திருவிளையாடற் புராணம்

கூடற் காண்டம்

திருவாலவாய்க் காண்டம்

கழக வெளியீடு

கழக வெளியீடு : கல்

உ

திருச்சிற்றம்பலம்

பரஞ்சோதி முனிவர்

அருளிச்செய்த

திருவிளையாடற் புராணம்

கூடற் காண்டம்

திருவாலவாய்க் காண்டம்

★

நாவலர் பண்டித

திரு ந மு வேங்கடசாமி நாட்டாரவர்கள்

உரையுடன்

★

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். லிமிடெட்.,
சென்னை-1. மதுரை-1. திருநெல்வேலி-6.
1969

நடுக்காவேரி முத்துச்சாமி வேங்கடசாமி நாட்டார் (1884-1944)

Ed 1 June 1928
Reprint : July 1965, June 1969


*

TIRUVILAIYADARP PURANAM
KOODARK KAANDAM

Appar Achakam, Madras-1. (I)

பொருளடக்கம்

	பக்கம்
நான்மாடக்கூடலான படலம்	க
எல்லாம்வல்ல சித்தரான படலம்	கசு
கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்	உஎ
யானையெய்த படலம்	சக
விருத்தகுமார பாலரான படலம்	சுஉ
கான்மாறியாடின படலம்	அஉ
பழியஞ்சின படலம்	க00
மாபாதகந் தீர்த்த படலம்	கஉங
அங்கம் வெட்டின படலம்	கசஉ
நாகமெய்த படலம்	கருசு
மாயப்பசுவை வதைத்த படலம்	கசுகூ
மெய்க்காட்டிட்ட படலம்	கஅசு
உலவாக்கிழியருளிய படலம்	உ0ரு
வளையல்விற்ற படலம்	உகஎ
அட்டமாசித்தி யுபதேசித்த படலம்	உஙச
விடையிலச்சினையிட்ட படலம்	உசஎ
தண்ணீர்ப்பந்தல் வைத்த படலம்	உசுக
இரசவாதஞ்செய்த படலம்	உஎகூ
சோழனை மடுவில் வீட்டிய படலம்	உகூங
உலவாக்கோட்டை யருளிய படலம்	ங0ச
மாமனாக வந்து வழக்குரைத்த படலம்	ஙகச
வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய படலம்	ஙஙஉ
விறகுவிற்ற படலம்	ஙசுஅ
திருமுகங்கொடுத்த படலம்	ச0ங
பலகையிட்ட படலம்	சகஅ
இசைவாது வென்ற படலம்	சஉஅ
பன்றிக் குட்டிக்கு முலைகொடுத்த படலம்	சருக
பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்	சஎஅ
கரிக்குருவிக் குபதேசஞ்செய்த படலம்	சஅஎ
நாரைக்கு முத்திகொடுத்த படலம்	சகூஎ
செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை	ரு0எ




நான்மாடக் கூடலானது.

கூ. ப. வ.




எல்லாம்வல்ல சித்தரானது




கூ. ப. உஎ]

கல்லானைக்குக் கரும்பருத்தியது




யானை யெய்தது




விருத்தகுமார பாலரானது

கூ. ப. ௬௨]




கான்மாழியாடியது

கூ. ப. அஉ]



பழியஞ்சினது

கூ. ப. ௧௦௦]




மாபாதகந் தீர்த்தது

கூ. ப. கஉங]




அங்கம் வெட்டினது

கூ. ப. கசஉ]



நாக மெய்தது

கூ. ப. கருகா]



கூ. ப. கசுசு] மாயப் பசுவை வதைத்தது




கூ. ப. கஅகூ] மெய்க்காட்டிட்ட படலம்



உலவாக்கிழி யருளியது



வளையல் விற்றது




அட்டமாசித்தியுபதேசித்தது

கூ. ப. ௨௬௪.]




விடையிலச்சினையிட்டது



தண்ணீர்ப் பந்தல் வைத்தது

கூ., ப. உ௬௧]



இரசவாதஞ் செய்தது

கூ. ப. உஎகூ]




சோழனை மடுவில் வீட்டியது

கூ. ப. உசுகூ]




உலவாக்கோட்டை யருளியது

கூ. ப. கூ0௪]




மாமனுக வந்து வழக்குரைத்தது

கூ. ப. ௩௧௪]



வரகுணனுக்குச் சிவலோகங் காட்டியது

கூ. ப. ௫௫௨]




'விறகு விற்றது . .




திருமுகங் கொடுத்தது

கூ. ப. சoகூ]




பலகையிட்டத்

கூ. ப. சகஅ]




இசைவாது வென்றது

கூ. ப. சஉஅ]



கூ. ப. ௪௫௧]

பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்தது




பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கியது

கூ. ப. சஎஅ]




கரிக்குருவிக்கு உபதேசஞ் செய்தது

கூ, ப. சஅஎ]



நாரைக்கு முத்தி கொடுத்தது



அர்ச்சனை செய்தத்

*** தி. ப. ருகக]

வட்ட வார்சடைக் குஞ்சியும் பூணநூன் மார்பும்
இட்ட நீறணி திலகமு மிணைக்குழை தூங்க
விட்ட வெள்ளைமுத் திரையுந்தோல் விரித்தபட் டிகையுஞ்
சுட்ட வெண்பொடிப் பொக்கணந் தூக்கிய தோளும்.

(இ - ள்.) வட்டம் வார் சடைக் குஞ்சியும் - வட்டமாகக் கட்டிய நீண்ட சடையாகிய சிகையும் பூணநூல் மார்பும் - பூணூலணிந்த திரு மார்பும் இட்ட நீறு அணி திலகமும் - தரித்த திருநீற்றின்மேல் அணிந்த திலகமும், இணைக் குழை தூங்கவிட்ட வெள்ளை முத்திரையும் - இரண் டாகிய குண்டலங்களுடன் தொங்கவிட்ட வெள்ளிய தோடுகளும், தோல் விரித்த பட்டிகையும் - தோலாகிய விரித்த அரைப் பட்டிகையும், சுட்ட வெண்பொடிப் பொக்கணம் தூக்கிய தோளும் - நீற்றிய திரு நீற்றினையுடைய பையைத் தொங்க விட்ட தோளும்.

பூணநூல், அ : அசை; பூணநூல் என்பது பாடமாயின் பூணுதலை யுடைய நூல் என்க. முத்திரை - அடையாளமாகிய தோடு; வெள்ளை முத்திரை - சங்காலாகிய தோடு. பொக்கணம் - திருநீற்றுப்பை. (௩)

தூய்ய வெண்பொடி யழிந்துமெய் சிவந்திடச் சுவடு
செய்யும் வெண்டிரட் படிகநீண் மாலையுஞ் சிவந்த
கையி லங்குகட் டங்கமுங் கண்டவர் மனஞ்சென்
றுய்ய வன்புற வீக்கிய வுதரபந் தனமும்.

(இ - ள்.) துய்ய வெண்பொடி அழிந்து மெய் சிவந்திட - தூய திருநீறு அழிந்து திருமேனி சிவக்குமாறு, சுவடுசெய்யும் - தழும்பினைச் செய்யும், வெண்திரள் படிகம் நீள் மாலையும் - வெள்ளிய திரண்ட படி கத்தாலாகிய நீண்ட மாலையும், சிவந்த கை இலங்கு கட்டங்கமும் - சிவந்த திருக்கரத்தில் விளங்கும் மழுப்படையும், கண்டவர் மனம் சென்று உய்ய வன்புற வீக்கிய உதரபந்தனமும் - தரிசித்தோர் உள்ள மானது சென்று பதிந்து உய்தி கூடச் சிக்கெனக் கட்டிய உதரபந்தனமும்.

திருநீறு அழிதலால் மெய்யின் சிவப்புத் தோன்றுமாறு என்க. கட்டங்கம் - மழு;

"சுத்திய பொக்கணத் தென்பணி கட்டங்கம்"

என்னும் திருச்சிற்றம்பலக் கோவையார் உரையை நோக்குக. (௪)

அட்ட வேங்கையீ ருரிவைகீண் டசைத்தகோ வணமும்
ஒட்ட வீக்கிய புலியத ளுடுக்கையு மிடத்தோள்
இட்ட யோகபட் டிகையும்பொன் னிடையிடை கட்டப்
பட்டசுஃறேலி வேத்திரப் படைக்கையும் படைத்து.

(இ - ள்.) அட்ட வேங்கை ஈர் உரிவைகீண்டு அசைத்த கோவண மும் - கொன்ற வேங்கையினின்றும் உரித்த தோலைக் கிழித்துக்

கட்டிய கோவணமும், ஒட்ட வீக்கிய புலி அதள் உடுக்கையும் - இறுகக் கட்டிய புலித்தோலாடையும், இடத்தோள் இட்ட யோக பட்டிகையும் - இடத்தோளிலிட்ட யோகபட்டிகையும், பொன் இடை இடை கட்டப்பட்ட சுஃஃறெலி வேத்திரப் படைகையும் படைத்து - பொற்கம்பியால் இடையிடையே கட்டப்பட்ட சுஃறென்னும் ஒலியினை யுடைய பிரப்புப் படையினை ஏந்திய திருக்கையும் ஆகிய இவற்றை யுடையராய்.

அடப்பட்ட என்பது அட்ட என நின்றது. கிண்டு - கீழ்ந்து. சுஃஃறென்னும் ஒலி என்பது சுஃஃறெலி யென நின்றது. சுஃறென : ஒலிக் குறிப்பு; இது பிரம்பைச் சுழற்றி வீசுவதால் உண்டாவது. (ரு)

வேத கிண்கிணி சிலம்புசூழ்ந் தடிகளின் மிழற்ற
ஓத ரும்பத முளரியூ றருண்மது வொழுகப்
போத வானந்த மதுநகர்ந் தலர்முகம் பொலியப்
பாத பங்கய முபநிடப் பாதுகை சூட.

(இ - ள்.) வேதம் கிண் கிணி சிலம்பு சூழ்ந்து அடிகளின் மிழற்ற - வேதமாகிய கிண்கிணியும் சிலம்பும் சூழ்ந்து திருவடிகளில் ஒலிக்கவும், ஓது அரும்பதம் முளரி ஊறு அருள்மது ஒழுக-சொல்லுதற்கரிய திருவடித் தாமரையிற் சுரக்கின்ற அருட்டேனது ஒழுகவும், போத ஆனந்த மது நுகர்ந்து அலர் முகம் பொலிய - ஞானனந்தமாகிய தேனைப் பருகி மலர்ந்த திருமுகமானது விளங்கவும், பாதபங்கயம் உபநிடப் பாதுகை சூட - திருவடித் தாமரைகளை உபநிடதமாகிய பாதுகை முடியில் அணியவும்.

இறைவன் ஞானனந்தமயனுய் இருத்தலை 'போதவானந்த மது நுகர்ந்து' என்றார். உபநிடதம் என்பது உபநிடம் என நின்றது. பாதுகையைச் சூட எனலுமாம். (சு)

சிறிது முரலும் வெயர்வையுந் திருமுகத் தரும்பக்
குறுகி யாவணஞ் சித்திர கூடநாற் சந்தி
மறுகு சூளிகை யுபரிகை மாளிகை வாயில்
அறுகு சூழ்நிறை தெற்றியிவ் விடந்தோறு மடைந்து.

(இ - ள்.) திருமுகத்து சிறிது முரலும் வெயர்வையும் அரும்ப - திருமுகத்தின்கண் சிறிது புன்னகையும் வெயர்வும் தோன்ற, குறுகி - சென்று, ஆவணம் - கடைவீதியும், சித்திரகூடம் - சித்திரகூடமும், நால்சந்தி - நான்கு தெருக்கள் கூடுமிடமும், மறுகு - வீதியும், சூளிகை உபரிகை - இறப்பினையுடைய மேல்மாடமும், மாளிகை வாயில் - மாளிகையின் வாயிலும், அறுகு நிறை சூழ்தெற்றி - சிங்க வரிசைகள் சூழ்ந்த திண்ணையும் ஆகிய, இவ்விடந்தொறும் அடைந்து-இவ்விடங்கள் தோறும் போய்.

சித்திரகூடம்-தெற்றியம்பலம். சூளிகை-நிலாமுற்றமுமாம். அறுகு-சிங்கம். (எ)

தெற்கி ருப்பவர் போல்வட திசைவயிற் சென்று
புக்கி ருப்பதுங் கிழக்குளார் போலமேற் றிசையில்
நக்கி ருப்பதும் யாவரு நாடின ரறியத்
தக்க தன்றியே யிந்திர சாலமாத் தணந்தும்.

(இ - ள்.) தெற்கு இருப்பவர்போல் வடதிசை வயின்சென்று புக்கு இருப்பதும் - தெற்கில் இருப்பவர்போற் காட்டி வடதிசைக் கண்ணே சென்று அமர்ந்திருப்பதும், கிழக்கு உளார்போல மேல் திசையில் நக்கு இருப்பதும் - கிழக்கிலிருப்பவர்போலக் காட்டி மேற்குத் திசையிற் சென்று மகிழ்ந்திருப்பதும், யாவரும் நாடினர் அறியத்தக்கது அன்றியே - எவரும் ஆராய்ந்து அறியக்கூடாவாறு, இந்திர சாலமா தணந்தும் - இந்திர சாலமாக நீங்கியும்

நாடினர்: முற்றெச்சம்; நாடினர் யாவரும் என இயைத்து, பார்த்துநின்றவர் யாவரும் என உரைத்தலுமாம். தக்கது - தக்கவாறு. இந்திரசாலம் - சாலங்களிற் றலையாயது சாலம் - வலை; பிறரை மயக்கி வயப்படுத்தும் விஞ்சையைக் குறிப்பதாயிற்று. ஆக வென்பது தொக்கது. (அ)

சேய வெற்பினை யணியதாச் செய்துமற் றணித்தாய்
மேய வெற்பினைச் சேயதா விடுத்துமெய்ம் முதுமூப்
பாய மக்களை யிளையவ ராக்கியுங் குதலை
வாய மக்களைக் கழிமுது மக்களா வகுத்தும்.

(இ - ள்.) சேய வெற்பினை அணியதாச்செய்து - தூரத்திலுள்ள மலையை அண்மையி லுள்ளதாகச் செய்தும், மற்று அணித்தாய் மேய வெற்பினைச் சேயதா விடுத்தும் - அதற்கு மாறாக அண்மையிலுள்ள மலையைச் சேய்மையிற் செல்லவிடுத்தும், மெய் முது மூப்பு ஆய மக்களை இளையவர் ஆக்கியும் - உடல் முதுமையையடைந்த விருத்தர்களை இளைஞர் களாக்கியும், குதலை வாய் மக்களை கழி முதுமக்களா வகுத்தும் - குதலைச் சொற்கள் பேசும் வாயினையுடைய பாலர்களை மிகுந்த விருத்தர்களாகச் செய்தும்.

சேய, வாய என்பன குறிப்புப் பெயரெச்சம். மற்று: வினைமாற்று. மேவிய, ஆகிய ஆக என்பன விகாரமாயின. (௯)

ஆணைப் பெண்ணுரு வாக்கியும் பெண்ணையா ணுருவா
மாணக் காட்டியு மலடியை மகப்பெறச் செய்துங்
கோணற் கூன்செவி டூமைகண் குருடுபங் கேவருங்
காணத் தீர்த்துநா லுலோகமுங் கனகமாச் செய்தும்.

(இ - ள்.) ஆணைப் பெண் உரு ஆக்கியும் - ஆண் வடிவத்தினைப் பெண் வடிவமாகச் செய்தும், பெண்ணை ஆண்உருவா மாணக்காட்டியும் - பெண் வடிவத்தினை ஆண் வடிவமாக மாட்சிமைப் படக் காட்டி

யும், மலடிமகப்பெறச் செய்தும்-மலடியைப் பிள்ளைப்பேறு அடையச் செய்தும், கோணல் கூன் செவிடு ஊமை கண்குருடு பங்கு எவருங் காணத்தீர்த்தும் - வளைந்த கூனும் செவிடும் ஊமையும் விழிக் குருடும் முடமும் ஆகிய இவற்றை யாவருங் காணப் போக்கியும், நால் உலோகமும் கனகமாச் செய்தும் - நான்கு உலோகங்களையும் பொன்னாகச் செய்தும்.

நாலு லோகம் என்றது ஐந்து லோகத்துள் பொன் ஒழிந்த இரும்பு, செம்பு, ஈயம், வெள்ளி என்பனவற்றை: ஐந்து லோகம் இவை யென்பதனை,

'தமனியம் இரும்பு தாமிரம் ஈயம்
இரசிதம் பஞ்ச லோக மென்ப'

என்னும் பிங்கலத்தானறிக. இரும்பு முதலியவற்றைப் பொன்னாக்கும் வித்தைக்கு இரசவாதம் என்று பெயர். (௧0)

செல்வர் தம்மனைப் பொருளெலாம் வறுமையிற் சிறந்தோர்
இல்ல மெய்தவு நட்டவ ரிகலின்றித் தம்மின்
மல்லு வெஞ்சம ரிழைப்பவுங் காஞ்சிர மரத்தின்
நல்ல தீங்கனி பழுப்பவும் விஞ்சைக ணயந்தும்.

(இ - ள்.) செல்வர் தம் மனைப்பொருள் எலாம் வறுமையில் சிறந்தோர் இல்லம் எய்தவும்-செல்வர்கள் இல்லிலுள்ள பொருள்களனைத்தும் வறுமையில் மிக்கோர் வீட்டிற்சென் றடையவும், நட்டவர் - நட்பினை யுடையவர், இகல் இன்றி - பகையில்லாமல், தம்மில் மல்லு வெஞ்சமர் இழைப்பவும் - தம்மிற் கொடிய மற்போர் புரியவும், காஞ்சிர மரத்தில் நல்ல தீங்கனி பழுப்பவும் - எட்டிமரத்தில் நல்ல சுவையினையுடைய பழங்கள் பழுக்கவும், விஞ்சைகள் நயந்தும் - வித்தைகள் செய்தும்.

மல்லு, உகரம் சாரியை. எய்த இழைப்ப பழுப்ப விஞ்சைகள் புரிந் தென்க. நயந்து - விரும்பி; செய்தென்னும் பொருட்டாயது. (௧௧)

பருவ மாறிய பருவத்தில் வையைநீர் பரந்து
வருவ தாக்கியு மீளவும் வறந்திடச் செய்தும்
பொருவி றீஞ்சுவை யோடையும் பொய்கையு முவர்ப்புத்
தருவ வாக்கியு முவரியின் சுவையதாத் தந்தும்.

(இ - ள்.) பருவம் மாறிய பருவத்தில் - காலமல்லாத காலத்தில், வையை நீர் பரந்து வருவது ஆக்கியும் - வையையாறு நீர் பெருகி வருவ தாகச் செய்தும், மீளவும் வறந்திடச் செய்தும் - திரும்பவும் வற்றுமாறு செய்தும், பொருவுஇல் தீஞ்சுவை ஓடையும் பொய்கையும் உவர்ப்புத் தருவ ஆக்கியும் - ஒப்பில்லாத இனிய சுவையினையுடைய ஓடையும் பொய்கையும் உவர்ப்புத் தருவனவாகச் செய்தும், உவரி இன்சுவையதாத் தந்தும் - கடல் இனிய சுவையினை உடையதாகச் செய்தும்.

பருவமாறிய பருவம் - முதுவேனிற் பருவம். ஓடை, பொய்கை உவரி என்பன அவற்றின் நீரைக் குறிப்பன. தந்து - செய்தென்னும் பொருட்டாயது. (௧௨)

வீசி மாத்திரைக் கோலினை விண்ணினட் டதன்மேல்
ஊசி நாட்டியிட் டூசிமேற் பெருவிர லூன்றி
ஆசி லாடியு மூசிமேற் றலைகிழக் காக
மாசில் சேவடிப் போதுவான் மலர்ந்திடச் சுழன்றும். (கரு)

(இ - ள்.) மாத்திரைக் கோலினை விண்ணில் வீசிநட்டு அதன் மேல் ஊசி நாட்டி இட்டு - மாத்திரைக் கோலை வானிலே வீசி நிறுத்தி அக்கோலின்மேல் ஊசியை நாட்டிவைத்து, ஊசிமேல் பெருவிரல் ஊன்றி ஆசில் ஆடியும் - அந்த ஊசியின்மேற் பெருவிரலை ஊன்றி நுண்ணிதின் ஆடியருளியும், ஊசிமேல் - அவ் வூசியின்மேல், தலை கிழக்கு ஆக மாசு இல் சேவடிப்போது வான் மலர்ந்திடச் சுழன்றும் - தலைகீழாகவும் குற்றமற்ற சிவந்த திருவடித்தாமரை வானின்கண் மலரவும் சுழன்றுடியும்.

மாத்திரை - அளவு; குறுந்தடியை மாத்திரைக்கோலென்பது வழக்கு;

"மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோ லொக்கும்".

என்பது காண்க. இட்டு : அசைநிலை. ஆசு - நுட்பம்; ஆசுஇல் - துன்ப மில்லையாக என்றுமாம். கிழக்கு என்பது முதற்கண் இப் பொருளில் வழங்கியே பின் திசைப் பெயராயிற்று; மேற்கு என்பதும் இவ்வாறே. போது என்றதற் கேற்ப மலர்ந்திட என்றார். மலர்தல் ஈண்டு மேல் நோக்கியிருத்தல். (கரு)

சண்ட வெம்பணிப் பகையெனப் பறந்துவிண் டாவிக்
கொண்ட லைப்பிடித் திடியொடுங் குடித்தநீர் பிழிந்து
கண்ட வர்க்கதி சயம்பெறக் காட்டியுங் காண
விண்ட லத்தினிற் பண்டுபோ லிறைகோள விடுத்தும்.

(இ - ள்.) சண்ட வெம்பணிப் பகை எனப் பறந்து - கடிய செல வினையுடைய கொடிய பாமபின் பகையாகிய கலுழனைப்போலப் பறந்து, விண் தாவி - வானிற்றாவி, கொண்டலைப் பிடித்து - முகிலைப் பற்றி, இடியொடும் குடித்த நீர் பிழிந்து - இடியொடு கடலிற் பருகிய நீரினைப் பிழிந்து, கண்டவர்க்கு அதிசயம் பெறக் காட்டியும் - பார்த்த வர்க்கு வியப்புத் தோன்றக் காண்பித்தும், காண - அவர்கள் காண, விண் தலத்தினில் பண்டுபோல் இறை கொள விடுத்தும் - வானின்கண் முன்போலவே தங்கும்படி அதனை விடுத்தும்.

சண்டம் - வன்மை; கலுழனுக்கு அடை. இடியொடும் பிழிந்து காட்டி யென்க. (௪௬)

எல்லி டைப்படும் பொருள்களை யிராவெழப் பார்த்தும்
அல்லி டைப்படும் பொருள்களைப் பகல்வர வமைத்தும்
வல்ல மூற்புன லுளர்வளி வலிகெடப் பார்த்தும்
நல்ல போதகாய் கனியிலா நாட்படக் கண்டும்.

(இ - ள்.) எல்இடைப் படும் பொருள்களை இரா எழப் பார்த்தும் - பகலிற் றோன்றும் பொருள்களை இரவிற் றோன்றுமாறு பார்த்தருளியும், அல்இடைப் படும் பொருள்களைப் பகல்வர அமைத்தும் - இரவிற் றோன்றும் பொருள்களைப் பகலில் வரச் செய்தும், வல் அழல் புனல் உளர்வளி வலிகெடப் பார்த்தும் - வலிய நெருப்பும் நீரும் அசைகின்ற காற்றுமாகிய இவைகளின் வலிகெடப் பார்த்தருளியும், நல்ல போது காய் கனி இலா நாள் படக் கண்டும் - நல்ல மலரும் காயும் கனியும் இல்லாத நாளில் உண்டாகச் செய்தும்.

பகலிற் றோன்றுவன ஞாயிறு முதலியன. இரவிற்றோன்றுவன திங்கள் முதலியன. வலிகெடப் பார்த்தல் - எரித்தல் நனைத்தல் அசைத்தல் முதலிய இயல்பினை இழக்கச் செய்தல். இல்லா நாள் - உரியவல்லாத நாட்கள். பார்த்து, கண்டு என்பன செய்து என்னும் பொருளன. (கரு)

பீளை கால்விழிக் கிழவரைப் பிரம்பினுல் வருடிக்
காளை யாடவ ராக்கியக் கணவருக் கிசைய
ஈளை வாய்முது கற்பினர் கருவடைந் திளமை
ஆள வேத்திரம் வருடி நீ றளித்தருள் செய்தும்.

(இ - ள்.) பீளை கால் விழிக் கிழவரைப் பிரம்பினுல் வருடி - பீளை ஒழுகும் விழியினையுடைய விருத்தரைப் பிரம்பினுல் நீவி, காளை ஆடவர் ஆக்கி - காளைப்பருவத்தினையுடைய ஆடவராகச் செய்து, அக்கணவருக்கு இசைய - அந்நாயகருக்குப் பொருந்த, ஈளைவாய் முது கற்பினர் - ஈளை வாய்ந்த முதுமைப் பருவத்தினையுடைய கற்பிற் சிறந்த அவர் மனைவியர், கரு அடைந்து இளமை ஆள - கருவுற்று இளமைப் பருவத்தை அடையுமாறு, வேத்திரம் வருடி நீறு அளித்து அருள் செய்தும் - பிரம்பினுல் தடவித் திருநீறு அளித்துக் கருணை புரிந்தும்.

கிழவர் என்னுஞ் சொல் உரியவர் என்னும் பொருளில் முன்பு வழங்கிப் பின்பு முதியோரைக் குறிக்கும் பெயராயிற்று. ஈளை - கபத்தா லுண்டாகும் இழைப்பு; பிறர் விளையெனப் பிரித்தது பொருந்தாமை காண்க. இளமை யெய்த வேத்திரம் வருடியும் கருவடைய நீறளித்தும் என்க. (கசு)

அகர மாதிமூன் ருகிய வாகரு டணமே
புகரி லாவதி ரிச்சிய மஞ்சனம் பொருவில்
வகர மாதிமூன் ருகிய வசியமே வாதம்
இகலி லாவயத் தம்பமேன் றின்னவை செய்தும்.

(இ - ள்.) அகரம் ஆதி மூன்ருகிய - அகரத்தை முதலாகவுடைய மூன்ருகிய, ஆகருடணம் புகர் இலா அதிரிச்சியம் அஞ்சனம் - ஆகருடணமும் குற்றமில்லாத அதிரிச்சயமும் அஞ்சனமும், பொருவுஇல் வகரம் ஆதி மூன்ருகிய - ஒப்பில்லாத வகரத்தை முதலாகவுடைய மூன்ருகிய, வசியம் வாதம் இகல் இலா வயத்தம்பம் - வசியமும் வாதமும் மாறுபாடில்லாத வயத்தம்பமும், என்று இன்னவை செய்தும் - என்று சொல்லப்படும் இவைகளைச் செய்தும்.

குறிலின் விகாரமே நெடிலாதலால் ஆ என்பதனை அகரத்து ளடக்கியும் வா என்பதனை வகரத்துளடக்கியும் 'அகரமாதி மூன்று,' 'வகரமாதி மூன்று' என்றார். ஆகருடணம் முதலியவற்றைக் குறிப்பாற் கூறலுறுவார் அவற்றின் முதலெழுத்தால் 'அகாரம், வகாரம்' என்றிங் ஙனம் கூறுவ ராகலின், அதனைப் புலப்படுப்பான் வேண்டி 'அகரமாதி மூன்றாகிய,' 'வகரமாதி மூன்றாகிய' என்று கூறிவைத்துப், பின் பெயர் களையும் கிளந்தோதினார். தாமதகுணசித்தி யெனப்படும் எட்டனுள் தம்பனம், மோகனம் என்னும் இரண்டு மொழித்து ஒழிந்தவற்றை இதனுள் ஓதினார். ஆகருடணம் - சேய்மையிலுள்ளதை அண்மையில் வர இழுத்தல். அதிரிச்சியம் - கட்புலனாவதைப் புலனாகாமல் மறையச் செய்தல். அஞ்சனம் - மறைந்திருப்பதை வெளிப்படுத்திக் காட்டுதல். வசியம் - பகைவரையும் உறவாக்குவது. வாதம் - இரும்பு முதலிய வற்றைப் பொன்னாக்குவது. வயத்தம்பம் - முதியோரை இளையராகவும் இளையோரை முதியராகவும் செய்வது. இடையிட்டு நின்ற ஏகாரங்கள் எண்ணுப்பொருள் குறித்தன;

> "எண்ணே காரம் இடையிட்டுக் கொளினும்
> எண்ணுக் குறித்தியலு மென்மனார் புலவர்"

என்பது தொல்காப்பியம். (கஎ)

> வேத நூறெளி யார்களைக் கலைகளும் விளங்கப்
> பூதி நாவினிற் சிதறியும் பூழியன் காதன்
> மாத ராரொடும் பயில்புது மணமலர்க் காவிற்
> காத நீண்டகோட் டேங்கினைக் கரும்பனை செய்தும்.

(இ - ள்.) வேத நூல் தெளியார்கள் எக்கலைகளும் விளங்க - மறை நூல் முதலிய யாவுந் தெளியாதவர்களுக்கு எல்லாக்கலைகளும் விளங்க. நாவினில் பூதி சிதறியும் - அவர் நாவிலே திருநீற்றைச் சிதறி யும், பூழியன் - பாண்டியனுனவன் காதல் மாதராரொடும் பயில் புது மணம் மலர்க்காவில் - காதல் மகளிரொடும் விளையாடும் புதிய மண மிக்க மலர்கள் நிறைந்த சோலையிலுள்ள, காதம் நீண்ட கோள் தெங்கினைக் கரும்பனை செய்தும் - காத அளவு நீண்டுயர்ந்த கோட்புக்க தெங்கினைக் கரிய பனையாகச் செய்தும்.

தெளியார்களுக்கு என்னும் நான்கனுருபு தொக்கது. கோட் டெங்கு - கோட்புக்க தெங்கு; காய்த்த தெங்கு. (கஅ)

> ஏனை வான்றருக் குலங்களைப் புட்களை யிருகோட்
> டானை யாதிபல் விலங்கினை யொன்றையொன் றாக
> ஞான நோக்கினு னோக்கியு நாடிய விளையோர்
> மானி னோக்கிய ராகிலோ மேனவேழில் வாய்ந்தும்.

(இ - ள்.) ஏனை வான் தருக் குலங்களை - மற்றைய உயர்ந்த மரக் கூட்டங்களையும், புட்களை - பறவைகளையும், இரு கோட்டு ஆனை ஆதி

பல்விலங்கினை - இரண்டு கொம்பினையுடைய யானை முதலிய பல விலங்குகளையும், ஒன்றை ஒன்றாக ஞான நோக்கினால் நோக்கியும் - ஒன்று மற்றொன்றுமாறு ஞானப்பார்வையாற் பார்த்தருளியும், நாடிய இளையோர் - பார்த்த இளமைப் பருவத்தினையுடைய ஆடவர், மானின் நோக்கியர் ஆகிலோமென - மான்போன்ற பார்வையினையுடைய மகளிராக நாம் பிறக்க வில்லையே எனக் கவல, எழில் வாய்ந்தும் - கட்டழகினைப் பொருந்தியும்.

ஒன்றை யென்பதில் ஐகாரம் சாரியை. இவனை அணைதற்கு மாதராகப் பிறந்திலோமேயென என்க:

"ஆடவர் பெண்மையை யவாவுந் தோளினாய்"

என இராமாயணங் கூறுவதுங் காண்க. இது வசியம் எனப்படும். (கக)

நாக நாடுபொன் னாட்டுள பொருளுமந் நகருள்
ஆக வாக்கியு மின்னணம் விச்சைக ளனந்தம்
மாக நாயகன் மலைமக ளாயகன் மதுரை
ஏக நாயகன் றிருவிளை யாடல்செய் திருந்தான்.

(இ - ள்.) நாக நாடு பொன் நாடு உள பொருளும் அந்நகருள் ஆக ஆக்கியும் - பாதலத்திலும் பொன்னுலகத்திலும் உள்ள பொருள்களும் அம்மதுரைப் பதியில் உண்டாகுமாறு செய்தும், இன்னணம் அனந்தம் விச்சைகள் - இங்ஙனம் அளவில்லாத வித்தைகளை, மாகநாயகன் - சிவலோக நாயகனும், மலைமகள் நாயகன் - பார்வதி தலைவனும், மதுரை ஏகநாயகன் - மதுரையிலெழுந்தருளியுள்ள ஒப்பற்ற இறைவனுமாகிய சோமசுந்தரக் கடவுள், திருவிளையாடல் செய்து இருந்தான் - திருவிளையாடலாகப் புரிந்து இருந்தருளினன்.

பாதலத்துப் பொருள் பொன்னாட்டுப் பொருளாகவும் பொன்னாட்டுப் பொருள் பாதலத்துப் பொருளாகவும் எனப் பிறர் பொருள் கூறுவாராயினர்; சொற்கள் அதற்கேற்றவாறில்லாமை காண்க. (உ0)

சித்த யோகிகள் செய்கின்ற வாடன்மேற் செலுத்தி
வைத்த கண்களுஞ் சிந்தையும் வாங்கலர் திகைத்துத்
தத்த மாள்வினைத் தொழின்மறந் திருந்தனர் தகைசால்
முத்த வேதிய ராதிய முதுநகர் மாக்கள்.

(இ - ள்.) தகைசால் முத்த வேதியர் ஆகிய முது நகர் மாக்கள் - தகுதிமிக்க முத்தத்தன்மையையுடைய அந்தணர் முதலிய தொன்மையுடைய மதுரைப் பதியிலுள்ள மாந்தர்கள், சித்த யோகிகள் செய்கின்ற ஆடல்மேல் செலுத்தி வைத்த - யோக சித்தமூர்த்திகள் செய்தருளும் திருவிளையாடலின்மேற் செலுத்தி வைத்த, கண்களும் சிந்தையும் வாங்கலர் - கண்களையும் உள்ளத்தினையும் மீட்க முடியாதவர்களாய், திகைத்து - திகைப்புற்று, தத்தம் ஆள்வினைத் தொழில் மறந்திருந்தனர் - தத்தமக்குரிய தொழில் முயற்சிகளை மறந்திருந்தார்கள் எ - று.

வாங்கலர் : எதிர்மறை முற்று எச்சமாயது. வாங்குதல் - மீட்டல். ஆள்வினை - முயற்சி; செய்கடனுமாம். முத்தர் . விடுபட்டோர்; சீவன் முத்தி பெற்றோர். (உக)

இனைய செய்தியை யுழையரா லிறைமக னறிந்தான்
அனைய சித்தரை யிங்ஙனந் தருகென வடுத்தார்
தனைய கற்றினன் சித்தரைச் சார்ந்தவர் தாமும்
வினையை வென்றவ ராடலை வியந்துகண் டிருந்தார்.

(இ - ள்.) இனைய செய்தியை - இந்நிகழ்ச்சியை, இறை மகன் உழையரால் அறிந்தான் - அபிடேக பாண்டியன் ஒற்றரால் அறிந்து, அனைய சித்தரை இங்ஙனம் தருக என - அவ்வித்தக சித்தரை இங்கு அழைத்து வாருங்கள் என்று, அடுத்தார் தனை அகற்றினன் - பக்கத்து நின்றவர்களைப் போக்கினன்; சித்தரைச் சார்ந்து அவர் தாமும் - சித்தரை அடைந்து அவரும், வினையை வென்றவர் ஆடலைக் கண்டு வியந்து இருந்தார் - இயல்பாகவே பாசங்களினீங்கிய அச்சித்தரின் திருவிளையாடலைப் பார்த்து வியந்து தம்மை மறந்திருந்தனர்.

தருகென ; அகரந் தொக்கது. தமை எனற்பாலது தொடை நோக்கித் தனையென நின்றது. தம் : சாரியை. அவர்தாமும் சார்ந்து என்க; தாம் : அசை. (உஉ)

அமைச்சர் தங்களை விடுத்தன னமைச்சருஞ் சித்தர்
தமைச் சரண்பணிந் தரசன்முன் வருகெனத் தவத்தோர்
எமக்கு மன்னனு லென்பய னெனமறுத் திடமண்
சுமக்கு மன்னவன் றம்மவர்* தொழுதனர் போனார்.

(இ - ள்.) (அவர்கள் வாராமையைக் கண்ட வழுதி பின்னும்) அமைச்சர் தங்களை விடுத்தனன் - மந்திரிகளை ஏவினன்; அமைச்சரும் சித்தர் தமைச் சரண் பணிந்து - அவர்களும் சித்தமூர்த்தியின் திருவடிகளை வணங்கி, அரசன் முன் வருக என - மன்னன் முன் வரக்கடவீர் என வேண்ட, தவத்தோர் - யோகசித்தர், எமக்கு மன்னனால் என்பயன் என மறுத்திட - எமக்கு அரசனாலாம் பயன் யாது என்று மறுக்க, மண் சுமக்கு மன்னவன் தம்மவர் தொழுதனர் போனார் - நிலவுலகினைத் தாங்கும் அரசனுடைய அமைச்சர்கள் தொழுது போயினர்.

தம் என்பன சாரியை, சரணினை யென உருபை மாறுக. வருகென : தொகுத்தல். பெருமிதந்தோன்ற 'எமக்கு' என்றார்.

"வையமும் தவமும் தூக்கின் தவத்திற்கு
ஐயவி யனைத்தும் ஆற்றாது"

என்பது தோன்றத் 'தவத்தோர்' எனவும், 'மண்சுமக்கு மன்னவன்' எனவும் கூறினார். வருதற்கு மறுத்திட வென்க. தம்மவர் - தமர். தொழுதனர் : முற்றெச்சம். (உங)

(பா - ம்.). *தம்மனோர்.

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

மன்னன்மு னமைச்சர் சித்தர் மறுத்துரை மாற்றங் கூற
முன்னவ னருள்பெற் றிம்மை மறுமையு முனிந்த யோகர்
இந்நில வேந்தர் மட்டோ விந்திர னயன்மா லேனோர்
தன்னையு மதிப்ப ரோவென் றிருந்தனன் றரும வேந்தன்.

(இ - ள்.) அமைச்சர் - அமைச்சர்கள், மன்னன்முன் - பாண்டியன் முன் சென்று, சித்தர் மறுத்து உரைமாற்றம் கூற - சித்த மூர்த்திகள் மறுத்துக் கூறிய மொழியினைச் சொல்ல, தரும வேந்தன் - (கேட்ட) அறநெறி பிழையாத பாண்டிவேந்தன், முன்னவன் அருள்பெற்று இம்மை மறுமையும் முனிந்த யோகர் - முதல்வனாகிய சிவபெருமான் திருவருளைப் பெற்று இம்மை மறுமைப் பயன்களை வெறுத்த யோகிகள், இந்நில வேந்தர் மட்டோ - இந்நிலவுலகமன்னரை மாத்திரமோ, இந்திரன் அயன் மால் ஏனோர் தன்னையும் மதிப்பரோ - இந்திரனையும் அயனையும் திருமாலையும் மற்றைத் தேவர்களையும் மதிப்பரோ (மதியார்) என்று இருந்தனன் - என்றெண்ணி இருந்தனன்.

உரைமாற்றம் : வினைத்தொகை. 'இகபரத்தாசை கழிந்த யோகியர்' என்றார் முன்னரும். தன்னையும் ஈண்டும் சாரியை பன்மையி லொருமையாயிற்று.

''பாராண்டு பகடேறி வருவார் சொல்லும்
பணிகேட்கக் கடவோமா பற்றற் றோமே''

எனவும்,

''சென்றுநாம் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோம்''

எனவும் திருநாவுக்கரசுகளும்,

''போகம் வேண்டி வேண்டிலேன் புரந்தராதி யின்பமும்''

எனவும்,

''கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு''

எனவும் திருவாதவூரடிகளும் கூறிய அருண்மொழிகள் ஈண்டுச் சிந்திக்கற் பாலன. (உச)

ஆகச் செய்யுள் - கஙஙிச.

இருபத்தோன்ருவது

கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்

[கலிநிலைத்துறை]

செல்லார் பொழில்சூழ் மதுராபுரிச் சித்த ரெல்லாம்
வல்லா ரவரா டலையாருரை செய்ய வல்லார்
எல்லாரும் வியப்புற வித்தனிச் சித்த சாமி
கல்லானை தின்னக் கரும்பீந்த கதையுஞ் சொல்வாம்.

(இ - ள்.) செல் ஆர் பொழில் சூழ் மதுராபுரிச் சித்தர் - மேகங்கள் தவழப் பெற்ற சோலைகள் சூழ்ந்த மதுரைப் பதியில் எழுந்தருளிய சித்தமூர்த்திகள், எல்லாம் வல்லார் - எல்லாம் செய்ய வல்லவர் (ஆகலின்), அவர் ஆடலை உரை செய்யவல்லார் யார் - அவர் செய்தருளும் திருவிளையாடலை உரைக்க வல்லவர் யாவர்; எல்லாரும் வியப்பு உற இத்தனிச் சித்தசாமி - (இனி) அனைவரும் அதிசயமடைய இவ்வொப்பற்ற சித்தமூர்த்திகள், கல்லானை தின்னக் கரும்பு ஈந்த கதையும் சொல்வாம் - கல்லானை தின்னுமாறு கரும்பினைக் கொடுத்த திருவிளையாடலையும் கூறுவாம்.

வல்லார் ஆகலின் என விரித்துரைக்க; எல்லாம் வல்லராகிய சித்தர் எனக் கூட்டலுமாம். சிறிது கூறினேமென்பார் 'யாருரை செய்யவல்லார்' என்ருர். (க)

பின்னேய மச்சம் பெருகப்பெரி யோரை யெண்ணு
தென்னே யெளியா ரெனயானிகழ்ந் திங்ங னீண்டச்
சொன்னே னவர்க்கென் குறையென்னிற் றுருவி நானே
தன்னே ரிலாதார் தமைக்காணத் தகுவ னென்ன.*

(இ - ள்.) பின் நேயம் அச்சம் பெருக் - பின்பு அன்பும் அச்சமும் பெருக, யான் பெரியோரை எண்ணுது எளியாரென இகழ்ந்து இங்ஙன் ஈண்டச் சொன்னேன் - யான் பெரியோரை மதியாது எளியாரைப் போல (க்கருதி) அவமதித்து இங்கு வரும்படி சொல்வித்தேன், என்னே - (என் அறியாமை இருந்தவாறு) என்னே, அவர்க்கு என்னில் குறை என் - அவருக்கு என்னிடம் பெறவேண்டிய குறைபாடு யாதுளது, தன் நேர் இலாதார் - தனக்கொப்பில்லாத அச்சித்த சாமிகளை, நானே துருவிக்காணத் தகுவன் என்ன - யானே தேடிக்காணத் தக்கவனுவேன் என்று கருதி.

(பா - ம்.) *தகுவ தென்ன.

இகழ்தலாவது அவரை எளியரெனக் கருதினமையே. இங்ஙனம் என்பது ஈறு தொக்கு நின்றது; இவ்விடம் என்னும் பொருட்டாயது. சொன்னேன், சொல்வித்தேன் : பிறவினைப் பொருட்டு. என்னில் - என்கண். பெறத்தக்க குறை என விரிக்க. நானே - குறையெலா முடைய யானே. (உ)

ஆனந்த சித்தர் தமைக்காண்பலென் றன்பு கூர்ந்த
மீனந் தரித்த கோடிவேந்தன் குறிப்பு நோக்கி
மோனந் தரித்த சிவயோகரு முந்தித் தம்போன்
மானந் தனக்கு வடமேற்றிசை வந்தி ருந்தார்.

(இ - ள்.) ஆனந்த சித்தர் தமைக் காண்பல் என்று அன்பு கூர்ந்த - ஆனந்த வடிவாகிய சித்த மூர்த்திகளைத் தரிசிப்பேனென்று அன்பு மிகுந்த, மீனம் தரித்த கொடிவேந்தன் குறிப்பு நோக்கி - கயல் எழுதிய கொடியினை யுயர்த்திய அபிடேக பாண்டியனது உள்ளக் குறிப்பினை உணர்ந்து, மோனம் தரித்த சிவயோகரும் - மௌனநிலையினைப் பூண்ட சிவயோகியாகிய சித்தரும், முந்தி - முன்னாகவே, தம் பொன் மானம் தனக்கு வடமேல் திசை வந்திருந்தார் - தமது பொன் விமானத்திற்கு வடமேற்குத் திசையின்கண் வந்து இருந்தருளினர்.

வேந்தன் அன்பு கூர்ந்தான், அவன் குறிப்பு நோக்கி வந்திருந்தார் என வுரைத்துக்கொள்க. மீனத்தைத் தாங்கிய கொடி. மோன முத்திரை தரித்த என்றுமாம். மானம் : முதற்குறை. (ங)

அருகாத செல்வத் தவனன்றுதைத் திங்க டோற்றம்
வருகால மாக மதுரேசனை வந்து வந்தித்
துருகா தரத்தாற்* கழிந்துள்வல மாக மீள†
வருவா னவன்முன் வருகாஞ்சுகி வன்கண் மாக்கள்.

(இ - ள்.) அன்று தைத் திங்கள் தோற்றம் வரு காலமாக - அந்நாள் தைமாதம் தோன்றுங் காலமாக, அருகாத செல்வத் தவன் - குறையாத செல்வத்தினையுடைய பாண்டியன், வந்து மதுரேசனை வந்தித்து - வந்து மதுரை நாயகனை வணங்கி, உருகு ஆதரத்தால் கழிந்து - உருகும் அன்பினால் மிகுந்து, மீள உள் வலமாக வருவான் - மீண்டு உள்ளே வலமாக வாரா நிற்க, அவன் முன் வரு - அவனுக்கு முன்னர் வருகின்ற, வன்கண் காஞ்சுகி மாக்கள் - அஞ்சாமையையுடைய மெய் காப்பாளர்.

தோற்றம் வரு காலமாக - தோன்றுங் காலமாகா நிற்க; அந் நன்னாளிலே என விரித்துக்கொள்க. கழிந்து - விஞ்சி; கழி என்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்தது. ஆதரம் கழிந்து என்பதனை ஆதரத் தாற் கழிந்து என்றார். உள் கழிந்து எனக் கூட்டி, உள்ளிடத்தி னின்கி என்றுரைத்தலுமாம். வருவான் என்பதனை வாரா நிற்க

(பா - ம்,) *உருகாதரத்தான். † வலமாக முன்பு.

எனச் செயவெனெச்சமாக்குக. காஞ்சுகி - சட்டையிட்ட மெய் காவலர்; கஞ்சுகம் - சட்டை. காஞ்சுகியராகிய மாக்கள் என்க. (ச)

சீறிட்ட வேங்கை யதட்சேக்கையர் சீறி யைந்தும்
பாறிட்ட வேடர் யோகபட்டத்தர் கட்டங் கத்தில்
ஏறிட்ட கைய ரிறுமாந்திருப் பாரை நோக்கி
மாறிட்டு நீக்கி* யெழப்போகென வந்து சொன்னார்.

(இ - ள்.) சீறிட்ட வேங்கை அதள் சேக்கையர் - சீறிய வேங்கையின் தோலாகிய தவிசினையுடையராய், ஐந்தும் சீறிப் பாறிட்ட வேடர் - ஐம்புலன்களையும் சினந்து ஓட்டிய திருவேடத்தினை யுடையராய், யோக பட்டத்தர் - யோக பட்டிகை யுடையராய், கட்டங்கத்தில் ஏறிட்ட கையர் - மழுப்படையில் ஏற்றிய திருக்கரத்தினையுடையராய், இறுமாந்து இருப்பாரை நோக்கி - இறுமாந்திருப்பவரைப் பார்த்து, வந்து - நெருங்கி வந்து, மாறு இட்டு நீக்கி எழப்போக எனச் சொன்னார் - பிரம்பினை நீட்டி அவ்விடத்தை விட்டு எழுந்துபோகக் கடவீர் என்று சொன்னார்.

சீறிட்ட - சிறிய: இடு: அசை. பாறிட்ட - பாற்றிய. ஏறிட்ட - ஏற்றிய. சேக்கையர் முதலிய குறிப்பு முற்றுக்கள் வினையெச்சமாயின. ஐந்து: தொகைக் குறிப்பு. பாற்றினமை தோற்றுவிக்கும் வேடம். கட்டங்கத்திற்கு முன் உரைத்தமை காண்க. மாறிட்டு நீக்கல் - பிரம்புகொண்டு நீங்குமாறு குறித்துக் காட்டல். எழப்போதல் - அகலப்போதல். போகென: தொகுத்தல். (இ)

பின்னு வருதென்னர் பிரான்பெரி யோரை நோக்கி
என்னாடு நும்மூர்† நுமக்கென்வரும் யாது வேண்டும்
நுந்நாம மேது நுவன்மின்னென வைய ரெந்த
நன்னாடு மெந்த நகருள்ளுந் திரிவ மப்பா.

(இ - ள்.) பின்னு வரு தென்னர் பிரான் பெரியோரை நோக்கி - பின்னாக வரும் பாண்டியர் தலைவன் அப்பெரியோரைப் பார்த்து, நும நாடு ஊர் என் - நுமது நாடும் ஊரும் எவை, நுமக்கு என் வரும் - உமக்கு என்ன கைவரும், யாது வேண்டும் - உமக்கு வேண்டியது யாது, நும் நாமம் ஏது - உமது பெயர் யாது, நுவல்மின் என - சொல்வீராக என்று வினவ, ஐயர் - சித்த மூர்த்திகள், அப்பா எந்த நல்நாடும் எந்த நகருள்ளும் திரிவம் - அப்பனே! நாம் எந்த நல்ல நாட்டிலும் எந்த நகரிலும் சஞ்சரிப்போம்.

நும் நாடு ஊர் என் எனக் கூட்டுக என் - எவை. எந்நாடு நும்மூர் என்பது பாடமாயின் நுமது ஊர் எந்த நாட்டிலுள்ளது என்று பொருள் படும். நாட்டுள்ளும் என விரிக்க. அப்பா என்பது பெரியோர் கூறும் மரபுச் சொல். இது முதல் ஐந்து செய்யுள் ஒருதொடர். (ஈ)

(பா - ம்.) * நீட்டி. † எந்நாடு நும்மூர். எந்நாடு நுந்நாடு.

ஆனவு மிப்போ தணிகான்மிர நாட்டிற் காசி
தானு மிருக்குந் தலமாகு மநாத ராகி
ஆனுத பிச்சைப் பெருவாழ் வுடையார் நமரா
நாணுளும் விஞ்சை நடாஅய்த்திரி* சித்த ரேம்யாம்.

(இ - ள்.) ஆனுலும் இப்போது - ஆயினும் இப்பொழுது, அணி கான்மிர நாட்டில் காசிதான் - அழகிய காசுமீர நாட்டின்கண் உள்ள காசிப்பதியே, நாம் இருக்கும் தலம் ஆகும் - நாம் தங்கும் பதியாகும்; அநாதராகி ஆனுத பிச்சைப் பெருவாழ்வு உடையார் நமராம் - ஒரு பற்றுமில்லாதவராய் நீங்காத பிச்சை எடுத்தலாகிய பெருவாழ்வினை யுடைய அடியார்களே நம் உறவினராவார்; யாம் நாள் நாளும் விஞ்சை நடாஅய்த் திரி சித்தரேம் - யாம் எந்நாளும் வித்தை நடாத்தித் திரிகின்ற சித்தராவேம்.

ஆனுலும்-எங்குந் திரிவமாயினும். கான்மிரம்-காசுமீரம். அநாதர் - ஆதரவில்லாதவர்; அநாதரர் என்பது தொக்கு நின்றது. எய்துதற்கரிய வாழ்வென்பார் 'பெருவாழ்வு' என்ருர். நாள்தோறும் - நாடோறும், நடாஅய் - நடாவி; நடாத்தி. 'அநாதனுகி...........வாழ்வுடையான்' என்பது பாடமாயின், ஆதியில்லாத சிவபெருமான் எமக்கு உறவாம் என்றுரைக்க. (எ)

ஆனந்த கானந் தொடுத்திங்குள வான சைவத்
தானம் பலவுந் தொழுதற்பர மாகி வந்தேம்
ஞானந் தருமிந் நகரிம்மையிற் சீவன் முத்தி
மானந் தமான பரமுத்தி மறுமை நல்கும்.

(இ - ள்.) ஆனந்த கானம் தொடுத்து இங்கு உளவான சைவத் தானம் பலவும் - தில்லைவனம் முதல் இங்கு உள்ளனவான சிவத்தலங்கள் பலவும், தொழுதற் பரம் ஆகி வந்தேம் - வணங்குதற் பொருட்டு வந்தேம்; ஞானம் தரும் இந்நகர் - ஞானத்தைப் பாலிக்கும் இந்த நகரமானது, இம்மையில் சீவன் முத்தி - இம்மையிலே சீவன் முத்தியையும், மறுமை மான் அந்தமான பரமுத்தி - மறுமையிலே மாயைக்கு அப்பாற்பட்ட பரமுத்தியையும், நல்கும் - அளிக்கும்.

தில் என்னும் இடைச்சொல் விழைவுப் பொருளில் வருதல் குறித்துத் தில்லை வனம் என்பதை ஆனந்த கானம் என மொழிபெயர்த்தாராதல் வேண்டும்: தில்லை சிவபெருமான் ஆனந்தத் தாண்டவம் புரியும் இடமாதலுங் கொள்க; ஆனந்த கானம் என்பதற்குக் காசி என்று பொருள் கூறுவாருமுளர். பரம் - பொருட்டு. மான் - பிரகிருதி மாயை; ஈண்டு விந்து மோகினிகளையும் குறிப்பதாகக் கொள்க. (அ)

ஈண்டுள்ள வர்க்கெம் விளையாடலைக் காட்டி யிச்சை
வேண்டும் பலசித் தியுநல்குவம் வேத மாதி
மாண்டங்கு மெண்ணெண் கலைஞானமும் வல்ல மல்லாற்
சேண்டங்கு மெல்லாப் பொருளும்வல சித்த ரேம்யாம்.

(பா - ம்) * நடாத்திடுஞ்.

(இ - ள்.) ஈண்டு உள்ளவர்க்கு எம் விளையாடலைக் காட்டி - இங்குள்ளவர்களுக்கு எமது விளையாடலைக் காண்பித்து, வேண்டும் பல சித்தியும் இச்சை நல்குவம் - (அவர்கள்) விரும்பும் பல பேறுகளையும் விருப்பத்தின்படியே அருளுவோம்; வேதம் ஆதி மாண் தங்கும் எண்ணெண் கலை ஞானமும் வல்லம் - மறை முதலான மாட்சி தங்கிய அறுபத்துநான்கு கலை ஞானங்களிலும் வன்மையுடையோம்; அல்லால் - இவையன்றியும், யாம் சேண் தங்கும் எல்லாப் பொருளும் வலசித்தரேம் - யாம் சேய்மையிலுள்ள பொருளனைத்தையும் (அண்மையில் வரச் செய்தலில்) வல்ல சித்தராவேம்.

பலசித்தி - பலமாகிய பேறு; பலவாகிய சித்தி என்றுமாம். எல்லாப் பொருளும் வல என்பதற்கு எல்லாப் பொருள்களையும் நிருமிக்க வல்ல என்றுரைத்தலுமாம். (௯)

உன்னால் நமக்குப் பெறல்வேண்டுவ தொன்று மில்லை
தென்ன வெனவுண் ணகைசெய்தனர் சித்த யோகர்
மன்ன மிவர்தம் மிறுமாப்புஞ் செருக்கும் வீறும்
என்ன லளவிட்ட றிவேனென வெண்ணித் தேர்வான்.

(இ - ள்.) தென்ன - பாண்டியனே, உன்னால் நமக்குப் பெறல் வேண்டுவது ஒன்றும் இல்லை - உன்னாலே நாம் அடைதற் பாலதாகிய பொருள் ஒன்றுமில்லை, என - என்று கூறி, உள் நகை செய்தனர் சித்த யோகர் - புன்னகை புரிந்து நின்றனர் சித்த மூர்த்திகள், மன் ஆம் இவர் தம் இறுமாப்பும் செருக்கும் வீறும் - நிலைபெற்ற இவருடைய இறுமாப்பும் செருக்கும் பெருமிதமுமாகிய இவற்றை. என்னால் அளவிட்டு அறிவேன் என எண்ணித் தேர்வான் - யாதினாலளந்து அறிவேன் என்று அரசன் எண்ணி ஆராய்வானாயினன்.

நமக்கு; நாம் என எழுவாய்ப் பொருட்டு. 'யாது வேண்டும்' என அரசன் வினவியதற்கு 'விடையாக வேண்டுவ தொன்றுமில்லை' என்றார். நம்மால் நீ பெறுவதன்றி உன்னால் நாம் பெறவேண்டுவதில்லை என்றார். மன் ஆம் - மன்னுதலுடைய. என்னால் - எதனால். (௧0)

தேரும் பொழுதோ ருழவன்னொரு செல்வக் கன்னல்
ஆருங் கமுகென்ன வயிர்ப்புறக் கொண்டு தாழப்
பாருந் திசையும் புகழ்பங்கயச் செங்கை தாங்கி
நீரும் பிறையுங் கரந்தார்தமை நேர்ந்து சொல்வான்.

(இ - ள்.) தேரும் பொழுது - அங்ஙனம் ஆராயும் பொழுது, ஓர் உழவன் - ஓர் உழவனானவன், ஒரு செல்வக் கன்னல் - செழித்தோங்கிய ஒரு கரும்பினை, ஆரும் கமுகு என்ன அயிர்ப்புறக் கொண்டு தாழ - யாரும் கமுகோ என்று ஐயுறக் கையிற் கொண்டு வணங்க, பாரும் திசையும் புகழ் பங்கயச் செங்கை தாங்கி - (அக் கரும்பினைப்) புவியும் திசைகளும் புகழும்படியான 'தாமரை மலர் போன்ற சிவந்த' கையிற்றாங்கி, நீரும்

பிறையும் கரந்தார் தமை நேர்ந்து சொல்வான் - கங்கையையும் மதியை யும் ஒளித்து வந்த சித்தசாமிகளைப் பார்த்துக் கூறுவான்.

செல்வக் கன்னல்-செழுமையுள்ள கரும்பு. ஆரும்: யாரும் என்பதன் மரூஉ. கையுறையாகக் கொண்டு வணங்க. கொடையாற் புகழும் கை யென்க. (௧௧)

வல்லாரில் வல்லே மெனவும்மை மதித்த நீரிக்
கல்லானைக் கிந்தக் கரும்பை யருத்தி னெல்லாம்
வல்லாரு நீரே மதுரைப்பெரு மானு நீரே
அல்லா லெவர்நும் மனம்வேட்ட தளிப்ப னென்றான்.

(இ - ள்.) வல்லாரில் வல்லேம் என உம்மை மதித்த நீர் - வல்ல வர்களுள் வல்லே மென்று உம்மை மதித்துக்கொண்ட நீர், இக்கல் லானைக்கு இந்தக் கரும்பை அருத்தின் - இந்தக் கல்லானைக்கு இக் கரும்பினை உண்பித்தால், எல்லாம் வல்லாரும் நீரே - எல்லாம் வல்ல சித்தரும் நீரே மதுரைப் பெருமானும் நீரே அல்லால் எவர் - மதுரை நாயகனும் நீரேயன்றி வேறு யாவர், நும்மனம் வேட்டது அளிப்பன் என்றான் - பின்பு நுமது மனம் விரும்பியதைக் கொடுப்பேன் என்று கூறினான்.

வல்லாரெல்லாருள்ளும் யாம் வல்லேமென மதித்த வென்க; ஏழனுருபு கூட்டிப் பிரித்தற் பொருளில் வந்தது. (௧௨)

என்னா முகிலைத் தளையிட்டவன் கூறக் கேட்டுத்
தென்னா வருதி யெனப்புன்னகை செய்து சித்தர்
நின்னால் வருவ தெமக்கேது நினக்கு நாமே
உன்னாசை தீரத் தருகின்ற தலாம லுண்டோ.

(இ - ள்.) என்னா முகிலைத் தளை இட்டவன் கூற - என்று மேகத் தைச் சிறையிட்ட பாண்டியன் சொல்ல, சித்தர் கேட்டு - அம்மொழி யைச் சித்தமூர்த்திகள் கேட்டு, தென்னா வருதி எனப் புன்னகை செய்து - பாண்டியனே வருவாய் எனப் புன்னகை புரிந்து, எமக்கு உன்னால் வருவது ஏது - எமக்கு உன்னால் வரும் பயன் யாது உளது, உன் ஆசை தீர - உனது அவா அடங்க, நாமே நினக்குத் தருகின்றது அலாமல் உண்டோ - நாமே உனக்குக் கொடுக்கின்ற தல்லாமல் வேறு உண்டோ?

'நும் மனம் வேட்டது அளிப்பன்' என மீட்டுங் கூறியதற்கு விடை யாக இங்ஙனம் கூறினார். தருகின்றது: தொழிற்பெயர். நின்பாற் பெறுவ தொன்றுண்டோ என்க. (௧௩)

செல்லா வுலகத் தினுஞ்சென்றொரு விஞ்சை கற்றோர்
பல்லாரு நன்கு மதிக்கப்பய னெய்து வார்கள்
எல்லா மறிந்த வெமக்கோன்றிலு மாசை யில்லை
கல்லானை கன்னல் கறிக்கின்றது காண்டி யென்றார்.

(இ - ள்.) ஒரு விஞ்சை கற்றோர் - யாதானும் ஒரு வித்தையினைக் கற்றோர், செல்லா உலகத்தினும் சென்று - போதற்கரிய உலகத்தினும் போய், பல்லாரும் நன்கு மதிக்கப் பயன் எய்துவார்கள் - பலரும் நன்கு மதிக்க (அவ்விஞ்சையைக் காட்டிப்) பயனடைவார்கள்; எல்லாம் அறிந்த எமக்கு ஒன்றிலும் ஆசையில்லை - எல்லா விஞ்சைகளையும் உணர்ந்த எமக்கு ஒன்றிலும் விருப்பம் இல்லை; கல்லானை கன்னல் கறிக்கின்றது காண்டி என்றார் - கல்லானையானது ஈதோ கரும்பினைக் கடிக்கின்றதைக் காண்பாய் என்றார்.

நன்கு மதிக்கும்படி விஞ்சையைக் காட்டி என விரிக்க. காண்டி : ஏவலொருமை; ட் ; எழுத்துப்பேறு. (கஎ)

கடைக்கண் சிறிதே குறித்தார்முன் கடாக்கல் யானை
மடைக்கண் டிறந்து மதமூன்றும் வழிய விண்வாய்
அடைக்கும் படிவாய் திறந்தார்த்துப் புழைக்கை நீட்டித்
தொடைக்குன்ற னன்கைச் சுவைத்தண்டைப் பறித்த தன்றே.

(இ - ள்.) சிறிது கடைக்கண் குறித்தார் முன் - சிறிது கடைக்கண் வைத்தருளிய சித்தருக் கெதிரே, கடாக்கல் யானை - மதத்தினையுடைய கல்யானையானது, மடைக்கண் திறந்து மத மூன்றும் வழிய - மடை போலக் கண் திறந்து மூன்று மதங்களும் ஒழுக, விண்வாய் அடைக்கும் படி வாய் திறந்து ஆர்த்து - மேகத்தின் வாய் அடைக்குமாறு வாயைத் திறந்து பிளிறிட்டு, புழைக்கை நீட்டி - தொளையினையுடைய துதிக்கையை நீட்டி, தொடைக்குன்று அனன் கைச்சுவைத் தண்டைப் பறித்தது - மாலையை யணிந்த மலையை ஒத்த பாண்டியன் கையிலிருந்த கரும்பைப் பிடுங்கியது.

என்று கூறிக் கடைக்கண் குறித்தார் முன் என்க. கடாக் கல்யானை - கல்லானையாகிய மதயானை. இடியோசையும் கீழ்ப்பட ஆர்த்ததென்றார். தொடைக்குன்று அனன் : இல்பொருளுவமை. சுவைத்தண்டு - கரும்பு. அன்று, ஏ : அசைகள். (கஅ)

பறித்துக் கடைவாய் வழிசாறளி பாய்ந்து நக்கக்
கறித்துக் குதட்டிப் பருகிக்கர மூச லாட
நெறித்துத் தருக்கி நிழல்சீறி நிமிர்ந்து நிற்ப
மறித்துக் கடைக்கண் குறித்தார்பினு மாயம் வல்லார்.

(இ - ள்.) பறித்து - அங்ஙனம் பிடுங்கி, கடைவாய் வழிசாறு அளி பாய்ந்து நக்க - கடைவாயில் வழிகின்ற சாற்றினை வண்டுகள் மொய்த்துப் பருகும்படி, கறித்துக் குதட்டிப் பருகி - கடித்து மென்று தின்று, கரம் ஊசல் ஆட - துதிக்கை ஊஞ்சல் போல ஆடாநிற்க, நெறித்துத் தருக்கி நிழல் சீறி நிமிர்ந்து நிற்ப - நெறித்துத் தருக்குற்று நிழலைச் சீறி நிமிர்ந்து நிற்க, பினும் மாயம் வல்லார் - பின்னும் விஞ்சையில்வல்ல சித்தர், மறித்துக் கடைக்கண் குறித்தார் - மீட்டும் கடைக் கண்ணாற் குறித்தருளினர்.

பருகி - தின்றென்னும் பொருட்டு. நெறித்து . உடலை நெளித்து. திமிலைச் சேறுதல் மதவேழத்தின் இயல்பு. மாயம் - விசித்திரச் செய்கை (௧௬)

மட்டுற்ற தாரான் கழுத்திற்கண்ட மாலை தன்னை
எட்டிப் பறித்த திகல்காஞ்சுகி மாக்கள் சீறிக்
கிட்டிக் களிற்றைப் புடைப்பான்கிளர் கோல்கொண் டோச்சச்
சிட்டத் தவர்கண் சிவந்தானையைச் சீறி நோக்க.

(இ - ள்.) மட்டு உற்ற தாரான் கழுத்தில் கண்ட மாலை தன்னை எட்டிப் பறித்தது - மணமிக்க மாலையையணிந்த பாண்டியன் கழுத்திலுள்ள (முத்தாலாகிய) கண்டமாலையை எட்டிப் பிடுங்கியது; இகல் காஞ்சுகி மாக்கள் சீறி - (உடனே) மாறுபட்ட மெய்காவலர் சீற்றங்கொண்டு, களிற்றைப் புடைப்பான் கிட்டிக் கோல் கொண்டு ஓச்ச - யானையை அடித்தற்கு நெருங்கிக் கோலினைக் கொண்டு வீச, சிட்டத்தவர் கண் சிவந்து ஆனையைச் சீறி நோக்க - சித்தமூர்த்திகள் கண் சிவந்து யானையைச் சினந்து பார்க்க.

கண்டமாலை - கழுத்தணி; பெயர். இகல்-இகலிய, சிட்டராகிய தவர் என்க; சிட்டர் - மேலோர். ஓச்சினர் - ஓச்சிய வளவில் என விரித்துரைக்க. (௧௭)

கண்டா வளியைக்* களிறுண்டது கண்கள் சேப்புக்†
கொண்டா னரசன் சிவயோகரிற் கோப மூளத்
தண்டா வரசன் றமருட்டறு கண்ணர் சீறி
வண்டா ரிதழி மறைத்தாரை யடிக்க வந்தார்.

(இ - ள்.) களிறு கண்டாவளியை உண்டது - யானையானது கண்ட மாலையை உண்டுவிட்டது; அரசன் கண்கள் சேப்புக் கொண்டான் - மன்னன் கண்கள் சிவந்து, சிவயோகரில் கோபம் மூள - சிவயோக சித்தர்மீது கோபம் மிக, தண்டா அரசன் தமருள் - நீங்காத அரசன் மெய் காப்பாளருள், தறுகண்ணர் சீறி - அஞ்சாமையையுடைய சிலர் சினந்து, வண் இதழித் தார் மறைத்தாரை அடிக்க வந்தார் - செழுமையாகிய கொன்றை மாலையை மறைத்துவந்த சித்தரை அடிக்கும் பொருட்டு நெருங்கி வந்தனர்.

கண்டாவளி; வடமொழி நெடிற்சந்தி. ஆவலி - மாலை; ஆவளி யெனத் திரியும். சேப்பு - சிவப்பு. கண்கள் சேப்புக் கொண்டான். சினைவினை முதன்மேல் நின்றது. கொண்டான்: முற்றெச்சம். கோப மூளக் கொண்டான் என்றலுமாம். யோகரில் - யோகரிடத்து. தண்டாத தமர் என்க. வண் இதழித்தார் என மாற்றுக; வண்டு மொய்த்த இதழி யென்றல் சிறப்பின்று. (௧௮)

(பா - ம்.) *கண்டாவலி. †கண்கள் சேப்பக்.

அப்போ திளமூர லரும்பியச் சித்த சாமி
கைப்போ தமைத்துக் கடிந்தோர்தமை நின்மி னென்ன
மைப்போ தகமன் னவர்வைத்தடி பேர்க்க லாற்ரு
தொப்போ தரிய நிலையோவியம் போல நின்ருர்.

(இ - ள்.) அப்போது அச்சித்தர் சாமி - அங்ஙனம் வரும்பொழுது அந்தச் சித்த மூர்த்திகள், இளமூரல் அரும்பி - புன்னகை புரிந்து, கடிந்தோர் தமைக் கைப்போது அமைத்து நின்மின் என்ன - வெகுண்டு வந்தோரைக் கைம்மலராலமைத்து நில்லுங்கள் என்று சொல்ல, மைப்போதகம் அன்னவர் - கரிய யானையை ஒத்த அவ்வீரர்கள், வைத்த அடி பேர்க்கலாற்ருது - வைத்த அடியைப் பெயர்க்கமுடியாது, ஒப்பு ஓது அரிய நிலை ஓவியம்போல நின்ருர் - ஒப்புச் சொல்லுதற்கரிய நிலையினையுடைய ஓவியம்போல நின்ருர்கள்.

அமைத்து நின்மினென்ன வென்க. தருக்குடைமையாற் போதக மன்ன ரென்ருர். வைத்த என்னும் பெயரெச்சத்து அகரம் தொக்கது. அரிய ஓவியம் நிலை யோவியம் எனத் தனித்தனி கூட்டுக. நிலை - அசையாது நிற்றல். (௧௯)

மத்தக் களிற்ருன் வெகுளித்தழன் மாறி யன்பு
பொத்தப் புதைந்த மனத்தற்புதம் பொங்கிச் சோரச்
சித்தப் பெருமா னடிமாமுடி தீண்டப் பாச
பெத்தத் தமியேன் பிழையைப்பொறு மேன்று வீழ்ந்தான்.

(இ - ள்.) மத்தக்களிற்ருன் - மத மயக்கத்தையுடைய யானையையுடைய பாண்டியன், வெகுளித் தழல் மாறி - சினத்தீ அவியப்பெற்று, அன்பு பொத்தப் புதைந்த மனத்து அற்புதம் பொங்கிச் சோர - அன்பு மூடுதலாற் புதைபட்ட மனத்தின்கண் வியப்பானது பொங்கி வழிய, சித்தப் பெருமான் அடி மா முடி தீண்ட - சித்தசாமியின் திருவடிகள் தனது பெருமை பொருந்திய முடியினைத் தீண்ட, பாச பெத்தத் தமியேன் பிழையைப் பொறும் என்று வீழ்ந்தான் - பாசத்தாற் கட்டுண்ட ஏழையேன் பிழையைப் பொறுத்தருளுமென்று வீழ்ந்து வணங்கினன்.

மத்தம் - உன்மத்தம்; மத்தகமுமாம். சோர - சோராநிற்க. தீண்டுமாறு வீழ்ந்தானென்க. பெத்தம் - கட்டுண்ட நிலைமை. (௨௦)

அன்புக் கிரங்குங் கருணைக்கட லான வையர்
இன்புற்று வேண்டும் வரங்கேளெனத் தாழ்ந்து வேந்தன்
நன்புத் திரப்பே றருள்வாயென நல்கிச் செங்கை
வன்புற்ற வேழ மிசைவைத்தரு ளுட்டம் வைத்தார்.

(இ - ள்.) அன்புக்கு இரங்கும் கருணைக் கடலான ஐயர் - அன்புக்கு இரங்கும் அருட்கடலான பெருமான், இன்புற்று - மகிழ்ந்து, வேண்டும் வரம் கேள் என - விரும்பிய வரத்தினைக் கேட்பாயாக என்று கூற, வேந்தன் தாழ்ந்து - அபிடேக பாண்டியன் வணங்கி, நன்

புத்திரப்பேறு அருள்வாய் என - நன்மைவாய்ந்த புதல்வர்ப் பேற்றினை அளிப்பாயாக என்று வேண்ட, நல்கி - (அங்ஙனமே) அருள் செய்து, வன்பு உற்ற வேழமிசை செங்கைவைத்து அருள் நாட்டம் வைத்தான் - வலிமைமிக்க யானையின் மேலே சிவந்த திருக்கையை வைத்து அருளோக்கம் வைத்தருளினான். (உ௧)

இரங்குதல் - எளிவருதல்.

[கலி விருத்தம்]

தழைக்கு நீள்கதிர்த் தண்முத்த மாலையைப்
புழைக்கை நீட்டிக் கொடுத்தது போதகம்
மழைக்கை நீட்டினன் வாங்கின னீதியிற்
பிழைக்க லாத பெருந்தகை வேந்தனே.

(இ - ள்.) போதகம் - யானையானது, புழைக்கை நீட்டி - தனது தொளையுடைய துதிக்கையை நீட்டி, தழைக்கு நீள் கதிர் தண் முத்த மாலையைக் கொடுத்தது - தழைக்கின்ற மிக்க ஒளியினையுடைய தண்ணிய முத்துமாலையைக் கொடுத்தது; நீதியில் பிழைக்கலாத பெருந்தகை வேந்தன் - நீதியினின்று தவறாத பெருந் தன்மையை யுடைய பாண்டி மன்னன், மழைக்கை நீட்டினன் வாங்கினன் - முகில் போலுங் கையினை நீட்டி அதனை வாங்கினான்.

கொடுக்குங் கையால் வாங்கின னென்பார் 'மழைக்கை நீட்டினன் வாங்கினன்' என்றார். நீட்டினன்: முற்றெச்சம்; நீதி - அரசாளு முறைமை. பிழைக்கலாத: எதிர்மறைப் பெயரெச்சம்; குவ்வும் அல்லும் சாரியை; ஆ: எதிர்மறை யிடைநிலை. (உ௨)

முத்த மாலிகை வாங்குமுன் முன்னின்ற
சித்த சாமி திருவுருக் கண்டிலன்
மத்த யானை வடிவமு மேனைய
ஒத்த தாக வுரவோன் வெருவினான்.

(இ - ள்.) முத்த மாலிகை வாங்கு முன் முன்நின்ற சித்தசாமி திருவுருக் கண்டிலன் - அங்ஙனம் முத்து மாலையை வாங்குதற்கு முன் எதிரே நின்றருளிய சித்த மூர்த்திகளின் திருவுருவத்தைக் காணா யிலன்; மத்தயானை வடிவமும் - மதமயக்கத்தினையுடைய யானையின் உருவமும், ஏனைய ஒத்ததாக - (அங்கு நின்ற) மற்றைய கல்லானை களைப் போன்றதாக, உரவோன் - வலியோனாகிய மன்னன், வெருவினான் - அஞ்சினான்.

ஒத்ததாயிற்று; அங்ஙனமாகவே வெருவினான் என விரித்துரைக்க. திருவுருவைக் காணாமலும் ஒத்ததாயினமை கண்டும் வெருவினான். வெருவுதலில்லாத மதுகை யுடையான் வெருவினான் என்றார். (உ௩)

இந்த வாட லெமக்குயி ராயவிவ்
வந்த மில்லி யருள்விளை யாட்டேனா
முந்தை வேத முதல்வனை மீளவும்
வந்து வந்தனை செய்தனன் மன்னனே.

(இ - ள்.) மன்னன் - (அங்ஙனம் அஞ்சிய) அரசனானவன், இந்த ஆடல் - இத் திருவிளையாடல், எமக்கு உயிராய இவ்வந்தம் இல்லி அருள் விளையாட்டு என - எமக்கு உயிராகிய இந்த அழிவில்லாத சோமசுந்தரக் கடவுளின் அருள் விளையாடலே என்று, முந்தைவேத முதல்வனை - முன்னவனாகிய வேதநாயகனை, மீளவும் வந்து வந்தனை செய்தனன் - மீண்டும் வந்து வணங்கினன்.

அந்தம் இல்லி - ஈறில்லாதவன்; இ: வினைமுதற்பொருள் விகுதி. முந்தை வேதத்திற்கு அடையுமாம். முன்பு சோமசுந்தரக் கடவுளை வணங்கித் திருக்கோயிலை வலம்வருகையிற் சிவசித்தரைக் கண்டானாகலின் மீளவும் 'வந்துவந்தனை செய்தனன்' என்றார். (உச)

முழுது ணர்ந்த முதல்வநின் னாடலை
இழுதை யேனறி யாதளந் தேனெனா
அழுதி றைஞ்சி யபராத மீந்துகை
தொழுது நின்று துதிக்கத் தொடங்கினான்.

(இ - ள்.) முழுது உணர்ந்த முதல்வ-முற்று முணர்ந்த முதல்வனே, நின் ஆடலை-உன் திருவிளையாடலை, இழுதையேன் அறியாது அளந்தேன் எனா - அறிவிலியாகிய யான் அறியாமையால் அளக்கலுற்றேன் என்று, அழுது இறைஞ்சி அபராதம் ஈந்து - அழுது வணங்கித் தண்டம் இறுத்து, கைதொழுது நின்று துதிக்கத் தொடங்கினான்-கைகூப்பி நின்று துதிக்கத் தொடங்கினான்.

இழுதையேன் என்பதற்குப் பேயனேன் என்றும் பொய்யினேன் என்றும் கூறலுமாம். அறியாது - அறியாமையால். அபராதம் - குற்றம், குற்றத்திற்குக் கழுவாயாக இறுக்கும் தண்டம்; ஈண்டுத் தண்டத்தை யுணர்த்திற்று. (உரு)

[கொச்சகக் கலிப்பா]

வேதியாய் வேத விளைபொருளாய் வேதத்தின்
நீதியாய் நீதி நெறிகடந்த நீளொளியாய்
ஆதியா யீறாய் நடுவா யவைகழிந்த
சோதியாய் நின்றாயென் சோதனைத்தோ நின்னியல்பே.

(இ - ள்.) வேதியாய் - வேதத்தை அருளியவனாகியும், வேத விளை பொருளாய் - வேதத்தில் விளையும் பயனாகியும், வேதத்தின் நீதியாய் - வேதங்கூறும் நீதியாகியும், நீதிநெறி கடந்த நீள் ஒளியாய் - அந்நீதி நெறிகளைக் கடந்த நீண்ட ஒளியாகியும், ஆதியாய் ஈறாய் நடுவாய் அவை கழிந்த சோதியாய் - முதலாகியும் முடிவாகியும் இடையாகியும் அவற்றுக்கு அப்பாலான ஒளிவடிவாகியும், நின்றாய் - நின்றவனே, நின் இயல்பு - இங்ஙனமாகிய நினது தன்மை, என் சோதனைத்தோ - என் சோதனையில் அகப்படற்பாலதோ ?

வேதி - வேதத்தையுடையவன். வேத விளைபொருள் - வேதத்தின் முடிந்த உண்மைப் பொருள். நீதியாய் நின்று அவ்வழி பொழுதும்

உயிர்கட்கு ஏற்ற பயனளித்தும் தான் அதனைக் கடந்து நின்றவன் என்றார். சோதனைத்தோ - சோதனை யகத்ததோ. நின்றாய்: பெயர். ஓகாரம் எதிர்மறைப் பொருட்டு.

"ஆதி யானை யமரர் தொழப்படும்
நீதி யானை நியம நெறிகளை
ஓதி யானை யுணர்தற் கரியதோர்
சோதி யானைக்கண் டீர்தொழற் பாலதே"

என்னும் தமிழ்மறை இங்குச் சிந்திக்கற்பாலது. (௨௬)

நின்னான் மொழிந்தமறை நின்னடிகள் வந்தித்தும்
பன்னா ளருச்சித்தும் பாதந் தலைசுமந்தும்
உன்னாமம் வாசித்து முன்னையறி யேனென்று
சொன்னா லடியனேன் *சோதனைத்தோ நின்னியல்பே.

(இ - ள்.) நின்னால் மொழிந்த மறை - நின்னாலே திருவாய் மலர்ந்தருளப்பட்ட வேதமானது, நின் அடிகள் வந்தித்தும் - உன் திருவடிகளை வணங்கியும், பல்நாள் அருச்சித்தும் - பலநாள் அருச்சனை புரிந்தும், பாதம் தலை சுமந்தும் - உன் திருவடிகளைத் தலையிற் சுமந்தும், உன் நாமம் வாசித்தும் - உன் திருப் பெயர்களைப் படித்தும், உன்னை அறியேன் என்று சொன்னால் - உன்னை அறிகிலேன் என்று முறையிடுமாயின், நின் இயல்பு அடியனேன் சோதனைத்தோ - அங்ஙனமாய நினது தன்மை அடியேனது சோதனையில் அகப்படற் பாலதோ ?

திருமறைக் காட்டிலே மறை அருச்சித்து வந்தித்தமை கொள்க. பாதம் தலை சுமத்தல் - பாதுகையா யிருந்து சுமத்தல். நாமம் வாசித்தல் - அவன் திருப்பெயர்களையே கூறுதல். உன்னாலும் உன் பெருமை உணர்தற்கரிதென்பார், "நின்னால் மொழிந்த மறை உன்னை யறியேனென்று சொன்னால்" என்றார். வந்தித்தல் முதலிய ஒன்றுஞ் செய்யாத அடியேன் என்க. மறை : சாதியொருமை. மறையும் என்னும் உம்மை தொக்கது. (௨௭)

[வேறு]

பெரியதினும் பெரியதுமாய்ச் சிறியதினுஞ் சிறியதுமாய்
அரியதினு மரியதுமா யெளியதினு மெளியதுமாய்க்
கரியதுமாய்க் காண்பானுங் காட்சியுமா யவைகடந்த
துரியமுமாய் நின்றாயேன் சோதனைத்தோ நின்னியல்பே.

(இ - ள்.) பெரியதினும் பெரியதுமாய் - பெரிதினும் பெரிதாகியும், சிறியதினும் சிறியதுமாய் - சிறிதினும் சிறிதாகியும், அரியதினும் அரியதுமாய் - அரிதினும் அரிதாகியும், எளியதினும் எளியதுமாய் -

(பா - ம்.) *அடியேன்றன், அடியேனென்.

எளிதினும் எளிதாகியும், கரியதுமாய் - சான்றாகியும், காண்பானும் காட்சியுமாய் - காண்பவனும் காட்சியுமாகியும், அவை கடந்த துரியமுமாய் - அவற்றைக் கடந்த துரியமாகியும், நின்றாய் - நின்றவனே, நின் இயல்பு என் சோதனைத்தோ - இங்ஙனமாய நினது தன்மை எனது சோதனையில் அகப்படற்பாலதோ?

பெரிதிற் பெரிதாதல் - அண்டமோரணுவாம் பெருமை கொள்ளுதல்;

"அண்டப் பகுதியி னுண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் றுன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன்"

என்பது திருவாசகத் திருமறை. இவ்வாசிரியர், கடவுள் வாழ்த்திலே,

"அண்டங்க ளெல்லா மணுவாக வணுக்க ளெல்லாம்
அண்டங்க ளாகப் பெரிதாய்ச்சிறி தாயி னானும்"

என்றமையும் காண்க. கரி - சான்று; அறிவித்து உடனிருந் தறிவது. காண்பான் - அறிபவன் ஆன்மா. காட்சி - அறிவு.

"அறிவானுந் தானே யறிவிப்பான் றானே
அறிவா யறிகின்றான் றானே - அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பா ராகாசம்
அப்பொருளுந் தானே யவன்"

என்னும் அம்மையார் திருவாக்கும் நோக்குக. உம்மைகள் மாற்றியுரைக்கப்பட்டன. (உ அ)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

என்றுபல முறைபழிச்சி மனையெய்தி விக்ரமனை யீன்று பன்னாட்
டொன்றுமுறை கோலோச்சி விக்கிரமன் சுவன்மிசைப்பார் சுமத்திப் பாசம்
வென்றுகளைந் தருட்சித்த சாமிதிரு வருளாற்கால் விளைபே சின்ப
மன்றன்மது* வீழ்வண்டிற் கலந்திருந்தா னபிடேக மாறன்மன்றே.

(இ - ள்.) என்று பல முறை பழிச்சி - என்று பலமுறை துதித்து, மனை எய்தி - தனது அரண்மனையை அடைந்து, விக்ரமனை ஈன்று - விக்கிரமனென்னும் புதல்வனைப் பெற்று, பல் நாள் தொன்று முறை கோல் ஓச்சி - பலநாள்வரை பழைய முறைப்படியே செங்கோலை நடத்தி, விக்கிரமன் சுவல்மிசை பார் சுமத்தி - விக்கிரமனது தோளின் மேல் நிலச்சுமையை ஏற்றி, பாசம் வென்று களைந்து - பாசத்தினை வென்று

(பா - ம்.) * மன்றமது.

போக்கி, அருட்சித்தசாமி திருவருள் நோக்கால் விளைபேரின்பம் - அருளுருவாகிய சித்தமூர்த்திகளின் திருவருட் பார்வையால் விளைந்த பேரின்பத்தின்கண், மன்றல் மது வீழ் வண்டில் - மணம் பொருந்திய தேனின்கண் விழ்ந்த வண்டினைப்போல, அபிடேகமாறன் கலந்திருந்தான்- அபிடேக பாண்டியன் இரண்டறக் கலந்திருந்தான்.

தமிழிலே ககரவொற்றின் பின் வேறுமெய் வந்து மயங்காதாக லின் விக்கிரமன் என்றே வருதல் வேண்டும்; செய்யுளோசை மிகாமற் பொருட்டு 'விக்ரமன்' என நின்றது. சோமசுந்தரக் கடவுள் சித்தராக வெளிவந்து அருள் புரிந்தமையால் 'சித்தசாமி திருவருணோக்கால்' என்றார். மதுவில் வீழ்ந்த வண்டு அதனையுண்டு பெயராது கிடத்தல் போல வென்க;

''அதுவென்று லெதுவெனவந் தடுக்குஞ் சங்கை
யாதலினு லதுவெனலு மறவே விட்டு
மதுவுண்ட வண்டெனவுஞ் சனக னாதி
மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தார்''

என்று தாயுமானவடிகள் கூறுமாறுங் காண்க. மன்ற என்பது பாடமாயின் தேற்றமாக என்றுரைக்க. மன்னும் ஒவும் அசைகள். (உக)

ஆகச் செய்யுள் - கஙஅ

இருபத்திரண்டாவது

யானையெய்த படலம்

[கலிவிருத்தம்]

கட்டவிழ் கடுக்கையர் கலானை கழைதின்ன
இட்டதிது பஞ்சவ னிடத்தமண ரேவி
விட்டமத யானைவிழ மேவலர் புரத்தைச்
சுட்டகணை விட்டுயிர் தொலைத்தமுறை சொல்வாம்.

(இ - ள்.) இது - இத் திருவிளையாடல், கட்டு அவிழ் கடுக்கையர் கல் ஆனை கழை தின்ன இட்டது - முறுக் கவிழ்ந்த கொன்றைமலர் மாலையை யணிந்த சித்த மூர்த்திகள் கல்லானையானது கரும்பினைத் தின்னுமாறு அளித்ததாகும்; பஞ்சவன் இடத்து அமணர் ஏவி விட்ட - விக்கிரம பாண்டியன்மேல் சமணர்கள் ஏவிய, மதயானை விழ - மதத்தை யுடைய யானையானது விழுமாறு, மேவலர் புரத்தைச் சுட்ட கணை விட்டு - பகைவரின் திரிபுரத்தை நீருக்கிய அம்பை விட்டு, உயிர் தொலைத்த முறை சொல்வாம் - அதன் உயிரினைப் போக்கிய திருவிளையாடலை இனிக் கூறுவாம்.

கல்லானை என்பதில் லகரந் தொக்கது. இது வென்றது மேலே கூறியதனை. (க)

விக்கிரம பாண்டியன் வெலற்கரிய செங்கோல்
திக்குநில னுந்திறைகொள் செல்வநிறை வெய்த
அக்கிரம வெங்கலி யரும்பகை யொதுங்கச்
ச்க்கர முருட்டியிடர் சாய்த்துமுறை செய்வான்.

(இ - ள்.) வெலற்கு அரிய செங்கோல் - பிறரால் வெல்லுதற் கரிய செங்கோலையுடைய, விக்கிரம பாண்டியன் - விக்கிரம வழுதியானவன், திக்கும் நிலனும் திறைகொள் செல்வம் நிறைவு எய்த-எட்டுத் திக்கினும் புவி முழுதிலும் திறையாகக் கொண்ட செல்வமானது நிறைவினைப் பொருந்தவும், அக்கிரம வெங்கலி அரும்பகை ஒதுங்க - கொடிய கலி யாகிய அரிய பகையானது ஓடவும், சக்கரம் உருட்டி - தனது ஆணை யாகிய திகிரியைச் செலுத்தி, இடர் சாய்த்து முறை செய்வான் - குடிகளின் துன்பத்தைப் போக்கி முறை செய்வானாயினன்.

செங்கோலையுடைய பாண்டியன் எனக் கூட்டுக. திக்கு, நிலன் என்பன ஆகு பெயர்கள். அக்கிரமம் - நெறியின்மை. அக்கிரமமும் வெம்மையும் கலிக்கு அடை. கலி - வறுமையும் தீமையும் முதலியன. நீதி திறப்புதலாகிய கலி என்பாருமுளர். (உ)

புத்தரம ணாதிய* புறக்களை யகழ்ந்து
நித்தமறை யாகம நெறிப்பயிர் வளர்த்து
மெய்த்தவிதி பத்தியின் விளைந்தபயன் யாருந்
துய்த்திட மனுத்தொழி னடத்திவரு தூயோன்.

(இ - ள்.) புத்தர் அமண் ஆதிய புறக்களை அகழ்ந்து - புத்தரும் சமணரும் முதலிய புறமதக் களைகளைக் களைந்து, நித்தம் மறை ஆகம நெறிப்பயிர் வளர்த்து - அழியாத வேதநெறியும் ஆகம நெறியுமாகிய பயிரினை வளர்த்து, மெய்த்த விதி பத்தியின் விளைந்த பயன் - (அப் பயிரினை) மெய்ம்மையையுடைய விதியாகவும் பத்தியாகவும் விளைந்த பயனை, யாரும் துய்த்திட - அனைவரும் நுகர, மனுதொழில் நடத்தி வரு தூயோன் - மனுமுறைப்படி ஆட்சி புரிந்து வருகின்ற தூயவனாகிய பாண்டியன்.

புத்தம் சமணம் முதலிய புறச் சமயங்களாகிய களையென்க. மறை யாகம நெறிப்பயிர் - வைதிக சைவமாகிய பயிர். விதி பத்தியின் - விதி நெறியும் பத்தி நெறியுமாக; இன்; சாரியை. மனுத்தொழில் - நீதி ஆட்சி. இஃது உருவகவணி. (ங)

மருவிதழி யானுறையும் வானிழி விமானத்
தருகுவட பக்கமுற வாலய மெழுப்பி
உருவரு விரண்டினையு மொருவிவரு சித்தர்
திருவுருவு கண்டுபணி செய்தொழுகு† நாளில்.

(இ - ள்.) மரு இதழியான் உறையும் வான் இழி விமானத்து அருகு வடபக்கம் உற - மணம் பொருந்திய கொன்றை மலர் மாலையை யணிந்த சோமசுந்தரக் கடவுள் வீற்றிருக்கும் விண்ணுலகி னின்றும் இறங்கிய விமானத்தின் அருகில் வடபக்கத்தில், ஆலயம் எழுப்பி - திருக்கோயில் எடுப்பித்து, உரு அரு இரண்டினையும் ஒருவி வரு சித்தர் திரு உருவு கண்டு - உருவத்தினையும் அருவத்தினையும் நீக்கி அருளுருக் கொண்டுவந்த சித்தசாமிகளின் திருவுருவத்தை ஆக்கி, பணிசெய்து ஒழுகு நாளில் - தொண்டு செய்தொழுகும் காலத்தில்.

பக்கமுற - பக்கமாக. உருவும் அருவும் மாயையின் காரியமாகலின் அவற்றை ஒருவிவரு என்றார். கண்டு - பிரதிட்டித்து. (ச)

செய்யகதி ரோன்வழிய செம்பிய னொருத்தன்
கையனவன் வென்றிபயில் காஞ்சிநக ருள்ளான்
பொய்யமணர் கட்டுரை புறத்துறையி னின்றான்
மையின்மதி மாறனொடு மாறுபட நின்றான்.

(இ - ள்.) செய்ய கதிரோன் வழிய செம்பியன் ஒருத்தன் - சிவந்த கிரணங்களை யுடையவனாகிய சூரியன் வழியில் சோழன் ஒருவன், வென்றி பயில் காஞ்சி நகருள்ளான் - வெற்றி பொருந்திய காஞ்சி நகரத்தில் இருப்பானாயினன்; பொய் அமணர் கட்டுரை புறத்துறையில் நின்றான் -

---

(பா - ம்.) * ஆதியர். † செய்துவரு.

பொய்ம்மையுடைய சமணர்கள், கட்டிக் கூறிய சமண் மதமாகிய புற நெறியில் நின்றவனும், கையன் - வஞ்சகனுமாகிய, அவன் - அச்சோழன், மை இல் மதி மாறனொடு - குற்றமில்லாத சந்திரன் மரபில் வந்த பாண்டியனோடு, மாறுபட நின்றான் - மாறுபட்டிருந்தான்.

வழிய - வழியினையுடைய. கட்டுரை - புனைந்து கூறிய. ஒருத்தன் உள்ளான் புறத்துறையில் நின்றானும் கையனுமாகிய அவன் மாறுபட நின்றான் என முடிக்க. மாறுபட - மாறுபட்டு. (ரு)

முடங்கன்மதி செஞ்சடை முடித்துவிடை யேறும்
விடங்கரது சேவடி விழுங்கிய மனத்து
மடங்கனிகர் தென்னனெதிர் வந்துபொர லாற்று
தடங்கலனோர் வஞ்சனையி னாலட மதித்தான்.

(இ - ள்.) முடங்கல் மதி செஞ்சடை முடித்து - வளைவினையுடைய பிறையைச் சிவந்த சடையில் முடித்து, விடை ஏறும் - இடபவூர்தியில் ஏறியருளும், விடங்கரது சேவடி விழுங்கிய மனத்து - அழகராகிய சோமசுந்தரக் கடவுளின் சிவந்த திருவடிகளை உட்கொண்ட மனத்தினை யுடைய, மடங்கல் நிகர் தென்னன் எதிர் வந்து பொரல் ஆற்றாது - சிங்கத்தை ஒத்த விக்கிரமபாண்டியனெதிரே வந்து போர் செய்த லாற்றாது, அடங்கலன் ஓர் வஞ்சனையினால் அட மதித்தான்-பகைவனாகிய அச்சோழன் ஒரு வஞ்சனையினாற் கொல்லக் கருதினான்.

விழுங்கிய - உட்கொண்ட; நன்கு பதித்த. பொரலாற்றாது - போர் செய்தற்கு வலியின்றி. ஓர் : விகாரம். (சு)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

அஞ்சனங் கவுஞ்சங் கோவர்த் தனந்திரி கூடங் காஞ்சிக்
குஞ்சரஞ் சையம்* மேம கூடமே விந்த மென்னும்
மஞ்சிவர் வரைக ளெட்டும் வைகுறு மமணர் தம்மில்
எஞ்சலில் குரவர்க் கோலை வேறுவே றெழுதி விட்டான்.

(இ - ள்.) அஞ்சனம் கவுஞ்சம் கோவர்த்தனம் திரிகூடம் - அஞ்சனமும் கிரவுஞ்சமும் கோவர்த்தனமும் திரிகூடமும், காஞ்சிக் குஞ்சரம் சையம் ஏமகூடம் விந்தம் என்னும் - காஞ்சியிலுள்ள அத்திகிரியும் சையமும் ஏமகூடமும் விந்தமும் என்று சொல்லப்பட்ட, மஞ்சு இவர் வரைகள் எட்டும் - முகில்கள் தவழும் எட்டு மலைகளிலும், வைகுறும் அமணர் தம்மில் - வசிக்கும் சமணர்களுள், எஞ்சல் இல் குரவர்க்கு வேறு வேறு ஓலை எழுதிவிட்டான்-குறைதலில்லாத ஆசிரியராயினோர்க்கு வேறு வேறாக ஓலை எழுதி அனுப்பினான்.

அஞ்சனம் - நீலவெற்பு. கவுஞ்சம், வடற்சொற் சிதைவு. அத்தி வெற்பினைப் பரியாயப் பெயராற் 'குஞ்சரம்' என்றார். எஞ்சல் இல் - மிக்க தொகையினையுடைய. (எ)

(பா - ம்.) * காஞ்சி குஞ்சர சையம்.

வடிவுபோ லுள்ள மெல்லா மாசிருள் புதைய நின்ற
அடிகண்மா ராவா ரெண்ணு யிரவரு மார்த்தார் வேய்ந்த
முடிகெழு வேந்தன் விட்ட முடங்கலை நிமிர்த்து வாசித்
திடிகெழு கார்போற் குன்றி னிழிந்துவே றிடத்திற் செல்வார்.

(இ-ள்.) வடிவுபோல் உள்ளம் எல்லாம் மாசு இருள் புதைய நின்ற அடிகள்மார் ஆவார் எண்ணுயிரவரும் - தம் வடிவு போன்றே உள்ள முழுதும் அஞ்ஞானமாகிய இருள்மூட நின்ற குரவராவார் எண்ணுயிரவரும், ஆர்தார் வேய்ந்த முடிகெழு வேந்தன் விட்ட முடங்கலை நிமிர்த்து வாசித்து - ஆத்திமாலையை யணிந்த முடிசூடிய சோழ மன்னன் விடுத்த ஓலையைப் பிரித்துப் படித்து, இடிகெழு கார் போல் - இடிமிக்க முகில்போல, குன்றின் இழிந்து வேறு இடத்தில் செல்வார் - மலைகளினின்றும் இறங்கி வேருகக் குறித்த இடத்திற் செல்வாராயினர்.

வடிவு அழுக்கால் மூடப்பட்டிருப்பது போன்றே மனம் அறியாமை யால் மூடப்பட்ட என்ருர்; புறத்தும் அகத்தும் தூய்மையில்லாதவர் என்றவாறு. மாசு - கறை, அறியாமை; இருள் மாசு என மாறி அறி யாமையாகிய அழுக்கு எனலுமாம். அடிகள்மார் - சமண குரவர்க்குச் சிறப்பாக வழங்கும் பெயர்: மார்: பெயர் விகுதி: ஆவார்: முதல் வேற்றுமைச் சொல். கருமையாலும் ஆரவாரத்தாலும் மலையினின் றிறங்குதலாலும் 'இடிகெழு கார்போல்' என்ருர். தம்மிடத்தின் வேருகிய குறித்த இடத்தில் என்க. (ரு)

யாவரு மொருங்கு கூடி யிருள்வழி கோள்வ தேய்ப்பக்
காவல்வல் லரணஞ் சூழ்ந்த காஞ்சிமா நகரத் தேய்திப்
பூவலர் தாரான் கோயிற் புறங்கடை புகுந்து வேந்தன்
ஏவலர் விடுப்ப வுள்போ யிறைமக னிருக்கை புக்கார்.

(இ-ள்.) யாவரும் ஒருங்குகூடி - அனைவரும் ஒன்று சேர்ந்து, இருள் வழி கொள்வது ஏய்ப்ப - இருளானது வழிச் செல்வதைப்போல (நடந்து), காவல் வல் அரணம் சூழ்ந்த காஞ்சிமா நகரத்து எய்தி - காவலையுடைய வலிய மதில் சூழ்ந்த பெரிய காஞ்சிப்பதியினை அடைந்து, பூ அலர் தாரான் கோயில் புறங்கடை புகுந்து - ஆத்தி மலரால் விளங்கும் மாலையை யணிந்த சோழனது அரண்மனையின் வாயிலை அடைந்து, வேந்தன் ஏவலர் விடுப்ப உள்போய் இறைமகன் இருக்கை புக்கார் - அரசனுடைய ஏவலாளர் விடுக்க உள்ளே சென்று அரசனிருப் பிடத்தை யுற்ருர்கள்.

இருள்வழி கொள்வ தேய்ப்ப என்றது இல்பொருளுவமை. ஏவலர் - வாயில் காப்போர். (கூ)

மன்னவன் முடிமேற் பீலி வைத்தன ராக்கங் கூற
அன்னவ னவரை நோக்கி வசியமுன் ஞறம் வல்லீர்
தேன்னனை யாபி சாரஞ் செய்துயிர் சேகுத்தா லுங்கட்
கேன்னது நாடு பாதி தருவல்போ யியற்று மென்ருன்.

(இ - ள்.) மன்னவன் முடிமேல் பீலி வைத்தனர் ஆக்கம்கூற - (புக்கவர்) சோழனுடைய முடியின்மேல் மயிற்றோகையை வைத்து ஆசிமொழி கூற, அன்னவன் அவரை நோக்கி - அம்மன்னன் அச்சமண குரவர்களைப் பார்த்து, வசியமுன் ஆறும் வல்லீர் - வசியம் முதலாகிய ஆறு தொழிலிலும் வல்லீரே, தென்னனை ஆபிசாரம் செய்து உயிர் செகுத்தால் - (நீவிர்) விக்கிரம பாண்டியனை மாரணவேள்வி செய்து கொல்லுவீரேல், உங்கட்கு என்னது நாடு பாதி தருவல் - உங்களுக்கு என்னுடைய நாட்டிற் பாதி தருவேன்; போய் இயற்றும் என்றான் - சென்று அதனைச் செய்யுங்களென்று கூறினான்.

வசிய முன்னாறு எல்லாம் வல்ல சித்தரான படலத்திற் கூறப் பட்டன. ஆபிசாரம் - அபிசார வேள்வி. என்னது : னகரம் விரித்தல். நாடுபாதி - நாட்டிற்பாதி. (கo)

தவம்புரிந் தவமே செய்வார் தாமதற் குடன்பட் டேகி
நிவந்ததெண் டிரைநீர்ப் பாலி நெடுங்கரைக் காத மூன்றிற்
கவர்ந்தகன் சாலை கோலி யோசனை யகலங் கல்லி
அவம்படு வேள்விக் குண்டங் கோணமெட் டாகக் கண்டார்.

(இ - ள்.) தவம் புரிந்து அவமே செய்வார் தாம் - (புறத்திலே) தவஞ் செய்து (அகத்தில்) அவமே செய்வாராகிய அவர்தாம், அதற்கு உடன்பட்டு ஏகி - அச்செய்கைக்கு உடன்பட்டுச் சென்று நிவந்த தெண்திரை நீர்ப்பாலி நெடுங்கரை - உயர்ந்து வரும் தெள்ளிய அலைபொருந்திய நீரையுடைய பாலியாற்றின் நீண்ட கரையில், காதம் மூன்றில் கவர்ந்த அகன்சாலை கோலி - மூன்று காத அளவினை அகப்படுத்திய அகன்ற வேள்விச் சாலையைக் கோலி, யோசனை அகலம் கல்லி - (அதில்) ஒரு யோசனை அகலம் தோண்டி, எட்டுக் கோணமாக அவம்படு வேள்விக் குண்டம் கண்டார் - எண் கோணமாகப் பழி விளையும் வேள்விக்குண்டத்தினைச் செய்தனர்.

தவம்புரிவார் போன்று அவமே புரிவாரென்க. அவம் - தவத் திற்கு மாறாய தீச்செய்கை;

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வா ராசையுட் பட்டு"

என்பது தமிழ்மறை. மூன்றில் - மூன்றினை, கவர்ந்த என்னும் பெய ரெச்சத்து அகரந் தொக்கது. கண்டார் என்பதனை எச்சமாக்கலுமாம். (கக)

விடம்பொதி காட்டம் பெய்து நிம்பநெய் விராய நஞ்சின்
உடம்புடை யுயிரின் கோழுன் கறிப்பொடி யூறு மெண்ணெய்
இடம்பட வாயங் காந்த வெரிக்குழி புதையப் பெய்து
கொடும்பழி வேள்வி செய்தார் கொல்லாத விரதம் பூண்டார்.

(இ - ள்.) விடம்பொதி காட்டம் பெய்து - (அங்ஙனஞ் செய்து) நஞ்சு பொதிந்த விறகினையிட்டு, நிம்பநெய் விராய - வேம்பின் நெய் கலந்த, நஞ்சின் உடம்பு உடை உயிரின் கொழுவின் - நஞ்சு பொருந்திய

உடலையுடைய உயிர்களின் கொழுவிய ஊனையும், கறிப்பொடி ஊறும் எண்ணெய் - மிளகு பொடி ஊறிய எள்ளின் நெய்யையும், இடம்பட வாய் அங்காந்த எரிக்குழி புதையப்பெய்து - இடம் பொருந்த வாய் திறந்த தீயினையுடைய வேள்விக் குண்டம் மறையுமாறு சொரிந்து, கொல்லாத விரதம் பூண்டார் கொடும்பழி வேள்வி செய்தார் - கொல்லாமையாகிய விரதத்தை மேற்கொண்ட சமணர்கள் கொடிய பழியினை விளைக்கும் வேள்வியினைச் செய்தார்கள்.

விடம்பொதி காட்டம் - எட்டி முதலியவற்றின் விறகு. நஞ்சினுடம்புடை உயிர் - பாம்பு முதலியன. கோழூன் - கொழுப்பு. வாய் அங்காந்த - வாய் திறந்தாற்போன்ற. கொல்லாமையாகிய விரதம் என விரிக்க. இவரது கொல்லா விரதம் இருந்தவா றென்னேயென் றிகழுவார் 'கொடும்பழி வேள்வி செய்தார் கொல்லாத விரதம் பூண்டார்' என்றார். (௧௨)

மாடுள போதும்பர் நந்தா வனமுள சோலை யுள்ள
காடுள கருகிச் சாயக் கயலுள வோடை யுள்ள
கோடுள வாவி யுள்ள குளமுள வறப்பத் தாவிச்
சேடுள முகிலுந் தீயச் சிகையெழு குண்டத் தீவாய்.

(இ - ள்) மாடு உள பொதும்பர் நந்தாவனம் உள - பக்கத்திலுள்ள மரச் செறிவினையுடைய நந்தவனங்களானவும், சோலை உள்ள - சோலைகளானவும், காடுஉள - காடுகளானவும் கருகிச்சாய - கருகித் தீயவும், கயல் உள ஓடை உள்ள - கயல்கள் உள்ள ஓடைகளானவும், கோடு உள வாவி உள்ள - கரையுள்ள வாவிகளானவும், குளம் உள - குளங்களானவும், வறப்ப - வறளவும், சேடு உள முகிலும் தீய - செம்மையில் உள்ள முகிலுங் கருகவும், தாவி எழுசிகை குண்டத் தீவாய் - தாவி எழுகின்ற சிகையினையுடைய வேள்விக் குண்டத் தீயின்கண்.

மாடுள, கயலுள, கோடுள, சேடுள என்பவற்றிலுள்ள உள என்பன குறிப்புப் பெயரெச்சம். ஏனைய உள, உள்ள என்பன முதல் வேற்றுமைச் சொல்; நந்தவனம் முதலியவற்றிலுள்ள உயிர்களென்று உரைப்பாருமுளர்; நந்தவனம் முதலியன அழிதல் கூறவே அவற்றிலுள்ள உயிர்களின் அழிவும் பெறப்படுதலானும், கருகிச்சாய, வறப்ப என்பவற்றிற்கு அங்ஙனம் பொருள் கூறுதல் சிறப்பின்றாகலானும் யாம் கூறிய பொருளே பொருத்தமாதல் காண்க. கொல்லா விரதம் பூண்டவர் இவையெல்லாம் அழிவுறும்படியாகத் தீ வளர்த்தனர் என இகழ்ந்துரைத்தவாறு. (௧௩)

கூற்றெழு தோற்றம் போல வஞ்சனக் குன்றம் போலக்
காற்றெழு செவியு நால்வாய் கௌவிய மருப்பு மாறா
ஊற்றெழு மதமு முச லாடிய வோற்றைக் கையும்
ஏற்றெழு விடம்போற் சீறி யெழுந்ததோர் தறுகண் யானை.

(இ - ள்.) காற்று எழு செவியும் - காற்றினை எழுப்புகின்ற காதினையும், நால்வாய் கௌவிய மருப்பும் - தொங்குகின்ற வாயினைப்

பற்றிய கொம்பினையும், ஆறு ஊற்று எழு மதமும் - ஆறுகச் சுரந்து ஒழுகுகின்ற மதத்தினையும், ஊசல் ஆடிய ஒற்றைக் கையும் - ஊஞ்சல் போல ஆடா நின்ற ஒற்றைத் துதிக்கையையும், ஏற்று - பொருந்தி, எழுவிடம்போல் சீறி - (கட்லின்கண்) எழுந்த நஞ்சினைப்போல வெகுண்டு, கூற்று எழு தோற்றம்போல அஞ்சனக் குன்றம்போல - கூற்றுவன் எழுந்த தோற்றம் போலவும் நீலமலை எழுந்த தோற்றம் போலவும், ஓர் தறுகண் யானை எழுந்தது ஓர் அஞ்சாமையையுடைய யானை எழுந்தது.

காற்று எழுகின்ற செவி என்றும், வாயாற் கௌவப்பட்ட மருப்பு என்றும் உரைத்தலுமாம். ஆறுக என்றது ஈறு தொக்கது; மாறு எனப் பிரித்தலுமாம். கொலைத் தொழிலுக்குக் கூற்றத்தையும் வடிவிற்கு அஞ்சனமலையையும், சினத்திற்கு விடத்தையும் உவமை கூறினர். (கசு)

அந்தமா வேள்வித் தீயு மவியமும் மதமுஞ் சோர
வந்தமா களிற்றை நீபோய் வழுதியை மதுரை யோடுஞ்
சிந்தவே தொலைத்தி யென்னாத் தென்றிசைச் செல்ல வேவி
முந்தவே விடுத்த மாசு மூழ்குட லமணப் பேய்கள்.

(இ-ள்.) அந்த வேள்வி மாதீயும் அவிய-அந்த வேள்விக் குண்டத்துப் பெரிய தீயும் அவியுமாறு, மும்மதமும் சோரவந்த மா களிற்றை - மூன்று மதங்களும் சொரிய எழுந்த பெரிய யானையை, மாசு மூழ்கு உடல் அமணப்பேய்கள் - அழுக்கில் மூழ்கிய உடலினையுடைய சமணப் பேய்கள் (நோக்கி), நீ போய் - நீ சென்று, வழுதியை மதுரை யோடும் சிந்தத் தொலைத்தி என்னா - விக்கிரம பாண்டியனை மதுரைப் பதியோடும் அழியும்படி தொலைப்பாயாக என்று, தென்திசை முந்தவே செல்ல ஏவி விடுத்த - தென் திசைக்கண் முற்படச் செல்லுமாறு பணித்து விடுத்தன.

அத்தீயினும் கொடுமையுடையதென்பார் 'தீயும் அவிய' என்றார். அந்தமா - அவிய என்றுமாம்; அந்தமா - முடிவாக: அஃது அவிந்து தொலைந்ததென்னும் குறிப்பிற்று. செறலினால் 'அமணப் பேய்கள் விடுத்த' என்றார். நிரம்பாத ஆசையுடைமையாலும் கொடுமையாலும் பேய்களாக்கிக் கூறினர். விடுத்த: அன்சாரியை பெறாத பலவின்பால் முற்று. (கஎ)

[கலி விருத்தம்]

அருளற்றிரு ளுடலிற்புதை யமணக்கய வர்களுட்
டெருளற்றரு மறையிற்படர் செயலற்றிக பரமெய்ப்
பொருளற்றவ னனிகத்தொடு புறமோய்த்திட மதமா
வெருளற்றிடி குரலிற்படி வெடிபட்டிட வருமால்.

(இ - ள்.) அருள் அற்று உடலின் இருள்புதை அமணக் கயவர்கள் - கருணை சிறிதுமின்றி (கருமையாற் புதைந்த) உடல்போல மற இருளால் மூடப்பெற்ற சமணக் கீழ்மக்கள், உள் தெருள் அற்று - அகத்திலே தெளிந்த அறிவின்றி, அருமறையிற் படர் செயல் அற்று - அரிய வேத

நெறியிற் செல்லுந் தொழிலின்றி, இகபரம் மெய்ப்பொருள் அற்றவன் - இம்மை மறுமைப் பயனும் வீடுபேறும் இல்லாதவனாகிய சோழனது, அனிகத்தொடு - சேனையுடன், புறம் மொய்த்திட - புறத்தே நெருங்கிவர, மதமா - இந்த மதயானையானது, வெருள் அறறு - அஞ்சுதலின்றி, இடி குரலில் படி வெடிபட்டிட வரும் - முழங்குகின்ற ஒலியால் நிலவுலகம் பிளக்கும்படி வாரா நின்றது.

தெருளறுதலும் மறையிற்படர் செயலறுதலும் இகபர மெய்ப் பொருளறுதலுக்குக் காரணமாயின. மெய்ப்பொருள் - நிலையாகிய வீடு பேறு. இடிகுரல் : வினைத்தொகை. ஆல் : அசை. (கசு)

அடியின்னள வகல்பாதல முடியின்னள வண்டம்
இடியின்னள வெழுகார்செவி யெறிகாலள வகிலம்
மடியும்மள வுளர்கான்மத மழையின்னள வுலக
முடிவின்னெழு கடல்கண்ணழ லளவாமுது வடவை.

(இ - ள்.) அடியின் அளவு அகல் பாதலம் - அந்த யானையின் அடிகளின் எல்லை அகன்ற பாதலமாகும்; முடியின் அளவு அண்டம் - முடியின் எல்லை வானுலகமாகும்; இடியின் அளவு எழுகார் - முழக்கத்தின் எல்லை எழுமேகங்களின் ஓசையாகும்; செவி எறிகால் அளவு அகிலம் மடியும் அளவு உளர் கால் - காதுகள் வீசும் காற்றின் எல்லை உலக முழுதும் அழியுங் காலத்தில் வீசும் ஊழிக் காற்றாகும்; மதமழையின் அளவு உலக முடிவின் எழுகடல் - மதமாகிய மழையின் எல்லை உலகம் முடியுங்காலத்திற் பொங்கி யெழும் எழுகடலாகும்; கண் அழல் அளவு முது வடவை ஆம் - விழிகள் சிந்தும் வெகுளித்தீயின் எல்லை பெரியதாகிய வடவைத்தீயாகும்.

இறுதியிலுள்ள ஆம் என்பதனைப் பாதலம் முதலியவற்றோடு கூட்டுக. ஓசையின் பொருட்டு ளகர மகர வொற்றுக்கள் விரிந்து நின்றன. (கஎ)

கூற்றஞ்சிய வருமிக்கரி குரலஞ்செவி முழைவாய்
ஏற்றஞ்செய மடங்குஞ்செவி யெறிகால்வழி விழித்தீ
ஊற்றஞ்செய மடைவாயுடைந் தொழுகுங்கட மதநீர்
நாற்றஞ்செயத் திசைவேழமு நடுக்கஞ்செய்து நலியும்.

(இ - ள்.) கூற்று அஞ்சிய வரும் இக்கரி - கூற்றுவனும் அஞ்சுமாறு வருகின்ற இந்த யானை, குரல் அஞ்செவி முழைவாய் ஏற்றம் செய-தனது முழக்கம் அஞ்செவியாகிய முழையின் கண்ணே சென்று தாக்கவும், மடங்கும் செவி எறிகால் வழி விழித்தீ ஊற்றம் செய - மடங்கிய செவிகள் வீசுகின்ற காற்றின் வழியே விழியின் தீமூண்டு சென்று ஊறு செய்யவும், மடைவாய் உடைந்து ஒழுகும் கடமத நீர் நாற்றம் செய - மடைவாய் உடைந்து ஒழுகும் மதநீர்ப் பெருக்கு நாறு

(பா - ம்.) * கூற்றஞ்சிட.

தலைச் செய்யவும், திசை வேழமும் நடுக்கஞ்செய்து நலியும் - (இவற்றால்) திக்கு யானைகளையும் நடுங்கச்செய்து வருத்தும்.

அஞ்சிய: செய்யிய வென்னும் வினையெச்சம். கரியானது திசை வேழங்களையும் நடுக்கஞ் செய்து நலியும் என்க. திசைவேழங்களின் செவியாகிய முழை. (கஅ)

இடிக்கும்புயல் வயிற்றைக்கிழித் திடியேற்றினை யுதிர்க்கும்
வெடிக்கும்பிளி றொலியாற்றிசை விழுங்கிச்செவி டாக்குந்
துடிக்கும்புழைக் கையோச்சிவிண் டொடுகுன்றினைச் சுற்றிப்
பிடிக்குங்கடல் கலக்குந்தனிப் பெருமத்தெனத் திரிக்கும்.

(இ - ள்.) இடிக்கும் புயல் வயிற்றைக் கிழித்து இடி ஏற்றினை உதிர்க்கும் - இடிக்கின்ற முகிலின் அகட்டினைக் கீண்டு இடியேற்றை உதிர்க்கா நிற்கும்; வெடிக்கும் பிளிறு ஒலியால் திசை விழுங்கிச் செவி டாக்கும் - முழங்குகின்ற பிளிறுதலின் ஓசையினால் திசைகளை விழுங்கிச் செவிடாக்கும்; துடிக்கும் புழைக்கை ஓச்சி - துடிக்கா நின்ற தொளைச் கையை வீசி, விண்தொடு குன்றினைச் சுற்றிப் பிடிக்கும் - வானை யளாவிய மலைகளைச் சுற்றிப் பிடிக்கும்; கடல் கலக்கும் தனிப் பெருமத்தெனத் திரிக்கும் - (அம்மலைகளைக்) கடலைக் கலக்குகின்ற ஒப்பற்ற பெரிய மத்தாகிய மந்தர மலையைப் போலச் சுழற்றா நிற்கும்.

யானை முழங்குதல் பிளிறுதலெனப்படும். விழுங்கி - அகப்படுத்தி. அவற்றைத் திரிக்கும் என விரித்துரைக்க. (கக)

உருமுக்குர லொலியிற்றுள ரொலிவிட்டெறி செவியிற்
றிருமுட்பிறை யெயிற்றழ* லெரிகட்டிரு ளுடலிற்
றருமுக்கட வருவித்துர லடியிற்றென நிலமேல்
வருமுக்கிர வடவைக்கனல் வரினொப்பத மதமா.

(இ - ள்.) உருமுக் குரல் ஒலியிற்று - இடிபோன்ற முழக்கத்தினை யுடையது; உளர் ஒலி விட்டெறி செவியிற்று - சூறைக்காற்றினை விட்டு வீசும் செவியினையுடையது; இருமுள் பிறை எயிற்று - இரண்டு முட் போலும் முனையையுடைய பிறை போன்ற மருப்புக்களையுடையது; அழல் எரி கட்டு - வெகுளித்தீ எரிகின்ற கண்களையுடையது; இருள் உடலிற்று - இருள் போன்ற உடலினையுடையது; அரு முக்கட அருவித்து - அரிய மூன்று மதங்களாகிய அருவியையுடையது; உரல் அடியிற்று - உரல் போன்ற அடியினையுடையது; அ மதமா - அந்த மதயானையானது, உக்கிர வடவைக்கனல் வரின் ஒப்பது என - கொடுமையுடைய வடவைத் தீயானது நடந்துவரின் அதனை ஒப்பதாம் என்னுமாறு, நிலமேல் வரும் - புவியின்மேல் வரா நின்றது.

ஒலியிற்று என்பது முதலியன குறிப்பு வினைமுற்றுக்கள். உளரொலி என்பதில் ஒலி காற்று என்னும் பொருளது. உளர்தல் - வீசுதல்.

(பா - ம்.) * அழலெறி.

எயிற்றிற்று என்பது விகாரமாயிற்று. மதமா கனல்வரின் ஒப்பது என நிலமேல்வரும் எனக்கூட்டி முடிக்க. அம்மதமா என்பதில் மகரந் தொக்கது. (உ0)

தெழிபட்டதிக்* கயத்தின்சேவி தீயப்பகை யோடும்
வழிபட்டோரு கடுங்கூற்றென வருகுஞ்சர வரவை
விழிபட்டவர் மோழியாலுணர் விரைபட்டலர் வேம்பன்
சுழிபட்டலை புனல்போன்மனஞ் சுழன்றானினைந் தழன்றான்.

(இ - ள்.) தெழிபட்ட திக்கயத்தின் செவி தீய - முழக்கந் தாக்கிய திசையானைகளின் செவிகள் கருக, பகையோடும் வழிபட்டு ஒரு கடுங் கூற்று என வரு குஞ்சர வரவை - பகைமையுடன் வழிக்கொண்டு ஒரு கொடிய கூற்றுவன்போல வருகின்ற யானையின் வரவினை, விழிபட்டவர் மொழியால் உணர் - கண்ணுற்றவர்களின் மொழியாலுணர்ந்த, விரை பட்ட அலர் வேம்பன் - மணம் பொருந்திய மலர்ந்த வேப்ப மலர் மாலையை யணிந்த விக்கிரம பாண்டியன், சுழிபட்டு அலைபுனல்போல் மனம் சுழன்றான் - சுழித்தல் கொண்டு அலைகின்ற நீர் போல மனஞ் சுழன்றான், நினைந்து அழன்றான் - எண்ணி வெதும்பினான்.

தெழி என்னும் முதனிலைத் தொழிற்பெயர் ஓசைக்காயிற்று. தெழித்தல் - உரப்புதல், ஆர்த்தல். பகை பகைவராகிய சமணருமாம். விழிபட்டவர் - கண்டவர். உணர் வேம்பன் என்க. சுழன்றான், அழன்றான் என்பனவற்றை எச்சமாக்கலுமாம். (உக)

மைப்போதகம் போறையாற்றிய மணிக்கோயின்முன் குறுகாக்
கைப்போதக முரித்தான் கழற் காற்போதக முறத்தாழ்ந்
திப்போதகந் தனையுந்தோலைத் தெனைக்காத்தியேன் றிரந்தான்
அப்போதகல் வானின்றேரு திருவாக்கேழுந் தன்றே.

(இ - ள்.) மை போதகம் பொறை ஆற்றிய மணிக்கோயில் முன் குறுகா - கரிய யானைகளாற் சுமக்கப்பட்ட மணிகள் அழுத்திய இந்திர விமானத்தின் முன் சென்று, கை போதகம் உரித்தான் கழல் கால் போது அகம் உறத் தாழ்ந்து - துதிக்கையினையுடைய யானையை உரித் தருளிய சோமசுந்தரக் கடவுளின் வீரக்கழலணிந்த திருவடி மலர்களை மனமுற வணங்கி, இப்போதகம் தனையும் தொலைத்து எனைக் காத்தி என்று இரந்தான் - இந்த யானையையும் கொன்று அடியேனைக் காத் தருள்க என்று குறையிரந்தான்; அப்போது அகல் வான் நின்று ஒரு திருவாக்கு எழுந்தன்று - அப்பொழுது அகன்ற விசும்பினின்றும் ஒரு திருவாக்கு எழுந்தது.

பொறை ஆற்றிய - பொறுத்தலைச் செய்த. முன்னொரு காலத்தில் யானையை உரித்த பெருமானே இந்த யானையையும் கொன்று அருள வல்லன் என்பார் 'கைப்போதக முரித்தான் கழற்காற்போதக முறத் தாழ்ந்து' என்றார். தன் தந்தையின் காலத்தில் வருணன் விட்ட கடலை யும் முகிலையும் தொலைத்தமைபோல இந்த யானையையும் தொலைக்க

(பா - ம்.) * தெழப்பட்ட. வழிப்பட்டொரு. விழிப்பட்டவர். சுழிப்பட்டலை.

வேண்டு மென்பது தோன்ற நின்றமையின் 'இப்போதகந்தனையும்' என்பதிலுள்ள உம்மை இறந்தது தழுவிய எச்சப்பொருட்டு; முன் யானை உரித்தமையைத் தழுவி நின்றதுமாம். எழுந்தன்று - எழுந்தது; அன் : சாரியை; ஏ : அசை. (௨௨)

விட்டார்வலி கெடநாமொரு விற்சேவக னாகி
ஒட்டார்விட வருவெங்கரி யுயிர்வௌவுது முதனின்
மட்டார்பொழிற் கடிமாநக ரயற்கீட்டிசை மருங்கோர்
அட்டாலைமண் டபஞ்செய்யென வதுகேட்டெழுந் தரசன்.

(இ - ள்.) விட்டார் வலிகெட-விடுத்தவர்களின் மனவன்மை கெடுமாறு, நாம் ஒரு வில் சேவகன் ஆகி - நாம் ஒரு விற்பிடித்த சேவகனாய் (வந்து) ஒட்டார் விடவரு வெங்கரி உயிர் வௌவுதும் - பகைவர்விட வருகின்ற கொடிய யானையின் உயிரைக் கவருவேம்; முதல் - முதலில், நின் மட்டு ஆர் பொழில் கடிமாநகர் அயல் கீழ் திசை மருங்கு - உனது தேன் நிறைந்த சோலை சூழ்ந்த காவலையுடைய பெரிய நகரத்தினருகிலே கீழ்த்திசையில், ஓர் அட்டாலை மண்டபம் செய்என - ஓர் அட்டாலை மண்டபம் செய்வாய் என்று அவ்வாக்கு அருள, அது கேட்டு அரசன் எழுந்து - அதனைக் கேட்டு அரசன் எழுந்து.

முதல் - முன்பு. கீழ்த்திசை என்பது மருவிற்று. அட்டாலை - விலங்குகளை வேட்டமாடுவார் ஏறியிருக்கும் பரண். அட்டாலை மண்டபம் - பரண் வடிவாக இயற்றிய மண்டபம். செய்யென எழுந்தன்று என மேற் செய்யுளோடு கூட்டி முடித்தலுமாம். (௨௩)

அகங்கவ்விய களிப்பெய்திவந் தட்டாலைமண் டபம்பொன்
நகங்கவ்விய தெனத்தூணொரு நானான்கினி லெடுத்தே
சகங்கவ்விய புகழான்செயத் தறுகட்கணை மதமா
முகங்கவ்விய விற்சேவகன் வருவானது மொழிவாம்.

(இ - ள்.) அகம் கவ்விய களிப்பு எய்திவந்து-உள்ளத்தை விழுங்கிய மகிழ்ச்சியை அடைந்துவந்து. அட்டாலை மண்டபம் - அட்டாலை மண்டபமொன்றை, பொன் நகம் கவ்வியது எனத் தூண் ஒருநால் நான்கினில் எடுத்து - பொன் மலையே உருமாறிச் சுமக்கின்றது என்று கண்டோர் சொல்லப் பதினாறு தூண்கள் சுமக்குமாறு எடுத்து, சகம் கவ்விய புகழான் செய - உலகத்தைத் தனதகப்படுத்திய புகழையுடையவிக்கிரம பாண்டியன் கட்டி முடிக்க, தறுகண் கணை மதமா முகம் கவ்விய வில் சேவகன் வருவான் - (சோமசுந்தரக் கடவுள்) கொலைத்தொழிலையுடைய அம்பானது அம்மத யானையின் முகத்திலே தைத்துருவ வில்லை யேந்திய சேவகனாகி வாராநின்றான்; அது மொழிவாம் - அதனைக் கூறுவாம்.

புகழானாகிய அரசன் என மேற்செய்யுளோடு இயைத்துரைக்க. தறுகண்மையுடைய மதமாவின் முகத்தைக் கணை கவ்விய என்றுரைத்தலுமாம். கவ்விய வருவான் என்க; கவ்விய : செய்திய வென்னும் வினையெச்சம். அது - அங்ஙனம் வருந் தோற்றத்தை. (௨௪)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

நீனிற நீத்த நீந்து நிழன்மதி யிரண்டுண் டென்ன
வானிற வலயச் சங்க வார்குழை நுழைவித் தம்பூம்
பானிற வேகினங் காணுப் படர்சடை மறைத்துத் தோற்றுங்
கானிறை குஞ்சிச் சூட்டிற் களிமயிற் கலாபஞ் சூடி.

(இ - ள்.) நீல்நிற நீத்தம் நீந்தும் நிழல் மதி இரண்டு உண்டு என்ன - நீலநிறத்தையுடைய இருளாகிய கடலை நீந்தும் திங்கள் இரண்டுள்ளன என்னும்படி, வால்நிற வலயச் சங்கம் வார்குழை நுழைவித்து - வெண்ணிறத்தையுடைய வட்டமாகிய சங்கினாலாகிய நீண்ட குண்டலங்களை (இருகாதிலும்) புகுத்தி, அம்பூம் பால் நிற எகினம் காணுப் படர்சடை மறைத்து - அழகிய தாமரை மலரில் வசிக்கும் வெண்ணிறத்தையுடைய பிரமனாகிய அன்னப் பறவை காணாத படர்ந்த சடையினை மறைத்து, தோற்றும் கான்நிறை குஞ்சிச் சூட்டில் களிமயில் கலாபம் சூடி - தோன்றுகின்ற மணம் நிறைந்த மயிர் முடியிலே களிக்கின்ற மயிலின் தோகையை அணிந்து.

நீலம் என்பது கடை குறைந்தது, நீல நிறத்தையுடைய கடல் எனக் கொண்டு நிழல் மதி இரண்டுண்டாயின் அவற்றை யொப்ப என விரித்துரைத்தலுமாம். காரொளியுடைய உடம்பின் இருபுறத்திலும் குண்டலங்கள் அசையுந் தோற்றம் நீல நிற நீத்தத்தை இரண்டு மதிகள் நீந்துவனபோன்றிருந்தது. சங்க வலயம் வார்குழை நுழைவித்து எனச் சொல்வகை செய்து சங்கக் குண்டலத்தை நெடிய காதில் நுழைவித்து என்றுரைத்தலுமாம். பூவும் நிறமும் அன்னத்திற்கும் பிரமனுக்கும் பொது. சூடு - உச்சியிலுள்ள மயிர் முடி: கண்ணியெனக் கொண்டு, குஞ்சியிலுள்ள கண்ணியுடன் கலாபத்தைச் சூடி என்றுரைப்பினும் அமையும். (௨௫)

கருங்கடன் முளைத்த செக்கர்க் கதிரெனக் குருதிக் கச்சை
மருங்குற வீக்கிச் சோரி வாயுடை வாளுங் கட்டி
இரங்குநான் மறைக ளேங்க விருநிலந் தீண்டு தாளிற்
பொருங்கழல் வளைத்து வாளிப் புட்டிலும் புறத்து வீக்கி.

(இ - ள்.) கருங்கடல் முளைத்த செக்கர் கதிர் என - கரிய கடலிற் றோன்றிய செவ்வொளியையுடைய பரிதி என்னும்படி, குருதிக் கச்சை மருங்கு உற வீக்கி - செந்நிறத்தையுடைய கச்சையினை அரையிற் பொருந்தக் கட்டி, சோரிவாய் உடைவாளும் கட்டி - குருதி ஒழுகும் வாயினையுடைய உடைவாளையும் அதன் புறத்தே செறித்து, இரங்கும் நான்மறைகள் ஏங்க இருநிலம் தீண்டு தாளில் - ஒலிக்கின்ற நான்கு மறைகளும் ஏங்கப் பெரிய நிலத்தைத் தீண்டுகின்ற திருவடியில், பொரும் கழல் வளைத்து - போருக்குரிய வீரக்கழலை அணிந்து, வாளிப்புட்டிலும் புறத்து வீக்கி - அம்புக் கூட்டினையும் முதுகிலே கட்டி.

குருதிக் கச்சை - குருதிபோலும் செந்நிறமுடைய கச்சை. ஏங்கல் - மனம்வாடி இளைத்தல். ஏங்க-ஏங்கும்படி; ஏங்காநிற்க என்றுமாம். (௨௬)

வீங்கிய தடந்தோ ளிட்ட வார்சிலை வில்லி னோடும்
பாங்குறை யிமயப் பாவை பாதியே யன்றி முற்றும்
வாங்கிய வண்ணம் போன்று மல்லது மாலு மோர்பால்
ஓங்கிய வண்ணம் போன்று மொளிநிறம் பசந்து தோன்ற.*

(இ - ள்.) வீங்கிய தடந்தோள் இட்ட வார்சிலை வில்லினோடும் - பூரித்த பெரிய தோளிற் சாத்திய நீண்ட வில்லோடும். பாங்கு உறை இமையப்பாவை பாதியே அன்றி முற்றும் வாங்கிய வண்ணம் போன்றும் - இடப்பாலில் உறைகின்ற மலைமகள் உடம்பின் பாதியல்லாமல் முற்றும் பெற்றருளிய தன்மை போலவும், அல்லது - அன்றி, மாலும் ஓர் பால் ஓங்கிய வண்ணம் போன்றும் - திருமாலும் ஒரு பங்கில் எழுந்த தன்மை போலவும், ஒளிநிறம் பசந்து தோன்ற - ஒளியினை யுடைய வடிவம் முழுதும் பசுமையாய்த் தோன்றவும்.

சிலைவில்: ஒரு பொருளிருசொல்; மலையாகிய வில்லென்றும், ஒலித்தலை யுடைய வில்லென்றும் கூறலுமாம். வாங்கிய வண்ணம் போலு மென்ன அல்லது ஓங்கிய வண்ணம்போலு மென்ன நிறம் பசந்து என்க. திருமால் இடப்பாலும் சிவன் வலப்பாலுமாக இயைந் திருப்பரென வைணவப் பெரியோர்களும் கூறுவர்; இச் செய்யுளில், மால் வலப்பாலில் ஓங்கிய வண்ணம் போன்று எனக் கொள்ள வேண்டும். (௨எ)

காமனுங் காமுற் றஞ்சுங் காளையாம் பருவங் தோன்றத்
தாமுல களந்த வென்றித் தனிவிற்சே வகனாய்த் தோன்றி
மாமறை மகுட மன்ன மண்டபத் தேறித் தென்னர்
கோமக னிடுக்கண் டீர்ப்பான் குஞ்சர வரவு நோக்கா.†

(இ - ள்.) காமனும் காமுற்று அஞ்சும் காளையாம் பருவம் தோன்ற - மதவேளும் விரும்பி அஞ்சுதற் கேதுவாகிய காளைப்பருவந் தோன்றவும், உலகு அளந்த வென்றித் தனிவில் சேவகனாய்த் தோன்றி - உலகினைத் தன்னகப்படுத்திய வெற்றி பொருந்திய ஒப்பற்ற வில்லைத் தாங்கிய வேட்டுவ வீரனாகி எழுந்தருளி, மாமறை மகுடம் அன்ன மண்டபத்து ஏறி - பெருமை பொருந்திய மறைகளின் முடியை ஒத்த அம் மண்டபத்திலேறி, தென்னர் கோமகன் இடுக்கண் தீர்ப்பான் - பாண்டியர் தலைவனாகிய விக்கிரம வழுதியின் துன்பத்தைத் துடைக்கும் பொருட்டு, குஞ்சர வரவு நோக்கா - யானையின் வரவினை நோக்கி.

மன்மதனும் விரும்புதற்கும் அஞ்சுதற்கும் ஏதுவாகிய அழகினை யுடைய காளைப்பருவம் என்க. தாம்: அசை. உலக முழுதும் பரந்த தனை 'உலகளந்த' என்றார்;

''ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழும்''.

என்புழிப் போல. தோன்றி - எழுந்தருளி. தீர்ப்பான்: வினையெச்சம். (௨அ)

(பா - ம்.) * பசந்து தோன்றி. † நோக்கி.

அஞ்சுகூ விளிச்செய்த் தென்ன வதுவர வறனி லாதான்
வெஞ்சினக் கோலி னோன்றாண் மிதித்துமெய் குழைய வாங்கிச்
செஞ்சிலை நெடுநாண் பூட்டித் திருவிர றெறித்துத் தாக்கிக்
குஞ்சர மெட்டு மஞ்சக் கோளரி முழக்கங் காட்டி.

(இ - ள்.) அஞ்சு கூவிளி செய்த்து என்ன அதுவர - ஐந்து கூப்பிடு தூரம் என்னுமாறு அந்த யானையானது வர, அறன் இலாதான் வெஞ்சினக் கோலின் - அறநெறியில்லாத அச்சோழனது கொடிய சினத்தினையுடைய கொடுங்கோலைப்போல, செஞ்சிலை நோன்தாள் மிதித்து மெய்குழைய வாங்கி - செவ்வையாகிய வில்லைத் தனது வலிய தாளால் மிதித்து உடல் வளைய (அதனை) வளைத்து, நெடுநாண் பூட்டி - நீண்ட நாணைப் பூட்டி, திருவிரல் தெறித்துத் தாக்கி - அழகிய விரலாலே தெறித்துக் குணத்தொனி செய்து, குஞ்சரம் எட்டும் அஞ்சக் கோளரி முழக்கம் காட்டி - திசை யானைகள் எட்டும் அஞ்சுமாறு சிங்கத்தொனியைக் காட்டி.

கூவிளி - கூப்பீடு. அறன் நிலாதான் எனப் பிரித்தலுமாம். உடையானது சினத்தைக் கோலுக்கேற்றினார். கோல்போல வளைய வளைத்தென்க. தெறித்துத் தாக்கி - தெறித்து நாணொலி எழுப்பி: குணத்தொனி செய்து, வருகின்ற யானையேயன்றித் திசை யானைகளும் அஞ்ச. கோளரிமுழக்கம் - சிங்கநாதம். (௨௯)

இங்கித நெடுங்கோ தண்ட மிடங்கையி லெடுத்து நார
சிங்கவெங் கணைதொட் டாகந் திருகமுன் னிடத்தாள் செல்ல
அங்குலி யிரண்டா லையன் செவியுற வலித்து விட்டான்
மங்குலின் முழங்கும் வேழ மத்தகங் கிழிந்த தன்றே.

(இ - ள்.) இங்கித நெடுங் கோதண்டம் இடங்கையில் எடுத்து - இனிய நெடிய வில்லை இடக்கையிலெடுத்து, நாரசிங்க வெங்கணை தொட்டு - கொடிய நாரசிங்கக் கணையைப் பூட்டி, ஆகம் திருக இடத்தாள் முன்செல்ல - தனது உடல் திருகவும் இடக்கால் முன்னே செல்லவும், ஐயன் - இறைவன், அங்குலி இரண்டால் செவி உற வலித்து விட்டான் - இரண்டு விரல்களால் செவி வரையிலும் இழுத்து விட்டான்; மங்குலின் முழங்கும் வேழ மத்தகம் கிழிந்தது - (அக்கணையினால்) முகில் போல முழங்கிவந்த அவ்வியானையின் மத்தகம் பிளந்தது.

இங்கிதம் - இனிமை; குறிப்புமாம். இடங்கை: மெலித்தல் விகாரம். முன் இடத்தாள் செல்ல என்றமையால் வலத்தாள் மண்டலித்தலுங் கொள்க; இது பைசாசம், மண்டலம், ஆலீடம், பிரத்தியா லீடம் என்னும் வில்லோர் நிலைகளுள் ஆலீடம் எனப்படும். அங்குலி - விரல். விரைவு தோன்ற 'விட்டான், கிழிந்தது' என்றார். அன்று, ஏ: அசைகள். (௩௦)

கோண்டலி னலறிச் சீறி வீழ்ந்தது கோடிய வேழம்
பிண்டது பாருஞ் சேடன் சென்னியும் பிளந்த தண்டம்
விண்டது போலு மென்னத் துண்ணென வெருவிப் போன
டண்டைய தருக்கும் வீறும் படைத்தன திசைமால் யானை.

(இ - ள்.) கொடிய வேழம் கொண்டலின் அலறிச்சிறி வீழ்ந்தது - கொடிய அக்களிறுனது முகில்போலக் கதறிச் சீறி நிலத்தில் விழுந்தது; பாரும் பிண்டது - (அதைப்பொறுக்கலாற்ருது) புவியும் பிளவு பட்டது; சேடன் சென்னியும் பிளந்தது - அனந்தனுடைய ஆயிர முடிகளும் பிளந்தன; அண்டம் விண்டது போலும் என்ன - அண்டம் வெடித்தது போலு மென்று, துண்ணென வெருவிப்போன - துணுக்குற்று அஞ்சி யோடிய, திசைமால் யானை-பெரிய திசையானைகள், பண்டைய தருக்கும் வீறும் படைத்தன - பழைய செருக்கையும் இறுமாப்பையும் பெற்றன.

பிளந்தது : சாதி யொருமை. திசை யானைகள் வெருவிப்போயின, பின்பு இவ்வேழம் வீழ்ந்தமைகண்டு தருக்கும் வீறும் படைத்தன என விரிக்க; போன என்பதைப் பெயரெச்சமாக்கி, போகிய தருக்கும் வீறும் என்னலுமாம். (௩௧)

புதைபடக் கரித்தோல் போர்த்த புண்ணிய மூர்த்தி தாளால்
உதைபடக் கிடந்த கூற்ற மொத்தது மத்த யானை
சுதைபடு மதிக்கோ வேந்தன் றொழுகுலச் சிறுவ னொத்தான்
பதைபடு மமணர் கால படரெனப் படரிற் பட்டார்.

(இ - ள்.) மத்த யானை - (அங்ஙனம் வீழ்ந்த) மத மயக்கத்தை யுடைய யானையானது, புகைபடக் கரித்தோல் போர்த்த புண்ணிய மூர்த்தி தாளால் உதைபடக் கிடந்த கூற்றம் ஒத்தது - (உடல்) மறைய யானைத்தோலைப் போர்த்தருளிய அறவடிவினனுகிய இறைவன் திருவடியால் உதை படுதலாற் கீழே வீழ்ந்து கிடந்த கூற்றுவனை ஒத்தது; சுதைபடு மதிக் கோவேந்தன் - அமிழ்தம் பொருந்திய திங்களின் மரபில் வந்த மன்னனுகிய விக்கிரம பாண்டியன், தொழுகுலச் சிறுவன் ஒத்தான் - சிவபெருமானை அடைக்கலம் புக்க அழகிய அந்தணச் சிறுவனுகிய மார்க்கண்டனை ஒத்தான்; பதைபடும் அமணர் காலபடர் எனப் படரில் பட்டார் - (யானை இறந்தது கண்டு) பதைக்கின்ற சமணர்கள் எமபடரைப் போலத் துன்பத்திலழுந்தினர்கள்.

யானையை உரித்ததும் கூற்றினை உதைத்ததும் போல்வன வெல்லாம் - இறைவனுடைய அருட் செயல்களென்பது தோன்ற 'புண்ணிய மூர்த்தி' என்ருர். கோவேந்தன் - பேரரசன்; ''கோவேந்தன் றேவி'' எனச் சிலப்பதிகாரத்துள் வருதல் காண்க. தொழுகுலச் சிறுவன் - தொழுகின்ற அழகிய சிறுவன், அந்தணச் சிறுவன். படர் - கிங்கரர், துன்பம். (௩௨)

இருள்கிடந் தனைய தானை யிட்டசிந் துரங்கார் மாலை
இருண்முகத் தோதுங்கிச் செல்லு மிரவிசெங் கிரணம் போன்ற
திருண்முழு துண்ணக் காலை யெழுகதிர் வட்ட மன்ன
திருளினை மறைத்த கண்ட னெய்தவாய் பெய்யுஞ்* செந்நீர்.

(இ - ள்.) ஆனை இருள் கிடந்தது அனையது - (இறந்து கிடந்த) யானை யானது இருள் கிடந்தாலொத்தது ; இட்ட சிந்துரம் - அதன் நெற்றியில்

(பா - ம்.) * வாய்ப் பெய்யும்.

இட்ட சிந்துரமானது, கார் மாலை இருள் முகத்து ஒதுங்கிச் செல்லும் இரவி செங்கிரணம் போன்றது - கரிய மாலைக்காலத்திலுள்ள இருள் முகத்தில் ஒருபுறஞ் சாய்ந்து செல்லும் சூரியனது சிவந்த கிரணத்தை ஒத்தது ; இருளினை மறைத்த கண்டன் எய்தவாய் பெய்யும் செந்நீர் - இருளை மறைத்த திருமிடற்றினையுடைய இறைவன் எய்த வாய் பொழியும் குருதியானது, இருள் முழுது உண்ண காலை எழு கதிர் வட்டம் அன்னது - இருள் முழுதையும் உண்ணுதற்குக் காலையில் எழுந்த வட்டமாகிய இளஞாயிற்றை ஒத்தது.

கிடந்தாலனையது என்பது கிடந்தனையது என்றாயிற்று. வேட்டுக் கோலம் பூண்டு வந்தமையால் 'இருளினை மறைத்த கண்டன்' என்றார். வாய் - வழி. (௩௩)

போய்யரு மனத்தார் தேற்றும் புன்னெறி யோழுக்கம் பூண்ட
வெய்யகோன் கோடுங்கோ றன்னை வெண்மருப் பாகத் தாங்கி
மையன்மா வடிவங்கோண்டு வந்தவெங் கலியைத் தேன்னன்
செய்யகோ லையன் சிங்க வாளியாய்ச் சிதைத்த தன்றே.

(இ - ள்.) பொய் அரு மனத்தார் தேற்றும் புல்நெறி ஒழுக்கம் பூண்ட - பொய் நீங்காத உள்ளத்தினையுடைய சமணர்கள் (அறநெறி யெனத்) தெளிவிக்கும் மறநெறியில் ஒழுகுதலை மேற்கொண்ட, வெய்ய கோன் கொடுங்கோல் தன்னை - கொடியவனாகிய சோழனது கொடுங் கோலை, வெண் மருப்பாகத் தாங்கி - வெள்ளிய காம்பாக ஏந்தி, மையல் மா வடிவம் கொண்டுவந்த வெங்கலியை - மத மயக்கத்தையுடைய யானையின் வடிவத்தைக் கொண்டுவந்த கொடிய கலியை, தென்னன் செய்யகோல் - பாண்டியனது செங்கோலானது, ஐயன் சிங்க வாளியாய்ச் சிதைத்தது - இறைவன் விடுத்தருளிய நாரசிங்கக் கணையாகி அழித்தது.

புன்னெறி - புன்மையாகிய சமணநெறி. சோழனுடைய கொடுங் கோலையும் தீச் செயலையும் பாண்டினது செங்கோல் வென்றது என்க. சிவபெருமான் வேடுருத் தாங்கிவந்து அம்பு விடுத்து யானையைக் கொன்றதற்குப் பாண்டியனது செங்கோல் காரணமாகலின் 'செய்ய கோல்சிதைத்தது' என அதன்மே லேற்றிக் கூறினர். அன்று, ஏ : அசைகள். (௩௪)

உருமுவீழ்ப் புண்ட குன்றி னும்பன்மா* வம்பு தோட்ட
பெருமுழை வாயும் வாயும் பேருகின வருவிச் சோரி
கருமுகின் மானச் சேனங் கழுதுகள் பூத மோய்த்த
திருமணித் தடந்தோள் வீங்கத் தேன்னவ னுவகை பூத்தான்.

(இ - ள்.) உருமு விழ்ப்புண்ட குன்றின் உம்பல்மா - இடிவீழப் பட்ட மலையை ஒத்த யானையின், அம்பு தொட்ட பெருமுழை வாயும் வாயும் அருவிச் சோரி பெருகின - அம்பினாலே தொளைக்கப்பட்ட பெரிய முழை போன்ற இடத்தினின்றும் வாயினின்றும் அருவி போலும் குருதிகள் பெருகின; கருமுகில் மான -(அம்மலையிற்றவழும்) கரிய

(பா - ம்.) *உம்பன்மான் : மால். வீங்கி.

முகிலை ஒக்க, சேனம் கழுதுகள் பூதம் மொய்த்த - பருந்துகளும் பேய்களும் பூதங்களும் (தசையை உண்ணுதற்பொருட்டு) மொய்த்தன; திருமணித் தடம் தோள்.வீங்க - வீர மகள் வசிக்கும் அழகிய பெரிய தோள்கள் வளருமாறு, தென்னவன் உவகை பூத்தான் - பாண்டியன் மகிழ் கூர்ந்தான்.

கணையால் ஏறுண்ட யானைக்கு உருமு வீழ்ந்த குன்றை உவமை கூறினர். உம்பல் - யானை. உம்பல்மா: இருபெயரொட்டு. திரு - வீர லக்குமி. (௬௫)

ஆனையின் புண்ணீ ருண்ண வடுத்தகா ருடற்பே யென்னச்
சேனைபின் செல்லப் போந்த திணியிரு ளமணர் தம்மை
மீனவன் கண்டு சீற வேந்தவன் குறிப்பி னிற்கும்
மானவெஞ் சினவேன் மள்ளர் வல்லைபோய் முடுக்க லுற்றார்.

(இ - ள்.) ஆனையின் புண்ணீர் உண்ண அடுத்த கார் உடல்பேய் என்ன - யானையினது குருதியைப் பருகுதற்கு வந்த கரிய உடலை யுடைய பேய்கள் போல, சேனை பின் செல்லப் போந்த - சோழனது சேனை பின்னே வர வந்த, திணி இருள் அமணர் தம்மை - செறிந்த இருள்போன்ற அமணரை, மீனவன் கண்டு சீற - பாண்டியன் கண்டு வெகுள, வேந்து அவன் குறிப்பில் நிற்கும் - மன்னனாகிய அவன் குறிப் பின்படி ஒழுகும், மான வெஞ்சின வேல் மள்ளர் - மானத்தையும் கொடிய சினத்தையுமுடைய வேற்படை ஏந்திய வீரர்கள், வல்லை போய் முடுக்கலுற்றார் - விரைந்து சென்று துரத்தத்தொடங்கினார்கள்.

புண்ணீர் - குருதி. பேயென்னப் போந்த அமணரென்க. வேந் தவன் - அவ்வேந்தன். (௬௬)

எடுத்தனர் கையிற் றண்ட மேறிந்தனர் மறிந்து சூழ்போய்த்
தடுத்தனர் கரகந் தூளாத் தகர்த்தனர் பீலி யோடுந்
தொடுத்தன ருடுத்த பாயைத் துணிபடக் கிழித்துக் கால்வாய்
விடுத்தனர் மானம் போக்கி விட்டனர் சில்லோர் தம்மை.

(இ - ள்.) கையில் தண்டம் எடுத்தனர் சில்லோர் தம்மை எறிந் தனர் - கையிலே தண்டத்தை எடுத்துச் சிலரை அடித்தனர், மறிந்து சூழ் போய்த் தடுத்தனர் கரகம் தூளாத் தகர்த்தனர் - (சிலரைக்) குறுக்காக வளைந்து தடுத்து அவர் கமண்டலத்தைத் தூளாக உடைத் தனர்; தொடுத்தனர் உடுத்த பாயை பீலியோடும் துணிபடக் கிழித்து - (சிலர்) தொடுத்து உடுத்திய பாயை மயிற்றோகையோடும் துண்டாகக் கிழித்து, கால்வாய் விடுத்தனர் - காற்றின்கண்ணே பறக்கவிட்டனர்; மானம் போக்கி விட்டனர் - (சிலரை) மானத்தைப் போக்கி ஓட்டினர்.

சில்லோர் தம்மை என்பதைத் தனித்தனி கூட்டுக. எடுத்தனர். தடுத்தனர், தொடுத்தனர் என்பன முற்றெச்சங்கள்; விடுத்தனர்

(பா - ம்.) * மன்னர்.

என்பதனையும் எச்சமாக்கி யுரைத்தலுமாம். தூளாக வென்பது ஈறு தொக்கது. பீலியோடும் தகர்த்தனர் என்றும், வாய்க்காலில் விடுத்தனர் என்றும் கூறுவாருமுளர். (௬எ)

எறியுண்டு செய்த மாய மிழப்புண்டு சேனை யோடு
முறியுண்டு நடுக்கம் பாவ மூழ்குண்டு மாழ்கிச் சாம்பிப்
பறியுண்ட தலையர் யாரும் பழிப்புண்டு பாயுந் தாமும்
உறியுண்ட கரகத் தோடு மோதுங்குண்டு பதுங்கிப் போனார்.

(இ - ள்.) பறியுண்ட தலையர் யாரும் - மயிர் பறிக்கப்பட்ட தலையினையுடைய சமணரனைவரும், எறியுண்டு - அடிபட்டு, செய்த மாயம் இழப்புண்டு - செய்த மாயத்தை இழந்து, சேனையோடும் முறியுண்டு - படைகளோடும் முறிபட்டு, நடுக்கம் பாவம் மூழ்குண்டு மாழ்கி சாம்பி - நடுக்கத்திலும் பாவத்திலும் மூழ்கி மயங்கி வாடி, பழிப்புண்டு - பழிப்படைந்து, பாயும் தாமும் உறியுண்ட கரகத்தோடும் ஒதுங்கினர் பதுங்கிப் போனார் - பாயும் தாமும் உறியிற் பொருந்திய கமண்டலத்தோடும் ஒளித்துப் பதுங்கி ஓடினர்.

முறிதல் - நிலை கெடுதல். உறியுண்ட - உறியுட் கொண்ட. பாயும் தாமும் கரகத்தோடும் போனார் என்றது.

''தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்''

என்புழிப்போலத் திணைவிரவிச் சிறப்பால் உயர்திணை முடிபேற்றது; திணைவழுவமைதி. (௬அ)

மாதங்கந் தடிந்தட் டாலை மண்டபத் திருந்த வீரன்
பாதங்கள் கையாற் பற்றிப் பாண்டிய னிரந்து வேண்டிப்
போதங்கள் கடந்தா யென்றும் பொலியவிங் கிருத்தி யென்ன
வேதங்கட் கருத்தஞ் சொன்ன வேதிய னதற்கு நேர்ந்தான்.

(இ - ள்.) மாதங்கம் தடிந்து அட்டாலை மண்டபத்து இருந்த வீரன் பாதங்கள் - யானையைக்கொன்று அட்டாலை மண்டபத்தின்கண் நிகரின்றி இருந்த வீரனாகிய இறைவன் திருவடிகளை, பாண்டியன் கையால்பற்றி இரந்து வேண்டி - விக்கிரம பாண்டியன் தன்கைகளாற் பிடித்துக்கொண்டு குறையிரந்து வேண்டி, போதங்கள் கடந்தாய் - பசுஞானம் பாசஞானங்களைக் கடந்தவனே, பொலிய என்றும் இங்கு இருத்தி என்ன - விளக்கமுற எஞ்ஞான்றும் இங்கு வீற்றிருப்பாயாக! என்று விண்ணப்பிக்க, வேதங்கட்கு அருத்தம் சொன்ன வேதியன் அதற்கு நேர்ந்தான் - வேதங்களுக்குப் பொருளருளிச் செய்த அந்தணன் அதற்கு இசைந்தருளினான்.

இரந்து வேண்டி இருத்தியென்ன வென்க. போதங்கள் - பாச பசு ஞானங்கள் ;

''பாச ஞானத்தாலும் பசுஞானத்தாலும்
பார்ப்பரிய பரம்பரனை''

என்பது சிவஞானசித்தியார். கண்ணுவர் முதலிய முனிவர்கள் வேண்டிய காலையில் அவர்கள் தெளியுமாறு வேதங்கட்குப் பொருள் கூறிய அந்தணனாகிய சிவபெருமான் என்க. (௩௯)

பின்னுஞ்சில் வரங்க ணல்கப் பெற்றுநான் மாடக் கூடல்
மன்னுஞ்சின் மயனை வந்து வந்தித்து வருநாட் காமன்
என்னுஞ்சின் மலர்ப்பூந் தண்டா ரிராசசே கரனைப் பெற்று
மின்னுஞ்சில் லியந்தேர் வேந்தன் மேதினி புரக்கு மன்னோ.

(இ - ள்.) பின்னும் சில் வரங்கள் நல்கப் பெற்று - மீண்டும் சில வரங்கள் அருளப்பெற்று, நான்மாடக் கூடல்மன்னும் சின்மயனை வந்து வந்தித்து வருநாள் - நான்மாடக் கூடலில் வீற்றிருந்தருளும் ஞான வடிவினனாகிய சோமசுந்தரக் கடவுளைக் காலந்தோறும் வந்து வழிபட்டு வருநாளில், காமன் என்னும் - மன்மதன் என்று சொல்லப்படும், சில் மலர்ப் பூந்தண்தார் இராசசேகரனைப் பெற்று - மெல்லிய மலர்களாலாகிய பொலிவுள்ள தண்ணிய மாலையை யணிந்த இராச சேகரன் என்னும் புதல்வனைப் பெற்று, மின்னும் சில்லி அம் தேர் வேந்தன் மேதினி புரக்கும் - விளங்கா நின்ற உருள்பூண்ட அழகிய தேரினையுடைய விக்கிரமபாண்டியன் புவியினைப் பாதுகாத்துவந்தான்.

அழகிற் காமனென்று சொல்லப்படும் இராச சேகரன் என்க. சின்மை ஈண்டு மென்மையை உணர்த்திற்று. சில்லி - உருள். மன். ஓ : அசைகள். (௪0)

வம்புளாய் மலர்ந்த வாரான் வரவிடு மத்தக் குன்றிற்
சிம்புளாய் வடிவங் கொண்ட சேவக னேவல் செய்த
அம்புளாய்த் தூணம் விள்ள வன்றவ தரித்த வாபோற்
செம்புளாய் கொடிய* நார சிங்கமா யிருந்த தன்றே.

(இ - ள்.) வம்பு உளாய் மலர்ந்த ஆரான்-மணத்தைத் தனதகத்துக் கொண்டதாய் மலர்ந்த ஆத்தி மாலையை யணிந்த சோழன்; வரவிடும் மத்தக் குன்றில் - விரவிட்ட மத யானையின் மேல், சிம்புளாய் வடிவம் கொண்ட சேவகன் ஏவல் செய்த அம்பு - சிம்புட் பறவையாகத் திருவுருக்கொண் டருளிய சோமசுந்தரக் கடவுள் ஏவிய அம்பு, உளாய் தூணம் விள்ள அன்று அவதரித்த வாபோல் - தூணின் அகத்ததாகி அத்தூண் பிளவுபட அதினின்றும் அப்பொழுது தோன்றியவாறுபோல, செம்புள் ஆய் கொடிய நாரசிங்கமாய் இருந்தது - பெரிய திருவடியாகிய கலுழன் தியானிக்கின்ற உக்கிர நரசிங்கமாய் வெளிப்பட்டிருந்தது.

மத்தக் குன்று - மதமலை; யானை, மத்தம், மதக்களி. சிம்புள் - எண்காற் புள்; இது வருடை யெனவும் சரபமெனவும் கூறப்படும்.

(பா - ம்.) * செம்புளாய்க் கொடிய.

ஏவல் செய்த - ஏவிய; மத்தக் குன்றில் ஏவிய அம்பு என்க. தூணின் உள்ளிருந்து அது பிளக்க அன்று தோன்றிய நரசிங்கத்தைப்போல இந் நரசிங்கக் கணையானது யானையின் உட்புகுந்து பிளந்து வெளிப்பட்டது என்க. செம்புள் - கலுழன். ஆய்தல் - ஈண்டுச் சிந்தித்தல். செம்புளாய்க் கொடிய என்னும் பாடத்திற்கு, கருடவடிவாய்க் கொடியினை யுடைய என்றுரைக்க. அன்று, ஏ : அசைகள். திருமாலானவர் தம் அடியாணுகிய பிரகலாதன் பொருட்டு, அவன் தந்தையாகிய இரணியனுல் அறையப் ப்ட்ட தூணினின்றும் தோன்றி அவனைக் கொன்றருளினன் என்பதும், இரணியனைக் கொன்ற நரசிங்கம் செருக்குற்று உலகை யழிக்கத் தொடங்கிய காலையில் சிவபெருமான் சிம்புளின் உருக்கொண்டு அதனைக் கொன்றருளினர் என்பதும் வரலாறு. சரப வடிவங்கொண்டது வீர பத்திரக் கடவுள் என நூல்கள் கூறினும் அவர் சிவ மூர்த்தங்களுள் ஒருவராகலின் அமையுமென்க. நரசிங்கம் தூணினின்றும் போந்ததனை,

"நசைதிறந் திலங்கப் பொங்கி நன்றுநன் றென்ன நக்கு
விசைபிறந் துருமு வீழ்ந்த தென்னவோர் தூணின் வென்றி
இசைதிறந் தமர்ந்த கையா லெற்றினு னெற்ற லோடும்
திசைதிறந் தண்டங் கிறிச் சிரித்தது செங்கட் சீயம்"

"பிளந்தது தூணு மாங்கே பிறந்தது சீயம் பின்னை
வளர்ந்தது திசைக ளெட்டும் பகிரண்ட முதல மற்றும்
அளந்தது அப் புறத்துச் செய்கை யாரறிந் தறைய கிற்பார்
கிளர்ந்தது ககன முட்டை கிழிந்தது கீழு மேலும்"

என்னும் கம்பராமாயணச் செய்யுட்களால் அறிக. (௬௪)

[எழுசீரடியாசிரிய விருத்தம்]

உலகெலா மழித்து மீளவுண் டாக்கு முருத்திரன் வீரசத் தியினிற்
சிலதரித் திறவா வவுணன்மார் பிடந்த சிங்கநா யகனையங்கெய்தி
அலகின்மா தவஞ்செய் துரோமசன் றன்பே ரறியவோர் தீர்த்தமுண் டாக்கி
இலகுபே றடைந்தான் பிரகலா தனுநோற் றிறிலாப் பெருவர மடைந்தான்.

(இ - ள்.) உலகு எலாம் அழித்து மீள உண்டாக்கும் உருத்திரன் - எல்லாவுலகங்களையும் அழித்து அவற்றை மீளவும் படைத்தருளும் உருத்திர மூர்த்தியின், வீரசத்தியினில் சில தரித்து - வீரசக்திகளுட் சில வற்றை அவனருளாற் பெற்று, இறவா அவுணன் மார்பு இடந்த சிங்க நாயகனை - இறவாத அவுணனுகிய இரணியனது மார்பினைப் பிளந்த நரசிம்ம மூர்த்தியை, உரோமசன் அங்கு எய்தி அலகு இல் மா தவம் செய்து - உரோமச முனிவன் அங்கே சென்று (வழிபட்டு) அளவிறந்த பெரிய தவங்களைச் செய்து, தன்பேர் அறிய ஓர் தீர்த்தம் உண்டாக்கி இலகு பேறு அடைநதான் - தனது பெயர் விளங்க ஒரு தீர்த்தம் உண்டாக்கிப் பெரும் பேற்றினை அடைந்தான்; பிரகலாதனும் நோற்று ஈறு இலாப் பெருவரம் அடைந்தான் - பிரகலாதனும் அங்குத் தவஞ் செய்து அழியாத பெரிய வரங்களைப் பெற்றான்.

அழித்தல் - காரணத்தில் ஒடுக்குதல். படைத்தல் - காரணத்தி னின்றும் தோற்றுவித்தல். "ஒடுங்கின சங்காரத்தின் வழியல்லது உற்பத்தியில்லை" ஆகலின், 'அழித்து மீளவுண்டாக்கு முருத்திரன்' என்றார். திருமால் முதலிய தேவர்களெல்லாம் தத்தம் தொழில் நடத்துவது இறைவன் சத்திகளிற் சிலவற்றைப் பெற்றே யென்பார் 'உருத்திரன் வீரசத்தியினிற் சில தரித்து' என்றார். தரித்து இடந்த வென்க. இறவா அவுணன் - இறவாதிருக்க வரங்கள் பெற்ற அவுணன். இதனை,

"பெண்ணிற் பேரெழி லாணினி லலியினிற் பிறிதும்
உண்ணிற் கும்முயி ருள்ளதி னில்லதி னுலவான்
கண்ணிற் காண்பன கருதுவ யாவினுங் கழியான்
மண்ணிற் சாகிலன் வானினுஞ் சாகிலன் வரத்தால்"

என்பது முதலிய கம்பர் செய்யுட்களால் அறிக. நரசிங்கக் கணைக்கு நரசிங்கப் பெருமானை உவமை கூறிய ஆசிரியர் அம்மூர்த்தியி னிடத்துள்ள அன்பினால் அவனை வழிபட்டார் பெற்ற பேற்றையும் கூறினார். (ருஉ)

ஆகச் செய்யுள் - கசஉஎ.

இருபத்து மூன்றுவது

விருத்தகுமார பாலரான படலம்

[கலிநிலைத்துறை]

தழையு லாங்கைய ரேவிய தந்திமேல் விடைமேல்
அழகர் சேவகஞ் செய்தவா றறைந்தன மவரே
கிழவ னாகிப்பின் காளையாய்க் கிஞ்சுகச் செவ்வாய்க்
குழவி யாய்விளை யாடிய கோள்கையைப் பகர்வாம்.

(இ - ள்.) தழை உலாம் கையர் ஏவிய தந்திமேல் - மயிற்றோகை பொருந்திய கையையுடைய சமணர்கள் ஏவிய யானையின்மேல், விடைமேல் அழகர் சேவகம் செய்தவாறு அறைந்தனம் இடப வூர்தியில் ஏறியருளும் பேரழகராகிய சோமசுந்தரக் கடவுள் சேவகஞ்செய்த திருவிளையாடலைக் கூறினோம்; அவரே - (இனி) அவ்விறைவரே, கிழவனாகி பின் காளையாய் கிஞ்சுகம் செவ்வாய்க் குழவியாய் - முதலில் விருத்தனாகியும் பின்பு குமாரனாகியும் அதன்பின் முருக்கிதழ் போன்ற சிவந்த வாயினையுடைய பாலனாகியும், விளையாடிய கொள்கையைப் பகர்வாம் - விளையாடியருளிய திருவிளையாடலைக் கூறுவாம்.

தழை - மயிற்பீலி. உலாவும் என்பது உலாம் என்றாயது. கையர் என்பதனை இரட்டுற மொழிதலாகக் கொண்டு வஞ்சகர் என்றும் உரைத்தலமையும். முறையே குழவியாய்க் காளையாய்க் கிழவனாகும் உலகியற்கு மாறாக விளையாடினா ரென்க. (க)

தென்னன் விக்கிர மன்புயத் திருநிலச் செல்வி
மன்னி வாழுநாண் மதுரையின் மறையவ னொருவன்
அன்ன வன்விரு பாக்கனா மவன்குடி வாழ்க்கை
மின்ன னாள்வட மீனனாள் பெயர்சுப விரதை.

(இ - ள்.) தென்னன் விக்கிரமன் புயத்து இருநிலச் செல்வி மன்னி வாழு நாள் - பாண்டியனாகிய விக்கிரமன் தோளின்கண் பெரிய நில மகளானவள் நிலை பெற்று வாழ்கின்ற நாளில், மதுரையில் மறையவன் ஒருவன் - அம் மதுரைப் பதியில் அந்தணன் ஒருவன் இருந்தனன்; அன்னவன் விருபாக்கன் ஆம் - அவன் விருபாக்கன் என்னும் பெயருடையனாவான்; அவன் குடி வாழ்க்கை மின் அனாள் - அவன் இல்வாழ்க்கைக்குரிய மனையாள், வடமீன் அனாள் - அருந்ததி போலும் கற்பினை யுடையவள்; பெயர் சுபவிரதை - அவள் பெயர் சுபவிரதை யென்பதாம்.

ஏற்ற பெற்றி சொற்கள் விரித்துரைக்கப்பட்டன. விருபாக்கன் மேல் நோக்கிய விழியையுடையவன்; இது சிவபிரான் திருப்பெயர்களுள்

ஒன்று. மின்னனாள் - மின்னலையொத்தவள்; கிழத்தி என்னுந் துணையாய் நின்றது. சுபவிரதை - நல்ல விரத முடையாள் என்னும் பொருள் பயப்பது. (உ)

அனையர் தங்களுக் கரும்பெறன் மகவின்றி யனந்தம்
புனித நல்லறஞ் செய்தொழி லொழுக்கமும் பூண்டு
நனைய வார்குழ லன்னைய ரேழுவர்பா னண்ணி
இனிய மாதவஞ் செய்தொரு பெண்மக வீன்றார்.

(இ - ள்.) அனையர் - அவ்விருவரும்; தங்களுக்குப் பெறல் அரும் மகவு இன்றி-தமக்குப் பெறுதற்கரிய மகப்பேறு இன்மையால், அனந்தம் புனித நல் அறம் செய்தொழில் - அளவிறந்த தூய சிவ புண்ணியஞ் செய்தலாகிய தொழிலையும், ஒழுக்கமும் - சீலத்தையும், பூண்டு - மேற்கொண்டு, நனைய வார்குழல் அன்னையர் எழுவர் பால் நண்ணி - தேனினையுடைய நீண்ட கூந்தலையுடைய அன்னையராகிய சத்தமாதர் திருமுன் பெய்தி, இனிய மாதவஞ்செய்து - இனிய பெரிய தவத்தைச் செய்து, ஒரு பெண்மகவு ஈன்றார் - ஒரு பெண் குழந்தையைப் பெற்றனர்.

பெறலரும் என்பது மாறி நின்றது. நெடுநாள் மகவில்லையாக அதன் பின் என்க. தொழிலும் என உம்மை விரிக்க. ஒழுக்கம் - கடவுள்வழிபாடு முதலியன நனைய: குறிப்புப்பெயரெச்சம். சத்த மாதர்கள் - பிரமாணி, நாராயணி, மாயேசுரி, கௌமாரி, வராகி, உருத்திராணி, இந்திராணி என்போர்; பிறவாறுங் கூறுவர். (௩)

பேருங் கௌரியேன் றழைத்தனர் பிராயமோ ரைந்திற்
சாருங் கௌரியும் பிறவிநோய் தணிப்பதற் குறுதி
தேருஞ் சிந்தையா டந்தையை வணங்கியிச் சேனனம்
ஈருந் தெய்வத மந்திர மியாதென வினவ.

(இ - ள்.) பேரும் கௌரி என்று அழைத்தனர் - பெயரும் கௌரி யென்றிட்டு அழைத்தனர்; பிராயம் ஓர் ஐந்தில் சாரும் கௌரியும்- ஐந்து வயதையடைந்த கௌரியம்மையும், பிறவி நோய் தணிப்பதற்கு உறுதி தேரும் சிந்தையாள் - பிறவிப் பிணியைப் போக்குதற்குச் சிறந்த வழியை ஆராயுஞ் சிந்தையை யுடையளாய், தந்தையை வணங்கி - தன் தந்தை யாகிய விருபாக்கனை வணங்கி, இச்செனனம் ஈரும் தெய்வத மந்திரம் யாது என வினவ - இப்பிறவியை ஒழிக்கும் தெய்வத்தன்மை பொருந்திய மந்திரம் யாது என்று வினவ.

ஐந்திற் சாரும் - ஐந்தினைப் பொருந்திய, உறுதி - மேலான. சாதனம் யாவென என்று பாடங்கொண்டு தெய்வமும் மந்திரமும் யாவை யென வினவ, என்றுரைப்பாருமுளர். (௪)

அந்த ஞானு மதிசயித் தரும்பெறன் மகட்குச்
சிந்தை யார்வமோ டிறைவிதன் மனுவினைச் செப்பத்
தந்தை பாலது தெளிந்துநாத் தழும்புறப் பயின்றாள்
முந்தை நாளரும் தவக்குறை முடித்திட வந்தாள்.

(இ - ள்.) அந்தணனும் அதிசயித்து - விரூபாக்கனும் வியப்புற்று, பெறல் அரும் மகட்கு - பெறுதற்கரிய புதல்விக்கு, சிந்தை ஆர்வமோடு இறைவிதன் மனுவினைச் செப்ப - உள்ளத்தி லெழுந்த அன்புடன் பராசத்தியின் திருமந்திரத்தைக் கூற, முந்தை நாள் அருந்தவக் குறை முடித்திட வந்தாள் - முற்பிறப்பிற் செய்த அரிய தவத்தின் குறையை நிரப்புதற்கு வந்த கௌரியம்மை, தந்தைபால் அது தெளிந்து - பிதாவினிடத்தில் அதனைக் கேட்டுத் தெளிந்து, நா தழும்பு உற பயின்றாள் - நாவானது தழும்படையும்படி அதனை ஓதி வந்தாள்.

குழவிப் பருவத்திலே பிறவியை யொழிக்க வேண்டு மென்னும் பேரறிவு தோன்றினமை குறித்து அதிசயித்தான். மனு - மந்திரம். தெளிந்து - தெளியக் கேட்டுணர்ந்து: பொருளும் ஓதுமுறையும் நன்கு உணரவேண்டுமாகலின் 'தெளிந்து' என்றார். இடைவிடாது பயின்றாள் என்பார் 'நாத்தழும்புறப் பயின்றாள்' என்றார். பயிலுதல்-உருவேற்றுதல்: செபித்தல், வந்தாள்: பெயர். வந்தவளாகலின் பயின்றாள் என்பது கருத்து. (கு)

தாதை தன்றவக் கொழுந்தினுக் கிசையமா சைவ
மாத வத்தனு யாதியாச் சிரமத்தில் வழங்கும்
வேத வித்துமாய் மரபினுன் மேம்படு வானெப்
போது போதுமென் றுளத்தொடு புகன்றுகொண் டிருந்தான்.

(இ - ள்.) தாதை - தந்தையானவன், தன் தவக் கொழுந்தினுக்கு இசைய - தனது தவக்கொழுந்தாகிய புதல்விக்குப் பொருந்த, மாசைவ மாதவத்தனுய் - பெருமை பொருந்திய சைவநெறி நின்ற பெரிய தவத்தினையுடையனுய், ஆதி ஆச்சிரமத்தில் வழங்கும் வேத வித்துமாய் - முதல் நிலையாகிய பிரமசரிய நெறியில் ஒழுகும் வேத வித்துமாகி, மரபினுல் மேம்படுவான் - மரபினுலு முயர்ந்த ஒருவன், எப்போது போதும் என்று - எப்பொழுது (மணவாளனுக) வருவான் என்று, உளத்தொடு புகன்று கொண்டு இருந்தான் - மனத்துடன் கூறிக் கொண்டிருந்தான்.

மாசைவம்-சைவத்தின் ஒரு வகையாகிய மகாசைவம் என்னலுமாம். ஆதி ஆச்சிரமம் - நான்கு நிலைகளுள் முதலது பிரமசரியம். வேதவித்து - வேதங்களை யறிந்தவன். மரபு-குடிப்பிறப்பு; கோத்திரம் முதலியவுமாம். போதும் - வருவான்; புகுதும் என்பதன் மரூஉ. இடைவிடாது சிந்தித்துக் கொண்டிருந்தான் என்பதனை இலக்கணை வகையால் 'உளத்தொடு புகன்று கொண்டிருந்தான்' என்றார். (சு)

பருவ நாலிரண் டாகமேற் கடிமணப் பருவம்
வருவ தாகவங் கொருபகல் வைணவப் படிவப்
பிரம சாரியாய்க் கடைதோறும் பிச்சைபுக் குண்பான்
ஒருவன் வந்தனன் பலிக்கவ ணயற்குலத்* துள்ளான்.

(இ - ள்.) பருவம நாலிரண்டு ஆக. (புதல்விக்கு) எட்டு வயது ஆக, மேல் கடிமணப் பருவம் வருவது ஆக - மேலே திருமணப் பருவம்

(பா - ம்.) * ணயற்புலத்.

வராநிற்க, ஒரு பகல் - ஒருநாள், அயற் புலத்து உள்ளான் - வேற்றூரில் உள்ளவனும், வைணவப் படிவப் பிரமசாரியாய் - வைணவக் கோலமுடைய பிரமசாரியனாய், கடைதொறும் பிச்சை புக்கு உண்பான் ஒருவன் - வாயில் தோறும் பலி ஏற்று உண்பவனுமாகிய ஒருவன், அவண் பலிக்கு வந்தனன் - அவ்விடத்திற் பிச்சைக்கு வந்தான்.

அங்கு - அப்பொழுதில் என்க. வைணவப் படிவ முடையனுயும் பிரமசாரியாயும் என விரித்துக் கொள்க. புக்கு - புகுந்து; ஏற்றலாகிய காரியத்தை யுணர்த்திற்று. (எ)

பிச்சை வேண்டினு னவற்குத்தன் பெண்ணினைக்கொடுப்பான்
இச்சை கூர்ந்தருந் தவத்தினுல் வருந்தியீன் றெடுத்த
விச்சை வேதியன் மனையோடு சுற்றமும் வினவா
தச்ச மின்றிநீ ரேடுத்தவ னங்கையிற் பெய்தான்.

(இ - ள்.) பிச்சை வேண்டினுன் அவற்கு - (அங்ஙனம் வந்து) பிச்சை கேட்ட அப்பிரமசாரிக்கு, தன் பெண்ணினைக் கொடுப்பான் இச்சை கூர்ந்து - தன் புதல்வியைக் கொடுத்தற்கு விருப்பங் கொண்டு, அருந் தவத்தினுல் வருந்தி ஈன்றெடுத்த விச்சை வேதியன் - அரிய தவத்தினுலே உடல் வருந்திப் பெற்றெடுத்த கற்றுவல்ல மறையவனுகிய விருபாக்கன், மனையொடு சுற்றமும் வினவாது - மனைவியையும் சுற்றத்தாரையும் கேளாது, அச்சம் இன்றி நீர் எடுத்து அவன் அங்கையில் பெய்தான் - அச்சமு மில்லாமல் நீரினை எடுத்து அவனுடைய அகங்கையில் வார்த்தான்.

வேண்டினுன் பெயரெச்சமாயிற்று. கொடுப்பான் : வினையெச்சம். புதல்வி மேலுள்ள அன்பும் தனது கல்வியறிவும் இதனைத் தடுத்தில வென்பார் 'அருந்தவத்தினுல் வருந்தி யீன்றெடுத்த விச்சைவேதியன்' என்ருர். ஒருதலையாக வினவுதற் குரியாரையும் வினவிற்றிலன் என்பார் 'மனையொடு சுற்றமும் வினவாது' என்ருர். மனைவி முதலாயினர் இணங்காவிடின் யாது செய்வதென்ற அச்சமும், தன் புதல்வி எத்தகைய இன்னலுறுவாளோ என்ற அச்சமும் இன்றி யென்க. எங்ஙனம் பெய்தான் என்பதனை வருஞ் செய்யுளிற் காண்க. (அ)

கலிக்கு நூபுரச் சீறடிக் கன்னிதன் விதியும்
பலிக்கு வந்தவ னல்வினைப் பகுதியுந் துரப்ப
ஒலிக்கு மந்திரச் சிரகநீ ரொழுக்கினுன் முந்தி*
சலிக்கு மன்னையுந் தமர்களுங் கேட்டுளந் தளர்வார்.

(இ - ள்.) கலிக்கும் நூபுரச் சீறடிக்கன்னிதன் விதியும் - ஒலிக்கின்ற சிலம்பினை யணிந்த சிறிய அடியையுடைய கௌரியின் கன்மமும், பலிக்கு வந்தவன் நல்வினைப் பகுதியும் - பிச்சைக்கு வந்தவனது நல்வினையின் கூறும், துரப்ப - செலுத்துதலால், முந்தி - முற்பட்டு, ஒலிக்கும் மந்திரம் சிரக நீர் ஒழுக்கினுன் - ஒலிக்கின்ற மந்திரத்தோடு

(பா - ம்.) * முந்தச்

கமண்டல நீரை வார்த்தான்; கேட்டு சலிக்கும் அன்னையும் தமர்களும் உளம் தளர்வார் - (அதனைக்) கேட்டு வருந்துகின்ற தாயும் உறவினரும் மனந்தளர்வாராயினர்.

கன்னிதன் விதி - இவனுக்கு மனைவியாக வேண்டு மென்னும் பிராரத்த கன்மம். நல்வினை பலதிறப் படுமாகலின் 'பகுதி' என்றார். இவன் தன்வயம் இழந்தனன் என்பார் துரப்ப' என்றார். முந்தி - விரைந்து. மந்திரத்தோடு என விரிக்க. கன்னிகையைத் தானஞ் செய்தற்குரிய மந்திரத்துடன் தாரை வார்த்தான் என்றவா றாயிற்று. தளர்வார் : முற்றெச்சம். (௯)

குலனு மோர்கிலன் கோத்திர மோர்கிலன் குடிமை
நலனு மோர்கில னொழுக்கமுங் கல்வியு நண்ணுந்
தலனு மோர்கிலன் கன்னியைத் தத்தஞ்செய் தானைப்
புலனு மோர்ந்தவன் விதிவழி மதியெனப் புலந்தார்.

(இ - ள்.) குலனும் ஓர்கிலன் - குலத்தையும் ஓராது, கோத்திரம் ஓர்கிலன் - கோத்திரத்தையும் ஓராது, குடிமை நலனும் ஓர்கிலன் - குடிப்பிறப்பின் மேன்மையையும் ஓராது, ஒழுக்கமும் கல்வியும் நண்ணும் தலனும் ஓர்கிலன் - ஒழுக்கத்தையும் கல்வியையும் இருக்கும் இடத்தினையும் ஓராது, எப்புலனும் ஓர்ந்தவன் கன்னியை தத்தம் செய்தான் - எல்லா நூல்களையு மறிந்தவன் தன் புதல்வியைத் தத்தஞ் செய்து விட்டான், விதிவழி மதி எனப் புலந்தார் - யாவர்க்கும் விதியின் வழியே மதிசெல்லும் என்று வாடினர்.

ஓர்கிலன் என்னும் எதிர்மறை முற்றுக்கள் எச்சமாயின; கு : சாரியை. அல் : எதிர் மறை இடைநிலை. ஓர்தல் - ஆராய்ந்தறிதல். இவையெல்லாம் ஆராய்தற் குரியவாகவும் இவற்றுள் ஒன்றும் ஆராய்ந்திலன் என்றார்.

"நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்"

என்பவாகலின், 'எப்புலனு மோர்ந்தவன்' என்றும், 'விதிவழி மதி' என்றும் கூறினர். (௧௦)

மற்ற வன்குடி கோத்திரஞ் சூத்திர மற்றும்
உற்ற றிந்துநம் மரபினுக் கொக்குமான் மாயோன்
சொற்ற தந்திர வைணவத் தொடக்குண்டு திரியுங்
குற்ற மொன்றினி மறுப்பதென் கொடுப்பதென் றிசைந்தார்.

(இ - ள்.) அவன் குடி கோத்திரம் சூத்திரம் மற்றும் உற்று அறிந்து - அவனுடைய குடியையும் கோத்திரத்தையும் சூத்திரத்தையும் பிறவற்றையும் பொருந்தியறிந்து, நம் மரபினுக்கு ஒக்கும் - (இவன்குடி முதலிய வெல்லாம்) நமது மரபுக்கு ஒத்திருக்கின்றன; மாயோன் சொற்ற தந்திர வைணவத் தொடக்குண்டு திரியும் குற்றம் ஒன்று - (இவன்) திருமால் கூறிய நூலின் வழிப்பட்ட வைணவ மதக்

கட்டுண்டு ஒழுகும் குற்ற மொன்று தான் உளது; இனி மறுப்பது என் - (முன்னரே தத்தஞ் செய்தமையால்) இனி மறுப்பது எவ்வாறு, கொடுப்பது என்று இசைந்தார் - கொடுக்க வேண்டுவதே யென்று உடன்பட்டனர்.

மற்று, ஆல்: அசைகள்; குடி முதலியவற்றில் உம்மை விரித் துரைக்க. அறிந்து - அவனையடைந்து உசாவி யறிந்து. தந்திரம் - பாஞ்சராத்திரம், வைகானசம் என்னும் வைணவ ஆகமங்கள். ஒன்றே - கொடுப்பதே என ஏகாரங்கள் விரித்துக் கொள்க. கொடுப்பது - கொடுக்கவேண்டுவது. (கக)

தாயு மொக்கலு மொத்தபின் றாதையும் வேதத்
தாயு மெண்மணத் தாதியா மறநிலை யாற்றால்
தேயு நுண்ணிடைக் கன்னியைச் செம்பொனாற் புதைத்துக்
காயு மாரழன் முன்னரக் காளைகைக் கொடுத்தான்.

(இ - ள்,) தாயும் ஒக்கலும் ஒத்தபின் - இங்ஙனம் தாயும் சுற்றத் தாரும் இசைந்தபின், தாதையும் - தந்தையும், வேதத்து ஆயும் எண் மணத்து - வேதத்தில் ஆராயப்பட்ட எண்வகை மணங்களுள், ஆதியாம் அறநிலை ஆற்றால் - முதற்கண் உள்ளதாகிய பிரம மண நெறியால், தேயும்நுண் இடைக் கன்னியைச் செம்பொனால் புதைத்து - மெலிகின்ற நுண்ணிய இடையையுடைய கௌரியைச் சிவந்த பொன்னாலாகிய அணிகளால் உடல் மறைய அலங்கரித்து, காயும் ஆர் அழல் முன்னர் அக் காளை கைக் கொடுத்தான் - சுடுகின்ற நிறைந்த ஓமத்தீயின் முன் அக்காளைப் பருவத்தையுடைய பிரமசாரியின் கையிற் கொடுத்தான்.

எண்மணம்: பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன. இவற்றை,

"மறையோர் தேஎத்து மன்றல் எட்டு"

என்று தொல்காப்பியமும்,

"அந்தண ரருமறை மன்ற லெட்டு"

என்று இறையனாரகப்பொருளும் கூறும். முதற்கண் உள்ள பிரமம் தமிழில் அறநிலை எனப்படும். பிரமமாவது பிரமசாரியங் காத்தானுக் குக் கன்னியைத் தீ முன்னர்க் கொடுப்பது. பொன்: அணிக்கு ஆகு பெயர். மிக அணிந்து என்பார் 'புதைத்து' என்றார். (கஉ)

தெய்வ மங்கல வரிசைகள் செய்துதான் பயந்த
மௌவ லங்குழற் கன்னியை மணமக னோடுங்
கௌவை யம்புனல் வேலிசூழ் கடிநகர் விடுத்தான்
சைவ மங்கல வேதியத் தாபத னிப்பால்.

(இ - ள்.) சைவ மங்கல வேதியத் தாபதன் - நன்மை பொருந்திய சைவ தவ வொழுக்கத்தையுடைய மறையோனாகிய விருபாக்கன்,

தெய்வ மங்கல வரிசைகள் செய்து - தெய்வத் தன்மை பொருந்திய மங்கல வரிசைகள் பலவற்றைச் செய்து, தான் பயந்த மௌவல் அம் குழல் கன்னியை - தான் பெற்ற முல்லைமலர்மாலை சூடிய அழகிய கூந்தலையுடைய கன்னியை, மணமகனோடும் - மணவாளனோடும், கௌவை அம்புனல் வேலி சூழ் கடிநகர் விடுத்தான் - ஒலிக்கின்ற நீர் வேலியாகச் சூழ்ந்த காவலையுடைய நகரின்கண் செல்ல விடுத்தான்; இப்பால் - பின்.

மங்கல வரிசை - சுப சீதனம். முல்லை கற்பிற்குரியது. கௌவையம், அம் : சாரியை. புனல் வேலி - நீர்வளமுடைய கழனி யாகிய வேலியுமாம். நகர் விடுத்தான் - நகரிற் செல்லவிடுத்தான். மங்கல சைவத்தாபத வேதியன் என மாறுக. இப்பால் - பின்பு என்ற படி; இதனைப் பின் நிகழும் சரிதத்தோடு இயைக்க. (௧௩)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

இல்லார்க்குக் கிழியீடு நேர்பட்டா லெனப்பல்லா
ரில்லந் தோறுஞ்
செல்லாநின் றிரந்துண்டு திரிந்தமகன் மணமகனாய்ச்
செல்வ நல்க
வல்லாளை மணந்துவரு வான்போற்றம் மனைபுகுத
வன்கட் சீலப்
பொல்லாராய் வைணவத்துப் புக்கொழுகு தாய்தந்தை
பொறாஅர்க ளாகி.

(இ - ள்.) இல்லார்க்குக் கிழியீடு நேர்பட்டாலென - வறியார்க்குப் பொன் முடிப்புக் கிடைத்தாற்போல், பல்லார் இல்லந்தோறும் செல்லாநின்று இரந்து உண்டு திரிந்த மகன் - பலருடைய மனை தோறும் சென்று ஏற்றுண்டு திரிந்த மகன், மணமகனாய் - மணமகனாக, செல்வம் நல்க வல்லாளை மணந்து வருவான்போல் தம் மனைபுகுத - செல்வத்தை அளிக்கவல்ல திருமகளை மணஞ் செய்து வருவான்போல வந்து தமது இல்லத்தையடைய, வன்கண் சீலப் பொல்லாராய் - கொடுமையையே சீலமாகக்கொண்ட பொல்லாதவராய், வைணவத்துப் புக்கு ஒழுகு தாய் தந்தை பொறாஅர்களாகி - வைணவ மதத்தை மேற்கொண்டு ஒழுகுகின்ற தாயும் தந்தையும் மனம் பொறாதவர்களாகி.

கிழியீடு - கிழியில் இடப்பட்டது; பொன் முடிப்பு. நேர்படுதல் - தானே எதிர்ப்படுதல். நேர்பட்டால் அவர் களிப்பதுபோற் களிப் புற்று என்க. திருமகளை மணந்து வருவான்போற் கௌரியை மணந்து வந்து புகவென விரிக்க. (௧௪)

வந்தமண வாட்டிசிவ சிந்தனையுஞ் சைவதவ
வடிவு நோக்கி
வெந்தவுடல் போன்மனமும் வெந்தவளை வேறேதுக்கி
வேண்டா ராகி

நிந்தனைசெய் தொழுகுவா ரவளையொரு நாணீத்து
நீங்கி வேற்றூர்த்
தந்தமர்மங் கலங்காண்பான்* றனியேவைத் தகம்பூட்டித்
தாங்கள் போனார்.

(இ - ள்.) வந்த மணவாட்டி சிவசிந்தனையும் சைவ தவவடிவும் நோக்கி - (தமது இல்லிற்கு) வந்த மணக்கோலத்தையுடைய கௌரியின் சிவசிந்தனையையும் சைவ தவவேடப் பொலிவையும் நோக்கி, வெந்த உடல்போல் மனமும் வெந்து - (தமது) கருகிய உடலைப்போல மனமும் வெந்து, அவளை வேறு ஒதுக்கி வேண்டாராகி நிந்தனை செய்து ஒழுகுவார் - அவளை வேறாக ஒதுக்கி வைத்துச் சிறிதும் விரும்பாராய் நிந்தித்து ஒழுகுபவர்கள், தாங்கள் ஒருநாள் வேற்றூர் தம்தமர் மங்கலம் காண்பான் - தாம் ஒருநாள் வேற்றூரில் நடக்கும் தம் சுற்றத்தாரின் மணத்தைக் காணுதற்கு, அவளைத் தனியே வைத்து நீத்து நீங்கி அகம் பூட்டிப் போனார் - அவளைத் தனியாக வைத்துவிட்டு நீங்கி இல்லினைப் பூட்டிக்கொண்டு போயினர்.

மணவாட்டி - மணமகள்; மணவாளனுக்குப் பெண்பால். தவ வடிவு - திருநீறு சாதனமுடைய வடிவு. சங்கு சக்கர முத்திரை பொறிக்கப் பட்டமையால் வெந்த உடம்பு. உளம் அழுக்காற்றாற் புழுங்குதலை 'வெந்து' என்றார். (கஓ)

உண்மாசு கழுவுவது நீறென்றே யுபநிடத
முரைப்பக் கேட்டும்
மண்மாசு படப்பூசும் வடிவுடையா ரகன்றதற்பின்
மனையில் வைகும்
பெண்மாசு கழியவொரு சிவனடியார் தமைக்காணப்
பெறும லின்றென்
கண்மாசு படுவதெனக் கனிந்தொழுகு தலையன்பாற்
கவலை கூர்வாள்.

(இ - ள்.) நீறே உள்மாசு கழுவுவது என்று உபநிடதம் உரைப்பக் கேட்டும் - திருநீறே அகத்திலுள்ள அழுக்கைப் போக்கித் தூய்மை செய்வது என்று உபநிடதங் கூறுவதைக் கேட்டும், மண்மாசு படப் பூசும் வடிவு உடையார் அகன்றதன் பின் - மண்ணை அழுக்குண்டாகப் பூசுகின்ற வடிவினையுடைய அவர்கள் போனபின், மனையில் வைகும் பெண் - இல்லில் இருக்கும் கௌரி, மாசு கழிய - குற்றம் ஒழியுமாறு, ஒரு சிவன் அடியார் தமைக் காணப் பெறுமல் - ஒரு சிவனடியாரைக் காணப்பெறாமல் இன்று என் கண் மாசு படுவது என - இப்பொழுது என் கண் மாசடைகின்றது என்று, கனிந்து ஒழுகு தலையன்பால் கவலை கூர்வாள் - பழுத்து ஒழுகும் தலையன்பினால் கவலை யுறுவாளாயினள்.

(பா - ம்.) * காண்பார்.

உண்மாசு - ஆணவம் முதலியன. உபநிடதம் - மறைமுடி. திரு நீற்றின் பெருமையை விளக்குவது பஸ்ம ஜாபால உபநிடதம் என்ப. திரு நீறு மாசு போக்குவதனையும், வேதத்தாற் கூறப்படுவதனையும், திரு நீற்றுப் பதிகத்தால் அறிக. மண் - திருமண் என்பது. மாசு கழிய - அநாதியே பந்தித்துள்ள பாசவழுக்கு ஒழிய, தீயாருடன் சம்பந்தித்த குற்றம் நீங்க வென்றுமாம். ஒருவரையேனும் காணப் பெறுதல் வேண்டுமென்பார் 'ஒரு சிவனடியார்' என்றார். காணப் பெறுமல் என்றது சிவனடியார் அங்குவரும் வழக்க மின்மையைக் குறிக்கின்றது, காண்டற்குத் தடையில்லாத இன்றும் காணப்பெறுமல் என்பார் 'இன்று' என்றார். கண் மாசுபடுவது கண் குருடாகின்றது. தலையன்பு - தீவிர தரமான அன்பு. (கசு)

சிவனடியார்க் கன்பிலாச் சிந்தையே யிரும்பேவல்
செய்து நாளும்
அவனடியார் திறத்தொழுகா வாக்கையே மரஞ்செவிக
ணாதி யைந்தும்
பவனடியா ரிடைச்செலுத்தாப் படிவமே பாவைமறை
பரவுஞ் சைவ
தவநெறியல் லாநெறியே பவநெறியென் றளியளாய்த்
தளர்வாள் பின்னும்.

(இ - ள்.) சிவன் அடியார்க்கு அன்பு இலாச் சிந்தையே இரும்பு - சிவனடியார்க்கு அன்பில்லாத மனமே இரும்பாகும், அவன் அடியார் திறத்து நாளும் ஏவல்செய்து ஒழுகா ஆக்கையே மரம் - அவ்விறைவனது அடியார் பக்கத்து எந்நாளும் பணிசெய்து ஒழுகாத உடலே மரமாகும், பவன் அடியாரிடை செவி கண் ஆதி ஐந்தும் செலுத்தாப் படிவமே பாவை - அச்சிவபெருமான் அடியாரிடத்துக் காது கண் முதலிய ஐம் பொறிகளையும் செலுத்தாத வடிவமே பாவையாகும், மறை பரவும் சைவ தவநெறி அல்லா நெறியே பவநெறி - வேதந் துதிக்கும் சைவ மாகிய தவநெறியல்லாத பிற நெறிகளே பிறவிக்கேதுவாகிய நெறிக ளாம், என்று அளியளாய்த் தளர்வாள் - என்று அன்புடையளாய்த் தளர்கின்றாள்; பின்னும் - பின்னரும்.

சிந்தை இரும்பே, ஆக்கை மரமே, படிவம் பாவையே, அல்லாநெறி பவ நெறியே என ஏகாரங்களைப் பிரித்துக் கூட்டலுமாம். பவன் - சிவ பெருமான். அவ நெறி என்று பாடமாயின் வீண்நெறி என்க.

"ஈசனுக்கன் பில்லா ரடியவர்க்கன் பில்லார்
எவ்வுயிர்க்கு மன் பில்லார் தமக்குமன் பில்லார்
பேசுவதென் னறிவிலாப் பிணங்களைநா மிணங்கிற்
பிறப்பினொடு மிறப்பினொடும் பிணங்கிடுவர் விடுநீ
ஆசையொடு மரனடியா ரடியாரை யடைந்திட்
டவர்கருமமுன்கரும மாகச் செய்து
கூசிமொழிந் தருண்ஞானக் குறியி னின்று
'கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே"

என்னும் சிவஞானசித்தியார் திருவிருத்தம் இங்கு நோக்கற்பாலது. (கஎ)

எனைத்துயிர்க்கு முறுதியிக பரமென்ப வவைகொடுப்பா
னெல்லாந் தானய்
அனைத்துயிர்க்கு முயிராகு மரனென்ப வவனறிவார்க்
கங்கம் வாக்கு
மனத்துறுமெய்ப் பத்திவழி வருமென்ப வப்பத்தி
வழிநிற் பார்க்கு
வினைத்துயர்தீர்த் திடவெடுத்த வடிவென்ப தவனடியார்
வேட மன்றே.

(இ-ள்.) எனைத்து உயிர்க்கும் உறுதி இகபரம் என்ப - எல்லா உயிர்களுக்கும் உறுதியாவன இம்மை யின்பமும் மறுமையின்பமும் என்று கூறுவர்; அவை கொடுப்பான் எல்லாம் தானய் அனைத்து உயிர்க்கும் உயிர் ஆகும் அரன் என்ப - அவற்றை அருளுபவன் எல்லா மும் தானகி எவ்வுயிர்க்கும் உயிராயுள்ள சிவபெருமான் என்பர்; அவன் அறிவார்க்கு அங்கம் வாக்கு மனத்து உறு மெய்ப் பத்திவழி வரும் என்ப - அவனை உணர்வார்க்கு உடலும் உரையும் உள்ளமுமாகிய இம் மூன்று கரணங்களாலும் செய்யப்படுகின்ற உண்மையாகிய பத்திநெறி உண்டாம் என்பர்; அப்பத்திவழி நிற்பார்க்கு - அவ்வன்பு நெறியில் நிற்பவர்க்கு, வினைத்துயர் தீர்த்திட எடுத்த வடிவு என்பது - வினைகளில் வருந் துன்பங்களைப் போக்குதற்கு எடுத்த வடிவமென்று சொல்லப்படுவது, அவன் அடியார் வேடம் அன்றே - அச்சிவபிரான் அடியார்களின் திருவேடம் அல்லவா!

வீட்டினையும் அடக்கி 'இகபரம்' என்றார். என்ப என்பனவற்றை அசையென்னலுமாம். அவனறிவார்க்கு: இரண்டனுருபு தொக்கு நின்றது. அறிதலாவது எப்பொழுதும் சிந்தித்தல், இறைவன் எடுத்த வடிவெனப்படுவது என்க.

"அறிவரியான் றனையறிய வாக்கை யாக்கி
அங்கங்கே யுயிர்க்குயிரா யறிவுகொடுத் தருளாற்
செறிதலினற் றிருவேடஞ் சிவனுருவே யாகும்"

என்றும்,

"தாபர சங்கமங்க ளென்றிரண் டுருவினின்று
மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க் கருளைவைப்பன்"

என்றும் சிவஞானசித்தியார் கூறுவது காண்க. (கஅ)

என்னவிருந் தலமருவா ளிருக்குமிடத் தவளுள்ளத்
தெண்ணி யாங்கே
தென்னவனு யிருந்தரசு செய்தபிரா னவட்கருளுஞ்
செவ்வி நோக்கிச்

கன்னமுரங் கரஞ்சிரந்தோள் கண்டமுங்கண் டிகைபூண்டு
கையிற் றம்போற்
பன்னெடுநாட் பழகியதோர் தனிப்பெரிய புத்தகமும்
பக்கஞ் சேர்த்தி.

(இ - ள்.) என்ன இருந்து அலமருவாள்-என்று கருதியிருந்து மனஞ் சுழலுவாள்; இருக்குமிடத்து - (இங்ஙனமாகக் கௌரி வருந்தி) இருக்குமிடத்தில், அவள் உள்ளத்து எண்ணியாங்கே - அவள் மனத்திற் கருதியவாறே, தென்னவனை இருந்து அரசு செய்தபிரான் - சுந்தர பாண்டியனாய் வீற்றிருந்து ஆட்சி புரிந்த சோமசுந்தரக்கடவுள், அவட்கு அருளும் செவ்வி நோக்கி - அவளுக்கு அருள் புரியும் பருவத்தை நோக்கி, கன்னம் உரம் கரம் சிரம் தோள் கண்டமும் கண்டிகை பூண்டு - காதுகளிலும் மார்பிலும் கைகளிலும் சென்னியிலும் தோள்களிலும் கழுத்திலும் உருத்திராக்கம் அணிந்து, தம்போல் பல் நெடுநாள் பழகியது ஓர் தனிப்பெரிய புத்தகமும் - தம்மைப் போலப் பன்னெடுங் காலம் பழகியதாகிய ஓர் ஒப்பற்ற பெரிய புத்தகத்தையும், பக்கம் கையில் சேர்த்தி - பக்கத்தே கையில் வைத்துக்கொண்டு.

மேற்செய்யுளிற் கூறியதைச் சுட்டி 'என்ன' என்றார். 'உண்மாசு கழுவுவது' 'சிவனடியார்க்கு' என்னுஞ் செய்யுட்களிலுள்ள 'கவலை கூர்வாள்' 'தளர்வாள்' என்பவற்றை எச்சமாக்கி, இச்செய்யுளில் 'அலமருவாள்' என்பதைப் பெயராக்கலுமாம். எண்ணியாங்கே அருளுஞ் செவ்வி நோக்கி யென்க. கன்னம் முதலியவற்றில் எண்ணும்மை விரித்துக் கொள்க. தம்மைப்போல் அனாதியாக விருந்து தம் முடன் பயின்றதாகிய புத்தகம் என்க. இப்பொழுது கொண்ட முதுமைக் கோலத்தைக் கருதி, தம்மைப்போல் நெடுநாட் பழகியதாகத் தோற்றும் புத்தகம் எனக் கூறினார் எனலுமாம். பக்கத்திலே கையில் வைத்துக் கொண்டு என்க. (சகூ)

கரிந்தநீள் கயன்முள்ளி னரையுமுது திரைகவுளுங்
கனைக்கு நெஞ்சுஞ்
சரிந்தகோ வணவுடையுந் தலைப்பனிப்பு முத்தரியந்
தாங்கு தோளும்
புரிந்தநூல் கிடந்தலையும் புண்ணியநீ றணிமார்பும்
பொலிய நீழல்
விரிந்ததோர் தனிக்குடையுந் தண்டூன்றிக் கவிழ்ந்தசையு
மெய்யுந் தாங்கி.

(இ - ள்.) கரிந்த நீள்கயல் முள்ளின் நரையும் - கரிய நீண்ட கயல் மீனின் முள்ளைப் போன்ற நரையும், முதுதிரை கவுளும் - மிகவுந் திரைந்த கபோலமும், கனைக்கும் நெஞ்சும் - அடிக்கடி கனைக்கின்ற மார்பும், சரிந்த கோவண உடையும் - ஒரு புறம் சரிந்துள்ள கோவணம் போக்கிய ஆடையும், தலைப்பனிப்பும் - தலை நடுக்கமும், உத்தரியம் தாங்கு தோளும் - மேலாடைதாங்கிய தோளும், புரிந்த நூல் கிடந்து

அலையும் புண்ணிய நீறு அணி மார்பும் - (முப்புரியாகச்) செய்த பூணூல் கிடந்து அசையும் புண்ணிய வடிவாகிய திருநீற்றினை அணிந்த மார்பும், நீழல் போலிய விரிந்தது ஓர் தனிக்குடையும் - நிழல் விளங்க விரிந்த தாகிய ஓர் ஒப்பற்ற குடையும், தண்டு ஊன்றிக் கவிழ்ந்து அசையும் மெய்யும் - தண்டினை ஊன்றி அதனோடு கவிழ்ந்தசைகின்ற திருமேனியும், தாங்கி - ஆகிய இவைகளைக் கொண்டருளி.

கரிந்த நீள்கயல் - புறத்தே கருநிறமுடைய நீண்ட கயல். முள்ளின், இன் ஒப்புப்பொருட்டு திரைகவுள்: வினைத்தொகை. கனைத்தல் - இருமல். நரை முதலியவற்றைப் பொலிய என்பதனோடு முடித்து, குடையும் மெய்யும் தாங்கி என்றுரைத்தலுமாம். (உ0)

ஒருத்தரா யுண்டிபல பகல்கழிந்த பசியினர்போ
லுயங்கி வாடி
விருத்தவே தியராய்வந் தகம்புகுதக் கண்டெழுந்து
மீதூ ரன்பின்
கருத்தளாய்த் தவிசிருத்திக் கைதொழுது சிவனையிங்குக்
காண வென்ன
வருத்தமா தவமுடையே னெனமுனிவர் பசித்துன்பால்
வந்தே மென்றார்.

(இ - ள்.) விருத்த வேதியராய் - மூப்பினையுடைய மறையவராய், ஒருத்தராய் - தனியராய், பல பகல் உண்டி கழிந்த பசியினர்போல் - பலநாட்கள் உணவு இன்மையால் நேர்ந்த பசியினை யுடையார் போல, உயங்கி வாடி வந்து அகம்புகுத - வருந்தி வாட்டமுற்று வந்து இல்லில் நுழையா நிற்க, கண்டு எழுந்து மீதூர் அன்பின் கருத்தளாய் - (அதனைப்) பார்த்து எழுந்து மேலோங்கும் அன்பினை யுடைய எண்ணமுடையவளாய், தவிசு இருத்திக் கைதொழுது - அவரை ஆசனத்தில் அமர்த்திக் கை கூப்பி வணங்கிநின்று, சிவனை இங்கு காண - சிவபெருமானை இங்குத் தரிசிக்க, என்னவருத்தம் மாதவம் உடையேன் என - என்ன வருந்திச் செய்த பெரிய தவத்தினை உடையேன் என்று சொல்ல; முனிவர் உன்பால் பசித்து வந்தேம் என்றார் - முனிவர் உன்னிடத்திற் பசியுற்று வந்தேம் என்று கூறியருளினார்.

ஒருத்தராய் - வேறு துணை யில்லாதவராய். கழிந்த என்னும் பெய ரெச்சம் காரணப்பொருட்டு. சிவனை, முன்னிலையிற் படர்க்கை வந்தது. சிவனடியாரைச் சிவன் என்று கூறுதல் மரபு; தேவரீர் என்பது போல; வைணவர்கள் பெருமாள் என்று கூறுதலுங் காண்க. உண்மையுந் தோன்ற இங்கே 'சிவனை' எனக் கூறினார். என்ன தவம் என்க. (உக)

இற்பூட்டிப் போயினா ரேமரங்க ளெனக்களரி
யியம்ப மேரு
விற்பூட்டிப் புரம்பொடித்த வேதியர்நின் கைதொட்டு
விடுமுன் யாத்த

கோற்பூட்டு விடுந்திறந்து கடிதடிசில் சமைத்தியெனக்
குமரி தாளில்
அற்பூட்டு மடவரலு மவ்வாறே யட்டில்புகுந்
தடிசி லாக்கி.

(இ - ள்.) (என்ற வளவில்), கௌரி - கௌரியம்மை, எமரங்கள் இல்பூட்டிப் போயினர் என - எம்மவர் வீட்டினைப் பூட்டிச் சென்றனர் என்று கூற, மேருவில் பூட்டிப் புரம் பொடித்த வேதியர் - மேருவில்லில் (அனந்தனாகிய நாணைப்) பூட்டித் திரிபுரத்தை நீறாக்கிய சிவபெருமானாகிய அந்தணர், நின் கை தொட்டுவிடுமுன் நினது கையாற் றொட்டு விடுதற்கு முன்னே யாத்த கொல் பூட்டு விடும் - பந்தித்த கொல்லனாற் செய்த பூட்டு நெகிழ்ந்து விடும்; திறந்து கடிது அடிசில் சமைத்தி என்ன - கதவைத் திறந்து விரைவில் உணவு ஆக்குவாய் என்று கூற, குமரி தாளில் அன்பு ஊட்டு மடவரலும் - இறைவியின் திருவடியில் அன்பினைச் செலுத்திய கௌரியும், அவ்வாறே அட்டில் புகுந்து அடிசில் ஆக்கி - அங்ஙனமே திறந்து அடுக்களையில் நுழைந்து திருவமுது சமைத்து.

எமரங்கள், கள் என்னும் விகுதிமேல் விகுதியும் அம் சாரியையும் பெற்று முடிந்தது. விற்பூட்டி - வில்லை வளைத்து என்றுமாம். கையாற் றொடு, அங்ஙனம் தொட்டு விடுமுன் என விரிக்க. கொல் - கொற்றொழில். பூட்டு விடும் - பூட்டு யாப்பு விடும். அற்பூட்டு - அன்பினைச் செலுத்திய; அன்பு அற்பு என வலித்தது. (உஉ)

தையன்மா தவக்கொழுந்து புறம்போந்து சிரகநீர்
தளிர்க்கை தாங்கி
ஐயனே யமுதுசெய வெழுந்தருளு மெனவெழுந்த
வடிகள் பாதச்
செய்யதா மரைவிளக்கி யந்நீர்தன் சென்னியின்மேற்
றெளித்துப் பாச
மையன்மா சிருள்கழுவி யகம்புகுவித் தாசனமேல்
வைத்துப் பின்னர்.

(இ - ள்.) மாதவக் கொழுந்து தையல் - பெரிய தவக்கொழுந்தாகிய கௌரி, புறம் போந்து - வெளியே வந்து, தளிர்க்கை சிரக நீர் தாங்கி - தளிர்போன்ற கையிலே கமண்டல நீரையேந்தி, ஐயனே அமுது செய எழுந்தருளும் என - ஐயனே! திருவமுது செய்தற்கு எழுந்தருளுவீராக என்று வேண்ட, எழுந்த அடிகள் பாதம் செய்ய தாமரை விளக்கி - அங்ஙனமே எழுந்த பெரியாரின் திருவடியாகிய செந்தாமரை மலர்களை (அக் கமண்டல நீரால்) விளக்கி, அந்நீர் தன் சென்னியின் மேல் தெளித்து - அந்த நீரைத் தனது தலையின்மீது தெளித்து, பாசம் மையல் மாசு இருள் கழுவி பாசமாகிய மயக்கத்தை விளைவிக்கும் மல விருளைப்போக்கி, அகம் புகுவித்து ஆசன மேல்வைத்து - இல்லிற் புகுவித்துத் தவிசின்மேல் எழுந்தருளியிருக்கச்செய்து, பின்னர் - பின்பு,

தெளித்து அங்ஙனம் தெளித்தலாற் கழுவி என்க. இருட் பாச மையல் மாசு எனக் கூட்டி, ஆணவமாகிய மயக்கத்தைச் செய்யும் அழுக்கினை என்றுரைத்தலுமாம். (உங)

நகைமலரிட் டருச்சித்து நல்லபரி கலந்திருத்தி
　　நறுவீ முல்லை
முகையனைய பாலடிசில் வெள்ளிமலை யெனப்பருப்பு
　　முதுகிற் செம்போற்
சிகரமெனப் பல்வேறு கருனைபுறந் தழீஇக்கிடந்த
　　சிறுகுன் றீட்ட
வகையெனநெய் யருவியெனப் படைத்தனைய சிற்றுண்டி
　　வகையும் பெய்து.

(இ - ள்) நகை மலர் இட்டு அருச்சித்து - விளக்கமாகிய மலர்களால் அருச்சித்து நல்ல பரிகலம் திருத்தி - நல்ல உண்கலத்தைத் திருத்தி வைத்து, நறுவீ முல்லை முகை அனைய பால் அடிசில் வெள்ளி மலை என - நறுமணங்கமழும் மலர்களையுடைய முல்லையின் அரும்பு போன்ற பால் வார்த்துச் சமைத்த சோற்றை வெள்ளிமலை போலவும், பருப்பு முதுகில் செம்பொன் சிகரம் என - பருப்பினை அம்மலையின் முதுகில் உள்ள சிவந்த பொன்னாலாகிய முடிபோலவும், பல்வேறு கருனை - பலவேறு பொரிக்கறிகளை, புறம் தழீஇக் கிடந்த ஈட்டம் சிறு குன்றின் வகை என - அம்மலையின் புறத்திற் சூழ்ந்து கிடந்த கூட்டமாகிய சிறு மலைகளின் வகை போலவும், நெய் அருவி எனப் படைத்து - நெய்யினை (அம்மலையில் ஒழுகும்) அருவி போலவும் படைத்து, சிற்றுண்டி வகையும் அனைய பெய்து - வேறு வேறு சிற்றுண்டிகளையும் அங்ஙனமே படைத்து.

பரிகலம் - உண்கலம், திருத்தி - தூய்மையுற வைத்து, நறுவீ முல்லைக்கு அடை. பாலடிசில் - வெள்ளிய அடிசிலுமாம். அடிசிலின் மேலிட்ட பருப்பு வெள்ளி மலையின் பொன் முடிபோலவும், அடிசிலைச் சூழவிட்ட கருனைகள் வெள்ளி மலையைச் சூழ்ந்து கிடந்த குன்றுகள் போலவும், அடிசிலின்மேலிருந்து ஒழுகும் நெய் வெள்ளி மலையின் முடியிலிருந்து ஒழுகும் அருவி போலவும் இருக்குமாறு என்க; வடிவும் நிறமும் பற்றி உவமைகள் கூறினர். (உச)

செய்யவா யிடையிடையே முகமனுரை யின்னமுது
　　செவியி லூட்டத்
தையலாள் வளைக்கையறு சுவையமுது வாயூட்டத்
　　தளர்ந்த யாக்கை
ஐயர்தாங் திருவமுது செய்தமுதுண் டவரேனமுப்
　　பகன்று பூவிற்
கையதே மலர்வாளிக் காளைவடி வாயிருந்தார்
　　கன்னி காண.

(இ - ள்.) தையலாள் - கௌரியம்மையின், செய்ய வாய் இடை இடையே முகமன் உரை இன் அமுது செவியில் ஊட்ட - சிவந்த வாயானது அடிக்கடி இன் மொழிகளாகிய இனிய அமுதினைச் செவியில் உண்பிக்கவும், வளைக்கை - வளையலணிந்த கையானது, அறுசுவை அமுது வாய் ஊட்ட - அறுசுவையோடுங் கூடிய அமுதினை வாயில் உண்பிக்க வும், தளர்ந்த யாக்கை ஐயர் - (மூப்பினால்) தளர்ச்சியுற்ற திருமேனியை யுடைய அவ்வேதியர், திருவமுது செய்து - உண்டருளி, அமுது உண்டவர் என - தேவாமுதம் உண்டவர் போல, மூப்பு அகன்று - முதுமை யொழிந்து, பூவில் கையதே மலர் வாளிக்காளை வடிவாய் - மலர்வில்லை ஏந்திய கையினையுடைய தேன் சிந்தும் மலர்க் கணைகளை யுடைய மதவேளின் வடிவினை உடையராகி, கன்னி காண இருந்தார் - கௌரி பார்க்குமாறு இருந்தனர்.

இடையிடையே அமுதம் போலும் இன்மொழிகளைக் கூறிக் கையால் அமுதூட்டினாள் என்க. கையினையுடைய காளை, வாளியையுடைய காளை எனக் கூட்டுக. மன்மதனுக்கு மலர் வில்லும் உண்டென்பதனை 'புஷ்பதந்வா' என அவனுக்கு வழங்கும் பெயரானறிக.

'பூங், குலை சிலையாக் கொண்டவர் போலும்''

என மதுரைக்கலம்பகங் கூறுதலுங் காண்க. (டு௫)

பூசியவெண் ணீறுபோய்க் கலவையாய்க் கண்டிகைபோய்ப்
பொன்செய் பூணுங்
காசணிபொற் குண்டலமுங் கடகமுமாய் மூப்புப்போய்க்
காளை யான
தேசுருவங் கண்டுநடு நடுங்கிவளைக் கரநெரித்துத்
திகைத்து வேர்த்துக்
கூசியொரு புறத்தோதுங்கி நின்றாளக் கற்புமலர்க்
கோம்ப ரன்னாள்.

(இ - ள்.) பூசிய வெள்நீறு போய்க் கலவையாய் - அணிந்த வெள்ளிய திரு நீறு மாறிக் கலவைச் சாந்தாகி, கண்டிகை போய் - உருத்தி ராக்கங்கள் மாறி, பொன் செய்பூணும் காசு அணி பொன் குண்டலமும் கடகமும் ஆய் - பொன்னாற் செய்த அணிகளும் மணிகளழுத்திய பொன்னாலாகிய குண்டலங்களும் கடகங்களும் ஆகி, மூப்புப் போய் காளை ஆன தேசு உருவம் - முதுமை மாறிக் கட்டிளமை ஆகிய ஒளி பொருந்திய உருவத்தை, அக்கற்பு மலர்க் கொம்பர் அன்னாள் கண்டு - கற்பினையுடைய பூங்கொம்பு போன்ற அக் கௌரியம்மை பார்த்து, நடுநடுங்கி வளைக்கரம் நெரித்து - நடுநடுங்கி வளையலணிந்த கைகளை நெரித்து, திகைத்து வேர்த்து - மனந்திகைத்து உடல் வெயர்த்து, கூசி ஒருபுறத்து ஒதுங்கி நின்றாள் - அஞ்சி ஒரு பக்கத்தில் ஒதுங்கி நின்றாள்.

போய் - மாறி, ஆய் என்னும் எச்சங்கள் ஆன என்னும் பெயரெச்ச வினை கொண்டன. மகளிர் அச்சத்தால் கை நெரித்தல் இயல்பு. கொம்பர் : போலி. (உசு)

ஆனபொழு தருங்கடிநன் மணங்குறித்து மனையிற்றீர்ந்
தயலூர் புக்க
தேனொழுகு துழாயலங்கற் றீர்த்தனுக்கன் புடையார்போற்
றிரியும் வஞ்ச
மானமுடை யார்மீண்டு மனைபுகலும் பதினறு
வயதின் மேய
பானன்மணி கண்டனுதற் காப்பணிந்தோர் பசுங்குழவிப்
படிவங் கொண்டான்.

(இ - ள்.) ஆனபொழுது அருங்கடி நல்மணம் குறித்து - அப்பொழுது அரிய விளக்கத்தையுடைய நல்ல மணத்தினைக் கருதி, மனையில் தீர்ந்து அயல் ஊர் புக்க - மனையை நீங்கி வேற்றூர் சென்ற, தேன் ஒழுகு துழாய் அலங்கல் தீர்த்தனுக்கு அன்பு உடையார்போல் திரியும் - தேன் வழியும் துழாய் மாலையை யணிந்த திருமாலுக்கு அன்பு உடையார்போல் (நடித்துத்) திரிகின்ற, வஞ்சம் மானம் உடையார் - தீய மானமுடைய மாமி முதலியோர், மீண்டு மனை புகலும் - திரும்பி வந்து இல்லிற் புக, பதினறு வயதில் மேய பானல்மணிகண்டன் - பதினறு வயதுடன் பொருந்தியிருந்த நீலோற்பல மலர்போன்ற அழகிய மிடற்றினையுடைய இறைவன், நுதல் காப்பு அணிந்து ஓர் பசுங்குழவிப் படிவம் கொண்டான்- நெற்றியிலே காப்பினை அணிந்து ஒரு பச்சைக் குழவியின் வடிவத்தைக் கொண்டருளினன்.

புக்க மானமுடையார், திரியும் மானமுடையார் எனத் தனித்தனி கூட்டுக. தீர்த்தன் - தூயன். திருமாலிடத்தும் உண்மை யன்புடையரல்ல ரென்பார் 'அன்புடையார்போல் திரியும்' என்றார். வஞ்சமானம் - தீய அபிமானம்; வஞ்சமும் மானமும் என்றுமாம். பானல் - குவளை, பானலும் நீலமணியும் போலும் கண்டம் என்றுமாம். காப்பு - திருநீறு; பொட்டு மாம். பசுமை - இளமை மேற்று. (உஎ)

எழுதரிய மறைச்சிலம்பு கிடந்துபுறத் தலம்பவன்ப
ரிதய மென்னுஞ்
செழுமலரோ டையின் மலர்ந்து சிவானந்தத் தேன்றதும்பு
தெய்வக் கஞ்சத்
தொழுதகுசிற் றடிப்பெரிய விரல்சுவைத்து மைக்கணீர்
துளும்ப வாய்விட்
டழுதணையா டையிற்கிடந்தா னனைத்துயிரு மீன்றுகாத்
தழிக்கு மப்பன்.

(இ - ள்.) அனைத்து உயிரும் ஈன்று காத்து அழிக்கும் அப்பன் - எல்லா உயிர்களையும் படைத்துக் காத்துத் துடைத்தருளும் ஐயன், எழுதரிய மறைச்சிலம்பு கிடந்து புறத்து அலம்ப - எழுதற்கரிய வேதமாகிய சிலம்புகள் புறத்திற் சூழ்ந்து கிடந்து ஒலிக்க, அன்பர் இதயம் என்னும்

செழுமலர் ஓடையில் மலர்ந்து - அன்பர்களின் நெஞ்சமாகிய செழிய மலரோடையில் மலர்ந்து, சிவானந்தத்தேன் ததும்பு - சிவானந்தமாகிய தேன் ததும்பி வழியும், தெய்வக்கஞ்சம் தொழுதகு சிற்றடி - தெய்வத் தன்மை பொருந்திய தாமரை மலர்போன்ற யாவராலும் வணங்கத் தக்க சிறிய திருவடியின், பெரிய விரல் சுவைத்து பெருவிரலை வாயில் வைத்துச் சுவைத்துக் கொண்டு, மைக்கண் நீர் துளும்ப வாய்விட்டு அழுது அணை ஆடையில் கிடந்தான். மைதீட்டிய கண்களில் நீர் ததும்ப வாயினைத் திறந்து அழுது அணையாக விரித்த ஆடையிலே கிடந்தருளினன்.

வேதங்கள் புறத்தே ஒலித்துக் கொண்டிருக்க அன்பர்களின் அகத்தில் விளங்குகின்ற திருவடி என்னும் நயமும் தோன்றுமாறு காண்க. தாமரை போலும் அடியென்னும் உவமை இதய ஓடையில் மலர்ந்து சிவானந்தத்தேன் ததும்பும் என்னும் உருவகங்களை அங்க மாகக் கொண்டு வந்தது. காற்பெருவிரல் சுவைத்தல் குழவி யியல்பு. எவ்வுயிர்க்கும் அப்பனுகியவன் தானெரு குழவியாய்க் கிடந்தான் என அவனது திருவிளையாட்டை வியந்து கூறியவாறு. (உஅ)

தாய்விட்டுப் போனதோரு தனிக்குழவி யெனக் கலங்கித்
 தாங்கித் தேடி
ஆய்விட்டுப் பிரமனழ மறைகளழ வன்புடையா
 ளன்பிற் பட்டு
வாய்விட்டுக் கிடந்தழுத மகவினைக்கண் டணங்கனையாண்
 மாமி யென்னுங்
காய்விட்டு மதக்கோடியா ளிம்மகவே தேனக்கேட்டாள்
 கௌரி தன்னை.

(இ - ள்.) தாய் விட்டுப் போனது ஒரு தனிக் குழவி எனக் கலங்கி - தாய் கைவிட்டுப் போகப்பட்டதாகிய ஓர் ஒப்பற்ற குழவியைப் போலக் கலங்கி, தாங்கி ஆய்விட்டு பிரமன் அழ - முடியிற்றாங்கி ஆராய்ந்து தேடிப் பிரமன் (ஒருபால்) அழவும், மறைகள் அழ - வேதங்கள் (ஒருபால்) அழவும், அன்பு உடையாள் அன்பில் பட்டு - அன்புடைய கௌரியின் அன்பிலகப்பட்டு, வாய்விட்டுக் கிடந்து அழுத மகவினைக் கண்டு - வாயைத் திறந்து அணையாடையிற் கிடந்தழுகின்ற குழவியைப் பார்த்து, அணங்கு அனையாள் மாமி என்னும் காய்விட்டு மதக்கொடியாள் - திருமகளை ஒத்த கௌரியின் மாமி என்கின்ற பெருஞ் சினத்தையுடைய வைணவ மதக்கொடியவள், கௌரி தன்னை இம்மகவு ஏது எனக் கேட்டாள் - கௌரியை நோக்கி இக்குழவி ஏது என்று கேட்டாள்.

தாய்தனி விட்டுப் போனதொரு குழவி என்றுமாம். எவ் வுயிர்க்கும் தந்தையே யன்றித் தாயுமாகிய இறைவன் தாய் விட்டுப் பிரிந்த குழவிபோல் அழுதான் என்றும், பிரமன் முதலிய தேவர்களும் மறைகளும் தன்னைத் தேடிக் காணது அழ நிற்கத் தான் தாயைக் காணது அழுவான்போல் அழுதான் என்றும் இறைவனுடைய அருமையும் எளிமையும் தோன்றக் கூறிய பொருணயமும் சொன்னயமும்

பாராட்டற் குரியன. கலங்கி வாய்விட்டுக் கிடந்தழுத எனக் கூட்டுக. ஆய்வு இட்டு - ஆராய்தலைப் பொருந்தி பிரமன் ஏனைத் தேவர்க்கும் உபலக்கணம். அன்பாகிய வலையிலகப்பட்டு என்பார் 'அன்பிற் பட்டு' என்றார். மாமியென்னும் கொடியாள், காய்கின்ற கொடியாள் எனக் கூட்டுக. விட்டு விஷ்ணு என்பதன் சிதைவு. (உக)

நத்தனயன் றனக்கரிய நாயகனுக் கன்புடையா
 ணவில்வா டேவ
தத்தனயந் தருமனைவி யோடுபோந்து சிறுபோது
 தையலாயீண்
டித்தனயன் றனைப்பார்த்துக் கோடியென வைத்தகன்று
 னென்ன முன்னஞ்
சித்தநய னங்கலங்கச் சீறிமண வாட்டிதன்மேற்
 செற்றங் கொண்டாள்.

(இ - ள்.) நத்தன் அயன் தனக்கு அரிய நாயகனுக்கு அன்பு உடையாள் நவில்வாள் - சங்கினை ஏந்திய திருமாலுக்கும் பிரமனுக்கும் காண்டற்கரிய சிவபெருமானுக்கு அன்புடைய கௌரி கூறுவாள், தேவ தத்தன் நயம் தரு மனைவியொடு போந்து தேவதத்தனென்பான் தனக்கு இன்பந்தரும் மனைவியொடும் வந்து, தையலாய்-பெண்ணே. இத்தனயன் தனை ஈண்டு சிறுபோது பார்த்துக் கோடி என வைத்து அகன்றான் - இக் குழவியை இங்குச் சிறிது பொழுது பார்த்துக்கொள்வாயாக என்று வைத்துச் சென்றான், என்ன முன்னம்-என்று சொல்லு முன்னரே, சித்தம் நயனம் கலங்கச் சீறி மணவாட்டி தன்மேல் செற்றம் கொண்டாள் - மனமுங் கண்களும் கலங்குமாறு சினந்து மருகியாகிய கௌரியின் மேல் மாறாச் சினங் கொண்டாள்.

நத்து - சங்கு. நவில்வாள் என்பதனைக் கூறுபவள் எனப் பெயராகக் கொள்க. யாரோ ஒருவன் என்பதற்குத் தேவதத்தன் என்று கூறும் வட நூல் வழக்குப்பற்றி ஈண்டுத் தேவதத்தன் என்று கூறிற்றுமாம். கோடி-கொள்ளுதி. என்றாள் என்னுமுனம் என விரித்துரைக்க. தன் சித்தமும் கண்ணும் சினத்தாற் கலங்க என்றும், கௌரியின் சித்தமும் கண்ணும் கலங்க என்றும் இருவகையாகக் கூறுதலும் பொருந்தும். செற்றம் - வைரம்; மாறா வெகுளி. தன்: அசை. (௬0)

என்புபூண் டிடுகாட்டிற் போடியாடு முருத்திரனுக்
 கிடைய ரூத
அன்புபூண் டான்மகவுக் கன்புடையாய் நீயுமெமக்
 காகா யென்னாத்
துன்புபூண் டயர்வாளை மகவையுங்கொண் டகத்தைவிடத்
 துரத்தி னார்கள்
வன்புபூண் டொழுகுவை ணவம் பூண்டு பொறையிரக்க
 மான நீத்தார்.

(இ - ள்.) என்பு பூண்டு இடுகாட்டில் பொடி ஆடும் உருத்திரனுக்கு-என்பினை அணிந்து புறங்காட்டிலே சாம்பலைப் பூசி ஆடுகின்ற உருத்திரனுக்கு, இடையறுத அன்பு பூண்டான் மகவுக்கு அன்பு உடையாய் - நீங்காத அன்பினை யுடையவன் மகவுக்கு அன்புடையவளே, நீயும் எமக்கு ஆகாய் என்று - நீயும் எங்களுக்கு ஆகமாட்டாய் என்று, வன்பு பூண்டு ஒழுகு - கொடுமையை மேற்கொண்டு ஒழுகாநின்ற வைணவம் பூண்டு - வைணவ நெறியைக் கைக்கொண்டு, பொறை இரக்கம் மானம் நீத்தார்-பொறுமையையும் கருணையையும் மானத்தையும் அறவே கைவிட்ட அவர்கள். துன்பு பூண்டு அயர்வாளை - துன்பத்தை மேற்கொண்டு சோருகின்ற கௌரியை, மகவையும் கொண்டு அகத்தைவிடத் துரத்தினர்கள் - அக்குழவியையும் கைக்கொண்டு மனையினின்று புறம்போக ஓட்டினர்கள்.

உருத்திரனுக்கு அன்பு பூண்டான் மகவுக்கு அன்புடையாய் என்றது அவர்கள் பொருமை யென்னும் சிறுமைக் குணத்தைக் காட்டுகின்றது, நீயும் என்னும் உம்மை, அவர்கள் எமக்கு ஆகாதவராதலே யன்றி என்னும் பொருள் தருதலால் எச்சவும்மை. ஆகாமை - பொருந்தாமை; பகைமை. முதலில் அவள் உறுந் துன்பத்தையும் நோக்காது, மருகி யென்றும் எண்ணாது, இளங் குழந்தையின் அழுகையையும் கருதாது துரத்தினமையால் 'பொறையிரக்க மான நீத்தார்' என்றார். ஒழுகு என்னும் பெயரெச்ச முதனிலை நீத்தார் என்பதன் விகுதியைக் கொள்ளும். (டக)

தாயிலாப் பிள்ளைமுகந் தனைநோக்கித் தெருவினிடைத்
தளர்வா ளுள்ளங்
கோயிலாக் கொண்டுறையுங் கூடனா யகனைமனக்
குறிப்பிற் கண்டு
வேயிலாக் கியதடந்தோட் கௌரிதிரு மந்திரத்தை
விளம்ப லோடுஞ்
சேயிலாக் கிடந்தழுத குழவிவிசும் பிடைவிடைமேற்
றெரியக் கண்டாள்.

(இ - ள்.) தாய் இலாப் பிள்ளை முகம்தனை நோக்கித் தெருவினிடைத் தளர்வாள் - தாயில்லாத அப்பிள்ளையின் திருமுகத்தை நோக்கித் தெருவின்கண் வருந்தும் அக்கௌரியானவள், உள்ளம் கோயிலாக் கொண்டு உறையும் கூடல் நாயகனை - தனது உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டு எழுந்தருளி யிருக்கும் மதுரை நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளை, மனக் குறிப்பில் கண்டு - மனத்தின் தியானத்தாலே தரிசித்து, வேயில் ஆக்கிய தடம் தோள் கௌரி திருமந்திரத்தை விளம்பலோடும் - மூங்கிலால் அமைத்தா லொத்த பெரிய திருத்தோள்களை யுடைய உமாதேவியின் திருமந்திரத்தை ஓதியவளவில், சேயிலாக் கிடந்து அழுத குழவி - சேய்மை யில்லையாகக் (அண்மையிற்) கிடந்து அழுத அம்மகவு, விசும்பிடை விடைமேல் தெரியக் கண்டாள் - வானிலே இடப வூர்தியின் மேல் விளங்கத் தரிசித்தாள்.

சிவபெருமானைத் தாயிலாப் பிள்ளை என்று கூறிய நயம் ஓர்க. குறிப்பு - சிந்தனை; தியானம். ஆக்கிய - அமைத்தா லொத்த; வேய் போன்ற என்பது கருத்து. சேய்மை யில்லையாக என்பது 'சேயிலா' என்றாயிற்று. விடைமேல் மழவுரு நீத்துத் தெரிய வென்க. (கூஉ)

மழவுருநீத் தடலேற்றின் வருவார்தம் மிடத்தணங்கின்
மனுவை யோதிப்
பழகியபார்ப் பனமகளைப் பார்ப்பதியின் வடிவாக்கிப்
பலருங் கண்டு
தொழவிடைமே லேற்றிவிசும் பாருக மலர்மாரி
சுரர்க டூற்ற
அழகரெழுந் தருளினர் களிதூங்கி யதிசயித்தா
ரவனி மாக்கள்.

(இ - ள்.) மழ உரு நீத்து அடல் ஏற்றின் வருவார் - குழவி வடிவத்தை நீக்கி வெற்றி பொருந்திய இடபவூர்தியில் வருகின்றவராகிய, அழகர் - சோமசுந்தரக் கடவுள், தம் இடத்து அணங்கின் மனுவை ஓதிப் பழகிய பார்ப்பன மகளை - தமது இடப்பாகத்திலமர்ந்தருளும் உமாதேவியின் திருமந்திரத்தை உச்சரித்துக் கைவந்த கௌரியம்மையை, பார்ப்பதியின் வடிவு ஆக்கி - உமையின் சாரூபத்தை அளித்தருளி, பலரும் கண்டு தொழ - யாவருங் கண்டு வணங்க, சுரர்கள் மலர்மாரி தூற்ற - தேவர்கள் மலர் மழை பொழிய, விடைமேல் ஏற்றி - இடபவூர்தியில் ஏற்றிக்கொண்டு, விசும்பு ஆருக எழுந்தருளினர் - வான்வழியாக எழுந்தருளினர்; அவனி மாக்கள் களிதூங்கி அதிசயித்தார் - புவியிலுள்ள மக்கள் களிப்பிலழுந்தி வியப்புற்றார்கள்.

அழகர் என்பதனை முன்னர்க்கூட்டி, வருவாராகிய அழகர் என்க. பார்ப்பதியின் வடிவு - உமையின் சாரூபம். மகளை ஏற்றி; எழுந்தருளினர் என்க. (கூஙு)

ஆகச் செய்யுள் : கருசும

———

இருபத்து நான்காவது

கான்மாறியாடின படலம்

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

திருத்த ராய்மது ராபுரி மேவிய
சித்தரா கியசெல்வர்
விருத்த ராயிளை யவருமாய் மழவுமாய்
வேடங்கோண் டடலேற்றின்
ஒருத்த ராய்விளை யாடிய வாடலை
யுரைத்தன மினிமன்றுள்
நிருத்த ராயவர் மாறிநின் றாடிய
நிலைசிறி துரைசெய்வாம்.

(இ - ள்.) திருத்தராய் மதுராபுரி மேவிய சித்தராகிய செல்வர் - திண்மலராய் மதுரை யம்பதியில் எழுந்தருளிய எல்லாம்வல்ல சித்தரான அருட் செல்வத்தையுடைய சோமசுந்தரக் கடவுள், விருத்தராய் இளையவருமாய் மழவுமாய் வேடம் கொண்டு - கிழவனாகியும் காளை யாகியும் குழவியாகியும் (உள்ள) திருவேடங்களைக் கொண்டு, அடல் ஏற்றின் ஒருத்தராய் - (பின்பு) வெற்றியையுடைய இடபவூர்தியின்மேல் ஒருவராய் நின்று, விளையாடிய ஆடலை உரைத்தனம் - விளையாடிய திருவிளையாடலைக் கூறினும்; இனி மன்றுள் நிருத்தராயவர் மாறி நின்று ஆடிய நிலை சிறிது உரை செய்வாம் - இனி வெள்ளியம்பலத்தில் நிருத்த ராகிய பெருமான் கான்மாறியாடியருளிய திருவிளையாடலைச் சிறிது கூறுவாம்.

உம்மைகள் எச்சப்பொருளன. விருத்தர் முதலிய மூவுருவங் கொண் டவரே பின்பு ஒருத்தராயும் நின்று விளையாடினு ரென்க. ஆயவர் : முதல் வேற்றுமைச் சொல். (க)

வேந்தன் மீனவன் கோடியவ* னாகிய
விக்கிர மன்றன்றேள்
ஏந்து மண்பொறை யிராசசே கரன்புயத்
திறக்கியைந் தருநாடன்
பூந்தண் மாமலர் வேதியன் மாதவன்
புரத்தின்மேற் பொலிந்தோங்குஞ்
சாந்த நீறெனச் சண்ணித்த புண்ணியத்
தனிமுத னகர்சார்ந்தான்.

(பா - ம்.) * மீனவண் கொடியவ.

(இ - ள்.) மீனம் வன் கொடியவனுகிய விக்கிரமன் வேந்தன் - கயல் எழுதிய வலிய கொடியினையுடையவனுகிய விக்கிரமபாண்டியனென்னும் மன்னன், தன் தோள் ஏந்து மண் பொறை தனது தோளாற் சுமந்த புவிச்சுமையை, இராச சேகரன் புயத்து இறக்கி- இராச சேகரன் என்னும் புதல்வன் தோளில் இறக்கிவிட்டு, ஐந்தரு நாடன்-பஞ்ச தருக்களையுடைய நாட்டையுடைய இந்திரனும், பூந்தண்மா மலர் வேதியன் - பொலிவினையுடைய தண்ணிய சிறந்த தாமரை மலரில் வசிக்கும் பிரமனும், மாதவன் புரத்தின்மேல் பொலிந்து ஓங்கும் - திருமாலுமாகிய இவர்களுடைய உலகத்திற்கு மேலே பொலிந்து ஓங்கிய, நீறு சாந்தம் என சண்ணித்த புண்ணியத் தனிமுதல் நகர் சார்ந்தான் - திருநீற்றினைச் சந்தனமாகப் பூசிய அறவடிவுடைய ஒப்பற்ற முதற்கடவுளாகிய சிவபிரான் உலகத்தை அடைந்தான்.

வல் மீனக்கொடியவனுகிய விக்கிரமவேந்தன் என்க இராசசேகரன் புயத்தில் ஏந்துமாறு இறக்கி. தான் சுமை ஒழிந்தமையால் 'இறக்கி' என்ருர். புரத்தின்மேற் பொலிந்தோங்கும் நகர் எனக் கூட்டுக. சண்ணித்தல் - பூசுதல்;

"மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான்"

என்பது திருநாவுக்கரசர் திருவாக்கு. (உ)

கண்ண கன்புவி யிராசசே கரன்போதுக்
கடிந்துசெங் கோலோச்சி
வண்ண வெண்குடை நிழற்றுவா ஞனந்த
வடிவமாய்த் தனிமன்றுள்
அண்ண லாடிய திருநடத் தன்பிஞ
லாடனு லொழித்தேனை
எண்ணு மூவிரு பத்துமுக் கலையுங்கற்
றிறைமுறை செயுநாளில்.

(இ - ள்.) இராச சேகரன் கண் அகன்புவி பொதுக்கடிந்து - இராச சேகர பாண்டியன் இடமகன்ற இந்நிலவுலகைப் பொது நீக்கி, செங்கோல் ஓச்சி வண்ணம் வெண்குடை நிழற்றுவான்-செங்கோலை நடாத்தி அழகிய வெண்கொற்றக் குடையால் நிழலைச் செய்து, ஆனந்த வடிவமாய்த் தனி மன்றுள் ஆடிய அண்ணல் திரு நடத்து அன்பினுல் - இன்ப வடிவமாய் ஒப்பற்ற மன்றின்கண் ஆடியருளும் இறைவனது திருநடத்தில் வைத்த பேரன்பினுல், ஆடல் நூல் ஒழித்து - பரதநூலை நீக்கி எண்ணும் ஏனை மூவிருபத்து முக்கலையும் கற்று - எண்ணப்படும் மற்றை அறுபத்து மூன்று கலைகளையும் கற்று, இறைமுறை செயும் நாளில் - அரசியலை முறைப்படி நடாத்தி வருநாளில்.

அகன், மரூஉ. பொதுக்கடிந்து-தனக்கே உரியதாக்கி நிழற்றுவான்: பெயருமாம். இறைவன் புரியும் திருக்கூத்தினைத் தானும் இயற்றுதல் தகவுடைத்தன்று எனக்கருதி யொழித்தான் என்பார் 'திருநடத்தன்பினுல் ஆடனூல் ஒழித்து' என்ருர். (௩)

சிலம்பி வாயினூ லிழைத்திடு பந்தரிற்
சேங்கண்மா ரேழவைகும்
அலம்பு தெண்டிரைப் பொன்னியந் தண்டுறை
யானைக்கா விறைக்கன்பு
கலந்த சிந்தையான் மூவிரு பத்துநாற்
கலைகளும் பயின்றுள்ளம்
மலர்ந்த வன்கரி காற்பெரு வளத்தவன்
வையகம் புரக்கின்றான்.

(இ - ள்.) சிலம்பி வாயின் நூல் இழைத்திடு பந்தரில் - சிலந்திப் பூச்சியானது வாயின் நூலாற் செய்த பந்தரிலகண், செங்கண்மால் தொழவைகும் - சிவந்த கண்களையுடைய திருமால் வணங்க வீற்றிருக்கும், அலம்பு தெண் திரைப் பொன்னி அம்தண் துறை ஆனைக்கா இறைக்கு - ஒலிக்கின்ற தெள்ளிய அலைகளையுடைய காவிரியாற்றின் அழகிய தண்ணிய நீர்த்துறையையுடைய திருவானைக்காவுடைய செல்வருக்கு, அன்புகலந்த சிந்தையான் அன்புகலந்த உள்ளமுடையவனும், மூவிருபத்து நால்கலைகளும் பயின்று உள்ளம் மலர்ந்தவன் - அறுபத்துநான்கு கலைகளையும் கற்று அறிவு விரிந்தவனும் ஆகிய, கரிகால் பெருவளத்தவன் - கரிகாற் பெருவளத்தா னென்னும் சோழமன்னன், வையகம் புரக்கின்றான் - நிலவுலகை ஆண்டு வருவானாயினன்.

ஆனைக்கா - யானை பூசித்த காவாகிய பதி. யானை பூசித்ததும், சிலம்பி வாயினூலாற் பந்தரிட்டு வழிபட்டதுமாகிய வரலாறுகளைப் பெரியபுராணத்திலுள்ள கோச்செங்கட் சோழர் புராணத்தாலறிக. கரிகாற் பெருவளத்தான் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின் புதல்வன்; போர் குறித்து வடதிசைச் சென்று, இமயமலை குறுக்கிட்டதென்று சினந்து அதனைச் செண்டாலடித்த பெருவீரன்; காடு கெடுத்து நாடாக்கியும், காவிரிக்குக் கரையிடுவித்தும், நீர் நிலைகளைப் பெருக்கியும் நாட்டினை வளஞ் செய்வித்தவன்; பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை முதலிய பாட்டுகட்குத் தலைவன்; பட்டினப்பாலை பாடிய உருத்திரங் கண்ணனார் என்ற புலவர்க்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசில் கொடுத்தவன்; மற்றும் இவன் பெருமைகளைப் பட்டினப்பாலை முதலியவற்றானறிக. (ச)

பொன்னி நாடவன் வாயிலு ளானொரு
புலவன்வந் தலர்வேம்பின்
கன்னி நாடனைக் கண்டுமுன் பரவுவான்
கனைகழற் கரிகாலெம்
மன்ன வற்கறு பத்துநாற் கலைகளும்
வரும்வரா தனக்கொன்று
தென்ன ரேறனை யாயது பரதநூ றேரிந்திலை
யெனச் சொனனன.

(இ - ள்.) பொன்னி நாடவன் வாயில் உள்ளான் ஒரு புலவன் வந்து - காவிரி நாட்டையுடைய அக் கரிகாற்சோழனது வாயிலினுள்ளவனாகிய ஒரு புலவன் வந்து, அலர் வேம்பின் கன்னிநாடனைக் கண்டு முன் பரவுவான் - அலர்ந்த வேப்ப மலர் மாலையை யணிந்த பாண்டி நாடனாகிய இராச சேகரனைக் கண்டு முன்னின்று துதிக்கின்றவன், தென்னர் ஏறு அனையாய் - பாண்டியருள் ஆண் சிங்கம் போன்றவனே, கனைகழல் கரிகால் எம்மன்னவற்கு அறுபத்துநால் கலைகளும் வரும் - ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த கரிகாலன் என்னும் எம் அரசனுக்கு அறுபத்துநான்கு கலைகளும் கைவரும்; உனக்கு ஒன்று வராது - உனக்கு ஒரு கலை வராது; அது பரத நூல் - அது யாதெனில் பரதநூலாகும்; தெரிந்திலை எனச் சொன்னான் - ஆதலால் நீ கலைகள் முழுதும் அறிந்திலை என்று சொன்னான்.

வாயிலுள்ளான் - அரண்மனைப் புலவன். பரவுவான்: பெயர். கரிகாலன், கரிகால் வளவன் என்றிங்ஙனம் இவன் பெயர் வழங்கும், தீயாற் கரிந்த காலுடைமையால் இப்பெயர் போந்தது;

"சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும்"

என்னும் பழமொழி வெண்பாவும்,

"முச்சக்கரமும்...கரிகாலன் கானெருப்புற்று"

என்னும் பத்துப் பாட்டைச் சார்ந்துள்ள வெண்பாவும் முதலியவற்றால் தீயாற் கால் கருகினமை யறிக. அதனை ஏன் தெரிந்திலையெனச் சொன்னான் எனினும் பொருந்தும். (௫)

கேட்ட மீனவன் மறுபுல விஞ்சையன்
　　கிளத்துசோல் லிகன்மானம்
மூட்ட வாகுல மூழ்கிய மனத்தனாய்
　　முதுமறைச் சிரமன்றுள்
நாட்ட மூன்றுடை நாயக னாடலை
　　நானுமா டுதற்குள்ளம்
வேட்ட தேகோலா மிதுவுமெம் பிரானருள்
　　விதியென வதுகற்பான்.

(இ - ள்.) கேட்ட மீனவன் - அதனைக் கேட்ட பாண்டியன், மறுபுல விஞ்சையன் கிளத்து சொல் இகல் மானம் மூட்ட - வேற்றரசன் வாயிற் புலவன் கூறிய கூற்று பகைமையையும் மானத்தையும் மூள்விக்க, ஆகுலம் மூழ்கிய மனத்தனாய் - துன்பத்துள் அழுந்திய மனத்தையுடையவனாய், முதுமறைச் சிரம்மன்றுள் - பழைமையாகிய வேதமுடிவின் வடிவாகிய மன்றின்கண், நாட்டம் மூன்று உடை நாயகன் ஆடலை - கண்கள் மூன்றுடைய இறைவன் ஆடியருளும் திருக்கூத்தினை, நானும் ஆடுதற்கு உள்ளம் வேட்டதே - ஒன்றுக்கும் பற்றாத சிறிய னாகிய யானும் ஆடுதற்கு என் உள்ளம் விரும்பிற்றேயோ, இதுவும் எம்பிரான் அருள் விதி என அது கற்பான் - இதுவும் எம் இறைவனுடைய அருளாணையே என்று கருதி அதனைக் கற்பதற்கு.

விஞ்சையன் - கல்வி வல்லோன்; புலவன். இகல்மானம் - வலிய மானமும் ஆம். மானம் - தாழ்தற்கு ஒருப்படாமை. மன்றுள் ஆடும் ஆடலை யென விரிக்க. விரும்பியதனை வியந்து வேட்டதே' என்றான். கொல், ஆம்: அசைகள். விதி - ஆணை, கட்டளை. கற்பான், வினையெச்சம். (௬)

[எழுசீரடியாசிரிய விருத்தம்]

ஆடனூல் வரம்பு கண்டவ ராகி
யவ்வழி யாடலும் பயின்ற
நாடக நடைதேர் புலவரைத் துருவி
நண்ணிய வவர்க்கெலா மகிழ்ச்சி
வீடருஞ் சிறப்பா லறுவையும் பூணும்
வெறுக்கையும் வெறுத்திடக் கொடுத்துப்
பாடல்வண் டரற்றுந் தாரினான் பரதப்
பனுவலுங் கசடறப் பயில்வான்.

(இ - ள்.) ஆடல் நூல் வரம்பு கண்டவராகி - நாடக நூலின் எல்லையைக் கண்டவராய், அவ்வழி ஆடலும் பயின்ற நாடக நடைதேர் புலவரைத் துருவி - அந்நூலிற் கூறிய வழியே ஆடுதலிலும் பழகிய நாடக நடையிற் றேர்ச்சி பெற்ற புலவரைத் தேடி, நண்ணிய அவர்க்கு எலாம் - வந்த அப்புலவரனைவர்க்கும், மகிழ்ச்சி வீடு அருஞ் சிறப்பால் - மகிழ்ச்சி நீங்குதலில்லாத வரிசையினால், அறுவையும் பூணும் வெறுக்கையும் வெறுத்திடக் கொடுத்து - ஆடையும் அணியும் பொன்னுமாகியவற்றை (அவர்கள்) விருப்பமொழியக் கொடுத்து, பாடல் வண்டு அரற்றும் தாரினான் - இசைபாடுதலையுடைய வண்டுகள் ஒலிக்கும் மாலையை யணிந்த பாண்டியன் (அவர்களிடம்,) பரதப் பனுவலும் கசடு அறப் பயில்வான் - நாடக நூலையும் குற்றமறக் கற்கத் தொடங்கினான்.

நாடக நடை - நாடக வொழுக்கம். துருவி-ஆராய்ந்து அழைத்து - சிறப்பால் - வரிசையாக. வெறுத்திட - அவாவடங்க; பின் வேண்டுதலில்லையாக: மிக என்றுமாம்,

“ உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே”

என்பவாகலின் 'வெறுத்திடக் கொடுத்து' என்றார். மீனவனாகிய தாரினான் என்க. பனுவலும், உம்மை எச்சப்பொருட்டு. (எ)

பாவமோ டராகந் தாளமிம் மூன்றும்
பகர்ந்திடு முறையினாற் பரதம்
ஆவயி னங்க முபாங்கமே பிரத்தி
யாங்கமே யலர்முக ராகம்

ஓவறு சீர்சால் கரப்பிர சார
முவமையில் சிரக்கர கருமந்
தாவறு கரகேத் திரங்கர கரணந்
தானக மேசுத்த சாரி.

(இ - ள்.) பாவமோடு அராகம் தாளம் இம்மூன்றும் பகர்ந்திடும் முறையினால் பரதம் - பாவமும் அராகமும் தாளமுமாகிய இந்த மூன்றையும் கூறும் மரபினால் (அந்நூல்) பரதமென்னும் பெயரதாம்; ஆவயின் அங்கம் உபாயங்கமே பிரத்தியாங்கமே அலர் முகராகம் - அந்நூலுட் கூறப்படும் அங்கமும் உபாங்கமும் பிரத்தியாங்கமும் தன்மை மிக்க முகராகமும் ஓவு அறு சீர்சால் கரப்பிரசாரம் - நீங்காத சிறப்பு நிறைந்த கரப்பிரசாரமும், உவமை இல் சிரக்கர கருமம் - ஒப்பில்லாத சிரக்கர கருமமும், தாவு அறு கர கேத்திரம் கரகரணம் தானகமே சுத்தசாரி - கெடுதலில்லாத கரகேத்திரமும் கரகரணமும் தானகமும் சுத்த சாரியும்.

பாவம், ராகம், தாளம் என்பவற்றின் முதற் குறிப்பாகிய ப, ர, த என்னும் மூன்றெழுத்துக்களாலாயது பரதமென்னும் பெயர்; எனவே நாடகத்திற்கு இன்றியமையாதன இம்மூன்று மென்பது பெறும். பொறி யுணர்வாகிய சுவையும், அதுபற்றி உள்ளத்தே நிகழும் குறிப்பும், அக் குறிப்புப் புறத்தே வெளிப்பட்டுத் தோன்றும் விறல் எனப் படும் மெய்ப்பாடும் பாவம் என்பதில் அடங்கும்; எடுத்த பொருளுக் கியைந்த தன்மையைப் பாவந்தோன்ற நிகழ்த்திக் காட்டுவது பாவகம் அல்லது அவிநயம் எனப்படும். வீரச்சுவை, அச்சச்சுவை, இழிப்புச் சுவை வியப்புச்சுவை, இன்பச்சுவை, அவலச்சுவை, நகைச்சுவை, வெகுளிச்சுவை, நடுவுநிலைச்சுவை எனச் சுவை ஒன்பது வகைப்படும்.

விறல் அல்லது சத்துவம் என்பது மெய்ம்மயிர் சிலிர்த்தல், கண்ணீர் வார்தல் நடுக்க மடுத்தல், வியர்த்தல், தேற்றம், களித்தல், விழித்தல், வெதும்பல், சாக்காடு, குரற்சிதைவு எனப் பத்து வகைப்படும். வெகுண்டோன் அவிநயம், ஐயமுற்றோ னவிநயம், சோம்பினோ னவி நயம், களித்தோ னவிநயம், உவந்தோ னவிநயம் அழுக்காறுடையோ னவிநயம், இன்பமுற்றோ னவிநயம், தெய்வமுற்றோ னவிநயம், அஞ்ஞை யுற்றோ னவிநயம், உடன்பட்டோ னவிநயம், உறங்கினோ னவிநயம், துயிலுணர்ந்தோ னவிநயம், செத்தோ னவிநயம், மழை பெய்யப் பட்டோ னவிநயம், பனித்தலைப்பட்டோ னவிநயம், வெயிற்றலைப் பட்டோ னவிநயம், நாணமுற்றோ னவிநயம், வருத்த முற்றோ னவிநயம், கண்ணோவுற்றோ னவிநயம், தலைநோவுற்றோ னவிநயம், அழற்றிறம் பட்டோ னவிநயம், சீதமுற்றோ னவிநயம், வெப்பமுற்றோ னவிநயம், நஞ்சுண்டோ னவிநயம் என அவிநயம் இருபத்து நான்கு வகைப்படும்; இவற்றினியல்புகளைச் சிலப்பதிகார அரங்கேற்று காதைக்கு அடியார்க்கு நல்லார் கூறிய உரையிற் காண்க. அராகம் - இசை; இது மூலாதாரந் தொடங்கி ஆளத்தி எனப்பட்டு; பின்பு இசையென்றும் பண்ணென்றும் சொல்லப்படும்: இஃது - ஆயம், சதுரம், வட்டம், திரிகோணம் என்னும் நால்வகைப் பாலையுள் ஆயப் பாலையாய் நின்ற பதினாற் கோவையிலே செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை எனப்பட்ட ஏழுபாலையினையும் இணை

நரம்புதொடுத்து நிறுத்த எழுகின்ற நூற்று மூன்று பண்கள் முதலாயின வாகும்; இனி, பைரவி முதலாகச் சொல்லப்படும் இராகங்களுமாம்; நரம்பின் அடைவால் உரைக்கப்பட்ட ஆதியிசை பதினுயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்று என்பர். தாளம் - சச்சபுடம் முதலான பஞ்ச தாளமும், அரை மாத்திரையுடைய ஏக தாளம் முதலாகப் பதினறு மாத்திரையுடைய பார்வதிலோசனம் ஈருகச் சொன்ன நாற்பத்தொரு தாளமும், ஆறன் மட்டம் எட்டன் மட்டம் என்பனவும், தாளவொரியல் தனிநிலை யொரியல் என்பனவும், ஒன்றன் பாணி முதலாக எண் கூத்துப்பாணி இறுதியாகக் கிடந்த பதினொரு பாணி விகற்பங்களும், முதனடை வாரம் முதலாயினவுமாம், அங்கம் முதலாகக் கூறப்படுவன நிருத்தத்தின் பொதுவிலக்கண வகைகள்; இவை வருஞ் செய்யுளிற் கூறப்படுவனவற்ருேடு சேர்ந்து முடியும். (அ)

விண்டிடாத் தேசி சாரியே நியாயம்
விருத்தியே பிரவிசா ரம்பூ
மண்டல முடனு காசமண் டலமே
மாசில்சுத் தக்கர ணஞ்சீர்
கண்டவுற் புலித கரணமே யங்க
காரமே யிரேசித மென்னக்
கோண்டநா லைந்து பேதமுங் கற்றுக்
கோதறப் பயின்றபி னவற்றுள்.

(இ - ள்.) விண்டிடாத் தேசிசாரியே - நீங்காத தேசிசாரியும், நியாயம் விருத்தியே பிரவிசாரம்-நியாயமும் விருத்தியும் பிரவிசாரமும், பூ மண்டலமுடன் ஆகாச மண்டலம் - பூ மண்டலமும் ஆகாச மண்டலமும், மாசுஇல் சுத்தக் கரணம் - குற்ற மில்லாத சுத்தக் கரணமும், சீர்கண்ட உற்புலித கரணமே அங்ககாரமே இரேசிதம் - சிறப்பமைந்த உற்புலித கரணமும் அங்ககாரமும் இரேசிதமும், என்னக் கொண்ட - என்று சொல்லப்பட்ட, நாலைந்து பேதமும் கற்றுக் கோதறப் பயின்ற பின் - இருபது பேதங்களையுங் கற்றுக் குற்றமறப் பழகிய பின்னர், அவற்றுள் - அவைகளுள்.

எண்ணேகாரம் இடையிட்டு வந்தன. (கூ)

வருத்தமின் மனேபா வாதியா மேட்டு
வகைநிருத் தங்களிற் சாரி
நிருத்தமா கியதாண் டவமக மார்க்க
நிகழ்த்திடுந் தேசியே வடுகே
அருத்தமா கியசிங் களமேன மூன்று
மதுநிலை யாறுமூ விரண்டு
திருத்தமாம் பதமுந் திகழிரே காதி
சேப்பிய வங்கமீ ரேட்டும்.

(இ - ள்.) வருத்தம் இல் மனோபாவ ஆதியாம் எட்டுவகை நிருத்தங்களில் - வருத்தமில்லாத மனோபாவ முதலிய எண்வகை நிருத்தங்களில் சாரி நிருத்தமாகிய தாண்டவம் அகமார்க்கம் ஆம் - சாரி நிருத்தமாகிய தாண்டவம் அகமார்க்கமாகும். நிகழ்த்திடும் தேசியே வடுகே அருத்தமாகிய சிங்களம் என மூன்றும் - (இன்னும் அவ்வக மார்க்கம்) கூறப்படும் தேசியும் வடுகும் பொருளமைந்த சிங்களமும் என மூன்று வகைப்படும்; அது நிலை ஆறும் - அவ்வக மார்க்கத்திற் குரிய அறுவகை நிலையும், மூவிரண்டு திருத்தம் ஆம் பதமும் - மூன்றும் இரண்டுஞ் சேர்ந்த திருத்தமாகிய ஐந்து பதமும், திகழ் இரேகை ஆதி செப்பிய அங்கம் ஈரெட்டும் - விளங்கா நின்ற இரேகை முதலாகச் சொல்லிய அங்கங்கள் பதினாறும்.

அகக் கூத்துள்ளே சாந்திக் கூத்தின் வகையாகிய சொக்கம், மெய், அவிநயம், நாடகம் என்னும் நான்கனுள் மெய்க்கூத்தானது தேசி, வடுகு, சிங்களம் என மூவகைப்படும் என்பர். அறுவகை நிலை - வைணவம், சமநிலை, வைசாகம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீடம் என்பன. மூவிரண்டு என்பதனை மூன்றும் இரண்டும் எனக் கொள்க. பதம் - பாதம்; ஐவகைப் பாதம் - சமநிலை, உற்கடிதம், சஞ்சாரம், காஞ்சிதம், குஞ்சிதம் என்பன. அங்கம் - அங்கக் கிரியை; அங்கக் கிரியை பதினாறு - சரிகை புரிகை, சமஉலி திரிகை, ஊர்த்துவகலிகை, பிருட்டகம், அர்த்த பிருட்டகம், சுவத்திகம், உல்லோலம், சூர்த்தனம், வேட்டனம், உபவேட்டனம், தானபதப்பிராய விருத்தம், உக்ஷேபணம், அவக்ஷேபணம், நிகுஞ்சனம் என்பன. 'திகழிரேகாதி' என்பதனை, திகழ் சரிகாதி எனப் பாடங் கொள்ளுதல் பொருத்தம். (௧0)

நால்வகைத் தாகுங் கரணமு மேலோர்
　　நாட்டிய விருவகைக் கரமுங்
கால்வகை புரிகை முதற்பதி னாறுங்
　　கவான்மனை யாதியா மிரண்டும்
பாலது மடிப்பு வகையெழு நான்கும்
　　பழிப்பறு சுத்தசா ரியெனும்
ஏலுறு பூசா ரிகள்பதி னாறு
　　மித்துணைக் ககனசா ரிகளும்.

(இ - ள்.) நால் வகைத்து ஆகும் கரணமும் - நான்கு வகைப் பட்டதாகிய கரணமும், மேலோர் நாட்டிய இருவகைக் கரமும் - மேலோர் நிலை பெறுத்திய இருவகைக் கைகளும். கால்வகை புரிகை முதல் பதினாறும் - புரிகை முதலிய காலின் செய்கை பதினாறும், கவான்மனை ஆதியாம் இரண்டு - மனை முதலிய தொடையின் றொழில் இரண்டும், பாலது மடிப்புவகை எழு நான்கும் - பக்கங்களின் தொழி லாகிய மடிப்புவகை இருபத்தெட்டும். பழிப்பு அறு சுத்தசாரி எனும் ஏல் உறு பூசாரிகள் பதினாறும் - குற்றமில்லாத சுத்தசாரி என்னப்படும் பொருந்திய பூசாரிகள் பதினாறும், இத்துணைக் ககனசாரிகளும் - பதினாறு ககனசாரிகளும்.

கரணம் - கைத்தொழில்; இது வட்டணை எனப்படும், வட்டணை நான்கு - அபவேட்டிதம், உபவேட்டிதம், யாவர்த்திதம், பரிவர்த்திதம் என்பன.

"தற்சனி முதலாப் பிடித்த லகம்வரின்
அத்தொழி லாகும் அபவேட் டிதமே"

"தற்சனி முதலா விடுத்தல் புறம்வர
உய்த்த லாகும் உபவேட் டிதமே"

"கனிட்ட முதலாப் பிடித்த லகம்வர
விடுத்த லாகும் வியாவர்த் திதமே"

"கனிட்ட முதலா விடுத்தல் புறம்வரப்
படுத்த லாகும் பரிவர்த் திதமே"

என்பவற்றால் அவற்றி னிலக்கணங்களை யறிக. இருவகைக்கரம் - இணையாவிணைக்கை, இணைக்கை என்பன; இவற்றுள் முன்னது ஒற்றைக்கை யெனவும், பிண்டி யெனவும் பெயர் பெறும்; பின்னது இரட்டைக்கை யெனவும், பிணையல் எனவும் பெயர் பெறும்; ஒற்றைக்கை - பதாகை, திரிபதாகை, கத்தரிகை, தூபம், அராளம், இளம்பிறை, சுகதுண்டம், முட்டி, கடகம் சூசி, கமலகோசிகம், காங்கூலம், கபித்தம், விற்பிடி, குடங்கை, அலாபத்திரம், பிரமரம், தாம்பிர சூடம், பசாசம், முகுளம், பிண்டி, தெரிநிலை, மெய்ந்நிலை, உன்னம், மண்டலம், சதுரம், மான்றலை, சங்கு, வண்டு, இலதை, கபோதம், மகரமுகம், வலம்புரி என முப்பத்துமூன்று வகைப்படும்; இரட்டைக்கை - அஞ்சலி, புட்பாஞ்சலி, பதுமாஞ்சலி, கபோதம், கற்கடகம், சுவத்திகம், கடகா வருத்தம், நிடதம், தோரம், உற்சங்கம், புட்பபுடம், மகரம், சயந்தம், அபயவத்தம், வருத்தமானம் எனப் பதினைந்து வகைப்படும். பிண்டியும், பிணையலும் அன்றி, எழிற்கை, தொழிற்கை என்ற இரண்டு வகையும் உண்டு. புரிகை என்பது அங்கக்கிரியை பதினாறனுள் ஒன்றாகக் காணப்படுகிறது. வேறு நூலிலுள்ளபடி கால்வகை காட்டுதும்: தேசிக்குரிய கால் - கீற்று, கடிசரி, மண்டலம், வர்த்தனை, கரணம், ஆவிடம், குஞ்சிப்பு, கட்டுப் புரியம், களியம், உள்ளாளம், கட்டுதல், கம்பித்தல் ஊர்தல், நடுக்கல், வாங்குதல், அப்புதல், அனுக்குதல், வாசிப்பு, குத்துதல், நெளிதல், மாறுகால், இட்டுப் புகுதல், சுற்றி வாங்குதல், உடற்புரிவு என இருபத்து நான்கு வகைப்படும்; வடுகிற்குரிய கால்கள் - சுற்றுதல், எறிதல், உடைத்தல், ஒட்டுதல், கட்டுதல், வெட்டுதல், போக்கல், நீக்கல், முறுக்கல், அனுக்கல், வீசல், குடுப்புக்கால், கத்தரிகைக்கால், கூட்டுதல் எனப் பதினான்கு வகைப்படும். கவான் - தொடையின் றொழில் மடிப்பு - பக்கங்களின் அசைவுத் தொழில். முன் அங்கம் முதலாக எண்ணப் பட்ட இருபது பேதங்களும், இச்செய்யுளிற் கூறிய பூசாரி, ககனசாரிகளும், மேல்வரும் தேசிசாரி முதலாயினவும் இன்னவென நன்கு விளங்கவில்லை. (௧௧)

ஏற்றதிக் கிராந்த மாதியா மூப்பத்
திருவகைத் தேசிசா ரிகளுங்
காற்றினுங் கடுந்தேர்ச் சக்கர முதலாங்
ககனசா ரிகைகளே ழைந்துஞ்.

சாற்றுவித் துவற்பி ராந்தமா தியவாஞ்
சாருபத் தோன்பது மாகப்
போற்றிவை யனைத்து முட்படப் புட்ப
புடத்திலக் கணமுதற் பொருள்கள்.

(இ-ள்.) ஏற்ற திக்கிராந்தம் ஆதியாம் முப்பத்து இருவகைத் தேசிசாரிகளும் - பொருந்திய திக்கிராந்தம் முதலாகிய முப்பத்திரண்டு வகைப்பட்ட தேசிசாரிகளும், காற்றினும் கடுந்தேர்ச் சக்கரம் முதலாம் ககன சாரிகைகள் ஏழைந்தும் - காற்றினும் வேகத்தையுடைய தேர்ச் சக்கரம் முதலாகிய ககன சாரிகைகள் முப்பத்தைந்தும், சாற்று வித்துவற்பிராந்தம் ஆதிய ஆம் சாரி பத்தொன்பதும் ஆக - சொல்லா நின்ற வித்துவற்பிராந்தம் முதலாகிய சாரி பத்தொன்பதுமாக, போற்று இவை அனைத்தும் உட்பட - சொல்லப்பட்ட - இவை யனைத்தும் அகப்பட, புட்பபுடத்து இலக்கணம் முதல்பொருள்கள் - புட்பபுடத்தின் இலக்கணங்களாகிய முதன்மையுள்ள பொருள்களாம். (கஉ)

ஆசவாத் தியமுன் பொருண்முதற் களாச
மாதியாம் பாடபே தங்கள்
பேசிய பதினு றேன்பதும் படக
பேதமோன் றொழிந்தநா லைந்தும்
மாசறு மளக மாதியாம் பாட
வகைகளு லேழுமற் றவற்றிற்
பூசல்வார்த் திகந்தொட் டைவகைச் சச்ச
புடாதியாந் தாளமாத் திரையும்.

(இ-ள்.) ஆசவாத்தியம் முன் பொருள் முதல்களாசம் ஆதியாம் பாடபேதங்கள் பேசிய பதினாறு ஒன்பதும் - ஆச வாத்தியமும் முன் பொருளும் முதன்மையாகிய களாசமும் முதலாகிய பாட பேதங்கள் கூறப்பட்ட இருபத்தைந்தும், படக பேதம் ஒன்று ஒழிந்த நாலைந்தும் - படக பேதங்கள் பத்தொன்பதும் மாசு அறும் அளகம் ஆதியாம் பாட வகைகள் நாலேழும் - குற்றமற்ற அளகம் முதலாகிய பாடவகைகள் இருபத் தெட்டும், அவற்றில் - அவைகளுள், பூசல் வார்த்திகம் தொட்டு ஐவகைச் சச்சபுட ஆதியாம் தாள மாத்திரையும் - பூசல் வார்த்திகந் தொட்டு ஐந்துவகைப்பட்ட சச்சபுட முதலாகிய தாள மாத்திரைகளும்.

இதிற் கூறப்பட்டன வாத்திய வகைகள் போலும். (கங)

கிளந்தமாத் திரையின் கதிகளுஞ் சொல்லுங்
கீதமும் பாடமு மெழுத்தும்
வளந்தரு மணிபந் தாதிகீ தத்தின்
வகுத்தகட் டளையேழு நான்கும்

அளந்திடு சரளை யாதிகட் டளையே
ழைந்துநன் கமைந்தபா வாதி
விளம்பிய மூன்று கலப்பு மீறாக
விளைத்திடுங் கூத்தக மார்க்கம்.

(இ - ள்.) ளெந்த மாத்திரையின் கதிகளும் - கூறப்பட்ட மாத்திரையின் கதிகளும், சொல்லும் கீதமும் பாடமும் எழுத்தும் - சொற்களும் கீதங்களும் பாடங்களும் எழுத்துக்களும், வளம்தரு மணிபந்தம் ஆதி கீதத்தின் வகுத்த கட்டளை எழு நான்கும் - வளப்பத்தைத் தருகின்ற மணிபந்தம் முதலாகக் கீதத்தின்கண் வகுத்த கட்டளைகள் இருபத்தெட்டும், அளந்திடு சரளை ஆதி கட்டளை ஏழைந்தும் - அளவறுக்கப்பட்ட சரளை முதலிய கட்டளைகள் முப்பத்தைந்தும், நன்கு அமைந்த பாவ ஆதி விளம்பிய மூன்று கலப்பும் ஈறாக விளைத்திடும் கூத்து அக மார்க்கம் - நன்றாக அமைந்த பாவமும் தாளமும் அராகமுமாகப் பரத நூலுட் கூறப்பட்ட இம்மூன்றும் தம்முட் பிளவுபடாமல் ஒத்தபான்மை இறுதியாகச் செய்யப்படுங் கூத்து அகமார்க்கமாகும்.

தாள மாத்திரையின் கதிகள் - கொட்டு, அசை, தூக்கு, அளவு எனப்படும். சொல் - உட்சொல், புறச்சொல், ஆகாயச் சொல் என மூவகைப்படும்; உட்சொல் - நெஞ்சொடு கூறல்; புறச்சொல் - கேட்போர்க்குரைத்தல்; ஆகாயச்சொல் - தானே கூறல். இனி தற்கூற்று புறக்கூற்று, முன்னிலைக் கூற்று, விண்ணின் கூற்று, எனச் சொல்லை நான்கு வகையாகப் பிரிப்பாருமுளர். கீதம் - இசை. பாடம் - கீதவுரு; இசைப்பாட்டு. எழுத்து - ஆளத்திக்குரிய எழுத்துக்கள். கட்டளை - வரையறை. (கச)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

உரைத்தவிக் கூத்துக் கற்கும் போதுதன் னுடம்பிற் சால
வருத்தநோ யெய்தி யிந்த வருத்தநான் மறையுந் தேறா
அருத்தமா யறிவாய் வெள்ளி யம்பலத் தாடி நின்ற
நிருத்தனுர் தமக்கு முண்டே யென்பது நினைவிற் கொண்டான்.

(இ - ள்.) உரைத்த இக்கூத்துக் கற்கும்போது - கூறிய இந்தக் கூத்தினைப் பயிலும் பொழுதில், தன் உடம்பில் சால வருத்த நோய் எய்தி - தனது உடம்பின்கண் மிகவும் துன்பமாகிய நோய் எய்தப் பெற்று, இந்த வருத்தம் - இத்துன்பமானது, நால்மறையும் தேறா அருத்தமாய் - நான்கு மறைகளாலும் அறியப்படாத பொருளாயும், அறிவாய் - ஞான வடிவாயும், வெள்ளி அம்பலத்து ஆடிநின்ற நிருத்தனுர் தமக்கும் - வெள்ளி மன்றின்கண் ஆடி நின்றருளும் கூத்தப்பிரானுக்கும், உண்டே என்பது நினைவிற் கொண்டான் - உளதாமே என்னும் எண்ணத்தை மனதிற் றொண்டான்.

இந்த வருத்தம் - இத்தன்மையான வருத்தம். எப்பொழுதும் ஆடுகின்றவரென்பார் 'ஆடி நின்ற' என்றார். என்பது - என்னும் எண்ணம். என்று எனக் கொள்ளினுமாம். (கரு)

கரியதா மரைக்கண் ணனுங் கமலநான் முகனுங் காண்டற்
கரியதா ளொன்றே நோவ வாற்றநா ணிற்ப தந்தோ
உரியதா மிதனைக் கற்று வருத்தமுற் றோர்ந்து மீது
தெரியநா னிருப்ப தேயோ வறனெனச் சிந்தை நோவான்.

(இ - ள்.) கரிய தாமரைக் கண்ணனும் - கரிய நிறத்தினையுடைய தாமரை மலர்போலுங் கண்களையுடைய திருமாலும், கமல நான்முக னும் காண்டற்கு அரிய தாள் ஒன்றே - தாமரை மலரில் வசிக்கும் பிரமனும் காணுதற்கரிய திருத்தாள் ஒன்றே, நோவ - துன்பமுற, ஆற்ற நாள் நிற்பது - பல நாளாக ஆடி நிற்கின்றது; அந்தோ ஐயோ, உரியது ஆம் இதனைக் கற்று வருத்தம் முற்றும் ஓர்ந்தும் - உரியதாகிய இப்பரத நூலைக் கற்று அதனால் நேரும் வருத்தம் அனைத்தையும் அறிந்து வைத்தும், ஈது தெரிய நான் இருப்பதேயோ அறன் எனச் சிந்தை நோவான் - இவ் வருத்தத்தைக் காண நான் உயிருடன் இருப்பதோ அறமாகும் என்று மனம் நோவானாயினன்.

தாளின் அருமையைப் புலப்படுப்பான் அரியும் அயனும் காண்டற் கரிய தாள் என்றான். தாள் ஒன்றே - தாள்களில் ஒன்றே; ஒன்றே நிற்பது எனக் கூட்டுக. இது தெரிந்து நான் வாளாவிருப்பது அறமோ என்றுரைப்பினும் அமையும். அந்தோ, இரக்கப் பொருள் குறித்த இடைச்சொல். (கசு)

வடுப்படு பிறவிப் பௌவ வரம்புகாண் கின்ற நாள்வந்
தடுப்பவர் யாவ ரேனு மவர்க்கெலாம் போகம் வீடு
கொடுப்பவர் செய்யு மிந்தக் கூத்தையெப் படிநாஞ் சென்று
தடுப்பது தகாதன் றேனும் வருந்துமே சரண மென்னா.

(இ - ள்.) வடுப்படு பிறவிப் பௌவம் வரம்பு காண்கின்ற நாள் வந்து அடுப்பவர் யாவரேனும் - குற்றம் பொருந்திய பிறவிக்கடலின் கரையைக் காணுதற்குரிய நன்னாள் வந்து பொருந்தப் பெற்றவர் யாவ ராயினும் அவருக்கு எலாம் போகம் வீடு கொடுப்பவர் செய்யும் இந்தக் கூத்தை - அவரனைவர்க்கும் இன்பத்தையும் வீடுபேற்றையும் அளித் தருளும் இறைவன் செய்கின்ற இந்தக் கூத்தினை, நாம் சென்று எப்படித் தடுப்பது - நாம் போய் எங்ஙனம் தடுப்பது; தகாது - தகுதி யன்று; அன்றேனும் - தடுப்பதன்றாயின், சரணம் வருந்துமே என்னா - திருவடி வருந்துமே என்று கருதி.

வந்து அடுப்பவர் யாவரேனும் அவர்க்கெலாம் போகத்தையும், காண்கின்ற நாள் வீட்டையும் கொடுப்பவர் என்றுரைத்தலுமாம்; காண்கின்ற நாளிலே வந்து அடுப்பவர்க் கெல்லாம் பேரின்பமாகிய வீட்டை யளிப்பவர் என்று கூறுதலும் பொருந்தும்; வந்து அடுக்கும் நாள் பிறவிக்கடலின் வரம்பு காண்கின்ற நாளாகு மென்க. எப்படித் தடுப்பது - தடுப்பது எங்ஙனம் பொருந்தும். அன்றேனும் - தகாதென ஒழியின்: உம் அசை. (கஎ)

இதற்கிது துணிவென் றுன்னி யெழுந்துபோய்ச் சிவனி ராவிற்
கதக்களிற் றொருத்த லேந்துங் கதிர்மணிக் குடுமிக் கோயில்
மதக்கரி யுரியி னாற்கு வரம்பறச் சிறந்த பூசை
விதப்பட யாம நான்கும் விதிவழி யியற்றல் செய்யா.

(இ - ள்.) இதற்கு இது துணிவு என்று உன்னி - இதற்கு இதுவே துணிபொருள் என்று ஒன்றைக் கருதி, எழுந்துபோய் - எழுந்து சென்று, சிவன் இரவில் - சிவராத்திரியில், கதக்களிற்று ஒருத்தல் ஏந்தும் கதிர் மணிக் குடுமிக்கோயில் - சினத்தை யுடைய எட்டு யானைகள் தாங்கும் ஒளிபொருந்திய மணிகளிழைத்த சிகரத்தை யுடைய இந்திர விமானத்தில் எழுந்தருளிய, மதக்கரி உரியினாற்கு - மதயானையின் தோலாகிய போர்வையையுடைய சோமசுந்தரக் கடவுளுக்கு, வரம்பு அறச் சிறந்த பூசை - எல்லை யில்லையாகச் சிறந்த பூசையினை, விதப்பட - வகைப்பட யாமம் நான்கும் நான்கு யாமங்களிலும், விதிவழி இயற்றல் செய்யா - (ஆகம) விதிப்படி செய்து.

துணிவு - செய்யத்தக்கது, களிறும் ஒருத்தலும் ஆண்பாற் பெயர்; களிறாகிய ஒருத்தலென்க விதப்பட - பல் வகையாக. இயற்றல் செய்யா - இயற்றுதலைச் செய்து; இயற்றி. (௧௦)

விண்டக மலர்த்தா ளேத்தி வெள்ளியம் பலத்து ளன்பர்
தொண்டக மலர நின்ற சோதிமெய்ஞ் ஞானக் கூத்தைக்
கண்டக மகிழ்ந்து தாழ்ந்து கட்புனல் சோரச் செங்கை
முண்டக முடிமே லேற்றி முகிழ்த்துநின் றிதனை வேண்டும்.

(இ - ள்.) அகம் விண்டு - மனமுருகி, மலர்த்தாள் ஏத்தி - தாமரை மலர் போன்ற திருவடியைத் துதித்து, வெள்ளியம் பலத்துள் அன்பர் தொண்டு அகம் மலர நின்ற சோதி - வெள்ளியம் பலத்திலே அன்பர்களின் தொண்டு பூண்ட உள்ளத் தாமரை மலர நின்ற பேரொளியாகிய இறைவனது, மெய்ஞ் ஞானக் கூத்தைக் கண்டு - உண்மை ஞானத் திருக்கூத்தைத் தரிசித்து, அகம் மகிழ்ந்து தாழ்ந்து - மனமகிழ்ந்து வணங்கி, கண்புனல் சோர - கண்களில் ஆனந்த வருவி பொழிய, செங்கை முண்டகம் முடிமேல் ஏற்றி முகிழ்த்து நின்று - சிவந்த கையாகிய தாமரை மலர்களைத் தலையின்மேற் கூப்பி நின்று, இதனை வேண்டும் - இதனை வேண்டுவா னாயினன்.

விண்ட என்னும் பெயரெச்சம் தொக்கதாகக் கொண்டு அகத்தில் மலர்ந்த என்றுரைத்தலுமாம். அம்பலத்துள் நின்ற சோதியின் கூத்தைக் கண்டு என்க. (௧௧)

நின்றதா ளெடுத்து வீசி யெடுத்ததா ணிலமீ தூன்றி
இன்றுநான் காண மாறி யாடியென் வருத்த மெல்லாம்
பொன்றுமா செய்தி யன்றேற் பொன்றுவ லென்னா வன்பின்
குன்றனான் சுரிகை வாண்மேற் குப்புற வீழ்வே னென்னா.

(இ - ள்.) நின்றதாள் எடுத்து வீசி - (ஐயனே) ஊன்றிய திருவடியை மேலெடுத்து வீசியும், எடுத்த தாள் நிலம்மீது ஊன்றி, தூக்கிய திருவடியை நிலத்தின் மேல் ஊன்றியும், இன்று நான் காண மாறி ஆடி - இன்று அடியேன் காணுமாறு (இங்ஙனம் கால்) மாறி ஆடுதலைப் புரிந்து, என் வருத்தம் எல்லாம் பொன்றுமா செய்து - என் துன்பமனைத்தும் அழியுமாறு செய்தருள்க: அன்றேல் - அங்ஙனஞ் செய்தருளாவிடில், பொன்றுவல் என்னு - நான் இறந்துபடுவன் என்று திருமுன் விண்ணப்பித்துக் கொண்டு, அன்பின் குன்று அனான் - அன்பில் மலையை ஒத்த இராசசேகர பாண்டியன், சுரிகை வாள்மேல் குப்புற வீழ்வேன் என்னு - உடைவாளின்மேற் குப்புற விழுவேன் என்று கருதி.

எடுத்த தாள் - குஞ்சித்த திருவடி, பொன்றுமாறு என்பது ஈறு தொக்கது. சலியாத அன்புடையான் என்பார், 'அன்பின் குன்றனான்' என்றார். சுரிகையாகிய வாள் என்க. குப்புற விழுதல் - வாளை எதிரே நிறுத்தி அதன்மேற் பாய்தல். (உ௦)

நாட்டினான் குறித்துப் பாய நண்ணுமுன் னிடத்தா ளூன்றி
நீட்டினான் வலத்தாள் வீசி நிருமலன் மாறி யாடிக்
காட்டினான் கன்னி நாடன் கவலையும் பாச மூன்றும்
வீட்டினான் பரமா னந்த வேலையுள் வீட்டி னானே.

(இ - ள்.) நாட்டினான் குறித்துப்பாய நண்ணுமுன் - கீழே அவ்வுடைவாளை நட்டு அதன்மேற் பாய்தற்கு நண்ணு முன்னரே, இடத்தாள் ஊன்றி - இடது தாளைக் கீழே ஊன்றி, வலத்தாள் நீட்டினான் வீசி - வலது திருவடியை மேலெடுத்து வீசி, நிருமலன் - இறைவன், மாறி ஆடிக் காட்டினான் - கால் மாறி ஆடிக்காட்டி, கன்னி நாடன் கவலையும் பாச மூன்றும் வீட்டினான் - கன்னி நாடனாகிய பாண்டியனுடைய கவலையையும் மும்மலங்களையும் அழித்து, பரமானந்த வேலையுள் வீட்டினான் - (அவனைப்) பேரின்பக் கடலுள் வீழ்த்தினான்.

நான்கடியிலும் முன்னுள்ள முற்றுக்கள் எச்சமாயின. காட்டினான் என்பதனை முற்றாக்கியும் கன்னிநாடன் என்பதனை எழுவாயாக்கியும், பாண்டியனானவன் கவலையும் பாசமூன்றும் வீட்டித், தன்னை வேலையுள் வீழ்த்தினான் என்றுரைத்தலுமாம். வீழ்த்தி என்பது வீட்டியென மருவிற்று. (உக)

விளைகள்வாய் வீழ்ந்த வண்டின் மெய்யறி வின்ப மென்னும்
அளவிலா முந்நீர் வெள்ளத் தாழ்ந்தவ னெழுந்து பின்னும்
உளமும்வா சகமு மெய்யு முடையவ னதுவே யாகப்
பளகிலா வன்பு தானே படிவமாய்ப் பழிச்ச லுற்றான்.

(இ - ள்.) விளைகள் வாய் வீழ்ந்த வண்டின் - இனிமை மிக்க மதுவின்கண் வீழ்ந்த வண்டைப்போல மெய் அறிவு இன்பம் என்னும் அளவு இலா முந்நீர் வெள்ளத்து ஆழ்ந்தவன் - உண்மை யறிவின்பம் என்று சொல்லப்படும் அளவில்லாத கடல் வெள்ளத்தில் மூழ்கிய

பாண்டியன், எழுந்து பின்னும் - எழுந்து மீண்டும், உளமும் வாசகமும் மெய்யும் உடையவன் அதுவே ஆக - உள்ளமும் உரையும் உடலுமாகிய இம்மூன்றும் தன்னை ஆளாக வுடையவன் உடைமையாய் விட, பளகு இலா அன்பு தானே படிவமாய் - குற்றமில்லாத அன்பே வடிவமா யிருந்து, பழிச்சலுற்றான் - துதிக்கத் தொடங்கினான்.

விளைதல் - முதிர்தல்; இனிமை மிகுதல் வண்டின், இன் உருபு ஒப்புப் பொருட்டு மதுவில் வீழ்ந்த வண்டு அதனை யுண்டு அதிலே மயங்கிக் கிடத்தல் போலச் சச்சிதானந்தமாகிய வெள்ளத்தில் மூழ்கி அதனை யுண்டு தற்போத மிழந்தான் என்றவாறு. கடல் வெள்ளம் போன்று இதுவும் உண்மை அறிவு இன்பம் என்னும் மூன்று நீர்மை யுடையது என்பது போதர 'முந்நீர் வெள்ளம்' என்று பெயர் கூறினர். உடையவன் - உலகுயிர்களை யெல்லாம் உடைமையாகவும் அடிமை யாகவும் உடையவன்; இறைவன் மூன்று கரணங்களையும் இறைவ னிடத்தே ஒப்புவித்தா னென்க. உடையவனது, பன்மை யொருமை மயக்கம். (உஉ)

(கலி விருத்தம்)

பெரியாய் சரணஞ் சிறியாய் சரணங்
கரியா கியவங் கணனே சரணம்
அரியா யெளியா யடிமா றிநடம்
புரிவாய் சரணம் புனிதா சரணம்.

(இ - ள்.) பெரியாய் சரணம் - பெரியதினும் பெரியவனே வணக்கம்; சிறியாய் சரணம் - சிறியதினுஞ் சிறியவனே வணக்கம்; கரியாகிய அங்கணனே சரணம் - சான்றாயுள்ள அழகிய கண்களை யுடையவனே வணக்கம்; அரியாய் - தேவர்க்கும் அரியவனே, எளியாய் - அடியார்க்கு எளியவனே, அடிமாறி நடம்புரிவாய் சரணம் - கால் மாறி நடம் புரிவோனே வணக்கம்; புனிதா சரணம் - தூயவனே வணக்கம்.

இறைவன் அண்ட மோரணுவாம் பெருமையும் அணுவோ ரண்டமாம் சிறுமையும் உடையவனென்பது முன்னுங் கூறப்பட்டது. இறைவன் உயிருக் குயிராயிருந்து காட்டிக் கண்டு நிற்பானாகலின் 'கரி யாகிய' என்றார். சரணம் போற்றி யென்பது போல் வணக்கம் எனப் பொருள் படுவதொரு சொல்; அடைக்கலம் என்றுமாம். (உங)

நதியா டியசெஞ் சடையாய் நகைவெண்
மதியாய் மதியா தவர்தம் மதியிற்
பதியாய் பதினெண் கணமும் பரவுந்
துதியாய் சரணஞ் சுடரே சரணம்.

(இ - ள்.) நதி ஆடிய செஞ்சடையாய் - கங்கை விளையாடுஞ் சிவந்த சடையையுடையவனே, நகைவெண் மதியாய் - ஒளிபொருந்திய

வெள்ளிய பிறையை அணிந்தவனே, மதியாதவர் மதியில் பதியாய் - கருதாதவர்கள் கருத்திற் பொருந்தாதவனே, பதினெண் கணமும் பரவும் துதியாய் - பதினெண் கணங்களாலும் துதிக்கப்படுந் துதியினை யுடையவனே, சரணம் - வணக்கம், சுடரே சரணம் - பேரொளியா யுள்ளவனே வணக்கம்.

ஆடிய-பொருந்திய என்றுமாம். மதியாதவர் - சிந்தியாதவர். மதி - தற்போதமாகிய அறிவுமாம். பதிதல் - தங்குதல். பதினெண்கணம் முன்பு உரைக்கப்பட்டன. (உ௯)

பழையாய் புதியாய் சரணம் பணிலக்
குழையாய் சரணங் கொடுவெண் மழுவாள்
உழையாய் சரணம் முருகா தவர்பால்
விழையாய் சரணம் விகிர்தா சரணம்.

(இ - ள்.) பழையாய் - எல்லாவற்றினும் பழைமையானவனே, புதியாய் - எல்லாவற்றினும் புதுமையானவனே, சரணம் - வணக்கம்; பணிலக் குழையாய் சரணம் - சங்கக் குழையினையுடையவனே வணக்கம்; கொடுவெண் மழுவாள் உழையாய் சரணம் - கொடிய வெள்ளிய மழுப் படையையும் மானையுமுடையவனே வணக்கம்; உருகாதவர்பால் விழையாய் சரணம் - (நின்னை நினைந்து) மனமுருகாதவரிடத்துச் (செல்ல) விரும்பாதவனே வணக்கம்; விகிர்தா சரணம் - விகிர்தனே வணக்கம்.

இறைவன் பழைமையுடைய எவற்றினும் பழைமையுடையனும் புதுமையுடைய எவற்றினும் புதுமை யுடையனுமாதலை,

"முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே"

என்னும் திருவாசகத்தானறிக; எல்லாம் தோன்றுதற்கு முன்னும் எல்லாம் அழிந்த பின்னும் இருப்பவன் என்பது கருத்து. உருகாதவர் பால் விழையாமையை,

"உள்ள முருகி லுடனுவ ரல்லது
தெள்ள வரியரென் றுந்தீபற
சிற்பரச் செல்வரென் றுந்தீபற"

என்னும் திருவுந்தியாராலும்,

"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்ப னவர்தமை நாணியே"

என்னும் தேவாரத்தாலும் அறிக. விகிர்தன்-வேறுபாடுடையவன். (௩௰)

இருளாய் வெளியாய் சரணம் மெனையும்
பொருளா கநினைந்துபுரந் தரன்மால்
தெருளா தநடந் தெரிவித் தெனையாள்
அருளாய் சரணம் மழகா சரணம்.

(இ - ள்.) இருளாய் வெளியாய் சரணம் - இருளா யுள்ளவனே வெளியாயுள்ளவனே வணக்கம்; எனையும் பொருளாக நினைந்து - (ஒன்றுக்கும் பற்றாத) அடியேனையும் ஒரு பொருளாகக்கருதி, புரந்தரன் மால் தெருளாத நடம் தெரிவித்து எனை ஆள் அருளாய் சரணம் - இந்திரனும் திருமாலும் அறியாத திருக்கூத்தினைக் காண்பித்து என்னை ஆளும் அருளை யுடையவனே வணக்கம்; அழகா சரணம் - பேரழகனே வணக்கம்.

பாசத்தாற் கட்டுண்ட உயிர்களால் அறிய லாகாமையின் 'இருளாய்' என்றார்;

"அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணார்க்
கிருட்கண்ணே பாசத்தார்க் கீசன்"

என்னும் மெய்கண்டார் திருவாக்கினை நோக்குக. 'யாவர்க்கு மேலாம் அளவிலாச் சீருடையான் யாவர்க்குங் கீழாம் அடியேனை'யும் பொருளாக நினைந்து என்க. இசைப்பொருட்டு மகரம் விரிந்துவருதல் காண்க. (உசு)

அயனத் தனெனப் படுமா டரவச்
சயனத் தவனைத் தருதத் துவநால்
வயனத் தவவா னவர்வா னவசேல்
நயனத் தவணா யகனே சரணம்.

(இ - ள்.) அயன் நத்தன் எனப்படும் ஆடு அரவச் சயனத்தவனைத் தரு தத்துவ - பிரமனையும் சங்கினை ஏந்தியவனென்று சொல்லப்படும் ஆடுகின்ற அனந்தனைப் பாயலாகக் கொண்ட திருமாலையும் தந்தருளிய தத்துவ வடிவாயுள்ளவனே, நால் வயனத்தவ - நான்கு வேதங்களாகிய திருவாக்கினையுடையவனே, வானவர் வானவ - தேவ தேவனே, சேல் நயனத்தவள் நாயகனே - அங்கயற்கணம்மையின் நாயகனே, சரணம் - வணக்கம்.

அயனையும் சயனத்தவனையும் என உருபும் உம்மும் விரிக்க. அத்தன் எனப் பிரித்து, அயனுக்கு அத்தனெனப்படும் என்றுரைத்தலுமாம். சிவ பெருமான் அயன் மால்களைத் தந்தமையை,

"மைந்த நின்னையென் வலப்புறத் தளித்தன னறிய
பைந்து ழாய்மணி வண்ணனை யெனதிடப் பாலில்
தந்த ளித்தன னிவிர்வெங் கரிமுகன் றழல்வேற்
கந்த னேரெனக் கருணையி னுச்சிமோந் தளித்தான்"

என்பதனுணறிக. வயனம் - வசனம்; நான்கு மாவாக்கியங்களின் பொருளா யுள்ளவன் எனலுமாம். (உஎ)

கதவெங் கரியின் னுரியாய் சரணம்
முதலந் தமிலா முதலே சரணென்
றதிர்பைங் கழனூ புரவண் டலறும்
பதபங் கயமுன் புபணிந் தரசன்.

(இ - ள்.) கதவெங் கரியின் உரியாய் சரணம் - சினத்தையுடைய கொடிய யானைத்தோலாகிய போர்வையை யுடையவனே வணக்கம்; முதல் அந்தம் இலா முதலே சரண் - முதலும் முடிவும் இல்லாத முதல்வனே வணக்கம்; என்று - என்று வழுத்தி, அதிர் பைங் கழல் நூபுர வண்டு அலறும் பதபங்கயம் முன்பு அரசன் பணிந்து - ஒலிக்கின்ற ஒளிபொருந்திய வீரக்கழலும் சிலம்புமாகிய வண்டுகள் ஆரவாரிக்கும் திருவடித் தாமரையின் முன்னர் மன்னன் வணங்கி.

ஆடுதலால் அலறுமென்க. பத பங்கயம் என்பதற் கேற்பக் கழலையும் சிலம்பையும் வண்டாக உருவகித்தார். பசுமை - பொன்னின் ஒளி மேற்று. பங்கயத்தை முன்பு பணிந்தென்றுமாம். (உஅ)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

என்றுமிப் படியே யிந்தத் திருநடம் யாருங் காண
நின்றருள் செய்ய வேண்டு நிருமல மான வெள்ளி
மன்றவ வடியேன் வேண்டும் வரமிது வென்று தாழ்ந்தான்
அன்றுதொட் டின்று மெங்கோ னந்நட நிலையாய் நின்றான்.

(இ - ள்.) இந்தத் திருநடம் யாரும் காண - இந்த மாறியாடிய திருக்கூத்தினை யாவருந் தரிசித் துய்யுமாறு, என்றும் இப்படியே நின்று அருள் செய்ய வேண்டும் - எஞ்ஞான்றும் இவ்வாறே நின்று அருள் புரிய வேண்டும்; நிருமலம் ஆன வெள்ளி மன்றவ - தூய்மையாகிய வெள்ளியம்பலத்தையுடையானே, அடியேன் வேண்டும் வரம் இது என்று தாழ்ந்தான் - அடியேன் வேண்டுகின்ற வரம் இதுவே என்று வணங்கினான்; அன்று தொட்டு இன்றும் எங்கோன் அந்நட நிலையாய் நின்றான் - அன்று முதல் இன்றுகாறும் எம்பெருமானாகிய வெள்ளியம்பலவாணன் மாறியாடிய அந்நிலையாகவே நின்றருளினான்.

ஒன்றுக்கும் பற்றாத என்னையும் ஒரு பொருளாகக் கொண்டு ஆடிய பெருங் கருணைத் திறத்தை உலகம் அறிந்துய்ய வேண்டும் என்னும் உட்கிடை யுடையனாய் இங்ஙனம் வேண்டினானென்க. தாழ்ந்தான்: தாழ, அங்ஙனமே அருள் செய்து நின்றான்; என விரித்துரைத்துக் கொள்க. (உகூ)

ஆகச் செய்யுள் - கசஅக

இருபத்தைந்தாவது

பழியஞ்சின படலம்

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

ஈறிலான் செழிய னன்புக் கெளியவ னாகி மன்றுள்
மாறியா டியகூத் தென்சொல் வரம்பின தாமே கங்கை
ஆறுசேர் சடையான் றானே ரரும்பழி யஞ்சித் தென்னன்
தேறலா மனத்தைத் தேற்றுந் திருவிளை யாடல் சொல்வாம்.

(இ - ள்.) ஈறு இலான் - அழிவில்லாதவனாகிய இறைவன், செழியன் அன்புக்கு எளியவனாகி - இராசசேகர பாண்டியன் அன்பிற்கு எளியனாய், மன்றுள் மாறி ஆடிய கூத்து - வெள்ளியம்பலத்திலே கான்மாறியாடிய திருக்கூத்து, என் சொல்வரம்பினது ஆமே - எனது சொல்லின் எல்லையுட் படுவதாமோ, கங்கை ஆறுசேர் சடையான் - (இனி) கங்கையாறு பொருந்திய சடையையுடையனாகிய சோமசுந்தரக் கடவுள், ஓர் அரும் பழி அஞ்சி - ஒரு கொடும்பழியை அஞ்சி, தென்னன் தேறலா மனத்தைத் தேற்றும் - குலோத்துங்க பாண்டியனுடைய தெளியாத மனத்தினைத் தெளிவித்த, திருவிளையாடல் சொல்வாம் - திருவிளையாடலைக் கூறுவாம்.

எளியவனாயினமையாற் கூத்தாடினான் என்பதொரு நயமுங் காண்க. ஏகாரம் எதிர்மறைப் பொருட்டு. தான், அசை: முதல் வேற்றுமைச் சொல்லுமாம் பழியின் கொடுமையை விளக்குவார் 'ஓர் அரும்பழி' என்றார்; அறிதற்கரிய பழி எனப் பொருள் படுமாயினும் அத்துணைச் சிறப்பின் றென்க. தேறலா : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். (க)

இனையநாட் சிறிதுசெல்ல விராசசே கரன்றன் காதற்
றனையனுங் குலோத்துங் கற்குத் தன்னர சிருக்கை நல்கி
வினையெலாம் வென்று ஞான வெள்ளியம் பலத்து ளாடுங்
கனைகழ னிழலிற் பின்னிக் கலந்துபே ரின்ப முற்றான்.

(இ - ள்.) இனைய நாள் சிறிது செல்ல - இங்ஙனமாய நாட்கள் சில கழிய, இராசசேகரன் தன் காதல் தனையனும் குலோத்துங்கற்கு - இராச சேகர பாண்டியன் தன் அன்பிற்குரிய புதல்வனாகிய குலோத் துங்கனுக்கு, தன் அரசிருக்கை நல்கி - தனது அரசியலைத் தந்து, வினை எலாம் வென்று - வினைகளை யெல்லாம் வென்று போக்கி, ஞான வெள்ளி அம்பலத்துள் ஆடும் கனைகழல் நிழலில் - ஞானமாகிய வெள்ளி மன்றின் கண் ஆடியருளும் ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்த திருவடி நீழலில், பின்னிக் கலந்து பேரின்பம் உற்றான் - இரண்டறக் கலந்து பேரின்பத்தை அடைந்தான்.

சிறிது - சில. அரசிருக்கை - அரியணை. வினையெலாம் வென்று - வினைகளை எஞ்சாமற் கெடுத்து. கழல்: ஆகுபெயர். இரண்டறக் கலந் தென்பார் 'பின்னிக் கலந்து' என்றார். (உ)

குரவன்சேங் கோல்கைக் கொண்ட குலோத்துங்க வழுதி [செங்கண்
அரவங்கம் பூண்ட கூட லாதிநா யகனை நித்தம்
பரவன்பின் வழிபா டாளுப் பத்திமை நியமம் பூண்டான்
இரவஞ்சுங் கதுப்பி னல்லா ரீரையா யிரவ ருள்ளான்.

(இ - ள்.) குரவன் செங்கோல் கைக்கொண்ட குலோத்துங்க வழுதி - தந்தையினது செங்கோலைக் கையிற்கொண்ட குலோத்துங்க பாண்டியன், செங்கண் அரவு அங்கம் பூண்ட கூடல் ஆதி நாயகனை - சிவந்த கண்களையுடைய பாம்புகளைத் திருமேனியில் அணிந்த மதுரையில் எழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளை, நித்தம் அன்பின் பரவு வழிபாடு ஆளுப் பத்திமை நியமம் பூண்டான் - நாடோறும் அன்பினுற் பூசிக்கும் வழிபாடாகிய நீங்காத பத்தி நியமத்தை மேற்கொண்டவன்; இரவு அஞ்சும் கதுப்பின் நல்லார் ஈரையாயிரவர் உள்ளான் - இருளும் அஞ்சுங் கூந்தலையுடைய மனைவியர் பதினுயிரவரை யுடையவன்.

குரவன் - தந்தை. அரவினையும் என்பினையும் அணிந்த என்றுமாம். வழிபாடாகிய நியமம் என்க. நியமம் - செய்கடன். பூண்டான்; அவன் உள்ளவனுயினுன்; என முற்றுக வுரைத்தலுமாம். கூந்தலின் கருமைக்கு முன்னிற்கலாற்ருது இரவும் அஞ்சு மென்க. (௩)

[கொச்சகக்கலிப்பா]

அப்பதினு யிரவர்க்கு மோவ்வோருத்திக் கவ்வாருய்
ஒப்பரிய வறுபதினு யிரங்குமர ருளரவருட்
செப்பரிய வல்லாண்மைச் சிங்கவிள வேறனையான்
வைப்பனையான் முதற்பிறந்த மைந்தன்பே ரனந்தகுணன்.

(இ - ள்.) ஒவ்வொருத்திக்கு அவ்வாருய் - ஒவ்வொரு மனைவிக்கும், ஆறு ஆருக, அப்பதினுயிரவர்க்கும் - அந்தப் பதினுயிரம் மகளிர்க்கும், ஒப்பு அரிய அறுபதினுயிரம் குமரர் உளர் - ஒப்பில்லாத அறு பதினுயிரங் குமரர்கள் உளராயினர்; அவருள் - அக்குமரருள், முதல் பிறந்த மைந்தன் - முதலிற் ருேன்றிய புதல்வன், செப்பு அரிய வல் ஆண்மைச் சிங்க இள ஏறு அனையான் - சொல்லுதற்கரிய வலிய ஆண்மையையுடைய இளமை பொருந்திய ஆண்சிங்கத்தை ஒத்தவன்; வைப்பு அனையான் - வைப்பு நிதியைப் போன்றவன்; பேர் அனந்த குணன் - அவன் பெயர் அனந்தகுணன்.

ஒருத்தி, ஆறு என்பன இரட்டித்த வழி ஒவ்வொருத்தி, அவ்வாறு என்ருயின; ''எண்ணிறையளவும்'' ''ஒன்ப தொழித்த வெண்ணொன்பது மிரட்டின்'' என்னும் நன்னூற் சூத்திரங்கள் நோக்குக. ஆக்கச் சொற் கொடுத்து உளராயினர் என விரிக்க. வல்லாண்மை - மிக்க ஆண்மை. (௪)

கலைபயின்று பரிநெடுந்தேர் கரிபயின்று பலகைவாள்
சிலைபயின்று வருகுமரர் திறநோக்கி மகிழ்வேந்தன்
அலைபயின்ற கடலாடை நிலமகளை யடலணிதோள்
மலைபயின்று குளிர்தூங்க மகிழ்வித்து வாழுநாள்.

(இ - ள்.) கலைபயின்று - கற்றற்குரிய கலைகளைக் கற்று; பரிநெடுந்தேர் கரிபயின்று - குதிரை நெடிய தேர் யானை என்பவற்றைச் செலுத்துந் திறமும் பயின்று, பலகை வாள் சிலை பயின்று - கேடகம் வாள் வில் என்பவற்றின் வரிசையையும் கற்று, வருகுமரர் திறம் நோக்கி மகிழ் வேந்தன் - வளர்கின்ற புதல்வர்களின் திறங்களைக் கண்டு மகிழும் அரசன், அலை பயின்ற கடல் ஆடை நிலமகளை - அலைகள் பொருந்திய கடலை ஆடையாக வுடுத்த புவிமகளை, அடல் அணி தோள் மலை பயின்று குளிர் தூங்க மகிழ்வித்து வாழும் நாள் - வெற்றியையே அணியாகப் பூண்ட தோளாகிய மலையின்கண் தங்கி இன்புறுமாறு மகிழ்வித்து வாழுங்காலத்தில்.

கலை - கற்கும் நூல்கள். பரி முதலியன, அவற்றை ஊருந் தொழிற்கும், பலகை முதலியன அவற்றாற் பொருந் தொழிற்கும் ஆயின திறம் - கூறுபாடு. நிலமகளை மகிழ்வித்து எனக் கூட்டுக. மலையிலே தங்கிக் குளிர்ச்சியடைய என்பதொரு நயமுங் காண்க. உயிர்களெல்லாம் இன்புற வருத்த மின்றூகப் புரந்தான் என்பதனை இங்ஙனங் கூறினர். (௫)

செய்யேந்து திருப்புத்தூர் நின்றுமொரு செழுமறையோன்
பையேந்து மரவல்குன் மனைவியோடும் பானல்வாய்க்
கையேந்து குழவியோடுங் கடம்புகுந்து மாதுலன்பால்
மையேந்து பொழின்மதுரை நகர்நோக்கி வருகின்றான்.

(இ - ள்.) ஒரு செழு மறையோன் - ஓர் அழகிய வேதியன், செய் ஏந்து திருப்புத்தூர் நின்றும் - வயல்கள் சூழ்ந்த திருப்புத்தூரினின்றும், அரவு ஏந்தும் பை அல்குல் மனைவியொடும் - பாம்பு ஏந்திய படத்தினை யொத்த அல்குலையுடைய மனைவியோடும், கை ஏந்து பால் நல்வாய்க் குழவியொடும் - கையிலேந்திய பால்மண மருத நல்ல வாயினையுடைய குழந்தையோடும், கடம் புகுந்து - காட்டின் வழியில் நுழைந்து, மாதுலன் பால் - மாமன் வீட்டிற்கு, மை ஏந்து பொழில் மதுரை நகர் நோக்கி வருகின்றான் - முகிலைச் சுமந்திருக்கும் சோலை சூழ்ந்த மதுரைப் பதியை நோக்கி வருகின்றான்.

செய் ஏந்து - கழனிகளை மிகுதியாகவுடைய. செழுமை குணத்தின் மேற்று. அரவு ஏந்தும் பை என மாறுக. மாதுலனிடத்தை யடைதற்கு நகர் நோக்கி வருகின்றான் என்க. மை - மேகம். (௬)

வருவானுண் ணீர்வேட்டு வருவாளை வழிநிற்கும்
பெருவானந் தடவுமொரு பேராலி னீழலின்கீழ்
ஒருவாத பசுங்குழவி யுடனிருத்தி நீர்தேடித்
தருவானபோய் மீண்டுமனை யிருக்குமிடந் தலைப்படுமுன்.

(இ - ள்) வருவான் - அங்ஙனம் வரும் அம்மறையோன், உண் நீர் வேட்டு வருவாளை - உண்ணும் நீரினை விரும்பி வந்த தன் மனைவியை, வழிநிற்கும் பெருவானம் தடவும் ஒரு பேர் ஆலின் நிழலின் கீழ் - வழியில் நிற்கின்ற பெரிய வானையளாவிய ஒரு பெரிய ஆலமரத்தின் நிழற் கீழே, ஒருவாத பசுங் குழவியுடன் இருத்தி - நீங்காத இளங் குழந்தையோடும் இருக்கச் செய்து, நீர் தேடித் தருவான் போய் - நீரினைத் தேடிக் கொண்டுவரச்சென்று, மீண்டு மனை இருக்கும் இடம் தலைப்படுமுன் - (நீரினைக் கொண்டு) திரும்பி மனைவி யிருக்குமிடத்தை அடைதற்கு முன்.

வேட்டு வருவாள் என்றது வேட்கையுற்ற பொழுதே பருகுதற்கு நீரின்றி வந்து கொண்டிருப்பவள் என்றவாறு. ஒருவாத பசுங்குழவி - சிறிதும் விட்டுப் பிரியாத பச்சைக் குழந்தை; பசுமை - மிக்க இளமையைக் குறிப்பது. தருவான்: வினையெச்சம். மனை: ஆகு பெயர். (எ)

இலைத்தலைய பழுமரத்தின் மிசைமுன்னா ளெய்ததோகு
கோலைத்தலைய கூர்வாளி கோப்புண்டு கிடந்ததுகால்
அலைத்தலைய வீழ்ந்தும்மை வினையுலப்ப வாங்கிருந்த
வலைத்தலைய மானோக்கி வயிறுருவத் தைத்தன்றால்.

(இ - ள்.) இலைத்தலைய பழுமரத்தின் மிசை - இலைகள் பொருந்திய தலையையுடைய அந்த ஆலமரத்தின் மேல், முன்னாள் எய்தது - முன்னொரு நாளில் (ஒரு வேடனால்) எய்யப் பெற்றதாய், கோப்புண்டு கிடந்தது ஒரு கொலைத்தலைய கூர்வாளி - கோக்கப்பட்டுக் கிடந்த கொலைத்தொழிலைத் தன்னிடத்தேயுடைய ஒரு கூரிய வாளியானது, கால் அலைத்து அலைய வீழ்ந்து - காற்றினால் அலைக்கப்பட்டு மரம் அசைதலால் விழுந்து, உம்மைவினை உலப்ப - முன்வினைப்பயன் முடிய, ஆங்குஇருந்த வலைத்தலைய மான்நோக்கி வயிறு உருவத் தைத்தன்று - அங்கே தங்கியிருந்த வலையில் அகப்பட்ட மான்போன்ற கண்ணையுடைய பார்ப்பனியின் வயிற்றிலே ஊடுருவத் தைத்தது.

தலைய என்பன குறிப்புப் பெயரெச்சம். பழுமரம் - ஆலமரம். எய்தது, கிடந்தது என்பவற்றை முறையே வினையெச்சமும் பெய ரெச்சமு மாக்குக. கொலை செய்யும் கூரிய நுதியையுடைய வாளி என்றலுமாம். அலைத்து - அலைக்கப்பட்டு; கடுங்காற்று வீசிற்றென்பது அலைத்தல் என்னும் சொல்லாற்றலாற் பெறப்படும். மரம் அலைதலால் என்க. உம்மைவினை - வாழ்நாட்கு அலகாகிய முன்வினை. உலத்தல் - முடிதல். வலைத்தலைய - வலையினிடத்துள்ள; மருட்சியைக் குறித்தற்கு 'வலைத்தலைய மான்' என்றார். தைத்தன்று - தைத்தது, அன் : சாரியை. ஆல் : அசை. (அ)

அவ்வாறவ் வணங்கனையா ளுயிரிழந்தா ளவ்வேலைச்
செவ்வாளி யேறிட்ட சிலையுடையா னொருவேடன்
வெவ்வாளி யேறனையான் வெயிற்கோதுங்கு நிழறேடி
அவ்வால நிழலெய்தி யயனின்று னிளைப்பாற.

(இ - ள்.) அவ்வாறு அவ்வணங்கு அனையாள் உயிர் இழந்தாள் - அவ்வண்ணமாக அத்தெய்வ மகளையொத்த பார்ப்பனி உயிர் துறந்தாள்; அவ்வேலை - அப்பொழுது, வெம் ஆளி ஏறு அனையான் ஒரு வேடன் - கொடிய சிங்க வேற்றினை யொத்தவனாகிய ஒரு வேடன், செவ்வாளி ஏறிட்ட சிலையுடையான் - தெரிந்தெடுத்த வாளியினை ஏறிட்ட வில்லையுடையவனாய், வெயிற்கு ஒதுங்கு நிழல்தேடி - வெயிலுக்கு ஒதுங்கி யிருக்கத்தக்க நிழலினைத் தேடி, அவ்வால நிழல் எய்தி இளைப்பு ஆற அயல் நின்றான் - அந்த ஆலமரத்தின் நிழலையடைந்து இளைப்பாறுதற்கு அம்மரத்தின் பக்கலில் நின்றான்.

செவ்வாளி - வடிவு செவ்விதாகிய அம்பு என்றும், குருதி தோய்ந்து சிவந்த அம்பு என்றும் கூறலுமாகும்; பார்ப்பனியைக் கொன்ற கொடுமையுடையதன்று என்னுங் குறிப்புத் தோன்றக் கூறிற்றுமாம். நிழல்தேடி என்றமையால் அவ்வால் ஒன்றே அங்கே நிழல் மரமாயது என்பது பெறப்படும். பார்ப்பனியைக் கண்டவனுமல்ல னென்பார் 'அயல் நின்றான்' என்றார். (௯)

தண்ணீர்க்குப் போயாவி தலைப்பட்ட மறையவனும்
உண்ணீர்கைக் கொண்டுமீண் டொருங்கிருந்த குழவியொடும்
புண்ணீர்வெள் ளத்துக்கா ழ்ந்துயிரைப் புறங்கொடுத்த
பண்ணீர மழலைமொழிப் பார்ப்பனியைக் கண்ணுற்றான்.

(இ - ள்.) தண் நீர்க்குப் போய் ஆவி தலைப்பட்ட மறையவனும் - தண்ணிய நீரினைக் கொணர்தற் பொருட்டுச் சென்று நீரோடையை யடைந்த அவ்வந்தணனும், உண் நீர் கைக்கொண்டு மீண்டு - உண்ணும் நீரினைக் கைக்கொண்டு திரும்பி, ஒருங்கு இருந்த குழவியொடும் புண்ணீர் வெள்ளத்துக் கால் தாழ்ந்து - உடன் சேரவிருந்த குழவி யோடும் குருதி வெள்ளத்தில் ஆழ்ந்து, உயிரைப் புறம் கொடுத்த - உயிரையிழந்த, பண்ணீர மழலைமொழிப் பார்ப்பனியைக் கண்ணுற்றான் - பண்போலும் இனிமைத் தன்மையையுடைய மழலைச் சொல்லையுடைய தன் மனைவியைப் பார்த்தான்.

ஆவி - பொய்கை. குழவியொடும் தாழ்ந்திருந்த பார்ப்பனி யென்றும் தன் உயிரைப் புறங்கொடுத்த பார்ப்பனி யென்றும் கொள்க. வெள்ளத்துக்கால் என்பதில், அத்து: சாரியை. கால்: ஏழனுருபு. புறங்கொடுத்தல் - புறம்பே போகவிடுத்தல். நீர - நீர்மையுடைய: ஈர எனப் பிரித்து, குளிர்ந்த என்றுரைத்தலுமாம். (௧0)

அயில்போலுங் கணையேறுண் டவ்வழிபுண் ணீர்சோர
மயில்போல வுயிர்போகிக் கிடக்கின்றாண் மருங்கணைந்தேன்
உயிர்போல்வா யுனக்கிதுவென் னுற்றதென மத்தெறிதண்
தயிர்போலக் கலங்கியறி வழிந்துமனஞ் சாம்பினான்.

(இ - ள்.) அயில்போலும் கணை ஏறுண்டு - வேல்போலுங் கூரிய கணை தைத்து, அவ்வழி புண்நீர் சோர - அவ்வழியே குருதி யொழுக, உயிர்போகி மயில்போலக் கிடக்கின்றாள் மருங்கு அணைந்து - உயிர் நீங்கி மயில்போன்று கிடக்கின்ற மனைவியின் அருகிற் சென்று, என்

உயிர்போல்வாய் - எனது உயிர் போன்றவளே, உனக்கு இது உற்றது என் என - உனக்கு இத்திமை நேர்ந்தது என்னையென்று, மத்து எறி தண் தயிர்போலக் கலங்கி - மத்தினாற் கலக்கப்பட்ட தண்ணிய தயிர் போலக் கலக்கமுற்று, அறிவு அழிந்து மனம் சாம்பினான் - அறிவிழந்து மனஞ் சோர்ந்தான்.

வலிய கணையென்பார் 'அயில்போலும் கணை' என்றார். அவ்வழி - அவ்விடத்தில் என்றுமாம். அம்பு தைத்த மயில் போலவென்க. நினக்கும் இது நேர்ந்ததோவென இரங்கினான். கலங்கி - உடைந்து; திட்பங் கெட்டு. (கக)

இனையதோர் பெண்பழியை யாரேற்றா ரெனத்தேர்வான்
அனையதோர் பழுமரத்தின் புறத்தொருசா ரழல்காலும்
முனையதோர் கணையோடு முடக்கியகைச் சிலையேந்தி
வினையதோர்ந் தெதிர்நின்ற விறல்வேடன் றனைக்கண்டான்.

(இ - ள்.) இனையது ஓர் பெண்பழியை ஏற்றார் யார் எனத் தேர்வான் - இங்ஙனமாகிய ஒருபெண் பழியை ஏற்றுக் கொண்டவர் யார் என்று ஆராயப் புகுந்த அம் மறையோன், அனையது ஓர் பழுமரத்தின் புறத்து ஒரு சார் - அந்த ஆலமரத்தின் புறத்தே ஒருபக்கத்தில், அழல் காலும் முனையது ஓர் கணையோடும் - நெருப்பினை உமிழும் முனையினை யுடைய ஒரு வாளியோடும், முடக்கிய சிலை கை ஏந்தி - வளைத்த வில்லைக் கையிலேந்தி, வினையது ஓர்ந்து எதிர்நின்ற விறல்வேடன் தனைக் கண்டான் - தனக்கு வாய்க்கும் வேட்டை வினையினை ஆராய்ந்து எதிரில் நின்ற வெற்றி பொருந்திய வேடனைக் கண்டான்.

பெண்பழி - பெண்கொலை புரிந்த பழி, அதன் கொடுமையை விளக்க 'இனையதோர் பெண்பழி' என்றான்; இத்தகைய பழியை யேற்பாரும் உளரோ வென்று கருதினான் என்க. தேர்வான்: பெயர். அனையது,: சுட்டு: ஓர்: அசை. முனையது; குறிப்புமுற்று எச்சமாகியது. வினையது. அது: பகுதிப் பொருள் விகுதி. (கஉ)

(கலிநிலைத்துறை)

காட்பணி தாளன் வாளொடு வீக்கிய கச்சாளன்
கூர்ப்பக ழிக்கோ லேறிடு வில்லன் கொலைசெய்வான்
ஏற்பன கைக்கோண் டிவ்விடை நின்றா னிவனேயென்
பார்ப்பனி யைக்கோன் றின்னுயி ருண்டு பழிபூண்டான்.

(இ - ள்) காப்பு அணிதாளன் - செருப்பினை யணிந்த தாளை யுடையனாய், வாளொடு வீக்கிய கச்சாளன் - வாளோடு கட்டிய கச்சினை யுடையனாய், கூர் பகழிக்கோல் ஏறிடு வில்லன் - கூரிய அம்பினை ஏறிட்ட வில்லை யுடையனாய், கொலைசெய்வான் - கொலைசெய்தற்கு, ஏற்பன கைக் கொண்டு இவ்விடை நின்றான் இவனே - ஏற்றவற்றைக் கையிற்கொண்டு இங்கு நிற்பவனாகிய இவனே, என் பார்ப்பனியைக் கொன்று இன் உயிர் உண்டு பழி பூண்டான் - என் மனைவியைக் கொன்று 'அவள் இனிய உயிரைப் பருகிப் பழி பூண்டவன்.

காப்பு - காலுக்கு அரணுயது; செருப்பு. தாளன் முதலிய குறிப்பு முற்றுக்கள் வினையெச்சமாயின. இவன் கொன்ருனென்று துணிதற்குக் காரணம் கொலைசெய்தற் குரியவற்றைக் கைக்கொண் டிருத்தலும் அவ் விடத்தில் நிற்றலுமாம். கொலைக் கருவிகளைக் கொண்டிருத்தலேயன்றி அவற்றைக் கொல்லுதற் கேற்ற பெற்றியமைத்துக் கொலையையே குறித்துக் கொண்டுள்ளான் என்பது தோன்ற 'கோல் ஏறிடு வில்லன்' என்றும், 'நின்ருன்' என்றும் கூறினுன். பகழிக்கோல்: இருபெயரொட்டு; கோல் என்பதும் அம்பிற்கொரு பெயர். நின்ருன் ஆதலால் இவனே கொன்று பழிபூண்டான்; என்று முற்ருக்கி யுரைத்தலுமாம். ஏகாரம் தேற்றம். (௧௩

என்ன மதித்தே யேடா வேடா வென்னேழை
தன்னை வதைத்தாய் நீயே யென்ருத் தழல்கால்கண்
மின்ன லெயிற்றுக் கூற்றென வல்வாய் விட்டார்த்து
மன்னவ ஞணைப் பாச மெறிந்து வலித்தேகும்.

(இ - ள்.) என்ன மதித்தே - என்று கருதி, ஏடா வேடா - ஏண்டா வேடா, நீயே என் ஏழை தன்னை வதைத்தாய் என்னு - நீயே என் மனைவியைக் கொன்ருய் என்று, தழல் கால் கண் மின்னல் எயிற்றுக் கூற்றென - தீயினை உமிழுங் கண்களையும் மின்னல்போன்ற பற்களையு முடைய கூற்றுவனைப் போல, வல்வாய்விட்டு ஆர்த்து - வலிய வாயினைத் திறந்து முழக்கஞ் செய்து, மன்னவன் ஆணைப் பாசம் எறிந்து வலித்து ஏகும் - வேந்தனது ஆணையாகிய பாசத்தை வீசி இழுத்துச் செல்வா ருயினன்.

மேற்செய்யுளிற் கூறியவற்றைச் சுட்டி 'என்ன மதித்து' என்ருர். கண்டவன் இங்ஙனம் கருதியென்க. ஏடா என்பது இக்காலத்தில் ஏண்டா எனத் திரிந்துளது. ஏழை - பெண். மின்னல்: அல், பெயர்விகுதி. கண்ணினையும் எயிற்றினையும் பார்ப்பனனுக்கும், ஆர்த்தலைக் கூற்றுக்கும் கொள்க. ஆணையைப் பாசமாக உருவகித்தார். 'அரசன் ஆணை' என்று கூறி இழுத்தேகினு னென்க. இதனுற் காட்டிலுள்ள வேட்டுவரும் அரசனுணை யென்ற வளவில் அடங்கி நிற்பரென்பது பெறப்படும். (௧௪)

மாண்டவ ளைத்தன் வெந்நிடை யிட்டான் மகவோக்கற்
ருண்டவ ணைத்தான் ருய்முலை வேட்டழு தன்சேயைக்
காண்டோறும் விம்மாக் கண்புனல் சோரக் கடிதேகா
ஆண்டகை மாறன் கூடலணைந்தா னளியன்ருன்.

(இ - ள்.) அளியன் தான் - இரங்கத் தக்கவனுகிய அம்மறையோன், மாண்டவளை தன் வெந் இடை இட்டான் - இறந்துபோன தன் மனைவி யைத் தனது முதுகில் இட்டு, மகவுஒக்கல் தாண்ட அணைத்தான் - குழந்தையைப் பக்கத்திற் பொருந்த அணைத்து, தாய்முலைவேட்டு அழுதன் சேயைக் காண்தொறும் - தாயின் பாலை விரும்பி அழுகின்ற அக்குழவி யைப் பார்க்குந்தோறும், கண்புனல் சோர விம்மா - கண்களில் நீர் ஒழுக

அழுது. கடிது ஏகா - விரைந்து சென்று, ஆண்தகை மாறன் கூடல் அணைந்தான் - ஆண்டன்மையையுடைய பாண்டியனது மதுரையை அடைந்தான்.

ஒக்கல் - அரையின் பக்கம். தாண்ட - தவழ. இட்டான், அணைத்தான் என்பன முற்றெச்சங்கள். அளியன் - பிறர் இரங்கத் தக்கான். (கடு)

மட்டவிழ் தாரான் வாயின் மருங்கே வந்தெய்தா
உட்டுக ளில்லா வேடனை முன்விட் டுயிரன்னாள்
சட்டக* நேரே யிட்டெதிர் மாறன் றமர்கேட்பக்
கட்டுளி சிந்தா முறையிடு கின்றான் கையோச்சா.

(இ - ள்.) மட்டு அவிழ்தாரான் வாயில் மருங்கே வந்து எய்தா - மணத்தொடு மலர்ந்த மலர்மாலையை யணிந்த பாண்டியனது கோயில் வாயிலை வந்தடைந்து, உள்துகள் இல்லா வேடனை முன்விட்டு-மனத்திலே குற்றமில்லாத வேடனை முன்னே விட்டு, உயிர் அன்னாள் சட்டகம் நேரே இட்டு - உயிர்போன்ற மனைவியின் உடலை எதிரே கிடத்தி, மாறன் தமர் கேட்ப - பாண்டியன் தமராகிய அமைச்சர் முதலியோர் கேட்ப, எதிர் - அவர்கட்கு நேரே, கை ஓச்சா - கையை மேலே ஓச்சி, கண் துளி சிந்தா முறையிடுகின்றான் - கண்ணீரைச் சொரிந்து முறையிடா நின்றான்.

உட்டுகளில்லா வேடன் என்றது புறத்தே கொலை செய்யுங் கருவிகளை யுடையனாயினும் பார்ப்பனியைக் கொல்லாமையால் அகத்தே குற்றமிலானாகிய வேடன் என்றவாறு. சட்டகம் - வடிவு; உடம்பு. அரசனுக்குத் தமராவார் அமைச்சர் முதலாயினர். எய்தா, சிந்தா, ஓச்சா என்பன செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். (கசு)

கோமுறை கோடாக் கொற்றவ ரேறே முறையேயோ
தாமரை யாள்வாழ் தண்கடி மார்பா முறையேயோ
மாமதி வானோன் வழிவரு மைந்தா முறையேயோ
தீமைசெய் தாய்போற் செங்கை குறைத்தாய் முறையேயோ.

(இ - ள்.) கோமுறை கோடா கொற்றவர் ஏறே முறையேயோ - அரசியல் முறை கோணாத மன்னருள் ஆண் சிங்கம் போன்றவனே முறையோ, தாமரையாள் வாழ் தண் கடி மார்பா முறையேயோ - தாமரை மலரில் வசிக்குந் திருமகள் வாழ்கின்ற தண்ணிய விளக்கமமைந்த மார்பினை யுடையவனே முறையோ, மாமதி வானோன் வழிவரும் மைந்தா முறையேயோ - பெருமை பொருந்திய திங்கட் புத்தேளின் மரபில் வந்த மைந்தனே முறையோ, தீமைசெய்தாய்போல் செங்கை குறைத்தாய் முறையேயோ - குற்றஞ் செய்தவன் போலச் சிவந்த கையைத் தறித்துக் கொண்டவனே முறையோ.

கோல் நிலை திரியாத கொற்றத்தினையுடைய அரசரு ளெல்லாஞ் சிறந்தவனென்க. முறையேயோ என்றது நினது நாட்டிலும் இத்தகைய தீமை நிகழ்வது முறைதானோ என்றவாறு. வலியரால் நலிவுற்றோர்

(பா - ம்.) * கட்டழல்.

இங்ஙனம் முறையேயோ என்றேனும், ஓலம் என்றேனும் பலகாற்கூறி வேண்டுதல் முறையிடுதல் எனப்படும். கடி - விளக்கம். தீமை செய்தாய் போற் செங்கை குறைத்தாய் என்றது பாண்டியருள் ஒருவன் புரிந்த அருஞ் செயலைக் குறிப்பிட்டவாறு.

கைகுறைத்த வரலாறுவது: ஒருகாலத்தில் மதுரைமாநகரில் வசித்த அந்தணனொருவன் தான் காசிக்குச் செல்ல விரும்பி அதனை இரவிலே தன் மனைவியிடம் கூறிக்கொண்டிருப்பவன். அவளைத் தேற்றுதற் பொருட்டு, 'பாண்டியனது செங்கோ லாட்சியில் நினக்கு எத்தகைய துன்பமும் உண்டாகாது; நான் மீண்டு வருந்துணையும் நீ அஞ்சாதிருப்பாயாக' என்று கூறினன்; நகரி சோதனையின் பொருட்டு இரவில் தனித்து வந்து கொண்டிருந்த அரசன் அம்மொழிகளைச் செவியுற்று, அன்றுமுதல் ஒவ்வொருநாளிரவிலும் அம்மனையைக் கண்காணித்து வந்தனன்; ஒருநாளிரவிலே காசிக்குச் சென்ற மறையோன் மீண்டு வந்து தன் மனைவியுடன் பேசிக்கொண்டிருக்கும் அரவங்கேட்ட அரசன் வேற்றுக் குரல் கேட்பதாக நினைந்து கதவைத் தட்டவும் அம்மறையோன் 'கதவு தட்டுவோன் யார்' என உரத்த குரலுடன் வினவினன்; வந்திருந்தவன் மனைக்குரிய மறையோன் என அரசன் அறிந்து அவ்வந்தணனுக்குப் பெரியதோர் ஐயம் நிகழுமே யென வருந்தி, ஒருபாயங் கருதி, அங்குள்ள வேதியர்மனை ஒவ்வொன்றின் கதவையும் தட்டிச் சென்றனன்; விடிந்தபின் மறையோரெல்லோரும் அரசன் திருமுன் வந்து, இரவிலே தங்கள் இல்லங்களின் கதவு தட்டப்பட்டமையை அறிவிக்க, அரசன், அக்குற்ற மிழைத்தது தன் கையே யென்று கூறி, அதனைத் துணித்தனன் என்பது. இதனை,

''உதவா வாழ்க்கைக் கீரந்தை மனைவி
புதவக் கதவம் புடைத்தன னொர்நாள்
அரைச வேலி யல்லதி யாவதும்
புரைதீர் வேலி யில்லென மொழிந்து
மன்றத் திருத்திச் சென்றீ ரவ்வழி
இன்றவ் வேலி காவா தோவெனச்
செவிச்சூட் டாணியிற் புகையழல் பொத்தி
நெஞ்சஞ் சுடுதலி னஞ்சிநடுக் குற்று
வச்சிரத் தடக்கை யமரர் கோமான்
உச்சிப் பொன்முடி யொளிவளை யுடைத்தகை
குறைத்த செங்கோற் குறையாக் கொற்றத்து
இறைக்குடிப் பிறந்தோர்க் கிழுக்க மின்மை''

என்று சிலப்பதிகாரமும்,

''எவக்குத் தகவன்று லென்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் றானய்த் — தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் றென்னவனுங் காணு
ரெனச்செய்யார் மாணு வினை''

என்று பழமொழி வெண்பாவும் கூறுதல் காண்க. பரிமேலழகரும்,

"முட்டாமற் செலுத்தியவாறு............
தன்கை குறைத்தான் கண்ணும் காண்க"

என்றனர்.

தீமை செய்தாய்போல் என்றது தீமை செய்யாமையைக் காட்டு இன்றது. (கஎ)

பிறங்குங் கோலான் மாறடு கோற்றம் பெறுவேந்தன்
உறங்கும் போதுந் தன்னரு ளாணை யுலகெங்கும்
அறங்குன் றுவாக் காப்பதை யென்ப வஃதியாதிம்
மறங்குன் றுதான் செய்கொலை காவா வழியென்றான்.

(இ - ள்.) பிறங்கும் கோலால் மாறுஅடு கொற்றம் பெறு வேந்தன் - விளங்குகின்ற செங்கோலினாலே பகைவரை வெல்லும் வெற்றியையுடைய அரசன், உறங்கும் போதும் - தூங்கும்போதும், தன் அருள் ஆணை - அவன் அருளாணையானது, உலகு எங்கும் அறம் குன்றுவா காப்பது என்ப - உலக முற்றும் அறங்கள் குறையாவாகக் காப்பது என்று நூலோர் கூறுவர்; அஃது-அக்கூற்றானது, இம்மறம் குன்றுதான் செய் கொலை காவா வழி - இக் கொலைத்தொழில் குறை யாத வேடன் செய்த கொலையைக் காவாவிடத்து, யாது என்றான் - என்ன பயனுடைத்து என்றான்.

அரசனது வெற்றிக்கு அவனது செங்கோல் காரணம் என்பதை,

"வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்"

என்னும் வாயுறைவாழ்த்தா லறிக.

"மாண்ட, அறநெறி முதற்றே யரசின் கொற்றம்"

என்றார் பிறரும். கோலான் என்பதற்குக் கோலையுடையன் என்று பிறர் பொருள் கூறியது சிறிதும் சிறப்பின்றுதலறிக. மாறு - பகை; பகைவரை யுணர்த்திற்று. அருளாணை - அருளுடன் கூடிய ஆணை. அரசன் துயிலும் பொழுதும் அவனது தெய்வத் தன்மையாகிய ஆணை யானது உலகம் புரத்தலை,

"உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்"

என்று சீவகசிந்தாமணி கூறுகின்றது. ஆகவென்பது ஈறு தொக்கது. காப்பதை, ஐ : சாரியை. யாது - எத்தன்மைத்து. காக்கவில்லை யென் பான் 'காவாவழி' என்றான். அஃது - அவ்வாணை யெனலுமாம். அஃதியாது : குற்றியலிகரம். (கஅ)

வாயிலு ளார்த மன்னவன் முன்போய் மன்னுநங்
கோயிலின் மாடோர் வேதியன் மாதைக் கொலைசெய்தான்
ஆயின னென்றோர் வேடனை முன்விட் டவிந்தாளைத்
தாயினன் வந்திங் கிட்டயர் கின்றான் றமியேன்றார்.

(இ - ள்.) வாயில் உளார்தம் மன்னவன் முன்போய் - வாயில் காப்போர் தம் அரசன் முன் சென்று, மன்ன நம் கோயிலின் மாடு - அரசே! நமது அரண்மனை வாயிலின் பக்கத்தில், ஓர் வேதியன் அவிந் தாளைத் தாயினன் வந்து இங்கு இட்டு - ஒரு மறையோன் உயிரிழந்த தன் மனைவியின் உடலை எடுத்து வந்து அங்குப் போட்டு, மாதைக் கொலை செய்தான் ஆயினன் என்று ஓர் வேடனை முன் விட்டு - அவளைக் கொலை செய்தானென்று ஒரு வேடனை முன்னே விட்டு, தமி அயர்கின் ருன் என்ருர் - தனியே வருந்துகின்ருன் என்றனர்.

செய்தான் என்பது செய்தானுயினன் என விரிந்து நின்றது. தாயினன் - தாவினன்; அணைத்தவன்; முற்றெச்சம். வேதியன் வந்து இட்டு முன் விட்டு அயர்கின்ருன் என்றும், வாயிலுளார் வேதியன் அயர்கின்ருன் என்ருர் என்றும் கூட்டுக. (கக)

இறைமக னஞ்சா வென்குடை நன்ரு லென்காவல்
அறமலி செங்கோ லஞ்சு பயந்தீர்த் தரசாளும்
முறைமையு நன்ருன் மண்கலி மூழ்கா* மூயன்றேந்தும்
போறைமையு நன்ரு லென்று புலந்து புறம்போந்தான்.

(இ - ள்.) இறைமகன் அஞ்சா - (அதனைக் கேட்டலும்) அரசன் அஞ்சி, என் குடை நன்று - (உயிர்களுக்குத் தண்ணிய நிழலைத் தரும்) எனது வெண்கொற்றக்குடை நன்ரு யிருந்தது; என் காவல் அறம் மலி செங்கோல் - எனது காப்பாகிய அறம்மிக்க செங்கோலானது, அஞ்சு பயம் தீர்த்து அரசு ஆளும் முறைமையும் நன்று - (குடிகளுக்கு) ஐவகை அச்சமும் உண்டாகாமற் போக்கி ஆட்சி புரியும் முறையும் நன்ரு யிருந்தது; மண்கலி மூழ்கா முயன்று ஏந்தும் பொறைமையும் நன்று - நிலவுலகம் கலியில் மூழ்காமல் தாளாண்மையுடன் தாங்கும்பொறையும் நன்ரு யிருந்தது; என்று புலந்து புறம் போந்தான் - என்று தன்னை வெறுத்துக்கொண்டு புறத்தே வந்தான்.

செங்கோலால் அரசாளும் முறைமையும் எனவும், என் காவலும் செங்கோலும் முறைமையும் எனவும், விரித் துரைத்தலுமாம். அஞ்சு என்பதனை இரட்டுற மொழிதலாக்கி, அஞ்சுகின்ற எனவும் ஐந்து எனவும் பொருள் கொள்க. ஐந்து பயம் - அரசனுலும், அரசன் றமராலும், பகைவராலும், கள்வராலும், ஏனை உயிர்களாலும் உண்டாகும் அச்சம்;

''மாநிலங்கா வலனுவான் மன்னுயிர்காக் குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னுற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனே''

என்று திருத்தொண்டர் - புராணங் கூறுதல் காண்க. கலி - தீமை; துன்பம். மூழ்கா: ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். நன்று என்பது இகழ்ச்சிக் குறிப்பு: ஆல் அசை. (உO)

(பா - ம்). *மூழ்க.

வேதிய னிற்குந் தன்மை தெரிந்தான் மெலிவுற்றான்
சாதியின் மிக்காய் வந்த துனக்கென் றளர்கின்றாய்
ஓதுதி யென்னக் காவல னைப்பார்த் துரைசான்ற
நீதியு ளாய்கே ளென்றுரை செய்வா னிகழ்செய்தி.

(இ - ள்.) வேதியன் நிற்கும் தன்மை தெரிந்தான் மெலிவுற்றான் - மறையோன் (வந்து) நிற்கும் தன்மையைக் கண்டு மெலிந்து, சாதியின் மிக்காய் - வருணத்தாற் சிறந்தவனே, தளர்கின்றாய் - நீ வருந்து கின்றனையே, உனக்கு வந்தது என் - நினக்கு நேர்ந்த துன்பம் யாது, ஓதுதி என்ன - சொல்லக் கடவாயென்று வினவ, காவலனைப் பார்த்து - அம்மறையோன் மன்னனை நோக்கி; உரைசான்ற நீதியுளாய் கேள் என்று - புகழமைந்த நீதியுடையாய்கேட்பாயாக வென்று, நிகழ்செய்தி உரை செய்வான் - நடந்த செய்தியைக் கூறுவானாயினன்.

நிற்குந்தன்மை-துன்பத்தில் ஆழ்ந்து நிற்கும் நிலைமை. தெரிந்தான், மெலிவுற்றான் என்பன முற்றெச்சங்கள். மெலிதல் - உள்ளம் வாடுதல்- ஓதுதி ஒருமையேவல் : த் : எழுத்துப்பேறு. அரசன் தெரிந்து மெலிந்து ஓதுதி யென்ன மறையோன் உரை செய்வான் என்க. (உக)

இன்றிவ ளைக்கொண் டோர்வட நீழ லிடையிட்டுச்*
சென்றுத ணீர்கொண் டியான்வரு முன்னிச் சிலைவேடன்
கொன்றய னின்றா னென்றுலை யூட்டுங் கொலைவேல்போல்
வன்றிறன் மாறன் செவிநுழை வித்தான் மறையோனால்.

(இ - ள்.) இன்று இவளைக் கொண்டு ஓர் வட நீழல் இடையிட்டுச் சென்று - இன்று இவளை அழைத்துக் கொண்டுவந்து ஓர் ஆலமரத்தின் நிழலின்கண் இருத்தி (நீரின் பொருட்டுச்) சென்று, தண் நீர் கொண்டு யான் வருமுன் - தண்ணீரினை முகந்துகொண்டு யான் வருதற்கு முன்னரே, இச்சிலை வேடன் - இந்த வில் வேடனானவன், கொன்று அயல் நின்றான் என்று - கொலைபுரிந்து அருகே நின்று கொண்டிருந்தான் என்று (இச்சொல்லை), உலை ஊட்டும் கொலை வேல் போல் (கொல்லன்) உலையிற் காய்ச்சிய கொலைத் தொழிலையுடைய வேல் போல, மறை யோன்-அவ்வேதியன் வல்திறல் மாறன் செவி நுழைவித்தான் - மிக்க வலியினையுடைய பாண்டியனது செவியில் நுழைவித்தான்.

தணீர் : ணகரம் தொக்கது : கொண்டியான் : குற்றியலிகரம். வன்றிறல் : ஒரு பொரு ளிருசொல். வேல் நுழைந்தாற்போல் நுழையச் செய்தான் என்க; இச்சொல் செவியுறும் பொழுதே அரசன் அளவற்ற வேதனை யெய்தினான் என்றபடி. முற்றுவினை முன் வந்தது. ஆல் : அசை. (உஉ)

(பா - ம்.) *இடைவிட்டு.

அந்தணன் மாற்றந் தன்னையு முட்கோண் டறநோக்குஞ்
சந்தன வெற்பன் மறவனை நோக்கத் தாழ்ந்தன்னான்
எந்தை பிரானே நாயடி யேனின் றேய்ப்பாற
வந்து புகுந்தே னந்த மரத்தின் மருங்கோர்சார்.

(இ - ள்.) அறம் நோக்கும் சந்தன வெற்பன் - அறத்திற் பிழையாமையையே குறிக் கொள்ளும் பொதியின் மலையையுடைய பாண்டியன், அந்தணன் மாற்றம் தன்னையும் உட்கொண்டு - மறையோன் சொல்லையும் கேட்டு மனத்திற் கொண்டு; மறவனை நோக்க - வேடனைப் பார்க்க, அன்னான் தாழ்ந்து - அவ்வேடன் வணங்கி, எந்தை பிரானே - எம் தந்தையாகிய பெருமானே, நாய் அடியேன் - அடி நாயேனாகிய யான், இன்று எய்ப்பு ஆற - இன்று இளைப்பாறுதற் பொருட்டு, அந்த மரத்தின் மருங்கு ஓர் சார் வந்துபுகுந்தேன் - அவ்வால மரத்தின் அடியில் ஒரு பக்கத்தில் வந்தடைந்தேன்

மாற்றந் தன்னையும், தன் : சாரியை; வேடன் மாற்றத்தையும்கேட்க என்னும் பொருள் குறித்தலால் உம்மை எச்சப் பொருட்டு. உட்கொள்ளல் - கேட்டலும், மனத்திற் கொள்ளலும். நோக்கும் என்னும் பெயரெச்சம் வெற்பன் என்பதன் விகுதியைக் கொள்ளும் சந்தன வெற்பு-சந்தன மரங்களையுடைய மலை: பொதியில். நோக்க - நிகழ்ந்ததைச் சொல்லுமாறு நோக்கினாற் கட்டளையிட, அறத்தை நோக்குவோனாகலின் அந்தணன் சொல்லைக் கேட்ட வளவில் வேடனை ஒறுத்தல் செய்யாது, அவன் வாய் மொழியையும் கேட்டறிய விரும்பினான் என்க. எத்துணையும் சிறுமையுடைய ஏவலாளன் என்பான் 'நாயடியேன்' என்றான். (உ௩)

ஐயே நானுங் கோன்றவ னல்லேன் கோன்றாரைக்
கையேன் வேறுங் கண்டில னேன்றா னிவளாகம்
எய்யே றுண்ட வாறேவ னேன்றா ரேதிர்நின்றார்
மெய்யே யையா யானறி யேனிவ் விளைவென்றான்.

(இ - ள்.) ஐயே - ஐயனே, நானும் கொன்றவன் அல்லேன் - நானும் இவளைக் கொலை செய்தவ னல்லேன்; கையேன் - கீழ் மகனாகிய யான், வேறு கொன்றாரையும் கண்டிலன் என்றான் - வேறு கொன்றவரையுங் காணேன் என்று கூறினான்; எதிர் நின்றார் - எதிர்நின்ற அமைச்சர், இவள் ஆகத்து எய்ஏறுண்டவாறு எவன் என்றார் (ஆயின்) இவள் உடலிலே அம்பு தைத்துருவியது எங்ஙனம் என்றார், ஐயா இவ் விளைவு மெய்யே யான் அறியேன் என்றான் - ஐயா ! இந்நிகழ்ச்சியை உண்மையாகவே யான் அறியேன் என்றான்.

ஐயனே யெனற்பாலது வேட்டுவர் பேசுமுறைக்கியைய 'ஐயே' என நின்றது. ஐ என்பது விளியுரு பேற்றதுமாம்; ஐ தலைவன்; அரசன். கை-சிறுமை. வேறு கொன்றாரையும் என உம்மையை மாறுக. அன்னான் எய்ப்பாற வந்து புகுந்தேன் கொன்றவ னல்லேன் கண்டிலன் என்றான்; என மேற் செய்யுளோடு இயைத்துரைக்க, எய் - எய்யப்

படுவது; அம்பு. ஏறுண்டவாறு எவன் - தைத்த விதம் என்னே. நின்றூர்: பெயர். ஐயா: பன்மையி லொருமை. (உ௭)

இக்கொலே செய்தான் யானல னென்ஞு துளனென்னத்
தக்கவ னேயோ தறுகண் மறவ னுரைமெய்யோ
சிக்க வொறுத்தா லல்லதை யுண்மை செப்பானென்
ஞேக்க வுரைத்தார் மந்திர ருள்ளார் பிறரெல்லாம்.

(இ - ள்.) (என்ற வளவில்) மந்திரர் உள்ளார் பிறர் எல்லாம் - அமைச்சருளிட்ட அனைவரும், தறுகண் மறவன் - வன்கண்மையுடைய வேடனுகிய இவன், இக்கொலே செய்தான் யான் அலன் என்ஞது-இந்தக் கொலேயினேச் செய்தவன் யானல்லேன் என்று கூருது, உளன் என்னத் தக்கவனேயோ - யான் செய்தேன் என்று உண்மை கூறும் தகுதியை யுடையவனே, உரை மெய்யோ - (இவன் கூறும்) சொல் மெய்யாகுமோ, சிக்க ஒறுத்தால் அல்லது உண்மை செப்பான் - மிகுதியாகத் தண்டித்தா லன்றி உண்மையைக் கூறமாட்டான், என்று ஒக்க உரைத்தார் - என்று ஒரு சேரக் கூறினர்.

அன் விகுதி தன்மைக்கண் வந்தது. உளன் - செய்துளேன். கொடுமையை இயல்பாகவுடைய வேடனுகலின் இவன் அலனென்ஞது உளனென்னத் தக்கவனே என்க. ஏகாரம் இசை நிறை. ஓகாரம் எதிர் மறைப் பொருட்டு. சிக்க - யாப்புடைத்தாக; நன்கு. அல்லதை, ஐ: சாரியை. அமைச்சரும் பிறருமாக உள்ளா ரெல்லாரும் சேர வுரைத்தா ரென்க. (உ௯)

மன்னன் ருனு மற்றது செய்ம்மின் னெனமள்ளர்
பின்னந் தண்டஞ் செய்தனர் கேட்கப் பிழையில்லான்
முன்னஞ் சொன்ன சொற்பெய ராஞய் மொழியாநின்
றின்னந் தீரத் தேருமி னென்ரு னென்செய்வான்.

(இ - ள்.) மன்னன் தானும் மற்றது செய்ம்மின் என - அரசனும் அதனைச் செய்யுங்கள் என்று கட்டளையிட, மள்ளர் பின்னம் தண்டம் செய்தனர் கேட்க - ஏவலாளர் பின்பு தண்டத்தினேச் செய்து கேட்க, பிழை இல்லான் - குற்றமற்ற அவ்வேடன், முன்னம் சொன்னசொல் பெயராஞய் மொழியா நின்று - முன் சொன்ன சொல்லினின்றும் மாறு படாது கூருநின்று, இன்னம் தீரத் தேருமின் என்ருன் - இன்னும் முற்ற ஆராயுங்கள் என்று கூறினுன்; என் செய்வான் - (இதையன்றி) வேறு யாது செய்யவல்லன்.

தான், மற்று என்பன அசைகள். பின்னம், முன்னம், இன்னம் என்பவற்றில் அம் சாரியை; பகுதிப் பொருள் விகுதியுமாம். செய்தனர்: முற்றெச்சம். தீர - முடிவுற. மொழியா நின்று என்பதனை முற்ருக்கி; பிழையில்லான் மொழியா நின்ருன்; பாண்டியன் தேருமின் என்ருன், என்று பிறர் பொருள் கூறுவாராயினர். (௩௰)

ஆற்ற வோறுக்குந் தண்டமு மஞ்சா னறைகின்ற
கூற்றமு மோன்றே கோன்ற குறிப்பு முகந்தோற்ருன்
மாற்றவ ரேயோ மாவோ புள்ளோ வழிவந்த
கோற்ரேடி யைக்கோன் றேன்பெற வல்லான் கொலேசெய்வான்.

(இ - ள்.) ஆற்ற ஒறுக்கும் தண்டமும் அஞ்சான் - மிகவும் ஒறுக்கும் தண்டத்திற்கும் அஞ்சுகின்றிலன்; அறைகின்ற கூற்றமும் ஒன்றே - இவன் கூறுகின்ற மறுமொழியும் (வேறுபாடின்றி) ஒன்றே யாயுள்ளது; கொன்ற குறிப்பும் முகம் தோற்ருன் - கொன்ற குறிப்பும் முகத்திலே தோன்றப் பெற்றிலன்; மாற்றவரேயோ மாவோ புள்ளோ - தனக்குப் பகைவரோ (அன்றி) விலங்கோ பறவையோ, வழிவந்த கோற்றெடியைக் கொன்று என்பெறவல்லான் - வழியில் வந்த பார்ப்பனியைக் கொல்லுதலால் என்ன பயனைப் பெறுவானுய், கொலே செய்வான் - (இவன், அவளைக்) கொலே செய்தற் குரியனுவான்.

> "அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
> கடுத்தது காட்டும் முகம்"

என்பவாகலின், இவன் கொன்றிருப்பானுயின் அக் குறிப்பு முகத்திலே தோன்ற வேண்டும், அங்ஙனம் தோன்றிற் றில்லேயென்பான் 'கொன்ற குறிப்பு முகந் தோற்ருன்' என்ருன். பகைவர், விலங்கு, புள் என்பவற்றுள் ஒன்ருயின் இவன் கொல்லுதல் பொருந்தும், அவற்றுள் ஒன்றல்லாத பார்ப்பனியைக் கொல்லுதலால் இவன் கொன்ருனென்பது எங்ஙனம் என்பான் 'மாற்றவரேயோ......கொலேசெய்வான் என்ருன். ஓகாரங்கள் தெரிநிலேப் பொருளன. கோற்றெடி - கோல்போற்றிரண்ட வளையினை யுடையாள்: அன்மொழித் தொகை. 'மாற்றவ ரேயோ மாவோ புள்ளோ' என்பதற்கு, அவளைக்கொன்றது அம்மறையோனுக்குப் பகைவராயினரோ அன்றி விலங்கோ பறவையோ என்றும், 'கொலே செய்வான்' என்பதற்கு வேடன் என்றும் பிறர் பொருள் கூறுவாராயினர். இதுவும் வருஞ் செய்யுளும் அரசன் உட்கோள், (உஎ)

கைதவ ஞமிக் கானவ னேயோ பிறரேயோ
செய்தவர் யாரே யிக்கொலே வேட்டஞ் செய்தோர்மா
எய்த விலக்கிற் றப்பிய கோரு னேறுண்டிம்
மைதவழ் கண்ணுள் மாய்ந்தன ளேயோ வறியேஞல்.

(இ - ள்.) இக்கொலே செய்தவர் - இந்தக் கொலேயினைப் புரிந்தவர், கைதவனும் இக்கானவனேயோ - வஞ்சகனுகிய இவ் வேடன்ருனே, பிறரேயோ - (அன்றிப்) பிறரோ, யாரே - யாரோ, வேட்டம் செய்தோர் மா எய்த இலக்கில் தப்பிய கோல்தான் ஏறுண்டு - (அல்லது) வேட்டை யாடுவோர் விலங்கினை எய்த குறிப்பினின்றும் பிழைத்த கணைதான் தைத்தலால், இம் மை தவழ் கண்ணுள் மாய்ந்தனளேயோ இந்த மை தீட்டிய கண்களை யுடையவள் இறந்தனளோ, அறியேன் ; அறிந்திலேன்.

கைதவன் என்றது வேடுவனென்னும் பொதுமை குறித்தது. இவன் கொன்றிலனென்று துணிதலும் அரிதென்பான் 'கைதவனு மிக்கா னவனேயோ' என்ருன். ஏகாரங்கள் இசை நிறைக்கவந்தன. தான், ஆல்: அசை. (உ௮)

என்னு முன்னித் தென்னவ னின்ன மிதுமுன்னூல்
தன்னு லாயத் தக்கதை யென்ருன் றகவிற்றன்
அன்னு ரந்நூ லாய்ந்தித நூலா லமையாதால்
மன்னு தெய்வத் தாலே தேறும் வழியென்ருர்.

(இ - ள்.) என்னு தென்னவன் முன்னி-என்று பாண்டியன் நினைத்து, இன்னம் இது முன்னூல் தன்னுல் ஆயத் தக்கது என்ருன் - இன்னும் இஃது அற நூலால் ஆராய்ந்து தெளியத் தக்கது என்ருன்; தகவில் தன் அன்னுர் அந்நூல் ஆய்ந்து - தகுதியில் தன்னை யொத்தவர்களாகிய அமைச்சர்கள் அவ்வற நூலை ஆராய்ந்து, மன்னு - வேந்தனே, இது நூலால் அமையாது - இது நூலாராய்ச்சியாலே தெளியத்தக்கதன்று; தெய்வத்தாலே தேறும்வழி என்ருர் - தெய்வத்தினுலே தெளியும் நெறியினை யுடையது என்ருர்கள்.

முன்னூல் - தொன்மையாகிய நூல். தக்கதை, ஐ: சாரியை: அரசன் எவ்வளவு தகுதி யுடையனோ அவ்வளவு தகுதியுடைய ரென்பார் 'தகவிற் றன்னன்னுர்' என்ருர். தன்னன்னுர் - புரோகிதருமாம். ஆராய்ந்து, அறியலாகாமையால், இது நூலாலமையாது தெய்வத் தாலே தேறும் வழியென்ரு ரென்க. ஆல்: அசை. தேறும் வழி - தெளியும் வழியினை யுடையது; தெய்வத்தின் வழியாற் றெளியற்பால தென்பது. (உக)

வேந்தர்கள் சிங்கம் வேதிய னைப்பார்த் திதுதீர
ஆய்ந்துன துள்ளக் கவலை யொழிப்பே னஞ்சேனின்
ஏந்திழை யீமக் கடனிறு விப்போ தென்றேவித்
தேந்துணர் வேங்கைத் தார்மற வோனைச் சிறைசெய்தான்.

(இ - ள்.) வேந்தர்கள் சிங்கம் - (அதனைக் கேட்ட) மன்னர்களுட் சிங்கம் போன்ற பாண்டியன், வேதியனைப் பார்த்து - மறையவனை நோக்கி, இது தீர ஆய்ந்து உனது உள்ளக்கவலை ஒழிப்பேன் - இதனை நன்கு ஆராய்ந்து உன் மனக்கவலையைப் போக்குவேன்; அஞ்சேல் - நீ அஞ்சற்க; நின் ஏந்திழை ஈமக்கடன் நிறுவிப் போது என்று ஏவி - நின் மனைவியின் ஈமக்கடன்களை முடித்து வருக என்று போக்கி, தேம்துணர் வேங்கைத் தார் மறவோனைச் சிறை செய்தான் - தேன் சிந்தும் பூங் கொத்துக்களையுடைய வேங்கைமலர் மாலையை யணிந்த வேடனைச் சிறைப் படுத்தினன்.

பகை வேந்தர்களாகிய யானைகளுக்கு ஆண்சிங்கம் போன்றவன் என்றுமாம். ஏந்திழை: அன்மொழித்தொகை. போது - புகுது; வா, இப்போது என்று பிரிக்கலாமெனினும், வருகவென்று கூறல் வேண்டு மாகலின் இது சிறப்பின்று. வேங்கையின் துணர்த்தார் என்று கூட்டலுமாம். (௩0)

மின்னனை யாடன் செய்கடன் முற்று மீண்டோனைத்
தன்னமர் கோயிற் கடைவயின் வைத்துத் தானேகிக்
கோன்னவில் வேலான் றங்கள் குடிக்கோர் குலதேய்வம்
என்ன விருந்தா ரடிகள் பணிந்தா னிதுகூறும்.

(இ - ள்.) மின் அனையாள் தன் செய்கடன் முற்று மீண்டோனை - மின்னலை யொத்த மனைவிக்கு இறுக்க வேண்டிய கடன்களைச் செய்து முடித்துத் திரும்பிவந்த மறையோனை, தன் அமர்கோயில் கடைவயின் வைத்து - தன்னால் விரும்பப்பட்ட அரண்மனை வாயிலில் வைத்துவிட்டு, கோல்நவில் வேலான் தான் ஏகி - கொலைத்தொழில் பயின்ற வேற்படை யேந்திய பாண்டியன் தான் சென்று, தங்கள் குடிக்கு ஓர் குலதெய்வம் என்ன இருந்தார் - தமது குடிக்கு ஒரு குலதெய்வமாக எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளின், அடிகள் பணிந்தான் இது கூறும் - திருவடிகளை வணங்கி இதனைக் கூறு நின்றான்.

தவிராது இறுக்கத் தக்கது என்பார் 'செய்கடன்' என்றார். தன் அமர் கோயில்-தன்னால் விரும்பப்பட்ட கோயில்; தனது விருப்பம் பொருந்திய கோயில் என விரித்தலுமாம். அமர்தல் - உளம் மேவுதல். குலதெய்வ மென்று உலகங் கூற என்றுமாம். பணிந்தான்: முற்றெச்சம். இது வென்றது பின் வருவதனை. (௩௧)

[கொச்சகக் கலிப்பா]

மன்றுடு மணியேயிம் மறவன்றன் பார்ப்பனியைக்
கோன்றானோ பிறர்பிறிதாற் கோன்றதோ விதுவறநூல்
ஒன்றாலு மளப்பரிதாக் கிடந்ததா லுன்னருளால்
என்றாழ்வு கேடத்தேற்று யேன்றிரந்தா னவ்வேலை.

(இ - ள்.) மன்று ஆடும் மணியே-வெள்ளியம்பலத்தில் ஆடியருளும் மாணிக்கமே, இம்மறவன் தான் பார்ப்பனியைக் கொன்றானோ - இவ் வேடன் தான் அப்பார்ப்பனியைக் கொன்றானோ (அன்றி), பிறர் பிறிதால் கொன்றதோ - பிறர் பிறகாரணத்தாற் கொன்றதோ, இது அறநூல் ஒன்றாலும் அளப்பரிதாக் கிடந்தது - இந்நிகழ்ச்சி அறநூல் முதலிய ஒன்றாலும் அளந்தறிதற் கரியதாகக் கிடக்கின்றது; உன் அருளால் என் தாழ்வு கெடத்தேற்றாய் என்று இரந்தான் - உனது திருவருளால் எனது குறைவுதீரத் தெளிவிப்பாயாக என்று குறையிரந்தான்; அவ்வேலை - அப் பொழுது.

கொன்றதோ இக்கொலை யென்க. அற நூலாலும் வேறொன்றாலும்; அறநூல்களுள் ஒன்றாலும் என்னலுமாம். அரிதாக என்பது ஈறு தொக்கது. ஆல்: அசை. என் தாழ்வு - எனக்கு உண்டாகும் பழி. (௩௨)

திருநகரின் புறம்போருசார் குலவணிகத் தேருவின்கண்
ஒருமனையின் மணமுளதங் கந்தணனே டோருங்குநீ
வருதியுன துளங்தேறு மாற்றமேலாந் தேற்றுதுமேன்
றிருவிசும்பி னகடுகிழித் தேழுந்ததா லோருவாக்கு.

(இ - ள்.) திருநகரின் புறம்பு ஒருசார் வணிகர் குலத் தெருவின் கண் - இத் திருநகரத்தின் புறம்பே ஒரு பக்கத்தில் வணிகர் குலத் தெருவிலுள்ள, ஒரு மனையில் மணம் உளது - ஒரு வீட்டில் மணவினை நிகழ்வதுளது; அங்கு அந்தணனோடு ஒருங்கு நீ வருதி - அவ்வில்லிற்கு அம்மறையவனோடு நீ ஒருசேர வருவாயாக; உனது உளம்தெரு மாற்றம் எலாம் தேற்றுதும் என்று - உன் உள்ளந் தெளியாத மாறுபாட்டினை யெல்லாம் தெளிவிப்போமென்று, இருவிசும்பின் அகடு கிழித்து ஒரு வாக்கு எழுந்தது - பெரிய வானினது வயிற்றைக் கீண்டுகொண்டு ஓர் அசரீரிவாக்கு எழுந்தது.

திருநகர் - கோயில் எனலும் பொருந்தும். குலம் - சிறப்புமாம். மாற்றம் - செய்தி யென்றுமாம். விசும்பினின்றும் தோன்றியதனை 'விசும்பினகடு கிழித்தெழுந்தது' என்றார். ஆல் : அசை. அவ்வேலை ஒரு வாக்கு எழுந்தது என்க. (கஉ)

திருவாக்குச் செவிமடுத்துச் செழியன்றன் புறங்கடையிற்
பெருவாக்கு மறையவனோ டொருங்கெய்திப் பெரும்பகல்போய்க்
கருவாக்கு மருண்மாலைக் கங்குல்வாய்த் தன்னைவேற்
றுருவாக்கிக் கடிமனைபோ யொருசிறைபுக் கினிதிருந்தான்.

(இ - ள்.) திருவாக்குச் செவிமடுத்து - அத் திருவாக்கினைக் கேட்டு, செழியன் - பாண்டியன், தன் புறங்கடையில் பெருவாக்கு மறையவனோடு ஒருங்கு எய்தி - தனது கடைவாயிலிலுள்ள மறைகளை யுணர்ந்த அந்தணனோடும் ஒருங்கு கூடி, பெரும் பகல் போய் - பெரிய பகற் பொழுது கழிந்து, கரு ஆக்கும் மருள்மாலை கங்குல்வாய் - கருமையை உண்டாக்கும் மயங்கிய மாலைப்பொழுதின் இருளில், தன்னை வேறு உரு வாக்கி - தன்னை வேற்றுருவ மாக்கிக் கொண்டு, கடிமனை போய் ஒரு சிறைபுக்கு இனிது இருந்தான் - மணவீடு சென்று ஒரு பக்கத்திற் புகுந்து இனிதே இருந்தனன்.

செவி நிரம்பக் கேட்டான் என்பார் 'செவி மடுத்து' என்றார். புறங்கடை : இலக்கணப் போலி. பெருவாக்கு - பெருமையுடைய வாக்கு; மறை. கரு - கருமை. மருள்மாலை - பகலும் இரவும் மயங்கிய மாலை; மயக்கத்தைச் செய்யும் மாலை. வேற்றுரு வாக்கல் - அரச கோலமின்றி வேறு கோலங் கொள்ளல். பிறரால் அறியப்படாமல் இடையூறின்றி யிருந்தான் என்பார் 'இனிதிருந்தான்' என்றார். (கச)

அன்றிறைவ னருளாலங் கவர்கேட்க வம்மனையின்
மன்றல்மகன் றனக்களந்த நாளுலப்ப மறலியிருட்
குன்றமிரண் டெனவிடுத்த கொடும்பாசக் கையினர்வாய்
மென்றுவருஞ் சினத்தவரி லொருவனிது விளம்புமால்.*

(இ - ள்.) அன்று இறைவன் அருளால் - அப்பொழுது சோம சுந்தரக் கடவுளின் திருவருளால், அங்கு அவர் கேட்க - அங்கே பாண்டியனும் மறையோனும் கேட்குமாறு, அம்மனையில் - அம்மண வீட்டின்கண், மன்றல் மகன் தனக்கு அளந்த நாள் உலப்ப - மணமக னுக்கு வரையறுத்த வாழ்நாள் முடிதலால், மறலி - கூற்றுவன்,

(பா - ம்.) * வினவுமால்.

இரண்டு இருட்குன்றமென விடுத்த - இரண்டு கரிய மலைபோல விடுத்த, கொடும் பாசக்கையினர்-கொடிய பாசத்தைக் கையிற் கொண்டவராய், வாய் மென்று வரும் சினத்தவரில் - வாயை மென்றுவருஞ் சினத்தை யுடைய காலபடர் இருவருள், ஒருவன் இது விளம்பும் - ஒருவன் இதனைக் கூறுவான்.

அளந்த - வரையறுத்த;

" அளந்தன போக மவரவ ராற்றால்"

என்பது காண்க. விடுத்த என்னும் பெயரெச்சம் சினத்தவர் என்பதன் விகுதி கொண்டு முடியும். நாளுலத்தலால் மறலிவிடுத்த சினத்தவரில் ஒருவன் இறைவனருளால் அது கேட்க இது விளம்பும் என முடிக்க. ஆல் : அசை. (கூரு)

இன்றேயிங் கிவனுயிரைத் தருதிரென மிரும்பகட்டுக்
குன்றேறுங் கோனுரையாற் கோள்வதேவன் பிணியுடம்பின்
ஒன்றேனு மிலனொருகா ரணமின்றி யுயிர்கோள்வ
தன்றேயென் செய்துமென மற்றவனீ தறைகிற்பான்.

(இ - ள்.) இன்றே இங்கு இவன் உயிரைத் தருதிர் எனும் - இப் பொழுதே இங்கு இம்மணமகன் உயிரைக் கொண்டு வருவீராக என்று கூறிய, இரும்பகட்டுக் குன்று ஏறும் கோன் உரையால் - பெரிய எருமைக்கடாவாகிய மலையிலேறும் நம் தலைவனது ஆணையால், கொள்வது எவன் - இவனுயிரைக் கவர்வது எங்ஙனம்; உடம்பில் பிணி ஒன்றேனும் இலன் - உடலின்கண் ஒருபிணியும் இல்லாதவனாயுளன், ஒருகாரணம் இன்றி உயிர்கொள்வது அன்றே - ஒரு காரணமு மில்லாமல் ஒருயிரைக் கொள்வது இயல்வதன்றே, என்செய்தும் என - என்ன செய்வோம் என்று வினவ, மற்றவன் ஈது அறைகிற்பான் - மற் றொருவன் இதனைக் கூறுவான்.

இரும்பகடு - கரிய கடாவுமாம். தருதிரென்பது கோன் உரை யாகும்; காரணமின்றி உயிர் கொள்வதன்றே; பிணி ஒன்றேனு மிலன்; ஆகலின் அவனுரையாற் கொள்வது எவன்; என்செய்தும்; என்றிங் ஙனம் உரைத்துக் கொள்க. மற்றவன் - மற்றையான்- (கூசு)

ஆற்றாலே றுண்டகணை யருகோதுங்கும் பார்ப்பனியைக்
காற்றால் வீழ்த் தேவ்வாறு கவர்ந்தேமப் படியிந்தச்
சாற்றா வாரத்திற ரும்பறுத்துப் புறநின்ற
ஈற்றாவை வேருளவிடுத் திவனாவி கவர் கேன்றான்.

(இ - ள்.) ஆற்று ஆல் அருகு ஒதுங்கும் பார்ப்பனியை - வழியி லுள்ள ஆலமரத்து நிழலினருகு ஒதுங்கிய பார்ப்பனியின் உயிரை, ஏறுண்ட கணை காற்றால் வீழ்த்து எவ்வாறு கவர்ந்தேம் - (அம் மரத்தின் கண் முன்னரே) சிக்கிக் கிடந்த கணையைக் காற்றினால் வீழ்த்தி எங்ஙனம் கவர்ந்தோமோ, அப்படி - அவ்வாறே, புறம் நின்ற ஈற்று ஆவை - புறத்தே நின்ற புனிற்றுப் பசுவினை, இந்தச் சாற்று ஆர

வாரத்தில் தாம்பு அறுத்து வெருள விடுத்து - இந்த மணவிழாவின் ஆரவாரத்தினாலே கயிற்றை யறுத்து வெருண்டோடச் செய்து, இவன் ஆவி கவர்க என்றான் - இவனுயிரை வௌவுவேமாக என்றான்.

சாறு - விழா. ஈற்றா - கன்றினை யீன்ற அணிமையை யுடைய பசு; புனிற்றா. கவர்கவென வியங்கோள் தன்மைக்கண் வந்தது; அகரந் தொகுத்தல்; கவர்கும் என்னும் தன்மைப் பன்மை விகாரமாயிற்றுமாம். பார்ப்பனி உயிரை எங்ஙனம் கவர்ந்தேமோ அங்ஙனம் இவனாவியைக் கவர்வேம் என்றானென்க. (கஎ)

அந்தமொழி கேட்டரச னருமறையோய் கேட்டனையோ
இந்தமொழி யெனப்பனவ னிவனிவ்வா றிறந்தாலென்
பைந்தொடியா ளிறந்ததுமப் படியேயென் மனக்கவலை
சிந்தவிது காண்பேனென் றொருங்கிருந் தான்றென்னனொடும்.

(இ - ள்.) அந்தமொழி அரசன் கேட்டு - அவ் வார்த்தையை மன்னவன் கேட்டு, அரு மறையோய் - அரிய வேதங்களை யுணரும் அந்தணனே, இந்த மொழி கேட்டனையோ என - இவ் வார்த்தையைக் கேட்டாயோ என வினவ, பனவன் - அப்பார்ப்பனன், இவன் இவ்வாறு இறந்தால் - இம்மணமகன் இங்குக் கூறியவாறே இறந்து படுவானாயின், என் பைந்தொடியாள் இறந்ததும் அப்படியே - என் மனைவி இறந்ததும் அங்ஙனமே தான், என் மனக் கவலை சிந்த இது காண்பேன் என்று - எனது மனத் துன்பங்கெட இந்நிகழ்ச்சியைக் காண்பேனென்று கூறி, தென்னனொடும் ஒருங்கு இருந்தான் - பாண்டியனோடும் ஒருசேர இருந்தனன்.

அப்படியே - அங்ஙனமே யென்பது உண்மை யாகும். (கஅ)

ஒட்டியபல் கிளைதுவன்றி யொல்லொலிமங் கலந்தொடங்கக்
கொட்டியபல் லியமுழங்கக் குழுமியவோ சையின்வெருண்டு
கட்டியதாம் பிறப்புனிற்றுக் கற்றாவோன்*றதிர்ந்தோடி
முட்டியதான் மணமகனை முடிந்ததா லவனாவி.

(இ - ள்.) ஒட்டிய பல் கிளை துவன்றி ஒல்லொலி மங்கலம் தொடங்க-நெருங்கிய பல சுற்றத்தாரும் சேர்ந்து ஒல்லெனும் ஒலியுடன் மணவினையைத் தொடங்கவும், கொட்டிய பல் இயம் முழங்க - அடிக்கப் பட்ட பல் இயங்களும் ஒலிக்கவும், குழுமிய ஓசையின் - இவை ஒருங்கு தொக்க பேரொலியால், கட்டிய தாம்பு இற - கட்டப்பட்ட கயிறு அறுமாறு, புனிற்றுக் கன்று ஆ ஒன்று - இளங் கன்றினையுடைய பசு ஒன்று, வெருண்டு அதிர்ந்து ஓடி மணமகனை முட்டியது - அஞ்சி அலறி ஓடி மணமகனை முட்டியது; அவன் ஆவி முடிந்தது - அவன் உயிர் முடிந்தது.

ஒட்டிய - அணுகிய. மங்கலந் தொடங்க - கடிசூத்திரம் அணியத் தொடங்குகையில் என்றுமாம். கொட்டப் பட்டனவாகி முழங்க

(பா - ம்.) *எதிர்ந்தோடி.

வென்று கொள்க. புனிற்றுக் கற்று - ஈன்றணிய கன்றினையுடைய பசு, கன்று என்பது வலித்தது. ஆல் இரண்டும் அசை. (௬௧)

மணமகனே பிணமகனாய் மணப்பறையே பிணப்பறையாய்
அணியிழையார் வாழ்த்தோலி*போ யழுகையொலி யாய்க்
கணமதனிற் பிறந்திறுமிக் காயத்தின் வரும்பயனை [கழியக்†
உணர்வுடையார் பெறுவருணர் வொன்றுமிலார்க் கொன்றுமிலை.

(இ - ள்.) மணமகனே பிண மகனாய் - மணப் பிள்ளையே உயிர் கழிந்த பிணமாகவும், மணப்பறையே பிணப் பறையாய் - மண வாத்தியமே சாப்பறை யாகவும், அணி இழையார் வாழ்த்து ஒலி அழுகை ஒலியாய் போய்க் கழிய - அணியப்பட்ட கலன்களையுடைய மங்கல மகளிரின் வாழ்த் தொலியே அழுகை யொலியாகவும் மாறி முடிய, கணம் அதனில் பிறந்து இறும் இக்காயத்தின் வரும் பயனை - கணப்பொழுதிற் றோன்றி மறையும் இவ்வுடலினாலாய பயனை, உணர்வு உடையார் பெறுவர் - அறிவுடையார் அடைவர்; உணர்வு ஒன்றும் இலார்க்கு ஒன்றும் இலை - அறிவு சிறிதும் இல்லாதவர்க்கு அப்பய னெய்துதல் சிறிதும் இல்லை.

உயிர் நீங்கிய உடம்பைப் பிணமகன் என்றார்;

"படுமகன் கிடக்கை காணூஉ"

என்பது புறப்பாட்டு. போய்க்கழிய எனக் கூட்டி, மாறி முடிய வென் றுரைக்க. இந்நிகழ்ச்சியை எடுத்துக் காட்டாகக் கொண்டு இங்ஙனம் கணத்திற் பிறந்தழியும் காயம் என்றார். இக்காயம் - இத்துணை நிலை யாமையுடைய உடம்பு. காயத்தின் வரும் பயனாவது பிறவாமைக் கேதுவாகிய அறத்தினைச் செய்து கோடல். நில்லாதவுடம்பு நிற்கும் பொழுதே நிலையாய அறத்தைச் செய்யவேண்டு மென்றவாறு. ஒன் றும் என்பது சிறிது மென்னும் பொருட்டு.

"மன்றங் கறங்க மணப்பறை யாயின
அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப்—பின்றை
ஒலித்தலு முண்டாமென் றுய்ந்துபோ மாறே
வலிக்குமா மாண்டார் மனம்"

என்னும் நாலடியார்ச் செய்யுளின் பொருள் இதில் விளக்கமுற அமைந் திருத்தல் காண்க. (௬௦)

கண்டானனந் தணனேன்ன காரியஞ்செய் தேனெனத்தன்
வண்டார்பூங் குழன்மனைவி மாட்சியினும் கழிதுன்பம்
கொண்டான்மற் றவனெடுந்தன் கோயில்புகுந் தலர்வேப்பந்
தண்டாரா னமைச்சர்க்கும் பிறர்க்குமிது சாற்றினான்.

(பா - ம்.) * வாழ்த்தொலியே. † கழிந்த

(இ - ள்.) அந்தணன் கண்டான் - மறையோன் அதனைக் கண்டு, என்ன காரியம் செய்தேன் என்று - யாது காரியம் செய்து விட்டேனென்று இரங்கி, தன் வண்டு ஆர் பூங்குழல் மனைவி மாட்சியினும் கழி துன்பம் கொண்டான் - தன் வண்டு மொய்க்கும் பூவையணிந்த கூந்தலையுடைய மனைவியினது இறப்பினும் மிக்க துன்பத்தைக் கொண்டான்; அலர் வேப்பம் தண்தாரான் - மலர்ந்த வேப்பம் பூவாலாகிய தண்ணிய மாலையை யணிந்த பாண்டியன், அவனொடும் தன் கோயில் புகுந்து - அவ் வேதியனுடன் தனது மாளிகையை யடைந்து, அமைச்சர்க்கும் பிறர்க்கும் இது சாற்றினான் - அமைச்சர்களுக்கும் ஏனையோர்க்கும் இதனைக் கூறினான்.

என்ன காரியஞ் செய்தேன் என்றது குற்றமில்லாத வேடன்மேல் இவ்வடாத பழியைச் சுமத்தி அவனை யொறுக்குமாறு செய்தேனே என்று கழிந்ததற் கிரங்கியபடி. மாட்சி-இறப்பு; மாள்: பகுதி. மாண்ட துன்பத்தினும் மிக்க துன்பமென்க. மற்று: அசை. வேம்பு என்பது அம்சாரியை பெற்று வலித்தது. (௪௧)

மறையவனை யின்னுமொரு மணமுடித்துக் கோடியென
நிறையவரும் பொருளீந்து நீபோதி யெனவிடுத்துச்
சிறையழுவத் திடைக் கிடந்த செடித்தலைய விடிக்குரல
கறையுடல்வே டனைத்தொடுத்த கால்யாப்புக் கழல்வித்து.

(இ - ள்.) மறையவனை நீ இன்னும் ஒரு மணம் முடித்துக் கோடி என - அந்தணனை (நோக்கி) நீ இன்னும் ஒரு மணஞ்செய்து கொள்வாயாக என்று, அரும்பொருள் நிறைய ஈந்து - அரிய பொருளை நிறையக் கொடுத்து, போதி என விடுத்து - செல்க என்று விடை கொடுத்தனுப்பி, சிறை அழுவத்து இடைக் கிடந்த - சிறைச்சாலையின்கண் (மனக்கவலையொடுங்) கிடந்த, செடித்தலைய இடிக்குரல கறை உடல் வேடனை-முடை நாற்றம் பொருந்திய தலையினையும் இடிபோன்ற குரலினையும் கரிய உடம்பினையுமுடைய வேடனை, தொடுத்த கால் யாப்புக் கழல்வித்து - பூட்டிய கால் விலங்கினைக் கழற்றச் செய்து.

கோடி - கொள்ளுதி; பகுதி முதனீண்டது; த்: எழுத்துப் பேறு; போதி என்பதிலும் த் எழுத்துப் பேறே. அழுவம் - பரப்பு, அரண். தலைய, குரல என்பவற்றில் அ - அசை; குறிப்புப் பெயரெச்சமாகக் கொண்டு தனித்தனி கூட்டுவாருமுளர். கறை - கருமை; அழுக்குமாம். கால்யாப்பு-விலங்கு. (௪௨)

தெளியாதே யாமிழைத்த தீத்தண்டம் பொறுத்தியென
விளியாவின் னருள்சுரந்து வேண்டுவன நனிநல்கி
அளியானு மனத்தரச னவனையவ னிடைச்செலுத்திக்
களியானை விழவெய்த கௌரியனைப்* போய்ப் பணிவான்.

(இ - ள்.) அளி ஆனு மனத்து அரசன் - தண்ணளி நீங்காத மனத்தை யுடைய மன்னன், அவனை விளியா - அவனைத், தன் அருகிலழைத்து, தெளியாதே யாம் இழைத்த தீத்தண்டம் பொறுத்தி என - உண்மை அறியாமல் யாஞ்செய்த கொடிய தண்டத்தைப் பொறுக்கக்கடவை

(பா - ம்.) * எய்த காவலனை.

என்று கூறி, இன் அருள் சுரந்து - இனிய கருணை சுரந்து, வேண்டுவன நனி நல்கி - அவன் விரும்பிய பொருள்களை மிகவும் அளித்து, அவன் இடைச் செலுத்தி - அவனிடத்திற்குப் போக விடுத்து, களியானை விழ எய்த கௌரியனைப் போய்ப் பணிவான் - (சமணர்கள் ஏவிய) களிப்பினையுடைய யானை விழும்படி அம்பெய்த சோமசுந்தரக் கடவுளைச் சென்று வணங்குவானாயினன்.

அவனை விளியா எனக் கூட்டுக; விளியா-விளித்து: பெயரெச்சமாக்கி, கெடாத இனிய அருள் என்றுரைத்தலுமாம். வேண்டுவன - வரிசைகளுமாம். கௌரியன் - பாண்டியன்; இறைவன் சுந்தர பாண்டியனாக விருந்து அரசு புரிந்தவனாகலின் 'கௌரியன்' என்றார். (சங)

[எழுசீரடியாசிரிய விருத்தம்]

ஆதரம் பெருகப் பாவியேன் பொருட்டெம்
மடிகணீ ரரும்பழி யஞ்சு
நாதரா யிருந்தீ ரெந்தையார்க் குண்டோ*
நான்செயத் தக்கதொன் றென்னாக்
காதலிற் புகழ்ந்து பன்முறை பழிச்சிக்
கரையின்மா பூசனை சிறப்பித்
தேதம தகற்றி யுலகினுக் குயிரா
யிருந்தன னிறைகுலோத் துங்கன்.

(இ - ள்.) ஆதரம் பெருக - அன்பு மேலோங்கத் (திருமுன் நின்று), எம் அடிகள் - எம்மிறைவரே, பாவியேன் பொருட்டு நீர் அரும்பழி அஞ்சும் நாதராய் இருந்தீர் - பாவியேன் பொருட்டாகத் தேவரீர் அரிய பழியினை அஞ்சுகின்ற நாதராயிருந்தீர்; எந்தையார்க்கு நான் செயத் தக்கது ஒன்று உண்டோ என்னா - (அங்ஙன மிருந்த) எம் தந்தையாகிய உமக்கு நான் செய்யத் தக்க கைம்மாறு ஒன்று உண்டோ என்று, காதலில் புகழ்ந்து - அன்பினாற் புகழ்ந்து, பல் முறை பழிச்சி - பல முறை துதித்து, கரை இல் மா பூசனை சிறப்பித்து - அளவில்லாத பெரிய பூசைகளைச் செய்வித்து, இறை குலோத்துங்கன் - அரசனாகிய குலோத்துங்க பாண்டியன், ஏதம் அகற்றி - துன்ப முண்டாகாமற் போக்கி, உலகினுக்கு உயிராய் இருந்தனன் - உலகத்திற்கு ஓர் உயிராகி வீற்றிருந்தான்.

ஆதரம் பெருகத் திருமுன் நின்று கூறிப் புகழ்ந்து என்க. பாவியேனுக்கு வரக்கிடந்த பழிக்கு அஞ்சினமையால், பழியஞ்சி நாதர் என்பதொரு பெயருடையராயினீர் என்பான் 'பழியஞ்சுநாதராயிருந்தீர்' என்றான். எளியேனாற் செய்யத்தக்கதொரு கைம்மாறும் உண்டோ வென்க மா பூசனை - விழா முதலியன. ஏதம் - உலகிற்கு ஐவகையால் வருந்துன்பம். அது : பகுதிப் பொருள் விகுதி. ''மன்னனுயிர்த்தே மலர்தலை யுலகம்'' என்பவாகலின் 'உலகினுக் குயிராயிருந்தனன்' என்றார். (சச)

ஆகச்செய்யுள்—௧௩௧௩.

(பா - ம்.) * உண்டே.

இருபத்தாருவது

மாபாதகந் தீர்த்த படலம்

[கலிவிருத்தம்]

வேத நாயகன் வெம்பழி யஞ்சிய
நாத ஞன நலனிது நல்கிய
தாதை யைக்கொலே செய்த தனயன்மா
பாத கந்தனைத் தீர்த்தமை பாடுவாம்.

(இ-ள்.) வேத நாயகன் - வேதங்கட்கு இறைவனுகிய சோம சுந்தரக் கடவுள்; வெம்பழி அஞ்சிய நாதன் ஆன நலன் இது - கொடிய பழியினை அஞ்சிய நாதனுகிய திருவிளையாடல் இதுவாகும்; நல்கிய தாதையைக் கொலைசெய்த தனயன் மாபாதகம் தனைத் தீர்த்தமை பாடுவாம் - (இனி அக்கடவுள்) பெற்ற தந்தையைக் கொலைபுரிந்த புதல்வனது மாபாதகத்தை நீக்கிய திருவிளையாடலைக் கூறுவாம்.

நலம் - நன்மையாகிய திருவிளையாடல். தந்தையாக எண்ணப் படுவார் பிறரு முளராகலின் 'நல்கியதாதை' என்ருர். (க)

விரைசெய் மாலைக் குலோத்துங்க மீனவன்
திரைசெய் நீர்நிலஞ் செங்கோல் செலத்தனி
அரசு செய்யுமந் நாளி லவந்தியென்
றுரைசெய் மாநக ராஞெரு பூசுரன்.

(இ-ள்.) விரைசெய் மாலைக் குலோத்துங்க மீனவன் - மணம் வீசும் மாலையை யணிந்த குலோத்துங்க பாண்டியன், திரைசெய் நீர்நிலம் செங்கோல் செல - அலைகள் வீசும் கடல் சூழ்ந்த புவிமுழுதும் தனது செங்கோல் செல்ல; தனி அரசு செய்யும் அந்நாளில் - பொதுக் கடிந்து ஆட்சி புரியும் அக்காலத்தில்; ஒரு பூசுரன் அவந்தி என்று உரைசெய்மா நகரான் - ஒரு வேதியன் அவந்தி என்று கூறப்படும் பெரிய நகரத்தில் இருந்தனன்.

மீனவன் - மீனக்கொடியை யுடையவன்; பாண்டியன். உலக முழுதும் இனிதாகச் செங்கோல் நடக்க என்பார் 'திரைசெய் நீர் நிலஞ் செங்கோல் செல' என்ருர். நகரான் என்பதனை நகரத்திருப்பானுயினன் என விரிக்க. (உ

வெருவுங் காய்சின மாறிய வேதியன்
மருவுங் காதன் மனையெனும் பேரினள்
திருவுங் காமனற்* றேவியு மண்டினை
உருவுங் காமுறு மோப்பில் வனப்பினுள்.

(பா-ம்.) *காமன்றன் றேவியும்.

(இ - ள்.) வெருவும் காய் சினம் மாறிய வேதியன் - யாவரும் அஞ்சத்தக்க சுடுகின்ற சினம் நீங்கிய அம்மறையோனுக்கு, காதல் மருவும் மனை எனும் பேரினள் - விருப்பம் பொருந்திய மனைவி என்ற பெயரினை யுடையவள், திருவும் காமன் நல்தேவியும் - திருமகளும் மதவேளின் நல்ல மனைவியாகிய இரதியும், மண்புனை உருவும் - சுதையாற் செய்த பாவையும், காமுறும் - விரும்பத்தக்க; ஒப்பு இல் வனப்பினள் - ஒப்பற்ற அழகினை யுடையாள்.

சினம் மாறிய - வெகுளி தன்கண் உண்டாகப் பெறாத வேதியன் மனையெனக் கூட்டுக. மனை - மனையாள். மனைக்குரிய மாண்பு சிறிதுமில ளென்பார், 'மனையெனும் பேரினள்' என்றார். திருவும் தேவியும் உருவும் என்னும் உம்மைகள் எண்ணுப் பொருளோடு சிறப்புங் குறித் தவ. மண் - சுதை;

"மண்மாண் புனைபாவை"

என்பது திருக்குறள். (௩)

படியி லோவியப் பாவையொப் பாகிய
வடிவி னாளவள் பான்மக னென்றொரு
கொடிய பாவி பிறந்து கொலைமுதற்
கடிய பாவக் கலன்போல்* வளருநாள்.

(இ - ள்.) படி இல் ஓவியப் பாவை ஒப்பு ஆகிய வடிவினாள அவள் பால் - ஒப்பில்லாத சித்திரப்பாவையை நிகர்த்த அழகினையுடைய அவ ளிடத்து, மகன் என்று ஒரு கொடிய பாவி பிறந்து - மகன் என்று ஒரு கொடும்பாவி தோன்றி, கொலைமுதல் கடிய பாவக் கலன் போல் வளரு நாள் - கொலை முதலிய கொடிய பாவங்களாகிய சரக்குகளை ஏற்றிய க்ப்பல்போல வளரு நாளில்.

படி - ஒப்பு படியில் என்பதற்குப் புவியில் என்றுரைத்தலுமாம். வடிவினளாகிய அவளென்க. நன்மக்கட்குரிய பண்பு சிறிதுமில்லா னென்பார் 'மகனென்று' என்றார். வளரலுற்றான் அங்ஙனம் வளரும் நாளில் என விரிக்க. (௪)

கோடி கோடி யடுஞ்சிலை கோட்டியே
கோடி கோடி கொடுங்கணை பூட்டியே
கோடி கோடி விகாரமுங் கூட்டியே
கோடி கோடி யனங்கரெய் தார்கொலோ.

(இ - ள்.) கோடி கோடி அனங்கர் - அநேகங்கோடி காமர்கள், கோடி கோடி அடுஞ்சிலை கோட்டியே - பலகோடி கொல்லுதற்றொழிலை யுடைய விற்களை வளைத்து, கோடி கோடி கொடுங்கணை பூட்டியே - பல கோடி கொடிய அம்புகளைப் பூட்டி, கோடி கோடி விகாரமும் கூட்டி - பல கோடி விகாரங்களைக் கூட்டி, எய்தார் கொலோ - எய்தார்களோ (யாம் அறியேம்).

(பா - ம்) * கன்ல்போல்.

கோடி கோடி என்பன எண்ணிறந்தன வென்னும் பொருளன. பின் கூறப்போகிற தீக் காமத்திற்குக் காரணமாக 'எய்தார் கொலோ' என்றார்; அங்ஙன மில்லையேல் இவன் தன்னை யீன்றாளை விரும்பியது என்னையென அதன் கொடுமை விளக்கியபடி. விகாரமாவன,

''வேட்கை யொருதலை யுள்ளுதல் மெலிதல்
ஆக்கஞ் செப்பல் நாணுவரை யிறத்தல்
நோக்குவ வெல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்கம் சாக்காடு''

என்று தொல்காப்பியத்திற் கூறப்பட்டவை; சுப்பிரயோகம், விப்பிர யோகம், சோகம், மோகம், மரணம் என்றும் உரைப்ப. அனங்கர் - உருவ மில்லாதவர். கொல் : அசை. (ஙு)

இளமைச் செவ்விய யாக்கையன் மையல்கூர்
வளமைக் காமமும் வல்வினை யுந்நிறைத்
தளைவிட்* டீர்த்தலிற் றன்னை வயிற்றிடை
விளைவித் தீன்றவ டன்னை விரும்பினான்.

(இ - ள்.) இளமைச் செவ்விய யாக்கையன் - இளமைப் பருவ முடைய உடலை யுடையனாகிய அவன், மையல்கூர் வளமைக் காமமும் வல்வினையும் - மயக்கம் மிக்க குன்றாத காமமும் வலிய தீவினையும், நிறைத் தளை விட்டு ஈர்த்தலில் - நிறையாகிய கட்டினை விடுவித்து இழுத்தலால், தன்னை வயிற்று இடை விளைவித்து ஈன்றவள் தன்னை விரும்பினான் - தன்னைத் தனது வயிற்றின்கண் தோற்றுவித்துப் பெற்ற தாயை விரும்பினான்.

இளமைச் செவ்வி - இளமைக்குரிய அழகுமாம். வளமை - கொழுமை; மிகுதி. நிறை - ஆடூஉக் குணங்களி லொன்று; மனதை நிறுத்தல். நிறையாகிய தளையை நீக்கி யென்க. ஈன்றவடன்னை, தன் : சாரியை. (சு)

அன்னை யென்னு மழிதகை யாளகத்
தின்னு யிர்த்துணை யும்மனக் காவலாய்
மன்னு நாண மடமுத னல்வருந்
தன்னை நீங்கலிற் றானுமோத் தாளரோ.

(இ - ள்) அன்னை என்னும் அழிதகையாள் - தாய் என்று சொல்லப் படும் அக் கற்பழிந்தவள், அகத்து இன் உயிர்த்துணையும் - உள்ளத்தில் இனிய உயிர்த்துணையாகவும், மனக்காவலாய் - மனத்துக்குக் காவலாக வும், மன்னும் - பொருந்திய, நாணம் மடம் முதல் நால் வரும் தன்னை நீங்கலில் - நாணமும் மடமும் அச்சமும் பயிர்ப்புமாகிய

(பா - ம்) *தளையிட்டு.

நால்வரும் தன்னை விட்டு நீங்கினமையால், தானும் ஒத்தாள் - தானும் அதற் குடன்பட்டாள்.

அழிதகையாள் - கற்பழிந்தவள்; தீநெறிப் பட்டவள்; ஆண்பாலில் அழிதகையான் என்று வரும். துணையாகவும் காவலாகவும் மன்னும் என விரிக்க. நாற்குணமும் நான்கு காவலர் போலுதலின் 'நால்வர்' என உயர்திணையாற் கூறினர்;

''நாற்குணமும் நாற்படையா''

என்பர் புகழேந்தியாரும். தானும் என்பதில் உம்மை இறந்தது தழுவிய எச்சம். அரோ : அசை. (எ)

இன்ப மோசிறி தாகு மிதில்வருந்
துன்ப மோகரை யில்லாத் தொடுகடல்
என்ப தாரு மிவனு லறியவிவ்
வன்ப தான வினையால் வருந்துவான்.

(இ. ள்.) இன்பமோ சிறிது ஆகும் - (காமத்தால் வரும்) இன்பமோ அற்பமாகும், இதில் வரும் துன்பமோ கரையில்லாத் தொடு கடல் - இதனுல் விளையுந் துன்பமோ கரையில்லாத கடலாகும், என்பது - என்னும் உண்மையை, ஆரும் இவனுல் அறிய - யாவரும் இப்பாவியினுல் அறிந்துகொள்ள, இவ்வன்பது ஆனவினையால் வருந்துவான் - இக் கொடுமையான தீவினையால் வருந்துவானுயினன்.

கணத்துள் அழிவது என்பார் 'சிறிது' என்றும், அளவிறந்த காலம் நிற்பது என்பார் 'கரையில்லாத் தொடுகடல்' என்றும் கூறினர். தொடு - தோண்டப்பட்ட; கடலுக்கு அடை. வன்பது, அது பகுதிப் பொருள் விகுதி. (அ)

மைய ஞக மதியை விழுங்கவைக்
கைய ஞயைக் கலந்தொழு குஞ்செயல்
ஐயன் ஞன்குறிப் பாற்கண் டயற்செவிக்
குய்ய லாவண்ண முள்ளத் தடக்கினுன்.

(இ - ள்.) மையல் நாகம் மதியை விழுங்க - காம மயக்கமாகிய இராகுவானது அறிவாகிய மதியை விழுங்கலால், அக் கையன் ஆயைக் கலந்து ஒழுகும் செயல் - அந்தக் கீழ்மகன் தாயைக் கூடி யொழுகுஞ் செயலினை, ஐயன் குறிப்பால் கண்டு - அவன் தந்தையானவன் குறிப் பாலறிந்து, அயல் செவிக்கு உய்யலா வண்ணம் உள்ளத்து அடக்கினுன். பிறர் செவிக்குச் செல்லாவாறு அதனை மனத்தின்கண் அடக்கி யொழுகினுன்.

மதி என்பது இரட்டுற மொழிதலாய் அறிவையும் திங்களையும் குறித்தது; காம மயக்கத்தால் அறிவு முழுதையும் இழந்தானென்க. கையன் - சிறுமையுடையன்; கீழோன். ஆய் - தாய். ஐயன் - தந்தை. உய்யலா - செல்லாத; ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; அல்; எதிர்மறை இடைநிலை. உய் என்னும் பகுதி தன்வினை குறித்து நின்றது. வேறு யாரும் அறியா வண்ணம் என்பார் 'அயற் செவிக்கு' என்ருர். (கூ)

வேற்றோர் வைகல் வெளிப்படக் கண்டறஞ்
சாற்று நாவினன் வேறொன்றுஞ் சாற்றிலன்
சீற்ற மேல்கொடு செல்வன்கொல் வேனென
ஏற்றெ ழுந்தன னீன்றாள் விலக்குவாள்.

(இ - ள்.) வேறு ஓர் வைகல் - மற்றொரு நாளில், வெளிப்படக் கண்டு - புலப்படக் கண்டு, அறம் சாற்றும் நாவினன் - அறநெறியைக் கூறும் நாவினையுடையனாய், வேறு ஒன்றும் சாற்றிலன் - பிறிதொன்றும் கூறானாயினன் ; (அங்ஙனமாகவும்), செல்வன் - அவன் புதல்வன், சீற்றம் மேல்கொடு - சினத்தை மேற்கொண்டு, கொல்வேன் என ஏற்று எழுந்தனன் - அவனைக் கொல்வேனென்று எதிர்ந்து எழுந்தான்; ஈன்றாள் விலக்குவாள் - பெற்றவள் விலக்குவாளாய்.

அறங் கூறியதன்றி அவனை இகழ்ந் துரைத்திலனென்க. செல்வன் என்றது இகழ்ச்சி தோன்றக் கூறியது. நாவினன், விலக்குவாள் என்னும் முற்றுக்கள் எச்சமாயின. (க0)

தாயி லின்ப நுகர்ந்தனை தந்தையைக்
காயி லென்பெறு வாயெனக் காமுகர்க்
காயி லன்னையி லப்பனி லென்பயன்
ஏயி லின்னரு ளென்னற மென்னென்றான்.

(இ - ள்.) தாயில் இன்பம் நுகர்ந்தனை - தாயினிடத்துக் காம வின்பத்தினை நுகர்ந்தாய், தந்தையைக் காயில் என்பெறுவாய் என - (இன்னும்) தந்தையைக் கொன்றனை யாயின் என்ன பயனை அடைவாயோ என்று கூற, காமுகர்க்கு - காமுகர்களுக்கு, ஆயில் - ஆராய்ந்து பார்க்கில், அன்னையில் அப்பனில் என் பயன் - தாயாலும் தந்தையாலும் என்ன பயன், இன் அருள் ஏயில் என் அறம் (ஏயில்) என் என்றான் - இனிய அருளைப் பொருந்தி லென்ன பயன் அறத்தைப் பொருந்தி லென்ன பயன் என்றனன்.

தாயில், இல் : ஏழனுருபு. தாயிலின்பம் நுகர்ந்ததே கொடு நிரயத் துன்ப முழத்தற்கு ஏதுவாகும்; அதனோடமையாது தந்தையைக் கொல்லுதலுஞ் செய்யின் நீ யெய்தும் துன்பத்திற்கு அளவில்லை யாகும் என்பாள் 'தாயில்......என்பெறுவாய்' என்றாள். காய்தல் - சினத்தல் ; கோறலை யுணர்த்திற்று. தாய் தந்தை யென்னும் முறைமையாலும், அருள் அறம் என்பவற்றாலும் என்ன பயனென்றான். ஏயில் என்பதனை அறம் என்பதனோடுங் கூட்டுக. நேயில் எனப் பிறர் பிரித்தது பொருந் தாமை யோர்க. விலக்குவாள் என அவன் என்னென்றான் எனக் கூட்டி யுரைக்க. (கக)

மண்டோ டுங்கரு விப்படை வன்கையிற்
கொண்டு தாதை குரவனென் றோர்கிலான்
துண்ட மாகத்* துணித்தனன் ஆய்முகத்
துண்ட காம நறவா லுணர்விலான்.

(பா - ம்.) * துணித்தானாய் வாய்முகத்.

(இ - ள்.) மண் தொடும் கருவிப் படை வன் கையில் கொண்டு மண் வெட்டுங் கருவியாகிய படையினைத் தனது வலிய கையிலேந்தி, தாதை குரவன் என்று ஓர்கிலான் - தன் தந்தையை ஐங்குரவருள் ஒருவனென்று அறியாதவனாய், ஆய் முகத்து உண்ட காம நறவால் உணர்வு இலான் - தாயினிடத்துப் புணர்ந்து நுகர்ந்த காமமாகிய கள்ளி னால் அறிவிழந்த பாவி, துண்டமாகத் துணித்தனன் -(அவனைத்) துண்டு பட வெட்டினான்.

மண்டொடுங் கருவி - மன் வெட்டி. கருவிப்படை: இருபெய ரொட்டு. வன்கை - கொலைசெய்யுங் கை. ஐங்குரவரிவ ரென்பதனையும், அவரை வழிபட வேண்டுமென்பதனையும்,

> "அரச னுவாத்தியான் றாய்தந்தை தம்முன்
> நிகரில் குரவ ரிவரிவரைத்.........
> தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே
> யாவருங் கண்ட நெறி"

என்னும் ஆசாரக்கோவையா லுணர்க. 'தாய்முகம்' - முகம் : ஏழன் உருபு. (கஉ)

> மைக்க ருங்கங்குல் வாய்க்கோன்ற தாதைக்குத்
> தக்க தீத்தவி சிட்டன்னை தன்னொடுங்
> கைக்க டங்கு பொருளோடுங் கன்னெறி
> புக்க னன்புடை சூழ்ந்தார் புளிஞரே.

(இ - ள்.) மைக்கருங் கங்குல்வாய் - மைபோலும் கருமையாகிய இரவின்கண், கொன்ற தாதைக்கு - தன்னாற் கொல்லப்பட்ட தந்தைக்கு, தக்க தீத்தவிசு இட்டு-பொருந்திய தீயாகிய படுக்கை யமைத்து, அன்னை தன்னொடும் கைக்கு அடங்கு பொருளொடும் கல்நெறி புக்கனன் - தாயோடும் சுமக்கத் தகுந்த பொருளோடும் கற்கள் பொருந்திய சுர நெறியை அடைந்தனன்; புளிஞர் புடை சூழ்ந்தார் - ஆறலைக்கும் வேடர்கள் அவனைச் சுற்றிலும் வளைந்து கொண்டனர்.

இருள் மைபோலு மென்பது,

> "எண்ணு மிவ்வுல கத்தவர் யாவரும்
> துண்ணெ னும்படி தோன்றிமுன் றோய்ந்திடில்
> வண்ண நீடிய மைக்குழம் பாமென்று
> நண்ணல் செய்யா நடுவிருள் யாமத்து"

என்னும் பெரியபுராணச் செய்யுளிற் புனைந்துரைக்கப் பட்டிருத்தல் காண்க. கொன்ற: செயப்பாட்டுவினை. தீத்தவிசு - ஈமத் தீயாகிய படுக்கை; ஈமப் பள்ளியிற் கிடத்தி யெரித்தென்க. கைக்கடங்கு பொருள் - கையில் எடுக்கலான பொருள். (கங)

எய்யுங் கோறொடு வில்ல ரிடிக்குநேர்
செய்யுஞ் சொல்லினர் செல்லலை நில்லெனக்
கையி லுள்ளவுங் கைக்கொண்டு காரிகைத்
தைய றன்னையுங் தாங்கொடு போயினார்.

(இ - ள்.) எய்யும் கோல் தொடுவில்லர் - எய்யப்பெறும் வாளியை ஏறிட்ட வில்லினை யுடையவராய், இடிக்கு நேர் செய்யும் சொல்லினர் - இடியை யொக்குஞ் சொல்லினை யுடையராய், செல்லலை நில் என - செல்லாதே நில் என்று (நிறுத்தி), கையில் உள்ளவும் தாம் கைக்கொண்டு - கையிலுள்ள பொருளையும் தாம் பறித்துக்கொண்டு, காரிகை தையல் தன்னையும் கொடுபோயினார் - அழகிய அம்மாதையுங் கைக்கொண்டு சென்றார்கள்.

செல்லலை, அல் எதிர்மறை யிடைநிலை; ஐ முன்னிலை விகுதி. காரிகை - அழகு. (கசு)

சென்று சேணிடைச் சிக்கற வாழலாம்
என்ற வெண்ணமொன் றெய்திய வண்ணமொன்
றொன்று நாமெண்ணத் தெய்வமொன் றெண்ணிய
தென்ற வார்த்தை யிவனிடைப் பட்டதால்.

(இ - ள்.) சேண் இடைச் சென்று சிக்கு அற வாழலாம் என்ற எண்ணம் ஒன்று - தூரதேயத்திற் சென்று இடையூறின்றி வாழலாம் என அவன் கருதிய எண்ணம் ஒன்று; எய்திய வண்ணம் ஒன்று - நிகழ்ந்த செய்தி மற்றொன்று; நாம் ஒன்று எண்ணத் தெய்வம் ஒன்று எண்ணியது என்ற வார்த்தை - 'நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது' என்ற பழமொழி, இவன் இடைப்பட்டது - இந்த மாபாதகனிடத்திற் புலப்பட்டது.

சிக்கற வாழலாம் - தடையின்றாக இன்பந் துய்த்து வாழலாம். ஆகலான் வார்த்தை இவனிடைப்பட்டதென்க. பட்டது - வெளிப் பட்டது. ஆல் : அசை. (கஎ)

தாதை தன்றன யற்கினி யார்துணை
மாதர் யாயை மறவர்கைக் கொள்ளவிப்
போது தான்றுணை யென்பவன் போன்றுமா
பாத கத்துரு வாய்வந்து பற்றினான்.

(இ - ள்.) தாதை-வெட்டுண்டிறந்த தந்தையானவன், மாதர் யாயை மறவர் கைக்கொள்ள - அழகிய தாயை வேடர் கவர்ந்து கொண்டமையால், தன் தனயற்கு துணை இனியார் - தன் புதல்வனுக்குத் துணை யாவார் இனி யாவர் (என்று வருந்தி), இப்போது - துணையை இழந்து வருந்தும் இப்பொழுது, தான் துணை என்பவன் போன்று - யானே துணை யாவேன் என்று தொடர்பவனைப்போல, மாபாதகத்து உருவாய் வந்து பற்றினான் - மாபாதக வடிவாய் வந்து அவனைப் பிடித்தான்.

யாய் - தாய். தந்தையைக் கொன்ற கொலைப்பாவம் வந்து பற்றிய தனைத் தந்தை பாதகத்துருவாய் வந்து பற்றினன். என்றார். இது தற்குறிப்பேற்றவணி. (கசு)

ஆவ வென்னு மழுஞ்சிவ தாவெனும்
பாவம் பாவம் பழியிது வோவைய
கோவெ னுங்கை குலைத்தெறி யுங்நிழற்
பாவை போல விடாதுபின் பற்றுமால்.

(இ - ள்.) ஆவ என்னும் - (அங்ஙனம் பற்றிய கொலைப் பாவமானது) ஐயோ என்று அலறும்; அழும் - அழாநிற்கும்; சிவதா எனும் - சிவதா என்று முறையிடும்; பழி இதுவோ பாவம் பாவம் - கொலைப்பழி இத் தன்மையதோ பாவம் பாவம், ஐயகோ எனும்-ஐயகோ என்று புலம்பும்; கைகுலைத்து எறியும்-கையை அசைத்து நிலத்தில் மோதும்; நிழல் பாவை போல விடாது பின்பற்றும் - உடம்பின் சாயையாகிய நிழல்போல விடாது பின்பற்றிச் செல்லும்.

சிவதா என்பது சிவபெருமானை நோக்கி முறையிடுஞ் சொல்; திருத் தொண்டர் புராணத்திலே,

''களியா னையினீ ருரியாய் சிவதா
எளியார் வலியா மிறைவா சிவதா
அளியா ரடியா ரறிவே சிவதா
தெளிவா ரமுதே சிவதா சிவதா''

என வருதல் காண்க. பாவம் பாவம் பழியிதுவோ என்பதனை ஆசிரியர் இரங்கிக் கூறியதாகக் கொள்க. பாவத்தாற் பற்றப்பட்டவ னிடத்து நிகழ்வனவற்றிற்கு அதனையே வினைமுதலாகக் கூறினர். ஆல்: அசை. (கஎ)

[வேறு]

நல்லதீர்த் தஞ்சிவ தலநலோர் பக்கமுஞ்
செல்லவொட் டாதரன் சீர்த்திநா மஞ்செவிப்
புல்லவொட் டாதுளம் புகுதவொட் டாதுநாச்
சொல்லவொட் டாதுகண் டுயிலவொட் டாதரோ.

(இ - ள்.) நல்ல தீர்த்தம் சிவதலம் நல்லோர் பக்கமும் செல்ல ஒட்டாது - நல்ல தீர்த்தத்தினருகிலும் சிவதலத்தினருகிலும் நல்லவர்க ளருகிலும் போகவிடாது; அரன் சீர்த்தி நாமம் செவி புல்ல ஒட்டாது - சிவபெருமானின் புகழும் அவன் திருப்பெயரும் செவியிற்பட விடாது; உளம் புகுத ஒட்டாது-(ஒருக்காற்படினும்) உள்ளத்திற் புகவிடாது; நாச் சொல்ல ஒட்டாது - (அவற்றை) நாவினாற் சொல்ல விடாது; கண் துயில ஒட்டாது - கண்ணுறங்க விடாது.

ஒட்டாது - இசையாது; தடுக்கும்;

''ஒட்டே னரசோ டொழிப்பேன்''

என்பது சிலப்பதிகாரம். அப்பாவத்தை யொழிக்க வேண்டித் தீர்த்தம் முதலியவற்றை அடைதல் முதலியன செய்யக் கருதின் அவற்றைச் செய்ய விடாது தடுத்தே விடும். அரோ: அசை. (கஅ)

சுற்றுமுன் பின்புறச் சூழ்ந்துதன் கொடுக்கினிற்*
பற்றிநின் றீர்க்குமா பாதகத் தாலலைந்
தெற்றினிச் செய்வதென் றாற்றலா திடருழந்
துற்றுவே† றுலகெலா மச்சமுற் றுழலுமால்.

(இ - ள்.) முன் பின்பு உறச் சுற்றும்-முன்னும் பின்னும் பொருந்தச் சூழும்; சூழ்ந்து தன் கொடுக்கினில் பற்றி நின்று ஈர்க்கும் - (அங்ஙனஞ்) சூழ்ந்து தன் கொய்சகத்தைப்பிடித்து இழுக்காநின்ற, மாபாதகத்தால் அலைந்து - மாபாதகத்தினு லலைந்து, எற்று இனி செய்வது என்று ஆற்ற லாது இடர் உழந்து - இனி யாது செய்வதென்று கருதிப் பொறுக்க லாற்றாது துன்பமுற்று, வேறு உலகு எலாம் உற்று அச்சம் உற்று உழலும் - தனியே உலகமெல்லாஞ் சென்று திரிந்து அஞ்சி வருந்துவா னாயினன்.

கொடுக்கு - கொய்சகம்; ஆடையை மடித்து முன்புறந் தொங்க விட்டிருப்பது, பாதகத்தால் அவன் அலைந்து உழலுவான் ஆயினான். வேறு - தனி. ஆல்: அசை. (கக)

உறுகணோ யாற்றநா ளுற்றுழன் றுலகெலாம்
மறுகவே திரியுமா பாதகன் வலியெலாஞ்
சிறுகுவான் சிவனருட் செயலினிற்‡ பாதகங்
குறுகுநாள் குறுகுநாள் கூடலைக் குறுகினான்.

(இ - ள்.) ஆற்ற நாள் உறுகண் நோய் உற்று உழன்று - (இங்ஙனம்) பன்னெடுநாள் மிக்க துன்பமடைந்து வருந்தி, உலகு எலாம் மறுகவே திரியும் மாபாதகன் - உலகின்கண் கண்டோரனைவரும் மனம் இளகி வருந்துமாறு திரியாநின்ற மாபாதகன், வலி எலாம் சிறுகுவான் - தனது வலிமை முழுதுங் குறைந்தவனாய், சிவன் அருள் செயலினில்- சிவ பெருமானது திருவருட் செயலினால், பாதகம் குறுகுநாள் குறுகுநாள் கூடலைக் குறுகினான் - அக்கொலைப் பாவமானது குறுகி ஒழியுநாள் வரவே அந் நாளில் மதுரையம்பதியை அடையலாயினான்.

உலகு என்பது உயிரை யுணர்த்திற்று; உலக முழுதும் சுழன்று திரியும் என்னலுமாம். சிறுகுவான், இறந்தகால எச்சமாயிற்று. செய லினிப் பாதகம் என்னும் பாடத்திற்கு, செயலால் இப்பாதகம் என்று பொருள் கூறிக்கொள்க. பாதகங் குறுகுதல் - பாவங் குறைதல். பின் னுள்ள குறுகுதல் அணுகுதல் என்னும் பொருட்டு. குறுகுநாள் குறுகு நாள் என்றும், கூடலைக் குறுகினான் என்றும் கூறிய ஈற்றடியின் நயம் போற்றற்பாலது; முற்று மோனையாதலுங் காண்க. (உ0)

(பா - ம்.) *கொடுக்கிறப். †உற்றவே. ‡செய்லினிப்.

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

அழிதகன் குறுகு வான்முன் னங்கயற் கண்ணி தந்தக்
குழையிரு காதுங் கோத்துக் கொலைகெழு* புலிப்பற் றாலி
நுழைமயிர் நெடுநாண் பின்ன னோன்பிட ரலைப்பப் பூண்டோர்
பழிதகை யாத வேடப் பாவையாய்ப் படிவங் கொள்ள.

(இ - ள்.) அழிதகன் குறுகுவான் முன்-அத் தீநெறிப்பட்ட பாதகன் அங்கு வருதற்கு முன், அங்கயற்கண்ணி - அங்கயற்கண் அம்மையார், தந்தக்குழை இரு காதும் கோத்து - தந்தத்தாலாகிய குண்டலங்களை இருசெவியிலும் நுழைவித்து, கொலைகெழு புலிப்பல் தாலி நுழை-கொலை பொருந்திய புலியின் பல்லாகிய தாலி கோத்த, மயிர் பின்னல் நெடு நாண் - மயிராற் பின்னிய நீண்ட மங்கல நாணினை, நோன்பிடர் அலைப்பப் பூண்டு-பெருமை பொருந்திய பிடரில் அசைந்தலையத் தரித்து, பழிதகையாத ஓர் வேடப் பாவையாய் படிவம் கொள்ள - பழிக்குந் தன்மையில்லாத ஒரு வேடமகளாய்த் திருவுருவங்கொள்ள.

குறுகுவான், எச்சமாயிற்று. நுழை - கோத்தவெனப் பிறவினைப் பொருட்டு. தகையில்லாத என்பது தகையாத என நின்றது. (௨௧)

கொலையிரும்* பழிக்கன் றஞ்சுங்கூடலெம் பெருமான் கொன்றை
மிலையிருங் குஞ்சி வேங்கை மெல்லிணர்க் கண்ணி வேய்ந்து
கலையிரு மருப்பிற் கோடிக் காதள வோடுந் தாடிச்
சிலையிருந் தடக்கை வேடத் திருவருக் கொண்டு தோன்றி.

(இ - ள்.) கொலை இரும் பழிக்கு அன்று அஞ்சும் கூடல் எம் பெருமான் - கொலையாலாம் பெரிய பழிக்கு அன்று அஞ்சிய மதுரையி லெழுந்தருளிய எம்பெருமானாகிய சோமசுந்தரக் கடவுள், கொன்றை மிலை இருங் குஞ்சி வேங்கை மெல் இணர்க்கண்ணி வேய்ந்து - கொன்றை மாலை யணிந்த நீண்ட சிகையின்கண் வேங்கையின் மெல்லிய பூங் கொத்துக்களாலாகிய மாலையை யணிந்து, கலை இரு மருப்பில் கோடி காது அளவும் ஓடும் தாடி - கலைமானின் இருகொம்பைப்போல் வளைந்து காது மட்டுஞ் சென்ற மீசையையும், சிலை இருந்தடக்கை-வில்லை யேந்திய நீண்ட பெரிய கையையுமுடைய, வேடத் திரு உருக்கொண்டு தோன்றி - வேடத் திருவுருவங்கொண்டு தோன்றி யருளி.

அன்று பழிக்கஞ்சியவர் இன்று பாதகத்திற் கஞ்சினா ரென்பது தோன்றக் கூறினர். முறுக்குடன் வளைந்து இருபுறமும் மேலே சென் றிருப்பதற்குக் கலை மருப்பு உவமை. தாடியும் தடக்கையும் உடைய வென விரிக்க. (௨௨)

கொண்டல்கண் படுக்கு மாடக் கோபுர மருங்கிற் பொங்கின்
கண்டகக் கருக்கு வாய குரைக்குநாய் கதுவிக் காப்பப்
புண்டலை வாளி வில்லோர் புறங்கிடந் திமைப்பத் திங்கட்
டுண்டவா ணுதலா ளோடுஞ் சூதபோ ராடல் செய்வான்.

(பா - ம்.) * கொலையெழு.

(இ - ள்) கொண்டல் கண் படுக்கும் மாடக்கோபுரம் மருங்கில் - முகில்கள் துஞ்சும் மாடங்களை யுடைய கோபுரத்தின் பக்கத்தில், போந்தின் கண்டகக் கருக்கு வாய குரைக்கும் நாய் கதுவிக் காப்ப - பனையினது முட்களையுடைய கருக்குப் போன்ற வாயையுடைய குலைக்கின்ற நாய்கள் சிறிதும் நீங்காது காக்கவும், புண் தலை வாளி வில் ஓர் புறம் கிடந்து இமைப்ப - தசை பொருந்திய நுதியையுடைய கணையும் வில்லும் ஒரு புறத்திற் கிடந்து விளங்கவும், திங்கள் துண்டம் வாள் நுதலாளோடும் சூது போர் ஆடல் செய்வான் - திங்களின் ஒரு பாதியை ஒத்த ஒள்ளிய நெற்றியையுடைய பிராட்டியோடும் சூதாடலாகிய போர்த் தொழிலைச் செய்வானாயினன்.

கருக்கு - மட்டையின் விளிம்பு. 'வாய' குறிப்புப்பெயரெச்சம். (உ௩)

வெருவரு வேழ முண்ட வெள்ளில்போல் வறிய னாகிப்
பருவர லுடனாங் கெய்தும் பாதகன் வரவு நோக்கி
ஒருவரு முள்ளத் தாலு முன்னருங் கொடிய பாவி
வருவது காண்டி யென்னா மாதரை நோக்கிக் கூறும்.

(இ - ள்.) வெருவு அரு வேழம் உண்ட வெள்ளில் போல் வறியனாகி - அச்சமில்லாத யானையா லுண்ணப்பட்ட விளாங்கனிபோல உள்ளீடில்லாதவனாய், பருவரலுடன் ஆங்கு எய்தும் பாதகன் வரவு நோக்கி - துன்பத்துடன் அங்கு வருகின்ற மாபாதகனது வருகையை நோக்கி, ஒருவரும் உள்ளத்தாலும் உன் அரும் கொடிய பாவி வருவது - ஒருவரும் மனத்தாலும் நினைத்தற்கரிய கொடிய பாவத்தை யுடையவன் வருவதை, காண்டி என்னா - காண்பாயாக என்று, மாதரை நோக்கிக் கூறும் - இறைவியை நோக்கிக் கூறுவான்.

வெருவரு - அஞ்சத்தக்க என்றுமாம். 'வேழம்' வெள்ளிலுக்கு வருவதொரு நோய் என்பர் நச்சினார்க்கினியர்;

"தூம்புடை நெடுங்கை வேழந் துற்றிய வெள்ளில்"

என்னும் சிந்தாமணி யடியின் உரையை நோக்குக; ஒரு கொதுகு என்பாருமுளர். வறியன் - மகிழ்ச்சி என்பது சிறிதுமில்லாதவன். காண்டி - காண்பாய், ட்: எழுத்துப் பேறு. (உ௪)

அணங்குநோ யெவர்க்குஞ் செய்யு மனங்கனா லலைப்புண் டாவி
உணங்கினா ருள்ளஞ் செல்லு மிடனறிந் தோடிச் செல்லா
குணங்குல னொழுக்கங் குன்றல் கொலைபழி பாவம் பாரா
இணங்குமின் னுயிர்க்கு மாங்கே யிறுதிவந் துறுவ தெண்ணா.

(இ - ள்.) எவர்க்கும் அணங்குநோய் செய்யும் அனங்கனால் அலைப்புண்டு - யாவர்க்குங் காமநோயைச் செய்கின்ற மாரனாலே அலைக்கப்பட்டு, ஆவி உணங்கினார் உள்ளம் - உயிர் சோர்ந்தவர்களின் உள்ளங்கள். செல்லும் இடன் அறிந்து ஓடிச்செல்லா - செல்லுதற்குரிய இடத்தினை அறிந்து சென்று சேரா; குணம் குலன் ஒழுக்கம் குன்றல் - குணமும் குலமும் ஒழுக்கமும் குறைதலையும், கொலை பழி பாவம் - கொலையும் பழி

பாவங்களும் உண்டாதலையும், பாரா - பார்க்கமாட்டா ; இணங்கும் இன் உயிர்க்கும் ஆங்கே இறுதி வந்து உறுவது எண்ணு - பொருந்திய தம் இனிய உயிர்க்கும் அவ்விடத்தே அழிவு வருதலையும் எண்ணமாட்டா.

எவர்க்கும் - எத் தன்மையோர்க்கும். இடங் கழிகாமத்தால் வருந்தின ரென்பார் 'அலைப்புண்டாவி யுணங்கினர்' என்றார். செல்லுமிடன் - மணத்தற்குரிய கன்னியர் மனைவி காமக் கிழத்தியர் என்னுமிடங்கள். குன்றலையும் கொலை முதலியன உண்டாதலையும் என விரிக்க, ஆங்கே என்பதற்கு அவ்வாறே என்றும் ; அப்பொழுதே என்றும் உரைத்தலுமாம். (உரு)

கள்ளுண்டல் காம மென்ப கருத்தறை போக்குச் செய்வ*
எள்ளுண்ட காமம் போல வெண்ணினிற் காணிற் கேட்கிற்
றள்ளுண்ட விடத்தி னஞ்சந் தலைக்கோண்டா லென்ன வாங்கே
உள்ளுண்ட வுணர்வு போக்கா துண்டபோ தழிக்குங் கள்ளுண்.

(இ - ள்.) கள் உண்டல் காமம் என்ப கருத்து அறை போக்குச் செய்வ - கள்ளுண்ணலும் காமமும் என்று சொல்லப்படுமிரண்டும் அறிவினை நீங்குமாறு செய்வன ; கள் ஊண் - (அவற்றுட்) கள்ளுணவானது, எள்ளுண்ட காமம் போல - இகழப்பட்ட காமத்தைப் போல, எண்ணினில் காணில் கேட்கில் தள்ளுண்ட இடத்தில் - எண்ணினும் காணினும் கேட்கினும் தவறுதலுற்ற இடத்தினும், நஞ்சம் தலைக்கொண்டால் என்ன - நஞ்சு தலைக்கேறியதுபோல, ஆங்கே - அப்பொழுதே, உள் உண்ட உணர்வு போக்காது - உள்ளே பொருந்திய அறிவினைப் போக்காது, உண்டபோது அழிக்கும் - உண்ட பொழுதில் மட்டுமே அதனை அழிக்கும்.

என்ப - என்பன ; வினைப்பெயர் ; என்று கூறுவர் என்றுமாம். அறைபோக்கு - அறை போதல் ; உள்ளதுபோல் ஒழிதல். காமத்திற் கேற்றும் பொழுது - காமுறப் பட்டாரை எண்ணுதல் முதலிய செய்த விடத்தென்று கொள்க. எண்ணினில், இன் வேண்டாவழிச் சாரியை. தள்ளுண்ட இடம் - கிடைக்காவழி ; விடத்தின் நஞ்சம் எனப் பிரித்து ஒரு பொரு ளிருசொல்லாகக் கொள்ளலுமாம். கள்ளுண்டலும் காமமும் உணர்வினை யிழப்பித்தலால் ஒக்கும் ; எனினும், கள்ளுண்காமம் போல உணர்வு போக்காது உண்டபோது அழிக்கும் என ஒப்புமையும் வேற்றுமையும் கூறினமையின் இது வேற்றுமையணி.

"உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு"

என்னுங் குறள் ஒருபுடை யொத்து நோக்கற்பாலது. (உசு)

காமமே கொலைகட் கெல்லாங் காரணங் கண்ணோ டாத
காமமே களவுக் கெல்லாங் காரணங் கூற்ற மஞ்சுங்
காமமே கள்ளுண் டற்குங் காரண மாத லாலே
காமமே நரக பூமி காணியாக் கொடுப்ப தென்றான்.

(பா - ம்.) *செய்வது.

(இ - ள்.) காமமே கொலைகட்கு எல்லாம் காரணம் - காமமே கொலைகளுக்கு எல்லாம் காரணமாயுள்ளது; கண்ணோடாத காமமே களவுக்கு எல்லாம் காரணம் - கண்ணோட்டமில்லாத காமமே களவு அனைத்திற்குங் காரணமாகும்; கூற்றம் அஞ்சும் காமமே கள் உண்டற்கும் காரணம்-கூற்றுவனும் அஞ்சுதற்குரிய காமமே கள்ளினை நுகர்வதற்கும் காரணமாகும்; ஆதலாலே, காமமே நரகபூமி காணியாக் கொடுப்பது என்றான் - ஆதலினாலே, காம மொன்றே (அவை யனைத்தாலு நேரும்) நரக பூமியைக் காணியாட்சியாகக் கொடுக்க வல்லது என்று கூறி யருளினான்.

காமமே என்பவற்றி னேகாரங்கள் தேற்றமும் பிரிநிலையுமாம். கண்ணோடாத காமம் - தன்னை யுடையாரைக் கண்ணோட்டமின்றி வருத்தும் காமம். ஐம்பெரும்பாதகங்களுள் கொலை களவு கள் என்ப வற்றை எடுத்தோதினமையின் இனம் பற்றிப் பொய்யையுங் கொள்க. காணியா - உரிமையாக; ஈறு தொக்கது. (உஎ)

கொலைப்பழி கோட்பட் டாங்கே குறுகியான் முகங்கண் டேட
அலைப்பட ருழந்து சாம்பி யழிவதென் பார்ப்பா னென்னக்
கலைப்படு திங்கள் வேணிக் கானவ னருட்க ணோக்கந்
தலைப்படச் சிறிது பாவந் தணிந்துதன் னறிவு தோன்ற.

(இ - ள்.) கொலைப்பழி கோள்பட்டு ஆங்கே குறுகியான் முகம் கண்டு - கொலைப் பாவத்தால் விழுங்கப்பட்டு அவ்விடத்தை யடைந்தவனது முகத்தை நோக்கி, ஏட பார்ப்பான் - ஏடா பார்ப்பானே, அலைப் படர் உழந்து சாம்பி அழிவது என் என்ன - அலைத்தலையுடைய துன்பத்தால் வருந்தி வாடி மெலிவது என்னை என்று வினவியருள, கலைப்படு திங்கள் வேணிக் கானவன் அருள் கண் நோக்கம் சிறிது தலைப்பட - ஒரு கலையினைப்பொருந்திய பிறையையணிந்த சடையையுடைய வேடனாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவருட்பார்வை சிறிது தலைப்படுதலால், பாவம் தணிந்து தன் அறிவு தோன்ற - பாவங் குறைந்து தனது முன்னை யுணர்வு தோன்றா நிற்க.

பழி கோட்பட்டு, தம்மினாகிய தொழிற்சொல் வர வலி யியல் பாயிற்று. அலை : முதனிலைத் தொழிற்பெயர்; ''அலைமேற் கொண்டு'' என்புழிப்போல. வேணிக் கானவன்-வேணியையுடைய வேடன், வேணி யாகிய காட்டையுடையன் என இருபொருள் தோன்ற நின்றது. பாவம் முழுது மொழிதல் பின் கூறப்படுதலின் ஈண்டுச் சிறிது தணிந் தென்றலுமாம். (உஅ)

முற்பக லிழைத்த பாவ முதிர்ச்சியால்* பிறந்து தந்தை
தற்பக† னன வாறுந் தாதையை வதைத்த வாறும்
பிற்பக லந்தப் பாவம் பிடித்தலைத் தெங்குந் தீரா
திப்பதி புகுந்த வாறு மெடுத்துரைத் திரங்கி நின்றான்.

(பா - ம்.) *பாவமுயற்சியால். †தற்பகை.

(இ - ள்.) முன் பகல் இழைத்த பாவ முதிர்ச்சியால் பிறந்து - முற்பிறப்பிற் செய்த பாவ முதிர்ச்சியாலே பிறந்து, தந்தை தற்பகன் ஆன வாறும் - தந்தையின் மனைவியை அடைந்த தன்மையும், தாதையை வதைத்தவாறும்-(அது காரணமாகத்) தந்தையைக் கொன்ற தன்மையும், பின் பகல் அந்தப் பாவம் பிடித்து அலைத்து-பின்னுளில் அந்தக் கொலைப் பாவம் பிடித்து வருத்த, எங்கும் தீராது - எங்குந் திரிந்து அது நீங்கப் பெருமல், இப்பதி புகுந்தவாறும் - இப்பதியை அடைந்த தன்மையும், எடுத்து உரைத்து இரங்கி நின்ருன் - எடுத்துக்கூறிக் கவன்று நின்ருன்.

தற்பகன்-தந்தையின் படுக்கையைப் பெற்றவன் என்பர் ; தற்பகை என்னும் பாடத்திற்கு, தனக்குப் பகையென்பது பொருள். அலைத்து - அலைக்க ; எச்சத்திரிபு. (உக)

மறப்பெரும் படிவங் கொண்டு மனத்தருள் சுரந்து நின்ற
அறப்பெருங் கருணை மூர்த்தி யழிதகை யவனைப் பார்த்தித்
திறப்பழி யாங்குச் சென்று மீங்கன்றித் தீரா தென்றக்
கறைப்பழி தீரும் வண்ணங் கருதியோ ருறுதி கூறும்.

(இ - ள்.) மறம் பெரு படிவம் கொண்டு-(புறத்தில்) மறத்தொழிலை யுடைய பெரிய வேட்டுவ வடிவங் கொண்டு, மனத்து அருள் சுரந்து நின்ற அறப் பெருங் கருணை மூர்த்தி - அகத்தின்கண் அருள் ஊறி நின்ற அறவுருவாகிய பேரருட் பெருமான், அழிதகைவனைப் பார்த்து-அந்த அழிதகைமை யுடையவனை நோக்கி, இத் திறப்பழி - இக்கொடிய பழி யானது, யாங்குச் சென்றும் ஈங்கு அன்றித் தீராது என்று - எங்கே செல்லினும் இப்பதியி லன்றி நீங்காது என்று கூறி, அக்கறைப் பழி தீரும் வண்ணம் கருதி ஓர் உறுதி கூறும் - அவ்வடுவாகிய பழிதீரும் வகையைக் கருதி ஓர் உபாயம் கூறி யருளுவான்.

இறைவன் கொள்ளுங் கோலங்களில் மறத்தன்மை யுடையன போல்வனவும் அருளுருவங்களே என்பது தோன்றக் கூறியவாறு ;

"வேகியா னுற்போற்செய்த வினையினை வீட்ட லோரார்"

எனச் சிவஞானசித்தி கூறுவது காண்க. திறப்பழி - ஏனைப் பழிகள் போல்வ தன்றி வேருகிய கொடும்பழி. ஈங்கன்றி யாங்குச் சென்றும் தீராது எனக் கூட்டுக. கறை - நீங்காது நிற்கும் மறு. (௩0)

வருதிநின் ஞமஞ் சொன்னோர் வருக்கமு நரகில் வீழக்
கருதிநீ செய்த பாவங் கழிப்பவ ரெவர்யா நோக்கந்
தருதலா லெளிதிற் றீரச் சாற்றுது மையங் கையேற்
றேருபோழு துண்டி யீச னுறுதவ* ரேவல் செய்தி.

(இ - ள்.) வருதி - வருவாய், நின் நாமம் சொன்னோர் வருக்கமும் நரகில் வீழ - உனது பெயரைக் கூறினவரின் மரபிலுள்ளோரும் நரகில்

(பா - ம்.) *ஈசனுற்றவர்.

வீழுமாறு, நீ கருதி செய்த பாவம் கழிப்பவர் எவர் - நீ அறிந்து செய்த பாவத்தைப் போக்குவார் யாவர், யாம் நோக்கம் தருதலால் எளிதில் தீரச் சாற்றுதும் - நாம் திருவருணோக்கஞ் செய்தமையால் எளிதினில் நீங்குமாறு கூறுகின்றோம்; ஐயம் கை ஏற்று ஒருபொழுது உண்டி - கையிலே பிச்சையேற்று ஒரு பொழுது உண்பாய், ஈசன் உறு தவர் ஏவல் செய்தி-சிவபெருமானுக்கு அடியார்களாகிய மிக்க தவத்தினை யுடையாரின் ஏவலைச் செய்வாய்.

வருக்கமும் நரகில் வீழ்தல் கூறவே சொன்னோர் வீழ்தலும், நாமஞ் சொன்னோர் வீழ்வர் எனவே இணங்கினோர் முதலானவர் வீழ்தலும் கூற வேண்டாவாயின. அறியாமற் செய்த பாவமன்றென்பார் 'கருதி நீ செய்த பாவம்' என்றார். எவராலும் கழித்தற் கரிதாயினும் எமது திரு நோக்கிற் கிலக்கானமையின் தீரச் சாற்றுதும் என்றாரென்க. உண்டி - உண்ணுதி. உண்டி, செய்தி என்பவற்றில் த்: எழுத்துப் பேறு; இ: எதிர் கால விகுதி. (கூக)

செங்கதிர்க் கடவுள் வானந் தீண்டுமுன் னெழுந்து தீந்தண்
பைங்கதி ரறுகு கொய்து பசுக்களை யருத்தி யார்வம்
பொங்கமுப் போதுங் கோயிற் புறத்தொட்டித் தீர்த்த மாடிச்
சங்கரன் றனைநூற் றெட்டு மெய்வலஞ் சாரச் செய்தி.

(இ - ள்.) செங்கதிர்க் கடவுள் வானம் தீண்டுமுன் எழுந்து-சிவந்த கிரணங்களையுடைய சூரியன் தோன்றி வானைத் தொடுவதற்கு முன்னமே எழுந்து, தீந்தண் பைங்கதிர் அறுகு கொய்து - இனிய தண்ணிய பசிய ஒளியையுடைய அறுகம் புல்லைக் கொய்து, பசுக்களை அருத்தி - பசுக்களை உண்பிப்பாய்; ஆர்வம் பொங்க முப்போதும் கோயில் புறத்தொட்டித் தீர்த்தம் ஆடி - அன்பு மேலோங்க மூன்று காலமும் திருக்கோயிலின் புறத்திலுள்ள தொட்டித் தீர்த்தத்தின்கண் நீராடி, சங்கரன் தனை நூற்றெட்டு மெய்சார வலம் செய்தி - சிவபெருமானை நூற்றெட்டு முறை உடம்பாலே பொருந்த வலஞ் செய்வாய்.

நல்ல நிலத்திலே செழுமையாக விருக்கும் அறுகென்க. அருத்துதி எனற்பாலது அருத்தி என நின்றது. முப்போது - காலை நண்பகல் மாலை. கோயிற் புறத்தொட்டி - அபிடேக நீர் வந்துவிழும் புறத்திலுள்ள தொட்டி. சங்கரன்றன்னை என்பதற்குச் சிவபெருமான் திருக்கோயில் என்பது கருத்தாகக் கொள்க. மெய்வலம் அங்கப் பிரதக்கணம். (கூஉ)

இத்தவ நெறியி னின்ற லிப்பழி கழியு மென்னாச்
சித்தவன் புடைய வேடத் திருவுருக் கொண்ட கொன்றைக்
கோத்தவ னுரைத்தான் கேட்டுக் கொடிச்சியா யிருந்த வம்மை
மத்தவன் கரித்தோல் போர்த்த மறவனை வினவு கின்றாள்.

(இ - ள்.) இத் தவநெறியில் நின்றால் இப்பழி கழியும் என்னா - இந்தத் தவ ஒழுக்கங்களி னின்றால் இந்தக் கொலைப்பழி நீங்கும்

என்று, சித்தம் அன்பு உடைய வேடத் திருவுருக்கொண்ட கொன்றைக் கொத்தவன் உரைத்தான் - உள்ளத்தில் அன்புடைய வேடத் திருவுருவங் கொண்ட கொன்றைப் பூங்கொத்தினை யணிந்த சோமசுந்தரக் கடவுள் கூறியருளினன்; கேட்டுக் கொடிச்சியாய் இருந்த அம்மை-இதனைக் கேட்டு வேட்டுவிச்சியாய் இருந்த உமையம்மையார், மத்தம் வன் கரித்தோல் போர்த்த மறவனை வினவுகின்றாள் - மத மயக்கத்தையுடைய வலிய யானையின் தோலைப் போர்த்தருளிய வேடனை வினவுகின்றார்.

இத்தவநெறி - மேல் இரு செய்யுளிலும் உண்டி, ஏவல் செய்தி, அருத்தி, செய்தி எனக் கூறியவை. உடைய, கொண்ட என்னும் பெயரெச்சங்களைக் கொத்தவன் என்பதன் விகுதியோடு தனித்தனி கூட்டுக. கொடிச்சி - குறிஞ்சித் தலைமகள்; வேட்டுவனுக்குப் பெண்பால். (௩௩)

ஐயவிக் கோடியோன் செய்த பாவத்துக் களவில் காலம்
வெய்யநா லேழு கோடி நரகிடை வீழ்ந்தா னேனும்
உய்வகை யிலாத பாவி யிவனுக்கேன் னுய்யுந் தேற்றஞ்
செய்வகை யென்று கேட்பச் செங்கண்மால் விடையோன் செப் [பும்.

(இ - ள்.) ஐய - ஐயனே, இக்கொடியோன் - இத்தீயவன், செய்த பாவத்துக்கு-தான் செய்த பாவத்திற்கு, அளவு இல் காலம் - அளவிறந்த காலம் வரையும், வெய்ய நாலேழு கோடி நரகு இடை வீழ்ந்தானேனும் - கொடிய இருபத் தெட்டுக்கோடி நரகின் கண்ணும் வீழ்ந்தானாயினும். உய்வகை இலாத பாவி - பிழைக்கும் வழி இல்லாத பாவியாவான்; இவனுக்கு உய்யும் தேற்றம் செய்வகை என் என்று கேட்ப - இவனுக்கு உய்யும் தெளிவினைச் செய்யும் வகை என்னை என்று கேட்க, செங்கண்மால் விடையோன் செப்பும் - சிவந்த கண்களையுடைய திருமாலாகிய இடபவூர்தியையுடைய பெருமான் கூறியருளுவான்.

கொடியோன் பாவியாவான் இவனுக்குச் செய்வகை என்னென்று கேட்பச் செப்பும் என முடிக்க. உய்யுந் தேற்றம் - பிழைக்கும் துணிவு; கடைத்தேற்றம். (௩௪)

அடுபழி யஞ்சா நீச ராயினு நினைக்கி னச்சம்
படுபழி அஞ்சான் செய்த பாதகத் தோடக்குண் டேங்கும்
விடுவகை* யின்றி வேறு களைகணு மின்றி வீயக்
கடவனைக் காப்ப தன்றோ காப்பென்றான் கருணை மூர்த்தி.

(இ - ள்.) கருணை மூர்த்தி - அருளேயுருவாகிய சோமசுந்தரக் கடவுள், அடுபழி அஞ்சா நீசர் ஆயினும் - கொல்லும் பழிக்கு அஞ்சாத புலையராயினும் (அவரும்), நினைக்கின் அச்சம் படுபழி அஞ்சான் செய்த - நினைத்தால் அச்சமுண்டாகும் கொடும் பழியை அஞ்சாது செய்த, பாதகத் தொடக்குண்டு-மாபாதகத்தாற் கட்டப்பட்டு, எங்கும் விடுவகை இன்றி - எவ்விடத்தும் நீரும்வகையில்லாமல், வேறு

(பா - ம்.) *விடுவ்தை.

களைகணும் இன்றி வேறு பற்றுக் கோடுமில்லாது, வியக்கடவனைக் காப்பது அன்றோ காப்பு என்றான் - அழியக் கடவோனைக் காப்பதல்லவா பாதுகாப்பாகும் என்று கூறியருளினன்.

நீசர் நினைக்கினும் அவருக்கும் அச்ச முண்டாகும் பழி. அஞ்சான்: முற்றெச்சம். காப்பன்றோ கருணையாற் காக்கும் காப்பென்று சொல்லப் படுவ தென்க. (கூ௫)

நெய்தற்போ தனைய வுண்க ணேரிழை நீயா தொன்று
செய்தற்குஞ் செய்யா மைக்கும் வேறோன்று செயற்கு மாற்றல்
மெய்தக்க கருணை வள்ளல் வேண்டினெவ் வினைஞ ரேனும்
உய்தக்கோ ராதல் செய்கை யுன்னருள் விளையாட் டன்றோ.

(இ - ள்.) நெய்தல்போது அனைய உண்கண் நேரிழை - கருங் குவளை மலரை ஒத்த மையுண்ட கண்களையுடைய உமையம்மையார், நீ யாதொன்று செய்தற்கும் செய்யாமைக்கும் வேறு ஒன்று செயற்கும் மெய் ஆற்றல் தக்க கருணை வள்ளல் - நீ எதுவும் ஒன்றனைச் செய்தற்கும் செய்யாமைக்கும் மற்றொன்று செய்தற்கும் உண்மை வலியுடைய அருள் வள்ள லாகுவை ; எவ்வினைஞரேனும் வேண்டின் உய்தக்கோர் ஆதல் செய்கை - எத்தகைய கொடுந்தொழிலினை யுடையரேனும் விரும்பினால் அவர் உய்திபெறுவதற்குரியராகச் செய்தல், உன் அருள் விளையாட்டு அன்றோ - நினது திருவருள் விளையாட்டல்லவா ?

நேரிழை : அன்மொழித்தொகை. செய்தல், செய்யாமை, வேறொன்று செய்தல் என்பன முறையே கர்த்திருத்துவம் அகர்த்திருத்து வம் அன்னியதாகர்த்திருத்துவம் என்று கூறப்படும். மெய் ஆற்றல் தக்க கருணை வள்ளல் நீ யென்க. உய்தக்கோராதல் செய்கை - உய்யத் தக்கோராகச் செய்வது. (௬கூ)

என்றக மகிழ்ச்சி பொங்க வியம்பின ளியம்ப லோடுங்
குன்றக நாட்ட வேடக் குழகனு மறைந்து வெள்ளி
மன்றக நிறைந்தான் மேக மறைந்திட மறைந்து செல்லும்
மின்றக விடாது பின்போம் விளங்கிழை மடந்தை யோடும்.

(இ - ள்.) என்று அகம் மகிழ்ச்சி பொங்க இயம்பினள் - என்று மனக் களிப்பு மீக்கூரக் கூறியருளினர், இயம்ப லோடும் - அங்ஙனம் கூறிய வளவில், குன்றகம் நாட்ட வேடக் குழகனும் - மலை நாட்டை யுடைய வேடனாகிய சோமசுந்தரக் கடவுளும், மறைந்து - திருவுருக் கரந்து, மேகம் மறைந்திட மறைந்து செல்லும் மின்தக - முகில் மறைய உடன் மறைந்து செல்லும் மின்போல, விடாது பின் போம் விளங்கு இழை மடந்தையோடும் - விடாது பின் செல்லும் விளங்கிய அணிகளை யுடைய உமைப்பிராட்டியோடும், வெள்ளி மன்று அகம் நிறைந்தான் - வெள்ளியம்பலத்தில் நிறைந்தருளினன்.

நேரிழை, கருணை வள்ளல் நீ செய்கை உன் அருள் விளையாட் டன்றோ என்று இயம்பினள் என்க. குன்றக நாடு மலையின் கண்ணுள்ள நாடு. நாட்ட: குறிப்புப் பெயரெச்சம். குழகன் - சுந்தரன். கரிய வேட்டுருக்கொண்டு வந்தமையின் மேகத்தை உவமை கூறினர், மின்தக.

மின்னலை யொக்க. இறைவனுடன் இறைவி திருவுருக் கரந்தமைக்குக் கூறிய இவ்வுவமை மிகப் பாராட்டற்குரியது. (௩எ)

ஆததா யியுங்கண்* டாளு வற்புத மடைந்து கூடல்
நாதனுர் நவின்ற வாற்ரு னன்னெறி விரதச் செய்கை
மாதவ வொழுக்கந் தாங்கி வருமுறை மதிய மூன்றிற்
பாதகங் கழிந்து தெய்வப் பார்ப்பன வடிவ மானுன்.

(இ - ள்.) ஆததாயியும் கண்டு ஆளுத அற்புதம் அடைந்து - மா பாதகனும் அதனைப் பார்த்து நீங்காத வியப்பினை எய்தி, கூடல் நாதனுர் நவின்ற வாற்ருல் - மதுரை நாயகன் கூறியருளிய நெறியே, நல் நெறி விரதச் செய்கை மாதவ ஒழுக்கம் தாங்கி வருமுறை - நல்வழிக் கேதுவாகிய விரதச் செயலையும் பெரிய தவவொழுக்கத்தை யும் மேற்கொண்டு செய்து வருமுறைமையால், மதியம் மூன்றில் பாதகம் கழிந்து தெய்வப் பார்ப்பன வடிவமானுன் - மூன்று மாதங் களிலே பாதகமுற்றுந் தொலைந்து தெய்வத்தன்மை பொருந்திய பார்ப்பன வடிவமாயினுன்.

ஆததாயி - கொடியோன்; நஞ்சிடுவார், தீக்கொளுவுவார் கருவி யாற் கொல்வார் முதலாயினேரை வடநூலார் ஆததாயிகள் என்ப; ''கொலையிற் கொடியாரை வேந் தொறுத்தல்'' என்னுங் குறளுரையிற் பரிமேலழகர் எழுதியிருப்பது நோக்குக. ஆதனுங்கது கண்டு என்பது பாடமாயின் அறிவில்லான் அதனைக் கண்டு என்பது பொருளாகும். முன்னுள்ள நிலைமையினும் உயர்ந்த நிலைமை எய்தினு னென்பார் 'தெய்வப் பார்ப்பன வடிவ மானுன்' என்ருர். (௩அ)

சோற்பதங் கடந்த வெந்தை சுந்தர நாதன் ருளிற்
பற்பல வடசோன் மாலை பத்தியிற் ரேடுத்துச் சாத்தி
தற்பர வறிவா னந்தத் தனியுரு வுடைய சோதி
போற்பத மருங்கிற் புக்கான் புண்ணிய மறையோ னம்மா.

(இ - ள்.) புண்ணிய மறையோன் - அங்ஙனம் புண்ணிய வடிவாகிய அந்தணன், சொல் பதம் கடந்த எந்தை சுந்தரநாதன் தாளில் - சொல்லி னெல்லையைக் கடந்த எம் தந்தையாகிய சோமசுந்தரக் கடவுள் திரு வடியில், பற்பல வடசொல் மாலை பத்தியில் தொடுத்துச் சாத்தி - பற்பல வடமொழியா லாகிய பாமாலைகளைப் பத்தியுடன் தொடுத்து அணிந்து, தற்பர அறிவு ஆனந்தம் தனி உருவு உடைய சோதி - உண்மை யறிவானந்த மென்னும் ஒப்பற்ற திருவுருவையுடைய பரஞ்சுடராகிய சோமசுந்தரக் கடவுளின், பொன் பதம் மருங்கில் புக்கான் - அழகிய திருவடியின் கண்ணே கலந்தனன்.

இறைவன் சொற்பதங் கடந்தா னுதலை,

''சொற்பதங் கடந்த தொல்லோன்''

என்று திருவாசகங் கூறுதல் காண்க. வட நாட்டினனுகலின் வடசொன் மாலை தொடுத்துச் சாத்தின னென்க. பத்தி-அன்பு, வரிசை. தற்பரம்- உண்மை யென்னும் பொருட்டு. அம்மா: வியப்பிடைச் சொல். (௩௯)

(பா - ம்.) *ஆதனுங்கது கண்டு.

அன்னையைப் புணர்ந்து தாதை குரவனு மந்த ணாளன்
றன்னையுங் கொன்ற பாவந் தணித்துவீ டளித்த தென்றால்
பின்னைநீ ரிழிநோய் குட்டம் பெருவயி றீளை வெப்பென்
றின்னநோய் தீர்க்குந் தீர்த்த மென்பதோ விதற்கு மேன்மை.

(இ - ள்.) அன்னையைப் புணர்ந்து - தாயைப் புணர்ந்து, தாதை குரவன் ஆம் அந்தணாளன் தன்னையும் கொன்ற பாவம் - தந்தையும் குரவனுமாகிய அந்தணனையும் கொன்ற மாபாதகத்தையும், தணித்து வீடு அளித்தது என்றால் - போக்கி வீடுபேற்றை அளித்ததாயின், பின்னை - பின், நீர் இழி நோய் குட்டம் பெருவயிறு ஈளை வெப்பு என்று இன்ன நோய் - நீரிழிவும் குட்டமும் பெருவயிறும் ஈளையும் வெப்புமாகிய இந்த நோய்களை, தீர்க்கும் தீர்த்தம் என்பதோ இதற்கு மேன்மை - போக்குகின்ற தீர்த்தமென்று சொல்லுவதோ இதற்கு மேன்மை யாகும்.

தந்தையும் குரவனும் அந்தணனுமாகியவனைக் கொன்றான் என்றார் :

"பாதக மென்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டும்—சேதிப்ப"

என்னுந் திருக்களிற்றுப்படியாரில் தாதை யென்றும் வேதியனென்றும் பிரித்தோதினமையுங் காண்க. அவன் புரிந்த தவச் செயல்களுள் கோயி லின் புறத்தொட்டி நீரில் முழுகியதைச் சிறந்தெடுத்து, இஃது அளித்த தென்றால் என்பதோ இதற்கு மேன்மை யென்றார். (சூ0)

அழிந்தவே தியன்மா பாதகந் தீர்த்த
　　தறிந்துவேந் தமைச்சரூ ருள்ளார்
ஒழிந்தபா ருள்ளார் வானுளார் வியப்ப
　　முற்றுநல் லுரையுணர் வெல்லாங்
கழிந்தபே ரருளிக் கயவன்மேல் வைத்த
　　காரணம் யாதெனக் கண்ணீர்
வழிந்துநான் மாடக் கூடனா யகனை
　　வழுத்தினர் மகிழ்ச்சியுட் டிளைத்தார்.

(இ - ள்.) வேந்து அமைச்சர் ஊர் உள்ளார் ஒழிந்த பார் உள்ளார் வான் உள்ளார் - மன்னனும் மந்திரிகளும் ஊரிலுள்ளவர்களும் ஏனைய நாட்டிலுள்ளவர்களும் தேவர்களுமாகிய அனைவரும், அழிந்த வேதியன் மாபாதகம் தீர்த்தது அறிந்து - நிலையழிந்த வேதியனது மாபாதகத்தைப் போக்கியதை அறிந்து, வியப்பம் உற்று - வியப்பெய்தி, நல் உரை உணர்வு எல்லாம் கழிந்த பேர் அருள் - நல்ல உரையையும் உணர்வை யுங் கடந்த பெரிய திருவருளை, இக்கயவன்மேல் வைத்த காரணம் யாது என - இந்தக் கீழ்மகன்மீது வைத்ததற்குக் காரணம் யாதோ என்று, கண் நீர் வழிந்து - கண்களினின்றும் ஆனந்தவருவி பொழிய, நான்மாடக் கூடல் நாயகனை வழுத்தினர் மகிழ்ச்சியுள் திளைத்தார் - மதுரை நாயக னாகிய சோமசுந்தரக் கடவுளைத் துதித்து உவகைக் கடலில் அழுந்தி னார்கள்.

வியப்பு என்பது வியப்பம் என்றாயது. திருவருளையுன்னிக் கண்ணீர் வழியத் திளைத்தார்களென்க. வழிந்து - வழிய : எச்சத் திரிபு. வழுத்தி னார்: முற்றெச்சம். (சுக)

ஆகச் செய்யுள் - கஉளசு.

இருபத்தேழாவது

அங்கம் வெட்டின படலம்

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

வேதகந் தரத்து* முக்கண் வேதியன் மறையோன் செய்த
பாதகந் தவிர்த்த வாறு பகர்ந்தனம் விஞ்சை யீந்த
போதகன் மனைக்குத் தீங்கு† புந்திமுன் னாகச் செய்த
சாதகன் றனைப்போ ராற்றித் தண்டித்த தண்டஞ் சொல்வாம்.

(இ - ள்.) வேத கந்தரத்து முக்கண் வேதியன் - வேதம் பாடுந் திருமிடற்றினையுடைய மூன்று கண்களையுடைய மறையோனாகிய சோம சுந்தரக்கடவுள், மறையோன் செய்த பாதகம் தவிர்த்தவாறு பகர்ந் தனம் - பார்ப்பனன் புரிந்த மாபாதகத்தினை நீக்கியருளிய திருவிளை யாடலைக் கூறினேம்; விஞ்சை ஈந்த போதகன் மனைக்கு - (இனி) வாள் வித்தை கற்பித்த ஆசிரியன் மனைவிக்கு, புந்தி முன்னாகத் தீங்கு செய்த சாதகன்தனை - அறிவு சான்றாகத் தீங்கு புரிந்த மாணவனை, போர் ஆற்றித் தண்டித்த தண்டம் சொல்வாம் - போர் புரிந்து தண்டித்த திருவிளையாடலைக் கூறுவோம்.

வேதகந் தரித்த என்னும் பாடத்திற்கு இரத குளிகை போன்று வேதித்தலைக் கொண்ட என்றும், பிரமன் தலையைத் தாங்கிய என்றும் பொருள் கூறலாகும். போதகன் - ஆசிரியன். சாதகன் - மாணாக்கன், புந்தி முன்னாக என்பது மனப்பூர்வமாக என்று வடமொழியிற் கூறப் படும். (க)

கூர்த்தவெண் கோட்டி யானைக் குலோத்துங்க வழுதி ஞாலங்
காத்தர சளிக்கு நாளிற் கடிமதி லுடுத்த கூடல்
மாத்தனி நகருள் வந்து மறுபுலத் தவனா யாக்கை
மூத்தவ னொருவன் வைகி முனையவாள் பயிற்றி வாழ்வான்.

(இ - ள்.) கூர்த்த வெண்கோட்டு யானைக் குலோத்துங்க வழுதி- கூரிய வெள்ளிய கொம்புகளையுடைய யானைப் படையினையுடைய குலோத்துங்க பாண்டியன், ஞாலம் காத்து அரசு அளிக்கு நாளில் - புவியினைப் பாதுகாத்து ஆட்சி புரியுங் காலத்தில், மறுபுலத்தவனாய் யாக்கை மூத்தவன் ஒருவன் - அயல் நாட்டினனாய் மூப்பினால் உடம்பு முதிர்ந்த விஞ்சையனொருவன், கடிமதில் உடுத்த கூடல் மாத்தனி நகருள் வந்து வைகி - காவலையுடைய மதில் சூழ்ந்த கூடல் என்னும்

(பா - ம்.) *வேதகந் தரித்த. †போ்தகன் றனக்கு.

பெரிய ஒப்பற்ற நகரின்கண் வந்து தங்கி, முனையவாள் பயிற்றி வாழ்வான் - கூர்மையுடைய வாட்போர் விஞ்சையினைக் கற்பித்து வாழா நின்றான்.

கூர்த்த, முனைய என்பன குறிப்புப் பெயரெச்சம். (உ)

வாள்வினைக் குரவ னன்னான் வல்லமண் விடுத்த வேழந்
தோள்வினை வலியா லட்ட சுந்தர விடங்கன் றன்னை
ஆள்வினை யன்புந் தானும் வைகலு மடைந்து தாழ்ந்து
மூள்வினை வலியை வெல்லு மூதறி வுடைய னம்மா.

(இ - ள்.) வாள்வினைக் குரவன் அன்னான்-வாட்டொழில் பயிற்றுங் குரவனாகிய அம் முதியோன், வல் அமண் விடுத்த வேழம் - வலிய சமணர்கள் ஏவிய யானையை, தோள்வினை வலியால் அட்ட சுந்தர விடங்கன் தன்னை - தமது திருத்தோளின் போர்த்தொழில் வன்மையாற் கொன்றருளிய அழகனாகிய சோமசுந்தரக் கடவுளை, வைகலும் - நாள் தோறும், ஆள்வினை அன்பும் தானும் அடைந்து தாழ்ந்து - இடையறாத அன்பும் தானுமாகச் சென்று வணங்குதலால், மூள்வினை வலியை வெல்லும் மூதறிவு உடையன் - மூண்டெழுகின்ற வினையின் வலியை வெல்லும் பேரறிவுடையனாகும்.

அமண் : குழூஉப் பெயர். ஆள்வினை - முயற்சி; இடையறாமையை உணர்த்திற்று ; அடிமைத் தொழில். அம்மா : இடைச் சொல். (ங)

கைவினை மறவாள் விஞ்சைக் காவல னவனைத் தாழ்ந்து
தெவ்வினை வெல்வான் கற்குஞ் சிங்கவே றனையார் தம்முள்
உய்வினை யுணராப் பாவி சித்தனென் றொருவ னுள்ளான்
அவ்வினை நிரம்பக் கற்றா னாகலூழ் வலியா லன்னான்.

(இ - ள்.) மறம் வாள் கைவினை விஞ்சைக் காவலன் அவனைத் தாழ்ந்து - கொலைத் தொழிலையுடைய வாளினைக் கையிற்கொண்டு பொரும் வித்தையில் வல்லனாகிய அம்முதியோனை வணங்கி, தெவ்வினை வெல்வான் கற்கும் சிங்க ஏறு அனையார் தம்முள்-பகையை வெல்லுமாறு வாள் வித்தை பயிலும் சிங்கவேற்றினை ஒத்த மாணவர் பலருள், உய்வினை உணராப் பாவி சித்தன் என்று ஒருவன் உள்ளான் - உய்யு நெறியை அறியாத பாவியாகிய சித்தனென்று ஒருவனுளன், அன்னான் ஆகலூழ் வலியால் அவ்வினை நிரம்பக் கற்றான் - அவன் ஆகூழின் வலியினால் அத் தொழிலைக் குறைவின்றிக் கற்றான்.

தெவ் - பகை; பகைவரை யுணர்த்திற்று. வெல்வான் : வினையெச்சம். உய்வு-தீ வினையினின்றும் பிழைத்தல். ஆகலூழ் - அவ் விஞ்சை பெருகுதற்குக் காரணமாகிய ஊழ்; ''ஆகலூ முற்றக் கடை'' என்பது திருக்குறள். (ச)

மானவாள் விஞ்சை யாலே தனைநன்கு மதிக்கத் தக்க
தானதோர் செருக்கி னாற்றன் னாசிரி யற்கு மாறாய்த்
தானுமோர் விஞ்சைக் கூடஞ் சமைத்துவாள் பலருங் கற்க
ஊனுலாம் படைவல் லானி வாதிய மிதப்பக் கோள்வான்.

(இ - ள்.) மானவாள் விஞ்சையாலே - பெருமை பொருந்திய வாள் வித்தையாலே, தனை நன்கு மதிக்கத்தக்கது ஆனது ஓர் செருக்கினால் - தன்னைப் பலரும் நன்கு மதிக்கத்தக்க திறமைபெற்றிருக்கும் ஒரு செருக்கினால், தன் ஆசிரியற்கு மாறாய் - தன்'குரவனுக்கு மாறாய், தானும் ஓர் விஞ்சைக் கூடம் சமைத்து-தானும் ஒரு வித்தைக்கூட மமைத்து, பலரும் வாள் கற்க-பலரும் வந்து வாள்விஞ்சை பயிலுமாறு (பயிற்றலால்). ஊன் உலாம் படை வல்லானில் ஊதியம் மிதப்பக்கொள்வான் - புலால் தங்கிய வாள் வல்லானாகிய ஆசிரியனிலும் ஊதியம் நிரம்பப் பெறுவானாயினன்.

வீரரது மானத்தை வாள்மே லேற்றிக் கூறிற்றுமாம். மதிக்கத்தக்க தன்மை உண்டானதா லாகிய செருக் கென்க. விஞ்சைக் கூடத்தைச் சிலம்பக்கூடம் என்று வழங்குவர். உலாம் - உலாவும்; பொருந்தும். மிதப்ப - மிக. (ரு)

ஒருத்தனே யிருவர் வாளின் விருத்தியு மொருங்கு கொள்ளுங்
கருத்தனாய் விருத்த னூரிற் கழிவது கருதி யன்னான்
வருத்துவா ளிளையர் தன்பால் வரமனந் திரித்து நாளும்
விருத்தமே செய்வான் றாயை விரும்பினோற் கிளையோ னன்னான்.

(இ - ள்.) ஒருத்தனே இருவர் வாளின் விருத்தியும் ஒருங்கு கொள்ளும் கருத்தனாய் - தான் ஒருவனே இருவரின் வாட்போர் பயிற்றலால் வரும் ஊதியத்தையும் ஒருசேர அடையும் கருத்தினை யுடையவனாய், விருத்தன் ஊரில் கழிவது கருதி - அம் முதியோன் அவ் ஊரினின்றும் நீங்குதல் கருதி, அன்னான் வருத்து வாள் இளையர் தன்பால் வர - அவனுடைய வருத்துகின்ற வாட்போர் பயிலும் மாணவர்கள் தன்னிடம் பயில வருமாறு, மனம் திரித்து நாளும் விருத்தமே செய்வான்- அவர்கள் மனத்தை வேறு படுத்தி நாள்தோறும் பகைமையே செய்து வருவான்; தாயை விரும்பினோற்கு இளையோன் அன்னான் - (அன்றியும் அவன்) தாயை விரும்பிக் கூடிய மாபாதகனுக்கு இளையான் போல்வானாய்.

வாளின் விருத்தி - வாள் பயிற்றுதலாற் பெறும் நிவேதனம். இளையர் - இளம் பருவ முடையர்; வீரர் என்றுமாம். அன்னான் என்பது எச்சமாய் வருஞ் செய்யுளிற் கேட்டுக் கேட்டகல்வான் என்பது கொண்டு முடியும். (சு)

தோடத்தோடப் பொறுக்குந் திண்மைத் தொன்னில மலையா னில்லா
இடத்தவன் றேவி பாற்போ யிடனுண்டே யிடனுண் டேயென்
றடுத்தடுத் தஞ்சா தேன்றுங் கேட்டுக்கேட் டகல்வா னாக
நடைத்தொழிற் பாவை யன்ன நங்கைவா ளாவி ருந்தாள்.*

(இ - ள்.) தொடத் தொடப் பொறுக்கும் திண்மைத்தொல் நிலம் அனையான் - தோண்டத் தோண்டப் பொறுக்குந் திண்ணிய பழைமையாகிய நிலத்தினைப் போலும் பொறுமையுடைய அவ்வாசிரியன், இல்லா இடத்து அவன் தேவிபால் போய் - இல்லாத பொழுது அவன் மனைவியிடத்துச் சென்று, இடன் உண்டே இடன் உண்டே என்று -

*(பா - ம்.) வாளாதிருந்தாள்.

சமயமுண்டோ சமயமுண்டோ என்று, என்றும் அடுத்து அடுத்து அஞ்சாது கேட்டுக் கேட்டு அகல்வானுக - நாள்தோறும் அடுத்தடுத்துச் சிறிதும் அஞ்சாது கேட்டுக் கேட்டு நீங்க, நடைத்தொழில் பாவை அன்ன நங்கை வாளா இருந்தாள் - நடக்குந் தொழிலையுடைய பாவை போன்ற அம்மாதராள் ஒன்றும் பேசாது சும்மா இருந்தாள்.

அடுக்குகள் பன்மைப் பொருளில் வந்தன. தோண்டுந் தோறும் பொறுக்கும் நிலம் போலும் பொறுமை யென்னுங் கருத்தினை,

''அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை''

என்னுந் திருக்குறளிற் காண்க. இடன் - சமயம். ஏகாரம் வினு. நடைத் தொழிற் பாவையன்னுள் என்றது இல் பொருளுவமம்.　(எ)

பின்னுெரு பகற்போய்ச் செங்கை பிடித்தனன் வலிப்பத் தள்ளி
வன்னிலைக் கதவ நூக்கித் தாழக்கோல் வலித்து மாண்ட
தன்னிலைக் காப்புச் செய்தா டனிமனக் காவல் பூண்டாள்
அந்நிலை பிழைத்த தீயோ னனங்கத்தீ வெதுப்பப் போனுன்.

(இ - ள்.) பின் ஒரு பகல்போய் செங்கை பிடித்தனன் வலிப்ப-பின்பு ஒரு நாட் சென்று அவள் சிவந்த கையைப் பிடித்து இழுக்க, தனிமனக் காவல் பூண்டாள் - ஒப்பில்லாத மனமாகிய காவலையுடைய அந்நங்கை, தள்ளிவல் நிலைக்கதவம் நூக்கித் தாழக்கோல் வலித்து-அவனைப் புறம்பே தள்ளி வலிய நிலையையுடைய கதவினைச் சாத்தித் தாழிட்டு, மாண்ட தன் நிலை காப்புச் செய்தாள் - மாட்சிமைப்பட்ட தனது கற்பு நிலையைக் காத்துக் கொண்டனள்; அந்நிலை பிழைத்த தீயோன் அனங்கத்தீ வெதுப்பப் போனுன் - அப்பொழுது தன் எண்ணம் தப்பிய அக்கொடியோன் காமத் தீயானது சுடச்சென்றுன்.

பிடித்தனன் வலிப்ப - வலிதிற் பற்றி யிழுக்க. தாழக்கோல்: தாழாகிய கோல்; அக்குச்சாரியை யென்று தொல்காப்பியரும், அகரம் சாரியை யென்று நன்னூலாரும் கூறுவர்;

''தாழென் கிளவி கோலொடு புணரின்
அக்கிடை வருத லுரித்து மாகும்''

என்பது தொல்காப்பியம். மனக்காவல் - மனத்தைக் கற்பு நெறியில் நிறுத்துங் காவல்; இது நிறை யெனப்படும்;

''சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை''

என்பது திருக்குறள். பிழைத்த - தவறு செய்த என்றுமாம்

அறங்கடை நின்ற ருள்ளு மாற்றவுங் கடைய ஞகிப்
புறங்கடை நின்றான் செய்த புலைமைதன் பதிக்குந் தேற்றாள்
மறந்தவிர் கற்பி ஞடன் மனம்பொதிந் துயிர்க டோறும்
நிறைந்தநான் மாடக் கூட னிமலனை நினைந்து நொந்தாள்.

(இ - ள்.) அறங்கடை நின்ற ருள்ளும் ஆற்றவும் கடையனுகி - பாவநெறியில் நின்றாரெல்லா ருள்ளும் மிகவுங் கடையனுகி, புறங்கடை நின்றான் செய்த புலைமை - மனையின் வாயிற் புறத்தே வந்துநின்ற அக் கொடியோன் செய்த புலைத்தன்மையை, தன் பதிக்கும் தேற்றாள் - தன் நாயகனுக்குந் தெரிவியாது, மறம் தவிர் கற்பினாள் - மறம் நீங்கிய கற்பினையுடையாள், மனம் பொதிந்து - தன் மனத்தின் கண்ணே மூடி வைத்து, உயிர்கள் தோறும் நிறைந்த நான்மாடக் கூடல் நிமலனை நினைந்து நொந்தாள் - உயிர்கள் தோறும் நிறைந்துள்ள கூடலம்பதியில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுளை நினைந்து வருந்தினாள்.

அறங்கடை - பாவம்;

''அறங்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்''

என்னும் வாயுறைவாழ்த்து இங்கு நோக்கற்பாலது. புலைமை - கீழ்மை. மறந்தவிர் கற்பினாள் - அறக்கற்புடையாள். அறக் கற்பினளாகலின் பதிக்கும் தெரிவியாது கூடனிமலனை நினைந்து நொந்தாள் என்க. (கூ)

தாதக நிறைந்த கொன்றைச் சடையவன் புறம்பு செய்த
பாதக மறுக்குங் கூடற் பகவனெவ் வுயிர்க்குந் தானே
போதக ஞகித் தேற்றும் புண்ணியன் புலைஞன் செய்த
தீதக முணர்ந்து தண்டஞ் செய்வதற் குள்ளங் கொண்டான்.

(இ - ள்.) அகம் தாது நிறைந்த கொன்றைச் சடையவன் - உள்ளே மகரந்த நிறைந்த கொன்றை மலர் மாலையை யணிந்த சடையையுடையவனும், புறம்பு செய்த பாதகம் அறுக்கும் கூடல் பகவன் - வேற்று நாட்டிற் செய்த மாபாதகத்தையும் போக்கும் மதுரைப் பிரானும், எவ்வுயிர்க்கும் தானே போதகன் ஆகித் தேற்றும் புண்ணியன் - எவ்வகை உயிர்களுக்குந் தானே உணர்த்துவோனுகி அறிவிக்கும் அறவடிவினனும் ஆகிய சோம சுந்தரக் கடவுள், புலைஞன் செய்த தீது அகம் உணர்ந்து தண்டம் செய் வதற்கு உள்ளம் கொண்டான் - நீசனுகிய சித்தன் செய்த தீங்கினை மனத்தி னுணர்ந்து அவனைத் தண்டிப்பதற்குத் திருவுள்ளங் கொண் டருளினான்.

புறம்புசெய்த பாதக மறுக்கும் என்றதன் கருத்து பிற பதிகளிற் போக்கலாகாத பாவத்தையும் போக்குமென்பதாம். பகவன் - இறைமைக் குணங்கள் ஆறுடையான். போதகனுகி - அறிவினை விளக்குவோனுகி; பக்குவ மெய்திய உயிர்களுக்கெல்லாம் ஆசானுகி மெய்ப்பொருளைத் தெளிவிக்கும் என்றுமாம். (கo)

கோளுடைக் குரவ னேபோற் சித்தனைக் குறுகிச் சித்தா
காளையா நீயுஞ் சாலக் கழியமூப் படைந்த யாமும்
வாளம ராடி நந்தம் வலிகளு மளந்து காண்டும்
நாளைவா வருது நாமு நகர்ப்புறத் தொருசா ரென்றான்.

(இ - ள்.) கோள் உடைக் குரவனே போல் சித்தனைக் குறுகி - வலியமைந்த அவ் வாளாசிரியனைப்போலத் திருவுருக்கொண்டு சித்தனை அடைந்து, சித்தா - சித்தனே, காளை ஆம் நீயும் - காளைப் பருவத்தினை யுடைய நீயும், சாலக் கழிய மூப்பு அடைந்த யாமும் - மிக்க மூப்பினை யுற்ற யாமும், வாள் அமர் ஆடி - வாட்போர் புரிந்து, நம்தம் வலிகளும் அளந்து காண்டும்-நம் ஆற்றல்களையும் வரைசெய்து காண்போம், நகர்ப் புறத்து ஒருசார் நாளைவா நாமும் வருதும் என்றான் - நகரின் புறத்தே ஒருபக்கத்தில் நாளை நீ வருவாயாக நாமும் வருவோம் என்று கூறி யருளினன்.

கோள்-வலிமை. சாலக்கழிய: ஒரு பொருட் பன்மொழி; அளவின்றி மூத்த என்றபடி. 'காளையா நீயும் சாலக்கழிய மூப்படைந்த யாமும்' என்றது போரின் கண் அவனுக்கு ஊக்கத்தையும் மானத்தையும் எழுப்ப வேண்டி யென்க. குமரன் வலியையும் விருத்தன் வலியையும் காண்போ மென்றான். காண்டும், வருதும் என்பன தன்மைப் பன்மை யெதிர்கால முற்றுக்கள். (கக)

நாதனுங் குரவன் கூற நன்றென வுவந்து நாலாம்
பாதக னதற்கு நேர்ந்தான் படைக்கலக் குரவன் மீண்டு
பேர்தரு மளவில் வையம் புதையிருள் வெள்ளத் தாழ
ஆதவன் வைய முந்நீர் வெள்ளத்து ளாழ்ந்த தம்மா.

(இ - ள்.) நாதன் ஆம் குரவன் கூற - இறைவனாகிய வாளாசிரியன் கூற, நாலாம் பாதகன்-நாலாவது பாதகமாகிய காமத்தை மேற்கொண்ட சித்தன், நன்று என உவந்து அதற்கு நேர்ந்தான் - நல்லது என்று மகிழ்ந்து அதனுக்கு உடன் பட்டான்; படைக்கலக் குரவன் மீண்டு போதரும் அளவில் - வாளாசிரியன் மீண்டு போகும்போது, வையம் புதை இருள் வெள்ளத்து ஆழ - புவியானது நிறைந்த இருள் வெள்ளத் தில் முழுகும்படி, ஆதவன் வையம் - சூரியன் தேரானது, முந்நீர் வெள் ளத்துள் ஆழ்ந்தது - கடல்வெள்ளத்தில் முழுகியது.

ஐம்பெரும் பாவங்களை யெண்ணுமிடத்துக் காமம் நான்காம் எண்ணு முறைக்கண் நிறுத்தப்படுதலின் 'நாலாம் பாதகன் என்றார். வையம் - புவி, தேர். அம்மா : அசை. (கஉ)

ஆசினன் குரவற் கின்னா வாற்றினேன் பாவம் போல
மாசிரு டிணிந்த* கங்குல் வலிகெட வடிவாள் விஞ்சைத்
தேசிக னுருவ னன்னான் றிணியுடல் சிதைப்பத் தீட்டுங்
காய்சின வாள்போற் கீழைக் கல்லிடை முளைத்தான் வெய்யோன்.

(பா - ம்.) * மாசிரு டணிந்த.

(இ - ள்.) ஆசு இல் நன்குரவற்கு இன்னு ஆற்றினேன் பாவம் போல - குற்றமில்லாத நல்ல குரவனுக்குத் துன்பஞ் செய்த சித்தனது பாவச் செறிவுபோல, மாசு இருள் திணிந்த கங்குல் வலிகெட - கரிய இருள் நிறைந்த இரவின் வன்மை கெடுமாறு, வடிவாள் விஞ்சைத் தேசிகன் ஒருவன் - கூரிய வாள்வித்தை கற்பிக்கும் குரவனாகிய ஒப்பற்ற இறைவன், அன்னான் திணி உடல் சிதைப்பத் தீட்டும் காய்சின வாள்போல் - அச்சித்தனது வலிய உடலைச் சேதிப்பதற்குத் தீட்டுகின்ற காயும் சினத்தினையுடைய வாட்படைபோல, வெய்யோன் கீழைக்கடலிடை முளைத்தான் - ஆதித்தன் கிழக்கு மலையிலே தோன்றினான்.

இருள் நிறைந்தது; பின் அவ்விருளின் வலிகெட வெய்யோன் முளைத்தான் என்றுரைத்துக் கொள்க. தேசிகன் வடிவுகொண்டு வந்த ஒப்பற்றவன். (கங)

நன்றியைக் கோன்று தின்றோ னாயக னாணைக் கஞ்சும்
வன்றிற லரிமா னூர்தித் தெய்வதம் வழிபட் டேத்தி
வென்றிவாள் பரவிக் கச்சு வீக்கிவாள் பலகை யேந்திச்
சென்றுவா ளுழவன் சொன்ன செருக்களங் குறுகி னானே.

(இ - ள்.) நன்றியைக் கொன்று தின்றோன் - குரவன் செய்த உதவியை முற்றுங் கெடுத்தவனாகிய சித்தன், நாயகன் ஆணைக்கு அஞ்சும் - சிவபெருமான் ஆணைக்கு அஞ்சும், வன்திறல் அரிமான் ஊர்தித் தெய்வதம் வழிபட்டு ஏத்தி - மிக்க வலியினையுடைய சிங்கவூர்தியையுடைய துர்க்கையை வணங்கித் துதித்து, வென்றி வாள் பரவி - வெற்றி பொருந்திய வாட்படையைத் துதித்து, கச்சு வீக்கி வாள் பலகை ஏந்திச் சென்று - கச்சினைக் கட்டி வாளையும் கேடகத்தையுங் கையிலேந்திச் சென்று, வாள் உழவன் சொன்ன செருக்களம் குறுகினான் - வாளாசிரியன் சொன்ன போர்க்களத்தை அடைந்தான்.

ஆசிரியன் செய்த நன்றியை மறந்து அவனுக்குப் பெருந்தீங்கியற்றலானான் ஆகலின் 'நன்றியைக் கொன்று தின்றோன்' என்றார். நன்றி கோறல் உய்தியில்லாத பாவமென்பது,

''எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு''

என்னுந் திருக்குறளாற் பெறப்படும். கொற்றந்தரும் தெய்வமாயினும் இறைவனாணைக்கஞ்சு மதனை வழிபட்டு இறைவனை வெல்லுமா றெங்ஙனம் என்பார் நாயகனாணைக் கஞ்சும்.........தெய்வதம் வழிபட்டு' என்றார். வன்றிறல்: ஒரு பொருட் பன்மொழி. வாளுழவன் - வாளாகிய ஏரால் உழுதுண்போன்; வாளாசிரியன்; ''வில்லேருழவர்'' என்பது திருக்குறள். (கச)

மதுகைவா ளமர்க்கு நேன்னல் வந்தறை கூவிப் போன
முதுகடும் புலியே றன்ன முடங்குடற் குரவன் றானும்
அதிர்கழல் வீக்கிக் கச்சு மசைத்துவெண் ணீறுஞ் சாத்திக்
கதிர்கோள்வாள் பலகை தாங்கிக் கயவனுக் கெதிரே வந்தான்.

(இ - ள்.) நென்னல் வந்து மதுகைவாள் அமர்க்கு அறை கூவிப் போன - நேற்றுவந்து வலிய் வாட்போருக்கு அறை கூவிச்சென்ற, முது கடும் புலி ஏறு அன்ன - முதிய கடிய புலியேற்றினை ஒத்த, முடங்கு உடல் குரவன் தானும் - வளைந்த உடலையுடைய (இறைவனாகிய) ஆசிரியனும், அதிர் கழல் வீக்கி - ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்து, கச்சும் அமைத்து - கச்சினையுங் கட்டி, வெள் நீறும் சாத்தி-வெள்ளிய திருநீற்றையுந் தரித்து, கதிர் கொள்வாள் பலகை தாங்கிக் கயவனுக்கு எதிரே வந்தான் - ஒளியினைக் கொண்ட வாளையும் கேடகத்தையும் கையிற்றாங்கி அக்கீழ் மகனுக்கு எதிரே வந்தனன்.

அறை கூவல் - போருக் கழைத்தல். உடம்பு முதிர்ந்தோ னாயினும் ஆண்மையிற் குன்றானென்பார் 'முதுகடும் புலியே றன்ன' என்றார். (கரு)

மடங்கலே றொன்றும் பைங்க ணரியோன்று மலைந்தா லென்ன
முடங்கல்வான் றிங்க ளொன்று முக்கணு நான்கு தோளும்
விடங்கலுழ் மிடறுந் தோற்ற வென்றிவாள் விஞ்சை வேந்தும்
அடங்கலன் றானு நேரிட் டாடம ராடல் செய்வார்.

(இ - ள்.) மடங்கல் ஏறு ஒன்றும் பைங்கண் நரி ஒன்றும் மலைந் தால் என்ன - சிங்க ஏறு ஒன்றும் பசிய கண்ணையுடைய நரி ஒன்றும் எதிர்த்துப் போர் புரிந்தாற்போல, முடங்கல் வான் திங்கள் ஒன்றும் முக்கணும் நான்கு தோளும் விடம் கலுழ் மிடறும் தோற்ற - வளைந்த வெள்ளிய பிறையும் மூன்று கண்களும் நான்கு திருத்தோளும் நஞ்சக் கறை விளங்குந் திருமிடறுமாகிய இவைகளைத் தோன்றாது மறைத்த, வென்றி வாள் விஞ்சை வேந்தும் - வெற்றி பொருந்திய வாள் வித்தைக் கிறைவனும், அடங்கலன் தானும் நேரிட்டு ஆடு அமர் ஆடல் செய் வார் - பகைவனாகிய சித்தனும் எதிர்ந்து வெல்லும் போரினைச் செய்யத் தொடங்கினர்.

மலைந்தா லென்ன விஞ்சை வேந்தும் அடங்கலனும் ஆடல் செய்வா ரென்க; மடங்க லேறுபோல் விஞ்சை வேந்தும், நரிபோல் அடங்கலனும் என நிரனிறை. (கசு)

எதிர்ப்பர்பின் பறிவர் நேர்போ யெழுந்துவா னேறு போல
அதிர்ப்பர்கே டகத்துட் டாழ்வுற் றடங்குவர் முளைப்பர் வாளை
விதிர்ப்பர்சா ரிகைபோய் வீசி வெட்டுவர் விலக்கி மீள்வர்
கொதிப்பர் போய் நகைப்ப ராண்மை கூறுவர் மாறி நேர்வர்.

(இ - ள்.) எதிர்ப்பர் - ஒருவரை யொருவர் எதிர்ப்பர்; பின்பறி வர் - பின் வாங்குவர்; நேர்போய் எழுந்துவான் ஏறு போல அதிர்ப்பர் - (மீளவும்) முன்சென்று மேலெழுந்து இடியேறுபோல முழங்குவர்; கேடகத்துள் தாழ்வுற்று அடங்குவர் - கேடகத்தினுள்ளே பதுங்கி மறைவர்; முளைப்பர் - மீண்டு வெளிப்படுவர்; வாளை விதிர்ப்பர் - ஏந்திய வாளை அசைப்பர்; சாரிகைபோய் வீசி வெட்டுவர் - இடசாரி வலசாரியாகச் சென்று வாளை வீசி வெட்டுவர்; விலக்கி மீள்வர் - அவ் வெட்டினை விலக்கித் திரும்புவர்; கொதிப்பர் - வெகுள்வர்; போய்

நகைப்பர் - சென்று சிரிப்பர்; ஆண்மை கூறுவர் - நெடு மொழி கூறுவர், மாறி நேர்வர் - சாரிகை மாறி எதிர்ப்பர்.

பின்பறிதல் - பெயர்தல்; பின் வாங்குதல். வீரரின் தொழிலியற் கையைக் கூறுதலால் இது தொழிற்றன்மையணி. (௧எ)

வெந்நிடு வார்போற் போவர் வட்டித்து விளித்து மீள்வர்
கோன்னிடு வாண்மார் பேற்பர் குறிவழி பிழைத்து நிற்பர்
இந்நிலை நாலைங் கன்ன லெல்லைநின் றாடல் செய்தார்
அந்நிலை யடுபோர் காண்பா ரனைவருங் கேட்க வையன்.

(இ - ள்.) வெந்நிடுவார் போல் போவர் - புறங்காட்டிச் செல்வார் போலப் போவர்; வட்டித்து விளித்து மீள்வர் - சுழன்று போருக் கழைத்துத் திரும்புவர்; கொன் இடு வாள் மார்பு ஏற்பர் - அச்சத்தைத் தருகின்ற வாள் வெட்டினைத் தமது மார்பின்கண் ஏற்பர்; குறிவழி பிழைத்து நிற்பர் - தாம் கொண்ட இலக்கின் நெறி தவற நிற்பர்; இந் நிலை நாலைங் கன்னல் எல்லை நின்று ஆடல் செய்தார் - இங்ஙனம் இருபது நாழிகை வரையும் நின்று போர் புரிந்தனர்; அந்நிலை - அப்பொழுது, அடுபோர் காண்பார் அனைவரும் கேட்க-கொல்லுதலையுடைய போரினைக் காண்போரனைவரும் கேட்குமாறு, ஐயன் - இறைவன்.

வட்டித்தல் - சுழலல். கொன் - அச்சம். பிழைத்து - தப்ப: எச்சத் திரிபு; பகைவர் செய்யுங் குறி தப்ப வென்க. கன்னல் - நாழிகை. முதியோனுகி வந்ததற் கேற்ப இருபது நாழிகைவரை போர் செய்வதாக நடித்தான் என்க. (௧அ)

குரத்தியை நினைத்த நெஞ்சைக் குறித்துரை நாவைத் தொட்ட
கரத்தினைப் பார்த்த கண்ணைக் காத்தனை கோடி யென்றேன்
றுரைத்துரைத் தவற்றுக் கெல்லா முறுமுறை தண்டஞ்செய்து
சிரத்தினைத் தடிந்து வீட்டித் திருவுரு மறைந்து நின்றான்.

(இ - ள்.) குரத்தியை நினைத்த நெஞ்சை - குருபத்தினியை விரும்பிக் கருதிய உள்ளத்தையும், குறித்து உரை நாவை - அவளை நோக்கித் தகாத மொழிகளைக் கூறிய நாவினையும்; தொட்ட கரத்தினை - பிடித்த கையையும்; பார்த்த கண்ணை - விரும்பிப்பார்த்த கண்களையும்: காத்தனை கோடி என்று என்று உரைத்து உரைத்து - காத்துக் கொள்வாய் காத்துக் கொள்வாய் என்று சொல்லிச் சொல்லி; அவற்றுக்கு எல்லாம் உறுமுறை தண்டம் செய்து - அவ்வுறுப்புக்களுக்கெல்லாம் பொருந்துமாற்றால் ஒறுத்தலைச் செய்து; சிரத்தினைத் தடிந்து வீட்டி-பின்பு தலையை யறுத்துக் கீழே தள்ளி, திரு உரு மறைந்து நின்றான்-திருவுருவம் மறைந்தருளினன்.

குரத்தி - குரவனுக்குப் பெண்பால். காத்தனை: முற்றெச்சம். இப்பொழுது முறையே அவற்றைப் பிளத்தலும் அறுத்தலும் தடித லும் சூலுதலும் செய்யாநின்றேம், வல்லையேல் காத்துக் கொள்ளுதி

என்றவாறு. நெஞ்சு-உளத்திற்கு நிலைக்களமாகிய மார்பு. ஒவ்வொன்றையும் ஒறுக்குங்கால் இங்ஙனம் சொல்லிச் சொல்லி யொறுத் தென்க. வீட்டி, வீழ்த்தி யென்பதன் மரூஉ. (கக)

போர்கெழு களங்கண் டாருட் பொருபடைக் கேள்விச் செல்வர்
வார்கெழு கழற்கா லானைக் கண்டிலர் மனையிற் றேடி
ஏர்கெழு கற்பி னாளை யெங்குற்றான் குரவ னென்னக்
கூர்கெழு வடிவேற் கண்ணாள் போயினார் கோயிற் கென்றாள்.

(இ-ள்) போர் கெழு களம் கண்டாருள் - போர் புரிதலைப் பொருந்திய களத்தின்கண் நின்று (அப் போரினைப்) பார்த்தவர்களுள்ளே, பொருபடைக் கேள்விச் செல்வர் - பொருதற்குரிய வாள் வித்தை பயிலும் மாணக்கர்கள், வார் கெழு கழல் காலானைக் கண்டிலர் - நெடிய வீரக்கழ லணிந்த காலையுடைய குரவனைக் காணாது, மனையில் தேடி - இல்லின்கண் தேடிச் சென்று, ஏர் கெழு கற்பினாளை குரவன் எங்குற்றான் என்ன-அழகு பொருந்திய கற்பினையுடைய குரத்தியை நோக்கி ஆசிரியன் எங்குச் சென்றான் என்று வினவ, கூர்கெழு வடிவேல் கண்ணாள்-கூர்மை வாய்ந்த வடித்த வேல்போன்ற கண்களையுடைய அந் நங்கை, கோயிற்குப் போயினார் என்றாள் - திருக்கோயிலுக்குச் சென்றனர் என்று கூறினாள்.

களங்கண்டார் - களப்போரின் வினோதங்கண்டு நின்றவர். கேள்விச் செல்வர் - கேள்வியாகிய செல்வத்தை யுடையவர்; மாணக்கர். வாரிற் கோத்த கழல் என்றுங் கூறுவர். கண்டிலர்: முற்றெச்சம். தேடிச் சென்று, கற்பினாளை நோக்கி என ஏற்ற சொற்கள் வருவித்துரைக்க. (உ0)

என்றவப் போதே கோயிற் கேகினான் மீண்டான் றேடிச்
சென்றவர் சித்தன் றன்னைச் செருக்களத் தடுபோர் செய்து
வென்றனை யேபின் னந்த வெங்களத் தெங்குந் தேடி
நின்றனைக் காணா திங்கு நேர்ந்தனம் யாங்க ளென்றார்.

(இ-ள்.) என்ற அப்போதே கோயிற்கு ஏகினான் மீண்டான் - என்று கூறிய அப்பொழுதே கோயிலுக்குச் சென்ற குரவன் திரும்பி வந்தனன்; தேடிச் சென்றவர் - அவனைத் தேடிச் சென்ற மாணவர்கள், சித்தன் தன்னை செருக்களத்து அடுபோர் செய்து வென்றனையே - (குரவனை நோக்கி) சித்தனைப் போர்க்களத்திலே கொல்லும் போரினைப் புரிந்து வெற்றி பெற்றாயே, பின் யாங்கள் நின்றனை அந்த வெங்களத்து எங்கும் தேடிக் காணாது இங்கு நேர்ந்தனம் என்றார் - பின்பு யாங்கள் உன்னை அப் போர்க்கள முழுதும் தேடிக் காணாமல் இங்கு வந்தோம் என்றார்கள்.

ஏகினான்: வினையாலணையும் பெயர். வென்றனையே பின் எங்ஙன் போந்தாயோ என விரித்துரைத்துக் கொள்க. நின்றனை, தன்: சாரியை. (உக)

விரைசெய்தா ரவன்யா னங்கம் வெட்டினே னல்லே னீங்கள்
உரைசெய்வ தேவன்யா ரேன்போற் சித்தனை யுடன்று மாய்த்து
வரைசெய்தோள் விந்தைக் கீந்தார் மற்றிது சுற்றும் வையைத்
திரைசெய்நீர்க் கூட லெந்தை திருவுளச் செயல்கோ லென்றான்.

(இ - ள்.) விரை செய் தாரவன் - (அதனைக் கேட்டு) மணம் வீசும் மாலையை யணிந்த குரவன், யான் அங்கம் வெட்டினேன் அல்லேன் - யான் சித்தனுடைய உடலை வெட்டினேனல்லேன்; நீங்கள் உரை செய்வது எவன் - நீங்கள் இங்ஙனம் கூறுவது என்னை, என்போல் உடன்று சித்தனை மாய்த்து - என்போல் வந்து போர் புரிந்து சித்தனைக் கொன்று, வரை செய்தோள் விந்தைக்கு ஈந்தார் யார் - மலைபோலும் தம் தோள்களைக் கொற்றவைக்கு அளித்தார் யாவரோ, இது - இந்நிகழ்ச்சி, சுற்றும் திரை செய் நீர் வையை கூடல் எந்தை திருவுளச் செயல் கொல் என்றான் - சூழ்ந்திராநின்ற அலைகளை வீசும் நீரினையுடைய வையை யாற்றினையுடைய நான்மாடக் கூடலில் எழுந்தருளிய எம் தந்தையாகிய சோமசுந்தரக்கடவுளின் திருவுளச் செயலோ என்று கூறினான்.

வெட்டிலேன் என்பது வெட்டினேனல்லேன்என விரிந்து நின்றது: வரை செய், செய்: உவமவுருபு. தோள்களை விந்தை குடியிருக்க அளித்தவர். அவன் தோளைத் தறித்துத் துர்க்கைக்குக் கொடுத்தவர் என்று பிறர் கூறுவர்; அது சிறவாமை காண்க. சுற்றும் வையை - மதுரையைச் சூழ்ந்திருக்கும் வையை. கொல்: ஐயப் பொருட்டு. (உஉ)

மட்டித்த கலவைக் கொங்கை மனைவியுஞ் சித்தன் றன்னைக்
கிட்டிப்பல் காலும் வந்து கேட்டது நெருநல் வாய்வந்
தொட்டித்தன் கையைப் பற்றி யீர்த்தது முள்ளம் வெந்து
தட்டிப்போய்க் கதவந் தாழிட் டிருந்ததுஞ் சாற்றி னாளே.

(இ - ள்.) கலவை மட்டித்த கொங்கை மனைவியும் - கலவை பூசிய கொங்கையையுடைய குரவன் பன்னியும், சித்தன் தன்னைக் கிட்டி பல்காலும் வந்து கேட்டதும் - சித்தனானவன் தன்னை நெருங்கி வந்து பலமுறையும் (இடனுண்டா என்று) கேட்டதும், நெருநல் வாய் ஒட்டி வந்து தன் கையைப் பற்றி ஈர்த்ததும் - நேற்றைப் பொழுது நெருங்கி வந்து தனது கையைப் பிடித்து இழுத்ததும், உள்ளம் வெந்து தட்டிப் போய்க் கதவம் தாழிட்டு இருந்ததும் - மனம் நொந்து அவனை விலக்கிப் போய்க் கதவைத் தாழிட்டுக் கொண்டு இருந்ததும், சாற்றினாள் - கூறினாள்.

தட்டி - அகப்படாது தள்ளி. கதவம், அம்: பகுதிப் பொருள் விகுதி. (உங)

அம்மனை யருளிச் சொன்ன படியெலா மருளிச் செய்து
தெம்முனை யடுவாள் வீரர் சித்தனை மாய்த்தா ரீது
மெய்ம்மையா மென்று கண்ட மைந்தரும் விளம்பக் கேட்டான்
எம்மையா ளுடைய கூட லிறைவிளை யாட்டே யென்றான்.

(இ-ள்.) அம்மனை அருளிச் சொன்னபடி எலாம் - எம் அன்னை யாகிய இவர் கூறியருளினபடி யெல்லாம், தெவ் முனை அடுவாள் வீரர் அருளிச் செய்து சித்தனை மாய்த்தார் - பகைவர் முனையை மாய்க்கும் வாள் வீரர் கூறியருளிச் சித்தனை வதைத்தனர்; ஈது மெய்ம்மை ஆம் என்று கண்ட மைந்தரும் விளம்பக் கேட்டான் - இஃது உண்மையாம் என்று பார்த்த மாணவர்களுஞ் சொல்லக் கேட்டான் (ஆசிரியன்); எம்மை ஆள் உடைய கூடல் இறை விளையாட்டே என்றான் - (இஃது) எம்மை ஆளுதலையுடைய கூடல் நாயகனாகிய சோமசுந்தரக்கடவுளின் திருவிளையாடலே என்றான்.

குரவனாவான் தந்தையாகலின் குரவன் பன்னியைத் தாய் என்றும், மாணுக்கரை மைந்தர் என்றும் கூறினார். அருளிச் சொன்ன என்பதைச் சொல்லி யருளின என்று விகுதி பிரித்துக் கூட்டுக. தெம் முனை - போர் முனையில் என்றுமாம். முன் எந்தை திருவுளச் செயல் கொல் என்று ஐயுற்றவன் இப்பொழுது துணிந்தான் என்பார் விளையாட்டே எனத் தேற்றேகாரங் கொடுத்தார். (உச)

கோடியையநே ரிடையா ளோடுங் கோற்றவா ளிளைஞ ரோடுங்
கடியநான் மாடக் கூடற் கண்ணுத லடிக்கீழ்த் தாழ்ந்து
நேடியனான் முகனுந் தேறா நெறியது சிறிய வேழை
அடியனே னளவிற் றேநின் னருள்விளை யாட லென்றான்.

(இ-ள்.) கொடியை நேர் இடையாளோடும் - கொடியை ஒத்த இடையினையுடைய தன் மனைவியோடும், கொற்றவாள் இளைஞரோடும் - வெற்றி பொருந்திய வாள் விஞ்சை பயிலும் மாணவர்களோடும் (சென்று), கடிய நான்மாடக் கூடல் கண்ணுதல் அடிக்கீழ்த் தாழ்ந்து - காவலையுடைய நான்மாடக் கூடலில் எழுந்தருளியுள்ள நெற்றிக்கண்ணை யுடைய இறைவனது திருவடியின்கீழ் வணங்கி, நெடியன் நான்முகனும் தேறா நெறியது நின் அருள் விளையாடல் - திருமாலும் பிரமனும் தெளி யாத நெறியதாகிய உனது அருள் விளையாட்டு, சிறிய ஏழை அடியனேன் அளவிற்றே என்றான் - ஒன்றுக்கும் பற்றாத அறிவிலியாகிய அடியேன் அளவினதோ என்று துதித்தான்.

சென்று என ஒரு சொல் வருவிக்க. கடிய - காவலையுடைய: குறிப்புப் பெயரெச்சம். நெடியனும் என உம்மை விரிக்க. யாவர்க்கு மேலாம் இறைவன் எத்துணையும் சிறிய தமக்கு எளிவந்த பேரருளை நினைந்து 'அடியனே னளவிற்றே' என ஆராமைமேலிட்டுக் கூறிய வாறு; 'ஏழையேங்களுக் காவதோ எந்தை நின் கருணை' என முன் கூறினமையுங் காண்க. (உரு)

தண்மதி வழிவந் தோனு நகருளார் தாமும் பாதி
விண்மதி மிலைந்த வேணி விடையவ னடி நோக்கிக்
கண்மலர் வெள்ளத் தாழ்ந்து கனைகழ லடியிற் றாழ்ந்து
பண்மலர் கீதம் பாடி யாடினார் பழிச்சி நின்றார்.

(இ - ள்.) தண்மதி வழிவந்தோனும்-குளிர்ந்த திங்களினது மரபில் வந்தவனாகிய பாண்டியனும், நகர் உளார் தாமும் - நகரில் உள்ளோரும், பாதி விண்மதி மிலைந்த வேணி விடையவன்-வானிலுள்ள பாதி மதியினை யணிந்த சடையையுடைய இடபவூர்தியை யுடைய சோமசுந்தரக் கடவுளின், ஆடல் நோக்கி - திருவிளையாடலை நோக்கி, கண்மலர் வெள்ளத்து ஆழ்ந்து - கண்களாகிய மலரினின்று ஒழுகும் ஆனந்தவருவி யாகிய வெள்ளத்தில் முழுகி, கனைகழல் அடியில் தாழ்ந்து - ஒலிக்கின்ற வீரக்கழ லணிந்த திருவடியில் வணங்கி, பண்மலர் கீதம் பாடி ஆடினார் பழிச்சி நின்றார்-பண் நிறைந்த இசைப்பாட்டுக்களைப் பாடி ஆடித் துதித்து நின்றார்கள்.

ஆடல் அடியார்க்கு எளிவரும் திருவிளையாடல். கீதம்-இசைப்பாட்டு. உவகையால் ஆடினரென்க. (உசு)

[வேறு]

அடியவருக் கெளியரிவர் பரதேசி காவலரென் றடிவீழ்ந் தேத்தி
வடியயில்வேற் குலோத்துங்கன் மாணிக்க மாலையெனு மனையா ளோடுந்
தொடியணிதோண் முதுமகனைக் களிறேற்றி நகரைவலஞ் சூழ்வித் திப்பால்
முடியணிவித் தனந்தகுண பாண்டியற்குத் தன்னிறைமை முழுதுமீந்தான்.

(இ - ள்.) அடியவருக்கு எளியர் இவர் - அடியார்க் கெளியராகிய இச் சோமசுந்தரக் கடவுள், பரதேசி காவலர் என்று அடிவீழ்ந்து ஏத்தி - தமக்கு ஒரு களைகண் இல்லாதவரைக் காத்தலில் வல்லவர் என்று அவர் அடியில் வீழ்ந்து வணங்கித் துதித்து, வடி அயில் வேல் குலோத்துங்கன் - வடித்த கூரிய வேற்படை யேந்திய குலோத்துங்க பாண்டியன், தொடி அணிதோள் முதுமகனை - வீரவளை அணிந்த தோளையுடைய முதியோனை, மாணிக்க மாலையெனும் மனையாளோடும் - மாணிக்கமாலை யென்று கூறப்படும் அவன் மனைவியோடும், களிறு ஏற்றி நகரை வலம் சூழ்வித்து - யானையின்மேல் ஏற்றி நகர் வலஞ் செய்வித்து, இப்பால் - பின், அனந்தகுண பாண்டியற்கு முடி அணிவித்து - தன் புதல்வனாகிய அனந்தகுண பாண்டியனுக்கு முடிசூட்டி, தன் இறைமை முழுதும் ஈந்தான் - தனது அரசுரிமை முழுதுங் கொடுத்தனன்.

பரதேசி - வேற்று நாட்டவன். வேற்று நாட்டினின்றும் போந்து வேறு களைகண் இலனா யிருந்த வாளாசிரியனைக் காத்தமையின் 'பரதேசி காவலர்' என்றானென்க. முதுமகன் - முதியோனாகிய வாளா சிரியன். அவர்கள் தம் பொருட்டு இறைவன் எளிவந்து அருள் புரியும் பேரன் புடையராயினமையின் அவர்களைக் களிறேற்றி நகர் வலஞ் செய்வித்தா னென்க. (உஎ)

நிலைநிலையாப் பொருளுணர்ந்து பற்றிகந்து கரணமொரு நெறியே செல்லப்
புலனெறிநீத் தருள்வழிபோய்ப் போதமாந் தன்வலியைப் பொத்தி நின்ற
மலவலிவிட் டகலவரா வுமிழ்ந்தமதி போல்விளங்கி மாறி யாடுந்
தலைவனடி நிழல்பிரியாப் பேரின்பக் கதியடைந்தான் றமிழர் கோமான்.

(இ - ள்.) நிலைநிலையாப் பொருள் உணர்ந்து - நிலையுள்ள பொருளை யும் நிலையில்லாத பொருளையும் உணர்ந்து, பற்று இகந்து கரணம் ஒரு நெறியே செல்ல - இருவகைப் பற்றினின்றும் நீங்கி அந்தக்கரணம் ஒரு வழிச் செல்ல, புலன் நெறி நீத்து அருள் வழி போய் - ஐம்புலன்களின் நெறியி னின்றும் நீங்கித் திருவருள் நெறிச் சென்று, போதம் ஆம் தன் வலியைப் பொத்தி நின்ற மலவலி விட்டு அகல - போதமாகிய தனது வலியினை மறைத்து நின்ற ஆணவ மலவலி கழன்றொழிய, அரா உமிழ்ந்த மதிபோல் விளங்கி - இராகு வென்னும் பாம்பால் உமிழப்பட்ட சந்திரனைப்போல விளங்கி, மாறி ஆடும் தலைவன் அடிநிழல் பிரியாப் பேர் இன்பக் கதி - கால் மாறி ஆடிய சோமசுந்தரக் கடவுளின் திருவடி நிழலைப் பிரியாத பேரின்ப வீட்டினை, தமிழர் கோமான் அடைந்தான் - தமிழர் பெருமானாகிய குலோத்துங்க பாண்டியன் அடைந்தான்.

நிலைநிலையாப் பொருளுணர்ச்சி - நித்தியாநித்திய வத்து விவேகம் என்று கூறப்படும். நிலைப் பொருள் - என்றும் ஒரு பெற்றியே நிற்கும் மெய்ப்பொருள். நிலையாப் பொருள் - மாறி யொழியும் பொய்ப் பொருள். இவற்றை யுணர்ந்தவழி நிலையாப் பொருளின் மேலுள்ள பற்று ஒழியும்; பின்பு மனம் ஒருவழிப்படும்; அதன் பின் உயிர் அருள் வழிச் செல்லும்; அதனால் மலவலி கெடும்; ஆகலின் அம்முறையே கூறினர். ஆன்மாவின் அறிவு வலியை யென்க. ஆணவ மலத்தாற் கட்டுண்டு நீங்கிய ஆன்மாவிற்குப் பாம்பால் விழுங்கப்பட்டு அதினின்றும் நீங்கிய மதியை உவமை கூறியது மிகவும் பொருத்த முடைத்து. பிரியாமையாகிய கதி யென்க. (உ அ)

ஆகச் செய்யுள் - கசு0உ

இருபத்தெட்டாவது

நாகமெய்த படலம்

[எழுசீரடியாசிரிய விருத்தம்]

செங்கண் மால்விடை மேல்வி டங்கர் செருக்க ளத்திடை வாளெடுத்
தங்கம் வெட்டிய சேவ கத்தை யறைந்த னந்தமிழ் மாறன்மேற்
சங்கை யிட்டம ணீச ராற்றிய தறுகண் வேள்வி முளைத்ததோர்
வெங்கண் வாளர வைத்து ணித்து விளித்த் வாறு விளம்புவாம்.

(இ-ள்.) செங்கண் மால் விடை மேல் விடங்கர் - சிவந்த கண்களை யுடைய திருமாலாகிய இடபவூர்தியின்மேல் இவர்ந்தருளும் பேரழக ராகிய சோமசுந்தரக் கடவுள், செருக்களத்து இடைவாள் எடுத்து - போர்க் களத்தின்கண் வாட்படையைத் தாங்கி, அங்கம் வெட்டிய சேவகத்தை அறைந்தனம் - அங்கம் வெட்டிய திருவிளையாடலைக் கூறி னோம்; தமிழ் மாறன்மேல் சங்கை இட்டு - (இனி) தமிழ் வேந்தனாகிய பாண்டியன்மேல் பகை கொண்டு, அமண் நீசர் ஆற்றிய - சமணராகிய கீழோர் செய்த, தறுகண் வேள்வி முளைத்தது ஓர் வெங்கண்வாள் அரவை - கொடிய வேள்வியின்கண் தோன்றியதாகிய ஒரு வெவ்விய கண்களையுடைய கொடிய பாம்பினை, துணித்து விளித்தவாறு விளம்பு வாம் - துண்டுசெய்து கொன்றருளிய திருவிளையாடலைக் கூறுவோம்.

சேவகம் - வீரம்; திருவிளையாடலை யுணர்த்திற்று. சங்கை - பகை யென்னும் பொருட்டு. வாளரவு - கொடிய பாம்பு. விளித்த, விளிந்த வென்பதன் பிறவினை. விளித்தவாறும் என உம்மை விரித்துரைத்தலு மாம். (க)

கோதி லாத குணத்த னந்த குணப்பெ ருந்தகை மீனவன்
ஆதி நாயக னுருவ மாகிய வைந்தெ ழுத்தொடு கண்டிவெண்
பூதி சாதன மாவ தேபொரு ளென்று பத்திமை பூண்டுதன்
தாதை யேமுத லாய மன்னவர் தம்மி னுந்தலை யாயினான்.

(இ-ள்.) கோது இலாத குணத்து - குற்றமில்லாத குணத்தினை யுடைய, அனந்தகுணப் பெருந்தகை மீனவன் - அனந்தகுணன் என்னும் பெயரினையுடைய பெருந்தகுதியையுடைய பாண்டியன், ஆதிநாயகன் உருவம் ஆகிய ஐந்து எழுத்தொடு - முழுமுதற் றலைவனாகிய சோம சுந்தரக் கடவுளின் திருவுருவாகிய திருவைந்தெழுத்துடன், கண்டி வெண்பூதி சாதனமே - உருத்திராக்கமும் வெள்ளிய திருநீறுமாகிய சாதனமே, பொருள் ஆவது என்று பத்திமை பூண்டு - மெய்ப்பொரு ளாவது என்று அன்பு கொண்டதால், தன் தாதையே முதல் ஆய மன்னவர் தம்மினும் - தன் தந்தை முதலாகிய அரசர்களினும், தலை ஆயினான் - சிறந்தவனானான்.

திருவைந்தெழுத்துச் சிவபெருமானுக்கு உருவமாதலைச் சிவஞான சித்தியார் முதற்சூத்திரத்தா லறிக; இது முன்னுங் காட்டப்பெற்றது. சாதனமே பொருளாவது எனப் பிரித்துக் கூட்டுக. தலை. முதல்: முதல்வன். (உ)

அத்த கைச்* சிவ சாத னந்தனி லன்பு மிக்கவ னொழுகலால்
அத்தன் மெய்த்திரு வைந்தெ ழுத்தொலி யாலு நீற்றொளி யாலுமுட்
பைத்த வல்லிரு ளும்பு றத்திரு ளுஞ்சி தைந்து பராபரன்
வித்த கத்திரு வேட மானது†மீன வன்றிரு நாடெலாம்.

(இ - ள்.) அத்தகைச் சிவசாதனம்தனில் - அத்தன்மையுடைய சிவ சாதனத்தின்கண், அன்பு மிக்கு அவன் ஒழுகலால் - அன்பு மிகுந்து அப் பாண்டியன் ஒழுகிவருதலால், மீனவன் திருநாடு எலாம் - அவன் திருநாடு முழுதும் அத்தன் மெய்த் திரு ஐந்து எழுத்து ஒலியாலும் - இறைவன் திருவுருவமாகிய திருவைந்தெழுத்தின் ஒலியாலும், நீற்று ஒளியாலும் - திருநீற்றினது ஒளியாலும் (முறையே), உள்வைத்த வல் இருளும் - உள்ளே பரந்த வலிய மலவிருளும், புறத்து இருளும் சிதைந்து - புறவிருளும் கெட்டு. பராபரன் வித்தகத் திரு வேடம் ஆனது - சிவபெருமானது மேன்மையுடைய திருவேடமாகப் பொலிந்தது.

'மன்ன னெவ்வழி மன்னுயி ரவ்வழி' என்பவாகலின் அரசன் சிவ சாதனத்தில் அன்பு மிக்கானாகவே நாட்டிலுள்ளாரும் அங்ஙனமாயின ரென்க. திருவைந்தெழுத்தொலியால் அக விருளும் திருநீற்றொளியால் அகவிருளுடன் புறவிருளும் சிதைந்து என்றுமாம். புறத்திருள் - பூத விருள். பைத்த - பரந்த. பராபரன் - பரமும் அபரமும் ஆனவன். (ங)

நாயி னுங்கடை யான மாசுட னள்ளி ருட்புரை நெஞ்சரெண்
ணாயி ரஞ்சமண் வேட ரன்ன தறிந்து கொண்டு வெகுண்டழ
றோயி ரும்பென மான வெங்கனல் சுட்டி டத்தரி யார்களாய்
மாயி ருந்தமிழ் மாற னைத்தெற வஞ்ச வேள்வி யியற்றுவார்.

(இ - ள்.) நாயினும் கடை ஆன மாசு உடல் - நாயினுங் கடைப் பட்ட அழுக் குடம்பினையுடைய, நள் இருள் புரை நெஞ்சர் எண்ணாயிரம் சமண் வேடர் - நடு இரவின் இருளையொத்த நெஞ்சினை யுடையவ ராகிய சமணகுரவர் எண்ணாயிரவரும், அன்னது அறிந்து கொண்டு வெகுண்டு - அதனை அறிந்து சினந்து, அழல் தோய் இரும்பு என - நெருப் பிற் காய்ச்சிய இரும்புபோல, மான வெங்கனல் சுட்டிட - மானமாகிய கொடிய நெருப்புச் சுடாநிற்க, தரியார்களாய் - பொறார்க ளாகி, மா இருந்தமிழ் மாறனைத் தெற - பெரிய தமிழை வளர்க்கும் பாண்டியனைக் கொல்லுதற்கு, வஞ்ச வேள்வி இயற்றுவார் - வஞ்ச வேள்வி ஒன்றினைச் செய்வாராயினர்.

உடலையுடைய நெஞ்சராகிய என விரித்து வேடரென்பதுடன் தனித்தனி கூட்டுக. தங்கள் சமயத்திற்குரிய ஒழுக்கமுடையரல்ல

(பா - ம்.) * இத்தகை. † வேடமாயின.

ரென்பார் 'சமண் வேடர்' என்றார். கொண்டு - உளங்கொண்டு என்றுமாம். மா இரு: ஒருபொருளிருசொல் வஞ்ச வேள்வி - அபிசார யாகம். (அ)

எல்லை காத மளந்து சாலை யெடுத்த ழற்படு குண்டமுங்
கல்லி யாரழ லிட்டெ ழும்புகை கௌவி யெண்டிசை களுமுறச்
செல்ல வான வுடுக்க ளும்பொரி யிற்பொ ரிந்தன சிதறநீண்
டோல்லை தாவி விசும்பு தைவர வோட்டி* வெங்கனன் மூட்டினார்.

(இ - ள்.) காத எல்லை அளந்து சாலை எடுத்து - ஒரு காத அளவு அளந்து வேள்விச்சாலை கோலி, அழல்படு குண்டமும் கல்லி - தீவளர்க்கும வேள்விக் குண்டமும் தோண்டி, ஆர் அழல் இட்டு - நிறைந்த தீயினை அதிலிட்டு, எழும் புகை எண் திசைகளும் கௌவி உறச் செல்ல - எழுகின்ற புகையானது எட்டுத் திசைகளையும் தன்னுட் படுத்தி மிகச் செல்லவும், வான உடுக்களும் பொரிந்தன பொரியில் சிதற - வானின் கண் உள்ள உடுக்கூட்டங்களும் பொரிந்து பொரி போற் சிந்தவும், நீண்டு ஒல்லைதாவி விசும்பு தைவர - ஓங்கி விரைந்து தாவி வானுலகத்தைத் தடவவும், வெங்கனல் ஓட்டி மூட்டினார் - கொடிய நெருப்பினை எழுப்பி மூட்டினார்கள்.

பொரிந்தன : முற்றெச்சம். அழலிட்டு மூட்டினா ரெனக. , (கு)

அத்த ழன்றெரி குண்டநின்று மகன்பி லத்தெழு வானெனப்
பைத்த துஞ்சிருள் வாயும் வாயிரு பாலும் வாலிய பகிர்மதிக்
கோத்து நஞ்சின† மொழுகு பற்களு மூழி யாரழல் விழிகளும்
வைத்த சைந்தோரு வெற்பு வந்தென வந்து ளானொரு தானவன்.

(இ - ள்.) அத் தழன்று எரிகுண்டம் நின்றும் - அந்தக் கொதித்து எரிகின்ற வேள்விக் குண்டத்தினின்றும், அகன்பிலத்து எழுவான் என - அகன்ற பிலத்தினின்றும் எழுகின்றவனைப்போல (எழுந்து), பைத்த இருள் துஞ்சு வாயும் - பரந்த இருள் தங்கிய வாயினையும், வாய் இருபாலும் - வாயின் இரண்டு பக்கங்களிலும், வாலிய பகிர்மதிக்கு ஒத்து - வெள்ளிய அரைச்சந்திரனைப் போன்று, நஞ்சு இனம் ஒழுகு பற்களும் - நஞ்சின் பெருக்கு ஒழுகுகின்ற பற்களையும், ஊழி ஆர் அழல் விழிகளும் வைத்து - ஊழிக்காலத்தின் நிறைந்த தீயை உமிழும் கண்களையுங் கொண்டு, ஒரு வெற்பு அசைந்து வந்தென - ஒரு மலை அசைந்து வந்தாற்போல, ஒரு தானவன் வந்துளான் - ஓர் அவுணன் வந்தான்.

அக் குண்டத்தினின்றும் வாயும் பற்களும் விழிகளும் கொண்டு ஒரு தானவன் வந்தான் என்க. துஞ்சுதல் - தங்குதல், மதிக்கு ஒத்து - மதியை யொத்து : வேற்றுமை மயக்கம். வைத்து - கொண்டு என்னும் பொருட்டு. இஃது இர் பொருளுவமையணி. (சு)

(பா - ம்.) *ஒட்டி. † கொத்த டுஞ்சினம்.

உதித்த செங்க ணரக்க வஞ்ச னுருத்தெ ழுந்தெரி வடவையிற்
கோதித்த டும்பசி தாக முங்கொடி தாலெ னக்கொடி யோரைநீர்
விதித்தி டும்பணி யாதெ னக்கென மீன வன்றனை மதுரையோ
டெதிர்த்தெ டுத்துவி ழுங்கி வாவென வேவி னாருட னேகினான்.

(இ - ள்.) உதித்த செங்கண் அரக்க வஞ்சன் (அங்ஙனம்) தோன்றிய சிவந்த கண்களையுடைய அவுணனாகிய கொடியோன், உருத்து எழுந்து - வெகுண்டெழுந்து. எரி வடவையில் - எரிகின்ற வடவைத் தீயைப்போல, கொதித்து அடும்பசி தாகமும் கொடிது என - பொங்கி வருத்துகின்ற பசியும் நீர்வேட்கையும் கொடியவென்று, கொடியோரை நீர் விதித்திடும் பணி எனக்கு யாது என - அக் கொடிய சமணர்களை (நோக்கி) நீவிர் எனக்கு விதிக்கும் ஏவல் யாது என்று வினவ, மீனவன் தனை மதுரையோடு எதிர்த்து எடுத்து விழுங்கி வா என ஏவினார் – பாண்டியனை மதுரையோடு எதிர்த்து எடுத்து விழுங்கி வருவாயாக என்று விடுத்தனர், உடன் ஏகினான் - அவனும் விரைந்து சென்றான்.

பசியும் என உம்மை விரிக்க. கொடிது : பன்மையி லொருமை. ஆல் : அசை. (எ)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

பாயுடை யவர்விட விடநாகப் படிவுகொ ணிசிசர னிலனண்டந்
தோயுட லினனுடல் விடமூறிச் சொரிதுளை யெயிறினன் வடவைச்செந்
தீயுடை யனவென வெரிகண்ணன் றிணியிருள் வரைமுழை யெனவிண்ட
வாயுடை யவனெடு நெறிமுன்னி மழைநுழை வரையென வருகின்றான்.

(இ - ள்.) பாய் உடையவர் விட - பாயினை உடையாகவுடைய சமணர்கள் ஏவ, விடநாகப் படிவுகொள் நிசிசரன் - நஞ்சினையுடைய பாம்பின் வடிவினைக் கொண்ட அவுணன், நிலன் அண்டம் தோய் உடலினன் - நிலவுலகினின்றும் அண்டத்தை அளாவும் உடலையுடையவனாய், உடல் விடம் ஊறிச் சொரிதுளை எயிறினன் - வருத்துகின்ற நஞ்சு சுரந்து பொழியுந் துளையினையுடைய பற்களையுடையவனாய், வடவைச் செந்தீ உடையன என எரி கண்ணன் - வடவைச் செந்தியை உடையன என்று சொல்ல எரிகின்ற கண்களையுடையவனாய், திணி இருள் வரை முழை என விண்ட வாய் உடையவன் - இருள் செறிந்த மலையின் குகைபோலத் திறந்த வாயினையுடையவனாய், நெடுநெறி முன்னி - நீண்ட வழியில் முற்பட்டு, மழை நுழை வரை என வருகின்றான் - முகில் தவழும் மலைபோல வாராநின்றான்.

நிசிசரன் - இரவிற் சரிப்போன்; அரக்கன். எயிற்றின் எனற் பாலது விகாரமாயிற்று. உடலினன், எயிறினன், கண்ணன், வாயுடையவன் என்னும் குறிப்பு முற்றுக்கள் எச்சமாயின. (அ)

அரவிறை யுறைபிலம் வெளிகாணவரையுடல் புதைபட நிலம்விள்ள*
வருவிழி† யழலெழ வுயிர்கான்முன் வளியுளர் கிளர்வலி விளிவெய்தப்
பொருசினவிழியெதிர் படுபைங்கூழ் புகையெழ வனமரைபொரிபொங்கர்
கருகிட முதுசினை யிறைகொள்ளுங் ககநிரை சிறைசுருள் படவீழ.

(இ - ள்.) அரை உடல் புதைபட - பாதி உடல் புதைபடுதலாலே, அரவு இறை உறை பிலம் வெளி காண - பாம்புகளின் தலைவனுகிய அனந்தன் உறையும் பாதலம் வெளியாகத் தெரியும்படி, நிலம் விள்ள - நிலம் பிளக்கவும், விழி வரு அழல் எழ உயிர் கால் முன் - கண்களினின்று வரும் நெருப்பு எழ உயிர்க்கின்ற பெருமூச்சின்முன். உளர்வளி கிளர்வலி விளிவு எய்த - சலிக்கின்ற காற்றினது மிக்க வலியானது இறத்தலைப் பொருந்தவும், பொரு சின விழி எதிர்படு பைங்கூழ் புகையெழ - மாறுபடும் சினத்தினையுடைய விழிகளுக்கு எதிர்ப்பட்ட பயிர்கள் புகைந்து வாடவும், வனம் பொரி அரை பொங்கர் கருகிட - காடுகளும் பொருக்கினையுடைய அடியினையுடைய மரச்செறிவுகளும் கருகவும், முதுசினை இறைகொள்ளும் ககநிரை சிறைசுருள்பட வீழ - பெரிய மரக்கிளைகளில் வசிக்கும் பறவைக் கூட்டங்கள் சிறைகள் கருகிச் சுருண்டு கீழே விழவும்.

காற்றினல் நெருப்பு மூளுமாகலின் 'விழியழலெழ உயிர்கால்' என்முர். உளர் வலி என்றும், பொரி அரை என்றும் மாறுக. இறை கொள்ளும் - தங்கும். ககம் - பறவை. (கூ).

அகனிலம் வெருவுற நிலனேந்து மரவிறை வெருவுற வெயில் காலும்
பகன்மதி வெருவுற விவைகௌவும் பணிகளும் வெருவுற வகநிக்கின்
புகர்மலை வெருவுற வடுதண்டப் புரவலன் வெருவுற வருசெங்கண்
நகைமதி புரையெயிறவன்மாட நகரெதிர் குடவயின் வருமெல்லை.

(ஏ - ள்.) அகல் நிலம் வெருவுற - அகன்ற நிலவுலகம் அஞ்சவும், நிலன் ஏந்தும் அரவு இறை வெருவுற - அந்நிலத்தைத் தாங்கும் அரவரசன் அச்சமெய்தவும், வெயில்காலும் பகல்மதி வெருவுற-கிரணத்தை வீசும் சூரியனும் சந்திரனும் துணுக்குறவும், இவை கௌவும் பணிகளும் வெருவுற - இவற்றை விழுங்கும் இராகு கேதுக்களாகிய பாம்புகளும் உட்கவும், அகல் திக்கின் புகர்மலை வெருவுற - அகன்ற திசைகளிலுள்ள (முகத்திற்) புள்ளிகளையுடைய மலைபோன்ற யானைகள் அஞ்சவும், அடுதண்டப் புரவலன் வெருவுற - கொல்லுகின்ற தண்டினை ஏந்திய கூற்றுவன் அஞ்சவும், வருசெங்கண் நகைமதி புரை எயிறவன் வருகின்ற சிவந்த கண்களையும் ஒள்ளிய (அரை) மதியினை ஒத்த வளைந்த பற்களையுமுடைய அவுணன், மாடம் நகர் எதிர் குட வயின் வரும் எல்லை - மாடங்கள் நிறைந்த மதுரைப் பதியின் நேரே மேற்றிசைக்கண் வரும் பொழுதில்,

---

(பா - ம்.) *விள்ளா. †வருவழி.

பகல் - ஞாயிறு. வெயில்காலும் என்பது பகலுக்கு அடை; ஒளிப் பொதுவாக்கி, மதிக்கும் ஏற்றலுமாம். புகர்மலை, யானைக்கு வெளிப்படை. எயிறவன் : ஒற்றிரட்டாது நின்றது. (க0)

கண்டவர் கடிநகர் கடிதோடிக் கௌரிய னடிதொழு தடிகேணங்
கொண்டல்கண் வளர்மதில் வளைகூடற் குடவயி னொருபெரு விடநாகம்
அண்டமு மகிலமு மொருவாயிட் டயிறர வருவதை யெனநீள்வாய்
விண்டுகொண் டணைவதை யெனலோடும் வெருவலன் மதிகுல மறவீரன்.

(இ - ள்.) கண்டவர் கடிநகர் கடிது ஓடி - (அதனைப்) பார்த்தவர்கள் காவலையுடைய நகர்க்கண் விரைந்து ஓடி, கௌரியன் அடி தொழுது - பாண்டியன் அடிகளை வணங்கி, அடிகேள் - அடிகளே, நம் கொண்டல் கண்வளர் மதில்வளை - நமது முகில் உறங்கும் மதில் சூழ்ந்த, கூடல் குட வயின் - மதுரைப்பதியின் மேற்றிசையில், ஒரு பெருவிடநாகம் - ஒரு பெரிய நஞ்சினையுடைய பாம்பானது, அண்டமும் அகிலமும் ஒருவாய் இட்டு அயில்தர வருவது என - அண்டங்களையும் மற்றெல்லாவற்றையும் ஒரு வாயிற்போட்டு உண்ணுதற்கு வருவது போல, நீள் வாய் விண்டு கொண்டு அணைவது எனலோடும் - பெரிய வாயைத் திறந்துகொண்டு வருகின்றது என்று கூறவும், மதிகுல மறவீரன் வெருவலன் - திங்கள் மரபில்வந்த வெற்றியையுடைய வீரனாகிய அனந்தகுணபாண்டியன் அது கேட்டு அஞ்சானாயினன்.

அடிகேள் - பெருமானீர். நம் கூடற்குடவயின் என்க. அயில வருவது போல அணைவது என்றனர் என்னவும் என விரிக்க. வருவதை, அணைவதை என்பவற்றில் ஐ : சாரியை. (கக)

மற்றிது முனமதி கரிவிட்டோர் வரவிட வருவதை யெனவெண்ணம்
உற்றிது தனையும் விளித்தற்கெம் முடையவர் விடையவர் விடநாகஞ்
சுற்றிய சடையின ருளரென்னாச் சுரருல கிழிசுட ரெனநிற்குங்
கற்றளி யிடையுறை யிறைமுன்போய்க் கனைகழ லடிதொழு தறைகிற்பான்

(இ - ள்.) இது முனம் மதகரி விட்டோர் வரவிடவருவது என - இப் பாம்பானது முன்னர் மதயானையை விடுத்த சமணர்கள் ஏவுதலால் வருவதாகும் என்று எண்ணம் உற்று - கருதி இதுதனையும் விளித்தற்கு - இதனையும் கொல்லுதற்கு, எம் உடையவர் விடையவர் - எம்மை ஆளாக உடையவரும் இடபவூர்தியினை உடையவரும், விடநாகம் சுற்றிய சடையினர் உளர் என்னா - நஞ்சினையுடைய பாம்பினை அணிந்த சடையினையுடையவருமாகிய சோமசுந்தரக்கடவுள் இருக்கின்றாரென்று, சுரர் உலகு இழிசுடர் என நிற்கும் கல்தளி இடை உறை இறை முன்போய் - தேவருலகினின்றும் இறங்கிய சூரியனைப்போல நிற்கும் மாணிக்க விமானத்தில் எழுந்தருளிய இறைவன் திருமுன் சென்று, கனைகழல் அடிதொழுது அறைகிற்பான் - ஒலிக்கின்ற வீரக் கழலணிந்த திருவடியை வணங்கிக் கூறுகின்றான்.

மற்று: அசை நிலை. வருவதை, ஐ: சாரியை. விளித்தல் - இறப்பித்தல்; விளிதல் என்பதன் பிறவினை. உடையவர் விடையவர் சடையினர் என ஒரு பொருள் மேற் பல பெயர் வந்தன. சுடரென நிற்கும் என்றமையால் கல் என்பது மாணிக்கத்தை உணர்த்துவதாயிற்று. தளி - கோயில்; விமானம். (கஉ)

வழிவழி யடிமைசெய் தொருபோது மறவலன் வழிபடுமடியேனின்
மொழிவழி முறைசெய்து வருவேனிம் முதுநக ரடையவு மமணீசர்
அழிவது கருதினர் விடுநாக மடைவது னருள்வழி யதனுவி
கழிவது கருதிய வடியேனைக் கருணைசெய் தருளிது கடனென்றான்.

(இ - ள்.) வழி வழி அடிமை செய்து - வழி வழியாகத் தொண்டு பூண்டு. ஒரு போதும் மறவலன் வழிபடும் அடியேன் - ஒரு பொழுதும் மறவாது வழிபடுகின்ற அடியேன், நின் மொழி வழி முறை செய்து வருவேன் - நின் ஆணை வழியே ஆட்சி புரிந்துவாரா நின்றேன், அமண் நீசர்-சமணராகிய கீழோர் இம்முது நகர் அடையவும் அழிவது கருதினர் விடுநாகம் அடைவது - இந்தத் தொன்னகர் முழுதும் அழிவதைக் கருதி விடுத்த பாம்பு வாரா நின்றது; உன் அருள் வழி அதன் ஆவி கழிவது கருதிய அடியேனை-உனது திருவருளின் நெறியே அதன் உயிர் போவதைக் கருதிய அடியேனுக்கு, கருணை செய்தருள் இது கடன் என்றான் - அருள் பாலிப்பாயாக இது நினது கடனாகும் என்று குறையிரந்தான்.

மொழி - வேதம் முதலியன. அடையவும் - முழுதும். மறவலன், கருதினர் என்பன முற்றெச்சம். அழிவது, கழிவது என்பன தொழிற் பெயர். அடியேனை - அடியேனுக்கு. (கங)

அனுமதி கொடுதொழு திறைபாத மகமதி* கொடுபுற னடைகின்ற
பனிமதி வழிவரு தமிழ்மாறன் பகழியொ டடுசிலை யினனேகிக்
குனிமதி தவழ்தரு மதினீடுங் கொடியணி குடகடை குறுகாமுன்
தனிவரை யெனநிகர் தருகோபத் தழல்விழி யரவினை யெதிர்கண்டான்.

(இ - ள்.) அனுமதி கொடு - அருள்பெற்றுக் கொண்டு, தொழுது வணங்கி, இறை பாதம் அகம் மதிகொடு - இறைவனது திருவடியை உள்ளத்திற் சிந்தித்தலோடு, புறன் அடைகின்ற - புறத்தே வருகின்ற, பனிமதி வழிவரு தமிழ் மாறன் - தண்ணிய சந்திரன் மரபில் வந்த தமிழ் வேந்தனாகிய அனந்தகுண பாண்டியன், பகழியொடு அடுசிலையினன் ஏகி - கணையுடன், கொல்லுதற்குரிய வில்லையுடையவனாய்ச் சென்று, குனிமதி தவழ் தருமதில் - வளைந்த மதி தவழுகின்ற மதிலினது, நீடும் கொடி அணி குடகடை குறுகாமுன் - நெடிய கொடி கட்டிய மேற்கு வாயிலை அடைதற்கு முன்னரே, தனிவரை என நிகர்தரு கோபத்தழல் விழி அரவினை எதிர் கண்டான் - ஒப்பற்ற மலை யென்று சொல்லுமாறு எதிர்ந்த சினத்தீ சிந்தும் விழியினையுடைய பாம்பினை நேரே கண்டனன்.

(பா - ம்.) *அகமதிற் கொடு.

அனுமதி - உடன்பாடு; அரவினைக் கொல்லுதற்கு இறைவன் அருளிப் பாடு. மதிகொடு - மதித்தல் கொண்டு; சிந்தித்து. அடைகின்ற மாறன் ஏகிக் குறுகாமுன் என்க. நிகர்தரு - எதிர்ந்த;

"நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு"

என்பது தொல்காப்பியம். (கஅ)

[எழுசீரடியாசிரிய விருத்தம்]

பல்பொறிப் பகுவாய்ப் படம்புடை பரப்பிப்
பக்கமேண் டிசையோடு விசும்பிற்
செல்கதிர் புதைத்துத் திணியிருள் பரப்பித்
திங்களின் பகிர்புரை நஞ்சம்
பில்கெயி றதுக்கிப் பெரிதுயிர்த் தகல்வாய்
பிளந்துமா நகரெலா மொருங்கே
ஒல்லெனக் கௌவி விழுங்குவான் சீறி
யுருத்தன னுரகவா ளவுணன்.

(இ - ள்.) உரகவாள் அவுணன் - பாம்பின் வடிவாகிய கொடிய அவுணன், பல்பொறிப் பகுவாய்ப் படம்புடை பரப்பி - பல பொறி களையும் பிளந்த வாயையுமுடைய படங்களைப் பரப்பி, பக்கம் எண் திசையொடு - எட்டுத் திக்குகளாகிய பக்கங்களோடு, விசும்பில் செல் கதிர் புதைத்து - வானிற் செல்லுகின்ற சூரியனையும் மறைத்து, திணி இருள்பரப்பி - செறிந்த இருளை விரித்து, திங்களின் பகிர்புரை - சந்திர னது பிளவினை ஒத்த, நஞ்சம் பில்கு எயிறு அதுக்கி - நஞ்சினை உமிழும் பல்லினை அதுக்கி, பெரிது உயிர்த்து - பெருமூச்சு விட்டு, அகல் வாய் பிளந்து - அகன்ற வாயைப் பிளந்து, மாநகர் எலாம் ஒருங்கே ஒல்லெனக் கௌவி விழுங்குவான் - பெரிய நகர் முழுதையும் ஒரு சேர விரைந்து கௌவி விழுங்குதற்கு, சீறி உருத்தனன் - சீறிச் சினந்தான்.

ஒல்லென: விரைவுக் குறிப்பு. விழுங்குவான்: வினையெச்சம். (கசு)

அடுத்தன னரச சிங்கவே றிடியே
றஞ்சவார்த் தங்கையிற் சாபம்
எடுத்தன னெடுநா ணிருதலை வணக்கி
யெரிமுகக் கூர்ங்கணை தொடுத்து
விடுத்தனன் விடுத்த சரமெலா முரகன்
வெறுந்துகள் படக்கறித் துமிழ்ந்து
படுத்தனன் பொருது பஞ்சவன் புராரி
பங்கயச் சேவடி நினையா.

(இ - ள்.) அரச சிங்க ஏறு அடுத்தனன் இடி ஏறு அஞ்ச ஆர்த்து - அரசருள் ஆண் சிங்கம் போன்ற பாண்டியன் நெருங்கி இடியேறும் அஞ்சப் பெருமுழக்கம் செய்து, அங்கையில் சாபம் எடுத்தனன் நெடு நாண் இருதலை வணக்கி - அழகிய கையில் வில்லை எடுத்து நீண்ட

நாணினால் (அவ்வில்லின்) இரண்டு தலையையும் வளைத்து, எரிமுகக் கூர்ங்கணை தொடுத்து விடுத்தனன் - கூரிய தீ முகக்கணைகளைப் பூட்டி விடுத்தனன்; விடுத்த சரம் எலாம் - (அங்ஙனம்) விடப்பட்ட கணைகளனைத்தையும், உரகன் வெறுந்துகள்படக் கறித்து உமிழ்ந்து படுத்தனன் - பாம்பின் வடிவாய அவுணன் வெறிய தூளாமாறு கடித்து உமிழ்ந்து சிதைத்தான்; பஞ்சவன் - (அதனைக் கண்ட) பாண்டியன், பொருது - மனம் பொருமல், புராரி பங்கயச் சேவடி நினையா - சோம சுந்தரக்கடவுளின் தாமரைமலர் போன்ற சிவந்த திருவடிகளைச் சிந்தித்து.

எடுத்து வணக்கி நாணிலே கணை தொடுத்து என்றுமாம். அடுத்தனன், எடுத்தனன் என்பன முற்றெச்சம். புராரி - புரப்பகைவன்; முப்புரங்களை யெரித்தவன். (கசு)

கோடியதோர் பிறைவா யம்பினை விடுத்துக்
கோளரா வளையுட றுணித்தான்
இடியதோ வெனவார்த் தெரிநிறக் குருதி
யிரங்கிவீ ழருவியிற் கவிழ
நெடியதோ ருடலம் புரள்படக் கூர்வா
ளெளிதர விளிபவன் மேலைக்
கடியதோ ரால காலவெள் ளம்போற்*
கக்கினான் கறையிரு ணஞ்சம்.

(இ - ள்.) கொடியது ஓர் பிறை வாய் அம்பினை விடுத்து - கொடியதாகிய ஒரு பிறைபோலும் வாயினையுடைய கணையை ஏவி, கோள் அரா வளை உடல் துணித்தான் - வலிய பாம்பினது நெளிந்த உடலைத் துண்டு படுத்தினான்; இடியதோ என ஆர்த்து - இடியொலியோ என்று ஐயுறப் பேரொலி செய்து, எரி நிறக்குருதி - தீயின் நிறம் போன்ற குருதி, இரங்கி வீழ் அருவியில் கவிழ - ஒலித்து வீழ்கின்ற அருவிபோல ஒழுகவும், நெடியது ஓர் உடலம் புரள்பட - நீண்டதாகிய ஒப்பற்ற உடல் புரளவும், கூர்வாள் நெளிதர - கூரிய வால் நெளியவும், விளிபவன் - இறக்கின்ற அவ்வவுணன், மேலைக் கடியது ஓர் ஆலகால வெள்ளம்போல் - முன்னாளிற் றோன்றிய கடியதாகிய ஒப்பற்ற ஆலகால நஞ்சின் பெருக்குப்போல, கறை இருள் நஞ்சம் கக்கினான் - கரிய இருள் போன்ற நஞ்சினைக் கக்கினான்.

இடியதோ, அது: பகுதிப்பொருள் விகுதி. கொடியது, நெடியது, கடியது என்பன எச்சமாயின. ஓர் என்பன அசைகளுமாம். ஆர்த்து விளிபவன் கக்கினான் என்க. (கஎ)

தீவிட முருத்துத் திணியிருள் கடுப்பத்
திருநக ரெங்கணுஞ் செறிந்த
காவிடங் கூவல் கயந்தலைசதுக்கங்
கழகமா வணமக ழிஞ்சி

(பா - ம்.) *ஆலாகல வெள்ளம்போலக்.

கோவிட மாட முபரிகை மேடை
கோபுர மரங்கெலாம் பரந்து
தாவிட மயங்கி யுறங்கினர் போலச்
சாம்பினர் தனிநகர் மாக்கள்.

(இ - ள்.) திவிடம் உருத்து - அந்தக் கொடிய நஞ்சானது சினந்து, திணி இருள் கடுப்ப - செறிந்த இருள் பரவியதைப்போல, திருநகர் எங்கணும் - அழகிய நகர் முழுதும், செறிந்த கா இடம் - நெருங்கிய சோலைகளும் கூவல் கயந்தலை - கிணறும் குளமும், சதுக்கம் கழகம் ஆவணம் - நாற்றெருக் கூடுமிடமும் கல்விக் கழகமும் கடைவீதியும், அகழ் இஞ்சி - அகழியும் மதிலும் கோ இடம் - அரசன் மாளிகையும், மாடம் உபரிகை மேடை கோபுரம் அரங்கு - மாடமும் உப்பரிகையும் மேடையும் கோபுரமும் நாட்டியசாலையும், எலாம் பரந்து தாவிட -ஆகிய எல்லாவிடங்களிலும் பரந்து தாவுதலால், தனிநகர் மாக்கள் - ஒப்பற்ற அந் நகரிலுள்ள மாந்தர்கள், மயங்கி உறங்கினர்போலச் சாம்பினர் - நஞ்சினால் மயங்கி உறங்கினவர்கள்போல வாடினர்கள்.

விடம் உருத்து இருள் கடுப்ப நகர் முழுதும் எல்லாவிடங்களிலும் பரந்து தாவிட என்க. ஆலாலத்தால் உறங்கிய வானோர்போல என்றுரைப்பாருமுளர். (கஅ)

'நிலைதளர்ந் துடலந் திமிர்ந்துவேர் வரும்பி
நிறைபுலன் பொறிகர ணங்கள்
தலைதடு மாறி யுரைமொழி குழறித்
தழுதழுப் படைந்துநா வுணங்கி
மலைதரு கபமே னிமிர்ந்துணர் வழிந்து
மயங்கிமூச் சொடுங்கியுள் ளாவி
அலைதர வூச லாடினர் கிடந்தா
ரன்னதொன் னகருளா ரெல்லாம்.

(இ - ள்.) நிலைதளர்ந்து உடலம் திமிர்ந்து வேர்வு அரும்பி - நிலை கெட்டு உடல் கம்பித்து வெயர்வை தோன்றி, நிறை புலன் பொறி கரணங்கள் தலை தடுமாறி - நிறைந்த புலன்களும் பொறிகளும் அந்தக் கரணங்களும் தலைதடுமாறி உரைமொழி குழறி தழுதழுப்பு அடைந்து நா உணங்கி - உரைக்கின்ற மொழிகள் குழறி நாத் தழுதழுப்புற்றுக் காய்ந்து, மலைதரு கபம் மேல்நிமிர்ந்து உணர்வு அழிந்து - பொருகின்ற கபம் மேலோங்கி அறிவழிந்து, மயங்கி மூச்சு ஒடுங்கி - மயங்கி உயிர்ப்பு அடங்கி, உள் ஆவி அலைதர - உள்ளேயுள்ள உயிர் அலைய, அன்னதொல் நகர் உளார் எல்லாம் ஊசல் ஆடினர் கிடந்தார் -அப்பழையநகரிலுள்ளா ரனைவரும் ஊஞ்சல்போல ஆடிக்கிடந்தனர்.

உடலம், அம்: சாரியை. தலை தடுமாறி - தடுமாற்றமுற்று: ஒருசொல். உரைமொழி, வினைத்தொகை. ஆடினர்: முற்றெச்சம். (கசு)

தென்னவன் விடங்கண் டஞ்சுமால் போலச்
சினகர மடைந்துதாழ்ந் தெந்தாய்
முன்னவ வாதி முதல்வ வித்தின்றி
முளைத்தவ முடிவிலா முனிவ
என்னவ வன்பர்க் கெளியவ யார்க்கு
மிறையவ விந்நகர்க் கென்றும்
மன்னவ வனாதி மறையவ முக்கண்
வானவ நினைச்சர ணடைந்தேன்.

(இ - ள்) தென்னவன் - அனந்தகுணபாண்டியன், விடம் கண்டு அஞ்சும் மால்போலச் சினகரம் அடைந்து - ஆலால விடத்தைக் கண்டு அஞ்சிய திருமால்போலத் திருக்கோயிலை அடைந்து, தாழ்ந்து - வணங்கி, எந்தாய் - எந்தையே, முன்னவ – யாவர்க்கும் முற்பட்டவனே, ஆதி முதல்வ - ஆதியாகிய முதல்வனே, வித்து இன்றி முளைத்தவ - மூலமின்றித் தோன்றியவனே, முடிவு இலா முனிவ - இறுதியில்லாத முனிவனே, என்னவ - எனக்குரிமையானவனே, அன்பர்க்கு எளியவ - அன்பர்கட்கு எளியவனே. யார்க்கும் இறையவ - எல்லோருக்குந் தலைவனே, இந்நகர்க்கு என்றும் மன்னவ - இம் மதுரைப்பதிக்கு எக்காலத்திலும் மன்னவனே, அனாதி மறையவ-அனாதியாயுள்ள மறையவனே, முக்கண் வானவ மூன்று கண்களையுடைய தேவனே, நினைச் சரண் அடைந்தேன்-நின்னைப் புகலாக அடைந்தேன்.

விடங்கண்டஞ்சிய திருமால் திருக்கைலையை அடைந்து சரண்புக் காற்போல என்க. அருகன் கோட்டம் என்னும் பொருளுள்ள சினகரம் என்னும் பெயர் பின் பொதுப்படக் கோயிலைக் குறிப்பதாயிற்று. என்னவ - எனக் குரிமையுடையவனே; ''அப்பனீ அம்மைநீ'' என்னும் திருத்தாண்டகம் முதலியவற்றுள் இறைவன் தமக் குரிமையுடையார் பல ராகவும் கூறப்படுதல் காண்க; என் நவ எனப் பிரித்து, எனக்குப் புதுமையை விளைப்பவனே என்று பிறர் கூறுவாராயினர். (உ௦)

அடுத்துவந் தலைக்கு மாழியைத் துரந்து
மாழியுண் டேழுமோன் றாகத்
தொடுத்துவந் தலைக்கும் பெருமழை தடுத்துந்
துளைக்கைவிண் டுழாவவெண் பிறைக்கோ
டெடுத்துவந் தலைக்குங் களிற்றினை விளித்து
மிந்நகர் புரந்தனை யின்று
மடுத்துவந் தலைக்கும் விடத்தினுன் மயங்கும்
வருத்தமுங் களைதியென் றிரந்தான்

(இ - ள்.) : அடுத்து வந்து அலைக்கும் ஆழியைத் துரந்தும் - நெருங்கிவந்து வருத்துங் கடலைச் சுவறச் செய்தும், ஆழி உண்டு ஏழும் ஒன்றாகத் தொடுத்துவந்து அலைக்கும் பெருமழை தடுத்தும் - கடல்

நீரைப் பருகி ஏழுமேகங்களும் ஒன்றாகத் திரண்டுவந்து பெய்து வருத்தும் பெருமழையைத் தடுத்தும், துளைக்கை விண்துழாவ - துளையையுடைய துதிக்கை வானைத் தடவுமாறு, வெண் பிறைக் கோடு எடுத்துவந்து அலைக்கும் களிற்றினை விளித்தும் - வெள்ளிய பிறை போன்ற கொம்பினிடையே மேலெடுத்துவந்து வருத்தும் யானையைக் கொன்றும். இந்நகர் புரந்தனை - இந்த நகரத்தைப் பாதுகாத்தனை, இன்று மடுத்துவந்து அலைக்கும் - இப்பொழுது அகப்படுத்துவந்து வருத்துகின்ற. விடத்தினுல் மயங்கும் வருத்தமும் களைதி என்று இரந்தான் - நஞ்சினுலே மயங்குகின்ற வருத்தத்தையும் நீக்கியருள்வா யென்று வேண்டினுன்.

ஏழ்: தொகைக் குறிப்பு, துளைக்கை யெடுத்துவந்தென்க விளித்து - விளியச் செய்து; பிறவினை. மடுத்து - நகரினை அகப்படுத்தி. இன்றும் அடுத்து எனப் பிரிப்பாருமுளர். முன்னுண்டாகிய துன்பங்களை யெல்லாம் போக்கி இந்நகரைக் காத்தருளிய நீயே இப் பொழுதும் இத்துன்பத்தினின்றும் காக்கற்பாலை யென வேண்டினுன். (உக)

அருட்கட லனைய வாதிநா யகன்ற
னவிர்சடை யணிமதிக் கொழுந்தின்
பெருக்கடை யமுதத் தண்டுளி சிறிது
பிலிற்றினுன் பிலிற்றிட லோடும்
பொருக்கென வெங்கும் பாலினிற் பிரைபோற்
புரையறக் கலந்துபண் டுள்ள
திருக்கிளர் மதுரா நகரமாப் புனிதஞ்
செய்ததச் சிறுதுளி யம்மா.

(இ - ள்.) அருள் கடல் அனைய ஆதி நாயகன் - கருணைக்கடலனைய ஆதி நாயகனுகிய சோமசுந்தரக்கடவுள், தன் அவிர் சடை அணிமதிக் கொழுந்தின் - தனது விளங்கா நின்ற சடையின்கண் அணிந்த இளம் பிறையினது, பெருக்கு அடை அமுதத் தண் துளி சிறிது பிலிற்றினுன் - பெருக்கமைந்த அமுதத்தின் தண்ணிய துளியிற் சிறிது சிந்தினுன்; பிலிற்றிடலோடும் - அங்ஙனம் சிந்திய வளவில், அச்சிறு துளி - அந்தச் சிறிய திவலையானது, பொருக்கென பாலினில் பிரைபோல் எங்கும் புரை அறக்கலந்து - விரைந்து பாலிற் பிரைபோல எவ்விடத் துங் குற்றமறக் கலந்து, பண்டு உள்ள திருக்கிளர் மதுரா நகரம் ஆக - முன்னுள்ள செல்வமிக்க மதுரை நகர் ஆகுமாறு, புனிதம் செய்தது - தூய்மை செய்தது.

புரையற - இடை வெளியின்றி என்றுமாம். முன்பு மதிக்கலையின் அமிழ்தாற் சாந்தி செய்யப்பெற்று அதனுல் மதுரையெனப் பெயரெய் தினமை திருநகரங்கண்ட படலத்துட் கூறப்பட்டது; இப்பொழுதும் அவ்வமிழ்தால் நஞ்சினைப்போக்கித் தூய்மைசெய்தமையின் பண்டுள்ள மதுரா நகரமா என்ருர். அம்மா: வியப்பிடைச்சொல். (உஉ)

இரவிமுன் னிருள தெனவிறை யருண்முன்
னிருண்மல வலியென வெங்கும்
பரவிய வமுதால் விடமகன் றவசப்
படிவொழிந் தியாவரு மின்பம்
விரவிய களிப்பின் மேவின ரிருந்தார்
மீனவர் பெருந்தகை வேந்தன்
அரவணி சடையாற் கன்புருத்தானே
யாகிமண் காவல்செய் திருந்தான்.

(இ - ள்.) இரவி முன் இருளது என - சூரியன் முன்னர் இருள் ஓடுதல் போலவும், இறை அருள்முன் இருள்மலவலி என - இறைவனது திருவருள் முன்னே ஆணவ மலவன்மை கெடுதல் போலவும், எங்கும் பரவிய அமுதால் - எவ்விடத்தும் பரவிய அமுதத்தினால், விடம் அகன்று - நஞ்சு நீங்கப் பெற்று, அவசப் படிவு ஒழிந்து - மயக்க வடிவம் நீங்கி, யாவரும் - அனைவரும், இன்பம் விரவிய களிப்பின் மேவினர் இருந்தார் - இன்பங்கலந்த மகிழ்ச்சியிற் பொருந்தி இருந்தனர்; மீனவர் பெருந் தகை வேந்தன்-பாண்டியர் பெருந்தகையாகிய அனந்த குணமன்னன், அரவு அணிசடையாற்கு அன்பு உருத்தானே ஆகி - பாம்பினை அணிந்த சடையையுடைய சோமசுந்தரக் கடவுளுக்கு அன்பே வடிவமாகி, மண் காவல் செய்து இருந்தான் - நிலவுலகைப் பாதுகாத் திருந்தனன்.

இருளது, அது : பகுதிப்பொருள் விகுதி. திருவருளால் ஆணவவலி கெடுதற்குக் கூறற்பாலவாய உவமைகளில் ஒன்றாகும். அமுதால் விட மொழிதல் இங்கு உவமேயமாக, அஃது உவமையாயிற்று. அவசம் - வச மின்மை; மூர்ச்சை. மேவினர் : முற்றெச்சம். (உரு)

ஆகச்செய்யுள் - ௧௬௨௫.

———

இருபத்தொன்பதாவது

மாயப் பசுவை வதைத்த படலம்

[கலிநிலைத்துறை]

சுருதி யின்புறத் தவர்விடு மராவினைச் சுருதி
கருத ரும்பர னருளுடைக் கௌரியன் றுணித்த
பரிசி தங்கது பொருதமண் படிறர்பின் விடுப்ப
வருபெ ரும்பசு விடையினுன் மாய்த்ததும் பகர்வாம்.

(இ - ள்.) சுருதியின் புறத்தவர் விடும் அராவினை - வேதநெறிக்குப் புறம்பாகிய சமணர்கள் ஏவிய பாம்பினை, சுருதி கருது அரும் பரன் அருள் உடைக் கௌரியன் - வேதமுஞ் சிந்தித்தற்கரிய இறைவனது திருவருளைப் பெற்ற அனந்தகுண பாண்டியன், துணித்த பரிசு இது - துண்டு படுத்திய திருவிளையாடல் இது: அங்கு அதுபொருது - (இனி) அங்கு அதனைப் பொறுக்காது, அமண் படிறர் - சமணராகிய வஞ்சகர், பின் விடுப்ப வரு பெரும்பசு - பின்பு ஏவவருகின்ற பெரிய (மாயப்) பசுவினை, விடையினுல் மாய்த்ததும் பகர்வாம் - (சோமசுந்தரக்கடவுள்) இடபத்தினுல் வதைத்தருளிய திருவிளையாடலையுங் கூறுவாம்.

புறம் - மாறுபாடு. கௌரியன் துணித்ததும் இறைவன் புரிந்த திருவிளையாடலே யென்பார் 'பரனரு ளுடைக் கௌரியன் றுணித்த' என்ருர். விடையினுன் என்பதனை இரட்டுற மொழிதலாகக்கொண்டு இடபத்தையுடைய சோமசுந்தரக் கடவுள் என்றும், இடபத்தினுல் என்றும் உரைத்துக் கொள்க. (க)

பணப்பெ ரும்பகு வாயுடைப் பாந்தளை யனந்த்
குணப்பெ ருந்தகை துணித்தபின் பின்வரு குண்டர்
தணப்ப ருங்குழாங் காலினுற் றள்ளுண்டு செல்லுங்
கணப்பெ ரும்புயல் போலுடைந் தோடின கலங்கி.

(இ - ள்.) பணம் பெரும்பகுவாய் உடை பாந்தளை - படம் பொருந்திய பெரிய பிளந்த வாயையுடைய பாம்பினை, அனந்தகுணப் பெருந்தகை துணித்தபின் - அனந்தகுணன் என்னும் பெரிய தகுதியை யுடைய பாண்டியன் துணித்த பின்பு, பின்வரு குண்டர் தணப்பு அரும் குழாம் - பின்னே வந்த சமணர்களின் நீங்காத கூட்டங்கள், காலினல் தள்ளுண்டு செல்லும் - காற்றினுற் றள்ளப்பட்டு ஓடும், பெரும்புயல் கணம்போல் - பெரிய முகிற்படலம் போல, உடைந்து கலங்கி ஓடின - இரிந்து மனம் கலங்கி ஓடுவவாயின.

குண்டர் குழாங்கள் புயற்கணம்போல் கலங்கியோடின என்க. (உ)

உடைந்து போனவ ரனைவரு மோரிடத் திருள்போல்
அடைந்து நாமுன்பு விடுத்தமால் யானைபோ லின்று
தொடர்ந்த பாம்பையுந் தொலைத்தனர் மேலினிச் சூழ்ச்சி
மிடைந்து செய்வதை யாதென வினையமோன் றோர்வார்.

(இ - ள்.) உடைந்து போனவர் அனைவரும் - (அங்ஙனம்) இரிந்து ஓடினவராகிய அச்சமண ரனைவரும், ஓர் இடத்து இருள்போல் அடைந்து - ஓரிடத்தில் இருள் செறிந்ததுபோலச் செறிந்து, நாம் முன்பு விடுத்த மால் யானைபோல் - நாம் முன் விடுத்த பெரிய யானையைக் கொன்றதுபோல, இன்று தொடர்ந்த பாம்பையும் தொலைத்தனர் - இன்று சென்ற பாம்பினையும் அழித்தார்கள்; இனிமேல் மிடைந்து யாது சூழ்ச்சி செய்வது என - இனி நாம் நெருங்கி யாது சூழ்ச்சி செய்வது என்று, வினையம் ஒன்று ஓர்வார் - ஒரு வஞ்சத்தை எண்ணுவாராயினர்.

செய்வது, ஐ : சாரியை. வினையம் - வஞ்சம். யாதெனக் கருதினவர் பின் ஓர்வாராயின ரென்க. (கூ)

ஆவை யூறுசெய் யார்பழி யஞ்சுவா ரதனை
ஏவு வாமிது வேபுணர்ப் பென்றுசூழ்ந் திசைந்து
பாவ காரிகள் பண்டுபோற் பழித்தழல் வளர்த்தார்
தாவி லாவுரு வாகியோர் தானவன் முளைத்தான்.

(இ - ள்.) ஆவை ஊறு செய்யார் - பசுவிற்குத் துன்பஞ் செய்யார்கள், பழி அஞ்சுவார் - (அதற்குத் துன்பஞ் செய்தலால் வரும்) பழியை அஞ்சுவார்கள் (ஆகலின்), அதனை ஏவுவாம் - அப்பசுவை விடுப்போம், இதுவே புணர்ப்பு என்று சூழ்ந்து இசைந்து - இதுவே தக்க சூழ்ச்சி யென்று கருதி யாவருங் கருத்தொத்து, பாவகாரிகள் - பாவகாரிகளாகிய அச்சமணர், பண்டுபோல் பழித்தழல் வளர்த்தார் - முன் போலவே கொடிய வேள்வி ஒன்றினைச் செய்தனர்; தாவு இல் ஆ உரு ஆகி ஓர் தானவன் முளைத்தான் - கெடுதலில்லாத பசுவின் வடிவாகி ஓர் அவுணன் தோன்றினான்.

புணர்ப்பு - சூழ்ச்சி. பாவகாரிகள் - பாவமே செய்வோர்;

"பாவ காரிகள் பார்ப்பரி தென்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே"

என்பது தேவாரம். ஆவின் சாதியியற்கை பற்றித் 'தாவில் ஆ' என்றார்;

"விடுநில மருங்கிற் படுபுல் லார்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாட் டொட்டுஞ் சிறந்ததன் றீம்பால்
அறந்தரு நெஞ்சோ டருள்சுரந் தூட்டும்
இதனொடு வந்த செற்ற மென்னை"

என்று மணிமேகலை கூறுதல் சிந்திக்கற் பாலது. (௪)

குண்ட ழற்கணின் றெழுந்தவக் கொடியவெம் பசுவைப்
பண்டு போலவர் விடுத்தனர் கூடலம் பதிமேல்
உண்டு மில்லையு மெனத்தடு மாற்றநூ லுரைத்த
பிண்டி யானுரை கொண்டுழல் பேயமண் குண்டர்.

(இ-ள்.) குண்டு அழல்கண் நின்று எழுந்த அக் கொடிய வெம் பசுவை - வேள்விக் குண்டத்தின் தீயினின்றுந் தோன்றிய அந்தக் கொடிய பசுவினை, கூடலம்பதிமேல் - மதுரைப்பதியின் மேல், உண்டும் இல்லையும் என தடுமாற்ற நூல் உரைத்த பிண்டியான் - அத்திநாத்தி என்ற தடுமாற்ற நூலினைக் கூறிய அசோக மரத்தினடியிலுள்ள அருகனது, உரை கொண்டு உழல் பேய் அமண் குண்டர் அவர் - உரையினைக் கொண்டு உழலுகின்ற பேய் போன்ற சமணக் கீழ் மக்களாகிய அன்னார், பண்டுபோல் விடுத்தனர் - முன்போல் விடுத்தார்.

குண்டு - வேள்விக்குண்டம், கொடிய வெம்: ஒரு பொருளன. பண்டுபோல்-முன்பு யானையையும் நாகத்தையும் விடுத்தமைபோல கூடலம்பதி, அம்: சாரியை. உண்டு இல்லை - அத்தி நாத்தி; அநேகாந்த மாக விரித்துரைக்கும் எழுவகையும் இவ்விரண்டுள் அடங்குதலின் யாண்டும் இவையே கூறப்படும். பிண்டி - அசோகு. குண்டராகிய அவர் பசுவைக் கூடலம்பதிமேல் விடுத்தனர் என்க. (ரு)

[கலி விருத்தம்]

மாடமலி மாளிகையி லாடுகொடி மானக்
கோடுகளி னோடுமுகில் குத்திமிசை கோத்துச்
சேடன்முடி யுங்கதிர்கொள் சென்னிவரை யுந்தூள்
ஆடவடி யிட்டுலவை யஞ்சிட வுயிர்த்தே.

(இ-ள்.) மாடம் மலி மாளிகையில் ஆடு கொடி மான - மாடங்கள் நிறைந்த மாளிகையின்கண் ஆடுகின்ற கொடியை யொப்ப, கோடுகளின் - கொம்புகளினால், ஓடு முகில் குத்திமிசை கோத்து - வானில் ஓடுகின்ற மேகங்களைக் குத்தி மேலே கோத்து, சேடன் முடியும் - அனந்தனது முடியும், கதிர்கொள் சென்னி வரையும் தூள் ஆட - ஒளியினைக் கொண்ட முடியினையுடைய மேருமலையும் புழுதியாட, அடி இட்டு - அடிபெயர்த்துவைத்து, உலவை அஞ்சிட உயிர்த்து - காற்றும் அஞ்சுமாறு மூச்செறிந்து.

மாடம் - மேனிலை. (சு)

விடுத்திடு முயிர்ப்பினெதிர் பூளைநறை வீபோல்
அடுத்திடு சராசர மனைத்துமிரி வெய்தக்
கடுத்திடு சினக்கனலி னுக்குலக மெல்லாம்
மடுத்திடு தழற்கடவுள் வார்புனலை மானி.

(இ - ள்.) விடுத்திடும் உயிர்ப்பின் எதிர் - விடுகின்ற மூச்சினெதிரே, அடுத்திடு சரஅசரம் அனைத்தும் - நேர்படுகின்ற இயங்கியற் பொருளும் நிலையியற் பொருளுமாகிய எல்லாம், நறை பூளை வீபோல் இரிவு எய்த - தேனையுடைய பூளைப்பூப் போலப் பறக்கவும், கடுத்திடு சினக்கனலி னுக்கு - மிக் கெழுகின்ற கோபத்தீயினுக்கு, உலகம் எல்லாம் மடுத்திடு தழல் கடவுள் வார் புனலே மான - உலகமனைத்தையும் அழிக்கும் தீக் கடவுள் பெருகிய நீரினை யொப்பதாகவும்.

சினக்கனலின் வெம்மையை நோக்குழி ஊழித்தீயும் நீர்போலத் தண்ணிதாய்த் தோன்ற வென்க. (எ)

உடன்றிறைகொள் புள்ளோடு விலங்கலறி யோட
மிடைந்தபழு வத்தோடு விலங்கலே மருப்பால்
இடந்தெறி மருத்தென வெறிந்தளவி லோரைத்
தொடர்ந்துடல் சிதைத்துயிர் தொலைத்திடியி னார்த்தே.

(இ - ள்.) இறைகொள் புள்ளொடு - தங்கிய பறவைகளோடு, விலங்கு அலறி ஓட - மிருகங்களும் அலறி ஓடுமாறு, மிடைந்த பழுவத் தொடு விலங்கலே - நெருங்கிய வனங்களோடு மலைகளையும், உடன்று மருப்பால் இடந்து - வெகுண்டு கொம்பினால் அடியொடு பெயர்த்து, எறி மருத்து என எறிந்து - வீசுகின்ற காற்றைப்போல எறிந்து, அளவி லோரைத் தொடர்ந்து உடல் சிதைத்து உயிர் தொலைத்து - அளவிறந்த மக்களைப் பின்தொடர்ந்து அவர்கள் உடலைச் சேதித்து உயிரைத் தொலைத்து, இடியின் ஆர்த்து - இடிபோலப் பேரொலி செய்து.

இறைகொள் - வனங்களிலும் மலைகளிலும் தங்குதலைக் கொண்ட. உடன்று இடந்து எறிந்து எனக் கூட்டுக. (அ)

மறலிவரு மாறென மறப்பசு வழிக்கோண்
டறலிவர் தடம்பொருநை யாறுடைய மாறன்
திறலிமலர் மங்கையுறை தென்மதுரை முன்னு
விறலிவரு கின்றதது மீனவ னறிந்தான்.

(இ - ள்.) மறலி வருமாறு என மறப்பசு வழிக் கொண்டு - கூற்று வன் வருந் தன்மைபோலக் கொலைத்தொழிலையுடைய பசுவானது வழி நடந்து, அறல் இவர் தடம் பொருநை ஆறு உடைய மாறன் - கருமணல் பரந்த பெரிய பொருநை யாற்றினையுடைய பாண்டியனது, திறலி மலர் மங்கை உறை தென்மதுரை முன்னு - வீரமகளும் திருமகளும் உறைகின்ற தென்றிசைக்கணுள்ள மதுரையை நோக்கி, விறலி வரு கின்றது - வெற்றிகொண்டு வாராநின்றது; அது மீனவன் அறிந்தான் - அதனைப் பாண்டியன் அறிந்தான்.

திறலி - திறல் உடையவள்; கொற்றவை; இ: பெயர் விகுதி. விறலி - விறல் கொண்டு. ''மாடமலி'' என்பது முதலிய செய்யுட்களி லுள்ள எச்சங்களை 'வருகின்றது' என்பததேனாடு முடிக்க. (கூ)

(பா - ம்.) *திறலி மரைமங்கை.

மீனவனு மாநகருண் மிக்கவரு முக்கண்
வானவனை மாமதுரை மன்னவனை முன்னோர்
தானவனை யாழிகொடு சாய்த்தவனை யேத்தா
ஆனதுரை செய்துமென வாலய மடைந்தார்.

(இ - ள்.) மீனவனும் - அனந்தகுண பாண்டியனும், மாநகருள் மிக்கவரும் - பெரிய அந் நகரத்துள் மேம்பட்டவரும், முக்கண் வானவனை - மூன்று கண்களையுடைய தேவனை, மா மதுரை மன்னவனை - பெரிய மதுரைக்கு மன்னனாகிய சுந்தரபாண்டியனை, முன் ஓர் தானவனை ஆழிகொடு சாய்த்தவனை - முன்னாளிலே சலந்தரன் என்னும் ஓர் அசுரனைத் திகிரிப்படையினால் வதைத்தவனை, ஏத்தா ஆனது உரை செய்தும் என - துதித்து நிகழ்ந்த செய்தியைக் கூறுவேமென்று, ஆலயம் அடைந்தார் - திருக்கோயிலை அடைந்தார்கள்.

மிக்கவர் - மேலோர். ஒரு பொருள்மேற் பலபெயர் வந்தன. ஆனது - நிகழ்ந்தது. உரை செய்தும் என - உரைப்பேம் என்று. (க0)

நாதமுறை யோபொதுவின் மாறிநட மாடும்
பாதமுறை யோபல வுயிர்க்குமறி விக்கும்
போதமுறை யோபுனித பூரண புராண
வேதமுறை யோவென விளித்துமுறை யிட்டார்.

(இ - ள்.) நாதமுறையோ - நாதனே முறையோ; பொதுவில் மாறி நடம் ஆடும் பாதமுறையோ - வெள்ளியம்பலத்திலே கால்மாறி ஆடியருளும் திருவடியையுடையவனே முறையோ; பல உயிர்க்கும் அறிவிக்கும் போதமுறையோ - எல்லா உயிர்களுக்கும் அறிவிக்கின்ற போதனே முறையோ; புனித - தூயவனே, பூரண - எங்கும் நிறைந்தவனே, புராண - பழம்பொருளானவனே, வேதமுறையோ - வேதத்தை அருளியவனே முறையோ; என விளித்து முறையிட்டார் - என்று கூவி முறையிட்டார்கள்.

நாதன் - தலைவன்; நாதத்தின் வடிவானவன் என்றுமாம். உயிர்களெல்லாம் இறைவன் அறிவிக்க அறியு மியல்பின வாகலின் 'பலவுயிர்க்கும் அறிவிக்கும் போத' என்றார். நாத பாத என்றிங்ஙனம் விளித்து, முறையோ என முறையிட்டார் என்க. முறையிடுதல் - பிறரால் நலிதலுறுவார் தம்மைக் காக்கவேண்டுமெனக் கூவி வேண்டுதல். (கக)

நின்றுமுறை யிட்டவரை நித்தனரு ணோக்கால்
நன்றருள் சுரந்திடப நந்தியை விளித்துச்
சென்றமண ரேவவரு தீப்பசுவை நீபோய்
வென்றுவரு வாயென விளம்பினன் விடுத்தான்.

(இ - ள்.) நின்று முறையிட்டவரை - (அங்ஙனம் திருமுன்) நின்று முறையிட்டவர்களை, நித்தன் - இறைவன், அருள் நோக்கால் நன்று

அருள் சுரந்து - திருவருள் நோக்கத்தாலே மிகவும் கருணைபுரிந்து, இடப நந்தியை விளித்து - இடப வடிவாயுள்ள திருநந்திதேவரை அழைத்து, நீ போய் - நீ சென்று, அமணர்ஏவ சென்று வரு தீப் பசுவை வென்று வருவாய் என - சமணர்கள் ஏவுதலால் வருகின்ற கொடிய பசுவை வென்று வருவாயாக என்று, விளம்பினன் விடுத்தான் - கூறிவிடுத்தான்.

நன்று - பெரிது. சென்று, வரு என்பன ஒரு பொருளே குறித்தன. விளம்பினன் : முற்றெச்சம். (கஅ)

[கலிநிலைத்துறை]

தண்டங் கெழுகூற் றமுமஞ்சத் தறுகட் செங்கட்
குண்டங் தழன்று கோதிப்பக்கோடு நாக்கெ றிந்து
துண்டந் துழாவக் கடைவாய்நுரை சோர்ந்து சென்னி
அண்டந் துழாவ வெழுந்தன்றட லேறு மாதோ.

(இ - ள்.) தண்டம் கெழு கூற்றமும் அஞ்ச - தண்டப்படையை ஏந்திய கூற்றுவனும் அஞ்சும்படி, தறுகண் செங்கண் குண்டம் தழன்று கொதிப்ப - கொடிய சிவந்த கண்களாகிய குழிகள் அழற்சிகை விட்டுக் கொதிக்கவும், கொடு நாக்கு எறிந்து துண்டம் துழாவ - வளைந்த நா வானது தாவி மூக்கினைத் துழாவவும், கடைவாய் நுரை சோர்ந்து சென்னி அண்டம் துழாவ - கடைவாய் நுரை ஒழுகப் பெற்றுத் தலை யானது அண்டத்தைத் தடவவும், அடல் ஏறு எழுந்தன்று - வலி மிக்க இடபம் எழுந்தது.

குண்டம் - தீ வளர்க்கும் குழி. எறிந்து - தாவி யென்னும் பொருட்டு, துண்டம் - மூக்கு. எழுந்தன்று - எழுந்தது ; அன் : சாரியை. மாது, ஓ : அசைகள். (கங)

நெற்றித் தனியோடை நிமிர்ந்து மறிந்த கோட்டிற்
பற்றிச் சுடர்செம் மணிப்பூண்பிறை பைய நாகஞ்
சுற்றிக் கிடந்தா லெனத் தோன்றவெள் ளாழியீன்ற
கற்றைக் கதிர்போற் பருமம்புறங் கெளவி மின்ன.

(இ - ள்.) நெற்றித் தனி ஓடை நிமிர்ந்து - நெற்றியிலுள்ள ஒப் பற்ற பட்டமானது சிறக்கப்பெற்று, மறிந்த கோட்டில் பற்றிச் சுடர் செம்மணிப் பூண் - வளைந்த கொம்பினைப் பொருந்தி ஒளிவிடும் சிவந்த மாணிக்கத்தாலாகிய பூணானது, பிறை - மூன்றாம் பிறையை, பைய நாகம் சுற்றிக் கிடந்தாலெனத் தோன்ற - படத்தையுடைய கேது வென்னும் பாம்பானது வளைந்து கிடந்தாற்போலத் தோன்றவும், வெள் ஆழி ஈன்ற கற்றைக் கதிர்போல் பருமம் புறம் கௌவி மின்ன - வெள் ளிய கடல் பெற்ற நெருங்கிய கிரணத்தையுடைய சூரியனைப்போலப் டோன்ணலாகிய கவசம் உடம்பின் புறத்திலே பொருந்தி விளங்கவும்.

செம்மணிப் பூணுக்கேற்பச் செம்பாம்பாகிய கேதுவைக் கொள்க. வளைந்த கொம்பிற்குப் பிறையும், பூணுக்குக் கேதுவும், நெற்றிப்

பட்டத்திற்கு அதன் படமும் உவமங்களாம். பைய : சினையடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். வெள் ஆழி - வெள்ளிய அலையையுடைய கடல் என்றுவது, பாற்கடல் என்றுவது கொள்க. வெண்ணிற உடம்பிற் கிடந்த பொற் கவசத்திற்கு வெண்கடலில் முளைத்து விளங்கும் ஞாயிறு உவமமாயிற்று. பருமம் - கலனை, கவசம். (கச)

கோட்டுப் பிறைகால் குளிர்வெண்கதிர்க் கற்றை போலச்
சூட்டுக் கவரித் தோடைத்தோங்கலு நெற்றி முன்னுப்
பூட்டுத் தரள முகவட்டும் போலியப் பின்னல்
மாட்டுச் சதங்கைத் தோடைகல்லென வாய்விட் டார்ப்ப.

(இ - ள்.) கோட்டுப் பிறைகால் குளிர் வெண்கதிர்க்கற்றைபோல - கொம்பாகிய பிறை கக்கிய குளிர்ந்த வெள்ளிய கதிர்த்திரளைப்போல, கவரித்தொடை சூட்டுத் தொங்கலும் - கவரியின் மயிராற் றொடுக்கப்பட்ட சூட்டாகிய தொங்கலும், நெற்றி முன்னுப் பூட்டுத் தரள முகவட்டும் பொலிய - நெற்றிக்கு முன்னுகப் பூட்டுதலையுடைய முத்தாலாகிய முகவட்டும் பொலிந்து விளங்கவும், பின்னல் மாட்டுச் சதங்கைத் தொடை கல்லென வாய்விட்டு ஆர்ப்ப - பின்னலாகிய மாட்டுச் சதங்கை மாலை கல்லென்று வாய்விட்டு ஒலிக்கவும்.

சூட்டு - உச்சியிலணிவது; ஈண்டுக் கொம்பினுச்சி. தொங்கல் - குஞ்சம். வட்டு - வட்டம். தொங்கலும் முகவட்டும் கதிர்க்கற்றை போலப் பொலிய என்க. கல்லென : ஒலிக்குறிப்பு. (கரு)

பணிநா வசைக்கும் படியென்னக் கழுத்தில் வீர
மணிநா வசைப்ப நகைமுத்தின் வகுத்த தண்டை
பிணிநாண் சிறுகிங் கிணிபிப்பல மாலைத் தொங்கல்
அணிநா ணலம்பச் சிலம்பார்ப்ப வடிக ணான்கும்,

(இ - ள்.) பணி நா அசைக்கும்படி என்ன பாம்பு நாவினை அசைக்குந் தன்மைபோல, கழுத்தில் வீரமணி நா அசைப்ப - கழுத்திலணிந்த வீரகண்டை நாவினை அசைத்து ஒலிக்கவும், நகை முத்தின் வகுத்த தண்டை - ஒளிபொருந்திய முத்தை உள்ளிடு பருக்கையாகக் கொண்டு செய்த தண்டையும், நாண் பிணி சிறு கிங்கிணி - கயிற்றிற் கோத்த சிறு சதங்கை மாலையும், நாண் மாலை அணி பிப்பலம் தொங்கல் - கயிற்றில் வரிசைப்படக் கோத்த அழகிய அரசிலை வடிவமாகச் செய்த மாலையும். அலம்ப - ஒலிக்கவும், அடிகள் நான்கும் சிலம்பு ஆர்ப்ப - நான்கு கால்களிலும் சிலம்புகள் ஒலிக்கவும்.

பிப்பலம் - அரசு. பிப்பல மாலையாகிய தொங்கல் என்றும், நாணுகிய அணி என்றும் வேறு வேருகக் கொள்ளலுமாம். (கசு)

அடியிட்டு நிலங்கிளைத் தண்டமேண் டிக்கும் போர்ப்பப்
பொடியிட் டுயிர்த்துப் பொருகோட்டினிற் குத்திக் கோத்திட்
டிடியிட் டதிர்கா ரெதிரேற்றெழுந் தாங்கு நோக்கிச்
செடியிட் டிருகண் ணழல்சிந்த நடந்த தன்றே.

(இ - ள்.) அடி யிட்டு நிலம் கிளைத்து - அடியினால் நிலத்தைக் கிளைத்து, அண்டம் எண் திக்கும் போர்ப்பப் பொடிஇட்டு - அண்டத்தையும் எட்டுத் திசைகளையும் மூடுமாறு புழுதிசெய்து, உயிர்த்து - பெருமூச்செறிந்து, பொரு கோட்டினில் குத்திக் கோத்திட்டு - பொருதற்குரிய கொம்பினாற் குத்தி (மண்ணைக்) கோத்துக்கொண்டு, இடி இட்டு அதிர் கார் எதிர் ஏற்று எழுந்தாங்கு நோக்கி - இடித்து முழங்கும் முகிலினை எதிர்த்தெழுந்ததுபோல (மேல்) நோக்கி, இரு கண் செடி இட்டு அழல் சிந்த நடந்தது - இரண்டு கண்களும் ஒளி கான்று தீயினைச் சிந்த நடந்தது.

அடி யிட்டு, இட்டு: மூன்றனுருபின் பொருட்டு. பொடியிட்டு - பொடியாக்கி. இடியிட்டு - இடித்து. செடி - ஒளி; கற்றையுமாம். அன்று, ஏ: அசை. (௧௭)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

பால்கொண்ட நிழல்வெண் டிங்கட் பகிர்கொண்ட மருப்பிற் கொண்மூச்
சூல்கொண்ட வயிற்றைக் கீண்டு துள்ளியோர் வெள்ளிக் குன்றங்
கால்கொண்டு நடந்தா லென்னக் கடிந்துடன் றாவைச் சீற்றம்
மேல்கொண்டு நாற்றம் பற்றி வீங்குயிர்ப் பெறிந்து கிட்டா.

(இ - ள்.) பால் கொண்ட நிழல் வெண் திங்கள் பகிர் கொண்ட மருப்பில் - பால்போலும் வெள்ளிய ஒளியினையுடைய திங்களின் பிளவையொத்த கொம்பினால், கொண்மூ சூல் கொண்ட வயிற்றைக்கீண்டு துள்ளி - முகிலினது சூலைக்கொண்ட வயிற்றைக் கிழித்துத் துள்ளிக்கொண்டு, ஓர் வெள்ளிக்குன்றம் கால் கொண்டு நடந்தால் என்னக் கடிந்து - வெள்ளி மலை ஒன்று கால் பெற்று நடந்தாற்போல விரைந்து சென்று, உடன்று - பகைத்து, சீற்றம் மேல் கொண்டு - வெகுளி மீக்கொண்டு, நாற்றம் பற்றி வீங்கு உயிர்ப்பு எறிந்து ஆவைக் கிட்டா - நாற்றம் பிடித்துப் பெருமூச்செறிந்து பசுவினை நெருங்கி.

பால் கொண்ட வெண்ணிழல் என்க. பால் கொண்ட, பகிர் கொண்ட என்பவற்றில் கொண்ட என்பது உவமவுருபு. கீண்டு, மரூஉ. நாற்றம் பற்றுதல் நிலத்தை மோந்து நாற்றமறிதல். நாற்றம் பிடித்தலும் வீங்குயிர்ப் பெறிதலும் ஏற்றின் சாதித்தன்மை. வெள்ளிக்குன்றம் கால்கொண்டு நடந்தாலென்ன என்பது இல் பொருளுவமை. (௧௮)

குடக்கது குணக்க தென்னக் குணக்கது குடக்க தென்ன
வடக்கது தெற்க தென்னத் தெற்கது வடக்க தென்ன
முடக்குறு மருப்பிற் கோத்து முதுகுகீ ழாகத் தள்ளும்
எடுக்குறு மலையைக் கால்பேர்த் தெனத்திசைப் புறத்து வீசும்.

(இ - ள்.) குடக்கது குணக்கது என்ன - மேலைத்திசையில் உள்ள பசு அப்பொழுதே கீழ்த்திசையில் உள்ளது என்று சொல்லவும், குணக்கது குடக்கது என்ன - கிழக்கேயுள்ளது மேற்கேயுள்ள தென்னவும், வடக்கது தெற்கது என்ன - வடக்கிலுள்ளது தெற்கே-

யுள்ளதென்னவும், தெற்கது வடக்கது என்ன - தெற்கிலுள்ளது வடக்கே யுள்ளதென்னவும், முடுக்குறும்-இந் நான்கு திசைகளிலும் அதனை இடையருது துரத்தும்; மருப்பில் கோத்து முதுகுகீழ் ஆகத்தள்ளும்-கொம்பிற் கோத்து முதுகு கீழாமாறு தள்ளும்; எடுக்குறும் - மீண்டு எடுக்கும்; மலையைக் கால் பேர்த்து என - மலையைக் காற்றுப் பெயர்த்து வீசியது போல, திசைப்புறத்து வீசும் - திசைகளின் புறத்தில் எறியும்.

குடக்கது. குணக்கது, வடக்கது, தெற்கது என்பன வினைக்குறிப்புப் பெயர். ஊழிக்காற்ருனது மலையினைப் பெயர்த்தெறிந்தாற்போல வென்க. பேர்த்தென: விகாரம். (கக)

கொழுமணிச் சிகர கோடி சிதைபடக் குவட்டில் வீசும்
பழுமரச் செறிவில் வான்ருேய் பணையிற வெறியும் வானின்
விழுமறப் பசுப்போல் வீழ வேலைவாய் வீசு மிங்ஙன்
செழுமதிக் கோட்டு நந்தித் தேவிளை யாடல் செய்து.

(இ - ள்.) கொழுமணிச் சிகரகோடி சிதைபடக் குவட்டில் வீசும்-பருத்த உருப்பெற்ற மணிகள் நிறைந்த சிகரவரிசைகள் தூளாகும்படி மலையின்கண் எடுத்து எறியும்; பழுமரச் செறிவில் ஆலமரங்களின் நெருக்கின்கண், வான் தோய் பணை இற எறியும் - வானை யளாவிய அவற்றின் கிளைகள் முறியுமாறு வீசும்; வானின் விழும் அறப் பசுப்போல் வீழ வேலைவாய் வீசும்-வானுலகினின்றும் கடலில் விழும் காமதேனுவைப் போல விழுமாறு கடலின்கண் எடுத்து வீசும்; இங்ஙன் - இங்ஙனம், செழுமதிக் கோட்டு நந்தித்தே விளையாடல் செய்து - செழுவிய (அரை) மதிபோன்ற கொம்பினையுடைய திருநந்தியாகிய தேவு போர்விளையாடல் செய்து.

துருவாச முனிவன் சாபத்தால் இந்திரன் செல்வமுற்றும் கடலில் ஒளித்த ஞான்று காமதேனுவும் அதன்கண் விழுந்ததாகலின் 'வானின் விழும் அறப் பசுப்போல்' என்றார். வானின், ஐந்தனுருபு நீக்கப் பொருட்டு. அவ் வறப் பசுப்போல் இம் மறப்பசு வீழ வென்க தே - தெய்வம். (உ0)

பூரிய ரெண்ணி யாங்கே பொருதுயி ரூற்றஞ் செய்யா
தாரிய விடைதன் மாண்ட வழகினைக் காட்டக் காமுற்
றீரிய நறும்பூ வாளி யேறுபட் டாவி யோடும்
வீரியம் விடுத்து வீழ்ந்து வெற்புரு வாயிற் றன்றே.

(இ - ள்.) பூரியர் எண்ணி யாங்கே - கீழ்மக்களாகிய சமணர்கள் எண்ணிய வண்ணமே, பொருது உயிர் ஊற்றம் செய்யாது - பொருதலினால் உயிர்க்குத் துன்பஞ் செய்யாது, ஆரிய விடை தன் மாண்ட அழகினைக் காட்ட - அழகிய இடபமானது தனது மாட்சிமைப்பட்ட அழகைக் காட்ட, காமுற்று-(அப் பசுவானது) அதனை விரும்பி, ஈரிய நறும் பூ வாளி ஏறுபட்டு-குளிர்ந்த நறிய மலரம்புகளால் ஏறுண்டு, ஆவியோடும் வீரியம் விடுத்து - உயிரோடு வீரியத்தையும் விட்டு, வீழ்ந்து வெற்பு உரு ஆயிற்று-கீழே விழுந்து மலைவடிவமாயிற்று.

ஆவை யூறு செய்யார் எனக் கருதினராகலின் அவர் எண்ணியாங்கே என்றார். ஊற்றம் - ஊறு. ஆரிய விடை - அரிய விடையென்றும், குரவுத் தன்மையுடைய விடையென்றும் உரைத்தலுமாம். வீரியத்துடன் ஆவியை விடுத்தென்க. அன்று, ஏ: அசைகள். (உக)

வாங்கின புரிசை மாட மாநக ராரு வின்பந்
தூங்கின வரவாய் வேம்பின் றோடவிழ் தாரான் றிண்டோள்
வீங்கின விரவி தோன்ற வீங்கிரு ளுடைந்த தென்ன
நீங்கின நாண மோடு நிரையமண் குழாங்க ளெல்லாம்.

(இ - ள்.) வாங்கின புரிசைமாட மாநகர் - வளைந்த மதிலையுடைய மாடங்கள் நிறைந்த பெரிய மதுரைப்பதி முழுதும், ஆரு இன்பம் தூங்கின - நீங்காத இன்பத்தில் அழுந்தின; அரம் வாய் வேம்பின் தோடு அவிழ் தாரான் திண்தோள் வீங்கின - அரம்போல இரு புறத்தும் வாயுள்ள இலைகளையுடைய வேம்பின் இதழ் விரிந்த மாலையையுடைய அனந்தகுண பாண்டியனின் திண்ணிய தோள்கள் பூரித்தன; இரவி தோன்ற விங்கு இருள் உடைந்தது என்ன - பரிதி உதித்தகாலை செறிந்த இருள் சிதைந்தாற்போல, நிரை அமண் குழாங்கள் எல்லாம் நாணமோடு நீங்கின - வரிசை வரிசையாயுள்ள சமணக்கூட்டங்களனைத்தும் நாணத்துடன் புறங்கொடுத் தோடின.

நகரிலுள்ளா ரனைவரும் என்பார் 'நகர்' என்றார். அரம் - வாளரம்; இவ்வுவமம் பழஞ் செய்யுட்களிற் பயின்றுளது. நாணம் - வெள்குதல்; நாணும் நீங்கிற்று அவர்களும் நீங்கினர் எனலுமாம். (உஉ)

உலகறி கரியாத் தன்பே ருருவினை யிடபக் குன்றாக்
குலவுற நிறுவிச் சூக்க வடிவினாற் குறுகிக் கூடற்
றலைவனை வணங்க வீசன் றண்ணருள் சுரந்து பண்டை
இலகுரு வாகி யிங்ங னிருக்கென விருத்தி னானே.

(இ - ள்.) உலகு அறி கரியா - உலகத்தார் அறியுஞ் சான்றாக, தன் பேர் உருவினை இடபக் குன்றாக் குலவுற நிறுவி - நந்தி தனது பெரிய வடிவினை இடப மலையாக விளங்க நிறுத்தி, சூக்க வடிவினால் கூடல் தலைவனைக் குறுகி வணங்க - நுண்ணிய வடிவினோடு மதுரைநாயகனை அடைந்து வணங்க, ஈசன் தண் அருள்சுரந்து - அவ் விறைவன் தண்ணிய கருணை சுரந்து, பண்டை இலகு உருவு ஆகி இங்ஙன் இருக்க என இருத்தினான் - முன்னைய விளங்கிய வடிவமாகி இங்கு இருப்பாயாக வென்று இருத்தி யருளினான்.

இந் நிகழ்ச்சியை உலகினர் அறியுஞ் சான்றாக வென்க. பேருரு - தூலவடிவம். சூக்கம் - சூக்குமம்; நுண்மை. இருக்கென: அகரந் தொகுத்தல். (உங

அந்நிலை நகரு ளாரு மரசனு மகிழ்ச்சி தூங்கிச்
சன்னிதி யிருந்த நந்தி தாளடைந் திறைஞ்சிப் போக
மின்னவிர் சடையா னந்தி வென்றியால் வீறு நோக்கி
இன்னமு தனையா ளோடுங் களிசிறந் திருக்கு நாளில்.

(இ - ள்.) அந்நிலை நகருளாரும் அரசனும் மகிழ்ச்சி தூங்கி - அப்பொழுது நகரிலுள்ளாரும் மன்னனும் களிப்பு மிக்கு, சன்னிதி இருந்த நந்தி தாள் அடைந்து இறைஞ்சிப் போக - திரு முன்பே இருந்த திரு நந்தி தேவரின் திருவடியை அடைந்து வணங்கிச் செல்ல, மின் அவிர் சடையான் - மின்போல் விளங்குஞ் சடையையுடைய சோமசுந்தரக் கடவுள், நந்தி வென்றி சால் வீறு நோக்கி - அந்நந்தி தேவரின் வெற்றி மிக்க பெருமிதத்தினைக் கண்டு, இன் அமுது அனையாளோடும் களி சிறந்து இருக்கும் நாளில் - இனிய அமுதத்தை யொத்த உமைப் பிராட்டியோடும் களிப்பு மிக்கு இருக்கும் பொழுது.

வீறு - பிறிதொன்றற் கில்லாத சிறப்பு. (௨௪)

அவ்விடை வரைமேன் முந்நீ ரார்கலி யிலங்கைக் கேகுந்
தெவ்வடு சிலையி ராமன் வானர சேனை சூழ
மைவரை யனைய தம்பி மாருதி சுக்கி ரீவன்
இவ்வடல் வீர ரோடு மெய்தியங் கிறுத்தான் மன்னோ.

(இ - ள்.) அவ்விடை வரைமேல் - அந்த இடப மலையின்மேல், முந்நீர் ஆர்கலி இலங்கைக்கு ஏகும் - மூன்று நீர்களையுடைய கடல் சூழ்ந்த இலங்கைக்குச் செல்லா நின்ற, தெவ் அடுசிலை இராமன் - பகைவரைக் கொல்லும் கோதண்டத்தை யேந்திய இராமபிரான், வானர சேனை சூழ - குரக்குப் படைகள் சூழ, மைவரை அனைய தம்பி மாருதி சுக்கிரீவன் - நீலமலையை ஒத்த இலக்குவனும் அனுமானும் சுக்கிரீவனு மாகிய, இவ்வடல் வீரரோடும் எய்தி - இந்த வெற்றியையுடைய வீரர்களோடும் அடைந்து. அங்கு இறுத்தான் - அங்கே தங்கினான்.

மைவரை - மேகந் தவழும் மலையுமாம். மாருதி - காற்றின் மைந்தன். மாருதம் - காற்று. அவ் விடைவரைமேல் எய்தி அங்கு இறுத்தான் என்க. மன் ஓ: அசைகள். (௨௫)

அன்னது தெரிந்து விந்த மடக்கிய முனியங் கெய்தி
மன்னவற் காக்கங் கூறி மழவிடைக் கொடியோன் கூடற்
பன்னரும் புகழ்மை யோது பனுவலை யருளிச் செய்ய
முன்னவன் பெருமை கேட்டு முகிழ்த்தகை முடியோ னாகி.

(இ - ள்.) விந்தம் அடக்கிய முனி - விந்த மலையை அடக்கிய அகத்திய முனிவன், அன்னது தெரிந்து அங்கு எய்தி - அதனை உணர்ந்து அங்குச் சென்று, மன்னவற்கு ஆக்கம் கூறி - மன்னனாகிய இராமனுக்கு ஆக்கமொழி கூறி, மழவிடைக் கொடியோன் கூடல் -

இளமை பொருந்திய இடபமாகிய கொடியையுடைய சோமசுந்தரக் கடவுளது மதுரைப் பதியின், பன் அரும் புகழ்மை ஓது பனுவலை - சொல்லுதற்கரிய புகழைக் கூறும் நூலை, அருளிச் செய்ய - கூறியருள, முன்னவன் பெருமை கேட்டு - அம் முதல்வனது பெருமையைக் கேட்டு, முகிழ்த்தகை முடியோன் ஆகி - கூப்பிய கையையுடைய முடியை யுடையவனாய்.

விந்தம் அடக்கிய - மேருவோடு இகலியோங்கிய விந்தத்தின் வீற்றினை யடக்கிய. புகழ்மை, மை: பகுதிப் பொருள் விகுதி. முடியின் மேற் குவித்த கைகளையுடையனாகி என்க. முனி அருளிச் செய்ய இராமன் கேட்டு என இயையும். (உசு)

முனியொடு குறுகிச் செம்பொன் முளரியுண் மூழ்கி யாதித்
தனிமுத லடியை வேணி முடியுறத் தாழ்ந்து வேத
மனுமுறை சிவாக மத்தின் வழிவழா தருச்சித் தேத்திக்
கனிவுற மன்பி லாழ்ந்து முடிமிசைக் கரங்கள் கூப்பி.

(இ - ள்.) முனியொடு குறுகி - அம் முனிவனோடு சென்று, செம்பொன் முளரியுள் மூழ்கி - சிவந்த பொற்றாமரையில் நீராடி, ஆதித் தனிமுதல் அடியை வேணி முடி உறத் தாழ்ந்து - யாவர்க்கும் ஆதியாகிய ஒப்பற்ற முதற் கடவுளின் திருவடியைச் சடையுடைய தனது முடி பொருந்துமாறு வணங்கி, வேத மனுமுறை சிவாகமத்தின் வழி வழாது அருச்சித்து ஏத்தி - வேத மந்திரத்தின் முறையும் சிவாகமநெறியும் வழுவாது அருச்சித்துத் துதித்து, கனிவுறும் அன்பில் ஆழ்ந்து - கனிந்த பேரன்பில் அழுந்தி, முடிமிசைக் கரங்கள் கூப்பி - முடியின்மேற் கைகளைக் குவித்து நின்று.

தனிமுதல் - முழுமுதல். இராமன் தவக்கோலந் தாங்கி வனம் போந்தானாகலின் 'வேணிமுடியுற' என்றார். மனு - மந்திரம். (உஎ)

புங்கவ சீவன் முத்தி புராதிப புனித போக
மங்கல மேவற்றி னுக்குங் காரண வடிவ மான
சங்கர நினது தெய்வத் தானங்க ளனந்த மிந்த
அங்கண்மா ஞால வட்டத் துள்ளன வவைக டம்மில்.

(இ - ள்.) புங்கவ - தேவர் யாவர்க்கும் உயர்ந்தோனே, சீவன் முத்தி புர அதிப - சீவன் முத்தி புரத்திற்குத் தலைவனே, புனித போக மங்கலம் எவற்றினுக்கும் காரண வடிவம் ஆன சங்கர - தூயபோக நலங்கள் எவற்றுக்குங் காரணவடிவாகிய சங்கரனே, இந்த அம் கண் மா ஞால வட்டத்து - இந்த அழகிய இடத்தையுடைய பெருமை பொருந்திய நிலவுலகின்கண், நினது தெய்வத் தானங்கள் அனந்தம் உள்ளன - நின்னுடைய தெய்வத்தன்மை பொருந்திய பதிகள் பல உள்ளன; அவைகள் தம்மில் - அவற்றுள்.

புங்கவன் - உயர்ந்தோன், வானோன். சீவன் முத்திபுரம் - மதுரை; தலவிசேடத்திற் காண்க. புராதிப: நெடிற்சந்தி. புனித என விளி

யாக்கித் தூயனே என்றுரைத்தலும், தூய போகங்கட்கும் மங்கலங்கட்கும் காரண வுருவான என்றுரைத்தலும் பொருந்தும். சங்கரன் - சுகத்தை யருளுபவன். அனந்தம் - வரம்பில்லன. ஞால வட்டம் - பூமண்டலம். (உஅ)

[கலிநிலைத்துறை]

அற்பு தப்பெரும் பதியிந்த மதுரையீ தாற்றப்
பொற்பு டைத்தென்ப தெவன்பல புவனமு நின்பாற்
கற்பு வைத்துய நீசெய்த கருமத்தின் விருத்தம்
வெற்பு ருக்களாய்ப் புடைநின்று விளங்கலான் மன்னே.

(இ - ள்.) அற்புதப் பெரும்பதி இந்த மதுரை - அற்புதம் பொருந்திய சிறந்த பதியாகும் இந்த மதுரையானது; ஈது ஆற்றப் பொற்பு உடைத்து என்பது எவன் - இது மிக்க மேன்மை யுடைத்தென்று கூறுவது என்னை, பல புவனமும் நின்பால் கற்பு வைத்து உய - எல்லா வுலகமும் நின்னிடத்தே தியானம் வைத்துப் பிழைக்குமாறு. நீ செய்த கருமத்தின் விருத்தம் - நீ செய்தருளிய திருவிளையாடல்களின் வரலாறு, வெற்பு உருக்களாய்ப் புடை நின்று விளங்கலால் - மலைவடிவங்களாய்ப் பக்கத்தே நின்று விளங்குதலால்.

கூறுதல் மிகை யென்பார் 'எவன்' என்றார். கற்பு - கற்றல்; ஈண்டுத் தியானம். கருமம் - காரியம். விருத்தம் - செய்தி. கொலைத் தொழில் என்பது கொண்டு கருமத்தின் ஒவ்வாமை என்றுரைத்தலுமாம். இங்கு நீ புரிந்த கருமத்தின் விருத்தம் வெற்புருக்களாய் இப் பதியின் மேன்மைக்கு அழியாத சான்றுகளாக விளங்குதலின் இது பொற்புடைத் தென்பது எவன் என விரித்துரைத்துக் கொள்க மன், ஓ: அசைகள். (உகூ)

கண்ட வெல்லையிற் றுன்பங்கள் களைதற்கு மளவைக்
கண்ட ரும்பெருஞ் செல்வங்க ளளித்தற்குங் கருணை
கொண்டு நீயுறை சிறப்பினாற் குளிர்மதிக் கண்ணி
அண்ட வாணவிவ் விலிங்கத்துக் கொப்புவே றாமோ.

(இ - ள்.) கண்ட எல்லையில் துன்பங்கள் களைதற்கும் - பார்த்த வளவிலே துன்பங்களைப் போக்குதற்கும், அளவைக்கு அண்டு அரும் பெருஞ் செல்வங்கள் அளித்தற்கும் - அளவைக்குப் பொருந்துதல் இல்லாத பெரிய செல்வங்களை அருளுதற்கும், கருணை கொண்டு நீ உறை சிறப்பினால் - திருவருள் கொண்டு நீ வீற்றிருக்குஞ் சிறப்பினாலே, குளிர்மதிக் கண்ணி அண்ட வாண - குளிர்ந்த பிறையை மாலையாகவுடைய தேவனே, இவ்விலிங்கத்துக்கு வேறு ஒப்பு ஆமோ - இந்தச் சொக்கலிங்கத்துக்கு வேறொன்று ஒப்பாகுமோ ?

அண்டு - கிட்டுதல்: முதனிலைத் தொழிற்பெயர். அளவைக்கு அண்டு அரும் - அளக்க வொண்ணாத என்றபடி, கண்ணி முடியிற் சூடு மாலை. அண்ட வாணன் - தேவன். வாழ்நன் என்பது வாணன் என மருவிற்று. ஓகாரம் எதிர்மறை. (கூ0)

தோய்ந்தி டும்பொழு தீட்டிய தொல்வினைப் படலம்
மாய்ந்தி டும்படி மாய்த்துநின் மங்கல போகம்
ஈந்தி டும்படிக் கிருந்தமா தீர்த்தத்தி னியல்பை
ஆய்ந்தி டும்பொழு ததற்கொரு தீர்த்தமோப் பாமோ.

(இ - ள்.) தோய்ந்திடும் பொழுது-(தன்னில்) மூழ்கும் பொழுதில். ஈட்டிய தொல்வினைப் படலம் மாய்ந்திடும்படி மாய்த்து - தேடிவைத்த பழவினைத் தொகுதி நசிக்குமாறு சிதைத்து, நின் மங்கலபோகம் ஈந்திடும்படிக்கு இருந்த - நினது நன்மையாகிய போகத்தை அருளும்படி அமைந்த, மாதீர்த்தத்தின் இயல்பை ஆய்ந்திடும் பொழுது - பெருமை பொருந்திய பொற்றாமரைப் பொய்கையின் தன்மையை ஆராயுங்கால். அதற்கு ஒரு தீர்த்தம் ஒப்பு ஆமோ - அதற்கு மற்றொரு தீர்த்தம் ஒப்பாகுமோ ?

ஈட்டிய - பல பிறவிகளிலும் தேடிய. தொல்வினைப்படலம் - சஞ்சித கன்மத் தொகுதி. நின் மங்கலபோகம் என்றது சிவபோகத்தை. படிக்கு, கு : பகுதிப் பொருள் விகுதி. (௬க)

எத்த லத்தினு மோவ்வொன் று விழுமிதா மிந்த
மெய்த்த லத்திலிம் மூவகை விழுப்பமும் விளங்கும்
அத்த வாதலா லித்தல மடைந்தவ ரேவர்க்குஞ்
சித்த சுத்தியும் பல்வகைச் சித்தியும் பயக்கும்.

(இ - ள்.) எத்தலத்தினும் ஒவ்வொன்று விழுமிதாம் - எந்தத் தலங்களிலும் மூர்த்தியும் தீர்த்தமும் தலமுமாகிய மூன்றனுள் ஒவ்வொன்று சிறப்புடைத்தாகும்; இந்த மெய்த்தலத்தில் இம் மூவகை விழுப்பமும் விளங்கும் - இந்த உண்மைத்தலத்தின்கண் இம் மூவகைச் சிறப்பும் விளங்கும்; ஆதலால் - ஆதலினால். அத்த - இறைவனே, இத்தலம்-இப்பதியானது, அடைந்தவர் எவர்க்கும்-தன்னைச் சார்ந்தவ ரனைவருக்கும், சித்தசுத்தியும் பல்வகைச் சித்தியும் பயக்கும் - மனத் தூய்மையையும் அணிமா முதலிய பலவகைச் சித்திகளையும் அருளா நிற்கும்.

மேல் மூன்று செய்யுட்களால் தலம், மூர்த்தி, தீர்த்தம் என்பவற்றின் சிறப்பு முறையே கூறப் பெற்றமையின் அவற்றைச் சுட்டி 'இம் மூவகை விழுப்பமும்' எனப்பட்டது. (௬உ)

அடியனே னெண்ணுங் கருமமுஞ் சரதமே யாக
முடியு மாறரி தச்செயன் முடியுமெப் படியப்
படிபு ரிந்தருள் கடிதெனப் பணிந்தனன் பரனும்
நெடிய வான்படு மமுதென வேதிர்மொழி நிகழ்த்தும்.

(இ - ள்.) அடியனேன் எண்ணும் கருமமும் சரதமே ஆக முடியுமாறு அரிது - அடியேன் எண்ணிய செயலும் உண்மையாக முடியுந் தன்மை அரிதோ; அச் செயல் எப்படி முடியும் அப்படி - அச்

செயலானது எவ்வாறு முடியுமோ அந்நெறியை, கடிது புரிந்தருள் எனப் பணிந்தனன் - விரைந்து செய்தருளவேண்டும் என்று இரந்து வணங்கினான்; பரனும் - சோமசுந்தரக்கடவுளும், நெடிய வான்படும் அமுது என எதிர்மொழி நிகழ்த்தும் - பரந்த வானின்கண் உண்டாகும் அமிழ் தென்னுமாறு எதிர்மாற்றம் கூறியருளுவான்.

முடியுமா, ஈறு தொக்கது. அரிதோ என ஓகாரம் விரிக்க. புரிதல் - செய்தல்; ஈண்டு உணர்த்துதல்; விரும்பியருள் எனலுமாம். வான் மொழியாகக் கூறுதலின் 'வான்படும் அமுதென' என்றார். இஃது இல்பொருளுவமை. (கூகூ)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

இரவிதன் மரபின் வந்த விராமகே ளெமக்குத் தென்கீழ்
விரவிய திசையிற் போகி விரிகடற் சேதுகட்டிக்
கரவிய வுள்ளக் கள்வன் கதிர்முடி பத்துஞ் சிந்தி
அரவமே கலையி னாளை யருஞ்சிறை யழுவ நீக்கி.

(இ - ள்.) இரவி தன் மரபில் வந்த இராம கேள் - சூரியன் மரபில் வந்த இராமனே கேட்பாயாக; எமக்குத் தென்கீழ் விரவிய திசையில் போகி - எமக்குத் தென்கிழக்காகப் பொருந்திய திசையிற் சென்று, விரிகடல் சேது கட்டி - விரிந்த கடலிலே சேதுபந்தனஞ் செய்து, கரவிய உள்ளக்கள்வன் கதிர்முடி பத்தும் சிந்தி - வஞ்சனையையுடைய உள்ளத்தையுடைய இராவணனது விளக்கமுள்ள பத்துத் தலைகளையுந் துணித்து, அரவம் மேகலையினாளை - ஒலிக்கின்ற மேகலையணிந்த சானகியை, அருஞ்சிறை அழுவம் நீக்கி - பொறுத்தற்கரிய சிறைக்கூடத்தினின்றும் நீக்கி.

தெற்கும் கிழக்கும் கலந்த திசை என்றுமாம். சேது - அணை. கரவிய - கரந்த. சிந்தி, தன் வினைக்கும் பிற வினைக்கும் பொதுவாய சொல். அழுவம் - பரப்பு, கூடம். (கூச)

மீண்டுநின் னயோத்தி யெய்தி விரிகட லுலகம் பன்னாள்
ஆண்டினி திருந்து மேனாள் வைகுண்ட மடைவா யாக
ஈண்டுநீ கவலை கொள்ளே லெனு* மச ரீரி கேட்டு
நீண்டவன் மகிழ்ந்து தாழ்ந்து நிருத்தனை விடைகொண் டேகி.

(இ - ள்.) மீண்டும் நின் அயோத்தி எய்தி - மீளவும் நினது அயோத்தியை அடைந்து விரி கடல் உலகம் பல் நாள் ஆண்டு இனிது இருந்து - பரந்த கடல் சூழ்ந்த உலகத்தை நெடுங்காலம் ஆட்சி புரிந்து இனிதாக இருந்து, மேல் நாள் வைகுண்டம் அடைவாயாக - பின்னாளில் வைகுண்டத்தைச் சேர்வாயாக; ஈண்டு நீ கவலை கொள்ளேல் - இப்பொழுது நீ கவலை கொள்ளாதே, எனும் அசரீரி கேட்டு - என்னும் அசரீரி யுரையைக் கேட்டு, நீண்டவன் மகிழ்ந்து தாழ்ந்து - நெடியவ

(பா - ம்.) * கொள்ளேலென.

ளுகிய இராமன் மகிழ்ந்து வணங்கி, நிருத்தனை விடைகொண்டு ஏகி - சோமசுந்தரக்கடவுளிடத்து விடைபெற்றுச் சென்று.

அயோத்தி - யுத்தத்தில் வெல்லப்படாதது என்னும் பொருளது, பதினோராயிரம் ஆண்டு இராமன் அரசு புரிந்தனன் என்பர். மேனாள் - ஆண்டிருந்த பின்பு. ஈண்டு, காலங்குறித்தது. அசரீரி - சரீரம் இல்லது ; வானில் எழும் உரை. (கூரு)

மறைப்பொரு ளுரைத்தோன் சொன்ன வண்ணமே யிலங்கை யெய்தி
அறத்தினைத் தின்ற பாவி யாவிதின் றனையான் செல்வத்
திறத்தினை யிளவற் கீந்து திருவிரா மேசங் கண்டு
கறைப்படு மிடற்றி ளுனை யருச்சித்துக் கருணை வாங்கி.

(இ - ள்.) மறைப்பொருள் உரைத்தோன் சொன்ன வண்ணமே - வேதத்துக்குப் பொருளருளிச் செய்த சோமசுந்தரக்கடவுள் கூறியருளிய படியே, இலங்கை எய்தி - இலங்கையை அடைந்து, அறத்தினைத்தின்ற பாவி ஆவிதின்று-அறத்தை அழித்த பாவியாகிய இராவணனது ஆவியைப் பருகி, அனையான் செல்வத்திறத்தினை இளவற்கு ஈந்து - அவனுடைய செல்வக்கூறுகளை அவன் தம்பியாகிய விபீடணனுக்குக் கொடுத்து, திரு இராமேசம் கண்டு - திருவிராமேச்சுரத்தை ஆக்கி, கறைப்படும் மிடற்றினானை அருச்சித்து - நஞ்சக்கறை பொருந்திய திருமிடற்றை யுடைய சிவபெருமானை வழிபட்டு, கருணை வாங்கி - அவனருளைப் பெற்று.

அறத்தை அடியொடுங் கெடுத்தவன் என்பார் 'அறத்தினைத் தின்ற பாவி' என்றார். 'அறத்தினைத் தின்றபாவி' யாவி தின்று' என்பது மிக்க நயமுடைத்து. தின்னாதவற்றைத் தின்பனவாகக் கூறுதல்,

''வாரா மரபின வரக்கூ றுதலும்''

என்னும் தொல்காப்பியச்சூத்திரத்து 'அன்னவை யெல்லாம்' என்பதனால் முடியும். காணல் - உண்டாக்கல். (கூசு)

பற்றிய பழியி னீந்தி யிந்திரன் பழியைத் தீர்த்த
வெற்றிகோள் விடையி ளுனை மீளவும் வந்து போற்றி
அற்றிர ளனைய கோதைக் கற்பினுக் கரசி யோடுஞ்
சுற்றிய சடையி ராமன் றொன்னக ரடைந்தா னிப்பால்.

(இ - ள்.) பற்றிய பழியின் நீந்தி - தன்னைப் பற்றித் தொடர்ந்த கொலைப் பாவத்தினின்றும் நீங்கி, இந்திரன் பழியைத் தீர்த்த வெற்றி கொள் விடையினானை - தேவேந்திரனது பழியினைப் போக்கிய வெற்றி பொருந்திய இடபவூர்தியையுடைய சோமசுந்தரக் கடவுளை, மீளவும் வந்து போற்றி - மீண்டும் வந்து துதித்து, அல்திரள் அனைய கோதைக் கற்பினுக்கு அரசியோடும் - இருளின் திரட்சியை ஒத்த கூந்தலையுடைய கற்புக்கிறைவியாகிய சானகியோடும், சுற்றிய சடை இராமன் - சுற்றிக் கட்டிய சடையினையுடைய இராமன், தொல்நகர் அடைந்தான்- தொன்மையுடைய தனது அயோத்திநகரத்தை அடைந்தான்; இப்பால்- பின்பு.

முனி மரபில் வந்து வேதம் வல்லனாய்ச் சிவவழிபாட்டினை மேற்கொண்ட இராவணனைக் கொன்றமையின் இராமனைக் கொலைப்பழி பற்றிய தென்க. இராமேச்சுரம் இராவணனைக் கொன்ற பழிதீர இராமன் பூசித்த தென்பதனைத் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பல திருப்பாட்டுக்களிற் கூறியுள்ளார்கள்; அவற்றுள் முறையே ஒவ்வொன்று பின்வருவன:

''தேவியை வவ்விய தென்னிலங் கைத்தச மாமுகன்
பூவிய லும்முடி பொன்று வித்தபழி போயற
ஏவிய லுஞ்சிலை யண்ணல் செய்தவிரா மேச்சுரம்
மேவிய சிந்தையி னார்கடம் மேல்வினை வீடுமே''

''கோடிமா தவங்கள் செய்து குன்றினார் தம்மை யெல்லாம்
வீடவே சக்க ரத்தா லெறிந்துபின் னன்பு கொண்டு
தேடிமால் செய்த கோயி திருவிரா மேச்சு ரத்தை
நாடிவாழ் நெஞ்ச மேநீ நன்னெறி யாகு மன்றே.''

சீதையின் கற்புமாண்பினைக் கம்பராமாயணம், திருவடி தொழுதபடலத்தில், அனுமான் இராமனுக்குக் கூறுங் கூற்றுக்களால் உணரலாகும். (௩௪)

[கலிநிலைத்துறை]

சேங்கோ லனந்த குணமீனவன் றேயங் காப்பக்
கோங்கோ டவிழ்தார்க் குலபூடணன் றன்னை யீன்று
போங்கோத ஞாலப் போறைமற்றவன் பாலிறக்கி
எங்கோ னருளாற் சிவமாநக ரேறி னானே.

(இ - ள்.) செங்கோல் அனந்தகுண மீனவன் - செங்கோலையுடைய அனந்தகுண பாண்டியன், தேயம் காப்ப - நிலவுலகைப் பாதுகாப்பதற்கு, கொங்கோடு அவிழ்தார்க் குலபூடணன் தன்னை ஈன்று - மகரந்தத்தோடு மலர்ந்த மலர் மாலையையுடைய குலபூடணனைப் பெற்று. பொங்கு ஓதம் ஞாலப்பொறை-பொங்குகின்ற கடல் சூழ்ந்த நிலச்சுமையை, அவன்பால் இறக்கி - அக்குலபூடணனிடத்தில் இறக்கி, எங்கோன் அருளால் சிவமாநகர் ஏறினன் - எம்பெருமானாகிய சோமசுந்தரக்கடவுளின் திருவருளால் பெருமை பொருந்திய சிவபுரத்தை அடைந்தான்.

ஓதம் - கடல்;

''ஓதமலி நஞ்சுண்ட வுடையானே''

எனத் திருவாசகம் கூறுவது காண்க. மற்று: அசை. பொறையை இறக்கிச் சிவமாநகர் ஏறினன் என நயந்தோன்றக் கூறினர். (௩௮)

ஆகச்செய்யுள் - கஊ௬௩.

முப்பதாவது

மெய்க்காட்டிட்ட படலம்

[கொச்சகக்கலிப்பா]

பாவமென வடிவெடுத்த படிற்றமணர் பழித்தழல்செய்
தேவவரு மறப்பசுவை யேறுயர்த்தோன் விடைநந்திக்
காவலனை விடுத்தழித்த கதையுரைத்து மட்டாலைச்
சேவகன்மெய்க் காட்டிட்டு விளையாடுந் திறமுரைப்பாம்.

(இ - ள்.) பாவம் என வடிவு எடுத்த படிற்று அமணர் - பாவமே என்னும்படி வடிவந்தாங்கிய வஞ்சனையையுடைய சமணர்கள், பழித்தழல் செய்து ஏவவரும் - பழி வேள்விசெய்து (தோற்றுவித்து) ஏவவந்த, மறப் பசுவை - கொலைத்தொழிலையுடைய பசுவினை, ஏறு உயர்த்தோன் - இடபக் கொடியுயர்த்திய சோமசுந்தரக் கடவுள், விடை நந்திக் காவலனை விடுத்து அழித்த கதை உரைத்தும் - இடப வுருவினையுடைய திரு நந்தியாகிய காவலனை ஏவி வதைத்தருளிய திருவிளையாடலைக் கூறினேம்; அட்டாலைச் சேவகன் - (இனி) அட்டாலைச் சேவகனாகிய அவ் விறைவன், மெய்க்காட்டிட்டு விளையாடும் திறம் உரைப்பாம் - மெய்க்காட்டிட்டு விளையாடின திருவிளையாடலைக் கூறுவோம்.

பாவம் வடிவெடுத்தாலொத்த என மாறியுரைத்தலுமாம். தோற்றுவித்து என்னுஞ் சொல் விரிக்க. காவலன்-காத்தல் வல்லோன்; தலைவன். உரைத்தும்: இறந்தகால முற்று. இறைவன் அட்டாலை மண்டபத்திற் சேவகனாய் வந்தமையை யானையெய்த படலத்திற் காண்க. அட்டாலை - மதிலின்மேலே பரண்போலுள்ள மண்டபம். மெய்க்காட்டிட்டு - திருமேனியைக் காட்டுதலைச் செய்து. (க)

வெவ்வியமும் மதயானை விறற்குலபூ டணன்சமணர்
அவ்வியவஞ் சனைகடந்த வனந்தகுணச் செழியன் பாற்
செவ்வியசெங் கோல்வாங்கித் திகிரிதிசை செலவுருட்டி
வவ்வியவெங் கலிதுரந்து மண்காத்து வருகின்றான்.

(இ - ள்.) வெவ்விய மும்மத யானை விறல் குல பூடணன் - கொடிய மும்மதங்களையுடைய யானையையுடைய வெற்றி பொருந்திய குலபூடண வழுதி, சமணர் அவ்விய வஞ்சனை கடந்த அனந்தகுணச் செழியன்பால் - சமணர்களது தீய வஞ்சனையைக் கடந்த அனந்தகுண பாண்டியனிடத்து, செவ்விய செங்கோல் வாங்கி - கோடாத செங்கோலைப் பெற்று, திகிரி திசை செல உருட்டி - ஆணையாகிய நேமியைத் திசை முழுதுஞ் செல்லு மாறு உருட்டி, வவ்விய வெங்கலி துரந்து - உலகினைப் பற்றிநின்ற

கொடிய கலியினை ஓட்டி, மண்காத்து வருகின்றான் - புவியினைப் பாது காத்து வருகின்றான்.

அவ்வியம் - தீமை; அழுக்காறுமாம். செவ்விய செங்கோல் - கோடாத செங்கோல்; செங்கோல் என்பதனைப் பெயர் மாத்திரையாகக் கொள்ளலுமாம். வவ்விய என்பதனை நிகழ் காலமாக வுரைக்க; வெம்மை பொருந்திய கலி யென்றுமாம். (உ)

சவுந்தரசா மந்தனெனத் தானைகா வலனொருவன்
சிவந்தசடை முடியண்ண லடியவரே சிவமாகக்
கவர்ந்தொழுகி யருச்சிக்குங் கடப்பாட்டி னெறிநின்றோன்
உவந்தரசற் கிருமைக்குந் துணையாகி யொழுகுநாள்.

(இ - ள்.) சவுந்தர சாமந்தன் எனதானை காவலன் ஒருவன் - சுந்தர சாமந்தன் என்று சேனாபதி ஒருவன் உள்ளான்; சிவந்த சடைமுடி அண்ணல் அடியவரே - சிவந்த சடாமுடியையுடைய சிவபெருமான் அடியாரையே, சிவமாகக் கவர்ந்து அருச்சித்து ஒழுகும் - அச் சிவபெருமானாக மனத்திற் கொண்டு வழிபட் டொழுகும், கடப்பாட்டின் நெறி நின்றோன்- கடமை நெறியில் நின்றவனாகிய அவன், உவந்து அரசற்கு இருமைக்கும் துணை ஆகி ஒழுகுநாள் - விரும்பி மன்னனுக்கு இம்மைக்கும் மறுமைக்குந் துணையாக நின்று ஒழுகு நாளில்.

சாமந்தன்-படைத் தலைவன். சவுந்தர சாமந்தன்: சிறப்புப் பெயர். ஒருவன் உளன் எனவும், நின்றோனாகிய அவன் எனவும் விரிக்க. கவர்ந்து-உளங் கொண்டு. அருச்சித்து ஒழுகும் என மாறுக. உவந்து துணையாகி என இயையும். (ந)

வல்வேடர்க் கதிபதியாய் வருசேதி ராயனெனும்
வில்வேட னொருவனவன் விறல்வலியான் மேலிட்டுப்
பல்வேறு பரிமான்றேர்ப் பஞ்சவன்மேற் படையெடுத்துச்
செல்வேனென் றுறவலித்தான் றென்னர்பிரா னஃதறிந்தான்.

(இ - ள்.) வல் வேடர்க்கு அதி பதியாய் வரு - வலிய வேடர்களுக்குத் தலைவனாயிருந்து வருகின்ற, சேதிராயன் எனும் வில் வேடன் ஒருவன்- சேதிராயன் என்னும் வில்லையுடைய வேடன் ஒருவன் உளன்; அவன் விறல் வலியால் மேலிட்டு - அவன் வெற்றியின் வலியினால் மேம்பட்டு, பல் வேறு பரிமான் தேர்ப் பஞ்சவன் மேல் - பல வேறு வகைப்பட்ட குதிரைகளையும் தேர்களையுமுடைய பாண்டியன்மேல், படை எடுத்துச் செல்வேன் என்று உற வலித்தான் - படை யெடுத்துப் போருக்குச் செல்லுவேன் என்று உறுதியாகக் கருதினான்; தென்னர்பிரான் அஃது அறிந்தான் - பாண்டியர் தலைவனாகிய குலபூடணன் அதனை அறிந்தான்.

சேதிராயன் - சேதி நாட்டுக்கு அரையன், சேதிநாடு - திருமுனைப் பாடிநாடு:

"சேதிநன் னாட்டுநீடு திருக்கோவ லூரின் மன்னி"

என்பது பெரியபுராணம். தமிழ் நாட்டு மூவேந்தரல்லாத குறுநில மன்னர்களை வேடர், காடவர் முதலிய பெயர்களால் ஒரு காலத்தில் இழித்துரைத்துவந்தனர் எனத் தெரிகிறது. பரிமான்: இருபெயரொட்டு; விரைந்த செலவினையுடைய குதிரையுமாம். படை யெடுத்தல் - சேனையுடன் மேற்சேறல், உற - மிக. அறிந்தான் என்பதனை எச்சமாக்கலுமாம். (ச)

தன்னதுதா ணிழனின்ற சாமந்தன் றனைப்பார்த்தெம்
பொன்னறைதாழ் திறந்துநிதி முகந்தளித்துப் புதிதாக
இன்னமுநீ சிலசேனை யெடுத்தெழுதிக் கோள்கென்றான்
அன்னதுகேட் டீசனடிக் கன்புளா னென்செய்வான்.

(இ - ள்.) தன்னது தாள் நிழல் நின்ற சாமந்தன் தனைப் பார்த்து - தனது அடி நிழலில் நின்ற சாமந்தனை நோக்கி, எம் பொன் அறை தாழ் திறந்து நிதிமுகந்து அளித்து - எமது நிதி அறையின் தாழைத் திறந்து பொருளை முகந்து கொடுத்து, புதிது ஆக இன்னமும் நீ சில சேனை எடுத்து எழுதிக்கொள்க என்றான் - புதிதாக இன்னுஞ் சில சேனைகளைச் சேர்த்துப் பதிவுசெய்து கொள்வாயாக என்றான்; அன்னது கேட்டு ஈசன் அடிக்கு அன்பு உளான் என் செய்வான் - அதனைக் கேட்டு இறைவன் திருவடிக்கு அன்புள்ளவனாகிய சுந்தரசாமந்தன் என்ன செய்கின்றானென்னில்,

தன்னது, னகரம் விரித்தல். அடங்கி நின்றமையைத் தாணிழல் நின்ற என்றார். தன் : சாரியை. புதிது - புதுமை ; பண்புமாத்திரையாக நின்றது. எடுத்து - தேர்ந்து திரட்டி. எழுதுதல் - உரிமையைப் பதிவு செய்தல். கொள் கென்றான் : அகரந் தொக்கது. (இ)

தென்னவர்கோன் பணித்தபணி பின்றள்ளச் சிந்தையிலன்
புன்னவர னருள்வந்து முன்னீர்ப்ப வொல்லைபோய்ப்
பொன்னறைதாழ் திறந்தறத்தா றீட்டியிடும் பொற்குவையுட்
டன்னதுளத் தவாவமையத் தக்கநிதி கைக்கவரா.

(இ - ள்.) தென்னவர்கோன் பணித்த பணி பின் தள்ள - பாண்டியர் தலைவனாகிய குலபூடணன் இட்டபணி பின்னே நின்று தள்ளவும், சிந்தையில் அன்பு உன்ன அரன் அருள் வந்து முன் ஈர்ப்ப - மனத்தில் அன்புடன் நினைத்த வளவிலே சிவபெருமான் திருவருள் வந்து முன்னே இழுக்கவும், ஒல்லைபோய்-விரைந்து சென்று, பொன் அறை தாழ் திறந்து-கருவூலத்தின் தாழைத் திறந்து, அறத்து ஆறு ஈட்டியிடும் பொன் குவையுள் - அறநெறியால் ஈட்டிவைத்த நிதிக் குவியலுள், தன்னது உளத்து அவா அமையத்தக்க - தன்னது உள்ளத்து விருப்பம் அடங்கத்தக்க, நிதி கைக் கவரா - பொருளைக் கைக்கொண்டு,

பணி பின்றள்ளவும் அருள் முன்னீர்ப்பவும் ஒல்லைபோய் என்க. அவாவிற்குப் பொருந்த மிகுதியான நிதியைக் கவர்ந்து என்றுமாம். (சு)

எண்ணிறந்த களிப்பிஞெடுந் திருக்கோயி லிடத்தணைந்து
கண்ணிறைந்த பொன்முளரிக் கயந்தலைநீர் படிந்துதன
துண்ணிறைந்த மெய்யன்பி ஞெளியுருவாய் முளைத்தெழுந்த
பண்ணிறைந்த மறைப்பொருளைப் பணிந்திறைஞ்சி யிதுவேண்டும்.

(இ - ள். எண் இறந்த களிப்பினெடும்-அளவிறந்த மகிழ்ச்சியோடும், திருக்கோயில் இடத்து அணைந்து-திருக்கோயிலுட் சென்று, கள் நிறைந்த பொன் முளரிக் கயந்தலை நீர் படிந்து - தேன் நிறைந்த பொற்றாமரை வாவியில் நீராடி, தனது உள் நிறைந்த மெய் அன்பின்-தனது உள்ளத்தின் கண் நிறைந்த உண்மை யன்பினாலே, ஒளி உருவாய் முளைத்து எழுந்த - ஒளி வடிவாய்த் தோன்றி யருளிய, பண் நிறைந்த மறைப்பொருளை பணிந்து இறைஞ்சி-இசை நிறைந்த வேதப் பொருளாகிய சோமசுந்தரக் கடவுளைக் கும்பிட்டு வணங்கி, இது வேண்டும் - இதனை வேண்டுவா னாயினன்.

கண் நிறைந்த எனப் பிரித்துக் கண்ணுக்கு நிறைந்த பொலிவினை யுடைய முளரி என்றுரைத்தலுமாம். கயந்தலை: மெலிந்து நின்றது. அன்பினது ஒளியுருவாய் முளைத்தெழுந்த பொருளை என்றுரைப்பாரு முளர். பணிந்து இறைஞ்சி என்பன வணங்கி யென்னும் ஒரு பொருள் குறித்தனவுமாம். (எ)

பண்ணியனான் மறைவிரித்த பரமேட்டி யெங்கோமான்
எண்ணியகா ரியமுடிப்பா யிவையுனக்கு முன்னடிக்கீழ்
அண்ணியமெய் யடியவர்க்கு மாதக்க வெனவிரந்தப்
புண்ணியமா நிதிமுழுது மவ்வழியே புலப்படுப்பான்.

(இ - ள்.) பண் இயல் நான்மறை விரித்த பரமேட்டி - இசை அமைந்த நான்கு மறைகளையும் வெளிப்படுத்த பரமேட்டியே, எம் கோமான் - எம்பெருமானே, எண்ணிய காரியம் முடிப்பாய் - அடியார் கருதிய கருமங்களை முடித்தருளுபவனே, இவை - இப்பொருள்கள், உனக்கும் - நினக்கும், உன் அடிக்கீழ் அண்ணிய மெய் அடியவர்க்கும் ஆதக்க - நின் திருவடிக்கீழ்ப் பொருந்திய உண்மை யடியார்க்கும் ஆகக் கடவன; என இரந்து - என்று வேண்டி, அப்புண்ணியமா நிதி முழுதும் அவ்வழியே புலப்படுப்பான் - அந்த அறத்தாற்றின் வந்த பெரிய நிதி முழுதையும் அந்நெறியிலேயே செலுத்துவானாயினன்.

பரமேட்டி – மேலோன்; கடவுள். எங்கோமான் எண்ணிய காரிய முடிப்பாய் என்பதற்கு எம் அரசன் நினைத்த காரியத்தை முற்றுவிப்பாய் என்றுரைத்தலும் பொருந்தும். ஆதக்க - ஆகத் தக்கன; முதனிலை வினையெச்சப் பொருட்டாய் நின்றது; ''செய் தக்க'' என்புழிப்போல. செலவிடுதலைப் புலப்படுத்தல் என்றார், அதன்பயன் நின்று விளங்குதலின். (அ)

அண்டமுக டுரிஞ்சிநிமிர் கோபுரமு மாயிரக்கான்
மண்டபமுங் கண்டிகையும் வயிரமணிக் கோளகையுங்
குண்டலமுந் தண்டரளக் குடைநிரையுங் கொடிநிரையுங்
கண்டனன்முன் னவனருளாற் பிறப்பேழுங் கரைகண்டோன்.

(இ - ள்.) அண்ட முகடு உரிஞ்சி நிமிர் கோபுரமும் - வானத்தின் உச்சியைத் தடவி உயர்ந்த கோபுரமும், ஆயிரக்கால் மண்டபமும் - ஆயிரம் தூண்களையுடைய மண்டபமும், கண்டிகையும் வயிரமணிக் கோளகையும் - கண்டிகையும் வயிரமணியாற் செய்த தோளணியும், குண்டலமும் - குண்டலங்களும், தண் தரளக்குடை நிரையும் - தண்ணிய முத்துக்குடை வரிசைகளும், கொடி நிரையும்-கொடிவரிசைகளும் ஆகிய இவற்றை, முன்னவன் அருளால் ஏழு பிறப்பும் கரை கண்டோன் கண்டனன் - முதல்வனாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவருளால் எழு வகைப் பிறப்பென்னுங் கடலின் கரையைக் கண்டவனாகிய சாமந்தன் செய் தமைத்தான்.

கோளகை-யானைக்கொம்பின் முனையிற் செறிக்கும் குமிழ்; ஈண்டுத் தோள்வலயத்தைக் குறிக்கின்றது போலும்; முன்னவனருளாற் கண்டனன் என்று கூட்டியுரைத்தலும் பொருந்தும். கண்டனன் அதனாற் கரை கண்டோனாயினன் என்னுங் கருத்துங் கொள்க. (கூ)

வானாடர்க் கவியுணவின் வகைமுந்நூன் மன்றல்முதல்
நானாவாஞ் சிறுவேள்வி நான்மறையோர்க் கறுசுவையின்
ஆனாத பேருண்டி துறவடைந் தோர்க் கருத்துபலி
தானாதி பலவேறு தருமநனி தழைவித்தான்.

(இ - ள்.) வானாடர்க்கு அவி உணவின் வகை - தேவர்களுக்கு ஊட்டும் அவியாகிய உணவின் வகைகளும், முந்நூல் மன்றல் முதல் நானாவாம் சிறு வேள்வி - பூணூல் மங்கலம் முதலிய பல வகையான சிறிய வேள்விகளும், நான்மறையோர்க்கு அறுசுவையின் ஆனாத பேர் உண்டி - நான்கு வேதங்களையு முணர்ந்த அந்தணர்க்கு அறுசுவையின் நீங்காத பேருண்டிகளும், துறவு அடைந்தோர்க்கு அருத்து பலி - துறவிகளுக்கு ஊட்டுந் திருவமுதும், ஆதி - முதலாகிய, பல வேறு தருமம் நனி தழைவித்தான் - பல வேறு வகையான தருமங்களை மிகவும் பெருகச் செய்தனன்.

நானா - பல. தான்: அசை. தான ஆதி எனப் பிரித்து, பல்வகைத் தானம் முதலிய என்றுரைத்தலுமாம். (க௦)

எவரேனு முருத்திரசா தனங்கண்டா லெதிர்வணங்கி
அவரேநம் பிறப்பறுக்க வடிவெடுத்த வரனென்று
கவராத வன்புள்ளங் கசிந்தொழுக வருச்சித்துச்
சுவையாறி னமுதருத்தி யெஞ்சியவின் சுவைதெரிவான்.

(இ - ள்.) எவரேனும் - யாவராயினும், உருத்திர சாதனம் கண்டால் எதிர் வணங்கி - சிவசாதனந் தாங்கினவரைக் காணின் எதிர் சென்று வணங்கி, அவரே நம் பிறப்பு அறுக்க வடிவு எடுத்த அரன் என்று - அவரே நமது பிறப்பைப் போக்கத் திருவுருவமெடுத்த சிவபெருமானென்று, கவராத அன்பு உள்ளம் கசிந்து ஒழுக அருச்சித்து - பிளவுபடாத அன்பால் உள்ளம் நெக்குருக வழிபட்டு, சுவை ஆறின் அமுது அருத்தி - அறுசுவையோடு கூடிய திருவமுதை உண்பித்து, எஞ்சிய இன்சுவை தெரிவான் - (அவர் உண்டு) மிஞ்சியவற்றை இனிய சுவை பார்ப்பான்.

எவரேனும் - உருப்பொலாதவர் இழிகுலத்தவர் முதலானோராயினும். உருத்திர சாதனம் - திருநீறு உருத்திராக்கம். கவராத - ஐயுறாத. எஞ்சிய - மிச்சிலாயுள்ளன: வினையாலணையும் பெயர். சுவை தெரிதல் உண்டலாகிய காரியத்தை உணர்த்திற்று.

"எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
　　திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போதே
　　யுகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி
　　யிரண்டாட்டா தொழிந்தீசன் றிறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
　　கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே"

என்னும் திருத்தாண்டகம் இங்கே சிந்திக்கற்பாலது. (௧௧)

இன்றைக்கா யிரநாளைக் கிருமடங்கு வருநாட்கும்
அன்றைக்கன் றிருமடங்கா வரசனது* பொருளெல்லாங்
கொன்றைச்செஞ் சடையார்க்கு மடியார்க்குங் கொடுப்பதனைத்
தென்றற்கோன் செவிமடுத்தான் சேனைக்கோ னிதுசெய்வான்.

(இ - ள்.) இன்றைக்கு ஆயிரம் நாளைக்கு இருமடங்கு - இன்றைக்கு ஆயிரம் பொன்னும் நாளைக்கு இரட்டிப்பும், வரு நாட்கும் - மேலே வருகின்ற நாட்களுக்கும், அன்றைக்கு அன்று இருமடங்கா - அன்றைக்கன்று இரட்டிப்பும் ஆக, அரசனது பொருள் எல்லாம் - மன்னனுடைய பொருள் முழுதையும், கொன்றைச் செஞ்சடையார்க்கும் அடியார்க்கும் கொடுப்பதனை - கொன்றைமாலையை யணிந்த சிவந்த சடையையுடைய சிவபெருமானுக்கும் அவனடியாருக்குங் கொடுக்குஞ் செய்தியை, தென்றல்கோன் செவிமடுத்தான் - தென்றல் தோன்றும் பொதியின் மலைக்குத் தலைவனாகிய குலபூடணன் கேள்வியுற்றான்; சேனைக்கோன் இது செய்வான் - சேனையின் தலைவனாகிய சுந்தரசாமந்தன் இதனைச் செய்வானாயினன்.

இன்றைக்கு நாளைக்கு என்பவற்றில் நான்கனுருபு ஏழாவதன் பொருளில் வந்தது. நாளை - அடுத்து வருநாள்; "நாளைச் செய்குவம் அற

(பா - ம்.) * அரசனருள் பொருள்.

மேலில்" எனச் சிலப்பதிகாரத்து வருதல் காண்க. அன்றைக்கு-அன்று-அற்றை யினும் மற்றைநாள். ஆக வென்பது ஈறு தொக்கது. கொடுப்பது: தொழிற்பெயர். தென்றல் அதற்கிடமாகிய வெற்பினை யுணர்த்திற்று. (க௨)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

காவல னவையத் தெய்திக் காரியஞ் செய்வா ரோடு
மேவினன் பிறநாட் டுள்ள வீரர்க்கு வெறுக்கை போக்கிச்
சேவகம் பதிய வோலை செலவிடுத் தழைப்பான் போலப்
பாவகஞ் செய்து தீட்டிப் பட்டிமை யோலை யுய்ப்பான்.

(இ - ள்.) காவலன் அவையத்து எய்திக் காரியம் செய்வாரோடு மேவினன் - அரசன் அவைக்குச் சென்று வினையாளரோடு கலந்து, பிற நாட்டு உள்ள வீரர்க்கு வெறுக்கை போக்கி - வேறுநாட்டிலுள்ள வீரர் களுக்குப் பொருளை அனுப்பி, சேவகம் பதிய - போர்ச்சேவகத்திற் பதிவு செய்ய, ஓலை செல விடுத்து அழைப்பான் போல - திருமுகம் போக்கி அழைப்பவன்போல, பாவகம் செய்து - பாவனை காட்டி, பட்டிமை ஓலை தீட்டி உய்ப்பான் - பொய்யோலை எழுதி விடுப்பவனாய்.

காரியஞ் செய்வார் - வினை செய்வார். போக்கி விடுத்து அழைப்பான் போல வென்க. சேவகம், பதிதல் என்பன பொதுச் சொற்களாயினும் படையின் ஊழியத்தையும் அதிற் பதிவு செய்தலையும் சிறப்பாகக் குறிப் பனவாகும். பட்டிமை - படிறு. மேவினன், உய்ப்பான் என்பன முற் றெச்சம். (கங)

எழுதுக தெலுங்கர்க் கோலை யெழுதுக கலிங்கர்க் கோலை
எழுதுக விராடர்க் கோலை யெழுதுக மராடர்க் கோலை
எழுதுக கொங்கர்க் கோலை யெழுதுக வங்கர்க் கோலை
எழுதுக துருக்கர்க் கோலை யென்றுபோய் யோலை விட்டான்.

(இ - ள்.) தெலுங்கர்க்கு ஓலை எழுதுக-தெலுங்கநாட்டினர்க்கு ஓலை யெழுதுக; கலிங்கர்க்கு ஓலை எழுதுக - கலிங்க நாட்டினர்க்கு ஓலை யெழுதுக; விராடர்க்கு ஓலை எழுதுக - விராட நாட்டினர்க்கு ஓலை யெழுதுக; மராடர்க்கு ஓலை எழுதுக - மராட நாட்டினர்க்கு ஓலை யெழுதுக; கொங்கர்க்கு ஓலை எழுதுக - கொங்க நாட்டினர்க்கு ஓலை யெழுதுக; வங்கர்க்கு ஓலை எழுதுக – வங்க நாட்டினர்க்கு ஓலை யெழுதுக; துருக்கர்க்கு ஓலை எழுதுக – துருக்க நாட்டினர்க்கு ஓலை யெழுதுக; என்று போய் ஓலை விட்டான் - என்று கூறிப் பொய்யோலை போக்கினான்.

என்று - என்த் திருமுகம் வரைவானுக்குக் கூறி, அரசன் அறியும் படி இங்ஙனம் கூறியதன்றி, ஓலை யெழுதுவித்ததுமிலன், அவ்வந் நாடு கட்குஅனுப்பியது மிலன் என்பார் 'என்று பொய்யோலை விட்டான்' என்றார். (கச)

எங்குமிப் படியே யோலை செலவிடுத் திருப்ப வாறு
திங்களி னளவு மந்தச் சேவகர் வரவு காணு
தங்கதிர் வேலோன் சேனைக் கரசனை யழைத்து நாளை
வெங்கதிர் படுமுன் சேனை யாவையும் விளித்தி யென்றான்.

(இ - ள்.) எங்கும் இப்படியே ஓலை செல விடுத்து இருப்ப - எவ்விடத்தும் இங்ஙனமே பொய்யோலை போக விடுத்து இருக்க, ஆறு திங்களின் அளவும் அந்தச் சேவகர் வரவு காணாது - ஆறு மாதங்கள் வரையும் அந்த வீரர்கள் வரவினைக் காணாமல், அம் கதிர் வேலோன் - அழகிய ஒளியினையுடைய வேற்படையேந்திய குலபூடண பாண்டியன், சேனைக்கு அரசனை அழைத்து - தானைக் காவலனாகிய சுந்தர சாமந்தனை அழைத்து, நாளை வெங்கதிர் படுமுன் - நாளைச் சூரியன் மறையு முன்னே, சேனை யாவையும் விளித்தி என்றான் - படைவீரர்களனைவரையும் அழைப்பாயாக என்று கூறினான்.

படுதல் - மறைதல். விளித்தி: ஏவலொருமை முற்று. த்: எழுத்துப் பேறு. (௩௫)

என்றமன் னவனுக் கேற்கச் சாமந்த னிசைந்து வெள்ளி
மன்றவ னடிக்கீழ் வீழ்ந்து வள்ளலே யரச னீந்த
குன்றுறழ் நிதிய மெல்லாங் கொண்டெனைப் பணிகொண் டாயே
வன்றிறற் சேனை யீட்டும் வண்ணம்யா தென்னநின்றான்.

(இ - ள்.) என்ற மன்னவனுக்கு ஏற்கச் சாமந்தன் இசைந்து-என்று கூறிய வேந்தனுக்குப் பொருந்தச் சாமந்தன் உடன்பட்டு, வெள்ளி மன்றவன் அடிக்கீழ் வீழ்ந்து - வெள்ளியம்பலவாணன் திருவடியின் கீழே விழுந்து வணங்கி, வள்ளலே - என் வள்ளால், அரசன் ஈந்த குன்று உறழ் நிதியம் எல்லாம் கொண்டு - மன்னன் அளித்த மலைபோலும் பொருள் முழுதையும் ஏற்றுக்கொண்டு, எனைப் பணிகொண்டாயே - என்னை அடிமை கொண்டனையே, வன் திறல் சேனை ஈட்டும் வண்ணம் யாது என்ன நின்றான் - மிக்க வலியுடைய சேனைகளைத் திரட்டும்வகை யாது என்று குறையிரந்து நின்றான்.

வள்ளல் - வரையா தளிப்போன். தான் விரும்பியதனை அளிக்க வேண்டுமென்னுங் கருத்தால் 'வள்ளலே' என்றான். மலைபோலும் நிதிய மெல்லாம் கொள்ளை கொண்ட வள்ளலே என நகை தோன்றுமாறுங் கொள்க. வன்றிறல்: ஒருபொரு ளிருசொல். (௩௬)

அடியவர் குறைவு தீர்த்தாண் டருள்வதே விரதம் பூண்ட
கொடியணி மாடக் கூடற் கோமகன் காமற் காய்ந்த
பொடியணி புராணப் புத்தேட் புண்ணிய னருளி னாலே
இடியதிர் விசும்பு கீறி யெழுந்ததோர் தெய்வ வாக்கு.

(இ - ள்.) அடியவர் குறைவு தீர்த்து ஆண்டருள்வதே விரதம் பூண்ட - அடியாரின் குறையினைப் போக்கி ஆண்டருள்வதையே விரத

மாகக் கொண்ட, கொடி அணி மாடக் கூடல் கோமகன் - கொடிகள் கட்டிய மாடங்களையுடைய கூடலம்பதிக்கு நாயகனும், காமன் காய்ந்த பொடி அணி புராணப் புத்தேள் புண்ணியன் - மன்மதனை எரித்த திருநீறு தரித்த முது தெய்வமாகிய அற வுருவனும் ஆகிய சோமசுந்தரக் கடவுளின், அருளினால் - திருவருளாலே, இடி அதிர் விசும்பு கீறி ஓர் தெய்வ வாக்கு எழுந்தது - இடி முழங்கும் வானைக் கிழித்து ஒரு தெய்வ வாக்கு எழுந்தது.

விரதமாகப் பூண்ட என விரிக்க. அடியார்களின் அல்லல் தீர்த்து ஆளுவதையன்றி இறைவனுக்கு வேறு கடப்பாடில்லை என்றவாறாயிற்று. காய்ந்த புண்ணியன், பொடியணிந்த புண்ணியன் எனத் தனித்தனி சென்றியையும். (௧௭)

சூழ்ந்தெழு சேனை யோடுந் தோற்றுது நாளை நீயும்
வீழ்ந்தர சவையத் தெய்தி மேவுதி யென்ன விண்ணம்
போழ்ந்தெழு மாற்றங் கேட்டிப் பொருநரே றுவகை வெள்ளத்
தாழ்ந்தனன் முந்நீர் வெள்ளத் தலர்கதி ரவனு மாழ்ந்தான்.

(இ - ள்.) சூழ்ந்து எழு சேனையோடும் தோற்றுதும் நாளை - சூழ்ந்து எழுகின்ற தானை வீரர்களோடு நாமும் நாளை வருவோம்; நீயும் வீழ்ந்த அரசு அவையத்து எய்தி மேவுதி என்ன - நீயும் (வீரர் வரவை) விரும்பிய அரசனது அவையின்கட் சென்று இருப்பாயாக என்று, விண்ணம் போழ்ந்து எழு மாற்றம் கேட்டு - வானைப் பிளந்தெழுந்த வார்த்தையைக் கேட்டு, பொருநர் ஏறு உவகை வெள்ளத்து ஆழ்ந்தனன் - வீரருள் ஆண்சிங்கம்போன்ற சுந்தரசாமந்தன் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினன்; அலர் கதிரவனும் முந்நீர் வெள்ளத்து ஆழ்ந்தான் - விரிந்த கிரணத்தையுடைய சூரியனும் கடல் வெள்ளத்தில் மூழ்கினன்.

வீழ்ந்த என்னும் பெயரெச்சத்து அகரந் தொக்கது. விரும்பி யெய்தி என்றுமாம். விண்ணம், அம்: சாரியை. பொருநர் - வீரர். முந்நீராகிய வெள்ளம் என்க. (௧௮)

மீனவன் காண மேரு வில்லிதன் றமரை வன்கண்
மானவேன் மறவ ராக்கி வாம்பரி வீர னாகத்
தானுமோர் கூத்துக் கோலஞ் சமைத்துவந் தாட விட்ட
நீனிற வெழினி போலக் காரிரு ணிவந்த தெங்கும்.

(இ - ள்.) மீனவன் காண - பாண்டியன் காணுமாறு, மேருவில்லி - மேருவை வில்லாகக் கொண்ட சோமசுந்தரக்கடவுள், தன் தமரை - தன்னுடைய கணங்களை, வன்கண் மான வேல் மறவர் ஆக்கி - அஞ்சாமையையுடைய மான மிக்க வேலையேந்திய வீரர்களாகச் செய்து, தானும் ஓர் வாம் பரி வீரன் ஆகக் கோலம் சமைந்துவந்து - தானும் ஒரு தாவுகின்ற குதிரைவீரனாகக் கோலம் பூண்டுவந்து, கூத்து ஆட இட்ட - திருக்கூத்து ஆடுதற்கு இடப்பட்ட, நீல் நிற எழினி போலக் கார்இருள் எங்கும் நிவந்தது - நீலநிறத்தையுடைய திரைபோலக் கரிய இருளானது எங்கும் மிக்கது.

தமர் - சிவகணங்கள். ஆட - நடிக்க, திருவிளையாடல் செய்ய. நீலம் என்பது கடைக்குறையாயிற்று. இது தற்குறிப்பேற்றவணி. (கக)

புண்ணிய மனையிற் போகிப் புலர்வதெப் போழ்தென் றெண்ணி
அண்ணல்சா மந்தன் றுஞ்சா னடிக்கடி யெழுந்து வானத்
தெண்ணிறை மீன நோக்கி நாழிகை யெண்ணி யெண்ணிக்
கண்ணுத லெழுச்சி காண்பா னளந்தனன் கங்கு லெல்லாம்.

(இ - ள்.) அண்ணல் சாமந்தன் - பெருமையுடையனாகிய சுந்தர சாமந்தன், புண்ணிய மனையில் போகி - அறம் நிலைபெற்ற தன் இல்லிற் சென்று, புலர்வது எப்போழ்து என்று எண்ணி - விடிவது எப்போது என்று கருதி, துஞ்சான் - தூங்காமல், அடிக்கடி எழுந்து - அடிக்கடி எழுந்தெழுந்து, வானத்து எண் நிறை மீனம் நோக்கி - வானின்கண் உள்ள எண் மிக்க மீன்களை நோக்கி, நாழிகை எண்ணி எண்ணி - நாழிகையை எண்ணி யெண்ணி, கண்ணுதல் எழுச்சி காண்பான் - சோமசுந்தரக் கடவுளின் வருகையைக் காணுதற்கு, கங்குல் எல்லாம் அளந்தனன் - இரவு முழுதையும் அளந்தனன்.

அண்ணல் சாமந்தன், உயர்திணைப் பெயராகலின் வலி வர இயல் பாயிற்று. மீனம் - நாண் மீன்கள். இருபத்தேழு நாண்மீன்களில் உச்சியில் வருவதனைக் கொண்டு இரவு நாழிகை கணிக்கப்படும். எழுச்சி- எழுந்தருளுகை. இரவில் சென்ற நாழிகை இத்துணை, நின்ற நாழிகை இத்துணை என்று பன்முறையும் எண்ணினமையின் 'கங்குலெல்லாம் அளந்தனன்' என்றார். துஞ்சான் : முற்றெச்சம். காண்பான் : வினை யெச்சம். (உ0)

தெருட்டரு மறைக டேறுச் சிவபரஞ் சுடரோ ரன்பன்*
பொருட்டொரு வடிவங் கொண்டு புரவிமேற் கொண்டுபோதும்
அருட்படை யெழுச்சி காண்பான் போலவார் கலியின் மூழ்கி
இருட்டுகள் கழுவித் தூய விரவிவந் துதயஞ் செய்தான்.

(இ - ள்.) தெருள் தரு மறைகள் தேறாச் சிவபரஞ்சுடர் - அறிவை விளக்குகின்ற மறைகளுந் தெளியாத சிவபரஞ்சோதி, ஓர் அன்பன் பொருட்டு ஒரு வடிவம்கொண்டு - ஓர் அன்பன் காரணமாக ஒரு திரு வுருவங்கொண்டு, புரவிமேற் கொண்டு போதும் - குதிரைமேற்கொண்டு வருகின்ற, அருள் படை எழுச்சி காண்பான்போல - அருட்படை யெழுச்சியைக் காணவந்தவன்போல, ஆர் கலியில் மூழ்கி-கடலில் முழுகி, இருள் துகள் கழுவி - இருளாகிய அழுக்கினைப் போக்கி, தூய இரவி வந்து உதயம் செய்தான்-தூயனாகிய பரிதி வந்து தோன்றினான்.

தெருள் - தெளிந்த அறிவு. தெருட்டு எனப் பிரித்து, உயிர்கட்கு விதி விலக்குகளைத் தெளிவிக்கின்ற என்றுரைத்தலுமாம். அருளினா லாகிய படையெழுச்சி என்க. படையெழுச்சி - படையுடன் புறப் படுதல். பெரியாரைக் காணவருவார் நீராடித் தூயவுடம்புடன் வருவ ராகலின் இரவியும் அங்ஙனம் வந்தான் என்றார். இதுவும் தற்குறிப் பேற்றவணி. (உக)

(பா - ம்.) *சுடரோ னன்பன்.

பொருநரே றனையா னேர்ந்து போந்துநான் மாடக் கூடற்
கருணைநா யகனைத் தாழ்ந்து கைதொழு திரந்து வேண்டிப்
பரவிமீண் டொளிவெண் டிங்கட் பன்மணிக் குடைக்கீ ழேகிக்
குருமதி மருமான் கோயிற் குறுகினன் குறுகு மெல்லை.

(இ - ள்.) பொருநர் ஏறு அனையான் ஏர்ந்து போந்து-வீரருள் ஆண் சிங்கம்போன்ற சுந்தர சாமந்தன் எழுந்து சென்று, நான்மாடக் கூடல் கருணை நாயகனைத் தாழ்ந்து கைதொழுது - நான்மாடக் கூடலில் வீற்றிருக்கும் அருட்கோமானாகிய சோமசுந்தரக் கடவுளைப் பணிந்து கை கூப்பி, இரந்து வேண்டிப் பரவி மீண்டு - குறையிரந்து வேண்டித் துதித்து மீண்டு, ஒளி வெண் திங்கள் பன்மணிக் குடைக் கீழ் ஏகி-ஒளி பொருந்திய வெள்ளிய சந்திரனை ஒத்த முத்துக் குடையின் கீழ்ச்சென்று, குருமதி மருமான் கோயில் குறுகினன் - நிறம் பொருந்திய சந்திரன் மரபினனாகிய பாண்டியன் மாளிகையை அடைந்தான், குறுகும் எல்லை-அங்ஙனம் அடையும்போது.

நேர்ந்து எனப் பிரித்து ஞாயிற்றின் உதயத்தை எதிர்த்து என்றும், செய்கடன் முற்றி என்றும், திருக்கோயிலை நோக்கி என்றும் உரைத்தலுமாம். பன்மணி - பலவாகிய முத்து; விலையேறிய முத்துமாம். திங்கட்குடை என வியையும். குரு - நிறம். மருமான் - வழித் தோன்றல் (உஉ)

கரைமதி யெயிற்றுச் சங்கு கன்னன்முன் னன வென்றிப்
பிரதம கணமுங் குண்டப் பெருவயிற் றொருவ னாதி
வரைபுரை குறுத்தாட்* பூத மறவருங் குழுமி வீக்கு
குரைகழல் வலிய நோன்றாட் கோளுடை வயவ ராகி.

(இ - ள்.) கரைமதி எயிற்றுச் சங்கு கன்னன் முன்னன வென்றிப் பிரதமகணமும் - தேய்ந்த மதி போன்ற பற்களையுடைய சங்கு கன்னன் முதலிய வெற்றியை யுடைய சிவகணங்களும், குண்டப்பெரு வயிற்று ஒருவன் ஆதி - ஆழ்ந்த பெரு வயிற்றினையுடைய குண்டோதரன் முதலிய, வரை புரை குறுதாள் பூதமறவரும் குழுமி - மலையை ஒத்த குறிய தாளையுடைய பூத வீரருங்கூடி, வீக்கு குரை கழல் வலிய நோன்தாள் - கட்டப்பட்ட ஒலிக்கும் வீரக்கழலை யுடைய வலிய பெரிய தாள்களையும், கோள் உடைவயவர் ஆகி - வலியினையுமுடைய வீரர்களாகி.

கரைதல் - தேய்தல்; குறைதல். குண்ட வயிற்றோன் - குண்டோதரன். குறுத்தாள்: வலித்தல் விகாரம். வலிய குரைகழல் வீக்கு நோன்றாள் என இயைத்தலுமாம். (உ௩)

(பா - ம்.) *குறுந்தாள்.

நெட்டிலை வடிவாள் குந்தந் தோமர நேமி நெய்த்தோர்
ஒட்டிய கணிச்சி சாப முடம்பிடி முதலா வெண்ணப்
பட்டவெம் படைமூ வாறும் பரித்தசெங் கையர் காலிற்
கட்டிய கழலர் காலிற் கடியராய்ப் புறம்பு காப்ப.

(இ - ள்.) நெடு இலை வடி வாள் - நெடிய தகட்டு வடிவமமைந்த வடித்த வாளும், குந்தம்-பெருஞ்சவளமும், தோமரம்-இருப்புலக்கையும், நேமி - திகிரியும், நெய்த் தோர் ஒட்டிய கணிச்சி - குருதி பொருந்திய மழுவும், சாபம் - வில்லும், உடம்பிடி - வேலும், முதலா எண்ணப்பட்ட-முதலாக எண்ணப்பட்ட, வெம்படை மூவாறும் பரித்த செங்கையர் - வெவ்விய பதினெட்டுப் படைக்கலங்களையும் ஏந்திய சிவந்த கையை யுடையவரும், காலில் கட்டிய கழலர்-காலிற்கட்டிய வீரக்கழலை யுடைய வரும், காலில் கடியராய்ப் புறம்பு காப்ப-காற்றினும் விரைந்த செலவினை யுடையவருமாய்ப் புறத்திற் சூழ்ந்து காக்கவும்.

நெய்த்தோர்-குருதி. படைக்கலங்களிற் சிறந்தனவாகக் கொள்ளப் பட்டன பதினெட்டுப் போலும். பிரதம கணமும் பூதமறவரும் இங்ஙனம் புறம்பு காப்பவென்க. (உச)

வார்கெழு கழற்கா னந்தி மாகாளன் பிருங்கி வென்றித்
தார்கெழு நிகும்பன் கும்போ தரன்முதற் றலைவர் யாரும்
போர்கெழு கவசந் தொட்டுப் புண்டர நுதலிற் றீட்டிக்
கூர்கெழு வடிவா ளேந்திக் குதிரைச்சே வகராய்ச் சூழ.

(இ - ள்.) வார் கெழு கழல் கால் நந்தி - நீட்சி பொருந்திய வீரக் கழல் அணிந்த காலையுடைய நந்தியும், மாகாளன் - மாகாளனும், பிருங்கி - பிருங்கியும், வென்றித்தார் கெழு நிகும்பன் - வெற்றிமாலை பொருந்திய நிகும்பனும், கும்போதரன் - கும்போதரனும், முதல் தலைவர் யாரும் - முதலிய சிவகணத் தலைவர் அனைவரும், போர் கெழு கவசம் தொட்டு - போரிற்குரிய கவசம் பூண்டு, நுதலின் புண்டரம் தீட்டி-நெற்றியிலே திருநீறு தரித்து, கூர்கெழு வடிவாள் ஏந்தி-கூர்மை பொருந்திய வடித்த வாளை ஏந்தி, குதிரைச் சேவகராய்ச் சூழ - குதிரை வீரராய்ச் சூழ்ந்து வரவும்.

தொட்டு - பூண்டு. (உரு)

கற்றைச்சா மரைகள் பிச்சங் கவிகைபூங் கொடிக்கா டெங்கும்
துற்றக்* கா ரொலியு நாணத் தூரிய முழுது மேங்கக்
கோற்றப்போர் விடையைத் தானே குரங்குளைப் பரியா மேற்கொண்
டோற்றைச்சே வகராய் மாறி யாடிய வொருவர் வந்தார்.

(இ - ள்.) கற்றைச் சாமரைகள் பிச்சம் கவிகை பூங்கொடிக் காடு எங்கும் துற்ற - திரளாகிய சாமரைகளும் பீலிகளும் குடைகளும் பொலிவினையுடைய துவசக்காடும் எங்கும் நெருங்கவும், கார் ஒலியும் நாணத் தூரியம் முழுதும் ஏங்க - முகிலின் இடியொலியும் நாணுமாறு

(ப - ம்.) *எங்கு முற்ற.

இயங்களனைத்தும் முழங்கவும், கொற்றப் போர்விடையைத் தானே - வெற்றியையுடைய போருக்குரிய இடபவூர்தியையே, குரங்கு உளை பரியா மேற்கொண்டு - வளைந்த பிடரிமயிரையுடைய குதிரையாக (ஆக்கி) அதில் ஏறியருளி, ஒற்றைச் சேவகராய் - ஒப்பற்ற வீரராய், மாறியாடிய ஒருவர் வந்தார் - கான்மாறியாடிய பெருமானார் வந்தருளினார்.

சாமரை, பிச்சம், கவிகை, கொடி ஆகிய காடு என்னலுமாம். முற்ற என்னும் பாடத்திற்குச் சூழ என்பது பொருள். தான் : அசை. குரங்கல்-வளைதல் ;

"குரங்கமை யுடுத்த மரம்பயி லடுக்கத்து"

என்பது சிலப்பதிகாரம். (உ௬)

பல்லிய மொலிக்கு மார்ப்பும் பாய்பரி கலிக்கு மார்ப்புஞ்
செல்லொலி மழுங்க மள்ளர் தெழித்திடு மார்ப்பு மொன்றிக்
கல்லெனுஞ் சும்மைத் தாகிக் கலந்தெழு சேனை மேனாள்
மல்லன்மா நகர்மேற் சீறி வருகடல் போன்ற தன்றே.

(இ - ள்.) பல் இயம் ஒலிக்கும் ஆர்ப்பும் - பல இயங்களும் ஒலிக்கின்ற ஒலியும், பாய் பரி கலிக்கும் ஆர்ப்பும் - பாய்கின்ற குதிரைகள் கனைக்கும் ஒலியும், செல் ஒலி மழுங்க மள்ளர் தெழித்திடும் ஆர்ப்பும்- முகிலின் இடி யொலியும் மழுங்கும்படி வீரர்கள் உரப்பும் ஒலியும், ஒன்றி - கலந்து, கல்லெனும் சும்மைத்து ஆகி கலந்து எழுசேனை - கல்லென்னும் ஓசையையுடையதாகிக் கலந்தெழுந்த சேனையானது, மேல் நாள் - முன்னாளில், மல்லல் மாநகர்மேல் சீறி வருகடல் போன்றது- வளப்பமிக்க பெரிய மதுரையின்மேற் சீறிவந்த கடலை ஒத்தது.

தெழித்தல் - உரப்புதல்; அதட்டுதல். ஓசையாலும் பரப்பாலும் கடல் போன்றது. மதுரையை நோக்கி வந்தமையின் முன்பு அங்ஙனம் வந்த கடலைக் கூறினார். அன்று, ஏ : அசைகள். (உ௭)

சேனையின் வரவு நோக்கித் திருமகன் திருமுன் னேகுந்
தானையந் தலைவன்* றென்னன் றாணிழல் குறுகிக் கூற
மீனவ னுவகை பூத்து வெயின்மணிக் கடையிற் போந்தங்
கானமண் டபத்திற் செம்பொ னரியணை மீது வைகி.

(இ - ள்.) சேனையின் வரவு நோக்கி - தானையின் வருகையைப் பார்த்து, திருமகன் திருமுன் ஏகும் - அரச சமுதாயத்திற்குச் செல்லும், தானை அம் தலைவன் - படைத்தலைவனாகிய சுந்தரசாமந்தன், தென்னன் தாள் நிழல் குறுகிக் கூற - குலபூடண பாண்டியனது அடி நிழலை அடைந்து கூற, மீனவன் உவகை பூத்து, அவ்வழுதியானவன் மகிழ்ந்து, வெயில்மணிக் கடையில் போந்து - ஒளிபொருந்திய மணிகள் பதித்த கடைவாயிலில் வந்து, அங்கு ஆன மண்டபத்தில் - அங்கு இருத்

(பா - ம்.) *தானையர் தலைவன்.

தற்கு அமைந்த மண்டபத்தின்கண், செம்பொன் அரி அணை மீது வைகி - செம்பொன்னாலாகிய சிங்காதனத்தின்மீது அமர்ந்து.

திருமகன் - சிறந்தோன், அரசன். அம்: சாரியை. தென்னன், மீனவன் என்பவற்றைச் சுட்டாகக் கொள்க. (உஅ)

தெவ்வடு மகிழ்ச்சி போங்கச் சேனையின் செல்வ* நோக்கி
எவ்வெவ தேயத்† துள்ளா ரிவரென வெதிரே நின்று
கௌவையின் மனச்சா மந்தன் கையிற்பொற் பிரம்பு நீட்டி
அவ்வவர் தொகுதி யெல்லா மணியணி நிறுவிக் கூறும்.

(இ - ள்.) தெவ் அடு மகிழ்ச்சி பொங்க - பகைவனாகிய சேதிராயனைக் கொல்லும் மகிழ்ச்சி மிக, சேனையின் செல்வம் நோக்கி - சேனையின் பெருக்கத்தைப் பார்த்து, இவர் எவ்வெவ்தேயத்து உள்ளார் என - இவர்கள் எந்தெந்தத் தேயத்திலுள்ளவர்கள் என்று பாண்டியன் வினவ, கௌவை இல் மனச்சாமந்தன் - துன்பமில்லாத மனத்தினையுடைய சாமந்தன், எதிரே நின்று கையில் பொன் பிரம்பு நீட்டி - எதிரில் நின்று கையிலுள்ள பொற் பிரம்பினை நீட்டி, அவ்வவர் தொகுதி எல்லாம் அணிஅணி நிறுவிக்கூறும் - அவரவர் கூட்டங்களையெல்லாம் அணியணியாக நிறுத்திக் கூறுவான்.

நோக்கி மகிழ்ச்சிபொங்க வினவ என்க ; பொங்கு அச்சேனை எனப் பிரித்துரைத்தலுமாம். எவ்வெவ, அ: அசை: அவரவர் என்பது அவ்வவர் என்றாய்து. (உக)

[கலிவிருத்தம்]

கோங்கரிவ ரையகுரு நாடரிவ ரைய
கங்கரிவ ரையகரு நாடரிவ ரைய
அங்கரிவ ரையவிவ ராரியர்க ளைய
வங்கரிவ ரையவிவர் மாளவர்க ளைய.

(இ - ள்.) ஐய இவர் கொங்கர் - ஐயனே இவர் கொங்கநாட்டினர், ஐய இவர் குருநாடர் - ஐயனே இவர் குருநாட்டினர்; ஐய இவர் கங்கர்- ஐயனே இவர் கங்கநாட்டினர் ; ஐய இவர் கருநாடர் - ஐயனே இவர் கருநாடநாட்டினர் ; ஐயஇவர் அங்கர் - ஐயனே இவர் அங்கநாட்டினர் ; ஐய இவர் ஆரியர்கள் - ஐயனே இவர்கள் ஆரிய நாட்டினர்கள் ; ஐய இவர் வங்கர் - ஐயனே இவர் வங்கநாட்டினர் ; ஐய இவர் மாளவர்கள் - ஐயனே இவர்கள் மாளவநாட்டினர்கள். (கூ0)

குலிங்கரிவ ரையவிவர் கோங்கணர்க ளைய
தெலுங்கரிவ ரையவிவர் சிங்களர்க ளைய
கலிங்கரிவ ரையகவு டத்தரிவ ரைய
உலங்கெழு புயத்திவர்க ளோட்டியர்க ளைய.

(பா - ம்.) *சேனையின் செவ்வி. †எவ்வெவத் தேயத்திலுள்ளார்.

(இ - ள்.) ஐய இவர் குலிங்கர் - ஐயனே இவர் குலிங்க நாட்டினர்; ஐய இவர் கொங்கணர்கள் - ஐயனே இவர்கள் கொங்கண நாட்டினர்கள்; ஐய இவர் தெலுங்கர் - ஐயனே இவர் தெலுங்கநாட்டினர்; ஐய இவர் சிங்களர்கள் - ஐயனே இவர்கள் சிங்கள நாட்டினர்கள்; ஐய இவர் கலிங்கர் - ஐயனே இவர் கலிங்க நாட்டினர், ஐய இவர் கவுடத்தர் - ஐயனே இவர் கவுட நாட்டினர், ஐய உலம் கெழு புயத்து இவர்கள் ஒட்டியர்கள் - ஐயனே திரண்ட கற்போலும் புயத்தினையுடைய இவர்கள் ஒட்டிய நாட்டினர்கள். (௩௧)

கோல்லரிவ ரையவிவர் கூர்ச்சரர்க ளைய
பல்லரிவ ரையவிவர் பப்பரர்க ளைய
வில்லரிவ ரையவிவர் விதேகரிவ ரைய
கல்லோலி கழற்புனை கடாரரிவ ரைய.

(இ - ள்.) ஐய இவர் கொல்லர் - ஐயனே இவர் கொல்லநாட்டினர்; ஐய இவர் கூர்ச்சரர்கள் - ஐயனே இவர்கள் கூர்ச்சர நாட்டினர்கள்; ஐய இவர் பல்லவர் - ஐயனே இவர் பல்லவநாட்டினர்; ஐய இவர் பப்பரர்கள் - ஐயனே இவர்கள் பப்பர நாட்டினர்கள்; ஐய இவர் வில்லர் - ஐயனே இவர்கள் வில்லர்கள்; ஐய இவர் விதேகர் - ஐயனே இவர் விதேகநாட்டினர்; ஐய இவர் கல் ஒலி கழல்புனை கடாரர் - ஐயனே இவர் கல்லென்னும் ஒலியையுடைய வீரக்கழலையணிந்த கடார நாட்டினர்.

பல்லவர் என்பது பல்லர் என நின்றது; வில்லர் - விற்கொடியை யுடைய சேரரின் நாட்டினர். கல்லென்னு மொலி என்பது கல்லொலி என நின்றது. (௩௨)

கேகயர்க ளாலிவர்கள் கேழ்கிளர் மணிப்பூண்
மாகதர்க ளாலிவர் மராடரிவர் காஞ்சி
நாகரிக ராலிவர்க ணம்முடைய நாட்டோர்
ஆகுமிவர் தாமெனமெய்க்* காட்டியறி வித்தான்.

(இ - ள்.) இவர்கள் கேகயர்கள் - இவர்கள் கேகயநாட்டினர்கள்; கேழ்கிளர் மணிப்பூண் இவர் மாகதர்கள் - ஒளி விளங்கும் மணிகள் பதித்த அணிகளை யணிந்த இவர்கள் மகத நாட்டினர்கள்; இவர் மராடர் - இவர் மராடநாட்டினர்; இவர்கள் காஞ்சிநாகரிகர் - இவர்கள் காஞ்சி நாட்டிலுள்ள நாகரிகமுடையவர்கள்; இவர் நம்முடைய நாட்டோர் ஆகும் - இவர் நமது நாட்டினராவர்; என என்று, மெய்க் காட்டி அறிவித்தான் - அவரவர் உருவினைக் காட்டித் தெரிவித்தான்.

ஆல் மூன்றும், தாம் என்பதும் அசைகள். காஞ்சி நாகரிகர் என்றது சோழரை யாதல்வேண்டும். (௩௩)

இத்தகைய சேட்புல னுளாரையிவ னுய்த்த
வித்தகைமை யென்னென வினவியருள் செய்யேல்
அத்தநின் னரும்பொரு ளனைத்தும்வரை யாதே
உய்த்தலி னடைந்தனர்க ளாலென வுரைத்தான்.

(பா - ம்.) *மெய்காட்டி.

(இ - ள்.) இத்தகைய சேண் புலன் உளாரை - இத்தன்மையுடைய சேய்மை நாடுகளில் உள்ளாரை, இவண் உய்த்த வித்தகைமை என் என - இங்கு வருவித்த சாமார்த்தியம் யாது என்று, வினவி யருள் செய்யேல் - வினவியருளாதே, அத்த - பெருமானே, நின் அரும் பொருள் அனைத்தும் - நினது அரிய பொருள் முற்றும் வரையாது உய்த்தலின் - வரையறையின்றிச் செலவு செய்தமையால், அடைந்தனர்கள் என உரைத்தான் - இவர்கள் யாவரும் வந்தார்கள் என்று கூறினான்.

வித்தகம் - சதுரப்பாடு; இது மை என்னும் பகுதிப்பொருள் விகுதிபெற்று வித்தகைமை எனத் திரிந்தது. இவர்கள் வந்தமைக்கு நின் பொருள் காரணமாமன்றி என் வித்தகம் காரணமன்று என அடங்கிக் கூறினான். அரும் பொருள் - பெறுதற்கரிய பொருள், அறநெறியால் வந்த பொருள். ஆல் : அசை. அறிவித்தவன் வினவற்க உய்த்தலின் அடைந்தனர் என உரைத்தான் என்க. இவ்வைந்து செய்யுட்களிலும் பலர்பாலில் இரு விகுதிபெற்று வந்த சொற்களுள்ளமை காண்க. (௩௪)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

அந்நெடுஞ் சேனை தன்னுட் சேணிடை யடன்மா வூர்ந்து
பின்னுற நிற்கு மொற்றைச் சேவகப் பிரானை நோக்கி
மன்னவ னவன்யா ரென்னச் சாமந்தன் வணங்கி யைய
இன்னவர் சேனை வெள்ளத் தியாரையென் றறிவ தென்றான்.

(இ - ள்.) அந் நெடுஞ்சேனை தன்னுள் - அப் பெரிய சேனையின் கண், சேண் இடை அடல்மா ஊர்ந்து பின்உற நிற்கும் - சேய்மையில் வலிய குதிரையைச் செலுத்திப் பின்னாக நிற்கின்ற, ஒற்றைச் சேவகப் பிரானை - ஒப்பில்லாத வீரனாகிய இறைவனை, மன்னவன் நோக்கி - பாண்டி வேந்தன் பார்த்து, அவன் யார் என்ன - அவன் யார் என்று வினவ, சாமந்தன் வணங்கி - சாமந்தன் தொழுது ஐய - ஐயனே, இன்னவர் சேனை வெள்ளத்து - இவர்களின் சேனைப் பெருக்கத்துள், யார் என்று அறிவது என்றான் - யார் என்று அறிந்து சொல்லக்கூடும் என்று கூறினான்.

இச் சேனை வெள்ளத்திலே தனித்தனியாக அறியலுறின் யாரை அறியக்கூடும் என்றானென்க. இன்னவர் யாரென்று அறிவது என இயைத்தலுமாம். (௩௫)

அவரையிங் கழைத்தி யென்றா னரசன்றன் வழிச்செல் வார்போற்
கவயமிட் டவரும் போந்தார் காவலன் களிகூர்ந் தம்பொன்
நவமணிக் கலன்பொன் னாடை நல்கினா னுள்ளத் தன்பு
தவறிலான் பொருட்டு வாங்கித் தரித்துத்தன் றமர்க்கு மீந்தார்.

(இ - ள்.) அவரை இங்கு அழைத்தி என்றான் - அவரை இங்கு அழைப்பாயாக என்றான் வேந்தன்; அரசன் தன் வழிச் செல்வார்போல் - அவனது வழிப்பட்டுச் செல்பவரைப்போல, கவயம் இட்டவரும் போந்தார் - கவசமணிந்த அவ் வீரரும் போந்தார்; காவலன் களி கூர்ந்து - மன்னன் மகிழ்ச்சிமிக்கு, அம்பொன் நவமணிக்கலன் பொன் ஆடை நல்கினான் - அழகிய பொன்னாலாகிய நவமணியிழைத்த அணி

களையும் பொன்னுடைகளையும் கொடுத்தான்; உள்ளத்து அன்பு தவறி லான் பொருட்டு வாங்கித் தரித்து - அவர் மனத்தின்கண் அன்பு நீங்காத சாமந்தன் பொருட்டு அவற்றை வாங்கி அணிந்துகொண்டு, தன் தமர்க்கும் ஈந்தார் - தம் பரிசனங்கட்குங் கொடுத்தருளினர்.

அழைத்தியென்றான் அழைக்கவே அவரும் போந்தார் என விரித்துரைக்க. அவரது தோற்றத்தால் அரசன் களிகூர்ந்தானாயிற்று. தன்றமர்க்கும் ஈந்தார் என ஒருமைச் சொல்லும் பன்மைச் சொல்லும் விரவி வந்தன. (௩௯)

ஆய்ந்தவெம் பரிமாத் தூண்டி யைங்கதி நடத்திக் காட்டி
ஏய்ந்ததஞ் சேனை வெள்ளத் தெய்தின ரெய்து மெல்லை
வேய்ந்ததார்ச் சேதி ராயன் வேட்டைபோய்ப் புலிகோட் பட்டு
மாய்ந்தன னென்றோ ரொற்றன் வேந்தன்முன் வந்துசொன்னான்.

(இ - ள்.) ஆய்ந்த வெம் பரிமாத் தூண்டி - ஆராய்ந்துகொண்ட கடிய செலவினையுடைய குதிரையைச் செலுத்தி, ஐங்கதி நடத்திக் காட்டி-ஐவகைக் கதிகளிலும் நடத்திக் காண்பித்து, ஏய்ந்த தம் சேனை வெள்ளத்து எய்தினர் - பொருந்திய தமது தானைவெள்ளத்தை அடைந்தார், எய்தும் எல்லை - அங்ஙனம் அடையும்பொழுது, தார் வேய்ந்த சேதிராயன் வேட்டைபோய் - மாலையணிந்த சேதிராயன் என்பான் வேட்டைக்குச் சென்று, புலிகோட்பட்டு மாய்ந்தனன் என்று - புலியினாற் கொள்ளப்பட்டு இறந்துபட்டனன் என்று, வேந்தன் முன் ஓர் ஒற்றன் வந்து சொன்னான் - மன்னன் முன்னே ஓர் ஒற்றன் வந்து கூறினன்.

ஐங்கதி இவை யென்பதனை,

"விக்கிதம் வற்கிதம் வெல்லு முபகண்டம்
மத்திமம் சாரியோ டைந்து"

என்பதனு லறிக; கோட்பட்டு: தம்மினைய தொழிற்சொல். (௩௭)

முரசதி ரனிக நோக்கி முகமலர்ந் துவகை பூத்த
அரசனு மனிக வேந்தற் களவில்சீர்த் தலைமை யோடும்
வரிசைகண் மிதப்ப நல்கி வந்துமெய்க் காட்டுத் தந்து
பரசிய பதாதி தத்தம் பதிபுகச் செலுத்து கென்றான்.

(இ - ள்.) முரசு அதிர் அனிகம் நோக்கி - முரசு முழங்குஞ் சேனையைப் பார்த்து, முகம் மலர்ந்து உவகை பூத்த அரசனும் - முக மலர்ந்து மகிழ்ச்சியுற்ற வேந்தனும், அனிக வேந்தற்கு - சேனைத் தலைவனாகிய சுந்தரசாமந்தனுக்கு, அளவு இல் சீர்த்தலைமையோடும் வரிசைகள் மிதப்ப நல்கி - அளவில்லாத சிறப்பினையுடைய தலைமையோடு வரிசைகளையும் நிரம்பக் கொடுத்து, வந்து மெய்க்காட்டுத் தந்து பரசிய பதாதி தத்தம் பதிபுகச் செலுத்துக என்றான் - வந்து மெய்க்காட்டுக் கொடுத்துத் துதிக்கப்பெற்ற சேனைகள் தத்தம் நகரிற் செல்லுமாறு விடுக்க என்று கூறினன்.

தலைமை - முதன்மைக்குரிய பட்டம்; வேறு சிறந்த வினைத்தலைமையுமாம். மெய்யைக் காட்டிய அளவானே புகழப்பெற்ற. பதாதி - காலாள். செலுத்துகென்றான்: அகரந் தொக்கது. (௬அ)

அறைந்தவார் கழற்காற் சேனை காவல னனிகந் தத்தஞ்
சிறந்தசே ணுட்டிற் செல்லச் செலுத்துவான் போன்று நிற்ப
நிறைந்தநான் மாடக் கூட னிருத்தனந் நிலைநின் றுங்கே
மறைந்தனன் மனித்த வேடங்* காட்டிய மறவ ரோடும்.

(இ - ள்.) அறைந்த வார்கழல் கால் சேனை காவலன் - ஒலிக்கின்ற நீண்ட வீரக்கழலையணிந்த காலையுடைய படைத்தலைவனாகிய சுந்தர சாமந்தன், அனிகம் - சேனைகள், தத்தம் சிறந்த சேண் நாட்டில் செல்ல- தத்தமக்குரிய சிறந்த சேய்மையிலுள்ள நாடுகளிற் செல்லுமாறு, செலுத்துவான் போன்று நிற்ப - செலுத்துகின்றவனைப்போலப் பாவனை செய்துநிற்க, நிறைந்த நான்மாடக் கூடல் நிருத்தன்-பெருமை நிறைந்த மதுரையில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக்கடவுள், அந்நிலை நின்றுங்கே - அங்கு நின்றபடியே, மனித்த வேடம் காட்டிய மறவரோடும் மறைந்தனன் - மனித வேடம் காட்டிய வீரராகிய சிவ கணங்களோடும் மறைந்தருளினன்.

நிறைந்த என்பதனை நிருத்தனுக்கேற்றி யுரைத்தலுமாம். அங்கே தோன்றி நின்றாற்போன்றே மறைந்தனன் என்க. நின்று ஆங்கே எனப் பிரித்து, அந்நிலை நின்றும் அப்பொழுதே மறைந்தனன் என்னலுமாம். (௬௯)

கண்டனன் பொருநை நாடன் வியந்தனன் கருத்தா சங்கை
கொண்டனன் குறித்து நோக்கி யீதுநங் கூடன் மேய
அண்டர்தம் பெருமான் செய்த வாடலென் றெண்ணிக் கண்ணீர்
விண்டனன் புளகம் போர்ப்ப மெய்யன்பு வடிவ மானன்.

(இ - ள்.) பொருநைநாடன் கண்டனன் வியந்தனன் - பொருநை யாறு சூழ்ந்த நாட்டினையுடைய குலபூடண பாண்டியன் இதனைக் கண்டு வியந்து, கருத்து ஆசங்கை கொண்டனன் - கருத்தில் ஐயுறவு கொண்டு, குறித்து நோக்கி - உய்த்துணர்ந்து, ஈது நம் கூடல் மேய அண்டர் தம் பெருமான் செய்த ஆடல் என்று எண்ணி - இது நமது கூடலில் வீற் றிருக்குந் தேவதேவனாகிய சோமசுந்தரக்கடவுள் செய்தருளிய திருவிளை யாடலென்று துணிந்து, கண்ணீர் விண்டனன் - கண்களில் ஆனந்த அருவி பொழியப்பெற்று, மெய்புளகம் போர்ப்ப அன்பு வடிவம் ஆனான் - உடல் முழுதும் புளகம் மூட அன்பே வடிவ மாயினன்.

முதற்கண் வியப்பும் ஐயமும் எய்தியவன் பின்பு குறித்து நோக்கி ஆடல் என்று துணிந்து அன்பு வடிவமானான் என்க. எண்ணி - துணிந்து என்னும் பொருட்டு. கண்டனன் முதலிய முற்றுக்கள் நான்கும் எச்ச மாயின. தம்: சாரியை; மெய் என்பதனை அன்புடன் கூட்டி, உண்மையன்பு என்னலுமாம். (௭0)

(பா - ம்) *மனித வேடம்.

தனக்குயிர்த் துணையா நின்ற சாமந்தன் றன்னை நோக்கி
உனக்கெளி வந்தார் கூட லுடையநா யகரே யென்றால்
எனக்கவ ராவார் நீயே யென்றவற் கியாவு நல்கி
மனக்கவல் பின்றி வாழ்ந்தான் மதிவழி வந்த மைந்தன்,

(இ - ள்.) தனக்கு உயிர்த்துணையா நின்ற சாமந்தன் தன்னை நோக்கி - தனக்கு உயிர்த்துணையாகப் பொருந்தி நின்ற சுந்தரசாமந்தனைப் பார்த்து, கூடல் உடைய நாயகரே - மதுரையில் வீற்றிருக்கும் எல்லாமுடைய சோமசுந்தரக்கடவுளே, உனக்கு எளிவந்தார் என்றால் - நினக்கு எளிதில் வந்தருளினாரென்றால், எனக்கு அவராவார் நீயே என்று - எனக்கு அக்கடவுள் நீயே என்று, அவற்கு யாவும் நல்கி - அவனுக்குப் பல சிறப்புக்களையுங் கொடுத்து, மதிவழி வந்த மைந்தன் - சந்திரன் மரபில் வந்த குலபூடண பாண்டியன், மனக்கவல்பு இன்றி வாழ்ந்தான் - மனத்திற் கவலை என்பதில்லாமல் வாழ்ந்து வருவானாயினன்.

நாயகரே என்பதில் ஏகாரம் சிறப்புணர்த்திற்று. ஆவார்: முதல் வேற்றுமைச்சொல். சிவனடியாரைச் சிவனெனவே தேறி வழிபடுதல் முறையாகலின் 'அவர் நீயே' என்றான். (சக)

ஆகச்செய்யுள் - கஎ0௪.

முப்பத்தொன்றுவது

உலவாக்கிழியருளிய படலம்

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

அடியார் பொருட்டுப் பரிவயவ ராகிச் செழியன் காணவிடைக்
கோடியார் வந்து மெய்க்காட்டுக் கொடுத்த வண்ண மெடுத்துரைத்துங்
கடியார் கொன்றை முடியாரக் கன்னி நாடன் றனக்கிசைந்த
படியா லுலவாக் கிழிகொடுத்த படியை யறிந்த படிபகர்வாம்.

(இ - ள்.) விடைக்கொடியார் - இடபக்கொடியையுடைய் சோம சுந்தரக் கடவுள், அடியார் பொருட்டு - அடியாராகிய சாமந்தர் பொருட்டு, பரிவயவராகி - குதிரை வீரராகி, செழியன் காணவந்து - பாண்டியன் காணுமாறு வந்து, மெய்க் காட்டுக் கொடுத்த வண்ணம் எடுத்து உரைத்தும் - மெய்க்காட்டுக் கொடுத்தருளிய திருவிளையாடலைக் கூறினேம்; கடி ஆர் கொன்றை முடியார் - (இனி) மணம் நிறைந்த கொன்றை வேணியராகிய அவரே, அக்கன்னி நாடன் தனக்கு இசைந்த படியால் - அப்பாண்டி நாடன் தனக்கு மனமொத்த அன்பனானபடியி னால், உலவாக்கிழி கொடுத்த படியை - (அவனுக்கு) உலவாக்கிழி அளித்த திருவிளையாடலை, அறிந்தபடி பகர்வாம் - அறிந்தவாறு கூறுவாம்.

உரைத்தும் - உரைத்தாம். கன்னி நாடனுக்குப் பொருந்தியவாறு கொடுத்தபடி என்றலுமாம். உலவாக்கிழி - எடுக்கக் குறையாத பொன் முடிப்பு. (க)

வள்ளல் குலபூ டணன்றிங்கள் வாரந் தொடுத்துச் சிவதருமம்
உள்ள வெல்லாம் வழாதுநோற் றொழுகும் வலியாற் றன்னாட்டில்
எள்ள லில்லா வேதியரை யிகழ்ந்தா னதனான் மழைமறுத்து
வெள்ள மருக வளங்குன்றி விளைவஃ கியது நாடெல்லாம்.

(இ - ள்.) வள்ளல் குலபூடணன்-வள்ளலாகிய குலபூடணபாண்டியன், திங்கள்வாரம் தொடுத்துச் சிவதருமம் உள்ள எல்லாம் - சோமவார விரதம் முதலாக உள்ள சிவபுண்ணியங்களனைத்தையும், வழாது நோற்று ஒழுகும் வலியால் - தவறாமல் நோற்று நடக்கும் வன்மையினால், தன் நாட்டில் எள்ளல் இல்லா வேதியரை இகழ்ந்தான் - தனது நாட்டிலுள்ள இகழ்தற்குரியரல்லாத மறையோரை அவமதித்தான்; அதனால் மழை மறுத்து வெள்ளம் அருக - அதனாலே மழை பெய்யாதொழிதலால் நீர்ப் பெருக்குக் குறைய, நாடு எல்லாம் விளைவு அஃகி வளங்குன்றியது - நாடு முழுதும் விளைவு சுருங்கி வளங் குறைந்தது.

திங்கள் வாரம், நோன்பிற்கு ஆகு பெயர். தொடுத்து - தொடங்கி, திங்கள் வாரந் தொடுத்து என்றும், நோற்று என்றும் கூறினமையால் சிவதருமம் என்றது சிவ விரதங்களைக் குறிக்கும். நோற்றமையாலே தருக்குற்று இகழ்ந்தானென்க. எள்ளலில்லா வேதியர் - மறைகளையுணர்ந்து அந்நெறி யொழுகும் சிறப்பினையுடைய அந்தணர். மழை வளந்தரும் அழலோம்பாளரை இகழ்ந்தமையின் அவர் அழலோம்புதலைக் கைவிட அதனால் மழை மறுத்ததென்க. மறுத்தலால் என்பது மறுத்து எனத் திரிந்துநின்றது. விளைவஃகி வளங்குன்றியது என விகுதி பிரித்துக் கூட்டப்பட்டது. (உ)

அறவோ ரெல்லாம் நிரப்பெய்தி யாகங் கிடந்த நூலன்றி
மறைநூ லிழந்து முனிவேள்வி வானோர் வேள்வி தென்புலத்தின்
உறைவோர் வேள்வி யிழந்திழிந்த தொழில்செய் தாற்ரு துயிர்வளர்ப்பான்
புறநா டணைந்தார் பசியாலே புழுங்கி யொழிந்த குடியெல்லாம்.

(இ - ள்.) அறவோர் எல்லாம் நிரப்பு எய்தி - அந்தணரெல்லாம் வறுமையுற்று, ஆகம் கிடந்த நூல் அன்றி மறைநூல் இழந்து - மார்பிற் கிடந்த பூணூலன்றி வேதமாகிய நூலை இழந்து, முனிவேள்வி வானோர் வேள்வி தென்புலத்தின் உறைவோர் வேள்வி இழந்து - முனிவர் வேள்வியும் தேவர் வேள்வியும் பிதிரர் வேள்வியுமாகிய இவற்றைக் கை விட்டு, ஆற்ரு து - வறுமைத் துன்பம் பொறுக்காது, இழிந்த தொழில் செய்து உயிர் வளர்ப்பான் புறநாடு அணைந்தார் - இழிவாகிய தொழிலைச் செய்தேனும் உயிரினை ஓம்புதற் பொருட்டு வேற்று நாடு சென்றனர் ; ஒழிந்த குடி எல்லாம் பசியாலே புழுங்கி - அவரொழிந்த குடிகளெல்லாம் பசியினாலே மனம் புழுங்கி.

அறவோர் - அறநெறி யொழுகுவோர். நிரப்பு, எதிர்மறை யிலக்கணையாக வறுமையைக் குறிக்கும் பெயர். அவரை வேதியரெனக் காட்டுதற்குப் பூணூலன்றிப் பிறிதொன்று மிலதாயிற்று என நகை தோன்றக் கூறினர். முனி வேள்வி முதலாயின அவ்வவர்க்கு இறுக்கப்படும் கடன்கள். முனிவர் கடன் கேள்வியானும், தேவர்கடன் வேள்வியானும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானும் இறுக்கப்படும் என்பர்;

''வேள்வியிற் கடவு ளருத்தினை கேள்வி
உயர்நிலை யுலகத் தையரின் புறுத்தினை
வணங்கிய சாயல் வணங்கா வாண்மை
இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல்கட னிறுத்த வெல்போ ரண்ணல்''

எனப் பதிற்றுப்பத்துக் கூறுவது காண்க. (௩)

எந்நா டணைவோ மெனவிரங்க விரங்கி மதிக்கோன் மதிநாளிற்
பொன்னுண் முளரித் தடங்குடைந்து சித்திக் களிற்றைப் பூசித்துத்
தன்னு தரவாற் கயற்கண்ணி தலைவன் றன்னை யருச்சித்து
முன்னு வீழ்ந்து கரமுகிழ்த்துப் பழிச்சி மகிழ்ந்து மொழிகின்றான்.

(இ - ள்.) எந்நாடு அணைவோம் என இரங்க - எந்த நாட்டிற்குச் செல்வோம் என்று வருந்த, மதிக்கோன் இரங்கி திங்கள் மரபினனாகிய குலபூடணன் மனங் கவன்று, மதிநாளில் - திங்கட்கிழமையில், நாள் பொன் முளரித் தடம் குடைந்து - அன்றலர்ந்த மலர்களையுடைய பொற்றாமரை வாவியில் நீராடி, சித்திக் களிற்றை பூசித்து - சித்தி விநாயகனை வணங்கி, தன் ஆதரவால் - தனது அன்பினால், கயல் கண்ணி தலைவன் தன்னை அருச்சித்து-அங்கயற்கண்ணி தலைவனாகிய சோமசுந்தரக் கடவுளை அருச்சித்து, முன்னா வீழ்ந்து-திருமுன் வீழ்ந்து, கரம் முகிழ்த்து-கை கூப்பி, பழிச்சி மகிழ்ந்து மொழிகின்றான் - துதித்து மகிழ்ந்து கூறுகின்றான்.

அரசன் மன்னுயிர்களைத் தன்னுயிர்போற் கருதுபவனாகலின் 'இரங்க இரங்கி' என்றார். முன்னா - முன்னாக. வீழ்ந்து பின் எழுந்து கரமுகிழ்த்து என விரிக்க. (௪)

அத்த வுலகி லுயிர்க்குயிர்நீ யல்லை யோவவ் வுயிர்பசியால்
எய்த்த வருத்த மடியேனை வருத்து மாறென் யானீட்டி
வைத்த நிதியங்* தருமத்தின் வழியே சென்ற தினியடிகள்
சித்த மலர்ந்தென் னிடும்பைவினை தீர வருட்கண் செய்கவென.

(இ - ள்.) அத்த - ஐயனே, உலகில் உயிர்க்கு உயிர் நீ அல்லையோ - உலகின்கண் உள்ள உயிர்களுக்கு உயிரா யுள்ளவன் நீ யல்லவோ, அவ் வுயிர் பசியால் எய்த்த வருத்தம் அடியேனை வருத்துமாறு என் - அந்த உயிர்கள் பசியால் இளைத்த வருத்தம் (தேவரீரைச் சாராது) அடியேனைச் சார்ந்து வருத்துங் காரணம் யாது, யான் ஈட்டிவைத்த நிதியம் தருமத்தின் வழியே சென்றது - யான் தேடிவைத்த பொருள் முழுதும் சிவபுண்ணிய நெறியிலே செலவாயது ; அடிகள் - தேவரீர், இனி சித்தம் மலர்ந்து என் இடும்பை வினைதீர - இனித் திருவுள்ளமலர்ந்து எனது துன்ப வினை நீங்குமாறு, அருள்கண் செய்க என - திருவருள் நோக்கம் செய்தருளுக என்று குறையிரக்க.

உயிர்கட்கெல்லாம் உயிராகிய நீயே அவ்வுயிர்களின் வருத்தத்தையும் அதனால் யானெய்தும் துன்பத்தையும் போக்கி யருளவேண்டுமென இரந்தான். என்னால் இயலுமளவு பொருளீட்டி அறம் புரிந்தேன் ; பொருளும் சென்றது; இனி யான் செய்யலாவ தொன்றில்லை என விரித்துக் கொள்க. நீ எனவும் அடிகள் எனவும் ஒருமையும் பன்மையும் விரவி வந்தன. நிதியம், அம் : சாரியை. (௫)

கோளா டரவம ரைக்கசைத்த கூடற் பெருமான் குறையிரக்கும்
ஆளா மரசன் றவறுசிறி தகங்கோண் டதனைத் திருச்செவியிற்
கேளார் போல வாளாதே யிருப்ப மனையிற் கிடைத்தமலன்
தாளா தரவு பெறநினைந்து தரையிற் கிடந்து துயில்கின்றான்.

(இ - ள்.) கோள் ஆடு அரவம் அரைக்கு அசைத்த கூடல் பெருமான் - கொலைத் தொழிலுடைய ஆடும் பாம்பினை அரையிற் கட்டி

(பா - ம்.) *வைத்த பொருளும்.

யருளிய சோமசுந்தரக் கடவுள், குறை இரக்கும் ஆளாம் அரசன் - குறையிரவா நின்ற அடியனாகிய அரசனது, தவறு சிறிது அகம் கொண்டு - தவற்றினைச் சிறிது திருவுள்ளத்திற் கொண்டு, அதனைத் திருச் செவியில் கேளார்போல வாளாது இருப்ப - அவன் மொழியைத் தனது திருச் செவியிற் கேளாதவர் போலச் சும்மா இருப்ப, மனையில் கிடைத்து - மன்னன் தனது மாளிகையிற் சென்று, அமலன் தாள் ஆதரவுபெற நினைந்து - இறைவனது திருவடியை அன்புமிகச் சிந்தித்து, தரையில் கிடந்து துயில்கின்றான் - தரையிற் படுத்து உறங்குவானாயினன்.

கோள் என்பதற்கு வலிமை என்றும் ஆடு என்பதற்குக் கொலை என்றும் உரைத்தலுமாம். இரக்கும் அரசன் ஆளாம் அரசன் எனத் தனித்தனி இயையும். வாளா என்னும் சொல் வாளாது வாளாங்கு என்றிங்ஙனம் திரிந்தும் வழங்கும். கிடைத்து - அடுத்து. (சு)

அங்கண் வெள்ளி யம்பலத்து ளாடு மடிக ளவன்கனவிற்
சங்கக் குழையும் வெண்ணீறுஞ் சரிகோ வணமுந் தயங்கவுரன்
சிங்க நாதங் கிடந்தசையச் சித்த வடிவா யெழுந்தருளி
வெங்கண் யானைத் தென்னவர்கோன் முன்னின் றிதனை விளம்புவார்.

(இ - ள்.) அங்கண் - அப்பொழுது, வெள்ளி அம்பலத்துள் ஆடும் அடிகள் - வெள்ளியம்பலத்திலே திருநடம் புரியும் சோமசுந்தரக் கடவுள், அவன் கனவில் - அவனது கனவின்கண், சங்கக்குழையும் - சங்கினாலாய குண்டலமும், வெண்நீறும் - வெள்ளிய திருநீறும், சரிகோவணமும் - சரிந்த கோவணவுடையும், தயங்க - விளங்கவும், உரன் சிங்கநாதம் கிடந்து அசைய - மார்பின்கண் சிங்க நாதம் கிடந்து அசையவும், சித்த வடிவாய் எழுந்தருளி - சித்தமூர்த்தியாக எழுந்தருளி, வெங்கண் யானைத் தென்னவர்கோன் முன்நின்று இதனை விளம்புவார் - தறுகண்மையுடைய யானையையுடைய பாண்டிவேந்தனாகிய குலபூடணன் முன்னே நின்று இதனைக் கூறியருளுகின்றார்.

சிங்க நாதம் - கொம்பினாற் செய்யப்பட்ட ஒருவகைத் துளைக் கருவி. தென்னவர்கோன்: சுட்டு. அடிகள் அவன் கனவில் எழுந்தருளி முன் னின்று இதனை விளம்புவார் என்க. (எ)

ஏடா ரலங்கல் வரைமார்ப வெம்பா லென்று மன்புடைமை
வாடா விரத விழுச்செல்வ முடையாய் வைய மறங்கடிந்து
கோடா தளிக்குஞ் செங்கோன்மை யுடையா யுனக்கோர் குறையுளதுன்
வீடா வளஞ்சேர் நாட்டிங்நாள் வேள்விச் செல்வ மருகியதால்.

(இ - ள்.) ஏடு ஆர் அலங்கல் வரைமார்ப - இதழ்கள் நிறைந்த மலர் மாலையணிந்த மலை போலும் மார்பினை உடையானே, என்றும் எம்பால் அன்பு உடைமை - எப்பொழுதும் என்னிடத்து அன்புடைமையும், வாடா விரதம் - கெடாத விரதமும் ஆகிய, விழுச்செல்வம் உடையாய் - சிறந்த செல்வத்தினை உடையவனே, வையம் மறம் கடிந்து

கோடாது அளிக்கும் செங்கோன்மை உடையாய் - புவியை மறத்தினைக் கடிந்து கோடுதலின்றிப் புரக்கும் செங்கோலை உடையாய், உனக்கு ஒரு குறை உளது - நின்பால் ஒரு குறை உண்டு; உன் வீடாவளம் சேர் நாட்டு - அதனால் உனது அழியாத வளம் பொருந்திய நாட்டின்கண், இந்நாள் வேள்விச் செல்வம் அருகியது - இப்பொழுது வேள்வியாகிய செல்வம் குறைந்தது.

வரை - உத்தம விலக்கணமாகிய சீற்றுமாம். அன்புடைமை- கெடாத விரதம் என்றுமாம். நீ இத்தன்மையை ஆயினும் நின்பால் ஓர் குறையுளது அதனால் அருகியது என விரித்துரைக்க. வாடா வீடா, என்னும் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள் ஒரு பொருள் குறித்தன. ஆல் : அசை. (அ)

மறையே நமது பீடிகையா மறையே நமது பாதுகையாம்
மறையே நமது வாகனமா மறையே நமது நூபுரமாம்
மறையே நமது கோவணமா மறையே நமது விழியாகும்
மறையே நமது மொழியாகு மறையே நமது வடிவாகும்.

(இ - ள்.) மறையே நமது பீடிகை ஆம் - வேதமே நமது ஆதன மாகும்; மறையே நமது பாதுகை ஆம் - வேதமே நமது பாதுகையாகும்; மறையே நமது வாகனம் ஆம் - வேதமே நமது ஊர்தியாகும்; மறையே நமது நூபுரம் ஆம் - வேதமே நமது காற்சிலம்பாகும்; மறையே நமது கோவணம் ஆம் - வேதமே நமது கோவணமாகும்; மறையே நமது விழி ஆகும் - வேதமே நமது கண்ணாகும்; மறையே நமது மொழி ஆகும் - வேதமே நமது மொழியாகும்; மறையே நமது வடிவு ஆகும் - வேதமே நமது திருவுருவமாகும். (கூ)

வேதந் தானே நமதாணைச் சத்தி வடிவாய் விதிவிலக்காய்ப் [கும்
போதங் கொளுத்தி நிலைநிறுத்திப் போகங்கொடுத்துப் பல்லுயிர்க்
பேதஞ் செய்யும் பிணியவிழ்த்தெம் பிரியா வீடு தருவதுதேன்
நாதஞ் செய்யுந் தார்வேந்தே நமது செங்கோ லதுவாகும்.

(இ - ள்.) வேதம் தானே நமது ஆணைச்சத்தி வடிவாய் - வேதமே நமது ஆணையாகிய சத்தி வடிவாகியும், விதிவிலக்காய் - விதி விலக்குக ளாகியும், போதம் கொளுத்தி நிலை நிறுத்தி - அறிவு கொளுத்தி நன் னெறியில் நிறுத்தி, போகம் கொடுத்து - போகத்தை அளித்து, பேதம் செய்யும் பிணி அவிழ்த்து - திரிபினை விளக்கும் ஆணவ மலக்கட்டினை அவிழ்த்து, பல் உயிர்க்கும் - ஆன்ம கோடிகளுக்கெல்லாம், எம்பிரியா வீடு தருவது - எமது பிரியாத வீடுபேற்றை அருளுவதாகும்; தேன் நாதம் செய்யும் தார் வேந்தே - வண்டுகள் ஒலிக்கும் மாலையையணிந்த மன்னனே, அது நமது செங்கோல் ஆகும் - அவ்வேதமே நமது செங் கோலுமாகும்.

போகம் - இம்மை மறுமையின்பங்கள். பேதஞ்செய்யும் - அறிவை வேறுபடுத்தும். எம்மைப் பிரியாதிருத்தலாகிய எமது வீடு என்க. (க0)

அந்த மறைக டமக்குறுதி யாவா ரந்நூல் வழிகலிநோய்
சிந்த மகத்தீ வளர்த்தெம்பாற் சிந்தை செலுத்து மந்தணரால்
இந்த மறையோர் வேள்விமழைக் கேது வாகு மிவர்தம்மை
மைந்த விகழ்ந்து கைவிட்டா யதனுன் மாரி மறுத்தன்றால்.

(இ - ள்.) அந்த மறைகள் தமக்கு உறுதியாவார் - அந்த வேதங்களுக்கு உறுதி யாவார், அந்நூல் வழி - அந்த வேத நூல் வழியே, கலி நோய் சிந்த மகத்தீ வளர்த்து - கலித்துன்பம் கெடுமாறு வேள்வித் தீயினை வளர்த்து, எம்பால் சிந்தை செலுத்தும் அந்தணர் - எம்மிடத்துச் சிந்தையைச் செலுத்துகின்ற அந்தணராவர்; இந்த மறையோர் வேள்வி மழைக்கு ஏதுவாகும் - இவ்வந்தணர் வேட்கும் வேள்வியே மழைக்குக் காரணமாகும்; மைந்த இவர் தம்மை இகழ்ந்து கைவிட்டாய்-மைந்தனே நீ இவர்களை இகழ்ந்து கை விட்டனை, அதனுல் மாரி மறுத்தன்று - அதனுல் மழை பெய்யா தொழிந்தது.

உறுதியாவார்-பாது காவலாவார். சிந்தை செலுத்தல்-தியானித்தல். மறுத்தன்று: உடன்பாட்டு வினைமுற்று. ஆல் இரண்டும் அசை. (கக)

மும்மைப் புவனங் களுமுய்ய முத்தீ வேட்கு மிவர்தம்மை
நம்மைப் போலக் கண்டொழுகி நாளு நாளு வளம்பெருக்கிச்
செம்மைத் தருமக் கோலோச்சித் திகிரி யுருட்டி வாழ்தியென
உம்மைப் பயன்போ லெளிவந்தா ருலவாக் கிழியோன் றுதவுவார்.

(இ - ள்.) மும்மைப் புவனங்களும் உய்ய - மூன்று உலகங்களும் உய்திபெற, முத்தீ வேட்கும் இவர் தம்மை - மூன்று தீயையும் வளர்க்கும் இவ்வந்தணரை, நம்மைப் போல கண்டு ஒழுகி-நம்மைப் போலவே கருதி ஒழுகி, நாளும் நாளுவளம் பெருக்கி - எப்பொழுதும் பல வளங்களையும் பெருகச் செய்து, தருமம் செம்மைகோல் ஓச்சித் திகிரி உருட்டி - அறவடிவான செங்கோலைச் செலுத்தி ஆக்கினை சக்கரத்தை நடத்தி, வாழ்தி என - வாழ்வாயாக வென்று, உம்மைப்பயன்போல் எளிவந்தார் - முற்பிறப்பிற் செய்த நல்வினைப் பயன்போல் எளிவந்த அவ்விறைவர், உலவாக்கிழி ஒன்று உதவுவார் - உலவாக்கிழி ஒன்று தந்தருளுவார்.

மும்மை - மூன்று; மை: பகுதிப்பொருள் விகுதி. முத்தீ - காருக பத்தியம், ஆகவனியம், தென்றிசையங்கி என்பன. சிவனை வழிபடும் திருமறையோராகலின் அவரைச் சிவனைப்போற் காணவேண்டும் என்றவாறு. உம்மை - முற்பிறப்பு; தவத்திற்காயிற்று. (கஉ)

இந்தக் கிழியி லெத்துணைப்பொன் னெடுத்து வழங்குந் தோறுநாங்கள்
தந்த வளவிற் குறையாத தன்மைத் தாகு மிதுகொண்டு *
வந்த விலம்பா டகற்றென்று கொடுத்து வேந்தன் மனக்கவலை
சிந்தித் திருநீ றதுசாத்தி மறைந்தா ரையர் திருவுருவம்.

(பா - ம்.) *அதுகொண்டு.

(இ - ள்.) இந்தக் கிழியில் எத்துணைப்பொன் எடுத்து வழங்கும் தோறும் - இந்தப் பொற்கிழியில் எவ்வளவு பொன்னாயினும் எடுத்து வழங்குந் தோறும், நாங்கள் தந்த அளவில் குறையாத் தன்மைத்து ஆகும் - அது நாம் கொடுத்த அளவினின்றும் குறையாத தன்மையுடைய தாகும்; இது கொண்டு வந்த இலம்பாடு அகற்று என்று கொடுத்து - இதனைக்கொண்டு வந்த வறுமையைப் போக்குவாயாக என்று கொடுத் தருளி, வேந்தன் மனக்கவலை சிந்த-மன்னனது மனக் கவலைகெட, திருநீறு சாத்தி - திருநீறு தரிப்பித்து; ஐயர் திரு உருவம் மறைந்தார் - இறைவர் திருவுருக் கரந்தருளினர்.

எத்துணைப் பொன் எடுத்து வழங்கினும் வழங்குந்தோறும் என விரித்துரைக்க. நாம் என்பது நாங்கள் என நின்றது. திருநீறது, அது: பகுதிப்பொருள் விகுதி. (கரு)

கண்ட கனவு நனவாகத் தொழுதா னெழுந்து கௌரியர்கோன்
அண்டர் பெருமான் றிருவடிபோலம்பொற் கிழியை முடித்தலைமேற்
கொண்டு மகிழ்ச்சி தலைசிறப்ப நின்றோர் முகூர்த்தங் கூத்தாடித்
தண்டா வமைச்சர் படைத்தலைவர் தமக்குங் காட்டி யறிவித்தான்.

(இ - ள்.) கௌரியர்கோன் கண்ட கனவு நனவு ஆக எழுந்து தொழுதான் - குலபூடண பாண்டியன் தான் கண்ட கனவு நனவாக எழுந்து வணங்கி, அண்டர் பெருமான் திருவடிபோல் - தேவ தேவனாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவடியைப்போல, அம் பொன்கிழியை முடித் தலைமேல் கொண்டு - அழகிய பொன் முடிப்பினை முடியினை யணிந்த தலைமேற் கொண்டு, மகிழ்ச்சி தலைசிறப்ப நின்று - மகிழ்ச்சி மேலோங்க நின்று, ஓர் முகூர்த்தம் கூத்து ஆடி - ஒரு முகூர்த்த நேரம் வரை ஆனந்தக்கூத்தாடி, தண்டா அமைச்சர் படைத்தலைவர் தமக்கும் காட்டி அறிவித்தான் - நீங்காத மந்திரிகளுக்கும் படைத்தலைவர் களுக்கும் அதனைக் காண்பித்து நிகழ்ந்த செய்தியைத் தெரிவித்தான்.

விழித்தவுடன் கனவிற் கண்டவாறே தனது நெற்றியில் திருநீறு சாத்தப் பெற்றிருந்ததனாலும், உலவாக்கிழி கைவரப் பெற்றமை யாலும் 'கண்டகனவு நனவாக' என்றார். சிவபெருமான் திருவடியைத் தனது முடிமேற் கொள்ளுமாறுபோல அவன் திருவருளாற் கிடைத்த கிழியையும் முடிமேற் கொண்டான் என்க. அமைச்சர் அரசனை நீங்கா ராகலின் 'தண்டா வமைச்சர்' என்றார்; ''உழையிருந்தான்'' என்று தெய்வப் புலவர் கூறுதலுங் காண்க. (கசு)

செங்க ணரிமான் பிடர்சுமந்த தெய்வ மணிப்பூந் தவிசேற்றிச்
சங்க முழங்க மறைமுழங்கச் சாந்தந் திமிர்ந்து தாதொழுகத்
தொங்க லணிந்து தசாங்கவிரைத் தூப நறுநெய்ச் சுடர்வனைத்துக்
கங்கை மிலைந்த கடவுளெனக் கருதிப் பூசை வினைமுடித்தான்.

(இ - ள்.) செங்கண் அரிமான்பிடர் சுமந்த-சிவந்த கண்களையுடைய சிங்கத்தின் பிடர் சுமந்த, தெய்வமணிப் பூந்தவிசு ஏற்றி - தெய்வத்

தன்மை பொருந்திய மணிகளிழைத்த அழகிய ஆதனத்தில் ஏற்றி, சங்கம் முழங்க - சங்கங்கள் (ஒரு பால்) முழங்கவும், மறை முழங்க - வேதம் (ஒருபால்) ஒலிக்கவும், சாந்தம் திமிர்ந்து - சந்தனக் குழம்பைப் பூசி, தாது ஒழுகத் தொங்கல் அணிந்து - மகரந்தஞ் சிந்த மாலையைச் சூட்டி, தசாங்கம் விரைத்தூபம் நறுநெய்ச் சுடர் வளைத்து - தசாங்கத் தாலாகிய நறும் புகையினையும் நறுமணங் கமழும் நெய் விளக்கினையும் வளைத்து, கங்கை மலைந்த கடவுளெனக் கருதி - கங்கையைத் தரித்த சோமசுந்தரக் கடவுளைப்போல அவ் வுலவாக்கிழியைக் கருதி, பூசைவினை முடித்தான் - பூசையாகிய தொழிலை முற்றுவித்தான்.

தசாங்கம் - சந்தனம் அகில் முதலிய பத்துவகைப் பொருள் கலந்தது; தசாங்க உபசார மென்றுரைப்பாருமுளர்; தசாங்க வுபசார மாவன: ஆவாகனம், தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம், அவ குண்டனம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமனீயம், அருக்கியம், புட்பதானம் என்பன. (கரு)

அடுத்து வணங்கி வலஞ்செய்திட் டம்பொற் கிழியைப் பொதிநீக்கி
எடுத்து முத்தீ வினைஞர்க்கும் யாகங் களுக்கும் யாவர்க்கும்
மடுத்து நாளும் வரையாது வழங்க வழங்க வடியார்க்குக்
கொடுக்கக் குறையா வீட்டின்ப மாயிற் றையர் கொடுத்தகிழி.

(இ - ள்.) அடுத்து வணங்கி வலஞ் செய்திட்டு - நெருங்கி வணங்கி வலஞ்செய்து, அம்பொன் கிழியைப் பொதி நீக்கி எடுத்து - அழகிய பொன் முடிப்பைக் கட்டவிழ்த்து எடுத்து, முத்தீவினைஞர்க்கும் யாகங் களுக்கும் யாவர்க்கு மடுத்து நாளும் வரையாது வழங்க வழங்க - முத்தியினை ஓம்பும் அந்தணர்கட்கும் வேள்விகளுக்கும் அனைவருக்கும் முகந்து நாள்தோறும் வரைவின்றிக் கொடுக்கக் கொடுக்க, ஐயர் கொடுத்த கிழி - சோமசுந்தரக்கடவுள் கொடுத்த அப் பொற்கிழி யானது அடியார்க்குக் கொடுக்கக் குறையா வீட்டு இன்பம் ஆயிற்று - அடியார்கட்குக் கொடுத்தலாற் குறைவுபடாத முத்தி யின்பம் போலாயிற்று.

எடுத்து மடுத்து வழங்கவென்க. தீவினைஞர் - தீ வளர்த்தலாகிய தொழிலையுடையார். அடுக்கு பன்மைப் பொருட்டு. சிவபோகமாகிய வீட்டின்பமானது எல்லையற்ற பூரணமாகலின் எண்ணிறந்த அடியார்கள் நுகரினும் அது குறைவின்றியே யுள்ளதாகும். இன்பமாயிற்று - இன்பம் போல்வதாயிற்று. (கசு)

ஆய பொதியில் விளைபொன்ன *லசும்பு செய்து விசும்பிழிந்த
கோயி லதனை யகம்புறமுங் குயின்று ஞானக் கொழுந்தனைய
தாயி லறுகாற் பீடிகைவான் றடவு கொடிய நெடியபெரு
வாயில் பிறவு மழகேறிப்ப வேய்ந்தான் மறையின் வரம்பறிந்தான்,

(இ - ள்.) ஆய பொதியில் விளை பொன்னால் - அந்த உலவாக் கிழியில் விளைந்த பொன்னினால், அசும்பு செய்து விசும்பு இழிந்த கோயில் அதனை - ஒளி வீசி விண்ணினின்று மிழிந்த இந்திர

(பா - ம்.) *வளை பொன்னல்.

விமானத்தை, அகம் புறமும் குயின்று - உள்ளும் புறமும் இழைத்து, ஞானக்கொழுந்து அனைய தாய் இல் - ஞானக்கொழுந்துபோலும் அங்கயற்கண்ணம்மையின் திருக்கோயிலும், அறுகால் பீடிகை - அறுகாற் பீடமும், வான் தடவு கொடிய நெடிய பெருவாயில் - விண்ணினைத் தடவுகின்ற கொடியையுடைய நீண்ட பெரிய கோபுர வாயிலும், பிறவும் - மற்றுள்ளனவும், அழகு எறிப்ப - அழகு வீச, மறையின் வரம்பு அறிந்தான் - வேதத்தின் எல்லையை அறிந்தவனாகிய குலபூடண பாண்டியன், வேய்ந்தான் - தகடு வேய்ந்தான்.

ஆய - ஆகிய; அத்தன்மையுடைய. அசும்பு - ஒளியின் கசிவு. கொடிய : பொருட் பெயரடியாக வந்த குறிப்புப் பெயரெச்சம். வாயில்: இலக்கணப்போலி. (கஎ)

முந்திக் குறையா நிதிக்கடலை முகந்து முகந்து நாடோறுஞ்
சிந்திக் குலபூ டணக்கொண்ட றெய்வ தருமப் பயிர்வளர்ப்பப்
பந்தித் திரைமுந் நீர்மேகம் பருகிச் சோரியப் பல்வளனும்
நந்திக் கன்னி நாடளகை நகர்போற் செல்வந் தழைத்தன்றே.

(இ - ள்.) குலபூடணக் கொண்டல் - குலபூடண வழுதி என்னும் முகிலானது, முந்தி - முற்பட்டு, குறையா நிதிக்கடலை முகந்து முகந்து - குறையாத நிதியாகிய கடலினை மொண்டு மொண்டு, நாள்தோறும் சிந்தி தெய்வ தருமப்பயிர் வளர்ப்ப - நாள்தோறும் பொழிந்து தெய்வத் தன்மை பொருந்திய தருமமாகிய பயிரை வளர்க்க, மேகம் - முகில்கள், பந்தித்திரை முந்நீர் பருகிச் சொரிய - வரிசையாய் வரும் அலைகளையுடைய கடல்நீரைக் குடித்து மழையினைப் பொழிய, பல்வளனும் நந்தி - பல வளங்களும் மிகுந்து, கன்னிநாடு - பாண்டி நாடானது, அளகை நகர் போல் செல்வம் தழைத்தன்று - அளகாபுரியைப்போலச் செல்வந் தழைத்தது.

குலபூடணன் அளவின்றி அறத்தினை வளர்க்கவே பின்பு மேகமும் மழை பொழிந்தது; நாடும் தழைத்தது என்க. அடுக்கு மிகுதிப் பொருட்டு. தெய்வதருமம் - சிவபுண்ணியம் என்றுமாம். அளகைநகர் நிதியின் கிழவனாகிய குபேரனுடையது ஆகலின் குறையாத செல்வமுடையதாம். தழைத்தன்று - தழைத்தது; அன் : சாரியை. நாடு செல்வம் தழைத்தது என இடத்து நிகழ் பொருளின்றொழில் இடத்தின் மேல் நின்றது. முன்னிரண்டடியும் உருவகம். (கஅ)

[எழுசீரடியாசிரிய விருத்தம்]

வையா கரணர்க ளையா யிகர்மறை
　　வல்லோர் மறைமுடி சொல்லாய்வோர்
மெய்யா மிருதிகள் பொய்யா விரதிகள்
　　வேள்வித் தழல்களை வாழ்விப்போர்
பையா டரவணி யையா னனனுரை
　　பகர்வோ ருலகிய லகல்வோர்கள்
எய்யா துறைதலி னையா தளகைய
　　தென்னப் பொலிவது தென்னாடு.

(இ - ள்.) வையாகரணர்கள் - வியாகரண பண்டிதர்களும், நையாயிகர் - நியாயநூற் புலவர்களும், மறை வல்லோர் - வேத முணர்ந்தவர்களும், மறைமுடி சொல் ஆய்வோர் - உபநிடதம் கூறுவதனை ஆராய்வோரும், மெய்யாம் மிருதிகள் - உண்மையாகிய மிருதிநூல் கற்றவர்களும், பொய்யா விரதிகள் - பொய்யாத நோன்பினர்களும், வேள்வித்தழல்களை வாழ்விப்போர் - வேள்வித்தீக்களை ஓம்புவோர்களும், பை ஆடு அரவு அணி ஐ ஆனனன் உரை பகர்வோர் - படம் விரித்து ஆடுகின்ற பாம்பினை அணிந்த ஐந்து முகங்களை உடையனாகிய சிவபெருமானது உரையாகிய ஆகமங்களைப் போதிப்பவர்களும், உலகு இயல் அகல்வோர்கள் - உலகியலினின்றும் நீங்கியவர்களும், எய்யாது உறைதலின் - வறுமையால் வருந்தாது வசிப்பதனால், தென்னாடு நையாத அளகையது என்னப் பொலிவது - பாண்டிநாடானது வறுமையால் வருந்தாத அளகையைப்போல விளங்காநின்றது.

வையாகரணர், நையாயிகர் என்பன வடமொழித் தத்திதாந்தங்கள். வியாகரணம் - இலக்கணம். நியாயம் - ஆறு தரிசனங்களில் ஒன்று : அக்கபாதர் என்னும் முனிவரால் உரைக்கப்பட்டது. சொல் : முதனிலைத் தொழிற்பெயர். மறை முடிசொல் என்பதற்கு வேதத்தின் முடிந்த பொருளையுணர்த்தும் மாவாக்கியம் என்றுரைத்தலுமாம். மிருதிகள் - மிருதியைக் கற்றவர்கள் ; வினைமுதற் பொருளுணர்த்தும் விகுதி புணர்ந்து கெட்டது. பொய்யா - பயன் பொய்த்தலில்லாத. இன்னோரெல்லாம் வருந்தாது உறையச் செல்வம் மிக்கிருத்தலால் அளகையென்னப் பொலிவ தென்க. நையாத என்னும் பெயரெச்சத்து அகரந் தொக்கது. அளகையது, அது : பகுதிப்பொருள் விகுதி. (கக)

ஆகச் செய்யுள் கஎஉக.

முப்பத்திரண்டாவது

வளையல் விற்ற படலம்

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

வேதந் தனது வடிவென்று விண்ணி னிழிந்த விமானமறைக்
கீதன் செழியன் றனக்குலவாக் கிழிதந் தளித்த வழியிதுவப்
போதங் கடந்த பொருள்வணிகப் புத்தேண் மாட மணிமறுகு
பாதந் தடவ நடந்துவளை பகர்ந்த பரிசு பகர்கிற்பாம்.

(இ - ள்.) வேதம் தனது வடிவு என்று - மறையே தனது திருவுருவம் என்று கூறியருளி, விண் நின்று இழிந்த விமானம் மறைக்கீதன் - வானினின்றும் இறங்கிய விமானத்தின்கண் வீற்றிருக்கும் வேதகீதனாகிய சோம சுந்தரக்கடவுள், செழியன் தனக்கு உலவாக்கிழி தந்தளித்த வழி இது - பாண்டியனுக்கு உலவாக்கிழி தந்தருளிய திருவிளையாடல் இதுவாகும்; அப் போதம் கடந்த பொருள் - (இனி) சுட்டறிவினைக் கடந்த அவ் விறைவன், புத்தேள் வணிகன் - தெய்வத்தன்மையையுடைய வணிகனாய், மாடம் மணி மறுகு பாதம் தடவ நடந்து - மாடங்கள் நிறைந்த அழகிய வீதியிலே திருவடிகள் தோய நடந்தருளி, வளை பகர்ந்த பரிசு பகர் கிற்பாம் - வளையல் விற்ற திருவிளையாடலைக் கூறுவாம்.

'வேதந் தனது வடிவென்று' என்றது மேற்படலத்தில் 'மறையே நமது வடிவாகும்' என்றதைச் சுட்டிற்று; வேதமே தனது வடிவமென்று இழிந்த என விமானத்திற்கு அடையாக்கி யுரைத்தலுமாம். வணிகரது தெய்வத் தன்மையுடைய மறுகில் என்றுரைத்தலும் பொருந்தும். போதங் கடந்த பொருள் பாதந் தடவ நடந்து என அருமையும் எளிமை யும் தோன்றக் கூறினர். (க)

இறைவன் குலபூ டணன்றிகிரி யிவ்வா றுருட்டு நாண்முன்னாட்
சிறைவண் டறையுந் தாருவன தெய்வ முனிவர் பன்னியர்தந்
நிறையன் றளந்து* காட்டுகென நெடியோன் மகனைப் பொடியாக்கும்
அறவன் றானோர் காபாலி யாகிப் பலிக்கு வருகின்றான்.

(இ - ள்.) இறைவன் குலபூடணன் திகிரி இவ்வாறு உருட்டுநாள்- மன்னனாகிய குலபூடணன் தனது ஆணையாகிய திகிரியை இங்ஙனம் செலுத்தும்பொழுது, முன்னாள் - முன்னொரு காலத்தில், சிறைவண்டு அறையும் தாருவன தெய்வமுனிவர் பன்னியர்தம் - சிறைகளையுடைய வண்டுகள் ஒலிக்கும் தாருகவனத்துத் தெய்வத்தன்மை பொருந்திய

(பா - ம்.) * நிறைவன் றளந்து.

முனிபத்தினிகளின். நிறை - கற்பினை. அளந்து காட்டுகு என - அளந்து காட்டுவேனென்று. நெடியோன் மகனைப் பொடி ஆக்கும் அறவன் - திருமாலின் புதல்வனாகிய மதவேளைப் பொடியாக்கிய அறவடிவினனாகிய இறைவன். அன்று தான் ஓர் காபாலி ஆகிப் பலிக்கு வருகின்றான் - அப்பொழுது தான் ஒரு தலையோட்டை ஏந்தினவனாய்ப் பலிக்கு வருவானாயினான்.

இவ்வாறுருட்டுநாள் என்றது பின்சென்று இயையும். தாருகவனம் என்பது விகாரமாயிற்று. பன்னி-பத்தினி. காட்டுகு - காட்டுவேன்; கு: தன்மை யொருமை முற்றுவிகுதி. மறவன் எனப் பிரித்து, வீரத்தையுடையான் என்றுரைத்தலுமாம். காபாலி - காபாலத்தையுடையவன்; தத்திதாந்தம். தம் : சாரியை. தான் . அசை. (உ)

வேத மசைக்குங் கோவணமு மெய்யி னீறு முள்ளாளக்
கீத மிசைக்குங் கனிவாயு முள்ளே நகையுங் கிண்கிணிசூழ்
பாத மலரும் பாதுகையும் பலிகோள் கலனுங் கொண்டிரதி
மாதர் கணவன்* றவவேட மெடுத்தா லொத்து வருமெல்லை.

(இ - ள்.) அசைக்கும் வேத கோவணமும் - கட்டிய வேதமாகிய கோவணமும், மெய்யில் நீறும் - திருமேனியிலே திருநீறும், உள்ளாளக் கீதம் இசைக்கும் கனிவாயும்-உள்ளாளமாகிய கீதத்தினைப் பாடும் கொவ்வைக்கனிபோன்ற வாயும், உள்ளே நகையும் - உள்ளே அரும்பிய புன்முறுவலும், கிண்கிணிசூழ் பாதமலரும் - கிண்கிணி சூழ்ந்த திருவடித் தாமரையும், பாதுகையும் - திருவடியிற் றரித்த பாதுகையும், பலிகொள் கலனும் கொண்டு - பலியேற்கும் கலனுமாகிய இவற்றைக் கொண்டு, இரதி மாதர் கணவன் தவவேடம் எடுத்தால் ஒத்து வரும் எல்லை-அழகிய இரதியின் நாயகனாகிய மதவேள் தவவேடம் எடுத்து வந்தாற்போன்று வரும்பொழுது.

உள்ளாளம் - காற்றினை உள்வாங்கிப் பாடும் பாட்டு; இது பதினொருவகைப்படும்;

''உள்ளாளம் விந்துவுட னாதை மொலியுருட்டுத்
தள்ளாத தூக்கெடுத்த லன்படுத்தல்—மெள்ளக்
கருதி நலிதல்கம் பித்தல் குடிலம்
ஒருபதின்மே லொன்றென் றுரை''

''கண்ணிமையா கண்டந் துடியா கொடிறசையா
பண்ணளவும் வாய்தோன்றா பற்றெரியா—எண்ணிலவை
கள்ளார் நறுந்தெரியற் கைதவனே கந்தருவர்
உள்ளாளப் பாட லுணர்''

என்னும் இசை மரபுச் செய்யுட்களால் உள்ளாளத்தின் வகையும் இயல்பும் உணர்க. கொண்டு - உடையவனாய். காமக் குறிப்புத் தோற்றும் பேரழகும் தவவேடமும் உடையனாய் வருதலின் 'இரதி மாதர் கணவன் றவவேட மெடுத்தாலொத்து' என்றார். (௩)

(பா - ம்.) * மாது கணவன்.

விள்ளுங் கமலச் சேவடிசூழ் சிலம்பி னொலியு மிடறதிரத்
துள்ளுங் கீத வொலியுங்கைத் துடியி னொலியுஞ் செவித்துளைகீண்
டுள்ளம் பிளந்து நிறைகளைந்தீர்த் தோல்லை வருமுன் வல்லியர்கள்
பள்ளங் கண்டு வருபுனல்போற் பலிகோண் டில்லின் புறம்போந்தார்.

(இ - ள்.) விள்ளும் கமலச் சேவடிசூழ் சிலம்பின் ஒலியும் - மலர்ந்த தாமரை மலர்போன்ற சிவந்த திருவடியிற் சூழ்ந்த சிலம்பின் ஒலியும், மிடறு அதிரத் துள்ளும் கீதவொலியும் - திருமிடறுனது துடிக்கத் துள்ளுகின்ற கீத ஒலியும், கைத்துடியின் ஒலியும்-திருக்கரத்திலேந்திய உடுக்கையின் ஒலியும், செவித்துளை கீண்டு-செவியின் துளையைக் கிழித்து. உள்ளம் பிளந்து - மனத்தை ஊடறுத்து, நிறைகளைந்து ஈர்த்து ஒல்லை வருமுன் - நிறையினைப் போக்கி இழுத்து விரைய வருதற்கு முன்னரே, வல்லியர்கள் - அம்முனி பன்னியர்கள், பள்ளம் கண்டு வருபுனல்போல் - பள்ளத்தைக் கண்டு வருகின்ற நீரைப்போல, பலிகொண்டு இல்லின் புறம் போந்தார் - பலியினைக் கொண்டு மனையின் புறத்தே வந்தார்கள்.

செவித் துளையில் மண்டிச் சென்றதனை 'செவித்துளை கீண்டு' என்றும், உள்ளத்தை வெளி செய்ததனை 'உள்ளம் பிளந்து' என்றும் கூறினுர். இவ் வொலிகள் செவி வழியே உள்ளம் புகுமுன் வல்லியர் நிறையினை யிழந்து விரைந்து பலிகொண்டு, புறம் போந்தார் என்பது கருத்தாகக் கொள்க. தடுமாற்ற முற்று விரைந்து வருதலின் 'பள்ளங் கண்டு வரு புனல் போல்' என்றுர். (சு)

[வேறு]

ஐயங்கோண் டணைவா ரையர் பரிகலத் தைய மன்றிக்
கையம்பொன் வளையும் பெய்வார் கருத்துநா ணன்றிக் காசு
செய்யும்பொன் மருங்கு ஞணு மிழப்பர்வேள் சிலையம் பன்றிக்
கோய்யுந்தண் மலர்க்க ணம்புங் கோங்கையிற் சோரியச் சோர்வார்.

(இ - ள்.) ஐயம் கொண்டு அணைவார் - அங்ஙனம் பலிகொண்டு வருபவராகிய அம்முனி பன்னியர், ஐயர் பரிகலத்து ஐயம் அன்றி - இறைவனது பலி ஏற்குங் கலத்தின்கண் அப்பலியை யன்றி, கை அம் பொன் வளையும் பெய்வார் - கையிலணிந்த அழகிய பொன்னுலாகிய வளையலையும் சொரிவார்கள்: கருத்து நாண் அன்றி - மனத்தின்கண் உள்ள நாணினையன்றி, காசு செய்யும் பொன் மருங்குல் நாணும் இழப்பர் - மணிகள் அழுத்திய பொன்னுலாகிய இடை நாணையு மிழப்பார்கள்; வேள்சிலை அம்பு அன்றி - மன்மதனது வில்லிலிருந்து வரும் கணைகளன்றி, கொய்யும் தண் மலர்க்கண் அம்பும் - கொய்யப் பெறுகின்ற தண்ணிய மலர்போன்ற கண்களினின்றும் வரும் அம்பும், கொங்கையில் சொரியச் சோர்வார் - தம் கொங்கைகளிற் சிந்த நிலை தளர்வார்கள்.

கருத்து நாண் - மகளிர் நாற்குணத்து ளொன்றாகிய நாண். மருங்குல் நாண்-மேகலை. சிலையம்பு-கருப்பு வில்லி லேறிட்ட மலர்க்கணை. கண்ணம்பு - கண்ணீர். வேட்கை நோயால் உடல் மெலிந்தமையால் வளைகளும் மேகலையும் கழன்றன. விரகவேதனை பொறுக்கலாற்றாது கண்ணீர் சொரிந்து சோர்ந்தனர். இதனால் மெலிதலும் நாணுவரை யிழத்தலும், மயக்கமும் கூறினார். (ஔ)

மடமயி லனையா ரெங்கள் வளையினைத் தருதி ரென்றார்
கடல்விட மயின்றா னுங்கள் கந்தரத் துள்ள தென்றான்
தடமதிக் கொம்ப னாரெங் கலையினைத் தருதி ரென்றார்
முடமதி மிலைந்தா னுங்கண் முகமதி யிடத்த தென்றான்.

(இ - ள்.) மடமயில் அனையார் - இளமையாகிய மயிலை யொத்த அம்மகளிர், எங்கள் வளையினைத் தருதிர் என்றார் - எங்கள் வளையைத் தாரும் என்று கேட்டனர்; கடல் விடம் அயின்றான் - கடலிற்றோன்றிய நஞ்சினையுண்ட நாயகன், உங்கள் கந்தரத்து உள்ளது என்றான் - (அது) உங்கள் கழுத்தில் உள்ளது என்று விடையிறுத்தான்; தடம் மதிக் கொம்பு அன்னார் - நிறைந்த மதியினையுடைய பூங்கொம்பு போன்ற அம்மாதரார், எம் கலையினைத் தருதிர் என்றார் - எமது கலையைக் கொடுத்து விடுமென்று கேட்டனர்; முடம்மதி மிலைந்தான் - வளைவாகிய பிறையை யணிந்த பெருமான், நுங்கள் முகமதி இடத்தது என்றான் - (அது) உங்கள் முகமாகிய சந்திரனிடத்துள்ளது என்று விடையிறுத்தான்.

வளை என்பது - வளையலுக்கும் சங்கிற்கும், கலை என்பது மேகலைக்கும் சந்திரகலைக்கும் சிலேடை. மகளிர் கழுத்துச் சங்குபோல்வதாகலின் 'உங்கள் கந்தரத்துள்ளது' என்றானென்க. தடமதிக் கொம்பனார் என்றது இல்பொருளுவமை. கலை: முதற்குறை. ஆடையென்றுமாம். நீர் வவ்விய எம் வளையையும் கலையையும் தருவீராக என்று மகளிர் தம் காமவேட்கை புலப்படக் கூறுநிற்க, அவ்வேட்கை சிறிதும் பற்றப் பெறாதவனாகிய இறைவன் அவர் கூறியவற்றுக்கு வேறு பொருள் கற்பித்துக் கொண்டு, வளையும் கலையும் நும்மிடத்தவேயாகவும் நீர் எம்மை வினவுவ தென்னையென நகையாடினன். காமக் குறிப்பிலனாய இறைவன் அக்குறிப்புடையான் போன்று நடித்தனனென்க. (சு)

இடையறிந் தெம்மைச் சேர்மி னென்றன ரினைய ரெங்கோன்
கடலமு தனையீர் நுங்கட் கிடையினிக் காணா தென்றான்
மடநலா ரஃதேற் பண்டை வண்ணமீந் தில்லிற் செல்ல
விடையளித் தருண்மி னென்றார் வேலைபுக் குறங்கு மென்றான்.

(இ - ள்.) இனையர் - அம்மங்கையர், இடை அறிந்து எம்மைச் சேர்மின் என்றனர் - செவ்வி யறிந்து எம்மைச் சேரும் என்று வேண்டினர்; எம் கோன் - எம் பெருமான், கடல் அமுது அனையீர் - கடலிற்

றேன்றிய அமுதத்தை ஒத்த பெண்களே, நுங்கட்கு இனி இடை காணாது என்றான் - உங்களுக்கு இனி இடைகாணப்பெறாது என்று கூறினன்; மடநலார் - மடப்பத்தையுடைய அம் மகளிர், அஃதேல் பண்டை வண்ணம் ஈந்து - அங்ஙனமாயின் எமது முன்னை நிறத்தைக் கொடுத்து, இல்லில் செல்ல விடை அளித்தருண்மின் என்றார் - எங்கள் வீட்டிற் செல்ல விடை கொடுத்தருளும் என்று வேண்டினர்; வேலை புக்கு உறங்கும் என்றான் - (அவன் அது) கடலிற் சென்று தூங்கும் என்று கூறினன்.

இடை என்பது சமயத்திற்கும் மருங்குலுக்கும், விடை என்பது உத்தரவிற்கும் இடபத்திற்கும் சிலேடை. இடை சமயம் என்னும் பொருளாதலை ''உடையோர்போல இடையின்று குறுகி'' என்பதனு லறிக. காணாது - காணப்படாது. மடம் - மகளிர் நாற் குணத்து ளொன்று. நல்லார் என்பது தொக்கது. இப்பொழுது நிறம் பசந்து வேறுபட்டிருத்தலின் 'பண்டை வண்ண மீந்து' என்றார். கூடி னலன்றிப் பண்டை வண்ணம் எய்துமாறின்மையின், அதனையே வேறோராற்றாற் கூறினாராயிற்று. வண்ணம் - தன்மை யென்றுமாம். இறைவர்க்கு ஊர்தியாகிய விடை திருமால் ஆகலின் 'வேலைபுக் குறங்கும்' என்றனன். கடலமுதனையீர் என்றது நயப்புத் தோன்றக் கூறியது. (எ)

நங்கையர் கபாலிக் கென்று நடுவிலை போலு மென்றார்
அங்கண் னடுவி லாமை நும்மனோர்க் கடுத்த தென்றான்
மங்கைய ரடிக ணெஞ்சம் வலியகற் போலு மென்றார்
கொங்கலர் கொன்றை யானுங் கொங்கையே வன்க லென்றான்.

(இ - ள்.) நங்கையர் - அம்மகளிர், கபாலிக்கு என்றும் நடு இலை போலும் என்றார் - இக்காபாலிக்கு எப்பொழுதும் நடுவில்லைபோலும் என்றனர்; அங்கணன் - இறைவன், நடு இலாமை நும் அன்னோர்க்கு அடுத்தது என்றான் - நடுவில்லாமை நும்மைப்போல்வார்க்கே பொருந்தியது என்றனன்; மங்கையர் - அப்பெண்கள், அடிகள் நெஞ்சம் வலிய கல்போலும் என்றார் - அடிகளின் நெஞ்சமானது வலிய கல்லை யொக்கும் என்று கூறினர்; கொங்கு அலர் கொன்றையான் - மகரந்தத்தோடு மலர்ந்த கொன்றை மாலையை அணிந்த சிவபெருமான், நும் கொங்கையே வன்கல் என்றான் - நுங்கள் கொங்கையே வலிய கல்லாகும் என்று கூறினன்.

நடு என்பது நடுவு நிலைமைக்கும் இடைக்கும் சிலேடை. நடுவுடைய ராயின் பிறர் துன்பத்தைத் தம்மையுற்ற துன்பம்போற் கருதி நீக்க லுறுவர்; இவன் அங்ஙனஞ் செய்யாமையின் நடுவிலனுவன் என்று மகளிர் கூற, நடு என்பதற்கு மருங்குல் என்று பொருள் கொண்டு நடு விலாமை நும்மனோர்க்கே அடுத்ததென்று இறைவன் கூறினன். இடை இல்லையென்னுமாறு நுண்ணிதாதல் குறித்து 'நடுவிலாமை' என்றார். 'கற்போலும்' என்றதில் போலும் ஒப்பில் போலியுமாம். வன்கல் - மலை, கொங்கைக்கு மலை உவமமாகலின் 'கொங்கையே வன்கல்' என்றன னென்க. (அ)

காதுவே லன்ன கண்ணார் கங்கைநீர் சுமந்த தேதுக்
கோதுமி னென்றார் நம்பா லுண்பலி யேற்க வென்றான்
ஏதுபோ லிருந்த தைய னிசைத்தசெப் பென்றா ரீசன்
கோதுறு வமுதன் னீர்நுங் கொங்கைபோ லிருந்த தென்றான்.

(இ - ள்.) காதுவேல் அன்ன கண்ணார் - கொலைபுரியும் வேலினை ஒத்த கண்களையுடைய அம் மகளிர், கங்கை நீர் சுமந்தது ஏதுக்கு ஓதுமின் என்றார் - நீர் கங்கை தாங்கியது எதன் பொருட்டு என்று வினவினர்; நும்பால் உண் பலி ஏற்க என்றான் - (இறைவன்) அது நும் மிடத்து உண்ணும் பலியை ஏற்பதற்கு என்று விடை யிறுத்தான்; ஐயன் இசைத்த செப்பு ஏதுபோலிருந்தது என்றார் - இவ்வையன் உரைத்த செப்பு யாதுபோலிருந்தது என்று கூறினர்: ஈசன் - இறைவன், கோது உறு அமுது அன்னீர் - குற்றமில்லாத அமுதம் போன்றவர்களே, நும் கொங்கைபோல் இருந்தது என்றான் - (அது) நுமது கொங்கை போல இருந்ததென்று கூறினன்.

கங்கை, செப்பு என்பன சிலேடைப் பொருளன. கங்கை நீர் சுமந்தது-நீர் கங்கையாற்றைத் தரித்தது, நீர் கையிலே பிரம கபாலத்தை ஏந்தியது; கம் - தலை. செப்பு - விடை, கிண்ணம். நீர் கங்கை யாற்றினைத் தரித்திருந்தும் தண்ணளியுடையீரல்லீர் என்பது தோன்ற 'கங்கை நீர் சுமந்த தேதுக்கு' என மங்கையர் கூறினர். தம் வினாவிற்கு ஏற்ற விடையன் றென்பார் 'ஏதுபோலிருந்ததைய னிசைத்த செப்பு' என்றனர். (கூ)

கறுத்ததை யேவன்கோ லைய கந்தர மென்றார் வேளை
வெறுத்தவன் மாரி பெய்தற் கென்றனன் விழியால் வேலை
ஒறுத்தவர் யாவ தென்றீ ருத்தர மென்றார் கூற்றைச்
செறுத்தவன் றென்பா னின்று நோக்கினாற் றெரிவ தென்றான்.

(இ - ள்.) ஐய-ஐயனே, கந்தரம் கறுத்தது எவன் கொல் என்றார்-கந்தரம் கறுத்தது யாது காரணம் என்று மங்கையர் வினவினர்; வேளை வெறுத்தவன் - மன்மதனை யெரித்த பெருமான், மாரி பெய்தற்கு என்றனன் - மழை பெய்தற்கு என்று விடை யிறுத்தான்; விழியால் வேலை ஒறுத்தவர் - கண்களால் வேற்படையை வென்ற அம்மகளிர், உத்தரம் யாவது என்றீர் என்றார் - உத்தரம் எதுவென்று கூறினீர் என்றனர்; கூற்றைச் செறுத்தவன் - காலனை உதைத்த இறைவன், தென்பால் நின்று நோக்கினால் தெரிவது என்றான் - (அது) தெற்கே நின்று எதிர் முகமாக நோக்கின் தெரியப் பெறுவது என்று கூறினன்.

கந்தரம் மிடற்றுக்கும் மேகத்திற்கும், உத்தரம் விடைக்கும் வடக்கிற்கும் சிலேடை. இவற்றை முறையே மிடறு விடை என்னும் பொருள்களில் வைத்து மகளிர் வினவ, இறைவன் இவற்றுக்கு மேகம் வடக்கு எனப் பொருள் கொண்டு விடையிறுத்தனன். கறுத்ததை, ஐ; சாரியை. கொல்: அசை. (க௦)

செக்கரஞ் சடையான் கண்ணிற் றம்முருத் தெரிய நோக்கி
இக்கோடி யார்போற் கண்ணு ளெம்மையு மிருத்தி ரென்றார்
நக்கனுந் தனையன் னார்கண் ணிடைக்கண்டு நகைத்து நம்மின்
மிக்கவர் நுங்க ணுள்ளார் விழித்தவர்க் காண்மி னென்றான்.

(இ - ள்.) செக்கர் அம் சடையான் கண்ணில் - (அம்மகளிர்) சிவந்த அழகிய சடையையுடைய இறைவன் கண்களில், தம் உருத்தெரிய நோக்கி - தங்கள் வடிவம் புலப்பட நோக்கி, இக்கொடியார் போல் - இந்தக் கொடிபோன்ற மகளிரைப்போல, கண்ணுள் எம்மையும் இருத்திர் என்றார் - நும் விழியுள் எம்மையும் வைத்துக்கொள்ளும் என்று வேண்டினர்; நக்கனும் - இறைவனும், தனை அன்னார் கண் இடைக் கண்டு - தன்னை அப்பெண்களின் விழியுட் கண்டு, நகைத்து - சிரித்து, நம்மின் மிக்கவர் நும்கண் உள்ளார் - நம்மைப்போல் அழகில் மிக்கார் நும் கண்களில் உள்ளார், விழித்து அவர்க் காண்மின் என்றான் - செவ்வனே விழித்து அவரைப் பாருங்கள் என்று கூறினன்.

தமக்கு மாறாக இருக்கின்றனர் என்னுங் கருத்தால் கொடுமை யுடையார் என்னும் பொருள் தோன்றவும் 'கொடியார்' என்றார். இருத்திர் - இருத்துவீர். நும் கண்ணுளே பிறரை வைத்துக் கொண் டிருக்கும் நீவிர் எம்மை இங்ஙனம் வேண்டுவதென்னென்று இறைவன் நகைத்தனன். இவற்றால் ஒருவரை யொருவர் பருகுவார்போல் நோக்கினமை புலனாம். இறைவன் காம மயக்கமின்றியே விளையாடு கின்றானாகலின் நகைத்தனன் என்க. நம்மைக்காட்டினும் மிக்கவர் என்று பொருள் கொண்டு, நீர் பிறரைக் கண்ணுள் வைத்திருப்பது நம்மினும் மிக்காரென்னுங் கருத்தாலாம் என்பது தோன்றக் கூறினானென்னலுமாம். கண்ணுள் இருப்பவரை விழித்துக் காண்மின் என்றது நகைச்சுவை யுடைத்து. "கண்ணுளார் நுங்காதலர்" என்னும் சிந்தாமணிச் செய்யுள் இங்கு நினைக்கற்பாலது. (௧௧)

அஞ்சலிப் போது பெய்வார் சரணமேன் றடியில் வீழ்வார்
தஞ்சேனத் தளிர்க்கை நீட்டித் தழுவிய கிடைக்குந் தோறும்
எஞ்சுவா னெஞ்சா தேத்தி யெதிர்மறை யெட்டுந் தோறும்
வஞ்சனு யகல்வான் மையல் வஞ்சியர்க் கணிய னாமோ.

(இ - ள்.) அஞ்சலிப் போது பெய்வார் - (அம் மகளிர்) அஞ்சலி யாகிய மலரைச் சொரிவாராய், சரணம் என்று அடியில் வீழ்வார் - அடைக்கல மென்று திருவடியில் வீழ்ந்து, தஞ்சம் எனத் தளிர்க்கை நீட்டி - பின்பு நீரே துணை என்று தளிர் போன்ற கைகளை நீட்டி, தழுவிய கிடைக்குந் தோறும் - தழுவ நெருங்குந்தோறும், எஞ்சுவான் - அப்பாற் படுவானாயினன், எஞ்சாது ஏத்தி எதிர் மறை எட்டுந்தோறும் வஞ்சனாய் அகல்வான் - சலிக்காது துதித்து எதிர்கின்ற வேதங்கள் எட்டுந்தோறும் வஞ்சனாய் அகப்படாது நீங்கும் பெருமான், மையல் வஞ்சியர்க்கு அணியன் ஆமோ - காம மயக்கத்தையுடைய பெண்களுக்கு அண்மையனா வானோ?

மலர் போன்ற கைகளைச் சென்னியிற் கூப்பி வணங்கினவர்கள் அங்ஙனம் கூப்பியவாறே அடியில் வீழ்வதனை அஞ்சலிப்போது பெய்வார் வீழ்வார் என்றனர். குவித்த கையிலுள்ள மலரைச் சொரிந்தென்றுமாம். பெய்வார், வீழ்வார் என்பன முற்றெச்சங்கள். தஞ்சம் - பற்றுக்கோடு; ஈறு தொக்கது. தழுவிய : செய்திய வென்னும் வினையெச்சம். எஞ்சுவான் - கடப்பான் என்னும் பொருள் குறித்தது. 'இரக்குவாரேன் எஞ்சிக் கூறேன்'' எனப் பதிற்றுப்பத்திலும் இப் பொருளில் வந்துள்ளமை காண்க. நேர் நின்று துதித்து எட்டுந்தோறும் அகப்படா தொழிதலின் 'வஞ்சனு யகல்வான்' என்றார். ஒகாரம் எதிர்மறை. இது வேற்றுப் பொருள் வைப்பின் பாற்படும். (கஉ)

அடுத்தெமைத் தழாதி ரேனீ ரவிழ்த்தபூங் கலையை மீள
உடுத்துமி னும்பால் யாங்கண் மையனோ யுழப்ப நோக்கிக்
கடுத்தெமர் முனியா முன்னங் கழற்றிய வளையுங் கையில்
எடுத்திடு மென்றார் நாளை யிடுதுமென் றேகினானே.

(இ - ள்.) நீர் எமை அடுத்துத் தழாதிரேல்-நீர் எம்மை நெருங்கித் தழுவாது போவீராயின், அவிழ்த்த பூங்கலையை மீள உடுத்துமின் - அவிழ்த்த அழகிய கலையை யேனும் மீள உடுத்தும்; நும்பால் யாங்கள் மையல் நோய் உழப்ப - நும்மிடத்து யாங்கள் கொண்ட காம மயக்கத் தாலே துன்பமுற, எமர் நோக்கிக் கடுத்து முனியா முன்னம் - எம் கணவர் அதனை நோக்கி எங்களைச் சினந்து வெறுக்கா முன், கழற்றிய வளையும் கையில் எடுத்து இடும் என்றார் - கழற்றிய வளையும் எடுத்துக் கையில் இடும் என்று வேண்டினர் ; நாளை இடுதும் என்று ஏகினன் - நாளை வந்து இடுவோம் என்று சென்றனன்.

தழுவாதிர் என்பது தழாதிர் என்றாயிற்று. கடுத்து என்பதற்கு விரைந்து என்றும், மிக்கு என்றும் பொருள் கூறலுமாம். கலை அவிழ் தலும் வளை கழலுதலும் அவர் காரணமாக நிகழ்ந்தமையின், நீர் அவிழ்த்த கலை என்றும் கழற்றிய வளை என்றும் கூறினர். அத்துணைப் பரிச வின்பேனும் நுகருங் கருத்தால் இங்ஙனம் வேண்டினர். மறு பிறப்பில் அவர்கட்கு வளையிடுதல் குறித்து நாளை யிடுதுமென்றேகினன் என்க. தாருக வனத்து முனிவர்கள் சிவ வழிபாட்டைக் கைவிட்டு வேள்வியே பொருளெனக் கொண் டிறுமாந்திருக்க, அவர் மனைவியரும் கற்பிலே தமக்கு நிகராவார் யாருமிலரெனச் செருக்குற்றிருந்தனர் ; அன்னாரின் தருக்கை யொழிக்கும் பொருட்டுச் சிவபெருமான் பிச்சைப் பெருமானாகப் போந்து முனிபன்னியர் கற்பினின்றும் நெகிழுமாறு செய்தனர் என்பது புராண வரலாறு. (கங)

பிள்ளைவெண் டிங்கள் வேய்ந்த பிரான்கொண்டு போன நாணும்
உள்ளமு மீட்க லாற்ரு துயங்கினர் கலையுஞ் சங்கும்
துள்ளவெங் கணையான் வாளி துளைப்பவெம் பசலை யாகங்
கொள்ளைகொண் டுண்ண நின்ற ரங்கிலை கொழுநர் கண்டார்.

(இ - ள்.) பிள்ளை வெண் திங்கள் வேய்ந்த பிரான் கொண்டு போன - வெள்ளிய இளமதியை அணிந்த இறைவன் கொண்டுபோன, நாணும் உள்ளமும் மீட்கலாற்றாது உயங்கினர் - நாணினையும் மனத்தை

யும் மீட்கமுடியாமல் அம்மகளிர் வாட்டமுற்று, கலையும் சங்கும் துள்ள - ஆடையும் வளையும் சரியவும், ஐங்கணையான் வாளி துளைப்ப - பஞ்சபாணனுடைய கணைகள் உடலைத் துளைக்கவும், வெம்பசலை ஆகம் கொள்ளைகொண்டு உண்ண - காம விருப்பாலாகிய நிறவேறுபாடு உடம்பு முழுதையும் கவர்ந்து படரவும், நின்ருர் - நின்றனர்; அந்நிலை - அங்ஙனம் நின்ற நிலைமையை, கொழுநர் கண்டார் - அவர்கள் கணவராகிய தாருகவன முனிவர்கள் கண்டனர்.

உயங்கினர்: முற்றெச்சம். கலை - மேகலையுமாம். துள்ள - சரிய என்னும் பொருட்டு. ஐங்கணையான்: காமன்; பெயர். வெம்மை - விருப்பம்; கொடுமையுமாம். உடல் முழுதும் போர்த்து வருத்துதலை 'ஆகங்கொள்ளைகொண் டுண்ண' என்ருர். (௧௬)

போய்தவ வடிவாய் வந்து நம்மனைப் பொன்னி னன்னுர்
மெய்தழை கற்பை நாணை வேரோடுங் களைந்து போன
கைதவன் மாடக் கூடற் கடவுளென் றெண்ணித் தேர்ந்தார்
செய்தவ வலியாற் கால மூன்றையுந் தெரிய வல்லார்.

(இ - ள்.) செய்தவ வலியால் காலம் மூன்றையும் தெரிய வல்லார் - செய்கின்ற தவத்தின் வன்மையால் முக்கால நிகழ்ச்சிகளையும் அறிய வல்ல, அத்தாருகாவன முனிவர், பொய்தவ வடிவாய் வந்து - பொய்த்த தவவேடத்துடன் வந்து, நம்மனைப் பொன்னின் அன்னுர் - நமது மனையிலுள்ள திருமகள்போலும் மனைவியரின், மெய்தழை கற்பை நாணை - உண்மை மிக்க கற்பினையும் நாணையும், வேரொடும் களைந்து போன கைதவன் - அடியொடும் களைந்து சென்ற வஞ்சகன், மாடக் கூடல் கடவுள் என்று எண்ணித் தேர்ந்தார் - மாடங்கள் நெருங்கிய கூடலில் வீற்றிருக்கும் சோமசுந்தரக் கடவுளே என்று சிந்தித்துணர்ந்தார்கள்.

பொய்தவ வடிவு, வினைத்தொகை யாகலின் இயல்பாயிற்று. தொடை நோக்கித் தகரம் தொக்க தென்றுமாம். பொன்னினன்னுர், சாரியை நிற்க உருபு தொக்கது. எண்ணும்மைகள் தொக்கன. மாடக் கூடல் - நான்மாடக் கூடல் எனலுமாம். காலம்: ஆகு பெயர். கால மூன்றையும் தெரிய வல்லாரை ''மறுவில் செய்தி மூவகைக் காலமும், நெறியி னுற்றிய அறிவர்'' எனக் கூறுவர் தொல்காப்பியர். (௧௭)

(வேறு)

கற்புத் திரிந்தார் தமைநோக்கிக் கருத்துத் திரிந்தீர் நீராழி*
வெற்புத் திரிந்த மதிற்கூடன் மேய வணிகர் கன்னியராய்ப்
பொற்புத் திரியா தவதரிப்பீர் போமென் றிட்ட சாபங்கேட்
டற்புத் திரிந்தா ரெங்களுக்கீ தகல்வ தெப்போ தெனமுனிவர்.

(இ - ள்.) கற்புத் திரிந்தார் தமைநோக்கி - கற்புநிலை மாறுபட்ட தம் மனைவியரைப் பார்த்து, நீர் கருத்துத் திரிந்தீர் - நீவிர் மனம் வேறுபட்டீர்கள் (ஆதலால்), ஆழி வெற்புத்திரிந்த மதில்கூடல் மேய - சக்கரவாள கிரி தனது வடிவந் திரிந்து வந்தாலொத்த மதில் சூழ்ந்த கூடலில்

(பா - ம்.) * நீளாழி.

வசிக்கும், வணிகர் கன்னியராய்ப் பொற்புத்திரியாது அவதரிப்பீர் - வணிகர் மகளிராய் அழகு சிறிதும் குறைபடாது தோன்றுவீர்கள், போம்- செல்லுங்கள், என்று இட்ட சாபம் கேட்டு - என்று அளித்த சாபத்தினைக் கேட்டு, அன்பு திரிந்தார் - நாயகனிடத்து வைத்த அன்பு வேறுபட்ட அம்மகளிர், எங்களுக்கு ஈது அகல்வது எப்போது என - எங்கட்கு இச் சாபம் நீங்குவது எப்பொழுது என்று வினவ, முனிவர் - அம் முனிவர்கள்.

கருத்துத் திரிந்தீர் என்பது விளியுமாம். திரிந்தாலனைய என்பது திரிந்த என நின்றது. அவதரிப்பீர் - பிறக்கக் கடவீர்கள். போம் - போமின் ; பன்மையேவல். அற்பு : வலித்தல். திரிந்தார் : பெயர். (கசு)

அந்த மாட மதுரைநகர்க் கரசா கியசுந் தரக்கடவுள்
வந்து நம்மைக் கைதீண்டும் வழியிச் சாபங் கழியுமெனச்
சிந்தை தளர்ந்த பன்னியருந் தென்னர் மதுரைத் தொன்னகரிற்
கந்த முல்லைத் தார்வணிகர் காதன் மகளி ராய்ப்பிறந்தார்.

(இ - ள்.) அந்த மாட மதுரை நகர்க்கு அரசு ஆகிய சுந்தரக் கடவுள் வந்து - மாடங்கள் நெருங்கிய அம் மதுரைப் பதிக்கு இறைவனாகிய சோமசுந்தரக் கடவுள் வந்து, நம்மைக் கைதீண்டும் வழி இச் சாபம் கழியும் என - உங்களைக் கைதீண்டும் பொழுது இந்தச் சாபம் நீங்குமென்று கூற, சிந்தை தளர்ந்த பன்னியரும் - (அச்சாபத்தால்) மனம் வாடிய முனி பன்னியரும் தென்னர் மதுரைத் தொல் நகரில் - பாண்டியரின் மதுரையாகிய தொன்மையுடைய நகரின்கண், கந்த முல்லைத் தார் வணிகர் - மணம் பொருந்திய முல்லை மலர் மாலையை யணிந்த வணிகர்களின், காதல் மகளிராய்ப் பிறந்தார் - அன்புடைய புதல்வியராய்த் தோன்றினார்கள்.

கைதீண்டல் - கையாற்றொடுதல்: சாபத்தாற் சிந்தை தளர்ந்த வென்க; தம் கற்பிற்கு இழுக்குண்டானமை கருதித் தளர்ந்த என்றுமாம். முல்லைமாலை வணிகர்க்குரித்து. (கஎ)

வளர்ந்து பேதை யிளம்பருவ மாறி யல்குற் புடையகன்று
தளர்ந்து காஞ்சி மருங்கோசியத் ததும்பி யண்ணுந் தரும்புமுலை
கிளர்ந்து செல்லும் பருவத்திற் கிடைத்தா ராக விப்பான்மண்
அளந்த விடையான் வந்துவளை பகரும் வண்ண மறைகிற்பாம்.

(இ - ள்.) வளர்ந்து பேதை இளம் பருவம் மாறி - வளர்ந்து இளமையாகிய பேதைப்பருவங் கடந்து, அல்குல் புடை அகன்று - அல்குலானது புடை பரக்க, காஞ்சிமருங்கு தளர்ந்து ஒசிய - மேகலை யணிந்த இடையானது தளர்ந்து வளையுமாறு, அரும்புமுலை - அரும்பிய கொங்கைகள், ததும்பி அண்ணுந்து கிளர்ந்து செல்லும் - விம்மி நிமிர்ந்து பூரித்து ஓங்கும், பருவத்தில் - மங்கைப் பருவத்தில், கிடைத்தாராக - அடைந்தாராக ; இப்பால் - இப்புறம், மண் அளந்த விடையான் வந்து - புவியை அளந்த திருமாலாகிய இடப வூர்தியையுடைய இறைவன் வந்து, வளை பகரும் வண்ணம் அறைகிற்பாம் - வளையல் விற்குந் தன்மையைக் கூறுவாம்.

அகன்று - அகல ; எச்சத் திரிபு. அகல ஓசிய கிளர்ந்து செல்லும் என்க. அரும்புபோலும் முலை என்றுமாம். பருவத்திற் கிடைத்தார் - பருவ மெய்தினர். இப்பால் - இனி ; அது நிற்க என்றபடி. குல பூடணன் திகிரியுருட்டுநாள் விடையான் வந்து வளைபகரும் வண்ணம் என இயையும். (௧௮)

கங்கை கரந்து மணிகண்டங் கரந்து நுதற்கண் கரந்தொருபால்
மங்கை வடிவுங் கரந்துழையு மழுவுங் கரந்து மழவிடையூர்
அங்க ணழகர் வளைவணிக ராகி யேன மளந்தறியாச்
செங்க மலச்சே வடியிரண்டுந் திரைநீர் ஞால மகள்சூட.

(இ - ள்.) மழவிடை ஊர் அம் கண் அழகர் - இளமையாகிய இடபத்தை ஊர்ந்தருளும் அழகிய கண்களையுடைய சோமசுந்தரக்கடவுள், கங்கை கரந்து - கங்கையை மறைத்து, மணிகண்டம் கரந்து - நீலமிடற்றினை ஒளித்து, நுதல் கண்கரந்து-நெற்றிக் கண்ணை மறைத்து, ஒரு பால் மங்கை வடிவும் கரந்து - ஒரு கூருகிய உமை வடிவையும் மறைத்து, உழையும் மழுவும் கரந்து - மானையும் மழுவையும் ஒளித்து, வளை வணிகர் ஆகி - வளையல் விற்கும் வணிகராய், ஏனம் அளந்து அறியாச் செங்கமலச் சேவடி இரண்டும் - திருமாலாகிய பன்றியினல் தேடி அறியப்படாத செந்தாமரை போன்ற சிவந்த இரண்டு திருவடிகளையும், திரைநீர் ஞால மகள் சூட - அலைகளையுடைய கடல் சூழ்ந்த புவிமாது (தனது முடியிற்) சூட.

யாவர்க்கும் மேலோனுகிய இறைவன் ஈண்டு எளிவந்தருளும் அருமைப்பாட்டை வியந்து 'கங்கை கரந்து மணிகண்டங் கரந்து' என்றிங்ஙனம் தனித்தனி கூறினர். ஊர்தற்கு விடை யிருக்கவும் தாளால் நடந்துவந்தா ரென்பார் 'விடையூர் அழகர்' என்றார். மணிகண்டம் - நீல மணிபோலும் திருமிடறு. கரந்து : தன்வினை பிறவினைக்குப் பொது ; ஈண்டுப் பிறவினை. இது பல்கால் வந்தது பின்வரும் நிலை என்னும் அணி. இதுவும் வருஞ் செய்யுளும் ஒரு தொடர். (௧௯)

பண்டு முனிவர் பன்னியர்பாற் கவர்ந்த வளையே பட்டுவடங்
கொண்டு தொடுத்து மீண்டவர்க்கே யிடுவே மெனுமுட் கோளினர்போற்
றொண்டர் தொடுத்த வைவண்ணத் துணர்த்தார் போலத் தோள்சுமந்து
மண்டு வளையை விலைபகர்ந்து வணிக மறுகில் வருகின்றார்.

(இ - ள்.) பண்டு முனிவர் பன்னியர் பால் கவர்ந்த வளையே - முன்னே முனிவரின் மனைவியரிடத்துக் கவர்ந்த வளைகளையே, பட்டு வடம் கொண்டு தொடுத்து - பட்டுக் கயிற்றாற் கோத்து வந்து, மீண்டு அவர்க்கே இடுவேம் எனும் உட்கோளினர்போல் - மீள அம் மகளிர்க்கே இடுவேம் என்னுங் கருத்துடையார் போல, தொண்டர் தொடுத்த ஐவண்ணத் துணர்த்தார் போலத் தோள் சுமந்து - அடியார்கள் தொடுத்துச் சூட்டிய ஐந்து நிறங்களையுடைய பூங்கொத்துக்களாலமைத்த மாலையைப்போலத் தோளிற்றாங்கி, மண்டு வளையை விலை பகர்ந்து வணிக மறுகில் வருகின்றார் - நெருங்கிய வளையல்களை விலை கூறி வணிக வீதியில் வருகின்றார்.

வேறெங்குஞ் செல்லாது வணிக மறுகில் வருதலின் 'அவர்க்கே யிடுவே மெனும் உட்கோளினர் போல்' என்றார். வளையை உட்கோளினர்போற் சுமந்து என்றும் தார்போலச் சுமந்து என்றும் தனித்தனி கூட்டுக. பட்டுக் கயிற்றிலே பல நிற வளைகள் கோத்திருப்பது ஐவண்ணத் துணர்த்தார் போன்றது. அதனைச் சுமத்தற்கண் உள்ள விருப்பம்புலப்பட 'தொண்டர் தொடுத்த தார்போல்' என்றார். (உ0)

மன்னு மறையின் பொருளுரைத்த மணிவாய் திறந்து வளைகொண்மின்
என்னு மளவிற் பருவமுகி லிமிழின் னிசைகேட் டெழுமயில்போற்
றுன்னு மணிமே கலைமிழற்றத் தூய வணிக குலமகளிர்
மின்னு மணிமா ளிகைநின்றும் வீதி வாயிற் புறப்பட்டார்.

(இ - ள்.) மன்னும் மறையின் பொருள் உரைத்த மணிவாய் திறந்து - நிலைபெற்ற வேதத்தின் பொருளை அருளிச் செய்த அழகிய திருவாயைத் திறந்து, வளைகொண்மின் என்னும் அளவில் - வளையல் கொள்ளுங்கள் என்று கூறிய வளவில், பருவம் முகில் இமிழ் இன் இசை கேட்டு எழு மயில்போல் - கார் காலத்துச் சூற்கொண்ட மேகம் ஒலிக்கும் இனிய ஒலியினைக் கேட்டு (ஆடுதற்கு) எழும் மயில்போல, துன்னும் மணிமேகலை மிழற்ற - நெருங்கிய மணிகளையுடைய மேகலை ஒலிக்க, தூய வணிகுல மகளிர் - களங்க மில்லாத வணிகுல மகளிர், மின்னும் மணி மாளிகை நின்றும் - ஒளி விடுகின்ற மணிக ளழுத்திய மாளிகையி னின்றும், வீதி வாயில் புறப்பட்டார் - வீதியின்கண் புறப்பட்டனர்.

முனிபுங்கவர்களாலும் உணர்தற்கரிய மறைப்பொருளை அவர்கட்கு உணர்த்தியருளிய திருவாயால் அறிவு சிறிது மில்லாரும் கூறிற்கும் மொழிகளைக் கூறுவானாயிற்று, அவனது அருள் இருந்தவாறென்னே என வியந்துரைத்தவாறு. வளைவாங்குவாருளரோ எனக் கூவி விற்குமளவில் என்க. மயில் சாயலால் மகளிர்க்கு உவமம். ஈண்டு உவகை மிகுதியைக் குறிக்க முகிலிசை கேட்டெழும் மயிலைக் கூறினார். மாளிகை நின்றும் என்பதற்கியைய மலையினின்றெழும் மயில் போல் என விரித்துரைத்தலும் பொருந்தும். வாய் - இடம். (உக)

வளைக ளிடுவா ரெனத்தங்கண் மனமெல் லாந்தம் புடையொதுங்கத்
தளைக ளிடுவார் வருகின்றார் தம்மைக் கொம்மை வெம்முலையார்
துளைக ளிடுதீங் குழலிசைபோற் சுரும்பு பாடக் கருங்குழன்மேல்
விளைக ளொழுக நடங்கிவரு மின்போ லடைந்து கண்டார்கள்.

(இ - ள்.) வளைகள் இடுவார் என - கைக்கு வளையல் இடுவார் போன்று, தங்கள் மனம் எல்லாம் தம்புடை ஒதுங்க - தங்கள் மனம் முழுதும் தம்மிடம் ஒதுங்குமாறு, தளைகள் இடுவார் வருகின்றார் தம்மை - (அவற்றை) விலங்கிடுதற்கு வருகின்ற அவ்வணிகரை, கொம்மை வெம்முலையார் - திரட்சியுடைய விருப்பந்தரும் கொங்கையையுடைய அம்மகளிர், துளைகள் இடு தீங்குழல் இசைபோல் சுரும்பு பாட - துளைகளிட்ட இனிய வேய்ங்குழலின் இசைபோல வண்டுகள்

பாடவும், கருங்குழல்மேல் விளைகள் ஒழுக - கரிய கூந்தலின்மே னின்று சுரக்குந் தேன் ஒழுகவும், நுடங்கிவரும் மின்போல் அடைந்து கண்டார் கள் - அசைந்து வருகின்ற மின்னல்போலச் சென்று பார்த்தார்கள்.

இடுவார் இரண்டனுள் முன்னது பெயர்; பின்னது வினையெச்சப் பொருட்டு. வெம்மை - விருப்பம். குழல்மேல் சுரும்புபாடவும் கள் ஒழுக வும் என்க. நுடங்கி வருமின்போல் என்றது இல்பொருளுவமை. (உஉ)

கண்ட வடிவாற் றிளைப்பதற்குக் கழிபே ரன்பு காதல்வழிக்
கோண்டு செல்ல வொருசார்தங் குணனு நாண முதனான்கும்
மண்டி யொருசார் மறுதலைப்ப மனமு முழன்று தடுமாற
அண்டர் பெருமான் விளையாடற் கமையச் சூழ்ந்தா ரமுதனையார்.

(இ - ள்.) கண்ட வடிவால் திளைப்பதற்கு - நோக்கிய அவ்வடிவுடன் கூடி இன்பம் நுகர்தற்கு, கழிபேர் அன்பு - மிகவும் பெரிய அன்பானது, ஒருசார் காதல் வழிக்கொண்டு செல்ல - ஒரு பக்கம் ஆசையின் வழியே கொண்டுபோக, ஒரு சார் தம் குணன் ஆம் நாணம் முதல் நான்கும் மண்டி மறுதலைப்ப - மற்றொரு பக்கம் தங்கள் குணமாகிய நாண் முதலிய நான்கும் நெருங்கித் தடுப்ப, மனமும் உழன்று தடுமாற - (அதனால்) மனமும் சுழன்று தடுமாற, அண்டர் பெருமான் விளையாடற்கு அமைய - தேவர் பிரானாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலுக்குப் பொருந்த, அமுது அனையார் சூழ்ந்தார் - அமுதினை ஒத்த அம்மகளிர் சூழ்ந்து மொய்த்தனர்.

வடிவால் - வடிவோடு கூடி; ஆல் ஒடுவின் பொருட்டாயது. அகண்டனாகிய இறைவனைத் தமது கண்ட வடிவால் திளைப்பதற்கு என்னும் தொனிப்பொருளும் கொள்க. கழி என்னும் உரிச்சொல் அன்பின் பெருமையைச் சிறப்பித்து நின்றது. நான்கு - நாண், மடம், அச்சம், பயிர்ப்பு, ஒரு சார் கொண்டு செல்ல-ஒருசார் மறுதலைப்ப அதனால் மனம் தடுமாறு நிற்கவும் சூழ்ந்தார் என்க. மறுதலைப்ப என்பது மறுதலிப்ப என வழங்கும். (உங)

[கலிவிருத்தம்]

இரங்குமே கலைசிலம் பன்றி யேனைய
விரும்பிய குழைதோடி மின்செய் கண்டிகை
மருங்கிறச் சுமப்பினும் வளைகைக் கில்லெனின்
அரும்பிய முலையினார்க் கழகுண் டாகுமோ.

(இ - ள்.) இரங்கும் மேகலை சிலம்பு அன்றி - ஒலிக்கின்ற மேகலையும் சிலம்பும் அல்லாமலும், ஏனைய - அவை ஒழிந்த விரும்பிய குழை தொடி மின்செய் கண்டிகை - விரும்பப்பட்ட குழையும் தொடியும் ஒளிவீசுங் கண்டிகையுமாகிய இவற்றை, மருங்கு இற சுமப்பினும் - இடை முறியு மாறு தாங்கினாலும், கைக்கு வளை இல் எனின் - கைகளுக்கு வளையல் இல்லையானால், அரும்பிய முலையினார்க்கு - முகிழ்த்த தனங்களையுடைய மகளிர்க்கு, அழகு உண்டாகுமோ - அழகுண்டாகுமோ?

தொடி - ஈண்டுக் கங்கணம். கண்டிகை - கழுத்தணி. அரும்பிய - கோங்கரும்புபோல் முகிழ்த்த. ஓகாரம்: எதிர்மறை. இச்செய்யுளை மகளிர் கூற்றுக்கி, ஆதலால் என விரித்து, வருஞ் செய்யுளோடு கூட்டி முடிக்க ; கவிக் கூற்றுமாம். (உச)

சேல்வநல் வணிகிரேஞ் செங்கைக் கேற்பன
நல்வளை தெரிந்திடு மேன்று நாய்கர்முன்
வல்வள ரிளமுலை மகளிர் மின்னுமிழ்
கல்வளர் கடகமேன் காந்த ணீட்டினர்.

(இ - ள்.) செல்வ நல்வணிகிர் - செல்வ மிக்க நல்ல வணிகிரே, எம் செங்கைக்கு ஏற்பன - எம்முடைய சிவந்த கைகளுக்குப் பொருந்திய, நல் வளை தெரிந்து இடும் என்று - நல்ல வளைகளை ஆராய்ந்து இடுவீராக என்று, வல் வளர் இளமுலை மகளிர் - சூதாடு கருவிபோலக் குவிந்து வளர்ந்த இளமையாகிய கொங்கையையுடைய மகளிர், நாய்கர் முன் - வணிகர் முன்னே, மின் உமிழ் கல்வளர் கடகம் மென் காந்தள் நீட்டினர் - ஒளிவீசும் கற்கள் அழுத்திய கடகத்தையுடைய காந்தள் மலர் போன்ற கையை நீட்டினர்கள்.

ஏற்பனவும் நல்லனவுமாகிய வளை என்றுமாம், கணந்தோறும் வேட்கை மிகலால் உடல் மெலிந்து வளை கழலுதலின் 'ஏற்பன நல்வளை தெரிந்து இடும்' எனக் காமக் குறிப்புத் தோன்றக் கூறினரென்க. கல் - மாணிக்கம் முதலியன. கல்வளர் - கற்கள்பொருந்திய. (உரு)

பண்டருங் கிளவியங் கயற்கட் பாவைகைத்
தண்டளிர் பற்றிய தடக்கை மாதர்கைம்
முண்டகம் பற்றியே முகிழ்த்துப் பல்வரி
வண்டுக ளேற்றுவார் மைய லேற்றுவார்.

(இ - ள்.) பண்தரும் கிளவி அங்கயற்கண் பாவை - இசைபோலு மினிமையைத்தரும் சொற்களையுடைய அங்கயற்கண் ணம்மையினது, கைத்தண் தளிர் பற்றிய தடக்கை - திருக்கரமாகிய குளிர்ந்த தளிரைப் பிடித்த நெடிய கையால், மாதர் கைம்முண்டகம் பற்றியே முகிழ்த்து - வணிகமகளிரின் கைகளாகிய தாமரை மலரைப் பிடித்து முகிழ்ப்பித்து, பல்வரி வண்டுகள் ஏற்றுவார் மையல் ஏற்றுவார் - பல வரிகளையுடைய வளையல்களைச் செறிப்பாராய்க் காம மயக்கத்தை மிகுவிப்பாராயினர்.

மாதர் - வணிக மாதர். வண்டு - வளை. முண்டகம் என்பதற்கேற்ப வண்டு என நயமுறக் கூறினர். வளையலைக் கையில் ஏற்றுவதுடன் மயக்கத்தை மனத்தில் ஏற்றினர் என்க. (உசு)

புங்கவ னிடுவளை புடைத்து மீளவந்
தேங்களுக் கிட்டிலை யிடுதி ராலெனக்
கோங்கவிழ் பைங்குழ லேருத்தங் கோட்டிநின்
றங்கர நீட்டுவா ராசை நீட்டுவார்.

(இ - ள்.) புங்கவன் இடுவளை புடைத்து மீள வந்து - இறைவனுகிய அவ்வணிகன் இட்ட வளையை உடைத்துவிட்டு மீளவும் வந்து, எங்களுக்கு இடவில - எங்களுக்கு இன்னும் இடவில்லை. இடுதிர் என - இப்பொழுது இடுவீராக என்று, கொங்கு அவிழ் பைங்குழல் எருத்தம் கோட்டி நின்று - மணம் விரிந்த பசிய கூந்தல் சரிந்த கழுத்தினை வளைத்து (முகத்தை மறைத்து) நின்று, அம் கரம் நீட்டுவார் - அழகிய கைகள் நீட்டுவாராய், ஆசை நீட்டுவார் - தமது வேட்கையைத் தோற்றுவிப்பார்கள்.

அவனது கையைப் பரிசித்தலாகிய இன்பத்தை மேன்மேல் நுகர விரும்பி இங்ஙனம் வளையை உடைத்து வந்து மீள இட வேண்டுவர் என்க. முன்பு வளையல் இடப் பெற்றவராகலின் தமதுருவைக் காட்டாது முகத்தை மறைத்தற்கு எருத்தங் கோட்டுவாராயினர். கூந்தலின் முகம் மறைய என்பார் 'பைங்குழல் எருத்தங்கோட்டி' என்ருர். நாணுற் கோட்டுதலுங் கொள்க. ஆசை நீட்டுதல் - ஆசையைத் தோற்றுவித்தல்; மிகுவித்தலுமாம். ஆல் : அசை. மேற்செய்யுளில் 'வண்டுகளேற்றுவார் மையலேற்றுவார்' என்றும், இச்செய்யுளில், 'அங்கர நீட்டுவார் ஆசை நீட்டுவார்' என்றும் கூறிய அழகு பாராட்டற்பாலது. (உஎ)

எமக்கிடு மெமக்கிடு மெனப்பின் பற்றியே
அமைத்தடந் தோளினு ரனங்கன் பூங்கணை
தமைத்துளை படுத்துவோர் சார்பி லாமையாற்
கமைப்புறு நாண்முதற் காப்பு நீங்கினர்.

(இ - ள்.) எமக்கு இடும் எமக்கு இடும் எனப் பின்பற்றி - எங்களுக்குஇடும் எங்களுக்கு இடும் என்று பின் தொடர்ந்து, அமை தடம் தோளினர் - மூங்கிலை ஒத்த பருத்த தோளையுடைய வணிககுல மகளிர், அனங்கன் பூங்கணை தமைத் துளைபடுத்த - மத வேளின் மலர் வாளிகள் தம்மைத் துளைக்க, ஓர் சார்பு இலாமையால் - (அதனை நீக்கி) ஒரு பற்றுக்கோடில்லாமையால், கமைப்பு உறு நாண் முதல் காப்பு நீங்கினர் பொறுத்தலையுற்ற நாண முதலாகிய காவலாகிய காவலினின்றும் நீங்கினார்கள்.

சார்பு - துணை. கமைப்பு - பொறுத்தல்; தம்மாற் பொறுக்கப் பெற்றிருந்த நாண் முதலாகிய என்க. நாண் முதலியன காவலாதலையும் காமமானது அதனை யழிப்பதனையும்,

''காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு''

என்னும் முப்பாலால் அறிக. (உஅ)

முன்னிடு வளையெலாங் கழல முன்புசூழ்ந்
தின்னவை பெரியவே யிடுமேன் றிட்டபின்
அன்னவு மனையவே யாக மீளவந்
தின்னமுஞ் சிறியவா விடுமேன் றேந்துவார்.

(இ - ள்.) முன் இடு வளை எலாம் கழல - முன்னே இட்ட வளைகளனைத்துங் கழன்றுவிட ; முன்பு சூழ்ந்து - (அம்மகளிர்) வணிகர் முன்பு மொய்த்து, இன்னவை பெரிய-இவ்வளைகள் அளவிற் பெரியன (ஆதலின் கழன்றன) ; வேறு இடும் என்று - வேறு வளைகள் இடுமென்று கூறி, இட்டபின் - அங்ஙனம் இட்டபின், அன்னவும் அனையவே ஆக - அவையும் அங்ஙனமே கழல, மீளவந்து - மீண்டும் வந்து ; இன்னமும் சிறியவா இடும் என்று ஏந்துவார் - இன்னுஞ் சிறிய வளைகளாக இடும் என்று கையை ஏந்துவார்.

பெரிய : அன்பெறாத பலவின்பாற் குறிப்புமுற்று. சிறியவாக என்பது விகாரமாயிற்று. ஏந்துதல் கையை நிமிர்த்தி நீட்டுதல். (உகூ)

பின்னிடு வளைகளுஞ் சரியப் பேதுறு
முன்னெதிர் குறுகிநீர் செறித்த மோய்வளை
தன்னொடு கலைகளுஞ் சரிவ தேயென
மின்னென நுடங்கினர் வேனெ டுங்கணார்.

(இ - ள்.) பின் இடு வளைகளும் சரிய - பின் இட்ட வளைகளுங் கழல, பேதுறு - மனமயங்கி, முன் எதிர் குறுகி - வணிகர் முன் சென்று எதிர் நின்று, நீர் செறித்த மொய்வளை தன்னொடு- நீர்செறிய இட்ட நெருங்கிய வளையோடு கலைகளும் சரிவதே என - மேகலைகளுங் கழல்கின்றனவே என்று, வேல் நெடுங்கணார் - வேல்போன்ற நெடிய கண்களையுடைய அம் மகளிர், மின் என நுடங்கினர் - மின்னல்போலத் துவண்டு (வெள்கினார்கள்).

பேது - மயக்கம். பேதுறு : செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம், சரிவது எனப் பன்மையில் ஒருமை வந்தது. சரிவதே என - சரியா நிற்கின்றது, இஃதொரு வியப்பிருந்தவாறென்னே என்று. நுடங்குதல் நாணினாலாயது. (௩௦)

இவ்வளை போல்வளை* யாமுன் கண்டிலேம்
மெய்வளை வணிகிரிவ் வரிய வெள்வளை
எவ்வயி னுள்ளவின் றினிய வாகியெம்
மெய்ம்மயிர் போடிப்பெழ† வீக்கஞ் செய்தவே.

(இ - ள்.) வளைவணிகிர் - வளையல் விற்கும் வணிகிரே, இவ்வளை போல் வளை யாம் முன் கண்டிலேம் - இந்த வளையல்போன்ற வளைகளை யாம் முன்னே பார்த்திலோம் ; மெய் - இஃது உண்மை ; இவ்வரிய வெள் வளை எவ்வயின் உள்ள - இந்த அருமையான வெள்ளிய வளையல்கள் எவ் விடத்தில் உள்ளன?, இன்று இனிய ஆகி எம் மெய் மயிர் பொடிப்பு எழ வீக்கம் செய்த - இன்று இனியனவாய் எம் உடம்பின மயிர் முகிழ்ப்பு உண்டாகப் பூரிக்கச் செய்தன.

உட்கூனிய வணிகரே எனப் பொருள்கூறுவாருமுளர் ; அது பொருந்தாமை யுணர்க. உள்ள, இனிய, செய்த என்பன அன்சாரியை

(பா - ம்.) * இவ்வளை போல்வன. †மெய்வளர் பொடிப்பெழ

பெருது நின்றன. வீக்கஞ்செய்த என்பது ஒரு சொல்லாகி மெய்யை என்னும் இரண்டாவதற்கு முடிபாயிற்று. (௩க)

நாளையும் வளையிட நண்ணுமிங் கென்பார்
கோள்வளை விலையிது கோண்டுபோ மேன்பார்
வாள்விழி யீர்பினுள் வாங்கிக் கோடுமேன்
ருளரி யேறனு ராடிப் போயினுர்.

(இ - ள்.) நாளையும் வளை இட இங்கு நண்ணும் என்பார் நாளையும் வளை இடுதற்கு இங்கு வருவீராக என்பார்கள் (மற்றும்), கோள்வளை விலை இது கொண்டு போம் என்பார் - நாங்கள் கொண்ட வளைக்கு விலையாகும் இதனைக் கொண்டுபோம் என்பார்கள்; ஆள் அரி ஏறு அனுர் - ஆண்மையுடைய சிங்கவேறு போன்ற வணிகேசர் (அம் மகளிரை நோக்கி), வாள் விழியீர் - வாள்போலும் கண்களை யுடையவர்களே, பின் நாள் வாங்கிக் கோடும் என்று - நாளை வாங்கிக் கொள் வேம் என்று கூறி, ஆடிப் போயினுர் - திருவிளையாடல் செய்து சென் றருளினர்.

கோள்: முதனிலை திரிந்தது. கோடும் - கொள்ளுதும். ஆள் - ஆண்மை. ஆடி என்பதனை இரட்டுற மொழிதலாகக் கொண்டு, உரைத்து என்று கூறுதலுமாம். (௩உ)

போயின வணிகர்தம் புடையின் மின்னெனப்
பாயின மகளிரும் பலருங் காணமுன்
மேயின விண்ணிழி விமானத் துள்ளொளி
ஆயின திருவுரு வாகித் தோன்றினுர்.

(இ - ள்.) போயின வணிகர் - அங்ஙனஞ் சென்ற வணிகராகிய பெருமானுர், தம்புடையில் மின் எனப் பாயின மகளிரும் பலரும் காண - தமது பக்கத்தில் மின்னலைப் போலப் பரந்து நின்ற மகளிரும் ஏனை யோரும் கண்டு வியக்க, முன் மேயின - முன் தாம் எழுந்தருளி யிருந்த, விண் இழி விமானத்துள் ஒளி ஆயின திரு உரு ஆகித் தோன்றினுர் - விசும்பினின்று மிழிந்த விமானத்தின்கண் ஒளி மயமாகிய திருவுருவ மாகித் தோன்றி யருளினுர்.

பாயின - பரந்த. மேயின - மேவின: பெயரெச்சம் இடப்பெயர் கொண்டது, சென்றவர் மறைந்து சிவலிங்கத் திருவுருவிற் கலந் தருளினுர் என்க. (௩௩)

[எழுசீரடியாசிரிய விருத்தம்]

மட்ட லம்பு கோதை யார்முன் வளைப கர்ந்த வணிகர்தாம்
பட்டி சைந்த வல்கு னங்கை பாக ராகு மேனவியந்
துட்ட தும்பு முவகை வெள்ள முற்றெ ழுந்த குமிழிபோற்
கட்ட தும்பு புனலி லாழ்ந்து களிய டைந்த நகரெலாம்,

(இ - ள்.) மட்டு அலம்பு கோதையார் முன் - தேன் ததும்பும் மாலையை யணிந்த மகளிர் முன்னே, வளைபகர்ந்த வணிகர் தாம்-வளையல் விற்ற வணிகரானவர், பட்டுஇசைந்த அல்குல் நங்கை பாகர் ஆகும் என வியந்து - பட்டாடை பொருந்திய அல்குலையுடைய உமா தேவியை ஒரு பாகத்திலுடைய இறைவராவார் என்று வியப்புற்று, உள் ததும்பும் உவகை வெள்ளம் உற்று எழுந்த குமிழிபோல் - உள்ளத்திற் றதும்பிய மகிழ்ச்சி வெள்ளத்திற் பொருந்தி யெழுந்த குமிழிபோல, கண்ததும்பு புனலில் ஆழ்ந்து - கண்களிலே ததும்புகின்ற நீரில் அமிழ்ந்து, நகர் எல்லாம் களி அடைந்த - நகரிலுள்ளா ரனைவரும் களிப்புற்றனர்.

அலம்புதல் - ஈண்டுத் ததும்புதல். வல்குல் - அரை ;

"பட்டிசைந்த வல்குலாள்"

என்பது தேவாரம். குமிழிபோலத் ததும்புகின்ற புனல் என்க. அடைந்த : அன்பெறாத முற்று. நகரிலுள்ளார் அனைவரும் களிப்படைந்தார் என்பதனை 'நகரெலாம் களியடைந்த' என்றார். (கூச)

உருவி லாளி யுடல் பொடித்த வொருவர் கூட லிருவரான்
மருவி லார்தி ருக்கை தொட்டு வளைசெ றித்த நீர்மையாற்
கருவின் மாத ராகி நாய்கர் கன்னி மார்கண் மின்னுவேற்
பொருவில் காளை யெனவ ரம்பில் புதல்வ ரைப்ப யந்தனர்.

(இ - ள்.) உருவிலாளி உடல் பொடித்த ஒருவர் - மன்மதனுடைய உடலை நீருக்கிய ஒருவரும், கூடல் இருவரால் மருவிலார் - திருமாலும் அயனுமாகிய இருவராலும் அடையப் படாத கூடல் நாயகருமாகிய சோமசுந்தரக்கடவுள், திருக்கை தொட்டு வளைசெறித்த நீர்மையால் - தமது திருக்கையாலே தொட்டு வளையல் இட்ட தன்மையால், நாய்கர் கன்னிமார்கள் - வணிக மங்கையர்கள், கருவின் மாதராகி - கருவுற்ற மகளிராகி, மின்னுவேல் பொருவு இல் காளை என - ஒளி விடுகின்ற வேலினையுடைய ஒப்பில்லாத காளையாகிய முருகவேளைப் போல, வரம்பு இல் புதல்வரைப் பயந்தனர் - அளவில்லாத மைந்தர்களைப் பெற்றார்கள்.

உருவிலாளி - உருவின்மையை ஆள்பவன்; அனங்கன்; ஈண்டு மதனன் என்னும் பெயர் மாத்திரையாக நின்றது. இறைவர் காமவயத் தராய் அம்மகளிரைப் பரிசித்தாரல்லர் என்பது தோன்ற 'உருவிலாளி யுடல் பொடித்த வொருவர்' என்றார்.

மருவு - அடையப்படுதல். வளை செறித்த நீர்மையால் என்னும் ஏதுவைக் கருவின் மாதரான்மைக்கும், வேற்காளை யெனப் புதல்வரைப் பயந்தமைக்கும் தனித்தனி கொள்க. (கூரு)

பிறந்த மைந்த ரளவி றந்த பெருமை கொண்ட பெருமிதஞ்
சிறந்த வீர மாற்ற லேற்ற திறல்பு னைந்து வைகினர்
மறந்த தும்பு வேனெ டுங்கண் வணிக மாதர் சிறிதுநாள்
துறந் தரன்ற னருள டைந்து துணைய டிக்கண் வைகினர்.

(இ - ள்.) பிறந்த மைந்தர் - (அங்ஙனம்) தோன்றிய புதல்வர்கள், அளவு இறந்த பெருமை கொண்ட பெருமிதம் - அளவற்ற பெருமை கொண்ட களிப்பும் சிறந்த வீரம் - மிக்க வீரமும், ஆற்றல் - வலிமையும், ஏற்ற திறல் - தக்க வெற்றியும் (ஆகிய இவற்றை), புனைந்து வைகினர் - அணிகலமாகச் சூடி வாழ்ந்தனர்; மறம் ததும்பு வேல் நெடுங்கண் வணிகமாதர், கொலை மிக்க வேல்போலும் நீண்ட விழிகளையுடைய வணிகமகளிர், சிறிது நாள் துறந்து - சின்னாட் கழித்து, அரன் தன் அருள் அடைந்து - சிவபெருமானது திருவருளைப் பெற்று, துணை அடிக்கண் வைகினர் - அவருடைய இரு திருவடிக்கண்ணும் கலந்து தங்கினர்கள்.

பெருமிதம் ஈண்டுக் களிப்பினை யுணர்த்திற்று, பெருமை கொண்ட, பெருமிதஞ் சிறந்த, வீரம் ஆற்றல் ஏற்ற எனப் பிரித்துத் திறலுக்கு அடையாக்கித் தனித்தனி கூட்டி யுரைத்தலுமாம். சிறிது நாள் - சின்னாள். (ருசு)

ஆகச் செய்யுள் - கஎஉக.

முப்பத்து மூன்றாவது

அட்டமாசித்தி யுபதேசித்த படலம்

[எழுசீரடி யாசிரிய விருத்தம்]

கோத்தி லங்கு கொன்றை வேய்ந்த கூட லாதி மாடநீள்
பத்தி யம்பொன் மறுக ணைந்து வளைப கர்ந்த பரிசுமுன்
வைத்தி யம்பி னுமி யக்க மாதர்* வேண்ட வட்டமா
சித்தி தந்த திறமி னித்தெ ரிந்த வாறு செப்புவாம்.

(இ - ள்.) இலங்கு கொன்றைக் கொத்து வேய்ந்த கூடல் ஆதி - விளங்கா நின்ற கொன்றையினது பூங்கொத்தினை யணிந்த கூடற்பதியில் எழுந்தருளிய முதல்வராகிய சோமசுந்தரக்கடவுள், நீள்மாடப்பத்தி அம்பொன் மறுகு அணைந்து - நீண்ட மாட வரிசைகளையுடைய அழகிய செல்வத்தையுடைய வீதியிற் சென்று, வளைபகர்ந்த பரிசு முன்வைத்து இயம்பினும் - வளையல் விற்ற திருவிளையாடலை முன் எடுத்துக் கூறினும்; இயக்க மாதர் வேண்ட - இயக்க மகளிர் குறையிரக்க, அட்டமா சித்தி தந்த திறம் - பெரிய எட்டுச் சித்திகளையும் உபதேசித்த திருவிளையாடலை, இனி தெரிந்தவாறு செப்புவாம் - இனி அறிந்தவாறு கூறுவோம் எ - று.

அம்பொன் மாடம் என இயைத்தலுமாம். பரிசு, திறம் என்பவற்றைத் திருவிளையாடல் என்றுரைத்துக் கொள்க. (க)

மின்ன லங்கல் வாகை வேல்வி ழுப்பெருங் குலத்தினிற்
றென்ன வன்ற னாணை நேமி திசையெ லாமு ருட்டுநாள்
முன்னை வைக லூழி தோறு மோங்கு மொய்வ ரைக்கணே
மன்னு தன்ப ராரை† யால நிழன்ம ருங்கு மறைமுதல்.

(இ - ள்.) வாகை அலங்கல் மின்வேல் - வெற்றி மாலை சூடிய மின் போலும் வேற்படையினை ஏந்திய, விழுப்பெருங்குலத்தினில் - மேன்மை மிக்க பாண்டியர் குலத்தில் வந்த, தென்னவன் குலபூடண வழுதி யானவன், தன் ஆணைநேமி திசை எலாம் உருட்டு நாள் - தனது ஆணைத் திகிரியைத் திசை முழுதும் செலுத்தி வருநாளில், ஊழிதோறும் ஓங்கும் மொய் வரைக்கண் - ஊழிக்காலந் தோறும் வளருகின்ற வலிய திருக்கைலாய மலையின்கண், மன்னு தன் பராரை ஆல நிழல் மருங்கு - நிலை பெற்ற தனது பருத்த அரையினையுடைய வடவாலின் நிழலின்கண், மறைமுதல், - வேத முதல்வனாகிய இறைவன், முன்னை வைகல் - முன்னொரு நாள்.

(பா - ம்.) *இயக்கி மாதர். †தண்பராரை.

தன் குலத்திற்கு அணிகலன் போன்றவன் என்னும் காரணப் பெயருடையான் என்பார் 'விழுப்பெருங் குலத்தினிற் றென்னவன்' என்றார். திருக்கைலை ஊழிதோறு முயர்தல்,

'ஊழிதோ றூழிமுற்று முயர்பொன் னெடித்தான் மலையே''

என்று தம்பிரான் றோழரால் அருளிச் செய்யப்பெற்றுளது; முன்பும் வந்தமை காண்க. பராரை: மரூஉ முடிபு. (உ)

அடுப்ப மாசில் வெள்ளி வெற்பி னருகி ருக்கு மரகதங்
கடுப்ப வாம மிசை யிருந்து கனக வெற்பன் மகளெனும்
வடுப்ப டாத கற்பி னுண்ம டித்து வெள்ளி லைச்சுருள்
கொடுப்ப நேச மூறு போக குரவ னாகி வைகினன்.

(இ - ள்.) அடுப்ப - தங்கியருள, மாசு இல் வெள்ளி வெற்பின் அருகு இருக்கும் மரகதம் கடுப்ப - குற்றமில்லாத வெள்ளி மலையின் பக்கத்திலிருக்கும் மரகதத்தையொப்ப, வாமமிசை இருந்து - வலப் பாகத்திலிருந்து, கனக வெற்பன் மகளெனும் வடுப்படாத கற்பினள் - மலையரையன் புதல்வியாகிய குற்றமில்லாத கற்பினையுடைய உமையம் மையார், வெள்ளிலைச் சுருள்மடித்துக் கொடுப்ப - வெற்றிலைச் சுருளை மடித்துக் கொடா நிற்க, நேசம் ஊறுபோக குரவனாகி வைகினன் - (அவ்விறைவன்) அன்பு சுரக்கும் போக குரவனாய் இருந்தருளினன்.

நிழல் மருங்க அடுப்ப எனக் கூட்டுக. இமயம் பொன்மலை யெனப் படும் ஆகலின் மலையரையனைக் 'கனக வெற்பன்' என்றார். வெள்ளிலை - வெறுவிதாகிய இலை. இறைவன் போகம் நுகர்தல் உயிர்களுக்குப் போக நுகர்ச்சி காட்டுங் கருத்தால் ஆகலின் 'போக குரவனாகி' என்றார்;

''போகமா யிருந்துயிர்க்குப் போகத்தைப் புரித லோரார்''

என்பதுங் காண்க. (௩)

பிருங்கி நந்தி யேமு தற்பெ ருந்த கைக்க ணத்தரும்
மருங்கி ருந்த சனக னாதி மாத வத்தர் நால்வரும்
ஒருங்கி றைஞ்சி யுண்ண வுண்ண வமுத மூறு சிவகதைக்
கரும்ப ருந்த வாய்ம லர்ந்து கருணை செய்யு மெல்லைவாய்.

(இ - ள்.) பிருங்கி நந்தி முதல் பெருந்தகைக் கணத்தரும் - பிருங் கியும் திருநந்தி தேவரும் முதலிய பெருந்தகுதியையுடைய சிவகணத் தலைவரும், மருங்கு இருந்த சனகன் ஆதி மாதவத்தர் நால்வரும் - அருகில் இருந்த சனகன் முதலிய பெரிய தவத்தினையுடைய முனிவர் நால்வரும், ஒருங்கு இறைஞ்சி - ஒரு சேர வணங்கி, உண்ண உண்ண அமுதம் ஊறு - உண்ணுந்தோறும் அமுதம் ஊற்றெடுக்கும், சிவகதைக் கரும்பு அருந்த - சிவகதையாகிய கரும்பினைச் (செவிவாயால்) உண்ண, வாய் மலர்ந்து கருணை செய்யும் எல்லைவாய் - திருவாய் மலர்ந்து அருள் புரியும் பொழுதில்.

ஒருங்கிறைஞ்சி அருந்த எனக் கூட்டுக. (௪)

பௌவ மூழ்கு சூர்த டிந்த பால னுக்கு முலைகொடுத்
தெவ்வ மாய வினைக டீரி யக்க மாத* ரறுவருந்
தெய்வ நீறு முழுத ணிந்து செய்ய வேணி கண்டிகைச்
சைவ வேட மாதவந் தரித்து வந்து தோன்றினர்.

(இ - ள்) பௌவம் மூழ்கு சூர் தடிந்த பாலனுக்கு - கடலின் கண் மூழ்கி யொளித்த சூரபன்மனை வதைத்தருளிய முருகக்கடவுளுக்கு, முலை கொடுத்து - பால் கொடுத்தலினால், எவ்வம் ஆய வினைகள் தீர் இயக்க மாதர் அறுவரும் - துன்பமாகிய வினைகள் நீங்கப்பெற்ற இயக்க மகளிர் அறுவரும், தெய்வ நீறு முழுது அணிந்து - தெய்வத் திருநீற்றினை உடல் முழுதும் பூசி, செய்ய வேணி கண்டிகை - சிவந்த சடையையும் உருத்திராக்க வடத்தையும் (தாங்கி,) மா சைவ தவவேடம் தரித்து - (இங்ஙனமாகப்) பெருமை பொருந்திய சைவத் தவக்கோலம் பூண்டு, வந்து தோன்றினர் - வந்து தோன்றினர்கள்.

துன்பத்திற்குக் காரணமாகிய வினையைத் துன்பமாகிய வினையென உபசரித்தார். அறுவர் கார்த்திகை மகளிர் என்று கூறப்படுவோர். வேணியும் கண்டிகையும் தாங்கி என ஒருசொல் வருவித்துரைக்க. (௫)

மந்தி ரச்சி லம்ப லம்பு மலர டிக்கண் வந்திசெய்
தெந்தை யட்ட சித்தி வேண்டு மெங்க ளுக்கெ னத்தொழா
அந்த ளிர்க்கை யவரி ரப்ப வண்ண றன்ம டித்தலந்
தந்தி ருக்கு மாதை யங்கை சுட்டி யீது சாற்றுமால்.

(இ - ள்.) அம் தளிர்க்கையவர் - (அங்ஙனம் தோன்றிய) அழகிய தளிர் போலும் கையையுடைய அம் மகளிர், மந்திரச் சிலம்பு அலம்பும் - வேதமாகிய சிலம்பு ஒலிக்கும், மலர் அடிக்கண் வந்தி செய்து - மலர் போன்ற திருவடியின் கண் (வீழ்ந்து) வணங்கி, தொழா - தொழுது, எந்தை - எம் தந்தையே, எங்களுக்கு அட்டமாசித்தி வேண்டும் என - அடியேங்களுக்கு அட்டமாசித்தியைத் தெரித்தருள வேண்டு மென்று, இரப்ப - குறையிரப்ப, அண்ணல் - இறைவன், தன் மடித்தலம் தந்து இருக்கும் மாதை - தனது மடித்தலத்தினைப் பெற்றிருக்கும் உமை நங்கையை, அம் கை சுட்டி ஈது சாற்றும் - அழகிய கையினாற் சுட்டி இதனைக் கூறியருளுவானாயினன்.

மந்திரம் என்றது ஈண்டு வேதத்தை. கை அவர் எனப் பிரித் துரைத்தலுமாம். தந்து - தரப்பெற்று. ஆல் : அசை. (௬)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

அலர்பசும் பொலங்கோம் பன்ன வணங்கிவ ளிறைவா லெங்கும்
மலர்பரா சத்தி யாகி மகேசையா யணிமா வாதிப்
பலர்புகழ் சித்தி யெட்டும் பணிந்துகுற் றேவல் செய்யுஞ்
சிலதிய ராகிச் சூழ்ந்து சேவகஞ் செய்ய வைகும்.

(பா - ம்.) * இயக்கி மாதர்.

(இ - ள்.) அலர் பசும் பொலம் கொம்பு அன்ன அணங்கு இவள் - மலர்ந்த பசிய பொற்கொம்பு போன்ற இவ்வுமை நங்கை, நிறைவால் - பூரணத்தன்மையால், எங்கும் மலர் பராசத்தி ஆகி - எங்கும் வியாபித்த பராசத்தி யாகியும், மகேசை ஆய் - மகேச்சுவரி எனப் பெறுவாளாகியும், அணிமா ஆதி - அணிமா முதலிய, பலர் புகழ் சித்தி எட்டும் - பலரும் புகழ்கின்ற எட்டுச் சித்திகளும், பணிந்து குற்றேவல் செய்யும் சிலதியராகி - வணங்கிக் குற்றேவல் புரியும் சேடியராகி, சூழ்ந்து சேவகம் செய்ய - சூழ்ந்து நின்று பணிசெய்யா நிற்க, வைகும் - வீற்றிருப்பாள்.

நிறைவு - பூரணம். மலர்தல் - பரத்தல், வியாபித்தல். பராசத்தி, மகேசை என்னும் சத்திகளாய் நிற்பவள் இவ்வுமையே என்றார் ;

''சத்தியாய் விந்து சத்தி யாய்மனோன் மனிதா னாகி
ஒத்துறு மகேசை யாகி யுமைதிரு வாணி யாகி
வைத்துறுஞ் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சத்தி யொருத்தி யாகும்
எத்திற நின்றா னீச னத்திற மவளு நிற்பள்''

என்று சிவஞானசித்தியார் கூறுதல் காண்க. (எ)

இவளைநீர் சிந்தித் தான்முன் னீட்டிய வினையை நீக்கித்
தவலருஞ் சித்தி யெட்டுந் தருமெனக் கருணை பூத்துச்
சிவபரஞ் சோதி யெட்டுச் சித்தியுந் தெளித்தல் செய்தான்
அவரது மறந்தா ரும்மை யாழ்வினை வலத்தான் மன்னோ.

(இ - ள்) இவளை நீர் சிந்தித்தால் - இப்பிராட்டியை நீவிர் சிந்திப்பீராயின், முன் ஈட்டிய வினையை நீக்கி - முற்பிறப்புக்களிலே செய்து தொகுத்த வினையைப் போக்கி, தவல் அரும் சித்தி எட்டும் தரும் என - கெடுதலில்லாத எட்டுச் சித்திகளையும் தந்தருளுவாளென்று, கருணை பூத்து - அருள் புரிந்து சிவபரஞ்சோதி எட்டுச் சித்தியும் தெளித்தல் செய்தான் - சிவபரஞ்சுடர் எட்டுச் சித்திகளையுந் தெளிவித்தருளினன் ; அவர் உம்மை ஆழ்வினை வலத்தால் அது மறந்தார் - அம்மகளிர் பிராரத்த வினையின் வலியால் அதனை மறந்தனர்.

அது மறந்தார் என்பதற்கு உமையைச் சிந்தியாமல் அச்சித்தியை மறந்தார் என்க. உம்மை யென்றது ஈண்டு முற்பிறப்புக்களை. ஆழ்வினை - ஆழமாகிய வினை. மன்னும் ஓவும் அசைகள். (அ)

செழுமதிப் பிளவு வேய்ந்த தேவுமக் குற்ற நோக்கி
முழுமதி முகத்தி னாரை முனிந்துநீர் பட்ட மங்கைப்
பழுமர முதலஞ் ஞானப் பாறையாய்க் கிடமி னென்னக்
கழுமலுற் றவர்தாழ்ந் தேன்று கழிவதிச் சாப மென்றார்.

(இ - ள்.) செழுமதிப் பிளவு வேய்ந்த தேவும் - செழுமையாகிய மதியின் பிளவினை அணிந்த இறைவனும், அக்குற்றம் நோக்கி - அப்பிழையை நோக்கி, முழுமதி முகத்தினாரை முனிந்து - நிறைமதி

போன்ற முகத்தினையுடைய அப்பெண்களைச் சினந்து நீர் - நீவிர், பட்ட மங்கைப் பழுமர முதல் - பட்டமங்கை யென்னும் பதியிலே ஆல மரத்தினடியில், அஞ்ஞானப் பாறையாய்க் கிடமின் என்ன - அசேதன மாகிய கற்பாறையாய்க் கிடப்பீராக என்று சபிக்க. கழுமல் உற்று அவர் தாழ்ந்து - அவர்கள் மயக்கமுற்று வணங்கி, இச்சாபம் என்று கழிவது என்றார் - இந்தச் சாபம் நீங்குவது எப்பொழுது என்று வினவினர்.

உபதேசத்தை மறந்த குற்றத்தால் அறிவில்லாத பாறையாய்க் கிடக்குமாறு சபித்தார். கழுமல் - மயங்கல். உற்றவர் என வினைப் பெயருமாம். (௯)

இப்படிக் கருங்க லாகிக் கிடத்திரா யிரமாண் டெல்லைக்
கப்புற மதுரை நின்று மடுத்துமைத் தொடுத்த சாபத்
துப்பற நோக்கி நுங்க டோல்லுரு நல்கிச் சித்தி
கைப்படு கனிபோற் காணக் காட்டுதும் போதி ரென்றான்.

(இ - ள்.) ஆயிரம் ஆண்டு எல்லைக்கு - ஆயிரம் ஆண்டளவு காறும், இப்படி கருங்கல் ஆகி கிடத்திர் - இங்ஙனங் கருங்கற் பாறையாய்க் கிடப்பீர், அப்புறம் - அதன்மேல், மதுரை நின்றும் அடுத்து - மதுரையி னின்றும் வந்து, உமைத் தொடுத்த சாபத்துப்பு அற நோக்கி - உங்களைத் தொடுத்த சாபத்தின் வலிமை நீங்குமாறு கடைக்கணித்து, நுங்கள் தொல் உரு நல்கி - உங்கள் பழைய வடிவையுங் கொடுத்து, சித்தி - எட்டுச் சித்திகளையும், கைப்படு கனிபோல் காணக் காட்டுதும் - கையி லுள்ள நெல்லிக்கனிபோல ஐயந்திரிபின்றிக் காணுமாறு காட்டுவோம்; போதிர் என்றான் - செல்வீர் என்று அருளிச் செய்தான்.

எல்லைக்கு - எல்லைகாறும். துப்பு - வலி. கிடத்திர், போதிர் என்பனவற்றில் த் : எழுத்துப்பேறு. (க0)

[வஞ்சித்துறை]

கோடியனார்க ளறுவரும்
நெடியவானி மிர்ந்துகார்
படியும்பட்ட மங்கையால்
அடியிற்பாறை யாயினார்.

(இ - ள்.) கொடி அனார்கள் அறுவரும் - பூங்கொடி போன்ற அம் மாதர் அறுவரும், நெடிய வான் நிமிர்ந்து - நீண்ட விசும்பினன்கண் உயர்ந்து, கார்படியும் - மேகம் பொருந்தப்பெற்ற, பட்ட மங்கை ஆல் அடியில் - பட்ட மங்கை என்னும் பதியில் உள்ள ஆலமரத்தினடியில், பாறை ஆயினார் - கருங்கற் பாறையாயினார்கள்.

நிமிர்ந்து படியும் ஆல் என்க. இதனை முச்சீரடியாக்கி வஞ்சிவிருத்தம் என்னலுமாம். (கக)

கதிர்கலம்பெய் காட்சிபோல்
உதிர்பழத்தி னுடலெலாம்
புதைபடக் கிடந்தனர்
மதரரித் தடங்கணார்.

(இ - ள்.) மதர் அரி தடங்கணார் - மதர்த்த அரி பரந்த பெரிய கண்களையுடைய அம்மகளிர், கதிர் கலம்பெய் காட்சிபோல் உதிர் பழத்தின் - (வேட்கோவர் வனைந்த) ஒளிவிடுகின்ற புதுக்கலம் வீழுந் தோற்றம்போல உதிர்கின்ற ஆலம் பழத்தினால், உடல் எலாம் புதைபடக் கிடந்தனர் - உடல் முழுதும் புதையக் கிடந்தனர்.

கதிர் கலம்: வினைத்தொகை; இயல்பாகலின்.

''புதுக்கலத் தன்ன கனிய வாலம்''

என ஐங்குறு நூற்றிலும்,

''புதுக்கலம் போலும் பூங்கனி யாலும்''

எனச் சீவகசிந்தாமணியிலும் ஆலம் பழத்திற்குப் புதுக்கலம் உவமையாக வந்துள்ளமை காண்க. (கஉ)

பருவமா யிரங்கழிந்
தொருவமாட மதுரையெங்
குரவனெண் குணத்தினன்
திருவுளந் திரும்பினான்.

(இ - ள்.) ஆயிரம் பருவம் கழிந்து ஒருவ - ஆயிரம் ஆண்டும் கழிந்துபோக, மாடமதுரை எம் குரவன் - மாடங்கள் நிறைந்த மதுரையின்கண் எழுந்தருளியுள்ள எம் குரவனும், எண் குணத்தினன் - எட்டுக் குணங்களை யுடையவனுமாகிய சோமசுந்தரக் கடவுள், திருவுளம் திரும்பினான் - தனது திருவுள்ளத்திற் கருணை கொண்டருளினான்.

பருவம் என்றது ஈண்டு ஆண்டினை. நீங்க அதன்பின் என்க. உளந் திரும்புதல் - கருணை கூர்தல். (கங)

தன்னதிச்சை கொண்டதோர்
இன்னருட் குரவனாய்
அந்நெடுங்க லாயினார்
முன்னர்வந்து தோன்றினான்.

(இ - ள்.) தன்னது இச்சை கொண்டது ஓர் இன் அருள் குரவனாய் - தனது இச்சையினாலே திருமேனி கொண்டருளிய, இனிய கருணைக் குரவனாகி, அந்நெடுங்கல் ஆயினார் முன்னர் வந்து தோன்றினான் - நீண்ட கருங்கல்லாய்க் கிடக்கும் அப்பெண்களின் முன்வந்து தோன்றி யருளினான்.

தன்னது, ணகரம் விரித்தல். கொண்டது - கொண்ட திருமேனியை யுடைய. இறைவன் சுதந்தர னாகலின் அவன் கொள்ளும் திருமேனி அவனது இச்சையாலாவதென்க;

"நிறுத்துவ னினைந்த மேனி நின்மல னருளி னாலே"

எனச் சிவஞான சித்தியார் கூறுதல் காண்க. (க௪)

இருட்டதும்பு கோதையார்
மருட்டதும்பு வினைகெட
அருட்டதும்பு கண்ணினாற்
றெருட்டதும்ப நோக்கினான்.

(இ - ள்.) இருள் ததும்பு கோதையார் - இருள் மிக்க கூந்தலை யுடைய அப் பெண்களின், மருள் ததும்பு வினைகெட - அஞ்ஞானத்தால் வந்த பெருந்தீவினை கெடுமாறு, அருள் ததும்பு கண்ணினால் - அருள் நிறைந்த திருவிழியால், தெருள் ததும்ப நோக்கினான் - ஞானமிக நோக்கி யருளினான்.

ததும்புதல் - நிறைதல். மருள் - அஞ்ஞானம். தெருள் - ஞானம். இசைப் பொருட்டு நான்கடியிலும் டகரம் விரிந்து நின்றது. (க௫)

அடிகணோக்க வம்புயங்
கடிகொணெய்தல் காந்தள்பைங்
கோடிகொண்முல்லை குமுதமேற்
படியப்பூத்த பாறையே.

(இ - ள்.) அடிகள் நோக்க - இறைவன் அங்ஙனம் நோக்கியருள, பாறை - அக் கற்பாறைகள், அம்புயம் - தாமரை மலர்களையும், கடி கொள் நெய்தல் - மணத்தினைக் கொண்ட நெய்தல் மலர்களையும், காந்தள் - காந்தட் பூக்களையும், பைங்கொடி கொள் முல்லை - பசிய கொடியிற் பொருந்திய முல்லையரும்புகளையும், குமுதம் - ஆம்பல் மலர் களையும், மேல் படியப் பூத்த - தம்மேற் பொருந்துமாறு பூத்தன.

அடிகள் நோக்க பாறை பூத்தன வென்க. அம்புயம் முதலியவற்றை எழுவாயாக்கி, பாறையின்மேற் படியப் பூத்தன என்னலுமாம். கல்லுரு நீங்கிப் பெண்ணுரு வெய்தினமையை இங்ஙனங் கூறினார். அம்புயம் முதலிய உவமைகளால் முகம், கண், கை, பல், வாய் என்னும் பொருள் களை இலக்கணையாகச் சொல்லினமையின் இச் செய்யுள் உருவகவுயர்வு நவிற்சியணி. (க௬)

தாக்கவேத கத்திரும்
பாக்கமுற்ற பொன்னேன
நீக்கமற்ற விருண்மல
வீக்கமற்று விட்டதே.

(இ - ள்.) வேதகத்து இரும்பு தாக்க - பரிசவேதியில் இரும்பு தாக்குற, ஆக்கம் உற்ற பொன் என - அவ்விரும்பின் றன்மை கெட்டு) ஆகிய பொன்னைப்போல, நீக்கம் அற்ற இருள் மலவீக்கம் அற்று விட்டது - (இறைவன் திருவருட் பார்வையால்) நீங்காத ஆணவமலத்தின் கட்டு அற்று விட்டது.

மேற் செய்யுளிலுள்ள 'அடிகள் நோக்க' என்பதனை ஈண்டும் கூட்டியுரைக்க. நீக்க மற்ற-பிரிப்பின்றியிருந்த. வீக்கம் - செறிவுமாம். (கஎ)

நிறையுமன் பெனுந்நதி
போறையெனுங் கரைகடந்
திறைவனின் னருட்கடற்
றுறையின்வாய் மடுப்பவே.

(இ - ள்.) நிறையும் அன்பு எனும் நதி - நிறைந்த அன்பு என்னும் யாறானது, பொறை எனும் கரை கடந்து - பொறுமை யென்னும் கரையைக் கடந்து, இறைவன் இன் அருள் கடல் துறையின்வாய் மடுப்ப - சிவபெருமானது இனிய திருவருளாகிய கடலின் துறையின்கண் (சென்று) கலக்க.

அடக்கலாற்றாது பொங்கி யெழுந்த தென்பார் 'பொறை யெனுங் கரை கடந்து' என்றார். (கஅ)

எழுந்திறை யடிக்கணே
அழுந்துநேச மோடுதவக்
கொழுந்தனார்க ளறுவரும்
விழுந்திறைஞ்சி னாரரோ.

(இ - ள்.) தவக்கொழுந்து அனார்கள் அறுவரும் - தவத்தின் கொழுந்து போன்றாராகிய அம்மகளிரறுவரும், எழுந்த - எழுந்த, அழுந்து நேசமொடு - ஆழ்ந்த அன்புடன், இறை அடிக்கண் விழுந்து இறைஞ்சினர் - இறைவன் திருவடியின்கண் வீழ்ந்து வணங்கினார்கள்.

அறுவரும் எழுந்து நேசமொடு இறைஞ்சினர் என்க. அரோ: அசை. (கக)

குமரற்கூட்டு மிளமுலை
உமையொப்பார்கள் சென்னிமேல்
அமலச்சோதி யங்கையாங்
கமலப்போது சூட்டினான்.

(இ - ள்.) குமரற்கு ஊட்டும் இளமுலை உமை ஒப்பார்கள் சென்னிமேல் - முருகக் கடவுளுக்குப் பால் அருத்தும் இளமையாகிய கொங்கையையுடைய உமையம்மைபோலும் அப்பெண்களின் முடியின்

மேல், அமலச்சோதி - தூய ஒளிவடிவினனுகிய இறைவன், அம் கை ஆம் கமலப்போது சூட்டினுன் - அழகிய கையாகிய தாமரை மலரைச் சூட்டினுன்.

சென்னியிற் கைவைத்தல் பரிச தீக்கை. போது என்றதற்கேற்பச் சூட்டினுன் என்ருர். (உ0)

சித்தியெட்டு மங்கலார்
புத்தியிற்கோ ளுந்தவே
கைத்தலத்தில் வைத்ததோர்
முத்தெனத்தெ ருட்டுவான்.

(இ - ள்.) சித்தி எட்டும் - எட்டுச் சித்திகளையும் அந்நலார் புத்தியில் கொளுந்த - அம்மகளிரின் அறிவிற் பொருந்த, கைத்தலத்தில் வைத்தது ஓர் முத்து எனத் தெருட்டுவான் - கையின்கண் வைத்த முத்தினைப் போலத் தெளிவிப்பானுயினன்.

கைக்கனி என்பதுபோல் மணிமுதலியவும் கூறப்படும். ஓர்: இசை நிறைக்க வந்தது. (உக)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

அணிமா மகிமா விலகிமா வரிய கரிமா பிராத்திமலப்
பிணிமா சுடையோர்க் கடைவரிய பிராகா மியமீ சத்துவமெய்
துணிமா யோகர்க் கெளியவசித் துவமென் றெட்டா மிவையுளக்கண்
மணிமா சறுத்தோர் விளையாட்டின் வகையா மவற்றின் மரபுரைப்பாம்.

(இ - ள்.) அணிமா மகிமா இலகிமா அரிய கரிமா பிராத்தி - அணிமாவும் மகிமாவும் இலகிமாவும் அருமையையுடைய கரிமாவும் பிராத்தியும், மலர்ப்பிணி மாசு உடையோர்க்கு அடைவு அரிய பிராகாமியம் ஈசத்துவம் - மல நோயாகிய் குற்றமுடையார்க்கு அடைதலரிய் பிராகாமியமும் ஈசத்துவமும், மெய்துணிமா யோகர்க்கு எளிய வசித்துவமும் என்று எட்டு ஆம் - மெய்ப்பொருளை யுணர்ந்த பெரிய யோகியருக்கு எளிய வசித்துவமும் என்று அச்சித்தி எட்டு வகைப்படும்; இவை உளக் கண்மணி மாசு அறுத்தோர் விளையாட்டின் வகையாம் - இவைகள் உள்ளத்தின்கண் கரிய அவிச்சையை நீக்கினவர்களின் விளையாட்டின் வகையாகும்; அவற்றின் மரபு உரைப்பாம் - அவற்றின் தன்மையைக் கூறுவாம்.

மாயோகர்க்கு எளிய என்றது ஏனையோர்க்கு அரிய என்றபடி. மணி - கருமை. (உஉ)

அறவுஞ் சிறிய வுயிர்தோறுந்தான் பரம காட்டை யணுவாய்ச்சென்
றுறையுஞ் சிறுமை யணிமாவா மூவரி ஞால முதன்மேலென்
றறையுஞ் சிவாந்த மாறுறு முள்ளும் புறனு மகலாதே
நிறையும் பெருமை தனையன்றே மகிமா வென்னு நிரம்பியநூல்.

(இ - ள்.) அறவும் சிறிய உயிர் தொறும் - மிகவும் நுண்ணிய உயிர்கள் தோறும், தான் பரமகாட்டை அணுவாய்ச் சென்று உறையும் சிறுமை அணிமா ஆம் - தான் (சிறுமையில்) முடிவாகிய பரமாணுவாய்ச் சென்று தங்கும் நுண்மையே அணிமாவாகும்; நிரம்பிய நூல் - பொருள் நிரம்பிய நூல்கள், உவரி ஞால முதல் மேல் என்று அறையும் சிவ அந்தம் ஆறுாறும் - கடல் சூழ்ந்த நில முதலாக எல்லாவற்றினும் மேல் என்று கூறப்படும் சிவம் ஈறுகவுள்ள முப்பத்தாறு தத்துவங்களின், உள்ளும் புறனும் அகலாது நிறையும் பெருமைதனை - அகத்தும் புறத்தும் நீங்காது உறையும் பெருமையை, மகிமா என்னும் - மகிமா என்று கூறுநிற்கும்.

காட்டை - முடிவு; வரம்பு. பிருதிவி தத்துவத்தை ஞாலம் என்றதற் கேற்ப உவரியென அடைகொடுத்துக் கூறினர். சிவம் - சிவதத்துவம். சிவாந்தம்: நெடிற்சந்தி. நிரம்பிய நூல் - மெய்நூல். அன்று, ஓ: அசைகள். (உ௩)

இலகு மேரு பாரம்போ லிருக்கும் யோகி தனையெடுத்தால்
இலகு வான பரவணுப்போ* லிருப்ப திலகி மாவாகும்
இலகு வான பரவணுப்போ லிருக்கும் யோகி தனையெடுத்தால்
இலகு மேரு பாரம்போ லிருப்ப தன்றோ கரிமாவாம்.

(இ - ள்.) இலகு மேரு பாரம்போல் இருக்கும் யோகிதனை எடுத்தால் - விளங்கா நின்ற மேருமலையின் பாரம்போலக் கனத்திருக்கும் யோகியை எடுத்தால், இலகு ஆன பர அணுப்போல் இருப்பது இலகிமா ஆகும் - இலேசான பரமாணுவைப் போலக் கனமற்று இருப்பது இலகிமாவாம்; இலகு ஆன பர அணுப்போல் இருக்கும் யோகிதனை எடுத்தால் - இலேசான பரமாணுவைப்போல மெலிந்திருக்கும் யோகியை எடுத்தால், இலகு மேரு பாரம்போல் இருப்பது கரிமா ஆம் - விளங்கா நின்ற மேரு மலையின் கனம்போலக் கனமாக இருப்பது கரிமாவாம்.

அன்று, ஓ: அசைகள். தூலம் என்பது பாடமாயின் பஞ்சு என்பது பொருளாம். (உச)

பிலத்தி லிருந்தோ னயனுலகிற் புகுதன் மீண்டும் பிலமடைதல்
பலத்தின் மிகுந்த பிராத்தியதாம் பரகா யத்தி னண்ணுதல்வான்
புலத்தி னியங்க லிச்சித்த போக மனைத்துந் தானிருக்குந்
தலத்தி னினைந்த படிவருதல் பிராகா மியமாந் தவக்கோடியீர்.

(இ - ள்.) தவக் கொடியீர் - தவக்கொடிபோலும் நங்கையீர், பிலத்தில் இருந்தோன் அயன் உலகில் புகுதல் - பிலத்தின்கண் இருந்தவன் பிரமனுலகில் அடைதலும், மீண்டும் பிலம் அடைதல் - மீளவும்

(பா - ம்.) * இலகுவான தூலமென.

பிலத்திற் புகுதலும், பலத்தின் மிகுந்த பிராத்தியதாம் - பயனுல் மிக்க பிராத்தியாகும்; பரகாயத்தில் நண்ணுதல் - வேறு உடலிற் புகுதலும், வான் புலத்தின் இயங்கல் - வானின்கண் சஞ்சரித்தலும் இச்சித்த போகம் அனைத்தும் - விரும்பிய போகமெல்லாம், தான் இருக்கும் தலத்தில் நினைந்தபடி வருதல் - தான் இருக்குமிடத்தில் நினைந்த வண்ணமே வரச்செய்தலும், பிராகாமியம் ஆம் - பிராகாமியமாகும்.

அது: பகுதிப்பொருள் விகுதி. வருவித்தல் என்பது வ்வ்விகுதி குன்றி நின்றது. (உரு)

விண்ணி லிரவி தன்னுடம்பின் வெயிலா லனைத்தும் விளக்குதல்போல்
மண்ணி லுளவாம் பொருள்பலவுங் கால மூன்றும் வானத்தின்
கண்ணி லுளவாம் பொருளுந்தன் காயத் தொளியா லிருந்தறிதல்
எண்ணி லிதுவு மறையொருசார் பிராகா மியமேன் றியம்புமால்.

(இ - ள்.) விண் இல் இரவி தன் உடம்பின் வெயிலால் - வானின் கண் உள்ள சூரியன் தனது உடலின் ஒளியால், அனைத்தும் விளக்குதல் போல் - எல்லாவற்றையும் விளங்கச் செய்தல்போல மண்ணில் உளவாம் பொருள் பலவும் - நிலவுலகில் உள்ள பொருளனைத்தையும், காலம் மூன்றும் - மூன்று காலங்களையும், வானத்தின் கண்ணில் உளவாம் பொருளும் - விண்ணுலகிலுள்ள பொருள்களையும், தன் காயத்து ஒளியால் இருந்து அறிதல் - தனது உடம்பின் ஒளியினுல் (விளங்கச் செய்து) தானிருந்த வண்ணமே அறிதலாகிய இதுவும் - இதனையும் எண்ணில் - ஆராயுமிடத்து, மறை ஒருசார் பிராகாமியம் என்று இயம்பும் - வேதம் ஒருபுடை பிராகாமியம் என்று கூறா நிற்கும்.

தான் ஓரிடத்திருந்தே யாவற்றையும் தன் காயத்தொளியால் விளங்கச் செய்து அறிதல் என்க. (உசு)

ஈச னெனமுத் தொழிலுந்தன் னிச்சை வழிசெய் தெழுபுரவித்
தேசன் முதற்கோள் பணிகேட்பத் திகழ்வ தீசத் துவமாகும்
பூச லவுணர் புள்விலங்கு பூத மனிதர் முதலுலகும்
வாச வாதி யெண்மருந்தன் வசமாக் கோள்கை வசித்துவமாம்.

(இ - ள்.) ஈசன் என முத்தொழிலும் தன் இச்சை வழிசெய்து - சிவபெருமானைப்போல ஆக்கலும் அழித்தலும் காத்தலுமாகிய மூன்று தொழில்களையும் தன் இச்சையின்படியே இயற்றி, எழு புரவித் தேசன் முதல் கோள் பணி கேட்ப - ஏழு குதிரைகளையுடைய சூரியன் முதல் ஒன்பது கோள்களும் ஏவல் கேட்க, திகழ்வது ஈசத்துவம் ஆகும் - விளங்குவது ஈசத்துவமாகும்; பூசல் அவுணர் புள்விலங்கு பூதம் மனிதர் முதல் உலகும் - போர்த் தொழிலையுடைய அவுணரும் பறவையும் விலங்கும் பூதமும் மனிதரும் முதலிய பல்வகை உயிர்களையும் வாசவ ஆதி எண்மரும் - இந்திரன் முதலிய திக்குப்பாலர் எண்மரையும், தன் வசமாக் கொள்கை வசித்துவம் ஆம் - தன் வசமாகச் செய்து கொள்வது வசித்துவம் ஆகும்.

தேசன் - ஒளியுருவன் ; ஆதித்தன். உலகு என்பது ஈண்டு உயிர் என்னும் பொருட்டு. வாசவாதி : தீர்க்க சந்தி, (உஎ)

எம்மை யுணர்ந்த யோகியர்க ளிவற்றை விரும்பா ரேனினுமவர்
தம்மை நிழல்போ லடைந்துலகர்க் கனையார் பெருமை தனையுணர்த்தும்
செம்மை யுடைய விவையென்னச் சித்தி யெட்டுந் தெளிவெய்தக்
கொம்மை முலையா ரறுவருக்குங் கொளுத்தி னனெண் குணச்செல்வன்.

(இ - ள்.) எம்மை உணர்ந்த யோகியர்கள் - எம்மை யறிந்த சிவ யோகியர், இவற்றை விரும்பார் எனினும் - இச் சித்திகளை விரும்பா ராயினும், அவர் தம்மை நிழல்போல் அடைந்து - அவர்களை உடம்பின் நிழல்போலத் தொடர்ந்து, உலகர்க்கு அனையார் பெருமைதனை உணர்த்தும் செம்மையுடைய இவை என்ன - உலகினருக்கு அவர் பெருமையை அறிவிக்கும் தகுதியை யுடையனவாம் இச்சித்திகள் என்று, சித்தி எட்டும் தெளிவு எய்த - அவ்வெண் சித்திகளையும் தெளிவுபட, கொம்மை முலையார் அறுவருக்கும் - திரண்ட கொங்கை களையுடைய மகளிர் அறுவருக்கும், எண்குணச் செல்வன் கொளுத்தி னன் - எட்டுக் குணங்களாகிய செல்வத்தினையுடைய இறைவன் அறிவித்தான்.

சிவஞானச் செல்வமுடைய பெரியார் இச்சித்திகளை விரும்பா ராதலை,

> ''இந்திரச் செல்வமு மெட்டுச் சித்தியும்
> வந்துழி வந்துழி மறுத்தன ரொதுங்கி''

என்று பட்டினத்தடிகள் கூறுமாறு காண்க. செம்மையுடைய இவை உணர்த்தும் என முடித்தலுமாம். (உஅ)

[வேறு]

தேவதே வுபதே சித்த சித்தியைச் சிலம்பன் செல்வி
பாவனை வலத்தா னன்கு பயின்றுவான் வழிக்கொண் டேகிப்
பூவலர் கதுப்பி னல்லா ரறுவரும் புரமூன் றட்ட
காவலன் விரும்பி வைகுங் கயிலைமால் வரையிற் புக்கார்.

(இ - ள்.) பூ அலர் கதுப்பின் நல்லார் அறுவரும் - மலர்கள் நிறைந்த கூந்தலையுடைய மகளிரறுவரும், தேவதே உபதேசித்த சித்தியை - தேவ தேவனாகிய சோமசுந்தரக்கடவுள் உபதேசித்தருளிய அட்டமாசித்தியையும், சிலம்பன் செல்வி பாவனை வலத்தால் நன்கு பயின்று - மலையரையன் புதல்வியாகிய உமையம்மையின் தியான வலியால் நன்றாகப் பயின்று, வான் வழிக்கொண்டு ஏகி - வான் வழியாற் சென்று, புரம் மூன்று அட்ட காவலன் விரும்பி வைகும் - திரிபுரங்களை எரித்த இறைவன் விரும்பி வீற்றிருக்கும், கயிலை மால் வரையில் புக்கார் - கைலை என்னும் பெரிய மலையிற் புகுந்தனர்.

தேவு எனப் பிரித்தலுமாம். சிவன் தேவ தேவனுதலை,

''தேவதேவன் சிவன்பெருந் தன்மையே''

என்னும் திருநாவுக்கரசர் தேவாரத்தா லறிக.

''இவளைநீர் சிந்தித் தால்முன் னீட்டிய வினையை நீக்கித்
தவலருஞ் சித்தி யெட்டுந் தரும்''

என முன்பு சிவபெருமான் அருளிச்செய்தமையால் உமையின் பாவனை வலத்தால் நன்கு பயின்று ரென்க. இங்ஙனம் பட்டமங்கையில் அட்ட மாசித்தி உபதேசித்த வரலாறு.

''பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்
கட்டமா சித்தி யருளிய வதுவும்''

எனத் திருவாசகத்திற் குறிப்பிடப்பெற்றது. (உக)

ஆகச் செய்யுள் - கஎஅ

———

முப்பத்து நான்காவது
விடையிலச்சினையிட்ட படலம்

[எழுசீரடி யாசிரிய விருத்தம்]

சந்து சூழ்மல யச்சி லம்பர் தவம்பு ரிந்த வியக்கிமார்க்
கந்த நாலிரு சித்தி தந்த தறைந்த னந்தன தடிதொழா
வந்து மீள்வள வன்பொ ருட்டு வடாது வாயிறி றந்தழைத்
திந்து சேகரன் விடையி லச்சினை யிட்ட வாறுவி ளம்புவாம்.

(இ - ள்.) சந்து சூழ் மலயச் சிலம்பர் - சந்தன மரங்கள் சூழ்ந்த பொதியின் மலையையுடைய சோமசுந்தரக் கடவுள், தவம்புரிந்த இயக்கி மார்க்கு - தவமியற்றிய இயக்க மாதர் அறுவர்க்கு, அந்தநாலிரு சித்தி தந்தது அறைந்தனம் - அந்த எட்டுச் சித்திகளையும் அருளிச்செய்த திரு விளையாடலைக் கூறினோம்; வந்து தனது அடி தொழா மீள்வளவன் பொருட்டு - வந்து தன் திருவடிகளை வணங்கித் திரும்பும் சோழமன்னன் பொருட்டு, வடாது வாயில் திறந்து அழைத்து - வடக்கு வாயிலைத் திறந்து உள்ளே அழைத்து, இந்து சேகரன் விடை இலச்சினை இட்டவாறு விளம்புவாம் - பிறை முடியணிகிய இறைவன் இடபக் குறியினைப் பொறித்த திருவிளையாடலை (இனிக்) கூறுவாம்.

எண் சித்திகளும் முன் கூறினமையால் 'அந்த' எனச் சுட்டினார். வளவன் பொருட்டு அங்ஙனந் தொழுதற்குத் திறந்தழைத்து இலச்சினை யிட்டவாறு என்க.

வடாது - வடக்கிலுள்ளது (க)

தோடு வெட்டி மலைத்து வாள்விதிர் துணைவி ழிக்குயி லிளமுலைக்
கோடு வெட்டிய குறிகொண் மேனியர் குடிகொண் மாநகர் கடிகொள்பைங்
காடு வெட்டிய கார ணக்குறி காடு வெட்டிய சோழனென்
றேடு வெட்டிய வண்டு சூழ்பொழி லெயில்கொள் கச்சியு ளானவன்.

(இ - ள்.) தோடு மலைத்து வெட்டி - (காதின்) தோட்டினைப் போர் புரிந்து வெட்டி, வாள் விதிர் துணைவிழிக் குயில் - வாளை அசைத்தா லொத்த இரண்டு விழிகளையுடைய குயில்போலும் உமைப்பிராட்டியின், இளமுலைக்கோடு வெட்டிய குறிகொள் மேனியர் - இளமையாகிய கொங்கை யென்னுங் கொம்பினாற் போழப்பட்ட குறியினைக்கொண்ட திருமேனியையுடைய ஏகம்பவாணர், குடிகொள் மாநகர் - எழுந்தருளி

யிருக்கும் பெருமை பொருந்திய காஞ்சி நகரில் கடிகொள் பைங்காடு வெட்டிய காரணக்குறி - (கண்டோர்க்கு) அச்சம் விளைத்தலைக் கொண்ட பசிய காடுகளை வெட்டிய காரணக் குறியினனே, காடு வெட்டிய சோழன் என்று - காடு வெட்டிய சோழனென்று பெயர் கூறப்பட்டு, ஏடு எட்டிய வண்டு சூழ்பொழில் எயில்கொள் கச்சியுளான் - இதழ்கள் பொருந்திய வண்டுகள் மொய்க்கும் சோலைகளையுடைய மதிலையுடைய காஞ்சிநகரி லுள்ளான் ஒருவன் ; அவன் - அம்மன்னன்.

மாநகரைச் சூழவென்க. கடி - மணமுமாம். ஏடுவெட்டிய வண்டு - இதழினைக் கிண்டிய வண்டு என்றுமாம் சிவபெருமான் உமையின் தனக் குறி யணிந்தவரலாற்றைக் காஞ்சிப்புராணம் - தழுவக் குழைந்த படலத் திலும், திருத்தொண்டர் புராணம் திருக்குறிப்புத் தொண்டர் புராணத் திலும் காண்க. (உ)

உத்த மச்சிவ பத்த ரிற்பெரி துத்த மன்புது விரைகலன்
மித்தை யென்றுவெ ணீறு கண்டிகை யார மென்றணி மெய்யினன்
நித்த வேத புராண மாதி நிகழ்த்தி டும்பொருள் கண்ணுதல்
அத்த னேபர தத்து வப்பொரு ளென்ற ளந்தறி கேள்வியான்.

(இ - ள்.) உத்தம சிவபத்தரில் பெரிது உத்தமன் - உத்தமமாகிய சிவ பத்தியையுடைய அடியாருள் மிகவும் உத்தமன்; புதுவிரைகலன் மித்தை என்று - புதிய மணமுடைய சந்தனமும் அணிகலனும் அழியும் பொரு ளென்று கருதி, வெள் நீறு கண்டிகை - வெள்ளிய திருநீறும் உருத்திராக்க மாலையுமே. ஆரம் என்று அணி மெய்யினன் - சந்தனமும் முத்தாரமு மென்று அணிந்த மேனியை யுடையவன் ; நித்த வேதம் புராணம் ஆதி - அழியாத மறைகளும் புராணங்களும் முதலிய நூல்கள், நிகழ்த்திடும் பொருள் கண்நுதல் அத்தனே - கூறும் பொருள் நுதற்கண்ணை யுடைய் ராகிய சிவபெருமானே ; பரதத்துவப் பொருள் என்று அளந்து அறி கேள்வியான் - (ஆகலின் அவனே) மேலான உண்மைப் பொருள் என்று அளந்தறிந்த கேள்வியை யுடையவன்.

மித்தை - பொய் ; ஈண்டு அநித்த மென்னும் பொருட்டு. அவற்றால் விளையும் இன்பம் நிலையற்ற தென்றபடி, ஆரம் என்பது இரட்டுற மொழி தலாற் சந்தனத்தையும் முத்தையும் உணர்த்திற்று. வெண்நீறு சாந்த மும், கண்டிகை முத்து வடமும் எனக் கொள்க. அளந்தறி - வேதம் முதலிய அளவைகளால் அளந்தறிந்த. (ங)

அங்க மாறுடு வேத நான்கு மறிந்து மெய்ப்பொரு ளாய்ந்துளஞ்
சங்கை கொண்டனு தினம ரன்புகழ் சாற்று சைவபு ராணநூல்
பொங்கு மின்சுவை யமுது தன்செவி வாய்தி றந்து புகட்டியுண்*
டெங்க ணாயக னடியி ணைக்க ணிருத்து மன்பு கருத்துளான்.

(இ - ள்.) அங்கம் ஆறுடு வேதம் நான்கும் அறிந்து - இங்ஙனம் ஆறு அங்கங்களையும் நான்கு மறைகளையும் கற்று, மெய்ப்பொருள் ஆய்ந்து - உண்மைப்பொருளை ஆராய்ந்து துணிந்து, உளம் சங்கை கொண்டு - உள்ளத்தால் (அப்பொருளைச்) சிந்தித்தல் செய்து, அனு

(பா - ம்.) * புகட்ட் வண்டு.

தினம் - எப்பொழுதும், அரன் புகழ் சாற்று - சிவபெருமான் புகழைக் கூறுகின்ற, சைவ புராண நூல் - சிவ புராண நூல்களாகிய, பொங்கும் இன் சுவை அமுது - மிக்க இனிய சுவையோடு கூடிய அமுதினை, தன் செவி வாய் திறந்து - தனது செவியாகிய வாயினைத் திறந்து, புகட்டி உண்டு - (பெரியோர்) ஊட்ட உண்டு, எங்கள் நாயகன் அடி இணைக்கண் - எங்கள் பெருமானாகிய அவ்விறைவனுடைய இரு திருவடியின் கண்ணும், இருத்தும் அன்பு கருத்துளான் - பதிய வைத்த அன்பு மிக்க மனத்தினை யுடையவன்.

அங்கம் ஆறு - சிட்சை, வியாகரணம், நிருத்தம், கற்பம், சந்தம், சோதிடம் என்பன; இவை வேதத்திற்கு உறுப்புக்கள் போறலின் அங்கம் எனப்படும்; இவற்றின் இயல்பு முன் உரைக்கப்பெற்றமை காண்க. சங்கை - ஈண்டுச் சிந்தித்தல் என்னும் பொருட்டு. புகட்டி - ஊட்டப் பெற்று. (௪)

முக்க ணாயகன் முப்பு ரத்தை முனிந்த நாயகன் மங்கையோர்
பக்க நாயகன் மிக்க வானவர் பரவு நாயக னரவணிச்
சோக்க* நாயக னாட லுஞ்செவி யான்மு கந்து சுவைதருந்†
தக்க பாலொடு தேன்க லந்து தருக்கி யுண்பவ னாயினான்.

(இ - ள்.) முக்கண் நாயகன் - மூன்று கண்களையுடைய இறைவனும், முப்புரத்தை முனிந்த நாயகன் - திரிபுரங்களை எரித்தருளிய இறைவனும், மங்கை ஓர்பக்க நாயகன் - உமையை ஒரு கூற்றில் வைத்த இறைவனும், மிக்க வானவர் பரவும் நாயகன் சிறந்த தேவர்கள் வழி படும் இறைவனுமாகிய, அரவு அணிச்சொக்க நாயகன் ஆடலும் - பாம்பாகிய அணியினையுடைய் சொக்கலிங்க மூர்த்தியின் திருவிளையாடலை யும், செவியால் முகந்து - செவியினால் மொண்டு சுவை தரும் தக்க பாலொடு தேன் கலந்து - சுவையினைத் தருகின்ற சிறந்த பாலுந் தேனுங் கலந்து, தருக்கி உண்பவன் ஆயினான் - உண்டு களிப்பானா யினன்.

ஒரு பொருள்மேற் பல பெயர் வந்தன. அரவணி சொக்கநாயகன் என இயல்பாயின் வினைத் தொகையாகும். சைவ புராணங்களுடன் சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலைக் கேட்டலைப் பாலுந் தேனும் கலந் துண்பதாகக் கூறினார். உண்டு தருக்குபவனாயினான் எனப் பிரித்துக் கூட்டுக. (௫)

அங்க யற்கண் மடந்தை பாக னடித்த லந்தொழு மாசைமேற்
போங்கி மிக்கெழு மன்ப னாய்மது ரேசன் மின்னு பொலங்கழற்
பங்க யப்பத மேன்று நான்பணி வேனே னப்பரி வெய்தியே
கங்கு லிற்றுயில் வான்க யற்புரை கண்ணி பங்கனை யுன்னியே.

(இ - ள்.) அங்கயற்கண் மடந்தை பாகன் - அங்கயற்கண்ணம் மையை ஒரு பாகத்திலுடைய சோமசுந்தரக்கடவுளின், அடித்தலம் தொழும் ஆசைமேல் பொங்கி மிக்கு எழும் அன்பனாய் - திருவடிகளை(க்

(பா - ம்.) *அரவணி சொக்க. †சுவைத்தருந்.

கண்டு தொழவேண்டுமென்னும் ஆசை மேலே பொங்கி எழுதலால் அதிகரித் தெழுகின்ற அன்புடையனுகி, மதுரேசன் மின்னு பொலம் கழல் பங்கயப்பதம் - மதுரைப்பிரானின் விளங்குகின்ற பொன்னுலாகிய வீரக் கழலணிந்த தாமரை மலர்போலுந் திருவடிகளை, நான் என்று பணிவேன் எனப் பரிவு எய்தி - யான் என்று கண்டு வணங்குவேன் எனப் பரிவு கூர்ந்து, கயல்புரை கண்ணி பங்கனை உன்னி - கயல்போலும் கண்களை யுடைய உமை பாகனுகிய அப்பெருமானைச் சிந்தித்துக் கொண்டே, கங்குலில் துயில்வான் - இரவில் உறங்குவானுயினன்.

பரிவு - அன்பு, துன்பம். கயற்புரை கண்ணிபங்கன் என்பதனைச் சுட்டாகக் கொள்க. (௬)

அன்று செம்பியர் கோம கன்கன வின்க ணேயருள் வெள்ளிமா
மன்று ணின்றவர் சித்த ராயெதிர் வந்து மன்னவ நின்னுளத்
தோன்று மஞ்ச லொருத்த னாகி யுருத்தி ரிந்துத னித்துவந்
தின்று வந்தனை செய்து போதி யெனப்பு கன்றன ரேகினர்.

(இ - ள்.) அன்று - அப்பொழுது. செம்பியர் கோமகன் கனவின் கண்-காடு வெட்டி என்னும் சோழர் பெருமானது கனவினிடத்து, அருள் வெள்ளி மாமன்றுள் நின்றவர் சித்தராய் எதிர் வந்து - அருள் மயமாகிய பெரிய வெள்ளியம்பலத்திலே நின்றருளிய இறைவர் சித்தமூர்த்தியாய் எதிரே வந்து, மன்னவ - அரசனே, நின் உளத்து ஒன்றும் அஞ்சல் - நின் மனதின்கண் சிறிதும் அஞ்சற்க; ஒருத்தனுகி உருதிரிந்து - நீ ஒருவனுய் மாறுவேடம் பூண்டு,தனித்து வந்து இன்று வந்தனை செய்து போதி என- துணையின்றி வந்து இன்று வணங்கிப் போவாயாக என்று, புகன்றனர் ஏகினர் - திருவாய்மலர்ந்தருளிச் சென்றனர்.

போதி, த் : எழுத்துப்பேறு- புகன்றனர்: முற்றெச்சம். (எ)

கேட்டு வேந்தன் விழித்து ணர்ந்து கிளர்ந்தவற்புத னாகியே
ஈட்டு சேனை யமைச்சு ளார்பிறர் யாரு மின்றி வழிக்கொளீஇ
நாட்ட மூன்றவ னாம வாள்கொடு நல்ல ருட்டுணை யாய்வழி
காட்ட வன்பெனு மிவுளி மேல்கொடு கங்குல் வாய்வரு வானரோ.

(இ - ள்,) வேந்தன் கேட்டு விழித்து உணர்ந்து - சோழமன்னன் (அவ்வருளிப் பாட்டினைக்) கேட்டு விழித்து அறிந்து, கிளர்ந்த அற்புத னுகி-மிக்க வியப் புடையவனுய், ஈட்டு சேனை அமைச்சுளார் பிறர் யாரும் இன்றி - தொகுக்கப்பட்ட சேனைகளும் மந்திரிகளும் வேறு யாரும் இல்லாமல் கங்குல்வாய் - அவ்விரவிலேயே, நல் அருள் துணையாய் வழி காட்ட - நல்ல திருவருள் துணையாய் நின்று வழி காண்பிக்க, அன்பு எனும் இவுளி மேல்கொடு - அன்பு என்னுங் குதிரையிலேறி, நாட்டம் மூன்று உடையவன் நாமவாள் கொடு-கண்கள் மூன்றுடைய இறைவனது திருநாமமாகிய திருவைந்தெழுத்தென்னும் வாட்படை யேந்தி, வழிக் கொளீஇ வருவான் - வழிக்கொண்டு வருவானுயினன்.

இறைவன் திருநாமம் பஞ்சாக்கர மென்பதனையும். அஃது அடியார் களின் இடையூறு களையும் வாள்போல்வ தென்பதனையும்,

''படைக்கல மாகவுன் னாமத் தெழுத்தஞ்செ னாவிற் கொண்டேன்'' என்று திருநாவுக்கரசர் அருளிச்செய்தலால் அறிக. நாமம் முதலியவற்றை வாள் முதலியவாக உருவகஞ் செய்தமையால் இஃது உருவகவணி. அரோ: அசை. (அ)

கல்லு மாரழ லத்த மும்பல கலுழி யுங்குண கனைகடற்
செல்லு மாநதி பலவும் வானிமிர் கன்ன லுஞ்செறி செந்நெலும்
புல்லு மாநில னுங்க ழிந்து புறங்கி டக்கந டந்துபோய்
வல்லு மாமுலை யார்க ணம்பயில் வையை யந்துறை யெய்தினன்.

(இ - ள்.) கல்லும் - மலைகளும், ஆர் அழல் அத்தமும் - நிறைந்த நெருப்புப்போலும் பாலைநிலமும், பல கலுழியும் - பல காட்டாறுகளும், குண கனைகடல் செல்லும் மாநதி பலவும் - ஒலிக்கின்ற கீழ்க்கடலிற் சென்று கலக்கும் பெரிய பல நதிகளும், வான் நிமிர் கன்னலும் செந்நெ லும் புல்லும் மாநிலனும் - வானை யளாவிய கரும்பும் செந்நெற் பயிரும் பொருந்திய பெருமை பொருந்திய மருத நிலங்களும், கழிந்து புறம் கிடக்க நடந்துபோய்-பிற்பட்டுப் புறத்தே கழிய நடந்து சென்று, வல்லு மா முலையார் கணம்பயில் வையை அம் துறை எய்தினன் - சூதாடு கருவி போன்ற பெரிய கொங்கையினையுடைய மகளிர் கூட்டம் நீராடிப் பயிலும் வையையாற்றின் அழகிய நீர்த்துறையை யடைந்தனன்.

ஆர் அழல் அத்தம் - இயங்குதற்கரிய அழலையுடைய சுரம் என்று மாம். குறிஞ்சி, பாலை, முல்லை மருதம் என்பன முறையே கூறப் பட்டன. (கூ)

குறுகு முன்ன ரதிர்ந்து வையை கொதித்த கன்கரை குத்திவேர்
பறிய வன்சினை முறிய விண்டொடு பைந்த ருக்களை யுந்தியே
மறுகி வெள்ள மெடுத்த லைத்தர மன்ன வன்கரை தன்னினின்
றிறுதி யில்லவ னைத்தொ ழற்கிடை யூறி தென்றனு ரெய்துவான்.

(இ - ள்.) குறுகு முன்னர் - அரசன் அங்கு வருவதற்கு முன்னரே, வையை வெள்ளம் எடுத்து - வையையாறு வெள்ளம் பெருகி, கொதித்து அதிர்ந்து - கொந்தளித்து ஆரவாரித்து, அகன்கரை குத்தி - அகன்ற கரையை அகழ்ந்து, விண் தொடு பைந் தருக்களை - வானையளாவிய பசிய மரங்களை, வேர் பறிய வன்சினை முறிய உந்தி - வேர் அறவும் வலிய கிளைகள் முறியவும் தள்ளி, மறுகி அலைத்தர - சுழன்று அலைக்க, மன்னவன் கரைதன்னில் நின்று - சோழமன்னன் கரையின் கண்ணே நின்று கொண்டு, இறுதி இல்லனைத் தொழற்கு - அழிவில்லாத சோம சுந்தரக் கடவுளை வணங்குதற்கு. இது இடையூறு என்று அனுர் எய்து வான் - இஃது இடையூறா யிராநின்றதென்று துன்புறுவானாயினன்.

வெள்ளமெடுத்து - பெருக்கெடுத்து. அலைத்தர - அலைத்தலைச் செய்ய; அலைவீச. (கо)

இழுதோ டுஞ்சுவை யமுது போற்கல னிட்டு ணுதிரு கண்கணீர்
வழிய வந்து விலக்கு வாரின் வளைந்த தாறு பகற்செயும்
பொழுதே ழும்பொழு தோம றுக்கம் விளைக்கு மேயிகல் பூழியன்
வழுதி யன்றியும் வையை யும்பகை யான தென்று வருந்துவான்.

(இ - ள்.) இழுதொடும் சுவை அமுது பொன்கலன் இட்டு - நெய்யோடு சுவை மிக்க அமுது (பசித்தவனுக்குப்) பொற்கலத்தில் இட்டிருக்க, உண்ணாது இரு கண்கள் நீர் வழிய - (அவன் அதனை) உண்ணப் பெறுமல் இரண்டு விழிகளினின்றும் நீர் சொரியுமாறு, வந்து விலக்கு வாரின் - வந்து தடுப்பவரைப்போல, ஆறு வளைந்தது - இந்நதி தடுத்தது, பகல் செயும் பொழுது எழும் பொழுதோ - பகலைச் செய்யும் சூரியன் உதிக்கும் பொழுது வந்தாலோ, இகல் பூழியன் மறுக்கம் விளைக்கும் - பகை கொண்டுள்ள பாண்டியன் துன்பஞ் செய்வான், வழுதி அன்றியும் வையையும் பகை ஆனது என்று வருந்துவான் - பாண்டியனே அல்லாமல் இவ் வையை யாறும் பகை யாயிற்று என்று வருந்தினான்.

இட்டு என்பதற்கு இடப்பட்டிருக்க என்று பொருள் கூறுக. 'கைக்கெட்டியது வாய்க் கெட்டவில்லை' என்னும் உலக வசனம் இங்கே கருதற்பாலது. பகற் செயும் பொழுது - பகலைச் செய்யும் ஞாயிறு. இகல் பூழியன் - மாறுபாடு கொண்ட பாண்டியன் : வினைத்தொகை.

(கக)

வெள்ள நோக்கி யழுங்கு செம்பியன் மெலிவு நோக்கி விரைந்தெழீஇக்
கள்ள நோக்கி லகப்ப டாதவர் கனவு போலவ னனவில்வந்
துள்ள நோக்குடை யன்ப ருக்கரு ளுருவ மாகிய சித்தர்தாம்
பள்ள நோக்கி வரும்பெ ரும்புனல் வற்ற நோக்கினர் பார்த்தரோ.

(இ - ள்.) கள்ள நோக்கில் அகப்படாதவர் - கரவினையுடைய பார்வைக்குக் கிட்டாதவராகிய சோமசுந்தரக் கடவுள், வெள்ளம் நோக்கி அழுங்கு செம்பியன் மெலிவு நோக்கி - வெள்ளத்தைக் கண்டு மனம் வருந்தும் சோழனது துன்பத்தைப் பார்த்தருளி, கனவுபோல் அவன் நனவில் விரைந்து எழீஇ வந்து - கனவின்கண் வந்ததுபோல அவன் நனவின் கண்ணும் விரைந்து எழுந்து வந்து, உள்ள நோக்கு உடை அன்பருக்கு - ஞானக் கண்ணாகிய அகப் பார்வையினையுடைய அன்பர்கட்கு, அருள் உருவம் ஆகிய சித்தர்தாம் - கருணை வடிவமாய்த் தோன்றியருளும் சித்தமூர்த்தி, பள்ளம் நோக்கிவரும் பெரும் புனல்-பள்ளத்தினை நோக்கி வருகின்ற வெள்ளநீரை, பார்த்து வற்ற நோக்கினர் - நோக்கி வற்றுமாறு திருவுளங் கொண்டனர்.

கள்ள நோக்கில் அகப்படார் என்ற கருத்தை,

''உள்ள முள்கலந் தேத்தவல் லார்க்கலாற்
கள்ள முள்ளவ ருக்கருள் வானலன்''

என்பது முதலிய அருள் வாக்குகளிற் காண்க. நோக்கினர் - கருதினர். அரோ : அசை.

(கஉ)

வறந்த வாறுக டந்து வந்து வடக்கு வாயிறி றந்துபோய்
நிறைந்த காவல்க டந்து வீதிக ணீந்தி நேரியர் வேந்தனைச்
சிறந்த வாடக புனித பங்கய் திப்பி யப்புன லாடுவித்
திறந்த வாதறை சாம கண்டர்த* மால யம்புகு வித்தரோ.

(இ - ள்.) வறந்த ஆறு கடந்து வந்து - (அங்ஙனந் திருவுளங் கொண்ட வளவில்) வற்றிய ஆற்றினை (அச்சோழ மன்னனோடும்) கடந்து வந்து, வடக்கு வாயில் திறந்து போய் - வடக்கு (மதில்) வாயிலைத் திறந்து உள்ளே சென்று, நிறைந்த காவல் கடந்து வீதிகள் நீந்தி-(போர் வீரர்கள்) நிறைந்த காவல்களைக் கடந்து பல வீதிகளையுந் தாண்டி, நேரியர் வேந்தனை - சோழமன்னனை, சிறந்த புனித ஆடக பங்கயத் திப்பியப் புனல் ஆடுவித்து - மேலான தூய பொற்றாமரையின் இனிய நீரில் மூழ்குவித்து, அறம் தவாது அறை சாம கண்டர் - அறத்தினைப் பிறழாது கூறுஞ் சாமகானஞ் செய்யும் கண்டத்தினையுடைய இறைவர், தம் ஆலயம் புகுவித்து - தமது திருக்கோயிலுட் புகச்செய்து.

ஆடக புனித பங்கய திப்பியம்: வட சொற்களாகலின் இயல்பாயின. திப்பியம் – இனிமை. அரோ : அசை. (௧௬)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

வெம்மைசெய் கதிர்கால்† செம்பொன் விமானசே கரத்தின் மேய
தம்மையும் பணிவித் தெண்ணில் சராசர மனைத்து மீன்ற
அம்மையங் கயற்க ணாளா மணங்கையும் பணிவித் துள்ளஞ்
செம்மைசெய் தின்ப வெள்ளத் தழுத்தினார் சித்த சாமி.

(இ - ள்.) சித்தசாமி-அச் சித்தமூர்த்தியாகிய பெருமான் வெம்மை செய்கதிர்கால் செம்பொன் - வெப்பத்தைச் செய்கின்ற ஒளியினை வீசும் சிவந்த பொன்னாலாகிய, விமான சேகரத்தில் மேய தம்மையும் பணி வித்து - விமானங்களுள் முடிபோல்வதாகிய இந்திர விமானத்தி லெழுந் தருளிய தம்மையும் வணங்கச் செய்து, எண் இல் சர அசரம் அனைத்தும் ஈன்ற - அளவிறந்த சராசரங்களனைத்தையும் பெற்றருளிய அம்மை - தாயாகிய, அங்கயற்கண்ணாளாம் அணங்கையும் பணிவித்து - அங்கயற் கண்ணியாகிய அணங்கினையும் வணங்கச்செய்து, உள்ளம் செம்மை செய்து இன்ப வெள்ளத்து அழுத்தினார் - உள்ளத்தைத் தூய்மை செய்து பேரின்பப் பெருக்கில் ஆழச்செய்தருளினார்.

வெம்மை - விருப்பமுமாம். உள்ளம் என்றது ஈண்டு உயிரை. செம்மை செய்தல் - ஆணவமல வழுக்கைப்போக்கித் தூய்மை செய்தல். (௧௭)

எண்ணிய வெண்ணி யாங்கே யான்பெற முடித்தாய் போற்றி
பண்ணியன் மறைக டேறுப் பான்மொழி மணாள போற்றி
புண்ணியர் தமக்கு வேதப் பொருளுரை பொருளே போற்றி
விண்ணிழி விமான மேய சுந்தர விடங்க போற்றி.

(பா - ம்.) * காளகண்டர்த. † கதிர்காய்.

(இ - ள்.) எண்ணிய எண்ணியாங்கே யான் பெற முடித்தாய் போற்றி - எண்ணியவற்றை எண்ணியவண்ணமே யான் பெறுமாறு முடித்தவனே வணக்கம்; பண் இயல் மறைகள் தேரு - பண் அமைந்த மறைகளால் அறியப்படாத, பால் மொழி மணாள போற்றி - பால் போலும் இனிய மொழிகளையுடைய அங்கயற்கணம்மையின் தலைவனே வணக்கம்; புண்ணியர் தமக்கு வேதப் பொருள் உரை பொருளே போற்றி - சனகர் முதலிய முனிவர்கட்கு வேதத்தின் பொருளை அருளிச்செய்த மெய்ப்பொருளே வணக்கம்; விண்இழி விமானம் மேய சுந்தர விடங்க போற்றி - வானினின்றும் இறங்கிய விமானத்தின்கண் எழுந்தருளிய சோமசுந்தரரென்னும் பேரழகுடையவனே வணக்கம்.

''எண்ணிய வெண்ணியாங் கெய்துப''

என்னும் திருக்குறட்டொடர் இங்கே கருதற்பாலது. தேரு மணாள என்க. பான்மொழி: அன்மொழித்தொகை. உரை பொருள் - உரைத்த மெய்ப்பொருள்: வினைத்தொகை. (௩௭)

எவ்வுட லெடுத்தேன் மேனா ளெண்ணிலாப் பிறவி தோறும்
அவ்வுட லெல்லாம் பாவ மறம்பொருட் டாக வன்றே
தேவ்வுடல் பொடித்தா யுன்றன் சேவடிக் கடிமை பூண்ட
இவ்வுட லொன்றே யன்றே யெனக்குட லான தையா.

(இ - ள்.) மேல்நாள் எண் இலாப் பிறவிதோறும் - முன்னாளில் எண்ணிறந்த பிறவிகள்தோறும், எவ்வுடல் எடுத்தேன் - எவ்வெவ் வுடல்கள் எடுத்தேனோ, அவ்வுடல் எல்லாம் - அவ்வுடல்களனைத்தும், பாவம் அறம் பொருட்டாக அன்றே - தீவினையும் நல்வினையுமாகிய அவ்விரண்டின் பொருட்டாக அல்லவா, தெவ் உடல் பொடித்தாய் - பகைவனாகிய மதவேளின் உடலை நீறாக்கியவனே, உன்றன் சேவடிக்கு அடிமைபூண்ட இவ்வுடல் ஒன்றே அன்றே - உனது சிவந்த திருவடிக்கு அடிமைபூண்ட இந்த உடல் ஒன்றுமட்டுமல்லவா, ஐயா - ஐயனே, எனக்கு உடல் ஆனது - எனக்கு உடலாய்நின்று பயன் தந்தது.

பிறவி எண்ணிலாதன என்பதை,

''தொல்லைநம் பிறவி யெண்ணிற் றொடுகடல் மணலுமாற்றா எல்லைய''

என்னும் சிந்தாமணிச் செய்யுளாலும் பல்வகை உடலெடுத்தலை,

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்''

என்னும் வாதவூரடிகளின் மணிவாசகத்தாலும் அறிக. அவ்வுடலெல்லாம் இருவினைப் பயன்களை நுகர்தற்பொருட்டன்றி, என் உயிர்க்கு உறுதி பயத்தற்பொருட்டு வந்தனவல்ல என்றார். பாவ மறம், செவ்வெண் ; இரண்டென்னும் தொகை விகாரத்தாற் றொக்கது. (கசு)

இன்னன பலவு மேத்தி யிறைஞ்சிப்பல் வரமும் வேண்டும்
மின்னகு வேலி னானை வேந்தநீ போந்த வண்ணங்
தென்னவ னறிந்தா லேதஞ் செய்யுமேன் றார்த்தார்க் கண்ணி
மன்னனைச் சித்த சாமி யுத்தர வழிக்கோண் டேகா.

(இ - ள்.) இன்னன பலவும் ஏத்தி இறைஞ்சி - இவைபோன்ற பலவுங்கூறித் துதித்து வணங்கி, பல் வரமும் வேண்டும் - பல வரங்களையும் வேண்டுகின்ற, மின் நகு வேலினானை - மின்னலைப்போல விளங்கும் வேற்படையினை யுடைய சோழனை, வேந்த - மன்னனே, நீ போந்த வண்ணம் - நீ இங்கு வந்த செய்தியை, தென்னவன் அறிந்தால் ஏதம் செய்யும் என்று - பாண்டியன் அறிவனேல் துன்பஞ் செய்வான் என்று கூறி, ஆர் தார் கண்ணி மன்னனை - ஆத்திமாலையை யணிந்த அச் சோழ மன்னனை, சித்தசாமி - சித்தமூர்த்திகள், உத்தர வழிக் கொண்டு ஏகா - வடக்கு வழிக்கொண்டு சென்று.

மேல் இரண்டு செய்யுளிலும் கூறியவற்றைச் சுட்டி 'இன்னன' என்றார். மின்நகு - மின்னலை எள்ளி நகும் என்றுமாம். தாராகிய கண்ணி யென்க. (கஎ)

மண்ணினை வளர்க்கும் வைகை வடகரை யளவு நண்ணிப்
புண்ணிய நீற்றுக் காப்புப் புண்டர நுதலிற் சாத்தி
உண்ணிறை கருத்துக் கேற்ப வுறுதுணை யுனக்குண் டாகி
நண்ணுக வென்று பொன்னி நாடனை விடுத்து மீண்டு.

(இ - ள்.) மண்ணினை வளர்க்கும் வைகை - நிலவுலகின்கண் உள்ள உயிர்களை யூட்டி வளர்க்கும் வையை யாற்றின், வடகரை யளவும் நண்ணி - வடகரை வரையுஞ்சென்று, புண்ணிய நீற்றுக் காப்பு புண்டரம் நுதலில் சாத்தி - புண்ணிய வடிவாயுள்ள திருநீற்றுக் காப்பினைத் திரிபுண்டரமாக நெற்றியில் அணிவித்து, உள் நிறை கருத்துக்கு ஏற்ப - உனது உள்ளத்தில் நிறைந்த கருத்துக்குப் பொருந்த, உறு துணை உனக்கு உண்டாகி - மிக்க துணை உனக்கு உண்டாகப்பெற்று, நண்ணுக என்று - செல்லக்கடவாய் என்று, பொன்னி நாடனை விடுத்து - காவிரி நாடனை அனுப்பி, மீண்டு-மீள.

திருநீறு துன்பம் புகுதாமற் காப்பதாகலின் 'காப்பு' எனப்பெறும்;

''ஆனநீற்றுக் கவசம் அடையப் புகுமின்கள்'',

என்பது திருவாசகம். கருத்து - சிவநேயம். உறுதுணை - இறைவன் திருநாமம் முதலியன : மேல்,

"நாட்ட மூன்றவன் நாம வாள்கொடு நல்ல ருட்டுணை யாய்வழி
காட்ட அன்பெனு மிவுளி மேல்கொடு கங்குல்வாய் வருவான்"
என்று கூறினமையுங் காண்க. (௧௮)

[கலி விருத்தம்]

காப்புச் செய்து* கதவில் விடைக்குறி
யாப்புச் செய்தமைத் தீர்ஞ்சடைச் சித்தர்போய்த்
தூப்புக் கைவரை சூழ்வட மேருவிற்
கோப்புச் செய்தபொற் கோயிலின் மேயினர்.

(இ - ள்.) காப்புச் செய்து - முன் திறந்த கதவினைச் சாத்தி, கதவில் விடைக்குறி யாப்புச்செய்து அமைத்து - அதன்கண் இடப முத்திரையைப் பொறித்தமைத்து, ஈர்ஞ்சடைச் சித்தர்போய் - குளிர்ந்த சடையை யுடைய சித்தசாமி சென்று, தூப்புக் கைவரை சூழ் - துளையையுடைய துதிக்கையையுடைய யானைகள் சூழ்ந்து நின்று சுமக்கும், வடமேருவில் கோப்புச் செய்த - வடக்கின்கண் உள்ள மேருமலையைப்போல் இயற்றிய, பொன் கோயிலில் மேயினர் - அழகிய விமானத்தின்கண் எழுந்தருளினர்.

தூம்பு, தூப்பு என வலித்தது; கைக்கு அடை. கைவரைசூழ் மேருவின் என இல்பொருளுவமை யாக்கலுமாம். கோப்புச்செய்த - ஒழுங்குற இயற்றிய. (௧௯)

கங்கு லின்கருங் கைகுறைப் பானெனச்
செங்கை நீட்டித் தினகரன் றோன்றலும்
எங்க ணாயக னிட்ட குறியறிந்
தங்கண் வாயி றிறப்பவ ரையுறு.

(இ - ள்.) கங்குலின் கருகை குறைப்பான் என - இரவாகிய அரக்கியின் கருமையாகிய கையினைத் தறிப்பவன்போல, தினகரன் செங்கை நீட்டித் தோன்றலும் - சூரியன் சிவந்த கிரணமாகிய கைகளை நீட்டித் தோன்றுதலும், அங்கண் வாயில் திறப்பவர் - அவ்விடத்து அவ் வாயிலைத் திறப்பவர்கள், எங்கள் நாயகன் இட்ட குறி அறிந்து ஐயுறு - எங்கள் பெருமானாகிய சோமசுந்தரக்கடவுள் இட்ட விடைக் குறியினைக்கண்டு ஐயுற்று.

கருங்கை செங்கை என்றது சொல் முரண். (௨௦)

மற்றை வாயில்கண் மூன்றினும் வல்லைபோய்
உற்று நோக்கினர் தாநேன்ன லோற்றிய
கோற்ற மீனக் குறிபிழை யாமைகண்
டேற்றி தாங்கோலென் றேந்தன்மு னெய்தினர்.

(பா - ம்.) * காப்புச் செய்த.

(இ - ள்.) மற்றை மூன்று வாயில்களினும் - ஏனை மூன்று வாயில் களினும், வல்லைபோய் உற்று நோக்கினர் - விரைந்துசென்று உற்றுப் பார்த்து, தாம் நென்னல் ஒற்றிய - தாம் நேற்று வைத்த, கொற்ற மீனக்குறி பிழையாமை கண்டு - வெற்றி பொருந்திய கயல் முத்திரை பிறழாமையைக் கண்டு, இது எற்று ஆம் கொல் என்று - இது யாதாய் முடியுமோ என்று, ஏந்தல் முன் எய்தினர் - மன்னன் முன்னே சென்றனர்.

நோக்கினர்: முற்றெச்சம். ஒரு புறம் குறி பிறழ்ந்திருத்தலின் முடிபு யாதாகுமோ எனத் துணுக்குற்றா ரென்க. (உக)

போற்றி மன்னநம் பொன்னங் கயற்குறி
மாற்றி யுத்தர வாயிற் கதவதில்
ஏற்றி லச்சினை யிட்டவர் யாரையென்
றாற்றல் வேந்த வறிகிலம் யாமென்றார்.

(இ - ள்.) மன்ன போற்றி - வேந்தனே வணக்கம். உத்தரவாயில் கதவில் - வடக்கு வாயிற் கதவின்கண், நம் பொன் அம் கயற்குறி மாற்றி - நமது அழகிய மீனக்குறியை மாற்றி, ஏற்று இலச்சினை இட்ட வர் யார் என்று - விடைக் குறியினை இட்டவர் யார் என்று, ஆற்றல் வேந்த அறிகிலம் யாம் என்றார் - வலியமைந்த வேந்தனே! யாங்க ளறியோம் என்று கூறினர்.

கயற்குறி மாற்றி ஏற்றிலச்சினை இடப்பட்டுளது, அங்ஙனம் இட்டவர் யாரென அறிகிலம்; என விரித்துரைக்க. பொன் அம் எனும் இரண்டும் அழகினை உணர்த்தின; அம் சாரியையுமாம். கதவதில், அது: பகுதிப்பொருள் விகுதி. யாரை, ஐ: சாரியை. (உஉ)

வையை நாடனும் வந்தது நோக்குறீஇ
ஐய வின்னதோ ரற்புத மாயையைச்
செய்ய வல்லவர் யாரெனத் தேர்கிலான்
ஐய மெய்தி யகன்மனை நண்ணினான்.

(இ - ள்.) வையை நாடனும் வந்து அது நோக்குறீஇ - வையை யாறு பாயும் நாட்டையுடைய பாண்டியனும் வந்து அதனை நோக்கி, ஐய இன்னது ஓர் அற்புத மாயையை - வியப்பினையுடைய இந்த அதிசய மாயையை - செய்ய வல்லவர் யார் எனத் தேர்கிலான் ஐயம் எய்தி - செய்தற்கு வல்லவர் யாரென்று தெரியாது ஐயுற்று, அகல்மனை நண்ணி னான் - அகற்சி பொருந்திய தனது கோயிலை அடைந்தான்.

அளபெடை சொல்லிசை நிறைக்க வந்தது. ஐய ஐ என்னும் வியப்புணர்த்தும் உரிச்சொல்லடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். தேர்கிலான்: முற்றெச்சம். (உ௩)

மறுத்த வுண்டியன் மாமலர்ப் பாயலை
வெறுத்த கன்றரை மேற்பள்ளி கொள்ளவும்
பொறுத்த னன்றுயின் றானிருட் போழ்தினிற்
கறுத்த கண்டர் கனவினிற் கூறுவார்.

(இ - ள்.) மறுத்த உண்டியன் - உணவை மறுத்தவனாய், மாமலர்ப் பாயலை வெறுத்து - பெருமை பொருந்திய மலர்ப்படுக்கையை வெறுத்து, அகன் தரைமேல் பள்ளிகொள்ளவும் பொறுத்தனன் துயின்றான் - அகன்ற தரையின் மீது பள்ளி கொள்ளவும் மனம் பொறுத்து உறங்கி னன்; இருள் போழ்தினில் - இருட்போதில், கறுத்த கண்டர் கனவி னில் கூறுவார் - கரிய திருமிடற்றினையுடைய சோமசுந்தரக் கடவுள் கனவின்கண் வந்து கூறியருளுவார்.

உணவு மறுத்தல் - உணவுண்ணாமை. மலர்ப்பாயல் - பூவணை; மலர் பரப்பிய பாயலுமாம். மலரணையிற் றுயிலுதற் குரியோர் தரையிற் றுயிலுதல் அரிதாகலின் 'பொறுத்தனன் றுயின்றான்' என்றார். இருட் போழ்தினில் கனவினிற் கூறுவார் என்க; இருட் போழ்துபோலக் கறுத்த கண்டம் என்றுமாம். பொறுத்தனன்: முற்றெச்சம். (உ௪)

மட்ட லம்பிய தாதகி மாலையான்
உட்ட தும்பி யொழுகிய வன்பினாற்
கட்டி லங்கெயிற் கச்சியிற் காடெலாம்
வெட்டி நம்புடை வித்திய பத்தியான்.

(இ - ள்.) மட்டு அலம்பிய தாதகி மாலையான் - தேன் சிந்தும் ஆத்தி மாலையை யணிந்த சோழன், உள் ததும்பி ஒழுகிய அன்பினால் - உள்ளத்தில் நிறைந்து வழிந்த அன்பினாலே, கட்டு இலங்கு எயில் கச்சியில் - காவலாக விளங்கும் மதிலையுடைய காஞ்சிமா நகரின்கண், காடு எலாம் வெட்டி நம்புடை வித்திய பத்தியான் - காடுஅனைத்தையும் வெட்டி நம்மிடத்தும் பத்தியாகிய விதையை விதைத்தவன்.

கட்டு - காவல் என்னும் பொருட்டு; கட்டப்பட்ட என்றுமாம். காடெலாம் வெட்டி என்றதற்கேற்பப் பத்தி வித்தியவன் என்றார்; காட்டினை அழித்து நாடாக்கி அந்நாடு முழுதும் சிவபத்தி வளரச் செய்தவன் என்பது கருத்து. (உ௫)

வந்து நம்மை வழிபட வேண்டினான்
இந்த வாயி றிறந்தழைத் தின்னருள்
தந்து மீள விடுத்துப்பின் றாட்கொளீஇ
நந்த மால்விடை நாம்பொறித் தேமென.

(இ - ள்.) வந்து நம்மை வழிபட வேண்டினான் - (அவன் இங்கு) வந்து நம்மை வணங்க விரும்பினான், நாம் இந்த வாயில் திறந்து - நாம் இந்த வடக்கு வாயிலைத் திறந்து, அழைத்து இன் அருள் தந்து - (அவனை உள்ளே) அழைத்து இனிய அருள் பாலித்து, மீள விடுத்து

பின் தாள் கொளீஇ - மீண்டும் அனுப்பிவிட்டுப் பின் தாளிறுக்கி, நந்தம் மால் விடை பொறித்தேம் என - நமது பெரிய விடையிலச்சினையை வைத்தோமென்று.

தாள் - தாழக்கோல்; கொளீஇ - கொளுவி; செறித்து, நந்தம்: தம்: சாரியை. (உ௬)

அருளி னானையந் தேற்றி யகன்றபின்
மருளி னீங்கி மலர்க்கண் விழித்தெழீஇ
வெருளி னான்வெயர்த் தான்விம்மி னான்பல
பொருளி னாற்றுதித் தான்குல பூடணன்.

(இ - ள்.) அருளினான் - அருளையுடைய சோமசுந்தரக் கடவுள், ஐயம் தேற்றி அகன்ற பின் - ஐயத்தைத் தெளிவித்து நீங்கிய பின், குல பூடணன் - குல பூடண பாண்டியன், மலர்க்கண் விழித்து எழீஇ - மலர் போலும் கண்டுயி லுணர்ந்து எழுந்து, மருளின் நீங்கி - ஐயுறவினின்றும் நீங்கி, வெருளினான் வெயர்த்தான் விம்மினான் - அஞ்சி வியர்த்து உடல் பூரித்து, பல பொருளினால் துதித்தான் - பொருள் நிறைந்த பல பாக்களாலே துதித்தான்.

அருளினான் என்பதனை எச்சமாக்கி, அருள்புரிந்து என்றுரைத் தலுமாம். ஐயம் தேற்றி - ஐயத்தின் நீக்கித் தெளிவித்து. வெருளினான் முதலிய மூன்றும் முற்றெச்சம். பொருள் - பொருளையுடைய பாடல்; சொற்களுமாம். (உ௭)

வள்ள லன்புக் கெளிவந்த மாண்புகண்
டுள்ள வுள்ளநின் றூற்றெழு மற்புத
வெள்ள மும்பர மானந்த வெள்ளமுங்
கொள்ளை கொண்டுதன் கோமனை நீங்கினான்.

(இ - ள்.) வள்ளல் - சோமசுந்தரக்கடவுள், அன்புக்கு எளிவந்த மாண்பு கண்டு - அன்பினுக்கு எளியனாய் வெளிவந்த மாட்சியை நோக்கி, உள்ள உள்ள நின்று ஊற்று எழும் அற்புத வெள்ளமும் - நினைக்குந் தோறும் இடையறாது சுரந்து எழுகின்ற அதிசய வெள்ளமும், பரமானந்த வெள்ளமும் கொள்ளை கொண்டு - சிவானந்த வெள்ளமும் தன்னைக் கொள்ளை கொள்ள, தன் கோமனை நீங்கினான் - தனது அரண்மனையை நீங்கினான்.

உள்ள உள்ளத்தினின்று ஊற்றெழும் என உரைத்தலுமாம். அற்புதத்தைச் சிவஞானம் என்றும், பரமானந்தத்தைச் சிவபோகம் என்றும் உரைப்பாருமுளர். அளவின்மை தோன்ற வெள்ளம் என்றார். கொண்டு என்பதைக் கொள்ள வெனத் திரிக்க. (உ௮)

அளிய ருமனத் தன்புடை யன்பருக்
கெளிய ராடலை யார்க்கும் வெளிப்படத்
தெளியு மாறு தெளிவித்துத் தன்னைப்போல்
விளிவிலா வின்ப வெள்ளத் தழுத்தினான்.

(இ - ள்.) அளி அரு மனத்து அன்பு உடை அன்பருக்கு - உயிர்களிடத்து அருள் நீங்காத மனத்தின்கண் அன்பு நிறைந்த அடியார்கட்கு, எளியர் ஆடலை - எளியராயுள்ள சோமசுந்தரக்கடவுளின் திருவிளையாடலை, யார்க்கும் வெளிப்படத் - தெளியுமாறு தெளிவித்து - யாவருக்கும் புலப்படத் தெளியும் வண்ணம் தெளிவித்து, தன்னைப்போல் விளிவு இலா இன்ப வெள்ளத்து அழுத்தினுன் - தன்னைப்போல யாவரும் அழியாத பேரின்ப வெள்ளத்தில் முழுகும்படி அழுத்தினுன்.

அளி - கனிவுமாம். தன்னைப்போல் முழுகுமாறு அழுத்தினுன் என விரிக்க (உகூ)

[கொச்சகக்கலிப்பா]

கோடாத செங்கோலும் வெண்குடையுங் கோமுடியும்
ஏடா ரலங்க லிராசேந் திரற்களித்துத்
தோடா ரிதழியான் ருட்கமலஞ் சூடிவான்
நாடா ளரசுரிமை பெற்ரு ணரபதியே.

(இ - ள்.) நரபதி - குலபூடண பாண்டியன், கோடாத செங்கோலும் வெண்குடையும் - கோணுத செங்கோலையும் வெண்கொற்றக் குடையையும், கோ முடியும் - அரச முடியையும், ஏடு ஆர் அலங்கல் இராசேந்திரற்கு அளித்து - இதழ்கள் நிறைந்த மலர் மாலையை யணிந்த இராசேந்திர பாண்டியனுக்குக் கொடுத்து, தோடு ஆர் இதழியான் - இதழ்கள் நிறைந்த கொன்றை மாலையையுடைய இறைவனது, தாள் கமலம் சூடி - திருவடித் தாமரையைத் (தனது முடியில்) அணிந்து, வான் நாடு ஆள் அரசு உரிமை பெற்ருன் - வானநாட்டை ஆளும் அரசுரிமையைப் பெற்றனன்.

கோடாத என வந்தமையால் செங்கோல் என்பது கோல் என்னுந் துணையாய் நின்றது; என்றும் கோடுதலில்லாத என்றுமாம். செங்கோல் வெண்குடை என்பன சொல் முரண். இராசேந்திரனை முடிசூட்டி என்பார் 'இராசேந்திரற் களித்து' எ ன்ருர். (கூO)

ஆகச் செய்யுள் - கஅகஅ

முப்பத்தைந்தாவது

தண்ணீர்ப்பந்தல் வைத்த படலம்

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

சம்பு மதுரைப் பரனிரவு தனியே வந்து தனைப்பணிந்த
வெம்பு கதிரோன் மருமானை விடுத்து மீண்டு தாழிறுக்கி
அம்பொற் கதவின்விடைபொறித்த தறைந்துந் தென்ன னடுபடைக்கு
வம்பு மலர்தோய் புனற்பந்தர் வைத்துக் காத்த வகைசொல்வாம்.

(இ - ள்.) சம்பு மதுரைப் பரன் - சம்புவாகிய மதுரைச் சோம சுந்தரக் கடவுள், இரவு தனியே வந்து தனைப் பணிந்த - இரவில் ஒருவனாய் வந்து தன்னை வணங்கிய, வெம்பு கதிரோன் மருமானை - வெப்ப மாகிய கிரணத்தையுடைய சூரியன் மரபினனாகிய சோழனை, விடுத்து - அனுப்பி, மீண்டு தாழ் இறுக்கி - திரும்பித் தாழிட்டு, அம் பொன் கதவின் விடை பொறித்தது அறைந்தும் - அழகிய பொன்னாலாகிய கதவின்கண் விடை யிலச்சினையிட்ட திருவிளையாடலைக் கூறினோம்; தென்னன் அடுபடைக்கு - பாண்டியனது போர் செய்யும் படைகளுக்கு, வம்பு மலர் தோய் புனல் பந்தர் வைத்துக் காத்த வகை சொல்வாம் - மணத்தினையுடைய மலர் தோய்ந்த தண்ணீர்ப் பந்தர் வைத்துக் காத் தருளிய திருவிளையாடலை (இனிக்) கூறுவாம்.

அறைந்தும்; இறந்தகாலத் தனித் தன்மைப் பன்மைமுற்று. தண்ணீர்க்கு மலரால் மண மூட்டுதலை,

"ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு"

என்னும் நாலடியார்ச் செய்யுளா னறிக. (க)

தென்ன னரச புரந்தரன்கோல் செலுத்து நாளிற் காடெறிந்த
மன்னன் பின்னர் வெளிப்படையாய்ப் போந்து போந்து மதுரேசன்
பொன்னங் கமலத் தாள்வணங்கிப் போவான் முன்னிப் பொருபொருநைக்
கன்னி நாடன் கேண்மைபெற விடுத்தான் வரிசைக் கையுறையே.

(இ - ள்.) தென்னன் அரச புரந்தரன் கோல் செலுத்து நாளில் - பாண்டியனாகிய இராசேந்திரன் செங்கோல் செலுத்தும் நாளில், காடு எறிந்த மன்னன் - காடுவெட்டிய சோழன், பின்னர் வெளிப்படையாய்ப் போந்து போந்து - பின் யாவருமறிய வெளிப்படையாய் வந்துவந்து, மதுரேசன் பொன் அம் கமலத்தாள் வணங்கிப் போவான் கருதி - சோம சுந்தரக்கடவுளின் அழகிய பொற்றாமரை மலர்போன்ற திருவடிகளை வணங்கிப் போகக் கருதி, பொரும் பொருநைக் கன்னி நாடன் -

கரையை மோதும் பொருநையாற்றினையுடைய கன்னி நாடனாகிய இராசேந்திர பாண்டியனது, கேண்மை பெற - நட்பைப் பெறுதற்கு, வரிசைக் கையுறை விடுத்தான் - வரிசையாகிய கையுறையை அனுப்பினான்.

இந்திரனுக்குப் புரந்தரன் என்பது ஒரு பெயராகலின் இராசேந்திரனை அரசபுரந்தரன் என்றார். போவான்: வினையெச்சம். வரிசை, கையுறை என்பன காணிக்கை என்னும் பொருளன. (உ)

பொன்னி நாடன் வரவிடுத்த பொலம்பூ ணாடை முதற்பிறவுங்
கன்னி நாடன் கைகவர்ந்து தானுங் கலக்குந் தொடர்பினால்
உன்னி வேறு கையுறையுய்த் துறவு செய்ய வுவப்பெய்திச்
சென்னி காதன் மகட்கொடுப்பா னிசைந்தா னந்தச் செழியற்கு.

(இ - ள்.) பொன்னி நாடன் வரவிடுத்த - காவிரி நாடனாகிய சோழ மன்னன் வரவிடுத்த, பொலம் பூண் ஆடை முதல் பிறவும் - பொன்னாலாகிய அணிகலன்களையும் பொன்னாடை முதலாக வுள்ள பிற பொருளையும், கன்னிநாடன் கைகவர்ந்து - கன்னிநாடனாகிய பாண்டியன் ஏற்றுக் கொண்டு தானும் கலக்கும் தொடர்பினால் உன்னி - தானும் (மனம்) ஒன்று படும் நட்பினைப் பெறக் கருதி, வேறு கையுறை உய்த்து உறவு செய்ய - வேறு காணிக்கை விடுத்து நட்புச் செய்ய, சென்னி - சோழன், உவப்பு எய்தி - மகிழ்ச்சியுற்று, அந்தச் செழியற்கு - அந்த இராசேந்திர பாண்டியனுக்கு, காதல் மகள் கொடுப்பான் இசைந்தான் - தன் அன்புள்ள மகளைக் கொடுத்தற்கு மனமிசைந்தான்.

பொலம், பொன் என்பதன் றிரிபு. கலக்குந் தொடர்பு - ஒருவர் ஒருவரோடு அளவளாவும் தொடர்பு. தானும் வேறு கையுறையுய்த்து என்க. (௩)

செழியன் றனக்கு வரையறுத்த செய்தி கேட்டுச் செம்பியர்கோன்
கழியன் புடைய குலமகளைத் தான்போய்க் கொள்வான் கருதிமதி
வழிவந் தவற்குத் தம்பியென வந்த வரச சிங்கமெனும்
பழியஞ் சாதான் வஞ்சித்துப் பழனக் காஞ்சிப் பதிபுகுவான்.

(இ - ள்.) செழியன் தனக்கு வரையறுத்த செய்தி கேட்டு - இராசேந்திர பாண்டியனுக்கு உறுதி செய்த செய்தியினைக் கேட்டு, செம்பியர்கோன் கழி அன்பு உடைய குலமகளை - சோழ மன்னனது மிக்க அன்புடைய சிறந்த புதல்வியை, தான் போய்க் கொள்வான் கருதி - தான் போய் மணந்து கொள்ளக் கருதி, மதி வழிவந்த அவற்குத் தம்பி என வந்த - சந்திரன் மரபில் வந்தவனாகிய அவனுக்குத் தம்பி என்று சொல்லத் தோன்றிய, அரசசிங்கம் எனும் பழி அஞ்சாதான் - அரசசிங்கனென்னும் பெயரினையுடைய பழியினை அஞ்சாத ஒருவன், வஞ்சித்துப் பழனக் காஞ்சிப்பதி புகுவான் - (முன்னவனை) வஞ்சித்து வயல்சூழ்ந்த காஞ்சிநகரிற் செல்வானாயினன்.

கொள்வான்: வினையெச்சம். வந்த அவற்கு என்பது வந்தவற்கு எனத் தொகுத்தலாயிற்று. தம்பி யெனற்குத் தகாதவன் என்பார்

'தம்பி யென வந்த' என்றார். அரச சிங்கம்-இராச சிம்மன். தமையனுக்கு மனைவியாக வரையறுக்கப் பட்டவள் தனக்கு அன்னை போல்வாளாகவும் அவளை மணக்கக் கருதினமையின் 'பழியஞ்சாதான்' என்றார். (அ)

காஞ்சிப் பதிமுன் குறுகுமிளங் காவ லோனைக் கடற்சேனை
தாஞ்சுற் றியவந் தெதிர்கொடுபோய்த் தன்முன் றனக்கென் றிருந்தமகள்
ஆஞ்சிற் றிடையை மணம்புணர்த்தி யந்த மருகற் கரசுநிலை
வாஞ்சித் தரச புரந்தரனைப் பிடிக்க மதித்தான் வனமேறிந்தான்.

(இ - ள்.) காஞ்சிப்பதிமுன் குறுகும் - காஞ்சி நகரை நோக்கி வரும், இளங்காவலோனை-சிற்றரசனாகிய அரச சிங்கனை, வனம் எறிந்தான் - காடு வெட்டிய சோழன், கடல்சேனை தாம் சுற்றிய வந்து எதிர்கொடுபோய் - கடல்போன்ற சேனைகள் சூழ எதிர்வந்து அழைத்துச் சென்று, தன் முன் தனக்கு என்று இருந்த மகள் ஆம் சிற்றிடையை - அவன் தமையனுக்கு என்று வரையறுத்திருந்த சிறிய இடையை யுடையவளாகிய தன் புதல்வியை, மணம் புணர்த்தி - மணம் புரிவித்து, அந்த மருகற்கு அரசு நிலை வாஞ்சித்து - அந்த மருகனுக்கு அரசுரிமை (கிடைத்தலை) விரும்பி, அரச புரந்தரனைப் பிடிக்க மதித்தான் - இராசேந்திரனைப் பிடிக்கக் கருதினான்.

சுற்றிய: செய்யிய வென்னும் வினையெச்சம். அவன்றன் முன்றனக்கு என்க. வனமெறிந்தான்: பெயர். (இ)

[எழுசீரடி யாசிரிய விருத்தம்]

மருமகன்ற னுடனெ ழுந்து மாம னான வளவர்கோன்
பொருமகன்ற சேனை யானை புடைநெ ருங்க மதிவழித்
திருமகன்றன் மேலமர்த் திறங்கு றித்து முரசறைந்
துருமகன்ற பல்லி யம்மொ லிப்ப வந்து ளானரோ.

(இ - ள்.) மாமனான வளவர்கோன் - மாமனாகிய சோழ மன்னன், மருமகன் உடன் எழுந்து - மருமகனோடு புறப்பட்டு, பொரும் அகன்ற சேனை யானை புடை நெருங்க - போர் செய்தற்குரிய பரந்த சேனையும் யானையும் பக்கத்திலே நெருங்கிவர, மதிவழித் திருமகன்மேல் அமர்த்திறம் குறித்து - சந்திரன் மரபினனாகிய இராசேந்திர வழுதியின்மேல் போர் செய்தலைக் குறித்து, முரசு அறைந்து - முரசு அறைவித்து, உரும் அகன்ற பல்இயம் ஒலிப்ப வந்துளான்-இடியும் அஞ்சி அகலுதற் கேதுவாகிய பல இயங்களும் ஒலிப்ப வந்தனன்.

சிறப்பு நோக்கி யானையை வேறு பிரித்துச் சேனை யானை என்றார். மருமகன்றன், திருமகன்றன் என்பவற்றில் தன்: சாரியை. அகன்ற - அகலுதற்கேதுவாகிய. அரோ: அசை. (க)

திரண்ட திர்ந்தெ ழுந்து வந்த சென்னி சேனை தன்னகர்க்
கிரண்டு யோச னைப்புறத்தி றுக்கு முன்ன ரோற்றரால்
தெருண்டு தென்னன் மாட நீடு கூடன் மேய சிவனதாள்
சரண்பு குந்து வேண்டு கென்று சார்ந்து தாழ்ந்து கூறுவான்.

(இ - ள்.) எழுந்து திரண்டு அதிர்ந்து வந்த சென்னி சேனை - (போர் குறித்து) எழுந்து நெருங்கி முழங்கி வந்த சோழனுடைய அப்படைகள், தன் நகர்க்கு இரண்டு யோசனைப் புறத்து இறுக்கும் முன்னர் - தனது நகருக்கு இரண்டு யோசனையில் வந்து தங்குதற்கு முன்னரே, ஒற்றரால் தென்னன் தெருண்டு - ஒற்றர்களாலே பாண்டியன் அறிந்துகொண்டு, மாடம் நீடு கூடல்மேய சிவனதாள் - மாடங்கள் நிறைந்த கூடலின்கண் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளில், சரண்புகுந்து வேண்டுகு என்று - அடைக்கலம் புகுந்து குறையிரப்பேனென்று கருதி, சார்ந்து தாழ்ந்து கூறுவான் - சென்று வணங்கிச் சொல்லுவான்.

சிவன, அகரம் ஆறனுருபு;

"சிவன தாட்சிந்தியாப் பேதைமார் போல"

என்பது தேவாரம். வேண்டுகு - வேண்டுவேன்; கு: தன்மை யொருமை யெதிர்கால விகுதி. (எ)

அன்று பாதி யிரவில் வந்து னடிப ணிந்து தமியனாய்ச்
சென்ற சென்னி யென்னு நின்ன திருவ டிக்க ணன்பினான்
இன்று மந்நி லைய னா*யெ னக்கு வேண்டு வனவிடுத்
தொன்று கேண்மை புரிகு வானு ளத்தி லொன்றை யுன்னினான்.

(இ - ள்.) அன்று பாதி இரவில் தமியனாய் வந்து - அன்று அரை யிரவில் ஒருவனாய் வந்து, உன் அடி பணிந்து சென்ற - நினது திருவடியை வணங்கிப்போன, சென்னி என்னும் நின்ன திருவடிக்கண் அன்பினான் - காடு வெட்டிய சோழனென்னும் உன் திருவடியின்கண் அன்புடையவன், இன்றும் அந்நிலையன் ஆய் - இப்பொழுதும் அந்நிலையை யுடையவனாதற்கு, எனக்கு வேண்டுவன விடுத்து - எனக்கு வேண்டும் பொருள்களை அனுப்பி, ஒன்று கேண்மை புரிகுவான் - கலந்த நட்பினைப் பெற விரும்பியவன், உளத்தில் ஒன்றை உன்னினான் - மனத்தின்கண் மற்றொன்றைக் கருதினான்.

நின்ன, அகரம் ஆறனுருபு. நிலையனாய் - நிலையனாக. ஒன்று - அதற்கு மாறாய தொன்று. (அ)

அறத்தி னுக்கு ளாகி யன்று நின்ற நீய வன்செயும்
மறத்தி னுக்கு ளாகி யின்று வன்மை செய்வ தேயறப்
புறத்தி னார்பு ரம்பொ டித்த புண்ணி யாவெ னக்கரைந்
துறைத்து வேண்டி னான வேலை யும்பர் நாத னருளினால்.

(பா - ம்.) * என்று மந்நிலையனாய்.

(இ - ள்.) அறப்புறத்தினர் புரம்பொடித்த புண்ணியா - அறத்திற்கு வேறாகிய மறத்தினையுடையார் முப்புரங்களையும் நீறாக்கிய புண்ணியனே, அன்று அறத்தினுக்கு உள்ளாகி நின்ற நீ - அவன் வந்து வணங்கிய அப்பொழுது அறத்திற்கு உடன்பட்டு நின்ற நீ, இன்று அவன் செய்யும் மறத்தினுக்கு உள்ளாகி வன்மை செய்வதே எனக் கரைந்து - இன்று அவன் செய்யும் தறுகண்மைக்கும் உடன்பட்டு நின்று கொடுமை செய்வது நன்றோ எனக் கூறி, உறைத்து வேண்டினன் - உறைப்புடன் குறையிரந்தான்; அவ்வேலை - அப்பொழுது, உம்பர்நாதன் அருளினால் - தேவர்க்கு நாயகனாகிய சோமசுந்தரக்கடவுளின் திருவருளால்.

செய்வதே - செய்வது அழகிதோ என்றபடி. அறப்புறம் - பாவம்; "அறங்கடை" என்புழிப்போல. தீயோரை யொறுத்தல் அறமாகலின் 'புரம் பொடித்த புண்ணியன்' என்றார். உறைத்து - அழுத்தமுற்று; "திருத்தொண்டி னுறைப்பாலே" என்பது காண்க. உள்ளாகி, அவ்வேலை என்பன ளகர வகரம் தொக்கு நின்றன. அறப்புறத்தினர் புரம் பொடித்த என்னும் அடை இன்றும் அறத்திற்கு மாறாகியவனை அழிக்கற்பாலை என்னும் கருத்துடன் கூடி யிருத்தலால் இது கருத்துடை யடையணி. (கூ)

மெய்து றந்த வாய்மை யொன்று விண்ணி னின்று மண்ணலே
ஐது நுங்கள் சேனை யோடு* மாக வத்து நாளைநீ
எய்தி வந்த தெவ்வ ரோடெ திர்ந்து ருத்து நின்றுபோர்
செய்தி வென்றி நின்ன தாதல் செய்து மென்றெ ழுந்ததால்.

(இ - ள்.) விண்ணின் நின்றும் மெய்துறந்த வாய்மை ஒன்று - வானினின்றும் அசரீரி மொழி ஒன்று, அண்ணலே - வேந்தனே, நாளை நீ நுங்கள் ஐது சேனையோடும் ஆகவத்து எய்தி - நாளை நீ நும் அற்பமாகிய சேனையோடும் போர்க்களஞ் சென்று, வந்த தெவ்வரோடு எதிர்ந்து உருத்து நின்று போர் செய்தி - வந்த பகைவரோடு எதிர்த்துச் சினந்து நின்று போர் புரிவாயாக; வென்றி நின்னது ஆதல் செய்தும் - வெற்றி நின்னுடையதாகச் செய்வோம்; என்று எழுந்தது - என்று உண்டாயது.

மெய் துறந்த வாய்மை - அசரீரி வாக்கு; அசரீரி - சரீரம் இல்லது. வாய்மை - ஈண்டு மொழியென்னும் பொருட்டு. ஐது - நுண்ணியது. அழகிதாக என்றுமாம். நுங்கள் நீ எனப் பன்மை யொருமை மயங்கிற்று. ஆகவம் - போர்க்களம். ஆல்: அசை. (க௦)

காய வாணி செவிநு ழைந்த காலை வேந்த ரிந்திரன்
நாய னார டிக்கணே நயந்த வன்பு முவகையும்
ஆய வேலை வீழ்ந்து தாழ்ந்த கன்று தன்னி ருக்கைபோய்
மேயி னுனி மிர்ந்த கங்குல் விடியு மெல்லை நோக்குவான்.

(இ - ள்.) காயவாணி செவி நுழைந்த காலை - ஆகாய வாக்குச் செவியிற் புகுந்த பொழுது, வேந்தர் இந்திரன் - இராசேந்திர

* (பா - ம்.) சேனை யேனும்.

பாண்டியன், நாயனார் அடிக்கண் நயந்த - இறைவரது திருவடிக்கண் விரும்பிய, அன்பும் உவகையும் ஆயவேலை வீழ்ந்து தாழ்ந்து அகன்று - அன்பும் மகிழ்ச்சியுமாகிய கடலுள் வீழ்ந்து வணங்கி அங்கு நின்றும் நீங்கி, தன் இருக்கைபோய் மேயினன் - தனது இருப்பிடஞ் சென்று அடைந்து, நிமிர்ந்த கங்குல் விடியும் எல்லை நோக்குவான் - மிகுந்த இரவு விடியு மெல்லையை நோக்குவானாயினன்.

காயம் - ஆகாயம்; முதற்குறை; இது காயமென்றே தொல்காப்பிய யம் முதலியவற்றில் வழங்குவது ஆராய்தற் குரியது. வாணி - வாக்கு. இராசேந்திரனை முன்பு அரச புரந்தரன் என்றதுபோல் ஈண்டு வேந்த ரிந்திரன் என்றார். நாயன் - தலைவன். விடியலை எதிர் நோக்கினா னாகலின் இரவு மிக்குத் தோன்றிற் றென்பார் 'நிமிர்ந்த கங்குல்' என்றார். (கக)

கழித்த கங்கு லிறவி சும்பு கண்வி ழிக்கு முன்னரே
விழித்தெ ழுந்து சந்தி யாதி வினைமு டித்து வானநீர்
சுழித்த லம்புவேணி யண்ண லாய பூசை செய்தெழீஇத்
தெழித்தெ ழுந்த சேனை யோடு செருநி லத்தை நண்ணினான்.

(இ - ள்.) கழித்த கங்குல் இற - மிக்க இராப் பொழுது ஒழிய, விசும்பு கண்விழிக்கு முன்னரே - ஆகாயம் கண் விழிக்கு முன்னரே, விழித்து எழுந்து சந்தி ஆதி வினை முடித்து - விழித்தெழுந்து சந்தி முதலிய வினைகளை முடித்துக்கொண்டு, வான நீர் சுழித்து அலம்பு வேணி அண்ணல் - கங்கைநீர் சுழித்து ஒலிக்கும் முடியினையுடைய இறைவனது, பூசை செய்து - பூசையை முடித்து, எழீஇ - எழுந்து, தெழித்து எழுந்த சேனை யோடு செரு நிலத்தை நண்ணினான் - ஆரவாரித்தெழுந்த படையுடன் போர்க்களத்தை அடைந்தான்.

கழிந்த என்பது கழித்த என வலித்தலாயிற்று. ஞாயிற்றை விசும்பிற்குக் கண்ணாக்கி, ஞாயிறு தோன்றுதலை விசும்பு கண்விழித்தல் என்றார்;

"வான்கண் விழியா வைகறை யாமத்து"

என்றார் இளங்கோவடிகளும். காலை மாலையாகிய சந்திகளிற் செய்யப்படும் நாட்கடன் சந்தி எனப்படும். தெழித்தல் - உரப்புதல். (கஉ)

அலைசி றந்த சலதி மீதொ ராறு செல்லு மாறுபோல்
மலைசி றந்த நேரி வெற்பன் மள்ளர் சேனை வெள்ளமேற்
கலைசி றந்த மதிநி றைந்த கன்னி நாடு காவலான்
சிலைசி றந்த சிறிய சேனை சென்ற லைத்து நின்றதே.

(இ - ள்.) அலை சிறந்த சலதி மீது ஒரு ஆறு செல்லு மாறுபோல் - அலைமிக்க கடலின்மேல் ஒரு நதி சென்று பாயுமாறுபோல, மலைசிறந்த நேரி வெற்பன் - மலைகளிற் சிறந்த நேரி மலையினையுடைய சோழனது, மள்ளர் சேனை வெள்ளமேல் - படை வீரராகிய கடலின்மேல், கலை சிறந்த மதி நிறைந்த கன்னி நாடு காவலான் - கலைப்பயிற்சியாற்

சிறந்த அறிவு நிறைந்த கன்னி நாட்டு மன்னனாகிய பாண்டியனது, சிலை சிறந்த சிறிய சேனை சென்று அலைத்து நின்றது - விற்போரிற் றலைசிறந்த சிறியதாகிய சேனை சென்று வருத்தி நின்றது.

சிறத்தல் - மிகுதல், மேம்படுதல். சோழன் சேனையின் பெருமையும் பாண்டியன் சேனையின் சிறுமையும் தோன்றக் கடலின்மேல் ஆறு செல்லுமாறுபோல் என உவமை கூறினர். மள்ளர் - வீரர். கலை சிறந்த, மதி நிறைந்த என்னும் அடை நாட்டிற்கும் காவலானுக்கும் பொருந்தும். (௧௩)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

உருமு வன்ன குரலின ருலவை யன்ன செலவினர்
வெருவு தீயின் வெகுளியார் வெடித்த வீர நகையினர்
செருவின் மான வணியினர் சினைஇ மடித்த வாயினர்
இருவர் சேனை மள்ளரும் மெதிர்ந்து கைக லந்தனர்.

(இ - ள்.) உருமு அன்ன குரலினர் - இடிபோன்ற குரலினை யுடையவரும், உலவை அன்ன செலவினர் - காற்றினைப் போன்ற கடிய செலவினையுடையவரும், வெருவு தீயின் வெகுளியார் - அஞ்சப்படும் தீப்போன்ற சினமுடையவரும், வெடித்த வீர நகையினர் - வெடிப்புடன் தோன்றிய வீர நகையினை உடையவரும், செருவில் மான அணியினர் - போரின்கண் மானமாகிய அணியினை யுடையவரும், சினைஇ மடித்த வாயினர் - சினந்து மடித்த வாயினையுடையவருமாகி, இருவர் சேனை மள்ளரும் எதிர்ந்து கை கலந்தனர் - இருவர் படை வீரரும் நேர்ந்து போர்புரியத் தொடங்கினர்.

இருதிறத்து வீரரும் ஒரு பெற்றியே ஆற்றலும் தறுகண்மையு முடையராய் எதிர்ந்தமை கூறினர். வெடித்தல் - ஒலியுடன் புறப்படுதல். சினைஇ : சொல்லிசை யளபெடை. கை : துணைமொழி. குரலினர் முதலியன வினையெச்சப் பொருளன. (௧௪)

மன்ற லந்தெ ரியனேரி மலைபவன்ற மர்க்கெலாந்
தென்ற லம்பொ ருப்பினன் றிரண்ட நான்கு கருவியும்
மின்ற யங்கு செய்யவேணி விடைய வன்ற னருளினல்
ஒன்ற னந்த மாகவந் துருத்தெ திர்ந்து தோன்றுமால்.

(இ - ள்.) மன்றல் அம் தெரியல் நேரி மலையவன் தமர்க்கு எலாம் - மணம் பொருந்திய அழகிய மாலையை யணிந்த நேரி மலையையுடைய சோழன் படை வீரர்கட் கெல்லாம், தென்றல் அம் பொருப்பினன் - தென்றலுக்கிடமாகிய அழகிய பொதியின் மலையையுடைய பாண்டியனது, திரண்ட நான்கு கருவியும் - திரண்ட நால்வகைப் படையும், மின் தயங்கு செய்ய வேணி விடையவன் தன் அருளினல் - மின்போல விளங்குஞ் சிவந்த சடையையும் இடபவூர்தியையுமுடைய சோமசுந்தரக் கடவுளின் திருவருளால், ஒன்று அனந்தமாக உருத்துவந்து

எதிர்ந்து தோன்றும் - ஒன்று அளவில்லவாக உருக்கொண்டு வந்து எதிரே தோன்றா நிற்கும்.

அம் இரண்டும் சாரியையுமாம். கருவி - சேனை- வேணியையுடையவனாகிய விடையவன் என்க. அனந்தம் - முடிவின்மை. உருத்து - உருக்கொண்டு: தன், சாரியை, ஆல்: அசை. (கடு)

தேரி னோதை கந்துகஞ் சிரிக்கு மோதை சோரிமதக்
காரி னோதை பேரியங் கறங்கு மோதை மறவர்தம்
போரி னோதை வீரர்தோள் புடைக்கு மோதை யோடுமுந்
நீரி னோதை யொன்றெனக் கலந்தோ டுங்கி* நின்றதே.

(இ - ள்.) தேரின் ஓதை - தேர்செல்லும் ஒலியும், கந்துகம் சிரிக்கும் ஓதை - குதிரைகள் கனைக்கு மொலியும், சொரிமதக் காரின் ஓதை - மதஞ்சொரிகின்ற யானைகளின் பிளிறொலியும், பேர் இயம் கறங்கும் ஓதை - பெரிய வாத்தியங்கள் ஒலிக்கு மொலியும், மறவர்தம் போரின் ஓதை - வீரர்கள் புரியும் போரினொலியும், வீரர் தோள்புடைக்கும் ஓதையோடு - அவர்கள் தோளினைத் தட்டு மொலியுமாகிய இவற்றோடு, முந்நீரின் ஓதை ஒன்று எனக்கலந்து ஒடுங்கி நின்றது - கடலினொலி ஒன்றென்று கூறுமாறு அஃது அவ்வொலிகளிற் கலந்து அடங்கி நின்றது.

சொரிமதம் என்னும் அடையால் கார் யானையாயிற்று. தம்: சாரியை. தேரொலி முதலியவற்றோடு கடலொலியும் ஒன்றென்னும்படி அஃது அவற்றில் ஒடுங்கியது என்றது தேரொலி முதலிய ஒவ்வொன்றும் கடலொலிபோல் விஞ்சியிருந்தமை கூறியவாறாயிற்று. ஒன்றென என்பதற்கு அற்பமென்ன என்றுரைத்தலுமாம். (கசு)

சிலைப யின்ற வீரரோடு சிலைப யின்ற வீரரே
கலைப யின்ற வாளரோடு கலைப யின்ற வாளரே
கொலைப யின்ற வேலரோடு கொலைப யின்ற வேலரே
மலைப யின்ற மல்லரோடு மலைப யின்ற மல்லரே.

(இ - ள்.) சிலை பயின்ற வீரரோடு சிலை பயின்ற வீரர் - விற்றொழில் பயின்ற வீரர்களோடு விற்றொழில் பயின்ற வீரர்களும், கலைபயின்ற வாளரோடு கலைபயின்ற வாளர் - படைக்கல நூன்முறையிற் பயின்ற வாள்வீரரோடு அங்ஙனம் பயின்ற வாள்வீரர்களும், கொலை பயின்ற வேலரோடு கொலை பயின்ற வேலர் - கொல்லுதலைப் பழகிய வேல் வீரரோடு வேல் வீரர்களும், மலை பயின்ற மல்லரோடு மலை பயின்ற மல்லரே - மற்போரிற் பழகிய மல்லரோடு மற்போரிற் பழகிய மல்லர்களும்.

கலை ஒளியுமாம். மல் என்பது ஐ என்னும் பகுதிப் பொருள் விகுதி பெற்று மலை யென நின்றதென்க; இரண்டனுருபாயின் மலைப்பயின்ற என ஒற்று இரட்டுதல் வேண்டும்; மலையை யொத்த என்றலுமாம். வீரரே முதலியன வருஞ்செய்யுளில் மலைவர் என்பது கொண்டு முடியும். (கஎ

(பா - ம்.) *ஒடுங்க.

கரியு கைத்த பாகரோடு கரியு கைத்த பாகரே
பரியு கைத்த மறவரோடு பரியு கைத்த மறவ்ரோ
கிரியு கைத்த* வலவரோ்டு கிரியு கைத்த வலவரே
எரியு கைத்தெ திர்ந்தகா லெனக்க லந்து மலேவரால்.

(இ - ள்.) கரி உகைத்த பாகரோடு கரி உகைத்த பாகரே - யானையைச் செலுத்திய வீரரோடு யானையைச் செலுத்திய வீரரும், பரி உகைத்த மறவரோடு பரி உகைத்த மறவரே - குதிரையைச் செலுத்திய வீரரோடு குதிரையைச் செலுத்திய வீரரும், கிரி உகைத்த வலவரோடு கிரி உகைத்த வலவரே - மலே போலும் தேரைச் செலுத்திய வீரரோடு தேரைச் செலுத்திய வீரரும், எரி உகைத்து எதிர்ந்த கால் எனக் கலந்து மலேவர் - நெருப்பினே மூட்டி எதிர்த்த காற்றைப்போல எதிர்ந்து போர் செய்வாராயினர்.

யானேவீரரும் தேர்வீரரும் அவற்றைச் செலுத்துதல் நோக்கி முறையே பாகர் எனவும் வலவர் எனவும் கூறப்பட்டனர். கிரி, உவமையாகு பெயராய்த் தேரினேக் குறித்தது; திகிரி என்பது முதற் குறையாயிற்றென்பாரு முளர். வடவைத்தீயை மூட்டி யெழுந்த ஊழிக் காற்றுப்போல் எனலுமாம். தீயுங் காற்றுங் கூடி எதிர்ந்து பொருதாற் போல வென்க. ஆல்: அசை. (௧அ)

விடுக்கும் வாளி யெதிர்பிழைப்பர் வெய்ய வாளி யெய்துபின்
தொடுக்கும் வாளி வில்லொடுந் துணிப்பர் பின்க ணிப்பற
மடுக்கும் வாளி மார்புதைப்ப வாங்கி மற்றவ் வாளி†கொண்
டடுக்கு மேவ லாரையெய் தடர்ப்பர் கிள்ளி மள்ளரே.

(இ - ள்.) கிள்ளி மள்ளர் - சோழனுடைய சேனே வீரர், விடுக்கும் வாளி எதிர் பிழைப்பர் - பாண்டியன் வீரர் விடும் கணேகளே எதிர் நின்று தப்புவர்; வெய்ய வாளி எய்து - கொடிய அம்புகளேத் தாம் விடுத்து, பின் தொடுக்கும் வாளி வில்லொடும் துணிப்பர் - பின் அவர்கள் தொடுக்கும் அம்புகளே வில்லோடும் துண்டு படுத்துவர்; பின் கணிப்பு அற மடுக்கும் வாளி மார்புதைப்ப - பின் அவர்கள் அளவின்றிச் செலுத்தும் அம்புகள் தம் மார்பிற்றைக்க, வாங்கி - அவற்றைப் பிடுங்கி, அவ்வாளி கொண்டு - அவ்வம்புகளால், அடுக்கும் மேவலாரை எய்து அடர்ப்பர் - நெருங்கும் பகைவரை எய்து கொல்லுவர்.

எதிர் பிழைத்தல் - அவை தம்மீது படாது தப்பச்செய்தல். மற்று: அசை; வினேமாற்றுமாம்: வாங்கி என்பதற்கு ஏற்று என்றுரைத்தலுமாம். தம் உடம்பிற் றைத்த அம்புகளேப் பிடுங்கிப் பகைவர்மேற் செலுத்தினர் என்பது நூழிலாட்டு எனப்படும்.

"களங்கழுமிய படையிரிய
உளங்கழிந்தவேல் பறித்தோச்சின்று"

என்பது அதன் இலக்கணம்.

(பா - ம்.) *தேர்க்கிரியுகைத்த. †மற்றை வாளி.

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்"

என வள்ளுவனுர் கூறுதலுங் காண்க. (௧௯)

சோனை மாரி யிற்சரஞ் சொரிந்து நின்று துள்ளுவார்
ஆன வாளி யெதிர்பிழைத் தொதுங்கி நின்ற ழற்சரங்
கூனல் வாளி சிலையிறத் தொடுத்தெ றிந்து கூவுவார்
மீன கேத னத்துவேந்தன் வீரர் சென்னி வீரர்மேல்.

(இ - ள்.) மீன கேதனத்து வேந்தன் வீரர் - கயற்கொடியினை யுயர்த்திய பாண்டியன் படை வீரர்கள், சென்னி வீரர்மேல் - சோழன் படை வீரர்களின்மேல், சோனை மாரியில் சரம் சொரிந்து - சோனை மழையைப்போல வாளிகளைப் பொழிந்து, நின்று துள்ளுவார் - களித்து நின்று துள்ளுவார்கள்; ஆனவாளி எதிர் பிழைத்து ஒதுங்கி நின்று - அங்ஙனமே பகைவர் சொரிந்த அம்புகளுக்கு எதிர்தப்பி ஒதுங்கி நின்று, வாளி கூனல் சிலை இற - அவர்களுடைய அம்பும் வளைந்த வில்லும் முறியுமாறு, அழல் சரம் தொடுத்து எறிந்து கூவுவார் - கொடிய கணைகளைத் தொடுத்து விடுத்து வீர முழக்கஞ் செய்வார்கள்.

சோனைமாரி - விடாது பெய்யும் மழை. எறிந்து - துணித்து என்றுமாம். (உ0)

தறிந்த தாட கர்ந்தசென்னி தரையு ருண்ட வரையெனச்
செறிந்த தோள்ச ரிந்ததேர் சிதைந்த பல்ப டைக்கலம்
முறிந்த யானை கையிரு முழங்கி வீழ்ந்த செம்புனல்
பறிந்த பாறு பாரிடங்கள் பைத்த கூளி மொய்த்தவே.

(இ - ள்.) தாள் தறிந்த - (படைவீரர்களின்) கால்கள் முறிந்தன; தகர்ந்த சென்னி தரை உருண்ட - அறுபட்ட தலைகள் நிலத்தில் உருண்டன; வரை எனச்செறிந்த தோள் சரிந்த - மலைபோலத் திரண்ட தோள்கள் துண்டாகிச் சரிந்தன; தேர் சிதைந்த - தேர்கள் அழிந்தன; பல்படைக்கலம் முறிந்த - பல படைக்கலங்களும் முறிந்தன; யானை கைஇரு முழங்கி வீழ்ந்த - யானைகள் துதிக்கை அறுபடுதலால் அலறி வீழ்ந்தன; செம்புனல் பறிந்த - குருதிவெள்ளம் ஓடின: பாறு பாரிடங்கள். பைத்த கூளி மொய்த்த - பருந்துகளும் பூதங்களும் கரிய பேய்களும் (போர்க்களமெங்கும்) நெருங்கின.

தறிந்த முதலியன அன்பெறுத பலவின்பால் முற்றுக்கள். இரு: செய்யா என்னும் எச்சம். பறிதல் - செல்லுதல். பைத்த - பரந்த என்றுமாம். (உ௧)

மடலி னீடு தாரலங்கன் மன்னர் சேனை யின்னவா
றடலி னீழ லடியகத் தொடுங்க வும்ப ருச்சியிற்
கடலி னீடு கதிர்பரப்பு கடவு ளெய்து மளவுநின்
றடலி னீடி யிடைவிடாம லமரு ழந்த தாலரோ.*

(பா - ம்.) *உழந்தவாலரோ.

(இ - ள்.) மடலின் நீடு தார் அலங்கல் மன்னர்சேனை - இதழ்கள் பொருந்திய (மண) மிக்க மாலையை யணிந்த இரண்டு மன்னர்களின் சேனைகளும், இன்னவாறு - இவ்வகையாக, உடலின் நீழல் அடியகத்து ஒடுங்க - உடம்பின் நிழல் அடியின்கண் ஒடுங்குமாறு, உம்பர் உச்சியில் - வானின் நடுவிடத்திற்கு, கடலின் நீடு கதிர் பரப்பு கடவுள் எய்தும் அளவும் - கடல்போல அளவின்றிப் பரந்த கிரணங்களை வீசுகின்ற சூரியன் வரும் அளவும், அடலின் நீடி நின்று இடைவிடாமல் அமர் உழந்து - வெற்றியில் மிக்கு நின்று இடைவிடாது போர் செய்தன.

சேனை இன்னவாறு எய்துமளவும் நின்று அமருழந்த தென்க. சேனை என்றதற்கேற்ப உழந்ததென ஒருமையாற் கூறினர். ஆல், அரோ என்பன அசைகள். (உஉ)

அந்த நாள னைத்தையும் மழிக்க நின்ற வரனுதற்
சிந்து தீயே னக்கனன் றுருத்து நின்று தெறுதலால்
எந்த யாறு மறவறப்ப விம்ப ரன்றி யும்பரும்
வெந்து வான யாறும்வற்ற வேனில் வந்தி றுத்ததால்.

(இ - ள்.) அந்தம் நாள் - முடிவுநாளில், அனைத்தையும் அழிக்க நின்ற - எல்லாவற்றையும் அழிக்குமாறு நின்ற, அரன் நுதல் சிந்து தீ என - உருத்திரமூர்த்தியின் நெற்றியினின்று சிந்திய தீயைப்போல, கனன்று உருத்துநின்று தெறுதலால் - (ஞாயிறு) கொதித்துச் சினந்து நின்று எரித்தலால், எந்த யாறும் அறவறப்ப - எல்லா நதிகளும் முற்றும் வற்ற, இம்பர் அன்றி உம்பரும் வெந்து - இந்நிலவுலக மல்லாமல் வானுலகும் கருகி, வானயாறும் வற்ற - ஆகாய கங்கையும் வற்ற - வேனில்வந்து இறுத்தது - வேனிற் பொழுது வந்து தங்கியது.

அந்த நாள் - உக முடிவாகிய நாள்; அந்நாளில் வேனில் வந்திறுத்தது என்றுமாம். நுதல் - நுதற்கண்; ஆகுபெயர். ஆல்: அசை. (உ௩)

மண்பி ளந்து பிலநுழைந்து வரைபி ளந்து நிரையவாய்
எண்பி ளந்து நின்றபொங்க ரிலையு கப்பி ளந்துமேல்
விண்பி ளந்து பரிதிநீடு வெங்க ரங்கள் யாரையுங்
கண்பி ளந்த ழன்றுவீசு கான லெங்கு மானதே.

(இ - ள்.) பரிதி நீடு வெங்கரங்கள் - சூரியனுடைய நீண்ட வெய்ய கிரணங்கள், மண்பிளந்து - நிலவுலகைப் பிளந்து, பிலம் நுழைந்து - பாதலவுலகிற் சென்று, வரைபிளந்து - மலைகளைப் பிளந்து, நிரைய வாய் எண்பிளந்து நின்ற பொங்கர் - ஒழுங்குபட்டனவாய் அளவிறந்து நின்ற சோலைகளின், இலை உகப்பிளந்து - இலைகள் உதிருமாறு வெதுப்பி, மேல் விண்பிளந்து - மேலுள்ள வானுலகையும் பிளந்து, யாரையும் கண் பிளந்து - யாவரையும் கண்ணைப் பிளந்து, அழன்று வீசுகானல் - கொதித்து வீசும் கானல், எங்கும் ஆனது - எவ்விடத்தும் ஆயிற்று.

எண் பிளந்து - எண்ணைக் கடந்து. இலை உக மரக்தோடுகளைப் பிளந்தென்றுமாம். கண் பிளந்து என்பது ஒரு சொல்லாய் இரண்டா வதற்கு முடிபாயிற்று: யாருடைய கண்ணையும் என மாற்றி யுரைத்தலு

மாம். கண்பிளந்து - கண் கூசச்செய்து. வீசுகானல் - வீசுதலாலாகிய கானல். பேய்த்தேரைக் கானல் என்பது பிற்கால வழக்கு. (உச)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

ஆயிடை யலகைத் தேரு மடைந்தவர் வெயர்வு மன்றித்
தூயநீர் வறந்த வந்தச் சுடுபுலந் தோய்ந்த காலும்
மீயுயர் மதிநி லாவும் வெய்யவாய்ச் சுடுநல் லோருந்
தீயவர் தம்மைச் சேர்ந்தாற் றீயவ ராவ ரன்றே.

(இ - ள்.) ஆயிடை - அவ்விடத்து, அலகைத்தேரும் - பேய்த் தேரும், அடைந்தவர் வெயர்வும் அன்றி - அங்குச் சென்றவர்களின் வியர் நீருமல்லாமல், தூயநீர் வறந்த - நல்ல நீர்கள் சிறிதுமின்றி வற்றின; அந்த சுடுபுலம் தோய்ந்த காலும் - அந்த வெப்பு நிலத்திற் படிந்துவரும் காற்றும், மீ உயர்மதி நிலாவும் - வானின்கண் உயர்ந்து விளங்கும் திங்களின் ஒளியும், வெய்யவாய்ச் சுடும் - கொடியனவாய்ச் சுடா நிற்கும்; நல்லோரும் - நல்லவரும், தீயவர் தம்மைச் சேர்ந்தால் - தீயவரைக் கூடினால், தீயவர் ஆவர் அன்றே - தீயவராவரல்லவா?

அலகைத்தேர் நீர்போலும் தோற்றமுடைத் தாகலின் 'அலகைத் தேரும் வெயர்வும்' என்றார். கால் ஈண்டுக் காற்று. தட்பமுடைய காற்றும் மதியின் கிரணமும் வெப்பமுடைய நிலத்தைச் சார்ந்து வெய் யவாய்ச் சுடும் என்ற பொருளைச் சாதித்தற்கு நல்லோரும் தீயவரைச் சேர்ந்தால் தீயவராவர் என்னும் வேறு பொருளைக் கூறினமையால் வேற்றுப் பொருள் வைப்பணி. (உடு)

விளைமத வூற்று மாறி வெகுளியுஞ் செருக்கு மாறித்
துளையுடைக் கைம்மான் றூங்கு நடைய வாய்ச் சாம்பிச் சோர்ந்த
உளர்தரு மூழிக் காலி னோடுவாம் புரவி யெய்த்துத்
தளர்நடை யுடைய வாகித் தைவரு தென்றல் போன்ற.

(இ - ள்.) துளை உடைக் கைமான் - துளை பொருந்திய கையையு டைய யானைகள், விளைமத ஊற்று மாறி – இடையறாதொழுகும் மதநீர் சுரத்தல் மாறி, வெகுளியும் செருக்கும் மாறி-சினமும் செருக்கும் ஒழிந்து, தூங்கு நடையவாய் சாம்பிச் சோர்ந்த - மந்த நடையையுடையனவாய் வாடிச் சோர்ந்தன; உளர்தரும் ஊழிக்காலின் ஓடு - சஞ்சரிக்கும் ஊழிக் காற்றைப் போல ஓடும், வாம்புரவி - தாவுங் குதிரைகள், எய்த்து - இளைத்து, தளர்நடை உடையவாகி - தளர்ந்த நடையினை உடைய னவாய், தைவரு தென்றல் போன்ற - தவழ்ந்து செல்லுந் தென்றலை ஒத்தன.

விளைதல் - உண்டாதல். உளர்தல் - அசைதல். காலின், இன்: ஒப்புப் பொருட்டு. சோர்ந்த போன்ற என்பன அன்பெறாத பலவின் பால் முற்றுக்கள். (உசு)

கானலந் தேர்மேற் சூறைக் காலெனும் பாகன் றூண்ட
வேனில்வேந் தேறிக் கீறி வெப்பமாம் படைகள் வீச
மாநிலங் காவல் பூண்ட மன்னவ ரிருவர்* தங்கள்
தானையு மூடைந்து தண்ணீர் நசைசுடச் சாம்பிற் றன்றே.

(பா - ம்.) *மானவரிருவர்

(இ - ள்.) கானல் தேர்மேல்-கானலாகிய தேரின்மேல், சூறைக்கால் எனும் பாகன் தூண்ட - சூறைக்காற்று என்னும் பாகன் செலுத்த, வேனில் வேந்து ஏறி, வேனிலாகிய வேந்தன் ஏறி, சீறி வெப்பமாம் படைகள் வீச - சினந்து வெப்பமாகிய படைக்கலங்களை வீச, மாநிலம் காவல் பூண்ட மன்னவர் இருவர் தங்கள் தானையும் உடைந்து - பெரிய நிலவுலகத்தை மேற்கொண்ட இரண்டு மன்னர்களின் சேனையும் (அவ் வெம்மைக்குத்) தோற்று, தண்ணீர் நசைசுட சாம்பிற்று - நீர் வேட்கை வருத்த வாடியது.

வேனிற் காலத்தில் கானலும் சூறைக்காற்றும் வெப்பமும் மிக்க மையை இங்ஙனங் கூறினர். அம், அன்று, ஏ: அசைகள். கானல் முதலி யவற்றைத் தேர் முதலியவாக உருவகப் படுத்தினமையால் இஃது உருவகவணி. (உ௭)

இரக்கமில் கொடிய செல்வர் மருங்குபோ யிரப்பார் போல
உருப்பமோண் டிறைக்குங் கள்ளி நீழல்புக் கொதுங்கு வாரும்
தருக்கற நிரப்பா லெய்த்தோர் தம்மினும் வறியர் பாற்சென்
றிரப்பபோ லிலைதீந் துக்க மரநிழ லெய்து வாரும்.

(இ - ள்.) இரக்கம் இல் கொடிய செல்வர் மருங்குபோய் - இரக்க மற்ற கொடிய செல்வரிடஞ் சென்று, இரப்பார்போல - இரப்பவரைப் போல, உருப்பம்மொண்டு இறைக்கும் - வெப்பத்தை முகந்து வீசுகின்ற, கள்ளி நீழல் புக்கு ஒதுங்குவாரும் - கள்ளி நிழலிற் சென்று ஒதுங்குப வரும், தருக்கு அற நிரப்பால் எய்த்தோர் - களிப்பு நீங்க வறுமையால் மெலிந்தோர்கள், தம்மினும் வறியர்பால் சென்று இரப்பபோல் - தம்மைக் காட்டிலும் வறுமையை யுடையாரிடஞ் சென்று இரத்தலைப் போல, இலை தீந்து உக்க மரம் நிழல் எய்துவாரும் - இலைகள் உதிரப் பட்ட மரத்தின்கண் நிழலுக்குச் செல்பவரும்.

உருப்பம் - வெப்பம். மொண்டு, முகந்து என்பதன் மரூஉ. உருப்ப மொண்டிறைக்கும் என்னும் பொருளடையால் கொடிய செல்வர் கடுஞ் சொற்களைப் பெய்வரென்பது பெறப்படும். இரப்ப : தொழிற் பெயர். குளகம். (உ௮)

கோல்லிபம் பரிமான் றேரின் குறுநிழ லொதுங்கு வாரும்
அல்லிருள் வட்டத் தோல்வெண் கவிகையு ளடங்கு வாருஞ்
செல்லிடம் பிறிது காணார் வீரவான் சென்றோர் நின்ற
கல்லுட* னிழல்சோ வாரு மாயினர் களம ரெல்லாம்.

(இ - ள்.) கொல் இபம் பரிமான் தேரின் - கொல்லுதற் றொழிலை யுடைய யானையும் குதிரையும் தேருமாகிய இவற்றின், குறுநிழல் ஒதுங்குவாரும் - சிறு நிழலில் ஒதுங்குகின்றவரும், அல் இருள் வட்டத் தோல் வெண்கவிகையுள் அடங்கு வாரும் - மிக்க இருள் போன்ற கேடகத் துள்ளும் வெள்ளிய குடையினுள்ளும் சென்று ஒடுங்குவாரும், செல் இடம் பிறிது காணார் - செல்லுதற்கு இடம் வேறு காணாதவராய்,

(பா - ம்.) *கல்லிடை.

வான் சென்றார் நின்ற கல் உடல் நிழல் சேர்வாரும் - வீர சுவர்க்கஞ் சென்ற வீரர்கள் நின்ற கல்லாகிய உடம்பின் நிழலை அடைவாரும், ஆயினார் களமர் எல்லாம் - ஆயினர் வீர ரனைவரும்.

அல் இருள் - நள்ளிரவின் இருள். வட்டத்தோல் - பரிசை. விரவான் சென்றோர் - போரிற் புறங் கொடாது உயிர் துறந்து வீர சுவர்க்க மடைந்தோர். அங்ஙனம் துறக்க மெய்திய வீரர்க்குக் கல்லில் உருச்செய்து பெயரும் பீடும் எழுதி நடுதல் பண்டை வழக்கமாகும்;

''என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்''

எனத் திருக்குறளிலும் இது கூறப்படுதல் காண்க. களமர் - போர்க் களத்தி லிருப்போர், வீரர். (உகூ)

ஆயதோ ரமையந் தன்னி லளவிலா வுயிர்க்கு மீன்ற
தாயனார் துலைபோல் யார்க்குஞ் சமநிலை யாய கூடல்
நாயனார் செழியன் றானை நனந்தலை வேத நாற்காற்
பாயதோர் தண்ணீர்ப் பந்தர் பரப்பியப் பந்தர் நாப்பண்.

(இ - ள்.) ஆயது ஓர் அமையம் தன்னில் - இவ்வாறான அமையத்தில் அளவு இலா உயிர்க்கும் ஈன்ற தாய் அன்னார் - அளவிறந்த உயிர் களனைத்திற்கும் பெற்ற தாய் போன்றவராகிய, துலைபோல் யார்க்கும் சமநிலை ஆய - தராசின் நாவினைப்போல் யாவரிடத்தும் நடுவு நிலையைப் பொருந்திய, கூடல் நாயனார் - மதுரைப் பெருமானாகிய சோமசுந்தரக் கடவுள், செழியன் தானை நனந்தலை - பாண்டியன் படையின் நடுவுள், வேதம் நால்கால் பாயது ஓர் தண்ணீர்ப் பந்தர் பரப்பி - நான்கு வேதங் களும் நான்கு கால்களாகப் பொருந்தியதொரு தண்ணீர்ப் பந்தர் வைத்து, அப்பந்தர் நாப்பண் - அப்பந்தரின் நடுவில்.

ஓர்: அசை. எல்லாவுயிர்களிடத்தும் பேரருளுடைய இறைவனுக்குப் பகையும் நொதுமலும் நண்பும் இல்லை யென்பார் 'யார்க்கும் சம நிலையாய' என்றார். யாவர் கண்ணும் நடுவுநிலையுடைய பெருமான் ஈண்டுச் செழியன்றானை நாப்பண் தண்ணீர்ப் பந்தர் வைத்துச் செழியற்கு வெற்றியும் சோழற்குத் தோல்வியும் எய்துவித்தது ஆன்மாக்களின் வினைகட் கேடாக அறக்கருணையால் அருளலும் மறக்கருணையால் ஒறுத்துக் குற்றந் தீர்த்தலுமாகிய அவரது அருட்செயலின் பெற்றியே யாமென்க. பாயது - பொருந்திய தென்னும் பொருட்டு. பரப்பி - பரப்புடைத்தாக வைத்து. பந்தர் : ஈற்றுப்போலி. (௩0)

புண்டர நுதலுங் காதின் புறத்தணி மலரும் பாத
மூண்டக மலர்மே லோற்றைக் கிண்கிணி முழக்குங் கச்சியாப்
புண்டதோ லுடையுங் கண்டோ ருள்ளமுங் கண்ணுங் கோள்ளை
கோண்டபுன் னகையு முள்ளக் கருணையின் குறிப்புந் தோன்ற.

(இ - ள்.) புண்டர நுதலும் - திரிபுண்டர மணிந்த நெற்றியும், காதின் புறத்து அணி மலரும் - காதின் மீது அணிந்த மலரும், பாத

முண்டக மலர்மேல் - திருவடியாகிய தாமரை மலர் மேல், ஒற்றைக் கிண்கிணி முழக்கும் - ஒற்றைச் சதங்கையின் ஒலியும், கச்சு யாப்புண்ட தோல் உடையும் - கச்சினால் இறுகக் கட்டப்பட்ட புலித்தோலாடையும், கண்டோர் உள்ளமும் கண்ணும் - நோக்கினவர்களின் உள்ளத்தையும் விழிகளையும், கொள்ளை கொண்ட புன்னகையும் - கொள்ளை கொண்ட புன்முறுவலும், உள்ளக்கருணையின் குறிப்பும் தோன்ற – திருவுள்ளத்தி லெழுந்த அருட் குறிப்பும் புலப்பட.

புறம் என்பதை ஏழனுருபு பாக்கிக் காதினிட்டுத் தணிந்த என்றலுமாம். கச்சியாப்பு : குற்றிகரம். கருணையின் குறிப்பு - கருணையை வெளிப்படுத்தும் தோற்றம். (௯௧)

அருமறை யகத்து ணின்றாங் கருந்தவ ராகி வேணிப்
பொருபுனல் பூரித் தாங்கோர் புண்ணியச் சிரகந் தாங்கி
ஒருவருக் கொன்றே யாகி யிலக்கருக் கிலக்க மாகித்
தருகுறும் புழையால் வாக்கித் தணித்தனர் தண்ணீர்த் தாகம்.

(இ - ள்.) அருமறை அகத்துள் நின்றாங்கு - அரிய வேதத்தினுள்ளே நின்ற நிலைபோல, அருந்தவர் ஆகி - அரிய தவக்கோல முடையராகி, ஓர் புண்ணியச் சிரகம் - ஒரு புண்ணிய வடிவாகிய நீர்க் கரகத்தினை, வேணிப் பொரு புனல் பூரித்துத் தாங்கி - சடையிலுள்ள (அலைகள்) மோதுங் கங்கைநீரை நிறைத்து ஏந்தி, ஒருவருக்கு ஒன்றே ஆகி இலக்கருக்கு இலக்கம் ஆகித் தரு – ஒருவருக்கு ஒரு தாரையாகவும் இலக்கம் பேருக்கு இலக்கந் தாரையாகவு மிருந்து நீரைத் தருகின்ற, குறும் புழையால் வாக்கி - (அதன்) சிறிய துவாரத்தால் நீரை வார்த்து, தண்ணீர்த் தாகம் தணித்தனர் - நீர் வேட்கையைப் போக்கினார்.

வேதத்துள் நின்ற நிலை - வேதத்தாற் கூறப்படும் நிலை ; இறைவன் தவ வடிவினனாகக் கூறப்படுதலை,

"நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே"

என்னும் புறப்பாட்டானு மறிக. பூரித்தாங்கு என்பதில் ஆங்கு அசை ; பூரித்தாற்போல என்பாருமுளர். இலக்கர் - நூறுயிரவர்; எண்ணிலார் என்றபடி. வாக்கி - வார்த்து. இங்ஙனம் இறைவன் தண்ணீர்ப்பந்தர் வைத்த அருட்செயல்,

"தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவக னாகிய நன்மையும்"

எனத் திருவாசகத்திற் குறிக்கப்பெற்றுளது. (௯௨)

சுந்தரப் புத்தேள் வைத்த நறுமலர் வாசத் தேண்ணீர்ப்
பந்தர்புக் கடைந்து நன்னீர் பருகியெய்ப் பகல வாற்றல்
வந்தபின் செழியன் றன்னோர் வளவன்மே லேறிச் சீறி
அந்தமி லனிகஞ் சிந்தித் தும்பைவேய்ந் தடுபோர் செய்தார்.

(இ - ள்.) சுந்தரப் புத்தேள் வைத்த - சோமசுந்தரக் கடவுள் வைத்தருளிய, துறுமலர் வாசத் தெள்நீர்ப் பந்தர்புக்கு அடைந்து - மணமிக்க மலரால் மணம் ஊட்டிய தெளிந்த நீரினையுடைய பந்தர் சென்று அடைந்து, நல்நீர் பருகி - நல்ல நீரினைப் பருகி, எய்ப்பு அகல - இளைப்பு நீங்க, ஆற்றல் வந்தபின் - முன் இழந்த வலிமை மீண்டவளவில், செழியன் தன்னோர் - பாண்டியன் சேனைவீரர், வளவன்மேல் ஏறி - சோழன்மேற் போருக்கெழுந்து, சீறி - சினந்து, அந்தம்இல் அனிகம் சிந்தி - அளவிறந்த அவன் படைகள் சிதறும்படி, தும்பை வேய்ந்து அடுபோர் செய்தார் - தும்பைமாலை யணிந்து கொல்லுதலையுடைய போரினைப் புரிந்தனர்.

வீறு - நெருங்கிய. தன்னோர் - தமர்; படைவீரர். சிந்த வென்பது சிந்தியெனத் திரிந்து நின்றது. அடுபோர் செய்து சிந்தினர் என விகுதி பிரித்துக் கூட்டலுமாம். (௩௩)

கடலுடைந் தென்னப் பொன்னிக் காவலன் றானை சாய
மடலுடை வாகை வேய்ந்து வளவனை மருக னோடும்
மிடலுடைத் தறுகட் சேனை வீரர்வெங் கையாற் பற்றி
அடலுடைக் கன்னி நாடர்க் கரசன்முன் கொண்டு போந்தார்.

(இ - ள்.) கடல் உடைந்து என்ன - கடற்பெருக்கு நிலை கடந்து புறம் போனாற்போல, பொன்னி காவலன் தானை சாய - காவிரியையுடைய சோழ மன்னன் சேனைகள் புறங்கொடுக்க, மடல் உடை வாகை வேய்ந்து - இதழ்களையுடைய வாகை மாலை சூடி, வளவனை மருகனோடும் - காடு வெட்டிய சோழனை அவன் மருமகனாகிய இராசசிங்க பாண்டியனோடு, மிடல் உடைத் தறுகண் சேனை வீரர் - வலிமையுடைய அஞ்சாமை மிக்க படை வீரர்கள், வெங்கையால் பற்றி - தம் வெவ்விய கையாற் பிடித்து, அடல் உடைக் கன்னி நாடர்க்கு அரசன் முன் - வெற்றியையுடைய கன்னி நாட்டிலுள்ளவர்கட்கு அரசனாகிய இராசேந்திர பாண்டியன் முன்பு, கொண்டு போந்தார் - கொண்டு வந்தனர்.

கடல் போலுஞ் சேனையாகலின் அது நிலை கெட்டோடுதலைக் கடலுடைந் தென்ன என்றார். உடைந்ததென்ன என்பது விகாரமாயிற்று மடலுடை வாகை, சினைக்கேற்ற அடையடுத்தது. அடலுடை அரசன் என்க. (௩௪)

கொடுவந்த வளவன் றன்னைக் கோப்பெருஞ் செழியர் கோமான்
வடுவந்த தம்பி யோடு மாடநீள் கூடன் மேய
கடுவந்த மிடற்றார் முன்போய் விடுத்தெந்தை கருத்தியா தென்ன
நடுவந்த நிலையான் கேட்ப நாயக னிகழ்த்து மன்னோ.

(இ - ள்.) கோப்பெரும் செழியர் கோமான் - பெரிய தலைமையையுடைய செழியர் பெருமானாகிய இராசேந்திர பாண்டியன், கொண்டுவந்த வளவன் தன்னை - அங்ஙனங் கொண்டு வரப்பட்ட சோழனை, வடுவந்த தம்பியோடு - (தனது குடிக்கு) வடுவாகத் தோன்றிய தம்பியோடு, மாடம்நீள் கூடல்மேய - மாடங்கள் மிக்க கூடலில் எழுந்

தருளிய, கடுவந்த மிடற்ருர் முன்போய் விடுத்து - நஞ்சு தங்கிய திரு மிடற்றினையுடைய இறைவன் திருமுன் கொடுபோய் விடுத்து, எந்தை கருத்து யாது என்ன - எந்தையே நின் திருவுள்ளம் யாதென்று, நடுவந்த நிலையான் கேட்ப - நடுவு நிலைமை பொருந்திய பாண்டியன் வினவ, நாயகன் நிகழ்த்தும் - இறைவன் கூறியருளுவான்.

கோ - தலைமை. தமையனுக்கு மனைவியாகக் குறித்தவளை மணஞ் செய்தமையாலும் தமையனது அரசினை வௌவப் போர்க்கு வந்தமையாலும் 'வடுவந்த தம்பி' என்ருர். கடுவந்த-கடுப்பொருந்திய. நடுவந்த நிலை - நடுவாகப் பொருந்திய நிலை. என்ன என்பதற்கு என்று வினவ என்று கூறி. கேட்ப என்பதற்குச் செவியேற்க என்றுரைத்தலுமாம். மன்னும் ஓவும் அசைகள். (௩௫)

அறவனீ யல்லை யோவுன் னகத்தினுக் கிசைந்த செய்கென்
றிறைவன தருளால் வானின் றெழுமொழி கேட்டு வையைத்
துறைவனு மறத்தி ஞற்ருற் சோழனைச் சிலமால் யானை
மறவயப் பரிபூண் மற்றும் வழங்கினுன் விடுத்தான் பின்னர்.

(இ - ள்.) நீ அறவன் அல்லையோ - நீ அறநெறி பிழையாதவ னல்லையோ, உன் அகத்தினுக்கு இசைந்த செய்க என்று - உன் உள்ளத்திற்குப் பொருந்திய செய்கையைச் செய்யக் கடவை என்று, இறைவனது அருளால் வான் நின்று எழும் மொழிகேட்டு - இறைவன் திருவருளால் வானினின்று உண்டாகும் மொழியைக் கேட்டு, வையைத் துறைவனும் - வையையின் நீர்த்துறையையுடைய பாண்டியனும், அறத்தின் ஆற்ருல் - அறநெறியால், சோழனை - காடு வெட்டிய சோழனை, சிலமால் யானை மறவயப்பரி பூண்மற்றும் வழங்கினுன் விடுத்தான் - சில மத யானைகளையும் வெற்றியையும் வன்மையையுமுடைய குதிரைகளையும் அணிகளையும் பிறவற்றையும் கொடுத்து விடுத்து, பின்னர் - பின்பு.

போரில் அகப்பட்ட வேந்தரைக் கொடுமையாக நடத்துதல் தகாதென்பதும், சோழனும் தமக்கு அன்பனுயும் பாண்டியற்கு நண்பனுயும் இருந்தவனென்பதும் தோன்ற 'அறவன் நீ அல்லையோ' எனக் கூறியருளினுர். செய்கென்று. அகரம் தொகுத்தல். எழுந்தது அங்ஙனம் எழுந்த மொழியைக் கேட்டு என விரிக்க. வழங்கினுன், விடுத்தான் என்பன எச்சங்களாயின. (௩௬)

வள்ளறன் றம்பி யென்னு மன்னவர் சிங்கந் தன்னைத்*
தள்ளருந் தறுக ணுண்மைத் தருக்கறத் தானுள் செல்வ
முள்ளன சிறிது மாற்றி யோதுக்கியேவ் வுயிர்க்குந் தாயாய்ப்
பள்ளநீ ரகிலங் காத்துப் பல்வளம் பழுக்க வாழ்ந்தான்.

(இ - ள்.) வள்ளல் - இராசேந்திர பாண்டியன், தன் தம்பி என்னும் மன்னவர் சிங்கம் தன்னை - தன் இளவல் என்று சொல்லப்படும் இராச சிங்கனை, தள் அருந் தறுகண் ஆண்மைத் தருக்கு அற - தள்ளுதற்கரிய அவனது அஞ்சாமையும் ஆண்மைச் செருக்கும் நீங்க, தான் ஆள் செல்வம் உள்ளன - தான் ஆளுஞ் செல்வங்களாயுள்ளவற்றுள், சிறிது

(பா - ம்.) *சிங்கன் றன்னை

மாற்றி ஒதுக்கி - சிறிது கொடுத்து அவனை வேறாக ஒதுக்கி விட்டு, எவ்வுயிர்க்கும் தாயாய் - எல்லா வுயிர்களுக்கும் அன்னையாய், பள்ள நீர் அகிலம் காத்து - கடல் சூழ்ந்த நிலவுலகினைப் புரந்து, பல்வளம் பழுக்க வாழ்ந்தான் - பல வளங்களும் சிறக்க வாழ்ந்தனன்.

பிறர் செய்த தீங்கினைப் பொறுத்ததன்றி அவர்க்கு உதவி செய்யவும் முற்பட்டா ருகலின் 'வள்ளல்' என்றார். தம்பி யாதற்குத் தக்கவனல்ல னென்பார் 'தம்பி யென்னும்' என்றார். மாற்றி - அவனுக்குரியதாகச் செய்து. எல்லா வுயிர்களிடத்தும் தலையளி யுடையவனாய் என்பார் 'எவ்வுயிர்க்குந் தாயாய்' என்றார். (௬௭)

ஆகச் செய்யுள் கஅ௩௫.

முப்பத்தாறுவது

இரசவாதஞ் செய்த படலம்

[கலி நிலைத்துறை]

வரதன் மீனவன் படையிடை வந்துநீர்ப் பந்தர்
விரத ளுகிநீ ரருத்திய வினையுரை செய்தும்
பரத நூலிய ஞடகப் பாவையா ளொருத்திக்
கிரத வாதஞ்செய் தருளிய வாடலை யிசைப்பாம்.

(இ - ள்.) வரதன் - வள்ளலாகிய சோமசுந்தரக் கடவுள், மீனவன் படையிடை - பாண்டியன் சேனை நடுவுள், நீர்ப்பந்தர் விரதனுகி வந்து - தண்ணீர்ப் பந்தர் வைக்கு முனிவஞய் வந்து, நீர் அருத்திய வினை உரை செய்தும் - நீரைப் பருகுவித்த திருவிளையாடலைக் கூறினோம்; பரத நூல் இயல் நாடகப்பாவையாள் ஒருத்திக்கு - பரத நூல் இலக்கணமமைந்த நாடகத்தில் வல்ல பதுமைபோல்வாளாகிய பொன்னனையாளுக்கு, இரத வாதம் செய்தருளிய ஆடலை இசைப்பாம் - இரசவாதஞ் செய்த திருவிளையாடலை (இனிக்) கூறுவாம்.

வரதன் - வேண்டுவன அளிப்போன். விரதன் - நோன்பினை மேற் கொண்டுளோன். (க)

பருங்கை மால்வரைப் பூழியன் பைந்தமிழ் நாட்டின்
இரங்கு தெண்டிரைக் கரங்களா லீர்ம்புனல் வையை
மருங்கி னந்தன மலர்ந்தபன் மலர்கடூய்ப் பணியப்
புரங்க டந்தவ னிருப்பது பூவண நகரம்.

(இ - ள்.) பருகை மால்வரை பூழியன் - பருத்த கையையுடைய கரிய மலைபோலும் யானைப் படையையுடைய பாண்டியனது, பைந்தமிழ் நாட்டின் - அழகிய தமிழ் நாட்டின்கண், ஈர்புனல் வையை - குளிர்ந்த நீரையுடைய வையை யாறு, இரங்கு தெள் திரைக் கரங்களால் - ஒலிக்கின்ற தெளிந்த அலையாகிய கைகளால், மருங்கில் நந்தனம் மலர்ந்த - பக்கங்களிலுள்ள நந்தனவனங்கள் மலர்ந்த, பல் மலர்கள் தூய்ப்பணிய - பல மலர்களையும் தூவி இறைஞ்ச, புரம் கடந்தவன் இருப்பது - திரிபுரங்களையும் நீருக்கிய இறைவன் வீற்றிருக்கப் பெறுவது, பூவண நகரம் - திருப் பூவண மென்னும் பதியாகும்.

மால் - பெருமையும், மத மயக்கமும் ஆம். பூழியர் என்னும் பெயர் பூழி நாட்டையுடைய காரணத்தால் முன்பு சேரர்க்குளதாகிப் பின் பாண்டியர்க்கு வந்திருத்தல் வேண்டும்: பூழி - கொடுந்தமிழ் நாடு

பன்னிரண்டனுள் ஒன்று; மேற்குக் கடலோரத்தில் உள்ளது. பசுமை தமிழுக்கு அடை; தமிழ் மொழியானது மென்மையும் ஒண்மையும் இனிமையும் வளமையும் செம்மையும் சீர்மையும் உடையதாய் விளங்குதலால் இதனைச் சான்றோர்கள் பலவாறு அடையடுத்து வழங்குவாராயினர் என்க. தூவி என்பது விகாரமாயிற்று. பூவணம் - பாண்டி நாட்டிலுள்ள தேவாரம் பெற்ற பதினான்கு திருப்பதிகளிலொன்று. இருப்பது - இருக்கும் இடமாவது. (உ)

எண்ணி லங்குறை சராசர மிலிங்கமேன் றெண்ணி
விண்ணி னாள்களுங் கோள்களும் விலங்குவ தியாக்கைக்
கண்ணி னான்கதிர் முதற்பல கடவுளர் பூசை
பண்ணி வேண்டிய நல்வர மடைந்ததப் பதியில்.

(இ - ள்.) அங்கு உறை எண் இல் சர அசரம் - அங்கு வசிக்கும் அளவற்ற சரா சரங்களனைத்தும், இலிங்கம் என்று எண்ணி - சிவலிங்க மூர்த்தமென்று கருதி, விண்ணின் நாள்களும் கோள்களும் விலங்குவது - வானின்கணுள்ள நாண்மீன்களும் நவக்கோள்களும் விலகிச் செல்லப் பெறுவது; ஆக்கைக் கண்ணினான் கதிர் முதல் பல கடவுளர் - உடலிற் கண்களையுடைய இந்திரனும் சூரியனு முதலிய பல தேவர்கள், பூசை பண்ணி - வழிபட்டு, வேண்டிய நல்வரம் அடைந்தது - தாம் விரும்பிய நல்ல வரங்களை அடையப் பெற்றது; அப்பதியில் - அத்தன்மை வாய்ந்த அந்நகரில்.

எண்ணில் சராசரங்களையும் என்றியைத்து விரிக்க. சிவலிங்கமாகத் தோன்றுதலின் எண்ணி விலங்குவவாயின; பதியின் மேன்மை கூறியவாறு. பூவணநகரம் விளங்கப்பெறுவது, அடையப்பெற்றது என்க. (௩)

கிளியு ளார்பொழிற் பூவணக் கிழவர்தங் கோயிற்
றளியு ளார்தவப் பேறனா டாதுகு பூந்தார்
அளியு ளார்குழ லணங்கனா ளந்தரத் தவர்க்குங்
களியு ளார்தர மயக்குறூஉங் கடலமு தனையாள்.

(இ - ள்.) கிளி உள் ஆர் பொழில் பூவணக் கிழவர்தம் - கிளிகள் உள்ளே நிறைந்துவாழும் சோலைசூழ்ந்த திருப்பூவண நாதருடைய, கோயில் தளியுளார் தவப்பேறு அனாள் - திருக்கோயிற் பணிபுரியும் உருத்திரகணிகையர் தவப்பயன்போலும் ஒரு நங்கை உளள்; தாது உகு பூந்தார் உள் அளி ஆர் குழல் அணங்கு அனாள் - அவள் மகரந்தஞ் சிந்தும் மலர்மாலையுள் வண்டுகள் பொருந்தி இசைபாடுங் கூந்தலையுடைய அணங்கினை யொப்பாள்; அந்தரத்தவர்க்கும் - தேவர்கட்கும், களிஉள் ஆர்தர - உள்ளத்திற் களிப்புமிக, மயக்குறூஉம் - மயக்குகின்ற, கடல் அமுது அனையாள் - கடலிற் றோன்றிய அமுதம்போல்வாள். (௪)

நரம்பி னேழிசை யாழிசைப் பாடலு நடநூல்
நிரம்பு மாடலும் பெண்ணலநீர்மையும் பிறவும்
அரம்பை மாதரை யொத்தன ளறனெறி யொழுகும்
வரம்பி னலவர் தமக்குமே லாயினாண் மன்னோ.

(இ - ள்.) நரம்பின் ஏழு இசை யாழிசைப் பாடலும் - நரம்பின் கண்ணமைந்த குரல் முதலிய ஏழிசைகளையுடைய யாழின் வழியே பாடும் மிடற்றுப்பாடலும், நடநூல் நிரம்பும் ஆடலும் - பரதநூலிற் கூறும் இலக்கணம் நிரம்பிய ஆடலும்: பெண் நல நீர்மையும் - பெண் கட்குரிய அழகின் றன்மையும், பிறவும் - ஏனையவுமாகிய இவற்றால், அரம்பை மாதரை ஒத்தனள் - அரம்பை மகளிரை நிகர்த்தனள், அறன் நெறி ஒழுகும் வரம்பினால் - சிவபுண்ணிய நெறியில் நடக்குங் கடப் பாட்டால், அவர் தமக்கு மேல் ஆயினாள் - அவ்வர மகளிரினும் மேம்பட்டவளானாள்.

ஏழிசை – குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. யாழ்ப்பாடலும் அதன்வழியே அதனை யொத்துப் பாடும் மிடற்றுப் பாடலும் என்பார், 'ஏழிசை யாழிசைப் பாடலும்' என்றார். பெண்ணலம் - பெண்டிர்க்குரிய அழகு. நாடக மகளிர் ஆடல் பாடல் அழகு என்பவற்றாற் சிறந்திருக்க வேண்டுமென்பதனை,

> "ஆடலும் பாடலு மழகு மென்றிக்
> கூறிய முறையி னொன்றுகுறை படாமல்"

என்னும் சிலப்பதிகார அரங்கேற்று காதை யடிகளானறிக. பிறவென் றது இன்சொல் முதலியவற்றை. அரம்பை மாதர் - ஊர்வசி முத லாயினர். தவப்பேறனாள் ஒருத்தியுளள் அவள் அணங்கனாள் அமுதனை யாள் ஒத்தனள் மேலாயினள் என முடிக்க. மன்னும் ஓவும் அசைகள். (௫)

ஆய மாதர்பேர் பொன்னனை யாளேன்ப வவடன்
நேய வாயமோ டிரவிரு ணீங்குமு னெழுந்து
தூய நீர்குடைந் துயிர்புரை சுடர்மதிக் கண்ணி
நாய னாரடி யருச்சனை நியமமு நடாத்தி.

(இ - ள்.) ஆய மாதர்பேர் பொன்னனையாள் என்ப - அன்னளா கிய மாதின் பெயர் பொன்னனையாள் என்று கூறுவர், அவள் தன் நேய ஆயமோடு - அவள் தன்னுடைய அன்புள்ள தோழியர் கூட்டத்தோடும், இரவு இருள் நீங்குமுன் எழுந்து - இரவின் இருள் புலர்தற்கு முன்னரே துயிலுணர்ந் தெழுந்து, தூயநீர் குடைந்து - புனிதமான நீரில் மூழ்கி, உயிர் புரை - உயிரையொத்த, சுடர்மதிக்கண்ணி நாயனார் - ஒளி பொருந்திய பிறைமதியைக் கண்ணியாகச் சூடிய சிவபெருமானுடைய, அடி அருச்சனை நியமமும் நடத்தி - திருவடிகளை அருச்சித்தலாகிய கடனை யும் இயற்றி,

என்ப, அசையுமாம். இருணீங்குமுன் - வைகறையில். கண்ணி - முடியிற் சூடும் மாலை. நாயனார் - தலைவர். உயிர்புரை நாயனார் என்க. (௬)

திருத்தர் பூவண வாணரைச் சேவித்துச் சுத்த
நிருத்த மாடிவந் தடியரைப் பொருளென நினையுங்
கருத்த ளாயருச் சித்தவர் களிப்பவின் சுவையூண்
அருத்தி யெஞ்சிய தருந்துவா ளஃதவ ணியமம்.

(இ - ள்.) திருத்தர் பூவணவாணரைச் சேவித்து - தூயராகிய திருப் பூவணநாதரை வணங்கி, சுத்த நிருத்தம் ஆடி - சுத்தநாடகம் ஆடி, வந்து-இல்லிற்கு வந்து, அடியரைப்பொருள் என நினையும் கருத்தளாய் - சிவனடியார்களை மெய்ப்பொருளென்று கருதும் உள்ளமுடையாளாய், அருச்சித்து - பூசித்து, அவர் களிப்ப இன்சுவை ஊண் அருத்தி - அவர் மகிழுமாறு இனிய சுவையோடு கூடிய உணவினை உண்பித்து, எஞ்சியது அருந்துவாள் - எஞ்சிய உணவினை உண்பாள்; அஃது அவள் நியமம் - அஃது அவள் நாடொறும் இயற்றும் கடனாகும்.

வாணர், வாழ்நர் என்பதன் மரூஉ. சுத்த நிருத்தம் சொக்கம்; சாந்தமாக ஆடும் சாந்திக் கூத்தின் வகை நான்கனுள் ஒன்று: நூற்றெட்டுக் கரணமுடையது. இனி மத்தள முதலியனவின்றிச் செய்யப்படும் கூத்து என்றுமாம். அடியர் - வினைத்துயர் தீர்க்கும் திருவேடமுடைய சிவனடியார், எஞ்சியது - மிச்சில். நியமம் - தவிராக்கடன். (எ)

மாத ரிந்நெறி வழங்குநாண் மற்றவ ளன்பைப்
பூத லத்திடைத் தெருட்டுவான் பொன்மலை வல்லி
காத ணயகன் றிருவுருக் காணிய வுள்ளத்
தாத ரங்கொடுத் தருளினர் பூவணத் தையர்.

(இ - ள்.) மாதர் இந்நெறி வழங்கும் நாள் - பொன்னனையாள் இந்த நெறியில் ஒழுகும் நாளில், பூவணத்து ஐயர் - திருப்பூவணத்து இறைவர், மற்றவள் அன்பை - அப்பொன்னனையாள் அன்பினை, பூதலத் திடைத் தெருட்டுவான் - நிலவுலகிலுள்ளாருக்கு அறிவிக்க, பொன்மலை வல்லி காதல் நாயகன் - உமையம்மையின் அன்புள்ள நாயகனாகிய சிவ பெருமானுடைய, திரு உருக்காணிய-திருமேனியைச் சமைக்க. உள்ளத்து ஆதரம் கொடுத்தருளினர் - (அவள்) மனத்தின்கண் ஆசையைக் கொடுத் தருளினர்.

காதல் எனப் பொருள்படும் மாதர் என்னும் உரிச்சொல்லே பின் மகளிரைக் குறித்ததாகலின், அஃது ஒருமையிலும் வழங்கும். மற்று: அசை. தெருட்டுவான்: வானீற்று வினையெச்சம். பொன்மலைவல்லி காதனாயகன் திருவுரு - தமது திருவுரு. காணிய - இயற்ற: செய்யிய என்னும் வினையெச்சம். ஐயர் அவள் அன்பைத் தெருட்டுவான் திருவுருக் காணிய ஆதரங் கொடுத்தருளினர் என்க. (அ)

ஐயர் தந்தபே ரன்புரு வாயினாண் மழுமான்
கையர் தந்திரு வுருவினைக் கருவினாற் கண்டு
மைய கண்ணினாள் வைகலும் வரும்பொரு ளெல்லாம்
பொய்யி லன்புகொண் டன்பர்தம் பூசைபி னேர்வாள்.

(இ - ள்.) மைய கண்ணினாள் - மைதீட்டிய விழிகளையுடைய பொன்னனையாள், ஐயர் தந்தபேர் அன்பு உரு ஆயினாள் - இறைவர் கொடுத்தருளிய பெரிய அன்பே வடிவமாகியவளாய், மழுமான் கையர் தம் திரு உருவினை - மழுவையும் மானையும் திருக்கரத்திலேந்திய சிவபெருமானது திருமேனியை, கருவினால் கண்டு - கருவில் உளதாக்கி, வைகலும் வரும் பொருள் எல்லாம் - நாள்தோறும் வருகின்ற பொருள்

முழுதையும். பொய் இல் அன்புகொண்டு - பொய்யில்லாத (மெய்) அன்பினால், அன்பர்தம் பூசையில் நேர்வாள் - அடியார் பூசையிலே செலுத்துவாள்.

ஆயினள்: முற்றெச்சம். தீம் இரண்டும் சாரியை, கரு - குழவியுருத் தோன்றும் தாயின் கருப்போன்று உலோகங்களினாய உரு வார்க்கப்படு தற்கு மெழுகினால் அமைக்கப்படும் வடிவம். இம் மெழுகுருவமைத்தலைக் கருக்கட்டுதல் என்பர். மைய: குறிப்புப் பெயரெச்சம். வரும்பொருள் - ஆடல் பாடல் முதலியவற்றால் வரும் பொருள். (௯)

அடியர் பூசனைக் கன்றியெஞ் சாமையா லடிகள்
வடிவு காண்பதெப் படியென்று மடியிலச் செழியற்
கொடிவில்* பொற்கிழி நல்கிய வள்ளலை யுன்னிப்
பிடிய னாளிருந் தாளஃ தறிந்தனன் பெருமான்.

(இ - ள்.) அடியர் பூசனைக்கு அன்றி - அடியார்களின் வழிபாட்டிற்கே யல்லாமல், எஞ்சாமையால் - பொருள் மிஞ்சாமையினால், அடிகள் வடிவுகாண்பது எப்படி என்று - இறைவரின் திருவுருவமைத்தல் எங்ஙனமென்று கருதி, மடிஇல் அச்செழியற்கு - சோம்பலில்லாத அக்குல பூடண பாண்டியனுக்கு, ஒடிவு இல் பொற்கிழி நல்கிய வள்ளலை உன்னி - குறையாத பொற்கிழியினையருளிய சோமசுந்தரக் கடவுளைச் சிந்தித்து, பிடி அனாள் இருந்தாள் - பெண் யானைபோல்பவளாகிய அப் பொன்னனையாள் இருந்தனள்; பெருமான் அஃது அறிந்தனன் - இறைவன் அதனைத் திருவுளங் கொண்டான்.

அகரம் பண்டறிசுட்டு. ஒடிவில் கிழி - உலவாக் கிழி. தனக்கும் பொன்னருளுவர் என்னுங் கருத்துடன் சிந்தித்தாள் என்பார் 'பொற்கிழி நல்கிய வள்ளலை யுன்னி' என்றார். (௧0)

துய்ய நீறணி மெய்யினர் கட்டங்கந் தொட்ட
கையர் யோகபட் டத்திடைக் கட்டினர் பூதிப்
பையர் கோவண மிசையசை யுடையினர் பவளச்
செய்ய வேணிய ரங்கொரு சித்தராய் வருவார்.

(இ - ள்.) துய்ய நீறு அணி மெய்யினர் தூய திருநீறு தரித்த மெய்யினையுடையவரும், கட்டங்கம் தொட்ட கையர் - மழு ஏந்திய திருக்கரத்தையுடையவரும், யோகபட்டத்து இடைக்கட்டினர் - யோக பட்டிகையை இடையிற் கட்டியவரும், பூதிப்பையர் - திருநீற்றுப்பையினை யுடையவரும், கோவணமிசை அசை உடையினர் - கோவணமீது கட்டிய ஆடையையுடையவரும், பவளச் செய்ய வேணியர் - பவளம் போன்ற சிவந்த சடையையுடையவருமாகி, ஒரு சித்தராய் அங்கு வருவார் - ஒரு சித்தமூர்த்தியாய் அங்கு வருவாராயினர்.

கட்டங்கம் - மழு; முன்னர் உரைத்தமை காண்க. அசை - அசைத்த, கட்டிய. மெய்யினர் முதலிய் குறிப்பு முற்றுக்கள் எச்சமாயின. (௧௧)

(பா - ம்) *மடிவில்.

வந்து போன்னனை யாண்மணி மாளிகை குறுகி
அந்த மின்றிவந் தமுதுசெய் வாரோடு மணுகிச்
சிந்தை வேறுகோண் டடைந்தவர் திருவமு தருந்தா
துந்து மாளிகைப் புறங்கடை யோருசிறை யிருந்தார்.

(இ-ள்.) வந்து பொன் அனையாள் மணிமாளிகை குறுகி-(அங்ஙனம்) வந்து பொன்னனையாளின் அழகிய திருமாளிகையை அடைந்து, சிந்தை வேறு கொண்டு அடைந்தவர் - வேறு கருத்துடன் வந்த அச்சித்த மூர்த்திகள்; அந்தம் இன்றிவந்து அமுது செய்வாரொடும் அணுகி - அள வில்லாமல் வந்து உண்பவரோடும் கூடி, திரு அமுது அருந்தாது - திருவமுது செய்யாமல், உந்தும் மாளிகைப் புறங்கடை - ஒளிவீசும் மாளிகையின் கடைவாயிலில், ஒருசிறை இருந்தார் - ஒரு பக்கத்தில் இருந்தருளினர்.

சிந்தை வேறுகொண்டு அடைந்தவர் - ஏனையடியார்போலத் திருவமு தருந்துங் கருத்தின்றி இரசவாதஞ் செய்யுங் கருத்துடன் போந்தவர். உந்துதல் - (ஒளி) வீசுதல்; மேல் நிவத்தலுமாம். வந்து குறுகி அருந்தாது ஒரு சிறையிருந்தார் என்க. (கஉ)

அமுது செய்தருந் தவரெலா மகலவே றிருந்த
அமுத வாரியை யடிபணிந் தடிச்சிய ரைய
அமுது செய்வதற் குள்ளெழுந் தருள்கென வுங்கள்
அமுத னனையிங் கழைமினென் றருளலு மனையார்.

இ-ள்.) அமுதுசெய்து அருந்தவர்எலாம் அகல - அரிய தவத்தினை யுடைய அடியவரெல்லாருந் திருவமுதுசெய்து செல்ல, வேறு இருந்த அமுதவாரியை அடிச்சியர் அடிபணிந்து - வேறாக இருந்த அமுத வெள்ள மாகிய சித்த மூர்த்திகளைத் தாதியர் அடிவணங்கி, ஐய - ஐயனே, அமுது செய்வதற்கு உள் எழுந்தருள்க என - திருவமுது செய்வதற்கு உள்ளே எழுந்தருளவேண்டுமென்று வேண்ட, உங்கள் அமுது அன்னனை இங்கு அழைமின் என்று அருளலும் - அவர் உங்கள் அமுதம் போன்ற தலைவியை இங்கே அழைமின்கள் என்று அருளிச் செய்யவும், அனையார் - அந்த ஏவன்மகளிர்.

அடிபணிந்து என்பது ஒரு சொல்லாய் இரண்டாவதற்கு முடிபா யிற்று அடிச்சியர் - அடித்தொண்டு புரியும் தாதியர், குற்றேவன் மகளிர். அருள்கென, அகரம் தொகுத்தல். (கங)

முத்த ராமுகிழ் வாணகை யல்குலாய் முக்கண்
அத்த ரானவர் தமரெலா மமுதுசெய் தகன்றார்
சித்த ராயொரு தம்பிரான் சிறுநகை யினராய்
இத்த ராதலத் தரியரா யிருக்கின்றா ரென்றார்.

(இ-ள்.) முத்து அரா - முத்தினையும் பாம்பின் படத்தினையும் முறையே நிகர்த்த, வாள்முகிழ் நகை அல்குலாய் - ஒள்ளிய புன்னகை யையும் அல்குலையுமுடைய அம்மையே, முக்கண் அத்தர் ஆனவர்

தமர் எலாம் - மூன்று கண்களையுடைய சிவபெருமானுடைய சுற்றமாகிய அடியார்களனைவரும், அமுதுசெய்து அகன்றார் - திருவமுது செய்து நீங்கினர்; ஒரு தம்பிரான் சித்தராய் - ஒரு தம்பிரான் சித்த மூர்த்தியாய், சிறுநகையினராய் - புன்னகையுடையராய், இத்தராதலத்து அரியராய் இருக்கின்றார் என்றார் - இந்நிலவுலகின்கண் கிடைத்தற்கரியராய் இருக்கின்றார் என்று கூறினர்.

முத்துப்போலும் நகை அராப்போலும் அல்குல் என நிரனிறை. இருக்கின்றார் - அமுது செய்யாதிருக்கின்றார். (கச)

நவம ணிக்கலன் பூத்தபூங் கோம்பரி னடந்து
துவரி தழ்க்கனி வாயினாள் சுவாகதங் கிலவென்
றுவமை யற்றவர்க் கருக்கிய மாசன முதவிப்
பவம கற்றிய வடிமலர் முடியுறப் பணிந்தாள்.

(இ - ள்.) துவர் இதழ்க்கனி வாயினாள்-பவளம்போன்ற இதழையும் கொவ்வைக் கனிபோன்ற வாயையுமுடைய பொன்னனையாள், நவமணிக் கலன் பூத்த - நவரத்தினங்களாலாகிய அணிகலன்கள் மலர்ந்த, பூங் கொம்பரின் நடந்து - பூங்கொம்புபோல நடந்து, சு ஆகதம் கில என்று - (தேவரீர் வரவு) நல்வரவல்லவா என்று கூறி, உவமை அற்றவர்க்கு - ஒப்பற்ற சித்த மூர்த்திகளுக்கு, அருக்கியம் ஆசனம் உதவி - அருக்கியமும் ஆசனமுங் கொடுத்து, பவம் அகற்றிய அடிமலர் - அடியார் பிறப்பை நீக்கிய திருவடி மலர்கள், முடி உறப் பணிந்தாள் - முடியிற் பொருந்த வணங்கினாள்.

முதலடி இல்பொருளுவமை. கொம்பர்: ஈற்றுப்போலி. அருக்கிய என்றதனால் இனம் பற்றிப் பாத்தியம் ஆசமனீயம் என்பவும் கொள்க. அகற்றிய என்பதனைச் செய்யியவென்னும் வினையெச்சமாக்கித் தனது பிறப்பைப் போக்குதற்கு என்றுரைத்தலுமாம். அடிமலரை முடிபொருந்த என்றுமாம். (கரு)

எத்த வஞ்செய்தே னிங்கெழுந் தருளுதற் கென்னாச்
சித்தர் மேனியும் படிவெழிற் செல்வமு நோக்கி
முத்த வாணகை யரும்பநின் றஞ்சலி முகிழ்ப்ப
அத்தர் நோக்கினா ரருட்கணா லருள்வலைப் பட்டாள்.

(இ - ள்.) சித்தர் மேனியும் - சித்தமூர்த்திகளின் திருமேனியையும், படிவு எழில் செல்வமும் நோக்கி - வடிவினது அழகின் செல்வத்தையுங் கண்டு, முத்தவாள் நகை அரும்ப நின்று - முத்துப்போன்ற ஒள்ளிய புன்னகை தோன்ற நின்று, இங்கு எழுந்தருளுதற்கு எத்தவம் செய்தேன் என்னா - (தேவரீர்) இங்கு எழுந்தருளுதற்கு என்ன தவம் செய்தேனோ வென்று, அஞ்சலி முகிழ்ப்ப - கையைச் சென்னியிற் குவித்து வணங்க, அத்தர் நோக்கினார் அருள் கண்ணால் - இறைவன் திருவருள் நாட்டத்தால் நோக்கி யருளினார்; அருள் வலைப்பட்டாள் - (பொன்னனையாள்) திருவருளாய வலையில் அகப்பட்டனள்.

படிவு - படிவம்: ஈறு தொக்கது. செல்வம் - பெருக்கம். நோக்குதல் - சட்சு தீட்சையாகும். பத்தி வலையிற்பட்ட பரமனது அருள் வலையிற்

பட்டாள் பொன்னனையாள் என்க. அருள் வலைப்பட்டாள் என்பதனை வினையாலணையும் பெயராக்கி வருஞ் செய்யுளிற் கூட்டி யுரைத்தலுமாம். (௧௬)

ஐய *உள்ளெழுந் தருளுக வடிகணீ ரடியேன்
உய்ய வேண்டிய பணிதிரு வுளத்தினுக் கிசையச்
செய்ய வல்லனென் றஞ்சலி செய்யவுண் ணகையா
மைய னோக்கியை நோக்கிமீ னோக்கிதன் மணாளன்.

(இ - ள்.) ஐய - ஐயரே, உள் எழுந்தருளுக - உள்ளே எழுந்தருளக் கடவிர்; அடிகள் நீர் - அடிகளாகிய நீர், அடியேன் உய்ய - அடியாளாகிய யான் ஈடேற, வேண்டிய பணி - விரும்பிய தொண்டினை, திருவுளத்தினுக்கு இசையச் செய்யவல்லன் என்று - திருவுள்ளத்திற்குப் பொருந்துமாறு செய்யவல்லேன் என்று கூறி, அஞ்சலிசெய்ய - வணங்க, மீன் நோக்கி தன் மணாளன் - அங்கயற்கண்ணி மணாளனாகிய சோமசுந்தரக் கடவுள், உள் நகையா - உள்ளே நகைத்து, மையல் நோக்கியை நோக்கி - மையல் விளைக்கும் பார்வையுடைய பொன்னனையாளைப் பார்த்து,

ஐய அடிகள் என ஒருமையும் பன்மையும் விரவிவந்தன; ஐய. அசையுமாம். யான் உய்ய நீர் வேண்டிய பணி என்க. உள் நகையா என்றும், மையல் நோக்கியை என்றும் கூறிய குறிப்பால், அவர் தம்மை அணைய வேண்டினாரெனக் கருதி, வேண்டிய பணி திருவுளத்தினுக்கிசையச் செய்ய வல்லன் என்று மறைத்துக் கூறினள் என்க. உள் நகையா - புன் முறுவல் செய்து. தன்: சாரியை. (௧௭)

வடியை நேர்விழி யாய்பெரு வனப்பினை சிறிதுன்
கொடியை நேரிடை யெனவிளைத் தனையெனக் கொன்றை
முடியி னனடி யாரமென் முகிழ்முலைக் கொடிதாழ்ந்
தடிய னேற்குவே றுயொரு மெலிவிலை யையா.

(இ - ள்.) வடியை நேர்விழியாய் - மாவடுவின் பிளவினையொத்த விழிகளையுடையாய், பெருவனப்பினை - பேரழகுடைய நீ, உன் கொடியை நேர் இடை எனச் சிறிது இளைத்தனை என - உனது கொடி போன்ற இடைபோலச் சிறிது உடல் மெலிந்திருக்கின்றாய் (அதன் காரணம் யாது) என்று வினவ மெல்முகிழ் முலைக் கொடி - மெல்லிய அரும்பாகிய கொங்கை முகிழ்த்த கொடிபோன்ற அவள், கொன்றை முடியினன் அடி ஆரத்தாழ்ந்து - கொன்றை மலரணிந்த திருமுடியையுடைய சிவபிரான் திருவடிகளைப் பொருந்த வணங்கி, ஐயா - ஐயனே, அடியனேற்கு வேறாய் ஒரு மெலிவு இலை - அடியேற்கு வேறொரு மெலிவு இல்லை (ஆனால்).

இளைத்திருப்பதன் காரணம் யாதென்று வினவ என விரித்துரைக்க. வேறுயொரு மெலிவிலை என்றதனால் ஒரு மெலிவுண்டென்

(பா - ம்.) * ஐயருள்.

பது குறிப்பிட்டவாருயிற்று; அது வருஞ் செய்யுளிற் பெறப்படும். மெலிவின் காரணம் மெலிவு எனப்பட்டது. (க௮)

எங்க ணுயகர் திருவுருக் காண்பதற் கிதயந்
தங்கு மாசையாற் கருவுருச் சமைத்தனன் முடிப்பேற்
கிங்கு நாடோறு மென்கையில் வருபொரு ளெல்லாம்
உங்கள் பூசைக்கே யல்லதை யொழிந்தில வென்ருள்.

(இ - ள்.) எங்கள் நாயகர் - எங்கள் தலைவராகிய சிவபெருமானுடைய, திரு உருக் காண்பதற்கு - திருவுருவத்தை ஆக்குவதற்கு, இதயம் தங்கும் ஆசையால் - உள்ளத்தில் நிலைபெற்ற விருப்பத்தினுல், கரு உருச் சமைத்தனன் - மெழுகினுற் கருக்கட்டி வைத்தேன்; முடிப்பேற்கு - அதனைப் பொன்னினுல் (செய்து) முடிக்கக் கருதிய எனக்கு, இங்கு நாள்தொறும் என்கையில் வருபொருள் எல்லாம் - இங்கு நாள் தோறும் என் கையில் வருகின்ற பொருள் முழுதும், உங்கள் பூசைக்கே அல்லது - அடியார்களாகிய உங்கள் பூசனைக்கே சரியாவதல்லாமல், ஒழிந்தில என்ருள் - எஞ்சவில்லை என்று கூறினுள்.

சிவபெருமானுகிய சித்த மூர்த்திகளைச் சிவனடியாராகக் கருதி 'உங்கள் பூசைக்கே' என்ருளென்க. அல்லதை, ஐ: சாரியை. (கக)

அருந்து நல்லமு தனையவ ளன்புதித் திக்கத்*
திருந்து தேனென விரங்குசொற் செவிமடுத் தையர்
முருந்து மூரலாய் செல்வமெய் யிளமைநீர் மொக்குள்
இருந்த வெல்லையு நிலையில வென்பது துணிந்தாய்.

(இ - ள்.) அருந்து நல் அமுது அனையவள் - உண்ணுதற்குரிய இனிய அமிழ்தம்போன்ற பொன்னனையாள், அன்பு - அன்போடு, தித்திக்க - இனிமை பொருந்த, திருந்து தேன் என-இனிமை திருந்திய தேன்போல, இரங்குசொல் - கூறுஞ் சொற்களை. ஐயர் செவிமடுத்து-சித்தமூர்த்திகள் கேட்டு, முருந்து மூரலாய் - மயிலிறகினடி போன்ற பற்களையுடையவளே, செல்வம் மெய் இளமை - செல்வமும் யாக்கையும் இளமையும், நீர் மொக்குள் இருந்த எல்லையும் நிலை இல என்பது துணிந்தாய் - நீரிற் ருேன்றும் குமிழி இருந்த அளவும் நிலைபெறுவன அல்லவென்பதனை நன்கு உணர்ந்தாய்.

சித்திக்க என்னும் பாடத்திற்கு அன்பு கைகூட என்றுரைக்க. இரங்கு சொல் - இரக்கந் தோன்றக் கூறுஞ்சொல் எனலுமாம். (உ0)

அதிக நல்லற நிற்பதென் றறிந்தனை யறத்துள்
அதிக மாஞ்சிவ புண்ணியஞ் சிவார்ச்சனை யவற்றுள்
அதிக மாஞ்சிவ பூசையு ளடியவர் பூசை
அதிக மென்றறிந் தன்பரை யருச்சனை செய்வாய்.

(பா - ம்.) * அன்பு சித்திக்க

(இ - ள்.) நல் அறம் அதிகம் நிற்பது என்று அறிந்தனை - நன்றாகிய அறமே சிறப்புடையதும் நிலைபெறுவதும் என்று உணர்ந்தனை; அறத்துள் - அவ்வறங்களுள்ளே, சிவபுண்ணியம் அதிகம் ஆம் - சிவ புண்ணியங்கள் சிறந்தனவாகும் (என்றும்), அவற்றுள் சிவார்ச்சனை அதிகம் ஆம் - அச் சிவ புண்ணியங்களுள்ளும் சிவபூசை சிறந்ததாகும் (என்றும்), சிவ பூசையுள் அடியவர் பூசை அதிகம் என்று அறிந்து - அச் சிவபூசையினும் அடியார் பூசை சிறந்தது என்றும் அறிந்து, அன்பரை அருச்சனை செய்வாய் - அடியார்களைப் பூசிப்பாயாயினை (அதனால்),

என்று என்பதனைப் பிறவிடத்துங் கூட்டுக. ஏனை அறங்களினும் சிவ புண்ணியம் சிவார்ச்சனைகளினும் அடியார் பூசை சிறந்த தென்பதனைப் பின்வரும் திருமந்திரங்களால் அறிக:

''ஆறிடும் வேள்வி யருமறை நூலவர்
கூறிடு மந்தணர் கோடிபே ருண்பதில்
நீறிடுந் தொண்டர் நினைவின் பயனிலை
பேறெனி லோர்பிடி பேறது வாகுமே''

''அகர மாயிர மந்தணர்க் கீயிலென்
சிகர மாயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரிலை யென்பது நிச்சயந் தானே''

''படமாடக் கோயிற் பகவற்கொன் றீயின்
நடமாடக் கோயி னம்பர்க்கங் காகா
நடமாடக் கோயி னம்பர்க்கொன் றீயிற்
படமாடக் கோயிற் பகவற்க தாமே.'' (உக)

உறுதி யெய்தினை யிருமையு முன்பெயர்க் கேற்ப
இறுதி யில்லவன் றிருவுரு வீகையாற் காணப்
பெறுதி யாகநின் மனைக்கிடைப் பித்தளை யீயம்
அறுதி யானபல் கலன்களுங் கொணர்தியேன் றறைந்தார்.

(இ - ள்.) இருமையும் உறுதி எய்தினை - இம்மை மறுமை இரண்டினும் பயன் பெற்றனை; உன் பெயர்க்கு ஏற்ப - பொன்னனையாள் என்னும் உன் பெயருக்குப் பொருந்த, இறுதி இல்லவன் திரு உரு - அழிவில்லாத இறைவன் திருமேனியை, ஈகையால் காணப் பெறுதியாக - பொன்னாற் செய்யப்பெறுவாயாக; நின் மனைக் கிடை - நினது மனையிற் கிடக்கும், பித்தளை ஈயம் அறுதியான பல் கலன்களும் - பித்தளையும் ஈயமும் முடிவாவுள்ள பல உலோகங்களாற் செய்யப்பட்ட கலங்களையும், கொணர்தி என்று அறைந்தார் - கொண்டு வருவாய் என்று கூறினார்.

ஈகை - பொன். தாழ்ந்த உலோகங்களைக் கூறி அவை முடிவாக வுள்ள என ஏனையவற்றைத் தழுவினர். (உஉ

ஈயஞ் செம்பிரும் பிரசித மென்பவும் புணர்ப்பாற்
றோயும் பித்தளை வெண்கலந் தராமுதற் றொடக்கத்
தாயும் பல்வகை யுலோகமுங் கல்லென வலம்பத்
தேயுஞ் சிற்றிடை கொண்டுபோய்ச் சித்தர்முன் வைத்தாள்.

(இ - ள்.) ஈயம் செம்பு இரும்பு இரசிதம் என்பவும் - ஈயமும் செம்பும் இரும்பும் வெள்ளியும் என்பனவும், புணர்ப்பால் தோயும் பித்தளை வெண்கலம் தராமுதல் தொடக்கத்து - ஒன்றோடொன்று கலத்தலால் உண்டாகும் பித்தளையும் வெண்கலமும் தராவு முதலிய தொடக்கத்தை யுடையவும் ஆகிய, ஆயும் பல்வகை உலோகமும் - ஆராயும் பலவகை உலோகங்களையும்; கல் என அலம்ப - கல்லென்று ஒலிக்க, தேயும் சிற்றிடை - தேய்ந்த சிறிய இடையையுடைய பொன்னனையாள், கொண்டு போய்ச் சித்தர்முன் வைத்தாள் - கொண்டுபோய்ச் சித்த மூர்த்திகள் முன்னர் வைத்தனள்.

ஈயம் முதலியன தனியுலோகமும், பித்தளை முதலியன கலப்பு லோகமும் என்றார். கல்லென : ஒலிக்குறிப்பு. சிற்றிடை : அன்மொழித் தொகை. (உ௩)

வைத்த வேறுவே றுலோகமு மழுவுழை கரந்த
சித்த சாமிக ணீற்றினைச் சிதறினர் பாவித்*
தித்தை நீயிரா வெரியிலிட் டெடுக்கினன் பொன்னாம்
அத்தை நாயகன் றிருவுருக் கொள்கென வறைந்தார்.

(இ - ள்.) வைத்த வேறுவேறு உலோகமும் - (அங்ஙனம் கொண்டு வந்து) வைத்த வெவ்வேறு வகையான உலோகங்க ளெல்லாவற்றிலும், மழு உழை கரந்த சித்தசாமிகள், மழுவையும் மானையும் மறைத்து வந்த சித்தமூர்த்திகள், நீற்றினைச் சிதறினர் - திருநீற்றைச் சிதறி, பாவித்து (இவை பொன்னாகவென்று) சிந்தித்து, இத்தை நீ இரா எரியில் இட்டு எடுக்கில் - இவற்றை நீ இரவில் நெருப்பிலிட்டு எடுத்தாயானால், நன் பொன் ஆம் - நல்ல பொன்னாகும்; அத்தை - அப் பொன்னினால், நாயகன் திரு உருக்கொள்க என அறைந்தார் - இறைவன் திருமேனி செய்யக்கடவை எனக் கூறியருளினார்.

உலோகங்களிலும் என ஏழனுருபு விரிக்க. சிதறினர் : முற்றெச்சம். இது அது என்பன அன்சாரியை பெறாமல் இரட்டித்தன. உலோக மென்னும் பொதுமையால் இத்தை என ஒருமையாற் கூறினார். எரியி லிடுதல் - புடமிடுதல். அத்தை - அதனால் : வேற்றுமை மயக்கம். கொள் கென : தொகுத்தல். (உ௪)

மங்கை பாகரை மடந்தையு மிங்குநீர் வதிந்து
கங்குல் வாயமு தருந்தியிக் காரிய முடித்துப்
போங்கு காரிருள் புலருமுன் போமெனப் புகன்றாள்
அங்க யற்கண டனைப்பிரி யாரதற் கிசையார்.

(பா - ம்.) * சிதறினர் பார்த்தே.

(இ - ள்.) மங்கைபாகரை - அங்ஙனங் கூறியருளிய உமை பாகராகிய சிவபெருமானை, மடந்தையும் - பொன்னனையாளும், இங்கு நீர் வதிந்து - இங்கு நீர் தங்கி, கங்குல்வாய் அமுது அருந்தி - இரவிற்றிருவமுதுசெய்து, இக்காரியம் முடித்து - இவ்வினையையும் முடித்து, பொங்கு கார் இருள் புலருமுன் போம் எனப் புகன்றாள் - மிக்க கரிய இருள் விடியுமுன் போவீராக என்று வேண்டினள்; அங்கயற் கணாள்தனைப் பிரியார் - அங்கயற் கண்ணம்மையைப் பிரியாதவராகிய இறைவர், அதற்கு இசையார் - அதற்கு உடன்படாமல்.

என்னுடன் கலந்து செல்லும் என்பதனை இடக்க ரடக்கலாக 'இங்குநீர் வதிந்து......போம்' என்றாளென்க. கங்குல்வாய் அமுதருந்தி என்பதற்கு இரவின்கண் அடிசில் உண்டு என்றும், இரவில் என் வாயி லுண்டாகும் 'வாலெயி றூறிய நீர்' ஆகிய அமுதினை யுண்டு என்றும் சிலேடைப்பொருள் கொள்க. இக்காரியம் - உலோகங்களைப் பொன் னாக்கும் காரியம். நீர் என்னுடன் அணைந்தமையைப் பிறர் அறிதலால் நுமக்குப் பழியுண்டாகாதவாறு செல்லும் என்பாள் 'காரிருள் புலரு முன் போமெனப் புகன்றாள்' என்க. ஒரு காதலியைப் பிரியாதுறையும் இயல்பினர் மற்றொருத்தியைக் கூடுதல் அரிதென்பார் 'அங்கயற் கணாள் தனைப்பிரியார் அதற்கிசையார்' என்றார். இறைவன் அரு ளாகிய சத்தியைப் பிரியாமை யுணர்க. பிரியார் : பெயர். இசையார் : முற்றெச்சம். (உரு)

சிறந்த மாடநீண் மதுரையிற் சித்தர்யா மென்று
மறைந்து போயினார் மறைந்தபின் சித்தராய் வந்தார்
அறைந்த வார்கழ லலம்பிட வெள்ளிமன் றாடி
நிறைந்த பேரொளி யாயுறை நிருத்தரென் றறிந்தாள்.

(இ - ள்.) சிறந்த மாடம் நீள் மதுரையில் சித்தர் யாம் என்று - சிறப்புடைய மாடங்கள் உயர்ந்த மதுரையில் வசிக்குஞ் சித்தர் யாம் என்று கூறி, மறைந்து போயினார் - மறைந்து சென்றனர்; மறைந்தபின் - (அங்ஙனம் அவர்) மறைந்தருளியபின், சித்தராய் வந்தார் - இங்குச் சித்தசாமியாய் வந்தவர், அறைந்த வார் கழல் அலம்பிட - (பலரும்) புகழும் நீண்ட வீரக்கழல் ஒலிக்க, வெள்ளிமன்று ஆடி - வெள்ளியம் பலத்திலே திருக்கூத்தாடி, எங்கும் நிறைந்த பேர் ஒளியாய் உறை நிருத்தர் என்று அறிந்தாள் - எங்கும் நிறைந்த பெரிய ஒளிவடிவாய்த் தங்கிய திருக்கூத்தர் என்று உணர்ந்தனள்.

அறைந்த - ஒலிக்கின்ற என்றுமாம். வந்தவர் வெள்ளிமன்றிலே ஆடி உறையும் நிருத்தரென் றறிந்தாள் என முடிக்க. மதுரையிற் சித்தர் என்று கூறி மறைந்த குறிப்பால் இங்ஙன் அறிந்தாள் என்க. (உசு)

மறைந்து போயினா ரெனச்சிறி தயர்ச்சியு மனத்தில்
நிறைந்த தோர்பெருங் கவற்சியை நீக்கினா ரென்னச்
சிறந்த தோர்பெரு மகிழ்ச்சியு முடையளாய்ச் சித்தர்
அறைந்த வாறுதீப் பெய்தன ளுலோகங்க ளனைத்தும்.

(இ - ள்.) மறைந்து போயினர் எனச் சிறிது அயர்ச்சியும் - மறைந்து போனாரே என்று சிறிது வருத்தமும், மனத்தில் நிறைந்தது ஓர் பெருங் கவற்சியை நீக்கினர் என்ன, மனத்தில் நிறைந்துள்ளதாகிய ஒரு பெரிய கவலையைப் போக்கினாரென்று, சிறந்தது ஓர் பெருமகிழ்ச்சியும் - சிறந்த தாகிய ஒரு பெரிய மகிழ்ச்சியும் உடையளாய் - உடையவளாகி, சித்தர் அறைந்தவாறு - சித்த மூர்த்திகள் கட்டளையிட்ட வண்ணமே, உலோகங்கள் அனைத்தும் தீப் பெய்தனள் - உலோகங்கள் அனைத்தையுந் தீயிற் புடமிட்டனள்.

அயர்ச்சி - சோர்வு. கவற்சி - திருவுருச் சமைத்தற்குப் பொன் னில்லையே என்னும் கவலை. (உஎ)

அழல டைந்தபி னிருண்மல வலிதிரிந் தரன்றாள்
நிழல டைந்தவர் காட்சிபோ னீப்பருங் களங்கங்
கழல வாடக மானதா லதுகொண்டு கனிந்த
மழலை யீர்ஞ்சொலாள் கண்டனள் வடிவிலான் வடிவம்.

(இ - ள்.) அழல் அடைந்த பின் - (உலோகம்) நெருப்பினைச் சேர்ந்த பின், இருள்மல வலிதிரிந்து - ஆணவமல சத்திகெட்டு, அரன் தாள் நிழல் அடைந்தவர் காட்சிபோல்; இறைவனது திருவடி ஞானத்தை அடைந்த வர் சிவமாக விளங்குதல்போல, நீப்பருங் களங்கம் கழல - நீங்குத லில்லாத களிம்பு நீங்க ஆடகம் ஆனது - பொன்னாகியது; அது கொண்டு - அப்பொன்னினால், கனிந்த மழலை ஈர்ஞ்சொலாள் - சுவை முதிர்ந்த தண்ணிய மழலைச் சொற்களையுடைய பொன்னனையாள், வடிவு இலான் வடிவம் கண்டனள் - ஒரு வடிவமுமில்லாத இறைவனுக்கு ஒரு திருவுருவம் சமைத்தனள்.

இருள் மலம் - உயிரின் அறிவை மறைக்கும் இருளாகிய ஆணவ மலம். தாள்நிழல் என்றது ஈண்டுத் திருவடி ஞானத்தை. ஆன்மாத் திருவடி ஞானத்தால் ஆணவமாகிய பசுத்துவம் நீங்கிச் சிவத்தன்மை யெய்தினாற்போல உலோகம் எரியாற் களிம்பு நீங்கிப் பொன்னாகியது என்க. ஆணவம் செம்பிற் களிம்புபோல் அநாதியே உயிரைப்பற்றி யிருப்பதென்பதும், அது ஞானத்தால் நீங்கவே ஆன்மா சிவமாய் விளங்கு மென்பதும் உண்மை நூற் கொள்கை. அழலடைந்த பின் களங்கம் கழல ஆடகமானது எனக் கூட்டுக. ஆல் : அசை. கொண்டு : மூன்றும் வேற்றுமைச் சொல். (உஅ)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

மழவிடை யுடையான் மேனி வனப்பினை நோக்கி யச்சோ
அழகிய பிரானோ வென்னா வள்ளிமுத் தங்கொண் டன்பிற்
பழகிய பிரானை யானாப் பரிவினாற் பதிட்டை செய்து
விழவுதேர் நடாத்திச் சின்னாள் கழிந்தபின் வீடு பெற்றாள்.

(இ - ள்.) மழவிடை உடையான் மேனி வனப்பினை நோக்கி - (அங்ஙனம் சமைக்கப்பெற்ற) இளமையாகிய இடப வூர்தியையுடைய இறைவன் திருமேனியின் அழகினைப் பார்த்து, அழகிய பிரானோ என்னா -

சுந்தரநாதனே இவன் என்று, அள்ளி முத்தம் கொண்டு - (கபோலத்தில்) அள்ளி முத்தமிட்டு, அன்பில் பழகிய பிரானை - தனது மெய்யன்பில் இடைவிடாதிருந்த இறைவனை, ஆனுப் பரிவினுல் பதிட்டை செய்து - நீங்காத அன்பினுலே பிரதிட்டை செய்து, விழவுதேர் நடாத்தி - திரு விழாவுந் தேரும் நடாத்தி, சிலநாள் கழிந்தபின் வீடு பெற்றுள் - சில நாட்கள் சென்றபின் பொன்னனையாள் வீடுபேற்றினை யெய்தினுள்.

அச்சோ : வியப்பிடைச் சொல் ; பிரானே என்பதில் ஓகாரமும் அப் பொருட்டு. பதிட்டை : வடசொற் சிதைவு. தேர் - இரதோற்சவம். (உக)

நையுநுண் ணிடையி னுளந் நாயகன் கபோலத் திட்ட
கையுகிர்க் குறியுஞ் சொன்ன காரணக் குறியுங் கொண்டு
வெய்யவெங் கதிர்கால்* செம்பொன் மேனிவே றுகி நாலாம்
பொய்யுகத் தவர்க்குத் தக்க பொருந்துரு வாகி மன்னும்.

(இ - ள்.) நையும் நுண் இடையினுள் - தேய்ந்த நுண்ணிய இடையையுடைய பொன்னனையாள், அந்நாயகன் கபோலத்து இட்ட கை உகிர்க்குறியும் - அவ்விறைவன் கபோலத்தின்கண் அள்ளுதற்கிட்ட கையிலுள்ள நகக்குறியையும், சொன்ன காரணக் குறியும் கொண்டு - அவள் கூறிய அழகிய பிரான் என்னும் காரணப் பெயரையுங் கொண்டு, வெய்ய வெம் கதிர்கால் செம்பொன் மேனி வேறுஆகி - மிக்க விருப்பந் தருதலையுடைய ஒளிவீசும் சிவந்த பொன்னுலாகிய திருமேனி வேறு பட்டு. நாலாம் பொய் உகத்தவர்க்கு - பொய்மிக்க கலியுகத்தார்க்கு, தக்க பொருந்து உரு ஆகி மன்னும் - தக்க பொருந்திய திருவுருவமாய் நிலைபெறும்.

உலகிற்கு இறைவனும் அவளால் விரும்பப்பட்டவனும் என்பது தோன்ற 'அந்நாயகன்' என்றுர் : வெய்ய வெம் : ஒருபொரு ளிருசொல்' விருப்பத்தைச் செய்யும் ஞாயிற்றின் கதிர் என்னலுமாம். உகிர்க்குறியும் காரணக் குறியும் கொண்டு மன்னும், பொருந்துருவாகி மன்னும் எனத் தனித்தனி கூட்டுக. (௩௦)

ஆகச் செய்யுள் - கஅஅடு.

(பா - ம்.) * கதிர்காய்.

முப்பத்தேழாவது

சோழனை மடுவில் வீட்டிய படலம்

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

மின்னனை யார்பூங் கொன்றை வேணிய ரிரத வாதம்
பொன்னனை யாண்முன் செய்து போந்தது புகன்றே மார்த்தார்
மன்னனை மடுவில் வீட்டி மலரடிக் கன்ப ஞன
தென்னனை யமரிற் காத்த திருவிளை யாடல் சொல்வாம்.

(இ - ள்.) நனைஆர்பூங் கொன்றை மின்வேணியர் - தேன் நிறைந்த கொன்றை மலர் மாலையை யணிந்த மின்போலும் சடையையுடைய சோமசுந்தரக் கடவுள், பொன்னனையாள்முன் இரதவாதம் செய்து போந்தது புகன்றேம் - பொன்னனையாள் முன்னர் இரசவாதஞ் செய்து சென்றருளிய திருவிளையாடலைக் கூறினேம்; ஆர்தார் மன்னனை - (இனி) ஆத்திமாலையை யணிந்த சோழமன்னனை, மடுவில்வீட்டி - மடுவின்கண் வீழ்த்தி, மலர் அடிக்கு அன்பன் ஆன தென்னனை - மலர்போன்ற திருவடிகட்கு அன்பனாகிய சுந்தரபாத சேகர பாண்டியனை, அமரில் காத்த திருவிளையாடல் சொல்வாம்-போரின்கண் காத்தருளிய திருவிளையாடலைக் கூறுவாம்.

மின்போலும் வேணி என்க; சித்தராய் வந்து தோன்றி மறைதலின் மின்னையொத்தவராகிய வேணியர் என்றுரைத்தலுமாம். வீட்டி, வீழ்த்தி என்பதன் மரூஉ. (க)

பொன்னெடுந் தேரி ராச புரந்தரன் புரந்த ராதி
மன்னெடுந் தேவ ரேத்தப் பரனுல கடைந்தா னிப்பால்
அந்நெடுந் தகையோன் மைந்த னடலிரா சேச னென்போன்
இந்நெடுந் தகையோன் மைந்த னிராசகம் பீர னென்போன்.

(இ - ள்) பொன் நெடுந் தேர் இராச புரந்தரன் - பொன்னாலாகிய பெரிய தேரினையுடைய இராசேந்திர பாண்டியன், புரந்தர ஆதி பல் நெடும் தேவர் ஏத்த - இந்திரன் முதலிய பல பெரிய தேவர்களும் புகழ, பரன் உலகு அடைந்தான் - சிவலோகமடைந்தனன்; இப்பால் - பின், அந்நெடுந் தகையோன் மைந்தன் - அப்பெரிய தகுதியை யுடையான் புதல்வன், அடல் இராசேசன் என்போன்-வெற்றியையுடைய இராசேச பாண்டியன் என்று சொல்லப்படுவோன்; இநெடுந் தகையோன் மைந்தன் - இந்த நெடுந்தகையின் மகன், இராச கம்பீரன் என்போன் - இராச கம்பீரனென்று சொல்லப்படுவோன். (உ)

மற்றிவன் குமரன் பாண்டி வங்கிய தீப னன்னோன்
பொற்றிணி தடந்தோண் மைந்தன் புரந்தர சித்தா மன்னோன்
வெற்றிகொள் குமரன் பாண்டி வங்கிய பதாகன் வீரம்
பற்றிய சுந்த ரேச பாதசே கரன வன்சேய்.

(இ - ள்.) இவன் குமரன் - இந்த இராச கம்பீரபாண்டியன் புதல்வன், பாண்டிவங்கிய தீபன் - பாண்டிவங்கிய தீபனென்பவன்; அன்னோன் பொன்திணி தடந்தோள் மைந்தன் - அவனுடைய பொன்னிறம் வாய்ந்த திண்ணிய பெரிய தோள்களை யுடைய புதல்வன், புரந்தரசித்தாம் - புரந்தரசித்து என்பான்; அன்னோன் வெற்றிகொள் குமரன் - அவனுடைய வெற்றி பொருந்திய மகன், பாண்டிவங்கிய பதாகன் - பாண்டிவங்கிய பதாகனென்போன்; அவன் சேய் - அவன் மைந்தன், வீரம்பற்றிய - வீரத்தைப் பொருந்திய, சுந்தரேச பாதசேகரன் - சுந்தரேச பாதசேகர னென்பவன்.

மற்று : அசை. வங்கியம் - வமிசம் (கூ)

பலர்புகழ் சுந்த ரேச பாதசே கரனுந் தென்னன்
அலைபுன லுடுத்த கூட லடிகளுக் கன்ப னாகிக்
கோலைபுணர் வேலால் வெங்கோற் குறும்பெனுங் களைக ளீர்த்து
மலர்தலை யுலக மென்னும் வான்பயிர் வளர்க்கு நாளில்.

(இ - ள்.) பலர்புகழ் சுந்தரேச பாதசேகரனும் தென்னன் - பலரும் புகழ்கின்ற சுந்தரேச பாதசேகரன் என்னும் அப்பாண்டியன், அலை புனல் உடுத்த கூடல் அடிகளுக்கு அன்பனாகி அலையும் நீரையுடைய வையை சூழ்ந்த கூடலின்கண் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளுக்கு அன்பனாகி, கொலைபுணர் வேலால் - கொலைத் தொழில் பொருந்திய வேற்படையால், வெங்கோல் குறும்பு எனும் களைகள் தீர்த்து - கொடுங் கோலையுடைய குறுநில மன்னரென்னுங் களைகளைப் போக்கி, மலர்தலை உலகம் என்னும் வான்பயிர் வளர்க்கு நாளில் - பரந்த இடத்தையுடைய உலகிலுள்ள உயிர்கள் என்னுஞ் சிறந்த பயிரை வளர்க்கு நாளில்.

சுட்டு வருவிக்க. குறும்பு - குறுநில அரசு. உலகம் ஈண்டு உயிர்களை யுணர்த்திற்று. வளர்க்கலுற்றான் அங்ஙனம் வளர்க்கு நாளில் என விரித்துரைக்க (சு)

பத்துமான் றடந்தேர் நூறு பணைக்கைமா நூற்றுப் பத்துத்
தத்துமா னயுத மள்ளர் தானையிவ் வளவே யீட்டி
இத்துணைக் கேற்ப நல்கி யெஞ்சிய பொருள்க ளெல்லாஞ்
சித்துரு வான கூடற் சிவனுக்கே செலுத்து மன்னோ.

(இ - ள்.) மான்தடந் தேர்பத்து - குதிரை பூட்டிய பெரிய தேர் பத்தும், பணைக்கைமாநூறு - பனைபோன்ற துதிக்கையையுடைய யானைகள் நூறும் தத்துமான் நூற்றுப் பத்து - தாவுகின்ற குதிரைகள் ஆயிரமும், மள்ளர் அயுதம் - காலாள் பதினாயிரமு மாகிய, இவ்வளவே

தானை ஈட்டி - இவ்வளவு படைகளையே தொகுத்து வைத்து இத் துணைக்கு ஏற்ப நல்கி - இவ்வளவிற்குப் பொருந்திய பொருள்களைக் கொடுத்து, எஞ்சிய பொருள்கள் எல்லாம் - மிஞ்சிய பொருள் முழுதையும், சித்து உருவான - அறிவே வடிவமாகிய, கூடல் சிவனுக்கே செலுத்தும் - மதுரையில் எழுந்தருளிய சிவபெருமானுக்கே செலவிடுவான்.

அயுதம் - பதினாயிரம். அரசன் பொருளிற் பெரும்பகுதி படையின் பொருட்டுச் செலவிடப்படுதல் வழக்காகவும் இவன் அதனைக் குறைத்து இறைவன் பொருட்டுச் செலவிட்டனன் என்க; இதனால், இவன்பகை வெல்லுதற்கன்றி அரசன் என்பதற்கு ஓர் அறி குறி யாகவே சிறிது படை வைத்திருந்தனன் என்பதும், தனக்கும் தனது நாட்டிற்கும் பகைவரால் நலிவுண்டாகாமல் இறைவன் காத்தருள்வன் எனக் கருதியிருந்தனன் என்பதும் பெறப்படும். ஏற்ப - ஏற்றவளவாக; சிறிதென்றபடி. மன், ஓ : அசைகள். (ரு)

கண்டிகை மகுட மாதிக் கலனிரை குயின்றுந் திங்கண்
மண்டல மிடறுஞ் சென்னிக் கோபுர மாட மாதி
எண்டிசை யிருள்கால் சீப்ப வெரிமணி யிழைத்து வேய்ந்துந்
திண்டிற லுடையா னின்ன திருப்பணி பிறவுஞ் செய்தான்.

(இ-ள்.) கண்டிகை மகுடம் ஆதி - கண்டிகையும் முடியு முதலாகிய, கலன் நிரை குயின்றும் - அணிகல வரிசைகளை இயற்றியும், திங்கள் மண்டலம் இடறும் - சந்திர மண்டலத்தை இடறும்படியோங்கிய, சென்னி - சிகரத்தையுடைய, கோபுரம் மாடம் ஆதி - கோபுரமும் திருமாளிகையு முதலியவற்றை, எண்திசை இருள் கால் சீப்ப - எட்டுத் திக்கிலுமுள்ள இருளைப் போக்குமாறு, எரிமணி இழைத்து வேய்ந்தும் - மாணிக்க மணிகள் இழைத் தியற்றியும், திண்திறல் உடையான் - மிக்க வலியினை யுடைய சுந்தரபாத சேகர பாண்டியன், இன்ன திருப்பணி பிறவும் செய்தான் - இவைபோன்ற பிற திருப்பணிகளையும் செய்தனன்.

கால் சீப்ப - ஓட்ட ; கால் : துணைச்சொல் ; கால் என்பதனை ஒளியாக்கி, ஒளியால் இருளையோட்ட என்றுரைத்தலுமாம். கோபுர மாட மாதி வேய்ந்தும் என்க. எரிமணி - நெருப்புப் போலும் ஒளியுடைய மாணிக்க மணி. (சு)

கல்லுமா றகன்ற மார்பன் கருவியின் சிறுமை நோக்கி
மல்லுமா றாத திண்டோள் வளவர்கோ னொருவன் காலிற்
செல்லுமா யிரம்ப ரிக்கோர் சேவக னென்போன் றானே
வெல்லுமா றெண்ணி வஞ்சி வேய்ந்துகொண் டெழுந்து போந்தான்.

(இ-ள்.) கல்லு மாறு அகன்ற - (திண்மையாலும் பரப்பினாலும்) மலையுடன் மாறுபட்டு அகன்ற, மார்பன் - மார்பினையுடைய பாண்டியனது, கருவியின் சிறுமை நோக்கி - சேனையின் சிறுமையைக் கருதி, மல்லு மாறாத திண்தோள் - மற்போர் இடையறாது செய்யும் திண்ணிய தோளையுடைய, வளவர்கோன் ஒருவன் - சோழர் மன்னன் ஒருவன், காலில் செல்லும் - காற்றைப்போல விரைந்து செல்லும், ஆயிரம் பரிக்கு

ஓர் சேவகன் என்போன் - ஆயிரங் குதிரைகட்கு ஒரு சேவகனென்று சொல்லப் படுவோன், தானே வெல்லுமாறு எண்ணி - தானே வெற்றி பெறுமாறு துணிந்து, வஞ்சிவேய்ந்து கொண்டு எழுந்து போந்தான் - வஞ்சிமாலை சூடிப் புறப்பட்டு வந்தான்.

கல்லு - மலை: உ: சாரியை; கல்லுடன் என விரிக்க. கல்லு மாறு - மலை தோற்கும்படியான என்றுரைத்தலுமாம், கருவி - படை. சேவகனென்போனாகிய ஒருவன் என்க. தானே - வேறு துணையின்றியே. ஆயிரம் பரிக்கோர் சேவகன் என்பது சிறப்பினைய பெயர். (எ)

பல்வகைக் கருவி யீட்டப் படையோடும் பரவை சீறிச்
செல்வது போலக் கன்னித் தீம்புன லாடு நோக்கி
மல்வரை யாத தோளான் வரவறிந் தெழுந்து மேருக்
கல்வரி சிலையான் முன்போய்க் கைதவன் றாழ்ந்து கூறும்.

(இ - ள்.) பல்வகைக் கருவி ஈட்டப் படையொடும் - பல்வகைப் படைக்கலங்களை ஏந்திய சேனையோடும். பரவை சீறிச் செல்வது போல - கடலானது சினந்து செல்வது போல, கன்னித் தீம்புனல் நாடு நோக்கி - இனிய பொருநை யாற்றின் நீரையுடைய கன்னி நாட்டை நோக்கி, மல் வரையாத தோளான் வரவு - மற்போர் நீங்காத தோளையுடைய சோழன் வருதலை, கைதவன் அறிந்து எழுந்து - பாண்டியன் (ஒற்றரால்) அறிந்து எழுந்து. மேருக்கல் வரிசிலையான் முன்போய் - மேருமலையைக் கட்டமைந்த வில்லாகக் கொண்ட இறைவன் திருமுன் சென்று, தாழ்ந்து கூறும் - வணங்கிக் கூறுவான்.

கருவி - படைக்கலப் பொது. செல்வது போல வரவு என்க. மேருக்கல் - மேருமலை. (அ)

பொன்னது வனைய வேணிப் புனிதவிப் பூமி நேமி
உன்னது வலத்தி னாலே யுருட்டுமேன் வலத்தை நோக்கான்
தன்னது வலத்தி னாலென் றானையின் சிறுமை நோக்கி
என்னது தேயங் கோள்வா னெண்ணினன் போலு மன்னோ.

(இ - ள்.) பொன் அனைய வேணிப் புனித - பொன்போன்ற சடையையுடைய புனிதனே, இப்பூமி - இந்நிலவுலகில், உன்னது வலத்தினாலே நேமி உருட்டும் - உன்னுடைய திருவருள் வலியால் ஆணைத் திகிரியை உருட்டுகின்ற, என் வலத்தை நோக்கான் - என் வலிமையைக் கருதாது, என் தானையின் சிறுமை நோக்கி - எனது சேனையின் குறைவை மட்டுங் கருதி, தன்னது வலத்தினால் - தன்னுடைய வலியினால், என்னது தேயம் கொள்வான் - எனது நாட்டைக் கைப்பற்றிக் கொள்வதற்கு, எண்ணினன் போலும். கருதிப் போலும்.

பொன்னது, அது: பகுதிப்பொருள் விகுதி. பூமியில் நேமி யுருட்டும் என்க, வலம் - வலிமை. உன்னது முதலிய மூன்றிலும் னகரம் விரித்தல். நோக்கான்: முற்றெச்சம். கொள்வான்: வான் ஈற்று வினையெச்சம். எண்ணிப்போலும் காவிரி நாடன் மேவினன் என வருஞ் செய்யுளோடு முடியும். மன், ஓ: அசைகள். (கூ)

காவிரி நாடன் சேனைக் கடலிடை யெரிபோன் மூண்டு
மேவின னென்று கூறி மீனவன் வேண்ட வானிற்
பூவிரி வாகை நீயே புனையநாம் பொருது மென்னு
நாவிரி யாத மாற்ற நாயகன் கூறக் கேட்டான்.

(இ-ள்.) காவிரி நாடன் - காவிரி நாட்டையுடைய சோழன், சேனைக் கடல் இடை - சேனையாகிய கடலின் நடுவில், எரிபோல் மூண்டு மேவினன் என்று கூறி - வடவைத் தீப்போல மூண்டுவந்தன னென்று கூறி, மீனவன் வேண்ட - பாண்டியன் குறையிரப்ப, பூவிரி வாகை நீயே புனைய - மலர்விரிந்த வாகைமாலையை நீயே அணியுமாறு, நாம் பொருதும் என்னு - நாம் போர் செய்வோமென்று, நாயகன் - இறைவனாகிய சோமசுந்தரக் கடவுள், நாவிரியாத மாற்றம் - நாவாற் கூறாத மொழி யால், வானில் கூறக் கேட்டான் - விசும்பின்கண் கூறி யருளப் பாண்டியன் கேட்டனன்.

சேனையைக் கடலென்றமையால் எரி என்றது வடவைத் தீயாயிற்று. பூ விரி - பொலிவு மிக்க என்றுமாம். நாவிரியாத மாற்றம் - அசரீரி மொழி. வானிற் கூறவென இயைக்க. (௧0)

எல்லியங் கமலச் செவ்வி யெனமுக மலர்ந்து நாதன்
அல்லியங் கமலச் செந்தா ளகந்தழீஇப் புறம்பு போந்து
பல்லியந் துவைப்பத் தானைப் பரவையுட் பரிமா வூர்ந்து
கோல்லியம் பொருப்பன் சேனைக் கடலெதிர் குறுகி னானே.

(இ-ள்.) எல்லி அம் கமலச் செவ்வி என - சூரியனைக் கண்ட அழகிய தாமரை மலரின் பொலிவைப் போல, முகமலர்ந்து - முக மலர்ச்சி யுடையவனாய், நாதன் அல்லி அம் கமலச் செந்தாள் - இறைவ னுடைய அகவிதழையுடைய அழகிய தாமரை மலர்போன்ற சிவந்த திருவடிகளை, அகம்தழீஇ - உள்ளத்தில் இருத்தி, புறம்பு போந்து - வெளியே வந்து, பல் இயம் துவைப்ப - பல வாத்தியங்களும் ஒலிக்க, தானைப் பரவையுள் பரிமா ஊர்ந்து - சேனையாகிய கடலினுள்ளே குதிரையைச் செலுத்தி, கொல்லி அம் பொருப்பன் - அழகிய கொல்லி மலையையுடைய சோழனது, சேனைக்கடல் எதிர் குறுகினான் - சேனைக் கடலின் எதிரே சென்றனன்.

எல்லி - எல்லையுடையது, ஞாயிறு; எல் - ஒளி. எல்லி - பகலு மாம். தழீஇ: சொல்லிசையளபெடை. கொல்லி மலை சேரர்க்குரிய தாயினும் ஒரோருகால் சோழரால் வென்று அடிப்படுத்தப் பெற்ற தென்று கருதிச் சோழனைக் கொல்லியம் பொருப்பன் என்றார் போலும். அதனை மூவேந்தர்க்கும் உரியதாகக் கூறிய செய்யுட்களும் உண்டு கேட்டவன் மலர்ந்து போந்து ஊர்ந்து குறுகினான் என வினை முடிக்க. (௧௧)

பண்ணுத லிசைவண் டார்க்கும் பசுந்தொடைச் செழியன் றானை
எண்ணுத லிலவாஞ் சென்னி யிரும்படைக் கடனே ராருய்
நண்ணுத லெனப்போய்ப் பொன்னி நாடவன் றமர்கட் கெல்லாங்
கண்ணுத லருளா லங்கோர் கடலெனத் தோன்றிற் றம்மா.

(இ - ள்.) பண்நுதல் இசை வண்டு ஆர்க்கும் - பண்ணேடமைந்த இசையினையுடைய வண்டுகள் ஒலிக்கும், பசுந்தொடைச் செழியன் தானை - பசிய மாலையையணிந்த பாண்டியன் சேனையானது, எண்ணுதல் இலவாம் சென்னி இரும்படைக் கடல் நேர் - எண்ணுதற்கு இயலாத சோழனது பெரிய சேனைக்கடலுக்கு நேரே, ஆருய் நண்ணுதல் எனப் போய் - ஓர் ஆறு செல்லுதல் போலச் சென்று, பொன்னி நாடவன் தமர்கட்கு எல்லாம் - காவிரி நாடனுகிய சோழனது போர் வீரர்கள் எல்லார்க்கும், கண்ணுதல் அருளால் - சோமசுந்தரக்கடவுளின் திருவருளினுலே, ஓர் கடல் என அங்கு தோன்றிற்று - ஒரு கடல்போலப் போர்க்களத்திலே தோன்றியது

பண்ணுதலையுடைய இசை யென்றுமாம். பசுமை - வாடாமை. இலவாம் படைகளாகிய கடல் என்க. ஆறு நண்ணுதல் எனப் பாடங் கொள்ளுதல் நேரிது. தமர் – போர் வீரர் ஆறு போலச் சிறிதாய்ச் சென்று கடல் போலப் பெரிதாய்த் தோன்றிற்று என்றூர். அம்மா: வியப்பிடைச்சொல். (கஉ)

கடலென வருமா வூர்ந்து கைதவன் சேனை முன்போய்
அடலணி மேருக் கோட்டி யாலவாய் நெடுநாண் பூட்டி
மடலவிழ் துழாய்க்கோ னட்டி வாயெரி புரத்தி லூட்டி
மிடலணி கூடற் கோமான் வேடுரு வாகி நின்றான்.

(இ - ள்.) அடல் அணி மேரு கோட்டி - வலிமை மிக்க மேரு மலையாகிய வில்லை வளைத்து, ஆலவாய் நெடுநாண் பூட்டி - வாசுகியாகிய நீண்ட நாணைப் பூட்டி, மடல் அவிழ் துழாய்க்கோன் நாட்டி - இதழ் விரிந்த துழாய் மாலை யணிந்த திருமாலாகிய வாளியை ஏறிட்டு, வாய் எரி புரத்தில் ஊட்டி - நகையாலாகிய நெருப்பினை முப்புரங்களில் மூள்வித்து, மிடல் அணி கூடல் கோமான் - வெற்றி பூண்ட கூடற்றலைவனுகிய சோமசுந்தரக்கடவுள், வேடு உருவாகி - வேட்டுவ வடிவந்தாங்கி, கடல் என வருமா ஊர்ந்து -(புடை பெயர்ந்த) கடல்போல விரைந்துவரும் குதிரையைச் செலுத்தி, கைதவன் சேனை முன்போய் நின்றான் - பாண்டியனது சேனையின் முன்னணியிற்சென்று நின்றான்.

கடல் - திரையுமாம். ஊர்ந்த என்று பாடமிருப்பின், மாவூர்ந்த கைதவனது கடலென வரும் சேனை முன்போய் என்றியைத் துரைத்தல் பொருந்தும். ஆலவாய் - பாம்பு; ஆலத்தை வாயிலுடையது என அன் மொழித்தொகை. கோனுகிய கோல் என இரட்டுற மொழிதலாகக் கொள்க. அவ்வம்பின் வாயிலிருந்த அக்கினி யென்றுமாம். ஊட்டி அணிந்த கோமான் என்க. (கங)

கங்குல்வாய்த் திங்கள போலக் காதணி தந்தத் தோடுங்
கங்குல்வாய் முளைத்த மீன்போற் கதிர்முத்த வடமுங் குஞ்சிக்
கங்குல்வாய்ச் சிலைபோல் வெட்சிக் கண்ணிசூழ் கலாபச் சூட்டுங்
கங்குல்வாய் கிழிக்குந் தந்தக் கடகமு மின்னுக் கால.

(இ - ள்.) கங்குல்வாய்த் திங்கள்போல - இரவில் நிலவிய சந்திரனைப் போல விளங்கும், காது அணி தந்தத் தோடும் - காதின்கண் அணிந்த தந்தத்தாலாகிய தோடும், கங்குல்வாய் முளைத்த மீன்போல் - இரவிற் றோன்றிய நாண்மீனைப்போல, கதிர் முத்த வடமும் - ஒளி வீசும் முத்து மாலையும், கங்குல் வாய்ச் சிலைபோல் - இரவின் கண் தோன்றிய இந்திர வில்லைப்போல, குஞ்சி வெட்சிக் கண்ணி சூழ்கலாபச் சூட்டும் - சிகையி லணிந்த வெட்சி மாலையுடன் சூழ்ந்த மயிற் பீலியாலாகிய நுதலணி மாலையும், கங்குல் வாய் கிழிக்கும் தந்தக் கடகமும் - இரவின் வாயினைக் கிழித்து விளங்கும் தந்த வளையும், மின்னுக்கால - ஒளி வீசா நிற்க.

வடிவு முழுதும் கருமையாயிருந்தமையின் கங்குலை உவமை கூறினர். சூட்டு - நுதலில் அணியும் மாலை. இருளை யோட்டு மென்பதனை இரவின் வாயைக் கிழிக்கும் என்றார். (கச)

அண்டத்தா ரமரர் நாம மன்றுதொட் டடையத் தோற்று
கண்டத்தா ரிருளே யெங்குங் கலந்தெனக் கறுத்த மேனி
கொண்டத்தா ராரி னற்கோர் கூற்றெனக் கொல்வே லேந்திச்
சண்டத்தீ யென்ன நின்றான் காவிரித் தலைவன் காணா.

(இ - ள்.) அண்டத்தார் - தேவர்கள், அன்று தொட்டு - (நஞ்சுண்ட) அந்நாள் தொடங்கி, அமரர் நாமம் அடைய - அமரர் என்னும் பெயரைப் பெறும்படி, கண்டத்துத் தோற்று ஆர் இருளே - திருமிடற்றிலே தோன்றிய நஞ்சாகிய மிக்க இருளே, எங்கும் கலந்தென - உடல் முழுதுங் கலந்தாற்போல, கறுத்தமேனி கொண்டு - கறுத்த திருமேனி கொண்டு, அ ஆர் தாரினற்கு - அந்த ஆத்தி மாலையையணிந்த சோழனுக்கு, ஓர் கூற்றென - ஒரு கூற்றுவனைப்போல, கொல்வேல் ஏந்தி - கொல்லுதற் றொழிலையுடைய வேற்படையினை ஏந்தி, சண்டத்தீ என்ன நின்றான் - ஊழித்தீப்போல நின்றருளினான்; காவிரித் தலைவன் காணா - (அதனைக்) காவிரித் தலைவனாகிய சோழன் கண்டு.

அமரர் என்னுஞ் சொல்லுக்கு மரணமில்லாதவர் என்பது பொருள். ஆலாலம் உண்டாய போழ்து இறைவன் அதனை உண்டருளி வானோரனைவரும் மரித்தொழியாது காத்தமையின் 'அண்டத்தார் அமரர் நாமம் அடையத் தோற்று' என்றார். அண்டத்திலே பொருந்திய தேவர்கள் அன்று தொட்டு அச்சமடையும்படி தோன்றிய என்றுமாம்: இதற்கு, அச்சப்பொருட்டாய நாம் என்னும் உரிச்சொல் அம்முப் பெற்ற தெனக்கொள்க. அஞ்சுதல் - இறைவனது முதன்மையும் தமது சிறுமையும் உணர்ந்து ஒடுங்குதல். கலந்தென; விகாரம். ஆர்த்தார்

என மாறுக. வேடுருவாகி நின்றவன் மின்னுக்கால மேனிகொண்டு வேல் ஏந்தி நின்றான் என்க. (௧௫)

சீறியா யிரம்ப ரிக்கோர் சேவகன் வந்தே னென்னக்
கூறினா னெதிர்த்தான் வெள்ளிக் குன்றவன் பத்து நூறு
மாறிலாப் பரிக்கு மட்டோர் வயவனீ யன்றோ வெண்ணில்
ஈறிலாப் பரிக்கு மோற்றைச் சேவகன் யானே யென்றான்.

(இ - ள்.) சீறி - சினந்து, ஆயிரம் பரிக்கு ஓர் சேவகன் வந்தேன் என்ன - ஆயிரம் குதிரைகட்கு ஒரு வீரனாகிய யான் வந்தேனென்று, கூறினான் எதிர்த்தான் - சொல்லி எதிர்த்தான்; வெள்ளிக்குன்றன் - வெள்ளி மலையையுடைய இறைவன், நீ மாறு இலா பத்து நூறு பரிக்கு மட்டு ஓர் வயவன் அன்றோ - நீ பகைமையில்லாத ஆயிரங் குதிரை களுக்கு மட்டும் ஒரு சேவகன் அல்லவா, எண்ணில் ஈறு இலா பரிக்கும் - எண்ணில் முடிவு பெறாத குதிரைகளுக்கும், ஒற்றைச் சேவகன் யானே என்றான் - ஒற்றைச் சேவகன் யானே என்று கூறியருளினான்.

சேவகன் எனத் தன்மையிற் படர்க்கை வந்தது. கூறினான்: முற்றெச்சம். நீ ஆயிரம் பரிக்கோர் வீரனென இறுமாந்தாய், யானோ எண்ணில்லாத பரிக்கோர் வீரனாவேன் என இறைவனாகிய வேடுவன் தன்னைப் புகழ்ந்து கூறினன் என்க. (௧௬)

என்றசொல் லிடியே றென்ன விருசெவி துளைப்பக் கேட்டு
நின்றவ னெதிரே மின்னு நீட்டிச்சென் மேகம் போலச்
சென்றுவேல் வலந்தி ரித்துச் செயிர்த்தன னதிர்த்துச் சீற
வன்றிற னூற்றுப் பத்து வயப்பரிக் கோருவ னஞ்சா.

(இ - ள்.) என்ற சொல் இடி ஏறு என்ன - என்று இறைவனாகிய வேடன் கூறிய சொல்லானது இடியேற்றின் ஒலியைப்போல, இரு செவி துளைப்ப - இரண்டு காதுகளையுந் துளைக்க, கேட்டு நின்றவன் எதிரே - கேட்டு நின்ற சோழனெதிரே, மின்னு நீட்டிச்செல் மேகம் போலச் சென்று - மின்னலை நீட்டிச் செல்லும் முகில் போலச் சென்று, வேல் வலம் திரித்துச் செயிர்த்தனன் - வேற்படையை வலமாகச் சுழற்றிச் சினந்து, அதிர்த்துச் சீற - முழங்கிச் சீற, வன் திறல் நூற்றுப் பத்து வயப் பரிக்கு ஒருவன் அஞ்சா-மிக்க வலிமையுடைய ஆயிரங் குதிரைகட்கு ஒரு சேவகனாகிய சோழன் பயந்து.

நின்றனன், அங்ஙனம் நின்றவனெதிரே என விரித்துரைக்க. செயிர்த்தனன்: முற்றெச்சம். வன்றிறல்: ஒரு பொருளிருசொல். (௧௭)

யாமினி யிந்த வேலா லிறப்பதற் கைய மில்லை
யாமென வகன்றான் மாவோ டாயிரம் பரிக்கோர் மன்னன்
காமனை வெகுண்ட வேடன் மறைந்தனன் கங்குற் சோதி
மாமக னதுகண் டோடும் வளவனைத் துரத்திச் சென்றான்.

(இ - ள்.) யாம் இனி இந்த வேலால் இறப்பதற்கு - இனி யாம் இந்த வேற்படையால் மாளுவதற்கு, ஐயம் இல்லையாம் என - ஐயுறவு இல்லை என்று கருதி, ஆயிரம் பரிக்கு ஓர் மன்னன் மாவோடு அகன்றான் - ஆயிரங் குதிரைகளுக்கு ஒரு சேவகனாகிய சோழன் குதிரையோடு புறங் கொடுத்து ஓடினான்; காமனை வெகுண்ட வேடன் மறைந்தனன்-மன்மதனை எரித்த வேடனாகிய இறைவன் மறைந்தருளினான்; கங்குல் சோதி மாமகன் - இரவில் விளங்கும் சந்திரன், மரபில் வந்த சுந்தரபாத சேகர பாண்டியன், அதுகண்டு ஓடும் வளவனைத் துரத்திச் சென்றான் - அதனைக் கண்டு ஓடுகின்ற சோழனைத் துரத்திச் சென்றான்.

கங்குற்சோதி - இரவில் ஒளிவிடும் திங்கள். மா - பெருமை. மகன்- வழித்தோன்றல். (௧அ)

துரந்திடு மளவி லோடுஞ் சோழனுந் திரும்பி நோக்கிக்
கருந்தடங் கண்ணி பாகங் கரந்தவே டுவனைக் காணான்
வருந்துய ரச்சந் தீர்ந்து மதுரையி னளவும் பற்றிப்
புரந்தரற் புறங்கண் டானைப் புறங்கண்டு முடுக்கிப் போனான்.

(இ - ள்.) துரந்திடும் அளவில் - அங்ஙனம் துரத்திச் செல்லுமளவில், சோழனும் திரும்பி நோக்கி - சோழன் திரும்பிப்பார்த்து, கருந்தடம் கண்ணி பாகம் கரந்த - கரிய நீண்ட கண்களையுடைய உமையுடன் கூடிய பாகத்தை மறைத்துவந்த, வேடுவனைக் காணான் - வேடனைக் காணாமை யால், வரும் துயர் அச்சம் தீர்ந்து-உண்டாகிய துன்பமும் அச்சமும் நீங்கி, புரந்தரன் புறங்கண்டானை - இந்திரனைப் புறங்கண்ட பாண்டியனை, மதுரையின் அளவும் பற்றி - மதுரைவரையிலும் தொடர்ந்து, புறம் கண்டு முடுக்கிப்போனான் - முதுகு கண்டு முடுக்கிச் சென்றனன்.

காணாமையால் தீர்ந்து முடுக்கிப் போனான் என்க. முன்னோன் புரிந்த வீரச்செயலை அவன்மீது ஏற்றிப் 'புரந்தரற் புறங்கண் டானை' என்றார். (௧௯)

காலொன்று முடுக்கப் பட்ட கனலொன்று நடந்தா லொத்து
வேலொன்று தடக்கை நேரி வேந்தனான் முடுக்குண் டோடுஞ்
சேலொன்று கொடியி னான்றன் செழுநகர் விரைந்து செல்வான்
மாலொன்று களிற்றி னங்கோர் மதுமலர்க் கிடங்கில் வீழ்ந்தான்.

(இ - ள்.) கால் ஒன்று முடுக்கப்பட்ட - காற்றொன்றினாலே துரத்தப்பட்ட, கனல் ஒன்று நடந்தால் ஒத்து - நெருப்பு ஒன்று நடந் தாற்போல, வேல் ஒன்று தடக்கை நேரி வேந்தனால் முடுக்குண்டு - வேற்படை ஏந்திய நீண்ட கையையுடைய நேரி மலையையுடைய சோழ மன்னனால் துரத்தப்பட்டு, ஓடும் சேல் ஒன்று கொடியினான் - ஓடுகின்ற கயல் எழுதிய கொடியையுடைய பாண்டியன், தன் செழுநகர் விரைந்து செல்வான் - வளம் பொருந்திய தனது நகர்க்கண் விரைந்து செல்லு கின்றவன், மால் ஒன்று களிற்றின் - மதமயக்கமுடைய யானைபோல,

ஆங்கு ஓர் மதுமலர்க்கிடங்கில் வீழ்ந்தான் - அங்குள்ள தேன் நிறைந்த பூக்களையுடைய ஓர் அகழியில் வீழ்ந்தனன்.

காலொன்று என்புழி ஒன்று எண்ணுப்பெயர் ; ஏனைய பெயரெச்ச முதனிலை. சோழனைக் காற்றோடும் பாண்டியனைக் கனலோடும் ஒப்பித்தார். (உ0)

மீனவன் மதுரை மூதூர் மேற்றிசைக் கிடங்கில் வீழ
மானவெம் புரவி யோடும் வளவனும் வீழ்ந்தான் கூடற்
கோனவ னருளால் வானோர் குரைகடல் கடையத் தோன்றும்
ஆனையி னெழுந்தான் றென்னன் கோழிவேந் தாழ்ந்து போனான்.

(இ - ள்.) மீனவன் மதுரை மூதூர் மேல் திசைக்கிடங்கில் வீழ - பாண்டியன் மதுரையாகிய பழைய நகரின் மேற்புறத்துள்ள அகழியில் விழ, மானவெம் புரவியோடும் வளவனும் வீழ்ந்தான் - பெருமையை யுடைய கொடிய குதிரையோடு சோழனும் விழுந்தனன் ; கூடல் கோனவன் அருளால் - மதுரைப் பெருமானாகிய சோமசுந்தரக்கடவுளின் திருவருளால், வானோர் குரைகடல் கடையத் தோன்றும் ஆனையின் - தேவர்கள் ஒலிக்கின்ற பாற்கடலைக் கடையத் தோன்றிய வெள்ளானை போல, தென்னன் எழுந்தான் - பாண்டியன் எழுந்தான் ; கோழிவேந்து ஆழ்ந்து போனான் - உறையூர் வேந்தனாகிய சோழன் ஆழ்ந்திறந்தனன்.

விரைந்து துரந்து சென்றானாகலின் அவன் வீழ்ந்தவுடன் இவனும் வீழ்ந்தான். அருளால் எழுந்தான் என்றியையும். இறைவனருளால் எழுந்தான் எனவே விழுந்ததும் அவனருளால் என்பது பெற்றாம். மேற்செய்யுளில் மாலொன்று களிற்றின் வீழ்ந்தான் எனக் கூறி, இதில், ஆனையின் எழுந்தான் என்ற நயம் பாராட்டற்குரியது. இதனால் அகழி யின் பெருமையும் கூறியவாறாயிற்று. கோழி - உறையூர். ஒரு கோழி யானையைப் போர்வென்ற இடத்தில் இயற்றப்பட்டதாகலின் இப் பெயரெய்திற்று ;

> "முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய
> புறஞ்சிறை வாரணம் புக்கனர்"

எனச் சிலப்பதிகாரம் கூறுதலுங் காண்க. (உக)

[எழுசீரடி யாசிரிய விருத்தம்]

பிலத்தள வாழ்ந்த கடிமலர்க் கிடங்கிற் பெருந்தகை யவிந்தவன் றுகில்பூண்
கலத்தரும் பேழை படைபரி மான்றேர் கரியெலாங் கவர்ந்துதண் பொருநைத்
தலத்தவன் றங்க ளுயக ரணியத் தக்கதூ சணிகல னல்கி
நலத்தகை யவர்பே ரருட்கடற் கன்பு நதியெனப் பெருகிவீற் றிருந்தான்.

(இ - ள்.) தண்பொருநைத் தலத்தவன் பெருந்தகை - தண்ணிய பொருநை சூழ்ந்த நாட்டையுடையவனாகிய பெருந் தகுதியுடைய

சுந்தரபாத சேகர பாண்டியன், பிலத்து அளவு ஆழ்ந்த கடிமலர் கிடங்கில் அவிந்தவன் - பாதலம்வரை ஆழ்ந்துள்ள மணமிக்க மலர்களையுடைய அகழியில் வீழ்ந்து இறந்த சோழனுடைய, துகில் பூண் - ஆடையும் அணியும், கலத்து அரும் பேழை - அரிய அணிகலப் பெட்டியும், படைபரிமான் தேர் கரி எலாம் கவர்ந்து - காலாளும் குதிரையும் தேரும் யானையும் ஆகிய இவையெல்லாவற்றையும் கொண்டு, தங்கள் நாயகர் அணியத் தக்க தூசு அணிகலன் நல்கி - தங்கள் தலைவராகிய சோமசுந்தரக் கடவுள் அணியத்தக்க ஆடைகளையும் அணிகலங்களையும் தந்து, நலத்தகையவர் பேர் அருள் கடற்கு - உயிர்களுக்கு நன்மையே புரியுந் தகுதியையுடைய அவ் விறைவரது பேரருளாய கடலுக்கு, அன்பு நதி எனப் பெருகி வீற்றிருந்தான் - தனது அன்பானது ஆறுபோலப் பெருக வீற்றிருந்தான்.

பெருந்தகை என்பதனைப் பிரித்துக் கூட்டுக. கடி - காவலுமாம். அன்பு அன்பினாலே திருவருளைத் தலைக்கூட வேண்டுதலின் 'அருட் கடற்கு அன்பு நதியெனப் பெருகி' என்றார். பெருகி - பெருக. (உஉ)

ஆகச் செய்யுள் - ககூ0எ.

முப்பத்தெட்டாவது

உலவாக்கோட்டை யருளிய படலம்

[எழுசீரடி யாசிரிய விருத்தம்]

மின்ப னிக்கதிர் வேணி வானவன் மீன வன்றனை மானவேல்
முன்ப னிக்க வலந்தி ரித்து முடுக்கி நேரி யடுக்கலான்
பின்ப னிக்கம லத்த டத்திற விட்ட வாறிது பெருமைசால்
அன்ப னுக்குல வாத கோட்டை யளித்த வாறு கிளத்துவாம்.

(இ - ள்.) பனிக் கதிர் மின் வேணி வானவன் - குளிர்ச்சி பொருந்திய கிரணங்களையுடைய சந்திரனை யணிந்த மின்போலும் சடையையுடைய சோமசுந்தரக் கடவுள், மீனவன்தனை - பாண்டியன் பொருட்டு, மானவேல் - பெருமை பொருந்திய வேற்படையினை, முன் - எதிரே, பனிக்க - நடுங்குமாறு, வலம் திரித்து - வலமாகச் சுழற்றி, நேரி அடுக்கலான் - நேரி மலையையுடைய சோழனை, முடுக்கி - துரத்தி, பின் - பின்பு, பனிக்கமலத் தடத்து இறவிட்டவாறு இது - (அவன்) குளிர்ந்த தாமரைகளையுடைய அகழியில் வீழ்ந்திறக்கச் செய்த திருவிளையாடல் இதுவாகும்; பெருமை சால் அன்பனுக்கு - பெருமை நிறைந்த அடியார்க்கு நல்லானுக்கு, உலவாத கோட்டை அளித்தவாறு - குறையாத அரிசிக் கோட்டையினை (அக் கடவுள்) அளித்தருளிய திருவிளையாடலை, கிளத்துவாம் - (இனிக்) கூறுவாம்.

மின்வேணி எனக் கூட்டுக. பனிக்கதிர் - திங்கள். தன் : சாரியை. மீனவனை - மீனவனுக்கு : வேற்றுமை மயக்கம். முன் முடுக்கிப் பின் இறவிட்டவாறு என்றுமாம். (க)

[கலிநிலைத்துறை]

பொடியார்க்கு மேனிப் புனிதர்க்குப் புனித வேற்றுக்
கொடியார்க்கு வேதக் குடுமிக்கிணை யான கூடற்
படியார்க்குஞ் சீர்த்திப் பதியேருழ வோரு ணல்லான்
அடியார்க்கு நல்லா னறத்திற்கும் புகழ்க்கு நல்லான்.

(இ - ள்.) பொடி ஆர்க்கும் மேனிப் புனிதர்க்கு - திருநீறு நிறைந்த திருமேனியையுடைய தூயவரும், புனித ஏற்றுக் கொடியார்க்கு - வெள்ளிய இடபக் கொடியை யுடையவரும் ஆகிய சோமசுந்தரக் கடவுளுக்கு, வேதக் குடுமிக்கு இணையான - வேத சிகைக்குச் சமமான, படி ஆர்க்கும் சீர்த்தி கூடற்பதி - புவிமுழுதும் நிறைந்த கீர்த்தியையுடைய மதுரைப் பதியிலே, ஏர் உழவோருள் நல்லான் - ஏரான் உழுதலைச் செய்யும் வேளாளரில் சிறந்தவன் ஒருவன், அடி

யார்க்கு நல்லான் - அடியார்க்கு நல்லான் என்னும் பெயரினன்; அறத்திற்கும் புகழ்க்கும் நல்லான் - அறத்திற்கும் (அதனுலாம்) புகழுக்கும் நல்லனுயுள்ளான்.

புனிதர்க்கு ஏற்றுக் கொடியார்க்கு என ஒரு பொருண்மேற் பல பெயர் வந்தன. வேதக் குடுமியானது எங்ஙனம் இறைவர் வசிக்கும் தூய இடமாமோ அங்ஙனமே கூடற்பதியுமா மென்ருர். சீர்த்தியையுடைய கூடற்பதி என இயைக்க. படியார்க்கும் என்பதில் கு: சாரியை. கூடலின் புகழ் புவிமுழுதும் நிறைதல்,

''நிலனுவிற் றரிதரூஉ நீண்மாடக் கூடலார்''

எனக் கலித்தொகை யுள்ளும் குறிக்கப்பட்டது. அடியார்க்கு நல்லான் என்பதனைக் காரணப்பெயராகக் கொண்டவன் என்க. அடியார்க்கு நல்லார் என்பது இறைவன் றிருப் பெயருமாம்;

''கருவூரு ளானிலை, அண்ணலா ரடியார்க்கு நல்லரே''

என்னும் ஆளுடைய பிள்ளையரர் திருவாக்கும் காண்க. (உ)

அனையா னறத்திற் கருள்போன்றவ ளான்ற கற்பின்
மனையாண் மரபின் வழுவாத தரும சீலை
எனையாரு நன்கு மதிக்க விருக்கு நீராள்
தனையாள் பதிக்குக் கதிக்குத்தனிச் சார்பு போல்வாள்.

(இ - ள்.) அனையான் அறத்திற்கு அருள் போன்றவள் - அவன் செய்யும் அறத்திற்கு அருள் போன்றவளாகிய, ஆன்ற கற்பின் மனையாள் - நிறைந்த கற்பினையுடைய மனைவி, மரபின் வழுவாத தருமசீலை - மரபிற்குரிய ஒழுக்கத்தினின்றுந் தவருத தருமசீலை என்பவள்; எனையாரும் நன்கு மதிக்க இருக்கும் நீராள் - (அவள்) தன் கணவனே யன்றி ஏனை யாவரும் நன்கு மதிக்குமாறு மனையறம் புரிந்திருக்குந் தன்மையை யுடையவள், தனை ஆள்பதிக்குக் கதிக்குத் தனிச் சார்பு போல்வாள் - தன்னை ஆளும் நாயகனுக்கு வீடெய்துதற்குரிய ஒப்பற்ற பற்றுக்கோடு போல்பவள்.

அறத்திற்குச் சிறந்த துணையாவது அருள் ஆகலின் 'அறத்திற்கு அருள் போன்றவள்' என்ருர். எனையாரும் - யாவரும்; 'வாழுமூர் தற் புகழும் மாண்கற்பின் இல்லாள்' என்றவாறு. வீடெய்துதற்குச் சிறந்த துணையாகிய மெய்யுணர்வு போல்வாளென்பார் 'கதிக்குத் தனிச்சார்பு போல்வாள்' என்ருர். (கூ)

பல்லே ருழவின் ரொழில்பூண்டு பயன்கள் கொள்வான்
வில்லே ருழவன் கடன்கொண்டு மிகுந்த வெல்லாம்
இல்லே ருழத்தி மடைச்செல்வ மியற்றி யேந்த
அல்லேறு கண்ட னடியாரை யருத்து நீரான்.

(இ - ள்.) பல் ஏர் உழவின் தொழில் பூண்டு - பல ஏர்களால் உழுதற்ரொழிலை மேற்கொண்டு, பயன்கள் கொள்வான் - மிக்க ஊதி

யத்தைப் பெறும் அடியார்க்கு நல்லான், வில் ஏர் உழவன் கடன் கொண்டு - அரசன் ஆறிலொன்றாகிய தனது கடமையைக் கொள்ள, மிகுந்த எல்லாம் - எஞ்சிய பொருளனைத்தையும், இல் ஏர் உழத்தி - மனைக்கிழத்தியாகிய தரும சீலை, மடைச் செல்வம் இயற்றி ஏந்த - அடிசில் அமைத்து அளிக்க, அல் ஏறு கண்டன் அடியாரை அருத்தும் நீரான் - இருள் நிறைந்த திரு மிடற்றினையுடைய இறைவன் அடியார்களை உண்பிக்குந் தன்மையை யுடையான்.

உழவின், இன் : சாரியை அல்வழிக்கண் வந்தது. வில்லேருழவன் - வில்லாகிய ஏரால் மாற்றாரை வெல்லுதலாகிய உழவினைச் செய்வோன் ; அரசன். இல்லே ருழத்தி - இல்லிற் செய்யும் விருந்தோம்புதல் முதலியவற்றால் அறப்பயன் விளைப்பவள் : மனையாள். எல்லாத் தொழில்களையும் உழவாக உருவகித்துக் கூறுதல் வழக்கு. கொண்டு - கொள்ள. மடை - சோறு ; அதனைச் செல்வமெனச் சிறப்பித்துக் கூறினார். (௪)

தொகைமாண்ட தொண்டர் சுவையாறு தழீஇய நான்கு
வகைமாண்ட மாறு படுமுண்டி மறுத்த ருந்த
நகைமாண்ட வன்பின் றலையாயவ னல்க நல்கப்
பகைமாண்ட செல்வ மணற்கேணியிற் பல்கு நாளின்.

(இ - ள்.) தொகை மாண்ட தொண்டர் - அளவிறந்த அடியார்கள், அறுசுவை தழீஇய - அறுவகைச் சுவையும் பொருந்திய, நான்கு வகை மாண்ட மாறுபடும் உண்டி - நான்கு வகையால் மாட்சிமைப்பட்ட (தம்முள்) மறுதலையாய உணவுகளை, மறுத்து அருந்த - மறுத்து உண்ணும்படி, நகை மாண்ட அன்பின் தலையாயவன் நல்க நல்க - மகிழ்ச்சி மிக்க தலையன்பினையுடைய அடியார்க்கு நல்லான் கொடுக்குந்தோறும், பகை மாண்ட செல்வம் - பகையில்லாத செல்வமானது, மணல் கேணியில் பல்கும் நாளில் - மணற் கேணியில் (இறைக்குந் தோறும்) நீர் சுரத்தல் போல இடையறாது பெருகு நாளில்.

மாண் என்பது மிகுதிப் பொருள் தருதலை 'ஞாலத்தின் மாணப் பெரிது' என்பதனால் அறிக. ஆறு சுவை - தித்திப்பு, புளிப்பு, கார்ப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்பன. நால்வகை உண்டி - உண்பன. தின்பன, நக்குவன, பருகுவன என்பன. மாறுபடுதலாவது வெவ்வேறு வகையினதாதல். மறுத்தருந்தல் - போதுமென்று தடுத்துண்ணுதல் ; மிகுதியாக இடுதலின் மறுப்பரென்க ;

''மறு சிகை நீக்கி யுண்டாரும்''

என்பது காண்க. இச் செல்வம் யாவர்க்கும் களிப்பை விளைத்தலின் 'பகைமாண்ட செல்வம்' என்றார். மாறுபடுவ தொன்றில்லாத செல்வம் என்றுமாம். (௫)

இந்நீர வாய வளங்குன்றினு மின்மை கூறாத்*
தன்னீர்மை குன்றா னெனுந்தன்மை பிறர்க்குத் தேற்ற
நன்னீர் வயலின் விளைவஃகி நலிவு செய்ய
மின்னீர வேணி மதுரேசர் விலக்கி னாரே.

(பா - ம்.) * கூராத்.

(இ - ள்.) இந்நீரவாய வளம் குன்றினும் - இத்தன்மையவாகிய செல்வங்கள் குறைந்தாலும், இன்மை கூருத் தன் நீர்மை குன்ருன் எனும் தன்மை - வறுமையைக் கூருமையாகிய தன் இனிய பண்பி னின்றும் குன்ற மாட்டான் (இவ்வடியார்க்கு நல்லான்) என்னுந் தன்மையை, பிறர்க்குத் தேற்ற - அஃதுணராத மற்றையோருக்குத் தெளிவிக்க, நல் நீர் வயலின் விளைவு அஃகி நலிவு செய்ய - நல்ல நீர்வள மிக்க வயல்களில் விளைவு குறைந்து வருத்துமாறு, மின்நீர வேணி - மின்போலும் ஒளி வீசுந் தன்மையையுடைய சடையையுடைய, மதுரேசர் விலக்கினர் - சோமசுந்தரக் கடவுள் அவ்விளைவை விலக்கி யருளினர்.

இன்மை கூருமை - தன்பால் வந்து இரந்தவர்க்கு 'என்னிடம் பொருளில்லை' யென்று கூருமை ; ஈதல்.

''இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்''

என்பது காண்க. அன்பன் இயல்பு ஆண்டவனுக்குத் தெரியுமாயினும், அவ்வியற்கையை ஏனையோர்க்கும் தெரிவித்து உய்வித்தற் பொருட்டு அங்ஙனஞ் செய்தனர் என்ருர். மின் ஈர வேணி எனப் பிரித்து, குளிர்ச்சி பொருந்திய, மின்போலும் வேணி என்றுரைத்தலும் பொருந்தும். மதுரேசர் தேற்ற நலிவு செய்யும்படி விலக்கினர் என்க.

''செல்வ மேவிய நாளி லிச்செயல் செய்வ தன்றியு மெய்யினுல்
அல்ல னல்குர வான போதினும் வல்ல ரென்றறி விக்கவே
மல்ல னீடிய செல்வ மெல்ல மறைந்து நாடொறு மாறிவந்
தொல்லை யில்வறு மைப்ப தம்புக வுன்னி ஞர்தில்லை மன்னினுர்''

என்னுந் திருத்தொண்டர் புராணச் செய்யுள் இங்கு நினைக்கற்பாலது. (கு)

குன்று விருத்திக் கடன்கோண்டுகோண் டன்பர் பூசை
நன்று நடாத்தத் தோடுத் தான்கடன் றனுங் கிட்டா
தோன்றுலுங் கோண்ட விரதத்துக் குறுதி யின்றி
நின்று னுடம்பை யோறுக்கின்ற நியமம் பூண்டான்.

(இ - ள்.) குன்று விருத்திக்கடன் கொண்டு கொண்டு - குறையாத வட்டிக் கடனை வாங்கி வாங்கி, அன்பர் பூசை நன்று நடாத்தத் தொடுத்தான் - அடியார் பூசையைச் செவ்வனே நடத்தத் தொடங்கினுன் ; கடன் தானும் கிட்டாது - பின் அக்கடனும் கிடைக்காமல், ஒன்றுலும் கொண்ட விரதத்துக்கு உறுதி இன்றி நின்றுன் - வேறென்றினுலுந் தான் மேற்கொண்ட விரதத்தை முடிப்பதற்கு வலி யில்லாமல் நின்ற அடியார்க்கு நல்லான், உடம்பை ஒறுக்கின்ற நியமம் பூண்டான் - உடலை (உணவின்றி யிருத்தலால்) வருத்தும் கடப்பாட்டினை மேற்கொண்டான்.

விருத்தி - வட்டி. தொடுத்தான் - தொடங்கினுன். நின்றுன் : பெயர். (எ)

கோடுப்பா ரவரே விளைவுங்கடன் கோளு மாற்றித்
தடுப்பா ரேனின்மற் றதையாவர் தடுக்க வல்லார்
அடுப்பார் விழுமங் களைவாரடி யார்க்கு நல்லூண்
மடுப்பா னியமந் தடைப்பட்டு வருந்து கின்றான்.

(இ - ள்.) கொடுப்பார் அவரே - கொடுக்கின்ற இறைவரே, விளைவும் கடன் கோளும் மாற்றித் தடுப்பார் எனில் - விளைவையுங் கடன் கோடலையும் மாற்றி விலக்குவாராயின், அதை யாவர் தடுக்கவல்லார் - அதனைத் தடுக்க வல்லவர் யாவர் (ஒருவருமில்லை ; அதனால்), அடுப்பார் விழுமம் களைவார் அடியார்க்கு - தம்மை அடுத்தவரின் துன்பத்தைப் போக்கும் சிவபிரான் அடியார்க்கு, நல் ஊண் மடுப்பான் - நல்ல உணவுகளை அளிக்கும் அடியார்க்கு நல்லான், நியமம் தடைப்பட்டு வருந்துகின்றான் - அந்நியமம் தடைப்பட்டு வருந்துகின்றனன்.

கோள் : முதனிலை திரிந்த தொழிற்பெயர். மற்று : அசை : யாவர் தடுக்க வல்லார் என்றது கவிக்கூற்று. விழுமம் - துன்பம். நியமம் உணவளித்தலாகிய கடன். (அ)

விண்ணாறு சூடும் விடையான்றமர்க் கூட்டி யன்றி
உண்ணாத வன்றன் னுயிர்க்குத்துணை யாய* கற்பிற்
பண்ணார்மொழி தன்னொடும் பட்டினி விட்டு நெஞ்சம்
புண்ணாக வாகம் பசித்தீயிற் புழுங்கப் பட்டான்.

(இ - ள்.) விண் ஆறு சூடும் விடையான் தமர்க்கு - ஆகாய கங்கையை அணிந்த இடப வூர்தியையுடைய சிவபெருமான் அடியார்கட்கு, ஊட்டி அன்றி உண்ணாதவன் - திருவமுது செய்வித் தல்லாமல் உண்ணுதல் இல்லாத அடியார்க்கு நல்லான், தன் உயிர்க்குத் துணையாய - தனது உயிர்க்குத் துணையாகிய, கற்பின் பண் ஆர் மொழி தன்னொடும் பட்டினி விட்டு - கற்பினையும் இசைபோலுஞ் சொல்லையுமுடைய மனைவியோடும் பட்டினிகிடந்து, நெஞ்சம் புண்ணாக - மனம் புண்ணாக, ஆகம் பசித்தீயில் புழுங்கப்பட்டான் - உடம்பு பசி என்னும் நெருப்பினால் வெதும்பப்பட்டான்.

ஊட்டியன்றி உண்ணாதவன் - உண்பித்து மிச்சிலை அருந்துவதன்றி வேறுண்ணாத நியமமுடையான். பண்ணார் மொழி : ஆகுபெயர். விட்டு - இருந்து, கிடந்து. (கூ)

இறக்கும் முடம்பாற் பெறும்பேறினி யாவ தென்னா
அறக்குன் றனையான் மனையோடு மடைந்திச் செய்தி
நிறக்கின்ற செம்பொற் சிலையார்க்கு நிகழ்த்தி யாவி
துறக்கின் றதுவே துணிவென்று துணிந்து போனான்.

(பா - ம்.) * உயிர்த்துணையாய.

(இ - ள்.) அறக்குன்று அனையான் - புண்ணிய மலைபோன்ற அடியார்க்கு நல்லான், இறக்கும் உடம்பால் - இறந்து படுகின்ற இவ் வுடம்பினால், இனி பெறும் பேறு யாவது என்னா - (நமது விரதந் தடைப்பட்ட) பின் நாம் அடையும் பயன் யாது என்று கருதி, மனையோடும் அடைந்து - மனைவியோடுஞ் சென்று. இச்செய்தி - இச் செய்தியை, நிறக்கின்ற செம் பொன் சிலையார்க்கு நிகழ்த்தி - விளங்குகின்ற சிவந்த பொன்மலையை வில்லாகவுடைய சோமசுந்தரக் கடவுளுக்குக் கூறி, ஆவி துறக்கின்றதுவே துணிவு என்று துணிந்து போனான் - உயிரை விடுதலே முடிவு என்று மனம் துணிந்து சென்றனன்.

என்றேனும் அழியும் இயல்பின தாகிய இவ்வுடம்பை நியமந் தவறிய பின்னரும் வைத்திருத்தலால் எய்தலாகும் பயனொன்று மின்மையால், இப்பொழுதே அதனை விடுத்தல் செயற்பாலதாமென்று துணிந்தனன் என்க. உடல் என்றேனும் அழியு மென்பதனை,

''மின்போ லழியும் வயிற்றுமை வடிவா யழியு மெய்யுருவாய்
முன்போ லழியும் பிறந்தழியு மடவா ருடனே முயங்கியதன்
பின்போ யழியு நரைத்தழியும் பேய்போற் றிரிந்து பெயர்ந்தழியும்
பொன்போல் வளர்த்து மிவ்வுடலம் நிலையா தழிந்து போய்விடுமே''

என்னும் செவ்வந்திப் புராணச் செய்யுள் நன்கு விளக்குகின்றது. சலியாமையும் பெருமையும் பற்றி ''அறக்குன் றனையான்'' என்றார். நிறக்கின்ற: பெயரடியாகத் தோன்றிய வினை. அனையான் யாவதென்னா, துணிவென்று துணிந்து போனான் என்க. (௧0)

ஐயன் றிருமுன்ன ரடைந்தடி தாழ்ந்து வானோர்
உய்யும் படிநஞ் சமுதுண்ட வொருவ வுன்றன்
மெய்யன்பர் பூசைக் கிடையூறு விளையவென்றன்*
செய்யும் புலமும் விளைவின்றிச் சிதைந்த வென்னா.

(இ - ள்.) ஐயன் திருமுன்னர் அடைந்து - சிவபெருமானது திருமுன்னர்ச் சென்று, அடிதாழ்ந்து - திருவடியில் வீழ்ந்து வணங்கி, வானோர் உய்யும்படி நஞ்சு அமுது உண்ட ஒருவ - தேவர்கள் உய்யுமாறு நஞ்சினை அமுதாக உண்டருளிய ஒப்பற்றவனே, உன்தன் மெய் அன்பர் பூசைக்கு இடையூறு விளைய - உனது மெய்யடியார்கள் பூசைக்கு இடையூறுண்டாக, என்தன் செய்யும் புலமும் விளைவு இன்றிச் சிதைந்த என்னா - என்னுடைய நன்செய்யும் புன்செய்யும் விளைவு சுருங்கிக் கெட்டன என்று கூறி (மற்றும்).

வானோர் உய்யும் பொருட்டு நஞ்சையும் உண்ட பேரருளாளனாகிய நின்னடியார் பூசை முட்டின்றி முடியும்படி அருள்செய்தல் கடன் என்னும் கருத்தினைக் கொண்டிருத்தலால் நஞ்சமுதுண்ட ஒருவ என்றது கருத்துடையடையணி. தன் இரண்டும் சாரியை. செய்யும் புலமும் என வேறு கூறினமையால் நன்செயும் புன்செயும் என்க. (௧௧)

(பா - ம்.) *இன்றென்.

விடனல்கு சூலப் படையாய் கடன் வேறு காணேன்
கடனல்க வல்லார் தமைக்காட்டுதி காட்டி லாயேல்
மடனல்கு மிந்த வுடம்பின்சுமை மாற்று வேனேன்
றுடனல்கு கற்புக் குரியாளோடும் வேண்டு மெல்லை.

(இ - ள்.) விடன் நல்கு சூலப் படையாய் - நஞ்சினை உமிழுஞ் சூலப் படையையுடைய பெருமானே, கடன் வேறு காணேன்-கடன் கொடுப்பார் வேறு ஒருவரையும் யான் அறிந்திலேன்; கடன் நல்க வல்லார் தம்மைக் காட்டுதி - (ஆதலின்) கடன் கொடுக்க வல்லவரை நீ காட்டக் கடவை; காட்டிலாயேல்-காட்டாவிடிலோ, மடன் நல்கும் இந்த உடம்பின் சுமை மாற்றுவேன் என்று - அறியாமை பொருந்திய இந்த உடற்பொறையை மாற்றி விடுவேனென்று கூறி, உடன் அல்கு கற்புக்கு உரியாளொடும் வேண்டும் எல்லை - தன்னுடனுறையும் கற்புக்குரிய மனைவியோடும் நின்று குறையிரக்கும் பொழுது.

விடன் அல்கு, மடன் அல்கு எனப் பிரித்தலுமாம். அல்கல் - பொருந்தல். கடன் வேறு காணேன் என்பதற்கு வேறு செய்யத் தக்கது அறியேன் என்னலுமாம். உடம்பின்: இன் சாரியை அல்வழிக்கண் வந்தது. (கஉ)

பஞ்சாதி வேதப் பொருள்சொன்ன பரமன் வாக்கோன்
றஞ்சாதி வேளாண் டலைவாவு னகத்தி லின்றோர்
செஞ்சாதி யாய* செழுவாலரிக் கோட்டை யுய்த்தேம்
எஞ்சா திருக்கு மெடுக்குந்தோறு மென்று மாதோ.

(இ - ள்.) பஞ்சாதி வேதப் பொருள் சொன்ன பரமன் வாக்கு ஒன்று - பஞ்சாதி என்னும் உறுப்பினையுடைய வேதத்திற்குப் பொருளருளிச் செய்த இறைவன் திருவாக்கு ஒன்று, வேளாண் தலைவா அஞ்சாதி - வேளாண்குடித் தலைவனே! நீ அஞ்சாதே; உன் அகத்தில் இன்று - உன் வீட்டில் இன்று, ஓர் செஞ்சாதி ஆய செழுவால் அரிக் கோட்டை உய்த்தேம் - ஒரு செந்நெல்லாலாய அழகிய வெள்ளிய அரிசிக் கோட்டையைச் செலுத்தினேம்; என்றும் எடுக்குந் தோறும் எஞ்சாது இருக்கும் - (அது) எஞ்ஞான்றும் எடுக்க எடுக்கக் குறையாமலிருக்கும்.

பஞ்சாதி - சந்தை கூட்டி ஓதுவோர் நிறுத்துதற் பொருட்டு வேதத்தில் வகுக்கப்பட்ட ஐம்பது பதங்கொண்ட ஒரு முடிவு. அஞ்சாதி: எதிர்மறை யேவல்; த்: எழுத்துப்பேறு. அரி - அரிசி. மாது, ஓ: அசைகள். (கந)

நீநாளும் பூசித் ததில்வேண்டிய கொண்டு நித்தம்
ஆனாத வன்பர்க் கமுதூட்டி யெவர்க்கு மன்ன
தானாதி நான தருமங்களுஞ் செய்தி வீடு
மேனா ளளிக்கின் றனமென்று விசும்பிற் கூற.

(பா - ம்.) * செஞ்சாலியாய.

(இ - ள்.) நீ நாளும் பூசித்து - நீ தினந்தோறும் வழிபட்டு, அதில் வேண்டிய கொண்டு-அக் கோட்டையில் வேண்டுமளவு பெற்றுக்கொண்டு, நித்தம் ஆறாத அன்பர்க்கு அமுது ஊட்டி - நாடோறும் நீங்காத நமது அடியார்கட்கு உணவு அருத்தி, எவர்க்கும் - யாவருக்கும், அன்னதான ஆதி - அன்னதானம் முதலிய, நானா தருமங்களும் செய்தி - பலவேறு வகையான அறங்களையுஞ் செய்யக்கடவை; வீடு மேல் நாள் அளிக்கின்றனம் என்று - முடிவில் வீடுபேறு அளிக்கின்றோமென்று, விசும்பில் கூற - வானின்கண் அசரீரியாகக் கூறியருள.

வேண்டிய : வினையாலணையும் பெயர். ஆறாத அன்பர் - குறையாத அன்பினை யுடையயர் என்றுமாம். தானாதி: நெடிற்சந்தி. நானா - பல
(௧௪)

கேட்டின்ப மெய்திக் கிளர்விம்மித னாகி வேதப்
பாட்டின் பயனைப் பணிந்தில்ல மடைந்து பண்டை
ஈட்டுந் தவப்பே றெனக்கண்டனன் றொண்டர்க் கெந்தை
கூட்டுங் கதிபோ லுலவாமற் கொடுத்த கோட்டை.

(இ - ள்.) கேட்டு இன்பம் எய்தி - (அதனைக்) கேட்டு மகிழ்ச்சி யடைந்து, கிளர் விம்மிதனாகி - மேலெழுந்த விம்மிதத்தை யுடையவனாய், வேதப் பாட்டின் பயனைப் பணிந்து - வேதப் பனுவலின் பொருளாயுள்ள இறைவனைப் பணிந்து, இல்லம் அடைந்து - மனையை யெய்தி, பண்டை ஈட்டும் தவப்பேறு என - முற்பிறப்புக்களிலே தேடிய தவத்தின் பயனைக் கண்டாற்போல, தொண்டர்க்கு - அடியார்கட்கு, எந்தை - எம் பெருமான், கூட்டும் கதிபோல் - அடைவிக்கும் பேரின்பம் (என்றுங் குறையாதிருத்தல்) போல, உலவாமல் கொடுத்த கோட்டை - குறையாதிருக்கக் கொடுத்தருளிய கோட்டையை, கண்டான் - கண்டனன்.

விம்மிதம் - அதிசயம். கோட்டையைத் தவப்பேறெனக் கண்டனன் என முடிக்க. கோட்டையை என்னும் இரண்டனுருபு இறுதிக்கண் தொக்கது;

"ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகாஅ விறுதி யான"

என்பது தொல்காப்பியம். (௧௫)

வானாறு சூடி தருகோட்டையை வைக றோறும்
பூநாறு சாந்தம் புகையொண்சுடர் கொண்ட ருச்சித்
தானாத செவ்வி யடிசிற்கு மதற்கு வேண்டும்
நானா கருவி விலைக்கும்மது நல்க வாங்கா.

(இ - ள்.) வான் ஆறு சூடி - கங்கையைத் தரித்த சோமசுந்தரக் கடவுள், தருகோட்டையை - அருளிய கோட்டையை, வைகல் தோறும் -

நாள்தோறும், பூ நாறு சாந்தம் புகை ஒண்சுடர் கொண்டு அருச்சித்து - மலரும் நறிய சந்தனமும் தூபமும் ஒள்ளிய தீபமும் என்னும் இவற்ருற் பூசித்து, செவ்வி ஆறுத அடிசிற்கும் - பதம் நீங்காத அன்னத்திற்கும், அதற்கு வேண்டும் நாறு கருவி விலைக்கும் - அவ்வன்னத்திற்கு வேண்டிய கறிப் பொருள் முதலிய பலவேறு உபகரணங்களின் விலைப் பொருட்கும், அது நல்க - அக் கோட்டை கொடுக்க, வாங்கா - கைக் கொண்டு.

சூடி - சூடுதலை யுடையான்; இ: வினை முதற்பொருள் விகுதி. கொண்டு: மூன்ரும் வேற்றுமைச் சொல். (௧௬)

மின்ஞர் சடையான் றமராய்ந்தவர் வேதச் செல்வர்
தென்ஞடர் தெய்வம் விருந்தோக்கல் செறிந்து நட்டோர்
முன்ஞ மேவர்க்கு முகில்போல் வரையாம னல்கி
எந்நாளு நோயின் றளகாதிப னென்ன வாழ்ந்தான்.

(இ - ள்.) மின் ஆர் சடையான் தமர் - மின்போன்ற சடையை யுடைய சிவபெருமானது அடியார்களும், ஆய்ந்தவர் வேதச் செல்வர் - வேதத்தை ஆராய்ந்தவர்களாகிய அந்தணர்களும், தென்ஞடர் தெய்வம் விருந்து ஒக்கல் - பிதிரரும் தெய்வமும் விருந்தும் சுற்றத்தாரும், செறிந்து நட்டோர் - நெருங்கி நட்புச் செய்தோரும், முன் ஆம் எவர்க்கும் - முதலாகிய யாவர்க்கும், முகில்போல் வரையாமல் நல்கி - மேகம்போல் வரைவின்றிக் கொடுத்து, எந்நாளும் நோய் இன்று அளகாதிபன் என்ன வாழ்ந்தான் - எஞ்ஞான்றும் வறுமை நோயின்றிக் குபேரன் போல வாழ்ந்து வந்தான்.

கலைகளை ஆய்ந்தவரும் வேதச் செல்வரும் என்றுமாம்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்ருங்
கைம்புலத்தா ரோம்ப றலை"

என்பவாகலின், தென்ஞடர் முதலாயினேர்க் களிப்பது இல்வாழ்வார்க் குரிய பொதுவறமாகும். சிவனடியார் முதலாயினர்க் களிப்பது சிறப்பறம். மேகம் யாவரையும் நீக்காது பெய்தல் போல நீக்காமற் கொடுத்தென்க. நோய் - துன்பமுமாம். அளகாதிபன் - அளகைப்பதிக்கிறைவன்: தீர்க்க சந்தி. (௧௭)

[வேறு]

அன்பன் னடியார்க் கினியா னனிநா ளளந்தல்கித்
தன்பன் னியொடு மயலார் சுற்றந் தமரோடும்
பின்பந் நிலையே யிமவான் மகளைப் பிரியாத
இன்பன் னுருவாய்ச் சிவமா நகர்சேன் றிறைகோண்டான்.

(இ - ள்.) அன்பன் அடியார்க்கு இனியான் - அன்பனாகிய அடியார்க்கு நல்லான், தன் பன்னி யொடும் - தன் மனைவியோடும், அயலார் சுற்றம் தமரோடும் - பக்கத்திலுள்ளார் சுற்றத்தார் நட்டார் என்னும் இவர்களோடும், நனிநாள் அளந்து அல்கி - நீண்டநாள் அறஞ் செய்திருந்து, பின்பு - அதன் பின்னர், அந்நிலையே - அங்கிருந்தவாறே, இமவான் மகளைப் பிரியாத இன்பன் உருவாய் - மலைமகளைப் பிரியாத இன்ப வடிவினனாகிய சிவபெருமான் உருவாகி, சிவமாநகர் சென்று இறை கொண்டான் - பெருமை பொருந்திய சிவபுர மெய்தித் தங்குதலுற்றான்.

அளந்து - அறஞ்செய்து; நாட்களை அளந்து என்றுமாம். அந்நிலையே - கடவ நாட்கழித்த அப்பொழுதே என்றுமாம். உரு - சிவசாரூபம். இமவான் மகளைப் பிரியாத இன்பன் உருவாய் என்றமையால் அவன் பத்தினி உமையின் சாரூபம் பெற்றமையும் கொள்க. இறை கொண்டான் - ஒரு பெற்றியே இன்பம் நுகர்ந்திருந்தான். (௧௮)

ஆகச் செய்யுள் - ௧௧௨௰

முப்பத்தொன்பதாவது

மாமனாகவந்து வழக்குரைத்த படலம்

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

தாமநா றிதழி யார்தந் தமர்க்கன்பன் வறுமைப் பட்டோன்
ஆமநா ளுலவாக் கோட்டை யருளிய முறையீ தையன்
தேமனாண் முல்லைத் தீந்தார்ச் சிறுதகை வணிகற் காக
மாமனும் படிவங் கொண்டு வழக்குரை வண்ணஞ் சொல்வாம்.

(இ - ள்.) நாறு தாம இதழியார்தம் தமர்க்கு அன்பன் - மணங் கமழும் கொன்றை மாலையையணிந்த இறைவன் தம்முடைய அடியார்க்கு நல்லான், வறுமை பட்டோன் ஆம் அ நாள் - வறுமை யுடையனாகிய அந்தநாளில், உலவாக் கோட்டை யருளிய முறை ஈது: உலவாக் கோட்டை யருளிய திருவிளையாடல் இது; ஐயன் - அப் பெருமான், தேம் மன் நாள் முல்லைத் தீந்தார் - தேன் பொருந்திய அன்றலர்ந்த முல்லை மலராலாகிய இனிய மாலையை யணிந்த, சிறு தகை வணிகற்கு ஆக - இளம்பருவமுடைய வணிகனுக்காக, மாமனும் படிவம் கொண்டு வழக்கு உரைவண்ணம் சொல்வாம் - அவனுக்கு மாமனாகிய வடிவந் தாங்கி வந்து வழக்குரைத்த திருவிளையாடலை (இனிக்) கூறுவாம்.

தாமம் நாறு இதழி என்பதற்கு மாலை போலத் தோன்றும் கொன்றைத்துணர் என்றுமாம். அநாள்: தொகுத்தல். தகை - பருவத்தை யுணர்த்திற்று. (க)

கன்னிநான் மாடக் கூடற் கடிநகர் வணிக மாக்கள்
தன்னின்மா நிதிக்கோ னன்னான் றனபதி யென்னும் பேரான்
மன்னினா னனையான் கற்பின் மடவரல் சுசீலை யென்பாள்
பொன்னினாண் முளரிச் சேக்கைப் புண்ணியத் திருவி னன்னாள்.

(இ - ள்.) கன்னிநான் மாடக் கூடல் கடிநகர் - என்றும் அழியாத நான்மாடக் கூட லென்னுங் காவலையுடைய மதுரைப்பதியின்கண் வசிக்கும், வணிகமாக்கள் தன்னில் - வாணிக மக்களுள், மாநிதிக் கோன் அன்னான் - குபேரனையொத்த செல்வ முடையனாகிய, தனபதி என்னும் பேரான் மன்னினான் - தனபதி என்னும் பெயரினையுடைய ஒருவன் இருந்தான்; அனையான் கற்பின் மடவரல் சுசிலை என்பாள் - அவனுடைய கற்பினையுடைய மனைவி சுசிலை என்னும் பெயரினை யுடையாள்; பொன்னின் நாள் முளரிச் சேக்கை - பொன் போன்ற புதிய தாமரை மலராகிய தவிசில் இருக்கும், புண்ணியத் திருவின் அன்னாள் - புண்ணிய வடிவாகிய திருமகளை யொத்தவள்.

கன்னி - அழிவின்மை. தம்மின் எனற்பாலது தன்னின் என எதுகை நோக்கி வந்தது. அன்னாய் என வினையெச்ச மாக்கலுமாம். மடவரல் - மடப்பத்தை யுடையாள். திருவின், சாரியை நிற்க உருபு தொக்கது. (உ)

எனவிவர் தமக்கு மைந்தற் பேறின்றி யிரங்கு நாளிற்
றனபதி மருகன் றன்னைத் தகவுசான் மகவாக் கொண்டு
மனமகிழ் சிறப்பா னல்க மனைவியுந் தொழுது வாங்கிப்
புனைவன புனைந்து போற்றிப் பொலிவுற வளர்த்துக் கொண்டாள்.

(இ - ள்.) என இவர் தமக்கு - என்று கூறப்பட்ட இவர்கட்கு, மைந்தன் பேறு இன்றி இரங்குநாளில் - புதல்வற்பேறு இல்லாமல் வருந்தும்பொழுது, தனபதி மருகன் தன்னை - தனபதி என்பவன் தன் மருமகனை, தகவுசால் மகவாக்கொண்டு - தகுதியமைந்த புதல்வனாக ஏற்றுக்கொண்டு, மனமகிழ் சிறப்பால் நல்க - மனமகிழ்ந்து சிறப்போடு கொடுக்க, மனைவியும் தொழுது வாங்கி - மனைவியாகிய சுசீலையும் வணங்கிக் கையில் வாங்கி, புனைவன புனைந்து போற்றி - அணியத்தக்க அணிகளை அணிவித்துப் பேணி, பொலிவுஉற வளர்த்துக் கொண்டாள் - பொலிவு மிக வளர்த்தனள்.

மருகன் - தங்கை மகன். மகனாக் கொள்ளுதல் புதல்வனாக முறைப் படி ஏற்றுக்கொள்ளுதல். (௩)

தனபதி மகப்பே றற்றா னாயினுந் தணவாக் காதன்
மனைவிமேல் வைத்த வாசை மயக்கினால் வருந்தி யீன்ற
தனயனை மகவாத் தந்த தங்கைமேற் றீராப் பூசல்
வினைவிளைத் தொழுக வோர்நா ளிளையளும் வெகுண்டு சொல்வாள்.

(இ - ள்.) தனபதி-தனபதி என்பான், மகப்பேறு அற்றான் ஆயினும்- பிள்ளைப்பேறு இல்லாதவனாயினும், தணவாக் காதல் மனைவிமேல் வைத்த - நீங்காத காதலையுடைய மனைவியினிடத்து வைத்த, ஆசை மயக்கினால் - ஆசையாற் போந்த மயக்கத்தினால், வருந்தி ஈன்ற தனயனை - தான் வருந்திப் பெற்ற புதல்வனை, மகவாத் தந்த தங்கை மேல் - பிள்ளையாகக் கொடுத்த தங்கையின்மேல், தீராப் பூசல் வினை விளைத்து ஒழுக - நீங்காத போர்த்தொழிலைச் செய்துவர, ஓர்நாள் இளையளும் வெகுண்டு சொல்வாள் - ஒருநாள் தங்கையும் சினந்து கூறுவாளாயினள்.

மனைவி வயிற்று மகப்பேறின்றித் தங்கை மகனை மகவாக்கொண் டவன் அவளுடன் பூசல் விளைத்தல் சிறிதும் தகாதென்பார் 'மகப் பேறற்றானாயினும்......பூசல் வினைவிளைத்து' என்றார். மயக்கினால் பூசல் வினைவிளைத்து என இயைக்க. இதனால் அவன் மனைவி தனது நாத்தூண் நங்கையொடு மனம் பொருந்தா திருந்தமை பெறப்படும் (௪)

பெருமித முனக்கேன் பிள்ளைப் பேறற்ற பாவி நீயென்
அருமைநன் மகனு லன்றே விருமையு மடைவா யென்னப்
பெரிதுநா ணடைந்து மேலைக் காயினும் பிள்ளைப் பேறு
தருதவம் புரிவே னென்னுத் தனபதி தவமேற் செல்வான்.

(இ - ள்.) பிள்ளைப்பேறு அற்ற பாவி உனக்குப் பெருமிதம் ஏன் - மகப்பேறற்ற பாவியாகிய உனக்குப் பெருமிதம் எதற்கு, என் அருமை நன் மகனல் அன்றே - என் அருமைப் புதல்வனலல்லவா, நீ இருமையும் அடைவாய் என்ன - நீ இம்மைப் பேற்றினையும் மறுமைப் பேற்றினையும் அடைவாய் என்று கூற, பெரிதும் நாண் அடைந்து - மிகவும் வெட்கமுற்று, மேலைக்கு ஆயினும் பிள்ளைப்பேறு தருதவம் புரிவேன் என்னு - மறு பிறப்பிலாயினும் மகப் பேற்றினைத் தருதற்குரிய தவத்தினைச் செய்வேனென்று, தனபதி தவமேல் செல்வான் - தனபதி தவம் புரிதற்பொருட்டுச் செல்வானுயினன்.

பெருமிதம் - செருக்கு. புதல்வற்பேறு மறுமைக்கும் காரண மாதலை,

"எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்"

என்னும் பொய்யா மொழியால் அறிக. மேலை - ஈண்டு மறுமை. (ரு)

தன்பெருஞ் செல்வ மெல்லா மருமகன் றனக்கே யாக்கி
அன்புகோண் மனைவி யோடு மருந்தவ நெறியிற் சென்றான்
பின்பவன் வரவு தாழ்ப்ப மருமகன் பெற்ற வெல்லாம்
வன்பினுல் வழக்குப் பேசி வௌவினர் தாய மாக்கள்.

(இ - ள்.) தன் பெருஞ் செல்வம் எல்லாம் - தனது பெரிய செல்வ முழுதையும், மருமகன் தனக்கே ஆக்கி - மருகனுக்கே உரிமை யாக்கி, அன்புகொள் மனைவியோடும் - அன்புகொண்ட தன் மனைவியோடும், அருந்தவ நெறியில் சென்றான் - அரிய தவநெறியிற் சென்றனன்; பின்பு அவன் வரவு தாழ்ப்ப - பின்பு அத் தனபதியின் வருகை காலந் தாழ்க்க, மருமகன் பெற்ற எல்லாம் - அவன் மருகன் அடைந்த செல்வ மனைத்தையும், வன்பினல் வழக்குப்பேசி - வலிமையினல் வழக்குரைத்து, தாய மாக்கள் வௌவினர் - தாயத்தார் வௌவிக்கொண்டனர்.

வரவு தாழ்ப்ப - நெடுநாள் வாராதிருந்தமையால். வன்பு-வலிமை; வன்கண்மையுமாம். (சு)

விளைநில னடிமை பைம்பூண் வெறுக்கைநன் பசுக்க ளேனை
வளனுமாற் றவர்கைக் கோள்ள வன்சிறை யிழந்த புட்போற்
றளர்வுறு மகனுந் தாயுஞ் சார்பிலாத் தம்ம னோர்க்கோர்*
களைகணு யிருக்குங் கூடற் கடவுளே சரண மேன்னு.

(பா - ம்.) * சார்பிலார் தம்மனோர்க்கோர்.

(இ - ள்.) விளை நிலன் - விளை நிலங்களையும், அடிமை - அடிமைகளையும், பைம்பூண் - பசிய அணிகளையும், வெறுக்கை - பொருள்களையும், நன் பசுக்கள் - நல்ல பசுக்களையும், ஏனை வளனும் - பிற வளங்களையும், மாற்றவர் கைக்கொள்ள - பகைவர் கவர்ந்துகொள்ள, வன் சிறை இழந்த புள்போல் - வலிய சிறைகளை இழந்த பறவைபோல, தளர்வு உறு மகனும் - மெலிவுற்ற புதல்வனும், தாயும் - அவனை யீன்ற அன்னையும், சார்பு இலாத் தம்மனோர்க்கு - பற்றுக் கோடில்லாத தம் போல்வார்க்கு, ஒரு களைகணாய் இருக்கும் - ஒரு பற்றுக்கோடா யிருக்கும், கூடல் கடவுளே - கூடலம்பதியில் வீற்றிருக்கும் இறைவனே, சரணம் என்னா - அடைக்கலம் என்று கருதி.

அடிமை - ஏவலாட்கள். வெறுக்கை - பொன் முதலியன, ஏனை வளன் - மனை, தோட்டம் முதலியன (எ)

வந்துவா னகடு போழ்ந்த மணிமுடி விமானக் கோயிற்
சுந்தர நாதன் பாதத் துணைதொழு திறைஞ்சி யார்க்குந்
தந்தையுந் தாயு மாகுந் தம்பிரா னீரே யெங்கட்
கெந்தையும் யாயு மென்னா விரங்கிநின் றினைய சொல்வாள்.

(இ - ள்.) வந்து - வந்தெய்தி, வான் அகடு போழ்ந்த மணிமுடி விமானக் கோயில் - விசும்பின் வயிற்றைக் கிழித் துயர்ந்த அழகிய முடியினையுடைய இந்திர விமானமாகிய கோயிலில் வீற்றிருக்கும், சுந்தர நாதன் பாதத்துணை தொழுது இறைஞ்சி - சோமசுந்தரக் கடவுளின் இரண்டு திருவடிகளையும் கும்பிட்டு வணங்கி, யார்க்கும் தந்தையும் தாயும் ஆகும் தம்பிரான் - யாவர்க்கும் அத்தனும் அன்னையுமாகிய தம்பிரானே, நீரே எங்கட்கு எந்தையும் யாயும் என்னா - தேவரீரே அடியேங்கட்கும் தந்தையும் தாயுமாவீர் என்று, இரங்கி நின்று இனைய சொல்வாள் - வருந்தி நின்று இத்தன்மையனவாய குறைகளைக் கூறுவாளாயினள்.

தம்பிரானாகிய நீரே யென்றுமாம். யாய் - தாய். மகனும் தாயும் வந்து வணங்கினர் எனவும், பின்பு தாய் இனைய சொல்வாள் எனவும் கொள்க. (அ)

என்மகன் றன்னை மைந்த னின்மையா லெவருங் காணத்
தன்மக னாகக் கொண்டு தகுதியா லன்றே காணி
பொன்மனை பிறவு நல்கிப் போயினா னென்மு னிப்பால்
வன்மையாற் றாயத் தார்க ளவையெலாம் வௌவிக் கொண்டார்.

(இ - ள்.) என்முன் - என் தமையன், மைந்தன் இன்மையால் - தனக்குப் பிள்ளை யில்லாமையால், என் மகன் றன்னை - என் மகனை, எவரும் காண - யாவருமறிய, தகுதியால் - கொள்ளவேண்டிய முறைப்படி, தன் மகனாகக் கொண்டு - தன் புதல்வனாகக்கொண்டு, அன்றே - அப்பொழுதே, காணி பொன் மனை பிறவும் நல்கிப் போயினான் - விளை நிலம் பொன் மனை என்பனவைகளையும் பிறவற்றையும் கொடுத்துப் போயினன்; இப்பால் - பின்பு, தாயத்தார்கள் - பங்காளிகள், அவை

எலாம் - அப்பொருள்களனைத்தையும் வன்மையால் வௌவிக்கொண்டார் - தங்கள் வலியினாலே கவர்ந்துகொண்டார்கள்.

என்முன் நல்கிப் போயினான் பின் தாயத்தார் வௌவிக் கொண்டனர் எனக. (௯)

ஒருத்திநா னொருத்திக் கிந்த வொருமக னிவனுந் தேருங்*
கருத்திலாச் சிறியன் வேறு களைகணுங் காணே னைய
அருத்திசா லறவோர் தேறு மருட்பெருங் கடலே யெங்கும்
இருத்திநீ யறியாய் கொல்லோ வென்றுபார் படிய வீழ்ந்தாள்.

(இ - ள்.) ஐய - ஐயனே, ஒருத்தி நான் - நானோ யாருமற்ற ஒருத்தி, ஒருத்திக்கு இந்த ஒருமகன் - ஒருத்தியாகிய எனக்கு இவன் ஒரே புதல்வன், இவனும் தேரும் கருத்து இலாச் சிறியன் - இவ்வொரு புதல்வனும் நன்மை தீமைகளை ஆராயுங் கருத்து இல்லாத இளைஞன்; வேறு களைகணும் காணேன் - வேறு பற்றுக் கோடும் காணேன்; அருத்திசால் அறவோர் தேறும் அருள்பெருங் கடலே - அன்பு நிறைந்த முனிவர்கள் தெளியும் பெரிய கருணைக் கடலே, நீ எங்கும் இருத்தி - நீ யாண்டும் இருப்பாய்; அறியாய் கொல்லோ என்று - (ஆதலின் இதனை) அறியாயோ என்று, பார் படிய வீழ்ந்தாள் - நிலம் படிய வீழ்ந்தனள்.

தேறும் கருத்து என்பது பாடமாயின் தெளியும் கருத்தென்றுரைக்க. ஒருத்தி யென்றதனாலும் வேறு களைகணும் காணேன் என்றதனாலும் இவட்குக் கணவனும், வேறு துணையாகும் சுற்றத்தாரும் இலரென்பது பெற்றாம். அருத்தி - ஆர்வம்; அன்பு. கொல் : அசைநிலை. (௧௦

மாறுகோள் வழக்குத் தீர்க்க வல்லவ ரருளி னாலே
சீறுகோள் வடிவேற் கண்ணாள் சிறுதுயி லடைந்தாள் மெய்யில்
ஊறுகோள் கரண மைந்து முற்றறி கனவிற் கங்கை
யாறுகோள் சடையார் வேதச் செல்வரா யடுத்துச் சொல்வார்.

(இ - ள்.) மாறுகோள் வழக்குத் தீர்க்க வல்லவர் அருளினால் - மாறுபட்ட கொடிய வழக்கினைத் தீர்க்க வல்ல பெருமானது திருவருளினால், சீறுகோள் வடிவேல் கண்ணாள் சிறுதுயில் அடைந்தாள் - சினங் கொண்ட வடித்த வேல்போலுங் கண்களையுடையவள் சிறிய உறக்கங் கொண்டனள்; மெய்யில் ஊறுகோள் கரணம் ஐந்தும் உற்று அறி கனவில் - உடலின்கட் பொருந்திய ஐம்பொறிகளும் ஒடுங்கி நிற்க (ஆன்மாவானது சூக்கும உடம்பினின்று) அறியும் கனவின்கண், கங்கை ஆறுகோள் சடையார் - கங்கையாற்றை யணிந்த சடையினையுடைய இறைவர், வேதச் செல்வராய் அடுத்துச் சொல்வார் - ஓர் அந்தணராய் வந்து கூறுகின்றார்.

ஊறுகோள் - உறுதலைக் கொண்ட, பொருந்திய. உற்று - ஒடுங்கி நிற்க; எச்சத்திரிபு. கனவின் இயல்பினை "பொறிகளும் தமது சத்தி மடங்கி, அவை மடங்கவே, அவற்றின் வழியவாகிய வாக்காதிகளும்

(பா - ம்.) * இவனுந் தேறும்.

தமது சத்தி மடங்கி, அவ்விருவகை இந்திரியங்களும் தொழிற்பாடின்றி ஆண்டு நின்றொழியும் அவத்தையின், ஏனை அந்தக்கரண முதலியன தொழிற்படினும் புறப்பொருள் விடயமாகாமையின் அகத்தே சூக்கும தேகத்தோடு நின்று ஆண்டைக் குரிய இருவினைப் பயன்களை நுகர்ந்து நிற்கும் அவத்தை சொப்பனம்'' என்னும் சிவஞான போதமா பாடியத்தா லுணர்க. (௧௧)

புலர்ந்தபின் றாயத் தோரைப் புரவல னாணை யாற்றால்
வலந்தரு மன்றத் தேற்றி மறித்தனை யிருத்தி யாம்போந்
தலந்தரு மறிவான் மூத்தோ ரனைவரு மிசைய *வந்தச்
சலந்தரு வழக்குத் தீர்த்துத் தருகுவம் போதி யென்றார்.

(இ - ள்.) புலர்ந்தபின் - விடிந்த பின்னர், தாயத்தோரை பங்காளிகளை, புரவலன் ஆணை ஆற்றால் - அரசன் ஆணை வழியால், மறித்தனை : மறித்து, வலம்தரு மன்றத்து ஏற்றி இருத்தி - வெற்றியைத் தரும் அவையின்கண் ஏற்றி இருப்பாயாக ; யாம் போந்து - யாம் வந்து, அலம் தரும் அறிவால் மூத்தோர் அனைவரும் இசைய - அமைந்த உணர்வினால் முதியோரனைவரும் உடன்பட, அந்தச் சலம்தரு வழக்குத் தீர்த்துத் தருகுவம் - அந்தப் பொய் வழக்கினை ஒழித்து உன் பொருளைக் கொடுப்போம் ; போதி என்றார் - நீ போகக் கடவை என்றருளிச் செய்தார்.

அரசன் ஆணை கூறி யழைப்பின் மீறிச் செல்லாராகையால் 'புரவலன் ஆணையாற்றால் மறித்தனை மன்றத் தேற்றி' என்றார். வலந்தரு மன்றம் - உண்மையுணர்த்தி வெற்றியைத் தரும் மன்றம் ; அறங்கூறவையம். மறித்தனை : முற்றெச்சம் அலம் - அமைவு. அனைவருக்கும் பொருந்த என்றுமாம். சலம் - பொய். இருத்தி, போதி என்பவற்றில் த்: எழுத்துப் பேறு. (௧௨)

வேரியங் குவளை யுண்கண் விழித்தனள் வியந்து கெட்டேன்
ஆருமில் லார்க்குத் தெய்வந் துணையென்ப தறிந்தே னென்னாக்
காரிருங் கயலுண் கண்ணாள் கணவனைத் தொழுது வாழ்த்திச்
சீரிளங் குமர னோடுந் தெரிவைதன் மனையிற் சென்றாள்.

(இ - ள்.) வேரி அம் குவளை உண்கண் விழித்தனள் - தேனையுடைய அழகிய குவளை மலரை வென்ற கண்கள் விழித்து, வியந்து - அதிசயித்து, கெட்டேன் - ஆ கெட்டேன்!, ஆரும் இல்லார்க்குத் தெய்வம் துணை என்பது அறிந்தேன் என்னா - அகதிக்குத் தெய்வந்துணை என்னும் பழமொழியை அறிந்தேனென்று கூறி, கார் இருங்கயல் உண்கண்ணாள் கணவனை - கரிய பெரிய மையுண்ட கயல்போலுங் கண்களையுடைய அம்மையின் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளை, தொழுது வாழ்த்தி - வணங்கித் துதித்து, சீர் இளங் குமரனோடும் - சீரிய இளமை பொருந்திய புதல்வனோடும், தெரிவை தன் மனையில் சென்றாள் - அம்மாது தனது இல்லின்கட் சென்றனள்.

(பா - ம்.) * அனைவரு மறிய.

விழித்தனள் : முற்றெச்சம். கெட்டேன் : வியப்புணர்த்தும் இடைச் சொல். (௧௩)

சென்றவள் கங்கு லெல்லை தெரிந்தபி னெழுந்து வெள்ளி
மன்றவன் கோயில் வாயில் வந்துவந் தனைசெய் தம்பொற்
குன்றவ னுரைத்த வாற்றாற் கொடுமைசால் வழக்குப் பூட்டி
வென்றவ ரிருக்கை யெய்தி விளம்புவாள் பலருங் கேட்ப.

(இ - ள்.) சென்றவள் கங்குல் எல்லை தெரிந்தபின் எழுந்து - அங்ஙனஞ் சென்றவள் இரவு புலர்ந்தவுடன் எழுந்து, வெள்ளி மன்றவன் கோயில் வாயில் வந்து - வெள்ளியம்பலவாணனது திருக்கோயில் வாயிலை யடைந்து, வந்தனை செய்து - வணங்கி, அம்பொன் குன்றவன் உரைத்த ஆற்றால் - அழகிய பொன்மலையை (வில்லாக) உடைய பெருமான் கூறியருளியவாறே, கொடுமைசால் வழக்குப் பூட்டி வென்றவர் - கொடுமை மிக்க வழக்கினைத் தொடுத்து வென்ற ஞாதிகளின், இருக்கை எய்தி - இருப்பிடத்தை அடைந்து, பலருங் கேட்ப விளம்புவாள் - பலருங் கேட்கக் கூறுவாள்.

கங்குல் எல்லை தெரிதல் - இரவின் முடிவு தெரிதல் : இருள் புலர்தல். சென்றவள் எழுந்து வந்து வந்தனைசெய்து இருக்கை யெய்தி விளம்புவாள் என முடிக்க. (௧௪)

அட்டில்வாய் நெருப்பி டேலோ ரடியிடே லறத்தா றன்றிப்
பட்டிமை வழக்கால் வென்று போகொட்டேன் பலருங் கேட்க
இட்டன னரச ணாணை யறத்தவி சேறி யான்றோர்
ஒட்டிய படிகேட் டெங்க ளுரிப்பொரு டந்து போமின்.

(இ - ள்.) அட்டில் வாய் நெருப்பு இடேல் - அடுக்களையில் நெருப்பு மூட்டாதே, ஓர் அடி இடேல் - ஓர் அடியும் பெயர்த்து வையாதே, அறத்து ஆறு அன்றி - அறநெறியால் அல்லாமல், பட்டிமை வழக்கால் வென்று போக ஒட்டேன் - பொய் வழக்கினால் வென்று போகவிட மாட்டேன், பலரும் கேட்க அரசன் ஆணை இட்டனன் - அனைவருஞ் சான்றாக அரசன்மீது ஆணையிட்டேன். அறத்தவிசு ஏறி - தருமாசனத்தில் ஏறி, ஆன்றோர் ஒட்டியபடி கேட்டு - நூலோர் ஆய்ந்து கூறுந் தீர்ப்பினைக் கேட்டு எங்கள் உரிப் பொருள் தந்து போமின் - எங்கள் உரிமைப் பொருளைக் கொடுத்துச் செல்வீராக.

அடுக்களையில் நெருப்பிடாதே, அடியெடுத்து வையாதே என ஆணை கூறி மறிப்போர் உரைத்தல் வழக்கு. பட்டிமை - படிறு, வஞ்சம். போகொட்டேன் : அகரந் தொக்கது. ஒட்டியபடி - வாதித்துக் கூறும் தீர்ப்பு ; பலரும் ஒன்று கூடி யுரைக்கும் தீர்ப்புமாம். ஒட்டியபடி கேட்டு எங்களுரிப்பொருள் தந்து என்றமையால் வெற்றி தமக்கேயெனத் துணிந்து கூறினளாயிற்று. மகனை உளப்படுத்தி 'எங்கள்' என்றாள். உரி - உரிய. இடேல் எனத் தனித்தனியே நோக்கிக் கூறி, போமின் என அனைவரையும் நோக்கிக் கூறினள் என்க. (௧௫

என்றனள் மறித்த லோடு மிழுக்குரை யாடி வைது
வன்றிறல் வலியார் தள்ளி யடித்தனர் மைந்த னோடுஞ்
சென்றனண் முறையோ வென்னாத் திருந்தறத் தவிசி னோர்முன்
நின்றுரை யாடி னாள்கேட் டறிந்தனர் நீதி நூலோர்.

(இ - ள்.) என்றனள் மறித்தலோடும்-என்று கூறி (அவர் செலவைத்) தடுத்தவளவில், வன்றிறல் வலியார் - மிக்க வலியுடைய ஞாதியர், இழுக்கு உரை ஆடி வைது தள்ளி அடித்தனர் - தீய சொற்களைக் கூறி வைது நிலத்திற் றள்ளி அடித்தார்கள்; மைந்தனோடும் சென்றனள் - (அவள்) புதல்வனோடுஞ் சென்று, முறையோ என்னா - இது முறையோ என்று கூவி, திருந்து அறத்தவிசினோர்முன் நின்று உரையாடினாள் - திருந்திய தரும பீடத்துள்ளார் முன் நின்று வழக்கினைக் கூறினாள்; நீதி நூலோர் கேட்டு அறிந்தனர் - நீதிநூல் வல்ல மன்றத்தார் அதனைக் கேட்டறிந்தனர்.

என்றனள், சென்றனள் என்பன முற்றெச்சம். வன்றிறல்: ஒரு பொருட் பன்மொழி. திருந்துதல் - சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல் அமைந்து ஒருபாற் கோடாதிருத்தல். (௧௬)

அறத்தவி சிருப்போ ரேவ லாடவ ரோடும் போந்து
மறித்தவைக் களத்திற் கூட்டி வந்தனள் வந்த வெல்லை
அறக்கொடி பாகர் வெள்ளி யம்பல வாணர் தாமத்
திறத்தன பதியே யென்னத் திருவுருக் கொண்டு செல்வார்.

(இ - ள்.) அறத் தவிசு இருப்போர் - தருமபீடத்தில் இருப்போருடைய, ஏவல் ஆடவரோடும் போந்து - ஏவலாளரோடுஞ் சென்று, மறித்து அவைக் களத்தில் கூட்டி வந்தனள் - மறித்து மன்றின்கண் (அஞ்ஞாதிகளைக்) கூட்டி வந்தாள், வந்த எல்லை - வந்த பொழுது, அறக் கொடி பாகர் - தரும வல்லியாகிய உமையை ஒருபாகத்திலுடையவரும், வெள்ளி அம்பல வாணர் - வெள்ளி மன்றுடையாருமாகிய சோமசுந்தரக் கடவுள், தாம் அத்திறம் தனபதியே என்ன - தாம் தவமேற் சென்ற தனபதியே போல, உருக்கொண்டு செல்வார் - திருவுருவந் தாங்கிச் செல்வாராயினர்.

கேட்டறிந்த அறத் தவிசினோர் ஏவலாளரை அனுப்பினரென்பது உடம்பொடு புணர்த்துரைக்கப்பட்டது. அறக்கொடி - அறமே உருவமாகிய கொடிபோல்வாள்; அறம் வளர்த்தாள் என்றுமாம். திறம் - தன்மை, அத்திறத் திருவுருக் கொண்டு என்று கூட்டுதலுமாம். (௧௭)

[கலி விருத்தம்]

பெருவிலைக் குண்டலம் பிடரிற் பத்திபாய்ந்
தெரிகதிர் கவிழ்ப்பவா ளெறிக்கு மங்கதம்
அருவரைத் தோள்கிடந் திமைப்ப வாகமேற்
குருமணிக் கண்டிகை குலாய்ப்பின் கேர்ட்டவே.

(இ - ள்.) பெருவிலைக் குண்டலம் - பெரிய விலையினையுடைய குண்டலங்கள், பிடரில் பத்தி பாய்ந்து எரிகதிர் கவிழ்ப்ப - பிடரியில் நிரைபட விளங்கும் ஒளியினை உமிழவும், வாள் எறிக்கும் அங்கதம் - ஒளிவீசும் தோளணி, அருவரை தோள் கிடந்து இமைப்ப - அரிய மலை போன்ற தோளிற் பொருந்தி ஒளிவிடவும், ஆகம் மேல் குருமணிக் கண்டிகை குலாய்ப்பின் கோட்ட - மார்பிற் கிடக்கும் நிறம் பொருந்திய மணிக் கண்டிகை விளங்கிப் பின்னே வளைந்து கிடக்கவும்.

காதிலும் மார்பிலும் அணிந்த குண்டலங்களும் கண்டிகையும் அசைதலால் முறையே பிடரிலும் முதுகிலும் ஒளிவீசி விளங்கின என்றார். அங்கதம் - வாகுவலயம். அருமை - ஈண்டுப் பெருமை. (கஅ)

முரலளி புறவிதழ் மொய்ப்பச் செய்யதா
மரைசிறி தலர்ந்தென மணிசெய் மோதிரக்
கரதலம் வீசியோர் கடுங்க ணேறெனப்
பெருமித நடைகொடு நடக்கும் பெற்றியார்.

(இ - ள்.) முரல் அளி புற இதழ் மொய்ப்ப - ஒலிக்கின்ற வண்டுகள் புற இதழில் மொய்த்துக் கிடப்ப, செய்ய தாமரை சிறிது அலர்ந்தென - செந்தாமரைப் போது சிறிது மலர்ந்தாற்போல் விளங்கும், மணி செய் மோதிரக் கரதலம் விசி - நீலமணியாற் செய்த மோதிரங்களை யணிந்த கைகளை வீசி, ஓர் கடுங்கண் ஏறு என - ஒரு வெகுளி நோக்கினையுடைய இடபம்போல, பெருமித நடை கொடு நடக்கும் பெற்றியார் - செம்மாந்த நடையால் நடக்குந் தன்மையுடையராய்.

விரல்கள் இதழ்கள் போலவும், விரல்களின் புறத்தணிந்த நீலமணி மோதிரங்கள் இதழ்களின் புறத்து மொய்த்துள்ள வண்டுகள் போலவும் விளங்கினவென்க. அலர்ந்தென : விகாரம். விளங்கும் என ஒரு சொல் விரிக்க. ஏறு - சிங்கவேறுமாம். (கக)

வாடிய முளரிபோன் மாறிட் டாரிடத்
தூடியு மலர்ந்தபோ தொப்ப மைந்தன்மேல்
நாடிய தண்ணளி நயந்து முட்கிடை
கூடிய முகத்தினர் குறுகு வாரவை.

(இ - ள்.) வாடிய முளரிபோல் - வாட்டமுற்ற தாமரை மலரைப் போல, மாறு இட்டார் இடத்து ஊடியும் - பகைவிளைத்த ஞாதிகளிடத்துப் பிணக்கினைக் காட்டியும், மலர்ந்தபோது ஒப்ப - மலர்ந்த தாமரை மலரைப்போல, மைந்தன்மேல் நாடிய தண் அளி நயந்தும் - புதல்வனிடத்துக் கொண்ட தண்ணிய அருளை விருப்புடன் காட்டியும், உட்கிடை கூடிய முகத்தினர் - உட்கருத்தைப் புலப்படுத்துவது போலும் முகத்தினராய், அவை குறுகுவார் - மன்றின்கண் வருகின்ற பெருமானார்.

"அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சம்
கடுத்தது காட்டு முகம்"

என்னும் பொய்யா மொழியால், உள்ளத்தே மிக்கு நிகழ்வதனை முகம் காட்டுதல் பெற்றும் இறைவர் தாம் கொண்ட கோலத்திற் கேற்ப மாறிட்டா ரிடத்து ஊடுதலும் மைந்தனிடத்து நயத்தலு முடையார் போல் நடிப்பாராய் முறையே மூகவாட்டமும் மலர்ச்சியு முடையவராய்த் தோன்றினார் என்க. உட்கிடை - உள்ளக்கருத்து. கவிழ்ப்ப, இமைப்ப, கோட்ட, பெற்றியராய், முகத்தினராய் அவை குறுகுபவர் எனக் கூட்டி முடிக்க. (௨0)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

அரசனிங் கில்லை கொல்லோ வான்றவ ரில்லை கொல்லோ
குரைகழல் வேந்தன் செங்கோல் கோடியதோ கோதி னூல்கள்
உரைசெயுந் தெய்வந் தானு மில்லைகொ லுறுதி யான
தருமமெங் கொளித்த தேகோ லென்றறத் தவிசிற் சார்வார்.

(இ - ள்.) இங்கு அரசன் இல்லை கொல்லோ - இந்நகரில் மன்னன் இல்லையோ, ஆன்றவர் இல்லை கொல்லோ - அறிவால் அமைந்த முதியோர் இல்லையோ, குரை கழல் வேந்தன் செங்கோல் கொடியதோ - ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்த அரசனது செங்கோல் கொடுங் கோலானதோ, கோது இல் நூல்கள் உரை செயும் தெய்வம் தானும் இல்லைகொல் - குற்றமற்ற வேத சிவாகமங்களை அருளிய கடவுளும் இல்லையோ, உறுதி யான தருமம் எங்கு ஒளித்ததே கொல் - நிலைபேறுடைய அறமும் எங்கே சென்று ஒளித்ததோ, என்று - என்று முறையிட்டு, அறத் தவிசில் சார்வார் - அறமன்றினைச் சார்வாராயினர்.

செங்கோல் வேந்தனே ஆன்றவரோ தெய்வமோ அறமோ இருப் பின் இத்தீமை நிகழாதென்பார் அவை இல்லையோ என்றாரென்க. கொடியதோ - கோடியதோ; குறுக்கல் விகாரம்; கொடுமையுடைய தாயிற்றோ என்றுமாம். நூல்களால் உரை செய்யப்படும் தெய்வம் என்றுரைத்தலும் அமையும். முன்னுள்ள கொல் இரண்டும் அசைகள். (௨௧)

தனபதி வரவு நோக்கி வஞ்சனைத் தாயத் தார்கள்
இனைவுறு மனத்த ராகி விம்மித மெய்தி வெல்லும்
மனவலி யிழந்து பண்டு வழக்கலா வழக்கால் வென்ற
வினைநினைந் துள்ள மச்ச நாணினால் விழுங்கப் பட்டார்.

(இ - ள்.) தனபதி வரவு நோக்கி - தனபதியின் வருகையைப் பார்த்து, வஞ்சனைத் தாயத்தார்கள் - வஞ்சனையையுடைய பங்காளிகள், இனைவு உறு மனத்தர் ஆகி - வருத்தமிக்க மனத்தினையுடையராய், விம்மிதம் எய்தி - வியப்புற்று, வெல்லும் மனவலி இழந்து - வெல்லக் கருதிய மன வலியை இழந்து, பண்டு வழக்கு அலா வழக்கால் வென்ற வினை நினைந்து - முன்பு கொடுவழக்கால் வென்ற தீச் செய்கையை நினைந்து, உள்ளம் அச்சம் நாணினால் விழுங்கப்பட்டார் - நெஞ்சம் அச்சத்தினாலும் வெட்கத்தி னாலும் விழுங்கப்பட்டார்.

வரவுநோக்கி முதலில் வியப்பும் பின் வருத்தமும் எய்தினர் என்க. முன் போன்றே மீட்டும் வெல்லலா மென்னும் மனவலி யுடையரா யிருந்து பின் அதனை இழந்தன ரென்பார் 'வெல்லும் மனவலி யிழந்து' என்றார். வழக்கு அலா வழக்கு - மெய்வழக்கல்லாத வழக்கு ; கொடு வழக்கு. தமது தீமை புலனுதல் குறித்து நாணமும், அரசன் ஒறுப்பன் என்பது கருதி அச்சமும் உள்ளத்தே மிக்கன ரென்க. (உஉ)

மாதுல ராகி வந்தோர் மருகனைத் தம்பின் வந்த
தாதுல ராத கோதை தன்னொடுந் தழீஇத்தங் கண்ட
மீதுல ராத சாம வேதமார்ப் பவர்போல் வாய்விட்
டாதுல ரானீ ரந்தோ வையவென் றழுது நைந்தார்.

(இ - ள்.) மாதுலர் ஆகிவந்தோர் - மாமனாகி வந்த இறைவர், மருகனை - மருமகனை, தம் பின் வந்த - தமக்குப் பின் தோன்றிய, தாது உலராத கோதை தன்னொடும் தழீஇ - தங்கையோடும் தழுவி, தம் கண்டம்மீது உலராத சாமவேதம் ஆர்ப்பவர்போல் - தமது திரு மிடற்றினின்றும் நீங்காத சாமவேதத்தினைப் பாடுபவர் போல, வாய் விட்டு - வாய்திறந்து, ஆதுலர் ஆனீர் - (நீங்கள்) வறியரானீர்கள் ; அந்தோ ஐய என்று அழுது நைந்தார் - ஐயகோ வென்று புலம்பி வருந்தினர்.

மருகனையும் தங்கையையும் தழுவி யென்க. கோதை - பெண். தம்பின் வந்த கோதை - தங்கை, கோதை என்பது மாலையும் ஆகலின் அப்பெயருக் கேற்பத் 'தாதுலராத' என அடை கொடுத்தார். தாது உலராத - மகரந்தம் அறாத. அவரது அழுகையொலியும் சாமவேத இசைபோல இனிமையா யிருந்ததென்பார் 'சாம வேத மார்ப்பவர் போல் வாய்விட்டு' என்றார். அந்தோ, ஐய என்பன இரக்கப் பொருளில் வந்த இடைச் சொற்கள். (உ௩)

குடங்கையி னெடுங்க ணளுங் குமரனும் வணிகர் தாளிற்
றடங்கணீ ராட்ட வீழ்ந்தார் தடக்கையா லெடுத்துப் புல்லி
மடங்கலே றனையார் தாமு மற்றவர் தமைத்தங் கண்ணீர்
நெடுங்கடல் வெள்ளத் தாழ்த்திக் குமரனை நோக்கி நைவார்.

(இ - ள்.) குடங்கையின் நெடுங்கணளும் - உள்ளங் கைபோல் அகன்ற நீண்ட கண்களையுடைய தங்கையும், குமரனும் - புதல்வனும், வணிகர் தாளில் - வணிகரின் திருவடிகளில், தடம் கண் நீர் ஆட்ட - தம் பெரிய கண்கள் அவற்றை நீராட்டும்படி, வீழ்ந்தார் - வீழ்ந்தனர் ; தடக்கையால் எடுத்துப் புல்லி - நீண்ட திருக்கரத்தினால் எடுத்துத் தழுவி, மடங்கல் ஏறு அனையார் தாமும் - சிங்கவேற்றினை யொத்த அவ்வணிகரும், அவர்தமை - அவர்களை, தம் கண் நீர் நெடுங்கடல் வெள்ளத்து ஆழ்த்தி - தமது கண்ணீராகிய பெரிய கடற்பெருக்கில் மூழ்குவித்து, குமரனை நோக்கி நைவார் - பின் புதல்வனைப் பார்த்து வருந்துவாராயினர்.

அகன்ற என வருவிக்க. தாளில் வீழ்ந்தார் என இயையும். தாம், மற்று என்பன அசைகள். கண்ணீர் பெருக விடுத்தமையைத் தடங்கணிராட்ட என்றும், கண்ணீர் வெள்ளத் தாழ்த்தி என்றும் கூறினர். (உ௪)

ஐம்படை மார்பிற் காணேன் சிறுசிலம் படியிற் காணேன்
மொய்ம்படை மதாணி காணேன் முகத்தசை சுட்டி காணேன்
மின்படு குழைகள் காணேன் வெற்றுடல் கண்டே னப்பா
என்பெறு மென்று பிள்ளைப் பணிகளுங் கவர்ந்தா ரென்னு

(இ - ள்.) மார்பில் ஐம்படை காணேன் - மார்பின்கண் ஐம்படையென்னும் அணியைக் கண்டிலேன்; அடியில் சிறு சிலம்பு காணேன் - காலின்கண் சிறிய சிலம்பினைக் கண்டிலேன்; மொய்ம்பு இடை மதாணி காணேன் - தோளின்கண் தோளணியைக் கண்டிலேன்; முகத்து அசை சுட்டி காணேன் - முகத்தின் கண் அசையும் சுட்டியைக் கண்டிலேன்; மின்படு குழைகள் காணேன் - (காதுகளில்) ஒளிவீசுங் குண்டலங்களைக் கண்டிலேன்; வெற்று உடல் கண்டேன் - (பின் இவை நீங்கிய) வெறும் உடலைக் கண்டேன்; அப்பா - அப்பனே, என்பெறும் என்று - எத்துணை விலை பெறுமென்று கருதி, பிள்ளைப் பணிகளும் கவர்ந்தார் என்னு - குழந்தையின் அணிகளையும் வௌவினர் என்று கூறி.

ஐம்படை - காவற் கடவுளாகிய திருமாலின் சக்கரம், தனு, வாள், தண்டு, சங்கம் என்னும் பஞ்சாயுதங்களின் உருவமைக்கப் பெற்றதோர் அணி; குழந்தைகட்குக் காவலாக ஐந்தாவது திங்களில் இதனைத் தரிப்பது மரபென்பர்; இது தாலி எனவும், ஐம்படைத் தாலி எனவும் வழங்கப் பெறும்;

> ''தாலி களைந்தன்று மிலனே பால்விட்டு
> அயினியு மின்றயின் றனனே''

எனப் புறப்பாட்டிலும்,

> ''அமளித் துஞ்சு மைம்படைத் தாலிக்
> குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்''

என மணிமேகலையிலும்,

> ''தாலி யைம்படை தழுவு மார்பிடை
> மாலை வாயமு தொழுகு மக்களை''

என இராமாயணத்திலும் வருதல் காண்க. மதாணி - ஈண்டுத் தோள்வளை. சுட்டி - உச்சியிலணிந்து முகத்திற் றொங்கும் அணி. அப்பா: மரபு வழுவமைதி; இரக்கத்தில் வந்ததுமாம். (உ௫)

அனைவரு மிரங்க வாய்விட் டழுதவ ரிளையா டன்னைத்
தனையனைக் கண்ணீர் மாற்றித் தடக்கையான் முதுகு தைவந்
தினையன்மி னென்முன் வேறேன் றெண்ணன்மி னென்னு வஞ்ச*
வினைஞர்வல் வழக்குச் சோர்ந்து விடுவது காண்மி னென்னு.

(பா - ம்.) * என்னு வஞ்ச.

(இ - ள்.) அவர் - அவ்வணிகேசர், அனைவரும் இரங்க வாய்விட்டு அழுது - கண்டாரெல்லாரும் மனமிரங்கும்படி வாய்விட்டழுது. இளையாள் தன்னைத் தனையனை - தங்கையையும் புதல்வனையும், கண்ணீர் மாற்றி - கண்ணீரைத் துடைத்து, தடக்கையால் முதுகு தைவந்து - நீண்ட கையினால் முதுகினைத் தடவி, இனையன்மின் - வருந்தாதீர்கள் - என்முன் வேறு ஒன்று எண்ணன்மின் - என்முன்னே வேறொன்றினையும் கருதாதீர்கள் ; எண்ணு வஞ்ச வினைஞர் - (நான் வருவேனென்று சிறிதும்) நினையாத வஞ்சத் தொழிலையுடைய ஞாதிகளின், வல் வழக்குச் சோர்ந்து விடுவது காண்மின் என்னு - கொடு வழக்குத் தோற்றுவிடுவதைக் காணுங்கள் என்றும்.

எண்ணும்மை விரிக்க, கண்ணீர்மாற்றி, முதுகு தைவந்து என்பன ஒரு சொன்னீரவாய் இரண்டாவதற்கு முடிபாயின. தனையனை நோக்கி என ஒரு சொல் வருவித் துரைத்தலுமாம். தைவரல் - தடவுதல். வேறொன் றெண்ணன்மின் என்பதற்கு இத்துணை நாள் உங்களை விடுத்து மறந்திருந்தேன் என நினையன்மின் என்றேனும், இவ்வழக்குத் தோற்று விடுமோ என நினையன்மின் என்றேனும் கருத்துக் கொள்க. எண்ணு - அறத்தினியல்பைச் சிறிதும் நினையாத என்றுமாம். (௨௬)

நட்பிடை வஞ்சஞ் செய்து நம்பினார்க் கூன்மா ருட்டத்*
துட்படக் கவர்ந்து மேற்றோர்க் கிம்மியு முதவா ராயும்
வட்டியின் மிதப்பக் கூறி வாங்கியுஞ் சிலர்போ லீட்டப்
பட்டதோ வறத்தா றீட்டு நம்பொருள் படுமோ வென்னு.

(இ - ள்.) நட்பு இடை வஞ்சம் செய்தும் - நண்பர்மாட்டும் வஞ்சனை புரிந்தும், நம்பினார்க்கு ஊன்மாருட்டத்து உட்படக் கவர்ந்தும் - நம்பிப் பொருளை வைத்தவர்க்கு உயிர் மயங்குமாறு அப்பொருளைக் கவர்ந்தும், ஏற்றோர்க்கு இம்மியும் உதவாராயும் - இரந்தவர்க்கு இம்மியளவுங் கொடாதவராயும், வட்டியில் மிதப்பக் கூறி வாங்கியும் - வட்டியில் வரம்பின்றிச் சொல்லி அங்ஙனமே வாங்கியும், சிலர் போல் ஈட்டப்பட்டதோ - சிலர் தேடுதல் போலத் தேடப்பட்டதோ (அன்று) ; அறத்து ஆறு ஈட்டும் நம்பொருள் படுமோ என்னு - அற நெறியால் ஈட்டிய நமது பொருள் அழியுமோ என்றும் கூறி(ப் பின்பு).

நட்பிடை வஞ்சஞ் செய்தல் - நண்பர் பொருளைக் கவர்ந்து கொள்ளுதல். ஊன் - உயிருக்கு ஆகுபெயர். மாருட்டம் - தடுமாற்றம் ; மயக்கம். நம்பி வைத்தார் பொருளைக் கவர்ந்த ஞான்று அவர் தடுமாற்றமடைதல் இயற்கை. ஊண் மாருட்டத்துட்பட என்னும் பாடத்திற்கு நஞ்சு முதலிய கலந்த உணவால் மயங்கச் செய்து என்பது பொருள். இம்மி - மத்தங்காய்ப் புல்லரிசி; ஒரு சிற்றெண்ணுமாம் ;

"இம்மியரிசித் துணையானும்"

என்பது நாலடி.

"இம்மியன நுண்பொருள்க ளீட்டி"

(பா - ம்.) * ஊண் மாருட்டத்.

என்னும் சிந்தாமணிச் செய்யுளின் உரையும் நோக்குக. தீநெறியானும் அறமின்றியும் அங்ஙனம் ஈட்டப்பட்டதாயின் அழிதல் கூடும் என்றவாறுயிற்று. (௨௭)

மங்கல மாட மோங்கு மதுரைநா யகனை நோக்கிச்
செங்கரஞ் சிரமேற் கூப்பி மாணிக்கந் தேற்றி விற்கும்
எங்குல வணிக ரேறே யெம்மனோர் வழக்கை யிந்தப்
புங்கவ ரிடனாத் தீர்த்துத் தருகெனப் புலம்பி யார்த்தார்.

(இ - ள்.) மங்கல மாடம் ஓங்கும் மதுரை நாயகனை நோக்கி - மங்கலம் நிறைந்த மாடங்கள் ஓங்கிய மதுரை நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளை நோக்கி, செங்கரம் சிரம்மேல் கூப்பி - சிவந்த திருக்கரங்களைத் திருமுடிமேற் குவித்து, மாணிக்கம் தேற்றிவிற்கும் எம்குல வணிகர் ஏறே - மாணிக்கங்களின் இலக்கணங்களைத் தெளிவித்து விற்றருளிய எமது வணிகர்குலச் சிங்கமே, எம்மனோர் வழக்கை - எங்கள் வழக்கை, இந்தப் புங்கவர் இடனாத் தீர்த்துத் தருக எனப் புலம்பி ஆர்த்தார் - இந்த அற மன்றத்தவர் வாயிலாகத் தீர்த்து எமது பொருளைத் தருக என்று புலம்பி முறையிட்டார்.

நோக்கி - எழுந்தருளி யிருக்கும் திசையை நோக்கி. தேவரீர் எம் வழக்குத் தீர்த்து அருள் புரிதற்கு உரிமையுடையீர் என்பார் 'எங்குல வணிகரேறே' என்றார். புங்கவர் - உயர்ந்தோர். இடனா - வாயிலாக. தருகென: அகரம் தொகுத்தல். (௨அ)

ஆவலித் தழுத கள்வர் வஞ்சரை வெகுண்டு நோக்கிக்
காவலன் செங்கோ னுண்ணூல் கட்டிய தருமத் தட்டில்
நாவெனுந் துலைநா விட்டெம் வழக்கையு நமராய் வந்த
மேவலர் வழக்குந் தூக்கித் தெரிகென விதந்து சொன்னார்.

(இ - ள்.) ஆவலித்து அழுத கள்வர் - இங்ஙனம் அவலங்கொட்டி அழுத பொய் வேடமுடைய இறைவர், வஞ்சரை வெகுண்டு நோக்கி - கொடியராகிய ஞாதிகளைச் சினந்து பார்த்து (ப்பின்), காவலன் செங்கோல் நுண்நூல் கட்டிய தருமத் தட்டில் - புரவலனது செங்கோலாகிய நுண்ணிய நூலினால் யாத்த அறமாகிய தட்டின்கண், நா எனும் துலைநா இட்டு - உங்கள் நாவாகிய துலைநாவை இட்டு, எம் வழக்கையும் - எமது வழக்கையும், நமராய் வந்த மேவலர் வழக்கும் - எம்முடைய பங்காளிகளாய் வந்த இப்பகைவர்களின் வழக்கையும், தூக்கித் தெரிக என - தூக்கி அறிவீர் என்று, விதந்து சொன்னார் - (நூலோரை நோக்கித்) தெளிவுபடக் கூறியருளினார்.

ஆவலித்தல் - வாய் புடைத் தார்த்தல். அரசன் செங்கோலுக்கும் அறத்திற்கும் பழுதுண்டாகாமல் நடுவு நிலையுடன் ஆராய்ந்து கூறுக என்பார், இங்ஙனம் உருவகப்படுத்திக் கூறினார்;

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி"

என்னும் குறள் இங்கே சிந்திக்கற்பாலது. தெரிகென: தொகுத்தல். விதத்தல் - வெளிப்படுத்தல். (௨௯)

நரைமுது புலியன் னான்சொற் கேட்டலு நடுங்கிச் சான்றோர்
இருவர்சொல் வழக்கு மேற்கொண் டநுவதித் திரண்டு நோக்கித்
தெரிவழி யிழுக்கு ஞாதி வழக்கெனச் செப்பக் கேட்டு
வெருவினர் தாயத் தார்கள் வலியரின் வேறு சொல்வார்.

(இ - ள்) நரைமுதுபுலி அன்னான் சொல் கேட்டலும் - நரைத்த முதிய புலியை யொத்த வணிகனது சொல்லைக் கேட்டவளவில், சான்றோர் நடுங்கி - அறத்தவிசில் இருக்கும் பெரியோர் நடுங்கி, இருவர் சொல் வழக்கும் மேற்கொண்டு - இரு திறத்தார் கூறுகின்ற வழக்கினை யும் ஏற்றுக் கொண்டு, அநுவதித்து இரண்டும் நோக்கித் தெரிவழி - அநுவாதஞ் செய்து இரண்டு வழக்கினையுஞ் சீர் தூக்கி உண்மை தெரிந்த விடத்து, ஞாதிவழக்கு இழுக்கு எனச் செப்ப - தாயத்தாரின் வழக்கு இழுக்குடைய தெனக்கூற, தாயத்தார்கள் கேட்டு வெருவினர் - ஞாதிகள் அதனைக் கேட்டு அஞ்சி, வலியரின் வேறு சொல்வார் - அஞ்சாத வலி யுடையார் போல வேறு சொல்வாராயினர்.

முதுமையும் ஆண்மையும் உடைமையால் 'நரை முது புலியன்னான்' என்றார். தாம் வழுவின்றி யுரைக்க வேண்டு மென்னும் அச்சத்தால் நடுங்கினர் என்க. அநுவதித்தல் - முற்கூறியதனைப் பின்னும் எடுத் துரைத்தல். நோக்கித் தெரிதல் - தடை விடைகளாற் கேட்டவற்றைச் சீர்தூக்கி ஊழான் உள்ளவா றுணர்தல். அகத்தே வெருவினராயும் புறத்தே வெருவிலர் போலச் சொல்வார் என்க. வெருவினர்: முற் றெச்சம். (௩௦)

தவலருஞ் சிறப்பி னான்ற தனபதிவணிக ரல்லர்
இவரென வவையங் கேட்ப விருகையும் புடைத்து நக்குக்
கவளமா னுரித்துப் போர்த்த கண்ணுதல் வணிகர் கோமான்
அவரவர் குடிப்பேர் பட்டங் காணிமற் றனைத்துங் கூறும்.

(இ - ள்.) இவர் தவல் அருஞ்சிறப்பின் ஆன்ற தனபதி வணிகர் அல்லர் என-இவர் கெடுதலில்லாத சிறப்பினால் நிறைந்த தனபதி வணிகர் அல்ல ரென்று கூற, அவையம் கேட்க - அவையிலுள்ளார் கேட்குமாறு, இருகையும் புடைத்து நக்கு - இரண்டு கைகளையும் ஒன்றோடொன்று தாக்கிச் சிரித்து, கவள மான் உரித்துப் போர்த்த கண்ணுதல் வணிகர் கோமான் - கவளமாகிய உணவினை யுடைய யானையை உரித்துத் தோலைப்போர்த்த சோமசுந்தரக் கடவுளாகிய வணிகர் தலைவன், அவர் அவர் குடிப்பேர் பட்டம் காணி மற்று அனைத்தும் கூறும் - அவரவரின் குடிப்பெயரும் பட்டமும் காணியும் பிற அனைத்துங் கூறி.

இவர் அல்ல ரென்று ஞாதியர் கூற என்க. அவை: ஆகுபெயர்; அம்: அசை. இவர் இங்ஙனம் முழுப்பொய் கூறியவா றென்னென்று கைகொட்டி நக்கார். அவரவர்-ஞாதியர் எல்லாருடைய. குடிப்பேர் - கோத்திரப்பெயர். பட்டம் - சிறப்புப் பெயர். கூறும் என்பதனை எச்சமாக்குக. (௩௧)

தந்தைதாய் மாமன் மாமி தாயத்தா ரவரை* யீன்றோர்
மைந்தர்க ளுடன்பி றந்தார் மனைவியர் கிளைஞர் மற்றும்
அந்தமில் குணங்கள் செய்கை யாதிய வடையா ளங்கள்
முந்தையின் வழுவா வண்ண முறையினுன் மொழிந்தான் முன்னோன்.

(இ - ள்.) தந்தை தாய் மாமன் மாமி - அவரவருடைய தந்தையும் தாயும் மாமனும் மாமியும், தாயத்தார்-ஞாதிகளும் அவரை ஈன்றோர்- அவர்களைப் பெற்றோரும், மைந்தர்கள் உடன் பிறந்தார் மனைவியர் கிளைஞர் - புதல்வர்களும் உடன் பிறந்தாரும் மனைவியரும் சுற்றத்தாரு மாகிய இவர்களையும், மற்றும் அந்தம் இல் குணங்கள் செய்கை ஆதிய அடையாளங்கள் - மற்றும் அவர்களின் அளவிறந்த குணங்களும் செய்தொழிலும் முதலிய அடையாளங்களையும் முந்தையின் வழுவா வண்ணம் முறையினால் முன்னோன் மொழிந்தான் - முன்னுள்ளபடியே சிறிதுந் தவறாத வண்ணம் முறைப்படி முதல்வனாகிய வணிகன் மொழிந்தனன்.

தந்தை முதல் கிளைஞர் ஈறாய அனைவரையும், அவர்கள் குணம் செயல் முதலிய அடையாளங்களையும் கூறினன் என்க. (௩௨)

அனையது கேட்ட வான்றோ ரனைவரு நோக்கி யந்தத்
தனபதி வணிகர் தாமே யிவரெனச் சாற்ற லோடும்
மனவலித் தாயத் தார்தம் வழக்கிழுக் கடைந்த தீது
நனைவழி வேம்பன் றேரிற் றண்டிக்கு நம்மை யென்னா.

(இ - ள்.) அனையது கேட்ட ஆன்றோர் அனைவரும் நோக்கி-அதனைக் கேட்ட பெரியோரனைவரும் (ஞாதிகளைப்) பார்த்து, இவர் அந்தத் தனபதி வணிகரே எனச் சாற்றலோடும்-இவர் அந்தத் தனபதி வணிகரே யாவர் என்று கூறியவளவில், மனவலித் தாயத்தார்தம் வழக்கு இழுக்கு அடைந்தது - மன வன்மையுடைய ஞாதியரின் வழக்குத் தோல்வியுற்றது; ஈது - இதனை, நனைவழி வேம்பன் தேரில் - தேன் வழியும் வேப்பமலர் மாலையையுடைய பாண்டியன் அறிந்தானாயின், நம்மைத் தண்டிக்கும் என்னா - நம்மைத் தண்டிப்பான் என்று கருதி.

தாம்: அசை; ஏகாரம் தேற்றம். (௩௩)

இல்லினுக் கேகி மீள்வன் யானென்றுங் குளத்திற் கேகி
ஒல்லையில் வருவே னென்று மோவ்வொரு வார்த்தை யிட்டு
வல்லெழு வனைய தோளா ரனைவரும் வன்கா றள்ளச்
செல்லெழு முகில்போற் கூட்டஞ் சிதைந்தன ரொளித்துப் போனார்.

(இ - ள்.) யான் இல்லினுக்கு ஏகி மீள்வன் என்றும் - யான் வீட்டிற்குச் சென்று வருவேன் என்றும், குளத்திற்கு ஏகி ஒல்லையில் வருவேன் என்றும் - பொய்கைக்குப் போய் விரைவில் வருவேனென்றும், ஒவ்வொரு

(பா - ம்.) * தாயத்தா ரிவரை.

வார்த்தை இட்டு - ஒவ்வொரு புகலைக் கூறிவிட்டு, வல் எழு அனைய தோளார் அனைவரும் - வலிய தூணை யொத்த தோளினையுடைய ஞாதிக ளனைவரும், வன்கால் தள்ள - வலிய காற்றுத் தள்ளுதலால், எழுசெல் முகில்போல் - எழுந்து சிதறியோடும் முகிலைப்போல, கூட்டம் சிதைந் தனர் ஒளித்துப் போனார் - கூட்டங் கலைந்து ஒளித்துப் போயினர்.

ஒவ்வொருவரும் தனித்தனி ஒவ்வொரு புகல் கூறிச் சென்றொளித் தன ரென்க. எழு என்னும் முதனிலை எழுந்து என வினை யெச்சப் பொருட்டாயது. எழுந்து செல் முகில் என இயைக்க. சிதைந்தனர் . முற்றெச்சம். (௩௪)

அனையவர் போக நின்ற வறனவின் மன்றத் துள்ளோர்
தனபதி வணிகர் தந்த தனமெலாந் தத்த மைந்தற்
கெனமனை யெழுதி வாங்கி யீந்தன ரீந்த வெல்லை
மனமொழி கடந்த நாய்கர் மறைந்துதங் கோயில் புக்கார்.

(இ - ள்) அனையவர் போக - அங்ஙனம் அந்த ஞாதிகள் மறைந் தொழிய, நின்ற அறன் நவில் மன்றத்து உள்ளோர் - அங்கிருந்த அறங் கூறும் அவையிலுள்ளார், தனபதி வணிகர் தந்த தனம் எலாம் - தன பதி வணிகர் முன் கொடுத்த பொருள் அனைத்தும், தத்த மைந்தற்கு என - தத்துப் புதல்வனுக்கே உரிய வென்று, மனை எழுதி வாங்கி ஈந்த னர் - அவராற் சாதனம் எழுதி வாங்கிக் கொடுத்தனர்; ஈந்த எல்லை - அங்ஙனங் கொடுத்தவளவில்; மனம் மொழிகடந்த நாய்கர் மறைந்து - உள்ளத்தையும் உரையையும் கடந்த வணிகர் தமது திருவுருக் கரந்து, தம் கோயில் புக்கார் - தமது திருக்கோயிலுட் புகுந்தருளினர்.

அறனவில் மன்றம் - அறங்கூறவையம். மனை - சாதனம் என்னும் பொருட்டு. முன் ஞாதியர் கைப்பற்றி யிருந்தமையால் மீட்டு எழுத வேண்டிற்று. (௩௫)

இம்மெனப் பலருங் காண மறைந்தவ ரிருந்தண் கூடற்
செம்மலென் றறிந்து நாய்கச் சிறுவனுக் குவகை தூங்க
விம்மித மடைந்து வேந்தன் வரிசைகள் வெறுப்ப* நல்கிக்
கைம்மறி வணிகர் கோயில் புதுக்கினன் கனகங் கொண்டு.

(இ - ள்-) இம்மெனப் பலரும் காண மறைந்தவர் - ஒல்லையில் அனைவருங் காண மறைந்தருளியவர், இருந்தண் கூடல் செம்மல் என்று வேந்தன் அறிந்து - பெரிய தண்ணிய கூடல் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுள் என்று அரசன் அறிந்து, விம்மிதம் அடைந்து - வியப்புற்று, நாய்கச்சிறுவனுக்கு - வணிக இளைஞனுக்கு, உவகை தூங்க - மகிழ்ச்சிமிக, வரிசைகள் வெறுப்ப நல்கி-வரிசைகளை மிகக் கொடுத்து, கைம்மறி வணிகர் கோயில் - கையில் மானையுடைய வணிகராய் வந்த இறைவன் திருக் கோயிலை, கனகம் கொண்டு புதுக்கினன்-பொன்னினாலே புதுப்பித்தான்.

(பா - ம்.) * வரிசையுள் வெறுப்ப.

இம்மென : விரைவுக்குறிப்பு. அறத்தவிசோரார் கேட்டறிந்தென்க. வெறுத்தல் செறிதலாகலின் வெறுப்ப என்பதற்கு மிக எனப் பொருள் கொள்க. உள் வெறுப்ப என்னும் பாடத்திற்கு மனம் வெறுக்க என்றுரைத்துக் கொள்க. வேந்தன் அறிந்து அடைந்து நல்கிப் புதுக்கினன் என வினை முடிவு செய்க. (௩௬)

[கலி நிலைத்துறை]

பூத நாயகன் பூரண சுந்தரப் புத்தேள்
பாத சேகரன் வரகுண பாண்டியன் புயத்தில்
ஓத நீருல கின்பொறை சுமக்கவைத் தும்பர்
நாதர் சேவடித் தாமரை நகைநிழ லடைந்தான்.

(இ - ள்.) பூதநாயகன்-பூதங்களுக்குத் தலைவனும், பூரண சுந்தரப் புத்தேள் - எங்கும் நிறைந்துளோனுமாகிய சோமசுந்தரக் கடவுளுடைய, பாதசேகரன் - திருவடியை முடியிற் கொண்ட சுந்தரேச பாதசேகர பாண்டியன், வரகுணபாண்டியன் புயத்தில் - வரகுணபாண்டியன் தோளின்கண், ஓத நீர் உலகின் பொறை சுமக்க வைத்து - கடல் சூழ்ந்த புவியின் சுமையைத் தாங்கவைத்து, உம்பர் நாதர் சேவடித் தாமரை நகை நிழல் அடைந்தான் - தேவதேவராகிய சிவபெருமான் திருவடித் தாமரையின் ஒள்ளிய நிழலிற் கலந்தனன்.

பூதம் - ஆன்மா ; ஐம்பூதம் என்றும், சிவகணம் என்றும் கொள்ளலுமாம். புயத்தில் பொறை வைத்து என்க. சுமக்க: இடைப்பிறவரல். (௩௭)

ஆகச் செய்யுள் ௧௧௯௨

நாற்பதாவது

வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய படலம்

[எழுசீரடி யாசிரிய விருத்தம்]

பண்கொண்ட வேதமுத லிடையீறு நாடரிய
பரன்மாம ஞகி* யொரு வணிகன்
எண்கொண்ட காணிபொருள் கவர்ஞாதி மாதுலரை
யெதிரேறி வென்றபடி யிதுவாந்
தண்கொண்ட நேமிவர குணதேவ னெய்துபழி
தன்னைத் துடைத்தனைய மனவன்
கண்கொண்டு காணவுயர் சிவலோக மதுரைதனில்
வருவித்த காதையினி மொழிவாம்.

(இ - ள்.) பண் கொண்ட வேதம் - இசையினைக் கொண்ட மறையினாலும், முதல் இடை ஈறு நாடரிய பரன் - முதலும் நடுவும் ஈறும் நாடுதற்கரிய இறைவன், மாமனுகி - மாமனாக வந்து, ஒரு வணிகன் - ஒரு வணிகச் சிறுவனது, எண் கொண்ட காணி பொருள் கவர் ஞாதி மாதுலரை - மதிப்பினையுடைய விளைநிலங்களையும் பிற பொருளையும் வெளவிய ஞாதிகளாகிய மாமன்மாரை, எதிர் ஏறி வென்றபடி இது ஆம் - எதிர்த்து மன்றில் ஏறி வென்றருளிய திருவிளையாடல் இது வாகும், தண்கொண்ட நேமி வரகுண தேவன் - தண்ணிய ஆக்கினு சச்கரத்தை யுடைய வரகுண தேவன், எய்துபழி தன்னைத் துடைத்து - அடைந்த கொலைப்பாவத்தினைப் போக்கி, அனைய மன்னவன் - அந்த மன்னன், கண் கொண்டு காண-கண்களாற் றரிசிக்க, உயர் சிவலோகம் - உயர்ந்த சிவலோகத்தை, மதுரைதனில் வருவித்த காதை - மதுரையில் வருவித்துக்காட்டிய திருவிளையாடலை, இனி மொழிவாம் - இனிக் கூறுவாம்.

வேதத்தின் முதல் இடை ஈறுகளால் நாடரிய என்றுரைப்பாருமுளர். தனபதிக்கு ஞாதிகளும், அவன் தங்கை மைந்தனுக்கு மாமன்மாரும் என்பார் 'ஞாதி மாதுலர்' என்ருர். தேவர் என்பது சோழ, பாண்டிய வேந்தர்களுக்குச் சிறப்புப் பெயராக வழங்கியுளது. இம் மன்னனைப் 'பெரிய அன்பின் வரகுண தேவர்' என்பர் பட்டினத்தடிகளும். மன்னவன் என்பதில் னகரம் தொக்குநின்றது. கண் கொண்டு என விதந்தோதினுர், காண்டலருமை நோக்கி.] (க)

(பா - ம்.) *. பரமாமனுகி.

இயமான னிந்திரவி யெரிவா னிலஞ்சலில
மெறிகா லெனும்பகுதி யிருநான்
மயமான சுந்தரனை மனம்வாய்மெய் யன்பினிறை
வழிபா டடைந்தவர குணனாய்ச்
சயவேளை வென்றவடி வினனீறில் வென்றிபெறு
சதவேள்வி யிந்திரனை நிகர்வோன்
இயன்மேனி கொண்டவொளி யினிலேழ் பசும்புரவி
யினன்றேசு* வென்றவர குணனே.

(இ - ள்.) இயமானன் இந்து இரவி - ஆன்மாவும் திங்களும் ஞாயிறும், எரிவான் நிலம் சலிலம் எறி கால் எனும் - நெருப்பும் வானும் நிலமும் நீரும் வீசுகின்ற காற்றுமாகிய, இருநால் பகுதி மயமான சுந்தரனை - எண் பகுதியின் மயமாகிய சோமசுந்தரக் கடவுளை, மனம் வாய் மெய் அன்பில் நிறைவழிபாடு அடைந்த வரகுணனாய் - மனம் மொழி மெய்யென்னும் மூன்று கரணங்களினாலும் மெய்யன்பு நிறைந்த வழிபாட்டினைப் பொருந்திய சிறந்த குணத்தையுடையவனாய், இயல் மேனி கொண்ட ஒளியினில் - இலக்கண மமைந்த வடிவத்திலுள்ள ஒளியினால், ஏழ் பசும் புரவி இனன் தேசு வென்ற வரகுணன் - ஏழு பச்சைக்குதிரைகளையுடைய சூரியன் ஒளியையும் வென்ற வரகுண பாண்டியன் என்பான், சயவேளை வென்ற வடிவினன் - (அழகினால்) வெற்றியையுடைய மதவேளையும் வென்ற வடிவத்தை யுடையவன்; ஈறு இல் வென்றி பெறு சதவேள்வி இந்திரனை நிகர்வோன் - (வேள்வி யியற்றுதலால்) அழிவில்லாத வெற்றி பொருந்திய நூறு வேள்வியினை யுடைய இந்திரனை யொப்போன்.

இயமானன் - எஜமானன் என்பதன் றிரிபு. எஜமானன் - வேள்வி யியற்றிய ஆன்மா. இருநாற் பகுதி மயமான என மாறுக. அட்ட மூர்த்தத்தை,

> 'இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி இயமான னாயெறியுங் காற்று மாகி
> அருநிலைய திங்களாய் ஞாயி றாகி ஆகாச மாயட்ட மூர்த்தி யாகி''

என்று தாண்டக வேந்தர் அருளிச் செய்தலுங் காண்க. வரகுணன் - மேலாகிய குணமுடையவன். வழிபாடடைந்த வரகுணனாய் என்றமை யால் அவன் பெயர் அக்காரணத்தா லெய்திய தென்பது குறிப்பித்தவா றாயிற்று. வேள்வியால் இந்திரனை நிகர்வோன் என ஏது வருவிக்க. இனன் - சூரியன். (௨)

மறையாதி கலைபலவு மகமாதி பலவினையும்
வழுவாது நிறுவுதலின் மலர்மேல்
இறையாகி மலர்வனிதை பிரிவான† திருமகளி
ரிகபோகம் விளையமுறை செயலாற் .

(பா - ம்.) * இனதேசு. † பிறிவான.

கறையாழி வளைகளணி கரனாகி யிகல்செய்பொறி
கரணாதி பகைகளையு நெறியால்
அறைவாய்மை யுரையின்முழு துணர்வாலெவ் வுயிருநிறை
யரனாகி யுலகுமுறை செயுநாள்.

(இ - ள்.) மறை ஆதிகலை பலவும் - வேத முதலிய பல நூல்களையும், மகம் ஆதி பலவினையும் - வேள்வி முதலிய பல கருமங்களையும், வழுவாது நிறுவுதலின் - தவறாது நிலைபெறச் செய்தலால், மலர்மேல் இறை ஆகி - தாமரை மலரில் இருக்கும் பிரமனாகியும், மலர்வனிதை பிரிவான திருமகளிர் - பூமகளின் கூறாகிய அட்டலக்குமிகளால், இக போகம் விளைய - இம்மையின்பம் விளைய, முறை செயலால் - செங்கோலோச்சுவதால், கறை ஆழிவளைகள் அணிகரன் ஆகி - குருதிக்கறை தோய்ந்த திகிரிப்படையையும் சங்கினையும் ஏந்திய கரத்தை யுடைய வனாகிய திருமாலாகியும், இகல் செய் பொறிகரண ஆதி பகை களையும் நெறியால் - மாறுபாட்டினைச் செய்யும் ஐம்பொறியும் அந்தக்கரணமு முதலிய பகையினைக் களையும் ஒழுக்கத்தாலும், அறைவாய்மை உரையின் - கூறுகின்ற மெய்யுரையாலும், முழுது உணர்வால் - முற்று முணர்தலினாலும், எவ்வுயிரும் நிறை அரன் ஆகி - எல்லா வுயிர்களிலும் நிறைந்த சிவபெருமானாகியும், உலகுமுறை செயும் நாள் - உலகினை ஓம்பி வரு நாளில்.

வழுவாது பயின்றும் செய்தும் நிறுவுதலின் என்க. இலக்குமி வேறு வேறு உருவெடுத்து வந்தாலொத்த மகளிர் பலரால் இன்பம் விளைய என்றுமாம். வாய்மையுரை - அரசற்கு மெய்ம்மை கூறுதலும் அரனுக்கு வேத சிவாகமங்களை அருளிச் செய்தலும் ஆம். முழு துணர்வு அரசற்கு எல்லாக் கலைகளையும் உணர்தலும் அரனுக்கு இயல்பாகவே முழுது முணர்தலும் எனக்கொள்க. வேத முதலிய நூல்கள் கூறும் பொருளால் முற்று முணரு முணர்ச்சியாலும் என ஒன்றாக்கி யுரைப்பாரு முளர். இறைவன் பொறிகரணாதி பகை களைதலை,

"பொறிவாயி லைந்தவித்தான்"

என்பதனாலுணர்க. இஃது ஏது உருவகவணி. (௫)

வேட்டஞ்செய் காதலொடு நாட்டங்க வேசிவன
மேட்டெங்கு மாதடவி யெரியா
நாட்டஞ்செய் காயுழுவை நீட்டுங்கை யானைமுக
நாட்டும்ப லேனமிவை முதலா
ஓட்டஞ்செய் தேரிரவி கோட்டின்க ணேறியிரு
ளூட்டந்தி மாலைவரு மளவாக்
கோட்டஞ்செய் வார்சிலையின் மாட்டம்பி னூறியுயிர்
கூட்டுண்டு மாநகரில் வருவான்.

(இ - ள்.) வேட்டம் செய்காதல் ஒருநாள் தங்க - வேட்டையாடும் விரும்பம் ஒருநாள் உள்ளத்தில் வந்து பொருந்த, ஏகி - சென்று, வனம் மேட்டு எங்கும் - காடும் மலையுமாகிய எவ்விடத்தும், மாதடவி - விலங்கு களைத் துருவி எரி ஆம் நாட்டம் செய் காய் உழுவை - நெருப்புப்பரக்கும் கண்களையுடைய சினத்தையுடைய புலிகளும், கைநீட்டும் யானை - துதிக்கையை நீட்டும் யானைகளும், முகம் நாட்டும் பல் ஏனம் இவை முதலா-முகத்தை நிலத்தில் நாட்டி உழுகின்ற பற்களையுடைய பன்றிகளு மாகிய இவை முதலாகப் பல விலங்குகளை, ஓட்டம் செய் தேர் இரவி - விரைந்து செல்லுந் தேரினை யுடைய சூரியன், கோட்டின் கண் ஏறி - அத்தகிரியின் மீது ஏறுதலால், இருள் ஊட்டும் அந்திமாலை வரும் அளவா- இருளைப் புகுவிக்கும் அந்திப்போது வருங்காறும், கோட்டம்செய் வார் சிலையின் மாட்டு அம்பின் நூறி - வளைந்த நீண்ட வில்லிற் பூட்டிய கணை களாற் கொன்று, உயிர் கூட்டுண்டு மாநகரில் வருவான் - அவற்றின் உயிர்களைக் கொள்ளை கொண்டு பெரிய நகரை நோக்கி வருவானாயினன்.

மேடெங்கும் என்பது சந்தம் நோக்கி விரிந்து நின்றது, முகத்தில் நாட்டப்பட்ட பல்லையுடைய ஏனம் என்றுமாம். உம்பல் ஏனம் எனப் பிரித்து ஆண்பன்றி என்றுரைப்பாரு முளர். கோடு - மலை. (௬)

காலிற் கடும்புரவி மேலிற் கடிந்துவரு
காலக் கடந்தனிலோர் மறையோன்
மாலுற் றயர்ந்துமுகம் வேர்வைக் குறுந்திவலை
வாரக் கிடந்துவிழி துயில்வோன்
மேலக் கடும்புரவி கால்வைப்ப வந்தணனும்
வீவுற் றவிந்தனன தறியான்
கோலிற் செலும்பரியின் மீனத்த னுந்தனது
கோயிற் புகுந்தனன வளவே.

(இ - ள்.) காலில் கடும்புரவி மேலில் கடிந்துவருகால் - காற்றைப் போலும் கூடிய செலவினையுடைய குதிரையின் மேல் விரைந்து வரும் பொழுது, அக்கடம்தனில் - அக்காட்டின்கண், மால் உற்று அயர்ந்து - துயில் மயக்கங்கொண்டு சோர்வெய்தி, வேர்வைக் குறுந்திவலை முகம் வாரக்கிடந்து துயில்வோன் - வேர்வையாகிய குறுந்துளி முகத்தினின்றும் ஒழுகக்கிடந்து உறங்குவோனாகிய, ஒரு மறையோன் மேல்-ஓர் அந்தணன் மேல், அக்கடும்புரவி கால்வைப்ப - அந்தக் கடுமையையுடைய குதிரை காலை வைக்க, அந்தணனும் வீவுற்று அவிந்தனன் - அம்மறையோனும் இறந்தொழிந்தான் ; அது அறியான் - அதனை அறியாமல், கோலில் செலும் பரியின் - அம்புபோலச் செல்லும் குதிரையோடு, மீனத்தனும் தனது கோயில் புகுந்தனன் - மீனக்கொடியையுடைய பாண்டியனும் தன் அரண்மனையை யடைந்தான் ; அவ்வளவே - அப்பொழுதே.

காலின், கோலின் என்பவற்றின் இன்னுருபு ஒப்புப் பொருட்டு. துயில்வோனாகிய மறையோன் என்க. வீவுற்று அவிந்தனன் : ஒருபொரு ளிருசொல். அதறியான், அவளவே என்பன விகாரம். (௭)

[ஷை வேறு]

கனவட்டத் தடியிடறப் பொறிவிட்டுப் புலனவியக்
கரணத்துட் பொதியுயிர்விட் டவனாகந்
தனையொக்கற் பனவரெடுத் தனர்கிட்டிக் குரிசில்கடைத்
தலையிட்டத் திறமொழியத் தமிழ்மாறன்
இனைவுற்றுப் பனவர்கையிற் கனகக்குப் பைகணிறைவித்
தெமதிக்குற் றவனையெடுத் தெரிமாலை
புனைவித்தக் கடன்முடிவித் தனன்மற்றப் பழிபடரிற்
புதையப்பற் றியதிடைவிட் டகலாதே.

(இ - ள்.) கனவட்டத்து அடி இடற - கனவட்டம் என்னுங் குதிரையின் காலிடறுதலால், பொறிவிட்டுப் புலன் அவிய-பொறிகளை விடுத்துப் புலன்கள் ஒழிய, கரணத்துள் பொதி உயிர் விட்டவன் ஆகம் தனை - கரணங்களுட் பொதிந்த உயிரை விட்டவனது உடலை, ஒக்கல் பனவர் எடுத்தனர் கிட்டி - கிளைஞராகிய அந்தணர்கள் எடுத்துச் சென்று, குரிசில் கடைத்தலையில் இட்டு அத்திறம் மொழிய-பாண்டியனது கடைவாயிலிற் போட்டு அச்செய்தியைக் கூற, தமிழ்மாறன் - தமிழை வளர்க்கும் பாண்டியனாகிய அவ்வரகுணன், இனைவுற்று - வருந்தி, பனவர் கையில் கனகக் குப்பைகள் நிறைவித்து - அவ்வேதியர் கையில்பொற்குவைகளை நிரப்பி, எமதிக்கு உற்றவனை எடுத்து எரிமாலை புனைவித்து - எமபுரஞ் சென்றவன் உடலை எடுத்துத் தகனஞ் செய்வித்து, அக்கடன் முடிவித்தனன் - அந்த ஈமக்கடன்களை முற்றுவித்தான்; அப்பழி - அக்கொலைப் பாவமானது, படரில் புதைய - அவன் துன்பத்தில் அழுந்துமாறு, இடைவிட்டு அகலாது பற்றியது - சிறிதும் நீங்காது தொடர்ந்தது.

கனவட்டம் - பாண்டியன் குதிரையின் பெயர். புலன் - பொறியுணர்வு. பொறிவிட்டு என்பதற்குப் பொறிகள் நிலை கெட்டு என்றுரைத்தலுமாம். அரசன் அமைச்சர் வாயிலாகத் தொழில் நடாத்துதல் போல ஆன்மாவானது கரணங்களினுள்ளே பொருந்தி அவற்றின் வாயிலாகத் தனது தொழிலை நடாத்துதலின் 'கரணத்துட் பொதியுயிர்' என்றார். எடுத்தனர் : முற்றெச்சம். எரிமாலை புனைவித்து - அக்கினிச் சுவாலையாகிய மாலை புனைவித்து : தீச்சுடர் மெய்ம் முழுதும் போர்க்கும் படி தகனஞ் செய்வித்து என்றவாறு. மாலை என்பதற்கு முறைப்படி என்றுரைப்பாருமுளர் : மற்று: அசை. (௬)

[அறுசீரடி யாசிரியவிருத்தம்]

பற்றிய பழிக்குத் தீர்வு பழமறைக் கிழவர் சொன்ன
பெற்றியி னைவே றண்டி நதிக்கரைப் பெருநூற் கேள்வி
முற்றிய மறையோர்க் கீந்து மூவராந் தாரு வேந்தைச்
சுற்றியுந் தூர்வை கோய்து சுரபிகள் சுவைக்க வீந்தும்.

(இ - ள்.) பற்றிய பழிக்குத் தீர்வு - அங்ஙனந் தொடர்ந்த கொலைப் பாவத்திற்குக் கழுவாயாக, பழமறைக் கிழவர் சொன்ன பெற்றியின் - தொன்று தொட்டுள்ள வேதத்திற்குரிய அந்தணர் கூறியவண்ணமே, ஐவேறு உண்டி - ஐவகைப்பட்ட உணவினை, நதிக்கரை - ஆற்றங்கரையின் கண், பெருநூல் கேள்வி முற்றிய மறையோர்க்கு ஈந்தும் - வேத நூற் கேள்வி மிக்க அந்தணர்க்கு அளித்தும், மூவர் ஆம் தாரு வேந்தைச் சுற்றியும் - மும்மூர்த்திகளின் வடிவமாகிய அரசமரத்தை வலம் வந்தும், தூர்வை கொய்து - அறுகம் புல்லைக் கொய்து, சுரபிகள் சுவைக்க ஈந்தும் - பசுக்கள் உண்ணக்கொடுத்தும்.

தீர்வு - கழுவாய் ; பிராயச்சித்தம். ஐவேறுண்டி - கறிப்பன, நக்குவன, பருகுவன, விழுங்குவன, மெல்லுவன. தாருவேந்து - அரசமரம். அரசமரத்தின் அடிப்பகுதி பிரமன் வடிவும் நடுப்பகுதி திருமால் வடிவும், இறுதிப்பகுதி உருத்திரன் வடிவும் உடையன என்பர். தூர்வை - அறுகு. பசுவுக்கு உணவளித்தல் சிறந்த அறமாதலை,

> ''யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை''

என்னும் திருமந்திரத்தாலறிக. (எ)

> அகமரு டணத்தா லோம மாற்றியு மானைந் தாவின்
> நகைமணிக் கோடு தோய்ந்த* நளிர்புனல் குடித்துந் தான
> வகைபல கொடுத்து நீங்கா வலியதா யிழுது பெய்த
> புகையழ லெனமே லிட்டுப் புலப்பட வளைந்த தன்றே.

(இ - ள்.) அகமருடணத்தால் ஓமம் ஆற்றியும் - அகமருடண மந்திரத்தால் ஓமஞ் செய்தும், ஆன் ஐந்து - பஞ்சகவ்வியத்தையும், ஆவின் நகை மணிக்கோடு தோய்ந்த நளிர் புனல் குடித்தும் - பசுவின் விளக்கமாகிய அழகிய கொம்பிற்றோய்ந்த குளிர்ந்த நீரினையும் பருகியும், தான வகை பல கொடுத்தும் - பலவகையான தானங்களைச் செய்தும், நீங்கா வலியதாய் - (அப்பழி) நீங்காத வலியினை யுடையதாய், இழுது பெய்த புகை அழல் என்ன மேலிட்டு-நெய் சொரிந்த புகையினை யுடைய நெருப்பைப்போல மேலோங்கி, புலப்பட வளைந்தது - கண்ணுக்குப் புலனும்படி சூழ்ந்தது.

அகமருடணம் - பாவத்தைப்போக்கும் ஒரு வேதமந்திரம். பசுவின் பெருமையை,

> "தங்கு மகில யோனிகட்கு மேலாம் பெருமைத் தகைமையன
> பொங்கு புனித தீர்த்தங்க ளெல்லா மென்றும் பொருந்துவன
> துங்க வமரர் திருமுனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத
> அங்க மனைத்துந் தாமுடைய வல்ல வோநல் லானினங்கள்''

என்பது முதலிய திருத்தொண்டர் புராணச் செய்யுட்களாலும், சிவதருமோத்தரத்தாலும் உணர்க, ஆனின் கோட்டில் புண்ணிய தீர்த்

(பா - ம்.) * தோய்த்த.

தங்களெல்லாம் இருப்பனவாக நூற்கள் கூறுதலின் கோடு தோய்ந்த புனல் குடித்தனன் என்க. அன்று, ஏ : அசை. (அ)

[கலி நிலைத்துறை]

ஏங்கும் பெருமூச் சேறியுங்கை யெறியுங் குன்றின்
ஓங்குஞ் சிறுகு முடன்றார்த்திடு முன்னும் பின்னும்
பாங்குந் தொடருஞ் சிரிக்கும்பகு வாயை மெல்லும்
நீங்குங் குறுகும் பழிதாவென நேர்ந்து பற்றும்.

(இ - ள்.) ஏங்கும் - இரங்கும்; பெருமூச்சு எறியும் - பெருமூச்சு விடும்; கை எறியும் - கையோடு கைதாக்கும்; குன்றின் ஓங்கும் - மலை போல வளரும்; சிறுகும் - (அணுவாகத்) தேயும்; உடன்று ஆர்த்திடும் - வெகுண்டு ஆரவாரிக்கும்: முன்னும் பின்னும் பாங்கும் தொடரும் - முன்னிலும் பின்னிலும் இருபக்கங்களிலும் தொடரும்; சிரிக்கும் - நகைக்கும்; பகுவாயை மெல்லும் - பிளந்த வாயை மெல்லும்; நீங்கும்-(சிறிது) விலகும்; குறுகும் - (பின்) நெருங்கும்; பழிதா என நேர்ந்து பற்றும் - பழிதா என்று கூறி எதிர்ந்து பிடிக்கும்.

அப்பழி உருக்கொண்டு வந்து இங்ஙன மெல்லாம் செய்யா நின்றன. பழிக்குப் பழி கொடு என்னும் பொருள்படப் 'பழிதா' என்று கூறு மென்க. (௯)

மாசுண்ட தெய்வ மணிபோற்பணி வாயிற் பட்ட
தேசுண்ட தீந்தண் மதிபோலொளி தேம்பி வண்டு
மூசுண்ட தான முகமாவுண்ட வெள்ளில் போலக்
காசுண்ட பூணு னறைபோய கருத்த னானான்.

(இ - ள்.) மாசு உண்ட தெய்வ மணிபோல் - மாசு படிந்து (கழுவப் படாத) தெய்வத்தன்மை யுடைய மாணிக்கம் போலவும், பணிவாயில் பட்ட - இராகு வென்னும் பாம்பின் வாய்ப்பட்ட, தேசுஉண்ட தீந்தண் மதிபோல்-ஒளியிழந்த இனிய தண்ணிய சந்திரன் போலவும், ஒளி தேம்பி-பொலிவு குன்றி, வண்டு மூசு உண்ட தானம் முகம்மா உண்ட-வண்டுகள் மொய்க்கும் மதநீர் ஒழுகும் முகத்தினையுடைய வேழத்தால் உண்ணப் பட்ட, வெள்ளில் போல-விளங்கனிபோல, காசு உண்ட பூணன்-மணிகள் இழைத்த அணிகளையுடைய வரகுண பாண்டியன், அறைபோய கருத்தன் ஆனான் - உள்ளீடில்லாத மனமுடையவனானான்.

தேசுண்ட என்பதற்கு ஒளி பொருந்திய என்றுரைத்து மதிக்கு இயற்கையடை ஆக்கலுமாம். விளவிற்கு வருவதொரு நோய் யானை என்னும் பெயருடையது; அப்பெயருக் கேற்பவே 'வண்டு மூசுண்ட தான முகம்' என அடை கொடுக்கப்பட்டது; இந்நூலின். மாபாதகந் தீர்த்தபடலத்தில், ''வெருவரு வேழமுண்ட வெள்ளில்போல் வறியனாகி'' என்பதன் உரையை நோக்குக. அறை போதல் - அறிவின்றிட்பமாகிய உள்ளீ டொழிதல். (௧0)

மறையோர்கள் பின்னும் பழிமேலிடு வண்ண நோக்கி
இறையோ யிதுநான் முகன்சென்னி யிறுத்த கூடல்
அறவேதியனைத் தினமாயிரத் தெண்காற் சூழல்
உறவே யொழிக்கப் படு* மின்ன முரைப்பக் கேட்டி.

(இ - ள்.) பின்னும் பழிமேலிடும் வண்ணம் - மீண்டும் கொலைப் பாவம் ஓங்கி வளருந் தன்மையை, மறையோர்கள் நோக்கி - அந்தணர்கள் கண்டு, இறையோய் - மன்னனே, இது - இந்தக் கொலைப்பாவம், நான்முகன் சென்னி இறுத்த - பிரமன் தலையைக் கிள்ளிய, கூடல் அறவேதியனை - மதுரையில் வீற்றிருக்கும் அறவுருவினனாகிய சோமசுந்தரக் கடவுளை, தினம் ஆயிரத்து எண்கால் சூழல் உற ஒழிக்கப்படும் - நாள்தோறும் ஆயிரத்தெட்டு முறை வலம் வருதலால் ஒழிக்கப்படும்; இன்னம் உரைப்பக் கேட்டி - இன்னுஞ் சொல்லக் கேட்பாயாக.

பிரமச்சாயை ஒழிதற்குப் பிரமன் சென்னியைக் கிள்ளிய பெருமானை வணங்குதலே ஏற்புடைத் தென்றார் என்க. (௧௧)

ஆனா விரத நெறியாலிரண் டைந்து வைகல்
வானா டனையம் முறையால் வலஞ் செய்து வந்தாய்
ஆனா லதற்கு வழிகாட்டுமென் றையர் கூறப்
போனா னரசன் புனிதன்றிருக் கோயில் புக்கான்.

(இ - ள்.) ஆனா விரத நெறியால் - நீங்காத நோன்பின் வழி நின்று, இரண்டு ஐந்துவைகல் - பத்து நாட்கள், வான் நாடனை - சிவலோக நாயகனாகிய சோமசுந்தரக்கடவுளை, அம்முறையால் வலம் செய்து வந்தாய் ஆனால் - மேற்கூறிய எண்ணின்படி வலம் வருவாயாயின், அதற்கு வழி காட்டும் என்று - அவன் அக்கொலைப்பாவம் நீங்கும் நெறியைக் காட்டியருளுமென்று, ஐயர் கூற - அவ்வந்தணர்கள் சொல்ல, அரசன் போனான் - வரகுண மன்னன் சென்று, புனிதன் திருக்கோயில் புக்கான் - இறைவனது திருக்கோயிலை யடைந்தான்.

போனான் : முற்றெச்சம். (௧௨)

விழியா யிரத்தோன் பழிதீர்த்தனை வேதி யன்றன்
கழியாத மாபா தகந்தீர்த்தனை கௌவைக் கங்கைச்
சுழியா றலைக்குஞ் சடையாயெனைத் தொட்ட லைக்கும்
பழியா னதுந்தீர்த் தருளென்று பணிந்து வீழ்ந்தான்.

(இ - ள்.) கௌவைக் கங்கைச் சுழி ஆறு அலைக்கும் சடையாய் - ஒலியினையுடைய கங்கையாகிய சுழித்தல் பொருந்திய ஆறு அலைக்கின்ற சடையையுடையவனே, விழி ஆயிரத்தோன் பழி தீர்த்தனை - ஆயிரங் கண்களையுடைய இந்திரன் பழியை நீக்கியருளினை; வேதியன் தன் கழியாத மாபாதகம் தீர்த்தனை - ஒரு மறையோனுடைய (எவ்

(பா - ம்.) * ஒழியப்படும்.

வாற்றானும்) நீங்காத மாபாதகத்தையும் நீக்கி யருளினை; எனைத் தொட்டு அலைக்கும் பழியானதும் தீர்த்தருள் என்று - (அதுபோல) என்னைப்பற்றி வருத்தும் பழியினையுந் தீர்த்தருளுவா யென்று கூறி, பணிந்து விழ்ந்தான் - வீழ்ந்து வணங்கினான்.

இந்திரனும் ஒரு வேதியனும் அறிந்து செய்த கொலையாலாய பழியைப் போக்கிய பேரருளாளனாகிய நினக்கு அடியேன் அறியாமல் நேர்ந்த கொலையானாய பழியைப் போக்குதல் முறைமையே என்பான் அவற்றை யெடுத்துரைத்தனன் என்க. கங்கைச் சடைய னென்றதும் பாவத்தைக் கழுவும் இயல்புடைய னென்பது குறிப்பிட்டபடி. பணிந்து விழ்ந்தான் என்பதற்குக் கும்பிட்டு வீழ்ந்தான் எனலுமாம். (௧௩)

எண்ணும் படியம் முறையால்வளைந் தேத்த வையன்
விண்ணின் றியம்பு மரசேபரி மேத வேள்வி
நண்ணும் பயனோ ரடிவைப்பினி னண்ண வெம்மைப்
பண்ணும் வலத்தான் மகிழ்ந்தேம்பழி யஞ்சன் மன்னோ.

(இ - ள்.) எண்ணும்படி - ஆயிரத்தெட்டு என்று எண்ணுமாறு, அம்முறையால் வளைந்து ஏத்த - அந்நெறியால் வலம் வந்து துதிக்க, ஐயன் - இறைவன், விண்நின்று இயம்பும் - வானின்கண் நின்று (அசரீரியாகக்) கூறியருளுவன்; அரசே - வேந்தனே, பரிமேத வேள்வி நண்ணும் பயன் - துரங்க வேள்வியினால் வரும் பயன், ஓர் அடிவைப் பினில் நண்ண - ஓர் அடி பெயர்த்து வைத்தலாலே பொருந்தும்படி, எம்மைப் பண்ணும் வலத்தால் மகிழ்ந்தேம் - எம்மை வலஞ் செய்தலாற் களிப்புற்றேம்; பழி அஞ்சல் - (இனிப்) பழிக்கு அஞ்சுத லொழிக.

வலஞ்செய்தற்கு ஓர் அடியெடுத்து வைத்தல் ஓர் அசுவமேதப் பயனை அளிக்கும் என அதன் மேன்மை கூறினார். மன்னும் ஓவும் அசை நிலை. (௧௪)

பொன்னோடு முத்தங் கொழிக்குந்துறைப் பொன்னி நாடன்
நின்னோ டமராற்ற நினைந்தெழு நீயு நேர்வாய்
அன்னோ னுனக்குப் புறகிட்டகன் றோடு நீயும்
பின்னோடி யெட்டிப் பிடிப்பாரிற் றுரத்து மெல்லை.

(இ - ள்.) பொன்னோடு முத்தம் கொழிக்கும் துறை - பொன்னையும் முத்தையும் (அலைகள்) ஒதுக்கும் நீர்த்துறைகளை யுடைய, பொன்னி நாடன் - காவிரி நாடனாகிய சோழன், நின்னோடு அமர் ஆற்ற நினைந்து எழும் - நின்னுடன் போர் புரியக் கருதி வருவான்; நீயும் நேர்வாய் - நீயும் எதிர்ப்பாய்; அன்னோன் உனக்குப் புறகிட்டு அகன்று ஓடும் - அச் சோழன் உனக்குப் புறங்காட்டிப் (போர்க்களத்தினின்றும்) நீங்கி ஓடுவன்; நீயும் பின் ஓடி - நீயும் அவன் பின்னேயே ஓடி, எட்டிப் பிடிப் பாரின் துரத்தும் எல்லை - எட்டிப் பிடிப்பவரைப்போல அவனைத் துரத்தும்பொழுது.

புறகிட்டு - முதுகுகாட்டி; தோற்று. அணிமையிற் சென்று துரத்து தலை 'எட்டிப்பிடிப்பாரின் துரத்து மெல்லை' என்றார். (௧௫)

எமையா மருச்சித் திருக்குந்தல மெய்து வாயால்
அமையா தவன்கட் பழியாற்றுது* மென்னச் சேற்கண்
உமையாண் மணாள னருள்வாழ்த்தி யுரக னுச்சிச்
சுமையாறு தோளான் றொழுதான்ற னிருக்கை புக்கான்.

(இ - ள்.) எமையாம் அருச்சித்து இருக்கும் தலத்து எய்துவாய் - எம்மை யாமே அருச்சித்து வழிபட்டிருக்குந் தலமாகிய திருவிடை மருதூரை அடைவாய், அமையாத வன்கண் பழி ஆற்றுதும் என்ன -(அங்கு உனது) தணியாத கொடிய பழியைத் தணிவிப்போ மென்று கூறியருள, உரகன் உச்சிச்சுமை ஆறு தோளான் - அனந்தன் முடிப் பொறை ஆறுதற் கேதுவாகிய தோளையுடைய வரகுண வேந்தன், சேல்கண் உமையாள் மணாளன் அருள் வாழ்த்தி - அங்கயற் கண்ணம்மையின் மணாளனாகிய சோம சுந்தரக்கடவுளின் திருவருளை வாழ்த்தி, தொழுதான் - தொழுது, தன் இருக்கை புக்கான் - தனது இருப்பிடஞ் சென்றனன்.

சிவபெருமான் எல்லா ஆன்மாக்களும் தம்மை வழிபட்டுய்யுமாறு மறையாதி நூல்களால் அருளிச் செய்தமையன்றித் தாமே அருச்சித்தும் காட்டுவாராயினர். 'எமையாம் அருச்சித்திருக்கும்' என்பதனால் அவ் விறைவனால் அருச்சிக்கத்தக்க வேறு தெய்வமின் றென்பது பெறும். இறைவன் திருவிடைமருதூரில் தம்மைத்தாம் பூசித்த வரலாற்றை அத்தல புராணம் நோக்கி யுணர்க. சுமையானய வருத்தம் ஆறுதற்குக் காரணமாகிய தோள் என்க. அவன் தலையாற் பொறுக்கும் புவிப் பொறை முழுவதையும் இவன் தோளாற் பொறுக்கின்றனன் என்றபடி. தொழுதான், முற்றெச்சம்: ஆல்: அசை. (௧௬)

ஆர்த்தார் முடியோன் சிலநாள்கழித் தாற்ற லேற்ற
போர்த்தாவு வேங்கைக் கோடித்தானை புடவி போர்ப்பப்
பேர்த்தார் கலிவந் தெனப்பேரிய மார்ப்பக் கன்னிப்
பார்த்தாம வேன்மீ னவனாட்டிற் படர்ந்த வெல்லை.

(இ - ள்.) சிலநாள் கழித்து - சிலநாள் சென்றபின், ஆர்த்தார் முடியோன் - ஆத்திமாலை யணிந்த முடியையுடைய சோழன், ஆற்றல் ஏற்ற - வலிமை மிக்க, போர்த்தாவு வேங்கைக் கொடித்தானை - போரின்கண் தாவுகின்ற புலிக்கொடியை உயர்த்திய தனது சேனையானது, புடவி போர்ப்ப - புவியை மறைக்கும்படி, ஆர்கலி பேர்த்து வந்தென - கடல் நிலை பெயர்ந்து வந்தாற்போல, பேர் இயம் ஆர்ப்ப - பெரிய முரசங்கள் ஒலிப்ப, கன்னிப்பார் - கன்னி நாட்டினையுடைய, தாமவேல் மீனவன் நாட்டில் - மாலையணிந்த வேற்படையையேந்திய பாண்டியனது நாட்டின்கண், படர்ந்த எல்லை - சென்ற பொழுது.

(பா - ம்) *பழிமாற்றுதும்.

சேனையின் பரப்பாலும் முழக்கத்தாலும் எழுச்சியாலும் கடல் புடை பெயர்ந்து வந்தாற்போல என்க. முடியோன் தானை போர்ப்ப அதனுடன் பேரியம் ஆர்ப்ப ஆர்கலிவந்தெனப் படர்ந்த வெல்லே என வினை முடிக்க. தாமம் - ஒளியுமாம். (கஎ)

மிடைந்தேறு நேரிப் பொருப்பன்படை வேலை மேற்சென்
றடைந்தேறி மீனக் கொடியானம ராட வாழி
கடைந்தேறு வெற்பிற் கலங்கிற்றெனக் கிள்ளி சேனை
உடைந்தேக வெந்நிட் டுடைந்தோடின னுள்ளம் வெள்கா.

(இ - ள்.) மிடைந்து ஏறும் நேரிப்பொருப்பன்படை வேலை மேல் - நெருங்கி முன்னேறிய நேரி மலையையுடைய சோழனது சேனைக்கடலின் மேல், ஏறிச்சென்று அடைந்து - எதிர்த்துச் சென்று பொருந்தி, மீனக்கொடியான் அமர் ஆட - மீனக்கொடி யுயர்த்திய பாண்டியன் போர் செய்ய, ஆழி - கடலானது, கடைந்து ஏறு வெற்பின் - கடைந்து எழுந்த மந்தர மலையினால், கலங்கிற்று என - கலங்கினாற்போல, கிள்ளி சேனை உடைந்து ஏக - சோழன் படைதோற்று ஓட, உடைந்து வெந் இட்டு உள்ளம் வெள்கா ஓடினன் -(சோழனும்) தோற்றுப் புறங் காட்டி மனம்வெள்கி ஓடினான்.

பாற்கடலை மந்தர வெற்புக் கலக்கினாற்போலச் சோழனது சேனையைப் பாண்டியன் கலக்கினான் என்க. (கஅ)

சுறவக் கொடியண்ண றுரந்துபின் பற்றிச் செல்வோன்
புறவக் கடிமுல் லையுந்தாமரைப் போது மேந்தி
நறவக் கழிநெய்தலங் கானலின் ஞாங்கர் மொய்த்த
இறவப் புலவு கழுவீர்ந்துறைப் பொன்னி சேர்ந்தான்.

(இ - ள்.) பின்பற்றி துரந்து செல்வோன் - (அங்ஙனம் ஓடிய சோழனைப்) பின் பற்றித் துரந்து செல்வோனாகிய, சுறவக்கொடி அண்ணல் - மீனக் கொடி யுயர்த்திய வரகுணபாண்டியன், புறவக்கடி முல்லையும் - முல்லை நிலத்து மணமிக்க முல்லை மலரையும், தாமரைப் போதும் ஏந்தி - தாமரை மலரையும் ஏந்தி, நறவம் கழி நெய்தல் கானலின் ஞாங்கர் - தேன் சிந்தும் கழிசூழ்ந்த நெய்தல் நிலத்துச் சோலையின் மருங்கில், மொய்த்த இறவு புலவுகழுவு - நெருங்கிய இருல் மீனின் புலால் நாற்றத்தைப் போக்கும், ஈர் துறைப் பொன்னி சேர்ந்தான் - குளிர்ந்த நீர்த் துறையையுடைய காவிரியை யடைந்தான்.

பாண்டியன் கொடியை மீன் என்னும் பொதுமையால் கயல் எனவும் சுறா எனவும் கூறுவர். இறவு - இருன் மீன். முல்லை நிலத்துப் பூவையும் மருத நிலத்துப் பூவையும் கொண்டு சென்று நெய்தனிலத்துப் புலாலை யொழிக்கும் எனக் காவிரியின் சிறப்புக் கூறினார். செல்வோனாகிய அண்ணல் பொன்னி சேர்ந்தான் என்க. (கக)

பூசத் துறையிற் புகுந்தாடியப் பொன்னித் தென்சார்
வாசத் திடைமா மருதைப்பணி தற்கு வையைத்
தேசத் தவன்கீழ்த் திசைவாயில் கடந்து செல்லப்
பாசத் தளையும் பழியும்புற நின்ற வன்றே.

(இ - ள்.) வையைத் தேசத்தவன் - (அங்ஙனம் அடைந்த) வையையாறு சூழ்ந்த பாண்டி நாட்டையுடைய வரகுண வேந்தன், பூசத் துறையில் புகுந்து ஆடி - பூசத்துறையிற் சென்று நீராடி, அப்பொன்னித் தென்சார் - அக்காவிரியின் தென்பக்கத்தில், வாசத்து மா இடை மருதைப் பணிதற்கு - மணமிக்க பெருமை பொருந்திய திருவிடைமருதூர் இறைவனை வணங்குதற்கு, கிழ்த்திசைவாசல் கடந்து செல்ல - கீழைத்திசை வாயிலைக் கடந்து உள்ளே செல்ல, பாசத்தளையும் பழியும் புறம் நின்ற - பாசபந்தமும் கொலைப்பாவமும் (உடன் செல்லாது) புறத்தே நின்றன.

பூசத்துறை - தைமாதம் பூசநாளிலே மருதவாணர் தீர்த்தமாடும் திருக்காவிரித்துறை; இதனை,

"பூசம் புகுந்தாடிப் பொலிந்தழ காய
ஈச னுறைகின்ற இடைமரு தீதோ"

எனத் திருஞான சம்பந்தப்பெருமானும்,

"ஈசனெம்பெரு மானிடை மருதினில்
பூச நாம்புகு தும்புன லாடவே"

எனத் திருநாவுக்கரசுகளும் அருளிச்செய்தல் காண்க. வாசம் மருதுக்கு அடை, எழுந்தருளியுள்ள என்றுமாம். அன்றும், ஏயும் அசைகள். (௨௦)

சுருதிச் சுரும்பு புறஞ்சூழ்ந்து குழறத் தெய்வ
மருதிற் சிறந்த பெருந்தேனைக்கண் வாயங் காந்து
பருகிப் படிந்து தழல்வாய் வெண்ணெய்ப் பாவையொப்ப
உருகிச் செயலற் றுரையற்றுணர் வாகி நின்றான்.

(இ - ள்.) சுருதிச் சுரும்பு புறம் சூழ்ந்து குழற - வேதமாகிய வண்டுகள் புறத்திற் சூழ்ந்து ஒலிக்க, தெய்வமருதில் சிறந்த பெருந்தேனை - தெய்வத்தன்மை பொருந்திய இடைமருதிற் சிறந்த பெருமையுடைய தேனை, கண்வாய் அங்காந்து பருகி - கண்ணாகிய வாயைத் திறந்து பருகி, படிந்து - அதிலே தோய்ந்து, தழல்வாய் வெண்ணெய்ப்பாவை ஒப்ப உருகி - நெருப்பிற்பட்ட வெண்ணெயாலாகிய பாவை போல உருகி, செயல் அற்று உரை அற்று உணர்வு ஆகி நின்றான் - செயலும் சொல்லும் ஒழிந்து உணர்வு வடிவாகி நின்றான்.

மருதடியில் வீற்றிருக்கும் பெருமானை மருதமரத்தில் உள்ள தேனாக உருவகப்படுத்தி, அதற்கேற்ப வேதத்தை வண்டாக உருவகித்தார். மரத்தின் பொந்தில் தேன் இருல் வைப்பது காண்க. நினைத்தொறும்

காண்டொறும் பேசுந்தொறும் எப்பொழுதும் இன்பஞ் செய்வதாகலின் 'பெருந்தேன்' என்றார்.

"அந்த விடைமருதி லானந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ"

என்னும் திருவாசகமும்,

"மன்று ளாடுமது வின்னசை யாலே மறைச்சு
ரும்பறை புரத்தின் மருங்கே"

என்னும் பெரிய புராணச் செய்யுளும் இங்கே சிந்திக்கற்பாலன. தழல்வாய் வெண்ணெய்ப் பாவை உருகி உருத்தோன்று தொழிதல் போல அன்பரல் உருகிக் கருவி கரண மெல்லாம் கெட்டுத் தற்போதமிழந்து நின்றனென்க. பெருந்தேனை மிகப் பருகின னென்பது 'அங்காந்து பருகிப் படிந்து' என்னுஞ் சொல்லாற்றலாற் பெறப்படும். தேனை மிகவுண்டார்க்கு உரைசெயல் ஒழிதலாகிய நயமும் போற்றுக. சிவபெருமான் தாம் எழுந்தருளியிருக்கும் திருப்பதிகளை உமாதேவியார்க்குக் காட்டிக்கொண்டு திருவிடை மருதூர்க்கு நேரே வருகையில், திருக் கைலை அவரது பிரிவாற்றாது மருதமாகி அங்கு நின்றதென்ப. (உ௧)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

நிராமய பரமா னந்த நிருத்தநான் மாடக் கூடற்
பராபர விமையா முக்கட் பகவபார்ப் பதிம ணாள
புராதன வகில நாத புண்ணிய மருத வாண
அராவணி சடையா வென்றேன் றளவிலாத் துதிகள் செய்தான்.

(இ - ள்.) நிராமய - நோயற்றவனே, பரம ஆனந்த நிருத்த - பேரின்பத் திருக்கூத்தனே, நான்மாடக்கூடல் பராபர - நான்மாடக் கூடலில் வீற்றிருக்கும் பராபரனே, இமையா முக்கண் பகவ - இமையாத மூன்று கண்களையுடைய பகவனே, பார்ப்பதிமணாள-பார்வதி மணாளனே, புராதன - பழைமையானவனே, அகிலநாத - எல்லாவற்றுக்கும் இறைவனே, புண்ணிய- அறவடிவனே, மருதவாண - இடைமருதில் வாழ்பவனே, அரா அணி சடையா - பாம்பை அணிந்த சடையை யுடையானே, என்று அளவு இலாத் துதிகள் செய்தான் - என்று சொல்லிச்சொல்லி அளவிறந்த துதிகளைக் கூறினான்.

நிராமயன் - பிறவி நோயில்லாதவன்; ஆமயம் - நோய். மதுரையில் அருள்புரிந்த இறைவனே இப்பெருமான் என்று கொண்டு 'நான்மாடக் கூடற் பராபர' என்றான். பகவன் - ஆறு குணங்களையுடையவன். (உ௨)

சொற்பதங் கடந்த சோதி துதித்தடி பணிந்த வேந்தை
மற்பெருந் தோளாய் கீழை வாயிலிற் பிரம சாயை
நிற்பதந் நெறியாற் செல்லே னிழன்மதி யுரிஞ்சு மேலைப்
பொற்பெரு வாயி னீங்கிப் போதிநம் மதுரைக் கேன்றான்.

(இ - ள்.) சொல் பதம் கடந்த சோதி-சொல்லின் நிலையைக் கடந்து நின்ற ஒளிவடிவான இறைவன், துதித்து அடிபணிந்த வேந்தை - துதி செய்து அடிவணங்கிய வரகுணவேந்தனை (நோக்கி) மல் பெருந்தோளாய் - மற்போரிற் றேர்ந்த பெரிய தோள்களையுடையவனே, கிழைவாயிலில் பிரமசாயை நிற்பது - கிழைவாயிலின்கண் பிரமசாயை நிற்கின்றது (ஆகலின்), அந்நெறியால் செல்லேல் - அவ்வழியாற் போதலொழிக; நிழல்மதி உரிஞ்சு மேலைப்பொன் பெருவாயில் நீங்கி - ஒளியினையுடைய சந்திரமண்டலத்தை உரிஞ்சுகின்ற பொன்னலாகிய பெரிய மேலைவாயிலி னின்று நீங்கி, நம்மதுரைக்குப் போதி என்றான் - நமது மதுரைப் பதிக்குச் செல்வாயாக என்று கூறியருளினான்.

'சொற்பதம்' என்புழிப் பதம் என்பது நிலைமையென்னும் பொருட்டு.

"சொற்பதங் கடந்த தொல்லோன்"

என்பது திருவாசகம். போதி, த் : எழுத்துப்பேறு. (உ௧)

வரகுண னதுகேட் டையன் மருதினை வளைந்து நீங்கற்
கருமையால் வாயி றோறு மடிக்கடி வீழ்ந்து வீழ்ந்து
வரைதொளைத் தன்ன மேலை வாயிலாற் போவா னன்ன
திருமணிக் கோபு ரந்தன் பெயரினாற் செய்து சின்னாள்.

(இ - ள்.) வரகுணன் அது கேட்டு - வரகுண பாண்டியன் அதனைக் கேட்டு, ஐயன் மருதினை வளைந்து-இறைவன் வீற்றிருக்கும் இடை மருதினை வலம் வந்து, நீங்கற்கு அருமையால் - பிரிதற்கு அருமையால், வாயில் தோறும் அடிக்கடி வீழ்ந்து வீழ்ந்து - வாயில்கள்தோறும் பன் முறையும் வீழ்ந்து வீழ்ந்து வணங்கி, வரை தொளைத்தன்ன மேலை வாயிலால் போவான் - மலையைத் தொளைத்தா லொத்த மேலைவாயிலாற் போகின் றவன், அன்ன திருமணிக் கோபுரம் - அந்த அழகிய மணிகளழுத்திய கோபுரத்தை, தன் பெயரினால் செய்து - தனது பெயரினாற் செய்து, சில் நாள் - சில நாள் (அங்குத் தங்கி)

தொளைத்ததன்ன என்பது விகாரமாயிற்று. மலையைத் தொளைத்தது போலும் வாயில் என்னும் இக்கருத்து,

"வென்றெழு கொடியொடு வேழஞ் சென்றுபுகக்
குன்று குயின்றன்ன வோங்குநிலை வாயில்"

என நெடுநல்வாடையில் வந்துளது. (உ௨)

திருப்பணி பலவுஞ் செய்து தென்றிசை வழிக்கொண் டேகிச்
சுருப்பணி நெடுநாண் பூட்டுஞ் சுவைத்தண்டீச் சிலையாற் காய்ந்த
மருப்பணி சடையான் கோயில் வழிதோறுந் தொழுது போற்றிப்
பொருப்பணி மாடக் கூடற் பொன்னக ரடைந்தான் மன்னே.

(இ - ள்.) திருப்பணி பலவும் செய்து - பல திருப்பணிகளையுஞ் செய்து முடித்து, தென் திசை வழிக்கொண்டு ஏகி-தென்றிசையின் வழிக் கொண்டு சென்று, சுரும்பு அணி நெடு நாண் பூட்டும் - வண்டுகளின் வரிசையாகிய நெடிய நாண் பூட்டிய, சுவைத்தண்டச் சிலையான் காய்ந்த - கரும்புவில்லையுடைய மதவேளை எரித்தருளிய, மருப்பு அணிசடையான் கோயில் - பன்றிக் கொம்பினை அணிந்த சடையையுடைய சிவபெருமான் வீற்றிருக்குந் திருக்கோயிலை, வழிதொறும் தொழுது போற்றி - வழி தோறும் வணங்கித் துதித்து, பொருப்பு அணிமாடக்கூடல் பொன் நகர் அடைந்தான் - மலைகளின் வரிசைபோல (ஓங்கிய) மாடங்களையுடைய மதுரை என்னுந் திருநகரை அடைந்தனன்.

சுருப்பு - சுரும்பு: வலித்தல். சுவைத்தண்டம் - கரும்பு. சடையான் கோயில் வழிதொறும் தொழுது என்பதற்கு மருதவாணர் கோயிலை வழிதொறும் திரும்பி நோக்கித் தொழுது என்றுரைக்க; அன்றி, வழி தொறும் உள்ள இறைவன் கோயில்களைத் தொழுது என்றுமாம். மன்னும் ஓவும் அசைகள். வரகுணதேவரது அன்பின் பெருக்கையும், அவர் இடைமருதில் இயற்றிக்கொண்டிருந்த திருத்தொண்டின் திறத்தையும்,

> "வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
> கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்
> ஓடும் பன்னரி யூளைகேட் டரனைப்
> பாடின வென்று படாம்பல வளித்தும்
> குவளைப் புனலிற் றவளை யரற்ற
> ஈசன் றன்னை யேத்தின வென்று
> காசும் பொன்னுங் கலந்து தூவியும்
> வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய
> செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
> பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன
> இடித்துக் கொண்டவ னெச்சிலை நுகர்ந்தும்
> மருத வட்டத் தொருதனிக் கிடந்த
> தலையைக் கண்டு தலையுற வணங்கி
> உம்மைப் போல எம்மித் தலையும்
> கிடத்தல் வேண்டுமென் றடுத்தடுத் திரந்தும்
> கோயின் முற்றத்து மீமிசைக் கிடப்ப
> வாய்த்தன வென்று நாய்க்கட்ட மெடுத்தும்
> காம்புகுத் துதிர்ந்த கனியுருக் கண்டு
> வேம்புகட் கெல்லாம் விதான மமைத்தும்
> விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
> புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
> பெரிய வன்பின் வரகுண தேவரும்"

என்று திருவிடை மருதூர் மும்மணிக் கோவையில், பட்டினத்தடிகள் அருளிச்செய்தல் காண்க. (உ௬)

தொடுபழி தொலைவித் தாண்ட சுந்தரத் தோன்றல் பாதக்
கடிமல ரடைந்து நாளுங் கைதொழு துலக மெல்லாம்
வடுவறு செங்கோ லோச்சும் வரகுண னறவோர் நாவால்
அடுசுவை யமுத மன்ன வரன்புகழ் செவிம டுப்பான்.

(இ - ள்.) தொடுபழி தொலைவித்து ஆண்ட - விடாது தொடர்ந்த பழியைப் போக்கிக் காத்தருளிய, சுந்தரத் தோன்றல் பாதக்கடிமலர் அடைந்து - சோமசுந்தரக்கடவுளின் திருவடியாகிய மணமிக்க தாமரை மலரைச் சார்ந்து, நாளும் கைதொழுது - நாள்தோறும் வணங்கி, உலகம் எல்லாம் வடு அறு செங்கோல் ஓச்சும் வரகுணன் - உலகம் முழுதும் குற்றமற்ற செங்கோல் செலுத்தும் வரகுண பாண்டியன், அறவோர் நாவால் - அந்தணர்கள் நாவினால், சுவை அடு அமுதம் அன்ன அரன் புகழ் - சுவை பொருந்திய அமுதத்தை யொத்த இறைவன் புகழை, செவிமடுப்பான் - கேட்பான்.

தொடுபழி - விடாது தொடரும் பழி; தொடுத்த என விரித்து வளைத்துக் கொண்ட பழி என்றுரைத்தலுமாம்; இஃது இப்பொருட் டாதலை,

"தொடுத்துங் கொள்ளா தமையலென்"

என்று புறப்பாட்டுள் வருதலானறிக. நாவைக் கலமாகவும், புகழை உணவாகவும், செவியை வாயாகவும் உருவகங் கொள்க. அடு - அடுத்த, பொருந்திய. ஏனைச் சுவைகளை வெல்லும் சுவையென்றுமாம்; நாவால் அட்ட என்றுரைப்பாருமுளர். (உசு)

வேதமா கமம்பு ராண மிருதிகண் முதலா நூலும்
ஓதுவ துலகின் மிக்க துருத்திர வுலக மென்னும்
போதம தகங்கொ டந்தப் பொற்பதி காண வேண்டுங்
காதல்செல் வழியே யீசன் கங்குலிற் கோயி லெய்தா.

(இ - ள்.) வேதம் ஆகமம் புராணம் மிருதிகள் முதலாம் நூலும் - வேதமும் ஆகமமும் புராணமும் மிருதிகளும் முதலாகிய நூல்கள் அனைத்தும், ஓதுவது - கூறுவதாகிய, உலகில் மிக்கது உருத்திர உலகம் என்னும் - உலகங்களில் மேம்பட்டது சிவலோகமென்னும், போதம் அகம்கொண்டு - அறிவினை மனத்திற்கொண்டு, அந்த பொன்பதி காண வேண்டும் காதல் செல்வழியே - அந்த அழகிய சிவலோகத்தைக் காண எழுந்த விருப்பத்தின் வழியே, ஈசன் கங்குலில் கோயில் எய்தா - சிவ ராத்திரியில் திருக்கோயிலை அடைந்து.

ஓதுவதாகிய போதம் என்க. உலகின் - பிரமன் முதலாயினோர் உலகங்களினும். போதமது என்பதில் அது : பகுதிப்பொருள் விகுதி. (உஎ)

[கலிநிலைத்துறை]

மாழை மான்மட நோக்கிதன் மணாளனை வணங்கிப்
பீழை யேழ்பவங் கடந்துநின் னடிநிழல் பெற்றோர்
சூழ நீசிவ புரத்தில்வீற் றிருப்பது தொழுதற்
கேழை யேற்கொரு கருத்துவந் தெய்திய தெந்தாய்.

(இ - ள்.) மாழைமான் மட நோக்கி தன் மணாளனை வணங்கி - இளமைபொருந்திய மான் போலும் பார்வையையுடைய மடப்பத்தை யுடைய உமையம்மையின் நாயகனாகிய சோமசுந்தரக்கடவுளை வணங்கி, பீழை ஏழ்பவம் கடந்து - துன்பத்தையுடைய எழுவகைப் பிறவியை யுங் கடந்து, நின் அடி நிழல் பெற்றோர் - நினது திருவடி நிழலை அடையப் பெற்றோர்கள், சூழ - சூழாநிற்க, நீ சிவபுரத்தில் வீற்றிருப்பது - நீ சிவலோகத்தின்கண் வீற்றிருக்குங் காட்சியை, தொழுதற்கு - கண்டு வணங்குதற்கு, எந்தாய் - எம் தந்தையே ஏழையேற்கு ஒரு கருத்து வந்து எய்தியது - அறிவில்லாத அடியேனுக்கு ஓர் எண்ணம் வந்து தோன்றியது.

மாழை - இளமை ; இஃது இப்பொருட்டாதலை ;

"மைபூத்தலர்ந்த மழைக்கண் மாழைமானேர் நோக்கின்"

என்னும் சிந்தாமணிச் செய்யுள் உரைநோக்கி யுணர்க. மடப்பத்தை யுடையாள் என விகுதிப் பொருளோடு இயைக்க ; மருட்சியும் மடப்பமும் உடைய நோக்கு என்றுமாம். (உஅ)

என்ற காவல னன்பினுக் கெளியராய் வெள்ளி
மன்ற வாணரவ் வுலகையிவ் வுலகிடை வருவித்
தின்று காட்டுது மிவற்கெனத் திருவுளத் தெண்ணம்
ஒன்றி னாரஃ துணர்ந்ததா லுருத்திர வுலகம்.

(இ - ள்.) என்ற காவலன் அன்பினுக்கு எளியராய் - என்று கூறிக் குறையிரந்த வரகுண வேந்தன் அன்பிற்கு எளியவராகி, வெள்ளி மன்றவாணர் - வெள்ளியம்பலமுடைய சோமசுந்தரக்கடவுள், அவ் வுலகை இவ்வுலகிடை வருவித்து இன்று இவற்குக் காட்டுதும் என - அச் சிவலோகத்தை இந்த நிலவுலகின்கண் வருவித்து இன்று இவ்வன்பனுக்குக் காட்டுவேமென்று, திருவுளத்து எண்ணம் ஒன்றினார் - திருவுள்ளத்தின் கண் எண்ணியருளினார் ; உருத்திர உலகம் அஃது உணர்ந்தது - அச் சிவலோகம் அதனை உணர்ந்தது.

எண்ணம் ஒன்றினார் - எண்ணம் பொருந்தினார் ; எண்ணினார்.

ஆல் : அசை. (உகூ)

கோடி மாமதிக் கடவுளர் குரூஉச்சுடர் பரப்பி
நீடி யோரிடத் துதித்தென மின்மினி நிகர்த்து
வாடி வானிரு சுடரோளி மழுங்கவா னிழிந்து
தேடி னார்க்கரி யானுறை சிவபுரந் தோன்ற.

(இ - ள்.) தேடினார்க்கு அரியான் உறை சிவபுரம் - தேடிய திருமாலுக்கும் பிரமனுக்கும் அரிய இறைவன் தங்கியருளிய சிவலோகமானது, கோடிமா மதிக்கடவுளர் - நிறைந்த கோடி திங்கட் புத்தேளிர், குரூஉச் சுடர் பரப்பி - நிறம் பொருந்திய ஒளியினைப் பரப்பி நீடி ஓர் இடத்து உதித்தென - குறைவின்றி ஒரே யிடத்தில் உதித்தாற்போல, வான் இரு சுடர் - வானின்கண் உள்ள பரிதியும் மதியுமாகிய இரண்டு சுடர்களும், மின் மினி நிகர்த்து வாடி ஒளி மழுங்க மின்மினிப் பூச்சியை ஒத்து வாடி ஒளி மழுங்குமாறு, வான் இழிந்து தோன்ற - விண்ணினின்றும் இறங்கித் தோன்றா நிற்க.

கோடி - எண்ணிறந்த என்னும் பொருட்டு. ஒளியுடன் தட்பமும் உடைமையால் மதிக்கடவுளரைக் கூறினர். உதித்தென: விகாரம், தேடினார்க்கு என்பதற்குத் தற்போதத்தால் ஆராயலுற்றார்க்கு எனப் பொதுவாக உரைத்தலுமாம். சிவபுரம் இருசுடரொளி மழுங்கு வாளிழந்து தோன்ற என வினை முடிவு கொள்க. (௬௦)

ஆண்ட நாயக னந்தியை யழைத்தெமக் கன்பு
மாண்ட காதலான் வரகுண வழுதிநம் முலகங்
காண்டல் வேண்டினன் காட்டெனக் கருணையா லேவல்
பூண்ட வேத்திரப் படையினன் றொழுதனன் போனான்.

(இ - ள்.) ஆண்ட நாயகன் - எம்மை ஆண்டருளிய சோமசுந்தரக் கடவுள், நந்தியை அழைத்து - நந்திப்புத்தேளை அழைத்து, எமக்கு அன்பு மாண்ட காதலான் வரகுணவழுதி - எமக்கு அன்பு சிறந்த விருப்பத்தை யுடையனாகிய வரகுண பாண்டியன், நம் உலகம் காண்டல் வேண்டினன் காட்டு என - நமது உலகத்தைக் காண விரும்பினன் ஆகலின் காட்டுவாயாக என்று கூறியருள, கருணையால் - அவன் திருவருளினால், ஏவல் பூண்ட வேத்திரப்படையினன் - அவ்வேலை மேற்கொண்ட பிரம்புப்படையையுடைய திருநந்திதேவன், தொழுதனன் போனான் - வணங்கிச் சென்றான்.

ஆண்ட நாயகன் - தம்மை ஆண்ட நாயகன் என்றும், உயிர்களை ஆண்டநாயகன் என்றும் உரைத்தலுமாம். காதல் - அன்பின் முதிர்ச்சி. ஏவல்பூண்ட என்பதற்குப் பணிசெய்தலை மேற்கொண்டஎனப் பொதுவின் உரைத்தலுமாம். கருணையான் என்னும் பாடத்திற்கு இறைவன் என்பது பொருள். தொழுதனன்: முற்றெச்சம். (௬௧)

வருதி யாலெனப் பணிந்தெழு வரகுணற் கொடுபோய்க்
கருதி யாயிரம் பெயருடைக் கடவுளான் முகத்தோன்
சுருதி யாதியீ றளப்பருஞ் சோயம்பிர காசப்
பரிதி யாள்சிவ புரமிது பாரெனப் பணித்தான்.

(இ - ள்.) வருதி என - (அங்ஙனஞ் சென்ற நந்திதேவன்) வருவாய் என்றருள, பணிந்து எழு வரகுணன் கொடு போய் - வணங்கி எழுந்த வரகுண பாண்டியனைக் கொண்டு சென்று, ஆயிரம் பெயர் உரைக்கடவுள் நான்முகத்தோன் - ஆயிரம் பெயருடைய திருமாலும் பிரமனும், சுருதி ஆதி கருதி - வேத முதலிய அளவைகளால் ஆராய்ந்து, ஈறு அளப்பு அரு - முடிவு காண்பரிய, சொயம்பிரகாசம் பரிதி ஆள் - இயற்கையாகிய பேரொளியினை யுடைய ஞான சூரியனாகிய சோம சுந்தரக்கடவுள் ஆண்டருளுகின்ற, சிவபுரம் இது - சிவலோகம் இது; பார் எனப் பணித்தான் - இதனைக் காண்பாயாக எனப் பணித்தருளினன்.

வருதியென்று கூறி அங்ஙனம் கூறிய வளவிற் பணிந்தெழுந்த வரகுணனைக் கொண்டுபோய் என விரித்துரைக்க. கடவுளாகிய பரிதி எனலுமாம்; இதற்கு, கருதிப்பார் எனப் பணித்தான் என்றியைத்துரைக்க. நான்முகத்தோனும் சுருதி முதலியவும் ஈறு அளப்பரும் என்றும், நான்முகத்தோனும் சுருதியும் முதலு முடிவும் அளத்தற்கரிய என்றும் உரைத்தலுமாம்;

"மறையின லயனன் மாலான் மனத்தினல் வாக்கால் மற்றும்
குறைவிலா வளவி னலுங் கூறெனு தாகி நின்ற
இறைவனர்"

என்று சிவஞான சித்தியார் கூறுதல் அறியற் பாலது, ஞாயிறு முதலிய ஒளிகட்கெல்லாம் ஒளி கொடுத்து இயல்பின் விளங்கும் பேரொளியாகலின் 'சொயம்பிரகாசப் பரிதி' என்றார். ஆல்: அசை. (கூஉ)

கருப்பு ரங்கமழ்ந் துளர்பசுங் கால்களா லுதையுண்
டருப்பி னஞ்சிதைந் தாயிரப் பத்தியோ சனைபோய்
மருக்க மழ்ந்துநூ றுயிரம் வாலிதழ்க் கமலம்
இருக்கு மோடைகள் புடைதோறுந் தழுவிய யாறும்.

(இ - ள்.) கருப்புரம் கமழ்ந்து - கருப்புர மணம் வீசி, உளர் பசுங் கால்களால் - அசைகின்ற தென்றற் காற்றுகளால், உதையுண்டு - மொத்துண்டு, அருப்பு இனம் சிதைந்து - அரும்புக் கூட்டங்கள் முறுக்கவிழ்ந்து, ஆயிரப்பத்து யோசனை போய் மருக்கமழ்ந்து - பதினாயிரம் யோசனை தூரஞ் சென்று மணம் வீசி, நூறுயிரம் வால் இதழ்க்கமலம் இருக்கும் ஓடைகள் - நூறுயிரம் இதழ்களையுடைய வெண்டாமரை மலர்கள் இருக்கின்ற ஓடைகள், புடை தோறும் தழுவிய யாறும் - பக்கந்தோறும் பொருந்திய ஆறுகளும்.

பசுங்கால் - இளங்காற்று. கால் என்றதற் கேற்ப உதையுண்டு என நயம்படக்கூறினர். வால் - தூய்மையுமாம். (கூ௩)

வரம்பின் மாதரார் மதுரவாய் திறந்துதேன் வாக்கும்*
நரம்பி னேழிசை யாழிசை நகைமலர்த் தருவின்
சுரும்பி னேரிசை நாரதர் தும்புரு† விசைக்கும்
இரும்பு நீர்மெழு காக்கிய வின்னிசை யெங்கும்.

(இ - ள்.) வரம்பு இல் மாதரார் - அளவிறந்த மாதர்கள், மதுர வாய் திறந்து - இனிய வாயினைத் திறந்து, தேன் வாக்கும் ஏழ் இசை - தேனைச் சொரிவதுபோற் பாடும் ஏழிசைகளும், நரம்பின் யாழ் இசை - நரம்புகளையுடைய யாழின் இசைகளும், நகைமலர்த் தருவின் - விளங்கு கின்ற மலர்களையுடைய மரங்களில் உள்ள, சுரும்பின் ஏர் இசை - வண்டு களின் அழகிய இசையும், நாரதர் தும்புரு இசைக்கும் - நாரதரும் தும்புரு வும் பாடுகின்ற, இரும்பு நீர் மெழுகு ஆக்கிய இன் இசை - இரும்பினை மெழுகு போல இளகுந் தன்மையாக்கிய இனிய இசையுமுள்ள, எங்கும் - எல்லா விடங்களும்.

தேன் வாக்கும் என்பதற்கேற்ப வாயை மலராக்குக. வாக்கும் ஏழிசையும் நரம்பின் யாழிசையும் எனக் கூட்டுக; யாழுடன் கூடிய வாக்கும் இசை என்றியைத் துரைத்தலுமாம். ஏழிசை முற்கூறப் பட்டமை காண்க. மெழுகு நீர் என மாறுக. எங்கும் என்பதனை எல்லா இடங்களும் எனக் கொண்டு யாறு முதலியவற்றோடு எண்ணுக. (௩௪)

அமுத வாவியும் போன்மல ரம்புயத் தடமுங்
குமுத வாயர மாதராங் குயிலினம் பயிலும்
நிமிர வாள்விடு மரகத நெடியபைங் காவுந்
திமிர மாசறக் கழுவிய தேவர்வாழ் பதமும்.

(இ - ள்.) அமுதவாவியும் - அமிழ்த மயமான நீரினையுடைய நடைக் கிணறும், பொன் அம்புய மலர்த்தடமும் - பொன் போன்ற தாமரை மலர்கள் நிறைந்த தடாகங்களும் குமுதவாய் அரமாதர் ஆம் குயில் இனம் பயிலும் - செவ்வல்லி மலர்போலும் வாயினையுடைய தேவமகளி ராகிய குயிற் கூட்டங்கள் விளையாடும், நிமிரவாள் விடும் மரகதம்-நிரம்ப ஒளிவிடும் மரகதம் போன்ற, நெடிய பைங்காவும் - நீண்ட பசிய சோலை களும், திமிரம் மாசு அறக்கழுவிய - இருளாகிய களங்கம் ஒழியுமாறு கழுவிய, தேவர் வாழ் பதமும் - தேவர்கள் வாழ்கின்ற பதங்களும்.

வாவி - நடைக்கிணறு. நிமிர - மிக. தேவர் ஒளிவடிவின ராகலின் 'திமிர மாசறக் கழுவிய தேவர்' என்றார்; ஆணவ இருளுமாம். (௩௫)

அலம்பு பாற்கடல்‡ போற்புறத் தமுதநீ ரகழும்
பொலஞ்செய் ஞாயில்சூழ் புரிசையும் பொன்செய்கோ புரமும்
நலங்கொள் பூவியல் வீதியு நவமணி குயின்ற
துலங்கு மாளிகைப் பந்தியுஞ் சூளிகை நிரையும்.

(பா - ம்.) *வார்க்கும், †நாரத தும்புரு. ‡அலங்கு பாற்கடல்.

(இ - ள்.) அலம்பு பால் கடல் போல் - ஒலிக்கின்ற பாற்கடல் போல, புறத்து அமுத நீர் அகழும் - புறத்தின்கண் அமுதம் போன்ற நீரினையுடைய அகழியும், பொலம் செய்ஞாயில் சூழ்புரிசையும் - பொன்னாற் செய்த சூட்டுக்கள் சூழ்ந்த மதிலும், பொன்செய் கோபுரமும் - பொன்னாற் செய்த கோபுரமும், நலம் கொள் பூ இயல் வீதியும் - நன்மையைக் கொண்ட பொலிவமைந்த வீதிகளும், நவமணி குயின்ற - ஒன்பது மணிகளும் பதிக்கப்பட்ட, துலங்கு மாளிகைப் பந்தியும் - விளங்கா நின்ற மாளிகை வரிசைகளும், சூளிகை நிரையும் - அவற்றின் இறப்பு வரிசைகளும்.

ஞாயில் - மதிலுறுப்பு; ஏப்புழைக்கு நடுவாக எய்து மறையும் சூட்டு என்பர். சூளிகை - நிலா முற்றமுமாம். (௩௬)

ஐம்பு லங்களும் வைகலும் விருந்ததா வருந்த*
வெம்பு நால்வகை யுண்டியும் வீணையுஞ் சாந்துஞ்
செம்போ னாரமு மாடலின் செல்வமுந் தெய்வப்
பைம்பொன் மேகலை யோவியப் பாவையோப் பாரும்.

(இ - ள்.) ஐம்புலங்களும் - ஐந்து புலன்களும், வைகலும் - நாள் தோறும், விருந்ததா அருந்த - விருந்தாக உண்ணுதற்கு அமைந்த, வெம்பு நால்வகை உண்டியும் - வெம்மையுள்ள நான்கு வகையாகிய உணவுகளும், வீணையும் - யாழும், சாந்தும் - சந்தனமும், செம்பொன் ஆரமும் - சிவந்த பொன்னாற் செய்த மாலைகளும், ஆடலின் செல்வமும் - ஆடலாகிய செல்வமும், தெய்வப் பைம்பொன் மேகலை - தெய்வத்தன்மை பொருந்திய பசிய பொன்னாலாகிய மேகலை யணிந்த, ஓவியப் பாவை ஒப்பாரும் - சித்திரப்பாவையை ஒத்த மகளிரும்.

ஐம் புலங்கள் - ஐம் பொறிகள். விருந்தது, அது : பகுதிப் பொருள் விகுதி. ஆக என்பது தொக்கது. வெம்பு - விருப்பஞ் செய்கின்ற என்றுமாம். உண்டி நாவிற்கும், வீணை செவிக்கும், சாந்து மூக்கிற்கும் மெய்க்கும், ஆரமும் ஆடலும் கண்ணிற்கும் விருந்தாக அமைந்தன. பாவையொப்பார் ஐம்பொறிகட்கும் விருந்தாக அமைந்தனர் என்க;

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள"

என்பது முப்பால். (௩௭)

படர்ந்த வார்சடை யுருத்திரர் பணைத்திரு மாந்த
வடங்கோள் பூண்மூலை யுருத்திர மகளிரோ டமரும்
இடங்கோண் மாளிகைப் பந்தியு மிகல்வினை துன்பங்
கடந்த செல்வமுங் கவலையில் போகமுங் காட்டி.

(இ - ள்.) படர்ந்த வார்சடை உருத்திரர்-விரிந்த நீண்ட சடையையுடைய உருத்திரர்கள், பணைத்து இருமாந்த - பருத்து இறுமாந்த, வடம்

(பா - ம்.) * விருந்தவா வருந்த.

கொள் பூண்முலை உருத்திர மகளிரோடு அமரும் - முத்து வடமாகிய அணியை அணிந்த கொங்கையையுடைய உருத்திர மகளிரோடு பொருந்தியிருக்கும், இடம் கொள் மாளிகைப் பந்தியும் - இடம் பரந்த மாளிகை வரிசைகளும், இகல் - பகைமையும், வினை துன்பம் - பிறரால் விளையுந் துன்பங்களையும் கடந்த செல்வமும் - நீங்கிய செல்வமும், கவலை இல் போகமும் - கவலையின்றித் துய்க்கும் போகங்களும் ஆகிய இவை அனைத்தையும், காட்டி - (தனித்தனி) காண்பித்து.

ஏனை யுலகங்களில் உள்ள செல்வம் பகைமையுடனும் துன்பங்களுடனும் பொருந்தியதும், போகம் கவலையுடன் கூடியதும் ஆம். ஆகலின் ஈண்டு அவையொழிந்த செல்வமும் போகமும் என்றார். சிவபுரம் இது பார் எனப் பணித்து, அங்குள்ள இவற்றைத் தனித்தனி காட்டியென்க. (௩அ)

முண்ட காசனன் பதமிது மூவுல களந்த
தண்டு ழாயவன் புரமிது தனிமுதல் வடிவங்
கொண்டு வீறுசா லுருத்திரர் கோப்பதி யின்ன
எண்டி சாமுகங் காவல ருறைவிட மிவைகாண்.

(இ - ள்.) முண்டக ஆசனன் பதம் இது - தாமரைத் தவிசினையுடைய பிரமன் வாழும் பதம் இதுவாகும்; மூவுலகு அளந்த தண் துழாயவன் புரம் இது - மூன்றுலகங்களையும் அளந்த குளிர்ந்த துழாய் மாலையை யுடைய திருமாலின் பதி இதுவாகும்; தனி முதல் வடிவம் கொண்டு - ஒப்பற்ற முதற் கடவுளாகிய சிவபெருமான் திருவுருவத்தைப் பெற்று, வீறு சால் உருத்திரர் கோப்பதி இன்ன - பெருமை மிக்க உருத்திரர்களின் சிறந்த நகரங்கள் இவை; எண் திசாமுகம் காவலர் உறைவிடம் இவை காண் - எட்டுத்திக்குகளையும் காவல் செய்கின்ற திக்குப்பாலகர்களின் இருப்பிடங்கள் இவையாகும்.

முண்டகாசனன் : வடமொழி நெடிற் சந்தி. கோ - தலைமை; சிறப்பு. திசாமுகம் - திசையின் இடம். காண், முன்னிலை யசை ; தனித்தனி கூட்டி, காண்பாயாக என்றுரைத்தலுமாம் ; வருஞ் செய்யுட்களிலும் இங்ஙனங் கொள்க. (௩௯)

புலரு முன்புன லாடிநீ றாடிநம் புனிதன்
இலகு மாலயம் விளக்கிநந் தனப்பணி யியற்றி
மலர்கோய் தாய்ந்தனர் தொடுத்தரன் புகழ்செவி மடுத்திவ்
வுலக வாணராய்ப் போகமுற் றுறைகுவ ரிவர்காண்.

(இ - ள்.) புலருமுன் - விடிவதற்கு முன்னரே, புனல் ஆடி - நீராடி, நீறு ஆடி - திருநீறு தரித்து, நம்புனிதன் இலகும் ஆலயம் விளக்கி - நமது இறைவன் விளங்கும் திருக்கோயிலைத் திருவலகிட்டு நந்தனப்பணி இயற்றி - திருநந்தனப்பணி செய்து, மலர் கொய்து ஆய்ந்தனர் தொடுத்து - மலரெடுத்து ஆய்ந்து திருப்பள்ளித்தாமம் தொடுத்துச் சாத்தி, அரன் புகழ் செவி மடுத்து - இறைவன் புகழைச் செவி நிரம்பக்

கேட்டு, இவ்வுலக வாணர் ஆய் - இவ்வுலகத்தில் வாழ்பவராய், போகம் உற்று உறைகுவர் இவர்காண் - போகந்துய்த்திருப்போர் இவர்.

ஆய்ந்தனர்; முற்றெச்சம். தாதமார்க்கமாகிய சரியை நெறியி னின்று சாலோக முற்றோர் இதிற் கூறப்பட்டனர். சரியையின் இயல் பினையும் பேற்றையும்,

"தாதமார்க்கஞ் சாற்றிற் சங்கரன்றன் கோயிற்
றலமலகிட் டிலகுதிரு மெழுக்குஞ் சாத்திப்
போதுகளுங் கொய்து பூந்தார் மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்துபாடித்
தீதிறிரு விளக்கிட்டுத் திருநந்த வனமும்
செய்துதிரு வேடங்கண் டாலடியேன் செய்வ
தியாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியும்
இயற்றுவதிச் சரியைசெய்வோ ரீசனுல கிருப்பர்"

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தால் அறிக. (௬0)

தூய ராகியைஞ் சுத்திசெய் தகம்புற மிரண்டின்
நேய ராய்விதி நெறியினுன் முகமனீ ரேட்டாற்
காயம் வாய்மன வோருமையா லர்ச்சித்துக் கடவுள்
நாய ஞரரு குறைபத நண்ணிஞ ரிவர் காண்.

(இ - ள்.) தூயர் ஆகி ஐஞ் சுத்தி செய்து - புனித முடையராய் ஐவகைச் சுத்திசெய்து, அகம்புறம் இரண்டின் நேயராய் - உள்ளும் புறம் பும் அன்புடையராய், விதி நெறியினுல் - ஆகம நெறியினுல், முகமன் ஈர் எட்டால் - பதினறு வகை உபசாரத்தாலும், காயம் வாய் மன ஒருமை யால் - உடல் உரை உள்ளமாகிய இம்மூன்றின் ஒருமைப்பாட்டுடன், அர்ச்சித்து - பூசித்து, கடவுள் நாயஞர் அருகு உறைபதம் நண்ணிஞர் இவர்காண் - எல்லாத் தேவர்களுக்கும் இறைவஞகிய சிவபிரான் அணி மையில் உறையும் பதத்தினை அடைந்தவர் இவர்.

ஐஞ்சுத்தி, பூதசுத்தி, ஆன்ம சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, இலிங்க சுத்தி என்பன. பூத சுத்தியாவது தத்துவங்களைச் சடமென் றறிதல்; ஆன்ம சுத்தியாவது அவ்வாறறிதல் ஆன்ம போதத்தா லன்று, திருவருளா லென்றுணர்தல்; திரவிய சுத்தியாவது ஆன்மா அறிவித்தாலன்றி அறியாதென வுணர்ந்து கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் பொருள் முழுதும் திருவருள் என்றுணர்தல்; மந்திர சுத்தியாவது திருவைந்தெழுத்தை முறைப்படி மாறி யுச்ச ரித்து அதன் உண்மையை உணர்தல்; இலிங்க சுத்தியாவது பதியாகிய சிவம் பசு பாசங்களின் பிரிவின்றி நின்று அவற்றைச் சேட்டிப்பிக்குந் தன்மையை உணர்ந்தி அச் சிவம் இலிங்கத்தினும் எழுந்தருளியிருக்கு மென்றுணர்தல். சரியை புறத்தொண்டும், கிரியை புறம் அகம் இரண் டினும் செய்யுந் தொண்டும் ஆகலின் 'அகம்புற மிரண்டின் நேயராய்'

என்றூர். முகமன் ஈரெட்டு - சோடச வுபசாரம். கடவுளர்க்கு நாயனார் என்க. புத்திர மார்க்கமாகிய கிரியை நெறியினின்று சாமீப முற்றோர் இதிற் கூறப்பட்டனர். கிரியையின் இயல்பையும் பேற்றையும்,

''புத்திரமார்க் கம்புகலின் புதியவிரைப் போது
புகையொளிமஞ் சனமமுது முதல்கொண் டைந்து
சுத்திசெய்தா சனமூர்த்தி மூர்த்தி மானுஞ்
சோதியையும் பாவித்தா வாகித்துச் சுத்த
பத்தியினு லர்ச்சித்துப் பரவிப் போற்றிப்
பரிவினெடு மெரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலுமிக் கிரியையினை யியற்று வோர்கள்
நிமலன்ற னருகிருப்பர் நினையுங் காலே''

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தால் அறிக. (௬௧)

கிளர்ந்த காலினு லங்கியை நிமிர்த்துமேற் கிடைத்து
வளர்ந்த பிங்கலை யிடைநடு வழியுகு மதியின்
விளைந்த வின்னமு துண்டுநம் விடையவன் வடிவங்
குளந்த னிற்குறித் தவனுருக் கொண்டவ ரிவர்காண்.

(இ - ள்.) கிளர்ந்த - காலினுல் - மேலெழுந்த பிராணவாயுவால், அங்கியை நிமிர்த்து - (மூலாதாரத்திலுள்ள) நெருப்பினை மேலே எழுப்பி, மேற் கிடைத்து - மேற் சென்று, வளர்ந்த பிங்கலை இடை நடுவழி உகும் - வளர்ந்த பிங்கலைக்கும் இடைக்கும் நடுவிலுள்ள சுழுமுனையின் வழியாகச் சொரிகின்ற, மதியின் விளைந்த இன் அமுது உண்டு - சந்திர மண்டிலத்தில் விளைந்த இனிய அமுதினை அருந்தி, நம் விடையவன் வடிவம் குளந்தனில் குறித்து - நம் இறைவனது திருவுருவத்தினைப் புருவமத்தியில் தியானித்து, அவன் உருக்கொண்டவர் இவர்காண் - அவன் வடிவத்தை அடைந்தவர் இவர்.

அங்கி - உடல் நடுவில் அக்கினி மண்டலத்தில் உள்ள மூலாக்கினி. பிராண வாயுவாலும் வன்னி பீசமந்திரத்தாலும் மூலக்கனலை மேலெழுப்பி என்க. மேல் - பிரமரந்திரம், பிங்கலை - வலது நாடி. இடை - இடது நாடி. நடு - சுழிமுனை நாடி. சுழி முனை வழியாக மேற் சென்று என்றுமாம். குளம் - நெற்றி; புருவ நடு. இவற்றின் இயல்புகளை யோக நூல்களில் விரிவாகக் காண்க. சகமார்க்கமாகிய யோக நெறியினின்று சாரூப முற்றோர் இதிற் கூறப்பட்டனர். யோகத்தின் இயல்பையும் பேற்றையும்,

''சகமார்க்கம் புலனெடுக்கித் தடுத்துவளி யிரண்டுஞ்
சலிப்பற்று முச்சதுர மூலாதா ரங்கள்
அகமார்க்க மறிந்தவற்றி னரும்பொருள்க ளுணர்ந்தங்
கணைந்துபோய் மேலேறி யலர்மதிமண் டலத்தின்

முக மார்க்க வமுதுடல முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தன் முதலாக வினைகள்
உகமார்க்க வட்டாங்க யோக முற்றும்
உழத்தலுழந் தவர்சிவன்ற னுருவத்தைப் பெறுவர்''

என்னும் சிவஞான சித்தித் திருவிருத்தத்தால் அறிக. (௪௨)

முக்க ணாயகன் பொருட்டென வேள்விகள் முடித்துத்
தொக்க வேதிய ரிவர்புனற் சாலையித் தொடக்கத்
தக்க பேரறம் புகழ்பயன் றமைநன்கு மதிக்கும்
போக்க மாறிய நிராசையாற் புரிந்தவ ரிவர்காண்.

(இ-ள்.) முக்கண் நாயகன் பொருட்டு என - மூன்று கண்களை யுடைய இறைவன் பொருட்டாக, வேள்விகள் முடித்துத் தொக்க வேதியர் இவர் - வேள்விகளைச் செய்து சிவபதம் அடைந்த அந்தணர்க ளிவராவர்; புனற்சாலை இத்தொடக்கம் தக்கபேர் அறம் - நீர்ச் சாலை வைத்தலாகிய இது முதலான தகுந்த பெரிய அறங்களை, புகழ் பயன் தமை நன்கு மதிக்கும் பொக்கம் மாறிய நிராசையால் - புகழையும் பயனையும் நன்கு கருதிச்செய்யும் பொய் நீங்கிய நிராசையுடன், புரிந்தவர் இவர்காண் - செய்தவர் இவர்.

புனற்சாலை - தண்ணீர்ப்பந்தர், புகழ் பயன் கருதிச் செய்யும் அறம் உண்மை யறம் அன்றென்பார் 'புகழ்பயன்றமை நன்குமதிக்கும் பொக்க மாறிய' என்றார். மேல் மூன்று செய்யுளிலும், சிவாகமங் கூறும் நான்கு நெறிகளுள் முன் மூன்று நெறியினின்றும் பதமுத்திகள் எய்தினோர்களைக் கூறி, இச்செய்யுள் முதலியவற்றாற் பிறவாறு சிவனுல கடைந்தவர்களைக் கூறுகின்றார். மறைநூல் கூறும் வேள்விகளைச் சிவன் பொருட்டுச் செய்த அந்தணர்களும், அறநூல் கூறும் பொது வறங் களைப் பயன் கருதாது செய்தவர்களும் சிவனுலகில் வாழ்தல் இதிற் கூறப்பட்டது. (௪௩)

மறையி னாற்றினாற் றந்திர மரபினான் மெய்யில்
நிறையு நீற்றினர் நிராமய னிருத்தனைந் தெழுத்தும்
அறையு நாவினர் பத்தரா யரன்புகழ் கேட்கும்
முறையி னாலிவர் வினைவலி முருக்கினர் கண்டாய்.

(இ-ள்.) மறையின் ஆற்றினால் - வேத நெறியினாலும், தந்திரம் மரபினால் - ஆகம நெறியினாலும், மெய்யில் நிறையும் நீற்றினர் - உடலில் நிறைந்த திருநீற்றினை யுடையவரும், நிராமயன் நிருத்தன் ஐந்து எழுத்தும் அறையும் நாவினர் - நோயற்றவனாகிய கூத்தப் பிரானது திருவைந்தெழுத்தையும் உச்சரிக்கின்ற நாவினை யுடையாரு மாய், பத்தராய் அரன் புகழ் கேட்கும் முறையினால் - அன்பராகி இறைவன் புகழைக் கேட்கின்ற முறைமையினால், வினைவலி முருக்கினர் இவர் - வினையின் வன்மையைக் கெடுத்தவர் இவர்.

வேத நெறியிலும் சிவாகமத்துறையில் நின்று சிவபிரானை வழிபட்டுப் பேறெய்தினோர் இதிற் கூறப்பட்டனர். (சச)

மறைக ளின்சத வுருத்திர மந்திர நவின்றோர்
நிறைகோள் கண்டிகை நீறணி நீரரியா ரேனுங்
குறிகு ணங்குலன் குறித்திடா தன்பரைச் சிவனென்
றறியு மன்பினாற் பிறவிவே ரறுத்தவ ரிவர்காண்.

(இ - ள்.) மறைகளின் சத உருத்திர மந்திரம் நவின்றோர் - வேதங்களிலுள்ள சதவுருத்திர மந்திரத்தைக் கூறினோரும், நிறை கொள் கண்டிகை நீறு அணி நீரர் - நிறைந்த உருத்திராக்க மாலையும் திருநீறும் அணிந்த தன்மையை யுடையாரும், யாரேனும் - யாவராயினும், குறி குணம் குலன் குறித்திடாது - அவர் பெயரையுங் குணத்தையுங் குலத்தையுங் கருதாது, அன்பரைச் சிவன் என்று அறியும் அன்பினால் - அடியார்களைச் சிவபிரானே என்று அறிகின்ற அன்பினாலே, பிறவிவேர் அறுத்தவர் இவர்காண் - பிறவியின் மூலத்தை அறுத்தவர் இவர்.

வேத புருடனுக்கு உருத்திரம் கண்ணும், அதனுள்ளிருக்கும் திருவைந்தெழுத்துக் கண்மணியுமாம் என்று பெரியோர் கூறுவர். கண்டிகையும் நீறு மணிந்தார் எவராயினும் அவரை இன்னவாறு வழிபட வேண்டு மென்பதனை,

"எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போதங்
குகந்தடிமைத் திறம்பேணி யுவந்து போற்றி
இவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி
யிரண்டாட்டா தொழிந்தீசன் றிறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே"

என்னும் தேவாரத்தால் அறிக. (சரு)

ஆனஞ் சாடிய பரஞ்சுட ரிறைசிவ ஞான
தானஞ் செய்தவர் தருப்பணஞ் செய்தவர் சாம
கானஞ் செய்தவற் காலயங் கண்டுதா பித்தோர்
ஊனஞ் சேர்பிறப் பறுத்துவா ழுத்தம ரிவர்காண்.

(இ - ள்.) ஆன் அஞ்சு ஆடிய பரஞ்சுடர் இறை - பஞ்சகவ்வியமாடிய பரஞ்சோதியாகிய இறைவனுடைய, சிவஞான தானம் செய்தவர் - சிவஞானத்தைத் தானஞ் செய்தவரும், தருப்பணம் செய்தவர் - தருப்பணஞ் செய்தவரும், சாமகானம் செய்தவற்கு - சாமகானம்

பாடும் சிவபெருமானுக்கு, ஆலயம் கண்டு தாபித்தோர் - திருக் கோயில் எடுத்துப் பிரதிட்டை செய்தவருமாய், ஊனம் சேர் பிறப்பு அறுத்து வாழ் உத்தமர் இவர் காண் - குற்றம் பொருந்திய பிறப்பினைப் போக்கி வாழும் உத்தமர் இவர்.

சிவஞான தானமாவது அபர ஞானமாகிய மெய்ந் நூல்களை ஈதலும், அவற்றின் பொருளைப் பக்குவ முடையார்க்கு அறிவுறுத்தலும் முதலியன செய்தல். தருப்பணம் - சிவனைக்கருதி மந்திர நீர் இறைத்தல். (௬௬)

சிவனை யர்ச்சனை செய்பவர்க் கிசைவன செய்தோர்
அவனே னக்குறித் தடியரைப் பூசைசெய் தாறு
சுவைய வின்னமு தருத்தினோர் தொண்டர்தம் பணியே
தவமே னப்புரிந் துயர்ச்சியைச் சார்ந்தவ ரிவர்காண்.

(இ - ள்.) சிவனை அர்ச்சனை செய்பவர்க்கு - சிவபெருமானைப் பூசிப்பவருக்கு, இசைவன செய்தோர் - பொருந்தும் காரியங்களைச் செய்தவரும், அடியரை அவன் எனக் குறித்து - அடியார்களை அச்சிவ பெருமானே எனக் கருதி, பூசை செய்து - பூசித்து, ஆறு சுவைய இன் அமுது அருத்தினோர் - அறுவகைச் சுவையமைந்த இனிய உணவினை உண்பித்தவருமாய், தொண்டர்தம் பணியே தவம் எனப் புரிந்து - அடியார் பணியைச் செய்தலே தவமென்று கருதிச் செய்து, உயர்ச்சியைச் சார்ந்தவர் இவர்காண் - மேன்மையை அடைந்தவர் இவர்.

இசைவன - பொருந்திய உபகரணங்களை யளித்தலும் பணி செய்தலுமாம். (௬௭)

ஆதி சுந்தரக் கடவுளுக் காலயம் பிறவும்
நீதி யாலருச் சனைபிற பணிகளு நிரப்பிப்
பூதி சாதன வழிநிலம் புரந்திவ ணடைந்த
கோதி லாதநின் குடிவழிக் கொற்றவ ரிவர்காண்.

(இ - ள்.) ஆதி சுந்தரக்கடவுளுக்கு - முதல்வராகிய சோமசுந்த ரக் கடவுளுக்கு, ஆலயம் பிறவும் - திருக்கோயிலும் மற்றுள்ளனவும், நீதியால் அருச்சனை பிற பணிகளும் நிரப்பி - விதிப்படி அருச்சனையும் பிற திருப்பணிகளும் குறைவறச் செய்து, பூதி சாதனவழி - திருநீறு முதலிய சிவசாதன நெறியினால், நிலம் புரந்து - புவியினைக் காத்து, இவண் அடைந்த - இங்கு வந்த, கோது இலாத - குற்ற மில்லாத, நின் குடிவழிக் கொற்றவர் இவர் காண் - நின் மரபிற் றோன்றிய மன்னவர் இவர்.

ஆலயமும் பிறவும் அமைத்து என ஒரு சொல் வருவித் துரைத் தலுமாம். (௬அ)

என்று வேத்திரங் கொடுகுறித் தெம்மிறை நந்தி
கொன்றை வேணியா னடியர்தங் குழாத்தினைத் தேற்றி
நின்று வீழ்ந்துவீழ்ந் தஞ்சலி முகிழ்த்திட நெறியே
சென்று வானவர் நாயகன் றிருமுன்பு விடுத்தான்.

(இ - ள்.) என்று - என்று கூறி, வேத்திரம் கொடு குறித்து - பிரம்பினாற் சுட்டிக் காட்டி, எம் இறை நந்தி - எம் தலைவனாகிய திரு நந்தி தேவன், கொன்றை வேணியன் - கொன்றை மாலையை யணிந்த முடியை யுடைய இறைவனது, அடியர்தம் குழாத்தினைத் தேற்றி - அடியார் கூட்டதநினைத் தெரிவித்து, நெறியே - முறைப்படியே, நின்று வீழ்ந்து வீழ்ந்து அஞ்சலி முகிழ்த்திட - (பாண்டியன்) ஒவ்வோரிடத்தினும் நின்று பலமுறை விழுந்து வணங்கிக் கைகூப்ப, சென்று - (அவனைக் கொண்டு) சென்று வானவர் நாயகன் திருமுன்பு விடுத்தான்-தேவர்கள் தலைவனாகிய சிவபெருமான் திருமுன் விடுத்தனன்.

பிரமன் முதலாகப் பாண் டியர் ஈறாக இதுகாறும் கூறப்பெற்றோரை அடியர் தங்குழாம் என்றார். நந்தி குறித்துத் தேற்றிச் சென்று விடுத்தான் என வினைமுடிக்க. (௬௯)

மறைக ளாகமம் வடிவெடுத் திருபுடை வாழ்த்த
நறைகொள் யாழ்தழீஇத் தும்புரு நாரதர் பாட
அறைகொள் வண்டிமிர் கொம்பரி னரம்பைய ராடக்
குறைகொள் வானவர் பதங்கிடை யாதிறை கொள்ள.

(இ - ள்.) மறைகள் ஆகமம் வடிவு எடுத்து - வேதங்களும் ஆகமங்களும் உருவங்கொண்டு, இருபுடை வாழ்த்த - இரண்டு பக்கங்களிலும் நின்று வாழ்த்தவும், நறைகொள் யாழ்தழீஇ - இனிய இசையமைந்த யாழினைத் தழுவி, தும்புரு நாரதர் பாட - தும்புருவும் நாரதரும் நின்று பாடவும், அறைகொள் வண்டு இமிர் கொம்பரின் - இசைபாடும் வண்டுகள் ஒலிக்கும் பூங்கொம்பு போல; அரம்பையர் ஆட - தேவ மகளிர் ஆடவும், குறை கொள் வானவர் பதம் கிடையாது இறை கொள்ள - குறையிரக்குந் தேவர்கள் காண்டற் குரிய செவ்வி பெறாது காத்திருக்கவும்.

நறை - தேன்; தேன் போலும் இன்னிசைக்காயிற்று. தழீஇ: சொல் லிசை யளபெடை. அறை - பாடுதல்: முதனிலைத் தொழிற் பெயர். இறை கொள்ள - தங்க; ஒரு சொல். (௭௰)

மதங்க விழ்க்குமால் வரைமுக மைந்தனுஞ் சூரன்
கதங்க விழ்த்தவேற் கந்தனுங் கருதலன் வேள்வி
விதங்க விழ்த்தவாள் வீரனும் வெயின்முடித் தார்தேன்
பதங்க விழ்ப்பவீழ்ந் தேயின பணிவழி நிற்ப.

(இ - ள்.) மதம் கவிழ்க்கும் மால்வரை முகம் மைந்தனும் - மதத்தைக் கொட்டும் பெரிய மலை போன்ற யானையின் முகத்தையுடைய மூத்த பிள்ளையாரும், சூரன் கதம் கவிழ்த்த வேல் கந்தனும் - சூரபன்மனது சினத்தை அறக்கெடுத்த வேற்படை யேந்திய முருகக் கடவுளும், கருதலன் வேள்வி விதம் கவிழ்த்த வாள்வீரனும் - பகைவனுகிய தக்கன் வேள்விவகையினை அழித்த வாட்படை யேந்திய வீரபத்திரக் கடவுளும், வெயில் முடித்தார் - ஒளியினையுடைய முடியிலணிந்த மாலைகள், பதம் தேன் கவிழ்ப்ப - செவ்வியுள்ள தேனைச் சிந்தும்படி, வீழ்ந்து ஏயின பணிவழி நிற்ப - வீழ்ந்து வணங்கி ஏவின பணியின் வழியே நிற்கவும்.

மதங்கவிழ்க்கும் என்ற அடையால் வரை யானையாயிற்று. கவிழ்த்த வேல் என்க. பதம் - செவ்வி. ஏயின - ஏவின- (௫௧

தூங்கு தானையை யோதுக்கிவாய் துணைக்கரம் பொத்தி
ஓங்கு மாலயன் றங்குறை யோதுங்கிநின் றுரைப்ப
வாங்கு வான்சிலை யிந்திரன் முதற்றிசை வாணர்
தாங்க டாம்புரி காரியக் குறைநின்று சாற்ற.

(இ - ள்.) தூங்கு தானையை ஒதுக்கி-தொங்குகின்ற முன்றுனையை ஒதுக்கி, வாய் துணைக்கரம் பொத்தி - வாயினை இரண்டு கைகளாலும் பொத்தி ஒதுங்கி நின்று - ஒருபுறமாக ஒதுங்கி நின்று, ஓங்கும் மால் அயன் தம் குறை உரைப்ப - சிறந்த திருமாலும் அயனும் தங்கள் குறையினைக் கூறவும், வாங்குவான் சிலை இந்திரன் முதல் திசைவாணர்-வளைந்த வானவில்லையுடைய இந்திரன் முதலிய திசைக்காவலர்கள், நின்று - ஒருபுறமாக நின்று, தாங்கள் புரி காரிய குறை சாற்ற - தாங்கள் புரிந்துவரும் காரியங்களின் குறைகளைக் கூறவும்.

மாலயன் ஒதுக்கிப் பொத்தி ஒதுங்கி நின்று குறை உரைப்ப என்க. தாம்: அசை. (௫௨)

எழுவி னேடுதண் டேந்திவாய் மேன்றேயி றதுக்கிக்
குழுமு பாரிடத் தலைவருங் கோடிகூற் றேதுங்கி
விழும மூழ்கிமேய் பனித்திட விதிர்க்குமுக் குடுமிக்
கழுமு ளேந்திய கணத்தவர் கடைதோறுங் காப்ப.

(இ - ள்.) எழுவினேடு தண்டு ஏந்தி - வளைதடியையும் தண்டத்தையும் ஏந்தி, வாய் மென்று எயிறு அதுக்கி - வாயினை மென்று பற்களை அதுக்கி, குழுமு பாரிடத் தலைவரும் - கூடிய பூதகணத் தலைவரும், கோடி கூற்று ஒதுங்கி - அளவிறந்த கூற்றுவர்கள் ஒதுங்கி, விழுமம் மூழ்கி மெய் பனித்திட - துன்பத்துள் முழுகி உடல் நடுங்க, விதிர்க்கும் - அசைக்கின்ற, முக்குடுமிக் கழுமுள் ஏந்திய கணத்தவர் - மூன்று சிகையினை யுடைய சூலப்படை ஏந்திய சிவகணத்தலைவர்களும், கடைதொறும் காப்ப-வாயில் தோறும் காவல் பூண்டு நிற்கவும்.

பாரிடம் - பூதகணம். கணத்தவரும் என எண்ணும்மை விரிக்க. (௩௩)

சித்தர் வானவர் தானவ்ர் சாரணர் திணிதோள்
வைத்த யாழினர் கின்னரர் மாதவ ரியக்கர்
பைத்த பாரிடர் காருடர் பாதல வாணர்
சுத்த யோகியர் முதற்கணத் தோகையெலாம் பரவ.

(இ - ள்.) சித்தர் வானவர் தானவர் சாரணர் - சித்தரும் வானவரும் அவுணரும், சாரணரும், திணிதோள் வைத்த யாழினர் - வலிய தோளின்கண் வைத்த யாழினையுடைய விஞ்சையரும், கின்னரர் மாதவர் இயக்கர் - கின்னரரும் மாதவரும் இயக்கரும், பைத்த பாரிடர் காருடர் - பரவிய பூதகணத்தலைவரும் கருடரும், பாதல வாணர் - நாகரும், சுத்த யோகியர் முதல் கணத்தொகை எலாம் பரவ - தூய சிவயோகியரும் முதலாகிய பல கணங்களும் துதிக்கவும்.

பைத்த - பரந்த என்னும் பொருட்டு. (௩௪)

இனிவ ரும்பிறப் பறுத்தெமைக் காத்தியா லெனத்தங்
கனிவ ரும்பிய வன்பெழு கருணையா ரமுதைப்
பனிவ ருந்தடங் கண்களாற் பருகிமெய் பனிப்ப
முனிவர் சங்கர சிவசிவ வெனமுறை முழங்க.

(இ - ள்.) இனி வரும் பிறப்பு அறுத்து - மேல்வரும் பிறப்பினை வேரறுத்து, எமைக் காத்தி என - எங்களைக் காக்கக் கடவை என்று வேண்டி, தம் கனிவு அரும்பிய அன்பு எழு கருணை ஆர் அமுதை - தங்கள் கனிவு தோன்றிய அன்பின்கண் விளைந்த அருள் நிறைந்த அமுதினை, பனி வரும் தடம் கண்களால் பருகி - ஆனந்த நீர்த்துளி வருகின்ற பெரிய கண்களாகிய வாயாற் பருகி, மெய் பனிப்ப - உடல் நடுங்க, முனிவர் சங்கர சிவசிவ என முறை முழங்க - முனிவர்கள் சங்கர சிவசிவ என்று முறையே முழங்கவும்.

அன்பெழு கருணை யாரமுது என்ற கருத்தினை,

"அம்மையே யப்பா வொப்பிலா மணியே
அன்பினில் விளைந்த வாரமுதே"

என்னும் திருவாசகத்திற் காண்க. ஆல் : அசை. (௩௫)

வரந்த வாதன யாவர்க்கும் வரன்முறை வழங்கி
முருந்த வாநகை* மலைக்கோடி முகிழ்நகை யரும்பத்
திருந்த வாயிரங் கதிர்விடு சிங்கமேல் லணைமேல்
இருந்த நாயக னிருக்கைகண் டிறைஞ்சின னிறைவன்.

---

* (பா - ம்.) முருந்த வாணகை.

(இ - ள்.) யாவர்க்கும் வரன் முறை - அனைவருக்கும் அவரவர் தகுதிக் கேற்ப தவாதன வரம் வழங்கி - கெடாதனவாகிய வரங்களை அருளிச் செய்து, முருந்து அவாம் நகை மலைக்கொடி-மயிலிறகின் அடியும் விரும்பும் பல் வரிசைகளையுடைய மலை வல்லியாகிய உமையம்மையார், முகிழ் நகை அரும்ப - புன்னகை செய்ய, திருந்த ஆயிரம் கதிர் விடு சிங்க மெல் அணைமேல் - திருத்தமாக அளவிறந்த ஒளி விடுகின்ற மெல்லிய சிம்மாதனத்தின்மேல், இருந்த நாயகன் இருக்கை கண்டு - வீற்றிருந்த இறைவனுடைய இருப்பினைத் தரிசித்து, இறைவன் இறைஞ்சினன் - வரகுண வேந்தன் வணங்கினன்.

முருந்து வானகை என்னும் பாடத்திற்கு முருந்து போலும் ஒள்ளிய நகை என்றுரைத்துக் கொள்க; இதற்கு அ அசை. ஆயிரஞ் சிங்கஞ் சுமந்த அணையென்றுமாம். (இசு)

உரைக ளுந்தடு மாறமெய் யுரோமமுஞ் சிலிர்ப்பக்
கரையி றந்தவின் னருட்பெருங் கடலிலன் பென்னுந்
திரையி றந்தவா றீர்த்திட மிதந்துபோய்ச் செப்பின்
வரையி றந்தவா னந்தவா ரமுதைவாய் மடுத்தான்.

(இ - ள்.) உரைகளும் தடுமாற-சொற்கள் குழற. மெய் உரோமமும் சிலிர்ப்ப - உடல் புளகம் போர்ப்ப, கரை இறந்த இன் அருள் பெருங் கடலில்-எல்லையில்லாத இனிய பெரிய அருட்கடலின்கண், அன்பு என்னும் திரை இறந்த ஆறு ஈர்த்திட - அன்பாகிய அலையில்லாத ஆறு இழுத்துச் செல்ல, மிதந்து போய் - அதில் மிதந்து சென்று, செப்பின் வரை இறந்த- சொல்லின் எல்லையைக்கடந்த, ஆனந்த ஆர் அமுதை வாய் மடுத்தான் - பேரின்பமாகிய அரிய அமிழ்தத்தை உண்டான்.

உரை தடுமாறல் முதலியன அன்பின் மிகுதியால் விளைவன. மணி வாசகரும் 'அன்பெனும் ஆறு கரையது புரள' என அன்பை ஆறாகக் கூறினார் கலக்கமற்ற பேரன்பானது இழுத்துச் செல்ல வருத்தமின்றிச் சென்று இறைவனைக் கண்டு சிவானந்தத்திற் றிளைத்தமையை இங்ஙனம் உருவகித்தார். கடலென்றதற்கேற்ப அமுதென்றார்; இதன் நயம் பாராட்டற் பாலது. (சுஎ)

தன்பு லன்களுங் கரணமுந் தன்னவே யாக்கி
அன்பு டம்புகொண் டவனெதி ரருட்சிவ லோகம்
பின்பு பண்டுபோன் மதுரையாப் பிராட்டியுந் தானும்
முன்பி ருந்தவா றிருந்தனன் சுந்தர மூர்த்தி.

(இ - ள்.) தன் புலன்களும் கரணமும் தன்னவே ஆக்கி - தன் இந்திரியங்களையும் அந்தக்கரணங்களையுந் தன்னுடையனவாகவே செய்து, அன்பு உடம்பு கொண்டவன் எதிர் - அன்பே வடிவமாகக் கொண்டு நின்ற வரகுண பாண்டியனெதிரே, அருள் சிவலோகம் - கருணை வடிவ மாகிய சிவலோகமானது, பின்பு பண்டுபோல் மதுரையா - பின் முன்பு

மதுரையா - பின் முன்புபோல மதுரையாக, சுந்தர மூர்த்தி - சோமசுந்தரக் கடவுள், பிராட்டியும் தானும் - உமையம்மையும் தானும், முன்பு இருந்தவாறு இருந்தனன் - முன்பு இருந்தது போலவே இருந்தருளினன்.

தன்னவாக்குதல்-விடயங்களிற் செல்லாது தனக்கு அடங்கியிருக்கச் செய்தல். ஆக என்பது ஈறு தொக்கது. பிராட்டியும் தானும் இருந்தனன் என்றது வழுவமைதி;

''தானுந்தன் றையலும் தாழ்சடையோ னுண்டிலனேல்'' என்புழிப் போல. (இஅ)

வேந்தர் சேகரன் வரகுணன் விண்ணிழி கோயில்
ஏந்தல் சேவடி யிறைஞ்சிநின் றிறையருட் பெருமை
ஆய்ந்த வாவுதன் னகம்புக வின்பமோ டன்பு
தோய்ந்து தாரைநீர் துளும்பநாக் குழறிடத் துதிப்பான்.

(இ - ள்.) வேந்தர் சேகரன் வரகுணன் - மன்னர்கட்கு ஒரு முடி போல்பவனாகிய வரகுண பாண்டியன், விண் இழி கோயில் ஏந்தல் சேவடி இறைஞ்சி - வானினின்றும் இறங்கிய இந்திர விமானத்தின் கண் வீற்றிருக்கும் சோமசுந்தரக் கடவுளின் சிவந்த திருவடிகளைப் பணிந்து, நின்று - திருமுன் நின்று, இறை அருள் பெருமை - இறைவனது திருவருட் பெருக்கம், ஆய்ந்து அவாவு தன் அகம்புக - ஆராய்ந்து விரும்பும் தனது உள்ளத்திற் புகுந்த வளவில், இன்பமோடு அன்பு தோய்ந்து - பேரின்பத்திலும் அன்பினும் அழுந்தி, தாரை நீர் துளும்ப - கண்களில் ஆனந்த நீர் ததும்பவும், நாக்குழறிட - நாவானது குழறவும், துதிப்பான் - பரவுவானாயினான்.

அவன் கண்ட காட்சியும் எய்திய இன்பமும் கனவுபோல் உள்ளத்திற்றோன்ற அதனை ஆராய்ந்தவிடத்து இறைவனது திருவருட் பெருமை புலனாயினமையின் துதிப்பானாயினான் என்க. (இகூ)

[கொச்சகக் கலிப்பா]

நாயினே னென்னை* நடுக்கும் பழியகற்றித்
தாயினே ராகித் தலையளித்தாய் தாள்சரணஞ்
சேயினேன் காணச் சிவலோகங் காட்டிப்பின்
கோயினேர் நின்றவருட் குன்றேநின் றாள்சரணம்.

(இ - ள்.) நாயினேன் என்னை - நாய் போன்ற அடியேனை, நடுக்கும் பழி அகற்றி - வருத்துகின்ற கொலைப் பாவத்தினின்றும் நீக்கி, தாயின் நேராகி - தாயே போன்று, தலை யளித்தாய் தாள் சரணம் - தலையளி செய்து ஆண்டவனே நின் திருவடிகட்கு வணக்கம்; சேயினேன் காண - நின் திருவருளுக்குச் சேய்மையிலுள்ள யானும் கண்டுகளிக்க, சிவலோகங் காட்டி - சிவபுரத்தைக் காண்பித்தருளி, பின் - பின்னர்,

(பா - ம்.) * நாயினேன் றன்னை.

கோயில் நேர் நின்ற - திருக்கோயிலில் என்னெதிரே நின்றருளிய, அருள் குன்றே - கருணை மலையே, நின்தாள் சரணம் - நின் திருவடிகளுக்கு வணக்கம்.

"பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்து"

என்ற திருவாசகம் இங்கே சிந்திக்கற் பாலது. சேய்மை - தூரம். (௬0)

மாழாந்து செய்யும் வினைவழிபோய் வன்னரகிற்
றாழா தடியனேற் கன்புதந்தாய் தாள்சரணம்
ஏழாகி நான்கு வகையா யெழுபிறப்பும்
பாழாக வென்னைப் பணிகொண்டாய் தாள்சரணம்.

(இ - ள்.) மாழாந்து செய்யும் வினைவழிபோய் - மயங்கிச் செய் கின்ற வினையின் வழியே சென்று, வல் நரகில் தாழாது - கொடிய நர கத்தில் அழுந்தாத வண்ணம், அடியனேற்கு அன்பு தந்தாய் - அடியே னுக்கு அன்பினை யளித்தவனே, தாள் சரணம் - நின் திருவடிகளுக்கு வணக்கம்; ஏழு ஆகி நான்கு வகையாய் எழுபிறப்பும் பாழாக - ஏழு வகைப்பட்டு நால்வகைத் தோற்றமாக வாராநின்ற பிறவிகள் அனைத்தும் பாழ்பட, என்னைப் பணிகொண்டாய் தாள் சரணம் - அடியேனை ஏவல் கொண்டவனே நின் திருவடிகட்கு வணக்கம்.

ஏழு - தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன நான்குவகை - அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பன. எழு - எழுகின்ற; உண்டாகின்ற. (௬௧)

வெங்கட் பழியின் வினையேனை வேறாக்கித்
திங்கட் குலக்களங்கந் தீர்த்தாய்நின் றாள்சரணம்
அங்கட் சிவபுரமுண் டன்புடையார்க் கென்பதையின்
றெங்கட்குக் காட்டி யிசைவித்தாய் தாள்சரணம்.

(இ - ள்.) வினையேனை - தீவினையுடைய என்னை, வெங்கண் பழியின் வேறு ஆக்கி - கொடிய பழியினின்றும் வேறுபடுத்தி, திங்கள்குலக் களங்கம் தீர்த்தாய் - சந்திர குலத்திற்கு வந்த மறுவைத் தொலைத் தவனே, நின் தாள் சரணம் - நின் திருவடிகளுக்கு வணக்கம்; அன்பு உடையார்க்கு அங்கண் சிவபுரம் உண்டு என்பதை - அன்புடையார் களுக்கு அழகிய இடத்தையுடைய சிவலோகம் உண்டு என்று நூல் கூறுவதை. இன்று - இப்பொழுது, எங்கட்குக் காட்டி இசைவித்தாய் - அடியேங்களுக்குக் காண்பித்து இசையச் செய்தவனே, தாள்சரணம் - நின் திருவடிகட்கு வணக்கம்,

தானுற்ற பழியால் தனது குலத்திற்கே களங்கமுண்டாகுமெனக் கருதினனாகலின் 'திங்கட்குலக் களங்கம் தீர்த்தாய்' என்றான். அங்கண் என்பதற்கு அவ்விடம் என்றும், மறுமை என்றும் உரைத்தலுமாம். ஆகம வளவையால் அறியப்படுவதைக் காட்சியளவையானும் அறியச் செய்தாய் என்றானென்க. (௬௨)

[கலி நிலைத்துறை]

என்ன வேத்தியின் னருள்முகந் தீறிலா வன்பாற்
பின்னர் வேறுபல் பூசையும் பிறக்குவித் திருந்தான்
மன்ன ரேறடை யார்க்கோரு மடங்கலே றடல்வேற்
றென்ன ரேறெனத் தோன்றிய வரகுண தேவன்.

(இ - ள்.) என்ன ஏத்தி - என்று துதித்து, மன்னர் ஏறு - அரசர்களுள் ஆண்சிங்கம் போன்றவன், அடையார்க்கு ஒரு மடங்கல் ஏறு - பகைவர்களுக்கு ஓர் இடியேறு போன்றவன், அடல்வேல் தென்னர் ஏறு - வெற்றி பொருந்திய வேற்படையேந்திய பாண்டியர்களுள் ஏறு போன்றவன், என தோன்றிய வரகுணதேவன் - என்னும்படி பிறந்த வரகுணதேவனென்னும் பாண்டியன், இன் அருள் முகந்து - இனிய திருவருளை முகந்துண்டு, ஈறு இலா அன்பால் - அழிவில்லாத அன்பினால், பின்னர் வேறு பல் பூசையும் பிறக்குவித்து இருந்தான் - பின் பல வேறு வகைப்பட்ட பூசனைகளையும் விளங்கச் செய்வித்து இருந்தனன்.

பிறங்குவித்து என்பது வலித்தலாயிற்று. மடங்கல்-இடி. தென்னர் ஏறு - பாண்டியருட் சிறந்தவன். (௬௩)

என்ற தேன்மலை முனிவனை யிருடிக ணோக்கி
அன்று வாசவன் பழிகரி சாபமந் தணனைக்
கோன்று தாயோடுங் கூடிய கோடுவினை முதலாத்
துன்று பாவமு மதுரையிற் றோலைத்தன னன்றே.

(இ - ள்.) என்ற - என்று கூறியருளிய தென்மலை முனிவனை - பொதியின் மலையையுடைய அகத்திய முனிவனை, இருடிகள் நோக்கி - முனிவர்கள் பார்த்து அன்று - முன்பு, வாசவன் பழி - இந்திரன் பழியையும், கரிசாபம்-வெள்ளையானை சாபத்தையும், அந்தணனைக் கொன்று தாயொடுங் கூடிய கொடுவினை முதலாத் துன்று பாவமும் - தந்தையாகிய அந்தணனைக் கொன்று தாயுடன் கலவி செய்த மாபாதக முதலாகு மிக்க பாவங்களையும் மதுரையில் தொலைத்தனன் அன்றே - மதுரையிலேயே போக்கி யருளினான் அல்லவா.

வேறிடங்களிற் செய்த பாவ முதலாயினவும் முன்பு இம்மதுரையிலே போக்கப்பட்டன என்றவாறு. தேவர், மனிதர், விலங்கு என்னும் எவ்வுயிரின் பாவத்தையும் இந்நகரிற் போக்கினன் என்பதற்கு வாசவன், கரி, மாபாதகன் வரலாறுகள் சுட்டப் பெற்றன. இத் திருவிளையாடற் சரிதம் அகத்தியரால் முனிவர்கட்குக் கூறப்பட்டதென்பதனைப் புராண வரலாற்றுட் காண்க. (௬௪)

பரம னேண்குணன் பசுபதி வரகுணற் பற்றும்
பிரம வன்பழி யிடைமரு திடைவிட்டுப் பேயர
வரம ளித்தவா றேன்னைகோல் வள்ளலே யிதனைத்
திரமு றப்புக லேமக்கேன முனிவர்கோன் செப்பும்.

(இ - ள்.) பரமன் எண்குணன் பசுபதி - (அங்ஙனந் தீர்த்தருளிய) பரமனும் எட்டுக் குணங்களையுடையவனும் பசுபதியுமாகிய சோமசுந்தரக் கடவுள், வரகுணன் பற்றும் பிரம வன்பழி - வரகுணனைப் பிடித்த கொடிய பிரமசாயை, இடைமருது இடைவிட்டுப் பெயர வரம் அளித்தவாறு என்னைகொல் - திருவிடைமருதூரின்கண் விட்டு நீங்குமாறு வரங் கொடுத்தது என்னையோ, வள்ளலே இதனைத் திரம் உற எமக்குப் புகல் என - வள்ளலே இச்செய்தியை எங்களுக்கு ஐயுறவு நீங்கக் கூறியருளுவாயாக என்று வேண்ட, முனிவர்கோன் செப்பும் - முனிவர் வேந்தனாகிய அகத்தியன் கூறியருளுவான்.

திரம் - உறுதி. கொல் : அசை. (௬௫)

பூத நாயகன் சுந்தரன் புண்ணிய மூர்த்தி
யாத லாலன்ன தலத்துறை யடியவ ரஞ்சிப்
பாத கஞ்செயா தொழுகுறாஉம் படிநினைந் தினைய
தீது றாஉம்பழி தனையிடை மருதினிற் றீர்த்தான்.

(இ - ள்.) பூதநாயகன் சுந்தரன் - பூதங்கட்கு இறைவனாகிய சோமசுந்தரக் கடவுள், புண்ணியமூர்த்தி ஆதலால் - அறவடிவினன் ஆதலின், அன்னதலத்து உறை அடியவர் - அந்தப் பதியில் உறையும் அடியார்கள், அஞ்சி பாதகம் செய்யாது ஒழுகுறாஉம்படி நினைந்து - பயந்து பாவஞ் செய்யாது ஒழுகுமாறு திருவுளங்கொண்டு, இனைய தீது உறா உம் பழிதனை - இந்தத் தீமை மிக்க பழியினை, இடைமருதினில் தீர்த்தான் - திருவிடைமருதூரில் தீர்த்தருளினான்.

பூதம் - ஆன்மா. அன்ன, இனைய என்பன சுட்டுத் திரிபுகள். அளபெடைகள் இன்னிசை நிறைக்க வந்தன. (௬௬)

என்ற கத்திய முனியிறை யிறைகொடுத் தியம்ப
நன்றே னச்சிரம் பணிந்து* மெய்ஞ் ஞானவா னந்தந்
துன்றி நற்றவர் சுந்தரச் சோதிசே வடிக்கீழ்
ஒன்று மற்புத வானந்த வுததியுட் குளித்தார்†.

(இ - ள்.) என்று அகத்தியமுனி இறை - என்று அகத்தியனாகிய முனி மன்னன், இறை கொடுத்து இயம்ப - விடை கொடுத்தருள நல்தவர் - நல்ல தவத்தினை யுடைய முனிவர்கள், நன்று எனச் சிரம் பணிந்து - நன்று என்று சிரமசைத்து, மெய்ஞ்ஞானம் ஆனந்தம் துன்றி - உண்மையறி வானந்தத்தில் தோய்ந்து, சுந்தரச் சோதி சேவடிக்கீழ் ஒன்றும் - சோமசுந்தரக் கடவுளின் சிவந்த திருவடியின்கீழ்ப் பொருந்தும், அற்புத ஆனந்த உததியுள் குளித்தார் - அற்புதமாகிய பேரின்பக் கடலில் மூழ்கினார்கள்.

அகத்தியனாகிய முனியிறை என்க. இறை - விடை. மெய்ஞ் ஞானவானந்தம் - சச்சிதானந்தம். (௬௭)

(பா - ம்.) * பனித்து. † களித்தார்.

[கொச்சகக் கலிப்பா]

அன்னதனித் தொன்மதுரை யன்றுதொடுத் தின்றெல்லை
தன்னனையத் தாயகில தலங்கள்சிகா மணியாகிப்
பொன்னகரின் வளஞ்சிறந்து பூவுலகிற் சிவலோகம்
என்னவிசை படப்பொலிந்த தேழிரண்டு புவனத்தும்.

(இ - ள்.) அன்னதனி தொல் மதுரை - அந்த ஒப்பற்ற பழைய மதுரைப்பதி, அன்று தொடுத்து இன்று எல்லை - அன்றுமுதல் இன்று வரையும், தன் அனையதாய் - தனக்குத்தானே நிகரானதாய், அகில தலங்கள் சிகாமணியாகி - எல்லாத் தலங்களுக்கும் ஒரு முடிமணியாய், பொன் நகரின் வளம் சிறந்து - தேவ உலகத்தினும் வளம் மிக்கு, ஏழ் இரண்டு புவனத்தும் பூ உலகில் சிவலோகம் என்ன இசைபடப் பொலிந்தது - பதினான்கு உலகங்களினும் பூலோக சிவலோகமென்று கூறப் புகழுடன் விளங்கியது.

வேறு ஒப்பாவதில்லை யென்பார் 'தன்னனையதாய்' என்றார். இதனால் மதுரைக்குப் பூலோக சிவலோகம் என்னும் பெயருண்டானமை கூறப் பட்டது. (௬அ)

ஆகச் செய்யுள் வரிசை ௨௦௯௦.

நாற்பத்தொன்ருவது
விறகு விற்ற படலம்

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

நெடியவன் பிரமன் றேட நீண்டவன் றென்னற் கேழின்
முடியதாஞ் சிவலோ கத்தைக் காட்டிய முறையீ தையன்
படிமிசை நடந்து பாடிப் பாணன்றன் விறகா ளாகி
அடிமையேன் றடிமை கொண்ட வருட்டிற மெடுத்துச் சொல்வாம்.

(இ - ள்.) நெடியவன் பிரமன் தேட நீண்டவன் - திருமாலும் பிரமனுந் தேட (அவர்கட்குக் கிட்டாமல் ஒளிப்பிழம்பாய்) வளர்ந்த சோமசுந்தரக் கடவுள், தென்னற்கு - வரகுண பாண்டியனுக்கு, ஏழின் முடியதாம் சிவலோகத்தை - ஏழு உலகங்கட்கும் முடியாகவுள்ள சிவ புரத்தை, காட்டிய முறை ஈது - காட்டியருளிய திருவிளையாடல் இது வாகும்; ஐயன் - (இனி) அவ் விறைவனே, படிமிசை விறகு ஆள் ஆகி நடந்து பாடி - புவியின்மேல் விறகு சுமந்து விற்கும் ஆளாகி நடந்து இசை பாடி, பாணன் தன் அடிமை என்று அடிமைகொண்ட - பாண பத்திரனுக்கு அடிமை என்று கூறி அவனை அடிமைகொண்டருளிய, அருள் திறம் எடுத்துச் சொல்வாம் - திருவருளின் திறத்தை எடுத்துக் கூறுவாம்.

ஏழு - ஏழுலகங்கள்: ஆகுபெயர். முடியது, அது: பகுதிப் பொருள் விகுதி. ஏழுலகங்களையும் அவற்றின் முடியாகச் சிவலோகம் விளங்கு தலையும்,

"புவலோகங் கடந்துபோய்ப் புண்ணியருக்
கெண்ணிறந்த போக மூட்டுஞ்
சுவலோகங் கடந்துபோய் மகலோகஞ்
சனலோகந் துறந்து மேலைத்
தவலோகங் கடந்துபோய்ச் சத்தியலோ
கங்கடந்து தண்டு ழாயோன்
நவலோகங் கடந்துலக நாயகமாஞ்
சிவலோக நண்ணி ஞரே"

என, மேல் மலயத்துவசனை யழைத்த படலத்திற் கூறியிருப்பது காண்க. வானோர்க்கும் அரியனும் இறைவன் அடியார்க்கு எளியனுயிருக்குந் தன்மை தோன்ற 'நெடியவன் பிரமன் றேட நீண்டவன்...விறகாளாகி அடிமையென்று' என்றனர். நெடியவன் றேட நீண்டவன், அடிமை யென்று அடிமைகொண்ட என்பவற்றின் நயம் ஓர்ந்துணர்க. தன்: சாரியை. (க)

மன்றலந் தேரியன் மார்பன் வரகுணன் செங்கோ லோச்சிப்
பொன்றலங் காவ லானிற் போலியுநா ளேம நாதன்
என்றொரு விறல்யாழ்ப் பாண்ன் வடபுலத் திருந்தும் போந்து
வென்றிகொள் விருதி னோடும் விஞ்சைசூழ் மதுரை சார்ந்தான்.

(இ - ள்.) மன்றல் அம் தெரியல் மார்பன் வரகுணன் - மணம் பொருந்திய அழகிய மாலையை யணிந்த மார்பினை யுடையனாகிய வரகுண பாண்டியன், செங்கோல் ஓச்சி - செங்கோல் நடாத்தி, பொன் தலம் காவலானில் பொலியுநாள் - பொன்னுலகினைப் புரக்குந் தேவேந்திரனைப் போல விளங்குநாளில், ஏமநாதன் என்று ஒரு விறல் யாழ்ப்பாணன் - ஏமநாதன் என்னும் ஒரு வெற்றியை யுடைய யாழ்ப்பாணன், வடபுலத் திருந்தும் போந்து - வடநாட்டினின்றும் வந்து; வென்றிகொள் விருதி னோடும் - வெற்றியினாற் கொள்ளப்பட்ட விருதுகளோடும், விஞ்சை சூழ் மதுரை சார்ந்தான் - கல்வி மிக்க மதுரையை அடைந்தான்.

யாழ்ப்பாணன் - யாழாற் பாடும் பாணன். முன் பலரை இசையில் வென்று விருதுகள் பெற்றவனென்பது. 'வென்றிகொள் விருதினோடும்' என்பதனாற் பெறப்பட்டது. விருதினோடும் போந்து மதுரை சார்ந்தான் என்க. (உ)

பூழியர் பெருமான் கோயில் புகுந்துவேத் தவையத் தெய்திச்
சூழிமால் யானை யானைத் தொழுதுபல் புகழ்கொண் டாடி
ஏழிசை மழலை வீணை யிடந்தழீஇச் சுருதி கூட்டி
வாழியின் னிசைத்தேன் மன்ன னஞ்செவி வழியப் பெய்தான்.

(இ - ள்.) பூழியர் பெருமான் கோயில் புகுந்து - பாண்டியர் தலைவனாகிய வரகுண தேவன் மாளிகையிற் சென்று, வேத்து அவையத்து எய்தி - அரசவையை அடைந்து, சூழிமால் யானையானைத் தொழுது - முகபடாமணிந்த பெரிய யானைகளையுடைய வேந்தனை வணங்கி, பல்புகழ் கொண்டாடி - பல புகழ்களையும் பாராட்டி, ஏழ் இசை மழலை வீணை - ஏழு இசைகளையுடைய மழலைபோலும் இனிமையைப் பயக்கும் யாழினை, இடம் தழீஇச் சுருதி கூட்டி - இடப்பக்கங்கொண்டு சுருதி கூட்டி, இன் இசைத் தேன் - இனிய இசையாகிய தேனை, மன்னன் அஞ்செவி வழியப் பெய்தான் - அரசனது அகஞ் செவி நிரம்பி வழியுமாறு சொரிந்தான்.

தழீஇ: சொல்லிசை யளபெடை. சுருதி கூட்டி - பண்ணமைத்து. வாழி: மங்கலப் பொருட்டாய அசைச்சொல். அஞ்செவி - அகஞ்செவி (௩)

முகையுடைந் தவிழ்ந்த மாலை முடித்தலை துளக்கித் தூசு
பகலவிர் மணிப்பூ ணல்கிப் பல்வுணக் கருவி நல்கி
அகன்மனை வேறு காட்டி யரசர்கோன் வரிசை செய்ய
இகலறு களிப்பி னோடு மிசைவல்லா னில்லிற் புக்கான்.

(இ - ள்.) முகை உடைந்து அவிழ்ந்த மாலை முடித்தலை துளக்கி - அரும்பின் முறுக்குடைந்து விரிந்த மலராலாகிய மாலையை யணிந்த முடியினையுடைய தலையை அசைத்து, தூசு - பல ஆடைகளையும், பகல் அவிர் மணிப்பூண் நல்கி - சூரியன்போல விளங்கும் மணிக்கலன்களையும் கொடுத்து, பல் உணு கருவி நல்கி - உணவுக்கு வேண்டிய பல பொருள் களையும் அளித்து, அகன்மனை வேறு காட்டி - அகன்ற இல்லம் வேறு காண்பித்து, அரசர் கோன் வரிசை செய்ய - மன்னர் மன்னனாகிய வரகுண பாண்டியன் சிறப்புச் செய்ய, இகல் அறு களிப்பினோடும்- பகையற்ற மகிழ்ச்சியோடும், இசை வல்லான் இல்லில் புக்கான் - இசையில் வல்ல ஏமநாதன் தனக்கு அமைத்த வீட்டிற் சென்றான்.

கருவி - உபகரணம். அரசன் வரிசை செய்தமையால் இங்கும் தன்னை வெல்லவல்லார் இலரெனக் கருதி மகிழ்ந்தனனென்பார் 'இகலறு களிப்பினோடும்' என்றார். (௬)

மீனவன் வரிசை பெற்ற செருக்கினும் விருதி னானும்
மானமேல் கொண்டு தன்னோ டின்னிசை பாட வல்ல
தானயாழ்ப் புலவர் வேறிங் கில்லெனத் தருக்குஞ் செய்தி
கோனறிந் துழையர்க் கூவிப் பத்திரற் கொணர்தி ரென்றான்.

(இ - ள்.) மீனவன் வரிசைபெற்ற செருக்கினும் - பாண்டியன் செய்த வரிசைகளைப் பெற்ற செருக்கினாலும், விருதினாலும்- (முன் பல அரசர்களிடம் பெற்ற) விருதினாலும், மானம் மேல் கொண்டு - பெருமை மிக்கு, தன்னோடு இன் இசை பாடவல்ல - தன்னுடன் இனிய இசை பாடுவதற்கு வல்ல, தான யாழ்ப்புலவர் - தானமமைந்த யாழ்ப்புலவர், இங்கு வேறு இல் எனத் தருக்கும் செய்தி - இங்கு வேறு ஒருவருமில்லை என்று கருதி இறுமாக்குஞ் செய்தியை, கோன் அறிந்து - பாண்டி மன்னன் அறிந்து, உழையர்க் கூவி - ஏவலாளரை விளித்து, பத்திரன் கொணர்திர் என்றான் - நம் பாணபத்திரனை அழைத்து வாருங்கள் என்று ஏவினான்.

தானம் - இசை தோன்றுமிடம். தருக்கினன் அங்ஙனந் தருக்குஞ் செய்தியை என விரித்துரைக்க. உழையர் - ஒற்றர். (௭)

உழையரால் விடுக்கப் பட்ட பத்திர னுவரி வென்றோன்
கழல்பணிந் தருகு நிற்பக் கௌரிய னோக்கிப் பாணி
பழகிசை வல்லா னோடும் பாடுதி கொல்லோ வென்ன
மழலையா ழிடந்தோ ளிட்ட பாணர்கோன் வணங்கிச் சொல்வான்.

(இ - ள்.) உழையரால் விடுக்கப்பட்ட பத்திரன் . அவ்வொற்றரால் அழைத்து வரப்பட்ட பாணபத்திரன், உவரி வென்றோன் கழல் பணிந்து - கடலை வென்ற பாண்டியன் அடிகளை வணங்கி, அருகு நிற்ப - பக்கத்தில் நிற்க, கௌரியன் நோக்கி - பாண்டியன் அவனைப் பார்த்து, பாணி பழகு இசை வல்லானோடும் - பாடுதல் பயின்ற இசை

வல்லனாகிய ஏம நாதனோடும், பாடுதி கொல்லோ என்ன - நீ பாட வல்லையோ என்று வினவ, மழலை யாழ் இடந்தோள் இட்ட பாணர் கோன் வணங்கிச் சொல்வான் - இனிய யாழை இடது தோளிலிட்ட பாணர் தலைவன் வணங்கிக் கூறுவான்.

உழையர் அழைத்து வந்துவிட - அங்ஙனம் விடுக்கப்பட்ட பத்திரன் என விரித்துக்கொள்க. உவரி - உவர்ப்புடையது; கடல். இ: வினை முதற் பொருள் விகுதி. முன்னோன் செயல் இவன்மீது ஏற்றிக் கூறப் பட்டது. பாணி - பாட்டு; தாளமுமாம். அடிப்பட்ட பயிற்சியுடையன் எனற்கு 'பாணி பழகிசை வல்லான்' என்றனன். கொல்: அசை. இடந் தோள்: மெலித்தல். (௬)

தென்னவர் பெரும யானுன் றிருவுள வலனுங் கூடன்
முன்னவ னருளுங் கூட்டு முயற்சியான் முயன்று பாடி
அன்னவன் விருது வாங்கி யவனைவீ றழிப்ப னென்றான்
மன்னவ னாளைப்பாடு போகென வரைந்து சொன்னான்.

(இ - ள்.) தென்னவர் பெரும - பாண்டியர் பெருமானே, யான் - அடியேன், உன் திரு உள வலனும் - உனது திருவுள்ளத்தின் வலிமையும், கூடல் முன்னவன் அருளும் - கூடலில் வீற்றிருக்கும் முதல்வனாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவருளும், கூட்டும் முயற்சியால் முயன்று பாடி - கூட்டுகின்ற முயற்சியின் நெறியே சென்று பாடி, அன்னவன் விருது வாங்கி - அந்த ஏமநாதன் விருதினை வாங்கி, அவனை வீறு அழிப்பன் என்றான் - அவன் தருக்கினையும் ஒழிப்பேன் என்று கூறினான்; மன்னவன் - வேந்தன், நாளை பாடு போக என வரைந்து சொன்னான் - நாளை வந்து பாடுவாய் இன்று போகக் கடவை என்று வரையறுத்துச் சொன்னான்.

நின் திருவுள்ளத்தின் அன்பும் இறைவன் அருளும் அவனை வெல்லுதற்கேற்ற முயற்சித் திறனை எனக்களிப்பது ஒருதலை யாகலின் யானும் அவ்வாறு முயன்று பாடி வெல்வேன் என்றானென்க. தோற்றவன் விருதினை யிழக்க வேண்டுமாகலின் 'விருது வாங்கி' என்றார். போகென: அகரந் தொகுத்தல். வரைந்து - காலம் வரையறுத்து. (எ)

இற்கண்ணே யிசைவல் லான்போ யிருந்துழி யனையான் பாங்கர்க்
கற்கும்பாண் மக்கண் மல்ல லாவணங் கவலை மன்றம்
பொற்குன்ற மனைய மாட மறுகெங்கும் போகிப் போகிச்
சொற்குன்று வகையாற் பாடித் திரிந்தனர் வீறு தோன்ற.

(இ - ள்.) இசை வல்லான் இல் கண் போய் இருந்துழி - இசையில் வல்ல பாணபத்திரன் தனது வீட்டின்கண் சென்று இருந்தபொழுது, அனையான் பாங்கர் பாண் கற்கும் மக்கள் - அவ்வேமநாதனிடம் இசை கற்கின்ற மாணவகர்கள், மல்லல் ஆவணம் கவலை மன்றம் - வளமிக்க கடை வீதியும் கவர் வழியும் மன்றங்களும், பொன்குன்றம் அனைய மாடம் மறுகு - பொன்மலையை ஒத்த, மாடங்களையுடைய

விதிகளும், எங்கும் - ஆகிய எவ்விடத்தும், போகிப் போகி - சென்று சென்று, சொல்குன்று வகையால் பாடி - இசை நூலிற்குரிய சொற்கள் மாத்திரை குறையாவகை பாடி, வீறு தோன்றத் திரிந்தனர் - தமது இசை வன்மை புலப்பட உலாவினர்.

பாண்கற்கும் மக்கள் என்க. மக்கள் - மாணவர்; பாண் மக்கள் என்றுமாம். கவலை - கவர் வழி; இரண்டு தெருக்கூடுமிடம். மன்றம் - பலர் கூடும் இடம். தங்கள் ஆசிரியனுடைய பெருமை தோன்ற என்றுமாம். (அ)

இவ்விசை கேட்டு நன்றென் றதிசயித் திசைவல் லான்பால்
வவ்விசை மைந்தர் பாடும் வண்ணமீ தென்னை கேட்டேன்
அவ்விசை வல்லான் பாடு முறையெற்றோ வவனை நாளைச்
சேவ்விசை* பாடி வெல்வ தெவனெனத் திவவுக் கோலான்.

(இ - ள்.) திவவுக்கோலான் - நரம்பின் கட்டமைந்த வீணையில் வல்ல பாணபத்திரன், இவ்விசை கேட்டு - இந்த இசையினைக் கேட்டு, நன்று என்று அதிசயித்து - நல்லது என்று வியந்து, இசை வல்லான் பால் இசை வவ்வு - ஏமநாதனிடம் இசை கற்கின்ற, மைந்தர் பாடும் வண்ணம் ஈது - மாணவகர் இசை பாடுந் தன்மை இது; என்னை - இவர்கள் இசை வன்மை யிருந்தவாறென்னை, கெட்டேன் - ஆ கெட்டேன், அவ்விசை வல்லான் பாடும்முறை எற்றோ - அந்த ஏமநாதன் பாடும் முறைமை எத்தன்மைத்தோ, நாளை செவ்விசை பாடி அவனை வெல்வது எவன் என - நாளைச் செவ்விய இசைபாடி அவனை வெல்வது எங்ஙனமென்று கருதி.

வவ்வுதல் - பற்றுதல்; கற்றுக்கொள்ளல். கெட்டேன்: வியப் பிடைச்சொல். இவர் பாடுவது இவ்வாறாயின் அவன் பாடுவது எத்தன் மைத்தோ அவனை வெல்வதெங்ஙனமெனக் கவலை கொண்டன னென்க. தெவ்விசை பாடி என்னும் பாடத்திற்குப் பகையாக இசைபாடி என்றும், யாவரும் ஏற்றுக்கொள்ளும் இசைபாடி என்றும் பொருள் கொள்ளலாகும்.

"தெவுக் கொளற் பொருட்டே"

என்பது தொல்காப்பியம். (௯)

மையணி மிடற்றி னானை மதுரைநா யகனை வந்தித்
தையனே யடியேற் கின்று னருட்டுணை செய்யல் வேண்டும்
மெய்யனே யென்று போற்றி வேண்டுகோண் டன்பு தோய்ந்த
போய்யறு மனத்தா னில்லம் புக்கினி திருந்தா னிப்பால்.

(இ - ள்.) மை அணி மிடற்றினானை மதுரைநாயகனை வந்தித்து - கரிய அழகிய திருமிடற்றினை யுடையனாகிய சோமசுந்தரக் கடவுளை வணங்கி, ஐயனே - அப்பனே, அடியேற்கு - அடியேனுக்கு, இன்று உன் அருள் துணை செய்யல் வேண்டும் - இப்பொழுது நினது திருவரு

(பா - ம்.) *தெவ்விசை.

ளாகிய துணையை அளித்தல் வேண்டும்; மெய்யனே என்று - உண்மை வடிவனே என்று, போற்றி வேண்டுகொண்டு - வணங்கி வேண்டிக் கொண்டு, அன்பு தோய்ந்த பொய் அறு மனத்தான் - அன்பில் மூழ்கிய பொய்யற்ற உள்ளத்தையுடைய பாணபத்திரன். இல்லம் புக்கு இனிது இருந்தான் - மனையை அடைந்து கவலையின்றி இருந்தனன்; இப்பால் - பின்.

கருமையை அணிந்த மிடறு என்றுமாம். ஒரு பொருண்மேற் பல பெயர் வந்தன. அருட்டுணை-அருளாகிய துணை. வேண்டு - வேண்டுதல்; முதனிலைத் தொழிற்பெயர். (௧0)

[கலிநிலைத்துறை]

வருத்த னாகிவந் திரந்தவ னிசைப்பகை மாற்ற
விருத்த னும்விற காளென விண்ணிழி விமானத்
தொருத்த னாறி வாகிய வுண்மையா னந்தத்
திருத்த னார்தம திச்சையாற் றிருவுருக் கொள்வார்.

(இ - ள்.) வருத்தனாகி வந்து இரந்தவன் - துன்பமுடையவனாகி வந்து குறையிரந்த பாணபத்திரனது, இசைப் பகை மாற்ற - இசையில் வல்ல பகைவனை ஓட்ட, விருத்தனும் விறகு ஆள் என - மூப்புடையனாகிய விறகாளைப்போல, விண் இழி விமானத்து ஒருத்தனார் - வானினின்றும் இறங்கிய இந்திர விமானத்தில் எழுந்தருளிய ஒப்பற்றவரும், உண்மை அறிவு ஆனந்தம் ஆகிய திருத்தனார் சச்சிதானந்த வடிவமுடையவரு மாகிய சோமசுந்தரக் கடவுள், தமது இச்சையால் திரு உருக்கொள்வார் - தமது இச்சையானே திருமேனி கொள்வாராயினர்.

இசைப்பகை - இசைவல்ல பகைவன். உண்மை யறிவானந்தமாகிய என மாறுக. திருத்தன் - தீர்த்தன். இறைவன் கொள்ளும் திருமேனிக்குக் காரணம் அவனது இச்சையே எனல் போந்தது. (௧௧)

அழுக்கு மூழ்கிய சிதரசைத் தவிர்சடை யமுதம்
ஒழுக்கு வெண்மதி* வாங்கியே செருகிய தொப்ப
மழுக்கு கூனல்வெள் வாய்க்குயம் வலம்படச் செருகி
இழுக்கு தேய்செருப் பருமறை கடந்ததா ளேற்றி.

(இ - ள்.) அழுக்கு மூழ்கிய சிதர் அசைத்து - அழுக்கு நிறைந்த கந்தையை உடுத்தி, அவிர்சடை அமுதம் ஒழுக்கு - விளங்கிய சடையி லிருந்து அமிழ்தினைப் பொழிகின்ற, வெண்மதி வாங்கியே செருகியது ஒப்ப - வெள்ளிய சந்திரனையே வாங்கி இடையிற் செருகியதுபோல, கூனல் - வளைந்த, மழுக்கு வெள்வாய்க் குயம் - மழுங்கிய வெள்ளிய வாயையுடைய அரிவாளை, வலம்படச் செருகி - வலப்புறத்து இடையிற் செருகி, இழுக்கு தேய் செருப்பு - இழுத்துத் தேய்ந்த செருப்பின்கண் அருமறை கடந்த தாள் ஏற்றி - அரிய வேத முடியைக் கடந்த திருவடி களை ஏற்றி.

(பா - ம்.) * வான்மதி.

சிதர் - கிழிந்த துணி. மதியையே என ஏகாரம் பிரித்துக் கூட்டுக. மழுக்கு: வலித்தல் விகாரம். கூனல் குயம் - கொடுவாள். செருப்பினைத் தாளில் இயைத்து என்றுமாம். (௧௨)

பழைய தோர்பொல்லம் பொத்திய பத்தர்யாழ்க் கோறோள்
உழைய தாகவிட் டெருத்தலைத் தூசலா டியவொண்
குழைய காதினிற் களவிணர்க் *குறியகாய் தூக்கித்
தழையும் வார்சிகை சரிந்திடச் சுமையடை தாங்கி.

(இ - ள்.) பழையது - பழையதாகிய, பொல்லம் பொத்திய - தைக்கப்பட்ட, ஓர் பத்தர் யாழ்க்கோல்-ஒரு பத்தரையுடைய வீணையின் தண்டானது, தோள் உழையது ஆகவிட்டு, தோளினிடத்ததாகத் தொங்க விட்டு, எருத்து அலைத்து ஊசல் ஆடிய - பிடரியை அலைத்து ஊசல் போல் அலைந்தாடிய, ஒண்குழைய காதினில் - ஒள்ளிய குண்டலத்தை யணிந்த திருச்செவியில், கள இணர்க்குறிய காய் தூக்கி - களாவின் பூங்கொத்தோடு கூடிய சிறிய காயினைத் தொங்கவிட்டு, தழையும் வார்சிகை சரிந்திட - தழைந்த நீண்ட சிகை சரிய, சுமையடை தாங்கி - சும்மாடு தாங்கி.

பொல்லம் பொத்தல் - கிழிந்ததனை மூட்டுதல்; தைத்தல். பத்தர் - யாழின் உறுப்புகளுள் ஒன்று. சுமையடை என்பது சும்மாடு என வழங்குகிறது. (௧௩)

தறிந்த விந்தனந் தினந்தோறுந் தாங்கிநீள் பங்கி
பறிந்து தேய்ந்தழுந் தியதலை யுடையராய்ப் பரிந்து
மறிந்த கங்கையும் பங்குறை மங்கையுங் காணு
தெறிந்த விந்தனச் சுமைதிரு முடியின்மே லேற்றி.

(இ - ள்.) தறிந்த இந்தனம் - முறியுண்ட விறகினை, தினந்தோறும் தாங்கி - நாள்தோறுஞ் சுமந்து, நீள்பங்கி பறிந்து தேய்ந்து அழுந்திய தலையுடையராய் - நீண்ட மயிர் கழியப்பட்டுத் தேய்ந்து பள்ளமாகிய தலையினை உடையவராய், பரிந்து மறிந்த கங்கையும் - அன்பு கூர்ந்து (முடியில்) மடங்கிய கங்கையும், பங்கு உறை மங்கையும் காணாது - பாகத்தில் உறையும் அங்கயற்கண் ணம்மையும் காணாமல், எறிந்த இந்தனச் சுமை திருமுடியின்மேல் ஏற்றி - வெட்டிய விறகின் சுமையைத் திருமுடியின்மேல் ஏற்றி.

தறிந்த - தறியுண்ட; தறிக்கப்பட்ட. தினந்தோறும் தாங்கினமையாற் பறிந்து தேய்ந்தழுந்திய தலைபோன்று தலையுடையராய் என்பது கருத்து. மறிந்த - அலை மடங்குகின்ற. அவர் காணின் பொறாராகலின் காணாதபடி முடியின்மேல் ஏற்றினர் என்க. (௧௪)

(பா - ம்.) * களவினற் குறிய.

என்பு தோன்றியூ னின்றியே யிளைத்தயாக் கையராய்
அன்பு தோன்றியே கண்டவ ரகங்கனிந் திரங்க
வன்பு தோன்றிய மனமொழி கடந்ததாண் மலர்பார்
முன்பு தோன்றிய தவத்தினுன் முடிமிசைச்* சூட.

(இ - ள்.) என்பு தோன்றி - எலும்புகள் வெளிப்பட்டு, ஊன் இன்றி இளைத்த யாக்கையராய் - தசை சிறிது மின்றி இளைத்த உடம்பினை யுடையராய், அன்பு தோன்றியே கண்டவர் அகம் கனிந்து இரங்க - பார்த்தவர்கள் அன்பு மிக்கு மனங் கனிந்திரங்க, வன்பு தோன்றிய மனம் மொழிகடந்த தாள் மலர் - கடினமான மனத்தையும் மொழியை யுங் கடந்த திருவடித் தாமரைகளை, பார் - நிலமகள், முன்பு தோன்றிய தவத்தினுல் - முன்பு செய்த தவத்தினுல், முடிமிசை சூட - தன் முடியின் கண்ணே சூட.

வன்பு தோன்றிய - கடினம் பொருந்திய; அன்பால் உருகுதலில் லாத. (கஙு)

திருமு கத்துவேர் வரும்பவாய் குவிந்தொலி† செய்ய
வருவர் கற்சுமை தாங்கிமேற் சார்த்துவர் மடுநீர்
பருகு வாரெடுப் பார்தலை வெம்மைவேர் பறிய
இருகை யாலடிக் கடியெடுத் தேந்தியூர் புகுவார்.

(இ - ள்.) திருமுகத்து வேர்வு அரும்ப-திருமுகத்தின்கண் வேர்வை தோன்ற, வாய் குவிந்து ஒலி செய்ய - திருவாய் கூம்பி ஒலி செய்ய, வருவர் - வாரா நிற்பர்; சுமை தாங்கி மேல் சார்த்துவர் - கல்லாலாகிய சுமைதாங்கி மேல் சுமையைச் சார்த்தா நிற்பர்; மடுநீர் பருகுவார் - மடுவிலுள்ள நீரைக் குடிப்பர்; எடுப்பார் - சுமையை எடுத்துத் தலையின் மேல் வைப்பர்; தலை வெம்மை வேர் பறிய - தலையில் வெப்பத்தாலாகிய வேர்வை நீங்க, இரு கையால் - இரண்டு திருக்கரங்களாலும், அடிக்கடி எடுத்து ஏந்தி ஊர் புகுவார் - அடிக்கடி சுமையை மேலே எடுத்து ஏந்தி ஊருட் புகுவாராயினர்.

உடம்பா லுழந்து தொழில் செய்வோர் களைப்புற்றபொழுது வாய் குவித்து ஒலி செய்தல் இயற்கை; இச்செய்யுள் விறகு சுமப்பார் தொழிலினியல்பை விளக்குதலின் தொழிற்றன்மையணி. (கசு)

நடந்து கொள்ளுநர்க் கருவிலை பகர்ந்துநான் மாடம்
மிடைந்த வீதியுங் கவலையு முடுக்கரு மிடைந்து
தொடர்ந்த வேதமும் பிரமன்மால் சூழச்சியும் பகலுங்
கடந்து போகியவ் விசைவலான் கடைத்தலைச் செல்வார்.

(பா - ம்.) * முடிமிசை சூட. † குவித்தொலி.

(இ - ள்.) நடந்து - அங்ஙனஞ் சென்று; கொள்ளுநர்க்கு அரு விலை பகர்ந்து - வாங்குபவர்க்கு மிக்க விலை சொல்லி, நால் மாடம் மிடைந்த வீதியும் - பல மாடங்கள் நெருங்கிய வீதிகளையும், கவலையும் - இரண்டு தெருக்கள் கூடுமிடங்களையும், முடுக்கரும் - குறுந் தெருக்களையும், மிடைந்து தொடர்ந்த வேதமும் - நெருங்கிப் பின் பற்றிய மறையையும், பிரமன் மால் சூழ்ச்சியும் - பிரமனும் திருமாலு மாகிய இவர்கள் சூழ்ச்சியையும், பகலும் - பகற்பொழுதையும், கடந்து போகி - கடந்துசென்று, அவ்விசைவலான் கடைத்தலைச் செல்வார் - அந்த இசையில் வல்ல ஏமநாதன் கடைவாயிலின்கண் செல்வா ராயினர்.

அருவிலை - விலைப்படலாகாத விலை; மிக்க விலை. நான்கு மாடம் கூடிய என்றுமாம். முடுக்கர் - குறுந்தெரு; இக்காலத்தில் இது சந்து என வழங்கும். பகல் முழுதும் வீதி முதலியவற்றில் நடந்து அவற்றைக் கடந்து பகல் கழிந்தபின் இசைவலான் கடைத்தலைச் செல்வாராயினர்; அங்ஙனஞ் செல்லுதற் பொருட்டே அரு விலை பகர்ந்தனரென்க. வேதமும் பிரமன் மால் சூழ்ச்சியும் இறைவன் இங்ஙனம் எழுந்தருளுதலை அறியும் வலியிலவாயின வென்பார் அவற்றைக் கடந்து என்றார். (௧௭)

வரவு நேர்ந்தழைப் பவரென வாம்பல்வாய் மலர
இரவு கான்றுவெண் மதிநகைத் தெழவுயிர்த் துணைவர்
பிரிவு நோக்கின ரெனக்கணீர் பில்குதா மரையின்
நிரைகள் கூம்பிடக் கதிரவன் குடகட *னீந்த.

(இ - ள்.) உயிர்த்துணைவர் வரவு நேர்ந்து அழைப்பவர் என - உயிர் போன்ற தலைவரது வருகையை நோக்கி அழைப்பவர் போல, ஆம்பல் வாய் மலர - ஆம்பல்கள் வாய் மலர, இரவு கான்று - இரவினைத் தோற்றுவித்து, வெண்மதி - வெள்ளிய சந்திரன், நகைத்து எழ - புன் முறுவல் செய்து தோன்றவும், (உயிர்த் துணைவர்) பிரிவு நோக்கினர் என - கணவரது பிரிவினைக் கண்ட மகளிர் கண்ணீர் உகுத்து முகம் வாடுதல் போல, கள் நீர் பில்கு தாமரையின் நிரைகள் கூம்பிட - தேனாகிய நீர் பெருகுந் தாமரையின் வரிசைகள் குவிய, கதிரவன் குட கடல் நீந்த - சூரியன் மேலைக் கடலில் நீந்திச் செல்லவும்.

உயிர்த்துணைவர் என்பதனை முன்னுங்கூட்டி யுரைக்க. மாலைப் பொழுதில் கூடினார்க்கு இன்பமும் பிரிந்தார்க்குத் துன்பமும் உளவாத லும் குறிப்பிட்டவாறாயிற்று. கண்ணீர் - கள்ளாகிய நீர் எனவும், விழி நீர் எனவும் இரட்டுற மொழிதல். (௧௮)

பறவை வாயடைத் தருகணை பார்ப்பொடும் பேடையைச்
சிறக ராலணைத் திரும்பொழிற் குடம்பையுட் சேறிய
நறவ வாய்ப்பெடை யுண்டதே னக்கிவண் டோடைப்
பொறைகோ டாமரைப் பள்ளியுட் புகுந்துகண் படுக்க.

(பா - ம்.) * குரைகட னீந்த.

(இ - ள்.) பறவை வாய் அடைத்து - ஆண் பறவைகள் வாய் திறந்து ஒலிக்காமல், அருகு அணை பார்ப்பொடும் பெடையை-பக்கத்தில் வந்து அணையும் குஞ்சுகளையும் பெட்டையையும், சிறகரால் அணைத்து - சிறகினால் அணைத்து, இரும்பொழில் குடம்பையுள் செறிய - பெரிய சோலையிலுள்ள தங்கள் கூட்டில் அடங்கவும், நறவம் உண்ட பெடை வாய் தேன் - தேனை உண்ட பெண் வண்டின் வாயிலுள்ள தேனை, வண்டு நக்கி - ஆண் வண்டு நக்கி, ஓடைப் பொறைகொள் தாமரைப் பள்ளியுள் - ஓடையிலுள்ள தம்மைச் சுமத்தலையுடைய தாமரையாகிய படுக்கையுள், புகுந்து கண் படுக்க - புகுந்து உறங்கவும்.

மாலைப் பொழுதில் பறவைகள் ஒலி யடங்குதல் இயல்பு. சிறகர்: போலி. (கக)

புல்லெ னீண்லைக் குரங்கினம் பொதும்பர்புக் குறங்க
முல்லை யாய்மகா ருய்த்தரக் கன்றுள்ளி முந்திக்
கோல்லை யானிரை மனைதோறுங் குறுகிடச் சிறுபுன்
கல்வி மாணவச் சிறார்பயில் கணக்கொலி யடங்க.

(இ - ள்.) நீள் புல்லென் நிலைக் குரங்கு இனம் - மிக்க புல்லென்ற தன்மையுடைய குரங்கின் கூட்டங்கள், பொதும்பர் புக்கு உறங்க - சோலை சென்று தூங்கவும், முல்லை ஆய் மகார் உய்த்தர - முல்லை நிலத்திலுள்ள ஆயச் சிறுவர்கள் செலுத்த, கொல்லை ஆன் நிரை - அந்நிலத்துப் பசுவின் கூட்டங்கள், கன்று உள்ளி - கன்றுகளை நினைத்து, மனைதொறும் முந்திக் குறுகிட - வீடுகள் தோறும் முற்பட்டுச் செல்லவும், சிறுபுன் கல்வி மாணவச் சிறார் - ஆரம்பக் கல்வி பயிலும் மாணவச் சிறுவர்கள், பயில் கணக்கு ஒலி அடங்க - பயிலுகின்ற நெடுங்கணக்கின் ஒலி அடங்கவும்.

புல்லெனல் - பொலிவின்றி யிருத்தல். ஆய் - ஆயச்சாதி. சிறு புன் சிறார் என்றுமாம். சிறுபுன்: ஒருபொரு ளிருசொல். கணக்கொலி - நெடுங்கணக்கை முறைவைத் தோதும் ஒலி. (உ0)

புனைந்த வாழ்கடற் கரும்படா முடம்பெலாம் போர்த்து
வனைந்த பூண்முலை நிலமக டுயில்வது மானக்
கனைந்த காரிருண் மெல்லெனக் கவிதரப் பிரிவால்
இனைந்த காதலர் நெஞ்சில்வே ளெரிகணை நாட்ட

(இ - ள்.) பூண்வனைந்த முலை நிலமகள் - ஆரம் அணிந்த முலைகளை யுடைய நிலமாது, புனைந்த - தான் உடுத்திருந்த, ஆழ்கடல் கரும் படாம் - ஆழ்ந்த கடலாகிய கரிய ஆடையை, உடம்பு எலாம் போர்த்து - உடம்பு முழுதும் போர்த்து, துயில்வதுமான - உறங்குவதுபோல, கனைந்த கார் இருள் - செறிந்த கரிய இருளானது, மெல்லெனக் கவி தர - மெல்லென வந்து உலகினைப் போர்க்கவும், பிரிவால் இனைந்த காதலர் நெஞ்சில் - பிரிவினால் வருந்திய காதலர்களுடைய நெஞ்சின்கண், வேள் எரிகணை நாட்ட - மன்மதன் எரிகின்ற அம்புகளை நாட்டவும்,

அருவியாகிய ஆரம்பூண்ட மலைகளாகிய கொங்கைகளையுடைய நிலமகள் என்க. மருங்கில் உடுத்த கரிய ஆடையை உடல்முழுதும் போர்த்து உறங்கினாற் போல எனக் கூறிய நயம் பாராட்டற்பாலது. இரவில் உயிர்களெல்லாம் வினையொழிந்திருத்தலின் 'நிலமகள் துயில் வதுமான' என்றது மிக்க பொருத்தமுடைத்து. (உக)

திங்கள் வாணுதன் முயற்கறைத் திலகமுஞ் சிவந்த
மங்கு லாடையு மயங்கிரு ளோதியும் வான்மீன்
பொங்கு மாரமும் பொலிந்துதன் கொண்கனைப் பொருப்பன்*
மங்கை தேடிவந் தாளென வந்தது மாலை.

(இ - ள்.) திங்கள் வாள் நுதல் - சந்திரனாகிய ஒள்ளிய நெற்றியில், முயற்கறைத் திலகமும் - முயற்களங்கமாகிய பொட்டும், சிவந்த மங்குல் ஆடையும் - செவ்வானமாகிய ஆடையும், மயங்கு இருள் ஓதியும் - மயங்கிய இருளாகிய கூந்தலும், வான்மீன் பொங்கும் ஆரமும் - விண்மீன்களாகிய விளங்குகின்ற ஆரமுமாகிய இவைகளால், பொலிந்து - விளங்கி, பொருப்பன் மங்கை - மலையரையன் புதல்வியாகிய உமை, தன் கொண்கனை - தன் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளை, தேடி வந்தாள் என - தேடி வந்தாள் என்னும்படி, மாலை வந்தது - மாலைப் பொழுது வந்தது.

சிவந்த மங்குல் - செவ்வானம். மயங்குதல் - கலத்தல்; மயக்கஞ் செய்தலுமாம் கயரி. நிறமுடைய உமை செவ்வாடையுடுத்துக் கூந்தலை ஒப்பனை செய்து திலகமும் ஆரமும் பூண்டு, தன்னைப் பிரிந்து விறகு சுமந்து போந்த இறைவனைத் தேடிவந்தாற்போல என்க. வரவு நேர்ந்து என்னுஞ் செய்யுள் முதலாகக் கூறிவந்த செயவெனெச்சங்கள் இச் செய்யுளிலுள்ள வந்தது என்னும் வினைகொண்டு முடியும். மாலை பொலிந்து வந்தது என முடிக்க. (உஉ)

எடுத்த விந்தன மோருபுறத் திறக்கியிட் டூன்றி
அடுத்த வன்புறந் திண்ணைமீ தமர்ந்திளைப் பாறித்
தொடுத்த வின்னிசை சிறிதெழீஇப் பாடினார் சுருதி
மடுத்தி யாரவன் பாடுவா னென்றிசை வல்லான்.

(இ - ள்.) எடுத்த இந்தனம் - சுமந்து வந்த விறகுக் கட்டை, ஒரு புறத்து இறக்கி ஊன்றி இட்டு - ஒருபக்கத்தில் இறக்கி ஊன்றி வைத்து, அடுத்தவன் புறம் திண்ணைமீது அமர்ந்து - வந்தவனாகிய ஏமநாதனது வெளித்திண்ணையின்மேல் அமர்ந்து, இளைப்பாறி - வந்த இளைப்பினைப் போக்கி, தொடுத்த இன்இசை சிறிது எழீஇப் பாடினார் - தொடுத்த இனிமையையுடைய இசையைச் சிறிது எழுப்பிப் பாடினார்; இசை வல்லான் - இசையில் வல்ல ஏமநாதன், சுருதிமடுத்து - அவ்விசையினைக் கேட்டு, பாடுவான் அவன் யார் என்று - பாடுவானாகிய அவன் யாவன் என்று கருதி.

(பா - ம்.) * பொருப்பின் மங்கை.

அடுத்தவன் - வேற்று நாட்டிலிருந்து வந்தவன். எழீஇ: சொல்லிசையளபெடை. சுருதி மடுத்து என்பதற்குப் பண்ணமைத்து என்றுரைத்தலுமாம். அவன் இசை பாடுவான் வல்லான் யாவன் என்று கருதியென்னலுமாம். (௨௩)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

வண்டறை கொன்றை யான்முன் வந்துநீ யாரை யென்றான்
பண்டரு விபஞ்சி* பாண† பத்திர னடிமை யென்றான்
முண்டக மலரோன் மாயோன் புரந்தரன் முதன்மற் றேனை
அண்டருந் தன்குற் றேவ லடிமையாக் கொண்ட வம்மான்.

(இ - ள்.) வண்டு அறை கொன்றையான் முன்வந்து - வண்டுகள் ஒலிக்கின்ற கொன்றை மாலையை யணிந்த இறைவன் திருமுன் வந்து, நீ யார் என்றான் - நீ யாவன் என்று வினவினான்; முண்டகமலரோன் - தாமரைமலரை இருக்கையாகவுடைய பிரமனும், மாயோன் - திருமாலும், புரந்தரன் முதல் மற்று ஏனை அண்டரும் - இந்திரன் முதலிய ஏனைய தேவர்களுமாகிய இவர்களை, தன் குற்றேவல் அடிமையாக் கொண்ட அம்மான் - தனது குற்றேவல் செய்யும் அடிமைகளாகக் கொண்ட இறைவன், பண் தரு விபஞ்சி - பண்ணமைந்த யாழ்வல்லோனாகிய, பாண பத்திரன் அடிமை என்றான் - பாணபத்திரன் அடிமை என்று கூறியருளினான்.

யாரை, ஐகாரம் முன்னிலைக்கண் வந்தது. விபஞ்சி - யாழ்; ஈண்டு யாழ் வல்லான் என்னும் பொருட்டு. மற்று: அசை. அடிமையென்றான் இஃதொரு வியப்பிருந்தவாறென்னை யென்க.

"எப்புன்மையரை மிகவேயுயர்த்தி விண்ணோரைப் பணித்தி"

என்னும் திருவாசகம் இங்கே சிந்திக்கற்பாலது. (௨௪)

கனியிசைக் கிழவன் றன்கீழ்க் கற்பவ ரநேகர் தம்முள்
நனியிசைக் கிழமை வேட்டு நானுமவ் வினைஞ னானேன்
தனியிசைக் கிழவ னோக்கித் தசையெலா மொடுங்க மூத்தாய்
இனியிசைக் கிழமைக் காகா யென்றெனைத் தள்ளி விட்டான்.

(இ - ள்.) கனிஇசை கிழவன் தன்கீழ்க் கற்பவர் அநேகர் தம்முள் - சுவைகனிந்த இசையில்வல்ல அப்பாண பத்திரனிடத்து இசை கற்கும் மாணவகர் பலருள், இசைக்கிழமை - இசைகற்றற்கு உரியனாதலை, நனி வேட்டு - மிகவும் விரும்பி, நானும் அவ்வினைஞன் ஆனேன் - நானுங் கற்குந் தொழிலுடையனானேன்; தனி இசைக்கிழவன் நோக்கி - ஒப்பற்ற இசைக்குரிய அப்பாணபத்திரன் என்னைப் பார்த்து, தசை எலாம் ஒடுங்க மூத்தாய் - தசைமுற்றும் ஒடுங்குமாறு முதியவனாயினை (ஆகலின்,) இனி இசைக்கிழமைக்கு ஆகாய் என்று - இனி நீ இசை கற்றற்கு உரியனாகமாட்டாய் என்று கூறி, எனைத் தள்ளிவிட்டான் - என்னை நீக்கி விட்டான்.

(பா - ம்.) * விபஞ்சிப்பாண, † பாணன் பத்திரன்.

கற்குந்தொழில் முற்றுப்பெறுமுன் என்னை நீக்கி விட்டன னென்க. (உ௫)

வெவ்விற கெறிந்து கட்டி விலைபகர்ந் தேனு மைய
இவ்வயி றோம்பு கேனேன் றித்தொழில் பூண்டே னென்ன
நைவளந் தெரிந்த வேம நாதனும் விறகு மள்ளா
அவ்விசை யொருகா லின்னும் பாடென வையன் பாடும்.

(இ - ள்.) ஐய - ஐயனே, வெவ்விறகு எறிந்து கட்டி விலைபகர்ந் தேனும் - உலர்ந்த விறகினை வெட்டிக்கட்டி விற்றாயினும், இவ்வயிறு ஓம்புகேன் என்று - இந்த வயிற்றை ஓம்பக்கடவேனென்று கருதி, இத் தொழில் பூண்டேன் என்ன - இந்தத் தொழிலை மேற்கொண்டேன் என்று கூற, நைவளம் தெரிந்த ஏமநாதனும் - இசை நூலில் வல்ல அவ்வேமநாதனும், விறகுமள்ளா - விறகு விற்கும் மள்ளனே, அவ்விசை - முன்பாடிய அந்த இசையை, இன்னும் ஒருகால் பாடு என - இன்னும் ஒரு முறை பாடுவாயாக என்று கூற, ஐயன் பாடும் - இறைவன் பாடி யருளுவான்.

இசையால் வயிறோம்புதல் கூடாமையின் இத்தொழில் பூண்டேன் என்றான். நைவளம் - நட்டபாடை என்னும் பண்; ஈண்டு இசைப் பொதுமையை உணர்த்திற்று; சிறப்பாக நட்ட பாடையில் வல்லவன் என்றுமாம். மள்ளர் என்னுஞ்சொல் பழைய நாளில் வீரரைக் குறித்து, பின் உடற்றிண்மையுடைய ஏவன் மாக்களைக் குறிப்பதாயிற்று. (உ௬)

குண்டுநீர் வறந்திட் டன்ன நெடுங்கோடிக் குறுங்காய்ப் பத்தர்த்
தண்டுநீ ணிறத்த நல்யா ழிடந்தழீஇத் தெறித்துத் தாக்கிக்
கண்டுமா டகந்தி ரித்துக் கௌவிய திவவிற் பாவ
விண்டுதே னொழுகிற் றென்ன வீக்கிமேன் சுருதி கூட்டி.

(இ - ள்.) குண்டுநீர் வறந்திட்டன்ன - மடுவின்நீர் வறந்தாற் போன்ற, நெடுங்கொடி குறுங்காய்ப் பத்தர் - நீண்ட கொடியிலுள்ள சிறிய காயாகிய பத்தரமைந்த, தண்டு - கோட்டினையும், நீள் நிறத்த - மிக்க நிறத்தினையுமுடைய, நல்யாழ் - நல்ல யாழினை, இடம்தழீஇ - இடது பக்கத்தில் தழுவி, தெறித்துத் தாக்கிக் கண்டு - நரம்பை எறிந்து தாக்கி (ப்பண்ணை எழுப்பி)ப் பார்த்து, மாடகம் திரித்து - முறுக்காணி யைச் சுழற்றி, திவவில் கௌவிய வீக்கி - வார்க்கட்டிலே கவ்வும்படி நரம்பைப் பிணித்து, விண்டு தேன் ஒழுகிற்று என்னப் பாவ - இருலினீங்கித் தேன் ஒழுகினாற்போலப் பரவும்படி, மென்சுருதி கூட்டி - மென்மையாகச் சுருதியை எழுப்பி.

வறந்திட்ட தன்ன என்பது விகாரமாயிற்று. நீர்வறந்த குட்டம் போல் எனக்கொள்க: குறுங்காய் - சுரைக்காய். உள்ளீடும் நீரும் வற்றிய சுரைக்காய்க்கு நீர் வற்றிய குண்டு உவமம். நிறம் ஐந்து; அவற்றை,

"மாத்திரைக ளொன்பானுந் தானங்க ளெட்டானும்
ஏத்துங் கிரியையென் றீரைந்தும் - கோத்துப்
பதின்மூன் றெழுத்தாற் றெழிலைந்தும் பண்ணின்
மதியோர்க ளைந்துநிற மாம்"

என்னுஞ் செய்யுளாலறிக. நல்யாழ் - குணமுழுதும் பொருந்திக் குற்ற முழுதும் நீங்கின யாழ். குணங்களை,

"சொல்லிய கொன்றை கருங்காலி மென்முருக்கு
நல்ல குமிழும் தணக்குடனே - மெல்லிலாய்
உத்தம மான மரங்க ளிவை யென்றார்
வித்தக யாழோர் விதி"

"தளமாய்ச் சமநிலத்துத் தண்காற்று நான்கும்
உளதா யொருங்கூன மின்றி - அளவு
முதிரா திளகாது மூன்றாங்கூ றாய
அதுவாகில் வீணைத்தண் டாம்"

"கோடே பத்த ராணி நரம்பே
மாடக மெனவரும் வகையின வாகும்"

என்பன முதலியவற்றால் அறிக. குற்றம் - நரம்பின் குற்றம்; அவை செம்பகை, ஆர்ப்பு, கூடம், அதிர்வு என்பன : அவற்றின் இயல்பை,

"செம்பகை யென்பது பண்ணோ டுளரா
இன்பமி லோசை யென்மனார் புலவர்"

"ஆர்ப்பெனப் படுவ தளவிறந் திசைக்கும்"

"கூட மென்பது குறியுற விளம்பின்
வாய்வதின் வாராது மழுங்கியிசைப் பதுவே"

"அதிர்வெனப் படுவ திழுமென வின்றிச்
சிதறி யுரைக்குந ருச்சரிப் பிசையே"

என்பவற்றாலறிக. இவை மரக் குற்றத்தால் வருவன என்பதை,

"நீரிலே நிற்ற லழுகுதல் வேத னிலமயங்கும்
பாரிலே நிற்ற லிடிவீழ்த லேய்மரப் பாற்படல்கோ
ணேரிலே செம்பகை யார்ப்பொடு கூட மதிர்வுநிற்றல்
சேரினேர் பண்க ணிறமயக் கம்படுஞ் சிற்றிடையே"

என்பதனாலறிக. இம்மேற்கோள்கள் சிந்தாமணி உரையில் நச்சினார்க்கினியராற் காட்டப் பெற்றன. தேனொழுகிற் றென்ன நரம்பை வீக்கி என்றுமாம்.　(௨எ)

விசையோடு தானந் தோறும் விரனடந் தூச லாட
இசைமுத லேழிற் பல்வே றின்னிசை யெழுஞ்சா தாரி
அசையோடு வீதிப் போக்கு முடுகிய லராகம் யார்க்கும்
நசைதரு நரம்பு கண்ட மொற்றுமை நயங்கொண் டார்ப்ப.

(இ - ள்.) தானந்தோறும் - சுரங்கள் எழும் தானங்கடோறும், விசையொடு விரல் கடந்து ஊசல் ஆட - விசையுடன் விரல் சென்று போக்கு வரவு செய்ய, இசை முதல் ஏழில் - ஏழிசைகளுக்கும் முதலாயுள்ள ஏழு சுரங்களில், பல்வேறு இன் இசை எழும் சாதாரி - பலவேறு வகைப்பட்ட இனிய இசைகளில் ஒன்றாயெழுஞ் சாதாரிப் பண்ணினை, அசையொடு வீதிப் போக்கு முடுகியல் அராகம் - அசையும் வீதிப் போக்கும் வண்ணமும் திறமுமாகிய இவைகளால். யார்க்கும் நசைதரும் நரம்பு கண்டம் ஒற்றுமை நயம்கொண்டு ஆர்ப்ப - எவர்க்கும் விருப்பந் தரும் நரம்பின் ஒலியும் மிடற்றின் ஒலியுந் தம்முள் வேறின்றி ஒலிக்க.

சாதாரி - முல்லைப்பண் ; இதனைத் தேவகாந்தாரம் என்பர். சாதாரி பாடினர் என ௩௨ ஆம் செய்யுளில் முடிக்க. அசை - தாள நான்கனுள் ஒன்று. வீதிப்போக்கு - நகர முதலிய நாலெழுத்துக்கள் நேராய்ச் செல்லுதல். முடுகியல் - பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு வண்ணம் என்னும் வண்ணங்கள். அராகம் - பாலையாழ்த்திறம். (௨அ)

வயிறது குழிய வாங்க லழுமுகங் காட்டல் வாங்குஞ்
செயிரறு புருவ மேறல் சிரநடுக் குறல்கண் ணாடல்
பயிரரு *மிடறு வீங்கல் பையென வாயங் காத்தல்
எயிறது காட்ட லின்ன வுடற்றொழிற் குற்ற மேன்ப.

(இ - ள்.) வயிறு குழிய வாங்கல் - (பாடும்போது) வயிறு குழிபட மேல் வாங்குதலும், அழுமுகம் காட்டல் - அழுமுகங் காட்டுதலும், வாங்கும் செயிர் அறு புருவம் ஏறல் - வளைந்த குற்றமற்ற புருவம் மேலேறுதலும், சிரம் நடுக்குறல் - தலை அசைத்தலும், கண் ஆடல் - கண் ஆடுதலும், பயிர் அரு மிடறு வீங்கல் - பாடுகின்ற அரிய மிடறு வீங்குதலும், பை என வாய் அங்காத்தல் - பையைப் போல வாய்திறத்தலும், எயிறு காட்டல் - பற்களைக் காட்டுதலும், இன்ன - இவை போல்வன பிறவு மாகிய, உடல் தொழில் குற்றம் - உடம்பின் தொழிற் குற்றங்களும்.

வயிறது எயிறது என்பனவற்றில் அது பகுதிப் பொருள் விகுதி. பயிர் - பாடுகின்ற. என்ப: அசை ; உடற்றொழிற் குற்றம் என்பனவாகிய இவைகளும் என்றுரைத்தலுமாம். இக் குற்றங்களின்றிப் பாடவேண்டு மென்பதனை,

"கருங்கொடிப் புருவ மேறா கயனெடுங் கண்ணு மாடா
அருங்கடி மிடறும் விம்மா தணிமணி யெயிறுந் தோன்றா"

என்னும் சிந்தாமணிச் செய்யுளாலும்,

(பா - ம்.) * பயிரறு. பயிறரு.

''கண்ணிமையா கண்டந் துடியா கொடிறசையா
பண்ணளவும் வாய்தோன்று பற்றெரியா—எண்ணிலிவை
கள்ளார் நறுந்தெரியற் கைதவனே கந்தருவர்
உள்ளாளப் பாட லுணர்''

என்னும் இசைமரபுச் செய்யுளாலும்,

''விரஞன் கமைத்த வணிகுரல் வீங்காது
நான்மறை துள்ளும் வாய்பிள வாது
காட்டியுள் ளுணர்த்து நோக்கமா டாது
பிதிர்கனல் மணிசூழ் முடிநடுக் காது
வயிறு குழிவாங்கி யழுமுகங் காட்டாது''

என்னும் கல்லாடச் செய்யுளாலும் அறிக. (உகூ)

வெள்ளைகா குளிகீ ழோசை வெடிகுர ஞசி யின்ன
எள்ளிய வெழாலின் குற்ற மெறிந்துநின் றிரட்ட லெல்லை
தள்ளிய கழிபோக் கோசை யிழைத்தனெட் டுயிர்ப்புத் தள்ளித்
துள்ளலென் றின்ன பாடற் ரொழிற்குற்றம் பிறவுந் தீர்ந்தே.

(இ - ள்.) வெள்ளை - நிறமில்லாத வெள்ளோசையும், காகுளி - இன்னு வோசையும், கீழோசை - கட்டை யிசையும், வெடிகுரல் - வெடித்த குரலும், நாசி - மூக்கோசையும், இன்ன - இவைபோல்வனவு மாகிய, எள்ளிய எழாலின் குற்றம் - (இசை நூலார்) விலக்கிய மிடற் ரோசையின் குற்றங்களும், எறிந்து நின்று இரட்டல் - விலங்கி நின்று ஒலித்தலும், எல்லை தள்ளிய கழிபோக்கு - அளவு கடந்த கழி போக்கும், ஓசை இழைத்தல் - ஓசைபுரிதலும், நெட்டுயிர்ப்புத் தள்ளித் துள்ளல் - பெருமூச்செறிந்து துள்ளலும், என்று இன்ன பாடல் தொழில் குற்றம் - என்று சொல்லப்பட்ட இவை முதலான பாடற்றொழிற் குற்றங்களும், பிறவும் - பிற குற்றங்களும், தீர்ந்து - நீங்கி.

காகுளி - பேய் கத்தினுற்போற் பாடுதல். கீழோசை - நிறமும் தானமும் குறைந்த கட்டையிசை. நாசி - ஒரு தானத்தே பாட ஒரு தானத்தே நழுவுதல் என்று முரைப்பர். எறிந்து நின்றிரட்டல் - ஒரு பண்ணைப் பாட வேறொரு பண்ணில் விலங்கி நின்றொலித்தல். கழிபோக்கு - ஓசை பலவாய் மிக்குச் செல்லுதல். ஓசை யிழைத்தல் - காக்கை கத்தினுற்போற் கத்துதல் என்பர்.

''நாசி காகுளி வெடிகுரல் வெள்ளை
பேசாக் கீழிசை யொருபுற மோடல்
நெட்டுயிர்ப் பெறிதல் எறிந்துநின் றிரட்டல்
ஓசை யிழைத்தல் கழிபோக் கென்னப்
பேசுறு குற்ற மசைவொடு மாற்றி''

என்று கல்லாடத்துள் வருதல் காண்க. (கூ0)

எழுதுசித் திரம்போன் மன்னி யிழுமெனு மருவி யோதை
முழவொலி கஞ்ச நாதம் வலம்புரி முரலு மோசை
கொழுதிசை வண்டின் றாரி யெனவிசைக் குணனும் வேரல்
விழுமிலை சிரன்மீன் மேல்வீழ் வீழ்ச்சிபோற் பாடற் பண்பும்.

(இ - ள்.) எழுது சித்திரம் போல் மன்னி - எழுதிய ஓவியம்போல அசைவற விருந்து, இழு மெனும் அருவி ஓதை - இழுமென் றொலிக்கும் அருவியின் ஓசையும், முழவு ஒலி - முழவின் ஓசையும், கஞ்சநாதம் - கஞ்சக்கருவியின் ஒலியும், வலம்புரி முரலும் ஓசை - வலம்புரிச்சங்கு முழங்கும் ஓசையும், கொழுது இசை வண்டின் தாரி என - மலர்களைக் கிண்டி ஒலிக்கும் வண்டின் ஒலியும் என்று சொல்லப்பட்ட, இசைக்குணனும் - மிடற்றோசையின் குணமும், வேரல் விழும் இலை - மூங்கிலினின்று வீழா நின்ற இலையின் வீழ்ச்சியும், சிரல் - மீன்குத்திப் பறவையானது, மீன் மேல் வீழ் வீழ்ச்சிபோல் - மீனின்மேல் வீழ்கின்ற வீழ்ச்சியும் போல, பாடல் பண்பும் - பாடற் குணமும்.

மூங்கில் இலையின் வீழ்ச்சி மேலிருந்து மெத்தெனக் கிழிறங்குதற்கும், சிரல் வீழ்ச்சி மேலே அசைந்து நின்று விரைந்து கிழிறங்கிச் செல்லுதலுக்கும் உவமம், இசைக்குணம் பாடற்குணங்களை,

"துய்யமொழி மென்குயிலுஞ் சோலைவரி வண்டினமும்
வைய முழங்கும் வலம்புரியும் - கைவைத்துத்
தும்புருவு நாரதரும் பாடியமு வோசையென
நம்புநீர் நால்வேதத் துள்"

"சிச்சிலி பூனை குடமுழக்கஞ் செம்மைத்தாம்
உச்சிமலை நீர்விழுக்கா டொண்பருந்து—பச்சைநிற
வேயினிலை வீழ்ச்சியுடன் வெங்கா னிழற்பறவை
யேயுங்கா லோசை யியல்பு"

என்னும் இசை மரபாலும்,

"வண்டின் றாரியுங் கஞ்ச நாதமும்
சிரல்வா னிலையுங் கழையிலை வீழ்வதும்
அருவி யோசையு முழவின் முழக்கமும்
வலம்புரிச் சத்தமும் வெருகின் புணர்ச்சியும்
இன்னுமென் றிசைப்பப் பன்னிய விதியொடு"

என்னும் கலாடத்தாலும் அறிக. (௩௧)

பொருந்தமந் தரத்தி னோடு மத்திமந் தாரம் போக்கித்
திருந்திய துள்ள றாங்கன் மெலிவது சிறப்பச் செய்து
மருந்தன செய்யு ளோசை யிசையோசை வழாமல் யார்க்கும்
விருந்தெனச் செவியின் மாந்தப் பாடினார் வேத கீதர்.

(இ-ள்.) பொருந்த - இசைய, மந்தரத்தினேடு மத்திமம் தாரம் போக்கி - படுத்தல் நலிதல் எடுத்தல் என்பவற்றில் இசையை நடாத்தி, திருந்திய துள்ளல் தூங்கல் மெலிவது சிறப்பச் செய்து - திருத்தமாகிய துள்ளலும் தூங்கலும் மெலிவதுமாகிய இவற்றைச் சிறக்கச் செய்து, மருந்து அன செய்யுள் ஓசை இசை ஓசை வழாமல் - அமுதத்தை ஒத்த பாடலோசையும் இசையோசையும் வழுவுதலில்லாமல், யார்க்கும் விருந்து என - யாவர்க்கும் விருந்தென்னும்படி, செவியின் மாந்த - அவர்கள் காதினுற் பருக, வேத கீதர் பாடினுர் - சாமகானராகிய இறைவர் பாடியருளினுர்.

இசைக் குணனும் பாடற் பண்பும் பொருந்த என மேற்செய்யு ளோடு இயைக்க. மந்தரம் - கீழ் இசை ; படுத்தல். மத்திமம் - சமனிசை; நலிதல். தாரம்-உச்சவிசை ; எடுத்தல். இவற்றை,

"மந்தரத்து மத்திமத்துந் தாரத்தும் வரன்முறையால்
தந்திரிகண் மெலிவித்துஞ் சயங்கொண்டும் வலிவித்தும்"

என்னும் திருத்தொண்டர்புராணச் செய்யுளால் அறிக. (கூ0)

[கொச்சகக்கலிப்பா]

விரைசார் மலரோ னறியா விகிர்தன்
அரசாய் மதுரை யமர்ந்தா னென்னே
அரசாய் மதுரை யமர்ந்தா னவனென்
புரைசார் மனனும் புகுந்தா னென்னே.

(இ-ள்.) விரைசார் மலரோன் அறியா விகிர்தன் - மணம் பொருந்திய தாமரை மலரில் இருக்கும் பிரமனுல் அறியப்படாத பெரு மான், அரசாய் மதுரை அமர்ந்தான் என்னே - பாண்டி மன்னனுக மதுரையின்கண் வீற்றிருந்தான் இஃது என்னே; அரசாய் மதுரை அமர்ந்தான் அவன் - அங்ஙனம் அரசனுய் மதுரையிலமர்ந்த அவ்விறை வனே, என் புரைசார் மனனும் புகுந்தான் என்னே - எனது குற்றம் பொருந்திய உள்ளத்தின் கண்ணும் குடிப்புகுந்தான் இஃது என்னே.

இது முதல் மூன்றும் அவர் பாடிய இசைப்பாட்டுக்கள். தலைவி கூற்றுகவுள்ளன. விகிர்தன் - வேறுபட்ட தன்மையன். (கூக)

பாடன் மறையுந் தெளியாப் பரமன்
கூடல் கோயில் கொண்டா னென்னே
கூடல் போலக் கொடியே னகமும்
ஆட லரங்கா வமர்ந்தா னென்னே.

(இ-ள்.) பாடல் மறையும் தெளியாப் பரமன் - துதித்தலை யுடைய வேதமும் தெளிந்துணராத இறைவன், கூடல் கோயில் கொண்டான் என்னே - கூடலின்கண் திருக்கோயில்கொண் டெழுந் தருளினன் இஃது என்னே, கூடல்போல - அக்கூடலில் எழுந்தருளியது போல, கொடியேன் அகமும் - கொடியேனது உள்ளத்திலும், ஆடல்

அரங்கா அமர்ந்தான் என்னே - நிருத்தம் புரியும் அம்பலமாக வீற்றிருந் தனன்! இஃது என்னே,

அகமும் அரங்காக அதில் அமர்ந்தான் என்க. (௩௭)

நீல வண்ணன் றேரு நிமலன்
ஆல வாயி லமர்ந்தா னென்னே
ஆல வாயா னலரில் வாசம்
போலென் னுளமும் புகுந்தா னென்னே.

(இ - ள்.) நீலவண்ணன் தேரு நிமலன் - நீல நிறத்தையுடைய திருமாலானும் அறியப்படாத இறைவன், ஆல வாயில் அமர்ந்தான் என்னே - திருவாலவாயின்கண் வீற்றிருந்தான் இஃது என்னே, ஆல வாயான் - அங்ஙனம் திருவாலவாயிலமர்ந்த அவ்விறைவன், அலரில் வாசம்போல் - மலரில் மணம்போல, என் உளமும் புகுந்தான் என்னே - எனது உள்ளத்தின் கண்ணும் புகுந்தான், இஃது என்னே!

இம்மூன்று செய்யுளிலும் மலரோனாலும் மறையாலும் மாலாலும் அறியப்படாதவன் என இறைவன் பெருமை கூறி, அவன் எளிவந்த தன்மையையும் விளக்கினமை காண்க. இந்நகர் மதுரையும் கூடலும் ஆலவாயும் ஆன முறைப்படியே இவற்றிலும் பெயர்கள் கூறப் பட்டன. என்னே என்றது, இங்ஙனம் பெரியனாய இறைவன் இத்துணை யெளியனாகியது என்ன வியப்பு என வியந்தபடி. சிந்தாமணியில் இங் ஙனம் மூன்றாக வந்த செய்யுட்களை 'தாழிசைக் கொச்சக வொருபோகு கள் கந்தருவ மார்க்கத்தான் இடை மடக்கின' என நச்சினார்க்கினியர் கூறினர். (௩௮)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

பாணர்தம் பிரானைக் காப்பான் பருந்தொடு நிழல்போக் கென்ன
யாணரம் பிசைபின் செல்ல விசைத்தவின் னிசைத்தே னண்ட
வாணர்தஞ் செவிக்கா லோடி மயிர்த்துளை வழியத் தேக்கி
யாணரின் னமுத வாக்கை யிசைமய மாக்கிற் றன்றே.

(இ - ள்.) பாணர் தம் பிரானைக் காப்பான் - பாணர்களின் தலைவ னாகிய பத்திரனைக் காத்தற் பொருட்டு, பருந்தொடு நிழல் போக்கு என்ன - பருந்தினோடு அதன் நிழல் செல்லுதல்போல, யாழ் நரம்பு இசை பின் செல்ல இசைத்த - வீணைநரம்பி லெழும் இசை பின் றொடரப் பாடி யருளிய, இன் இசைத்தேன் - இனிய இசையாகிய தேனானது, அண்ட வாணர்தம் செவிக்கால் ஓடி - தேவர்களுடைய செவியாகிய காலின் வழியே ஓடி, மயிர்த்துளை வழியத் தேக்கி - மயிர்த் துளைகளின் வழியே கசியுமாறு நிரப்பி, யாணர் இன் அமுத ஆக்கை - அழகிய இனிய அமுத மயமாகிய அவர்கள் உடலை, இசைமயம் ஆக்கிற்று - இசைமயமாகச் செய்தது.

காப்பான்: வினையெச்சம். காப்பான் இசைத்த வென்க.

''பருந்து மதனிழலும் பாட்டு மெழாலும்
　　திருந்துதார்ச் சீவகற்கே சேர்ந்தன'

என்னும் சிந்தாமணிச் செய்யுளும், ''பருந்து பறக்கு மிடத்து முறையே உயர்ந்து அந்நிலத்தின்கண் நின்று ஆய்ந்து பின்னும் அம்முறையே மேன்மேல் உயர்கின்றாற்போலப் பாடவேண்டுதலின் அஃது உவமையாயிற்று'' என்னும் அதனுரையும் இங்கு நோக்கத் தக்கன. மிடற்றிசையை யாழிசை தொடர்ந்து செல்லுதற்குப் பருந்தினிழலியக்கம் உவமை. யாணரம்பு, வாணர் என்பன முறையே யாழ்நரம்பு, வாழ்நர் என்பவற்றின் மரூஉக்கள். தம் இரண்டும் சாரியை. அன்று. ஏ: அசைகள். (௬௬)

தருக்களுஞ் சலியா முந்நீர்ச் சலதியுங் கலியா நீண்ட
பொருப்பிழி யருவிக் காலு நதிகளும் புரண்டு துள்ளா
அருட்கடல் விளைத்த கீத வின்னிசை யமுத மாந்தி
மருட்கெட வறிவன் றீட்டி வைத்தசித் திரமே யொத்த.

(இ - ள்.) தருக்களும் சலியா - மரங்களும் அசையாவாய், முந்நீர்ச் சலதியும் கலியா - மூன்று நீரினையுடைய கடல்களும் ஒலியாவாய், நீண்ட பொருப்பு இழி அருவிக்காலும் - உயர்ந்த மலையினின்றும் இழியும் அருவியாகிய கால்களும், நதிகளும் புரண்டு துள்ளா - ஆறுகளும் புரண்டு துள்ளாவாய், மருள்கெட-மயக்கம் நீங்க, அருள் கடல் விளைத்த-கருணைக் கடலாகிய இறைவன் பாடியருளிய, கீத இன் இசை அமுதம் மாந்தி - இன்னிசைக் கீதமாகிய அமுதத்தைப் பருகி, அறிவன் - சிற்ப நூல் வல்லான், தீட்டி வைத்த சித்திரமே ஒத்த-எழுதிவைத்த சித்திரங்களையே ஒத்திருந்தன.

தருக்கள் முதலியன மாந்திச் சலித்தல் முதலியன செய்யாவாய்ச் சித்திரமே யொத்த என வினை முடிக்க. மருள் - அறியாமையுமாம்.

''மருவியகால் விசைத்தசையா மரங்கண்மலர்ச் சினைசலியா
கருவரைவீ ழருவிகளுங் கான்யாறுங் கலித்தோடா
பெருமுகிலின் குலங்கள்புடை பெயர்வொழியப் புனல்சோரா
இருவிசும்பி னிடைமுழங்கா வெழுகடலு மிடைதுளும்பா''

என்னும் திருத்தொண்டர் புராணச் செய்யுள் இங்கே நோக்கற்பாலது. (௬௭)

வீணைகை வழுக்கிச் சோர்வார் சிலர்சிலர் விரன டாத்தும்
யாணரம் பெழாலுங் கண்டத் தெழாலும்வே றுக வேர்ப்பர்*
நாணமோ டுவகை துள்ள நாத்தலை † நடுங்கித் தங்கள்
மாணிழை யவர்மேல் வீழ்வார் விஞ்சையர் மயங்கிச் சில்லோர்.

(பா - ம்.) * வேறுக வோர்ப்பார், † நாத்தல நடுங்கி.

(இ - ள்.) விஞ்சையர் சிலர் - யாழ் விஞ்சைவல்ல காந்தருவருட் சிலர், வீணைகை வழுக்கிச் சோர்வார் - வீணை கையினின்றும் நழுவி வீழச் சோர்வடைவர், சிலர் - மற்றுஞ் சிலர், விரல் நடாத்தும் யாழ் நரம்பு எழாலும் - விரலால் வருடி யெழுப்பப்படும் யாழ் நரம்பின் இசையும், கண்டத்து எழாலும் வேருக வேர்ப்பர் - மிடற்றினது இசையும் வேருகுமாறு வேர்ப்பார்கள்; சில்லோர் - வேறு சிலர், நாணமோடு உவகை துள்ள - நாணம் ஒருபாலும் மகிழ்ச்சி ஒருபாலும் ஓங்க, நாத்தலை நடுங்கி மயங்கி - நாவும் தலையும் நடுங்கி மதிமயங்கி, தங்கள் மாண் இழையவர்மேல் விழ்வார் - தத்தம் சிறந்த அணிகளையுடைய மகளிர் மேல் விழ்வர்.

விஞ்சையர் - விச்சாதரர் என்றுமாம். எழால் - இன்னிசை. யாண ரம்புக்கு மேல் உரைத்தது காண்க. (௬அ)

போதுளான் பரமன் பாதப் போதுளா ஞுன் வேலை
மீதுளான் பரமா னந்த வேலைமீ துள்ளா ஞுன்
தாதுளாங் கமலக் கண்போற் சதமக னுடல மெல்லாங்
காதுளா னல்லே னென்ருன் கண்ணுளான் கானங் கேட்டு.

(இ - ள்.) கண்ணுளான் கானம்கேட்டு - நுதற்கண்ணுடைய சிவ பெருமான் பாடியருளிய தேவகானத்தினைக் கேட்டு, போதுளான் பரமன் பாதப் போதுளான் ஆனுன் - தாமரை மலரில் இருக்கும் பிரமன் அவ் விறைவனுடைய திருவடித் தாமரையின் கீழுள்ளவனுனுன்; வேலைமீ துளான் - கடலின்மேல் அறிதுயில் கொள்ளுந் திருமால், பரமானந்த வேலைமீது உள்ளான் ஆனுன் - பேரின்பக் கடலில் உள்ளவனுனுன்; சத மகன் - இந்திரன், தாதுஉள் ஆம் கமலக்கண்போல் - அகத்தே மகரந்தத்தை யுடைய தாமரை மலர்போன்ற கண்களைப்போல, உடலம் எல்லாம் - உடல்முற்றும், காதுஉளான் அல்லேன் என்ருன் - செவிகளையுடைய னல்லேனுயினேன் என்று கூறி வருந்தினுன்.

இசையானது சிவானந்தத்தை விளைத்தமையின் இறைவன் திரு வடியிற் கலந்தாற்போ லாயினுன் என்பார் 'பாதப் போதுளானுனுன்' என்ருர். போதுளான் பாதப் போதுளான் என்றும், வேலைமீதுள்ளான் பரமானந்த வேலைமீதுள்ளான் என்றும் கூறிய நயம் பாராட்டற்பாலது. கண்ணுளான் என்பதற்குக் கூத்தியற்றுபவன் என்றுரைப்பாருமுளர். (௬௧)

முனிவருந் தவத்த ராதி முத்தர்மா சித்த ரன்பன்*
துனிவரும் பழங்கண் டீர்ப்பான் சுந்தரத் தோன்றல் கீதம்
கனிவருங் கருணை யென்னுங் கடலிலன் பென்னு மாற்றிற்
பனிவருங் கண்ணீர் வெள்ளம் பாய்ந்திட வின்பத் தாழ்ந்தார்.

(இ - ள்.) முனிவு அரும் - வெறுப்பு, (விருப்பு) அற்ற, தவத்தர் ஆதிமுத்தர் மாசித்தர் - தவத்தரும் சீவன்முத்தரும் பெரிய சித்தரும்.

(பா - ம்.) * - அன்பின் துனிவரும்.

அன்பன் - பாணபத்திரனது, துனி வரும் பழங்கண் தீர்ப்பான் சுந்தரத் தோன்றல் - துன்பத்தையும் அதனல் வந்த மெலிவையும் நீக்குவானாகிய சோமசுந்தரக் கடவுளின், கீதம் கனிவரும் கருணை என்னும் கடலில் - இசையாகக் கனிந்த கருணையாகிய கடலில், அன்பு என்னும் ஆற்றில் - அன்பாகிய ஆற்ரேடு, பனிவரும் கண்ணீர் வெள்ளம் பாய்ந்திட - குளிர்ந்த ஆனந்தக்கண்ணீர் வெள்ளம் பாய, இன்பத்து ஆழ்ந்தார் - இன்பத்தில் ஆழ்ந்தனர்.

முனிவு - வெறுப்பு. இறைவன் அருளுதி முத்தனுகலின் சீவன் முத்தரை ஆதிமுத்தர் என்ருர்; தவத்தர் முத்தர் சித்தர் ஆதியானவர்கள் என்றுமாம். பழங்கண் - மெலிவு. தீர்க்கும்படி சுந்தரத் தோன்றல் பாடிய என விரித்துரைத்தலுமாம். கடலில் ஆற்றுலே வெள்ளம் பாய; கடலிற் செல்லும் ஆற்றிலே வெள்ளம் பாய என்றுமாம். (௪0

ஊடிவே ருேதுங்கித் துன்ப வுவரியுட் குளித்தார் தம்மிற்
கூடிவே றற்ற வின்பக் குளிர்கடல் வெள்ளத் தாழ்ந்தார்
நாடிவே றிடைப்பி ரிந்தார் மேன்மன நடாத்தி மேனி
வாடிவே ளலைப்பச் சோர்ந்து மம்மர்நோ யுழந்தார் மண்ணோர்.

(இ - ள்.) மண்ணோர் - நிலவுலகிலுள்ளவருள், ஊடி வேறு ஒதுங்கி - பிணங்கி வேருக ஒதுங்கி, துன்ப உவரியுள் குளித்தார் - துன்பக் கடலுள் மூழ்கிய மகளிர், தம்மில் கூடி வேறு அற்ற இன்பக்குளிர்கடல் வெள்ளத்து ஆழ்ந்தார் - தாமாகவே தலைவர்களைக் கூடி வேறில்லாத இன்பமாகிய குளிர்ந்த கடல் வெள்ளத்துள் ஆழ்ந்தார்கள்; நாடி வேறு இடைப் பிரிந்தார்மேல் மனம் நடாத்தி - (தலைவரைப் பிரிந்த மகளிர்) பொருள் முதலியவற்றை நாடி மறுபுலத்துப் பிரிந்து சென்ற தலைவர்மேல் மனத்தைச் செலுத்தி, வேள் அலைப்ப - மன்மதன் வருத்துதலைச் செய்ய; மேனி வாடி சோர்ந்து - உடல் வாடி உள்ளஞ் சோர்ந்து, மம்மர் நோய் உழந்தார் - காமநோயால் வருந்தினுர்கள்.

வேறு வாயிலின்றி என்பார் 'தம்மில்' என்ருர். வேறற்ற - உடம்பு ஒன்ருய. பிரிந்த மகளிர் என வருவிக்க. ஊடின ஆடவரும் மகளிரும் என்றும், பிரிந்த ஆடவரும் மகளிரும் என்றும் பொதுவாக உரைத்தலுமாம். (௪௧)

பைத்தலை விடவாய் நாகம் பல்பொறி மஞ்ஞை நால்வாய்
மத்தமா னரிமான் புல்வாய் வல்லிய மருட்கை யெய்தித்
தத்தமா றறியா வாகித் தலைத்தலை மயங்கிச் சோர
இத்தகை மாவும் புள்ளு மிசைவலைப் பட்ட வம்மா.

(இ - ள்) பைத்தலை விடவாய் நாகம் பல்பொறி மஞ்ஞை - படத்தையுடைய தலையையும் நஞ்சு பொருந்திய வாயினையுமுடைய பாம்புகளும் பல பொறிகளையுடைய மயில்களும், நால்வாய் மத்தமான் அரிமான் - தொங்குகின்ற வாயினையும் மதமயக்கத்தையுமுடைய யானைகளும் சிங்கங்களும், புல்வாய் வல்லியம் - மான்களும் புலிகளும் இத்தகை

மாவும் புள்ளும் - இங்ஙனம் ஒன்றுக்கொன்று பகைமையுடைய ஏனைய விலங்குகளும் பறவைகளும், மருட்கை எய்தி - இசையால் மயங்கி, தத்தம் மாறு அறியாவாகி - தம்தம் பகைமையை அறியாவாய், தலைத் தலை மயங்கிச் சோர - இடங்கள் தோறும் ஒன்றோடொன்று கலந்து சோர்ந்து; இசைவலைப்பட்ட - இசையாகிய வலையின்கட் பட்டன.

பாம்புக்கு மஞ்ஞையும் யானைக்குச் சிங்கமும் மானுக்குப் புலியும் பகையாவன. இங்ஙனம் பகையான விலங்குகளும் பறவைகளும் இசையால் மருட்கை யெய்தினமையால் தம் பகைமையறியமாட்டாமல் ஒன்றோ டொன்று விரவிச் சோர்ந்து நின்றன என்றார். சோர்தல் - ஒன்றின்மீது ஒன்று சாய்தலுமாம். சோர - சோர்ந்து; சோரும்படி என்றுமாம். மாவும் புள்ளும் வலைப்பட்டன என்பது நயமுடைத்து. அம்மா: வியப்பிடைச் சொல். (சஉ)

வன்றரை கிழிய வீழ்போய் வான்சினை கரிந்து நின்ற
ஒன்றறி மரங்க ளெல்லாஞ் செவியறி வுடைய வாகி
மென்றளி ரீன்று போது விரிந்துகண் ணீருஞ் சோர
நன்றறி மாந்தர் போல நகைமுக மலர்ந்த மாதோ.

(இ - ள்.) வன்தரை கிழிய வீழ்போய் - வலிய நிலம் பிளக்குமாறு விழுது வீழ்த்தி, வான் சினை கரிந்துநின்ற - பெரிய கிளைகள் உலர்ந்து நின்ற, ஒன்று அறிமரங்கள் எல்லாம்-ஊறு என்னும் ஓரறிவுடையவாகிய மரங்கள் அனைத்தும், செவி அறிவு உடையவாகி - ஓசையறிவினையு முடையனவாய் - மென்தளிர் ஈன்று - மெல்லிய தளிரினை ஈன்று. போது விரிந்து - பூக்கள் மலர்ந்து, கண்ணீரும் சோர - கண்ணீரும் பொழிய, நன்று அறி மாந்தர்போல-தமக்கு உறுதியாவன அறிந்த மக்களைப்போல, நகைமுகம் மலர்ந்த - நகையொடு முகமலர்ந்தன.

விழ் - விழுது. ஒன்று அறி - ஊறு என்னும் ஒன்றனையே அறியும்;

''ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே''

என்பது தொல்காப்பியம். செவியறிவு - ஐந்தாவதாகிய ஓசையை அறியும் அறிவு. இசை செவியால் அறியப்படுவதாகலின் அதற்கேற்பச் செவியறி வுடையவாகி என்றார். ஓரறிவுடையதன்மேலும் கரிந்தும் போன மரங்கள் செவியறி வுடையனபோல இசையை யேற்றுத் தளிர்த்து அவ்வளவே யன்றி மனத்தால் நன்றினை யறியும் மக்கள்போலக் கண்ணீர் சொரிந்து முகமலர்ந்தன என வியந்து கூறினர். வற்றல் மரமானது தளிரீன்று அரும்பிப் போதாகி மலர்ந்து தேனுஞ் சிந்திற்றென்றால் இசையின் பெருமையை யாரால் இயம்பலாகும்! மரத்திற்குக் கள்ளாகிய நீர் எனவும், மாந்தர்க்கு விழிநீர் எனவும் கொள்க. மாது, ஓ: அசைகள் (சங)

வாழிய வுலகின் வானோர் மனிதர்புள் விலங்கு மற்றும்
ஆழிய கரண மெல்லா மசைவற வடங்க வையன்
ஏழிசை மயமே யாகி யிருந்தன வுணர்ந்தோ ருள்ளம்
ஊழியி லொருவன் றாள்புக் கொடுங்கிய தன்மை யொத்த.

(இ - ள்.) உலகின் வானோர் - வானுலகிலுள்ள தேவர்களும், மனிதர் - மனிதர்களும் புள் விலங்கு மற்றும் - பறவையும் விலங்கும் ஏனையவும், ஆழிய கரணம் எல்லாம் - இசையிற்பதிந்த மனமுதலிய கரணங்கள் அனைத்தும், அசைவு அற அடங்க - அசைவின்றி அடங்க, ஐயன் - இறைவனது, ஏழ் இசைமயமே ஆகி இருந்தன - ஏழாகிய இசையின் மயமேயாகி இருந்தன (அங்ஙனமிருந்த தன்மை), உணர்ந்தோர் உள்ளம் - மெய்யுணர்ந்தோரின் உள்ளம், ஊழியில் ஒருவன் தாள்புக்கு - இறுதியில்லாத ஒருவனாகிய இறைவன் திருவடியின்கண் சென்று, ஒடுங்கிய தன்மை ஒத்த - ஒடுங்கிய தன்மையை ஒத்தது.

வாழிய: மங்கலப் பொருட்டாய அசைச்சொல் வானுலகினோர் எனப் பிரித்துக் கூட்டுக; உலகங்களில் உள்ள எனப் பொதுப்பட வுரைத்தலுமாம். ஆழிய - அழுந்திய. உணர்ந்தோர் - பரஞானத்தாலே பரத்தைத் தரிசித்தோர். உலகமெல்லாம் ஒடுங்கிய ஊழியிலும் எஞ்சி நிற்கும் ஒருவனாகிய இறைவன் என்றுமாம். ஒடுங்கிய தன்மை - சிவமே யான தன்மை. (௪௪)

கண்ணிறை நுதலோன் சாம கண்டத்தி னெழுந்த முல்லைப்
பண்ணிறை தேவ கீதஞ் சராசர வுயிரும் பாரும்
விண்ணிறை திசைக ளெட்டும் விழுங்கித்தன் மயமே யாக்கி
உண்ணிறை யுயிரு மெய்யு முருக்கிய திசைவல் லானை.

(இ - ள்.) கண் நிறை நுதலோன் - கண் நிறைந்த நெற்றியை யுடைய சோமசுந்தரக் கடவுளின், சாம கண்டத்தின் எழுந்த - சாம வேதம் பாடுந் திருமிடற்றினின்றும் எழுந்த, முல்லைப்பண் நிறை தேவ கீதம் - சாதாரியாகிய நிறைந்த தேவகானமானது, சர அசர உயிரும் - இயங்குவனவும் நிற்பனவுமாகிய உயிர்களையும், பாரும் - நிலவுலகத் தையும், விண் - விண்ணுலகத்தையும், நிறை திசைகள் எட்டும் - நிறைந்த எட்டுத் திக்குகளையும், விழுங்கி தன் மயமே ஆக்கி - விழுங்கித் தன் மயமாகவே செய்து, இசை வல்லானை உள்நிறை உயிரும் மெய்யும் உருக்கியது - இசையில் வல்ல ஏமநாதனை உள்ளே நிறைந்த உயிரை யும் உடலையும் உருக்கியது.

வல்லானுடைய உயிரையும் மெய்யையும் உருக்கிய தென்க. (௪௫)

[கலிநிலைத்துறை]

சிந்தை தோயுமைம் பொறிகளுஞ் செவிகளாப் புலன்கள்
ஐந்து மோசையா விசைவலா னிருந்தன னாகப்
பந்த நான்மறை நாவினாற் பத்திர னாளாய்
வந்து பாடின ரிந்தனச் சுமையொடு மறைந்தார்.

(இ - ள்.) சிந்தை தோயும் ஐம்பொறிகளும் - மனத்துடன் பொருந் தும் ஐம்பொறிகளும், செவிகளா - காதுகளாகவும், புலன்கள் ஐந்தும் - ஐம்புலன்களும், ஓசையா - ஓசையாகவும், இசைவலான் இருந்தனனாக -

இசையில் வல்ல ஏமநாதன் இருந்தானாக; பந்தம் நான்மறை நாவினால் - பந்த முதலிய உறுப்புக்களையுடைய நான்மறைகளைக் கூறியருளிய நாவினால், பத்திரன் ஆளாய் வந்து பாடினார் - பாணபத்திரன் அடிமை யாக வந்து பாடியருளிய இறைவர், இந்தனச் சுமையொடும் மறைந்தார் - விறகுச் சுமையோடும் மறைந்தருளினார்.

மனத்துடன் கூடாவிடத்துப் பொறிகள் உணராவாகலின் 'சிந்தை தோயும் ஐம்பொறிகளும்' என்றார். ஐம்பொறிகளும் செவிகளாய்ப் புலன்களைந்தும் ஓசையா என்றது கண் முதலிய ஏனைப் பொறிகள் உருவம் முதலிய புலன்களைச் சிறிதும் உணராதிருக்க என்றதன்றி, அவற்றின் ஆற்றல்களையெல்லாம் செவியேகொண்டு அனைத்தையும் ஒடுக்கி நிற்கின்ற ஓசை யொன்றையே யுணர என்றதுமாயிற்று;

"ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள"

என்னும் பெரிய புராணச் செய்யுள் இங்கே சிந்திக்கற்பாலது. பந்தம் - தளை; வேதத்தின் உறுப்பு. பாடினார்: பெயர். அவன் இசை யொன் றையே உணர்ந்துகொண்டிருந்தமையின் அவர் மறைந்த தன்மையையும் உணரானாயினான் என்க. (சகூ)

யான றிந்தசா தாரியன் றிம்பரு ளிதனை
நான றிந்ததென் றொருவரு நவின்றிலர் தேவ
கான மீதிவற் குணர்த்தினோன் கடவுளே யன்றி
ஏனை மானுடர் வல்லரோ விதுவியப் பென்னா.

(இ - ள்.) யான் அறிந்த சாதாரி அன்று - (இது) யான் அறிந்த சாதாரிப்பண் அன்று; இம்பருள் - இந்நிலவுலகில், நான் அறிந்தது என்று ஒருவரும் இதனை நவின்றிலர் - என்னால் அறியப்பட்டது என்று ஒருவரேனும் இதனைக் கூறிற்றிலர்; ஈது தேவகானம் - இது தேவகான மாகும் (ஆதலின்), இவற்கு உணர்த்தினோன் - இவனுக்கு இதனை அறி வித்தவன், கடவுளே அன்றி - கடவுளே அல்லாமல், ஏனை மானுடர் வல்லரோ - மற்றை மனிதர்கள் அறிவிக்க வல்லரோ, இது வியப்பு என்னா - இது வியக்கத்தக்க செய்தி என்று கூறி.

ஒருவரும் தாம் அறிந்ததாகக் கூறிற்றிலர் என்க. மானுடனாகிய பாணபத்திரனுடைய மாணாக்கனாகக் கூறினமையின் 'இது வியப்பு' என்றான். (சஎ)

இழுக்கி விட்டவிக் கிழமக னிசையிதே லந்த
வழுக்கில் பத்திரன் பாடலெற் றோவென மதியா
அழுக்க முற்றெழுந் திசைவலா னடுத்ததன் பண்டர்
குழுக்க ளுங்குலை குலைந்திட விருள்வழிக் கொண்டான்.

(இ - ள்.) இழுக்கிவிட்ட இக்கிழமகன் இசை இதேல் - நீக்கிவிடப் பட்ட இம்முதியோன் இசை இதுவாயின், அந்த வழுக்கு இல் பத்திரன்

- அந்தக் குற்றமில்லாத பாணபத்திரனது, பாடல் எற்றோ என மதியா - பாடல் எத்தன்மைத்தோ என்று கருதி, அழுக்கம் உற்று - வருந்து தலுமுற்று, இசைவலான் எழுந்து - இசையில் வல்ல ஏமநாதன் அவணின்றும் எழுந்து, அடுத்த தன் பண்டர் குழுக்களும் குலை குலைந்திட - தன்னை அடுத்த பாண் மக்களின் கூட்டங்களும் நிலை தடுமாறிச் செல்ல, இருள் வழிக்கொண்டான் - இரவிலேயே ஓடத் தலைப்பட்டான்.

இழுக்கி - கடிந்து. இதேல்: விகாரம். அழுக்கம் - அழுங்குதல். பண்டர் - பாண்மக்கள். (௪அ)

மடக்கு பல்கலைப் பேழையு மணிக்கலம் பிறவும்
அடக்கு பேழையுங் கருவியாழ்க் கோலுமாங் காங்கே
கிடக்க மானமு மச்சமுங் கிளர்ந்துமுன் னீர்த்து
நடக்க வுத்தர திசைக்கணே நாடினு னடந்தான்.

(இ - ள்.) பல்கலை மடக்கு பேழையும் - பல் வகை ஆடைகளை மடித்து வைத்துள்ள பெட்டிகளும், மணிக்கலம் பிறவும் அடக்கு பேழையும் - மணிகள் இழைத்த அணிகளையும் பிற பொருளையும் அடக்கிய பெட்டிகளும், கருவியாழ்க் கோலும் - கருவியாகிய யாழ்க்கோலும், ஆங்காங்கே கிடக்க - அங்கங்கே கிடக்க, மானமும் அச்சமும் கிளர்ந்து முன் ஈர்த்து நடக்க - மானமும் பயமும் முன்னே இழுத்துச் செல்ல, உத்தர திசைக்கணே நாடினுன் நடந்தான் - வடதிசைக் கண்ணே நாடிச் சென்றான்.

மானம் அழிந்து விடுமென்னும் அச்சத்தால் விரைந்து சென்றானென்பார், மானமும் அச்சமும் ஈர்த்து 'நடக்க' என்றார். மிக விரைந்து செல்லுங் கருத்தால் பேழை முதலியவற்றை எடாது சென்றனன் என்க. நாடினுன் : முற்றெச்சம். (௪௯)

சிவிகை யோர்வழி விறலிய ரோர்வழி செல்லக்
கவிகை யோர்வழி கற்பவ ரோர்வழி கடுகக்
குவிகை யேவல ரோருவழி கூடநா ணுள்ளத்
தவிகை யோவரு மோருவழி யகன்றிட வகன்றான்.

(இ - ள்.) சிவிகை ஓர் வழி விறலியர் ஓர் வழி செல்ல - பல்லக்கு ஒருவழியிலும் பாடினிகள் ஒரு வழியிலுஞ் செல்லவும், கவிகை ஓர் வழி கற்பவர் ஓர் வழி கடுக - குடை ஒருவழியிலும் மாணவகர் ஒருவழியிலும் விரைந்து செல்லவும், கை குவி ஏவலர் ஒருவழி கூட - கை கூப்பி வணங்கும் ஏவலாளர் ஒரு வழியிற் செல்லவும், உள்ளத்து நாண் அவிகை ஓவரும் ஒரு வழி அகன்றிட - உள்ளத்தின்கண் நாண் ஒழிந்த பாண்மக்களும் ஒருவழி அகல, அகன்றான் - தானும் நீங்கினான்.

விறலியர் - பாடினிகள் ; பாடுமகளிர் ; விறல்பட ஆடு மகளிர் என்பர் நச்சினார்க்கினியர். அவிகை - அவிதலுடைய. ஓவர் - ஏத்தாளர் ; அரசர்களை ஏத்துவோர் ; பாணர். (௫௦)

அன்று பத்திரன் கனவில்வந் தாடலேற் றழகர்
இன்று பத்திர விசைவலா னிடைவிற காளாய்ச்
சென்று பத்திர னடிமையா மென்று பாண் செய்து
வென்று பத்திரஞ் செய்துநின் வேண்டுகோ ளென்றார்.

(இ - ள்.) ஆடல் ஏற்று அழகர் - வெற்றியையுடைய இடப வூர்தியையுடைய சோமசுந்தரக் கடவுள். அன்று பத்திரன் கனவில் வந்து - அன்று பாணபத்திரன் கனவில் வந்து, பத்திர - பாணபத்திரனே, நின் வேண்டுகோள் - உன் வேண்டுகோளின்படியே, இசைவலான் இடை - இசையில் வல்ல அவ்வேமநாதனிடத்து, விறகு ஆளாய் இன்று சென்று - விறகாளாக இன்று போய், யாம் பத்திரன் அடிமை என்று - யாம் பாணபத்திரன் அடிமை என்று கூறி, பாண் செய்து - இசை பாடி, வென்று பத்திரம் செய்தும் என்றார் - வென்று நின்னைக் காத்தனம் என் றருளிச் செய்தார்.

பாண் செய்து - என்பதனை இரட்டுற மொழிதலாகக் கொண்டு தாழ்ச்சி செய்து என்றும் உரைத்துக் கொள்க.

''பணிந்து பாண்செய்த தன்றே''

என்னும் சிந்தாமணித் தொடருக்கு நச்சினார்க்கினியர் இங்ஙனம் பொருள் கூறினமை காண்க;

''பாண்பேசிப் படுதலையிற் பலி கொள்கை தவிரீர்''

எனத் தேவாரத்தில் பாண்பேசி என்பது தாழ்ச்சி சொல்லி என்னும் பொருளில் வந்திருத்தலும் கருதுக. செய்தும் - செய்தோம். வேண்டு கோளால் என மூன்ற னுருபு விரிக்க. (௩௧)

குஞ்சி நாண்மலர்க் கொன்றையா ரங்ஙனங் கூறும்
நெஞ்சி னுனினைப் பரியசொற் கேட்டலு நெஞ்சம்
அஞ்சி னுனிது செய்யவோ வடியனேன் மறைகட்
கெஞ்சி னுரையின் றிரந்தவா றென்றுகண் விழித்தான்.

(இ - ள்.) குஞ்சி நாள்மலர்க் கொன்றையார் - முடியின்கண் அன்ற லர்ந்த கொன்றைமலர் மாலையையுடைய இறைவர், அங்ஙனம் கூறும் -அவ்வாறு கூறியருளிய, நெஞ்சினுல் நினைப்பரிய சொல் - நெஞ்சி னுலும் நினைத்தற்கரிய சொல்லை, கேட்டலும் - கேட்டவளவில், நெஞ்சம் அஞ்சினுன் - மனந் துணுக்குற்று. இது செய்யவோ - இக்காரியம் செய்தற்கோ, அடியனேன் மறைகட்கு எஞ்சினுரை இன்று இரந்தவாறு என்று - அடியனேன் வேதங்களுக்கு மெட்டாத இறைவரை இன்று குறையிரந்தபடி யென்று, கண்விழித்தான் - கண்விழித் தெழுந்தான்.

நெஞ்சினுல் நினைப்பரிய சொல் - விறகாளாய்ச் சென்று 'பத்திர னடிமையாம்' என்று கூறிய சொல். (௩௨)

கண்ம லர்ந்தெழு பத்திரன் கரையிலா வுவகை
உண்ம லர்ந்தெழு மன்புகொண் டூக்கவெங் கதிரோன்
விண்ம லர்ந்தெழு முன்புபோய் விசும்பிழி கோயிற்
பண்ம லர்ந்தநான் மறைப்பொரு ளடித்தலம் பணிந்தான்.

(இ - ள்.) கண் மலர்ந்து எழு பத்திரன் - அங்ஙனங் கண் விழித்தெழுந்த பாணபத்திரன், கரை இலா உவகை உள் மலர்ந்து - அளவிறந்த மகிழ்ச்சியால் அகமலர்ந்து, எழும் அன்பு கொண்டு ஊக்க - மேலெழுந்த அன்பு தன் மயமாக்கிச் செலுத்த, வெங்கதிரோன் - வெவ்விய கதிர்களையுடைய சூரியன், விண்மலர்ந்து எழுமுன்பு போய் - வானிலே உதித்தெழுதற்கு முன்னரே சென்று, விசும்பு இழிகோயில் - விண்ணினின்றும் இழிந்த இந்திர விமானத்தில் எழுந்தருளிய, பண்மலர்ந்த நான் மறைப் பொருள் - இசை நிறைந்த நால்வேதங்களின் பொருளாயுள்ள சோமசுந்தரக் கடவுளின், அடித்தலம் பணிந்தான் - திருவடிகளை வணங்கினான். (௨௩)

கடிய கானகம் புகுதவோ கட்டிய விறகை
முடியி லேற்றவோ முண்டகத் தாள்கணொந் திடவந்
தடிய னேன்பொருட் டடாதசொற் பகரவோ வஞ்சக்
கொடிய னேன்குறை யிரந்தவா விளைந்ததே குற்றம்.

(இ - ள்.) கடிய கானகம் புகுதவோ - கொடிய காட்டின்கண் செல்லவோ, கட்டிய விறகை முடியில் ஏற்றவோ - கட்டப்பட்ட விறகு சுமையைத் திருமுடியில் ஏற்றுதற்கோ, முண்டகத் தாள்கள் நொந்திட வந்து - தாமரை மலர் போன்ற திருவடிகள் நோவுமாறு நடந்து வந்து, அடியனேன் பொருட்டு - அடியேன் நிமித்தம், அடாத சொல் பகரவோ - தகாத சொல்லைக் கூறுதற்கோ, வஞ்சக் கொடியனேன் குறை யிரந்தவா - வஞ்சகத்தையுடைய கொடியேன் குறையிரந்தபடி, குற்றம் விளைந்ததே - அதனால் அடியேனுக்குப் பெரும் பிழை விளைந்து விட்டதே (இதற்கு என் செய்வேன்).

கொடியனேன் குறை யிரந்தது அடியேன் பொருட்டுப் புகுதவோ ஏற்றவோ பகரவோ என இரங்கினான் என்க. (௨௪)

நெடிய னேமுதல் வானவர் நெஞ்சமுஞ் சுருதி
முடிய னேகமுங் கடந்தநின் முண்டகப் பாதஞ்
செடிய னேன்பொருட் டாகவிச் சேணிலந் தோய்ந்த
அடிய னேற்கெளி தாயதோ வையநின் பெருமை.

(இ - ள்.) நெடியனே முதல் வானவர் நெஞ்சமும் - திருமால் முதலிய தேவர்களின் உள்ளங்களையும், சுருதிமுடி அனேகமும் கடந்த - எண்ணிறந்த வேதங்களின் முடிகளையுங் கடந்தருளிய, நின் முண்டகப் பாதம் - தேவரீரது தாமரை மலர்போன்ற திருவடிகள், செடியனேன் பொருட்டாக - பாவியேன் பொருட்டாக, இச்சேண்நிலம் தோய்ந்த -

இந்தப் பெரிய நிலத்தின்கண் தோய்ந்தன; ஐயநின் பெருமை - (ஆதலால்) ஐயனே நினது பெருமை, அடியனேற்கு எளிது ஆயதோ - அடியேனுக்கு எளிதாயிற்றோ ?

செடியனேன் - பாவியேன் ; செடி - குற்றம். தோய்ந்த : அன்பெறாத பலவின்பால் முற்று. எத்தனையும் அரிய நின் பெருமை ஒன்றுக்கும் பற்றாத புன்மையேன் திறத்தும் எளிதாயிற்றோ என்றபடி. (௫௫)

நாத வந்தமுங் கடந்தமெய்ஞ் ஞானவா னந்த
போத மேன்பரஃ தின்றொரு புடவிமா னுடமாய்
ஆத பந்தெற வெறிந்த*விந் தனஞ்சுமந் தடியேன்
பேதை யன்பள வாயதோ பெருமநின் னுருவம்.

(இ - ள்.) பெரும - பெருமானே, நின் உருவம்-தேவரீரின் உருவம், நாத அந்தமும் கடந்த - நாதாந்தத்தினையுங் கடந்தருளிய. மெய் ஞான ஆனந்தபோதம் என்பர் - உண்மை யறிவானந்த மென்று கூறுவர் பெரியோர் ; அஃது இன்று ஒருபுடவி மானுடமாய் - அவ்வுருவம் இன்று இந் நிலவுலகின்கண் ஒரு மனித வடிவாய், ஆதபம் தெற - வெய்யில் சுட்டு வருத்த; எறிந்த இந்தனம் சுமந்து - வெட்டிய விறகினைச் சுமந்து, பேதை அடியேன் அன்பு அளவு ஆயதோ - பேதையாகிய அடியேனது அன்பின் அளவாகியதோ.

நாத அந்தம் - குடிலை, போதம் - தெளிவு என்னும் பொருட்டு. ஆதபம் - வெய்யில். பேதையாகிய அடியேன் என மாறுக ; பொய்யன்பு எனலுமாம். (௫௬)

மறிந்த தெண்டிரை கிடந்தவ னுந்தியில் வந்தோன்
அறிந்த தன்றரும் பொருள்வரம் பகன்றெழு விசும்புஞ்
செறிந்த வண்டமுங் கடந்தது சிறியனேன் பொருட்டாத்
தறிந்த† விந்தனஞ் சுமந்ததோ தம்பிரான்‡ முடியே.

(இ - ள்.) தம்பிரான் முடி - இறைவனது திருமுடியானது, மறிந்த தெண்திரை கிடந்தவன் - மடங்கி வீசுந் தெளிந்த அலைகளையுடைய பாற்கடலிற் பள்ளி கொண்டவனாகிய திருமாலும். உந்தியில் வந்தோன் - அவனது உந்தியிற் றோன்றியவ னாகிய பிரமனும். அறிந்தது அன்று - அறிந்ததன்று ; அரும் பொருள் வரம்பு - அரிய பொருள்களின் முடிவாயது ; அகன்று எழு விசும்பும் செறிந்த அண்டமும் கடந்தது - பரந்த வானினையும் நெருங்கிய அண்டங்களையுங் கடந்தது ; சிறியனேன் பொருட்டா - (அஃது) இன்று சிறியனாகிய என் பொருட்டு, தறிந்த இந்தனம் சுமந்ததோ - வெட்டப்பட்ட விறகினைச் சுமந்ததோ.

அரும்பொருள் - மறைப்பொருள் ; தத்துவங்கள் ;

"போதார் புனைமுடியும் எல்லாப் பொருண் முடிவே"

(பா - ம்.) * தெறத்தறிந்த. † எறிந்த. ‡ எம்பிரான்.

என்று திருவாசகம் கூறுதல் காண்க. அரும்பொருள் என்பதற்கு அணு என்றுரைத்து, அணுவுக் கணுவாயது என்பாரு முளர்; அது சிறப்பின் றாதல் உணர்க. 'பாதாள மேழினுங் கீழ் பாதமலர்' என்பதனால் முடி அண்டமனைத்துங் கடந்த தென்பது பெறப்படுதல் காண்க. (௩எ)

என்ன வந்தனை செய்துநின் றேத்தியங் கயற்கண்
மின்ன மர்ந்தபங் கொருவனை வலங்கொடு மீண்டு
மன்னர் தம்பிரா னாகிய வரகுண தேவன்
தன்னை வந்தடி பணிந்தனன் றந்திரிக் கிழவோன்.

(இ - ள்.) என்ன - என்று, வந்தனைசெய்து நின்று ஏத்தி - வணங்கி நின்று துதித்து, அங்கயற்கண் மின் அமர்ந்த பங்கு ஒருவனை - அங்கயற் கண்ணம்மை அமர்ந்த பாகத்தையுடைய சோமசுந்தரக்கடவுளை, வலங் கொடு மீண்டு - வலஞ்செய்து திரும்பி, மன்னர்தம்பிரானாகிய வரகுண தேவன் தன்னை - மன்னர் மன்னனாகிய வரகுண தேவனை, தந்திரிக் கிழவோன் - யாழுக்குரிய பாணபத்திரன், வந்து அடி பணிந்தனன் - வந்து வணங்கினான்.

மின்-மின்போல்வாள். தந்திரி-நரம்பு: யாழுக்கு ஆகுபெயர். (௩அ)

வந்த வேழிசைத் தலைமகன் வரவறிந் தரசன்
அந்த வேழிசைக் கிழவனை யழையென வுழையோர்
பந்த யாழ்மக னிருக்கைபோய்ப் பார்த்தனர் காணார்
சிந்தை யாகுல மடைந்தவன் போனவா தெரியார்.*

(இ - ள்.) வந்த ஏழ்இசைத் தலைமகன் வரவு - அங்ஙனம் வந்த ஏழிசையிலும் வல்ல பாணபத்திரனது வருகையை, அரசன் அறிந்து - வரகுண பாண்டியன் தெரிந்து, அந்த ஏழ் இசைக் கிழவனை அழை என - (வடபுலத்தினின்றும் வந்த) அந்த ஏழிசை வல்ல ஏமநாதனை அழையாய் எனப் பணிக்க, உழையோர் - ஏவலாளர், பந்தம் யாழ் மகன் இருக்கை போய் - கட்டமைந்த யாழ்மகனாகிய ஏமநாதன் இருப்பிடஞ் சென்று, பார்த்தனர் காணார் - பார்த்துக் காணாது, சிந்தை ஆகுலம் அடைந்து அவன் போனவா தெரியார் - மனம் வருந்தி அவ் வேமநாதன் போன விதத்தைத் தெரியாதவர்களாய்.

அழை யென ஒருவனை நோக்கிக் கூற உழையோர் பலர் சென்றன ரென்க. பந்தம் - யாழ்வலிக்கட்டு. அடைந்து போனவா என இயையும்; அடைந்து காணார் எனினும் பொருந்தும். போனவாறு என்பது ஈறு தொக்கது. பார்த்தனர், காணார், தெரியார் என்பன முற்றெச்சங்கள். (௩௯)

(பா - ம்.) * தெளியார்.

எங்கு ளானெனத் தேடுவா ரிவரெதி ரயல்வாய்
அங்கு ளார்சில ரறிந்தவா றறைகுவா ரவனேற்
றிங்கு ளான்விற கெடுத்தொரு முதுமக னிவன்பாற்
பொங்கு மேழிசைப் பத்திர னடிமையாய்ப் போந்தான்.

(இ - ள்.) எங்கு உளான் எனத் தேடுவார் இவர் எதிர் - எங்கு இருப்பான் எனத் தேடுவாராகிய இவரெதிரே, அயல்வாய் அங்குளார் சிலர் - அங்கே அருகிலுள்ளார் சிலர், அறிந்தவாறு அறைகுவார் - தெரிந்தவாறு சொல்வார், அவன் நேற்று இங்கு உளான் - அவன் நெருநல் இங்கு இருந்தான், ஒரு முதுமகன் - ஒரு கிழவன், விறகு எடுத்து - விறகு சுமந்து, இவன்பால் - இவ்வேம நாதனிடத்து, பொங்கும் ஏழ் இசைப் பத்திரன் - விளங்குகின்ற ஏழு இசையிலும் வல்ல பாண பத்திரனது, அடிமையாய்ப் போந்தான் - அடிமையாகி வந்தான்.

அயல்வாய்-பக்கத்து மனையிடங்கள். அடிமையாய் - அடிமை யென்று கூறி. அறைகுவார் என்பது வருஞ்செய்யுளில் 'எனா' என்பதனைக் கொள்ளும். (௬0)

பாடி னான்பின்பு பட்டது தெரிகிலேம் பானாள்
ஓடி னானெனக் கேட்டலு மொற்றர்போய்க் கொற்றஞ்
சூடி னானவை யடைந்தவர் சொல்லிய வாறே
ஆடி னார்வியப் படைந்தனு மானமுற் றரசன்.

(இ - ள்.) பாடினான் - (வந்து) பாடினான், பின்பு பட்டது தெரிகிலேம் - பின்னர் நிகழ்ந்த செய்தியை அறியோம், பால் நாள் ஓடினான் - பாதி இரவில் அவ்வேமநாதன் ஓடினான், என - என்று கூற, கேட்டலும் கேட்டவளவில், ஒற்றர் போய் - உழையோர் சென்று, கொற்றம் சூடினான் அவை அடைந்து - வெற்றி மாலையைச் சூடிய பாண்டியனது அவையைச் சார்ந்து, அவர் சொல்லியவாறே ஆடினார் - அவ்வயலோர் கூறியவாறே கூறினார்; அரசன் வியப்பு அடைந்து அனுமான முற்று - பாண்டியன் அதிசயித்து ஐயமுற்று.

பட்டது - நிகழ்ந்தது. கொற்றம் - வெற்றி; வாகை. ஆடினார் - கூறினார். அனுமானம் - ஐயம்; கருதுதலுமாம். (௬௧)

தன்ன டைந்தவத் தந்திரித் தலைவனை நோக்கி
என்ன வாறவன் போனவா றிங்கினும் போன
பின்னை யாதுநீ செய்தனை யெனவிசைப் பெருமான்
தென்னர் கோனடி தொழுதுதன் செய்தியை மொழிவான்.

(இ - ள்.) தன் அடைந்த அத்தந்திரித் தலைவனை நோக்கி - தன்னைச் சார்ந்து நின்ற அந்த யாழ்த் தலைவனாகிய பாணபத்திரனைப் பார்த்து, அவன் போனவாறு என்னவாறு - அவன் போனவிதம் என்னவகை, இங்கினும் போன பின்னை - இங்கு நின்றும் போயின பின், நீ யாது

செய்தனை என - நீ என்ன செய்தாய் என்று வினவ, இசைப் பெருமான் - இசைத் தலைவனாகிய பத்திரன், தென்னர் கோன் அடிதொழுது - பாண்டியர் மன்னனாகிய வரகுணனின் அடிகளை வணங்கி, தன் செய்தியை மொழிவான் - தனது செய்தியைக் கூறுவானாயினன்.

இங்கினும் இவ்விடத்தினின்றும் ; இன்: நீக்கப்பொருட்டு. (௬௨)

நென்னல் வாயடி யேனின தாணிழ னீங்கிப்
பின்னல் வார்சடை மௌலியெம் பிரானடி பணிந்தேன்
இன்ன லார்குறை யிரந்துமீண் டிருக்கைபுக் கிருந்தேன்
கன்ன லார்மொழி பங்கரென் கனவில்வந் தருளி.

(இ - ள்.) நென்னல் வாய் - நேற்றைப் பொழுதில், அடியேன் நினதாள் நிழல் நீங்கி - அடியேன் உன்னுடைய அடி நிழலை நீங்கிச் சென்று, பின்னல் வார் சடை மௌலி - பின்னிய நீண்ட சடையாகிய முடியினையுடைய, எம்பிரான் அடிபணிந்தேன் - எம் பிரானாகிய சோம சுந்தரக்கடவுளின் திருவடிகளைப் பணிந்து, இன்னல் ஆர் குறை இரந்து மீண்டு - துன்ப மிக்க குறைபாடுகளை இரந்து கூறிமீண்டு, இருக்கை புக்கு இருந்தேன் - இல்லிற் புகுந்து இருந்தேன்; கன்னல் ஆர்மொழி பங்கர் - கரும்பு போலும் மொழியினையுடைய உமையைப் பாகத்தி லுடைய் அவ்விறைவர், என் கனவில் வந்தருளி - எனது கனவின்கண் வந்தருளி.

வாய்: ஏழனுருபு. நின: அகரம் ஆறன் பன்மையுருபு. பணிந்தேன்: முற்றெச்சம். ஆர் : உவமச் சொல்லாக நின்றது. மொழி: ஆகுபெயர். (௬௩)

ஓடி யுன்பொருட் டாகநாம் விறகெடுத் துழன்று
வாடி நின்பகைப் புறங்கடை வந்துசா தாரி
பாடி வென்றுநின் பகைவனைத் துரந்தன மெனச்சொல்
ஆடி னார்விழித் தேனிது நிகழ்ந்ததென் றறைந்தான்.

(இ - ள்.) உன்பொருட்டாக - உன் நிமித்தமாக, நாம் ஓடி விறகு எடுத்து உழன்று வாடி - நாம் ஓடி விறகு சுமந்து திரிந்து வாடி, நின் பகைப் புறங்கடை வந்து - நின் பகைவனாகிய் ஏமநாதன் தலைவாயிலிற் சென்று, சாதாரி பாடி வென்று - சாதாரிப் பண்ணைப் பாடி வென்று, நின் பகைவனைத் துரந்தனம் எனச் சொல் ஆடினார் - அவனை ஒட்டி விட்டேமெனக் கூறியருளினார்; விழித்தேன் - யானுங் கண் விழித்தேன்; இது நிகழ்ந்தது என்று அறைந்தான் - இதுதான் நடந்த செய்தி என்று கூறினான்.

பகைப் புறங்கடை - பகைவனது இல்லின் புறங்கடை. சொல்லாடினார் - சொல்லினார். சொல்லிய வளவில் விழித்தேன் என்க. (௬௪)

ஏவன் மைந்தர்போய் விளங்கிவந் திசைத்ததும் வீணைக்
காவ லன்கனு நிகழ்ச்சியு மொத்தலிற் கைக்கும்
பூவ லங்கலா னிஃதுநம் பொன்னகர்க் கூடற்
றேவர் தம்பிரான் றிருவிளை யாட்டெனத் தெளிந்தான்.

(இ - ள்.) ஏவல் மைந்தர்போய்-ஏவலாளர் சென்று, விளங்கி வந்து இசைத்ததும் - தெரிந்துவந்து கூறியதும், வீணைக்காவலன் கனு நிகழ்ச்சியும் - வீணை வேந்தனுகிய பாணபத்திரனது கனு நிகழ்ச்சியும், ஒத்தலின் - ஒத்திருத்தலால், கைக்கும் பூ அலங்கலான் - வேப்ப மலர் மாலையை யணிந்த பாண்டியன், இஃது நம் பொன்நகர்க் கூடல்-இது நமது அழகிய நகரமாகிய கூடலின்கண் எழுந்தருளிய, தேவர் தம்பிரான் திருவிளையாட்டெனத் தெளிந்தான் - தேவதேவனுகிய சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல் என்று தெளிந்தான்.

விளங்கி என்பது விளங்க அறிந்து என்னும் பொருளில் வந்தது. கைக்கும்பூ - கசக்கும் பூ; வேப்பம் பூ. (சுஒ)

இகழ்ந்த கூற்றெறி சேவடிக் கிடையரு நேயந்
திகழ்ந்த பத்திர னன்பையுந் தேவரைக் காப்பான்
அகழ்ந்த வாழிநஞ் சுண்டவ னருளையும் வியந்து
புகழ்ந்து போய்மது ராபுரிப் புனிதனைப் பணியா.

(இ - ள்.) இகழ்ந்த கூற்று எறி சேவடிக்கு - அவமதித்து வந்த கூற்றுவனை உதைத்த சிவந்த திருவடிக்கு, இடையரு நேயம் திகழ்ந்த இடைவிடாத அன்பு விளங்கிய, பத்திரன் அன்பையும் - பாணபத்திரனது அன்பையும், தேவரைக்காப்பான் - தேவர்களைக் காக்கும் பொருட்டு, அகழ்ந்த ஆழி நஞ்சு உண்டவன் அருளையும் - (சகரர்) தோண்டிய கடலின் நஞ்சினை உண்ட இறைவனது அருளையும், வியந்து புகழ்ந்து - பாராட்டிப் புகழ்ந்து, போய் - சென்று, மதுராபுரிப் புனிதனைப் பணியா - மதுரைப் பதியி லெழுந்தருளிய இறைவனை வணங்கி.

இகழ்ந்த - தன்னைச் சரண் புகுந்த அடியான்மீது தன்னை மதியாது அடர்ந்து வந்த. காப்பான்: வினையெச்சம். நஞ்சுண்டவன் என்றதனுலும் அருளை விளக்கினர். (சுசு)

பத்தர் யாழிசைக் கிழவனைப் பணைக்கைமா னெருத்தில்
வைத்து மாடநீ ணகர்வலஞ் செய்வித்து மலர்ந்த
சித்த மாழ்ந்திட வரிசைகண் மிதப்புறச் செய்து
தத்து மான்றேரேடைத் தேரினுன் றன்மனை புகுவான்.

(இ - ள்.) பத்தர் யாழ் இசைக்கிழவனை - பத்தரையுடைய யாழிசைக்கு உரிய பாணபத்திரனை, பணைக்கைமான் எருத்தில் வைத்து - பணைபோன்ற துதிக்கையையுடைய யானையின் பிடரில் வைத்து, மாடம்

நீள்நகர் வலம் செய்வித்து - மாடங்கள் நிறைந்த நீண்ட நகரினை வலஞ் செய்வித்து, மலர்ந்த சித்தம் ஆழ்ந்திட - மலர்ந்த அவன் மனம் உவகைக் கடலில் அமிழ்ந்த, வரிசைகள் மிதப்புறச் செய்து - வரிசைகளை நிறையச் செய்து, தன்மனை புகுவான் - தனது மனையிற் புகுகின்றவனாகிய, தத்தும் மான் தொடைத் தேரினன் - தாவுகின்ற குதிரைகள் பூட்டிய தேரை யுடைய பாண்டியன்.

மிதப்புற - மிக. தொடை - பூட்டு. புகுவானாகிய தேரினன் என்க. (௬௭)

தேவ ருந்தவ முனிவருந் தேவரிற் சிறந்தோர்
யாவ ருந்தமக் காட்செய விருப்பவ ரிருதாள்
நோவ வந்துமக் காட்செய்து நுங்குறை முடிப்பார்
ஆவ ரேலுமக் கனைவரு மேவல ரன்றே.

(இ - ள்.) தேவரும் தவமுனிவரும் தேவரில் சிறந்தோர் யாவரும் - தேவர்களும் தவத்தினையுடைய முனிவர்களும் தேவர்களிற் சிறந்த திருமால் முதலிய அனைவரும், தமக்கு ஆள்செய்ய இருப்பவர் - தமக்குக் குற்றேவல் செய்ய வீற்றிருப்பவராகிய இறைவர், இருதாள் நோவவந்து - இரண்டு திருவடிகளும் வருந்த வந்து, உமக்கு ஆள்செய்து - உமக்கு ஏவல் செய்து, நும்குறை முடிப்பார் ஆவரேல் - உமது குறையினை முடிப்பாராயின், உமக்கு அனைவரும் ஏவலர் அன்றே - உமக்கு அனைவரும் ஏவலாளர் அல்லவோ?

அனைவரும் - அத்தேவர் முதலாயினாரும் புவியின் மாந்தரனைவரும். (௬௮)

ஆத லாலெனக் குடையர் நீ ருமக்குநா னடியேன்
ஈத லாலெனக் கும்மோடு வழக்குவே றிலைநான்
ஓத லாவதோர் குறையுள தின்றுதொட் டுமக்கு
வேத நாதனைப் பாடலே கடனென விடுத்தான்.

(இ - ள்.) ஆதலால் - ஆகையால், எனக்கு உடையர் நீர் - என்னை யுடைய தலைவர் நீர்; நான் உமக்கு அடியேன் - நான் நுமக்கு அடிமை; ஈது அல்லால் - நீர் தலைவரும் யான் அடிமையுமாகிய இந்த முறையே யன்றி, எனக்கு உம்மொடு வேறு வழக்கு இலை - அடியேனுக்கு உம்முடன் வேறு வழக்கு இல்லை; நான் ஓதல் ஆவதோர் குறை உளது - இன்னும் நான் கூறக்கடவதாகிய குறை ஒன்று உளது; (அது), இன்று தொட்டு - இன்று முதல், உமக்கு வேத நாதனைப் பாடலே கடன் என விடுத்தான் - உமக்கு வேதநாதனாகிய இறைவனைப் பாடுதலே கடமை என்று வேண்டி அனுப்பினான்.

நீர் முன்போல் அரசவைக்கண் வந்து பாடுதல் மரபன்றென்பார் 'எனக் கும்மொடு வழக்கு வேறிலை' என்றார். (௬௯)

அரச னல்கிய வெறுக்கைபூ ணுடைகள் பிறவும்
பரசு நாவலர் மாணவர் யாவர்க்கும் பகிர்ந்து
வரிசை யாலிசைக் கிளையோடு மனையில்வந் தெய்திக்
கரைசே யாமகிழ் சிறந்திசைக் காவல னிருந்தான்.

(இ - ள்.) அரசன் நல்கிய - வரகுண பாண்டியன் கொடுத்த, வெறுக்கை பூண் ஆடைகள் பிறவும் - செல்வமும் அணியும் ஆடைகளும் பிறவுமாகிய அனைத்தையும், பரசும் நாவலர் மாணவர் யாவர்க்கும் பகிர்ந்து - துதிக்கின்ற நாவலர்க்கும் மாணவர்கட்கும் பகிர்ந்து கொடுத்து, இசைக்கிளையொடு - பாண் சுற்றத்தோடு, வரிசையால் - அரசன் செய்த வரிசையோடும், மனையில் வந்து எய்தி - மனையின்கண் வந்தடைந்து, கரை செயா மகிழ் சிறந்து - அளவிறந்த மகிழ்ச்சியிற் சிறந்து, இசைக் காவலன் இருந்தான் - யாழ் வேந்தனாகிய பாணபத்திரன் இனி திருந்தான்.

ஆடைகளும் பிறவும் என்க. பரசு நாவலர் - வந்தியர். வரிசை - ஊர்தி கொடி முதலியன. (எO)

ஆகச் செய்யுள் உகOO

நாற்பத்திரண்டாவது

திருமுகங் கொடுத்த படலம்

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

முன்னவன் மதுரை மூதூர் முழுமுத லிசைவலானை
இன்னிசை பாடி வென்ற தின்றுரை செய்தே* மந்தத்
தென்னவன் சேரன் மாடே திருமுகங் கொடுத்துப் பாணர்
மன்னவன் றனக்குச் செம்பொன் வழங்கிய வழக்கஞ் சொல்வாம்.

(இ - ள்.) முன்னவன் - (திருமால் முதலியோர்க்கு) முன்னவனும், மதுரைமூதூர் முழு முதல் - மதுரை என்னும் பழம் பதியில் எழுந்தருளிய முழுமுதற் பொருளுமாகிய சோமசுந்தரக் கடவுள், இசை வலானை - இசையில் வல்ல ஏமநாதனை, இன் இசை பாடி வென்றது - இனிய இசை பாடி வென்ற திருவிளையாடலை, இன்று உரை செய்தேம் - இப்பொழுது கூறினேம்; அந்தத் தென்னவன் - (இனி) அவ்விறைவனே; சேரன் மாடே திருமுகம் கொடுத்து - சேரமான் பெருமாளிடந் திருமுகங் கொடுப்பித்து, பாணர் மன்னவன் தனக்கு - பாணர் வேந்தனாகிய பத்திரனுக்கு, செம்பொன் வழங்கிய வழக்கம் சொல்வாம் - செம்பொன் அளித்த திருவிளையாடலைக் கூறுவோம்.

முன்னவனென்ற கருத்தை,

"மாலு நான்முகத் தொருவன் யாரினும்
முன்ன வெம்பிரான் வருக"

என்னும் திருவாசகத்தால் அறிக.

என்னுரை செய்தேம் என்பது பாடமாயின் யாதினையறிந்து கூறினேம் என்றுரைத்துக் கொள்க. சுந்தர பாண்டியனாக வந்தமையின் 'அந்தத் தென்னவன்' என்றார். வழக்கம் - வரலாறு. (க)

இனிமதி யெமக்கீ தென்னா யாழ்வல்லோ னன்று தொட்டுப்
பனிமதி மருமான் கோயிற் பாணிசைக் கிழமை நீத்துக்
குனிமதி மிலைந்த நாதன் கோயின்முப் போது மெய்திக்
கனிமதி யன்பிற் பாடுங் கடப்படு நியமம் பூண்டான்.

(இ - ள்.) இனி எமக்கு மதி ஈது என்னா - இனி எமக்கு அறிவாவது இதுவே என்று கருதி, யாழ் வல்லோன் - யாழில் வல்ல பாணபத்திரன்; அன்று தொட்டு - அந்நாள் முதல், பனிமதி மருமான் கோயில் பாண் இசைக் கிழமை நீத்து - குளிர்ந்த சந்திரன் மரபினனாகிய வரகுண

(பா - ம்.) *என்னுரை செய்தேம்.

பாண்டியனது அரண்மனையில் இசை பாடுகின்ற உரிமையைவிட்டு, குனி மதி மிலைந்த நாதன் - வளைந்த மதியினை அணிந்த இறைவனது, கோயில் முப்போதும் எய்தி - திருக்கோயிலை மூன்று காலங்களினும் அடைந்து, மதிகனி அன்பில் பாடும் - உள்ளத்திற் கனிந்த அன்பினாலே பாடுகின்ற, கடப்படு நியமம் பூண்டான் - கடமையாகிய நியதியை மேற்கொண்டான்.

அரசன் கூறிய இந்நெறியில் ஒழுகுதலே எமக்கு அறிவென்று கொண்டெனக. முப்போது - காலை நண்பகல் மாலை. (உ)

இத்தொழி லன்றி வேறு தொழிலிவற் கின்மை யாலே
பத்திர னிலம்பா டெய்தப் பொறுப்பரோ பழனக் கூடற்
சித்தவெம் மடிகள் வேந்தன் பொன்னறைச் செல்வம் வௌவிப்
பத்தர்யா ழிடத்தோ ளேந்திப் பாடுவான் காண வைப்பார்.

(இ - ள்.) இத்தொழில் அன்றி - இங்ஙனம் இறைவன் திருமுன் பாடுதலேயன்றி. வேறு தொழில் இவற்கு இன்மையாலே - வேறு தொழில் இவனுக்கு இல்லாமையினால், பத்திரன் இலம்பாடு எய்த - பாணபத்திரன் வறுமையை அடைய, பழனக்கூடல் சித்த எம் அடிகள் பொறுப்பரோ - வயல் சூழ்ந்த கூடலிலுள்ள சித்தராகிய எம்மிறைவர் அதனைப் பொறுப்பரோ (பொறாராகலின்), வேந்தன் பொன் அறைச் செல்வம் வௌவி - மன்னனது கருவூலத்திலுள்ள செல்வங்களைக் கவர்ந்து, பத்தர் யாழ் இடத்தோள் ஏந்தி - பத்தரையுடைய யாழினை இடது தோளிலேந்தி, பாடுவான் காணவைப்பார் - பாடுகின்ற பாண பத்திரன் காணுமாறு எதிரில் வைப்பாராயினர்.

வேறு தொழில் - அரசவையிற் பாடுதல் மாணவர்க்குக் கற்பித்தல் முதலிய பொருள் பெறுந் தொழில். (௩)

சிலபொலங் காசு சின்னாண் மணிக்கலன் சின்னாள் செம்பொற்
கலைவகை சின்னா ளம்பொற் சாமரைக் காம்பு சின்னாள்
அலர்கதி ரரிமான் சேக்கை யாடகத் தகடு சின்னாள்
குலமணி வருக்கஞ் சின்னாள் கொடுத்திடக் கொண்டு போவான்.

(இ - ள்.) சில் நாள் பொலங்காசு சில - சில நாள் பொற்காசு சிலவும், சில் நாள் மணிக்கலன் - சில நாள் மணிகள் இழைத்த அணி களும், சில் நாள் செம்பொன் கலைவகை - சில நாள் சிவந்த பொன்னுடை வகைகளும், சில் நாள் அம்பொன் சாமரைக் காம்பு - சில நாள் அழகிய பொன்னாலாகிய சாமரைக் காம்புகளும், சில் நாள் - சில நாள், அரிமான் சேக்கை - சிம்மாசனத்தில் வேய்ந்த, அலர் கதிர் ஆடகத்தகடு - விரிந்த ஒளியினையுடைய பொற்றகடும், சில் நாள் குல மணி வருக்கம் - சில நாள் பல சாதி மணிக் குவியல்களும், கொடுத்திட - அளிக்க, கொண்டு போவான் - பெற்றுக்கொண்டு போவானாயினன்.

குலம் - சிறப்புமாம். (௪)

கைவரும் பொருளைத் தந்த கள்வருந் தானு மன்றி
எவ்வெவர் தமக்குந் தோற்று தெரியிலிட் டழித்துஞ் சின்னஞ்
செய்வன செய்துந் தன்னைச் சேர்ந்தவ ரிரந்தோர் கைபார்த்
துய்பவர் பிறர்க்கு மாறு துதவியுட் கவலை தீர்ப்பான்.

(இ - ள்.) கைவரும் பொருளை - அங்ஙனம் கையில்வந்த பொருளை, தந்த கள்வரும் தானும் அன்றி - தனக்கு அளித்த கள்வரும் தானுமே அல்லாமல், எவ்வெவர் தமக்கும் தோற்றுது - எவ்வகையினர்க்கும் புலப்படாமல், எரியில் இட்டு அழித்தும் - நெருப்பில் இட்டு உருவழித்தும், சின்னம் செய்வன செய்தும் - உருமாற்ற வேண்டியவைகளை அங்ஙனமே செய்தும், தன்னைச் சேர்ந்தவர். இரந்தோர் - தன்னைச் சார்ந்தவர்க்கும் இல்லையென்றிரந்தவர்க்கும், கை பார்த்து உய்பவர் பிறர்க்கும் - தன் கை வரவு பார்த்துப் பிழைப்போர்க்கும், இவரொழிந்த பிறர்க்கும், மாறுது உதவி உள்கவலை தீர்ப்பான் - இடையறுது கொடுத்து அவர்களின் உள்ளக் கவலையைப் போக்கி வருவான்.

அழித்தல் - உருக்குதல். சின்னஞ் செய்தல் - முன்னையுருத்தோன்று வகை பேதித்தல். தன்னைச் சேர்ந்தவர் - சுற்றத்தார். கைபார்த்துய்பவர் - பரவுவோர், ஏவல் செய்வோர் முதலாயினுர். (௫)

வைகலுங் கொடுப்போர் பின்னுண் மறுத்தன ராகப் போய்ப்போய்க்
கைதொழு திறைஞ்சி வாளா வருமவன் கலியின் மூழ்கி
உய்வகை வேறு காணு தொக்கலு மொக்க வாடிக்
கையற வடைய நோனு துறங்கினுன் கனவி னெல்லை.

(இ - ள்.) வைகலும் கொடுப்போர் - இங்ஙனம் நாள்தோறும் கொடுத்துவரும் இறைவர், பின்நாள் மறுத்தனராக - பிந்திய நாட்களில் கொடாது மறுத்தாராக; போய்ப்போய் - சென்றுசென்று, கை தொழுது இறைஞ்சி - கைகூப்பி வணங்கி, வாளா வரும் அவன் - ஒன்றும் பெறுது வருகின்ற அப்பாணபத்திரன், கலியில் மூழ்கி - வறுமைக் கடலிலழுந்தி, உய்வகை வேறுகாணுது - பிழைக்கும் வகை வேறு காணுமல், ஒக்கலும் - சுற்றத்தாரும், ஒக்க வாடிக் கையறவு அடைய - ஒரு சேர வாடித் துன்பமுற, நோனுது உறங்கினுன் - பொறுக்கலாற்றுது துயின்ருன்; கனவின் எல்லை - அப்பொழுது அவன் கனவின் கண்.

ஒக்க - உடன் என்றுமாம். கையறவு - கையாறு; செயலறுதியாகிய துன்பம். நோன்றல் - பொறுத்தல். (௬)

சித்தவெம் பெருமான் வந்து செப்புவா ரப்பா நிம்பத்
தொத்தவன் கோசந் தன்னிற் றும்பியுண் கூனியின் வெளவி
இத்தன மின்று காறு மீந்தன மெம்பா லன்பு
வைத்தவ னறிந்தாற் சங்கை மனத்தனுய் விசுற்பங் கொள்வான்.

(இ - ள்.) சித்த எம்பெருமான் வந்து செப்புவார் - சித்த மூர்த்தி களாகிய எம் பெருமானர் தோன்றியருளிக் கூறுவார்; அப்பா - அப்பனே, நிம்பத் தொத்தவன் - வேப்பமலர் மாலையை யணிந்த பாண்டியனது, கோசம் தன்னில் - பொன்னறையில், தும்பி உண் கனியின் வெளவி - வேழம் உண்ட விளாங்கனிபோல (அஃது ஆகுமாறு) கவர்ந்து, இத்தனம் இன்றுகாறும் ஈந்தனம் - இந்தப் பொருளை இந் நாள் வரையும் கொடுத்தருளினேம்; எம்பால் அன்பு வைத்தவன் அறிந்தால் - எம்மிடத்து அன்புவைத்த வரகுணபாண்டியன் அறிந் தானாயின், சங்கை மனத்தனய் விகற்பம் கொள்வான் - ஐயமுற்ற மனத்தினனாய் வேறுபட்டு.

அப்பா என அன்பால் விளித்தார். தொத்து - பூங்கொத்து. கோசம் - பொன்னறை. கனியின் - கனிபோல வறிதாக சங்கை - ஐயம். விகற்பங் கொள்ளல் - தடுமாற்ற மடைதல். கொள்வான் என்பதனை எச்சமாக்குக. (எ)

மயலறக் கற்புக் காக்கு மகளிர்போற் றுறவு காக்க
முயலும்யோ கரிவுட் காப்பு முரசெறி புறஞ்சூழ் காப்புங்
கயலிலச் சினையு நிற்கக் கவர்ந்ததற் புதமிக் கள்வன்
உயிர்தோறு மொளித்து நின்ற வொருவனோ* வறியே னென்பான்.

(இ - ள்.) மயல் அறக் கற்புக் காக்கும் மகளிர்போல் - (வேறு ஆடவரிடத்து) ஆசை இல்லையாகக் கற்பினைக் காக்கின்ற மகளிர் போலவும், துறவு காக்க முயலும் யோகரில் - துறவினைக் காக்க முயலுகின்ற சிவயோகிகளைப் போலவும், உள்காப்பும் - அகக்காவலும், முரசு எறிபுறம் சூழ்காப்பும் - எறிகின்ற முரசொலியுடன் சூழ்தரும் வெளிக்காவலும், கயல் இலச்சினையும் நிற்க - மீன முத்திரையும் உள்ளவாறே இருக்க, கவர்ந்தது அற்புதம் - பொருளை வெளவியது வியக்கத்தக்கது; இக்கள்வன் - இங்ஙனம் கவர்ந்த கள்வன், உயிர் தொறும் ஒளித்துநின்ற ஒருவனோ - உயிர்கள்தோறும் ஒளித்துநின்ற ஒருவனாயிருப்பானோ, அறியேன் என்பான் - அறியேனே என்று கருது வான்.

மயல் - மையல்; ஆசை. கற்புக் காக்கும் மகளிர்க்கு நாண் முதலியன அகத்தே நீங்காது நின்று காத்தல்போலவும் துறவுகாக்க முயல்வார்க்குப் புறத்திலுள்ள ஐம்பொறிகளும் விடயங்கள் புகுதாது தடுத்து நிற்றல்போலவும் உட்காப்பும் புறஞ்சூழ் காப்பும் என முறை நிரனிறையாகக் கொள்க. உயிர்தொறு மொளித்து நின்ற வொருவனோ எனத் தன்னை ஐயுறுதலுஞ் செய்வான் என்றபடி. (அ)

கோமக னினைய செய்தி யறியுமேற் கோசங் காப்போர்க்
காமுறு† தண்ட நின்போ லன்பகத் தெம்மை வைத்த
தேமரு போந்தின் கண்ணிச் சேரமான் றனக்கிப் போது
நாமொரு முடங்க் றீட்டி நல்குவம் போதி யென்ன.

(பா - ம்.) *ஒளித்த கள்வ னொருவனோ. †ஆமுறுந் தண்டம்.

(இ - ள்.) கோமகன் இனையசெய்தி அறியுமேல் - மன்னவன் இச் செய்தியை அறிவானேல் (அங்ஙனங் கருதுவதன்றி), கோசம் காப் போர்க்கு உறுதண்டம் ஆம் - கருவூலங் காப்போர்க்கு மிக்க தண்டமும் உண்டாகும்; (ஆதலால்), நின்போல் - உன்னைப்போல், அன்பு அகத்து எம்மை வைத்த - அன்போடு உள்ளத்தின்கண் எம்மை வைத்துள்ள, தேம் மரு போந்தின் கண்ணிச் சேரமான் தனக்கு - தேன் பொருந்திய பனம் பூமாலையை யணிந்த சேரமானுக்கு, இப்போது - இப்பொழுது, நாம் ஒரு முடங்கல் தீட்டி நல்குவம் - நாம் ஓர் ஓலை எழுதிக்கொடுப்போம், போதி என்னு - நீ அங்குப் போகக்கடவை என்று கூறி.

முடங்கல் - திருமுகம். (௬)

மறைக்குரை செய்த வாக்கான் மதிமலி புரிசை யென்னுஞ்
சிறப்பியல் சீர்சால் செய்யுட் பாசுரஞ் செப்பித் தீட்டிப்
பிறைச்சடைப் பெருமானல்கி மறைந்தனன் பெரும்பாண் செல்வன்
உறக்கநீத் தாடிப் பாடி யுவகைமா கடலி லாழ்ந்தான்.

(இ - ள்.) மறைக்கு உரைசெய்த வாக்கால் - வேதத்துக்குப் பொருளருளிச் செய்த திருவாக்கினுல், மதிமலி புரிசை என்னும் - 'மதிமலி புரிசை' என்னு முதலையுடைய, சிறப்பு இயல் சீர்சால் - சொற்பொருட் சிறப்புடைய விழுப்பமிக்க, செய்யுள் பாசுரம் செப்பி தீட்டி - செய்யுளாகும் திருப்பாசுரம் ஒன்றினைக் கூறி அதனை எழுதி, நல்கி - கொடுத்தருளி, பிறைச்சடைப் பெருமான் மறைந்தனன் - பிறையினை யணிந்த சடையையுடைய இறைவன் மறைந்தருளினுன்; பெரும்பாண் செல்வன் - பெருமையுடைய இசையாகிய செல்வத்தையுடைய பாணபத்திரன், உறக்கம் நீத்து - துயிலினின்றும் நீங்கி, ஆடிப்பாடி - ஆனந்தக்கூத்தாடிப் பாடி, உவகைமா கடலில் ஆழ்ந்தான் - உவகை என்னும் பெரிய கடலுள் அமிழ்ந்தினுன்.

திருமுகப்பாசுரம்

"மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவும் பானிற வரிச்சிறை
அன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பால் யாழ்வல பாண பத்திரன்
தன்போ லென்பா லன்பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே"

என்பது. வரிச்சிறகு, சிவன்யாம், ஒருமையினுரிமையின், யாழ்பயில், தன்போலெம்பால் என்பன பாசுரத்தின் பாடபேதங்கள். இது ௧௧-ஆம் திருமுறையில் முதலதாகவுள்ளது.

"பரிபுரக் கம்பலை யிருசெவி யுண்ணும்
குடக்கோச் சேரன் கிடைத்திது காண்கென
மதிமலி புரிசைத் திருமுகங் கூறி
அன்புருத் தரித்த வின்பிசைப் பாணன்
பெறநிதி கொடுக்கென வுறவிடுத் தருளிய
மாதவர் வழுத்துங்கூடற் கிறைவன்"

எனக்கல்லாடத்தும் இவ்வரலாறு குறிக்கப்பெற்றுள்ளது. (௧0)

[கலிவிருத்தம்]

வாங்கிய திருமுக மணிப்பட் டாடையிட்
டாங்கிறை யடிபணிந் தகன்று பத்திரன்
ஓங்கிய கோயிலை வலங்கொண் டோல்லென
நீங்கிமேல் வரைப்புல நெறிக்கொண் டேகுவான்.

(இ - ள்.) வாங்கிய திருமுகம் - பெற்ற திருமுகத்தை, மணி - அழகிய, பட்டு ஆடை இட்டு - பட்டாடையில் வைத்து, இறை அடி பணிந்து - இறைவன் திருவடியை வணங்கி, ஆங்கு அகன்று - அங்கு நின்றும் நீங்கி, பத்திரன் - பாணபத்திரன், ஓங்கிய கோயிலை வலம் கொண்டு, உயர்ந்த திருக்கோயிலை வலம்வந்து, ஒல்லென நீங்கி-விரைந்து அகன்று, மேல்வரைப் புலம் நெறிக்கொண்டு ஏகுவான் - மேற்றிசையிலுள்ள மலைநாட்டிற்கு வழிக்கொண்டு செல்வானாயினன்.

ஒல்லென: விரைவுக்குறிப்பு. வரைப்புலம் - மலைநாடு. (௧௧)

கொல்லையுங் குறிஞ்சியுங் கோதிக்கும் வெம்பரற்
கல்லத ரத்தமுங் கடந்து முட்புறப்
பல்சுளைக் கனியடி யிடறப் பைப்பைய
நல்வளங் கெழுமலை நாடு நண்ணினான்.

(இ - ள்.) கொல்லையும் குறிஞ்சியும் - முல்லைநிலத்தையும் குறிஞ்சி நிலத்தையும், கொதிக்கும் வெம்பரல் கல் அதர் அத்தமும் கடந்து - கொதிக்கின்ற வெய்ய பருக்கைக் கற்களையுடைய வழியினையுடைய பாலை நிலத்தையும் கடந்து, முள்புறம் பல் சுளைக்கனி அடி இடற - புறத்தில் முட்களையும் பல சுளைகளையுமுடைய பலாக்கனிகள் அடியில் இடற, பைப்பைய - மெல்லமெல்ல, நல்வளம் கெழு மலை நாடு நண்ணினான் - நல்ல வளங்கள் நிறைந்த மலைநாட்டினை அடைந்தான்.

மலைவளங் கூறுவார் 'கனியடியிடற' என்றார். பையப்பைய என்பது முன் மொழியிறுதி அகரம் மெய்யொடுங் கெட்டுப் பைப்பைய என்றாயது. (௧௨)

அலைகட னெடுந்துகி லந்த நாடேனுந்
தலைமக டனக்குவான் றடவு குன்றுபூண்
முலையென விளங்கின முகத்திற் றீட்டிய
திலகமே யானது திருவஞ் சைக்களம்.

(இ - ள்.) அலை கடல் நெடுந்துகில் - அலைக்கின்ற நெடிய கடலினை ஆடையாகவுடைய, அந்த நாடு எனும் தலைமகள் தனக்கு - அந்த நாடு என்கின்ற தலைவிக்கு, வான் தடவு குன்று - விண்ணினை அளாவிய மலைகள், பூண்முலை என விளங்கின - அணிகளையுடைய கொங்கைகள்போல விளங்கின; திருவஞ்சைக்களம் - திருவஞ்சைக்களம் என்னும் பதி, முகத்தில் தீட்டிய திலகமே ஆனது-அம்மாதின் முகத்தில் இட்ட திலகமே போன்று விளங்கியது.

பூண்முலையும் திலகமும் மகளிர்க்கு இன்றியமையாச் சிறப்பின வாதல் உணர்க. (கரு)

அறமக ளாக்கமு மலரின் மேயசெந்
நிறமக ளாக்கமு நீதி சான்றபோர்
மறமக ளாக்கமும் வடசோற் றென்கலைத்
திறமக ளாக்கமுஞ் சிறந்த தந்நகர்.*

(இ - ள்) அறமகளாக்கமும் - அறமகளாலாய தருமச்செல்வமும், அலரில்மேய செந்நிறமகள் ஆக்கமும் - தாமரை மலரில் வசிக்குந் திருமகளாலாய பொருட்செல்வமும், நீதிசான்ற போர் மறமகள் ஆக்கமும் - நீதியமைந்த போருக்குரிய கொற்றவையாலாய வீரச்செல்வமும், வடசொல் தென்கலைத் திறமகள் ஆக்கமும் - வடமொழி தென்மொழி யென்னும் பகுப்பினையுடைய கலைமகளாலாய கல்விச் செல்வமும், சிறந்தது அந்நகர் - சிறக்கப்பெற்றது அந்நகரம்.

அறமகள் - தருமதேவதை. செந்நிறமகள் - செய்யாள்; இலக்குமி. நீதியுடன் கூடாத போர் வென்றி வீரமாகாதென்பார் 'நீதிசான்ற போர்' என்றார். ஆக்கம் - ஆகியது. (கசா)

மண்புக ழந்நகர் மறுகின் மாடோரு
தண்புனற் சாலையிற் சார்ந்து ளானிப்பால்
விண்புகழ் நீதியவ் வேந்தற் கன்றிராக்
கண்புனை நுதலினர் கனவிற் றோன்றினர்.

(இ - ள்) மண்புகழ் அந்நகர் மறுகின் மாடு - புவி முழுதும் புகழும் அந்த நகரின் வீதியின்கண், ஒரு தண்புனல் சாலையில் சார்ந்துளான் - ஒரு தண்ணீர்ப் பந்தரிற் றங்கினன்: இப்பால் - இப்புறம், விண் புகழ் நீதி அவ்வேந்தற்கு - வானுலகம் புகழும் நீதியினையுடைய அச் சேர வேந்தற்கு, அன்று இரா - அன்று இரவில், கண்புனை நுதலினர் கனவில் தோன்றினர் - கண் பொருந்திய நெற்றியையுடைய இறைவர் கனவிலே தோன்றியருளினர்.

மலைநாடு நண்ணின பத்திரன் அஞ்சைக்களத்து மறுகிலே தண்ணீர்ப் பந்தலிற் சார்ந்திருந்தனன் என்க. மண், விண் என்பன ஆகுபெயர்கள். (கஎ)

(பா - ம்.) * சிறந்தவந்நகர்.

தென்னவன் மதுரையி லிருக்குஞ் சித்தர்யாம்
நின்னிடை வந்துளே நின்னைக் கண்டுதான்
நன்னிதி வேண்டநம் மோலை கொண்டுநம்
இன்னிசைப் பாணபத் திரனிங் கெய்தினான்.

(இ - ள்.) நின்னிடை வந்துளேம் யாம் - நின்னிடத்து வந்துளே மாகிய யாம், தென்னவன் மதுரையில் சித்தர் - பாண்டியனது மதுரையி லுள்ள சித்தராவேம்; நின்னைக் கண்டு - உன்னைப் பார்த்து, நல்நிதி வேண்ட - நல்ல பொருள் வேண்டுதற் பொருட்டு, நம் ஓலை கொண்டு - நமது திருமுகம் பெற்றுக்கொண்டு, நம் இன்இசைப் பாணபத்திரன் - நமது இன்னிசை பாடும் பாணபத்திரன், இங்கு எய்தினான் - இங்கு வந்தனன். (கசு)

மற்றவற் கருநிதி கொடுத்து மன்னநீ
தெற்றென வரவிடு கென்று சித்தர்தாஞ்
சொற்றனர் போயினர் சுரக்குந் தண்ணளி
ஒற்றைவெண் குடையினா னுறக்க நீங்கினான்.

(இ - ள்.) மன்ன நீ - மன்னனே நீ, அவற்கு அருநிதி கொடுத்து - அப்பத்திரனுக்கு அரிய பொருள் கொடுத்து, தெற்றென வரவிடுக என்று - விரைந்து வரவிடக்கடவை என்று, சித்தர் தாம் சொற்றனர் போயினர் - சித்தமூர்த்திகள் கூறி மறைந்தனர்; சுரக்கும் தண் அளி - உயிர்க ளிடத்துச் சுரந்தெழும் தண்ணிய அருளையுடைய, ஒற்றை வெண் குடையினான் - ஒப்பற்ற வெண்குடையையுடைய சேரமான் பெருமாள், உறக்கம் நீங்கினான் - துயிலுணர்ந்தனன்.

தெற்றென : விரைவு குறித்தது. விடுகென : அகரந்தொக்கது. சொற்றனர் : முற்றெச்சம். மற்று, தாம் என்பன அசைகள். (கஎ)

கங்குல்வாய்க் கண்டவக் கனவைப் பெண்ணையந்
தொங்கலான் றமரொடு சொல்லிச் சேர்கணாள்
பங்கினான் றிருமுகங் கொணர்ந்த பத்திரன்
எங்குளான் கொல்லெனத் தேட வெண்ணுவான்.

(இ - ள்.) பெண்ணையந் தொங்கலான் - அழகிய பனம் பூ மாலையை யணிந்த அவ்வேந்தன், கங்குல்வாய்க் கண்ட அக்கனவை - இரவிலே கண்ட அக்கனவினை, தமரொடு சொல்லி - அமைச்சரோடு கூறி, சேல் கணாள் பங்கினான் திருமுகம் கொணர்ந்த பத்திரன் - அங்கயற் கண்ணி யார் பங்கனது திருமுகத்தைக்கொண்டு வந்த பாணபத்திரன், எங்கு ளான் கொல்லென - எங்கிருக்கின்றானோ என்று, தேட எண்ணுவான் - தேடக் கருதுவான்.

அம், சாரியையுமாம். கொல் : ஐயப்பொருட்டு. (கஅ)

மற்றவர் தமைத்துரீஇ வருக தில்லெனக்
கொற்றவ னேவலோர் குறுகி மாடமுந்
தெற்றியு நியமமு மன்றுஞ் சென்றுசென்
றெற்றிகழ் மணிநக ரெங்குந் தேடுவார்.

(இ - ள்.) அவர் தமைத் துரீஇ வருக தில்லென - அப்பாண பத்திரரைத் தேடிக் கண்டு வருக என்று கட்டளையிட, கொற்றவன் ஏவலோர் - அரசன் ஏவலாளர், குறுகி - சென்று, மாடமும் தெற்றியும் - மாடங்களிலும் திண்ணைகளிலும், நியமமும் மன்றும் - கடைவீதிகளிலும் மன்றங்களிலும், எல் திகழ் மணி நகர் எங்கும் - சூரியனைப்போல விளங்கும் அழகிய நகரின் எவ்விடத்தும், சென்று சென்று தேடுவார் - போய்ப் போய்த் தேடுவாராயினர்.

மற்று: அசை. துரீஇ - துருவி; சொல்லிசை யளபெடை. தில்: விழைவுப்பொருளில் வந்த இடைச்சொல்; கால விரைவுப்பொருளில் வந்ததென்பாருமுளர். தெற்றி - அம்பலமுமாம். நியமம் - கடைவீதி. சென்று சென்று: தொழிற் பயில்வுப் பொருளில் வந்த அடுக்கு. (௧௯)

தருமநீர்ப் பந்தரி னிருக்குந் தந்திரி
வருமிசைக் கிழவனைக் கண்டு வல்லைபோய்த்
திருமகற் குணர்த்தினர் சேனையோ டெழீஇப்
பெருமகன் பாணர்தம் பிரானை நண்ணினான்.

(இ - ள்.) தரும நீர்ப் பந்தரின் இருக்கும் - அறத்தின் பொருட்டு வைத்த நீர்ச்சாலையில் இருக்கும், தந்திரி வரும் இசைக்கிழவனைக் கண்டு - யாழ் கைவந்த பாண பத்திரனைக் கண்டு, வல்லை போய் - விரைந்து சென்று, திருமகற்கு உணர்த்தினர் - வேந்தனுக்குத் தெரிவித்தனர்; பெருமகன் - அவ்வரசர் பெருமானும், சேனையோடு எழீஇ - நால்வகைப் படையோடும் எழுந்து, பாணர்தம் பிரானை நண்ணினான் - பாணர் பெருமானை அடைந்தனன்.

தந்திரி: ஆகுபெயர். வரும் - கைவரும். எழீஇ, சொல்லிசை யளபெடை. (௨0)

கண்டனன் முகிழ்த்தகைக் கமலஞ் சென்னிமேற்
கொண்டனன் பாடினன் கூத்து மாடினன்
தண்டென வீழ்ந்தன னன்பிற் றண்ணறு
வண்டென மகிழ்ந்தனன் மன்னர் மன்னனே.

(இ - ள்.) மன்னர் மன்னன் - அரசர்க்கரசனாகிய சேரமான், கண்டனன் - பத்திரனைக் கண்டு; அன்பில் - அன்பினால், முகிழ்த்த கைக் கமலம் - கூப்பிய கைத்தாமரைகளை, சென்னிமேல் கொண்டனன் - தலையின்மேற் கொண்டு, பாடினன் கூத்தும் ஆடினன் தண்டு என வீழ்ந்தனன் - பாடி ஆனந்தக்கூத்தாடித் தண்டம் போற் கீழே வீழ்ந்து, தண் நறு வண்டு

என மகிழ்ந்தனன் - குளிர்ந்த தேனைக் கண்டு வண்டு மகிழ்வது போல மகிழ்ந்தான்.

மகிழ்ந்தனன் என்பதொழிந்த ஏனைய முற்றுக்களெல்லாம் எச்ச மாயின; முற்ருகவே நிறுத்தித் தனித்தனி முடித்தலுமாம். வருஞ்செய்யு ளிலும் இங்ஙனங் கொள்க. (உக)

வாங்கினன் றிருமுக மலர்க்க ணொற்றினன்
தாங்கினன் முடிமிசைத் தாமம் போன்மகிழ்
தூங்கினன் றடங்கணீர் துளிப்ப மெய்யெலாம்
வீங்கினன் பொடிப்பெழ வேந்தர் வேந்தனே.

(இ - ள்.) வேந்தர் வேந்தன் - மன்னர் பெருமானுகிய சேரமான், திருமுகம் வாங்கினன் - திருமுகத்தினை ஏற்று, மலர்க்கண் ஒற்றினன் - மலர் போன்ற கண்களில் ஒற்றி, முடிமிசை தாமம் போல் தாங்கினன் - தலையின்மேல் மாலைபோல் தாங்கி, மகிழ்தூங்கினன் - மகிழ்ச்சிமிக்கு, தடம் கண் நீர் துளிப்ப - பெரிய கண்களினின்றும் ஆனந்த வருவி சொரிய வும், மெய் எலாம் பொடிப்பு எழ - உடல் முழுதும் புளகம் போர்ப்பவும், வீங்கினன் - பூரித்தான்.

பொடிப்பு - மயிர் முகிழ்ப்பு. திருத்தொண்டர் புராணத்தில் இவ்வரலாறு கூறு மிடத்துள்ள,

"அடியேன் பொருளாத் திருமுகங்கொண்
டணைந்த தென்ன வவர்தாமும்
கொடிசேர் விடையார் திருமுகங்கைக்
கொடுத்து வணங்கக் கொற்றவனுர்
முடிமேற் கொண்டு கூத்தாடி
மொழியுங் குழறிப் பொழிகண்ணீர்
பொடியார் மார்பிற் பரந்துவிழப்
புவிமேற் பலகால் விழுந்தயர்வார்"

என்னுஞ்செய்யுள் இங்கு நோக்கற்பாலது. (உஉ)

[எண்சீரடி யாசிரிய விருத்தம்]

மின்னவிருஞ் செம்பொன்மணி மாடக் கூடன்
மேயசிவன் யாமெழுதி விடுக்கு மாற்றம்
நன்னர்முகி லெனப்புலவர்க் குதவுஞ் சேர
நரபாலன் காண்கதன்போ னம்பா லன்பன்
இன்னிசையாழ்ப் பத்திரன்றன் மாடே போந்தா
னிருநிதியங் கோடுத்துவர விடுப்ப தென்னத்
தென்னர்பிரான் றிருமுகத்தின் செய்தி நோக்கிச்
சேரர்பிரான் களிப்பெல்லை தெரியா னுகி.

(இ - ள்.) மின் அவிரும் செம்பொன் மணிமாடக் கூடல் - ஒளி விளங்கும் சிவந்த பொன்னாலாகிய அழகிய மாடங்கள் நெருங்கிய கூடற் பதியின்கண், மேயசிவன் யாம் - எழுந்தருளியிருக்கும் சிவபெருமானாகிய யாம், எழுதிவிடுக்கும் மாற்றம் - எழுதி அனுப்புஞ் செய்தி, நன்னர் முகில் என - நல்ல மேகம்போல, புலவர்க்கு உதவும் சேர நரபாலன் காண்க - புலவர்களுக்கு வரையா தளிக்கும் சேரவேந்தன் காண்க; இன் இசை யாழ்ப்பத்திரன்-இத்திருமுகங் கொண்டு வரும் இனிய இசையினையுடைய யாழில் வல்ல பாணபத்திரன், தன்போல் நம்பால் அன்பன் - தன்னைப் போல நம்மிடத்து அன்புடையான், தன் மாடே போந்தான் - அவன் தன்னிடத்து வருகின்றான். இரு நிதியம் கொடுத்து வரவிடுப்பது என்ன - (அவனுக்கு) மிக்கபொருள் கொடுத்து அனுப்புவது என்று, தென்னர் பிரான்-பாண்டியர் பெருமானாகிய சோமசுந்தரக்கடவுள் (வரைந்தருளிய) திருமுகத்தின் செய்தி நோக்கி - திருமுகத்தின் செய்தியை நோக்கி, சேரர் பிரான் களிப்பு எல்லை தெரியானாகி - சேரர்பெருமான் மகிழ்ச்சியின் வரம்பினை அறியாதவனாகி.

நரபாலன் எனவும், தன் எனவும் படர்க்கையாற் கூறினர். திருமுகத்தில் இங்ஙனங் கூறுவது மரபு. தன்போல் நின்னைப்போல். தம்மாடு-நின் பக்கல். விடுப்பது: வியங்கோள். எல்லை தெரியாத களிப்புடையனாகி யென்க.　(உக)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

பொன்னின் றளிகை மிசைவைத்துப் புழைக்கை மதமான் றலையேற்றி
மன்னுங் கோளையாழ்ப் புலவனைமுன் வைத்துப் பின்னே தானிருந்து
மின்னுங் கதிர்கா லிணைக்கவரி வீசிப் பலவே றியங்கலிப்பத்
தென்னென் றளியா ரிசைத்தாரான் றிருமா நகரை வலஞ்செய்யா.

(இ - ள்.) பொன்னின் தளிகை மிசை வைத்து (அத்திருமுகத்தைப்) பொற்பீடத்தின் மேல் வைத்து, புழைக்கை மதமான் தலை ஏற்றி - துளை பொருந்திய கையையும் மதத்தையுமுடைய யானையின் தலையில் ஏற்றி, மன்னும் கோளையாழ்ப் புலவனை முன்வைத்து - பெருமை பொருந்திய இசையமைந்த யாழ்ப் புலவனாகிய பாண பத்திரனை முன்னர் வைத்து, தான் பின்னே இருந்து - தான் பின்னே அமர்ந்து, மின்னும் கதிர்கால் இணைக் கவரி வீசி - விளங்கும் ஒளியினை வீசும் இரட்டைக் கவரிகளை வீசி, பலவேறு இயம் கலிப்ப-பலவகை வாச்சியங்களும் ஒலிக்க, தென்னென்று அளி ஆர் இசைத்தாரான் - தென்னென்று வண்டுகள் மொய்த்து இசை பாடும் மாலையை யணிந்த சேரமான் பெருமான், திருமா நகரை வலம் செய்யா - அழகிய பெரிய நகரை வலஞ் செய்வித்து.

கோளை - இசைப்பாட்டு. இரண்டு கையாலும் இரு பக்கத்தும் கவரி வீசினன் என்க. தென்னென்று: இசைக் குறிப்பு.　(உச)

பஞ்சு தடவுஞ் சீறடியார் பலமங் கலங்கொண் டெதிர்போத
மஞ்சு தடவு நீள்குடுமி மாட மனையிற் கொடுபோகி
நஞ்சு தடவு மணிகண்ட னன்பன் றனை*நன் னீராட்டி
அஞ்சு தடவி யோவியஞ்செய் தமைத்த மணிமண் டபத்தேற்றி.

(இ - ள்.) மஞ்சு தடவும் சீறடியார் - செம்பஞ் சூட்டிய சிறிய அடியினையுடைய மகளிர், பல மங்கலம் கொண்டு எதிர்போத - அட்ட மங்கலங்களையும் ஏந்தி எதிர் வர, மஞ்சு தடவு நீள் குடுமி மாடம் மனையில் - முகிலை அளாவும் உயர்ந்த சிகரம் பொருந்திய மாடத்தை யுடைய அரண்மனையின்கண், கொடு போகி - கொண்டு சென்று, நஞ்சு தடவும் மணி கண்டன் அன்பன் தனை - நஞ்சு அளாவிய நீலகண்டத்தை யுடைய சிவபெருமானுக்கு அன்பனாகிய பத்திரனை, நல் நீர் ஆட்டி - மணம் பொருந்திய நீரால் மஞ்சனஞ் செய்வித்து, அஞ்சு தடவி ஓவியம் செய்து அமைத்த - ஐவகை நிறங்களும் தடவி ஓவியம் வரைந்தமைத்த, மணி மண்டபத்து ஏற்றி - மணிகள் அழுத்திய மண்டபத்தில் எழுந்தருள் வித்து.

மணிகண்டன் - நீல மணிபோலும் கரிய திருமிடற்றையுடையன். அஞ்சு: ஐந்து என்பதன் போலி; நிலத்திற்கு ஆகுபெயர். (உ௫)

அம்பொற் றவிசிட் டருச்சனைசெய் தாறு சுவையின் னமுதருத்திச்
செம்பொற் கலவை நறுஞ்சாந்தந் தீம்பூ வாதி முகவாசம்
பைம்பொற் கலத்து வெள்ளிலைதீம் பழுக்காய் பிறவு முறைநல்கி
உம்பர்க் கிறைவன் றிருமுகத்தி லுய்ப்ப தெனலா லுய்த்துமென.

(இ - ள்.) அம்பொன் தவிசு இட்டு - அழகிய பொன்னாலாகிய தவி சளித்து, அருச்சனை செய்து - அருச்சித்து, அறுசுவை இன் அமுது அருத்தி - அறுவகைச் சுவையுமுடைய இனிய அமுதினை உண்பித்து, செம்பொன் கலவை நறுஞ் சாந்தம் - சிவந்த பொன்னிறம்வாய்ந்த நறிய கலவைச் சந்தனமும், தீம்பூ ஆதி முகவாசம் - தீம்பூ முதலிய முக வாசமும், பைம்பொன் கலத்து - பசிய பொற்றட்டின்கண், வெள்ளிலை தீம்பழுக்காய் பிறவும் - வெற்றிலையும் இனிய பாக்கும் பிறவுமாகிய வற்றை, முறை நல்கி - முறைப்படி கொடுத்து, உம்பர்க்கு இறைவன் திருமுகத்தில் - தேவர்கட்குத் தலைவனாகிய சோமசுந்தரக்கடவுள் அரு ளிய திருமுகத்தின்கண், உய்ப்பது எனலால் - வரவிடுப்பது என்று கட்டளை யிருத்தலால், உய்த்தும் என - அங்ஙனமே செய்வோமென்று கருதி.

தவிசிட்டு - தவிசில் இருக்கச்செய்து என்க. செம்பொற் கலவை, பொற்சுண்ணம் முதலியன கலந்தவையுமாம். முகவாசம் இவை யென்பதனை,

---

(பா - ம்.) * நன்பன்றனை.

"தக்கோலம் தீம்பூத் தகைசால் இலவங்கம்
கற்பூரம் சாதியோ டைந்து"

என்பதனுல் உணர்க. (உசு)

செம்போ னறையைத் திறந்தமைத்துக் காட்டி யினைய திருவெல்லாம்
உம்பர் பெருமா னடியீர் நீருடையீர் கவர்ந்து கோண்மினென
இம்பர் நிழற்றும் வெண்குடையா னிசைப்ப வெதிர்தாழ்ந் திசைக்கிழவன்
நம்ப னருளுக் குரியீர்நீர் நல்கிற் றமையு மெனக்கென்ன.

(இ - ள்.) செம்பொன் அறையைத் திறந்து - கருவூலத்தைத் திறந்து, அழைத்து - பாணபத்திரனை அழைத்து, காட்டி - காண்பித்து, இனைய திரு எல்லாம் - இந்தச் செல்வம் அனைத்தையும், உம்பர் பெருமான் அடியீர் - தேவர் பெருமானுகிய இறைவனுக்கு அடியீராகிய, நீர் உடையீர் - நீரே உடையீர், கவர்ந்து கொள்மின் என - கைக் கொள்ளுமென்று, இம்பர் நிழற்றும் வெண்குடையான் இசைப்ப - இந்நிலவுலகிற்கு நிழல் செய்யும் வெள்ளிய குடையையுடைய சேர மன்னன் கூற, எதிர் தாழ்ந்து இசைக் கிழவன் - இசைக்கு உரிய பாணபத்திரன் எதிர் வணங்கி, நம்பன் அருளுக்கு உரியீர் நீர் - இறைவன் திருவருளுக்குரியீராகிய நீர், நல்கிற்று எனக்கு அமையும் என்ன - தந்தது எனக்குப் போதிய தென்று கூற.

யாவும் உம்முடையனவே கைக்கொள்ளும் என்ன அங்ஙனம் வேண்டாம் நீர் கொடுக்குமளவு அமையுமென்று பாணர் கூற வென்க. (உஎ)

மன்னன் றனேண் ணியவாற்றல் வழங்க வழங்க மறுத்துமறுத்
தின்ன றீரு மிசைக்கிழவ னிலங்கும் பொலம்பூ ணிருநிதியம்
பொன்னஞ் சிவிகை கரிபரிமான் பொற்பட் டாடை பலபிறவுந்
தன்ன வென்னு* மளவாற்றாற் றனே கொள்ளத் தார்வேந்தன்.

(இ - ள்.) மன்னன் - சேரமான் பெருமாள், தான் எண்ணிய வாற்றல் வழங்க வழங்க - எல்லாப் பொருளும் அவருடையன வென்று தான் கருதியபடி கொடுக்கக் கொடுக்க, இன்னல் தீரும் இசைக்கிழவன் மறுத்து மறுத்து - துன்பம் நீங்கும் பாணபத்திரன் அவற்றை மறுத்து மறுத்து, இலங்கும் பொலம் பூண் - விளங்குகின்ற பொன்னணிகளை யும், இருநிதியம் - பெரிய நிதியையும், பொன் அம் சிவிகை - பொன்னு லாகிய அழகிய சிவிகைகளையும், பல கரி பரி மான் பொன்பட்டு ஆடை - பல யானைகளையும் குதிரைகளையும் பொன்னுலாகிய பட்டாடைகளையும், பிறவும் - பிறவற்றையும், தன்ன என்னும் அளவாற்றல் கொள்ள - தனக்கு அமைவன வென்னும் அளவின் வகையால் ஏற்றுக் கொள்ள, தார் வேந்தன் - மாலையை யணிந்த மன்னனுகிய சேரமான்.

(பா - ம்.) *தன்னதென்னும் .

அரசன் யாவற்றையும் கொடுக்கக் கொடுக்க அவையனைத்தையும் கொள்ளாது மறுத்துத் தனக்கு அமையுமளவாகக் கொள்ள வென்க. தன்னம் என்பது பாடமாயின் அரசன் கருத்துக்குச் சிறியவென்று தோன்றுமளவாக என உரைக்க. தன்னம் - சிறுமை. தான், ஏ - அசைகள்.

''பரந்த நிதியின் பரப்பெல்லாம் பாண னார்பத் திரனார்க்கு
நிரந்த தனங்கள் வெவ்வேறு நிரைத்துக் காட்டி மற்றிவையும்
உரந்தங் கியவெங் கரிபரிகண் முதலா வுயிருள் ளனதனமும்
புரந்த வரசுங் கொள்ளுமென மொழிந்தார் பொறையர் புரவலனார்''

''பாண னார்பத் திரனாரும் பைம்பொன் மௌலிச் சேரலனார்
காணக் கொடுத்த விவையெல்லாம் கண்டு மகிழ்வுற் றதிசயித்துப்
பேண வெனக்கு வேண்டுவன வடியேன் கொள்ளப் பின்னுகனார்
ஆணை யரசு மரசுறுப்புங் கைக்கொண் டருளு மெனவிறைஞ்ச''

என்பன திருத்தொண்டர்புராணச் செய்யுட்கள். (உஅ)

பின்னே ழடியோ சேட்சென்று பெருமை சான்ற வரிசையினாற்
றன்னே ரிசையான் றனைவிடுத்து மீண்டா னாகத் தமிழ்மதுரை
மின்னேர் சடையா ரிசைத்தொண்டன் றானுமீண்டு வெயில்விரிக்கும்
பொன்னேர் மௌலி நிதிக்கிழவன் போல மதுரை நகர்புக்கான்.

(இ - ள்.) பின் ஏழ்அடியோ - பின்னே ஏழு அடி தூரமோ (சென்றது), சேண் சென்று - அதிக தூரஞ் சென்று, பெருமை சான்ற வரிசையினால் - பெருமை நிறைந்த சிறப்புடன், தன்நேர் இசையான் தனைவிடுத்து மீண்டானாக - தனக்குத்தானே ஒத்த இசைவல்ல பாணபத்திரனை அனுப்பி மீண்டு வந்தனனாக; தமிழ் மதுரை மின்நேர் சடையார் - தமிழ் வளர்க்கும் மதுரைப்பதியில் எழுந்தருளிய மின்னலை யொத்த சடையினையுடைய சோமசுந்தரக்கடவுளது, இசைத்தொண்டன் தானும் மீண்டு - இசைபாடுந் தொண்டனாகிய பாணத்திரனுந் திரும்பி, வெயில்விரிக்கும் - ஒளிவீசுகின்ற, பொன்ஏர் மௌலிநிதிக் கிழவன் போல - பொன்னாலாகிய அழகிய முடியினையுடைய குபேரன்போல, மதுரைநகர் புக்கான் - மதுரைப்பதியிற் புகுந்தனன்.

தம்மிடம் வந்து செல்லும் பெரியார்கட்கு ஏழடிதூரம் பின் சென்று வழியனுப்புதல் மரபு. சேரலனாரோ அங்ஙனமன்றி ஆரா அன்பினால் நகர்ப்புறங்காறுஞ் சென்று அவர் விடுக்க மீண்டார் என்க.

''பண்பு பெருகும் பெருமாளும் பாணனார்பத் திரனார்பின்
கண்கள் பொழிந்த காதனீர் வழியக் கையாற் றொழுதணைய
நண்பு சிறக்கு மவர்தம்மை நகரின் புறத்து விடைகொண்டு
திண்பொற் புரிசைத் திருமதுரை புக்கார் திருந்து மிசைப்பாணர்''

என்பது பெரியபுராணம் (உக

வந்து மதுரைப் பெருமானை வணங்கிக் கொணர்ந்த நிதியெல்லாம்
இந்து மருமா னகருள்ளார் யாரு மறிய யாவர்க்கும்
முந்தை வேத முதல்வர்க்கும் புலவோர் தமக்கு முறைநல்கிச்
சந்த யாழி னிசைப்பாணர் தரும மனையான் வைகினன்.

(இ - ள்.) சந்தம் யாழின் இசைப்பாணர் தருமம் அனையான் - சந்தமமைந்த யாழின் இசையில் வல்ல பாணர்கள் செய்த அறமே யனைய பத்திரன், வந்து மதுரைப் பெருமானை வணங்கி - வந்து மதுரை நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளை வணங்கி, கொணர்ந்த நிதி எல்லாம் - கொண்டுவந்த பொருள் அனைத்தையும், இந்து மருமான் நகருள்ளார் யாரும் அறிய - சந்திரன் மரபினனாகிய பாண்டியனது நகரில் உள்ளாரனைவரும் அறிய, முந்தை வேதமுதல்வர்க்கும் புலவோர் தமக்கும் - முற்பட்ட மறையினையுணர்ந்த அந்தணர்க்கும் புலவர்களுக்கும், யாவர்க்கும் - இரவலர் முதலிய ஏனை யாவர்க்கும், முறைநல்கி - வரிசையால் அளித்து, வைகினன் - வாழ்ந்து வந்தனன்.

மருமானும் நகருள்ளாரும் என்றுமாம். யாருமறிய என்பதற்கு யாவரும் அறஞ் செய்யு முறைமையை அறிய என்றும் கருத்துக் கொள்க. (௩௦)

ஆகச் செய்யுள் - ௨௧௩௦

நாற்பத்து மூன்றுவது

பலகையிட்ட படலம்

[கொச்சகக்கலிப்பா]

கருந்துழாய் முகிலொருபாற் கலந்தவர்*பத் திரற்குநிதி
திருந்தியா ருதியனிடைத் திருமுகமீந் தளித்ததிது
வருந்தியா ழவனிசைப்ப மழைதூங்கு நள்ளிரவில்
இருந்துபா டெனப்பலகை யிட்டதூஉ மினிப்பகர்வாம்.

(இ - ள்.) கருந்துழாய் முகில் - கரிய துழாய் மாலையை யணிந்த முகில்போன்ற திருமால், ஒருபால் கலந்தவர் - ஒரு பக்கத்திற் பொருந்தப்பெற்ற இறைவர், பத்திரற்கு - பாணபத்திரனுக்கு, திருந்து தார் உதியனிடை - திருத்தமாகிய மாலையை யணிந்த சேரமானிடம், திருமுகம் ஈந்து - திருமுகங் கொடுப்பித்து, நிதி அளித்தது இது - பொருள் அளித்தருளிய திருவிளையாடல் இது; அவன் - அப்பாணபத்திரன், மழை தூங்கும் நள்இரவில் வருந்தி யாழ் இசைப்ப - மழைபொழியும் நடு இரவில் வருந்தி யாழ் இசைபாட, இருந்து பாடு என - இதன்மீது இருந்து பாடுகவென்று, பலகை இட்டதூஉம் - (அப்பெருமானார்) பலகையிட்டருளிய திருவிளையாடலையும் இனிப் பகர்வாம் - இனிக் கூறுவாம்.

இறைவனது ஒரு கூற்றிலே திருமால் இருத்தலை,

"இடமால் வலந்தான்"

என்னும் பொன்வண்ணத்தந்தாதியிற் காண்க.

"அரனுரண னுமம் ஆன்விடைபுள் ளூர்தி
உரைநூல் மறையுறையுங் கோயில் - வரைநீர்
கரும மழிப்பளிப்புக் கையதுவேல் நேமி
உருவமெரி கார்மேனி யொன்று"

என்னும் முதலாழ்வார் பாட்டாலும் பெறப்படுகின்றது. அவன் யாழ் இசைப்ப என இயையும். (க)

முன்புடைய நாயகனை முப்போதும் புகுந்திறைஞ்சி
இன்புறமே ழிசைக்கிழவ னிருநிதிய மருளியபின்
அன்புசிறந் தறையிரவு மடைந்துபணிந் தடல்விடையின்
பின்புறநின் றேழிசையும் பாடிவரும் பேறடைவான்.

(பா - ம்) * கரந்தவர்.

(இ - ள்.) உடைய நாயகனை - தம்மை ஆள்ாகவுடைய சோம சுந்தரக் கடவுளை, முன்பு - முன்னமே, முப்போதும் புகுந்து இறைஞ்சி - மூன்று காலங்களினும் சென்று வணங்கி, இன்புறும் ஏழ் இசைக் கிழவன் - இன்பமிகும் பாணபத்திரன், இருநிதியம் அருளியபின் - பெருஞ்செல்வத்தை அருளிய பின்னர், அன்பு சிறந்து - அன்புமிகுந்து, அரையிரவும் அடைந்து பணிந்து - நடுயாமத்திலுஞ் சென்று வணங்கி, அடல்விடையின் பின்புறம் நின்று - வெற்றி பொருந்திய திருநந்தி தேவரின் பின்புறத்தில் நின்றுகொண்டு, ஏழ் இசையும் பாடிவரும் பேறு அடைவான் - ஏழிசைகளையும் பாடி வருதலாகிய பயனை அடைவான்.

நிதியம் அளிப்பதற்குமுன் காலை நண்பகல் மாலை என்னும் முப் பொழுதும் சென்றிறைஞ்சி வந்தவன் நிதியம் அளித்தபின் ஆரா அன் பினால் அரையிரவிலும் சென்று பணிந்து பாடுவானாயினன் என்க. முன்புடைய என்று கொண்டு எல்லாவல்லமையுமுடைய என்றும், முன்னமே தன்னை ஆளாகவுடைய என்றும் உரைப்பாருமுளர். (உ)

தொழுந்தகையன் பருந்தேவர் தொகுதிகளுந் தொழத்திங்கட்
கொழுந்தலைய நதியலையக் குனிக்கின்ற தனிக்கடவுள்
செழுந்தரளச் சிவிகையின்மேற் றேவிதிருப் பள்ளியறைக்
கெழுந்தருளும் போதுபணிந் தேத்துவா னோரிரவில்.

(இ - ள்.) தொழும் தகை அன்பரும் - யாவரும் வணங்குந் தகுதி யுடைய அடியார்களும், தேவர் தொகுதிகளும் - தேவர் குழாங்களும், தொழ - வணங்கவும், திங்கள் கொழுந்து அலைய - பிறைச் சந்திரன் ஒரு பால் அலையவும், நதி அலைய - கங்கை ஒருபால் அலையவும், குனிக்கின்ற - வெள்ளிமன்றுள் ஆடியருளும், தனிக்கடவுள் - ஒப்பற்ற இறைவன், செழுந்தரளச் சிவிகையின்மேல் - செழிய முத்துவிமானத்தின்மேல், தேவி திருப்பள்ளியறைக்கு - உமையம்மையாரின் திருப்பள்ளியறைக்கு, எழுந்தருளும்போது - எழுந்தருளும் நடுயாமத்தில், பணிந்து ஏத்துவான் - வணங்கி இசைபாடுவானாயினன் ; ஓர் இரவில் - ஒருநாள் இரவில்.

ஏத்துவான் அங்ஙனம் ஏத்துநாள் ஓர் இரவில் என்க. (௩)

இன்னிசையாழ்ப் பெரும்பாண னெவ்விடையூ றடுத்தாலுந்
தன்னியம நெறியொழுக்கந் தவானென்ப துலகறியப்
பொன்னியலுஞ் சடைமௌலிப் புராணர்திரு விளையாட்டால்
அன்னிலையிற்* கருங்கொண்மூ வார்த்தெழுந்த திசையெல்லாம்.

(இ - ள்.) இன் இசை யாழ்ப் பெரும் பாணன் - இனிய இசை யமைந்த யாழில் வல்ல பெருமையையுடைய பாணபத்திரன், எவ் விடையூறு அடுத்தாலும் - எவ்வகை இடையூறு நேர்ந்தாலும், தன் நியமநெறி ஒழுக்கம் தவான் என்பது உலகு அறிய - தனது கடப்பா டாகிய ஒழுக்க நெறியினின்றுந் தவறான் என்பதை உலகினரனைவரும்

(பா - ம்.) * அந்நிலையில்.

அறியுமாறு, பொன் இயலும் சடைமௌலிப் புராணர் திருவிளையாட்டால் - பொன்போன்ற சிவந்த சடைமுடியையுடைய பழம்பொருளாயுள்ள சோமசுந்தரக்கடவுளின் திருவிளையாட்டினல், அந்நிலையில் - இருள் மிக்க அப்பொழுதில், திசையெல்லாம் - எட்டுத்திக்குகளிலும், கருங்கொண்மூ ஆர்த்து எழுந்த - கரிய முகில்கள் முழங்கி எழுந்தன.

தவான் - கெடான். உலகறியும்படி திருவுளங்கொண்ட புராணர் திருவிளையாட்டால் என விரிக்க. அன்னிலையில் - ஓர் இரவின் இருளில். அந்நிலையில் எனப் பாடங்கொண்டு பத்திரன் புறப்படும் பொழுதில் என்றுரைத்தலுமாம். (சு)

தடித்துநிரை புடைபரப்பித் தடுமாறித் திசைமயங்கத்
துடித்துவிட வாயரவஞ் சோர்ந்துசுருண் டளையொதுங்க
இடித்துடுவின் கணம்புதைப்ப விருள்கான்று சலபதிமுன்
முடித்திடுவான் வரவிடுத்த* முகிலேழும் வளைந்தவென†.

(இ - ள்.) விடவாய் அரவம் - நஞ்சு பொதிந்த வாயினையுடைய பாம்புகள், துடித்து சோர்ந்து சுருண்டு அளை ஒதுங்க - உடல் துடித்துச் சோர்ந்து சுருண்டு புற்றில் நுழையுமாறு, தடித்து நிரை புடை பரப்பி இடித்து - மின் வரிசைகளைப் பக்கங்களிற் பரப்பி இடித்து, திசை தடுமாறி மயங்க - (உயிர்கள்) திசைதடுமாறி மயங்கும்படி, உடுவின் கணம் புதைப்ப இருள் கான்று - விண்மீன்களின் கூட்டம் புதைபட இருளினைச் சொரிந்து. சலபதி - நீர்க்கடலாகிய வருணன், முன் - முன்னொருநாளில், முடித்திடுவான் வரவிடுத்த முகில் ஏழும் வளைந்த என - (மதுரையை) அழித்தற் பொருட்டு ஏவிய ஏழுமுகில்களும் வளைந்தாற்போல வளைந்து.

தடித்து - மின். தடுமாறி திசைமயங்க என்பதற்கு எட்டுத் திசையில் உள்ளவர்களும் தடுமாறி மயங்க என்றுரைத்தலுமாம். புதைப்ப - புதைபட. சலபதி - வருணன். முடித்திடுவான் : வினையெச்சம். (ஞ)

கருங்கடலை விசும்பெடுத்துக் கவிழ்ப்பதெனை வெண்டாரை
நெருங்கிருளி னிருப்புக்கோ னிரைத்ததென நிறங்கருக
ஒருங்குசோரிந் துள்ளுணரா ருள்ளம்போ லுட்புறம்பு
மருங்கோடுகீழ் மேலென்று தெரியாத மயங்கிருள்வாய்.

(இ - ள்.) வெண்தாரை - வெள்ளிய தாரைகள், நெருங்கு இருளின் - செறிந்த இருளினல். இருப்புக்கோல் நிரைத்தது என நிறம் கருக - இருப்புக் கோல்களை நிரைபட நட்டுவைத்தாற்போல நிறம் கருகித் தோன்ற (அவற்றை), கருங்கடலை விசும்பு எடுத்துக் கவிழ்ப்பது என - கரிய கடல் நீர் முழுதையும் வான் எடுத்துக் கவிழ்ப்பது போல, ஒருங்கு சொரிந்து - சேரப்பொழிதலால், உள் உணரார் உள்ளம்போல் -

(பா - ம்.) * வரவழைத்த. † வளைந்ததென.

ஆன்மாவாகிய தம்மையும் (தலைவனையும்) அறியாதவர்கள் உள்ளம் போல, உள்புறம்பு மருங்கொடு கீழ் மேல் என்று தெரியாத - உள்ளென்றும் வெளியென்றும் பக்கமென்றும் கீழென்றும் மேலென்றும் அறியலாகாத, மயங்கு இருள்வாய் - மயங்கிய இருளின்கண்.

தாரைகள் வெண்ணிற முடையன வாயினும் இருளின் செறிவாற் கருகின என்றார்.

> ''விசும்புற வெள்ளிவெண்
> கோல் நிரைத்தன போற்கொழுந் தாரைகள்''

என்று திருத்தக்க தேவரும்,

> ''வான், வெள்ளிவீழிடை வீழ்த்தெனத் தாரைகள்''

என்று கம்பரும் கூறுவன காண்க. உள் - உள்ளம் : ஆன்மா. (௬)

> மாமாரி யிடைநனைந்து வருவானம் மாரிதனைப்
> பூமாரி யெனநினைந்து திருக்கோயில் புகுந்தெய்திக்
> காமாரி தனைப்பணிந்து கருணைமா ரியினனைந்து
> தேமாரி பொழிவதெனத் தெள்விளியாழ் வாசிப்பான்.

(இ - ள்.) மாமாரி இடை நனைந்து வருவான் - அந்தப் பெரு மழையில் நனைந்து வருவானாகிய பாணபத்திரன், அம்மாரிதனைப் பூமாரி என நினைந்து - அம் மழையை மலர் மழையெனக் கருதி, திருக்கோயில் புகுந்து எய்தி - திருக்கோயிலுட் சென்று புகுந்து, காமாரிதனைப் பணிந்து - சோமசுந்தரக் கடவுளை வணங்கி, கருணைமாரியில் நனைந்து - (அப்பெருமானது) அருள் மழையில் நனைந்து, தேம்மாரி பொழிவது என - தேன்மழை பொழிவதுபோல. தெள்விளி யாழ் வாசிப்பான் - இசை யமைந்த யாழினை வாசிப்பானாயினன்.

ஓரிரவில் மயங்கிருள்வாய் நனைந்து வருவான் என்க. மழையில் நனைதலால் வருந்துதலன்றி உவகையுடன் சென்றனன் என்பார் 'பூமாரியென நினைந்து' என்றார். காமாரி - காமனை யெரித்தவன் : தீர்க்க சந்தி. தெள்விளி - ஒரு பண் ; தெளிந்த இசையென்றும் உரைப்பர். (எ)

> விடைக்கடவுள் பின்னின்று வீணையிடத் தோள்கிடத்திப்
> புடைத்துநரம் பெறிந்துமிடற் றேலிபோக்கிப் பொலங்கொன்றைச்
> சடைக்கடவுள் செவிவழிபோ யருட்பைங்கூழ் தலையெடுப்பத்
> தொடைத்தமிழி னிசைப்பாணிச் சுவையமுத மடைதிறந்து.

(இ - ள்.) விடைக்கடவுள் பின் நின்று - இடப தேவரின் பின்னே நின்று, வீணை இடத்தோள் கிடத்தி - யாழினை இடது தோளில் அணைத்து, நரம்பு புடைத்து எறிந்து - நரப்பை அமுக்கித் தெறித்து,

மிடற்று ஒலி போக்கி - மிடற்றின் ஒலியை எழுப்பி, தமிழின் தொடை இசைப்பாணி - தமிழினல் தொடுக்கப்பட்ட இசைப்பாட்டாகிய, சுவை அமுதம் மடை திறந்து-சுவைமிக்க அமிழ்தம் மடை யுடைத்து, பொலம் கொன்றைச் சடைக் கடவுள் - பொன் போன்ற கொன்றை மாலையை யணிந்த சடையை யுடைய சோமசுந்தரக் கடவுளின், செவி வழி போய்-செவியாகிய கால் வழியாகச் சென்று பாய்தலால், அருள் பைங்கூழ் தலையெடுப்ப - திருவருளாகிய பயிர் ஓங்கும்படி. (அ)

நரம்புநனைந் திசைமழுங்க நனைந்துடலம் பனிப்பவிசை
வரம்பொழுகு விரன்மிறைத்து வலிவாங்க மயிர்சிலிர்ப்ப*
நிரம்பியசே றடிபுதைப்ப நின்றுநிறை யன்பிசையாய்
அரும்புதல்போ லென்புருக்கு மமுதவிசை பாடுமால்.

(இ - ள்.) நரம்பு நனைந்து இசைமழுங்க - யாழின் நரம்பு நனைந்து சுருதி குறையவும், உடலம் நனைந்து பனிப்ப - உடம்பு நனைந்து நடுங்கவும், இசை வரம்பு ஒழுகு விரல் - (குரல் முதலிய) இசையினெல்லை கடவாது போக்கு வரவு செய்யும் விரல்கள், மிறைத்து வலிவாங்க - விறைத்து வலிகொள்ளவும், மயிர் சிலிர்ப்ப - (குளிரால்) மயிர் சிலிர்க்கவும், நிரம்பிய சேறு அடி புதைப்ப - நிரம்பிய சேறு அடிகளை மூடவும், நின்று - (பெயராது) நின்று, நிறை அன்பு இசையாய் அரும்புதல் போல் - நிறைந்த அன்பே இசை மயமாய் வெளிப்படுதல் போல, என்பு உருக்கும் அமுத இசைபாடும் - எலும்பினையும் உருக்குகின்ற அமுதம் போன்ற இசையினைப் பாடுவானாயினன்.

மழையால் இவை நிகழவும் நிறைந்த அன்பினல் இடம் பெயராது நின்று அருட் பைங்கூழ் தலையெடுப்ப இசைபாடும் என்க. ஆல்: அசை. (க)

[இடைமடக்கி வந்த கொச்சகவொருபோகு]

மாதர் நகையாய் மதுரேச ருண்பலிக்கெம் மனைவாய் வந்து
காதன் முகத்தரும்பிக் காட்டியென் சிந்தை கவர்ந்தார் போலுங்
காதன் முகத்தரும்பக் கையறவு தீரக் கலப்பேன் பாதி
பேதையுரு வாயிருந்தார் நாணிவிழித் தாவி பிழைத்தேன் போலும்.

(இ - ள்.) மாதர் நகையாய் - அழகிய பல் வரிசைகளையுடைய தோழியே, மதுரேசர் உண் பலிக்கு-மதுரையில் எழுந்தருளிய இறைவர் உண்ணும் பலியின் பொருட்டு, எம்மனைவாய் வந்து - எமது மனையின் கண் வந்து, முகத்து காதல் அரும்பிக் காட்டி - முகத்தின் கண் காதற்குறியை வெளிப்படுத்திக் காட்டி, என் சிந்தை கவர்ந்தார் போலும் - எனது உள்ளத்தைக் கொள்ளைக்கொண்டனர் போலும்; காதல் முகத்து அரும்ப - அங்ஙனம் காதற் குறிப்பு முகத்திலே தோன்ற, கையறவு தீரக் கலப்பேன் - காமநோய் தீருமாறு கலக்கத் தொடங்கினேன்; பாதி பேதை உருவாய் இருந்தார் - ஒரு கூறு பெண்

(பா - ம்.) * மயிர் சிலும்ப.

வடிவா யிருந்தனர் (அதனால் அது நீங்கி) நாணி விழித்து ஆவி பிழைத் தேன் போலும் - வெள்கி விழித்து உயிர் பிழைத்தேன் போலும்.

கனவின் கண், பலிக்குவந்த இறைவர்மேற் காதலுற்றாளொருத்தி அதனைத் தன் தோழிக்குக் கூறுவது பொருளாகக் கொண்ட இது முதலிய மூன்றும் பாணனார் பாடிய இசைப்பாட்டாக ஆசிரியர் இயற் றியன வென்க. கையறவு - துன்பம்; காம நோய். போலும் என் பன ஒப்பில் போலி. (௧௦)

ஒண்ணுதலாய் வெண்டலைகோண் டுண்பலிக்கு நம்மனையி னூடே கூடற்
கண்ணுதலா ருள்ளாளக் கானமிசைத் தென்னுள்ளங் கவர்ந்தார் போலுங்
கண்ணுதலார் பாடு மவிநயங்கண் டாகங் கலப்பேன் பாதி
பெண்ணுருவ மாயிருந்தார் வெள்கிவிழித் தாவி பெற்றேன் போலும்.

(இ - ள்.) ஒள் நுதலாய் - ஒள்ளிய நெற்றியினையுடைய தோழியே, வெண்தலை கொண்டு - வெள்ளிய தலையோட்டினை ஏந்தி, உண் பலிக்கு - உண்ணும் பலியின் பொருட்டு நம்மனையின் ஊடே - நமது இல்லின் கண் (வந்து), கூடல் கண்ணுதலார் - கூடலில் எழுந்தருளிய நெற்றிக் கண்ணையுடைய இறைவர், உள்ளாளக் கானம் இசைத்து - உள்ளாள இசை பாடி, என் உள்ளம் கவர்ந்தார் போலும் - எனது சிந்தையைக் கொள்ளை கொண்டார் போலும், கண்ணுதலார் பாடும் அவிநயம் கண்டு - அவர் பாடும் இன்பச் சுவையவிநயத்தைக் கண்டு, ஆகம் கலப் பேன் - அவரது திருமார்பிற் கலக்கத் தொடங்கினேன், பாதி பெண் உருவமாய் இருந்தார் - ஒரு கூறு பெண் வடிவமாயிருந்தனர்; வெள்கி விழித்து ஆவி பெற்றேன் போலும் - (அதனால்) நாணி (அக்கலவி ஒழிந்து) விழித்து நீங்கி உயிர் பெற்றேன் போலும்.

உள்ளாளம் இன்னதென்பது முன் கூறப்பட்டது. அவிநயம் - காம அவிநயம்; இதன் இயல்பினை,

> "காம வவிநயம் கருதுங் காலைத்
> தூவுள் ளுறுத்த வடிவுந் தொழிலும்
> காரிகை கலந்த கடைக்கணுங் கவின்பெறு
> மூரன் முறுவல் சிறுநிலா வரும்பலும்
> மலர்ந்த முகனும் இரந்தமன் கிளவியும்
> கலந்தன பிறவுங் கடைப்பிடித் தனரே"

என்பதனால் அறிக. (௧௧)

ஐயரியுண் கண்ணாய் திருவால வாயுடையா ரையங் கோள்வான்
மையனகை செய்தென் வனமுலையின் மேற்செங்கை வைத்தார் போலும்
மையனகை செய்தென் வனமுலைமேற் கைவைப்ப மாழ்கிச் சோர்வேன்
தையலிடங் கண்டு நடுநடுங்கி விழித்தாவி தரித்தேன் போலும்.

(இ - ள்.) ஐ அரி உண் கண்ணாய் - அழகிய செவ்வரி படர்ந்த மையுண்ட கண்களை உடைய தோழியே, திருவாலவாய் உடையார் -

திருவாலவாயினையுடைய சோமசுந்தரக்கடவுள், ஐயம் கொள்வான் - பலி ஏற்கும் பொருட்டு (எம்மில்லில் வந்து), மையல் நகை செய்து - காமக்குறிப்புடன் நகைத்து, என் வனம் முலைமேல் - எனது அழகிய கொங்கையின்மேல், செங்கை வைத்தார் போலும் - தமது சிவந்த திருக்கரத்தை வைத்தனர் போலும்; மையல் நகை செய்து என்வனம் முலைமேல் கை வைப்ப - அவர் அங்ஙனம் செய்ய, மாழ்கிச் சோர்வேன் - மயங்கிச் சோர்வேனாகிய யான், தையல் இடம் கண்டு - ஒரு பெண்ணை அவரது இடப்பாகத்திற்கண்டு, நடு நடுங்கி விழித்து ஆவி தரித்தேன் போலும் - துணுக்குற்று விழித்து உயிர்தரித்தேன் போலும்.

வனம்-சந்தனக்கோலமுமாம். மாழ்கிச் சோர்வேன் என்றது நானும் அவரைக் கூடுதலுற்றேன் என்னும் பொருட்டு, இவை மூன்றிலும் 'போலும்!' எனச் சிறிது ஐயறவு தோன்றக் கூறுதலானும், விழித்து என்பதனாலும் இவை கனவு நிலையுரைத்தல் என்பது பெறப்படும். விறகு விற்ற படலத்தில் இறைவர் பாடியனவாகவுள்ள பாட்டுக்களிற் போலவே ஈண்டும் மதுரையுங் கூடலும் ஆலவாயும் முறையே கூறப்பட்டன. இவற்றில் முறையே காதல் முகத்தரும்பி என்றும், கான மிசைத்து என்றும், செங்கை வைத்து என்றும், கூறியிருப்பன பக்குவ மெய்திய ஆன்மாவுக்கு ஆசானாக வந்து அருள் செய்யும் இறைவன் பாவனையானும் வாசகத்தானும் பரிசத்தானும் புரியும் தீக்கைகளைக் குறிப்பின் உணர்த்துவனவாதல் காண்க. இதற்குப் பலி என்றது உடல் பொருள் ஆவிகளைக் கொள்ளுதல் ஆகும். (கஉ)

அறுசீரடி யாசிரிய விருத்தம்

பாடுவா ரிருவர்க் கன்று பரிசிலாக் கொடுத்த சங்கத்
தோடுவார் செவியி லூட்டுந் தொண்டுகண் டிதன்மே னின்று
பாடுவா யுனக்கே யிந்தப் பலகையென் றாழ்ந்த வன்பின்
நாடுவார் விசும்பிற் கூறி நவமணிப் பலகை யிட்டார்.

(இ - ள்.) பாடுவார் இருவர்க்கு - இசை பாடும் இருவர்க்கு, அன்று பரிசிலாக் கொடுத்த - அந்நாளிற் பரிசிலாகக் கொடுத்தருளிய, சங்கத்தோடுவார் செவியில் - சங்கத்தோட்டினையணிந்த நீண்ட திருச்செவிகளில், ஊட்டும் தொண்டு கண்டு - இசையை ஊட்டும் திருத்தொண்டினைக் கண்டருளி, இதன்மேல் நின்று பாடுவாய் - நீ இந்தப் பலகைமேல் நின்று பாடக் கடவை, இந்தப் பலகை உனக்கே என்று - இஃது உனக்கே உரியது என்று, ஆழ்ந்த அன்பின் நாடுவார் - அழுந்திய அன்பினாலே நாடி அறியப்படுபவராகிய இறைவர், விசும்பில் கூறி - வானிலே அசரீரியாகக் கூறியருளி, நவமணிப்பலகை இட்டார் - நவமணியிழைத்த பலகையொன்று இட்டார்.

இருவர் - ஆகா, ஊகூ என்னும் கந்தருவர்கள். இவர்கள் பாட்டிற்குப் பரிசிலாக என்றும் இவர்கள் தோட்டின் வடிவாக விருந்து பாடும்படி தமது திருச்செவியைக் காணியாக அளித்தருளினர் என்க. அங்ஙனம் பாடுவார்க்குத் திருச்செவியையே இடமாக அளித்தவர் இன்று பாணர் சேற்றிலே கால்புதைய நின்று பாடுதலைப் பார்த்தும்

தரித்திரார் என்பது தோன்ற 'பரிசிலாக் கொடுத்த செவியிலூட்டும் தொண்டு கண்டு பலகை யிட்டார்' என்றார். (கக)

இறையரு ளாணை யஞ்சி யிட்டபொற் பலகை யேறி
நறைகெழு மதுர கீதம் பாடிநான் மறைகள் சூடும்
அறைகழ லகத்துட் கொண்டு பலகையு மங்கை கொண்டு
மறைவழி யாழ்வல் லோன்றன் மனைவயிற் செல்லு மெல்லை.

(இ - ள்.) இறை அருள் ஆணை அஞ்சி - இறைவன் அருளிய ஆணையை (மறுத்தற்கு) அஞ்சி, இட்ட பொன்பலகை ஏறி - அவன் இட்டருளிய பொன்னாலாகிய பலகையில் ஏறி, நறை மதுரம் கெழு கீதம் பாடி - தேனின் சுவை பொருந்திய இசையினைப் பாடி, நான்மறைகள் சூடும் - நான்கு வேதங்களும் முடியிற் சூடிய, அறைகழல் அகத்துள் கொண்டு - ஒலிக்கின்ற வீரக்கழல் அணிந்த திருவடியை உள்ளத்திற் கொண்டு, பலகையும் அங்கை கொண்டு - அப்பலகையையும் கையிலேந்தி, மறைவழி யாழ் வல்லோன் - இசை நூலின் வழியே யாழ் வாசித்தலில் வல்லவனாகிய பாணபத்திரன், தன் மனையில் செல்லும் எல்லை - தனது இல்லிற்குச் செல்லும் பொழுது.

இசை நூலும் மறை எனப்படுதலை,

"நரம்பின் மறைய வென்மனார் புலவர்"

என்று தொல்காப்பியர் கூறுதலானறிக. (கச)

மின்னுமா மேக நீங்கி விசும்புவாய் விளங்கித் தென்றல்
மன்னுமா மலய மேய மாதவன் குடித்த வைகற்
பொன்னுமா மணியு முத்தும் புலப்படக் கிடந்த வேலை
என்னமீன் விளங்கித் தோன்ற வேகியில் புகுந்தா னிப்பால்,

(இ - ள்.) தென்றல் மன்னும் மாமலயம் மேய - தென்றற் காற்று நிலை பெற்ற பெரிய பொதியின் மனையிற்றங்கிய, மாதவன் குடித்த வைகல்-பெரிய தவத்தினையுடைய அகத்திய முனிவன் பருகிய ஞான்று, வேலை - கடலின்கண். பொன்னும் மாமணியும் முத்தும் புலப்படக் கிடந்த என்ன - பொன்னும் சிறந்த மணிகளும் முத்தும் வெளிப்படக் கிடந்தாற்போல, மின்னும் மாமேகம் நீங்கி-மின்னுகின்ற கரிய முகில்கள் நீங்கப்பெற்று, விசும்புவாய் விளங்கி-வானம் விளக்க முறுதலால், மீன் விளங்கித் தோன்ற-விண் மீன்கள் புலப்பட்டுத் தோன்றா நிற்க, ஏகி இல்புகுந்தான்-சென்று வீட்டிற் புகுந்தனன் ; இப்பால் : பின்பு.

விசும்புவாய் - வானின் இடம். விளங்கி - காரணப்பொருட்டாய செய்தெனெச்சம். வேலையிற் புலப்படக் கிடந்தவென்ன விசும்பிலே விளங்கித்தோன்ற என்க. மேக நீங்கி விசும்பிற்கு நீர்வற்றந்த கடலும், விண்மீன்களுக்குப் பொன் முதலியவும் உவமம். (கரு)

[பா - ம்.) *மலையின்மேய.

பாயிருட் படலங் கீண்டு பரிதிகண் விழித்துச் செங்கை
ஆயிரம் பரப்பி முந்நீ ரலைகட னீந்து மெல்லை
மாயிரு ஞாலங் காக்கும் வரகுண னிரவு தங்கள்
நாயகன் பாடற் கீந்த நல்லருட் பரிசில் கேட்டான்.

(இ - ள்.) பரிதி கண் விழித்து - சூரியன் கண் விழித்து, பாய் இருள் படலம் கிண்டு - பரந்த இருட்கூட்டத்தைக் கிழித்து, செங்கை ஆயிரம் பரப்பி - சிவந்த கிரணமாகிய ஆயிரங் கரங்களையும் விரித்து, முந் நீர் அலைகடல் நீந்தும் எல்லை - மூன்று நீர்களையுடைய அலைக்கின்ற கிழைக் கடலை நீந்தும்பொழுது, மா இரு ஞாலம் காக்கும் வரகுணன் - மிகப்பெரிய நிலவுலகினைப் புரக்கும் வரகுண பாண்டியன், இரவு - இராப்போதில், தங்கள் நாயகன் - தங்கள் குலதெய்வமாகிய சோம சுந்தரக்கடவுள், பாடற்கு ஈந்த நல் அருள் பரிசில் கேட்டான் - பத்திரனது பாடலுக்கு அளித்தருளிய நல்ல அருட்கொடையைக் கேட்டறிந்தனன்.

உதித்தலைக் கண் விழித்து என்றும், இருளை யோட்டுதலை இருட்படலங் கிண்டு என்றும், கதிர் வீசுதலைச் செங்கை பரப்பி என்றும், கிழைக்கடலைத் தாண்டி வருதலைக் கடல் நீந்தும் என்றும் கூறியது குணவணி. கிண்டு: கிழ்நீது என்பதன் மரூஉ. நீரில் நீந்துவார் கை பரப்புதல் இயல்பாகலின் அதற்கேற்ப, 'செங்கையாயிரம் பரப்பி முந் நீரலைகட னீந்து மெல்லை' என்றார். மாயிரு, உரிச்சொல்லாகலின் யகரம் வந்தது. அருட்பரிசில் - அருளாகிய பரிசில்; அருளால் அளித்த பரிசில். (கசு)

இன்னிசைக் கரசை யிட்ட பலகைமீ திருத்தி மன்னர்
மன்னவ னிவனே யெங்கண் மதுரைநா யகனேன் றுன்னி
மின்னிவர் மணிப்பூ ணல்கி விளைநில மிகவு நல்கி
நன்னிதி வெறுப்ப நல்கி வரிசையா னடத்தி* வந்தான்.

(இ - ள்.) இன் இசைக்கு அரசை - இனிய இசைக்கு அரசனாகிய பாணபத்திரனை, இட்ட பலகைமீது இருத்தி - இறைவன் இட்டருளிய அப்பலகைமேல் இருக்கச்செய்து, மன்னர் மன்னவன் - வேந்தர் வேந்தனாகிய வரகுணதேவன், இவனே எங்கள் மதுரை நாயகன் என்று உன்னி - இவனே எங்கள் சோமசுந்தரக்கடவுள் என்று கருதி, மின் இவர் மணிப் பூண் நல்கி - ஒளிபரந்த மணிகள் அழுத்திய அணிகளைக் கொடுத்தும், விளை நிலம் மிகவும் நல்கி - விளை நிலங்களை மிகுதியாகத் தந்தும், நல் நிதி வெறுப்ப நல்கி - நல்ல பொருள்களை (அவன்) உவர்ப்ப அளித்தும், வரிசையால் நடத்தி வந்தான் - முறைமையால் (இங்ஙனமே பல நாளும்) நடத்தி வந்தான்.

சிவனடியாரைச் சிவனெனவே நினைக்க வேண்டுமென்பது உண்மை நூற்றுணிபாகலின் அவனை இறைவனாகவே உன்னினன் என்க. வெறுப்ப - மிக என்றுமாம். (கஎ)

(பாடம்.) * வரிசையா நடத்தி.

[எழுசீரடி யாசிரிய விருத்தம்]

இறையருள் வரிசை பெற்றபத் திரனு மேறுயர்த் தவரைநாற் போதும்
முறையினுல் வழிபட் டொழுகுவா னுக முடிகெழு வரகுண வேந்து
மறைமுத லடிகள் வந்துவந் தனையால் வழுத்துவான் சில்பகல் கழிய
நிறைபெருஞ் சுடரோன் றிருவுரு வடைந்து நெறியினுற் சிவபுர மடைந்தான்.

(இ - ள்.) இறை அருள் வரிசை பெற்ற பத்திரனும் - வரகுண மன்னன் அருளிய வரிசைகளைப் பெற்ற பாணபத்திரனும், ஏறு உயர்த் தவரை - இடபக்கொடியினை யுயர்த்திய சோமசுந்தரக் கடவுளை, நாற்போதும் - நான்கு காலங்களிலும், முறையினுல் வழிபட்டு ஒழுகு வானுக - முறைப்படி வழிபாடு செய்து ஒழுகுவானுக; முடிகெழு வரகுண வேந்து - முடியுடை வேந்தனுகிய வரகுண தேவன், மறை முதல் அடிகள் வந்து வந்தனையால் வழுத்துவான் - வேத முதல்வனுகிய சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளைத் (திருக்கோயிலின்கண்) வந்து வணங்கித் துதிப்பானுகி. சில் பகல் கழிய - சின்னுட்கழிய, நெறியினுல் - முறைமையால், நிறைபெருஞ் சுடரோன் திரு உரு அடைந்து - எங்கும் நிறைந்த பேரொளியாகிய இறைவனது திருவுருவத்தை அடைந்து, சிவபுரம் அடைந்தான் - சிவலோகத்தை அடைந்தான்.

நாற்போது - காலை, நண்பகல், மாலை, நடுயாமம். வந்தனையால் - வணங்குவதோடு: ஆல் ஒடுவின் பொருட்டு. வழுத்துவான்: முற்றெச்சம். திருவுரு - சாரூபம். (கஅ)

ஆகச் செய்யுள் - உகசஅ

நாற்பத்து நான்காவது

இசைவாது வென்ற படலம்

[எண்சீரடி யாசிரிய விருத்தம்]

கூடலம் பதியி லாடக மேருக்
கோடியவிற் குரிசி லடியவ னுக்குப்
பாடலின் பரிசி லாகிய செம்போற்
பலகையிட் டபடி பாடின மன்னுன்
வீடரும் போருவில் கற்புடை யாளோர்
விறலி யைப்பரம னிறையருள் பற்றி
மாட கஞ்சேறியும் யாழ்வழி பாடி
வாது வென்றவர லாறு மிசைப்பாம்.

(இ - ள்.) அம் கூடல் பதியில் - அழகிய மதுரைத் திருநகரில் எழுந்தருளிய, ஆடக மேருக் கொடிய வில்குரிசில் - பொன்மேருவாகிய வளைந்த வில்லையேந்திய சோமசுந்தரக் கடவுள், அடியவனுக்கு - அடியானுகிய பாணபத்திரனுக்கு, பாடலின் பரிசில் ஆகிய - (அவன்) பாடலுக்குப் பரிசிலாக, செம்பொன் பலகை இட்டபடி பாடினம் - சிவந்த பொற்பலகை அருளிய திருவிளையாடலைக் கூறினேம்; அன்னுன் - (இனி) அப் பாணபத்திரனது, வீடு அரும் பொருஇல் கற்பு உடையாள் - அழிதலில்லாத ஒப்பற்ற கற்பினையுடைய மனைவியார், பரமன் நிறை அருள்பற்றி - இறைவனது நிறைந்த திருவருளைப் பற்றுக்கோடாகக் கொண்டு, மாடகம் செறியும் யாழ்வழி பாடி - முறுக்காணி செறிந்த யாழின் வழியே பாடி, ஓர் விறலியை வாது வென்ற வரலாறும் இசைப்பாம் - ஒரு பாடினியை வாதில் வென்ற திருவிளையாடலையுங் கூறுவாம்.

கொடிய - வளைவுடைய; கொடுமை - வளைவு; கோடிய என்பதன் விகாரமுமாம். ஆகிய: செய்யிய வென்னும் வினையெச்சம். (க)

வரகு ணன்கதி யடைந்தபி னம்போன்
மௌலி சூடிய விராசவி ராசப்
புரவ லன்புவி மடந்தையை வேட்டுப்
புயந்த ழீஇக்கோடு நயந்தரு நாளிற்
பரவு மன்பதை புரந்தோழு கந்தப்
பஞ்சவற் கரிய ரஞ்சன வுண்கண்
மரபின் வந்தமட வார்பல ரேனை
மையல் செய்யுமட வார்பலர் மாதோ.

(இ - ள்.) வரகுணன் கதி அடைந்தபின் - வரகுணபாண்டியன் சிவகதி அடைந்தபின், அம்பொன் மௌலி சூடிய - அழகிய பொன்னு லாகிய முடிசூடிய, இராச விராசப் புரவலன் - இராசராச மன்னன் என்பான், புவிமடந்தையை வேட்டுப் புயம் தழீஇக் கொடு - நிலமகளை மணந்து தோளிற் றழுவிக்கொண்டு, நயம் தரும் நாளில் - (குடிகளுக்கு) இன்பமளித்து வரும்பொழுது, பரவும் மன்பதை புரந்து ஒழுகு - பரவிய மக்கட் கூட்டத்தைப் பாதுகாத்தொழுகும், அந்தப் பஞ்சவற்கு உரியர் - அந்தப் பாண்டியனுக்கு உரியராயுள்ளார், அஞ்சன உண் கண் மரபின் வந்த மடவார் பலர் - மையுண்ட கண்களையுடைய தனது மரபில் வந்த மகளிர் பலர்; ஏனை மையல் செய்யும் மடவார் பலர் - மற்றை மயக்கஞ் செய்யுங் காமக்கிழத்தியர் பலர்.

மரபின் வந்த மடவார் - குடிப்பிறந்தவராகிய மனைக்கிழத்தியர். மையல் செய்யு மடவார் - கணிகையருள்ளே காமக்கிழத்தியர். மாது, ஓ: அசைகள். (௨)

அன்ன போகமட வாரு ளொருத்தி
யரச னுக்கமுது மாவியு மாகும்
மின்ன னுண்மதுர கீத மிசைக்கும்
விஞ்சை யின்றுறைவ லாளவ ளுக்கும்
பன்ன காபரண னின்னிசை பாடும்
பத்திரன் பொருவில் கற்புடை யாட்கும்
மன்னு கீதவினை யாலிகன் மூள
வழுதி காதன்மட மாது பொருளாய்.

(இ - ள்.) அன்னபோக மடவாருள் ஒருத்தி - அந்தக் காமக் கிழத்தியருள் ஒருத்தி, அரசனுக்கு அமுதும் ஆவியும் ஆகும் மின்னனாள் - மன்னனுக்கு அமுதும் உயிருமாகிய மின்னலை ஒத்தவள்; மதுரகீதம் இசைக்கும் விஞ்சையின் துறைவலாள் - இனிய இசை பாடும் கல்வியின் துறையில் வல்லவள்; அவளுக்கும் - அம்மாதுக்கும், பன்னக ஆபரணன் இன் இசை பாடும் - பாம்பணியினையுடைய இறைவன்திருமுன் இனிய இசையினைப் பாடுகின்ற, பத்திரன் பொரு இல் கற்பு உடையாட்கும் - பாணபத்திரனது ஒப்பற்ற கற்பினை யுடைய மனைவிக்கும், மன்னுகீத வினையால் - (இன்பம்) நிலைபெற்ற இசைபாடுஞ் செயலால், இகல் மூள - பகை மூள, வழுதி காதல் மடமாது பொருளாய் - பாண்டியனது காதலுக்குரிய இளமையாகிய மாது மனம் பொருதவளாய்.

போக மடவார் - இன்பம் விளைக்கும் காமக்கிழத்தியர். (௩)

பாடி னிக்கெதிரோர் பாடினி தன்னைப்
பாட விட்டிவள் படைத்த செருக்கை
ஈடழிப்பலென வெண்ணி யெழீஇத்தன்
னிறைமகற்கஃ திசைத்தலு மந்தத்

தோடி றப்பொரு கயற்கணி ளுடான்
சொன்ன வாறேழுகு மன்னவர் மன்னன்
நாடி யத்தகைய விறலியை யீழ
நாட்டி னும்வர வழைத்து விடுத்தான்.

(இ - ள்.) பாடினிக்கு எதிர் ஓர் பாடினிதன்னைப் பாடவிட்டு - இந்தப் பாடினிக்கு எதிராக ஒரு பாடினியைப் பாடவிட்டு, இவள் படைத்த செருக்கை ஈடு அழிப்பல் என எண்ணி எழீஇ - இவள் கொண்ட செருக்கினை வலியழிப்பேனென்று கருதி எழுந்து, தன் இறைமகற்கு அஃது இசைத்தலும் - தன் மன்னனுக்கு அச்செய்தியைக் கூறியவளவில், அந்தத் தோடு இறப்பொரு கயல்கணினாள் - தோடு இற்றெழியும்படி போர்புரியுங் கயல்போன்ற கண்ணையுடைய அக் காமக்கிழத்தி, சொன்னவாறு ஒழுகும் மன்னவர் மன்னன் - சொன்னபடி நடக்கும் மன்னர் மன்னனாகிய அப்பாண்டியன், அத்தகைய விறலியை நாடி - அங்ஙனம் பாடி வெல்லுந் தகுதியையுடைய பாடினியை ஆராய்ந்து கண்டு, ஈழ நாட்டினும் வரவழைத்து விடுத்தான் - ஈழ நாட்டினின்றும் வரவழைத்தான்.

ஈடழிப்பல் என்பது ஒரு சொல்லாய் இரண்டாவதற்கு முடிபாயிற்று; ஈடு - வலிமை. எழீஇ; சொல்லிசை யளபெடை. தோடு - காதணி. கண் காதளவோடுதலை இங்ஙனங் கூறினர். நாட்டினும் - நாட்டினின்றும். விடுத்தான், விட்டான் என்பதுபோலத் துணிவுப் பொருளில் வந்தது. (ச)

பந்த யாழ்முதுகு தைவர விட்டுப்
பாட லாயமிரு பக்கமு மொய்ப்ப
வந்த பாடினி மடந்தையு மன்னர்
மன்னனைத் தொழுதோர் கின்னரமாதிற்
சந்த வேழிசைமி ழற்றின ணின்று
டன்னை நோக்கியொரு மின்னிடை யாண்மேற்
சிந்தை போக்கிவரு தீப்பழி நோக்காத்
தென்ன ருக்கரச னின்னது செப்பும்.

(இ - ள்.) பந்தம் யாழ் முதுகு தைவரவிட்டு - கட்டமைந்த யாழ் முதுகினைத் தடவுமாறு தொங்கவிட்டு, பாடல் ஆயம் இருபக்கமும் மொய்ப்ப - பாடும் மகளிர் கூட்டம் இரண்டு பக்கங்களிலும் மொய்ப்ப, வந்த பாடினி மடந்தையும் - வந்த விறலியாகிய மாதும், மன்னர் மன்னனைத் தொழுது - வேந்தர் வேந்தனாகிய பாண்டியனைத் தொழுது, ஓர் கின்னரமாதில் - ஒரு கின்னர மங்கைபோல, சந்த ஏழ் இசை மிழற்றினள் நின்றாள் - பண்ணமைந்த ஏழிசைகளையும் பாடி நின்றனள்; தன்னை நோக்கி - அங்ஙனம் நின்ற அவளை நோக்கி, ஒரு மின் இடையாள்மேல் சிந்தை போக்கி - ஒரு மின்போலும் இடையினையுடையாள் மேல் மனத்தைப் போக்கினமையால், வரு தீப்பழி நோக்கா - மேலே விளையுங் கொடிய பழியினைக் கருதாத, தென்னருக்கு அரசன் - பாண்டி

யருக்கு வேந்தனுகிய இராச ராசன், இது செப்பும் - இதனைச் சொல்லு வான்.

கின்னரர் - இசைபாடும் ஒரு தேவ சாதியார். நின்ருள் அங்ஙனம் நின்றவளை நோக்கி என விரித்துரைக்க. (௯)

பத்தி ரன்மனைவி தன்னையெம் முன்னர்ப்
　　பாடு தற்கழை யதற்கவ ளாற்ரு
துத்த ரஞ்சொலினும் யாமவள் சார்பா
　　யுனைவி லக்கினும் விடாது தொடர்ந்தே
சித்த நாணமுற வஞ்சின மிட்டுச்
　　செல்ல னில்லென வளைந்துகோ ளென்ரு
எய்த்த நுண்ணிடையி ஞளை யிருக்கைக்
　　கேகி நாளைவரு கென்று விடுத்தான்.

(இ - ள்.) பத்திரன் மனைவிதன்னை எம்முன்னர் - பாணபத்திரன் மனைவியை எமது முன்னே, பாடுதற்கு அழை-பாடுதற்கு அழைப்பாயாக, அதற்கு அவள் ஆற்ருது உத்தரம் சொலினும் - அதற்கு அவள் உன்னேடு பாட ஆற்ருமல் வேறு போக்குச் சொல்லினும், யாம் அவள் சார்பாய் உனை விலக்கினும் - யாம் அவள் சார்பாய் இருந்து உன்னைத் தடுத்தாலும், விடாது தொடர்ந்தே-நீ அவளை விடாது பின்பற்றி, சித்தம் நாணம் உற- அவள் மனம் வெள்குமாறு, வஞ்சினம் இட்டு - சூளுறவுசெய்து, செல்லல் நில் என வளைந்துகொள் என்ரு - செல்லாதே நில் என்று வளைந்து கொள்வாயாக என்று கூறி, எய்த்த நுண் இடையினுளை - இளைத்த நுண்ணிய இடையினையுடைய அப்பாடினியை, இருக்கைக்கு ஏகி நாளை வருக என்று விடுத்தான் - இருப்பிடஞ் சென்று நாளை வரக்கடவாய் என்று அனுப்பினன்.

செல்லல் - செல்லாதே; அல் விகுதி எதிர் மறையில் வந்தது. வருகென்று: அகரந் தொக்கது. (௰)

[கலிநிலைத்துறை]

பின்ன ரின்னிசைப் பத்திரன் பெருந்தகை விறலி
தன்னை யங்கழைத் துளத்தொன்று புறத்தொன்று சாற்றும்
என்னே டின்னிசை பாடுவா ருளர்கொலோ விங்கென்
றுன்னி வந்திருக் கின்றன ளிசைவலா ளொருத்தி.

(இ - ள்.) பின்னர் - பின்பு, இன் இசைப் பத்திரன் பெருந்தகை விறலிதன்னை - இனிய இசைபாடுதலில் வல்ல பாணபத்திரன் மனைவி யாகிய மிக்க கற்பினையுடைய பாடினியை, அங்கு அழைத்து - தன்முன் அழைத்து, உளத்து ஒன்று புறத்து ஒன்று சாற்றும் - அகத்தொன்றும் புறத்தொன்றுமாகக் கூறுகின்ருன்; இசைவலாள் ஒருத்தி - இசையில் வல்ல ஒரு பெண், உன்னி - தன்னை நன்கு மதித்தலையால், இங்கு

என்னொடு இன் இசை பாடுவார் - இங்கு என்னுடன் இனிய இசை பாடுகின்றவர், உளர்கொலோ என்று வந்திருக்கின்றனள் - உளரோ என்று சொல்லிக்கொண்டு வந்திருக்கின்றனள்.

தகை-ஈண்டுக் கற்பு. உள்ளத்தில் ஒன்று கருதி வாயால் மற்றொன்று கூறுகின்றான் என்பார் 'உளத்தொன்று புறத்தொன்று சாற்றும்' என்றார். என்னொடு - எனக்கு ஒப்பாக. (எ)

ஆட மைத்தடந் தோளினா யவளோடுங் கூடப்
பாட வல்லையோ பகரெனப் பாடினி பகர்வாள்
கோட ருந்தகைக் கற்புமிக் கூடலெம் பெருமான்
வீட ருங்கரு ணையுமெனக் கிருக்கையால் வேந்தே.

(இ - ள்.) ஆடு அமை தடம் தோளினாய் - அசையும் மூங்கிலை ஒத்த பெரிய தோளினையுடையாய், அவளொடும் கூடப் பாட வல்லையோ - நீ அவளுடன் ஒப்பாக நின்று பாடுதற்கு வலியுடையையோ, பகர் என - கூறுவாயாக என்று வினவ, பாடினி பகர்வாள் - விறலி கூறுவாள்; வேந்தே - அரசே, கோடு அரும் தகைக் கற்பும் - மாறுதலில்லாத பெருமையையுடைய கற்பும், இக்கூடல் எம்பெருமான் - இந்த நான் மாடக்கூடலில் எழுந்தருளிய எம்பெருமானது, வீடு அருங் கருணையும் - அழிதலில்லாத அருளும், எனக்கு இருக்கையால் - எனக்குத் துணையாக இருத்தலினால்.

கூட - ஒப்பாக. கோள்தரும் எனப் பிரித்து உறுதியைத் தருகின்ற என்றுரைத்தலுமாம். (அ)

பாடி வெல்வதே யன்றிநான் பரிபவ மூழந்து
வாடு வேனலே னென்றுரை வழங்கலு மதுக்கால்
ஏடு வார்குழ லவளையு மிருக்கையுய்த் திருந்தான்
நீடு வார்திரைப் பொருநையந் தண்டுறை நிருபன்.

(இ - ள்.) பாடி வெல்வதே அன்றி - அவளொடு பாடி நான் வெற்றி பெறுவதேயல்லாமல், பரிபவம் உழந்து வாடுவேன் அலேன் என்று உரை வழங்கலும் - தோல்வியினால் வருந்தி வாட்டமுறேன் என்று கூறிய அளவில், மதுக்கால் ஏடு வார் குழல் அவளையும் - தேன்பொழியும் மலரிதழை யணிந்த நீண்ட கூந்தலையுடைய அப் பாடினியையும், இருக்கை உய்த்து இருந்தான்-அவள் இருப்பிடத்திற்குப் போகவிடுத்து இருந்தான்; நீடு வார் திரைப்பொருநை அம் தண்துறை நிருபன் - நீண்ட பெரிய அலைகளையுடைய தாமிரபன்னியின் அழகிய தண்ணிய துறைகளையுடைய பாண்டிமன்னன்.

பரிபவம் - துன்பம்; மானக்கேடுமாம். நீடு வார் என்பன ஒரு பொருள் குறித்தன; மிக்க என்றபடி. பாடினி உரை வழங்கலும் நிருபன் அவளையும் உய்த்து இருந்தான் என்க. (கூ)

மற்றை வைகலவ் விருவரைப் பஞ்சவன் மதுரைக்
கோற்ற வன்றன தவையிடை யழைத்துநேர் கூட்டிக்
கற்ற வேழிசை கேட்குமுன் கலத்தினும் போந்த
வெற்றி வேன்மதர் நெடுங்கணுள் விறலியை வைதாள்.

(இ - ள்.) மற்றைவைகல் - மறுநாளில், அவ்விருவரை - அவ்விருவரையும், பஞ்சவன் மதுரைக் கொற்றவன் - பாண்டியனாகிய மதுரை மன்னன், தனது அவையிடை அழைத்து-தன் அவையின்கண் வருவித்து, நேர்கூட்டி - ஒருவருக்கொருவர் நேரில் இருக்குமாறு செய்து, கற்ற ஏழ் இசை கேட்குமுன் - அவர்கள் கற்ற ஏழு இசைகளையும் பாடுமாறு ஏவிக் கேட்டற்கு முன்னரே, கலத்தினும் போந்த - மரக்கலத்தினின்றும் வந்த, வெற்றிவேல் மதர் நெடுங்கணுள் - வெற்றி பொருந்திய வேல் போன்ற மதர்த்த நீண்ட கண்களையுடையவள், விறலியை வைதாள் - பாணபத்திரன் மனைவியாகிய பாடினியை இகழ்ந்துரைத்தாள்.

இருவரையும் என்னும் முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. கலம் - நாவாய். கலத்தினுல் வந்தவளைக் கலத்தினின்றும் வந்தவள் என்றார். (சo)

குற்ற மெத்தனை யெத்தனை குணங்கள் யாழ்க் கோலுக்
குற்ற தெய்வம்யா* விசைப்பதெவ் வுயிருடம் புயிர்மெய்
பெற்ற வோசையெவ் வளவவைக் குத்தரம் பேசி
மற்றெ ஞேடுபா டில்லையேல் வசையுனக் கென்றாள்.

(இ - ள்.) யாழ்க்கோலுக்கு - வீணைக்கு, எத்தனை குற்றம் - எவ்வளவு குற்றங்கள்; எத்தனை குணங்கள் - எவ்வளவு குணங்கள்; உற்ற தெய்வம் யா - பொருந்திய தெய்வங்கள் யாவை; இசைப்பது எவ்வுயிர் உடம்பு உயிர் மெய் - ஒலிப்பது எந்த உயிரெழுத்து எந்த மெய்யெழுத்து எந்த உயிர்மெய்யெழுத்து; பெற்ற ஓசை எவ்வளவு - (அவைகட்கு) அமைந்த ஒலி எவ்வளவின; அவைக்கு உத்தரம் பேசி - அவைகட்கு விடை கூறி, மற்று எனோடு பாடு - பின் என்னுடன் பாடுவாயாக; இல்லையேல் உனக்கு வசை என்றாள் - இன்றேல் உனக்கு அது குற்றமாகும் என்று கூறினாள்.

குற்றம் - செம்பகை, ஆர்ப்பு, கூடம், அதிர்வு என்பன; இவை மரக் குற்றத்தால் வருவன என்பதை,

"நீரிலே நிற்றல் அழுகுதல் வேதல் நில மயங்கும்
பாரிலே நிற்றல் இடிவீழ்தல் நோய்மரப் பாற்படல் கோள்
நேரிலே செம்பகை ஆர்ப்பொடு கூடம் அதிர்வு நிற்றல்
சேரில்நேர் பண்கள் நிரமயக் கம்படுங் சிற்றிடையே"

(பா - ம்.) * தெய்வ மேது.

என்னுஞ் செய்யுளா லறிக. குணங்களாவன: மேற்கூறிய குற்றங்க ளொழிந்த கொன்றை, கருங்காலி முதலிய மரங்களால் இயன்றிருப்பன வாகும்;

"சொல்லிய கொன்றை, கருங்காலி மென்முருக்கு
நல்ல குமிழுந் தணக்குடனே—மெல்லியலாய்
உத்தம மான மரங்க ளிவையென்றார்
வித்தக யாழோர் விதி"

என்பது காண்க. யாழ்க்கோல் - யாழாகிய கோல். தெய்வம் - விசுவா மித்திரன் முதலாகக் கூறுவர். என்னோடு என்பது விகாரமாயிற்று. (௧௧)

இருமை யும்பெறு கற்பினா ளியம்புவாள் கலத்தின்
வரும ரும்பெறற் கல்வியும் வாதின்மே லூக்கப்
பெருமை யும்பலர் விரும்புறு பெண்மையின் செருக்குந்
திரும கன்சபை யறியவாய் திறக்கவேண் டாவோ.

(இ - ள்.) இருமையும் பெறு கற்பினாள் இயம்புவாள் - இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் அடைதற்குரிய கற்பினையுடையாள் கூறுவாள்; கலத்தின் வரும் பெறல் அருங்கல்வியும் - மரக்கலத்தினின்றும் வந்த பெறுதற்கரிய கல்வியினையும், வாதின்மேல் ஊக்கப் பெருமையும் - வாதின்மேற் சென்ற மனவெழுச்சியின் பெருமையினையும், பலர் விரும்புறு பெண்மையின் செருக்கும் - பலரும் விழைகின்ற பெண்ணலத்தின் செருக் கினையும், திருமகன் சபை அறிய - பாண்டியனது அவையிலுள்ளார் அறியு மாறு, வாய் திறக்க வேண்டாவோ - உன் வாயினைத் திறந்து காட்ட வேண்டாமா?

கலத்தின் வருங்கல்வி என உடையாள் தொழில் உடைமை மேல் ஏற்றிக் கூறப்பட்டது. கற்பின் றன்மை வாய்க்கப் பெறுதாள் என்பாள் 'பலர் விரும்புறு பெண்மையின் செருக்கும்' என்றாள். பெண்டிர்க்குரிய நாண் சிறிதுமின்றி அரசவையில் இங்ஙனம் பேசுகின்றாய் என்பாள் 'சபை யறிய வாய்திறக்க வேண்டாவோ' என்று பாடினி கூறினாள் என்க. (௧௨)

நெய்யுண் பூங்குழன் மடவரா னின்னோடும் வாது
செய்யும் பூசலுக் கெதிரலாற் றீயவாய் திறந்து
வையும் பூசலுக் கெதிரலேன் மானம்விற் றுன்போல்
உய்யும் பாவைய ரேயதற் கெதிரென வுரைத்தாள்.

(இ - ள்.) நெய் உண் பூங்குழல் மடவரால் - நெய் பூசிய மலர்களை யணிந்த கூந்தலையுடைய பெண்ணே, நின்னொடும் வாது செய்யும் பூசலுக்கு எதிர் அலால் - நின்னோடும் இசைவாது செய்யும் போருக்கு நான் எதிரே அல்லாமல், தீயவாய் திறந்து வையும் பூசலுக்கு எதிர் அலேன் - கொடிய வாயினைத் திறந்து இகழும் போருக்கு எதிரல்லேன்;

உன்போல் - உன்னைப்போல, மானம் விற்று உய்யும் பாவையரே - மானத்தை விற்றுப் பிழைக்கும் மகளிரே, அதற்கு எதிர் என உரைத்தாள் - அப்பூசலுக்கு எதிராவார் என்று கூறினாள்.

மடவரல் என்பது விளியில் மடவரால் என்றாயது. பூசல் - போர். மானம் விற்று உன்போல் உய்யும் பாவையர் என்றதனால் நீ மானத்தை விற்றுப் பிழைக்க வந்துளாய் என்றவாறாயிற்று. (௧௩)

வென்றி மீனவன் விலக்குவான் போலெதிர் விலக்கித்
துன்று தார்க்குழன் மடந்தைமீர் பாடுமின் றோற்றோர்
வென்ற மாதரார்க் கடிமையாய் விடுவதே சபதம்
என்று மானமுண் டாக்கலு மீழநாட் டரிவை.

(இ - ள்) வென்றி மீனவன் - வெற்றியையுடைய பாண்டியன், விலக்குவான்போல்-விலக்குகின்றவனைப்போல் அவிநயித்து, எதிர் விலக்கி- எதிர் நின்று தடுத்து, துன்று தார்க்குழல் மடந்தைமீர் - நெருங்கிய மாலையை யணிந்த கூந்தலையுடைய மங்கைமீர், பாடுமின் - (நீவிர் இப் பூசலை ஒழித்துப்) பாடுவீர்களாக ; தோற்றோர்-அவ்விசையில் தோற்றவர், வென்ற மாதரார்க்கு அடிமையாய் விடுவதே-வெற்றிபெற்ற மடந்தைக்கு அடிமையாகி விடுவதே, சபதம் என்று மானம் உண்டாக்கலும் - சூளுறவாவது என்று கூறி இருவருக்கும் மானத்தை மூட்டியவளவில், ஈழநாட்டு அரிவை - ஈழ நாட்டினின்றும் போந்த அரிவை.

நடுவு நிலையுடன் அவர்கள் பூசலை விலக்கினானல்லன் என்பார் 'விலக்குவான்போ லெதிர் விலக்கி' என்றார். (௧௪)

முந்தி யாழிடந் தழீஇக்குரல் வழிமுகிழ் விரல்போய்
உந்த வேபெரு மிதநகை யுட்கிடந் தரும்பச்
சந்த வேழிசை யிறைமகன் றாழ்செவிக் கன்பு
வந்த காதலாண் மழலையி னமுதென வார்த்தாள்.

(இ - ள்.) முந்தி - தான் முற்பட்டு, யாழ் இடம் தழீஇ - யாழினை இடத்தோளிற் றழுவி, குரல்வழி முகிழ் விரல் போய் உந்த - குரல் என்னும் நரம்பின்வழியே முகிழ்த்த விரல்சென்று தாக்கவும், பெருமித நகை உள்கிடந்து அரும்ப - பெருமிதத்தை வெளிப்படுத்தும் புன்னகை உள்ளே கிடந்து சிறிது தோன்றவும், சந்த ஏழ்இசை - பண்ணமைந்த ஏழிசைகளையும், இறைமகன் தாழ் செவிக்கு - பாண்டி மன்னனது வார்ந்து நீண்ட காதில், அன்பு வந்த காதலாள் - அன்பு வளர்தற் கேதுவாகிய காதல் காட்டும் அவனது காமக் கிழத்தியின், மழலை இன் அமுது என வார்த்தாள் - இளஞ்சொல்லாகிய இனிய அமுதம் போல வார்க்கினாள்.

அன்புவந்த காதலாள் - அன்பு வளர்தற் கேதுவாகிய காதலைச் செய்பவள் ; காமக்கிழத்தி. காமக்கிழத்தியின் இளஞ்சொற்போலவும் அமுதம்போலவும் எனலுமாம். செவிக்கு - செவிக்கண். (௧௫)

வீணை வாங்கினள் மாடக முறுக்கினள் விசித்து
வாண ரம்பெறிந் திருசெவி மடுத்தன ரியக்கர்
நாண மெல்விர னடைவழி நாவிளை யமுதம்
பாணர் கோமகன் விறலியும் பலர்செவி நிறைத்தாள்.

(இ - ள்.) பாணர் கோமகன் விறலியும் - பாணர் பெருமானாகிய பத்திரன் மனைவியாகிய பாடினியும், வீணை வாங்கினள் மாடகம் முறுக்கினள் - யாழினை எடுத்து மாடகத்தை முறுக்கி, விசித்து வாள் நரம்பு எறிந்து - கட்டமைத்து ஒள்ளிய நரம்பினைத் தாக்கி, இயக்கர் இருசெவி மடுத்தனர் நாண - இயக்கர்களும் இரண்டு செவிகளினுங் கேட்டு வெள்க, மெல்விரல் நடைவழி - மெல்லிய விரல் நடத்துதலா லுண்டாகும் ஓசையின் வழியே, நாவிளை அமுதம் - தனது நாவால் விளைக்கும் இசை யமுதத்தை, பலர் செவி நிறைத்தாள் - பலர் செவிகளிலும் நிரப்பினாள்.

வாங்கினள், முறுக்கினள், மடுத்தனர் என்பன முற்றெச்சம். விரல் நடைவழி நாவிளை அமுதம் - யாழினிசையோடு பொருந்த மிடற்றாற் பாடும் இசை. விறலியும் வாங்கி முறுக்கி விசித்து எறிந்து நாண அமுதம் நிறைத்தாள் என வினைமுடிக்க. விறலியும் என்னும் உம்மை இறந்தது தழுவிய எச்சப் பொருட்டு. (கசு)

அரச னுட்கிடை யறிந்தில ரவைக்களத் துள்ளார்
விரைசெய் வார்குழற் பாடினி பாடலை வியந்தார்
புரைசை மானிரைப் பூழிய னிலங்கையிற் போந்த
வரைசெய் குங்குமக் கொங்கையாள் பாடலை மகிழ்ந்தான்.

(இ - ள்.) அவைக் களத்து உள்ளார் - அவையிலுள்ள அனைவரும், அரசன் உட்கிடை அறிந்திலர் - மன்னனது மனக்கருத்தை யறியாது, விரைசெய் வார்குழல் பாடினி பாடலை வியந்தார் - மணங் கமழ்கின்ற நீண்ட கூந்தலையுடைய விறலியின் பாடலைக் கொண்டாடினார்; புரைசை மான் நிரைப் பூழியன் - கழுத்துக் கயிற்றினை யுடைய யானைக் கூட்டங்களையுடைய பாண்டியன், இலங்கையில் போந்த - இலங்கையி னின்றும் வந்த, வரைசெய் குங்குமக் கொங்கையாள் பாடலை மகிழ்ந்தான் - மலையை ஒத்த குங்குமக் குழம்பணிந்த கொங்கையை யுடைய ஈழப் பாடினியின் பாடலைப் பாராட்டினான்.

அறிந்திலர்: முற்றெச்சம். புரைசை; இடைப்போலி. புரசை - யானைக்கழுத்திடு கயிறு. வரைசெய், செய்: உவமப்பொருட்டு. (கஎ)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

தென்னவ னுட்கோ ளெல்லை தெரிந்தன ரவையத் துள்ளார்
அன்னவன் புகழ்ந்த வாறே புகழ்ந்தன ரவளைத் தானே
முன்னவ னருளைப் பெற்று மும்மையுந் துறந்தோ ரேனும்
மன்னவன் சொன்ன வாறே சொல்வது வழக்கா றன்றே.

(இ - ள்.) அவையத்துள்ளார் - அவையிலுள்ளவர்கள், தென்னவன் உட்கோள் எல்லே தெரிந்தனர்-பாண்டியன் உள்ளக்கிடையின் முடிவைத் தெரிந்து, அன்னவன் புகழ்ந்தவாறே - அவன் புகழ்ந்த வண்ணமே, அவளைத் தானே புகழ்ந்தனர் - அவ்விழப் பாடினியின் பாடலையே புகழ்ந்தார்கள் ; முன்னவன் அருளைப் பெற்று - இறைவனது திருவருளைப் பெற்று, மும்மையும் துறந்தோரேனும் - மூவாசைகளையுந் துறந்த பெரியாராயினும், மன்னவன் சொன்னவாறே சொல்வது வழக்காறு அன்றோ - அரசன் கூறியவாறே கூறுவது வழக்காறு அல்லவா.

மும்மை - மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்னும் மூவாசைகள். மன்னவன் சொன்னவாறே சொல்வது வழக்காறு என்பதனை,

> "இகழி னிகழ்ந்தாங் கிறைமக னென்று
> புகழினு மொக்கப் புகழ்ப"

என்பதனாலு மறிக. தெரிந்தனர் : முற்றெச்சம். தான் : ஏ, அசைகள். இச்செய்யுள் வேற்றுப்பொருள்வைப்பணி. (கஅ)

> பொன்றளி ரனையாண் மையற் புதுமது நுகர்ந்து தீது
> நன்றறி யாத கன்னி நாடவ னவையை நோக்கி
> இன்றொரு நாளிற் றேரத் தக்கதோ விதுவென் றந்த
> வென்றடு வேற்க ணாரைப் போமென விடுத்தான் மன்னோ.

(இ - ள்.) பொன் தளிர் அனையாள் - பொன் தளிர்த்தாலொத்த மேனியை யுடைய காமக்கிழத்தி மேல்வைத்த, மையல் புதுமது நுகர்ந்து - காமமாகிய புதிய நறவினைப் பருகியதால், தீது நன்று அறியாத கன்னி நாடவன் - தீமையையும் நன்மையையும் அறியமாட்டாத கன்னி நாட்டினையுடைய பாண்டியன் அவையை நோக்கி - அவையிலுள்ளாரைப் பார்த்து, இது - இவ்விசை வாதின் முடிபு, இன்று ஒரு நாளில் - இன்று ஒரே நாளில், தேரத்தக்கதோ என்று - ஆராய்ந்தறியத் தக்கதோ என்று கூறி, அந்த வென்று அடுவேல் கணாரை - வென்று பகைவரைக் கொல்லும் வேல்போன்ற கண்களையுடைய இம்மடவார்களை, போம் என விடுத்தான் - இருக்கைக்குப் போவீராக என்று அனுப்பினான்.

பொன்னினது தளிர் என்றுமாம் ; இதற்குப் பொற்றளிர் என்பது மெலிந்து நின்றதாகக் கொள்க. புது மது - மயக்கஞ் செய்வதிற் புதுமையுடைய தொரு மது. காமம் மதுப்போல்வதென்பது,

> "கள்ளுண்டல் காம மென்ப கருத்தறை போக்குச் செய்வ"

என முன் கூறப்பட்டவாறும் காண்க. மன்னும் ஓவும் அசைகள். (கக)

> மருவிய வாய மேத்த விருந்தினன் மனைவந் தெய்திப்
> புரவலன் றனது பாட்டைப் புகழ்ந்ததே புகழ்ந்த தாகப்
> பெருமிதந் தலைக்கொண் டானப் பெருங்களிப் படைந்து மஞ்சத்
> திருமல ரணைமே லார்வந் திளைத்தினி திருந்தா ளிப்பால்.

(இ - ள்.) மருவிய ஆயம் ஏத்த - தன்னைச் சூழ்ந்த மகளிர் கூட்டம் புகழ, விருந்தினுள் - புதிதாக வந்த ஈழப்பாடினி, மனைவந்து எய்தி - தன் விடுதி வந்தடைந்து, புரவலன்-இராச ராச பாண்டியன், தனது பாட்டைப் புகழ்ந்ததே புகழ்ந்ததாக - தன் பாட்டினை வியந்ததனையே ஒரு புகழ்ச்சி யாகக் கருதி, பெருமிதம் தலைக்கொண்டு - இறுமாப்பு மேற்கொண்டு, ஆனுப் பெருங்களிப்பு அடைந்து - நீங்காத பெருஞ் செருக்குற்று, மஞ்சத் திருமலர் அணைமேல் - தூங்குமஞ்சத்திற் பரப்பிய அழகிய மலர்ப் படுக்கையின்மேல், ஆர்வம் திளைத்து இனிது இருந்தாள் - மகிழ்ச்சிமிக்குக் கவலையின்றி இருந்தாள், இப்பால் - பின்.

அரசன் நெறிதிறம்பித் தன்னைப் புகழ்ந்தது உண்மைப் புகழ்ச்சி யன்றாகவும் அதனைப் புகழ்ச்சியாகக் கொண்டாள் என்பார் 'புகழ்ந்ததே புகழ்ந்ததாக' என்றார். மஞ்சம் - கட்டில். (உ0)

வணங்குறு மருங்கிற் கற்பின் மடவரன் மதங்கி தானும்
அணங்கிறை கொண்ட நெஞ்ச ளங்கயற் கண்ணி பாகக்
குணங்குறி கடந்த சோதி குரைகழ லடிக்கீ ழெய்தி
உணங்கினள் கலுழ்கண் ணீர ளொதுங்கிநின் றிதனைச் சொன்னாள்.

(இ - ள்.) வணங்குறு மருங்கின் கற்பின் - வளையும் இடையினையும் கற்பினையுமுடைய, மடவரல் மதங்கிதானும் - பாணபத்திரன் மனைவி யாகிய பாடினியும், அணங்கு இறைகொண்ட நெஞ்சள் - துன்பங் குடி கொண்ட நெஞ்சினையுடையளாய், அங்கயற் கண்ணிபாகம் - அங்கயற் கண்ணம்மையை ஒருபாகத்திலுடைய, குணம் குறிகடந்த சோதி - குணத்தையுங் குறியையும் கடந்து நின்ற ஒளிவடிவினனாகிய சோம சுந்தரக் கடவுளின், குரைகழல் அடிக்கீழ் எய்தி - ஒலிக்கும் வீரக்கழல் அணிந்த திருவடிக்கீழ் அடைந்து, உணங்கினள் - வாட்டமுற்று, கலுழ் கண்ணீரள் - கலங்கியழுங் கண்ணீரையுடையவளாய், ஒதுங்கிநின்று இதனைச் சொன்னாள் - ஒருபுற மொதுங்கி நின்று இதனைக் கூறுவா ளாயினள்.

அணங்கு - வருத்தம். இறைகொள்ளல் - தங்குதல். உணங்கினள் என்னும் தெரிநிலை முற்றும் நீரள் என்னும் குறிப்புமுற்றும் எச்ச மாயின. (உக)

தென்னவ னாகி வையஞ் செய்யகோல் செலுத்திக் காத்த
மன்னவ வழுதி வார வழிவழக் குரைப்ப தானான்
அன்னவன் கருத்துக் கேற்ப வவையரு மனைய ரானார்
பின்னடு நிலைமை தூக்கிப் பேசுவார் யாவ ரையா

(இ - ள்.) தென்னவனாகி - சுந்தர பாண்டியனாகி, வையம் செய்ய கோல் செலுத்திக் காத்த மன்னவ - நிலவுலகைச் செங்கோலோச்சிப் புரந்தருளிய மன்னவனே, வழுதி - இராசராச பாண்டியன், வாரவழி வழக்கு உரைப்பதானான் - அன்பு சென்ற வழியே வழக்குப் பேசுவா னாயினன்; அன்னவன் கருத்துக்கு ஏற்ப - அவன் உட்கோளுக் கிசைய, அவையரும் அனையர் ஆனார் - அவையிலுள்ளாரும் அத் தன்மையா

ராயினர்; பின் - இங்ஙனமாயபின், ஐயா நடுநிலைமை தூக்கிப் பேசுவார் யாவர் - ஐயனே! நடுநிலைமையினின்று ஆராய்ந்துரைப்பார் யாவருளர்?

வாரவழி - பட்ச பாதம்: ஒருபக்கம் அன்புடையனாய் அழிவழக்குரைப்பதானுன் எனலுமாம். நின்னையன்றி வேறுயாரும் இல்லையென்பாள் 'பேசுவார் யாவரையா' என்றாள் என்க. (உஉ)

உன்னருட் டுணை*செய் தென்பா லுறுகணோய் துடைப்ப தென்ன
மின்னனாய் நீயே நாளை வெல்லுமா செய்து மஞ்சேல்
என்னவா காய வாணி யீறிலா னருளாற் கேட்டு
மன்னருங் கற்பி னுடன் மனைபுகுந் திருந்தாண் மன்னோ.

(இ - ள்.) உன் அருள் துணைசெய்து - உனது திருவருளாகிய துணையை நல்கி, என்பால் உறுகண் நோய் துடைப்பது என்ன - என் பாலுள்ள துன்ப நோயைப் போக்கக் கடவாய் என்று குறையிரப்ப, ஈறு இலான் அருளால் - அழிவில்லாத இறைவன் திருவருளால், ஆகாய வாணி - அசரீரி, மின் அனாய் - மின் போல்வாய், நீயே நாளை வெல்லுமா செய்தும் - நாளை நீயே வெல்லுமாறு செய்வோம், அஞ்சேல்-நீ அஞ்சற்க, என்ன - என்று கூற, கேட்டு - அதனைக் கேட்டு, மன் அருங் கற்பினாள் தன் மனை புகுந்து இருந்தாள் - நிலைபெற்ற அரிய கற்பினையுடைய விறலி தன் இல்லிற்சென்று இருந்தாள்.

உன்னரு டுணைசெய்து என்னும் பாடத்திற்கு உன்னருளே துணை செய்து துடைப்பதாகும் என்றுரைக்க. முற்பொருளில் துடைப்பது வியங்கோள்; "மறப்ப தறிவிலென் கூற்றுக்களே" என்புழிப்போல. மன், ஓ: அசைகள். (உ௩)

அன்றுபோன் மற்றை ஞான்று மழைத்தனன் பாடல் கேட்டுக்
குன்றுபோற் புயத்தா னென்னற் கூறிய வாறே கூற
மன்றுளார் பலரு மன்ன வண்ணமே சொன்னார் கேட்டு
நின்றபாண் மடந்தை பாண்டி நிருபனை நோக்கிச் சொல்வாள்.

(இ - ள்.) குன்றுபோல் புயத்தான் - மலைபோலுந் தோளினையுடைய பாண்டியன், அன்றுபோல் மற்றை ஞான்றும் - அன்று போலவே அடுத்த நாளும், அழைத்தனன் பாடல் கேட்டு - அவ்விரு விறலிகளையும் அழைப்பித்து அவர்கள் பாடலைக் கேட்டு, நென்னல் கூறியவாறே கூற - நேற்றுப் புகன்ற வண்ணமே புகல, மன்றுளார் பலரும் அன்ன வண்ணமே சொன்னார் - அவையிலுள்ள அனைவரும் அவ்வரசன் கூறியவாறே கூறினார்; கேட்டு நின்ற பாண் மடந்தை-இதனைக் கேட்டு (மனம் புழுங்கி) நின்ற பாடினி, பாண்டி நிருபனை நோக்கிச் சொல்வாள் - பாண்டி வேந்தனைப் பார்த்துக் கூறுவாளாயினள்.

அழைத்தனன்: முற்றெச்சம். (உ௪)

(பா - ம்.) * உன்னருடுணை.

தென்னரே றனையாய் ஞால மனுவழிச் செங்கோ லோச்சும்
மன்னரே றனையாய் வார வழக்கினை யாத லானீ
சொன்னவா றவையுஞ் சொல்லத் துணிந்தது துலைநா வன்ன
பன்னகா பரணர் முன்போய்ப் பாடுகேம் பாடு மெல்லை.

(இ - ள்.) தென்னர் ஏறு அனையாய் - பாண்டியருள் ஆண்சிங்கம் போல்வாய், ஞாலம் - இந்நில வுலகில், மனுவழி செங்கோல் ஓச்சும் மன்னர் ஏறு அனையாய் - மனுவறத்தின் வழியே செங்கோல் செலுத்தும் மன்னர்களுள் ஏறுபோல்வாய், வாரவழக்கினை - நீதான் அன்பின் வழி நின்று வழக்கினை ஒருந் தன்மையை யுடையையாயினை; ஆதலால் நீ சொன்னவாறே - ஆதலினால் நீ நடுநிலை யிகந்து கூறியவண்ணமே, அவையும் சொல்லத் துணிந்தது - அவையிலுள்ளாரும் கூறத் துணிந்தனர்; துலைநா அன்ன - தராசின் நாப்போலும் நடுநிலைமையுள்ள, பன்னக ஆபரணர் முன்போய்ப் பாடுகேம் - அரவினை அணியாகக் கொண்ட சோமசுந்தரக் கடவுளின் திருமுன் சென்று யாங்கள் பாடுவேம்; பாடும் எல்லை - அங்ஙனம் பாடுங்கால்.

நடுநின்று முறைபுரியும் இறையாகிய நீயும் எம்மில் ஒரு புறத்து வாரம்பற்றி வழக்குரைப்பாயாயினை, அவைய மாந்தரும் நின்வழிக் கூறினர்; ஆகலின் இனி என்றும் கோடாத வாய்மையுடைய சிவபிரான் திருமுன்சென்று பாடுவேம் என்றுள் என்க. பன்னகா பரணர்: வடமொழி நெடிற் சந்தி. (௨௫)

இருவரேம் பாட்டுங் கேட்டுத் துணிந்திவள் வென்று ளென்று
ஒருவர்சந் நிதியிற் சொன்னாற் போதுமென் றுரைத்தாள் பாண்டித்
திருமக னனைய வாறே செய்மினீர் செய்மி னென்ன
மருவளர் குழலி னார்த மனைபுகுந் திருந்தார் பின்னாள்.

(இ - ள்.) இருவரேம் பாட்டும் கேட்டு - எங்களிருவரின் பாடலையும் கேட்டு, ஒருவர் துணிந்து - யாரேனும் ஒருவர் மனந்துணிந்து, இவள் வென்றுள் என்று - இருவருள் இவள்தான் வென்றனள் என்று, சந்நிதியில் சொன்னால் போதும் என்று உரைத்தாள் - அவ்விறைவன் திருமுன் சொன்னால் அமையும் என்று கூறினள், பாண்டித் திருமகன் - இராசராச பாண்டியன், அனைய வாறே நீர் செய்மின் செய்மின் என்ன - அங்ஙனமே நீர் செய்யுமென்று கூற, மருவளர் குழலினார் தம் மனை புகுந்து இருந்தார் - மணம் ஓங்கும் கூந்தலையுடைய அவ் விறலியர் இருவரும் தத்தம் இல்லிற்சென்று தங்கினர்; பின் நாள் - மறுநாளில்,

செய்மின் செய்மின்; துணிவுப்பொருளில் வந்த அடுக்குத்தொடர், (௨௬)

[கலி விருத்தம்]

தென்ற ணுடனு மந்திரச் செல்வரும்
நன்று தீதுணர் நால்வகைக் கேள்வியோர்
ஒன்ற வேகி யொளிவிடு வெள்ளிமா
மன்ற வாணர்மா மண்டபத் தெய்தினர்.

(இ - ள்.) தென்றல் நாடனும் - தென்றற்காற்றின் பிறப்பிடமாகிய பொதியின் மலையையுடைய பாண்டிநாடனும், மந்திரச்செல்வரும் - அமைச்சர்களும், நன்று தீது உணர் - (இருவகை இசையின்) குணத்தினையும் குற்றத்தையும் அறிதற் கேதுவாகிய, நால்வகைக்கேள்வியோர் ஒன்ற - கீத ஞான முதலிய நால்வகைஞானமுடையார் சூழ, ஏகி - சென்று, ஒளி விடு வெள்ளிமாமன்ற வாணர் - ஒளி வீசுகின்ற பெரிய வெள்ளி யம்பல வாணரது, மாமண்டபத்து எய்தினர் - பெரிய மண்டபத்தை அடைந்தனர்.

நால்வகைக்கேள்வி - கீதஞானம், இலயஞானம், சுருதிஞானம், தாளஞானம் என்பனவாம். (உஎ)

எய்தி யம்மட மாதரை யிங்குறச்
செய்தி ரென்னத் திருமக னேவலோர்
நொய்தி னோடி நொடித்தழைத் தாரோடு
மைதி கழ்ந்த விழியார் வருவரால்.

(இ - ள்.) எய்தி - அங்ஙனம் அடைந்து, திருமகன் - பாண்டி மன்னன், அம்மடமாதரை இங்குறச் செய்திர் என்ன - அந்த இளமையையுடைய விறலிகளை இங்கு வரச்செய்மின் என்று கட்டளையிட, நொய்தின் ஓடி நொடித்து - விரைந்து ஓடி மன்னன் கட்டளையைக் கூறி, ஏவலோர் அழைத்தாரொடு - அழைத்தா ராகிய அவ்வேவலாளருடன், மைதிகழ்ந்த விழியார் வருவர் - மைவிளங்கிய விழியினையுடைய அவ்விருவரும் வருவாராயினர்.

செய்திர், த் எழுத்துப்பேறு. நொடித்து - கூறி, ஏவலோர் அழைத்தார் அங்ஙனம் அழைத்தவரோடு என விரித்துரைக்க. ஆல்: அசை. (உஅ)

படிமை யார்தவப் பாடினி வந்தெனக்
கடிமை யாவளின் றையமின் றுலெனக்
கொடுமை யார்மனக் கோட்டச் செருக்கொடுங்
கடுமை யாகவந் தாள்கலத் தின்வந்தாள்.

(இ - ள்.) கலத்தின் வந்தாள் - மரக்கலத்தில் வந்த பாடினி, இன்று தவப்படிமை ஆர் பாடினி வந்து - இன்று தவவேடம் நிறைந்த விறலி வந்து, எனக்கு அடிமையாவள் - எனக்கு அடிமையாவாள், ஐயம் இன்று என - இதற்கு ஓர் ஐயுறவில்லை என்று கருதி, கொடுமை ஆர் கோட்டம் மனச்செருக்கொடும் - கொடுமை நிறைந்து நெறி பிறழ்ந்த

மனத்தின் கண் உள்ள செருக்கோடும், கடுமையாக வந்தாள் - விரைவாக வந்தனள்.

படிமை - தவக்கோலம்; தவ்வொழுக்கமுமாம், ஆல்: அசை கடுமை - விரைவு. கலத்தின் வந்தவள் கடுமையாக வந்தாள் என்க. (உக)

கற்பின் மிக்கெழு* கற்புங் கருத்தினிற்
சிற்ப ரஞ்சுடர் சேவடி மேல்வைத்த
அற்பு மிக்கெழ மெல்லவந் தாளரோ.
பொற்பின் †மிக்குள பத்திரன் பொன்னனாள்.

(இ - ள்.) பொற்பின் மிக்குள பத்திரன் பொன்அனாள் - அழகினால் மேம்பட்ட பாணபத்திரன் மனைவியாகிய திருமகளை ஒத்த பாடினி, கற்பின்மிக்கு எழுகற்பும் - கல்வியறிவால் மேம்பட்டெழுந்த நிறையும், கருத்தினில் - தனது உள்ளத்தில், சிற்பரஞ்சுடர் சேவடிமேல் வைத்த அற்பும்-ஞானப் பரஞ்சோதியாகிய சோமசுந்தரக் கடவுளின் சிவந்த திருவடிமேல் வைத்த அன்பும், மிக்கு எழ - பொலிந்து தோன்ற, மெல்ல வந்தாள்-மெதுவாக வந்தனள்.

கற்பிற்குரிய அமைதியோடு வந்தாளென்பார் 'மெல்லவந்தாள்' என்றார். அரோ : அசை - (கூ0)

அலங்கு மாரமோ டங்கத் மாதிபல்
கலன்க டாங்கிக் கலைஞர் குழாத்திடை
இலங்கு மாட மதுரைக் கிறைவரும்
புலன்கோ ணாவலர் போல்வந்து வைகினார்.

(இ - ள்.) இலங்கு மாட மதுரைக்கு இறைவரும் - விளங்கா நின்ற மாடங்களையுடைய மதுரைக்கு இறைவராகிய சோமசுந்தரக் கடவுளும், புலன்கொள் நாவலர் போல் - (இசை நூலில்) உணர்வு மிக்க புலவர் போல, அலங்கும் ஆரமோடு - அசைகின்ற முத்துமாலையோடு, அங்கதம் ஆதிபல் கலன்கள் தாங்கி - தோளணி முதலிய பல அணிகளைத் தரித்து, கலைஞர் குழாத்திடை வந்து வைகினார் - புலவர் குழுவின் நடுவில் வந்து தங்கினர்.

அலங்குதல் - அசைதல்; ஒளிவிடுதலுமாம். நாவலர்போல் - நாவலருள் ஒருவர்போல். (கூக)

அந்த வேத்தவை தன்னி லருங்கலம்
வந்த வேய்த்தடந் தோளிசை மாதராள்
முந்த வேத்திசை பாடினள் முந்தையோர்
சிந்தை வேட்டொன்றுஞ் செப்பின ரில்லையால்.

(பா - ம்.) * கற்பு மிக்கெழு. † பொற்புமிக்குள.

(இ - ள்.) அந்த வேந்து அவை தன்னில் - அந்த அரசவையின் கண், அருங்கலம் வந்த - அரிய மரக்கலத்தில் வந்த, வேய்த்தடம் தோள் இசைமாதராள் - மூங்கில் போலும் பருத்த தோளையுடைய பாடினி, முந்த - முற்பட, வேத்திசை பாடினள் - அரசர்க்குரிய இசையைப் பாடினள்; முந்தையோர் - முன் கொண்டாடினவர், சிந்தை வேட்டு - மனம் விரும்பி, ஒன்றும் செப்பினர் இல்லை - யாதும் கூறாதிருந்தனர்.

வேந்து வேத்து என்றாயது. ஏத்திசை எனப்பிரித்து, நால்வகை வருணப் பூதரை வாழ்த்தினள் என்று கூறி,

"அந்தணர் வேள்வியோ டருமறை முற்றுக
வேந்தன் வேள்வியோ டியாண்டுபல வாழ்க
வணிக ரிருநெறி நீணிதி தழைக்க
பதினெண் கூலமும் உழவர்க்கு மிகுக
அரங்கியற் கூத்து நிரம்பிவினை முடிக
வாழ்க நெடுமுடி கூர்கவென் வாய்ச்சொலென்
றிப்படிப் பலிகொடுத் திறைவனிற் றெருக்குச்
சேட்பட வமைத்துச் செழும்புகை காட்டிச்
சேவடி தேவரை யேத்திப் பூதரை
மூவடி முக்கால் வெண்பா மொழிந்து
செவியழுக் குறுமை வேந்தனை யேத்திக்
கவியொழுக் கத்து நின்றுழி வேந்தன்
கொடுப்பன கொடுக்க வமையு மென்ப"

என்னும் சூத்திரத்தைக் காட்டுவாருமுளர். வேத்திசை என்பதில் அஃது அடங்குதலுங் காண்க. ஆல்: அசை. (கூஉ)

வீணை தோளிட னேந்திய வெண்மலர்
வாணி பாட விருக்கையின் வைகியே
யாண ரம்பெறிந் தின்னிசை யோர்ந்தெழீஇப்
பாணர் கோமகன் பன்னியும் பாடுமால்.

(இ - ள்.) வீணை தோள் இடன் ஏந்திய வெண்மலர்வாணி - யாழினை இடத்தோளிலேந்திய வெண்டாமரைமலரில் வீற்றிருக்கும் கலைமகள், பாடு அ இருக்கையின் வைகி - பாடும் அவ்வாசனத்திலே தானும் இருந்து, யாழ் நரம்பு எறிந்து - யாழின் நரம்பினை விரலினாற் றாக்கி, இன் இசை ஓர்ந்து எழீஇ - இனிய இசையினை ஆராய்ந்து எழுப்பி, பாணர் கோமகன் பன்னியும் பாடும் - பாணர் பெருமானாகிய பத்திரன் மனைவியும் பாடுவாளாயினள்.

பாடு அவ்விருக்கை எனப் பிரிக்க. வாணி பாடும் இருக்கையாவது ஒன்பான் விருத்தியுட் டலைக்கண் விருத்தியாகிய பதுமாசனமாகும். ஒன்பான் விருத்தியாவன: பதுமுகம், உற்கட்டிதம், ஒப்படியிருக்கை, சம்புடம், அயமுகம், சுவத்திகம், தனிப்புடம், மண்டிலம், ஏகபாதம்

என்பன. யாழ் நரம்பு என்பது மருவிற்று. எழீஇ: சொல்லிசையளபெடை. ஆல்: அசை. (௩௩)

குடங்கை நீரும் பச்சிலையு மிடுவார்க் கிமையாக் குஞ்சரமும்
படங்கோள் பாயும் பூவணையுந் தருவாய் மதுரைப் பரமேட்டி
படங்கோள் பாயும் பூவணையுந் தருவாய் கையிற் படுதலைகோண்
டிடங்க டோறு மிரப்பாயென் றேசு வார்க்கென் பேசுவனே.

(இ - ள்.) குடங்கை நீரும் பச்சிலையும் இடுவார்க்கு - அகங்கையளவான நீரையும் பசிய இலையையும் இட்டு வழிபடுவார்க்கும், இமையாக் குஞ்சரமும் - ஐராவதமும், படம் கொள் பாயும் - படத்தைக் கொண்ட அனந்தசயனமும், பூ அணையும் - தாமரை மலர்த் தவிசுமாகிய இவற்றை, மதுரைப் பரமேட்டி தருவாய் - மதுரையில் எழுந்தருளிய பெருமானே! நீ அளித்தருள்வாய்; படம்கொள் பாயும் பூ அணையும் தருவாய் - (அவருக்கு) அவற்றை அருள்பவனாகிய நீயே, கையில் படுதலைகொண்டு - திருக்கரத்தில் கபாலத்தை ஏந்தி, இடங்கள்தோறும் இரப்பாய் என்று - இல்லங்கள்தோறுஞ் சென்று ஏற்பாயென்று கூறி, ஏசுவார்க்கு என் பேசுவனே - பழிக்கின்ற புறச்சமயிகளுக்கு (யான்) யாது கூறுவேன்.

தேவர்கள் இமையா நாட்டம் உடையராகலின் தேவர்க்கரசனது யானையை 'இமையாக் குஞ்சரம்' என்றார். குஞ்சரமும் பாயும் அணையும் தருவாய் என்றது இந்திரன் பதமும் திருமால் பதமும் பிரமன் பதமும் தருவாய் என்றபடி. குடங்கை நீரும் பச்சிலையும் இடுவார்க்கு அவை தருவாய் என்றது எவ்வளவு நல்குரவாளரும் இறைவனை வழிபடுதற்கு இழுக்கின்று என்பதனையும், அடியார்கள் அன்புடன் இடும் அத்துணை நீருக்கும் பச்சிலைக்குமே இறைவன் அவ்வளவு பெரிய பதங்களை யளிக்கும் பேரருளாளன் என்பதனையும், இந்திரன் மால் பிரமன் என்போரெல்லாம் அங்ஙனம் இறைவனை வழிபட்டே அப்பதவிகளை அடைந்தனராவர் என்பதனையும் காட்டுகிறது. வழிபடுவார்க்கு அத்துணைப் பெருஞ்செல்வங்களை ஈயும் நீ படுதலை கொண்டிரப்பது ஆன்மாக்களின் உடல் பொருள் ஆவிகளை யெல்லாம் ஏன்றுகொண்டு அவற்றுக்கு அருள் புரியும் காரணத்தால் என்பதனை அறியாது புறச்சமயிகள் நின்னைப் பழித்துரைப்பர். அவர்க்குக் கூறும் விடை யாதுமில்லை யென்க. (௩௪)

தேனார் மொழியார் விழிவழியே செல்லா தவர்க்கே வீடென்று
நானா வேதப் பொருளுரைத்தாய் நீயே மதுரை நம்பரனே
நானா வேதப் பொருளுரைத்தாய் நீயே பாதி நாரியுரு
ஆனா யென்று பிறர்பழித்தா லடியேன் விடையே தறைவேனே.

(இ - ள்.) தேன் ஆர் மொழியார் விழி வழியே செல்லாதவர்க்கே - தேனின் சுவை போலுஞ் சுவைதிரம்பிய சொற்களையுடைய மகளிரின் பார்வையால் மயங்கி அவர் பின்சென்று அலையாதவர்க்கே, வீடு என்று - வீடுபேறு உரியதென்று, நானாவேதப் பொருள் - பலவகைப்பட்ட மறைப்பொருளை விரித்து, மதுரை நம்பரனே நீயே உரைத்தாய் - மதுரையிலெழுந்தருளிய நம்பரனே நீயே கூறியருளினாய்; நானா

வேதப் பொருள் உரைத்தாய் நீயே - அங்ஙனங் கூறியருளியவ ஞகிய நீயே, பாதி நாரி உரு ஆனுய் என்று - ஒருபாதி பெண் வடிவ மாயினை என்று கூறி, பிறர் பழித்தால் - புறச்சமயிகள் ஏசினுல், அடியேன் விடை ஏது அறைவேன் - (அவருக்கு) அடியேன் யாது விடையிறுப்பேன் ?

''அரவக லல்கு லார்பா லாசைநீத் தவர்க்கே வீடு
தருவமென் றளவில் வேதஞ் சாற்றிய தலைவன்''

என, இப்புராணத்து நம்பியாரூரர் துதியிற் கூறியிருத்தல் இங்கு நோக்கற்பாலது. நாளு - பல, மகளிராசையை நீத்தல் வேண்டுமென்று கூறிய நீயே பாதி நாரியுருவானது ஆன்மாக்களுக்குப் போகத்தையூட்டிக் கன்மந்தொலைத்து அருள்புரிதற் கென்னும் உண்மையுணராது புறச்சமயிகள் நின்னைப் பழித்துரைப்பார் ; அவர்க்குக் கூறும் விடை யாதும் இல்லை யென்க.

''தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடி
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ''

என்னும் திருவாசகம் இங்கே சிந்திக்கற்பாலது.　　(௩௫)

வரத ஞகி யெவ்வுயிர்க்கு மாயா விருத்தி வலியடக்கிச்
சரத மான வீட்டின்பந் தருவாய் மதுரைத் தனிமுதலே
சரத மான வீட்டின்பந் தருவாய் வீடு பேறுவார்போல்
விரத யோக நிலையடைந்தா யென்பார்க் கென்னுன் விளம்புவனே.

(இ - ள்.) வரதனுகி - அருட்கொடை யுடையவனுகி, எவ்வுயிர்க்கும் மாயாவிருத்தி வலி அடக்கி-எல்லா வுயிர்களுக்கும் மாயாமலத்தின் தொழில் வலியை அடக்கி, சரதமான வீட்டு இன்பம் - அழியாத வீட்டின்பத்தினை, மதுரைத் தனிமுதலே தருவாய் - மதுரையில் அமர்ந்தருளிய ஒப்பற்ற முழுமுதற் கடவுளே நீயே அருளுவை யாயினை ; சரதமான வீட்டின்பம் தருவாய் - (அவற்றுக்கு) அவ் வின்பத்தை அருளும் நீயே, வீடு பெறுவார்போல் - வீட்டினை விரும்பி யோகுசெய் வாரைப்போல, விரத யோகநிலை அடைந்தாய் என்பார்க்கு - (அரிய) நோன்புகளையுடைய யோகநிலையை அடைந்தனை என்று பழிப்பார்க்கு, நான் என் விளம்புவன் - யான் யாது கூறுவேன்.

நீ யோகநெறியில் நிற்பது ஆன்மாக்களை யோகநெறியிற் புகுத்திப் பேரின்பவீடு அளித்தற்கு என்னும் உண்மை யுணராது புறச்சமயிகள் நின்னைப் பழித்துரைப்பர் ; அவர்க்குக் கூறும் விடை யாதும் இல்லை யென்க. இவ்வியல்பினரை நோக்கியே,

''போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரித லோரார்
யோகியா யோக முத்தி யுதவுத லதுவு மோரார்
வேகியா னுற்போற் செய்த வினையினை வீட்ட லோரார்
ஊகியா மூட ரெல்லா மும்பரி லொருவ னென்பார்''

என்பது முதலிய சிவஞான சித்தியார்த் திருவிருத்தங்கள் எழுந்தன. இம் மூன்றும் பத்திரன் மனைவியாகிய பாடினி பாடிய இசைப் பாட்டுக் களாக ஆசிரியர் பாடியன; இவை கந்தருவ மார்க்கத்தான் இடை மடக்கிவந்தன. (௬௬)

[எழுசீரடி யாசிரிய விருத்தம்]

கண்ணுதன் மதுரைப் பிரானையிவ் வாறு
கருதிய பாணியாற் கனிந்து
பண்ணுதல் பரிவட் டணைமுத லிசைநூல்
பகர்முதற் றொழிலிரு நான்கும்
எண்ணுறு வார்தல் வடித்திடன் முதலா
மெட்டிசைக் கரணமும் பயப்ப
மண்ணவர் செவிக்கோ வானவர் செவிக்கும்
வாக்கினு ணாவிளை யமுதம்.

(இ-ள்.) கண் நுதல் மதுரைப்பிரானை - நெற்றியிற் கண்ணை யுடைய மதுரை நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளை, இவ்வாறு கருதிய பாணியால் - இங்ஙனம் கருதிய இசைப்பாட்டினால், கனிந்து - மனங் கனிந்து, பண்ணுதல் பரிவட்டணை முதல் - பண்ணுதல் பரிவட் டணை ஆதியாக, இசைநூல் பகர்முதல் தொழில் இருநான்கும் - இசை நூல் கூறுகின்ற முதற்றொழில் எட்டும், எண்ணுறு வார்தல் வடித் திடல் முதலாம் - எண்பொருந்திய வார்தல் வடித்திடல் முதலாகிய, எட்டு இசைக்கரணமும் பயப்ப - எட்டு இசைக்கரணங்களும் பொருந்த, நாவிளை அமுதம் - தனது நாவால் உண்டாக்கிய அமுதத்தை, மண்ணவர் செவிக்கோ - நிலவுலகோர் செவிகட்கு மட்டுமோ, வானவர் செவிக்கும் வாக்கினாள் - தேவர்கள் செவிக்கும் வார்த்தாள்.

மதுரைப்பிரானை இவ்வாறு கருதிய பாணி என்றமையால் இது பெருந்தேவபாணி என்க. முதற்றொழில் எட்டாவன-பண்ணல், பரிவட் டணை, ஆராய்தல், தைவரல், செலவு, கையூழ், விளையாட்டு, குறும் போக்கு என்பன. அவற்றுள் பண்ணலாவது இணை, கிளை, பகை, நட் பான நரம்புகள் பெயருந்தன்மை மாத்திரை யறிந்து வீக்குதல். பரி வட்டணை - வீக்கின நரம்பை விரல்களால் அகமும் புறமும் கரணஞ் செய்து தடவிப்பார்த்தல். ஆராய்தல் - ஆரோகண அவரோகண வகை யால் இசையைத் தெரிதல். தைவரல் - அநுசுருதியேற்றல், செலவு - ஆளத்தியிலே நிரம்பப்பாடுதல், கையூழ் - பாட நினைத்த வண்ணத்திற் சந்தத்தை விடுத்தல். விளையாட்டு - வண்ணத்திற் செய்த பாடல்களை இன்பமாகப் பாடுதல். குறும் போக்கு - குடகச் செலவும் துள்ளற் செல வும் பாடுதல். இசைக்கரணம் எட்டாவன . வார்தல், வடித்தல் உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், எள்ளல், பட்டடை என்பன. (௬௭)

இடையினே டேனைப் பிங்கலை யியக்க
மிகந்துமு லந்தோடுத் தியக்கி
நடுவுறு தொழிலாற் பிரமரந் திராந்த
நடைபெற விசைக்கு முள்ளாளம்

மிடறுவீங் காள்கண் ணிமைத்திடா ளெயிறு
　　வெளிப்படாள் புருவமே னிமிராள்
கோடிறது துடியாள் பாடலு மதுகேட்
　　டனைவருங் குதூகல மடைந்தார்.

(இ - ள்.) இடையினேடு - இடைகலையோடு ஏனைப் பிங்கலை இயக்கம் இகந்து - மற்றைப் பிங்கலையிலும் இயங்கும் இயக்கம் ஒழிந்து, மூலம் தொடுத்து இயக்கி - மூலாதாரத்தினின்றுங் காற்றினை எழுப்பி, நடுவுறு தொழிலால் - சுழுமுனையின் தொழிலினுல், பிரமரந்திர அந்தம் நடைபெற இசைக்கும் உள்ளாளம் - பிரமரந்திரம் முடிய நடக்குமாறு இசைக்கின்ற உள்ளாளகீதத்தினை, மிடறு வீங்காள் - மிடறு வீங்காமலும், கண் இமைத்திடாள் - கண் மூடாமலும், எயிறு வெளிப்படாள் - பற்கள் வெளிப்படாமலும், புருவம் மேல் நிமிராள் - புருவங்கள் மேல் ஏறுமலும், கொடிறது துடியாள் - கபோலந் துடியாமலும், பாடலும் - பாடியவளவில்; அதுகேட்டு அனைவரும் குதூகலம் அடைந்தார் - அதனைக் கேட்டு அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர்.

நடுவுறு தொழில் - சுழுமுனுமார்க்கத்தில் வாயுவை இயக்கிச் செய்யும் கிரியை. உள்ளாளம். இச்செய்யுளிற் கூறிய இலக்கணத்தோடு கந்தருவராற் பாடப்படுவது.

''கண்ணிமையா கண்டந் துடியா கொடிறசையா
பண்ணளவும் வாய்தோன்ரு பற்றெரியா—எண்ணிலிவை
கள்ளார் நறுந்தெரியற் கைதவனே கந்தருவர்
உள்ளாளப் பாட லுணர்''

என்பது காண்க.　கொடிறது, அது : பகுதிப் பொருள் விகுதி.　(கூஅ)

கன்னிநா டுடையான் கைதவ னெனும்பேர்க்
　　காரணந் தேற்றுவா னெனத்தான்
இன்னிசை யறிஞ னாகியு முன்போ
　　லியம்புவா னொருப்படு கின்ருன்
முன்னவ னருளாற் றன்மனக் கோட்ட
　　முரண்கெடப் போதுமையா னேக்கி
இன்னவ டானே வென்றன ளென்ரு
　　னினையவா றனைவரு மொழிந்தார்.

(இ - ள்.) கன்னிநாடு உடையான் - கன்னி நாட்டினையுடைய பாண்டியன், கைதவன் எனும் பேர்க்காரணம் தேற்றுவான் போல - கைதவன் என்னும் தனது பெயரின் காரணத்தை அறிவிப்பவனைப் போல, தான் இன் இசை அறிஞன் ஆகியும் - தான் இனிய இசை நூல் அறிஞனுயிருந்தும், முன்போல் இயம்புவான் ஒருப்படுகின்ருன் - முன்போலவே கூறுதற்கு மனந்துணிகின்றவன், முன்னவன் அருளால் -

சோமசுந்தரக் கடவுளின் திருவருளால், தன் மனக் கோட்ட முரண் கெட - தனது மனக்கோணலின் வலிகெட, பொதுமையால் நோக்கி - நடுநிலையோடு பார்த்து, இன்னவள் தானே வென்றனள் என்றான் - இந்தப் பாடினியே வென்றனள் என்று கூறினான்; இனையவாறு அனை வரும் மொழிந்தார் - இங்ஙனமே எல்லாருங் கூறினர்.

பாண்டிவேந்தரைக் குறிக்கும் கைதவன் என்னும் பெயர்க்கு வஞ்சகன் என்றும் பொருளுண்டாகலின் அப் பொருள்பற்றியே அப்பெயர் உண்டாயிற்றென்று தெளிவிப்பான்போல நடுநிலை திறம்பிக்கூற ஒருப்படுகின்றவன் என்றார். (கக)

கரியுரை மொழிந்த கைதவ னிலங்கைக்
கைதவப் பாடினி கழுத்திற்
புரிகுழன் மாதை யிருத்தென விருத்தும்
போதுமை யிடங்கரந் திருந்த
அரியநா வலரீ தற்புத மீதற்
புதமென வறைந்தவை காண
விரிகதிர் மின்போன் மறைந்தனர் யாரும்
வியந்தனர் பயந்தனன் வேந்தன்.

(இ - ள்.) கரி உரைமொழிந்த கைதவன் - சான்றுமொழி பகர்ந்த பாண்டியன், கைதவ இலங்கைப் பாடினி கழுத்தில் - வஞ்சக ஒழுக்க முடைய ஈழப் பாடினி கழுத்தில், புரிகுழல் மாதை இருத்து என - கட்டமைந்த கூந்தலையுடைய பாடினியை இருத்துக என்று ஏவ, இருத்தும் போது -(ஏவல் மகளிர் அங்ஙனமே) இருத்துங்காலையில், உமை இடம் கரந்து இருந்த - உமாதேவியார் பொருந்திய இடப்பாகத்தை மறைத்து வந்திருந்த, அரிய நாவலர் - அரிய புலவராகிய சோமசுந்தரக் கடவுள்; ஈது அற்புதம் ஈது அற்புதம் என அறைந்து - இது வியப்பு இது வியப்பு என்று கூறியருளி, அவைகாண - அவையிலுள்ளோர் அனைவருங் காண, விரிகதிர் மின்போல் மறைந்தனர் - விரிந்த ஒளியினையுடைய மின்னலைப்போல மறைந்தனர்; யாரும் வியந்தனர் - யாவரும் வியப்புற்றனர்; வேந்தன் பயந்தனன் - அரசன் அச்சமெய்தினான்.

அடுக்கு உவகையின்கண் வந்தது. (ச0)

செங்கணே றழக ராடலீ தென்றே
யாவருந் தெளிந்தன ரேத்தி
அங்கணா யகர்தங் கருணையின் றிறனு
மடியவ ரன்பையுந் தூக்கித்
தங்கணா ரருவி பெருகவா னந்தத்
தனிப்பெருஞ் சலதியி லாழ்ந்தார்
வங்கமேல் வந்தாள் பிடர்மிசை யிருந்த
மாணிழை விறலியை மன்னன்.

(இ - ள்.) யாவரும் - அனைவரும், ஈது செங்கண் ஏறு அழகர் ஆடல் என்று தெளிந்தனர் - இது சிவந்த கண்களை யுடைய இடபத்தின் மேல் இவர்ந்தருளும் சோமசுந்தரக்கடவுளின் திருவிளையாடலென்று அறிந்து, ஏத்தி - துதித்து, அங்கண் நாயகர் தம்கருணையின் திறனும் - அருட்பார்வையினையுடைய இறைவரது திருவருளின் திறத்தையும், அடியவர் அன்பையும் தூக்கி - அடியாரின் அன்பையும் சீர்தூக்கி, தம் கண் ஆர் அருவி பெருக - தம் கண்களினின்றும் நிறைந்த ஆனந்த வருவி பெருக்கெடுக்க, ஆனந்தத் தனிப் பெருஞ் சலதியில் ஆழ்ந்தார் - இன்பமாகிய ஒப்பற்ற பெரிய கடலுள் அமிழ்ந்தனர்; வங்க மேல் வந்தாள் பிடர்மிசை இருந்த - மரக்கலத்தில் வந்த ஈழப் பாடினியின் தோளின்மேல் ஏறி யிருந்த, மாண் இழை விறலியை - மாட்சிமையுடைய அணிகளை யணிந்த பாடினியை, மன்னன் - அரசன்.

ஏற்றழகர் எனற்பாலது தொக்குநின்றது. தெளிந்தனர்: முற்றெச்சம். வந்தாள்: வினைப்பெயர். (௬௧)

இறக்குவித் தவட்கு முந்தமுத் தார
மேரிமணிக் கலன்றுகில் வரிசை
பெறக்கொடுத் தேனை யவட்குமுண்
மகிழ்ச்சி பெறச்சில வரிசைதந் தவையிற்
சிறக்கவந் தொருங்கு வைகிவா னிழிந்த
தெய்வதக் கோயில்புக் கிருந்த
அறக்கொடி யிடஞ்சேர் பெரும்புல வோர்க்கு
மருங்கல னாதிக ணல்கா.

(இ - ள்.) இறக்குவித்து - இறக்கி, அவட்கு - அப்பாடினிக்கு, முந்த - முற்பட, முத்து ஆரம் - முத்துமாலைகளையும், எரிமணிக்கலன் - நெருப்புப் போன்ற மணிகளழுத்திய கலன்களையும், துகில் - ஆடைகளையும், வரிசைபெறக் கொடுத்து - வரிசையாகக் கொடுத்து, ஏனையவட்கும் - மற்றை ஈழப்பாடினிக்கும், உள் மகிழ்ச்சி பெறச் சில வரிசை தந்து - உள்ளம் மகிழச் சில வரிசைகளை அளித்து, அவையில் சிறக்க வந்து ஒருங்கு வைகி - அவையின்கண் மேன்மையுற வந்து அனைவரோடும் ஒருங்கு எழுந்தருளியிருந்து, வான் இழிந்த தெய்வதக் கோயில்புக்கு இருந்த - விண்ணினின்றும் இறங்கிய தெய்வவிமானத்தின்கண் புகுந்து இருந்த, அறக்கொடி இடம்சேர் - தரும வல்லியாகிய இறைவியை இடப்பாதியிற் கொண்ட, பெரும்புலவோர்க்கும் - பெரும் புலவராகிய சோமசுந்தரக் கடவுளுக்கும், அருங்கலன் ஆதிகள் நல்கா - அரிய அணி கலன் முதலியவைகளை அளித்து.

ஈழப்பாடினி தோற்றவளாயினும் தன்னால் வருவிக்கபட்டவளாதலால் அவட்கும் வரிசை தந்தனன் என்க. அவையில் வந்து ஒருங்கு வைகிப் பின் கோயில்புக்கிருந்த புலவோர் என்க. (௬௨)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

மன்னவர் வலிக ளெல்லாந் தெய்வத்தின் வலிமுன் னில்லா
அன்னமா தெய்வஞ் செய்யும் வலியெலா மரண்மூன் றட்ட
முன்னவன் வலிமுன் னில்லா வெனப்பலர் மொழிவ தெல்லாம்
இன்னபாண் மகளிற் காணப் பட்டதென் றிரும்பூ தெய்தா.

(இ - ள்.) மன்னவர் வலிகள் எல்லாம் - அரசருடைய வலிமை யெல்லாம், தெய்வத்தின் வலிமுன் நில்லா - தெய்வத்தின் வலிமை முன் நில்லா ; அன்னமா தெய்வம் செய்யும் வலிஎலாம் - அப்பெரிய தெய்வங் கள் செய்யும் வலிமுழுவதும், அரண்மூன்று அட்ட முன்னவன் வலிமுன் நில்லா - மூன்று புரங்களையும் அழித்த இறைவன் வலிமுன் நில்லாவாம் ; எனப் பலர் மொழிவது எல்லாம் - என்று ஆன்றோர் பலரும் கூறுவ தெல்லாம், இன்னபாண்மகளின் காணப்பட்டது என்று - இந்தப் பாடினி வாயிலாகக் காணப்பட்டதென்று, இறும்பூது எய்தா - வியப்புற்று.

மொழிவதெல்லாம் : ஒருமைப் பன்மை மயக்கம். பாண் மகளின் - பாடினி வாயிலால். (சங)

மின்னியல் சடையி னானை விடைகொடு வலஞ்செய் தேகி
இன்னிய மியக்கஞ் செய்ய வெழில்கொடன் கோயி லெய்தித்
தொன்னிதி பெற்றான் போலச் சுகுணபாண் டியனைப் பெற்று
மன்னிய மகிழ்ச்சி வீங்க வைகின னிராச ராசன்.

(இ - ள்.) இராசராசன் - இராசராச பாண்டியன், மின் இயல் சடையினானை - மின்போன்ற சடையையுடைய சோமசுந்தரக் கடவுளை, வலஞ்செய்து - வலம் வந்து, விடை கொடு ஏகி - அப்பெருமானிடம் விடைபெற்றுச் சென்று, இன் இயம் இயக்கம் செய்ய - இனிய வாத்தி யங்கள் ஒலிக்க, எழில்கொள் தன் கோயில் எய்தி - அழகிய தனது மாளிகையை அடைந்து, தொல்நிதி பெற்றான்போல - சேமநிதிபெற்ற வனைப்போல, சுகுண பாண்டியனைப் பெற்று - சுகுண பாண்டியன் என்னும் மைந்தனைப் பெற்று, மன்னிய மகிழ்ச்சி வீங்க வைகினன் - நிலைபெற்ற மகிழ்ச்சி மிக இருந்தனன்.

இயக்கஞ் செய்ய - ஒலிக்க. (சச)

ஆகச் செய்யுள் - உகஙஉ

நாற்பத்தைந்தாவது

பன்றிக்குட்டிக்கு முலைகொடுத்த படலம்

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

இருளைக்கந் தரத்தில் வைத்தோன் றன்னிடத் தென்று மன்பின்
தெருளைத்தந் தவட்கு மாறுந் தெரிவையை யிசையால் வெல்ல
அருளைத்தந் தளித்த வண்ண மறைந்தனந் தாயாய்ப் பன்றிக்
குருளைக்கு முலைதந் தாவி கொடுத்தவா றெடுத்துச் சொல்வாம்.

(இ - ள்.) இருளைக் கந்தரத்தில் வைத்தோன் - நஞ்சினைத் தனது திருமிடற்றின்கண் வைத்தருளிய சோமசுந்தரக்கடவுள், தன்னிடத்து என்றும் அன்பின் தெருளைத் தந்தவட்கு - எஞ்ஞான்றும் தன்னிடத்தில் உண்மை யன்பினை வைத்த பாடினிக்கு. மாறு ஆம் தெரிவையை - அவள் பகையாகிய ஈழப் பாடினியை, இசையால் வெல்ல - இசையினால் வெல்லு மாறு, அருளைத் தந்து அளித்தவண்ணம் அறைந்தனம் - திருவருளைத் தந்து ஆண்டருளிய திருவிளையாடலைக் கூறினேம்; தாயாய் - இனி (அப்பெருமானே) தாய்ப்பன்றியாய் வந்து, பன்றிக் குருளைக்கு முலைதந்து ஆவி கொடுத்தவாறு - பன்றிக்குட்டிகளுக்கு முலை கொடுத்து உயிரைப் புரந்த திருவிளையாடலை, எடுத்துச் சொல்வாம் - எடுத்துக் கூறு வோம்.

அன்பின் தெருள் - தெளிந்த அன்பு; உண்மை யன்பு. குருளை - குட்டி.

"நாயே பன்றி புலிமுயல் நான்கும்
ஆயுங் காலைக் குருளை யென்ப"

என்பது தொல்காப்பியம். (க)

முறையென விமையோர் வேண்ட முளைத்தநஞ் சயின்று சான்றாய்
உறையென மிடற்றில் வைத்த வும்பரான் மதுரைக் காரந்
திறையென வெறிநீர் வையைத் தெற்கது குருவிருந்த
துறையென வுளதோர் செல்வத் தொன்மணி மாட மூதூர்.

(இ - ள்.) இமையோர் முறையென வேண்ட-தேவர்கள் முறையோ வென்று குறையிரக்க, முளைத்த நஞ்சு அயின்று - கடலிலே தோன்றிய நஞ்சினை உண்டு, சான்றாய் உறை என - சான்றாக நீ இங்கே தங்குவாய் என்று, மிடற்றில் வைத்த உம்பரான் - அதனைத் திருமிடற்றின்கண் வைத்தருளிய சிவலோகநாதன் எழுந்தருளிய, மதுரைக்குத் திறை என ஆரம் எறி - மதுரைப்பதிக்குத் திறையாக முத்துக்களை வீசும், நீர் - நீரினை யுடைய, வையைத் தெற்கது - வையையாற்றின் தெற்கிலே, ஓர் செல்வம் தொல்மணி மாடமூதூர் - ஒரு செல்வமிக்க பழைய அழகிய மாடங்கள்

நிறைந்த பெரியவூர், குருவிருந்த துறை என உளது - குருவிருந்ததுறை என்னும் பெயருடன் உள்ளது.

இமையோர் முறையிட்டமையை,

''நஞ்சமஞ்சி, ஆவெந்தாயென் றவிதாவிடு நம்மவரவரே''

எனத் திருவாதவூரடிகள் அருளிச் செய்தலுங் காண்க. சான்றாய் - சிவ பெருமானே பரமபதி என்பதற்குச் சான்றாய். (உ)

தருநாத னாதி வானோர் தங்குரு விருந்து நோற்பக்
குருநாத னெனப்பேர் பெற்றுக் கோதிலா வரந்தந் தேற்றில்
வருநாதன் சித்தி ரத்தேர் வலவனா ருடனே கஞ்சத்
திருநாதன் பரவ வைகி யிருக்குமச் சிறந்த வூரில்.

(இ - ள்.) தருநாதன் ஆதிவானோர்தம் குரு-கற்பகத்தருவின் தலைவனாகிய இந்திரன் முதலிய தேவர்களின் குரவனாகிய வியாழன், இருந்து நோற்ப - தங்கியிருந்து தவம் புரிதலால், குருநாதன் எனப் பேர் பெற்று - குருநாதன் என்னுந் திருநாமம் பெற்று, கோது இலா வரம் தந்து - குற்றமில்லாத வரங்களை அருளி, ஏற்றில் வருநாதன் - இடபவூர்தியில் வரும் இறைவன், சித்திரத் தேர்வலவனாருடனே - விசித்திரமாகிய தமது தேரைச் செலுத்தும் பாகனாகிய பிரமனுடன், கஞ்சத் திருநாதன் பரவ - தாமரைமலரில் வீற்றிருக்கும் இலக்குமிக்கு நாயகனாகிய திருமால் போற்ற, வைகி இருக்கும் - எழுந்தருளியிருப்பன்; அச்சிறந்த ஊரில் - அத்தகைய சிறந்த பதியிலே.

நோற்றல் - சிவபிரானைக் குறித்துத் தவஞ் செய்தல். சித்திரத்தேர்- திரிபுரங்களை அழித்தற்கு எழுந்தருளுதற் பொருட்டுத் தேவர்களால் இயற்றப்பட்ட தேர். கஞ்சத்திரு - இலக்குமி. (ங)

சுகலனென் றொருவே ளாள னவன்மனை சுகலை யென்பாள்
இகலருங் கற்பி னாள்பன் னிருமகப் பெற்றாள் செல்வப்
புகலருஞ் செருக்கா லன்ன புதல்வரைக் கடியா ராகி
அகலருங் களிப்பு மீதூ ரன்பினால் வளர்க்கு நாளில்.

(இ - ள்.) சுகலன் என்று ஒரு வேளாளன் - சுகலன் எனப் பெயரிய ஒரு வேளாளன் (உளன்); அவன்மனை சுகலை என்பாள் - அவன் மனைவி சுகலை என்று சொல்லப்படுவாள்; இகல் அருங்கற்பினாள் - மாறுபாடில்லாத கற்பினையுடைய அவள், பன்னிரு மகப்பெற்றாள் - பன்னிரண்டு பிள்ளைகளைப் பெற்றாள்; செல்வப் புகல் அருஞ்செருக்கால் - செல்வத்தாலாகிய சொல்லுதற்கரிய செருக்கினால், அன்ன புதல்வரைக் கடியாராகி - அந்தப் பிள்ளைகளைக் குற்றங்கண்டவழி ஒறுக்காதவர்களாய், அகல் அருங் களிப்பு மீதூர் அன்பினால் - நீங்காத களிப்பு மிக்க அன்போடு, வளர்க்கு நாளில் - வளர்த்துவரும் பொழுது.

ஒரு வேளாளன் உளன் என வருவித்து முடிக்க. செல்வச் செருக்கால் என்க. கடியாராகி - குற்றங் கண்டுழி ஒறுத்து நல்வழிப் படுத்தாராகி. (ச)

தந்தையுந் தாயு மாயத் தறுகண்மிக் குடைய ராகி
மைந்தரும் வேட ரோடு கூடிவெங் கானில் வந்து
வெந்தொழில் வேட்டஞ் செய்வார் வெயில்புகாப் புதற்கீ ழெய்தி
ஐந்தவித் திருந்து நோற்குங் குரவனை யங்குக் கண்டார்.

(இ - ள்.) தந்தையும் தாயும் மாய - தம் அப்பனும் அன்னையும் இறந்தொழிய, மைந்தரும் - புதல்வர்களும், தறுகண்மிக்கு உடையராகி - வன்கண்மை மிகவும் உடையராய், வேடரோடு கூடி வெங்கானில் வந்து - வேடர்களோடு கூடிக் கொடிய காட்டில் வந்து, வெந்தொழில் வேட்டம் செய்வார் - கொடுந் தொழிலாகிய வேட்டையாடுவோர், வெயில் புகாப் புதல் கீழ்எய்தி - வெய்யில்புகாத புதலின் கீழ்ச்சென்று, ஐந்து அவித்து இருந்து நோற்கும் - ஐம்புலன்களையும் வென்று தியானத்தி லிருந்து நோற்கின்ற, குரவனை அங்கு கண்டார் - வியாழபகவானை அங்கே கண்டனர்.

ஐந்து, ஐம்புலனுக்கு ஆகுபெயர். எய்தி இருந்து நோற்கும் குரவனை வேட்டஞ் செய்வார் அங்குக் கண்டார் என்க. (௫)

கைத்தலம் புடைத்து நக்குக் கல்லும்வெம் பரலும் வாரி
மெய்த்தவன் மெய்யிற் றாக்க வீசினர் வினையை வெல்லும்
உத்தமன் *வீக்கஞ்செய்தார் தவத்தினுக் குவரென் றுன்னிச்
சித்தநோந் தினைய வஞ்சத் தீயரைச்செயிர்த்து நோக்கா.

(இ - ள்.) கைத்தலம் புடைத்து நக்கு - இரண்டு கைகளையும் ஒன்றோ டொன்று தாக்கி நகைத்து, கல்லும் வெம்பரலும் வாரி - கற்களையும் கொடிய பருக்கைகளையும் அள்ளி, மெய்த்தவன் மெய்யில் தாக்க - உண்மைத் தவத்தினையுடைய வியாழனது உடம்பிலே தாக்குமாறும், வீசினர் - எறிந்தார்கள்; இனைய வஞ்சத் தீயரை - இந்த வஞ்சக் கொடியோரை, வினையை வெல்லும் உத்தமன் - வினையைப் புறங்காணும் அவ்வுத்தமன், உவர்தவத்தினுக்கு வீக்கம் செய்தார் என்று உன்னி - இவர் நமது தவத்திற்கு இடையூறு செயதனரே என நினைந்து, சித்தம் நொந்து - மனம் நொந்து, செயிர்த்து நோக்கா - சினந்து நோக்கி.

வீக்கம் - அழிவு; வீ என்பதன் அடியாகப் பிறந்தது; விக்கம் எனப் பாடங் கொண்டு விக்நம் என்பதன் சிதைவு என்பாருமுளர். உவர் - இவர். (௬)

தொழுந்தொழின் மறந்து வேடத் தொழிலுவந் துழல்வீர் நீர்மண்
உழுந்தொழி லுடைய நீராற் பன்றியி னுதரத் தெய்திக்
கொழுந்தழ லனைய வேனக் குருளையாய்த் தந்தை தாயை
இழந்தல முறுமி னென்ன விட்டனன் கடிய சாபம்.

(பா - ம்.) * விக்கம்.

(இ - ள்.) தொழும் தொழில் மறந்து - (பெரியாரைக் காணின்) வணங்குங் கடப்பாட்டினை மறந்து, வேடத்தொழில் உவந்து உழல்வீர் - வேடர்களின் தொழிலை விரும்பி உழல்கின்றீர், நீர்மண் உழுந்தொழில் உடைய நீரால் - நீர்நிலத்தினை உழுதலாகிய தொழிலையுடைய தன்மையால், பன்றியின் உதரத்து எய்தி - பன்றியின் கருப்பத்திலுற்று, கொழுந்தழல் அனைய - கொழுவிய நெருப்பினை ஒத்த (சினத்தினையுடைய), ஏனக் குருளையாய் - பன்றிக்குட்டிகளாய்த் தோன்றி, தந்தை தாயை இழந்து அலமுறுமின் என்னு - தந்தையையுந் தாயையும் இழந்து துன்பமெய்துவீராக என்று, கடிய சாபம் இட்டனள் - கொடிய சாபமிட்டனன்.

உழல்வீர்: விளி. உழுங்குலத்திற் பிறந்து அத்தொழிலைக் கைவிட்டுக் கொடுமைசெய் துழலும் நீர் நிலத்தை உழுமியல்புடைய பன்றிக் குருளைகளாகப் பிறப்பீர் என்றான் என்க. அலமுறுமின் - துன்பம் எய்துமின்; அலம் - துன்பம். (எ)

பாவத்தை யனைய மைந்தர் பன்னிரு பேரு மஞ்சிச்
சாவத்தை யேற்றெப் போது தணிவதிச் சாப மென்ன
ஆவத்தை யகற்று மீச னருட்கழ னினைந்து வந்த
கோவத்தை முனிவு செய்தக் கடவுளர் குரவன் கூறும்.

(இ - ள்.) பாவத்தை அனைய மைந்தர் பன்னிருபேரும் - பாவமே உருவெடுத்தாற் போன்ற மைந்தர் பன்னிருவரும், அஞ்சி - பயந்து, சாவத்தை ஏற்று - சாபத்தினை ஏற்று, இச்சாபம் தணிவது எப்போது என்ன - இந்தச் சாபம் நீங்குவது எப்பொழுது என்று வேண்டி வினவ, அக்கடவுளர் குரவன்-தேவகுருவாகிய அவ் வியாழன், வந்த கோவத்தை முனிவுசெய்து - தனக்கு வந்த சினத்தினை வெறுத்து, ஆவத்தை அகற்றும் ஈசன் அருள் கழல் நினைந்து கூறும்-உயிர்களுக்கு (நேர்ந்த) இடையூற்றினை நீக்கும் இறைவனது அருளுருவாகிய திருவடியைச் சிந்தித்துக் கூறுவான்.

சாபம் முதலியவற்றிலே பகரம் வகரமாய்த் திரிந்து நின்றது. சினத்தினைச் சினந்தான் என்க. (அ)

என்னையா ளுடைய கூட லேகநா யகனே யுங்கட்
கன்னையாய் முலைதந் தாவி யளித்துமே லமைச்ச ராக்கிப்
பின்னையா னந்தவீடு தருமெனப் பெண்ணோர் பாகன்
தன்னையா தரித்தோன் சொன்னான் பன்னிரு தனயர் தாமும்.

(இ - ள்.) என்னை ஆள் உடைய கூடல் ஏக நாயகனே - என்னை ஆளாகவுடைய கூடலம்பதியில் எழுந்தருளிய தனித் தலைவனாகிய சோமசுந்தரக் கடவுளே, உங்கட்கு அன்னையாய் முலைதந்து ஆவி அளித்து, உங்களுக்குத் தாயாய்வந்து முலைகொடுத்து உயிரைப் புரந்து, மேல் - பின், அமைச்சர் ஆக்கி - பாண்டியனுக்கு அமைச்சர்களாகச் செய்தருளி, பின்னை - அதன்பின், ஆனந்த வீடுதரும் என - பேரின்ப வீட்டினையும் அருளுவான் என்று, பெண் ஓர் பாகன் தன்னை ஆதரித்

தோன் சொன்னான் - உமையை ஒரு பாகத்திலுடைய அவ்விறைவனைப் பேணி வழிபடும் குரவன் கூறினான்; பன்னிரு தனயர் தாமும் - (பின்) பன்னிரு மைந்தர்களும். (கூ)

தொன்மைசால் குருவி ருந்த துறையதன் புறத்த வான
பன்மைசால் கான வாழ்க்கைப் பன்றிகட் கரசாய் வைகுந்
தன்மைசா றனியே னத்தின் றன்பெடை வயிற்றிற் சென்று
வன்மைசால் குருளை யாகிப் பிறந்தனர் வழக்கான் மன்னே.

(இ - ள்.) தொன்மைசால் குருவிருந்த துறையதன் புறத்த ஆன - பழைமை மிக்க குருவிருந்த துறையின் புறத்தில் உள்ளனவாகிய, பன்மைசால் கான வாழ்க்கைப் பன்றிகட்கு - பலவாகிய காட்டில் வாழுதலையுடைய பன்றிகளுக்கு, அரசாய் வைகும் தன்மைசால் - வேந்தாயிருக்கும் தன்மையுடைய, தனி ஏனத்தின் - ஒப்பற்ற பன்றியின், பெடை வயிற்றில்சென்று - பெண்ணின் வயிற்றிற் சென்று, வழக்கால் - சாப நெறியாலே, வன்மைசால் குருளையாகிப் பிறந்தனர் - வலிமை மிக்க குட்டிகளாய்ப் பிறந்தனர்.

ஏனத்தின் பெடை என்பதனை இலேசாற் கொள்க. துறையது, அது: பகுதிப் பொருள் விகுதி. தன்: சாரியை. மன், ஓ : அசைகள். (கo)

ஆனநா ளொருநா ளெல்லை யரசருக் கரச னான
மீனவன் மதுரை நீங்கி மேற்றிசைக் கான நோக்கி
மானமா வேட்டஞ் செய்வான் மத்தமா வுகைத்துத் தண்டாச்
சேனை*தன் புறம்பே மொய்ப்பச் செல்கின்றான் செல்லு மெல்லை.

(இ - ள்.) ஆனநாள் - இவ்வாறான காலையில், ஒருநாள் எல்லை - ஒருநாளளவில், அரசருக்கு அரசனான மீனவன் - மன்னர்களுக்கு மன்னனாகிய இராச ராசபாண்டியன், மதுரைநீங்கி - மதுரையைவிட்டு, மேல் திசைக் கானம் நோக்கி - மேற்குத் திக்கிலுள்ள காட்டினை நோக்கி, மானம்மா வேட்டம் செய்வான் - பெரிய விலங்குகளை வேட்டையாடுதற் பொருட்டு, மத்தமா உகைத்து - மதமயக்கத்தையுடைய யானையைச் செலுத்தி, தண்டாச் சேனை தன்புறம்பே மொய்ப்பச் செல்கின்றான் - நீங்காத தானைகள் தன்மருங்கிற் சூழப்போகின்றான்; செல்லும் எல்லை - அங்ஙனம் போகும்போது.

இராச ராச பாண்டியன் என்பார் 'அரசருக் கரசனான மீனவன்' என்றார் எனலுமாம். மானம் - பெருமை. (கக)

மாவழங் கிடங்க டேர வல்லதோல் வன்கா லோற்றர்
பாவடிச் சுவடு பற்றிப் படர்ந்துநா றழல்பு லால்வாய்த்
தீவிழி யுழுவை யேனந் திரிமருப் பிரலை புல்வாய்
மேவிட னறிந்து வல்லே விரைந்துவந் தெதிரே சொன்னார்.

(பா - ம்.) * தண்டார்ச்சேனை.

(இ - ள்.) மா வழங்கு இடங்கள் தேரவல்ல-விலங்குகள் பயிலும் இடங்களை ஆராய்ந்து அறியவல்ல, தோல்வன்கால் ஒற்றர் - தொடு தோலணிந்த வலிய காலையுடைய ஒற்றர்கள், பா அடிச் சுவடுபற்றிப் படர்ந்து - (விலங்குகளின்) பரந்த அடிச்சுவட்டினைப் பின்பற்றிச் சென்று, நாறு அழல்புலால் வாய்த்தீவிழி உழுவை - தோன்றும் சினத்தீயினையும் புலால் நாறும் வாயினையும் நெருப்புப்போன்ற கண்களையுமுடைய புலிகளும், ஏனம் - பன்றிகளும், திரிமருப்பு இரலை - திருகிய கொம்புகளையுடைய கலைமானும், புல்வாய் - மானினங்களும், மேவு இடன் அறிந்து - தங்கிய இடங்களை அறிந்து, வல்லே விரைந்து வந்து எதிரே சொன்னார் - மிக விரைந்து வந்து மன்னனெதிரே நின்று புகன்றனர். (கஉ)

மறத்துறை வேட்ட மாக்கள் வல்லைபோ யோடியே றிந்து
புறத்துவார் வலைகள் போக்கி நாயதன் புறம்பு போர்ப்ப
நிறைத்துமா வோதுக்கி நீட்டும் படைஞராய்*சூழ்ந்து நிற்ப
அறத்துறை மாறாக் கோலா ளானைமேல் கோண்டு நிற்ப.

(இ - ள்.) மறத்துறை வேட்ட மாக்கள் - கொலை நெறிபயின்ற வேட்டை யாடுதல் வல்லார், வல்லைபோய் - விரைந்துசென்று, ஓடியெறிந்து - காடுகளை வெட்டிச் சரித்து, புறத்துவார் வலைகள்போக்கி - புறம்பே நெடிய வலைகளைக் கட்டி, நாய் அதன் புறம்பு போர்ப்ப நிறைத்து - நாய்கள் அவ்வலையின் புறம்பு சூழ்ந்து நிற்குமாறு அவற்றை நிறைத்து, மா ஒதுக்கி நீட்டும் படைஞராய்ச் சூழ்ந்துநிற்ப - விலங்குகளை ஒரு வழிப்படுத்தி அவற்றின்மேல் விடும் படைகளையுடையராய்ச் சுற்றிலும் நிற்கவும், அறத்துறை மாறாக் கோலான் - அறநெறியினின்றும் மாறாத செங்கோலையுடைய பாண்டியன், ஆனைமேல் கொண்டுநிற்ப - யானைமேலேறி ஒருபால் நிற்கவும்.

ஓடியெறிதல் - காடுவெட்டிச் சரித்தல். (கங)

சில்லரித் துடி†கோ டேங்குஞ் செவிடுறச் சிலையா நிற்பப்
பல்வகைப் பார்வை காட்டிப் பயில்விளி யிசையா நிற்ப‡
வல்லிய மிரலை மையன் மானினம் வேருளா நிற்ப
வில்லிற வலித்து வாங்கி மீளிவேங் கணைக டூர்த்தார்.

(இ - ள்.) சில் அரித்துடி - சில்லென அரித்தெழும் ஓசையையுடைய உடுக்கைகளும், கோடு - கொம்புகளும், எங்கும் செவிடுறச் சிலையாநிற்ப - எவ்விடத்தும் செவிடுபடுமாறு ஒலியா நிற்கவும், பல்வகைப் பார்வை காட்டி - பலவகையான பார்வை விலங்குகளைக் காட்டி, பயில்விளி இசையாநிற்ப - அவ்விலங்குகள் பயின்ற அழைப்பொலியை ஒலியா நிற்கவும், வல்லியம் இரலை மையல் மான் இனம் வெருளா நிற்ப - புலிகளும் மான்களும் மதமயக்கத்தையுடைய யானைக் கூட்டங்களும் அஞ்சுமாறு, வில் இற வலித்து வாங்கி - வில் முறியுமாறு வலிபெற வளைத்து, மீளிவெங் கணைகள் தூர்த்தார் - வலிய கொடிய கணைகளைப் பொழிந்தனர்.

(பா - ம்.) * ஈட்டும் படைஞராய். †சில்லரிதுடி. ‡இசையாநிற்பர்.

சில்லரிதுடி எனப் பாடங்கொண்டு, சில்லரியாவது ஒலிக்கும் ஒரு வகைப்பறை யென்பாரும் உளர். பார்வை - விலங்குகளைப் பிடித்தற்கு வளர்க்கப்பட்ட இனமாகிய விலங்குகள். பயில் விளி - அவை பயின்ற அழைப்பொலி. மையல் மான் - யானை. நன்கு வளைத்து என்பார் ''வில்லிற வலித்து வாங்கி'' என்றார். (கச)

[எழுசீரடி யாசிரிய விருத்தம்]

செறிந்த மான்மு றிந்த தாள்சி தைந்த சென்னி செம்புனற்
பறிந்த வாறு வெண்ணி ணம்ப ரிந்து வீசு கையிறு
மறிந்த வேழு யர்ந்த வேழ மாண்ட வெண்கு வல்லியம்
பிறிந்த வாவி யோடும் வாய்பி ளந்த வாய்வி ழுந்தவே.

(இ - ள்.) செறிந்த மான் - நெருங்கிய மான்கள், தாள்முறிந்த ; (சில) கால் முறிந்தன ; சென்னி சிதைந்த - (சில) தலை சிதைந்தன ; செம்புனல் ஆறு பறிந்த - குருதி ஆறு ஓடியது ; ஏழ் உயர்ந்த வேழம் - ஏழு முழம் உயர்ந்த யானைகள், வீசு கை இறு - வீசுகின்ற துதிக்கை அற்று, வெண்ணிணம் பரிந்து - வெள்ளிய நிணம் சிந்தி, மறிந்த மாண்ட- (செல்நெறி) தடைப்பட்டு மடிந்தன ; எண்கு வல்லியம் - கரடிகளும் புலிகளும், பிறிந்த ஆவியோடும் - நீங்கின உயிரோடும், வாய் பிளந்த வாய் விழுந்த - வாய் பிளந்தனவாகி விழுந்தன.

பறிந்தது என்பது துவ்வீறு தொக்கது. செம்புனல் ஆறு பறிந்த தென்க. யானை ஏழுமுழம் உயர்ந்திருத்தல் உத்தம இலக்கணம். வேழம் மறிந்தன எண்கு மாண்டன வல்லியம் விழுந்தன என்றுரைத்தலுமாம். (கரு)

தோட்ட புற்கி ழங்குவாடை தோடவி ரைந்து கண்ணியுட்
பட்ட வும்பொ றித்து வைத்த பார்வை வீழ்ந்த டுத்தவுங்
கட்டி யிட்ட வலைபி ழைத்து ஞமலி கௌவ நின்றவும்
மட்டி லாத வொட்டி நின்ற மள்ளர் வேலின் மாய்ந்தவே.

(இ - ள்.) தொட்ட புல்கிழங்கு வாடை தொட - தோண்டிய புல்லின் மணமும் கிழங்கின் மணமும் வீச விரைந்து கண்ணியுள் பட்டவும் - விரைந்து சென்று வலையுட்பட்டனவும், பொறித்து வைத்த பார்வை வீழ்ந்து அடுத்தவும் - செய்து வைத்த பார்வை விலங்கினை விரும்பிவந்து பொருந்தியனவும், கட்டி இட்ட வலை பிழைத்து - கட்டி வைத்த வலையினின்றுந் தப்பி, ஞமலி கௌவநின்றவும் - நாய்கள் கௌவ நின்றனவுமாகிய, மட்டிலாத - அளவிறந்த விலங்குகள், ஒட்டி நின்ற மள்ளர் வேலின் மாய்ந்தவே - கிட்டிநின்ற வீரர்களின் வேற் படையால் மாய்ந்தன.

கண்ணியின் நடுவே புல்லும் கிழங்கும் தோண்டி வைத்திருக்க அவற்றின் மணத்தால் ஈர்க்கப்பட்டுவந்து கண்ணியுட் பட்டன என்க. பொறித்து வைத்த பார்வை - பார்வை விலங்குகளாக இயற்றிவைத்த உருக்கள். பட்ட, அடுத்த, நின்ற என்பன வினையாலணையும் பெயர்கள்.

மட்டிலாத வேலின் என இயைத்தலுமாம். மாய்ந்த: அன்பெறாத பல வின்பால் முற்று. (கசு)

பட்ட மாவொ ழிந்து நின்ற மறவி லங்கு பல்சில
வட்ட மாவ ளைந்து டுத்த வலையி னுந்தி யப்புறத்
தெட்டி நின்ற கொலைஞர்மே லெதிர்ந்து மீள்வ வெயில் வளைந்
தொட்டி னாரை மலையு மாப்பொ றிக்க ணங்க ளொத்தவே.

(இ - ள்.) பட்டமா ஒழிந்துநின்ற - இறந்தொழிந்த விலங்குகள் நீங்க இறவாது நின்ற, மறவிலங்கு பல்சில - பலவும் சிலவுமாய் கொடிய விலங்குகள், வட்டமா வளைந்து உடுத்த - வட்டமாக வளைந்து சூழ்ந்த, வலையின் உந்தி - வலையினின்றுந் தாவி, அப்புறத்து எட்டிநின்ற - புறத்தே அடுத்துநின்ற, கொலைஞர்மேல் எதிர்ந்து மீள்வ - வேட்டுவ மாக்கள் மீது பாய்ந்து மீள்வன, எயில் வளைந்து - மதிலைச் சூழ்ந்து, ஒட்டினாரை - எதிர்த்த பகைவரை, மலையும் - பொராநிற்கும், மாப்பொறிக் கணங்கள் ஒத்த - பொறிகளாகிய விலங்குக் கூட்டங்களை ஒத்தன.

ஒழிந்து - ஒழிய; எச்சத்திரிபு. மாப்பொறி - விலங்குப்பொறி. (கஎ)

வல்லி யந்து ளைத்த கன்று மான்று ளைத்த கன்றுவெங்
கல்லி யங்கு மெண்கி னைத்து ளைத்த கன்று கயவுவாய்
வெல்லி பந்து ளைத்து மள்ளர் விட்ட வாளி யிங்ஙனஞ்
சொல்லி னுங்க டிந்து போய்த்து ணித்த மாவ ளப்பில.

(இ - ள்.) மள்ளர்விட்ட வாளி - வீரர்விட்ட வாளிகள், சொல்லினும் கடிந்துபோய் - முனிவரிடுஞ் சாப மொழியினும் விரைந்து சென்று, வல்லியம் துளைத்து அகன்று - புலிகளைத் துளைத்துருவியும், மான் துளைத்து அகன்று - மான்களைத் துளைத்துருவியும், வெங்கல் இயங்கும் எண்கினைத் துளைத்து அகன்று - வெப்ப மமைந்த மலைகளில் இயங்கும் கரடிகளைத் துளைத் துருவியும், கயவுவாய் வெல் இபம் துளைத்து - பெரிய வாயினையுடைய வெற்றி பொருந்திய யானைகளைத் துளைத்தும், இங்ஙனம் துணித்தமா அளப்பில - இவ்வாறு துண்டித்த விலங்குகள் அளவிறந்தன.

கயவு - பெருமை;

"தடவும் கயவும் நளியும் பெருமை"

என்பது தொல்காப்பியம். சொல் - முனிவரின் சாபமொழி; அஃது அக் கணத்தே விரைந்து சென்று தாக்குதலின் உவமமாயிற்று;

"சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசரம்"

எனக் கம்பநாடர் கூறுதலுங் காண்க. (கஅ)

மடுத்த வாளி யிற்பி ழைத்து வலையை மூட்டி யப்புறத்
தடுத்த மானை வெளவி நாய லைத்து நின்ற வாதிநாள்
உடுத்த பாசி வலையி னின்று முய்க்கு வாரை யொய்யெனத்
தடுத்த வாவி ளைத்து நின்ற தைய லாரை யொத்தவே.

(இ - ள்.) மடுத்த வாளியில் பிழைத்து - பாய்ந்த வாளிகளினின்றுந் தப்பி, வலையை முட்டி அப்புறத்து அடுத்த மானை - வலையை மோதி அப்புறஞ்சென்ற மான்களை, வெளவி அலைத்துநின்ற நாய் - கௌவி வருத்தி நின்றனவாகிய நாய்கள். ஆதிநாள் உடுத்த பாசவலையினின்றும் உய்குவாரை - முன்னாளிலே சூழ்ந்த பாசமாகிய வலையினின்றும் தப்பிப் பிழைத்துச் செல்லும் பெரியோரை, ஒய்யெனத் தடுத்து - விரைந்து தடுத்து, அவா விளைத்து நின்ற - ஆசையை விளைத்து நின்ற, தையலாரை ஒத்தவே - பெண்களை ஒத்தன.

அலைத்து நின்ற நாய் என மாறுக. ஆதிநாள் என்றது அனாதி காலமாக என்றபடி. ஒய்யென : விரைவுக் குறிப்பு.

> "பலதுறைகளின் வெருவரலொடு பயில்வலையற நுழைமா
> உலமொடுபடர் வனதகையுற வுறுசினமொடு கவர்நாய்
> நிலவியவிரு வினைவலையிடை நிலைசுழல்பவர் நெறிசேர்
> புலனுறுமன னிடைதடைசெய்த பொறிகளினள வுளவே"

என்னும் திருத்தொண்டர் புராணச் செய்யுளொடு இஃது ஒப்புநோக்கற் பாலது. (கக)

> மதியை நேர்வ கிர்ந்து கௌவி யனைய வான்ம ருப்புவெங்
> கதிய வேழ மீது தாது காலு நீல முகையினீள்*
> நுதிய வேனு ழைந்த செம்பு ணூழில் வீழு முதிரநீர்
> முதிய கான வரையின் மீது மொய்த்த தீயை யொத்தவே.

(இ - ள்.) மதியை நேர் வகிர்ந்து கௌவி யனைய - சந்திரனை இரு கூறுகப் பிளந்து கௌவினாற்போன்ற, வான் மருப்பு வெம்கதிய வேழம் மீது - வெள்ளிய மருப்பினையும் வெய்ய நடையையுமுடைய யானையின் மேல், தாதுகாலும் நீலமுகையின் - மகரந்தஞ் சிந்தும் நீலோற்பலத்தின் அரும்புபோல (நஞ்சு பூசிய), நீள்நுதிய வேல் நுழைந்த - நீண்ட முனையையுடைய வேற்படை ஊடுருவியதாலாகிய, செம்புண் நூழில் வீழும் உதிரநீர் - பசும் புண்ணின் தொளையினின்று பொழியுங் குருதி நீர், முதிய கான வரையின்மீது - முற்றிய மரங்களையுடைய காடு அடர்ந்த மலையின்மேல், மொய்த்த தீயை ஒத்த - சூழ்ந்த நெருப்பினை ஒத்தது.

கதிய, நிதிய, முதிய என்பன குறிப்புப் பெயரெச்சங்கள். நுழைந்த : காரணப்பொருளில் வந்த பெயரெச்சம். நூழில் - துளை. ஒத்தது : துவ் வீறு தொக்கது ; குருதிகள் ஒத்தன எனலுமாம் ;

> "வீழ்தரு மொண்குருதி
> கார்த்திகைச் சாற்றிற் கழிவிளக்குப் போன்றவே"

என்னும் களவழிச் செய்யுள் இங்கு நோக்கற்பாலது. (உ0)

(பா - ம்.) * முகையினின்.

மள்ள ரோசை துடியி னோசை வயிரி னோசை வாளிபோய்த்
தள்ள வீழ்வி லங்கி னோசை தப்பி யோடு மானின்மேற்
றுள்ளு நாய்கு ரைக்கு மோசை கானமூடு தொக்குவான்
உள்ளு லாயு டன்றொ லிக்கு முருமி னோசை புரையுமால்.

(இ - ள்.) மள்ளர் ஓசை - வீரர்களின் ஆர்ப்பொலியும், துடியின் ஓசை - உடுக்கையின் ஒலியும், வயிரின் ஓசை - ஊதுகொம்பின் ஒலியும், வாளிபோய்த் தள்ள வீழ் விலங்கின் ஓசை - வாளிகள் சென்று தைத்து வீழ்த்தலால் வீழ்கின்ற விலங்குகளின் ஒலியும், தப்பி ஓடும் மானின் மேல் - வலையைத் தப்பியோடும் மான்களின்மேல், துள்ளும் நாய் குரைக்கும் ஓசை - தாவுகின்ற நாய்கள் குரைக்கின்ற ஒலியும், கானம் ஊடு தொக்கு - காட்டின்கண் ஒருசேரத் திரண்டு, வானுள் உலாவி உடன்று ஒலிக்கும் உருமின் ஓசை புரையும் - வானின்கண் உலாவி வெகுண்டு ஒலிக்கும் இடியோசையினை ஒக்கும்.

எண்ணும்மைகள் விரிக்க. ஆல்: அசை. (உக)

இன்ன வேறு பல்வி லங்கெ லாம லைத்தி லங்குவேல்
மன்ன ரேறு தென்னர் கோம கன்கு டக்கி னேகுவான்
அன்ன போதோ ரேன மேன வரசி ருக்கு மடவிவாய்
முன்ன ரோடி வந்து நின்று வந்த செய்தி மொழியுமால்.

(இ - ள்.) இன்ன பல்வேறு விலங்கு எலாம் அலைத்து - இங்ஙனம் பலவேறு வகையான விலங்குகளை யெல்லாம் வருத்தி, மன்னர் ஏறு - அரசருள் ஏறுபோன்ற - இலங்கு வேல் தென்னர் கோமகன் - விளங்கு கின்ற வேற்படை யேந்திய பாண்டியர் கோமான், குடக்கின் ஏகுவான் - மேற்றிசை நோக்கிச் செல்வானாயினன்; அன்ன போது - அதுபோது, ஓர் ஏனம் - ஒரு பன்றி, ஏன அரசு இருக்கும் அடவிவாய் - பன்றி யரசன் இருக்குங் காட்டின்கண், முன்னர் ஓடி வந்து நின்று - முற்பட்டு ஓடி வந்து நின்று, வந்த செய்தி மொழியும் - தான் வந்த செய்தியைக் கூறும்.

ஆல்: அசை. (உஉ)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

எங்களுக் கரசே கேட்டி யிங்குள விருக மெல்லாந்
திங்களுக் கரசன் கொன்று வருகின்றா னென்று செப்ப
வெங்களிப் படைந்து பன்றி வேந்தனு மடுபோ ராற்றச்
சங்கையுற் றெழுந்து போவான் றன்னுயிர்ப் பெடையை நோக்கா.

(இ - ள்.) எங்களுக்கு அரசே கேட்டி - எங்களுக்கு அரசனே கேட்பாயாக, இங்கு உள விருகம் எல்லாம் - இங்குள்ள விலங்குகளனைத் தையும், திங்களுக்கு அரசன் கொன்று வருகின்றான் என்று செப்ப - சந்திர மரபிற்கு மன்னனாகிய பாண்டியன் கொன்று வாராநின்றான் என்று சொல்ல, பன்றிவேந்தனும் - அப்பன்றி யரசனும், வெங்களிப்பு

அடைந்து - மிக்க களிப்பெய்தி, அடுபோர் ஆற்றச் சங்கையுற்று - கொல்லுதலையுடைய போர் புரிய எண்ணி, எழுந்து போவான் - எழுந்து செல்பவன், தன் உயிர்ப் பெடையை நோக்கா - தனது உயிர் போன்ற பெண் பன்றியைப் பார்த்து,

கேட்டி, ட்: எழுத்துப்பேறு; இ: எதிர்கால விகுதி. விருகம் - விலங்கு. திங்கள் மரபிற்றோன்றிய அரசனைத் திங்களுக்கரசன் என்றார். வெம்மை மிகுதி மேற்று. போர் பெற்றமை கருதிக் களிப் படைந்தது என்க. சங்கையுற்று - எண்ணங்கொண்டு. வேந்தன் என்பதற் கேற்பப் போவான் என்றார். (உங)

இன்றுபாண் டியனை நேரிட் டிருஞ்சம ராடி வென்று
வன்றிறல் வாகை யோடு வருகுவ னேயோ வன்றிப்
பொன்றுவ னேயோ நீயுன் புதல்வரைப் பாது காத்து
நன்றிவ ணிருத்தி யென்ன நங்கைப்பே டின்ன கூறும்.

(இ - ள்.) இன்று பாண்டியனை நேரிட்டு - இன்று பாண்டியனை எதிர்த்து, இருஞ்சமர் ஆடி வென்று - பெரிய போர் புரிந்து வென்று, வன்திறல் வாகையோடு வருகுவனேயோ - மிக்க வலியாற் பெற்ற வெற்றி மாலையுடன் வருவேனோ, அன்றிப் பொன்றுவனேயோ - அல்லாமல் இறந்து படுவேனோ (அறியேன்); நீ உன் புதல்வரைப் பாதுகாத்து நன்று இவண் இருத்தி என்ன - நீ உன் புதல்வர்களை நன்றாகப் பேணி இங்கு இருப்பாயாக என்று கூற, நங்கைப் பேடு இன்ன கூறும் - பெண் பன்றி இங்ஙனங் கூறா நிற்கும்.

வன்றிறல்: ஒருபொரு ளிருசொல். (உச)

ஆவியங் கேக விந்த வாகமிங் கிருப்ப தேயிப்
பாவியோ மேனா ளிந்தப் பறழினை வகுத்த தெய்வம்
மாவம ராடி வென்று வருதியேல் வருவே னன்றி
நீவிளிந் திடத்து மாய்வே னிழலுக்குஞ் செயல்வே றுண்டோ.

(இ - ள்.) ஆவி அங்கு ஏக இந்த ஆகம் இங்கு இருப்பதே - உயிர் அங்குச்செல்ல இந்த உடல் இங்கு இருப்பது வழக்காமோ, மேல் நாள் - முன்னாளில், இந்தப் பறழினை வகுத்த தெய்வம் இப் பாவியோ - இந்தக் குட்டிகளை வகுத்த தெய்வம் இந்தப் பாவியோ, (அது வேறு ஆகலின் யானும் வந்து) மா அமர் ஆடிவென்று வருதியேல் வருவேன் - நீ பெருஞ்சமர் புரிந்து வெற்றி பெற்று வருவாயேல் உடன் மீளுவேன்; அன்றி - அல்லாமல், நீ விளிந்த இடத்து மாய்வேன் - நீ இறந்து படுவாயேல் அவ்விடத்திலேயே யானும் இறந்தொழிவேன்; நிழலுக்கும் செயல் வேறு உண்டோ - உடம்பின் நிழலுக்கு அவ்வுடம்பைத் தொடர்ந்து செல்வதன்றி வேறு செயலும் உளதோ?

எனக்கு நின்னையன்றி வேறு உயிரில்லை யாகலின் யான் நின்னைப் பிரிந்து வாழ்தல் கூடாதென்பாள் 'ஆவியங் கேக இந்த வாக மிங்கிருப் பதே' என்றாள். ஏகாரம் எதிர்மறைப் பொருட்டு. இக்குட்டிகளை

இங்ஙனம் விதித்த தெய்வம் வேறுண்டாகலின் அதுவே அவற்றைப் புரக்க வல்லதன்றி யான் அல்லேன் என்பாள் 'இப் பாவியோ மேனுள் இந்தப் பறழினை வகுத்த தெய்வம்' என்றாளென்க. விளிவையேல் விளிந்த விடத்து என விரிக்க. விளிந்த என்பதன் அகரம் தொக்கது. (உரு)

போதுக மெழுக வென்னுப் பொருக்கென வெழுந்து நீலத்
தாதுற ழேனப் பாட்டி தன்புடை தழுவிச் செல்லும்
பேதுறு பறழை நூக்கிப் பின்றெடர்ந் தணைந்து செல்லக்
காதெயிற் றெறுழி வேந்தன் காலென நடந்தா னன்றே.

(இ - ள்.) போதுகம் எழுக என்ளு - (ஆகலின்) செல்வோம் எழுக என்று கூறி, பொருக்கென எழுந்து - விரைந்து எழுந்து, நீலத் தாது உறழ் பாட்டி ஏனம் - இரும்பினை யொத்த நிறத்தினையுடைய பெண் பன்றி, தன்புடை தழுவிச்செல்லும் - தனது மருங்கில் தழுவி வாரா நின்ற, பேதுறு பறழை நூக்கி - மன மயங்குதற் கேதுவாகிய குட்டிகளைத் தள்ளி, பின் தொடர்ந்து அணைந்து செல்ல - பின்பற்றி நெருங்கிச் செல்லாநிற்க, காது எயிற்று எறுழி வேந்தன் கால் என நடந்தான் - கொல்லுகின்ற பற்களையுடைய பன்றியரசன் காற்றைப் போல விரைந்து சென்றான்.

பொருக்கென : விரைவுக்குறிப்பு. நீலத்தாது - நீலோற்பலத்தின் மகரந்தமுமாம். பாட்டி என்பது பெண்பன்றியைக்குறிக்கும் மரபுப் பெயர் ;

"பாட்டி என்பது பன்றியும் நாயும்"

என்பது தொல்காப்பியம். பேதுறு - மருளுகின்ற என்றுமாம். அன்று, ஏ : அசைகள். (உசு)

பல்வகைச் சாதி யுள்ள பன்றியின் கணங்க ளெல்லாம்
வெல்படைத் தறுகட் சேனை வீரராய் முன்பு செல்லச்
செல்லெனத் தெழித்துச் செங்கட் டீயுக மான மென்னும்
மல்லல்வாம் புரவி மேல்கோண் டெழுந்தனன் வராக வீரன்.

(இ - ள்.) பல்வகைச் சாதி உள்ள - பலவேறு சாதியான, பன்றியின் கணங்கள் எல்லாம் - பன்றிக்கூட்டங்கள் அனைத்தும், வெல் படைத் தறுகண் சேனைவீரராய் முன்பு செல்ல - வெல்லும் படைக்கலமும் அஞ்சாமையுமுடைய படை வீரராய் முன்னே செல்லநிற்க, வராகவீரன் - பன்றிவீரன், செல் எனத் தெழித்து - இடிபோல ஒலித்து, செங்கண் தீ உக - சிவந்த கண்களினின்றுஞ் சினத்தீ சிந்த, மானம் என்னும் மல்லல் வாம் புரவிமேல் கொண்டு எழுந்தனன் - மானமென்கின்ற வலிய தாவுங் குதிரைமேலேறிப் போருக்கு எழுந்தனன்.

மானமானது ஈர்க்கச் சென்றமையின் அதனைப் புரவியாக உருவகித்தார். (உஎ)

முற்படு தூசி யாக நடக்கின்ற முரட்காற் பன்றி
மற்படு சேனை நேரே வருகின்ற மன்னர் மன்னன்
வெற்படு தடந்தோள் வன்றாள் வீரர்மேற் சீறிச் செல்லப்
பிற்பட வொதுங்கி வீரர் பெய்தன ரப்பு மாரி.

(இ - ள். முற்படு தூசியாக நடக்கின்ற - முன்னணியாக நடக்கின்ற, முரண் கால் பன்றி மல்படுசேனை - முருட்டுக் கால்களையுடைய பன்றியாகிய வலிமிக்க படை, நேரே வருகின்ற மன்னர் மன்னன் - எதிரே வருகின்ற வேந்தர் வேந்தனாகிய பாண்டியனது, வெற்பு அடு தடந்தோள் வன் தாள் வீரர்மேல் - மலையைப் பொருது வென்ற பெரிய தோள்களையும் வலிய தாள்களையுமுடைய வீரர்கள்மேல், சீறிச் செல்ல - சினந்து செல்ல, வீரர் பிற்பட ஒதுங்கி - அவ்வீரர்கள் பின்னே ஒதுங்கி நின்று, அப்பு மாரிபெய்தனர் - அம்பு மழையினைப் பொழிந்தனர்.

தூசி - முன்னே செல்லும் படை. நடக்கின்ற சேனை வீரர்மேற் செல்ல அவர் அப்புமாரி பெய்தனர் என்க. அப்பு, அம்பு என்பதன் வலித்தல். (உ அ)

சோரிந்தன சோரி வெள்ளஞ் சோரிந்தன வீழ்ந்த யாக்கை
சரிந்தன குடர்க ளென்பு தகர்ந்தன வழும்பு மூளை
பரிந்தன சேனங் காகம் படர்ந்தன வுயிரு மெய்யும்
பிரிந்தன வேன நின்ற பிறைமருப் பேன வீரர்.

(இ - ள்) சோரி சொரிந்தன வெள்ளம் சொரிந்தன - குருதிகள் பொழிந்து வெள்ளமாகப் பெருகின; யாக்கை வீழ்ந்த - உடல்கள் வீழ்ந்தன; குடர்கள் சரிந்தன - குடர்கள் சரிந்தன; என்பு தகர்ந்தன; எலும்புகள் முறிந்தன; வழும்பு மூளை பரிந்தன - வழும்பும் மூளையும் அற்றன; சேனம் காகம் படர்ந்தன - பருந்துங் காகமும் பரவின; ஏனம் உயிரும் மெய்யும் பிரிந்தன - பன்றிகள் (இங்ஙனம்) உயிர்வேறு உடல் வேறாகப் பிரிந்தன; நின்ற பிறைமருப்பு ஏன வீரர் - பிழைத்து நின்ற பிறைபோலும் கோட்டினையுடைய பன்றிவீரர்.

பின்னுள்ள சொரிந்தன என்பது பெருகின என்னும் பொருட்டு. வீரர் என்பது வருஞ் செய்யுளில் உள்ள சிதைத்தனர் முதலிய வினைகளைக் கொள்ளும். (உக)

பதைத்தன ரெரியிற் சீறிப் பஞ்சவன் படைமேற் பாய்ந்து
சிதைத்தனர் சிலரைத் தள்ளிச் செம்புனல் வாயிற் சோர
உதைத்தனர் சிலரை வீட்டி யுரம்புதை படக்கோ டேன்றி
வதைத்தனர் சிலரை நேரே வகிர்ந்தனர் சிலரை மாதோ.

(இ - ள்.) எரியில் சீறிப் பதைத்தனர் - நெருப்பைப் போலச் சினந்து உடல் பதைத்து, பஞ்சவன் படைமேல் பாய்ந்து சிலரைச் சிதைத்தனர் - பாண்டியன் படைமீதுபாய்ந்து சிலரைச் சிதைத்தார்கள்; சிலரைத் தள்ளி - சிலரைக் கீழே தள்ளி, வாயில் செம்புனல் சோர உதைத்தனர் - அவர் வாயினின்றும் குருதிபொழியுமாறு உதைத்தார்

கள்; சிலரை வீட்டி-சிலரை வீழ்த்தி, உரம் புதைபடக் கோடு ஊன்றி வதைத்தனர்-அவர் மார்பிற் புதையுமாறு கொம்பினை அழுத்திக் கொன்றார்கள்; சிலரை நேரே வகிர்ந்தனர் - சிலர் உடலைச் சரிபாதியாகக் கிழித்தார்கள்.

பதைத்தனர்: முற்றெச்சம், மாது, ஓ: அசைகள். (௯0)

தாள்சிதைந் தாருஞ் சில்லோர் தலைசிதைந் தாருஞ் சில்லோர்
தோள்சிதைந் தாருஞ் சில்லோர் தொடைசிதைந் தாருஞ் சில்லோர்
வாள்சிதைந் தாருஞ் சில்லோர் வரையறுத் தலரோன் றீட்டும்
நாள்சிதைந் தாருஞ் சில்லோர் நராதிபன் சேனை வீரர்.

(இ - ள்.) நர அதிபன் சேனைவீரர்-பாண்டிவேந்தனுடைய படை வீரர்களில், தாள் சிதைந்தாரும் சில்லோர் - கால்முறிந்தவர்களுஞ் சிலர் - தலை சிதைந்தாரும் சில்லோர் - தலையுடைந்தவருஞ் சிலர்; தோள் சிதைந்தாரும் சில்லோர்-தோள் முறிந்தவருஞ் சிலர்; தொடை சிதைந் தாரும் சில்லோர் - தொடை நொறுங்கினவருஞ் சிலர்; வாள் சிதைந் தாரும் சில்லோர் - வாட்படை அற்றாருஞ் சிலர்; அலரோன் வரையறுத்துத் தீட்டும் நாள் சிதைந்தாரும் சில்லோர் - பிரமன் வரை யறுத்து எழுதிய வாழ்நாள் உலந்தாருஞ் சிலர்.

நராதிபன் - மனிதர்களுக்குத் தலைவன்; அரசன். (௯௧)

கண்டனர் கன்னி நாடு காவல னமைச்சர் சீற்றங்
கொண்டனர் முசல நேமி கூற்றென வீசி யார்த்தார்
விண்டனர் மாண்டார் சேனை வீரரு மனைய வெல்லைப்
புண்டவ ழெயிற்று வேந்தைப் புடைநின்ற பேடை நோக்கா.

(இ - ள்.) கன்னிநாடு காவலன் அமைச்சர் கண்டனர்-கன்னிநாட்டினைக் காவல் செய்யும் பாண்டி மன்னனது அமைச்சர் இதனைக் கண்டு, சீற்றம் கொண்டனர் - சினங்கொண்டு, கூற்று என - கூற்றுவனைப்போல, முசலம் நேமி வீசி ஆர்த்தனர் - இருப்புலக்கைகளையும் திகிரிகளையும் எறிந்து ஆரவாரித்தனர்; சேனை வீரரும் விண்டனர் மாண்டார் - (அவற்றால்) படைவீரரனைவரும் உயிர் விண்டு மாண்டனர், அனைய எல்லை - அப்பொழுது, புண் தவழ் எயிற்று வேந்தை - (பகைவரின்) புலாலில் உலாவும் பற்களையுடைய பன்றிவேந்தனை, புடைநின்ற பேடை நோக்கா - பக்கத்தில் நின்ற பெண் பன்றி பார்த்து

கண்டனர், கொண்டனர், விண்டனர் என்பன முற்றெச்சங்கள். புண்தவழ் - தசை பொருந்திய என்றுமாம். எயிறு - பன்றிக் கோடு. (௯௨)

ஏவிய சேனை யெல்லா மிறந்தன வினிநாஞ் செய்யல்
ஆவதேன் வாளா நாமு மழிவதிங் கென்னை தப்பிப்
போவதே கரும மென்று புகன்றதத் துணையை நோக்கிச்
சாவதை யஞ்சா வேனத் தனியர சொன்று சாற்றும்.

(இ - ள்.) ஏவிய சேனை எல்லாம் இறந்தன - ஏவிய படை முழுதும் மாண்டன; இனி நாம் செய்யலாவது என் - இனி நாம் செய்யக்கடவது என்னை, நாமும் வாளா இங்கு அழிவது என்னை - நாமும் கொன்னே இங்கு மடிவது என் கருதி, தப்பிப்போவதே கருமம் என்று புகன்றது - உயிர்தப்பி ஓடிப்போவதே நமக்குரிய செயலாகும் என்று கூறியது; சாவதை அஞ்சா ஏனத் தனி அரசு - இறப்பினை அஞ்சாத ஒப்பற்ற பன்றியரசு, அத்துணையை நோக்கி ஒன்று சாற்றும்- அங்ஙனங் கூறிய மனைவியை நோக்கி ஒன்று கூறுநிற்கும்.

ஏவிய - ஏவப்பட்ட: செயப்பாட்டு வினைப்பொருளில் வந்த செய்வினை. அழிவது என்னை - அழிதலாற் பயன் யாது. சாவது - சாதல்: தொழிற்பெயர். (௩௩)

நுண்ண றிவுடைய ராகி நூலோடு பழகி னாலும்
பெண்ணறி வென்ப தெல்லாம் பேதைமைத் தாத லாலுன்
கண்ணறி வுடைமைக் கேற்ற காரிய முரைத்தாய் மானம்
எண்ணறி வுடையோர்க் கெல்லா மிழுக்குடைத் தன்றே யீதால்.

(இ - ள்.) நுண் அறிவு உடையராகி - நுண்ணிய அறிவினை யுடையராய், நூலொடு பழகினாலும் - பல நூல்களோடு பன்னாட் பழகினும், பெண் அறிவு என்பது எல்லாம் பேதைமைத்து - பெண்ணறிவு என்று சொல்லப்படுவதெல்லாம் பேதைமையை யுடையது; ஆதலால் - ஆதலினால், உன்கண் அறிவுடைமைக்கு ஏற்ற காரியம் உரைத்தாய் - உன்னிடத்துள்ள அறிவுடைமைக்குப் பொருந் திய கருமத்தைக் கூறினாய்; மானம் எண் அறிவு உடையோர்க்கு எல்லாம் - மானத்தைப் பொருளாகக் கருதும் அறிவுடையோர் அனை வர்க்கும் ஈது இழுக்கு உடைத்து அன்றே - இது குற்றமுடைய தல்லவா?

"நுண்ணறி வுடையோர் நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும்பே தைமைத்தே"

என்பது தொன்மொழி. என்பதெல்லாம்: ஒருமைப்பன்மை மயக்கம்; "உள்ளுவதெல்லாம்" என்புழிப்போல. உன்கண் அறிவுடைமைக்கு ஏற்ற- உனக்கு இயல்பாகிய பேதைமையறிவுக்கேற்ற. ஈது - போரிற் புறங் காட்டுதலாகிய இச்செயல். ஆல்: அசை. (௩௪)

தூங்கிருள் வறுவாய்ச் சிங்க மிரண்டுறை துறையின் மாடோர்
வாங்கிரு மருப்புக் கேழல் வந்துநீர் பருகி மீளும்
வீங்கிரு ளுடற்கா ரேன மோன்றுறை துறையில் வீரந்
தாங்கிரு மடங்க னீர்க்குத் தலைப்பட வஞ்சு மன்றே.

(இ - ள்.) இருள் தூங்கு வறுவாய்ச் சிங்கம் இரண்டு - இருள் தங்கிய வறிய வாயையுடைய இரண்டு சிங்கங்கள், உறை துறையின் மாடு - உறைகின்ற நீர்த்துறையின்கண், வாங்கு இருமருப்பு ஓர் கேழல் - வளைந்த இரண்டு கொம்புகளையுடைய ஒரு பன்றி, வந்து நீர் பருகி மீளும் - அஞ்சாது வந்து நீர் குடித்துச்செல்லும்; வீங்கு இருள்

உடல் கார்ஏனம் ஒன்று உறை - செறிந்த இருள் போன்ற கரிய உடலையுடைய ஒரு பன்றி உறையும், துறையில் - நீர்த்துறையின்கண், வீரம் தாங்கு இரு மடங்கல் - வீரத்தை அணியாகத் தாங்கிய இரண்டு சிங்கங்கள், நீர்க்குத் தலைப்பட அஞ்சும் - நீர்பருகுதற்கு வர அஞ்சாநிற்கும்.

முழை போலும் வாயென்பார் 'தூங்கிருள் வாய்' என்றார். வறு வாய் - உணவு பெறாதிருக்கும் வாய். வீங்கிருள் போலும் காருடல் என்க. இருசிங்கம் உறையுந் துறையில் ஓர் கேழல் அஞ்சாது வந்து பருகி ஏதமின்றி மீளும்; ஓர் ஏனம் உறையுந் துறையில் இருசிங்கம் தலைப்படவும் அஞ்சும் எனத் தன் குலத்திற்குரிய வீரத்தையும் வெற்றியையும் எடுத்துக் காட்டிற்று. அன்று, ஏ: அசைகள். (நரு)

அத்திட மரபின் வந்து பிறந்துளே ளாத லாலே
கைத்திடு தாரான் வீரங் கவர்ந்திசை திசையும் வானும்
வைத்திட வல்லே னன்றி மடிந்திட வல்லே னாகிற்
பொய்த்திடு முடம்பே யன்றிப் புகழுடம் பழிவ துண்டோ.

(இ - ள்.) அ திடம் மரபின் வந்து பிறந்துளேன் - அத்தகைய வீரம் வாய்ந்த குடியில் (மேலைத்தவத்தால்) வந்து பிறந்தேன்; ஆதலாலே - ஆகையால், கைத்திடு தாரான் வீரம் கவர்ந்து - கைப்பினையுடைய வேப்பமலர் மாலையையணிந்த இப்பாண்டியனுடைய வீரத்தைக் கொள்ளை கொண்டு, இசை திசையும் வானும் வைத்திடவல்லேன், எனது புகழை எட்டுத்திக்குகளிலும் விண்ணுலகினும் நாட்டுதற்கு வல்லவனாவேன்; அன்றி - அங்ஙனஞ் செய்யாது, மடிந்திட வல்லேனாகில் - புறங்கொடாது மடியவல்லேனானால், பொய்த்திடும் உடம்பே அன்றி - என்றும் அழியுந் தன்மையையுடைய இப்பூதவுடம்பு அழிவதேயன்றி, புகழ் உடம்பு அழிவது உண்டோ - புகழுடம்பும் அழிவதுண்டோ? (இல்லை யென்றபடி)

கைக்கும் பூவாலாகிய மாலையைக் கைக்கும் மாலை என்றார். பொய்த்திடும் உடம்பு - நிலைபெறாத உடம்பு; என்றேனும் அழியும் உடம்பு. புகழ் உடம்பு - புகழாகிய உடம்பு. ஓகாரம் எதிர் மறைப் பொருட்டு. (நசு)

[கலிநிலைத்துறை]

நீநில் லெனத்தன் பேடைதன்னை நிறுத்தி நீத்தேன்
கானில் லெனவாழ் கருமாவின் கணங்க ளெல்லாம்
ஊனில் லுயிருண் டனமேன்றினி யோடல் கூடற்
கோனில் லெனவார்ப் பவன்போலக் கோதித்து நேர்ந்தான்.

(இ - ள்.) நீ நில் என - அஞ்சுகின்ற நீ நிற்கக் கடவை என்று கூறி, தன் பேடைதன்னை நிறுத்தி - தனது பெண்பன்றியை நிறுத்தி, நீத்து - அதனின் நீங்கி, என் கான் இல் எனவாழ் - எனது காட்டினை இல்லமாகக் கொண்டு வாழ்ந்த, கருமாவின் கணங்கள் எல்லாம் - பன்றிக் கூட்டங்கள் முழுதையும், ஊன் நில் உயிர் உண்டனம் என்று இனி ஓடல் - உடம்பிலுள்ள உயிரைக் கவர்ந்தனம் என்று

மகிழ்ந்து இனி ஓடற்க; கூடற்கோன் நில் என ஆர்ப்பவன்போல - கூடற்றலைவனுகிய பாண்டியனே நிற்பாயாக என்று கூறி ஆரவாரிப் பவனைப்போல, கொதித்து நேர்ந்தான் - வெகுண்டு எதிர்ந்தான்.

கருமா - பன்றி. கணங்களெல்லாவற்றையும் என இரண்டனுருபு விரித்து, உயிருண்டனம் என்பதை ஒரு சொல்லாக்கி முடிக்க. ஊனில்: இடைப்பிறவரல், ஓடல், அல் : எதிர்மறைக்கண் வந்தது ; ''மகனெனல்'' என்புழிப்போல. கோன் : விளி. (ருஎ)

நிலத்தைக் கீளைத்துப் பிலங்காட்டி நிமிர்ந்த தூள்வான்
தலத்தைப் புதைப்பத் தனியேன வரவு நோக்கி
வலத்தைப் புகழ்ந்தான் வியந்தான் சிலைவாங்கி வாளிக்
குலத்தைச் சோரிந்தான் பொருநைத்துறைக் கோற்கை வேந்தன்

(இ - ள்.) நிலத்தைக் கிளைத்துப் பிலம் காட்டி - நிலத்தைக் கீறிப் பாதலத்தைக் காண்பித்து, நிமிர்ந்த தூள் - மேலெழுந்த புழுதிப் படலம், வான் தலத்தைப் புதைப்ப - விண்ணுலகினை மறைக்க (வருகின்ற), தனி ஏன வரவு - ஒப்பில்லாத பன்றியின் வருகையை, பொருநைத்துறைக் கொற்கை வேந்தன் நோக்கி - பொருநை யாற்றின் துறையையும் கொற்கைப் பதியையும் உடைய பாண்டி வேந்தன் கண்டு, வலத்தைப் புகழ்ந்தான் வியந்தான் - அதன் வீரத்தைப் புகழ்ந்து பாராட்டி, சிலைவாங்கி - வில்லைவளைத்து, வாளிக்குலத்தைச் சொரிந்தான் - அம்புக் கூட்டத்தைச் சொரிந்தான்.

புதைப்ப வருகின்ற ஏனவரவு என விரித்துரைக்க. புகழ்ந்தான், வியந்தான் என்பன முற்றெச்சங்கள். குலம் - கூட்டம். (ருஅ)

குறித்துச் செழியன் விடுவாளியைக் கோல வேந்தன்
பறித்துச் சிலவாளியை வாய்கோடு பைம்பு லென்னக்
கறித்துச் சிலவாளியைக் கால்கோடு தேய்த்துத் தேய்த்து
முறித்துச் சிலவாளியை வாலின் முறித்து நின்ருன்.

(இ - ள்.) செழியன் - பாண்டியன், குறித்துவிடு வாளியை - தன்னைக் குறியாகக் கொண்டுவிட்ட அம்புகளை, கோலவேந்தன் பறித்து - பன்றி யரசன் (உடம்பினின்றும்) பிடுங்கி, சில வாளியை வாய்கொடு பைம்புல் என்னக் கறித்து - (அவற்றுள்) சில வாளிகளை வாயாலே பசிய புல்லைக் கறித்தல் போலக் கடித்தும், சில வாளியைக் கால் கொடு தேய்த்துத் தேய்த்து முறித்து - சில கணைகளைக் காலாலே தேய்த்துத் தேய்த்து முறித்தும், சில வாளியை வாலின் முறித்து நின்ருன் - சில அம்புகளை வாலினுல் முறித்தும் நின்றனன்.

கோலம் - பன்றி. உடம்பினின்றும் பறித்தென்க. கொடு - கொண்டு : மூன்ரும் வேற்றுமைச் சொல். (ருகூ)

மானம் பொருது மதியின்வழி வந்த வேந்தன்
தானம் பொருது கவிழ்க்கும்புகர்த் தந்தி கையில்
ஊனம் பொருத முசலங்கொடுத் தேறி யுய்த்தான்
ஏனம் பொருதார்த் திடியேற்றி னெழுந்த தன்றே.

(இ - ள்.) மதியின் வழிவந்த வேந்தன் - சந்திரன் மரபில் வந்த இராசராச பாண்டியன். மானம் பொருது - மானம் மீக்கூர, தானம் பொருது கவிழ்க்கும் - மதநீரைப் பொறுக்கலாற்றாது கொட்டுகின்ற, புகர்த்தந்தி கையில் - முகத்திற் புள்ளிகளையுடைய யானையின் கையில், ஊனம் பொருத முசலம் கொடுத்து - குற்றமில்லாத இருப்புலக்கையைக் கொடுத்து, ஏறி உய்த்தான் - ஏறிச் செலுத்தினான்; ஏனம் பொருது - (அதனைக்கண்ட) பன்றிபொறுக்கலாற்றாது, இடி ஏற்றின் ஆர்த்து எழுந்தது - இடியேறுபோல முழங்கி எழுந்தது.

மானத்தாற் பொறுக்கலாற்றாது என்றுமாம். ஒரு விலங்கினால் அலைப்புண்டனன் எனப் பிறர் கூறும் பழிக்கு ஆற்றாது நொந்தனன் என்பார் 'மானம் பொருது' எனவும் வீரமில்லாத ஒரு விலங்கினால் வீரமிக்க எம்மைக் கொல்லக் கருதினன் என்று வெகுண்டதென்பார் 'ஏனம் பொருதார்த்து' எனவும் கூறினார். தானம் - மதநீர். ஏற்றின். இன் : ஒப்புப் பொருட்டு. அன்று, ஏ : அசைகள். (சo)

தந்திப் பொருப்பைத் துணிக்கென்று தழன்று சீற்றம்
உந்திக் கதலிக் கொழுந்தண்டென வூசற் கையைச்
சிந்திப் பிறைவா ளெயிறோச்சிச் சிதைத்து வீட்ட
முந்திக் கடுந்தேர் மிசைப்பாய்ந்தனன் மூரித் தாரான்.

(இ - ள்.) தந்திப்பொருப்பைத் துணிக்கு என்று - யானையாகிய மலையைத் துணிப்பேன் என்று, தழன்று - கொதித்து, சீற்றம் உந்தி - சினமானது செலுத்த, கதலிக் கொழுந்தண்டு என - வாழையின் கொழுவிய தண்டைப்போல, ஊசல் கையைச் சிந்தி - ஊசல்போல் அசைகின்ற துதிக்கையைத் துணித்து, பிறைவாள் எயிறு ஓச்சி - பிறைபோன்ற ஒள்ளிய மருப்பினைக் கடாவி, சிதைத்து வீட்ட - உடலைச் சிதைத்துக்கொல்ல, மூரித்தாரான் - வலிய சேனையினையுடைய பாண்டியன், முந்தி - முற்பட்டு, கடுந்தேர்மிசைப் பாய்ந்தனன் - விரைந்த செலவினையுடைய தேரின்மேற் பாய்ந்தேறினான்.

துணிக்கு - துணிப்பேன்; கு: தன்மை யொருமை எதிர்கால விகுதி. உந்தி - உந்த; எச்சத்திரிபு. தார் - படை. (சக)

திண்டேர் மிசைநின் றடனேமி திரித்து விட்டான்
கண்டேன வேந்தன் விலக்கிக் கடுங்காலிற் பாய்ந்து
தண்டே ருடையத் தகர்த்தான்பரி தன்னிற் பாய்ந்து
வண்டேறு தாரான் விடவேலை வலந்தி ரித்தான்.

(இ - ள்.) திண் தேர் மிசை நின்று - வலிய தேரின் மேல் நின்று, அடல் நேமி திரித்து விட்டான் - கொல்லுதலையுடைய திகிரிப்படையைச் சுழற்றி விட்டான்; ஏனவேந்தன் கண்டு விலக்கி - பன்றியரசன் பார்த்து (அதனைத்) தடுத்து, கடுங்காலில் பாய்ந்து - கடிய காற்றைப் போல விரைந்து பாய்ந்து, தண்தேர் உடையத் தகர்த்தான் - தண்ணிய (நிழலையுடைய) தேர் சிதையும்படி உடைத்தான்; வண்டு ஏறு தாரான் - வண்டுகள் மொய்க்கும் மாலையை யணிந்த பாண்டியன், பரிதன்னில் பாய்ந்து - (பின்பு) குதிரைமேற் பாய்ந்து ஏறி, விடவேலை வலம் திரித்தான் - நஞ்சு பூசிய வேற்படையை வலமாகச் சுழற்றினான். (சஉ)

சத்திப் படைமேல் விடுமுன்னர்த் தறுகண் வீரன்
பத்திச் சுடர்மா மணித்தார்ப்பரி மாவின் பின்போய்
மோத்திக் குடர்செம் புனல்சோர முடுகிக் கோட்டாற்
குத்திச் செகுத்தான் பொறுத்தானலன் கூடல் வேந்தன்.

(இ - ள்.) சத்திப்படை - (அங்ஙனஞ் சுழற்றிய) வேற்படையை, மேல் விடு முன்னர் - தன் மீது விடுதற்கு முன்னரே, தறுகண் வீரன் - அஞ்சாமையையுடைய அப்பன்றி வீரன், பத்திச்சுடர் மாமணித் தார்ப் பரிமாவின்பின் போய் - ஒளி வரிசையையுடைய பெரிய மணிகளையுடைய கிண்கிணி மாலையையணிந்த அந்தக் குதிரையின் பின்சென்று, மொத்தி - தாக்கி, குடர் செம்புனல் சோர - குடரும் குருதியும் சோர, கோட்டால் முடுகிக்குத்தி - கொம்பினால் விரைந்து குத்தி, செகுத்தான் - அதனைக் கொன்றனன்; கூடல் வேந்தன் பொறுத்தான் அலன் - பாண்டியன் அது கண்டு பொறுக்கலாற்றாது.

பரிமா: இருபெய ரொட்டு. குடரும் புனலும் சோரக்குத்தி என்க. குடர்: போலி. (சங)

மண்ணிற் குதித்து வலிகண்டு வராக வேந்தை
எண்ணித் தலையிற் புடைத்தான்கை யிருப்புத் தண்டாற்
புண்ணிற் படுசெம் புனலாறு புடவி போர்ப்ப
விண்ணிற் புகுந்தான் சுடர்கீறி விமான மேலால்.

(இ - ள்.) மண்ணில் குதித்து - நிலத்திலே குதித்து, வலிகண்டு வராக வேந்தை எண்ணி - வலியினைக்கண்டு பன்றியரசனை மதித்து, கை இருப்புத் தண்டால் தலையில் புடைத்தான் - கையிலுள்ள இருப்புலக்கையாலே தலையில் அடித்தான்; புண்ணில்படு செம்புனல் ஆறு புடவி போர்ப்ப - அந்தப் புண்ணினின்று பொழியும் குருதியாறு புவியை மூட, சுடர் கிறி விமான மேலால் விண்ணில் புகுந்தான் - சூரிய மண்டலத்தைக் கிழித்து விமானமீதேறி விண்ணுலகடைந்தனன்.

எண்ணி என்பதற்கு அடிக்குமிடத்தை ஆராய்ந்து எனப் பொருள் கொண்டு, வலிகண்டு எண்ணி வேந்தைத் தலையிற் புடைத்தான் என்றியைத் துரைத்தலுமாம். போரிற்புறங் கொடாது உயிர் துறந்த வீரர் ஞாயிற்றின் மண்டிலம் வழியாகச் சென்று துறக்கம் புகுவர் என்ப. (சச)

வேனிற் கிழவோனில் விளங்கி வியந்து வானோர்
தேனிற் பொழிபூ மழைபெய்ய நனைந்து தெய்வக்
கானத்* தமுதுண் டிருகாது† களித்து வீர
வானத் தமுதுண் டரமங்கையர் கோங்கை சேர்ந்தான்.

(இ - ள்.) வேனில் கிழவோனில் விளங்கி - வேனிற்காலத்துக்கு உரிமை பூண்ட மன்மதன் போல் விளங்கி, வானோர் வியந்து பொழிபூ - தேவர்கள் வியப்புற்றுப் பொழியும் பூக்கள் தேனின் மழை பெய்ய நனைந்து - தேனாகிய மழையினைப் பொழிய அதில் நனைந்து, தெய்வக் கானத்து அமுது இருகாது உண்டுகளித்து - தெய்வத்தன்மை பொருந்திய இசையாகிய அமுதினை இரண்டு செவிகளாலும் பருகி மகிழ்ந்து, வீர வானத்து அமுதினை உண்டு - வீரசுவர்க்கத்துள்ள தேவ அமுதினை உண்டு, அரமங்கையர் கொங்கை சேர்ந்தான் - அரமாதர்களின் கொங்கையை அணைந்தான்.

அங்ஙனம் துறக்கம் புக்கவன் பேரழகுடைய திப்பிய யாக்கையுடையனாய் ஐம்புல இன்பங்களும் ஆரத்துய்த்தனன் என்றார். விளங்கி நனைந்து உண்டு உண்டு சேர்ந்தான் என வினைமுடிக்க. (சடு)

[கலி விருத்தம்]

பின்றுணை யாய பெடைத்தனி யேனம்
என்றுணை மாய விருப்பது கற்போ
வென்றில னேனும் விசும்படை வேனல்
என்றிகல் வேந்தை யெதிர்த்த துருத்தே.

(இ - ள்.) பின் - பின்னர், துணையாய தனிபெடை ஏனம் - துணையாக நின்ற ஒப்பற்ற பெண் பன்றி, என் துணை மாய - என் துணைவன் இறந்தொழிய, இருப்பது கற்போ - யான் உயிருடன் இருப்பது கற்பு நெறியாமோ, வென்றிலனேனும் விசும்பு அடைவேன் என்று - வெல்லாவிடினும் என் துணைவனோடு விண்ணுலகைச் சேர்வேனென்று கருதி, இகல் வேந்தை உருத்து எதிர்த்தது - பகைமையையுடைய பாண்டி மன்னனைச் சினந்து எதிர்த்தது.

கணவன் துஞ்சியக்கால் உடன் றுஞ்சுதல் உத்தமக் கற்புடை மகளிர் இயல்பு ; இதனை,

"காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்காது
இன்னுயி ரீவர்"

என்னும் மணிமேகலையி னறிக. ஆல் : அசை. (சசு)

(பா - ம்.) * தெய்வகானத்து. † இருகாதும்.

விறனவில் பேட்டை விளிப்பது வேந்தர்க்
கறனல வென்றவ னுள்வினை மள்ளர்க்
கிறைமக னான சருச்சர னென்றோர்
மறமக னேர்ந்தம ராட வளைந்தான்.

(இ - ள்.) விறல் நவில் பேட்டை - வீரங்கூறி எதிர்த்த அப்பெண் பன்றியை, விளிப்பது வேந்தர்க்கு அறன் அல என்று - மாய்ப்பது மன்னருக்கு அறமல்ல என்று கருதி, அவன் - அம்மன்னனுடைய, ஆள்வினை மள்ளர்க்கு இறைமகனான - போர்த்தொழிலையுடைய வீரர்க்குத் தலைவனான, சருச்சரன் என்ற ஓர் மற மகன் - சருச்சரனென்ற பெயரினையுடைய ஒரு வேடன், நேர்ந்து அமர் ஆட வளைந்தான் - எதிர்த்துப் போர் புரிதற்குச் சூழ்ந்தான்.

விளிப்பது - விளியச்செய்வது; கொல்வது. என்ற என்பதன் அகரம் தொக்கது. (சஎ)

நனிபொழு தாடம ராடின னஞ்சிற்
கனிசின வன்பெடை காய்சின வேடத்
தனிமக னைத்தரை வீட்டின தாற்றல்
இனியிலை யென்ன விளைத்துயிர் சோர்வான்.

(இ - ள்.) நனி பொழுது ஆடு அமர் ஆடினன் - நெடும் பொழுது வெற்றியைத் தரும் போர் புரிந்தான்; நஞ்சில் கனி சினவன்பெடை - நஞ்சினும் முதிர்ந்த சினத்தையுடைய வலிய அப் பெண்பன்றி, காய்சின வேடத் தனி மகனை - காய்கின்ற சினத்தையுடைய வேடனாகிய ஒப்பற்ற சருச்சரனை, தரை வீட்டினது - தரையில் வீழ்த்தியது; இனி ஆற்றல் இலை என்ன - இனிப் போர் புரிய வலியில்லை என்று சொல்லுமாறு, இளைத்து உயிர் சோர்வான் - மெலிந்து உயிர் சோர்வானாகிய அவன்.

ஆடமர் - வென்றியைச் செய்யும் போர்; கொல்லும் போர் என்றுமாம். (சஅ)

இரும்புசெய் தண்டினை யிம்மென வோங்கிப்*
பொரும்பெடை சென்னி புடைத்து விளிந்தான்
விருந்தின ராயிரு வோரும் விமானத்
தருந்திறல் வான மடைந்தன ரன்றே.

(இ - ள்.) இரும்பு செய் தண்டினை-இரும்பாற் செய்த தண்டத்தை, இம்மென ஓங்கி - விரைந்து ஓங்கி, பொரும் பெடை சென்னி புடைத்து விளிந்தான் - போர்புரியும் பெண்பன்றியின் தலையில் அடித்து இறந்தனன்: இருவோரும் - அவ்விருவரும், விமானத்து - விமானத்திலேறி, அருந்திறல் வானம் விருந்தினராய் அடைந்தனர் - வீரசுவர்க்கத்துக்கு விருந்தினராகச் சென்றனர்.

(பா - ம்.) * ஒச்சி.

இம்மென: விரைவுக் குறிப்பு. உயிர்சோர்கின்றவன் விரைய் இருப்புத் தண்டினைப் பெடையின் தலையிற் புடைத்துக் கொன்று தானும் உயிர்துறந்தான் என்க. அருந்திறல் வானம் - வீரசுவர்க்கம். அன்று, ஏ: அசைகள். அப்பொழுதே என்றுமாம். (சகூ)

வன்றிறன் மன்னவர் மன்னவ னுந்தன்
பொன்றிகழ் மாநகர் புக்கன னிப்பாற்
பன்றி விழுந்து பருப்பத மாகா
நின்றது பன்றி நெடுங்கிரி யென்ன.

(இ - ள்) வன் திறல் மன்னவர் மன்னவனும்-மிக்க வலியினையுடைய இராசராச பாண்டியனும். தன்பொன் திகழ் மாநகர் புக்கனன் - தனது அழகு விளங்கா நின்ற பெரிய நகரிற் புகுந்தான்; இப்பால் - இப்புறம், பன்றி விழுந்து - அப்பன்றி கீழே விழுந்து, பன்றி நெடுங்கிரி என்ன - நெடிய பன்றி மலை என்று அனைவருங் கூற, பருப்பதம் ஆகா நின்றது - மலையாகி நின்றது.

வன்றிறல்: ஒருபொருட் பன்மொழி. மன்னவர் மன்னவன்: பெயர். (ருo)

அன்று தொடுத்தத னுக்கது பேராய்
இன்றும் வழங்குவ திம்பரி னந்தக்
குன்றி லருந்தவர் விஞ்சையர் கோபம்
வென்றவ ரெண்ணிலர் வீடுற நோற்பார்.

(இ - ள்.) இம்பரில் - இந்நிலவுலகில், அன்று தொடுத்து - அக்காலந்தொட்டு, அதனுக்கு அது பேராய் - அம்மலைக்கு அதுவே பெயராகி, இன்றும் வழங்குவது - இஞ்ஞான்றும் வழங்கா நின்றது; அந்தக் குன்றில் - அந்தப் பன்றிமலையில், அருந்தவர் விஞ்சையர் எண்ணிலர் - முனிவரும் விஞ்சையருமாகிய அளவிறந்தோர், கோபம் வென்றவர் - சினத்தைக் களைந்தவராகி, வீடு உற நோற்பார்-வீடுபேற்றினை அடையத் தவஞ் செய்வார்கள்.

தொடுத்து - தொடங்கி. அருந்தவர் - முனிவர். கோபம் வென்றெனவே காம மயக்கங்களை வென்றென்பதும் உபலக்கணத்தாற் பெறப்படும். (ருக)

[கலி நிலைத்துறை]

என்று கூறிய வருந்தமிழ்க் கிறைவனை நோக்கித்
துன்று மாதவ ரறிவிலாச் சூகரவுருவக்
குன்றின் மீதிருந் தவரேலாங்* கோதற நோற்று
நின்ற காரணம் யாதெனக் குறுமுனி† நிகழ்த்தும்.

(இ - ள்.) என்று கூறிய அருந்தமிழ்க்கு இறைவனை நோக்கி - என்று இங்ஙனங் கூறியருளிய அரிய தமிழுக்கு இறைவனாகிய அகத்திய முனிவனைப் பார்த்து, துன்றும் மாதவர் - நெருங்கியிருந்த முனிவர்கள், அவர் எல்ாம் - அம்முனிவர் விச்சாதரரெல்லாம், அறிவு

(பா - ம்.) * அருந்தவரெலாம். † குடமுனி.

இலாச் சூகர உருவக் குன்றின்மீது இருந்து - அறிவில்லாத பன்றி வடிவாகிய அம்மலையின்மேல் இருந்து, கோதற நோற்று நின்ற காரணம் யாது என - குற்றம் நீங்கத் தவஞ் செய்து நின்ற காரணம் யாதென்று வினவ, குறுமுனி நிகழ்த்தும் - அகத்திய முனிவன் கூறும்.

தமிழை வளர்த்தோருள் முதன்மை பூண்டிருத்தலின் அகத்தியனைத் 'தமிழ்க்கிறைவன்' என உபசாரமாகக் கூறினர். இருந்தவர் எலாம் என்பதற்குப் பெரிய தவத்தோரெல்லாம் என்றுரைத்தலும் பொருந்தும். நின்ற காரணம் - நின்றமைக்குக் காரணம். (௫௨)

வேனில் வேளென விளங்குவிச் சாதர னென்னுந்
தான யாழ்மகன் புலத்தியன் றவத்தினுக் கிடையூ
றான பாண்செயப் பன்றியாச் சபித்தன னறவோன்
ஏன மாகுவோ னுய்வதேன் றெனக்கென முனிவன்.

(இ - ள்.) வேனில் வேள் என விளங்கு - வேனிற் காலத்துக்குரிய காமனைப்போல வடிவம் பெற்று விளங்கும், விச்சாதரன் என்னும் தானயாழ் மகன் - விச்சாதரன் என்று கூறப்படும் தானங்கள் அமைந்த யாழில் வல்ல இயக்கன் ஒருவன், புலத்தியன் தவத்தினுக்கு இடையூறு ஆன பாண் செய - புலத்திய முனிவன் தவத்துக்கு இடையூறு விளைத்தலையுடைய இசைப்பாட்டினைப் பாட, அறவோன் பன்றியா சபித்தனன் - அம்முனிவன் அவனைப் பன்றியாமாறு சபித்தனன்; ஏனம் ஆகுவோன் - அங்ஙனம் பன்றியாகும் அவன், உய்வது எனக்கு என்று என - எனக்கு இச்சாபத்தினின்று நீங்குதற்குரிய காலம் யாதென்று வினவ, முனிவன் - அப் புலத்திய முனிவன்.

பாண்செய என்பதற்குக் கீழ்மை செய்ய என்றும் உரைக்க; முன்னரும் கூறப்பட்டது. ஆக என்பது ஈறு தொக்கது. ஆக - ஆகும்படி. (௫௩)

மன்னர் மன்னனுந் தென்னவன் வந்துநின் வனத்திற்
றுன்னு பல்வகை விலங்கெலாந் தொலைத்துனை மாய்க்கும்
பின்ன ரிவ்வுருப் பெறுகெனப் பணித்தன னியக்கன்
அன்ன வாறுவந் திறந்துபின் பழவுரு வடைந்தான்.

(இ - ள்.) மன்னர் மன்னனும் தென்னவன் வந்து - இராசராச பாண்டியன் வந்து, நின் வனத்தில் துன்னு பல்வகை விலங்கு எலாம் தொலைத்து - நின் காட்டில் நெருங்கிய பலவகையான விலங்குகளையெலாம் மாய்த்து, உனை மாய்க்கும் - உன்னையுங் கொல்லுவான்; பின்னர் இவ்வுருப் பெறுக எனப் பணித்தனன் - பின் இந்த வடிவத்தைப் பெறக்கடவை என்று அருளிச் செய்தனன்; இயக்கன் - அந்த இயக்கன், அன்னவாறு வந்து இறந்து பின் பழ உரு அடைந்தான்; அங்ஙனமே பன்றியாக வந்து இறந்து பின் பழைய வடிவத்தைப் பெற்றனன்.

மன்னர் மன்னன் என்பதற்கு மேல் உரைத்தமை காண்க; இரட்டுற மொழிதலாக்கி, அரசர்க்கு அரசனாகிய இராசராச பாண்டியன் என்றுரைத்தலும் பொருந்தும். பெறுகெனா: அகரந் தொகுத்தல். முனிவன் பணித்தனன் என்க. (௩௪)

ஆய புண்ணிய விஞ்சைய னாகமாய்க் கிடந்த
தூய நீரதா லவ்வரை மீமிசைத் துறந்த
பாய கேள்விய ரிறைகொளப் பட்டதெவ் வுயிர்க்கும்
நாய னார்மது ரேசரு நயந்தவ ணுறைவார்.

(இ - ள்.) ஆய புண்ணிய விஞ்சையன் - அந்தப் புண்ணிய வடிவினனாகிய இயக்கனுடைய, ஆகமாய்க்கிடந்த தூயநீரதால் - உடலாகக் கிடந்த தூய தன்மையை யுடையதாதலால், அவ்வரை - அம்மலை, மீமிசை - தன்மேல், துறந்த பாய கேள்வியர் இறைகொள்ளப்பட்டது - முற்றத் துறந்த பரந்த நூற்கேள்வியினையுடைய முனிவர் முதலியோரால் தங்கப்பட்டது; எவ்வுயிர்க்கும் நாயனார் மதுரேசரும் - எல்லாவுயிர்கட்கும் இறைவராகிய மதுரைநாயகரும், அவண் நயந்து உறைவார் - அவ்விடத்தில் விருப்பத்துடன் எழுந்தருளியிருப்பர்.

நீரது - நீர்மையுடையது. ஆல் - ஆகையால். மீமிசை-ஒருபொருட் பன்மொழி. இறைகொளல் - தங்கல். (௩௫)

என்ற கத்தியன் விடைகொடுத் தியம்பின னிப்பாற்
பன்றி யேற்றையும் பாட்டியும் பைம்புனத் திட்டுச்
சென்ற விந்தபின் பன்னிரு குருளையுந் திகைப்புற்
றன்ற லக்கணே யுழந்தமை யாரளந் துரைப்பார்.

(இ - ள்.) என்று அகத்தியன் விடை கொடுத்து இயம்பினன்-என்று அகத்தியமுனி விடை கூறியருளினன்; இப்பால் - பின், பன்றி ஏற்றையும் பாட்டியும் - ஆண் பன்றியும் பெண் பன்றியும், பைம்புனத்து இட்டுச் சென்று அவிந்தபின் - பசிய காட்டின்கண் விட்டுப் போய் மாண்ட பின்னர், பன்னிரு குருளையும் - பன்னிரண்டு குட்டிகளும், திகைப்புற்று - திகைத்து, அன்று அலக்கண் நோய் உழந்தமை - அந்நாள் துன்பநோயிற் பட்டு வருந்தியதை, அளந்து உரைப்பார் யார் - வரையறுத்துக் கூற வல்லார் யார் (ஒருவருமில்லை என்றபடி.)

ஏற்றை - விலங்கின் ஆண்;

''ஏறும் ஏற்றையும்''

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தால் ஏற்றை பெயராதல் அறிக. (௩௬)

ஓடு கின்றன தெருமர லுறுவன நிழலைத்
தேடு கின்றன தாய்முலைத் தீயபால் வேட்டு
வாடு கின்றன தாகவெம் பசிநனி வருத்த
வீடு கின்றன வெயில்சுட வெதும்புகின் றனவால்.

(இ - ள்.) ஓடுகின்றன - (அக் குட்டிகள் தாய் தந்தையரைத் தேடி) ஓடுகின்றன; தெருமரல் உறுவன - (காணாமையால்) சுழலுகின்றன; நிழலைத் தேடுகின்றன - நிழலைத்தேடி அலைகின்றன; தாய் தீயமுலைப் பால் வேட்டு வாடுகின்றன - தாயினது இனிய முலைப்பாலை விரும்பி வாட்டமடைகின்றன; தாகம் வெம்பசி நனிவருத்த வீடுகின்றன - நீர் வேட்கையும் கொடிய பசியும் மிகவுந் துன்புறுத்தலால் உயிர் சோருகின்றன; வெயில் சுட வெதும்புகின்றன - வெயில் சுடுதலால் வெதும்பி வருந்துகின்றன.

தீய - இனிய. ஆல் : அசை. (கள)

இன்ன வாறிவை யணங்குறு மெல்லைவேல் வல்ல
தென்ன ராகிய தேவர்க டேவரங் கயற்கண்
மின்ன ளோடு மின்னவிர் விமானமீ தேறி
அன்ன கானகத் திச்சையா லாடல்செய் திருந்தார்.

(இ - ள்.) இவை இன்னவாறு அணங்குறும் எல்லை - இக்குட்டிகள் இங்ஙனந் துன்புறும் பொழுது, வேல்வல்ல - வேலாற் செய்யும் போரில் வல்ல, தென்னராகிய தேவர்கள் தேவர் - சுந்தரபாண்டியராகிய தேவர்கள் தேவராகும் இறைவர், அங்கயற்கண் மின் அனளொடு - மின்னலை ஒத்த அங்கயற் கண்ணம்மையோடு, மின் அவிர் விமான மீது ஏறி - ஒளி விளங்கும் விமானத்தின் மேலேறியருளி, அன்ன கானகத்து - அந்தக் காட்டின்கண், இச்சையால் ஆடல் செய்திருந்தார் - தமதிச்சையினல் திருவிளையாடல் புரிந்து கொண்டிருந்தார்.

இச்சையாவது உயிர்க்கு அருள் நேசமாகும். (கஅ)

ஏன மேன்பற ழுறுகணோய்க் கிரங்கின ரிச்சை
ஆன வன்புதந் தத்துய ரகற்றுவா னீன்ற*
மான வன்புடைப் பேடையின் வடிவெடுத் தயருங்
கான வன்பறழ் கலங்கஞர் கலங்கநேர் வந்தார்.

(இ - ள்.) ஏனம் மென் பறழ் உறுகண் நோய்க்கு இரங்கினர் - மென்மையுடைய அப்பன்றிக்குட்டிகளின் துன்பநோய்க்கு இரங்கி, இச்சை ஆன அன்பு தந்து - விருப்பமாகிய அன்பினை வைத்து, அத்துயர் அகற்றுவான் - அத்துன்பத்தை யொழித்தருள, ஈன்ற மான அன்பு உடைப் பேடையின் வடிவு எடுத்து - அவற்றை ஈன்ற மிக்க அன்பினை யுடைய பெண் பன்றியின் வடிவினை எடுத்து, கானம் அயரும் - காட்டின் கண் சோருகின்ற, வன்பறழ் - வலிய அக்குட்டிகளின், கலங்கு அஞர் கலங்க - கலங்குதற் கேதுவாகிய பசித்துன்பம் கலங்கி நீங்குமாறு, நேர் வந்தார் - எதிரே வந்தருளினர்.

இளமைபற்றி மென்பறழ் என்றும், சாதிபற்றி வன்பறழ் என்றும் கூறினரெனக்கொள்க. மானம் ஈண்டு மிகுதியை உணர்த்திற்று. (கக)

(பா - ம்.) *அகற்றுவானின்ற.

கிட்டு கின்றதந் தாயெதிர் குட்டியுங் கிட்டி
முட்டு கின்றன மோப்பன* முதுகுறத் தாவி
எட்டு கின்றன கால்விசைத் தெறிவன நிலத்தை
வெட்டு கின்றன குதிப்பன வோடுவ மீள்வ.

(இ - ள்.) கிட்டுகின்ற தம் தாய் எதிர் - அங்ஙனம் நெருங்கி வருகின்ற தங்கள் தாயினெதிரே, குட்டியும் - குட்டிகளும், கிட்டி முட்டுகின்றன - நெருங்கி மோதுவனவும், மோப்பன - மோப்பனவும், முதுகு உறத் தாவி எட்டுகின்றன - முதுகிற் பொருந்தத் தாவி எட்டுவனவும், கால் விசைத்து எறிவன நிலத்தை வெட்டுகின்றன - காலை விசைந்துப் பின் எறிந்து நிலத்தை வெட்டுவனவும், குதிப்பன ஓடுவ மீள்வ - குதிப்பனவும் ஓடுவனவும் மீள்வனவும் ஆயின.

எறிவனவாய் வெட்டுகின்றன என்க. தாயைக் கண்ட உவகை யால் இங்ஙனம் செய்தன. பன்றிக் குட்டிகளின் தொழிற்றிறங்களை நன்கு விளக்குதலால் இச் செய்யுள் தன்மை நவிற்சியாகும். (சு0)

ஏன மின்னமுங் காண்பரி தாகிய வேனம்
ஆன மெய்ம்மயிர் முகிழ்த்திடத் தழுவிமோந் தருளின்
மான மென்முலை யருத்திமா வலனும்வன் றிறனும்
ஞான மும்பெருந் தகையுநற் குணங்களு நல்கா.

(இ - ள்.) ஏனம் இன்னமும் காண்பரி தாகிய ஏனம் - திருமாலாகிய பன்றி இன்னமுங் காண்டற் கரிதாகிய பன்றி, மெய் ஆன மயிர் முகிழ்த்திட - மெய்யிலுள்ள மயிர் முகிழ்க்க, தழுவி மோந்து - அவற்றை அணைத்து மோந்து, அருளின் மானம் மென்முலை அருத்தி - அருளினாற் சுரந்த பெரிய மெல்லிய முலைப்பாலை ஊட்டி, மாவலனும் வன்றிறனும் - சிறந்த வெற்றியும் மிக்க வலியும், ஞானமும் பெருந்தகையும் நற்குணங் களும் நல்கா - ஞானமும் பெருந்தகைமையும் ஏனை நற்குணங்களு மாகிய இவற்றைத் தந்தருளி

திருமால் பன்றியுருவெடுத்துத் தேடி இன்னமும் காண்டற்கரிய பரம் பொருளாகிய சிவபெருமான் தான் ஒரு பெண் பன்றியாகிப் பன்றிக்குட்டிகள் இருக்குமிடம் தேடி வந்து அவற்றிற்கு முலை கொடுத்தருளினன் என இறைவன் வானோர்க் கரியனும் ஏனோர்க் கெளியனும் இருக்குந்தன்மையை நயம்படக் கூறினர். இறைவன் அளித்த பால் திருவருள் ஆகையால் வலம் முதலிய யாவும் அவற் றிற்கு எய்துவன வாயின என்க; குழவிகள் பின் எய்தும் நலங்களுக் கெல்லாம் முன் உண்ட தாய்ப்பால் காரணமாமென்பதும் இதனாற் பெறப்படுதல் ஓர்க. (சுக)

துங்க மாமுக மொன்றுமே சூகர முகமா
அங்கம் யாவையு மானுட யாக்கைய வாக்கிக்
கங்கை நாயகன் கடவுளர் நாயகன் கயற்கண்
மங்கை நாயகன் கருணையாந் திருவுரு மறைந்தான்.

(பா - ம்.) *மொய்ப்பன.

(இ - ள்.) துங்கமாமுகம் ஒன்றுமே சூகர முகமா - சிறந்த பெரிய முகம் ஒன்றனையும் பன்றி முகமாக (வைத்து), அங்கம் யாவையும் - ஏனைய உறுப்புக்களனைத்தையும், மானுட யாக்கைய ஆக்கி - மக்கள் உடலிலுள்ள உறுப்புக்களாச் செய்து, கங்கை நாயகன் - கங்கையின் கேள்வனும், கடவுளர் நாயகன் - தேவர்கள் தலைவனும், கயற்கண் மங்கை நாயகன் - அங்கயற்கண் ணம்மையின் நாதனுமாகிய சோம சுந்தரக் கடவுள், கருணையாம் திருஉரு மறைந்தான் - அருளாற் கொண்ட அத்திருவுருவம் மறைந்தருளினன்.

யாக்கையவாக ஆக்கி என விரிக்க. (சுஉ)

இம்மை யிப்பவத் தன்னையா யினிவரு பவமுஞ்
சேம்மை செய்தசே தனத்தையுஞ் சேதனஞ் செய்தார்
எம்மை யேப்பவத் தாயினு மேனைப்பல வுயிர்க்கும்
அம்மை யப்பராய்க் காப்பவ ரவரலா லெவரே.

(இ - ள்.) இம்மை இப்பவத்து அன்னையாய் - இந்நிலவுலகில் இப் பன்றி யாகிய பிறப்பின்கண் தாயாய் வந்து முலைகொடுத்து, அசேத னத்தையும் சேதனம் செய்து - அறிவில்லாத பன்றிக் குட்டிகளையும் அறிவுடை மக்களாகச் செய்து, இனி வரு பவமும் செம்மை செய்தார் - மேல்வரும் பிறவியையுந் தூய்மை யாக்கினர்; எம்மை எப்பவத்து ஆயினும் - எவ்வுலகத்தில் எப்பிறவியிலாயினும், ஏனைப்பல உயிர்க்கும் - பலவகையான உயிர்களெல்லாவற்றுக்கும், அம்மை அப்பராய் காப்பவர் - தாயும் தந்தையுமாகி நின்று காப்பவர். அவர் அலால் எவர் - அவரே யல்லால் வேறு யாவர்? (ஒருவருமில்லை என்றபடி).

அசேதனம் - பகுத்தறிவில்லது. சேதனம் - பகுத்தறிவுள்ளது. சேதனஞ் செய்து செம்மை செய்தார் என விகுதி பிரித்துக் கூட்டுக. எவ்விடத்து எப்பிறப்பிலும் அருள் செய்பவர் சிவபெருமான் என்பதனை.

> ''எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்
> கிங்கேயென் றருள்புரியு மெம்பெருமான்''

என ஆளுடைய பிள்ளையார் அருளிச் செய்தல் காண்க. அம்மையப்பராய் என்னும் தொடர் ''அம்மையே அப்பா என்னும் திருவாசகத்தை நினைவூட்டுகின்றது. இங்ஙனம் இறைவன் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்தருளிய பெருங்கருணைத் திறத்தை;

> ''ஏவுண்ட பன்றிக் கிரங்கி யீசன் எந்தை பெருந்துறை யாதி யன்று
> கேவலங் கேழலாய்ப் பால்கொ டுத்த கிடப்பறி வாரெம் பிரானை
> [வாரே''

எனத் திருவாதவூரடிகள் அருளிச் செய்தல் காண்க. (சுங)

ஆகச் செய்யுள் உஉடுு.

நாற்பத்தாறுவது

பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்

[கலி நிலைத்துறை]

தந்தை தாயிழந் தலமரு குருளையைத் தாயாய்
வந்து நாயகன் முலைகொடுத் தருளிய வகையீ
தந்த வாறிரு மைந்தரு மந்திர ராகி
எந்தை யார்சிவ புரம்புகுந் திருந்தவா றிசைப்பாம்.

(இ - ள்.) தந்தை தாய் இழந்து - தந்தையையும் தாயையும் இழந்து, அலமரு குருளையை - வருந்திய பன்றிக் குட்டிகளுக்கு, நாயகன் தாயாய் வந்து - இறைவன் தாய்ப் பன்றியாக உருவெடுத்துவந்து, முலைகொடுத்தருளிய வகை ஈது - முலை கொடுத்த திருவிளையாடல் இது; அந்த ஆறிரு மைந்தரும் - (இனி) அந்தப் பன்னிரண்டு குமரர்களும், மந்திரர் ஆகி - பாண்டியனுக்கு அமைச்சர்களாகி(ப் பின்), எந்தையார் சிவபுரம் புகுந்து இருந்தவாறு இசைப்பாம் - எம் தந்தையாராகிய இறைவரது சிவலோகத்தை அடைந்திருந்த திருவிளையாடலைக் கூறுவோம். (க)

குருளையை - குருளைக்கு: வேற்றுமை மயக்கம்.

ஆதி நாயகன் றிருவுரு மறைந்தபி னனைய
கோதி லாறிரண் டேனமாக் குமரருங் காலைச்
சோதி யாறிரண் டருக்கர்போற் றோன்றியப் பொருப்பில்
ஓதி யாய்ந்தபல் கலைஞரா யொருங்குவீற் றிருந்தார்.

(இ - ள்.) ஆதிநாயகன் திரு உரு மறைந்தபின் - முதற்கடவுளாகிய இறைவன் திரு உருவம் மறைந்தருளிய பின்னர், அனைய கோது இல் மா ஆறிரண்டு ஏனக் குமரரும் - அந்தக் குற்றமில்லாத பெருமையையுடைய பன்னிரண்டு பன்றிவீரர்களும் காலை - காலையில் எழுந்த, சோதி ஆறிரண்டு அருக்கர்போல் தோன்றி - ஒளிமிக்க பன்னிரண்டு இளஞ் சூரியர்களைப் போலக் காணப்பட்டு, அப்பொருப்பில் - அம்மலையின்கண், ஓதி ஆய்ந்த பல்கலைஞராய் - கற்று ஆராய்ந்து தெளிந்த பல கலைகளிலும் வல்லுநராகி, ஒருங்கு வீற்றிருந்தார் - ஒரு சேர வீற்றிருந்தார்கள்.

திருவுரு - தாயாய்வந்த உருவம். ஆதித்தர் பன்னிருவரும் ஒருங்குதித்தாற் போல் இப்பன்னிரு குமரரும் விளங்கினரென்றார். அப்பொருப்பு - அந்தப் பன்றி மலை (உ)

அனைய ராயவர் வைகுநா ளறைபுனற் கூடற்
புனித நாயக னருட்டிற முயிர்க்கெலாம் பொதுவாய்
இனிய வாவன வென்பதை யாவருந் தேற
வனிதை பான்மொழி மங்கைதன் மணாளனை வினவும்

(இ - ள்.) அவர் அனையராய் வைகுநாள் - அவர்கள் அத்தன்மையராய் இருக்கும் நாளில், அறை புனல் கூடல் புனித நாயகன் - ஒலிக்கும் நீர் சூழ்ந்த மதுரையில் எழுந்தருளிய நின்மலனாகிய சோமசுந்தரக் கடவுளின், அருள் திறம் - திருவருளின் வகைகள், உயிர்க்கு எலாம் பொதுவாய் இனிய ஆவன என்பதை - எல்லா உயிர்கட்கும் பொதுவாய் நின்று இன்பந்தருவன என்று ஞான நூல்கள் கூறுவதனை, யாவரும் தேற - அனைவருந் தெளிந்துய்ய, வனிதை பால் மொழி மங்கை தன் மணாளனை வினவும் - சத்தியாகிய பால்போலும் மொழிகளையுடைய அங்கயற்கண்ணம்மை தன் கேள்வனை வினவாநிற்கும்.

மங்கையாகிய வனிதை என்றுரைத்தலுமாம். (௯)

வெவ்வி லங்கினும் வெய்யதா* யசேதன விலங்காம்
இவ்வி லங்கெயிற் றேனமேன் குருளைகட் கிரங்கிக்
கைவி லங்கினை யெய்தநீ கருணையாய் முலைதந்
திவ்வி லங்கறி வகற்றிய தியாதென விறைவன்.

(இ - ள்.) வெவ்விலங்கினும் வெய்யதாய் - கொடிய விலங்குகளினுங் கொடியதாய், அசேதன விலங்கு ஆம் - அறிவில்லாத விலங்காகிய, இவ் இலங்கு எயிற்று ஏனம் மென் குருளைகட்கு - இந்த விளங்கும் பற்களையுடைய பன்றியின் இளமை வாய்ந்த குட்டிகளுக்கு, இரங்கி - இரக்கமுற்று, கைவிலங்கினை எய்தநீ - (சமணரேவிய) யானையை எய்து வீழ்த்திய நீ, கருணை - அருளாலே, ஆய் - தாய்ப் பன்றியாகி, முலைதந்து - முலைப்பால் கொடுத்து, இவ்விலங்கு அறிவு அகற்றியது யாது என - இந்த விலங்கின் அறிவைப் போக்கியருளியது என்னை என்று வினவ, இறைவன் - சோமசுந்தரக்கடவுள்.

முன்பு ஒரு பாண்டியனுக்கிரங்கி யானையைக் கொன்றருளிய தேவரீர் இன்று ஒரு பாண்டியனால் வேட்டத்திற் கொல்லப்பட்ட கொடிய விலங்காகிய பன்றியின் குருளைகட்கு இரங்கி முலைதந்ததும் அவற்றிற்கு இழிந்த அறிவை நீக்கி நல்லறிவு தந்ததும் எக்காரணத்தால் என வினவினரென்க. கைவிலங்கு - யானை. கருணையாய் என்பதற்கு இரக்கமுடையையாய் என்றுமாம். எய்தநீ இரங்கி முலைதந்து அறிவகற்றியது என இயையும். (௨0)

அகில வேதமு மாகம பேதமு நம்மைச்
சகல சீவத யாபர னென்றுரை சால்பால்
இகலில் சேதன மசேதன மாகிய விரண்டும்
புகலில் வேறல வெமக்கவை பொதுமைய ெவதனால்.

(பா - ம்.) * வெய்யவாய்

(இ - ள்.) அகில வேதமும் ஆகம பேதமும் - எல்லா வேதங்களும் பலவகைப்பட்ட ஆகமங்களும், நம்மை சகல சீவதயாபரன் என்று உரை சால்பால் - நம்மை எல்லா உயிர்களிடத்தும் ஒரே தன்மையான அருளையுடைய இறைவன் என்று கூறுந் தகுதியால், இகல் இல் - வெறுப்பில்லாத, சேதனம் அசேதனம் ஆகிய அவை இரண்டும் - அறிவுள்ளதும் அறிவில்லாததுமாகிய அவ்விரண்டும், புகலில் - கூறுமிடத்து, எமக்கு வேறு அல - எமக்கு வேறல்ல, பொதுமைய - ஒரு தன்மையனவே ; அதனால் - அக்காரணத்தால்.

சேதனம் அசேதனமாகிய இரண்டும் எமக்கு வேறல என்பது வேதாகமங்கள். எம்மைச் சகல சீவதயாபரன் என்றுரைத்தலால் தெளியப்படும் ; என்றான் என்பது கருத்தாகக் கொள்க. (ரு)

தாயி ழந்துவெம் பசித்தழ லகஞ்சுடத் தழன்று
காயு மாதபம் புறஞ்சுடக் கானிடைக் கிடந்து
தீயு மேனமேன் குருளைக டேருமர விரங்கி
ஆயு மாய்முலை யளித்துயி ரளித்தன மதனால்.

(இ - ள்.) தாய் இழந்து வெம்பசித் தழல் அகம் சுட - தாயை இழந்து கொடிய பசித்தீ அகத்தின்கண் சுட்டு வருத்தவும், தழன்று காயும் ஆதபம் புறம் சுட - கொதித்து எரிக்கின்ற வெய்யில் புறத்திற் சுட்டு வருத்தவும், கானிடைக் கிடந்து தீயும் - காட்டின்கண் பற்றுக்கோடின்றிக் கிடந்து வெதும்பா நின்ற, ஏனம் மென் குருளைகள் - இளமையாகிய பன்றிக் குட்டிகள், தெருமர இரங்கி - அங்ஙனம் வருந்தியதனால் இரங்கி, ஆயுமாய் முலை அளித்து உயிர் அளித்தனம் - தாயுமாகி முலைப்பால் கொடுத்து உயிரைப் புரந்தனம், அதனால் - அங்ஙனம் நாம் அருளினமையால்,

ஆயும் என்பதன் உம்மை இழிவு சிறப்பு. (சு)

அளவி லாற்றலுந் திறனுநல் லரும்பெறற் கல்வி
விளைவு ஞானமுங் கிடைத்தனர் மீனவற் கினிமேல்
வளைவி லாதகோ லமைச்சராய் வளம்பல பெருக்கிக்
களைவில் பாசநீத் தெம்பெருங் கணத்தவ ராவார்.

(இ - ள்.) அளவு இல் ஆற்றலும் திறனும் - அளவிறந்த வலியும் வெற்றியும், பெறல் அரும் நல் கல்வி விளைவும் - பெறுதற்கரிய நல்ல கல்வியின் முதிர்வும், ஞானமும் - மெய்யுணர்வும், கிடைத்தனர் - கைவரப் பெற்றனர் ; இனிமேல் மீனவற்கு - இனி இராசராசபாண்டியனுக்கு, வளைவு இல்லாத கோல் அமைச்சராய் - செங்கோல் ஓச்சும் அமைச்சர்களாகி, பலவளம் பெருக்கி - பலவகை வளங்களையும் பெருக்கி, களைவு இல் பாசம் நீத்து - போக்குதற்கரிய பாசங்களை ஒழித்து, எம் பெருங்கணத்தவராவார் - எமது பெரிய சிவகணத்தவராவர்.

கிடைத்தனர் - கிடைக்கப் பெற்றனர். வளைவிலாத கோல் செங்கோல். (எ)

என்று நாயக ளுயகிக் கிறைகொடுத் தியம்பி
அன்று மீனவன் கனவில்வந் தரசகேள் பன்றிக்
குன்றி லேனமா முகத்தராய்ப் பன்னிரு குமரர்
வென்றி வீரரரய் வைகுநர் மிக்கறி வுடையார்.

(இ - ள்.) என்று நாயகன் நாயகிக்கு இறைகொடுத்து இயம்பி - என்று இங்ஙனம் இறைவன் இறைவிக்கு விடை கூறி யருளி, அன்று மீனவன் கனவில் வந்து - அன்று பாண்டியன் கனவின்கண் வந்து, அரச கேள் - மன்னனே கேட்பாயாக; பன்றிக்குன்றில் - பன்றி மலையில், மா ஏன முகத்தராய் - பெரிய பன்றி முகத்தினை யுடையராய், வென்றி வீரராய் - வெற்றி மிக்க வீரர்களாய், பன்னிரு குமரர் வைகுநர் - பன்னிரண்டு மைந்தர்கள் இருக்கின்றனர்; மிக்க அறிவு உடையார் - அவர் நிரம்பிய அறிவினை யுடையராவர்.

இறை - விடை. மிக்க என்பதன் அகரம் தொக்கது. (அ)

அவரை நின்கடைக் கமைச்சராக் கோடியேன் றளவில்
சிவப ரஞ்சுட ரருள்செயச் செழியர்கோ வேந்தன்
கவல ருங்களிப் புடையனுய்க் கண்மலர்ந் தெழுமான்
தவழ்நெ டுந்திரைக் கருங்கட றத்திநீந் தெல்லே.

(இ - ள்.) அவரை - அம்மைந்தர்களை, நின்கடைக்கு அமைச்சராக் கோடி என்று - நினது வாயிலுக்கு அமைச்சராகக் கொள்ளக் கடவையென்று, அளவு இல் சிவபரஞ் சுடர் அருள்செய - அளவிறந்த பரஞ்சோதியாகிய சிவபெருமான் அருளிச் செய்ய, செழியர் கோ வேந்தன் - பாண்டியர் பெரு வேந்தனுகிய இராசராசன், கவல் அருங் களிப்பு உடையனுய் - கவற்சியில்லாத மகிழ்ச்சி யுடையனுய், கண் மலர்ந்து - துயிலுணர்ந்து, எழுமான் - (சூரியன் தேரிற் பூட்டிய) ஏழு குதிரைகளும், நெடுந்திரை தவழ் கருங்கடல் - நெடிய அலைகள் தவழுங் கரிய கீழைக்கடலை, தத்தி நீந்து எல்லே - தாவி நீந்தும் வைகறைப் பொழுதில்.

கடை என்றது ஈண்டு அரண்மனை அல்லது வினைசூழ் மன்றைக் குறிக்கும். கோவேந்தன் - பெருவேந்தன். (கூ)

மாண்ட கேள்விசான் மந்திரர்க் குணர்த்தியம் மலைமேற்
காண்ட கேனமா வீரரைக் கொணர்கெனக் கருணை
பூண்ட காவல னமைச்சரும் போயவர்க் கண்டு
வேண்ட வீரரு மீண்டினுர் மீனவன் றிருமுன்.

(இ - ள்.) மாண்ட கேள்வி சால் மந்திரர்க்கு உணர்த்தி - மாட்சிமைப்பட்ட கேள்வி நிறைந்த மந்திரிகளுக்கு (அக்கனவினை) அறிவித்து, அம்மலைமேல் - அப்பன்றி மலையிலுள்ள, காண்தகு மா ஏன வீரரைக் கொணர்க என - அழகுபொருந்திய பெருமைமிக்க அப்பன்றி வீரரைக் கொணர்திர் என்று கட்டளையிட, கருணைபூண்ட காவலன்

அமைச்சரும் போய் - அருளையே தனக்கு அணிகலமாகப் பூண்ட அம் மன்னனுடைய மந்திரிகள் அங்குச் சென்று, அவர்க் கண்டு வேண்ட - அவரைக் கண்டு வருமாறு வேண்ட, வீரரும் மீனவன் திருமுன் ஈண்டினார் - அவ்வீரர்களும் பாண்டியன் திருமுன் வந்தனர்.

கொணர்கென : அகரந் தொகுத்தல். கருணைபூண்ட காவலன் அமைச்சர் என்பதற்கு அரசன் ஆணையை மேற்கொண்ட அமைச்சர் என்றுரைத்தலும் பொருந்தும். (க0)

வந்தி றைஞ்சிய வராகமா மைந்தரை நேர்கண்
டந்த மில்களிப் படைந்துவேந் தமைச்சியற் கிழமை
தந்து வேறுபல் வரிசையுந் தக்கவா நல்கிக்
கந்து சீறிய கடகரிக் கைதவன் பின்னர்.

(இ - ள்.) வந்து இறைஞ்சிய மாவராக மைந்தரை - அங்ஙனம் வந்து வணங்கிய பெருமை பொருந்திய அப்பன்றி வீரரை, வேந்து - இராசராசபாண்டியன், நேர்கண்டு அந்தம்இல் களிப்பு அடைந்து - எதிர் கண்டு அளவில்லாத மகிழ்ச்சியுற்று, அமைச்சு இயல் கிழமை தந்து - அமைச்சியல் உரிமையை நல்கி, பல்வேறு வரிசையும் தக்கவா நல்கி - பலவேறு வரிசைகளையுந் தக்கவாறு கொடுத்து, கந்து சீறிய கடகரிக் கைதவன் - கட்டுத்தறியைச் சினந்த மதயானையையுடைய பாண்டியன், பின்னர் - பின் (அவர்க்கு.)

தக்கவா - தகுதிக் கேற்றவாறு : றுவ்வீறு தொக்கது. (கக)

பழைய மந்திரக் கிழார்மடப் பாவைபோல் வாரை
விழவு சால்கடி மங்கலம் விதியினாற் புணர்த்தி
அழகி தாமென நடத்தினா னனையரும் வீரக்
கழலி னாற்கோரு கவயமுங் கண்ணுமாய் நடப்பார்.

(இ - ள்.) பழைய மந்திரக் கிழார் மடப்பாவை போல்வாரை - முன்னரே மந்திரக் கிழமையுடைய அமைச்சர் பெற்ற இளமை வாய்ந்த பதுமைபோன்ற பெண்களை, விதியினால் - மறைநூல் விதிப்படி, விழவு சால் கடிமங்கலம் புணர்த்தி, சிறப்பு மிக்க கடிமணம் செய்வித்து, அழகிது ஆம் என நடத்தினான் - (பார்த்தவர்) அழகிது என்று சொல்லுமாறு நடத்தினான்; அனையரும் வீரக் கழலினாற்கு - அவ்வீரர்களும் வீரக் கழலையணிந்த பாண்டியனுக்கு, ஒரு கவயமும் கண்ணுமாய் நடப்பார் - ஒப்பற்ற கவசமுங் கண்ணும்போல நடப்பாராயினர்.

பாவைபோல்வாரை மங்கல விதியினாற் சேர்த்து என்றுரைப்பாருமுளர், அரசற்கு இடையூறு வராது தடுத்தலின் கவயம் போன்றும், மேல்வரக் கடவனவற்றை முன் அறிந்து தெரிவித்தலின் கண் போன்றும் நடப்பார் என்க;

"சூழ்வீர் கண்ணாக வொழுகலான்"

என முப்பால் கூறுவதுங் காண்க. (க௨)

[ஷை வேறு]

உடம்பா றிரண்டிற் குயிரோ ன்றெனெ வொன்றி யைவாய்
விடம்பா யரவம் விழுங்கும்மிரை யொத்து நெஞ்சந்
திடம்பாடு கொள்ள வினைவாங்கிச் செழியன் கல்வி
இடம்பாடு நல்கும் பயன்போன்மகிழ் வெய்த நின்றார்.

(இ - ள்.) உடம்பு ஆறிரண்டிற்கு உயிர் ஒன்று என ஒன்றி - இவ்வுடல் பன்னிரண்டிற்கும் உயிர் ஒன்றே என்று அனைவருங் கருதுமாறு அப்பன்னிருவரும் ஒன்றுபட்டு, விடம்பாய் ஐவாய் அரவம் - நஞ்சு பரந்த ஐந்து வாய்களையுடைய பாம்பானது, விழுங்கும் இரை ஒத்து - விழுங்கும் உணவினைப் போன்று, நெஞ்சம் திடம்பாடு கொள்ள - நெஞ்சம் உறுதியைப் பொருந்த, வினைவாங்கி - வினையினை ஏற்றுக்கொண்டு, செழியன் கல்வி இடம்பாடு நல்கும் பயன்போல் - பாண்டியனது கல்விப் பொருளும் செல்வப் பொருளும் (அவனுக்குப்) பயன் அளித்தல் போலப் (பயனை நல்கி), மகிழ்வு எய்த நின்றார் - (அதனால்) அவன் மகிழ்ச்சியடையத் தமக்குரிய அமைச்சியனெறியில் தவறாது ஒழுகினர்.

அரவின் ஐந்து வாயுள் ஒருவாய் இரை விழுங்குதற்கு ஏனை வாய்கள் அமைந்திருத்தல் போன்று ஒருவர் பெறும் சிறப்பு முதலியவற்றுக்கு ஏனையர் அமைந்திருத்தலாகிய திண்ணிய நெஞ்சு உடையராய் என்பார், 'ஐவா யரவம் விழுங்கும் இரை யொத்து நெஞ்சம் திடம்பாடு கொள்ள' என்றார். வினைவாங்கி - கருமத்தை ஏற்று நடாத்தி. இடம்பாடு - செல்வம். இச்செய்யுளுக்குப் பிறர் கூறிய உரை சிறிதும் பொருந்தாமை ஓர்க. (கரு)

நல்லாவின் பாலி னறுந்தேன்கலந் தென்னப் பன்னூல்
வல்லாரு மாகி மதிநுட்பரு மாகிச் சோர்வில்
சொல்லா லடையார் மனமுங்களி தூங்கச் சொல்லிப்
பல்லார் பிறர்சொற் பயனாய்ந்து கவர வல்லார்.

(இ - ள்.) நல் ஆவின் பாலில் நறுந்தேன் கலந்தென்ன - நல்ல ஆனின் பாலில் நறுந்தேன் கலந்தாற்போல, பல்நூல் வல்லாருமாகி மதிநுட்பருமாகி - பலநூல்களும் கற்று வல்ல செயற்கை யறிவுடையராய் அதனோடு இயற்கையாகி நுண்ணறிவும் கலத்தலுடையராய், சோர்வு இல் சொல்லால் - சோர் வில்லாத சொற்களால், அடையார் மனமும் களிதூங்கச் சொல்லி - பகைவர் மனமுங் களிப்படையுமாறு பேசி, பிறர் பல்லார் சொல் பயன் ஆய்ந்து கவர வல்லார் - பிறர் பலருங் கூறுஞ் சொற்களிலுள்ள குற்ற நோக்காது அவற்றின் பயனைமட்டும் ஆராய்ந்து கொள்ளுதலில் வல்லார்.

இச்செய்யுளானது,

''மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை''

''ஆக்கமுங் கேடு மதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு''

''வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்''

என்னும் திருக்குறட் பாக்களின் பொருளைத் தழுவியுள்ளது. (கச)

பழையே மிறையுட் கோளப்பட்ட*மேன் றேமாப் பெய்தார்
உழையேவல் செய்யுஞ் சிறார்போல வோதுங்கி வேந்தன்
விழைவே ததனை விடம்போல வெறுத்து வெஃகார்
அழல்போ லணுகா ரகலார்நிழ லன்ன நீரார்.

(இ - ள்.) நிழல் அன்ன நீரார் - அரசனது உடல் நிழல் போன்று விடாது நிற்கும் அவ்வமைச்சர், பழையேம் - நாம் பழைமை உடையேம், இறை உட்கொள்ளப்பட்டம் என்று ஏமாப்பு எய்தார் - அரசனால் நன்கு மதிக்கப்பட்டேம் என்று கருதிக் களிப்படையாமல், உழை ஏவல் செய்யும் சிறார்போல ஒதுங்கி - அருகிலிருந்து ஏவியவற்றைச் செய்யுஞ் சிறுவர்களைப்போல ஒரு சிறை ஒதுங்கி நின்று, வேந்தன் விழைவு ஏது - வேந்தனால் விரும்பப்பட்ட பொருள் எதுவோ, அதனை வெஃகார் விடம்போல வெறுத்து - அதனை விரும்பாது நஞ்சினை வெறுத்தல்போல வெறுத்து, அழல்போல் அணுகார் அகலார் - அவனைத் தீயைப்போலக் கருதி நெருங்கவுமாட்டார் நீங்கவு மாட்டார்.

பட்டேம் என்றுவது பட்டனம் என்றுவது இருக்கற்பாலது பட்டம் என விகாரமாயிற்று. அழல் என்றது குளிரைப் போக்குதற்குக் காயும் தீயினை. இச் செய்யுள்,

''பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்''

''கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்''

''இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும்''

''மன்னர் விழைப விழையாமை மன்னரால்
மன்னிய வாக்கந் தரும்''

''அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்''

என்னும் பாக்களின் பொருளைத் தழுவி வந்தது. இவ்விரு செய்யுளினும் காட்டிய திருக்குறட் பாக்களுக்குப் பரிமேலழகர் கூறிய உரையும் உணரற்பாலது. (கரு)

(பா - ம்.) * இறையூழ் கொளப்பட்டம்.

மறுக்குஞ் செயனீத்து நடக்கையின் வையத் தோரை
ஒறுக்கும் பொருளும் பணிகேட்கையி னொன்ன லாரைச்
செறுக்கும் பொருளும் கவரார்வினை செல்வ மாக்கள்
இறுக்கும் பொருளே யிறைவர்க்கிவ ரீட்டுஞ் செல்வம்.

(இ - ள்.) மறுக்கும் செயல் நீத்து நடக்கையின் - குடிகள் தாம் மறுக்கப்பட்ட செயல்களை விலக்கி விதித்தவழி நடத்தலால், வையத்தோரை ஒறுக்கும் பொருளும் - அவரை ஒறுத்தலான் வரும் பொருளையும், பணிகேட்கையின் - பகைவர் தாம் ஏவிய ஏவலைக்கேட்டு ஒழுகுதலால், ஒன்னலாரைச் செறுக்கும் பொருளும் - அவரைச் செறுத்தலான் வரும் பொருளையும், கவரார் - விரும்பாராய், வினை செல்வமாக்கள் இறுக்கும் பொருளே - வினைதலாலாகிய செல்வத்தையுடைய குடிகள் அவ்வினையில் ஆறிலொரு கடமையாக இறுக்கும் பொருளே, இவர் இறைவற்கு ஈட்டும் செல்வம் - இவ்வமைச்சர் தம் அரசனுக்குத் தொகுக்குஞ் செல்வமாகும்.

ஒறுக்கும் பொருள் - தண்டமாக விதிக்கும் பொருள். ஒன்னலாரைச் செறுக்கும் பொருள் - பகைவரை வென்று பெறும் திறைப்பொருள். பெரும்பான்மை பற்றி ஆறிலொன்றாகிய வினைபொருளைக் கூறினர் ; உடையா ரின்மையின் தானே வந்துற்ற பொருளும், சுங்கப் பொருளும் அரசர்க்குரியவெனக் கொள்க.

"உறுபொருளும் உல்கு பொருளுந்தன் னொன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்"

என்பதிலுள்ள ஒன்னார்த்தெறு பொருளுடன் குடிகளை ஒறுக்கும் பொருள் இவர் ஈட்டும் பொருளல்ல என விலக்கினர். வினை செல்வ மாக்கள் இறுக்கும் பொருள் என்றமையால் விளைவுகுன்றி வறுமையுற்றுக் குடிகள் உலகையுடன் கொடுக்க வியலாவிடத்து ஆறிலொன்றாகிய கடமையும் கொள்ளார் என்பதாயிற்று. (கசு)

மறத்தாம வேலான்* மனக்கோள்கைதந் நெஞ்சுள் வான
நிறத்தாடி நீழ லெனத்தோற்ற நிறுத்து மற்ற
தறத்தா றெனிலாற் றுவரன்றெனி லாக்க மாவி
இறத்தான் வரினு மனத்தானு மிழைக்க வெண்ணார்.

(இ - ள்.) மறத்தாம வேலான் - கொலையிற் பயின்ற ஒளியினை யுடைய வேற்படையேந்திய மன்னனது, மனக்கொள்கை - மனக் கருத்து, தம் நெஞ்சுள் - தமது நெஞ்சின்கண், வானம் நிறத்து ஆடிநிழல் எனத் தோற்ற - வானம் போன்றதும் ஒளியையுடையதுமாகிய கண்ணாடியில் நிழல்போல விளங்கித் தோன்ற, நிறுத்து - அதனைச் சீர்தூக்கி, அது அறத்து ஆறு எனில் ஆற்றுவர் - அஃது அறநெறியிற்பட்டதாயின் செய்வர் ; அன்று எனில் - அந்நெறியிற்படாதாயின், ஆக்கம் ஆவி இற வரினும் - (அது செய்யாவழி) தம் பொருளும் உயிரும் அழிய வருமாயினும், மனத்தானும் இழைக்க எண்ணார் - (அக்கேடு வருதலை யஞ்சி) அதனைச் செய்ய மனத்தினாலுங் கருதார்.

(பா - ம்.) * மறத்தான வேலான்.

தனக்கென உருவமின்மையாற் கண்ணாடி வானம்போல்வ தாயிற்று. ஆடியில் அடுத்த பொருளின் நிழல் விளங்கித் தோன்று தல்போல அரசன் மனக்கருத்து இவர் நெஞ்சிலே தோன்றிற்று என் ருர்; அகத்து நிகழ்வதனை ஐயப்படாதுணரும் தெய்வத் தன்மை கூறியவாறு.

"அறிகொன் றறியா னெனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்"

என்னும் திருக்குறளும்,

"தம்முயிர்க் குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்"

என்னும் இராமாயணச் செய்யுளும் இங்கு நோக்கற்பாலன. (கஎ)

எழுசீரடி யாசிரிய விருத்தம்

இன்னவா றொழுகும் பன்னிரு வோரு
மீகையுந் தருமமும் புகழுந்
தென்னர்கோ மகற்கு வைகலும் பெருகத்
திசையெலாம் விசயமுண் டாக்கிப்
பன்னகா பரணன் சிவபுர மடைந்து
பரன்கண நாதருட் கலந்து
மன்னிவீற் றிருந்தார் மன்னர்மன் னவனும்
வான்பத மடைந்துவீற் றிருந்தான்.

(இ - ள்.) இன்னவாறு ஒழுகும் பன்னிருவோரும் - இங்ஙனம் ஒழுகும் அமைச்சர் பன்னிருவரும், தென்னர் கோமகற்கு - பாண்டியர் பெருமகனுக்கு, ஈகையும் தருமமும் புகழும் வைகலும் பெருக - பொரு ளும் அறமும் புகழும் நாடோறும் பெருகுமாறு, திசை எலாம் விச யம் உண்டாக்கி - திசைதோறும் வெற்றியை விளைத்து, பன்னக ஆபரணன் சிவபுரம்அடைந்து - பாம்பணியை யுடையவனாகிய இறை வனது சிவலோகத்தை அடைந்து, பரன்கண நாதருள் கலந்து மன்னி வீற்றிருந்தார் - அவனது சிவகணங்களுட் கலந்து நிலை பெற்று வீற் றிருந்தனர்; மன்னர் மன்னவனும் - வேந்தர் வேந்தனாகிய இராசராச பாண்டியனும், வான்பதம் அடைந்து வீற்றிருந்தான் - இந்திரபதவியைப் பெற்று வீற்றிருந்தான்.

ஈகை - பொன். பொருளால் அறமும் அறத்தாற் புகழும் அவற் ருல் வெற்றியும் உண்டாதலின் அம்முறையே கூறினர். பன்னகாபர ணன் : தீர்க்க சந்தி. (கஅ)

ஆகச் செய்யுள் உஉஎஅ.

நாற்பத்தேழாவது

கரிக்குருவிக்கு உபதேசஞ்செய்தபடலம்

[கொச்சகக்கலிப்பா]

வரிக்குருகிப் பத்திரற்குப் பலகையிட்ட மணிகண்டன்
அரிக்குருளை வடிவான வடல்வீரர்க் கரசன்பார்
பரிக்குமமைச் சியலளித்த பரிசுரைத்தாம் பசுபதிபாற்
கரிக்குருவி குருமொழிகேட் டருளடைந்த கதைபகர்வாம்.

(இ - ள்.) வரிக்கு உருகிப் பத்திரற்குப் பலகையிட்ட மணி கண்டன் - இசைப்பாட்டிற்கு நெகிழ்ந்து பாணபத்திரனுக்குப் பலகை யிட்டருளிய நீலமணி போலுந் திருமிடற்றினையுடைய இறைவன், அரிக்குருளை வடிவான அடல் வீரர்க்கு - பன்றிக்குட்டிகளின் வடிவாகிய வெற்றிவாய்ந்த பன்னிரண்டு வீரர்களுக்கும் அரசன் பார்பரிக்கும் அமைச்சு இயல் அளித்த பரிசு உரைத்தாம் - பாண்டியனது நாட்டினை ஓம்பும் அமைச்சியலை அளித்தருளிய திருவிளையாடலைக் கூறினோம்; பசுபதிபால் - அவ்விறைவனிடத்து கரிக்குருவி குரு மொழிகேட்டு அருள் அடைந்த கதை பகர்வாம் - கயவாயென்னும் பறவை குரு மொழியினைக்கேட்டு அவன் திருவருளைப்பெற்ற திருவிளையாடலை (இனிக்) கூறுவோம்.

வரி - இசைப்பாட்டு. அரி - பன்றி. பசு - பாசத்தாற் கட்டுண்ட உயிர்கள்; பசுபதி - ஆன்மகோடிகளுக்கெல்லாம் இறைவன். (க)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

மன்னவ னிராச ராசன் வானவர்க் கரச னான
பின்னவன் குமர னான பெருவலி மடங்க லன்னான்
துன்னல ரடுபோர் சாய்க்குஞ் சுகுணபாண் டியனீர் ஞாலம்
இன்னறீர்த் தறக்கோ லோச்சி யீர்ங்குடை நிழற்று நாளில்.

(இ - ள்.) மன்னவன் இராசராசன் - வேந்தனாகிய இராசராச பாண்டியன், வானவர்க்கு அரசனானபின் - இந்திரபதவியைப் பெற்ற பின்னர், அவன் குமரனான சுகுண பாண்டியன் - அவன் புதல்வனாகிய சுகுண பாண்டியனென்பான், துன்னலர் அடுபோர் சாய்க்கும் பெருவலி மடங்கல் அன்னான் - பகைவரது அடுகின்ற போரினை அழிக்கும் பெரிய வலியினையுடைய சிங்கம்போல்வானாய், நீர்ஞாலம் இன்னல் தீர்த்து- கடல் சூழ்ந்த புவியிலுள்ள உயிர்களின் துன்பத்தைப் போக்கி, அறக்கோல் ஓச்சி - செங்கோல் நடாத்தி, ஈர் குடை நிழற்றும் நாளில் - தண்ணிய குடையால் நிழலைச் செய்யுங் காலையில்.

குமரனுன பாண்டியன் அடுபோர் சாய்க்கும் பாண்டியன் எனத் தனித்தனி இயைத்தலுமாம். அறக்கோல் - அறத்தின் வழுவாத கோல்; செங்கோல். (உ)

ஆற்றல்சா லோருவன் மேனு ளாற்றவு மறனே யாற்றி
மாற்றமில் சிறிது பாவஞ் செய்ததன் வலத்தால்* வந்து
தேற்றமில் கயவா யாகிச் சேனித்தலாற் காக மாதி
கூற்றேன வூற்றஞ் செய்யக் குருதிசோர் தலைய தாகி.

(இ - ள்.) ஆற்றல் சால் ஒருவன் - வலிமைமிக்க ஒருவன் மேல் நாள் - முன் பிறப்பில், அறன் ஆற்றவும் ஆற்றி - அறத்தை மிகவுஞ் செய்து, மாற்றம் இல் சிறிது பாவம் செய்து - மாறுதலில்லாத சிறிது பாவத்தையுஞ் செய்து, அதன் வலத்தால் வந்து - அதன் வலியால் வந்து, தேற்றம் இல் கயவாயாகி - அறிவில்லாத கரிக்குருவியாய், செனித்த லால் - பிறத்தலால், காகம் ஆதி - காக்கை முதலிய பறவைகள், கூற் றென ஊற்றம் செய்ய - கூற்றுவனைப்போல (அதற்கு) இடை யூற்றினை விளைக்க, குருதி சோர் தலையதாகி - (அதனால் அது) குருதி வடிகின்ற தலையினை யுடையதாகி.

மாற்றம் இல் - தன்பயனை விளைத்தன்றி நீங்குதல் இல்லாத. அது என்னும் எழுவாய் வருவித்துரைக்க. (ங)

புட்கேலா மேளிதா யூறு பாடஞ்சிப் புரத்துள்† வைகி
உட்கிநீள் வனத்துட் போகி வழிமருங் கோருசார் நிற்கும்
கட்கவிழ்ந் தோழுகப் பூத்த கவிழிணர் மரமேல் வைகி
வெட்கமீ தூரச் சாம்பி வெய்துயிர்த் திருக்கு மெல்லை.

(இ - ள்.) புட்கு எலாம் எளிதாய் - பறவைகள் அனைத்திற்கும் எளிய பறவையாய், ஊறுபாடு அஞ்சி -(அவை செய்யும்) இடையூற் றினுக்குப் பயந்து, புரத்துள் வைகி - ஊருள் இருந்து, உட்கி - (பின் அங்கிருத்தற்கும்) அஞ்சி, நீள்வனத்துள் போகி - நீண்ட காட்டினுட் சென்று, வழி மருங்கு ஒரு சார் நிற்கும் - வழியருகின் ஒரு புறத்தில் நிற்கும், கள்கவிழ்ந்து ஒழுகப் பூத்த கவிழ் இணர் மரமேல் வைகி - தேன் கவிழ்ந்து ஒழுகுமாறு மலர்ந்த கவிழ்ந்த பூங்கொத்துக்களை யுடைய மரத்தின்மேலே தங்கி, வெட்கம் மீதூரச் சாம்பி - நாணம் மீதூரச் சோர்ந்து வெய்துயிர்த்து இருக்கும் எல்லை - சுடுமூச்செறிந்து இருக்குமளவில்.

புரம் - ஊர். சாம்பி - கூம்பி (ச)

விடையவ னீறு பூசு மேய்யவன் பூண்ட கண்டித்
தோடையவன் புறம்பு முள்ளுந் தூயவன் குடையுங் கையில்
உடையவன் றரும தீர்த்த யாத்திரை யோழுக்கம் பூண்ட
நடையவ னோருவ னந்த நறுந்தரு நிழலிற் சார்ந்தான்.

(பா - ம்.) *செய்தந்த வலத்தால். †புறத்துள்.

(இ - ள்.) விடையவன் நீறுபூசும் மெய்யவன் - இடபவூர்தியை யுடைய இறைவனது திருநீற்றினை அணிந்த மெய்யினையுடையவனாய், பூண்ட கண்டித் தொடையவன் - உருத்திராக்க மாலையையுடையவனாய், புறம்பும் உள்ளும் தூயவன் - புறமும் அகமுந் தூய்மையுடையவனாய், கையில் குடையும் உடையவன் - (இவையே யன்றிக்) கையின்கண் குடையும் உடையவனாய், தரும தீர்த்தயாத்திரை ஒழுக்கம் பூண்ட நடையவன் ஒருவன் - தூய நதிகளிற்சென்று நீராடு ஒழுக்கத்தை மேற் கொண்ட நடையினையுடைய ஒருவன், அந்த நறுந்தரு நிழலில் சார்ந் தான் - அந்த நறிய மர நிழலை அடைந்தான்.

தரும தீர்த்தம் - புண்ணிய தீர்த்தம். நடையவன் - நடந்து செல்லுதலை யுடையவன். (ரு)

இருந்தவன் சிலரை நோக்கி யியம்புவா னெவர்க்கும் பேறு
தருந்தலந் தீர்த்த மூர்த்தித் தன்மையிற் சிறந்த வன்பு
வருந்தமிழ் மதுரை பொற்றா மரைத்தடஞ் சுந்த ரேசப்
பெருந்தகை யென்று சான்றோர் பேசுவ ராத லாலே.

(இ - ள்.) இருந்தவன் சிலரை நோக்கி இயம்புவான் -(அங்ஙனஞ் சார்ந்து) இருந்த அப்படிவத்தன் அங்குள்ள சிலரைப் பார்த்துக் கூறு வான் ; எவர்க்கும் பேறு தரும் - யாவர்க்கும் விரும்பிய பயன்களை நல்கும், தவம் தீர்த்தம் மூர்த்தித் தன்மையில் சிறந்த தலமும் தீர்த்தமும் மூர்த்தியுமாகிய தன்மையிற் சிறந்தன, அன்பு வருந்தமிழ் மதுரை - (முறையே) அன்பு வளர்தற்குரிய தமிழையுடைய மதுரையும், பொற்றாமரைத்தடம் - பொற்றாமரை வாவியும், சுந்தரேசப் பெருந் தகை என்று - சோமசுந்தரப் பெருமானும் என்று, சான்றோர் பேசுவர் ஆதலால் - பெரியார் கூறுவர் ஆதலால்.

இருந்தவன் என்பதனை இரட்டுறமொழிதலாக்கி இருந்த பெரிய தவவொழுக்க முடையான் என்றுரைக்க. தலத்தன்மை தீர்த்தத் தன்மை மூர்த்தித்தன்மையிற் சிறந்த தலமும் தீர்த்தமும் மூர்த்தியும் என விரித்துரைக்க. (௬)

ஓரிடத் தினைய மூன்று* விழுப்பமு முள்ள தாகப்
பாரிடத் தில்லை யேனைப் பதியிடத் தொன்றே யென்றுஞ்
சீருடைத் தாகுங் கூடற் செழுநக ரிடத்தம் மூன்றும்
பேருடைத் தாகு மென்றாற் பிறிதொரு பதியா தென்றான்.

(இ - ள்.) ஓர் இடத்து இனைய மூன்று விழுப்பமும் உள்ளதாக - ஒரேயிடத்தில் இந்த மூன்று சிறப்பும் உடையதாக, பாரிடத்து இல்லை - இந்நிலவுலகின்கண் (வேறு பதி) இல்லை ; ஏனைப் பதி இடத்து - மற்றைப் பதிகளில், என்றும் ஒன்றே சீர்உடைத்தாகும் - எஞ்ஞான்றும் அம் மூன்றில் ஒன்றே சிறப்புடையதாகும்; கூடல் செழுநகர் இடத்து - கூட லாகிய செழிய பதியின்கண், அம்மூன்றும் பேர்உடைத்தாகும் என்றால் -

(பா - ம்.) *அனைய மூன்று.

அம்மூன்றுந் தனித்தனி பெருமையுடையது என்றால், பிறிது ஒரு பதி யாது என்றான் - அதனை யொப்பதாகிய வேறொரு பதி யாதுளது என்றான்.

பாரிடத்து வேறுபதி இல்லை என்றும், அதனையொப்பதாகிய பிறிதொரு பதி என்றும், விரித்துரைக்க. (எ)

இம்மது ரேசன் சேவித் தேத்துவோர்க் கெளிய னாகிக்
கைம்மலர் நெல்லி போலக் கருதிய வரங்க ளெல்லாம்
இம்மையி னுடனே நல்கு மேனைய தலத்து வானோர்
அம்மையி னன்றி நல்கா ராதலா லதிக* மென்றான்.

(இ - ள்.) இம் மதுரேசன் சேவித்து ஏத்துவோர்க்கு - இந்த மதுரை நாயகனாகிய சோமசுந்தரக் கடவுள் தன்னைவணங்கித் துதிப்போர்க்கு, கைம்மலர் நெல்லிபோல எளியனாகி - கையாகிய மலரின்கண் உள்ள நெல்லிக்கனியின் தோற்றம் போல் எளிமையுடையவனாய்த் தோன்றி, கருதிய வரங்கள் எல்லாம் - அவர் கருதிய வரங்கள் அனைத்தையும், இம்மையின் உடனே நல்கும் - இப்பிறப்பிலே உடன் தந்தருளுவன்; ஏனைய தலத்து வானோர் - மற்றைய தலத்துக் கடவுளர், அம்மையின் அன்றி நல்கார் - மறுபிறப்பிலன்றி இப்பிறப்பில் நல்கார்; ஆதலால் அதிகம் என்றான் - ஆகையால் சோமசுந்தரக் கடவுளே மேன்மையுடைய மூர்த்தியாகும் என்று கூறினான்.

நன்கு விளங்குவதென்பதற்கு எடுத்துக்காட்டாக ஆன்றோரால் நிறுவப்பெற்று வழங்கிவருவதொரு வசனம் 'உள்ளங்கை நெல்லிக்கனி' என்பது. இது 'கரதலாமலகம்' என வடமொழியிற் கூறப்படும்.

"தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்"

என்னும் திருவாசகம் இங்கே சிந்திக்கற்பாலது. வரங்களெல்லாம் கைம்மலர் நெல்லிபோல நல்கும் என இயைத்துரைத்தலும் பொருந்தும். (அ)

மற்றது கேட்டுக் கொம்பர் வைகிய கயவாய் ஞானம்
பெற்றது பறவை யாகிப் பிறந்ததும் பிறவுந் தேற்றம்
உற்றது நாமிச் சன்ம மொழிப்பதற் கறவோ னிங்ஙன்
சொற்றதே யுறுதி யென்று துணிவுகொ டெழுந்த தன்றே.

(இ - ள்.) கொம்பர் வைகிய கயவாய் - அம்மரக்கிளையிற் சாம்பியிருந்த கரிக்குருவி, அதுகேட்டு ஞானம் பெற்றது - அவன் கூறியதைக் கேட்டலால் ஞானத்தைப் பெற்றது; பறவையாகிப் பிறந்ததும் பிறவும் தேற்றம் உற்றது -(அதனால்) தான் பறவையாய்ப் பிறந்த காரணமும் பிறவும் தெளிந்தது; இச்சன்மம் நாம் ஒழிப்பதற்கு - இக்கொடிய பிறவியை நாம் ஒழிப்பதற்கு, இங்ஙன் அறவோன்

(பா - ம்.) * அதிகன்.

சொற்றதே உறுதி என்று - இங்கு இவ்விரத வொழுக்கினன் கூறியதே உறுதியாவதென்றுகருதி, துணிவுகொடு எழுந்தது - துணிந்து எழுந்தது.

ஞானம் - மூன்று காலமும் அறியும் அறிவு. கொம்பர்: ஈற்றுப் போலி. மற்று, அன்று ஏ: அசைகள். அன்றே என்பதற்கு அப்பொழுதே என்றுரைத்தலும் ஆம். (௯)

ஆய்மலர்க் கான நீங்கி யாடக மாடக் கூடற்
போய்மலர்க் கனக கஞ்சப் புண்ணியப் புனறோய்ந் தாம்பல்
வாய்மலர்க் கயலுண் கண்ணாண் மணாளனை வலஞ்செய் தன்பிற்
றோய்மலர்க் கழலி னானை யகத்தினாற் றொழுதர்ச் சித்தே.

(இ - ள்.) ஆய்மலர்க்கானம் நீங்கி - வண்டுகளாராயுந் தேனையுடைய மலர்கள் நிறைந்த காட்டை நீங்கி, ஆடகமாடக் கூடல்போய் - பொன்னாலாகிய மாடங்கள் நிறைந்த மதுரைப்பதியிற் சென்று, மலர்க் கனக கஞ்சப் புண்ணியப் புனல் தோய்ந்து - மலர்களையுடைய பொற்றாமரையின் புண்ணிய நீரில் மூழ்கி, ஆம்பல் மலர்வாய் - ஆம்பல் போன்ற திருவாயினையும் கயல் உண்கண்ணாள் - கயல் போன்ற மையுண்ட கண்களையுமுடைய உமையம்மையின், மணாளனை வலம் செய்து - நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளை வலஞ்செய்து, அன்பில் தோய்மலர்க் கழலினானை - அன்பாகிய நீரிற்றோயும் தாமரைமலர் போன்ற திருவடிகளையுடைய அவ்விறைவனை, அகத்தினால் தொழுது அர்ச்சித்து - மனத்தினால் வணங்கிப் பூசித்து.

ஆய்மலர் என்பதற்கு மெல்லிய மலர் என்றும் அழகிய மலர் என்றும் உரைத்தலுமாம். (௧0)

இன்னண மூன்று வைகல் கழிந்தபி னெம்பி ராட்டி
தன்னமர் காத லானைத் தாழ்ந்தெதிர் நோக்கி யைய
என்னையிக் கயவாய் செய்யுஞ் செயலிதன் வரவியா தென்ன
முன்னவ னதன்றன் செய்தி வரவெலா முறையாற் கூறு.

(இ - ள்) இன்னணம் மூன்று வைகல் கழிந்தபின் - இங்ஙனம் மூன்று நாட்கள் சென்றபின், எம்பிராட்டி - எம் பிராட்டியார், தன் அமர் காதலானைத் தாழ்ந்து - தம்மால் விரும்பப்பட்ட காதலராகிய சோமசுந்தரக் கடவுளை வணங்கி, எதிர்நோக்கி - நேரே பார்த்து, ஐய - ஐயனே, இக்கயவாய்செய்யும் செயல் என்னை - இக்கரிக்குருவி செய்யும் வழிபாடு எதன் பொருட்டு, இதன் வரவு யாது என்ன-இதன் வரலாறு என்னை என்று வினவ, முன்னவன் - இறைவன், அதன் செய்தி வரவு எலாம் முறையால் கூறு - அதனது செய்தியும் வரலாறுமாகிய அனைத்தையும் முறைப்படி கூறி.

வரவியாது என்புழி இகரம் குறுகிநின்றது. அதன்றன், தன்: சாரியை. (௧௧)

பத்திமை நியமம் பூண்ட பறவைமேற் கருணை நாட்டம்
வைத்திமை யாத முக்கண் மறைமுத லொருசேய்க் கன்று
நித்திய நிலைமை நல்கி நேர்ந்தவெங் கூற்றைக் காய்ந்த
சத்திய ஞான மிர்த்திஞ் சய*த்தினை யுபதே சித்தான்.

(இ - ள்.) இமையாத முக்கண் மறை முதல் - இமையாத மூன்று கண்களையுடைய வேத முதல்வனாகிய அச் சோமசுந்தரக் கடவுள், பத்திமை நியமம் பூண்ட பறவைமேல் - அன்பு செய்தலையே கடப்பாடாகக் கொண்ட அப் பறவையின்மேல், கருணை நாட்டம் வைத்து - அருள் நோக்கம் வைத்து ஒரு சேய்க்கு - ஒரு மாணியாகிய மார்க்கண்டனுக்கு, அன்று - அந்நாளில், நித்திய நிலைமை நல்கி - அழிவற்ற தன்மையைக் கொடுத்து, நேர்ந்த வெங்கூற்றைக் காய்ந்த - எதிர்த்த கொடிய கூற்றுவனை ஒறுத்த, சத்திய ஞான மிர்த்திஞ்சயத்தினை - உண்மை ஞானமாகிய மிர்த்திஞ்சய மனுவை, உபதேசித்தான் - உபதேசித் தருளினான்.

மிர்த்திஞ்சயம் - மூன்றெழுத்தான் முடிந்ததொரு வேத மந்திரம். (கஉ)

[கலிவிருத்தம்]

உவமை யற்றவ னுரைத்த மந்திரஞ்
செவிம டுத்தலுஞ் சிற்று ணர்ச்சிபோய்ப்
பவம கற்றிடப் படுக ரிக்குரீஇ
கவலை விட்டரன் கழல்வ ழுத்துமால்.

(இ - ள்.) உவமை அற்றவன் - ஒப்பற்றவனாகிய இறைவன், உரைத்த மந்திரம் செவிமடுத்தலும் - உபதேசித்தருளிய அம்மனுவைக் காதிற் கேட்டவளவில், சிற்றுணர்ச்சி போய் - சிற்றறிவு நீங்கி, பவம் அகற்றிடப்படு கரிக்குரீஇ - பிறவி நீங்கப்பெற்ற அக்கயவாய், கவலை விட்டு - துன்பமொழிந்து, அரன் கழல் வழுத்தும் - அவ்விறைவன் திருவடிகளைத் துதிக்கும்

அகற்றிடப்படு - நீக்கப்பட்ட; நீக்கிய. குரீஇ: இயற்கையளபெடை. ஆல்: அசை. (கந)

எண்ணி லாவுயிர்க் கிறைவ போற்றிவான்
தண்ணி லாமதிச் சடில போற்றியென்
புண்ணி யப்பயன் போற்றி யங்கயற்
கண்ணி நாதநின் கருணை போற்றியால்.

(இ - ள்.) என் இலா உயிர்க்கு இறைவ போற்றி - அளவிறந்த உயிர்களுக்குத் தலைவனே வணக்கம்; வான்தண் நிலாமதிச்சடில போற்றி - வானின்கண் உலாவும் குளிர்ந்த நிலாவையுடைய சந்திரனைத் தரித்த சடையையுடையானே வணக்கம்; என் புண்ணியப் பயன்

(பா - ம்.) * மித்திஞ்சயம்.

போற்றி - எனது சிவ புண்ணியத்தின் பயனானவனே வணக்கம், அங்கயற் கண்ணி நாத - அங்கயற் கண்ணம்மையின் நாதனே, நின் கருணை போற்றி - நினது திருவருளுக்கு வணக்கம்.

போற்றி என்பதற்குச் சாக்க என்றுரைத்தலுமாம். என் புண்ணி யப்பயன் - யான் முற்பிறப்புகளிற் செய்த சிவபுண்ணியத்தின் பயனாக வெளிப்பட்டருளியவன் என்றபடி, ஆல் : அசை. (௧௪)

தெளித லின்றியே செய்த தீமையால்
விளியு மென்னையு மாளல் வேண்டுமோ
எளிய ரெங்குளா ரென்று தேர்ந்துதேர்ந்
தளியை யாவதுன் னருளின் வண்ணமே.

(இ - ள்.) செய்த தீமையால் - யான் புரிந்த தீவினையால், தெளிதல் இன்றியே விளியும் என்னையும் - நின் கருணைத் திறத்தை அறியாது மாளா நிற்கும் நாயேனையும், ஆளல்வேண்டுமோ - ஆளுதல்வேண்டுமோ, எளியர் எங்குளார் என்று தேர்ந்து தேர்ந்து அளியை ஆவது - களை கணற்ற எளியார் எங்குளார் என்று தேடித்தேடி அவர்மீது அருளுடை யையா யிருத்தல், உன் அருளின் வண்ணமே - நின் திருவருளின் தன்மைபோலும்.

இச்செய்யுள்,

"பித்த னென்றெனை யுலகவர் பகர்வதோர் காரண மிதுகேளீர்
ஒத்துச் சென்றுதன் றிருவருட் கூடிடு முபாயம தறியாமே
செத்துப் போயரு நரகிடை வீழ்வதற் கொருப்படு கின்றேனை
அத்த னாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே"

என்னும் திருவாசகக் கருத்தைத் தழுவியிருத்தல் காண்க. (௧௫)

உம்மை நல்லற முடைய நீர்மையால்
இம்மை யிம்மனு வியம்பி னாயிது
அம்மை நன்னெறிக் கேது வாதலான்
மும்மை யுந்நல முடைய மோய்ம்பினேன்.

(இ - ள்.) உம்மை நல் அறம் உடைய நீர்மையால் - முற்பிறப்பிற் செய்த நல்ல அறத்தினையுடைய தன்மையால், இம்மை இம்மனு இயம்பி னாய் - இப்பிறப்பில் இம் மந்திரத்தை உபதேசித் தருளினை ; இது அம்மை நல்நெறிக்கு ஏது ஆதலால் - இது மறுமையிற் சிவகதியிற் செல்லுதற்குக் காரண மாதலால், மும்மையும் - மூன்று பிறப்பிலும், நலம் அடைந்த மொய்ம்பினேன் - பயன் பெற்ற வலியனாயினேன்.

இப்பிறப்பில் இம்மந்திரம் உபதேசிக்கப் பெற்றமையால் முற் பிறப்பில் இதற்கேதுவாகிய சிவ புண்ணியமும், வரும் பிறப்பில் இதனாலெய்தும் சிவகதிப்பேறும் உடையேனாகலின் அடியேன் மும்மையும் பெரு நலமுடையனாயினேன் என்றது ;

''சென்ற காலத்தின் பழுதிலாத் திறனு
மினியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்ற பேறிதனு
லென்றைக்குந் திருவரு ளுடையோம்''

என்னும் பெரிய புராணச் செய்யுட் கருத்துடன் இஃது ஒற்றுமை யுறுதல் காண்க. (கசு)

ஆயி னும்மெனக் கைய வோர்குறை
தீய புள்ளெலா மூறு செய்தெனைக்
காயு மானமுங் கழியக் கண்டபேர்
ஏயெ னும்படிக் கெளிய னாயினேன்.

(இ - ள்.) ஆயினும் - ஆனாலும், ஐய - ஐயனே, எனக்கு ஓர் குறை - எனக்கு ஒரு குறைபாடு உள்ளது; தீய புள் எலாம் - கொடிய பறவைக ளெல்லாம், எனை ஊறு செய்து காயும் - என்னைத் துன்புறுத்தி வருத்தா நிற்கும், மானமும் கழிய - மானமும் நீங்க, கண்டபேர் ஏ எனும்படிக்கு - பார்த்தவர்கள் ஏ என்று இகழுமாறு, எளியனாயினேன் - யான் அனைத்திற்கும் எளியேனாயினேன்.

ஓர் குறை உளது என விரித்துரைக்க. ஏ : இகழ்ச்சிக் குறிப்பிடைச் சொல். (கஎ)

என்ன வக்குரீஇ யியம்ப வெம்பிரான்
அன்ன புட்கெலாம் வலியை யாகெனப்
பின்னு மக்குரீஇ தாழ்ந்து பேதையேற்
கின்னு மோர்வரந் தருதி யென்றதால்.

(இ - ள்.) என்ன அக்குரீஇ இயம்ப - என்று அந்தக் குருவி கூற, எம்பிரான் - எம் இறைவனாகிய சோமசுந்தரக் கடவுள், அன்ன புட்கு எலாம் வலியை ஆக என - அந்தப் பறவைகள் அனைத்திற்கும் வன்மையை யுடையையாகக் கடவை யென்றருள, அக்குரீஇ பின்னும் தாழ்ந்து - அந்தக் கரிக் குருவி மீண்டும் வணங்கி, பேதையேற்கு - அறிவில்லாத எனக்கு, இன்னும் ஓர் வரம் தருதி என்றது - இன்னும் ஒரு வரம் தந்தருள்வாய் என இரந்துவேண்டியது.

புட்கு எலாம் - புட்கள் எல்லாவற்றிற்கும்; எல்லாவற்றினும். ஆல்: அசை. (கஅ)

வலியை யென்பதென் மரபி னுக்கெலாம்
பொலிய வேண்டுமெப் போது நீசொன
ஒலிய மந்திர மோதி யோதிநாங்
கலியை வெல்லவுங் கருணை செய்கென.

(இ - ள்.) வலியை என்பது - வலியை யாகவென்று நீ அருளியது, என் மரபினுக்கு எலாம் பொலியவேண்டும் - என் மரபில் வரும் பறவைகள் அனைத்திற்கும் விளங்கவேண்டும்; எப்போதும் - (அது வன்றி அவைகள்) எஞ்ஞான்றும், நீ சொன ஒலிய மந்திரம் - நீ கூறி யருளிய ஒலியையுடைய மந்திரத்தை, ஓதி ஓதி நாம் கலியை

வெல்லவும் - இடை யீடின்றிப் பயின்று அச்சத்தையும் துன்பத்தையும் ஒழிக்கவும், கருணை செய்க என - அருள் செய்வாயாக என்று வேண்ட;

நாம் - அச்சம்; யாங்கள் என்றுமாம். செய்கென: அகரம் தொகுத்தல். (௧௧)

ஆவ தாகவேன் றமரர் நாயகன்
மூவெ ழுத்தினன் முடிந்த வம்மனு
தாவி றெய்வத மிருடி சந்தமோ
டோவி லோசைமுன் றேடுதே ருட்டினன்.

(இ - ள்.) அமரர் நாயகன் - தேவர் தேவனாகிய இறைவன், ஆவ தாக என்று - அங்ஙனமே ஆகக் கடவது என்று கூறியருளி, மூவெழுத் தினால் முடிந்த அம்மனு - மூன்று எழுத்தினால் முடிந்த அம்மந்திரத்தை, தாவு இல் தெய்வதம் இருடி சந்தமோடு - கெடுதலில்லாத தெய்வம் முனி பண் என்பவற்றோடும், ஓவு இல் ஓசை மூன்றொடு தெருட்டினன் - நீங்குதலில்லாத எடுத்தல் முதலிய மூன்று ஓசையோடும் தெளி வுறுத்தான்.

மனு - மந்திரம். இம்மந்திரத்தைத் திரியம்பகம் என்றும் கூறுவர். ஒவ்வொரு மந்திரத்திற்கும் தெய்வமும் இருடியும் சந்தமும் உண்டாகை யால் இதனை அவற்றோடு தெளிவித்தார் என்க. ஓசை மூன்று - எடுத்தல் படுத்தல் நலிதல்; இவை வடமொழியில் உதாத்தம் அநுதாத்தம் சொரிதம் என்று கூறப்படும். (௨0)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

குருமொழி பயின்று முள்வாய்க் குருவிதன் குலனுந் தன்போல்
அருமறை முதல்வ னீந்த வாற்றலாற் பறவைக் கெல்லாம்
பெருமைசால் வலியா னென்னும் பெயரவா யுலகின் மன்னக்
கருமணி கண்டன் செம்போற் கனைகழ லடிசேர்ந் தன்றே.

(இ - ள்.) முள்வாய்க் குருவி - முள்போலக் கூரிய வாயையுடைய அக்கரிக் குருவி, குருமொழி பயின்று - குரவன் உபதேச மொழியை இடைவிடாது பயின்று, தன் குலனும் - தனது சாதிப் பறவைகளும், தன் போல் - தன்னைப் போலவே, அருமறை முதல்வன் ஈந்த ஆற்றலால் - அரிய வேத முதல்வனாகிய சோமசுந்தரக் கடவுளருளிய வலியால், பறவைக்கு எல்லாம் பறவைகள் அனைத்திற்கும், பெருமை சால் வலியான் என்னும் பெயரவாய் - பெருமை மிக்க (வலியை யுடைமை யால்) வலியானென்னும் பெயரினை யுடையவாய், உலகின் மன்ன உலகிலே நிலை பெற்றிருக்க, கருமணி கண்டன் - நீலமணி போலுந் திருமிடற்றை யுடைய அவ்விறைவனது, செம்பொன் கனை கழல் அடி சேர்ந்தன்று - சிவந்த பொன்னாலாகிய ஒலிக்கின்ற வீரக் கழலணிந்த திருவடியைச் சேர்ந்தது.

ஒரு குருவியும் இத்தகைய பெறற்கரும்பேற்றினை எய்திற்றென வியப்பாராய் 'முள்வாய்க் குருவி' என்றார். முதல்வன் ஈந்த அருமறை

ஆற்றலால் என இயைத்துரைப்பாருமுளர். குருவி சேர்ந்தன்று என முடிக்க. சேர்ந்தன்று - சேர்ந்தது : உடன்பாட்டு முற்று. (உ௧)

இக்கரிக் குருவி தானேற் றெய்திய வரத்தைத் தன்போல்
ஒக்கலு மேளிதா வெய்தப் பெற்றதா லுலகின் மேன்மைத்
தக்கவ* னொருவன் வாழத் தன்கிளை வாழ்வ தென்ன
மிக்கவ ரேடுத்துக் கூறும் பழமொழி விளக்கிற் றன்றே.

(இ - ள்.) இக்கரிக் குருவி - இந்தக் கரிக்குருவி, தான் நோற்று எய்திய வரத்தை - தான் வருந்தி நோற்றுப் பெற்ற வரத்தினை, தன் போல் ஒக்கலும் எளிதா எய்தப் பெற்றதால் - தன்னைப் போல் தன் இனமும் எளிதாக அடையுமாறு வேண்டிப் பெற்ற அதனால், உலகில் மேன்மைத் தக்கவன் ஒருவன் வாழ - உலகின்கண் மேலாகிய தகுதியுடையான் ஒருவன் வாழ, தன் கிளை வாழ்வது என்ன - அவனது சுற்றம் வாழ்வதாகுமென்று, மிக்கவர் எடுத்துக் கூறும் பழமொழி விளக்கிற்று - அறிவுடையோர் எடுத்துக் கூறுகின்ற பழமொழியை விளக்கியது.

தான் வருந்தி எய்திய வரத்தை ஒக்கல் எளிதாகத் தன் போல் எய்த என்க. பெற்றதால் - பெற்ற அதனால். குருவி பெற்றவதனால் பழமொழி விளக்கிற்று என முடிக்க. அன்று, ஏ : அசைகள். (உஉ)

[வேறு]

ஈச னடிக்கன் பில்லார்போ லேளியா ரில்லை யாவர்க்கும்
ஈச னடிக்கன் புடையார்போல் வலியா ரில்லை யாவர்க்கும்
ஈச னடிக்கன் பின்மையினா லேளிதாய்த் திரிந்த விக்கயவாய்
ஈச னடிக்கன் புடைமையினால் வலிதா யிற்றே யெவ்வுயிர்க்கும்.

(இ - ள்.) ஈசன் அடிக்கு அன்பு இன்மையினால் - இறைவன் திருவடியில் அன்பு இல்லாமையினால், எளிதாய்த் திரிந்த இக்கயவாய் - வலியற்றுத் திரிந்த இந்தக் கரிக்குருவி, ஈசன் அடிக்கு அன்பு உடைமையினால் - அவன் திருவடியில் அந்த அன்பு உண்டாகப் பெற்றமையினால், எவ்வுயிர்க்கும் வலிது ஆயிற்று - பறவைகள் எல்லாவற்றுக்கும் வலியை யுடையதாயிற்று (ஆதலால்), ஈசன் அடிக்கு அன்பு இல்லார் போல் - அவ்விறைவன் திருவடியில் அன்பில்லாதார் போல, யாவர்க்கும் எளியார் இல்லை - அனைவர்க்கும் எளியார் (பிறரொருவர்) இல்லை; ஈசன் அடிக்கு அன்புடையார் போல் - அவன் திருவடியில் அன்புடையார் போல, யாவர்க்கும் வலியார் இல்லை - அனைவருக்கும் வலியார் யாரும் இல்லை (என்பது தேற்றம்).

உயிர் என்றது ஈண்டுப் பறவைகளை. அன்பிலார் போல் எளியாரில்லை என்பதற்கும் அன்புடையார் போல் வலியாரில்லை என்பதற்கும் இக்கயவா யொன்றே எடுத்துக் காட்டாயிற் றென்க. (உ௩)

ஆகச் செய்யுள் - உ௨௧௩.

(பா - ம்.) * மேன்மை தக்கவன்.

நாற்பத்தெட்டாவது

நாரைக்கு முத்திகொடுத்த படலம்

[கலி விருத்தம்]

அத்தி தந்த விமான வழகியார்*
பத்தி தந்த பறவைக்கு மந்திர
சித்தி தந்த திறனிது நாரைக்கு
முத்தி தந்த கருணை மொழிகுவேம்.

(இ - ள்.) அத்தி தந்த விமான அழகியார் - எட்டு யானைகளால் தாங்கப் பெற்ற விமானத்தின்கண் எழுந்தருளிய சுந்தர விடங்கப் பெருமானார், பத்தி தந்த பறவைக்கு - அன்பு செய்த கரிக் குருவிக்கு, மந்திர சித்தி தந்த திறன் இது - மந்திர சித்தி அருளிய திருவிளையாடல் இதுவாகும்; நாரைக்கு முத்தி தந்த கருணை மொழிகுவேம் - (இனி) நாரைக்கு முத்தி கொடுத்த திருவிளையாடலைக் கூறுவோம்.

அத்தி - யானை. தந்த - சுமக்கப் பெற்ற. (க)

தேக்கு நீர்வையை நாட்டோரு தென்புலத்
தாக்கு மாடவைப் போன்றுள தவ்வயின்
வீக்கு யாழ்செயும் வண்டுக்கு வீழ்நற
வாக்கு தாமரை வாவியொன் றுள்ளதால்.

(இ - ள்.) தேக்கும் நீர்வையை நாட்டு - நிரம்பிய நீரையுடைய வையையாறு சூழ்ந்த பாண்டி நாட்டின், ஒரு தென் புலத்து - ஒரு சார் தெற்கின்கண், ஆக்கும் மாடவைப்பு ஒன்று உளது - நிருமிக்கப் பெற்ற மாடங்களையுடைய பதி ஒன்று உள்ளது; அவ்வயின் - அப் பதியின்கண், வீக்கும் யாழ் செயும் வண்டுக்கு - நரம்பின் கட்டமைந்த யாழ் இசை போல இசைபாடும் வண்டுகளுக்கு, வீழ் நறவாக்கு தாமரை வாவி ஒன்று உள்ளது - விரும்பும் தேனை வாக்குகின்ற தாமரை மலர்கள் நிறைந்த வாவி ஒன்று உள்ளது.

தேங்கும் என்பது வலித்தலாயிற்று. நற: குறியதன் இறுதிச் சினை கெட உகரம் பெறாது நின்றது. ஆல்: அசை. (உ)

ஆழ மிக்க கயந்தலை யத்தலை
வாழு மீன மனைத்தையும் வாய்ப்பெய்து
சூழ நந்துமுத் தீனுந் துறைக்கணே
தாழ்வ தோர்செய்ய தாண்மட நாரையே.

(பா - ம்.) *விமான மழகியார்.

(இ - ள்.) ஆழம் மிக்க அக்கயந்தலைத் தலை - மிக்க ஆழத்தை யுடைய அவ்வாவியின்கண், வாழும் மீனம் அனைத்தையும் - வாழுகின்ற மீன்கள் அனைத்தையும், வாய்ப் பெய்து - விழுங்கி, நந்து சூழ முத்து ஈனும் துறைக்கணே - சங்குகள் சுற்றிலும் முத்துக்களை ஈனுகின்ற அத்துறையின்கண், ஓர் செய்ய தாள் மடநாரை தாழ்வது - ஒரு சிவந்த கால்களையுடைய இளமை பொருந்திய நாரை தங்கா நின்றது.

கயந்தலை - கயம்; வாவி. தாழ்தல் - தங்குதல். நாரை வாய்ப்பெய்து தாழ்வது என முடிக்க. (௫)

சிறிய நாண்மழை யின்றியச் சேயிதழ்
வெறிய தாமரை யோடை வியன்கரை
இறைகோ ணாரை யிருவினைப் பௌவமும்
வறிய தாகி வறப்ப வறந்ததால்.

(இ - ள்.) சிறிய நாள் மழை இன்றி - சிலநாள் மழை யின்மையால், அச்சேய் இதழ் வெறிய தாமரை ஓடை - அந்தச் சிவந்த இதழ்களையும் மணத்தையுமுடைய தாமரை மலர்கள் நிறைந்த வாவி, வியன்கரை இறைகோள் நாரை - அதன் அகன்ற கரையின்கண் தங்கிய நாரையின், இருவினைப் பௌவமும் வறியதாகி வறப்ப - இரு வினையாகிய கடலும் பயனற்றதாய் வறக்குமாறு, வறந்தது - நீர் வற்றியது.

வெறிய: வெறி என்னும் பண்படியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். நல்வினையும் பிறவிக் கேதுவாகலின் 'இருவினைப் பௌவமும்' என்றார். வறியதாகி வறத்தல் - பயனின்றி யொழிதல். இந்நாரை வேறிடஞ் சென்று முனிவர்கள் கூறும் புராணப் பொருள் கேட்டு அறியாமை நீங்கி இறைவனை வழிபட்டு முத்தி பெறுதற்கு முதலிற் காரணமா யிருந்தது இவ்வோடை. நீர் வற்றியது ஆதலின் 'இருவினைப் பௌவமும் வறப்ப வறந்தது' என்றார். ஓடை வறந்தது என முடிக்க. ஆல்: அசை. (௬)

நுரைசெ றித்தன்ன நோன்சிறை நாரையும்
இரைவி ரும்பியவ் வாவி யிகந்தோரீஇ
விரைய வந்தொரு கானிடை வீழ்ந்ததால்
புரையி லோர்க்கிட னாகுமப் போங்கர்வாய்.

(இ - ள்.) நுரை செறித்தன்ன நோன்சிறை நாரையும் - நுரையினைச் செறித்து வைத்தா லொத்த வலிய சிறைகளை யுடைய அந்நாரையும், இரை விரும்பி - இரை அருந்துதலை விரும்பி, அவ்வாவி இகந்தொரீஇ - அந்த வறண்ட வாவியினின்று நீங்கி, விரைய வந்து ஒரு கானிடை வீழ்ந்தது - விரைந்து வந்து ஒரு காட்டிலே சோர்ந்து விழுந்தது; புரை இலோர்க்கு இடன் ஆகும் அப்போங்கர்வாய் - குற்றமில்லாத முனிவர்களுக்கு இடமாகிய அக்காட்டின்கண்.

செறித்தாலன்ன என்பது செறித்தன்ன என்றுயிற்று. இகத்தல் - கடத்தல். புரை - குற்றம். ஆல் : அசை. (ரு)

முத்த ரான முனிவர் குழாத்தோடுஞ்
சுத்த வானந்த வாரியுட் டோய்ந்துதன்
சித்த மாசு கழீஇச்சிவ மாகிய
சத்தி யத்தவ மாமுனி தங்குமால்.

(இ - ள்.) முத்தரான முனிவர் குழாத்தொடும் - சீவன் முத்தர்களான முனிவர் கூட்டத்துடன், சுத்த ஆனந்த வாரியுள் தோய்ந்து - சிவானந்தக் கடலில் மூழ்கி, தன் சித்தமாசு கழீஇ - தனது மன அழுக்கைப் போக்கி, சிவமாகிய சத்தியத் தவமா முனி தங்கும் - சிவமாந் தன்மை பெற்ற சத்தியன் என்னும் பெயரையுடைய பெரிய தவமுனிவன் தங்கியுள்ளான்.

முத்தர்-சீவன் முத்தி பெற்றவர், கழீஇ : சொல்லிசை யளபெடை. சிவமாதல்-சிவத்துவ விளக்கம் பெறுதல், இதிலும் பின்வரும் மூன்று செய்யுட்களிலும் ஆல் : அசை. (சு)

கூப்பி டெல்லை குணித்துச் சதுரமா
யாப்ப மைந்துசுற் றெங்கும் படித்துறைக்
கோப்ப மைந்து குளிர்சந்தி யாமடங்
காப்ப மைந்தோர் கயந்தலை யுள்ளதால்.

(இ - ள்.) கூப்பிடு எல்லை குணித்துச் சதுரமா யாப்பு அமைந்து - ஒரு கூப்பிடு தூரம் வரையறுத்துச் சதுரமாகக் கட்டப்பட்டு, சுற்று எங்கும் படித்துறைக் கோப்பு அமைந்து - சுற்று முழுதும் படித்துறைக் கோவை அமையப்பெற்று, காப்பு - காவலோடு கூடிய, குளிர் சந்தியா மடம் அமைந்து - தண்ணிய சந்தியா மடம் அமையப்பட்டு, ஓர் கயந்தலை உள்ளது - ஒரு தடாகம் உள்ளது.

குணித்து - வரையறுத்து, சந்தியாமடம் - சந்திக் கடன் செய்தற் குரிய மடம். (எ)

விரைசெய் சண்பகம் பாதிரி வேங்கைதேன்
இரைசெய் வஞ்சி யிலஞ்சி குராமரா
நிரைசெய் கிஞ்சுக நீண்மரு தாதியா
உரைசெய் பன்மர மும்புறத் துள்ளவால்.

(இ - ள்.) விரை செய் சண்பகம் பாதிரி வேங்கை-மணம் வீசுஞ் சண்பகமும் பாதிரியும் வேங்கையும், தேன் இரை செய்வஞ்சி இலஞ்சி குராமரா - வண்டுகள் ஒலித்தலைச் செய்யும் வஞ்சியும் மகிழும் குராவும் மராவும், உரைசெய் கிஞ்சுகம் நீள் மருது ஆதியா - வரிசையாகவுள்ள

முருக்கும் நீண்ட மருதும் முதலாக, உரை செய் பல்மரமும் - சொல்லப்பட்ட பல மரங்களும், புறத்து உள்ள - (அவ்வாவியின்) புறத்தி லுள்ளன.

தேன் - வண்டு. இரை ; முதனிலைத் தொழிற் பெயர். (அ)

அந்த வாவியின் பேரச்சோ தீர்த்த* மேன்
றிந்த ஞால மியம்புவ தாலிரை
உந்த வாவுகோ டுக்க†வெழுந்துமுன்
வந்த நாரை யதன்கரை வைகுமால்.

(இ - ள்.) அந்த வாவியின்பேர் அச்சோ தீர்த்தம் என்று - அந்த ஓடையின் பெயர் அச்சோதீர்த்தமென்று, இந்த ஞாலம் இயம்புவது - இந்நிலவுலகத்தாராற் கூறப்படுவது ; இரை உந்து அவாவு கொடு ஊக்க - உணவில் மீதூர்ந்து எழுந்த விருப்பம் தன்னைப்பற்றிச் செலுத்த, எழுந்துமுன் வந்த நாரை - புறப்பட்டு அவ்வாவியின் முன் வந்த நாரை, அதன் கரை வைகும் - அதன் கரையின்கண் தங்கா நின்றது.

அவாவு, உ : சாரியை. (கூ)

ஆய்ந்த மாதவ ரப்புனி தத்தடந்
தோய்ந்து தோய்ந்தங் கெழுந்தோறுந் தோட்புறஞ்
சாய்ந்த வார்சடைக் கற்றையிற் றத்துமீன்
பாய்ந்து பாய்ந்து புரள்வன பார்த்தரோ.

(இ - ள்.) ஆய்ந்த மாதவர் - உண்மைப் பொருளை ஆராய்ந் துணர்ந்த பெரிய முனிவர், அப்புனிதத்தடம் தோய்ந்து தோய்ந்து - அத்தூய வாவியின்கண் மூழ்கி மூழ்கி, எழுந்தொறும் - மேலே எழுந் தொறும், தோட்புறம் சாய்ந்த வார் சடைக்கற்றையில் - பிடரிலே சாய்ந்து கிடக்கும் நீண்ட சடைத்திரளில், தத்தும் மீன் பாய்ந்து பாய்ந்து புரள்வன பார்த்து - குதிக்கின்ற மீன்கள் பாய்ந்து பாய்ந்து புரளுதலைப் பார்த்து.

அடுக்குகள் பன்மை குறித்தன. அங்கு அரோ, என்பன அசை நிலைகள். (க0)

ஈண்டை யித்தவத் தோர்திரு மேனியைத்
தீண்ட வெத்தவஞ் செய்தன வேகொலென்
றூண்டை மீனமக் காகா வெனவிரை
வேண்டு நாரை வெறுத்தங் கிருந்ததால்.‡

(இ - ள்.) ஈண்டை இத்தவத்தோர் திருமேனியை - இங்கு இந்த முனிவர்கள் திருமேனியை, தீண்ட - தொடுதற்கு, எத்தவம் செய்தனவேகொல் என்று - (இந்த மீன்கள்) எத்துணைத் தவம் புரிந்தனவோ என்று கருதி, ஆண்டைமீன் நமக்கு ஆகா என - (அங்ஙனம் தவம்

(பா - ம்.) *அதோ தீர்த்தம். †கொடுக்க. முந்தவாவு முடுக்க. ‡இறுத்ததால்.

புரிந்து) அங்கு வசிக்கும் மீன்கள் நமக்கு இரையாகத் தகாதன என்று, இரை வேண்டும் நாரை - இரையை விரும்பிவந்த நாரை, வெறுத்து அங்கு இருந்தது - அதனைவெறுத்து அங்கு இருந்தது.

வெறுத்து - உணவை வெறுத்து. ஆல் : அசை. (௧௧)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

தன்னிகர்* தவத்தோர் யாருந் தடம்படிங் தேறி நித்த
மன்னிய கரும முற்றிச் சந்தியா மடத்தில் வைகி
மின்னிய மகுடஞ் சூடி வேந்தனு யுலகங் காத்த
பொன்னியல் சடையான்† கூடற் புராணநூ லோது கின்றார்.

(இ - ள்.) தன் நிகர் தவத்தோர் யாரும் - தனக்குத் தானே ஒப்பாகிய தவத்தினையுடைய முனிவரனைவரும், தடம்படிந்து - வாவியில் நீராடி, ஏறி - கரையேறி, நித்தம் மன்னிய கருமம் முற்றி - நாள் தோறும் நிலைபெற்ற வினைகளைக் குறைவறச் செய்து, சந்தியா மடத்தில் வைகி - சந்தியா மடத்திலே தங்கி, மின்னிய மகுடம் சூடி - விளங்கா நின்ற திருமுடி தரித்து, வேந்தனாய் உலகம் காத்த - சுந்தர பாண்டியனாய் உலகினைப் புரந்தருளிய, பொன் இயல் சடையான் - பொன்போலும் அழகிய சடையையுடைய சோமசுந்தரக் கடவுளின், கூடல் புராணநூல் ஓதுகின்றார் - மதுரை மான்மிய நூலினை ஓதி வருவாராயினர்.

தனக்குத்தானே யொப்பாகிய தவம் என்க. தந்நிகர் என்று பாடமாயின் தம் என்பது தவத்தோரைக் குறிக்கும். (௧௨)

அண்ணலெம் பெருமான் செய்த வருள்விளை யாட்டு மாதிப்
பண்ணவன் சிறப்புங் கூடற் பழம்பதிச் சிறப்புங் தீர்த்தத்
தெண்ணருஞ் சிறப்புஞ் சேர்ந்தோர்க் கெளிவரு மிறைவ னென்னும்
வண்ணமு மெடுத்துக் கூறக் கேட்டங்கு வதியு நாரை.

(இ - ள்.) அண்ணல் எம்பெருமான் செய்த அருள் விளையாட்டும் - இறைவனாகிய எம் பெருமான் செய்தருளிய திருவிளையாடல்களையும், ஆதிப்பண்ணவன் சிறப்பும் - முதற் கடவுளாகிய சொக்கலிங்க மூர்த்தியின் சிறப்பினையும், கூடல் பழம் பதிச் சிறப்பும் - அவனது பழம் பதியாகிய கூடல் என்னும் தலத்தின் சிறப்பினையும், தீர்த்தத்து எண் அருஞ் சிறப்பும் - பொற்றாமரைத் தீர்த்தத்தின் அளவிறந்த சிறப்பினையும், சேர்ந்தோர்க்கு - அம்மூர்த்திதலம் தீர்த்தங்களை அடைந்தோர்க்கு, இறைவன் எளிவரும் என்னும் வண்ணமும் - அவன் எளிதில் வந்து அருள்புரிவான் என்னுந் தன்மையையும், எடுத்துக்கூற - எடுத்துச் சொல்ல, அங்கு வதியும் நாரைகேட்டு - அங்கே தங்கியிருக்கும் நாரை அவற்றைக் கேட்டு. (௧௩)

(பாடம்) * தந்நிகர். † பொன்னியற் சடையான்.

மடம்படு மறிவு நீங்கி வல்வினைப் பாசம் வீசித்
திடம்படு மறிவு கூர்ந்து சிவபரஞ் சோதி பாதத்
திடம்படு மன்பு வாவென் றீர்த்தெழ வெழுந்து நாரை
தடம்படு மாடக் கூடற் றனிநக ரடைந்து மாதோ.

(இ - ள்.) மடம்படும் அறிவு நீங்கி - அறியாமையோடு கூடிய அறிவு நீங்கப் பெற்று, வல்வினைப்பாசம் வீசி - வலிய வினைக்கட்டை அறுத்து, திடம்படும் அறிவு கூர்ந்து - உறுதியாகிய மெய்யுணர்வு பெற்று, சிவபரஞ்சோதி பாதத்து இடம்படும் அன்பு - சிவபரஞ் சுடரின் திருவடிக்கண் பரந்த அன்பு, வா என்று ஈர்த்து எழ - வருவாயாக என்று இழுக்க, நாரை எழுந்து - நாரையானது புறப்பட்டு, தடம்படும் மாடக்கூடல் தனிநகர் அடைந்து - அகன்ற மாடங்கள் நிறைந்த கூடலாகிய ஒப்பற்ற பதியை அடைந்து.

மடம்படும் அறிவு - சிற்றறிவு. திடம்படும் அறிவு - மெய்யுணர்வு. மாது, ஓ : அசைகள். (கச)

வாங்கிய திரைசூழ் பொற்றா மரைபடிந் திமையா வேழந்
தாங்கிய விமான மேய தலைவனைத் தாழ்ந்து சூழ்ந்து
தேங்கிய வருட்க ணோக்கத் தெரிசித்துத்* திருமுன் வைகி
ஓங்கிய கருணை மேனி யுள்ளுறத் தியானஞ் செய்து.

(இ - ள்.) வாங்கிய திரைசூழ் பொற்றாமரை படிந்து - வளைந்த அலைகள் சூழ்ந்த பொற்றாமரையின்கண் நீராடி, இமையாவேழம் தாங்கிய விமானம் மேய - இமையாத யானைகளால் தாங்கப்பட்ட விமானத்தின்கண் எழுந்தருளிய, தலைவனை - சோமசுந்தரக் கடவுளை, தாழ்ந்து சூழ்ந்து - வணங்கி வலம்வந்து, தேங்கிய அருள்கண் நோக்க - அவ்விறைவன் நிறைந்த அருளையுடைய திருக்கண்ணாற் பார்த்தருள, தெரிசித்து - அவனது அருளுருவைத் தரிசனஞ்செய்து, திருமுன்வைகி - திருமுன் இருந்து, கருணை ஓங்கிய மேனி - கருணை நிறைந்த திருமேனியை, உள்ளுறத் தியானம் செய்து - உள்ளே பொருந்தத் தியானித்து.

இறைவன் அருட்கண்ணால் நோக்க அதனாற் றரிசித்தலை,

"கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி"

எனத் திருவாதவூரடிகள் அருளிச்செய்தல் காண்க. (கரு)

இந்நிலை நியம முவைந் தெல்லைஞான் றியன்று பின்னாள்
அந்நிலை யொழுகு நாரை யாடக கமலந் தோய்வான்
வன்னிலை மதில்சூழ் ஞாங்கர் வந்துழிப் பசியால் வெந்து
மின்னிலை வேல்போற் றுள்ளு மீன்கவர்ந் துண்கு மென்னா.

(பா - ம்.) * நோக்கந் தெரிசித்து.

(இ - ள்.) மூவைந்து ஞான்று எல்லை - பதினைந்துநாள் வரை, இந்நிலை நியமம் இயன்று - இவ்வொழுக்கமாகிய கடப்பாட்டிற் பொருந்தி நின்று, பின்னாள் - வழிநாள், அந்நிலை ஒழுகும் நாரை - அங்ஙனம் ஒழுகிய நாரை, ஆடக கமலம் தோய்வான் - பொற்றாமரையின்கண் நீராடுதற் பொருட்டு, வல்நிலை மதில்சூழ் ஞாங்கர் வந்துழி - வலிய நிலையையுடைய சுற்றுமதிலின் மருங்கு வந்தபொழுது, பசியால் வெந்து - பசித்தீயினால் வெந்து கருகுதலால், மின் இலை வேல்போல் துள்ளும்மீன் கவர்ந்து உண்கும் என்னா - ஒளியையுடைய தகட்டு வடிவமான வேற்படையைப் போலத் துள்ளுகின்ற மீன்களைப் பிடித்து உண்பேமென்று.

தோய்வான் : வினையெச்சம். மின் நிலைத்தவேல் என்றுமாம். (௧௬)

சிறிதுளத் துள்ளி நாதன் றிருவருள் வலத்தாற் பின்னர்
அறிவுவந் தச்சோ விந்த வறப்பெருந் தீர்த்தத் துள்ளே
எறியுமீ னருந்த வாசை யெழுந்ததே யெனக்கிப் போதிப்
பிறவியென் றொழிவ தென்னாப் பேரஞ ரடைந்து பின்னும்.

(இ - ள்.) உளத்து சிறிது உள்ளி - உள்ளத்தே சிறிது கருதி, நாதன் திருவருள் வலத்தால் - இறைவன் திருவருள் வலியால், பின்னர் அறிவு வந்து - பின்பு அறிவு வரப்பெற்று, அச்சோ - ஐயோ, இந்த அறப் பெருந் தீர்த்தத்துள்ளே - இந்த அறவடிவாகிய பெரிய தீர்த்தத்தினுள்ளே, எறியும் மீன் அருந்த - தாவுகின்ற மீனை அருந்த, ஆசை எழுந்ததே - எனக்கு இப்போது அவா உண்டாயிற்றே (இங்ஙனம் ஆனால்), இப்பிறவி என்று ஒழிவது என்னா - இந்தக் கொடிய பிறவி எப்பொழுது ஒழியுமோ என்று, பேர் அஞர் அடைந்து - பெருந் துன்பமுற்று, பின்னும் - மீண்டும்.

இங்ஙனம் பசி முதலிய துன்பம் உண்டாயவழிப் பழைய பயிற்சி வயத்தால் ஒரோ வழி நினைவு புலன்கள் மேற்செல்லுதலும், தமது மெய்யுணர்வால் அதனை யொழித்துப் பிறப்பறுத்தலும் மெய்யுணர்ந்தார் கண் நிகழ்வனவென்க. அச்சோ; இரக்கப் பொருளில்வந்த இடைச்சொல். (௧௭)

சுந்தரச் செம்மல் பாதத் துணைமல ரன்பிற் றோய்ந்து
சிந்தைவைத் திருக்கு மெல்லை தேவரு மறையுஞ் செய்யும்
வந்தனைக் கரியா னாரை மனநினை வடிவாய்த் தோன்றி
எந்தமக் கினியாய் வேண்டும் வரமென்கோ லியம்பு கென்றான்.

(இ - ள்.) சுந்தரச் செம்மல் பாதத்துணை மலர் - சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளாகிய இரண்டு தாமரைமலர்களிலும் வைத்த, அன்பில் தோய்ந்து - அன்பிற்படிந்து, சிந்தை வைத்திருக்கும் எல்லை - அந்நிலையில் மனத்தைப் பதியவைத் திருக்கும்போது, தேவரும் மறையும் செய்யும் வந்தனைக்கு அரியான் - தேவர்களும் வேதங்களுஞ் செய்யும் வழிபாட்டுக்கும் எட்டாத அவ்விறைவன், நாரை மனம் நினை வடிவாய்த் தோன்றி - அந்நாரை தன் மனத்து நினைத்த வடிவமாகத் தோன்றி, எந்தமக்கு இனியாய் - எனக்கு இனிய நாரையே, வேண்டும்

வரம் என்கொல் இயம்புக என்றான் - உனக்கு வேண்டிய வரம் யாதோ அதனைக் கூறக்கடவாய் என்று கூறியருளினான்.

இறைவன் தேவரும் மறையும் செய்யும் வந்தனைக்கு அரியனாயும் இந்நாரைக்கு எளிவந்தனன் என வியந்து கூறினர் என்க. நினை - சிந்தித்த; தியானித்த. கொல்: அசை. இயம்புக என்பதன் அகரம் தொக்கது.

(கஅ)

[கலிநிலைத்துறை]

செய்ய கான்மட நாரையுஞ் சென்றுதாழ்ந்
தைய னேயிப் பிறவி யறுத்துநின்
மெய்யர் வாழ்சிவ லோகத்தின் மேவிநான்
உய்ய வேண்டுமோன் றின்னமு முண்டரோ.

(இ - ள்.) செய்யகால் மடநாரையும் - சிவந்த தாளையுடைய அவ் விளநாரையும், சென்று தாழ்ந்து - திருமுன்சென்று வீழ்ந்து வணங்கி, ஐயனே இப்பிறவி அறுத்து - ஐயனே இக்கொடிய பிறவியைப் போக்கி, நான் - அடியேன், நின்மெய்யர் வாழ் சிவலோகத்தின் மேவி - நினது உண்மை அன்பர்கள் வாழுஞ் சிவலோகத்திற் சென்று, உய்யவேண்டும் - பிழைக்க வேண்டும்; இன்னமும் ஒன்று உண்டு - இன்னமும் வேண்டும் வரம் ஒன்று உள்ளது.

''வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை''

என்பது மறையாகலின் முதற்கண் பிறவியறுத்தல் கூறிற்று. அரோ: அசை. (கக)

வள்ள லென்மர புள்ளவு மற்றைய
புள்ளு மிந்தப் புனித மலர்த்தடத்
துள்ள மீனுயி ருண்ணினெக் காலமும்
தள்ளொ ணாத பழிவந்து சாருமால்.

(இ - ள்.) வள்ளல்-கருணைவள்ளலே, என் மரபு உள்ளவும் மற்றைய புள்ளும் - எனது மரபில் உள்ளனவும் மற்றையவுமான பறவைகள், இந்தப் புனித மலர்த்தடத்து உள்ள - இந்த மலர் நிறைந்த தூய வாவியி லுள்ள, மீன் உயிர் உண்ணின் - மீன்களின் உயிரை உண்டால், எக்கால மும் - எஞ்ஞான்றும், தள்ளொணாத பழி வந்து சாரும் - நீக்கமுடியாத பாவம் வந்து (அவற்றைச்) சேரும் (அதலால்.)

மற்றையவுமாகிய புள் என உம்மையை மாறுக. ஆல்: அசை. (உ0)

என்று மித்தட மீனில வாகநீ
நன்று சால்வர நல்கென வெள்ளிமா
மன்று ளானும் வரந்தந்து போயினான்
சென்று நாரை சிவலோகஞ் சேர்ந்ததால்.

(இ - ள்.) என்றும் இத்தடம் மீன் இலவாக - எஞ்ஞான்றும் இவ் வாவியின்கண் மீன்கள் இல்லையாகுமாறு, நன்று சால்வரம் நீ நல்கு என - நன்மை நிறைந்த அவ்வரத்தினை நீ அருளக் கடவை என்று வேண்ட, மாவெள்ளி மன்றுளானும் வரம் தந்து போயினன் - பெரிய வெள்ளியம் பலத்தையுடைய சோமசுந்தரக் கடவுளும் அவ்வரத்தை அருளி மறைந் தனன்; நாரை சிவலோகம் சென்று சேர்ந்தது - நாரை சிவலோகத்தைச் சென்றடைந்தது.

ஆல்: அசை. (உக)

இயங்க ளைந்து மியம்ப விமானமேற்
புயங்க ணான்குமுக் கண்களும் பொற்பவான்
வியங்கொள் பூமழை வெள்ளத்து ளாழ்ந்துபோய்
வயங்கோ ணந்தி கணத்துள் வதிந்ததே.

(இ - ள்.) இயங்கள் ஐந்தும் இயம்ப - தேவ துந்துபிகள் ஐந்தும் ஒலிக்க, விமானமேல் - விமானத்தின் மேலேறி, புயங்கள் நான்கும் முக் கண்களும் பொற்ப - நான்கு தோள்களும் மூன்று கண்களும் அழகு செய்ய, வான் வியம் கொள் பூமழை வெள்ளத்துள் ஆழ்ந்துபோய் - வானுலகோர் பொழிந்த பெருமை பொருந்திய மலர் மழையாலாகிய வெள்ளத்தில் மூழ்கிச்சென்று, வயம் கொள் நந்தி கணத்துள் வதிந்தது - வெற்றியையுடைய நந்திகணங்களுள் ஒன்றாய்த் தங்கியது.

புயங்கள் நான்கும் முக்கண்களும் பொற்ப என்றமையால் சிவ சாரூபம் பெற்றுச்சென்ற தென்க. வியம் - பெருமை. நந்திகணம் - சிவகணம். (உஉ)

அன்று தொட்டின் றளவும்பொற் றாமரை
என்று ரைக்கு மெழின்மல ரோடையிற்
சென்று கைத்துத் திரிகின்ற மீனலால்
ஒன்று மற்றன நீர்வா ழுயிர்களும்.

(இ - ள்.) அன்று தொட்டு இன்று அளவும் - அன்றுமுதல் இந்நாள் காறும், பொற்றாமரை என்று உரைக்கும் - பொற்றாமரை என்று சொல்லப் படும், எழில்மலர் ஓடையில் - அழகிய மலர்களையுடைய அவ்வாவியின்கண், சென்று உகைத்துத் திரிகின்ற மீன் அலால் - ஓடித் துள்ளி விளையாடும் மீன்களையன்றி, நீர்வாழ் உயிர்களும் ஒன்றும் அற்றன - ஏனைய நீர்வாழ் உயிர்களும் சிறிதுமின்றி ஒழிந்தன. (உ௩)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

தன்கிளை யன்றி வேற்றுப் பறவைக டாமுந் தன்போல்
நன்கதி யடைய வேண்டிற் றேகொலிந் நாரை செய்த
அன்பினில் வியப்போ வீச னருளினில்* வியப்போ வன்பர்க்
கின்புரு வான வீச னன்பருக் கெளிதே யைய.†

(பா - ம்.) * ஈசனருளன்பர்க்கு. † எளிதேயை.

(இ - ள்.) தன்கிளை அன்றி - தனது இனமாகிய பறவைகளே யல்லாமல், வேற்றுப் பறவைகள் தாமும் - வேறு இனப் பறவைகளும், தன்போல் - தன்னைப்போல, நன்கதி அடைய வேண்டிற்றே - சிவகதி அடையுமாறு இறைவனிடத்து வரம்வேண்டியதே, இந்நாரை செய்த அன்பினில் வியப்போ - இந்த நாரைபுரிந்த அன்பினில் வியப்புளதோ (அன்றி), ஈசன் அருளினில் வியப்போ - (அதற்கு எளிவந்த) இறைவன் அருளின்கண் வியப்புளதோ, அன்பர்க்கு இன்பு உருவான ஈசன் - அன்பர் கட்கு இன்ப வடிவமாய் விளங்கும் சிவபிரானது அருள், அன்பருக்கு எளிதே - அன்பர்களின் அன்புக்கு எளிதே.

முன் கரிக்குருவி தன் கிளை யெல்லாம் தன்போல் மேன்மை யெய்த வரம் பெற்றது. இந்நாரையோ அவ்வளவன்றி வேற்று இனப் பறவைக ளும் நற்கதியடைய வேண்டிற்று. இதனது அன்பிருந்தவாறென்னே என வியந்தபடி. அன்பினில் வியப்போ அருளினில் வியப்போ என்னும் வினாவுக்கு ஈசனருள் அன்பர் அன்புக் கெளிதே எனச் சமற்காரமாக விடை கூறப்பட்டது.

''முட்டி லன்பர்த மன்பிடுந் தட்டுக்கு முதல்வர்
மட்டு நின்றதட் டருளொடுந் தாழ்வுறும் வழக்கால்''

என்னும் திருத்தொண்டர் புராணச் செய்யுள் இங்கு நோக்கற்பாலது. கொல், ஐய என்பன அசைகள். (உச)

மறக்கு றும்புக் களைகட்டு மண்ணின்மேல்
அறப்பெ ரும்பயி ராக்கி யதன்பயன்
சிறக்க நல்கிட வுண்டு செருக்குவான்
துறக்க மெய்தி யிருந்தான் சுகுணனும்.

(இ - ள்.) சுகுணனும் - சுகுணபாண்டியனும், மறக் குறும்புக்களை கட்டு - பாவமாகிய சிறிய களையைப் பிடுங்கி, மண்ணின்மேல் - நிலவுல கின்மேல், அறப்பெரும் பயிர் ஆக்கி - அறமாகிய பெரிய பயிரை வளர்த்து, அதன் பயன் சிறக்க நல்கிட உண்டு செருக்குவான் - அதன் பயன் மிகவும் கைகூட (அதனை) உண்டு களித்தற் பொருட்டு, துறக்கம் எய்தி இருந்தான் - துறக்க நாட்டினை அடைந்திருந்தான்.

இவ்வுலகிற் புரிந்த அறத்தின் பயனை நுகர்ந்து களித்தற் பொருட்டுத் துறக்க மெய்தினன் என்றார். செருக்குவான்: வினையெச்சம். (உரு)

ஆகச் செய்யுள் - உ௩உக

கூடற் காண்டம்

முற்றிற்று.

குறிப்பு: ஒவ்வொரு செய்யுட் பதவுரை யீற்றிலும் எ - று என விரித்துக்கொள்க.

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

[எண் : பக்களண்]

அகங்கவ்விய களிப்	௫௧
அகமரு டணத்தா	௩௩௭
அகர மாதிமுன்	௨௨
அகனிலம் வெருவுற	௧௬௦
அகில வேதமு	௪௭௯
அங்கண் வெள்ளி	௨௦௮
அங்க மாறொடு	௨௪௮
அங்க யற்கண்	௨௪௯
அஞ்சலிப் போது	௨௨௧
அஞ்சனங் கவுஞ்சங்	௪௩
அஞ்சுகூ விளிச்சேய்த்	௫௪
அடிகணைக்க	௨௪௦
அடியர் பூசனைக்	௨௮௩
அடியவருக் கெளியரிவர்	௧௫௪
அடியவர் குறைவு	௧௯௩
அடியனே னெண்ணுங்	௧௮௨
அடியனேன் முன்	௧௪
அடியார் பொருட்டுப்	௨௦௫
அடியிட்டு நிலங்கிளைத்	௧௭௫
அடியின்னள வகல்பாதல	௪௮
அடுத்தன னரச	௧௬௩
அடுத்து வணங்கி	௨௧௨
அடுத்துவந் தலைக்கு	௧௬௬
அடுத்தெமைத் தழாதி	௨௨௨
அடுபழி யஞ்சா	௧௩௮
அடுப்ப மாசில்	௨௩௫
அட்ட வேங்கையீ	௧௭
அட்டில்வாய் நெருப்பி	௩௨௦
அணங்குநோ யெவர்க்குஞ்	௧௩௩
அணிமா மகிமா	௨௪௨
அண்டத்தா ரமரர்	௨௧௯
அண்டமுக டுரிஞ்சிநிமிர்	௧௯௦
அண்ணலெம் பெருமான்	௫௦௧
அதிக நல்லற	௨௮௭
அத்த கைச்	௧௫௭
அத்த வுலகி	௨௦௭
அத்த ழன்றெரி	௧௫௮
அத்திட மரபின்	௪௬௬
அத்தி தந்த	௪௯௭
அந்தணன் மாற்றந்	௧௧௨
அந்த ஞளனு	௬௩
அந்த நாள	௨௭௧
அந்த மறைக	௨௧௦
அந்த மாட	௨௨௪
அந்தமா வேள்வித்	௪௭
அந்தமொழி கேட்டரச	௧௧௯
அந்த வாவியின்	௫௦௦
அந்த வேத்தவை	௪௪௨
அந்நிலை நகரு	௧௭௯
அந்நெடுஞ் சேனை	௨௦௧
அப்பதிஞ யிரவர்க்கு	௧௦௧
அப்போ திளமூர	௩௫
அமுத வாவியும்	௩௫௧
அமுது செய்தருந்	௨௮௪
அமைச்சர் தங்களை	௨௫
அம்பொற் றவிசிட்	௪௧௪
அம்மனை யருளிச்	௧௫௨
அயனத் தனெனப்	௯௮
அயில்போலுங் கணை	௧௦௪
அரச னல்கிய	௪௦௨
அரசனிங் கில்லை	௩௨௩
அரச ஞுட்கிடை	௪௩௬
அரவிறை யுறை	௧௬௦
அருகாத செல்வத்	௨௮
அருச்சனை யுவந்த	௧௨
அருட்கட லனைய	௧௬௭
அருந்து நல்லமு	௨௮௭
அருமறை யகத்து	௨௭௫
அருளற்றிரு ஞுடலிற்புதை	௪௭
அருளி ஞனையந்	௨௫௯
அலங்கு மாரமோ	௪௪௨
அலம்பு பாற்கடல்	௩௫௧
அலர்பசும் பொலங்	௨௩௬
அலைகட னெடுந்துகி	௪௦௮
அலைசி றந்த	௨௬௬
அவரை நின்கடைக்	௪௮௧
அவரையிங் கழைத்தி	௨௦௧
அவ்வாறவ் வணங்கனையா	௧௦௩
அவ்விடை வரைமேன்	௧௭௯
அழல டைந்தபி	௨௧௧
அழிதகன் குறுகு	௧௩௨
அழிந்தவே தியன்மா	௧௪௧
அழுக்கு மூழ்கிய	௩௭௩
அளவி லாற்றலுந்	௪௮௦

அளிய ருமனத் உருக
அறங்கடை நின்ரு கசகூ
அறத்தவி சிருப்போ ௩உக
அறத்தி னுக்கு உகூச
அறமக ளாக்கமு ச0க
அறவனி யல்லை உஎஎ
அறவுஞ் சிறிய உசஉ
அறவோ ரெல்லாம் உ0கூ
அறைந்தவார் கழற் உ0௩
அற்பு தப்பெரும் கஅக
அனுமதி கொடுதொழு ககூஉ
அனையது கேட்ட ௩உக
அனைய ராயவர் சஎக
அனையர் தங்களுக் கூ௩
அனையவர் போக ௩௩0
அனையா னறத்திற் ௩0ரு
அனைவரு மிரங்க ௩உரு
அன்பன் னடியார்க் ௩கஉ
அன்புக் கிரங்குங் ௩ரு
அன்றிறைவ னருளாலங் ககஎ
அன்று செம்பியர் உரு0
அன்று தொடுத்தத சஎஉ
அன்று தொட்டின் ரு0ரு
அன்று பத்திரன் ௩கூச
அன்று பாதி உகூச
அன்றுபோன் மற்றை ச௩க
அன்னதவித் தொன் ௩கூஎ
அன்னது தெரிந்து கஎக
அன்னநான் மாடத் க0
அன்ன போகமட சஉக
அன்னை யென்னு கஉரு
அன்னையைப் புணர்ந்து கசக
ஆசவாத் தியமுன் கக
ஆசினன் குரவற் கசஎ
ஆடமைத்தடந் ச௩உ
ஆடனூல் வரம்பு அகூ
ஆணைப் பெண்ணுரு கக
ஆண்ட நாயக ௩சக
ஆததா யியுங்கண் கச0
ஆதரம் பெருகப் கஉஉ
ஆத லானெனக் ச0க
ஆதி சுந்தரக் ௩ருஅ
ஆதி நாயகன் சஎஅ
ஆயதோ ரமையந் உஎச
ஆய புண்ணிய சஎச
ஆய பொதியில் உகஉ
ஆய மாதர்பேர் உஅக
ஆயிடை யலகைத் உஎஉ
ஆயி னும்மெனக் சகூச
ஆய்ந்த மாதவ ரு00
ஆய்ந்தவெம் பரிமாத் உ0உ
ஆய்மலர்க் கான சகக
ஆர்த்தார் முடியோன் ௩சக
ஆர்த்தெழு கொண்மூ கூ
ஆவ தாகவென் சகரு
ஆவலித் தழுத ௩உஎ
ஆவவென்னு க௩0
ஆவியங் கேக சகூக
ஆவை யூறுசெய் கஎ0
ஆழ மிக்க சகஎ
ஆறுமதி முடியணிந் கச
ஆற்றல்சா லொருவன் சஅஅ
ஆற்ற வொறுக்குந் ககச
ஆற்றுலே றுண்டகணை ககஅ
ஆனஞ் சாடிய ௩ருகூ
ஆனநா ளொருநா சருரு
ஆனந்த கானந் ௩0
ஆனந்த சித்தர் உஅ
ஆனபொழு தருங்கடிநன் எஎ
ஆனுலு மிப்போ ௩0
ஆனு விரத ௩௩க
ஆனையின் புண்ணீ ருஎ
இகழ்ந்த கூற்றெறி ச00
இக்கரிக் குருவி சககூ
இக்கொலை செய்தான் கக௩
இங்கித நெடுங்கோ ருச
இடிக்கும்புயல் வயிற்றைக் சக
இடையறிந் தெம்மைச் உகஅ
இடையினே டேனைப் சசகூ
இதற்கிது துணிவென் கூச
இத்தகைய சேட்புல உ00
இத்தவ நெறியி க௩எ
இத்தொழி லன்றி ச0ச
இந்தக் கிழியி உக0
இந்த வாட ௩கூ
இந்நிலை நியம ரு0உ
இந்நீர வாய ௩0கூ
இப்படிக் கருங்க உ௩அ
இம்மது ரேசன் சக0
இம்மெனப் பலருங் ௩௩0
இம்மை யிப்பவத் சஎஎ
இயங்க ளைந்து ரு0ரு
இயமான னிந்திரவி ௩௩௩
இரக்கமில் கொடிய உஎ௩
இரங்குமே கலைசிலம் உஉஎ
இரவிதன் மரபின் கஅ௩

இரவிமுன் னிருள ௧௬௮
இருட்ட தும்பு ௨௪௦
இருந்தவன் சிலரை ௪௮௯
இருமை யும்பெறு ௪௩௪
இரும்புசெய் தண்டினை ௪௭௧
இருவரேம் பாட்டுங் ௪௪௦
இருளாய் வெளியாய் ௯௮
இருளைக்கந் தரத்தில் ௪௫௧
இருள்கிடந் தனைய ௫௫
இலகு மேரு ௨௪௩
இலைத்தலைய பழுமரத்தின் ௧௦௩
இல்லார்க்குக் கிழியீடு ௬௮
இல்லினுக் கேகி ௩௨௯
இவளைநீர் சிந்தித் ௨௩௭
இவ்வளை போல்வளை ௨௩௦
இவ்விசை கேட்டு ௩௭௨
இழுக்கி விட்டவிக் ௩௯௨
இழுதொ டுஞ்சுவை ௨௫௨
இளமைச் செவ்விய ௧௨௫
இறக்கும் முடம்பாற் ௩௦௮
இறக்குவித் தவட்கு ௪௪௯
இறைமக னஞ்சா ௧௧௦
இறையரு ளாணை ௪௨௫
இறையருள் வரிசை ௪௨௭
இறைவன் குலபூ ௨௧௫
இற்கண்ணே யிசைவல் ௩௭௧
இற்பூட்டிப் போயினு ௭௩
இனிமதி யெமக்கீ ௪௦௩
இனிவ ரும்பிறப் ௩௬௧
இனைய செய்தியை ௨௫
இனையதோர் பெண்பழியை ௧௦௫
இனையநாட் சிறிதுசெல்ல ௧௦௦
இன்ப மோசிறி ௧௨௬
இன்றிவ ளைக்கொண் ௧௧௧
இன்றுபாண் டியனை ௪௬௧
இன்றேயிங் கிவனுயிரைத் ௧௧௮
இன்றைக்கா யிரநாளைக் ௧௯௧
இன்னண மூன்று ௪௯௧
இன்ன வாறிவை ௪௭௫
இன்னவா றெழுகும் ௪௮௬
இன்ன வேறு ௪௬௦
இன்னன பலவு ௨௫௫
இன்னிசைக் கரசை ௪௨௬
இன்னிசையாழ்ப் பெரும் ௪௧௯
ஈச னடிக்கன் ௪௯௬
ஈச னெனமுத் ௨௪௪
ஈண்டுள்ள வர்க்கெம் ௩௦
ஈண்டை யித்தவத் ௫௦௦
ஈயஞ் செம்பிரும் ௨௮௯
ஈறிலான் செழிய ௧௦௦
உடம்பா றிரண்டிற் ௪௮௩
உடன் றிறைகொள் ௧௭௨
உடைந்து போனவ ௧௭௦
உண்மாசு கழுவுவது ௬௯
உதித்த செங்க ௧௫௯
உத்த மச்சிவ ௨௪௮
உம்மை நல்லற ௪௯௩
உருமுக்குர லொலியிற் ௪௩௯
உருமு வன்ன ௨௬௭
உருமுவீழ்ப் புண்ட ௫௬
உருவி லாளி ௨௩௨
உரைக ளுந்தடு ௩௬௨
உரைத்தவிக் கூத்துக் ௯௨
உலகறி கரியாத் ௧௭௮
உலகெலா மழித்து ௬௦
உவமை யற்றவ ௪௯௨
உழையரால் விடுக்கப் ௩௭௦
உறுகணோ யாற்றநா ௧௩௧
உறுதி யெய்தினை ௨௮௮
உன்னருட் டுணை ௪௩௯
உன்னால் நமக்குப் ௩௧
ஊடிவே றொதுங்கித் ௩௮௯
ஊழிநாள் வெடிக்கு ௫
எங்க ளையகர் ௨௮௭
எங்களுக் கரசே ௪௯௦
எங்குமிப் படியே ௧௯௩
எங்கு ளானெனத் ௩௯௮
எடுத்த விந்தன ௩௭௮
எடுத்தனர் கையிற் ௫௭
எண்ணிய வெண்ணி ௨௫௩
எண்ணி லங்குறை ௨௮௦
எண்ணி லாவுயிர்க் ௪௯௨
எண்ணிறந்த களிப் ௧௮௯
எண்ணும் படியம் ௩௪௦
எதிர்ப்பர்பின் பறிவர் ௧௪௯
எத்த லத்தினு ௧௮௨
எத்த வஞ்செய்தே ௨௮௫
எந்நா டணைவோ ௨௦௬
எமக்கிடு மெமக்கிடு ௨௨௯
எமையா மருச்சித் ௩௪௧
எம்மை யுணர்ந்த ௨௪௫
எய்தி யம்மட ௪௪௧
எய்யுங் கோறொடு ௧௨௯
எல்லி டைப்படும் ௨௧
எல்லியங் கமலச் ௨௯௭
எல்லை காத ௧௫௮

எவரேனு முருத்தி ககO
எவ்வுட லெடுத்தேன் உடுச
எழுதரியமறைச்சிலம்பு எஎ
எழுதுக தெலுங் ககஉ
எழுதுசித் திரம்போன் ஙஅச
எழுந்திறை உசக
எழுவி னேடுதண் ஙகூO
எறியுண்டு செய்த இஅ
எற்றுதெண் டிரை ச
எனவிவர் தமக்கு ஙகடு
எனைத்துயிர்க்கு முறுதியிக எக
என்பு தோன்றியூ ஙஎடு
என்புபூண் டிடுகாட்டிற் எகூ
என்மகன் றன்னை ஙகஎ
என்ற கத்திய ஙகூகூ
என்ற கத்தியன் சஎச
என்றக மகிழ்ச்சி கஙக
என்ற காவல ஙசஅ
என்றசொல் லிடியே ஙOO
என்ற தென்மலை ஙகூடு
என்றமன் னவனுக் ககஙு
என்றவப் போதே கடுக
என்றனள் மறித்த ஙஉக
என்று கூறிய சஎஉ
என்று நாயக சஅக
என்றுபல முறைபழிச் ஙகூ
என்று மித்தட இOச
என்றுமிப் படியே கக
என்று வேத்திரங் ஙடுக
என்ன மதித்தே கOகூ
என்னலுந் தென்னர் கூ
என்ன வக்குரிஇ சகச
என்ன வந்தனை ஙகஎ
என்னவிருந் தலமருவா எக
என்ன வேத்தியின் ஙகூடு
என்னு முகிலைத் ஙஉ
என்னு முன்னித் ககடு
என்னையா ளுடையகூட சடுச
ஏங்கும் பெருமுச் ஙஙஅ
ஏடா ரலங்கல் உOஅ
ஏவன் மைந்தர்போய் சOO
ஏவிய சேனை சகூச
ஏற்றறிக் கிராந்த கூO
ஏன மின்னமுங் சஎகூ
ஏன மென்பற சஎடு
ஏனை வான்றருக். உஙு
ஐங்கனி யமுத கஉ
ஐம்படை மார்பிற் ஙஉடு
ஐம்பு லங்களும் ஙடுஉ
ஐய உள்ளெழுந் உஅகூ
ஐயங்கொண் டணைவா உகஎ
ஐயரியுண் கண்ணாய் சஉங
ஐயர் தந்தபே உஅஉ
ஐயவிக் கொடியோன் கஙஅ
ஐயன் றிருமுன்ன ஙOகூ
ஐயே நானுங் ககஉ
ஒட்டியபல கிளை துவன்றி ககக
ஒண்ணுதலாய் வெண் சஉங
ஒருத்தரா யுண்டிபல உங
ஒருத்தனே யிருவர் கசச
ஒருத்திநா னொருத்திக் ஙகஅ
ஓடி யுன்பொருட் ஙகூகூ
ஓடு கின்றன சஎச
ஓரிடத் தினைய் சஅகூ
கங்கு லிங்கருங் உடுகூ
கங்குல்வாய்க் கண்டவந் சகO
கங்குல்வாய்த் திங்கள் உகூகூ
கங்கை கரந்து உஉடு
கடலுடைந் தென்னப் உஎகூ
கட்லென வருமா உகூஅ
கடியகா லுதைப்ப எ
கடிய கானகம் ஙகூடு
கடைக்கண் சிறிதே ஙங
கட்டவிழ் கடுக்கையர் சக
கண்ட கனவு உகக
கண்ட வடிவாற் உஉஎ
கண்டவர் கடிநகர் ககூக
கண்ட வெல்லையிற் கஅக
கண்டனர் கன்னி சகூச
கண்டனன் பொருநை உOங
கண்டனன் முகிழ்த்தகைக் சகக
கண்டா வளியைக் ஙச
கண்டானந் தனனென்ன கஉO
கண்டிகை மகுட உகூடு
கண்ண கன்புவி அங
கண்ணிறை நுதலோன் ஙகூக
கண்ணுதல் மூர்த்தி அ
கண்ணுதன் மதுரைப் சசகூ
கண்ம லர்ந்தெழு ஙகடு
கதவெங் கரியின் கூகூ
கதிர்கலம்பெய் உஙகூ
கதிர்மதி மிலைந்த ங
கரிந்தநீள் கயன்முள்ளி எஉ
கரியதா மரைக்கண் கூங
கரியு கைத்த உகூக
கரியுரை மொழிந்த சசஅ

கருங்கடலை விசும்	௪௨௦
கருங்கடன் முளைத்த	௫௨
கருந்துழாய் முகிலொரு	௪௧௮
கருப்பு ரங்கமழ்ந்	௩௫௦
கரைமதி யெயிற்றுச்	௧௯௬
கலிக்கு நூபுரச்	௬௫
கலைபயின்று பரிநெடுற்	௧௦௨
கல்லு மாரழ	௨௫௧
கல்லுமா றகன்ற	௨௯௫
கழித்த கங்கு	௨௬௬
கழைகெழு வரையி	௧௦
கள்ளுண்டல் காம	௧௩௪
கறுத்ததை யெவன்கொ	௨௨௦
கற்பின் மிக்கெழு	௪௪௨
கற்புத் திரிந்தார்	௨௨௩
கற்றைச்சா மரைகள்	௧௯௭
கனவட்டத் தடியிடறப்	௩௩௯
கனியிசைக் கிழவன்	௩௭௯
கன்னிநா டுடையான்	௪௪௭
கன்னிநான் மாடக்	௩௧௪
காஞ்சிப் பதிமுன்	௨௬௩
காதுவே லன்ன	௨௨௦
காப்பணி தாளன்	௧௦௫
காப்புச் செய்து	௨௫௬
காமமே கொலைகட்	௧௩௪
காமனுங் காமுற்	௫௩
காய வாணி	௨௬௫
காலிற் கடும்புரவி	௩௩௫
காலொன்று முடுக்கப்	௩௦௧
காவல னவையத்	௧௯௨
காவிரி நாடன்	௨௯௭
கானலந்தேர்	௨௭௨
கிட்டு கின்றதந்	௪௭௬
கிளந்தமாத் திரையின்	௯௧
கிளர்ந்த காலினு	௩௫௫
கிளியு ளார்பொழிற்	௨௮௦
குஞ்சி நாண்மலர்க்	௩௯௪
குடக்கது குணக்க	௧௭௬
குடங்கை நீரும்	௪௪௪
குடங்கையி னெடுங்க	௩௨௪
குண்ட முற்கணின்	௧௭௧
குண்டுநீர் வறந்திட்	௩௮௦
குமரற் கூட்டு	௨௪௧
குரத்தியை நினைத்த	௧௫௦
குரவன்செங் கோல்கைக்	௧௦௧
குருமொழி பயின்று	௪௯௫
குலனு மோர்கிலன்	௯௬
குலிங்கரிவ ரையவிவர்	௧௯௯
குறித்துச் செழியன்	௪௬௭
குறுகு முன்ன	௨௫௧
குற்ற மெத்தனை	௪௩௩
குன்று விருத்திக்	௩௦௭
கூட லம்பதியி	௪௨௮
கூப்பி டெல்லை	௪௯௯
கூர்த்தவெண் கோட்டி	௧௪௨
கூற்றஞ்சிய வருமிக்கரி	௪௮
கூற்றெழு தோற்றம்	௪௬
கேகயர்க ளாலிவர்கள்	௨௦௦
கேட்ட மீனவன்	௮௫
கேட்டின்ப மெய்திக்	௩௧௧
கேட்டு வேந்தன்	௨௫௦
கைதவ னுமிக்	௧௧௪
கைத்தலம் புடைத்து	௪௫௩
கைவரும் பொருளைத்	௪௦௫
கைவினை மறவாள்	௧௪௩
கொங்கரிவ ரையகுரு	௧௯௧
கொடியதோர் பிறைவா	௧௬௪
கொடியனுர்க	௨௩௮
கொடியைநே ரிடையா	௧௫௩
கொடுப்பா ரவரே	௩௦௮
கொடுவந்த வளவன்	௨௭௬
கொண்டலி னலறிச்	௫௪
கொண்டல்கண் படுக்கு	௧௩௨
கொத்தி லங்கு	௨௩௪
கொலைப்பழி கோட்பட்	௧௩௫
கொலையிரும் பழிக்கண்	௧௩௨
கொல்லரிவ ரையவிவர்	௨௦௦
கொல்லிபம் பரிமான்	௨௭௩
கொல்லையுங் குறிஞ்	௪௦௮
கொழுமணிச் சிகர	௧௭௭
கோடாத செங்கோலும்	௨௬௦
கோடி கோடி	௧௨௪
கோடி மாமதிக்	௩௪௯
கோட்டுப் பிறைகால்	௧௭௫
கோதி லாத	௧௫௬
கோமக னினைய	௪௦௬
கோமுறை கோடாக்	௧௦௭
கோளா டரவம	௨௦௭
கோளுடைக் குரவ	௧௪௭
சண்ட வெம்பணிப்	௨௧
சத்த நான்மறைப்	௧௬
சத்திப் படைமேல்	௪௬௯
சந்து சூழ்மல	௨௪௭
சம்பு மதுரைப்	௨௬௧
சவுந்தரசா மந்தனெனத்	௧௮௭
சித்த யோகிகள்	௨௪

சித்தர் வானவர் ௩௯௧
சித்தவெம் பெருமான் ௪௦௫
சித்தியெட்டு ௨௪௨
சிந்தைதோயுமைம் ௩௬௧
சிலபொலங் காசு ௪௦௪
சிலம்பி வாயினு ௮௪
சிலைப யின்ற ௨௯௮
சில்லரித் துடிகோ ௪௫௯
சிவனடியார்க் கன்பிலாச் ௭௦
சிவனை யர்ச்சனை ௩௫௮
சிவிகை யோர்வழி ௩௯௩
சிறந்த மாடநீண் ௨௬௦
சிறிது மூரலும் ௧௮
சிறிதுளத் துள்ளி ௫௦௩
சிறிய நாண்மறை ௪௬௮
சீறிட்ட வேங்கை ௨௬
சீறியா யிரம்ப ௩௦௦
சுகலனென் றெருவே ௪௫௨
சுந்தரச் செம்மல் ௫௦௩
சுந்தரப் புத்தேள் ௨௭௫
சுருதிச் சுரும்பு ௩௪௩
சுருதி யின்புறத் ௧௯௧
சுறவக் கொடியண்ண ௩௪௨
சுற்றுமுன் பின்புறச் ௧௩௧
சூழ்ந்தெழு சேனை ௧௬௪
செக்கரஞ் சடையான் ௨௨௧
செங்க ணரிமான் ௨௧௧
செங்கணே றழக ௪௪௮
செங்கண் மால்விடை ௧௫௯
செங்கதிர்க் கடவுள் ௧௩௭
செங்கோ லனந்த ௧௮௫
செம்பொ னறையைத் ௪௧௫
செய்யகதி ரோன்வழிய ௪௨
செய்ய கான்மட ௫௦௪
செய்யவா யிடையிடையே ௭௫
செய்யேந்து திருப்புத்தூர் ௧௦௨
செல்லார் பொழில் சூழ் ௨௭
செல்லா வுலகத் ௩௨
செல்வநெல் வணிகரெஞ் ௨௨௮
செல்வர் தம்மனைப் ௨௦
செழியன் றனக்கு ௨௯௨
செழுமதிப் பிளவு ௨௩௭
செறிந்த மான்மு ௪௫௭
சென்றவள் கங்கு ௩௨௦
சென்று சேணிடைச் ௧௨௬
சேய வெற்பினை ௧௬
சேனையின் வரவு ௧௬௮
சொரிந்தன சோரி ௪௯௩
சொற்பதங் கடந்த-சோ ௩௪௪
சொற்பதங் கடந்த-வெ ௧௪௦
சோனை மாரி ௨௭௦
தடித்துநிரை புடைபரப் ௪௨௦
தண்டங் கெழுகூற் ௧௭௪
தண்ணீர்க்குப் போயாவி ௧௦௪
தண்மதி வழிவந் ௧௫௩
தந்திப் பொருப்பைத் ௪௯௮
தந்தை தாயிழந் ௪௭௮
தந்தைதாய் மாமன் ௩௨௬
தந்தையுந் தாயு ௪௫௩
தருக்களுஞ் சலியா ௩௮௭
தருநாத ஞறி ௪௫௨
தருமநீர்ப் பந்தரி ௪௧௧
தவம்புரிந் தவமே ௪௫
தவலருஞ் சிறப்பி ௩௨௮
தழைக்கு நீள்கதிர்த் ௩௯
தழையு லாங்கைய ௯௨
தறிந்த தாட ௨௭௦
தறிந்த விந்தனந் ௩௭௪
தனக்குயிர்த் துணையா ௨௦௪
தனபதி மகப்பே ௩௧௫
தனபதி வரவு ௩௨௩
தன்கிளை யன்றி ௫௦௫
தன்பு லங்களுங் ௩௯௨
தன்பெருஞ் செல்வ ௩௧௯
தன்ன டைந்தவத் ௩௬௮
தன்னதிச்சை கொண் ௨௩௬
தன்னதுதா ணிழனின்ற ௧௮௮
தன்னிகர் தவத்தோர் ௫௦௧
தாக்க வேத ௨௪௦
தாதக நிறைந்த ௧௪௯
தாதை தன்றவக் ௯௪
தாதை தன்றன ௧௨௬
தாமநா றிதழி ௩௧௪
தாயிலாப் பிள்ளைமுகந் ௮௦
தாயி லின்ப ௧௨௭
தாயி ழந்துவெம் ௪௮௦
தாயு மொக்கலு ௯௭
தாய்விட்டுப் போனதொரு ௭௮
தாள்சிதைந் தாருஞ் ௪௯௪
திங்கள் வாணுதன் ௩௭௮
திண்டேர் மிசைநின் ௪௯௮
திரண்ட திர்ந்தெ ௨௯௪
திருத்த ராய்மது ௮௨
திருத்தர் பூவன ௨௮௧
திருநகரின் புறம் ௧௧௯
திருப்பணி பலவுஞ் ௩௪௫

திருமகள் வலக்கண் உ
திருமு கத்துவேர் ௩௭௫
திருவாக்கு செவிமடுத்துச் ௧௧௭
நீவிட முருத்துத் ௧௬௪
துங்க மாமுக ௪௭௬
துய்ய நீறணி உ௮௩
துய்ய வெண்பொடி ௧௭
துரந்திடு மளவி ௩0௧
தூங்கிருள் வறுவாய்ச் ௪௬௫
தூங்கு தானையை ௩௬0
தூய ராகியைஞ் ௩௫௪
தெய்வ மங்கல ௬௭
தெருட் டருமறைக ௧௧௫
தெவ்வடு மகிழ்ச்சி ௧௧௧
தெழிபட்டதிக் கயத்தின் ௫0
தெளித லின்றியே ௪௧௩
தெளியாதே யாமிழைத்த ௧௨௧
தெற்கி ருப்பவர் ௧௧
தென்ற னுடனு ௪௪௧
தென்னரே றனையாய் ௪௪0
தென்னவர்கோன் பணித்த ௧௮௮
தென்னவர் பெரும ௩௭௧
தென்னவனுகி ௪௩௮
தென்னவ னுட்கோ ௪௩௬
தென்னவன் மதுரையி ௪௧0
தென்னவன் விடங்கண் ௧௬௬
தென்ன னரச உ௬௧
தென்னன் விக்கிர ௬உ
தேக்கு நீர்வையை ௪௧௭
தேட ருங்கதிர் ௧௬
தேரி ஞேதை உ௬௮
தேரும் பொழுதோ ௩௧
தேவதே வுபதே உ௪௫
தேவ ருந்தவ ௪0௧
தேனார் மொழியார் ௪௪௪
தையன்மா தவக்கொழுந் ௭௪
தொகைமாண்ட தொண்ட ௩0௬
தொடத்தொடப்பொறுக் ௧௪௪
தொடுபழி தொலைவித் ௩௪௭
தொட்ட புற்கி ௪௫௭
தொழுந்தகையன் பருந் ௪௧௧
தொழுந்தொழின் மறந்து ௪௫௩
தொன்மைசால் குருவி ௪௫௫
தோடு வெட்டி உ௪௭
தோய்ந்தி டும்பொழு ௧௮உ
நகைமலரிட் டருச்சித்து ௭௫
நங்கையர் கபாலிக் உ௧௧
நடந்து கொள்ளுநர்க் ௩௭௫
நடுங்கினன் கழிந்த ௧௧
நட்பிடை வஞ்சஞ் ௩உ௬
நதியா டியசெஞ் ௧௬
நத்தனயன் றனக்கரிய ௭௧
நரம்பி னேழிசை உ௮0
நரம்புநனைந் திசைமழுங் ௪உஉ
நரைமுது புலியன் ௩உ௮
நல்லதீர்த் தஞ்சிவ ௧௩0
நல்லாவின் பாலி ௪௮௩
நவம ணிக்கலன் உ௮௫
நளிர்புனன் மதுரை ௪
நனிபொழு தாடம ௪௭௧
நன்றியைக் கொன்று ௧௪௮
நாக நாடுபொன் உ௪
நாட்டினன் குறித்துப் ௬௫
நாதமுறை யோபொது ௧௭௩
நாத வந்தமுங் ௩௧௬
நாதனுங் குரவன் ௧௪௭
நாயி னுங்கடை ௧௫௭
நாயினே னென்னை ௩௬௩
நால்வகைத் தாகுங் ௮௧
நாளையும் வளையிட உ௩௧
நிராமய பரமா ௩௪௪
நிலத்தைக் கிளைத்துப் ௪௬௭
நிலைதளர்ந் துடலந் ௧௬௫
நிலைநிலையாப் பொருளுணர் ௧௫௪
நிறையு மன் உ௪௧
நின்றதா ளெடுத்து ௬௪
நின்றுமுறை யிட்டவரை ௧௭௩
நின்னுன் மொழிந் ௩௮
நீநாளும் பூசித் ௩௧0
நீநில் லெனத்தன் ௪௬௬
நீல வண்ணன் ௩௮௬
நீனிற நீத்த ௫உ
நுண்ண றிவுடைய ௪௬௫
நுரை செறித்தன்ன ௪௧௮
நெடியவன் பிரமன் ௩௬௮
நெடிய னேமுதல் ௩௧௫
நெட்டிலை வடிவாள் ௧௧௭
நெய்தற்போ தனைய ௧௩௯
நெய்யுண் பூங்குழன் ௪௩௪
நெற்றித் தனியோடை ௧௭௪
நென்னல் வாயடி ௩௬௧
நையு நுண் ணிடையி உ௧உ
பஞ்சாதி வேதப் ௩௧0
பஞ்சு தடவுஞ் ௪௧௪
படர்ந்த வார்சடை ௩௫உ
படிமை யாமவதப் ௪௪௧

படியி லோவியப்	௧௨௪
பட்ட மாவொ	௪௫௮
பணைப்பெ ரும்பகு	௧௬௯
பணிநா வசைக்கும்	௧௭௫
பண்கொண்ட வேத	௩௩௨
பண்டருங் கிளவியங்	௨௨௮
பண்டு முனிவர்	௨௨௫
பண்ணியனான் மறை	௧௮௯
பண்ணாத லிசைவண்	௨௧௮
பதைத்தன ரெரியிற்	௪௬௩
பத்தர் யாழிசைக்	௪௦௦
பத்திமை நியமம்	௪௧௨
பத்தி ரன்மனைவி	௪௩௪
பத்துமான் றடந்தேர்	௨௧௪
பந்த யாழ்முதுகு	௪௩௦
பரம னெண்குணன்	௩௬௫
பருங்கை மால்வரைப்	௨௭௧
பருவ நாலிரண்	௬௪
பருவமா யிரங்	௨௩௧
பருவ மாறிய	௨௦
பலர்புகழ் சுந்த	௨௧௪
பல்பொறிப் பகுவாய்ப்	௧௬௩
பல்லிய மொலிக்கு	௧௧௮
பல்லே ருழவின்	௩௦௫
பல்வகைக் கருவி	௨௧௬
பல்வகைச் சாதி	௪௬௨
பழைய தோர்பொல்லம்	௩௭௪
பழைய மந்திரக்	௪௮௨
பழையாய் புதியாய்	௯௭
பழையே மிறையுட்	௪௮௪
பறவை வாயடைத்	௩௭௬
பறித்துக் கடைவாய்	௩௩
பற்றிய பழிக்குத்	௩௩௬
பற்றிய பழியி	௧௮௪
பாடன் மறையுந்	௩௮௫
பாடி வெல்வதே	௪௩௨
பாடினான் பின்பு	௩௯௮
பாடி விக்கெதிரோர்	௪௨௯
பாடுவா ரிருவர்க்	௪௨௪
பாணர்தம் பிரானைக்	௩௮௬
பாயிருட் படலங்	௪௨௬
பாயுடை யவர்விட	௧௫௯
பால் கொண்ட	௧௭௬
பாவத்தை யனைய	௪௫௪
பாவமென வடிவெடுத்த	௧௮௬
பாவமோ டராகந்	௮௬
பிச்சை வேண்டினா	௬௫
பிருங்கி நந்தி	௨௩௫
பிலத்தள வாழ்ந்த	௩௦௨
பிலத்தி லிருந்தோ	௨௪௩
பிள்ளைவெண் டிங்கள்	௨௨௨
பிறங்குங் கோலான்	௧௦௯
பிறந்த மைந்த	௨௩௨
பின்றுணை யாய	௪௭௦
பின்ன ரின்னிசைப்	௪௩௧
பின்னா வருதென்	௨௯
பின்னிடு வளைகளுஞ்	௨௩௦
பின்னுஞ்சில் வரங்க	௫௯
பின்னேய மச்சம்	௨௭
பின்னே முடியோ	௪௧௬
பின்னொரு பகற்போய்ச்	௧௪௫
பீளை கால்விழிக்	௨௨
புங்கவ சீவன்	௧௮௦
புங்கவ னிடுவளை	௨௨௮
புட்கெலா மெளிதா	௪௮௮
புண்டர நுதலுங்	௨௭௪
புண்ணிய மனையிற்	௧௧௫
புதைபடக் கரித்தோல்	௫௫
புத்தரம னாதிய	௪௨
புலரு முன்புன	௩௫௩
புலர்ந்தபின் றாயத்	௩௧௯
புல்லெ னீணிலைக்	௩௭௭
புனிதநீ ராடி	௧௧
புனைந்த வாழ்கடற்	௩௭௭
பூசத் துறையிற்	௩௪௩
பூசியவெண் ணீறுபோய்க்	௭௬
பூதங்க ளல்ல	௧
பூத நாயகன் சுந்தரன்	௩௬௬
பூத நாயகன் பூரண	௩௩௧
பூரிய ரெண்ணி	௧௭௭
பூழியர் பெருமான்	௩௬௯
பெரியதினும் பெரியது	௩௮
பெரியாய் சரணஞ்	௯௬
பெருமித முனக்கேன்	௩௧௬
பெருவிலைக் குண்டலம்	௩௨௧
பேருங் கௌரியென்	௬௩
பைஞ்சுட ரெறிக்	௭
பைத்தலை விடவாய்	௩௮௯
போடியார்க்கு மேனிப்	௩௦௪
பொய்தவ வடிவாய்	௨௨௩
பொய்யறு மனத்தார்	௫௬
பொருநரே றனையா	௧௯௬
பொருந்தமந் தரக்	௩௮௪
பொள்ளென மேக	௫
பொன்றளி ரனையாண்	௪௩௭
பொன்னகரான் காலந்	௬௩

பொன்னது வனைய	௨௯௬	மறிந்த தெண்டிரை	௩௯௬
பொன்னி நாடவன்	௮௪	மறுக்குஞ் செயனீத்து	௪௮௫
பொன்னி நாடன்	௨௬௨	மறுத்த வுண்டியன்	௨௫௮
பொன்னின் றளிகை	௪௧௩	மறைக ளாகமம்	௩௫௯
பொன்னெடுந் தேரி	௨௯௩	மறைக ளின்சத	௩௫௭
பொன்னொடு முத்தங்	௩௪0	மறைக்குரை செய்த	௪0௭
போதுக மெழுக	௪௬௨	மறைந்து போயின	௨௯0
போதுளான் பரமன்	௩௮௮	மறைப்பொருளுரைத்	௧௮௪
போயின வணிகர்	௨௩௧	மறையவனே யின்னுமொரு	௧௨௧
போர்கெழு களங்கண்	௧௫௧	மறையாதி கலைபலவு	௩௩௩
போற்றி மன்னநம்	௨௫௭	மறையி னுற்றினுற்	௩௫௬
பௌவ மூழ்கு	௨௩௬	மறையே நமது	௨0௯
மங்கல மாட	௩௨௭	மறையோர்கள் பின்னும்	௩௩௯
மங்கை பாகரை	௨௮௯	மற்றது கேட்டுக்	௪௯0
மடக்கு பல்கலைப்	௩௯௩	மற்றவர் தமைத்துரீஇ	௪௧௧
மடங்கலே றென்றும்	௧௪௯	மற்றவற் கருநிதி	௪௧0
மடமயி லனையா	௨௧௮	மற்ற வன்குடி	௬௬
மடம்படு மறிவு	௫0௨	மற்றிது முனமத	௧௬௧
மடலி னீடு	௨௭0	மற்றிவன் குமரன்	௨௯௪
மடுத்த வாளி	௪௫௮	மற்றை வாயில்கண்	௨௫௬
மட்ட லம்பிய	௨௫௮	மற்றை வைகலவ்	௪௩௩
மட்ட லம்பு	௨௩௧	மன்ற லந்தெ	௨௬௭
மட்டவிழ் தாரான்	௧0௭	மன்றலந் தெரியன்	௩௬௯
மட்டித்த கலவைக்	௧௫௨	மன்ருடு மணியே	௧௧௬
மட்டுற்ற தாரான்	௩௪	மன்னர் மன்னனுந்	௪௭௩
மணமகனே பிணமகனுய்	௧௨0	மன்னவர் வலிக	௪௫0
மண்டொ டுங்கரு	௧௨௭	மன்னவ னிராச	௪௮௭
மண்ணிற் குதித்து	௪௬௯	மன்னவன் முடிமேற்	௪௪
மண்ணினை வளர்க்	௨௫௫	மன்னன்மு னமைச்சர்	௨௬
மண்பி ளந்து	௨௭௧	மன்னன் ருனு	௧௧௩
மண்புக ழ்ந்நகர்	௪0௯	மன்னன் ருனென்	௪௧௫
மதங்க விழ்க்குமால்	௩௫௯	மன்னு மறையின்	௨௨௬
மதியை நேர்வ	௪௫௯	மாசுண்ட தெய்வ	௩௩௮
மதுகைவா ளமர்க்கு	௧௪௮	மாடமலி மாளிகையி	௧௭௧
மத்தக் களிற்ருன்	௩௫	மாடுள பொதும்பர்	௪௬
மந்தி றச்சி	௨௩௬	மாண்ட கேள்விசான்	௪௮௧
மயலறக் கற்புக்	௪0௬	மாண்டவ ளைத்தன்	௧0௬
மரும கன்ற	௨௬௩	மாதங்கந் தடிந்தட்	௫௮
மருவிதழி யானுறையும்	௪௨	மாத ரிந்நெறி	௨௮௨
மருவிய வாய	௪௩௭	மாதர் நகையாய்	௪௨௨
மழவிடை யுடையான்	௨௯௧	மாதுல ராகி	௩௨௪
மழவுருநீத் தடலேற்றின்	௮௧	மாமாரி யிடைநனைந்து	௪௨௧
மள்ள ரோசை	௪௬0	மாவழங் கிடங்க	௪௫௫
மறக்கு ரும்புச்	௫0௬	மாழாந்து செய்யும்	௩௬௪
மறத்தாம வேலான்	௪௮௫	மாழை மாண்மட	௩௪௮
மறத்துறை வேட்ட	௪௫௬	மாறுகொள்ʼ வழக்குத்	௩௧௮
மறப்பெரும் படிவங்	௧௩௬	மானம் பொருது	௪௬௮
மறலிவரு மாறென	௧௭௨	மானவாள் விஞ்சை	௧௪௩

மிடைந்தேறு நேரிப்	௩௪௨	வணங்குறு மருங்கிற்	௪௩௮
மின்ப ளிக்கதிர்	௩0௪	வண்டறை கொன்றை	௩௭௯
மின்ன லங்கல்	௨௩௪	வந்தமண வாட்டிசிவ	௯௮
மின்னவிருஞ் செம்பொன்	௪௧௨	வந்த வேழிசைத்	௩௯௭
மின்னனை யாடன்	௧௧௯	வந்தி றைஞ்சிய	௪௮௨
மின்னனை யார்பூங்	௨௧௩	வந்து நம்மை	௨௫௮
மின்னார் சடையான்	௩௧௨	வந்துநான் மாட	௯
மின்னியல் சடையி	௪௫0	வந்து பொன்னனை	௨௮௪
மின்னுமா மேக	௪௨௫	வந்து மதுரைப்	௪௧௭
மீண்டுநின் னயோத்தி	௧௮௩	வந்துவா னகடு	௩௧௭
மீனவனு மாநகருன்	௧௭௩	வம்புளாய் மலர்ந்த	௫௯
மீனவன் காண	௧௧௪	வயிறது குழிய	௩௮௨
மீனவன் மதுரை	௩0௨	வரகுண னதுகேட்	௩௪௫
மீனவன் வரிசை	௩௭0	வரகு ணன்கதி	௪௨௮
முகையுடைந் தமிழ்ந்த	௩௯௧	வரத னாகி	௪௪௫
முக்க ணாயகன் பொருட்	௨௫௯	வரதன் மீனவன்	௨௭௯
முக்க ணாயகன் முப்பு	௩௪௧	வரந்த வாதன	௩௯௧
முடங்கன்மதி செஞ்சடை	௪௩	வரம்பின் மாதரார்	௩௫௧
முண்ட காசனன்	௩௫௩	வரவு நேர்ந்தழைப்	௩௭௯
முத்த மாலிகை	௩௯	வரிக்குருகிப் பத்திரற்குப்	௪௮௭
முத்த ராமுகிழ்	௨௮௪	வருதிநின் னாமஞ்	௧௩௯
முத்த ரான	௪௧௧	வருதி யாலெனப்	௩௪௯
முந்திக் குறையா	௨௧௩	வருத்தமின் மனோபா	௮௮
முந்தி யாழிடந்	௪௩௫	வருத்த னாகிவந்	௩௭௩
மும்மைப் புவனங்	௨௧0	வருவானுண் ணீர்வேட்டு	௧0௨
முரசதி ரனிக	௨0௧	வலியை யென்பதென்	௪௯௪
முரலளி புறவிதழ்	௩௨௨	வல்லாரில் வல்லே	௩௨
முழுது ணர்ந்த	௩௭	வல்லி யந்து	௪௫௮
முறையென விமையோர்	௪௫௧	வல்வேடர்க் கதிபதியாய்	௧௮௭
முற்பக லிழைத்த	௧௩௫	வழிவழி யடிமைசெய்	௧௯௨
முற்படு தாசி	௪௯௩	வளர்ந்து பேதை	௨௨௪
முனியொடு குறுகிச்	௧௮0	வளைக ளிடுவா	௨௨௯
முனிவருந் தவத்த	௩௮௮	வள்ள லன்புன்	௨௫௧
முன்புடைய நாயகனை	௪௧௮	வள்ள லென்மர	௫0௪
முன்னவன் மதுரை	௪0௩	வள்ளல் குலபூ	௨0௫
முன்னிடு வளையெலாங்	௨௨௧	வள்ளறன் றம்பி	௨௭௭
மெய்து றந்த	௨௯௫	வறந்த வாறுக	௨௫௩
மொக்க கருங்கங்குல்	௧௨௮	வன்றரை கிழிய	௩௯0
மைப்போதகம் பொறை	௫0	வன்றிறல் வருணன்	௧௫
மையணி மிடற்றி	௩௭௨	வன்றிறன் மன்னவர்	௪௭௨
மைய னாக	௧௨௯	வாங்கிய திருமுக	௪0௮
யாமினி யிந்த	௩00	வாங்கிய திரைசூழ்	௫0௨
யாவரு மொருங்கு	௪௪	வாங்கின புரிசை	௧௭௮
யான றிந்தசா	௩௧௨	வாங்கினன் றிருமுக	௪௧௨
வடியைய நேர்விழி	௨௮௯	வாடிய முளரிபோன்	௩௨௨
வடிவுபோ னுள்ள	௪௪	வாயிலு ளார்த	௧0௯
வடுப்படு பிறவிப்	௧௩	வார்கெழு கழற்கா	௧௧௭
வட்ட வார்சடைக்	௧௭	வாரிய வுலகின்	௩௯0

வாள்வினைக் குரவ	௧௪௩
வானுடர்க் கவியுணவின்	௧௯௦
வானுறு சூடி	௩௧௧
விக்கிரம பாண்டியன்	௪௧
விசையொடு தானந்	௩௨௨
விடம்பொதி காட்டம்	௪௫
விடனல்கு சூலப்	௩௧௦
விடுக்கும் வாளி	௨௬௯
விடுத்திடு முயிர்ப்	௧௭௧
விடைக்கடவுள் பின்	௪௨௧
விடையவ னீறு	௪௮௮
விடையினை யால	௮
விட்டார்வலி கெட	௫௧
விண்டக மலர்த்தா	௯௪
விண்டிடாத் தேசி	௮௮
விண்ணுறு சூடும்	௩௦௮
விண்ணி லிரவி	௨௪௪
விரைசார் மலரோ	௩௮௫
விரைசெய் சண்பகம்	௪௯௯
விரைசெய்தா ரவன்யா	௧௫௨
விரைசெய் மாலைக்	௧௨௩
விழியா யிரத்தோன்	௩௩௯
விளைகள்வாய் வீழ்ந்த	௯௫
விளைநில னடிமை	௩௧௬
விளைமத வூற்று	௨௭௨
விள்ளுங் கமலச்	௨௧௭
விறனவில் பேட்டை	௪௭௧
வீங்கிய தடந்தோ	௫௩
வீசி மாத்திரைக்	௨௧
வீணைகை வழுக்கிச்	௩௮௭
வீணை தோளிட	௪௪௩
வீணை வாங்கினள்	௪௩௬
வெங்கட் பழியின்	௩௬௪
வெந்நிடு வார்போற்	௧௫௦
வெம்மைசெய் கதிர்	௨௫௩
வெருவரு வேழ	௧௩௩
வெருவுங் காய்சின	௧௨௩
வெவ்வியமும் மதயானை	௧௮௬
வெவ்வி லங்கினும்	௪௭௯
வெவ்விற கெறிந்து	௩௮௦
வெள்ள நோக்கி	௨௫௨
வெள்ளிய நீறு	௬
வெள்ளைகா குளிகை	௩௮௩
வென்றி மீனவன்	௪௩௫
வேட்டஞ்செய் காத	௩௩௪
வேதகந் தரத்து	௧௪௨
வேத கிண்கிணி	௧௮
வேத நாயகன்	௧௨௩
வேத நூறெளி	௨௩
வேதந் தனது	௨௧௫
வேதந் தானே	௨௦௯
வேத மசைக்குங்	௨௧௬
வேதமா கமம்பு	௩௪௭
வேதமுதற் கலை	௧௩
வேதிய னிற்குந்	௧௧௧
வேதியாய் வேத	௩௭
வேந்தர்கள் சிங்கம்	௧௧௫
வேந்தர் சேகரன்	௩௬௩
வேந்தன் மீனவன்	௮௨
வேரியங் குவளை	௩௧௯
வேற்ரோர் வைகல்	௧௨௭
வேனில் வேளென	௪௭௩
வேனிற் கிழவோனில்	௪௭௦
வைகலுங் கொடுப்போர்	௪௦௫
வைத்த வேறுவே	௨௮௯
வையா கரணர்க	௨௧௩
வையை நாடலும்	௨௫௭

கழக வெளியீடு, கங்க

உ

திருச்சிற்றம்பலம்

பரஞ்சோதிமுனிவர்

அருளிச்செய்த

திருவிளையாடற் புராணம்

திருவாலவாய்க் காண்டம்

நாவலர் பண்டித

திரு ந மு வேங்கடசாமி நாட்டாரவர்கள்

உரையுடன்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி - 6. சென்னை - 1.
1965

நடுக்காவேரி முத்துச்சாமி வேங்கடசாமி நாட்டார் (1884 - 1944)

Ed 1 July 1931

Reprint : Dec 1965

Q23 : 38MxJ50, 1
K5.3

TIRUVILAIYADARP PURANAM
Tiruvaalavaaik Kaandam

Appar Achakam, Madras-1.

உள்ளுறை

திருவாலவாயான படலம்	....	க
சுந்தரப் பேரம்பெய்த படலம்	....	க௪
சங்கப்பலகை தந்த படலம்	....	௩௫
தருமிக்குப் பொற்கிழி யளித்த படலம்	...	௫௨
கீரனைக் கரையேற்றிய படலம்	...	க0௪
கீரனுக்கு இலக்கண முபதேசித்த படலம்	....	க௨க
சங்கத்தார் கலகந் தீர்த்த படலம்	...	க௩௬
இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்	...	க௪௩
வலைவீசின படலம்	....	க௬௫
வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்	...	க௭௫
நரி பரியாக்கிய படலம்	....	௨௪[illegible]
பரி நரியாக்கி வையை யழைத்த படலம்	...	௩0௮
மண் சுமந்த படலம்	...	௩௪0
பாண்டியன் சுரந்தீர்த்த படலம்	....	௪0௨
சமணரைக் கழுவேற்றிய படலம்	...	௪௪க
வன்னியுங் கிணறும் இலிங்கமு மழைத்த படலம்	....	௪௮0
அருச்சனைப் படலம்	...	௫கக
செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை	...	௫௪௭




* தி. ப. க]


திருவாலவாயானது




தி. ப. கச] சுந்தரப் பேரம்பெய்தது



சங்கப் பலகை தந்தது




தருமிக்குப் பொற்கிழியளித்தது



கீரனைக் கரையேற்றியது



கீரனுக்கு இலக்கணமுபதேசித்தது




சங்கத்தார் கலகந் தீர்த்தது




இடைக்காடன் பிணக்குத் தீர்த்தது



தி. ப. கஸ்தூரி] வலை வீசினது



வாதவூரடிகளுக்கு உபதேசித்தது




தி. ப. உசள]


நரி பரியாக்கியது



தி. ப. ௯0அ]　　பரி நரியாக்கியது



மண் சுமந்தது



பாண்டியன் சுரந்தீர்த்தது



சமணரைக் கழுவேற்றியது

[தி. ப. சசக]



தி. ப. ௪௧௦] வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்தது

உ

திருச்சிற்றம்பலம்

திருவிளையாடற் புராணம்

மூலமும் உரையும்

௩. திருவாலவாய்க் காண்டம்

நாற்பத்தொன்பதாவது
திருவாலவாயான படலம்

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

பாயுடையார் விடுத்தபழி யழல்வழுதி
யுடல்குளிப்பப் பதிக மோதும்
சேயுடையா ரணந்திளைக்குஞ் செவியுடையா
ரளவிறந்த திசைக ளெட்டுந்
தோயுடையார் பொன்னிதழித் தொடையுடையார்
விடவரவஞ் சுற்று மால
வாயுடையார் புகழ்பாடப் பெறுவேமேல்
வேண்டுவதிம் மனித யாக்கை.

(இதன் பொருள்.) பாய் உடையார் விடுத்த பழி அழல் - பாயை ஆடையாதவுடைய அமணர் (தமது திருமடத்தின்கண்) வைத்த பழிக்கு ஏதுவாகிய நெருப்பு, வழுதி உடல் குளிப்ப - பாண்டியனுடலிற் சென்று பற்றுமாறு, பதிகம் ஓதும் - திருப்பதிகம் பாடியருளும், சேய் உடை ஆரணம் திளைக்கும் செவியுடையார் - ஆளுடைய பிள்ளையாரின் தமிழ் மறையை இடையறாது நுகருஞ் செவியினையுடையாரும், அளவு இறந்த திசைகள் எட்டும் தோய் உடையார் - எல்லையின்றிப் பரந்த எட்டுத் திக்குகளையும் பொருந்திய ஆடையாக வுடையாரும், பொன் இதழித்தொடை உடையார் - பொன் போன்ற கொன்றை மாலையை யுடையாரும், விட அரவம் சுற்றும் ஆலவாய் உடையார் - நஞ்சினையுடைய பாம்பினாற் கோலி வரையறுக்கப்பட்ட திருவாலவாயினை யுடையாருமாகிய சோமசுந்தரக் கடவுளின், புகழ் பாடப் பெறுவேமேல் - புகழைப் பாடும் பேறு பெறுவேமானால், இம் மனித யாக்கை வேண்டுவது - இந்த மனித்தவுடம்பு வேண்டுவதே யாகும்.

அழல் வழுதியுடல் குளிப்பப் பதிகமோதிய வரலாற்றை மேற் பாண்டியன் சுரந்தீர்த்த படலத்திற் காண்க. சேய் - பிள்ளையார். சேயுடை யாரணம் என்புழி ஆறுவது செய்யுட்கிழமைக்கண் வந்தது ; கபிலரது பாட்டு என்புழிப்போல. திசைகள் எட்டும் தோயுடையார் - திகம்பரர்.

> " வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
> தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
> சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
> வீழ்த்த வாவினை யேனெடுங் காலமே "

> " குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
> பனித்தசடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
> இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
> மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே "

என்னும் திருநாவுக்கரசர் திருப்பாட்டுக்கள் இங்கே சிந்திக்கற்பாலன. (௨)

> வேதனெடு மாலாதி விண்ணுடர்
> மண்ணுடர் விரத யோகர்
> மாதவர்யா வருங்காண மணிமுறுவல்
> சிறிதரும்பி மாடக் கூடல்
> நாதனிரு திருக்கரந்தோட் டம்மியின்மேல்
> வைத்தகய னாட்டச் செல்வி
> பாதமல ரேழுபிறவிக் கடனீந்தும்
> புணையென்பர் பற்றி லாதோர்.

(இ-ள்.) வேதன் நெடுமால் ஆதி விண்ணுடர் - பிரமனும் நெடியனாகிய திருமாலும் முதலிய தேவர்களும், மண்ணுடர் - புவியிலுள்ளாரும், விரதயோகர் மாதவர் யாவரும் - அரிய நோன்பினை மேற்கொண்ட சிவயோகியரும் பெரிய தவத்தினையுடைய முனிவரும் ஆகிய அனைவரும், காண - காணும்படி, மாடக்கூடல் நாதன் - நான்மாடக்கூடலின் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுள், மணிமுறுவல் சிறிது அரும்பி - அழகிய புன்னகை முகிழ்த்து, இரு திருக்கரம் தொட்டு - இரண்டு திருக்கரங்களாலும் தீண்டி, அம்மியின்மேல் வைத்த - அம்மியின்மேல் வைத்தருளப்பெற்ற, கயல்நாட்டச் செல்வி பாதமலர் - அங்கயற்கண்ணம்மையின் திருவடி மலர்களை, பற்று இலாதோர் - இருவகைப் பற்றும் அற்ற பெரியோர், எழுபிறவிக் கடல் நீந்தும் புணை என்பர் - எழுவகைப்பட்ட பிறவியாகிய கடலைக் கடப்பதற்குரிய நாவாய் என்று கூறுவார்.

அம்மியின்மேல் வைத்தமை முன் திருமணப்படலத்திற் காண்க. வைத்த பாதமலர் என்க. பிறவி எழாவன தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. பிறவி காரண காரியத் தொடர்ச்சியாய் அநாதியாக வந்துகொண்டிருத்தலின் அளவிட முடியாததென்பார், 'கடல்' என்றார். பற்றிலாதோர் - எவ்வகைப் பற்றும் அற்று இறைவன் திருவடியையே பற்றி நின்றோர்.

"முற்று வேண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்று நின்றாரைப் பற்று பாவமே"

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்"

என்னும் மறைமொழிகள் இங்கே கருதற் பாலன. (௨)

[அடி வேறு]

ஓலவாய் மறைக டேறு வொருவன்றன் னுலகந் தன்னைச்
சேலவா யுழலு நாரைக் கருளிய செயலீ தம்ம
நீலவாய் மணிசேர் கண்ட னெடியநான் மாடக் கூடல்
ஆலவா யாகச் செய்த வருட்டிற மெடுத்துச் சொல்வாம்.

(இ-ள்.) வாய் ஓலம் மறைகள் தேறு ஒருவன் - வாய்திறந்து ஓலமிடும் மறைகளும் தெளியாத இறைவன், தன் உலகம் தன்னை - தனது சிவலோகத்தை, சேல் அவாய் உழலும் நாரைக்கு அருளிய செயல் ஈது - சேல்மீனை விரும்பிச் சுழன்று திரியும் நாரைக்கு அருளிய திருவிளையாடல் இதுவாகும்; நீலம் வாய்மணி நேர் கண்டன் - நீலநிறம் வாய்ந்த மணியினை ஒத்த திருமிடற்றையுடைய அவ்விறைவன், நெடிய நான்மாடக்கூடல் - நீண்ட நான்மாடக்கூடலை, ஆலவாயாகச் செய்த அருள் திறம் - திருவாலவாயாகச் செய்த திருவிளையாடலை, எடுத்துச் சொல்வாம் - (இனி) எடுத்துக் கூறுவாம்.

ஓலமிடுதல் - முறையிடுதல்;

"அருமறை முறையிட்டின்னு மறிவதற் கரியான்"

எனவும்,

"மயக்கறு மறையோ லிட்டு மாலயன் றேட நின்றான்"

எனவும் திருத்தொண்டர் புராணம் கூறுதல் காண்க. ஓலம், நீலம் என்பன ஈறுகெட்டன. அம்ம: இடைச்சொல். (௩)

சித்திர மேரு வென்ற திரண்டதோட் சுகுணன் பின்பு
சித்திர விரதன் சித்ர பூடணன் றிண்டேர் வல்ல
சித்திர துவசன் வென்றிச் சித்திர வருமன் வன்றோட்
சித்திர சேனன் சீர்சால் சித்ரவிக் கிரம னென்போன்.

(இ-ள்.) சித்திரம் மேரு வென்ற திரண்ட தோள் சுகுணன் பின்பு - அழகிய மேருமலையை வென்ற திரண்ட தோள்களையுடைய சுகுண பாண்டியனுக்குப் பின், சித்திர விரதன் - சித்திர விரதனும், சித்திர பூடணன் - சித்திரபூடணனும், திண்தேர் வல்ல சித்திரத் துவசன் - வலிய தேர்ப்போரில் வல்ல சித்திரத்துவசனும், வென்றிச் சித்திர வருமன் - வெற்றி பொருந்திய சித்திரவருமனும், வன்தோள் சித்திர சேனன் - வலிய தோள்களை உடைய சித்திரசேனனும், சீர்சால் சித்ர விக்கிரமன் என்போன் - சிறப்பு அமைந்த சித்திரவிக்கிரமன் எனப்படுவானும்.

சித்ர என்பது தமிழியற்கு மாறுயினும் சீர்நோக்கித் திரியாது நின்றது; பின் வரும் பராக்ரம என்பதும் அது. (௮)

மணிகெழு தேரி ராச மார்த்தாண்ட னிராச சூடா
மணியணி முடியி ராச சார்த்தூல வழுதி சிந்தா
மணிநிகர் துவிச ராச குலோத்தமன் மடங்கா வென்றி
மணிதிகழ் பொலம்பூ ணாயோ தனப்பிர வீணன் மன்னோ.

(இ - ள்) மணிகெழு தேர் இராசமார்த்தாண்டன் - மணிகள் பதித்த தேரினையுடைய இராசமார்த்தாண்டனும், இராச சூடாமணி - இராச சூடாமணியும், அணி முடி இராசசார்த்தூலவழுதி - அழகிய முடியினையுடைய இராசசார்த்தூல பாண்டியனும், சிந்தாமணி நிகர் துவிச ராச குலோத்தமன் - சிந்தாமணி போன்ற கொடையினையுடைய துவிச ராச குலோத்தமனும், மடங்காவென்றி மணி திகழ் பொலம் பூண் ஆயோதனப் பிரவீணன் - மடங்காத வெற்றியையும் மணிகள் பதிக்கப்பட்டு விளங்கும் பொன்னணிகளையு முடைய ஆயோதனப் பிரவீணனும்.

சிந்தாமணி - சிந்தித்தவற்றைக் கொடுக்கும் ஒரு தெய்வமணி. ஆயோதனம் - போர். பிரவீணன் - வல்லன். மன்னும் ஓவும் அசை நிலை. (௯)

இயம்பருந் திறலி ராச குஞ்சரன் பரவி ராச
பயங்கரன் கைக்கும் பைந்தா ருக்கிர சேனன் பாரைச்
சயங்கெழு தோண்மே லேந்து சத்துருஞ் சயன்வீ மத்தேர்
வயங்கெழு மன்னன் வீம பராக்ரம வழுதி மாதோ.

(இ - ள்.) இயம்பரும் திறல் இராச குஞ்சரன் - சொல்லுதற்கரிய வெற்றியையுடைய இராசகுஞ்சரனும், பரவிராச பயங்கரன் - பரவி ராச பயங்கரனும், கைக்கும் பைந்தார் உக்கிரசேனன் - கசக்கும் பசிய வேப்ப மலர் மாலையை யணிந்த உக்கிரசேனனும், பாரை சயம் கெழு தோள் மேல் ஏந்து சத்துருஞ்சயன் - புவியை வெற்றி பொருந்திய தோளின்கண் தாங்கிய சத்துருஞ்சயனும், வயம் கெழு வீமத்தேர் மன்னன் - வெற்றிபொருந்திய வீமரதன் என்னும் வேந்தனும், வீம பராக்ரமவழுதி - வீமபராக்கிரம பாண்டியனும்.

மாது, ஓ: அசைகள். (௰)

பெய்வளை விந்தை சேர்ந்த பிரதாப மார்த்தாண் டப்பேர்த்
தெவ்வடு சிலையான் றேர்விக் கிரமகஞ் சுகன்றே ரார்போர்
வெளவிய சமர கோலா கலனெனும் வாகை வேலான்
அவ்விய மவித்த சிந்தை யதுலவிக் கிரம னென்பான்.

(இ - ள்.) பெய்வளை விந்தைசேர்ந்த பிரதாப மார்த்தாண்டப் பேர் - இடப்பட்ட வளையலையுடைய வீரமகள் அணைந்த பிரதாப மார்த்தாண்டனென்னும் பெயரினையுடைய, தெவ் அடுசிலையான் - பகைவரைக் கொல்லும் வில்லினையுடையானும், தேர்விக்கிரம கஞ்சுகன் - தேரையுடைய விக்கிரமகஞ்சுகனும், தேரார் போர் வெளவிய - பகைவர் போர்வலியைக் கவர்ந்த, சமரகோலாகலன் எனும் வாகைவேலான் -

சமர கோலாகலன் என்னும் வெற்றி வேலையுடையானும், அவ்வியம் அவித்த சிந்தை அதுல விக்கிரமன் என்பான் - பொறாமையை ஒழித்த உள்ளத்தை யுடைய அதுல விக்கிரமன் எனப்படுவானும்.

தேரார்-பகைவர். (எ)

எழில்புனை யதுல கீர்த்தி யெனவிரு பத்தி ரண்டு
வழிவழி மைந்த ராகி வையகங் காத்த வேந்தர்
பழிதவி ரதுல கீர்த்தி பாண்டியன் றன்பா லின்பம்
பொழிதர வுதித்த கீர்த்தி பூடணன் புரக்கு நாளில்.

(இ - ள்.) எழில் புனை அதுலகீர்த்தி என - அழகுமிக்க அதுல கீர்த்தியும் என்று, இருபத்திரண்டு மைந்தர் வழிவழி ஆகி - இருபத்திரண்டு மைந்தர்கள் வழி வழியாகத் தோன்றி, வையகம் காத்த வேந்தர் - இந் நிலவுலகை ஆண்ட அவ்வேந்தருள், பழிதவிர் அதுலகீர்த்தி பாண்டியன் தன்பால் - பழி நீங்கிய அதுலகீர்த்தி என்னும் வழுதியினிடத்து, இன்பம் பொழிதர உதித்த - இன்பம் மிகும்படி தோன்றிய, கீர்த்திபூடணன் புரக்கும் நாளில் - கீர்த்திபூடண பாண்டியன் செங்கோலோச்சிவருங் காலையில்.

இருபத்திரண்டு மைந்தர் வழிவழித்தோன்றி வையகம்புரந்தனர், அங்ஙனம் புரந்த வேந்தருள் என விரித்துரைத்துக் கொள்க. புனைதலும் பொழிதலும் மிகுதலை யுணர்த்தின. (அ)

கருங்கட லேழுங் காவற் கரைகடந் தார்த்துப் பொங்கி
ஒருங்கெழுந் துருத்துச் சீறி யும்பரோ டிம்ப ரேட்டுப்
பொருங்கட கரியு மேட்டுப் பொன்னெடுங் கிரியு நேமிப்
பெருங்கடி வரையும் பேரப் பிரளயங் *கோத்த வன்றே.

(இ-ள்.) கருங்கடல் ஏழும் - கரிய கடல்கள் ஏழும், ஒருங்கு பொங்கி எழுந்து - ஒருசேரப் பொங்கி மேலெழுந்து, உருத்துச் சீறி ஆர்த்து - வெகுண்டு சீறி ஆரவாரித்து, காவல் கரைகடந்து - காவலாகிய எல்லையைக் கடந்து, உம்பரோடு இம்பர் - விண்ணுலகும் மண்ணுலகும், பொரும் எட்டு கடகரியும் - போர்செய்யும் மதத்தையுடைய எட்டு யானைகளும், நெடும் பொன் எட்டுக்கிரியும் - நெடிய பொன்னையுடைய எட்டு மலைகளுந், பெருங்கடி நேமி வரையும் - பெரிய அச்சத்தைத்தரும் சக்கரவாள கிரியும், பேர - நிலைபெயருமாறு, பிரளயம் கோத்த - பிரளயமாக ஒன்றோடொன்று கோத்தன

கருமை பெருமையுமாம். உருத்துச்சீறி ஒருபொருட் பன்மொழி. கடி - காவலுமாம். அன்று, ஏ: அசைகள். (க)

அப்பெருஞ் சலதி வெள்ளத் தழுந்தின வழிவி லாத
எப்பெரும் பொழிலு மேழு தீபமு மிவற்றுட் டங்கி
நிற்பன செல்வ வான திணைகளு நீண்ட சென்னிப்
பர்ப்பத வகையு மீறு பட்டன வாக வங்கண்.

(பா - ம்.) *கோத்த தன்றே.

(இ - ள்.) அப்பெருஞ் சலதிவெள்ளத்து அழுந்தின-அந்தப்பெரிய கடல் வெள்ளத்துள் மூழ்கி, அழிவு இலாத எப்பெரும் பொழிலும்-அழிவில்லாத எத்துணைப் பெரிய பூமியும், ஏழுதீபமும்-ஏழு தீபங்களும், இவற்றுள் தங்கி நிற்பன செல்வ ஆன திணைகளும்—இவைகளிலே தங்கி நிற்பனவும் செல்வனவுமாகிய பொருள்களும், நீண்ட சென்னிப் பர்ப்பத வகையும் உயர்ந்த முடிகளையுடைய மலைவகைகளும், ஈறுபட்டனவாக-ஒழிந்தனவாக; அங்கண்-அப்பொழுது.

அழுந்தின: முற்றெச்சம். பொழில்-உலகம்.

இஃது இப்பொருட்டாதலை,

"செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன்"

என்னும் திருவாசகத்திற் காண்க. நிற்பனவான திணை - நிலைத்திணை. செல்லவான திணை-இயங்குதிணை. திணை-குலம். (கo)

தேனிழி குதலைத் தீஞ்சொற் சேனெடுங் கண்ணி கோயில்
வானிழி விமானம் பொற்று மரைவிளை யாட்டின் வந்த
கானிழி யிடபக் குன்றங் கரிவரை நாகக் குன்றம்
ஆனிழி வரைவ ராக வரைமுத லழிவி லாத.

(இ - ள்.) தேன் இழி குதலைத்தீஞ்சொல்-தேன் ஒழுகும் இனிய குதலைச் சொல்லையுடைய, சேல்நெடுங் கண்ணி கோயில்-சேல் போலும் நீண்ட விழிகளையுடைய உமையம்மையின் திருக்கோயிலும், வான் இழி விமானம்-வானினின்றும் இறங்கிய இந்திரவிமானமும், பொற்றாமரை-பொற்றாமரைவாவியும், விளையாட்டின் வந்தகான் இழி இடபக்குன்றம்-இறைவன் திருவிளையாட்டினால் வந்து தங்கிய மணம்வீசும் (சோலைகளை யுடைய) இடபமலையும், கரிவரை-யானைமலையும், நாகக்குன்றம்-நாக மலையும், ஆன் இழிவரை-பசுவின் உருத்திரிந்த பசுமலையும், வராக வரை-பன்றிமலையும், முதல்-முதலிய இடங்கள், அழிவு இலாத -(அங் கேனால்) அழியாதனவாயின.

தேன் இழி என்பதற்குத் தேனும் புறங்கொடுக்கும் என்றுரைத் தலுமாம். சேல் நெடுங்கண்ணி- அங்கயற்கண்ணம்மை. கான் இழி சோலைகளையுடைய என வருவித்துரைக்க. முதல் - முதலன. ஆக்கச் சொல் விரித்து அழிவிலாதனவாயின என்க. (கக)

வெள்ளநீர் வறப்ப வாதி வேதியன் ஞால முன்போல்
உள்ளவா றதிப்ப நல்கி யும்பரோ டிம்ப ரேனைப்
புள்ளோடு விலங்கு நல்கிக் கதிருடற் புத்தேண் மூவர்
தள்ளரு மரபின் முன்போற் றமிழ்வேந்தர் தமையுந் தந்தான்.

(இ - ள்.) வெள்ளநீர் வறப்ப-பிரளயநீர் வற்ற, ஆதிவேதியன்-சிவபெருமான், முன் உள்ளவாறுபோல் ஞாலம் உதிப்ப நல்கி - முன் இருந்த தன்மை போலவே உலகம் தோன்றுமாறு அருள் புரிந்து,

உம்பரோடு இம்பர் ஏனைப் புள்ளொடு விலங்கு நல்கி - தேவர்களையும் மக்களையும் மற்றைப் பறவைகளையும் விலங்குகளையும் தோற்றுவித்து, கதிர் உடல் புத்தேள் மூவர் தன் அரு மரபின் - ஒளி வடிவமுடைய சந்திரனும் சூரியனும் தீக்கடவுளுமாகிய மூவரின் தன்னுகற் கரிய மரபில், முன்போல் தமிழ் வேந்தர்தமையும் தந்தான் - முன்போலவே மூன்று தமிழ் மன்னர்களையும் தந்தருளினான்.

போல், அசையுமாம். உம்பர், இம்பர் என்பன அவ்விடங்களி லுள்ளாரை உணர்த்தின. திங்கள் மரபினர் பாண்டியரும் ஞாயிற்றின் மரபினர் சோழரும், அங்கி மரபினர் சேரரும் ஆம். (௧௨

[கலி விருத்தம்]

அங்கியை மதிமர பென்னு மாழியுட்
டங்கிய கலையெண்ணான் கிரட்டி தன்னொடும்
பொங்கிய நிலாமதி போலத் தோன்றினான்
வங்கிய சேகர வழுதி மன்னனே.

(இ-ள்.) அங்கு இயை மதி மரபு என்னும் ஆழியுள் - அங்ஙன மியைந்த சந்திரன் மரபாகிய கடலுள், தங்கிய எண்ணான்கு இரட்டி கலையொடும் - பொருந்திய அறுபத்துநான்கு கலைகளோடும், பொங்கிய நிலாமதிபோல - விளங்கித் தோன்றிய நிலவினையுடைய சந்திரன்போல, வங்கிய சேகரவழுதி மன்னன் தோன்றினான் - வங்கிய சேகரபாண்டியன் என்னும் வேந்தன் தோன்றினான்.

தொடக்கமும் ஈறும் தோன்றாது நெடிதாய் வருதலின் மதிமரபை ஆழியாக உருவகித்தார். இவன் அறுபத்துநான்கு கலையும் நிரம்பினான் ஆகலின் எண்ணான்கிரட்டி கலையொடும் பொங்கிய மதிபோல என்றார்; இஃது இல்பொருளுவமை. வங்கியம் - வம்சம். (௧௩)

தாளணி கழலினான் றங்க ணாயகன்
கோளணி புரிசைசூழ் கோவில் சூழவோர்
வாளணி கடிநகர் சிறிது வைகவைத்
தாளரி யேறென வவனி காக்குநாள்.

(இ-ள்.) தாள் அணி கழலினான் - காலிற் கட்டிய வீரக்கழலை யுடைய அவ்வேந்தன், தங்கள் நாயகன் - தங்கள் தலைவனாகிய சோம சுந்தரக் கடவுளின், கோள் அணி புரிசைசூழ் கோயில் சூழ - ஒன்பது கோள்களுந் தவழும் மதில் சூழ்ந்த திருக்கோயிலைச் சூழ, ஓர் வாள் அணி கடிநகர் சிறிது வைகவைத்து - ஒளி பொருந்திய காவலையுடைய ஒரு நகரைச் சிறிதாக ஆக்கிக்கொண்டு, ஆளரி ஏறென அவனி காக்கு நாள் - சிங்கவேறு போலப் புவியைப் பாதுகாத்து வரும் நாளில்.

கோள் அணிபுரிசை - கோட்களை அணிந்த மதில்; மதிலின் உயர்ச்சி கூறியவாறு. வைக வைத்து - பொருந்த வைத்து; ஆக்கி என்றபடி. (௧௪)

செய்யகோன் மனுவழி செலுத்து நீர்மையாற்
பொய்கெழு கலிப்பகை புறந்தந் தோடத்தன்
வையகம் பல்வளஞ் சுரப்ப வைகலும்
மெய்கெழு மன்பதை மிக்க வாலரோ.

(இ-ள்.) *செய்ய கோல் மனுவழி செலுத்தும் நீர்மையால் - செங்கோலை மனுவறத்தின் வழியே ஓச்சுகின்ற தன்மையால், பொய்கெழு கலிப்பகை புறந்தந்து ஓட - பொய் மிக்க கலி என்னும் பகைவன் புறங்காட்டி ஓட, தன் வையகம் வைகலும் பல்வளம் சுரப்ப - தன் நாடு நாடோறும் பல வளங்களையுஞ் சுரத்தலால், மெய்கெழு மன்பதை மிக்க - உண்மை மிக்க மக்கட்கூட்டங்கள் (நாள்தோறும்) மிக்கன.*

கலி - வறுமை முதலிய தீமை. வைகலும் என்பதனை ஈரிடத்துங் கூட்டுக. ஆல், அரோ: அசைகள். (கஙு)

பல்குறு மானிடப் பரப்பே லாமொருங்
கல்குற விடங்குறை வாக வாய்மதுப்
பில்குறு தாரினன் பிறைமு டித்தவன்
மல்குறு கோயிலின் மருங்க ரெய்தினன்.

(இ-ள்.) *பல்குறும் மானிடப் பரப்பு எலாம் - (அங்ஙனம்) பல்கிய மக்கட் பரப்பு அனைத்தும், ஒருங்கு அல்குற இடம் குறைவாக - ஒருங்கு தங்குவதற்கு இடம் குறைவுபட, ஆய்மதுப் பில்குறு தாரினன் - (வண்டுகள்) ஆராயுந் தேன்பிலிற்றும் மாலையையுடைய பாண்டியன், பிறைமுடித்தவன் மல்குறு கோயிலின் மருங்கர் எய்தினன் - பிறையை யணிந்த சோமசுந்தரக் கடவுள் வீற்றிருந்து விளங்குந் திருக்கோயிலின் பக்கத்தை அடைந்தனன்.*

உறுதல் எல்லாம் துணை வினை. வண்டு ஆயும் என விரிக்க. மல்குதல் - விளங்குதன்மேற்று. மருங்கர்: ஈற்றுப்போலி. (கசு)

கறையணி கண்டனைத் தாழ்ந்து கைதொழு
திறையவ நின்னருள் வலியி னிந்நிலப்
பொறையது வாற்றுவேற் கீண்டிப் போதொரு
குறையதுண் டாயின தென்று கூறுவான்.

(இ-ள்.) *கறை அணி கண்டனைத் தாழ்ந்து - நஞ்சக்கறையினை அணிந்த திருமிடற்றினையுடைய இறைவனை வணங்கி, கைதொழுது - கைகூப்பி, இறைவ - தலைவனே, நின் அருள்வலியின் - நினது அருள் வலியினால், இந்நிலப் பொறையது ஆற்றுவேற்கு - இந்நிலச்சுமையைத் தாங்கிவந்த எனக்கு, ஈண்டு இப்போது ஒரு குறையது உண்டாயினது என்று கூறுவான் - இங்கு இப்பொழுது ஒருகுறை உண்டாயிற்றென்று அதனைக் கூறுவானாயினான்.*

பொறையது, குறையது என்பவற்றில் அது பகுதிப்பொருள் விகுதி. (கஎ)

இத்தனை மாக்களு மிருக்கத் தக்கதாப்
பத்தனங் காணவிப் பதிக்க ணாதியே
வைத்தறை செய்திடும் வரம்பு காண்கிலேன்
அத்தமற் றதனையின் றறியக்காட் டென்றான்.

(இ - ள்.) இத்தனை மாக்களும் இருக்கத் தக்கதா - இவ்வளவு மக்களும் இருக்கத் தகுதியுடையதாக, பத்தனம் காண - ஒரு நகரினை ஆக்குவதற்கு, இப்பதிக்கண் ஆதியே வைத்து அறைசெய்திடும் வரம்பு காண்கிலேன் - இந் நகரின்கண் ஆதி காலத்திலிருந்து வரையறுத்து வைத்த எல்லையை அறியேன்; அத்த அதனை இன்று அறியக்காட்டு என்றான் - (ஆதலால்) அத்தனே அவ்வெல்லையை இன்று யான் அறியுமாறு காட்டியருள்வாயாக வென்று இரந்து வேண்டினன்.

பத்தனம் - பட்டணம்; நகரம். அறைசெய்துவைத்த என மாறுக. மற்று : அசை. (௧௮)

நண்ணிய பொருளினு நண்ணி தாயவர்
விண்ணிழி விமானநின் றெழுந்து மீனவன்
திண்ணிய வன்பினுக் கெளிய சித்தராய்ப்
புண்ணிய வருட்கட லாகிப் போதுவார்.

(இ - ள்.) நுண்ணிய பொருளினும் நுண்ணிதாயவர் - அணுவினும் அணுவாயுள்ள அச்சோமசுந்தரக்கடவுள், விண் இழி விமானம் நின்று எழுந்து - வானினின்றும் இறங்கிய இந்திர விமானத்தினின்றும் எழுந்து, மீனவன் திண்ணிய அன்பினுக்கு எளிய சித்தராய் - பாண்டியனது வலிய அன்பிற்கு எளிய சித்தமூர்த்தியாகி, புண்ணிய அருள்கடல் ஆகிப் போதுவார் - அறமும் அருளுமாய கடலாகி வருவாராயினர்.

இறைவன் எவற்றினும் நுண்பொருளாதலை,

"அணுத்தருந் தன்மை யில்லையோன் காண்க"

"நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க"

என்னும் திருவாசகம். அவரைக் கண்ட துணையானே அறக்கடலென்றும் அருட்கடலென்றும் அனைவரும் கருதுமாறு போதுவாராயினர் என்க. (௧௯)

[கலிநிலைத்துறை]

பாம்பி னாற்கடி சூத்திரங் கோவணம் பசுந்தாட்
பாம்பி னாற்புரி நூல்சன்ன வீரம்வெம் பகுவாய்ப்
பாம்பி னாற்குழை குண்டலம் பாதகிண் கிணிநாண்
பாம்பி னாற்கர கங்கணம் பரித்தனர் வந்தார்.

(இ - ள்.) பாம்பினால் கடிசூத்திரம் கோவணம் - பாம்பினால் அரைஞாணும் கோவணமும், பசுந்தாள் பாம்பினால் - இல்லாத காலையுடைய பாம்பினால், புரிநூல் சன்னவீரம் - பூணுநூலும் வெற்றிமாலை

யும், வெம்பகுவாய்ப் பாம்பினால் - கொடிய பிளந்த வாயையுடைய பாம்பினால், குழை குண்டலம் பாதகிண்கிணிகாண் - குழையுங் குண்டலமும் காற்சதங்கை கோத்த கயிறும், பாம்பினால் கரகங்கணம் பரித்தனர் வந்தார் - பாம்பினால் கைவளையும் தாங்கி வந்தார்.

பசுந்தாட் பாம்பு முதலியவற்றைச் சுட்டாகக் கொள்க. பசுமை இன்மை மேற்று; "அருங்கேடன்" என்புழிப்போல இல்லாத தாளை யுடைய பாம்பு என்றார்;

"பச்சைத்தா ளரவாட்டி"

என்னும் தமிழ்மறையுங் காண்க. சன்னவீரம் - மார்பிலும் முதுகிலும் மாறியணியும் ஒருவகை வெற்றிமாலை;

"சன்னவீரம் திருமார்பில் வில்விலக"

என்பது திருக்கைலாய ஞானவுலா. பரித்தனர்: முற்றெச்சம். (௨0)

வந்த யோகர்மா மண்டப மருங்குநின் றங்கைப்
பந்த வாலவா யரவினைப் பார்த்துநீ யிவனுக்
கிந்த மாநக ரெல்லையை யளந்துகாட் டென்றார்
அந்த வாளரா வடிபணிந் தடிகளை வேண்டும்.

(இ - ள்.) வந்தயோகர் - அங்ஙனம் வந்த சித்த மூர்த்திகள், மாமண்டபம் மருங்குநின்று - பெரிய மண்டபத்தின் மருங்கு நின்று, அங்கைப்பந்த ஆலவாய் அரவினைப் பார்த்து - அழகிய திருக்கரத்திற் கட்டிய நஞ்சுபொருந்திய வாயையுடைய பாம்பைப் பார்த்து, நீ இவனுக்கு இந்த மாநகர் எல்லையை அளந்து காட்டு என்றார் - நீ இப் பாண்டியனுக்கு இந்தப் பெரிய நகரத்தின் எல்லையை வரையறுத்துக் காட்டுவாயாக என்று கூறியருளினார்; அந்த வாள் அரா அடிபணிந்து அடிகளை வேண்டும் - அந்த ஒளிபொருந்திய பாம்பு அடிவணங்கிச் சித்த மூர்த்திகளை இரந்து வேண்டும்.

பந்தம் - கட்டு; கங்கணம். (௨௧)

பெரும விந்நக ரடியனேன் பெயரினால் விளங்கக்
கருணை செய்தியென் றிரந்திடக் கருணையங் கடலும்
அருண யந்துநேர்ந் தனையதே யாகெனப் பணித்தான்
உருகெ முஞ்சின வுரகமு*மோல்லெனச் செல்லா.

(இ - ள்.) பெரும - பெருமானே, இந்நகர் அடியனேன் பெயரினால் விளங்க - இந்த நகரம் அடியேன் பெயரினால் விளங்குமாறு, கருணை செய்தி என்று இரந்திட - அருள் புரிவாயாகவென்று இரந்து வேண்ட, அம் கருணைக்கடலும் - அழகிய கருணைக்கடலும், அருள் நயந்து நேர்ந்து அனையதே ஆக எனப் பணித்தான் - அருளினால் விரும்பி உடன்பட்டு அங்ஙனமே ஆகுக என்று அருளினான்; உருகெழுஞ்சின

(பா - ம்.) * உருகெழுஞ் செலவுரகமும்.

உரகமும் - (கண்டோர்க்கு) அச்சந்தருதலைப் பொருந்திய சினத்தையுடைய அப்பாம்பும், ஒல்லெனச் செல்லா - விரைந்து சென்று.

செய்தி - செய்வாய்; த்: எழுத்துப்பேறு. ஆக என்பதன் அகரந் தொக்கது. உரு - உட்கு; அச்சம்.

"உருவுட்காகும்"

என்பது தொல்காப்பியம். ஒல்லென: விரைவுக் குறிப்பு, செல்லா, செய்யா வென்னும் வாய்பாட்டு வினையெச்சம். (உஉ)

கீட்டி சைத்தலைச் சென்றுதன் கேழ்கிளர் வாலை
நீட்டி மாநகர் வலம்பட நிலம்படிந் துடலைக்
கோட்டி வாலைவாய் வைத்துவேற் கோற்றவற் கெல்லை
காட்டி மீண்டரன் கங்கண மானது கரத்தில்.

(இ - ள்.) கீழ்த்திசைத் தலைச் சென்று - கீழைத் திசையின்கட் சென்று, தன் கேழ்கிளர்வாலை நீட்டி - தனது ஒளிபொருந்தி விளங்கும் வாலை நீட்டி, மாநகர் வலம்பட நிலம்படிந்து - பெரிய அந் நகருக்கு வலமாக நிலத்திற் படிந்து, உடலைக் கோட்டி - உடலை வளைத்து, வாலை வாய் வைத்து - வாலைத் தனது வாயில் வைத்து, வேல் கொற்றவர்க்கு எல்லை காட்டி - வேற்படை யேந்திய பாண்டி வேந்தனுக்கு எல்லையைக் காட்டி, மீண்டு அரன் கரத்தில் கங்கணம் ஆனது - மீள இறைவனது திருக்கரத்தின்கட் கங்கணமாயது.

கீழ்த் திசை என்பது கீட்டிசை என மருவியது. கோட்டி - வளைத்து. (உ௩)

சித்தர் தஞ்சின கரத்தெழுந் தருளினர் செழியன்
பைத்த வாலவாய் கோலிய படிசுவ ரெடுத்துச்*
சுத்த நேமிமால் வரையினைத் தோட்டகழ்ந் தெடுத்து
வைத்த தாமென வகுத்தனன் மஞ்சுசூ ழிஞ்சி.

(இ - ள்.) சித்தர் - சித்த மூர்த்திகள், தம் சினகரத்து எழுந்தருளினர் - தமது திருக்கோயிலின்கண் எழுந்தருளினர்; செழியன் - வங்கிய சேகர பாண்டியன், பைத்த ஆலவாய் கோலியபடி - படத்தையுடைய பாம்பு வளைந்து எல்லை வரையறுத்தபடி, சுவர் எடுத்து - மதிலுக்கு அடிநிலை பாரித்து, சுத்த மால் நேமி வரையினை - தூய பெரிய சக்கரவாள மலையை, தொட்டு அகழ்ந்து எடுத்து வைத்தது ஆம் என - அடியோடு தோண்டி எடுத்து வைத்ததாகும் என்று கண்டோர் கருதும் வண்ணம், மஞ்சுசூழ் இஞ்சி வகுத்தனன் - முகில் சூழ்ந்த மதில் கட்டி முடித்தனன்.

சினகரம் - அருகன் கோட்டம்; இது பின் எல்லாக் கடவுளராலயங்களையும் குறிப்பதாயிற்று. பைத்த - படத்தையுடைய; பெயரடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். ஆலவாய்-பாம்பு; ஆலத்தை வாயிலுடையது எனக் காரணக்குறி. தொட்டு அகழ்ந்து என்பன ஒரு பொருளன. (உ௪)

(பா - ம்.) * சுவடெடுத்து.

தென்றி சைப்பரங் குன்றமும் வடதிசை யிடபக்
குன்ற முங்குடக் கேடக நகரமுங் குணபாற்
பொன்ற லங்கிழித் தெழுபொழிற் பூவண நகரும்
என்று நாற்பெரு வாயில்கட் கெல்லையா வகுத்தான்.

(இ - ள்.) நால் பெருவாயில்கட்கு - நான்கு பெரிய வாயில்களுக்கும், தென்திசைப் பரங்குன்றமும் - தெற்கின்கண் திருப்பரங்குன்றமும், வடதிசை இடபக் குன்றமும் - வடக்கின்கண் இடப மலையும், குடக்கு ஏடகநகரும் - மேற்கின்கண் திருவேடகப்பதியும், குணபால் - கிழக்கின்கண், பொன்தலம் கிழித்து எழுபொழில் பூவணநகரும் - தேவருலகத்தை ஊடுருவி மேலெழுந்த சோலைகள் சூழ்ந்த திருப்பூவண நகரும், என்றும் எல்லையா வகுத்தான் - எஞ்ஞான்றும் எல்லையாமாறு அம்மதில் வாயில்களை அமைத்தான்.

என்று நான்கினையும் என வருவித் துரைத்தலுமாம். (உ0)

அனைய நீண்மதி லாலவாய் மதிலென வறைவர்
நனைய வார்பொழி னகரமு மாலவாய் நாமம்
புனைய லாயதெப் போதுமப் பொன்னகர் தன்னைக்
கனைய வார்கழற் காலினன் பண்டுபோற் கண்டான்.

(இ - ள்.) அனைய நீள்மதில் ஆலவாய் மதிலென அறைவர் - அந்த நீண்ட மதிலை ஆலவாய் மதில் என்று கூறுவர்; நனைய வார் பொழில் நகரமும் - தேனையுடைய நெடிய சோலை சூழ்ந்த அந்த நகரமும், எப்போதும் ஆலவாய் நாமம் புனையலாயது - எஞ்ஞான்றும் ஆலவா யென்னும் பெயரைப் பெறுவதாயிற்று. அப்பொன் நகர் தன்னை - அந்த அழகிய நகரத்தை, கனைய வார்கழல் காலினன் - ஒலித்தலையுடைய நெடிய வீரக்கழலையணிந்த காலையுடைய அப்பாண்டியன், பண்டுபோல் கண்டான் - முன்போல ஆக்கினன்.

நனைய, கனைய என்பன குறிப்புவினைப்பெயரெச்சம்; கனைய என்பதில் அகரம் அசையுமாம். (உக)

கொடிக ணீண்மதின் மண்டபங் கோபுரம் வீதி
கடிகோள் *பூம்பொழி லின்னவும் புதியவாக் கண்டு
நெடிய கோளகை கிரீடம்வா ணிழன்மணி யாற்செய்
தடிகள் சாத்திய கலன்களும் வேறுவே றமைத்தான்.

(இ - ள்) கொடிகள் நீள்மதில் மண்டபம் - கொடிகள் கட்டிய நீண்ட திருமதிலும் திருமண்டபமும், கோபுரம் வீதி - திருக்கோபுரமும் திருவீதியும், கடிகொள் பூம்பொழில் இன்னவும் - மணம் மிக்க பூக்களையுடைய சோலைகளும் இவைபோன்ற பிறவும், புதியவாக்கண்டு - புதியனவாகச் செய்து, அடிகள் சாத்திய - சோமசுந்தரக் கடவுள் அணியும்படி, நெடிய கோளகை கிரீடம் - நீண்ட கவசமும் முடியும், வாள் நிழல் மணியால்செய்து - விளங்கும் ஒளியையுடைய மணிகளாற்

(பா - ம்.) * கொடிகொள்.

செய்து, வேறுவேறு கலன்களும் அமைத்தான் - இன்னும் வேறுவேறு அணிகளும் செய்தனன்.

கோளகை - கவசத்தை உணர்த்திற்று. சாத்திய - அணியும்படி: செய்யிய வென்னும் வினையெச்சம்; பெயரெச்சமாகக்கொண்டு, சாத்திய கோளகை கிரீடம் கலன்களும் மணியாற்செய்து அமைத்தான் என்றுரைத்தலுமாம். (உஎ)

பல்வ கைப்பெருங் குடிகளின் பரப்பெலா நிரப்பிச்
செல்வ வானவன்* புரந்தரன் புரத்தினுஞ் சிறப்ப
மல்லன் மாநகர் பெருவளந் துளும்பிட வளர்த்தான்
தொல்லை நாட்குல சேகரன் போல்வரு தோன்றல்.

(இ - ள்.) பல்வகைப் பெருங்குடிகளின் பரப்பு எலாம் நிரப்பி- பலவகைப்பட்ட சிறந்த குடிகளின் பரப்பு அனைத்தையுங் குடியேற்றி, செல்வவானவன் புரந்தரன் புரத்தினும் சிறப்ப - செல்வ மிக்க குபேரனும் இந்திரனுமாகிய இவர்கள் நகரத்தினுஞ் சிறந்தோங்க, மல்லல் மாநகர் பெருவளம் துளும்பிட-வளமிக்க பெரிய அந்நகரின்கண் பெரிய செல்வங்கள் நிறைய, தொல்லைநாள் குலசேகரன் போல்வரு தோன்றல் வளர்த்தான் - முன்னாளில் விளங்கிய குலசேகர பாண்டியனைப் போல வந்த வங்கிய சேகர பாண்டியன் வளர்த்தான்.

வானவனாகிய புரந்தரன் என்றுமாம். குலசேகரன் பண்டு திருநகரங் கண்டானாகலின், 'குலசேகரன்போல் வருதோன்றல்' என்றார்; இரு பெயரும் ஒரே பொருளவாதலும் காணற்பாலது. (உஅ)

ஆகச் செய்யுள் - உ௬௬௧

(பா - ம்.) * வானவர்.

ஐம்பதாவது
சுந்தரப் பேரம்பெய்த படலம்

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

அங்கண ருரக மணிந்தருள் வடிவ
மடைந்தர சகமகிழக்
கங்கண விடவர வங்கொடு கடிநகர்
கண்டருண் முறையிதுவாஞ்
சங்கணி குழையினர் பஞ்சவன் வழிபடு
தம்பெய ரெழுதியகூர்
வெங்கணை கோடுவள வன்படை முடுகிய
வென்றியை யினிமொழிவாம்.

(இ-ள்.) அங்கணர் - அருட் பார்வையையுடைய இறைவர், உரகம் அணிந்தருள் வடிவம் அடைந்து - பாம்பினை அணிந்தருளிய சித்த மூர்த்திகள் வடிவம் கொண்டருளி, அரசு அகம் மகிழ - வங்கிய சேகர மன்னன் உள்ளமகிழ, கங்கண விட அரவம் கொடு - கங்கணமாகிய நஞ்சினையுடைய பாம்பினால், கடிநகர் கண்டருள் முறை இதுவாம் - காவலையுடைய நகரின் எல்லையை வரையறுத்துக் காட்டியருளிய திருவிளையாடல் இதுவாகும்; சங்கு அணி குழையினர் - அணிந்த சங்கினாலாகிய குழையையுடைய அவ்விறைவர், பஞ்சவன் வழிபடும் தம்பெயர் எழுதிய - பாண்டியன் வழிபடுகின்ற தமது திருப்பெயர் தீட்டிய, கூர் வெங்கணைகொடு - கூரிய கொடிய அம்புகளினால், வளவன்படை முடுகிய வென்றியை - விக்கிரம சோழன் படையைத் துரத்திய திருவிளையாடலை, இனி மொழிவாம் - இனிக் கூறுவாம்.

கொடு - கொண்டு; மூன்றும் வேற்றுமைச் சொல். தம் பெயர் - சுந்தரன் என்னும் பெயர். முடுகிய - ஓட்டிய வென்னும் பொருட்டு. (க)

வெங்கய னீள்கொடி வங்கிய சேகரன்
வெண்குடை நீழலின்வாய்
வங்கமு லாவிய தெண்கடன் ஞால
மடந்தையு மாசறுசீர்ச்
செங்கம லாலய மங்கையும் வாலிய
திண்பத மாலயமேல்
நங்கையு மோவற மங்கல மான
நயம்பெற* வாழ்வுறுநாள்.

(இ-ள்) வெங்கயல் நீள் கொடி வங்கிய சேகரன் - வெவ்விய கயல் எழுதியநீண்ட கொடியையுயர்த்திய வங்கியசேகர பாண்டியனது,

---

(பா-ம்.) * நயம்பெறு.

வெண்குடை நீழலின்வாய் - வெண்கொற்றக் குடையின் நிழலின்கண், வங்கம் உலாவிய தெண்கடல் ஞாலமடந்தையும் - மரக்கலங்கள் உலா வும் தெளிந்த கடல் சூழ்ந்த நிலமகளும், மாசு அறுசீர்ச் செங்கமல ஆலய மங்கையும் - குற்றமற்ற சிறப்பினையுடைய செந்தாமரை மல ரைக் கோயிலாக உடைய திருமகளும், வாலிய திண்பதும ஆலயமேல் நங்கையும் - வெண்மையாகிய திண்ணிய தாமரை மலராகிய கோயிலின் கண் வீற்றிருக்கும் நாமகளும், ஒவு அற - நீங்குதலில்லாமல், மங்கலம் ஆனநயம் பெற - (அந்நாட்டிலுள்ளார்) மங்கலமான நன்மைகளைப் பெறுமாறு, வாழ்வுறும் நாள் - வாழும் நாளில்.

நயம்பெறு என்பது பாடமாயின் அம்மூவரும் நன்மை பொருந்திய வாழ்வினைப் பொருந்து நாளில் என்க. கல்வி செல்வங்களானும் பிற நலன்களானும் ஞாலம் பொலிவெய்தியதென்பது கருத்து. (௨)

வேழ மறப்படை சூழ வேதிர்த்தவர் வீறு கேடுத்தடியிற்
றாழ வடர்த்திகல் வாகை தோடுத்தலர் தார்புனை விக்கிரமச்
சோழன் மதிக்குல நாயக னைப்போரு சூள்கரு தித்தோலையா
ஆழ்கட லுக்கிணை யாமணி கத்தோடு மாடம ருக்கேழுவான்.

(இ - ள்) மறவேழப்படை சூழ எதிர்த்தவர் - கொலைத்தொழிலை யுடைய யானைப் படைசூழ எதிர்த்த பகைவர், அடியில் தாழ - தனது அடியில் வீழ்ந்து வணங்குமாறு, வீறு கெடுத்து அடர்த்து - அவர் தருக்கை யொழித்து வென்று, இகல்வாகை தொடுத்து அலர் தார்புனை விக்கிரமச்சோழன் - வெற்றிக்குரிய வாகை மலராற் றொடுத்து விளங் கிய மாலையையணிந்த விக்கிரமச்சோழன், மதிக்குல நாயகனைப் பொரு சூள்கருதி - சந்திரமரபிற் றோன்றிய வங்கிய சேகர பாண்டியனைப் பொருது வெல்லும் வஞ்சினத்தை எண்ணி, தொலையா ஆழ்கடலுக்கு இணை ஆம் அனிகத்தொடும் - அழியாத ஆழ்ந்த கடலுக்கு ஒப்பாகிய படையோடும், ஆடு அமருக்கு எழுவான் - அடுதலைச்செய்யும் போருக்கு எழுவானாயினன்.

பொருசூள் கருதி என்பதற்குச் சூளுடன் பொருது வெல்லுதல் கருதி என்பது கருத்தாகக் கொள்க. (௩)

கயபதி காய்சின நரபதி பாய்துர கதபதி யேமுதலா
வயமிகு தோள்வட திசையின ராதிபர் வலிகெழு சேனையினோ
டியமிடி யேறிமி ழிசையென வாய்விட விரதம தேறிநடாஅய்ப்
பயன்மலி காவிரி நதியரு கேயுறை பதிகொடு மேயினனால்.

(இ - ள்.) கயபதி - கயபதியும், காய்சின நரபதி - வருத்துஞ் சினத்தையுடைய நரபதியும், பாய் துரகபதி முதலா - பாய்ந்து செல் லுந் துரகபதியும் முதலாக, வயம்மிகுதோள் வடதிசையின் நராதிபர் - வெற்றி மிக்க தோள்களையுடைய வடதிசை மன்னர்களின், வலிகெழு சேனையினோடு - வலிமை மிக்க படையோடு, இயம் இடியேறு இமிழ் இசையென வாய்விட - பல்லியங்கள் இடியேறு ஒலிக்கும் ஒலிபோல ஒலிக்க, இரதம் ஏறி நடாஅய் - தேரில் ஏறி அதனைச்செலுத்தி, பயன் மலி காவிரிநதி அருகே - பயன்மிக்க காவிரியாற்றின் அருகேயுள்ள, உறைபதி கொடு - தான் உறையும் பதியினின்று, மேயினன் - புறப் பட்டு வந்தனன்.

கயபதி முதலிய பெயர்கள் யானைகளையுடைய தலைவன் என்பது முதலிய பொருளுடையன. நராதிபர்: வடமொழித் தீர்க்க சந்தி. இரதமது, அது: பகுதிப் பொருள் விகுதி. நடாஅய்: சொல்லிசை யளபெடை. பதிகொடு - பதியினின்று என்னும் பொருட்டு. (அ)

சிலைத்தெழு செம்பியன் வெம்படை மள்ளர்
செயிர்த்து மதிக்கடவுட்
குலத்தவ னாட்டினி ருந்*தெழி லானிரை
கொண்டு குறும்புசெய்து
மலர்த்தட மேரி யுடைத்து நகர்க்கு
வரும்பல பண்டமுமா
றலைத்து முடக்கி நடுக்கம் விளைத்து
மமர்க்கடி யிட்டனரால்.

(இ - ள்.) சிலைத்து எழுசெம்பியன் வெம்படை மள்ளர் - ஆரவாரித்து எழுந்த சோழனுடைய கொடிய படைவீரர், செயிர்த்து - சினந்து, மதிக் கடவுள் குலத்தவன் நாட்டின் இருந்து - திங்கட்புத்தேள் மரபினனாகிய பாண்டியன் நாட்டிறங்கி, எழில் ஆன் நிரை கொண்டு குறும்பு செய்தும் - அழகிய பசு நிரைகளைக் கவர்ந்து தீமை புரிந்தும், மலர்த்தடம் ஏரி உடைத்தும் - மலர் நிறைந்த குளங்களையும் ஏரிகளையும் உடைத்தும், நகர்க்குவரும் பல பண்டமும் ஆறலைத்து முடக்கி நடுக்கம் விளைத்தும் - நகருக்குள் வருகின்ற பல பொருள்களையும் வழிப்பறித்து அவைகொண்டு வருவோரைத் துரத்தி அவருக்குத் துன்பம் விளைத்தும், அமர்க்கு அடியிட்டனர் - இங்ஙனமாகப் போர் புரிதற்கு அடி கோலினர்.

ஆனிரை கொண்டும் என உம்மை விரித்து, குறும்பு செய்து உடைத்து எனக் கூட்டியுரைத்தலுமாம். அடியிடுதல் - தொடக்கஞ் செய்து கொள்ளுதல். (௯)

மாற னறிந்தினி யென்செய்து நேரியன்
வன்படையோ வளவின்
றேறி யெதிர்ந்தம ராட லெனக்கரி†
திக்குறை யைப்பிறையோ
டாறணி பூரண சுந்தர னெந்தை
யடித்தல முன்குறுகாக்
கூறியி ரந்து வரம்பெறு கேன்றிறை
கோயி லடைந்தனனால்.

(இ - ள்.) மாறன் அறிந்து - (அதனைப்) பாண்டியன் அறிந்து, இனி என் செய்து - இனி யான் யாது செய்வேன், நேரியன் வன் படையோ அளவு இன்று - சோழனது வலிய படையோ அளவில்லாதது; ஏறி எதிர்ந்து அமர் ஆடல் எனக்கு அரிது - (ஆதலால்) மேற்

(பா - ம்.) * நாட்டுமிருந்து. † ஆடினெனக்கரிது.

எதிர்த்துப் போர் புரிதல் எனக்கு முடியாத தொன்று; இக்குறையை - இந்தக் குறைபாட்டை, பிறையோடு ஆறு அணிபூரண சுந்தான் எந்தை - சந்திரனோடு கங்கையையு மணிந்த எங்கும் நிறைந்த சோம சுந்தரக் கடவுளாகிய எம் தந்தையினது, அடித்தலம் முன் குறுகா - திருவடிகளின் முன்பெய்தி, கூறி - சொல்லி, இரந்து வரம் பெறுகு - குறையிரந்து வரம் பெறுவேன்; என்று இறை கோயில் அடைந்தனன் - என்று கருதி அவ்விறைவன் திருக்கோயிலை அடைந்தான்.

செய்து, பெறுகு என்பன தன்மை யொருமை எதிர்கால முற்றுக்கள்; செய்தும் எனப்பிரித்துப் பன்மை யொருமை விரவி வந்தன எனலுமாம். (சு)

அடைந்து பணிந்தரு ளாயக னேயடி
யேனொடு விக்கிரமன்
தொடர்ந்தம ராட வயற்புல மன்னவர்
தொகையொடு பாசறைவாய்ப்
படர்ந்திறை கொண்டன னேபொர வொத்த
பதாதி யெனக்கில்லையே
மிடைந்து வரும்படை மிக்க விடத்தரண்
வேறுளதோ விறைவா.

(இ-ள்) அடைந்து - அங்ஙனம் அடைந்து, பணிந்து - வணங்கி அருள்நாயகனே - (அடியார் வேண்டியவற்றை) அருளும்பெருமானே, விக்கிரமன் - விக்கிரமசோழனென்பான், அடியேனொடு தொடர்ந்து அமர் ஆட - அடியேனுடன் எதிர்த்துப் போர் புரிய, அயல்புல மன்னவர் தொகையொடு - வேற்று நில மன்னரின் தொகுதியோடும், பாசறைவாய்ப் படர்ந்து இறை கொண்டனன் - பாசறையின் கண் வந்து தங்கினன்; பொர - அவனோடு பொருதற்கு, ஒத்த பதாதி எனக்கு இல்லையே - தகுதியுடைய சேனை என்னிடத்தில் இல்லையே, மிடைந்து வரும் படை மிக்க விடத்து - நெருங்கி வரும் படை மிகைத்தெழுந்த பொழுது, இறைவா அரண் வேறு உளதோ - இறைவனே எனக்கு அரணாவது வேறு உண்டோ? (இல்லையென்றபடி),

அருள் நாயகன் - கருணையுடைய நாயகன் என்றுமாம். அயற்புலம் - தனது நாட்டிற்குப் பக்கத்திலுள்ள வேறு நாடுகள். இறைகொண்டனன் - இறுத்தனன், தங்கினன. பதாதி என்பது சேனை என்னும் பொதுப் பொருளில் வந்துளது. அரண் வேறுளதோ என்றது நின்னையன்றி வேறு காவல் இல்லையென்றபடி. (எ)

என்னை யினிச்செயு மாறென மாற னிரந்து மொழிந்திடவும்
முன்னவன் வானிடை நின்றச ரீரி மொழிந்தருள் வான்முதனி
அன்னவ னோடம ராடபி ளுமு மடைந்துத வித்துணையாய்
நின்னது வாகை யெனப்பொரு கின்றன நீயினி யஞ்சலென.

(இ-ள்) இனிச் செயுமாறு என்னை என - இனி என்னுஞ் செய்யக் கடவது யாது என்று, மாறன் இரந்து மொழிந்திடவும் - பாண்டியன்

குறையிரந்து கூறலும், முன்னவன் - முதல்வனாகிய சோமசுந்தரக் கடவுள், வான் இடை நின்று அசரீரி மொழிந்தருள்வான் - விண்ணிலே நின்று அசரீரியாகக் கூறியருளுவான்: முதல் நீ அன்னவனோடு அமர் ஆடு - முதற்கண் நீ அவனுடன் எதிர்த்துப் போர் செய்; பின் நாமும் அடைந்து - பின்னர் நாமும் அங்கு வந்து, உதவித்துணையாய் - நினக்கு உதவிபுரியுந் துணையாகி, வாகை நின்னது எனப் பொருகின்றனம் - வெற்றி உன்னுடையதென்று கூறும்படி போர்புரிவோம்; நீ இனி அஞ்சல் என - நீ இனி அஞ்சுத லொழிக வென்றருள.

துணையாய் அடைந்து பொருகின்றனம் எனக் கூட்டி யுரைத்தலுமாம். பொருகின்றனம் என்பது ஈண்டுப் பொருவாம் என எதிர்காலப் பொருட்டு. அஞ்சல், 'மகனெனல்' என் புழிப்போல எதிர்மறை. (அ)

சிந்தை களித்திரு கண்க ளுளித்திரு செங்கை குவித்திறைவன்
அந்தி மதிச்சடை யந்தண னைத்தொழு தன்று புறப்படமுன்
வந்தன னொற்றுவ னந்தி வரைக்கயல் வந்தது விக்கிரமன்
வெந்தறு கட்படை யென்றர சற்கு விளம்பின னப்பொழுதே.

(இ - ள்.) இறைவன் - பாண்டியன், சிந்தைகளித்து - (அம்மொழியைக் கேட்டலும்) மனமகிழ்ந்து, இருகண்கள் துளித்து - இரண்டுகண்களிலும் ஆனந்த நீர் பெருக்கி, இருசெங்கை குவித்து - இரண்டு கரங்களையுங் கூப்பி, அந்திமதிச் சடை அந்தணனைத் தொழுது - பிறைமதியினை அணிந்த சடையையுடைய அந்தணனாகிய பெருமானை வணங்கி, அன்று புறப்பட - அப்போது (திருக்கோயிலினின்றும்) வெளிப்பட, ஒற்றுவன் அரசற்கு முன் வந்தனன் - ஒற்றன் அவனுக்கு முன் வந்து, விக்கிரமன் வெந்தறுகண்படை - விக்கிரமசோழனது கொடிய அஞ்சாமையை யுடைய படை, நந்தி வரைக்கு அயல் வந்தது என்று விளம்பினன் - இடபமலைக்கு அருகில் வந்தது என்று கூறினன்: அப்பொழுதே - அப்போதே.

அந்திமதி - மாலைப் பொழுதிலே செக்கர் வானத்திற் றோன்றும் பிறை. வந்தனன்: முற்றெச்சம். (௯)

அரச னியம்பல வதிர வலம்புரி
யலற வலங்குளைமான்
இரத மணைந்திட விசைகொடு சிந்தையி
னிடவல வன்கடவப்
புரசை நெடுங்கரி திரையெறி யுங்கடல்
பொருபரி விண்டொடுதேர்
விரைசெய் நறுந்தொடை விருதர்க ணம்புடை
விரவ நடந்தனனால்.

(இ - ள்.) அரசன் - பாண்டியன், பல இயம் அதிர - பல இயங்கள் ஒலிக்கவும், வலம்புரி அலற - வலம்புரிச் சங்கம் முழங்கவும், அலங்கு உளை மான் இரதம் அணைந்திட - அசைகின்ற தலையாட்டமணிந்த குதிரைகள் பூட்டிய தேரில் ஏற, சிந்தை பின்னிட விசைகொடு வலவன்

கடவ - மனவேகமும் பின்னிடுமாறு விசையுடன் பாகன் செலுத்த, புரசை நெடுங்கரி - கழுத்திடு கயிற்றை யுடைய பெரிய யானையும், திரை எறியும் கடல் பொருபரி - அலை வீசுங் கடலை பொரும் குதிரையும், விண்தொடு தேர் - வானை அளாவுந் தேரும், விரை செய் நறுந்தொடை விருதர் கணம் - மணம் வீசும் நறிய மாலையை யணிந்த வீரர் கூட்டமுமாகிய நாற்படையும், புடை விரவ நடந்தனன் - அயலிலே சூழ்ந்து வரச் சென்றனன்.

அலந்துளை - அசைகின்ற தலையாட்டம்;

"அலந்துளைப் புரவி யையவரோடு சினைஇ"

என்னும் புறப்பாட்டடியின் உரையை நோக்குக; உளை - பிடரிமயிருமாம். விருதர் - வீரர். அரசன் இரதம் அணைந்திட வலவன் கடவ அவன் நடந்தனன் என முடிக்க. (௧௦)

[எழுசீரடியாசிரிய விருத்தம்]

அளந்து சூழ்திரு வால வாய்மதி
லின்பு றத்தக ழாழிபோல்
வளைந்த சோழ னெடும்ப டைக்கெதிர்
வஞ்சி வேய்ந்தெழு பஞ்சவன்
கிளர்ந்த சேனை யதிர்ந்து கிட்டின
கிட்டி யவ்விரு படைஞருங்
களஞ்சி றந்திட வஞ்சி னங்கொடு
கைவ குத்தமர் செய்வரால்.

(இ - ள்.) அளந்து சூழ் - வரையறுக்கப்பட்டுச் சூழ்ந்த, திருவாலவாய் மதிலின் புறத்து - திருவாலவாயின் மதிற்புறத்திலே, அகழ் ஆழி போல் - தோண்டிய கடல்போல், வளைந்த சோழன நெடும்படைக்கு எதிர் - சூழ்ந்த சோழனது பெரிய படைக்கு எதிரே, வஞ்சி வேய்ந்து எழு பஞ்சவன் - வஞ்சிமாலை யணிந்து போருக்கெழுந்த பாண்டியனது, கிளர்ந்த சேனை அதிர்ந்து கிட்டின - ஊக்கத்துடன் எழுந்த படைகள் ஆரவாரித்து நெருங்கின; கிட்டி அவ்விரு படைஞரும் - அங்ஙனம் நெருங்கி அவ்விருதிறத்துப் படைவீரரும், களம் சிறந்திட வஞ்சினம் கொடு கை வகுத்து அமர் செய்வர் - போர்க் களஞ் சிறக்க வஞ்சினங் கூறிப் படை வகுத்துப் போர்புரிவாராயினர்.

அகழ் ஆழிபோல் என்பதற்கு அகழியாகிய ஆழிபோல் என்றுரைத்தலுமாம். அகழ் - அகழியாதலை 'வையையும் ஒருபுறத் தகழாம்' என நகரப் படலத்துட் போந்தமையா லறிக. வஞ்சி - மண்ணசையால் மேற்சேறல். (௧௧)

கைய மோத்தெழு தேரி னரோடு கைய மோத்தெழு தேரரும்
மையன் மைக்கரி வீர ரோடெதிர் மையன் மைக்கரி வீரருங்
கொய்யு ளைப்பரி வயவ ரோடிகல் கொய்யு ளைப்பரி வயவருங்
கைய முற்படை வீசி மின்விடு காரே னப்பொரு வாரரோ.

(இ - ள்.) சையம் ஒத்து எழு தேரினரொடு சையம் ஒத்து எழு தேரரும் - மலையை யொத்தெழுந்த தேரினையுடைய வீரருடன் தேர் வீரரும், மையல் மைக்கரி வீரரோடு எதிர் மையல் மைக்கரி வீரரும் - மதமயக்கத்தையுடைய கரிய யானை வீரருடன் யானைவீரரும், கொய் உளைப்பரி வயவரோடு இகல் கொய் உளைப்பரி வயவரும் - கொய்யப்பட்ட பிடரி மயிரையுடைய குதிரை வீரருடன் மாறுபட்டெழுந்த குதிரை வீரரும், கை அழல் படை வீசி - கைகளால் நெருப்புச் சிந்தும் படைக்கலங்களை வீசி, மின் விடு கார் எனப் பொருவார் - மின்னலை வீசும் மேகம்போல நின்று போர் புரிவாராயினர்.

சையம் - மேற்கிலுள்ள ஒரு மலை. அடைகள் தேர் முதலியவற்றிற் குரியன. அரோ - அசை. (௯௨)

முடங்கு வெஞ்சிலை வில்ல ரோடு
முடங்கு வெஞ்சிலை வில்லரும்
விடங்க லுழ்ந்திடு வேல ரோடு
விடங்க லுழ்ந்திடு வேலரும்
இடங்கை தோல்வல வாள ரோடு
மிடங்கை தோல்வல வாளரும்
மடங்க லேறு மடங்க லேறு
மலைப்ப தென்ன மலைப்பரால்.

(இ - ள்.) முடங்கு வெஞ்சிலை வில்லரோடு முடங்கு வெஞ்சிலை வில்லரும் - வளைந்த கொடிய வில்லையுடைய வீரருடன் வில் வீரரும், விடம் கலுழ்ந்திடு வேலரோடு விடம் கலுழ்ந்திடு வேலரும் - நஞ்சினை யுமிழும் வேலினையுடைய வீரருடன் வேல வீரரும், இடம் கை தோல் வலம் வாளரோடும் - இடக்கையிற் கேடகமும் வலக்கையில் வாட் படையுமுடைய வாள் வீரருடன், இடம் கை தோல் வலம் வாளரும் - அவற்றையுடைய வாள் வீரரும், மடங்கல் ஏறும் மடங்கல் ஏறும் மலைப்பது என்ன - சிங்க வேறும் சிங்க வேறும் போர்புரிவதுபோல, மலைப்பர் - போர் புரிவர்.

சிலை என முன் வந்தமையின் வில்லர் என்பது வீரர் என்னும் பெயர் மாத்திரையாய் நின்றது. (௯௩)

அரவி னன்னில மம்பு யம்பொறை
யாற்று மீனவ னுற்றல்கூர்
புரவி யின்னிரை வைய மேல்கோடு
போந்த நேரியர் வேந்தனேர்
விரவி மின்னிய முரசி யம்ப
மிடைந்து வெஞ்சம ராடுமோ
திரவி தன்னொடு மதிய வன்போர
வேகி னனிக ராகுமால்.

(இ - ள்.) அரவின் - அனந்தன் என்னும் பாம்பினைப் போல, நன்னிலம் அம்புயம பொறை ஆற்றும் மீனவன - நல்ல நிலவுலகத்தை

அழகிய தோளினுற் ருங்கும் பாண்டியன், ஆற்றல் கூர் புரவியின் நிரை வையம் மேல் கொடு - வலி மிக்க குதிரைகள் வரிசையாகப் பூட்டப் பட்ட தேரில் ஏறி, போந்த நேரியர் வேந்தன் நேர் விரவி - போருக்கு வந்த சோழமன்னன் எதிர் சென்று கலந்து, மின்னிப முரசு இயம்ப - விளங்கிய போர் முரசு ஒலிக்க, மிடைந்து வெஞ்சமர் ஆடும் ஆறு - நெருங்கி வெவ்விய போர் புரியுந் தன்மை, இரவி தன்னொடு மதிபவன் பொர ஏகினல் நிகர் ஆகும் - சூரியனேடு சந்திரன் போர்புரியச் சென்று புரிந்ததை ஒக்கும்.

அரவின், இன்: ஒப்புப் பொருட்டு: அரவினற் சுமக்கப்பட்ட நிலத்தை என விரித்துரைத்தலுமாம். நேரியர் - நேரி வெற்பினை யுடையவர்; சோழர். பரிதி மரபினனுகிய சோழனெடு திங்கள் மரபின ஞகிய பாண்டியன் பொரச் சென்றது பரிதியொடு திங்கள் பொரச் சென்றது போலும் என்ருர்; இதனற் சோழன் முன் பாண்டியன ஆற்றல் குன்று மென்பதும் குறிப்பித்தவாருயிற்று. (௧௮)

தள்ளு மாவொலி தான யாறு
துளும்பு மாவொலி தூண்டுதேர்
தள்ளு மாவொலி படையோ டும்படை
தாக்கு மாவொலி பொருநரார்த்
தேள்ளு மாவொலி மள்ளர் பைங்கழ
லேங்கு மாவொலி வீங்கியந்
தேள்ளு மாவொலி வேறு பாடு
திரிந்து கல்லென லாயதே.

(இ - ள்.) துள்ளும் மா ஒலி - தாவிச் செல்லுங் குதிரைகளின் கனைப்பொலியும், தான யாறு துளும்பும் மா ஒலி - மத நீரை ஆறு போலப் பெருக்கும் யானைகளின் பிளிறொலியும், தூண்டு மா தள்ளும் தேர் ஒலி - தூண்டப்படுங் குதிரைகளால் இழுக்கப்படுந் தேர்களின் ஒலியும், படையொடு படை தாக்கும் மா ஒலி - படைகளோடு படை தாக்கும் பேரொலியும், பொருநர் ஆர்த்து எள்ளும் மா ஒலி - வீரர்கள் ஆரவாரித்து ஒருவரை ஒருவர் இகழ்ந்து கூறும் பேரொலியும், மள்ளர் பைங்கழல் ஏங்கும் மா ஒலி - அவ்வீரர்கள் கட்டிய பசிய வீரக்கழல்கள் ஒலிக்கும் பேரொலியும், வீங்கு இயம் தெள்ளும் மா ஒலி - மிக்க இயங்கள் ஒலிக்கும் பேரொலியும், வேறுபாடு திரிந்து கல்லெனல் ஆயது - தம்முள் வேறுபாடு இன்றி ஒன்ருகி எங்கும் கல்லென்னும் ஒலியாயிற்று.

மா என்னும் ஓரெழுத் தொருமொழி குதிரை, யானை, பெருமை என்னும் பல பொருளில் வந்தது. தூண்டு தேர் தள்ளும் மாவொலி என்பதற்குத் தூண்டப்படும் தேர்களால் உண்டாக்கப்படும் பேரொலி என்றுரைத்தலுமாம். (௧௯)

துடித்த வாளர வென்ன வீசிய
தூங்கு கையின வீங்குநீர்
குடித்த காரொடு சார்ம லைந்திடு
கொள்கை போல வுடன்றுடன்

ரிடித்த வாயின வசனி யேறி
னிருப்பு லக்கை யெடுத்தெறிந்
தடித்த சோரியோ டாவி சோர
விழுந்த வெஞ்சின வானையே.

(இ-ள்.) தடித்த வாள் அரவு என்ன - தடிக்கும் ஒள்ளிய பாம்பு போல, விசிய தூங்கு கையின - வீசிய தொங்குகின்ற துதிக்கையை யுடையனவாகி, வீங்கு நீர் குடித்த காரொடு கார் பலந்திடு கொள்கை போல - மிக்க நீரைப் பருகிய முகிலோடு முகில் போர்புரியுந் தன்மை போல, உடன்ற உடன்ற அசனி ஏறின் இடித்தவாயின - மாறுபட்டு மாறுபட்டு இடியேறுபோல முழங்கின வாயினையுடையனவாகி, இருப்பு உலக்கை எடுத்து எறிந்து அடித்த சோரியொடு - இருப்புலக்கையை எடுத்து வீசி அடித்தலால் வருங் குருதியோடு, ஆவிசோர - உயிருஞ் சோர, வெஞ்சின யானை விழுந்த - கொடிய சினத்தையுடைய யானைகள் விழுந்தன.

யானையாற் சுழற்றி வீசப்படும் துதிக்கை துடிக்கின்ற பாம்பு போலும் என்றார்; வாளால் எறியப்பட்ட யானைக்கை உருமெறிந்த பாம்புபோற்புரளும் எனக் களவழி நாற்பதில் வந்திருத்தல் நோக்கற்பாலது. ஏற்றன் என்பது ஏறின் என விகாரமாயிற்று. அடித்த: பெயரெச்சம் காரணப் பொருட்டாயது; 'ஆறு சென்றவியர்' என்புழிப் போல. விழுந்த, அன் பெறாத முற்று. (கரு)

எய்த வாளி விலக்கு வார்பிறி தெய்யும் வாளித மார்புதோள்*
செய்த போதவ ராண்மை கண்டு சிரித்து வென்றி வியப்பரால்
வைத வாவடி வேலெ றிந்திட வருவ தைக்குறி வழியினாற்
கொய்த தார்மற வாளெ றிந்துகுறைத்து வேறு படுத்துவார்.

(இ-ள்.) எய்தவாளி விலக்குவார் - (பகைவர்) எய்த அம்பினை விலக்குவாராகியவீரர், பிறிது எய்யும்வாளி தம்மார்பு தோள் செய்த போது - (மீண்டும் அவர்) எய்த வேறு கணை தமது மார்பினைத் துளைத்த போது, அவர் ஆண்மை கண்டு சிரித்து - அவரது ஆண்மையினைக் கண்டு மகிழ்ந்து, வென்றிவியப்பர் - அவர் வெற்றியை வியந்து பாராட்டுவார்; வைதவா வடிவேல் எறிந்திட - கூர்மை நீங்காத வடித்த வேற்படையினைப் பகைவர் வீச, வருவதை - வருகின்ற அவ்வேற்படையை, குறி வழியினால் - குறிவைக்கும் நெறியினால், கொய்ததார் மறவாள் எறிந்து - கொய்த மாலையையணிந்த வீரவாளை வீசி, குறைத்து வேறுபடுத்துவார் - துண்டித்து அழிப்பார்.

தோள், தோட்ட என்பதன் முதனிலை: போழ்செய்த என்னும் பாடத்திற்குப் பிளந்த என்றுரைக்க. வாளிமார்பினைத் துளைத்த பொழுது சிரித்து வியப்பர் என்றது அவரது ஊராஞ்சா மறத்தினை விளக்கியபடி. வை - கூர்மை. கொய்ததார் என்புழிச் சினையடை முதலொடு வந்தது. (கள)

(பா - ம்.) * மார்பு போழ்.

பின்னி டாதிரு படையு மொத்தம
　　ராடு மெல்லை பெரும்படைச்
சென்னி தன்றுணை யாய வுத்தர
　　தேய மன்னவர் படையொடுந்
துன்னி ஞால முடிக்கு நாளெழு
　　சூறை தள்ள வதிர்ந்தெழும்
வன்னி யென்ன வுடன்றெ திர்ந்தனன்
　　வழுதி சேனை யுடைந்ததே.

(இ-ள்.) பின்னிடாது இருபடையும் ஒத்து அமர் ஆடும் எல்லை-இங்ஙனம் புறங்காட்டாமல் இருதிறத்துச் சேனைகளும் ஒத்துப் போர் புரியும்போது, பெரும்படைச் சென்னி - பெரிய படையினையுடைய சோழன், தன் துணை ஆய உத்தரதேய மன்னவர் படையொடும் துன்னி-தனக்கு உதவியாகிய வடநாட்டு வேந்தர் படையோடும் நெருங்கி, ஞாலம் முடிக்கும் நாள் எழு சூறைதள்ள - உலகத்தை அழிக்கும் நாளில் எழுந்த ஊழிக்காற்று உந்துவதால், அதிர்ந்து எழும் வன்னி என்ன - முழங்கி யெழுந்த ஊழித் தீயைப்போல, உடன்று எதிர்ந்தனன் - வெகுண்டு எதிர்ந்தான்; வழுதிசேனை உடைந்தது - (அவ்வளவில்) பாண்டியன் சேனை சிதைந்தோடியது.

ஞாலம் முடிக்குநாள் - ஊழிக்காலம். சூறை - பெருங்காற்று. (கஅ)

மின்ன லங்கிலை* வாளோ டுஞ்சிலை
　　வில்லி ழந்தனா வீரரே
பன்ன லம்புனை தேரோ டுங்கரி
　　பரியி ழந்தனர் பாகரே
தென்ன வன்பொரு வலியி ழந்தன
　　னென்று செமபியன் வாகையுந்
தன்ன தென்று தருக்கு மேல்கொாடு
　　சங்கெ டுத்து முழக்கினன்.

(இ-ள்.) வீரர் - பாண்டியன் படைவீரர், மின் அலங்கு இலைவாளொடும் சிலைவில் இழந்தனர் - மின்போல விளங்கும் தகட்டு வடிவமாகிய வாட்படையோடு ஒலித்தலையுடைய வில்லையும் இழந்தனர்; பாகர் - பாகர்கள், பல் நலம் புனை தேரொடும் கரி பரி இழந்தனர் - பல வகை நலம்பெற அலங்கரிக்கப்பட்ட தேரோடு யானைகளையும் குதிரைகளையும் இழந்தார்கள்; செம்பியன் - விக்கிரம சோழன், தென்னவன் பொருவலி இழந்தனன் என்று - பாண்டியன் பொருதற்குரிய வலியை இழந்து விட்டனன் என்றும் (அதனால்), வாகையும் தன்னது என்று - வெற்றியும் தன்னுடைய தென்றுங் கருதி, தருக்குமேல்கொாடு சங்கு எடுத்து முழக்கினன் - செருக்கினை மேற்கொண்டு வெற்றிச் சங்கை எடுத்து ஊதினன். (கக)

(பா - ம்.) * மின்னிலங்கிலை.

அந்த வேலையின் முன்ன ருந்தம தருளே னக்குளிர் கடிபுனற்
பந்தர் நீழ லளித்து மோடை படுத்தி யும்பகை சாயவே
வந்த வேடர வண்ண மேயொரு மான வேடர சாய் வலஞ்
சிந்த வாகுல மூழ்கு மீனவன்* சேனை காவல ராயினர்.

(இ - ள்) அந்த வேலையின் - அப்பொழுது, முன்னரும் - முன்னே யும், தமது அருள் எனக்குளிர் கடிபுனல் பந்தர்நீழல் அளித்தும் - தமது அருள்போலக் குளிர்ந்த மணமுள்ள நீரைப்பந்தர் நிழலின்கண் கொடுத் தும், ஓடைபடுத்தியும் பகைசாயவே வந்த வேடர் - சோழனை மடுவில் விட்டியும் பகைவர் புறங்கொடுக்குமாறு வந்த திருவேடத்தையுடைய அச்சோமசுந்தரக் கடவுள், அவ்வண்ணமே ஒரு மானவேடு அரசாய்-அங்ஙனமே ஒரு பெருமையை யுடைய வேடமன்னராய் (வந்து), வலம் சிந்த ஆகுலம் மூழ்கும் - வெற்றி அழிந்ததால் துன்பக்கடலுள் மூழ் கிய, மீனவன் சேனை காவலர் ஆயினர் - பாண்டியனது சேனைக்குத் தலைவர் ஆயினர்.

புனல் பந்தர் நீழல் அளித்ததைத் தண்ணீர்ப்பந்தல் வைத்த படலத்திலும், ஓடைபடுத்தியதைச் சோழனை மடுவில் வீட்டிய படலத் திலும் காண்க. வேடமுடையர் என்றும் வேட்டுவர் என்றும் இரு பொருள்பட 'வந்த வேடர்' என்றார்; சோழனை மடுவில் வீட்டிய பொழுது இறைவன் வேட்டுருக்கொண்டு வந்தமை காண்க; அது பற்றியே இங்கு 'அவ்வண்ணமே யொருமான வேடரசாய் என்றார். (உ0)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

குன்றவில் வேடன் சாபங் குழைவித்துச் சுந்த ரேசன்
என்றதன் னாமந் தீட்டி யிட்டகூர்ங் கணைக ளேண்டி
வென்றன மென்று வாகை மிலைந்துவெண் சங்க மார்த்து
நின்றவன் சேனை மீது நெறிப்படச் செலுத்தா நின்றான்.

(இ - ள்.) குன்ற வில் வேடன் - மேரு மலையை வில்லாகவுடைய இறைவனாகிய வேடன், சாபம் குழைவித்து - வில்லை வளைத்து; சுந்த ரேசன் என்ற தன நாமம் தீட்டியிட்ட கூர்ங்கணைகள் - சுந்தரேசன் என்ற தனது திருப்பெயர் தீட்டிய கூரியகணைகளை, வென்றனம் என்று வாகை மிலைந்து - வென்று விட்டோமென்று கருதி வெற்றிமாலை சூடி, வெண்சங்கம் ஆர்த்து - வெள்ளிய சங்கினை முழக்கி, நின்றவன் சேனை மீது - நின்ற விக்கிரம சோழன் சேனையின்மேல், நெறிப்படத் தூண் டிச் செலுத்தா நின்றான் - வரிசைப்படத் தொடுத்துவிடா நின்றான்.

வேடன் கணைகளை நின்றவன் சேனைமீது செலுத்தா நின்றான் என முடிக்க. (உக)

அம்முனை வாளி யோவ்வோன் றடல்புனை† நூற்று நூறு
தெம்முனை வீரர் தம்மைச் செகுத்துயி ருண்ண நோக்கி
இம்முனை வாளி யொன்றுக் கித்துணை வலியா தென்னு
வெம்முனை மறவேற் சென்னி வியந்தனு மான மெய்தா.

(பா - ம்.) *மீனவர். † நூறு நூறு.

(இ - ள்.) அம்முனைவாளி ஒவ்வொன்று - அந்தக் கூரிய கணை ஒவ்வொன்றும், அடல்புனை தெவ்முனை நூற்று நூறு வீரர்தம்மை - வெற்றி புனைந்த பகைவன் போர்முனையிலுள்ள பதினாயிர வீரர்களை, செகுத்து உயிர் உண்ண - கொன்று உயிரைப் பருக, நோக்கி-அதனைப் பார்த்து, இம்முனைவாளி ஒன்றுக்கு இத்தனை வலி யாது என்னு - இந்தக் கூரிய அம்பு ஒன்றுக்கு இவ்வளவு வலி ஏது என்று, வெம்முனை மறவேல் சென்னி - வெவ்விய கூர்மையுடைய கொலைத்தொழில் பொருந்திய வேலினையேந்திய சோழன், வியந்து அனுமானம் எய்தா - வியந்து அனுமானமுற்று.

நூற்று நூறு - நூறுடன் உறழ்ந்த நூறு ; பதினாயிரம். ஒன்றுக்கு ஒரோன்றுக்கு. யாது - எங்ஙனம் பொருந்தியது. அநுமானம் - கருதல்; ஈண்டு ஐயுறவு என்னும் பொருட்டு. (உ௨)

அன்னகூர் வாளி தன்னைக் கோணர்கென வதனை வாசித்
தின்னது சுந்த ரேச னெனவரைந் திருப்ப தீது
தென்னவற் காலவாயான் றுணைசெய்த செயலென் றஞ்சிப்
பொன்னிநா டுடையான் மீண்டு போகுவான் போகு வானை.

(இ - ள்.) அன்ன கூர்வாளி தன்னைக் கொணர்க என - அந்த அம்பினைக் கொண்டுவரக்கடவை என ஒருவனை ஏவி, அதனை வாசித்து - (அவனால் கொண்டு வரப்பட்ட) அந்த வாளியைப் படித்து, இன்னது சுந்தரேசன் என வரைந்திருப்பது, இது சுந்தரேசன் என்று எழுதப் பட்டுளது; ஈது - (ஆதலால்) இது. தென்னவற்கு - பாண்டியனுக்கு, ஆலவாயான் துணை செய்த செயல் என்று - ஆலவாய் அண்ணல் துணை புரிந்த செய்தியாகும் என்று கருதி, அஞ்சி - பயந்து, பொன்னிநாடு உடையான் மீண்டு போகுவான்-காவிரி நாடனாகிய சோழன் திரும்பிப் போவானாயினன் ; போகுவானை - அங்ஙனம் போகும் அவனை.

கொணர்கவென ஏவிக் கொண்டு வந்த அதனை வாசித்து என விரித்துரைத்துக் கொள்க. கொணர்கென : அகரம் தொகுத்தல்.(உ௩)

செருத்துணை யாகி வந்த வுத்தர தேயத் துள்ளார்
துருக்கரோட் டியர்வே றுள்ளார் யாவருஞ் சூழ்ந்து நில்லென்
றுருத்தனர் வைது நீபோர்க் குடைந்தனை போதி யீதுன்
கருத்தெனி னாண்மை யாவர் கண்ணதுன் மான மென்னும்

(இ - ள்.) செருத்துணையாகி வந்த - போர்த்துணையாகி வந்த, உத்தர தேயத்து உள்ளார் துருக்கர் ஒட்டியர்-வடநாட்டிலுள்ளாராகிய துருக்கரும் ஒட்டியரும், வேறு உள்ளார் யாவரும் சூழ்ந்து - இவரொழிந்த ஏனையோருமாகிய அனைவருங் கூடி, நில் என்று உருத்தனர் வைது - நிற்பாயாக என்று கூறிச் சினந்து வைது, நீ போர்க்கு உடைந்தனை போதி - நீ போருக்குத் தோற்றுப் போகின்றாய்; ஈது உன் கருத்து எனின் - இஃது உனது கருத்தானால், ஆண்மையாவர் கண்ணது - ஆண் தன்மை யாரிடத்தது, உன்மானம் என்னும்-உனது பெருமை என்னாகும்

உருத்தனர், உடைந்தனை யென்பன முற்றெச்சங்கள். போதி: எழுத்துப் பேறு. (உ௪)

சேல்லலை வருதி யென்னாச் செயிர்த்தெழுந் திடியி னார்த்துக்
கல்லெழு வனைய திண்டோட் கௌரியன் படைமேற் சென்று
வில்லிற வலித்து வாங்கி வேறுவே றாகி நின்று
சோல்லினுங் கடிய வாளி தொடுத்தனர் விடுத்தார் தூர்த்தார்.

(இ - ள்.) செல்லலை வருதி என்னா - (ஆதலால்) நீ செல்லற்க வருவாயாக வென்று கூறி, செயிர்த்து எழுந்து இடியின் ஆர்த்து - சினந்து எழுந்து இடிபோல ஆரவாரித்து, கல் எழு அனைய திண்தோள் கௌரியன் படைமேல் சென்று - கற்றூணை யொத்த திண்ணிய தோளை யுடைய பாண்டியன் சேனைமேற் சென்று, வில் இற வலித்து வாங்கி - வில் முறியுமாறு இழுத்து வளைத்து, வேறு வேறு ஆகி நின்று - தனித் தனி ஒவ்வோரிடத்தில் நின்று, சொல்லினும் கடியவாளி - (முனிவர் சாப) மொழியினும் விரைந்து செல்லும் வாளிகளை, தொடுத்தனர் விடுத்தார் தூர்த்தார் - தொடுத்து விடுத்துத் தூர்த்தனர்.

"சொல்லொக்குங் கடியவேகச் சுடுசரம்" என்னும் கம்பராமாயணச் செய்யுட்டொடர் ஈண்டுக் கருதற்பாலது. தொடுத்தனர், விடுத்தார் என்பன முற்றெச்சங்கள். (௨௫)

வடுத்தவா மருமச் செம்புண் மறமக னாகி நின்ற
கடுத்தவா மிடற்று முக்கட் கண்ணுதற் சாமி தான்முன்
எடுத்தவா டகவி லன்ன* விருஞ்சிலை வாளி யொன்று
தொடுத்தவா டவர் தாம் விட்ட சுடுசரந் தொலைத்துப் பின்னும்.

(இ-ள்.) வடு தவா மருமம் செம்புண் மறமகன் ஆகி நின்ற - வடு நீங்காத மார்பின்கண் செம்புண்ணையுடைய வேடத்திருவுருவங் கொண்டு நின்ற, கடு தவா மிடற்று முக்கண் கண்ணுதல் சாமி - நஞ்சு நீங்காத திருமிடற்றையும் மூன்று கண்களையுமுடைய சோமசுந்தரக் கடவுள், தான் முன் எடுத்த ஆடகவில் அன்ன இருஞ் சிலை - தான் திரிபுர மெரித்த ஞான்று எடுத்த மேரு வில்லைப் போலும் பெரிய வில்லில், வாளி ஒன்று தொடுத்து - ஓர் அம்பினைத் தொடுத்து விடுத்து, அ ஆடவர் விட்ட சுடுசரம் தொலைத்து - அந்த ஆடவர் விட்ட கொடிய கணைகளை அழித்து, பின்னும் - மீண்டும்.

வடு - தழும்பு. கண்ணுதல் பெயர் மாத்திரமாய் நின்றது. ஆடவர் வீரர் என்னும் பொருட்டு.

"ஆடவன் கொன்றான் அச்சோ"

என்பது பெரிய புராணம். (௨௬)

பத்தம்பு தொடுத்து நூற்றுப்
பத்துமான றேரைச் சாய்த்தான்
பத்தம்பு தொடுத்து நூற்றுப்
பத்துவெங் களிற்றை மாய்த்தான்

(பா - ம்.) * வில்லென்ன.

பத்தம்பு தொடுத்து நூற்றுப்
பத்தவாம் பரியைக் கொன்றான்
பத்தம்பு தொடுத்து நூற்றுப்
பத்துமா னுடரை வென்றான்.

(இ - ள்.) பத்து அம்பு தொடுத்து - பத்துக் கணைகளை விடுத்து, நூற்றுப்பத்து மான் தேரைச் சாய்த்தான் - குதிரை பூட்டிய ஆயிரந் தேரை அழித்தான்; பத்து அம்பு தொடுத்து - பத்து அம்புகளை ஏவி, நூற்றுப் பத்து வெங்களிற்றை மாய்த்தான் - ஆயிரங் கொடிய யானைகளைக் கொன்றான்; பத்து அம்பு தொடுத்து - பத்து வாளிகளைத் தூண்டி, நூற்றுப் பத்து வாம்பரியைக் கொன்றான் - ஆயிரம் தாவுங் குதிரைகளை மாய்த்தான்; பத்து அம்பு தொடுத்து - பத்துப் பாணங்களைக் கடாவி, நூற்றுப் பத்து மானுடரை வென்றான் - ஆயிரம் வீரர்களைக் கொன்றான். (உ௭)

நூறம்பு தொடுத்து நூற்று நூறு* வெம் பரிமே லெய்தான்
நூறம்பு தொடுத்து நூற்று நூறுவெங் கரிமேற் பெய்தான்
நூறம்பு தொடுத்து நூற்று நூறுதேர் சிதைய விட்டான்
நூறம்பு தொடுத்துநூற்று நூறுசே வகரை யட்டான்.

(இ - ள்.) நூற்று நூறு வெம்பரி மேல் - வெவ்விய பதினாயிரங் குதிரைகள் மேல், நூறு அம்பு தொடுத்து எய்தான் - நூறு கணைகளை வில்லிற் பூட்டி விடுத்து (அவற்றை அழித்தான்); நூற்று நூறு வெங் கரிமேல் - கொடிய பதினாயிரம் யானைகளின் மேல், நூறு அம்பு தொடுத்துப் பெய்தான் - நூறு வாளிகளை வில்லிற் பூட்டிப் பொழிந்து (அவற்றை அழித்தான்); நூற்று நூறு தேர் சிதைய நூறு அம்பு தொடுத்து விட்டான் - பதினாயிரந் தேர் சிதையுமாறு நூறு அம்புகளை வில்லிற் றொடுத்து விட்டான்; நூறு அம்பு தொடுத்து நூற்று நூறு சேவகரை அட்டான் - நூறு பாணங்களை ஏவிப் பதினாயிரம் வீரர்களைக் கொன்றான். (உ௮)

ஆயிரம் வாளி யானூ றாயிரம் பரியைக் கொன்றான்
ஆயிரம் வாளி யானூ றாயிரங் கரியை வென்றான்
ஆயிரம் வாளி யானூ றாயிரந் தேரைச் சாய்த்தான்
ஆயிரம் வாளி யானூ றாயிரம் பேரைத் தேய்த்தான்.

(இ - ள்.) ஆயிரம் வாளியால் நூறாயிரம் பரியைக் கொன்றான் - ஆயிரம் கணைகளினால் நூறாயிரம் குதிரைகளைக் கொன்றான்; ஆயிரம் வாளியால நூறாயிரம் கரியை வென்றான் - ஆயிரம் வாளிகளால் நூறாயிரம் யானைகளை அழித்தான்; ஆயிரம் வாளியால் நூறாயிரம் தேரைச் சாய்த்தான் - ஆயிரம் அம்புகளினால் நூறாயிரந் தேர்களை உடைத்தான்; ஆயிரம் வாளியால் நூறாயிரம் பேரைத் தேய்த்தான் - ஆயிரம் பாணங்களால் நூறாயிரம் வீரர்களைத் தொலைத்தான்.

(பா - ம்) *நூறு நூறு. (நாலடியிலும்)

இம்மூன்று செய்யுளிலும் இறுதிச் சீர்கள் இவ்விரண்டு ஒவ்வோரெதுகையாக அமைந்திருத்தல் காண்க. (உ௯)

தடிந்தன தோளுந் தாளுந் தகர்ந்தன சென்னி மண்ணிற்
படிந்தன மடிந்தோர் யாக்கை பரிந்தன தும்பைத் தாமம்
மடிந்தன மையல் யானை மாண்டன தாண்டும் பாய்மான்
ஒடிந்தன கொடிஞ்சி மான்றே ரொதுங்கின வொழிந்த சேனை.

(இ - ள்.) தோளும் தாளும் தடிந்தன - வீரர்களின் தோள்களும் கால்களும் அறுபட்டன; சென்னி தகர்ந்தன - தலைகள் உடைபட்டன; மடிந்தோர் யாக்கை மண்ணில் படிந்தன - இறந்தவர்களின் உடல்கள் மண்ணிற் கிடந்தன; தும்பைத் தாமம் பரிந்தன - தும்பை மாலைகள் அறுந்தன; மையல் யானை மடிந்தன - மதமயக்கத்தையுடைய யானைகள் மடிந்தன; தாண்டும் பாய்மான் மாண்டன - தாவும் குதிரைகள் இறந்தன; கொடிஞ்சி மான் தேர் ஒடிந்தன - மொட்டையுடைய குதிரை பூண்ட தேர்கள் நொறுங்கின; ஒழிந்த சேனை ஒதுங்கின - எஞ்சிய சேனைகள் ஓடி மறைந்தன.

தும்பைத்தாமம் வலிமை காட்டுதலே பொருளாகப் பொருவார் சூடுவது. தாண்டும் என முன் வந்தமைபால் பாய்மான் என்றது பெயர் மாத்திரையாக நின்றது. ஒழிந்த - இறவாது எஞ்சிய. (௩௦)

ஆவிமுன் னேகத் தாமு மருக்கமண் டலத்தா றேகத்
தாவுவ வென்ன வாடுந் தலைபல சிலைவாள்* பட்டுக்
கூவிளி யெடுத்து வீழுங் குறைத்தலை யாடப் பாதிச்
சாவுட னின்று கைகள் கொட்டுவ தாள மென்ன.

(இ - ள்.) ஆவி முன் ஏக - உயிர் முன்னே செல்ல, தாமும் அருக்க மண்டலத்து ஆறு ஏகத்தாவுவ என்ன - தாமுஞ் சூரிய மண்டலத்தின் வழியாகப் போதற்குத் தாவுதல் போல, பல தலை ஆடும் - பல தலைகள் ஆடா நிற்கும்; சிலைவாள் பட்டு கூவிளி எடுத்து வீழும் - வாளிகளும் வாளும் பட்டுக் கூவும் ஓசையைச் செய்து வீழ்கின்ற, குறைத்தலை ஆட - கவந்தங்கள் ஆடாநிற்க, பாதிச்சாவுடல் நின்று தாளம் என்ன கைகள் கொட்டுவ - குற்றுயிரோடு கூடிய உடல்கள் நின்று தாளம் போடுதல் போலக் கைகளைக் கொட்டுவன.

போரில் உயிர் துறந்தோர் சூரியமண்டல வழியாக வீரசுவர்க்கம் எய்துவர் என்ப. கூவிளி - கூவும் ஓசை. குறைத்தலை - தலையற்ற உடல். (௩௧)

தறைவிழத் தனது சென்னி வீட்டினர் தம்மை நின்ற
குறையுடல் கைவேல்† குத்தி நூக்குவ குரவை பாடி
எறிபடு தலைகள் வாய்மென் றெயிறது கறித்து வீழ்ந்து
கறுவின மார்பந் தட்டி நிற்பன கவந்த யாக்கை.

(பா - ம்.) * சிலவாள். † குறையுடறகைவேல்.

(இ-ள்.) தனது சென்னி தறை விழ - தனது தலை தரையில் விழ, வீட்டினர் தம்மை - அறுத்து வீழ்த்தினவரை, நின்ற குறையுடல்- வீழாது நின்ற கவந்தம், கைவேல் குத்தி நூக்குவ - கையிலுள்ள வேலாற் குத்தித்தள்ளுவன; எறிபடு தலைகள் - அறுபட்ட தலைகள், குரவைபாடி - குரவைப்பாட்டுப் பாடி, வாய் மென்று எயிறு கறித்து விழ்ந்து கறுவின - வாயினை மென்று பல்லைக்கடித்து விழ்ந்து சினந்தன; கவந்த யாக்கை மார்பம் தட்டி நிற்பன - குறையுடல்கள் மார்பைத் தட்டி நிற்பன.

தனது: பன்மையிலொருமை. எயிறது, அது: பகுதிப்பொருள் விகுதி. (௩௨)

ஒருவழிப் பட்டு வீழ மிருதலை யோன்றற் கோன்று
மருவிய கேண்மை யாகி* வாலெயி றிலங்க நக்குப்
பிரிவற வந்தாய் நீயு மேன்றெதிர் பேசிப் பேசிப்
பரிவுற மொழிந்து மோந்து பாடிநின் றுடல் செய்த.

(இ-ள்.) ஒருவழி பட்டு வீழும் இருதலை - ஓரிடத்தில் அறுபட்டு வீழ்கின்ற இரண்டு தலைகள், ஒன்றற்கு ஒன்று கேண்மை மருவிய ஆகி - ஒன்றற்கொன்று நட்பினைப் பொருந்தியனவாய், வால் எயிறு இலங்க நக்கு - வெள்ளிய பற்கள் விளங்கச் சிரித்து, பிரிவு அற நீயும் வந்தாய் என்று எதிர் பேசிப்பேசி - பிரிவின்றி நீயும் வந்தாயென்று எதிரெதிரே பேசி, பரிவு உற மொழிந்து மோந்து - அன்புமிக (வேறு செய்திகளையும்) கூறி ஒன்றையொன்று மோந்து, பாடி நின்று ஆடல் செய்த - பாடி நின்று ஆடின.

செய்த: அன்பெறாத பலவின் பால் முற்று. (௩௩)

மாகவா றியங்கு சேனம் வல்லிருட் குவையி னன்ன
காகம்வன் கழுகு வெம்போர்க் களனிடை யவிந்து வீழ்ந்தோர்
ஆகமேற் சிறக டிக்கோண் டசைவன வேடை நீக்கப்
பாகநின் றால வட்டம் பணிப்பன போன்ற வன்றே.

(இ-ள்.) மாக ஆறு இயங்கு சேனம் - வானின் வழியே உலாவும் பருந்துகளும், வல் இருட் குவையின் அன்ன காகம் - செறிந்த இருளின் திரட்சியை ஒத்த காக்கைகளும், வன்கழுகு - வலிய கழுகுகளும், வெம்போர்க்களன் இடை அவிந்து வீழ்ந்தோர் - கொடிய போர்க் களத்தின்கண் இறந்து வீழ்ந்தவர்களின், ஆகம் மேல் - உடல்களின் மேல், சிறகு அடிக்கொண்டு அசைவன - சிறகுகளை அடித்து அசைதல், வேடைநீக்கப் பாகம் நின்று ஆலவட்டம் பணிப்பன போன்ற - வெப்பத்தைப் போக்கப் பக்கத்தில் நின்று விசிறியை அசைத்தலை ஒக்கும்.

குவையினன்ன: சாரியை நிற்க உருபு தொக்கது. அடிக்கொண்டு- அடித்தல் பொருந்தி; அடித்து. அன்று, ஏ: அசைகள். (௩௪)

(பா-ம்.) *கேண்மைத்தாகி.

வெள்ளமாச் சோரி யீர்ப்ப மிதக்கின்ற தேர்கள் வெம்பேய்ப்
பிள்ளைகண் மூழ்கிக் கீழ்போய் மறித்தெனப் பெயர்ந்து வீழ்வ
தெள்ளுநீர்க் கடலின் மீதூர் சிதைக்கல நிரையுந் தாக்கித்
துளளிமற் றவற்றைச் சாய்க்குஞ் சுறவமும் போன்ற வன்றே.

(இ - ள்.) மாச்சோரி வெள்ளம் ஈர்ப்ப - பெரிய குருதி வெள்ளம் இழுக்க, மிதக்கின்ற தேர்கள் - மிதந்து செல்லுந்தேர்களும், வெம் பேய்ப் பிள்ளைகள் - கொடிய பேயின் பிள்ளைகளும், மூழ்கிக் கீழ் போய் மறித்தெனப் பெயர்ந்து வீழ்வ - (அப்பிள்ளைகள்) முழுகிக் கீழ்வழியே சென்று தாக்குதலால் (அத்தேர்கள்) செல்லுநிலை பெயர்ந்து வீழ்தலும், தெள்ளும் நீர்க்கடலின் மீது ஊர் சிதைக்கலம் நிரையும் - தெளிந்த நீரையுடைய கடலின் மேல் ஓடாநின்ற வரிசையாகிய பாய்மரத்தை யுடைய மரக்கலங்களையும், துள்ளித்தாக்கி அவற்றைச் சாய்க்கும் சுறவமும் - மேலெழுந்து தாக்குதலால் அம்மரக்கலங்களை வீழ்த்தும் சுறா மீன்களையும் (அவற்றால் அவை வீழ்தலையும்), போன்ற - ஒத்தன.

தேர்கள் மரக்கலங்களையும், பேய்ப்பிள்ளைகள் சுறவங்களையும் தேர்கள் மறிந்து வீழ்தல் மரக்கலங்கள் சாய்தலையும் ஒத்தன வென்க. பேய்கள் குருதிவெள்ளத்தில் மூழ்குமென்பது ஐதிகம். மறித்தென - மறிக்க : செய்தென எனனும் வாய்பாட்டு வினையெச்சம். (௯௨)

கத்திநின் றொருபா லீர்ப்பக் கருங்கோடி சேனந் துண்டஞ்
சொத்திநின் றொருபா லீர்ப்பக் குடவயிற றழல்கட் பூதப்
பத்திநின் றொருபா லீர்ப்பப் பட்டவ ராகங் கூளி
பொத்திநின் றொருபா லீர்ப்ப வைம்பொறி போல மன்னோ.

(இ - ள்.) ஐம்பொறி போல - (மனத்தைத் தத்தம் வழி இழுக்கும்) ஐம்பொறிகள் போல, பட்டவர் ஆகம் - மடிந்தவர் உடல்களை, கருங்கோடி கத்தி நின்று ஒருபால் ஈர்ப்ப - கரிய காகங்கள் கத்தி நின்று ஒரு பக்கம் இழுக்க, சேனம் - பருந்துகள், துண்டம் கொத்தி நின்று ஒருபால் ஈர்ப்ப - மூக்கினாற் கொத்தி நின்று ஒருபால் இழுக்க, குட வயிறு அழல் கண் பூதப்பத்தி - குடம் போன்ற வயிற்றையும் எரிகின்ற கண்களையுமுடைய பூதவரிசைகள், நின்று ஒருபால் ஈர்ப்ப - நின்று ஒருபால் இழுக்க, கூளி பொத்தி நின்று ஒருபால் ஈர்ப்ப - பேய்கள் மொய்த்து நின்று ஒருபால் இழுப்பன.

துண்டம் - பறவை மூக்கு. மன், ஒ : அசைகள். (௯௩)

துடுவைவான் முறங்கா றள்ளுந் துணைச்செவி யரிசி கோட்டின்
உடுவைநேர் மணியின் குப்பை யுரலடி யுக்லகை திண்கோ
டடுகலங் கடந்தீச் சோரி மத்தக மடுப்பென் றியானைப்
படுகளம விசயச் செல்வி யடுமடைப் பள்ளி மானும்.

(இ - ள்.) வால் துடுவை - வாலைத் துடுப்பாகவும், கால் தள்ளும் துணைச் செவி - காற்றைத் திரட்டும் இரண்டு செவிகளையும், முறம் முறமாகவும், கோட்டின் உடுவை நேர் மணியின் குப்பை அரிசி - தந்தங்களிலுள்ள நாண் மீனை ஒத்த முத்துக் குவியலை அரிசியாகவும், அடி

உரல் - அடியை உரலாகவும், திண்கோடு உலக்கை - திண்ணிய கொம்பை உலக்கையாகவும், கடம் அடுகலம் - கதுப்பைச் சமைக்கும் கலமாகவும், சோரி தீ - குருதியை நெருப்பாகவும்' மத்தகம் அடுப்பு என்று - மத்தகத்தை அடுப்பாகவும் (கொண்டு), யானைப் படுகளம் - யானைகள் மடிந்த போர்க்களம், விசயச் செல்வி அடும் மடைப்பள்ளி மானும் - வீரத் திருமகள் சமைக்கும் மடைப்பள்ளியை ஒக்கும். (௧௭)

பிணத்தினைக் கோலிப் புண்ணீ
　　ராற்றினைப் பெருக்கி யுண்பேய்க்
கணத்தினை யுதைத்து நூக்கிக்
　　கரையுடைத் தொருவன் பூதம்
நிணத்தொடும் வருமந் நீத்த
　　நேர்பட விருந்து கையால்
அணைத்துவாய் மடுக்கும் வையை
　　யருந்திய பூத மென்ன.

(இ - ள்.) ஒருவன் பூதம் - ஒரு வலிய பூதமானது, வையை அருந்திய பூதம் என்ன - வையை நீர்ப்பெருக்கை (இரண்டு கரங்களாலுந் தடுத்துக் குடித்த குண்டோதரனென்னும் பூதம்போல, பிணத்தினைக் கோலி பிணங்களை அணையாகக் கோலி - புண்ணீர் ஆற்றினைப் பெருக்கி - சோரி யாற்றினைப் பெருக்கி, உண்பேய்க் கணத்தினை உதைத்து நூக்கி - உண்ணுகின்ற பேய்க்கூட்டத்தை உதைத்துத் தள்ளி, கரை உடைத்து - அவ்வணையை உடைத்து, நிணத்தொடும் வரும் அந்நீத்தம் - நிணங்களோடும் வாராநின்ற அச்சோரிப் பெருக்கினை, நேர்பட இருந்து - நேர்படமாக இருந்து, கையால் அணைத்து வாய் மடுக்கும் - இரண்டு கைகளாலும் தடுத்துப் பருகும். (௧௮)

புரத்தினு ளுயர்ந்த கூடற் புண்ணிய னெழுதி யெய்த
சரத்தினி லவிந்தார் சென்னிக் குற்றழிச் சார்வாய் வந்த
அரத்தினை யறுக்கும் வைவே லயற்புல வேந்தர் நச்சு
மரத்தினை யடுத்த சந்துங் கதழெரி மடுத்த தென்ன.

(இ - ள்.) புரத்தினுள் உயர்ந்த கூடல் புண்ணியன் - முத்தி நகரங்களுள் உயர்ந்த கூடலில் வீற்றிருக்கும் அறவடிவினனாகிய சோமசுந்தரக் கடவுள், எழுதி எய்த சரத்தினில் தன் பெயர் எழுதி விடுத்த வாளிகளால், சென்னிக்கு உற்றுழிச் சார்வாய் வந்த - சோழனுக்கு இடையூறு நேர்ந்துழி உதவியாகிக் காக்கவந்த, அரத்தினை அறுக்கும் வைவேல் அயல்புல வேந்தர் - அரத்தை அறுக்கும் கூரிய வேற்படையையுடைய மறுபுல மன்னர் அனைவரும், நச்சு மரத்தினை அடுத்த சந்தும் - நஞ்சு மரத்தை அடுத்த சந்தன மரங்களும், கதழ் எரி மடுத்தது என்ன - விரைந்து பற்றும் நெருப்பினால் எரியுண்டாற்போல, அவிந்தார் - இறந்துபட்டனர்.

புரம் - காசி முதலிய பதிகள். வேலின் திண்மையும் கூர்மையும் தோன்ற 'அரத்தினை யறுக்கும் வைவேல்' என்றார். நச்சுமரத்தை யழித்தற்பொருட்டு மூட்டும் எரியால் அதனைச் சார்ந்த சந்தனமரமும்

அழிதல்போலச் சோழனை அழித்தற் பொருட்டுப் புரிந்த போரில் அவற்குத் துணையாய் வந்த மன்னர்களும் அழிந்தனர் என்றார்;

> "மனத்தான் மறுவில ரேனுந்தாஞ் சேர்ந்த
> இனத்தா லிகழப் படுப—புனத்து
> வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
> எறிபுனந் தீப்பட்டக் கால்"

என்னும் நாலடிச் செய்யுள் இங்கு நோக்கற்பாலது. (ருகூ)

மாசறு காட்சி யான்றன்
வாளியா லவிந்தோர் தம்மை
மூசுவண் டென்னச் சூழ்ந்து
மொய்த்தன பைத்த கூளி
காய்சினச் சேனங் காகங்
கழுகினம் பற்றி யீர்த்துப்
பூசலிட் டொன்றோ டொன்று
போர்செய்வான் றொடங்கிற் றம்மா.

(இ-ள்.) மாசு அறு காட்சியான் தன் வாளியால் - குற்றமற்ற இயற்கை அறிவினையுடைய இறைவன் வாளிகளால், அவிந்தோர் தம்மை - இறந்தவர்களை, பைத்த கூளி - பரந்த பேய்கள், மூசுவண்டு என்னச் சூழ்ந்து மொய்த்தன - மலரில் மொய்க்கும் வண்டுகள்போலச் சூழ்ந்து மொய்த்தன; காய்சினச் சேனம் காகம் கழுகு இனம்பற்றி ஈர்த்து - மிக்க சினத்தையுடைய பருந்துகளும் காகங்களும் கழுகுக் கூட்டங்களும் பிடித்து இழுத்து, பூசல் இட்டு ஒன்றோடு ஒன்று போர் செய்வான் தொடங்கிற்று - கலகம் விளைத்து ஒன்றோடொன்று போர் புரிதற்குத் தொடங்கியது.

செய்வான்: வானீற்று வினையெச்சம். தொடங்கிற்று, பன்மையி லொருமை. அம்மா: இடைச்சொல். (௬0)

வெஞ்சின மறக்கோ னம்பி விடுகணை வெள்ளத் தாழ்ந்து
வஞ்சின முறுதன் சேனை மடிந்தது கண்டு மாழாந்
தெஞ்சின படையுஞ் சூழ வேதிலார் நகையுஞ் சூழத்
தஞ்சின மறமுஞ் சூழச் சோழனு முடைந்து போனான்.

(இ-ள்.) வெஞ்சின மறக்கோன் நம்பி - கொடிய சினத்தையுடைய வேடர் தலைவனாகிய நம்பி, விடுகணை வெள்ளத்து ஆழ்ந்து - விடுத்த அம்பு வெள்ளத்து மூழ்கி, வஞ்சினம் உறுதன் சேனை மடிந்தது கண்டு - வஞ்சினங் கூறிப் போருக்கு உற்ற தனது சேனை இறந்தொழிந் தமை கண்டு, மாழாந்து - மயங்கி, எஞ்சின படையும் சூழ - எஞ்சிய சேனையுந் தன்னைச் சூழ, ஏதிலார் நகையும் சூழ - பகைவர் நகையும் சூழ, தஞ்சின மறமும் சூழ - வீரமின்மையுஞ் சூழ, சோழனும் உடைந்து போனான் - சோழனுந் தோற்றுப்போயினான்.

வீரம் சிறிதுமின்றி என்பார் 'துஞ்சின மறமுஞ்சூழ' என்ருர். சோழனும் என்னும் உம்மை எச்சப்பொருட்டு; ஏனைய எண்ணும்மை. (௪௧)

வில்லோடு மேக மன்ன வெஞ்சிலை வேட வேந்தன்
மல்லோடு பயின்ற தென்னன் மலர்முகச் செவ்வி நோக்கி
அல்லோடு மதிவந் தென்ன வருணகை சிறிது பூத்துச்
செல்லோடு பகைபோற் கொண்ட திருவுரு மறைந்து போனன்.

(இ-ள்.) வில்லொடு மேகம் அன்ன வெஞ்சிலை வேட வேந்தன் - வில்லோடு கூடிய முகில் போன்ற கொடிய வில்லையுடைய வேட மன்னன், மல்லொடு பயின்ற தென்னன் - மற்போரிற் பயின்ற பாண்டியனது, மலர்முகச் செவ்வி நோக்கி - தாமரை மலர்போன்ற முகத்தின் பொலிவைப் பார்த்து, அல்லொடு மதிவந்தென்ன - இருளோடு சந்திரன் வந்தாற்போல, அருள்நகை சிறிது பூத்து - அருளோடு கூடிய புன்னகை சிறிது அரும்பி, செல்லொடு பகைபோல் கொண்ட - இடியுடன் பகை கொண்டாற்போலக் கொண்ட, திருஉரு மறைந்துபோனன் - திருவுருவம் மறைந்தருளினன்.

வேட நம்பியின் கரிய உடலுக்கும் வில்லுக்கும் முறையே மேகமும் இந்திர வில்லும், மற்றும் அவ்வுடற்கும் நகையொளிக்கும் இருளும் மதியும் உவமைகளாயின. முன்பு மேகம் கூறப்பட்டமையின் செல் என்பதற்கு இடி என்று பொருள் கூறப்பட்டது. அச்சம் விளைக்கும் உரு என்பது கருத்தாகக் கொள்க. (௪௨)

பாடுவா யளிதே னூட்டும் பைந்தொடைச் செழியன் வென்றிக்
கோடுவாய் வைத்திட் டார்த்துக் குஞ்சர முகட்டி லேறித்
தோடுவாய் கிழிக்குங் கண்ணார் மங்கலந் துவன்றி யேந்த
நீடுவார் திரைநீர் வேலி நீண்மதி னகரிற் புக்கான்.

(இ-ள்.) பாடு அளிவாய் தேன் ஊட்டும் பைந்தொடைச் செழியன் - இசை பாடும் வண்டுகளின் வாயில் மதுவை ஊட்டும் பசிய மாலையை யணிந்த பாண்டியன், வென்றிக் கோடுவாய் வைத்திட்டு ஆர்த்து - வெற்றிச் சங்கை வாயில் வைத்து முழக்கி, குஞ்சர முகட்டில் ஏறி - யானையின் மத்தகத்தில் ஏறி, தோடுவாய் கிழிக்குங் கண்ணார் - தோட்டின் வாயைக் கிழிக்குங் கண்ணையுடைய மகளிர், மங்கலம் துவன்றி ஏந்த - நெருங்கி அட்டமங்கலங்களையும் ஏந்த, நீடுவார் திரைநீர் வேலி - நீண்ட பெரிய அலைகளையுடைய நீரையே வேலியாகவுடைய, நீண்மதில் நகரில் புக்கான் - நீண்ட மதிலாற் சூழப்பட்ட நகரின்கட் சென்றனன்.

பாடுவாயளிதேனூட்டும் பைந்தொடைச்செழியன் என்றது பாடும் பரிசிலர்க்கு வரிசை நல்கும் பண்பினன் என்பதைக் குறிப்பிற் பெற வைத்தவாறு. கோடு - சங்கு. (௪௩)

[எண்சீரடியாசிரிய விருத்தம்]

சிலைவிற்சே வகஞ்செய்து வாகை வாங்கித்
திருவளித்த சேவகற்குச் சிறந்த பூசை
நிலைவித்தாய் மணிப்பொலம்பூ ணிறுவிச் சாத்தி
நிழல்விரிக்கும் வெயின்மணியா னெடிய மேரு
மலைவிற்றா னென்னவரிச் சிலையு நாமம்
வரைந்தகடுங் கூர்ங்கணையும் வனைந்து சாத்தி
அலைவித்தாழ் கடலுலகுக் ககலச் செங்கோ
லறம்பெருக்கும் வங்கியசே கரனு மண்ணல்.

(இ - ள்) சிலைவில் சேவகம் செய்து - ஒலித்தலையுடைய வில்லாற் போர் செய்து, வாகை வாங்கி - வெற்றிபெற்று, திரு அளித்த சேவகற்கு - தனக்கு) அரசியற்றிருவினை அளித்த வீரனாகிய சோமசுந்தரக் கடவுளுக்கு, சிறந்த பூசை நிலைவித்து - சிறந்த பூசனை நிலைபெறச் செய்து, ஆய்மணிப் பொலம்பூண் நிறுவிச்சாத்தி - ஆராய்ந்த மணிகள் அழுத்திய பொன்னாலாகிய அணிகளைச் செய்து சாத்தி, நிழல் விரிக்கும் வெயில் மணியால் - ஒளி பரப்புஞ் சிவந்த மணிகளால், நெடியமேரு மலை வில்தான் என்ன வரிச்சிலையும் - நீண்ட மேருமலையாகிய வில் இதுதான் என்று கண்டோர் கருதக் கட்டமைந்த வில்லையும், நாமம் வரைந்த கடுங்கூர்ங்கணையும் - (சுந்தரேசன் என்னும்) திருப்பெயர் தீட்டிய கடிய கூரிய கணையையும், வனைந்து சாத்தி - செய்து சாத்தி, இத்தாழ்கடல் உலகுக்கு அலைவு அகல - இந்தக் கடல்சூழ்ந்த உலகிற்குத் துன்ப மொழிய, வங்கிய சேகரனும் அண்ணல் - வங்கிய சேகரன் என்னும் பெருமை பொருந்திய பாண்டியன், செங்கோல் அறம் பெருக்கும் - செங்கோலினால் அறம் தழைத்தோங்கச் செய்து வந்தான்.

சிலைவில் - மலைபோலும் வில் என்றுமாம். சேவகஞ் செய்து - வீரத்தைக் காட்டி ; பொருது. தன் வழிபாட்டிற் கிரங்கி இறைவன் புரிந்த பேரருட் செயலைப் பின்னுள்ளார் பலரும் அறிந்துய்தல் கருதி வில்லும், சுந்தரேசன் என்னும் பெயர் தீட்டிய கணையும் வனைந்து சாத்தினன் என்க. அண்ணல் பூசை நிலைவித்து, நிறுவிச்சாத்தி, வனைந்து சாத்தி, உலகுக்கு அலைவு அகல அறம் பெருக்கும் என வினை முடிக்க. (௬௪)

ஆகச் செய்யுள் - ௨௬௧௬

ஐம்பத்தொன்றாவது

சங்கப்பலகை தந்த படலம்

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

வேடுரு வாகி மேரு வில்லிதன் னாமக் கோலெய்
தாடம ராடித் தென்ன னடுபகை துரந்த வண்ணம்
பாடினஞ் சங்கத் தார்க்குப் பலகைதந் தவரோ டொப்பக்
கூடிமுத் தமிழின் செல்வம் விளக்கிய கொள்கை சொல்வாம்.

(இ - ள்.) மேருவில்லி - மேருமலையை வில்லாகவுடைய சோமசுந்தரக்கடவுள், வேடு உருவாகித் தன் நாமக்கோல் எய்து - வேட்டுவத் திருமேனி கொண்டு தனது திருப்பெயர் தீட்டிய கணைகளை விடுத்து, ஆடு அமர் ஆடி - வெற்றியையுடைய போர்புரிந்து, தென்னன் அடு பகை துரந்த வண்ணம் பாடினம் - பாண்டியனது கொல்லும் பகையாகி வந்த சோழனைத் துரத்திய திருவிளையாடலைக் கூறினோம்; சங்கத்தார்க்குப் பலகை தந்து - (இனி அவ்விறைவனே) சங்கப் புலவர்க்குப் பலகை அளித்தருளி, அவரோடு ஒப்பக் கூடி - அவரோடு வேற்றுமையின்றிக் கூடியிருந்து, முத்தமிழின் செல்வம் விளக்கிய கொள்கை சொல்வாம் - முத்தமிழாகிய செல்வத்தைப் பொலிவுபெறச் செய்த திருவிளையாடலைக் கூறுவாம்.

கோல் - அம்பு. அடு: பகைக்கு அடை. முத்தமிழ் - இயல், இசை, நாடகம் என்னும் மூவகைத் தமிழ். தமிழின், இன்: சாரியை அல்வழிக்கண் வந்தது. (க)

வங்கிய சேக ரன்கோல் வாழுநாண் மேலோர் வைகற்
கங்கையந் துறைசூழ் கன்னிக் கடிமதிற் காசி தன்னிற்
பங்கய முளரிப் புத்தேள் பத்துவாம் பரிமா வேள்வி
புங்கவர் மகிழ்ச்சி தூங்க மறைவழி போற்றிச் செய்தான்.

(இ - ள்.) வங்கிய சேகரன் கோல் வாழுநாள் - வங்கிய சேகர பாண்டியனது செங்கோல் நன்கு நடைபெறும் நாளில், மேல் ஓர் வைகல் - முன் ஒரு நாளில், கங்கை அம்துறை சூழ் - கங்கையின் அழகிய துறை சூழ்ந்த, கன்னிக் கடிமதில் காசி தன்னில் - அழியாத காவலையுடைய மதில் சூழ்ந்த காசிப்பதியின்கண், பங்கய முளரிப் புத்தேள் - தாமரை மலரை இருக்கையாக வுடைய பிரமன், வாம்பரி மாவேள்வி பத்து - தாவுகின்ற துரங்க வேள்வி பத்தினை, புங்கவர் மகிழ்ச்சி தூங்க - தேவர்கள் மகிழ்கூர, மறைவழி போற்றிச் செய்தான் - வேதவிதிப்படி பேணிச் செய்தான்.

வாழுநாள் மதுரை நோக்கி நண்ணுவார் என, மேற் பதின்மூன்றுஞ் செய்யுளோடு இயையும். பங்கயமாகிய முளரியென்க. வாம்-வாவும்; பரிக்கு அடை. பரிமா: இருபெயரொட்டு. (உ)

நிரப்பிய வழிநா ணன்னீ ராடுவா னீண்ட வீணை
நரப்பிசை வாணி சாவித் திரியெனு நங்கை வேத
வரப்பிசை மனுவாங் காயத் திரியெனு மடவா ரோடும்
பரப்பிசைக் கங்கை நோக்கிப் படருவான் படரு மெல்லை.

(இ-ள்.) நிரப்பிய வழிநாள் - (அவற்றைச்) செய்து முடித்த பின்னர், நல்நீர் ஆடுவான் - நல்ல நீரின்கண் ஆடுதற் பொருட்டு, நரப்பு இசை நீண்ட வீணை வாணி - நரம்பின் இசை பொருந்திய நெடிய வீணையையுடைய கலைமகளும், சாவித்திரி எனும் நங்கை - சாவித்திரி எனும் நங்கையும், வேதவரப்பு இசை மனுவாம் - வேத வரம்பாக அமைந்த மந்திர வடிவாகிய, காயத்திரி எனும் மடவாரோடும் - காயத்திரியுமாகிய இம்மூன்று மனைவிகளோடும், இசை பரப்பு கங்கை நோக்கிப் படருவான் - புகழைப் பரப்புகின்ற கங்கையாற்றினை நோக்கிச் செல்வானாயினன்; படரும் எல்லை - அங்ஙனஞ் செல்லும் பொழுது.

மனு - மந்திரம். (கூ)

நானவார் குழலி னாரம் மூவரு* ணாவின் செல்வி
வானவா றியங்கும் விஞ்சை மாதரா ளொருத்தி பாடுங்
கானவா றுள்ளம் போக்கி நின்றனள் கமல யோனி
யானவா றறிவ னேகி யந்நதிக் கரையைச் சேர்ந்தான்.

(இ-ள்.) நானவார் குழலினார் அம்மூவருள் - பயிர்ச் சாந்தணிந்த நீண்ட கூந்தலையுடைய அந்த மூவரு மகளிருள், நாவின் செல்வி - நாமகள், வான ஆறு இயங்கும் விஞ்சை மாதராள் ஒருத்தி - வானின் வழியே செல்லுதலையுடைய ஒரு விஞ்சைமகள், பாடும் கான ஆறு உள்ளம் போக்கி நின்றனள் - பாடுகின்ற இசை நெறியில் உள்ளத்தைச் செலுத்தி நின்றாள்; கமலயோனி ஆனவால் அறிவன் ஏகி - தாமரையிற் றோன்றினவனாகிய தூய அறிவினையுடைய பிரமன் சென்று, அந்நதிக் கரையைச் சேர்ந்தான் - அந்நதிக் கரையினை அடைந்தான்.

நின்றனள் - தாழ்த்து நின்றனள். கமல யோனி - திருமாலின் உந்தித் தாமரையில் உதித்தோன். (௰)

நாமகள் வரவு தாழ்ப்ப
நங்கைய ரிருவ ரோடுந்
தாமரைக் கிழவன் மூழ்கித்
தடங்கரை யேறு மெல்லைப்
பாமகள் குறுகி யென்னை
யன்றிநீ படிந்த வாறென்
னுமெனா வெகுண்டாள் கேட்ட
வம்புயத் தண்ணல் சொல்வான்.

(பா-ம்.) *அம்மூவரில்.

(இ-ள்.) நாமகள் வரவு தாழ்ப்ப - வாணியின் வரவு தாழ்த்தலி னால், நங்கையர் இருவரோடும் - மற்றை இரண்டு மடந்தையரோடும், தாமரைக் கிழவன் மூழ்கி - தாமரை மலரில் இருக்கும் பிரமன் நீராடி, தடம்கரை ஏறும் எல்லை - பெரிய கரையில் ஏறுங்கால், பாமகள் குறுகி - கலைமகள் சென்று, என்னை அன்றி நீ படிந்தவாறு என்னும் என வெகுண்டாள் - என்னையல்லாது நீ நீராடியது என்னை என்று சினந்தாள், கேட்ட அம்புயத்து அண்ணல் சொல்வான் - அதனைக் கேட்ட பிரமன் கூறுவான். (௫)

குற்றநின் மேல தாக
　　நம்மைநீ கோபங் கோள்வ
தெற்றென வினைய தீங்கை
　　யெண்ணறு மாக்க டோற்றம்
உற்றனை யொழித்தி யென்று
　　வுரைத்தனன் சாப மேற்கும்
பொற்றொடி மடந்தை யஞ்சிப்
　　புலம்புகோண் டவலம் பூண்டாள்.

(இ-ள்.) குற்றம் நின்மேலது ஆக - குற்றம் நின் கண்ணதாக, நம்மை நீ கோபம் கொள்வது எற்று என - எம்மை நீ வெகுள்வது எத் தன்மைத்து என்று கூறி, இனைய தீங்கை - இந்தக் குற்றத்தை, எண் அறு மாக்கள் தோற்றம் உற்றனை ஒழித்தி என்று சாபம் உரைத்தனன் - நாற்பத்தெட்டு மக்களாகத் தோன்றி ஒழிப்பாயென்று சாபங் கூறினன், ஏற்கும் பொன்தொடி மடந்தை - அச்சாபத்தை ஏற்கும் பொன்னாலாகிய வளையை யணிந்த கலைமகள், அஞ்சிப் புலம்பு கொண்டு அவலம் பூண்டாள் - அஞ்சிப் புலம்பித் துன்பமுற்றாள்.

இனைய தீங்கு - வரவு தாழ்த்த குற்றமும், கோபங் கொண்ட குற்றமும். (௬)

ஊனிட ரகன்றோ யுன்ற ருயிர்த்துணை யாவே னிந்த
மானிட யோனிப் பட்டு மயங்குகோ வென்ன வண்டு
தேனிடை யழுந்தி வேதஞ் செப்பும்வெண் கமலச் செல்வி
தானிட ரகல நோக்கிச் சதுர்முகத் தலைவன் சாற்றும்.

(இ-ள்.) ஊன் இடர் அகன்றோய் - உடம்பெடுத்தலாலுளதாகிய துன்பம் நீங்கியோய், உன் ஆர் உயிர்த்துணை ஆவேன் - உனது அரிய உயிர்த்துணை ஆகும் யான், இந்த மானிட யோனிப்பட்டு மயங்குகோ என்ன - இந்த மனிதப்பிறப்பின் பாற்பட்டு மயங்குவேனோ என்று கூற, வண்டு தேன்இடை அழுந்தி வேதம் செப்பும் - வண்டுகள் தேனில் மூழ்கி வேதம் பாடுவதற்கிடமாயுள்ள, வெண்கமலச் செல்வி - வெண் டாமரை மலரை இருக்கையாகவுடைய அக் கலைமகளின், இடர் அகல நோக்கி - துன்பம் நீங்க நோக்கி, சதுர்முகத்தலைவன் சாற்றும் - நான் முகனாகிய நாயகன் கூறுவான்.

அயன் பிறப்பில்லாதவன் என்னுங் கருத்தால் ஊனிட ரகன்றவன் எனப்பட்டான். மனிதப் பிறப்பின் துன்பத்தையறியாத உனக்கு உயிர்த் துணையாகிய யான் அத்துன்பத்தள் அழுந்துதல் முறையோ என்றாள் என்க. அவள் இருகைகையாகிய கமலத்து வண்டு வேதஞ் செப்பும் எனவே அவள் வேதஞ் செபபுதல் கூறவேண்டாதாயிற்று. (எ)

முகிழ்தரு முலைநின் மெய்யா முதலெழுத் தைம்பத் தொன்றிற்
றிகழ்தரு மாகா ராதி ஹாகார மீறுச் செப்பிப்
புகழ்தரு நாற்பத் தெட்டு நாற்பத்தெண் புலவ ராகி
அகழ்தரு கடல்சூழ் ஞாலத் தவதரித் திடுவ வாக.

(இ - ள்.) முகிழ் தரும் முலை - அரும்பு போலும் முலையையுடைய மாதே, நின் மெய்யாம் முதல் எழுத்து ஐம்பத்து ஒன்றில் - நினது வடிவமாகிய ஐம்பத்தொரு முதலெழுத்துக்களில், திகழ் தரும் - விளங்கா நின்ற, ஆகாரம் ஆதி ஹாகாரம் ஈறுச் செப்பிப் புகழ் தரும் நாற்பத்தெட்டும் - ஆகாரம் முதல் ஹாகாரம் இறுதியாகக் கூறிப் புகழப்பட்ட நாற்பத்தெட்டு எழுத்துக்களும், நாற்பத்து எண் புலவர் ஆகி - நாற்பத் தெட்டுப் புலவர்களாகி, அகழ்தரு கடல்சூழ் ஞாலத்து - தோண்டிய கடல் சூழ்ந்த நிலவுலகில், அவதரித்திடுவ ஆக - அவதரித் திடுவனவாக.

நாற்பத் தெட்டெழுத்து - வடமொழி உயிரெழுத்தில் ஆகாரம் முதலிய பதினைந்தும் ககரம் முதலிய முப்பத்து மூன்றும் ஆம். க்ஷ முதலியன கூட்டெழுத்து ஆதலின் விலக்கப்பட்டன. சீர் நிரம்புதற்கு ஹாகாரம் என நெடிலாக்கிச் சாரியை கொடுத்தார். (அ)

அத்தகு வருண மெல்லா மேறிநின் றவற்ற வற்றின்
மெய்த்தகு தன்மை யெய்தி வேறுவே றியக்கந் தோன்ற
உய்த்திடு மகாரத்திற்கு முதன்மையா யொழுகு நாதர்
முத்தமி ழால வாயெம முதல்வரம் முறையான் மன்னோ.

(இ - ள்.) அத்தகு வருணம் எல்லாம் - அத்தகைய எழுத்துக்கள் அனைத்திலும், ஏறி நின்று - ஊர்ந்து நின்று, அவற்று அவற்றின் மெய்த்தகு தன்மை எய்தி - அவ்வவ்வெழுத்துக்களின் மெய்யாய தன்மையைப் பொருந்தி, வேறு வேறு இயக்கம் தோன்ற உய்த்திடும் அகாரத்திற்கு - வேறு வேறாக இயங்குமாறு செலுத்தும் அகரத்திற்கு, முதன்மையாய் ஒழுகும் நாதர் - தலைமையாய் ஒழுகும் இறைவர், முத்தமிழ் ஆலவாய் எம் முதல்வர் - மூன்று தமிழையுமுடைய ஆலவாயின்கண் அமர்ந்த எமது சோமசுந்தரக் கடவுள்; அம்முறையால் - அம்மரபினால்.

வருணம் - வர்ணம்; எழுத்து.

"மெய்யி னியக்கம் அகரமொடு சிவணும்"

என்னும் தொல்காப்பியச் சூத்திர வுரையில், 'இங்ஙனம் மெய்க்கண் அகரம் கலந்து நிற்குமாறு கூறினாற் போலப் பதினோருயிர்க்கண்ணும் அகரம் கலந்து நிற்குமென்பது ஆசிரியர் கூறாராயினர், அந்நிலைமை தமக்கே புலப்படுதலானும் பிறர்க்கு இவ்வாறு உணர்த்துதல் அரிதாக லானும் என்று உணர்க. இறைவன் இயங்குதிணைக்கண்ணும் நிலைத்

நிலைக்கண்ணும் பிறவற்றின்கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்கு மாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல அகாமும் உயிர்க்கண்ணும் தனி மெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்குமென்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்தது' என நச்சினார்க்கினியர் கூறி யிருப்பதும்,

"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

என்னும் முதற்குறளும்,

"அகர வுயிர்போல் அறிவாகி யெங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து."

என்னும் திருவருட்பயன் முதற் செய்யுளும் இங்கு நோக்கற்பாலன. மன்னும் ஓவும் அசைகள். (கூ)

தாமொரு புலவ ராகித் திருவுருத் தரித்துச் சங்க
மாமணிப் பீடத் தேறி வைகியே நாற்பத் தோன்ப
தாமவ ராகி யுண்ணின் றவரவர்க் கறிவு தோற்றி
ஏமுறப் புலமை காப்பா ரென்றனன் கமலப் புத்தேள்.

(இ-ள்.) தாம் ஒரு புலவர் ஆகித் திரு உருத் தரித்து - தாமும் ஒரு புலவராகத் திருமேனி தாங்கி, சங்கம் மாமணிப் பீடத்து ஏறி - சங்கத்தின் பெருமை பொருந்திய மணிகள் அழுத்திய தவிசில் ஏறி, வைகி - ஒரு சேர வீற்றிருந்து, நாற்பத்தொன்பதாம் அவராகி - நாற்பத் தொன்பதாவது புலவர் என்னும் எண்ணையுடையராய், உள் நின்று அவர் அவர்க்கு அறிவு தோற்றி - அகத்தின்கண் நின்று அந்நாற்பத் தெண்மருக்கும் அறிவை விளக்கி, ஏமுறப் புலமை காப்பார் என்றனன் கமலப்புத்தேள் - அரணாகப் புலமையைக் காத்தருளுவர் என்று பிரமன் கூறினன்.

சங்கப்பீடம் - சங்கப்பலகை. (கo)

அக்கர நாற்பத் தெட்டு மவ்வழி வேறு வேறு
*மக்களாய்ப் பிறந்து பன்மாண் கலைகளின் வகைமை தேர்ந்து
தொக்கவா ரியமு மேனைச் சொற்பதி னெட்டு மாய்ந்து
தக்கதேன் கலைநுண் டேர்ச்சிப் புலமையிற் றலைமை சார்ந்தார்.

(இ-ள்.) அக்கரம் நாற்பத்து எட்டும் - நாற்பத்தெட்டு எழுத்துக் களும், அவ்வழி வேறுவேறு மக்களாய் பிறந்து - அங்ஙனமே வெவ்வேறு மக்களாகத் தோன்ற, பல் மாண் கலைகளின் வகைமை தேர்ந்து - (அவர்கள்) பல மாட்சிமைப்பட்ட கலைகளின் வகைகளைத் தெளிந்து, ஆரியமும் ஏனை தொக்க சொல்பதினெட்டும் ஆய்ந்து - ஆரிய மொழி யையும் மற்றைய பதினெட்டாகத் தொகுக்கப்பட்ட மொழிகளையும்

---

* அக்கரங்கள் மக்களாய்ப் பிறந்தனவாகக் கூறியதன் கருத்து, கபிலர் என்னும் உரை நூலில் விளக்கப் பெற்றுளது.

ஆராய்ந்து. தக்க தென் கலைநுண் தேர்ச்சிப் புலமையில் - பெருமை வாய்ந்த தமிழ்க் கலையின் நுண்ணிய தேர்ச்சிப் புலமையில், தலைமை சார்ந்தார் - தலைமை பெற்றார்.

மக்களாய்ப் பிறக்க அங்ஙனம் பிறந்த நாற்பத்தெண்மரும் தேர்ந்து ஆய்ந்து தலைமை சார்ந்தார் என விரித்து முடித்துக்கொள்க. சிறப்புப் பற்றி ஆரியமும் தமிழும் பிரித்தோதப்பட்டன. (கக)

கழுமணி வயிரம் வேய்ந்த கலன்பல வன்றிக் கண்டிக்
கோழுமணிக் கலனும் பூணுங் குளிர்நிலா நீற்று மேய்யர்
வழுவறத் தெரிந்த செஞ்சொன் மாலையா லன்றி யாய்ந்த
செழுமலர் மாலை யானுஞ் சிவார்ச்சனை செய்யு நீரார்.

(இ - ள்.) கழுமணி வயிரம் வேய்ந்த - (அவர்கள்) சாணை பிடித்த மணிகளாலும் வயிரங்களாலும் புனைந்த, கலன் பல அன்றி - பல கலன்களே அல்லாமல், கண்டிக் கொழு மணிக் கலனும் பூணும் - உருத்திராக்க மாலையாகிய கொழுவிய மணிக்கலனையும் அணியும், குளிர் நிலா நீற்று மெய்யர் - தண்ணிய நிலாப்போலுந் திருநீறு தரித்த மேனியையுடையார், வழு அறத் தெரிந்த செஞ்சொல் மாலையால் அன்றி - குற்றமற ஆராய்ந்த செவ்விய சொற்களாற் றொடுக்கப்பட்ட பாமாலையாலல்லாமல் ஆய்ந்த செழுமலர் மாலையாலும் - ஆராய்ந்தெடுத்துத் தொடுத்த புதிய மலர் மாலையினாலும், சிவார்ச்சனை செய்யும் நீரார் - சிவவழிபாடு செய்யுந் தன்மையை யுடையார்.

பாமாலை சூட்டுவதும் அருச்சனையாதலை,

"மற்றுநீ வன்மை பேசி வன்றொண்ட னென்னு நாமம்
பெற்றனை நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகு மாதலான் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்"

என்று சிவபிரான் வன்றொண்டர்க்கு அருளினமை கூறும் பெரிய புராணச் செய்யுளால் அறிக. (கஉ)

புலந்தோறும் போகிப் போகிப் புலமையால் வேன்று வேன்று
மலர்ந்ததண் போருநை நீத்த வளங்கேழு நாட்டில் வந்து
நிலந்தரு திருவி னுன்ற நிறைநிதிச் சேழியன் சேங்கோல்
நலந்தரு மதுரை நோக்கி நண்ணுவார் நண்ணு மேல்லே.

(இ - ள்.) புலந்தொறும் போகிப் போகி - நாடுகள் தோறுஞ் சென்று சென்று, புலமையால் வென்று வென்று - புலமைத் திறத்தால் அங்குள்ளவர்களை வென்று வென்று, மலர்ந்த தண் பொருநை நீத்தம் - பரந்த தண்ணிய பொருநை வெள்ளத்தால், வளம் கெழு நாட்டில் வந்து - வளம் மிக்க பாண்டிய நாட்டின்கண் வந்து, நிலம் தரு திருவின் - மாற்றாரது நிலத்தைத் தனக்கு நல்கும் போர்த்திருவினால், ஆன்ற நிறை நிதிச் செழியன் - மிகவும் நிறைந்த நிதியினையுடைய பாண்டியனது, செங்கோல் நலம் தரு மதுரை நோக்கி நண்ணுவார் - செங்கோலால்

நன்மை பொருந்திய மதுரையை நோக்கி வருவாராயினர்; நண்ணும் எல்லை - அங்ஙனம் வரும்பொழுது.

அடுக்கு தொழிற் பயில்வுப் பொருட்டு. தொல்காப்பியப் பாயிர வுரையில், "நிலந்தரு திருவிற் பாண்டியன்" என்பதற்கு, 'மாற்றாரது நிலத்தைக் கொள்ளும் போர்த்திருவினையுடைய பாண்டியன்' என நச்சினார்க்கினியர் உரை கூறியது இங்கு நோக்கற்பாலது. வேற்று நாட்டு மன்னர்களாலே திறையாகத் தரப்பட்ட திரு என்றுமாம். திருவின் என்பதற்குத் திருவுடன் என்றுரைத்தலுமாம். (௧௬)

பற்பல கலைமாண் டேர்ச்சிப் பனுவலின் பயனாய் நின்ற
அற்புத மூர்த்தி யெந்தை யாலவா யடிக ளாங்கோர்
கற்பமை கேள்வி சான்ற கல்வியின் செல்வ ராகிச்
சொற்பதங் கடந்த பாத மிருநிலந் தோய வந்தார்.

(இ - ள்.) பற்பலகலை - பலவகைப்பட்ட கலைகளையுடைய, மாண் தேர்ச்சிப் பனுவலின் பயனாய் நின்ற அற்புதமூர்த்தி எந்தை - மாட்சிமைப்பட்ட தேர்ச்சியையுடைய மறையின் பயனாய் நிலைபெற்ற ஞானமூர்த்தியும் எம் தந்தையும் ஆகிய, ஆலவாய் அடிகள் - மதுரைப் பிரானாகிய சோமசுந்தரக் கடவுள், ஆங்கு - அங்கு, ஓர் கற்பு அமை கேள்வி சான்ற கல்வியின செல்வராகி-கற்றலும் அமைந்த கேள்வியும் நிறைந்த ஒரு புலவராகி, சொல்பதம் கடந்த பாதம் இருநிலம் தோயவந்தார் - சொல்லளவைக் கெட்டாத திருவடிகள் இப்பெரிய நிலத்திற் றோய நடந்து வந்தார்.

கற்பும் அமை கேள்வியும் சான்ற என்க ;

"கற்றல் கேட்ட லுடையார் பெரியார்"

என்பது திருநெறித் தமிழ்மறை. கல்வியின் செல்வர் - கல்வியாகிய செல்வத்தை யுடையர்; சாரியை அல்வழிக்கண் வந்தது. பாதம் சொற்பதங் கடந்ததாதலைப்

"பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்"

என்னும் திருவாசகத்தானறிக. (௧௭)

அவ்விடை வருகின் றாரை நோக்கிநீ ராரை நீவிர்
எவ்விடை நின்றும் போது கின்றனி ரென்ன வன்னார்
வெவ்விடை யனையீர் யாங்கள் விஞ்சைய ரடைந்தோர் பாவம்
வௌவிடு பொருநை நாட்டின் வருகின்றே மென்ன லோடும்.

(இ - ள்.) அவ்விடை வருகின்றாரை நோக்கி நீர் ஆர் - அங்கு வருகின்றவரை நோக்கி நீவிர் யாவர், நீவிர் எவ்விடை நின்றும் போதுகின்றனிர் என்ன - நீவிர் எங்கிருந்து வருகின்றீர் என்று கேட்க, அன்னார் - அப்புலவர்கள், வெவ்விடை அனையீர் - பெருமிதமுடைய இடபம் போல்வீர், யாங்கள் விஞ்சையர் - யாங்கள் புலவர்களாவேம், அடைந்தோர் பாவம் வௌவிடு - அடைந்தாரது பாவத்தைப்போக்கும், பொருநை நாட்டின் வருகின்றேம்-பொருநை சூழ்ந்த பாண்டி நாட்டின் கண்ணே வந்துகொண்டிருக்கின்றேம், என்னலோடும் - என்று கூறிய வளவில்.

ஆரை: ஐகாரம் முன்னிலைக்கண் வந்தது. வெவ்விடை - விருப்பஞ் செய்யும் விடையுமாம். பொருநை நாட்டின் எல்லையை அடைந்து அங்கு நின்றும் வருகின்றேம் என்றுமாம். (கரு)

தனிவரு புலவர் நீவிர் தண்டமி ழால வாயெங்
கனிவரு கருணை மூர்த்தி கனைகழ லிறைஞ்சல் வேண்டும்
இனிவரு கென்ன நீரே யெங்களுக் களவில் கோடி
துனிவரு வினைக டீர்க்குஞ் சுந்தரக் கடவு ளென்றார்.

(இ - ள்.) தனிவரு புலவர் - தனியே வந்த புலவராகிய இறைவர், நீவிர் - நீங்கள், தண் தமிழ் ஆலவாய் - தண்ணிய தமிழையுடைய திருவாலவாயில் எழுந்தருளிய, எம் கனிவரு கருணைமூர்த்தி கனைகழல் இறைஞ்சல் வேண்டும் - எமது கனிந்த அருளையுடைய சோமசுந்தரக் கடவுளின் ஒலிக்கும் வீரக்கழலணிந்த திருவடியை வணங்கவேண்டும் (ஆதலால்), இனி வருக என்ன - இப்பொழுதே வரக்கடவீர் என்று கூறியருள, எங்களுக்கு அளவு இல் கோடி துனிவரு வினைகள் தீர்க்கும் - எங்களுக்கு அளவிறந்த கோடி துன்பத்தைத் தரும் வினைகளைப் போக்கியருளும், சுந்தரக்கடவுள் நீரே என்றார் - சோமசுந்தரக்கடவுள் நீரே என்று (அப்புலவர்கள்) கூறினார்கள்.

சோமசுந்தரக்கடவுளின் திருவடியை வணங்குமாறு நீர் எதிர் வந்து அழைத்த பேருதவியை உன்னின் எங்கட்கு நீரே அக்கடவுளாவீர் என்றனர்; சமற்காரமாக உண்மையை வெளிப்படுத்தியவாறுங் காண்க. வருகென்ன: அகரந் தொகுத்தல். (கசு)

மறையினா றொழுகும் பன்மாண்
கலைகள்போன் மாண்ட கேள்வித்
துறையினா றொழுகுஞ் சான்றோர்
சூழமீண் டேகிக் கூடற்
கறையினார் கண்டத் தாரைப்
பணிவித்துக் கரந்தா ரொற்றைப்
பிறையினார் மகுடந் தோற்றா
தறிஞராய் வந்த பெம்மான்.

(இ - ள்.) மறையின் ஆறு ஒழுகும் பல்மாண் கலைகள்போல் - வேதத்தின் வழியே ஒழுகும் பல மாட்சிமைப்பட்ட கலைகள்போல, மாண்ட கேள்வித் துறையின் ஆறு ஒழுகும் சான்றோர் சூழ - மாட்சிமைப்பட்ட கேள்வித் துறையின் வழியே ஒழுகும் புலவர் தம்மைச் சூழ்ந்துவர, ஒற்றைப் பிறையின் ஆர் மகுடம் தோற்றாது - ஒற்றைப் பிறை பொருந்திய சடை முடியை வெளிப்படுத்தாது, அறிஞராய்வந்த பெம்மான் - புலவராய் வந்த சோமசுந்தரக் கடவுள்; மீண்டு ஏகி - திரும்பிச் சென்று, கூடல் கறையின் ஆர் கண்டத்தாரைப் பணிவித்துக் கரந்தார் - கூடலிலெழுந்தருளிய நஞ்சக் கறை பொருந்திய திருமிடற்றையுடைய இறைவனை வணங்குவித்து மறைந்தருளினார்.

சான்றோர் கலைகள்போற் சூழ என்க. கறையினார், பிறையினார் என்பவற்றில் இன் வேண்டாவழிச் சாரியை. (கஎ)

விம்மித மடைந்து சான்றோர்
 விண்ணிழி விமான மேய
செம்மலை வேறு வேறு
 செய்யுளாற் பரவி யேத்திக்
கைம்மலை யுரியி னார்தங்
 காறொழு திறைஞ்சி மீண்டு
கோய்ம்மலர் வாகைச் செவ்வேற்
 செழியனைக் குறுகிக் கண்டார்.

(இ - ள்.) சான்றோர் - புலவர்கள், விம்மிதம் அடைந்து - வியப்புற்று, விண் இழி விமானம் மேய செம்மலை - வானினின்றும் இறங்கிய இந்திரவிமானத்தில் எழுந்தருளிய இறைவரை, வேறு வேறு செய்யுளால் பரவி ஏத்தி - வெவ்வேறு செய்யுட்களாலே துதித்துப் புகழ்ந்து, கைமலை உரியினார் தம் கால் தொழுது - யானைத்தோலைப் போர்வையாக வுடைய அவ்விறைவர் திருவடிகளைத் தொழுது, இறைஞ்சி - வணங்கி, மீண்டு - திரும்பி, கொய் வாகைமலர் செவ்வேல் செழியனைக் குறுகிக் கண்டார் - கொய்த வாகை மலர்மாலை சூடிய சிவந்த வேலையுடைய பாண்டியனைச் சென்று கண்டனர்.

தம்மை அழைத்துவந்து தரிசிப்பித்தவர் அவ்விறைவரேயென உணர்ந்தமையால் விம்மித மெய்தினர் என்க. வாகைமாலை - வெற்றி மாலை. (கஅ)

மறமலி நேமிச் செங்கோன் மன்னவன் வந்த சான்றோர்
அறமலி கேள்வி நோக்கி யவைக்களக் கிழமை நோக்கித்
திறமலி யொழுக்க நோக்கிச் சீரியர் போலு மென்னா
நிறைமலி யுவகை பூத்த நெஞ்சினா னிதனைச் செய்தான்.

(இ - ள்.) மறம்மலி நேமிச் செங்கோல் மன்னவன் - வெற்றிமிக்க சக்கரத்தையும் செங்கோலையுமுடைய வங்கிய சேகர பாண்டியன், வந்த சான்றோர் அறம்மலி கேள்வி நோக்கி - வந்த புலவர்களின் அறம் நிறைந்த கல்வியை நோக்கியும், அவைக்களக் கிழமை நோக்கி - அவைக் களத்தில் இருத்தற்குரிய தகுதியை நோக்கியும், திறம்மலி ஒழுக்கம் நோக்கி - வகையமைந்த ஒழுக்கத்தை நோக்கியும், சீரியர் போலும் என்னா - சிறந்தவர்கள் என்று கருதி, நிறைமலி உவகை பூத்த நெஞ்சினான் இதனைச் செய்தான் - நிறைதல் மிக்க மகிழ்பூத்த உள்ளமுடையனாய் இதனைச் செய்வானாயினன்.

அவைக்களத்தில் இருத்தற்குரிய தகுதியாவது,

“குடிப்பிறப்புக் கல்வி குணம்வாய்மை தூய்மை
நடுச்சொல்லு நல்லணி யாக்கங் - கெடுக்கும்
அழுக்கா றவாவின்மை யவ்விரண்டோ டெட்டும்
இழுக்கா அவையின்க ணெட்டு”

என வெண்பாமாலையிற் கூறப்பட்ட எண்வகை யியல்பினை உடைத்தாயிருத்தல். போலும்: ஒப்பில் போலி. (கக)

திங்களங் கண்ணி வேய்ந்த செக்கரஞ் சடில நாதன்
மங்கலம் பெருகு கோயில் வடகுட புலத்தின் மாடோர்
சங்கமண் டபமுண் டாக்கித் தகைமைசால் சிறப்பு நல்கி
அங்கமர்ந் திருத்தி ரென்ன விருத்தின னறிஞர் தம்மை.

(இ-ள்.) திங்கள் அம் கண்ணி வேய்ந்த - சந்திரனாகிய அழகிய மாலையையணிந்த, செக்கர் அம் சடிலநாதன் - சிவந்த அழகிய சடையையுடைய சோமசுந்தரக் கடவுளின், மங்கலம் பெருகு கோயில் - மங்கலம் மிக்க திருக்கோயிலின், வடகுடபுலத்தின் மாடு - வடமேற்றிசைப் பக்கத்தில், ஓர் சங்கமண்டபம் உண்டாக்கி - ஒரு சங்கமண்டபம் எடுத்து, தகைமைசால் சிறப்பு நல்கி - தகுதிநிறைந்த பலவரிசைகளை அளித்து, அங்கு அமர்ந்து இருத்திர் என்ன இருத்தினன் அறிஞர் தம்மை - அங்கே தங்கியிருப்பீராக என்று அப்புலவர்களை இருத்தினன்.

அமர்ந்திருத்திர் என்பதற்கு விரும்பி யுறைவீர் என்றுரைத்தலுமாம். (உ0)

வண்டமிழ் நாவி னூர்க்கு மன்னவன் வரிசை நல்கக்
கண்டுளம் புழுங்கி முன்னைப் புலவரக் கழகத் தோரை
மண்டினர் மூண்டு மூண்டு வாதுசெய் தாற்றன் முட்டிப்
பண்டைய புலனுந் தோற்றுப் படருழந் தெய்த்துப் போனார்.

(இ-ள்.) வண்தமிழ் நாவினூர்க்கு - வளவிய தமிழையுடைய செந்நாப் புலவர்கட்கு, மன்னவன் வரிசை நல்க - பாண்டியன் பலவரிசைகளை அளிக்க (அதனை), முன்னைப் புலவர் கண்டு உளம் புழுங்கி - பழைய புலவர்கள் கண்டு உள்ளம் வெந்து, அக்கழகத்தோரை - அச்சங்கப் புலவரை, மண்டினர் மூண்டு மூண்டு வாது செய்து - நெருங்கிச் சென்று சென்று வாது புரிந்து, ஆற்றல் முட்டிப் பண்டைய புலனும் தோற்று - தங்கள் ஆற்றல் குன்ற முன்னுள்ள புலமையையும் இழந்து, படர் உழந்து எய்த்துப் போனார் - துன்புற்று மனமிளைத்துச் சென்றனர்.

மண்டினர்: முற்றெச்சம். அடுக்கு தொழிற் பயில்வுப் பொருட்டு. முட்டி: செயவெனெச்சத் திரிபு. பழைய புலமை இழுக்குற்றமையால் 'பண்டைய புலனுந் தோற்று' என்றார். (உக)

இனையர்போல் வந்து வந்து மறுபுலத் திருக்குங் கேள்வி
வினைஞரு மதமேற் கொண்டு வினய்வினய் வாதஞ் செய்து
மனவலி யிளைப்ப வென்று வைகுவோ ரொன்றை வேண்டிப்
புனையிழை பாக நீங்காப் புலவர்மு னண்ணி னாரே.

(இ-ள்.) இனையர்போல் - இந்தப் புலவர்கள்போலவே, மறுபுலத்து இருக்கும் கேள்வி வினைஞரும் - வேற்று நாட்டிலுள்ள நூற்கேள்வி வல்ல புலவர்களும், வந்து வந்து மதம் மேற்கொண்டு வினய் வினய் வாதம் செய்து - வந்து வந்து தருக்கினை மேற்கொண்டு பலமுறை வினவி வாதித்து, மனவலி இளைப்ப - மனத்தின் திட்பங்கெட, வென்று - (அவர்களை) வென்று, வைகுவோர் - தங்கியிருக்கும் அக்

கழகத்தார், ஒன்றை வேண்டி-ஒரு பொருளைக் கருதி, புனை இழை பாகம் நீங்காப் புலவர்முன் நண்ணினர் - உமையம்மையை இடப்பாகத்தில் நீங்காத புலவராகிய சோமசுந்தரக் கடவுள் திருமுன் சென்றனர்.

ஈண்டும் அடுக்குகள் அப்பொருளன. நூற்கேள்வியே தொழிலாக வுடைய ரென்பார் 'கேள்வி வினைஞரும்' என்றார் மதம் மேற்கொண்டு என்பதற்கு உடன்படல் முதலிய எழுவகை மதத்தினை மேற்கொண்டு என்றுரைத்தலுமாம். விஞவி என்பது விகாரமாயிற்று. ஒன்று: பண்பாகு பெயர். புனையிழை - அணியப்பட்ட அணியினையுடையாள்: அன்மொழித்தொகை. (உ௨)

முந்துநூன் மொழிந்தார் தம்மை
முறைமையால் வணங்கி யெம்மை
வந்துவந் தெவரும் வாதஞ்
செய்கின்றார் வரிசை யாக
அந்தமில் புலமை தூக்கி
யளப்பதா* வெம்ம னோர்க்குத்
தந்தருள் செய்தி சங்கப்
பலகையொன் றென்று தாழ்ந்தார்.

(இ-ள்.) முந்துநூல் மொழிந்தார் தம்மை - முதனூலாகிய வேதாகமங்களை அருளிச்செய்த இறைவனை, முறைமையால் வணங்கி - முறைப்படி வணங்கி, எம்மை வரிசையாக வந்து வந்து எவரும் வாதம் செய்கின்றார் - எம்மோடு தொடர்ச்சியாக வந்து வந்து எவரும் வாதிக்கின்றனர்: அந்தம் இல் புலமை தூக்கி அளப்பதா - (ஆதலால்) முடிவில்லாத புலமையைச் சீர்தூக்கி அளக்குங் கருவியாக, எம்மனோர்க்கு - எமக்கு, சங்கப்பலகை ஒன்று தந்தருள் செய்தி என்று தாழ்ந்தார் - ஒரு சங்கப் பலகை அளித்தருளுவாயாக என்று வேண்டி வணங்கினர்.

முந்துநூல் - தமிழ் இலக்கண முதனூலுமாம்;

"வினையி னீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்"

என்பதுங் காண்க. வரிசையாக - இடையறுது என்றபடி. (உ௩)

பாடிய பாணற் கன்று வலியவே பலகை யிட்டார்
பாடிய புலவர் வேண்டிற் பலகைதந் தருளார் கொல்லோ
பாடிய புலவ ராகும் படியொரு படிவங் கொண்டு
பாடிய புலவர் காணத் தோன்றினர் பலகை யொடும்.

(இ-ள்.) பாடிய பாணற்கு அன்று வலியவே பலகை இட்டார் - தம்மைப் பாடிய பாணபத்திரனுக்கு அன்று வலிந்து பலகை அருளிய சோமசுந்தரக் கடவுள், பாடிய புலவர் வேண்டில் - பாடிய புலவர்கள் தாமே (ஒரு பலகையை) வேண்டினால், பலகை தந்தருளார் கொல்லோ -

---

(பா-ம்.) * அளப்பதாய்.

அதனைத் தாரா திருப்பரோ, பாடிய புலவர் ஆகும்படி ஒரு படிவம் கொண்டு - பாடுகின்ற புலவராம் வண்ணம் ஒரு திருவுருவந் தாங்கி. பாடிய புலவர் காண பலகையோடும் தோன்றினர் - பாடிய அப் புலவர்கள் காணப் பலகையுடன் வெளிவந்தனர்.

பாணற்குப் பலகை யிட்டமை பலகையிட்ட படலத்திற் காண்க. வலிய - கேளாமலே. இட்டார்: பெயர். கொல்லோ என்பதில் கொல் அசை நிலை; ஓகாரம் எதிர்மறைப் பொருட்டு. இது சொற்பொருட் பின்வரு நிலையணி. (௨௭)

சதுரமா யளவி ரண்டு சாணதிப் பலகை யம்ம
மதியினும் வாலி தாகு மந்திர வலிய தாகும்
முதியநம் போல்வார்க்கெல்லா முழம்வளர்ந் திருக்கை நல்கும்
இதுநமக் களவு கோலா யிருக்குமேன் றியம்பி யீந்தார்.

(இ - ள்.) சதுரமாய் அளவு இரண்டு சாணது இப்பலகை - சதுர வடிவினதாய் இரண்டு சாண் அளவுள்ளதாகிய இந்தப் பலகை, மதியினும் வாலி தாகும் - சந்திரனிலும் வெள்ளியதாகும்; மந்திர வலியது ஆகும் - மந்திர வலியை யுடையதாகும்; முதிய நும் போல்வார்க்கு எல்லாம் - அறிவால் முதிய நும் போன்றார்க்கெல்லாம், முழம் வளர்ந்து இருக்கை நல்கும் - ஒவ்வொரு முழமாக வளர்ந்து இருக்கை யளிக்கும்; இது - இப்பலகை, நுமக்கு அளவு கோலாய் இருக்கும் என்று இயம்பி - உங்களுக்கு ஓர் அளவு கருவியாக இருக்குமென்று கூறி, ஈந்தார் - (அதனைத்) தந்தருளினார்.

சாணது: குறிப்பு முற்று பெயரெச்சமாயது. அம்ம: வியப்பிடைச் சொல். பலகை வெண்ணிறமுடைய தென்பதனை வருஞ் செய்யுளாலு மறிக; அறிவால் அளத்தற்கரிய புலமைத் திறத்தை இஃது அளத்த லால் அறிவினும் தூயதாகும் என்றலுமாம். புலமை முற்றியார்க்கு வளர்ந்து இருக்கை நல்கி ஏனையர்க்கு இடந் தராமையின், 'மந்திர வலியது' என்றார். (௨௮)

நாமக ளுருவாய் வந்த நாவலர் தமக்கு வெள்ளைத்
தாமரை யமளி தன்னைப் பலகையாத் தருவ தென்னக்
காமனை முனிந்தார் நல்கக் கைக்கோடு களிறு தாங்கும்
மாமணிக் கோயி றன்னை வளைந்துதங் கழகம் புக்கார்.

(இ - ள்.) நாமகள் உருவாய் வந்த நாவலர் தமக்கு - கலைமகள் வடிவாக வந்த அப்புலவர்களுக்கு, வெள்ளைத்தாமரை அமளி தன்னை - வெண்டாமரையாகிய தவிசினை, பலகையாத் தருவ தென்ன - ஒரு பலகையாகச் செய்து தருவதுபோல, காமனை முனிந்தார் நல்க - மன் மதனை எரித்த இறைவர் தந்தருள, கைக்கொடு - (அவர்கள்) அதனை ஏற்றுக்கொண்டு, களிறு தாங்கும் மாமணிக் கோயில் தன்னை - யானைகள் சுமக்கும் பெரிய மணிகள் அழுத்திய திருக்கோயிலை, வளைந்து - வலம் வந்து, தம் கழகம் புக்கார் - தமது அவையிற் புகுந்தனர்.

தருவது : தொழிற் பெயர். (௨௯)

நாறுபூந் தாம நாற்றி நறும்பனி தோய்ந்த சாந்தச்
சேறுவெண் மலர்வெண் டூசு* செழும்புகை தீப மாதி
வேறுபல் வகையாற் பூசை வினைமுடித் திறைஞ்சிக் கீரன்
ஏறினான் கபில னோடு பரணனு மேறி னானே.

(இ-ள்) நாறு பூந்தாமம் நாற்றி - மணமுள்ள பூமாலைகளைத் தொங்கவிட்டு, நறும்பனி தோய்ந்த சாந்தச்சேறு - நறிய பனிநீர் அளாவிய சந்தனக் குழம்பும், வெண்மலர் வெண்தூசு செழுபுகை தீபம் ஆதி - வெண்மலரும் வெள்ளாடையும் செழிய தூபமும் தீபமும் முதலிய, வேறு பல்வகையால் பூசை வினை முடித்து - வேறு பலவகையாலும் பூசைவினை முடித்து, இறைஞ்சி - வணங்கி, கீரன் ஏறினான் - நக்கீரன் முன்னர் ஏறினான், கபிலனோடு பரணனும் ஏறினான் - கபிலனோடு பரணனும் ஏறினான்.

இறைவனால் அருளப்பட்ட தெய்வமாப் பலகை ஆதலின் பூசித்து வணங்கி யேறினர் என்க. முதன்மை பற்றி இம்மூவரையும் விதந்து கூறினார். ஓடு, உடனிகழ்ச்சி. (உஎ)

இருங்கலை வல்லோ ரெல்லா மிம்முறை யேறி யேறி
ஒருங்கினி திருந்தார் யார்க்கு மொத்திடங் கொடுத்து நாதன்
தருஞ்சிறு பலகை யொன்றே தன்னுரை செய்வோர்க் கெல்லாஞ்
சுருங்கிநின் றகலங் காட்டித் தோன்றுநூல் போன்ற தன்றே.

(இ-ள்.) இருங்கலை வல்லோர் எல்லாம் - பெரிய நூல் வல்லோரனைவரும், இம்முறை ஏறி ஏறி ஒருங்கு இனிது இருந்தார் - இங்ஙனமே ஏறியேறி ஒருசேர வீற்றிருந்தனர்; நாதன் தரும் சிறுபலகை ஒன்றே - இறைவன் தந்தருளிய சிறிய பலகையொன்றே, யார்க்கும் ஒத்து இடம் கொடுத்து - அனைவர்க்கும் ஒக்க இடங்கொடுத்து, தன் உரை செய்வோர்க்கு எல்லாம் - தன் உரை காண்பாரனைவருக்கும், சுருங்கி நின்று அகலம் காட்டித் தோன்றும் நூல்போன்றது - எழுத்தாற் சுருங்கி நின்று பொருள் விரிவு காட்டித் தோன்றும் நூலை ஒத்தது.

ஒத்து - ஒக்க. கொடுத்த அதனால் நூல்போன்றது என்க. அகலம் - விரிவுரை. அன்று, ஏ: அசைகள். (உஅ)

மேதகு சான்றோர் நூலின் வினைபொருள் விளங்கத் தம்மில்
ஏதுவு மெடுத்துக் காட்டு மெழுவகை மதமுங் கூறும்
போதவை தெளிந்த கிள்ளை பூவையே புறம்பு போந்து
வாதுசெய் வார்கள் வந்தான் மறுத்துநேர் நிறுத்து மன்னோ.

(இ-ள்.) மேதகு சான்றோர் - மேம்பட்ட அப்புலவர்கள், நூலின் வினைபொருள் விளங்க - நூல்களில் அமைந்த பொருள் விளங்க, தம்மில் - தம்முள்; ஏதுவும் எடுத்துக்காட்டும் எழுவகை மதமும் கூறும்போது - ஏதுவும் உதாரணமும் எழுவகை மதமும் கூறும்போது, அவை தெளிந்த கிள்ளை பூவையே - அவற்றைக் கேட்டுத் தெளிந்த, கிளியும் நாகணவாய்ப்

(பா - ம்.) * வண்மலர் வண்டூசு.

பறவையுமே, புறம்பு போந்து - வெளியே வந்து, வாது செய்வார்கள் வந்தால் - வாதஞ் செய்வார்கள் வந்தால், மறுத்து நேர் நிறுத்தும் - அவர்கள் கொள்கையை மறுத்துத் தங்கொள்கையை நிலைநாட்டும்.

ஏதவும் எடுத்துக்காட்டும் தமது மேற்கோளை நிலைபெறுத்துதற் பயத்தன. எழுவகை மதமாவன - உடன்படல், மறுத்தல், பிறர் மதம் மேற்கொண்டு களைதல், தான் நாட்டித் தனது நிறுப்பு, இருவர் மாறு கோள் ஒருதலை துணிதல், பிறர் நூற்குற்றங் காட்டல், பிறிதொடு படான் றன்மதங்கொளல் என்பன. எண்ணும்மை தொக்கன நூற் பொருள் விளங்க ஏது திருட்டாந்தங்களும் எழுவகை மதம் முதலியவும் இடையறாது கூறுதலின் கிளியும் பூவையும் அவற்றைப் பயின்று கூறுவ வாயின என்க. அவையே அங்ஙனஞ் செய்யுமெனவ அச்சான்றோர் பெருமை கூறியவாறு. மன்னும் ஓவும் அசைகள்.

"பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோதும் ஓசை கேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருட்சொல்லும் மிழலை யாமே"

என்னும் பிள்ளையார் தேவாரமும்,

"உள்ள மாருந காதவர் ஊர்விடை
தள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளு மோசைத் திருப்பதி கங்கள்பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்"

என்னும் பெரிய புராணச் செய்யுளும் இங்கே சிந்திக்கற்பாலன. (௨௧)

[கலி விருத்தம்]

ஆய வாறெண் புலவரு மாய்ந்துணர்
பாய கேள்விப் பயன்பெற மாட்சியாற்
றூய பாட றொடங்கினர் செய்துகொண்
டேய வாறிருந் தாரந்த வெல்லைவாய்.

(இ-ள்.) ஆய ஆறு எண் புலவரும் - அந்நாற்பத்தெட்டுப் புலவர்களும், ஆய்ந்து உணர் பாய கேள்விப் பயன் பெற - (தாம்) ஆராய்ந்து தெளிந்த பரந்த நூற்கேள்வியின் பயன் விளங்க, மாட்சியால் தூய பாடல் தொடங்கினர் செய்துகொண்டு - மாண்புடனே தூய பாடல்களைத் தொடங்கிப் பாடிக்கொண்டு, ஏயவாறு இருந்தார் - தம்மிச்சை வழியே இருந்தனர்; அந்த எல்லைவாய் - அப்பொழுது.

பயனைப் பிறரும் பெறுதற்பொருட்டு என்றுமாம். தொடங்கினர்: முற்றெச்சம். ஏயவாறு என்பதற்கு இறைவர் பணித்தவாறு என்றுரைத் தலுமாம். (௩௦)

பலருஞ் செய்த பனுவலு மாண்பொருண்
மலருஞ் செல்வமுஞ் சொல்லின் வளமையுங்
குலவுஞ் செய்யுட் குறிப்புமொத் தோன்றியே
நிலைமை யங்கிக் கிடந்தவத் தன்மையால்

(இ - ள்.) பலரும் செய்த பனுவலும் - அப்புலவர் பலருஞ் செய்த பாட்டுக்கள் அனைத்தும், மலரும் மாண்பொருள் செல்வமும் - (உரை காண்போர் அறிவிற்கேற்றவாறு) விரியும் மாட்சிமையுடைய பொருள் விழுப்பமும், சொல்லின் வளமையும் - சொல் வளப்பமும், குலவும் செய்யுள் குறிப்பும் - செய்யுளிலே குறிப்பிற்றோன்றும் பொருளும், ஒத்து ஒன்றி - ஒரு நிகரவாகப் பொருந்துதலால், தலைமயங்கிக் கிடந்த - (வேறுபாடு அறிய முடியாது) தலைமயங்கிக் கிடந்தன ; அத்தன்மையால் - அதனால்.

பனுவல் - பாட்டு. குறிப்பு - வியங்கியம். கிடந்த = அன்பெறாத பலவின்பால் முற்று. (௩௧)

வேறு பாடறி யாது வியந்துநீர்
கூறு பாட லிதுவென்றுங் கோதிலேன்
தேறு பாட லிதுவென்றுஞ் செஞ்செவே*
மாறு பாடுகோண் டார்சங்க வாணரே.

(இ - ள்.) வேறுபாடு அறியாது - வேறுபாடு உணராமல், வியந்து - தம்முள் வியப்புற்று, நீர் கூறு பாடல் இது என்றும் - நீர் கூறிய பாடல் இதுதான் என்றும், கோதுஇல் என் தேறு பாடல் இது என்றும் - குற்றமில்லாத எனது தெளிந்த பாடல் இதுதான் என்றும், சங்கவாணர் செஞ்செவே மாறுபாடு கொண்டனர் - சங்கப் புலவர்கள் ஒருவருக்கொருவர் நேரே மாறுபாடு கொண்டனர்.

செஞ்செவே - செவ்வையாக ; நன்றாக. வாணர்: மரூஉ. (௩௨)

மருளு மாறு மயக்கற வான்பொருள்
தெருளு மாறுஞ் செயவல்ல கள்வர்சொற்
பொருளு மாமது ரேசர் புலவர்முன்
அருளு நாவல ராய்வந்து தோன்றினர்.

(இ - ள்.) மருளுமாறும் - மயங்குமாறும், மயக்கு அற வான் பொருள் தெருளுமாறும் - அம்மயக்கம் நீங்க உண்மைப் பொருள் தெளியுமாறும், செயவல்ல கள்வர் - செய்தற்கு வல்ல கள்வரும், சொல் பொருளும் ஆம் மதுரேசர் - சொல்லும் பொருளுமாம் மதுரேசருமாகிய சோமசுந்தரக் கடவுள், புலவர் முன் அருளும் நாவலராய் வந்து தோன்றினர் - அப் புலவர்கள் முன் அருளுகின்ற ஒரு புலவராய் வந்து தோன்றினர்.

இறைவர் சொல்லும் பொருளுமாதலை,

"சொல்லை நம்பி பொருளாய் நின்ற நம்பி"

என நம்பியாரூரர் தேவாரத்துள் ஓதுதலான் அறிக. (௩௩)

வந்த நாவலர் வந்திக்கு நாவலர்
சிந்தை யாகுலஞ் செய்ய மயக்குறும்
பந்த யாப்பைக் கோணர்கெனப் பாவலர்
எந்தை யீங்கிவை யென்றுமுன் னிட்டனர்.

(பா - ம்.) * செஞ்சவே.

(இ - ள்.) வந்த நாவலர் - அங்ஙனம் வந்த நாவலராகிய இறைவர், வந்திக்கும் நாவலர் சிந்தை ஆகுலம் செய்ய மயக்குறும் - தம்மை வணங்கும் புலவர்களின் மனம் வருந்த மயக்கும், பந்த யாப்பைக் கொணர்க என - தளையமைந்த செய்யுட்களைக் கொண்டு வருவீராக என்று கட்டளையிட, பாவலர் - அப்புலவர்கள், எந்தை - எம் தந்தையே, ஈங்கு இவை என்று முன் இட்டனர் - இங்குள்ள இவையே என்று அவற்றைக் கொண்டு வந்து திருமுன் வைத்தனர்.

பந்தம் - தளை. யாப்பு - செய்யுள் என்னும் பொருட்டு. கொணர்கென: அகரந்தொகுத்தல். (௩௪)

தூய சொல்லும் பொருளின் றொடர்ச்சியும்
ஆய நாவல ரவ்வவர் தம்முது
வாய பாடல் வகைதெரிந் தவ்வவர்க்
கேய வேயெடுத் தீந்தன ரென்பவே.

(இ - ள்.) தூய சொல்லும் பொருளின் தொடர்ச்சியும் ஆய நாவலர் - தூய சொல்லும் தொடர்ந்த பொருளுமாகிய அந்நாவலர் பெருமான், அவ்வவர்தம் முதுவாய பாடல் - அவ்வப்புலவர்களின் பொருள் முதிர்ச்சி வாய்ந்த பாடல்களின், வகை தெரிந்து - வேறுபாடுகளை அறிந்து, அவ்வவர்க்கு ஏயவே - அவ்வவர்க்கு மனம் பொருந்துமாறு, எடுத்து ஈந்தனர் - எடுத்து அளித்தனர்.

பொருளின் றொடர்ச்சி என்பதனைத் தொடர்ந்த பொருள் என மாறுக. சொல்லும் பொருளுமாம் என்பதற்கு மேல் எடுத்துக்காட்டினமை காண்க. இதற்குச் சொல்லின் தொடர்ச்சியும் பொருளின் றொடர்ச்சியும் ஆராய என்றுரைப்பாருமுளர். முதுவாய பாடல் என்பதற்கு முதிர்ந்த வாயிடத்தவான பாடல் என்றுரைத்தலுமாம். என்ப: அசை. (௩௫)

வாங்கு சங்கப் புலவர் மனங்களித்
தீங்கு நீரெம ரோடு மொருத்தராய்
ஓங்கி வாழ்திரென் றொல்லெனத் தங்களைத்
தாங்கு செம்பொற் றவிசி லிருத்தினர்.

(இ - ள்.) வாங்கு சங்கப்புலவர் - அவற்றை வாங்கிய சங்கப் புலவர்கள், மனம் களித்து - மனமகிழ்ந்து, நீர் எமரோடும் ஒருத்தராய் ஈங்கு ஓங்கி வாழ்திர் என்று - நீர் எம்முடன் ஒருவராய் இங்கே சிறந்து வாழ்வீராக என்று கூறி, ஒல்லென - விரைந்து, தங்களைத் தாங்கு செம்பொன் தவிசில் இருத்தினர் - தங்களைத் தாங்குகின்ற சிவந்த பொன்னாலாகிய பலகையில் இருத்தினர்கள்.

ஒல்லென: விரைவுக் குறிப்பு. ஒல்லென இருத்தினர் என்க. (௩௬)

பொன்னின் பீடிகை யென்னும்பொன் னாரமேல்
துன்னு நாவலர் சூழ்மணி யாகவே
மன்னி னார்நடு நாயக மாமணி
என்ன வீற்றிருந் தார்மது ரேசரே.

(இ-ள்,) பொன்னின் பிடிகை என்னும்-பொற்பலகை என்னும், பொன் ஆரமேல் - பொன்னாரத்தில், துன்னும் நாவலர் சூழ் மணியாக மன்னினர் - பொருந்திய நாற்பத்தெண் புலவரும் சுற்றிலும் பதித்த மணிகளாக இருந்தனர், மதுரேசர் - சோமசுந்தரக்கடவுள், மாநடு நாயகம் மணி என்ன வீற்றிருந்தார் - பெருமை பொருந்திய நடுநாயக மணி என்னுமாறு வீற்றிருந்தனர்.

நாயகமணி - தலைமை மணி. (௬௭)

நதிய ணிந்தவர் தம்மோடு நாற்பத்தோன்
பதின்ம ரேன்னப் படும்புல வோரேலாம்
முதிய வான்றமிழ் பின்னு முறைமுறை
மதிவி ளங்கத் தோடுத்தவண் வாழுநாள்.

(இ-ள்.) நதி அணிந்தவர் தம்மொடும் - கங்கையைத் தரித்த இறைவரோடும், நாற்பத்தொன்பதின்மர் என்னப்படும் புலவோரெலாம் - நாற்பத்தொன்பதின்மரென்று கூறப்படும் புலவர்களனை வரும், பின்னும் முதியவான் தமிழ் - மீண்டும் தொன்மையுஞ் சிறப்பு முடைய தமிழ்ப் பாக்களை, முறை முறை மதிவிளங்கத் தொடுத்து - முறை முறையாகக் கற்போர்க்கு அறிவு விளங்கத் தொடுத்து, அவண் வாழுநாள் - அங்கு வாழும்பொழுது.

தமிழ் என்றது தமிழ்ச் செய்யுட்களை யுணர்த்திற்று. முதிய என்றது தமிழுக்கு அடை. மதிவிளங்க என்பதற்குப் புலமைத்திறம் வெளிப்பட என்றுரைத்தலுமாம். (௬௮)

[கலிநிலைத்துறை]

வங்கிய சேகரன் வங்கிய சூடா மணிதன்னைப்
பொங்கிய தேசார் முடிபுனை வித்துப் புவிநல்கி
இங்கியல் பாச வினைப்பகை சாய விருந்தாங்கே
சங்கியல் வார்குழை யானடி யோன்றிய சார்புற்றான்.

(இ-ள்.) வங்கிய சேகரன் - வங்கிய சேகரபாண்டியன், வங்கிய சூடாமணி தன்னை - வங்கிய சூடாமணிக்கு, பொங்கிய தேசு ஆர் முடி புனைவித்து-விளங்கிய ஒளி நிறைந்த முடி சூட்டி, புவிநல்கி - புவியாட்சியை அளித்து, இங்கு இயல் பாச வினைப்பகை சாய இருந்து-இம்மையில் அமைந்த வினைப்பாசம் என்னும் பகைமைகெட இருந்து, ஆங்கே சங்கு இயல்வார் குழையான் அடி ஒன்றிய சார்பு உற்றான் - மறுமையிற் சங்கினாலமைந்த நீண்ட குழையினையுடைய சிவபெருமான் திருவடியிற் கலத்தலாகிய வீடுபேற்றை அடைந்தனன்.

வங்கிய சூடாமணிக்கு என நான்கனுருபாகத் திரிக்க. பாசவினை - வினைக்கயிறு;

"பாசமாம் வினைப் பற்றறுப்பான்."

என்னும் திருத்தொண்டர் புராணச் செய்யுளும் நோக்குக. சார்பு - மூத்திநிலை என்னும் பொருட்டு. (௬௯)

ஆகச் செய்யுள் ௨௩௬௨.

ஐம்பத்திரண்டாவது

தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்

[கலிநிலைத்துறை]

சொற்குவை தேரும் பாவலர் மேவத் தொகுபீடம்
அற்குவை கண்டத் தண்ண லளித்த தறைந்தேமால்
தற்குவை தந்தா லுய்குவ லென்னுந் தருமிக்குப்
பொற்குவை நல்கும் வண்ண மெடுத்துப் புகல்கிற்பாம்.

(இ-ள்.) சொல்குவை தேரும் பாவலர் மேவ - சொற்கூட்டங்களை ஆராய்ந்து தெளியும் புலவர்கள் தங்க, தொகு பீடம் - சங்கப் பலகையை, அல்குவை கண்டத்து அண்ணல் - செறிந்த இருளையுடைய திருமிடற்றினையுடைய இறைவன், அளித்தது அறைந்தேம் - தந்தருளியதைக் கூறினேம்; தற்கு உவை தந்தால் உய்குவல் என்னும் தருமிக்கு - தனக்கு அந்தப் பொற்கிழியிலுள்ள காசுகளை அளித்தால் பிழைப்பேன் என்று வேண்டுந் தருமிக்கு, பொன்குவை நல்கும் வண்ணம் எடுத்துப் புகல்கிற்பாம் - அப் பொற் காசுகளை ஈந்தருளிய திருவிளையாடலை இனிது விதந்து கூறுவாம்.

சொற்குவை - பெயர் வினை இடை உரிகள் ஆகும் செஞ்சொல், ஆக்கச்சொல், குறிப்புச் சொல் என்பன. தொகுபீடம் - தொக்கிருக்கும் பீடம்; சங்கப் பலகை. ஆல்: அசை. உவை: சுட்டிடைச் சொல் அடியாகப் பிறந்த பலவின்பாற் பெயர். (க)

மன்னவர் மன்னன் வங்கிய சூடா மணிமாறன்
தென்னவ ராகித் திகிரி யுருட்டுந் தென்கூடல்
முன்னவ ரன்னங் கண்டறி யாத முடிக்கேற்பப்*
பன்மலர் நல்கு நந்தனம் வைக்கும் பணிபூண்டான்.

(இ-ள்.) மன்னவர் மன்னன் வங்கிய சூடாமணி மாறன் - வேந்தர் வேந்தனாகிய வங்கிய சூடாமணி பாண்டியன், தென்னவராகித் திகிரி உருட்டும் - சுந்தர பாண்டியராய் ஆக்கினை சக்கரஞ் செலுத்திய, தென் கூடல் முன்னவர் - தென்றிசைக் கண்ணதாகிய நான்மாடக் கூடலில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளின், அன்னம் கண்டு அறியாத முடிக்கு ஏற்ப - பிரமனாகிய அன்னப்பறவை காணாத திருமுடிக்குப் பொருந்த, பல்மலர் நல்கும் - பல மலர்களைக் கொடுக்கும், நந்தனம் வைக்கும் பணிபூண்டான் - திருநந்தவனம் வைத்தலாகிய திருப்பணியை மேற்கொண்டான்.

நந்தவனம் நந்தனம் என மரீஇயது; மகிழ்ச்சியைத் தரும் பூந்தோட்டம் என்பது பொருள். (உ)

---

* (பா-ம்.) முடிக்கேற்ற: முடிக்கேற.

மாதவி பாதிரி தாதகி கூவிள மந்தாரந்
தாதவிழ் மல்லிகை முல்லையி லஞ்சி தடங்கோங்கம்
வீதவழ் கொன்றை கரந்தைசெ ழுங்கர வீரந்தண்
போதவிழ் நந்தி செருந்திகு ருந்தம் புன்னாகம்.

(இ - ள்.) மாதவி பாதிரி தாதகி கூவிளம் மந்தாரம் - குருக்கத்தியும் பாதிரியும் ஆத்தியும் வில்வமும் மந்தாரமும், தாது அவிழ் மல்லிகை - மகரந்தத்தொடு மலர்ந்த மல்லிகையும், முல்லை இலஞ்சி தடம் கோங்கம் - முல்லையும் மகிழும் பெரிய கோங்கும், வீதவழ் கொன்றை கரந்தை செழுங் கரவீரம் - வண்டுகள் மொய்க்கும் கொன்றையும் கரந்தையும் வளவிய அலரியும், தண்போது அவிழ் நந்தி செருந்தி குருந்தம் புன்னாகம் - தண்ணிய போது விரிந்த நந்தியாவட்டமும் செருந்தியும் குருந்தமும் புன்னாகமும். (ஃ)

முண்டக மென்கடி நீலமு தற்பல முப்போதும்
எண்டிசை யுங்கம ழும்படி நந்தன மெங்குந்தேன்
உண்டிசை வண்டு படிந்துமு ரன்றிட வுண்டாக்கி
வண்டிமிர் சண்பக நந்தன முந்தனி வைத்தானால்.

(இ - ள்.) முண்டகம் மென்கடி நீலம் முதல் பல - தாமரையும் மெல்லிய மணமுள்ள நீலோற்பலமுமாகிய இவை முதலிய பல மலரும், முப்போதும் எண்திசையும் கமழும்படி - மூன்று காலத்தும் எட்டுத் திக்குகளிலும் மணங்கமழுமாறு, நந்தனம் - திருநந்தவனத்தினை, எங்கும் தேன் படிந்து உண்டு வண்டு இசை முரன்றிட - எங்கும் தேனிற்படிந்து அதனைப் பருகி வண்டுகள் இசை பாட, உண்டாக்கி - ஆக்குவித்து, வண்டு இமிர் சண்பக நந்தனமும் - வண்டுகள் ஒலிக்கும் சண்பக நந்தவனமும், தனி வைத்தான் - தனியே வைத்தான்.

முப்போது - காலை, நண்பகல், மாலை என்பன. கமழ என்பது கமழும்படி என வழக்கில் வந்தது. மகரந்தத்திற் படிந்து என்றுமாம். (ரு)

பொய்த்திடு நுண்ணிடை மங்கல மங்கையர் பொன்பூண்டார்
ஒத்தெழு சண்பக மொய்த்தவ ரும்ப ருடைந்தெங்கும்
வைத்திடு நந்தன வாசம்வி ழுங்கி மணங்கான்று
பைத்து மலர்ந்தன கண்டு மகிழ்ந்து பரித்தேரான்.

(இ - ள்.) பொய்த்திடு நுண் இடை மங்கல மங்கையர் - இளைத்த நுண்ணிய இடையினையுடைய மங்கல மகளிர், பொன் பூண்டார் ஒத்து - பொன்னணி பூண்டதை யொத்து, எழு சண்பகம் - மேலெழுந்த சண்பகங்கள், மொய்த்த அரும்பர் உடைந்து - நெருங்கிய அரும்புடைந்து, எங்கும் வைத்திடு நந்தனவாசம் விழுங்கி - வேறெங்கும் வைத்த நந்தவனத்தின் மணத்தைத் தன்னுட்படுத்தி, மணம் கான்று - மணம் வீசி, பைத்து மலர்ந்தன - பசந்து மலர்ந்தன; பரித்தேரான் கண்டு மகிழ்ந்து - குதிரை பூட்டிய தேரையுடைய பாண்டியன் அதனைக் கண்டு மகிழ்ந்து

புலப்படாமையின் பொய்யென்று கூறத் தக்க இடையென்பார், 'பொய்த்திடு நுண்ணிடை' என்றார். பூண்டார் என்னும் முற்று, தொழில் மேனின்றது. அரும்பர்: ஈற்றுப்போலி. அரும்படைந்து என்னுஞ் சினைவினை முதன்மேல் நின்றது. பைத்து: பசுமை யென்னும் பண்படியாகப் பிறந்த வினையெச்சம். (௫)

செருக்கிய வண்டு விழாமலர் கோய்து தெரிந்தாய்ந்து
நெருக்கிய விண்டை நிரைத்தொடை தொங்க னெடுந்தாமம்
மருக்கிளர் கண்ணி தொடுத்தணி வித்து வணங்காரூர்
கருக்கிய கண்ணுத லார்திரு மேனி கவின்செய்தான்.

(இ-ள்.) செருக்கிய வண்டு விழா மலர் கொய்து தெரிந்து ஆய்ந்து - கள்ளுண்டு களித்த வண்டுகள் மோவாத மலர்களைக் கொய்து குற்றமில்லன தெரிந்து காம்பு முதலியன ஆய்ந்து, நெருக்கிய இண்டை நிரைத்தொடை தொங்கல் நெடுந்தாமம் - நெருங்கத் தொடுத்த இண்டையும் வரிசையாகிய தொடையும் தொங்கலும் நெடிய தாமமும், மருக்கிளர் கண்ணி தொடுத்து அணிவித்து - மணம் வீசும் கண்ணியும் ஆகிய பலவகை மாலைகளைத் தொடுத்து அணிவித்து, வணங்கார் ஊர் கருக்கிய கண்ணுதலார் திருமேனி கவின் செய்தான் - பகைவரின் திரிபுரத்தை எரித்து நீருக்கிய நெற்றிக்கண்ணையுடைய சோமசுந்தரக் கடவுளின் திருமேனியை அழகு செய்தான்.

இண்டை - தண்ட வடிவமாகத் தொடுத்த மாலை; தொடை - சதுரமாகத் தொடுத்த மாலை; தாமம் - கோத்த மாலை; கண்ணி - வட்ட வடிவமாகத் தொடுத்த மாலை. தொடை - தொடுக்கப்படுவது; மாலை. (௬)

அன்னவி யன்பொழின் மாமத ரேச ரடித்தாழ்வோன்
பொன்னவிர் சண்பக மாலைபு னைந்த புதுக்கோலம்
தன்னைவி யந்திவர் சண்பக சுந்தரர் தாமென்னு
முன்னரி றைஞ்சின னிம்பம ணிந்த முடித்தென்னன்.

(இ-ள்.) அன்னவியன் பொழில் மாமதுரேசர் - அந்தப் பரந்த சோலை சூழ்ந்த மதுரையில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளின், அடித்தாழ்வோன் - அடியை வணங்குவோனாகிய, நிம்பம் அணிந்த முடித் தென்னன் - வேப்ப மலர் மாலை சூடிய முடியையுடைய அப்பாண்டியன் பொன் அவிர் சண்பகமாலை புனைந்த புதுக்கோலம் தன்னை வியந்து பொன்போல விளங்கும் சண்பகமாலை அணிந்த புதிய கோலத்தைக் கண்டு வியப்புற்று, இவர் சண்பக சுந்தரர் என்னு முன்னர் இறைஞ்சினன் - இவர் சண்பக சுந்தரர் என்று கூறித் திருமுன் வணங்கினன்.

அன்ன: அகரச் சுட்டின் திரிபு. தாழ்வோனாகிய தென்னன் எனக் கூட்டுக. சண்பகசுந்தரர் என்று பெயர் கூறி வணங்கினன் என்க. (எ)

அன்னதோர் நாமம் பெற்றன ரின்று மணிக்கூடன்
முன்னவ ரந்தத் தாமம வர்க்கு முடிக்கேற்றும்
இன்னதோர் நீராற் சண்பக மாற னென்றேபேர்
மன்னிவி ளங்கினன் வங்கிய சூடா மணிதானும்.

(இ - ள்.) அணிக்கூடல் முன்னவர் - அழகிய கூடலில் எழுந்தருளிய முதல்வராகிய சோமசுந்தரக் கடவுள், இன்றும் அன்னது ஓர் நாமம் பெற்றனர் - இதுபோதும் அந்த ஒரு திருநாமத்தைப் பெற்றார்; அந்தத் தாமம் - அந்தச் சண்பக மாலைகளை, அவர் முடிக்கு ஏற்றும் இன்னதொர் நீரால் - அவரது திருமுடிக்கு ஏற்றும் இத்தன்மையால், வங்கிய சூடாமணியும் - வங்கிய சூடாமணி என்னும் பாண்டியனும், சண்பக மாறன் என்றே பேர் மன்னி விளங்கினன் - சண்பக பாண்டியன் எனப் பெயரெய்தி விளங்கினன்.

அன்னது இன்னது என்பன சுட்டுத் திரிபுகள், ஓர்: விகாரம். இறுதியிலுள்ள உம்மை எச்சவும்மை. (அ)

சண்பக மாறன் சண்பக சுந்தரர் தம்மாடே
நண்பக மாறு நன்பணி செய்யு நன்னாளிற்
பண்பகர் சொல்லார் தம்புடை மாரன் படுபோர்மூண்
டெண்பக வெய்வா னாகிய வந்தன் றிளவேனில்.

(இ - ள்) சண்பக மாறன் - சண்பக பாண்டியன், சண்பக சுந்தரர் தம்மாடு - சண்பக சுந்தரரிடத்து, நண்பு, அகம் மாறு நன்பணி செய்யும் நல் நாளில் - அன்பு உள்ளத்தினின்றும் நீங்காமல் நல்ல திருப்பணி செய்து வரும் நல்ல நாளில், பண்பகர் சொல்லார் தம்புடை - பண்ணும் புகழுஞ் சொல்லினையுடைய மகளிரிடத்து, மாரன் படுபோர் மூண்டு - மதவேள் மிக்க போர்த்தொழிலின் மூண்டு, எண்பக எய்வான் ஆகிய - அளவிறப்ப அம்புகளை எய்ய, இளவேனில் வந்தன்று - இளவேனிற் காலம் வந்தது.

நண்பு - நண்ணுதல் என்றுரைப்பாருமுளர். பண்பகர் சொல்லார் என்பதற்குப் பண்போலப் பகர்கின்ற சொல்லார் என்றும் கேட்போர் பண்ணென்று கூறும் சொல்லினையுடையார் என்றும் உரைத்தலுமாம்; எண்பக என்பதற்கு நெஞ்சு பிளக்க என்றுரைத்தலும் ஆம். எய்வானாகிய: ஒரு சொல்; செய்யிய வென்னும் வினையெச்சம். வந்தன்று: உடன்பாட்டு முற்று. (கூ)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

மனிதர்வெங் கோடை தீர்க்கும் வசந்தமென் காலும் வேறு
துனிதவி ரிளங்கால் வேண்டுஞ் சோலையுஞ் சோலை வேண்டும்
புனிதநீர்த் தடமும் வேறு புதுமல ரோடை வேண்டும்
பனிதரு மதியும் வேறு பான்மதி வேண்டுங் காலம்.

(இ - ள்.) (அவ்விளவேனில்) மனிதர் வெங்கோடை தீர்க்கும் வசந்த மென்காலும் - மக்களின் கொடிய வெப்பத்தைப் போக்கும் இளந்தென்றலும், துனிதவிர் வேறு இளங்கால் வேண்டும் - (தனது வெப்பத்தாலாகிய) துன்பத்தை நீக்கும் வேறு இளந்தென்றலை விரும்பும், சோலையும் சோலை வேண்டும் - சோலையும் வேறு சோலையை விரும்பும், புனித நீர்த்தடமும் - தூயநீர் நிறைந்த தடாகமும், வேறு புது மலர் ஓடைவேண்டும் - வேறுநாள்மலர் நிறைந்த நீரோடையை விரும்பும், பனிதரு மதியும் - மக்களுயிர்க்குத் தட்பந் தருஞ் சந்திரனும், வேறு பால் மதி வேண்டும் - வேறு வெள்ளிய சந்திரனை விரும்பும், காலம் - காலமாயிருந்தது.

மனிதர் வெங்கோடை தீர்க்கும் என்னும் அடையைச் சோலை முதலியவற்றோடுங் கூட்டி, வேண்டும் என்னும் பெயரெச்சம் நான்கனையும் காலம் என்பதனோடு தனித்தனி முடிக்க. மக்கள் வெப்பொழிக்கும் தண்ணிய பொருள்களும் தமக்கு வேறு தண்ணிய பொருள்களை விரும்புமெனக் கூறியது வெம்மை மிகுதியைக் குறிப்பாகத் தந்து நிற்றலால் இது குறிப்பு என்னும் குணவணியாகும். பெருங்காப்பியத்திற்குரிய பருவ வருணனை இது முதலிய செய்யுட்களாற் கூறப்படுகின்றது. (௧௦)

அண்டவான் றருமேற் சீறிச் சிவந்தெழுந் தாங்குத் தேமாத்
தண்டளி ரீன்று வானந் தைவர நிவந்த காசு
கொண்டிடை யழுத்திச் செய்த குழையணி மகளிர் போல
வண்டிறை கொள்ளப் பூத்து மலர்ந்தன செருந்தி யெல்லாம்.

(இ - ள்.) தேமா - மாமரங்கள், அண்டவான் தருமேல் சீறிச் சிவந்து எழுந்தாங்கு - வானின்கண் உள்ள சிறந்த கற்பகத் தருவின் மேற் சீறிச் சிவந்தெழுந்தாற்போல, தண் தளிர் ஈன்று - தண்ணிய செந்தளிர்களைத் தந்து, வானம் தைவர நிவந்த - வானுலகை யளாவ உயர்ந்தன; காசுகொண்டு இடை அழுத்திச் செய்த - நீலமணிகளைக் கொண்டு இடையிடையிற் பதித்துச் செய்த, குழை அணி மகளிர் போல - காதணியை அணிந்த பெண்கள்போல, செருந்தி எல்லாம் - செருந்திகள் அனைத்தும், வண்டு இறைகொள்ளப் பூத்து மலர்ந்தன - வண்டுகள் இடையிடை தங்கப் பூத்து மலர்ந்தன.

சிவத்தல் - வெகுளலும் செந்நிற முறுதலும் ஆம். புளிமா ஒன்றுளதாதலாற் பிறிதினியைபு நீக்கிய விசேடணந் தந்து, 'தேமா' என்றார். தைவர - தடவ. நிவந்த : அன்பெறாத பலவின்பால் முற்று. செருந்தி மலர் பொற்குழை போன்றும், வண்டு நீலமணி போன்றும் விளங்கின வென்க. மாமரங்கள் இயல்பாகத் தளிர்த்து உயர்ந்தமையைத் தேவ தருக்கள்மேற் சீறிச் சிவந்தெழுந்தாற்போல எனக் கற்பித்துக் கூறுதலால் தற்குறிப்பேற்ற வுவமையணி; வானுலகுடன் சம்பந்தமில்லா திருக்கச் சம்பந்தம் கற்பித்து, 'வானந் தைவர நிவந்த' எனக் கூறுதலால் தொடர்புயர்வு நவிற்சியணி; இவ்விரண்டும் விரவுதலால் இச் செய்யுள் கலவையணி. (௧௧)

செங்கதிர் மேனி யான்போ லவிழ்ந்தன செழும்ப லாசம்
மங்குலூர் செல்வன் போல மலர்ந்தன காஞ்சி திங்கட்
புங்கவன் போலப் பூத்த பூஞ்சினை மரவஞ் செங்கை
அங்கதி ராழி யான்போ லலர்ந்தன விரிந்த காயா.

(இ - ள்.) செழும்பலாசம் - வளவிய முண் முருக்குக்கள், செங்கதிர் மேனியான்போல் அவிழ்ந்தன - செவ்வொளி பொருந்திய மேனியையுடைய சூரியனைப்போலச் செந்நிறமாக மலர்ந்தன; காஞ்சி-காஞ்சி மரங்கள், மங்குல் ஊர் செல்வன்போல மலர்ந்தன-முகிலை ஊர்தியாகக் கொண்டு ஊரும் இந்திரன்போலக் கருநிறமாக மலர்ந்தன; பூஞ்சினை மரவம் - பொலிவுள்ள கிளைகளையுடைய குங்கும மரங்கள், திங்கள் புங்கவன்போலப் பூத்த-சந்திரனைப்போல வெண்ணிறமாக மலர்ந்தன. விரிந்த காயா - விரிந்த காயாஞ் செடிகள், செங்கை அம் கதிர் ஆழியான்

போல் அலர்ந்தன - சிவந்த கையில் அழகிய ஒளியையுடைய திகிரியை யுடைய திருமால்போல் நீலநிறமாக மலர்ந்தன.

மரவம் - வெண்கடம்புமாம். பூத்த: முற்று. உவமம் நான்கும் உருவு பற்றியன.

"ஒருகுழை யொருவன்போ லிணர்சேர்ந்த மராஅமும்
பருதியஞ் செல்வன்போ னனையூழ்த்த செருந்தியும்
மீனேற்றுக் கொடியோன்போன் மிஞிறார்க்குங் காஞ்சியும்
ஏனோன்போ னிறங்கிளர்பு கஞலிய ஞாழலும்
ஆனேற்றுக் கொடியோன்போ லெதிரிய விலவமும்"

என்னும் பாலைக்கலியடிகள் இங்கு நோக்கற்பாலன. இதனைப் பலவயிற் போலி யுவமை யணியின் பாற்படுத்தலுமாம். (கஉ)

தரைகிழித் தெழுநீர் வையைத்
தடங்கரை யேக்க ரல்குல்
அரவமே கலைசூழ்ந் தென்ன
வலர்ந்துதா துகுப்ப ஞாழல்
மரகதந் தழைத்து வெண்முத்
தரும்பிப்பொன் மலர்ந்து வாங்குந்
திரைகடற் பவளக் காடு
செய்வன கன்னிப் புன்னை.

(இ - ள்.) தரை கிழித்து எழு நீர் வையைத் தடங்கரை - தரையைக் கிழித்துச் செல்லாநின்ற நீரையுடைய வையையாற்றின் பெரிய கரையாகிய பெண், எக்கர் அல்குல் - மணல்மேடாகிய அல்குலில், அரவம் மேகலை சூழ்ந்தென்ன - ஒலியையுடைய மேகலையை அணிந்தாற் போலத் (தோன்றுமாறு), ஞாழல் அலர்ந்து தாது உகுப்ப - குங்கும மரங்கள் மலர்ந்து மகரந்தத்தைச் சிந்துவன; கன்னிப் புன்னை - இளமையாகிய புன்னை மரங்கள், மரகதம் தழைத்து - மரகதம்போலும் இலைகள் தழைத்து, வெண்முத்து அரும்பி - வெள்ளிய முத்துக்கள்போலும் முகைகள் அரும்பி, பொன் மலர்ந்து - பொன்போலும் பூக்கள் மலர்ந்து, வாங்கும் திரைகடல் பவளக்காடு செய்வன - வளைந்த அலைதலையுடைய கடலிலுள்ள பவளக்காடு போலும் மகரந்தஞ் சிந்துவன.

எக்கரை அல்குலாக உருவகஞ்செய்து கரையைப் பெண்ணாக உருவகஞ் செய்யாமையால் இது வியனிலை உருவகமும்; மரகதம், முத்து, பொன், பவளம் என்னும் உவமைகளால் முறையே இலை, அரும்பு, மலர், மகரந்தம் என்னும் பொருள்களை இலக்கணையாகக் கூறுதலால் உருவக வுயர்வு நவிற்சியணியும் ஆம். உகுப்ப: முற்று. திரைகடல்; வினைத்தொகை. (கங)

ஊடினர் போல வெம்பி யிலையுதிர்ந் துயிரன் னாரைக்
கூடினர் போல வெங்குங் குழைவரத் தழைத்து நீங்கி
வாடினர் போலக் கண்ணீர் வாரமெய் பசந்து மையல்
நீடின ரலர்போற் பூத்து நெருங்கின மரங்க ளெல்லாம்.

(இ-ள்.) மரங்கள் எல்லாம் - மரங்கள் யாவும், ஊடினார்போல வெம்பி இலை உதிர்ந்து - ஊடிய மகளிர்போல வெம்பி இலையை உதிர்த்து, உயிர் அன்னாரைக் கூடினார்போல - உயிரையொத்த நாயகர்களைக் கூடிய மகளிர்போல, எங்கும் குழைவரத் தழைத்து - எவ்விடத்தும் குழைகள் தோன்றத் தழைத்து, நீங்கி வாடினார்போல - அத்தலைவரைப் பிரிந்து வாடுகின்ற மகளிர்போல, கண்ணீர்வார மெய்பசந்து - கண்ணீரொழுக உடல் பசந்து, மையல் நீடினார் அலர்போல் பூத்து நெருங்கின - காம மயக்கம் மிக்க மகளிரின் பழிச்சொல்போலப் பூக்கள் மலர்ந்து நெருங்கின.

ஊடினார் உளம்வெம்பி அணிகளைக் களைதல்போல எனவும், கூடினார் உடல் குழையத் தழைத்தல்போல எனவும், நீங்கி வாடினார் விழிநீரொழுக மெய் பசலையுறுதல்போல எனவும் உவமைகளை விரித்துரைத்துக்கொள்க. குழைவரத் தழைத்து - குழையாக வளரும்படி தழை கொண்டு, உடல் குழையப் பூரித்து, கண்ணீர் - கண்களிலிருந்து பெருகு நீர், தேனாகிய நீர். பசந்து - பசுமைகொண்டு, பசலை பூத்து. அலர் - மலர், பழிச்சொல். இது பலவயிற் போலியுவமையணி. (கசு)

விழைதரு காத லார்தா
மெலிவுற மெலிந்து நெஞ்சம்
குழைவுறக் குழைந்து நிற்கும்
கோதிலாக் கற்பி னார்போல்
மழையறும் கோடை* தீப்ப
மரந்தலை வாட வாடித்
தழைவுறத் தழைத்து நின்ற
தழீஇயபைங் கொடிக ளெல்லாம்.

(இ-ள்.) விழைதரு காதலார் தாம் மெலிவுற மெலிந்து - தம்மால் விரும்பப்பட்ட காதலர் மெலியத்தாமும் மெலிந்து, நெஞ்சம் குழைவுறக் குழைந்து நிற்கும் - அவர் மனங் களிகூரத் தாமுங் களிகூர்ந்து நிற்கும், கோது இலாக் கற்பினார்போல - குற்றமற்ற கற்புடைய மகளிர்போல, மழை அறும் கோடை தீப்ப - மழைபற்ற கோடை தீத்தலால், மரம் தலைவாட - மரங்கள் தலைவாட, தழீஇய பைங்கொடிகள் எல்லாம் - அவற்றைச் சுற்றிய பசிய கொடிகள் யாவும், வாடி - தாமும் வாடி, தழைவுறத் தழைத்து நின்ற - அவைகள் தழைக்கத் தாமும் தழைத்து நின்றன.

கற்புடைய மகளிரும் காதலரும் ஈருடற்கோருயிர்போல் அன்பால் இயைந்து நிற்பராகலின் அவருள் ஒருவரெய்தும் இன்ப துன்பங்கள் ஏனையர்க்கும் எய்துமென்க;

“ காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர்
ஆகத்து ளோருயிர் கண்டனம் யாமின் றியாவையுமாம்
ஏகத் தொருவ னிரும்பொழி லம்பல வன்மலையில்
தோகைக்குந் தோன்றற்கு மொன்றாய் வருமின்பத் துன்பங்களே.”

(பாடம்.) *மழைவறுங்கோடை.

என்னும் திருக்கோவையார்ப்பாட்டு இங்கே சிந்திக்கற்பாலது. வினைஅன் சாரியை பெறாத பலவின்பால் முற்று, இது தொழிலுவமையணி. (கடு)

சேட்டிகைத் தென்கா றள்ளத் தெண்மதுச் சிதறத் தும்பி
நீட்டிசை முரலச் சாயா நின்றபூங் கொம்ப ராடல்
நாட்டியப் புலவ னுட்ட நகைமுகம் வேயர்வை சிந்தப்
பாட்டிசைத் தாடா நின்ற பாவைமார் போன்ற வன்றே.

(இ-ள்.) சேண் தென்திகைக் கால்தள்ள - நெடிய தென்றிசையினின்று வருந் தென்றற் காற்றுத் தள்ளுதலால், தெண் மதுச் சிதற - தெளிந்த தேன் துளிக்க, தும்பி நீட்டிசை முரல - வண்டுகள் நெட்டிசை பாட, சாயா நின்று ஆடல் பூங்கொம்பர் - ஒசிந்து ஆடும் பூங்கொம்புகள், நாட்டியப் புலவன் ஆட்ட - கூத்து வல்லோன் ஆட்டுவிக்க, நகைமுகம் வெயர்வை சிந்த - ஒளி பொருந்திய முகத்தினின்றும் வியர்வை சிதற, பாட்டு இசைத்து ஆடாநின்ற பாவைமார் போன்ற - பாட்டுப் பாடி ஆடாநின்ற நாடக மகளிரை ஒத்தன.

திகை - திசை. கொம்பர்: இறுதிப் போலி. கொம்பர் ஆடல் பாவைமார் ஆடல் போன்றன என மாற்றித் தொழிலுவமை யாக்கலுமாம். (கசு)

மலர்ந்தசெவ் வந்திப் போதும் வகுளமு முதிர்ந்து வாடி
உலர்ந்துமொய்த் தளிதே னக்கக் கிடப்பன வுள்ள மிக்க
குலந்தரு நல்லோர் செல்வங் குன்றினுந் தம்பா லில்லென்
றலந்தவர்க் குயிரை மாறி யாயினுங் கொடுப்ப ரன்றே.

(இ-ள்.) மலர்ந்த செவ்வந்திப்போதும் வகுளமும் - விரிந்த செவ்வந்தி மலரும் மகிழம் பூவும், உதிர்ந்துவாடி உலர்ந்தும் - நிலத்தில் உதிர்ந்து வாடிப் புலர்ந்தும், அளிமொய்த்துத் தேன் நக்கக் கிடப்பன - வண்டுகள் மொய்த்துத் தேன் உண்ணக் கிடப்பனவாயின; உள்ளம் மிக்க - உள்ள மிகுதியையுடைய, குலம்தரு நல்லோர் - உயர்குடிப் பிறந்த நல்லோர்கள், செல்வம் குன்றினும் - செல்வஞ் சுருங்கிய விடத்தும், தம்பால் இல் என்று அலந்தவர்க்கு - தம்மிடத்து வந்து இல்லை என்று கூறி வருந்தியவர்க்கு, உயிரை மாறியாயினும் கொடுப்பர் அன்றே - தம்முயிரை மாறியாகிலும் கொடுப்பாரல்லவா?

உள்ள மிகுதி - மனவெழுச்சி; சுருங்கா உள்ளமுமாம்;

"உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு"

என்னும் திருக்குறளும்,

"வளன் வலியுறுக்கும் உளமிலாளர்"

என்னும் புறப்பாட்டடியும் இங்கு நோக்கற் பாலன. பூக்கள் உலர்ந்திடந்தும் அளிதேன் நக்கக்கிடக்கின்றன என்னும் பொருளை நல்லோர் செல்வங் குன்றினும் அலந்தவர்க்கு உயிரை மாறியாயினும் கொடுப்பர் என்னும் பொருளாற் சாதித்தலின் இதுவேற்றுப்பொருள் வைப்பணி. (கஎ)

நாறிய தண்ணந் தேமா நறுந்தளிர் கோதிக் கூவி
ஊறிய காமப் பேட்டை யுருக்குவ குயின்மென் சேவல்
வீறிய செங்கோல் வேந்தன் வெளிப்படத் தேயங் காவல்
மாறிய வேந்தன் போல வொடுங்கின மயில்க ளெல்லாம்.

(இ - ள்.) மென்குயில் சேவல் - மெல்லிய ஆண்குயில்கள், நாறிய தண் அம் தேமா நறுந்தளிர் கோதி - தோற்றிய குளிர்ந்த அழகிய தேமாவின் நறிய தளிர்களைக் கோதி, காமம் ஊறிய பேட்டைக் கூவி உருக்குவ - காமமரும்பிய பேட்டினைக் கூவி உருக்குவன; வீறிய செங்கோல் வேந்தன் வெளிப்பட - பெருமிதமுடைய செங்கோலை யுடைய பெருவேந்தன் தோன்ற, தேயம் காவல் மாறிய வேந்தன்போல - நாடு காவல்மாறிய குறுநில மன்னன்போல, மயில்கள் எல்லாம் ஒடுங்கின - மயில்கள் யாவும் ஒடுங்கின.

இளவேனிற் காலத்தில் மாமரம் தளிர்த்தலும், குயில்கள் அதன் மீதிருந்து கூவி மகிழ்தலும், மயில்கள் கூவா தொடுங்கலும் இயல்பு. நறுந்தளிர் எனப் பின்வருதலின் நாறிய என்பதற்குத் தோன்றிய என்றுரைக்க. இளவேனிலைச் செங்கோல் வேந்தனாகக் கொள்க. நாடு காவல் மாறி யொடுங்கிய குறுநில மன்னன் என விரித்துக் கொள்க. (௧௮)

பொங்கரி னுழைந்து வாவி
புகுந்துபங் கயந்து ழாவிப்
பைங்கடி மயிலை முல்லை
மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணங்கூட் டுண்டு
குளிர்ந்துமெல் லென்று தென்றல்
அங்கங்கே கலைக டேரு
மறிவன்போ லியங்கு மன்றே.

(இ - ள்.) தென்றல் - தென்றற் காற்று, அங்கு அங்கே கலைகள் தேரும் அறிவன்போல் - பலவிடங்களிலுஞ் சென்று நூல்களை ஆராய்ந்தறியும் அறிவுடை மாணவன்போல, பொங்கரில் நுழைந்து - சோலையில் நுழைந்து, வாவி புகுந்து - தடாகத்திற்புகுந்து, பங்கயம் துழாவி - தாமரையை அளாவி, பைங்கடி மயிலை முல்லை மல்லிகைப் பந்தர் தாவி - பசிய மணமுள்ள இருவாட்சியும் முல்லையும் மல்லிகையுமாகிய இவற்றின் பந்தரிலே தாவி, கொங்கு அலர் மணம் கூட்டுண்டு - மகரந்தத்தை யுடைய மலர்களின் மணங்களைக் கவர்ந்து, குளிர்ந்து மெல்லென்று - குளிர்ந்து மெதுவாய், இயங்கும் - உலாவும்.

நன் மாணாக்கனொருவன் நல்லாசிரியர் பலருழையுஞ் சென்று அவர்கள்பால் நூற்பொருள் பலவும் உணர்ந்து நன்னடை வாய்ந்து சாந்த குணமுடையனாய் ஒழுகுதல் போலத் தென்றல் பலவிடங்களிலுஞ் சென்று தவழ்ந்து அங்கங்குள்ள மணங்களைக் கவர்ந்து தண்ணிதாய் மெத்தென்ற தன்மைவாய்ந்து உலாவும் எனத் தொழிலுவமங்கொள்க.

"அருடருங் கேள்வி யமையத் தேக்கப்
பற்பல ஆசான் பாங்குசெல் பவர்போல்
மூன்றுவகை யடுத்த தேன்றரு கொழுமலர்
கொழுதிப் பாடுங் குணச்சுரும் பினங்காள்."

என்று கல்லாடங் கூறுவது சிந்திக்கற்பாலது. பந்தர் : ஈற்றுப்போலி. (சுகூ)

தாமரை களாஞ்சி தாங்கத் தண்குயின் முழவ மேங்க
மாமரு தமருங் கிள்ளை மங்கல மியம்பத் தும்பி
காமர மிசைப்ப முள்வாய் கைதை*வா ளேடுப்ப வேனிற்
கோமகன் மகுடஞ்சூடி யிருப்பதக் குளிர்பூஞ் சோலை.

(இ - ள்.) தாமரை களாஞ்சி தாங்க - தாமரை களாஞ்சி தாங்கவும், தண் குயில் முழவம் ஏங்க - குளிர்ந்த குயில் முழவம் ஒலிக்கவும், மாமருது அமரும் கிள்ளை - பெரிய மருதமரத்தில் இருக்கும் கிளி, மங்கலம் இயம்ப - மங்கலங் கூறவும், தும்பி காமரம் இசைப்ப - வண்டுகள் இசைப்பாட்டுப் பாடவும், முள்வாய் கைதை வாள் எடுப்ப - முட்களையுடைய தாழை வாளை ஏந்தவும், வேனில் கோமகன் மகுடம் சூடி இருப்பது - வேனிற்காலத்திற்குரிய மன்மதன் முடிசூடி வீற்றிருக்கப் பெறுவது, அக் குளிர் பூஞ்சோலை - அந்தத் தண்ணிய பூஞ்சோலை.

களாஞ்சி - காளாஞ்சி ; தாம்பூலமெடுக்குங் கலம். தாமரை, குயில், கிளி, வண்டு, தாழை என்பவற்றை முறையே காளாஞ்சி யேந்துவார், முழவொலிப்பார், மங்கலங் கூறுவார், இசைபாடுவார், வாளெடுப்பார் ஆகவும், தாமரை மலர், குயிலொலி, கிளிமொழி, வண்டிசை, தாழை மடல் என்பவற்றை முறையே காளாஞ்சி, முழவு, மங்கல வாழ்த்து, இசைப்பாட்டு, வாள் ஆகவும் கொள்க. இங்கே கூறியவெல்லாம் ஓர் அரசற்கும் மன்மதனுக்கும் பொருந்துமாறு காண்க. வேனிற் கோமகன் என்பதற்கு வேனிலாகிய அரசன் என்றுரைப்பாருமுளர்.

"தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ."

என்னும் கம்பராமாயணப்பாட்டு இதனுடன் ஒருபுடை ஒத்து நோக்கற்பாலது. இச்செய்யுள் உருவகவுயர்வுநவிற்சி. (உ0)

கலையினு னிறைந்த விந்து காந்தமண் டபத்துஞ்†செய்த
மலையினு மெழுது மாட மருங்கினு நெருங்கு சோலைத்
தலையினுங் கமல வாவித் தடத்தினுந் தண்முத் தார
முலையினு மன்றிக் கோடை முடிவிடங் காணா் மைந்தர்.‡

(இ - ள்.) மைந்தர் - ஆடவர்கள், கலையினால் நிறைந்த இந்து காந்த மண்டபத்தும் - கலைகளால் நிறைந்த சந்திரகாந்தக் கல்லாலாகிய

(பா - ம்.) * முள்வாய்க் கைதை. † காந்த மண்டபத்தில், ‡ காணார் மாந்தர்.

மண்டபத்திலும், செய்த மலையினும் - செய்குன்றிலும் எழுதும் மாட மருங்கினும் - சித்திரம் வரைந்த மாடத்தடத்தும், நெருங்கு சோலைத் தலையினும் - நெருங்கிய சோலையினிடத்தும், கமலவாவித்தடத்தினும் - தாமரையையுடைய பொய்கையினிடத்தும், தண்முத்த ஆரம்முலையினும் - குளிர்ந்த முத்தாரமணிந்த மகளிர் கொங்கைகளிலும், அன்றி - அல்லாமல், கோடை முடிவு இடம் காணார் - வேனில் வெம்மையை ஆற்றும் இடம் வேறு காணார்.

கலை நிறைதல் இந்துவுக்கு அடை. இந்து காந்தம் - சந்திரனைக் கண்டு நீர் கக்கும் கல். எழுது மாடம் - சித்திர மண்டபம். சந்திர காந்த மண்டபம் முதலிய இடங்களில் மகளிர் முலைத்தடத்தில் என்பது கருத்தாகக் கொள்க. (உக)

நிலந்தரு திருவி னுன்ற னிழன்மணி* மாடக் கூடல்
வலந்தரு தடந்தோண் மைந்தர் வானமும் வீழும் போக
நலந்தரு மகளி ரோடு நாகநா டவர்தஞ் செல்வப்
பொலந்தரு வனைய காட்சிப் பூம்பொழி னுகர்வான் போவார்.

(இ - ள்.) நிலந்தரு திருவினுன்தன் - மாற்றாரது நிலத்தைத்தரும் போர்த்திருவினையுடைய வங்கிய சூடாமணி மாறனது, நிழல் மணி மாடக்கூடல் - ஒளியினையுடைய மணிகள் அழுத்திய மாடங்கள் நிறைந்த கூடலிலுள்ள, வலம் தருதடம் தோள்மைந்தர் - வெற்றியைத் தரும் பெரிய தோள்களையுடைய காளையர், வானமும் வீழும் போக நலம்தரு மகளிரோடு - விண்ணவரும் விரும்பும் இன்ப நலத்தை அளிக்கும் மாதராருடன், நாகநாடவர்தம் செல்வப்பொலம்தரு அனையகாட்சி - அவ்வான நாடரின் செல்வமிக்க பொன் மயமாகிய கற்பகச் சோலை போன்ற தோற்றத்தையுடைய, பூம்பொழில் நுகர்வான் போவார் - பூஞ்சோலையின் இன்பத்தை நுகர்தற்குப் போவாராயினர்.

"நிலந்தரு திருவிற் பாண்டியன்"

என்னும் தொல்காப்பியப் பாயிரவடிக்கு நச்சினார்க்கினியர் கூறிய பொருள் காணற்பாலது; நிலந்தரு திருவினுன்ற எனப் பாடமோதி 'மரக்கலத்தாலுமன்றி, நிலவுலகு தருஞ்செல்வத்தால் நிறைந்த' என்று பொருளுரைப்பாருமுளர். மாடக் கூடல் - நான்மாடக்கூடல் என்பது முதல் குறைந்து நின்றது என்றுமாம் வீழும் - விரும்பும். நாகநாடு - விண்ணுலகம். நுகர்வான்: வினையெச்சம். (உஉ)

[வேறு]

மாத்தாண் மதமா னெருத்தின் மடங்க லெனச்செல் வாரும்
பூத்தா ரொலிவாம் பரிமேற் புகர்மா வேனப்போ வாரும்
பாத்தார்† பரிதி யெனவாம் பரித்தே ருகைத்தூர் வாருந்
தேத்தா ருளர்வண் டலம்பச் சிலம்பி னடக்கின் றாரும்.

(இ-ள்.) மாத்தாள் மதமான் எருத்தில் - பெரிய தாளையும் மத மயக்கத்தையுமுடைய யானையின் பிடரில், மடங்கல் எனச்செல்வாரும் -

(பா - ம்.) *திருவினுன்ற நிழன்மணி. † பார்த்தார்.

சிங்கத்தைப்போலச் செல்வாரும், பூத்தார் ஒலிவாம் பரிமேல் - அழகிய கிண்கிணி மாலை ஒலிக்கும் தாவுகின்ற குதிரைமேல், புகர்மா எனப் போவாரும் - புள்ளியையுடைய முகத்தையுடைய யானையைப் போலப் போவாரும், பாத்துஆர் பரிதி என - (பன்னிரண்டாகப்) பகுக்கப்பட்டு நிறைந்த சூரியர்களைப்போல, வாம்பரித்தேர் உகைத்து ஊர்வாரும் - தாவுங்குதிரை பூட்டிய தேரினைத் தூண்டி நடத்துவாரும், தேம்தார் உளர் வண்டு அலம்பச் சிலம்பின் நடக்கின்றாரும்-தேன் நிறைந்த மாலையிலே கிண்டுகின்ற வண்டுகள் ஒலிக்க மலைபோல நடந்து செல்வாரும்.

யானைமீது சிங்கம் செல்வது போலவும், குதிரைமீது யானை போவது போலவும், மலை நடப்பது போலவும் என இல்பொருளுவமை யாக்கலுமாம். ஆதித்தர் பன்னிருவராகலின், 'பாத்தார்' என்றார். தேன் தேம் எனத் திரிந்தது. செல்வாரும் போவாரும் ஊர்வாரும் நடக்கின்றாரும் ஆகிய ஆடவரும் என உகூஆம் செய்யுளோடுஇயைக்க.(உ௩)

நீலப் பிடிமேற் பிடிபோ னெறிக்கோள் வாருந் தரள
மாலைச் சிவிகை மிசைவெண் மலரா ளெனச்செல் வாரும்
ஆலைக் கருமபன் றுணைபோ லணித்தார்ப் பரியூர் வாருங்
கோலத் தடக்கை பற்றிக் கொழுந ருடன்போ வாரும்.

(இ - ள்.) நீலப்பிடிமேல் பிடிபோல் நெறிக்கொள்வாரும் - கரிய பெண்யானைமீது பெண்யானைபோலச் செல்வாரும், தரள மாலைச் சிவிகைமிசை வெண்மலராள் எனச் செல்வாரும் - முத்துமாலைகள் தூக்கிய பல்லக்கின்மேல் வெண்டாமரையாளாகிய கலைமகள் போலச் செல்வாரும், ஆலைக்கரும்பன் துணைபோல்-ஆலையில் அமையுங் கருப்பு வில்லையுடைய மதவேளின் வாழ்க்கைத் துணையாகிய இரதிதேவியைப் போல. அணித்தார்ப் பரிஊர்வாரும் - அழகிய கிண்கிணி மாலையை யணிந்த குதிரைமேற் செல்வாரும், கோலத் தடக்கைபற்றி-(கொழுநர்களின்)அழகிய பெரிய கையைப் பிடித்து, கொழுநருடன் போவாரும் - அவருடன் நடந்து செல்வாரும்.

நெறிக்கொள்வாரும் செல்வாரும் ஊர்வாரும் போவாரும் ஆகிய படையன்ன மகளிரும் என வருஞ் செய்யுளோடு இயைக்க. (உச)

சுருப்புக் கமழ்தேங் கண்ணித் தொடுபைங் கழலா டவருங்
கருப்புச் சிலைமன் னவனாற் கருவிப் படையன் னவரும்
விருப்புற் றெறிநீர் வையை வெள்ளைத் தரளந் தெள்ளிப்
பொருப்பிற் குவிக்கும் புளினம் புறஞ்சூழ் சோலை புகுவார்.

(இ - ள்.) சுரும்பு கமழ்தேம் கண்ணி - வண்டு மொய்த்த மணங் கமழும் தேன்நிறைந்த மாலையையணிந்த, பைங்கழல்தொடு ஆடவரும்-பசிய வீரக்கழல் அணிந்த ஆடவர்களும், கருப்புச்சிலை மன்னவன் - கரும்பு வில்லையுடைய மன்மதனது, நால கருவிப்படை அன்னவரும் - நான்கு வகைப்பட்ட படைகளைப் போன்ற மகளிரும், விருப்புற்று - விரும்பி, எறிநீர் வையை - எற்றுகின்ற நீர் நிறைந்த வையை யாறு, தரளம் தெள்ளி வெள்ளைப் பொருப்பில் குவிக்கும் - முத்துக்களைக் கொழித்து வெள்ளை மலைபோலக் குவிக்கின்ற, புளினம புறம் சூழ் சோலை புகுவார் - மணற்குன்றுகள் புறஞ்சூழ்ந்த சோலைகளிற் புகுவா ராயினர்.

சுரும்பு, கரும்பு என்பன வலித்தல் பெற்றன; கருவிப் படை கருவியாகிய படை : இருபெயரொட்டு. (௨௫)

கூந்தற் பிடியும் பரியு மூர்வார் கொழுநர் தடந்தோள்
ஏந்தச் சயமா தென்னத் தழுவா விழிந்து பொழில்வாய்ப்
பூந்தோத் தலர்பொற் கொடிதா துகுமா றென்னப் புனைந்த
சாந்தக் கலவை யுகப்போய் வனமங் கையர்போற் சார்ந்தார்.

(இ - ள்.) கூந்தல் பிடியும் பரியும் ஊர்வார் - புற மயிரையுடைய பெண் யானைகளிலும் குதிரைகளிலும் ஏறிச்சென்ற மகளிர், கொழுநர் தடம் தோள் ஏந்த - தத்தம் கொழுநர்கள் பெரிய தோளால் ஏந்த, சயமாது என்னத் தழுவா இழிந்து - வெற்றிமகளைப் போலத் தழுவி இறங்கி, பொழில்வாய் - சோலையினிடத்து, பூந்தொத்து அலர் பொற் கொடி தாது உகுமாறு என்ன - பூந்தொத்துக்கள் அலர்ந்த பொன் போன்ற கொடியினின்றும் மகரந்தஞ் சிந்துதல்போல, புனைந்த சாந்தக் கலவை உக - அணிந்த கலவைச் சந்தனம் உலர்ந்து சிந்த, போய் - சென்று, வனமங்கையர்போல் சார்ந்தார் - வனத்தில் வாழுந் தெய்வ மகளிரைப்போல அடைந்தனர்.

கொழுநரின் தோளைத் தழுவினமையால் அத்தோள்மீது இருக்கும் விசய இலக்குமிபோல் விளங்கின ரென்க. ஊர்வார் தழுவா இழிந்து உகப்போய்ச் சார்ந்தார் என வினைமுடிக்க. (௨௬)

ஏமா சலமென் முலையார் நடையோ வியமே யென்னப்
பூமா தவிசேர் வாரும் புன்னை நிழல்சேர் வாருந்
தேமா நிழல்சேர் வாருஞ் செருந்தி நிழல்சேர் வாருங்
காமா யுதசா லைகள்போற் கைதை நிழல்சேர் வாரும்.

(இ - ள்.) ஏம அசலம் என் முலையார் - பொன்மலையென்று கூறத் தக்க கொங்கையையுடைய மகளிர், நடை ஓவியம் என்ன பூ மாதவி சேர்வாரும் - நடக்கும் பதுமைபோலச் சென்று பூக்கள் நிறைந்த குருக்கத்தி நிழலை அடைவாரும், புன்னை நிழல் சேர்வாரும் - புன்னைமரத்தின் நிழலை அடைவாரும், தேமா நிழல் சேர்வாரும்-தேமாவின் நிழலை அடைவாரும், செருந்திநிழல் சேர்வாரும் - செருந்தியின் நிழலை அடைவாரும், காம ஆயுத சாலைகள்போல் - மதவேளின் படைச்சாலைகள் போல் (மலர்ந்த), கைதை நிழல் சேர்வாரும் - தாழையின் நிழலை அடைவாரும் (ஆயினர்).

ஏமாசலம், காமாயுதம் என்பன வடமொழித் தீர்க்கசந்தி. போல் என இயல்பாகப் பாடமோதி, போலுங் கைதை எனப் பொருளுரைத்தல் சிறப்பு. ஆயினர் என ஒருசொல் வருவித்து முடிக்க. (௨௭)

கோடும் பிறைவா ணுதலார் குழலைக் கருவிக் காரென்
றோடுந் தோகை யவர்கண் ணோக்கிக் கணையென் றஞ்சி
ஓடுங் கொடியி னன்னா ருருமாந் தளிரென் றயில்வான்
நாடுங் குயிலன் னவர்பண் ணிசைகேட் டொதுங்கி நாணும்.

(இ - ள்.) கோடும்பிறைவாள் நுதலார் குழலை - வளைந்த பிறை போன்ற ஒள்ளிய நெற்றியையுடைய மகளிரது கூந்தலை, கருவிக்கார் என்று ஆடும்தோகை - மின்னுமுதலிய தொகுதியையுடைய முகில் என்று கருதி ஆடுகின்ற மயில்கள், அவர்கண் நோக்கிக் கணை என்று அஞ்சி ஓடும் - அவர் கண்களைக் கண்டு அம்பென்று கருதி அஞ்சி ஓடா நிற்கும்; கொடியின் அன்னார் உருமாந்தளிர் என்று அயில்வான் நாடும் குயில் - கொடிபோன்ற அம்மகளிரின் உருவத்தை மாந்தளிரென்று கருதிக் கோதி உண்ணச் செல்லுங் குயில்கள், அன்னவர்பண் இசை கேட்டு ஒதுங்கி நாணும் - அவர் பாடும் பண்ணொலியைக் கேட்டு நாணிச் செல்லாநிற்கும்.

கருவி - தொகுதி. களிப்பால் ஆடும் என்க. கொடியின்: சாரியை நிற்க உருபு தொக்கது. அயில்வான்: வினையெச்சம். நாணி ஒதுங்கும் என மாறுக. நாணுதல் தம் அறியாமையை உணர்ந்து வெள்குதலும், இசைக்குத் தோற்று நாணலும் ஆம். கூந்தலை மேகம் எனவும் கண்ணை அம்பெனவும் மயிலும், உருவை மாந்தளிரெனக் குயிலும் மயங்கினவெனக் கூறுதலால் இது மயக்கவணி. (௨அ)

நீடுந் தரங்க மிரங்கு நிறைநீர் நிலையே யன்றிப்
பாடுஞ் சுரும்புண் கழுநீர் பைந்தாட் குமுதம் பதுமங்
கோடும் பூத்த வென்னக் கொடியே ரிடையார் குழையுந்
தோடுங் கிடந்த வதனத் தொகையாற் பொலிவ சோலை.

(இ - ள்.) நீடும் தரங்கம் இரங்கும் நிறை நீர் நிலையே அன்றி - நீண்ட அலைகள் ஒலிக்கும் நிறைந்த ஓடைகளே அல்லாமல், பாடும் சுரும்பு உண் கழுநீர் பைந்தாள் குமுதம் பதுமம் - இசைபாடும் வண்டுகள் மது உண்ணும் குவளையையும் பசிய தாளையுடைய ஆம்பலையும் தாமரையையும், கோடும் பூத்த என்ன - பூங்கொம்புகளும் பூத்தன போல, கொடி ஏர் இடையார் குழையும் தோடும் கிடந்த வதனத் தொகையால் - கொடி போன்ற அழகிய இடையையுடைய மகளிரின் குண்டலமும் தோடும் பொருந்திய முகங்களின் தொகுதியால், சோலை பொலிவ - சோலைகள் விளங்காநின்றன.

நீரிற் பூத்தற்குரிய குவளை ஆம்பல் தாமரை என்பன கோட்டிற் பூத்தாற் போல மகளிருடைய கண்வாய் முகம் என்பன விளங்கின வென்க குவளை முதலியவற்றைக் கோடு பூத்தவென்ன என்றது இல் பொருளுவமை. (௨௯)

பிடிக ளென்ன நடந்தா
    ருடன்போய்க் கொழுநர் பெருந்தண்
கொடிகண் மிடைந்த வில்லி
    லியக்கர் போலக் குறுகிக்
கடிகொள் பனிநீர் தெளித்து
    வேடை தணித்துங் கன்றும்
அடிகள் பிடித்துஞ் சேடி
    யவர்கைக் குதவி யாவார்.

(இ - ள்.) கொழுநர் - கணவர்கள், பிடிகள் என்ன நடந்தாருடன் போய் - பெண் யானைகள் போல நடந்த மகளிருடன் சென்று, பெருந் தண் கொடிகள் மிடைந்த இல்லில் - பெரிய குளிர்ந்த கொடிகள் மிடைந்த இல்லின்கண், இயக்கர் போலக் குறுகி - இயக்கர்கள் போலச் சார்ந்து, கடி கொள் பனிநீர் தெளித்து வேடைதணித்தும் - மணங் கொண்ட பனி நீரைத் தெளித்து வெம்மையை ஆற்றியும், கன்றும் அடிகள் பிடித்தும் - நடத்தலாற் கன்றிய அவர்கள் அடிகளைப் பிடித்தும், சேடியர்கைக்கு உதவியாவார் - தோழியர்களின் கைகளுக்கு உதவி புரிவாராவர்.

கொடிகள் மிடைந்தஇல் - இல்போன்று கொடிமிடைந்த இடம் லதாக் கிருஹம். சேடியர் செய்யும் பணியைத் தாம் செய்தலால் அவர் கைக்குதவியாவார் என்றனர். (௯0)

மைவார் தடங்கண் மடவார்
வளைப்பார் கோம்பின் மலரைக்
கோய்வார் குமிழ்மோந் துயிர்ப்பார்
குழையுஞ் செவியுங் குழலும்
பெய்வார் மகிழ்ச்சி செய்வார்
பேரா மையல் கூர
எய்வார் கணைபோற் றைப்பக்
கொழுநர் மார்பத் தெறிவார்.

(இ- ள்.) மைவார்தடம் கண்மடவார்-மைதீட்டிய நீண்ட பெரிய கண்களை யுடைய மகளிர், வளைப்பார் கொம்பின் மலரைக்கொய்வார்- கொம்புகளை வளைத்து அவற்றின் மலர்களைக் கொய்து, குமிழ் மோந்து உயிர்ப்பார்-குமிழம்பூப்போன்ற மூக்கில் மோந்து உயிர்த்து, குழையும் செவியும் குழலும் பெய்வார் - குழைகளிலும் காதுகளிலும் கூந்தலிலும் அணிந்து, மகிழ்ச்சி செய்வார் - (நாயகர்களுக்கு) மகிழ்ச்சியை விளைப் பார்கள்; பேரா மையல் கூர-நீங்காத காமமயக்கம் மிக, எய்வார் கணை போல் தைப்ப - (மன்மதன்) எய்யும் நீண்ட கணைபோலப் பாயுமாறு, கொழுநர் மார்பத்து எறிவார்-அவற்றைக் கணவர் மார்பில் எறிவார்கள்.

வளைப்பார் முதலியவற்றை எச்சமாக்காது தனித்தனி முடித்தலு மாம். குமிழ் - குமிழம் பூப்போலும் மூக்கு. (௯௧)

முத்தேர் நகையார் வளைப்ப
முகைவிண் டலர்பூங் கொம்பர்ப்
புத்தேள் வண்டும் பேடையும்
புலம்பிக் குழலிற் புகுந்து
தேத்தே யெனப்பாண் செய்து
தீந்தே னருந்துந் துணையோ
டொத்தே ழிசைபா டிக்க
ளுண்ணும் பாண ரோத்தே

(இ - ள்.) முத்து ஏர் நகையார் வளைப்ப-முத்துப்போன்ற அழகிய பற்களையுடைய மகளிர் கொம்புகளை வளைக்க, முகைவிண்டு அலர் பூங் கொம்பர் - அரும்புகள் நெகிழ்ந்து மலர்ந்த அப்பூங் கொம்புகளிலுள்ள, புத்தேள் வண்டும் - புதிய ஆண் வண்டுகளும், பெடையும் - பெண் வண்டுகளும், புலம்பி - ஒலித்து, குழலில் புகுந்து - அவர் கூந்தலிற் புகுந்து, தெத்தே எனப் பாண்செய்து - தெத்தே என்று இசைபாடி, துணையோடு ஒத்து ஏழ் இசைபாடி - விறலியோடு சேர்ந்து ஏழிசை களையும் பாடி, கள் உண்ணும் பாணர் ஒத்து - கள்ளினை அருந்தும் பாணர் போல, தீந்தேன் அருந்தும் - இனிய தேனைப் பருகும்.

கொம்பர் : ஈற்றுப்போலி : வருஞ் செய்யுளிலும் இது. புத்தேள்- புதுமை என்னும் பொருட்டு. தெத்தே, அனுகரணம். துணையுடன் ஏழிசைபாடி அதற்குப் பரிசிலாக் கள்ளினைப் பெற்றுண்ணும் பாணர் போல வண்டு பெடையுடன் பாண் செய்து தேனருந்தும் என்க. இது பரிவருத்தனையணி. (௬௨)

[வேறு]

இம்பர்வீ டளிக்குந் தெய்வ
 மகளிரே யென்பார் கூற்றம்
வம்பல மெய்யே போலும்
 வளைக்கையார் வளைப்பத் தாழ்ந்து
கம்பமுற் றடிப்பூச் சிந்தி
 மலர்முகங் கண்ணீர் சோரக்
கொம்பரும் பணிந்த வென்றா*
 லுலகியல் கூறற் பாற்றே.

(இ - ள்.) இம்பர் வீடு அளிக்கும் தெய்வம் - இந்நிலவுலகில் வீடு பேறு அளிக்கும் தெய்வம், மகளிரே என்பார் கூற்றம் - மகளிரே என் றுரைப்பாரது உரை, வம்பு அல மெய்யே போலும் - பொய்யல்ல மெய்யே போலும், வளைக்கையார் வளைப்பத் தாழ்ந்து - வளையலணிந்த கையை யுடைய அம்மகளிர் வளைக்க வணங்கி, கம்ப முற்று - நடுங்கி, அடிப்பூச்சிந்தி - அவரடிகளில் மலர்களைச் சிதறி, மலர் முகம் கண்ணீர் வார - மலர் முகத்தினின்றும் கண்ணீரொழுக, கொம்பரும் பணிந்த என்றால் - கொம்புகளும் வழிபட்டன என்னின், உலகு இயல் கூறல் பாற்றே - உலகின் தன்மை கூறும் பகுதியையுடையதோ (அன்று என்றபடி.)

மகளிரே தெய்வம் என்பார் உலகாயதர் ;

“ ஊடுவ துணர்வ துற்ற கலவிமங் கையரை யுள்கி
வாடுவ தடியில் வீழ்ந்து வருந்துவ தருந்த வம்பின்
கூடுவ துணர்வு கெட்டுக் குணமெலாம் வேட்கை யேயாய்
நீடுவ தின்ப முத்தி யித்தினின் றூர்கண் முத்தர் ”

(பா - ம்.) * பணிந்த தென்றால்.

என உலகாயதன் கூற்றாகச் சிவஞான சித்தியார்ப் பரபக்கத்துள் ஓதுதல் காண்க. மகளிர் வளைப்ப இயல்பாக நடுங்கி மலர்சிந்தித் தேன் சொரியும் கொம்பினை வேட்கையால் உடல் கர்பித்து அவரருளைப்பெற வேண்டி அடிகளில் மலர் தூவிக் கண்ணீருடன் வணங்குவனவாகக் கற்பித்தார். மலர் முகம் - மலரினிடம். மலர் போலும் முகம். கண்ணீர் - கள்ளாகிய நீர், விழி நீர். உலகியல் என்றது ஆடவர் ஒழுகுந் தன்மை. மெய்யே போலும் என்றது தற்குறிப்பு. (௫௯)

மைக்கணா ளொருத்தி யெட்டா
நிமிர்கொம்பை வளைக்குந் தோறுங்
கைக்குநேர் படாமை வாடுங்
கடிமலர்க் கோடிபோ னிற்பத்
தைக்கும்பூங் கணைவே ளன்னா
னொருமகன் றலைப்பட் டென்னை
எய்க்கின்றாய் தோண்மே லேறிப்
பறியென வேந்தி நின்றான்.

(இ - ள்.) மைக்கணாள் ஒருத்தி-மைதிட்டிய கண்ணையுடைய ஒரு பெண், நிமிர் கொம்பை எட்டா வளைக்குந் தோறும் - உயர்ந்த கொம்பொன்றை எட்டிவளைக்குந் தோறும், கைக்கு நேர்படாமை - கைக்கு எட்டாமையால், வாடும் கடிமலர்க்கொடி போல் நிற்ப - வாட்டமுற்ற மணமுள்ள மலர்க்கொடி போலச் சோர்ந்து நிற்க, தைக்கும் பூங்கணை வேள் அன்னான் ஒருமகன் தலைப்பட்டு - பாய்ந்துருவும் மலர்க்கணையையுடைய மன்மதன் போன்றானாகிய ஓர் ஆண் மகன் எதிர்ப்பட்டு, என்னை எய்க்கின்றாய் - என்னை வாடுகின்றாய், தோள்மேல் ஏறிப் பறி என - எனது தோளின் மேல் ஏறி மலர்களைக் கொய்வாயாக வென்று கூறி, ஏந்தி நின்றான் - அவளைத்தாங்கி நின்றான்.

நேர்படாமையின் என உருபு விரிக்க. யானிருக்க நீ இளைப்பதென்னை என்றானென்க. இது கலவியைக் குறிப்பாலுணர்த்தலின் உதாரம் என்னும் குணவணியாகும். (௬௰)

தையலா ளொருத்தி யெட்டா
மலர்க்கொம்பைத் தளிர்க்கை நீட்டி
ஐயநுண் மருங்கு னோவ
வருந்தலு மாற்றாக் கேள்வன்
ஒய்யென விதுவு மென்னை
யூடிய மகளி ரேயோ
கோய்யென வளைத்து நின்றான்
கண்முத்தங் கோழிப்ப நின்றாள்.

(இ - ள்.) தையலாள் ஒருத்தி-ஒருபெண், எட்டாமலர்க் கொம்பை- எட்டாத பூங்கொம்பொன்றை வளைக்க, தளிர்க்கை நீட்டி - தளிர்

போன்ற தனது கையை நீட்டி, ஐயம் நுண்மருங்குல் நோவவருந்தலும்- (உண்டோ இல்லையோ என்னும்) ஐயம் விளைக்கும் நுண்ணிய இடை வருந்த வருந்தலும், ஆற்றுக்கேள்வன் - அதனைப் பொறாத அவள் கொழுநன், ஒய்யென - விரைந்து, இதுவும் என்னை ஊடிய மகளிரேயோ - என்னை இக்கொம்பும் பிணங்கிய மாதரேயோ, கொய் என வளைத்து நின்றான் - பறிப்பாய் என்று கூறி அதனை வளைத்து நின்றனன்: கண் முத்தம் கொழிப்ப நின்றாள் - அவள் கண்களில் முத்துப்போல நீர் துளிக்க நின்றனள்.

வளைக்க என ஒரு சொல் வருவிக்க. ஒய்யென: விரைவுக் குறிப்பு. ஒய்யென வளைத்து நின்றான் என இயைக்க. கைக்கு அகப்படாது விலகி நிற்றலால் ஊடிய மகளிர் போலும் எனத் தலைவன் கூறிய தொடர்க்கு என்னுடன் ஊடிய மகளிர் போலும் எனக் கூறினானாகப் பொருள் கொண்டு, அவன் பரத்தையருடன் இன்பம் நுகர்ந்தானெனக் கருதிப் புலந்தழுதாள் என்க. இது தூரகாரிய வேதுவின்பாற்படும். (கூ௫)

மைக்குழ லொருத்தி காதில் வட்டப்பொன் னோலை யூடே
திக்கய மனையான் கொய்த செருந்திப்பூச் செருகி நோக்கி
இக்குழை யழகி தென்றா னிடுவேங்கைக்* கிடுதி யென்னா
அக்குழை யோடும் வீசி யன்பனுக் கலக்கண் செய்தாள்.

(இ - ள்.) மைக்குழல் ஒருத்தி காதில் - கரிய கூந்தலை யுடைய ஒரு பெண்ணின் காதில், வட்டப்பொன் ஓலையூடு - வட்டமாகிய பொன்னாற் செய்த ஓலை யூடே, திக்கயம் அனையான் கொய்த செருந்திப் பூச்செருகி - திக்கு யானை போன்ற ஒருவன் தான் பறித்த செருந்தி மலரைச் செருகி, நோக்கி - அதனைப் பார்த்து, இக்குழை அழகிது என்றான் - இந்தக் குழையானது அழகாயுள்ளது எனக் கூறினான், எங்கைக்கு இடு இடுதி என்னா - எம் தங்கைக்கு, இடுவாய் இடுவாய் என்று கூறி, அக்குழையோடும் வீசி - அந்தக் காதணியோடு மலரையும் எறிந்து, அன்பனுக்கு அலக்கண் செய்தாள் - (அவள்) அந்த அன்பனுக்குத் துன்பம் விளைத்தாள்.

தலைவன் ஆர்வ மிகுதியால் மலரைச் செருகி அழகிது என்று பாராட்டா நிற்ப, அவன் தன்னால் விரும்பப்பட்ட பிறமகளிர்க்கு இக் கோலத்தைக் காட்டுதற் பொருட்டு இங்ஙனஞ் செய்தான் எனத்தலைவி உட்கொண்டு பிணங்கினாள்; என்க.

"கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தியைக்
காட்டிய சூடினி ரென்று"

என்னுங் குறள் இங்கு நோக்கற்பாலது. முதற்கண் ஊடியிருந்த தலைவி யது ஊடலைத் தீர்த்தற்கு மலர் கொணர்ந்து செருகினான் என்றும், பரத்தையர்க்கு ஒப்பனை செய்த பயிற்சியால் இங்ஙனம் மலர் செருகினா னெனக் கருதினள் என்றும் கோடலுமாம். திக் என்னும் வடசொல் திரியாது நின்றது. எங்கை என்றது பரத்தையை. இடு இடுதி என வெகுளியால் இருகாற் கூறினாள். (கூ௬)

(பா - ம்.) *இடுமெங்கை.

மயிலிளம் பேடையன் னாளோர்
மாதர்மாங் குடம்பை செல்லுங்
குயிலிளம் பேடைதன் னாவிச்
சேவலைக் கூவ நோக்கி
அயிலிளங் களிறன் னானைக்
கடைக்கணித் தளியுந் தேனும்
பயிலிளஞ் சோலை மாடோர்
மாதவிப் பந்தர் சேர்ந்தாள்.

(இ - ள்.) இளம்பெடை மயில் அன்னாள் ஓர் மாதர் - இளமை பொருந்திய பெண் மயில் போல்வாளாகிய ஒரு பெண், மாங்குடம்பை செல்லும் இளங்குயிற் பெடை - மாமரத்திலுள்ள தனது கூட்டின் கட் செல்லும் இளமையுடைய பெண் குயில், தன் ஆவிச்சேவலைக் கூவ - தன் உயிர்போன்ற ஆண்குயிலைக் கூவி அழைக்க, நோக்கி - அதனைக் கண்டு, அயில் இளங்களிறு அன்னானை - வேற்படை ஏந்திய மழயானை போன்ற தன் காதலனை, கடைக்கணித்து - கடைக்கண்ணால் நோக்கி, அளியும் தேனும் பயில் இளஞ்சோலை மாடு-ஆண் வண்டும் பெண் வண்டும் பயிலும் இளமரக்காவின் மருங்கு, ஓர் மாதவிப் பந்தர் சேர்ந்தாள்- ஒரு குருக்கத்திப் பந்தரை அடைந்தனள்.

குயிற்பெடை சேவலைக் கூவிக் குடம்பை சென்றதனை நோக்கிய வளவில் காதலனைக் கூடும் வேட்கை விஞ்சினமையின் தலைவற்குக் குறிப்பா னுணர்த்தி மாதவிப்பந்த ரெய்தினளென்க. கடைக்கணித் தல்-கடைக்கண்ணோக்கால் கலவிக் குறிப்புணர்த்தல். நாணம் மக ளிர்க்கு இயல்பாய குணம் ஆகலின் வாயாற் கூறுளாயினள். தன் ஆவி: ஆறும் வேற்றுமை ஒற்றுமைக் கிழமைப் பொருளில் வந்தது. கடைக் கணித்து: பெயரடியாகப் பிறந்த இறந்தகால வினையெச்சம். பந்தர்: போலி. (கஎ)

பாசிழை யொருத்தி யாற்றுப்
புலவியாள் பைந்தா ரான்முன்
பூசகில் வாசங் காலிற்
போக்கியும் புனைபூண் காஞ்சி
ஓசையைச் செவியி லுய்த்துங்
கலவியி னுருவந் தீட்டுந்
தூசினை யுடுத்தும் போர்த்துந்
தூதுவிட் டவள்போ னின்றாள்.

(இ - ள்.) பாசிழை ஒருத்தி-பசிய அணிகளை யணிந்த ஒரு பெண், ஆற்றுப் புலவியாள் - பொருத புலவியையுடையவளாய், பைந்தாரான் முன்-பசிய மாலையை யணிந்த தலைவன் முன், பூசு அகில் வாசம் காலில் போக்கியும்-பூசிய அகிலின் மணத்தைக் காற்றின் வழிச் செலுத்தியும், புனைபூண் காஞ்சி ஓசையை - இடையில் அணிந்த காஞ்சி யென்னும் அணியின் ஒலியை, செவியில் உய்த்தும் - அவன் காதிற் புகச் செய்தும், கலவியின் உருவம் தீட்டும் தூசினை உடுத்தும் போர்த்தும் - கலவியின்

வடிவங்களை எழுதிய ஆடையை உடுத்தும் போர்த்தும், தூதுவிட்டவள்போல் நின்றாள் - தூதனுப்பியவள்போல நின்றனள்.

பசுமை என்பதன் ஈறுகெட்டு முதல் நீண்டது. ஆற்றுப்புலவியாள் - தலைவனுடன் ஊடி நின்றவள் பின் அவ்வூடல் நீட்டிக்கப் பெறுதவளாய்; காஞ்சி-இடையிலணியும் அணிவிசேடம்: எண்கோவையுடையது. கலவியினுருவம் - 'பற்குறி நகக்குறிகள் பாணிகொடு தட்டல், நற்கமிழ்து துய்த்தல், களி நன்கெழ அணைத்தல்' முதலியன. இச் செய்யுள் உதாரம் என்னும் குணவணி; தொழில் நுட்பமும் ஆம். (கஅ)

வாய்ந்தநாண் மலர்கோய் தீவான்
மெய்யிலம் மலர்த்தேந் தாது
சாந்தமான் மதம்போற் சிந்திக்
கிடப்பவோர் தையல் யாரைத்*
தோய்ந்தசாந் தென்று ளுள்ளத்
துன்னையுஞ் சுமந்து கொய்த
ஆய்ந்தசண் பகத்தா தென்று
னெய்சோரி யழலி னின்றாள்.

(இ - ள்.) ஓர் தையல் - ஒரு பெண்ணானவள், வாய்ந்த நாள்மலர் கொய்து ஈவான் மெய்யில் - மணம் வாய்ந்த புதிய மலரைப் பறித்துக் கொடுக்குந் தலைவன் உடலில், அத்தேன் மலர்த்தாது - அத்தேன் நிறைந்த மலரின் மகரந்தம், சாந்தம் மான்மதம்போல் சிந்திக் கிடப்ப - சந்தனத்தோடு கலந்த கத்தூரி போலச் சிந்திக் கிடக்க (அதனைக் கண்டு), யாரைத் தோய்ந்த சாந்து என்றாள் - இஃது எந்த மாதரைக் கூடினமையா லமைந்த சாந்து என்றாள்; உள்ளத்து உன்னையும் சுமந்து கொய்த - (அவன்) உள்ளத்தின்கண் உன்னையுந் தாங்கிக்கொய்த, ஆய்ந்த சண்பகத்தாது என்றான்-ஆராய்ந்த சண்பக மலரின் மகரந்தம் என்று கூறினான்; நெய்சொரி அழலின் நின்றாள் - (அது கேட்டலும்) நெய்சொரியப்பட்ட நெருப்பைப்போலச் சினமூண்டு நின்றாள்.

தோய்ந்த என்னும் பெயரெச்சம் காரணப்பொருட்டு. தலைவியின் பொருட்டே மலர் கொய்தலானும், சண்பகமலரின் நிறம் தலைவியின் மேனியையும் அதன் மணம் அவள் மணத்தையும் காட்டி நிற்றலானும் தலைவியை அகத்தே நினைந்த வண்ணமாக நின்று மலர் கொய்தமையை 'உள்ளத்துன்னையுஞ் சுமந்து கொய்த' எனத் தலைவன் கூறினான்; நான் தனித்தன்றி நீயும் உடனிருக்க என்பது தோன்ற இங்ஙனம் கூறினான் என்க. இங்ஙனமாய எச்சவும்மையைப் பிற மகளிரையன்றி உன்னையும் சுமந்து என்னும் பொருட்டாகக் கொண்டு தலைவி வெகுண்டு நின்றாள் என்க. (கக)

பிணியவிழ் கோதை யாளோர் பேதைதன் பதிதன் னூடல்
தணியவன் தடியில் வீழத் தன்னிழ லனையான் சென்னி
மணியிடைக் கண்டு கங்கை மணாளனை யோப்பீ ரெம்மைப்
பணிவதென் னென்று நக்குப் பரிவுமேற் பிரிவு செய்தாள்.

(பா - ம்.) *தையலாரை.

(இ - ள்) பிணி அவிழ்கோதையாள் ஓர் பேதை - கட்டு அவிழ்ந்த மலர் மாலையை யணிந்தாளாகிய ஒரு பெண், தன் பதி தன் ஊடல் தணிய வந்து அடியில் விழ - தன் நாயகன் தன் ஊடல் தணியுமாறு வந்து காலில் விழ்ந்து வணங்க, தன் நிழல் அனையான் சென்னிமணி இடைக்கண்டு - தனது நிழலை அத்தலைவன் முடியிலுள்ள மணியின்கட் கண்டு, கங்கை மணாளனை ஒப்பீர் -(முடியில் ஒருத்தியை ஒளித்துவைத் திருப்பதால்) கங்கையின் நாயகனாகிய சிவபிரானைப் போல்வீரே, எம் மைப் பணிவது என் என்று நக்கு - எம்மை வணங்குவது என் கருதி என்று கூறிச் சிரித்து, பரிவுமேல் பரிவு செய்தாள் - (தலைவனுக்குத்) துன்பத்தின்மேல் துன்பஞ் செய்தாள்.

மற்றொருத்தியைத் தலையிடை ஒளித்துவைத்திருக்கின்றீர் என் பாள் 'கங்கை மணாளனை யொப்பீர்' எனச் சுருங்கச்சொல்லல் என்னும் அணிதோன்றக் கூறினாள். வெகுளியால் 'எம்மை' என்றும், பணிவது கரவு என்பது தோன்றப் 'பணிவது என்' என்றும் கூறினாளென்க. முன் னிருந்த துன்பத்தின் மேலும் மிக்க துன்பம் விளைத்தனள் என்பார் 'பரிவுமேற் பரிவு செய்தாள்' என்றார். (சo)

மதுகைவா ளொருவ னங்கோர் மங்கைதன் வடிவை நோக்கிப்
பதுமமே யடிகை காந்தள் பயோதரங் கோங்கு காவிப்
புதுமலர் விழிவா யாம்பற் போதுநம் மூர லெப்போ
ததனைவாய் திறந்து காட்டிப் போமினென் றடுத்து நின்றான்.

(இ - ள்.) மதுகைவாள் ஒருவன் அங்கு ஓர் மங்கை தன்வடிவை நோக்கி-வலிய வாளையுடைய ஓர் ஆடவன் அங்கு ஒரு பெண்ணின் வடி வத்தை நோக்கி, அடி பதுமமே - (நுமது) பாதம் தாமரை மலரே, கை காந்தள் - கை காந்தள் மலரே, பயோதரம் கோங்கு - கொங்கை கோங் கின் அரும்பே, விழி காவிப்புது மலர் - விழி புதிய நீலோற்பல மலரே, வாய் ஆம்பல் போது - வாய் ஆம்பல் மலரே; நும்மூரல் எப்போது - நுமது பல் எந்த மலரோ (அறியேன்), அதனை வாய்திறந்து காட்டிப் போமின் என்று - அதனை வாய்திறந்து காண்பித்துப் போவீராக என்று கூறி, அடுத்து நின்றான் - நெருங்கி நின்றான்.

நினது புன்னகையாற் றலையளி செய்யவேண்டுமென இரப்பான் 'மூரல் எப்போது அதனை வாய்திறந்து காட்டுக' என வேறொராற்றாற் கூறினான். நும் என்றும் போமின் என்றும் பன்மையாற் கூறினது தன் எளிமை தோன்ற அவளை உயர்த்துச் சொல்லியவாறு. இது வஞ்ச கவிற்சியணி. (சக)

விடைத்தனி யேறன் னானோர்
விடலையோர் வேற்க ணாண்முன்
கிடைத்துநம் மிடத்தே னெஞ்சங்
கெட்டுவந் தொளித்த தல்குற்
றடத்திடை யொளித்த தேயோ
தனத்திடை யொளித்த தோவும்
படத்தினைத் திறந்து காட்டிப்
போகெனப் பற்றிச் சென்றான்.

(இ-ள்.) தனிவிடை ஏறு அன்னான் ஓர் விடலை-ஒப்பற்ற இடப வேறு போல்வானாகிய ஒரு விடன், ஓர் வேல்கணாள் முன் கிடைத்து - ஒரு வேல்போன்ற கண்ணையுடைய பெண்ணின் முன் சென்று, என் நெஞ்சம் கெட்டு வந்து நும்மிடத்து ஒளித்தது-என் மனம் (என்னினின்றும்) நீங்கி வந்து நும்பால் ஒளித்தது; அல்குல் தடத்திடை ஒளித்ததேயோ- அஃது அல்குலிடத்து ஒளித்ததோ, தனத்திடை ஒளித்ததோ-கொங்கையின் கண் ஒளித்ததோ, பூம்படத்தினைத் திறந்து காட்டிப்போக என - (அவற்றை மூடிய) அழகிய ஆடையைத் திறந்து காட்டிப் போவாயாக வென்று கூறி, பற்றிச் சென்றான் - அவளைப் பின்றொடர்ந்து சென்றான்.

பூம்படம் - பூத் தொழிலமைந்த ஆடையுமாம். போக என்னும் வியங்கோள் ஈறு தொக்கது. பற்றி என்பதற்கு உடையைப் பற்றிக் கொண்டு என்றுரைத்தலுமாம் (ச)

மாந்தளி ரடியார் சாய்ப்ப வளைந்தபூஞ் சினைவண் டன்னார்
கூந்தலிற் கிடந்த செம்மற் கோதைமேல் வீழ்ந்த கற்பின்
ஏந்திழை யவரை நீத்துப் பலர்நுகர்ந் தெச்சி லாக்கும்
பூந்தொடி யவரைத் துய்க்கும் பேதையர் போன்ற தன்றே.

(இ-ள்.) மாந்தளிர் அடியார் சாய்ப்ப - மாந்தளிர் போன்ற அடிகளையுடைய மகளிர் வளைத்தலால், வளைந்த பூஞ்சினை-வளைந்த மலர்க் கொம்பினின்றும், அன்னார் கூந்தலில் கிடந்த - அம்மகளிரின் குழலிற் றங்கிக்கிடந்த, செம்மல் கோதை மேல் வீழ்ந்த வண்டு - பழம் பூமாலையின் மேல் வீழ்ந்த வண்டு, கற்பின் ஏந்திழையவரை நீத்து கற்பு நிறைந்த மணக்கிழத்தியரை விடுத்து, பலர் நுகர்ந்து எச்சில் ஆக்கும் பூந்தொடியவரைத் துய்க்கும் - பலரும் நுகர்ந்து எச்சிலாக்கிய பொருட் பெண்டிரைத் துய்க்கும், பேதையர் போன்றது-அறிவிலிகளை ஒத்தது.

செம்மல்-பழம்பூ. சினையினின்றும் கோதைமேல் வீழ்ந்த வண்டு பேதையர் போன்றது என முடிக்க. கொம்பிலுள்ள மலரைக் கற்புடை மகளிராகவும் கூந்தலிலுள்ள வாடிய மலரை விலைமாதராகவும் உவமைக் கேற்பப் பொருளையும் விரித்து ஒருமை வாசகந் தோன்றக் கூறினமையால் இஃது ஒருவயிற்போலி யுவமையணி. அன்று, ஏ: அசை. (சரு)

[கலி விருத்தம்]

புல்லி மைந்தர் பொருள்கவர்ந் தாரென
வல்லி யன்ன மடந்தையர் கொய்தலின்
அல்லி நாண்மல ரற்றபின் கைப்பொருள்
இல்லி யென்ன விளைத்தன காவெலாம்.

(இ-ள்.) புல்லி - தழுவி, மைந்தர் பொருள் கவர்ந்தார் என - ஆடவர் பொருளை விலைமாதர் கவர்ந்தது போல, வல்லி அன்ன மடந்தையர் கொய்தலின் - கொடி போன்ற மகளிர் பறித்தலினால், அல்லி நாள் மலர் அற்ற பின்-அகவிதழையுடைய புதிய மலர்கள் ஒழிந்த பின், கைப்பொருள் இல்லி என்ன - (அங்ஙனம் பரத்தையர்க்குக் கொடுத்தலால்) கைப்பொருள் அற்ற வறியன் போல, கா எலாம் இளைத்தன - சோலைகளெல்லாம் வறங்கூர்ந்தன.

கவர்ந்தார் என்பது தொழிலையுணர்த்திற்று. அல்லி - பூவின் அகவிதழ். இல்லி : இகர விகுதி வினைமுதற் பொருள் குறித்தது. குல மகளிர்க்கு விலை மகளிரை உவமை கூறியது உவமை வழுவாயினும் பூக்கொய்தலிற் பெரிது முயன்றனர் என்னும் குணமிக்குத் தோன்று தலால் வழுவன்றென்க. (௪௪)

மையுண் கண்ணியர் மைந்தரோ டம்மலர்
கொய்யுஞ் செல்வ நுகர்ந்து கொழுங்கணும்
மெய்யுந் தோயிற் கொழுநரின் வேற்றுமை
செய்யும் பொய்கை திளைப்பச்சென் றாரரோ.

(இ - ள்.) மைஉண் கண்ணியர்-மையுண்ட கண்களையுடைய அம் மகளிர், மைந்தரோடு - ஆடவரோடு, அம்மலர் கொய்யும் செல்வம் நுகர்ந்து - அப்பூக்கொய்யும் செல்வத்தைத் துய்த்து, தோயில் - கலந் தால், கொழுங்கணும் மெய்யும் - மதர்த்த கண்களையும் உடலையும், கொழுநரின் வேற்றுமை செய்யும் - கொழுநர் வேறுபடுத்துவதுபோல் வேறுபடுத்தும், பொய்கை திளைப்பச் சென்றார் - பொய்கையின்கண் நீராட்டயரச் சென்றனர்.

செல்வம் என்றது காமத்தை; சீவகசிந்தாமணியில், "வீணைச் செல்வம்" என்பதற்கு, 'இசை நாடகம் காமத்தை விளைத்தலின் அவற்றாற் பிறக்கும் காமத்தை வீணைச்செல்வம் என்றார்' என நச்சினார்க் கினியர் உரைத்திருப்பது நோக்கற்பாலது. கொழுநரைத் தோய்தலால் உண்டாகும் வேறுபாடு பொய்கையிற் றிளைத்தலாலும் உண்டாகுமென் பது கருத்தாகக் கொள்க. அவ்வேறுபாடாவன-கண் சிவத்தல், இதழ் வெளுத்தல், கொங்கைமேற் சந்தனக்கோலம் அழிதல், உடம்பு அலசல் முதலியன. 'கொழுநரின் வேற்றுமை செய்யும் பொய்கை' என்றதும் அவர்கள் காமக் குறிப்புடன் திளைப்பச் சென்றனரென்பதைக் குறித்தற் பொருட்டாம். அரோ : அசை. பெருங்காப்பியத்துட் புனைந்து கூறு தற்குரிய புனல் விளையாட்டு இச்செய்யுள் முதலாகக் கூறுகின்றார். (௪௫)

அன்ன மன்னவ ராடுங் கயந்தலை
நன்னர் நீல நளினங் குமுதமென்
றின்ன வன்றி யெழின்முல்லை சண்பகம்
பொன்னங் கோங்கமும் பூத்தது போன்றதே.

(இ - ள்.) அன்னம் அன்னவர் ஆடும் கயந்தலை-அன்னம்போன்ற அம்மகளிர் நீர் விளையாடும் பொய்கையானது, நன்னர் நீலம் நளினம் குமுதம் என்று இன்ன அன்றி - நல்ல நீலோற்பலமும் தாமரையும் ஆம்பலுமென்று கூறப்படும் இம்மலர்களையே யன்றி, எழில் முல்லை சண்பகம் பொன்அம் கோங்கமும்-அழகிய முல்லையையும் சண்பகத்தை யும் பொன் போன்ற அழகிய கோங்கினையும், பூத்தது போன்றது-பூத் திருத்தலை ஒத்தது.

இந்நூலாசிரியர் கயந்தலை என்பதனைக் கயமென்னும் பொருளிற் பலவிடத்தும் வழங்குவர். நன்னர் : பண்புப்பெயர் ; நல்: பகுதி : நர்: விகுதி. நீர் விளையாடப் புகுந்த மகளிர் பற்களும் உடலும் தனமும்

பொய்கையிலே தோன்றுதலால் அப்பொய்கை நீர்ப் பூவே யன்றிக் கொடிப்பூவும் கோட்டுப்பூவும் பூத்ததை யொத்தது என்பார் 'இன்ன வன்றி யெழின்முல்லை சண்பகம் பொன்னங் கோங்கமும் பூத்தது போன்றது' என்றார். கொடிப்பூ முல்லை, ஏனைய கோட்டுப்பூக்கள், முல்லை, சண்பகம், கோங்கு என்னும் உவமைகளால் முறையே பல், மேனி, தனம் என்னும் பொருள்களை இலக்கணையாகக் கூறுதலின் இஃது உருவகவுயர்வு நவிற்சியணி. (௬௬)

[கலி நிலைத்துறை]

குரவ வோதியர் கயந்தலை குறுகுமுன் கயலும்
அரவு மாமையு* மலவனு மன்னமு மகன்ற
பருவ ரால்களு மிரிந்தன பகைஞர்மே லிட்டு
வருவ ரேலெதிர் நிற்பரோ வலியிழந் தவரே.

(இ-ள்.) குரவ ஓதியர் கயந்தலை குறுகு முன் - குரா மலரை யணிந்த கூந்தலையுடைய மகளிர் பொய்கையை அடையுமுன்பே, கயலும் அரவும் ஆமையும் அலவனும் அன்னமும் அகன்ற - சேல் மீனும் பாம்பும் யாமையும் ஞெண்டும் அன்னமும் அஞ்சி அகன்றன; பரு வரால்களும் இரிந்தன - பெரிய வரால் மீன்களும் ஓடின; பகைஞர் மேலிட்டு வருவரேல் - பகைவர் மேலெழுந்து போருக்கு வருவரேல், வலி இழந்தவர் எதிர் நிற்பரோ - வலியற்றவர் எதிர்த்து நிற்பரோ (நில்லார் என்றபடி).

கயல் மகளிரின் கண்ணுக்கும், அரவு அல்குலுக்கும், ஆமை புற வடிக்கும், அலவன் முழந்தாளுக்கும், அன்னம் நடைக்கும், வரால் கணைக் காலுக்கும் அஞ்சி அகன்றொளித்தன என்றார். அகன்ற: அன்பெறாத பலவறிசொல். ஓகாரம் எதிர்மறை. குறுகுமுன் அகன்றன இரிந்தன என்பது விரைவுயர்வு நவிற்சி. முன்னர்க் கூறிய பொருளை முடித்தற்கு, 'பகைஞர் மேலிட்டு வருவரேல் எதிர் நிற்பரோ வலி யிழந்தவரே' என உலகியல்பை விதந்து கூறுவது வேற்றுப்பொருள் வைப்பணி. (௬எ)

பண்ணே னுஞ்சொலார் குடைதோறும் பன்மலர் வீழ்ந்த
தண்ணே னுந்திரை யலைதொறு நிரைநிரை தாக்கல்
கண்ணு நீலமு முகங்களுங் கமலமும் வாயும்
வண்ண வாம்பலுந் தத்தமின் மலைவன வனைய.

(இ-ள்) பண் எனும் சொலார் குடைதொறும் - பண் என்று கூறப்படும் சொல்லையுடைய மகளிர் மூழ்குந்தோறும், பல் மலர் - பல மலர்கள், வீழ்ந்த தண்ணெனும் திரை அலைதொறும் - மேலெழுந்து வீழ்ந்த குளிர்ந்த அலைகள் அலைக்குந்தோறும், நிரை நிரை தாக்கல் - வரிசை வரிசையாக மோதுதல், கண்ணும் நீலமும் - கண்களும் நீலோற்பல மலர்களும், முகங்களும் கமலமும் - முகங்களும் தாமரை மலர்களும், வாயும் வண்ண ஆம்பலும் - வாய்களும் அழகிய ஆம்பல் மலர்களும், தத்தமில் மலைவன அனைய - தங்கள் தங்களுக்குள்ளே போர் புரிதலை ஒத்தன.

(பா - ம்.) * அரவும் யாமையும்.

மலர்கள் மகளிர் அவயவங்களோடு தாக்கல் மலைதலை யொத்தன வென்க. தொறும் : தொழிற் பயில்வுப் பொருளில் வந்த இடைச்சொல். மலைவன : தொழிலை யுணர்த்திற்று. (சஅ)

கூழை பாசியின் விரிந்திட மகிழ்ந்துநீர் குடையும்
மாழை யுண்கணார் கொங்கையு முகங்களு மருங்கர்
சூழ ரும்போடு மலர்ந்தசெந் தாமரைத் தொகுதி
ஆழ்த ரங்கநீ ரிடைக்கிடந் தலைவன வனைய.

(இ-ள்.) கூழை பாசியின் விரிந்திட - கூந்தல் பாசியைப் போல விரிய, மகிழ்ந்து நீர் குடையும் - மகிழ்ந்து நீராடுகின்ற, மாழை உண் கணார் - மாவடுவின் பிளவு போன்ற மையுண்ட கண்களை யுடைய மகளிரின், கொங்கையும் முகங்களும்- கொங்கைகளும் முகங்களும், ஆழ் தரங்கம் நீரிடைக் கிடந்து அலைவன - ஆழ்ந்த அலைகளையுடைய நீரின்கட் கிடந்து அசைவனவாகிய, மருங்கர்சூழ் அரும்பொடு - பக்கத்திற்சூழ்ந்த மொட்டுகளோடு, மலர்ந்த செந்தாமரைத் தொகுதி அனைய - மலர்ந்த செந்தாமரைக் கூட்டங்களை ஒத்தன.

அலைவனவாகிய அரும்பையும் மலரையும் ஒத்திருந்தன வென்க. கொங்கையும் முகங்களும் அசைதல் அரும்பொடு மலர்த் தொகுதி அலைதலை யொத்தன என ஒரு சொல் வருவித்துரைத்தலுமாம். மருங் கர் : போலி. அலைவன: தொழிற்பெயர். (சகூ)

தூய நீர்குடைந் தேறுந்தன் றுணைவியைத் துணைவன்
வாயுங் கண்களும் வேறுற்ற வண்ணங்கண் டென்கண்
ஏய வின்னுயி ரனையவ ளெங்குளா ளென்றான்
காயும் வேற்கணாள் முலைகுளிப் பாட்டினாள் கண்ணீர்.

(இ-ள்.) தூயநீர் குடைந்து ஏறும் தன் துணைவியை - தூயநீரில் மூழ்கிக் கரையேறுந் தன் தலைவியை, துணைவன் - தலைவன், வாயும் கண்களும் வேறுற்ற வண்ணம் கண்டு- அவள் வாயும் விழிகளும் வேறு பட்டிருக்குந் தன்மையைக் கண்டு (தன் தலைவி அல்லள் இவள் என்று கருதி), என்கண் ஏய இன் உயிர் அனையவள் எங்குளாள் என்றான் - என்னிடத்துப் பொருந்திய இனிய உயிர்போல்வாள் எங்கே உள்ளாள் என்று வினவினான் ; காயும் வேல்கணாள் - (அதனைக் கேட்ட அவள்) கொல்லுலையிற் காயும் வேல்போலுஞ் சிவந்த கண்களையுடையளாய், கண்ணீர் முலை குளிப்பாட்டினாள் - கண்ணீரால் முலைகளைக் குளிப் பாட்டினாள்.

வாயுங் கண்களும் வேறுற்ற வண்ணம் - செந்நிறமுடைய வாய் வெண்ணிறமாகவும், வெண்ணிறமுடைய கண் செந்நிறமாகவும் மாறிய தன்மை. தலைவியின் வாயுங் கண்களும் இங்ஙனம் நிறம் மாறினமை யாலே அவளை வேறு மாதாகக் கருதி, 'என் உயிரனையவள் எங்குளாள்' என வினவினான். அது கேட்ட தலைவி அவன் மற்றொருத்தியைத் தன் இன்னுயிரனையளாகக் கொண்டு வினவினன் எனக் கருதி வெகுண்டு அழுதனள் என்க. காயும் - பகைவரைக் கொல்லும் என்றுமாம். காயும் வேற்கணாள் என்றது அவளது வெகுளியைக் குறித்தவாறு. கண்ணீ

ரால் என உருபு விரிக்க. மிக அழுதாள் என்பதனை வேறு வகையாற் கூறினர். (௰)

மங்கை நல்லவ ளொருத்திநீ ராடுவான் மகிழ்நன்
அங்கை பற்றின ளேகுவா ளவன்குடைந்* தேறும்
பங்க யக்கணு ளொருத்தியைப் பார்த்தலுஞ் சீசீ†
எங்கை யெச்சினீ ராடலே னெனக்கரை நின்றாள்.

(இ - ள்.) மங்கை நல்லவள் ஒருத்தி - மங்கைப் பருவமுடைய ஒரு பெண், நீர் ஆடுவான் - நீராடுதற் பொருட்டு, மகிழ்நன் அங்கை பற்றினள் ஏகுவாள் - கொழுநனது அழகிய கையைப் பிடித்துக்கொண்டு செல்கின்றவள், அவன் - அக்கொழுநன், குடைந்து ஏறும் பங்கயக் கணுள் ஒருத்தியைப் பார்த்தலும் - அந்த நீராடிக் கரையேறும் தாமரை போன்ற கண்களையுடைய ஒரு பெண்ணைப் பார்த்தவளவில், சிசி எங்கை எச்சில்நீர் ஆடலேன் என - சிச்சி என் தங்கையின் எச்சிலாகிய நீரில் யான் ஆடேன் என்று கூறி, கரை நின்றாள் - கரையிலே நின்றனள்.

ஆடுவான்: வானீற்று வினையெச்சம். பற்றினள்: முற்றெச்சம். ஏகுவாள்: பெயர். சீ சி: இகழ்ச்சிக் குறிப்பு. நீராடச் சென்ற இருவருள் தலைவன் தன்னெதிர்ப்பட்ட ஒரு மாதைப் பராக்காக நோக்க, அது கண்ட தலைவி இவள் இவன் காமக்கிழத்தியாதல் வேண்டும் அதனாலன்றோ உவந்து நோக்கினன் எனக் கருதி, அவள் ஆடிய நீரிலே தான் ஆடேனெனப் புலந்து நின்றாள் என்க. (௧௧)

வளைந்த பைங்கழ லான்புன லாடலின் மார்பின்
நனைந்த குங்குமத் தலையெறி நளினமோட் டழுந்தப்
புனைந்த கோங்கையால் வடுப்படப் பொறித்தவள் யாரென்
றினைந்த ழுங்கினு ணெய்சொரி யெரியென வொருத்தி.

(இ - ள்.) வனைந்த பைங் கழலான் - பசிய வீரக்கழலை யணிந்த ஓர் ஆடவன், புனல் ஆடலின் - நீராடுதலால், மார்பில் நனைந்த குங்குமத்து - அவனது மார்பின்கண் நனைந்துள்ள குங்குமக் குழம்பில், அலை எறி நளின மொட்டு அழுந்த-அலைகளால் வீசப்பட்ட தாமரை மொட்டு அழுந்தி வடுப்படுத்த, ஒருத்தி - (அதனைக் கண்ட) தலைவி, புனைந்த கொங்கையால் வடுப்படப் பொறித்தவள் யார் என்று - முத்து மாலை அணிந்த கொங்கைகளால் வடுப்படுமாறு அழுத்தியவள் யார் என்று வினவி, இனைந்து - வருந்தி, நெய்சொரி எரி என இனைந்து அழுங்கினள் - நெய் சொரிந்த நெருப்புப் போலச் சினம் மிக்கு நைந்து வருந்தினள்.

பைங்கழல் - பசும் பொன்னாற் செய்யப்பட்ட கழல். தலைவன் மார்பிலே தாமரை மொட்டு அழுந்திய வடுவைக் காமக் கிழத்தியின் முலைச்சுவடாகக் கருதித் தலைவி புலந்தனள் என்க. எரியெனச் சின மிக்கு என விரித்துரைத்துக் கொள்க. (௧௨)

(பா - ம்.) * அவன் குடைந்து. † பார்த்தனன் சிச்சி.

வீழ்ந்த காதலன் செய்ததீங் காகிய வேலாற்
போழ்ந்த நெஞ்சினள் புலவிநோய் பொருளவன் காண
ஆழ்ந்த நீரிடை யமுழுந்துவாள்* போன்றயர்ந் தயலே
தாழ்ந்த வன்னத்தை நோக்கிக்கை தாவென விரந்தாள்.

(இ - ள்.) வீழ்ந்த காதலன் - தன்னால் விரும்பப்பட்ட காதலன், செய்த தீங்கு ஆகிய வேலால் - தனக்குச் செய்த தீமை என்னும் வேற் படையால், போழ்ந்த நெஞ்சினள் - பிளக்கப்பட்ட உள்ளத்தையுடைய ளாகிய ஒரு மாது, புலவிநோய் பொருள் - ஊடல் நோய் பொருதவ ளாய், அவன் காண - அக்காதலன் பார்க்க, ஆழ்ந்த நீரிடை அழுந்து வாள் போன்று - ஆழமாகிய நீரின்கண் அழுந்துவாள் போலப் பாவனை காட்டி, அயர்ந்து - சோர்ந்து, அயலே தாழ்ந்த அன்னத்தை நோக்கி - அருகிலே (தாமரை மலரில்) தங்கிய அன்னத்தைப் பார்த்து, கைதா என இரந்தாள் - கைகொடு எனக் குறையிரந்தாள்.

புலவி துன்பஞ் செய்தலின் அதனைப் பொருளாயினள் என்க. தலைவன் தன்னை அணைத்து எடுக்குங் கருத்தினளாய் நீரில் அழுந்து வாள்போன்று அயர்ந்து அன்னத்தை நோக்கி இரப்பாளாயினள். தாழ்தல் - தங்குதல். (ருங)

கரும்பு போன்மொழி யாளொரு காரிகை வதனஞ்
சுரும்பு சூழ்கம லங்களுட் கமலமாய்த் தோன்ற
விரும்பு காதல னையுற்று மெலிந்தனன் மெல்ல
அரும்பு முல்லைகண் டையத்தி னீங்கிச்சென் றணைந்தான்.

(இ - ள்.) கரும்பு போல் மொழியாள் - கருப்பஞ்சாறு போலுஞ் சொற்களை யுடையளாகிய, ஒரு காரிகை - ஒரு பெண்ணினுடைய, வதனம் - முகமானது, சுரும்பு சூழ் கமலங்களுள் கமலமாய்த் தோன்ற - வண்டுகள் சூழ்ந்த தாமரை மலர்களுள் ஒரு தாமரை மலராய்த் தோன்ற, விரும்பு காதலன் ஐயுற்று மெலிந்தனன் - அவளை விரும்பிய காதலன் ஐயுறவு கொண்டு மெலிந்து, மெல்ல அரும்பு முல்லை கண்டு - (அது போழ்து) மெல்ல அரும்பிய முல்லையரும்பு போலும் பற்களைக் கண்டு, ஐயத்தின் நீங்கிச் சென்று அணைந்தான் - சந்தேகத்தினின்றும் நீங்கிப் போய்க் காதலியைக் கலந்தான்.

கரும்பு அதன் சாற்றிற்கும், கமலம் அதன் மலருக்கும், முல்லை அதன் அரும்புக்கும் ஆகுபெயர். முல்லை யரும்பு பற்களை உணர்த்திற்று. இது தாமரை மலரோ காதலியின் முகமோ என ஐயுற்று மெலிந்த காதலன் அதனைக் கண்டு அவள் புன்னகை செய்தமையாற் றோன்றிய பற்களால் அவள் முகமெனத் தெளிந்து சென்று அணைந்தனன் என்க. கூந்தலாற் சூழப்பட்ட முகம் வண்டு சூழ்ந்த கமலம் போன்றிருந்தது. இதன்கண் ஐயவணியும், தெரிதருதேற்ற வுவமை யணியும் விரவி யுள்ளன. (ருச)

(பா - ம்.) * அமிழ்ந்துவாள்.

களித்த காதலன் மொக்குள்வாய்த் தன்னிழல் கண்டு
தெளித்து வாணகை செய்யமாற் றுளேன்று சீறித்
தளிர்க்கை நீட்டினள் கண்டில டடவினள் சலத்துள்
ஒளித்தி யோவென வுதைத்தனள் பேதைமா தொருத்தி.

(இ-ள்.) பேதை மாது ஒருத்தி - பேதையாகிய ஒரு பெண், களித்த காதலன் - களிப்புற்ற தலைவன், மொக்குள்வாய் - நீர்க்குமிழியில், தன் நிழல் கண்டு - தனது நிழலைப் பார்த்து, தெளித்து வாள் நகை செய்ய - உரப்பி ஒள்ளிய நகை செய்ய, மாற்றாள் என்று சீறி - (அவள் அந்நிழலைத்) தனது மாற்றாளென்று சினந்து, தளிர்க்கை நீட்டினள் தடவினள் கண்டிலள் - தனது தளிர் போன்ற கைகளை நீட்டித் தடவிக் காணாது, சலத்துள் ஒளித்தியோ என உதைத்தனள் - நீருள் மறைந்தனையோ வென்று சொல்லி உதைத்தாள்.

தன் நிழல் காதலியின் பிரதி பிம்பம். தெழித்து என்பது தெளித்து என்றாயது; அவட்குத் தெளிவித்து என்றும், அதனைக் கலங்காது நிறுத்தி என்றும் உரைத்தலுமாம். நீட்டினள், கண்டிலள், தடவினள் என்பன முற்றெச்சம். சலத்துள் ஒளித்தியோ என்பதனை இரட்டுறமொழிதலாக்கி, வஞ்சத்தால் உள்ளே மறைந்தனையோ என்றும் உரைத்தல் அமையும். இது நிழலை மாற்றாளென மயங்கினமையால் மயக்கவணி. (௩௫)

நாறு சுண்ணமேன் கலவையு நானமுந் தம்மின்
மாறி வீசிநின் றுடுவார் மாலைதா ழகலத்
தூறு பாடற வந்தரத் தளிகவர்ந் துண்ப
ஆறு செல்பவர் பொருள்வெளவு மரட்டரே போல.

(இ-ள்.) நாறு சுண்ணம் மென்கலவையும் நானமும் - நறுமணங் கமழுஞ் சுண்ணப்பொடியையும் மெல்லிய கலவையையும் மான்மதத்தையும், தம்மில் மாறி வீசி நின்று ஆடுவார் - தம்முள் மாறி மாறி வீசி விளையாடும் ஆடவர் மகளிர்களின், மாலை தாழ் அகலத்து - மாலை தங்கிய மார்பின்கண், ஊறுபாடு அற - அவை சென்று பொருந்துதல் இல்லையாக, ஆறு செல்பவர் பொருள் வெளவும் அரட்டர் போல - வழிச்செல்வாரின் பொருளை இடையே பறித்துக்கொள்ளும் ஆறலைப்பார் போல, அளி - வண்டுகள், அந்தரத்து - இடை வெளியுனின்று, கவர்ந்து உண்ப - அவற்றைக் கொள்ளை கொண்டு உண்பன.

வீசுகின்ற சுண்ணம் கலவை நானம் என்பன குறித்த இடத்திற்குச் செல்லாமல் இடையே வண்டுகள் கவர்ந்துண்டல் வழிச்செல்வார் பொருளை இடையே ஆறலைப்பார் கவர்ந்துண்டல் போலும் என்க. ஊறுபாடு - ஊறுதல், பாடு: தொழிற் பெயர் விகுதி. அரட்டர்-ஈண்டு ஆறலைப்பார். (௩௬)

கோய்யு நீலமுங் கமலமுங் கோண்டுகோண் டனங்கன்
எய்யும் வாளியி னெறிவரா லெறிந்திடு மலரைக்
கையி னுற்புடைத் தெறிந்தவர் கதிர்முகம் படக்கண்
டைது வாணகை செய்தக மகிழ்ச்சியு ளாழ்வார்.

(இ - ள்.) கொய்யும் நீலமும் கமலமும் கொண்டு கொண்டு - கொய்த நீலமலரையும் தாமரை மலரையும் கைக்கொண்டு, அனங்கன் எய்யும் வாளியின் எறிவர்-மதவேள் எய்யும் மலர்க்கணைபோல ஒருவர் மேலொருவர் வீசுவர், எறிந்திடு மலரை - அங்ஙனம் வீசிய மலரை, கையினல் புடைத்து - கரத்தினல் (அது எதிர்த்துச் செல்லுமாறு) தாக்கி. எறிந்தவர் முகம் படக்கண்டு - (அது சென்று) எறிந்தவரின் முகத்திற் படுதலைப் பார்த்து, ஐதுவாள் நகை செய்து - அழகிதாக ஒள்ளிய நகை புரிந்து, அகமகிழ்ச்சியுள் ஆழ்வார் - மனமகிழ்ச்சியாகிய கடலில் அழுந்துவார்.

அனங்கன் - உடம்பில்லாதவன் எனக் காரணப் பெயர். நீலமும் கமலமும் அவற்கு அம்புகளாகலின் 'அனங்கன் எய்யும் வாளியின்' என்ருர்; இவர் எறிதலும் காமத்தை மிகுத்தல் கொள்க. ஆல்: அசை. ஐது: இடைச்சொல்லடியாகப் பிறந்த குறிப்புமுற்று எச்சமாயது.(கஎ)

வாச மென்பனி நீரோடு சுண்ணமும் வாரி
வீசு வாரிளம் பிடியோடு வேழமா நிரைபோற்
காசு லாந்தொடி வில்லிடக் கைகளா லள்ளிப்
பூசு சாந்தவை யழிந்திடப் புனிதநீ ரிறைப்பார்.

(இ - ள்.) இளம் பிடியொடு வேழமா நிரைபோல்-இளமையாகிய பெண் யானைகளோடு ஆண் யானையின் கூட்டங்கள் நீரை வீசி விளையாடுதல் போல, வாசம் மென் பனி நீரொடு சுண்ணமும் வாரிவீசுவார் - மணமுள்ள மெல்லிய பனி நீருடன் சுண்ணப்பொடியையும் - அள்ளி (மகளிரும் ஆடவரும்) வீசி விளையாடுவர்; காசுஉலாம் தொடி வில்லிட - மணிகள் அழுத்திய வளைகள் ஒளிவீச, கைகளால் புனிதநீர் அள்ளி - கைகளாலே தூய நீரை அள்ளி, பூசு சாந்து அழிந்திட இறைப்பார் - பூசிய சந்தனம் அழியுமாறு வீசுவர்.

மகளிரும் ஆடவரும் கூடி நின்று நீர் முதலியவற்றை இறைத்தல் பிடிகளும் வேழங்களும் கூடி நின்று நீரினை இறைத்தல் போலுமென்க. தொடிஎன்பது வீரவளையம் ஆகலின் ஆடவர்க்கும் பொருந்தும்; மகளிர் அள்ளி ஆடவர் மார்பில் இறைப்பர் என்றுமாம். சாந்தவை, அவை: பகுதிப் பொருள் விகுதி. (கஅ)

அப்பெ ரும்புனற் றடங்குடைந் தாடுவா ராயத்
தொப்ப ருந்தனி யொருமக ளொருவன்றன் முகத்துத்
துப்பை வென்றசெந் துவரிதழ்ச் செய்யவாய்த் தூநீர்
கொப்ப ளித்தன* ளாம்பலந் தேனெனக் குடித்தான்.

(இ - ள்.) அப்பெரும் புனல் தடம் குடைந்து ஆடுவார் ஆயத்து- அந்தப் பெரிய நீர் நிறைந்த வாவியில் குடைந்து நீராடும் மகளிர் கூட்டத்து, ஒப்பு அருந்தனி ஒரு மகள் - ஒப்பற்ற ஒரு மாது, ஒருவன் தன் முகத்து - ஓர் ஆடவன் முகத்தில், துப்பை வென்ற செந்துவர் இதழ்ச் செய்யவாய்த் தூநீர் கொப்பளித்தனள் பவளத்தை வென்ற செந்நிறம் வாய்ந்த இதழையுடைய சிவந்த வாயிலுள்ள தூய நீரைக் கொப்பளித்தாள்; ஆம்பல் அம்தேன் எனக் குடித்தான்-(அவன் அந்நீரை) ஆம்பல் மலரிலுள்ள அழகிய தேன் என்று கருதிக் குடித்தான்.

(பா - ம்.) * கொப்புளித்தனள்.

தனியொரு, செந்துவர் என்பவற்றில் ஒரு பொருண்மேல் இரு சொற்கள் வந்தன. வாய் ஆம்பல்மலர் போலுதலின் 'ஆம்பலந்தேனெனக் குடித்தான்' என்றார்; அஃது அவனுக்கு இனிமை மிக்கிருந்தது தேன் என்பதனாற் பெற்றாம். (ருக)

ஆழ மவ்விடைச் செல்லலை நில்லென வடுத்தோர்
வேழ மன்னவன் விலக்குவான் போலொரு வேற்கண்
ஏழை தன்னைக்கை யால்வளைத் தேந்திவண் டறைதார்
சூழு மார்பணைத் திரதிதோ டோய்ந்தவ னொத்தான்.

(இ - ள்.) ஓர் வேழம் அன்னவன் - ஆண்யானை போன்ற ஓர் ஆடவன், ஒரு வேல் கண் ஏழை தன்னை - வேல்போன்ற விழிகளை யுடைய ஒரு மாதினை, அவ்விடை ஆழம் செல்லலை நில் என - அவ்விடம் ஆழமுடைத்தாகலின் செல்லாதே நில் என்று, விலக்குவான்போல் அடுத்து - தடுப்பவன்போலச் சென்று, கையால் வளைத்து ஏந்தி - கரங்களால் வளைத்துத் தூக்கி, வண்டு அறை தார் சூழும் மார்பு அணைத்து - வண்டுகள் ஒலிக்கும் மாலைசூழ்ந்த மார்பின்கண் அணைத்து, இரதி தோள் தோய்ந்தவன் ஒத்தான் - இரதியின் தோளைக் கூடின மன்மதனை ஒத்தனன்.

செல்லலை: எதிர்மறை யொருமை ஏவல் முற்று; அல்: எதிர்மறை இடைநிலை. அவன் கருத்து அவளைத் தழுவுவதாகலின் 'விலக்குவான் போல்' என்றார். இதனை இலேசவணியின்பாற் படுத்தலுமாம். (சo)

மாசி னானமுஞ் சூடிய மாலையு மெய்யிற்
பூசு சாந்தமு மாரமும் பொய்கைக்குக்* கொடுத்து
வாச மெய்யினி லம்புய வாசமு மயங்க
ஆசை மைந்தரோ டிளையவ ரகன்கரை யடைவார்.

(இ - ள்.) மாசு இல் நானமும் - குற்றமில்லாத மான்மதமும், சூடிய மாலையும் - அணிந்த மாலைகளும், மெய்யில் பூசு சாந்தமும் ஆரமும் - மெய்யினிற் பூசிய சந்தனமும் முத்தாரமுமாகிய இவற்றை, பொய்கைக்குக் கொடுத்து - வாவிக்குக் கொடுத்து, வாசம் மெய்யினில் - மணமிக்க தங்கள் மேனியில், அம்புய வாசமும் மயங்க - தாமரை மலரின் மணமும் விரவ, இளையவர் ஆசை மைந்தரோடு - இளமை வாய்ந்த மகளிர் அன்புள்ள ஆடவருடன், அகன் கரை அடைவார் - அகன்ற கரையை அடைவாராயினர்.

இளையவர் மகளிரை யுணர்த்திற்று;

"பந்தினை யிளையவர் பயிலிடம்."

எனக் கம்பர் கூறுதலுங் காண்க. அகன், லகரம் னகரமாய்த் திரிந்தது புணர்ச்சியில் விகாரம்; மரூஉ என்றுமாம். நானம் முதலியவற்றைப் பொய்கைக்குக் கொடுத்து அங்குள்ள அம்புயவாசம் பெற்றனர் என்றமையால் இது பரிவருத்தனையணி. (சக)

(பா - ம்.) * மார்பமும் பொய்கைக்கு.

தைய லார்சிலர் நனைந்தநுண் டானையுட் பொதிந்த
மெய்யெ லாம்வெளிப் படக்கரை யேறுவான் வெள்கி
ஐய தாபொலந் துகிலென வன்பரைக் கூய்க்கண்
செய்ய மாயனைக் கேட்குமாய்ச் சிறுமிய ரொத்தார்.

(இ-ள்.) தையலார் சிலர் - மகளிர் சிலர், நனைந்த நுண்தானையுள் - நனைந்த மெல்லிய ஆடையுள்ளே, பொதிந்த மெய் எலாம் - மறைபட்ட உறுப்புக்கள் யாவும், வெளிப்பட - வெளித்தோன்றலால், கரை ஏறுவான் வெள்கி - கரை ஏற வெட்கி, அன்பரைக் கூய் - தங்கள் தங்கள் காதலரைக் கூவி, ஐய பொலம் துகில் தா என - ஐயனே பொன்னுடை அளிப்பாயென்று கேட்டலால் (அவர்கள்), செய்ய கண் மாயனைக் கேட்கும் - சிவந்த கண்களையுடைய கண்ணனை (துகில்) கேட்கின்ற, ஆய்ச் சிறுமியர் ஒத்தார் - இடைச் சிறுமியரைப் போன்றார்.

ஆடை மிக்க மென்மை யுடைமையால் நனைந்த விடத்து அற்றம் வெளிப்படுப்பதாயிற்று. ஏறுவான், வினையெச்சம். தனித்தனி கூவிக் கேட்டன ரென்பார் 'ஐயதா' என ஒருமையாற் கூறினர். யமுனையாற்றில் நீராடிய ஆய்ச்சிறுமியரின் உடைகளைக் கவர்ந்து கண்ணன் குருந்த மரத்தில் ஒளித்தனன் என்பது வரலாறு. (சுஉ)

உலத்தை வென்றதோ ளாடவ ருச்சிமேற் பொறித்த
அலத்த கத்தொடு குங்கும மளைந்துசெம் புனலாய்
மலர்த்த டங்குடைந் தவர்க்குநீ ராஞ்சன* வட்டக்
கலத்தை யொத்தன சுற்றிநின்† றாரொத்த கடிக்கா.‡

(இ-ள்.) மலர்த்தடம் - மலர்கள் நிறைந்த பொய்கைகள், உலத்தை வென்ற தோள் ஆடவர் உச்சிமேல் பொறித்த - திரண்ட கல்லை வென்ற தோளையுடைய ஆடவர்களின் முடிமீது திட்டிய, அலத்தகத்தொடு - செம்பஞ்சுக் குழம்போடு, குங்குமம் அளைந்து - குங்குமமும் கலந்து, செம்புனல் ஆய் - சிவந்த நீரினையுடையனவாய், குடைந்தவர்க்கு நீராஞ்சன வட்டக் கலத்தை ஒத்தன - நீராடிக் கரையேறியவர்க்கு (அமைத்த) நீராஞ்சனமெடுக்கும் வட்டக் கலத்தினை ஒத்தன; கடிக்கா - மணமுள்ள சோலைகள், சுற்றி நின்றார் ஒத்த - (அவற்றைச்) சுற்றிநின்ற மகளிரை ஒத்தன.

மகளிரின் ஊடல் தீர்த்தற்கு ஆடவர் அவர் காலில் வீழ்ந்து வணங்கும் பொழுது அன்னார் சினமிக்கு ஆடவர் தலைமீது உதைத்தலால் அவர் காலில் ஊட்டிய செம்பஞ்சுக்குழம்பு ஆடவரின் தலைமீது பொறிக்கப்பட்டிருக்கு மென்க. நீராஞ்சனம் - ஆலத்தி. வட்டக்கலம் - வட்டில்: தட்டம். சுற்றி - சுழற்றி. (சுங)

பட்டும் பன்னிறக் கலிங்கமும் பன்மணிக் கலனுங்
கோட்டுஞ் சாந்தமு நானமுங் குங்குமச் சேறுங்
கட்டுந் தாமமுந் தமதுகட் டழகெலாங் கவர
மட்டுண் கோதைய ராடவர் மனமெலாங் கவர்ந்தார்.

(பா-ம்.) * நீராசனம். † சுற்ற. ‡ கடிகா.

(இ - ள்.) பட்டும் பல்நிறக் கலிங்கமும் - பட்டாடைகளும் பல நிறமுள்ள பருத்தி நூலாடைகளும், பல்மணிக் கலனும் - பல மணிகள் அழுத்திய அணிகளும், கொட்டும் சாந்தமும் - நிறையப் பூசிய சந்தனமும் - நானமும் - மான்மதமும், குங்குமச் சேறும் - குங்குமக் குழம்பும், கட்டும் தாமமும் - கட்டிய மாலைகளுமாகிய இவைகள், தமது கட்டழகு எலாம் கவர - தங்கள் கட்டழகு முழுதையுங் கவர்ந்து கொள்ள, மட்டு உண் கோதையர் - மணமிக்க மாலையணிந்த மகளிர், ஆடவர் மனம் எலாம் கவர்ந்தார் - ஆடவர்களின் உள்ளமனைத்தையும் கவர்ந்தனர்.

ஆடையணி முதலியவற்றால் மகளிர் அழகுபெறாது அவரால் அவை அழகு பெற்றன வென அவர்களது இயற்கையழகின் சிறப்புக் கூறுவார் 'தமது கட்டழகெலாங் கவர' என்றார். மேல் 'புதுமது நுகரப் புக்கார்' என்று கூறுதலின் ஈண்டு மதுவுண்ட மகளிர் என்னலாகாமை யறிக. (சுச)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

காவியுங் கமலப் போதுங் கள்ளொழு காம்பற் போதும்
ஆவியுட் பூத்த போல வாடியுட் பூப்ப நோக்கி
ஏவிரண் டன்ன கண்ணா லனங்கனை யேவல் கொள்ளும்
பூவிரி பொலங்கொம் பன்னார் புதுமது நுகரப் புக்கார்.

(இ - ள்.) காவியும் கமலப்போதும் - நீலோற்பல மலரும் தாமரை மலரும், கள் ஒழுகு ஆம்பல் போதும் - தேன் ஒழுகும் ஆம்பல் மலருமாகிய இவை, ஆவியுள் பூத்தபோல - வாவியுள் மலர்ந்தனபோல, ஆடியுள் பூப்ப நோக்கி - கண்ணாடியுள்ளும் மலருமாறு பார்த்து, இரண்டு ஏ அன்ன கண்ணால் - இரண்டு கணைகளை ஒத்த கண்களால், அனங்கனை ஏவல் கொள்ளும் - மதவேளையும் பணிகொள்ளும், பூவிரி பொலம் கொம்பு அன்னார் - பூக்கள் மலர்ந்த பொற்கொம்பு போன்ற அம்மகளிர், புதுமது நுகரப் புக்கார் - புதிய மதுவினைப் பருகப் புகுந்தனர்.

மகளிர் கண்ணாடியில் முகம் பார்த்த காலையில் அவர் கண் முகம் வாய் என்பன அதனுட் டோன்றுதல் காவி கமலம் ஆம்பல் என்னும் பூக்களை அது பூத்தமை போன்றிருந்த தென்க. பூத்த: தொழிற்பெயர். அனங்கனையும் என்னுஞ் சிறப்பும்மை தொக்கது. (சுரு)

போன்னினும் வெள்ளி யானும்
பளிங்கினும் புலவன் செய்த
நன்னிறக் கலத்திற் கூர்வா
ணட்டேன வாக்கிச் சேடி
மின்னனா ரளித்த தேறற்
சிறுதுளி விரலிற் றெள்ளித்
துன்னிவீழ் களிவண் டோச்சித்
தொண்டையங் கனிவாய் வைப்பார்.

(இ-ள்.) சேடி மின் அனார் - மின்போன்ற தோழிகள், பொன்னினும் வெள்ளியானும் பளிங்கினும் - பொன்னாலும் வெள்ளியாலும் பளிங்காலும், புலவன் செய்த நல் நிறக் கலத்தில் - கம்மப் புலவனாற் செய்யப்பட்ட நல்ல ஒளியையுடைய கலங்களில், கூர்வாள் நட்டென வாக்கி அளித்த - கூரிய வாளை நட்டாற்போல வார்த்துக் கொடுத்த, தேறல் - மதுவில், சிறு துளி விரலில் தெள்ளி - சிறிய துளியை விரலாற்றெறட்டுத் தெறித்து, துன்னி வீழ் களிவண்டு ஓச்சி - நெருங்கி வீழும் மதுமயக்கத்தையுடைய வண்டுகளை ஓட்டி, அம் தொண்டைக் கனிவாய் வைப்பார் - அழகிய கோவைக் கனிபோன்ற வாயில் வைத்து அருந்துவார்.

புலவன் - பொன் முதலிவற்றாற் கலம் இயற்றும் அறிவுடையான்; கம்மியன். கலத்தில் வீழும் மதுவின் இடையறு வொழுக்கு அதில் வாள் நட்டது போன்றிருந்தது. நட்டென: தொகுத்தல். சேடி மின்னனார்: பன்மையிலொருமை. வாக்கி - வார்த்து: வாக்கு: பகுதி. கள்ளுண்பார் அதனை விரலாற் றெறட்டுத் தெறித்துப் பின் உண்ணுதல் மரபு என்க. (கூசு)

வள்ளத்து வாள்போல் வாக்கு
 மதுக்குடந் தன்பாற் பெய்த
கொள்ளைத்தேன் மதுவைக்* கொள்ளை
 கோளவந்த வள்ள மீதேன்
றுள்ளத்து வெகுண்டு வைவா
 ளூன்றிமார் பிடப்ப தோத்த
கள்ளைச்சூழ் காளை வண்டு
 செருச்செயல் காண்ப வொத்த.

(இ-ள்.) வள்ளத்து வாள் போல் வாக்கும் மதுக்குடம் - கிண்ணத்தில் வாளை நட்டாற்போல வார்க்கா நின்ற மதுக் குடமானது (அத் தோற்றத்தால்), தன்பால் பெய்த கொள்ளைத்தேன் மதுவை - தன்னிடத்துப் பெய்துவைத்த மிக்க மணமுள்ள கள்ளினை, கொள்ளை கொள வந்த வள்ளம் ஈது என்று - கவர வந்த வள்ளம் இதுவென்று கருதி, உள்ளத்து வெகுண்டு - மனத்திற் சினங்கொண்டு, வைவாள் ஊன்றி மார்பு இடப்பது ஒத்த - கூரிய வாளை ஊன்றி அதன் மார்பைப் பிளப்பதை ஒக்கும்; கள்ளைச் சூழ் காளை வண்டு - அம்மதுவினைச் சூழ்ந்த இளமையுடைய வண்டுகள், செருச் செயல் காண்ப ஒத்த - அப்போர்ச் செயலைக்காண்பன ஒத்தன.

கொள்ளை இரண்டனுள் முன்னது மிகுதிப் பொருட்டு. தேன் - மணம்; தெண்மது எனப் பாடமாயின் தெளிந்த மது என்க. இடப்பது: தொழிற் பெயர். (கூஎ)

தணியவுண் டுள்ளஞ் சோரு மொருமக டணிய வுண்பான்
பிணியவிழ் கோதை யாளோர் பெண்மகள் கலத்தில் வாக்குந்
துணிமதத் தாரை தன்னை வாளெனத் துணிந்து பேதாய்
திணிகதிர் வாளால் விள்ளஞ் சிதைத்தியோ வென்று நக்காள்.

(பா-ம்.) * தெண்மது.

(இ - ள்.) தணியல் உண்டு உள்ளம் சோரும் ஒருமகள் - கள்ளினை நுகர்ந்து மதிமயங்கிய ஒரு மாது, தணியல் உண்பான் - கள்ளினைப் பருகுதற் பொருட்டு, பிணி அவிழ் கோதையாள் ஓர் பெண்மகள்-முறுக் கவிழ்ந்த மலர்மாலை யணிந்த ஒரு பெண், கலத்தில் வாக்கும் துணிமதுத் தாரை தன்னை - வள்ளத்தில் வார்க்கின்ற தெளிந்த மதுத் தாரையை, வாள் எனத் துணிந்து - வாட்படை என்று துணிந்து, பேதாய் - அறி வில்லாதவளே, திணி கதிர் வாளால் - செறிந்த ஒளியையுடைய வாட் படையினால், வள்ளம் சிதைத்தியோ என்று நக்காள்-வள்ளத்தை அழிக் கின்றாயோ என்று கூறிச் சிரித்தாள்.

தணியல் - கள். உண்பான்: வினையெச்சம். உண்பான் வாக்கும் தாரையை என்க. துணி - தெளிவு. இது போல்வனவற்றை மயக்க வணியின் பாற் படுத்துக. (௬அ)

மலர்தோறுஞ் சிறுதே னக்கித் திரிவண்டு மடவார் தங்கைத்
தலனெடுத் தோச்ச வோடா தழீஇத் தடஞ் சாடி மொய்ப்ப
இலமெனப் பல்லோர் மாட்டு மிரந்திரந் தின்மை நீங்கா
தலமரும் வறியோர் வைத்த நிதிகண்டா லகல்வ ரேயோ.

(இ - ள்.) மலர்தொறும் சிறு தேன் நக்கித் திரிவண்டு - பூக்கள் தோறுஞ் சென்று சிறிய தேனை நக்கித் திரிகின்ற வண்டுகள், மடவார் - மதுவுண்ணும் மகளிர், தம் கைத்தலன் எடுத்து ஓச்ச - தமது கையை மேலெடுத்து ஓட்டவும், ஓடா - ஓடாமல், தடம் சாடி - பெரிய மதுச் சாடியை, தழீஇமொய்ப்ப - தழுவி மொய்ப்பன வாயின; இலம் எனப் பல்லோர் மாட்டும் இரந்து இரந்து-வறியம் என்று கூறிப் பலரிடத்தும் பலகாலும் இரந்தும், இன்மை நீங்காது அலமரும் வறியோர்-இலம்பாடு நீங்காமல் மனஞ் சுழன்று அலையும் வறுமையுடையோர், வைத்த நிதி கண்டால் - சேமித்து வைத்த நிதியினைக் காணின், அகல்வரேயோ - (யாவர் அகற்றினும் அதனைவிட்டு) நீங்குவரோ (நீங்கார் என்றபடி.)

மலர்தொறுஞ் சிறுதேன் நக்கித் திரிதல் பல்லோர் மாட்டும் இரந்து திரிதலை யொக்கும். ஓடா: ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். தழீஇ: சொல்லிசை யளபெடை. இது வேற்றுப்பொருள் வைப்பணி. (௬௯)

உண்டவ ளொருத்தி கள்வா
யுதிக்குந்தன் முகமுங் கண்ணுங்
கண்டுதா மரைகள் வேலை
முளைத்ததக் கள்ளை யார
மோண்டுணப் பேதைத் தும்பி
யம்மது முளரி வார்தேன்
னுண்டுளி சேறிவ தென்று
னொடித்துக்கை புடைத்து நக்காள்.

(இ - ள்.) உண்டவள் ஒருத்தி - மதுவைப் பருகிய ஒரு பெண், கள்வாய் உதிக்கும் தன் முகமும் கண்ணும் கண்டு - கள்ளின்கண்

தோன்றுந் தனது முகத்தையும் கண்ணையுங் கண்டு, தாமரை கள் வேலை பூத்தது-தாமரை மதக்கடலில் முளைத்தது, அக்கள்ளை ஆரமொண்டு உணுப் பேதைத் தும்பி-அம்மதுவை நிறைய அள்ளி உண்ணுத அறிவில்லாத வண்டு, அம்மது முளரிவார் தேன் நுண்துளி செறிவது என்னு நொடித்து - அம்மதுக் கடலில் முளைத்த தாமரையினின்று ஒழுகும் மதுவின் சிறு துளியைச் சூழ்கின்றது என்று சொல்லி, கை புடைத்து நக்காள் - கை தட்டிச் சிரித்தாள்.

கள்ளிலே தோன்றிய முகத்தைத் தாமரையாகவும், கண்ணை வண்டாகவும் மயங்கினுள் என்க. (எ0)

மங்கையா ளொருத்தி தானுண்
டெஞ்சிய மதுவட் டோன்றுந்
திங்களை நோக்கி யென்னைப்
பிரிவின்கட் டீயாய்ச் சுட்டாய்
இங்குவந் தகப்பட் டாயே
யினிவிடேன் கிடத்தி யென்னு
அங்கோரு வள்ளங் கோண்டு
சேமித்தா ளருந்தல் செய்யாள்.

(இ - ள்.) மங்கையாள் ஒருத்தி-மங்கைப் பருவமுள்ள ஒரு பெண், தான் உண்டு எஞ்சிய மதுவுள் - தான் பருகி மிகுந்த கள்ளினுள், தோன்றும் திங்களை நோக்கி-பிரதிபலிக்கும் சந்திரனைப் பார்த்து, பிரிவின்கண் என்னைத் தீயாய்ச் சுட்டாய்-(என் தலைவனைப்) பிரிந்திருந்த காலத்து என்னை நெருப்பாக நின்று காய்ந்தனை; இங்கு வந்து அகப்பட்டாயே - (இன்று) இங்கே வந்து அகப்பட்டுக் கொண்டாயே, இனி விடேன் - இனி உன்னை விடமாட்டேன், கிடத்தி என்னு - இங்ஙனே கிடப்பாயாக என்று கூறி, அருந்தல் செய்யாள் - அக்கள்ளைப் பருகாது, அங்கு ஒரு வள்ளம் கொண்டு சேமித்தாள் - அங்கு மற்றொரு வள்ளத்தினுல் மூடி வைத்தனள்.

கிடத்தி, த் : எழுத்துப்பேறு, இ : விகுதி. சேமித்தல் - காவல் செய்தல். (எக)

வெவ்விய நறவ முண்ட
விளங்கிழை யொருத்தி கையிற்
கௌவிய வாடி தன்னிற்
கருங்கய னெடுங்கட் சேப்புங்
கோவ்வைவாய் விளர்ப்பு நோக்கி
யென்னலங் கூட்டுண்டேகும்
ஒளவிய மனத்தான் யாரென்
றயர்கின்ரு ளயலா ரேள்ள.

(இ - ள்.) வெவ்விய நறவம் உண்ட விளங்கிழை ஒருத்தி - வெம்மையுடைய கள்ளை உண்ட விளக்கமாகிய அணிகளையணிந்த ஒரு பெண்

கையில் கௌவிய ஆடிதன்னில் - கையிற்பற்றிய கண்ணுடியில், கருங் கயல் நெடுங்கண் சேப்பும் - கரிய கயல்போன்ற நெடிய கண்களின் சிவப்பையும், கொவ்வைவாய் விளர்ப்பும் நோக்கி - கொவ்வைக் கனி போன்ற வாயின் வெளுப்பையும் பார்த்து, என் நலம் கூட்டுண்டு ஏகும்- எனது இன்பத்தைக் கொள்ளை கொண்டு செல்லும், ஓளவியமனத்தான் யார் என்று-வஞ்சமனத்தையுடையான் யாவன் என்று கூறி, அயலார் எள்ள அயர்கின்ருள் - அயலார் நகைக்கச் சோர்கின்ருள்.

கள்ளுண்டலால் வந்த கண் சிவப்பையும் வாய் விளர்ப்பையும் கலவியால் வந்தனவாக மயங்கினுள் என்க. சேப்பு: செம்மையென்னும் பண்படியாக வந்த தொழிற் பெயர். (எஉ)

ஒருத்திகள் ளுண்கின் ருடன் னுருவமங் நறவுட் டோன்ற
ஒருத்தியென் னுடன்வந் துண்பாள் காணென வுண்ட தோழி
ஒருத்திவந் தென்செய் வாடன் னுருவமு நோக்கிப் பேதாய்
ஒருத்தியோ விருவ ரென்ரு ளேச்சிலென் றுகுத்து நக்காள்.

(இ - ள்.) ஒருத்தி கள் உண்கின்ருள் - கள் உண்கின்ற ஒரு பெண், தன் உருவம் அம் நறவுள் தோன்ற - தன் வடிவம் அம் மதுவுள்ளே தோன்ற (கண்டு), ஒருத்தி என்னுடன் வந்து உண்பாள் காண் என - ஒருத்தி என்னேடு வந்து உண்கின்ருள் (இதைக்) காண்பாயாகவென்று கூற, உண்ட தோழி ஒருத்தி வந்து - கள்ளுண்ட தோழி ஒருத்தி அங்கு வந்து, என் செய்வாள் - என்ன செய்கின்ருளெனின், தன் உருவமும் நோக்கி - தனது வடிவத்தையும் (அதனுட்) கண்டு, பேதாய் - அறிவில் லாதவளே, ஒருத்தியோ-(உன்னேடு உண்பவள்) ஒருத்தியோ (அன்று); இருவர் என்ருள் - இருவர் என்று கூறினுள்; எச்சில் என்று உகுத்து நக்காள் - (அவள்) இஃது எச்சிற்பட்டதென்று அதனைக் கீழே உகுத்துச் சிரித்தனள்.

உண்கின்ருளாகிய ஒருத்தி என்க. உருவமும்: எச்சவும்மை ஒருத்தியோ: ஒகாரம் தெரிநிலை. (எ௩)

சாடியு ணறவ முண்டா டன்னுரு வேறு பாட்டை
ஆடியு ணோக்கி நானே வல்லனே வேனைத்தான் கைக்கோண்
டோடினர் பிறரு முண்டோ வுயிரன்னன் வந்திங் கென்னைத்
தேடினேன் செய்கே னென்னைத் தேடித்தா சேடி யென்ருள்.

(இ - ள்.) சாடியுள் நறவம் உண்டாள் - சாடியிலேயுள்ள மதுவை உண்ட ஒரு பெண், தன் உருவேறுபாட்டை ஆடியுள் நோக்கி - தனது வடிவத்தின் வேறுபாட்டினைக் கண்ணுடியுட்கண்டு, நானே அல்லனே- (இங்கிருப்பது) நான்தானே வேறுமகளோ, எனைத்தான் கைக்கொண்டு ஓடினர் பிறரும் உண்டோ - பிறர் என்னைக் கைப்பற்றி ஓடினரோ, உயிர் அன்னன் வந்து இங்கு என்னைத்தேடின் என் செய்கேன் - என் உயிர் போன்ற காதலன் வந்து இங்கு என்னைத் தேடினுல் யான் என் செய்வேன், சேடி என்னைத் தேடித்தா என்ருள் - தோழியே என்னைத் தேடிக் கண்டு பிடித்துத் தருவாயாக என்று வேண்டினள். (எச)

களித்தவ ளொருத்தி நின்ற
வாடியுட் கணவன் றன்பின்
ஒளித்தவ னுருவுந் தானு
நேர்பட வுருத்து நோக்கித்
துளித்தகண் ணீர ளாகி
யேதிலா டோடோய்ந் தின்பங்
குளித்தனை யிருத்தி யோவென்
றுதைத்தனள் கோப மூண்டாள்.

(இ - ள்.) களித்தவள் ஒருத்தி நின்ற ஆடியுள் - கள்ளுண்ட ஒரு பெண் தான் நின்று பார்த்த கண்ணாடியுள், தன் பின் ஒளித்தவன் கணவன் உருவும் - தன் பின்னே மறைந்து நின்ற கேள்வன் வடிவமும், தானும் நேர்பட-தன் வடிவமுந் தோன்ற, உருத்து நோக்கி-செயிர்த்து நோக்கி, துளித்த கண்ணீரளாகி - துளிக்கின்ற கண்ணீரை யுடையளாய், ஏதிலாள் தோள் தோய்ந்து இன்பம் குளித்தனை - அயலாள் தோளைப் புணர்ந்து இன்பக் கடலுள் மூழ்கி, இருத்தியோ என்று - இருக்கின்றாயோ வென்று கூறி, கோபம் மூண்டாள் உதைத்தனள் - சினமுதிர்ந்து உதைத்தாள்.

களித்தல் - கள்ளுண்டு மயங்கல். ஒளித்தவனாகிய கணவன் என்க. கணவன் நிழலைக் கணவனாகவும், தன் நிழலை மற்றொருத்தியாகவும் மயங்கினாள். மதுவுண்டல் கூறிய இச்செய்யுட்களிலே பேதைமை பற்றிய நகைச்சுவை விஞ்சியிருத்தல் காண்க.

"எள்ளல் இளமை பேதைமை மடனென்
றுள்ளப் பட்ட நகைநான் கென்ப"

என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும். (எரு)

இளம்புளிந் தயிர்வி ராய
வின்சுவை பொதிந்த சோறு
வளம்பட விருந்தி னோடு
மருந்துவார் வசந்த வீணை
களம்படு மேழாலி னோடு
கைவிர னடாத்திக் காமன்
உளம்புகுந் தலைப்ப வெண்ணெய்ப்
பாவைபோ லுருகிச் சோர்வார்.

(இ - ள்.) இளம் புளிந் தயிர் விராய-இளம் புளிப்பினையுடைய தயிர் கலந்த, இன்சுவை பொதிந்த சோறு - இனிய சுவை நிறைந்த சோற்றினை, விருந்ினோடும் வளம்பட அருந்துவார்-விருந்தினரோடும் வளம் பொருந்த உண்பார்கள்; களம்படும் எழாலினோடு-மிடற்றிலுண்டாகும் ஓசை யமைந்த பண்ணுடன், வசந்த வீணை - வசந்த காலத்துக்குரிய வீணையை, கைவிரல் நடாத்தி - வாசித்து, காமன் உளம் புகுந்து

அலைப்ப - மதவேள் உள்ளத்திற் சென்று வருத்துதலால், வெண்ணெய்ப் பாவைபோல் உருகிச் சோர்வார் - வெண்ணெயாற் செய்த பதுமைபோல் உருகித் தளர்வார்.

"புளிப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்"

என்பதனால், புளிந் தயிர் என மெலி மிக்கது. விருந்து - புதுமை; அது புதியராய் வந்தார் மேல் நின்றது. எழால் - மிடற்றிசை; 'வெள்ளை காகுளி கீழோசை வெடிகுரல் நாசியின்ன, எள்ளிய வெழாலின் குற்றம்' என விறகு விற்ற படலத்திற் கூறினமையுங் காண்க. (எகூ)

இவ்விள வேனிற் காலத் தின்னுயிர்த் துணைவி யோடும்
செவ்விய செங்கோ னேமிச் சென்பக மாற னோர்நாள்
கைவினை வல்லோன் செய்த கதிர்விடு காந்தக் குன்றில்
வெவ்விய வேடை நீப்பா னிருந்தனன் வேறு வைகி.

(இ - ள்.) இவ்விளவேனில் காலத்து ஓர் நாள் - இந்த இளவேனிற் காலத்தில் ஒருநாள், கைவினை வல்லோன் செய்த - சிற்பநூல் வல்லோன் செய்த, கதிர்விடு காந்தக் குன்றில் - ஒளிவிடும் சந்திரகாந்தக் கல்லாலாகிய செய்குன்றின்கண், வெவ்விய வேடை நீப்பான் - கொடிய வெப்பத்தைப் போக்கும் பொருட்டு, செவ்விய செங்கோல் நேமிச் செண்பக மாறன் - திருந்திய செங்கோலையும் ஆணைத்திகிரியையுமுடைய செண்பக மாறன் என்பான், இன் உயிர்த் துணைவியோடும் - தனது இனிய உயிர் போலும் மனைவியோடும், வேறு வைகி இருந்தனன் - வேறாகத் தங்கியிருந்தனன்.

இவ்விளவேனிற் காலம் - இதுகாறும் வருணித்த இயல்பினையுடைய இளவேனிற்காலம். செவ்விய என முன்வந்தமையின் செங்கோல் என்பது பெயர் மாத்திரையாய் நின்றது. காந்தம் - சந்திரகாந்தம். வெவ்விய வேடை - மிக்க வெப்பம். நீப்பான் : வினையெச்சம். (எஎ)

மாந்தளி ரீன்று கோங்கு
வண்டளவ ரும்பித் தண்டேங்
காந்தள்சேங் கமல மாம்பல்
சண்பகங் கழுநீர் பூத்துச்
சாய்ந்தமேன் கோடியுந் தானுந்
தனியிடத் திருப்பா னேரே
வாய்ந்ததோர்* நாற்றந் தோன்ற
வசைந்தது வசந்தத் தென்றல்.

(இ - ள்.) மாந்தளிர் ஈன்று - மாந்தளிர் தளிர்த்து, கோங்கு வண்தளவு அரும்பி - கோங்கு மொட்டும் வளவிய முல்லையரும்பும் அரும்பி, தண் தேம் காந்தள் - தண்ணிய தேன் நிறைந்த காந்தள் மலரும், செங்கமலம் ஆம்பல் சண்பகம் கழுநீர் பூத்து - செந்தாமரை மலரும் குமுத

(பா - ம்.) * ஆய்ந்ததோர்.

மலரும் சண்பக மலரும் குவளைமலரும் மலர்ந்து, சாய்ந்த மென்கொடியும் தானும் - ஒசிந்த மெல்லிய கொடி (ஒன்று உளதேல் அது) போன்ற தேவியுந் தானுமாக, தனி இடத்து இருப்பான் நேரே - தனியிடத்தில் இருக்கும் அச்சண்பகமாறனுக்கு நேரே, வாய்ந்தது ஓர் நாற்றம்தோன்ற - புதுமை வாய்ந்ததாகிய ஒரு நறுமணந் தோன்றுமாறு, வசந்தத் தென்றல் அசைந்தது - வசந்த காலத்திற்குரிய தென்றல் மெல்லென வீசியது.

மாந்தளிர் முதலியவற்றையுடைய கொடிபொன்றுளதேல் அது போலும் என விரித்து இல்பொருளுவமை யாக்குக. மாந்தளிர் மேனியையும், கோங்கு தனத்தையும், தளவு பற்களையும், காந்தள் கையையும், கமலம் முகத்தையும், ஆம்பல் வாயையும், சண்பகம் மூக்கையும், கழுநீர் கண்ணையும், இவற்றையுடைய கொடி தலைவியையும் உணர்த்தின. உவமானச் சொற்களால் உவமேயங்களைக் கூறுதலால் உருவகவுயர்வு நவிற்சியணியுமாம். கொடியும் தானும் இருப்பான் என்றது வழுவமைதி;

“ தானுந்தன் றையலுந் தாழ்சடையோ னுண்டிலனேல். ”

என்னுந் திருவாசகத்திற்போல. (எஅ)

வெவ்விய வேலான் வீசும் வாசமோங்* தீது வேறு
திவ்விய வாச மாக விருந்தது தென்றல் காவில்
வெளவிய வாச மன்று காலுக்கும் வாச மில்லை
எவ்வியல் வாச மேயோ விதுவென வெண்ணங் கோள்வான்.

(இ - ள்.) வெவ்விய வேலான் - கொடிய வேற்படையினையுடைய சண்பகமாறன், வீசும் வாசம் மோந்து - அங்ஙனம் வீசிய மணத்தை உயிர்த்து, ஈது வேறு திவ்விய வாசமாக இருந்தது - இது வேறு தெய்வத் தன்மை பொருந்திய மணமாக இருந்தது; தென்றல் காவில் வெளவிய வாசம் அன்று - தென்றல் சோலையிற் கவர்ந்த மணம் அன்று; காலுக்கும் வாசம் இல்லை - காற்றுக்கும் இயல்பாக மணமில்லை (ஆகின்), இது எவ்வியல் வாசமேயோ என - இம்மணம் எதன்கட் பொருந்திய மணமோ என்று, எண்ணங்கோள்வான் - எண்ணுவானாகி.

திவ்வியம்-தெய்வத் தன்மை. இவ்வுலகத்து இதுகாறும் உணர்ந்த வாசமன்றென்பான் ‘வேறு திவ்விய வாசமாக விருந்தது’ என்றான். காவில் வெளவிய வாசமன்று, வேறு திவ்விய வாசமாக விருந்தது என மாற்றியுரைத்தலுமாம். காற்று ஊறு, ஓசை என்னும் இருகுணமே உடையதாகலின் ‘காலுக்கும் வாசமில்லை’ என்றான். எவ்வியல் என்பதனை எதன்கட் பொருந்திய என விரித்துக் கொள்க. எண்ணங்கொள்வான்: ஒரு சொல்லாய் எச்சமாயிற்று. (எகூ)

திரும்பித்தன் றேவி தன்னை
நோக்கினன் றேவி யைம்பால்
இரும்பித்தை வாச மாகி
யிருந்தது கண்டிவ் வாசஞ்

(பா - ம்.) * வாசமோர்ந்து.

சுரும்பிற்குந் தெரியா தென்னுச்
சூழ்ந்திறும் பூது கொண்டீ
தரும்பித்தைக் கியல்போ செய்கை
யோவென வையங் கொண்டான்.

(இ - ள்.) திரும்பித் தன் தேவி தன்னை நோக்கினன். திரும்பித் தனது மனைவியைப் பார்த்தான்; தேவி ஐம்பால் இரும்பித்தை வாசமாகி இருந்தது கண்டு-(அந்தமணம்) தேவியின் ஐந்து பகுப்பாக முடிக்கப் படும் பெருமை பொருந்திய கூந்தலின் மணமாயிருத்தலைக் கண்டு, இவ் வாசம் சுரும்பிற்கும் தெரியாது என்னுச் சூழ்ந்து - இம்மணம் வண்டிற் கும் தெரியாது என்று எண்ணி, இறும்பூது கொண்டு - வியப்புற்று, ஈது - இம்மணம், அரும்பித்தைக்கு இயல்போ செய்கையோ என ஐயங் கொண்டான் - அரிய கூந்தலுக்கு இயற்கையோ (அன்றிச்) செயற் கையோ என்று ஐயுற்முன்.

ஐம்பால் - ஐந்து பகுப்பு; முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என்பன. பித்தை பெண் மயிரை உணர்த்தி நின்றது. செய்கை - செயற்கை. (அ0)

ஐயுறு கருத்தை யாவ ராயினு மறிந்து பாடல்
செய்யுந ரவர்க்கே யின்ன வாயிரஞ் செம்பொ னென்றக்
கையுறை வேலா னீந்த பொற்கிழி கைக்கொண் டேகி
மெய்யுணர் புலவர் முன்னுத் தூக்கினர் வினைசெய் மாக்கள்.

(இ - ள்.) ஐயுறு கருத்தை அறிந்து - யான் ஐயுற்ற கருத்தினை உணர்ந்து, பாடல் செய்யுநர் யாவராயினும் - பாடுகின்றவர் யாவரா யிருந்தாலும், அவர்க்கே இன்ன ஆயிரம் செம்பொன் என்று - அவ ருக்கே இந்த ஆயிரம் செம்பொன் அடங்கிய முடிப்பு உரியதென்று கூறி, அ கை உறை வேலான் ஈந்த பொற்கிழி - அந்த வேற்படை ஏந்திய கையினனாகிய சண்பக மாறன் கொடுத்த பொன் முடிப்பை, வினைசெய் மாக்கள் கைக்கொண்டு ஏகி - ஏவலாளர் பெற்றுச் சென்று, மெய் உணர் புலவர் முன்னுத் தூக்கினர்-உண்மையை உணர்ந்த சங்கப் புலவர் இருக்கை முன்னே கட்டித் தொங்கவிட்டனர்.

இன்ன: இகரச் சுட்டின் திரிபு. கையிற் பொருந்திய வேல் எனக் கிடந்தவா றுரைத்தலுமாம். வேலான் ஈந்தனன் அங்ஙனம் ஈந்த என விரித்துரைக்க. முன்னு - முன்னுக. (அக)

வங்கத்தார் பொருள்போல் வேறு வகையமை கேள்வி நோக்கிச்
சங்கத்தா ரெல்லாந் தம்மிற் றனித்தனி தேர்ந்து தேர்ந்து
துங்கத்தார் வேம்ப னுள்ளஞ் சூழ்பொரு டுழாவி யுற்ற
பங்கத்தா ராகி யெய்த்துப் படருறு மனத்த ராஞர்.

(இ - ள்.) சங்கத்தார் எல்லாம்-சங்கப் புலவரனைவரும், வங்கத்து ஆர் பொருள் போல் - மரக்கலத்தில் நிறைந்த பொருளின் வகைபோல, வேறுவகை அமை கேள்வி - வேறு வேறு வகையாக அமைந்த நூல் களால், தம்மில் நோக்கி - தம்முள் (ஒன்றுபட்டு) ஆராய்ந்தும், தனித்

தனி தேர்ந்து தேர்ந்து - ஒவ்வொருவரும் தனித்தனியே பன்முறை ஆராய்ந்தும், துங்கத் தார் வேம்பன் உள்ளம் சூழ் பொருள் துழாவி - சிறந்த வேப்ப மலர் மாலையை யணிந்த சண்பகமாறன் உள்ளத்துக் கருதிய பொருளைத் தேடி (க் காணாமையால்), உற்ற பங்கத்தாராகி - சிறுமையுற்றவராய், எய்த்துப் படர் உறு மனத்தரானார் - இளைத்துத் துன்ப மிக்க மனத்தினையுடையவரானார்.

வங்கத்திலே பல திணைப் பொருள்களும் நிறைந்திருக்குமாறுபோல பல திணைப்பொருள்களும் நிறைந்த நூல்கள் என்க. கேள்வியால் என உருபு விரிக்க. தார் வேம்பன் என்பதை வேப்பந்தாரன் எனவும், உற்ற பங்கத்தாராகி என்பதைப் பங்க முற்றவராகி எனவும் மாறுக. சூழ் பொருள் - கருதிய பொருள்: வினைத்தொகை. படர் - துன்பம். (அஉ)

[கலி விருத்தம்]

அந்த வேலையி லாதி சைவரில்
வந்த மாணவன் மணஞ்செய் வேட்கையான்
முந்தை யாச்சிம முயலும் பெற்றியான்
தந்தை தாயிலான் றருமி யென்றுளான்.

(இ - ள்.) அந்த வேலையில் - அப்பொழுது, ஆதி சைவரில் வந்த மாணவன் - ஆதி சைவ மரபில் வந்த மாணவனும், தந்தை தாய் இலான் - தந்தையும் தாயும் இல்லாதவனும், முந்தை ஆச்சிமம் முயலும் பெற்றியான் - பிரமசரிய நிலையில் வழுவாது ஒழுகுந் தன்மையனும் ஆகிய, தருமி என்றுளான் - தருமி என்ற பெயருள்ள ஒருவன், மணம் செய் வேட்கையான் - மணஞ்செய்யும் விருப்புடையவனாய்.

ஆதிசைவர் - சிவனை அருச்சிக்கும் சிவ மறையோர். இவர்களைச் சதாசிவமூர்த்தியின் ஐந்து திருமுகங்களினின்றும் தோன்றிய ஐந்து முனிவரின் வழியினர் என்பர். முந்தை - முன். ஆச்சிரமம் என்பது திரிந்து நின்றது. வேட்கையான் என்பதை எச்சமாக்குக. (அ௩)

ஒருவ னான்முகத் தோருவன் மார்புறை
திருவ னாடருந் தேவ னுவரு
அருவ நாலகன் றானைத் தன்கலி
வெருவ நாடிமுன் வீழ்ந்து வேண்டுவான்.

(இ - ள்.) ஒருவன் - ஒப்பற்றவனும், நான்முகத்து ஒருவன் - நான்கு முகங்களையுடைய பிரமனும், மார்பு உறை திருவன் - திருமகள் உறையும் மார்பினையுடைய திருமாலினும், நாடரும் தேவன் - தேடிக் காண்பதற்கு அரிய தேவனும், நால் உரு நால் அருவம் அகன்றானை - நான்கு உருவங்களும் நான்கு அருவங்களும் (அருவுருவம் ஒன்றும்) ஆகிய இவற்றைக் கடந்தவனுமாகிய சோமசுந்தரக் கடவுளை, தன் கலி வெருவ நாடி - தன் துன்பம் அஞ்சி ஓடக் கருதி, முன் வீழ்ந்து வேண்டுவான் - திருமுன் விழ்ந்து வணங்கி வேண்டுவானாயினன்.

மார்பு உறை திருவன் என்பதனைத் திரு உறை மார்பன் என விகுதி பிரித்துக் கூட்டுக. உருவம் நான்கு : அயன், மால், உருத்திரன்,

மகேசன். அருவம் நான்கு: விந்து, நாதம், சத்தி, சிவம். உபலக்கணத்தால் அருவுருவாகிய சதாசிவமுங் கொள்க. இவ்வொன்பது பேதங்களிலும் வியாபித்து நின்று தொழில் நடாத்தும் துரிய சிவனாகிய முழுமுதல்வன் உண்மையில் இவற்றைக் கடந்து நிற்பன் என்க;

"சிவஞ்சத்தி நாதம் விந்து சதாசிவன் றிகழுமீசன்
உவந்தரு ளுருத்தி ரன்றான் மாலய னொன்றி னொன்றாய்ப்
பவந்தரு மருவ நாலிங் குருவநா லுபய மொன்றாய்
நவந்தரு பேத மேக நாதனே நடிப்ப னென்பர்"

என்னும் சிவஞான சித்தியார்த் திருவிருத்தங் காண்க. (அச)

தந்தை தாயிலேன் றனிய னாகிய
மைந்த னேன்புது வதுவை வேட்கையேன்
சிந்தை நோய்செயுஞ் செல்ல றீர்ப்பதற்
கெந்தை யேயிது பதமென் றேத்தியே.

(இ - ள்.) எந்தையே-எம் தந்தையே, தந்தை தாய் இலேன் - தந்தை தாய் அற்றவனாய், தனியனாகிய மைந்தனேன் - ஒரு பற்றுக்கோடு மில்லாதவனாயுள்ள சிறியேன், புதுவதுவை வேட்கையேன் - கடிமணம் புரியும் விருப்பமுடையேன்; சிந்தை நோய் செயும் செல்லல் தீர்ப்பதற்கு -(அது முடித்தற்குப் பொருளின்மையின்) மனத்தை வருத்தும் வறுமைத் துன்பினை நீக்குவதற்கு, இது பதம் என்று ஏத்தியே - இது தருணம் என்று கூறித் துதித்து.

செல்லல் - துன்பம்; வறுமைத் துன்பம், (அரு

நெடிய வேதநூ னிறைய வாகமம்
முடிய வோதிய முறையி னிற்கெனும்*
வடுவி† லில்லற வாழ்க்கை யின்றிநின்
அடிய ருச்சனைக் கருக னாவனே.

(இ - ள்.) நெடிய வேத நூல் நிறைய - உயர்ந்த மறை நூல்கள் முற்றவும், ஆகமம் முடிய - ஆகமங்கள் முற்றவும், ஓதிய முறையில் நிற்கு எனும் - ஓதி அறிந்த முறையில் நிற்பேன் எனினும், வடு இல் இல்லற வாழ்க்கை இன்றி - குற்றமில்லாத இல்லற வாழ்க்கை இல்லாமல், நின் அடி அருச்சனைக்கு அருகன் ஆவனோ - தேவரீரின் திருவடியை அருச்சிப்பதற்கு உரியன் ஆவனோ (ஆகேன்).

வேதநூலை நிறைய ஓதிய முறையில், ஆகமங்களை முடிய ஓதிய முறையில் எனத் தனித்தனி கூட்டுக. நிற்கு - நிற்பேன்: எனினும் என்பது எனும் என விகாரமாயிற்று. இல்லற வாழ்க்கை உற்றோரே சிவபெருமானை அருச்சித்தற்குரியரென்பது வேதாகமங்களின் துணிபென்பது இதனாற் பெறாம். (அசு)

(பா - ம்.) *நிற்பினும் † வடிவில்.

ஐய யாவையு மறிதி யேகோலாம்
வையை நாடவன் மனக்க ருத்துணர்ந்
துய்ய வோர்கவி யுரைத்தே னக்கருள்
செய்ய வேண்டுமேன் றிரந்து செப்பினான்.

(இ - ள்.) ஐய - ஐயனே, யாவையும் அறிதியே - நீ யாவற்றையும் அறிவாயன்றே, வையை நாடவன் மனக்கருத்து உணர்ந்து - வையை நாட்டையுடைய பாண்டியனது உள்ளக் கருத்தை ஓர்ந்து, உய்ய - யான் உய்தி பெற, ஓர் கவி உரைத்து - ஒரு கவி பாடி, எனக்கு அருள் செய்ய வேண்டும் என்று - அடியேனுக்கு அருளல் வேண்டுமென்று, இரந்து செப்பினான் - குறையிரந்து கூறினான்.

இல்வாழ்க்கையை மேவியே நின் அடியை அருச்சிக்க வேண்டும் என்பதனையும், மணமுடித்தற்குப் பொருளில்லாது நான் வருந்துதலையும் நீ அறிவாய் என்பான் 'யாவையும் அறிதி' என்றான், முற்றுணர்வுடைய நினக்குப் பாண்டியன் மனக்கருத்துணர்தல் அரிதன்றென்பதும் கருத்தாகக் கொள்க. கொல், ஆம்: அசைகள். (அஎ)

தென்ன வன்குல தெய்வ மாகிய
மன்னர் கொங்குதேர் வாழ்க்கை யின்றமிழ்
சொன்ன லம்பெறச் சொல்லி நல்கினார்
இன்ன றீர்ந்தவ னிறைஞ்சி வாங்கினான்.

(இ - ள்.) தென்னவன் குல தெய்வமாகிய - பாண்டியன் குல தெய்வமாகிய, மன்னர் - சுந்தர பாண்டியர், கொங்குதேர் வாழ்க்கை இன்தமிழ் - கொங்குதேர் வாழ்க்கை என்னும் முதலையுடைய இனிய தமிழ்ப்பாவை, சொல் நலம் பெறச் சொல்லி நல்கினார் - சொல்லழகு நிரம்பப் பாடித் தந்தருளினார்; இன்னல் தீர்ந்து அவன் இறைஞ்சி வாங்கினான் - துன்பம் நீங்கி அத்தருமி என்பவன் (அதனை) வணங்கி வாங்கினான்.

கொங்குதேர் வாழ்க்கை என்பது,

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோநீ யறியும் பூவே"

என்னும் பாசுரத்திற்கு முதற்குறிப்பு. தமிழ் என்பது செய்யுளை உணர்த்திற்று. இச்செய்யுள் நலம்புனைந்துரைத்தல் என்னும் துறை யமைந்தது. மணத்தினை ஆராய்ந்து திரியும் வாழ்க்கையையுடைய அழகிய சிறையினையுடைய வண்டே, 'பயிற்சி மிக்க நட்பும் மயில்போற் சாயலும் நெருங்கிய பற்களும் உடைய இவ்வரிவையின் கூந்தல்போல நறுமணமுடையன நீ அறியும் பூக்களுள் உளவோ, விருப்பம் பற்றிக் கூறாது உண்மை கூறுக' என்பது இதன் பொருள். இங்ஙனம் புனைந்துரைக்கு முகத்தால் தலைவன் நயப்புணர்த்தினான் என்க. இதனாற் றலைவி கூந்தல்

இயற்கை மண முடைத்தென்பது பெறப்படுதல் காண்க. இச்செய்யுள் குறுந்தொகையிற் கோக்கப் பெற்றுள்ளது. (அஅ)

போற்ற னிச்சடைப்* புவன நாயகன்
சோற்ற பாடல்கைக் கோண்டு தோன்னிதி
பெற்றே டுத்தவன் போன்று பீடுறக்
கற்ற நாவலர் கழக நண்ணினுன்.

(இ-ள்.) பொன் சடை - பொன் போலுஞ் சடையினையுடைய, தனி புவன நாயகன் - ஒப்பற்ற உலக நாயகனாகிய சோமசுந்தரக்கடவுள், சொற்ற பாடல் கைக்கொண்டு - திருவாய் மலர்ந்தருளிய திருப்பாசுரத்தைக் கையிலேற்று, தொல் நிதி பெற்றெடுத்தவன் போன்று - வைப்பு நிதியைப் பெற்றவன் போல (மகிழ்ந்து), பீடு உறக் கற்ற நாவலர் கழகம் நண்ணினுன் - பெருமை பொருந்தக் கற்று வல்ல புலவர் சங்கத்தை அடைந்தான்.

பீடுறக் கற்ற என்றும், பீடுற நண்ணினுன் என்றும் இயைத்தல் அமையும். (அகூ)

கல்வி யாளர்தங் கையி னீட்டினுன்
வல்லே யாவரும் வாங்கி வாசியாச்
சோல்லின் செல்வமும் போருளுந் தூக்கியே
நல்ல நல்லவேன் றுவகை நண்ணினுர்.

(இ-ள்.) கல்வியாளர் தம் கையில் நீட்டினுன் - புலவர் கையில் (அத்திருப்பாசுரத்தைக்) கொடுத்தான்; வல்லே வாங்கி - விரைந்து வாங்கி, யாவரும் வாசியா - அனைவரும் அதனைப் படித்து, சொல்லின் செல்வமும் பொருளும் தூக்கியே - சொல் வளத்தையும் பொருள் வளத்தையும் சீர் தூக்கி, நல்ல நல்ல என்று - (அவை) மிகவும் நல்லன என்று கூறி, உவகை நண்ணினுர் - மகிழ்ச்சி யுற்றனர்.

அடுக்கு உவகை பற்றியது; வியப்புமாம். (கூ0)

அளக்கில் கேள்வியா ரரசன் முன்புபோய்
விளக்கி யக்கவி விளம்பி னுர்கடன்
உளக்க ருத்துநே ரோத்த லாற்சிரந்
துளக்கி மீனவன் மகிழ்ச்சி தூங்கினுன்.

(இ-ள்.) அளக்கு இல் கேள்வியார் - அளவில்லாத நூற்கேள்வியை யுடைய சங்கப் புலவர்கள், அரசன் முன்பு போய் - பாண்டியன் முன் சென்று' அக்கவி விளம்பி விளக்கினுர்கள் - அக்கவியினைக் கூறிப் பொருள் விளக்கினுர்கள்; தன் உளக் கருத்து நேர் ஒத்தலால் - தன் உள்ளக் கருத்துடன் (அது) முற்றும் ஒத்திருத்தலால், மீனவன் சிரம் துளக்கி மகிழ்ச்சி தூங்கினுன் - பாண்டியன் முடியசைத்துக் களிகூர்ந்தான்.

(பா-ம்.) * பொற்றனிச்சடை.

அளக்கு: தொழிற்பெயர், விளம்பி விளக்கினர் என மாறுக நேரொத்தல் - முழுதொத்தல். (௬௧)

உணர்ந்த கேள்வியா ரிவரோ டோல்லைபோய்ப்
புணர்ந்த வாயிரம் பொன்னு மின்றமிழ்
கொணர்ந்த வேதியன் கோள்க வின்றேன
மணந்த தாரினன் மகிழ்ந்து நல்கினன்.

(இ - ள்.) உணர்ந்த கேள்வியார் இவரொடு - உண்மை யுணர்ந்த கேள்வி வல்லாராகிய இப்புலவரோடும், ஒல்லை போய் - விரைந்து சென்று, புணர்ந்த ஆயிரம் பொன்னும் - பொருந்திய ஆயிரம் பொன்னையும், இன்தமிழ் கொணர்ந்த வேதியன் இன்று கொள்க என - இனிய பாசுரத்தைக் கொண்டுவந்த வேதியன் இப்பொழுதே கொள்ளக் கடவனென்று, மணந்த தாரினன் - மணம் வீசும் மாலையை யணிந்த பாண்டியன், மகிழ்ந்து நல்கினன் - மகிழ்ந்து அளித்தான். (௬௨)

வேந்த னேவலால் விபுதர் தம்மோடும்
போந்து மீண்டவைப் புறம்பு தூங்கிய
ஆய்ந்த போற்கிழி யறுக்கு நம்பியை
நேர்ந்த கீரனில் லெனவி லக்கினன்.

(இ - ள்.) வேந்தன் ஏவலால் - பாண்டியன் ஏவலினால், விபுதர் தம்மொடும் மீண்டு போந்து - புலவரோடும் திரும்பிச் சென்று, அவைப் புறம்பு தூங்கிய - கழகத்தின் வெளியிற் றூங்கிய, ஆய்ந்த பொன் கிழி அறுக்கும் நம்பியை - சிறந்த பொன் முடிப்பை அறுக்கும் அத்தருமியை, கீரன் நேர்ந்து நில் என விலக்கினன் - நக்கீரன் எதிர்ந்து அறுக்காதே நில் என்று தடுத்தான்.

விபுதர் - புலவர். இதனால் முன்பு கீரன் ஆண்டிருந்திலனென்பது பெற்றாம். (௬௩)

குற்ற மிக்கவிக் கென்று கூறவுங்
கற்றி லானெடுங் காலம் வெம்பசி
உற்ற வன்கலத் துண்ணு மேல்லைகைப்
பற்ற வாடினன் பண்பு பற்றினன்.

(இ - ள்.) இக்கவிக்குக் குற்றம் என்று கூறவும் - இந்தப் பாடலுக்குக் குற்றம் (உண்டு) என்று கூறவும், கற்றிலான் - தமிழ்ப் புலமையில்லானாகிய அவ்வேதியன், நெடுங்காலம் வெம்பசி உற்றவன் - நீண்ட காலமாகக் கொடிய பசி உற்றவனாய்; கலத்து உண்ணும் எல்லை - கலத்தின்கண் உணவு பெற்று உண்ணுங்கால், கைப்பற்ற வாடினன் - (உண்ணற்கவெனத் தடுத்து ஒருவன்) கையைப் பற்றிக்கொள்ள வாட்டமடைந்த ஒருவனது, பண்பு பற்றினன் - தன்மையை அடைந்தான்.

குற்றமின்றெனக் கூறுதற்கேற்ற வலியிலானென்பார் 'கற்றிலான்' என்றார். (௬௪)

உலர்ந்த நெஞ்சுகோண் டோதுங்கி நாயகன்
நலந்த ருங்கழ னண்ணி ஞனவன்
மலர்ந்த பாடல்கோண் டறிஞர் வைகிடத்
தலர்ந்த சிந்தைகோண் டடைந்த மைந்தனே.

(இ - ள்.) உலர்ந்த நெஞ்சுகொண்டு ஒதுங்கி - வாடிய மனத்துடன் நடந்து, நாயகன் நலம் தரும் கழல் நண்ணினுன் - இறைவனது நன்மையைத் தருந் திருவடியை அடைந்தனன்; அவன் மலர்ந்த பாடல் கொண்டு - அவ்விறைவன் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாசுரத்தைப் பெற்றுக்கொண்டு, அறிஞர் வைகு இடத்து - சங்கப் புலவர் இருக்கும் இடத்திற்கு, அலர்ந்த சிந்தையோடு அடைந்த மைந்தன் - மகிழ்ந்த உள்ளத்தோடு சென்ற அத்தருமி என்பான்.

மலர்ந்த - அருளிச் செய்த. அலர்ந்த சிந்தை - களிப்பு மிக்க சிந்தை. மைந்தன் நண்ணினுன் என்க. (கரு)

செய்யுள் கோண்டுபோய்த் திருமுன் வைத்துளப்
பையுள் கோண்டவப் பனவ னேன்னைநீ
மையுண் கண்ட*விவ் வழுவு பாடலைக்
கையு ணல்கினுய் கதியி லேற்கேன.

(இ - ள்.) உளம் பையுள் கொண்ட அப்பனவன் - உள்ளத்திற் கவலை கொண்ட அம்மறையோன், செய்யுள் கொண்டுபோய் திருமுன் வைத்து - திருப்பாசுரத்தைக் கொண்டுபோய்த் திருமுன் வைத்து, மை உண் கண்ட - கருமை பொருந்திய திருமிடற்றை யுடையவனே, நீ இவ்வழுவு பாடலை-நீ குற்றமுள்ள இப்பாடலை, கதி இலேற்குக் கையுள் நல்கினுய் என்னை என - ஒரு பற்றுமற்ற எனக்குக் கையில் அளித்தருளினையே அஃது என்னை என்று கூறி.

பையுள் - துன்பம். மையுள் கண்ட எனப் பாடமோதி, மையும் கருநிறம்பெறக் கருதும் கண்டத்தை யுடையாய் என்றுரைப்பாருமுளர். ரேன் இக்கவி குற்றமுடைத்தென்று கூறினமையின் 'வழுவு பாடல்' என்ருனென்க. (கசு)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

வறுமைநோய் பிணிப்பப் பன்ஞள்
வழிபடு மடியே னின்பாற்
பேறுபோரு ளிழந்தே னேன்று
பேசிலேன் யார்க்கு மேலாங்
கறைகேழு மிடற்ருேய் நின்றன்
கவிக்குற்றஞ் சில்வாழ் நாட்சிற்
றறிவுடைப் புலவர் சோன்ஞ
லாருனை மதிகக வல்லார்.

(பா - ம்.) * மையுள் கண்ட.

(இ-ள்.) வறுமை நோய் பிணிப்ப - வறுமையாகிய பிணி என்னைக்கட்டி வருத்த, பல்நாள் வழிபடும் அடியேன் - பலநாட்களாக வழிபாடு செய்துவரும் அடியேன், நின்பால் பெறு பொருள் இழந்தேன் என்று பேசிலேன் - நின்னிடத்துப் பெறுகின்ற பொருளை இழந்தேன் என்று கூறிற்றிலேன்; யார்க்கும் மேலாம் கறைகெழு மிடற்றோய் - அனைவருக்கும் மேலாகிய நஞ்சக்கறை பொருந்திய திருமிடற்றினையுடைய இறைவனே, நின்றன் கவி - நீ பாடியருளிய பாசுரத்திற்கு, சில் வாழ்நாள் சிற்றறிவு உடைப் புலவர் - சில் வாழ்நாளும் சிற்றறிவுமுடைய புலவர், குற்றம் சொன்னால் - குற்றங் கூறினால், உனை மதிக்க வல்லார் யார் - நின்னை மதிக்கவல்லவர் யாவர் (ஒருவரும் இல்லை யென்றபடி.)

யான் பொருளிழந்த வருத்தத்தினும் புலவர் நின் கவிக்குக் குற்றங் கூறியதனாலாகிய வருத்தம் பெரிதுடையேனென்றான் என்க.

"யாவர்க்கு மேலாம் அளவிலாச் சீருடையான்"

என்பது திருவாசகம். (௬௭)

எந்தையிவ் விகழ்ச்சி நின்ன
தல்லதை யெனக்கியா தென்னாச்
சிந்தைநோ யுழந்து சைவச்
சிறுவனின் றிரங்க யார்க்கும்
பந்தமும் வீடும் வேதப்
பனுவலும் பயனு மான
சுந்தர விடங்க னங்கோர்
புலவனாய்த் தோற்றஞ் செய்தான்.

(இ-ள்) எந்தை - எம் தந்தையே, இவ்விகழ்ச்சி நின்னது அல்லது - இந்த நிந்தை நின்னைச் சார்ந்ததல்லது, எனக்கு யாது என்னா - எனக்கு யாதுளதென்று கூறி, சைவச் சிறுவன் - அவ்வாதிசைவ மாணவன், சிந்தைநோய் உழந்து நின்று இரங்க - மனக்கவலையால் வருந்தி நின்று இரங்க, யார்க்கும் பந்தமும் வீடும் - அனைவருக்கும் பந்தமும் வீடும், வேதப் பனுவலும் பயனுமான - மறைநூலும் அதன் பயனுமாகிய, சுந்தர விடங்கன் - சோமசுந்தரக் கடவுள், அங்கு ஓர் புலவனாய்த் தோற்றம் செய்தான் - அங்கு ஒரு புலவனாகத் தோற்றுவானாயினன்.

இவ்விகழ்ச்சி நின்னது என்றது நீ அதனைப் போக்கவேண்டுமென்னும் குறிப்பிற்று. அல்லதை, ஐ; சாரியை. இறைவன் பந்தமும் வீடுமாயினமையும், வேதமும் அதன் பயனுமாயினமையும்,

"பந்தமுமாய் வீடுமாயினார்க்கு"

எனவும்,

"மறையுமாய் மறையின் பொருளுமாய்
வந்தென் மனத்திடை மன்னிய மன்னே"

எனவும் திருவாசகத்திற் கூறப்படுதல் சிந்திக்கற்பாலது. (௬௮)

கண்டிகை மதாணி யாழி
கதிர்முடி வயிரம் வேய்ந்த
குண்டலங் குடிகோண் டாகத்
தழகெலாங் கொள்ளை கொள்ளத்
தண்டமிழ் மூன்றும் வல்லோன்
றானெனக் குறியிட் டாங்கே
புண்டர நுதலிற் பூத்துப்
பொய்யிருள் கிழித்துத் தள்ள.

(இ - ள்.) கண்டிகை மதாணி ஆழி கதிர்முடி - மகரகண்டிகையும் பதக்கமும் மோதிரமும் ஒளி பொருந்திய முடியும், வயிரம் வேய்ந்த குண்டலம் - வயிரங்கள் பதித்த குண்டலமும், ஆகத்துக் குடிகொண்ட அழகு எலாம் கொள்ளைகொள்ள - திருமேனியின்கண் குடியாக இருக்கும் அழகையெல்லாம் கவரவும், தண் தமிழ் மூன்றும் வல்லோன் - தண்ணிய மூன்று தமிழிலும் வல்லவன், தான் எனக் குறியிட்டாங்கே - தானே எனக் குறியிட்டதுபோல, புண்டரம் - திரிபுண்டரம், நுதலில் பூத்து - நெற்றியின்கண் இடப்பெற்று, பொய் இருள் கிழித்துத் தள்ள - நிலையில்லாத அஞ்ஞான விருளைக் கிழித்து ஓட்டவும்.

கொண்ட என்னும் பெயரெச்சத்து அகரம் தொக்கது; கண்டிகை முதலியன ஆகத்திற் குடிகொண்டு என்றுரைத்தலுமாம். புண்டரம் - திருநீறு மூன்று கீற்றாக நெற்றியில் இடப்படுவது. முத்தமிழ் வல்லோன் எனக் குறியிட்டாற்போல் இடப்பட்ட திரிபுண்டரம் என்றது தற்குறிப்பு. பொய்யிருள் - ஆணவமலமாகிய இருள்; மும்மல இருள் என்றுமாம். (கக)

விரிகதிர்ப் படாத்திற் போர்த்த மெய்ப்பையு ளடங்கிப் பக்கத்
தெரிமணிக் கடகத் திண்டோ ளிளையவ ரடைப்பை யோடுங்
குருமணிக் களாஞ்சி யம்பொற் கோடிகந் தாங்க முத்தாற்
புரிமதிக் குடைக்கீழ்ப் பொற்காற் கவரிபால் புரண்டு துள்ள.

(இ - ள்.) விரிகதிர் படாத்தில் போர்த்த - விரிந்த ஒளியையுடைய ஆடையாற்போர்க்கப்பெற்ற, மெய்ப்பையுள் அடங்கி - சட்டையங்கியினுள் உடலைக்கரந்து, பக்கத்து - இருபக்கங்களிலும், எரிமணிக் கடகத் திண்தோள் இளையவர் - நெருப்புப்போலும் மணிகள் அழுத்திய கடகங்கள் அணிந்த திண்ணிய தோள்களையுடைய இளைஞர், அடைப்பையோடும் குருமணிக் களாஞ்சி - அடைப்பையையும் நிறம் பொருந்திய மணிகள் பதித்த காளாஞ்சியையும், அம்பொன் கோடிகம் தாங்க - அழகிய பொன்னாலாகிய பூந்தட்டினையும் தாங்கி வரவும், முத்தால் புரி மதிக் குடைக்கீழ் - முத்தாலாகிய சந்திரவட்டக் குடையின் கீழே, பால் பொன்கால் கவரி புரண்டு துள்ள - இருபாலும் பொற்காம்பினையுடைய சாமரை புரண்டு துள்ளவும்.

போர்த்த என்பது தைத்த என்னும் பொருட்டு. மெய்ப்பை - சட்டை. எரிமணி - மாணிக்கமணி. அடைப்பை - வெற்றிலைப்பை. களாஞ்சி - தாம்பூலத் தட்டு, உமிழுங்கலன். (௬00)

சொல்வரம் பிகந்த பாத
மென்பது தோன்ற வேதம்
நல்லபா துகையாய்ச் சூட
நவின்றன கற்றுப் பாட
வல்லவர் மறையி னாறு
மனுமுதற் கலைபோற் பின்பு
செல்லநூ லாய்ந்தோர் வைகுந்
திருந்தவைக் களத்தைச் சேர்ந்தான்.

(இ-ள்.) சொல்வரம்பு இகந்த பாதம் என்பது தோன்ற - சொல்லின் எல்லையைக் கடந்த திருவடி யென்பது புலப்பட, வேதம் நல்ல பாதுகையாய்ச் சூட - மறை நல்ல பாதுகை வடிவமாகி (அதனைத் தன் முடியிற்) சூடவும், நவின்றன கற்றுப் பாட வல்லவர் - கூறியருளிய பாசுரங்களைக் கற்றுப் பாடவல்லவர்கள், மறையின் ஆறு மனுமுதல் கலை போல் பின்புசெல்ல - மறையின் வழியே மனுமுறை முதலிய கலைகள் பின்செல்வதுபோலப் பின் செல்லவும், நூல் ஆய்ந்தோர் வைகும் திருந்து அவைக்களத்தைச் சேர்ந்தான் - நூலாராய்ச்சி வல்ல புலவர் இருக்கும் திருத்தமாகிய கழகத்தை அடைந்தனன்.

பாதம் சொல்வரம்பிகந்த தென்பதனை,
"பாதாள மேழினுங் கீழ் சொற்கழிவு பாதமலர்"

என்னுந் திருவாசகத்தாலறிக; வேதத்தின்மேல் நிற்றலால் சொல்லைக் கடந்தமை குறிக்கப்பட்டது. கலை செல்வதுபோல் என விரித்துரைக்க. நவின்றன கற்றுப் பாடவல்லவர் - மாணாக்கர்; கற்றுச் சொல்லிகள் எனப்படுவர். (௬0௧)

ஆரவை குறுகி நேர்நின் றங்கிருந் தவரை நோக்கி
யாரைநங் கவிக்குக் குற்ற மியம்பின ரென்ன முன்னங்
கீரனஞ் சாது நானே கிளத்தினே னென்ற னின்ற
சீரணி புலவன் குற்றம் யாதெனத் தேராக் கீரன்.

(இ-ள்.) ஆர் அவை குறுகி - புலவர் நிறைந்த அவையினைச் சார்ந்து, நேர் நின்று - எதிர் நின்று, அங்கு இருந்தவரை நோக்கி - அங் கிருந்த புலவர்களைப் பார்த்து, நம் கவிக்குக் குற்றம் இயம்பினர் யார் என்ன முன்னம் - எமது கவிக்குக் குற்றம் கூறினவர் யார் என்று கேட்பதற்கு முன்னரே, கீரன் அஞ்சாது நானே கிளத்தினேன் என்றான் - நக்கீரன் சிறிதும் அஞ்சாது நானே குற்றங் கூறினேன் என்றனன்; நின்ற சீர் அணி புலவன் - அதனைக் கேட்டு நிலைபெற்ற புகழ்வாய்ந்த புலவன், குற்றம் யாது என - குற்றம் யாதென்று வினவ, தேராக் கீரன் - தெளியாத நக்கீரன்.

ஆரவை - நிறையவை. யாரை: ஐகாரம் சாரியை. நின்ற சீர் - நிலைபெற்ற புகழ்; வந்து நின்ற என்றுமாம். தேரா - பொருளுண்மை தெரியாத. (௬0௨)

சொற்குற்ற மின்று வேறு
　　பொருட்குற்ற மென்றான் றூய
பொற்குற்ற வேணி யண்ணல்
　　பொருட்குற்ற மென்னை யென்றான்
தற்குற்றம் வருவ தோரான்
　　புனைமலர்ச் சார்பா லன்றி
அற்குற்ற குழற்கு நாற்ற
　　மில்லையே யென்றா னையன்.

(இ - ள்.) சொல் குற்றம் இன்று - சொற்குற்ற மில்லை; வேறு பொருள் குற்றம் என்றான் - வேறே பொருளின் குற்றமென்று கூறினான்; தூய பொற்கு உற்ற வேணி அண்ணல் - தூய பொன்னை யொத்த சடையையுடைய இறைவன், பொருள் குற்றம் என்னை என்றான் - பொருட்குற்றம் என்னை என்று வினவினன், தன் குற்றம் வருவது ஓரான் - தனக்குக் குற்றம் வருவதை அறியாத கீரன், புனை மலர்ச்சார்பால் அன்றி - அணிந்த மலர்ச்சார்பினாலல்லாமல், அற்கு உற்ற குழற்கு - இருளையொத்த கூந்தலுக்கு, நாற்றம் இல்லை என்றான் - இயற்கையாக மணம் இல்லை என்று கூறினான்; ஐயன் - இறைவன்.

பொற்குற்ற, அற்குற்ற என்பவற்றில் குவ்வுருபை ஐயுருபாகத் திரித்து உற்ற என்பதை உவமவுரு பாக்குக; குற்ற எனப் பிரித்து, பறித்த என்று பொருளுரைப்பாரும் உளர். (க0ரு)

பங்கய முகமென் கொங்கைப்
　　பதுமினி குழலோ வென்ன
அங்கது மனைத்தே யென்றா
　　னலவா யுடையான் றெய்வ
மங்கையர் குழலோ வென்ன
　　வன்னது மந்தா ரத்தின்
கொங்கல ரளைந்து நாறுங்
　　கொள்கையாற் செய்கைத் தென்றான்.

(இ - ள்.) பங்கயம் முகம் மென் கொங்கைப் பதுமினி குழலோ என்ன - தாமரை மலர்போன்ற முகத்தையும் மெல்லிய கொங்கையையு முடைய பதுமினி கூந்தலோ என்று வினவ, அங்கு அதும் அனைத்தே என்றான் - அக்கூந்தலும் அத்தன்மைத்தே எனக் கூறினான்; ஆலவாய் உடையான் தெய்வமங்கையர் குழலோ என்ன - திருவாலவாயுடைய இறைவன் தேவமகளிரின் கூந்தலோ என்று வினவ, அன்னதும் - அக்கூந்தலும், மந்தாரத்தின் கொங்கு அலர் அளைந்து நாறும் கொள்கையால் - மந்தாரத்தின் மணமுடைய மலர்களைக் கலந்து மணங்கமழுந் தன்மையினால், செய்கைத்து என்றான் - செயற்கை மணமுடையதே என்று கூறினான்.

பத்தினிப் பெண்டிர் கூந்தலுக்கும், தேவமகளிர் கூந்தலுக்கும் இயற்கை மணமுண்டென்பார் அவற்றை விதந்து வினவினர். அங்கதும்

என்பதில் அங்கு அசை; அதும் என முற்றுகரம் கெட்டது. செய்கைத்து - செயற்கையுடையது. (கoச)

பரவிநீ வழிபட் டேத்தும்
பரஞ்சுடர் திருக்கா ளத்தி
அரவுநீர்ச் சடையார் பாகத்
தமர்ந்தஞா னப்பூங் கோதை
இரவினீர்ங் குழலு மற்றே
வெனவஃது மற்றே யென்னு
வெருவிலான் சலமே முற்றச்
சாதித்தான் விளைவு நோக்கான்.

(இ - ள்.) நீ பரவி வழிபட்டு ஏத்தும் - நீ துதித்து வழிபட்டு வணங்கும், பரஞ்சுடர் - பரஞ்சோதியாகிய, திருக்காளத்தி அரவு நீர்ச் சடையார் - திருக்காளத்தியிற் கோயில் கொண்டருளிய பாம்பையும் கங்கையையும் அணிந்த சடையையுடைய இறைவரது, பாகத்து அமர்ந்த ஞானப் பூங்கோதை - இடப்பாகத்தில் எழுந்தருளிய ஞானப் பூங்கோதையின், இரவின் ஈர் குழலும் அற்றே என - இருளை யொத்த தண்ணிய கூந்தலும் அத்தன்மைத்தோவென்று வினவ, அஃதும் அற்றே என்னு - அக்கூந்தலும் அத்தன்மையை உடையதே என்று, வெருவிலான் - சிறிதும் அஞ்சாது, விளைவு நோக்கான் சலமே முற்றச் சாதித்தான் - மேல் வருவதை அறியாமல் முடியவும் சலஞ்சாதித்தான்.

நீ வழிபட்டேத்தும் சடையார் என்க; ஞானப் பூங்கோதை என்னலுமாம். சலம் - பொய், வஞ்சனை. சலஞ்சாதித்தல் - வைரஞ் சாதித்தல் என்னும் பொருளிலும் வழங்கும். (கoரு)

கற்றைவார் சடையா னெற்றிக்
கண்ணினைச் சிறிதே காட்டப்
பற்றுவா னின்னு மஞ்சா
னும்பரார் பதிபோ லாக
முற்றுநீர் கண்ணா னாலு
மொழிந்தநம் பாடல் குற்றங்
குற்றமே யென்றான் றன்பா
லாகிய குற்றந் தேரான்.

(இ - ள்.) கற்றைவார் சடையான் - திரண்ட நீண்ட சடையையுடைய இறைவன், நெற்றிக் கண்ணினைச் சிறிது காட்ட - நுதல் விழியைச் சிறிது திறந்துகாட்ட, பற்றுவான் - அதனாற் பற்றப்படுவானாகியும், இன்னும் அஞ்சான்-இன்னும் அஞ்சாதவனாய், உம்பரார் பதிபோல் ஆகம் முற்றும் நீர் கண்ணானாலும் - தேவேந்திரன்போல் உடல் முற்றும் நீர் கண்களை உடையீரானாலும், மொழிந்த நம் பாடல் குற்றம் குற்றமே என்றான் - கூறிய நமது செய்யுள் குற்றமுடையதே என்று கூறினன்; தன் பால் ஆகிய குற்றம் தேரான் - தன்னிடத்துள்ள குற்றத்தை அறியாதவன்.

அவனைத் தீமை நீர்த்து ஆட்கொள்ளும் கருத்தின ரென்பார் 'கண்ணினைச் சிறிதே காட்ட' என்றார். உம்பரார் - விண்ணுலகிலுள்ள வர்; தேவர். வலியுறுத்துவான் 'குற்றங் குற்றமே' என்றான். (௧0௬)

[கலிநிலைத்துறை]

தேய்ந்த நாண்மதிக் கண்ணியா னுதல்விழிச் செந்தீப்
பாய்ந்த வெம்மையிற் பொருதுபொற் பங்கயத் தடத்துள்
ஆய்ந்த நாவலன் போய்விழுந் தாழ்ந்தன னவனைக்
காய்ந்த நாவல னிம்மெனத் திருவுருக் கரந்தான்.

(இ - ள்.) தேய்ந்த நாள்மதிக் கண்ணியான் - குறைந்த பிறைமதி யாகிய கண்ணியை உடைய இறைவனது, நுதல்விழிச் செந்தீ பாய்ந்த வெம்மையில் - நெற்றிக் கண்ணின் செந்தழல் பற்றிய வெப்பத்தால், பொருது - பொறுக்கலாற்றாது, பொன் பங்கயத் தடத்துள் - பொற்றா மரை வாவியுள், ஆய்ந்த நாவலன் போய் விழுந்து ஆழ்ந்தனன் - நூல்களை ஆராய்ந்தறிந்த நா வல்லோனாகிய கீரன் சென்று விழுந்து அழுந்தினன்; அவனைக் காய்ந்த நாவலன் - அவனைச் சினந்து ஒறுத்த புலவனாகிய சோமசுந்தரக் கடவுள், இம்மெனத் திருவுருக்கரந்தான் - விரைந்து தனது திருவுருவை மறைத்தருளினான்.

தனக்குப் பிழை செய்தாரும் மீட்டும் வந்தடைந்தால் அவர்க்கு அருள்புரியும் இயல்பினன் என்பது தோன்ற 'தேய்ந்த நாண்மதிக் கண்ணியான்' என்றார்; இது கருத்துடை யடையணி. இம்மென: விரைவுக் குறிப்பு. (௧0௭)

ஆகச் செய்யுள் - ௨௩௬௧.

ஐம்பத்து மூன்ருவது

கீரனைக் கரையேற்றிய படலம்

[கலிநிலைத்துறை]

மார னைப்பொடி கண்டவ னந்தண மைந்தனுக்
கார நற்கன கக்கிழி யீந்த தறைந்தனம்
ஏர னத்திரள் சூழ்மல ரோடை யிடத்தினுங்
கீர னைக்கரை யேற்றிய வாறு கிளத்துவாம்.

(இ-ள்.) மாரனைப்பொடி கண்டவன் - மன்மதனை நீருக்கிய இறைவன், அந்தண மைந்தனுக்கு - மறைச்சிறுவனாகிய தருமிக்கு, ஆரமனமகிழ, நல்கனகக் கிழி ஈந்தது அறைந்தனம் - நல்ல பொற்கிழியை அளித்தருளிய திருவிளையாடலைக் கூறினும்; ஏர் அனத்திரள் சூழ்மலர் ஓடை இடத்தினும் - அழகிய அன்னப்பறவையின் கூட்டம் சூழ்ந்த பொற்ருமரை வாவியினின்றும், கீரனைக் கரையேற்றியவாறு - நக்கீரனைக் கரையேற்றிய திருவிளையாடலை, கிளத்துவாம் - (இனிக்) கூறுவாம்.

பொடி கண்டவன் - பொடியாக்கியவன்; ஒரு சொல். கிழி பின்னர்க் கொடுக்கப்படுவதாயினும், அதற்கேதுவான 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் பாசுரம் முன்பு அளிக்கப்பெற்றமையின் 'கனகக் கிழியீந்தது' என்ருர். (க)

தாழ்ந்த வேணிய னேற்றி முளைத்த தழற்கணுற்
போழ்ந்த நாவல ஞடக பங்கயப் பொய்கைவாய்
வீழ்ந்த ரும்படர் வேலையில் வீழ்ந்தனன் விம்முறச்
சூழ்ந்த நாவலர் கண்டு பொருது துளங்குவார்.

(இ-ள்.) தாழ்ந்த வேணியன் - நீண்ட சடையையுடைய சோமசுந்தரக்கடவுளின், நெற்றி முளைத்த தழல் கணுல்-நெற்றியிற்ருேன்றிய அனற்கண்ணுல், போழ்ந்த நாவலன் - பிளக்கப்பட்ட கீரன், ஆடக பங்கயப் பொய்கைவாய் வீழ்ந்து - பொற்ருமரை வாவியுள் வீழ்ந்து, அரும்படர் வேலையில் வீழ்ந்தனன் விம்முற - கடத்தற்கரிய துன்பக்கடலுள் வீழ்ந்து வருந்த, சூழ்ந்த நாவலர் கண்டு பொருது துளங்குவார் - சூழ்ந்துநின்ற ஏனைப் புலவர்கள் (அதனைக்) கண்டு பொறுக்கலாற்ருது வருந்துவாராயினர்.

தாழ்ந்த - தொங்கிய; நீண்ட, போழ்ந்த என்பது பாயப்பட்ட என்னும் கருத்திற்று. படர் - துன்பம். வீழ்ந்தனன் : முற்றெச்சம். (உ)

ஏன்ற வேந்த னிலாக்குடி யீட்டமு மின்கதிர்
கான்ற நாயக மாமணி போகிய கண்டியும்
ஆன்ற ஞானமி லாதவர் கல்வியு மானதே
சான்ற கீரனி லாதவை கூடிய சங்கமே.

(இ-ள்.) சான்ற கீரன் இலாது அவை கூடிய சங்கம் - புலமை சான்ற நக்கீரன் இல்லாது பிற புலவர் கூடிய இச்சங்கமானது, ஏன்ற வேந்தன் இலாக் குடி ஈட்டமும் - பொருந்திய மன்னனில்லாத குடியின் கூட்டத்தையும், இன் கதிர் கான்ற நாயகம் மாமணி போகிய கண்டியும் - இனிய ஒளி வீசும் நடுநாயகமாகிய பெரிய மணியை இழந்த கண்டிகையையும், ஆன்ற ஞானம் இலாதவர் கல்வியும் ஆனது-நிறைந்த மெய்யுணர்வில்லாதவர் கல்வியையும் போன்றது.

கவற்சியும், விளக்கமின்மையும், பயனின்மையும் உவமைகளாற் கொள்க. இது பல்பொருளுவமையணி. (டு).

ஐய சொற்பொரு டன்வடி வானவ ராலவாய்
மைத ழைத்த மிடற்றினர் தம்மொடும் வாதுதான்
செய்த விப்பிழை யோபெரி தெப்படி தீருமோ
உய்வ தற்புத மேயென யாவரு முன்னினார்.

(இ-ள்.) சொல் பொருள் வடிவு ஆனவர்-சொல்லும் பொருளும் தனது வடிவமாயுள்ளவரும், ஆலவாய் மைதழைத்த மிடற்றினர் தம் மொடும் - திருவாலவாயின்கண் வீற்றிருக்கும் இருள்மிக்க திருமிடற்றினையுடையவருமாகிய சோமசுந்தரக் கடவுளுடன், வாதுசெய்த இப் பிழையோ பெரிது - வாதஞ்செய்த இந்தப் பிழை மிகப் பெரியது (ஆகலின்), எப்படி தீருமோ - (இஃது) எங்ஙனம் நீங்குமோ, உய்வது அற்புதமே என - இனி பிழைத்தல் அரிதே என்று, யாவரும் உன்னினார் - அனைவருங் கருதினர்.

ஐய: அசைநிலை; குறிப்புப் பெயரெச்சமாகக் கொண்டு, அழகிய என்றுரைத்தலுமாம். சொற்பொருள்-சொல்லின் பொருள் என்றுமாம். சொற்பொருள் வடிவானவருடன் சொற்பொருள்பற்றி வாதுசெய்யப் பிறர் எங்ஙனம் வல்லுநராவர் என்பது தோன்றச் 'சொற்பொருள் தன் வடிவானவர்' என்றார். தான் என்பதும் அசை. (சா)

எய்தி வெள்ளி மலைபெயர்த் தானு மிறுத்ததன்
கையில் வீணைதொட் டின்னிசை பாடக் கனிந்தவன்
செய்த தீங்கு பொறுத்தது மன்றித்திண் டேரொடும்
மொய்கொள் வாளுங் கொடுத்தனன் புண்ணிய மூர்த்தியே.

(இ-ள்.) எய்தி வெள்ளிமலை பெயர்த்தானும் - வெள்ளிமலைக்குச் சென்று (அதனைப்) பெயர்த்த இராவணனும், இறுத்த தன் கையில் வீணைதொட்டு - (அம் மலையைப்) பறித்த தனது கையில் வீணையைத் தழுவி, இன் இசை பாடக்கனிந்து - இனிய இசை பாடத் திருவுள்ளங் கனிந்து, அவன் செய்த தீங்கு பொறுத்ததும் அன்றி - அவன் செய்த பிழையைப் பொறுத்தருளியதும் அல்லாமல், திண்தேரொடும் மொய் கொள் வாளும் கொடுத்தனன் - திண்ணிய தேரும் வலிய வாளும் கொடுத்தருளினன்; புண்ணியமூர்த்தியே-இந்தப் புண்ணிய வடிவாகிய இறைவன்.

இலங்கையர் வேந்தனாகிய இராவணன் குபேரனை வென்று புட்பகத்தின்மீது இவர்ந்து திருக்கைலையை அடைந்தவழி அவ்விமானம்

நடைப்பட்டதாகலின் சினங்கொண்டு அம்மலையைப் பெயர்த்தெடுக்க லுற்றவன் இறைவனது திருவடி விரலூதியால் ஊன்றப்பட்ட மலையின் கீழ்க்கிடந்து உழந்து பின் தெளிந்து இறைவனை இசைபாடி வழுத்த அவர் அவனுக்கு நெடிய வாழ்நாளும், தேரும், வாளும் கொடுத்தருளி னர் என்பது வரலாறு. இறைவனது இத்தகைய கருணைத் திறத்தை விளக்கவே திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரையரும் பதிகந்தோறும் இவ்வரலாற்றைக் குறிப்பிப்பாராயினரென்க. (௫)

யாவ ராலு மகற்றரி திப்பிழை யாவர்க்குந்
தேவ ராமவ ரேதிரு வுள்ளந் திரும்பினாற்
போவ தேயிது வேதுணி பென்று புகன்றுபோய்ப்
பாவ லோர்பரன் றாணிழ லிற்பணிந் தேத்துவார்.

(இ - ள்.) இப்பிழை யாவராலும் அகற்றரிது - இப்பெரும் பிழையை யாவராலும் நீக்குதலரிது; யாவர்க்கும் தேவராம் அவரே - அனைவர்க்குந் தேவராகிய அப்பெருமானே, திருஉள்ளம் திரும்பினால் - திருவுள்ளம் இரங்குவராயின், இது போவது துணிபே என்று புகன்று - இப்பிழை நீங்குவது உறுதியே என்று கூறி, பாவலோர் போய் பரன் தாள் நிழலில் பணிந்து ஏத்துவார் - புலவர்கள் சென்று சோமசுந்தரக் கடவுளின் திருவடி நிழலில் வீழ்ந்து வணங்கித் துதிப்பாராயினர்.

அகற்று: முதனிலைத் தொழிற்பெயர்; அகற்ற என்னும் பெயரெச் சத்து அகரந் தொக்கதுமாம். உள்ளந் திரும்புதல் - செற்றமொழிந்து இரங்குதல். (௬)

திருத்த னேசர ணஞ்சர ணம்மறைச் சென்னிமேல்
நிருத்த னேசர ணஞ்சர ணந்நிறை வேதநூல்
அருத்த னேசர ணஞ்சர ணந்திரு வாலவாய்
ஒருத்த னேசர ணஞ்சர ணங்க ளுனக்குநாம்.

(இ - ள்.) திருத்தனே நாம் உனக்குச் சரணம் சரணம்- தூயவனே நாங்கள் உனக்கு அடைக்கலம்; மறைச் சென்னிமேல் நிருத்தனே சரணம் சரணம் - மறைமுடியின்மேல் திருக்கூத்தாடுபவனே உனக்கு அடைக்கலம்; நிறை வேதநூல் அருத்தனே சரணம் சரணம்-நிறைந்த மறைகளின் பொருளாயுள்ளவனே உனக்கு அடைக்கலம்; திருவால வாய் ஒருத்தனே சரணம் சரணம் - திருவாலவாயின்கண் எழுந்தருளிய ஒப்பற்றவனே உனக்கு அடைக்கலம்.

அடைக்கலம் - அடைக்கலப் பொருள் என்றவாறு - தமக்கொரு சுதந்தரமுமின்றித் தம்மை ஒப்புவிப்பது அடைக்கலம் புகலாகும். (எ)

பாயு மால்விடை மேல்வரு வோய்பல் லுயிர்க்கெலாந்
தாயுந் தந்தையு மாகுநின் றண்ணளி தாமரைக்
கேயு மாதவன் போனல்ல தீய வியற்றினார்க்
காயு மின்பமுந் துன்பமு மாக்குவ தாதலால்.

(இ-ள்.) பாயும் மால்விடை மேல் வருவோய்-பாய்ந்து செல்லும் திருமாலாகிய இடபவூர்தியில் ஏறி (அடியார்க்கருள விரைந்து) வருப வனே, பல் உயிர்க்கு எலாம் தாயும் தந்தையும் ஆகும் நின் தண் அளி - பலவேறு வகைப்பட்ட உயிர்கள் யாவற்றிற்கும் அன்னையும் அத்தனு மாகும் நினது தண்ணிய அருளே, தாமரைக்கு ஏயும் ஆதவன்போல் - தாமரை மலருக்குப் பொருந்திய சூரியன் (மலர்தலையும் வாடுதலையுஞ் செய்தல்) போல, நல்ல தீய இயற்றினார்க்கு - நன்மைகளையும் தீமை களையுஞ் செய்தார்க்கு. ஆயும் இன்பமும் துன்பமும் ஆக்குவது - ஆரா யும் இன்பத்தையும் துன்பத்தையும் செய்வது ; ஆதலால் - ஆகையால்.

மால்விடை - பெரியவிடை என்றுமாம். உயிர்க்கெலாம் தாயும் தந்தையுமாகும் என்றமையால் உயிர்கட்கு இறைவனாலளிக்கப்படும் துன்பங்கள் தாய் தந்தையரால் மக்களுக்கு அளிக்கப்படும் துன்பங்கள் போலும் என்க.

“ தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்க டஞ்சொ லாற்றின்
வந்திடா விடினு றுக்கி வளாரினு லடித்துத் தீய
பந்தமு மிடுவ ரெல்லாம் பார்த்திடிற் பரிவே யாகும்
இந்தநீர் முறைமை யன்றோ வீசனார் முனிவு மென்றும்”

என்னும் சிவஞானசித்தியும் காண்க. தாமரைக்கு ஏயும் ஆதவன்போல் என்றது ஆதவன் சன்னிதியில் தாமரை தன்னியல்பிற்கேற்ப அலர் தலும் உலர்தலும் உடைமைபோல் நன்மை தீமை புரியும் உயிர்கள் இறைவன் சன்னிதியில் இன்ப துன்பங்களை எய்துகின்றன என்றபடி. நல்ல தீய இயற்றினார்க்கு இன்பமும் துன்பமும் என்றது நிரனிறை. (அ)

அத்த கற்ற செருக்கி னறிவழி கீரனின்
வித்த கக்கவி யைப்பழு தென்ற விதண்டையான்
மத்த கக்கண் விழித்து வெதுப்பின் மலர்ந்தபொன்
முத்த கக்கம லத்திடை வீழ முடுக்கினாய்.

(இ-ள்.) அத்த - இறைவனே, கற்ற செருக்கின் - கற்றுணர்ந்த இறுமாப்பினால், அறிவு அழி கீரன்-உணர்வழிந்த கீரன், நின் வித்தகக் கவியை-நினது சதுரப்பாடுடைய பாசுரத்தை, பழுது என்ற விதண்டை யால்-குற்றமென்ற விதண்டையினாலே, மத்தகக் கண் விழித்து-நெற்றிக் கண்ணைத் திறந்து, வெதுப்பின் - அதன் வெம்மையால், முத்து அகம் - முத்துக்களைத் தன்னிடத்துள்ள, மலர்ந்த பொன் கமலத்திடை வீழ முடுக்கினாய்-மலர்ந்த பொற்றாமரை வாவியில் வீழுமாறு செலுத்தினாய்.

கற்ற என்னும் பெயரெச்சம் காரணப் பொருட்டு; முற்றக் கற்று ளேன் என்னுஞ் செருக்கால் என்பது கருத்தாகக் கொள்க. விதண்டை- வாதத்தில் வெல்லும் வேட்கை யுடையார் தமது பக்கத்தைத் தாபித்த லின்றிப் பிறர் பக்கத்தை இகழ்தல் மாத்திரமான கதை. (௯)

இருணி றைந்த மிடற்றடி கேளினி யிப்பிழை
கருணை செய்து பொறுத்தரு ளென்று கபிலனும்
பரண னும்முத லாகிய பாவலர் யாவருஞ்
சரண மென்று விழுந்திரந் தாரடி சாரவே.

(இ - ள்.) இருள் நிறைந்த மிடற்று அடிகேள் - இருள் நிரம்பிய திருமிடற்றினை யுடைய பெரியோய், இனிக் கருணை செய்து - இனி அருள் புரிந்து, இப்பிழை பொறுத்தருள் என்று - இக்குற்றத்தைப் பொறுக்கக் கடவை என்று, கபிலனும் பரணனும் முதலாகிய பாவலர் யாவரும் - கபிலனும் பரணனு முதலான புலவர் அனைவரும், சரணம் என்று அடிசார விழுந்து - அடைக்கலமென்று திருவடியிற் பொருந்த வீழ்ந்து, இரந்தார் - குறை யிரந்து வேண்டினர்.

பாவலர் யாவரும் இப்பிழை பொறுத்தருள் என்று அடிசார விழுந்து இரந்தார் என முடிக்க. (௯௦)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

அக்கீர வேலை யால மயின்றவெங் கருணை வள்ளல்
இக்கீர மழலைத் தீஞ்சொ லிறைவியோ டெழுந்து போந்து
நக்கீரன் கிடந்த செம்பொ னளினப்பூந் தடத்து ஞாங்கர்ப்
புக்கீர மதுரத் தீஞ்சொற் புலவர்தங் குழாத்து ணின்றான்.

(இ - ள்.) *அக்கீரவேலை ஆலம் அயின்ற - அந்தப் பாற்கடலிற் றோன்றிய நஞ்சினை உண்டருளிய, எம் கருணை வள்ளல் - எமது அருள் வள்ளலாகிய இறைவர், இக்கு ஈர் அம்மழலைத் தீஞ்சொல் - கரும்பின் சுவையினை வென்ற அழகிய மழலையாகிய இனிய சொல்லை யுடைய, இறைவியோடு எழுந்து போந்து - உமைப் பிராட்டியோடு எழுந்து வந் தருளி, நக்கீரன் கிடந்த செம்பொன் நளினப் பூந்தடத்து ஞாங்கர் - நக் கீரன் அழுந்திக் கிடந்த சிவந்த பொற்றாமரை மலர்களையுடைய வாவி யினருகு புக்கு - அடைந்து, ஈரம் மதுரத்தீஞ்சொல் புலவர்தம் குழாத் துள் நின்றான்* - அன்புச் சுவைகனிந்த இனிய சொல்லை யுடைய புலவர் கூட்டத்துள் நின்றான்.

அகரச்சுட்டு உயர்வு குறித்தது. கீரம் - க்ஷீரம் என்பதன் சிதைவு. நக்கீரன் என்பதில் நகரம சிறப்புப் பொருளுணர்த்தும் இடைச்சொல். "குலமினையல் நம்பி" என்னும் சிந்தாமணிச் செய்யுளுரையில் 'நப் பின்னை' என்பதனை விளக்குழி நச்சினார்க்கினியர் இங்ஙனம் கூறுதல் காண்க. (௯௧)

அனற்கணா னோக்கி னான்பின் னருட்கணா னோக்க வாழ்ந்த
புனற்கணே கிடந்த கீரன் பொறிபுலன் கரண மெல்லாங்
கனற்கணார் தமவே யாகக் கருணைமா கடலி லாழ்ந்து
வினைக்கணே யெடுத்த யாக்கை வேறிலன் புருவ மானான்.

(இ - ள்.) *அனல் கணால் நோக்கினான் - முன் அழற் கண்ணால் நோக்கிய இறைவன், பின் அருள் கண்ணால் நோக்க - பின் அருள் விழி யால் நோக்கியருள, ஆழ்ந்த புனற்கண்ணே கிடந்த கீரன்* - ஆழமாகிய நீரின் கண்ணே கிடந்த நக்கீரன், *பொறிபுலன் கரணம் எல்லாம்* - பொறியும் புலனும் கரணமுமாகிய அனைத்தும், *கனல் கணார் தமவே யாக*-நெற்றிக் கண்ணினை யுடைய அவ்விறைவருடையவேயாக, *கருணை மாகடலில் ஆழ்ந்து* - அருளென்னும் பெரிய கடலில் அழுந்தி, *வினைக் கணே எடுத்த யாக்கை* - வினையினா லெடுத்த உடல், *வேறு இல் அன்பு உருவம் ஆனான்* - அழிதலில்லாத அன்பு வடிவமானான்.

அனற் கண்ணால் நோக்கப் பொற்றாமரை வாவியில் அழுந்திக் கிடந்தமைபோல அருட்கண்ணால் நோக்கக் கருணைக் கடலில் ஆழ்ந்தனன் என்றார். பொறி, புலன் கரணமெல்லாம் இறைவருடைய வாதலாவது அளத்திற்பட்ட புற்போலப் பசு கரணமெல்லாம் பதிகரணமாதல். தம : பலவின்பாற் குறிப்பு முற்று; தாம் : பகுதி. விளைக்கணே : வேற்றுமை மயக்கம்.

"திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணு முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த வருட்டிரு நோக்க மெய்தித்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய வொளியி னிழற் பொருவிலன் புருவ மானார்"

எனக் கண்ணப்பர் செய்தி கூறும் பெரிய புராணச் செய்யுள் இங்கு நோக்கற்பாலது. (கஉ)

போதையா ருலக மீன்ற
புனிதையார் பரஞா னப்பூங்
கோதையார் குழற்குத் தீங்கு
கூறிய கோடிய நாவின்
றீதையார் பொறுப்ப ரேயோ*
வவரன்றித் திருக்கா ளத்திக்
காதையார் குழையி னாரைக்
காளத்தி கயிலை யென்று.

(இ - ள்.) போதையார் - ஞானவடிவினரும், உலகம் ஈன்ற புனிதையார் - உலகத்தைப்பெற்ற தாய்மையுடையாருமாகிய, பரஞானப் பூங்கோதையார் குழற்கு - சிறந்த ஞானப்பூங்கோதையாரின் கூந்தலுக்கு, தீங்கு கூறிய கொடிய நாவின் தீதை - பழுதுசொன்ன கொடிய நாவின் குற்றத்தை, அவர் அன்றிப் பொறுப்பரேயோ - அவ்விறைவர் பொறுப்பாரே அல்லாமல் வேறொருவர் பொறுப்பரோ, திருக்காளத்தி காது ஆர் குழையினாரை - திருக்காளத்தியில் எழுந்தருளிய காதிற் பொருந்திய குழையினையுடைய அவ்விறைவரை, காளத்தி கயிலை என்று - காளத்தி கயிலை என்று.

போதை - போதமுடையாள்; போதம் - ஞானம்;
"போதையார் பொற்கிண்ணத் தடிசில்"

என்பது ஆளுடைய பிள்ளையார் திருவாக்கு. அபரஞானமன்றென்பார் 'பரஞானம்' என்றார். அவரன்றிப் பொறுப்பார் யாரென அவரது கருணைத்திறத்தை நினைந்து என விரித்துரைத்துக்கொள்க. காதை ஆர் - காதிற்பொருந்திய. கைலைகாளத்தி யென்பது செய்யுளாதலின் மாறி நின்றது. (கந)

(பா - ம்.) *பொறுப்பாரேயோ.

எடுத்தசொன் மாறிமாறி யிசையநே
　　ரிசைவெண் பாவாற்
றொடுத்தவந் தாதி சாத்தத்
　　துணைச்செவி மடுத்து நேர்வந்
தடுத்தவன் கையைப் பற்றி
　　யகன்கரை யேற்றி னார்தாள்
கொடுத்தெழு பிறவி வேலைக்
　　கொடுங்கரை யேற்ற வல்லார்.

(இ-ள்) எடுத்த சொல் மாறி மாறி இசைய - எடுத்த சொல் மாறி மாறி வந்து பொருந்த, நேரிசை வெண்பாவால் தொடுத்த அந்தாதி சாத்த - நேரிசை வெண்பாவால் தொடுத்த (கைலை பாதி காளத்தி பாதி என்னும்) அந்தாதி மாலையைச் சாத்த, தாள்கொடுத்து-(அடியார் கட்குத்) திருவடியாகிய புணையை அருளி, எழுபிறவிக் கொடு வேலை - எழுவகைப் பிறவியாகிய கொடிய கடலினின்றும், கரை ஏற்றவல்லார் - வீடு என்னுங் கரையில் ஏற்றவல்ல அவ்விறைவர், துணைச்செவி மடுத்து நேர்வந்து - (அவ்வந்தாதியை) இரண்டு செவிகளாலுங் கேட்டு நேரே வந்து, அடுத்து அவன் கையைப்பற்றி அகன்கரை ஏற்றினார் - நெருங்கி அந்தக் கீரன் கையைப்பிடித்து அகன்ற கரையின்கண் ஏற்றியருளினர்.

எடுத்த சொல் மாறி மாறியிசைய என்றது ஒரு பாட்டில் கைலையும், அடுத்த பாட்டிற் காளத்தியும் மாறி மாறி அமைய என்றவாறு.

"சொல்லும் பொருளுமே தூத்திரியும் நெய்யுமா
நல்லிடிஞ்சி லென்னுடைய நாவாகச் - சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலை மேலிருந்த
பெண்பாகர்க் கேற்றினேன் பெற்று"

"பெற்ற பயனிதுவே யன்றே பிறந்தியான்
கற்றவர்க ளேத்துஞ்சீர்க் காளத்திக் - கொற்றவர்க்குத்
தோளாகத் தாடரவஞ் சூழ்ந்தணிந்த வம்மானுக்
காளாகப் பெற்றே னடைந்து"

என்பன காண்க. நேரிசைவெண்பா - வெண்பாவின் பொதுவிலக்கண முடைத்தாய், நான்கடியுள்ளதாய், நான்கடியும் ஒரேதுகையான ஒரு விகற்பத்தாலேனும், முன்னிரண்டடியும் ஒரேதுகையும் பின்னிரண்டடியும் மற்றோரேதுகையுமான இருவிகற்பத்தாலேனும் இரண்டாமடி இறுதிச்சீர் தனிச்சீராகப் பெற்று வருவது. தாளைக் கொடுத்துக் கடலினின்றும் கரையேற்றவல்லார் கையைப்பற்றிப் பொய்கையினின்றும் கரையேற்றினார் என்னும் நயம் சிந்திக்கற்குரியது. (சச)

கைதந்து கரையே றிட்ட
　　கருணையங் கடலைத் தாழ்ந்து
மைதந்த கயற்க ணாளை
　　வந்தித்துத் தீங்கு நன்கு

செய்தந்தோர்க் கிகலு மன்புஞ்
செய்தமை பொருளாச் செய்யுட்
பெய்தந்து பாடு கின்றான்
பிரானருள் நாடு கின்றான்.

(இ-ள்.) கைதந்து கரைஏறிட்ட கருணை அம் கடலைத்தாழ்ந்து - கைகொடுத்துக் கரையேற்றிய அழகிய கருணைக் கடலாகிய சோமசுந்தரக் கடவுளை வணங்கி, மைதந்த கயல் கணாளை வந்தித்து - மையெழுதிய கயல் போலுங் கண்களையுடைய அங்கயற்கண்ணம்மையையும் வணங்கி, தீங்கு நன்கு செய்தந்தோர்க்கு - தீமையும் நன்மையும் புரிந்தவர்க்கு, இகலும் அன்பும் செய்தமை பொருளா - சினத்தையும் அருளையும் செய்தமையே பொருளாக, செய்யுள் பெய்தந்து - செய்யுளிலமைத்து, பிரான் அருள் நாடுகின்றான் - இறைவன் திருவருளை நாடும் நக்கீரன், பாடுகின்றான் - பாடுவானாயினன்.

ஏற்றிட்ட என்பது ஏறிட்ட என விகாரமாயிற்று. செய்தந்தோர் - செய்தோர்; பெய்தந்து - பெய்து; தா: துணைவினைப்பகுதி: இகலும் அன்பும் - கோபமும் பிரசாதமும். தீங்கு செய்தோர்க்கு இகலும், நன்கு செய்தோர்க்கு அன்பும் என நிரனிறையாகக் கொள்க. நாடுகின்றான் : பெயர். (௪௭)

அறனிலா னிழைத்த வேள்வி
யழித்தபே ராண்மை போற்றி
மறனிலாச் சண்டிக் கீந்த
மாண்பெருங் கருணை போற்றி
கறுவிவீழ் கூற்றைக் காய்ந்த
கனைகழற் கமலம் போற்றி
சிறுவனுக் கழியா வாழ்நா
ளளித்தருள் செய்தி போற்றி.

(இ-ள்.) அறன் இலான் இழைத்த வேள்வி - அறம் சற்றுமில்லாத தக்கன்செய்த வேள்வியை, அழித்த பேர் ஆண்மை போற்றி - அழித்த பெரிய ஆண்மை (அடியேனைக்) காக்க; மறன் இலாச் சண்டிக்கு - பாவஞ் சற்றுமில்லாத சண்டேசருக்கு, ஈந்த மாண் பெருங் கருணை போற்றி-அளித்தருளிய மாட்சிமை பொருந்திய பெரிய கருணை காக்க; கறுவிவீழ் கூற்றைக் காய்ந்த - சினந்து (மாணியின்மேல்) வீழ்ந்த கூற்றுவனை உதைத்தருளிய, கனைகழல் கமலம் போற்றி - ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த தாமரைமலர்போன்ற திருவடி காக்க; சிறுவனுக்கு அழியா வாழ்நாள் - அச்சிறுவனாகிய மார்க்கண்டனுக்கு அழிவில்லாத ஆயுளை, அளித்தருள் செய்தி போற்றி - அளித்தருளிய செய்தி காக்க.

தக்கன் வேள்வி அழித்தமையும் கூற்றைக் காய்ந்தமையும் இகலும், சண்டிக்குக் கருணை பாலித்தமையும் சிறுவனுக்கு வாழ்நாள் அளித்தமையும் அன்பும் ஆகும். தக்கன் வேள்வி புரியினும் அது மறமாதலும், சண்டி வேதியனாகிய தாதையின் தாளைச் சேதிப்பினும் அஃது அறமாதலும், முறையே அரனடிக்கு அன்பின்மையானும் அன்புடைமையாலும் என்க;

"அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறம தாகும்
பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி
நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே"

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தம் காண்க. (கசு)

சலந்தர னுடலங் கீண்ட சக்கரப் படையாய் போற்றி
வலந்தரு மதனை மாயோன் வழிபடக் கொடுத்தாய் போற்றி
அலர்ந்தசெங் கமலப் புத்தே ணடுச்சிர மரிந்தாய் போற்றி
சிலந்தியை மகுடஞ் சூட்டி யரசருள் செல்வம் போற்றி.

(இ-ள்.) *சலந்தரன் உடலம் கீண்ட சக்கரப் படையாய் போற்றி* - சலந்தராசுரன் உடலைப் பிளந்த திகிரிப்படையை யுடையவனே வணக்கம்; *வலம் தரும் அதனை* - வெற்றி தரும் அப்படையினை, *மாயோன் வழிபடக் கொடுத்தாய் போற்றி* - திருமால் வழிபாடு செய்ய அளித்தருளியவனே வணக்கம்; *அலர்ந்த செங்கமலப்புத்தேள்* - மலர்ந்த செந்தாமரையில் இருக்கும் பிரமனின், *நடுச்சிரம் அரிந்தாய் போற்றி* - நடுத்தலையை அரிந்தவனே வணக்கம்; *சிலந்தியை மகுடம் சூட்டி* - சிலந்திக்கு முடி சூட்டி, *அரசு அருள் செல்வம் போற்றி* - அரசு அருளிய செல்வமே வணக்கம்.

சலந்தரன் உடல் கீண்ட சக்கரத்தை இறைவன் மாயோனுக்கு அருளினமையை,

"செருமேவு சலந்தரனைப் பிளந்தசுட ராழி
செங்கண்மலர்ப் பங்கயமாச் சிறந்தானுக் கருளி"

எனத் திருநாவுக்கரசர் தேவாரத்துள் அருளிச்செய்தலாலறிக. இங்ஙனமே இவ்வரலாறுகளனைத்தும் தேவாரம் முதலிய திருமுறைகளில் எடுத்தாளப்படுகின்றன என்க. வலந்தரும் மதனை எனப்பிரித்து, மன் மதனை என்றுரைப்பாருமுளர்; சக்கரப்படை என்பதே ஈண்டுச் சிறந்த பொருளாதல் உய்த்துணர்க. சலந்தர னுடலங் கீண்டமையும் பிரமன் சிரமரிந்தமையும் இகலும், மாயோற்குச் சக்கரம் அளித்தமையும் சிலந்திமை மகுடஞ் சூட்டினமையும் அன்பும் ஆதம். (கஎ)

திரிபுர மெரிய* நக்க சேவகம் போற்றி மூவர்க்
கருளிய தலைமை போற்றி யனங்கனை யாகந் தீய
எரியிடு நயனம் போற்றி யிரதிவந் திரப்ப மீளக்
கரியவன் மகனுக் காவி யுதவிய கருணை போற்றி.

(இ-ள்.) *திரிபுரம் எரிய நக்க சேவகம் போற்றி* - திரிபுரம் எரியுமாறு சிரித்தருளிய வீரம் காக்க; *மூவர்க்கு அருளிய தலைமை போற்றி* - அப்புரத்திலுள்ள மூவருக்கு அருளிய தலைமை காக்க; *அனங்கனை ஆகம் தீய எரியிடு நயனம் போற்றி* - மதவேளை அவன் உடல் நீறுக எரித்தருளிய நுதல்விழி காக்க; *இரதி வந்து இரப்ப* - இரதிவந்து குறையிரப்ப, *மீள* - திரும்பவும், *கரியவன் மகனுக்கு ஆவி உதவிய*

(பா-ம்.) * திரிபுரம் பொரிய.

கருணை போற்றி - திருமாலின் புதல்வனாகிய அம்மதவேளுக்கு உயிர் அளித்தருளிய கருணை காக்க.

திரிபுரம் எரித்த ஞான்று மூவர் உய்ந்தனர் என்பதும் அவர்க்கு இறைவன் அருள் பாலித்தனன் என்பதும்,

"மூவெயில் செற்றஞான் றுய்ந்த மூவரி
லிருவர் நின்றிருக் கோயிலின் வாய்தல்
காவ லாளரென் றேவிய பின்னை
யொருவ னீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநட மகிழ
மணிமுழா முழக்க வருள்செய்த
தேவ தேவநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே"

என்னும் நம்பியாரூரர் தேவாரத்து அருளிச் செய்யப்பட்டமை காண்க. (கஅ)

நகைத்தட வந்த* வந்த
நகுசிரந் திருகி வாங்கிச்
சிகைத்திரு முடிமேல் வைத்த
திண்டிறல் போற்றி கோயில்
அகத்தவி சுடரைத் தூண்டு
மேலிக்கர சாள மூன்று
சகத்தையு மளித்த தேவர்
தம்பிரான் சரணம் போற்றி.

(இ - ள்.) நகைத்து அட வந்த அந்த நகுசிரம் - சிரித்துக் கொல்லுதற்கு வந்த அந்த வெண்டலையை, திருகி வாங்கி - திருகி எடுத்து, சிகைத் திரு முடிமேல் வைத்த திண் திறல் போற்றி - சடையை யுடைய அழகிய முடியின்கண் வைத்த மிக்க திறல் காக்க; கோயில் அகத்து அவி சுடரை - திருக்கோயிலினுள் அவிகின்ற விளக்கை, தூண்டும் எலிக்கு - தூண்டிய எலிக்கு, அரசு ஆள மூன்று சகத்தையும் அளித்த - ஆட்சி புரிய மூன்று உலகத்தையும் அளித்தருளிய, தேவர் தம்பிரான் சரணம் போற்றி - தேவ தேவனது திருவடி காக்க.

நகுசிரம் - வெண்டலை; இது தாருக வனத்து முனிவர்களால் விடுக்கப்பட்டது. எலி விளக்கைத் தூண்டிய சிவ புண்ணியத்தால் மாவலியாகப் பிறந்து உலகாண்ட தென்பது வரலாறு. (கக)

பொருப்பகழ்ந் தெடுத்தோன் சென்னி
புயமிற மிதித்தாய் போற்றி
இருக்கிசைத் தவனே பாட
விரங்கிவாள் கொடுத்தாய் போற்றி

(பா - ம்.) * நகைத்திடவந்த.

தருக்கொடு மிருவர் தேடத்
தழற்பிழம் பானாய் போற்றி
செருக்குவிட் டவரே பூசை
செய்யநேர் நின்றாய் போற்றி.

(இ - ள்.) பொருப்பு அகழ்ந்து எடுத்தோன் - திருக்கைலையைப் பறித்தெடுத்த இராவணனது, சென்னி புயம் இற மிதித்தாய் போற்றி- தலைகளும் தோள்களும் முறிய மிதித்தருளியவனே வணக்கம்; அவனே இருக்கு இசைத்துப் பாட - அவ்விராவணனே வேதத்தைக் கூறிப் பாட, இரங்கி வாள் கொடுத்தாய் போற்றி- கருணை கூர்ந்து அவனுக்கு வாட் படை யருளியவனே வணக்கம்; தருக்கொடும் இருவர் தேட - செருக்கோடு திருமாலும் பிரமனும் தேட, தழற் பிழம்பு ஆனாய் போற்றி - அனற் பிழம்பானவனே வணக்கம்; அவரே - அவ்விருவருமே, செருக்கு விட்டுப் பூசை செய்ய - அத்தருக்கினை ஒழித்து வழிபட, நேர் நின்றாய் போற்றி - நேரில் நின்றருளியவனே வணக்கம்.

இருக்கு என்பது ஈண்டு வேதம் என்னும் பொதுப்பொருளில் வந்துளது. (௨0)

பருங்கைமால் யானை யேனம் பாய்புலி யரிமான் மீனம்
இருங்குறள் யாமை கோண்ட விகல்வலி கடந்தாய் போற்றி
குரங்குபாம் பெறும்பு நாரை கோழியா ணலவன் றேரை
கருங்குரீ இ கழுகி னன்புக் கிரங்கிய கருணை போற்றி.

(இ - ள்.) பருங்கைமால் யானை - பருத்த துதிக்கையையுடைய யானையும், ஏனம் பாய் புலி அரிமான் மீனம் - பன்றியும் பாய்கின்ற புலியும் சிங்கமும் மீனமும், இருங்குறள் யாமை கொண்ட இகல்வலி கடந்தாய் போற்றி -பெரிய குறளும் யாமையுங்கொண்ட மிக்க வலியை அடக்கினவனே வணக்கம்; குரங்கு பாம்பு எறும்பு நாரை கோழி - குரங்கும் பாம்பும் எறும்பும் நாரையும் கோழியும், ஆண் அலவன் தேரை கருங்குரீஇ கழுகின் - ஆண் ஞெண்டும் தவளையும் கரிக்குருவியும் கழுகுமாகிய இவற்றின், அன்புக்கு இரங்கிய கருணை போற்றி - அன்புக்கு இரங்கிய கருணையே வணக்கம்.

யானையும் புலியும் கொண்ட வன்மையை யொழித்து அவற்றின் தோலைப் போர்வையாகவும் உடையாகவும் கொண்டருளினமை முன் கூறப்பட்டது. ஏனம், அரிமான், மீனம், குறள், யாமை என்பன திருமால் எடுத்த அவதாரங்கள். திருமால், பு யைப் பாயாகச்சுருட்டிப் பாதலத்திலொளித்த இரணியாக்கனை வெள்ளைப்பன்றி யுருவெடுத்துச் சென்று கொன்று புவியை முன்போல் நிறுவியும், எல்லாவுலகங்களையும் தன்னடிப்படுத்து யாவரும் தன் பெயரையே மந்திரமாகக்கூறி வழுத்தும்படி செய்து இடுக்கண் விளைத்த இரணியனை நரசிங்கவுருக்கொண்டு கொன்றும், வேதங்களைக் கவர்ந்து கடலிலொளித்த சோமகன் என்னும் அசுரனை மீனவுருக்கொண்டு சென்று கொன்று வேதங்களை வெளிப்படுத்தியும், எல்லாவுலகங்களையும் தன்னடிப் படுத்துத்தேவர்கள் ஏவல் கேட்ப அரசு செலுத்திய மாவலியென்பானை வாமனன் என்னும் குறளுருவாகத் தோன்றிச் சென்று மூன்றடிமண்

இரந்து வளர்ந்து ஈரடியால் நிலத்தையும் வானத்தையும் அளந்து மூன்றாமடியைத் தலைமீது வைத்துப் பாதலத்தில் அழுத்தியும், பாற்கடல் கடையுங்கால் அமிழ்ந்த மந்தரமலையை ஆமையுருக்கொண்டு தாங்கியும் உலகிற்கு நலம்புரிந்து, பின் அவ்வச்செயலின் முடிவிலே தருக்குற்று உலகிற்கு அச்சமும் இடரும் விளைத்தகாலை சிவபெருமான் திருமாலின் அவ்வத் தோற்றங்களையும் அழிப்பித்தனர் எனப் புராணங்கள் கூறும்.

திருக்குரங்கணில் முட்டம், குரங்காடுதுறை முதலிய திருப்பதிகளில் குரங்கும்; திருநாகேச்சுரம், சீகாளத்தி முதலிய திருப்பதிகளில் பாம்பும்; திருவெறும்பீச்சரத்தில் எறும்பும்; திருக்கழுக்குன்றம், திருப்புள்ளிருக்குவேளூர் முதலியவற்றில் கழுகும்; பூசித்துப் பேறு பெற்றன. நாரையும், கரிக்குருவியும் மதுரையிற் பேறுபெற்ற செய்திகள் இப்புராணத்துள் முன் ஓதப்பட்டன: கோழி காசியில் முத்தியடைந்தமையும் முன் கூறப்பட்டது. அலவனும் தேரையும் பேறு பெற்றமை வந்த வழிக் காண்க. ஆற்றூர் என்னுந் திருப்பதியிலே சிவதீர்த்தத்தில் இருந்த ஒரு தவளை சிவனிராவில் ஒரு பாம்பால் விழுங்கப்பட்டு உயிர்விடும் அமையத்தில் உமையால் திருவைந்தெழுத்து உபதேசிக்கப்பெற்றுச் சிவசாரூபம் பெற்றதென ஆற்றூர்ப் புராணம் கூறுவதனைத் தேரை அருள் பெற்றமைக்குக் கொள்ளலுமாம். நண்டு கற்கடகேச்சுரத்தில் முத்திபெற்றதென்றும் கூறுப. (உக)

சாலநா னிழைத்த தீங்குக்
கென்னையுந் தண்டஞ் செய்த
கோலமே போற்றி பொல்லாக்
கொடியனேன்* றொடுத்த புன்சொன்
மாலைகேட் டென்னை யாண்ட
மலைமகண் மணாள போற்றி
ஆலவா யடிகள் போற்றி
யம்மைநின் னடிகள் போற்றி.

(இ-ள்.) நான் சால இழைத்த தீங்குக்கு - நான் மிகவும் செய்த குற்றத்திற்கு, என்னையும் தண்டம் செய்த கோலமே போற்றி - அடியேனையும் ஒறுத்தருளிய திருவுருவே வணக்கம்; பொல்லாக் கொடியனேன் - பொல்லாத கொடியவனாகிய யான், தொடுத்த புன்சொல் மாலை கேட்டு - தொடுத்த புல்லிய சொல் மாலையைக் கேட்டு, என்னை ஆண்ட மலைமகள் மணாள போற்றி - அடியேனை ஆண்டருளிய மலைமகளின் மணாளனே வணக்கம்; ஆலவாய் அடிகள் போற்றி - திருவாலவாயில் எழுந்தருளிய பெருமானே வணக்கம்; அம்மை நின் அடிகள் போற்றி - பிராட்டியே நின் திருவடிகட்கு வணக்கம்.

இப்பாட்டிலே தனக்குச்செய்த இகலும் அன்பும் கூறப்பட்டன. போற்றி என்னுஞ் சொல் வணக்கம் எனவும் காக்க எனவும் பொருள் படும். ஆகையால் இச்செய்யுட்களில் இவ்விரு பொருளும் கூறப்பட்டன. (உஉ)

(பா-ம்.) * போற்றியஞ்சிக் கொடியனேன்.

[கலிநிலைத் துறை]

ஆவ லந்தனே னடியனேற் கருளரு ளென்னுக்
கோவ மும்பிர சாதமுங் குறித்துரை பனுவற்
பாவ லங்கலாற் பரனையும் பங்கிலங் கயற்கட்
பூவை தன்னையு முறைமுறை போற்றியென் றேத்தா*.

(இ - ள்.) ஆ - ஐயோ, அலந்தனேன் - வருந்தினேன், அடியனேற்கு அருள் அருள் என்று - அடியேனுக்கு அருளாய் அருளாய் என்று வேண்டி, கோவமும் பிரசாதமும் குறித்து உரை - இறைவனுடைய வெகுளியையும் அருளையும் குறித்துக் கூறும், பனுவல் பா அலங்கலால் - நூலாகிய பாமாலையால், பரனையும் - சோமசுந்தரக் கடவுளையும், பங்கில் அங்கயற்கண் பூவை தன்னையும் - அவன் பாகத்திலமர்ந்த அங்கயற்கண் ணம்மையையும், முறை முறை போற்றி என்று ஏத்தா - முறையாகப் போற்றி என்று துதித்து.

ஆ: இரக்கப்பொருள் குறித்த இடைச்சொல். பனுவல் - கோபப் பிரசாதம் என்னும் பிரபந்தம்; அது,

"தவறு பெரிதுடைத்தே தவறு பெரிதுடைத்தே
வெண்டிரைக் கருங்கடன் மேற்றுயில் கொள்ளும்
அண்ட வாணனுக் காழியன் றருளியும்
உலக மூன்று மொருங்குடன படைத்த
மலரோன் றன்னை வான்சிர மரிந்துங்
கான வேடுவன் கண்பரிந் தப்ப
வான நாடு மற்றவற் கருளியுங்
கடிபடு பூங்கணைக் காம னுருடல்
பொடிபட விழித்தும் பூதலத் திசைந்த
மானுட னாகிய சண்டியை
வானவ னாக்கியும்..........." என்பது. (உ௬)

தேவ தேவனைப் பின்பெருந் தேவபா ணியோடுந்
தாவி லேழிசை யேழுகூற் றிருக்கையுஞ் சாத்திப்
பூவர் சேவடி சென்னிமேற் பூப்பவீழ்ந் தெழுந்தான்
பாவ லோர்களுந் தனித்தனி துதித்தனர் பணிந்தார்.

(இ - ள்.) பின் தேவதேவனைப் பெருந் தேவபாணியொடும் - பின்பு தேவதேவனாகிய அவ்விறைவனுக்குப் பெருந் தேவபாணியுடன், தாஇல் ஏழ்இசை ஏழு கூற்றிருக்கையும் சாத்தி - கெடுதலில்லாத ஏழிசை யமைந்த திருஏழு கூற்றிருக்கையும் சாத்தி, பூவர் சேவடி சென்னிமேல் பூப்ப - மலர் போன்ற சிவந்த திருவடிகள் தனது முடியின் மேல் மலருமாறு, விழ்ந்து எழுந்தான் - விழுந்து வணங்கி எழுந்தனன்;

(பா - ம்.) * போற்றியென் றேத்தா.

பாவலோர்களும் தனித்தனி துதித்தனர் பணிந்தார் - ஏனைப் புலவர்களும் தனித்தனியே துதித்து வணங்கினர்.

தேவபாணி - தெய்வத்தைப் பாடும் பாட்டு. முதற் கடவுளைப் பாடினமையின் பெருந் தேவபாணி எனப்பட்டது. அது,

“சூல பாணியை சுடர்தரு வடிவனை
நீல கண்டனை நெற்றியோர் கண்ணனை
பால்வெண் ணீற்றனை பரம யோகியை
காலனைக் காய்ந்த கறைமிடற் றண்ணலை
நூலணி மார்பனை நுண்ணிய கேள்வியை
கோல மேனியை கொக்கரைப் பாடலை
வேலுடைக் கையனை விண்டோய் முடியனை
ஞாலத் தீயினை நாதனைக் காய்ந்தனை
தேவ தேவனை திருமறு மார்பனை
கால மாகிய கடிகமழ் தாரனை............”

என்பது. எழுகூற்றிருக்கை - ஒன்று முதல் ஏழுவரையுள்ள எண்களை அமைத்துப் பாடும் ஒருவகைச் சித்திரப் பாட்டு. அது,

“ஒருடம் பீருரு வாயினை யொன்றுபுரிந்
தொன்றி னீரிதழ்க் கொன்றை சூடினை
மூவிலைச் சூல மேந்தினை
சுடருஞ் சென்னி மீமிசை
இருகோட் டொருமதி யெழில்பெற மிலைத்தனை
ஒருகணை யிருதோள் செவியுற வாங்கி
மூவெயி னுற்றிசை முரணரன் செகுத்தனை
ஆற்ற முந்நெறி பயந்தனை
செறிய விரண்டு நீக்கி
ஒன்று நினைவோர்க் குறுதி யாயினை
அந்நெறி யொன்று
மனம்வைத் திரண்டு நினைவி லோர்க்கு
முந்நெறி யுலகங் காட்டினை யந்நெறி
நான்கென வூழி தோற்றினை
சொல்லு மைந்தலை யரவசைத் தசைந்தனை
நான்முகன் மேன்முகங் கபால மேந்தினை
நூன்முக முப்புரி மார்பில்
இருவ ரங்க மொருங்குட னேந்திய
ஒருவ நின்னடி காணு திருவர்
மூவுல குழன்று நாற்றிசை யுழிதர
ஐம்பெருங் குன்றத் தழலாய்த் தோன்றினை
ஆறுநின் சடையது வைந்துநின் னிலையது
நான்குநின் வாய்மொழி மூன்றுநின் கண்ணே

இரண்டுசின் குழையே யொன்றுநின் னேறே
ஒன்றிய காட்சி யுமையவ ளடுங்க
இருங்களிற் றுரிவை போர்த்தனை நெருங்கி
முத்தி நான்மறை யைம்புல னடக்கிய
அறுதொழி லாளர்க் குறுதி பயந்தனை
ஏழி லின்னரம் பிசைத்தனை
ஆறி லமுதம் பயந்தனை யைந்தில்
விறலியர் கொட்டு மழுத்த வேந்தினை
ஆல நீழ லல் திருந் தறநெறி
நால்வர் கேட்க நன்கினி துரைத்தனை
நன்றி யில்லா முந்நீர்ச் சூர்மாக்
கொன்றங் கிருவரை யெறிந்த வொருவன்
தாதை யொருமிடற் றிருவடி வாயினை
தரும மூவகை யுலக முணரக்
கூறுவ னூல்வகை
இலக்கண விலக்கிய நலத்தக மொழிந்தனை
ஐங்கணை யவனொடு காலனை யடர்த்தனை
அறுவகைச் சமயமு நெறிமையில் வகுத்தனை
ஏழி னோசை யிராவணன் பாடத்
தாழ்வாய்க் கேட்டவன் றலையளி பொருத்தினை
ஆறிய சிந்தை யாகி யைங்கதித்
தேரொடு திசைசெல விடுத்தோன்
நாற்றோ ளலனேய் நந்திபிங் கிருடியென்
றேற்ற பூத மூன்றுடன் பாட
இருகண் மொந்தை யொருகணங் கொட்ட
மட்டுவிரி யலங்கன் மலைமகள் காண
நட்ட மாடிய நம்ப வதனாற்
சிறியேன் சொன்ன வறிவில் வாசகம்
வறிதெனக் கொள்ளா யாக வேண்டும்
வெறிகமழ் கொன்றையொடு வெண்ணில வணிந்து
கீதம் பாடிய வண்ணல்
பாதஞ் சென்னியிற் பரவுவன் பணிந்தே."

என்பது. பூவார் எனற்பாலது எதுகை நோக்கிக் குறுகின்றது; ஆர் உவமவுருபு; பூவர் என்பதற்குச் சுந்தரர் என்றுரைப்பாரு முள்ளார். துநித்தனர்: முற்றெச்சம்.

நக்கீரர் பாடிய இந்நான்கு பிரபந்தங்களும், மற்றும் இவர் பாடிய திருவீங்கோய்மலை எழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, காரெட்டு, போற்றித் திருக்கலி வெண்பா, திருக்கண்ணப்பர் திருமறம் என்பனவும், திருமுருகாற்றுப்படையும் சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் பதினொராந் திருமுறையில் அடங்கியுள்ளன. (௨௪

துதித்த கீரனுக் கின்னருள் சுரந்துநீ முன்போன்
மதித்த நாவலர் குழாத்திடை வதியென மறைநூல்
உதித்த நாவினர் கருணைசெய் துருக்கரந் தயன்சேய்
விதித்த கோயில்புக் கிருந்தனர் விளங்கிழை யோடும்.

(இ-ள்.) மறைநூல் உதித்த நாவினர் - வேதநூல் தோன்றிய நாவினையுடைய சோமசுந்தரக் கடவுள், துதித்த கீரனுக்கு - இங்ஙனம் துதித்த நக்கீரனுக்கு, இன் அருள் சுரந்து - இனிய அருள் சுரந்து, நீ முன்போல் - நீ முன்போலவே, மதித்த நாவலர் குழாத்திடை வதி எனக் கருணை செய்து - நின்னை நன்குமதித்த புலவர் கூட்டத்து நடுவிலே தங்குவாயாக வென்று கூறியருளி, உருக்கரந்து - திருவுருவை ஒளித்து, அயன்சேய் விதித்த கோயில்புக்கு - பிரமன் புதல்வனாகிய தேவதச்சன் அமைத்த திருக்கோயிலினுட் புகுந்து, விளங்கிழையோடும் இருந்தனர் - விளக்கமாகிய அணிகளை அணிந்த உமையம்மையோடும் வீற்றிருந்தனர்.

மதித்த - யாவரானும் மதிக்கப்பட்ட என்றுமாம். விளங்கிழை : வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. (உகு)

கற்ற கீரனுங் கலைஞருங் கழகமண் டபத்தில்
உற்ற வாடகக் கிழியறுத் தந்தணற் குதவிக்
கொற்ற வேந்தனும் வரிசைகள் சிலசெயக் கொடுப்பித்
தற்ற நீங்கிய கல்வியின் செல்வரா யமர்ந்தார்.

(இ-ள்.) கற்றகீரனும் கலைஞரும் - பல கலைகளையுங் கற்ற நக்கீரனும் புலவர்களும், கழக மண்டபத்தில் உற்ற - சங்க மண்டபத்தின் முன் தூக்கிய, ஆடகக்கிழி அறுத்து அந்தணற்கு உதவி - பொன் முடிப்பை அறுத்துத் தருமி என்னும் மறையவனுக்குக் கொடுத்து, கொற்றவேந்தனும் வரிசைகள் சில செயக் கொடுப்பித்து - வெற்றி வேந்தனாகிய சண்பகமாறனும் சில வரிசைகள் செய்யுமாறு கொடுப்பித்து, அற்றம் நீங்கிய கல்வியின் செல்வராய் அமர்ந்தார் - குற்றம் நீங்கிய கல்விச் செல்வராக இருந்தனர்.

அற்றம் - சோர்வு ; குற்றம். கல்வியின் : இன்சாரியை அல்வழிக் கண் வந்தது. (உசு)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

சம்பக மாற னென்னுந் தமிழ்நர்தம் பெருமான் கூடல்
அம்பக நுதலி னானை யங்கயற் கண்ணி னாளை
வம்பக நிறைந்த செந்தா மரையடி வந்து தாழ்ந்து
நம்பக நிறைந்த வன்பாற் பல்பணி நடாத்தி வைகும்.

(இ-ள்.) சம்பகமாறன் என்னும் தமிழ்நர்தம் பெருமான் - சண்பகமாறன் என்னும் தமிழர் வேந்தன், கூடல் அம்பகம் நுதலினானை அங்கயற் கண்ணினாளை - கூடலில் வீற்றிருக்கும் நெற்றிக் கண்ணனாகிய சோமசுந்தரக் கடவுளையும் அங்கயற்கண்ணம்மையையும், வம்பு அகம் நிறைந்த செந்தாமரை அடி வந்து தாழ்ந்து - மணம் உள்ளே நிறைந்த

செந்தாமரை மலர்போன்ற திருவடிகளில் வந்து வணங்கி, நம்புஅகம் நிறைந்த அன்பால்-சிவமே பொருளெனத் துணிந்த உள்ளத்தின்கண் நிறைந்த அன்பினால், பல்பணி நடாத்து வைகும் - பல திருப்பணிகள் நடாத்தி இனிதிருப்பானாயினன்.

தமிழ்நர், நர் : பெயர் விகுதி. அம்பகம் - கண். எண்ணும்மைகள் தொக்கன. ஆறனுருபாகத் திரித்தலுமாம். வம்பு - மணம். நம்பு - விருப்பம் ;

"நம்பும் மேவும் நசையா கும்மே"

என்பது தொல்காப்பியம். இச்சொல் இக்காலத்து நம்பகம், நம்பிக்கை என உருத்திரிந்து, பொருள் வேறுபட்டு வழங்குகிறது. (உஎ)

ஆகச் செய்யுள் - உகுசகு.

ஐம்பத்து நான்காவது

கீரனுக்கு இலக்கண முபதேசித்த படலம்

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

கோன்றையங் தேரியல் வேய்ந்த
கூடலேம் பேருமான் சேம்போன்
மன்றலங் கமலத் தாழ்ந்து
வழிபடு நாவ லோனை
அன்றகன் கரையே றிட்ட
வருளுரை செய்தே மிப்பாற்
றேன்றமி ழனையான் றேறத்
தேருட்டிய திறனுஞ் சோல்வாம்.

(இ-ள்.) கொன்றை அம்தெரியல் வேய்ந்த - அழகிய கொன்றை மாலை அணிந்த, கூடல் எம்பெருமான் - கூடலில் வீற்றிருக்கும் எம் பெருமானாகிய சோமசுந்தரக் கடவுள், மன்றல் அம் செம்பொன் கமலத்து ஆழ்ந்து - மணமிக்க அழகிய சிவந்த பொற்றாமரைத் தடத்து வீழ்ந்து அழுந்தி, வழிபடு நாவலோனை - துதித்த நாவலனாகிய நக்கீரனை, அன்று அகன் கரை ஏறிட்ட அருள் உரை செய்தேம் - அப்பொழுது அகன்ற கரையின்கண் ஏற்றி யருளிய திருவிளையாடலை உரைத்தேம்; இப்பால் - பின், தென் தமிழ் அனையான் தேற - அழகிய தமிழிலக் கணத்தினை அந் நக்கீரன் தெளியுமாறு, தெருட்டிய திறனும் சொல்வாம் - தெளிவித்த திருவிளையாடலையும் உரைப்பாம்.

தென்றமிழ் என்றது இயற்றமிழ் இலக்கணத்தை. தெருட்டிய : பிறவினைப் பெயரெச்சம் ; தெருட்டு : பகுதி. (க)

முன்புநான் மாடக் கூடன் முழுமுத லாணை யாற்போய்
இன்புற வறிஞ ரீட்டத் தேய்தியாங் குறையுங் கீரன்
வன்புறு கோட்டங் தீர்ந்து மதுரையேம் பேருமான் றாளில்
அன்புறு மனத்த னாகி யாய்ந்துமற் றிதனைச் சேய்வான்.

(இ-ள்.) நான்மாடக் கூடல் முழுமுதல் ஆணையால் - நான்மாடக் கூடலின் கண் எழுந்தருளிய முழுமுதற் கடவுளாகிய சோமசுந்தரக் கடவுளின் ஏவலால், முன்பு போய் - முன்பு சென்று, இன்பு உற - மகிழ்ச்சி மிக, அறிஞர் ஈட்டத்து எய்தி ஆங்கு உறையும் கீரன் - புலவர் கூட்டத்தை அடைந்து அங்கு வதியும் நக்கீரன், வன்பு உறு கோட்டம் தீர்ந்து - வலிமிக்க அழுக்காறு நீங்கி, மதுரை எம்பெருமான் தாளில் - மதுரையில் அமர்ந்தருளிய எம் பெருமான் திருவடியில், அன்பு உறு மனத்தனாகி - அன்பு மிக்க மனமுடையனாய், ஆய்ந்து இதனைச் செய்வான் - ஆராய்ந்து இதனைச் செய்வானாயினன்.

கோட்டம் - மனக்கோண் : அழுக்காறு. மற்று : அசை. (உ)

கட்டவிழ் கடுக்கை யண்ணல் கண்ணினு லவிந்த காளை
மட்டவிழ் மலரோ னுலு மாயவ னுலுங் காக்கப்
பட்டவ னல்ல னன்னு னுதல்விழிப் படுதீ நம்மைச்
சுட்டபோ துருப்பந் தீர்த்துக் காத்ததிச் சுவண கஞ்சம்.

(இ - ள்.) கட்டு அவிழ் கடுக்கை அண்ணல் - முறுக்கு அவிழ்ந்த கொன்றை மலர் மாலையை அணிந்த இறைவனது, கண்ணினல் அவிந்த காளை - நுதற் கண்ணினுல் நீருகிய மதவேள், மட்டு அவிழ் மலரோனுலும் - மணத்தொடு மலர்ந்த தாமரை மலரில் இருக்கும் பிரமனுலும், மாயவனுலும் காக்கப்பட்டவன் அல்லன் - திருமாலினுலும் காக்கப்பட்டிலன்; அன்னுன் நுதல் விழிப்படு தீ-அவ்விறைவனது நெற்றிக் கண்ணில் உண்டாகிய நெருப்பு, நம்மைச் சுட்டபோது - நம்மை வெதுப்பிய பொழுது, உருப்பம் தீர்த்து - அவ்வெம்மையைப் போக்கி, இச் சுவண கஞ்சம் காத்தது - இப்பொற்ருமரைத் தடம் ஓம்பியது.

காமனைச் சிவபிரானிடத்து ஏவிய பிரமனும், காமனுக்குத் தந்தையாகிய திருமாலும் அவனைக் காக்கும் வலியுடையரேல் காத்திருப்பர்; அவர்களாலும் காக்கவொண்ணுத இறைவனது நுதல்விழிச் செந்தீயின் வெம்மையை மாற்றி இப்பொற்ருமரை காத்தது; என இறைவனது முதன்மையும், பொற்ருமரையின் மேன்மையும் புலப்பட ஆவ்வரலாறு குறிக்கப்பட்டது. (ஙு)

இப்பெருந் தடமே யெம்மை யெம்மையுங் காப்ப தென்னுக்
கப்பிலா மனத்தான் மூன்று காலமு மூழ்கி மூழ்கி
அப்பனை யால வாயெம் மடிகளை யடியார் சேம
வைப்பினை யிறைஞ்சி நித்தம் வழிபடு நியமம் பூண்டான்.

(இ - ள்.) இப்பெருந்தடமே - இந்தப் பெருமை வாய்ந்த தீர்த்தமே, எம்மை எம்மையும் காப்பது என்னு-எம்மை எப்பிறப்பிலும் ஓம்புவதாகும் என்று கருதி, கப்பு இலா மனத்தால்-பிளவு படாத (ஒன்றுபட்ட) மனத்துடன், மூன்று காலமும் மூழ்கி மூழ்கி - மூன்று காலங்களிலும் அதில் நீராடி, அப்பனை ஆலவாய் எம் அடிகளை-எல்லா உயிர்கட்கும் அத்தனும் திருவாலவாயில் அமரும் எம் இறைவனும், அடியார் சேமவைப்பினை - அடியார்களின் சேமநிதியுமாகிய சோமசுந்தரக் கடவுளை, இறைஞ்சி நித்தம் வழிபடும் நியமம் பூண்டான் - வணங்கி நாள் தோறும் வழிபடுகின்ற கடப்பாட்டினை மேற்கொண்டான்.

எம்மையும்-எப்பிறப்பினும்; இம்மையினும் மறுமையினும் என்றுமாம். அடியார் சேம வைப்பினை என்ற கருத்தை,

"காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க."

எனத் திருவாசகத்தும்,

நல்லடியார் மனத் தெய்ப்பினில் வைப்பை,"

என வன்ருெண்டர் தேவாரத்தும் காண்க. (சு)

மையறு மனத்தான் வந்து வழிபடு நியம நோக்கிப்
பையர வாரம் பூண்ட பரஞ்சுடர் மாடக் கூடல்
ஐயனு மணிய னாகி யகமகிழ்ந் தவனுக் கொன்று
செய்யநன் கருணை பூத்துத் திருவுளத் திதனைத் தேர்வான்.

(இ - ள்) மை அறும் மனத்தான் - குற்றம் நீங்கிய மனத்தை யுடைய நக்கீரன், வந்து வழிபடும் நியமம் நோக்கி - நாள்தோறும் வந்து வழிபடுங் கடப்பாட்டினைப் பார்த்து, பை அரவு ஆரம்பூண்ட பரஞ்சுடர் மாடக்கூடல் ஐயனும் - படத்தையுடைய பாம்பினை ஆரமாகப் பூண்ட பரஞ்சோதியாகிய நான்மாடக்கூடல் இறைவனும், அணியனாகி அக மகிழ்ந்து - அண்மையனாய்த் திருவுள்ளம் மகிழ்ந்து, அவனுக்கு ஒன்று செய்ய நன் கருணைபூத்து - அந்தக் கீரனுக்கு ஒன்று புரியத் திருவருள் கூர்ந்து, திருவுளத்து இதனைத் தேர்வான் - திருவுள்ளத்தின் கண் இதனைக் கருதுவானாயினன்.

அணியனாதல் - அவன் உள்ளத்தே விளங்குதல். (ௗ)

இலக்கண மிவனுக் கின்னுந்
தெளிகில விதனா லாய்ந்த
நலத்தசோல் வழூஉச்சோ லேன்ப
தறிகில னவைதீர் கேள்விப்
புலத்தவர் யாரைக் கோண்டு
போதித்து மிவனுக் கென்னா
மலைத்தனு வளைத்த முக்கண்
மன்னவ னுன்னு மெல்லை

(இ - ள்.) இவனுக்கு இன்னும் இலக்கணம் தெளிகில - இவனுக்கு இன்னும் இலக்கணம் விளங்கவில்லை; இதனால் - இதனாலே, ஆய்ந்த நலத்தசொல் - ஆராய்ந்த நன்மையையுடைய சொல்லும், வழூஉச்சொல் என்பது அறிகிலன் - குற்றமுடைய சொல்லும் இது இது என்பதை அறியாதவனாயினன்; நவைதீர் கேள்விப் புலத்தவர் யாரைக்கொண்டு - குற்றமற்ற நூற்கேள்வியின் புலமையோர் யாவரால், இவனுக்குப் போதித்தும் என்னா - இவனுக்குப் போதிப்போமென்று, மலைத்தனு வளைத்த முக்கண் மன்னவன் - மலையை வில்லாக வளைத்த மூன்று கண் களையுடைய சுந்தரபாண்டியன், உன்னும் எல்லை - நினைத்த பொழுது.

தெளிகில - விளங்கிற்றில. நலத்த : குறிப்புப் பெயரெச்சம். புலத்தவர் - புலமை யுடையார். போதித்தும் : போதிப்போம்; தன்மைப் பன்மை எதிர்கால முற்று; பன்மை தலைமை பற்றியது. உன்னினன் அங்ஙனம் உன்னும் பொழுது என விரிக்க. (ಸ)

பங்கயச் செங்கை கூப்பிப்
பாலினேர் மோழியாள் சோல்வாள்
அங்கண வங்கை நேல்லிக்
கனியேன வனைத்துங் கண்ட

புங்கவா நினது சங்கைக்
குத்தரம் புகல வல்லார்
எங்குளா ரேனு மென்னெஞ்
சுதிப்பதோன் றிசைப்பே னையா.

(இ - ள்.) பாலின் நேர்மொழியாள் - பால்போலும் மொழியினை யுடைய உமையம்மையார், பங்கயச் செங்கை கூப்பிச் சொல்வாள் - தாமரை மலர்போன்ற சிவந்த கரங்களைக் குவித்து வணங்கிக் கூறுவாள், அங்கணா - அங்கணனே. அங்கை நெல்லிக்கனி என அனைத்தும் கண்ட புங்கவா - உள்ளங்கை நெல்லிக்கனி போல யாவையும் உணர்ந்த புங்க வனே, நினது சங்கைக்கு உத்தரம் புகலவல்லார் எங்கு உளார் - உனது கேள்விக்கு விடைகூற வல்லவர் எங்கே உள்ளார் (ஒருவருமில்லை), ஏனும் - எனினும், என் நெஞ்சு உதிப்பது ஒன்று-எனது உள்ளத்திலே தோன்றுவதொன்றை, இசைப்பேன் ஐயா - கூறுவேன் ஐயனே.

புங்கவன் - உயர்ந்தோன்; தேவன். ஏனும்-அங்ஙனமாயினும். (எ)

பண்டொரு வைகல்* வெள்ளிப்
பனிவரை யிடத்துன் பாங்கர்ப்
புண்டவழ் குலிசக் கோமான்
பூமகன் மாயப் புத்தேள்
அண்டருஞ் சனக னாதி
யருந்தவர் பிறரு மீண்டிக்
கொண்டன ரிருந்தா ரிந்தக்
குவலயம் பொறுத மாதோ.

(இ - ள்.) பண்டு ஒரு வைகல் - முன்னொரு நாள், பனி வெள்ளி வரை இடத்து உன் பாங்கர்-வெள்ளிய இமயமலையின்கண் உன்பக்க லில், புண் தவழ் குலிசக் கோமான் - புலால் விளங்கும் வச்சிரப்படையை யுடைய இந்திரனும், பூமகன் மாயப் புத்தேள் அண்டரும் - பிரமனும் திருமாலும் பிற தேவர்களும், சனகன் ஆதி அருந்தவர் பிறரும்-சனகன் முதலிய அரிய முனிவரும் பிறரும், ஈண்டிக்கொண்டனர் இருந்தார் - நெருங்கி இருந்தார்; இந்தக் குவலயம் பொறுது - அதனால் இந்த ஞாலம் பொறுக்கலாற்றாது.

பண்டொரு வைகல் என்றது திருக்கல்யாண காலத்தை. மாயப்புத் தேள் முதலிய அண்டரும் பிறரும் என விரிக்க. கொண்டனர்: முற் றெச்சம். மாது, ஓ: அசை. (அ)

தாழ்ந்தது வடகீ ழெல்லை
யுயர்ந்தது தென்மேற் கெல்லை
சூழ்ந்தது கண்டு வானோர்
தொழுதுணைப் பரவி யைய

(பா - ம்.) * பண்டொரு போது.

ஊழ்ந்திடு மரவம் பூண்டோ
யோருவனின் னுைப்பா னங்கே
வாழ்ந்திட விடுத்தா லிந்த
வையநேர் நிற்கு மென்றார்.

(இ - ள்.) வடகீழ் எல்லை தாழ்ந்தது - வடகிழக் கெல்லை தாழ்ந்தது; தென் மேற்கு எல்லை உயர்ந்தது - தென்மேற் கெல்லை உயர்ந்தது; அது கண்டு - அதனைப் பார்த்து, வானோர் உனைச் சூழ்ந்து - தேவர்கள் உன்னைச் சூழ்ந்துகொண்டு, தொழுது பரவி - வணங்கித் துதித்து, ஐய - ஐயனே, ஊழ்ந்திடும் அரவம் பூண்டோய் - ஊருகின்ற பாம்பினை அணிந்தவனே, நின் ஒப்பான் ஒருவன் அங்கே வாழ்ந்திட விடுத்தால் - நின்னையொப்பா னொருவனை அத் தென்மேற் கெல்லையில் வாழும்படி விடுப்பின், இந்த வையம் நேர்நிற்கும் என்றார் - இந்த நிலவுலகம் சமமாக நிற்கும் எனக் கூறினர்.

சூழ்ந்து - ஆலோசித்து என்றுமாம். ஊழ்ந்திடல் - ஊர்தல் என்னும் பொருட்டு. நின்னை உள்ளத்தே கொண்டிருத்தலால் நின்னொப்பான் என்க. (கூ)

பைத்தலை புரட்டு முந்நீர்ப்
பௌவமுண் டவனே யெம்மை
ஒத்தவ னனையான் வாழ்க்கைக்
குரியளா கியவு லோபா
முத்திரை யிமவான் பெற்ற
முகிழ்முலைக் கொடியோப் பாளேன்
றத்திரு முனியை நோக்கி
யாயிடை விடுத்தா யன்றே.

(இ - ள்.) பைத்து அலைபுரட்டும் முந்நீர்ப் பௌவம் உண்டவனே - பரந்து அலைவீசும் மூன்று நீரினையுடைய கடலைக் குடித்த குறுமுனிவனே, எம்மை ஒத்தவன் - எம்மை ஒப்பான், அனையான் வாழ்க்கைக்கு உரியளாகிய உலோபா முத்திரை - அம்முனிவன் இல்வாழ்க்கைக்கு உரியவளாகிய உலோபா முத்திரை என்பாளே, இமவான் பெற்ற முகிழ் முலைக்கொடி ஒப்பாள் என்று - மலையரையன் பெற்ற அரும்பிய கொங்கையையுடைய கொடிபோன்ற உமையை ஒத்தவள் என்று கூறி, அத் திருமுனியை நோக்கி - அந்தத் திருமுனிவனைப் பார்த்து, ஆயிடை விடுத்தாய் - அங்குப் போகுமாறு பணித்தனை.

பைத்து - விரிந்தென்னும் பொருட்டு. அன்று, ஏ: அசை. (க0)

விடைகோடு போவா னென்றை வேண்டினு னேகுந் தேயந்
தோடைபெறு தமிழ்நா டென்று சொல்லுப வந்த நாட்டின்
இடைபயின் மனித்த ரெல்லா மின்றமி ழாய்ந்த கேள்வி
உடையவ ரேன்ப கேட்டார்க் குத்தா முரைத்தல் வேண்டும்.

(இ - ள்.) விடைகொடு போவான்-விடைபெற்றுப் போகும் அம் முனிவன், ஒன்றை வேண்டினன் - ஒன்றை வேண்டுவானாயினன்; ஏகும் தேயம் - யான் செல்லும் நாடு, தொடைபெறு தமிழ்நாடு என்று சொல்லுப - (செய்யுளாகத்) தொடுத்தலைப்பெறும் தமிழ்நாடு என்று கூறுவர்; அந்த நாட்டின் இடையயில் மனித்தர் எல்லாம் - அந்த நாட்டின்கண் வாழும் மக்களனைவரும், இன் தமிழ் ஆய்ந்து கேள்வி உடையவர் என்ப - இனிய தமிழை ஆராய்ந்து அந்நூற்கேள்வி மிக்கவரென்று கூறுவர்; கேட்டார்க்கு உத்தரம் உரைத்தல் வேண்டும் - (ஆதலால் அத்தமிழ் நூலில்) வினவினர்க்கு விடை கூறுதல் வேண்டும்.

தொடை-செய்யுளுறுப்புக்களுள் ஒன்று; அது மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை, பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை, நிரனிறை, இரட்டை என்னும் விகற்பங்களுடையது. (கக)

சித்தமா சகல வந்தச் செந்தமி ழியனூ றன்னை
அத்தனே யருளிச் செய்தி யென்றனன் னனையான் றேற
வைத்தனை முதனூ றன்னை மற்றது தெளிந்த பின்னும்
நித்தனே யடியே னென்று நின்னடி காண்பே னென்றான்.

(இ - ள்.) சித்தம் மாசு அகல - மனத்திலுள்ள அறியாமையாகிய குற்றம் நீங்க, அந்தச் செந்தமிழ் இயல் நூல் தன்னை-அச்செந்தமிழின் இலக்கண நூலை, அத்தனே அருளிச் செய்தி என்றனன் - இறைவனே அருளிச் செய்வாயாக என்று வேண்டினன், அனையான் தேற முதனூல் தன்னை வைத்தனை - அம்முனிவன் தெளியுமாறு முதனூல் அருளினை, அது தெளிந்த பின்னும்-அம் முதல் நூலைத் தேர்ந்துணர்ந்த பின்னும், நித்தனே-அழிவில்லாதவனே, அடியேன் நின் அடி என்று காண்பேன் என்றான் - அடியேன் நினது திருவடியை என்று காண்பேன் என்று வினவினன்.

மற்று: அசை. (கஉ)

கடம்பமா வனத்தி லெம்மைக் கண்டனை யிறைஞ்சி யுள்ளத்
திடம்பெற யாது வேட்டா யவையெலா மெம்பாற் பெற்றுத்
திடம்பெற மலயத் தேய்தி யிருக்கென விடுத்தாய் சென்று
குடம்பெறு முனியு மங்கே யிருக்கின்றான் கொடியி னோடும்.

(இ - ள்.) மா கடம்பவனத்தில் - பெரிய கடம்பவனத்தின் கண் எம்மைக் கண்டனை இறைஞ்சி - எம்மைக் கண்டு வணங்கி, உள்ளத்து இடம் பெற யாது வேட்டாய் - நின் உள்ளத்தின்கண் நிரம்ப யாதனை யாதனை விரும்பினையோ, அவை எலாம் எம்பால் பெற்று - அவற்றை எல்லாம் எம்மிடத்துப் பெற்று, திடம்பெற மலயத்து எய்தி இருக்க என விடுத்தாய் - மனஞ்சலியாது பொதியின் மலையிற்சென்று இருக்கக் கடவை என்று ஏவினும்; குடம்பெறு முனியும் அங்கே சென்று - கலச முனியாகிய அவனும் அங்குச் சென்று, கொடியினோடும் இருக்கின்றான் - உலோபா முத்திரையோடும் இருக்கின்றான்.

கண்டனை: முற்றெச்சம். அவையெனப் பின்வருதலின் யாது என்பதனை அடுக்கிக் கொள்க; ஒருமையும் பன்மையும் மயங்கின வென்றுமாம். இருக்கென: அகரம் தொக்கது. (கங)

இனையதுன் றிருவுள் ளத்துக்
    கிசைந்ததே லிவற்குக் கேள்வி
அனையமா தவனைக் கூவி
    யுணர்த்தென வணங்கு கூற
இனையநா ணிகழ்ச்சி* யெல்லா
    மறந்திடா தின்று சொன்னாய்
அனையதே செய்து மென்னா
    வறிவனை நினைந்தா னையன்.

(இ - ள்.) இனையது உன் திருவுள்ளத்திற்கு இசைந்ததேல் - இச் செய்தி நினது திருவுள்ளத்துக்குப் பொருந்துவதாயின், அனைய மாதவனைக் கூவி - அம்முனிவனை அழைத்து, இவற்குக் கேள்வி உணர்த்து என அணங்கு கூற - இந்நக்கீரனுக்குத் தமிழிலக்கணத்தை அறிவுறுத்துவாயாக என்று இறைவி கூற, இனையநாள் நிகழ்ச்சி எல்லாம் - இத்துணை நாட் செய்திகளனைத்தையும், மறந்திடாது இன்று சொன்னாய் - மறந்திடாது இன்று கூறினை, அனையதே செய்தும் என்னா - அதனையே செய்வேமென்று கூறி, ஐயன் அறிவனை நினைந்தான் - இறைவன் அம்முனிவனை நினைந்தனன்.

கூவி அவனால் உணர்த்து என விரிக்க. பாலினோர் மொழியாளாகிய அணங்கு என இயைக்க. சொன்னாயென வியந்து என்க. (கசு)

[கலி நிலைத்துறை]

உடைய் நாயகன் றிருவுள முணர்ந்தனன் முடிமேல்
அடைய வஞ்சலி முகிழ்த்தன னருந்தவ விமானத்
திடைபு குந்தனன் பன்னியோ டெழுந்தன னகல்வான்
நடைய னாகிவந் தடைந்தன னற்றமிழ் முனிவன்.

(இ - ள்.) உடைய நாயகன் திருவுளம் உணர்ந்தனன் - எல்லா முடைய இறைவனது திருவுள்ளக் குறிப்பினை அறிந்து, முடிமேல் அடைய அஞ்சலி முகிழ்த்தனன் - முடிமீது பொருந்த அஞ்சலியாகக் கைகளைக் குவித்து, அருந்தவ விமானத்திடை பன்னியோடு புகுந்தனன் - அரிய தவமாகிய விமானத்தில் மனைவியோடும் ஏறி. எழுந்தனன் - மேலே எழுந்து, அகல்வான் நடையன் ஆகிவந்து - அகன்ற வானை வழியாகக் கொண்டு நடப்பவனாய், நல்தமிழ் முனிவன் அடைந்தனன் - நல்ல தமிழ் முனிவன் மதுரையை அடைந்தான்.

வானிலே செல்லும் தவ ஆற்றலை விமானமாக உருவகித்தார். உணர்ந்தனன், முகிழ்த்தனன், புகுந்தனன், எழுந்தனன் என்பன முற்றெச்சங்கள். (கஎ)

(பா - ம்.) * எனைய நாணிகழ்ச்சி.

இயங்கு மாதவத் தேரினும் பன்னியோ டிழிந்து
புயங்க னாலயம் புகுந்துநாற் புயம்புடை கிளைத்துத்
தயங்கு செம்பவ ளாசலந் தன்னையு மதன்பால்
வயங்கு மிந்திர நீலமால் வரையையும் பணியா.

(இ-ள்.) இயங்கும் மாதவத்தேரினும் - இயங்குதலையுடைய பெரிய தவமாகிய தேரினின்றும், பன்னியோடு இழிந்து - மனைவியோடும் இறங்கி, புயங்கன் ஆலயம் புகுந்து - சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலுட் புகுந்து, புடைநால் புயம் கிளைத்துத் தயங்கு - மருங்கில் நான்கு திருத்தோள்கள் கிளைத்து விளங்கும், செம் பவள அசலம் தன்னையும் - சிவந்த பவளமலையை ஒத்த இறைவனையும், அதன்பால் வயங்கும் இந்திர நீலமால் வரையையும் பணியா - அதன் மருங்கில் விளங்கும் பெரிய இந்திர நீலமலையை ஒத்த அம்மையையும் வணங்கி.

தேரினும் - தேரினின்றும். புயங்கன் - சிவபிரான் திருப்பெயர்.

"புயங்கனுள்வான் பொன்னடிக்கே" என்பது திருவாசகம்; அரவாபரண முடையன் என்றுரைப்பாருமுளர். இறைவன் பவளமலையையும், இறைவன் பக்கத்துள்ள இறைவி பவளமலையின் பாங்கர் விளங்கும் இந்திர நீலமலையையும் போன்று தோன்றினர்.

"வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற் பெனவிடப் பாகங்
கொள்ளு மாமலை யாளுடன் கூடவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின்மன் னவனார்"

என்னும் பெரியபுராணச் செய்யுள் சிந்திக்கற்பாலது. (கசு)

பெருகு மன்புளந் துளும்பமெய் யானந்தம் பெருக
அருகி ருந்தன னுவயிற் கீரனு மம்பொன்
முருக விழ்ந்ததா மரைபடிந் திறைவனை முன்போல்
உருகு மன்பினு லிறைஞ்சுவா னேல்லைவந் தடைந்தான்.

(இ-ள்.) பெருகும் அன்பு உளம் துளும்ப - சுரந்து பெருகும் அன்பானது உள்ளம் நிறைந்து ததும்புவதால், மெய் ஆனந்தம் பெருக - சிவானந்தம் பெருக, அருகு இருந்தனன் - அருகில் இருந்தனன்; கீரனும் - நக்கீரனும், முருகு அவிழ்ந்த தாமரை படிந்து - மணம்விரிந்த அழகிய பொற்றாமரையிற் படிந்து, முன்போல் - முன்போலவே, உருகும் அன்பினால் இறைவனை இறைஞ்சுவான் - உருகுகின்ற அன்பினால் இறைவனை வணங்குதற்பொருட்டு, ஆவயின் ஒல்லைவந்து அடைந்தான் - அங்கு விரைந்து வந்து சேர்ந்தனன்.

மெய் - ஆக்கை என்றுமாம். அன்பினால் உள்ள முருகுதலும் ஆனந்தம் விளைதலும்,

"அன்பினா லடியே னாவியோ டாக்கை யானந்த மாய்க்கசிந் துருக"

என்னும் திருவாசகத்தால் அறியப்படும். ஆவயின், சுட்டுநீண்டது. இறைஞ்சுவான்: வினையெச்சம். (கஎ)

இருந்த மாதவச் செல்வனை யெதிர்வர நோக்கி
அருந்த வாவிவற் கியற்றமி ழமைந்தில வெம்பாற்
றெரிந்த நீயதை யரிறபத் தெருட்டெனப் பிணியும்
மருந்து மாகிய பெருந்தகை செய்யவாய் மலர்ந்தான்.

(இ - ள்.) இருந்த மாதவச் செல்வனை - அருகில் இருந்த பெரிய தவமாகிய செல்வத்தையுடைய அகத்திய முனிவனை, எதிர்வர நோக்கி - திருமுன் வருமாறு கடைக்கண்சாத்தி, அருந்தவா - அரிய தவச் செல்வ, இவற்கு இயல்தமிழ் அமைந்தில - இந்நக்கீரனுக்குத் தமிழிலக்கணம் நிரம்பிற்றில; எம்பால் தெரிந்த நீ - எம்மிடத்துக் கேட்டுத் தெரிந்த நீ, அதை அரில்தபத்தெருட்டு என - அவ்விலக்கணத்தைக் குற்றம் நீங்க இவற்கு விளக்குக என்று, பிணியும் மருந்துமாகிய பெருந்தகை செய்யவாய் மலர்ந்தான் - பிணியும் மருந்துமாகிய சோமசுந்தரக்கடவுள் செவ்விய திருவாய் மலர்ந்தருளினன்.

தப - நீங்க; தபு : பகுதி;

"உப்பகார மொன்றென மொழிப
இருவயி னிலையும் பொருட்டா கும்மே."

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தால் தபு என்பது தன்வினைக்கும் பிறவினைக்கும் உரித்தாதல் பெறப்படும்; ஈண்டுத் தன்வினைக்கண் வந்தது. தெருட்டு : தெருள் என்பதன் பிறவினை. இறைவன் தன் ஆணை வழிநில்லாத உயிர்கட்குத் துன்பமும், நிற்கும் உயிர்கட்கு இன்பமும் அருளுதலின் பிணியும் அதற்கு மருந்துமாகிய பெருந்தகை என்றார். இதனைக் கோபப்பிரசாதத்தாலும் அறிக. (கஅ)

வெள்ளை மாமதிப் பிளவணி வேணியங் கருணை
வள்ள லார்பணி சிரத்தினு மனத்தினுந் தாங்கிப்
பள்ள மேழையும் பருகினோன் பணியுநக் கீரன்
உள்ள மாசற வியாகர ணத்தினை யுணர்த்தும்.*

(இ - ள்.) வெள்ளை மாமதிப் பிளவு அணி - வெண்மையாகிய பெருமை பொருந்திய பிறைமதியை அணிந்த, வேணி அம்கருணை வள்ளலார் பணி - சடையையுடைய அழகிய அருள்வள்ளலாகிய சோமசுந்தரக்கடவுள் கட்டளையை, சிரத்தினும் மனத்தினும் தாங்கி - முடியிலும் மனத்திலும் தாங்கி, பள்ளம் ஏழையும் பருகினோன் - கடல் ஏழையுங் குடித்த குறுமுனிவன், பணியும் நக்கீரன் உள்ளம் மாசு அற - தன்னை வணங்கிய நக்கீரனது உள்ளத்திலுள்ள அறியாமை நீங்க, வியாகரணத்தினை உணர்த்தும் - இலக்கணத்தை அறிவுறுத்தும்.

வியாகரணம் - இலக்கணம். (கக)

இருவ கைப்புற வுரைதழீஇ யெழுமத மோடுநாற்
பொருளோ டும்புணர்ந் தையிரு குற்றமும் போக்கி
ஒருவி லையிரண் டழகோடு முத்தியெண் ணுன்கும்
மருவு மாதிநூ லினைத்தொகை வகைவிரி முறையால்.

(பா - ம்.) * வியாகரணத்தினை யுரைக்கும்.

(இ - ள்.) இருவகைப்புறவுரை தழீஇ - பொதுவுஞ் சிறப்புமாகிய இருவகைப் புறவுரைகளையும் முன்னர்ப் பொருந்தி, எழுவகை மதமொடு - உடன்படல் முதலிய எழுவகை மதங்களோடும், நாற்பொருளொடும் புணர்ந்து - அறமுதலிய நான்கு பொருளோடும் கூடி, ஐஇரு குற்றமும் போக்கி - குன்றக்கூறல் முதலிய பத்துக் குற்றங்களையும் அகற்றி, ஒருவில் ஐ இரண்டு அழகொடும் - நீங்குதல் இல்லாத சுருங்கச் சொல்லல் முதலிய பத்து அழகோடும், உத்தி எண்ணான்கும் மருவும் - முப்பத்திரண்டு உத்தியும் பொருந்தும், ஆதி நூலினைத் தொகைவகை விரி முறையால் - முதனூலினைத் தொகையும் வகையும் விரியுமாகிய முறையினால்.

புறவுரை - பாயிரம். நாற்பொருள் - அறம்பொருள் இன்பம் வீடு எழுவகை மதம், பத்துக் குற்றம், பத்தழகு, முப்பத்திரண்டு தந்திர வுத்தி (நூற் புணர்ப்பு) என்பவற்றைப் பின்வருஞ் சூத்திரங்களால் முறையே அறிக:

"எழுவகை மதமே யுடம்படன் மறுத்தல்
பிறர்தம் மதமேற் கொண்டு களைவே
தாஅ னாட்டித் தனாது நிறுப்பே
இருவர் மாறுகோ ளொருதலை துணிவே
பிறர்நூற் குற்றங் காட்ட லேனைப்
பிறிதொடு படாஅன் றன்மதங் கொளலே."

"குன்றக் கூறன் மிகைபடக் கூறல்
கூறியது கூறன் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தன் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தன் மற்றொன்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுத னின்றுபய னின்மை
என்றிவை யீரைங் குற்ற நூற்கே."

"சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை யாழமுடைத் தாதல்
முறையின் வைப்பே யுலகமலை யாமை
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த
தாகுத னூலிற் கழகெனும் பத்தே."

"நுதலிப் புகுத லோத்துமுறை வைப்பே
தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்
முடித்துக் காட்டன் முடிவிடங் கூறல்
தானெடுத்து மொழிதல் பிறன்கோட் கூறல்
சொற்பொருள் விரித்த றொடர்சொற் புணர்த்தல்
இரட்டுற மொழித லேதுவின் முடித்தல்
ஒப்பின் முடித்தன் மாட்டெறிந் தொழுகல்
இறந்தது விலக்க லெதிரது போற்றல்
முன்மொழிந் துகோடல் பின்னது நிறுத்தல்

விகற்பத்தின் முடித்தன் முடிந்தவை முடித்தல்
உரைத்து மென்ற லுரைத்தா மென்றல்
ஒருதலை துணித லெடுத்துக் காட்டல்
எடுத்த மொழியி னெய்த வைத்தல்
இன்ன தல்ல திதுவென மொழிதல்
எஞ்சிய சொல்லி னெய்தக் கூறல்
பிறநூன் முடிந்தது தானுடன் படுதல்
தன்குறி வழக்க மிகவெடுத் துரைத்தல்
சொல்லின் முடிவி னப்பொருண் முடித்தல்
ஒன்றின முடித்த றன்னின முடித்தல்
உய்த்துணர வைப்பென வுத்தியெண் ணுன்கே." (உ0)

கருத்துக் கண்ணழி வாதிய காண்டிகை யானும்
விருத்தி யானுநூற் கிடைப்பொரு ளுக்கற விளக்கித்
தேரித்து ரைத்தன னுரைத்திடு திறங்கண்டு நூலின்
அருத்த மேவடி வாகிய வாதியா சிரியன்.

(இ-ள்.) கருத்துக் கண்ணழிவு ஆதிய காண்டிகையானும் - கருத்துரையும் பதவுரையு முதலிய காண்டிகையுரையானும், விருத்தியானும் - விருத்தியுரையானும், நூல் கிடைப்பொருள் துளக்கு அற விளக்கி - அம் முதனூலின் உட்கிடைப் பொருளை ஐயமற விளக்கி, தெரித்து உரைத்தனன் - தெருட்டிக் கூறினன்; உரைத்திடு திறம் கண்டு - அவன் கூறிய வன்மையைப் பார்த்து, நூலின் அருத்தமே வடிவு ஆகிய - அந்நூலின் பொருளே திருவுருவமாகிய, ஆதி ஆசிரியன் - முதற் குரவனாகிய சோமசுந்தரக் கடவுள்.

காண்டிகையாவது கருத்து, பதப்பொருள், எடுத்துக்காட்டு, வினா, விடை என்னும் ஐந்துங் கொண்டது. விருத்தியாவது பாடம், கருத்து, சொல்வகை, சொற்பொருள், தொகுத்துரை, உதாரணம், வினா, விடை, விசேடம், விரிவு, அதிகாரம், துணிவு, பயன், ஆசிரியவசனம் என்னும் பதினான்கனையும் கொண்டது. (உக)

தருக்கு மின்பமுங் கருணையுந் ததைய*மா தவனைத்
திருக்க ரங்களான் மகிழ்ச்சியுட் டிளைத்திடத் தடவிப்†
பெருக்க வேண்டிய பேறெலாம் பீடுற நல்கி
இருக்கை யிற்செல விடுத்தன னுலவா யிறைவன்.

(இ-ள்.) தருக்கும் இன்பமும் கருணையும் ததைய - களிப்பும் இன்பமும் அருளும் பொங்க, மாதவனை - தவப்பெரியானாகிய அவ்வகத்திய முனிவனை, மகிழ்ச்சியுள் திளைத்திட - (அவன்) மகிழ்ச்சிக் கடலுள் திளைக்க, திருக்கரங்களால் தடவி - தனது திருக்கைகளாலே தடவி, வேண்டிய பேறு எலாம் - அவன் பெற வேண்டிய பயன் அனைத்தையும், பெருக்க நிரம்ப, பீடுஉற நல்கி - சிறக்கக் கொடுத்தருளி, இருக்கையில் செல விடுத்தனன் - அவன் இருக்கையிற் செல்ல விடுத்

(பா-ம்.) * ததைப்ப. † திளைத்திடத் தழுவி.

தருளினன்; ஆலவாய் இறைவன் - திருவாலவாயின்கண் எழுந்தருளிய இறைவன், (உஉ)

பொன்ன னாளொடுங் குறுமுனி விடைகொடு போன
பின்னை யாருயிர்க் கிழத்திதன் பிரானைநேர் நோக்கி
என்னை நீயிவற் குணர்த்திடா தித்தவப் போதியின்
மன்ன னாலுணர்த் தியதென மதுரைநா யகனும்.

(இ - ள்.) பொன் அனாளொடும் குறுமுனி விடைகொடு போன பின்னை - பொன்னை யொத்த உலோபா முத்திரை யோடுங் குறுமுனி விடைபெற்றுப் போன பின்னர், ஆர் உயிர்க்கிழத்தி - அரிய உயிர் போன்ற பிராட்டியார், தன் பிரானை நேர்நோக்கி - தன் தலைவனாகிய சோமசுந்தரக்கடவுளை எதிரே பார்த்து, இவற்கு நீ உணர்த்திடாது - இந் நக்கீரனுக்கு நீ இலக்கணம் அறிவித்தருளாது, இத்தவப் பொதியின் மன்னனால் உணர்த்தியது என்னை என - இத்தவமுடைய பொதியின் மலைத்தலைவனாகிய அகத்தியனால் உணர்த்திய காரணம் என்னென்று வினவ, மதுரை நாயகனும் - மதுரைப் பெருமானும்.

கிழத்தி - உரிமை யுடையாள்; கிழமை: பகுதி. (உங)

தன்னை நித்தலும் வழிபடுந் தகுதியோர் சாலப்
பொன்ன ளிப்பவர் தொடுத்தமற் சரமிலாப் புனிதர்
சொன்ன சொற்கட வாதவர் துகடவிர் நெஞ்சத்
தின்ன வர்க்குநூல் கொளுத்துவ தறனென விசைப்ப.

(இ - ள்.) தன்னை நித்தலும் வழிபடும் தகுதியோர் - தன்னை நாள்தோறும் வழிபடும் தன்மையுடையோரும், சாலப் பொன் அளிப்பவர் - நிறையப் பொருள் கொடுப்போரும், தொடுத்த மற்சரம் இலாப்புனிதர் - அழுக்காறு அடைதலில்லா மனத்தூய்மை உடையவரும், சொன்ன சொல் கடவாதவர் - சொன்ன சொல்லைக் கடவாதவரும் ஆகிய, துகள் தவிர் நெஞ்சத்து இன்னவர்க்கு - குற்றம் நீங்கிய உள்ள முடைய இவர் போல்வார்க்கு, நூல் கொளுத்துவது அறன் என இசைப்ப - நூல் போதிப்பது அறமென்று கூறுவர் அறிந்தோர்.

மற்சரம் - மாற்சரியம், அழுக்காறு. (உச)

இவனெ டுத்தமற் சரத்தினால் யாமுணர்த் தாதத்
தவனை விட்டுணர்த் தினமெனச் சாற்றினன் கேட்டுக்
கவலை விட்டக மகிழ்ச்சிகொண் டிருந்தனள் கதிர்கால்
நவம ணிக்கலம் பூத்ததோர் கொடிபுரை நங்கை.

(இ - ள்.) இவன் எடுத்த மற்சரத்தினால் - இவன் கொண்ட அழுக்காற்றினால், யாம் உணர்த்தாது - யாம் அறிவுறுத்தாமல், அத் தவனை விட்டு உணர்த்தினம் எனச் சாற்றினன் - அம்முனிவனை விட்டு அறிவித்தோம் என்று கூறியருளினன்; கேட்டு - அதனைக் கேட்டு, கவலை விட்டு - ஐயமொழிந்து, கதிர்கால் நவமணிக் கலம் பூத்தது ஓர் கொடி புரை நங்கை - ஒளி வீசும் நவமணிகள் பதித்த அணிகளைப் பூத்ததாகிய

ஒரு கொடிபோன்ற பிராட்டி, அகம் மகிழ்ச்சி கொண்டு இருந்தனள் - மனமகிழ்ச்சி கொண்டு இருந்தனள்.

கவலை - முற்றுமுணர்ந்த பெருமான் தான் உணர்த்தாது ஒரு முனிவனால் உணர்த்தியது என்னை என்னும் ஐயம். (உ௫)

கற்ற கீரனும் பின்புதான் முன்செய்த கவிகண்
முற்று மாய்ந்துசோல் வழுக்களும் வழாநிலை முடிபும்
உற்று நோக்கின னறிவின்றி முழுதோருங் குணர்ந்தோன்
சோற்ற பாடலிற் போருள்வழுச் சோல்லினே னென்னு.

(இ - ள்.) கற்ற கீரனும் - அகத்தியர்பால் இலக்கணம் கற்ற நக்கீரனும், பின்பு - பின்னர், தான் முன் செய்த கவிகள் முற்றும் ஆய்ந்து- தான் முன்னே செய்த கவிகள் அனைத்தையும் ஆராய்ந்து, சொல் வழுக்களும் வழாநிலை முடிபும் உற்று நோக்கினன் - வழூஉச்சொல் முடிபும் வழாநிலைமுடிபும் ஆகிய இவற்றைச் சிந்தித்துப் பார்த்து, முழுது ஒருங்கு உணர்ந்தோன் சொற்ற பாடலில் - முற்றும் ஒருசேர உணர்ந்த இறைவன் கூறியருளிய பாசுரத்தில், அறிவு இன்றி - அறிவில்லாமையினால், பொருள்வழுச் சொல்லினேன் என்னு-பொருட் குற்றஞ் சொல்லினேன் என்று,

சொல்வழுக்கள் - திணைவழு, பால்வழு, இடவழு, காலவழு, வினாவழு, விடைவழு, மரபுவழு என எழுவகைப்படும். சொல்வழுக்கள் என்றாரேனும் அகத்திணை வழுவும், புறத்திணை வழுவுமாகிய பொருளிலக்கண வழுக்களும் கொள்க. வழுவமைதி என்பதும் உபலக்கணத்தாற் பெறப்படும். (உசு)

மறையி னந்தமுந் தோடாததா ணிலந்தோட வந்த
நிறைப ரஞ்சுடர் நிராமய நிருத்தற்குப் பிழைத்தேன்
சிறிய கேள்வியோர் கழியவுஞ் சேருக்குடை யோரேன்
றறிஞர் கூறிய பழஞ்சோலேன் னளவிற்றே யம்ம.

(இ - ள்.) மறையின் அந்தமும் தொடாத தாள் - மறை முடியும் தீண்டுதற்கரிய திருவடிகளை, நிலம் தொட வந்த - நிலமகள் தீண்டுமாறு நடந்து வந்த; நிறை பரஞ்சுடர் நிராமய நிருத்தற்குப் பிழைத்தேன் - எங்கும் நிறைந்த பரஞ்சோதியாகிய பாசமற்ற கூத்தப்பிரானுக்குப் பிழை செய்தேன் (ஆகலின்), சிறிய கேள்வியோர் - நிரம்பாத கல்வியுடையவர், கழியவும் செருக்கு உடையோர் என்று-மிகவும் இறுமாப்புடையவராய் இருப்பர் என்று, அறிஞர் கூறிய பழஞ்சொல்-அறிவுடையோர் கூறிய பழமொழி, என் அளவிற்று-என் அளவினதாயது.

மறையின் அந்தம் - வேதாந்தம்; உபநிடதம். நிராமயன் - பாசநோயில்லாதவன்; ஆமயம்-நோய். கழிய: உரிச்சொல்லடியாக வந்த வினையெச்சம். சிறிய கேள்வியோர் செருக்குறுவ ரென்பது,

"கரையமை கல்வி சாலாக் கவிஞர்போ லிறுமாந்து"

என இவ்வாசிரியராலும் முன் குறிக்கப்பட்டது. அம்ம: இடைச்சொல். (உஎ)

அட்ட மூர்த்திதன் றிருவடிக் கடியனேன் பிழைக்கப்
பட்ட தீங்கினு லெனையவ னுதல்விழிப் படுதீச்
சுட்ட தன்றியென் னெஞ்சமுஞ் சுடுவதே யென்றென்
றுட்ட தும்பிய விழுமநோ யுவரியு ளாழ்ந்தான்.

(இ - ள்.) அட்டமூர்த்தி தன் திருவடிக்கு - அட்டமூர்த்தியாகிய இறைவன் திருவடிகட்கு, அடியனேன் பிழைக்கப்பட்ட தீங்கினால் - அடியேன் பிழைசெய்ய நேர்ந்த தீங்கினால், எனை - அடியேனை, அவன் நுதல் விழிப்படு தீ சுட்டது அன்றி - அவ்விறைவனது நெற்றி விழியில் உண்டாகிய நெருப்புச் சுட்டதே அல்லாமல், என் நெஞ்சமும் சுடுவதே என்று என்ற - என் உள்ளமும் என்னைச் சுடுகின்றதே என்று எண்ணி எண்ணி, உள் ததும்பிய விழுமநோய் உவரியுள் ஆழ்ந்தான் - உள்ளே நிரம்பித் ததும்பும் துன்பநோயென்னுங் கடலுள் ஆழ்ந்தான்.

அட்டமூர்த்தி-நிலம், நீர், தீ, வளி, வான், ஞாயிறு, திங்கள், உயிர், என்னும் எட்டு வடிவாகிய இறைவன். நெஞ்சமும்: இறந்தது தழுவிய எச்சவும்மை. நெஞ்சம் சுடுதலை,

"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

என்னும் வாயுறை வாழ்த்தானும் அறிக. விழுமம். துன்பம்; கவலை. (உஅ)

மகவை யீன்றதாய் கைத்திடு மருந்துவாய் மடுத்துப்
பகைப டும்பிணி யகற்றிடும் பான்மைபோ லென்னை
இகலி ழைத்தறி வுறுத்தினுற்* கேழையேன் செய்யத்
தகுவ தியாதென வரம்பிலா மகிழ்ச்சியுட் டாழ்ந்தான்.

(இ - ள்.) மகவை ஈன்ற தாய் - பிள்ளையைப் பெற்ற தாய், கைத்திடும் மருந்து வாய் மடுத்து - கசக்கும் மருந்தினை அதன் வாயில் ஊட்டி, பகைபடும் பிணி அகற்றிடும் பான்மைபோல் - பகைத்தலைப் பொருந்திய பிணியை நீக்குந் தன்மைபோல, என்னை இகல் இழைத்து - என்மேற் சினங்கொண்டு, அறிவுறுத்தினற்கு - அறிவுறுத்திய அவ்விறைவனுக்கு, ஏழையேன் செய்ய தகுவது யாது என - அறிவிலியாகிய என்னாற் செய்யத்தக்க கைம்மாறு யாதென்று, வரம்பு இலா மகிழ்ச்சியுள் தாழ்ந்தான் - எல்லையில்லாத மகிழ்ச்சிக் கடலுள் அழுந்தினான்.

மகவு மருந்தினை உண்ணாதாகவும் தாய் அதனை வலிதின் ஊட்டிப் பிணியகற்றுதல் போல என்க. பகைபடும்-உடம்பிற்குப் பகையாகப் பொருந்தும். தன் பிழை கருதித் துன்பத்துள் ஆழ்ந்தவன் பின்பு இறைவன் புரிந்த அருள் கருதி இன்பத்துள் ஆழ்ந்தான்.

"கோகழியெங் கோமாற்கு நெஞ்சமே
உண்டாமோ கைம்மா றுரை"

(பா - ம்.) *உருத்தினுய்க்கு.

என்றார் மாணிக்கவாசகப் பெருமானும். (உ௯)

மாத வன்றனக் காலவாய் மன்னவ னருளாற்
போத கஞ்செய்த நூலினைப் புலவரே னோர்க்கும்
ஆத ரஞ்செயக் கொளுத்தியிட் டிருந்தன னமலன்
பாத பங்கய மூழ்கிய பத்திமைக் கீரன்.

(இ - ள்.) அமலன் பாதபங்கயம் மூழ்கிய பத்திமைக்கீரன் - நின்மலனாகிய சோமசுந்தரக்கடவுளின் திருவடித் தாமரையில் அழுந்திய அன்பையுடைய நக்கீரன், மாதவன் தனக்கு ஆலவாய் மன்னவன் அருளால் - குறுமுனிவனானவன் தனக்கு அவ்விறைவனருளால், போதகம் செய்த நூலினை - போதித்த இலக்கண நூலை, புலவர் ஏனோர்க்கும் - ஏனைய புலவர்களுக்கும், ஆதரம் செயக் கொளுத்தியிட்டு இருந்தனன் - அன்புமிக அறிவுறுத்தியிருந்தான்.

ஆலவாய் மன்னவன் - மதுரையிற் சுந்தர பாண்டியனாக அரசு புரிந்த இறைவன்: சுட்டாகக் கொள்க. (௩0)

ஆகச் செய்யுள் - உ௫௯௬

ஐம்பத்தைந்தாவது

சங்கத்தார் கலகந் தீர்த்த படலம்

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

காமனைப் பொடியாக் கண்ட
　　கண்ணுத றென்னூல்* கீர
நாமநற் புலவற் கீந்த
　　நலமிது பொலம்பூங் கொன்றைத்
தாமனச் சங்கத் துள்ளார்
　　தலைதடு மாற்றந் தேற
ஊமனைக் கொண்டு பாட
　　லுணர்த்திய வொழுக்கஞ் சொல்வாம்.

(இ - ள்.) *காமனைப் பொடியாக் கண்ட கண்ணுதல்-மன்மதனை நீறாக்கிய நெற்றிக் கண்ணையுடைய இறைவன், தென்னூல் - தமிழிலக் கணத்தை, கீர நாம நல் புலவற்கு ஈந்த நலம் இது - கீரனென்னும் பெயரையுடைய நல்ல புலவனுக்கு உபதேசித்த திருவிளையாடல் இது; பொலம்பூங்கொன்றைத் தாமன் - பொன்போன்ற கொன்றைமலர் மாலையை யணிந்த அப்பெருமான், அச்சங்கத்து உள்ளார் - அச்சங்கப் புலவர்கள், தலை தடுமாற்றம் தேற - தத்தம் மயக்கத்தினின்றும் தெளிய, ஊமனைக் கொண்டு பாடல் உணர்த்திய ஒழுக்கம் சொல்வாம்- மூங்கை ஒருவனால் பாடல்களின் பெருமை சிறுமையை (அப்புலவர் களுக்கு) அறிவித்தருளிய திருவிளையாடலை (இனிக்) கூறுவாம்.* (௧)

அந்தமில் கேள்வி யோரெண்
　　ணறுவரும் வேறு வேறு
செந்தமிழ் செய்து தம்மிற்
　　செருக்குறு பெருமை கூறித்
தந்தமின் மாறுய்த் தத்தந்
　　தராதர மளக்க வல்ல
முந்தைநூன் மொழிந்த வாசான்
　　முன்னவர்வந் தெய்தி னாரே.

(இ - ள்.) *அந்தம் இல் கேள்வியோர் எண்ணறுவரும் - அள விறந்த புலமை சான்ற நாற்பத்தெட்டுப் புலவர்களும், வேறு வேறு செந்தமிழ் செய்து-தனித் தனியாகச் செவ்விய தமிழ்ப்பாக்கள் செய்து தம்மில் செருக்குறு பெருமை கூறி - தங்களுள் தருக்குமிக்க பெருமை கூறி, தந்தமில் மாறாய் - தம்முள்ளே ஒருவர்க்கொருவர் பகையாய், தத் தம் தராதரம் அளக்க வல்ல-தத்தம் பெருமை சிறுமையை அளந்தறிய*

(பா - ம்.) *தொன்னூல்.

வல்ல, முந்தை நூல் மொழிந்த ஆசான் - முன்னூல் மொழிந்தருளிய குரவனாகிய சோமசுந்தரக்கடவுளின், முன்னர் வந்து எய்தினர்-திருமுன் வந்து சேர்ந்தனர்.

செந்தமிழ்-செந்தமிழ்ப்பாக்கள். தருக்குறு பெருமை கூறி என்பதனைப் பெருமைகூறித் தருக்குற்று என மாறுக. தராதரம்-பெருமை சிறுமை; தகுதி. (உ)

தொழுதன ரடிகள் யாங்க டொடுத்தவிப் பாட றம்முள்
விழுமிதுந் தீதுந் தூக்கி வேறுபா டளந்து காட்டிப்
பழுதறுத் தையந் தீரப் பணிக்கெனப் பணிந்தார் கேட்டு
முழுதொருங் குணர்ந்த வேத முதல்வனு முக்கண் மூர்த்தி.

(இ-ள்.) தொழுதனர் - வணங்கி, அடிகள் - இறைவ, யாங்கள் தொடுத்த இப் பாடல் தம்முள் - யாங்கள் பாடிய இப்பாடல்களுள், விழுமிதும் தீதும் தூக்கி - வழுவில்லாததனையும் வழுவுள்ளதனையும் சீர் தூக்கி, வேறு பாடு அளந்து காட்டி - அவற்றின் பெருமை சிறுமைகளைத் தெரித்துக்காட்டி, பழுது அறுத்து ஐயம் தீரப் பணிக்க எனப் பணிந்தார் - எம்முள் எழுந்த இறுமாப்பினைப் போக்கி எமது ஐயுறவு நீங்குமாறு பணித்தருளக் கடவை என்று வேண்டி (மீண்டும்) வணங்கினர்; முழுது ஒருங்கு உணர்ந்த வேதம் முதல்வனும் முக்கண் மூர்த்தி கேட்டு- முற்றும் ஒருசேர உணர்ந்தருளிய மறை முதல்வனாகிய அம் முக்கட்பெருமான் (அதனைக்) கேட்டருளி.

தொழுதனர் : முற்றெச்சம், பழுது - குற்றம், செருக்கு. பணிக்கென : அகரந் தொகுத்தல். (௩)

இருவருந் துருவ நீண்ட வெரியழற் றூணிற் றோன்றும்
உருவென வறிவா னந்த வுண்மையா யுலகுக் கெல்லாங்
கருவென முளைத்த மூல விலிங்கத்து ணின்றுங் காண்டற்
கரியதோர் புலவ னாகித் தோன்றியன் றருளிச் செய்வான்.

(இ-ள்.) இருவரும் துருவ-திருமாலும் பிரமனும் தேட, நீண்ட எரி அழல் தூணில் - எட்டாது நீண்ட தீப்பிழம்பினின்றும், தோன்றும் உரு என - தோன்றியருளிய திருவுருவம்போல, அறிவு ஆனந்த உண்மையாய் - சச்சிதானந்த வடிவமாய், உலகுக்கு எல்லாம் கரு என முளைத்த - உலகத்திலுள்ள இலிங்கங்களுக்கெல்லாம் காரணமாய் முளைத்த, மூல இலிங்கத்துள் நின்றுங் காண்டற்கு அரியது ஓர் புலவனாகி - மூலவிலிங்கத்துள் நின்றும் காணுதற்கரிய ஒரு புலவனாகத் திருவுருக்கொண்டு, தோன்றி - வெளிப்பட்டு, ஒன்று அருளிச்செய்வான் - ஒரு செய்தி கூறியருளுவான்.

அறிவானந்த உண்மையாய் என்பதனை உண்மை யறிவானந்தமாய் என மாறுக; உண்மை - சத்து. இது சச்சிதானந்த வடிவமான தென்பதும், மேரு முதலிய இடங்களிலுள்ள இலிங்கமெல்லாம் தோன்றுதற்கு முன் தோன்றினமையாலும், அவ்விலிங்கமெல்லாம் இதினின்றும் கிளைத்தமையாலும் இது மூலலிங்கம் எனப்படும் என்பதும் மூர்த்தி விசேடப் படலத்திற் கூறப்பட்டமை காண்க. இனி, உலகுக்கெல்லாம்

என்பதற்கு உலகத்தின் தோற்றரவுக்கெல்லாம் என்றுரைத்தலுமாம், இதனை,

"ஆதியி லான்ம தத்துவ மான வலர்மகன் பாகமும் நடுவில்
நீதியின் விச்சா தத்து வமான நெடியவன் பாகமு முடிவில்
ஓதிய சிவதத் துவமென லான வுருத்திரன் பாகமு முதிக்கும்
பேதியம் மூன்றி லெண்ணிறத் துவங்கள் பிறக்குமிம்
[மூன்றினு முறையால்"

என்னும் வேதத்துக்குப் பொருளருளிச்செய்த படலச் செய்யுளாலறிக. (ச)

[கலி விருத்தம்]

இம்மாநக ருள்ளானொரு வணிகன்றன பதியென்
றம்மாநிதிக் கிழவோன்மனை குணசாலினி யனையார்
தம்மாதவப் பொருட்டால்வெளிற் றறிவாளரைத் தழுவும்
பொய்ம்மாசற வினன்போலவ தரித்தானொரு புத்தேள்.

(இ-ள்.) தனபதி என்று ஒரு வணிகன் - தனபதி என்னும் பெயருடையனாய் ஒரு வணிகன், இம்மாநகர் உள்ளான் - இப்பெரிய நகரில் இருக்கின்றான்; அம்மாநிதிக்கிழவோன் மனை குணசாலினி - அப்பெரிய நிதிக்கிழவன் மனைவி குணசாலினி என்பாள்; அனையார் தம் மாதவப்பொருட்டால் - அவர்கள் செய்த பெரிய தவம் காரணமாக, வெளிற்று அறிவாளரைத் தழுவும் பொய் மாசு அற - வெள்ளறிவினரைத் தழுவிய நிலையுதல் இல்லாத அஞ்ஞானம் ஆகிய இருள் நீங்க, இனன் போல் ஒரு புத்தேள் அவதரித்தான - சூரியன் தோன்றினாற் போல ஒப்பற்ற முருகக்கடவுள் அவதரித்தான்.

வெளிற்றறிவு - புல்லறிவு. இனன் - சூரியன். புத்தேள் - தெய்வம்; முருகக்கடவுள் என்பதை இப்புராணத்து வலைவீசிய படலத்திலும், இறையனாரகப் பொருள் உரைப்பாயிரத்திலும் காண்க. இதனை ஐஞ்சீராகப் பிரித்துக் கலிநிலைத்துறையாக்கலாம் எனினும் அதற்கு ஓசையின்பமின்மையின் கலிவிருத்தம் எனலே பொருத்தமென்க. (ரு)

ஓயாவிறன் மதனுக்கிணை யொப்பானவ னூமச்
சேயாமவ னிடைநீருரை செய்யுட்கவி யெல்லாம்
போயாடுமி னனையானது புந்திக்கிசைந் தானன்
றியாவரு மதிக்குந்தமி ழதுவேயென வறைந்தான்.

(இ-ள்.) ஓயாவிறல் மதனுக்கு இணை ஒப்பானவன் - அவன் இடையீடுபடாத வெற்றியையுடைய மதவேளுக்கு இணையொத்தவன்; ஊமச்சேயாம் அவனிடை போய்-ஊமைப்பிள்ளையாகிய அவனிடத்துச் சென்று, நீர் உரை செய்யுள் கவி எல்லாம் ஆடுமின் - நீர் பாடிய கவிகள் அனைத்தையுங் கூறுங்கள்; அனையானது புந்திக்கு இசைந்தால்- அவனது உள்ளத்திற்குப் பொருந்துமேல், யாவரும் நன்றாய் மதிக்கும் தமிழ் அதுவே என அறைந்தான் - அனைவரும் சிறப்பாகக் கருதிப் பாராட்டும் கவி அதுவேயாகும் என்று கூறியருளினான்.

செய்யுள் - சூத்திரம், உரை, பாட்டு என்னும் மூன்றற்கும் பொது வான பெயர். கவி - பாட்டு. செய்யுளாகிய கவயெல்லாம் என்க. ஆடுதல் - கூறுதல். (சு)

வன்றாண்மழ விடையாயவன் மணிவாணிக னூமன்
என்றாலவன் கேட்டெங்ஙன மிப்பாடலிற் கிடக்கும்
நன்றானவுந் தீதானவு நயந்தாய்ந்ததன் றன்மை
குன்றாவகை யறைவானென மன்றாடிய கூத்தன்.

(இ - ள்) வல்தாள் மழவிடையாய் - வலிய கால்களையுடைய இளமையாகிய இடபவூர்தியை யுடையாய், அவன் மணிவாணிகன் ஊமன் என்றால் - அவன் மணிகளின் குணங் குற்றங்களை ஆராயும் வணிகர் மரபினனும் ஊமனுமாகில், அவன் நயந்து கேட்டு - அவன் (இப்பாடலை) விரும்பிக் கேட்டு, இப்பாடலில் கிடக்கும் நன்றானவும் தீது ஆனவும் ஆய்ந்து - இதிற் கிடக்கின்ற நன்மையையும் தீமையையும் ஆராய்ந்து, அதன் தன்மை குன்றாவகை எங்ஙனம் அறைவான் என - அதன் தன்மையைக் குறைவின்றி எவ்வாறு கூறுவான் என்று வினவ, மன்று ஆடிய கூத்தன் - வெள்ளியம்பலத்திலே திருக்கூத்தாடிய பெருமான்.

மணிவாணிகனு யுள்ளான் பாட்டின் றன்மையை ஆராய்ந்தறிதல் எங்ஙனம், ஊமனுயுள்ளவன் அதனைச் சொல்லுவதெங்ஙனம் என ஐயுற்று வினாவினாரென்க. (எ)

மல்லார் தடம் புயவாணிக மைந்தன்றனக் கிசையச்
சொல்லாழமும் பொருளாழமுங் கண்டான்முடி துளக்காக்
கல்லார்புயம் புளகித்துளங் களிதூங்குவன் கலகம்
எல்லாமகன் றிடுமுங்களுக் கென்றாலயஞ் சென்றான்.

(இ - ள்.) மல்ஆர் தடம்புய வாணிக மைந்தன் - வலி நிறைந்த பெரிய தோளையுடைய அவ்வணிக மைந்தன், தனக்கு இசைய - தனக்குப் பொருந்த, சொல் ஆழமும் பொருள் ஆழமும் கண்டால் - சொல்லாழத்தையும் பொருளாழத்தையும் காணின, முடிதுளக்கா - முடியை அசைத்து, கல் ஆர் புயம் புளகித்து உளம்களி தூங்குவன் - மலைபோன்ற தோள் புளகித்து உள்ளத்தின்கண் மிக மகிழ்வன்; உங்களுக்குக் கலகம் எல்லாம் அகன்றிடும் - உங்களுள் நேர்ந்த கலகம் அனைத்தும் நீங்கும், என்று - என்று கூறியருளி, ஆலயம் சென்றான் - திருக்கோயிலுட் சென் றருளினான்.

துளக்கா: செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். கல் - மலை. ஆர்: உவமவுருபு. (அ)

பின்பாவல ரெல்லாம்பெரு வணிகக்குல மணியை
அன்பாலழைத் தேகித்தம தவையத்திடை யிருத்தா
நன்பான்மலர் நறுஞ்சாந்துகொண் டருச்சித்தனர் நயந்தே
முன்பாலிருந் தருந்தீந்தமிழ் மொழிந்தாரவை கேளா.

(இ - ள்.) பின் - பின்பு, பாவலர் எல்லாம் - புலவர் அனைவரும்; பெரு வணிகக்குல மணியை அன்பால் அழைத்து ஏகி - பெரிய வணிகர்

குல சிகாமணியை அன்போடு அழைத்துச் சென்று, தமது அவையத்திடை இருத்தா-தங்கள் கழகத்தின்கண் இருத்தி, நன்பால் மலர் நறுஞ் சாந்து கொண்டு நயந்து அருச்சித்தனர் - நல்ல வெண்மலரும் நறிய சந்தனமுமாகிய இவற்றுலிவிரும்பி அருச்சித்து, முன்பால் இருந்து - முன்னர் இருந்து, அருந்தீந்தமிழ் மொழிந்தார் - அரிய இனிய தமிழ்க் கவிகளை மொழிந்தனர்; அவை கேளா - அவற்றைக் கேட்டு.

பால் மலர் - பால் போலும் வெள்ளிய மலர்; 'வெளியது உடீஇ வெண்பூச்சூட்டி' என்று களவியலுரை கூறுதலுங் காண்க. அருச்சித்தனர்: முற்றெச்சம். முன்பால்-முன்பக்கம். முன்பு ஆல் எனப் பிரித்து வேற்றுமை மயக்க மாக்கி முன்பில் என்றுரைத்தலுமாம். (கூ)

மகிழ்ந்தான்சிலர் சொல்லாழ்ச்சியை
மகிழ்ந்தான்சிலர் பொருளை
இகழ்ந்தான்சிலர் சொல்வைப்பினை
யிகழ்ந்தான்சிலர் பொருளைப்
புகழ்ந்தான்சிலர் சொல்லின்பமும்
பொருளின்பமு மொருங்கே
திகழ்ந்தான்சிலர் சொற்றிண்மையும்
பொருட்டிண்மையுந் தேர்ந்தே.

(இ - ள்) சிலர் சொல் ஆழ்ச்சியை மகிழ்ந்தான் - சிலர் சொல்லாழத்தை மகிழ்ந்தான்; சிலர் பொருளை மகிழ்ந்தான் - சிலர் பொருளாழத்தை மகிழ்ந்தான்; சிலர் சொல் வைப்பினை இகழ்ந்தான் - சிலர் சொல் வைத்த முறையினை இகழ்ந்தான்; சிலர் பொருளை இகழ்ந்தான்- சிலர் பொருளமைப்பினை இகழ்ந்தான்; சிலர் சொல் இன்பமும் பொருள் இன்பமும் ஒருங்கே புகழ்ந்தான்; சிலர் சொல்லின்பத்தையும் பொருளின்பத்தையும் ஒரு சேரப் புகழ்ந்தான்; சிலர் சொல் திண்மையும் பொருள் திண்மையும் தேர்ந்து திகழ்ந்தான்-சிலர் சொல்வலியையும் பொருள் வலியையும் ஆராய்ந்தறிந்து (மகிழ்ச்சியுடன்) விளங்கினன்.

மகிழ்தல் இகழ்தல், புகழ்தல் என்பவற்றை மெய்ப்பாட்டால் வெளிப்படுத்தினனென்க. (க0)

இத்தன்மைய ணுகிக்கலை வல்லோர்தமி ழெல்லாஞ்
சித்தங்கொடு தெருட்டுஞ்சிறு வணிகன்றெருள் கீரன்
முத்தண்டமிழ் கபிலன்றமிழ் பரணன்றமிழ் மூன்றும்
அத்தன்மைய னறியுந்தோறு மறியுந்தோறு மேல்லாம்.

(இ - ள்.) கலைவல்லோர் தமிழ் எல்லாம் சித்தம் கொடு - கலையில் வல்ல அப்புலவர்களின் கவிகள் அனைத்தையும் உள்ளத்திற் கொண்டு, இத்தன்மையன் ஆகி தெருட்டும் சிறுவணிகன் -(அவற்றி னியல்புகளை) இங்ஙனம் மெய்ப்பாட்டினாலே புலப்படுத்திய சிறிய வணிகன், தெருள் கீரன் முத்தண்தமிழ் - தெளிந்த நக்கீரனது மூன்று வகைப்பட்ட தண்ணிய தமிழும், கபிலன் தமிழ் பரணன் தமிழ் மூன்றும்-கபிலனது தமிழும் பரணனது தமிழுமாகிய மூன்றினையும், அத்தன்மையன்-அங்

னம் உளங்கொண்டு, அறியுந்தொறும் அறியுந்தொறும் எல்லாம் - உணருந்தோறும் உணருந்தோறும்.

கீரன்றமிழ் முதலியவற்றில் ஆருவது செய்யுட்கிழமை. அடுக்கு மிகுதிப் பொருள் குறித்தது. (கக)

நுழைந்தான்பொரு டோறுஞ்சொற்றோறு
நுண்டீஞ்சுவை யுண்டே
தழைந்தானுடல் புலனைந்தினுந்
தனித்தான்சிரம் பனித்தான்
குழைந்தான்விழி வழிவேலையுட்
குளித்தான்றனை யளித்தான்
விழைந்தான்புரி தவப்பேற்றினை
விளைத்தான் களிதிளைத்தான்.

(இ - ள்.) தனை அளித்தான் விழைந்தான் புரிதவப் பேற்றினை விளைத்தான் - தன்னைப் பெற்ற தந்தை விரும்பிச் செய்த தவத்தின் பயனைப் புலப்படுத்திய அவ்வணிக மைந்தன், நுண் பொருள்தொறும் சொல்தொறும் நுழைந்தான் - நுண்ணிய பொருள்தோறும் சொல் தோறும் நுழைந்து, தீஞ்சுவை உண்டு உடல் தழைத்தான் - அவற்றின் இனிய சுவையினை அருந்தி, உடல் பூரித்து, புலன் ஐந்தினும் தனித்தான் - ஐம்புலன்களினின்றுந் தனித்து அச்சுவை மயமாயினன்; சிரம் பனித்தான் - முடி துளக்கினான்; குழைந்தான் விழிவழி வேலையுள் குளித்தான் களிதிளைத்தான் - மனங்குழைந்து விழிகளினின்றும் வழி கின்ற ஆனந்தக் கண்ணீராகிய கடலுட் குளித்துக் களிகூர்ந்தனன்.

பொருட்சுவை - நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சமனிலை, என்னும் ஒன்பதுமாம். சொற் சுவை - குணம், அலங்காரம் என்பன. புலனைந்தினும் தனித்தலாவது ஐம்புல வுணர்வு மின்றிச் சுவைமயமாதல். அளித்தான், விளைத்தான் என்பன வினையாலணையும் பெயர்கள். நுழைந்தான், தழைந்தான், குழைந்தான், விழைந்தான் என்பன முற்றெச்சங்கள். (கஉ)

பல்காசொடு கடலிற்படு பவளஞ்சுடர் தரளம்
எல்லாநிறுத் தளப்பானென வியல்வாணிகக் குமரன்
சொல்லாழமும் பொருளாழமுந் துலைநாவெனத் தூக்க
நல்லாறறி புலவோர்களு நட்டாரிகல் விட்டார்.

(இ - ள்.) பல்காசொடு கடலில் படுபவளம் சுடர்தரளம் எல்லாம் - பல மணிகளும் கடலிற்றோன்றும் பவளமும் ஒளிவிடும் முத்து மாகிய அனைத்தையும், நிறுத்து அளப்பான் என - நிறுத்தி அறுதி யிடுவான் போல, இயல்வாணிகக் குமரன் - அழகிய வணிகமைந்தன், சொல் ஆழமும் பொருள் ஆழமும் நா துலை எனத் தூக்க - சொல்லாழத் தையும் பொருள் ஆழத்தையும் நாவினையே துலையாகக் கொண்டு நிறுத்துக்காட்ட, நல் ஆறு அறி புலவோர்களும் இகல் விட்டார் நட்டார்-நன்னெறியை அறிந்த புலவர்கள் யாவரும் பகையைவிடுத்து நண்பராயினர்.

சுடர்தரளம் : வினைத்தொகை. நா என்றது உபசாரம்; துலையினது நாவென்ன என்றுமாம். விட்டார் : முற்றெச்சம். (கஉ)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

உலகினுட் பெருகி யந்த வோண்டமிழ் மூன்றும் பாடற்
றிலகமாய்ச் சிறந்த வாய்ந்த தெய்வநா வலருந் தங்கள்
கலகமா நவையிற் றீர்ந்து காசறு பனுவ லாய்ந்து
புலமிகு கோட்டி செய்து பொலிந்தன ரிருந்தார் போலும்.

(இ - ள்.) அந்த ஒண்தமிழ் மூன்றும் - அவ்வணிக மைந்தனால் முற்றும் பாராட்டப் பெற்ற நக்கீரன் கபிலன் பரணன் என்னும் மூவருடைய பாடல்கள், உலகினுள் பெருகி - உலகத்திற் பரவி, பாடல் திலகமாய்ச் சிறந்த - பாக்களுக்குத் திலகமாக விளங்கின ; ஆய்ந்த தெய்வநாவலரும் - கலைகளை ஆராய்ந்த தெய்வப் புலவர்களும், தங்கள் கலகமாம் நவையில் தீர்ந்து - தங்கள் கலகமாகிய குற்றத்தினின்றும் நீங்கி, காசு அறு பனுவல் ஆய்ந்து - குற்றமற்ற நூல்களை ஆராய்ந்து, புலம் மிகு கோட்டி செய்து பொலிந்தனர் இருந்தார் - அறிவான் மிக்க அளவளாவுதலைச் செய்து விளங்கி இருந்தனர்.

சிறந்த : அன்பெறாத பலவறிசொல். தெய்வநாவலர் - தெய்வத் தன்மை வாய்ந்த புலவர். கோட்டி செய்தல் - கூடி அளவளாவுதல்; வாதஞ் செய்தல். பொலிந்தனர் : முற்றெச்சம். போலும் : ஒப்பில் போலி. (கச)

ஆகச் செய்யுள் உசுகo

ஐம்பத்தாருவது

இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

குடைக்காடன் பசிக்கன்னக் குழியருத்தி
வேட்கையறக் கொடுத்த கங்கைச்
சடைககாடன் புலவரிக றணிவித்த
முறையிதுமேற் றன்னைப் பாடுந்
தொடைக்காடன் பகன்றிகழ்ந்த தென்னவனை
முனிந்துதன்னைத் தொழுது போன
இடைக்காட னுடன்போய்ப்பின் பெழுந்தருளிப்
பிணக்கறுத்த வியல்பு சொல்வாம்.

(இ - ள்.) குடைக்கு ஆள்தன் பசிக்கு - குடை பிடிப்பதற்கு ஆளாகிய குண்டோதரனது பசியை நீக்குதற்கு, அன்னக்குழி அருத்தி - அன்னக்குழியை வருவித்து ஊட்டி, வேட்கை அறக்கொடுத்த கங்கைச் சடைக்காடன்-அவன் நீர் வேட்கை நீங்கக் கொடுக்கப்பட்ட கங்கையை அணிந்த சடைக் காட்டினையுடைய சோமசுந்தரக் கடவுள், புலவர் இகல் தணிவித்த முறை இது - புலவர்களின் கலகத்தைத் தீர்த்தருளிய திருவிளையாடல் இது, மேல் - இனி, தன்னைப் பாடும் தொடைக்கு ஆடு அன்பு அஃன்று இகழ்ந்த - தன்னைப் பாடிய செய்யுளுக்குச் செய்யும் அன்பு நீங்கி அவமதித்த, தென்னவனை முனிந்து - பாண்டியனை வெறுத்து, தன்னைத் தொழுது போன - தன்னை வணங்கிப் பிணங்கிச் சென்ற, இடைக்காடன் உடன்போய் - இடைக்காடனுடன் சென்று, பின்பு எழுந்தருளிப் பிணக்கு அறுத்த இயல்பு சொல்வாம் - பின் எழுந்தருளி அவனது பிணக்குத் தீர்த்த திருவிளையாடலைக் கூறுவாம்.

ஆள்தன், தன் : சாரியை. தன்னைப் பாடும்-பாண்டியனைப் பாடும். தன்னைத் தொழுது - இறைவனைத் தொழுது. செய்யுளுறுப்பாகிய தொடை என்பது செய்யுளை யுணர்த்திற்று ; பாமாலை என்றுமாம். ஆடு - பொருந்திய. (க)

இந்திரன்றன் பழிதுரத்தி யரசளித்துப்
பின்புகதி யின்ப மீந்த
சுந்தரன்பொன் னடிக்கன்பு தொடுத்துநறுஞ்
சண்பகத்தார் தொடுத்துச் சாத்தி
வந்தனைசெய் திருத்தொண்டின் வழிக்கேற்பச்
சண்பகப்பூ மாற வேந்தன்
அந்தரசூ டாமணியாஞ் சிவபுரத்து
ணிறைசெல்வ மடைந்தா னிப்பால்.

(இ-ள்.) இந்திரன் தன்பழி துரத்தி அரசு அளித்து - இந்திரன் பழியை நீக்கி அவனுக்கு அரசுரிமையையுந் தந்து, பின்புகதி இன்பம் ஈந்த சுந்தரன் - பின் வீட்டின்பத்தையும் அளித்த சோமசுந்தரக் கடவுளின், பொன் அடிக்கு அன்பு தொடுத்து-பொன்போலுந் திருவடிகட்கு அன்பு கூர்ந்து, நறுஞ்சண்பகத்தார் தொடுத்துச் சாத்தி - நறுமணங் கமழுஞ் சண்பகமாலை தொடுத்து (அக்கடவுளுக்குச்) சாத்தி, வந்தனை செய் திருத்தொண்டின் வழிக்கு ஏற்ப - வழிபாடு செய்து வந்த திருத்தொண்டின் நெறிக்குப் பொருந்த, சண்பகப்பூமாற வேந்தன் - சண்பக மாறனென்னும் மன்னன், அந்தர சூடாமணியாம் சிவபுரத்துள்-(மேலே யுலகங்களுக்கும்) முடிவாயுள்ள சூளாமணி போலுஞ் சிறந்த சிவபுரத்துள், நிறை செல்வம் அடைந்தான் - நிறைந்த செல்வத்தைப் பெற்றான்; இப்பால் - பின்.

அந்தர சூடாமணியாம் - மேலுள்ள உலகங்கட்குச் சூடாமணி போன்றதாகிய.

"ஏழின் முடியதாஞ் சிவலோகம்"
என்றார் முன்னும். (உ)

ஆற்றன்மிகு பிரதாப சூரியன்வங்
கிசத்துவச னளவில் சீர்த்தி
சாற்றரிய விரிபுமருத் தனன்சோழ
வங்கிசாந் தகன்றன் வென்றி
மாற்றரிய புகழ்ச்சேர வங்கிசாந்
தகன்பாண்டி வங்கி சேசன்
தோற்றமுறு பரித்தேர்வங் கிசசிரோ
மணிபாண்டீச் சுரன்றன் மன்னே.

(இ-ள்.) ஆற்றல்மிகு பிரதாப சூரியன் - வலிமிக்க பிரதாப சூரியனும், வங்கிசத்துவசன் - வங்கிசத்துவசனும், அளவு இல் சீர்த்தி சாற்று அரிய இரிபு மருத்தனன் - அளவிறந்த புகழ்வாய்ந்த சொல்லுதற்கரிய இரிபுமருத்தனனும், சோழவங்கிசாந்தகன் - சோழவங்கிசாந்தகனும், வென்றி மாற்று அரிய புகழ்ச் சேரவங்கிசாந்தகன் - நீக்குதற்கரிய வெற்றியும் புகழும் வாய்ந்த சேரவங்கிசாந்தகனும், பாண்டி வங்கிசேசன்-பாண்டிவங்கிசேசனும், தோற்றம் உறு பரித்தேர் வங்கிச சிரோமணி - பொலிவு மிக்க குதிரைபூண்ட தேரினையுடைய வங்கிச சிரோமணியும், பாண்டீச்சுரன் - பாண்டீச்சுரனும்.

வம்சம் என்பது வங்கிசம் எனத் திரிந்தது. இரிபு மருத்தனன் - பகைவரைக் கொல்பவன். வங்கிசாந்தகன் - வமிசத்திற்குக் காலன் போன்றவன். மன், ஓ: அசைகள். (௩)

துணிவுடைய குலத்துவசன் வங்கிசபூ
டணமாறன் சோம சூடா
மணிகுலசூ டாமணியே யிராசசூ
டாமணியே மாற்றார் போற்றிப்

பணியவரும் பூபசூ டாமணியே
குலேசபாண் டியனே யென்னக்
கணிதமுறு பதினைவர் வழிவழிவந்
துதித்துநிலங் காவல் பூண்டார்.

(இ - ள்.) துணிவுடைய குலத்துவசன் - போர்த்துணிவு மிக்க குலத்துவசனும், வங்கிசபூடண மாறன் - வங்கிசபூடண மாறனும், சோம சூடாமணி - சோம சூடாமணியும், குலசூடாமணி - குலசூடாமணியும், இராச சூடாமணி - இராச சூடாமணியும், மாற்ருர் போற்றிப் பணிய வரும் பூப சூடாமணி - பகைவர்கள் துதித்து வணங்குமாறு வருந் தோற்றத்தையுடைய பூப சூடாமணியும், குலேச பாண்டியன் என்னக் கணிதம் உறு பதினைவர் - குலேச பாண்டியனும் என்று எண்ணப்படும் பதினைந்து பாண்டியர்களும், வழிவழி வந்து உதித்து நிலம் காவல் பூண்டார் - ஒருவர் பின் ஒருவராய்த் தோன்றி நிலவுலகினைக் காத்தலை மேற்கொண்டார். (ச)

அத்தகைய பாண்டியருட் குலேசபாண்
டியனென்னு மரசன் றோண்மேல்
வைத்தவனி தலம்புரப்போ னிலக்கணமு
மிலக்கியமும் வரம்பு கண்டோன்
எத்தகைய பெருநூலு மெல்லைகண்டோ
ஞதலிஞ லிவனுக் கேற
முத்தமிழோர் பயில்சங்க மிடங்கொடுத்த
தனையமணி முழவுத் தோளான்.

(இ - ள்.) அத்தகைய பாண்டியருள் - அத்தன்மையை யுடைய பாண்டியருள், அவனிதலம் தோள்மேல் வைத்து புரப்போன் - நிலவுலகைத் தோளின்கண் வைத்துக் காப்பவனுகிய. குலேச பாண்டியன் என்னும் அரசன் - குலேச பாண்டியன் என்னும் மன்னன், இலக்கணமும் இலக்கியமும் வரம்பு கண்டோன் - இலக்கணமும் இலக்கியமுமாகிய இவற்றின் முடிவைக் கண்டு, எத்தகைய பெருநூலும் எல்லை கண்டோன் ஆதலினுல் - வேறு எத்தகைய பெரிய நூலையும் முடிவு கண்டவனுதலால், இவனுக்கு - இப்பாண்டியனுக்கு, முத்தமிழோர் பயில் சங்கம் ஏற இடம் கொடுத்தது - மூன்று தமிழையு முணர்ந்த புலவர் இருக்கும் சங்கப்பலகை ஏறுதற்கு இடந்தந்தது; அனையமணி முழவுத் தோளான் - அந்த அழகிய மத்தளம்போலுந் தோளையுடைய குலேச பாண்டியன்.

புரப்போனுகிய அரசன் என்க. வரம்பு கண்டு என எச்சமாக்குக. வரம்பு கண்டோனும் எல்லை கண்டோனும் ஆதலினுல் என வுரைத்தலுமாம். (ரு)

கழிந்தபெருங் கேள்வியிஞ னெனக்கேட்டு
முழுதுணர்ந்த கபிலன் றன்பாற்
பொழிந்தபெருங் காதன்மிகு கேண்மையிஞ
னிடைக்காட்டுப் புலவன் றேன்சோன்

மொழிந்தரசன் றனைக்காண்டு மெனத்தொடுத்த
பனுவலொடு மூரித் தீந்தேன்
வழிந்தொழுகு தாரானைக் கண்டுதொடுத்
துரைப்பனுவல் வாசித் தானால்.

(இ - ள்.) கழிந்த பெருங் கேள்வியினன் எனக் கேட்டு - மிகப் பெரிய நூல் வல்லான் என்று கற்றோர் கூறக்)கேட்டு, முழுது உணர்ந்த கபிலன்தன்பால் - கலைகள் முற்றுமுணர்ந்த கபிலனிடத்து, பொழிந்த பெருங் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் - பொழியப்பட்ட பெரிய அன்புமிக்க நட்பினனாகிய இடைக்காட்டுப் புலவன், தென்சொல் மொழிந்து அரசன் தனைக்காண்டும் என - ஒரு தமிழ்ப் பிரபந்தங் கூறிச் சென்று அரசனைக் காண்போமென்று கருதி, தொடுத்த பனுவலொடு - இயற்றிய அந்நாலுடன், மூரித்தீந்தேன் வழிந்து ஒழுகு தாரானைக் கண்டு - மிகவும் இனிய மது வழிந்தொழுகும் வேப்பமலர்மாலையை யணிந்த அப்பாண்டியனைக் கண்டு, தொடுத்த உரைப்பனுவல் வாசித்தான் - தானியற்றிய உரை யமைந்த செய்யுளைப் படித்தனன்.

முழவுத் தோளான் கேள்வியினான் எனக்கேட்டு என இயைக்க. கழிந்தபெரு : ஒரு பொருண் மேல் வந்தன. காண்டும் : தன்மைப் பன்மை யெதிர்கால முற்று. மூரி - பெருமை. தொடுத்த என்பதன் ஈற்றகரம் தொக்கது. ஆல் : அசை. (சு)

வழுக்காத சொற்சுவையும் பொருட்சுவையும்
பகிர்ந்தருந்த வல்லோ னுள்ளத்
தழுக்காற்றாற் சிரந்துளக்கா னகமகிழ்ச்சி
சிறிதுமுகத் தலர்ந்து காட்டான்
எழுக்காயுந் திணிதோளா னொன்றுமுரை
யான்வாளா விருந்தா னய்ந்த
குழுக்காத னண்புடையான் றனைமானம்
புறந்தள்ளக் கோயில் புக்கான்.

(இ - ள்.) வழுக்காத சொல் சுவையும் பொருள் சுவையும் பகிர்ந்து அருந்தவல்லோன் - குற்றமிலாத சொல்லின் சுவையையும் பொருளின் சுவையையும் பாகுபடுத்தி நுகரவல்ல அப்பாண்டியன், உள்ளத்து அழுக்காற்றால் - மனத்தின்கண் உள்ள பொறாமையால், சிரம் துளக்கான் - முடியை அசைக்காமலும், அகமகிழ்ச்சி சிறிதும் முகத்து அலர்ந்து காட்டான் - உள்ள மகிழ்ச்சியை முகத்தின்கண் சிறிதும் மலர்ந்து காட்டாமலும், எழுக்காயும் திணிதோளான் - தூணைவென்ற திண்ணிய தோளையுடைய அப்பாண்டியன், ஒன்றும் உரையான் வாளா இருந்தான் - ஒன்றுங்கூறாது சும்மா இருந்தனன்; ஆய்ந்த குழுகாதல் நண்பு உடையான் - நூல்களை ஆராய்ந்த புலவர் கூட்டத்தால் விரும்பப் பட்ட நட்பினையுடைய அப்புலவன், தனைமானம் புறம்தள்ளக் கோயில் புக்கான் - தன்னை மானமானது வெளியே தள்ள(ச் சென்று) திருக் கோயிலைச் சார்ந்தான்.

வல்லோனுகிய தோளான் என இயைக்க ; தோளான் வல்லோன் எனினும் என விரித்துரைத்தலுமாம். முகமலர்ச்சியால் அகமகிழ்ச்சியைப் புலப்படுத்தாதென்க. (எ)

சந்நிதியில் வீழ்ந்தெழுந்து தமிழறியும்
பெருமானே தன்னைச் சார்ந்தோர்
நன்னிதியே திருவால வாயுடைய
நாயகனே நகுதார் வேம்பன்
பொன்னிதிபோ லளவிறந்த கல்வியுமிக்
குளனென்று புகலக் கேட்டுச்
சொன்னிறையுங் கவிதொடுத்தே னவமதித்தான்
சிறிதுமுடி துளக்கா ளுகி.

(இ-ள்.) சந்நிதியில் வீழ்ந்து எழுந்து - திருமுன் விழுந்து வணங்கி எழுந்து, தமிழ் அறியும் பெருமானே - தமிழை அறியும் பெருமானே, தன்னைச் சார்ந்தோர் நல்நிதியே - சார்ந்தவருக்கு நல்ல நிதி போல்வாய், திருவாலவாயுடைய நாயகனே - திருவாலவாயினை உடைய இறைவனே, நகு தார் வேம்பன் - விளங்குகின்ற வேப்பமலர் மாலையையணிந்த பாண்டியன், பொன் நிதிபோல் அளவு இறந்த கல்வியும் மிக்குளன் என்று புகல - பொருட் செல்வ மிக்குடையனுதல் போல அளவிறந்த கல்விச் செல்வமும் மிக்குள்ளான் என்று (கற்றோர்) கூற, கேட்டு - அதனைக்கேட்டு, சொல் நிறையும் கவிதொடுத்தேன் - சொற்சுவை நிரம்பிய கவிபாடி அவனிடஞ் சென்றேன், சிறிதும் முடி துளக்காளுகி அவமதித்தான் - சிறிதும் தலை அசைக்காமல் அவமதித்தான்.

எனது செய்யுள் எத்தன்மை யுடையதென நீ அறிவாய் என்பார் 'தமிழறியும் பெருமானே' என்றார். (அ)

பரிவாயின் மொழிதொடுத்து வருணித்தோர்க்
ககமகிழ்ந்தோர் பயனு நல்கா
விரிவாய தடங்கடலே நெடுங்கழியே
யடுங்கான விலங்கே புள்ளே
பொரிவாய பராரைமர நிரையேவான்
றேடுகுடுமிப் பொருப்பே வெம்பும்
எரிவாய கொடுஞ்சுரமே யெனவிவற்றே
ரஃறிணையோத் திருந்தா னெந்தாய்.

(இ-ள்.) எந்தாய் - எம் தந்தையே, பரிவாய் இன்மொழி தொடுத்து வருணித்தோர்க்கு - அன்புடன் இனியமொழியாற் கவி தொடுத்து வருணித்த புலவர்களுக்கு, அகமகிழ்ந்து ஓர் பயனும் நல்கா - மனமகிழ்ந்து ஒரு பயனும் அளிக்காத, விரிவாய தடங்கடலே - விரிந்த பெரிய கடலும், நெடுங்கழியே - நெடிய உப்பங்கழியும், அடுங்கான விலங்கே - கொல்லுகின்ற காட்டிலுள்ள விலங்கும், புள்ளே - பறவையும், பொரிவாய பராரை மரநிரையே - பொருக்குவாய்ந்த பருத்த அரையையுடைய மரவரிசையும், வான்தொட குடுமிப் பொருப்பே -

வாளை அளாவிய முடியினையுடைய மலையும், வெம்பும் எரிவாய கொடுஞ் சுரமே - வெதுப்புகின்ற அனலைத் தன்னிடத்துடைய கொடிய பாலை நிலமும், என இவற்றுள் ஓர் அஃறிணை ஒத்து இருந்தான் - என்று சொல்லப் பட்ட இவற்றுள் ஓர் அஃறிணைப் பொருளைப் போன்றிருந்தான்.

கடல் முதலிய அஃறிணைப் பொருள்களை எவ்வளவு வருணிப்பினும் அவை அகமகிழ்தலும் பயனளித்தலும் இல்லாமைபோல் இவனும் இருந் தனன் என்றார். இதனால் அவனது இழிவைப் புலப்படுத்தியவாறுங் காண்க. ஏகாரங்கள் எண்ணுப்பொருளன. பாராரை : மரூஉ. (௯)

என்னையிகழ்ந் தனனேசொல் வடிவாய்நின்
னிடம்பிரியா விமையப் பாவை
தன்னையுஞ்சொற் பொருளான வுன்னையுமே
யிகழ்ந்தனனென் றனக்கியா தென்னா
முன்னைமொழிந் திடைக்காடன் றணியாத
முனிவீர்ப்ப முந்திச் சென்றான்
அன்னவுரை திருச்செவியி னூறுபா
டெனவுறைப்ப வருளின் மூர்த்தி.

(இ - ள்.) என்னையோ இகழ்ந்தனன் - அவன் என்னையோ இகழ்ந் தான், சொல்வடிவாய் நின் இடம்பிரியா - சொல்லின் வடிவமாக நினது இடப்பாகத்தினின்றும் பிரியாத, இமையப்பாவை தன்னையும் - பார்வதி தேவியையும், சொல்பொருளான உன்னையுமே இகழ்ந்தனன் - அச் சொல்லின் பொருளான நின்னையுமே இகழ்ந்தனன், என் தனக்கு யாது என்னா - அதனால் எனக்கு வந்த குறை யாது என்று, முன்னை மொழிந்து - திருமுன் நின்று கூறி, இடைக்காடன் தணியாத முனிவு ஈர்ப்ப முந்திச் சென்றான் - இடைக்காடன் பொறுத்தற்கரிய சினம் இழுப்ப முன்னே சென்றனன்; அன்ன உரை - அந்தச்சொல், திருச் செவியின் ஊறுபாடு என உறைப்ப - திருச்செவியின்கண் வேற்படை போலுஞ் சென்று தைக்க, அருளின் மூர்த்தி - கருணை வடிவினனாகிய அச்சோமசுந்தரக் கடவுள்.

பொருளமைந்த சொற்களாற் றொடுக்கப்பெற்ற செய்யுளை இகழ்ந் தமையின் சொல்வடிவாகிய இறைவியையும் பொருள்வடிவாகிய இறைவனையும் இகழ்ந்தானும் என்றார். சொல்லும் பொருளும் பேதமும் அபேதமுமின்றி நிற்றல்போல் சத்தியும் சிவனும் இயைந்து நிற்ப ரென்க; ஊறுபாடு என்பது கருவியை உணர்த்திற்று. (௧௦)

போனவிடைக் காடனுக்குங் கபிலனுக்கு
மகத்துவகை போலியு மாற்றான்
ஞானமய மாகியதன் னிலிங்கவுரு
மறைத்துமையா நங்கை யோடும்
வானவர்தம் பிரானெழுந்து புறம்போய்த்தன்
கோயிலினேர் வடபால் வையை
ஆனநதித் தென்பாலோ ராலயங்கண்
டங்கணினி தமர்ந்தான் மன்னோ.

(இ - ள்.) போன இடைக்காடனுக்கும் - (அங்ஙனம் கூறிச் சினந்து) சென்ற இடைக்காடனுக்கும், கபிலனுக்கும் அகத்து உவகை பொலியும் ஆற்ருல்-(அவன் உயிர் நண்பனுகிய) கபிலனுக்கும் மனத்தின் கண் மகிழ்ச்சி மிகுமாறு, வானவர் தம்பிரான் - தேவர்கள் தேவனுகிய அவ்விறைவன், ஞானமயமாகிய தன் இலிங்க உரு மறைத்து-ஞானமய மாகிய தனது இலிங்கவுருவை மறைத்து, உமையாம் நங்கையோடும் எழுந்து - உமைப் பிராட்டியுடன் எழுந்து, புறம்போய் - வெளியே சென்று, தன் கோயிலின் நேர் வடபால் - தனது திருக்கோயிலுக்கும் நேரே வடதிசையில், வையை ஆனநதித் தென்பால் - வையையாற்றின் தென்பக்கத்து, ஓர் ஆலயம் கண்டு இனிது அமர்ந்தான் - ஒரு திருக் கோயிலை ஆக்கி அதன்கண் இனிதாக அமர்ந்தருளினுன்.

மன், ஓ : அசைகள். (௧௧)

சங்கவான் றமிழ்த்தெய்வப் புலவோரு
முடனெழுந்து சைல வேந்தன்
மங்கைநா யகன்போன வழிபோயங்
கிருந்தாரவ் வழிநாள் வைகற்
கங்குல்வாய் புலரவரும் வைகறையிற்
பள்ளியுணர் காலத் தெய்தி
அங்கணு யகனடியார் சேவிப்பா
ரிலிங்கவுரு வங்குக் காணுர்.

(இ - ள்.) வான்தமிழ்ச் சங்கத் தெய்வப் புலவோரும் - சிறந்த தமிழ்ச் சங்கத்துத் தெய்வத்தன்மை பொருந்திய புலவர்களும், உடன் எழுந்து - ஒரு சேர எழுந்து, சைலவேந்தன் மங்கைநாயகன் போன வழிபோய் - மலைமன்னன் புதல்வியாராகிய உமையின் கேள்வன் சென்ற வழியே சென்று, அங்கு இருந்தார் - அங்குத் தங்கினர்; அவ்வழி நாள் வைகல் கங்குல்வாய் புலரவரும் வைகறையில் - அந்நாளின் பின்னுள் இராப்பொழுது கழியவரும் காலைப்போதில், பள்ளி உணர்காலத்து எய்தி - இறைவனது திருப்பள்ளி எழுச்சிக்காலத்திற் சென்று, அங்கண் நாயகன் அடியார் சேவிப்பார் - அச்சிவபெருமான் அடியார்கள் வணங்க லுற்றவர்கள், அங்கு இலிங்க உருக்காணுர் - அத் திருக்கோயிலின்கண் இலிங்கத் திருவுருவத்தைக் காணுதவராய்.

சேவிப்பாராகிய அடியார் என்றுமாம். (௧௨)

என்னவதி சயமோவீ தென்றயிர்த்தா
ரிரங்கினு ரிதனை யோடி
மன்னவனுக் கறிவிப்பான் வேண்டுமெனப்
புறப்பட்டு வருவா ராவி
அன்னவரைப் பிரிந்துறையு மணங்கனையா
ரேனவுமல ரணங்கு நீத்த
பொன்னவிர்தா மரையெனவும் புலம்படைந்து
பொலிவழிந்த புரமுங் கண்டார்.

(இ - ள்.) ஈது என்ன அதிசயம் என்று அயிர்த்தார்-இஃது என்ன அதிசயம் என்று ஐயுற்று, இரங்கினர் - வருந்தி, ஓடி இதனை மன்னவனுக்கு அறிவிப்பான் வேண்டும் என - விரைந்து சென்று இச் செய்தியை அரசனுக்கு அறிவிக்கவேண்டுமென்று கருதி, புறப்பட்டு வருவார் - புறப்பட்டு வரும் அடியார்கள், ஆவி அன்னவரைப் பிரிந்து உறையும் அணங்கு அனையார் எனவும் - உயிர்போன்ற கேள்வரைப் பிரிந்து வசிக்கும் தெய்வமகளிர் போன்ற பெண்கள்போலவும், அலர் அணங்கு நீத்த பொன் அவிர் தாமரை எனவும் - திருமகள் கைவிட்ட பொன்போல விளங்குந் தாமரை போலவும், புலம்பு அடைந்து-தனிமை அடைந்து, பொலிவு அழிந்த புரமும் கண்டார் - பொலிவழிந்து நிற்கும் நகரத்தினையுங் கண்டனர்.

அயிர்த்தார் இரங்கினர் என்பவற்றை முற்றாகவே யுரைத்தலுமாம். அறிவிப்பான்; வினையெச்சம். பொன்னவிர் என்பது தாமரைக்கு இயற்கையடை. (கங)

அரசனிடைப் புகுந்துள்ள நடுநடுங்கி
நாவுணங்கி யரசே யாமோன்
றுரைசெயவஞ் சுதுமுங்க ணுயகனைத்
திருப்பள்ளி யுணர்ச்சி நோக்கி
மரைமலர்ச்சே வடிபணியப் புகுந்தனமின்
றாங்கவன்றன் வடிவங் காணேம்
புரமுநனி புலம்படைந்த தென்றழல்வே
லெனச்செவியிற் புகுத்த லோடும்.

(இ - ள்.) அரசனிடைப் புகுந்து - வேந்தனிடத்துச் சென்று, உள்ளம் நடுநடுங்கி நா உணங்கி - மனம் பதைபதைத்து நாவுலர்ந்து, அரசே - மன்ன, யாம் ஒன்று உரைசெய அஞ்சுதும் - யாங்கள் ஒரு செய்தியை இங்குக் கூற அஞ்சுகின்றேம்; உங்கள் நாயகனை - உங்கள் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளை, திருப்பள்ளி உணர்ச்சி நோக்கி - திருப்பள்ளி எழுச்சியில் நோக்கி, மரைமலர்ச் சேவடி பணியப் புகுந்தனம் - தாமரை மலர்போலுஞ் சிவந்த திருவடிகளைப் பணிதற்குச் சென்றேம்; இன்று ஆங்கு அவன் தன் வடிவம் காணேம் - இன்று அவ்விடத்தில் அப்பெருமானது திருவடிவத்தைக் கண்டிலேம்; புரமும் நனிபுலம்பு அடைந்தது - நகரமும் மிகவும் பொலிவிழந்தது, என்று செவியில் - என்று (அவன்) செவியின்கண், அழல்வேல் எனப் புகுத்தலோடும் - நெருப்பிற் காய்ச்சிய வேற்படைபோலப் புகுத்தியவளவில்.

நடுநடுங்கி - மிகநடுங்கி; வழக்கிலே இரட்டைக் கிளவிபோல் இங்ஙனம் வாரா நின்றது. மரை: முதற்குறை. என்று அச் சொற்களை வேலெனச் செவியிற் புகுத்தலோடும் என்க. (கச)

வழுதியரி யணையிலிருந் தடியிறவீழ்
பழுமரம்போன் மண்மேல் யாக்கை
பழுதறவீழ்ந் துயிரோடுங்க வறிவோடுங்கி
மட்பாவை படிந்தாங் கொல்லைப்

பொழுதுகிடந் தறிவுசிறி தியங்கவெழுந்
தஞ்சலிக்கைப் போது கூப்பி
அழுதிருகண் ணீர்வெள்ளத் தாழ்ந்தடியே
னென்பிழைத்தே னண்ணு லண்ணல்.

(இ - ள்.) வழுதி - பாண்டியன், அடிஇறவிழ் பழுமரம்போல் - வேர் அற வீழ்ந்த ஆலமரம்போல், அரி அணையில் இருந்து - சிம்மா தனத்தினின்றும், மண்மேல் யாக்கை பழுதுஉற வீழ்ந்து - மண்ணின் மேல் உடலின்கண் வடுப்படுமாறு வீழ்ந்து, உயிர் ஒடுங்க அறிவு ஒடுங்கி - உயிர் ஒடுங்குதலால் அறிவு ஒடுங்கி, மண்பாவை படிந்தாங்கு - சுதை யாற் செய்த பிரதிமை கிடந்தாற்போல, ஒல்லைப்பொழுது கிடந்து - சிறிதுநேரங் கிடந்து, சிறிது அறிவு இயங்க எழுந்து - சிறிது உணர்ச்சி யுண்டாக எழுந்து, அஞ்சலி கைப்போது கூப்பி அழுது - அஞ்சலியாகக் கைத்தாமரைகளைத் தலையின்மேற் குவித்து அழுது, இருகண் நீர் வெள்ளத்து ஆழ்ந்து - இரண்டு கண்களினின்றும் பொழியும் நீர்ப்பெருக்கில் மூழ்கி, அடியேன் என் பிழைத்தேன் அண்ணால் அண்ணல் - அடியேன் என்ன தவறு இழைத்தேன் பெருமவோ பெருமவோ.

பழுமரம் - முதிர்ந்த ஆலமரம்; ஒல்லை - விரைவு; ஈண்டுச் சிறிது என்னும் பொருளில் வந்தது அவலம், கவலை, கையாறு, அழுங்கல் என்னும் அவத்தைகளை யடைந்தானென்க. (கஙி)

கோலையினையோ ரவுணர்புர நொடிவரையிற்
பொடியாகக் குனித்த மேருச்
சிலையினையோ பழையசிவ புரத்தினையோ
வருவிமணி தெறிக்கும் வெள்ளி
மலையினையோ தம்மைமறந் துனைநினைப்பார்
மனத்தினையோ வாழ்த்தும் வேதத்
தலையினையோ வெங்குற்ரு யெங்குற்ரு
யென்றென்று தளரு மெல்லை.

(இ - ள்.) கொலையினை ஓர் அவுணர் புரம் - கொலைபுரியும் நெறியை ஆராய்ந்தறியும் அவுணர்களின் திரிபுரம், நொடிவரையில் பொடியாக - நொடிப்பொழுதிலே பொடியாகுமாறு, குனித்த மேருச்சிலையினையோ - வளைத்த மேருவாகிய வில்லை யுடையோய், பழைய சிவபுரத்தினையோ - நீ பழைய சிவலோகத்தின்கண் உள்ளாயோ. அருவிமணி தெறிக்கும் வெள்ளிமலையினையோ - அருவிமணிகளை எறியும் கைலாய மலையின்கண் உள்ளாயோ, தம்மை மறந்து உனை நினைப்பார் மனத்தினையோ - தம்மை மறந்து நின்னை நினைக்கின்ற அடியார்கள் மனத்தின்கண் உள்ளாயோ, வாழ்த்தும் வேதத் தலையினையோ - (நினை இடையருது) வாழ்த்துகின்ற மறை முடியின்கண் உள்ளாயோ, எங்கு உற்ருய் எங்கு உற்ருய் என்று என்று தளரும் எல்லை - (இவற்றுள்) எங்குச் சென்ருய் எங்குச் சென் ருய் என்று சொல்லிச் சொல்லி வருந்தும் பொழுது.

நொடி - கைந்நொடி; மாத்திரைப் பொழுதை யுணர்த்திற்று. சிவ புரத்தினை யுற்ருயோ, வெள்ளி மலையினை யுற்ருயோ என்றிங்ஙனம்

கூட்டியுரைத்தலுமாம்; சிவபுரத்தை யுடையாய், வெள்ளி மலையை யுடையாய் என்றிங்ஙனம் கூறி, ஓகாரம் புலம்பின்கண் வந்ததென் றுரைத்தலும் பொருந்தும். அடுக்குகள் அவலங்குறித்து நின்றன. (கசு)

சிலர்வந்து மன்னவோ ரதிசயங்கண்
டனம்வையைத் தென்சா ராக
அலர்வந்தோன் படைத்தநாண் முதலொருகா
லமுங்கண்ட தன்று கேள்வித்
தலைவந்த புலவரொடு மாலவா
யுடையபிரான் றானே செம்பொன்
மலைவந்த வல்லியொடும் வந்திறைகொண்
டுறைகின்றான் மாதோ வென்றார்.*

(இ - ள்.) சிலர் வந்து மன்ன ஓர் அதிசயம் கண்டனம்-சிலர் வந்து வேந்தே யாங்கள் ஓர் அதிசயத்தினைக் கண்டோம் (அது யாதெனில்), வையைத் தென்சாராக - வையை யாற்றின் தென்பாலாக, அலர் வந்தோன் படைத்த நாள் முதல் - பிரமன் இவ்வுலகை ஆக்கிய காலமுதல், ஒரு காலமும் கண்டது அன்று - ஒரு காலத்திலேனும் பார்த்திராதது; கேள்வித் தலை வந்த புலவரொடும் - நூலாராய்ச்சியாற் சிறந்த சங்கப் புலவர்களோடும், ஆலவாய் உடையபிரான் - திருவால வாயினையுடைய சோமசுந்தரக் கடவுள், செம்பொன்மலை வல்லியொடும் தானே வந்து - சிவந்த பொன்னையுடைய மலையரையன் புதல்வியாகிய உமா தேவியாரோடும் தானே வந்து, இறைகொண்டு உறைகின்றான் என்றார் - நிலை பெற்று அமர்ந்திருக்கின்றனன் என்று கூறினர்.

பண்டு அங்கே கோயில் இருந்த தில்லை யென்பார் 'பிரமன் படைத்த நாண் முதற் கண்டதன்று' என்றும், சோமசுந்தரக் கடவுளே யன்றி வேறன்றென்பார் 'பிரான்றானே' என்றும் கூறினர். செம் பொன் மலை: பெயருமாம். மாது, ஓ: அசைகள். (கள)

அவ்வுரைதன் செவிநுழைந்து புகுந்தீர்ப்ப
வெழுந்தரச னச்சத் தாழ்ந்து
தெவ்வர்முடித் தொகையிடறுங் கழற்காலா
னடந்தேகிச் செழுநீர் வையை
கௌவைநெடுந் திரைக்கரத்தாற் கடிமலர் தூஉய்ப்
பணியத்தென் கரைமேல் வந்து
மௌவலிள முகைமுரன் மாதினொடு
மிருக்கின்ற மணியைக் கண்டான்.

(இ - ள்.) அவ்வுரை தன் செவி நுழைந்து புகுந்து ஈர்ப்ப - அச் சொல்லானது தன் செவி வழியே நுழைந்து உள்ளே புகுந்து இழுக்க, அரசன் எழுந்து - மன்னன் எழுந்து, அச்சத்து ஆழ்ந்து - பயத்தின்கண்

(பா - ம்.) * யாதோ வென்றார்.

அழுந்தி, தெவ்வர் முடித்தொகை இடறும் கழல் காலால் நடந்து ஏகி - பகைவரின் முடித்தொகையினை இடறு நின்ற வீரக் கழலணிந்த காலினால் நடந்து சென்று, செழுநீர் வையை - தெள்ளிய நீரையுடைய வையை யாறானது, கௌவைநெடும் திரைக் கரத்தால் கடிமலர் தூஉய்ப் பணிய - ஒலியினையுடைய நீண்ட அலையாகிய கையினால் மணம் பொருந்திய மலர்களைத் தூவி வணங்க, தென்கரைமேல் - அதன் தென்கரை மேல், மௌவல் இளமுகை மூரல் மாதினொடும் வந்து இருக்கின்ற மணியைக் கண்டான் - முல்லையினது இளமை பொருந்திய அரும்பு போன்ற பற்களையுடைய பிராட்டியோடும் வந்திருக்கும் பெருமானைக் கண்டான்.

யான் செய்த பிழை என்னோவென அச்சமுற்றனனென்க. காலானாகிய அரசன் என்றுமாம். வந்துபணிய இருக்கின்ற மணி என்க. (கஅ)

படர்ந்துபணிந் தன்புகுக்கும்* கண்ணீர்சோர்ந்
தானந்தப் பௌவத் தாழ்ந்து
கிடந்தெழுந்து நாக்குழறித் தடுமாறி
நின்றிதனைக் கிளக்கும் வேதந்
தொடர்ந்தறியா வடிசிவப்ப நகர்புலம்ப
வுலகீன்ற தோகை யோடிங்
கடைந்தருளுங் காரணமென் னடியேனாற்
பிழையுளதோ வையா வையா.

(இ - ள்.) படர்ந்து பணிந்து - அங்ஙனஞ் சென்று கண்டு வணங்கி, அன்பு உகுக்கும் கண்ணீர் சோர்ந்து-அன்பானது சிந்துகின்ற கண்ணீரைப் பொழிந்து, ஆனந்தப் பௌவத்து ஆழ்ந்து கிடந்து - இன்பக்கடலுள் அழுந்திக் கிடந்து, எழுந்து - பின் எழுந்து, நாக்குழறித் தடுமாறி நின்று இதனைக் கிளக்கும் - நாவானது குழறுதலுற்றுத் தடுமாறி நின்று இதனைக் கூறுவான்; வேதம் தொடர்ந்து அறியா அடி சிவப்ப - மறைகளுந் தொடர்ந்தறியாத திருவடி சிவக்கவும், நகர் புலம்ப - நகரிலுள்ளோர் வருந்தவும், உலகு ஈன்ற தோகையோடு இங்கு அடைந்தருளும் காரணம் என் - உலகினைப் பெற்ற அம்மையோடும் இங்கு வந்து தங்கியருளிய காரணம் யாது, அடியேனால் பிழையுளதோ ஐயா ஐயா - ஐயனே ஐயனே அடியேனால் ஏதாயினும் தவறு ஏற்பட்டதோ?

நாக்குழறலும் தடுமாறலும் முதலாயின அன்பின் மிகுதியால் நிகழ்வன. புலம்ப - தனிமையுற என்றுமாம். அடுக்கு முறையிடற்கண் வந்தது. (கக)

அல்லதையேன் றமராலேன் பகைஞராற்
கள்வரா லரிய கானத்
தெல்லைவிலங் காதிகளா லிடையூறின்
றமிழ்நாட்டி லெய்திற் றேலோ

(பா - ம்.) * அன்புருக்கும்.

தோல்லைமறை யவரோழுக்கங் குன்றினரோ
தவந்தருமஞ் சுருங்கிற் றாலோ
இல்லறனுந் துறவறனும் பிழைத்தனவோ
யானறியே னெந்தா யெந்தாய்.

(இ - ள்.) அல்லது - அன்றி, என் தமரால் - என் பரிசனங்களா லாயினும், என் பகைஞரால் - எனது பகைவரா லாயினும், கள்வரால் - கள்வரா லாயினும், அரிய கானத்து எல்லை விலங்கு ஆதிகளால் - செல் லுதற்கரிய காட்டின்கண் உள்ள விலங்கு முதலாயவைகளா லாயினும், இன்தமிழ் நாட்டில் இடையூறு எய்திற்றோ - இனிய இத்தமிழ்நாட்டின் கண் இடையூறு நேர்ந்ததோ, மறையவர் தொல்லை ஒழுக்கம் குன்றி னரோ - வேதியர் தமக்குத் தொன்று தொட்டு வந்த ஒழுக்கத்திற் குறைந்தனரோ, தவம் தருமம் சுருங்கிற்றோ - தவமும் தருமமும் சுருங் கினவோ, இல்லறனும் துறவறனும் பிழைத்தனவோ - இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியினின்றும் தவறினவோ, எந்தாய் எந்தாய் யான் அறியேன் - எம் தந்தையே எம் தந்தையே (நிகழ்ந்தது யாதென) யான் அறியேன்.

அல்லதை, ஐ : சாரியை. மாநிலம் புரக்கும் வேந்தன் தன்னாலும் தமராலும் பகைவராலும் ஏனை உயிர்களாலும் குடிகட்கு இடையூறு உண்டாகாமற் போக்கி, அறத்தினைப் பாதுகாக்க வேண்டுமென்பவாக லின் இங்ஙனம் கூறினன் என்க; இதற்கேற்ப, மேற்பாட்டில் 'அடியே னாற் பிழையுளதோ' என்பதற்கு, என்னாற் குடிகளுக்குத் துன்பமுள தாயிற்றோ என்பது கருத்தாகக் கொள்க. இந்நாட்டில் என்றும் இத் தகைய தீமை நிகழ்ந்ததில்லையென்பான் 'இன்றமிழ் நாட்டில் எய் திற்றோ' என்றான். சுருங்கிற்றோ என்பதைத் தவத்துடனும் தருமத் துடனும் தனித்தனி கூட்டுக. ஆல் : அசை. (உ0)

கள்ளேறு கடுக்கைநறுஞ் சடையானே
போற்றிபெருங் கருணை போற்றி
வெள்ளேறு கோடியுயர்த்த விடையானே
போற்றியருள் விகிர்தா போற்றி
புள்ளேறு கோடியுயர்த்த புனிதனயன்
றேறாத புனிதா போற்றி
வள்ளேறு சிறுகுழவி மதிநுதலங்
கயற்கண்ணி மணாள போற்றி.

(இ - ள்.) கள் ஏறு நறுங் கடுக்கை சடையானே போற்றி-தேன் நிறைந்த நறிய கொன்றை மாலையை யணிந்த சடையை யுடையானே வணக்கம்; பெருங் கருணைபோற்றி - பேரருள் உடையானே வணக்கம் வெள் ஏறு கொடி உயர்த்த விடையானே போற்றி - வெள்ளிய இடபத் தைக் கொடியில் உயர்த்திய இடபவூர்தியை யுடையானே வணக்கம் ; அருள் விகிர்தா போற்றி - கருணை விகிர்தனே வணக்கம் ; புள் ஏறு கொடி உயர்த்த புனிதன் - கலுழனைக் கொடியின்கண் உயர்த்திய தூயோனாகிய திருமாலும், அயன் - பிரமனும், தேறாத புனிதாபோற்றி-

அறியாத தூயவனே வணக்கம்; வள் ஏறு சிறு குழவி மதிநுதல்-கூர்மை மிக்க நுனியினையுடைய சிறிய பிறைபோலும் நெற்றியையுடைய, அங்கயற்கண்ணி மணாள போற்றி - அங்கயற்கண்ணம்மையின் கேள்வனே வணக்கம்.

வெள்ளேறு கொடியுயர்த்த விடையானே என்பதற்குக் கொடியின்கண் உயர்த்திய வெண்மை மிக்க இடபத்தினை யுடையானே என்றுரைத்தலுமாம். புள் ஏறிய கொடியை உயர்த்திய என்றுமாம். குழவி மதி - பிறை. (உக)

பாதமல ரிணைபோற்றி பன்னிரண்டு
கையானைப் பயந்தாய் போற்றி
வேதமுடி கடந்தபர ஞானத்தி
லானந்த விளைவே போற்றி
போதவடி வாய்நால்வர்க் கசைவிறந்து
நிறைந்தபரம் பொருளே போற்றி
மாதவள நீறணிந்த மன்னவங்
கயற்கண்ணி மணாள போற்றி.

(இ - ள்.) பாதமலர் இணைபோற்றி - திருவடித் தாமரை மலர் இரண்டிற்கும் வணக்கம்; பன்னிரண்டு கையானைப் பயந்தாய் போற்றி- பன்னிரண்டு திருக்கரங்களையுடைய அறுமுகக்கடவுளை அளித்தருளியவனே வணக்கம்; வேதமுடி கடந்த பரஞானத்தில் - மறைமுடியைக் கடந்த பரஞானத்தின்கண் விளையும், ஆனந்த விளைவே போற்றி-இன்ப விளைவே வணக்கம்; போதவடிவாய் - உபதேச வடிவமாய், நால்வர்க்கு அசைவு இறந்து நிறைந்த பரம்பொருளே போற்றி - சனகர் முதலிய நால்வருக்கும் அசைவின்றி நிறைந்தருளிய மேலான பொருளே வணக்கம்; மா தவள நீறு அணிந்த மன்ன-பெருமை பொருந்திய வெள்ளிய திருநீற்றை யணிந்தருளிய இறைவனே, அங்கயற் கண்ணி மணாள போற்றி - அங்கயற் கண்ணம்மையின் காதலனே வணக்கம்.

வேதம் முதலிய கலைகளெல்லாம் பாசஞானமாகிய அபரஞானமாகலானும், பதிஞானமாகிய பரஞானத்தினன்றிச் சிவம் விளங்காதாகலானும் 'வேத முடி கடந்த பரஞானத்திலானந்த விளைவே' என்றார்; தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலத்தில்,

"வேதமுடிமே லானந்த வுருவாய் நிறைந்து விளையாடும்
மாதரசே"

என்றதையுங் காண்க. வேத முதலியவை பாசஞான மென்பதை,

"வேதசாத் திரமிருதி புராணகலை ஞானம்
விரும்பசபை வைகரியா தித்திறங்கண் மேலாம்
நாதமுடி வானவெலாம் பாச ஞானம்"

என்னும் சிவஞான சித்தியார்த் திருவிருத்தத்தால் அறிக. போதவடிவாய் - போதக வடிவாய்; ஞான வடிவாய் நிறைந்த என்றுமாம். அசைவிறந்தமை கடவுள் வாழ்த்தில் உரைத்தவாறுங் காண்க. (உஉ)

போக்கமுடை யார்செய்யும் பூசைதவங்
கண்டுநகும் புராண போற்றி
தக்கன்மகம் பொடியாகத் திருப்புருவ
நெரித்தகொடுந் தழலே போற்றி
செக்கமலக் கண்ணிடந்த கண்ணனுக்குத்
திகிரியருள் செல்வா போற்றி
மைக்குவளை யனையமணி கண்டாவங்
கயற்கண்ணி மணாள போற்றி.

(இ - ள்.) பொக்கம் உடையார் செய்யும் பூசை தவம் கண்டு நகும் புராண போற்றி-பொய்ம்மையுடையவர் செய்கின்ற பூசையையுந் தவத்தினையுங் கண்டு சிரிக்கும் பழையோய் வணக்கம்; தக்கன் மகம் பொடியாக - தக்கன் செய்த வேள்வி நீறுகுமாறு, திருப்புருவம் நெரித்த கொடுந் தழலே போற்றி - திருப்புருவத்தினை நெரித்தருளிய கொடிய நெருப்பே வணக்கம்; செக்கமலக்கண் இடந்த கண்ணனுக்கு - செந்தாமரை மலர்போன்ற கண்ணை இடந்து அருச்சித்த திருமாலுக்கு, திகிரி அருள் செல்வா போற்றி - சக்கரப்படை அருளிய செல்வனே வணக்கம், மைக்குவளை அனைய மணிகண்டா - கரிய குவளை மலர் போன்ற நீலகண்டனே, அங்கயற்கண்ணி மணாள போற்றி - அங்கயற்கண்ணம்மையின் மணவாளனே வணக்கம்.

பொக்கம் - பொய்; கரவு. அன்பால் உருகுவார்க்கன்றி, அன்பில்லாத பூசையும் தவமும் புரிவார்க்கு இறைவன் அருளானென்பதை,

"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்ப னவர்தமை நாணியே"

என்னும் திருநாவுக்கரசர் தேவாரத்தாலறிக. சினந்த வென்பது புருவ நெரித்த என்பதனாற் குறிக்கப்பட்டது, மகத்தைப் பொடியாக்கினமையின் 'கொடுந்தழலே' என்றான். செக்கமலம் : வலித்தல் விகாரம். (உந)

தென்னவ னின்ன வண்ண
மேத்தினன் செம்பொற் கூடன்
மன்னவன் கேட்டா காய
வாணியால் வையை நாட
உன்னது சோத்த நாங்கேட்
டுவந்தன மினிய தாயிற்
றின்னமொன் றுளது கேட்டி
யென்றின னருளிச் செய்வான்.

(இ - ள்.) தென்னவன் இன்ன வண்ணம் ஏத்தினன் - குலேச பாண்டியன் இவ்வாறு துதித்தானாக, செம்பொன் கூடல் மன்னவன்

கேட்டு - செம்பொன் நிறைந்த ஆலவாயில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள் அதனைக் கேட்டு, ஆகாய வாணியால் - அசரீரியால், வையை நாட - வையை நாடனே, உன்னது சோத்தம் நாம் கேட்டு உவந்தனம் - உனது துதியினைக் கேட்டு நாம் மகிழ்ந்தோம்; இனியது ஆயிற்று - (அஃது எமக்கு) இனிமையுடையதாயிற்று; இன்னம் ஒன்று உளது -(உனக்குக் கூறவேண்டியது) இன்னும் ஒன்று உண்டு; கேட்டி என்றனன் அருளிச் செய்வான் - அதனைக் கேட்பாயாக என்று கூறியருளுவான்.

வாணி - வாக்கு. உன்னது; னகரம் விரித்தல். சோத்தம் - இழிந்தார் செய்யும் அஞ்சலி; ஈண்டுத் துதியை உணர்த்திற்று.

"சோத்துன் னடியமென் றோரை"

என்னும் திருக்கோவையார் உரையை நோக்குக. இனி என்பது அம் சாரியை பெற்றுத் திரிந்து இன்னம் என வழங்குவதாயிற்று. கேட்டி, கேள்; பகுதி, த்: எழுத்துப்பேறு, இ: விகுதி. என்றனன், முற்றெச்சம். (உச)

இயம்பரும் பதிகடம்மு ளாலவா யேற்ற மீங்குச்
சயம்புவா யனந்த முள்ள தானவ ரியக்கர் சித்தர்
வயம்புரி யரக்கர் வானோர் முனிவரர் மனித ருள்ளார்
நயம்பெற விதியாற் கண்ட நங்குறி யனந்த முண்டால்.

(இ - ள்.) இயம்பரும் பதிகள் தம்முள் - சொல்லுதற்கரிய திருப்பதிகள் பலவற்றுள்ளும், ஆலவாய் ஏற்றம் - திருவாலவாய் சிறந்தது; ஈங்கு சயம்புவாய் அனந்தம் உள்ள - இங்குத் தாமே தோன்றியனவாய் அளவிறந்த அருட்குறிகள் உள்ளன; தானவர் இயக்கர் சித்தர் - அசுரர்களும் இயக்கர்களும் சித்தர்களும், வயம்புரி அரக்கர் வானோர் முனிவரர் மனிதர் உள்ளார் - வெற்றியை விரும்பிய அரக்கர்களும் தேவர்களும் முனிவர்களும் மனிதர்களும், நயம் பெற விதியால் கண்ட - தாங்கள் விரும்பிய நலன்களைப் பெறுதற்பொருட்டு ஆகமவிதிப்படி நிலைபெறுத்திய, நம் குறி அனந்தம் உண்டு - நமது அருட்குறிகளும் பல உள்ளன.

சயம்பு - சுயம்பு: தானே தோன்றியது. உள்ள: அன்பெறாத பலவறி சொல். குறி - இலிங்கம். ஆல்: அசை. (உரு)

அக்குறி களின்மேம் பட்ட குறியறு பத்து நான்காம்
இக்குறி களின்மேம் பட்ட குறிகளெட் டினைய வெட்டுத்
திக்குறை வானோர் பூசை செய்தன விவற்றியாம் வந்து
புக்குறை குறிநந் தோழன் பூசித்த குறிய தாகும்.

(இ - ள்.) அக்குறிகளில் மேம்பட்ட குறி அறுபத்து நான்காம் - அவ்வருட்குறிகளிற் சிறந்த குறிகள் அறுபத்து நான்காகும்; இக்குறிகளில் மேம்பட்ட குறிகள் எட்டு - இவ்வறுபத்து நான்கு குறிகளிற் சிறந்த குறிகள் எட்டாகும்; இனைய-இவ்வெட்டுக் குறிகளும், எட்டுத் திக்கு உறை வானோர் பூசை செய்தன-எட்டுத் திசைகளிலும் இருக்கும் தேவர்களாற் பூசிக்கப்பட்டன; இவற்றுள் யாம் வந்து புக்கு உறைகுறி-

இவ்வெட்டனுள் யாம் வந்து புகுந்து உறையுங் குறியானது, நம் தோழன் பூசித்த குறியது ஆகும் - நம் நண்பனாகிய குபேரன் வழிபட்ட குறியாகும்.

குறியது, அது : பகுதிப்பொருள் விகுதி. (உசு)

அறைந்தவித் தெய்வத் தான மனைத்துமோ ரூழிக் காலத்
திறந்தநந் தோழன் கண்ட விலிங்கமா மதனா லிங்கே
உறைந்தன முறைத லாலே யுத்தர வால வாயாய்ச்
சிறந்திடத் தகுவ தின்று முதலிந்தத் தெய்வத் தானம்.

(இ - ள்.) அறைந்த இத் தெய்வத்தானம் அனைத்தும்-மேற்கூறிய இந்த அருட்குறிகள் உள்ள இடம் அனைத்தும், ஓர் ஊழிக்காலத்து இறந்த - ஓர் ஊழிக்காலத்தில் மறைந்தன ; நம் தோழன் கண்ட இலிங்கமாம் அதனால் - இது நம் நண்பன் கண்டு வழிபட்ட இலிங்க மாகுமாதலால், இங்கே உறைந்தனம் - இக்குறியின்கண் உறைந்தருளினோம் ; உறைதலாலே - இங்ஙனம் உறைதலால், இந்தத் தெய்வத் தானம் - இத் தெய்வத்தானமானது, இன்று முதல் - இன்று முதலாக, உத்தர ஆலவாயாய்ச் சிறந்திடத் தகுவது - வடதிருவால வாயாகிச் சிறக்கத்தக்கது.

இறந்த : அன்பெறாத பலவின்பால் முற்று. உத்தர ஆலவாயாய்ச் சிறந்திடத் தகுவது - வடமதுரை யென்னும் பெயருடன் விளங்கத் தகுவது. (உஎ)

ஓங்குதண் பணைசூழ் நீப
 வனத்தைநீத் தொருபோ தேனும்
நீங்குவ மல்லேங் கண்டா
 யாயினு நீயும் வேறு
தீங்குளை யல்லை காடன்
 செய்யுளை யிகழ்த லாலே
ஆங்கவ னிடத்தியாம் வைத்த
 வருளினால் வந்தே மென்னா.

(இ - ள்.) ஓங்கு தண்பணை சூழ் நீப வனத்தை நீத்து - சிறந்த தண்ணிய வயல்கள் சூழ்ந்த கடம்பவனத்தை விட்டு, ஒரு போதேனும் நீங்குவம் அல்லேம் - ஒரு பொழுதாயினும் நீங்கியிருப்பேமல்லேம் ; ஆயினும்-ஆனாலும், நீயும் வேறு தீங்குளை அல்லை - நீயும் வேறு தீங்குடையை அல்லை ; காடன் செய்யுளை இகழ்தலால் - இடைக்காடன் செய்யுளை அவமதித்தாயாதலால், ஆங்கு அவனிடத்து யாம் வைத்த அருளினால் வந்தேம் என்னா - அப்பொழுதே அவன்கண் யாம் வைத்த அருளினால் இங்கு வந்தேமென்று.

நீங்குவமல்லேம் நீயும் தீங்குளையல்லை ஆயினும் இகழ்தலாலும் அருளாலும் வந்தேம் என முடிக்க. கண்டாய் : முன்னிலையசை ; காடன் முன்மொழி கெட்டு நின்றது. ஆங்கு : அசையுமாம். இடத் தியாம் : குற்றியலிகரம். (உஅ)

பெண்ணினைப் பாகங் கொண்ட பெருந்தகைப் பரம யோகி
விண்ணிடை மொழிந்த மாற்ற மீனவன் கேட்டு வானோர்
புண்ணிய சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை யன்றோ
எண்ணிய பெரியோர்க் கென்னா வேத்தினா னிறைஞ்சி னானே.

(இ - ள்.) பெண்ணினைப் பாகம் கொண்ட - உமையை ஒரு பாகத்திற் கொண்ட, பெருந்தகைப் பரமயோகி - பெரிய தகுதியையுடைய மேலான யோகியாகிய இறைவன், விண்ணிடை மொழிந்த மாற்றம் - வானின்கண் அசரீரியாகக் கூறிய வார்த்தையை, மீனவன் கேட்டு - பாண்டியன் கேட்டு, வானோர் புண்ணிய - தேவர்களின் புண்ணியனே, எண்ணிய பெரியோர்க்கு-யாவராலும் நன்கு மதிக்கப்பெறும் பெருமையுடையார்க்கு, சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை அன்றோ என்னா-சிறியோர்கள் செய்த குற்றத்தைப் பொறுத்தருளுவது பெருமையல்லவா என்று, ஏத்தினான் இறைஞ்சினான் - துதித்து வணங்கினான்.

பெண்ணினைப் பாகங்கொண்ட பரமயோகி என்றது இறைவன் உயிர்கட்குப் போகம் அருளுதற் பொருட்டு உமையை ஒரு கூற்றிற் கொண்டானாயினும் தூயவுடம்பும் இயல்பாகவே பாசமின்மையும் உடையன் என்றவாறு ;

"மங்கையோ டிருந்தே யோகு செய்வானை"

என்பது கருவூர்த்தேவர் திருவிசைப்பா. சிறியோர் குற்றம் பொறுப்பது பெரியார்க்குப் பெருமை என்னும் கருத்தினை,

"வெறுப்பனவே செய்யுமென் சிறுமையைநின் பெருமையினாற்
பொறுப்பவனே"

எனவும்,

"பொறுப்பரன்றேபெரியோர்சிறு நாய்கடம் பொய்யினையே"

எனவும் வரும் திருவாசகங்களிற் காண்க. ஏத்தினான் : முற்றெச்சம். (உக)

அடிபணிந் தேத்தி னானை யருள்சுரந் தசையு மின்னுக்
கொடியணி மனையிற் போக்கிக் கோமள வல்லி யோடும்
உடனுறை புலவ ரோடு மொல்லைதன் கோயில் புக்கான்
வடதிரு வால வாயில் வந்துவீற் றிருந்த வள்ளல்.

(இ - ள்.) வடதிரு ஆலவாயில் வந்து வீற்றிருந்த வள்ளல் - வட திருவாலவாயின்கண் (இடைக்காடன் பொருட்டு) வந்து வீற்றிருந்த வள்ளலாகிய சோமசுந்தரக் கடவுள், அடிபணிந்து ஏத்தினானை - அடி வணங்கித் துதித்த அக் குலேச பாண்டியனை, அருள் சுரந்து - கருணை கூர்ந்து, அசையும் மின்னுக்கொடி அணிமனையில் போக்கி அசைகின்ற மின்போன்ற கொடி கட்டிய மாளிகையிற் போகவிடுத்து, கோமள வல்லியோடும்-பசுங்கொடி போன்ற பிராட்டியாரோடும், உடன் உறை புலவரோடும் ஒல்லை தன் கோயில் புக்கான் - உடன் உறைந்த சங்கப் புலவர்களோடும் விரைந்து தனது திருக்கோயிலுட் புகுந்தருளினான்.

ஏத்தினனைப் போக்கியென்க. மின் உகரச்சாரியை பெறுதலை,
"மின்பின் பன்கன் தொழிற்பெய ரனைய"
என்னும் நன்னூற் சூத்திரத்தாலறிக. (ரு௦)

மின்மதிச் சடையி னன்பி
னடந்துபோய் விடைகொண் டேகும்
மன்னவன் றன்னைப் பாடி
வந்தவன் றன்னை மாட்சித்
தன்மைசால் சங்க வாணர்
தம்மோடுங் கொடுபோ யென்றும்
பொன்மகள் காணி கொண்ட
புரிசைசூழ் கோயில் புக்கான்.

(இ-ள்.) மின்மதிச் சடையினன் பின் நடந்துபோய் - மின்னலை ஒத்த சந்திரனை அணிந்த சடையையுடைய சோமசுந்தரக் கடவுளின் பின் திருக்கோயிலுக்கு நடந்து சென்று, விடைகொண்டு ஏகும் மன்னவன் - விடைபெற்று மீளும் பாண்டியன், தன்னைப் பாடி வந்தவன் தன்னை - தன்னைப் பாடிவந்த இடைக்காடனை, மாட்சித்தன்மை சால் சங்க வாணர் தம்மொடும் கொடு போய் - மாண்பின் தன்மை நிறைந்த சங்கப் புலவரோடும் அழைத்துக்கொண்டு சென்று, என்றும் பொன் மகள் காணிகொண்ட - எஞ்ஞான்றுந் திருமகள் தனக்கு ஆட்சியிட மாக் கொண்ட, புரிசைசூழ் கோயில் புக்கான் - மதில் சூழ்ந்த மாளிகை யிற் புகுந்தனன்.

மின்னையொத்த சடையென்க. மேற் செய்யுளிலே மனையிற் போக்கிக் கோயில் புக்கான் என்றாரேனும்கோயில் புகுமளவும் பின்னே நடந்து சென்று விடை பெற்றேகினன் என்பது இச்செய்யுளாற் பெற்றாம். (ருக)

விதிமுறை கதலி பூகங் கவரிவால் விதானந் தீபம்
புதியதார் நிறைநீர்க் கும்பங் கதலிகை புனைந்த மன்றற்
கதிர்மணி மாடத் தம்பொற் சேக்கைமேற் கற்றோர் சூழ
மதிபுனை காடன் றன்னை மங்கல வணிசெய் தேற்றி.

(இ-ள்.) விதிமுறை - விதிப்படி, கதலி பூகம் கவரி - வாழையும் கமுகும் சாமரையும், வால் விதானம் தீபம் - வெள்ளிய மேல்விதானமும் விளக்கும், புதிய தார் நிறை நீர்க் கும்பம் கதலிகை புனைந்த - அன்றலர்ந்த மலராற்றொடுத்த மாலையும் பூரண கும்பமும் கொடியும் ஆகிய இவைகளால் அலங்கரித்த, மன்றல் கதிர்மணிமாடத்து - விழா நீங்காத ஒளியினையுடைய மணிகள் அழுத்திய மாளிகையின்கண், அம் பொன் சேக்கைமேல் - அழகிய பொன்னாலாகிய இருக்கையின்மேல், கற்றோர் சூழ - புலவர்கள் சூழ, மதிபுனை காடன் தன்னை - அறிவையே அணிகல மாகப் பூண்ட இடைக்காடனை, மங்கல அணிசெய்து - மங்கலமாக அலங்கரித்து, ஏற்றி - அமர்த்தி.

மன்றல் - மங்கல விழா. (ருஉ)

சிங்கமான் சுமந்த பொன்னஞ்
சேக்கைமே லிருந்து வெள்ளைக்
கொங்கவிழ் தாமந் தூசு
குளிர்மணி யாரந் தாங்கி
மங்கல முழவ மார்ப்ப
மறையவ ராக்கங் கூற
நங்கையர் பல்லாண் டேத்த
நன்மொழிப் பனுவல் கேட்டு.

(இ - ள்.) சிங்கமான் சுமந்த பொன்அம் சேக்கைமேல் - சிங்கஞ் சுமந்த பொன்னாலாகிய அழகிய ஆதனத்தின்மேல், இருந்து - தானும் இருந்து, கொங்கு அவிழ் வெள்ளைத் தாமம் - மகரந்தத்தோடு மலர்ந்த வெண்மலர் மாலையும், தூசு-வெள்ளாடையும், குளிர்மணி ஆரம் தாங்கி-தண்ணிய முத்து மாலையுமாகிய இவற்றை அணிந்து, மங்கல முழவம் ஆர்ப்ப - மங்கல இயங்கள் ஒலிக்கவும், மறையவர் ஆக்கம் கூற - அந்தணர் ஆக்கமொழி கூறவும், நங்கையர் பல்லாண்டு ஏத்த - பாவையர் பல்லாண்டு பாடவும், நன்மொழிப் பனுவல் கேட்டு - நல்ல சொற்கள் புணர்த்தியற்றிய செய்யுளைக் கேட்டு.

சிங்கமான் - சிங்கமாகிய விலங்கு; இரு பெயரொட்டு, வெள்ளை என்பதனைத் தூசு ஆரம் என்பவற்றோடும் ஒட்டுக. பாட்டுடைத் தலைவன் வெண் மலர்மாலையும், வெள்ளாடையும் வெள்ளணியும் அணிந்து கேட்டல் மரபாகலின் 'வெள்ளைக் கொங்கவிழ் தாமந் தூசு குளிர்மணி யாரந் தாங்கி' என்றார். ஆக்கம் - ஆசி. (கக)

அறிவுடைக் காட னுக்கு மருமைமாண் புலமை யோர்க்கும்
முறைமையா லாரந் தூசு முகிழ்முலைக் கொடியி னன்னார்
நிறைநிதி வேழம் பாய்மான் விளைநில நிரம்ப நல்கி
அறைகழற் காலிற் பின்னே ழடிநடந் திதனை வேண்டும்.

(இ - ள்.) அறிவுடைக் காடனுக்கும் - அறிவுடைய இடைக்காடனுக்கும், அருமைமாண் புலமையோர்க்கும் - கிடைத்தற்கரிய மாட்சி மிக்க புலவர்கட்கும், முறைமையால் - வரிசைப்படி, ஆரம் தூசு முகிழ் முலைக் கொடியின் அன்னார் - முத்தாரங்களையும் ஆடைகளையும் அரும்பு போன்ற கொங்கையையுடைய கொடிபோன்ற ஏவன் மகளிரையும், நிறை நிதி வேழம் பாய்மான் விளை நிலம் - நிறைந்த பொருளையும் யானைகளையும் குதிரைகளையும் விளைநிலங்களையும், நிரம்ப நல்கி - நிரம்பக் கொடுத்து, அறைகழல் காலில் ஏழ் அடி பின் நடந்து - ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த காலினால் ஏழடி தூரம் அவர்கள் பின் நடந்துசென்று இதனை வேண்டும் - இதனை வேண்டுவானாயினன்.

அருமைமாண் - அருமை மிக்க என்றுமாம். "ஞாலத்தின் மாணப் பெரிது" என்புழி 'மாண்' மிகுதிப் பொருட்டானமை காண்க. "பொது நோக்கொழி மதி புலவர் மாட்டு" என்பவாகலின் 'முறைமையால்' என்றார். ஏழடி பின் சேறல் மரபு. பாடும் புலவனியல் பிணையும், தலைவன் பாட்டினைக் கேட்கு முறைமையினையும்,

" பாடுமுறை தொடர்செய்யுட் டெரிக்க வல்ல
பாவலற்குக் குணங்குறிசி ரொழுக்க மேன்மை
நீடமுகார் சமயநூல் அறநூன் மற்று
நிகழ்த்துநா லிலக்கணநாற் கவியு ளானாய்
நாடுறுப்பிற் குறையிலனாய் நோயி லானாய்
நாற்பொருளு முணர்ந்துகல தெளிந்து முப்பான்
கூடுவய திழிந்தெழுபான் வயதி லேறாக்
குறியுடைய னயினவன் கவிதை கொள்ளே."

" கொள்ளுமிடம் விதானித்துத் தொடைய னாற்றிக்
கொடிகதலி தோரணம்பா லிகைநீர்க் கும்பம்
துள்ளுபொறி விளக்கொளிர முரசி யம்பத்
தோகையர்பல் லாண்டிசைப்ப மறையோர் வாழ்த்த
வெள்ளைமலர் துகில்புனைந்து தவிசின் மேவி
வேறுமொரு கவிசிருத்திச் செய்யுட் கேட்டே
உள்ளமகிழ் பொன்புவிபூ ணுடை மற்று
முதவியே முடிபுலவ னுடன்போய் மீளே"

என்னும் பொருத்தப் பாட்டியற் செய்யுட்களா னறிக. (௯௪)

புண்ணியப் புலவீர் யானிப்
போழ்திடைக் காட னார்க்குப்
பண்ணிய குற்ற மெல்லாம்
பொறுக்கெனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரு
மன்னநீ நுவன்ற சொல்லாந்
தண்ணிய வமுதா லெங்கள்
கோபத்தீத் தணிந்த தென்னா.

(இ - ள்.) புண்ணியப் புலவீர் - புண்ணிய வடிவாயுள்ள புலவர்களே, யான் - அடியேன், இப்போழ்து இடைக்காடனார்க்கு - இப்பொழுது இடைக்காடருக்கு, பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க என - செய்த குற்றங்களனைத்தையும் பொறுக்கக் கடவீர் என்று, பரவித் தாழ்ந்தான் - துதித்து வணங்கினான், நுண்ணிய கேள்வியோரும் - நுட்பமாகிய நூற்கேள்வி வல்லோரும், மன்ன - மன்னனே, நீ நுவன்ற சொல்லாம் தண்ணிய அமுதால் - நீ கூறிய சொல்லாகிய குளிர்ந்த அமிழ்தத்தால், எங்கள் கோபத் தீ தணிந்தது என்னா - எங்கள் சினமாகிய நெருப்பு அவிந்தது என்று கூறி.

பொழுது போழ்தென விகாரமாயிற்று. பொறுக்கென : அகரந் தொக்கது. அமுது - நீர் என்றுமாம். (௯௫)

இன்னமு மாலவாயெம் மிறையவன் கருணை நோக்காற்
பன்னரும் புகழ்மை குன்றாப் பாக்கிய முனக்குண் டாக
என்னநல் லாக்கங் கூறி யேகினா ராக வந்தத்
தென்னவன் குலேசன் செய்த தவமுருத் திரிந்தா லென்ன.

(இ - ள்.) இன்னமும் ஆலவாய் எம் இறையவன் கருணை நோக்கால் - இன்னும் ஆலவாயிலுறையும் எம்மையனது அருட்பார்வையினால், பன் அரும் புகழ்மை குன்றாப் பாக்கியம் - புகலுதற்கரிய புகழ் குன்றாத பெருஞ்செல்வம், உனக்கு உண்டாக என்ன நல் ஆக்கம் கூறி ஏகினார் ஆக - உனக்கு உண்டாகக் கடவது என்று நல்ல ஆக்க மொழி அறைந்து அகன்றனராக; அந்தத் தென்னவன் குலேசன் செய்த தவம் - அந்தக் குலேச பாண்டியன் செய்த தவமானது, உருத்திரிந்தால் என்ன - உருமாறி வந்தாற்போல.

புகழ்மை, மை: பகுதிப்பொருள் விகுதி. கேள்வியோரும் ஆக்கங் கூறி ஏகினார், ஏகினபின்பு என விரித்துரைத்துக் கொள்க. (கூசு)

எரிமருத் தவனி முன்னா
மெண்வகை மூர்த்தி யன்பு
புரிமருத் துவனைச் சூழ்ந்த
பொருபழி துடைத்தோன் சோதி
விரிமருத் துடல்வான் றிங்கண்
மிலைந்தவ னருளின் வந்தான்
அரிமருத் தனனாந் தென்ன
னடலரிக் குருளை யன்னான்.

(இ - ள்.) எரி மருத்து அவனி முன்னாம் எண்வகை மூர்த்தி - தீயும் காற்றும் நிலனுமுதலாகிய எண்வகை வடிவமுள்ளவனும், அன்பு புரி மருத்துவனைச் சூழ்ந்த - அன்பினால் வழிபாடு செய்யும் இந்திரனைச் சூழ்ந்த, பொரு பழி துடைத்தோன் - வருத்தும் பழியினைப் போக்கினவனும், சோதி விரிமருத்து உடல் வான் திங்கள் மிலைந்தவன் அருளின் - ஒளிவிரிந்த அமிழ்தமயமாகிய உடலையுடைய வான்மதியைச் சூடியவனுமாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவருளால், அடல் அரிக் குருளை அன்னான் - வலிமிக்க சிங்கக் குட்டிபோன்ற, அரிமருத்தனனாம் தென்னன் வந்தான் - அரிமருத்தன னென்னும் பாண்டியன் மகனாக வந்து தோன்றினான்.

இறைவன் அட்டமூர்த்தியாதலை,

"இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி யியமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி யாகாய மாயட்ட மூர்த்தி யாகி"

என்னும் திருத்தாண்டகத்தாலறிக. மருத்துவன் - இந்திரன். மருந்து மருத்து என வலித்தது. திங்கள் மிலைந்தவன் அருளினாலே குலேசன் செய்த தவம் உருத்திரிந்தாலென்ன அரிமருத்தனனாந் தென்னன் வந்தான் என்க. (கூஎ)

[கலிநிலைத் துறை]

பரிசிலைப் புலவருக் கருள்குலே சன்பல பகல்கழிஇத்
திரிமருப் பிரலைவெம் மழுவேடுத் தவன்மதிச் சேன்னிமேல்
வரிசிலைப் படைபொறித் தவனெனப் பெறுவர மைந்தனும்
அரிமருத் தனனிடத் தவனிவைத் தரனடி யெய்தினான்.

(இ - ள்.) பரிசிலைப் புலவருக்கு அருள் குலேசன் - புலவர்கட்குப் பரிசில் அளித்த குலேசபாண்டியன், பலபகல் கழீஇ - பல காலங்களைக் கழித்து, திரிமருப்பு இரலை வெம்மழு எடுத்தவன் - திரிந்த கொம்பினை யுடைய மானையும் கொடிய மழுவையும் ஏந்திய இறைவனது, மதிச் சென்னிமேல் - பிறை முடியின்மேல், வரிசிலைப் படை பொறித்தவன் என - கட்டமைந்த விற்படையினால் அடித்த அருச்சுனன்போல, வரம் பெறு மைந்தனும் அரிமருத்தனனிடத்து - வரம் பெறும் புதல்வனாகிய அரிமருத்தன னிடத்தில், அவனி வைத்து அரன் அடி எய்தினான் - நிலவுலகை வைத்துவிட்டு இறைவன் திருவடி நீழலை அடைந்தான்.

இடைக்காடர்க்கும் ஏனைச் சங்கப் புலவர்கட்கும் பரிசில் வழங்கினமையைச் சுட்டி 'பரிசிலைப் புலவருக் கருள் குலேசன்' என்றார். கழீஇ-கழித்து : சொல்லிசையளபெடை. பாண்டு மைந்தனாகிய அருச்சுனன் பகைவரை வெல்லப் பாசுபதாத்திரம் பெறவேண்டிச் சிவ பிரானை நோக்கி அருந்தவம் புரியா நிற்புழி, அவன் தவநிலையைச் சிதைக்குமாறு துரியோதனன் ஏவிய மூகன் என்னும் அசுரன் பன்றி யுருவெடுத்து வந்தனனாக, சிவபிரான் வேட்டுவத் திருவுருக்கொண்டு போந்து அப் பன்றியைக் கொன்று அருச்சுனனுடன் விளையாட்டாகப் போர் புரிந்து அவனது வில்லின் நாணினை யறுக்க, அவன் நாணற்ற விற்கழுந்தால் இறைவன் திருமுடிமீது அடித்துப் பின் இறைவனை யறிந்து வழுத்தி வரம்பெற்றன னென்பதனைப் பாரதத்துக் காண்க. அருச்சுனன் வில்லாலடித்து வரம்பெற்றமைபோலப் பிரம்பாலடித்து வரம் பெறுதல் கருதிச் 'சிலைப்படை பொறித்தவனெனப் பெறு வரமைந்தன்' என்றார்; பகைவரை அழிக்கும் ஆற்றலுங் கொள்க.

(கஅ)

ஆகச்செய்யுள் - உகூஉஅ

ஐம்பத்தேழாவது

வலைவீசின படலம்

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

மின்றிரித் தன்ன வேணி வேதிய னிடைக்கா டன்பின்
சென்றுமீண் டனையான்கோண்ட பிணக்கினைத் தீர்த்த வண்ணம்
இன்றுரை செய்து முந்நீ ரேறிவலை வீசி ஞாழன்
மன்றலங் குழலி னளை மணந்துமீள் வண்ணஞ் சோல்வாம்.

(இ - ள்) மின்திரித்தன்ன வேணிவேதியன் - மின்னலைத் திரித்து விட்டா லொத்த சடையையுடைய அந்தணனாகிய சோமசுந்தரக் கடவுள், இடைக்காடன் பின் சென்று மீண்டு-இடைக்காடன் பின்னே போய் மீண்டு, அனையான் கொண்ட பிணக்கினைத் தீர்த்தவண்ணம் - அவன் கொண்ட பிணக்கினைத் தீர்த்தருளிய திருவிளையாடலை, இன்று உரை செய்தும் - இன்று கூறினேம்; முந்நீர் எறிவலை வீசி-கடலின்கண் எறியும் வலையினை வீசி, ஞாழல் மன்றல் அம் குழலினளை - புலிநகக் கொன்றைமலரின் மணம் நிறைந்த அழகிய கூந்தலையுடைய உமையம் மையை, மணந்து மீள்வண்ணம் சொல்வாம் - திருமணஞ்செய்து மீண் டருளிய திருவிளையாடலை (இனிக்) கூறுவாம்.

திரித்தாலன்ன என்பது விகாரமாயிற்று. நெய்தற்றலைவற்குப் புதல்வியாகத் தோன்றியிருந்தமையின் 'ஞாழல் மன்றலங்குழலினள்' என்றார். ஞாழல் - குங்குமமரம் என்பாருமுளர். (க)

அந்தமி லழகன் கூட லாலவா யமர்ந்த நீல
கந்தர னுலக மீன்ற கன்னியங் கயற்க ணாளாங்
கோந்தவி ழலங்கற் கூந்தற் கோடிக்குவே றிடத்து வைகி
மந்தண மான வேத மறைப்போரு ளுணர்த்து மாதோ.

(இ - ள்.) அந்தம்இல் அழகன்-முடிவில்லாத பேரழகனும், கூடல் ஆலவாய் அமர்ந்த நீலகந்தரன் - கூடலென்னுந் திருவாலவாயில் எழுந் தருளிய நீல கண்டனுமாகிய சோமசுந்தரக் கடவுள், உலகம் ஈன்ற கன்னி - உலகத்தைப் பெற்ற கன்னியாகிய, அங்கயற்கணாளாம் - அங்கயற்கண்ணம்மையாகிய, கொந்து அவிழ் அலங்கல் கூந்தல் கொடிக்கு - கொத்தில் மலர்ந்த மலர் மாலையை யணிந்த கூந்தலையுடைய கொடிபோல்வார்க்கு, வேறு இடத்து வைகி - தனியிடத்தில் இருந்து,

மந்தணமான வேத மறைப்பொருள் உணர்த்தும் - இரகசியமான வேதத்தின் உட்பொருளைக் கூறியருளுவானாயினன்.

இறைவி உலகமெல்லாம் ஈன்றும் கன்னியாதலே,

"சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ் சத்திதான் சிவத்தை யீன்றும்
உவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயி ரெல்லா மீன்றும்
பவன்பிர மசாரி யாகும் பான்மொழி கன்னி யாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் றெரியு மன்றே"

என்னும் சிவஞான சித்தியார்த் திருவிருத்தத்தாலறிக. மறை - உபநிடதமுமாம். மாது, ஓ அசைகள். (௨)

நாதனின் னருளாற் கூறு நான்மறைப் பொருளை யெல்லாம்
யாதுகா ரணத்தான் மன்னோ வறிகிலே மெம்பி ராட்டி
காதர மடைந்தாள் போலக் கவலையுஞ் சிறிது தோன்ற
ஆதர மிலளாய்க் கேட்டா ளஃதறிந் தமலச் சோதி.

(இ - ள்.) நாதன் இன் அருளால் கூறும் - இறைவன் இனிய திருவருளினாற் கூறுகின்ற, நான்மறைப்பொருளை எல்லாம் - நால்வேதப் பொருள்களையெல்லாம், யாது காரணத்தாலோ அறிகிலேம் - என்ன காரணத்தினாலோ யாம் அறியேம்; எம்பிராட்டி - எம் இறைவி, காதரம் அடைந்தாள்போல - அச்சமுற்றவள்போல, கவலையும் சிறிது தோன்ற-சிறிது வருத்தமும் வெளிப்பட, ஆதரம் இலளாய்க்கேட்டாள்-விருப்பமில்லாதவளாய்க் கேட்டனள்; அமலசோதி அஃது அறிந்து - நின்மலனாகிய இறைவன் அதனை உணர்ந்து.

அங்ஙனம் ஆர்வமின்றிக் கேட்குமியல்பினளல்லளென்பார் 'யாது காரணத்தாலோ அறிகிலேம்' என்றார். இறைவன் பரதவர் வேந்தனுக்கு அருள்புரியுங் குறிப்பினனாதல் ஓர்ந்து அதற்கேற்ப இங்ஙனம் கேட்டாளென்று கொள்க. மன் : அசை. (௩)

அராமுக மனைய வல்கு லணங்கினை நோக்கி யேனை
இராமுக மனைய வுள்ளத் தேழைமார் போல வெம்பாற்
பராமுகை யாகி வேதப் பயனொருப் படாது கேட்டாய்
குராமுகை யவிழ்ந்த கோதா யுற்றவிக் குற்றந் தன்னால்.

(இ - ள்.) அராமுகம் அனைய அல்குல் அணங்கினை நோக்கி - பாம்பின் படம் போன்ற அல்குலையுடைய பிராட்டியைப் பார்த்து, இராமுகம் அனைய உள்ளத்து ஏனை ஏழைமார்போல - இருள்போன்ற உள்ளத்தினையுடைய ஏனை மகளிர் போன்று, எம்பால் வேதப்பயன்- எம்மிடத்து வேதப்பொருளை, பராமுகையாகி ஒருப்படாது கேட்டாய்-பராமுகமுடையையாகி மனம் ஒருவழிப்படாது கேட்டனை; குராமுகை அவிழ்ந்த கோதாய்-குராவின் அரும்பு விரிந்த மலர் மாலையை யணிந்த

கூந்தலையுடையாய், உற்ற இக்குற்றம் தன்னால் - நேர்ந்த இக் குற்றத்தினால்.

இராமுகம் -:இரவினிடம்; இருள். அறியாமையுடைய உள்ள மென்பதனை இங்ஙனம் இலக்கணையாகக் கூறினார்;

"அகம் குன்றி மூக்கிற் கரியார்"

எனத் திருக்குறளிலும்,

"கூழின் மலிமனம் போன்றிரு ளாகின்ற கோகிலமே"

எனத் திருக்கோவையாரிலும் வருதல் காண்க. (ச)

விரதமு மறனு மின்றி மீன்படுத் திழிஞ ரான
பரதவர் மகளா கென்று பணித்தனன் பணித்த லோடும்
அரதன வாரந் தாழ்ந்த வாரமேன் முலையா ளஞ்சி
வரதநிற் பிரிந்து வாழ வல்லனே வென்று தாழ்ந்தாள்.

(இ - ள்.) விரதமும் அறனும் இன்றி மீன்படுத்து - நோன்பும் அறனுமில்லாமல் மீன்களைப் பிடித்துக் கொலைபுரிதலால், இழிஞர் ஆன பரதவர் மகள் ஆக என்று பணித்தனன் – இழிஞராகக் கருதப் படுகின்ற பரதவரின் மகளாகக் கடவை என்று கட்டளையிட்டான்; பணித்தலோடும் அங்ஙனம் பணித்தவளவில், அரதன ஆரம் தாழ்ந்த- மாணிக்கமாலை தொங்கியசையும், ஆரம்மென் முலையாள் அஞ்சி - சந்த னக்குழம் பணிந்த மெல்லிய கொங்கையையுடைய தேவி அச்சுற்று, வரத - வள்ளலே, நின் பிரிந்து வாழவல்லனே என்று தாழ்ந்தாள்- யான் நின்னைப் பிரிந்து வாழவல்லனே என்று கூறி வணங்கினாள்.

"நோன்பென்பது கொன்று தின்னாமை"

என்பதனால் கொலை செய்வார் நோன்புடையரல்லராதலையும்,

"அறவினை யாதெனிற் கொல்லாமை"

என்பதனால் அவர் அறமுடையரல்லராதலையும்,

"கொலைவினைஞ ராகிய மாக்கள் புலைவினையர்"

என்பதனால் அவர் இழிவெய்துதலையும் அறிக. (ரு)

வீங்குநீர்ச் சடையா னீங்கு மெல்லியல் பிரிவு நோக்கி
வாங்குநீர்க் கானல் வாழ்க்கை வலைஞர்கோன் மகளாய் வைகி
ஆங்குநீ வளர்நாள் யாம்போந் தருங்கடி முடித்த மென்னாத்
தேங்குநீ ரமுதன் னாளைச் செலவிடுத் திருந்தா னிப்பால்.

(இ - ள்.) விங்கும் நீர்ச்சடையான்-பெருக்கெடுக்குங் கங்கையை யணிந்த சடையினையுடைய இறைவன், நீங்கும் மெல்லியல் பிரிவு நோக்கி - பிரிகின்ற உமையின் துன்பத்தைக் கண்டு, வாங்கு நீர்கானல் வாழ்க்கை வலைஞர் கோன் - வளைந்த கடற்கரையிலுள்ள சோலையில் வாழும் பரதவமன்னனுக்கு, மகளாய் வைகி ஆங்கு நீ வளர்நாள் - மகளாகப் பொருந்தி அங்கே நீ வளர்கின்ற அப்பொழுது, யாம் போந்து அருங்கடி முடித்தும் என்னு-யாம் வந்து அரிய திருமணத்தை முடிப்போமென்று, தேங்குநீர் அமுது அன்னாளை-நிரம்பிய நீரினை யுடைய கடலிற்றோன்றிய அமுதம் போன்ற அம்மையை, செலவிடுத்து இருந்தான் - போகவிட்டு இருந்தனன்; இப்பால் - பின்.

வாங்குநர், தேங்குநர் என்பன கடல் என்னும் பொருளன. கானல் - கடற்கரைச்சோலை. முடித்தும் - முடிப்போம்; தன்மைப் பன்மை யெதிர்கால முற்று. (சு)

அன்னது தெரிந்து நால்வா யைங்கரக் கடவு டாதை
முன்னர்வந் திதனு லன்றோ மூண்டதிச் செய்தி* யெல்லாம்
என்னவீர்ங் கவளம் போலாங் கிருந்தபுத் தகங்க ளெல்லாந்
தன்னெடுங் கரத்தால் வாரி யெறிந்தனன் சலதி மீதால்.

(இ - ள்.) நால்வாய் ஐங்கரக்கடவுள் - தொங்கிய வாயினையும் ஐந்து திருக்கரங்களையுமுடைய மூத்த பிள்ளையார், அன்னது தெரிந்து- அச்செய்தியை யறிந்து, தாதை முன்னர் வந்து - தன் தந்தையாகிய இறைவன் திருமுன் வந்து, இச்செய்தி எல்லாம் இதனால் அன்றோ மூண்டது என்ன - இந்நிகழ்ச்சி அனைத்தும் இதனாலல்லவா மூண்டது என்று, ஆங்கு இருந்த புத்தகங்கள் எல்லாம் - அங் கிருந்த சுவடிகளையெல்லாம், தன் நெடுங்கரத்தால் - தனது நெடிய கையினால், ஈர்ங் கவளம்போல் வாரி-குளிர்ந்த கவளத்தை அள்ளுவது போல அள்ளி, சலதி மீது எறிந்தனன் - கடலின்கண் வீசினன்.

கவளம் - யானை யுண்ணும் உணவு. ஆல் : அசை. (எ)

வரைபக வெறிந்த கூர்வேன் மைந்தனுந் தந்தை கையில்
உரைபெறு போத நூலை யொல்லெனப் பறித்து வல்லே
திரைபுக வெறிந்தா னாகச் செல்வநான் மாடக் கூடல்
நரைவிடை யுடைய நாத னந்தியை வெகுண்டு நோக்கா.

(இ - ள்.) வரைபக எறிந்த கூர்வேல் மைந்தனும் - கிரவுஞ்சமலை பிளக்குமாறு எறிந்த கூரிய வேற்படையையுடைய முருகக்கடவுளும், தந்தை கையில்-தந்தையாரின் திருக்கரத்தினின்றும், உரைபெறு போத நூலை ஒல்லெனப் பறித்து - புகழமைந்த சிவஞானபோத நூலை விரைந்து பிடுங்கி, வல்லே திரைபுக எறிந்தானாக - விரைந்து அது கடலில் விழ எறிந்தனன்; செல்வ நான்மாடக்கூடல் நரைவிடை உடைய நாதன் - செல்வமிக்க நான்மாடக்கூடலின்கண் எழுந்தருளிய

(பா - ம்.) மூண்ட விச்செய்தி

வெள்ளிய இடபவூர்தியையுடைய சோமசுந்தரக் கடவுள், நந்தியை வெகுண்டு நோக்கா - திருநந்திதேவரைச் சினந்து பார்த்து.

போதநூல் - சிவஞானபோதம். ஒல்லென், விரைவுக் குறிப்பு. நரை - வெண்மை. (அ)

அடுத்துநா மிருக்குஞ் செவ்வி யறிந்திடா திவரை வாயில்
விடுத்துநீ யிருந்தாய் தீங்கு விளைந்ததுன் றனக்கு மிந்தத்
தொடுத்ததீங் கொழிய வின்றோர் சுறவுரு வாகி வையம்
உடுத்தகா ரோத நீர்புக் குழல்கெனப் பணித்தான் மன்னோ.

(இ - ள்.) நாம் அடுத்து இருக்கும் செவ்வி அறிந்திடாது - நாம் பொருந்தியிருக்கும் அமயத்தை அறியாமல், இவரை வாயில் விடுத்து நீ இருந்தாய் - இவர்களை வாயிலிற் புகவிட்டு நீ வாளா இருந்தனை; தீங்கு விளைந்தது - அதனால் தீங்கு விளைந்தது; உன்தனக்கும் தொடுத்த இந்தத் தீங்கு ஒழிய - உனக்கும் நேர்ந்த இக் குற்றம் நீங்குமாறு, இன்று ஓர் சுறவு உருவாகி - இப்பொழுதே ஒரு சுறாமீன் வடிவமாகி, வையம் உடுத்த கார் ஓத நீர் புக்கு உழல்க எனப் பணித்தனன் - நிலவுலகைச் சூழ்ந்த கரிய ஒலிபொருந்திய நீரினையுடைய கடலின்கட் புகுந்து வருந்துவாயாக என்று கட்டளையிட்டான்.

அடுத்து அறிந்திடாது எனக் கூட்டலுமாம். உன்றனக்கும், உம்மை எச்சப் பொருட்டு. உழல்கென, அகரம் தொக்கது. மன், ஓ: அசைகள். (௯)

வெருவரு சேலவின் வேழ முகத்தனை விதித்த சாபப்*
பெருவலி தன்னைச் சாரும் பெற்றியாற் சாபங் கூறான்
அருவரை நெஞ்சு போழ்ந்த வள்ளிலை நெடுவேற் செங்கை
முருகனை வணிகர் தம்மின் மூங்கையா கென்றா னிப்பால்.

(இ - ள்.) வெருவரு செலவின் வேழ முகத்தனை - கண்டோர்க்கு அச்சம் வருதற்கேதுவாகிய நடையினையுடைய யானையின் முகத்தை யுடைய மூத்த பிள்ளையார்க்கு, விதித்த சாபப் பெருவலி - இடும் சாபத்தின் பெரிய வலியானது, தன்னைச் சாரும் பெற்றியால் - தன்னையே வந்தடையுந் தன்மையினாலே, சாபம் கூறான் - சாபங் கூறாமல், அருவரை நெஞ்சு போழ்ந்த - வெல்லுதற்கரிய கிரவுஞ்ச மலையின் மார்பினைப் பிளந்த, அள் இலை நெடுவேல் செங்கை முருகனை - கூரிய தகட்டு வடிவாய் நீண்ட வேற்படை ஏந்திய சிவந்த திருக் கரத்தை யுடைய இளைய பிள்ளையாரை, வணிகர் தம்மில் மூங்கை ஆக என்றான் - வணிகர் மரபில் ஊமனாகத் தோன்றக் கடவை என்று சபித்தனன்; இப்பால் - பின்.

சாபமாகிய பெருவலி என்றுமாம். சாபம் பெருவலி என்பது பாட மாயின், பெருவலி என்பது இறைவனை யுணர்த்தும்; 'மதவலி' என்பது போல. (௧௦)

(பா - ம்) * சாபம் பெருவலி.

நாயக னேவ லாலே நாயகி வலைஞர் மாதர்
ஆயது நந்திப் புத்தே ளடுசுற வாகி முந்நீர்
மேயதுங் கருணை வள்ளன் மீன்படுத் தணங்கை வேட்டுப்
போயது மவட்குக் கேள்வி புகன்றது முறையிற் சொல்வாம்.

(இ - ள்.) நாயகன் ஏவலாலே - இறைவனது ஆணையினால், நாயகி வலைஞர் மாதர் ஆயதும் - இறைவி பரதவமாது ஆனதும், நந்திப்புத்தேள் அடுசுறவு ஆகி முந்நீர் மேயதும் - திருநந்திதேவர் கொல்லுகின்ற சுறுமீனாகிக் கடலுட் சென்றதும், கருணை வள்ளல் மீன்படுத்து அணங்கை வேட்டுப்போயதும் - அருள் வள்ளலாகிய அவ்விறைவன் அம்மீனைப் பிடித்து அம் மாதினை மணந்து போனதும், அவட்குக் கேள்வி புகன்றதும் - அவ் வம்மையாருக்குத் திருவுத்தரகோச மங்கையில் உபதேசஞ் செய்தருளியதுமாகிய இவற்றை, முறையில் சொல்வாம் - முறையாகக் கூறுவாம்.

படுத்து - அகப்படுத்து. (கக)

[கலிநிலைத்துறை]

சூழும் வார்திரை வையையந் துறைகெழு நாட்டுட்
கீழை யார்கலி முகத்தது நெய்தலங் கீழ்நீர்
ஆழ நீள்கருங் கழியகழ் வளைந்துகா ரளைந்த*
தாழை மூதெயி லுடுத்ததோர் தண்டுறைப் பாக்கம்.

(இ - ள்.) ஓர் தண் துறைப்பாக்கம் - ஒரு தண்ணிய நீர்த்துறைகள் வாய்ந்த பாக்கம், வார்திரை சூழும் வையை அம் துறைகெழு நாட்டுள் - நீண்ட அலைகள் சூழ்ந்த வையை யாற்றின் அழகிய துறைகள் பொருந்திய பாண்டி நாட்டின்கண், கீழை ஆர்கலி முகத்தது - கீழைக்கடலின் முகத்துள்ளது, நெய்தலம் கீழ்நீர் - (அது) நெய்தனிலத்து உவர்நீரினுடைய, ஆழம் நீள்கருங்கழி அகழ் வளைந்து - ஆழமுடைய நீண்ட கரிய கழியாகிய அகழியினாற் சூழப்பட்டு, கார் அளைந்த தாழை மூதெயில் உடுத்தது - முகிலை அளாவி உயர்ந்த தாழையாகிய பெரிய மதிலாற் சூழப்பட்டது.

நெய்தலம், அம் : சாரியை. கீழ்நீர் - உவர்நீர் ; கூவல் என்பாருமுளர். கழி - நெய்தனிலத்து நீரோடை. கழி அகழி போலவும் உடுத்ததென்ப. பாக்கம் - கடற் பக்கத்து ஊர். உடுத்ததாகிய பாக்கம் முகத்தது என முடித்தலுமாம். (கஉ)

முடங்கு முள்ளிலை யாற்புதைந் தெதிரெதிர் மோய்த்து
நடங்கு கைதைபோ தொடுவளி நூக்கநின் றசைவ
மடங்கு மெய்யராய்க் கையிருங் கேடக வட்டத்
தடங்கி வாள்பனித் தாடம ராற்றுவாரனைய.

(பா - ம்.) * காரளைந்து ; தாதளைந்து.

(இ - ள்.) முடங்குமுள் இலையால் புதைந்து - மடங்கிய முள்ளை யுடைய இலைகளால் மறைபட்டு, எதிர்எதிர் மொய்த்து - தம்முன் எதிரெதிரே நெருங்கி, வளி நூக்க போதொடு நின்று அசைவ - காற்றுத் தள்ளுவதால் மலரோடு நின்று அசைவனவாகிய, நுடங்கு கைதை - வளைந்த தாழைகள், மடங்குமெய்யராய் - வளைந்த மெய்யினை யுடையராய், கை இருங்கேடக வட்டத்து அடங்கி - கையிலுள்ள பெரிய கேடகமாகிய வட்டத்துள் மறைந்து, வாள் பனித்து - வாளை விதிர்த்து, ஆடு அமர் ஆற்றுவார் அனைய - வெற்றிதரும் போரினைப் புரிவாரை ஒத்தன.

முள்ளிலை கேடகத்தையும், போது வாளையும், கைதை போர் செய்வாரையும் போன்றிருந்தன என்க. (கங)

புலவு மீனுணக் கோசையும் புட்களோப் பிசையும்
விலைப கர்ந்திடும் மமலையு மீன்கோள்கம் பலையும்
வலையெ றிந்திடு மரவமும் வாங்குமா ரவமும்
அலையெ றிந்திடு பரவைவா யடைப்பன மாதோ.

(இ - ள்.) புலவுமீன் உணக்கு ஓசையும் - புலானாற்றமுடைய மீன்களை உலர்த்தும் ஒலியும், புட்கள் ஓப்பு இசையும் - (அவற்றை உண்ணவரும்) பறவைகளை ஓட்டும் ஒலியும், விலை பகர்ந்திடும் அமலையும் - (அவற்றை) விலை கூறும் ஒலியும், மீன்கொள் கம்பலையும் - அம்மீன்களை வாங்குவோர் ஒலியும், வலை எறிந்திடும் அரவமும் - பரதவர் வலை வீசும் ஒலியும், வாங்கும் ஆரவமும் - அவ்வலையை இழுக்கும் ஒலியும், அலை எறிந்திடு பரவை வாய் அடைப்பன - அலை வீசும் கடலின் ஒலி வாயை அடைப்பன.

ஓசை, இசை, அமலை, கம்பலை, அரவம், ஆரவம், என்பன ஒரு பொருள் குறித்த வேறு பெயர்த் திரிசொற்கள், ஆரவம் - அரவம் என்பதன் விகாரமுமாம். கடலின் ஒலி புலப்படாமற் செய்வன என்க. மாது, ஓ : அசைகள். (கச)

வாட்டு நுண்ணிடை நுளைச்சியர் வண்டலம் பாவைக்
கூட்டு கின்றசோ றருகிருந் துடைந்தபூங் கைதை
பூட்டு கின்றன நித்திலம் பொருகடற் றரங்கஞ்
சூட்டு கின்றன கடிமலர் சூழல்சூழ் ஞாழல்.

(இ - ள்.) வாட்டும் நுண் இடை நுளைச்சியர் - (கொங்கைகள்) வருத்தும் நுண்ணிய இடையினையுடைய நுளைச்சிறுமியரின், வண்டல் அம்பாவைக்கு - விளையாட்டிடத்துள்ள பாவைக்கு, உடைந்த பூங் கைதை அருகு இருந்து சோறு ஊட்டுகின்ற - மலர்ந்த மலர்களை யுடைய தாழைகள் பக்கத்திலிருந்து சோற்றினை உண்பியாநின்றன; பொருகடல் தரங்கம் - மோதுகின்ற கடலின் அலைகள், நித்திலம் பூட்டுகின்றன - முத்து மாலையைப் பூட்டாநின்றன; சூழல் சூழ் ஞாழல் - சோலையைச் சூழ்ந்த புலிநகக் கொன்றை மரங்கள், கடிமலர் சூட்டுகின்றன - மணமிக்க மலர்களைச் சூட்டாநின்றன.

வண்டல் - மகளிர் விளையாட்டு. சோறு என்றது மகரந்தத்தை. எழுவாய் மூன்றும் இறுதியிலும், பயனிலை மூன்றும் முதலிலும் நின்றன ;

'எச்சப் பெயர்வினை யெய்து மீற்றினும்''

என்னும் நன்னூற் சூத்திரம் நோக்குக. (௧௫)

நிறைந்த தேண்கட லாடிநீ ணெறியிடைச் செல்வோர்க்
கறந்தெ ரிந்தபோற் பொதிந்தசோ றவிழ்ப்பன தாழை
சிறந்த முத்தொடு பசும்பொனும் பவளமுந் திரட்டிப்
புறந்தெ ரிந்திடக் கொடுப்பன மலர்ந்தபூம் புன்னை.

(இ - ள்.) நிறைந்த தெண்கடல் ஆடி - நீர் நிறைந்த தெள்ளிய கடலின்கண் நீராடி, நீள் இடைச் செல்வோர்க்கு - நெடுந்தூரம் வழிச் செல்லும் யாத்திரைக்காரர்களுக்கு, தாழை அறம் தெரிந்தபோல் - தாழைகள் அறநூல் உணர்ந்தனபோல, பொதிந்த சோறு அவிழ்ப்பன - ஊட்டுதற்குப் பொதிந்த சோற்றினை அவிழ்ப்பன ; மலர்ந்த பூம்புன்னை - மலர்ந்த பொலிவினையுடைய புன்னை மரங்கள், சிறந்த முத்தொடு பசும்பொனும் பவளமும் திரட்டி - சிறந்த முத்தை யும் பசிய பொன்னையும் பவளத்தையும் ஒன்று சேர்த்து, புறம் தெரிந் திடக் கொடுப்பன - அயலோர் அறியுமாறு கொடாநின்றன,

அறம் தெரிந்து அழிபசி தீர்ப்பார் போலத் தாழைகள் சோறு அவிழ்ப்பன, பிறர் கண்டு புகழுமாறு கொடுப்பார் போலப் புன்னை கள் கொடுப்பன என்க. பொதிந்த சோறு - பொதிசோறு, மூடிய மகரந்தம். முத்து, பொன், பவளம் என்னும் உவமச் சொற்களால் அரும்பு மலர், பழம் என்னும் பொருள்களைக் கூறுதல் உருவகவுயர்வு நவிற்சி. (௧௬)

கோன்று மீன்பகர் பரதவர் குரம்பைக டோறுஞ்
சென்று தாவிமேற் படர்வன திரைபடு பவளம்
மன்றல் வார்குழ னுளைச்சியர் மனையின்மீ னுணக்கும்
முன்றில் சீப்பன கடலிடு முழுமணிக் குப்பை.

(இ - ள்.) மீன்கொன்று பகர்பரதவர் - மீன்களைக் கொன்று விற்கும் பரதவர்களின், குரம்பைகள் தோறும் - சிறு குடில் தோறும், திரைபடு பவளம் சென்று தாவிமேல் படர்வன - கடலில் உண்டாகிய பவளம் போய்த் தாவி மேலே படரா நின்றன ; மன்றல் வார் குழல் நுளைச்சியர் - மணம் நிறைந்த நீண்ட கூந்தலையுடைய நுளைச்சியர், மனையின் முன்றில் உணக்கும் மீன் - குடிலின் வாயிலிற் புலர்த்தும் மீன்களை, கடல் இடு முழுமணி குப்பை சீப்பன - கடலின் அலைக ளால் இடப்படும் பருத்தமுத்தின் கூட்டங்கள் சிதைப்பன.

திரை, ஆகுபெயர். முன்றிலில் அலகிட்டுப் போக்கப்படுவன மணிக்குப்பை என்றுமாம். (௧௭)

கூற்றம் போன்றகண் ணுளைச்சியர் குமுதவாய் திறந்து
மாற்றம் போக்கினர் பகர்தருங் கயற்குநேர் மாருந்
தோற்றம் போக்குவ வவர்விழித் துணைகளக் கயன்மீன்
நாற்றம் போக்குவ தவர்குழ னறுமலர்க் கைதை*.

(இ - ள்.) கூற்றம் போன்ற கண் நுளைச்சியர் - கூற்றுவன் போன்ற கண்களையுடைய நுளைச்சியர், குமுதவாய் திறந்து மாற்றம் போக்கினர் - ஆம்பல் மலர் போன்ற வாயினைத் திறந்து கூவி, பகர் தரும் கயற்கு - விற்கும் கயல் மீனுக்கு, நேர் மாறும் அவர் விழித்துணை கள் - நேர்பகையாகிய அவர் இருகண்கள், அக் கயல் மீன் தோற்றம் போக்குவ - அக் கயல் மீன்களின் தோற்றத்தைப் போக்குவன ; அவர் குழல் நறுங்கைதை மலர் - அவர் கூந்தலிலுள்ள நறிய தாழைமலர், நாற்றம் போக்குவது - அவற்றின் நாற்றத்தைப் போக்கும்.

மாற்றம் போக்குதல் - விலை கூறுதல். போக்கினர் : முற்றெச்சம். (கஅ)

அலர்ந்த வெண்டிரைக் கருங்கழிக் கிடங்கரி னரும்பர்
குலைந்த விழ்ந்துதேன் றுளும்பிய குமுதமே யல்ல
கலந்த ருங்கட லெறிகருங் காற்பனங் கள்வாய்
மலர்ந்த ருந்திய குமுதமு மொய்ப்பன வண்டு.

(இ - ள்.) அலர்ந்த வெண்திரைக் கருங்கழிக் கிடங்கரின் - பரந்த வெள்ளிய அலைகளையுடைய கரிய கழியாகிய கிடங்கில், அரும்பர் குலைந்து அவிழ்ந்து தேன் துளும்பிய குமுதமே அல்ல - முகையின் கட்டவிழ்ந்து மலர்ந்து தேன் ததும்பிய ஆம்பல் மலரின் மாத்திரமே யல்ல, கலம் தருங் கடல் எறி - மரக்கலங்களையுடைய கடலின் அலை மோதுகின்ற, கருங்கால் பனங்கள் - கரிய அடியையுடைய பனை மரத்தின் கள்ளை, வாய் மலர்ந்து அருந்திய குமுதமும் - வாயைத் திறந்து உண்ட நுளைச்சியரின் வாயாகிய ஆம்பல் மலரிலும், வண்டு மொய்ப்பன - வண்டுகள் மொய்ப்பன.

வெண்டிரைக் கருங்கழி என்பது முரண். கிடங்கர், அரும்பர் என்பன ஈற்றுப்போலி, குமுதம் இரண்டிலும் ஏழனுருபு விரிக்க. பின்னதாகிய குமுதம் வாய்க்கு ஆகுபெயர். (கக)

ஆய பட்டினத் தொருவன்மே லாற்றிய தவத்தாற்
றூய வானவர் தம்மினுந் தூயனுய்ச் சிறிது
தீய தீவினைச் செய்தியாற் றிண்டிமில் வாணர்
மேய சாதியிற் பிறந்துளான் மேம்படு மனையான்.

(இ - ள்.) ஆயபட்டினத்து ஒருவன் - அந்தப் பட்டினத்தின் கண் ஒருவன், மேல் ஆற்றிய தவத்தால் - முற்பிறப்பில் செய்த

(பா - ம்.) * நகைமலர்க்கைதை.

தவத்தினால், தூய வானவர் தம்மினும் தூயனாய் - தூய்மையுள்ள தேவர்களினுந் தூய்மையுள்ளவனாய், சிறிது தீய தீவினைச்செய்தியால்- சிறிது கொடிய தீவினையைச் செய்தவதனால், திண் திமில் வாணர் மேய சாதியில் - திண்ணிய தோணியால் வாழ்வோர் பொருந்திய பரதவர் குலத்தில், பிறந்துளான் - பிறந்தனன்; மேம்படும் அணியான் - (அங்ஙனம் பிறந்து) மேம்பட்ட அவன்.

தீயதீவினை - மிக்க தீமையையுடைய வினை; தீவினை என்றது பெயர் மாத்திரமாக நின்றதெனினும் அமையும். திமில் வாணர் - தோணியிற் சென்று மீன் பிடித்து வாழ்பவர். வாணர், வாழ்நர் என்பதன் மரூஉ. (௨௦)

சேடிய காருடற் பரதவர் திண்டிமி னடத்தா
நெடிய வாழியிற் படுத்தமீன் றிறைகொடு நிறைக்குங்
கடிய வாயிலோ னவர்க்கெலாங் காவலோ னேற்றுக்
கோடிய வானவ னடிக்குமெய் யன்புசால் குணத்தோன்.

(இ - ள்.) செடிய கார் உடல் பரதவர் - முடைநாற்ற முடைய கரிய உடலையுடைய வலைஞர், திண் திமில் நடத்தா - திண்ணிய தோணியை நடத்தி, நெடிய ஆழியில் படுத்தமீன் - நீண்ட கடலிற் பிடித்த மீன்களை, திறைகொடு நிறைக்கும் கடிய வாயிலோன் - திறையாக ஏற்று நிறைக்கப்படும் காவலையுடைய வாயிலை யுடையவன்; அவர்க்கு எலாம் காவலோன் - அப்பரதவர் அனைவருக்கும் காவலன்; ஏற்றுக் கொடிய வானவன் அடிக்கு - இடபக்கொடியையுடைய சிவபெருமான் திருவடிக்கு, மெய் அன்பு சால் குணத்தோன் - உண்மையன்பு நிறைந்த குணத்தினை யுடையவன்.

செடிய கொடிய என்பன பெயரடியாகவும், நெடிய என்பது பண்படியாகவும், கடிய என்பது உரியடியாகவும் பிறந்த குறிப்புவினைப் பெயரெச்சம். (௨௧)

மகவி லாமையா லாற்றநாண் மறுமையோ டிம்மைப்
புகலி லானென வருந்துவா னொருபகற் போது
தகவு சால்பெருங் கிளையோடுஞ் சலதிமீன் படுப்பான்
அகல வார்கலிக் கேகுவா னதன்கரை யோருசார்.

(இ - ள்.) ஆற்றநாள் மகவு இலாமையால் - பன்னாட்கள் வரை மகப்பேறு இன்றி, மறுமையோடு இம்மைப்புகல் இலான் என - மறுமைக்கும் இம்மைக்கும் ஒரு பற்றுக்கோடில்லாதவன் போல, வருந்துவான் - வருந்தும் அப் பரதவமன்னன், ஒருபகல் போது - ஒரு நாள், தகவுசால் பெருங்கிளையோடும் - தகுதிமிக்க பெரிய சுற்றத்தாருடன், சலதிமீன்படுப்பான் - கடல் மீனைப் பிடிப்பதற்கு, அகல ஆர் கலிக்கு ஏகுவான் - அகன்ற கடலுக்குச் செல்கின்றவன், அதன் கரை ஒருசார்- அக்கடற்கரையின் ஒரு பக்கத்தில்.

வருந்துவான் : பெயர். படுப்பான்: வினையெச்சம். (௨௨)

தக்க மேருமா மலைமக னோடையிற் றவத்தான்
மிக்க மீனவன் வேள்வியில் விரும்பிய மகவாய்ப்
புக்க நாயகி தன்பதி யாணையாற் புலவு
தோக்க மீன்விலை வலைஞன்மேற் றவப்பயன் றுரப்ப*.

(இ - ள்.) தக்கமேருமா மலைமகன் - தகுதி வாய்ந்த பெரிய மலையரையன் செய்த, மிக்க தவத்தால் ஓடையில் - சிறந்த தவத்தினால் மலரோடையிலும், மீனவன் வேள்வியில் - பாண்டியன் செய்த சிறந்த தவத்தினால் வேள்வியிலும், விரும்பிய மகவாய் - அவர்கள் வேண்டிய குழந்தை வடிவமாய், புக்கநாயகி - சென்று வெளிப்பட்ட இறைவி, தனபதி ஆணையால் - தனது பதியாகிய இறைவன் ஆணையினால், புலவு தொக்க மீன்விலை வலைஞன் - புலால்நாற்ற மிக்க மீன்விற்கும் பரதவ மன்னன், மேல் தவப்பயன் துரப்ப - முற்பிறப்பிற் செய்த தவப்பயன் செலுத்த.

பொன்னென்னும் ஒற்றுமைபற்றி இமயத்தை மேருவென்றும், மேருவை இமயமென்றும் ஓரோவழிக் கூறுவர் ;

"இமயவில் வாங்கிய"

என எட்டுத்தொகையுள் வருதலுங் காண்க. மிக்க தவத்தால் என மாறி மலைமகனுக்கும் மீனவனுக்கும் கூட்டுக. மலையரையனுக்கு மகளானமையைக் கந்தபுராணம் பார்ப்பதிப்படலத்திலும், மலயத்துவச பாண்டியனுக்கு மகளானமையை இப் புராணத்துத் தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலத்திலும் காண்க. (உ௩)

இச்சை யாலவ னன்பினுக் கிரங்குவாள் போலச்
செச்சை வாய்திறந் தழுதொரு திருமக வாகி
நெய்ச்ச பாசிலைப் புன்னைநன் னீழலிற் கிடந்தாள்
மைச்ச காருடற் கொடுந்தொழில் வலைஞர்கோன் கண்டான்.

(இ - ள்.) இச்சையால் ஒரு திருமகவு ஆகி - தமது இச்சையின் வழியே ஒரு திருமகளாகி, அவன் அன்பினுக்கு இரங்குவாள் போல் - அப்பரதவ மன்னன் அன்பினுக்குத் திருவுள்ள மிரங்குவாள் போல, செச்சைவாய் திறந்து அழுது - தமது செந்நிறமுள்ள திருவாயினைத் திறந்து அழுது, நெய்ச்ச பாசிலைப்புன்னை நல் நீழலில் கிடந்தாள் - நெய்ப்பினையுடைய பசிய இலைகளடர்ந்த புன்னை மரத்தின் குளிர்ந்த நிழலின்கண் கிடந்தனள் ; மைச்சகார் உடல் கொடுந்தொழில் வலைஞர் கோன் கண்டான் - கரிய பெரிய உடலையும் கொடிய தொழிலையுமுடைய பரதவர் மன்னன் கண்டனன்.

செச்சை - செந்நிறம். நெய்த்த, மைத்த என்னும் குறிப்புப் பெயரெச்சங்கள் எதுகை நோக்கிப் போலியாயின. கருமை பெருமையுமாகலின் காருடல் என்பதற்குப் பெரிய உடல் என உரைக்கப் பட்டது. (உ௪)

(பா - ம்.) * தவப்பயன் றூரப்ப.

கார்கோ ணீர்த்திரு மாதுகோல் கரந்துநீ ருறையும்
வார்கோள் பூண்முலை மடந்தைகோல் வனத்துறை வாழ்க்கைத்
தார்கோள் பூங்குழ லணங்குகோ றடங்கணு மிமைப்ப
ஆர்கோ லோமக வாகியீண் டிருந்தன ளென்னு.*

(இ - ள்,) கார்கொள் நீர்த் திருமாதுகொல் - கரிய கடலின்கண் தோன்றிய திருமகளோ, கரந்துநீர் உறையும் - நீரின்கண் மறைந்து வசிக்கும், வார்கொள் பூண்முலை மடந்தைகொல் - கச்சினை அணிந்த அணிகலன் தங்கிய கொங்கையையுடைய நீரரமகளோ, வனத்துஉறை வாழ்க்கை - கானின்கண் உறையும் வாழ்க்கையினையுடைய, தார் கொள் பூங்குழல் அணங்குகொல் - மாலையை யணிந்த பொலிவான கூந்தலையுடைய கானரமகளோ, ஆர்கொலோ மகவு ஆகி - இவருள் யாரோ ஒரு பெண் மகவாகி, தடங்கணும் இமைப்ப - பெரிய கண்களும் இமைக்க, ஈண்டு இருந்தனள் - இங்கு இருந்தனள்; என்னு - என்று கூறி.

வனத்துறை வாழ்க்கை அணங்கு வனதேவதை. குழவியின் பேரழகால் இங்ஙனம் ஐயுற்றுனென்க. தடங்கணும் இமைப்ப என்றது மானுடவுருக் கொண்டிருத்தல் குறிப்பித்தவாறு. கொல், ஐயப்பொருட்டாய இடைச்சொல். (உரு)

பிள்ளை யின்மையேற் கிரங்கியெம் பிரான்றமிழ்க் கூடல்
வள்ள னல்கிய மகவிது வேயென வலத்தோள்
துள்ள வன்புகூர்ந் தெடுத்திரு தோளுறப் புல்லித்
தள்ள ருந்தகைக் கற்பினு டனதுகைக் கோடுத்தான்.

(இ - ள்) பிள்ளை இன்மையேற்கு - பிள்ளையில்லாத எனக்கு, எம்பிரான் தமிழ்க்கூடல் வள்ளல் - எம் பெருமானுகிய தமிழை யுடைய நான்மாடக் கூடலிலுறையும் சோமசுந்தரக் கடவுள், இரங்கி நல்கிய மகவு இதுவே என - அருள்சுரந்து ஈந்தருளிய மகவே இது என்று கருதி, வலத்தோள் துள்ள - வலது தோள் துடிக்க, அன்பு கூர்ந்து எடுத்து இருதோள் உறப் புல்லி - அன்பு மிகுந்து எடுத்து இரண்டு தோள்களும் பொருந்தத் தழுவி, தன் அருந்தகைக் கற்பினுள் தனது கைகொடுத்தான் - நீங்குதலில்லாத தகுதியையுடைய கற்பினை யுடைய மனைவியின் கையிற் கொடுத்தான்.

இன்மையேன் - இன்மையை உடையேன்; இல்லேன். வேண்டு வார் வேண்டுவதை யீதல் பற்றி 'வள்ளல்' என்றுன். மகவே என ஏகாரம் பிரித்துக் கூட்டுக. ஆடவர்க்கு வலத்தோள் துடித்தல் நன்னிமித்தமாகும். (உசு)

பிறவி யந்தகன் றெரிந்துகண் பெற்றெனக் கழிந்த
வறிய னீணிதி பெற்றென வாங்கினுள் வலைஞர்
எறியும் வேலையி னுர்த்தனர் கையெறிந் திரட்டிக்
குறிய வாணகைவ லைச்சியர் குழறினுர் குரவை.

(பா - ம்.) * இருந்தவளென்னு.

(இ - ள்.) பிறவி அந்தகன் தெரிந்து - பிறவிக்குருடன் (பொருள்களை) அறியுமாறு; கண்பெற்றென - கண் பெற்றாற்போலவும், கழிந்த வறியன் நீள்நிதி பெற்றென வாங்கினாள் - மிக்க வறுமையுடையோன் பெரிய வைப்பு நிதியைப் பெற்றாற் போலவும் வாங்கினாள்; எறியும் வேலையின் வலைஞர் ஆர்த்தனர் - அலை வீசுங் கடல் போல வலைஞர் ஆரவாரித்தனர்; குறிய வாள் நகை வலைச்சியர் - ஒளி பொருந்திய சிறிய பற்களையுடைய வலைச்சியர், கை எறிந்து இரட்டி - கையை ஒன்றோடொன்று தாக்கி விசி, குரவை குழறினர் - குரவைப்பாடல் பாடினர்.

பிறந்தநாள் தொட்டுக் கண்ணில்லானும் வறியனும் இடையே கண்ணும் நிதியும் பெற்றால் எய்தும் பெருமகிழ்ச்சிபோல மகப்பேறில்லாதவள் மகவு கிடைத்ததென்னும் பெருமகிழ்ச்சியோடு வாங்கினாள் என்க. தெரிந்து - தெரிய; எச்சத்திரிபு. பெற்றென - பெற்றாலென; விகாரம். கழிந்த, உரியடியாகப் பிறந்த பெயரெச்சம். இரட்டி - மாறிவீசி. (உஎ)

பிழையில் கற்புடை மனைவியும் பெறுதுபெற் றெடுத்த
குழவி யைத்தடங் கோங்கையுங் கண்களுங் குளிரத்
தழுவி முத்தமிட் டுச்சிமோந் தன்புளந் ததும்ப
அழகி தாகிய மணிவிளக் காமென வளர்ப்பாள்.

(இ - ள்) பிழை இல் கற்புடை மனைவியும் - தவறில்லாத கற்பினையுடைய மனைவியும், பெறுதுபெற்று எடுத்த குழவியை - வருந்திப் பெறுமாற் பெற்றெடுத்த மகவினை, தடங்கொங்கையும் கண்களும் குளிரத்தழுவி - பெரிய கொங்கையும் விழிகளுங் குளிருமாறு புல்லி, முத்தமிட்டு உச்சிமோந்து - முத்தங்கொடுத்து உச்சிமோந்து, உளம் அன்பு ததும்ப - உள்ளத்தின்கண் அன்பு நிறைந்து ததும்ப, இது அழகாகிய மணிவிளக்கு ஆம் என வளர்ப்பாள் - இம்மகவு ஓர் அழகிய மாணிக்க விளக்காகும் என்று கருதிப் போற்றி வளர்ப்பாளாயினள்.

பிழைஇல் கற்பு - கலங்கா நிலைமையுடைய கற்பு. பெறுது - சூலுளைந்து பெறுது. இது அழகாகிய எனப் பிரித்தியைக்க; அழகினையுடையதாகிய என்றுமாம். என்றும் பொலிவு குன்றாமைபற்றி 'மணிவிளக்காமென' என்றார். (உஅ)

புலவு மீன்விலைப் பசும்பொனாற் செய்தபல் பூணும்
இலகு மாரமும் பாசியுங் காசிடை யிட்டுக்
குலவு கோவையுஞ் சங்கமுங் குலத்தினுக் கிசைய
அலகி லாதபே ரழகினுக் கழகுசெய் தணிந்தாள்.

(இ - ள்.) புலவுமீன் விலைப்பசும் பொனால் செய்த பல்பூணும் - புலால் நாற்றமுடைய மீன்களை விற்றதனால் வந்த பசியபொன்னாற் செய்த பல அணிகளும், இலகும் ஆரமும் பாசியும் - விளங்காநின்ற முத்துக்களும் பாசிகளுமாகிய இவற்றுடன், காசு இடை இட்டு - மணிகள் இடையிற் கோக்கப்பட்டு, குலவுகோவையும் - விளங்காநின்ற மாலைகளும், சங்கமும் - அக்குமணிகளுமாகிய இவற்றால், குலத்தினுக்கு

இசைய - தங் குலத்துக்குப்பொருந்த, அலகு இலாதபேர் அழகினுக்கு அழகு செய்து அணிந்தாள் - அளவிறந்த பெரிய அழகுக்கு ஓர் அழகு செய்து அலங்கரித்தாள்.

பாசி - பலகறை யென்பாருமுளர். அழகு செய்தணிந்தாள் என்பதற்கு அழகு செய்யாநின்று அணிந்தாள் என்றேனும், அணிந்து அழகு செய்தாள் என்றேனும் பொருள் கொள்க.

"அழகினுக் கழகுசெய்தார்"

என்றார் கம்பநாடரும். (உகூ)

தொண்டை வாய்வலைச் சிறுமியர் தொகையொடுந் துறைபோய்
வண்ட லாடியு நித்தில மாமணி கொழித்துங்
கண்டன் ஞாழல்சூழ் கானலங் கடிமலர் கொய்துங்
கொண்ட லோதிபின் றாழ்தரக் குரைகடல் குளித்தும்.

(இ - ள்.) தொண்டை வாய் வலைச்சிறுமியர் தொகையொடும் - கொவ்வைக் கனிபோன்ற வாயினையுடைய பரதவச்சிறுமியர் கூட்டத்தோடும், துறைபோய் வண்டல் ஆடியும் - கடற்றுறைக்குப் போய்ச் சிற்றில் கோலி விளையாடியும், நித்திலமா மணிகொழித்தும் - பெரிய முத்துக்களை (ச் சிறுமுறத்தால்) கொழித்தும், கண்டல் ஞாழல் சூழ் கானல் - தாழைகளும் புலிநகக் கொன்றைகளுஞ் சூழ்ந்த சோலையில், அம்கடிமலர் கொய்தும் - அழகிய மணம் பொருந்திய மலர்களைக் கொய்தும், கொண்டல் ஓதி பின் தாழ்தர - முகில்போன்ற கூந்தல் பின்னே தாழ, குரை கடல் குளித்தும் - ஒலிக்குங் கடலின்கண் நீராடியும்.

வண்டல் விளையாட்டிற்கமைய முத்துக்களை அரிசியாகக் கொண்டு கொழித்தும் என்க. (௩௦)

தளர்ந்த பைங்கொடி மருங்குலுந் தன்னுயிர்த் தலைவன்
அளந்த வைகலுங் குறைபட வவனிடத் தார்வங்
கிளர்ந்த வன்புமொண் கொங்கையுங் கிளரநாட் சிறிதில்
வளர்ந்து வைகினள் வைகலு முயிரெலாம் வளர்ப்பாள்.

(இ - ள்.) தளர்ந்த பைங்கொடி மருங்குலும் - ஒல்கிய பசிய கொடிபோன்ற இடையும், தன் உயிர்த்தலைவன் அளந்த வைகலும் குறைபட - தனது உயிர்த்தலைவனாகிய இறைவன் வரையறுத்துக் கூறிய நாளும் தேயவும், அவனிடத்து ஆர்வம் கிளர்ந்த அன்பும் - அவனிடத்தில் விருப்பமிக்க அன்பும், ஒண் கொங்கையும் கிளர - ஒள்ளிய கொங்கையும் வளரவும், வைகலும் உயிர் எலாம் வளர்ப்பாள் - நாள்தோறும் உயிர்களனைத்தையும் வளர்க்கும் இறைவி, சிறிது நாளில் வளர்ந்து வைகினள் - சில நாளில் வளர்ந்து தங்கினள்.

மருங்குலும் வைகலும் குறைபட, அன்பும் கொங்கையும் கிளர என்றமை புணர்நிலை யணியின்பாற்படும். ஈற்றடியின் நயம் பாராட்டற்குரியது. (௩௧)

ஆல வாயுடை நாயக னேவிய வாறே
மாலை தாழிள மதிச்சடை மகுடமுங் கரங்கள்
நாலு மாகிய வடிவுடை நந்தியுஞ் சுறவக்
கோல மாகிவெண் டிரைக்கடல் குளித்தினி திருந்தான்.

(இ - ள்.) ஆலவாய் உடை நாயகன் - திருவாலவாயுடைய இறைவன், ஏவியவாறே - பணித்த வண்ணமே, மாலை தாழ் இளமதிச் சடை மகுடமும்-மாலை தாழ்ந்த இளம்பிறையணிந்த சடைமுடியும், கரங்கள் நாலுமாகிய வடிவு உடை நந்தியும் - நான்கு திருக்கரங்களும் பொருந்திய வடிவினையுடைய திருநந்திதேவும், சுறவக்கோலமாகி - சுறாமீன் வடிவமாகி, வெண்திரைக்கடல் குளித்து இனிது இருந்தான் - வெள்ளிய அலைகளையுடைய கடலில் மூழ்கி இனிதாக இருந்தனன்.

நந்தியும், உம்மை எச்சப் பொருட்டு. (கூஉ)

குன்றெ றிந்தவேற் குழகனுங் கரிமுகக் கோவும்
அன்றெ றிந்ததந் திரமெலாஞ் சிரமிசை யடக்காக்
கன்றெ றிந்தவ னறிவருங் கழன்மனத் தடக்கா
நின்றெ றிந்தகன் மத்தென* வுழக்கிடா நிற்கும்.

(இ-ள்.) குன்று எறிந்தவேல் குழகனும்-கிரவுஞ்சமலையைப் பிளந்த வேற்படையையுடைய முருகக்கடவுளும், கரிமுகக் கோவும் - யானை முகத்தையுடைய மூத்த பிள்ளையாரும், அன்று எறிந்த தந்திரம் எலாம்-அன்று கடலின்கண் வீசிய நூல்களனைத்தையும், சிரமிசை அடக்கா-முடியின்கண் அடக்கியும், கன்று எறிந்தவன் அறிவரும் கழல் - விளங்கனி உகுக்கக் கன்றினை வீசிய திருமாலும் அறிதற்கரிய திருவடியை, மனத்து அடக்கா நின்று - மனத்தின்கண் அடக்கியும் நின்று, எறிந்த கல் மத்து என உழக்கிடாநிற்கும்-கடலைக் கலக்கிய மந்தரமலையாகிய மத்தைப்போல அதனைக் கலக்கா நின்றது அச் சுறாமீன்.

தந்திரம் - நூல்; ஆகமம். ஓரசுரன் ஆன்கன்றின் வடிவு கொண்டு தீங்கு புரியவருதலை யறிந்த கண்ணன் அக் கன்றினைக் குணிலாகக் கொண்டு விளவின்கனி யெறிந்து அவனுயிர் செகுத்தனன் என்பது வரலாறு;

"கன்றுகுணிலாக் கனியுகுத்த மாயவன்"

என்றார் இளங்கோவடிகளும். (கூங)

கிட்டுந் தோணியைப் படகினைக்† கிழிபட விசைபோய்த்
தட்டுஞ் சோங்கினை மேலிடு சரக்கொடுங் கவிழ
முட்டுஞ் சீறிமேல் வரும்பல சுறவெலா முடுக்கி
வெட்டுங் கோடுகோத் தேனைய மீனெலாம் வீசும்.

(பா - ம்.) * வன்மத்தென. † படவினை.

(இ - ள்.) கிட்டும் தோணியைப் படகினைக் கிழிபட - நெருங்கி வரும் தோணியையும் படகினையும் அவை பிளவுபடுமாறு, விசை போய்த் தட்டும் - விரைந்து சென்று தாக்கும்; சோங்கினை மேல்இடும் சரக்கொடும் கவிழமுட்டும் - சோங்கினை அதன் மேலிட்ட சரக்குடன் கவிழுமாறு (கீழே சென்று) முட்டும்; சீறிமேல் வரும்பல சுறவு எலாம் முடுக்கி வெட்டும் - சினந்து தன்மேல் வருஞ் சுறாமீன்களனைத்தையுந் துரத்தி வெட்டும், ஏனைய மீன் எலாம் கோடுகோத்து வீசும்-மற்றைய மீன்களெல்லாவற்றையும் கொம்பிற் கோத்துப் புறத்தில் வீசும்.

தோணி, படகு, சோங்கு என்பன மரக்கல விசேடம். (௩௪)

தரங்க வாரிநீர் கலக்கலாற் றந்திரங் கோடுமேல்
இரங்கு வான்புல வோர்க்கமு தீகையா லெண்ணூர்
புரங்கண் மூன்றையும் பொடித்தவ ஞணையாற் புனலிற்
கரங்க ணான்கையுங் கரந்தமீன் மந்தரங் கடுக்கும்.

(இ - ள்.) எண்ணூர் புரங்கள் மூன்றையும் பொடித்தவன் ஆணையால் - பகைவரின் மூன்று புரங்களையும் எரித்த இறைவனது ஆணையினால், புனலில் - கடலின்கண், கரங்கள் நான்கையும் கரந்தமீன் - நான்கு திருக்கரங்களையும் மறைத்து உறையும் அச்சுறாமீன், தரங்கவாரி நீர் கலக்கலால்-அலைகளையுடைய கடல் நீரைக் கலக்குதலாலும், தந்திரம்மேல்கோடு-நூல்களைச் சிரத்திற்றாங்கி, இரங்குவான்புலவோர்க்கு-மனம் வருந்தும் சிறந்த புலவர்களுக்கு, அமுது ஈகையால் - ஞானமிர்தத்தை அளித்தலாலும் (கடலைக்கலக்கித் தனது வலிமையைக் கொண்டு வருந்திய சுவர்க்கத்திலுள்ள தேவர்கட்குத் தேவாமிர்தத்தைக் கொடுத்த,) மந்தரம் கடுக்கும் - மந்தரமலையை நிகர்க்கும்.

தந்திரம் - நூல், தனது வலிமை. மேல் - சென்னி, மேலிடம். வான் - மேன்மை, சுவர்க்கம். புலவோர் - அறிஞர், தேவர். அமுது - ஞானம், தேவாமிர்தம். மேல்கொடு என மாற்றித் தலைமேற் கொண்டு எனவும், மேல்வான் எனக் கூட்டிமேலிடத்ததாகிய சுவர்க்கம் எனவும் உரைக்க. நந்தியாகிய மீன் என்பார் 'கரங்கள் நான்கையும் கரந்தமீன்' என்றார். இச்செய்யுள் செம்மொழிச் சிலேடையணி. (௩௫)

தள்ளு நீர்த்திரை போய்நுளைச் சேரிகள் சாய்ப்பத்*
துள்ளு நீர்குடித் தேழுமறை சூலிறப் பாயும்
முள்ளு நீண்மருப் புடையமீன் மோய்கல மந்தத்
தெள்ளு நீர்த்துறை நடையற வின்னணந் திரியும்.

(இ - ள்.) முள்ளு நீண்மருப்பு உடைய மீன் - முள் வாய்ந்த நீண்ட கொம்பினையுடைய அச்சுறாமீன், தள்ளும் நீர்த்திரை போய் -

---

(பா - ம்.) *சேரிகள் சாய

தள்ளுகின்றநீரின் அலைகள் சென்று, நுளைச்சேரிகள் சாய்ப்பத் துள்ளும்- நுளைச்சேரியிலுள்ள குடில்களை வீழ்த்துமாறு துள்ளும்; நீர்குடித்து எழுமழை சூல் இறப் பாயும் - நீரைப்பருகி மேலே எழுமுகிலின் கருச்சிதையுமாறு பாயும்; அந்தத் தெள்ளும் நீர்த்துறை - அந்தத் தெளிந்த நீரினையுடைய துறையின்கண், மொய்கலம் நடைஅற இன்னணம் திரியும் - நெருங்கிய கப்பல்களின் போக்கு வரவு இல்லையாமாறு இங்ஙனம் உலவும். (௩௬)

எற்றி தாலெனத் துறைமகன் யாமிது பிடிக்கும்
பெற்றி யாதெனக் கிளையொடும் பெருவலைப் பாசம்
பற்றி யாழியூர் படகுகைத்* தெறிந்தனன் படகைச்
சுற்றி வாய்கிழித் தெயிற்றிறப் பாய்ந்தது சுறவம்.

(இ - ள்.) துறைமகன் - நெய்தனிலத்தலைவன், இது எற்று என - இஃது எத்தன்மைத்து எனவும், யாம் இது பிடிக்கும் பெற்றியாது என - யாம் இதனைப் பிடிப்பது எவ்வாற்றாலெனவும் (கருதி). கிளையொடும் ஆழி ஊர் படகு உகைத்து - தமருடன் கடலின்கண் செல்லும் படகினைச் செலுத்தி, பெருவலைப் பாசம் பற்றி எறிந்தனன் - பெரிய வலைக்கயிற்றைப் பிடித்து வீசினன்; சுறவம் - அச்சுறாமீன், படகைச் சுற்றி வாய் கிழித்து - அப்படகினைச் சூழ்ந்து வாயைப் பிளந்து, எயிற்று இறப் பாய்ந்தது - தனது கொம்பினால் அது சிதையுமாறு பாய்ந்தது.

எற்றிதால், ஆல்: அசை. துறைமகன் - துறைவன்; நெய்தற் றலைவன்., வாய்கிழித்து - வாய் பிளந்து:

"தீவா யுழுவை கிழித்ததந்தோ"

என்னும் திருச்சிற்றம்பலக் கோவையார்ச் செய்யுளிலும் கிழித்த தென்பது இப்பொருட்டாதல் காண்க. எயிற்றால் என மூன்றனுருபு விரிக்க. (௩௭)

படவு டைப்பவோர் தோணிமேற் பாய்ந்துமத் தோணி
விடவு றத்தெறித் தெறிந்திட விசைத்தொரு சோங்கின்
இடைபு குந்துநீள் வலையெறிந் திங்ஙனம் வெவ்வே
றுடல்பு குந்துழ லுயிரெனப் பரதனு முழல்வான்.

(இ - ள்.) படவு உடைப்ப - இங்ஙனம் அப் படகினை உடைக்க, ஓர் தோணிமேல் பாய்ந்தும் - ஒரு தோணிமேற் பாய்ந்து வலைவீசியும், அத்தோணி விடவு உறத்தெறித்து எறிந்திட - அத்தோணியும் பிளவுபடுமாறு பாய்ந்து சிதைக்க, விசைத்து ஒரு சோங்கின் இடை புகுந்து நீள் வலை எறிந்து - விரைந்து ஒரு சோங்கின்கண் ஏறி நீண்ட வலையை வீசியும், இங்ஙனம் - இவ்வாற்றால், வெவ்வேறு உடல் புகுந்து உழல் உயிர் என - வெவ்வேறு உடலின்கட் புகுந்து உழலும் உயிர்போல, பரதனும் உழல்வான் - பரதவமன்னனும் உழன்று திரிவானாயினன்.

(பா - ம்). *படவுகைத்து.

படகினும் தோணியும், தோணியினும் சோங்கும் பெரியனவா மென்க. விடவு - பிளவு. ஒருயிர் வினைவயத்தால் வெவ்வேறுடம் பெடுத்து உழலுதல்போல் இவன் மீன் பிடிக்கும் வினையால் வெவ் வேறு கலங்களிற் புகுந்து உழன்றான் என்பதனால் இது தொழி லுவமம். (ருஅ)

முன்னர் வீசினுற் பின்னுற முளைத்தெழு முயன்று
பின்னர் வீசினுன் முன்னுறப் பெயர்ந்தெழும் வலத்தில்
உன்னி வீசினு லிடம்பட வுருத்தெழு மிடத்தின்
மன்னி வீசினுல் வலத்தெழு மகரவே றதுதான்.

(இ - ள்.) மகர ஏறு - அச்சுறுமீன், முன்னர் வீசினால் பின்னுற முளைத்து எழும்-முன்னே வலை வீசினால் பின்னே தோன்றி மேலெழும்; முயன்று பின்னர் விசினால் - முயன்று பின்னே அவ்வலையினை வீசினால், பெயர்ந்து முன்னுற எழும் - (அப்பின்னிடத்து நின்றும்) போய் முன்னே எழும்; வலத்தில் உன்னி வீசினால் - வலப்புறத்தில் (அது இருக்குமிடம்) அறிந்து விசினால், இடம்பட உருத்து எழும் - இடப் புறத்தின்கண் சினந்து மேலெழும்; இடத்தில் மன்னி வீசினால் - இடப்புறத்தில் பொருந்த வீசினால், வலத்து எழும் - வலப்புறத்தில் மேலே எழும்.

மன்னி என்பதனை மன்ன வெனத் திரிக்க.

சுறவின் ஆண் ஏறெனப் படுதலை,

"கடல்வாழ் சுறவும் ஏறெனப் படுமே"

என்னும் தொல்காப்பிய மரபியற் சூத்திரத்தானறிக. அது, பகுதிப் பொருள் விகுதி. தான், அசை. (ருகு)

எறிவ லைப்படு மகமலர்ந் தீர்ப்பவ னுள்ளம்
மறுத லைப்பட வலையினும் வழீஇப்பொரு ளாசை
நெறிம லர்க்குழ னல்லவர் நினைவென நினைவுற்
றறிப வர்க்கரி தாம்பரம் பொருளென வகலும்.

(இ - ள்.) எறி வலைப்படும் - வீசிய வலையின் கண் அகப்படும்; அகமலர்ந்து ஈர்ப்பவன் உள்ளம் மறுதலைப்பட - (அகப்பட்டதென) மனமகிழ்ந்து இழுப்பவனுடைய உள்ளம் வருந்த, வலையினும் வழீஇ - அவ்வலையினின்றும் வழுவி, பொருள் ஆசை நெறிமலர்க்குழல் நல்லவர் நினைவு என - பொருளாசை மிக்க நெறித்த மலரணிந்த கூந்தலை யுடைய விலைமகளிர் நினைவுபோலவும், நினைவுற்று அறிபவர்க்கு அரி தாம் பரம்பொருள் என - சிந்தித்து அறிபவர்க்கு அறிதற்கரிய சிவ பரம் பொருள்போலவும், அகலும் - நீங்கும்.

மறுதலைப்பட-மகிழ்ச்சிக்கு மாறாக; துன்பமுண்டாக. வலையினும்- வலையினின்றும், விலைமகளிர் மனம் ஒருவழி நில்லாமைபோல ஓரிடத்து நில்லாமையாலும், ஆன்மபோதத்தால் அறிவேமென முயல்வார்க்குப் பரம்பொருள் அறியப்படாதகலுதல்போல அகப்

படாது நீங்குதலாலும் பொதுமகளிர் நிலையெனவும் பரம்பொருளெனவும் அகலும் என்றார். பரம்பொருள் ஆன்மபோதத்தால் காணப்படுவதன்றென்பதனை,

"தன்னறி வதனாற் காணுந் தன்மைய னல்ல னீசன்"

என்னும் சிவஞான சித்தியால் அறிக. (௬0)

ஏவ லாளரோ டின்னவா றின்னமீன் படுத்தற்
காவ தாந்தொழி லியற்றவு மகப்படா தாக
யாவ ரேயிது படுப்பவ ரேன்றிருங் கானற்
காவ லாளனும் பரதருங் கலங்கஞ ருழந்தார்.

(இ - ள்.) ஏவலாளரோடு இன்னவாறு-ஏவலாளருடன் இங்ஙனம், இன்ன மீன் படுத்தற்கு ஆவது ஆம் தொழில் இயற்றவும் - இந்த மீனைப் பிடிப்பதற்கு உரிய தொழிலைச் செய்யவும், அகப்படாதாக - அஃது அகப்படாதாக, யாவரே இது படுப்பவர் என்று-இனி யாவரே இதனைப் பிடிக்க வல்லார் என்று கருதி, இருங் கானல் காவலாளனும் - பெரிய நெய்தனிலத்தலைவனும், பரதரும் கலங்கு அஞர் உழந்தார் - பரதவரும் பெருந்துன்பத்தால் வருந்தினார்கள்.

ஆவதாம்தொழில் - பொருந்திய வினை. கலங்கு அஞர் - நெஞ்சு கலங்குந் துன்பம். (௬க)

சங்க லம்புதண் டுறைகெழு நாடனிச் சலதித்
துங்க மந்தர மேனக்கிடந் தலமருஞ் சுறவை
இங்க ணைந்தெவன்* பிடிப்பவ னவனியா னீன்ற
மங்கை மங்கலக் கிழானேன மனம்வலித் திருந்தான்.

(இ - ள்.) சங்கு அலம்பு தண் துறை கெழுநாடன் - சங்குகள் ஒலிக்கும் குளிர்ந்த நீர்த்துறைகள் பொருந்திய கடல் நாடன், இச்சலதி - இக் கடலின்கண், துங்க மந்தரம் எனக் கிடந்து அலமரு சுறவை - வலிமிக்க மந்தரமலைபோலக் கிடந்து கலக்கும் சுறாமீனை, இங்கு அணைந்து எவன் பிடிப்பவன் - இங்கு வந்து பிடிப்பவன் எவனோ, அவன் யான் ஈன்ற மங்கை மங்கலக்கிழான் என-அவனே யான் பெற்ற மங்கையின் மணவிழாவுக்கு உரியவன் என்று, மனம் வலித்திருந்தான்- உறுதிகொண்டிருந்தான்.

கிழான் - உரியவன். வலித்தல் - உறுதியாக எண்ணுதல். (௬உ)

நந்தி நாதனு மினையனு யங்கய ணுட்டத்
திந்து வாணுத லாளுமங் கனையளா யிருப்பத்
தந்தி நாலிரண் டேந்திய தபனிய விமானத்
துந்து நீர்ச்சடை யார்மண முன்னினா ரின்னே.

(பா - ம்.) *அங்கணைந்தெவன்.

(இ - ள்.) நந்திநாதனும் இனையனாய் - திருநந்திதேவும் இத்தன்மையனாயும், அங்கயல் நாட்டத்து - அழகிய கயல்போலும் கண்களையும், இந்துவாள் நுதலாளும் - பிறைபோன்ற ஒள்ளிய நெற்றியையும் உடைய தேவியும், அங்கு அனையளாய் இருப்ப - அங்கு அத்தன்மையளாயும் இருக்க, நாலிரண்டு தந்தி ஏந்திய - எட்டு யானைகள் தாங்கிய, தபனிய விமானத்து-பொன்விமானத்தின்கண் எழுந்தருளிய, உந்து நீர்ச்சடையார் - தாவுகின்ற கங்கையை யணிந்த சடையையுடைய சோமசுந்தரக்கடவுள், மணம் உன்னினார் - திருமணத்தினைத் திருவுளம் கொண்டருளினர்.

மன், ஓ: அசைகள். (௬௩)

உயர்ந்த சாதியுந் தம்மினு மிழிந்தவென் றுன்னிக்
கயந்த நெஞ்சுடை வலைக்குலக் கன்னியை வேட்பான்
வியந்து கேட்பதெவ் வாறவர் வெறுக்குமுன் னவருக்
கியைந்த மீன்வலை யுருவெடுத் தேகுது மென்னா.

(இ - ள்.) உயர்ந்த சாதியும் - உயர்ந்த மரபுகளும், தம்மினும் இழிந்த என்று உன்னி-தங்கள் மரபினும் தாழ்ந்தனவே என்று கருதி, கயந்தநெஞ்சுடை வலைக்குலக்கன்னியை-பெருமையமைந்த உள்ளத்தையுடைய வலைக்குலத்துத் தோன்றிய அம்மையை, வேட்பான் வியந்து கேட்பது எவ்வாறு - மணக்கும் பொருட்டு மேன்மை கூறிக் கேட்பது எங்ஙனம், அவர் வெறுக்குமுன் - அங்ஙனம் கேட்டு அவர் வெறுத்து இல்லையென்பதற்கு முன்னரே, அவருக்கு இயைந்த மீன் வலை உரு எடுத்து ஏகுதும் என்னா - அவருக்குப் பொருந்திய மீன் பிடிக்கும் வலைஞன் உருவினை எடுத்துப் போவோம் என்று கருதி.

கயந்த, கய என்னும் உரியடியாகப் பிறந்த பெயரெச்சம்; கய பெருமையாதலை,

''தடவும் கயவும் நளியும் பெருமை''

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தாலறிக; இனி, கசந்த என்பதன் போலியாகக் கொண்டு, பிற குலங்களை, வெறுத்த என்றுரைத்தலுமாம். வேட்பான் : வினையெச்சம். வலை - வலைஞன். (௬௪)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

கருகிருண் முகந்தா லன்ன கச்சினன் கச்சோ டார்த்த
சுரிகையன் றேண்மே லிட்ட துகிலினன் குஞ்சி சூட்டும்*
முருகு கோப் பளிக்கு† நெய்தற் கண்ணியன் மூத்த வானோர்
இருவரு மறையுந் தேடி யிளைப்பவோர் வலைஞ னானான்.

(இ - ள்.) கருகு இருள் முகந்தால் அன்ன கச்சினன் - மிகக் கரிய இருளை முகந்தாலொத்த கச்சினையுடையனாய், கச்சொடு ஆர்த்த

(பா - ம்.) *குஞ்சிச்சூட்டும்; குஞ்சிசூடும். †கொப்புளிக்கும்.

சுரிகையன் - அக் கச்சுடன் கட்டிய உடைவாளை யுடையவனாய், தோள்மேல் இட்ட துகிலினன் - தோளின்கண் இட்ட மேலாடை யுடையவனாய், குஞ்சி சூட்டும் - மயிரின்கண் சூட்டிய, முருகு கொப்ப ளிக்கும் நெய்தற்கண்ணியன் - தேன் கொப்பளிக்கும் நெய்தல்மாலையை யுடையவனாய், மூத்த வானோர் இருவரும் மறையும் தேடி இளைப்ப - தேவர்களில் மூத்தவராகிய திருமாலும் பிரமனுமாகிய இருவரும் மறை களும் தேடிக் காணாது இளைக்க, ஓர் வலைஞன் ஆனான் - ஒரு வலை மகன் வடிவங் கொண்டருளினன்.

கச்சினன் முதலிய குறிப்பு முற்றுக்கள் வினையெச்சமாயின. மூத்த - பெருமையுடைய என்றுமாம். (௬௫)

முழுதுல கீன்ற சேற்கண் முதல்வியை யருளி லார்போல்
இழிதொழில் வலைமா தாகச் சபித்தவா றென்னே யென்றும்
பழிபடு சாப மேறார் பரதராய் வரவும் வேண்டிற்
றழகிது நன்று நன்றெம் மாலவா யடிகள் செய்கை.

(இ - ள்.) உலகு முழுது ஈன்ற சேல்கண் முதல்வியை - உலக மனைத்தையும் பெற்றருளிய அங்கயற்கண்ணம்மையை, அருளிலார் போல் - அருளில்லாதவர் போல, இழிதொழில் வலைமாது ஆகச் சபித்தவாறு என்னே - இழிந்த தொழிலையுடைய வலைக்குலக்கன்னி ஆகுமாறு சபித்த காரணம் யாதோ (அங்ஙனம் சபித்ததால்), என்றும் பழிபடு சாபம் ஏறார் - எஞ்ஞான்றும் பழிபொருந்திய சாபம் ஏற்காத தாம், பரதராய் வரவும் வேண்டிற்று - ஒரு வலைஞராக வரவும் வேண்டியதாயிற்று; எம் ஆலவாய் அடிகள் செய்கை - எமது ஆலவா யின்கண் எழுந்தருளிய ஆண்டவன் செய்கை, நன்று நன்று அழகிது - நன்று நன்று அழகாயிருந்தது.

ஏனைத் தேவரெல்லாம் சாபத்தாற் பற்றப்படுவாராதலும், சிவ பெருமான் ஒருவரே சாபத்தாற் பற்றப்படாராதலும் உணர்த்துவார் 'பழிபடு சாபமேறார்' என்றார்;

"சங்கையின் முனிவர் யாருஞ் சாற்றிய சாபம் யாவும்
எங்கடம் பெருமான் றன்னை மெய்திய தில்லை யன்னோர்
அங்கவன் றன்பா லுய்க்கு மளவையி லிறுதிநாளிற்
பொங்கெரி யதன்மேற் செல்லும் பூனைபோன் மாய்ந்த வன்றே"

என்னும் கந்தபுராணம் - ததீசியுத்தரப்படலச் செய்யுள் காண்க. செய்கை - விளையாட்டு, அழகிது நன்று நன்று என்பன வியப்பின் கண் வந்தன. இது கவிக்கூற்று. (௬௬)

தன்பெருங் கணத்து ளானோர் தலைவனுஞ் சலதி வாணன்
என்பது தோன்ற வேட மெடுத்தெறி வலைதோ ளிட்டு
வென்புற மலைப்பக் காவி மீனிடு குடம்பை தாங்கிப்
பின்புற நடந்து செல்லப் பெருந்துறைப் பாக்கம் புக்கான்.

(இ - ள்.) தன்பெருங் கணத்துளான் ஓர் தலைவனும் - தனது சிவ கணத்துள் தலைவனுயுள்ள ஒருவனும், சலதிவாணன் என்பது தோன்ற வேடம் எடுத்து - நெய்தனில வாழ்க்கையான் என்பது தோன்ற அவ் வுருக்கொண்டு, எறிவலைதோள் இட்டு-வீசும் வலையைத் தோளின்கண் இட்டு, வென்புறம் அலைப்ப - முதுகின் புறத்தை அலைக்க, மீன் இடு குடம்பை காவி தாங்கி - மீன் இடும் கூட்டினைத் தொடுத்துத் தாங்கி, பின்புறம் நடந்து செல்ல - பின்புறமாக நடந்துவர, பெருந் துறைப் பாக்கம் புக்கான் - பெரிய கடற்றுறையிலுள்ள பாக்கத்தை அடைந்தனன்.

காவுதல் - தண்டின் இருபுறத்தும் தொடுத்தல். (சஎ)

கழித்தலைக் கண்டற் காடுங் கைதையங் கானு நெய்தற்
சுழித்தலை கிடங்கு* நீத்துச் சுஃறெனுந் தோட்டுப் பெண்ணை
வழித்தலை சுமந்து வார்கள் வார்ப்பவா யங்காந் தாம்பல்
குழித்தலை மலர்பூங் கானற் கொடுவலைச் சேரி சேர்ந்தான்†.

(இ - ள்.) கழித்தலைக் கண்டல் காடும் கைதையம் கானும் - கழியின்கண் உள்ள முள்ளிக்காட்டினையும் தாழைக்காட்டினையும், நெய்தல் சுழித்து அலை கிடங்கும் நீத்தும் - நெய்தன் மலரைச் சுழித்து அலைக்குங் கிடங்குகளையும் கடந்து, சுஃறெனும் தோட்டுப் பெண்ணை - சுஃறென்று ஒலிக்கும் மடலையுடைய பனையானது, வழி - வழியின்கண் நின்று, வார் கள் தலை சுமந்து வார்ப்ப - ஒழுகுங் கள்ளினைத் தலையின் கண் சுமந்து வார்க்க, குழித்தலை - குழியின்கண், ஆம்பல்வாய் அங்காந்து மலர் - ஆம்பல் வாய் திறந்து மலரும், பூங்கானல் கொடு வலைச் சேரி சேர்ந்தான் - அழகிய சோலைகள் சூழ்ந்த நுளைச்சேரியை அடைந்தான்.

கண்டல் - கடல் முள்ளிச்செடி; கண்டலைச் செந்தாழை என்றும், கைதையை வெண்டாழை என்றும் கூறுவாருமுளர். சுஃறெனும், ஒலிக்குறிப்பு. பெண்ணை கள்வார்ப்ப ஆம்பல் வாயங்காந்து மலரும் என்ற வருணனையால் அச்சேரியிலுள்ளார் கள்ளுண்டல் குறிக்கப் பட்டது. கொடுவலை - வளைந்த முடிகளையுடைய வலை; கொடுமை யுடைய சேரியுமாம். (சஅ)

பெருந்தகை யமுதன் ஞளைப் பெறுதுபெற் றெடுப்பா னேற்ற
அருந்தவ வலைஞர் வேந்த னதிசய மகத்துட் டோன்ற
வருந்தகை யுடைய காளை வலைமகன் வரவு நோக்கித்
திருந்தழ குடைய நம்பி யாரைநீ செப்பு கென்றான்.

(இ - ள்.) பெருந்தகை அமுது அன்னாளை - பெருந்தகைமை வாய்ந்த அமுதம் போலும் உமையம்மையை, பெறுது பெற்றெடுப் பான் நோற்ற அருந்தவ வலைஞர் வேந்தன் - பெறுது பெறுதற்குச் செய்த அரிய தவத்தினையுடைய வலைஞர் மன்னன், அகத்துள் அதி சயம் தோன்ற வரும் - மனத்தின்கண் ஒரு வியப்புத் தோன்றுமாறு

(பா - ம்.) * சுழித்தலைக் கிடங்கு. † சேரி சார்ந்தான்.

வருகின்ற, தகை உடைய காளை வலைமகன் வரவு நோக்கி - தகுதியை யுடைய காளைப்பருவமுடைய வலைமகனது வருகையைப் பார்த்து, திருந்து அழகு உடைய நம்பி - திருந்திய அழகினையுடைய நம்பி, நீ யார் செப்புக என்றான் - நீ யார் கூறுவாயாக என்று வினவினன்.

எடுப்பான்: வினையெச்சம். அதிசயம் அகத்துட்டோன்ற நோக்கி என்றுமாம், நம்பி - ஆணிற் சிறந்தவன். யாரை, ஐகாரம் முன்னிலைக்கண் வந்தது. செப்புகென்றான், அகரம் தொகுத்தல். (சக)

சந்தநான் மறைக டேருத் தனியொரு வடிவாய்த் தோன்றி
வந்தமீன் கோலைஞன் கூறு மதுரையில் வலைஞர்க் கெல்லாந்
தந்தைபோற் சிறந்து ளானோர் தனிவலை யுழவ னல்ல
மைந்தன்யான் படைத்துக் காத்துத் துடைக்கவும் வல்லனாவேன்.

(இ - ள்.) சந்த நான் மறைகள் தேருத் தனி ஒரு வடிவாய்த் தோன்றி வந்த - சந்தமமைந்த நான்கு மறைகளும் அறியாத ஒப்பற்ற ஒரு வடிவமாய்த்தோன்றி வந்தருளிய, மீன் கொலைஞன் கூறும் - மீன் கொலை புரியும் வலைஞன் கூறுவான்; மதுரையில் வலைஞர்க்கு எல்லாம் - மதுரையின்கண் வலைஞர் அனைவருக்கும், தந்தைபோல் சிறந்துள்ள ஓர் தனிவலை உழவன் - தந்தைபோன்று மேம்பட்டான் ஆகிய ஒரு ஒப்பற்ற வலையுழவனது, நல்ல மைந்தன் யான் - நல்லபுதல்வன் யான்; படைத்துக் காத்து துடைக்கவும் வல்லன் ஆவேன் - ஆக்கி அளித்து அழிக்கவும் வல்லனாவேன்.

சந்தம் - பண். வலையுழவன் - வலையால் உழுதுண்பான்; வாழ்க்கை நடாத்துதற்குரிய எல்லாத்தொழில்களையும் உழவாகச் சார்த்திக் கூறுதல் வழக்கு. தான் இறைவனாதற் கேற்ப முத்தொழிலும் வல்லன் எனவும், வலைஞனாக வந்தமைக்கேற்ப மீன்படுத்து வைத்து விற்க வல்லன் எனவும் கவர் பொருள் படக் கூறினன் என்க; கடல் வாணனாகையால், கடற்குரிய முத்தொழிற்குணமும் தனக்குளவென்பது தோன்றக் கூறினான் எனலுமாம். (நO)

அல்லது வான்மீ னெல்லா மகப்பட வலைகோண் டோச்ச
வல்லவ னாவே னென்ன மற்றிவன் வலைஞன் கோலம்
புல்லிய மகன்கோன் முன்னம் புகன்றசொல் லொன்றிப் போது
சொல்லிய தொன்றி ரண்டுஞ் சோதனை காண்டு மென்னா.

(இ - ள்.) அல்லது - அன்றியும், வான்மீன் எல்லாம் அகப்பட - பெரிய மீன்களனைத்தும் அகப்படுமாறு, வலைகொண்டு ஓச்சவல்லவன் ஆவேன் என்ன - வலைகொண்டு எறிவதிலும் வல்லவனாவேனென்று கூற, இவன் வலைஞர் கோலம் புல்லிய மகன்கொல் - இவன் (உண்மை வலைஞனன்றி) வலைஞர் வடிவெடுத்து வந்த மகனோ, முன்னம் புகன்ற சொல் ஒன்று - முன் கூறிய சொல் ஒன்று; இப்போது சொல்லியது ஒன்று - இப்பொழுது சொன்னசொல் ஒன்று; இரண்டும் சோதனை

(இ - ள்.) தன்பெருங் கணத்துளான் ஓர் தலைவனும் - தனது சிவ கணத்துள் தலைவனுயுள்ள ஒருவனும், சலதிவாணன் என்பது தோன்ற வேடம் எடுத்து - நெய்தனில வாழ்க்கையான் என்பது தோன்ற அவ் வுருக்கொண்டு, எறிவலைதோள் இட்டு-வீசும் வலையைத் தோளின்கண் இட்டு, வென்புறம் அலைப்ப - முதுகின் புறத்தை அலைக்க, மீன் இடு குடம்பை காவி தாங்கி - மீன் இடும் கூட்டினைத் தொடுத்துத் தாங்கி, பின்புறம் நடந்து செல்ல - பின்புறமாக நடந்துவர, பெருந் துறைப் பாக்கம் புக்கான் - பெரிய கடற்றுறையிலுள்ள பாக்கத்தை அடைந்தனன்.

காவுதல் - தண்டின் இருபுறத்தும் தொடுத்தல். (௬எ)

கழித்தலைக் கண்டற் காடுங் கைதையங் கானு நெய்தற்
சுழித்தலை கிடங்கு* நீத்துச் சுலீறெனுந் தோட்டுப் பெண்ணை
வழித்தலை சுமந்து வார்கள் வார்ப்பவா யங்காந் தாம்பல்
குழித்தலை மலர்பூங் கானற் கொடுவலைச் சேரி சேர்ந்தான்†.

(இ - ள்.) கழித்தலைக் கண்டல் காடும் கைதையம் கானும் - கழி யின்கண் உள்ள முள்ளிக்காட்டினையும் தாழைக்காட்டினையும், நெய்தல் சுழித்து அலை கிடங்கும் நீத்தும் - நெய்தன் மலரைச் சுழித்து அலைக்குங் கிடங்குகளையும் கடந்து, சுலீறெனும் தோட்டுப் பெண்ணை- சுலீறென்று ஒலிக்கும் மடலையுடைய பனையானது, வழி - வழியின்கண் நின்று, வார் கள் தலை சுமந்து வார்ப்ப - ஒழுகுங் கள்ளினைத் தலையின் கண் சுமந்து வார்க்க, குழித்தலை - குழியின்கண், ஆம்பல்வாய் அங் காந்து மலர் - ஆம்பல் வாய் திறந்து மலரும், பூங்கானல் கொடு வலைச் சேரி சேர்ந்தான் - அழகிய சோலைகள் சூழ்ந்த நுளைச்சேரியை அடைந்தான்.

கண்டல் - கடல் முள்ளிச்செடி; கண்டலைச் செந்தாழை என்றும், கைதையை வெண்டாழை என்றும் கூறுவாருமுளர். சுலீறெனும், ஒலிக்குறிப்பு. பெண்ணை கள்வார்ப்ப ஆம்பல் வாயங்காந்து மலரும் என்ற வருணனையால் அச்சேரியிலுள்ளார் கள்ளுண்டல் குறிக்கப் பட்டது. கொடுவலை - வளைந்த முடிகளையுடைய வலை; கொடுமை யுடைய சேரியுமாம். (௬அ)

பெருந்தகை யமுதன் னாளைப் பெறுதுபெற் றெடுப்பா னோற்ற
அருந்தவ வலைஞர் வேந்த னதிசய மகத்துட் டோன்ற
வருந்தகை யுடைய காளை வலைமகன் வரவு நோக்கித்
திருந்தழ குடைய நம்பி யாரைநீ செப்பு கென்றான்.

(இ - ள்.) பெருந்தகை அமுது அன்னாளை - பெருந்தகைமை வாய்ந்த அமுதம் போலும் உமையம்மையை, பெறுது பெற்றெடுப் பான் நோற்ற அருந்தவ வலைஞர் வேந்தன் - பெறுது பெறுதற்குச செய்த அரிய தவத்தினையுடைய வலைஞர் மன்னன், அகத்துள் அதி சயம் தோன்ற வரும் - மனத்தின்கண் ஒரு வியப்புத் தோன்றுமாறு

(பா - ம்.) * சுழித்தலைக் கிடங்கு. † சேரி சார்ந்தான்.

செவ்விதி ணோக்கி யாகந் திருகநின் றெறிந்தான் பக்கங்
கௌவிய மணிவில் வீச விசையொலி கறங்கிப் பாயப்
பைவிரித் துயிர்த்து நாகம் விழுங்கவாய்ப் பட்ட மீன்போல்
வெவ்வினைச் சுறவே றையன் விடுவலைப் பட்ட தன்றே.

(இ - ள்.) செவ்விதின் நோக்கி - (மீன் இருக்குமிடத்தினைத்) தப்பாமற் பார்த்து, ஆகம் திருக நின்று - உடல் திருக நின்று, பக்கம் கௌவிய மணிவில் வீச - விளிம்பிற் பொருந்திய மணிகள் ஒளி வீசவும், விசை ஒலி கறங்கிப்பாய எறிந்தான் - வீசிய வேகத்தாலுண்டாகிய ஒலி எங்கும் ஒலித்துப் பரவவும் வீசினன்; பைவிரித்து உயிர்த்து நாகம் விழுங்க - படத்தினை விரித்துச் சீறிப் பாம்பானது விழுங்க, வாய்ப்பட்ட மீன்போல் - அதன் வாயில் அகப்பட்ட மீன் போல, வெவ்வினைச் சுறவு ஏறு - கொடுந்தொழிலையுடைய அச் சுறு மீன், ஐயன் விடுவலைப்பட்டது - இறைவன் வீசிய வலையின்கண் அகப்பட்டது.

ஆகம் திருக நிற்றல் - பைசாசம், மண்டிலம் முதலிய நிலைவகையுள் அடங்கும். மணிவில் வீசலாலும் விசையொலி கறங்கினமையாலும் அவ்வலை பை விரித்துயிர்த்த நாகம்போன்றது. அன்று, ஏ அசைகள். (ருச)

மாசறு கேளி ரன்பின் வலைப்படு வலைஞர் கோன்றாய்*
வீசிய வலையிற் பட்ட மீனினைச் சுருக்கி வாங்கிக்
காசேறி தரங்க முந்நீர்க் கரையிடை யிட்டான் கள்வாய்
மூசுதே னென்ன வார்த்து மொய்த்தன பரதச் சாதி.

(இ - ள்.) மாசு அறு கேளிர் அன்பின் வலைப்படு வலைஞர்கோன் - குற்றமற்ற அடியார்களது அன்பாகிய வலையின்கண் அகப்படும் வலைஞர் தலைவன், தாய் வீசிய வலையில் பட்ட மீனினை - தாவி வீசிய வலையின்கண் அகப்பட்ட மீனை, சுருக்கி வாங்கி - சுருக்கி இழுத்து, காசு எறி தரங்க முந்நீர்க் கரையிடை இட்டான்-மணிகளை வீசும் அலைகளையுடைய கடலினது கரையின்கண் போட்டான்; கள் வாய் மூசு தேன் என்ன - கள்ளினிடத்து மொய்த்த வண்டுகள்போல, பரதச்சாதி ஆர்த்து மொய்த்தன - வலைஞர் மரபினர் ஆரவாரித்து மொய்த்தனர்.

இறைவர்க்குக் கேளிராவார் அடியாரென்க. அன்பு வலையிலகப்படுதலை,

"பத்திவலையிற் படுவோன் காண்க"

என்னும் திருவாசகத்தாலறிக. தாய், தாவி என்பதன் விகாரம்.

இறைவன் இங்ஙனம் கானவனாகி மீன்வலை வீசிய திருவிளையாட்டை,

"அணிமுடி யாதி யமரர்கோமா
னானந்தக் கூத்த னறுசமயம்
பணிவகை செய்து படவதேறிப்
பாரொடு விண்ணும் பரவியேத்தப்

(பா - ம்)* கோன்றான்.

பிணிகெட நல்கும் பெருந்துறையெம்
பேரரு ளாளன் பெண்பாலுகந்து
மணிவலை கொண்டு வான்மீன்விசிறும்
வகையறி வாரெம் பிரானவாரே"

என எடுத்தேத்தும் திருவாசகம். (௫௫)

கிளையுநங் கோனும் வீசு வலைஞராய்க் கிளர்தோ ளாற்றல்
விளைவோடு முயன்று பன்னாள் வினைசெயப் படாத மீனிவ்
விளையவ னொருவன் றானே யொருவிசை யெறிந்தா னீர்த்தான்
அளியநங் குலத்தோர் தெய்வ மகனிவ னாகு மென்றார்.

(இ - ள்.) நம் கோனும் கிளையும் - நம் மன்னனும் அவன் சுற்றத்தாரும், வீசு வலைஞராய் - வீசுகின்ற வலையினையுடையராய், கிளர் தோள் ஆற்றல் விளைவொடு - விளங்குகின்ற தோள்வன்மையின் கிளர்ச்சியொடு, பன்னாள் முயன்று வினைசெயப் படாத மீன் - பல நாட்கள் வரையில் முயன்று விசியும் அகப்படாத மீனினை, இவ்விளையவன் ஒருவன் தானே - இவ்விளைஞன் ஒருவனே, ஒரு விசை எறிந்தான் ஈர்த்தான் - ஒருமுறை வலையினை வீசிச் சுருக்கி இழுத்துக் கரையில் விட்டான்; இவன் நம் குலத்து அளிய ஓர் தெய்வமகன் ஆகும் என்றார் - இவன் நமது குலத்திற்குரிய அருளையுடைய ஒரு தெய்வ மகனாவான் என்று கூறினார்.

எறிந்தான், முற்றெச்சம். அளிய - அருளுடைய. (௫௬)

கைதைசூழ் துறைவ னோகை கைமிகப் பம்பை யேங்க
நொய்தெனு நுசுப்பிற் கள்வாய் நுளைச்சியர் குரவை தூங்கப்
பைதழை பகுவாய்க் கச்சைப் பரதவற் கலங்கன் ஞாழல்*
செய்தபூங் கோதை மாதைத் திருமணம் புணர்த்தி னானே.

(இ - ள்.) கைதைசூழ் துறைவன் - தாழை சூழ்ந்த நெய்தனிலத் தலைவன், ஓகை கைமிக - மகிழ்ச்சி மிக்கோங்க, பம்பை ஏங்க - நெய்த னிலப்பறை ஒலிக்கவும், நொய்து எனும் நுசுப்பில் - நுண்ணியது என்று சொல்லப்படும் இடையினையும், கள்வாய்-கள்ளுண்ட வாயினையு முடைய, நுளைச்சியர் குரவை தூங்க - நுளைச்சியர் குரவைக் கூத் தாடவும், பைதழை பகுவாய்க் கச்சைப் பரதவற்கு - படம் விரிந்த பிளந்த வாயையுடைய பாம்பாகிய கச்சினையுடைய வலைஞர் பெருமானுக்கு, ஞாழல் செய்த அலங்கல் கோதைமாதை - புலிநகக் கொன்றை மலரால் தொடுத்த பொலிவுமிகும் மாலையையணிந்த கூந்தலையுடைய தன் புதல்வியை, திருமணம் புணர்த்தினான் - திருமணம் செய் வித்தான்.

குரவை - கைகோத்தாடும் கூத்து. பகுவாய் - பிளந்த வாயை யுடையது; பாம்பு. ஞாழற் செய்தபூ அலங்கல் என மாறுக. (௫௭)

(பா - ம்.) * ஞாழற் செய்தெழுங்கோதை,

அந்நிலை வதுவைக் கோல மாயின மருக ஞரும்
மின்னிலை வேற்க ணாளும் விண்ணிடை விடைமேற
தந்நிலை வடிவாய்த் தோன்றத் தடங்கரை மீனந் தானும
நன்னிலை வடிவே போன்று நந்தியாய் முந்தித் தோன்ற.

(இ - ள்.) அந்நிலை - அப்பொழுது, வதுவைக்கோலம் ஆய மருகனாரும் - மணக்கோலம் பூண்ட மருகனாரும், மின் இலைவேல்கணாளும் - ஒளியினையுடைய தகட்டுவடிவமைந்த வேல்போன்ற கண்களுடைய புதல்வியாரும், விண்ணிடை விடை மேற்கொண்டு - வானின்கண் இடபவூர்தியில் ஏறியருளி, தம் நிலை வடிவாய்த் தோன்ற - தமக்கு உரிய சகளத் திருமேனியுடன் தோன்ற, தடம்கரை மீனம் தானும் - பெரிய கடற்கரையிற் கிடந்த மீனும், நன்னிலை வடிவே போன்று - முன்னுள்ள நல்லவடிவமே போல, நந்தியாய் முந்தித் தோன்ற - திருநந்தி தேவராகித் திருமுன் முற்பட்டுத் தோன்ற.

வடிவேபோன்று - வடிவேயாகி. (௫அ)

கோற்றவெள் விடைமேற் காட்சி கொடுத்தவர் கருணை நாட்டம்
பெற்றலின் மேலைச் சார்பாற் பிணித்தவிப் பிறவி யாக்கைச்*
சிற்றறி வொழிந்து முந்நீர்ச் சேர்ப்பனல் லறிவு தோன்றப்
பொற்றனு மேரு வீரன் பூங்கழ லடிக்கீழ்த் தாழ்ந்தான்.

(இ - ள்.) கொற்றம் வெள் விடைமேல் காட்சி கொடுத்தவர் - (அங்ஙனம்) வெற்றிபொருந்திய வெள்ளிய இடபவூர்தியிற் காட்சி கொடுத்த அவ்விறைவரது, கருணை நாட்டம் பெற்றலின் - அருட் பார்வையைப் பெற்றதனால், முந்நீர்ச் சேர்ப்பன் - கடற்றுறையினையுடைய நெய்தனிலத்தலைவன், மேலைச்சார்பால் பிணித்த - முன்வினைச் சார்பினாற் பந்தித்த, இப்பிறவியாக்கைச் சிற்றறிவு ஒழிந்து - இப் பிறவியின் சிற்றறிவு நீங்கி, நல் அறிவு தோன்ற - நல்லுணர்வு தோன்றாநிற்க. பொன் மேரு தனு வீரன் - பொன்மேருவை வில்லாக வளைத்த வீரனாகிய அவ்விறைவனது, பூங்கழல் அடிக்கீழ்த் தாழ்ந்தான் - அழகிய வீரக் கழலணிந்த திருவடியின்கீழ் வீழ்ந்து வணங்கினான்.

இறைவர் கருணை நாட்டத்தால் பிறவிச்சார்பு அகலுதலை,

"அங்கணர் கருணை கூர்ந்த வருட்டிரு நோக்க மெய்தித்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல"

என்னும் பெரிய புராணச் செய்யுளானுமறிக. (௫௯)

இரக்கமி லிழிந்த யாக்கை யெடுத்துழ லேழை யேனைப்
புரக்கவின் றென்போல் வந்த புண்ணிய வடிவம் போற்றி
அரக்கெறி பவளச் செவ்வா யணங்கினோ மணந்தேன் பாசங்
கரக்கவெள் விடைமே னின்ற கருணையே போற்றி யென்றான்.

(பா - ம்.) * பிறவிவாழ்க்கை.

இரக்கம் இல் இழிந்த யாக்கை எடுத்து - (உயிர்களின் ...ல்லாத இழிந்த உடலை எடுத்து, உழல் ஏழையேனை - அறிவிலியாகிய என்னை, இன்று புரக்க - இன்று காத்தற் ...டு, என்போல் வந்த புண்ணிய வடிவம் போற்றி - என்னைப் ...வ உருவெடுத்து வந்த அருளுருவே வணக்கம்; அரக்கு எறி ...ள் செவ்வாய் அணங்கினை மணந்து - செவ்வொளி வீசும் பவளம் ...பான்ற சிவந்த வாயினை யுடைய அம்மையைத் திருமணம் புரிந்து என் பாசம் கரக்க - எனது பாசம் ஒழியுமாறு, வெள்விடைமேல் நின்ற கருணையே போற்றி என்றான் - வெள்ளிய இடபவூர்தியின்மேல் நின்று காட்சி கொடுத்தருளிய கருணையே வணக்கம் என்று கூறித் துதித்தனன்.

அரக்கு - செந்நிறம். (சுO)

அகவிலான் பரவி நின்ற வன்பனை நோக்கிப் பன்னாள்
மகவிலா வருத்த* நோக்கி யுமையைநா மகளாத் தந்து
தகவினான் மணந்தே நீயித் தரணியிற் றனத னென்ன
நகவிலாப் போக மூழ்கி நம்முல கடைவா யென்ன.

(இ - ள்.) அக இலான் - அடியார்களின் மனமாகிய கோயிலை யுடைய இறைவன், பரவி நின்ற அன்பனை நோக்கி - அங்ஙனம் துதித்து நின்ற அன்பனைப் பார்த்து, பன்னாள் மகவு இலா வருத்தம் நோக்கி - பலநாட்கள்வரை மகப்பேறின்மையாகிய நின் துன்பத்தினைக் கண்டு, நாம் உமையை மகளாகத் தந்து - நாம் உமாதேவியை நினக்குப் புதல்வியாகத் தந்து, தகவினால் மணந்தேம் - முறைப்படி வந்து மணந்து கொண்டோம்; நீ இத்தரணியில் - நீ இந்நிலவுலகின்கண் இருந்து, தனதன் என்ன நகவு இலாப் போகம் மூழ்கி - குபேரனைப் போன்று இகழ்ச்சியில்லாத போகத்திலழுந்தி, நம் உலகு அடைவாய் என்ன - (இறுதியில்) நமது சிவலோகத்தை அடைவாயாக என்று.

அகம் - உள்ளம். தகவினால் - மரபுக்கேற்ற முறைமையால். நகவு - நகுதல்; எள்ளுதல். (சுக)

பெண்ணினை வதுவைக் கீந்த பெருந்துறைச் சேர்ப்பற் கன்று
தண்ணளி சுரந்து நல்கித் தருமமால் விடைமேற் றோன்றி
விண்ணிடை நின்றான் சென்றான் வேத்திரப் படையா னோடும்
உண்ணிறை யன்ப ரோடு முத்தர கோச மங்கை.

(இ - ள்.) பெண்ணினை வதுவைக்கு ஈந்த பெருந்துறைச் சேர்ப்பற்கு - தன் புதல்வியைத் திருமணம் புரிதற்குக் கொடுத்த பெரிய நெய்தற்றுறையையுடைய சேர்ப்பனுக்கு, அன்று தண் அளிசுரந்து நல்கி - அன்று பேரருள் சுரந்து அளித்தருளி, தருமமால் விடைமேல் - தருமமாகிய பெரிய இடப மூர்த்தியின் மேல், விண்ணிடை தோன்றி நின்றான் - வானின்கண் வெளிப்பட்டு நின்ற இறைவன், வேத்திரப் படையானோடும் - பிரப்பம் படையினையுடைய திருநந்திதேவரோடும், உள் நிறை அன்பரோடும் உத்தர கோசமங்கை சென்றான் - உள்ளத்

(பா - ம்.) * மகவிலாவருமை.

தில் நிறைந்த அன்பினையுடைய அடியாரோடும் உத்தர
குச் சென்றருளினன்.

நின்றான், பெயர்.

அங்கிருந் தநாதி மூர்த்தி யாதிநான் மறைக ளேத்துங்
கோங்கிருங் கமலச் சேவ்விக் குரைகழல் வணங்கிக் கேட்பப்
பங்கிருந் தவட்கு வேதப் பயனெலாந் திரட்டி முந்நீர்ப்
போங்கிருஞ் சுதைபோ லட்டிப் புகட்டினன் சேவிக ளார.

(இ - ள்) அநாதி மூர்த்தி அங்கு இருந்து - அநாதி மூர்த்தியாகிய இறைவன் அத்தலத்தில் அமைந்தருளி, ஆதி நான் மறைகள் ஏத்தும் - பழைய நான்கு மறைகளும் துதிக்கும், கொங்கு இரும் கமலச்செவ்வி - மணமிக்க பெரிய தாமரை மலர்போலுஞ் செவ்வி வாய்ந்த, குரைகழல் வணங்கிக்கேட்ப - ஒலிக்கும் வீரக்கழலணிந்த தன் திருவடிகளை வணங்கிக்கேட்ப, பங்கு இருந்தவட்கு - ஒரு பாகத்தில் வீற்றிருந்த அம்மையார்க்கு, வேதப்பயன் எலாம் திரட்டி - மறைப் பொருள் அனைத்தையும் ஒரு சேரத் திரட்டி, முந்நீர்ப்பொங்கு இருஞ்சுதை போல் அட்டி - கடலிற்றோன்றிய பெருமையமைந்த அமிழ்தைப்போற் சொரிந்து. செவிகள் ஆர புகட்டினன் - செவிகள் நிரம்புமாறு புகட்டியருளினன்.

அட்டி - சொரிந்து;

"பூக்கையா லட்டி"

எனத் தேவாரத்துள் வருதலுங் காண்க. (சுங)

வேறு

அவ்வேலை யன்புடையா ரறுபதினா யிரவருக்கு மளித்துப் பாச
வெவ்வேலை கடப்பித்து வீடாத பரானந்த வீடு நல்கி
மைவேலை யனையவிழி யங்கயற்க ணங்கையோடு மதுரை சார்ந்தான்
இவ்வேலை நிலம்புரக்க முடிகவித்துப் பாண்டியனென் றிருந்த மூர்த்தி.

(இ - ள்) இவ்வேலை நிலம்புரக்க - கடல் சூழ்ந்த இந்நிலவுலகைப் புரந்தருள, முடிகவித்துப் பாண்டியன் என்று இருந்த மூர்த்தி - முடி சூடிச் சுந்தர பாண்டியனாக இருந்தருளிய இறைவன், அவ்வேலை - அப்பொழுது. அன்புஉடையார் அறுபதினாயிரவருக்கும் அளித்து - மெய்யன்புடைய அறுபதினாயிரம் அடியார்களுக்கும் அப்பொருளை அறிவுறுத்தி, பாச வெவ்வேலை கடப்பித்து - ஆணவமலமாகிய கொடிய கடலைக் கடக்கச் செய்து, வீடாத பரானந்த வீடுநல்கி - அழியாத பேரின்ப வீட்டினை அருளி, மைவேலை அனையவிழி அங்கயற்கண் நங்கையொடும் மதுரை சார்ந்தான் - மை தீட்டிய வேலை ஒத்த விழிகளை

...ற்கண்ணம்மையாரோடும் மதுரையை அடைந்தருளி

...

...பதினுயிரர் - திருவுத்தர கோசமங்கையில் இருந்த சிவனடி...ளும் சிவயோகிகளும். வீடாத - அழியாத. பரானந்தம் - ...லாகிய ஆனந்தம், சிவானந்தம். (கூச)

ஆகச் செய்யுள் - உஎகஉ.

ஐம்பத்தெட்டாவது

வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்

கொச்சகக்கலிப்பா

கலைவீசு மதிச்சடையோன் கடற்றுறைவன் றலைச்சென்று
வலைவீசி யவன்பாச வலைவீசும் பரிசிதுமேல்
அலைவீசும் புனல்வாத வூரரைவந் தவிச்சைவலி
நிலைவீசிப் பணிகொண்ட நெறியறிந்த படிமொழிவாம்.

(இ - ள்.) கலைவீசும் மதிச்சடையோன் - ஒளி வீசும் சந்திரனைத் தரித்த சடையினையுடைய சோமசுந்தரக்கடவுள், கடல் துறைவன் தலைச்சென்று - நெய்தனிலத் தலைவனிடத்துச் சென்று, வலைவீசி - வலையினைவீசி, அவன் பாசவலை வீசும் பரிசு இது - அவனது பாசமாகிய வலையினை அறுத்தருளிய திருவிளையாடல் இது; மேல் - இனி, வந்து - (அவ்விறைவன் குரவனுக) எழுந்தருளி வந்து, அலை வீசும் புனல் வாதவூரரை - அலைகளை வீசும் நீர் சூழ்ந்த திருவாதவூரடிகளை, அவிச்சை வலி நிலைவீசி - (அவரது) ஆணவமலத்தின் வலியினது தன்மையைக் கெடுத்து, பணிகொண்ட நெறி - ஆட்கொண்டருளிய திருவிளையாடலை, அறிந்தபடி மொழிவாம் - அறிந்தவாறு கூறுவாம்.

கலைவீசும் என்பதற்குக் கலைகளையிழந்த என்றுரைப்பாருமுளர். பாசவலை வீசும் என்புழி வீசுதல் போக்குதல் என்னும் பொருட்டு. அவிச்சை - அஞ்ஞானம்: ஆணவம். நிலை - ஆன்மாவின் அறிவிச்சை செயல்களை மறைக்குந் தன்மை. அறிதற்கரிதென்பது தோன்ற 'அறிந்த படி' என்ருர். (க)

தொடுத்தவறு மையும்பயனுந் தூக்கிவழங் குநர்போல
அடுத்தவயல் குளநிரப்பி யறம்பெருக்கி யவனியெலாம்
உடுத்தகட லொருவர்க்கு முதவாத வுவரியென
மடுத்தறியாப் புனல்வையைக் கரையுளது வாதவூர்.

(இ - ள்.) தொடுத்த வறுமையும் பயனும் தூக்கி வழங்குநர்போல - ஒருவனைப்பற்றிய வறுமையினையும் அவனுற் பிறர்க்கு ஆகும் பயனையும் சீர்தூக்கிக் கொடுப்பார் போல, அடுத்த வயல் குளம் நிரப்பி - அடுத்துள்ள வயல்களையும் குளங்களையும் நிரம்பச்செய்து, அறம் பெருக்கி - (அதனுல்) அறத்தினைப் பெருக்கி, அவனி எலாம் உடுத்த கடல் - நிலவுலகு அனைத்தையும் சூழ்ந்த கடலானது, ஒருவர்க்கும் உதவாத உவரி என்ன - ஒருவருக்கேனும் பயன்படாத உவர் நீரையுடையதெனக் கருதி, மடுத்து அறியாப் புனல் வையைக்கரை-அதிற்

பாய்ந்தறியாத நீரினையுடைய வையையாற்றினது கரையின்கண் வாதவூர் உளது - திருவாதவூர் என்னும் திருப்பதி உள்ளது.

"வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து"

என்பது வாயுறைவாழ்த்தாகலின் வறியார்க்கே ஈதல்வேண்டும்; அவருள்ளும் பிறர்க்குப் பயன்படுவார்க்கீதல் சிறந்தது. வயலும் குளமும் வறியனவும் பிறர்க்குப் பயன்படுவனவும் ஆகும். அடுத்த - இருமருங்கும் பொருந்திய. கடலுக்கு வறுமையின்மையும் கொள்க. உவரி-உவர் நீர் உடையது; இ : வினைமுதற்பொருள் விகுதி. வையையாறு இயல்பாகக் கடலிற் கலவாமையைக் கடல் வறுமையின்மையும் பயன் படாமையும் உடையதென அதில் மடுத்தறியாதெனக் கற்பித்துக் கூறினமையால் இது தற்குறிப்பேற்றவணி. இதனால் ஒரு காலத்தில் வையையாறு கடலிற் கலவாதாயிற்றென அறிக. (உ)

விழவறு நகரெங்கும் விருந்தறு மனையெங்கும்
மழவறு மகிழ்வெங்கு மறையறு கிடையெங்கும்
முழவறு வரங்கெங்கு முகிலறு பொழிலெங்கும்
உழவறு வயலெங்கு முடம்பறு வுயிரென்ன.

(இ - ள்.) உடம்பு அறு உயிர் என்ன - உடலினின்றும் நீங்காத உயிர் போல, நகர் எங்கும் விழவு அறு - நகர் முழுதும் திருவிழாக்கள் நீங்கா; மனை எங்கும் விருந்து அறு - இல்லம் அனைத்தினும் விருந்து கள் நீங்கா; கிடை எங்கு மகிழ்வு அறு - யாண்டும் மகிழ்ச்சியைத் தரும் பிள்ளைகள் நீங்கா; எங்கும் மகிழ்வு மழவு அறு - யாண்டும் மகிழ்ச்சியைத் தரும் பிள்ளைகள் நீங்கா ; கிடை எங்கும் மறை அறு - பாடசாலைகள் யாவற்றிலும் வேதங்கள் ஒழியா; அரங்கு எங்கும் முழவு அறு - நாடகசாலை எங்கணும் மத்தள ஒலிகள் ஓயா; பொழில் எங்கும் முகில் அறு - சோலைகள் அனைத்திலும் மேகங்கள் நீங்கா; வயல் எங்கும் உழவு அறு - வயல்கள் எல்லாவற்றிலும் உழவுத் தொழில்கள் ஓயா.

விருந்து - புதுமை; இஃது ஆகுபெயராய்ப் புதியராய் வந்தாரை உணர்த்திற்று. மழவு - இளமை; இஃது குழவியை உணர்த்திற்று; 'முருகு' என்பது போல். மறை - வேத மோதல். கிடை - வேதமோதுஞ் சாலை. உடம்பறுவுயிரென்ன என்ற உவமையால் நகர் முதலிய வற்றிற்கு விழவு முதலியன பொலிவு தருதல் பெற்றும். (௩)

ஆயவளம் பதியதனி னமாத்தியரி லருமறையின்
றூயசிவா கமநெறியின் றுறைவிளங்க வஞ்சனையான்
மாயனிடும் புத்தவிரு ளுடைந்தோட வந்தொருவர்
சேயவிளம் பரிதியெனச் சிவனருளா லவதரித்தார்.

(இ - ள்.) ஆயவளம்பதி அதனில் - அங்ஙனமாகிய வளமிக்க அந் நகரின் கண், அமாத்தியரில் - அமாத்தியர் மரபில், அருமறையின் தூய சிவாகம நெறியின் துறைவிளங்க - அரிய வேத நெறியும் தூய்மை

யாகிய சிவாகமத்துறையும் விளங்கவும், மாயன்வஞ்சனையால் இடும் புத்த இருள் உடைந்து ஓட - திருமால் தனது வஞ்சனையினால் இட்ட புத்த இருளானது சிதறி ஓடவும், சேய இளம் பரிதி என - செந்நிற முடைய இளஞாயிற்றினைப் போல, ஒருவர் வந்து சிவன் அருளால் அவதரித்தார் - ஒருவர் வந்து சிவபெருமான் திருவருளால் அவதரித் தருளினர்.

வளம்பதி, மெலித்தல். அமாத்தியர் - மறையோரில் அமைச்சுத் தொழில் பூண்டு வரும் ஒரு குடியினர். மறையின் நெறியும் சிவாகமத் தின் துறையும் விளங்கவெனக் கூட்டுக;

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க"

என ஆளுடைய பிள்ளையாரின் அவதார விசேடங்கூறும் பெரிய புராணச்செய்யுள் இங்கு நோக்கற்பாலது. திரிபுரத்தவுணர் செய்யும் கொடுமைக்காற்றாது இந்திரன் முதலியோர் விண்டுவைச் சரணடைந்து கூற, திருமால் அவர்களின் வெலற்கருந்திறலையுன்னி ஒரு சூழ்ச்சியால் வெல்லக் கருதிப் புத்த சமயத்தை யுண்டாக்கி அவர்கட்குப் போதித்துச் சிவநேயத்தினின்றும் வழுவுமாறு புரிந்தனன் என்பது புராண கதை;

"சாக்கிய குருவின் மாய னுங்கவர் புரத்திற் சார்ந்து
கோக்களிற் றுரிவை போர்த்த கொன்றைவே ணியன்மே லன்பு
நீக்கியவ் வவுணர் தம்மை நிகழ்த்துபுன் சமயந் தன்னில்
ஆக்கிநல் லிலிங்க பூசை யறிவொடு மகற்றி னானே"

என்னும் கூர்ம புராணச்செய்யுள் காண்க. இவர் தந்தையார் பெயர் சம்புபாதாசிருதர் எனவும், தாயார் பெயர் சிவஞானவதியார் எனவும் திருப்பெருந்துறைப் புராணம் கூறும். (ச)

பேர்வாத வூரரெனப் பெற்றுத்தம் பிறங்குமறைச்
சார்வாய நூல்வழியாற் சடங்கெல்லா நிறைவெய்தி
நீர்வாய விளமதிபோ னிரம்புவார் வேதமுதற்
பார்வாயெண் ணெண்கலையும் பதினாறாண் டினிற்பயின்றார்.

(இ - ள்.) வாதவூரர் எனப் பேர் பெற்று - திருவாதவூரர் என்னும் பிள்ளைத்திருநாமம் பெற்று, தம் பிறங்கும் மறைச்சார்வு ஆய நூல் வழியால் - தமது விளங்கும் வேதத்தின் சார்பாகிய நூலிற் கூறும் நெறிப்படி, சடங்கு எல்லாம் நிறைவு எய்தி - சடங்குகள் அனைத்தும் நிறைதலைப் பொருந்தி, நீர்வாய இளமதிபோல் நிரம்புவார் - குளிர்ந்த தன்மை வாய்ந்த இளம்பிறை வளர்வது போல வளருமவர், பார்வாய் வேத முதல் எண்ணெண் கலையும் - புவியின்கண் வேதத்தை முதலாக வுடைய அறுபத்து நான்கு கலைகளையும், பதினாறு ஆண்டினில் பயின் றார் - பதினாறு வயதளவிற் கற்றுணர்ந்தார்.

மறைச்சார்வாய நூல் - போதாயனீயம் முதலிய கற்ப சூத்திரங் கள். நிறைவெய்தி - நிறைவிக்கப்பெற்று.

"எக்கலையுங் கற்றுணர்ந்தார் ஈரெட்டாண் டெல்லையினில்"
என்ருர் கடவுண்மா முனிவரும். (ரு)

இத்தகையோர் நிகழ்செய்தி யறிந்தவர்சேன் றியம்பவரி
மர்த்தன பாண் டியன்கேட்டு வரவழைத்து மற்றவரைச்
சித்தமகிழ் *வரிசையினுற் சிறப்பளித்துத் தன்கோயில்
வித்தகநன் மதியமைச்சின் ருெழில்பூட்டி மேம்படுத்தான்.

(இ - ள்.) இத்தகையோர் நிகழ் செய்தி அறிந்தவர் - இப்பெருமையினை யுடையார் ஒருவர் இருக்குஞ் செய்தியை அறிந்த சிலர், சென்று இயம்ப - போய்ச் சொல்ல, அரிமர்த்தன பாண்டியன் கேட்டு - அரிமர்த்தன பாண்டியனென்பான் (அதனைக்) கேட்டு, அவரை வரவழைத்து - அவரைத் தன்பால் வருவித்து, சித்தம் மகிழ் வரிசையினுல் சிறப்பு அளித்து - மனமகிழுதற் கேதுவாகிய வரிசையோடு மேன்மையும் அளித்து, தன் கோயில் வித்தக நன்மதி அமைச்சின் தொழில் பூட்டி - தனது அரமனையின் சதுரப்பா டமைந்த நல்லமதி மிக்க அமைச்சுத் தொழிலையுந் தந்து, மேம்படுத்தான் - சிறப்பித்தான்.

வரிசை - நவமணிக்கலன், பொன்னுடை முதலிய சீர்சால் கொடை. சிறப்பு என்பதனைத் தென்னவன் பிரமராயன் என்னும் சிறப்புப் பெயரெனக் கொள்ளின் அமைச்சின் தொழில்பூட்டி அவர் திறம்கண்டு, பின் சிறப்பளித்தான் என்னல் வேண்டும்.

"தென்னவன் பிரம ராய னென்றருள் சிறந்த நாமம்
மன்னவர் மதிக்க நல்கி வையக முய்வ தாக
மின்னவ மணிப்பூ ணுடை வெண்மதிக் கவிகை தண்டு
பொன்னவிர் கவரி வேழ மளித்தனன் பொருநை நாடன்"

என்பது திருவாதவூரடிகள் புராணம். (சு)

செற்றமிகுங் கருவிகளின் றிறநூலு மனுவேந்தன்
சொற்றபெருந் தொன்னூலுந் துளக்கமற விளக்கமுறக்
கற்றறிந்தோ ராதலினுற் காவலற்குக் கண்போன்ற
முற்றுணர்ந்த வமைச்சரினு முதலமைச்ச ராய் நிகழ்வார்.

(இ - ள்.) செற்றம்மிகும் கருவிகளின் திறநூலும் - சினமிக்க கருவிவகைகட்குரிய நூல்களையும், மனுவேந்தன் சொற்ற பெருந் தொல் நூலும் - மனுவென்னும் மன்னனுற் கூறப்பட்ட பெருமையுந் தொன்மையும் உடைய நூலையும், துளக்கம் அற விளக்கமுற - ஐயந் திரிபு நீங்க விளக்கம் பொருந்த, கற்று அறிந்தோர் ஆதலினுல் - கற்று உணர்ந்தவர் ஆகலின், காவலற்குக் கண்போன்ற முற்று உணர்ந்த அமைச்சரினும் - மன்னனுக்குக் கண்போன்ற முற்று முணர்ந்த அமைச்சர்களினும், முதல் அமைச்சராய் நிகழ்வார் - முதல் மந்திரியாக ஒழுகுவாராயினர்.

(பா - ம்.) *வரிசை யிறைச் சிறப்பளித்து.

கருவி - படைக்கலமும் தானையும், படைக்கலப் பயிற்சிக்குரிய நூல்களும், யானை குதிரை ஊர்தற்குரிய நூல்களும், பிறவு மென்க. தொன்னூல் - நீதிநூல். அமைச்சர் கண்ணாக அரசபாரம் நடத்தலின் 'காவலற்குக் கண்போன்ற அமைச்சர்' என்றார்;

"சூழ்வார்கண் ணாக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்"

என்னும் திருக்குறள் நோக்குக. (எ)

புல்லாதார் முரணடக்கிப் பொருள்கவர்வா ரென்பதெவன்
சொல்லாத பல்வேறு தீபத்துச் செங்கோன்மை
வல்லாருந் தத்தமதேத் தரியபொருள் வரவிடுத்து
நல்லாரா யொப்புரவு நட்படைய நடக்கின்றார்.

(இ - ள்.) சொல்லாத பல்வேறு திபத்துச் செங்கோன்மை வல்லாரும் - அடைதற்கரிய பலவேறு வகைப்பட்ட தீவுகளில் கோல் கோணாது குடிகளைப் புரக்கவல்ல மன்னரும், தத்தம தேத்து அரிய பொருள் வரவிடுத்து - தங்கள் தங்கள் நாட்டிலுள்ள அரியபொருளை அனுப்பி, நல்லாராய் ஒப்புரவு நட்பு அடைய-நல்லவராய் மனமொத்த நட்பினைப் பொருந்துமாறு, நடக்கின்றார் - ஒழுகுவாராகிய திருவாத வூரர், புல்லாதார் முரண் அடக்கி - பகைவரின் வலியினை அடக்கி, பொருள் கவர்வார் என்பது எவன் - அவரது பொருளைக் கவர்வார் என்று கருதுவது என்னை?

தீபம் - கடல் நாப்பணிருக்கும் நிலம். தேத்து - தேசத்து; தேசம் என்பது தேம் எனத் தொல்காப்பியம் முதலிய பழைய நூல்களிற் பயின்றுள்ளது. யாவரும் இவருடைய நட்பை விரும்பித் தாமாகவே திறையனுப்புதலின் பகைவர் இலராயினர் என்பதும், பகைவர் இலராகவே முரணடக்குதலும் பொருள் கவர்தலும் இல்லையாயின என்பதும், கருத்தாகக் கொள்க. (அ)

அண்ணலரி மருத்தனனுக் கடல்வாத வூரமைச்சர்
கண்ணுமிகு கவசமும்போற் காரியஞ்செய் தொழுகுவார்
தண்ணளிசெய் தவனியெலாந் தன்கிளைபோற் குளிர்தூங்க
வண்ணமதிக் குடைநிழற்றி முறைசெய்து வாழுநாள்.

(இ - ள்.) அடல் வாதவூர் அமைச்சர் - வெற்றி பொருந்திய வாத வூரராகிய அமைச்சர், அண்ணல் அரிமருத்தனனுக்கு - பெருமை பொருந்திய அரிமருத்தன பாண்டியனுக்கு, கண்ணும் இடுகவசமும் போல்-கண்களையும் அணிந்த கவசத்தையும் போல (இருந்து), காரியம் செய்து ஒழுகுவார் - வினை செய்து ஒழுகுவாராய், தண் அளி செய்து - தண்ணிய அருள் புரிதலால், அவனி எலாம் - நிலவுலகிலுள்ள மக்களனைவரும், தன் கிளைபோல் குளிர் தூங்க - தன் கிளைஞர் மகிழு மாறு போல மகிழ்கூர, வண்ணம் மதிக்குடை நிழற்றி - நிறம் வாய்ந்த சந்திரவட்டக் குடையினால் நிழல் செய்து, முறை செய்து வாழு நாள் - முறை புரிந்து வாழும் நாளில்,

நன்னெறியிற் செலுத்தலால் அரசனுக்குக் கண்ணும், தெய்வத்தால் வரும் இடையூறுகளைச் சாந்தியானும் மக்களால் வரும் இடையூறுகளை நால்வகை உபாயங்களானும் போக்கிப் பாதுகாத்தலின் அவற்குக் கவசமும் போல்வாரென்க.

"காதலித் தறஞ்செய் வோர்க்குக் கவசமுங் கண்ணு மாகி
ஏதிலர்க் கிடும்பை யாகி யிறைஞ்சினர்க் கின்ப மாகி
ஆதுலர்க் கன்னை யாகி யரனடிக் கன்பு மிக்கார்
பூதலத் திறைவ னாணை பொதுவற நடத்து நாளில்"

என்பது திருவாதவூரர் புராணம். (கூ)

கலிநிலைத்துறை

மெய்ம்மை யாம்பொருள் விவேகமும் வேறுபா டாய
பொய்ம்மை யாம்பொருள் விவேகமும் புந்தியுட் டோன்ற
இம்மை யாசையு மறுமையி லாசையு மிகந்து
செம்மை யாகிய கருத்தராய்ப் பரகதி தேர்வார்.

(இ - ள்.) மெய்ம்மையாம் பொருள் விவேகமும் - மெய்யாகிய பொருளின் உணர்ச்சியையும், வேறுபாடாய - அதற்கு வேறான, பொய்ம்மையாம் பொருள் விவேகமும் - பொய்யாகிய பொருளின் உணர்ச்சியும், புந்தியுள் தோன்ற - உள்ளத்தின்கண் உதிக்க, இம்மை ஆசையும் - இம்மையின்பத்தில் விருப்பமும், மறுமையில் ஆசையும் - மறுமை யின்பத்தில் விருப்பமும், இகந்து - நீங்கி, செம்மையாகிய கருத்தராய் - மனத்தூய்மை யுடையராய், பரகதி தேர்வார் - வீடடையும் நெறியினை ஆராய்வாராயினர்.

மெய்ம்மையாம் பொருள் - நித்தப் பொருள்; தனக்கோர் ஆக்கக் கேடுகளின்றிச் சுட்டறிவிற் படாது நின்ற சத்துப் பொருள். பொய்ம்மையாம் பொருள் - அநித்தப் பொருள்; ஆக்கக் கேடுகளுடைத்தாய்க் கால தேய முதலியவற்றால் ஏகதேசப் படுதலும் பலவேறு வகைப் படுதலு முடைத்தாய்ச், சுட்டறிவிற் கெட்டி நிற்கும் அசத்துப் பொருள். இம்மை மறுமை யின்பங்கள் இந்திரசாலம்போலத் தோன்றும் போதே இலவாதலும், கனவைப் போல முடிவு போகாது இடையே யழிதலும், பேய்த்தேர் போல ஒரு காரணங்காட்டி நிலை பெருமையு முடைமையால் 'இம்மை யாசையு மறுமையி லாசையுமிகந்து' என்றார். செம்மையாகிய கருத்தராய் என்றது சிவபுண்ணிய முதிர்ச்சியால் இருவினை யொப்புடையராய் என்றபடி. இனி, நித்தியா நித்திய வஸ்து விவேகம், இகபரபோக விராகம், சமம் முதலிய அறுகுணப்பேறு, முமூட்சுத்துவம் எனப்படும் வீட்டிச்சை ஆகிய மோக்க சாதனம் நான்கும் இப்பாட்டில் முறையே கூறப்பெற்றன வெனவுங் கொள்க. (கo)

புத்த ராதியோர் புறவுரை நெறிகளும் பொய்யா
நித்த வேதநூ றழுவிய வகவுரை நெறியுஞ்
சித்த மாசறுத் தரனருட் டேளிவியா வதனுன்
மித்தை யாணவத் தொடக்கறு தில்லையாம் வீடும்.

(இ-ள்.) புத்தர் ஆதியோர் புற உரை நெறிகளும் - புத்தர் முதலானவர்களின் வேதாகமங்கட்குப் புறம்பாகக் கூறப்படும் நெறிகளும், பொய்யா நித்தவேத நூல் தழுவிய - பொய்யாத உண்மையாகிய மறைநூலைத் தழுவிய, அகஉரை நெறியும் - அகமாகச் சொல்லப்படும் நெறிகளும், சித்தம் மாசு அறுத்து அரன் அருள் தெளிவியா - மனத்தின்கண் உள்ள அழுக்கினைப் போக்கி இறைவன் திருவருளைத் தெளிவுறுத்தமாட்டா; அதனால்-அம்மாட்டாமையினால், மித்தை ஆணவத் தொடக்கு அருது - சடமாகிய ஆணவப் பிணிப்பு நீங்காது; வீடும் இல்லையாம் - (அதனால்) வீடுபேறும் இல்லையாகும்.

புறவுரை நெறி புறப்புறம், புறம் என இருவகைப்படும்; உலோகாயதம், நால்வகைப் பௌத்தம் (மாத்தியமிகம், யோகாசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம்), ஆருகதம் என்பன புறப்புறச் சமயங்கள்; தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என்பன புறச்சமயங்கள். அகவுரை நெறி அகப்புறம், அகம் என இருவகைப்படும்; பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், அயிக்கியவாதசைவம் என்பன அகப்புறச் சமயங்கள்; பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சிவசங்கிராந்த வாதம் ஈசுவரஅவிகாரவாதம், சிவாத்துவித சைவம் என்பன அகச்சமயங்கள். இந்நாலாறு சமயங்களின் இயல்புகளையெல்லாம் செந்தமிழ்ச் சிவஞான போத முதனூலுக்கு மாதவச் சிவஞான யோகிகள் கண்டருளிய திராவிட மாபாடியம் என்னும் பேருரையுட் காண்க. மித்தை - பொய், சடம். (௧௧)

பத்தி செய்தர னருள்பெறும் பத்தருக் கன்றி
முத்தி யெய்தரி தெனமறை மொழிவதப் பொதுநூற்
சத்தி யப்பொருட் டெளிவெலாஞ் சத்திநி பாதர்க்
குய்த்து ணர்த்துவ தாகம மென்பர்மெய் யுணர்ந்தோர்.

(இ-ள்.) பத்தி செய்து அரன் அருள் பெறும் பத்தருக்கு அன்றி - அன்பு செய்து இறைவன் திருவருளைப் பெற்ற அன்பர்கட்கு அன்றி ஏனையோருக்கு, முத்தி எய்து அரிதென மொழிவது மறை - வீடு பேற்றினை எய்தல் இல்லை என்று கூறுவது வேதம்; அப்பொது நூல் சத்தியப் பொருள் தெளிவு எலாம் - அப்பொது நூலின் உண்மைப் பொருட்டெளிவு அனைத்தையும், சத்திநிபாதர்க்கு-திருவருட் பதிவுடையாருக்கு, உய்த்து உணர்த்துவது - விளக்கி அறிவிப்பது, ஆகமம் - சிவாகமம்; என்பர் மெய் உணர்ந்தோர் - என்று கூறுவர் மெய்ப் பொருளை உணர்ந்த பெரியோர்.

எய்து: முதனிலைத் தொழிற் பெயர். வேதம் யாவர்க்கும் உரித்தாகலின் பொது நூல் எனவும், ஆகமம் சத்திநிபாத முடையார்க்கு உரித்தாகலின் சிறப்பு நூல் எனவும் கூறப்படும்; இதனை,

"வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூ லநாதியம லன்றருநூ லிரண்டும்

ஆரண நூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலாம்
நீதியினு லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது நீண்மறையி னெழிபொருள்வே தாந்தத்
திதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்''

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தா லறிக.

சத்திநிபாதர் - சத்திநிபாதம் உடையோர்; சத்திநிபாதம் - திருவருட்சத்தி பதிதல்; தவம் சரியை முதல் நால்வகைப்பட்டு அவற்றுள்ளும் பலவேறு வகைப்பட்டு நிகழ்தற்கேற்பப், பக்குவமாதற் பொருட்டு மலத்திற்கு அநுகூலமாய் நின்று நடாத்திய திரோதான சத்தி மலம் பரிபாக மெய்தியவழி அக்கருணை மறமாகிய செய்கை மாறிக் கருணை யெனப்படும் முன்னைப் பராசத்தி ரூபமேயாய் ஆன்மாக் கண்மாட்டுப் பதிதல்; அதன் வகை பின்பு காட்டப்பெறும். பாதம் - பதிதல்; விழ்ச்சி. நி - ஏற்றமாக வென்னும் பொருள் குறித்து நின்ற இடைச்சொல். (௩௨)

வேத வாகமச் சென்னியில் விளைபொரு ளபேதம்
பேத மாகிய பிணக்கறுத் திருட்பிணி யவிழ்த்து
நாத னாகிய தன்னையு மென்னையு நல்கும்
போத னாகிய குருபரன் வருவதெப் பொழுதால்.

(இ - ள்.) வேத ஆகமச் சென்னியில் - வேதங்களும் ஆகமங்களுமாகிய இவற்றின் முடிவில், விளை பொருள் - விளையும் பொருள், அபேதம் பேதமாகிய பிணக்கு அறுத்து-அபேதம் பேதம் என்று கருதும் மாறுபாட்டினை ஒழித்து, இருள் பிணி அவிழ்த்து-ஆணவமலக் கட்டினை அவிழ்த்து, நாதனாகிய தன்னையும் என்னையும் நல்கும் - இறைவனாகிய தன்னையும் என்னையும் உணர்த்தியருளும், போதனாகிய குருபரன் வருவது எப்பொழுது - ஞானவடிவினனாகிய குருநாதன் வருவது எப்பொழுது?

வேத வாகமம், தமிழ் நூன்முறையால் உடம்படுமெய் பெற்றது. வேதச் சென்னியில் விளைபொருள் கடவுளும் ஆன்மாவும் அபேதம் எனவும், ஆகமச் சென்னியில் விளைபொருள் கடவுளும் ஆன்மாவும் பேதம் எனவும், ஆகலான் வேதாந்தமும் சித்தாந்தமும் தம்முள் முரணுவன வெனவும் கருதும் மாறுபாட்டை யொழித்து என்க; கடவுளும் ஆன்மாவும் பொருட்டன்மையால் வேறாயினும் கலப்பால் ஒன்றாதல் பற்றி மலநீக்கத்தின் பொருட்டு அதுவே நான் எனப் பாவிக்கின் கடவுள் ஆன்மாவின் வேறன்றாய்த் தோன்றும் என்பதே வேதமுடிவின் கருத்தாகலின் அஃது ஆகம முடிவுடன் முரணாதாமெனப் பிணக்கறுத்தல் கொள்க: இப்பெற்றியை,

"கண்டவிவை யல்லேனா னென்றகன்று காணுக்
கழிபரமு நானல்லே னெனக்கருதிக் கசிந்த
தொண்டினொடு முளத்தவன்றா னின்றகலப் பாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன் வேறின்றி

விண்டகலு மலங்களெல்லாம் கருடதியா னத்தால்
விடமொழியு மதுபோல விமலதையு மடையும்
பண்டைமறை களுமதுநா னேனென்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே''

என்னும் சிவஞான சித்தியாராலறிக.

''வேதமோ டாகமம் மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே''

என்னும் திருமந்திரமும் இங்கே சிந்திக்கற்பாலது. குருவருளாற் கடவுளைக் கண்டே ஆன்மாவாகிய தன்னைக் காண்டல் இயல்வதாகலின் 'தன்னையும் என்னையும் நல்கும்' என்றார்; இதனை,

''சூரியகாந் தக்கல்லி னிடத்தே செய்ய
சுடர்தோன்றி யிடச்சோதி தோன்று மாபோல்
ஆரியனு மாசான்வந் தருளாற் றோன்ற
வடிஞான மான்மாவிற் றோன்றுந் தோன்றத்
தூரியனுஞ் சிவன்றோன்றுந் தானுந் தோன்றுந்
தொல்லுலக மெல்லாந்தன் னுள்ளே தோன்றும்
நேரியனுப் பரியனுமா யுயிர்க்குயிரா யெங்கு
நின்றநிலை யெல்லாமுன் னிகழ்ந்து தோன்றும்''

என்னுஞ் சித்தியாராலறிக.

''ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலும்
என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்
நின்னிலை யனைத்தையுங் கண்டே னென்னே
நின்னைக் காணு மாந்தர்
தன்னையுங் காணாத் தன்மை யோரே''

என்னும் பட்டினத்தடிகள் திருவாக்கு முணர்க. (கூ)

கரவி லாதபே ரன்பினுக் கெளிவருங் கருணைக்
குரவ னாரரு ளன்றியிக் கொடியவெம் பாசம்
புரையில் கேள்வியாற் கடப்பது*புணையினு லன்றி
உரவு நீர்க்கடல் கரங்கொடு நீந்துவ†தொக்கும்.

(இ - ள்.) கரவுஇலாத பேர் அன்பினுக்கு - கள்ளமில்லாத பெரிய அன்பினுக்கு, எளிவரும் கருணைக் குரவனார் அருள் அன்றி - எளிவந்தருளும் அருளையுடைய ஞானாசிரியரது திருவருட்புணையின்

(பா - ம்.) * கேள்வியாற் கழிப்பது. † கரங்கொடு நீங்குவது.

லன்றி, இக்கொடிய வெம்பாசம்-இந்தக் கொடிய வெவ்விய பாசமாகிய கடலை, புரைஇல் கேள்வியால் கடப்பது. குற்றமில்லாத நூற் கேள்வியினால் கடக்கக் கருதுதல், உரவு நீர்க்கடல் கரங்கொடு நீந்துவது ஒக்கும் - வலிய நீரினையுடைய கடலைக் கையினால் நீந்திக் கடக்கக் கருதுதலை ஒக்கும்.

இறைவன் கரவுடையார்க் கறிவரியன் என்பதனை,
"கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானை"

"பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்ப னவர்தமை நாணியே"

என்னும் தேவாரங்களானறிக. கொடிய வெம்: ஒரு பொருளில் வந்த இரு சொல். நீந்துவதொக்கும் என்றது முடியா தென்றவாறு. (கச)

என்றவ் வாதவூர்* மறையவ ரின்பவீ டெய்தத்
துன்று மாசையாற் றொடக்குண்டு சுருதியா கமநூல்
ஒன்று கேள்வியோர் வருந்தோறு முணர்ந்தவ ரிடைத்தாஞ்
சென்று காண்டோறு மளவளாய்த் தேர்குவா ரானார்.

(இ - ள்.) என்று அவ்வாதவூர் மறையவர் - என்று கருதி அவ்வாதவூரராகிய அந்தணர், இன்பவிடு எய்தத்துன்றும் ஆசையால் தொடக்குண்டு - பேரின்ப வீட்டினை அடைய வேண்டுமென்னும் மிக்க ஆசையினாற் கட்டுண்டு, சுருதி ஆகம நூல் ஒன்று கேள்வியோர் வருந்தோறும் - வேதமும் ஆகமமுமாகிய நூல்களிற் பொருந்திய கேள்வி வல்லுநர் தம்மிடம் வருந்தோறும், உணர்ந்தவர் இடை தாம் சென்று காண்தொறும் - அவற்றை உணர்ந்தாரிடந் தாஞ்சென்று காணுந்தோறும், அளவளாய்த் தேர்குவார் ஆனார் - அவர்களோடு கலந்து ஆராய்வாராயினர்.

மேல் நான்கு பாட்டிலும் சொன்னவற்றைச் சுட்டி 'என்று' என்றார். கேள்வியோர் நகர்க்கு வருந்தொறும் உணர்ந்து அவரிடைத் தாம் சென்று காண்டொறும் என்றுரைத்தலுமாம்;

"வளங்கெழு புவியி னுள்ள வாவியுங் காவு மோடி
விளங்கிசை வண்டு தண்டேன் மிகுமலர் தேடு மாபோல்
உளங்கொள நிமல னன்னூ லோதின ருண்மை யெல்லாம்
அளந்தறி வுணர்ந்த நீரார் யாவரென் றுயு நாளில்"

என்பது வாதவூரடிகள் புராணம். (கரு)

எண்ணி லாரிடத் தளந்தளந் தறிபொரு ளெல்லாம்
உண்ணு நீர்விடாய்க் குவரிநீ ருண்டவ ரொப்ப
அண்ண லாரகத் தமைவுறு தரசனுக் குயிருங்
கண்ணு மாயமைச் சுரிமையுங் கைவிடா தியல்வார்.

(பா - ம்.) * என்றிவ்வாதவூர்.

(இ - ள்.) எண்ணிலார் இடத்து அளந்து அளந்து அறிபொருள் எல்லாம் - (இங்ஙனம்) அளவிறந்த அறிஞரிடத்து ஆராய்ந்தறிந்த பொருளெல்லாவற்றானும், உண்ணும் நீர்விடாய்க்கு - பருகும் நீர் வேட்கையைத் தணிப்பதற்கு, உவரி நீர் உண்டவர் ஒப்ப - கடல் நீரைப் பருகியவரின் வேட்கை தணியாவாறு போல, அண்ணலார் அகத்து அமைவுறாது - பெருமை பொருந்திய வாதவூரர் மனத்தின் கண் அமைதி பொருந்தாதாக, அரசனுக்கு உயிரும் கண்ணுமாய் - மன்னனுக்கு உயிரும் விழியுமாகி, அமைச்சு உரிமையும் கைவிடாது இயல்வார் - அமைச்சுரிமையையும் கைவிடாது நடப்பாராய்,

அடுக்குப்பன்மை குறித்தது. அறிபொருள் எல்லாவற்றானும் அமைதியுறாதாக என விரித்துரைக்க. கடலின் உவர் நீருண்டால் விடாய் தணியாது மிகுதல்போல இவர்க்கும் அமைதியுண்டாகாது உண்மையுணரும் வேட்கை மிகுவதாயிற்று.

''சாத்திரத்தை யோதினர்க்குச் சற்குருவின் றன்வசன
மாத்திரத்தே வாய்க்குநலம் வந்துறுமே— ஆர்த்தகடற்
றண்ணீர் குடித்தவர்க்குத் தாகந் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாயிதனைச் செப்பு''

என்னும் திருக்களிற்றுப்படியார்ச் செய்யுள் இங்கு அறிதற்பாலது. அரசன் எல்லாப் போகங்களையும் நுகர்தற்கும் நல்வழியில் நடத்தற்கும் கருவியாயிருந்தனரென்பார் 'அரசனுக்குயிருங் கண்ணுமாய்' என்றார். (௧௬)

கள்ளக் காதல னிடத்தன்பு கலந்துவைத் தொழுகும்
உள்ளக் காரிகை மடந்தைபோ லும்பரைக் காப்பான்
பள்ளக் காரியுண் டவனிடத் துள்ளன்பு பதிந்து
கொள்ளக் காவல னிடைப்புறத் தொழிலுமுட் கொண்டார்.

(இ - ள்.) கள்ளக்காதலனிடத்து - கள்ளநாயகனிடத்தில் உள்ள, அன்பு உள்ளம் கலந்துவைத்து - அன்பினை அகத்தின்கண் பொருந்த வைத்து, ஒழுகும் காரிகை மடந்தை போல் - அழகிய ஒரு பெண் (புறத்தின்கண் கொண்ட நாயகனுக்குச் செய்யும் புறத்தொழிலில் வழுவாது) ஒழுகுமாறு போல, உம்பரைக் காப்பான் - தேவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு, பள்ளக்காரி உண்டவனிடத்து - கடலின் நஞ்சினை உண்ட இறைவனிடத்து வைத்த; அன்பு உள்பதிந்து கொள்ள - அன்பானது உள்ளத்தின்கண் அழுந்தி (அதனைக் கவர்ந்து) கொள்ள, காவலனிடை புறத்தொழிலும் உட்கொண்டார் - மன்னனிடத்துப் புறத்தொழிலையும் உட்கொண்டு வழுவாது ஒழுகுவாராயினர்.

பள்ளம் - ஆழம்; கடலுக்காயிற்று. காரி - கருமையுடைய நஞ்சு. பதிஞானம் தலைப்படுவார் எத்தொழிலில் நிற்பினும் தம் நிலைகுலையார் என்பதனை,

''நாடுகளிற் புக்குழன்றுங் காடுகளிற் சரித்து நாகமுழை புக்கிருந்துந்
தாகமுத றவிர்ந்தும்

நீடுபல காலங்க ளித்தரா யிருந்தும் நின்மலஞா னத்தையில்லார்
நிகழ்ந்திடுவர் பிறப்பில்
ஏடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே யிடைக்கே யெறிவிழியின் படு
கிடந்துமிறை ஞானம் [கடைக்கே
கூடுமவர் கூடரிய வீடுங் கூடிக் குஞ்சித்த சேவடியுங்
கும்பிட்டே யிருப்பர்''

என்னும் சிவஞான சித்தியாரால் அறிக. (கஎ)

இன்ன செய்கையி னொழுகுவா ரொருபொழு தேகித்
தென்னர் தம்பிரா னவையிடைச் சென்றெதிர் நின்றார்
அன்ன போதடு பரிநிறை காப்பவ ரரசன்
முன்னர் வந்துதாழ்ந் தொருசிறை நின்றிது மொழிவார்.

(இ - ள்.) இன்ன செய்கையின் ஒழுகுவார் - இச் செய்கையுடன் ஒழுகுவாராகிய வாதவூரர், ஒரு பொழுது ஏகி - ஒருநாட் சென்று, தென்னர் தம்பிரான் அவையிடைச் சென்று எதிர் நின்றார்-பாண்டியர் தலைவனாகிய அரிமருத்தனனது அவையினைக் குறுகி அவனெதிரே நின்றனர்; அன்னபோது - அப்பொழுது, அடுபரிநிரை காப்பவர்- பகைவரைக் கொல்லும் குதிரைப்பந்தியினைக் காப்பவர், அரசன் முன்னர் வந்து தாழ்ந்து - அவ்வரசன் முன் வந்து வணங்கி: ஒரு சிறை நின்று இது மொழிவார் - ஒரு புறத்தில் ஒதுங்கி நின்று இதனை மொழிவாராயினர்.

இன்ன, அன்ன என்பன சுட்டுத்திரிபுகள். (கஅ)

மறந்த வாதவேல் வலவநம் வயப்பரி வெள்ளத்
திறந்த வாம்பரி போகநின் றெஞ்சிய வெல்லாம்
நிறைந்த நோயவு நெடிதுமுப் புடையவு மன்றிச்
சிறந்த வாம்பரி யொன்றிலை தேர்ந்திடி னென்றார்.

(இ - ள்.) மறம் தவாத வேல்வலவ-வெற்றி நீங்காத வேற்படை ஏந்திய வீர, நம் வயப்பரி வெள்ளத்து - நமது வெற்றி பொருந்திய குதிரை வெள்ளத்தில், இறந்த வாம்பரி போக - இறந்தொழிந்தவாகிய குதிரைகள் போக, நின்று எஞ்சிய எல்லாம் - எஞ்சி நின்ற குதிரைகள் அனைத்தும், நிறைந்த நோயவும் - நிறைந்த நோயினையுடையவும், நெடிது மூப்பு உடையவும் அன்றி - கழிந்த மூப்பினை யுடையனவுமே அல்லாமல், தேர்ந்திடின் சிறந்த வாம்பரி ஒன்று இலை என்றார் - ஆராய்ந்து பார்க்குமிடத்துச் சிறந்த தாவுங் குதிரை ஒன்றேனும் இல்லை என்று கூறினர்.

உரிமைபற்றி 'நம்' என்றார். அளவிறந்த குதிரை யென்பார் 'பரிவெள்ளத்து' என்றனர். வாம், வாவும் என்னும் பெயரெச்சத்து உயிர்மெய் கெட்டது. (கக)

மன்றல் வேம்பனும் வாதவூர் வள்ளலை நோக்கி
இன்று நீர்நம தறைதிறந் திருநிதி யெடுத்துச்
சென்று வேலையந் துறையில்வந் திறங்குவ தெரிந்து
வென்றி வாம்பரி கொடுவரப் போமென்று விடுத்தான்.

(இ - ள்.) மன்றல் வேம்பனும் - (அதனைக் கேட்ட) மணம் பொருந்திய வேப்பமலர் மாலையை யணிந்த பாண்டியனும், வாதவூர் வள்ளலை நோக்கி - (எதிர் நின்ற) வாதவூர் வள்ளலாரைப் பார்த்து, நீர் இன்று நமது அறை திறந்து-நீர் இன்று நமது கருவூலத்தைத் திறந்து, இருநிதி எடுத்து - பெரும்பொருளை எடுத்துக் கொண்டு, சென்று - போய், வேலையந்துறையில் வந்து இறங்குவ - கடற்றுறையின் கண் வந்து இறங்கும் குதிரைகளில், வென்றி வாம்பரி தேர்ந்து கொடு வரப்போம் என்று விடுத்தான் - வெற்றியைத் தரத்தக்க தாவுங் குதிரைகளை ஆராய்ந்து வாங்கிக் கொண்டு வருதற்குப் போவீராக என்று கூறி அனுப்பினான்.

அறை - பண்டாரம். போம்: செய்யுமென்னும் வாய்பாட்டேவல்; பிற்கால வழக்கு. (உ0)

உள்ளம் வேறுபட் டமைச்சிய னெறியினின் றொழுகும்
வள்ள லார்நிதி யறைதிறந் தரும்பெறல் வயமான்
கொள்ள வேண்டிய பொருளெலாங் கொண்டுதா மிறுக்கி
வெள்ளை மாமதி வேந்தனை விடைகொடு போவார்.

(இ - ள்.) உள்ளம் வேறுபட்டு - மனம் வேறுபட்டு, அமைச்சியல் நெறியில் நின்று ஒழுகும் வள்ளலார் - அமைச்சியற்றுறையில் வழுவாது நின்று ஒழுகும் வாதவூர் வள்ளலார், நிதி அறை திறந்து - கருவூலத்தினைத் திறந்து, அரும்பெறல் வயமான் கொள்ளவேண்டிய - பெறுதற்கரிய வெற்றியினையுடைய குதிரைகள் கொள்ளுதற்கு வேண்டிய, பொருள் எலாம்கொண்டு - பொருள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு, தாம் இறுக்கி - தாமிட்டு, வெள்ளைமாமதி வேந்தனை விடைகொடு போவார் - வெண்மையாகிய பெருமை பொருந்திய சந்திரனது மரபினனாகிய பாண்டியனிடம் விடைபெற்றுச் செல்கின்றவர்.

உள்ளம் வேறுபடுதல் - மனத்தைச் சிவனிடத்து வைத்தல். அரசன் பொருளைச் சிவபெருமானுக்கும் சிவனடியார்க்குமாக வழங்கி, அரசற்கு இம்மையோடு மறுமையும் வழங்குவாரென்பது குறிப்பார் 'வள்ளலார்' என்றார். அரசன் அவ்வடிகள் பெருமையை உள்ளவாறுணரும் அறிவு வலி பெற்றிலானென்பது குறிப்பிற்றோன்ற 'வெள்ளை மாமதி வேந்தன்' என்றார். வேந்தன்பால் என ஏழனுருபாக்குக; விடைகொடு என்பது ஒரு சொல்லாய் இரண்டாவதற்கு முடிபாயிற்று என்னலுமாம். (உக)

எடுத்த பொற்சுமை யொட்டகத் திட்டுமுன் னேக
விடுத்து விண்டொடு திண்டிமில்* விடையவன் கோயில்
அடுத்த விழ்ந்தபொன் னம்புயத் தடம்படிந் தனைய
மடுத்த டங்கரைச் சித்திபைங் கரத்தனை வணங்கா.

(பா - ம்.) * திண்டிறல்.

(இ - ள்.) எடுத்த பொன்சுமை - கருவூலத்தினின்றும் எடுத்த பொன் சுமையை, ஒட்டகத்து இட்டுமுன் ஏகவிடுத்து - ஒட்டகத்தில் ஏற்றி அவைமுன்னே செல்லுமாறு ஏவி, விண்தொடு - வானை அளாவிய, திண் திமில் விடையவன் கோயில் அடுத்து - திண்ணிய திமிலையுடைய இடபவூர்தியை உடைய சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலுட் சென்று, அவிழ்ந்த பொன் அம்புயத் தடம்படிந்து - மலர்ந்த பொற்று மரையினையுடைய வாவியின்கண் நீராடி, அனைய மடுத்தடம் கரை - அந்த ஆழமாகிய பொய்கையினது கரையின்கண் எழுந்தருளிய, சித்தி ஐங்கரத்தனை வணங்கா - ஐந்து கைகளையுடைய சித்தவிநாயகனை வணங்கி.

விண்டொடு கோயில் எனக் கூட்டுக. திமில் - சூடு; கொண்டை யெனவும் வழங்கும். (உஉ)

கருணை நாயகி யங்கயற் கண்ணியெம் பிராட்டி
அருண நாண்மலர்ச் செய்யசீ றடித்தல மிறைஞ்சி
வருண ஞர்பெரு வயிற்றுநோய் வலிகெடுத் தாண்ட
தருண நாண்மதிச் சடையுடை யடிகண் முன்றாழா.

(இ - ள்.) கருணை நாயகி அங்கயற்கண்ணி - அருட்சத்தியாகிய அங்கயற் கண்ணி என்னும், எம்பிராட்டி - எம் பெருமாட்டியின், அருணநாள் மலர் - சிவந்த அன்றலர்ந்த தாமரைமலர் போலும், செய்ய சிறடித்தலம் இறைஞ்சி - சிவந்த சிறிய திருவடிகளை வணங்கி, வருணன் ஆர்பெருவயிற்று நோய்வலி கெடுத்து - வருணனது நிறைந்த பெரிய வயிற்றினது நோயின் வன்மையைப் போக்கி, ஆண்ட - ஆண்டருளிய, தருண நாள் மதிச் சடை உடை - இளமையாகிய பிறைமதியினைத் தரித்த சடையினையுடைய, அடிகள் முன் தாழா - இறைவன் திருமுன் வணங்கி.

அருணம் - செந்நிறம். வருணனது வயிற்றுநோய் கெடுத்தமையை இப் புராணத்து வருணன் விட்ட கடலை வற்றச்செய்த படலத்திற் காண்க. மலநோயை முருக்கிச் சிவஞானம் பெருக்க வணங்கினர் என்பது குறிப்பிற்றோன்ற 'வருணனர் பெருவயிற்று நோய் வலிகெடுத் தாண்ட தருணநாண்மதிச் சடையுடை யடிகண் முன்றாழா' என்றார். (உ௩)

ஒன்று வேண்டுமிப் பொருளெலா முனக்குமைம் பொறியும்
வென்று வேண்டுநின் னன்பர்க்கு மாக்குக வெள்ளி
மன்று வேண்டிநின் றாடிய வள்ளலென் றுறையீ
தென்று வேண்டிநின் றேத்துவார்க் கிறைவனின் னருள்போல்.

(இ - ள்.) வெள்ளிமன்று வேண்டிநின்று ஆடிய வள்ளல் - வெள்ளியம்பலத்தினை விரும்பி நின்று ஆடியருளிய வள்ளால், ஒன்று வேண்டும் - (அடியேனுக்கு) ஒரு வரம் அருளல் வேண்டும், இப் பொருள் எலாம் - (அதாவது) இப்பொருள் அனைத்தையும், உனக்கும் - நினக்கும், ஐம்பொறியும் வென்று வேண்டும் நின் அன்பர்க்கும் ஆக்குக-

(பா - ம்,) சீரடி.

ஐம்பொறிகளையும் அடக்கி நின்னையே விரும்பும் நின் அடியார்கட்கும் உரியவாக்குக'; என்குறை ஈது என்று வேண்டி நின்று ஏத்துவார்க்கு- அடியேன் குறைபாடு இதுவே என்று குறையிரந்து நின்று துதிக்கும் அவ்வாதவூரடிகளுக்கு, இறைவன் இன்அருள் போல் - அவ்விறைவன் தனது இனிய திருவருளை ஈந்தருளியது போல.

மன்றுவேண்டி நின்முடிய வள்ளல் என்றது பதஞ்சலி, புலிக்காலர் என்னும் முனிவர்களின் வேண்டுகோளுக்கு அருள்புரிந்தமைபோல அடியேன் வேண்டுகோளுக்கு அருள்புரிக என்னுங் கருத்தை யுட்கொண்டிருத்தலால் வாக்கியரூபமாக வந்த கருத்துடையடை கொளியணி. (உ௪)

ஆதி சைவனு மருச்சக னொருவனே ரணைந்து
பூதி யீந்தன னமக்கிது போலிலை நிமித்தம்
ஈது நன்னெறிக் கேதுவென் றிருகையேற் றணிந்து
வேத நாதனை யிறைஞ்சினர் விடைகொடு மீண்டார்.

(இ - ள்.) ஆதிசைவனும் அருச்சகன் ஒருவன்நேர் அணைந்து பூதி ஈந்தனன் - ஆதிசைவனாகிய அருச்சகன் ஒருவன் நேரில்வந்து திருநீறு அளித்தனன்; நமக்கு நிமித்தம் இதுபோல் இல்லை - நமக்கு இதுபோல் நன்னிமித்தம் வேறில்லை; ஈது நன்நெறிக்கு ஏது என்று-இது நாம் அடையக் கருதும் நல்வழிக்கு ஓர் ஏதுவாம் என்று கருதி, இருகை ஏற்று அணிந்து - இரண்டு கரங்களிலும் ஏற்று நெற்றியிற் றரித்து; வேதநாதனை இறைஞ்சினர் - வேத நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளை வணங்கி, விடைகொடு மீண்டார் - விடைபெற்று மீண்டனர்.

ஆதிசைவன் - சிவ மறையோன், இறைஞ்சினர்: முற்றெச்சம். (உ௫)

கலிவிருத்தம்

இன்னிய மதிர்ந்தன வெழுந்தன பதாதி
துன்னிய விணைக்கவரி துள்ளின துகிர்க்காற்
பொன்னியன் மதிக்குடை நிழன்றன* பொலங்கொண்
மின்னிய மணிச்சிவிகை மேற்கொடு நடந்தார்.

(இ - ள்.) இன்இயம் அதிர்ந்தன - இனிய வாத்தியங்கள் ஒலித்தன; பதாதி எழுந்தன - கொடிகள் மேல் எழுந்தன; துன்னிய இணைக் கவரி துள்ளின - நெருங்கிய இரட்டைச் சாமரைகள் இருபுறமுந் துள்ளின; துகிர்க்கால் பொன் இயல் மதிக்குடை நிழன்றன - பவளக் காலையுடைய பொன்னாலியன்ற சந்திரவட்டக் குடைகள் நிழல் செய்தன; பொலம் கொள் மின்னிய மணிச்சிவிகை மேற்கொடு நடந்தார் - பொன்னாற் செய்தலைக் கொண்ட ஒளி வீசும் மணிகள் அழுத்திய சிவிகையின் மேலேறிச் சென்றனர். (உ௬)

(பா - ம்.) * நிழற்றின.

மற்றிவர் வழிப்படுமுன் மாறிநட மாடும்
வெற்றிவிடை யாரிவர் வினைத்தொகையி னொப்பும்
பற்றிய விருட்டுமல பக்குவமு நோக்கா
உற்றடிமை கொண்டுபணி கொண்டருள வுன்னா.

(இ - ள்.) இவர் வழிப்படுமுன் - இங்ஙனம் இவர் நடப்பதற்கு முன்னரே, மாறிநடம் ஆடும் வெற்றி விடையார் - கான்மாறி நடித்தருளும் வெற்றியினையுடைய இடபவூர்தியை யுடைய சோமசுந்தரக் கடவுள், இவர் வினைத்தொகையின் ஒப்பும் - இவரது இருவினை ஒப்பையும், பற்றிய இருட்டுமல பக்குவமும் நோக்கா-தொடர்ந்த இருளாகிய மல பரிபாகத்தையும் நோக்கி, உற்று அடிமை கொண்டு பணி கொண்டருள உன்னா - குரவனாகிச் சென்று ஆட்கொண்டு தமது திருப்பணியின்கண் நிறுத்தி யருளத் திருவுளங் கொண்டு.

இருவினை யொப்பு - நல்வினைப் பயனாகிய இன்பத்தையும் தீவினைப் பயனாகிய துன்பத்தையும் ஒரு பெற்றியே நோக்குவது; புண்ணிய பாவம் இரண்டனையும் அவற்றின் பயன்களையும் ஒப்ப உவர்த்து விடுமாறு அவ்விருவினையும் அறிவின்கண் ஒப்ப நிகழ்தல் என்றுமாம்; பிறவாறு உரைப்பாரு முளர்; சிவஞான போத மாபாடியத்துள் மாதவச் சிவஞான முனிவரால் இது விரித்துரைக்கப்பட்டுளது; ஆண்டுக்காண்க. மலபக்குவம் - மலபரிபாகம்; ஆணவமலம் தனது சத்தி தேய்தற்குரிய துணைக்காரணங்க ளெல்லாவற்றோடும் கூடுதல். நோக்கா, உன்னா என்பன செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். (உஎ)

சந்தமறை தீண்டரிய தங்கருணை யாலோர்
அந்தணர் குலக்குரவ னாகியடி நீங்கா
மைந்தர் பலர் தம்மொடு பெருந்துறையில் வந்தோர்
கொந்தலர் நெருங்கிய குருந்தடி யிருந்தார்.

(இ - ள்.) சந்தமறை தீண்டரிய தம் கருணையால் - சந்தமமைந்த வேதமும் தீண்டுதற்கரிய தமது கருணையினால், ஓர் அந்தணர் குலக் குரவனாகி - ஓர் அந்தணர் குலத்து ஆசிரியத் திருமேனி கொண்டு, அடி நீங்கா மைந்தர் பலர் தம்மொடு - திருவடியினைப் பிரியாத பல மைந்தர்களோடும், பெருந்துறையில் வந்து - திருப்பெருந்துறையின் கண் வந்து, அலர்கொந்து நெருங்கிய - பூங்கொத்துக்கள் அடர்ந்த, ஓர் குருந்தடி இருந்தார் - ஒரு குருந்த மரத்தின் அடியில் இருந்தனர்.

மைந்தர் - மாணவகர்; ஆசிரியனை ஞானபிதா என்றும், மாணாக்கரை ஞானபுத்திரர் என்றும் கூறுதல் மரபு. அடி நீங்கா - நிழல் போலத் திருவடியை விட்டு நீங்காது தொடர்ந்த;

"அருபரத் தொருவ னவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல"

எனத் திருவாசகம் போற்றித் திருவகவலில் வருதல் காண்க; திருவடியை இடையறுது சிந்திக்கும் பத்திவலி யமைந்த மாணக்கர் என்பாரு முளர். (உஅ)

பொருங்கட லனீகமோடு போய்ப்புற வடுத்த
இருங்கட மளப்பில கடந்தெழு பிறப்பாங்
கருங்கடல் கடக்கவரு வார்கருணை வெள்ளப்
பெருங்கட னிறைந்துறை பெருந்துறை யடைந்தார்.

(இ - ள்.) பொருங்கடல் அனீகமொடு போய் - கரையொடு மோதுங் கடல்போன்ற சேனைகளோடுஞ் சென்று, புறவு அடுத்த இருங்கடம் அளப்புஇல கடந்து - முல்லை நிலத்தினை அடுத்த பெரிய காடுகள் அளவிறந்தவற்றைக் கடந்து, எழு பிறப்பாம் கருங்கடல் கடக்க வருவார் - எழுவகைப் பிறப்பு என்னுங் கரிய கடலைக் கடக்க வரும் அவ் வாதவூரடிகள், கருணை வெள்ளப் பெருங்கடல் நிறைந்து உறை - அருள்வெள்ளம் நிறைந்த பெரிய கடல் நிறைந்து உறையும், பெருந்துறை அடைந்தார் - திருப்பெருந் துறையினை அடைந்தனர்.

கடம் - சுரம்; பாலையாகிய காடு. ஒரு கடல் கடக்க வருவார் மற்றொரு கடல் உள்ள இடத்தை யடைந்தார் என்னும் நயமும், பெருங்கடலிலே பெருந்துறை இருப்பது முறையாகவும் பெருந்துறையில் பெருங்கடல் உறைகின்றது என்னும் நயமும் இன்பம் விளைப்பன. கருணைவெள்ளப் பெருங்கடல் - சிவபெருமான். (உகூ)

அடுத்திட வடுத்திட வகத்துவகை வெள்ளம்
மடுத்திட முகிழ்த்தகைம் மலர்க்கமல முச்சி
தொடுத்திட விழிப்புன றுளித்திட வினைக்கே
விடுத்திடு மனத்தருள் விளைந்திட நடந்தார்.

(இ - ள்.) அடுத்திட அடுத்திட - அப்பெருந்துறை எல்லையை அடுக்க அடுக்க, அகத்து உவகை வெள்ளம் மடுத்திட - மனத்தின்கண் மகிழ்ச்சிப் பெருக்கு நிறையவும், முகிழ்த்த கைமலர்க் கமலம் உச்சி தொடுத்திட - கூப்பிய கைகளாகிய தாமரை மலர்கள் முடியின்கண் ஏறவும், விழிப்புனல் துளித்திட - ஆனந்தக் கண்ணீர் துளிக்கவும், வினைக்கே விடுத்திடும் மனத்து - இறைவன் திருத் தொண்டுக்கே தம்மைச் செலுத்தும் மனத்தின்கண், அருள் விளைந்திட நடந்தார் - திருவருள் விளையவும் நடந்தனர்.

கமலமலர் என மாறுக. வினை - ஈண்டு இறை பணி; ஏழனுருபு நிற்குமிடத்து நான்கனுருபு நின்றது வேற்றுமை மயக்கம்; வினைக்கு விடை கொடுத்திடும் என்றலுமாம். (௩௦)

பித்தித வெனப்பிறர் நகைக்கவரு நாலாஞ்
சத்திபதி யத்தமது சத்தறிவு தன்னைப்
பொத்திய மலத்தினும் வேரீஇச்சுமை பொறுத்தோன்
ஒத்திழி பிணிப்புறு மொருத்தனையு மொத்தார்,

(இ-ள்.) இது பித்து எனப் பிறர் நகைக்கவரும்-இது பித்து என்று கூறிப் பிறர் நகைபுரியுமாறு வருகின்ற, நாலாஞ் சத்தி பதிய-நான்காவதாகிய திவிரதர சத்திநிபாதம் உண்டாக, தமது சத்து அறிவு தன்னைப் பொத்திய - தமது உண்மையறிவினை மறைத்த, மலத்தினும் வெரீஇ - மலத்தினின்றும் அஞ்சி, சுமை பொறுத்தோன் ஒத்து - (முன்) சுமை பொறுத்தோனை ஒத்து, இழிபிணிப்புறும் ஒருத்தனையும் ஒத்தார் - (பின்) கட்டு நீங்கியவனையும் ஒத்தார்.

அருள் வயத்தராய்த் தம் வயமழிந்து நிற்பார் ஒன்றனை ஒருகாற் செய்து ஒருகால் இழத்தலை நோக்கி உலகினர் பித்தென நகையாநிற்பர்.

"சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்
சதுரிழந் தறிமால் கொண்டு"

"பித்தனென்றெனை யுலகவர் பகர்வதோர் காரணமிது கேளீர்"

எனவரும் திருவாசகவடிகளை நோக்குக. சத்திநிபாதம் மந்ததரம், மந்தம், திவிரம், திவிரதரம் என நான்கு வகைப்படும்; அரக்கு வெய்யிலில் வெதும்புவதுபோல்வது மந்ததரம், மெழுகு வெய்யிலில் உருகுவதுபோல்வது மந்தம், நெய்சூட்டி விளகுவது போல்வது திவிரம், நெய் நெருப்பிலுருகுவது போல்வது திவிரதரம் என்க; தைலம் இடையறு தொழுகுவது போல்வது திவிரதரம் என்றுமாம். மலத்தினும் வெரீஇ - மலத்தினின்றும் அஞ்சி நீங்கி, முன் சுமை பொறுத்தோனையும் கட்டுண்டோனையும் ஒத்திருந்து, இப்பொழுது சுமை யிறக்கியவனையும் கட்டு நீங்கியவனையும் ஒத்தார் என உரைத்துக்கொள்க. இழி என்பதனைச் சுமையொடு கூட்டிச் சுமையிறக்கிய என்றும், பிணிப்புடன் கூட்டிப் பிணிப்பு நீங்கிய என்றும் பொருள் கொள்ள வேண்டும்.

"ஆவதெ னிதனைக் கண்டிங் கணைதொறு மென்மேற் பாரம்
போவதொன் றுளது போலும்"

என்னும் திருத்தொண்டர் புராணச் செய்யுள் இங்கு நோக்கற்பாலது. (௩௧)

நெருப்பிலிடு வெண்ணெயென நெஞ்சுருக வென்னை
உருக்குமித னலெனை யொளித்தமல வாற்றல்
கருக்குமவ னாகியெனை யாள்கருணை வெள்ளம்
இருக்குமிட னேயிதென வெண்ணிநகர் புக்கார்.

(இ - ள்.) நெருப்பில் இடுவெண்ணெய் என - நெருப்பிலிட்ட வெண்ணெய் உருகுவதுபோல, நெஞ்சு உருக என்னை உருக்கும் - நெஞ்சு உருகுமாறு அடியேனை உருக்குகின்ற, இதனல் - இவ் வேதுவினல், எனை ஒளித்த மல ஆற்றல் கருக்குமவனாகி - என் அறிவினை மறைத்த ஆணவ மலத்தின் வலியினைத் தீர்ப்பவனாகி, எனை ஆள் கருணை வெள்ளம் - அடியேனை ஆட்கொள்ளும் கருணையங்கடல், இருக்கும் இடன் இதுவே என எண்ணி - வீற்றி

ருக்கும் இடம் இதுவே என்று கருதி, நகர் புக்கார் - அந்நகருட் புகுந்தனர்.

கருக்குமவன் - கருக்குவான். இதெனை: விகாரம். (ருஉ)

காயிலே யடைந்தகழு முட்படை வலத்தார்
கோயிலே யடைந்துகுளிர் வான்புனல் குடைந்து
வாயிலே யடைந்துடல மண்ணுற விழுந்து
வேயிலே யடைந்தவரை மெய்ப்புகழ் வழுத்தா.

(இ - ள்.) காய் இலே அடைந்த கழுமுள் படை வலத்தார் - வருத்துகின்ற தகட்டு வடிவமமைந்த சூலப்படையினை வலக்கரத்தில் ஏந்திய இறைவரது, கோயிலே அடைந்து - திருக்கோயிலைச் சார்ந்து. குளிர்வான் புனல் குடைந்து - தண்ணிய சிறந்த புனலில் நீராடி, வாயிலே அடைந்து - திருவாயிலே அடைந்து, உடலம் மண்ணுற விழுந்து - உடல் மண்ணிற்றேயுமாறு விழுந்து வணங்கி, வேய் இலே அடைந்தவர் மெய்ப்புகழை வழுத்தா - மூங்கிலாகிய திருக்கோயிலே அடைந்த அவ்விறைவரது உண்மையமைந்த புகழினைத் துதித்து.

நெல்லைப்பதியில் மூங்கிலிற்றேன்றினு ராதலின் 'வேயிலேயடைந்தவரை' என்ருர். அடைந்தவரை என்பதிலுள்ள ஐகாரத்தைப் பிரித்துப் புகழ் என்பதனேடு கூட்டுக; புகழ் வழுத்தா என்பதை ஒரு சொல்லாகக் கொண்டு இரண்டாவதற்கு முடிபாக்கலுமாம். (ருரு)

ஆலயம ருங்குவல மாகவரு வார்முன்
மூலமறை யோதிமுடி யாதபொரு டன்னைச்
சீலமுனி வோர்தெளிய மோனவழி தேற்றுங்
கோலமுறை கின்றதோர் குருந்தையெதிர் கண்டார்.

(இ - ள்.) ஆலயம் மருங்கு வலமாக வருவார் - அத்திருக்கோயிலின்கண் வலமாக வரும் அவ்வாதவூரடிகள், மூன் - முன்னெரு காலத்தில், மூலம் மறை ஓதி முடியாத பொருள் தன்னை - முதனூலாகிய மறையினை ஓதியும் அறிய முடியாத பொருளை, சீல முனிவோர் தெளிய - தவவொழுங்கினை யுடைய சனகாதி முனிவர்கள் தெளியுமாறு, மோனவழி தேற்றும் கோலம் உறைகின்றது - மௌனநெறியிஞற் றெளிவித்த திருக்கோலம் வீற்றிருக்கப் பெற்றதாகிய, ஓர் குருந்தை எதிர் கண்டார் - ஒரு குருந்த மரத்தினை எதிரே கண்ணுற்ருர்.

மோனவழி தேற்றுதல் - திருவாய் மலர்ந்தருளாது மோன முத்திரையத்தனுய் இருந்து காட்டுதல்; கடவுள் வாழ்த்தானுமறிக. ஆல் நிழலில் நால்வர்க்கு ஒளி நெறி காட்டிய அக்கோலத்துடனேயே இங்கே குருந்தினிழலில் எழுந்தருளியிருந்தாரென்க. (ருசு)

கலிநிலைத்துறை

வேத நூலொரு மருங்கினு மெய்வழிச் சைவப்
போத நூலொரு மருங்கினும் புராணத்துட் கிடந்த
கீத நூலொரு மருங்கினுங் கிளைகெழு சமய
பேத நூலொரு மருங்கினும் வாய்விட்டுப் பிறங்க.

(இ-ள்.) வேதநூல் ஒரு மருங்கினும் - மறைநூல் ஒரு பாலும், மெய்வழிச் சைவப் போத நூல் ஒரு மருங்கினும் - உண்மை நெறியைக் கூறும் ஆகமமாகிய ஞான நூல் ஒரு பக்கத்தும், புராணத்துள் கிடந்த கீத நூல் ஒரு மருங்கினும் - புராணத்துடன் கிடந்த இசை நூல் ஒரு சிறையும், கிளை கெழு சமய பேதநூல் ஒரு மருங்கினும் - பல கிளைகளை யுடைய வேற்றுமைப்பட்ட சமய நூல்கள் ஒரு மருங்கினும், வாய் விட்டுப் பிறங்க - வாய் விட்டு ஒலிக்கவும்.

புராணத்துடன் கிடந்த கீத நூல் என்க; மூன்றனுருபு நிற்கு மிடத்து ஏழனுருபு நிற்றல் வேற்றுமை மயக்கம். இசை விருப்பின ராதலின் கீதநூலுங் கூறினர்;

"அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகடா மருளுமாறே"

என்னும் தமிழ் மறையுங் காண்க. பிறங்க - விளங்க; ஒலித்தல் மேற்று. (நடு)

சுருதி கூறிய வறமுத னான்குமத் தொன்னூற்
கரிய தாங்கதிக் கேதுவென் றாகமங் காட்டுஞ்
சரியை யாதிநாற் பாதமுந் தலைதெரிந் துணர்ந்த
பெரிய மாணவர் கழகமும் வினாவிடை பேச.

(இ-ள்.) சுருதி கூறிய அறம் முதல் நான்கும் - மறைகள் கூறிய அறமுதலிய பொருள் நான்கினையும், அத் தொல்நூற்கு அரியதாம் கதிக்கு - அம் முதனூலுக்கு அரியதாகிய வீடுபேற்றுக்கு, ஏது என்று ஆகமம் காட்டும் - கருவி என்று ஆகமங்கள் கூறும், சரியை ஆதிநாற் பாதமும் - சரியை முதலிய பாதங்கள் நான்கினையும், தலைதெரிந்து உணர்ந்த - சிக்கறுத்து உணர்ந்த, பெரிய மாணவர் கழகமும் - பெரிய மாணவர் கூட்டங்களும், வினாவிடை பேச - வினாவும் விடையுமாகப் பேசவும்.

நாற்பாதம்-சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன, சரியை - சிவபிரான், உயிர்கள் சோபான முறையானுணர்ந்து உய்தற் பொருட்டுக் கொண்டருளிய தூலம், சூக்குமம், அதிசூக்குமம் என்னும் மூவகை வடிவினுள்ளே நுண்ணுணர் வின்மையிற் சகளமாகிய தூல வடிவ மாத்திரத்தைப் பொருளென்றுணர்ந்து காயத் தொழின் மாத் திரையால் ஆகமத்தின் விதித்தவாறு வழிபடுதல்; கிரியை - அஃது அடிப்பட்டு வரவர நிகழும் பக்குவ விசேடத்தால் நுண்ணுணர் வுடையராய்ச் சகள நிட்களமாகிய சூக்கும வடிவமே பொருள், சகள வடிவம் அதனை வழிபடுதற்கிடமாகிய திருமேனி, என்று இவ்வா

றுணர்ந்து புறமாகிய காயத் தொழிலானும் அகத் தொழிலானும் விதித்தவாறே வழிபடுதல்; யோகம்-அஃது அடிப்பட்டு வரவர நிகழும் பக்குவ விசேடத்தால் அதி நுட்ப வுணர்வுடையராய் நிட்களமாகிய அதிசூக்கும வடிவமே பொருள், சகளமும் சகள நிட்களமும் அதனை வழிபடுதற்கிடமாகிய திருமேனிகள், என்று இவ்வாறுணர்ந்து அகத் தொழின் மாத்திரையால் விதித்தவாறே வழிபடுதல்; ஞானம்-மூன்றும் இவ்வாறு முறையே அடிப்பட்டு வரவர நிகழும் பக்குவ முதிர்ச்சியானே உள்ளவாறு உணர்வு விளங்கி எங்கு நிறைந்த சச்சிதானந்தப் பிழம்பே சொரூபம், ஏனைச் சகளம் முதலிய மூன்றும் தூலாருந்ததி நியாயமாக அதனை உணர்தற்பொருட்டும் வழிபடுதற்பொருட்டும் கொண்ட திரு மேனிகள், என்றிவ்வாறுணர்ந்து காயத்தொழில் மனத்தொழில் இரண்டனையும் கைவிட்டு, கேட்டல் முதலிய அறிவுத் தொழின் மாத்திரையால் வழிபடுதல்; இன்னும் இவற்றின் விரிவைச் சிவஞான போத மாபாடியத்துட் காண்க. (நசு)

சரியை வல்லமெய்த் தொண்டருஞ் சம்புவுக் கினிய
கிரியை செய்யுநன் மைந்தருங் கிளர்சிவ யோகந்
தெரியுஞ் சாதகக் கேளிருந் தேசிகத் தன்மை
புரியும் போதகச் செல்வரு மளவிலர் பொலிய.

(இ-ள்.) சரியை வல்லமெய்த் தொண்டரும் - சரியையில் வல்ல உண்மைத் தாதமார்க்கத்தினரும், சம்புவுக்கு இனிய கிரியை செய்யும் நல்மைந்தரும் - இறைவனுக்கு இனிய கிரியையினைச் செய்யும் நல்ல புத்திர மார்க்கத்தினரும், கிளர் சிவயோகம் தெரியும் சாதகக் கேளிரும்- விளங்கா நின்ற சிவயோகத்தினை அறியுஞ் சாதனையையுடைய சகமார்க்கத்தினரும், தேசிகத்தன்மை புரியும் போதகச் செல்வரும் அளவிலர் பொலிய - ஞானாசிரியத் தன்மையைச் செய்யும் ஞானச் செல்வராகிய சன்மார்க்கத்தாருமாகிய அளவிறந்தவர்கள் விளங்கவும்.

மேற்பாட்டிலே நாற்பாதத்தையும் ஆராய்ந்த மாணுக்கரைக் கூறி, இப்பாட்டில் அவற்றில் வல்லரா யொழுகுவாரைக் கூறினர். சரியை முதலிய நான்கும் முறையே தாதமார்க்கம், புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனவும் பெயர் பெறும் எனவும், அந்நெறி களில் நிற்பார் தொண்டர், மைந்தர், சாதகர், போதகர் எனப் பெய ரெய்துவார் எனவும், அவரெய்தும் பயன் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்னும் பதமுத்தி பரமுத்திகளுமாம் எனவும் கொள்க; இவற்றினியல்பைச் சிவஞான சித்தியார் எட்டாஞ் சூத்தி ரத்தும், இப்புராணத்து வரகுணனுக்குச் சிவலோகங்காட்டிய படலத்தும் காண்க;

"அழிவி லானுரை யாகம மிலக்கமாய்ந் தவற்றுள்
விழுமி தாகிய விதியினும் விலக்கினு மடியைத்
தழுவு தொண்டர்கண் மைந்தர்கள் சாதகர் பாசங்
கழுவி வீடருள் போதகக் காட்சியர் பலரால்"

என்னும் நகரப்படலச் செய்யுளும் இங்கு நோக்கற் பாலது. கேளிர் - சகர், தோழர். (கூஎ)

ஒழித்த நோன்பின ராடலர் பாடல ருலகம்
பழித்த செய்கைய ரழுகையர் நகையினர் பாசங்
கழித்த கண்ணினு லரனுருக் கண்டுகோண் டுலகில்
விழித்த கண்குரு டாத்திரி வீரரும் பலரால்.

(இ - ள்.) ஒழித்த நோன்பினர் ஆடலர் பாடலர் - விதி விலக்குக் கடந்த தவத்தினை யுடையராய் ஆடியும் பாடியும், உலகம் பழித்த செய்கையர் - உலகத்தாரால் பழிக்கப்படுஞ் செய்கையை யுடையராய், அழுகையர் நகையினர் - அழுகையை யுடையராய், நகையினை யுடையராய், பாசம் கழித்த கண்ணினால் - மலத்தை நீக்கிய ஞானக் கண்ணினால், அரன் உருக் கண்டுகொண்டு - இறைவன் திருவுருவத்தை இடையறாது தரிசித்துக்கொண்டு, உலகில் விழித்த கண் குருடாத்திரி வீரரும் பலர் - உலகின்கண் திறந்த ஊனக்கண் குருடாகத் திரிகின்ற வீரரும் பலர்.

பசுகரணம் பதிகரணமாக நிகழப் பெற்றுத் தற்செய விழப்பினின்று செய்வன யாவும் அவர்க்குத் தவமா மென்பார் 'ஒழித்த நோன்பினர்' என்றார்;

"சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்"

என்னும் திருவாசகத்தைச் சிந்திக்க. சிவானந்த மேலீட்டால் ஆடல் பாடல் செய்வர். இவர்கள் அறிவொழியும் பாலர் குணத்தையும், ஒருகாற் செய்து ஒருகாலிழக்கும் உன்மத்தர் குணத்தையும், செயலிழப்பினின்று செய்யும் பிசாசர் குணத்தையும் பொருந்தினவராகலின் 'உலகம் பழித்த செய்கையர் அழுகையர் நகையினர்' எனப்பட்டார். "பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பார் பதார்த்தங்கள் பாரார்" என்றபடி, உலகப் பொருளை முன் நோக்கி யாங்கு நோக்கி நிற்பினும் அப்பொருள் அதற்குத் தோன்றா திருத்தலின் 'விழித்த கண் குருடா' என்றார். பாசம் கழித்த கண் - ஞானக்கண். விழித்த கண் - ஊனக்கண்.

இது முதல் மூன்று செய்யுட்களால் சன்மார்க்கருள் ஞான நிட்டை யடைந்தா ரியல்புகள் கூறப்படுகின்றன. (கூஅ)

கரவி லுள்ளமாம் விசும்பிடைக் காசற விளங்கும்
பரசி லாச்சுடர்க் குதயமீ றின்மையாற் பகலும்
இரவு நேர்படக் கண்டில ரியன்றுசெய் நித்த
விரத மாதிநோன் பிழந்துறை விஞ்சையர் பலரால்.

(இ - ள்.) கரவு இல் உள்ளமாம் விசும்பிடை - கள்ளமில்லாத உள்ளமாகிய ஆகாயத்தில், காசு அற விளங்கும் பரசு இலாச் சுடர்க்கு-

களங்கமின்றி விளங்காநின்ற மழுவில்லாத சிவ சூரியனுக்கு, உதயம் ஈறு இன்மையால் - தோற்றமும் மறைவும் இல்லையாகையால், பகலும் இரவும் நேர்படக் கண்டிலர் - பகலும் இரவுந் தோன்றக் காணாதவராய், இயன்று செய் நித்த விரதம் ஆதி நோன்பு இழந்து உறை - மனம் பொருந்திச் செய்யும் நாட் கடன் முதலிய தவங்கள் நெகிழ்ந் தொழியப் பெற்று உறைகின்ற, விஞ்சையர் பலர்-ஞானிகளும் பலர்.

உள்ளம் - ஆன்மா, மனமுமாம். காசு அற என்பதற்கு மலமாசு நீங்குதலால் என்றுரைத்தலுமாம். கரசரணாதி அவயவமின்றிச் சுயஞ்சோதியாய்ப் பிரகாசித்தலின் 'பரசிலாச் சுடர்' என்றார்; பரசு இன்மை கூறவே கரம் முதலியன இன்மை பெற்றாம். பகல் இரவு என்பதற்குச் சகல கேவலமும், நாட் கூறாகிய பகல் இரவும் பொருளாகக் கொள்க; அவ்விரண்டுங் காணாமையாவது சாக்கிரத்தே நின்மல துரியாதீதத்தைப் பொருந்தி நிற்றல். நித்தமாதி விரதம் - ஞானத்திற்குக் காரணமாகக் கன்ம காண்டம் பற்றிச் செய்யப்படும் கிரியைகள்; அவை "உறங்கினேன் கை வெறும் பாக்கென" த் தாமே தவிரவேண்டுமெனச் சங்கற்ப நிராகரணத்துள் ஓதுதலின் 'நோன்பிழந் துறை' என்றார். விஞ்சையர் - ஞானிகள். இச்செய்யுட்களின் கருத்தை,

"ஞாலமதின் ஞானநிட்டை யுடையோருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன் றில்லை
சீலமிலை தவமில்லை விரதமொ டாச்சிரமச்
செயலில்லை தியானமிலை சித்தமல மில்லை
கோலமிலை புலனில்லை கரண மில்லை
குணமில்லை குறியில்லை குலமு மில்லை
பாலருடனுன்மத்தர் பிசாசர்குண மருவிப்
பாடலினோ டாடலிவை பயின்றிடினும் பயில்வர்"

என்னும் சிவஞான சித்தியார்த் திருவிருத்தத்தால் நன்கு தெளிக. (௩௧)

உடையுங் கோவண முண்டியுங் கைப்பலி யுறவென்
றடையுங் கேளிரு மரனடி யார்கண்டி கலன்கண்
படையும் பாரிட மாயினும் பகலிரா முதலீ
றிடையின் றாமிடத் துறங்குவ திஃதவர் வாழ்க்கை.

(இ - ள்.) உடையும் கோவணம் - ஆடையுங் கோவணமே; உண்டியும் கைப்பலி - உணவும் கையிலேற்கும் பலியே; உறவு என்று அடையும் கேளிரும் அரன் அடியார் - உறவினர் என்று அடையுஞ் சுற்றத்தாருஞ் சிவனடியார்களே; கலன் கண்டி-அணிகலனும் உருத்திராக்க மாலையே; கண் படையும் பாரிடம் - துயிலுமிடமும் நிலமே; ஆயினும் - ஆனாலும், உறங்குவது - இவர்கள் தூங்குவது; பகல் இரா முதல் இடை ஈறு இன்றாம் இடத்து - பகலும் இரவும் முதலும் நடுவும் முடிவுமில்லாத இடத்தின்கண்; இஃது அவர் வாழ்க்கை-இஃதே அவர் வாழ்க்கையாகும்.

''அகலிடமே யிடமாக வூர்க டோறும்
அட்டுண்பா ரிட்டுண்பார் விலக்காரையம்
புகலிடமா மம்பலங்கள் பூமிதேவி
யுடன்கிடந்தாற் புரட்டாள்பொய் யன்று மெய்யே''

எனவும்,

''உறவாவா ருருத்திரபல் கணத்தினோர்க
ளுடுப்பனகோ வணத்தொடுகீ ளுளவா மன்றே''

எனவும் வரும் தமிழ்மறைகள் இங்கே சிந்திக்கற் பாலன. முதல் இடை ஈறு என்பதற்குச் சிருட்டி திதி சங்காரம் என்னும் முத்தொழிலும், இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலமும், முதல் இடை கடை என்னும் மூவிடமும் கொள்க. (சo)

இத்த கைப்பல தொண்டர்தங் குழாத்திடை யாலம்
ஒத்த பைங்குருந் தடியினில் யோகவா சனத்திற்
புத்த கத்தெழு தியசிவ ஞானமெய்ப் போதங்
கைத்த லந்தரித் திருப்பதோர் கருணையைக் கண்டார்.

(இ - ள்.) இத்தகைப் பல தொண்டர் தம் குழாத்திடை - இத் தன்மையுடைய பல அடியார் கூட்டத்தின் நடுவில், ஆலம் ஒத்த பைங் குருந்தடியினில் - கல்லால மரம் போன்ற பசிய குருந்த மரத்தினடியில் யோக ஆசனத்தில் - யோகாசனத்தில், புத்தகத்து எழுதிய சிவஞான மெய்ப்போதம்-உண்மையாகிய சிவஞான போதம் எழுதிய சுவடியினை, கைத்தலம் தரித்திருப்பதோர் கருணையைக் கண்டார் - திருக்கரத் தின்கண் தாங்கியிருக்கும் ஓர் அருள் வடிவத்தைக் கண்டனர்.

யோகவாசனம், தமிழ் நூன் முடிபு. எழுதிய புத்தகத்தை என்க. (சக)

மன்று ளாடிய வானந்த வடிவமும் வடவால்
ஒன்றி நால்வருக் கசைவற வுணர்த்திய வுருவும்
இன்று நாயினேற் கெளிவந்த விவ்வுரு வென்று
அன்று நாயகன் குறிப்புளத் துணர்த்திட வறிந்தார்.

(இ - ள்.) அன்று நாயகன் குறிப்பு உளத்து உணர்த்திட - அங்ஙனங் கண்ட காலை இறைவனது திருவருட் குறிப்பு உள்ளத்தின் கண் உணர்த்தியருளுதலால், இன்று நாயினேற்கு எளிவந்த இவ்வுரு- இப்பொழுது நாயேனுக்கு எளிவந்த இக்கருணை வடிவமானது, மன்றுள் ஆடிய ஆனந்த வடிவமும் - அம்பலத்திலே திருக் கூத்தாடி யருளிய இன்பவடிவமும், வடவால் ஒன்றி - கல்லாலின் கீழிருந்து, நால்வருக்கு அசைவு அற உணர்த்திய உருவும் - சனகாதி முனிவர் நால்வருக்கும் மன அசைவு நீங்குமாறு உணர்த்தி யருளிய வடிவமுமே, என்று அறிந்தார் - என்று உணர்ந்தார்.

அசைவற என்பதை இரட்டுற மொழிதலாக்கி, அசைவற இருந்து உணர்த்திய என்றுங் கொள்க. திருவருள் முன்னின் றுணர்த்தச் சிவத்தை யுணரு முணர்ச்சி கைகூடிற்றென்பார், 'நாயகன் குறிப்புளத் துணர்த்திட வறிந்தார்' என்றார். (சஉ)

முன்ப ணிந்தன ரணிந்தன ரஞ்சலி முடிமேல்
என்பு நெக்கிட வுருகின ரினியரா யெளிவந்
தன்பெ னும்வலைப் பட்டவ ரருள்வலைப் பட்டார்
துன்ப வெம்பவ வலையறுத் திடவந்த தொண்டர்.

(இ - ள்.) துன்ப வெம்பவ வலை அறுத்திட வந்த தொண்டர் - துன்பமயமாகிய கொடிய பிறவி வலையினை அறுத்தற்கு வந்த தொண்டராகிய வாதவூரடிகள், முன்பணிந்தனர் - திருமுன்னர் வணங்கி, முடிமேல் அஞ்சலி அணிந்தனர் - தலைமேற் கைகளைக் குவித்து, என்பு நெக்கிட உருகினர் - என்பு நெக்குவிட உருகி, இனியராய் எளிவந்து அன்பு எனும் வலைப்பட்டவர் - இனியராகி எளிவந்து அடியார் அன்பாகிய வலையிற்பட்ட அவ்விறைவரது, அருள் வலைப்பட்டார் - அருளாகிய வலையின்கட் பட்டனர்.

பணிந்தனர், அணிந்தனர், உருகினர் என்பன முற்றெச்சங்கள்; முற்றாகவே யுரைத்தலுமாம். பின்னிரண்டடியின் நயம் மிக்க இன்பம் விளைப்பதாகும். (சங)

கால முங்கனுக் காட்சியு *நிமித்தமுங் கடிந்தார்
சீல மாணவர் செவ்விதேர் தேசிக னென்ன
மூல வாகம மோதினோன் முறுக்கவிழ் கழுநீர்
மாலை சாந்தணிந் தடியின்மேல் வன்கழல் வீக்கி.

(இ - ள்.) காலமும் - தீக்கைக் குரிய நல்லோரையும், கனுக் காட்சியும் - கனத் தோற்றமும், நிமித்தமும்-நன்னிமித்தங்களுமாகிய இவற்றையறிந்து செய்தற்குரிய பக்குவத்தினை, கடிந்தார் சீலமாணவர் செவ்விதேர் - நீங்கியாராகிய ஞானவொழுக்கத்தினையுடைய மாணவரது பக்குவத்தை நன்கு அறியும், தேசிகன் என்ன - ஞானாசிரியன் என்று அறிஞர் கூறுமாறு, மூல ஆகமம் ஓதினோன் - மூலாகமங்களை அருளிச் செய்த அவ்விறைவன், முறுக்கு அவிழ் கழுநீர்மாலை சாந்து அணிந்து - கட்டவிழ்ந்த செங்கழுநீர் மாலையையும் சந்தனத்தையும் அணிந்து, அடியின்மேல் வன்கழல் வீக்கி - திருவடியின்மேல் வலிய வீரக் கழலைக் கட்டி.

காலம் - தீக்கைக்கு விதித்த காலம். கனுக்காட்சி - ஆசிரியன் மாணுக்கனைப் பல முகத்தானும் சோதித்த பின்னர்த் தீக்கைக்குக் குறித்த நாட்கு முதல் நாளிரவு தூய நிலத்தில் தருப்பைப் படுக்கையில் அவனைத் துயிலச் செய்ய அப்போது அவன் காணும் கனவு; அது நன்றாயின் அங்கீகரித்தும் தீதாயின் அதன் பொருட்டு ஆகமத்திற்

(பா - ம்.) *நிமித்தமுங் கருதார்.

சொல்லப்பட்ட கழுவாய் புரிந்தும் திக்கை செய்வர் என்பர். நிமித்தம் பல்லி முதலியவற்றால் உணர்த்தப்படும் நற்சகுனம்;

"வந்துநான் வறுமை யுற்றேன் மாற்றென திலம்பா டென்று
சிந்தையா குலமுற் றூன்கைச் செழும்பொரு ளிதல் செய்வார்க்
கிந்தநா ளளிக்க வேண்டு மெனவிதி யின்மை யாலே
அந்தநா ளிந்நாளாக வடிமைகொண் டருள வேண்டி"

என்பது திருவாதவூரர் புராணம். கழுநீர்மாலை யணிந்தமை

" மூல மாகிய மும்மல மறுக்கும், தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர்மாலை, யேலுடைத் தாக வெழில்பெற வணிந்து',

என அடிகள் தாமே கூறுமாற்றானும் அறியப்படும். (௪௪)

அண்ணல் வேதிய ரொழுக்கமு மன்புங்கண் டியாக்கை
உண்ணி லாவுயிர் பொருள்புன லுடன்கவர்ந் துள்ளக்
கண்ணி னான்மலங் கழீஇப்பத கமலமுஞ் சூட்டி
வண்ண மாமலர்ச் செங்கரஞ் சென்னிமேல் வையா.

(இ - ள்.) அண்ணல் வேதியர் - பெருமை பொருந்திய மறையவ ராகிய வாதவூரடிகளின், ஒழுக்கமும் அன்பும் கண்டு - ஞான ஒழுக்கத் தினையும் அன்பினையும் பார்த்து, யாக்கைஉள் நிலாவு உயிர் பொருள் புனலுடன் கவர்ந்து - உடலையும் அதனுள் உலாவும் உயிரையும் பொருளையும் தான நீருடன் ஏற்று, உள்ளக் கண்ணினால் மலம் கழீஇ- அக நோக்கினால் மலமாசினைக் கழுவி, பத கமலமும் சூட்டி - திருவடித் தாமரையையும் முடியிற் சூட்டி, வண்ணம் மாமலர்ச் செங்கரம் - அழகிய தாமரை மலர்போன்ற சிவந்த திருக் கரத்தினை, சென்னிமேல் வையா - முடியின்மேல் வைத்து.

உள்ளக் கண்ணினால் மலங்கழீஇ என்றது மானத திக்கை. பத கமலமுஞ் சூட்டி என்றது திருவடி திக்கை. செங்கரஞ் சென்னிமேல் வையா என்றது அத்தமத்தக சையோகமெனப்படும் பரிச திக்கை. உள்ளக் கண்ணினால் என்பதற்கு ஔத்திரியின் ஞான திக்கையால் என உரைத்தலுமாம்; ஞானதிக்கைக் குரியார்க்கும் பரிச திக்கை விலக்கின் றென்க; திக்கை வகைகளை,

"பலவிதமா சான்பாச மோசனந்தான் பண்ணும்
படிநயனத் தருள்பரிசம் வாசகமா னதமும்
அலகில் சாத்திரயோக மவுத்தி ராதி
யநேகமுள வவற்றினவுத் திரியிரண்டு திறனும்
இலகுஞா னங்கிரியை யெனஞான மனத்தா
லியற்றுவது கிரியையெழிற் குண்டமண்ட லாதி
நிலவுவித்துச் செய்தல் கிரியாவதிதா னின்னும்
நிர்ப்பீசஞ் சபீசமென விரண்டாகி நிகழும்"

என்னும் சிவஞான சித்தியார்த் திருவிருத்தத்தா லறிக. இறைவன் தம் உயிர் உடல் பொருள்களை யெல்லாம் ஏற்றருளினமையை,

"அன்றே யென்ற னாவியு முடலு முடைமை யெல்லாமுங்
குன்றே யனையா யென்னையாட் கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக்குண்டோ வெண்டோண் முக்கணெம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ விதற்கு நாயகமே"

எனத் திருவாசகத்துள் அடிகள் தாமே அருளிச்செய்தலானுமறிக. (௬௫)

சூக்க மாகுமைந் தெழுத்தினிற் சுற்றிய பாச
வீக்க நீக்கிமெய் யானந்தம் விளைநிலத் துய்த்துப்
போக்கு மீட்சியுட் புறம்பிலாப் பூரண வடிவம்
ஆக்கி னானொரு தீபகம் போல்வரு மண்ணல்.

(இ - ள்.) சூக்கமாகும் ஐந்தெழுத்தினில் - சூக்குமமென்னும் திருவைந்தெழுத்தின் உபதேசத்தினால், சுற்றிய பாச வீக்கம் நீக்கி - வாதவூரரைப் பந்தித்த பாசக் கட்டினைப் போக்கி, மெய் ஆனந்தம் விளை நிலத்து உய்த்து - அழியாத இன்பம் விளையும் நிலத்திற் செலுத்தி, போக்கு மீட்சி உள் புறம்பு இலாப் பூரண வடிவம் ஆக்கினான் - போக்கும் வரவும் உள்ளும் புறம்பு மில்லாத வியாபக வடிவமாகச் செய்தனன்; ஒரு தீபகம்போல் வரும் அண்ணல் - ஒரு பார்வைபோன்று எளிவந்த இறைவன்.

பஞ்சாக்கரம் தூலம், சூக்குமம், அதிசூக்குமம் என மூவகைப்படும் என்றும், தூலம், சூக்குமம், காரணம், மகாகாரணம், முத்தி என ஐவகைப்படும் என்றும் கூறுப; அவற்றுள் சூக்குமம், இங்கு உபதேசித்தமை கூறினார்; அது,

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்"

என அடிகள் திருவாசகத்துள் அருளிச் செய்ததாகும் என்பர். சூக்கம், பாகதச் சிதைவு. சுற்றிய பாச வீக்கம் என்பதற்குத் திரோதாயி, ஆணவங்களை யுணர்த்தும் இரண்டக் கரங்கள் என்பாரு முளர். கண்ட வடிவன்றாகையால் போக்கு மீட்சி உட்புறம்பிலாதாயிற்று. பூரண வடிவமாக்கினான் - சிவசொரூபமாக்கினான். தீபகம் - பார்வை; மான் காட்டி மான் பிடிப்பார்போல வாதவூரரை ஆட்கொள்ளுதற்குத் திருவுருக் கொண்டு வந்தனர் என்க. அண்ணல் ஆக்கினான் என முடியும். பல்வகைப் பஞ்சாக்கரங்களி னியல்பும், அவற்றை ஓது முறையும், நிற்குமுறையும் குருமுகத்தால் அறியற்பாலன. (௬௬)

பார்த்த பார்வையா லிரும்புண்ட நீரெனப் பருகுந்
தீர்த்தன் றன்னையுங் குருமொழி செய்ததுந் தம்மைப்
போர்த்த பாசமுந் தம்மையு மறந்துமெய்ப் போத
மூர்த்தி யாயொன்று மறிந்திலர் வாதவூர் முனிவர்.

(இ - ள்.) பார்த்த பார்வையால் - நோக்கிய திருவருள் நோக்கத்தினலே, இரும்பு உண்ட நீர் எனப் பருகும் - காய்ச்சிய இரும்பு நீரினைப் பருகினாற்போலப் பருகிய, தீர்த்தன் தன்னையும்-தூயவனாகிய அவ்வாசிரியனையும், குருமொழி செய்ததும்-அக்குரவன் உபதேசமொழி அருளியதையும், தம்மை போர்த்த பாசமும் - தம்மை மறைத்த பாசத்தையும், தம்மையும் மறந்து - தம்மையும் மறந்துவிட்டு, மெய்ப் போத மூர்த்தியாய் - மெய்ஞ்ஞான வடிவினராய், ஒன்றும் அறிந்திலர் வாதவூர் முனிவர்-ஒன்றனையும் அறியாதவராயினர் வாதவூர் முனிவர்.

பருகும் - அத்துவிதமாகத் தம்முள் அடக்கிய; மும்மலங்களையும் சுவற்றிய என்பாருமுளர். பாசத்தை மறத்தலாவது பாசமொழிந்து நிற்றல். தீர்த்தனையும் குருமொழி செய்ததனையும் தம்மையும் மறத்தலாவது ஞேயம் ஞானம் ஞாதுரு என்னும் மூன்றும் நழுவாமல் நழுவி நிற்றல். ஊமைத் தசும்புள் நீர் நிறைந்தாற்போல ஞானவொளி நிறைந்திருந்தன ரென்பார் 'மெய்ப்போத மூர்த்தியாய்' என்றார். 'முனிவர்' என உடம்பொடு உணர்த்தும் அவரது ஞான நிட்டை நிலை விளக்கினர். (௭௭)

தேனும் பாலுந்தீங் கன்னலு மமுதுமாய்த் தித்தித்
தூனு முள்ளமு முருக்கவுள் ளொளியுணர்ந் தின்பம்
ஆன வாறு*தேக் கிப்புறங் கசிவதோத் தழியா
ஞான வாணிவந் திருத்தன ளன்பர்தந் நாவில்.

(இ - ள்.) தேனும் பாலும் தீங்கன்னலும் அமுதுமாய்த் தித்தித்து-தேனும் பாலும் இனிய கருப்பஞ்சாறும் அமிழ்துமாகத் தித்தித்து, ஊனும் உள்ளமும் உருக்க - உடலையும் உள்ளத்தையும் உருக்க, உள் ஒளி உணர்ந்து - அகத்திற்றோன்றிய அருளொளியை உணர்ந்து, இன்பம் ஆன ஆறு தேக்கி - இன்பமாகிய ஆறு தேக்கப்பட்டு, புறம் கசிவது ஒத்து - புறத்திற் கசிவதுபோல, அழியா ஞானவாணி வந்து அன்பர் தம்நாவில் இருத்தனள் - அழியாத ஞானக் கலைமகள்தானே வந்து அவ்வன்பருடைய நாவின்கண் தங்கினள்.

தேனும் பாலுந் திங்கன்னலு மமுதுமாய்த் தித்தித்தமை,

"ஊனா யுயிரா யுணர்வாயென் னுட்கலந்து
தேனா யமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழியெமக்குத் தந்தருளும்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார்"

எனவும், உள்ளொளி யுணர்ந்தென்பது,

"சீரார் பெருந்துறையில்
எளிவந் திருந் திரங்கி யெண்ணரிய வின்னருளால்
ஒளிவந்தெ னுள்ளத்தி னுள்ளே யொளிதிகழ
அளிவந்த வந்தணனை"

(பா - ம்.) *தேக்கிய புறம்.

எனவும் அடிகள் திருவம்மானையில் அருளிச் செய்தலா னறியப்படும். இன்பவெள்ளம் உள்ணிறைந்து புறங்கசிவதுபோல ஞானமயமான மொழிகள் நாவில் வெளி வரலாயின வென்க. (சஅ)

தொழுத கையினர் துளங்கிய முடியினர் துளும்ப
அழுத கண்ணினர் பொடிப்புறு மியாக்கையர் நாக்குத்
தழுத ழுத்தவன் புரையினர் தமையிழந் தழல்வாய்
இழுதை யன்னமெய் யினர்பணிந் தேத்துவா ராஞர்.

(இ - ள்.) தொழுத கையினர் துளங்கிய முடியினர் - கூப்பிய கையினராய் நடுங்கிய தலையினராய், துளும்ப அழுத கண்ணினர் - நீர் ததும்ப அழுத கண்ணினராய், பொடிப்புறும் யாக்கையர் - புளகித்த உடலை யுடையவராய், நாக்குத் தழுதழுத்த அன்பு உரையினர் - நாத் தழுதழுத்த அன்பு மொழியினராய், தமை இழந்து - சீவபோதத்தை இழந்து, அழல்வாய் இழுதை அன்ன மெய்யினர் - நெருப்பிற்பட்ட நெய்போன்ற உடலையுடையராய், பணிந்து ஏத்துவார் ஆனார் - வணங்கித் துதிப்பாராயினர்.

கையினர் முதலிய குறிப்பு முற்றுக்கள் எச்சமாயின. தலையன்பின் செய்கைகள் இதிற் கூறப்பட்டன.

"திருத்திகழ் கவிகைக் கீழுஞ் சிறந்தபொற் சிவிகை மேலும்
வரத்திரு மேவு தானை மன்னவ னென்ன வந்தார்
உருத்தெரி யாத நீறுங் கோவண வுடையுங் குஞ்சி
விரித்துள சிரமுங் கண்ணீர் மிகப்பொழி விழியு மானார்"

"அன்புட னேக்கி நிற்ப ரழுவர்கை தொழுவர் வீழ்வர்
இன்புற வெழுவர் பின்பா லேகுவ ரிரங்கி மீள்வர்
நன்பகல் கங்குல் காணுர் ஞானநல் லறிவே கொண்டு
கொன்புனை பித்தர் பாலர் பிசாசர்தங் கொள்கை யானார்"

எனவரும் திருவாதவூரர் புராணச் செய்யுட்கள் நோக்கற்பாலன. (சகூ)

பழுதி லாதசொன் மணியினைப் பத்திசெய் தன்பு
முழுது மாகிய வடத்தினுன் முறைதொடுத் தலங்கல்
அழுது சாத்துமெய் யன்பருக் ககமகிழ்ந் தையர்
வழுவி லாதபேர் மாணிக்க வாசக னென்றார்.

(இ - ள்.) பழுது இலாத சொல் மணியினை - குற்றமற்ற சொல் லாகிய மாணிக்கங்களை, பத்தி செய்து - வரிசைப் படுத்தி, அன்பு முழு தும் ஆகிய வடத்தினால் முறை தொடுத்த அலங்கல் - முற்றும் அன் பாகிய நாணினால் முறையாகக் கோத்த மாலையை, அழுது சாத்தும் மெய் அன்பருக்கு - அழுது சூட்டிய உண்மை அன்பராகிய அவ் வாதவூரருக்கு, ஐயர் அகமகிழ்ந்து - ஆசிரியர் மனமகிழ்ந்து, வழு

இலாதபேர் மாணிக்க வாசகன் என்ருர் - குற்றமில்லாத பெயர் மாணிக்கவாசகன் என்று கூறியருளினர்.

அகவிருளை நீக்கி ஒளிர்வன வாகலின் 'சொன் மணியினை' எனவும், ஒவ்வொரு சொல்லும் அன்பால் ஊடுருவப் பட்டிருத்தலின் 'அன்பு முழுதுமாகிய வடத்தினுல்' எனவும் கூறினர், வாழ்த்துள்ளும் 'அமுதடியடைந்த வன்பன்' எனக் கூறிப் போந்தமை சிந்திக்கற்பாலது. தொடுத்த என்னும் பெயரெச்சத்து அகரம் தொக்கது; தொடுத்து அவ் வலங்கல் எனச் சுட்டு வருவித்துரைத்தலுமாம். ஐயர் அன்பருக்கு வழுவிலாதபேர் மாணிக்க வாசகன் என்ருர் எனமுடிக்க. திக்கையில் மாணவருக்கு ஏற்புடைய பெயர் ஆசிரியரால் வழங்கப்படுவதுண்டாக லின் இஃதும் அங்ஙனம் வழங்கப் பெற்ற பெயரென்க. (௫௦)

பாட்டிற் கின்புறு குருபரன் பாதமேற் கண்ணீர்
ஆட்டிச் சோன்மல ரணிந்துதற் போதவின் னமுதை
ஊட்டித் தற்பர ஞானமா மோமவெங் கனலை
மூட்டிச் சம்புவின் பூசைமேன் முயற்சிய ராணுர்.

(இ - ள்.) பாட்டிற்கு இன்புறு குருபரன் - பாட்டிற்கு மகிழும் குருநாதனுடைய, பாதமேல் கண்ணீர் ஆட்டி - திருவடிமேல் ஆனந்தக் கண்ணீரால் திருமஞ்சன மாட்டி, சொல்மலர் அணிந்து - சொல்லாகிய மலரைச்சூட்டி, தற்போத இன் அமுதை ஊட்டி - சிவபோதமாகிய இனிய அமுதினை உண்பித்து, தற்பர ஞானமாம் ஓமவெங் கனலை மூட்டி - பரஞானமாகிய ஓமஞ் செய்தற்குரிய வெப்பமாகிய கனலை மூட்டி, சம்புவின் பூசை மேல் முயற்சியர் ஆனுர் - (இவ்வாறு) சிவ பூசையில் முயற்சியுடையவர் ஆயினர்.

கண்ணீர் சொரிதலும், பாடுதலும், தற்போதமிழந்து நிற்றலும், பரஞானமேலிடலும் ஆகிய இவற்றை முறையே திருமஞ்சனமாட்டல், அருச்சித்தல், நிவேதித்தல், ஓமக் கனல் வளர்த்தல் என்பனவாக உருவகித்துச் சிவபூசை யென்றனர்; எனவே, வேறு பூசை யின்றேனும் இவை தாமே உண்மைச் சிவபூசனை யாமென்பது போதரும்; அந்தரி யாக பூசை என்பாருமுளர்;

"மறவாமை யானமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி
உறவாதி தனையுணரு மொளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத வானந்த மெனுந்திருமஞ் சனமாட்டி
அறவாணர்க் கன்பென்னு மமுதமைத் தர்ச்சனை செய்வார்"

என்னும் திருத்தொண்டர் புராணச் செய்யுள் இங்கே கருதற்பாலது. (௫க)

ஆசை வெம்பவ வாசனை யற்றுமா ணிக்க
வாச கப்பிரான் றேசிகன் மாணவ ரோதும்
ஓசை யாகம வுபநிடப் பொருளெலாங் கேட்டு
நேச மங்குவைத் திருந்தன ரதுகண்டு நிருத்தன்.

(இ - ள்.) ஆசை வெம்பவ வாசனை அற்று - அவாவினால் வரும் கொடிய பிறவி வாசனை நீங்கி, மாணிக்க வாசகப் பிரான் - மணிவாசகப் பெருமானார், தேசிகன் மாணவர் ஓதும் - ஞானாசிரியனது மாணவர்கள் ஓதுகின்ற, ஓசை ஆகம உபநிடப் பொருள் எலாம் கேட்டு - ஒலியினையுடைய ஆகமப் பொருளும் உபநிடதப் பொருளுமாகிய அனைத்தையும் கேட்டு, நேசம் அங்கு வைத்து இருந்தனர் அன்பினை அங்குப் பதிய வைத்து இருந்தனர்; நிருத்தன் அது கண்டு - ஆசிரியனாகிய கூத்தப்பிரான் அதனைக் கண்டு.

ஆசையும், பிறவிக்கேதுவாகிய மலவாசனையும் என்றுமாம். தேசிகனும் மாணவரும் வினா விடைகளாகக் கூறும் என்றுரைத்தலும் பொருந்தும். சித்தாந்தப் பொருளும் வேதாந்தப் பொருளும் கேட்டு என்க. உபநிடதம் எனற்பாலது உபநிடம் என விகாரமாயிற்று. (கூஉ)

[எண்சீரடி யாசிரிய விருத்தம்]

தித்திக்கு மணிவார்த்தை யின்னஞ் சின்னா
டிருச்செவியி லருந்தவுங்கைச் செம்பொ னெல்லாம்
பத்திப்பே ரன்பளித்துக் கவர்ந்து வேண்டும்
பணிகொடுபாண் டியனையிவர் பண்பு தேற்றி
முத்திக்கே விடுத்திடவும் புத்தை வாது
முடித்திடவுந் திருவுள்ள முன்ன மெய்தி
எத்தித்தோண் டரைக்கருமஞ் சிறிதுண் டிங்கே
யிருத்தியென வுருக்கரந்தா னடிய ரோடும்.

(இ - ள்.) தித்திக்கும் மணிவார்த்தை இன்னம் சில்நாள் திருச்செவியில் அருந்தவும் - இனிக்கின்ற மாணிக்கம் போலும் வாசகமாகிய அமிர்தினை இன்னும் சில நாட்கள் வரையிலும் தமது திருச்செவியாகிய வாயினால் உண்ணவும், கைச் செம்பொன் எல்லாம் - கையிலுள்ள செம்பொன் அனைத்தையும், பத்திப்பேர் அன்பு அளித்துக் கவர்ந்து - பத்தி என்னும் தலையன்பினைத் தந்து கவர்ந்து கொண்டு, வேண்டும் பணி கொடு - தாம் விரும்பும் பணியை ஏற்றுக்கொண்டு, பாண்டியனை இவர் பண்புதேற்றி - பாண்டியனுக்கு இவர் பண்பினை அறிவித்து, முத்திக்கே விடுத்திடவும் - வீட்டின்கட் செலுத்தவும், புத்தை வாது முடித்திடவும் - புத்தரை வாதின்கண் வென்று அழிக்கவும், திருவுள்ளம் முன்னம் எய்தி - திருவுள்ளத்திற் கருதி, தொண்டரை - வாதவூரடிகளை, கருமம் சிறிது உண்டு - சிறிது காரியம் உளது (ஆதலால்), இங்கே இருத்தி என - இங்கு இருப்பாயாக என்று, எத்தி - விரகு செய்து, அடியாரோடும் உருக்கரந்தான் - அடியார்களோடும் மறைந் தருளினான்.

வார்த்தை: கருவியாகு பெயர். அன்பு அளித்துச் செம்பொன் கவர்ந்து என்றது பரிவருத்தனை, பாண்டியனை, முத்திக்கு என்பன

வேற்றுமை மயக்கம், புத்து, சமன் என்பதுபோல் நின்ற குழூஉப் பெயர். முன்னம் - குறிப்பு. எத்தல்-விரகு செய்தல்; ஏமாற்றலுமாம். இருத்தி - இருப்பாய்; இ விகுதி எதிர்காலங் காட்டிற்று. (௩௩)

கனவில்வருங் காட்சியெனக் கருணை மூர்த்தி
காட்டிமறைத் தலுமன்பர் கலக்கத் தாழ்ந்து
நனவுகொல்லோ கனவுகொல்லோ வின்று நாதன்
ஞமலிக்குத் தவிசிட்ட நலம்போ லென்னை
நினைவரிய திருமேனி காட்டி யாண்டு
நீத்ததையென் றையுற்று நெஞ்சந் தேறி
இனவடியா ருடன்கூட்டா தேகி னாயோ
வென்னையுமென் வினையையுமிங் கிருத்தி யெந்தாய்.

(இ - ள்.) கனவில் வரும் காட்சி என-கனவிற்றோன்றும் தோற்றம் போல, கருணைமூர்த்தி காட்டி மறைத்தலும் - அருள்வடிவினராகிய இறைவர் தமதுருவைக் காட்டி மறைத்தவளவில், அன்பர் - வாதவூரடிகள், கலக்கத்து ஆழ்ந்து-துன்பக் கடலுள் அழுந்தி, நாதன் இன்று நினைவு அரிய திருமேனி காட்டி - இறைவன் இன்று நினைத்தற்கரிய தனது திருமேனியைக் காண்பித்து, ஞமலிக்கு தவிசு இட்ட நலம் போல் - நாய்க்குத் தவிசு அளித்து நலம்பட ஆண்டமை போல, என்னை ஆண்டு - என்னை ஆண்டருளி, நீத்தது - நீங்கியருளியது, நனவு கொல்லோ கனவு கொல்லோ என்று ஐயுற்று - நனவோ அன்றிக் கனவோ என்று ஐயுற்று, நெஞ்சம் தேறி - (பின் நனவே என) மனந் தெளிந்து, எந்தாய்-எம் தந்தையே, இன அடியாருடன் கூட்டாது - உன் இனமாகிய அடியாரோடு சேர்க்காமல், என்னையும் என் வினையையும் இங்கு இருத்தி ஏகினாயோ-அடியேனையும் அடியேன் வினையையும் இங்கு இருத்திச் சென்றனையோ.

ஞமலிக்குத் தவிசிட்ட நலம்போல் என்ற கருத்து,

"நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு"

எனவும்,

"பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேயுன் பொன்னருளே"

எனவும் திருவாசகத்துள் வருதல் காண்க. நினைவரிய திருமேனி காட்டி ஆண்டமையை,

"வண்ணந்தா னதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்க ளவைகாட்டி வழியற் றேனைத்
தின்னந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்"

எனவும்,

"பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை யாட்கொண்ட"

எனவும்,

"உருநா மறியவோ ரந்தணனா யாண்டுகொண்டான்"

எனவும் அடிகள் திருவாசகத்தில் அருளிச் செய்தலும் காண்க.
நீத்தல் விண்ணப்பம், ஐ : சாரியை. (௯௪)

வஞ்சவினைக் கோள்கலனா முடலைத் தீவாய்
மடுக்கிலேன் வரையுருண்டு மாய்ப்பே னல்லேன்
நஞ்சொழுகு வாளாலுங் குறைப்பே னல்லே
னாதனே யதுவுநின துடைமை யென்றே
அஞ்சினேன் றானேயு மழியா தாவி
யையனே நினைப்பிரிந்து மாற்ற கில்லேன்
என்செய்கோ வெந்தாயோ வெந்தா யோவென்
றிரங்கினார் புரண்டழுதா ரினைய சொல்வார்.

(இ - ள்.) வஞ்சவினைக் கொள்கலனும் உடலை - வஞ்சமுடைய வினைகள் நிறைந்த பாண்டமாகிய இவ்வுடலை, தீவாய் மடுக்கிலேன் - நெருப்பின்கண் வீழ்த்திலேன்; வரை உருண்டு மாய்ப்பேன் அல்லேன் - மலையினின்று உருண்டு மாய்ப்பேனல்லேன்; நஞ்சு ஒழுகும் வாளாலும் குறைப்பேன் அல்லேன் - நஞ்சு ஒழுகும் வாளினாலும் சேதிப்பேனல்லேன்; நாதனே - இறைவனே, அதுவும் நினது உடைமை என்றே அஞ்சினேன் - அவ்வுடலும் உனது உடைமையெனக் கருதி அதனைக் கொல்ல அஞ்சினேன்; ஆவி தானேயும் அழியாது - உயிர் தானேயும் அழியாது; ஐயனே - தலைவனே, நினைப்பிரிந்தும் ஆற்றகில்லேன் - நின்னைப் பிரிந்தும் பொறுக்ககில்லேன்; எந்தாயோ எந்தாயோ என்செய்கோ என்று இரங்கினார் - எந்தாயோ எந்தாயோ யான் என்ன செய்வேனென்று புலம்பி, புரண்டு அழுதார் இனைய சொல்வார் - புரண்டு அழுது இத்தன்மையனவற்றைக் கூறுவாராயினர்.

கொள்கலன் - பாண்டம்; மரக்கலமுமாம். வாளுக்கு நஞ்சு பூசுத லுண்டாகலின் 'நஞ்சொழுகு வாள்' என்றார். உடலைத் தீவாய் மடுக்கிலேன் என்பது முதலிய கருத்துக்களை,

"ஒய்விலாதன வுவமனி லிறந்தன வொண்மலர்த் தாடந்து
நாயிலாகிய குலத்தினுங் கடைப்படு மென்னை நன்னெறிகாட்டித்
தாயிலாகிய வின்னருள் புரிந்தவென் றலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் றிண்வரை யுருள்கிலேன் செழுங்கடல்
[புகுவேனே"

எனவும்,

"அறுக்கிலேனுடல் துணிபடத்தீப்புக்
கார்கிலேன்றிரு வருள்வகை யறியேன்

பொறுக்கிலேனுடல் போக்கிடங்காணேன்
போற்றிபோற்றியென் போர்விடைப்பாகா
இறக்கிலேனுனைப் பிரிந்தினிதிருக்க
வென்செய்கேனிது செய்கவென் றருளாய்
சிறைக்கணேபுன னிலவியவயல்சூழ்
திருப்பெருந் துறை மேவியசிவனே''

எனவும் வரும் திருவாசகத்திருப்பாட்டுக்களிற் காண்க. செய்கோ - செய்வேனோ; செய்கு - செய்வேன். (ருரு)

*வறியவனு மோருபிறவிக் குருடன் கையில்
வந்தபெரு விலைமணிபோன் மழலை தேருச்
†சிறியவனு மோருமதலை கையிற் கோண்ட
செம்போன்மணி வள்ளம்போற் றேவர் யார்க்கும்
அறிவரியாய் சிறியேனை யேளிவந் தாண்ட
வருமையறி யேன்றுன்பத் தழுவத் தாழப்
பிறிவறியா வன்பரோடு மகன்றுய் கல்லாப்
பேதையேன் குறையலதேம் பிரானு லேன்னே.

(இ - ள்.) தேவர் யார்க்கும் அறிவரியாய் - தேவரனைவருக்கும் அறிதற் கரியவனே, வறியவனும் ஒரு பிறவிக்குருடன் கையில் - வறியோனாகிய ஒரு பிறவிக்குருடன் கையில், வந்த பெருவிலைமணிபோல் - தானே வந்து கிடைத்த பெருவிலையினையுடைய மணியைப்போலவும், மழலை தேருச் சிறியவனும் ஒருமதலை-மழலைச்சொல் தெளியாத சிறியவனாகிய ஒரு மதலை, கையில் கொண்ட - தனது கையிற்கொண்ட, செம்பொன்மணி வள்ளம்போல் - சிவந்த பொன்னாலாகிய மணிகள் பதித்த கிண்ணத்தைப் போலவும், சிறியேனை எளிவந்து ஆண்ட அருமை அறியேன் - சிறியேனாகிய என்னை எளிவந்து ஆண்டருளிய அருமையை யான்அறியேன்; துன்பத்து அழுவத்து ஆழ-(அதனால் யான்) துன்பக்கடலுள் அழுந்த, பிறிவறியா அன்பரொடும் அகன்றாய்- பிறிவினை அறியாத அடியாரோடும் மறைந்தருளினை; கல்லாப் பேதையேன் குறை அலது - கல்லாத புல்லறிவினேனது குறையேயன்றி, எம்பிரானால் என் - எம்பிரானால் யாது குறையுளது?

பிறவிக்குருடனும், மதலையும் கிடைத்தற்கரிய பெருவிலை மணியும் பொன் வள்ளமும் எளிதிற் கிடைத்த வழியும் அவற்றின் அருமையறியாது கை நெகிழ விடுமாறு போல அடியேனை எளிவந்தாண்ட நினது அருமையை அறியாது நெகிழவிடலானேன் என்றார். மதலை கையிற் கொண்ட பொன் வள்ளம்போல் என்னும் கருத்து,

(பா - ம்.) * வறியனும். † சிறியனும்.

"மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலால்
அரியை யென்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்மை யன்பருன் மெய்மை மேவினார்
பொய்யி லங்கெனைப் புகுத விட்டுநீ
போவதோ சொலாய் பொருத்த மாவதே"

என்னும் பாசுரத்தாலும், என் குறையன்றி நின்னால் யாதுங் குறை யில்லை என்னும் கருத்து,

"என்னா லறியாப் பதந்தந்தா யான தறியா தேகெட்டேன்
உன்னா லொன்றுங் குறைவில்லை யுடையாய்யடிமைக் காரென்பேன்
பன்னா ளுன்னைப் பணிந்தேத்தும் பழைய வடியா ரொடுங்கூடா
தென்னா யகமே பிற்பட்டிங் கிருந்தே னோய்க்கு விருந்தாயே"

என்னும் பாசுரத்தாலும் திருவாசகத்தில் அடிகளால் அருளிச் செய்யப் பட்டிருத்தல் காண்க. துன்பத்து என அத்துச்சாரியை அல்வழிக் கண் வந்தது. அழுவம் - பரப்பு; கடல். எதுகை நோக்கிப் பிறிவு; என வலியாயிற்று. (௫௬)

[கலிப்பா]

மண்ணாதி யாறாறு மனந்துழாவித் தடுமாறிப்
புண்ணாகி யெனைக்காணா துழல்கின்றேனைப் போதவருட்
கண்ணா லவைமுழுதுங் கரையநோக்கி யான்யானென்
றெண்ணா வெனைத்தந்தா யெங்குற்றாயோ வெந்தாயே.

(இ - ள்.) மண் ஆதி ஆறாறும் - நிலம் முதலிய முப்பத்தாறு தத்துவங்களிலும், மனம் துழாவி - மனத்தால் ஆராய்ந்து, எனைக் காணாது - என்னைக் காணமாட்டாது, தடுமாறி புண்ணாகி உழல்கின் றேனை - கலங்கி வருந்திச் சுழலுமென்னை, போத அருள்கண்ணால் - ஞான அருணோக்கினால், அவை முழுதும் கரைய நோக்கி - அத் தத்துவங்கள் முற்றும் கரையும்படி நோக்கியருளி, யான் யான் என்று எண்ணா எனைத் தந்தாய் - யான் யான் என்று கருதாத என்னைக் காட்டி யருளினையே; எந்தாய் எங்கு உற்றாயோ - எந்தையே எங்குச் சென் றனையோ?

மண்ணாதி ஆறாறு - நிலம் முதல் நாதம் ஈறாகிய முப்பத்தாறு தத்துவங்கள்: ஆறாறு, ஆகுபெயர் : தத்துவங்களில் ஒரோ வொன் றையே நான் என மயங்கிப்பின் ஆராய்ந்து என்னைக் காணாது உழல்கின் றேனை என்க. இச் செய்யுளிலும் வரும் செய்யுள் இரண்டிலும் தத்துவ ரூபம் முதலிய தச காரியங்கள் ஒருவாறு அமைந்திருத்தல் உய்த்துணரற்பாலன. போதமாகிய அருள். தத்துவங்கள் கரைய

என்றமையால் மந்திரம், பதம், வன்னம், புவனம், கலை என்னும் ஏனை அத்துவாக்களும் கரையஎன உபலக்கணத்தாற் கொள்ளலுமாம்.

"மந்திரங் பதங்கள் வன்னம் புவனங்கள் தத்து வங்கள்
ஐந்துநற் கலைகள் என்னும் அறுவகை யகற்றி யந்தச்
சிந்தனைக் கரிய மேலைச் சிவத்துட னறிவு சேரப்
பந்தனை யொழிவார் தம்மேற் பரிந்தருட் பார்வை செய்து"

என்னும் வாதவூரடிகள் புராணச் செய்யுளுங் காண்க. ஆன்மாவே யான் என்று எண்ணாத என்னை என்க; எண்ணா என்பதனை ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சமாக்கி, அத் தத்துவங்களை யான் யானென்று எண்ணாமல் என்னைத் தந்தாய் எனவும் உரைத்தலுமாம். தந்தாய் என்றது அறிவித்தாய் என்றபடி. என்னை அறிவித்தாய் என்னவே நின்னை அறிவித்தாய் என்பதும் போதரும்; என்னை?

"ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலும்
என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்
நின்னிலை யனைத்தையும் கண்டேன் என்னே
நின்னைக் காணா மாந்தர்
தன்னையுங் காணாத் தன்மை யோரே"

என்று பட்டினத்தடிகள் உணர்ந்து கூறுதலின் என்க. இது முதலிய மூன்று செய்யுட்களையும் ஐஞ் சீராகப் பிரித்துக் கலிநிலைத்துறை ஆக்கலுமாம். (கூஎ)

வானாதி யைந்துமுதல் வகுத்தவோசை முதலைந்தும்
ஆனாதி யங்குமன மாதிநான்கும் வழியடைப்பத்
தேனாதி யறுசுவையுங் கழியவூறுந் தேள்ளமுதம்
யானார நல்கினையா லெங்குற்றாயோ வேந்தாயே.

(இ-ள்.) வான் ஆதி ஐந்தும் - வான் முதலிய பூதங்கள் ஐந்தும், முதல் வகுத்த ஓசை முதல் ஐந்தும் - (அவை தோன்றுதற்குக்) காரணமாக வகுக்கப்பட்ட ஓசை முதலிய தன் மாத்திரைகள் ஐந்தும், ஆனாது இயங்கும் - நீங்காது அலையும், மனம் ஆதி நான்கும் - மனமுதலிய அந்தக் கரணங்கள் நான்குமாகிய இவற்றின், வழி அடைப்ப - வழி தூர, தேன் ஆதி அறுசுவையும் கழிய ஊறும் தெள் அமுதம் - தேன் முதலிய அறுவகைச் சுவைப்பொருளினும் சுவைமிக ஊறும் சிவானந்த அமிழ்தினை, யான் ஆர நல்கினை - யான் உண்ணுமாறு நல்கியருளினையே; எந்தாய் எங்கு உற்றாயோ - எந்தையே எங்குப் புக்கனையோ?

ஆன்மதத்துவம் இருபத்து நான்கில் எஞ்சி நின்ற ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந்திரியம் ஐந்தும் இனம்பற்றிக் கொள்க. வழியடைத்தலாவது பிறவியொழிதல்; கரணங்களும் பொறிகளும் விடய நுகர்ச்சியிற் செல்லும் வழிதூர என்றுமாம்;

"மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி
யுள்ளவா காணவந் தருளாய்
தேறலின் றெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
வின்பமே யென்னுடை யன்பே"

என்னும் திருவாசகம் இங்கே சிந்திக்கற்பாலது. தேன் ஆதி அறுசுவை- தேன், பால், கன்னல், கனி, சீனி, கற்கண்டு என்ப. ஐந்து, நான்கு, சுவை என்பன ஆகுபெயர்கள். கழிய, கழி என்னும் உரிச்சொல்லடி யாகப் பிறந்த வினையெச்சம். ஆல், அசை. (௫அ)

மாசாய் மறைக்குமல வலியும்நானும் வேறின்றி
ஆசா *விகாரமல மாயினேனைப் பொருட்படுத்திப்
பேசாத †வின்புருவி னின்னோடென்னைப் பின்வைத்த
ஈசா வெனையிங்கிட் டெங்குற்றாயோ வெந்தாயே.

(இ - ள்.) மாசு ஆய் மறைக்கும் மலவலியும் நானும் வேறு இன்றி- இருளாகிய மறைக்கும் ஆணவமலவலியும் யானும் அத்துவிதமாய், ஆசாவிகாரமலம் ஆயினேனை - பல திறப்பட்ட ஆசையாகிய மலமான என்னையும், பொருள்படுத்தி - ஒரு பொருளாக்கி, பேசாத இன்பு உருவின் நின்னோடு - உரைக்கப்படாத இன்ப வடிவினையுடைய நின்னோடு, என்னைப் பின் வைத்த ஈசா - என்னைப் பின்னே வைத்த இறைவனே, எந்தாய் - எம் தந்தையே, எனை இங்கு இட்டு எங்கு உற்றாயோ - அடியேனை இங்கு வைத்து எங்கு உற்றனையோ?

மறைக்கும் - அறிவு இச்சை செயல்களை மறைக்கின்ற. கேவலா வத்தையில் ஆணவமலத்தோடும், சகலாவத்தையில் தனு கரண புவன போக வடிவாகிய மாயாமலத்தோடும் ஒன்றுபட்டுக் கிடந்த என்னை நின்மலாவத்தையிற் புகுத்தி நின்னைச் சாரவைத்த ஈசனே என்று ரென்க. எதுகை நோக்கி ஆசா என்பது திரியாது நின்றது. பேசப் படாத என்றமையால் நினைக்கப்படாத என்பதும் கொள்க;

"உரைமாண்ட வுள்ளொளி யுத்தமன்வந் துளம்புகலும்"

எனவும்,

"உள்ளப்படாத திருவுருவை யுள்ளுதலும்"

எனவும் திருவாசகத்தில் வருதல் காண்க. (௫௯)

[கலிநிலைத்துறை]

என்று வாய்திறந் தரற்றினா ரிரங்கினார் புனிற்றுக்
கன்று நீங்கிய வானெனக் கரைந்தநெஞ் சினராய்ச்
சென்று கோபுர வாயிலின் புறம்புபோய்த் திரண்டு
நின்ற காவலன் றமர்களை நேர்ந்தனர் நோக்கா.

(பா - ம்.) *விகாரமயம். †அன்புருவின்.

(இ - ள்.) என்று வாய் திறந்து அரற்றினர் இரங்கினர் - என்று வாய் திறந்து கதறி வருந்தி, புனிற்றுக்கன்று நீங்கிய ஆன் என - இளங் கன்று நீங்கின பசுவைப்போல, கரைந்த நெஞ்சினராய்ச் சென்று - உருகிய மனத்தினை யுடையராய்ச் சென்று, கோபுரவாயிலின் புறம்பு போய் - கோபுர வாயிலுக்கு வெளியே போய், திரண்டு நின்ற காவலன் தமர்களை நேர்ந்தனர் நோக்கா - அங்கே கூடி நின்ற அரசன் பரிவாரங்களை நேர்ந்து பார்த்து.

புனிற்றுக் கன்று - ஈன்றணிமையுடைய கன்று. அரற்றினர், இரங்கினர், நேர்ந்தனர் : முற்றெச்சங்கள். (௬0)

துங்க வாரியிற் கடும்பரித் தோகையெலா மாடித்
திங்க ளின்றலை வருமென முன்புபோய்த் தென்னர்
புங்க வன்றனக் குணர்த்துமின் போமென விடுத்தார்
அங்க ணுயகன் பெருந்துறை நாயக னன்பர்.

(இ-ள்.) கடும் பரித் தொகை எலாம்-விரைந்த செலவினையுடைய குதிரைக் கூட்டங்களெல்லாம், ஆடித் திங்களின் தலை-ஆடி மாதத்தில், துங்கவாரியில் வரும் என - சிறந்த கடற்றுறையின்கண் வந்திறங்கு மென்று, முன்புபோய் - முன்னர்ச் சென்று, தென்னர் புங்கவன் தனக்கு உணர்த்துமின் - பாண்டியர் பெருமானுக்குக் கூறுங்கள்; போம் என விடுத்தார்-போமின் என்று கூறி அனுப்பினர்; அங்கண் நாயகன் பெருந்துறை நாயகன் அன்பர் - அழகிய அருட் கண்ணை யுடைய தலைவனாகிய பெருந்துறை நாதனுக்கு அன்பராகிய மணி வாசகனர்.

வாரியினின்று இறங்கும் பரியெல்லாம் ஆடித்திங்களில் வரும் எனவும், பரியெல்லாம் வாரியினின்று ஆடித்திங்களில் இறங்கும் எனவும் இருபொருள் தோன்றக் கூறினமை காண்க. சௌரமானத் தால் ஆடிமாதமாவது சாந்திரமானத்தால் ஆவணிமாதமாகுதலின் பரியெல்லாம் ஆடித்திங்களில் வருமென்ற கூற்றும் தவறுபடாமை பெற்றும். தலை ஏழனுருபு. போமின் எனற்பாலது போம் என நின்றது; வழக்கில் வந்த செய்யுமென்னும் வாய்பாட்டேவலுமாம். (௬௧)

புரசை மாவயப் புரவிதேர்ப் பொருநர்போய்ப் பொறிவண்
டிரைசெய் தார்முடி வேந்தன்முன் னிறைஞ்சினு ருள்ள
துரைசெய் தாரது கேட்டொன்று முரைத்தில னிருந்தான்
நிரைசெய் தார்ப்பரி வரவினை நோக்கிய நிருபன்.

(இ - ள்.) புரசைமாவயப் புரவி தேர்ப்பொருநர்போய் - கழுத்திடு கயிற்றையுடைய யானைகளையும் வெற்றியையுடைய குதிரைகளையும் தேர்களையுமுடைய வீரர்கள் சென்று, பொறிவண்டு இரைசெய் தார் முடிவேந்தன் முன் இறைஞ்சினர் - பொறிகளையுடைய வண்டுகள் ஒலித்தலைச் செய்யும் மாலையையணிந்த முடியினையுடைய அரிமருத்தன பாண்டியன் முன் வணங்கி, உள்ளது உரை செய்தார் - நடந்ததைக் கூறினர்; அது கேட்டு ஒன்றும் உரைத்திலன் இருந்தான் - அதனைக்

கேட்டு ஒன்றுங்கூறு திருந்தனன்; நிரைசெய் தார்ப் பரிவரவினை நோக்கிய நிருபன் - வரிசைப்படுத்திய கிண்கிணி மாலையை யணிந்த குதிரைகளின் வரவினை எதிர்பார்த்திருக்கும் அப் பாண்டியன்.

புரசை-யானைக்கழுத்திடு கயிறு. யானை வீரரும், குதிரை வீரரும், தேர் வீரரும் போய் என்க. இறை: முதனிலைத் தொழிற் பெயர். இறைஞ்சினர், உரைத்திலன் என்பன முற்றெச்சங்கள். நிருபன் உரைத்திலன் இருந்தான் என முடிக்க. (௬௨)

வள்ளல் வாதவூர் முனிகளு மன்னவன் பரிமாக்
கொள்ள நல்கிய பொருளெலாங் குருந்தில்வந் தாண்ட
பிள்ளை வாண்மதிச் சடைமுடிப் பெருந்துறை மறையோர்க்
குள்ள வாதரம் பெருகமுன் வேண்டியாங் குய்ப்பார்.

(இ - ள்.) வள்ளல் வாதவூர் முனிகளும் - வள்ளலாகிய வாதவூரடிகளும், மன்னவன் - அரிமருத்தன பாண்டியன், பரிமாக்கொள்ள நல்கிய பொருள் எலாம்-குதிரை வாங்கக் கொடுத்த பொருள் முழுதையும், குருந்தில் வந்து ஆண்ட-குருந்த மரத்தின் அடியில் வந்து ஆண்டருளிய, பிள்ளைவாள் மதிச்சடைமுடி - ஒள்ளிய குழவித் திங்களைத் தரித்த சடைமுடியினை யுடைய, பெருந்துறை மறையோர்க்கு - பெருந்துறையில் எழுந்தருளிய அந்தணராகிய சிவபெருமானுக்கு, உள்ள ஆதரம் பெருக - உள்ளன்பு பெருக, முன் வேண்டியாங்கு உய்ப்பார் - முன் வேண்டிக் கொண்டது போலவே செலுத்துவாராயினர்.

சடைமுடிப் பெருந்துறை மறையோர்க்கு என்பதற்குச் சடாமுடியையுடைய பெருமானுரெழுந்தருளிய திருப்பெருந்துறையிலுள்ள ஆதிசைவரங்கிய அந்தணர்களுக்கு எனப் பிறர் கூறியபொருள் சிறிதும் பொருந்தாமை காண்க. முன் வேண்டி யாங்கு - 'இப்பொருளெலாம் உனக்கும் ஐம்பொறியும் வென்று வேண்டும் நின்னன்பர்க்கும் ஆக்குக' என மேல் வேண்டியவாறு. உய்த்தல் - செலவிடுதல். (௬௩)

சிறந்த பூசைக்குந் திருவிழாச் சிறப்புக்குஞ் செல்வம்
நிறைந்த வாலயத் திருப்பணித் திறத்துக்கு நிரப்பி
அறந்த வாதபே ரன்பர்க்குஞ் செலுத்தியத் தலத்தே
உறைந்த வாவற வின்னண மொழுகுநாள் கழிப்பார்.

(இ - ள்.) சிறந்த பூசைக்கும் திருவிழாச் சிறப்புக்கும் - சிறப்புடைய பூசனைக்கும் திருவிழாவாகிய சிறப்புக்கும், செல்வம் நிறைந்த ஆலயத் திருப்பணித் திறத்துக்கும்-செல்வம் நிறைந்த திருக் கோயிலின் திருப்பணி வகைக்கும், நிரப்பி-நிரம்பக்கொடுத்து, அறம் தவாதபேர் அன்பர்க்கும் செலுத்தி - அறநெறியினின்று நீங்காத பெரிய அன்பர்கட்கும் செலவிட்டு, அத்தலத்தே உறைந்து - அப்பதியின் கண் உறைந்து, அவா அற - அவா என்பதின்றி, இன்னணம் - இவ்வாறு, ஒழுகு நாள் கழிப்பார் - செல்லும் நாட்களைக் கழிப்பாராயினர்.

திருவிழா சிறப்பெனப் படுதலை,

"சிறப்பொடு பூசனை செல்லாது"

என்னுந் திருக்குறளாலறிக; நித்தத்திற் ரூழ்வு தீரச் செய்யப்படுதலின் நைமித்தகம் சிறப்பு எனப்படும். (௬௪)

எல்லை கூறிய குளிர்மதி யடுக்கவந் தெய்த
மல்லல் யானையா னின்னமும் வயப்பரி வந்த
தில்லை யாலிது வென்னென வோலையு மெழுதிச்
செல்ல வுய்த்தனன் வாதவூ ரமைச்சர்தந் திருமுன்.

(இ-ள்.) எல்லை கூறிய குளிர்மதி அடுக்க வந்து எய்த-எல்லையாகக் கூறிய ஆடித் திங்கள் பொருந்த வந்து அடைய மல்லல் யானையான் - மதவளமுடைய யானையை யுடைய பாண்டியன், இன்னமும் வயப்பரி வந்தது இல்லை- இன்னும் வெற்றி பொருந்திய குதிரைகள் வரவில்லை; இது என் என ஓலையும் எழுதி - இதற்குக் காரணம் என்ன வென்று ஓலையும் வரைந்து, வாதவூர் அமைச்சர் தம் திருமுன் செல்ல உய்த்த னன் - வாதவூரராகிய அமைச்சரின் திரு முன்னர்ச் செல்ல விடுத்தான்.

குளிர்மதி - கடகமாதம். ஆடித்திங்கள்; குளிர் - ஞெண்டு; கற்கடகம். இல்லையால், ஆல்: அசை. வாதவூர ராகிய அமைச்சர் என விரிக்க; வாதவூரிற்றோன்றியவராகிய அமைச்சர் என்றுமாம். (௬௫)

மன்ன வன்றிரு முகங்கண்டு முறைமையால் வாங்கி
அன்ன வாசகந் தெரிந்துகொண் டாதியீ றில்லா
முன்ன வன்றிரு வருட்கடன் மூழ்கிய முனிவர்
என்னை வேறினிச் செய்யுமா றென்றுநின் றயர்வார்.

(இ - ள்.) மன்னவன் திருமுகம் கண்டு - பாண்டியனது ஓலையைப் பார்த்து, முறைமையால் வாங்கி - முறைப்படி வாங்கி, அன்ன வாசகம் தெரிந்து கொண்டு - அதிலுள்ள வாசகத்தைத் தெரிந்து கொண்டு, ஆதிஈறு இல்லா முன்னவன் - முதலு முடிவு மில்லாத முன்னவனாகிய இறைவனது. திருவருட் கடல் மூழ்கிய முனிவர் - திருவருட் கடலுள் மூழ்கிய முனிவராகிய மணிவாசகனார், என்னை வேறு இனிச் செய்யு மாறு என்று நின்று அயர்வார் - இனிச் செய்யும் வழி வேறு என்னை யெனக் கருதி நின்று சோர்வாராகி.

திருமுகவாசகம் வாதவூரடிகள் புராணத்தில்,

"தென்னவ னரச னோலை தென்னவன் பிரம ராயன்
என்னுநல் லமைச்சன் காண்க வெல்லையி றனங்கொண் டேகிக்
கொன்னுறு பரிகொ ளாமற் கோவணங் கொண்டீ ரீது
முன்னர்தங் கருமஞ் செய்வார் வண்மையென் றுவகை யுற்றேம்"

"வையக மன்ன ராகி வாழ்வதின் மனைக டோறும்
எய்திய வுதரத் தியா விரப்பது பெருமை யென்றும்
மெய்தகத் தம்மை யாண்ட வேந்தரைப் பிழைத்து வேறு
செய்வது பலிக்கு மென்று தேர்ந்தநூற் றுணிவுங் கண்டேம்"

"மன்னரை யடைந்து வாழ்தல் வஞ்சநஞ் சுமிழு நாகந்
தன்னுடன் மருவி வாழுந் தன்மையென் றுணர்வீ ராயில்
துன்னுமிவ் வோலை காணும் பொழுதுநந் தூதர் தம்மோ
டிங்நகர் வருக மாற னெழுத்தென வுரைத்து நின்றான்"

என விரித்துரைக்கப் பெற்றுளது. (கசு)

சிந்தை யாகிய செறுவினுட் சிவமுத லோங்கப்
பந்த பாசம்வே ரறக்களைந் தருட்புனல் பாய்ச்சி
அந்த மாதியின் றாகிய வானந்த போகந்
தந்த தேசிக வுழவன்றன் கோயிலைச் சார்ந்தார்.

(இ - ள்.) சிந்தையாகிய செறுவினுள் - உள்ளமாகிய விளை நிலத்துள், சிவமுதல் ஓங்க - அன்பாகிய முளை வளர, பந்தபாசம் வேர் அறக் களைந்து - பந்தமாகிய பாசமென்னும் களையினை வேரறக் களைந்து, அருள் புனல் பாய்ச்சி - அருளாகிய நீரினைக் கால்யாத்து. அந்தம் ஆதி இன்று ஆகிய - முதலு முடிவும் இல்லையாகிய, ஆனந்த போகம் தந்த தேசிக உழவன்தன் - சிவானந்தமாகிய விளைவினைப் புசிக்குமாறு தந்தருளிய குரவனாகிய உழவனது, கோயிலைச் சார்ந்தார் - திருக் கோயிலைச் சார்ந்தனர்.

சிவம் - அன்பு ; பத்தி. பிறவாறும் உருவகஞ் செய்ப ;

"அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட வுழவ ராரத் தந்த
அண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க"

என்னும் திருவாசகமும்,

"மெய்ம்மையா முழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனு நீரைப் [பாய்ச்சித்
தம்மையு நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையு ணிற்ப ராகிற் சிவகதி விளையு மன்றே"

என்னும் திருநாவுக்கரசர் தேவாரமும்,

"அன்பென் பாத்தி கோலி முன்புற
மெய்யெனு மெருவை விரித்தாங் கையமில்
பத்தித் தனிவித் திட்டு நித்தலும்
ஆர்வத் தெண்ணீர் பாய்ச்சிநேர் நின்று"

என்னும் பட்டினத்தடிகள் திருவாக்கும் நோக்குக.

இது மிகை குறையில்லாத ஒற்றுமை யுருவகவணி. (௬௭)

அறுசீரடியாசிரிய விருத்தம்

என்ன யகனே பொன்னுட ரேறே யேறு கொடியுயர்த்த
மன்னு தென்னு பெருந்துறையெம் மணியே வழுதி பொருளெல்லாம்
நின்னு லயத்து நின்னடியா ரிடத்துஞ் செலுத்து நெறியளித்தாய்
பின்னு னவனுக் கென்கொண்டு பரிமாச் செலுத்தப் பெறுமாறே.

(இ - ள்.) என் நாயகனே-என் தலைவனே, பொன்னுடர் ஏறே-தேவர்கள் சிங்கவேறே, ஏறு கொடி உயர்த்த மன்னு - இடபத்தைக் கொடியின்கண் உயர்த்தியருளிய மன்னு, தென்னு-சுந்தரபாண்டியனே, பெருந்துறை எம்மணியே - திருப்பெருந் துறையில் எழுந்தருளிய எமது மாணிக்கமே, வழுதி பொருள் எல்லாம் - பாண்டியன் பொருளனைத்தையும், நின் ஆலயத்தும் நின் அடியாரிடத்தும் - நின் திருக்கோயிலின் திருப்பணியிலும் நினது அடியார் திறத்திலும், செலுத்தும் நெறி அளித்தாய் - செலவிடும் நெறியினை எனக்குத் தந்தருளினை; பின் நான் - இனி யான், அவனுக்கு என்கொண்டு பரிமாச் செலுத்தப் பெறுமாறு - அப் பாண்டியனுக்கு எதுகொண்டு குதிரை செலுத்தப் பெறும் வகை?

பொன்னுடரேறே என்ற கருத்து நம்பியாரூரர் அருளிச் செய்த திருவாலங்காட்டுத் தேவாரப் பதிகத்தில்,

"சிவனே தேவர் சிங்கமே"

என வருதல் காண்க. நீயே வழுதி பொருளெல்லாம் செலவிடச் செய்தாயாகலின் பரிமாச் செலுத்தும் வகையும் நீயே காட்டுதல் வேண்டுமென்பார் இங்ஙனம் கூறினரென்க. (௬௮)

என்னு விறைஞ்சி யெழுந்தேத்தி யிரந்தா ரெதிரே பெருந்துறையின்
மின்னுர் சடைமேற் பிறைமுடித்தோன் விசும்பி னிறைந்த திருவாக்கால்
மன்னு னவற்குப் பரியெல்லாம் வருமென் றோலை விடுதியெனச்
சொன்னு னதுகேட் டகத்துவகை துளும்பி வரைந்து சுருள்விடுத்தார்.

(இ - ள்.) என்று இறைஞ்சி எழுந்து - என்று கூறிக் கீழே விழ்ந்து வணங்கி எழுந்து நின்று, ஏத்தி இரந்தார் எதிரே - பலபடத் துதித்துக் குறையிரந்த மாணிக்கவாசக ரெதிரே, பெருந்துறையின் மின் ஆர் சடைமேல் பிறைமுடித்தோன் - பெருந்துறையில் எழுந்தருளிய மின்போன்ற சடையின்கண் பிறையினை முடித்தருளிய இறைவன், விசும்பில் நிறைந்த திருவாக்கால் - வானின்கண் நிறைந்த திருவாக்கினுல், மன்னுனவற்கு - பாண்டியனுக்கு, பரி எல்லாம் வரும் என்று ஓலை விடுதி எனச் சொன்னுன் - குதிரைகளெல்லாம் வருமென்று எழுதி ஓலை விடுப்பாயாக என்று கூறி

யருளினன்; அதுகேட்டு - அதனைக் கேட்டு, அகத்து உவகை துளும்பி வரைந்து சுருள் விடுத்தார் - மனத்தின்கண் மகிழ்ச்சிமிக்கு ஓலை எழுதிப் போக்கினர்.

விசும்பினிறைந்த திருவாக்கு - அசரீரி. மன்னனவற்கு-மன்னற்கு; ஆனவன்: முதல் வேற்றுமைச் சொல். மன்னற்கு ஓலை விடுதி எனக் கூட்டுக. ஓலையைச் சுருளாகச் செய்து அனுப்புதல் வழக்காகலின் 'சுருள் விடுத்தார்' என்றார்; இது முடங்கல் எனவும் கூறப்படும். (௬௯)

அந்த வோலைப் பாசுரமு மறையக் கேட்டு நின்றாங்கோர்
சிந்தை யானு மகிழ்சிறப்ப விருந்தான் புரவித் தேரோடும்
வந்த வாதிச் செங்கதிரோன் மறைந்தா னவனால் வையமேலாம்
வெந்த வேடை தணிப்பான்போன் முளைத்தா *னாதி வெண்கதிரோன்.

(இ - ள்.) அந்த ஓலைப் பாசுரமும் அறைய - அந்த ஓலையின் வாசகத்தையும் ஒருவன் படிக்க, நின்று கேட்டு-கருத்துடன் நின்று கேட்டு, ஓர் ஆங்கு - அதனை அறிந்த பொழுதே, சிந்தை ஆன மகிழ்சிறப்ப இருந்தான்-மனத்தின்கண் நீங்காத மகிழ்ச்சி மிக இருந்தனன்; புரவித் தேரோடும் ஆதி வந்த செங்கதிரோன் மறைந்தான் - குதிரைகள் பூட்டிய தேருடன் வந்த ஆதியாகிய சூரியன் மறைந்தனன்; அவனால் வையம் எலாம் வெந்த வேடை-அச்சூரியனால் நிலவுலகனைத்தும் வெந்த வெப்பத்தினை, தணிப்பான் போல் - ஆற்றுபவனைப் போல, வெண் கதிரோன் ஆதி முளைத்தான் - சந்திரன் கீழ்த்திசையிற் றோன்றினன்.

ஆங்கு, ஓர் என்பன அசையுமாம். ஆதி - சூரியன்; ஆதியாகிய செங்கதிரோன் என இருபெயரொட்டு; புரவித் தேரோடும் நேரே வந்த செங்கதிரோன் என்றுமாம்; ஆதி-நேரோடல்; இடப வீதியாகிய முதல் வீதியிற் செல்லும் ஆதித்தன் என்று கூறலும் பொருந்தும். ஆதி முளைத்தான் - முதற்றிசையாகிய கீழ்த்திசையில் உதித்தான். (எ௦)

அன்று துயிலும் வாதவூ ரடிகள் கனவிற் சுடர்வெள்ளி
மன்று கிழவர் குருந்தடியில் வடிவங் காட்டி யெழுந்தருளி
வென்றி வேந்தன் மனங்கவரும் விசயப் பரிகொண் டணைகின்றேம்
இன்று நீமுன் னேகுதியென் றருளிச் செய்ய வெழுந்திருந்தார்.

(இ - ள்.) அன்று துயிலும் வாதவூர் அடிகள் கனவில் - அன்று இரவு துயில்கின்ற வாதவூரடிகள் கனவின்கண், வெள்ளி மன்று கிழவர் - வெள்ளியம்பலத்திற்கு உரிய சோமசுந்தரக் கடவுள், குருந்து அடியில் வடிவம் காட்டி எழுந்தருளி - குருந்த மரத்தடியில் ஆட்கொண்ட ஆசிரியக் கோலங்காட்டி எழுந்தருளி, வென்றி வேந்தன் மனம்கவரும் வெற்றியையுடைய பாண்டியனது மனத்தைக் கொள்ளை

பா - ம்.) *ஆழிவெண்கதிரோன்.

கொள்ளும், விசயப்பரிகொண்டு அணைகின்றேம் - வெற்றியைத்தரத் தக்க குதிரைகளை வாங்கிக்கொண்டு வருவேம்; இன்று நீமுன் ஏகுதி என்று அருளிச்செய்ய - இன்று நீ முன்னே செல்வாயென்று அருள்புரிய, எழுந்திருந்தார் - வாதவூரடிகள் விழித்தெழுந்தார்.

குருந்தடியில் வடிவம் - குருந்தடியில் எழுந்தருளிய வடிவம். வடிவங் காட்டி - வடிவத்துடன் கனவில் எழுந்தருளி அருளிச்செய்ய என்க. (எக)

கனவி னிடத்துந் தேவர்க்குங் காண்டற் கரிய கருணையுரு
நனவி னிடத்துங் கனவிடத்து மெளிதே யன்றே நமக்கென்ன
நினைவி னிடைக்கொண் டிருக்கின்றார் நிருத்தா னந்தச் சுடருள்ளத்
தினவி ருளைத்தின் றெழுவதென வெழுந்தா னிரவி யிரவொதுங்க.

(இ - ள்.) கனவினிடத்தும் தேவர்க்கும் காண்டற்கு அரிய கருணை உரு - கனவின் கண்ணும் தேவருக்கும் காணுதற்கரிய அருள் வடிவம், நனவினிடத்தும் கனவிடத்தும் எளிதே அன்றே நமக்கு என்ன - நனவிலும் கனவிலும் நமக்கு எளிதல்லவா என்று, நினைவினிடைக் கொண்டு இருக்கின்றார் - (வாதவூரர்) கருதிக் கொண்டிரா நின்றார்; உள்ளத்து இனஇருளை - அவ்வடிகளது உள்ளத்தின்கட் செறிந்த ஆணவமலமாகிய இருளை, நிருத்தானந்தச் சுடர் தின்று எழுவது என - ஆனந்தக்கூத்தினை யுடைய இறைவனென்னும் ஞான சூரியன் தின்று எழுந்தாற் போல, இரவி இரவு ஒதுங்க எழுந்தான் - சூரியன் இருள் ஒதுங்க எழுந்தனன்.

கனவினிடத்தும், தேவர்க்கும் என்னும் உம்மைகள் முறையே இழிவு சிறப்பும், உயர்வு சிறப்பும் ஆம். இறைவன் கனவிலும் தேவர்க் கரியனாதலையும் நனவிலும் தமக்கு எளியனாதலையும்,

"கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலும் நாயேற் கருளினை போற்றி"

எனவும்,

"கனவேயுந் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவே யனவளைத் தோளியொடும் புகுந்தருளி
நனவே யெனைப்பிடித் தாட்கொண்டவா நயந்துநெஞ்சம்
சினவேற்க ணீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ"

எனவும் அடிகள் திருவாசகத்தில் அருளிச்செய்திருத்தல் காண்க. (எஉ)

எழுந்தா ருடைய பெருந்துறையா ரிருதாள் பணிந்தா ரினிப்பிறப்பில்
அழுந்தார் வழிக்கொண் டாரடைந்தா ரகன்றார் நெறிக ளவிர்திங்கட்
கொழுந்தார் சடையார் விடையார்தென் கூட லணைந்தார் பாடலிவண்
டுழுந்தார் வேந்தன் பொற்கோயி லுற்றார் காணப் பெற்றாரால்.

(இ - ள்.) இனிப் பிறப்பில் அழுந்தார் எழுந்தார் - இனிப் பிறப்பினுள் அழுந்தாதவராகிய வாதவூரடிகள் அப்பொழுது எழுந்து, உடைய பெருந்துறை இருதாள் பணிந்தார் - தம்மை ஆளாகவுடைய பெருந்துறை நாதரின் இரண்டு திருவடிகளையும் பணிந்து, வழிக்கொண்டார் அடைந்தார் நெறிகள் அகன்றார் - வழிக் கொண்டு சென்று சேய நெறிகளைக் கடந்து, அவிர் திங்கள் கொழுந்து ஆர் சடையார் விடையார் - விளங்காநின்ற இளஞ்சந்திரனை அணிந்த சடையினை யுடையாரும் இடப வூர்தியை யுடையாருமாகிய சோமசுந்தரக் கடவுளின், தென் கூடல் அணைந்தார்-மதுரையைச் சார்ந்து, பாடுஅளி வண்டு உழும் தார் வேந்தன் பொற்கோயில் உற்றார் - இசைபாடும் வண்டுகள் கிண்டாநின்ற வேப்பமலர் மாலையை யணிந்த பாண்டியனது பொன்மயமான அரண்மனையை அடைந்து, காணப் பெற்றார் - அரசனைக் காணப் பெற்றனர்.

அழுந்தார்: வினையாலணையும் பெயர். எழுந்தார், பணிந்தார், வழிக் கொண்டார், அடைந்தார், அகன்றார், அணைந்தார், உற்றார் என்பன முற்றெச்சங்கள். அளி வண்டு - அளியாகிய வண்டு. ஆல்: அசை. (எ௩)

மன்னர் பெருமா னெதிர்வந்த மறையோர் பெருமான் வழிபாடு
முன்னர் முறையாற் செய்தொழுகி முன்னே நிற்ப முகநோக்கித்
தென்னர் பெருமா னெவ்வளவு செம்பொன் கொடுபோ யெவ்வளவு
நன்ன ரிவுளி கொண்டதெனக் கேட்டான் கேட்ட நான்மறையோர்.

(இ - ள்.) மன்னர் பெருமான் எதிர்வந்த மறையோர் பெருமான் - மன்னர் மன்னனாகிய பாண்டியனுக்கு முன்னேவந்த வேதியர் பெருமானாகிய அடிகள், முன்னர் முறையால் வழிபாடு செய்தொழுகி - முன் செய்யும் முறைப்படியே வழிபாடு செய்தொழுகி, முன்னே நிற்ப - எதிரில் நிற்க, தென்னர் பெருமான் முகம்நோக்கி - அப்பாண்டியர் தலைவன் அவர் முகத்தைப் பார்த்து, எவ்வளவு செம் பொன் கொடு போய்-எவ்வளவு செம்பொன்னை எடுத்துச் சென்று, எவ்வளவு நன்னர் இவுளி கொண்டது எனக் கேட்டான் - எவ்வளவு நல்ல குதிரைகள் வாங்கிய தென்று வினவினன்; கேட்ட நான்மறையோர் - அதனைக் கேட்ட அடிகள்,

முன்னர் முறை - புரவி வாங்கப் புறப்படுமுன் அமைச்சராகிய தாம் அரசர்க்குச் செய்து போந்த முறை. தென்னர் பெருமான், நான் மறையோர் என்பவற்றைச் சுட்டாகக் கொள்க. நன்னர்: பண்புப் பெயர். கொண்டது: தொழிற் பெயர். கேட்டல் இரண்டனுள் முன்னது வினவுதல், பின்னது செவியுறல். (எ௪)

பொன்னு மளவோ விலைகொண்ட புரவித் தொகையு மனைத்தவைதாம்
பின்னர் வரக்கண் டருளுதியெம் பெருமா னிதனுற் றுரங்கபதி
என்னு நாமம் பெறுதிமதி யென்றா ரென்ற மந்திரர்க்குத்
தென்னன் சிறந்த வரிசைவளஞ் செய்து விடுப்பச் செல்கின்றார்.

(இ - ள்.) பொன்னும் அளவோ - எடுத்துச் சென்ற பொன்னும் ஓர் அளவினை யுடையதோ (அன்று), விலைகொண்ட புரவித் தொகையும் அனைத்து - வாங்கிய குதிரைத் தொகையும் அத்தன்மைத்தே; அவை தாம் பின்னர் வரக்கண்டு அருளுதி - அக் குதிரைகள் பின்பு வரக் கண்டருள்வாய்; எம்பெருமான் - எம் தலைவ, இதனால் துரங்கபதி என்னும் நாமம் பெறுதிமதி-இக்காரணத்தினால் துரங்கபதி என்னும் பெயரினைப் பெறுவாயாக; என்றார் - என்று கூறினார்; என்ற மந்திரர்க்கு - என்று கூறிய அமைச்சர்க்கு, தென்னன் - அரிமருத்தன பாண்டியன், வளம் சிறந்த வரிசை செய்து விடுப்ப - வளமிக்க பல வரிசைகள் அளித்து அனுப்ப, செல்கின்றார் - செல்லும் அவ்வடிகள்.

பொன்னுக்கு எங்ஙனம் அளவின்றோ அங்ஙனமே புரவிக்கும் அளவின்று என்றார். இதனால் - இங்ஙனம் அளவிறந்த குதிரைகளை எய்துதலால். மதி யென்னும் முன்னிலை யசைச்சொல் முன்னிலை முற்றைச் சார்ந்து வந்தது; மதி- இதனைக் கருதுவாயாக என்றலுமாம். தாம்: அசை. (எரு)

பொன்னங் கமலத் தடம்படிந்து புழைக்கை மதமா முகக்கடவுள்
தன்னங் கமலச் சரணிறைஞ்சித் தனியே முளைத்த சிவக்கொழுந்தை
மின்னங் கயற்கட் கொடிமருங்கில் விளைந்த தேனை முகந்துண்டு
முன்னங் கருத்து மொழியுடம்பு மூன்று மன்பாய்த் தோன்றினார்.

(இ - ள்.) பொன் கமலத் தடம் படிந்து - பொற்றாமரைத் தடத்தில் நீராடி, புழைக்கை மதமா முகக் கடவுள் தன் - துளை பொருந்திய துதிக்கையையும் மதப் பெருக்கினையுமுடைய யானைமுகத்தினையுடைய சித்தி விநாயகக் கடவுளின், அம் கமலச் சரண் இறைஞ்சி - அழகிய தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்கி, தனியே முளைத்த சிவக் கொழுந்தை - ஒன்றாய் முளைத்த சிவக் கொழுந்தை, மின் அம் கயற்கண் கொடி மருங்கில் விளைந்த தேனை - மின்போன்ற அழகிய அங்கயற் கண்ணம்மை என்னுங் கொடியின் பக்கத்தில் விளைந்த தேனை, முகந்து உண்டு - கண்ணாகிய வாயினால் மொண்டு பருகி, முன்னம் கருத்து மொழி உடம்பு மூன்றும் - திருமுன்னர் உள்ளமும் உரையும் உடலுமாகிய மூன்று கரணங்களும், அன்பாய்த் தோன்றினார் - அன்பு வடிவாய்க் காணப்பட்டார்.

பொன்னம்: அம் அசை. உமையைக் கொடியாகவும் சிவத்தைத் தேனாகவும் உருவகித்தார். கண்ணாகிய வாயால் என வருவித்துரைக்க. அன்புமயமாகிய சிவத்தேனை உண்டமையால் தாமும் அன்புமயமாயினா ரென்க. முன்னங் கருத்து என்பதற்கு முன்னுதலை யுடைய அழகிய கருத்து என்றுமாம். முன்னுதல் - நினைத்தல். (எசு)

மன்னே யென்னை யாட்கொண்ட மணியே வெள்ளி மன்றுடும்
அன்னே யடியேன் வேண்டியவா றரச னீந்த நிதியெல்லாம்
முன்னே கொண்டேன் பணிகொண்டாய் முனியா தரச னனிமகிழ
என்னே புரவி வரும்வண்ண மேன்று வேண்டி நின்றிடலும்.

(இ - ள்.) மன்னே - என் இறைவனே, என்னை ஆட்கொண்ட மணியே-என்னை அடிமையாகக் கொண்டருளிய மாணிக்கமே, வெள்ளி மன்று ஆடும் அன்னே - வெள்ளியம்பலத்தில் திருக் கூத்தாடி யருளும் அன்னையே, அடியேன் வேண்டியவாறு-அடியேன் வேண்டிக்கொண்ட வண்ணமே, அரசன் ஈந்த நிதி எல்லாம் - அரசன் அளித்த பொருள் முழுதையும், முன்னே கொண்டு என் பணிகொண்டாய் - முதலில் ஏற்றுக் கொண்டு பின் என் பணியையும் கொண்டருளினை; அரசன் முனியாது நனி மகிழ - மன்னன் சினங் கொள்ளாது மிகவும் மகிழ்ச்சி அடையுமாறு, புரவி வரும் வண்ணம் என்னே என்று வேண்டி இரந்திடலும் - குதிரைகள் வருமாறு எங்ஙன மென்று வேண்டி நின்ற வளவில்.

எங்ஙனம் புரவி வருமென நான் அறிகிலேன் நீயே அருளிட வேண்டும் எனக் குறையிரத்தலும் என்க. (எஎ)

மெய்யன் புடையா யஞ்சலைநீ வேட்ட வண்ணம் விண்ணிரவி
வையம் பரிக்கும் பரியனைய வயமாக் கொண்டு வருதுமென
ஐயன் றிருவாக் ககல்விசும்பா றெழுந்த தாக வதுகேட்டுப்
பொய்யன் பகன்றார் சிவன்கருணை போற்றி மனையிற் போயினார்.

(இ - ள்.) மெய் அன்பு உடையாய் - உண்மை யன்புடையாய், அஞ்சலை - அஞ்சுதலொழிவாய்; நீ வேட்ட வண்ணம் - நீ வேண்டிய வாறே, விண் இரவி வையம் பரிக்கும் பரி அனைய-வானின்கண் உள்ள சூரியனது தேரை இழுக்கும் குதிரையை ஒத்த, வயமாக் கொண்டு வருதும் என - வெற்றியை யுடைய குதிரைகளைக் கொண்டு வருவேம் என்று, ஐயன் திருவாக்கு - இறைவன் திருவாக்கு, அகல் விசும்பு ஆறு எழுந்ததாக - அகன்ற வானின் வழியே (அசரீரியாக) எழா நிற்க, அது கேட்டு - அதனைக் கேட்டு, பொய் அன்பு அகன்றார் - பொய்யன்பு நீங்கிய வாதவூரடிகள், சிவன் கருணை போற்றி மனையில் போயினார் - சிவபிரான் கருணையைத் துதித்துத் தமது இல்லிற்குச் சென்றனர்.

அஞ்சலை, அல்:எதிர்மறையிடை நிலை; ஐ:முன்னிலை விகுதி. வையம்-தேர். எழுந்தது எழ அதனைக் கேட்டு என விரித்துக் கொள்க. (எஅ)

வேறு

கடிமனை யடைந்த வெல்லை வாதவூர்க் காவ லோரை
மடிமையில் சுற்றத் தோருங் கேளிரு மாண்ட காதல்
அடிமையுள் ளாரு மேதி லாளரும் பிறரு மீண்டி
இடிமழை வாய்விட் டென்னப் புந்திக ளினைய சொல்வார்.

(இ - ள்.) கடிமனை அடைந்த எல்லை - விளக்கமமைந்த தமது இல்லினை அடைந்த பொழுது, வாதவூர்க் காவலோரை, - அவ்வாதவூ ரமைச்சரை, மடிமை இல் சுற்றத்தோரும் கேளிரும் - சோர்வில்லாத

கிளைஞரும் நட்பினரும், மாண்டகாதல் அடிமையுள்ளாரும் - சிறந்த அன்பினையுடைய ஏவலாளரும், ஏதிலாளரும் பிறரும் ஈண்டி - அயலாரும் மற்றையோரும் நெருங்கி, இடி மழை வாய் விட்டென்ன-இடிக்கும் மேகம் வாய்திறந்தாற் போல, இனைய புந்திகள் சொல்வார் - இவ்வாறான புத்திகளைச் சொல்வாராயினர்.

பெரியோர்களை அவர்கள் அவதரித்த ஊர்க்குத் தலைவராகக் கூறுதல் மரபாகலின் 'வாதவூர்க் காவலோரை' என்றார். மடிமை - மடியின்றன்மை. பலருந்திரண்டு கழறுதலால் 'இடி மழை வாய்விட் டென்ன' என்றார்; வாய்விடுதல் - முழங்குதல்; விட்டாலென்ன என்பது விட்டென்ன எனத் தொக்கது. (எக)

மந்திரக் கிழமை பூண்டு மன்னவர் கருமஞ் செய்வ
தந்தணர்க் கறனே யல்ல வமைச்சிய லறத்து நின்றால்
வேந்திற லரசர்க் கேற்ற செய்வதே வேண்டு மென்னத்
தந்திர மனுநூல் வல்லோர் சாற்றுவா ரன்றே யையா.

(இ - ள்.) மந்திரக்கிழமை பூண்டு - அமைச்சியலுரிமை பூண்டு, மன்னவர் கருமம் செய்வது - அரசரது வினைசெய்தல், அந்தணர்க்கு அறனே அல்ல-மறையவருக்குரிய அறமே அன்று; அமைச்சியல் அறத்து நின்றால் - அமைச்சியலுக்குரிய அறநெறியில் நின்றால், வெந்திறல் அரசர்க்கு ஏற்ற செய்வதே வேண்டும் என்ன - மிக்க வலியினையுடைய அம்மன்னவர்க்குப் பொருந்திய வினைகளையே செய்ய வேண்டுமென்று, ஐயா - ஐயனே, தந்திரம் மனுநூல் வல்லோர் - தந்திரமாகிய மனுநூல் வல்லவர், சாற்றுவார் அன்றே - கூறுவார் அல்லவா?

மன்னவர் கருமம் - அரசரேவிய வினை, அரச காரியம்; அரசர்க் குரிய தொழில்களுமாம். நூலும் கரகமும் முக்கோலும் மணையும் உடையராய்ப் பிச்சை கொண்டுண்டேனும் தமது பொருளுண்டேனும் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறு தொழில் புரிந்தொழுகல் அந்தணர்க்குரிய அறமாகலின் 'மன்னவர் கருமஞ்செய்வ தந்தணர்க் கறனே யல்ல' என்றார். செய்வது : தொழிற் பெயர். அரச காரியஞ் செய்வது அந்தணர்க்குரித்தன்று, அங்ஙனம் உரித்தல்லாத அதனையும் அவர் ஒரோ வழி மேற்கொள்ளின், பின்பு அரசர்க்குரிய வினைகளாகிய நாடுகாத்தலும் பகை யொறுத்தலும் முதலியவற்றிற்கு ஏற்றவைகளையே புரிதலும், அவனது ஒளியோடு பொருந்த ஒழுகுதலும் செய்தல் வேண்டுமென்க. தந்திரம் வல்லோரும் மனுநூல் வல்லோரும் என்றுமாம்; தந்திரம் - ஆகமம். (அ0)

அரைசிய லமைச்சு நீதி யாய்ந்தநுங் கட்கு நாங்கள்
உரைசெய்வ தேவனீர் செய்வ தோன்றுநன் றுவ தில்லை
விரைசெறி தாராற் கின்று வெம்பரி வருவ தாக
வரையறை செய்தீர் நாளை யென்சொல வல்லீ ரையா.

(இ - ள்.) அரைசியல் அமைச்சுநீதி ஆய்ந்த நுங்கட்கு - அரசியலை யும் அமைச்சர் நீதியையும் ஆராய்ந்தறிந்த நுமக்கு, நாங்கள் உரைசெய் வது எவன் - நாங்கள் சொல்லக்கிடப்பது யாது, நீர் செய்வது ஒன்றும் நன்ருவது இல்லை - நீர் செய்யுங் காரியம் சிறிதும் அழகிதன்று; விரை செறி தாராற்கு - மணமிக்க வேப்ப மலர் மாலையை யணிந்த பாண்டிய னுக்கு, வெம்பரி இன்று வருவதாக வரையறை செய்தீர் - விரும்பத் தக்க குதிரைகள் இன்று வருமென நாள் வரையறுத்தீர்; ஐயா - ஐயனே, நாளை என் சொலவல்லீர் - (குதிரை வராவிடில்) நாளை என்ன சொல்ல வல்லீரோ.

அரசியல் - அரசனது தன்மை என்றுமாம்; ஆவது, பிழை செய் தாரைக் கண்ணோடாது ஒறுத்தல் முதலிய அவனது பெற்றி. வெம்பரி- கடுஞ்செலவினையுடைய பரி என்றுமாம். வருவதாக - வருமென. பரி இன்று வருவதாக நாளை வரையறை செய்தீர், இனி என் சொலவல்லீர் என மாற்றியும் விரித்தும் உரைத்தலுமாம். (அக)

தழுவிய கிளைஞர் நட்டோர் சார்வுளோர் தக்க சான்ருேர்
குழுவினைக் காக்க வேண்டுங் குறிப்பிலீர் போலு நீவிர்
ஒழுகுறு செயலி ஞலே யுஞ்செய லுமக்கே சால
அழகிது போலு மென்னக் கழறினு ரதுகேட் டையன்.

(இ - ள்.) நீவிர் ஒழுகுறு செயலினாலே - நீவிர் நடக்கலுற்ற செய்கையாலே, தழுவிய கிளைஞர் நட்டோர் - சூழ்ந்துள்ள சுற்றத் தாரும் நட்பினரும், சார்வுளோர் தக்க சான்றோர் - சார்ந்தவர்களும் தகுதி வாய்ந்த பெரியாருமாகிய, குழுவினை - கூட்டத்தை, காக்க வேண்டும் குறிப்பிலீர் போலும் - ஓம்பவேண்டுமென்னும் குறிப்பு டையரல்லீர் போலும்: உம்செயல் உமக்கே சால அழகிது போலும் எனக் கழறினார் - உமது செய்கை உமக்கே மிகவும் அழகுடையது போலுமென்று இடித்துக் கூறினார்; ஐயன் அது கேட்டு - அடிகள் அதனைக் கேட்டு.

சார்வுளோர் - தம்மைப் பற்றுக்கோடாகச் சார்ந்திருக்கும் ஏனை யோர். நுமது செய்கையை ஆராயின் குறிப்பிலீர் போலும் என்க. கழறுதல் - இடித்துரைத்தல். போலும் இரண்டும் ஒப்பில்போலி. (அஉ)

சுற்றமுந் தொடர்பு நீத்தேந் துன்பமு மின்பு மற்றேம்
வெற்றுடன் மானந் தீர்ந்தேம் வெறுக்கைமேல் வெறுக்கை வைத்தேம்
செற்றமுஞ் செருக்குங் காய்ந்தேந் தீவினை யிரண்டுந் தீர்ந்தேம்
கற்றைவார் சடையான் கோலங் காட்டியாட் கொண்ட வன்றே.

(இ - ள்.) கற்றைவார் சடையான் - திரண்ட நீண்ட சடையை யுடைய இறைவன், கோலம் காட்டி ஆட்கொண்ட அன்றே - தன் அருட்கோலத்தைக் காட்டி அடிமைகொண்ட அப்பொழுதே, சுற்றமுந் தொடர்பும் நீத்தேம் - சுற்றத்தையும் ஏனைத் தொடர்புகளையும் துறந்

தேம்; துன்பமும் இன்பும் அற்றேம் - துன்பத்தையும் இன்பத்தையும் ஒழிந்தேம்; வெறு உடல் மானம் தீர்ந்தேம் - பயனற்ற இவ்வுடம்பின் பற்றையும் நீங்கினேம்; வெறுக்கை மேல் வெறுக்கை வைத்தேம் - பொருளின் மேல் வெறுப்பு வைத்தேம்; செற்றமும் செருக்கும் காய்ந் தேம்-சினத்தையும் மதத்தையும் சினந்து போக்கினேம்: தீவினை இரண் டும் தீர்ந்தேம் - கொடிய நல்வினை தீவினை என்னும் இரண்டினின்றும் நீங்கினேம்.

மேற்செய்யுளில் கிளைஞர் முதலானோரைக் காக்கவேண்டும் குறிப்பிலிர் போலும் என்றதை அநுவதித்து 'சுற்றமுந் தொடர்பு நீத்தேம்' என்றார். தொடர்பு - நட்டோர், சார்வுளோர், சான்றோர் என்னும் தொடர்புகள். இனி, காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், உவகை, மதம், மானம் என்னும் உட்பகை ஆறும் ஒழிந்தவாறு ரைத்தலும் ஊன்றியுணர்க. வெறுக்கை இரண்டனுள் முன்னது செல்வம்; யாவும் வந்து செறிதலின் வெறுக்கை யெனப்பட்டது; வெறுத்தல் - செறிதல். பின்னது உவர்த்தல் என்னும் பொருட்டாய தொழிற்பெயர். தீமையுடைய இருவினையும் என்க. நல்வினையும் பிறவிக்கேதுவாகலின் 'வினையிரண்டும்' என்றார்;

"இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்னும் தமிழ் மறையுங் காண்க. (அரு)

தந்தைதாய் குரவ ஞசான் சங்கர னிராசை பெண்டீர்
மைந்தர்பல் லுயிருஞ் சுற்ற மாசிலா வீச னன்பர்
அந்தமில் பிறவி யேழு மடுபகை யென்ப தோர்ந்தேம்
எந்தையார் கருணை காட்டி யெம்மையாட் கொண்ட வன்றே.

(இ - ள்.) எந்தையார் கருணை காட்டி எம்மை ஆட்கொண்ட அன்றே - எம் பெருமானார் தமது அருட்கோலம் காட்டி எம்மை அடிமை கொண்டருளிய அப்பொழுதே, தந்தை தாய் குரவன் ஆசான் சங்கரன் - அப்பனும் அம்மையும் ஞானசிரியனும் போதகாசிரியனும் அவ்விறைவனே என்பதையும், பெண்டீர் நிராசை - மனைவி நிராசையே என்பதையும், மைந்தர் பல் உயிரும் - மக்கள் பல உயிர்களுமே என்பதையும், சுற்றம் மாசு இலா ஈசன் அன்பர்-சுற்றத்தார் குற்றமில் லாத சிவனடியாரே என்பதையும், அடுபகை-கொல்லும் பகை, அந்தம் இல்பிறவி ஏழும் என்பது - முடிவில்லாத எழுவகைப் பிறப்புமே என்பதையும், ஓர்ந்தேம் - அறிந்தேம்.

ஞான குரவனும் வித்தியா குரவனும் என்பார் 'குரவனுசான்' என்றார். எண்ணிடைச் சொற்கள் தொக்கன. கருணை திருவுருவை உணர்த்தி நின்றது. நிராசையே பெண்டிரும் மைந்தரும் பல்லுயிரு மெனப் பிறர் கூறிய உரை சிறிதும் பொருந்தாமை யுணர்க. என்பது என்னும் சொல்லைத் தனித்தனி கூட்டி முடிக்க. (அச)

ஊரெலா மட்ட சோறு நம்மதே யுவரி சூழ்ந்த
பாரெலாம் பாய றுன்னற் கோவணம் பரிக்கு மாடை
சீரெலாஞ் சிறந்த சாந்தந் தெய்வநீ றணிபூண் கண்டி
நீரெலாஞ் சுமந்த வேணி நிருத்தனாட் கொண்ட வன்றே.

(இ - ள்.) நீர் எலாம் சுமந்த வேணி நிருத்தன்-கங்கை நீர் முற்றுந் தாங்கிய சடையினை யுடைய திருக்கூத்தனாகிய இறைவன், ஆட்கொண்ட அன்றே - அடிமை கொண்ட அப்பொழுதே, ஊர் எலாம் அட்ட சோறு நம்மதே - ஊர் முற்றும் சமைத்த சோறு நம்முடையதே; உவரி சூழ்ந்த பார் எலாம் பாயல் - கடல் சூழ்ந்த நிலவுலகு முற்றும் நமது படுக்கையே; துன்னல் கோவணம் பரிக்கும் ஆடை - தைத்த கோவணம் உடுக்கும் உடையே; சீர் எலாம் சிறந்த சாந்தம் தெய்வ நீறு - சீர் அனைத்தாலும் சிறந்த சந்தனம் தெய்வத்தன்மை பொருந்திய திருநீறே; அணி பூண்கண்டி - அணியும் அணி உருத்திராக்க மாலையே.

அட்டசோறு: பெயரெச்சம் செயப்படுபொருட்பெயர்கொண்டது. நம்மதே, மகரம் விரித்தல். உவரி, உவரையுடையது; இ:வினை முதற்பொருள் விகுதி. 'அட்டுண்டு வாழ்வார்க் கதிதிக ளெஞ்ஞான்றும் அட்டுண்ணு மாட்சியுடையவர்' ஆகலின் 'ஊரெலா மட்டசோறு நம்மதே' என்றார். இவ்விரு செய்யுளிலும் போந்த கருத்துக்களிற் பலவும்,

"சின்னச் சீரை துன்னற் கோவணம்
அறுதற் கிளொடு பெறுவது புனைந்து
சிதவ லோடொன் றுதவுழி யெடுத்தாங்
கிடுவோ ருளரெனி னிலையினின் றயின்று
படுதரைப் பாயலிற் பள்ளிமேவி யோவாத்
தகவெனு மரிவையைத் தழீஇ மகவெனப்
பல்லுயி ரனைத்தையு மொக்கப் பார்க்குநின்
செல்வக் கடவுட் டொண்டர்"

எனத் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையுட் பயின்றுள்ளமை காண்க.

"ஆரங் கண்டிகை யாடையுங் கந்தையே"

என்னும் திருத்தொண்டர் புராணத்தொடரும் நோக்கற்பாலது. (அ௫)

[எழுசீரடி யாசிரிய விருத்தம்]

இறக்கினு மின்றே யிறக்குக வென்று மிருக்கினு மிருக்குக வேந்தன்
ஒறுக்கினு மொறுக்க வுவகையு முடனே யூட்டினு மூட்டுக வானிற்
சிறக்கினுஞ் சிறக்க கொடியதீ நரகிற் சேரினுஞ் சேருக சிவனை
மறக்கிலம் பண்டைப் பழவினை விளைந்தான் மாற்றுவார் யாரென மறுத்தார்,

(இ - ள்.) இறக்கினும் இன்றே இறக்குக-(ஆதலால்) இறந்தாலும் இன்றே இறக்கக்கடவேம்; என்றும் இருக்கினும் இருக்குக-அன்றி எப் பொழுதும் அழியாமல் இருந்தாலும் இருக்கக் கடவேம்; வேந்தன் ஒறுக்கினும் ஒறுக்க-மன்னன் தண்டித்தாலும் தண்டிக்கக்கடவன்; உடனே உவகையும் ஊட்டினும் ஊட்டுக-உடனே மகிழ்ச்சியை ஊட்டினும் ஊட்டக் கடவன்; வானில் சிறக்கினும் சிறக்க - விண்ணு லகிற் சென்று சிறப்புப் பெறினும் பெறக்கடவேம்; கொடிய நிரயத்தில் சேரினும் சேருக-(அன்றி) கொடிய நெருப்புமயமாகிய நிரயத்தின்கண் சேர்ந்தாலுஞ் சேரக்கடவேம்; சிவனை மறக்கிலம்-சிவபெருமானை மறக்க மாட்டேம்; பண்டைப் பழவினை விளைந்தால்-முன் செய்த பழவினை வந்து விளையின், மாற்றுவார் யார் என மறுத்தார் - அதனை மாற்றவல்லார் யாவருளர் என்று மறுத்துக் கூறினர்.

இறக்குக, இருக்குக என்பவற்றிற் குகரம் விரிந்து நின்றது. உவகையும் என்பதில் உம் அசை. இறைவன் பழவினைப் பயனை நுகர் விக்குங்கால் அதற்குஅமைந்து நுகர்தலன்றி மாற்றுதல் கூடாதாகலின் 'பழவினை விளைந்தால் மாற்றுவார் யார்' என்றார். என என்பதனைச் 'சுற்றமுந் தொடர்பும்' என்பது முதலிய செய்யுட்களின் வினைக ளோடும் கூட்டி, மறுத்தார் என முடிக்க. அடிகள் தற்சுதந்தரமின்றி இறைவனருள் வழிப்பட்டு நிற்கும் பெற்றியை,

"நரகம் புகினும், எள்ளேன் றிருவருளாலே யிருக்கப் பெறின்"
"நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ விதற்கு நாயகமே"
"காயத்திடுவா யுன்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே"

என்னும் திருவாசகங்களிற் காண்க. (அகூ)

ஆகச் செய்யுள் - உ,எகூஅ,

———

ஐம்பத்தோன்பதாவது

நரி பரியாக்கிய படலம்

[அறு சீரடி யாசிரிய விருத்தம்]

அரிகணை தொடுத்து வேழ மட்டவன் செழியன் வாயிற்
றெரிகலை யமைச்ச ரேற்றைத் தேசிக வடிவத் தீண்டி
வரிகழல் சூட்டி யாண்ட வண்ணமிவ் வண்ண மையன்
நரிகளைப் பரிக ளாக்கி நடத்திய வாறுஞ் சொல்வாம்.

(இ - ள்.) அரிகணை தொடுத்து வேழம் அட்டவன் - நரசிங்க பாணத்தை விடுத்து (சமணர் ஏவிய) யானையை அழித்த சோமசுந்தரக் கடவுள், செழியன் வாயில் தெரிகலை அமைச்சர் ஏற்றை - பாண்டியன் வாயிலிலுள்ள கலைகளை ஆராய்ந்த அமைச்சருள் ஆண் சிங்கம் போல் வாராகிய வாதவூரடிகளை, தேசிக வடிவத்து ஈண்டி-குருவடிவத்துடன் வந்து, வரிகழல் சூட்டி ஆண்டவண்ணம் இவ்வண்ணம் - (வீரகண் டையைக்) கட்டிய திருவடியை அவர் முடியிற் சூட்டி ஆட்கொண் டருளிய திருவிளையாடல் இது, ஐயன்-அச்சோமசுந்தரக்கடவுள், நரிக ளைப் பரிகள் ஆக்கி நடத்தியவாறும் சொல்வாம் - நரிகளைக் குதிரைக ளாக்கி நடத்தியருளிய திருவிளையாடலையும் (இனிக்) கூறுவாம்.

அரிக்கணை எனற்பாலது எதுகை நோக்கி இயல்பாயிற்று. வடிவத்து - வடிவத்துடன். கழல்: ஆகு பெயர். (க)

சுற்றமாம் பாச நீவித் துகளறுத் திருந்தார் தம்மை
மற்றைநா ளழைத்து வேந்தன் வந்தில போலு மின்னங்
கொற்றவாம் பரிக ளென்னக் குறுமதி முடித்தா னன்பர்
இற்றைநாண் முதனாண் மூன்றி லீண்டுவ விறைவ வென்னா.

(இ - ள்.) சுற்றமாம் பாசம் நீவி - சுற்றமாகிய பாசத்தைத் துடைத்து, துகள் அறுத்து இருந்தார் தம்மை - ஆணவமலத்தை அறுத் துச் சிவயோகத்திலிருந்த அவ் வாதவூரடிகளை, வேந்தன் மற்றை நாள் அழைத்து - அரிமருத்தன பாண்டியன் மறுநாள் தன்னிடம் அழைத்து, கொற்றவாம் பரிகள் இன்னம் வந்திலபோலும் என்ன - வெற்றியை யுடைய தாவுங் குதிரைகள் இன்னும் வந்திலபோலுமென்று வினவ, குறுமதி முடித்தான் அன்பர் - பிறைமதியினை முடித்த இறைவன் அடியாராகிய மணிவாசகனார், இறைவ-மன்னனே, இற்றை நாள் முதல் நாள் மூன்றில் - இன்று முதல் மூன்று நாட்களுள், ஈண்டுவ - வரு வனவாகும்; என்னா - என்று கூறி,

சுற்றத்தார் பாசம்போல் விடெய்தாமல் தடை செய்து நிற்றலின் 'சுற்றமாம் பாசம்' என்முர். மேல்,

'சுற்றமுந் தொடர்பு நீத்தேம்'

என அடிகள் அருளிச் செய்தமையுங் காண்க. நீவுதல் - ஒழித்தல், துகள் - காம வெகுளி மயக்கமுமாம். போலும், ஒப்பில் போலி. இனி என்பது அம் பெற்று இன்னம் என்ருயது. குறுமதி - சிறுமதி; பிறை. (உ)

சிந்துர நுதன்மால் யானைச் செல்வவப் பரிக்கு வேறு
மந்துரை யகன்ற வாக* வகுக்கசூழ் தண்ணீ ரூட்ட
நந்துறை தடங்கள் வேறு தோடுக† நீ ணகர மெங்கும்
இந்துறை மாட மெல்லா மழகுசெய் திடுக‡ வென்ருா.

(இ - ள்.) சிந்துர நுதல்மால் யானைச் செல்வ - சிந்துர மணிந்த நுதலையும் மதமயக்கத்தையு முடைய யானையை யுடைய செல்வனே, அப்பரிக்கு - அங்ஙனம் வருங் குதிரைகளுக்கு, அகன்றவாக வேறு மந்துரை வகுக்க - அகற்சி யுள்ளனவாக வேறு குதிரைப் பந்திகள் வகுத்திடுக; தண்ணீர் ஊட்ட - அவைகட்கு நீர் ஊட்டுதற்பொருட்டு, நந்து உறை தடங்கள் வேறு சூழ் தொடுக - சங்குகள் உறையுந் தடாகங்கள் வேறு சூழத் தோண்டுக; நீள் நகரம் எங்கும் - நீண்ட நகரின் எல்லா விடங்களிலுமுள்ள, இந்து உறை மாடம் எல்லாம் அழகு செய்திடுக - சந்திரன் தவழும் மாளிகைகளனைத்தையும் ஒப்பனை செய்க; என்ருர் - என்று கூறினர்.

சிறந்த பரிகள் மிகுதியாக வருமென்னுங் கருத்தால் இங்ஙனம் கூறினர். மந்துரை - குதிரை கட்டுமிடம். தொடுதல் - தோண்டுதல். (௩)

காவலன் கருமஞ் செய்வோர் கந்துகப் பந்தி யாற்றி
ஓவற நகர மெங்கு மொளிபெற வழகு செய்யத்
தாவுதெண் கடலேழ் கண்ட சகரர் போல் வைகன் மூன்றில்
வாவியுங் குளனுந் தொட்டார் மண்டொடு கருவி மாக்கள்.

(இ - ள்.) காவலன் கருமம் செய்வோர் - (மன்னன் ஆணைப்படி) அவன் கருமஞ் செய்யும் ஏவலாளர், கந்துகப் பந்தி ஆற்றி - குதிரைப் பந்தி அமைத்து, நகரம் எங்கும் ஓவு அற ஒளிபெற அழகு செய்ய - நகரமனைத்தும் நீங்காமல் ஒளிவிடுமாறு அலங்கரிக்க, மண்தொடு கருவி மாக்கள் - மண் தோண்டுங் கருவியினை யுடைய மக்கள், தாவு தெண் கடல் ஏழ்கண்ட சகரர் போல் - அலைகள் தாவுந் தெள்ளிய ஏழு கடலையும் சகரர்கள் தோண்டினமைபோல, வைகல் மூன்றில் - மூன்று நாட்களில், வாவியும் குளனும் தொட்டார் - பல வாவிகளையுங் குளங்களையுந் தோண்டினர்.

(பா - ம்.) * மந்துரை யகலிதாக வகுப்பது. †வேறு தொடுவது. ‡அழகு செய்திடுவது.

கடலேழ் என்றது உபசாரம்; சகரர் தொட்டது கிழக்குக் கடல் என்ப;

"குணாஅது கரை பொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்று முதிர் பௌவத்தின் குடக்கும்"

என்னும் புறப்பாட்டடிகளும், அவற்றின் உரையும் நோக்குக. சகரன் என்னும் பரிதிகுல வேந்தன் துரங்க வேள்வி இயற்றிய காலை இந்திரன் அவ்வேள்விக் குதிரையைப் பற்றிப் பாதலத்தில் தவம் புரிந்து கொண்டிருந்த கபில முனிவரின் பின் புறத்தே ஒளித்து வைக்க, குதிரையின் பின் சென்ற அஞ்சுமானால் அதனையறிந்த சகரன் புதல்வர் அறுபதினாயிரவர் அதனை மீட்பதாக நிலத்தைத் தோண்டிப் பாதல மடைந்தனரென்பது வரலாறு. (ச)

வரையறை செய்த மூன்று வைகலுங் கழிந்த பின்னாட்
கரையறு பரிமா வீண்டக் கண்டில மின்ன மென்னா
விரையறை வண்டார் தண்டார் வேம்பனும் விளித்து வந்த
உரையறை நாவி னாரை யொறுப்பவ னொத்துச் சீறா.

(இ - ள்.) வண்டு அறை விரை ஆர் தண் தார் வேம்பனும் - வண்டுகள் ஒலிக்கும் மணம் நிறைந்த தண்ணிய வேப்ப மலர் மாலையையணிந்த பாண்டியனும், வரை யறை செய்த மூன்று வைகலும் கழிந்த பின்னாள் - வரையறுத்துக் கூறிய மூன்று நாட்களும் கழிந்த வழிநாள், இன்னம் கரை அறு பரிமா ஈண்டக் கண்டிலம் என்னா - இன்னும் அளவிறந்த குதிரைகள் வரக் கண்டிலமென்று கருதி, விளித்து - அழைத்தலால், வந்த உரை அறை நாவினாரை - வந்த (மாணிக்கம் போலுஞ்) சொற்களைக் கூறும் நாவினையுடைய அவ்வமைச்சரை, ஒறுப்பவன் ஒத்துச் சீறா - தண்டிப்பவன் போன்று சினந்து.

பரிமா: இருபெயரொட்டு. வண்டு அறை விரை ஆர் எனச் சொற்களை மாறுக. தார் வேம்பன் என்பதில் விகுதி பிரித்துக் கூட்டுக. உரை - திருவாசகம் என்னும் பொருட்டு. (ரு)

என்னிவன் பரிமாக் கொண்ட தென்றவை வருவ தென்னாத்*
தன்னெதிர் நின்ற வஞ்சத் தறுகணார் சிலரை நோக்கிக்
கொன்னுமிக் கள்வன் றன்னைக் கொண்டுபோய்த் தண்டஞ் செய்தெம்
பொன்னெலா மறவு கொண்டு வாங்குமின் போமி னென்றான்.

(இ - ள்.) என் இவன் பரிமாக் கொண்டது - இவன் குதிரைகள் வாங்கியவாறு என்னே, அவை வருவது என்று என்னா - அவை வருதல் எப்பொழுதோ என்று கூறி, தன் எதிர் நின்ற வஞ்சத்தறுகணார் சிலரை நோக்கி - தனக்கெதிரில் நின்ற வஞ்ச மிக்க தறுகண்மை யுடைய தண்டலாளர் சிலரைப் பார்த்து, கொன்னும் இக்கள்வன் தன்னைக்

(பா - ம்.) *வருவ வென்னா.

கொண்டு போய் - (நினைக்கினும்) அச்சத்தைத் தரும் இத் திருடனைக் கொண்டு சென்று, தண்டம் செய்து - தண்டித்து, எம்பொன் எலாம் அறுவு கொண்டு வாங்குமின் - எமது பொன் முழுதையும் அறுதியாக வாங்குங்கள், போமின் - விரைந்து செல்லுங்கள், என்றான் - என்று கட்டளை யிட்டான்.

எவன் என்பது என் என்று ஆகி இகழ்ச்சி குறித்து நின்றது. கொன், அச்சப் பொருட்டாய இடைச் சொல்;

"அச்சம் பயமிலி காலம் பெருமையென்
றப்பா னுன்கே கொன்னைச் சொல்லே"

என்பது தொல்காப்பியம். மறுவு எனப் பிரித்து, மச்சம் என்றுரைத்தலுமாம். (௬)

கற்றிணி தோளான் சீற்றங் கண்டெதிர் நில்லா தஞ்சிச்
சுற்றிய பாசம் போலத் தொடர்ந்துகொண் டேகி மள்ளர்
எற்றினி வகைதான் பொன்னுக் கியம்புமென் றதிர்த்துச் சீறிச்*
செற்றமில் சிந்தை யார்மேற் செறிந்தகல் லேற்றி னாரே.

(இ - ள்.) கல்திணி தோளான் - மலைபோலுந் திண்ணிய தோளையுடைய மன்னனது, சீற்றங்கண்டு மள்ளர் அஞ்சி - சினத்தினை ஏவலாளர் கண்டு பயந்து, எதிர் நில்லாது - எதிரே நில்லாமல், சுற்றிய பாசம் போலத் தொடர்ந்து கொண்டு ஏகி - விடாது பாசஞ் சூழ்ந்தாற் போலச் சூழ்ந்து தொடர்ந்து சென்று, இனி பொன்னுக்கு வகைதான் எற்று இயம்பும் என்று அதிர்த்துச் சீறி - இனிப் பொருள் கொடுப்பதற்கு வகை யாது கூறுமென்று கழறிச் சினந்து, செற்றம் இல் சிந்தையார் மேல் செறிந்த கல் ஏற்றினார் - சினமிறந்த மனமுடைய அடிகளின் மேல் பாரஞ்செறிந்த கல்லை ஏற்றினார்.

பாசம் சூழ்ந்தாற்போலச் சூழ்ந்து என்க. தான்: அசை. (எ)

பொன்னெடுஞ் சயிலங் கோட்டிப் புரம்பொடி படுத்த வீரர்
சொன்னெடுந் தாளை யுள்கி நின்றனர் சுமந்த பாரம்
அந்நெடுந் தகையார் தாங்கி யாற்றினா ரடைந்த வன்பர்
தந்நெடும் பார மெல்லாந் தாங்குவா ரவரே யன்றே.

(இ - ள்.) நெடும் பொன் சயிலம்கோட்டி-நெடிய பொன்மலையை வில்லாக வளைத்து, புரம்பொடி படுத்தவீரர் - முப்புரங்களையும் நீறாக்கிய வீரராகிய இறைவரது, சொல் நெடுந்தாளை உள்கி நின்றனர் - புகழமைந்த நீண்ட திருவடியை (மணிவாசகனார்) மனத்தின்கண் நினைத்துத் (துன்பமின்றி) நின்றனர்; சுமந்த பாரம் - அவர் சுமந்த பாரத்தினை, அந்நெடுந்தகையார் தாங்கி ஆற்றினார் - அப்பெருந்தகையாராம் இறைவர் தாங்கிச் சுமந்தனர்; அடைந்த அன்பர் தம் நெடும்

(பா - ம்.) *எதிர்த்துச்சீறி.

பாரம் எல்லாம் - தம்மை அடைந்த அன்பர்களின் பெரிய சுமை யனைத்தையும், தாங்குவார் அவரே அன்றோ - தாங்குவார் அவரே அல்லவா?

சயிலம், சைலம் என்பதன் போலி. சொல் நெடுந்தாள் - சொல் வரம் பிறந்த பாதம் என்றுமாம்;

"பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்"

என்னும் திருவாசகமும் காண்க. இது வேற்றுப்பொருள் வைப்பணி யின் பாற்படும். (அ)

சிலையது பொறைதோற் றுது சிவனடி நிழலி னின்றார்
நிலையது நோக்கி மாய நெறியிது போலு மென்னுக்
கொலையது வஞ்சா வஞ்சர் கொடுஞ்சினந் திருகி வேதத்
தலையது தெரிந்தார் கையுந் தாள்களுங் கிட்டி யார்த்தார்.

(இ - ள்.) சிலையது பொறை தோற்றுது - கல்லின்பாரம் தோன் றுமல், சிவன் அடி நிழலில் நின்றார் நிலையது நோக்கி - சிவபெருமான் திருவடி நிழலின் கண் நின்ற அடிகளின் தன்மையைப் பார்த்து, இது மாயநெறி போலும் என்னு - இது ஒரு மாய வழிபோலும் என்று கருதி, கொலையது அஞ்சா வஞ்சர் - கொலையினைச் சிறிது மஞ்சாத வஞ்சத் தறுகணாளர், கொடுஞ்சினம் திருகி - கொடிய சினம் முறுகி, வேதத்தலையது தெரிந்தார் - மறையின் முடியினை அறிந்த அடிகளின், கையும் தாள்களும் கிட்டி ஆர்த்தார் - கைகளிலும் கால்களிலும் கிட்டி கட்டினர்.

சிலையது, அது: ஆறனுருபு. நிலையது முதலிய மூன்றிலும் அது பகுதிப் பொருள் விகுதி. (கூ)

அக்கொடுந் தொழிலு மஞ்சா திருந்தன ரரனை யுள்கி
இக்கொடுந் தொழிலி னார்தா மினிநனி யொறுப்ப ரென்னுப்
புக்கது காண்டற் குள்ளம் பொறானென விரவிப் புத்தேள்
மிக்கதன் னொளிகண் மாழ்கி விரிகட லழுவத் தாழ்ந்தான்.

(இ - ள்.) அக் கொடுந்தொழிலும் அஞ்சாது - அந்தக் கொடிய செய்கைக்கும் அஞ்சாமல், அரனை உள்கி இருந்தனர் - இறைவனை நினைந்து (துன்பின்றி) இருந்தனர்; இக்கொடுந் தொழிலினர் தாம் - இந்தக் கொடிய தண்டலாளர், இனி நனி ஒறுப்பர் என்னு - இனி மிகவுந் தண்டிப்பர் என்று கருதி, அது காண்டற்கு உள்ளம் பொறான் என - அதனைப் பார்த்தற்கு உள்ளம் பொறுக்கலாற்றாதவனைப் போல, இரவிப்புத்தேள் - சூரியதேவன், மிக்க தன் ஒளிகள் மாழ்கி - தன் னுடைய மிகுந்த கிரணங்கள் கெட்டு, விரிகடல் அழுவத்துப் புக்கு ஆழ்ந்தான் - விரிந்தகடற் பரப்பின்கட் சென்று அழுந்தினன்.

தாம்: அசை. இயல்பாக அத்தமித்த சூரியனை அது காண்டற்கு உள்ளம் பொறானென ஆழ்ந்தான் என்றமையால் இது தற்குறிப் பேற்றவணி. (க0)

சுந்தர விடங்க ரன்பர் சூழ்துய ரகற்ற நேரே
வந்தெழு காட்சி போல வந்தது செக்கர் வானம்
இந்தவர் மார்பந் தூங்கு மேனவெண் கோடு போன்ற
தந்தர வுடுக்க ளேல்லா மயன்றலை மாலை யொத்த.

(இ - ள்.) சுந்தர விடங்கர் - சோமசுந்தரக் கடவுளாகிய பேரழகுடையார், அன்பர் சூழ்துயர் அகற்ற - அன்பரின் சூழ்ந்த துன்பத்தை அகற்றுதற்கு, நேரே வந்து எழுகாட்சிபோல - நேரே வந்து எழுந்த தோற்றம் போன்று, செக்கர்வானம் வந்தது - செவ்வானம் வந்தது; இந்து - மதியானது, அவர் மார்பம் தூங்கும்-அவரது திருமார்பின் கண் கிடந்து அசையும், ஏனவெண் கோடு போன்றது - பன்றியினது வெள்ளிய கொம்பினை ஒத்தது; அந்தர உடுக்கள் எல்லாம் - வானின் கண் உள்ள நாண்மீன்களனைத்தும், அயன் தலை மாலை ஒத்த - பிரமனது தலை மாலையை ஒத்தன.

இச்செய்யுள் மாலையுவமை யணியின் பாற்படும். (கக)

சுழிபடு பிறவித் துன்பத் தொடுகட லழுவத் தாழ்ந்து
கழிபடு தனையுங் காப்பான் கண்ணுதன் மூர்த்தி பாதம்
வழிபடு மவரைத் தேரான்* வன்சிறைப் படுத்த தென்னன்
பழிபடு புகழ்போ லெங்கும் பரந்தது கங்கு லீட்டம்.

(இ - ள்.) சுழிபடு பிறவித்துன்பத் தொடுகடல் அழுவத்து ஆழ்ந்து - சுழி பொருந்திய பிறவித்துன்பமாகிய கடற்பரப்பின்கண் அழுந்தி, கழிபடுதனையும் காப்பான் - கொன்னே கழிகின்ற தன்னையும் ஓம்புதற்பொருட்டு, கண்ணுதல் மூர்த்தி பாதம் வழிபடும் அவரை - நெற்றிக்கண்ணையுடைய இறைவன் திருவடியை வழிபடும் அவ்வடிகளை, தேரான் - அறியாதவனாய், வன்சிறைப்படுத்த தென்னன் - வலிய சிறைப்படுத்திய பாண்டியனது, பழிபடு புகழ்போல் - பழிபட்ட புகழ் பரந்தது போல, கங்குல் ஈட்டம் எங்கும் பரந்தது - செறிந்த இருள் எங்கும் பரவியது.

சுழிபடு, தொடு என்பன கடலுக்கு இயற்கை யடைகள். தனை - அரசனை. காப்பான்: வினையெச்சம். அவரது பெருமையைத் தேரான் என்க. இது தற்குறிப்பின் பாற்படும். (கஉ)

கங்குல்வந் திறுத்த லோடுங் கருஞ்சிறை யறையிற் போக்கிச்
சங்கிலி நிகளம் பூட்டித் தவத்தினைச் சிறையிட் டென்னச்
செங்கனல் சிதற நோக்குஞ் சினங்கெழு காவ லாளர்
மங்குலி னிருண்ட கண்டர் தொண்டரை மறுக்கஞ் செய்தார்.

(இ-ள்.) கங்குல் வந்து இறுத்தலோடும்-இருள் வந்து நிலைபெற்றவளவில், கருஞ்சிறை அறையில் போக்கி - பெரிய சிறைச்சாலையிற்

(பா - ம்.) *தேருன்.

புகுத்தி, தவத்தினைச் சிறையிட்டென்ன - தவத்தினை விலங்கு பூட்டிச் சிறைப்படுத்தினாற்போல, சங்கிலி நிகளம் பூட்டி-சங்கிலியாகிய விலங்கினைப் பூட்டிச் சிறைப்படுத்தி, செங்கனல் சிதற நோக்கும் சினம்கெழு காவலாளர் - சிவந்த நெருப்புப் பொறி சிதறப் பார்க்கும் சினமிக்க தண்டலாளர், மங்குலின் இருண்ட கண்டர் தொண்டரை - முகில் போலும் இருண்ட திருமிடற்றினையுடைய இறைவரது அடியாராகிய வாதவூரடிகளை, மறுக்கம் செய்தார் - துன்பஞ்செய்தனர்.

கருஞ்சிறை - பெரிய சிறை; இழிந்த சிறையுமாம். தவமே உருவாயினாரென்பார் 'தவத்தினைச் சிறையிட்டென்ன' என்றார். காவலாளர் தொண்டரை அறையிற் போக்கி நிகளம்பூட்டி மறுக்கஞ் செய்தார் என வினைமுடிவு செய்க. (௧௩)

மிடைந்தவர் தண்டஞ் செய்ய வெஞ்சிறை வெள்ளத் தாழ்ந்து
கிடந்தவர் கிடந்தோன் பூமே லிருந்தவன் றேடக் கீழ்மேல்
நடந்தவர் செம்பொற் பாத நகைமலர் புணையாப் பற்றிக்
கடந்தனர் துன்ப வேலை புலர்ந்தது கங்குல் வேலை.

(இ - ள்.) அவர் மிடைந்து தண்டம் செய்ய - அத்தண்டலாளர் நெருங்கி அங்ஙனம் ஒறுத்தலைப்புரிய, வெஞ்சிறை வெள்ளத்து ஆழ்ந்து கிடந்தவர் - வெவ்விய சிறையாகிய கடலில் அழுந்திக் கிடந்த அடிகள், கிடந்தோன் - பாற்கடலிற் கிடந்த திருமாலும், பூமேல் இருந்தவன் - தாமரை மலர் மேல் இருந்த பிரமனும், கீழ் மேல் தேட - முறையே கீழும் மேலுந் தேடா நிற்க, நடந்தவர்-நீண்டவரது, செம்பொன் பாத நகைமலர் - சிவந்த பொன்போன்ற திருவடியாகிய ஒளி பொருந்திய மலரை, புணையாப் பற்றி - புணையாகப் பிடித்து, துன்ப வேலை கடந்தனர் - துன்பமாகிய கடலைக் கடந்தனர்; கங்குல் வேலை புலர்ந்தது - இராக்காலம் விடிந்தது,

பாற்கடலிற் கிடந்தோன் என ஒரு சொல் வருவித்துரைக்க. கிடந்தவர் பாதமலர் புணையாப்பற்றித் துன்பவேலை கடந்தனர் என முடிக்க. கங்குல் வேலை என்பதில் வேலை - பொழுது. (௧௪)

அந்தமி லழகன் றன்னை யங்கயற் கண்ணி யோடுஞ்
சுந்தர வமளிப் பள்ளி யுணர்த்துவான் றொண்டர் சூழ
வந்தனை செய்யு மார்ப்பு மங்கல சங்க வார்ப்பும்
பந்தநான் மறையி னார்ப்பும் பருகினார் செவிக ளார.

(இ - ள்.) அந்தம் இல் அழகன் தன்னை - அளவில்லாத பேரழகனாகிய சோமசுந்தரக் கடவுளை, அங்கயற் கண்ணியோடும் - அங்கயற் கண்ணம்மையுடன், சுந்தர அமளி - அழகிய படுக்கையினின்றும், பள்ளி உணர்த்துவான் தொண்டர் சூழ-துயிலுணர்த்துதற் பொருட்டு அடியார்கள் நெருங்க, வந்தனை செய்யும் ஆர்ப்பும் - அவர்கள் வழிபடும் ஒலியும், மங்கல சங்க ஆர்ப்பும் - மங்கலமாகிய சங்குகளின்

ஒலியும், பந்தம் நான் மறையின் ஆர்ப்பும் - பந்தமமைந்த நான்கு வேதங்களின் ஒலியுமாகிய இவற்றை, செவிகள் ஆரப் பருகினர்- செவிகள் நிறையுமாறு அடிகள் பருகினர்.

உணர்த்துவான்: வினை யெச்சம். திருப்பள்ளி யெழுச்சியின் பொருட்டுத் தொண்டர் சூழ என்க. சூழ்ந்து நின்று வந்தனை செய்யும் என்றுமாம். மங்கல சங்கம் - வலம்புரிச் சங்கம். பந்தம் - தளை. (௧௫)

போதவா னந்தச் சோதி புனிதமெய்த் தொண்டர்க் காக
நாதமா முரச மார்ப்ப நரிப்பரி வயவர் சூழ
வேதவாம் பரிமேற் கொண்டு வீதியில் வரவு காணுங்
காதலான் போலத் தேர்மேற் கதிரவ னுதயஞ் செய்தான்

(இ - ள்.) போத ஆனந்தச் சோதி - ஞானானந்த ஒளிப்பிழம்பாகிய இறைவன், புனித மெய்த்தொண்டர்க்காக - தூய உண்மைத் தொண்டராகிய மாணிக்கவாசகர் பொருட்டு, நாதமாம் முரசம் ஆர்ப்ப - நாத தத்துவமாகிய முரசு ஒலிக்கவும், நரிப்பரி வயவர் சூழ - நரியாகிய குதிரையின் வீரர் சூழவும், வேதவாம் பரிமேற் கொண்டு - வேதமாகிய தாவுங் குதிரைமேல் ஏறி யருளி, வீதியில் வரவுகாணும் காதலான் போல - வீதியின்கண் வருதலைக் காணும் விருப்புடையவன் போல, கதிரவன் தேர்மேல் உதயம் செய்தான் - சூரியன் தேரின் மேல் ஏறி உதயமாயினன்.

இறைவற்கு முரசம் நாததத்துவ மென்பதனை,

"மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்"

"வேத மொழியர் வெண்ணீற்றர் செம்மேனியர்
நாதப் பறையின ரன்னே யென்னும்"

என வரும் திருவாசகத் திருப்பாடல்களானறிக. இது தற்குறிப் பேற்றவணி. (௧௬)

கயனெடுங் கண்ணி யோடுங் கட்டவிழ் கடிப்பூஞ் சேக்கைத்
துயிலுணர்ந் திருந்த சோம சுந்தரக் கருணை வெள்ளம்
பயினெடுஞ் சிகர நோக்கிப் பங்கயச் செங்கை கூப்பி
நயனபங் கயநீர் சோர நாதனைப் பாட லுற்றார்.

(இ - ள்.) கட்டு அவிழ் கடிப்பூஞ் சேக்கை - முறுக்கு அவிழ்ந்த மணம் பொருந்திய மலரமளியினின்றும், கயல் நெடுங் கண்ணியோடும்- கயல் போலும் நீண்ட கண்ணையுடைய பிராட்டியோடும், துயில் உணர்ந்திருந்த - துயில் நீங்கியிருந்த, சோமசுந்தரக் கருணை வெள்ளம் பயில் - சோமசுந்தரராகிய அருள் வெள்ளம் எழுந்தருளிய, நெடுஞ்

சிகரம் நோக்கி - நீண்ட விமானத்தை நோக்கி, பங்கயச் செங்கை கூப்பி - தாமரை மலர்போலுஞ் சிவந்த கரங்களைக் குவித்து, நயன பங்கயம் நீர் சோர - கண்ணாகிய தாமரையினின்றும் ஆனந்த வருவி ஒழுக, நாதனைப் பாடலுற்றார்-இறைவனைப் பாடத் தொடங்கினர்.

சுந்தரனாகிய கருணை வெள்ளம் உயர்திணைப் பெயர் ஈறு கெட்டு வலிமிக்கது. (௧எ)

[கொச்சகக்கலிப்பா]

எந்தா யனைத்துலகு மீன்றாயெத் தேவர்க்குந்
தந்தாய் செழுங்குவளைத் தாராய் பெருந்துறையில்
வந்தாய் மதுரைத் திருவால வாயுறையுஞ்
சிந்தா மணியே சிறியேற் கிரங்காயோ.

(இ - ள்.) எந்தாய் - எமது தந்தையே, அனைத்து உலகும் ஈன்றாய்- உலகமனைத்தையும் பெற்றவனே, எத்தேவர்க்கும் தந்தாய் - எல்லாத் தேவர்கட்கும் தந்தையே, செழுங்குவளைத் தாராய்-செழிய குவளைமலர் மாலையை அணிந்தவனே, பெருந்துறையில் வந்தாய் - அங்ஙனம் அணிந்து அடியேனை ஆட்கொள்ளுதற் பொருட்டுத் திருப்பெருந்துறை யின்கண் வந்தருளியவனே, மதுரைத் திருவாலவாய் உறையும் சிந்தாம ணியே - மதுரை என்னுந் திருவாலவாயின்கண் வீற்றிருக்கும் சிந்தாமணி போல்வானே, சிறியேற்கு இறங்காயோ-சிறியேனாகிய எனக்கு இரங்கி யருளாயோ.

தந்தாய், விளியின் ஐ ஆயாகத் திரிந்தது. குவளை கழுநீரெனவும் படும்.

"காதல னாகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக வெழில்பெற வணிந்தும்"

என்பது திருவாசகம். திருவாலவாய் - இறைவன் கோயிலுமாம்; சிந்தாமணி - சிந்தித்தவற்றைத் தரும் மணி; சிந்தாத மணி என்றுமாம்;

"ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா தோணோக்க மாடாமோ"

என்னும் திருவாசகமுங் காண்க. (௧அ)

மூவா முதலாய் முதுமறையா யம்மறையுந்
தாவாத சோதித் தனிஞான பூரணமாய்த்
தேவாதி தேவாய்த் திருவால வாயுறையும்
ஆவார் கோடியா யடியேற் கிரங்காயோ.

(இ - ள்.) மூவா முதலாய்-கெடாத முதலாகியும், முது மறையாய்- பழைய வேதமாகியும், அம்மறையும் தாவாத சோதித் தனிஞான பூரணமாய் - அவ்வேதமும் பற்றாத ஒளியுருவாகிய ஒப்பற்ற ஞான

கிறைவாகியும், தேவாதி தேவாய் - தேவாதி தேவனுகியும், திருவால வாய் உறையும் - திருவாலவாயின்கண் எழுந்தருளிய, ஆவார் கொடியாய் - நீண்ட இடபக்கொடியை யுடையவனே, அடியேற்கு இரங்காயோ - அடியேனுகிய எனக்கு இரங்கியருளாயோ?

தேவாதி தேவன் - தேவர்கட்கு ஆதியாகிய தேவன். ஆய் என்னும் செய்தெனெச்சங்கள் உறையும் என்னும் பெயரெச்ச வினை கொண்டன, ஆ - ஈண்டு இடபம். ஆர் கொடி எனப் பிரித்துப் பொருந்திய கொடி என்னலுமாம். (௧௯)

முன்ன முதுபொருட்கு முன்ன முதுபொருளாய்ப்
பின்னும் புதுமைக்கும் பின்னகும் பேரொளியாய்த்
தென்ன மதுரைத் திருவால வாயுறையும்
என்ன யகனே யெளியேற் கிரங்காயோ.

(இ - ள்.) முன்னும் முது பொருட்கும் முன்னும் முது பொருளாய் - முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய், பின்னும் புதுமைக்கும் பின்னகும் பேர் ஒளியாய் - பின்னைப் புதுமைக்கும் பின்னகும் பெரிய ஒளிவடிவாய், தென் ஆம் மதுரைத் திருவாலவாய் உறையும் என் நாயகனே - தெற்கின் கண் உள்ளதாகிய மதுரை என்னுந் திருவாலவாயின்கண் எழுந்தருளிய, என் நாயகனே, எளியேற்கு இரங்காயோ - எளியேனுகிய எனக்கு இரங்கி யருளாயோ?

இச்செய்யுளின் முன்னிரண்டடிகள்,

"முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே"

என்னும் *திருவாசக* வடிகளைத் தழுவி வந்தன. தென் - அழகு என்றுமாம். (௨௦)

மண்ணய்ப் புனலாய்க் கனலாய் வளியாகி
விண்ண யிருசுடரா யித்தனையும் வேருகிப்
பண்ண யிசையாய்ப் பனுவலா யெங்கண்ணுங்
கண்ணு யென்னுறுகண் காணுவா றென்கோலோ.

(இ - ள்.) மண்ணய்ப் புனலாய்க் கனலாய் வளியாகி - நிலனுகியும் நீராகியும் நெருப்பாகியும், காற்றுகியும், விண்ணய் இருசுடராய் - வானுகியும் இரண்டு சுடர்களாகியும், இத்தனையும் வேருகி - இத்தனைக்கும் வேருகியும், பண்ணய் இசையாய்ப் பனுவலாய் - பண்ணுகியும் இசையாகியும் பாட்டாகியும், எங்கண்ணும் கண் ஆனய் - எவ்விடத்தும் கண்ணுகியும் நின்றவனே, என் உறுகண் காணுவாறு என்கோலோ - எனது துன்பத்தை நீ காணுதவாறு என்னையோ (அறியேன்).

இருசுடர் - ஞாயிறு திங்கள். இறைவன் எல்லாப் பொருளிலும் கலந்து நிற்றலின் 'மண்ணாய்......இருசுடராய்' என்றும், எல்லாவற்றையும் கடந்து நிற்றலின் 'இத்தனையும் வேறாகி' என்றுங் கூறினார்.

"பண்ணும்பத மேழும்பல வோசைத்தமி ழவையும்
உண்ணின்றதொர் சுவையும்முறு தாளத்தொலி பலவும்
மண்ணும்புன லுயிரும்வரு காற்றுஞ்சுடர் மூன்றும்
விண்ணும்முழு தானானிடம் வீழிம்மிழ லையே"

"வேறாயுட னானானிடம் வீழிம்மிழ லையே"

என்று திருஞான சம்பந்தப்பெருமான் அருளிச்செய்தலுங் காண்க. எங்கண்ணும்: மெலித்தல் விகாரம். உறுகண் - துன்பம். எவ்விடத்தும் கண்ணுடைய் நீ எனது துன்பத்தைக் காணுவாறென்னை யென்றார். (௨௧)

போங்குஞ் சினமடங்கல் போன்றுருத்து வெங்கூற்றம்
அங்கும் புரியா வருந்துன்பத் தாழ்ந்துநான்
மங்கும் படியறிந்தும் வந்தஞ்ச லென்கிலையால்
எங்குஞ் செவியுடையாய் கேளாயோ வென்னுரையே.

(இ - ள்.) வெங்கூற்றம் - கொடிய கூற்றுவன், சினம் பொங்கும் மடங்கல் போன்று உருத்து - சினமிக்க ஊழித்தீப்போன்று கொதித்து, அங்கும் புரியா அருந்துன்பத்து - அவனுலகத்துஞ் செய்யாத பொறுத்தற்கரிய துன்பக்கடலுள், நான் ஆழ்ந்து மங்கும்படி அறிந்தும் - அடியேன் அழுந்தி மங்குந் தன்மையை அறிந்து வைத்தும், வந்து அஞ்சல் என்கிலை - வந்து அஞ்சாதே என்றருளிச் செய்கிலை; எங்கும் செவி உடையாய் - எங்குங் காதுடையவனே, என் உரை கேளாயோ - எனது முறையீட்டினைக் கேட்டருளாயோ!

மடங்கல் - ஊழித்தீ; சிங்கமுமாம். மங்குதல் - மாழ்குதல். "எங்கும் கண்ணையும், முகத்தையும், எங்கும் கையையும், எங்கும் அடியையும் உடையராய், தம்முடைய கரங்களினாலும் சிறகுகளினாலும் மண்ணையும் விண்ணையும் இயைத்துப் படைப்பவர் அந்தக் கடவுள் ஒருவரே" என இருக்கு மறை கூறுதலின் 'எங்கண்ணுங் கண்ணாய்' என்றும், 'எங்குஞ் செவியுடையாய்' என்றும் கூறினார்.

"எண்ணில்பல் கோடி சேவடி முடிகள்
எண்ணில்பல் கோடிதிண் டோள்கள்
எண்ணில்பல் கோடிதிருவுரு நாமம்
ஏர்கொண்மூக் கண்முக மியல்பும்
எண்ணில்பல் கோடி யெல்லைக்கப் பாலாய்
நின்றைஞ்ஞாற் றந்தண ரேத்தும்
எண்ணில்பல் கோடி குணத்தரேர் வீழி
யிவர்நம்மை யாளுடை யாரே"

என்னும் திருவிசைப்பாவும் காண்க. (௨௨)

பூட்டியருட் பாசமிரு பாதம் பொறித்துடலிற்
கூட்டி யடியாரு ளகப்படுத்தாட் கொண்டருமை
காட்டியவோ வின்றென்னைக் கைவிட்டாய் வெய்யரெனை
ஆட்டி யொறுக்குமிடத் தாரென்று கொள்வாரே.

(இ- ள்.) அருள்பாசம் பூட்டி - அருளாகிய பாசத்தால் பிணித்து, உடலில் இருபாதம் பொறித்து - முடியின்கண் இரண்டு திருவடிகளை யும் பொறித்து, அடியாருள் கூட்டி அகப்படுத்து - அடியாருள் ஒருவனுகக் கூட்டி அகப்படுத்தி, ஆட்கொண்டு அருமை காட்டியவோ - ஆட் கொண்டு நினதருமையைக் காட்டியவனே, இன்று என்னைக் கைவிட் டாய் - இப்பொழுது அடியேனைக் கைவிட்டனை; வெய்யர் - கொடிய இத்தண்டலாளர், எனை ஆட்டி ஒறுக்குமிடத்து - என்னைத் துன்புறுத் தித் தண்டிக்குங் காலத்து, என்று கொள்வார் ஆர் - தாங்குபவர் யாவர்?

உடல் தலைக்கு ஆகுபெயர்.

"விச்சைதா னிதுவொப்ப துண்டோ கேட்கின்
மிகுகாத லடியார்தம் மடிய னாக்கி
அச்சந்தீர்த் தாட்கொண்டா னமுத மூறி
யகநெகவே புகுந்தாண்டா னன்பு கூர"

என அடிகள் திருவாசகத்தில் அருளிச்செய்தல் இங்கே சிந்திக்கற் பாலது. (௨௩)

ஊரா ருனைச்சிரிப்ப தோராயென் றுன்னடிமைக்
காரா யடியே னயர்வே னஃதறிந்தும்
வாரா யரசன் றமரிழைக்கும் வன்கண்ணோய்
பாராயுன் றன்மை யிதுவோ பரமேட்டி.

(இ - ள்) ஊரார் உனைச் சிரிப்பது ஓராய் என்று - ஊரிலுள்ளார் உன்னை எள்ளி நகையாடுதலை அறியாமலிருக்கின்றாய் என்று கருதி, உன் அடிமைக்கு ஆராய் - உன் அடிமைக்கு ஆராகியோ (அடியார் போன்று), அடியேன் அயர்வேன் - அடியேன் அயர்கின்றேன்; அஃது அறிந்தும் வாராய் - அதனை நீ அறிந்து வைத்தும் வந்தருளினாயல்லை; அரசன் தமர் இழைக்கும் வன்கண் நோய் பாராய் - மன்னனுடைய ஏவ லாளர் செய்யுங் கொடிய துன்பத்தினைப் பார்த்தருளினாயல்லை; பர மேட்டி உன் தன்மை இதுவோ - பரமேட்டியே உனது தன்மை இதுவோ?

"ஏசா நிற்ப ரென்னையுனக் கடியா னென்று பிறரெல்லாம்
பேசா நிற்ப ரியான்றானும் பேணா நிற்பே னின்னருளே"

"தெருளார் கூட்டம் காட்டாயேற் செத்தே போனாற் சிரியாரோ"

என்னும் திருவாசகப்பகுதிகள் இங்கே சிந்திக்கற்பாலன. உன் கருணை யிருந்தவா றிதுவோ என்றார். பரமேட்டி - பரமன், (௨௪)

[கலிநிலைத்துறை]

என்றி ரங்குவோ ரிரங்கொலி யிளஞ்சிரு ரழுகை
சென்று தாயர்தஞ் செவித்துளை நுழைந்தெனச் செல்லக்
குன்றி ருஞ்சிலை கோட்டிய கூடனா யகன்கேட்
டன்று வன்சிறை நீக்குவான் றிருவுளத் தமைத்தான்.

(இ - ள்.) என்று இரங்குவோர் இரங்கு ஒலி - என்று கூறி வருந்தும் வாதவூரடிகளின் முறையீட்டொலி, இளஞ்சிருர் அழுகை சென்று - இளஞ்சிறுவர்களின் அழுகை ஒலிபோய், தாயர் தம் செவித்துளை நுழைந்தெனச் செல்ல - தாயாருடைய செவித்துளையின்கண் நுழைந்தாற்போலத் தன் திருச்செவியின்கண் நுழைய, குன்று இருஞ்சிலை கோட்டிய - மேரு மலையைப் பெரிய வில்லாக வளைத்த, கூடல் நாயகன் கேட்டு - கூடல் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுள் அதனைக் கேட்டு, அன்று வன்சிறை நீக்குவான் திருவுளத்து அமைத்தான் - அப்பொழுது வலிய சிறையை நீக்குதலைத் திருவுள்ளத்திற் கொண்டருளினான்.

இரங்கொலி செல்ல நாயகன் கேட்டு உளத்தமைத்தான் என்க. நுழைந்தென: விகாரம். நீக்குவான்: தொழிற்பெயர். (உ௫)

நந்தி யாதியாம் பெருங்கண நாதரை விளித்தான்
வந்தி யாவரும் பணிந்தனர் மன்னவற் கின்று
முந்தி யாவணி மூலநாள் வந்தது முனிவு
சிந்தி யாமுனம் பரியெலாஞ் செலுத்துவான் வேண்டும்.

(இ - ள்.) நந்தி ஆதியாம் பெரும் கணநாதரை விளித்தான் - திருநந்திதேவர் முதலிய பெரிய கணத்தலைவர்களை அழைத்தருளினன்; யாவரும் வந்து பணிந்தனர் - அவரனைவரும் வந்து வணங்கினர்; ஆவணி மூலநாள் முந்தி வந்தது - ஆவணித்திங்கள் மூலநாள் முற்பட்டே வந்துவிட்டது; முனிவு சிந்தியாமுனம் - மன்னன் சினத்தல் கருது முன்னரே, மன்னவற்கு இன்று பரி எலாம் செலுத்துவான் வேண்டும் - அவனுக்கு இன்று குதிரைகள் அனைத்தையும் செலுத்துதல் வேண்டும்.

ஆதி என்றதனால் பிருங்கி, மாகாளர் முதலியோர் கொள்க. வந்தி யாவரும்: இகரம் குறுகாது நின்றது. (உ௬)

யாவ ரும்புனத் தியங்குறு நரியெலா மீட்டித்
தாவ ரும்பரி யாக்கியத் தாம்பரி நடாத்துஞ்
சேவ கஞ்செய்வோ ராகிமுன் செல்லுமின் யாமும்
பாவ கம்பட வருதுமப் படியெனப் பணித்தான்.

(இ - ள்.) யாவரும் - நீவிரனைவரும், புனத்து இயங்குறும் நரி எலாம் ஈட்டி - காட்டின்கண் உலவும் நரிகளனைத்தையுங் கொண்டு

வந்து, தாவு அரும்பரி ஆக்கி-தாவுகின்ற அரிய குதிரைகளாகச் செய்து, அ தாம்பரி நடாத்தும் சேவகம் செய்வோராகி-அத்தாவும் குதிரைகளை நடாத்துகின்ற குதிரைச் சேவகராகி, முன் செல்லுமின் - முன்னே செல்லுங்கள்; யாமும் - நாமும், பாவகம்பட - (நோக்குவோர்க்குக் குதிரைச்சேவகர் என்னும்) கருத்து உண்டாக, அப்படி வருதும் எனப் பணித்தான் - அவ்வாறே வருவோம் என்று பணித்தருளினன்.

தா வரும் எனப் பிரித்தலும் பொருந்தும். தாம், தாவும் என்பதன் விகாரம். (உஎ)

ஏக நாயக னாணைபூண் டெழுகணத் தவரும்
நாக நாடரும் வியப்புற நரியெலாந் திரட்டி
வேக வாம்பரி யாக்கியவ் வெம்பரி நடாத்தும்
பாக ராயின ரவர்வரும் பரிசது பகர்வாம்.

(இ - ள்.) ஏக நாயகன் ஆணை பூண்டு - ஒப்பற்ற இறைவனது ஆணையை மேற் கொண்டு, எழுகணத்தவரும் - எழுந்த கணத் தலைவரும், நாக நாடரும் வியப்புற - வான நாடரும் வியப்புறுமாறு, நரி எலாம் திரட்டி - நரிகளை எல்லாம் ஓரிடஞ் சேர்த்து, வேகவாம்பரி ஆக்கி - விரைவுள்ள தாவுங் குதிரைகளாகச் செய்து, அவ்வெம்பரி நடாத்தும் - அந்த வேகமாகிய பரிகளை நடாத்துகின்ற, பாகராயினர் - சேவகராயினர்; அவர் வரும் பரிசது பகர்வாம் - அப்பாகர் வருந் தன்மையைக் கூறுவாம்.

நாகநாடரும் என்பதில் உம்மை சிறப்பு. பரிசது, அது பகுதிப் பொருள் விகுதி. (உஅ)

தூக்கி யார்த்தசெம் பட்டினர் சுரிகையர் தொடுதோல்
வீக்கு காலின ரிருப்புடற் காப்பினர் வெருளின்
நோக்கு பார்வையர் புண்டர நுதலின ரிடியிற்
றாக்கி யார்ப்பெழு நகையினர் தழன்றெழு சினத்தோர்.

(இ - ள்.) தூக்கி ஆர்த்த செம்பட்டினர் - தூக்கிக் கட்டிய செம் பட்டாடையை யுடையவர்; சுரிகையர் - உடைவாளை யுடையவர்; தொடுதோல் வீக்கு காலினர் - தொடு தோல் கட்டிய காலையுடையவர்; இருப்பு உடற் காப்பினர் - இருப்புக் கவசத்தினை யுடையவர்; வெருளின் நோக்கு பார்வையர் - (கண்டோர்) அஞ்சுமாறு பார்க்குங் கண்களையுடையவர்; புண்டர நுதலினர் - திரிபுண்டர மணிந்த நெற்றியினை யுடையவர்; இடியில் தாக்கி ஆர்ப்பு எழு நகையினர் - இடி போலுந் தாக்கி ஒலி எழும் நகையினையுடையவர்; தழன்று எழு சினத்தோர் - கொதித்தெழுஞ் சினத்தினையுடையவர்.

தொடுதோல் - செருப்பு. உடற்காப்பு - கவசம். செம்பட்டினர் முதலியோராய் ஆயினர் என்க. (உகூ)

வட்டத் தோல்வரி புறங்கிடந் தசையவை வடிவாள்
தொட்ட கையினர் சிலர்நெடுந் தோமரஞ் சுழல
விட்ட கையினர் சிலர்வெரி னிடைநெடு விசிகப்
புட்டில் வீக்கிவிற் றூக்கிய புயத்தினர் சிலரால்.

(இ - ள்.) (அவருள்) வட்டத் தோல் - வட்டமாகிய பரிசை, வரி புறம் கிடந்து அசைய - (கவசம்) வரிந்த முதுகிற் கிடந்து அசைய, வைவடிவாள் தொட்ட கையினர் சிலர் - கூரிய வடித்த வாட்படையினைத் தொட்ட கையினையுடையார் சிலர்; நெடுந்தோமரம் சுழல விட்ட கையினர் சிலர் - நீண்ட தண்டத்தைச் சுழலவிட்ட கையினையுடையார் சிலர்; வெரின் இடை நெடுவிசிகப் புட்டில் வீக்கி - முதுகினிடத்து நீண்ட அம்புக் கூட்டினைக் கட்டி, வில் தூக்கிய புயத்தினர் சிலர் - வில்லைத் தொங்கவிட்ட தோளையுடையார் சிலர்.

விசிகம் - அம்பு. புட்டில் - தூணி. (௩௦)

செம்ப டாஞ்செய்த போர்வையர் சிலர்பசும்* படத்தான்
மோய்ம்பு வீக்கிய கவயத்தர் சிலர்கரு முகில்போல்
அம்பு யம்புதை காப்பினர் சிற்சில ரவிரும்
பைம்பொன் வாணிறப் படாஞ்செய்குப் பாயத்தர் சிலரால்.

(இ - ள்) செம்படாம் செய்த போர்வையர் சிலர் - சிவந்த ஆடையாற் செய்த போர்வையினை யுடையார் சிலர்; பசும் படத்தால் மொய்ம்பு வீக்கிய கவயத்தர் சிலர் - பசிய ஆடையால் தோளில் இறுகக் கட்டிய கவசமுடையார் சிலர்; கருமுகில் போல் - கரிய மேகம்போல; அம்புயம் புதை காப்பினர் சிற்சிலர் - அழகிய தோளை மறைத்த (நீல ஆடையாற் செய்த) கவசமுடையார் சிலர்; அவிரும் பைம்பொன்வாள் நிறப்படாம் செய் குப்பாயத்தர் சிலர் - விளங்கா நின்ற பசிய பொன் போலும் ஒள்ளிய நிறத்தினையுடைய ஆடையாற் செய்த சட்டையுடையார் சிலர்.

படாம் - ஆடை. குப்பாயம் - சட்டை. (௩௧)

பிச்ச வோண்குடை யார்பலர் கவரிவால் பிறங்கத்
தைச்ச தண்குடை யார்பலர் சல்லிசூழ் நாற்றி
வைச்ச வண்குடை யார்பலர் வாணிலா முத்தம்
மோய்ச்ச வெண்குடை யார்பலர் மோய்ம்பின ரிவருள்.

(இ - ள்.) பிச்ச ஒண்குடையார் பலர் - பீலிக்குஞ்சங் கட்டிய ஒள்ளிய குடையினை யுடையார் பலர்; கவரிவால் - கவரிமாவின் வாலால், பிறங்க - விளங்க, தைச்ச தண்குடையார் பலர் தைத்த தண்ணிய குடையினையுடையார் பலர்; சல்லி சூழ் நாற்றி வைச்ச வண்குடையார் பலர் - சல்லிகளைச் சூழத் தொங்கவிட்டு வைத்த

(பா - ம்.) *சிலர்சிலர்.

வளப்பமிக்க குடையினை யுடையார் பலர்; வாள் நிலாமுத்தம் மொய்ச்ச வெண்குடையார் பலர்-வெள்ளிய ஒளியினையுடைய முத்துக்கள் நெருங்கிய வெண்குடையினையுடையார் பலர்; மொய்ம்பினர் இவருள் - வலியினையுடையரான இவர் நடுவே.

தைச்ச, வைச்ச, மொய்ச்ச என்பனபோலி. (௬உ)

தரும மாதிநாற் பொருளெனுந் தாளது ஞான
கரும காண்டமாஞ் செவியது காட்சியைக் கடந்த
ஒருமை யாம்பர மபரமா முணர்வெனுங் கண்ண
தருமை யாம்விதி முகத்தது நிடேதவா லதுவால்.

(இ - ள்.) தருமம் ஆதி நால் பொருள் எனும் தாளது - அற முதலிய நான்கு பொருளாகிய நான்கு கால்களை யுடையது; ஞான கரும காண்டமாம் செவியது - ஞான காண்டமும் கரும காண்டமும் ஆகிய இரண்டு காதுகளை யுடையது; காட்சியைக் கடந்த ஒருமையாம் - சுட்டறிவினைக் கடந்த ஒருப்பாடாகிய, பரம் அபரமாம் உணர்வு எனும் கண்ணது - பரஞானமும் அபர ஞானமுமாகிய இரண்டு கண்களை யுடையது; அருமையாம் விதிமுகத்தது - அருமையாகிய விதியாகிய முகத்தினையுடையது; நிடேத வாலது - விலக்காகிய வாலையுடையது.

இது முதல் நான்கு செய்யுளால் இறைவன் இவர்ந்து வரும் வேதப் புரவியை வருணிக்கின்றார். வேதமானது அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளால் நிலை பெறுவதும், ஞான காண்டம் கருமகாண்டம் என இரு பகுதிப் படுவதும், பரஞான அபர ஞானங்களை விளைவிப்பதும், விதிவிலக்கு வடிவினதும் ஆம் என்க. (௬௩)

தந்தி ரங்களாற் புறவணி தரித்தது விரித்த
மந்தி ரங்களாற் சதங்கைதார் மணிச்சிலம் பணிந்த
தந்த ரஞ்சுழல் சோமனு மருக்கனு மிதிக்குஞ்
சுந்த ரப்பதம் பொறைகொளத் தூங்கிரு புடைத்தால்.

(இ - ள்.) தந்திரங்களால் புற அணி தரித்தது - ஆகமங்களால் புறத்திலணியும் அணிகளைப் பூண்டது; விரித்த மந்திரங்களால் - அவ்வாகமங்கள் விரித்த மந்திரங்களால்; சதங்கை தார் மணிச் சிலம்பு அணிந்தது - சதங்கை மாலையையும் கிண்கிணி மாலையையும் மணிகள் அமைந்த சிலம்பினையும் அணிந்தது; மிதிக்கும் சுந்தரப் பதம் பொறை கொள - மிதிக்கின்ற அழகிய திருவடிகளைத் தாங்க, அந்தரம் சுழல் சோமனும் அருக்கனும் தூங்கு இருபுடைத்து - வானின்கண் சுழலும் சந்திரனும் சூரியனுமாகிய அங்கவடிகள் தொங்குகின்ற இருமருங்கினை யுடையது.

தந்திரம் - ஆகமம். வேதத்தை விளக்குவன ஆகமங்களாதலின் 'தந்திரங்களால் புறவணி தரித்தது' என்றார். மேற் செய்யுளில்

உறுப்புகள் கூறி, இதில் அணிகள் கூறினர். சோமனும் அருக்கனு மாகிய அங்கவடிகள் என விரிக்க. புடைத்து - பக்கங்களை உடையது; குறிப்பு முற்று. (௩௪)

மாண்ட தாரகப் பிரமமாங் கலினம்வாய் கிழியப்
பூண்ட தாற்புறச் சமயமாம் பொருபடை முரிய
மூண்டு போரெதிர் விளைத்திகன் முடிப்பது முளரி
ஆண்ட கோமுக மந்துரை யாகமே வியதால்.

(இ - ள்.) மாண்ட தாரகப் பிரமமாம் கலினம் – மாட்சிமைப்பட்ட பிரணவமாகிய கடிவாளத்தை, வாய் கிழியப் பூண்டது - வாய்கிழியு மாறு பூண்டது; புறச் சமயமாம் - புறச்சமயங்களாகிய, பொருபடை முரிய - போர் செய்யும் படைகள் புறங் கொடுக்குமாறு, மூண்டு எதிர் போர் விளைத்து இகல் முடிப்பது - சினமிக்கு எதிர்நின்று போர் செய்து பகையை முடிப்பது; முளரி ஆண்ட கோ முகம் - தாமரை மலரைத் தவிசாக ஆண்ட பிரமனது நான்கு முகங்களையும், மந்துரை யாக மேவியது - பந்தியாகக்கொண்டு பொருந்தியது.

தாரகப்பிரமம் - எல்லா மந்திரங்கட்கும் ஆதாரமாகிய பிரணவ மந்திரம். கோ - பிரமன். (௩௫)

அண்ட கோடிக ளனைத்துமோர் பிண்டமா வடுக்கி
உண்ட நீரதா முதுகின்மே லுபநிடக் கலணை
கொண்ட வாலிய வைதிகப் புரவிமேற் கொண்டான்
தொண்டர் பாசவன் றொடரவிழ்த் திடவருஞ் சோதி.

(இ - ள்.) அண்ட கோடிகள் அனைத்தும் - அண்ட கோடிகள் அனைத்தையும், ஓர் பிண்டமா அடுக்கி நீண்ட நீரதாம் முதுகின் மேல் - ஒரு பிண்டமாக அடுக்கி அமைத்த தன்மையை யுடையதாகிய முதுகின்மேல், உபநிடக்கலணை கொண்ட - மறைமுடிவாகிய கலணை யினைக் கொண்ட, வாலிய வைதிகப் புரவிமேற் கொண்டான் - தூய வேதமாகிய குதிரைமேல் ஏறியருளினன்; தொண்டர் பாச வன் தொடர் அவிழ்த்திட வரும் சோதி - அடியாரது பாசமாகிய வலிய கட்டினை அவிழ்க்க எழுந்தருளிவரும் பரஞ்சோதியாகிய கடவுள்.

உபநிடதம் என்பது உபநிடம் எனத் தொக்கு நின்றது. உப நிடதம் - வேதத்தின் ஞானகாண்டம்; வேத முடிபு. கலணை-குதிரை மேற்றவிசு; சேணம்; இது கலனையெனவும் படும். (௩௬)

ஆன மந்திரக் கிழார்பொருட் டன்றியும் வென்றி
மீன வன்பிறப் பறுக்கவும் வார்கழல் வீக்கி
வான நாயக னேந்திய மறையுறை கழித்த
ஞான வாள்புற விருளையு நக்கிவா ளேறிப்ப.

(இ - ள்.) வான நாயகன் - (அங்ஙனம் ஏறியருளிய) தேவர் பெருமானாகிய சோமசுந்தரக்கடவுள், ஆன மந்திரக் கிழார் பொருட்டு அன்றியும் - அமைச்சுரிமையுடையரான வாதவூரடிகள் பொருட்டல்லாமலும், வென்றி மீனவன் பிறப்பு அறுக்கவும் - வெற்றியை யுடைய அரிமருத்தன பாண்டியன் பிறப்பினை அறுக்கும் பொருட்டும், வார்கழல் வீக்கி ஏந்திய-நீண்ட வீரகண்டயைக் கட்டித் திருக்கரத்திலேந்திய, மறை உறை கழித்த ஞானவாள்-வேதமாகிய உறையினின்றும் கழித்த ஞானமாகிய வாள், புறஇருளையும் நக்கி வாள் எறிப்ப - அகவிருளையே அன்றிப் புறவிருளையும் போக்கி ஒளி வீசவும்.

பகையறுக்கலுறுவார் வீரக்கழலணிந்து வாளேந்துமாறே இறைவனும் அடியாரின் பிறவியாகிய பகையை அறுக்கக் கழலணிந்து வாளேந்தினனென்றார்.

இறைவற்கு ஞானமே வாளாதலை,

"ஞானவா ளேந்துமையர் நாதப் பறையறைமின்"

என்னும் திருவாசகத்தாலறிக. புறவிருளையும், உம்மை எச்சப் பொருட்டு. (௩எ)

சாய்ந்த கோண்டையுந் திருமுடிச் சாத்தும்வாள் வைரம்
வேய்ந்த கண்டியுந் தோடிகளுங் குழைகளும் வினையைக்
காய்ந்த புண்டர நுதலும்வெண் கலிங்கமுங் காப்பும்
ஆய்ந்த தோண்டர்த மகம்பிரி யாதழ கெறிப்ப.

(இ - ள்.) சாய்ந்த கொண்டையும்-ஒரு புறஞ்சாய்ந்த கொண்டையும், திருமுடிச்சாத்தும் - திருமுடிப்பாகையும், வாள்வைரம் வேய்ந்த கண்டியும் - ஒளி பொருந்திய வைரம் பதித்த கண்டிகைகளும், தொடிகளும் குழைகளும் - வீரவளைகளும் குண்டலங்களும்; வினையைக் காய்ந்த புண்டர நுதலும் - வினைகளைச் சினந்து போக்கும் திருநீற்றினை மூன்று கீற்றாக அணிந்த திருநுதலும், வெண்கலிங்கமும் காப்பும் - வெள்ளிய ஆடையும் கவசமும், ஆய்ந்த தொண்டர்தம் அகம்பிரியாது அழகு எறிப்ப - (மெய்ப்பொருளை) ஆராய்ந்தறிந்த தொண்டர்கள் மனத்தினின்றும் நீங்காத அழகினை வீசவும்.

திருமுடிச்சாத்து - தலைப்பாகை. குதிரைச் சேவகனுனமைக் கேற்பச் சாய்ந்த கொண்டையும், திருமுடிச்சாத்தும் முதலியன உடையனானனென்க. (௩அ)

பிறக்கு மாசையோர் மறந்துமிங் கணுகன்மின் பிறப்பை
மறக்கு மாசையோ ரிம்மென வம்மினன் பரைவேங்
தோறுக்கு நோய்களை வானென வோருவனும் பிறவி
அறுக்க வந்தன னேன்பபோற் பரிச்சிலம் பலம்ப.

(இ - ள்.) பிறக்கும் ஆசையோர் மறந்தும் இங்கு அணுகன்மின்- பிறக்கும் விருப்புடையவர்கள் மறந்தேயும் இங்கு வாராதீர்கள்; பிறப்பை மறக்கும் ஆசையோர் - பிறப்பினைப் போக்கும் விருப்புடைய

வர், இம்மென வம்மின் - விரைந்து வாருங்கள்; அன்பரை - மணிவாசக ரை, வேந்து ஒறுக்கும் நோய் களைவான் என - பாண்டியன் ஒறுக்குந் துன்பத்தினைப் போக்குதற்பொருட்டு வருதல் போல, ஒருவன் நும் பிறவி அறுக்க வந்தனன் - இறைவன் நுமது பிறப்பினை ஒழிக்க வந் தனன்; என்ப போல் - என்று சொல்லுவபோல், பரிச்சிலம்பு அலம்ப- குதிரைச் சிலம்புகள் ஒலிக்கவும்.

இம்மென: விரைவுக் குறிப்பு.

“செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லன்மின் றென்னனன்னாட்
டிறைவன் கிளர்கின்ற காலமிக் காலமெக் காலத்துள்ளும்
அறிவொண் கதிர்வா ளுறைகழித் தானந்த மாக்கடவி
எறியும் பிறப்பை யெதிர்ந்தார் புரள விருநிலத்தே”

என்னும் திருவாசகம் இங்கே சிந்திக்கற் பாலது. ஒருவனும் எனக் கொண்டுரைத்தலுமாம். இது தற்குறிப்பேற்றவணி. (௬௯)

கங்கை யைச்சடை முடியின்மேற் கரந்தனை யவள்போல்
எங்க டம்மையுங் கரந்திடென் றிரந்துகா வேரி
துங்க பத்திரை யாதியா நதிகளுஞ் சூழப்
பொங்கி வீழ்வபோ லொலியலுங் கவரியும் புரள.

(இ-ள்.) கங்கையைச் சடை முடியின் மேல் கரந்தனை-கங்கையைச் சடை முடியின்மேல் ஒளித்தருளினை; அவள்போல் எங்கள் தம்மையும் கரந்திடு என்று இரந்து - அவளை ஒளித்தது போல எங்களையும் ஒளித் தருளுவாயாக என்று குறையிரந்து, காவேரி துங்கபத்திரை ஆதியாம் நதிகளும் - காவேரியும் துங்கபத்திரையு முதலாகிய நதிகளும், சூழப் பொங்கி வீழ்வபோல் - சூழவும் பொங்கி வீழ்வன போல, ஒலியலும் கவரியும் புரள - மேலாடையுஞ் சாமரையும் புரளவும்.

ஒலியல் - ஈச்சோப்பி என்பாரு முளர்; ஈச்சோப்பி - ஈயோட்டுங் கருவி. தற்குறிப்பணி. (௭௦)

வாவி நாறிய வாலிதழ்த் தாமரை மலரோன்
நாவி னாளுமை நாயக னான்மறை பரியா
மேவி னானெனத் தானொரு வெண்குடை யாகிப்
பாவி னாலென முடியின்மேற் பானிலாக் கால.

(இ - ள்.) வாவி நாறிய வால் இதழ்த் தாமரை மலரோன் - தடாகத் தின்கண் தோன்றிய தூய இதழ்களை யுடைய தாமரை மலரில் இருப்பவனாகிய பிரமனது, நாவினாள் - நாவில் வசிக்குங் கலைமகள், உமை நாயகன் நான்மறை பரியா மேவினான் என - உமைகேள்வனாகிய சோமசுந்தரக் கடவுள் நான்கு மறைகளையும் குதிரையாகக் கொண்டு

வந்தனன் என்று கருதி, தான் ஒரு வெண்குடையாகிப் பாவிஞல் என- தான் ஒரு வெள்ளிய குடையாகிக் கவிந்தாற்போல, முடியின் மேல் பால் நிலாக்கால - (வெண் கவிகை) திருமுடியின் மேல் பால் போன்ற நிலவினை வீசவும்.

நாறுதல் - தோன்றுதல்: தற்குறிப்பு. (சக)

முறையி னோதிய புராணமூ வாறுநா மொழியும்
இறைவ னுமிவன் படைத்தளித் தழிப்பவ னிவனே
மறையெ லாமுறை யிடுபரம் பொருளென வாய்விட்
டறையு மாறுபோ லியங்களீ ரொன்பது மார்ப்ப.

(இ - ள்.) முறையின் ஓதிய புராணம் மூவாறும் - முறைப்பட ஓதிய புராணங்கள் பதினெட்டும், இவன் நாம் மொழியும் இறைவனும்- இவன்றான் நாங்கள் கூறும் இறைவனுவான்; படைத்து அளித்து அழிப்பவன் இவனே - ஆக்கி அளித்து அழிப்பவனுகிய இவனேதான், மறை எலாம் முறையிடும் பரம்பொருள் என - வேதங்களெல்லாம் ஓலமிடும் பரம்பொருளுமென்று, வாய்விட்டு அறையுமாறு போல் - வாய்திறந்து கூறுமா போல, இயங்கள் ஈரொன்பதும் ஆர்ப்ப - இயங்கள் பதினெட்டும் ஒலிக்கவும்.

பதினென் புராணங்கள்: பிரமம், பதுமம், வைணவம், சைவம், பாகவதம், பௌடியம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமகைவர்த்தம், இலிங்கம், வராகம், சாந்தம், வாமனம், மற்சம், கூர்மம், காருடம், பிரமாண்டம் என்பன. புராணங்கள் வேதப் பொருளைத் துணிந்துரைக்கும் உபப்பிருங்கணமாதலின் 'இவனே மறையெலா முறையிடு பரம்பொருளென' அறைதற்கு முரியன வென்க. தற்குறிப்பு. (சஉ)

மிடைந்த மாயவாம் பரித்திரள் மேற்றிசை நோக்கி
நடந்த நாயக னுன்மறைப் புரவியு நாப்பண்
அடைந்த தாலெழுந் தூளிக ளண்டமுந் திசையும்
படர்ந்த போம்வழி யாதென மயங்கினுன் பரிதி.

(இ - ள்.) மிடைந்த மாயவாம் பரித்திரள் - நெருங்கிய மாய மாகிய தாவும் குதிரைக்கூட்டங்கள், மேல் திசை நோக்கி நடந்த - மேற்குத் திசையை நோக்கி நடந்தன; நாயகன் நான்மறைப் புரவியும் நாப்பண் அடைந்தது - இறைவனது நான்மறையாகிய குதிரையும் நடுவே வந்தது; எழும் தூளிகள் அண்டமும் திசையும் படர்ந்த - மேலெழுந்த புழுதிகள் அண்டங்களினும் திக்குகளினும் சென்று பரவின; பரிதி போம் வழி யாது என மயங்கினுன் - (அதனுல்) சூரியன் தான் செல்லும் வழி யாதென்று மயக்கமுற்றனன்.

வாவும்பரி, போகும்வழி என்பன விகாரமாயின. மேல் ஆறு செய்யுளிலும் போந்த செயவெனெச்சங்கள் அடைந்தது என்னும் முற்று வினை கொண்டன. நடந்த என்பதையும் எச்சப்படுத்துக. (சங)

பள்ள மாக்குவ திடரினைப் பள்ளத்தை மேடு
கொள்ள வாக்குவ பாரெலாம் விலாழிகொப் பளித்து
வெள்ள மாக்குவ தூளியால் வெள்ளத்தை வெறிதாய்
உள்ள தாக்குவ புள்ளுவ வுருக்கொண்ட பரிமா.

(இ - ள்.) புள்ளுவ உருக்கொண்ட பரிமா - வஞ்சக வடிவங் கொண்ட குதிரைகள், திடரினைப் பள்ளமாக்குவ-மேட்டினைப் பள்ளம் ஆக்குவன ; பள்ளத்தை மேடு கொள்ள ஆக்குவ-பள்ளத்தை மேடாகு மாறு ஆக்குவன; பார் எலாம் விலாழி கொப்பளித்து வெள்ளம் ஆக்குவ - புவி முழுதும் வாய் நுரையைக் கொப்பளித்தலால் வெள்ள மாக்குவன; தூளியால் - குரத்தில் எழும் புழுதியால், வெள்ளத்தை வெறிதாயுள்ளது ஆக்குவ - வெள்ளத்தைச் சுவற்றி நிலமாக்குவன.

விலாழி - குதிரை வாய் நுரை. வெறிதாயுள்ளது - வெறுநிலம். (சச)

கொய்யு ளைப்பரி யெழுந்ததூள் கோப்பவான் கங்கை
வையை யொத்ததேழ் பசும்பரி செம்பரி மாவாச்
செய்த தொத்தது சிந்துரந் திசைக்கய முகத்துப்
பெய்த தொத்ததா லொத்தது பெரும்பகன் மாலை

(இ - ள்.) கொய் உளைப்பரி எழுந்ததூள் கோப்ப - கொயத புற மயிரினையுடைய குதிரைகளால் எழுந்த புழுதி எங்குங் கோத்தலினால், வான் கங்கை வையை ஒத்தது - ஆகாய கங்கை வையையாற்றினை ஒத்தது ; ஏழ் பசும் பரி - சூரியனுடைய ஏழு பச்சைக் குதிரைகளும், செம்பரிமாவாச் செய்தது ஒத்தது - செய்ய குதிரைகளாகப் படைக்கப் பட்டமை ஒத்தது ; திசைக்கயம் சிந்துரம் முகத்துப் பெய்தது ஒத்தது- திக்கு யானைகள் சிந்துரத்தை முகத்திற் பெய்ததை ஒத்தது ; பெரும் பகல் மாலை ஒத்தது - நடுப்பகல் மாலைப்பொழுதை ஒத்தது.

பரி, கயம் என்னும் சாதிபற்றி ஒருமை வினை கொடுத்தார். (சரு)

விளம்பு கின்றவச் சம்புவெம் பரித்திரண் மிதிக்குங்
குளம்பு கிண்டிய வெழுந்ததூள் குன்றிற கரிந்தோன்
வளம்பு குந்தடை வார்குர வழிபுரி வேள்விக்
களம்பு கைந்தெழு தோற்றமே யல்லது கடாதால்.

(இ - ள்.) விளம்புகின்ற அச்சம்பு வெம்பரித்திரள் - கூறப்படு கின்ற அந்த நரியாகிய வெவ்விய குதிரைக் கூட்டங்கள், மிதிக்கும் குளம்பு கிண்டிய எழுந்த தூள் - மிதிக்கின்ற குளம்பு கிண்டுதலால் புழுதி எழுந்த தோற்றத்தை, குன்று இறகு அரிந்தோன் வளம்புகுந்து அடைவார் - மலைகளின் சிறகுகளை அரிந்த இந்திரன் பதவியிற் சென்ற டையுங் கருத்தினையுடையார், குரவழிபுரி வேள்விக் களம் புகைந்து எழுதோற்றமே அல்லது-குதிரையின் குளம்புபட்ட இடந்தோறும் புரி

கின்ற வேள்விச் சாலையினின்றும் புகை புகைந்தெழுந் தோற்றமே ஒப்பதல்லாமல், கடாது - (மற்றொன்று) ஒவ்வாது.

சம்பு - நரி; சிவனது பரித்திரள் என்பதும் தோன்ற நின்றது. கின்டிய: செய்யிய வென்னும் வினையெச்சம். கடாது - ஒவ்வாது; கடுத்தல் - ஒத்தல். (சசு)

மட்பு லந்திசை வான்புதை பூழியுண் மறைந்து
கோட்பு றும்பரி சதங்கைதா ரொலியினுங் குளிர்வான்
பேட்பு றுங்குர லொலியினுஞ் செவியினிற் பிறிது
கட்பு லங்களாற் கண்டிலர் வழிவரக் கண்டோர்.

(இ - ள்.) மண்புலம் திசை வான்புதை பூழியுள் மறைந்து - நில வுலகினையும் திக்குகளையும் வானுலகினையும் மூடிய புழுதியுள் மறைந்து, கொட்புறும் பரி-சுழன்றுவருங் குதிரைகள். வழிவர-வழியில்வருதலை, சதங்கைதார் ஒலியினும் - (அவற்றின்) சதங்கை மாலையும் கிண்கிணி மாலையுமாகிய இவற்றின் ஒலியாலும், குளிர்வான் பெட்புறும் குரல் ஒலியினும்-(நீருண்டு) குளிர்ந்த முகிலும் விரும்பும் கனைப்பொலியாலும், செவியினில் கண்டோர் - காதினாற் கண்டோரும், பிறிது கட்புலங்க ளால் கண்டிலர் - வேறு கண்களாற் காணாதவராயினர்.

வழி வரக் கண்டோர் செவியாலன்றிக் கண்ணாற் கண்டிலர் எனினும் அமையும். (சஎ)

[கோச்சகக் கலிப்பா]

தரங்கமேறி முத்திவை விலாழியல தார்மா
இரங்குமொலி யல்லதிரை யேங்குமொலி யின்ன*
துரங்கமல மற்றிவை சுரர்க்கரச னின்றும்
புரங்கொல விடுத்திட வரும்புணரி யென்பார்.

(இ - ள்.) இவை விலாழி அல - இவை வாய் நுரைகள் அல்ல; தரங்கம் எறி முத்து - கடலின‌லைகள் வீசும் முத்துக்களாம்; இன்ன தார்மா இரங்கும் ஒலி அல்ல - இவை கிண்கிணி மாலையை யணிந்த குதிரைகளின் கனைப்பொலி யல்ல; திரை ஏங்கும் ஒலி - அலைகள் ஒலிக்கும் ஒலியாம்; இவை துரங்கம் அல இங்கு வருபவை குதிரைகள் அல்ல; சுரர்க்கு அரசன் இன்றும் புரம் கொல விடுத்திட - தேவேந் திரன் இப்பொழுதும் இந்நகரத்தை அழித்தற் பொருட்டு விடுத்தலால்; வரும் புணரி என்பார் - வருகின்ற கடலாம் என்று கூறுவர்.

முன்பு இந்திரன் கடலை ஏவினமையால் 'இன்றும்' என்றார். புரம்- இந்நகர்; சுட்டு வருவிக்க. விலாழி முதலிய பொருள்களை மறுத்து முத்து முதலியனவாக உருவகப் படுத்தினமையால் இச் செய்யுள் அவ நுதி யுருவகவணி. (சஅ)

(பா - ம்.) *இன்னும்.

இம்பருல குள்ளவல பண்டிணைய பாய்மா
உம்பருல காளிபரி யேகோலது வொன்றே
வெம்பரிதி வெம்பரிகோ லேழவைக ளேழும்
பைம்பரிகள் யாவிணைய பாய்பரிக ளென்பார்.

(இ - ள்.) இணைய பாய்மா - இந்தத் தாவுங் குதிரைகள், பண்டு இம்பர் உலகு உள்ள அல - முன் இந்நில வுலகில் உள்ளன அல்ல; உம்பர் உலகு ஆளி பரியே கொல் - மேலுலகை ஆளும் இந்திரன் குதிரையோ, அது ஒன்றே - அது ஒன்றே (ஆதலின் அதுவல்ல); வெம் பரிதி வெம்பரி கொல் - வெம்மையை யுடைய சூரியனுடைய கடிய குதிரைகளோ, அவைகள் ஏழ் - அவைகள் ஏழேதாம்; ஏழும் பைம்பரி கள் - (அதுவன்றி) அவ்வேழும் பச்சைக் குதிரைகள் (ஆகலின் அவையு மல்ல); இணைய பாய்பரிகள் யா என்பார் - (ஆயின்) இத்தாவுங் குதிரை கள் யாவை என (ஒருவரை ஒருவர்) வினவுவார்.

இந்திரன் பரி உச்சைச் சிரவம் எனப்படும்; அஃது எண்ணால் ஒன்றாதலும், சூரியன் பரி எண்ணால் ஏழாதலுடன் பசிய நிறத்தவா யிருத்தலும் இவற்றொடு வேற்றுமையாம். இச் செய்யுள் ஐயவிலக் கணையின் பாற்படும். (௬௯)

வெம்பணிக ளைப்பொர வெகுண்டெழுவ தேயோ
பைம்புன லுடுத்தமுது பார்முதுகு கீறும்
உம்பருல கைப்பொர வுருத்தெழுவ தேயோ
அம்பர முகட்டள வடிக்குர மழுத்தும்.

(இ - ள்.) பைம் புனல் உடுத்த-கரிய கடலை ஆடையாக வுடுத்த, முது பார் முதுகு கீறும் - பழைய நில மகளின் முதுகினைக் குளம்பாற் கிழிக்கும் (ஆகலின்), வெம்பணிகளைப்பொர - கொடிய (அனந்தன் முதலிய பாதலத்தில் வசிக்கும்) பாம்புகளைப் பொருது அழிப்பதற்கு, வெகுண்டு எழுவதேயோ - சினந்து எழுவதோ (அன்றி), அம்பரம் முகட்டு அளவு-வானின் முடிவரையும், அடிக்குரம் அழுத்தும் - அடிக் குளம்பினால் அழுத்தும் (ஆதலின்), உம்பர் உலகைப் பொர - மேலுல கைப் பொருது அழித்தற்கு, உருத்து எழுவதேயோ - சினந்து எழு வதோ (அறியோமென்றும்).

கீறும் ஆகலின், அழுத்தும் ஆகலின் எனக் காரணச் சொல் விரிக்க. (௭௦)

உத்தர திசைப்புரவி தெற்கடையு மாறும்
அத்தகைய தெற்குள வடக்கடையு மாறும்
அத்தகை* குடக்கோடு குணக்கடையு மாறுஞ்
சித்தர்விளை யாடலின் வெளிப்படுதல் செய்யா.

(பா - ம்.) *இத்தகை

(இ - ள்.) சித்தர் விளையாடலின் - சித்தருடைய விளையாட்டுப் போல, உத்தர திசைப்புரவி - வடதிசையிலுள்ள குதிரைகள், தெற்கு அடையுமாறும் - தென்றிசையை அடையும்வகையும், தெற்கு உள அத்தகைய - தெற்கின் கண் சென்றுள்ள அங்ஙனமாய அவை, வடக்கு அடையுமாறும் - வடக்கின்கண் அடையும் வகையும், அத்தகை குடக்கொடு குணக்கு அடையுமாறும் - அங்ஙனமே கிழக்குத் திசையினின்று மேற்கிலும் மேற்கிலிருந்து கிழக்கிலும் செல்லுந் தன்மையும், வெளிப்படுதல் செய்யா - தோன்றவில்லை (என்றும்).

குடக்கொடு குணக்கடைதல் - கிழக்கிலிருந்து மேற்கிலும் மேற்கிலிருந்து கிழக்கிலும் அடைதல். (௫௧)

மறைமரபு சாலவரும் வன்னியிவை பொன்னித்
துறைவனுள முஞ்சுடு மிரும்பனை தொடுக்கும்
அறவனுள முஞ்சுடு மமைச்சரை யொறுக்கும்
இறைவழுதி யுள்ளமு மினிச்சுடுவ தென்பார்.

(இ - ள்.) மறை மரபு சாலவரும் வன்னி இவை - பரிநூலிற் கூறும் இலக்கணங்கள் நிரம்பவராநின்ற இக்குதிரைகளாகிய நெருப்பு, பொன்னித்துறைவன் உளமும் சுடும் - காவிரியின் நீர்த்துறையினையுடைய சோழன் மனத்தையுஞ் சுடும்; இரும்பனை தொடுக்கும்-கரிய பனையின் மலராற்றொடுத்த மாலையை யணிந்த, அறவன் உளமும் சுடும்- சேரன் உள்ளத்தையும் சுடும்; இனி - மேல், அமைச்சரை ஒறுக்கும் - வாதவூரடிகளை வருத்தும், இறை வழுதி உள்ளமும் சுடுவது என்பார் - பாண்டி மன்னன் உள்ளத்தையும் சுடும் என்றுங் கூறுவாராயினர்.

மறை என்பது ஈண்டுப் புரவிநூலை. வன்னி - குதிரை. தீ: இரட்டுற மொழிதல். குதிரையைத் தீயாக உருவகித்துச் 'சுடும்' என்றார். இருமை - கருமை. பாண்டியற்கு மாற்றாராகலின் சோழனுளத்தையும் சேரனுளத்தையும் சுடுமென்றார். வாதவூரரை ஒறுத்தமை பற்றிப் பாண்டியன் தானே வருந்துவனென்பார் 'வழுதியுள்ளமுமினிச் சுடுவதென்பார்' என்றார். முன் இரண்டு செய்யுட்களையும் இதிலுள்ள 'என்பார்' என்பதனோடு முடிக்க. (௫௨)

முந்தையொரு மந்திரி பொருட்டரசன் முன்னா
அந்தமி லனீகமொ டரும்பரியில் வந்தாங்
கிந்தமறை மந்திரி யிடும்பைதணி விப்பான்
வந்தனர்கோ லிப்பரி வரும்பொருந ரென்பார்.

(இ - ள்.) முந்தை ஒரு மந்திரி பொருட்டு -முன்னொரு காலத்தில் சௌந்தர சாமந்தன் என்னும் ஒரு சேனைத் தலைவன் பொருட்டு; அரசன் முன்னா - பாண்டியன் முன்னே, அந்தமில் அனீகமொடு - அளவிறந்த சேனைகளோடு, அரும்பரியில் வந்தாங்கு - அரிய புரவிமீது வந்ததுபோல, இப்பரி வரும் பொருநர் - இக் குதிரையில் வரும் வீரர்.

இந்த மறை மந்திரி இடும்பை தணிவிப்பான் - இன்று இந்த மறையவ ராகிய மந்திரியாரின் துன்பத்தைத் தணிவித்தற் பொருட்டு, வந்தனர் கொல் என்பார் - வந்தனரோ என்றுங் கூறுவார்.

அமைச்சுரிமையும் தானைத் தலைமையும் ஒருங்குடையாரு முளரா கலின் 'மந்திரி பொருட்டு' என்றார். சௌந்தர சாமந்தர் பொருட்டு இறைவன் பரியில் வந்தமையை முன் மெய்க்காட்டிட்ட படலத்திற் காண்க. தணிவிப்பான்: வினையெச்சம். (ருங)

காமனிவ னேகோலறு காலுழ கடப்பந்
தாமனிவ னேகோல்பொரு தாரகனை வென்றோன்
மாமனிவ னேகோன்மலை வன்சிற கரிந்த
நாமனிவ னேகோலென நாரிய ரயிர்த்தார்.

(இ - ள்.) இவன் காமன் கொல்-இக்குதிரை வீரனாகிய பேரழகன் மதவேளோ, இவன் - (அன்றி) இவ்வினையோன், அறு கால் உழு கடப்பம் தாமன் கொல் - வண்டுகள் கிளறுங் கடப்ப மாலையையணிந்த முருகனோ, இவன் - (அன்றி) நம்மனத்தைத் தனது மாயையினால் கவரு மிவன், பொரு தாரகனை வென்றோன் மாமன் கொல் - போர் புரிந்த தாரகனைக் கொன்ற அம்முருகக் கடவுளின் மாமனாகிய மாயனோ, இவன் - (அன்றி) பெரும் போகமுடைய இவன், மலை வன் சிறகு அரிந்த நாமன் கொல் என - மலைகளின் வலிய சிறகினை அரிந்த இந்திரனோ என்று, நாரியர் அயிர்த்தார் - பெண்கள் ஐயுற்றனர்.

அறுகால் - ஆறாகிய கால்களை யுடையது; வண்டு. பொருதார கனை வென்றோன், சுட்டு மாத்திரையாகக் கொள்க. நாமன் - பகை வர்க்கு அச்சத்தைச் செய்பவன். (ருச)

அடுத்திடுவர் கண்ணிறைய வண்ணலழ கெல்லாம்
மடுத்திடுவர் கைவளையை மாலைவிலை யென்னக்
கொடுத்திடுவர் மாலைகள் கொடுத்திடுதி யன்றேல்
எடுத்திடுதி யெங்கள்வளை யெங்கள்கையி லென்பார்.

(இ - ள்.) அடுத்திடுவர் கண் நிறைய அண்ணல் அழகு எல்லாம் மடுத்திடுவர் - (அம்மகளிரிற் சிலர் அவ்வண்ணலை) அடுத்து அவன் அழகு அனைத்தையும் கண்ணாகிய வாயினால் நிறையப் பருகுவர்; கை வளையை மாலைவிலை என்னக் கொடுத்திடுவர் - கையிலுள்ள வளைகளை மாலைக்கு விலையெனக் கொடுப்பார்; மாலைகள் கொடுத்திடுதி - நின் மார்பிலணிந்த மாலைகளைக் கொடுப்பாயாக; அன்றேல் - கொடாயேல், எங்கள் வளை எடுத்து - (அவற்றின் விலையாகக் கொடுத்த) எங்கள் வளைகளை எடுத்து, எங்கள் கையில் இடுதி என்பார் - எங்கள் கையில் இடுவாயாக என்று கூறுவர்.

வேட்கை நோயால் உடல் மெலிதலின் வளை கழன்று விழுதலை 'மாலை விலை யென்னக் கொடுத்திடுவர்' என்றார். மாலைகள் கொடுத்திடுதி என்றதனால் அவனது மாலையைச் சூடிக்கொள்ளும் விருப்பமும், எடுத்திடுதி எங்கள் வளை என்றதனால் அவன் தம்மைத் தொடவேண்டுமென்னும் விருப்பமும் உடையரானமை பெற்றாம். இவை போல்வன மகளிர்கண் நிகழும் அகமெய்ப்பாடுகள். (ருரு)

ஏந்தன்முடி மாலைமலர் சிந்தினவெ டுத்துக்
கூந்தலின்மி லைந்துமதன் வாகைமலர் கோள்வார்
சாந்தனைய சிந்தின தனந்தடவி யண்ணற்
றோய்ந்தளவி லாமகிழ் துளும்பினவ ராவார்.

(இ - ள்.) ஏந்தல் முடிமாலை சிந்தின மலர் எடுத்து - இறைவன் திருமுடியின் கணுள்ள மாலையினின்றும் சிந்திய மலர்களை எடுத்து, கூந்தலில் மிலைந்து - (சிலர்) தங்கள் குழலிற்சூடி, மதன் வாகைமலர் கொள்வார் - மதவேளை வென்று வெற்றிமாலை கொள்வார்; அனைய சிந்தின சாந்து தனம் தடவி - (சிலர்) அவ்வாறு திருமார்பினின்றுஞ் சிந்தின சாந்தினைத் தங்கள் கொங்கைகளிற் பூசி அண்ணல் தோய்ந்து அளவு இலா மகிழ் துளும்பினவர் ஆவார் - அவ்வண்ணலைக் கூடி அளவிறந்த மகிழ்ச்சி மீதூர்ந்தவரை ஒத்தார்.

கூடினவர் போலும் மகிழ்ச்சியெய்துதலின் 'மதன் வாகைமலர் கொள்வார்' என்றார். அனைய - அவ்வாறாக. (ருசு)

பொட்டழகன் மார்பிலிடு போர்வைகவ சப்பேர்
இட்டதுமெய் நம்முயிர்த டுத்தமையி னென்பார்
கட்டழகன் மாலையது கண்ணியென வோதப்
பட்டதுமெய் நம்முயிர் படுத்தமையி னென்பார்.

(இ - ள்.) பொட்டு அழகன் மார்பில் இடு போர்வை - பொட்டினையணிந்த இவ்வழகன் மார்பிலணிந்த போர்வை, நம் உயிர் தடுத்தமையின் - நமது உயிரை (அம்மார்பு கவராது) தடுத்ததினால், கவசப்பேர் இட்டது மெய் என்பார் - அதற்குக் கவசமென்னும் பெயர் இட்டது மெய்யே என்று சிலர் கூறுவர்; கட்டழகன் மாலை - இப்பேரழகன் மாலை, நம் உயிர் படுத்தமையின் - நமது உயிரை அகப்படுத்தினமையின், கண்ணி என ஓதப்பட்டது மெய் என்பார் - அது கண்ணி என்று ஓதப்பட்டது உண்மையே என்று சிலர் கூறுவர்.

கவசம் - சட்டை, மெய்யுறை. கண்ணி - மாலை, வலை. படைக்கலம் புகாது காப்பது போன்று நம்முயிர் புகாது காத்தலாலும், பறவை முதலியவற்றை அகப்படுத்தல் போன்று நம்முயிரை அகப்படுத்தலாலும் கவசம், கண்ணி என்னும் பெயர்கள் முறையே அவற்றுக்குப் பொருந்தினவென்றாரென்க. மெய்-பொருந்தியது. மாலையது, அது : பகுதிப்பொருள் விகுதி. (ருஎ)

[கலி நிலைத்துறை]

இச்சை யால்வடி வெடுப்பவ னிந்திர சால
விச்சை காட்டுவா னெனப்பரி வீரனி லுலகைப்
பிச்ச தேற்றிட மயக்கியுங் காமனிற் பெரிது
நச்சு* மாதரை மயக்கியு மிங்ஙன நடந்தான்.

(இ - ள்.) இச்சையால் வடிவு எடுப்பவன் - தனது இச்சையளவானே திருவுருவமெடுக்கும் இறைவன், இந்திரசால விச்சை காட்டுவான் என - இந்திரசால வித்தை காட்டுவானைப்போல, பரிவீரனில் - குதிரை வீரனைப்போல் (தன்னைக் காட்டி), உலகைப் பிச்சு ஏற்றிட மயக்கியும் - உலகினர் பித்தை ஏற்குமாறு அவரை மயக்கியும், காமனில் - மதவேளைப்போல் (காணப்பட்டு), பெரிது நச்சு மாதரை மயக்கியும் - மிகவும் விரும்பும் மகளிரை மயக்கியும், இங்ஙனம் நடந்தான் - இவ்வாறு நடந்தருளினன்.

இறைவன் வினைவயத்தாற் பிறத்தலின்றித் தான் விரும்பிய வடிவை விரும்பியவாறு எடுப்பவனாகலின் 'இச்சையால் வடிவெடுப்பவன்' என்றார். விச்சை காட்டுவான் என மயக்கியும், மயக்கியும் நடந்தான் என்க. விச்சை, பிச்சு என்பன போலி. பிச்சது, அது பகுதிப் பொருள் விகுதி. ஏற்றிட - ஏற்க. (௬அ)

தாவு கந்துக மிந்திய மோத்தன சயமா
வாவு திண்கண மள்ளர்கண் மனங்களை யொத்தார்
மேவி யம்மனந் தோறுமிடை விடாதுநின் றியக்கும்
ஆவி யொத்தது நடுவரு மருமறைப் பரியே.

(இ - ள்.) தாவு கந்துகம் இந்தியம் ஒத்தன - தாவுகின்ற குதிரைகள் ஐம்பொறிகளை ஒத்தன; சயமா வாவு திண் கண மள்ளர்கள் - வெற்றி பொருந்திய அக்குதிரைகளை நடாத்தும் திண்ணிய வீரர்களாகிய சிவகணத்தவர், மனங்களை ஒத்தார் - மனங்களை ஒத்தனர்; அம் மனந்தொறும் மேவி நின்று - அம்மனங்கடோறும் பொருந்தி நின்று, இடைவிடாது இயக்கும் ஆவி - இடையறாமல் இயக்குகின்ற உயிரினை, நடுவரும் அருமறைப் பரி ஒத்தது - நடுவில் வரும் - அரிய வேதமாகிய குதிரை ஒத்தது.

வாவு சயமா என மாறுக, மனம் கூடாவழிப் பொறிகள் புலன்களிற் செல்லாமையானும், ஆன்ம வறிவின்றி மனத்திற்கு இயக்கமின்மையானும், 'கந்துகம் இந்திய மொத்தன, மள்ளர்கள் மனங்களை யொத்தார், மறைப்பரி ஆவி யொத்தது' என்றார். மறைப்பரி என்றது இலக்கணையால் இறைவனைக் குறிக்கும். (௬௯)

(பா-ம்.) *நச்ச.

துன்னு மின்னிய முழக்கமுந் துரகத வொலியும்
அன்ன வீரர்வா யரவமுந் திசைசெவி டடைப்பக்
கன்னி மாமதில் சூழ்கடி நகர்க்கரைக் காதம்
என்ன வெய்தினுன் மறைப்பரிப் பாகனவ் வெல்லை.

(இ - ள்.) துன்னும் இன் இய முழக்கமும் - நெருங்கிய இயங்களின் பேரொலியும், துரகத ஒலியும் - குதிரைகளின் கனைப்பொலியும், அன்ன வீரர்வாய் அரவமும் - அக்குதிரை வீரர்களின் வாய் ஒலியும், திசை செவிடு அடைப்ப-திக்குகளைச் செவிடாக்க, மறைப்பரி பாகன்-வேதப் புரவியின் பாகனுகிய இறைவன், கன்னி மாமதில் சூழ் கடி நகர்க்கு-அழியாத பெருமதில் சூழ்ந்த காவலையுடைய அம் மதுரைக்கு, அரைக்காதம் என்ன எய்தினுன்-அரைக்காத தூரம் உளதென்னுமாறு வந்தனன்; அவ்வெல்லை - அப்பொழுது.

கன்னி - அழிவின்மை. (சூ0)

[கொச்சகக் கலிப்பா]

கண்டவர் கடிதோடிக் கடிநகர் குறுகிக்கார்
விண்டவழ் மணிமாடத் தடுசிறை மிடைகின்ற
கொண்டலி னனையார்முன் குறுகினர் மலர்செவ்வி
முண்டக வதனத்தார் முகிழ்நகை யினர்சொல்வார்.

(இ - ள்.) கண்டவர் - பார்த்தவர்கள், கடிது ஓடி-விரைந்து ஓடி, கடிநகர் குறுகி - காவலையுடைய நகரினை அடைந்து, விண் கார் தவழ் மணி மாடத்து - வானின்கண் உள்ள முகில்கள் தவழும் அழகிய மாடத்தையுடைய, அடுசிறை மிடைகின்ற - வருத்துஞ் சிறையின்கண் காவலாளரால் நெருக்கப் பட்டிருக்கின்ற, கொண்டலின் அனையார் முன் குறுகினர் - முகிலை ஒத்த வாதவூரடிகளின் திருமுன் சென்று, மலர் செவ்வி முண்டக வதனத்தார் - மலர்ந்த செவ்வியையுடைய தாமரை மலர்போன்ற முகமுடையராய், முகிழ் நகையினர் சொல்வார்- அரும்பிய நகையினையுடையராய் (இதனைக்) கூறுவாராயினர்.

பேரின்பப் பயன் விளைக்கும் திருவாசக மழையைக் கைம்மாறு கருதாது பொழிவாராகலின் 'கொண்டலி னனையார்' என்றார். கொண்டலின், சாரியை நிற்க உருபு தொக்கது. மலர் செவ்வி - அப்பொழுதலர்ந்த செவ்வி. குறுகினர், வதனத்தார், நகையினர்: முற்றெச்சங்கள். (சூக)

மன்னவ னெறிகோடா மந்திர ரடலேறே
பன்னிற வெழுமுந்நீர்ப் பரவைகள் வருமாபோற்
றுன்னின வருகின்ற துரகத முளவெல்லாம்
பொன்னெயின் மணிவாயில் புகுவன விதுபோதில்.

(இ - ள்.) மன்னவன் நெறிகோடா மந்திரர் அடல் ஏறே - பாண்டியனது அரசியல் நெறியினின்றும் வழுவாத அமைச்சர்களுள் வெற்றி பொருந்திய ஆண் சிங்கம் போன்றவரே, முந்நீர் பல் நிற எழு பரவைகள் வருமாபோல் - மூன்று நீர்களையுடைய பல நிறமுள்ள எழு கடல்களும் வருந் தன்மையைப் போல, உள துரகதம் எல்லாம் - உலகிலுள்ள குதிரைகள் அனைத்தும், துன்னின வருகின்ற - நெருங்கி வருகின்றன; இது போதில் - இப்போது, பொன் எயில் மணி வாயில் புகுவன - பொன்னாலாகிய மதிலின் அழகிய வாயிலின்கண் புகுதா நிற்கும்.

குதிரைகளும் பல நிறத்த வாகலின் 'பன்னிற......பரவைகள் என்றார். துன்னி வருகின்ற துரகதமான வெல்லாம் இது போதில் புகுவன என்றுரைத்தலுமாம். (கூஉ)

ஒல்லையி லதுமன்னற் குரையுமி னெனமேரு
வில்லவ னருள்பெற்ற வேதியர் பெருமான்போய்ச்
செல்லது தளையிட்ட திருமக னருகெய்தி
மல்லணி திணிதோளாய் வருவன பரியென்றார்.

(இ - ள்.) அது ஒல்லையில் மன்னற்கு உரையுமின் என - அதனை விரைவில் வேந்தனுக்கு விளம்புவீராக என்று கூற, மேரு வில்லவன் அருள் பெற்ற - மேரு மலையை வில்லாக வுடைய இறைவனது திருவருளைப் பெற்ற, வேதியர் பெருமான்போய் - மறையவர் தலைவராகிய அடிகள் சென்று, செல்லது தளை இட்ட திருமகன் அருகு எய்தி - முகிலை விலங்கு பூட்டிச் சிறைப்படுத்திய பாண்டியன் பக்கலிற் சென்று, மல் அணி திணி தோளாய் - மற்போர் வல்ல அழகிய திண்ணிய தோளையுடைய மன்னா, பரிவருவன என்றார் - குதிரைகள் வருகின்றன என்று கூறினர்.

செல்லினைத் தளையிட்டவன் வழிவந்தோனாகலின் 'தளையிட்ட திருமகன்' என்றார். செல்லது, அது: பகுதிப் பொருள் விகுதி. வருவன - வாராநின்றன. (கூரு)

மருத்தென வருகின்ற மாக்கட லெனமன்னன்
திருத்தணி கடகப்பூண் டெறித்திட வுடல்வீங்கிப்*
பெருத்தெழு மகிழ்தூங்கிப் பெருவிலை மணியாரம்
அருத்திகொள் கலைநல்கி யமைச்சரை மகிழ்வித்தான்.

(இ - ள்.) மாக்கடல் மருத்து என வருகின்ற என - குதிரை வெள்ளம் காற்றைப்போல விரைந்து வருகின்றன என்று கூற, மன்னன் - அரிமருத்தன பாண்டியன், திருத்து அணி கடகப்பூண் தெறித்திட - திருத்திய அழகிய கடகமாகிய அணி தெறிக்குமாறு, உடல் வீங்கி - உடல் பூரித்து, பெருத்து எழு மகிழ் தூங்கி - ஓங்கி எழுந்த மகிழ்ச்சி மீதூர்ந்து, பெருவிலை மணி ஆரம் - பெரிய விலையுள்ள முத்து

(பா - ம்.) *உடல் வீங்க.

மாலைகளையும், அருத்தி கொள்கலை நல்கி - விரும்பத் தக்க ஆடைகளையும் கொடுத்து, அமைச்சரை மகிழ்வித்தான் - மந்திரியாராகிய வாதவூரடிகளை மகிழ்வித்தனன்.

மாக்கடல் - குதிரையாகிய கடல். வருகின்றன என என்க. திருத்து - திருந்த அணிந்த. (சுச)

ஏந்தரி யணைநீங்கி யெழுதிய தலைவாயிற்
போந்தரு கோளிர்மாடம் புகுந்தரி யணைமேவிக்
காந்தளின் விரனல்லார் கவரிகள் புடைவீச
ஆய்ந்தவர் புறஞ்சூழ வடுபரி வரவேற்பான்.

(இ - ள்.) அரி ஏந்து அணை நீங்கி - சிங்கஞ் சுமந்த ஆதனத்தினின்றும் எழுந்து, எழுதிய தலைவாயில் போந்து - சித்திரம் எழுதிய தலைவாயிலில் வந்து, அருகு ஒளிர் மாடம் புகுந்து - அதனருகில் ஒளி வீசும் மாடத்திற் புகுந்து, அரி அணை மேவி - சிங்காதனத்திலிருந்து, காந்தளின் விரல் நல்லார் - செங்காந்தள் மலர் போன்ற விரல்களையுடைய பெண்கள், புடை கவரிகள் வீச - இருமருங்கிலும் கவரிகள் வீசவும், ஆய்ந்தவர் புறம் சூழ - நூலாராய்ந்த அமைச்சர் முதலியோர் புறத்தில் சூழவும், அடுபரி வரவு ஏற்பான் - வெற்றி பொருந்திய பரிகளை வரவேற்பானாயினன்.

ஆய்ந்தவர் - நூல்களை ஆராய்ந்தறிந்த அமைச்சர், புரோகிதர், புலவர் முதலாயினோர். (சுரு)

பரனருள் விளையாடல் காட்டிய பரிவெள்ளம்
வருவன சிறுகாலந் தாழ்த்தலு மதிவேந்தர்
புரவலன் மனம்வெள்கிப் போய்யிது வெனவுள்கி
அருகணை யுழையோரைக் குறித்தன னழல்கண்ணன்.

(இ - ள்.) பரன் அருள் விளையாடல் காட்டிய - இறைவன் தனது திருவிளையாடலைக் காட்டா நிற்க, வருவன பரிவெள்ளம் - வருகின்ற குதிரை வெள்ளம், சிறுகாலம் தாழ்த்தலும் - சிறிது போது வரவு தாழ்த்த வளவில், மதிவேந்தர் புரவலன் - மதிவழி மன்னருட் சிறந்த வணுகிய அரிமருத்தன பாண்டியன், மனம் வெள்கி - உள்ளம் நாணி, இது பொய் என உள்கி - இது பொய் என்று கருதி, அருகு அணை உழையோரை - அருகிலிருந்த தண்டலாளரை, அழல் கண்ணன் குறித்தனன் - நெருப்புப்போலுஞ் சிவந்த கண்களையுடையனாய் நோக்கினன்.

காட்டிய: செய்யிய வென்னும் வினையெச்சம். உழையோர் - தண்டலாளர். குறித்தனன் - குறிப்புடன் நோக்கினன். (சுசு)

மன்னவ னினைவாற்றான் மந்திரர் பெருமானைத்
துன்னினர் கொடுபோயத் தோள்வலி மறமள்ளர்
உன்னரி தெனவஞ்சா தொறுத்தன ருரவோர்தந்
தென்னவர் தமையுள்கிச் சேவடி துதிசெய்வார்.

(இ - ள்.) மன்னவன் நினைவு ஆற்றால் - பாண்டியன் கருத்தின் படியே, அத்தோள்வலி மறமள்ளர் - அந்தத் தோள் வலிமையும் கொலைத் தொழிலையு முடைய ஒறுப்பாளர், மந்திரர் பெருமானை - அமைச்சர் பெருமானாகிய அடிகளை, துன்னினர் கொடுபோய்-நெருங்கிக் கொண்டு போய், அஞ்சாது - சிறிதும் பழிபாவங்கட்கு அஞ்சாமல், உன் அரிது என ஒறுத்தனர் - கண்டோர் நினைப்பதற்கும் அரிய கடுந் தண்டமென்று கூறுமாறு ஒறுத்தனர்; உரவோர் - சிவஞானச் செம்ம லாகிய அடிகள், தம் தென்னவர் தமை உள்கி - தமது சுந்தர பாண்டிய ராகிய சோமசுந்தரக் கடவுளை நினைந்து, சேவடி துதிசெய்வார் - அவரது சிவந்த திருவடியைத் துதிப்பாராயினர்.

அரசரது நோக்கத்தால் அவன் உள்ளக் கருத்தினை உணர்ந்தன ரென்பார், 'மன்னவன் நினைவாற்றால்' என்றனர்;

"நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற"

என்னும் திருக்குறள் நோக்குக. உன்: முதனிலைத் தொழிற் பெயர்; உன்ன என்பது தொக்கதுமாம். உரவோர் - பத்தி ஞான வலியுடை யோர். தம் தென்னவர் - தம் பெருமானாகிய சுந்தரபாண்டியர். (சுஎ)

[கலிநிலைத்துறை]

பூவார் முளரிப் புத்தே ளறியா நெறிதந்தாய்
பாவார் தென்சொற் பனுவன் மாலைப் பணிகொண்டாய்
தேவா தேவர்க் கரசே சிறியே னுறு துன்பம்
ஆவா வென்ன யஞ்சே* லென்ன யறனேயோ.

(இ - ள்.) முளரிப்பூ ஆர் புத்தேள் அறியா - தாமரை மலரில் வசிக் கும் பிரமனும் அறியாத, நெறி தந்தாய் - சன்மார்க்கத்தை அளித் தருளினை; பா ஆர் தென் சொல் பனுவல் மாலைப் பணி கொண்டாய் - பா அமைந்த தமிழ் மொழியாகிய மலராற்றொடுத்த பாட்டாகிய மாலையைச் சாத்தும் பணியை அடியேன்பாற் கொண்டருளினை; தேவா - தேவனே, தேவர்க்கு அரசே - திருமால் முதலிய தேவர்கட்கு அரசனே, சிறியேன் உறு துன்பம் - கடையேன் படுந் துன்பத்திற்கு, ஆவா என்னாய் - ஐயோ வென்று இரங்குகின்றாயில்லை; அஞ்சேல் என்னாய் - அங்ஙனம் இரங்கி அஞ்சற்க என்று கூறியருளுகின்றாயில்லை;

(பா - ம்.) * ஆவா வென்ன வஞ்சே,

அறனேயோ - இது உனக்கு அறமாமோ?

பா - செய்யுளுறுப்புக்களுள் ஒன்று; அஃதாவது சேட்புலத்திலிருந்து ஒருவன் எழுத்துஞ் சொல்லுந் தெரியாமற் பாடமோதுங்கால் இஃது இன்ன செய்யுள் என அறிதற்கு ஏதுவாய்ப் பரந்து பட்டு வரும் ஓசை. பனுவல்-பாட்டு, பதிகமுமாம். ஆவா : இரக்கப் பொருள் படும் இடைச்சொல்.

"தேவா தேவர்க் கரியானே சிவனே சிறிதென் முகநோக்கி
ஆவா வென்ன ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே"

எனவும்,

"பஞ்சே ரடியாள் பாகத் தொருவா பவளத் திருவாயால்
அஞ்சே லென்ன ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே"

எனவும் திருவாசகம் ஆசைப்பத்துள் அடிகள் அருளிச் செய்தல் காண்க. ஆவாவென்று என்னும் பாடத்திற்கு ஆவா என்றிரங்கி எனப் பொருள் கூறுக. (சுஅ)

நெஞ்சே யுரையே செயலே யெல்லா நினவென்றாய்
வஞ்சே போலு மஃதே லின்று வாராயோ
பஞ்சே ரடியாள் பாகா கூடற் பரமேட்டீ
அஞ்சே லென்று யிதுவோ* வருளுக் கழகையா.

(இ - ள்.) நெஞ்சே உரையே செயலே எல்லாம் நின என்றாய் - உள்ளமும் உரையும் உடலுமாகிய அனைத்தும் உன்னுடையன என்று கூறியருளினை; வஞ்சே போலும் - அது பொய்யே போலும்; அஃதேல் இன்று வாராயோ - அஃது உண்மையானால் இப்பொழுது வராதிருப்பாயோ, பஞ்சு ஏர் அடியாள் பாகா - செம்பஞ்சுக் குழம்பு ஊட்டிய அழகிய திருவடிகளையுடைய பிராட்டியாரை ஒரு கூற்றிலுடையவனே, கூடல் பரமேட்டீ - கூடலில் எழுந்தருளிய இறைவனே, அஞ்சேல் என்றாய் - அஞ்சற்க என்று அருளுகின்றாயில்லை; ஐயா - ஐயனே, இதுவோ அருளுக்கு அழகு - இங்ஙனம் வாளாவிருப்பதோ நின்னருளுக்கு அழகாகும்? (ஆகாது.)

வஞ்சகம் என்பது வஞ்சு எனக் கடைக்குறையாயிற்று. (சுக)

காவி நேருங் கண்டா நாயிற் கடையான
பாவி யேனைப் பொருளாக் கொணடேன் பணிகொண்டாய்
ஆவி யோடிவ் வுடலு நினதே யன்றேவின்
றேவி வாளா திருந்தா லாரேன் னுடையானே.

(இ - ள்.) காவிநேரும் கண்டா - நீலோற்பல மலரை ஒத்த திருமிடற்றினையுடையவனே, நாயில் கடையான பாவியேனை - நாயினுங் கடைப்பட்ட பாவியாகிய என்னையும், பொருளாக்கொண்டு

(பா - ம்.) *அஞ்சே லென்று விதுவோ.

என்பணி கொண்டாய் - ஒரு பொருளாக ஏற்றுக் கொண்டு எனது பணியையும் கொண்டருளினை; ஆவியோடு இவ்வுடலும் நினதே அன்றோ - இவ்வுயிரும் உடலும் நின்னுடையன அல்லவா, இன்று ஒவி வாளாது இருந்தால் - இன்று என்னை நீங்கி வாளா இருந்தாயானால், என் உடையானே யார் - என்னை உடையானே என்னைக் காப்பவர் வேறு யாவர்? (ஒருவருமில்லை என்றபடி).

நாயிற் கடையான பாவியேனைப் பொருளாக் கொண்டு என்றது

"நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே யாட்கொண்டாய்"

எனவும், ஆவியோ டிவ்வுடலு நினதேயன்றோ என்றது,

"அன்றே யென்ற னுவியு முடலு முடைமை எல்லாமும்
குன்றே யனையா யென்னையாட் கொண்டபோதே கொண்டிலையோ"

எனவும் அடிகள் திருவாசகத்துள் அருளிச்செய்தலாற் பெறப்படுவன. ஆவி உடல் என்பவற்றைத் தனித்தனி கூட்டி நினதே என்க. ஒவி - ஒழிந்து. என்னைக் காப்பார் யார் என விரித்துரைக்க. (எ௦)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

என்றிரந் திரங்கு மன்ப ரிருசெவி யூடே யேங்குங்
கன்றிளஞ் செவியி னல்லான் கனைகுர லோசை போல
ஒன்றிய சின்னங் காளங் காகள மோலிக்கு மோசை
வென்றிகோள் புரவிச் செந்தூ டிசையெலாம் விழுங்கக் கண்டார்.

(இ - ள்.) என்று இரந்து இரங்கும் அன்பர் - என்று குறையிரந்து வருந்தும் வாதவூரடிகள், இருசெவி ஊடே - தமது இரண்டு செவியுள்ளும், ஏங்கும் இளங்கன்றின் செவியில் - (தாயைப்பிரிந்து) வருந்தும் இளங்கன்றின் காதில், நல்லான் கனைகுரல் ஓசை போல - நல்ல தாய்ப் பசு கதறுங் குரலொலி சென்றடைதல் போல, ஒன்றிய சின்னம் காளம் காகளம் ஒலிக்கும் ஓசை - பொருந்திய சின்னமும் காளமும் காகளமும் ஒலிக்கும் ஓசை சென்று விழுங்கவும், வென்றி கொள் புரவிச் செந்தூள் பகைவரை வென்று வெற்றி கொள்ளுங் குதிரைகள் வருதலால் மேலெழுந்த சிவந்த புழுதி, திசை எலாம் விழுங்கக் கண்டார் - திக்குகள் அனைத்தையும் விழுங்கவும் பார்த்தனர்.

விழுங்க என்பதனை முன்னுங்கூட்டி, நல்லான் ஓசை போல இரு செவியூடே சென்று விழுங்க என்க. சின்னம் முதலிய மூன்றும் ஊதும் எக்காளவகை. கேட்டலையும் காண்டலாகக் கூறியது இலக்கணை வகை; "நாற்றங் கேட்டலும்" என்புழிப்போல. (எக)

வழுதியு மறிந்து வாத வூரரை விளித்து வந்த
தொழுகுல வமைச்சர் தம்பாற் றுகடவி ரன்பு கூர்ந்தெம்
பழுதறு கரும நம்போற் பரிக்குநர் யாரை யென்று
எழுதரு மகிழ்ச்சி மேற்கொண் டளவளா யிருக்கு மெல்லை.

(இ - ள்.) வழுதியும் அறிந்து - பாண்டியனும் அதனை அறிந்து, வாதவூரரை விளித்து - வாதவூரடிகளை அழைப்பித்து, வந்த தொழுகுல அமைச்சர் தம் பால் - வந்த மறையவர் குலத்தினராகிய மந்திரியார் பால், துகள் தவிர் அன்பு கூர்ந்து - குற்றமில்லாத அன்பு மீதூர்ந்து, எம் பழுது அறு கருமம் - எமது குற்ற மற்ற அரசியல் வினைகளை, நும் போல் பரிக்குநர் யாரை என்று - உம்மைப்போல ஏற்றுச்செய்து முடிப்பவர் யார் என்று கூறி, எழுதரு மகிழ்ச்சி மேற்கொண்டு - மிக்க மகிழ்ச்சியைப் பொருந்தி, அளவளாய் இருக்கும் எல்லை - அவருடன் அளவளாவியிருக்கும்போது.

தொழுகுலம் - தெய்வமுமாம். யாரை, ஐ : சாரியை. எழுதரு - மிகுகின்ற; தரு துணைவினை. (எஉ)

பாயிருட் படலங் கீறிப் பல்கதிர் பரப்பித் தோன்றுஞ்
சேயிளம் பரிதி வானோ ரனையராய்ச் சிறந்த காட்சி
மேயின பாக ரோடும் விலாழியாற் பரவை செய்யும்
வாயின வாகி வந்த மாயவாம் பரிக ளெல்லாம்.

(இ - ள்.) மாய வாம்பரிகள் எல்லாம் - மாயமாகிய தாவுங் குதிரைகள் அனைத்தும், பாய் இருள் படலம் கீறி - பரந்த இருட் படலத்தைக்கிழித்து, பல் கதிர் பரப்பித்தோன்றும் - பலகிரணங்களைப் பரப்பித் தோன்றுகின்ற, சேய் இளம் பரிதி வானோர் அனையராய் - சிவந்த இளஞ்சூரியர்களை ஒத்தவராய், சிறந்த காட்சி மேயின பாகரோடும் - சிறந்த தோற்றத்தைப் பொருந்தின பாகர்களோடும், விலாழியால் பரவை செய்யும் வாயினவாகி வந்த - விலாழியாற் கடலினைச் செய்யும் வாயினையுடையனவாகி வந்தன.

ஆதித்தர் பன்னிருவராகலின் 'பரிதி வானோர்' என்றார். விலாழி யாற் பரவை செய்யும் என்றமையால் பரிகளெல்லாம் கடலினலை போன்றன எனவும், பாகரெல்லாரும் கடலிலுதித்த ஆதித்தர்கள் போன்றனர் எனவும் கொள்க. வந்த, அன் பெறாத முற்று. (எங)

வண்டுழ தாரி னான்றன் மரபின்மன் னவரு முன்னாட்
கண்டறி யாத காட்சிக் கவனவாம் பரியை நோக்கி
அண்டர்நா யகன்போ னுமு மாயிரங் கண்பெற் றாலும்
உண்டமை யாவென் றுள்ளக் குறிப்போடு முவகை பூத்தான்.

(இ - ள்.) வண்டு உழு தாரினான்-வண்டுகள் கிண்டுகின்ற வேப்ப மலர் மாலையை யணிந்த பாண்டியன், தன் மரபின் மன்னவரும் முன்னாள்

கண்டறியாத - தன் மரபிற்போந்த மன்னவர்களும் முற்காலத்துப் பார்த்தறியாத, காட்சி கவன வாம்பரியை நோக்கி - தோற்றத்தையும் விரைந்த செலவினையுமுடைய தாவுங் குதிரைகளைப் பார்த்து, நாமும் அண்டர் நாயகன் போல் ஆயிரம் கண்பெற்றாலும் - நாமும் தேவேந்திரனைப் போல ஆயிரம் விழிகளைப் பெற்றாலும், உண்டு அமையா என்ற உள்ளக்குறிப்பொடும் - (அவற்றாலும் இவற்றின் பொலிவு) பருகி முடியா என்ற மனக்குறிப்புடன், உவகை பூத்தான் - மகிழ்ந்தான்.

கவனம் - வேகம். அண்டர் - தேவர். நோக்குதலை உண்டலாகக் கூறினார்:

"உண்டற் குரிய வல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலு மரபே"

என்பது தொல்காப்பியம்; இனி, இதனை "வாரா மரபின வரக் கூறுதலும்" என்னும் எச்சவியற் சூத்திரத்து ஒன்றெனக் முடித்தலாற் கொள்ளலுமாம். (எ௬)

தானென மகிழ்ச்சி யென்னத் தலைதடு மாறி வேந்தன்
மானவெம் பரிமேல் வந்த வயவரை வியந்து மிக்கார்
ஆனவ ரிவருள் யாரென் றமைச்சரை வினவ வையா
யானது வறியே னென்றார் யாவையு மறிய* வல்லார்.

(இ - ள்.) வேந்தன் - பாண்டியன், தான் என மகிழ்ச்சி என்னத் தலைதடுமாறி - தான் என்றும் மகிழ்ச்சி என்றும் பாகுபடுத்து உணர முடியாமல் மயங்கி, மான வெம்பரி மேல் வந்த வயவரை வியந்து - பெருமை பொருந்திய வெய்ய குதிரைகளின் மேல் ஏறிவந்த வீரரை நோக்கி வியப்புற்று, இவருள் மிக்கார் ஆனவர் யார் என்று அமைச்சரை வினவ-இவருள்ளே தலைவர் யார் என்று மந்திரியாராகிய அடிகளை வினவ, யாவையும் அறியவல்லார் - அனைத்தையும் அறிய வல்ல அவ்வடிகள், ஐயா - ஐயனே, யான் அது அறியேன் என்றார் - யானும் அதனை அறியேனென்று கூறினர்.

தான் வேறு மகிழ்ச்சி வேறு என்னுமாறின்றி மகிழ்ச்சியே வடிவாயினன் என்பார் 'தானென மகிழ்ச்சியென்னத் தலைதடுமாறி' என்றார். ஆனவர்: எழுவாய்ச் சொல். எப்பொருளை அறிந்தால் மற்றெல்லாம் அறிந்தனவாகுமோ அப்பரம் பொருளையே அறியவல்லாராகலின் 'யாவையு மறிய வல்லார்' என்றார். (எ௭)

எண்சீரடியாசிரிய விருத்தம்

அண்டமேலா மாதார மாகத் தாங்கு
　　மானந்தத் தனிச்சோதி யண்டந் தூங்குஞ்
சண்டமறைப் பரிதனக்கா தார மாகித்
　　தரிக்கவொரு காலத்து மசைவி லாத

(பா - ம்.) *யாரையு மறிய.

புண்டரிகத் தாளசையப் பாச நீக்கும்
புனைகரத்தாற் பரிபூண்ட பாசம் பற்றிக்
கொண்டரச னெதிர்போந்து மன்னா வெங்கள்
குதிரையேற் றஞ்சிறிது காண்டி யென்றார்.

(இ - ள்.) அண்டம் எலாம் ஆதாரமாகத் தாங்கும் - அண்டங்களனைத்தையும் ஆதாரமாக நின்று தாங்கியருளும், ஆனந்தத் தனிச்சோதி-இன்பவடிவாகிய ஒப்பற்ற ஒளிமயமாகிய இறைவர், அண்டம் தாங்கும் சண்ட மறைப்பரி - அண்டத்தால் தாங்கப்படும் வேகமுடைய வேதப் புரவி, தனக்கு ஆதாரமாகித் தரிக்க - தமக்கு ஆதாரமாகித் தம்மைத் தாங்கா நிற்க, ஒரு காலத்தும் அசைவு இலாத புண்டரிகத்தாள் அசைய - ஒரு காலத்தினும் அசையாத தாமரை மலர் போலுந் திருவடிகள் அசைய, பாசம் நீக்கும் புனைகரத்தால் - உயிர்களின் பாசத்தைப் போக்கும் அழகிய திருக்கையினால், பரி பூண்ட பாசம் பற்றிக்கொண்டு - குதிரைவாயிற் பூண்ட பாசத்தைப் பிடித்துக்கொண்டு, அரசன் எதிர் போந்து - அரசனெதிரே போய், மன்னா - மன்னனே, எங்கள் குதிரை ஏற்றம் சிறிது காண்டி என்றார் - எங்கள் குதிரை ஏற்றத்தினைச் சிறிது காண்பாயாக என்று கூறியருளினர்.

அண்டங்களுக்கெல்லாம் சார்பாகித் தனக்கொரு சார்பின்றி நிராதாரனாயுள்ள இறைவன் அண்டத்தினாலும் தரிக்கப்படும் ஆதேயமாகிய வேதப்பரி தனக்கு ஆதாரமாகி நின்று தாங்குமாறு வந்தான் என அவனது அருள் விளையாடலை வியந்து கூறியவாறு. சண்டம் - வலிமை, வேகம். இறைவன் "போக்கும் வரவும் புணர்வும் இலான்" ஆகையால் 'ஒரு காலத்தும் அசை விலாத புண்டரிகத்தாள்' என்றார். பாசம் நீக்கும் கரத்தாற் பாசம்பற்றி என நயம்படக் கூறினார். (எசு)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

இசைத்தவைங் கதியுஞ் சாரி யொன்பதிற் றிரட்டி யான*
விசித்திர விகற்புந் தோன்ற வேந்தனு மவையு மன்றித்
திசைப்புலத் தவரு மேலைத் தேவரு மருள மேற்கொண்
டசைத்தன ரசைவற் றெல்லா வுலகமு மசைக்க வல்லார்.

(இ - ள்.) இசைத்த ஐங்கதியும் - (பரிநூலிற்) கூறிய மல்லகதி முதலிய ஐந்து கதிகளும், ஒன்பதிற்று இரட்டியான விசித்திர சாரி விகற்பும் - பதினெட்டாகிய விசித்திர நடை விகற்பங்களும், தோன்ற - வெளிப்பட, வேந்தனும் அவையும் அன்றி - மன்னனும் அவன் அவையிலுள்ளாரு மல்லாமல், திசைப்புலத்தவரும் மேலைத்தேவரும் மருள - திக்குப்பாலகரும் விண்ணுலகிலுள்ள தேவர்களுங் கண்டு மருளுமாறு, அசைவு அற்று எல்லா உலகமும் அசைக்கவல்லார் - தான் அசைதலின்றி உலகமனைத்தையும் அசைக்க வல்லராகிய அவ்விறைவர், மேற்கொண்டு அசைத்தனர் - அக்குதிரைமேல் இவர்ந்தருளி அதனை நடத்திக் காட்டினர்.

(பா - ம்.) *இரட்டியாதி.

ஐங்கதி - மல்லகதி, மயூரகதி, வானரகதி, வல்லியகதி, சரகதி என்பன; இவற்றுள் சரகதி நீக்கி இடபகதி கொள்வாரும், பிறவாறு வேறுபட வுரைப்பாருமுளர். சாரி - குதிரை நடை. சுக்கிரநீதி இரண்டாம் அத்தியாயத்தில் குதிரை நடை பதினொரு வகையாகவும், நான்காம் அத்தியாயத்தில் ஆறுவகையாகவும் கூறப்பட்டுள. இவ்வாசிரியர் பதினெட்டாகக் கூறுகின்றனர். தொகுத்தும்விரித்தும் கூறு முறைபற்றி நூல்கடோறும் இங்ஙனம்வேறுபடுவன பலவுள. திசைப் புலத்தவர் - எண்டிக்கிலுள்ளாரும் என்றுமாம். தாம் அசைவற இருந்தே எல்லாவுலகமும் அசைக்க வல்லவர் தாமும் அசைந்து ஒரு குதிரையை அசைப்பது வியப்பின்றென்பார் 'மேற்கொண் டசைத்தன ரசைவற் றெல்லா வுலகமு மசைக்க வல்லார்' என்றார். (எஎ)

ஆண்டகை யவர்போ னின்ற வடுகணத் தவருந்தத்தங்
காண்டகு புரவி யெல்லா நடத்தினர் காட்டக் கண்டு
பாண்டிய னவரை நோக்கி நுங்களிற் பதியாந் தன்மை
பூண்டவர் யாவ ரென்று னிவரென்றார் புரவிவீரர்.

(இ - ள்.) ஆண்தகை அவர் போல் - ஆண்டன்மையையுடைய அவ்விறைவர் நடத்திக் காட்டினமைபோல், நின்ற அடுகணத்தவரும் - சூழ்ந்து நின்ற வெற்றி மிக்க சிவகணத்தவராகிய குதிரை வீரரும், தத்தம் காண் தகு புரவி எல்லாம் நடத்தினர் காட்ட - தங்கள் தங்கள் அழகிய குதிரைகள் அனைத்தையும் நடத்திக்காட்ட, பாண்டியன் கண்டு - பாண்டியன் அதனைக் கண்டு, அவரை நோக்கி - அவர்களைப் பார்த்து, நுங்களில் பதியாம் தன்மை பூண்டவர் யாவர் என்றான் - உங்களுள்ளே தலைமைத் தன்மை பூண்டவர் யாவர் என்று வினவினன்; புரவிவீரர் இவர் என்றார் - குதிரைவீரர் இவரென்று காட்டினர்.

காண்டகு - காணத்தக்க; அழகு பொருந்திய. நடத்தினர் - முற்றெச்சம். (எஅ)

சுட்டுதற் கரிய சோதி சுருதிவாம் புரவி யோடு
மட்டவிழ் தாரி னான்முன் வருதலுங் கருணை நாட்டம்
பட்டுள மயங்கித் தன்னை மறந்தெழீஇப் பாண்டி வேந்தன்
தட்டவிழ் கமலச் செங்கை தலைமிசைக் கூப்பி நின்றான்.

(இ - ள்.) சுட்டுதற்கு அரிய சோதி - சுட்டுதற்கரிய பரஞ்சோதியாகிய இறைவர், வாம்சுருதிப் புரவியோடு - தாவுகின்ற வேதப் பரியுடன், மட்டு அவிழ் தாரினான் முன்வருதலும் - மணம் விரிந்த வேப்பமலர் மாலையையணிந்த பாண்டியன் முன்வந்த வளவில், கருணை நாட்டம்பட்டு - அவரது அருட் பார்வை படுதலால், உளம் மயங்கி - மனமயங்கி, தன்னை மறந்து எழீஇ - தன்னை மறந்து எழுந்து, பாண்டி வேந்தன் - அப்பாண்டி மன்னன், தட்டு அவிழ் கமலச் செங்கை - தட்டம் போல் மலர்ந்த தாமரை மலர்போன்ற சிவந்த கைகளை, தலைமிசைக் கூப்பி நின்றான் - தலையின்மேற் குவித்து நின்றனன்.

சுட்டுதற்கரிய - மாற்றம் மனம் கழிய நின்ற; சுட்டறிவைக் கடந்துநின்ற; இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்றியம்ப வொண்ணாத. பட்டு - படுதலால்: எச்சத்திரிபு. தட்டு - தட்டம், வட்டில்; இதழுமாம். தான் அரசனென்பதனை மறந்து கூப்பி நின்றான். (எகூ)

பின்னவ னாணை யாலே மறைப்புண்ட பெருநீர்க் கூடன்
மன்னவ னறிவு தோன்ற வின்றொரு வயமா வீரன்
தன்னைநாங் கண்டெ ழுந்து தடங்கரங் கூப்பி நின்ற
தென்னெனத் தவிசின் மீள விருந்திட நாணி நின்றான்.

(இ - ள்.) பின் அவன் ஆணையால் மறைப்புண்ட - பின் அவ்விறைவன் ஆணையினால் மறைக்கப்பட்ட, பெருநீர்க்கூடல் மன்னவன் - வையையாறு சூழ்ந்த நான் மாடக் கூடலின் மன்னவனாகிய பாண்டியன், அறிவு தோன்ற - தன்னறிவு தோன்ற. இன்று - இப்பொழுது, ஒரு வயமாவீரன் தன்னைக் கண்டு - ஒரு வெற்றி மிக்க குதிரை வீரனைப் பார்த்து, நாம் எழுந்து தடம் கரம் கூப்பி நின்றது என்னென - நாம் சிம்மாசனத்தினின்றும் எழுந்து பெரிய கைகளைத் தலை மேற் குவித்து வணங்கி நின்றது என்னே என்று கருதி, மீள-மீண்டும், தவிசின் இருந்திட நாணி நின்றான் - அவ்வாதனத்தின்கண் அமருவதற்கு வெள்கி நின்றனன்.

மறைப்புண்ட - பழைய அறிவு மறைக்கப்பெற்றுத் தன்னை மறந்திருந்த. பெருநீர்: ஆகுபெயர். ஆணையாலே அறிவு தோன்ற என்க. அறிவு - பழைய பாச அறிவு. (அ0)

நிற்கின்றான் முகத்தை நோக்கி நேர்நின்ற மறைமா வீரர்
பொற்குன்றம் புயத்தா யுன்றன் பொருளெலாங் கொண்டு போந்துன்
சொற்குன்றா வமைச்சன் றானே நமக்குநஞ் சூழ னீங்கா
மற்குன்றா நமர்க்கு மார வழங்கினான் வழங்க லாலே.

(இ - ள்.) நிற்கின்றான் முகத்தை நோக்கி - அங்ஙனம் நிற்கும் பாண்டியன் முகத்தைப் பார்த்து, நேர் நின்ற மறைமா வீரர் - அவனெதிரே நின்ற வேதப் பரியினையுடைய வீரர், பொன்குன்று ஆம் புயத்தாய் - பொன்மலைபோலுந் தோளையுடையாய், உன்றன் பொருள் எலாம் கொண்டுபோந்து - உன்றன் பொருள் எலாம் கொண்டு வந்து, உன்சொல் குன்றா அமைச்சன் - உனது சொல்லைக் கடவாத அமைச்சனாகிய வாதவூரன், தானே - தானாகவே, நமக்கும் - எமக்கும், நம் சூழல் நீங்கா மல் குன்றா நமர்க்கும் - எமது அருகினின்றும் நீங்காத வலிகுறையாத பரிசனங்கட்கும், ஆர வழங்கினான் - தெவிட்டக் கொடுத்தனன்; வழங்கலால் - அங்ஙனம் கொடுத்தலினால்.

மறைமாவீரர் என்பது மேல் 'பரிவில வழக்கி தென்றார்' என்பது கொண்டு முடியும். உன் சொல் குன்றா அமைச்சன் என்பதற்கு உனது புகழ் குன்றாமைக்குக் காரணமாகிய அமைச்சன் என்றும் பொருள்

கொள்க. குதிரை வீரர்க்கும் அடியார்க்கும் பொருந்துமாறு 'நம் சூழல் நீங்கா நமர்' என்றார். (அக)

வானவர் தமக்கே யன்றி மனிதருக் கிசையத் தக்க
வானவன் றறிஞ ரிட்ட விலைவரம் பகன்ற நூலின்
மானமுள் ளனவாய் நல்ல வாசிக ளுனக்கு வந்த
ஊனமில் பரிமா விற்கும் வாணிக முரைப்பக் கேட்டி.

(இ - ள்.) வானவர் தமக்கே அன்றி - தேவர்களுக்கு இசைவதே யல்லாமல், மனிதருக்கு இசையத்தக்கவான அன்று - மக்களுக்கு இசையத்தக்கனவல்ல; அறிஞர் இட்டவிலை வரம்பு அகன்ற - பரிநூற் புலவர் மதிக்கும் விலையின் எல்லையைக் கடந்தன; நூலின் மானம் உள்ளனவாய் - பரிநூலிற் கூறும் பெருமை உள்ளனவாய், நல்ல வாசிகள் உனக்கு வந்த - நன்மையமைந்த குதிரைகள் உனக்கு வந்தன; ஊனம் இல் பரிமா விற்கும் வாணிகம் உரைப்பக் கேட்டி - குற்றமில்லாத குதிரைகளை விற்கும் வாணிகமுறையினைச் சொல்லக் கேட்பாயாக.

மனிதருக்கிசையத்தக்கன வல்ல, அறிஞரிட்ட விலைவரம்பகன்றன என்பன அவற்றைப் புகழ்ந்துரைப்பன வன்றி, உண்மையைக் குறிப் பிடுவன வாதலும் காண்க. இசையத்தக்கவல்ல, விலைவரம்பகன்றன அத்தன்மையவான நல்ல வாசிகள் என்க. அகன்ற, வந்த என்பன அன்பெறாத பலவின்பால் முற்றுக்கள். (அஉ)

இன்னவாம் பரிக ளென்பா லின்றுநீ கயிறு மாறி
நின்னவாக் கொள்ளு நீரா னின்னவாம் பரியே நாளை
என்னவா யிருந்த வேனு மெனக்குமுன் றனக்குங் கொண்டு
மன்னவா கரும மில்லை பரிவிலை வழக்கீ தென்றார்.

(இ - ள்.) மன்னவா - மன்னனே, இன்ன வாம் பரிகள் - இந்தத் தாவுங் குதிரைகளை, இன்று நீ என்பால் - இப்பொழுது நீ என் னிடத்தில், கயிறுமாறி நின்னவாக் கொள்ளும் நீரால் - கயிறுமாறி நின்னுடையனவாக ஏற்றுக்கொள்ளு முறையினால், பரி நின்னவே ஆம் - இக்குதிரைகள் நின்னுடையனவே யாகும்; நாளை என்னவாய் இருந்த வேனும் - (அங்ஙனம் ஆதலினால்) நாளை இவை என்ன தன்மையை அடைந்தனவாயினும், எனக்கும் உன்தனக்கும் - எனக்கும் உனக்கும், கொண்டு - இது பற்றி, கருமம் இல்லை - யாதொரு வழக்குமில்லை; பரிவிலை வழக்கு ஈது என்றார் - குதிரை வியாபார முறைமை இது வாகும் என்று கூறியருளினார்.

இன்ன ஆம் பரிகள் எனப் பிரித்து இத்தன்மையனவாகிய புரவிகள் என்றும் பொருள்கொள்க. கயிறுமாறுதல், மாடு, குதிரை முதலியன வாங்குவோர் அவை தமக்குரிமையானமைக்கு அடையாளமாக வேறு கயிறு பூட்டிக் கொள்ளுதல். இது கொண்டு என வருவித்துரைக்க. (அங)

அப்போழ தரசன் றானு மகமகிழ்ந் ததற்கு நேர்ந்தெம்
மெய்ப்புக ழமைச்சர் தம்மின் மேம்படு வாத வூரர்
ஒப்பருந் திறத்த ராகி யும்மிடை நட்பான் மிக்க
துப்புர வுடைய ராஞ ரெனநனி சொல்லி ஞனே.

(இ - ள்.) அப்பொழுது அரசன் தானும் அகமகிழ்ந்து - அது போது மன்னனும் மனமகிழ்ந்து, அதற்கு நேர்ந்து - அதற்கு உடன்பட்டு, எம் மெய்ப்புகழ் அமைச்சர் தம்மில் - எமது உண்மைப்புகழினை யுடைய அமைச்சருள், மேம்படு வாதவூரர் - சிறப்பெய்திய திருவாதவூரர், ஒப்பு அருந் திறத்தராகி - ஒப்பற்ற திறமுடையராய், உம்மிடை நட்பால் - உம்மிடத்துப்பூண்ட நட்பினுல், மிக்க துப்புரவு உடையரானர் என - மிக்க தூய்மையுடையவரானுரென்று, நனி சொல்லினன் - மிகப் பாராட்டிக் கூறினன்.

துப்புரவு - தூய்மை. ஒழுங்கு. நனிசொல்லினன் - மிகப் பாராட்டினன். (அச)

உரகத வாரந் தோற்று துயர்மறைப் பரிமேல் வந்தார்
மரகத நிறத்து நிம்ப மாலைதாழ் மார்பி ஞற்குக்
குரகதங் கயிறு மாறிக் கோடுப்பவர் போதுமை யாய*
துரகத விலக்க ணங்கள் சோல்லுவான் றேடங்கி ஞரே.

(இ - ள்.) உரகத ஆரம் தோற்றுது - பாம்பணியைக் காட்டாமல் மறைத்து, உயர் மறைப் பரிமேல் வந்தார் - உயர்ந்த வேதக்குதிரை மேல் வந்த இறைவர், மரகத நிறத்து நிம்பமாலை தாழ் மார்பினற்கு - மரகதம் போன்ற நிறத்தினையுடைய வேப்ப மலர்மாலை தொங்கும் மார்பினையுடைய பாண்டியனுக்கு, குரகதம் கயிறுமாறிக் கொடுப்பவர் - குதிரைகளைக் கயிறுமாறிக் கொடுக்கலுறுவார், பொதுமையாய துரகத இலக்கணங்கள் - பொதுவாகிய குதிரை இலக்கணங்களை, சொல்லுவான் தொடங்கினர் - சொல்லத் தொடங்கினர்.

உரகதம் - பாம்பு; மார்பால் ஊர்வது என்னும் பொருட்டு. வந்தார், பெயர். கொடுப்பவர் - கொடாநின்றவர். (அரு)

காயும்வேன் மன்ன வோரிக் கடும்பரி யமையம் வந்தான்
ஞாயிலுந் தாண்டிச் சேல்லு நாட்டமு நுழையாச் சால
வாயிலு நுழையுங் கண்ட வேளியேலாம் வழியாச் சேல்லுந்
தீயவேம் பசிவந் துற்றுற் றின்ஞத வேனினுந் தின்னும்.

(இ - ள்.) காயும்வேல் மன்ன - பகைவரைச் சினக்கும் வேற்படையையுடைய வேந்தனே, ஓர் இக்கடும்பரி - ஒப்பற்ற இந்த வேகமுடைய குதிரைகள், அமையம் வந்தால் - போர் புரிதற்குரிய சமையம் நேரின், ஞாயிலும் தாண்டிச் செல்லும் - மதிலுறுப்பையும் தாவிச்

(பா - ம்.) *பொதுமைத்தாய.

செல்லும்; நாட்டமும் நுழையாச் சால வாயிலும் நுழையும் - பார்வையும் நுழையாத பலகணி வாயிலிலும் நுழைந்து செல்லும்; கண்ட வெளி எலாம் வழியாச் செல்லும் - பார்த்த வெளிகளனைத்தையும் வழியாகக் கொண்டு செல்லும்; தீய வெம்பசி வந்துற்றால் - மிகக் கொடியபசி வந்துற்றால், தின்னாத எனினும் தின்னும் - தின்னப் படாத வைக்கோல் முதலியவற்றையுந் தின்னும்.

ஓர் - அறிவாயாக என்றுமாம். ஓரியாகிய பரி என உண்மை புலப்படுத்துரைக்கும் நயம் பாராட்டற்பாலது; ஓரி - நரி. ஞாயில் - சூட்டு என்னும் மதிலுறுப்பு. நரியாதற்கேற்ப, ஞாயிலும் என்பதற்கு நாயைக் காட்டிலும் என்னும் பொருளும், சாலவாயில் என்பதற்கு வலையின் துவாரம், மனையின் நீர் கழிவாயில் என்னும் பொருள்களும் கொள்ளுதலும் பொருந்தும். காடு கரை முதலிய வெல்லாம் வழியாகச் செல்லும் என்றும், பிணம் முதலியனவும் தின்னும் என்றும் நரிக் கேற்பப் பொருள் கொள்க. தின்னாத - தின்னப்படாதன: வினையாலணையும் பெயர். பொதுவான குதிரையிலக்கணங்கள் சொல்லத் தொடங்கினவர் இடையே தாம் கொணர்ந்த குதிரைகளின் தொழிற் பண்புகள் சில கூறினர். (௬௬)

[கலிவிருத்தம்]

போருவில்சீ ரிலக்கணப் புரவி யொன்றுதான்
ஒருவன திடைவதிந் துறையி னொல்லென
மருவுறுந் திருமகண் மல்லற் செல்வமும்
பெருகுறுங் கீர்த்திகள் பல்கும் பெற்றியால்.

(இ - ள்.) பொருவு இல் சீர் இலக்கணப்புரவி ஒன்று தான் - ஒப்பில்லாத சிறந்த இலக்கணம் நிறைந்த ஒரு குதிரை, ஒருவனது இடை வதிந்து உறையின் - ஒருவனிடத்துத் தங்கி உறையுமாயின், ஒல்லெனத் திருமகள் மருவுறும் - விரைந்து திருமகள் வந்து அவனைப் பொருந்துவாள்; மல்லல் செல்வமும் பெருகுறும் - வளப்பமிக்க செல்வமும் பெருகும்; கீர்த்திகள் பெற்றியால் பல்கும் - புகழ்களும் பல திறத்தால் மிகா நிற்கும். (௬௭)

ஒல்லெனா: விரைவுக் குறிப்பு.

நெய்த்திடு மாந்தளிர் நிறத்த நாவின
வைத்திடு குளம்புக ளுயர்ந்த வார்ந்துநேர்
ஒத்திடு மெயிற்றின வுரமுங் கண்டமும்
பைத்திடு மராப்படம் போன்ற பாடலம்.

(இ - ள்.) நெய்த்திடும் மாந்தளிர் நிறத்த நாவின - பசையினையுடைய மாந்தளிர் போன்ற நிறத்தினையுடைய நாவினையுடையனவாய், வைத்திடு குளம்புகள் உயர்ந்த - நிலத்தில் வைக்குங் குளம்புகள் உயர்ந்தனவாய், வார்ந்து நேர் ஒத்திடும் எயிற்றின - நீண்டு

தம்முளொத்த பற்களை யுடையனவாய், உரமும் கண்டமும் பைத்திடும் அராப்படம் போன்ற - மார்பும் மிடறும் பரந்த பாம்பின் படம் போன்றனவாய குதிரைகள், பாடலம் - பாடலமெனப் பெயர் பெறும்.

நாவினவும் உயர்ந்தனவும் எயிற்றினவும் போன்றனவும் ஆகிய குதிரைகள் என விரித்துரைத்தலுமாம். குளம்புகள் உயர்ந்த, உரமும் கண்டமும் அராப்படம் போன்ற எனச் சினை வினைகள் முதலோடு பொருந்தின. இது பாடலம் என்னும் குதிரையின் இலக்கணம் கூறிற்று. (அஅ)

அகலிய நுதலின வாய்ந்த குஞ்சிபோல்
நிகரறு கோய்யுளை நிறமோன் றுயின
புகரறு கோணமூன் றுகிப் பொற்புறு
முகமுடை யனவய மோய்கோள் கோடகம்.

(இ - ள்.) அகலிய நுதலின - அகன்ற நெற்றியை யுடையனவாய், ஆய்ந்த குஞ்சிபோல் நிகர் அறு கொய்யுளை - சிக்கறுத்த மயிர் போல (வாய்ந்து) ஒப்பற்ற புறமயிர், நிறம் ஒன்று ஆயின - ஒரே நிறம் வாய்ந்தனவாய், புகர் அறு கோணம் மூன்று ஆகி - குற்றமற்ற மூன்று கோணமுடையதாய், பொற்பு உறு முகம் உடையன - அழகு பொருந்திய முகத்தை யுடையனவாய குதிரைகள், வயம் மொய் கொள்கோடகம் - வெற்றியும் வலியுமுடைய கோடகம் எனப்பெயர் பெறும்.

கொய் உளை - கத்தரித்த பிடரிமயிர். முக்கோணமாகிப் பொற்புறும் முகம் என்க. மொய் - வலிமை. இது கோடகம் என்னும் குதிரையின் இலக்கணம் கூறிற்று. (அகூ)

முட்டிய சமரிடை முகத்தில் வாளினுல்
வெட்டினு மெதிர்ப்பதாய்க் குரங்கு வேங்கைதோல்
பட்டிமை நரியரி சரபம் பாய்முயல்
எட்டிய கதியின விவுளி யென்பவே.

(இ - ள்.) முட்டிய சமரிடை - நெருங்கிய போரின்கண், முகத்தில் வாளினுல் வெட்டினும் - தம் முகத்தில் வாளினுல் வெட்டினுலும், எதிர்ப்பதாய் - எதிர்த்துப் போர் புரிவதாய், குரங்கு வேங்கை தோல் - குரங்கும் புலியும் யானையும், பட்டிமை நரி அரிசரபம் பாய்முயல் - வஞ்சகமுள்ள நரியும் சிங்கமும் சரபப்புள்ளும் பாய்கின்ற முயலுமாகிய இவற்றின், எட்டிய கதியின - மிக்க கதியினையுடைய குதிரைகளை, இவுளி என்ப - இவுளி என்று கூறுவர்.

தோல் - யானை. பட்டிமை - படிறு. சரபம் - சிம்புள். எதிர்ப்பதாய் கதியின என ஒருமையும் பன்மையும் விரவிவந்தன. இஃது இவுளி என்னும் குதிரையின் இலக்கணம் கூறிற்று. (கூ0)

உன்னத நீளமுண் டாகிச் சங்குவெண்
கன்னலின் வாலிய விலாழி கால்வதாய்ப்
பின்னமா கியதனி வன்னம் பெற்றுமை
வன்னமு முடையது வன்னி யாவதே.

(இ - ள்.) உன்னதம் நீளம் உண்டாகி - உயரமும் நீளமு முடையதாய், சங்கு வெண் கன்னலின் - சங்கும் வெள்ளைச் சருக்கரையும் போல, வாலிய விலாழி கால்வதாய் - வெண்மையாகிய வாய் நுரையைக் கக்குவதாய், தனிபின்னமாகிய வன்னம் பெற்று - ஒப்பற்ற பிங்கல நிறம் பெற்று, மைவன்னமும் உடையது - அதனோடு கருநிறமு முடைய குதிரை, வன்னியாவது - வன்னி என்று சொல்லப்படுவதாகும்.

பொருந்திய உயரமும் நீளமும் உடையதாகி என்க. இது வன்னி என்னும் குதிரையின் இலக்கணம் கூறிற்று. (கூக)

திணிதரு கழுத்தினிற் சிறந்த தெய்வத
மணியுள தாகியெண் மங்க லத்ததாய்
அணிதரு பஞ்சகல் யாண முள்ளதாய்க்
குணிதரு நீரது குதிரை யாவதே.

(இ - ள்.) திணிதரு கழுத்தினில் - திண்ணிய கழுத்தில், சிறந்த தெய்வதமணி உளதாகி - சிறந்த தெய்வமணியுள்ளதாய், எண்மங்கலத்ததாய் - அட்டமங்கல முடையதாய், அணிதரு பஞ்சகல்யாணம் உள்ளதாய் - அழகிய பஞ்சகல்யாணமுள்ளதாய், குணிதரு நீரது - இங்ஙனம் வரையறுக்கப்பட்ட பெற்றியையுடைய பரி, குதிரை ஆவது - குதிரை என்னும் பெயருடையதாகும்.

தெய்வமணி - கழுத்தில் வலமாகச் சுழித்திருக்கும் சுழி; இதனை இப்படலத்து கககக-ஆம் செய்யுளிலும், எண்மங்கலம், பஞ்சகல்யாணம் என்பவற்றின் இலக்கணங்களை கக0-ஆம் செய்யுளிலும் காண்க. குதிரை யென்பது ஒரு வகைக்குச் சிறப்புப் பெயருமாயிற்று. இது குதிரை என்னும் குதிரையின் இலக்கணம் கூறிற்று. (கூஉ)

குங்குமங் கருப்புரங் கொழுந்திண் காரகிற்
பங்கமான் மதமெனக் கமழும் பாலதாய்ச்
சங்கமு மேகமுஞ் சரப முங்கொடுஞ்
சிங்கமும் போலொலி செய்வ தாம்பரி.

(இ - ள்.) குங்குமம் கருப்புரம் கொழுந் திண்கார் அகிற்பங்கம் மான்மதம் என - குங்குமமும் கருப்பூரமும் கொழுவிய திண்ணிய கரிய அகிற்குழம்பும் மான்மதமுமாகிய இவற்றின் மணமென, கமழும் பாலதாய் - நறுமணங்கமழும் பான்மையை யுடையதாய், சங்கமும் மேகமும் சரபமும் - சங்கும் முகிலும் சிம்புட் புள்ளுமா - கொடுஞ்

சிங்கமும்போல் ஒலிசெய்வது - கொடிய சிங்கமுமாகிய இவற்றைப் போல் ஒலிக்குங் குதிரை, பரி ஆம் - பரி என்னும் பெயருடையதாகும்.

பங்கம் - சேறு, மான்மதம் - கத்தூரி. இது பரி என்னும் குதிரையின் இலக்கணம் கூறிற்று. (௬௩)

நாலுகால் களுங்கடைந் தெடுத்து நாட்டினாற்
போல்வதாய்க் கோட்புறும் போது சுற்றுதீக்
கோலையோப் பாகிமேற் கொண்ட சேவகன்
காலினு ளடங்குவ தாகுங் கந்துகம்.

(இ - ள்.) நாலுகால்களும் கடைந்து எடுத்து நாட்டினால் போல்வதாய்-நான்கு கால்களும் கடைந்து எடுத்து நாட்டிவைத்தாற் போல்வதாய், கொட்புறும் போது - சுழலும் போதில், சுற்று தீக்கோலை ஒப்பாகி - கொள்ளிவட்டம் ஒப்பதாகி, மேற்கொண்ட சேவகன் காலினுள் அடங்குவது - ஏறிய வீரனுடைய காலினுள் அடங்கும் குதிரை, கந்துகம் ஆகும் - கந்துகம் என்னும் பெயருடையதாகும்.

கொட்புறல் - வட்டமாகச் சாரிவருதல். விரைவு மிகுதியால் குதிரையின் வடிவு புலப்படாது வட்டவடிவே தோன்றுதலின் சுற்று தீக்கோலை உவமங் கூறினார். ஒப்பாகி - ஒப்பதாகி, இது கந்துகம் என்னும் குதிரையின் இலக்கணம் கூறிற்று. (௬௪)

அரணமுந் துருக்கமு மாறுந் தாண்டிடும்
முரணின வாகியிம்* முற்றி லக்கணப்
புரணமேல் லாநிறை புரவி போந்தன
இரணவே லாய்வய தெட்டுச் சென்றவால்.

(இ - ள்.) அரணமும் துருக்கமும் ஆறும் தாண்டிடும் முரணின வாகி - மதிலும் மலைமேற் கோட்டையும் நதியுமாகிய இவற்றைத் தாண்டிடும் வலியினையுடையனவாய், இம்முற்று இலக்கணப் புரணம் எல்லாம் நிறைபுரவி போந்தன - இம்முழு இலக்கணமும் ஒளியும் நிறைந்த குதிரைகள் வந்தன; இரண வேலாய் - பகைவரைப் புண் படுத்தும் வேற்படையேந்திய பாண்டியனே, வயது எட்டு சென்ற - இவைகள் எட்டு வயதாயின வாகும்.

துருக்கம்-கோட்டை; காடுமாம். இலக்கணமும் புரணமும் என்க. புரணம் - ஒளி; கதியுமாம். ஆல்: அசை. (௬௫)

பகைத்திற முருக்குமிப் பரிகண் மன்னநீ
உகைத்திடத் தக்கவென் றோதி வேதநூற்
சிகைத்தனிச் சேவகர் திரும்பித் தம்மனோர்
முகத்தினை நோக்கினர் மோய்த்த வீரரும்.

(பா - ம்.) *முரணது வாகி.

(இ - ள்.) பகைத்திறம் முருக்கும் இப்பரிகள் - வலிமிக்க பகைவர்களைக் கொல்லும் இக்குதிரைகள், மன்ன - வேந்தனே, நீ உகைத்திடத் தக்கவென்று ஓதி - நீ செலுத்தத் தக்கவை என்று சொல்லி, வேதநூல் சிகைத்தனிச் சேவகர் - மறைநூலின் முடிவாகிய உபநிடதத்தின் உட்பொருளாகிய இறைவர், தம்மனோர் முகத்தினைத் திரும்பி நோக்கினார் - தமது கணங்களின் முகத்தைத் திரும்பிப் பார்த்தனர்; மொய்த்த வீரரும் - சூழ்ந்துள்ள குதிரை வீரரும்.

வேதப் புரவியின்மீது வந்தமையுந் தோன்ற 'வேதநூற் சிகைத்தனிச் சேவகர்' என்றார். தம்மனோர் - தமர்; கணங்கள். (கூசு)

வாம்பரி மறைக்கெலாம் வரம்பு காட்டுவ
தாம்படி கண்டவ ரறிவும் பிற்படப்
போம்படி முடுக்கினார் புரவி யாவையும்
வேம்பணி தோளினன் வியப்பு மெய்தியே. *

(இ - ள்.) வாம்பரி மறைக்கு எலாம் வரம்பு காட்டுவதாம்படி - தாவுகின்ற குதிரைகளின் இலக்கணங்களைக் கூறும் பரிநூலனைத்திற்கும் எல்லை காட்டுவதாம்படி, கண்டவர் அறிவும் பிற்படப் போம்படி - கண்டவர்கள் மனமும் பின்னிடப்போமாறு, புரவி யாவையும் முடுக்கினார் - குதிரைகளனைத்தையும் விரையச் செலுத்தினார்கள்; வேம்பு அணி தோளினன் - வேப்பமலர் மாலையை யணிந்த தோளையுடைய பாண்டியன், வியப்பும் எய்தியே - மகிழ்வேயன்றி வியப்பு மெய்தி.

பரிமறை - புரவிநூல். அறிவு - ஈண்டு மனம். (கூஎ)

ஆத்தராய் மருங்குறை யமைச்சர் யாரையும்
பார்த்தசை யாமுடி யசைத்துப் பைப்பையப்
பூத்தவா ணகையொடு மகிழ்ச்சி பொங்கினன்
தீர்த்தனு நடத்தினன் றெய்வ மாவினை.

(இ - ள்.) ஆத்தராய் மருங்கு உறை அமைச்சர் யாரையும் பார்த்து - தனக்கு உறுதி சூழ்பவராய் அருகு சூழ்ந்த மந்திரிகளனைவரையும் நோக்கி, அசையா முடி அசைத்து - துளங்காத முடியினைத் துளக்கி, பைப்பைய பூத்தவாள் நகையொடு மகிழ்ச்சி பொங்கினன் - மெல்ல அரும்பிய ஒள்ளிய புன்னகையுடன் மகிழ்ச்சி கூர்ந்தனன்; தெய்வ மாவினை தீர்த்தனும் நடத்தினன் - தெய்வத்தன்மையையுடைய குதிரையை இறைவனும் நடத்தியருளினான்.

ஆத்தர் - ஆப்தர்; உறுதிநாடுவோர், பைப்பைய, விகாரம். தீர்த்தன் - தூயன். (கூஅ)

(பா - ம்.) *வியப்பு மெய்தியே. வியப்ப மெய்தினன்,

இருவகைச் சாரியு மெதிர்ந்து வட்டமாய்
வருவழி ஞெகிழிபோன் மறுகெ லாமொரு
துரகத மேநிலை நின்ற தோற்றமொத்
தொருவற நடத்தின ரொருக ணத்தினே.

(இ - ள்.) இருவகைச் சாரியும் எதிர்ந்து - இடசாரியும் வலசாரியு மாக எதிர்ந்து, ஞெகிழிபோல் வட்டமாய் வருவழி - கொள்ளி வட்டம் போல் வட்டமாக வருமிடத்து, மறுகு எலாம் ஒரு துரகதமே நிலை நின்ற தோற்றம் ஒத்து - வீதியனைத்தும் ஒரு குதிரையே நிலைத்து நின்ற தோற்றம் போன்று, ஒருவு அற - அத்தோற்றம் நீங்குதலில்லை யாக, ஒரு கணத்தின் நடத்தினர் - ஒரு கணப்பொழுதில் நடத்திக் காட்டினர்.

ஞெகிழி - கொள்ளி. (கக)

இந்நிலை யலமரு மிவுளி மேலொரு
மின்னிலை வேலினன் வினவத் தங்கையின்
மன்னிய கங்கணம் விடுத்து மாநகர்
தன்னிலை காட்டிய தன்மை யொத்தது.

(இ - ள்.) இந்நிலை அலமரும் இவுளி - இங்ஙனம் சுழலும் குதிரை யின் தன்மை, மேல் - முன்னாளில், ஒரு மின் இலை வேலினன் வினவ - மின்போன்ற தகட்டு வடிவினையுடைய வேற்படையேந்திய வங்கிய சேகரபாண்டியன் இரந்து கேட்க, தம் கையில் மன்னிய கங்கணம் விடுத்து - இறைவன் தமது திருக்கரத்தில் நிலை பெற்ற கங்கணமாகிய பாம்பினை விடுத்து, மாநகர் தன்நிலை காட்டிய தன்மை ஒத்தது - பெரிய நகரின் பழைய எல்லையாகிய நிலையினைக் காட்டிய தன்மையை ஒத்தது.

அலமரல் - சுழலல்; வட்டமாக வருதல். கங்கணம் விடுத்து நகர் எல்லை காட்டியதனைத் திருவாலவாயான படலத்திற் காண்க. (க00)

பன்னிற முடையவாம் பரியும் வீதியுட்
பின்னிய வாவெனப் பின்னி வட்டமாய்த்
தன்னிகர் மதுரையாந் தையல் கையணி
துன்னிய பன்மணித் தொடியும் போன்றவே.

(இ - ள்.) பல் நிறம் உடைய வாம் பரியும் - பல நிறங்களையுடைய தாவுங் குதிரைகளும், பின்னியவா என வீதியுள் வட்டமாய்ப் பின்னி - பின்னிவைத்தவாறு போல வீதியுள் வட்டமாகப் பின்னி, தன் நிகர் மதுரையாம் தையல் - தனக்குத்தானே ஒத்த மதுரையாகிய பெண், கை அணி - கையில் அணிந்த, பல் மணி துன்னிய தொடியும் போன்ற - பல மணிகள் பதித்த வளையையும் போன்றன,

வீதிகையாகவும், அதில் வட்டமாய் நின்ற பன்னிறக் குதிரைகள் பன்னிற மணி பதித்த வளையாகவும் தோன்றின. (கOக)

இந்திய னுதலினு ரிடித்த பொற்சுணஞ்
சிந்திய மறுகிடை நடக்குந் திண்பரிப்
பந்தியி னெழுந்ததூள் சுவணப் பாரின்மா
உந்திய வெழுந்தபொற் பூழி யொத்ததே.

(இ-ள்.) இந்து இயல் நுதலினர் - சந்திரனை ஒத்த நெற்றியை யுடைய பெண்கள், இடித்த பொற்சுணம் சிந்திய மறுகு இடை - இடித்த பொற்சுண்ணஞ் சிந்திய வீதியின்கண், நடக்கும் திண்பரி பந்தியின் எழுந்த தூள் - நடக்கின்ற திண்ணிய குதிரைகளின் வரிசை யால் எழுந்த தூள், சுவணப் பாரில் மா உந்திய எழுந்த-பொன்னுலகில் (உச்சைச்சிரவம் என்னும்)குதிரை செல்லுதலால் மேலெழுந்த, பொன்பூழி ஒத்தது - பொற்பராகத்தை ஒத்தது.

பார் - உலகமென்னும் பொருட்டு. உந்திய - உந்த: செய்யிய வென்னும் எச்சம். (கOஉ)

தேவரு மனிதருந் திருந்து கூடலார்
யாவரு முவப்புற விவுளி விட்டுமண்
காவலன் முன்குறீஇக் கருணை மாக்கடல்
மாவருந் திறனெலாம் வகுத்துத் தேற்றுமால்.

(இ-ள்.) தேவரும் மனிதரும் திருந்து கூடலார் யாவரும் - தேவர் களும் பிற நகரிலுள்ள மக்களும் கூடல் நகராருமாகிய அனைவரும், உவப்புற இவுளிவிட்டு - மகிழுமாறு குதிரையைச் செலுத்தி, கருணை மாக்கடல் - பெருங் கருணைக் கடலாகிய இறைவர், மண்காவலன் முன் குறீஇ - நிலவுலகைக் காப்பவனாகிய பாண்டியன் முன்சென்று, மாவரும் திறன் எலாம் வகுத்துத் தேற்றும் - குதிரைகள் வரும் வகை அனைத்தையும் வகுத்துத் தெரிவிப்பாராயினர்.

விட்டு - செலுத்தி. குறுகி என்பது விகாரமாயிற்று. (கOங)

(எழுசீரடி யாசிரிய விருத்தம்)

வளங்கோள் காம்போச மிப்பரி யிம்மா மந்தர மிந்தவாம் புரவி
விளங்கு காந்தார மிக்குரங் குளைவான் மீகமிக் கந்துகஞ் சிந்து
துளங்கில் பாஞ்சால மிக்கன வட்டந் துளுவமிக் குதிரையித் துரகங்
களங்கமி லிமயம் பருப்பத மிந்தக் கற்கியிம் மண்டிலங் கலிங்கம்.

(இ-ள்.) இப்பரி வளம் கொள் காம்போசம் - இக்குதிரைகள் வளம் பொருந்திய காம்போச நாட்டிலுள்ளவை; இம் மா மந்தரம் - இக்குதிரைகள் மந்தர மலையிலுள்ளவை; இந்த வாம்புரவி விளங்கு காந்தாரம் - இந்தத் தாவுங் குதிரைகள் தோற்றம் அமைந்த காந்தார நாட்டிலுள்ளவை; இக்குரங்கு உளை வான்மீகம் - இந்த வளைந்த பிடர்

மயிரினை யுடைய குதிரைகள் வான்மீக நாட்டிலுள்ளவை; இக் கந்துகம் சிந்து - இக் குதிரைகள் சிந்து நாட்டிலுள்ளவை; இக்கன வட்டம் துளங்கு இல் பாஞ்சாலம் - இக்குதிரைகள் (பகைவரால்) கலங்குதலில்லாத பாஞ்சால நாட்டிலுள்ளவை; இக்குதிரை துளுவம்- இக்குதிரைகள் துளுவ நாட்டிலுள்ளவை; இத்துரகம் களங்கம் இல் இமயம் - இக்குதிரைகள் குற்றமில்லாத பனிமலையிலுள்ளவை; இக் கற்கி பருப்பதம் - இக்குதிரைகள் திருப்பருப்பதத்திலுள்ளவை; இம் மண்டிலம் கலிங்கம் - இக்குதிரைகள் கலிங்க நாட்டிலுள்ளவை.

குரங்கல் - வளைதல். குரங்குவளை : ஆகுபெயர். இப்பரி காம் போசம் என்றாற்போல் வருவனவெல்லாம் பிறந்தவழிக் கூறல் என்னும் ஆகுபெயராகும். இது முதல் நான்கு செய்யுட்களில் குதிரையின் பரியாயப் பெயர்கள் பலவற்றையும் ஆசிரியர் எடுத் தமைத்திருக்கும் திறன் பாராட்டற்குரியது. (கoச)

ஆரிய மிந்தப் பாடல மிந்த் வச்சுவங் *கூர்ச்சர மிந்தச்
சீரிய துரங்கங் கேகய மிந்தத் திறலுறு கோய்யுளை யவனம்
வேரியம் பணைசூழ் மக்கமிக் கோக்கு விரிபொழில் வனுயுச மிந்தப்
போரிய லிவுளி பல்லவ மிந்தப் பொலம்புனை தார்நெடும் பாய்மா.

(இ - ள்.) இந்தப் பாடலம் ஆரியம் - இக்குதிரைகள் ஆரிய நாட்டிலுள்ளவை; இந்த அச்சுவம் கூர்ச்சரம்-இக்குதிரைகள் கூர்ச்சர நாட்டிலுள்ளவை; இந்தச் சீரிய துரங்கம் கேகயம் - இந்தச் சிறந்த குதிரைகள் கேகய நாட்டிலுள்ளவை; இந்தத் திறல் உறு கொய்யுளை யவனம் - இந்த வலிமிக்க பிடர்மயிரையுடைய குதிரைகள் யவன நாட்டிலுள்ளவை; இக்கொக்கு வேரி அம் பணை சூழ் மக்கம் - இக் குதிரைகள் மணம் நிறைந்த அழகிய வயல்கள் சூழ்ந்த மக்க நாட்டிலுள்ளவை; இந்தப் போர் இயல் இவுளி விரிபொழில் வனுயுசம்- போர்புரியும் வன்மை அமைந்த இக்குதிரைகள் விரிந்த பொழில்சூழ்ந்த வனுயுச நாட்டிலுள்ளவை; இந்தப் பொலம் புனை தார் நெடும் பாய்மா பல்லவம் - இந்தப் பொன்னாலாகிய அழகிய கிண்கிணிமாலை யணிந்த நீண்ட பாய்கின்ற குதிரைகள் பல்லவ நாட்டிலுள்ளவை. (கoரு)

கற்றவர் புகழ்சவ் வீரமிக் கோரங் கன்னிமா ராட்டமிவ் வன்னி
கோற்றவர் பயில்வா சந்திக மிந்தக் கோடகங் காடகங் கன்னல்
உற்றகான் மீர மிவ்வய மிந்த வுத்தம கோணமா ளவமிவ்
வெற்றிசேர் குந்தங் கந்தர மிந்த விறல்புனை யரிசவு ராட்டம்.

(இ - ள்.) இக்கோரம் கற்றவர் புகழ் சவ்வீரம் - இக் குதிரைகள் புலவர் புகழுஞ் சவ்வீர நாட்டிலுள்ளவை; இவ்வன்னி கன்னிமா ராட்டம்-இக்குதிரைகள் அழியாத மாராட்ட நாட்டிலுள்ளவை; இந்தக் கோடகம் கொற்றவர் பயில் வாசந்திகம் - இக் குதிரைகள் மன்னர்கள் வதியும் வாசந்திக நாட்டிலுள்ளவை; இவ்வயம் காடு அகம் கன்னல்

(பா - ம்.) *குர்ச்சரம்

உற்ற கான்மீரம் - இக்குதிரைகள் காட்டிடமெல்லாம் கரும்புகள் நிறைந்த கான்மீர நாட்டிலுள்ளவை; இந்த உத்தமகோணம் மாளவம்- இந்த மேலான குதிரைகள் மாளவ நாட்டிலுள்ளவை; இவ் வெற்றிசேர் குந்தம் கந்தரம் - இவ்வெற்றி பொருந்திய குதிரைகள் கந்தரநாட்டிலுள்ளவை; இந்த விறல்புனை அரி சவுராட்டம் - இந்த வெற்றியுயி அழகுமுள்ள குதிரைகள் சவுராட்ட நாட்டிலுள்ளவை.

மாராட்டம் - மகாராஷ்டிரம். கான்மீரம் - காஸ்மீரம். இவ்வயம் - இந்த அயம். சவுராட்டம் - சௌராஷ்டிரம். (கoசு)

விரிபொழிற் சாலி வேய்மிகு கிள்ளை வேறுதீ வாந்தர மிந்தத்
துரகத மிந்தக் குரகதங் கொண்டல் சூழ்குருக் கேத்திர மின்ன
பரவுபல் வேறு தேயமு முள்ள பரியெலா மிவன்றரு பொருளின்
விரவிய நசையாற் கொணர்ந்திவர் வந்தார் வேந்தகே ளிந்தவாம் பரியுள்.

(இ - ள்.) வேய்மிகுகிள்ளை - ஒப்பனை மிக்க இக்குதிரைகள், விரிபொழில்சாலி - விரிந்த சோலைசூழ்ந்த சாலி நாட்டிலுள்ளவைகள்; இந்தத் துரகதம் வேறு திவாந்தரம்-இக்குதிரைகள் வேறு தீவாந்தரங்களிலுள்ளவை; இந்தக் குரகதம் கொண்டல் சூழ் குருக்கேத்திரம் - இக்குதிரைகள் முகில் சூழ்ந்த குருக்கேத்திரத்திலுள்ளவை; இன்ன பரவு பல்வேறு தேயமும் உள்ள பரி எலாம் - இந்தப் பரந்த பல்வேறு வகைப்பட்ட தேயங்களிலுமுள்ள குதிரைகளையெல்லாம், இவன் தரு பொருளின் விரவிய நசையால்-இவ்வாதவூரன் கொடுத்த பொருளினாற் போந்த விருப்பத்தால், இவர் கொணர்ந்து வந்தார்-இவர்கள் கொண்டு வந்தனர்; வேந்த கேள் - மன்னனே கேட்பாயாக; இந்த வாம்பரியுள் - இந்தத் தாவுங் குதிரைகளுள்.

வேய் - ஒப்பனை. குருக்கேத்திரம் - குருக்ஷேத்திரம்.

"தறுக ணண்மைய தாமரை நிறத்தன தகைசால்
மறுவில் வான்குளம் புடையன மாளவத் தகத்த
பறையி னுலுவ படுசினை நாவலின் கனிபோற்
குறைவில் கோலத்த குளிர்புனற் சிந்துவின் கரைய"

"பார சூரவம் பல்லவ மெனும்பதிப் பிறந்த
வீர வாற்றல வினைகடுந் தேறலி னிறத்த
பாரிற் றேர்செலிற் பழிபெரி துடைத்தென நாணிச்
சோரும் வார்புய றுளங்கவின் புகுவன துரகம்"

"பீலி மாமயி லெருத்தெனப் பெருவனப் புடைய
மாலை மாரட்டத் தகத்தன வளரிளங் கிளியே
போலு மேனிய பொருகடற் கலத்தின்வந் திழிந்த
கோல நீர்ப்பவ ளக்குளம் புடையன குதிரை"

என்னும் சிந்தாமணிச் செய்யுட்கள் இங்கே நோக்கற்பாலன. (கoஎ)

வெண்ணிறஞ் சிவப்புப் பொன்னிறங்
கறுப்பு வேறற விரவிய நான்கு
வண்ணமுள் ளனவும் வேறுவே றுய
மரபுமை வண்ணமும் வந்த
எண்ணிய விவற்றின் சிறப்பிலக் கணத்தை
யியம்புதுங் கேளென விகல்காய்
அண்ணலங் களிற்றுற் கருமறைப் பரிமே
லழகியா ரடைவுடன் விரிப்பார்.

(இ - ள்.) வெண்ணிறம் சிவப்பு பொன்னிறம் கருப்பு நான்கு - வெள்ளை நிறமும் சிவப்பு நிறமும் பொன்னிறமும் கருப்பு நிறமுமாகிய இந்நான்கும், வேறு அற விரவிய வண்ணம் உள்ளனவும் - வேறு பாடு இன்றிக் கலந்த நிறத்தையுடைய குதிரைகளும், வேறு வேறு ஆய மரபும்-அந்நிறங்களைத் தனித்தனியுடைய குதிரைகளும், ஐவண்ணமும் வந்த - ஐந்து நிறங்களையுடைய குதிரைகளும் வந்தன, எண்ணிய இவற்றின் - மதிக்கத்தக்க இக்குதிரைகளின், சிறப்பு இலக்கணத்தை இயம்புதும் கேள் என - சிறப்பிலக்கணங்களைக் கூறுவோம் கேட்பாயாக என்று, இகல்காய் அண்ணல் அம் களிற்றுற்கு - பகைவரைச் சினக்கும் பெருமையும் அழகுமுடைய யானையினையுடைய பாண்டியனுக்கு, அருமறைப் பரிமேல் அழகியார் - அரிய வேதப்பரிமேல் வந்தருளிய விடங்கர், அடைவுற விரிப்பார் - முறைப்பட விரித்துக் கூறுவார்.

ஐவண்ணம்: ஆகுபெயர். (௧0அ)

வெள்ளிநித் திலம்பால் சந்திரன் சங்கு
வெண்பனி போல்வது வெள்ளைத்
துள்ளிய புரவி மாதுளம் போது
சுகிர்ந்தசெம் பஞ்சியின் குழம்பிற்
றெள்ளிய நிறத்த செம்பரி மாமை
சிறைக்குயில் வண்டுகார் முகில்போல்
ஒள்ளிய கரிய பரியெரி யழலா னுரோசனை
நிறத்தபோற் பரியே.

(இ - ள்.) வெள்ளி நித்திலம் பால் சந்திரன்-வெள்ளியும் முத்தும் பாலும் மதியும், சங்கும் வெண்பனி போல்வது - சங்கும் வெள்ளிய பனியும் போன்றது, துள்ளிய வெள்ளைப் புரவி-தாவுகின்ற வெள்ளைக் குதிரையாகும்; மாதுளம் போது சுகிர்ந்த செம்பஞ்சியின் குழம்பின் - மாதுளம் பூவும் சிவிசீ செம்பஞ்சியின் குழம்பும்போல, தெள்ளிய நிறத்த செம்பரி-தெளிந்த நிறைத்தினையுடையவை சிவப்புக் குதிரைகளாகும், மாமை சிறைக்குயில் வண்டு கார்முகில்போல் ஒள்ளிய கரிய பரி - கரிய மையும் சிறையையுடைய் குயிலும் வண்டும் கரிய முகிலும்

போல ஒளியையுடையன கருங்குதிரைகளாகும்; எரி அழல் ஆன் உரோசனை நிறத்தபொன் பரி - எரிகின்ற அனலும் கோரோசனையும் போன்ற நிறமுடையன பொன்மைக் குதிரைகளாகும்.

எண்ணும்மைகள் தொக்கன. நிறத்த, ஒள்ளிய என்பன குறிப்பு வினைப்பெயர்கள். மா-கருமை. ஆன்உரோசனை-கோரோசனை. (க0க)

தெரிதர வகுத்த விந்நிற நான்குஞ்
செறிந்தது *மிச்சிர மேனப்பேர்
உரைசெய்வர் முகமார் புச்சிவால் காலென்
றுரைத்தவெட் டுறுப்பினும் வெண்மை
விரவிய தட்ட மங்கலந் தலைவால்
வியனுர மென்றவிம் மூன்றும்
ஒருவிய வுறுப்போ ரைந்திலும் வெள்ளை
யுள்ளது பஞ்சகல் யாணி.

(இ - ள்.) தெரிதர வகுத்த இந்நிறம் நான்கும் செறிந்தது-தெரியுமாறு வகுக்கப்பட்ட இந்நான்கு நிறங்களும் கலந்து செறிந்த குதிரைக்கு, மிச்சரம் எனப் பேர் உரை செய்வர் - மிச்சரமென்று பெயர் கூறுவர்; முகம் மார்பு உச்சி வால் கால் என்று உரைத்த - முகமும் மார்பும் உச்சியும் வாலும் நான்கு கால்களும் என்று உரைக்கப்பட்ட, எட்டு உறுப்பினும் வெண்மை விரவியது அட்டமங்கலம் - இவ்வெட்டு உறுப்புக்களினும் வெண்மை கலந்தது அட்டமங்கலமாகும்; தலை வால் வியன் உரம் என்ற இம்மூன்றும் ஒருவிய - தலையும் வாலும் சிறந்த மார்புமாகிய இம்மூன்றும் நீங்கப்பெற்ற, உறுப்பு ஓரைந்திலும் வெள்ளை உள்ளது பஞ்சகல்யாணி - ஓரைந்து உறுப்புக்களிலும் வெண்மையுள்ளது பஞ்சகல்யாணியாகும்.

மிச்சரம் - கலவை. உறுப்பு ஐந்து - முகமும் நான்கு கால்களும். (கக0)

அணிகிளர் கழுத்தில் வலஞ்சுழித் திருந்தா
லறிந்தவ ரதனையே தெய்வ
மணியென விசைப்பர் முகந்தலை நாசி
மார்பமிந் நான்குமிவ் விரண்டு
பணிதரு சுழியு நதனடுப் †பின்னைப்
பக்கமு மோவ்வொரு சுழியுந்
துணிதர விருப்ப திலக்கண முளதிச்
சுழியில திலக்கண வழுவே.

(பா - ம்.) *மிச்சர மிதன்பேர். †பின்பு பக்கமும்.

(இ - ள்.) அணிகிளர் கழுத்தில் வலம் சுழித்து இருந்தால்-அழகு விளங்குங் கழுத்தின்கண் வலமாகச் சுழித்திருப்பின், அறிந்தவர் - பரி நூலினைக் கற்றுணர்ந்தவர், அதனையே தெய்வமணி என இசைப்பர்- அச்சுழியினையே தேவமணி என்று கூறுவர்; முகம் தலை நாசி மார்பம் இந்நான்கும் - முகமும் தலையும் மூக்கும் மார்புமாகிய இந்நான்கு உறுப்புக்களிலும், பணிதரு இவ்விரண்டு சுழியும் - நலமென்று கூறப் படும் இரண்டிரண்டு சுழிகளும், நுதல் நடு பின்னைப் பக்கமும் - நெற்றி நடுவிலும் பின் பக்கத்திலும், ஒவ்வொரு சுழியும் துணிதர இருப்பது-ஒவ்வொரு சுழியும் ஐயமற விருப்பது, இலக்கணம் உளது - இலக்கணமுடைய குதிரையாகும்; இச்சுழி இலது இலக்கணவழு - இச்சுழிகளில்லாதது இலக்கணக் குற்றமுடையதாகும்.

பணிதரு-அடங்கித் தோன்றும் என்றுமாம். துணிதர - தெளிய. வழு - வழுவுள்ளது. (௧௧௧)

பிரிவுற வுரத்தி லைஞ்சுழி யுளது பேர்சிரீ வற்சமா நுதலில்
இருசுழி யாதன் முச்சுழி யாத லிருக்கினு நன்றது வன்றேல்
ஒருவற நான்கு சுழிவலம் புரியா வுள்ளது நல்லது வன்றி
இருசுழி முன்னங் கால்களின் மூலத் திருக்கினு நல்லதென் றிசைப்பார்.

(இ - ள்.) பிரிவு உற உரத்தில் ஐஞ்சுழி உளது (ஒன்றோ டொன்று நெருங்காமல்) பிரிவினைப் பொருந்த மார்பின்கண் ஐந்து சுழியுள்ள குதிரை, பேர் சிரீ வற்சமாம் - சிரீவற்சம் என்னும் பெயருடையதாகும்; நுதலில் இருசுழி ஆதல் முச்சுழி ஆதல் இருக்கினும் நன்று - நெற்றி யின் கண் இரண்டு சுழியாவது மூன்று சுழியாவது இருந்தாலும் நல மாகும்; அது அன்றேல் - அங்ஙனமில்லையானால், ஒருவு அற நான்கு சுழிவலம்புரியா உள்ளது நல்லது - நீங்குதலின்றி (ஒன்றோடொன்று தொடர்ந்து) நான்கு சுழி வலம்புரியாக இருப்பது நன்மையாம்; அன்றி- அல்லாமல், முன்னம் கால்களின் மூலத்து - முன் கால்களின் அடியில், இருசுழி இருப்பினும் நல்லது என்று இசைப்பார் - இரண்டு சுழி இருந் தாலும் நலமென்று கூறுவர்.

ஆதல் - ஆவது; இடைச் சொல். (௧௧௨)

களநடு விரட்டைச் சுழியுடைப் பரிதன்
கருத்தனுக் கறமிடி காட்டும்
அளவறு துன்ப மரணமுண் டாக்கு
மவைகணைக் காலுள வாகில்
உளபயங் துன்ப நிகளபந் தனமே
லுதடுமூற் காலடி கபோலம்
வளர்முழந் தாளிந் நான்கினுஞ்
சுழிகண் மன்னினுந் தலைவனை வதைக்கும்.

(இ - ள்.) களம் நடு இரட்டைச்சுழியுடைப் பரி - கழுத்து நடுவில் இரட்டைச் சுழியினையுடைய குதிரை, தன் கருத்தனுக்கு அறமிடி காட்டும் - தன் தலைவனுக்கு மிகவும் வறுமையை உண்டாக்கும்; அளவு அறு துன்பம் மரணம் உண்டாக்கும் - (இன்னும்) அளவிறந்த துன்பத்தினையும் மரணத்தினையும் உண்டாக்கும்; அவை கணைக்கால் உளவாகில் - அச்சுழிகள் கணைக்காலிலுள்ளனவாயின், பயம் துன்பம் நிகளபந்தனம் உள - அச்சமும் துன்பமும் விலங்கு பூணுதலும் உளவாகும்; மேல் உதடு முன்கால் அடி கபோலம் வளர் முழந்தாள் - மேலுதடும் முன் காலின் அடியும் கபோலமும் வளர்ந்த முழந்தாளுமாகிய, இந்நான்கினும் சுழிகள் மன்னினும் தலைவனை வதைக்கும் - இந்நான்குறுப்பினும் சுழிகள் இருந்தாலும் தலைவனைக் கொல்லும்.

உளபயம் - மனோபயம் என்றுமாம். (ககந)

இச்சுழி யுடைய புரவிபந் தியில்யாத்
திருக்கினும் பழுதிவை கிடக்க
அச்சமில் பரிக்குப் பிராயநா லெட்டா
மவத்தைபத் தாகுமோவ் வொன்றில்
வைச்சது மூன்று வருடமு மிரண்டு
மதியமும் பன்னிரு நாளும்
நிச்சயித் தளந்தா ரின்னமு மொருசார்
நிகழ்த்திடு மிலக்கண மதுகேள்.

(இ - ள்.) இச்சுழி உடைய புரவி - இந்தக் குற்றமுள்ள சுழியினையுடைய குதிரைகள், பந்தியில் யாத்து இருக்கினும் - பந்தியில் கட்டப்பட்டிருப்பினும், பழுது - தீங்குவிளையும்; இவை கிடக்க - இவை நிற்க; அச்சம் இல் பரிக்குப் பிராயம் நாலெட்டாம் - போரின்கண் அஞ்சுதலில்லாத குதிரைக்கு வயசு முப்பத்திரண்டாகும்; அவத்தை பத்து ஆகும் - பருவம் பத்தாகும்; ஒவ்வொன்றில் வைச்சது - ஒவ்வொரு பருவத்திலும் வைத்த காலவளவு, மூன்று வருடமும் இரண்டு மதியமும் பன்னிரு நாளும் நிச்சயித்து அளந்தார் - மூன்றாண்டும் இரண்டு திங்களும் பன்னிரண்டு நாளுமெனத் துணிந்து வரையறை செய்தனர்; இன்னமும் ஒரு சார் நிகழ்த்திடும் இலக்கணம் கேள் - இன்னமும் ஒரு வகையாகப் பரிநூலார் கூறும் இலக்கணத்தைக் கேட்பாயாக.

அச்சமில் என்றது பரிக்குப் பொதுவான அடை, அவத்தை - பருவம். வைச்சது: போலி. பரிநூலோர் நிச்சயித்தளந்தார் என்க. இலக்கணமது, அது : பகுதிப் பொருள் விகுதி. (ககச)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

எவ்வண்ண பேதமிகுந் திருந்தாலும்
வெள்ளைகலந் திருந்த தானால்
அவ்வண்ணப் பரிநன்று கரும்புரவிக்
ககடேனு மகன்மார் பேனுஞ்

சேவ்வண்ண மிருக்கினது சயமுளதப்
படிவெண்மை சேர்ந்தா லந்த
மைவண்ணப் பரியின்பேர் வாருணமாஞ்
சயங்கொடுக்கு மாற்றார் போரில்.

(இ - ள்.) எவ்வண்ண பேதம் மிகுந்து இருந்தாலும் - எந்த நிறத்தின் வகை மிக்கிருந்தாலும், வெள்ளை கலந்து இருந்தது ஆனால் - வெண்ணிறங் கலந்திருக்கு மாயின், அவ்வண்ணப் பரி நன்று - அந்நிறத்தையுடைய குதிரை நல்லது; கரும் புரவிக்கு அகடேனும் அகல் மார்பேனும் - கரிய குதிரைக்கு வயிற்றிலேனும் அகன்ற மார்பிலேனும், செவ்வண்ணம் இருக்கின் - செந்நிற மிருக்குமாயின், அது சயம் உளது - அக்குதிரை வெற்றியை யுடையது, அப்படி வெண்மை சேர்ந்தால் - அங்ஙனமே வெண்ணிற மிருப்பின், அந்த மை வண்ணப் பரியின்பேர் - அந்த மை போலுங் கரிய நிறத்தினையுடைய் குதிரையின் பெயர், வாருணம் ஆம் - வாருண மென்பதாகும்; மாற்றார் போரில் சயம் கொடுக்கும் - அது பகைவருடன் புரியும் போரின்கண் தன் தலைவனுக்கு வெற்றியைக் கொடுக்கும்.

அகடு, மார்பு என்பவற்றில் ஏழனுருபு விரிக்க. அது சயங் கொடுக்கும் எனச் சுட்டு வருவிக்க. சயம், வடமொழித்தற்பவம். (௧௧௫)

மகவளிக்கும் பிடர்வெளுப்பு மகிழ்வளிக்கு
முரவெளுப்பு மணித்தார்க் கண்டத்
தகவெளுப்புப் பொருள்கொடுக்கு முகவெளுப்புச்
சயங்கொடுக்கு மதன்பின் பக்கத்
தகவெளுப்புச் சுகம்பயக்கு மிடவெளுப்புச்
சந்தானந் தழைக்குஞ் செல்வம்
மிகவளர்க்குந் தனம்பலதா னியநல்கும்
வலப்புறத்து வெள்ளை மாதோ.

(இ - ள்.) பிடர் வெளுப்பு மகவு அளிக்கும் - பிடர் வெளுப்புள்ள குதிரை தன் தலைவனுக்கு மகப்பேற்றினைக் கொடுக்கும்; உரவெளுப்பு மகிழ்வு அளிக்கும் - மார்பு வெளுப்புள்ள குதிரை மகிழ்ச்சியைக் கொடுக்கும்; மணித்தார்க் கண்டத்து அகவெளுப்பு - மாணிக்கமாலையை யணிந்த கழுத்தின்கண் வெண்மையுள்ள குதிரை, பொருள் கொடுக்கும் - பொருளைக் கொடுக்கும்; முகவெளுப்பு சயம் கொடுக்கும் - முக வெளுப்புள்ள குதிரை வெற்றியைக் கொடுக்கும்; அதன்பின் பக்கம் தகவெளுப்பு - அம்முகத்தின் பின்பக்கத்தின்கண் பொருந்த வெளுப்பமைந்த குதிரை, சுகம் பயக்கும் - இன்பத்தைக் கொடுக்கும்; இட வெளுப்பு சந்தானம் தழைக்கும் செல்வ மிக வளர்க்கும் - இடப் பக்கத்தில் வெண்மையுள்ள குதிரை மகப்பேறு மிகுதலாகிய செல்வத்தை மிகப் பெருக்கும்; வலப்புறத்து வெள்ளை - வலப் பக்கத்தின்கண்

வெண்மையுள்ள குதிரை, தனம் பல தானியம் நல்கும் - திரவியத்தை யும் பல விளைபொருளையும் அளிக்கும்.

வெளுப்பு, வெள்ளை என்பன பரிக்கு ஆயின. மணித்தார் - கிண் கிணிமாலையுமாம். தழைக்கும் - தழைவிக்கும் எனப் பிறவினை முற்று மாம். (௧௧௬)

நற்புறம்வான் முகமூன்றும் வெளுத்தபரி
வென்றிதரு* நாபி தோட்டு
முற்புறமே லாம்பரிதி யெனச்சிவந்து
மதியெனப்பின் முழுதும் வேள்கும்
போற்புடைய வயப்பரிக்குப் பகல்விசய
மதியெனமுற் புறம்பு வேள்கிப்
பிற்புறமேல் லாங்கதிர்போற் சிவந்த பரிக்
கிராவிசயம் பெருகு† மன்றே.

(இ - ள்.) நல்புறம் வால்முகம் மூன்றும் வெளுத்தபரி வென்றி தரும் - நல்ல முதுகும் வாலும் முகமுமாகிய இம்மூன்றிலும் வெண் ணிறமுள்ள குதிரை (தன் தலைவனுக்கு) வெற்றியைத் தரும்; நாபி தொட்டு - உந்தி முதலாக, முன்புறம் எலாம் பரிதி எனச் சிவந்து - முன் பக்கமனைத்தும் சூரியனைப்போல் செந்நிறம் பெற்று, பின் முழு தும் மதி என வெள்கும் - பின்புறமனைத்துஞ் சந்திரனைப் போல வெளுத்திருக்கும், பொற்பு உடைய வாம்பரிக்குப் பகல் விசயம் - அழகுடைய தாவுங்குதிரைக்குப் பகற்போரில் வெற்றியும், முன் புறம்பு மதிஎன வெள்கி - முன்புறமுற்றும் சந்திரனைப்போன்று வெண்ணிறம் பெற்று, பின்புறம்எல்லாம் கதிர்போல் சிவந்த பரிக்கு - பின்புறமனைத்தும் சூரியனைப்போலச் சிவந்த குதிரைக்கு, இராவிசயம் பெருகும் - இராப்போரில் வெற்றியும் பெருகும்.

வெள்கல் - வெளுத்தல்; வெண்மையாதல். புறம்பு - புறம், பக் கம். பகல் விசயமும் இராவிசயமும் பெருகும் என்க. (௧௧௭)

வந்தனவா லிவ்விரண்டு வகைப்பரியும்
புரவியடி வைத்தா லோத்த
பந்தேனவு நின்றாலோ மலையெனவு
மோலித்தாலோ பகடு சீறும்
வேந்தறுக ணரியெனவும் வேகத்தாற்
காற்றெனவு மிதிக்குங் கூத்தாற்
சந்தநட மகனெனவு நடக்கிலரி
களிறெனவுந் தகைய தாகி.‡

(பா - ம்) *நன்றிதரும். †விசயம் பெருக்கும். ‡தகையவாகி.

(இ - ள்.) இவ்விரண்டு வகைப் பரியும் வந்தன - இந்த இரண்டு வகைக் குதிரைகளும் வந்தன ; புரவி அடிவைத்தால் ஒத்த பந்து எனவும் - குதிரை அடி வைத்தால் ஒத்த பந்தைப் போலவும், நின்றால் மலை எனவும் – நின்றதானால் மலை போலவும், ஒலித்தால் - கனைத்த தானால், பகடு சீறும் வெம்தறுகண் அரி எனவும் - யானையைச் சீறிக் கொல்லும் கொடிய அஞ்சாமையுடைய சிங்கம் போலவும், வேகத்தால் காற்று எனவும் - வேகத்தினால் காற்றைப்போலவும், மிதிக்கும் கூத்தால் சந்தம் நடமகன் எனவும்-மிதித்து நடக்கும் கூத்தினால் அழகிய கூத்தனைப் போலவும், நடக்கில் அரி களிறு எனவும் தகையதாகி - நடந்தால் சிங்கத்தையும் யானையையும் போலவும் தன்மையையுடைய தாய்.

இரண்டு வகைப்பரி - பகல் வெற்றி தருவதும், இராவெற்றி தருவதும். ஒத்த - ஒன்றையொன் றொத்த. அடி வைத்தால் குளம்பு பந்தெனவும், நின்றால் உடல் மலையெனவும், ஒலித்தால் ஒலி அரியென வும் என இங்ஙனம் விரித்துரைத்துக்கொள்க. குளகம். (கக அ)

குலமகள்போற் கவிழ்முகமுங் கருநெய்த
லெனக்கண்ணுங் கொண்டு கார்போல்
நிலவியசீர் வண்ணமுங்கார் நெய்தலெனக்
கடிமணமு நிறைந்து நாற்ற
மலரகில்சந் தேரிமணிப்பூ ணலங்கரிக்கி
லானுத மகிழ்ச்சி யெய்தி
இலகுவதுத் தமவாசி யென்றுரைப்பர்
பரிவேத மெல்லை கண்டோர்.

(இ - ள்.) குலமகள்போல் கவிழ்முகமும் - உயர்குடியிற் பிறந்த கற்புடை மகள்போலக் கவிழ்ந்த முகத்தையும், கருநெய்தல் எனக் கண்ணும் கொண்டு - கருங்குவளை மலர்போலும் கண்ணையும் கொண்டு, கார் போல் நிலவிய சீர் வண்ணமும் - கருமுகில் போல் விளங்கிய சிறந்த நிறமும், கார் நெய்தல் எனக் கடிமணமும் நிறைந்து - கருநெய் தல் போல மிக்க மணமும் நிறைந்து, நாற்றமலர் அகில் சந்து எரி மணிப்பூண் அலங்கரிக்கில் - மணமிக்க மலரும் அகிற்குழம்பும் சந்தனக் குழம்பும் நெருப்புபோன்ற மணிகள் அழுத்திய அணிகளுமாகிய இவற் றால் ஒப்பனை செய்யின், ஆனாத மகிழ்ச்சி எய்தி இலகுவது - நீங்காத மகிழ்ச்சியை அடைந்து விளங்குவது, உத்தம வாசி என்று - உத்தமக் குதிரை என்று, பரிவேதம் எல்லை கண்டோர் உரைப்பர் : புரவி நூலின் வரம்பினைக் கண்டறிந்தவர் கூறுவர்.

தகையதாகி, கொண்டு, நிறைந்து, எய்தி, இலகுவது உத்தம வாசி என்றுரைப்பர் என வினை முடிவு செய்க. (ககக)

நூறுவிர லுத்தமவாம் பரிக்குயர்வீ
ரெட்டுவிர னூறு நீக்கிக்
கூறுவிரன் மத்திமவாம் பரிக்கறுபத்
தோன்றதமக் குதிரைக் கென்ப
ஈறில்புக ழாய்பொருந ரிப்பரியைப்
பூசனஞ்செய் திறைஞ்சிப் பாசம்
மாறுவரா லெனமணித்தார் சதங்கைசிலம்
பணிவித்து மதிக்கோ மாறன்.

(இ - ள்.) உத்தம வாம்பரிக்கு உயர்வு நூறு விரல் - தாவுகின்ற உத்தமக் குதிரைக்கு உயரம் நூறுவிரலளவாகும், மத்திம வாம்பரிக்கு நூறு ஈரெட்டு விரல் நீக்கிக் கூறுவிரல் - தாவுகின்ற மத்திமக் குதிரைக்கு உயரம் அந்நூறு விரலில் பதினறு விரல் நீக்கி மீதமாகக் கூறப்படும் எண்பத்து நான்கு விரலளவாகும், அதமக்குதிரைக்கு அறுபத்தொன்று என்ப - அதமக்குதிரைக்கு உயரம் அறுபத்தொரு விரலளவாகும் என்று கூறுவர்; ஈறு இல் புகழாய் - அழிவில்லாத புகழையுடையோய், பொருநர் - வேந்தர்கள், இப்பரியைப் பூசனம் செய்து இறைஞ்சிப் பாசம் மாறுவர் என - இக்குதிரைகளைப் பூசித்து வணங்கிக் கயிறுமாறுவார்களென்று கூறியருள, மணித்தார் சதங்கை சிலம்பு அணிவித்து - அழகிய கிண்கிணி மாலையும் சதங்கை மாலையும் சிலம்பும் அணிவித்து, மதிக்கோமாறன் - சந்திரன் மரபினனாகிய அரி மருத்தன பாண்டியன்.

என்ப என்பதனை முன்னும் கூட்டுக. பொருநர் - ஈண்டு வேந்தர். பூசனஞ்செய்து - பூசித்து. மாறுவர்-மாறும் வழக்க முடையர். பொரு கின்ற நரிப்பரியை என உண்மை புலப்பட வைக்கும் நயம் பாராட் டற்குரியது. (௧௨௦)

கொத்தவிழ்தார் நறுஞ்சாந்தங் கொண்டுசெழும்
புகைதீபங் கொடுத்துப் பூசை
பத்திமையாற் செய்திறைஞ்சி யெதிர்நிற்ப
வாலவாய்ப் பரனை நோக்கிக்
கைத்தலந்தன் சிரமுகிழ்த்து வாழியெனப்
பரிகொடுத்தான் கயிறு மாறி
முத்தொழிலின் மூவராய் மூவர்க்குந்
தெரியாத முக்கண் மூர்த்தி.

(இ - ள்.) கொத்து அவிழ் தார் நறுஞ்சாந்தம் கொண்டு - கொத்தொடு மலர்ந்த மலர்களாற் றொடுத்தமாலையும் நறிய சந்தனமுங் கொண்டு, செழும்புகை தீபம் கொடுத்து - செழிய தூபமும் தீபமுங் கொடுத்து, பத்திமையால் பூசை செய்து - அன்புடன் வழிபட்டு,

இறைஞ்சி எதிர் நிற்ப - வணங்கி எதிரே நிற்க, முத்தொழிலின் மூவராய் - மூன்று தொழில்களையுடைய மூன்று தேவராகியும், மூவர்க்கும் தெரியாத முக்கண் மூர்த்தி - அம்மூவருக்கும் தெரியாத மூன்று கண்களையுடைய இறைவன், ஆலவாய்ப் பரனை நோக்கி - திருவாலவாயில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளை நோக்கி, கைத்தலம் தன் சிரம் முகிழ்த்து - கைத்தலங்களைத் தன் முடியிற் குவித்து, வாழி என கயிறு மாறிப் பரிகொடுத்தான் - மன்னன் வாழக்கடவன் என்று வேண்டிக் கயிறு மாறிக் குதிரைகளைக் கொடுத்தனன்.

முத்தொழில் - படைத்தல் காத்தல் அழித்தல். முத்தொழிலின்-முத்தொழில் புரிதற்பொருட்டு என்றுமாம்.

"படைத்தளித் தழிப்ப மும்மூர்த்திக ளாயினை"

எனத் திருவெழுகூற்றிருக்கையுள் வருதலுங் காண்க. இறைவன் மூவர்க்கு முதலான துரிய மூர்த்தி என்பதனை,

"தேவர்கோ வறியாத தேவதேவன்
செழும் பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன்"

என்னும் திருவாசகத்தானும் அறிக. கருணை மாக்கடல் இறைஞ்சிப் பாசம் மாறுவர் என்று கூற, மாறன் அணிவித்துப் பூசைசெய்து இறைஞ்சி நிற்ப, மூர்த்திபரனை நோக்கி முகிழ்த்து மாறிப் பரிகொடுத்தான் என முடிக்க. (௧உ௧)

ஷ. வேறு

உவநிடக் கலணை வாசி யொன்றலா னின்ற மாயக்
கவனவாம் புரவி யெல்லாங் கொடுத்திடக் கவர்ந்து வீறு
தவனனில் விளங்குந் தென்னன் றன்பெருங் கோயி லுய்ப்பப்
பவனமுங் கடலும் போலக் கொண்டுபோய்ப் பந்தி சேர்த்தார்.

(இ - ள்.) உவநிடக் கலணை வாசி ஒன்று அலால்-மறைமுடியாகிய கல்லணையையுடைய வேதப் பரி ஒன்றை யல்லாமல், நின்ற கவன மாயவாம் புரவி எல்லாம் கொடுத்திட - வேறு நின்ற வேகமுடைய வஞ்சகமாகிய தாவுகின்ற குதிரைகளனைத்தையுங் கொடுத்திட, வீறு தவனனில் விளங்கும் தென்னன் - ஒப்பற்றெழுந்த சூரியனைப்போல விளங்கும் பாண்டியன், கவர்ந்து - வாங்கி, தன் பெருங்கோயில் உய்ப்ப-தனது அரமனையிற் செலுத்துமாறு கட்டளையிட, பவனமும் கடலும் போலக் கொண்டுபோய் - (ஏவலாளர்) காற்றையும் கடலையும் கொண்டுபோவது போலக் கொண்டுபோய், பந்தி சேர்த்தார் - மந்துரையிற் சேர்த்தனர்.

உபசிடதம் எனற்பாலது திரிந்து நின்றது. கவனம்-வேகம். வீறு-பிறிதொன்றற் கில்லாத சிறப்பு. உய்ப்ப - உய்க்குமாறு கட்டளையிட. வேகத்தாற் பவனமும், பரப்பாலும் தோற்றத்தாலும் ஒலியாலும் கடலும் போன்றதென்க. (௧௨௨)

வாசிவா ணிகர்க்குத் தென்னன் வெண்டுகில் வரிசையாக
வீசினன் பாணற் கேவல் செய்தவர் வெள்கு வாரோ
கூசிலா நேசர்க் காப்பான் குதிரையி னிழிந்தேற் றந்தத்
தூசினை யிரண்டாங் கங்கை யெனமுடி சூடி நின்றார்.

(இ - ள்.) வாசி வாணிகர்க்குத் தென்னன் வரிசையாக வெண் துகில் வீசினன் - குதிரை வணிகராகிய இறைவருக்குப் பாண்டியன் வெள்ளிய ஆடை ஒன்றினைப் பரிசிலாகக் கொடுத்தனன், பாணற்கு ஏவல் செய்தவர் வெள்குவாரோ - பாணபத்திரனுக்கு அடிமை என்று கூறி அவன் பணியைச் செய்தவர் (இதனை வாங்குதற்கு) நாணுவாரோ, கூசுஇலா - சிறிதும் நாணமில்லாமல், நேசர்க் காப்பான் - அன்பராகிய வாதவூரரைக் காத்தற் பொருட்டு, குதிரையின் இழிந்து அந்தத் தூசினை ஏற்று - குதிரையினின்றும் இறங்கி அந்த ஆடையை வாங்கி, இரண்டாம் கங்கை என முடி சூடி நின்றார்-இரண்டாவது கங்கை ஒன்றினைச் சூடியதுபோல முடியின்கண் சூடி நின்றனர்.

எல்லா முழு முதன்மையுமுடைய இறைவன் பாண்டியன் அளித்த ஆடையைத் தாழ்ந்து நின்று வாங்குவரோ என்னும் ஆசங்கையைப் பரிகரித்தற்கு ஒரு பாணனுக்கும் ஏவல் செய்தவர் அரசன்பால் இதனை வாங்க வெள்குவரோ என்றார். இது பழிப்பது போல இறைவனது அடியார்க் கெளியனாம் கருணைத்திறத்தை வியந்து கூறியவாறு. பாணபத்திரனுக்கு ஏவல் செய்தமையை விறகு விற்ற படலத்திற் காண்க. கூசு : முதனிலைத் தொழிற் பெயர். இலா : ஈறுகெட்ட எதிர் மறை வினையெச்சம். கங்கை வெண்ணிற முடையதாகலின் 'கங்கை யென' என்றார். துகிலின் தூய்மை கூறியவாறு மாயிற்று. (௧௨௩)

இனையதூ சிவன்பா லூர்தி யிழிந்துநின் றேற்றுச் சென்னி
புனைவதென் னிவர்கை யோடும் புனைந்ததிக் குடையும் பூண்ட
கனலராப் பூணு மன்னன் கவருமோ வென்று தம்மின்
வினவினர் வெகுண்டு சொன்னார் கணத்தனி வீர ரெல்லாம்.

(இ - ள்) கணத்தனிவீரர் எல்லாம்-ஒப்பற்ற கண வீரரனைவரும், இனைய தூசு இவன்பால் ஊர்தி இழிந்து நின்று ஏற்றுச் சென்னி புனைவது என் - இவ் விழிந்த ஆடையை இம் மன்னனிடம் குதிரையினின்றும் இறங்கி எளியன் போல நின்று வணக்கத்துடன் வாங்கி முடியின்கண் சூடியது எதன் பொருட்டு, இவர் கை ஓடும் புனைந்த திக்கு உடையும் - (அங்ஙனம் ஏற்காவிடின்) இவர் கையிலுள்ள ஓட்டினையும் அணிந்த திக்காடையையும், பூண்ட கனல் அராப்பூணும் - அணிந்த அனல் போலும் சினமுடைய பாம்பணிகளையும், மன்னன் கவருமோ-

இவன் கொள்ளை கொள்வானோ, என்று வினவினர் வெகுண்டு சொன்னார் - என்று ஒருவரோ டொருவர் வினவிச் சினந்து கூறினர்.

தூசினையும் அரசனையும் சிறுமைப்படுத்து 'இனைய தூசு' எனவும், 'இவன்பால்' எனவும் கூறினர். ஊர் தியிழிதல் நிற்றல் ஏற்றல், சென்னி புனைதல் ஆகிய யாவும் இவர் பெருமைக் கொவ்வாதன என்றுரென்க. அங்ஙனம் ஏற்காவிடில் இவர் கையோடு முதலியவற்றைக் கவர்வான் என்று அஞ்சினரோ என வெகுளியில் நகை தோன்றக் கூறினர். இதனால் ஆண்டவனுடைய இறைமையை விளக்கியவாறுமாயிற்று. திக்குடை - திசையாகிய உடை ; ஆடையின்மை. (கஉச)

அறந்தரு கோலான் வெவ்வே றடுபரி வயவர் யார்க்கும்
நிறந்தரு கலிங்க மீந்தா னேர்ந்தவை வாங்கி யன்பிற்
சிறந்தருள் வடிவாய் வந்தார் செழுமறைப் புரவி யோடு
மறைந்தனர் மறைந்தா ரொக்க மாயவாம் பரிமேல் வந்தார்.

(இ - ள்.) அறம் தரு கோலான் - அறநெறியினின்றும் வழுவாது பேணுதலால் குடிகட்கு இன்பந்தருஞ் செங்கோலை யுடைய பாண்டியன், வெவ்வேறு அடு பரி வயவர் யார்க்கும் நிறம் தரு கலிங்கம் ஈந்தான் - வேறு வேறு வெற்றி பொருந்திய பரிவீரரனைவருக்கும் ஒளியினையுடைய ஆடைகளைக் கொடுத்தான்; அன்பில் சிறந்து அருள் வடிவாய் வந்தார் - அன்பினாற் சிறந்து அருளுருவாய் வந்த இறைவர், நேர்ந்து அவை வாங்கிச் செழுமறைப் புரவியோடு மறைந்தனர் - முன் சென்று அவற்றை வாங்கிக் கொண்டு அழகிய வேதப்பரியுடன் மறைந்தருளினர் ; மாய வாம்பரிமேல் வந்தார் - மாயமாகிய தாவுகின்ற குதிரையில் வந்த கணவீரரனைவரும், ஒக்க மறைந்தார் - கூடவே மறைந்தனர்.

வெவ்வேறு நிறந்தரு கலிங்கம் என்றுமாம். அவர்கள் வெகுண்டு நின்றமையால் இறைவனே அவற்றையும் நேர்ந்து வாங்கினர் என்க. வாங்கி என்பதனை வாங்க என எச்சத்திரிபாக்கி உரைப்பாருமுளர். அன்பிற் சிறந்து - அன்பிற்கு ஈடுபட்டு. ஒக்க - உடன்சேர. இறைவன் இங்ஙனம் நரிகளைக் குதிரைகளாக்கிக் கொணர்ந்த திருவிளையாட்டை,

"அரியொடு பிரமற் களவறி யொண்ணான்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்"

எனவும்,

"நரியைக் குதிரைப் பரியாக்கி ஞால மெல்லா நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்ச தேற்றும்
[பெருந்துறையாய்"

எனவும் அடிகள் திருவாசகத்தில் அருளிச்செய்தல் காண்க. (கஉரு)

இருமைக்குந் துணையாய் நின்ற விருபிறப் பாளர்க் கேற்ப
அருமைத்தாஞ் சிறப்பு நல்கி யவரிடத் தவரை யுய்த்துப்
பருமத்த யானை வேந்தன் பகற்கதிர் வானத் துச்சி
வருமப்போ தெழுந்து செம்போன் மாடநீள் கோயில் புக்கான்.

(இ - ள்.) இருமைக்கும் துணையாய் நின்ற இருபிறப்பாளர்க்கு - இம்மையு மறுமையுமாகிய இரண்டிற்குந் துணையாய் நின்ற மறையவராகிய வாதவூரர்க்கு, ஏற்ப - பொருந்துமாற்ருல், அருமைத்து ஆம் சிறப்பு நல்கி - அருமையை யுடையதாகிய வரிசையை அளித்து, அவரை அவரிடத்து உய்த்து - அவரை அவரிடத்திற்குச் செல்ல விடுத்து, பருமத்த யானை வேந்தன் - தவிசினையுடைய யானையையுடைய மன்னன், பகல் கதிர் வானத்து உச்சிவரும் அப்போது எழுந்து - சூரியன் வானின் உச்சியில் வருகின்ற அப்பொழுதில் எழுந்து, செம்பொன் மாடம் நீள் கோயில் புக்கான் - சிவந்த பொன்னுலாகிய மாடத்தையுடைய நீண்ட அரமனையிற் புகுந்தனன்,

பருமத்த குறிப்புப்பெயரெச்சம்; பருமம்-யானைமேற்றவிசு; பருமத்த எனப் பிரித்துப் பருத்த மதமயக்கத்தையுடைய யானை என்றலுமாம். (கஉகூ)

ஏனைமந் திரருந் தத்த மில்புகப் புரவி பார்த்த
மாநக ராருந் தத்த மனைபுகப் பரியின்பாகர்
ஆனவர் தாமுங் கோயி லடைந்துதம் விளையாட் டேல்லாம்
மீனெடுங் கண்ணி ளுட்கு விளம்பின ரிருந்தா ரன்றே.

(இ - ள்.) ஏனை மந்திரரும் தத்தம் இல்புக - மற்றைய அமைச்சர்களுந் தந்தம் வீட்டிற்குச் செல்ல, புரவி பார்த்த மாநகராரும் தத்தம் மனைபுக - குதிரைக் காட்சியைக் காணவந்த பெரிய நகரமாந்தரும் தந்தம் மனையிற் செல்ல, பரியின் பாகர் ஆனவர் தாமும் - குதிரை வீரராகிய இறைவரும், கோயில் அடைந்து - திருக்கோயிலை அடைந்து, தம் விளையாட்டு எல்லாம் - தமது திருவிளையாடல் அனைத்தும், மீன் நெடுங் கண்ணினாட்கு விளம்பினர் இருந்தார் - மீன்போன்ற நீண்ட கண்களையுடைய அம்மையாருக்குக் கூறியிருந்தருளினார்.

ஏனைமந்திரர் - வாதவூரரை யொழிந்த அமைச்சர்கள். பாகரானவர் - பாகராய் வந்தவர். தாம்: அசை. மீனெடுங் கண்ணினாள் - அங்கயற்கண்ணம்மை. விளம்பினர்: முற்றெச்சம். (கஉஎ)

ஆகச் செய்யுள் உ,கஉரு

அறுபதாவது

பரி நரியாக்கி வையை யழைத்த படலம்

[கலிநிலைத்துறை]

ஞான நாயக னாணையா னரிபரி வெள்ளம்
ஆன வாறுரை செய்துமீண் டப்பரி நரியாய்ப்
போன வாறுகண் டமைச்சரைப் புரவலன் கறுப்ப
வான வாறுபோல் வையைநீர் வந்தவா றுரைப்பாம்.

(இ - ள்.) ஞான நாயகன் ஆணையால் - அறிவுருவாகிய இறைவன் ஆணையினால், நரி பரிவெள்ளமானவாறு உரைசெய்தும் - நரிகள் குதிரைப் பெருக்காகி வந்த திருவிளையாடலைக் கூறினேம்; மீண்டு மீள, அப்பரி நரியாய்ப் போனவாறு கண்டு - அக்குதிரைகள் நரிகளாய்ப் போனதன்மையைப் பார்த்து, அமைச்சரைப் புரவலன் கறுப்ப - மந்திரியாராகிய வாதவூரடிகளை மன்னவன் ஒறுக்க, வான ஆறுபோல் - வான் யாற்றினைப்போல, வையை நீர் வந்தவாறு உரைப்பாம் - வையையாறு நீர் பெருகிவந்த திருவிளையாடலை (இனிக்) கூறுவாம்.

கறுத்தல் - வெகுளல்; ஒறுத்தலை யுணர்த்திற்று. பதிகத்துள் 'பரிகள் நரியாக்கியது' என்றே இருப்பினும், இச்செய்யுள் 'வையை நீர் வந்தவா றுரைப்பாம்' என்று கூறுதலானும், படல்முடிவில் வையை வந்தமை உரைக்கப்பட்டிருத்தலானும் 'பரிநரியாக்கி வையை யழைத்த படலம்' என்னும் பெயர் பொருந்துமாறு காண்க. (௧)

நெருங்கு தூரிய முழக்கமுந் தானையு நிமிர
மருங்கி லாதவர் வந்தெதிர் மங்கல மேந்த
அரங்கொல் வேலினா னருளிய வரிசையோ டணைந்து
புரங்கொல் வேதியர்க் கன்பர்தந் திருமனை புகுந்தார்.

(இ - ள்.) நெருங்கு தூரிய முழக்கமும் தானையும் நிமிர - நெருங்கிய இயங்களின் பேரொலியும் சேனைகளின் ஆரவாரமும் ஓங்க, மருங்கு இலாதவர் எதிர்வந்து மங்கலம் ஏந்த - இடையில்லாத பெண்கள் எதிரே வந்து எட்டு மங்கலங்களையும் ஏந்த, புரங்கொல் வேதியர்க்கு அன்பர் - திரிபுரங்களை யழித்த அந்தணராகிய இறைவர்க்கு அன்பராகிய வாதவூரர், அரம்கொல் வேலினான் அருளிய வரிசையோடு அணைந்து - அரத்தையும் மழுக்கும் வைரவேற் படையினையுடைய பாண்டியன் அளித்த சிறப்புடன் சென்று, தம் திருமனை புகுந்தார் - தமது தெய்வத்தன்மை பொருந்திய மனையிற் புகுந்தனர்,

மிக நுண்ணிய மருங்குலை யுடையாரென்பார் அதிசயவகையால் 'மருங்கிலாதவர்' என்றார். அரங்கொல் வேல் - அரத்தால் அராவப் பட்ட வேலுமாம். (உ)

உடுத்த சுற்றமுங் கழகமு மோட்டிய நட்பும்
அடுத்த கேண்மையால் வினவுவா ரவரவர்க் கிசைய
எடுத்த வாய்மையான் முகமனு மகிழ்ச்சியு மீந்து
விடுத்த வாதவூ ராளிகள் வேறிடத் திருந்து.

(இ - ள்.) உடுத்த சுற்றமும் கழகமும் ஒட்டிய நட்பும் - சூழ்ந்துள்ள சுற்றத்தவரும் கற்றோரும் நெருங்கிய நண்பருமாய், அடுத்த கேண்மையால் வினவுவார் அவரவர்க்கு - பொருந்திய கேண்மையினால் வினவுவாராகிய அவரவர்க்கு, இசைய - பொருந்த, எடுத்த வாய்மையால் - எடுத்துக்கூறிய இன்சொற்களால், முகமனும் மகிழ்ச்சியும் ஈந்து - முகமனையும் மகிழ்வையும் அளித்து, விடுத்த வாதவூராளிகள் - அவரவர் இருக்கைக்குச் செல்லவிடுத்த வாதவூரடிகள், வேறு இடத்து இருந்து - தனியிடத்தில் அமர்ந்து.

கழகம் - கற்றோர் கூட்டம். நட்பு என்னும் பெயர் அதனை யுடையாரை உணர்த்திற்று. சுற்றமாகியும் கழகமாகியும் நட்பினராகியும் வினவலுறும் அவரவர்க்கு என விரிக்க. வாய்மை - வாய்மொழி. முகமன் - உபசாரம். ஆளி - ஆளுதலையுடையார்; தலைவர்; கள் விகுதி உயர்வுப் பன்மையில் வந்தது. (௩)

கரந்தை சூடிய வாலவாய்க் கண்ணுத லன்று
ரிரந்த வண்ணமே யாங்கொடு போகிய வெல்லாம்
பரந்த வன்பருந் தானுங்கொண் டெம்மையும் பணிகொண்
டரந்தை தீர்த்தன னன்றியு மரசனுக் கிசைய.

(இ - ள்.) கரந்தை சூடிய ஆலவாய்க் கண்ணுதல் - கரந்தை மலரினை அணிந்த திருவாலவாயில் எழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள், நாம் அன்று இரந்த வண்ணமே - நாம் முன்பு குறையிரந்து வேண்டிய வண்ணமே, யாம் கொடுபோகிய எல்லாம் - யாம் கொண்டுபோன பொருளெல்லாவற்றையும், பரந்த அன்பரும் தானும் கொண்டு - மிக்க அன்பர்களும் தானும் ஏற்றுக்கொண்டு, எம்மையும் பணி கொண்டு அரந்தை தீர்த்தனன் - எம்மையும் அடிமை கொண்டு என் பிறவித் துன்பத்தையும் போக்கினன்; அன்றியும் - அல்லாமலும், அரசனுக்கு இசைய - மன்னனுக்கு மனம் பொருந்த.

அன்பரும் தானும் கொண்டு அரந்தை தீர்த்தனன் என்பது,

"தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்" என்புழிப் போல வந்த வழுவமைதி. (௪)

நல்ல வாம்பரி செலுத்தின னமக்கினிக் கவலை
இல்ல வாம்படி யாக்கின னின்னமோன் றுலகை
வெல்ல வாம்படி தன்னருள் விளக்குமா னந்தம்
புல்ல வாம்படி யெமைத்தவம் பூட்டுவான் வேண்டும்.

(இ - ள்.) நல்ல வாம்பரி செலுத்தினன் - நல்ல தாவுகின்ற குதிரைகளைச் செலுத்தி வந்தனன்; நமக்கு இனிக் கவலை இல்ல வாம்படி ஆக்கினன் - (அதனால்) நமக்கு இனித் துன்பமில்லையாமாறு செய்தருளினன்; இன்னம் ஒன்று - (ஆனால்) இன்னும் செய்ய வேண்டியது ஒன்றுளது; உலகை வெல்ல ஆம்படி - (அதாவது) உலகினை வெல்லத் தக்க வண்ணம், தன் அருள் விளக்கும் - தனது திருவருள் உண்டாக்கும், ஆனந்தம் புல்ல ஆம்படி - இன்பம் பொருந்தத் தக்க வண்ணம், எமைத் தவம் பூட்டுவான் வேண்டும் - எம்மைத் தவநெறியிற் செலுத்துதல் வேண்டும்.

இல்லவாம்படி - இலவாமாறு. வெல்லவும் புல்லவும் ஆகும் வண்ணம் என்க. வெல்லலாம்படி, புல்லலாம்படி எனப் பாடங் கொள்வது சிறப்பு. பூட்டுவான், தொழிற் பெயர். (௫)

என்ற வாதரந் தலைக்கொள விகபரத் தாசை
ஒன்று மின்றியே யுணர்வினுக் குள்ளுணர் வாகத்
துன்று பூரண மாகிய சுந்தரச் சோதி
மன்று ளாடிய சேவடி மனம்புதைத் திருந்தார்.

(இ - ள்.) என்ற ஆதரம் தலைக்கொள - என்ற விருப்பமீக்கூர, இகபரத்து ஆசை ஒன்றும் இன்றியே - இம்மை மறுமையின்பங்களில் ஆசை சிறிதும் இல்லாமல், உணர்வினுக்குள் உணர்வாகத் துன்று - அறிவுக்குள் அறிவாகப் பொருந்திய, பூரணமாகிய சுந்தரச் சோதி - எங்கும் நிறைந்த பரம்பொருளாகிய சோமசுந்தரக் கடவுளின், மன்றுள் ஆடிய சே அடி - வெள்ளியம்பலத்தில் ஆடியருளும் சிவந்த திருவடியை, மனம் புதைத்து இருந்தார் - தமது உள்ளத்துட்கொண்டிருந்தனர்.

முன்னரும் 'இம்மையாசையும் மறுமையிலாசையும் இகந்து' எனப் போந்தமை காண்க. ஒன்றும் - சிறிதும். உள்ளுணர்வாக எனப் பிரித்துரைத்தலுமாம். (௬)

நாளை யுந்திரு வாலவாய் நாயகன் றமரை
ஆள மண்சுமந் தருளுமேன் றதனையுங் காண்பான்
ஊளைவெம்பரிப்* பூழிபோர்ப் புண்டமெய் கழுவி
மீள வேண்டுவான் போற்கடல் குளித்தனன் வெய்யோன்.

(பா - ம்.) *வெம்பரித் தூளி.

(இ - ள்.) நாளையும் திருவாலவாய் நாயகன் - நாளைப் பொழுதும் திருவாலவாய்ப் பெருமான், தம்மரை ஆள - தமது அடியாராகிய வாதவூரரை ஆண்டருளும் பொருட்டு, மண் சுமந்தருளும் என்று - மண் சுமந்தருளுவானென்று கருதி, அதனையும் காண்பான் - அதனையுங் காண, ஊளை வெம்பரிப் பூழி போர்ப்புண்டமெய் கழுவிமீள - ஊளையிடுங் கொடிய நரிப் பரிகளால் மேலெழுந்த புழுதியாற் போர்க்கப்பட்ட உடலைக் கழுவித் திரும்பி வருதற்கு, வேண்டுவான்போல் - விரும்பினவனைப்போல, வெய்யோன் கடல் குளித்தனன் - சூரியன் மேலைக் கடலில் மூழ்கினன்.

காண்பான் : வினையெச்சம். ஊளை யென்னும் குறிப்பால் நரி யென்பது போந்தது. ஊளை - நரியின் கூக்குரல். இது தற்குறிப் பேற்ற வணி. (எ)

ஈச னுடல்வெம் பரிக்குழாத் தெழுந்தசெந் தூளான்
மாசு மூழ்கிய வண்டத்தை வானிலா வென்னுந்
தூசி னலறத் துடைப்பவ னெனமணித் தொகுதி
வீசு மாழியுண் முளைத்தனன் வெண்மதிக் கடவுள்.

(இ - ள்.) ஈசன் ஆடல் வெம்பரிக் குழாத்து எழுந்த - இறைவன் திருவிளையாடலாற் போந்த கொடிய பரிக் கூட்டத்தினால் எழுந்த, செந்தூளால் மாசு மூழ்கிய அண்டத்தை - செம்புழுதியால் அழுக்குப் படிந்த அண்டத்தினை, வால்நிலா என்னும் தூசினல் அறத் துடைப்பவன் என - வெள்ளிய நிலவாகிய ஆடையினால் முற்றுந் துடைக்கத் தோன்றியவனைப்போல, மணித் தொகுதி வீசும் ஆழியுள் - முத்துக்குவியல்களை அலைகளால் வீசுங் கடலின்கண், வெண்மதிக் கடவுள் முளைத்தனன் - வெள்ளிய திங்கட் புத்தேள் தோன்றினன்.

அண்டம் - வான்முகடு. தூசு - வெள்ளாடை. வெண்மதி, தன்னேடியைபின்மை மாத்திரை நீக்கிய விசேடணம். (அ)

சேய தாரகை வருணமாத் தீட்டிய வானம்
ஆய வேட்டினை யிருளெனு மஞ்சனந் தடவித்
தூய வாணிலா வென்னும்வெண் டூசினற் றுடைப்பான்
பாய வேலையின் முளைத்தனன் பனிமதிக் கடவுள்.

(இ - ள்.) சேயதாரகை வருணமாத் தீட்டிய - சேய்மையிலுள்ள உடுக் கூட்டங்களையே எழுத்தாக எழுதப்பட்ட, வானம் ஆய ஏட்டினை - வானமாகிய ஏட்டினை, இருள் எனும் அஞ்சனம் தடவி - இருளாகிய மையினைத் தடவி, தூய வாள் நிலா என்னும் வெண் தூசினல் - தூய ஒள்ளிய நிலாவாகிய வெள்ளாடையினுல், துடைப்பான் - துடைப்பதற்கு, பனிமதிக்கடவுள் - குளிர்ச்சி பொருந்திய திங்களாகிய தேவன், பாய வேலையில் முளைத்தனன் - பரந்த கடலின்கண்ணே தோன்றினன்.

வருணம் - எழுத்து. பனையேட்டில் ஆணிகொண்டெழுதிய எழுத்துக்கள் நன்கு விளங்குமாறு மை பூசித்துடைப்பது வழக்கமாகலின்

'இருளெனும்அஞ்சனந் தடவி நிலா வென்னும் தூசினுல் துடைப்பான்' என்ருர். இவ்விரண்டு செய்யுளும் உருவகத்தை அங்கமாகக் கொண்டு வந்த தற்குறிப்பேற்றம். (௯)

கள்ளொ ழுக்குதார் மீனவன் கடிமனை புகுந்த
புள்ளு வப்பரி நள்ளிருட் போதுவந் தெய்தப்
பிள்ளை யாகிய மதிமுடிப் பிரான்விளை யாட்டால்
உள்ள வாறுதம் வடிவெடுத் தொன்றேடொன் றுசாவும்.

(இ - ள்.) கள் ஒழுக்குதார் மீனவன் கடிமனை புகுந்த - தேனைச் சொரிகின்ற வேப்ப மலர் மாலையை யணிந்த பாண்டியனது காவலை யுடைய மனையின்கண் புகுந்த, புள்ளுவப்பரி - வஞ்சக வுருக்கொண்ட குதிரைகள், நள் இருள் போது வந்து எய்த - நடுவிராப் பொழுது வந்து பொருந்த, பிள்ளையாகிய மதிமுடிப்பிரான் விளையாட்டால் - பிறை மதியினைச் சூடிய முடியினையுடைய இறைவன் திருவிளையாடலினால், உள்ளவாறு தம் வடிவு எடுத்து - தமது வடிவத்தை முன் உள்ளபடியே எடுத்து, ஒன்றோடு ஒன்று உசாவும் - ஒன்றேடொன்று உசாவா நிற்கும்.

பிள்ளையாகிய மதி - பிறைமதி. (௧௦)

சங்கி னோசையும் பிணப்பறை யோசையுஞ் சரிந்த
மங்கு லோதிய ரழுகுர லோசையும் வடந்தாழ்
கொங்கை சேப்புறக் கையெறி யோசையுங் குளிர*
எங்கு நாஞ்செவி பருகுவ மின்னமு தென்ன.

(இ - ள்.) சங்கின் ஓசையும் பிணப்பறை ஓசையும் - சங்கின் ஒலியினையும் சாக்காட்டுப் பறையின் ஒலியினையும், சரிந்த மங்குல் ஓதியர் அழுகுரல் ஓசையும் - பின்புறஞ் சரிந்த முகில் போலுங் கூந்தலை யுடைய மகளிர் அழுகுரலின் ஒலியினையும், வடம்தாழ் கொங்கை சேப்புறக் கை எறி ஓசையும் - (அவர்கள்) முத்துமாலை தங்கிய கொங்கைகள் சிவக்குமாறு கையினுல் அடித்துக் கொள்ளும் ஒலியினையும், இன் அமுது என்ன - இனிய அமுதினை வாய்குளிரப் பருகுவது போல, நாம் எங்கும் செவி குளிரப் பருகுவம் - நாம் எவ்விடத்தும் செவிகள் குளிருமாறு நுகர்வோம்.

சங்கோசையும் சாக்காடு குறித்தது. சரிந்த - துயரத்தால் முடியாது கிடக்கின்ற என்றுமாம். சேப்பு - சிவத்தல். எங்கும் - புறங் காட்டிலும் அதனைச் சூழ்ந்த இடங்களிலும், பருகும் இயற்கை யுடையேம் என்க. குளிற என்னும் பாடத்திற்கு ஒலிக்க என்று பொருள் கொள்க. (௧௧)

(பா - ம்.) *குளிற.

வாம்ப ரித்திர ளாகிநா மனித்தரைச் சுமந்து
தாம்பு சங்கிலித் தொடக்குண்டு மத்திகை தாக்க
ஏம்ப லுற்றனம் பகலெலா மிப்பொழு தீண்டு
நாம்ப டைத்தன நம்முரு நம்விதி வலத்தால்.

(இ - ள்.) நாம் பகல் எலாம் - நாம் பகல் முழுதும், வாம்பரித்திரள் ஆகி - தாவுகின்ற குதிரைக் கூட்டங்களாகி, மனித்தரைச் சுமந்து - மக்களைச் சுமந்து, தாம்பு சங்கிலித் தொடக்குண்டு - கயிற்றினாலும் சங்கலியினாலும் கட்டப்பட்டு, மத்திகை தாக்க ஏம்பல் உற்றனம் - கோலாலடிக்க வருந்தினோம்; இப்பொழுது ஈண்டு - இப்பொழுது இங்கு, நாம் நம் விதி வலத்தால் நம் உருப் படைத்தனம் - நாம் நமது நல்வினையின் வலியினால் நமது பழைய வடிவினைப் பெற்றோம்.

மத்திகை - குதிரைச் சம்மட்டி. ஏம்பல் - வருத்தம். அத்தகைய நாம் பரித்திரளாகி ஏம்பலுற்றனம் என விரித்துரைக்க. (௬௨)

கான கந்தனி லொழுகுநாண் முதலிந்தக் கவலை
யான துன்பநா மறிந்தில மின்னமு மார்த்த
மான வன்றொடர் வடுக்களு மத்திகைத் தழும்பும்
போன வன்றினிப் புலருமுன் போவதே கருமம்.

(இ - ள்.) கானகம் தனில் ஒழுகும் நாள் முதல் - காட்டின்கண் சஞ்சரிக்கத் தொடங்கிய நாள் முதல் நேற்றுவரையும், இந்த கவலையான துன்பம் நாம் அறிந்திலம் - இந்தக் கவலைக்கு ஏதுவாகிய துன்பத்தை நாம் அறிந்திலோம்; ஆர்த்த மானவன் தொடர்வடுக்களும் - கட்டிய பெரிய வலிய சங்கிலியின் தழும்புகளும், மத்திகைத் தழும்பும் - குதிரைச் சம்மட்டியின் வடுக்களும், இன்னமும் போன அன்று - இன்னும் நீங்கவில்லை; இனிப் புலரு முன் போவதே கருமம் - இனி விடிவதற்குமுன் இவ்விடத்தினின்றும் போவதே செய்யத்தக்க காரியம்.

நாம் என்றது நரியாகிய சாதியை. போன அன்று - போயின அல்ல. (௬௩)

உள்ள மாரநாந் தின்பதற் கூன்சரிந் தொழுகும்
நொள்ளை நாகில நந்தில நுழைந்தளை யொதுங்கும்
கள்ள நீள்கவைக் கான்ஞெண்டு மிலவினிக் கடலை
கொள்ளி ஞேடுபைம் பயறுபுற் கொள்வதை* யடாதால்.

(இ - ள்.) உள்ளம் ஆர நாம் தின்பதற்கு - மனமார நாம் தின்பதற்கு, ஊன் சரிந்து ஒழுகும் நொள்ளை நாகு இல - தசை சரிந்து தொங்கும் கட்பொறியில்லாத நத்தைகள் இங்கில்லை; நந்து இல -

(பா - ம்.) *கொள்வகை.

சங்குகளும் இல்லை; அளை நுழைந்து ஒதுங்கும் கள்ளம் - வளையில் நுழைந்து பதுங்கும் கள்ளத்தையும், நீள் கவைக்கால் ஞெண்டும் இல - நீண்ட பிளவுபட்ட கால்களையுமுடைய ஞெண்டுகளும் இல்லை; இனி கடலை கொள்ளிறோடு பைம்பயறு புல்கொள்வது அடாது - இனிக் கடலையும் கொள்ளும் பசிய பயறும் புல்லும் தின்னுவது நமக்குப் பொருந்தாது.

ஆர - நிறைய; திருப்தியுற. நொள்ளை - குருடு. கொள்வதை, ஐ: சாரியை. (௧௪)

நாடிக் காவலன் றமருளார் நகருளார் கண்டாற்
சாடிக் காய்வரே புலருமுன் சங்கிலித் தொடர்நீத்
தோடிப் போவதே சூழ்ச்சியென் றூக்கமுற் றொருங்கே
கூடிப் பேசின வூளைவாய்க் குறுநரிக் குழாங்கள்.

(இ - ள்.) காவலன் தமருளார் நகருளார் நாடிக் கண்டால் - மன்னன் சேனைகளும் நகரிலுள்ளவர்களும் நம்மை நாடிக் காண்பாராயின், சாடிக் காய்வர் - அடித்துக் கொல்லுவர்; புலருமுன் சங்கிலித் தொடர் நீத்து ஓடிப் போவதே சூழ்ச்சி என்று - (ஆதலால்) விடியுமுன் சங்கிலிக் கட்டினை ஒழித்து ஓடிப்போவதே தக்க உபாயமென்று, ஊக்கமுற்று - மனவூக்கத்துடன், ஊளைவாய்க் குறுநரிக் குழாங்கள் - ஊளையிடும் வாயினையுடைய சிறிய நரிக் கூட்டங்கள், ஒருங்கே கூடிப் பேசின - ஒரு சேரக் கூடிப் பேசி முடிவு செய்தன.

காய்ந்து சாடுவர் என மாறுதலுமாம். தொடர் - கட்டு. (௧௫)

வெறுத்த காணமுங் கடலையும் விரும்பின கோழுன்
றுறுத்த நாகுநந் தலைவனைச் சங்கிலித் தொடரை
முறித்த கால்களிற் கட்டிய கயிற்றொடு முளையைப்
பறித்த வூளையிட் டெழுந்தன போம்வழி பார்ப்ப.

(இ - ள்.) காணமும் கடலையும் வெறுத்த - கொள்ளையுங் கடலையையும் வெறுத்து, கோழ் ஊன் துறுத்த நாகு நந்து அலவனை விரும்பின - கொழுவிய தசை துறுத்திய நத்தையையுஞ் சங்கினையும் நண்டையும் விரும்பி, சங்கிலித் தொடரை முறித்த - சங்கிலித் தொடக்கை முறித்து, கால்களில் கட்டிய கயிற்றொடு முளையைப் பறித்த - கால்களிற் கட்டிய கயிற்றுடன் தறியையும் பிடுங்கி, ஊளையிட்டு எழுந்தன - ஊளையிட்டு எழுந்து, போம்வழி பார்ப்ப - போதற்கு வழி தேடுவவாயின.

வெறுத்த, துறுத்த, முறித்த, பறித்த என்னும் அன்பெறாத முற்றுக்களும், விரும்பின, எழுந்தன என்னும் முற்றுக்களும் எச்சமாயின. பார்ப்பனவாயின என ஆக்கச் சொல் வருவித்துரைக்க. (௧௬)

நின்ற நீணிலைப் பந்தி*யு ணெருங்குமா நிரையைச்
சென்று தாவிவா ளெயிறுறச் சிதைபடக் கடித்து
மென்று சோரியைக் குடிப்பன வீக்கிய முளையோ
டொன்ற வோடவே யண்டத்தி லூறுசெய் வனவால்.

(இ - ள்.) நின்றநீள் நிலைப்பந்தியுள் - தாம் நின்ற நீண்ட நிலையினையுடைய மந்துரையில், நெருங்கு மா நிரையைச் சென்றுதாவி-நெருங்கிய குதிரை வரிசைகளைப் போய்த்தாவி, வாள் எயிறு உற-ஒள்ளிய பற்கள் அழுந்துதலால், சிதைபட-ஊறுபட, கடித்து மென்று சோரியைக் குடிப்பன - கடித்துமென்று குருதியைக் குடிப்பனவாயின சில; வீக்கிய முளையோடு ஒன்ற ஓடவே-சில கட்டிய முளையோடு பொருந்த ஓடுதலால், அண்டத்தில் ஊறு செய்வன - அவற்றின் அண்டங்களில் ஊறு செய்வனவாயின.

மாநிரை - முன்பிருந்த குதிரைகள். அண்டம் - பீசம். (௧௭)

ஊளை யோசைகேட் டிம்மென வுறக்கநீத் தெழுந்து
காளை வீரராம் மந்துரை காப்பவர் நெருநல்
ஆளி போல்வரு பரியெலா நரிகளாய் மற்றை
ஓளி மாநிரை குடர்பறித் துண்பன கண்டார்.

(இ - ள்.) காளை வீரராம் மந்துரை காப்பவர் - மந்துரைக் காவலாளராகிய காளைப் பருவமுடைய வீரர்கள், ஊளை ஓசை கேட்டு - நரிகளின் ஊளை யொலியைக் கேட்டு, இம்மென உறக்கம் நீத்து எழுந்து-விரைந்து துயில் நீத்து எழுந்து, நெருநல் ஆளிபோல் வரு பரி எலாம்-நேற்றுச் சிங்கம்போல் வந்த குதிரைகளெல்லாம், நரிகளாய் - நரிகளாகி, மற்றை ஒளி மாநிரை குடர் பறித்து உண்பன கண்டார் - ஏனைய வரிசையாகக் கட்டிய குதிரைக் கூட்டங்களின் குடரினைப் பறித்துண்ணுதலைக் கண்டனர்.

இம்மென: விரைவுக் குறிப்பு. ஒளி - வரிசை. குடர்: போலி. உண்பன: தொழிற் பெயர். (௧௮)

காண்ட லுஞ்சில வலியுள கடியமுள் ளரணந்
தாண்டி யோடின சிலநரி சாளர முழையைத்
தூண்டி யோடின சிலநரி சுருங்கையின் வழியால்
ஈண்டி யோடின நூழில்புக் கேகின சிலவே.

(இ - ள்.) காண்டலும் சில வலி உள - அங்ஙனங் கண்ட வளவில் சில வலியுள்ள நரிகள், கடியமுள் அரணம் தாண்டி ஓடின - கூரிய இருப்பு முட்களைத் தலையிற் செறித்து வைக்கப்பட்ட மதில்களைத் தாண்டியோடின; சில நரி சாளர முழையைத் தூண்டி ஓடின - சில

(பா - ம்.) * நீணிரைப்பந்தி

நரிகள் பலகணியின் துளைகளைத் தள்ளி ஓடின ; சில நரி சுருங்கையின் வழியால் ஈண்டி ஓடின - சில நரிகள் நுழைவாயில் வழியினால் நெருங்கி ஓடின, சில நூழில்புக்கு ஏகின - சில நரிகள் கரந்துறை வழியாற் புகுந்து ஓடின.

கடிய - கூர்மையுடைய; கடி என்னும் உரிச்சொல்லடியாக வந்த குறிப்புப் பெயரெச்சம். முள் - இருப்புமுள். சுருங்கை - நுழைந்து செல்லும் சிறிய வாயில்; நிலவறையுமாம். (௧௯)

முடங்கு காலுடைச் சம்புவு மூப்படைந் தாற்றல்
அடங்கு மோரியுங் கண்குரு டாகிய நரியும்
ஒடுங்கி நோயுழந்* தலமரு மிகலனு மோடும்
இடங்கள் கண்டில பந்தியிற் கிடந்தன வேங்கி.

(இ - ள்.) முடங்கு கால் உடைச் சம்புவும் - வளைந்த காலினை யுடைய நரிகளும், மூப்பு அடைந்து ஆற்றல் அடங்கும் ஓரியும் - மூப்புற்று வலி ஒடுங்கிய நரிகளும், கண் குருடாகிய நரியும் - கண் தெரியாத நரிகளும், ஒடுங்கி நோய் உழந்து அலமரும் இகலனும் - உடல் இளைத்து நோயினால் வருந்திச் சுழலும் நரிகளும், ஓடும் இடங்கள் கண்டில - ஓடும் வழிகளைக் காணாதவைகளாய், பந்தியில் ஏங்கிக் கிடந்தன - மந்துரையிலேயே மனமேங்கிக் கிடந்தன.

முடங்குகால் - முடம் பட்ட கால். சம்பு, ஓரி, இகலன் என்பன நரி என்னும் பொருள் குறித்த பல பெயர்த் திரிசொல். (௨௦)

கிட்டி யோடினர் வெருட்டுவோர் கீழ்விழக் கடித்துத்
தட்டி யோடுவ சிலவெதிர் தடுப்பவ ரடிக்கீழ்
ஒட்டி யோடுவ சிலகிடந் தூளையிட் டிரங்குங்
குட்டி யோடணைத் தெயிலிறக் குதிப்பன சிலவே.

(இ - ள்.) சில - சில நரிகள், கிட்டி ஓடினர் வெருட்டுவோர் கீழ்விழ - தம்மை நெருங்கி ஓடிவந்து அச்சுறுத்துவோர் கீழே விழுமாறு, கடித்துத்தட்டி ஓடுவ - கடித்து அவர் கையில் அகப்படாமல் ஓடுவன; சில எதிர் தடுப்பவர் அடிக்கீழ் ஒட்டி ஓடுவ - சில நரிகள் எதிரே வந்து தடைப் படுத்துகின்றவரின் காலின் கீழே பதுங்கி ஓடுவன; சில - சில நரிகள், கிடந்து ஊளையிட்டு இரங்கும் குட்டியோடு அணைத்து - செயலின்றிக் கிடந்து ஊளையிட்டு வருந்துகின்ற குட்டிகளை அணைத்து, எயில் இறக் குதிப்பன - மதில் சிதைவுபடக் குதிப்பன.

தட்டி - தவறி. குட்டியோடு: வேற்றுமை மயக்கம். (௨௧)

(பா - ம்.) * ஒடுங்கு நோய்.

மறம்பு னைந்தவேன் மீனவன் மாளிகை தள்ளிப்
புறம்ப டைந்தவிந் நரியெலாம் பொய்கையுய் யானம்
அறம்ப யின்றநீண் மனைமறு காலயங் கவலைத்
திறம்ப டார்ந்தபன் மாடநீ ணகரெலாஞ் செறிந்த.

(இ - ள்.) மறம்புனைந்த வேல்மீனவன் மாளிகைதள்ளி - வெற்றி மாலைசூடிய வேற்படை யேந்திய பாண்டியனது மாளிகையைக் கடந்து, புறம்பு அடைந்த இந்நரி எலாம் - வெளியே சென்றடைந்த இந்நரி களெல்லாம், பொய்கை உய்யானம் - குளக்கரையும் பூந்தோட்டங் களும், அறம் பயின்ற நீண்மனை - அறம் விளங்கும் நெடிய சாலைகளும், மறுகு ஆலயம் கவலைத் திறம் படர்ந்த - வீதிகளும் திருக்கோயில்களும் சந்தி வகைகளும் ஆகிய இடங்களிற் சென்றனவாய், பல்மாடம் நீள் நகர் எலாம் செறிந்த - பல மாடங்களையுடைய நெடிய நகர் முழுதும் நெருங்கின.

தள்ளி - கடந்து; நீங்கி. அறம்பயின்ற மனை - அறச்சாலை; தரும சத்திரம். கவலை - இரண்டு மூன்று தெருக்கள் கூடுமிடங்கள்; கவர் வழியுமாம். படர்ந்த : முற்றெச்சம். (௨௨)

மன்றுஞ் சித்திர கூடமு மாடமு மணிசெய்
குன்றுந் தெற்றியு முற்றமு நாளொடு கோள்வந்
தென்றுஞ் சுற்றிய பொங்கரு மெங்கணு நிரம்பி
ஒன்றுஞ் சுற்றமோ டூளையிட் டுழல்வன நரிகள்.

(இ - ள்.) நரிகள் - நரிக்கூட்டங்கள், மன்றும் சித்திர கூடமும் மாடமும் - மன்றங்களும் சித்திர மெழுதிய கூடங்களும் மாடங்களும், மணி செய்குன்றும் தெற்றியும் முற்றமும் - மணிகளாற் கட்டிய செய் குன்றுகளும் திண்ணைகளும் முன்றில்களும், நாளொடு கோள் வந்து என்றும் சுற்றிய பொங்கரும் எங்கணும் நிரம்பிய - நாண்மீனொடு கோள்களும் எஞ்ஞான்றுஞ் சுற்றப் பெறும் சோலைகளுமாகிய எல்லா விடங்களிலும் நிறைந்து, ஒன்றும் சுற்றமோடு ஊளையிட்டு உழல்வன - நெருங்கிய சுற்றத்தோடு ஊளையிட்டுத் திரியா நின்றன.

மன்று - ஊர்க்கு நடுவே எல்லாருங் கூடி யிருக்கும் மரத்தடி என்றும், தெற்றி - அம்பலம் என்றும் கொள்ளலுமாம். (௨௩)

கரியி னோசையும் பல்லிய வோசையுங் கடுந்தேர்ப்
பரியி னோசையு மின்றமி ழோசையும் பாணர்
வரியி னோசையு நிரம்பிய மணிநக ரெங்கும்
நரியி னோசையாய்க் கிடந்தது விழித்தது நகரம்.

(இ - ள்.) கரியின் ஓசையும் பல்இய ஓசையும் - யானைகளின் பிளிறொலியும் பலவகை வாத்தியங்களின் ஒலியும், கடுந்தேர்ப்பரியின்

ஓசையும் - விரைந்த செலவினையுடைய தேரிற்பூட்டிய குதிரைகளின் கனைப்பொலியும், இன்தமிழ் ஓசையும் - இனிய தமிழின் ஒலியும், பாணர் வரியின் ஓசையும் - பாணர்களின் இசைப்பாட்டொலியும், நிரம்பிய மணிநகர் எங்கும் - நிறைந்த அழகிய நகர்முழுதும், நரியின் ஓசையாய்க் கிடந்தது - நரிகளின் ஊளையொலிமயமாய்க் கிடந்தது; நகரம் விழித்தது - நகரிலுள்ளோர் விழித்தனர்.

தமிழோசை - புலவர்கள் தமிழாராய்ச்சிசெய்யும் ஓசை. வரி - இசைப் பாட்டு. நகரம் என்னும் இடப்பெயர் இடத்திலுள்ளாரை உணர்த்தி நின்றது. (உச)

விழித்த ஞாளிகள் விழித்தன கேகயம் வெருவி
விழித்த கோழிகள் விழித்தன மதுகரம் வெருண்டு
விழித்த வோதிமம் விழித்தன குருகினம் விரைய
விழித்த வாரணம் விழித்தன கருங்கொடி வெள்ளம்.

(இ - ள்.) ஞாளிகள் விழித்த - நாய்கள் விழித்தன; கேகயம் வெருவி விழித்தன - மயில்கள் அஞ்சி விழித்தன; கோழிகள் விழித்த - கோழிகள் விழித்தன; மதுகரம் வெருண்டு விழித்தன - வண்டுகள் பயந்து விழித்தன; ஓதிமம் விழித்த-அன்னப் பறவைகள் விழித்தன; குருகு இனம் விரைய விழித்தன - நாரையின் கூட்டங்கள் விரைந்து விழித்தன; வாரணம் விழித்த - யானைகள் விழித்தன; கருங்கொடி வெள்ளம் விழித்தன - கரிய் காக்கைக் கூட்டங்கள் விழித்தன.

கொடி - காக்கை. விழித்தற்குரிய பொழுது வருமுன் யாவும் நள்ளிரவில் விழித்தன என்க. (உரு)

அடடில் புக்கன நிணத்தினை யழற்பசி யுருக்கப்
பட்ட டுக்கிய கருங்கல முருட்டுவ பாகு
சுட்ட சோறுபல் லுணவுவாய் மடுப்பன சூழ்ந்த
குட்டி யுண்ணவுங் கொடுப்பன கூவிளி கொள்வ.

(இ - ள்.) நிணத்தினை அழல் பசி உருக்கப்பட்டு - சில நரிகள் தங்கள் தசையினை அழல் போன்ற பசி உருக்குவதால், அட்டில் புக்கன - சமையலறையிற் புகுந்து, அடுக்கிய கருங்கலம் உருட்டுவ - அடுக்கப்பட்ட பழைய மட்பாண்டங்களை உருட்டி, பாகு சுட்ட சோறு பல் உணவு வாய் மடுப்பன-குழம்பும் வெந்த சோறும் பல உணவுமாகிய இவற்றைத் தின்று, சூழ்ந்த குட்டி உண்ணவும் கொடுப்பன - சூழ்ந்துள்ள குட்டிகள் உண்ணுதற்கும் கொடுத்து, கூவிளி கொள்வ - பேரொலி செய்வன.

உருக்கப்பட்டு - உருக்க என்னும் பொருளதாய் நின்றது. புக்கன முதலிய முற்றுக்களை எச்சமாக்குக. பல் லுணவு - கறி, பழம் முதலாயின. கூவிளி - கூக்குரல். (உசு)

புறவு பூவைபைங் கிள்ளைகள் பூத்தலைச் சேவல்
பிறவும் வாருவ வுறங்கிய பிள்ளையைக் கொடுபோய்
நறவு நாறிய குமுதவாய் நகையெழ நக்கி
உறவு போல்விளை யாடுவ வூறுசெய் யாவால்.

(இ - ள்.) புறவு பூவை பைங் கிள்ளைகள் - (சில நரிகள்) புறாக்களையும் நாகணவாய்ப் பறவைகளையும் பசிய கிளிகளையும், பூத்தலைச் சேவல் பிறவும் வாருவ - முண்முருக்கமலர் போன்ற சூட்டுப் பொருந்திய தலையினையுடைய சேவல்களையும் இவை போன்ற பிறவற்றையும் வாருகின்றன; உறங்கிய பிள்ளையைக் கொடு போய் - (சில நரிகள்) வீட்டிற் றூங்கிய பிள்ளைகளைக் கொண்டு போய், நறவு நாறிய குமுதவாய் நகை எழ நக்கி - தேன் ஊறும் குமுதமலர் போன்ற வாயினின்றும் புன்னகை தோன்ற நக்கி, உறவு போல் விளையாடுவ - உறவைப்போற் கருதி விளையாடுவன; ஊறு செய்யா - துன்பஞ் செய்யமாட்டா.

பூ - பூப்போலும் சூட்டு; உச்சிக் கொண்டை. வாருதல் - அள்ளுதல்; கவர்தல். பிள்ளை - மக்கட்குழவி. இறைவன் திருவருட் குறிப்பால் குழவிகளை ஊறு செய்யாது விளையாடுவனவாயின. (உஎ)

பறிப்ப வேரோடு முன்றில்வாய்ப் படர்பசுங் கோடியைக்
கறிப்ப நாகிளங் காயெலாங் கரும்புதேன் கவிழ
முறிப்ப வாயிட்டுக் குதட்டுவ வண்டுவாய் மோய்ப்பத்
தெறிப்ப வூளையிட் டாடுவ திரிவன பலவே.

(இ - ள்.) பல - பலநரிகள், முன்றில்வாய்ப்படர் பசுங்கொடியை வேரோடு பறிப்ப - முற்றத்தின்கண் படர்ந்த பசுங்கொடிகளை வேரோடு பிடுங்கி, நாகு இளம் காய் எலாம் கறிப்ப - அவற்றிலுள்ள மிக்க இளமையாகிய காய்கள் அனைத்தையுங் கடித்து, கரும்பு தேன் கவிழ முறிப்ப-தேன் கவிழ்ந்தொழுகுமாறு கரும்புகளை முறித்து, வாய் இட்டுக் குதட்டுவ - வாயிற்போட்டுக் குதட்டி, வாய் வண்டு மொய்ப்பத் தெறிப்ப- வாயில் வண்டுகள் மொய்க்கக் கீழே உமிழ்ந்து, ஊளையிட்டு ஆடுவ திரிவன- ஊளையிட்டு விளையாடித் திரிவன.

பறிப்ப முதலியவற்றை முற்றுகவே உரைத்தலுமாம். தன்மையும் பொலிவுங் கருதி முன்றிலில் பசுங்கொடிகள் படரவிட்டிருப்பர்; அவரை முதலிய கறிதருங் கொடியுமாம். கறித்தல் - கடித்தல்: வண்டு வாய் மொய்ப்ப வாயிட்டுக் குதட்டுவ எனக்கூட்டி யுரைத்தலும், தெறிப்ப என்பதற்குக் குதிப்பன என்றுரைத்தலும் பொருந்தும். (உஅ)

ஆயி ரம்பொரி திரிமருப் படல்கெழு மேடம்
ஆயி ரங்கருந் தாதுநே ராக்கைய வேனம்
ஆயி ரங்கவி ரனையசூட் டவிர்தலைக் கோழி
ஆயி ரந்துறும் பார்ப்போடு மாருயிர் செகுப்ப.

(இ - ள்.) பொரிதிரிமருப்பு அடல்கெழு ஆயிரம் மேடம் - பொருக்குப் பொருந்திய திருகிய கொம்பினையுடைய வலிமிக்க ஆயிரம் ஆட்டுக்கிடாய்களையும், கருந்தாதுநேர் ஆக்கைய ஆயிரம் ஏனம் - இரும்பினை ஒத்த உடலையுடைய ஆயிரம் பன்றிகளையும், கவிர் அனைய சூட்டு அவிர்தலை ஆயிரம் கோழி - முண்முருக்குமலரொத்த சூட்டு விளங்குந் தலையினை யுடைய ஆயிரங் கோழிகளையும், ஆயிரம் குறும் பார்ப்பொடும் - சிறிய ஆயிரம் கோழிக்குஞ்சுகளையும், ஆர் உயிர் செகுப்ப - அவற்றின் அரிய உயிரினைப் போக்கிக் கொள்வன.

பொரி - பொருக்கு. கருந்தாது - இரும்பு. கவிர் - பலாசு. பார்ப்பு - குஞ்சு;

"பார்ப்பும் பறழும் பறப்பவற் றிளமை"

என்பது தொல்காப்பியம். (௨௯)

பின்றொ டர்ந்துநாய் குரைப்பொடு துரந்திடப் பெயர்ந்து
முன்றொ டர்ந்துயிர் செகுப்பன வெஞ்சின மூட்டி
வன்ற டம்புய மள்ளர்போய் வலிசெயப்பொருது
கன்றி வந்துசெம் புனலுகக் கடிப்பன வனந்தம்.

(இ - ள்.) அனந்தம் - அளவில்லாத நரிகள், நாய் குரைப்பொடு பின் தொடர்ந்து துரந்திட - நாய்கள் குரைத்தலுடன் தம்மைப் பின் தொடர்ந்து துரந்திட, பெயர்ந்து முன் தொடர்ந்து உயிர் செகுப்பன - திரும்பி முன்னே தொடர்ந்து போய் அவற்றின் உயிரைப் போக்குவன; வெஞ்சினம் மூட்டி வன் தடம்புய மள்ளர் போய் வலிசெய - கொடிய சினம் மூட்டப்பட்டு வலிய பெரிய தோளையுடைய வீரர்கள் போய்த் துன்பஞ்செய்ய, பொருது கன்றிவந்து செம்புனல் உகக்கடிப்பன - பொறுக்காது சினந்து வந்து குருதி ஒழுக அவர்களைக் கடிப்பன.

மூட்டி - மூட்டப்பட்டு; செயப்பாட்டு வினைப்பொருளில் வந்த செய்வினை. கன்றி - சினம் முதிர்ந்து. (௩௦)

பன்றி வாய்விடு மிரக்கமும் பல்பொறி முள்வாய்
வென்றி வாரணச் சும்மையு மேழகத் தோலியும்
அன்றி நாய்குரைப் போசையு மாடவ ரார்ப்பும்
ஒன்றி யூளைவாய் நரிக்குரற் கொப்பதுண் டொருசார்.

(இ - ள்.) பன்றி வாய்விடும் இரக்கமும் - பன்றிகள் வாய் விடும் ஒலியும், பல்பொறி முள்வாய் வென்றி வாரணச் சும்மையும் - பலபொறிகளையும் முள்போன்ற வாயினையும் வெற்றியையு முடைய கோழிகளின் ஒலியும், மேழகத்து ஒலியும் அன்றி - ஆடுகளின் ஒலியுமாகிய இவையேயல்லாமல், நாய் குரைப்பு ஓசையும், ஆடவர் ஆர்ப்பும் ஒன்றி - நாய்களின் குரைப்பொலியும் மள்ளர்களின் ஆரவாரவொலியும் ஒன்றுபட்டு, ஊளைவாய் நரிக்குரற்கு ஒருசார் ஒப்பது உண்டு - ஊளையிடும் வாயினையுடைய நரிகளின் ஒலிக்கு ஒருபுடை ஒப்பதுண்டு.

இரக்கம், சும்மை என்பன ஒலியென்னும் பொருளன. அன்றி என்பதற்கு மாறுபட்டு என்றுரைத்தலுமாம். இவை எல்லாவற்றி னொலியும் சேர்ந்தும் நரிகளின் ஒலிக்கு ஒருபுடை யொக்குமேயன்றி முழுதும் ஒவ்வா என்றார். (௯௧)

கங்கு லெல்லைகா ணியநகர் கண்விழித் தாங்கு
மங்குறேய்பெரு வாயில்க டிறத்தலு மாறு
தெங்கு மீண்டிய நரியெலா மிம்மென வோடிப்
பொங்கு காரிருட் டுணியெனப் போயின கானம்.

(இ - ள்.) கங்குல் எல்லை காணிய நகர் கண்விழித்தாங்கு - இரவின் முடிவைக் காணுதற்கு நகரம் கண்விழித்தாற் போல, மங்குல் தோய் பெருவாயில்கள் திறத்தலும் - முகில் தவழுகின்ற பெரிய வாயில்கள் திறந்தவளவில், எங்கும் மாறுது ஈண்டிய நரி எலாம் - எங்கும் இடமின்றி நெருங்கிய நரிகள் அனைத்தும், இம்மென - விரைய, பொங்கு கார் இருள் துணி என - நிறைந்தகரிய இருளின் துண்டங்கள் காட்டில் ஓடினாற்போல, கானம் ஓடிப்போயின - காட்டிற்கு ஓடிப்போயின.

வாயில்கள் - நகரின் மதில் வாயில்கள். வாயில்கள் திறந்தமை நகர்கண் விழித்தாற் போன்றிருந்தது. இம்மென : விரைவுக்குறிப்பு. (௯௨)

ஈறி லாச்சிவ பரஞ்சுட ரிரவிவந் தெறிப்பத்
தேறு வாரிடைத் தோன்றிய சிறுதெய்வம் போல
மாறி லாதபன் செங்கதிர் மலர்ந்துவா ளெறிப்ப
வீறு போயொளி மழுங்கின மீன்கண மெல்லாம்.

(இ - ள்.) தேறுவாரிடை - கேட்டல் முதலிய உபாயங்களால் மெய்யுணர்வு பெறுகின்ற ஞானிகளிடத்து, ஈறு இலாச் சிவபரஞ்சுடர் இரவி வந்து எறிப்ப - முடிவில்லாத சிவப்பரஞ்சோதியாகிய சூரியன் தோன்றி அருட்கிரணத்தை வீச, தோன்றிய சிறு தெய்வம்போல - அங்குத் தோன்றிய சிறு தெய்வங்கள் வலி குறைந்து ஒளி மழுங்குதல் போல, மாறுஇல் ஆதபன் செங்கதிர் மலர்ந்து வாள் எறிப்ப - மாறுதல் இல்லாத சூரியனுடைய ஆயிரங்கிரணங்களும் பரவி ஒளியை வீச, மீன்கணம் எல்லாம் வீறுபோய் ஒளிமழுங்கின - விண்மீன்களின் கூட்ட மெல்லாம் வலிகுன்றி ஒளிமழுங்கின.

முன் சிறுதெய்வங்களைப் பொருளெனக் கொண்டிருந்தவர்கள் மெய்யுணர்வு பெற்றுச் சிவபெருமானே பரம்பொருளென உணர்ந்த காலை "சென்று நாம் சிறு தெய்வஞ் சேர்வோ மல்லோம் சிவபெருமான் றிருவடியே சேரப் பெற்றோம்" என அவற்றை அவமதித்து விடுத்தலை 'ஈறிலாச்சிவபரஞ்சுடரிரவி வந்தெறிப்பத்தேறு வாரிடைத் தோன்றிய சிறு தெய்வம்போல' என்றார். ஞாயிறு என்றும் ஒருபெற்றியே வந்து கொண்டிருப்பதென்பார் 'மாறிலாதபன்' என்றார். மாறு, முதனிலைத்

தொழிற்பெயர். எறிப்ப என்னும் எச்சமிரண்டும் காரணப்பொருளன. (௯௩)

அண்ட ருக்கரி தாகிய மறைப்பொரு ளழுகைத்
தொண்ட ருக்கெளி தாகிமண் சுமந்தருள் வருத்தங்
கண்ட ருட்கழல் வருடுவான் கைகளா யிரமுங்
கொண்ட ருக்கவெங் கடவுளுங் குணகட லுதித்தான்.

(இ - ள்.) அண்டருக்கு அரிதாகிய மறைப்பொருள் - தேவர்கட்கு அரிதாகிய வேதத்தின் உட்பொருளானது, அழுகைத் தொண்டருக்கு எளிதாகி - அழுதலை மேற்கொண்ட தொண்டராகிய வாதவூரடிகளுக்கு எளிதாகி, மண்சுமந்தருள் வருத்தம் கண்டு - மண் சுமந்தருளும் வருத்தத்தை நோக்கி, அருள்கழல் வருடுவான் - திருவருளாகிய திருவடிகளை வருடும் பொருட்டு, கைகள் ஆயிரமும் கொண்டு - ஆயிரங் கரங்களையுங் கொண்டு, அருக்க வெங்கடவுளும் - வெவ்விய சூரிய தேவனும், குணகடல் உதித்தான் - கீழைக்கடலில் வந்துதோன்றினன்.

அண்டருக்கும் என்னும் சிறப்பும்மை தொக்கதுமாம். மறைப்பொருள் என்னும் பெயருக்கேற்ப அரிதாகிய எளிதாகி என அஃறிணை வாய்பாடு கூறினர். வாதவூரர் தலையன்பால் இடையறாது அழுது கொண்டிருந்தாரென்பது திருவாசகத்தால் நன்கு விளங்குதலின் 'அழுகை தொண்டர்' என்றார். இப்புராணத்து வாழ்த்தினுள்ளும் 'துளும்பு கண்ணீருள் மூழ்கி அழுதடியடைந்த அன்பன்' என்று கூறினமை காண்க. இறைவனுடைய அங்கமெல்லாம் அருளேயாகலின் 'அருட் கழல்' என்றார். வருடுவான்: வினையெச்சம். கைகள் என்றது கிரணங்களை; அதற்குக் கரம் என்னும் பெயருண்மையும் காண்க. கொண்டு தோன்றினாற் போல என விரித்துரைத்துக் கொள்க. இது தற்குறிப்பேற்ற அணி. (௯௪)

கவன வெம்பரி செலுத்திமேற் கவலைதீர்ந் துள்ளே
சிவமு ணர்ந்தவர் சிந்தைபோன் மலர்ந்தசெங் கமலம்
உவமை யில்பரம் பொருளுணர்ந் துரையிறந் திருந்தோர்
மவுன வாயென வடங்கின மலர்ந்தபைங் குமுதம்.

(இ - ள்.) வெம் கவன பரிசெலுத்தி - மிக்க வேகத்தினையுடைய குதிரைகளைப் பாண்டியனுக்குச் செலுத்துதலால், மேல் கவலை தீர்ந்து - இனி வருங் கவலை நீங்கி, உள்ளே சிவம் உணர்ந்தவர் சிந்தைபோல் - அகத்தின்கண் சிவபிரானை யுணர்ந்த மணிவாசகனார் இதயம் போல, செங்கமலம் மலர்ந்த - செந்தாமரைகள் மலர்ந்தன; உவமைஇல் பரம் பொருள் உணர்ந்து - உவமையில்லாத அப் பரம்பொருளை உணர்ந்து உரை இறந்து இருந்தோர் மவுனவாய் என - சொல்லிறந்திருந்த அவ்வடிகளின் மவுனத்தையுடைய வாய் போல, மலர்ந்த பைங்குமுதம் - அடங்கின - (இரவில்) மலர்ந்திருந்த பசிய குமுதமலர்கள் கூம்பின,

வாதவூரர் பொருட்டே இறைவன் பரி செலுத்தினமையால் அவர் மேலேற்றிக் கூறினர்; இறுத்து என்றுமாம். பரிசெலுத்தி என்பதற்கு வாசியை மேனோக்கிச்செலுத்தி எனவும் ஒரு பொருள் கொள்க. உள்ளே சிவமுணர்ந்தவர் என்றது சிவயோகிகளையும், பரம்பொருளுணர்ந்து உரையிறந்திருந்தோர் என்றது சிவஞானிகளையும் பொதுமையில் உணர்த்துவனவாகக் கோடலுமாம். மலர்ந்த இரண்டனுள் முன்னது முற்று பின்னது எச்சம். (௩௫)

பந்தி யாளர்கள் யாதெனப் பகர்துமென் றச்சஞ்
சிந்தி யாவெழுந் தொல்லைபோய்த் திரண்மதங் கவிழ்க்குந்
தந்தி யானர சிறைகொளு மிருக்கையைச் சார்ந்து
வந்தி யாவுடல் பனிப்புற வந்தது மொழிவார்.

(இ - ள்.) பந்தியாளர்கள் யாது எனப் பகர்தும் என்று அச்சம் சிந்தியா - மந்துரைக் காவலாளர்கள் என்னெனக் கூறுவேமென்று அச்சத்துடன் கருதி, எழுந்து ஒல்லைபோய் - எழுந்து விரையச் சென்று, திரள்மதம் கவிழ்க்கும் தந்தியான் - திரண்ட மதத்தைக் கவிழ்க்கும் யானையையுடைய மன்னன், அரசு இறைகொளும் இருக்கையைச் சார்ந்து - அரசு வீற்றிருக்குங் கொலுமண்டபத்தினை அடைந்து, வந்தியா - வணங்கி, உடல்பனிப்புற வந்ததுமொழிவார் - உடல் நடுங்கி நடந்ததைக் கூறுவாராயினர்.

அச்சத்துடன் என மூன்றனுருபு விரிக்க. சிந்தியா, வந்தியா, என்பன செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இறைகொளும், - இருத்தல் செய்யும். வந்தது - நிகழ்ந்தது. (௩௬)

காற்றி னுங்கடுங் கதியவாய்க் கண்களுக் கினிதாய்*
நேற்று வந்தவாம் பரியெலா நின்றவாம் பரிக்குக்
கூற்றெ னும்படி நரிகளாய் நகரெலாங் குழுமி
ஊற்றஞ் செய்துபோய்க் காட்டகத் தோடிய வென்றார்.

(இ - ள்.) காற்றினும் கடுங்கதியவாய் - காற்றினைப்பார்க்கிலும் மிக்க வேகமுடையனவாய், கண்களுக்கு இனிதாய் - பார்ப்போர் கண்களுக்கு இன்பம் பயப்பனவாய், நேற்று வந்த வாம் பரி எலாம் - நேற்று வந்த தாவுகின்ற குதிரைகள் அனைத்தும், நின்ற வாம்பரிக்குக் கூற்று எனும்படி - பந்தியில் நின்ற பழைய குதிரைகளுக்கெல்லாம் கூற்றுவன் என்று சொல்லுமாறு, நரிகளாய் - நரிகளாகி, நகர் எலாம் குழுமி ஊற்றம் செய்து - நகர் முழுதுங்கூடிப் பலதுன்பங்கள் செய்துவிட்டு, காட்டகத்துப்போய் ஓடிய வென்றார் - காட்டின் கண்ணே ஓடிப்போயினவென்று கூறினர்,

இனிதாய் : பன்மையிலொருமை வந்தது. ஊற்றம்-ஊறு. ஓடிப்போயின என விகுதி பிரித்துக் கூட்டுக. (௩௭)

(பா - ம்.) *கட்கினியனவாய்,

கருத்து ருதவிச் சொல்லெனுங் கடியகால் செவியாந்
துருத்தி யூடுபோய்க் கோபமாஞ் சுடுதழன் மூட்டி
எரித்த தீப்பொறி சிதறிடக் கண்சிவந் திறைவன்
உருத்த வாறுகண் டமைச்சரும் வெருவினு ரொதுங்கி.

(இ - ள்.) கருத்துருத இச்சொல் எனும் கடிய கால் - நினைக்கவுமாகாத இச்சொல்லாகிய கொடியகாற்று, செவியாம் துருத்தி ஊடு போய்-செவியாகிய துருத்தி வழியாகச் சென்று, கோபமாம் சுடுதழல் மூட்டி - சினமாகிய சுடுகின்ற நெருப்பினை மூட்டி, எரித்த தீப்பொறி சிதறிட - எரிக்கப்பட்ட நெருப்புப் பொறி சிதறிட, இறைவன் கண் சிவந்து உருத்தவாறு கண்டு - மன்னன் கண்கள் சிவந்து வெகுண்ட தன்மையைக் கண்டு, அமைச்சரும் வெருவி ஒதுங்கினர் - மந்திரிகளும் பயந்து ஒதுங்கினர்கள்.

துருத்தி - கொல்லனுலையில் நெருப்பு மூட்டுந் தோற்றுருத்தி. அமைச்சரும் என்னும் சிறப்பும்மையால் ஏனையர் வெருவினமை கூற வேண்டாவாயிற்று. இஃது உருவகவணி. (௲அ)

அமுத முண்டவ னஞ்சமுண் டாலென முதனுட்
சமர வெம்பரி மகிழ்ச்சியுட் டாழ்ந்தவ னவையே
திமிர வெங்குறு நரிகளாய்ச் சென்றவே யென்னு
அமர ரஞ்சிய வாணையா னரனு ராழ்ந்தான்.

(இ - ள்.) அமரர் அஞ்சிய ஆணையான் - தேவர்களும் அஞ்சும் ஆணையையுடைய அரிமருத்தன பாண்டியன், அமுதம் உண்டவன் நஞ்சம் உண்டால் என - அமுதினை நுகர்ந்தவன் நஞ்சினை உண்டாற் போல, முதல் நாள் வெம் சமரம் பரி மகிழ்ச்சியுள் தாழ்ந்தவன் - முதல் நாள் கொடிய போர்புரியுங் குதிரைகளைக் கண்ட மகிழ்ச்சிக் கடலுள் மூழ்கியவனாகி, அவையே - அக்குதிரைகளே, திமிரவெங்குறு நரிகளாய்ச் சென்றவே என்னு - இருள்போலுங் கொடிய சிறிய நரிகளாய் ஓடிப்போயினவே என்று கருதி, ஆர் அனு ஆழ்ந்தான்-நிறைந்த துன்பக்கடலுள் அழுந்தினான்.

மகிழ்ச்சியுட் டாழ்ந்தவனாகிய ஆணையான் என்று கூட்டியுரைத்தலுமாம். ஆர் - பொறுத்தற்கரிய என்றுமாம். (௲க)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

அருகிருக்குந் தொல்லமைச்சர் தமைநோக்கி
வாதவூ ராளி யென்னும்
கருகிருட்டு மனக்கள்வ னம்முடைய
பொருண்முழுதுங் கவர்ந்து காட்டிற்

குருதிநிணக் குடர்பிடுங்கித் தின்றுதிரி
நரிகளெல்லாங் குதிரை யாக்கி
வரவிடுத்தா னிவன்செய்த மாயமிது
கண்டீரோ மதிநூல் வல்லீர்.

(இ - ள்.) அருகு இருக்கும் தொல் அமைச்சர் தமைநோக்கி - பக்கத்தில் இருக்கும் பழைய மந்திரிகளைப் பார்த்து, வாதவூராளி என்னும் கருகு இருட்டு மனக்கள்வன் - வாதவூரன் என்னும் கருகிய இருள்போலு மனமுடைய கள்வன், நம்முடைய பொருள்முழுதும் கவர்ந்து - நம்முடைய பொருள் அனைத்தையுங் கொள்ளை கொண்டு, குருதி நிணக்குடர் பிடுங்கித்தின்று காட்டில் திரி நரிகள் எல்லாம் - குருதி ஒழுகும் நிணத்துடன் கூடிய குடர்களைப் பிடுங்கித் தின்று இடுகாட்டில் திரியும் நரிகளை எல்லாம், குதிரையாக்கி வரவிடுத்தான் - குதிரைகளாக்கி வரவிடுத்தனன்; மதிநூல் வல்லீர் இவன் செய்த மாயம் இது கண்டீரோ - மதிநூல் வல்லீர்காள் இவன் செய்த இவ் விந்திர சாலத்தைக் கண்டீர்களா?

அருகிருக்கும் என்றது அமைச்சரியல்பினை விளக்கியவாறுமாம். "உழையிருந்தான்" என்றார் வள்ளுவனாரும். இருட்டுமனம்-வஞ்சமனம்;

"அகங் குன்றி - மூக்கிற் கரியா ருடைத்து"

என்னும் திருக்குறளிலுங் காண்க. மதிநூல் - நீதிநூல்; இயற்கை யறிவுடன் நூலறிவு சான்றவர் என்றுமாம். (௫௦)

இம்மாயஞ் செய்தானை யென்செய்வ
தெனவுலகி லெமருக் கெல்லாம்
வெம்மாசு படுபாவம் பழியிரண்டும்
படவிழுக்கு விளைத்துத் தீய
கைம்மாறு கொன்றான்றன் பொருட்டினியா
மேதுரைக்கக் கடவே மென்று
சும்மாது சிரந்தூக்கி யெதிராடா
திருந்தாரச் சூழ்வல் லோர்கள்.

(இ - ள்.) இம்மாயம் செய்தானை - இவ்வஞ்சகஞ் செய்த வாதவூரனை, என் செய்வது என-என்ன செய்யலாமென்று மன்னன் வினவ, அச்சூழ்வல்லோர்கள் - அச்சூழ்ச்சி வல்லுநராகிய அமைச்சர்கள், உலகில் - இந்நிலவுலகின்கண், எமருக்கு எல்லாம்-எம்போன்ற அமைச்சருக்கெல்லாம், வெம் மாசுபடு பாவம் பழி இரண்டும்பட - கொடிய களங்கம் பொருந்திய பாவமும் பழியுமாகிய இரண்டும் உண்டாக, இழுக்கு விளைத்து - குற்றம் செய்து, தீய கைம்மாறு கொன்றான் தன் பொருட்டு - கைம்மாறு கொன்ற தீயோனாகிய வாதவூரன் பொருட்டு,

இனி நாய் ஏது உரைக்கக் கடவேம் என்று - யாம் இனி என்ன சொல்லக் கடவேமென்று கருதி, எதிராடாது சும்மாது சிரம் தூக்கி இருந்தார் - விடைகூறுது வாளா தலை குனிந்து இருந்தனர்.

அமைச்சருள் ஒருவர் புரிந்த தீமையால் அமைச்சர் சாதிக்கே பாவமும் பழியு முண்டாமெனக் கருதினர். கைம்மாறு - எதிர் நன்றி; ஈண்டு நன்றியென்னும் பொருட்டு. கொன்ற தீயன் என விகுதி பிரித்துக் கூட்டுக. சும்மாது, து : பகுதிப் பொருள் விகுதி; 'வாளாது' என்புழிப்போல. தூக்கல்-தொங்கவிடல். சூழ் - சூழ்ச்சி : முதனிலைத் தொழிற் பெயர். அமைச்சர் தமை நோக்கி என் செய்வதென அவர்கள் எதிராடா திருந்தனர் என முடிக்க. (௬௧)

அவ்வேலை மனக்கினிய பரிசேலுத்தி யரசகா ரியநன் ருக்கி
வெவ்வேலை மனக்கவலை விடுத்தனமென் றகமகிழ்ச்சி விளைவு கூர
மைவ்வேலை விடமுண்ட வானவனை நினைந்தறிவு மயமா மின்ப
மெய்வேலை யிடைவீழ்ந்தார் விளைந்ததறி யார்வந்தார் வேந்தன் மாடே.

(இ - ள்.) அவ்வேலை-அப்பொழுது, மனக்கு இனிய பரி செலுத்தி-மனத்துக்கு இனிய குதிரைகளைச் செலுத்தி, அரசகாரியம் நன்ருக்கி - அரச கருமத்தைச் செவ்வனே முடித்து, வெவ்வேலை மனக்கவலை விடுத்தனம் என்று-கடல்போன்ற கொடிய மனக்கவலையை நீக்கினேமென்று கருதி; அகம் மகிழ்ச்சி விளைவுகூர - மனவகத்ின்கண் மகிழ்ச்சி மிக, மை வேலை விடம் உண்ட வானவனை நினைந்து - கரிய கடலின் நஞ்சினை உண்ட இறைவனை நினைந்து, அறிவுமயமாம் மெய் இன்பவேலை யிடை வீழ்ந்தார்-ஞானமயமாகிய அழியாத பேரின்பக் கடலுள் வீழ்ந்த அடிகள் விளைந்தது அறியார் - நிகழ்ந்த செயலினை அறியாமல், வேந்தன்மாடு வந்தார் - அரசனிடம் வந்தனர்.

மனக்கு, அத்துச்சாரியை தொக்கது. மெய் அறிவு இன்ப மயமாம் வேலை எனக்கொண்டு கூட்டி, சச்சிதானந்த சொரூபமாகிய கடல் என்றுரைத்தலுமாம். (௬௨)

வந்தவரைச் சிவந்தவிழிப் பொறிசிதறக்
கடுகடுத்து மறவோ னேக்கி
அந்தமிலாப் பொருள்கொடுபோய் நல்லவயப்
பரிகொடுவந் தழகி தாகத்
தந்தனையன் றேவரச கருமமுடித்
திசைநிறுத்தத் தக்கோர் நின்போல்
எந்தவுல குளரேயோ வேனவேகுண்டா
னதுகேட்ட வீசன் றேண்டர்.

(இ - ள்.) வந்தவரை - அங்ஙனம் வந்த வாதவூரடிகளை, சிவந்த விழிப்பொறி சிதற - சிவந்த கண்களினின்றும் தீப்பொறி சிதறுமாறு,

மறவோன் கடுகடுத்து நோக்கி - மறத்தினையுடைய பாண்டியன் சினந்து பார்த்து, அந்தம் இலாப் பொருள் கொடுபோய் - அளவிறந்த பொருள்களை எடுத்துக்கொண்டுபோய், நல்ல வயப்பரி கொடுவந்து - நல்ல வெற்றியையுடைய குதிரைகளைக் கொண்டுவந்து, அழகிதாகத் தந்தனை அன்றே - அழகாகக் கொடுத்தாயல்லவா, அரசகருமம் முடித்து இசைநிறுத்தத் தக்கோர் - (அதனால்) வேந்தன் வினைகளை முடித்துப் புகழை நிறுவவல்ல தக்கோர், நின்போல் எந்த உலகு உளரேயோ என வெகுண்டான் - நின்னைப் போல் எந்தவுலகில் உள்ளாரோவென்று சினந்து கூறினான்; அதுகேட்ட ஈசன் தொண்டர் - அதனைக் கேட்ட இறைவன் தொண்டராகிய அடிகள்.

அழகிதாகத் தந்தனையன்றே, இசை நிறுத்தத்தக்கோர் நின்போல் எந்த வுலகுளரேயோ என்பன வெகுளியால் வந்த இகழ்ச்சிக் குறிப்பு. மறவோன் வந்தவரை நோக்கி அன்றே உளரேயோ என வெகுண்டான் என முடிக்க. (சக)

குற்றமே தப்புரவிக் கேனக்கேட்டார்
 கோமகனுங் குற்ற மேதும்
அற்றதா லரையிரவி னரியாகி
 யயனின்ற புரவி யெல்லாஞ்
செற்றுவார் குருதியுக நிணஞ்சிதறக்
 குடர்பிடுங்கித் தின்று நேர்வந்
துற்றபேர்க் கூற்றமிழைத் தூர்கலங்கக்
 காட்டகத்தி லோடிற் றன்றே.

(இ - ள்.) அப்புரவிக்குக் குற்றம் ஏது எனக் கேட்டார் - அக்குதிரைகளுக்குக் குற்றம் என்னவென்று கேட்டனர்; கோமகனும் - மன்னனும், அரை இரவில் நரியாகி - நள்ளிரவில் நரிகளாய், அயல் நின்ற புரவி எல்லாம் செற்று - மருங்கில் நின்ற குதிரைகளை எல்லாம் கொன்று, வார்குருதிஉக நிணம் சிதற - நிறைந்த குருதி ஒழுகவும் நிணங்கள் சிதறவும், குடர் பிடுங்கித் தின்று - அவற்றின் குடர்களைப் பிடுங்கித் தின்றுவிட்டு, நேர்வந்து உற்ற பேர்க்கு ஊற்றம் இழைத்து - நேரில் வந்த மக்களுக்கு இடையூறு செய்து, ஊர்கலங்கக் காட்டகத்தில் ஓடிற்று - ஊரிலுள்ளவர்கள் மனங்கலங்கக் காட்டின்கண் ஓடின; குற்றம் ஏதும் அற்றது - (இதுவன்றி) குற்றஞ் சிறிதுமில்லாதனவே.

புரவி: தொகுதியொருமை. குற்றமேதும் அற்றது என்றது இகழ்ச்சிக்குறிப்பு. குடர்: போலி. பேர்: உலகவழக்கு. (சஉ)

கண்ணுமிடு கவசமும்போற் காரியஞ்சேய்
 தொழுகியதுங் காலம் பார்த்தெம்
எண்ணரிய நிதியீட்டங் கவர்வதற்கோ
 நின்னமைச்சி னியற்கை நன்றாற்

புண்ணியவே தியர்மரபிற் பிறந்தனமேன்
றொருபெருமை பூண்டா யேநீ
பண்ணியகா ரியம்பழுது பிறராகிற்
றண்டிக்கப் படுவ ரென்றான்.

(இ - ள்.) கண்ணும் இடுகவசமும் போல் காரியம் செய்து ஒழுகியதும்-எனக்குக் கண்ணும் இடுகின்ற கவசமும் போல இதுவரை என் கருமங்களைச் செவ்வனே செய்து வந்ததனைத்தும், காலம் பார்த்து-சமயம் பார்த்து, எம் எண்ணரிய நிதி ஈட்டம் கவர்வதற்கோ - எமது அளவிறந்த பொருட்குவியல்களைக் கவருதற்காகவோ, நின் அமைச்சின் இயற்கை நன்று - நின்னமைச்சிலக்கணம் நன்று; புண்ணிய வேதியர் மரபில் பிறந்தனம் என்று ஒரு பெருமை பூண்டாயே - புண்ணிய மறையோர் மரபில் தோன்றினேமென்று ஒரு பெருமையைப் பூண்டனையே, நீ பண்ணிய காரியம் பழுது - நீ செய்த காரியம் மிகவுந் தவறுடைத்து; பிறராகில் தண்டிக்கப்படுவர் என்றான்-மற்றொருவராயின் தண்டிக்கப்படுவர் என்று கூறி.

கண்ணும் கவசமும்போல் என்னும் உவமை முன்பு விளக்கப் பட்டது. நன்று என்றது இகழ்ச்சி. பொருளுக்காக வன்றி வஞ்சகச் செயலுக்காகவும் தண்டிக்கப்படுவர் என்றான் என்க. (௬௫)

தண்டலா ளர்களிவனைக் கொடுபோய்நம்
பொருண்முழுதுந் தடுத்து மீர்த்தும்
மிண்டினால் வலிசெய்தும் வாங்குமென
வெகுண்டரசன் விளம்பக் கூற்று
மண்டுமேன் மறஞ்செய்யும் வலியுடையார்
கதிரையிரு ளடுத்துப் பற்றிக்
கொண்டுபோ னாலென்னக் கொடுபுறம்போ
யறவோரைக் கொடுமை செய்வார்.

(இ - ள்.) தண்டலாளர்கள் - தண்டற்காரர்களே, இவனைக் கொடு போய் - இவனைக் கொண்டுபோய், தடுத்தும் ஈர்த்தும் மிண்டினால் வலி செய்தும் - (எங்குஞ் செல்லவொட்டாமல்) தடுத்தும் இழுத்தும் (உங்கள் ஆணையைக்) கடந்தால் வேறு ஒறுத்தும், நம் பொருள் முழுதும் வாங்கும் என அரசன் வெகுண்டு விளம்ப - நமது பொருள் முழுதையும் வாங்குவீராகவென்று மன்னன் சினந்துகூற, கூற்றும் மண்டுமேல் மறம் செய்யும் வலியுடையார் - கூற்றுவனும் எதிர்ப்பானேல் போர்புரிந்து வெற்றியடையும் வலியுடைய அவர், கதிரை இருள் அடுத்துப் பற்றிக்கொண்டு போனால் என்ன - சூரியனை இருள் நெருங்கிப் பிடித்துக் கொண்டு போனாற் போல, புறம் கொடு போய் - வெளியிற் கொண்டு போய், அறவோரைக் கொடுமை செய்வார் - அறவடிவாய அடிகளைத் துன்புறுத்துவாராயினர்.

தண்டலாளர் - இறை வாங்கும் ஏவலாளர்கள். தண்டலாளர்கள், அண்மைவிளி. மிண்டுதல் - மீறுதல். கூற்று மண்டுமேல் மறஞ்செய்யும் என்ற கருத்தினை,

"கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை"

என்னும் திருக்குறளிற் காண்க. 'கதிரையிருளடுத்துப் பற்றிக் கொண்டுபோனாலென்ன' என்றது இல்பொருளுவமை. (சகூ)

கதிர்நோக்கிக் கனன்மூட்டுங் கடும்பகலுச்
சியிலிரவிக் கடவு ணேர்நின்
றெதிர்நோக்க நிலைநிறுத்திக் கரங்களினு
நுதலினுங்கல் லேற்றிச் செந்தீப்
பிதிர்நோக்கத் தவரோறுப்ப வாற்றாராய்
வீழ்ந்திருளைப் பிளப்போன் செந்தீ
மதிநோக்கத் தனிச்சுடரை யழைத்தழுது
துதிசெய்வார் வாத வூரர்.

(இ - ள்.) கதிர் நோக்கிக் கனல் மூட்டும் கடும்பகல் உச்சியில், சூரியனை நோக்கி அழலை மூட்டுகின்ற கடிய உச்சிப்பொழுதில், இரவிக்கடவுள் நேர்நின்று எதிர் நோக்க - அச்சூரிய தேவனுக்கு நேரே நின்று எதிராக அவனைப் பார்க்குமாறு, நிலை நிறுத்தி - அசையாமல் நிற்கச்செய்து, கரங்களினும் நுதலினும் கல் ஏற்றி - இரண்டு கைகளிலும் நெற்றியினும் கற்களை ஏற்றி, செந்தீப் பிதிர் நோக்கத்தவர் ஒறுப்ப - சிவந்த நெருப்புப் பொறி பறக்குங் கண்ணினை யுடைய அத்தண்டலாளர்கள் ஒறுக்க, ஆற்றாராய் வீழ்ந்து - பொறுக்கலாற்றாது கீழே வீழ்ந்து, இருளைப் பிளப்போன் செந்தீ மதி நோக்கத் தனிச்சுடரை அழைத்து அழுது - இருளைப் பிளக்குஞ் சூரியனும் சிவந்த அனற்கடவுளும் சந்திரனுமாகிய கண்களையுடைய ஒப்பற்ற ஒளி வடிவினனாம் இறைவனை அழைத்து அழுது, வாதவூரர் துதி செய்வார் - வாதவூரர் துதிப்பாராயினர்.

வைக்கோல் முதலிய துரும்புகளை வெய்யிலில் வைத்து நெருப்பு மூட்டும் பகல் எனப் பகலின் வெம்மை மிகுதி கூறியவாறு. நோக்கி - நோக்குவித்து; எதிராக்கி. நிலை நிறுத்தல் - அடி பெயர்த்து வையாது கோடிட்ட இடத்தில் நிற்கச் செய்தல். (சஎ)

[கொச்சகக்கலிப்பா]

நாதவோ நாத முடிவிறந்த நாடகஞ்செய்
பாதவோ பாதகனை மென்னைப் பணிகொண்ட
வேதவோ வேத முடிவின் விளைந்ததனிப்
போதவோ போத நெறிகடந்த பூரணவோ.

(இ - ள்.) நாதவோ - நாததத்துவத்திலுள்ளவனே, நாத முடிவு இறந்த நாடகம் செய் பாதவோ - அந்நாததத்துவத்தின் முடிவைக் கடந்த ஞானநடனஞ் செய்யுந் திருவடிகளை யுடையவனே, பாதகனும் என்னைப் பணிகொண்ட வேதவோ - பாதகனாகிய என்னையும் அடிமை கொண்டருளிய மறைவடிவானவனே, வேதமுடிவின் விளைந்த தனிப் போதவோ - அம்மறையின் முடிவில் விளைந்த ஒப்பற்ற ஞானவடிவினனே, போத நெறிகடந்த பூரணவோ - பாசஞான பசுஞானங்களின் வழியைக் கடந்த பூரண வடிவானவனே.

நாதம் என்றது சிவதத்துவத்தை; இறைவன் அதனை அதிட்டித்து நிற்றலின் 'நாத' என்றார்; தலைவன் என்றுமாம். நாத முடிவிறந்த என்றது நாதத்தின் எல்லையாகிய குடிலை என்னும் மகாமாயையைக் கடந்த என்றபடி. நாத முடிவிறந்த பாத என இயைக்க;

"பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்"

என்னும் திருவாசகமும் இக்கருத்தே பற்றியது. நாதமுடிவிறந்த நாடகம் எனக் கொண்டு சுத்தமாயையைக் கடந்த சிற்சத்தியாகிய ஞானவெளியிலே புரியும் ஞான நாடகம் என்றுரைத்தலுமாம். போத நெறி என்றது பாசஞான பசுஞானங்களை ;

"பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனை"

என்பது சிவஞான சித்தி. நான்கடியிலும் இணையெதுகை வந்துள்ளன. இச்செய்யுளிலும் பின்னிரண்டு செய்யுளிலும் ஓகாரங்கள் புலம்பல் விளியில் வந்தன. (௬அ)

ஐயவோ வென்னுடைய வன்பவோ வன்பர்க்கு
மெய்யவோ மெய்யில் வினையேன் றலைவைத்த
கையவோ செய்யகழற் காலவோ காலனைக்காய்
செய்யவோ வேதப் பரியேறுஞ் சேவகவோ.

((இ - ள்.) ஐயவோ - ஐயனே, என்னுடைய அன்பவோ - என்னுடைய அன்பனே, அன்பர்க்கு மெய்யவோ - நின் அன்பர்க்கு மெய்யாயுள்ளவனே, மெய் இல் வினையேன் தலைவைத்தகையவோ-மெய்யில்லாத (பொய் நிறைந்த) தீவினையேன் தலையின்கண் வைத்தருளிய திருக்கரத்தை யுடையவனே, செய்ய கழல் காலவோ - (அங்ஙனம் வைத்த) சிவந்த வீரகண்டையை யணிந்த திருவடியையுடையவனே, காலனைக் காய் செய்யவோ - கூற்றுவனை உதைத்தருளிய செம்மேனியுடையவனே, வேதப்பரி ஏறும் சேவகவோ - வேதப்புரவியில் ஏறியருளும் வீரனே.

இறைவன் அன்பர்க்கு அன்பனாதலையும் அன்பர்க்கு மெய்யனாதலையும்,

"தீர்ந்தவன் பாயவன்பர்க் கவரினு மன்ப போற்றி"

"ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த வின்பமே என்னுடை அன்பே"

"மெய்ம்மை யன்பருன் மெய்ம்மை மேவினர்"

என்னும் திருவாசகங்களால் அறிக. அத்தமத்தக சையோக தீக்கையும் திருவடி தீக்கையும் செய்தமை தோன்ற 'வினையேன் றலைவைத்த கையவோ காலவோ,' என்றார். (சக)

அத்தவோ கல்லாக் கடையேனை யாட்கொண்ட
பித்தவோ பொய்யுலகை மெய்யாகப் போதிக்குஞ்
சித்தவோ சித்தந் தெளிவித் தெனைத்தந்த
முத்தவோ மோன மயமான மூர்த்தியவோ.

(இ - ள்.) அத்தவோ - எப்பொருட்கும் இறைவனே, கல்லாக் கடையேனை ஆட்கொண்ட பித்தவோ - கல்லாத புல்லறிவினையுடைய என்னை ஆண்டு கொண்ட பித்தனே, பொய் உலகை மெய்யாகப் பேதிக்கும் சித்தவோ - பொய்யாகிய உலகினை மெய்யாகக் கருதும் வண்ணம் பேதப்படுக்குஞ் சித்த வடிவினனே, சித்தம் தெளிவித்து எனைத் தந்த முத்தவோ-அடியேன் மயக்க வுணர்வினைத் தெளிவித்து என்னை யுணர்த்திய முத்தி வடிவானவனே, மோன மயமான மூர்த்தியவோ - மௌனவடிவினையுடைய மூர்த்தியே,

"கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை"

"கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை"

என அடிகள் திருவாசகத்தில் அருளிச் செய்தல் காண்க. கரணங்களெல்லாவற்றிலும் இறைவன் கலந்து நிற்றலின் 'சித்தவோ' என்றார்.

"கூறு நாவே முதலாகக் கூறுங் கரண மெல்லாநீ
தேறும் வகைநீ திகைப்புநீ தீமை நன்மை முழுதுநீ"

என்னுந் திருவாசங் காண்க. சித்தன் - சித்தி வல்லோன் என்றுமாம். எனைத் தந்த என்பதற்கு எனக்குச் சிவமாந் தன்மையைத் தந்தருளிய என்றுரைத்தலுமாம்.

"சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்"

"சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தன்"

என்னும் திருவாசகங்கள் இக்கே சிந்திக்கற் பாலன. (கூ0)

[ஒருபோகு கொச்சகக் கலிப்பா]

என்றேறிய புகழ்வேதிய ரிரங்குந்துதி செவியிற்
சென்றேறலும் விடையேறுசுந் தரன்மற்றிவர் செயலை
மன்றேறவு முடிமேனதி மண்ணேறவு முதியாள்
அன்றேறிய தேரோடும்விண் ணடைந்தேறவு நினைந்தான்.

(இ - ள்.) என்று ஏறிய புகழ் வேதியர் இரங்கும் துதி - என்று மிக்க புகழ் வாய்ந்த மறையோராகிய வாதவூரடிகள் அழுது முறையிடுந் துதி, சென்று செவியில் ஏறலும் - சென்று திருச் செவியின்கண் புகுந்த வளவில், விடை ஏறு சுந்தரன் - ஆனேற்றின் மேல் ஏறியருளுஞ் சோமசுந்தரக் கடவுள், இவர் செயலை மன்தேறவும் - இவ்வடிகள் செயலை அரசன் தெளியவும்; முடிமேல் நதி மண் ஏறவும் - தனது திருமுடியின்கண் வையையாற்றின் மண் ஏறவும், முதியாள் - முதுமைப் பருவமுடைய வந்தி யென்பாள், அன்று - அஞ்ஞான்று, ஏறிய தேரோடும் விண் அடைந்து ஏறவும் - தான் ஏறிய விமானத்துடன் சிவபுரத்தை அடையவும், நினைந்தான் - திருவுளங் கொண்டருளினன்.

ஏறிய புகழ் - மிக்க புகழ். செயல் - பெருமை. (௫௧)

கங்கைப்புனல் வடிவாகிய கவ்வைத்திரை வையைச்
சங்கச்சரி யறலாமலர்த் தாரோதியை நோக்கா
வங்கக்கடல் பேரூழியில் வருமாறென வெவரும்
இங்கற்புத மடையப்பெரு கென்றானருள் குன்றான்.

(இ - ள்.) கங்கைப்புனல் வடிவாகிய - கங்கை நீரின் வடிவாகிய, கவ்வைத் திரை வையை - ஒலியினை யுடைய அலைகள் வீசும் வையை நதியாகிய, சங்கச்சரி - சங்காகிய வளையலையும், அறலாம் மலர்த்தார் ஓதியை நோக்கா - கருமணலாகிய மலர் மாலையை யணிந்த கூந்தலையு முடைய பெண்ணை நோக்கி, வங்கக் கடல் பேர் ஊழியில் வருமாறு என - கப்பல்களையுடைய கடல் பெரிய ஊழிக் காலத்தின் கண் பெருகி வருந் தன்மைபோல, இங்கு எவரும் அற்புதம் அடைய - இவ்வுலகி லுள்ளாரனைவரும் வியப்பினை அடையுமாறு, பெருகு என்றான் - பெருகி வரக்கடவை யென்றருளிச் செய்தனன்; அருள்குன்றான் - பேரருள் குன்றாத இறைவன்.

வையை கங்கைப் புனல் வடிவாகியதனை அன்னக்குழியும் வையையும் அழைத்த படலத்திற் காண்க. ஓதி: ஆகு பெயர். (௫௨)

தும்பைச்சடை முடியானொரு சொல்லாடவு முன்னாள்
வம்பைப்பொரு முலையால்வரி வளையால்வடு வழுத்துங்
கொம்பைத்தவங் குலைப்பான்கடுங் கோபங்கொடு நடக்குங்
கம்பைப்பெரு நதியிற்கடுங் கதியால்வரும் வையை.

(இ - ள்.) தும்பைச்சடை முடியான் ஒரு சொல் ஆடவும் - தும்பை மலர் மாலையை யணிந்த சடை முடியையுடைய அச்சோம சுந்தரக் கடவுள் இங்ஙனம் ஒரு சொல்லினைச் சொன்னவளவில், முன் நாள் - பண்டொரு நாளில், வம்பைப் பொரு முலையால் வரிவளையால் - கச்சினைப் பொருகின்ற கொங்கைகளாலும் வரியமைந்த வளைகளாலும், வடு அழுத்தும் கொம்பை - இறைவன் மேனியில் வடுப்படுமாறு அழுத்திய உமைப் பிராட்டியின், தவம் குலைப்பான் - தவத்தை அழிக்கும் பொருட்டு, கடும் கோபம் கொடு நடக்கும் - மிக்க சினங் கொண்டு நடக்கும், பெருங்கம்பை நதியில் - பெரிய கம்பை யாற்றைப் போல, வையை கடுங்கதியால் வரும் - வையையாறு கடிய செலவுடன் வாரா நின்றது.

முலையாலும் வளையாலும் என்னும் எண்ணும்மைகள் தொக்கன. கொம்பு - பூங்கொம்புபோல்வாராகிய உமாதேவியார். தவம் குலைப்பான் என்பதனை ஒரு சொல்லாகக் கொண்டு இரண்டாவதற்கு முடிபாக்கலுமாம். குலைப்பான்: வினையெச்சம். கதியால் - கதியுடன். ஒரு காலத்தில் இறைவனைப் பிரியலுற்ற இறைவி மீண்டும் இறைவனை அடைதற் பொருட்டுக் காஞ்சிப் பதியிலே மணலாற் சிவலிங்கம் தாபித்து வழிபட்டு வந்த காலை இறைவனால் ஏவப்பெற்ற கம்பை நதி பெருகி வந்து அதனை அழிக்கலுற, அம்மை சிவலிங்கப் பெருமானைக் கட்டி யணைத்தமையால் இறைவற்கு முலைத்தழும்பும் வளைத்தழும்பும் உண்டாயின என்பது வரலாறு. (௨௩)

பத்திக்குளிர் கமுகின்குலை பரியக்கரை முரியக்*
குத்திப்பழஞ் சிதறச்செறி கோட்டங்களை வீட்டி
முத்திக்கோடு கதலிப்புதன் முதுசாலிக ளரித்துத்
தத்திப்பல தருவேரோடுந் தள்ளிக்கடு கியதே.

(இ - ள்.) பத்திக்குளிர் கமுகின்குலை பரிய - வரிசையாயுள்ள குளிர்ந்த பாக்குமரத்தின் பழக்குலை அறவும், கரை முரியக் குத்தி - கரைகள் உடையவுங் குத்தியும், பழம் சிதற - பழங்கள் சிதறுமாறு, செறிகோட்டங்களை வீட்டி - நெருங்கிய மரக் கிளைகளைக் கீழே வீழ்த்தியும், முத்து இக்கொடு கதலிப்புதல் முது சாலிகள் அரித்து - முத்தையுடைய கரும்புகளையும் வாழையாகிய புல்லையும் முற்றி விளைந்த நெற்கதிர்களையும் அரித்துக்கொண்டும், தத்தி - தாண்டி, பல தரு - பல மரங்களை, வேரோடும் தள்ளி - வேருடன் வீழ்த்தியும், கடுகியது - விரைந்து சென்றது.

கோடு என்பது அம் சாரியை பெற்று டகரம் இரட்டித்துக் கோட்டம் என்றாயது. வீட்டி, வீழ்த்தி என்பதன் மரூஉ. (௨௪)

பல்லாயிரஞ் செந்தாமரை பரப்பிக்கோடு வரலால்
நல்லாயிரங் கண்ணுனெழி னயக்குங்குளிர் நளினங்
கல்லாரமுங் கடிமுல்லையுங் கரும்புங்கோடு வரலால்
வில்லாயிரங் கோடுபோர்செயும் வேள்வீரனு மானும்.

(பா - ம்.) *பரிந்துக் கரை முரித்து.

(இ - ள்.) பல் ஆயிரம் செந்தாமரை பரப்பிக் கொடுவரலால்-பல வாகிய ஆயிரஞ் செந்தாமரை மலர்களைப் பரப்பிக் கொண்டு வருதலால், நல் ஆயிரம் கண்ணன் எழில் நயக்கும் - நல்ல ஆயிரங் கண்களையுடைய இந்திரன் தோற்றத்தை ஒக்கும்; குளிர் நளினம் - குளிர்ந்த தாமரை மலரையும், கல்லாரமும் கடிமுல்லையும் கரும்பும் கொடுவரலால் - குவளை மலரையும் மணம் பொருந்திய முல்லை மலரையும் கரும்பினையும் கொண்டு வருவதால், வில் ஆயிரம் கொடு போர் செயும் - அளவிறந்த விற்களைக் கொண்டு போர் புரியும், வேள் வீரனும் மானும்-வீரனாகிய மன்மதனையும் ஒக்கும்.

தாமரை முதலியன முதலிற் கூறும் சினையறிகிளவி. நயக்கும் - ஒக்குமென்னும் பொருட்டு. நளினம் குவளை முல்லை யென்னும் மலர்கள் மன்மதனுக்கு அம்பும், கரும்பு வில்லும் ஆகலின் 'வேள்வீரனு மானும்' என்றார். (ருரு)

மணிமாலையு மலர்மாலையுஞ் சிதருவிறு மருங்கே
அணிகாஞ்சியு மொளிர்சங்கமு மலறப்புடை யெறியாக்
கணியாவெழின் முகதாமரை கண்ணீரோடுங் கவிழாத்†
தணியாமுனி வுடனூடிய தடங்கண்ணியர் போலும்.

(இ - ள்.) மணிமாலையும் மலர்மாலையும் இறுமருங்கே சிதரு - மணிகளின் வரிசையையும் மலர் வரிசையையும் உடைந்த கரையின் கண் சிதறி, அணி காஞ்சியும் ஒளிர் சங்கமும் - அழகிய காஞ்சி மரங் களையும் விளக்கமாகிய சங்குகளையும், அலற புடைஎறியா - ஒலிக்கும் படி பக்கங்களில் வீசி, கணியா எழில் முகதாமரை - அளவிடப்படாத அழகைத் தன்னிடத்துள்ள தாமரை மலர்களை, கள் நீரொடும் கவிழா - கள்ளாகிய நீருடன் கவிழ்த்து (வைகையாறு வருதலால், முத்த மாலை யையும் பூமாலையையும் அறுத்துச் சிதறி ஒடியும் இடையின்கண் அணிந்த என் கோவையையும் ஒளிவிடும் வளைகளையும் புடைத்து எறிந்து அளவிடப் படாத அழகையுடைய முகமாகிய தாமரையைக் கண்களிலிருந்து வரும் நீருடன் கவிழ்த்து), தனியா முனிவுடன் ஊடிய தடம் கண்ணியர் போலும் - ஆறாத சினத்துடன் பிணங்கிய பெரிய கண்களையுடைய மகளிரை ஒக்கும்.

மாலை - வரிசை, தார். மருங்கு - கரை, இடை. காஞ்சி - காஞ்சி மரம், இடையிலணியும் என் கோவை. சங்கம் - சங்கு, வளை. முகம் - இடம், வதனம். கண்ணீர் - கள்ளாகிய நீர், விழிநீர். சிதரு, எறியா, கவிழா என்பன செய்யா என்னும் வாய்பாட்டு வினை யெச்சங்கள். இது சிலேடை பற்றி வந்த உவமை. (ருசு)

வரையுந்திய மதுமுல்லையி னேய்பாறயிர் மருதத்
தரையுந்திய கரும்பின்குறை சாரூடுவ ராரூ
டிரையுந்தெழு தூநீர்வையை யிந்நன்னகர் வைகுந்
திரையுந்தெழ கடறம்மிடஞ் சென்றூலவை போலும்.

(பா - ம்.) † கவிழ.

(இ - ள்.) வரை உந்திய மது - மலையினின்றும் பெருகிய மதுவும், முல்லையின் நெய் பால் தயிர் - முல்லை நிலத்தின் நெய்யும் பாலுந் தயிரும், மருதத்தரை உந்திய கரும்பின் குறை சாறோடு - மருத நிலத்தினின்றும் பெருகிய கரும்பினைக் குறைத்தலாலாகும் சாறும், உவர் ஆறோடு - நெய்தனிலத்து உப்பாறுமாகிய இவற்றுடன், இரையுந்து எழு தூநீர் வையை - பேரொலிசெய்து எழுந்த தூய நீரினையுடைய வையையாறு, இந் நல்நகர் வைகும் - (சோமசுந்தரக்கடவுளால் அழைக்கப்பட்டு) இந்த நல்ல நகரின்கண் பொருந்தியுள்ள, திரை உந்து எழுகடல் - அலை வீசுகின்ற எழு கடல்களும், தம்மிடம் சென்றால் அவை போலும் - தத்தம் இடம் சென்றால் அங்ஙனம் செல்லும் அவற்றை ஒக்கும்.

நெய்தனிலத்து உவராறு என வருவித்துரைக்க. மலை முதலிய நானிலத்து மது முதலிய ஆறனோடு வையையின் தூநீரும் சேர்ந்து மதுக்கடல் முதலிய எழு கடலும் போன்றன வென்க. இரையுந்து - இரையும் ; உம் உந்தாயிற்று ;

"உம்முந் தாகும் இடனுமா ருண்டே"

என்பது விதி. (௩௭)

கல்லென்றதிர் சும்மைப்புனல் கடிமாமதிற் புறம்போய்
இல்லங்களுஞ் சிறுதுச்சிலு மறித்திட்டிருங் கடல்வாய்ச்
செல்லுங்கல நாவாய்பல திமில்போற்சுமந் தேகிப்
புல்லும்புரி சையுந்தள்ளியுள் புகுகின்றதை யன்றே.

(இ - ள்.) கல் என்று அதிர் சும்மைப்புனல் - கல்லென்று ஒலிக்கும் ஒலியையுடைய அவ்வெள்ளநீர், கடிமாமதில் புறம்போய் - காவலையுடைய பெரிய மதிலின் புறத்தே சென்று, இல்லங்களும் சிறு துச்சிலும் மறித்திட்டு - பல இல்லங்களையும் சிறிய குடில்களையும் கீழ் மேலாகத் தள்ளி (அவற்றை), இருங்கடல் வாய்ச் செல்லும் கலம் நாவாய் பல திமில் போல் - பெரிய கடலின்கண் ஓடும் மரக் கலங்களாகிய நாவாய்களையும் பல தோணிகளையும் போல, சுமந்து ஏகி - சுமந்து சென்று, புல்லும் புரிசையும் தள்ளி உள்புகுகின்றது - பொருந்திய மதிலையுந் தள்ளி உள்ளே செல்லாநின்றது.

கல்லென்று: ஒலிக்குறிப்பு. துச்சில் - குடிசையென்னும் பொருட்டு. புகுகின்றதை, ஐ : சாரியை. (௩௮)

மறுகும்பல பொருளாவண மணிவீதியு மன்றுஞ்
சிறுகுங்கண மதமாநிரை சேருந்தெரு வும்போய்
முறுகுஞ்சின மோடுதேண்டிரை மூரிப்புன லூவிக்
குறுகும்படி கண்டஞ்சினர் கோடிமாநக ருள்ளார்.

(இ - ள்.) தெள்திரை மூரிப்புனல் - தெள்ளிய அலைகளையுடைய வெள்ளநீர், முறுகும் சினமொடு - கன்றிய சினத்துடன், மறுகும் பல பொருள் மணி ஆவண வீதியும் - வீதிகளிலும் பல பொருள் நிறைந்த

அழகிய கடைத்தெருக்களிலும், மன்றும் - அம்பலங்களிலும், சிறுகும் கண மதம் மாரிரைசேரும் தெருவும் போய்-சிறிய கண்களையுடைய மத மயக்கங்கொண்ட யானைக்கூட்டங்கள் சேர்ந்த தெருக்களிலுஞ் சென்று தாவிக் குறுகும்படி - தாவி வருந்தன்மையை, கொடிமாநகர் உள்ளார் கண்டு அஞ்சினர் - கொடிகள் நெருங்கிய பெரிய நகரிலுள்ளவர்கள் பார்த்து அஞ்சினர்கள்.

கண - கன்ன; கன்னினை உடையவாகிய மூரி - பெருமை. படி - தன்மை. (௫௯)

சிலர்மைந்தரை யெடுப்பார்களுஞ் சிலர்மைந்தரைக் காணு
தலமந்தழு வாருஞ்சில ரங்கைத்தளிர் பற்றிக்
குலமங்கையர் தமைக்கொண்டுயப் போவார்களுங் குறுகுந்
தலமெங்கெனத் திகைப்பார்களுந் தடுமாறுகின் றரும்.

(இ - ள்.) சிலர் மைந்தரை எடுப்பார்களும் - புதல்வர்களை எடுப்பார் சிலரும், சிலர் மைந்தரைக் காணுது அலமந்து அழுவாரும் - புதல்வர்களைக் காணுமல் சுழன்று அழுவார் சிலரும், அம் கைத்தளிர் பற்றி - அழகிய கையாகிய தளிரைப் பிடித்து, குலமங்கையர் தமைக் கொண்டு உயப்போவார்கள் சிலரும் - மனைக்கிழத்தியாரை அழைத்துக் கொண்டு உயிர்தப்பப் போவார் சிலரும், குறுகும் தலம் எங்கு எனத் திகைப்பார்களும் - நாம் சென்றடையும் இடம் எங்குள்ள தெனக் கருதித் திகைப்பார் (சிலரும்), தடுமாறுகின்றரும் - (எதுவுந் தோன்றுமல்) தடுமாறுபவர் (சிலரும்).

சிலர் எடுப்பவர்களும் என்றிங்ஙனம் நேரே கூறுதலுமாம். சிலர் என்பதனைப் பிறவற்றேடும் கூட்டி, ஈற்றில் ஆகி என்னுஞ்சொல் விரித்து முடிக்க. (௬௦)

பொன்னுள்ளன பணியுள்ளன பொருள்பேணல்செய் வாரும்
மன்னுஞ்சில பொருள்கைக்கொள மறப்பார்களு மாடம்
மின்னுங்கொடி நெடுமாளிகை மேலேறுகின் றரும்
இந்நன்னகர் துயர்மூழ்குதற் கேதேதுவென் பாரும்.

(இ - ள்.) உள்ளனபொன் உள்ளன பணிபொருள் பேணல் செய் வாரும் - தமக்குள்ளனவாய பொன்களையும் உள்ளனவாய அணிகளையும் பிறபொருள்களையும் பேணுவாரும், மன்னும் சில பொருள் கைக்கொள மறப்பார்களும் - பொருந்திய சில பொருள்களைக் கைப்பற்றுதற்கு மறப்பவர்களும், மாடம் மின்னும் கொடி நெடு மாளிகை மேல் ஏறுகின்றரும் - மாடங்களிலும் விளங்கா நின்ற கொடிகள் கட்டிய நீண்ட மாளிகைகளிலும் ஏறுகின்றவர்களும், இந்நல் நகர் துயர் மூழ்குதற்கு ஏது ஏது என்பாரும் - இந்தப்புண்ணிய நகரம் இத்துன்பக்கடலுள் மூழ்குதற்குக் காரணம் யாது என்று கூறுவார்களும்.

ஏது - காரணம், யாது. (௬௧)

நேற்றும்பரி நரியாயின நெடுமாநக ரெங்கும்
ஊற்றஞ்செய்த வென்பார்களு மொருகால முமிந்த
ஆற்றின்பெருக் கிலையென்றயர் வாருங்கட லரசன்
சீற்றங்கொடு முன்போல்வருஞ் செயலேகோலென் பாரும்.

(இ - ள்.) நேற்றும் பரி நரி ஆயின - நேற்றும் குதிரைகளெல்லாம் நரிகளாகி, நெடுமாநகர் எங்கும் ஊற்றம் செய்த என்பார்களும் - நீண்ட பெரிய நகரனைத்திற்கும் ஊறு செய்தன என்று கூறுவார்களும், ஒரு காலமும் இந்த ஆற்றின் பெருக்கு இலை என்று அயர்வாரும் - முன்னொரு காலத்திலும் இவ்வாறான ஆற்றின் பெருக்கு இல்லை என்று கூறி வருந்துவாரும், கடல் அரசன் சீற்றம் கொடு முன்போல்வரும் செயலே கொல் என்பாரும் - கடல் வேந்தனாகிய வருணன் சினங் கொண்டு முன் போல்வருஞ் செயலோ என்று ஐயுற்றுக் கூறுவாரு மாகி.

இங்ஙனம் தொடர்ந்து துன்பம் விளைதற்குக் காரணம் என்ன வென்பாராய் 'நேற்றும் பரிநரியாயின ஊற்றஞ்செய்தன' என்றன ரென்க. இந்த - இத்தன்மையான. வருணன் ஏவலாற் கடல் வருதலைக் கடலரசன் வருதலாகக் கூறினர். (௬௨)

நங்கோமகன் செங்கோல்பிழைத் தனனோவென நவில்வார்
அங்கோல்வளை பங்கன்விளை யாட்டோவென வறைவார்
இங்காரிது தணிப்பாரென விசைப்பாரிது தணிப்பான்
பொங்காலமுண் டருள்சுந்தர னலதியாரெனப் புகல்வார்.

(இ - ள்.) நம் கோமகன் செங்கோல் பிழைத்தனனோ என நவில்வார் - (பின்னும்) நம் மன்னன் நீதி முறை தவறினனோ என்று கூறுவார்; அம்கோல் வளை பங்கன் விளையாட்டோ என அறைவார் - அழகிய திரண்ட வளையலை யணிந்த உமையம்மையின் ஒரு கூறனாகிய சோம சுந்தரக்கடவுளின் திருவிளையாடலோ என்று சொல்லுவார்; இது தணிப்பார் இங்கு யார் என இசைப்பார் - இவ்வெள்ளத்தை வற்றச் செய்பவர் இந்நிலவுலகில் யாவருளர் என்று கூறுவார்; இது தணிப்பான் - இதனைத் தணிக்கின்றவன், பொங்கு ஆலம் உண்டருள் சுந்தரன் அலது யார் எனப் புகல்வார் - கொதித்தெழுந்த ஆலாலம் என்னும் நஞ்சினை உண்டருளிய சோமசுந்தரக்கடவுளையல்லாது வேறு யாவருளர் என்று புகல்வார்.

காவலன் முறை தவறின் இயற்கையல்லன செயற்கையிற் றோன்றுமாகலின் 'நங்கோமகன் செங்கோல் பிழைத்தனனோ' என்றன ரென்க. யார் ஆரென் மருவிற்று. அலதியார்: குற்றிய லிகரம் அலகு பெறாது நின்றது. (௬௩)

அடுத்தாயிரங் குண்டோதர ரெதிரேற்றிருந் தகல்வாய்
மடுத்தாலுமி தடங்காதென மதிப்பாரிது தனையும்
எடுத்தாயிர முககங்கையி னிறைவன்சடை யேறக்
கொடுத்தாலல தடங்காதிதன் கொடுங்கோபம தென்பார்.

(இ - ள்.) ஆயிரம் குண்டோதரர் அடுத்து எதிர் ஏற்று இருந்து - அளவிறந்த குண்டோதரர்கள் இதனை அடுத்து எதிரே மறித்து நின்று, அகல்வாய் மடுத்தாலும் இது அடங்காது என மதிப்பார் - அகன்ற தங்கள் வாய்களை வைத்துப் பருகினாலும் இது அடங்காதென்று கருதுவார்; ஆயிரமுக கங்கையின் - ஆயிர முகங்களையுடைய கங்கையை எடுத்து வைத்ததுபோல, இதுதனையும் - இதனையும், இறைவன் எடுத்து சடை ஏறக்கொடுத்தால் அலது - இறைவன் எடுத்துத் தன் சடையின் கண் ஏறுமாறு கொடுத்தால் அல்லாமல், இதன் கொடுங்கோபம் அடங்காது என்பார் - இதன் கொடியசினம் அடங்காது என்று கூறுவர்:

இதடங்காது : விகாரம். கோபமது, அது : பகுதிப் பொருள் விகுதி. (௬௪)

வானாறிழி நதியாயிர முகத்தால்வரு வதுபோல்
ஆனாதெழு நீத்தந்தணி யாவாறுகண் டன்பு
தானாகிய சிவனன்பரை யோறுக்குந்தறு கண்ணர்
போனார்தம தகத்தேயுள பொருள்பேணுதல் கருதா.

(இ - ள்.) வான் ஆறு இழி நதி - வானின் வழியே இழியும் கங்கையாறு, ஆயிர முகத்தால் வருவதுபோல் - ஆயிர முகத்தோடு வருவதைப்போல, ஆனாது எழு நீத்தம் - இடையறாது பெருகும் நீர்ப்பெருக்கு, தணியாவாறு - குறையாத தன்மையை, அன்புதான் ஆகிய சிவன் அன்பரை ஒறுக்கும் தறுகண்ணர் கண்டு - அன்பே வடிவாகிய சிவனடியாராகிய வாதவூரரை ஒறுக்கும் வன்கணாளர்கள் பார்த்து, தமது அகத்தே உள பொருள் பேணுதல் கருதா போனார் - தங்கள் இல்லின்கண் உள்ள பொருளைப் பாதுகாத்தல் கருதிச் சென்றனர்.

அன்பு தானாகிய அன்பரை என்க. (௬௫)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

வழுதிதன் றமர்விட் டேக மதுரைநா யகன்பா லேகி
அழுதிசை பாடுந் தொண்டி லகப்படும் பாதம் போற்றி
தொழுதுகொண் டறிவா யூறுஞ் சுகப்பெருங் கடலின் மூழ்கி
எழுதுசித் திரம்போன் மன்னி யிருந்தனர் வாத வூரர்.

(இ - ள்.) வாதவூரர்-வாதவூரடிகள், வழுதி தன் தமர் விட்டு ஏக - பாண்டியன் தமராகிய தண்டலாளர் தம்மை விட்டுப்போக, மதுரை

நாயகன்பால் ஏகி - மதுரை நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளிடத்துச் சென்று, அழுது இசைபாடும் தொண்டில் அகப்படும் பாதம் போற்றி- அன்பால் அழுது இசைத்தமிழால் வழுத்துதலாகிய திருத்தொண்டின் கண் அகப்படுகின்ற திருவடியை துதித்து, தொழுதுகொண்டு - வணங்கி, அறிவாய் ஊறும் சுகப்பெருங் கடலில் மூழ்கி - அறிவுமய மாய்ச் சுரக்கும் இன்பக்கடலுள் மூழ்கி, எழுது சித்திரம்போல் மன்னி இருந்தனர் - எழுதி வைத்த சித்திரத்தைப்போல் அசைவற்று இருந்தருளினர்,

பத்திவலையில் அகப்படும் பாதம் என்றபடி. அறிவாய் மூழ்கி என இயைத்தலுமாம். (சுசு)

ஆகச் செய்யுள் - உகூகக

அறுபத்தொன்றாவது

மண் சுமந்த படலம்

[எழுசீரடி யாசிரிய விருத்தம்]

பண்சு மந்தமறை நாட ரும்பொருள் பதஞ்சு மந்தமுடி யார்மனம்
புண்சு மந்ததுயர் தீர வந்தபரி நரிக ளாயடவி போனபின்
விண்சு மந்தசுர நதியே னப்பெருகு வித்த வையையிது விடையவன்
மண்சு மந்துதிரு மேனி மேலடி வடுச்சு மந்தகதை யோதுவாம்.

(இ-ள்.) மண்சுமந்த மறை நாடரும் பொருள் - இசையினைத் தாங்கிய மறைகளும் நாடுதற்கு அரிய மெய்ப்பொருளாகிய இறைவனது, பதம் சுமந்த முடியார் - திருவடியைத் தாங்கிய முடியினை யுடைய வாதவூரடிகளின், மனம் புண் சுமந்த துயர் தீரவந்த பரி - மனம் புண்படுதற்குக் காரணமாகிய துயரம் நீங்குமாறு வந்த குதிரைகள், நரிகளாய் அடவிபோனபின் - நரிகளாகிக் காட்டிற்குச் சென்ற பின்னர், விண் சுமந்த சுரநதி எனப் பெருகுவித்த வையை இது - வானால் சுமக்கப்பட்ட தேவயாறாகிய கங்கையைப்போல வையையைப் பெருகுவித்த திருவிளையாடல் இது; விடையவன் - ஆனேற்றினை யுடைய அவ்விறைவன், மண்சுமந்து திருமேனிமேல் அடிவடுச் சுமந்த கதை ஓதுவாம் - மண்ணைச் சுமந்து திருமேனியின்கண் பிரம்படியின் தழும்பினைத் தாங்கிய திருவிளையாடலை (இனிக்) கூறுவாம்.

புண்சுமந்த துயர் - புண்படுதற்கு ஏதுவாகிய துயர்; பெயரெச்சம் காரியப் பொருட்டு. (க)

கருங்க டற்றிரை யிடைக்கி டந்துசுழல்
கலமே னக்கன முகடளாய்
வரும்பு னற்பரவை யுட்கி டந்துநகர்
மறுகி யுட்கமற வேலினன்
ஒருங்க மைச்சரை விளித்து நீர்கரை
சுமந்தோ துக்கிவரு மோதநீர்ப்
பொருங்க தத்தினை யடக்கு வீரென
வமைச்சருந் தொழுது போயினர்.

(இ-ள்.) ககன முகடு அளாய்வரும் புனல் பரவையுள் - வானின் முடியை அளாவிவரும் புனற் பரப்பினுள், கருங்கடல் திரையிடைக் கிடந்து சுழல் கலம் என - கரிய கடலின் அலையினூடு கிடந்து சுழலும் கப்பலைப்போல, நகர் கிடந்து மறுகி உட்கு -

நகரமானது கிடந்து சுழன்று வருந்தா நிற்க, மறவேலினன் - கொலைத் தொழிலையுடைய வேற்படை யேந்திய பாண்டியன், ஒருங்கு அமைச்சரை விளித்து - மந்திரிகளை ஒருசேர அழைத்து, நீர் கரை சுமந்து - நீர் கரைபோட்டு, வரும் ஓதநீர் ஒதுக்கி - பெருகிவரும் வெள்ள நீரை ஒதுக்கி, பொரும் கதத்தினை அடக்குவீர் என - கரையை மோதும் அதன் விரைவினை அடக்குவீராக என்று கூற, அமைச்சரும் தொழுது போயினர் - மந்திரிகளும் வணங்கிப் போனார்கள்.

பரவை - பரப்பு. கரை சுமந்து - கரைபோட்டு; இயற்றுதற் கருத்தாவின் தொழிலை ஏவுதற் கருத்தாவின்மேல் வைத்துக் கூறினர். பொரும் - மோதும், போர்செய்யும். கதம் – விரைவு, கோபம். (உ)

வெறித்த டக்கைமத யானை மந்திரிகள்
வேறு வேறுபல குடிகளுங்
குறித்தெ டுத்தெழுதி யெல்லை யிட்டளவு
கோல்கி டத்திவரை கீறியே
அறுத்து விட்டுநக ரெங்க ணும்பறை
யறைந்த ழைத்துவிடு மாளெலாஞ்
செறித்து விட்டவ ரவர்க்க ளந்தபடி
செய்மி னென்றுவரு வித்தனர்.

(இ - ள்.) வெறித்தடக்கை மதயானை மந்திரிகள் - மதவெறியினையும் பெரிய துதிக்கையினையுமுடைய யானையையுடைய அமைச்சர்கள், வேறு வேறு பல குடிகளும் - வெவ்வேறு வகைப்பட்ட பல குடிகளையும், குறித்து எடுத்து எழுதி - ஆராய்ந்து எடுத்து எழுதி, எல்லையிட்டு - தொகை முடிவுகட்டி, அளவு கோல் கிடத்தி வரைகீறி அறுத்து விட்டு - அளவுகோல் போட்டு அளந்து கோடு கிழித்து வரையறுத்து, நகர் எங்கணும் பறை அறைந்து அழைத்து - நகர் முழுதும் பறை சாற்றி அழைத்து, விடும் ஆள் எலாம் செறித்து விட்டு - அவ்வக் குடிகள் விட்ட கூலியாட்களை யெல்லாம் ஓரிடத்தில் தொகவைத்து, அவர் அவர்க்கு அளந்தபடி செய்மின் என்று வருவித்தனர் - அவரவர்க்கு அளந்து வரையறுத்தபடி செய்யுங்கள் என்று கூறி அவ்வவ்விடத்துக்கு அவரவரை வரவழைத்தனர்.

அவரவர் அணைகோலுதற்குரிய பங்கினை அளந்து வரை யறுத்து என்க. பறை யறைந்து என்பது அரசனெடுத்த ஆலயம் என்புழிப் போலப் பிறவினை விகுதி தொக்கு நின்றது. (௩)

மண்டோ டுங்கருவி கூடை யாளரு
மரஞ்சு மந்துவரு வார்களும்
விண்டோ டும்படி நிமிர்ந்து வண்டுபடு
விரிபசுந் தழைப லாலமும்

கொண்ட திர்த்துவரு வாரும் வேறுபல
கோடி கூடிய குழாமுநீர்
மொண்ட ருந்தவரு மேக சாலமென
வருபு னற்கரையின் மொய்த்தனர்.

(இ - ள்.) மண்தொடும் கருவி கூடையாளரும் - மண்வெட்டுங் கருவியுடன் கூடையுங் கொண்டுவருவார்களும், மரம் சுமந்து வருவார்களும் - மரங்களைச் சுமந்து வருவார்களும், விண்தொடும்படி நிமிர்ந்து வண்டுபடு விரிபசுந்தழை - வானையளாவுமாறு ஓங்கி வண்டுகள் மொய்த்த விரிந்த பசிய தழையையும், பலாலமும்கொண்டு அதிர்த்து வருவாரும் - வைக்கோலையும் சுமந்து கொண்டு ஆரவாரஞ் செய்து வருவார்களும், வேறுபல கோடி கூடிய குழாமும் - இவர்கட்கு வேருகப் பலகோடியாகத் திரண்ட கூட்டங்களுமாய், நீர் மொண்டு அருந்த வரும் மேகசாலம் என - நீரினை முகந்து பருகுதற்கு வரும் முகிற் கூட்டம்போல, வரு புனல் கரையில் மொய்த்தனர் - பெருகிவரும் புனற் கரையின்கண் மொய்த்தார்கள்.

நிமிர்ந்து என்னும் முதல்வினை சினையின்மேலேற்றிக் கூறப்பட்டது. மொண்டு, முகந்து என்பதன் மரூஉ. புனற்கரை-யாற்றின் கரை. (௪)

கிட்டு வார்பரி நிறுத்து வாரரவு
ருட்டு வாரடி கிடத்துவார்
இட்டு வார்தழை நிரப்பு வார்விளி
யெழுப்பு வார்பறை யிரட்டுவார்
வெட்டு வார்மண லெடுத்து வார்செல
வெருட்டு வார்கடிது துடுமெனக்
கொட்டு வார்கரை பரப்பு வாருவகை
கூரு வார்குரவை குழறுவார்.

(இ - ள்.) கிட்டுவார்பரி நிறுத்துவார் - நெருங்கிக் குதிரைமரம் நிறுத்தி, அரவு உருட்டுவார் அடி கிடத்துவார் - வைக்கோலாற் பாம்பு போல உருட்டி அக்குதிரை மரத்தினடியிற் கிடத்தி, வார் தழை இட்டு நிரப்புவார் - நீண்ட தழைகளையிட்டு நிரப்பி, விளி எழுப்புவார் பறை இரட்டுவார் - மகிழ்ச்சியால் ஓசையை எழுப்பிப் பறையடிப்பார்கள்; வெட்டுவார் மணல் எடுத்துவார் செல வெருட்டுவார்-வெட்டி மணலை எடுத்துச் செல்வார் விரைந்து செல்ல அச்சுறுத்துவார், கடிது துடுமெனக் கொட்டுவார் கரை பரப்புவார்-விரைந்து துடுமென்று மணலைக் கொட்டிக் கரையின்கண் பரப்புவார்கள்; உவகை கூருவார் குரவை குழறுவார் - மகிழ்ச்சி மிக்குக் குரவைப் பாடலைப் பாடுவார்கள்.

கிட்டுவார் முதலியவற்றை முற்ருகவே உரைத்தலுமாம். பரி நிறுத்தல் - குதிரைப் பாய்ச்சலாக மரங்களை நிறுத்துதல்; இங்ஙனம்

சிறுத்திய மரம் குதிரைமரம் எனப்படும். அரவு உருட்டுதல் - வைக்கோல் முதலியவற்றைப் பாம்புபோல் உருட்டுதல்; இது பாம்பு எனப் படும். பரி, அரவு என்பன ஆகுபெயர். விளியெழுப்புதல் - கூவுதல்; சீழ்க்கை யொலி எழுப்புதலுமாம். எடுத்துவார் - எடுப்பார். துடுமென: ஒலிக்குறிப்பு. (ரு)

கட்டு வார்கரை யுடைப்ப* நீர்கடுகல்
கண்டு நெஞ்சது கலங்குவார்
மட்டி லாதமுனி வென்னை யன்னையினி
யாறு கென்றெதிர் வணங்குவார்
கோட்டு வார்மண லுடைப்ப டங்கமகிழ்
கோள்ளு வார்குரவை துள்ளுவார்
எட்டு மாதிரமு மேட்ட வாயொலி
யெழுப்பு வார்பறை யிரட்டுவார்.

(இ - ள்.) கட்டுவார் கரை உடைப்ப நீர் கடுகல் கண்டு - கட்டிய நீண்ட கரையை உடைப்பதற்கு நீர் விரைந்து வருதலைக் கண்டு, நெஞ்சது கலங்குவார்-உள்ளங் கலங்கி, அன்னை - தாயே, மட்டு இலாத முனிவு என்னை - எங்கள்மேல் அளவில்லாத சினம் எதற்கு, இனி ஆறுக என்று எதிர் வணங்குவார் - இனி ஆறக்கடவை என்று வேண்டி எதிரே வணங்கி, மணல் கொட்டுவார் - மணலைக் கொட்டுவார்கள்; உடைப்பு அடங்க மகிழ் கொள்ளுவார் குரவை துள்ளுவார் - உடைப்பு அடங்க அதனைக் கண்டு மகிழ்ச்சி கொண்டு குரவையாடுவர்; எட்டு மாதிரமும் எட்ட வாயொலி எழுப்புவார் பறை இரட்டுவார் - எட்டுத்திக்குகளுக்கும் எட்டுமாறு வாயினால் ஒலி செய்து பறை யடிப்பார்கள்.

நெஞ்சது, அது: பகுதிப்பொருள் விகுதி. ஆறுகென்று: அகரந் தொக்கது. எட்ட - அணைய. (சு)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

இந்நிலை யூரி லுள்ளார் யாவர்க்குங் கூலி யாளர்
துன்னிமுன் னளந்த வெல்லைத் தொழின்முறை மூண்டு செய்வார்
அந்நிலை நகரின் றென்கீழ்த் திசையுளா ளளவி லாண்டு
மன்னிய நரைமு தாட்டி யொருத்திபேர் வந்தி யென்பாள்.

(இ - ள்.) இந்நிலை - இங்ஙனமாக, ஊரில் உள்ளார் யாவர்க்கும் - ஊரிலுள்ள அனைவருக்கும், கூலியாளர் துன்னி முன் அளந்த எல்லை - கூலியாட்கள் வந்து செறிந்து முன்னரே அவரவர்க்கு அளந்து விட்ட எல்லையின்கண் நின்று, முறை தொழில் மூண்டு செய்வார்

(பா - ம்.) * கரையுடைப்பு.

முறைப்படி தொழிலை மேற்கொண்டு செய்வாராயினர்; அங்கிலை - அப்போது, நகரின் தென்கீழ்த் திசையுளாள் - அந்த நகரத்தின் தென் கிழக்குத் திசையிலுள்ளவளும், அளவு இல் ஆண்டு மன்னிய நரை மூதாட்டி ஒருத்தி - அளவில்லாத ஆண்டுகள் பொருந்திய நரைத்த முதுமையளுமாகிய ஒருத்தி. பேர் வந்தி என்பாள் - வந்தி என்னும் பெயருடையவள்.

அளவில் ஆண்டு மன்னிய - அளவற்ற யாண்டுகள் கழிந்த. மூதாட்டி - முதுமையை ஆள்பவள். (எ)

சேவியுண வான வேத சிரப்பொரு ளுணர்ந்து செந்தீ
அவியுண வூட்டு மீச னன்பரி னாற்ற நோற்ற
தவநிறை பேறு துய்ப்பா டாயிலார்க் கன்னை யொப்பாள்
சுவையுறு பிட்டு விற்றுண் டொழிலின ளமிய ளாவாள்.

(இ - ள்.) செவி உணவு ஆன வேத சிரப்பொருள் உணர்ந்து - செவியுணவாகிய மறை முடியின் பொருளினை உணர்ந்து, செந்தீ அவி யுணவு ஊட்டும் ஈசன் அன்பரின் - சிவந்த வேள்வித் தீயின்கண் அவி யாகிய உணவினை உண்பிக்கும் இறைவன் அடியார்களினும், ஆற்ற நோற்ற தவம் - மிகச் செய்த தவத்தினது, நிறை பேறு துய்ப்பாள் - நிறைந்த பயனை நுகருவாள்; தாய் இலார்க்கு அன்னை ஒப்பாள் - அன்னையில்லாதவர்கட்கு அன்னைபோல்வாள்; சுவை உறு பிட்டு விற்று உண்தொழிலினள் - சுவை மிக்க பிட்டினை விற்று உண்ணுந் தொழிலினை யுடையாள்; தமியளாவாள் - யாருமற்ற தனியள்.

இறைவற்கு அன்பினாற் பிட்டருத்தி ஏனோர் பெறுதற்கரிய பேறு பெறுவாளாகலின் 'அவியுணவூட்டு மீசனன்பரின் ஆற்ற நோற்ற தவ நிறை பேறு துய்ப்பாள்' என்றார். தாயிலார்க்கு அன்னை யொப்பாள் என்றது தாயில்லாத சிவபெருமானுக்கும் ஓர் அன்னைபோல்வாள் என்ப தொரு பொருளுந் தோன்ற நின்றது; மேல் 'தந்தையொடு தாயின்றித் தனிக்கூலி யாளாக, வந்தவெனக் கொருதாயாய்' என இறைவன் கூறு மாறுங் காண்க. (அ)

வைகலு மவித்த செவ்விப் பிட்டினை மருங்கு நான்கு
கைகளாய் முளைத்த முக்கட் கரும்பினை யரும்பு மூரற்
செய்கதிர் முகத்தா னந்தத் தேறலை யால வாயெம்
ஐயனை யகத்தா னேக்கி யன்பினு லருத்தி விற்பாள்.

(இ - ள்.) வைகலும் - நாள்தோறும், அவித்த செவ்விப்பிட்டினை - அவித்த பக்குவ மமைந்த பிட்டினை, மருங்கு நான்கு கைகளாய் முளைத்த முக்கண் கரும்பினை - பக்கத்தில் நான்கு கைகளாக முளைத்த மூன்று கண்களை யுடைய கரும்பினை, அரும்பு மூரல் செய் - அரும்பிய புன்னகையினைச் செய்யும், கதிர் முகத்து ஆனந்த தேறலை - விளக்க மாகிய திருமுகத்தினையுடைய இன்பத் தேனை, ஆலவாய் எம்ஐயனை -

திருவாலவாயில் எழுந்தருளிய எம்முடைய சோமசுந்தரக் கடவுளை, அகத்தால் நோக்கி அன்பினால் அருத்திவிற்பாள் - உள்ளக் கண்ணால் நோக்கிஅன்பினால் முன் ஊட்டிப் பின் விற்பாள்.

கண்-விழி, கணு. மூரலையுடைய கதிர் செய்யும் முகம் என்றுமாம். கரும்பும் தேனுமாகிய ஐயனை. நோக்கி, நோக்க னேக்கம். (௯)

வளைந்தமெய் யுடைய வந்த மாதவ நரைமு தாட்டிக்*
களந்தபங் கடைப்பான் கூலி யாள்கிடை யாம லாற்றத்
தளர்ந்தினி யென்னே மன்னன் றண்டிக்கி னென்செய் கேனென்
றுளந்தடு மாறிக் கூட லுடையநா யகனை யுன்னு.

(இ - ள்.) வளைந்த மெய்யுடைய அந்த மாதவ நரை மூதாட்டிக்கு- கூனிய உடலையுடைய அந்தப் பெரிய தவத்தை யுடைய நரைத்த முதியாள் தனக்கு, அளந்த பங்கு அடைப்பான் - அளந்துவிட்ட பங்கினை அடைப்பதற்கு, கூலியாள் கிடையாமல்-கூலியாள் கிடைக்கா மல், ஆற்றத் தளர்ந்து - மிகவும் தளர்ந்து, இனி என்னே மன்னன் தண்டிக்கின் என்செய்கேன் என்று - இனி என்னை வேந்தன் ஒறுத்தா னாயின் யான் யாது செய்வேனென்று, உளம் தடுமாறி-மனந்தடுமாறி, கூடல் உடைய நாயகனை உன்னு - மதுரை நாயகனை நினைத்து.

மூதாட்டி தனக்கு என விரித்துக் கொள்க. அடைப்பான்: வினை யெச்சம். கூடல் நாயகன் தன்னை அடிமையாகவுடைய நாயகன் என்க. (௧௦)

பிட்டுவிற் றுண்டு வாழும் பேதையே னிடும்பை யென்ப
தெட்டுணை யேனு மின்றி யிரவியெங் கெழுகென் றிந்நாண்
மட்டுநின் னருளா லிங்கு வைகினேற் கின்று வந்து
விட்டதோ ரிடையூ றைய மீனவ னாணை யாலே.

(இ - ள்.) ஐய - ஐயனே, பிட்டு விற்று உண்டு வாழும் பேதை யேன் - பிட்டினை விற்று அதனால் வரும் ஊதியங்கொண்டு உண்டு உயிர் வாழும் பேதையேனாகிய யான், இந்நாள் மட்டும் - இந்நாள் வரையிலும், நின் அருளால் இடும்பை என்பது எள் துணையேனும் இன்றி - நினது திருவருளால் துன்பம் என்பது எள்ளளவேனு மில்லாமல், இரவி எங்கு எழுக என்று இங்கு வைகினேற்கு - சூரியன் எங்கேனும் எழக்கடவன் என்று கருதி இங்கு இருந்த எனக்கு, மீனவன் ஆணையால் இன்று வந்து விட்டது ஓர் இடையூறு - பாண்டியன் ஆணையினால் இன்று ஓர் இடையூறு வந்து விட்டது.

எங்கேனும் என்பது எங்கு எனத் தொக்குநின்றது. எழுக என்பதன் அகரந் தொக்கது. எங்கு எழுந்தால் எனக்கு வருவதென்னை என்பது கருத்து;

(பா - ம்.) *மூதாட்டி.

"எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்"

என்னும் திருவாசகமும் காண்க. வந்து விட்டது, விடு துணிவுப் பொருட்டு. (௧௧)

துணையின்றி மக்க ளின்றித் தமரின்றிச் சுற்ற மாகும்
பணையின்றி யேன்று கோள்வார் பிறரின்றிப் பற்றுக் கோடாம்
புணையின்றித் துன்பத் தாழ்ந்து புலம்புறு பாவி யேற்கின்
றிணையின்றி யிந்தத் துன்ப மெய்துவ தறனோ வெந்தாய்.

(இ - ள்.) துணை இன்றி மக்கள் இன்றி - நாயகனுமில்லாமல் மக்களுமில்லாமல், தமர் இன்றி - கிளைஞருமில்லாமல், சுற்றமாகும் பணை இன்றி - நட்பினராய கூட்டமுமில்லாமல், ஏன்று கொள்வார் பிறர் இன்றி - ஏன்று கொள்ளும் பிறருமில்லாமல், பற்றுக்கோடாம் புணை இன்றி துன்பத்து ஆழ்ந்து புலம்புறு பாவியேற்கு - (இவ்வாற்றால்) பற்றுக்கோடாகிய புணையின்றித் துன்பமாகிய கடலுள் அழுந்திப் புலம்பும் பாவியாகிய எனக்கு, இன்று - இப்பொழுது, இந்தத் துன்பம் இணை இன்றி எய்துவது - இந்தத் துன்பம் ஒப்பின்றி வருவது, எந்தாய் - எம் தந்தையே, அறனோ - அறமாகுமோ!

துணை - கணவன். பணை - கூட்டம். இணையின்றி - இணையில்லையாக. (௧௨)

தேவர்க்கு மரிய னாகுந் தேவனே யன்ப ராவார்
யாவர்க்கு மெளிய னாகு மீசனே வேந்த னாணைக்
காவற்செங் கோலார் சீற்றங் கடுகுமுன் கூலி யாளாய்
ஏவற்செய் வாரைக் காணே னேழையே னினியென் செய்கேன்.

(இ - ள்.) தேவர்க்கும் அரியன் ஆகும் தேவனே - தேவர்கட்கும் அரியனாகிய தேவனே, அன்பராவார் யாவர்க்கும் எளியன் ஆகும் ஈசனே - அன்பராவார் அனைவருக்கும் எளியனாகிய இறைவனே, வேந்தன் ஆணைக் காவல் செங்கோலார் சீற்றம் கடுகு முன் - மன்னனது ஆணையை மேற்கொண்டு காக்கும் செங்கோலையுடைய அமைச்சர்களின் சினம் என்பால் விரைந்து வருமுன், கூலியாளாய் ஏவல் செய்வாரைக் காணேன் - கூலி யாளாக வந்து எனது ஏவலைச் செய்பவரைக் கண்டிலேன்; ஏழையேன் இனி என் செய்கேன் - ஏழையாகிய யான் இனி என்ன செய்வேன்?

இறைவன் தேவர்க்கும் அரியனாதலையும் அன்பர்க்கு எளியனாதலையும்,

" மூவ ராலு மறியொ ணாமுத லாய வானந்த மூர்த்தியான்
யாவ ராயினு மன்ப ரன்றி யறியொ ணாமலர்ச் சோதியான்"

என்னும் திருவாசகத்தா லறிக. அமைச்சர் சீற்றத்துடன் கடுகி வந்து ஒறுக்குமுன் என்பாள் 'சீற்றங் கடுகுமுன்' என்றாள். (கரு)

கூலியாள்வருவ துண்டோ வென்றுதன் கொங்கை முற்றத்
தாலிபோற் கண்ணீர் சோர்வாள் குறித்துமுன் பருத்தும்பிட்டை
வேலைநீர் ஞாலங் காண மிசைந்தவ ளிடும்பை தீர்ப்பான்
பாலினேர் மொழியாள் பாக மறைத்தருட படிவங்கொள்வார்.

(இ-ள்.) கூலியாள் வருவது உண்டோ என்று - கூலியாள் வருவதுண்டோவென்று கருதி, தன் கொங்கை முற்றத்து - தனது கொங்கை யிடத்தில், ஆலி போல் கண் நீர் சோர்வாள் - மழைத்துளி போலக் கண்ணீர்சிந்தும் அவ்வந்தி, முன்பு குறித்து அருத்தும் பிட்டை - முன்பு மனத்தால் நினைத்து (யாரும் அறியாமல்) உண்பிக்கும் பிட்டினை, வேலை நீர் ஞாலம் காண மிசைந்து - கடல்நீர் சூழ்ந்த இப் புவியிலுள்ளார் காண உண்டு, அவள் இடும்பை தீர்ப்பான் - அவள் துன்பத்தை நீக்கும் பொருட்டு, பாலின்நேர் மொழியாள் பாகம் மறைத்து - பாலை யொத்த மொழியினையுடைய பிராட்டியாரின் பாகத்தை மறைத்து, அருள் படிவம் கொள்வார் - அருளால் உருவங் கொள்வாராயினர்.

குறித்து - உள்ளத்தாற் சிந்தித்து. உலகினர் அறியாது முன்பு அருந்திய பிட்டை இப்பொழுது அறிய உண்டு என்க. பாலினேர், சாரியை நிற்க உருபு தொக்கது. (கசு)

குறட்குநீ ரருத்தி வையைக் குடிஞையா யொழுகுங் கங்கை
அறற்குழல் பிரிவி னாற்றா தன்பினா லவளைக் காண்பான்
மறக்கய னெடுங்க ணாளை வஞ்சித்து வடிவ மாறிப்
புறப்படு வாரைப் போலப் போதுவார் போத மூர்த்தி.

(இ-ள்.) குறட்கு நீர் அருத்தி - குண்டோதரனுக்கு நீரினை ஊட்டி, வையைக் குடிஞையாய் ஒழுகும் - வையையாறாகச் செல்லா நிற்கும், கங்கை அறல் குழல் பிரிவின் ஆற்றாது - கங்கை என்னும் கருமணலாகிய கூந்தலையுடைய நாயகியின் பிரிவினைப் பொறுக்க லாற்றாது, அவளை அன்பினால் காண்பான் - அந்நங்கையை அன்போடு காணுதற்கு, மறக்கயல் நெடுங்கணாளை வஞ்சித்து - தருக்குடைய கயல் போலும் நீண்ட கண்களை யுடைய உமையம்மையை வஞ்சித்து, வடிவம் மாறி - திருவுருவம் மாறி, புறப்படுவாரைப்போல - புறப் படுவாரைப்போல, போதமூர்த்தி போதுவார் - ஞான மூர்த்தியாகிய சோம சுந்தரக்கடவுள் செல்வாராயினர்.

குடிஞை - யாறு. அறற்குழல் - பெண் என்னுந் துணையாய் நின்றதுமாம். பிரிவின் - பிரிவினால் எனலும் பொருந்தும். இது தற்குறிப்பேற்றவணியின்பாற் படும். (கஎ)

[கொச்சகக் கலிப்பா]

அழுக்கடைந்த பழந்துணியோன் றரைக்கசைத்து விழுத்தொண்
குழுக்கடந்த விண்டைநிகர் சுமையடைமேற் கூடைகவிழ்த் [டர்
தெழுக்கடந்து திசைகடந்திட் டிணைகடந்த திருத்தோண்மேன்
மழுக்கடைந்து விளங்கியவாய் மண்டோடுதிண் படையேந்தி.

(இ - ள்.) அழுக்கு அடைந்த பழந்துணி ஒன்று அரைக்கு அசைத்து-அழுக்குச் சேர்ந்த பழைய துணி ஒன்றினை இடையிற் கட்டி, விழுத்தொண்டர் குழுக்கள் தந்த இண்டை நிகர் சுமையடைமேல் - சிரிய தொண்டர் கூட்டங்கள் கட்டிச் சாத்திய இண்டை மாலையை ஒத்த சும்மாட்டின்மேல், கூடை கவிழ்த்து - கூடையினைக் கவிழ்த்து, எழுக்கடந்து திசை கடந்திட்டு இணைகடந்த திருத்தோள் மேல் - தூணை வென்று திக்குகளைக் கடந்து உவமையைக் கடந்த அழகிய தோளின் மேல், மழுக்கு அடைந்து விளங்கிய வாய் - மழுங்குதலையுற்று விளங்கிய வாயினையுடைய, திண் மண்தொடு படை ஏந்தி - திண்ணிய மண் வெட்டியை ஏந்தி.

மழுங்கு - மழுக்கு என வலித்தது. பலகாலும் மண்ணை வெட்டுதலால் மழுங்கிய வாய் என்க. (௧௬)

திடங்காதல் கொண்டறவோர் திருவேள்வி தருமமுதும்
இடங்காவல் கொண்டுறைவா ளருத்தமுது மினிதுண்டும்
அடங்காத பசியினர்போ லன்னைமுலைப் பாலருந்த
மடங்காத பெருவேட்கை மகவுபோற் புறப்பட்டார்.

(இ - ள்.) அறவோர் திடம் காதல் கொண்டு - முனிவர்கள் உறுதியாகிய அன்பினைக் கொண்டு, திருவேள்விதரும் அமுதும் - சிறந்த வேள்வியின்கண் தருகின்ற அவியையும், இடம் காலம் கொண்டு உறைவாள் அருத்து அமுதும் - இடப்பாகத்தின்கண் காவல் கொண்டு உறைபவராகிய பிராட்டியார் ஊட்டும் அமுதையும், இனிது உண்டும்-நன்றாக உண்டும், அடங்காத பசியினர் போல் - அடங்காத பசியினை யுடையார் போல, அன்னை முலைப்பால் அருந்த மடங்காத பெரு வேட்கை மகவுபோல் புறப்பட்டார் - தாயின் முலைப்பாலைப் பருகு தற்கு மடங்காத பேரவாவினையுடைய மகவு போலப் புறப்பட்டருளினர்.

அடங்காத பசியினர் என்னும்படி மகவுபோற் புறப்பட்டார் என்க. (௧௭)

ஆலுமறைச் சிரமுடியா ரடிக்கமல நிலஞ்சூடக்
கூலிகொடுத் தேன்வேலை* கொள்வாருண் டோவென்றேன்
றேலமறைத் திருமொழிபோ லுரைபரப்பிக் கலுழ்கண்ணீர்
வேலையிடைப் படிந்தயர்வாள் வீதியிடத் தணைகின்றார்.

(பா - ம்.) *எனை வேலை.

(இ - ள்.) ஆலும் மறைச் சிரம் முடி ஆர் அடிக்கமலம்-ஒலிக்கின்ற வேத முடியின் உச்சியிலுள்ள திருவடித் தாமரையை. நிலம் சூட - நிலமகள் தரிக்குமாறு, கூலிகொடுத்து என் வேலை கொள்வார் உண்டோ என்று என்று - கூலியைக் கொடுத்து என் வேலையை வாங்கிக் கொள்பவருண்டோ வென்று, ஓலமறைத் திருமொழிபோல் உரைபரப்பி - ஒலிவடிவாகிய சிறந்த வேத மொழிபோலக் கூறி, கலும் கண்ணீர் வேலையிடைப் படிந்து அயர்வாள் - அழுகின்ற கண்ணீராகிய கடலிற் படிந்து துன்புறுவாளாகிய வந்தியினது, வீதி யிடத்து அணைகின்றார் - வீதியின்கண் வருகின்றார்.

வேத முடியின் மேலுள்ள திருவடி நிலந்தோயுமாறு நடந்து வருகின்றார் என அருமையும் எளிமையும் தோன்றக் கூறியபடி. உரை பரப்பி அடிக்கமலம் நிலஞ்சூட வீதியிடத்து அணைகின்றார் என வினை முடிக்க. எனை வேலை கொள்வார் என்னும் பாடத்திற்கு என்னை வேலை வாங்குவார் என்று உரைக்க. (கஅ)

தந்தைதாய் பிறரின்றி வருகின்ற தனிக்கூலி
மைந்தனார் வாய்மலரும் குரல்கேட்டு வந்தியுந்தன்
சிந்தையா குலமிழந்து நல்கூர்ந்தார் செல்வமகத்†
தந்தபோ தெழுமகிழ்ச்சி தலைக்கொள்ளப் புறம்போந்தாள்.

(இ - ள்.) தந்தை தாய் பிறர் இன்றி வருகின்ற - தந்தையும் தாயும் வேறொருவரின்றி வருகின்ற, தனிக் கூலி மைந்தனார் வாய் மலரும் குரல் கேட்டு - தனித்த கூலி மகனார் கூறிவரும் குரலைக் கேட்டு, வந்தியும் தன் சிந்தை ஆகுலம் இழந்து - வந்தியும் தனது மனக் கவலை யொழிந்து, நல் கூர்ந்தார் செல்வம் மக தந்தபோது - மக்கட் பேறின்மையாகிய வறுமையை யுடையார் மக்கட் பேறாகிய செல்வத்தைப் பெற்ற காலத்து, எழுமகிழ்ச்சி தலைக்கொள்ளப் புறம் போந்தாள் - அவர்க்குண்டாம் மகிழ்ச்சி தனக்கு வந்து கூட வெளியே வந்தாள்.

தாம் எல்லார்க்கும் தந்தையும் தாயும் ஆவதன்றித் தமக்கு வேறொருவர் தந்தை தாயாகப் பெறாத என்க. நல்கூர்ந்தார் - பிள்ளையால் மிடிப்பட்டார்;

"நல்கூர்ந்தார் செல்வ மகள்"

என்னும் கலித்தொகை யடிக்கு நச்சினார்க்கினியர் இவ்வாறு பொருள் கூறுதல் காண்க. வந்தியும் மகப்பெற்றாற் போலும் மகிழ்ச்சி யெய்தினாள்; வந்தி என்பதற்கு மலடி யென்பதொரு பொருளுமுண்மையின் இது மிக்க நயமுடைத்து. (ககூ)

(பா - ம்.) †செல்வமிக. செல்வமகம்

அன்னையெனத் தன்பாலின் னருள்சுரந்து வருகாளை
தன்னையழைத் தெனக்களந்த கரையடைத்துத் தருவாயோ
என்னவிசைத் தனளாக வடைக்கின்றே னெனக்கன்னே
பின்னையதற் கிடுங்கூலி யாதென்றார் பெருமுதியாள்.

(இ - ள்.) அன்னை எனத் தன்பால் இன் அருள் சுரந்து வருகாளை தன்னை அழைத்து - தாய்போலத் தன்கண் இனிய அருள் சுரந்து வரும் காளைப் பருவ முடையாரை அழைத்து, எனக்கு அளந்த கரை அடைத்துத் தருவாயோ என்ன இசைத்தனளாக - என் பங்குக்கு அளந்து விட்ட கரையினை அடைத்துத் தருவாயோ என்று வினவினளாக; அன்னே - தாயே, அடைக்கின்றேன் - அடைத்துத் தருவேன், பின்னை - அடைத்தபின், எனக்கு அதற்கு இடும் கூலி யாது என்றார் - எனக்கு அதற்காகக் கொடுக்குங் கூலி யாது என்று கேட்டனர்; பெரு முதியாள் - பெரிய அம்முதியவள்.

அன்னை யென அருள் சுரந்து எனலும், அன்னை யென அழைத்து எனலும் பொருந்தும். (உ0)

பிட்டிடுவே னுனக்கென்று ளதற்கிசைந்து பெரும்பசியாற்
சுட்டிடநான் மிகமெலிந்தேன் சுவைப்பிட்டி லுதிர்ந்தவெலாம்
இட்டிடுவா யதுமுந்தத் தின்றுநா னிளைப்பாறிக்
கட்டிடுவே னின்னுடைய கரையென்றார் கரையில்லார்.

(இ - ள்.) உனக்குப் பிட்டு இடுவேன் என்றாள் - உனக்குக் கூலியாகப் பிட்டுத் தருவேனென்று கூறினள்; கரை இல்லார் அதற்கு இசைந்து - எல்லையில்லாத இறைவர் அதற்கு உடன் பட்டு, பெரும் பசியால் சுட்டிட நான் மிகமெலிந்தேன் - பெரிய பசித்தீ என்னைச்சுட அதனால் யான் மிக இளைத்தேன்; முந்த - யான் வேலை செய்தற்கு முன்னரே, சுவைப் பிட்டில் உதிர்ந்த வெலாம் - சுவை மிக்க பிட்டில் உதிர்ந்த பிட்டு முழுதும், இட்டிடுவாய் - தருவாயாக; அது தின்று நான் இளைப்பாறி - அதனைத் தின்று நான் சிறிது இளைப்பாறிக் கொண்டு, நின்னுடைய கரை கட்டிடுவேன் என்றார் - நினது பங்குக் கரையைக் கட்டுவேனென்று கூறினர்.

பசி சுட்டிட அதனால் எனச் சுட்டுப் பெயர் வருவித்து உருபு பிரித்தொட்டுக. சுட்டிட முதலியவற்றில், இடு: துணைவினை. கரையில்லார்- அளவைகளால் அளக்கப்படும் வரம்பு இல்லாதவர். (உக)

தெள்ளியடு சிற்றுண்டி சிக்கடைந்த பொதிநீக்கி
அள்ளியெடுத் தருந்தப்பா வென்றிட்டா ளரைக்கசைத்த
புள்ளியுடைத் துகினீத்தார் புறத்தானை விரித்தேந்தி
ஒள்ளியதென் றவளன்பு முடன்கூட்டி யமுதுசெய்வார்.

(இ - ள்.) தெள்ளிஅடு சிற்றுண்டி - மாவினைத் தெள்ளிச் செய்த பிட்டினை, சிக்கு அடைந்த பொதி நீக்கி - அழுக்கடைந்த மூடிய

ஆடையை நீக்கி, அள்ளி எடுத்து அப்பா அருந்து என்று இட்டாள் - அள்ளி யெடுத்து அப்பனே உண்பாயாக என்று கூறி அளித்தனள்; அரைக்கு அசைத்த புள்ளி உடைத் துகில் நீத்தார் - இடையிற் கட்டிய புள்ளியை யுடைய புலித்தோலுடையை நீக்கி வந்தவர், புறத்தானை விரித்து ஏந்தி - முன்றானையை விரித்து ஏந்தி, ஒள்ளியது என்று - இது மிக நன்றாயிருக்கிறதென்று, அவள் அன்பும் உடன் கூட்டி அமுது செய்வார் - அவளது அன்பையும் ஒருங்கு சேர்த்து அருந்துவாராயினர்.

சிக்கு - அழுக்கு. பொதி - மூடு துணி. அன்பினால் 'அப்பா' என்றாள். ஒள்ளியது - சிறந்தது. உண்டலை அமுது செய்தல் என்பது பெரியோர் சம்பிரதாயம். (உஉ)

அன்னைமுலைத் தீம்பாலி னரியசுவைத் திஃதந்தத்
தென்னவனு யுலகாண்ட திருவால வாயுடைய*
மன்னர்பிரான் றனக்கேயா மென்றென்று வாய்ப்பெய்து
சென்னியசைத் தமுதுசெய்தார் தீவாய்நஞ் சமுதுசெய்தார்.

(இ - ள்.) அன்னை முலைத் தீம்பாலின் அரிய சுவைத்து இஃது - தாயின் முலைப்பாலைவிட அரிய சுவையை யுடையதாகிய இப்பிட்டு, அந்தத் தென்னவனுய் உலகு ஆண்ட - அந்தச் சுந்தர பாண்டியனாய் இந்நிலவுலகை ஆண்டருளிய, திருவாலவாயுடைய மன்னர் பிரான் தனக்கேயாம் என்று என்று - திருவாலவாயினையுடைய மன்னர் பெருமானுக்கே உரியதாகும் என்று சொல்லிச் சொல்லி, வாய்ப்பெய்து - வாயிற்போட்டு, தீவாய் நஞ்சு அமுது செய்தார் - தீயைப்போலும் வெம்மை வாய்ந்த நஞ்சினை யுண்ட அவ்விறைவர், சென்னி அசைத்து அமுது செய்தார் - முடிதுளக்கி அருந்தினர்.

அந்த மன்னர் பிரான் எனக் கூட்டுக. திருவாலவாயுடைய மன்னர் பிரானுக்கே ஆகுமென்று பிட்டினைப் புகழ்ந்துரைப்பார் போன்று உண்மை கூறும் நயம் பாராட்டற்குரியது. உவப்பாலும் வியப்பாலும் சென்னியசைத்தார். கொடிய நஞ்சினையும் அமுது செய்தவர் இப் பிட்டினை விடுவரோ என்னும் நயந் தோன்ற 'தீவாய்நஞ் சமுது செய்தார்' எனப் பெயர் கூறினர். (உ௩)

தந்தையொடு தாயின்றித் தனிக்கூலி யாளாக
வந்தவெனக் கொருதாயா யருள்சுரந்து மாறாத
இந்தவிளைப் பொழித்தனையே யினிவேலைத் தலைச்சென்றுன்
சிந்தைகளிப் பெழவேலை செய்வேனென் றிசைத்தெழுந்தார்.

(இ - ள்.) தந்தையொடு தாய் இன்றி - தந்தையும் தாயுமில்லாமல், தனிக் கூலியாளாக வந்த எனக்கு - தனித்த கூலியாளாக வந்த எனக்கு, ஒரு தாயாய் அருள் சுரந்து - ஓர் அன்னையாகி அருள் சுரந்து, மாறாத இந்த இளைப்பு ஒழித்தனையே - நீங்காத இந்த இளைப்பினை

(பா - ம்.) * வாய் மலர்ந்து.

நீக்கினையே (ஆனதால்), இனி வேலைத்தலைச் சென்று - இனி வேலை நடக்குமிடஞ்சென்று, உன் சிந்தை களிப்பு எழ - உன் மனம் மகிழ்ச்சி மிக, வேலை செய்வேன் என்று இசைத்து எழுந்தார் - வேலை செய்வே னென்று கூறி எழுந்தனர்.

தந்தை தாய் இல்லாத எனக்கு எனக் கூறுவது அழகிது; இறைவன் 'பிறவா யாக்கைப் பெரியோன்' ஆகலின் அவற்குத் தந்தை தாய் இன்மை அறிக;

''தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடி''

என்பது திருவாசகம். வேலைத்தலை - வேலை செய்யுமிடம். (௨௪)

தந்திவாய் மருப்பிடறி வருங்குடிஞைத் தடங்கரையில்
வந்தியான் வந்தியா ளேன்றேட்டில் வரைவித்துப்
புந்தியா லுரையானூற் பொருளினு லளப்பரிய
அந்திவான் மதிச்சடையார் கரையடைப்பா ராயினர்.

(இ - ள்.) தந்திவாய் மருப்பு இடறிவரும் - யானையின் வாயிலுள்ள கொம்பினை இடறிக் கொண்டு வருகின்ற, குடிஞைத் தடம் கரையில் வந்து - வையை யாற்றினது பெரிய கரையின்கண் வந்து, யான் வந்தி ஆள் என்று ஏட்டில் வரைவித்து - யான் வந்தியின் கூலியாள் என்று கணக்கில் எழுதுவித்து, புந்தியால் உரையால் நூற்பொருளினால் அளப்பரிய - மனத்தினாலும் மொழியாலும் நூற்பொருளினாலும் அளந்து காண்டற் கரிய, அந்திவான் மதிச் சடையார் - செக்கர் வானிற் றோன்றும் பிறையினை யணிந்த சடையை யுடைய இறைவர், கரை அடைப்பார் ஆயினர் - கரையினை யடைக்கத் தொடங்கினர்.

வந்தியான் என்பதில் குற்றியலிகரம் அலகு பெற்றது. எண்ணும்மைகள் தொக்கன. (௨௫)

வெட்டுவார் மண்ணைமுடி மேல்வைப்பார் பாரமேனக்
கோட்டுவார் குறைத்தேடுத்துக் கோடுபோவார் சுமடுவிழத்
தட்டுவார் சுமையிறக்கி யேடுத்ததனைத் தலைபடியக்
கட்டுவா ருடன்சுமந்து கோடுபோவார் கரைசோரிவார்.

(இ - ள்.) மண்ணை வெட்டுவார் - மண்ணினை வெட்டுவார்; முடிமேல் வைப்பார்-அதனைத் தூக்கிமுடியின்கண் வைப்பார்; பாரம் எனக் கொட்டுவார் - பாரம் அதிகமென்று கூறிக் கீழே கொட்டுவார்; குறைத்து எடுத்துக் கொடுபோவார் - அதனைக் குறைத்து எடுத்துக் கொண்டு போவார்; சுமடுவிழத்தட்டுவார் - சும்மாடு விழுமாறு தட்டுவார்; சுமை இறக்கி அதனை எடுத்துத் தலைபடியக் கட்டுவார் - சுமையைக் கீழே இறக்கி வைத்து அச் சும்மாட்டினை எடுத்துத் தலையிற் படியுமாறு கட்டுவார், உடன் சுமந்துகொடுபோவார் கரை சொரிவார் - விரைந்து சுமந்து கொண்டுபோய்க் கரையிற் கொட்டுவார்-

சுமடு - சுமையடை; சும்மாடு. (௨௬)

இவ்வண்ண மிவரொருகா லிருகான்மண் சுமந்திளைத்துக்
கைவண்ண மலர்கன்றக் கதிர்முடிமேல் வடுவழுந்த
மைவண்ண னறியாத மலரடிசெம் புனல்சுரந்து
செவ்வண்ணம் படைப்பவொரு செழுந்தருவின் மருங்கணைந்தார்.

(இ - ள்.) இவர் இவ்வண்ணம் ஒரு கால் இரு கால் மண் சுமந்து இளைத்து - இவர் இங்ஙனம் ஒருமுறை இருமுறை மண்ணைச் சுமத்தலால் உடல் மெலிந்து, கைவண்ணமலர் கன்ற - திருக்கைகளாகிய செந்நிறமுடைய தாமரை மலர்கள் கன்றவும், கதிர்முடிமேல் வடு அழுந்த - ஒளி பொருந்திய முடியின்கண் வடு அழுந்தவும், மைவண்ணன் அறியாத மலர் அடி - முகில் போலும் நிறமுடைய திருமாலறியாத தாமரை மலர் போலுந் திருவடிகள், செம்புனல் சுரந்து செவ்வண்ணம் படைப்ப - குருதி சுரந்து செந்நிறத்தைப் பெறவும், ஒரு செழுந்தருவின் மருங்கு அணைந்தார் - ஒரு செழிய மரத்தினது நிழலை அடைந்தனர்.

கன்ற முதலிய எச்சங்கள் காரணப்பொருளன. கொன்றை நிழல் என்பர் கடவுள் மாமுனிவர். (உஎ)

தருமேவு மலைமகளுஞ் சலமகளு மறியாமற்
றிருமேனி முழுதுநில மகடீண்டித் திளைப்பெய்தக்
குருமேவு மதிமுடியைக் கூடையணை மேற்கிடத்தி
வருமேரு வனையார்தம் வடிவுணர்ந்து துயில்கின்றார்.

(இ - ள்.) தருமேவும் மலைமகளும் - மரங்கள் பொருந்திய மலையரையன் புதல்வியாராகிய உமையம்மையாரும், சலமகளும் அறியாமல் - கங்காதேவியாரும் அறியாமல், திருமேனி முழுதும் - தமது திருவுடல் முழுதையும், நிலமகள் தீண்டி திளைப்பெய்த - நிலமகள் பரிசித்துத் திளைக்க, குருமேவும் மதிமுடியை - நிறம் பொருந்திய சந்திரனையணிந்த முடியினை, கூடை அணை மேல் கிடத்தி - கூடையாகிய அணையின் மேல் வைத்து, வருமேரு அனையார் - வளருகின்ற மேருமலையையொத்த இறைவர், தம் வடிவு உணர்ந்து துயில்கின்றார் - தமது வடிவினை உணர்ந்து துயில்கொள்கின்றார்.

தருமேவு என்றது மலைக்கு அடை. குரு - நிறம்; ஒளி. அணை - தலையணை. துயிலுதல் ஒரு விளையாட்டேயன்றி, ஏனையோர் போல மயக்கத்தால் துயில்கின்றாரல்லர் என்பார் 'தம் வடிவுணர்ந்து துயில்கின்றார்' என்றார். வடிவுணர்ந்து - சொரூபத்தை உணர்ந்து கொண்டு. (உஅ)

அத்தருவே யாலநெடுந் தருவாக வலைபுரட்டித்
தத்திவரும் புனலடைப்பார் சனகாதி முழுதுணர்ந்த
மெய்த்தவராய்க் கண்களிப்ப மெய்யுணர்ச்சி மோனமயச்
சுத்தவுருத் தெளிவிப்பா ரெனத்துயிலுந் துயிலுணர்ந்தார்.

(இ - ள்) அத்தருவே நெடும் ஆலந்தருவாக - அந்த மரமே நீண்ட வடவால மரமாக, அலைபுரட்டித் தத்திவரும்புனல் அடைப்பார் அலைகளை விசித் தத்திக் கொண்டு வரும் நீரை அடைப்பவர்களே, சனக ஆதி முழுது உணர்ந்த மெய்த்தவராய்க் கண் களிப்ப - சனகன் முதலாகிய முற்று முணர்ந்த உண்மைத்தவ முடையாராகிக் கண் களிகூர, மெய் உணர்ச்சி மோனமய சுத்த உருத் தெளிவிப்பார் என - மெய்யுணர்வால் பெறப்படும் மோனமயமாகிய தமது தூய அருளுருவினைத் தெளி விப்பாரைப் போல, துயிலும் துயில் உணர்ந்தார் - தூங்கும் தூக்கத்தினின்றும் விழித்தனர்.

முழுதுணர்ந்த சனகாதி மெய்த்தவராய் என மாறுக. மோன நிலையிலிருந்து தெளிவிப்பாரெனத் துயிலும் துயில் என்க. (௨௯)

ஆடுவார் சாமமெனத் தித்திக்கு மமுதவிசை
பாடுவார் நகைசெய்வார் தொழில்செய்வார் பராக்கடையக்
கோடுவார் மணல்குவிப்பார் குதிப்பார்தூ ளெழவடிபாய்ந்
தோடுவா ருடன்மீள்வா ருன்மத்த ரெனவிருப்பார்.

(இ - ள்.) ஆடுவார் - கூத்தாடுவார்; சாமம் எனத் தித்திக்கும் அமுத இசை பாடுவார் - சமாவேதத்தைப்போலச் சுவைபயக்கும் அமுதம் போலும் இசையினைப் பாடுவார்; நகை செய்வார் - சிரிப்பார்; தொழில் செய்வார் பராக்கு அடைய - வேலை செய்பவர்கள் பராக்கினை அடையுமாறு, வார் கோடு மணல் குவிப்பார் குதிப்பார் - நீண்ட கரையின்கண் மணலைக் குவித்துத் தாண்டுவார்; அடி தூள் எழ பாய்ந்து ஓடுவார் - காலினுள்ள துகள் மேலே எழுமாறு பாய்ந்து ஓடுவார்; உடன் மீள்வார் - உடனே திரும்புவார்; உன்மத்தர் என இருப்பார் - உன்மத்தரைப் போலப் பேசாமல் இருப்பார்.

பராக்கடைய என்பதனை ஆடுவார் முதலியவற்றுக்கும் காரியமாக்குக. பராக்கு அடைய - பராக்குப் பார்க்க; தமது தொழிலை விட்டு வேடிக்கை பார்க்க. (௩௰)

வேலையினு லறவருந்தி யிளைத்தார்போன் மெய்வேர்வை
காலமிசை மூச்செறிந்து வாயொலியாற் காற்றழைத்துச்
சாலநெடும் பசியினர்போற் றளர்ந்தடியா ளிடும்பிட்டின்
மேலடைந்த விருப்பினராய் மீண்டுமவள் பாலணைவார்.

(இ - ள்.) வேலையினால் அறவருந்தி இளைத்தார் போல் - வேலையினாலே மிகவும் வருந்தி மெலிந்தவர் போல, மெய் வேர்வை கால - உடல் வேர்வையினைச் சிந்த, மிசை மூச்சு எறிந்து - மேல் மூச்சு விட்டு, வாய் ஒலியால் காற்று அழைத்து - வாயைக் குவித்துச் செய்யும் ஒலியினால் காற்றினை அழைத்து, சால நெடும் பசியினர் போல் தளர்ந்து - மிகவும் நீண்டகாலத்துப் பசியுடையார்போலத் தளர்வுற்று, அடியாள் இடும்பிட்டின் மேல் அடைந்த விருப்பினராய் - அடியாளாகிய வந்தி கொடுக்கும் பிட்டின்கண் சென்றடைந்த விருப்பினை யுடையவராய், மீண்டும் அவள்பால் அணைவார் - மீளவும் அவளிடஞ் செல்வாராயினர்.

இளைத்தார் போல் என்றும், பசியினர் போல் என்றும் கூறியது இவையெல்லாம் நாடகமாத்திரமேயன்றி உண்மையல்ல என்றற்கு. வாயைக் குவித்து எழுப்பும் சீழ்க்கை யொலியால் காற்று வருவித்தல் பணியாளரிடைக் காணப்படும் வழக்கு. (௩௧)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

இடும்பைநோய் வெள்ள நீந்தி யின்பநீர் வெள்ளத் தாழ்ந்த
கொடும்புற முதியாண் முன்போய்க் கூறுவார் கோலுக் கேற
இடம்படு கரைக ளெல்லா மடைபடு கின்ற வின்னங்
கடும்பசி யுடையே னன்னே பிட்டிடு கடிதி னென்றார்.

(இ - ள்.) இடும்பை நோய் வெள்ளம் நீந்தி - துன்ப நோயாகிய வெள்ளத்தினை நீந்திக் கடந்து, இன்பநீர் வெள்ளத்து ஆழ்ந்த - இன்பமாகிய வெள்ளத்தில் அழுந்திய, கொடும்புறம் முதியாள் முன்போய் - வளைந்த முதுகினையுடைய முதியவளாகிய வந்தியின் முன் சென்று, கூறுவார் - சொல்லுவார்; கோலுக்கு ஏற இடம்படு கரைகள் எல்லாம் அடைபடுகின்ற - அளந்து விட்ட கோலுக்குப் பொருந்த இடமகன்ற கரைகளெல்லாம் அடைபடுகின்றன; அன்னே - தாயே, இன்னம் கடும் பசி உடையேன் - யான் இன்னும் மிக்க பசியுடையேன் (ஆகலின்), கடிதின் பிட்டு இடு என்றார் - விரைவில் பிட்டு இடுவாயாக என்று கூறியருளினர்.

நீர் வெள்ளத்துக்கு அடை. ஏற - பொருந்த. கடும்பசி - மிக்க பசி. (௩௨)

ஆங்கவ ளப்போ தட்ட சிற்றுண வளித்தா ளையர்
வாங்கியங் கையு நாவுங் கனலெழ வாயிற் பெய்து
பாங்கிரு கொடிறு மொற்றிப் பதமுறப் பருகிக் கொண்டு
நீங்கிமுன் போலப் போந்து நெடுங்கரை யடைக்க லுற்றார்.

(இ - ள்.) ஆங்கு அவள் அப்போது அட்ட சிற்றுணவு அளித்தாள் - அவ்விடத்தில் அவ்வந்தி அப்பொழுது செய்த பிட்டினைக் கொடுத்தாள்; ஐயர் - இறைவர், வாங்கி அங்கையும் நாவும் கனல் எழ வாயில் பெய்து - அதனை வாங்கி அகங்கையும் நாவும் தீயெழ வாயிற் போட்டு, இருபாங்கு கொடிறும் ஒற்றி - இரண்டு பக்கங்களிலுமுள்ள கொடிற்றினைக் கையால் ஒற்றி, பதம் உற - அது உண்ணும் பதத்தினைப் பொருந்த, பருகிக்கொண்டு நீங்கி - அதனை அருந்திக் கொண்டே அவ்விடத்தினின்றும் நீங்கி, முன் போலப் போந்து - முன்போல் வந்து, நெடுகரை அடைக்கலுற்றார் - நீண்ட கரையினை அடைக்கத் தொடங்கினார்.

பசி மிகுதியால் விரைந்துண்போர்போலச் சூட்டினைக் கருதாது வாயிற் போட்டனர் என்க. வாங்கினமையாற் கையும், வாயிற்பெய்தமையால் நாவும் வெம்மையுற. கனல் - தழல் போலும் வெம்மை. கொடிறு-கவுள், (௩௩)

பிட்டுவாய் மிதப்ப வுண்பார் பெருவலி யுடையார் போல
வெட்டுவா ரெடுத்த மண்ணைக் கொண்டுபோய் வேற்றுப் பங்கிற்
கொட்டுவா ருடைப்பு மாறுங் கொள்கைகண் டார்த்து திண்டோள்
தட்டுவா ரயனின் றாரைத் தழுவுவார் களிப்புத் தாங்கி.

(இ - ள்.) பிட்டு வாய் மிதப்ப உண்பார் - பிட்டினை வாய் நிறையப்போட்டு உண்பார்; பெருவலி உடையார் போல வெட்டுவார் - பெரிய வலிமையுடையார் போல வெட்டுவார்; எடுத்த மண்ணைக் கொண்டுபோய் வேற்றுப்பங்கில் கொட்டுவார் - அங்ஙனம் வெட்டி யெடுத்த மண்ணைத் தூக்கிக்கொண்டு போய் வேறு பங்கில் கொட்டுவார்; உடைப்பு மாறும் கொள்கை கண்டு - அந்த உடைப்பு மாறுந் தன்மையைப் பார்த்து, ஆர்த்துத் திண்தோள் தட்டுவார் - ஆரவாரஞ் செய்து திண்ணிய தோளினைத் தட்டுவார்; களிப்புத் தாங்கி அயல் நின்றாரைத் தழுவுவார் - களிப்பு மிக்குப் பக்கத்தில் நின்றவரைக் கட்டித் தழுவுவார். (௩௪)

எடுத்தமண் கூடை யோடு மிடறிவீழ் வார்போ லாற்றின்
மடுத்திட வீழ்வர் நீந்தி வல்லைபோய்க் கூடை தள்ளி
எடுத்தகன் கரைமே லேறி யடித்தடித் தீரம் போக்கித்
தொடுத்தகட் டவிழ்ப்பர் மீளத் துன்னுவர் தோடுவர் மண்ணை.

(இ - ள்.) எடுத்த மண்கூடையோடும் - எடுத்த மண்ணையுடைய கூடையுடன், இடறி வீழ்வார்போல் ஆற்றின் மடுத்திட வீழ்வார் - காலிடறி விழுபவரைப் போல ஆற்றில் அழுந்த விழுவார்; வல்லை நீந்திப்போய் - விரைந்து நீந்திச்சென்று, கூடை தள்ளி எடுத்து - கூடையைத் தள்ளி வந்து எடுத்து, அகன் கரைமேல் ஏறி - அகன்ற கரையின் மேலேறி, அடித்து அடித்து ஈரம் போக்கி - அக்கூடையைப் பல முறை அடித்து ஈரத்தைப்போக்கி, தொடுத்த கட்டு அவிழ்ப்பர் - அதன் தொடுத்த கட்டினை அவிழ்ப்பர்; மீளத் துன்னுவர் - மீளவும் அக் கட்டினைக் கட்டுவர்; மண்ணைத் தொடுவர் - மண்ணை வெட்டுவர்,

அகன்: மரூஉ. துன்றுதல்; தைத்தல்; கட்டுதல். (௩௫)

கொட்டுமண் சுமந்து செல்வர் கூடையை யுடைப்பில் வீழத்
தட்டுவ ரெடுப்பார் போலத் தாவிவீழ்ந் தலையி லோட
விட்டொரு மரத்தைப் பற்றி மிதப்பர்திண் கரையி லேற
முட்டுவர் சுழியி லாழ்வர் சேட்சென்று முளைப்பர் மீள்வர்.

(இ - ள்.) கொட்டுமண் சுமந்து செல்வர் - ஒரு கொட்டு மண்ணைச் சுமந்து கொண்டு போவார்; கூடையை உடைப்பில் வீழத் தட்டுவர் - கூடையை உடைப்பில் விழுமாறு தட்டுவார்; எடுப்பார்போலத் தாவி வீழ்ந்து அலையில் ஓடவிட்டு - அதனை எடுப்பவர்போலத் தாவி நீரில் வீழ்ந்து அது அலையில் ஓடுமாறு விட்டு, ஒரு மரத்தைப் பற்றி மிதப்பர் - ஒரு மரத்தினைப் பிடித்து மிதப்பர்; திண்கரையில் ஏற முட்டுவர் - திண்ணிய கரையிலேறப் பல பக்கங்களினுஞ் சென்று மோதுவர்;

சுழியில் ஆழ்வர் - நீர்ச்சுழியுள் அழுந்துவர். சேண்சென்று முளைப்பர் மீள்வர் - நெடுந்தூரம் போய் மேலே எழுந்து மீளுவர்.

கொட்டு - மண்வெட்டியின் வாயாகிய தகடு. முளைப்பர் - நீரிலிருந்து மேலே தோன்றுவர். (௩௬)

கொட்டினைக் கழலப் பார்ப்பர் கோப்பர்கோ லிடையாப் பிட்டுத்
தட்டுவ ருயிர்ப்பு வீங்கித் தள்ளநின் றிளைப்பர் கச்சிற்
பிட்டினை நுகர்வர் வேலை வினைகெடப் பிறர்க்கு மள்ளி
இட்டுமா றோச்ச நோக்கி நகைப்பர்கை யிரண்டுந் தாக்கி.*

(இ - ள்.) கொட்டினைக் கழலப் பார்ப்பர் - மண்வெட்டி கழலும்படி செய்வர்; கோல் இடையாப்பு இட்டுக்கோப்பர் தட்டுவர் - காம்பினிடத்தில் ஆப்பினைச் செருகிக்கோத்துத் தட்டுவர்; உயிர்ப்பு வீங்கித்தள்ள நின்று இளைப்பர் - மூச்சு மேலோங்கிச்செல்ல நின்று வருந்துவர்; கச்சில் பிட்டினை நுகர்வர் - கச்சிலுள்ள பிட்டினை அள்ளி அருந்துவர்; வேலைவினை கெடப் பிறர்க்கும் அள்ளி இட்டு - வேலையாகிய வினை கெடுமாறு வேலைசெய்யும் பிறர்க்கும் அள்ளிக்கொடுத்து, மாறு ஓச்ச நோக்கி - வேலை வாங்குவோர் பிரம்பினை ஓங்க அதனைப் பார்த்து, கை இரண்டும் தாக்கி நகைப்பர் - இரண்டு கரங்களையும் ஒன்றோடொன்று தாக்கிச் சிரிப்பர்.

பார்ப்பர் - செய்வர். பிறர்க்கும் அள்ளிக்கொடுத்து வினைகெடச் செய்வதால் மாறு ஓச்ச என்க. மாறு - பிரம்பு; வளாருமாம். (௩௭)

வானத்தின் மண்ணிற் பெண்ணின் மைந்தரிற் பொருளி லாசை
தானற்றுத் தமையு நீத்துத் தத்துவ முணர்ந்த யோகர்
ஞானக்கண் கொண்டே யன்றி நாடருஞ் சோதி மண்ணோர்
ஊனக்கண் கொண்டுங் காண வுடன்விளை யாடல் செய்வார்.

(இ - ள்.) வானத்தில் மண்ணில் பெண்ணில் மைந்தரில் பொருளில் - இந்திரன் முதலிய இறையவர் பதங்களிலும் மண்ணிலும் மகளிரிலும் மைந்தரிலும் பொருளிலும், ஆசை தான் அற்று - விருப்பமற்று, தமையும் நீத்து - தற்போதத்தையும் இழந்து, தத்துவம் உணர்ந்த யோகர் - உண்மை நிலையினை யுணர்ந்த யோகிகள், ஞானக்கண் கொண்டே அன்றி நாடரும் சோதி - ஞானக்கண்ணாற் காண்டலன்றிப் பிறவாற்றால் நாடுதற்கரிய பரஞ் சுடராகிய சோமசுந்தரக் கடவுள், மண்ணோர் ஊனக்கண் கொண்டும் காண - புவியிலுள்ளார் ஊனக்கண்ணாலுங் கண்டு களிக்க, உடன் விளையாடல் செய்வார் - அவருடன் தாமுமொருவராய் விளையாடுவாராயினர்.

எண்ணும்மைகள் தொக்கன. தான்: அசை. தமையும் நீத்து என்பதற்கு இருவகை உடம்பின் கண்ணும் பற்று விட்டு என்றுமாம்.

(பா - ம்.) *தாங்கி.

பற்றறுத்து மெய்யுணர்ந்த சிவயோகிகளாலும் ஞானக்கண்ணாலன்றி அறியலாகாத பெருமான் மண்ணில் வாழும் ஏனைப்பொதுமக்களும் ஊனக்கண்ணாலும் காணும்படி அவருடன் விளையாடுவாராயினர் என அன்பிற்கு எளியரான இறைவரது அருமைப்பாட்டை விளக்கினர். (௩அ)

அருளினு லுலக மெல்லா மாக்கியு மளித்து நீத்தும்
பெருவிளை யாடல் செய்யும் பிறைமுடிப் பெருமா னிங்ஙன்
ஒருவிளை யாடல் செய்ய வோச்சுகோற் கைய ராகி
அருகுநின் றேவல் கோள்வா ரடைகரை நோக்கப் புக்கார்.

(இ - ள்.) அருளினால் உலகம் எல்லாம் ஆக்கியும் அளித்தும் நீத்தும் - பேரருளினாலே உலகமனைத்தையும் ஆக்கியும் காத்தும் அழித்தும், பெருவிளையாடல் செய்யும் பிறைமுடிப் பெருமான் - பெரிய விளையாடலைப் புரியும் பிறையை யணிந்த முடியினையுடைய இறைவன், இங்ஙன் ஒரு விளையாடல் செய்ய - இங்கே இவ்வண்ணம் ஒரு விளையாடலைச் செய்யா நிற்க, ஓச்சு கோல் கையராகி அருகுநின்று ஏவல் கொள்வார் - வீசுகின்ற கோலையுடைய கையினையுடையராய்ப் பக்கத்தில் நின்று வேலை வாங்குவோர், அடைகரை நோக்கப் புக்கார் - அடைபட்ட கரையினைப் பார்க்கப் போயினர்.

நீத்து - ஒழித்து என்னும் பொருட்டு. இங்ஙனம் என்பது ஈறு தொக்கது. (௩௯)

நெட்டலை யோதுங்கி யோட நிவப்புற வரைபோ லிட்டுக்
கட்டிய கரைக ளெல்லாங் கண்டுகண் டொப்பு நோக்கி
அட்டமே செல்வார் திங்க ளாயிரந் தொழுதாள் பேரால்
விட்டபங் கடைப டாமை கண்டனர் வெகுளி மூண்டார்.

(இ - ள்.) நெடு அலை ஒதுங்கி ஓட - நீண்ட அலைகள் ஒதுங்கி ஓடுமாறு, நிவப்பு உற வரைபோல்இட்டுக் கட்டிய கரைகள் எல்லாம் - உயர்தலைப் பொருந்த மலைபோல் மண்இட்டுக் கட்டிய கரைகளனைத்தையும், கண்டு கண்டு ஒப்பு நோக்கி - பார்த்துப் பார்த்துக் கணக்குடன் ஒத்திருத்தலையும் நோக்கி, அட்டமே செல்வார் - குறுக்கே செல்லுமவர், திங்கள் ஆயிரம் தொழுதாள் பேரால் விட்ட பங்கு - ஆயிரம் பிறையினைக் கண்டு வணங்கிய வந்தியின் பெயரால் அளந்து விட்ட பங்கு, அடைபடாமை கண்டனர் வெகுளி மூண்டார் - அடைபடாதிருத்தலைக் கண்டு சீற்றமிக்கனர்.

வரைபோல் நிவப்புறக் கட்டிய என இயைக்க. அட்டம் - வளைவு, குறுக்கு; அங்கு என்றுமாம். நூறாண்டு புக்காள் என்பார் திங்களாயிரந் தொழுதாள், என்றார்; பத்துத்திங்கள் ஓராயுளாகக் கொள்ளுதலு முண்டென்க. மகளிர் பிறை தொழுதலியல்பாகலின் அதன் மேலிட்டு ஆயுள் நீட்சி கூறினர். (௪௦)

வந்திக்குக் கூலி யாளாய் வந்தவன் யாரென் றோடிக்
கந்தர்ப்ப னெனநேர் நின்ற காளையை நோக்கி யேடா
அந்தப்பங் குள்ள வெல்லா மடைபட்ட தேவனீ யின்னம்
இந்தப்பங் கடையாய் வாளா திருத்தியா றம்பீ யென்றார்.

(இ - ள்.) வந்திக்குக் கூலியாளாய் வந்தவன் யார் என்று ஓடி - வந்திக்குக் கூலியாளாக வந்தவன் யாவன் என்று வினவி ஓடி, கந்தர்ப்பன் என நேர்நின்ற காளையை நோக்கி - மன்மதனைப்போல எதிரில் நின்ற காளை போன்றாரைப் பார்த்து, ஏடா - ஏண்டா, அந்தப் பங்கு உள்ள எல்லாம் அடைபட்டது - அந்தப் பங்கு உள்ளன முற்றும் அடைபட்டது; நீ இன்னம் - நீ இன்னமும், இந்தப் பங்கு அடையாய் - இந்தப் பங்கினை அடையாமல், வாளாது இருத்தி எவன் தம்பீ என்றார் - சும்மா இருக்கின்றனையே அதற்கு யாது காரணம் தம்பீ என்று வினவினர்.

ஏடா தம்பீ எனக் கூட்டி யுரைக்க. அந்தப் பங்கு - ஏனோர் பங்குகள். வாளாது, து: பகுதிப்பொருள் விகுதி. காளையின் அழகில் ஈடுபட்டுத் தம்பியென அருமை பாராட்டிக் கூறினர். (சுக)

வேறுரை யாது தம்மை யுணர்ந்தவர் வீறு தோன்ற
ஈறிலா னிறுமாப் பெய்தி யிருந்தன னாக மேலிட்
டாறுவந் தடுத்த பங்கி லடைகரை கல்லிச் செல்ல
மாறுகொண் டோச்ச வஞ்சி மயங்கினர் வலிய கோலார்.

(இ - ள்.) ஈறு இலான் வேறு உரையாது - அழிவில்லாத இறைவன் அதற்கு வேறொன்றும் விடைகூறாது, தம்மை உணர்ந்தவர் வீறு தோன்ற - தம்மையுணர்ந்த அடியாரின் வீறு வெளிப்பட, இறுமாப்பு எய்தி இருந்தனன் ஆக - இறுமாப்புற்று இருந்தானாக; ஆறு மேலிட்டு வந்து - ஆறானது மேற்கொண்டு வந்து, அடுத்த பங்கில் அடைகரை கல்லிச் செல்ல - அடுத்த பங்கில் அடைபட்டிருக்கும் கரையையும் தோண்டிச் செல்லாநிற்க, வலிய கோலார் மாறுகொண்டு ஓச்ச அஞ்சி மயங்கினர் - வலிய கோலையுடையவர் கோலினால் அடிக்க அஞ்சிமயங்கினர்.

வீறு - பெருமை. இச்செய்யுளிலும் அவரது தோற்றத்தில் ஈடுபட்டமை கூறினர். (சுஉ)

பித்தனோ விவன்று னென்பா ரல்லது பேய்கோட் பட்ட
மத்தனோ விவன்று னென்பார் வந்தியை யலைப்பான் வந்த
எத்தனோ விவன்று னென்பா ரிந்திர சாலங் காட்டுஞ்
சித்தனோ விவன்று னென்பா ராரென்றுந் தெளியோ மென்பார்.

(இ - ள்.) இவன் தான் பித்தனே என்பார் - இவன் பித்துடையவனேவென்று கூறுவர்; அல்லது இவன் தான் பேய் கோட்பட்ட மத்தனே என்பார் - அன்றி இவன் பேயாற் பிடிக்கப் பட்ட உன்மத்தனேவென்று சொல்லுவர்; இவன் தான் வந்தியை அலைப்பான் வந்த எத்தனே என்பார் -(அன்றி) இவன் வந்தியை வருத்துதற்கு வந்த எத்தனேவென்று இயம்புவர்; இவன் தான் இந்திர சாலம் காட்டும் சித்தனே என்பார் - (அன்றி) இவன் இந்திரசாலங் காட்டுகின்ற சித்தனேவென்று செப்புவர்; ஆர் என்றும் தெளியோம் என்பார் - இவருள் யாரென்றுந் தெரிந்திலோம் என்று கூறுவர்.

தான் நான்கும் அசை. பேய்கோட்பட்ட, தம்மினாகிய தொழிற் சொல் வர வலி இயல்பாயிற்று. அலைப்பான்: வினையெச்சம். எத்தன்- ஏமாற்றுவோன். (௪௩)

பாடல்விஞ் சையனே வென்பார் பண்ணினாற் பாணிக் கேற
ஆடல்விஞ் சையனே வென்பா ரரும்பெறற் செல்வத் தாழ்ந்து
வாடிய மகனே வென்பா ரிசைபட வாழ்ந்து கெட்ட
ஏடவிழ் தாரி னாருள் யார்மக னிவன்கோ லென்பார்.

(இ - ள்.) பாடல் விஞ்சையனே என்பார் - பாடலில் வல்ல கந்தருவனேவென்று பகருவார்; பண்ணினால் பாணிக்கு ஏற ஆடல் விஞ்சையனே என்பார் - பண்ணோடு தாளத்துக்குப் பொருந்த ஆடுதலில் வல்ல பரதநூற் புலவனேவென்று அறைகுவார்; அரும் பெறல் செல்வத்து ஆழ்ந்து - (முன்னே) பெறுதற்கரிய செல்வப் பெருக்கில் அழுந்தி, வாடிய மகனே என்பார் - (பின்) அச்செல்வங் குன்றிய மகனேவென்று செப்புவார்; இசைபட வாழ்ந்து கெட்ட ஏடு அவிழ் தாரினாருள் - புகழுண்டாக வாழ்ந்து பின் அவ்வாழ்க்கை கெட்ட இதழ்விரிந்த மாலையை யணிந்த மன்னருள், இவன் யார் மகன்கொல் என்பார் - இவன் யார் மகனே என்று சொல்லுவார்.

ஆல் ஓடுவின் பொருட்டு. பாணி - தாளம். ஏற - பொருந்த. கெட்ட என்னும் பெயரெச்சம் தாரினார் என்பதன் விகுதியோடியையும். இவன் யார்மகன் கொல் என மாறுக. (௪௪)

கரும்பனும் விரும்ப நின்ற கட்டழ குடைய னென்பார்
அரும்பெற லிவன்றான் கூலிக் காட்செய்த தேவனே வென்பார்
இரும்பெருங் குரவ ரற்ற தமியனே வென்பார் வேலை
புரிந்தவ னல்ல னென்பா ரதுமேனி புகலு மென்பார்.

(இ - ள்.) கரும்பனும் விரும்ப நின்ற கட்டழகு உடையன் என்பார் - மதவேளும் விரும்புமாறு நின்ற பேரழகுடையனென்று பேசுவார்; அரும்பெறல் இவன் தான்-பெறுதற்கரிய இவன், கூலிக்கு ஆட்செய்தது எவனே என்பார் - கூலியின் பொருட்டு ஆளாக வந்து

வேலை செய்தது யாது காரணமோ என்று கூறுவார்; இரும்பெரும் குரவர் அற்ற தமியனே என்பார் - தாயும் தந்தையுமாகிய இருமுது குரவரும் இல்லாத தனியனேவென்று சாற்றுவார்; வேலை புரிந்தவன் அல்லன் என்பார்-இவன் இதற்கு முன் வேலை செய்தவனல்லனென்று விளம்புவார்; அது மேனி புகலும் என்பார்-அதனை இவன் திருமேனியே செப்புகின்றது எனச் சொல்லுவார்.

அரும்பெறல் - பெறலரும். இரும் என்பதில் உம் : இசைநிறை. மேனிபுகலும் என்றது சொல்லாததனைச் சொல்வதுபோற் கூறியது. (௬௫)

கூலியுங் கோண்டான் றனே கணக்கிலுங் குறிக்கச் சோன்ஞன்
வேலையுஞ் செய்யா னின்சோல் விளம்பினுங் கேளான் கல்லின்
பாலறை முளையே யாகிப் பராமுகம் பண்ணி நின்றான்
ஏலநா மிதனை வேந்தற் குணர்த்துது மேன்று போனார்.

(இ - ள்.) கூலியும் கொண்டான் - (வேலை தொடங்குதற்கு முன்னரே வந்தியிடம்) கூலியும் வாங்கிக்கொண்டான்; தானே கணக்கிலும் குறிக்கச்சொன்னான் - தானே இங்கு வந்து யான் வந்தியின் ஆளென்று கணக்கிலும் பதிவு செய்யுமாறு கூறினான்; வேலையும் செய்யான் - வேலையும் செய்யாமலிருக்கிறான்; இன்சொல் விளம்பினும் கேளான் - இனியவை கூறினுங் காது கொடான்; கல்லின் பால் அறை முளையே ஆகிப் பராமுகம் பண்ணி நின்றான் - கல்லிலடித்த முளையே போலச் சிறிதும் அசையாது நம்மையும் ஒரு பொருட்படுத்தாமல் நின்றனன்; நாம் இதனை வேந்தற்கு ஏல உணர்த்துதும் என்று போனார் - நாம் இச்செய்தியை மன்னற்கு இசையக் கூறுவேமென்று கருதிச்சென்றனர்.

ஆகி என்பதனை ஆக வெனத் திரித்து, நாம் கூறுஞ்சொல் கல்லில் அறையும் முளைபோன்று செவியில் ஏறாதாக என்றுரைத்தலுமாம்;

"குன்றின்மேற் கொட்டுந் தறிபோற் றலைதகர்ந்து
சென்றிசையா வாகுஞ் செவிக்கு"

எனப் பிறர் உவமங் கூறியிருத்தலுங் காண்க. (௬௬)

தலைமகன் றிருமுன் றாழ்ந்து சாற்றுவா ரடிகே ளிந்த
அலைபுன னகரார் தத்தம் பங்கெலா மளந்த வாற்றான்
மலையினும் வலிய வாகச் சுமந்தனர் வளைந்த சிற்றாண்
விலைநரை யாட்டி தன்பங் கடைத்திலள் வேன்றி வேலோய்.

(இ - ள்.) தலைமகன் திருமுன் தாழ்ந்து சாற்றுவார் - மன்னனது திருமுன்னே வணங்கிக் கூறுவார்; அடிகேள் - அடிகளே, இந்த அலை புனல் நகரார் - இந்த வருத்தும் வெள்ளத்தையுடைய நகரத்தி

ளுள்ளார், அளந்த வாற்ருன் - அளந்து விட்டபடியே, தத்தம் பங்கு எலாம் - தத்தமக்குரிய பங்காகிய கரை முழுதையும், மலையினும் வலியவாகச் சுமந்தனர் - மலையைக் காட்டிலும் வலியவாக உயர்த்தனர்; சிற்ருண் விலை வளைந்த நரையாட்டி - பிட்டு விற்கும் உடல் வளைந்த மூதியவளாகிய வந்தி என்பாள், தன்பங்கு - தன்பங்கினை, வெற்றி வேலோய் அடைத்திலள் - வெற்றி பொருந்திய வேற்படை ஏந்திய வேந்தனே இன்னமும் அடைத்தாளில்லை.

சுமந்தனர் - உயர்த்தனர் என்னும் பொருட்டு. வளைந்த என்னும் பெயரெச்சம் நரையாட்டி என்பதன் விகுதியோடியையும். (௬௭)

வேளையும் வனப்பி ஞலே வென்றவ ஞெருவன் வந்தி
ஆளென வங்கே வந்து பதிந்தன னரசர் செல்வக்
காளைபோற் களிப்பன் பாடு மாடுவன் காலம் போக்கி
நீளுவன் வேலை யொன்று நெஞ்சினு நினைதல் செய்யான்.

(இ - ள்.) வேளையும் வனப்பினுலே வென்றவன் ஒருவன் - மத வேளையும் தன் அழகினுலே வென்ற ஒருவன், வந்தி ஆள் என அங்கே வந்து பதிந்தனன் - வந்தியின் ஆள் என்று அங்கே வந்து கணக்கிற் பதிவு செய்தனன்; அரசர் செல்வக் காளை போல் களிப்பன் - மன்னர் களின் செல்வமிக்க புதல்வர்களைப் போலக் களி கூர்வன்; பாடும் - பாடுவான்; ஆடுவன் - கூத்தாடுவான்; காலம் போக்கி நீளுவன் - காலத்தை வேலை செய்யாமற் போக்கி நீட்டிப்பன்: வேலை ஒன்றும் நெஞ்சினும் நினைதல் செய்யான் - வேலையை மட்டும் மனத்திலுங் கருதான்.

காளை - காளை போலும் மைந்தர். நீளுவன் - நீட்டிப்பன் என்னும் பொருட்டு. (௬௮)

ஆண்டகை வனப்பை நோக்கி யடிக்கவுங் கில்லே மஞ்சி
ஈண்டினே மேன்று கூற விம்மென வமைச்ச ரோடும்
பாண்டிய னெழுந்து நாம்போய்ப் பங்கடை பட்ட வெல்லாங்
காண்டுமேன் றெறிநீர் வையைக் குடினையங் கரையைச்
[சார்ந்தான்.

(இ - ள்.) ஆண்டகை வனப்பை நோக்கி அஞ்சி அடிக்கவும் இல்லேம் - அவ்வாண்டகையின் பேரழகினைப் பார்த்து அஞ்சி அடித்தலும் ஆற்றேமாய், ஈண்டினேம் என்று கூற - இங்கு வந்தோ மென்று சொல்ல, பாண்டியன் இம்மென அமைச்சரோடும் எழுந்து - பாண்டியன் விரைந்து மந்திரிகளோடும் எழுந்து, நாம் போய்ப் பங்கு அடைபட்ட எல்லாம் காண்டும் என்று - நாம் சென்று அடைபட்டன வாய பங்குகளை யெல்லாம் காண்பேமென்று கூறி, எறிநீர் வையைக் குடினை அம் கரையைச் சார்ந்தான் - அலைவீசும் நீரினையுடைய வையையின் அழகிய கரையினைச் சேர்ந்தான்.

ஆண்டகை : அன்மொழித் தொகை. கில் : ஆற்றலுணர்த்தும் இடைநிலை ; பொதுவே செய்தலென்னும் பொருட்டாயும் வரும். ஈண்டுதல் - அணுகுதல். இம்மென, விரைவுக் குறிப்பு. அடைபட்ட பங்கு எல்லாம் என மாறுக. (௬௯)

எடுத்ததிண் கரைக ளெல்லா மிறைமக னுள்ளத் தோகை
மடுத்தன ஞேக்கிச் செல்வான் வந்திபங் கடைப்பா ரின்றி
அடுத்தநோன் கரையுங் கல்லி யழித்தெழு வெள்ள நோக்கிக்
கடுத்துநின் றெங்குற் ருனிக் கரைசுமந் தடைப்பா னென்ருன்.

(இ - ள்.) எடுத்ததிண் கரைகள் எல்லாம் - உயர்த்தி அடைக்கப்பட்ட திண்ணிய கரைகளனைத்தையும், நோக்கி உள்ளத்து ஓகை மடுத்தனன் செல்வான் இறைமகன் - கண்டு மனமகிழ்ச்சி யுற்றுச் செல்பவனுகிய மன்னன், வந்திபங்கு அடைப்பார் இன்றி - வந்தியின் பங்கு அடைப்பவ ரில்லாமையால், அடுத்த நோன் கரையும் கல்லி அழித்து எழுவெள்ளம் நோக்கி - அதனை அடுத்துள்ள வலிய கரையினையும் கல்லி அழித்து மேன்மே லெழுகின்ற வெள்ளத்தைப் பார்த்து, கடுத்து நின்று - சினந்து நின்று, இக்கரை சுமந்து அடைப்பான் எங்குற்ருன் என்ருன் - இந்தக் கரையினைச் சுமந்து அடைப்பவன் எங்குச் சென்ருனென்று வினவினன்.

நோக்கி ஓகை மடுத்தனன் செல்வானுகிய இறைமகன் எனக. இன்றி - இல்லாமையால். நோன்மை - திண்மை. (௭0)

வள்ளறன் கோபங் கண்ட மாறுகோற் கைய ரஞ்சித்
தள்ளருஞ் சினத்த ராகித் தடக்கைதொட் டீர்த்துப் பற்றி
உள்ளோடு புறங்கீழ் மேலா யுயிர்தோறு மொளித்து நின்ற
கள்வனை யிவன்ருன் வந்தி யாளெனக் காட்டி நின்ருர்.

(இ - ள்.) வள்ளல்தன் கோபம் கண்ட மாறுகோல் கையர் - பாண்டியன் சினத்தைக் கண்ட பிரப்பங் கோலைக் கையிலேந்திய ஏவலாளர், அஞ்சி - பயந்து, தள் அரும் சினத்தராகி - நீக்குதற்கரிய சினமுடையவராய், உள்ளொடு புறம் கீழ் மேலாய் - அகமும் புறமும் கிழும் மேலுமாகி, உயிர்தொறும் ஒளித்து நின்ற கள்வனை - உயிர்கடோறும் கரந்து நின்ற கள்வனுகிய இறைவனை, தடக்கை தொட்டுப் பற்றி ஈர்த்து-பெரிய கையைத் தொட்டுப்பிடித்து இழுத்து, இவன்ருன் வந்தி ஆள் எனக் காட்டி நின்ருர் - இவன்ருன் வந்தி ஆள் என்று காண்பித்து நின்றனர்.

வள்ளல் அரசன் என்னுந் துணையாய் நின்றது. அரசன் சினத்திற்கு அஞ்சி அடிகள்மேற் சினமுடையராயினர். கையால் தொட்டு ஈர்த்து என்றலுமாம்.

"நள்ளுங் கீழுளு மேலுளும் யாவுளும்
எள்ளு மெண்ணெயும் போனின்ற வெந்தையே"

"மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க"

"பண்டே பயில்தொறு மின்றே பயில்தொறும்
ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்"

என்னும் திருவாசகப் பகுதிகள் இங்கே சிந்திக்கற் பாலன. (௫௧)

கண்டனன் கனன்று வேந்தன் கையிற்பொற் பிரம்பு வாங்கி
அண்டமு மளவி லாத வுயிர்களு மாக மாகக்
கொண்டவன் முதுகில் வீசிப் புடைத்தனன் கூடை யோடு
மண்டனை யுடைப்பிற் கொட்டி மறைந்தன னிறைந்த சோதி.

(இ - ள்.) வேந்தன் கண்டனன் கனன்று - அரிமருத்தன பாண்டியன் கண்டு சினந்து, கையில் பொன் பிரம்பு வாங்கி - கையில் பிரம்பினை வாங்கி, அண்டமும் அளவு இலாத உயிர்களும் ஆகமாகக் கொண்டவன் - அண்டங்களையும் அளவிறந்த உயிர்களையும் தனது திருமேனியாகக் கொண்ட இறைவனது, முதுகில் வீசிப் புடைத்தனன் - முதுகின்கண் விசி அடித்தனன்; நிறைந்த சோதி - எங்கும் நிறைந்த ஒளிவடிவினனாகிய அவ்விறைவன், கூடையோடு மண்தனை உடைப்பில் கொட்டி மறைந்தனன் - கூடையுடன் மண்ணை உடைப்பிற் போட்டு விட்டு மறைந்தருளினன்.

அளவிலாத அண்டமும் அளவிலாத உயிர்களும் என்க. இறைவன் உலகுயிர்கள் எல்லாவற்றுள்ளும் நிறைந்து அவற்றை இயக்கு வித்தலின் அவையெல்லாம் இறைவனுக்கு ஆகமாகும்; அங்ஙனம் அவை இறைவற்குத் திருமேனியாதல் பற்றியே எல்லாம் அவனே என நூல்கள் உபசரித்துக் கூறா நிற்கும். (௫௨)

[எழுசீரடி யாசிரிய விருத்தம்]

பாண்டியன் முதுகிற் பட்டது செழியன்
பன்னிய ருடம்பினிற் பட்ட
தாண்டகை யமைச்சர் மேனிமேற் பட்ட
தரசிளங் குமரர்மேற் பட்ட
தீண்டிய கழற்கால் வீரர்மேற் பட்ட
திவுளிமேற் பட்டது பருமம்
பூண்டவெங் கரிமேற் பட்டதெவ் வுயிர்க்கும்
போதன்மேற் பட்டவத் தழும்பு.

(இ - ள்.) எவ்வுயிர்க்கும் போதன்மேல் பட்ட அத் தழும்பு - எவ்வகை உயிர்கட்கும் அறிவுக் கறிவாயுள்ள அவ்விறைவன்மேற் பட்ட அவ்வடித் தழும்பு, பாண்டியன் முதுகில் பட்டது - அரிமருத்தன

பாண்டியன் முதுகிற்பட்டது; செழியன் பன்னியர் உடம்பினில் பட்டது - அப்பாண்டியன் மனைவியர்களின் உடல்மேற்பட்டது; ஆண்டகை அமைச்சர் மேனிமேல் பட்டது - அவ்வாண்டகையின் உடம்பின்மேற் பட்டது; அரசு இளம் குமரர்மேற் பட்டது - இளமை வாய்ந்த அரசகுமாரர்கள் மேற் பட்டது; ஈண்டிய கழல் கால்வீரர் மேல் பட்டது - நெருங்கிய வீரகண்டையை யணிந்த காலையுடைய வீரர்கள் மேற் பட்டது; இவுளி மேல் பட்டது - குதிரைகளின் மேற் பட்டது; பருமம் பூண்ட வெங்கரிமேல் பட்டது - கவசமணிந்த வெவ்விய யானைகளின் மேற் பட்டது. (௫௩)

பரிதியு மதியும் பாம்புமைங் கோளும்
　　பன்னிறம் படைத்தநாண் மீனும்
இருநிலம் புனல்கா லெரிகடுங் கனல்வா
　　னென்னு மைம் பூதமுங் காருஞ்
சுருதியு மாறு சமயவா னவருஞ்
　　சுரர்களு முனிவருந் தோண்டின்
மருவிய முனிவர் கணங்களும் பட்ட
　　மதுரைநா யகனடித் தழும்பு.

(இ - ள்.) மதுரை நாயகன் அடித்தழும்பு - மதுரேசனாகிய சோமசுந்தரக் கடவுளின் மேற்பட்ட அடித்தழும்பினை, பரிதியும் மதியும் பாம்பும் ஐங்கோளும் - சூரியனும் சந்திரனும் இராகு கேதுக்களாகிய பாம்புகளும் இவை ஒழிந்த செவ்வாய் முதலிய ஐந்து கோள்களும், பல்நிறம் படைத்த நாள் மீனும் - பல நிறங்களைப் பெற்ற நட்சத்திரங்களும், இருநிலம் புனல் கால் எரி கடுங்கனல் வான் என்னும் ஐம்பூதமும் - பெரிய நிலனும் நீரும் காற்றும் எரிகின்ற கடிய தீயும் வானுமாகிய ஐந்து பூதங்களும், காரும் - முகிலும், சுருதியும் - வேதங்களும், ஆறுசமய வானவரும் - அறுவகைச் சமயங்கட்கு முதல்வராய தேவர்களும், சுரர்களும் - ஏனை வானோர்களும், முனிவு அரும் தொண்டின் மருவிய முனிவர் கணங்களும் பட்ட - வெறுப்பில்லாத திருத்தொண்டில் மருவிய முனிவர் கூட்டங்களும் பெற்றன.

ஒன்பான் கோட்களில் பரிதியும் மதியும் பாம்புகளும் வேறு கூறப் பட்டமையின் 'ஐங்கோள்' என்றார். ஐங்கோள் - செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி. ஆறு சமய வானவர் - அறுவகைச் சமயங் கட்கும் முத்தித்தானமாயுள்ள தேவர்கள்;

"அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோன்"

எனத் திருவாசகம் கூறுவதுங் காண்க. அஃறிணையும் உயர்திணையும் விரவி 'பட்ட' என அஃறிணை முடிபேற்றன. பட்டது என்பதில்

துவ்விறு தொக்கதாகக் கொண்டு பரிதி முதலியவற்றிற்கு ஏழனுருபு விரித்து முடித்தலுமாம். (௫௪)

வானவர் மனிதர் நரகர்புள் விலங்கு மாசுணஞ் சிதலெறும் பாதி
ஆனபல் சரமு மலைமரங் கோடிபுல் லாதியா மசரமும் பட்ட
ஊனடை கருவும் பட்டன தழும்போ டுதித்தன வுயிரிலோ வியமுந்
தானடி பட்ட சராசர சடங்க டமக்குயி ராயினோன் றழும்பு.

(இ - ள்.) சரஅசர சடங்கள் தமக்கு உயிர் ஆயினோன் தழும்பு இயங்குவனவும் நிற்பனவுமாகிய சேதனங்களுக்கும் அசேதனங்களுக்கும் உயிராயுள்ள இறைவன் அடித்தழும்பினை, வானவர் மனிதர் நரகர் - தேவரும் மக்களும் நரகரும், புள் விலங்கு மாசுணம் சிதல் எறும்பு ஆதி ஆன - பறவையும் விலங்கும் பாம்பும் செல்லும் எறும்பும் முதலாகிய, பல்சரமும் - இயங்கு திணை பலவும், மலைமரம் கொடி புல் ஆதியாம் அசரமும் பட்ட - மலையும் மரமும் கொடியும் புல்லும் முதலாகிய நிலைத்திணைகளும் பட்டன; ஊன் அடைகருவும் பட்டன தழும்போடு உதித்தன - கருப்பையுட்டங்கிய கருக்களும் அடிபட்டுத் தழும்புடன் தோன்றின; உயிர் இல் ஓவியமும் தான் அடிபட்ட - உயிரில்லாத சித்திரங்களும் அடிபட்டன.

சித்தும் அசித்துமாகிய பிரபஞ்சமெல்லாம் இறைவன் வியாபித்து அவற்றிற்கு உயிராய் நிற்றலின் அவனடித் தழும்பை வானவர் முதல் புல் இறுதியாகவுள்ள உயிர்ப்பொருள்களும், மலை ஓவியம் முதலிய உயிரில் பொருள்களும் பட்டன. உயிராயினோன் தழும்பு சரமும் அசரமும் பட்ட, கருவும் தழும்போடுதித்தன, ஓவியமும் அடிபட்ட என முடிக்க. பட்ட, இரண்டும் முற்று. பட்டன, முற்றெச்சம். தான் : அசை. (௫௫)

துண்ணென மாயோன் விழித்தனன் கமலச்
சோதியும் யாதென வியந்தான்
விண்ணவர் பெருமான் வெருவினன் வானோர்
வேறுளார் மெய்பனிப் படைந்தார்
வண்ணயா ழியக்கர் சித்தர்சா ரணர்தம்
வடுப்படா வுடம்பினிற் பட்ட
புண்ணையா தென்று தத்தமிற் காட்டி
மயங்கினர் புகுந்தவா றறியார்.

(இ - ள்.) மாயோன் துண்ணென விழித்தான் - திருமால் திடுக்கிட்டு விழித்தனன்; கமலச்சோதியும் யாது என வியந்தான் - தாமரை மலரிலிருக்கும் பிரமனும் இது யாதென்று வியந்தனன்; விண்ணவர் பெருமான் வெருவினன் - தேவேந்திரன் பயந்தான்; வானோர் வேறு உளார் மெய்பனிப்பு அடைந்தார் - மற்றைத் தேவர்களும் உடல் நடுங்கினர்; வண்ணம் யாழ் இயக்கர் சித்தர் சாரணர் - இலக்கணம்

அமைந்த யாழினையுடைய இயக்கர்களும் சித்தர்களும் சாரணர்களும், தம் வடுப்படா உடம்பினில் பட்ட புண்ணை - தங்கள் தழும்பு படாத உடல்களிற் பட்ட புண்ணினை, யாது என்று தத்தமில் காட்டி - இது யாது என்று தங்கள் தங்களுள்ளே காண்பித்து, புகுந்தவாறு அறியார் மயங்கினர் - நிகழ்ந்த தன்மையை அறியாதவர்களாய் மயங்கினர்கள்.

துண்ணென: குறிப்பு. மாயோன் துயில்புரிவோனாகலின் 'விழித்தனன்' என்றார். வேறுளாராகிய வானோர் என்க. வண்ணம் - இலக்கணம்; பெருவண்ணம் முதலிய பாடற்றொழிலமைந்த என்றுமாம். இதனால் மாயோன் முதலிய கடவுளர்க்கும், கணங்கட்கும் இறைவன் உயிராதல் பெறப்பட்டது. (௩௬)

ஏகநா யகனெவ் வுயிர்களுந் தானே
　　யென்பது மன்பினுக் கெளியன்
ஆகிய திறனுங் காட்டுவா னடிபட்
　　டங்கொரு கூடைமண் கோட்டி
வேகநீர் சுருங்கக் கரையினை யுயர்த்தி
　　மிகுத்துடன் வேலைநீத் தொளித்துப்
போகிய வாறு கண்டுகோற் கையர்
　　போய்நரை யாட்டியைத் தொடர்ந்தார்.

(இ - ள்.) ஏகநாயகன் - தனி முதல்வனாகிய இறைவன், எவ்வுயிர்களும் தானே என்பதும் - எல்லா வுயிர்களும் தானே என்பதனையும், அன்பினுக்கு எளியன் ஆகிய திறனும் - தான் அன்பிற்கு எளியனாகிய தன்மையையும், காட்டுவான்-அனைவருக்குங் காட்டும் பொருட்டு, அடிபட்டு - பிரம்படி பட்டு, அங்கு ஒரு கூடை மண் கொட்டி - அவ்வுடைப்பில் ஒரு கூடை மண்ணைக் கொட்டி, நீர் வேகம் சுருங்கக் கரையினை மிகுத்து உயர்த்தி - நீரின் விரைவு குறையுமாறு கரையை மிகுத்து உயர்த்தி, உடன் வேலை நீத்து ஒளித்துப்போகியவாறு கண்டு - உடனே வேலை செய்தலை நீத்து மறைந்துபோன தன்மையைக் கண்டு, கோல் கையர் போய் நரையாட்டியைத் தொடர்ந்தார் - கோலை ஏந்திய கையினையுடைய ஏவல் கொள்ளும் வினையாளர் சென்று முதியவளாகிய வந்தியைத் தொடர்ந்தனர்.

எல்லா வுலகங்களையும் படைத்துக் காத்தழிக்கும் பரமன் ஒரு கூலியாளாய் வந்து மண் சுமந்து அடியும் பட்டமையால் 'அன்பினுக்கு எளியன்' என்பது காட்டினார்; அவ்வடி எல்லா உயிர்களின் மீதும் பட்டமையால் 'எவ்வுயிர்களும் தானே' என்பது காட்டினார் என்க. எவ்வுயிர்க்கும் உயிரானவன் தானே என்பார் 'எவ்வுயிர்களுந் தானே, என்றார். காட்டுவான்: வினையெச்சம். (௩௭)

வன்புதாழ் மனத்தோர் வலிசெய வின்ன
　　மன்னனுன் மறக்கமுண் டேயோ
முன்புபோ கியவா ளேன்செய்தா னென்னுய்
　　முடியுமோ வினியெனத் திரங்கி

என்புபோல் வெளுத்த குழலினள் கூட
லிறைவனை நோக்கிநின் றிரங்க
அன்புதே னாக வருத்திய சிற்றா
ணமுதுசெய் தருளினா ரருளால்.

(இ - ள்.) வன்புதாழ் மனத்தோர் வலிசெய - வன்மை தங்கிய மனத்தினையுடைய ஒறுப்பாளர் துன்பஞ் செய்ய, திரங்கி என்புபோல் வெளுத்த குழலினள் - திரைந்து என்பைப் போல் வெளுத்த கூந்தலையுடைய அவ்வந்தி, இன்னம் மன்னனால் மறுக்கம் உண்டேயோ - இன்னமும் பாண்டியனால் துன்பமுண்டோ, முன்பு போகிய ஆள் என் செய்தான் - முன்னர் எனக்காக வேலை செய்யப்போன ஆள் என்ன செய்தானோ, இனி என்னாய் முடியுமோ என - இனி யாதாய் முடியுமோ வென்று கருதி, கூடல் இறைவனை நோக்கி நின்று இரங்க - நான்மாடக் கூடலின் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளைநோக்கி நின்று வருந்த, அன்புதேனாக அருத்திய சிற்றாண் - அன்பையே தேனாக அளைந்து ஊட்டிய பிட்டினை, அமுது செய்தருளினார் அருளால் - அமுது செய் தருளிய அவ்விறைவரது திருவருளினால்.

வன்பு - வன்கண்மை, தாழ்த்தல் - தங்குதல். தோள் திரங்கிக் குழல் வெளுத்தவள் என்க. குளகம். (ருஅ)

கண்ணுத னந்தி கணத்தவர் விசும்பிற்
கதிர்விடு திப்பிய விமானம்
மண்ணிடை யிழிச்சி யன்னைவா வென்று
வல்லைவைத் தமரர் பூ மழையும்
பண்ணிறை கீத வோதையும் வேதப்
பனுவலும் துந்துபி யைந்தும்
விண்ணிடை நிமிரச் சிவனரு ளடைந்தோர்
மேவிய சிவபுரத் துய்த்தார்.

(இ - ள்.) கண்ணுதல் நந்தி கணத்தவர் - சிவகணத்தவர், கதிர் விடு திப்பிய விமானம் - ஒளி விசும் சிறந்த விமானத்தினை, விசும்பின் மண்ணிடை இழிச்சி - வானினின்றும் புவியின்கண் இறக்கி, அன்னைவா என்று வல்லை வைத்து - தாயே வருகவென்று விரைந்து அதில் ஏற்றி, அமரர் பூ மழையும் - தேவர்களின் மலர் மழையும், பண் நிறை கீத ஓதையும் - பண்ணிறைந்த இசையின் ஒலியும், வேதப்பனுவலும் - வேதமந்திரங்களின் ஒலியும், துந்துபி ஐந்தும் - பஞ்சதூரியங்களின் முழக்கமும், விண்ணிடை நிமிர - வானின்கண் ஓங்க, சிவன் அருள் அடைந்தோர் மேவிய சிவபுரத்து உய்த்தார் - சிவபெருமான் திருவருளைப் பெற்றோர்கள் சென்றடைந்த சிவலோகத்தின்கண் செலுத்தினர்.

கண்ணுதலின் நந்திகணத்தவர். திப்பியம் - ஒளி, தெய்வத்தன்மை. விசும்பின் விமானம் எனக்கூட்டி வானவூர்தி என்றுரைத்தலும் பொருந்தும். அன்னே, அண்மைவிளி. (௫௯)

மன்றுடை யானோர் கூடைமண் கோட்டி
மறைந்தது மடைகரை நீண்ட
குன்றென வுயர்ந்த தன்மையுந் தம்மேற்
கோலடி பட்டது நோக்கி
என்றன்மேற் பட்ட தென்றன்மேற் பட்ட
திதுவென வதுவென வமைச்சர்
நின்றவ ருணர்த்து நிகழ்ச்சியும் பிறர்பா
னிகழ்ச்சியு நோக்கியந் நிருபன்.

(இ - ள்.) மன்று உடையான் ஓர் கூடைமண் கொட்டி மறைந்ததும் - வெள்ளியம்பலத்தையுடைய சோமசுந்தரக் கடவுள் ஒரு கூடை மண்ணைக் கொட்டி மறைந்தருளியதையும், அடை கரை நீண்ட குன்றென உயர்ந்த தன்மையும் - அடைக்கலுற்ற கரையானது நீண்ட மலைபோல் உயர்ந்த தன்மையும், தம்மேல் கோல் அடிபட்டது நோக்கி - தங்கள்மேல் பிரம்படி பட்டதைப் பார்த்து, அமைச்சர் நின்றவர் - அங்கு நின்ற அமைச்சர்கள், இது என்மேல் பட்டதுஎன அது என் மேல் பட்டது என - இத்தழும்பு என்மேற்பட்டது அத்தழும்பு என் மேற்பட்டது என்று சுட்டிக் காட்டி, உணர்த்தும் நிகழ்ச்சியும் - ஒருவர்க்கொருவர் தெரிவிக்கின்ற நிகழ்ச்சியையும், பிறர்பால் நிகழ்ச்சியும் - பிறர்களிடத்து நிகழும் நிகழ்ச்சியையும், அந்நிருபன் நோக்கி - அவ் வரிமருத்தன பாண்டியன் கண்டு.

மன்றுடையான் என்றது கவியின் கருத்து. அடை என்பது கரைக்கு அடையாக வந்திருப்பினும் கரை அடைபட்டதும் என்பது கருத்தாகக் கொள்க. அரசன் தன்மீது கோலடி பட்டதும் நோக்கி நின்றவருணர்த்து நிகழ்ச்சியும் பிறர்பால் நிகழ்ச்சியும் நோக்கி என்றுரைத்தலுமாம். தன் இரண்டும் அசை. (௬௦)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

உள்ளத்தா சங்கை பூண்டா னாகமண் ணுடைப்பிற் கோட்டிக்
கள்ளத்தா ராகிப் போனார் ககனத்தா ராகிச் சேனை
வெள்ளத்தார் பிறருங் கேட்ப மீனவற் குவகை வெள்ளங்
கொள்ளத்தா மழைத்தா காய வாணியாற் கூற லுற்றார்.

(இ - ள்.) உள்ளத்து ஆசங்கை பூண்டானாக - மனத்தின்கண் ஐயுறவு கொண்டானாக; மண் உடைப்பில் கொட்டி - மண்ணை உடைப்பினிற் போட்டு, கள்ளத்தாராகிப் போனார் - மறைந்து சென்

றருளிய அவ்விறைவர், ககனத்தாராகி - வானிடத்தாராகி, சேனை வெள்ளத்தார் பிறரும் கேட்ப - சேனைப் பெருக்கினரும் பிறரும் கேட்குமாறு, மீனவற்கு உவகை வெள்ளம்கொள்ள அழைத்து - பாண்டியனுக்கு மகிழ்ச்சிப் பெருக்கு உண்டாக அவனை விளித்து, ஆகாயவாணியால் கூறலுற்றார் - அசரீரியாற் சொல்லத் தொடங்கினர்.

மண்கொட்டி மறைந்ததும், ஒரு கூடை மண்ணால் கரை அடைபட்டு மலைபோல் உயர்ந்ததும், யாவர் மேலும் பிரம்படி பட்டதும் ஆசங்கைக்குக் காரணமாயின. பூண்டான் என்னும் முற்றினை ஆக என்னும் இடைச்சொல் அடுத்து எச்சமாக்கிற்று. போனார்: வினையாலணையும் பெயர். வாணி - வாக்கு. (௬௧)

மறத்தாறு கடந்த செங்கோல் வழுதிநின் பொருள்க ளெல்லாம்
அறத்தாற்றி னீட்டப் பட்ட வனையவை புனித மான
திறத்தாலே நமக்கு நம்மைச் சேர்ந்தவர் தமக்கு மார்வம்
உறத்தாவில் வாத வூர னுதவினா னாதலாலே.

(இ - ள்.) மறத்து ஆறு கடந்த செங்கோல் வழுதி - மறநெறியைக் கடந்த செங்கோலையுடைய பாண்டியனே, நின் பொருள்கள் எல்லாம் - நின்னுடைய பொருள்களனைத்தும், அறத்து ஆற்றில் ஈட்டப்பட்ட - அறநெறியிலே தேடப்பட்டன; அனையவை புனிதமான திறத்தாலே - அப்பொருள்கள் தூயவாயுள்ள தன்மையினாலே, நமக்கும் நம்மைச் சேர்ந்தவர் தமக்கும் - நமக்கும் நம்மையடைந்த அடியார்கட்கும், ஆர்வம் உற - அன்பு பொருந்த, தாவு இல் வாதவூரன் உதவினான் - குற்றமில்லாத வாதவூரன் கொடுத்தனன்; ஆதலால் - அதனால்.

அறநெறியால் ஈட்டப்பட்டன, அங்ஙனம் ஈட்டப்பட்டமையின் அவை புனிதமான திறத்தால் என்க. ஆதலால் - அங்ஙனம் உதவினமை காரணமாக. (௬௨)

அனையனை மறுக்கஞ் செய்தா யரும்பிணப் புலவுத் தீவாய்
வனநரித் திரளை யீட்டி வாம்பரி யாக்கித் தந்தேங்
கனையிருட் கங்குற் போதிற் கழிந்தன பின்னுந் தண்ட
வினையர்பால் விடுத்துத் துன்பம் விளைத்தனை யதுபோ றுதேம்.

(இ - ள்.) அனையனை மறுக்கம் செய்தாய் - அவ்வாதவூரனைத் துன்பஞ் செய்தனை; அரும்பிணப் புலவுத்தீவாய் வனநரித்திரளை ஈட்டி - அணுகுதற்கரிய பிணங்களின் புலாலையுடைய கொடிய வாயினையுடைய வனத்திலுள்ள நரிகளைத் தொகுத்து, வாம்பரி ஆக்கித்தந்தேம் - தாவுகின்ற குதிரைகளாக்கிக் கொடுத்தேம்; கனை இருள் கங்குற்போதில் கழிந்தன - செறிந்த இருளையுடைய இராப்பொழுதில் (அவையாவும் நரிகளாகி) ஓடின; பின்னும் - மீளவும், தண்ட வினையர்பால் விடுத்துத் துன்பம் விளைத்தனை - ஒறுப்பாளரிடம் விடுத்து

அவரால் துன்பம் விளைவித்தனை ; அது பொறுதேம் - அதனைப் பொறுக்கமாட்டேமாகி,

மறுக்கஞ் செய்தாய் ஆதலின் ஆக்கித் தந்தேம் என்க. அவை கழிந்தன எனச் சுட்டுப்பெயர் வருவித்துரைக்க. (கூ௩)

வருபுனல் பெருகப் பார்த்தேம் வந்திகைப் பிட்டு வாங்கிப்
பருகிவந் தாளாய் மாறு பட்டன மண்போ கட்டுப்
பொருகரை யுயரச் செய்து போகியவ் வன்னை போல்வாள்
பெருகிய விடும்பை தீர்த்தேம் பேருல கடையச் செய்தேம்.

(இ - ள்.) வருபுனல் பெருகப் பார்த்தேம் - வையையாற்றில் வரும் நீர் பெருகுமாறு செய்தேம்; வந்திகைப் பிட்டுவாங்கிப் பருகி வந்து ஆளாய் - வந்தியின் கையிற் பிட்டினை வாங்கி அருந்திக் கொண்டே வந்து கூலியாளாகி, மாறுபட்டனம் – பிரம்படியும் பட்டேம் ; மண் போகட்டுப் பொருகரை உயரச் செய்து - ஒரு கூடை மண்ணைப் போட்டு அலைகள் மோதப்பெறும் கரையினை உயருமாறு செய்து, போகி - மறைந்து சென்று, அவ்வன்னை போல்வாள் - அத் தாய் போன்றவளின், பெருகிய இடும்பை தீர்த்து - மிக்க துன்பத்தினை நீக்கி, எம்பேர் உலகு அடையச் செய்தேம் - எமது பெரிய உலகினை அடையுமாறு செய்தேம்.

மாறு - பிரம்படி : ஆகுபெயர். போகட்டு என்பது போட்டு என மருவி வழங்குகிறது. இடும்பை - பிறவித்துன்பம். (கூ௪)

இத்தனை யெல்லாஞ் செய்த திவன்பொருட் டிந்த வேத
வித்தகன் றன்மை யொன்று மறிந்திலை வேட்கை யெம்பால்
வைத்துனக் கிம்மை யோடு மறுமையுந் தேடித் தந்த
உத்தமன் றொடைசந் தாதிப் புறப்பற்று மொழிந்த நீரான்.

(இ - ள்.) இத்தனை எல்லாம் செய்தது இவன் பொருட்டு - இவ்வளவெல்லாம் செய்தது இவ்வாதவூரன் பொருட்டே ; இந்த வேத வித்தகன் தன்மை - இந்த மறை நூலுணர்ந்த சதுரப்பாடுடையவன் தன்மையை, ஒன்றும் அறிந்திலை - சிறிதும் நீ அறிந்தாயில்லை, எம்பால் வேட்கை வைத்து - இவன் எம்மிடம் விருப்பம் வைத்ததால், உனக்கு இம்மையோடு மறுமையும் தேடித்தந்த உத்தமன் - உனக்கு இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் தேடிக்கொடுத்த உத்தமன் ; தொடை சந்து ஆதி புறப்பற்றும் ஒழிந்த நீரான் - மாலையும் சந்தனமும் முதலாகிய புறப்பற்றினையும் (அகப்பற்றினையும்) துறந்த தன்மையை யுடையவன்.

செய்தது : தொழிற்பெயர். புறப்பற்றும் என்னும் உம்மை எச்சப் பொருட்டு. (கூரு)

நிறையுடை யிவனை யிச்சை வழியினு னிறுத்தி யான்ற
மறைவழி நின்று நீதி மன்னவர்க் களந்த வாழ்நாள்
குறைபடா தானுச் செல்வ வாரியுட் குளித்து வாழ்கென்
றிறையவன் மொழிந்த மாற்ற மிருசெவி நிரம்பத்* தென்னன்.

(இ - ள்.) நிறைஉடை இவனை - மனத்தை ஒருவழி நிறுத்தும் இவ்வாதவூரனை, இச்சை வழியினால் நிறுத்தி - அவன் விருப்பத்தின் படியே செலுத்தி, ஆன்ற மறைவழி நின்று - நீ பெருமை நிறைந்த மறையின் வழியே நின்று, நீதி மன்னவர்க்கு அளந்த வாழ்நாள் - நீதியோடு பொருந்திய வேந்தர்களுக்கு வரையறுத்த ஆயுள் நாள், குறைபடாது - குறைவு படாமல், ஆனுச்செல்வ வாரியுள் குளித்து வாழ்க என்று - நீங்காத செல்வப்பெருக்கிலே திளைத்து வாழக்கடவை என்று, இறையவன் மொழிந்த மாற்றம் - இறைவன் கூறியருளிய மொழி, இருசெவி நிரம்ப - இரண்டு செவிகளிலும் நிரம்ப, தென்னன் - பாண்டியன்.

வாழ்கென்று : அகரம் தொகுத்தல். கூறலுற்ற இறையவன் மொழிந்த மாற்றம் என்க. (௩௬)

அச்சமுற் றுவகை யீர்ப்ப வதிசய வெள்ளத் தாழ்ந்து
போச்சமி லன்ப ரெங்குற் றாரெனப் புகுந்து தேடி
நச்சர வசைத்த கூட னாயகன் கோயி னண்ணி
இச்சையி† லிருக்கின் றாரைக் கண்டுபோ யிறைஞ்சி வீழ்ந்தான்.

(இ - ள்.) அச்சம் உற்று உவகை யீர்ப்ப - அஞ்சுதலைப் பொருந்தி மகிழ்ச்சியானது இழுக்க, அதிசய வெள்ளத்து ஆழ்ந்து - வியப்பாகிய வெள்ளத்துள் அழுந்தி, பொச்சம் இல் அன்பர் எங்கு உற்றார் என - பொய்யில்லாத (மெய்) அன்பினையுடைய அடிகள் எங்குச் சென்றாரென்று, புகுந்து தேடிப்போய் - பலவிடங்களிலும் தானே புகுந்து தேடிச் சென்று, நச்சு அரவு அசைத்த கூடல் நாயகன் கோயில் நண்ணி - நஞ்சினையுடைய பாம்பினைக் கச்சாகக் கட்டிய நான் மாடக் கூடலில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலை அடைந்து, இச்சையில் இருக்கின்றாரைக்கண்டு - தமது விருப்பின் படியே சிவயோகத்திலிருக்கும் வாதவூரடிகளைப் பார்த்து, இறைஞ்சி வீழ்ந்தான் - வீழ்ந்து வணங்கினான்.

அச்சமும், உவகையும், அதிசயமும் ஒன்றினொன்று மிக என்றபடி. நஞ்சு நச்சு என வலித்தது. நண்ணி இருக்கின்றாரை எனவும், நண்ணிக் கண்டு எனவும் இயையும். இச்சையில் - விரும்பியவாறு. (௩௭)

(பா - ம்.) *நிரப்ப. †விச்சையில்.

தொல்லைநீ ருலக மாண்டு சுடுதுயர் நரகத் தாழ
வல்லவென் னறிவுக் கேற்ற வண்ணமே செய்தே னீரென்
எல்லைதீர் தவப்பே ருய்வந் திகபர வேது வாகி
அல்லல்வெம் பிறவி நோய்க்கு மருமருந் தானீ ரையா.

(இ - ள்.) ஐயா - ஐயனே, தொல்லை நீர் உலகம் ஆண்டு - பழைய கடல் சூழ்ந்த இந்நிலவுலகினை ஆண்டு, சுடுதுயர் நரகத்து ஆழவல்ல - வருத்தும் துன்பத்தையுடைய நிரயத்தின்கண் அழுந்துதற்கு வல்ல, என் அறிவுக்கு ஏற்றவண்ணமே செய்தேன் - எனது புல்லறிவுக்குப் பொருந்தியபடியே உமக்குத் தீங்கு செய்தேன்; நீர் என் எல்லை தீர்தவப் பேறு ஆய் - நீவிர் எனது அளவிறந்த தவப்பயனாகி, வந்து - அமைச்சராக வந்து, இகபர ஏதுவாகி - இம்மைப் பயனுக்கும் மறுமைப் பயனுக்கும் காரணமாய், அல்லல் வெம்பிறவி நோய்க்கும் - துன்பமய மாகிய கொடிய பிறவிப் பிணிக்கும், அருமருந்து ஆனீர் - அரிய மருந்து ஆகாநின்றீர்.

உலக மாளுதல் நரகத் துன்பத்திற்கு ஏதுவாமென அதனை வெறுத்துக் கூறியவாறு. நோய்க்கு அருமருந்தும் ஆனீர் என உம்மை பிரித்துக் கூட்டுதல் சிறப்பு. ஆனீர் ஐயா: பன்மையொருமை மயக்கம். (சுஅ)

செறுத்துநா னும்மை யெண்ணு திழைத்தவித் தீங்கு தன்னைப்
பொறுத்துநீர் முன்போ னுங்கள் புவியெலாங் காவல் பூண்டு
மறுத்துடைத் தாள்வ தாகென் றிரந்தனன் மண்ணி லாசை
வெறுத்தவர், நகையுட் டோன்ற வேந்தனை நோக்கிச் சொல்வார்.

(இ - ள்.) நான் உம்மை எண்ணுது - அடியேன் உமது உயர்வினைச் சிறிதுங் கருதாது, செறுத்து இழைத்த இத்தீங்கு தன்னைப் பொறுத்து - சினந்து செய்த இத்தீமையைப் பொறுத்தருளி, நீர் முன்போல் நுங்கள் புவிஎலாம் காவல் பூண்டு - நீவிர் முன் போலவே நுமது புவி அனைத்தையும் காத்தலை மேற்கொண்டு, மறு துடைத்து ஆள்வது ஆக என்று இரந்தனன் - குற்றத்தைப் போக்கி ஆளக்கடவீராக என்று இரந்து வேண்டினன்; மண்ணில் ஆசை வெறுத்தவர் - மண்ணின்கண் உள்ள விருப்பினை நீக்கிய வாதவூரடிகள், நகை உள்தோன்ற - உள்ளே நகை தோன்ற, வேந்தனை நோக்கிச் சொல்வார் - அரசனை நோக்கிக் கூறாயினர்.

நும்மை யெனப் பிரித்தலுமாம். இறைவனது திருவருளுக்குரியாரே புவி முழுதுக்கும் உரியராவர் என்னுங் கருத்தால் 'நுங்கள் புவியெலாங் காவல் பூண்டு' என அரசன் கூறினன். ஆள்வதாக - ஆள்க. ஆள்வது என்னுந் தொழிற்பெயருடன் ஆக என்பது சேர்ந்து வியங் கோளாயிற்று. ஆகென்று, அகரந் தொகுத்தல். மண்ணிலாசை வெறுத்தவர் என்பது அவர் புவியாளார் என்பது தோன்ற நின்றமையின் கருத்துடன் கூடிய விசேடியமாகும். (சுகூ)

பாய்திரை புரளு முந்நீர்ப் படுகட லுலகுக் கெல்லாம்
ஆயிரஞ் செங்க ணன்போ லரசுவீற் றிருப்பீ* ருங்கள்
நாயக னருளிச் செய்த வண்ணமே நயந்து செய்வீர்
தூயவ ரன்றே நுங்கள் சூழல்சேர்ந் தொழுக வல்லார்.

(இ - ள்.) பாய் திரைபுரளும் முந்நீர்படு கடல் உலகுக்கு எல்லாம் - பரந்த அலைகள் புரளுகின்ற மூன்று நீர்களையுடைய ஆழமாகிய கடல்சூழ்ந்த உலகமனைத்திற்கும், ஆயிரம் செங்கணன்போல் அரசு விற்றிருப்பீர் - சிவந்த ஆயிரங் கண்களையுடைய இந்திரன்போல் தனியரசாக வீற்றிருப்பீர்; உங்கள் நாயகன் அருளிச் செய்த வண்ணமே - உங்கள் இறைவனாகிய சோமசுந்தரக் கடவுள் கட்டளையிட்டருளியபடியே, நயந்து செய்வீர் - விரும்பிச் செய்வீர்; நுங்கள் சூழல் சேர்ந்து ஒழுகவல்லார் - உங்கள் இடத்தைச் சார்ந்து நடக்க வல்லவர், தூயவர் அன்றே - தூய்மையுடையாரல்லவா?

படுகடல் - ஒலிக்குங் கடலுமாம். உலகுக் கெல்லாம் அரசாக வீற்றிருப்பீர் என்க. சோமசுந்தரக் கடவுள் தென்னர் குலமுழுதாளும் பெருமானும் தென்னவனும் இருத்தலின் 'உங்கள் நாயகன் என்றார்;

"பாரின்ப வெள்ளங் கொளப்பரி மேற்கொண்ட பாண்டியனார்"

"பாண்டிய னாரருள் செய்கின்ற முத்திப் பரிசிதுவே"

"பரவிய வன்பரை யென்புருக் கும்பரம் பாண்டியனார்"

என்றிங்ஙனம் இறைவனைப் பாண்டி வேந்தாகவே அடிகள் அருளிச் செய்தலுங் காண்க. (எ0)

உம்மைநா னடுத்த நீரா லுலகியல் வேத நீதி
செம்மையா லிரண்டு நன்றாத் தெளிந்தது தெளிந்த நீரான்
மெய்ம்மையாஞ் சித்த சுத்தி விளைந்தது விளைந்த நீராற்
பொய்ம்மைவா னவரி னீந்திப் போந்தது சிவன்பாற் பத்தி.

(இ - ள்.) உம்மை நான் அடுத்த நீரால் - நான் உம்மை அடைந்த தன்மையால், உலகியல் வேதநீதி இரண்டும் - உலக நடையும் வேத வொழுக்கமுமாகிய இரண்டும், செம்மையால் நன்றாத் தெளிந்தது - முறைப்படி நன்கு தெளியப் பெற்றது; தெளிந்த நீரால் - அங்ஙனம் தெளிந்தபடியால், மெய்ம்மையாம் சித்தசுத்தி விளைந்தது - உண்மையாகிய மனத்தூய்மை உண்டாயது; விளைந்த நீரால் - அங்ஙனம் உண்டான படியால், பொய்ம்மை வானவரின் நீந்தி - அழிகின்ற தேவர்களினின்றுங் கடந்து, சிவன்பால் பத்திபோந்தது - சிவபெருமானிடத்து அன்பு விளைந்தது.

லௌகிகம் வைதிகம் இரண்டும் என்க. இரண்டும் தெளிந்தது, பன்மையிலொருமை; இரண்டனையும் உள்ளம் தெளிந்தது என்றுமாம்.

(பா - ம்.) *அரசு செய்திருப்பீர்.

சில்லாண்டிற் சிதையும் சிலதேவர் சிறு நெறியைக் கடந்து பல்லாண் டென்னும் பதங்கடந்த இறைவன் பால் அன்புவிளைந்ததென்றாரென்க;

"அத்தேவர் தேவ ரவர்தேவ ரென்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேது மில்லாதென் பற்றற நான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ"

எனவும்,

"அவமாய தேவ ரவகதியி லழுந்தாமே
பவமாயங் காத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி"

எனவும் அடிகள் திருவாசகத்தில் அருளிச் செய்தலுங் காண்க. (எக)

வந்தவிப் பத்தி யாலே மாயையின் விருத்தி யான
பந்தமாம் பவஞ்ச வாழ்க்கை விளைவினுட் பட்ட துன்பம்
வெந்தது கருணை யாகி மெய்யுணர் வின்பந் தன்னைத்
தந்தது பாதஞ் சூட்டித் தன்மய மாக்கிற் றன்றே.

(இ - ள்.) வந்த இப் பத்தியாலே-இங்ஙனம் விளைந்த இவ்வன்பினாலே, மாயையின் விருத்தியான-மாயையின் விருத்தியாகிய, பந்தமாம் பவஞ்ச வாழ்க்கை விளைவினுள் பட்ட துன்பம் வெந்தது - கட்டாகிய உலகவாழ்க்கை நிகழ்ச்சியில் உண்டாகிய துன்பம் வெந்து நீறாகியது; மெய் உணர்வு இன்பம் கருணை ஆகி - சச்சிதானந்தப் பரம்பொருள் அருள்வடி வெடுத்துவந்து, தன்னைத் தந்தது - தன்னை எனக்குக் கொடுத்து, பாதம் சூட்டி-தனது திருவடியை எனது முடியிற் சூட்டி, தன்மயம் ஆக்கிற்று - தன்மய மாக்கியது.

விருத்தி - படம் குடிலானாற் போல்வது; ஈண்டுப் பரிணாமமும் கொள்க. பிரபஞ்சம் என்பது பவஞ்சம் என்றாயிற்று. பிரபஞ்சம் மாயேய மலமாதலின் 'பந்தமாம் பவஞ்சம்' என்றார். மெய் உணர்வு இன்பம் - சத்து சித்து ஆனந்தம்; சச்சிதானந்தம். தன்மயமாக்கல் - சிவமாக்கல்;

"சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே"

என்னும் திருவாசகமும் காண்க. (எ௨)

சச்சிதா னந்த மாமத் தனிப்பர சிவனே தன்ன
திச்சையா லகில மெல்லாம் படைத்தளித் தீறு செய்யும்
விச்சைவா னவரைத் தந்த மேலவன் பிறவித் துன்பத்
தச்சமுற் றடைந்தோர்க் கான வின்பவீ டளிக்கு மன்னோன்.

(இ - ள்.) சச்சிதானந்தமாம் அத்தனிப் பரசிவனே - சச்சிதானந்த மாகிய அந்த ஒப்பற்ற பரசிவனே, தன்னது இசையால் - தனது இச்சையினாலே, அகிலம் எல்லாம் படைத்து அளித்து ஈறுசெய்யும் விச்சை வானவரை - உலகமனைத்தையும் ஆக்கி அளித்து அழிக்கும் தொழிலையுடைய அயனும் அரியும் அரனுமாகிய தேவர்களை, தந்த மேலவன் - உண்டாக்கிய மேலோன்; பிறவித்துன்பத்து அச்சமுற்று அடைந்தோர்க்கு - பிறவித்துன்பத்திற்கு அஞ்சி வந்தவர்களுக்கு, ஆறு இன்பவீடு அளிக்கும் அன்னோன் - நீங்காத இன்பத்தையுடைய வீடு பேற்றினை அளிக்கின்ற அவ்விறைவன்.

தன்னது, னகரம் விரித்தல். விச்சை-ஞானம்; ஈண்டுத் தொழில். இச்சையால் தந்த மேலவன் என்க. துன்பத்து என்பதனோடு இரண்டனுருபேனும் ஐந்தனுருபேனும் விரித்துரைத்தலுமாம்;

"அச்சக் கிளவிக் கைந்து மிரண்டும்
எச்ச மிலவே பொருள்வயி னான"

என்பது தொல்காப்பியம். (எ௩)

மந்தரங் கயிலை மேருப் பருப்பதம் வார ணாசி
இந்தநல் லிடங்க டோறு மிகபர போகம் யார்க்குந்
தந்தருள் செய்தெம் போல்வார் தம்மனம் புறம்போ காமற்
சிந்தனை திருத்தி ஞானத் திருவுரு வாகி மன்னும்.

(இ - ள்.) மந்தரம் கயிலை மேரு பருப்பதம் வாரணாசி-மந்தரமலை யும் கயிலைமலையும் மேருமலையும் ஸ்ரீபருப்பதமும், காசியுமாகிய, இந்த நல் இடங்கள் தோறும் - இந்த நல்ல இடங்கடோறும், ஞானத் திரு உருவாகி - அழகிய ஞானவடிவினை யுடையனாகி, யார்க்கும் இகபர போகம் தந்தருள்செய்து - அனைவர்க்கும் இம்மை மறுமையின்பங்களை அளித்தருளி, எம்போல்வார் தம்மனம் புறம் போகாமல் - எம்மனோர் மனம் புறத்தே செல்லாமல், சிந்தனை திருத்தி மன்னும் - உள்ளத்தைத் திருத்தி வீற்றிருப்பான்.

புறம் போகாமல் - விடயங்களிற் செல்லாமல். அன்னோன் மன்னும் என்க. (எ௪)

ஒப்பவர் மிக்கோர் வேறற் றொருவனா யெங்குந் தங்கும்
அப்பரஞ் சுடரே யிந்த வாலவா யுறையுஞ் சோதி
கைப்படு கனிபோன் மேனாட் கண்ணுவ னாதி யோர்க்கு
மெய்ப்பொருள் விளங்கித் தோன்ற வேதத்தை விருத்தி செய்தான்.

(இ - ள்.) ஒப்பவர் மிக்கோர் வேறு அற்று ஒருவனாய் - ஒப்பாரும் மிக்காரும் வேறு யாரும் இன்றித் தனி முதல்வனாய், எங்கும் தங்கும் அப்பரஞ்சுடரே - எங்கும் நிலைபெற்ற அந்தப் பரஞ்சோதியே, இந்த

ஆலவாய் உறையும் சோதி - இந்த ஆலவாயின்கண்ணே உறைகின்ற சோமசுந்தரக் கடவுள்; மேல் நாள் - முன்னொரு காலத்தில், கண்ணுவன் ஆதியோர்க்கு - கண்ணுவன் முதலிய முனிவர்களுக்கு, மெய்ப் பொருள் விளங்கித் தோன்று வேதத்தை - உண்மைப் பொருள் வெளிப்பட்டுத் தோன்றுத வேதத்தை, கைப்படு கனிபோல் - உள்ளங் கை நெல்லிக் கனிபோல் அதன் உண்மைப் பொருள் விளங்குமாறு, விருத்தி செய்தான் - விரித்துக் கூறினான்.

கைப்படு கனிபோல் விருத்தி செய்தான் என்க; விருத்தி செய்தல்- விரித்துரைத்தல். கண்ணுவனாதியோர்க்கு வேதத்தை விருத்தி செய்தமை வேதத்துக்குப் பொருளருளிச் செய்த படலத்திற் காண்க. (எரு)

தன்னரு ளான ஞானத் தபனிய மாகுந் தில்லைப்
பொன்னக ரிடத்தி லென்னைப் போகெனப் பணித்தா னீரும்
அன்னதற் கிசைதி ராகென் றாலவா யடிக டம்மைப்
பன்னருந் துதியா லேத்தி விடைகொடு பணிந்து போவார்.

(இ - ள்.) தன் அருளான ஞானத்தபனியம் ஆகும் - (அவனே) தனது அருள் மயமாகிய ஞானவெளியாம் பொன்னம்பல மென்னும், பொன் தில்லை நகரிடத்தில் என்னைப் போக எனப் பணித்தான் - அழகிய தில்லைப் பதியின்கண் என்னைப் போகக் கடவை என்று கட்டளையிட்டான்; நீரும் அன்னதற்கு இசைதிராக என்று - நீவிரும் அதற்கு உடன்படக்கடவீராக என்று கூறி, ஆலவாய் அடிகள் தம்மை- திருவாலவாயில் வீற்றிருக்கும் சோமசுந்தரக் கடவுளை, பன் அரும் துதியால் ஏத்தி - சொல்லுதற்கரிய துதிகளாற் பரவி, பணிந்து விடை கொடு போவார் - வணங்கி விடைபெற்றுக் கொண்டு செல்வா ராயினர்.

போகென, ஆகென்று என்பவற்றில் அகரம் தொகுத்தல். துதி - தோத்திரப்பாடல். (எசு)

தன்றொடக் கறுத்த நாதன் றாட்டொடக் குண்டு போவார்
பின்றொடர்ந் தரசன் செல்லப் பெருந்தவர் நின்மி னின்மின்
என்றவர் செலவுங் கூப்பி டெல்லைசென் றணிய ளுகிச்
சென்றடி பணிந்து தென்னன் விடைகொடு திரும்பி னானே.

(இ - ள்.) தன் தொடக்கு அறுத்த நாதன் - தனது கட்டினை அறுத்த இறைவனது, தாள் தொடக்குண்டு போவார் பின் - திருவடி நேயத்தாற் கட்டப்பட்டுச் செல்வாராகிய அடிகளின் பின், அரசன் தொடர்ந்து செல்ல - அரசன் தொடர்ந்து போகி, பெருந்தவர் - பெரிய தவத்தினையுடைய அடிகள், நின்மின் நின்மின் என்றவர் - நில்லும் நில்லும் என்று கூறினவராய், செலவும் - செல்லா நிற்கவும், கூப்பிடு எல்லை சென்று - கூப்பிடு தூரஞ் சென்று, அணியனுகிச் சென்று அடி

பணிந்து - பின் நெருங்கிப் போய் அடிவணங்கி, தென்னன் விடை கொடு திரும்பினன் - பாண்டியன் விடை பெற்றுக் கொண்டு மீண்டனன்.

தாள் - அடிநேயம் ; திருவருளுமாம். (எஎ)

துறந்தவர் போக மீண்டு தொன்னக ரடைந்து தென்னன்
அறந்தரு பங்கி னுரை யடைந்துதான் பிரம்பு நீட்டப்
புறந்தரு கருணை வெள்ளம் பூரிப்பத் தாழ்ந்து நெஞ்ச
நிறைந்தது வாய்கொள் ளாம னின்றெதிர் துதிப்ப தானன்.

(இ - ள்.) துறந்தவர் போக - முற்றத் துறந்தவராகிய அடிகள் செல்ல, தென்னன் மீண்டு தொல்நகர் அடைந்து - பாண்டியன் மீண்டு தனது பழமையான நகரினை அடைந்து, அறம் தரு பங்கினுரை அடைந்து - அறங்களை ஈன்ற உமையாகிய பாகத்தையுடைய சோமசுந்தரக் கடவுளை அடைந்து, தான் பிரம்பு நீட்டப் புறம்தரு கருணை வெள்ளம் பூரிப்பத் தாழ்ந்து - தான் பிரம்பினை ஓச்ச முதுகு தந்தருளிய அவ்வருள் வெள்ளமாகிய இறைவர் மகிழுமாறு வீழ்ந்து வணங்கி, நெஞ்சம் நிறைந்தது வாய் கொள்ளாமல் - நெஞ்சத்தின்கண் நிறைந்த ஆர்வம் வாய்கொள்ளாமல் வெளி வருதல் போல, எதிர் நின்று துதிப்பது ஆனன் - திருமுன் நின்று வழுத்துவானாயினன்.

துறந்து அவர் போக என்று பிரித்தலுமாம். அறந்தருபங்கு - உமையாகிய பங்கு. கருணை வெள்ளம் - இறைவன். ஆனாது வாய் விட்டுத் துதித்தலின் 'வாய் கொள்ளாமல்' என்றார். துதிப்பது, தொழிற் பெயர். (எஅ)

[கோச்சகக் கலிப்பா]

அடையாளப் [illegible] ருவ [illegible] அடித்தகோடுஞ் சிலைத்தழும்புந்
தொடையாகத் [illegible] தொண்டன் றொடுத்தெறிந்த கல்லும்போற்
கடையானேன் [illegible] குண்டடித்த கைப்பிரம்பு முலகமெல்லாம்
உடையானே பொறுத்ததோ வுன்னருமைத் திருமேனி.

(இ - ள்.) உலகம் எல்லாம் உடையானே - உலக முழுதையும் உடைய பெருமானே, உன் அருமைத் திருமேனி - உனது அருமைத் திருமேனியானது, அடையாளம்பட ஒருவன் அடித்த கொடுஞ்சிலைத் தழும்பும் - வடுப்படுமாறு அருச்சுனன் என்னும் ஒருவன் அடித்த வளைந்த வில்லின் தழும்பையும், ஒரு தொண்டன் - ஒரு தொண்டனாகிய சாக்கிய நாயனார், தொடையாகத் தொடுத்து எறிந்த கல்லும் போல் - மாலையாகத் தொடுத்து வீசிய கல்லையும் பொறுத்தது போல, கடையானேன் - கடையவனாகிய யான், வெகுண்டு அடித்த கைப் பிரம்பும் பொறுத்ததோ - சினந்து அடித்த கைப் பிரம்பினையும் பொறுத்தருளியதோ!

ஒருவன் : அருச்சுனன் : பாண்டு மைந்தனாகிய அருச்சுனன் பாசுபதப்படை வேண்டிச் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்த காலையில் அவனது தவத்தை அழித்தற்குத் துரியோதனனது ஏவலால் பன்றியுருவெடுத்து வந்த மூகன் என்னும் அசுரனை இறைவன் வேட்டுருக்கொண்டு துரந்து வந்து அம்பெய்து வீழ்த்தி அருச்சுனனோடு வழக்காடிப் போர் புரிந்து அவனது வில்லின் நாணை அறுக்க, அவன் விற்கழுந்தால் இறைவனை அடித்தான் என்பது வரலாறு. ஒரு தொண்டன் திருத்தொண்டர் புராணத்துக் கூறப்பட்ட தனியடியார் அறுபத்து மூவருள் ஒருவராகிய சாக்கிய நாயனார்; திருச்சங்க மங்கையிலே வேளாளர் குலத்துதித்த ஒருவர் மெய்யுணர்வு பெறக் கருதிச் சாக்கிய (புத்த) மதத்தை அடைந்து, பின்பு சிவனருளால் சைவ நெறியே உண்மை நெறியெனத் தெளிந்து ''எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும், மன்னிய சீர்ச் சங்கரன்றாள் மறவாமை பொருள்'' என்று கருதிச் சாக்கிய வேடத்துடனிருந்தே சிவபிரான்பால் அன்புடையராய் ஒழுகுகின்றவர் நாடோறும் சிவலிங்க தரிசனஞ் செய்து உண்ண விரும்பி வெள்ளிடையிலிருந்த ஒரு சிவலிங்கத்தைக் கண்டு உவகை மீதூர்ந்து திருவருட் குறிப்பால் அதன்மீது தம்மையறியாமலே ஒரு கல்லினை யெடுத்தெறிந்து அன்று முதல் அதுவே நியமமாகக் கல்லெறிந்து வழிபட்டு முத்தியடைந்தனர் என்பது வரலாறு. பொறுத்ததோ, ஓகாரம் இரக்கத்தில் வந்தது. (எகூ)

கடியேறு மலர்மகன்மான் முதலாய கடவுளரும்
படியேழு மளவிறந்த பல்லுயிரு நீயேயோ
முடியேற மண்சுமந்தாய் முதுகிலடி வடுப்பட்ட
தடியேனும் பட்டேனின் றிருமேனி யானேனே.

(இ - ள்.) முடி ஏற மண் சுமந்தாய் - முடியின்கண் ஏற மண்ணைச் சுமந்த இறைவனே, கடி ஏறும் மலர் மகன்மால்:முதலாய கடவுளரும் - மணம் பொருந்திய தாமரை மலரில் இருக்கும் பிரமனும் திருமாலும் முதலிய தேவர்களும், படி ஏழும் - ஏழு உலகங்களும், அளவு இறந்த பல் உயிரும் நீயேயோ - அவற்றிலுள்ள அளவில்லாத பல உயிர்களும் நீயே போலும்; முதுகில் அடிவடு பட்டது - (அதனாற்றான்) நின் திரு முதுகிற்பட்ட அடித்தழும்பு அவை எல்லாவற்றின் மேலும் பட்டது; அடியேனும் பட்டேன் - அவ்வடியை அடியேனும் பட்டேன் (ஆதலால்), நின் திருமேனி ஆனேனே - யானும் நினது திருமேனி ஆனேனே!

படி - உலகம் என்னும் பொருட்டு ஆனேனே என்பதில் ஓகாரம் வியப்பின்கண் வந்தது. கடையேனாகிய யானும் உனக்குத் திருமேனி யானேன் போலும் என வியந்து கூறியவாறு. (அ0)

கைக்குமருந் தின்சுவைபின் காட்டுமா றேனவினைக்கும்
பொய்க்குமருங் கலனாகி மண்ணுண்டு புலைநரகந்
துய்க்குமருந் துயர்களைவான் மாறாய்நின் றுணையடிக்கே
உய்க்குமருந் தவரிவரென் றறியாமை யோறுத்தேனே.

(இ - ள்.) கைக்கும் மருந்து - முன்னே கசக்கும் மருந்து, பின் இன்சுவை காட்டுமாறு என - பின் தனது இனிய பயனைக் காட்டுவதுபோல, வினைக்கும் பொய்க்கும் அருங்கலனாகி - தீவினையும் பொய்யுமாகிய பண்டங்களை ஏற்றும் அரிய மரக்கலமாகி, மண் ஆண்டு - இந்நிலவுலகினை ஆள்வதால், புலைநரகம் துய்க்கும் அருந்துயர் களைவான் - புல்லிய நிரயத்தில் நுகரும் கொடிய துன்பத்தைக் களையும் பொருட்டு, மாறாய் - முன்னே பகையாகி, நின்துணை அடிக்கே உய்க்கும் - பின் நின் இரண்டு திருவடிகளிலே செலுத்தும், அருந்தவர் இவர் என்று அறியாமை ஒறுத்தேன் - அரிய முனிவர் இவரென்று அறியாமல் ஒறுத்தேன்.

சுவை - உறுதி என்னும் பொருட்டு. கலனாகி - அணிகலனாகி என்றுமாம். புலை - புன்மை. துய்க்கும் நரகத்துயர் என இயைத்தலுமாம்; நரகந் துய்த்தற்கு ஏதுவாகிய பிறவிப்பிணியைக் களைய என்றுரைத்தலும் பொருந்தும். இவர்: வாதவூரர். காட்டுமாறென மாறாய் நின்று உய்க்கும் அருந்தவர் என்க. (௮௧)

பாதியுமை யுருவான பரமேட்டி யெனக்கிம்மை
ஊதியமும் பரகதியு முறுதிபெற விளைவிக்கும்
நீதியினான் மந்திரியாய் நின்னருளே யவதரித்த
வேதியரை யறியாதே வெறுத்துநா னொறுத்தேனே.

(இ - ள்.) பாதி உமை உருவான பரமேட்டி - ஒரு பாதி உமையம்மையின் வடிவான இறைவ. எனக்கு - அடியேற்கு, இம்மை ஊதியமும் பரகதியும் - இம்மைப் பயன்களையும் வீடு பேற்றினையும், உறுதிபெற விளைவிக்கும் நீதியினால் - திண்ணமாக உண்டாக்கும் நீதியுடன், நின் அருளே மந்திரியாய் அவதரித்த வேதியரை - நினது திருவருளே அமைச்சராய்த் தோன்றிய அந்தணரை, அறியாது வெறுத்து நான் ஒறுத்தேன் - அறியாமல் வெறுத்து அடியேன் ஒறுத்தேன்.

ஊதியம் - பேறு. நீதியினால்-நீதியுடன். நினது திருவருளே வாதவூரராகத் தோன்றிற்றென அவர் பெருமையை வியந்துரைத்தான். அருளால் என மூன்றனுருபு விரித்து, அவதரித்து மந்திரியாகிய என விகுதி பிரித்துக் கூட்டுதலுமாம். (௮௨)

மாயா விருத்தியினான் மாழாந்து மாதவரை
ஆயா தொறுத்தே னருநரகத் தாழ்ந்துநான்
வீயாம லின்றனையார் மெய்ம்மையெலாந் தேற்றியவென்
தாயானாய் தண்ணளிக்கென் றமியேன்செய் கைம்மாறே.

(இ - ள்.) மாயா விருத்தியினால் மாழாந்து - மாயையின் விருத்தியினால் மயங்கி, மாதவரை ஆயாது ஒறுத்தேன் - தவசிரேட்டராகிய வாதவூரரை ஆராயாது ஒறுத்தேன் (அதனால்), நான் அரு நரகத்து ஆழ்ந்து வீயாமல் - அடியேன் கரையேறுதற்கரிய நரகத்தின்கண்

அழுந்திக்கெடாமல், இன்று - இப்பொழுது, அனையார் மெய்ம்மை எலாம் தேற்றியஎன் தாயானாய்-அவ்வடிகளின் உண்மைகளனைத்தையும் தெளிவித்த என் அன்னைபோல்வாய், தண் அளிக்கு தமியேன் செய்கைம்மாறு என் - நினது குளிர்ந்த அருளுக்கு அடியேன் செய்யுங் கைம்மாறு யாது (ஒன்றுமில்லை).

விருத்தி - செய்கை, அவரது மெய்ம்மை அறிந்து வழிபட்டு வீயாமல் உய்ந்தேன் என்பான் 'நரகத் தாழ்ந்து வீயாமல் தேற்றிய' என்றான். (அ௩)

நின்னையுணர்ந் தவர்வேத நெறிவேள்வி செய்தூட்டும்
இன்னமுதிற் கழிசுவைத்தோ விவளிடும்பிட் டெவ்வுயிர்க்கும்
மன்னவனே செந்துவர்வாய் மலர்ந்தமுது செய்தனையால்
அன்னையிலா வுனக்கிவளோ ரன்னையாய் வந்தாளோ.

(இ - ள்.) நின்னை உணர்ந்தவர் - நின்னியல்பினை அறிந்த முனிவர்கள், வேத நெறி - மறையிற் கூறிய வழியே, வேள்வி செய்து ஊட்டும் இன் அமுதில் - வேள்வி புரிந்து அதில் உண்பிக்கும் அவியுணவினும், இவள் இடும் பிட்டு கழிசுவைத்தோ - இவ்வந்தி இட்ட பிட்டு மிகவுஞ் சுவையுடையதோ, எவ்வுயிர்க்கும் மன்னவனே-எல்லா உயிர்கட்கும் இறைவனே, செந்துவர்வாய் மலர்ந்து அமுது செய்தனை- மிகவும் சிவந்த திருவாயினைத் திறந்து அமுது செய்தருளினை ; அன்னை இலா உனக்கு - தாயில்லாத உனக்கு, இவள் ஓர் அன்னையாய் வந்தாளோ - இவளொரு தாயாகி வந்தனளோ.

மன்னவனே அமுது செய்தனை, இது கழி சுவைத்தோ, இவள் அன்னையாய் வந்தாளோ என வினை முடிவு செய்க. (அ௪)

அன்றுசிறுத் தொண்டரிடும் பிள்ளைக் கறியமுதும்
மென்று சுவைதெரிந்த வேடனிட்ட வூனும்போல்
நன்றுநரை யாட்டியிடு பிட்டு நயந்தருந்தி
என்று மடியார்க் கெளிவந்தா யெந்தாயே.

(இ - ள்.) அன்று - அந்நாளில், சிறுத் தொண்டர் இடும் பிள்ளைக் கறி அமுதும் - சிறுத்தொண்ட நாயனார் இட்ட பிள்ளைக்கறியமுதினையும், வேடன் இட்ட - கண்ணப்பநாயனார் இட்ட, மென்று சுவை தெரிந்த ஊனும் போல் - அவரால் மென்று சுவை தெரியப்பெற்ற ஊனமுதினையும் போல, நரையாட்டி இடுபிட்டும் நன்று நயந்து-நரை முதியாளாகிய வந்தி இட்ட பிட்டினையும் பெரிதும் விரும்பி நுகர்ந்து, எந்தாய்-எந்தையே, என்றும்-எக்காலத்தும், அடியார்க்கு எளிவந்தாய்- அடியார் திறத்தில் எளியனாயினாய்.

சிறுத்தொண்டர் - சிவனடியார்க்கு மிகச் சிறியரா யொழுகும் தொண்டர் : காரணப் பெயர்;

"சீதமதி யரவினுடன் செஞ்சடைமேற் செறிவித்த
நாதனடியார் தம்மை நயப்பாட்டு வழிபாட்டான்
மேதகையா ரவர்முன்பு மிகச்சிறிய ராயடைந்தார்,
ஆதலினாற் சிறுத்தொண்ட ரெனநிகழ்ந்தா ரவனியின்மேல்."

என்னுந் திருத்தொண்டர் புராணச் செய்யுள் நோக்குக. சிறுத்தொண்டர் பிள்ளைக்கறி யமுதிட்ட வரலாற்றையும், கண்ணப்பர் மென்று சுவை தெரிந்த ஊன் இட்ட வரலாற்றையும் பெரிய புராணத்திற் காண்க. பிள்ளைக் கறியமுதினை இறைவன் உண்டமை கேட்கப்பட்டிலதேனும் அந் நிவேதனங் காரணமாக இறைவன் அவர்கட்கு அருள் புரிந்தமையின் 'பிள்ளைக்கறியமுதும் போல்' என்றார். கண்ணப்பர் ஊன் சுவை தெரிந்திட்டமை,

"ஊனமுது கல்லையுடன் வைத்திதுமுன் னையினன்றால்
ஏனமொடு மான்கலைகண் மரைகடமை யிவையிற்றில்
ஆனவுறுப் பிறைச்சியமு தடியேனுஞ் சுவைகண்டேன்
தேனுமுடன் கலந்ததிது தித்திக்கு மெனமொழிந்தார்."

"வெய்யகனற் பதங்கொள்ள வெந்துளதோ வெனுமன்பால்
நையுமனத் தினிமையினி னையமிக மென்றிடலாற்
செய்யுமறை வேள்வியோர் முன்புதருந் திருந்தவியில்
எய்யும் வரிச் சிலையவன்றா னிட்டவூ னெனக்கினிய"

என முறையே கண்ணப்பர் கூற்றாகவும் சிவபெருமான் கூற்றாகவும் வந்துள்ள செய்யுட்களாலறிக. திருஞானசம்பந்தப் பிள்ளையார் வாதவூரடிகட்குப் பிற்காலத்தினர் என்பது இந்நூலாசிரியர் கருத்தாகலின் பிள்ளையார் காலத்திருந்த சிறுத்தொண்டரும் பிற்காலத்தினரென்பது இவர்க்கு உடன்பாடாதல் பெறப்படும். அங்ஙனமாயினும் இவ்வரலாறெல்லாம் இவர்க்கு முற்காலத்தினவாகலின் சிறுத்தொண்டர் செய்தியையும் இங்குக் கூறினர். இங்ஙனம் நூலாசிரியர்கள் பிறழக் கூறுதல் பலவிடத்துக் காணப்படும். அன்று என்பதற்கு வருங்காலத்தில் எனப் பொருள் கொள்ளுதல் சிறப்பின்று. நன்று - பெரிது; தொல்காப்பியத்து உரியியலிற் காண்க. (அ௫)

நரியாவும் பரியாக்கி நடத்தியுமம் பரமன்றித்
தரியாயான் றருதுகிலைத் திருமுடிமேற் றரித்துமறைக்
கரியாய்நீ யென்பாச மறுக்கவருந் திருமேனி
தெரியாதே பரியாசை திளைத்திறுமாந் திருந்தேனே.

(இ-ள்.) மறைக்கு அரியாய் நீ - வேதங்களுக்கு அரியவனாய நீ, நரியாவும் பரியாக்கி நடத்தியும் - நரிகளை யெல்லாம் குதிரைகளாக்கி நடத்தியும், அம்பரம் அன்றித்தரியாய்-திசை வெளியன்றி வேறொன்றையும் உடுக்காத நீ, யான் தரு துகிலைத் திருமுடிமேல் தரித்தும்-அடியேன்

கொடுத்த ஆடையை வாங்கித் திருமுடியின்கண் தரித்தும், என் பாசம் அறுக்கவரும் திருமேனி தெரியாதே - எனது கட்டினை அறுக்க வரும் நினது திருமேனியை உணராமல், பரி ஆசை திளைத்து இறுமாந்து இருந்தேனே - குதிரைகளில் வைத்த விருப்பத்துள் அழுந்தி இறுமாந் திருந்தேனே.

அம்பரம் - திசை. ஆகாயம்; இறைவன் திசையே ஆடையாக வுடையனாதலைத் திகம்பரன் என்னும் பெயரானுமறிக. அம்பரம் ஆடையுமாகலின் இரட்டுற மொழிதலாகக் கொண்டு, திசையாகிய ஆடையன்றி என உரைத்தலுமாம். திருமேனியின் அருமையைத் தெரியாதே என்க. தெரியாது : எதிர்மறை வினையெச்சம். இறுமாத்தல் - தருக்குதல். தருக்கியிருந்தேன் இஃது என்ன புன்மை என இசையெச்சம் விரித்துரைக்க. (அசு)

விண்சுமக்கும் புள்ளாய் விலங்காய்ச் சுழன்றுமனம்
புண்சுமக்குஞ் சூழ்ச்சி வலியுடைய புத்தேளிர்
மண்சுமக்கு மள்ளராய் வந்திலரே வந்தக்காற்
பண்சுமக்குஞ் சொல்லிபங்கன் பாதமுடி காண்பாரே.

(இ - ள்.) விண் சுமக்கும் புள்ளாய் - வானாற் சுமக்கப்படும் பறவையாகியும், விலங்காய்ச் சுழன்று - விலங்காகியும் தேடி வருந்தி, மனம் புண் சுமக்கும் - (காணாமையின்) மனம் புண்பட்ட, சூழ்ச்சி வலி உடைய புத்தேளிர் - ஆராய்ச்சி வலியினையுடைய பிரமனுந் திருமாலுமாகிய தேவர்கள், மண் சுமக்கும் மள்ளராய் வந்திலரே - மண்ணைச் சுமக்கும் ஏவலாளராய் வந்திலரே, வந்தக்கால் - வந்திருப்பார்களானால், பண் சுமக்கும் சொல்லிபங்கன் - பண்ணின் சுவையினைத் தாங்கிய இன்சொல்லையுடைய உமையம்மையை ஒரு பாகத்தில் வைத்த இறைவனது, பாதம் முடி காண்பாரே - திருவடியையும் திருமுடியையுங் கண்டிருப்பாரே.

வேறு ஆதரவன்றி விண்ணின் இயங்குதலின் 'விண் சுமக்கும் புள்' என்றார். புள் - அன்னம். விலங்கு - பன்றி. சூழ்ச்சி வலியுடைய என்றது நகுதற் குறிப்பு. பிரமனையும் திருமாலையும் முன்னர்க் கூறி, பாதம் முடி காண்பார் எனப் பிற்கூறினமையின் இது மயக்க நிரனிறை. வந்திலரே காண்பாரே என இரங்கிக் கூறுவது போன்று இறைவன் 'பிரமன்மால் காணாப் பெரியன்' ஆதலையும், அடியார்க்கு எளியனாதலையும் விளக்கினமை காண்க. (அஎ)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

என்றுபல முறையாலே துதித்தடைந்தோர்க்
கன்பரிவ ரிவரைத் தேறின்
நன்றுமிக பரபோகம் வீடுபெற
லெளிதென்று நகைத்தார் வேந்தன்

அன்றுதிருப் பணிபூசை பிறவுநனி
வளம்பெருக்கி யழகார் வெள்ளி
மன்றுடையா னடிக்கன்பு முயிர்க்கன்புஞ்
சுரந்தொழுகி வாழு நாளில்.

(இ - ள்.) என்று பல முறையாலே துதித்து - என்று பல முறையினாலே வழுத்தி, அடைந்தோர்க்கு அன்பர் இவர் - தன்னடியினை அடைந்தவர்க்கு அன்பராவாரிவர்; இவரைத் தேறின் - இவரைத் தெளிந்தால், இகபர போகம் - இம்மை மறுமையின்பங்களையும், வீடு - முத்தியின்பத்தையும், நன்றும் பெறல் எளிது என்று - பெரிதும் அடைதல் எளிதென்று கருதி, நகைத்தார் வேந்தன் - ஒளி பொருந்திய மாலையை யணிந்த மன்னன், அன்று - அந்நாள் முதல், திருப்பணி பூசை பிறவும் - திருப்பணியும் பூசனையும் பிறவும், நனிவளம் பெருக்கி - மிகவும் பொலிவுற நடத்தி, அழகு ஆர் வெள்ளிமன்று உடையான் அடிக்கு அன்பும் - அழகு நிறைந்த வெள்ளியம்பலமுடைய இறைவனது திருவடிக்கண் அன்பும், உயிர்க்கு அன்பும் சுரந்து ஒழுகி வாழும் நாளில் - உயிர்களிடத்து அன்பும் சுரந்து வாழ்ந்தொழுகும்போது.

பிறவும் என்றது திருவிழா முதலியவற்றை. அடிக்கு உயிர்க்கு என்பவற்றில் நான்கனுருபு ஏழன் பொருளில் வந்தன. உயிர்க்கன்பு என்புழி அன்பு அருளுமாம். (அ அ)

முன்புபெருந் துறையார்க்கு மடியார்க்கு
மறந்தெரிந்த முறையா லீட்டுந்
தன்பொருள்போ யுடன்பலவாய்த் தழைத்துவரு
பயனேபோற் றலையு வாவின்
நன்பனிகான் மதிகண்ட வுவரியெனப்
பலசெல்வ நாளு மோங்க
இன்புறுவான் சகநாத னெனுமகப்பெற்
றின்பத்து ளின்பத் தாழ்ந்தான்.

(இ - ள்.) அறம் தெரிந்த முறையால் ஈட்டும் தன் பொருள் - அறநெறியினை ஆராய்ந்தறிந்த முறையினால் ஈட்டிய தனது பொருள், முன்பு பெருந்துறையார்க்கும் அடியார்க்கும் போய் - முன்னம் பெருந்துறை இறைவரிடத்தும் அவரடியாரிடத்தும் வாதவூரடிகளாற் சென்று, டன் - உடனே, பலவாய் தழைத்து வருபயனே போல் - பல வகையாய்த் தழைத்து வரும் பயனேபோல, தலை உவாவின் நன்பனி கால் மதிகண்ட உவரி என - பூரணையில் நல்ல குளிர்ந்த நிலவினை வீசும் சந்திரனைக் கண்ட கடல் பொங்குதல்போல, பல செல்வம் நாளும் ஓங்க - பல வகைப்பட்ட செல்வம் நாள்தோறும் மிக்கோங்க, இன்புறுவான் - இன்பமுறும் அவ் அரி மருத்தன பாண்டியன், சகநாதன் எனும் மகப்பெற்று - சகநாதன் என்

னும் புதல்வனைப் பெற்று, இன்பத்துள் இன்பத்து ஆழ்ந்தான் - சிறந்த மகிழ்ச்சிக் கடலுள் அழுந்தினன்.

அமாவாசையும் உவா எனப்படுமாகலின் பூரணையைத் தலையுவா என்றார். உவரி என ஓங்க எனவும், பயனேபோல் ஓங்க மகப்பெற்று எனவும் கூட்டுக. இன்பத்துள் இன்பம் - இடையறா இன்பம். (அக)

அம்மகனை முடிசூட்டி யரசாக்கி
வாதவூ ரமைச்சர் சார்பான்
மெய்ம்மைநெறி விளங்கியிரு வினையொப்பி
லரன்கருணை விளைந்த நோக்கான்
மும்மைமலத் தொடர்நீந்திச் சிவானந்தக்
கடற்படிந்து முக்கண் மூர்த்தி
செம்மலர்த்தா ணிழலடைந்தான் றிறலரிமர்த்
தனனென்னுந் தென்பார் வேந்தன்.

(இ - ள்.) திறல் அரிமர்த்தனன் என்னும் தென்பார் வேந்தன் - ஆற்றல் பொருந்திய அரிமருத்தனனென்னும் பாண்டி நாட்டு மன்னன், அம்மகனை முடி சூட்டி அரசு ஆக்கி - அம் மகனுக்கு முடிசூட்டி அவனை அரசனாக்கி, வாதவூர் அமைச்சர் பால் - வாதவூரடிகளாகிய அமைச்சரது சம்பந்தத்தால், மெய்ம்மைநெறிவிளங்கி - உண்மைநெறி விளங்கப்பெற்று, இருவினை ஒப்பில் அரன் கருணை விளைந்த நோக்கால் - இருவினையொப்பின்கண் உண்டாகிய இறைவனது அருள் நோக்கால், மும்மைமலத் தொடர் நீந்தி - மூன்று மலங்களாகிய தொடரினைக் கடந்து, சிவானந்தக் கடல் படிந்து - சிவானந்தமாகிய கடலில் மூழ்கி, முக்கண்மூர்த்தி செம்மலர்த்தாள் நிழல் அடைந்தான் - மூன்று கண்களையுடைய சோமசுந்தரக் கடவுளின் சிவந்த தாமரை மலர் போன்ற திருவடி நிழலை அடைந்தனன்.

சார்பால்-சார்ந்திருந்தமையால், சம்பந்தத்தால். இருவினை யொப்பு- நல்வினைப் பயனாகிய இன்பத்தையும் தீவினைப்பயனாகிய துன்பத்தையும் ஒப்ப நோக்குதல். மும்மை, மை: பகுதிப்பொருள் விகுதி. மும்மலம்- ஆணவம், கன்மம், மாயை. (௬0)

[வேறு]

வழுதியால் விடுக்கப் பட்ட வாதவூர் முனிக டம்மைப்
பழுதிலாப் பாடல் கொள்வார் பதிபல பணிந்து போந்து
முழுதுணர் மறையோர் வேள்விப் புகையண்ட முடிகீண் டேழி
எழுவட வரைபோற் றேன்று மெழிற்றில்லை மூதூர் சேர்ந்தார்.

(இ - ள்.) வழுதியால் விடுக்கப்பட்ட வாதவூர் முனிகள் - பாண்டியனால் விடுக்கப்பட்ட வாதவூர் முனிவர், தம்மைப் பழுது

இலாப் பாடல் கொள்வார் பதி பல பணிந்து போந்து - தம்முடைய குற்றமில்லாத பாடல்களை ஏற்றுக்கொள்ளும் இறைவர் திருப்பதிகள் பலவற்றையும் வணங்கிச்சென்று, முழுது உணர் மறையோர் வேள்விப் புகை - முற்றும் உணர்ந்த மறையவராகிய மூவாயிரவரின் வேள்விப் புகையானது, அண்டமுடி கீண்டு - அண்ட முகட்டைக் கிழித்து, ஊழி எழு வடவரைபோல் தோன்றும் - ஊழிக்காலத்தில் உயரும் வடக்கின் கண்ணுள்ள கைலைமலை போலக் காணப்படும், எழில் தில்லை மூதூர் சேர்ந்தார் - அழகிய தில்லையென்னும் பழம் பதியினை அடைந்தார்.

வாதவூரர் சோமசுந்தரக் கடவுளை வணங்கி விடைபெற்று மதுரையினின்றும் புறப்பட்ட பொழுது பாண்டியன் அவர் கருத்தைத் தடுக்கலாற்றாது விட்டமையின் 'வழுதியால் விடுக்கப்பட்ட' என்றார். அடிகள் என்றாற்போலக் கள்விகுதி தந்து முனிகள் என்றார். பாடல் கொள்வார் என்பதனை ஒருசொன்னீரதாக்கித் தம்மை என்னும் இரண் டாவதற்கு முடிபாக்கலுமாம். பாடல் கொள்வார் - பாடற்றொண்டு கொள்வார். வடவரை என்றது கைலை என்னும் திருநொடித்தான் மலையை. அஃது ஊழியில் உயரும் என்பதனை 'ஊழிதோ றோங்குமவ் வோங்கல்' எனத் திருக்கைலை வருணனையிலும் இவ்வாசிரியர் கூறி யிருத்தல் காண்க. (௬௧)

[ஷை வேறு]

வீதிதோறும் வீழ்ந்துவீழ்ந் திறைஞ்சியா லயத்தெய்தி மெய்ம்மையான
சோதியறி வானந்தச் சுடருருவாஞ் சிவகங்கை தோய்ந்து மேனி
பாதிபகிர்ந் தவள்காணப் பரானந்தத் தனிக்கூத்துப் பயிலா நிற்கும்
ஆதியரு ளாகியவம் பலங்கண்டு காந்தநே ரயம்போற் சார்ந்தார்.

(இ - ள்.) வீதிதோறும் வீழ்ந்து வீழ்ந்து இறைஞ்சி - வீதிகடோறும் வீழ்ந்து வீழ்ந்து வணங்கி, ஆலயத்து எய்தி - திருக்கோயிலை அடைந்து, மெய்ம்மையான சோதி அறிவு ஆனந்தச் சுடர் உருவாம் - உண்மையான ஒளியும் அறிவும் இன்பமுமாகிய இறைவரது திருவுருவமாகிய, சிவகங்கை படிந்து - சிவகங்கையில் நீராடி, மேனி பாதி பகிர்ந் தவள் காண - திருமேனியில் ஒரு பாதியைப் பங்கிட்டுக் கொண்ட சிவகாமியார் பார்க்க, பர ஆனந்தத் தனிக்கூத்துப் பயிலா நிற்கும் - மேலான இன்பமாகிய ஒப்பற்ற திருக்கூத்தினைப் பயிலும், ஆதி அருளாகிய அம்பலம் கண்டு - இறைவரது திருவருளாகிய அம்பலத்தைக் கண்டு, காந்தம் நேர் அயம்போல் சார்ந்தார் - காந்தத்தினை எதிர்ந்த இரும்புபோலச் சார்ந்தனர்.

இறைவன் திருக்கூத்தியற்றும் சிற்றம்பலத்தைத் தன்னகத்துடைய தெய்வப்பதி ஆகலானும், அங்கு வதியும் அந்தணர் மூவாயிரவரும் சிவகணநாதரா'கலானும் 'வீதிதொறும் வீழ்ந்து வீழ்ந் திறைஞ்சி'ச் சென்றார் என்க. அடுக்கு தொழிற்பயில்வு குறித்தது. சச்சிதானந்தமாகிய சுடரின் உருவாம் சிவகங்கை என்க. இறைவனது சத்தியொன்று தானே அருளும் ஞானமும் முதலிய பெயர்களைப்

பெறுதலின் 'அருளாகிய அம்பலம்' என்ருர். ஈர்க்கப்பட்டமை தோன்றக் 'காந்தநேர் அயம்போல்' என்ருர். (௯௨)

அன்றுகுருந் தடியிலடி வைத்தாண்ட
　　கோலமே யருளா னந்த
மன்றினிடத் தெதிர்தோற்றி வாவென்பா
　　ரேனமூரன் மணிவாய் தோற்றி*
நின்றதனிப் பெருங்கூத்தர் நிலைகண்டா
　　ரஞ்சலித்தார் நிலமேல் வீழ்ந்தார்
ஒன்றரிய புலன்கரண வழிநீந்தி
　　மெய்யன்பி னுருவ மானர்.

(இ - ள்.) அன்று குருந்து அடியில் அடி வைத்து ஆண்ட கோலமே - அன்று திருப்பெருந்துறையில் குருந்த மரத்தின் அடியில் திருவடியை முடியின்கண் சூட்டி ஆட்கொண்டருளிய திருக்கோலமே, அருள் ஆனந்தமன்றினிடத்து எதிர் தோற்றி-அருளானந்த மயமாகிய அம்பலத்தின்கண் எதிரே தோன்றி, வா என்பார் என - வா என்று அழைப்பார் போல, மணிவாய் மூரல் தோற்றி நின்ற - அழகிய திரு வாயின்கண் புன்னகை காட்டி நின்றருளிய, தனிப் பெருங் கூத்தர் நிலை கண்டார் - ஒப்பற்ற பெரிய கூத்தப் பெருமானது திருக்கோலத் தினைக் கண்டு, அஞ்சலித்தார் நிலமேல் வீழ்ந்தார் - கைகளை முடியிற் குவித்து நிலத்தின்மேல் வீழ்ந்து, ஒன்று அரிய புலன்கரண வழி நீந்தி- ஒன்று படுதலில்லாத ஐம்புலன்களும் அந்தக்கரணங்களுமாகிய இவற்றின்வழிச் செல்லுதலைக் கடந்து, மெய் அன்பின் உருவம் ஆனர்- உண்மையன்பின் வடிவமாயினர்.

கோலமே நின்ற என இயையும். வா வென்பாரென என்னுங் கருத்தை,

"சென்று தொழுமின்கள் தில்லையுட்சிற்றம் பலத்து நட்டம்
　என்று வந்தாயென்னு மெம்பெரு மான்றன் றிருக்குறிப்பே"

என்னும் திருநாவுக்கரசர் தேவாரத்திற் காண்க. (௯௩)

வண்டுபோற் புண்டரிக மலரில்விளை
　　சிவானந்த மதுவை வாரி
உண்டுவா சகம்பாடி யாடியழல்
　　வெண்ணெயென வுருகுந் தொண்டர்

(பா - ம்.) *தோன்றி.

விண்டுழா வியகுடுமி மன்றுடையான்
றிருவாக்கான் மிகுந்த நேயங்
கொண்டுபோய்க் குணதிசையி லருந்தவர்வாழ்
தபோவனத்தைக் குறுகி யங்கண்.

(இ - ள்.) வண்டுபோல் - வண்டினைப்போல, புண்டரிகமலரில் விளை சிவானந்த மதுவை வாரி உண்டு - தில்லைவனமாகிய தாமரை மலரில் விளைந்த சிவானந்தமாகிய தேனை வாரி உண்டு, வாசகம் பாடி ஆடி - திருவாசகம் பாடி இன்பக் கூத்தாடி, அழல் வெண்ணெய் என உருகும் தொண்டர் - நெருப்பிற்பட்ட வெண்ணெய் போல மனமுருகுந் தொண்டராகிய மாணிக்க வாசகர், விண் துழாவிய குடுமி மன்று உடையான் திருவாக்கால் - வானையளாவிய முடியினையுடைத்தாகிய பொன்னம்பலத்தை யுடைய இறைவனது திருவாக்கினால், மிகுந்த நேயம் கொண்டு போய் - மிகுந்த அன்பு கொண்டு சென்று, குண திசையில் அருந்தவர் வாழ்தபோவனத்தைக் குறுகி - கீழ்த்திசையில், அரிய தவத்தையுடைய முனிவர்கள் வாழும் தவவனத்தை அடைந்து, அங்கண் - அவ்விடத்தில்.

புண்டரிக மலர் என்பது இரட்டுற மொழிதலால் தில்லை வனத்தையும் தாமரை மலரையும் குறிக்கும். சாந்தோக்கிய உபநிடதத்திலே 'பிரமபுரமாகிய இச்சரீரத்திலுள்ள தகரமாகிய புண்டரீக வீட்டினுள் இருக்கும் ஆகாசம்' என்பது முதலாகத் தகரவித்தை கூறப்பட்டது. அதுபோல இப்பிரமாண்டத்தினுள் இருக்கும் தில்லைவனம் புண்டரீக வீடு எனவும், இத்தில்லை வனத்தில் நிருத்தஞ் செய்யும் சிவம் ஆகாசம் எனவும் கூறப்படும் என்க; ஆறுமுக நாவலரவர்கள் எழுதிய பெரிய புராண வசனத்தில் இது விரித்துரைக்கப் பெற்றமை காண்க. வண்டு போல் உண்டு என இயையும். (கூசா)

குறிகுணங்கள் கடந்ததனிக் கூத்தனுரு
வெழுத்தைந்தின் கொடுவா ளோச்சிப்
பொறிகரணக் காடெறிந்து வீசிமனப்
புலந்திருத்திப் புனிதஞ் செய்து
நிறைசிவமாம் விதைவிதைத்துப் பசுபோதங்
களைந்தருணன் னீர்கால் பாய
அறிவுருவாய் விளைந்ததனிப் பரானந்த
வமுதருந்தா தருந்தி நின்றார்.

(இ - ள்.) குறி குணங்கள் கடந்ததனிக் கூத்தன் உரு - குறியையுங் குணத்தையுங் கடந்த ஒப்பற்ற கூத்தப் பெருமானது வடிவமாகிய,

எழுத்து ஐந்தின் - திருவைந் தெழுத்தென்னும், கொடுவாள் ஓச்சி- வளைந்த வாளினை ஓச்சி, பொறி கரணக்காடு எறிந்து வீசி - ஐம் பொறிகளும் அந்தக்கரணமுமாகிய காட்டினை முற்றும் அழித்து, மனப்புலம் திருத்தி - மனமாகிய நிலத்தினைச் செப்பஞ் செய்து, புனிதம் செய்து - தூய்மை செய்து, நிறை சிவமாம் விதைவிதைத்து - எங்கும் நிறைந்த சிவமாகிய வித்தினை விதைத்து, பசுபோதம் களைந்து- சீவபோதமாகிய களையினைக் களைந்தெடுத்துவிட்டு, அருள் நல்நீர்கால் பாய - அருளாகிய நல்ல நீர் பாய்தலால், அறிவு உருவாய் விளைந்த - அறிவே வடிவமாய் விளைந்த, தனிப்பரானந்த அமுது - ஒப்பற்ற சிவ போகமாகிய அமுதினை, அருந்தாது அருந்தி நின்றார் - இடையறாமல் அருந்தி நின்றனர்.

இறைவன் குறி குணங்கள் கடந்தவனாதலை,

"குறியொன்று மில்லாத கூத்தன்"

"குணங்கள்தா மில்லா இன்பமே"

என்னும் திருவாசகங்களானறிக. கூத்தன் உரு ஐந்தெழுத்தாதலை,

"ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே
நாடுந் திருவடியி லேநகரம் - கூடும்
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்"

என்னும் உண்மை விளக்கத்தாலறிக. திருநாவுக்கரசர்

"படைக்கல மாகவுன் னாமத் தெழுத்தஞ்செ னாவிற்
கொண்டேன்"

எனத் திருவைந்தெழுத்தை வாளாக உருவகப் படுத்தினமை இங்கே சிந்திக்கற்பாலது. ஐந்தெழுத்தின் என்பதில் இன்சாரியை அல்வழிக் கண் வந்தது. கால் பாய, கால்:துணைச் சொல். அருந்தாது அருந்தல்- தற்போதங் கொண்டு நுகராது திருவருள் வழி நின்று நுகர்தல். இஃது இயைபுருவக அணி. (௬௫)

மானிரையுங் குயவரியும் வந்தொருங்கு
நின்றரிஞ்ச மயங்கு கானத்
தானிரைகன் றெனவிரங்கி மோந்துநக்க
வானந்த வருட்கண் ணீரைக்

கானிறைபுள் ளினம்பருகக் கருணைநெடுங்
கடலிருக்குங் காட்சி போலப்
பானிறவெண் ணீற்றன்ப ரசைவின்றிச்
சிவயோகம் பயிலு நாளில்.

(இ - ள்.) மயங்கு கானத்து - இருள் செறிந்த அக்காட்டின்கண், மான் நிரையும் குயவரியும் வந்து ஒருங்கு நின்று உரிஞ்ச - மான் கூட்டங்களும் புலிகளும் வந்து ஒருசேரநின்று உரிஞ்சவும், ஆன்நிரை-பசுக்கூட்டங்கள், கன்று என இரங்கி மோந்து நக்க - கன்று என்று இரங்கிமோந்து நக்கவும், ஆனந்த அருள் கண்ணீரை - அருள்மயமாகிய இன்பக் கண்ணீரை, கான் நிறை புள் இனம் பருக - அக்காட்டில் நிறைந்த பறவைக் கூட்டங்கள் பருகவும், கருணை நெடுங்கடல் இருந்த காட்சிபோல - நீண்ட அருட்கடல் இருந்த தோற்றம் போல, பால்நிற வெண்நீற்று அன்பர் - பால் போன்ற நிறத்தினையுடைய வெண்ணீற்றினை யணிந்த அடிகள், அசைவு இன்றிச் சிவயோகம் பயிலும் நாளில் - சலிப்பற்றுச் சிவயோகம் பயிலாநின்ற நாளில்.

குயம் - அரிவாள். குயவரி - குயம்போலும் வரிகளையுடைய புலி; அன்மொழித்தொகை. தல விசேடத்தாலும் தவச்சிறப்பாலும் தம்முட் பகையுள்ள விலங்குகளும் பகைமையொழிந்தன என்பார் 'மானிரையும் குயவரியும் வந்தொருங்கு நின்றுரிஞ்ச' என்றார். உரிஞ்சவும் நக்கவும் பருகவும் பயிலுநாளில் என்றது சாந்தமயமான சிவயோக நிலையை விளக்கியபடி. (௬௬)

புத்தர்சில ரிலங்கையினும் போந்துமூ
வாயிரமெய்ப் போத வேத
வித்தகரோ டேழுநாள் வரையறுத்துச்
சூளோட்டி விவாதஞ் செய்வார்
இத்தகைய நாளேழில் யாமிவரை
வேறுமெனு மெண்ணம் பூண்ட
சித்தமுடை யவராக வவர்கனவி
லெழுந்தருளித் தேவ தேவர்.

(இ - ள்.) புத்தர் சிலர் இலங்கையினும் போந்து - சில புத்தர்கள் இலங்கையினின்றும் வந்து, மெய்ப்போத மூவாயிர வேத வித்தகரோடு - உண்மை ஞானமுடைய மறையவர் மூவாயிரவரோடும், ஏழு நாள் வரையறுத்து சூள்ஒட்டி விவாதம் செய்வார் - ஏழு நாள் வரையறுத்துக்கொண்டு வஞ்சினங்கூறி வாதஞ்செய்வாராயினர்; இத்தகைய நாள் ஏழில் - இங்ஙனம் வரையறுத்த ஏழு நாளில், இவரை வேறும் எனும் எண்ணம் பூண்ட சித்தமுடையவராக - யாம் இவரை வெல்வோமென்னும் நினைவை மேற்கொண்ட உள்ளமுடையவராக; அவர் கனவில் தேவதேவர் எழுந்தருளி - அவர் கனவின்கண் தேவதேவ ராகிய இறைவர் எழுந்தருளி.

இலங்கையினும் - இலங்கையினின்றும், வேறும்: தன்மைப் பன்மை முற்று; வெல்:பகுதி தும்:விகுதி. சைவ மாதவரொருவர் ஈழ நாட்டுக்குச் சென்றவர் 'பொன்னம்பலம் வாழ்க' என்று யாண்டும் கூறிக்கொண்டு செல்லா நிற்கையில் அதனை அறிந்த புத்தர் சிலர் அதனைத் தம் அரசனுக்கு அறிவிக்கவே அவன் அவரை வருவித்து 'நீர் கூறும் பொன்னம்பலம் என்பது யாது? அதனைத் தெரியக் கூறுவீராக' என்றதும், அவர் பொன்னம்பலத்தின் மான்மியங்களை எடுத்துக் கூறும் பொழுது அவ்வரசனோ டொருங்கிருந்த புத்தகுரு கேட்டுச் சினங் கூர்ந்து, அக்கோயிலை வாதில் வென்று புத்தன் பள்ளியாக்குவே னென்னத் தன் மாணாக்கர்களுடன் சென்றனன்; எனப் புத்தர்கள் இலங்கையினின்றும் வந்த வரலாறு திருவாதவூரர் புராணத்திற் கூறப் பெற்றுள்ளது. (௬௭)

வாதவூ ரனைவிடுத்து வாதுசெய்வீ
ரெனவிழித்து மறையோ ரந்தப்
போதவே தியரைவனம் புகுந்தழைத்தா
ரப்போது பொதுவி லாடும்
வேதநா யகன்பணித்த வழிநின்று
ரெதிர்மறுப்ப மீண்டு போந்து
காதரா குலமூழ்கி யிருந்தார்முத்
தழனிமிர்த்துக் கலியைக் காய்வார்.

(இ-ள்.) வாதவூரனை விடுத்து வாது செய்வீர் என - நமது திரு வாதவூரனை விடுத்து வாதஞ் செய்யுங்கள் என்று கூறியருள, மறை யோர் விழித்து - வேதியர்கள் விழித்து, அந்தப் போதவேதியரை - அந்த ஞான மறையோரான வாதவூரரை, வனம்புகுந்து அழைத்தார் - அவ்வனத்திற் சென்று அழைத்தனர்; அப்போது - அப்பொழுது, பொதுவில் ஆடும் வேதநாயகன் பணித்தவழி நின்றார் - பொன்னம்ப லத்தில் ஆடியருளும் வேதநாயகனாகிய இறைவன் கட்டளையிட்ட நெறியில் நிற்பவராகிய அடிகள், எதிர்மறுப்ப - தடுத்துக்கூற, முத் தழல் நிமிர்த்துக் கலியைக் காய்வார் - முத்தீயை வளர்த்து உயிர்களின் துன்பத்தைப் போக்குபவராகிய அம்மூவாயிரவரும், மீண்டு போந்து - திரும்பிவந்து, காதர ஆகுலம் மூழ்கி இருந்தார் - அச்சந்தருந் துன்பக் கடலுள் மூழ்கியிருந்தனர்.

மன்றுடையான் திருவாக்கால் தபோவனத்தைக் குறுகிச் சிவ யோகம் பயின்றனர் என முற்கூறினமையின் ஈண்டும் 'வேதநாயகன் பணித்த வழி நின்றார்' என்றார். காதரம்-அச்சம். காதராகுலம்: வடமொழி நெடிற்சந்தி. முத்தழல் காருகபத்தியம், ஆகவனீயம், தென்றிசையங்கி யென்பன. நிமிர்த்தல் - வளர்த்தல் என்னும் பொருட்டு, காய்வார்: வினைப்பெயர். (௬௮)

பின்னுமவர் கனவின்கண் மன்றுணடம்
பிரியாத பெருமான் வந்து
முன்னவனைப் பெருந்துறையிற் குருந்தடியி
லாட்கொண்ட முறையி னானும்
இன்னிசைவண் டமிழ்மணிபோற் பாடுங்கா
ரணத்தானும் யாமன் றிட்ட
மன்னியபேர் மாணிக்க வாசகனென்
றழைமின்கள் வருவ னென்றார்.

(இ - ள்.) மன்றுள் நடம்பிரியாத பெருமான் - பொன்னம்பலத்தில் நீங்காது நடம்புரியும் இறைவன், பின்னும் அவர் கனவின் கண் வந்து - மீண்டும் அவர் கனவிலே வந்து, அவனை முன் பெருந்துறையில் குருந்து அடியில் ஆட் கொண்ட முறையினானும் - அவனை முன்னே திருப்பெருந் துறையில் குருந்தமரத்தின் நிழலில் ஆட்கொண்டருளிய முறையாலும், இன் இசை வண்தமிழ் - இனிய இசையோடு கூடிய வளம் நிறைந்த தமிழ்ப் பாட்டுக்களை, மணிபோல் பாடும் காரணத்தானும் - மாணிக்கம் போலப் பாடுகின்ற காரணத்தாலும், யாம் அன்று இட்ட மன்னிய பேர் மாணிக்க வாசகன் என்று அழைமின்கள் - யாம் அன்று இட்ட நிலைபெற்ற பெயர் மாணிக்கவாசகனாகும் ஆதலால் அப்பெயரைக் கூறி அழையுங்கள்; வருவன் என்றார் - வருவா னென்று அருள் செய்தார்.

மாணிக்கவாசகனாகும் ஆதலால் அப்பெயரைக்கூறி அழையுங்கள் என விரித்துரைக்க; அப்பெயரினைத் தாமும் வாதவூரரும் அன்றிப் பிறர் அறியாராகலின் அதனைக் கூறியழைப்பின் தமது ஆணையென அறிந்து வருவரென்பார் 'மாணிக்க வாசக னென் றழைமின்கள் வருவன்' என்று கூறினாரென்க. இட்டபேர், மன்னியபேர் எனத்தனித்தனி இயையும். (௧௧)

உறக்கமொழிந் தறவோர்சென் றவர்நாம
மொழிந்தழைப்ப வுணர்ந்து நாதன்
அறக்கருணை யிதுவோவென் றவரோடு
மெழுந்துநக ரடைந்து மண்ணுந்
துறக்கமுநீத் தருவருத்தார் மன்றாடுந்
துணைக்கமலந் தொழுது மீண்டோர்
நிறக்கனக மண்டபத்திற் புக்கிருந்தா
ரறிஞர்குழா நெருங்கிச் சூழ.

(இ - ள்.) அறவோர் உறக்கம் ஒழிந்து சென்று - அவ்வந்தணர் தூக்கம் நீங்கிப் போய், அவர் நாமம் மொழிந்து அழைப்ப - அவர் பெயரைக்கூறி அழைப்ப, மண்ணும் துறக்கமும் நீத்து அருவருத்தார் - நிலவுலக இன்பினையும் துறக்க வுலகஇன்பினையும் அருவருத்துத்துறந்த

அடிகள், உணர்ந்து - அதனை யறிந்து, நாதன் அறக்கருணை இதுவோ வென்று - இறைவன் அறக்கருணை இதுவோவென்று கருதி, அவரோடும் எழுந்து நகர் அடைந்து - அம்மறையவரோடும் எழுந்து நகரத்தை அடைந்து, மன்று ஆடும் துணைக்கமலம்தொழுது - பொதுவின்கண் ஆடுகின்ற இரண்டு திருவடித் தாமரைகளையும் வணங்கி, மீண்டு ஓர் நிறக்கனக மண்டபத்தில் புக்கு - திரும்பி ஓர் ஒளியினையுடைய பொன்மண்டபத்திற் புகுந்து, அறிஞர் குழாம் நெருங்கிச் சூழ இருந்தார்-அறிஞர்கூட்டம் நெருங்கிச் சூழாநிற்க இருந்தருளினார்.

மாணிக்க வாசகர் என்பது இறைவனளித்த பெயராகலின் அதனையே 'அவர் நாமம்' என்றார்.

'நாயினேனை நலமலி தில்லையுட், கோலமார்தரு பொதுவினில் வருக' என இவறவன் பணித்த காரணங்களில் இதுவும் ஒன்றே வெனக் கருதின ரென்பார், 'நாதன் அறக்கருணை இதுவோ வென்று புக்கிருந்தார்' என்றார் மன்னும் துறக்கமும் நீத்து அருவருத்தமையை,

"வானேயும் பெறில் வேண்டேன் மண்ணாள்வான் மதித்து [மிரேன்"

என்றற்றொடக்கத்தனவாக அடிகள் திருவாசகத்தில் அருளிச்செய்தலானறிக. (௧௦௦)

[வேறு]

தத்துநீர்க் கலத்திற் போந்த சீவரப் போர்வை தாங்கும்
புத்தரை வேறு வைத்துப் புகன்மினும் மிறையு நூலும்
அத்தலை நின்றோ ரெய்துங் கதியுமென் றாய்ந்த கேள்வி
மெய்த்தவ நெறிமா ணிக்க வாசகர் வினவி னாரே.

(இ - ள்.) தத்தும் நீர்க்கலத்தில் போந்த - அலைகள் தாவும் கடலில் மரக்கலத்தில வந்த, சீவரப்போர்வை தாங்கும்-கடுக்காய் நீரிற்றோய்த்த போர்வையைத் தாங்கும், புத்தரை வேறு வைத்து - புத்தர்களை வேறாக இருத்தி, நும் இறையும் நூலும் அத்தலை நின்றோர் எய்தும் கதியும் புகல்மின் என்று - நுமது கடவுளையும் நூலையும் அந்நெறியில் நின்றவர் செல்லுங் கதியையும் கூறுங்களென்று, ஆய்ந்த கேள்வி - ஆராய்ந்த கேள்வியினையும், மெய்த்தவ நெறி - உண்மைத்தவ வொழுக்கத்தையுமுடைய, மாணிக்கவாசகர் வினவினார் - மணிவாசகனார் வினவியருளினர்.

சீவரப் போர்வை - மருதந்தளிர் ஊறிய துவர்நீரிற்றோய்த்த போர்வை என்றும் கூறுவர். நூல் - கடவுள் கூறிய முதனூல். அத்தலை - அந்நூல்வழி. (௧௦௧)

கனவினு நீறு காணாக் கைதவர் காட்சி யானும்
மனவனு மானத் தானும் வாசகப் பெருமான் றம்மை
வினவிய மூன்று முத்தே சாதியின் விரித்தார் வேதம்
அனையவர் கேட்டம் மூன்று மனுவாதஞ் செய்துட் கோள்ளா.

(இ - ள்.) கனவினும் நீறுகாணுக் கைதவர் - கனவிலும் திரு நீற்றைக் காணாத வஞ்சகராகிய அப்புத்தர்கள், காட்சியானும் மன அனுமானத்தானும் - காட்சியளவையினாலும் கருதலளவையினாலும், வாசகப் பெருமான் தம்மை வினவிய மூன்றும் - மணிவாசகப் பெரு மானார் தம்மைக் கேட்ட மூன்றையும், உத்தேச ஆதியின் விரித்தார் - உத்தேச முதலியவற்றால் விரித்துக் கூறினர்; வேதம் அனையவர் கேட்டு - மறைபோல்வாராகிய அடிகள் கேட்டு, அம்மூன்றும் அனுவாதம் செய்து உட்கொள்ளா - அம்மூன்றினையும் அனுவதித்து மனத்துட் கொண்டு.

புத்தர்கட்குக் காட்சியும் அநுமானமுமே பிரமாண மாதலால் 'காட்சியானு மனவநுமானத்தானும்' என்றார். மனத்தாற் கருதியறி தலே அநுமானம் என்பார் 'மனவனு மானத்தானும்' என்றார் என்க. வினவிய மூன்று - இறை, நூல், கதி என்பன. உத்தேசாதியின் - உத்தேசம், இலக்கணம், பரீக்கை என்பனவற்றால்.; உத்தேசம் - கூறும் பொருளைப் பெயர் மாத்திரையான் எடுத்தோதல்: இலக்கியம், இலக்கணம் - சிறப்பியல்பு; அவ்வியாத்தி அதிவியாத்தி அசம்பவம் என்னும் முக்குற்றங்களும் இல்லாத தன்மை. பரீக்கை-இலக்கியத்தில் இலக்கணம் உளதாதலை ஆராய்தல். உத்தேசாதி, தீர்க்கசந்தி. அறிவு நிறைவானும், தூய்மையானும் வேதத்தை உவமை கூறினார். அனு வாதஞ்செய்தல் - பிறர் கூறியவற்றை ஒருபயன் நோக்கித் தான் எடுத்து மொழிதல். 'ஆதியுத்தேசத்தானு மிலக்கணவமைதியானும் சோதனை வகைமையானுஞ் சொன்ன நூலனுவாதித்து' என்னும் தடாதகைப்பிராட்டியார் திருவவதாரப்படலச் செய்யுளுரையில் உரைத்தமையுங் காண்க. (க0உ)

இன்றிவர்க் கனுமா னாதி யெடுப்பதென் னென்று காட்சி
ஒன்றுகொண் டவர்க டாமே யுடம்படன் மறுத்தார் காட்சி
அன்றியே தின்மை யாலே யனுமான வளவை யாலும்
நின்றவன் றுங்கோ னாதி நிறுத்திய மூன்று மென்றார்.

(இ - ள்) இன்று இவர்க்கு அனுமான ஆதி எடுப்பது என்என்று - இப்பொழுது இவர்கட்குக் கருதல் முதலிய அளவைகளை எடுத்துக் கூறுதல் எதற்கு என்று கருதி, காட்சி ஒன்றுகொண்டு காட்சியளவை ஒன்றினாலே, அவர்கள் தாமே உடம்படல் மறுத்தார் - அவர்களே உடம்படுமாறு மறுத்து, காட்சி அன்றி ஏது இன்மையாலே - காட்சி யளவை இன்றி ஏது இல்லையாகலின், உங்கோன் ஆதி நிறுத்திய மூன்றும், - உமது கடவுள் முதலாக நீர் நிலைநிறுத்திய மூன்றும், அனு மான அளவையாலும் நின்ற அன்று என்றார் - கருதலளவை யாலும் நின்றன அல்ல என்று கூறியருளினர்.

அனுமானாதி - அனுமானமும் உரையளவையும். உடம்படல் - உடம்படுங் கொள்கையை என்றுமாம். இறை முதலிய மூன்றும் காட்சிக் கெய்தாமையின் காட்சியளவையானும், காட்சியின்றி அனு மானத்திற்குச் சிறந்த கருவியாகிய ஏது பெறப்படாமையின் அனுமான வளவையானும் அவர் அவற்றை நிறுவலாகாமையுணர்க. தீக்கும் புகைக்குமுள்ள உடனிகழ்ச்சியை அடுக்களை முதலியவற்றிற் கண்

டிருந்தாலன்றி 'இம்மலை தீயுடைத்து; புகையுடைமையால்' என அனுமானித்தல் செல்லாதென்க. புத்தர் கூறும் இறை முதலிய மூன்று பொருள்களின் இயல்பினையும், சைவர்களால் அவை மறுக்கப்படு மாற்றையும் சிவஞான சித்தியார் பரபக்கத்திற் காண்க. (௧0௩)

போன்றுதன் முத்தி யென்பார் பூசுரர் பிரானை நோக்கி
இன்றெமைக் காட்சி யொன்றால் வென்றன மென்றீ ரானால்
நன்றுநுங் கடவு டன்னை யளவையா னாட்டி யெம்மை
வென்றிடு மென்று ரைந்தும் வென்றவர் முறுவல் செய்யா.

(இ - ள்.) பொன்றுதல் முத்தி என்பார் - பஞ்சகந்தங் கெடுதலே வீடுபேறு என்னும் அப்புத்தர்கள், பூசுரர் பிரானை நோக்கி - அந்தணர் பெருமானாகிய அடிகளை நோக்கி, இன்று எமைக்காட்சி ஒன்றால் வென்றனம் என்றீர் ஆனால் - இப்பொழுது எங்களைக் காட்சியளவை ஒன்றினாலே வென்றோமென்று கூறினீராயின், நன்று - நல்லது, நும் கடவுள் தன்னை அளவையால் நாட்டி - நுமது கடவுளை அளவையால் நிலைநாட்டி, எம்மை வென்றிடும் என்றார் - எங்களை வெல்லும் என்று கூறினார்; ஐந்தும் வென்றவர் முறுவல் செய்யா - ஐம்புலன்களையும் வென்றவராகிய மணிவாசகர் நகைத்து.

உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, அறிவு என்னும் ஐந்து கந்தங்களும் பொன்றக் கெடுதலே முத்தியென்பர் புத்தராகலின் 'பொன்றுதல் முத்தி யென்பார்' என்றார்;

''ஓங்கிய உருவ மோடும் வேதனை குறிப்பி னோடும்
தாங்குபா வனைவிஞ் ஞானந் தாமிவை யைந்துங் கூடிப்
பாங்கினாற் சந்தா னத்திற் கெடுவது பந்த துக்கம்
ஆங்கவை பொன்றக் கேடா யழிவது முத்தி யின்பம்''

என்னும் சிவஞானசித்தியாரின் பரபக்கச் செய்யுள் காண்க. நன்று என்பது அனுவதித்தற் குறிப்பாக வழங்குவது. ஐந்தும்: தொகைக் குறிப்பு. (௧0௪)

பிறவியந் தகர்க்கு வெய்யோன் பேரொளி காட்ட லாமோ
மறைகளா லளவை தன்னாற் றேவரான் மனத்தால் வாக்கால்
அறிவருஞ் சோதி யெங்கோ னவன்றிரு நீற்றுத் தொண்டின்
குறிவழி யன்றிக் காணுங் கொள்கையா னல்ல னென்றார்.

(இ - ள்.) பிறவி அந்தகர்க்கு வெய்யோன் பேர் ஒளி காட்ட லாமோ - பிறவிக்குருடர்க்குச் சூரியனது பெரிய ஒளியினைக் காட்ட லொண்ணுமோ, மறைகளால் அளவைதன்னால் - மறைகளாலும் அளவைகளாலும், தேவரால் மனத்தால் வாக்கால் அறிவரும் சோதி எங்கோன் - தேவர்களாலும் மனத்தாலும் மொழியினாலும் அறிதற் கரிய ஒளிவடிவினன் எமது இறைவன்; அவன் - அவ்விறைவன், திரு நீற்றுத் தொண்டின் குறிவழி அன்றி - திருநீற்றுத் தொண்டாகிய குறி வழியே நிற்பார்க்கு அல்லாமல், காணும் கொள்கையான் அல்லன்

என்றார் - ஏனையோரால் காணுந் தன்மையையுடையனல்லன் என்று கூறினர்.

அளவை—காட்சி முதலியன. எண்ணும்மைகள் தொக்கன. அடியார்க்கு அடியாராதலைத் 'திருநீற்றுத் தொண்டு' என்றார். (க0ரு)

தேற்றமில் லாத ருங்கள் சிவனுக்குந் திருநீற் றுக்குந்
தோற்றமெப் படித்திட் டாந்தஞ் சொல்லுமி னென்றார் தூயோர்
வேற்றுமை யறநா மின்னே விளக்குது மதனை நீங்கள்
தோற்றபி னுமக்குத் தண்டம் யாதுகோல் சொன்மி னென்றார்.

(இ - ள்.) தேற்றம் இல்லாதார் - தெளிவில்லாத அப்புத்தர்கள், உங்கள் சிவனுக்கும் திருநீற்றுக்கும் - உங்கள் சிவபெருமனுக்குந் திருநீற்றுக்கும் உள்ள இயைபுக்கு, தோற்றம் எப்படி திட்டாந்தம் சொல்லுமின் என்றார் - காட்சியளவை யாது உதாரணஞ் சொல்லுங்களென்றார்; தூயோர் - புனிதராகிய அடிகள், நாம் இன்னே அதனை வேற்றுமை அற விளக்குதும் - நாம் இப்பொழுதே அதனை வேற்றுமை நீங்க விளக்கிக் காட்டுவோம்; நீங்கள் தோற்றபின் - நீவிர் தோல்வியுற்ற பின்னர், நுமக்குத் தண்டம் யாது கொல் சொன்மின் என்றார் - நுமக்குத் தண்டனை யாது சொல்லுங்களென்று வினவினர்.

திருட்டாந்தம் எனற்பாலது விகாரமாயிற்று. திருட்டாந்தம் - காணப்பட்ட முடிபுடையது. உதாரணம். கொல்: அசை. (க0சு)

செக்குர லிடையிட் டேம்மைத் திரிப்பது தண்ட மென்னு
எக்கராம் புத்தர் தாமே யிசைந்தன* ரேரிவாய் நாகங்
கோக்கிற கணிந்தா ரன்ப ருலர்ந்தகோ மயத்தை வாங்கிச்
செக்கரந் தழல்வாய்ப் பெய்து சிவந்திட வேதுப்பி வாங்கி.

(இ - ள்.) செக்கு உரலிடை எம்மை இட்டுத் திரிப்பது தண்டம் என்னு - செக்காகிய உரலின்கண் எம்மைப் போட்டுத் திரிப்பதுவே தண்டனை என்று, எக்கராம் புத்தர் தாமே இசைந்தனர் - இறுமாப்புடையராகிய புத்தர்கள் தாமே கூறி உடன்பட்டனர்; எரிவாய் நாகம் கொக்கு இறகு அணிந்தார் அன்பர் - நஞ்சினையுடைய வாயையுடைய பாம்பினையும் கொக்கினிறகினையும் அணிந்த சிவபெருமானுக்கன்பராகிய மாணிக்கவாசகர், உலர்ந்த கோமயத்தை வாங்கி - காய்ந்த கோமயத்தை எடுத்து, செக்கர் அம் தழல் வாய்ப்பெய்து - சிவந்த நெருப்பின்கண் போட்டு, சிவந்திட வெதுப்பி வாங்கி - அது சிவக்குமாறு எரித்து அதனை எடுத்து.

எரி என்றது நஞ்சினை. கோமயம் - ஆவின் சாணம். செக்கர் - செம்மை: பண்புப் பெயர். (க0எ)

(பா - ம்.) * இசைத்தனர்.

இவ்வண்ண மிருக்கு மேங்க ளிறைவண்ண வடிவு மந்தச்
செவ்வண்ண மேனி பூத்த திருவெண்ணீ றதுவு மேன்று
மெய்வ்வண்ண முணர்ந்த வேத வித்தக ரவைமுன் காட்ட
உய்வ்வண்ண மறியா மூட ருள்ளமு முயிருந் தோற்றார்.

(இ - ள்.) எங்கள் இறை வண்ண வடிவும் - எங்கள் இறைவனது ஒளி பொருந்திய வடிவமும், அந்தச் செவ்வண்ணம் மேனி பூத்த - அந்தச் செவ்வொளியுடைய திருமேனியில் மலர்ந்த, திரு வெண்ணீறு அதுவும் - திருவெண்ணீறும், இவ்வண்ணம் இருக்கும் என்று - இவ்வாறு இருக்கும் என்று, மெய்வண்ணம் உணர்ந்த வேத வித்தகர் - மெய்யின் தன்மையை உணர்ந்த அந்தணராகிய அடிகள், அவை முன் காட்ட - அவையோர்முன் காண்பிக்க, உய்வண்ணம் அறியா மூடர் - பிழைக்கும் நெறியினை அறியாத மூடர்களாகிய அப் புத்தர்கள், உள்ளமும் உயிரும் தோற்றார் - மன வூக்கத்தையும் உயிரையும் ஒருங்கே தோற்றனர்.

கோமயத்திற் பற்றிய தீயே திருமேனியாகவும், அத்தியின் மேற் பூத்த நீறு திருமேனியிற் பூத்த நீறாகவும் இயைபு காட்டினர் என்க. அது, பகுதிப் பொருள் விகுதி. உள்ளம் - ஊக்கம். செக்கிலிட் டரைப்பது எனத் தாம் இசைந்தபடி உயிரிழப்பது திண்ணமாகலின் 'உயிருந் தோற்றார்' என்றார். (௧0அ)

இங்கிவர் தோற்ற வண்ணங் கேட்டவ ரிறப்ப தின்பந்
தங்குவீ டென்று தேற்றுஞ் சமயத்தி லாழ்ந்த வாத்திக்
கோங்கிவர் தாரான் மூங்கைக் குயிற்பெடை யெனத்தா னீன்ற
மங்கையைக் கொண்டு தில்லை மல்லன்மா நகரில் வந்தான்.

(இ - ள்.) இங்கு இவர் தோற்றவண்ணம் கேட்டு - இங்கு இவர்கள் தோல்வியுற்ற தன்மையைக் கேட்டு, அவர் இறப்பது இன்பம் தங்கு வீடு என்று தேற்றும் சமயத்தில் - அப்புத்தர்களால் பஞ்ச கந்தங் கெடுதலே இன்பம் நிலைபெற்ற வீடு என்று தேற்றப்படுஞ் சமயப் படுகுழியில், ஆழ்ந்த - அழுந்திய, ஆத்திக் கொங்கு இவர் தாரான் - ஆத்திமலராலாகிய மணம் விரிந்த மாலையை யணிந்த சோழன், மூங்கைக் குயில் பெடை எனத் தான் ஈன்ற - கூவாத பெண் குயில் போலத் தான் பெற்ற, மங்கையை கொண்டு - மங்கையை உடன் கொண்டு, தில்லை மல்லல்மா நகரில் வந்தான் - தில்லை யென்னும் வளமிக்க பெரிய பதியின்கண் வந்தனன்.

இறப்பது என்றது பஞ்சகந்தங் கெடுதலை. அவர் தேற்றும் சமயத்தில் எனக் கூட்டுக. மங்கையைக் குயிற்பெடை யெனக் கொண்டு என இயைத்தலுமாம். (௧0௯

யாவரே யாக வின்றிங் கென்மகண் மூங்கை தீர்த்தோர்
ஆவரே வென்றோ ரென்றா ஞற்றவு மானம் பூண்டு
சாவதே முத்தி யென்பார் மணிமுதன் மூன்றுந் தங்கள்
தேவரே யென்றெ னுள்கிச் செய்யவுந் தீரா தாக.

(இ - ள்.) யாவரே ஆக - யாவராயினுமாக, இன்று - இப்பொழுது, இங்கு என் மகள் மூங்கை தீர்த்தோர் ஆவரே - இவ்விடத்தில் என் புதல்வியின் மூங்கையைத் தீர்த்தவரே, வென்றோர் என்றான் - வெற்றி பெற்றவர் என்று கூறினன்; சாவதே முத்தி என்பார் - பஞ்சகந்தங் கெடுதலே விடு என்று கூறும் அப்புத்தர், ஆற்றவும் மானம் பூண்டு - மிகவும் மானத்தை மேற்கொண்டு, மணி முதல் மூன்றும் தங்கள் தேவரே என்று என்று உள்கி - மணி முதலிய மூன்றும் தங்கள் புத்தரே என்று பன்முறையுங் கருதி, செய்யவும் தீராதாக - வேண்டுவன புரியவும் அது நீங்காதாக.

வென்றோர் ஆவரே எனக் கூட்டியுரைத்தலும் ஆம். சாவதே முத்தி யென்பார் - ஐங்கந்தம் அழிதலே முத்தி யென்பார்; எள்ளுங் கருத்தால் இங்ஙனங் கூறினர். மணி முதல் மூன்று - மணி, மந்திரம், மருந்து. தங்கள் தேவரே மெய்த் தேவரென்று உள்கி மூன்றும் செய்யவும் என்றுரைத்தலுமாம். (௧௧0)

அந்தணர் பெருமான் முன்போ யரசன்றன் மகளைப் போகட்
டிந்தநோய் நீரே தீர்க்க வேண்டுமேன் றிரந்தா னையன்
சுந்தர நாதன் மன்று ளாடிய துணைத்தா டன்னைச்
சிந்தைசெய் தருட்க ணோக்காற் றிருந்திழை யவளை நோக்கா.

(இ - ள்.) அந்தணர் பெருமான் முன் அரசன் போய் - அந்தணர் பிரானாகிய அடிகளின் முன் அரசன் சென்று, தன் மகளைப் போகட்டு - தன் புதல்வியை இருத்தி, இந்த நோய் நீரே தீர்க்க வேண்டும் என்று இரந்தான் - இந்தப் பிணியினை அடிகளே நீக்கவேண்டு மென்று குறையிரந்தான்; ஐயன் - அடிகள், சுந்தர நாதன் மன்றுள் ஆடிய துணைத்தாள் தன்னைச் சிந்தை செய்து - சோம சுந்தரக் கடவுளின் மன்றுளாடும் இரண்டு திருவடிகளையும் மனத்திலிருத்தி, அருள் கண் நோக்கால் திருந்து இழை அவளை நோக்கா - அருட் பார்வையினால் திருத்தமாகிய அணிகளையணிந்த அம்மங்கையை நோக்கி.

போகட்டு - போட்டு, கிடத்தி. ஐயனாகிய சுந்தர நாதன் என்றுமாம். திருவாலவாயில் எழுந்தருளிய பெருமானே தில்லை மன்றுள் நடிப்பவரும் என்று கருதினாரென்பார், 'சுந்தரநாதன் மன்றுளாடிய துணைத்தாள் தன்னைச் சிந்தை செய்து' என்றார். (௧௧௧)

வேறுவே றிறைவன் கீர்த்தி வினாவுரை யாகப் பாடி
ஈறிலா னன்பர் கேட்ப விறைமொழி கொடுத்து மூங்கை
மாறினாள் வளவன் கன்னி மடவரல் வளவன் கண்டு
தேறினான் சிவனே யெல்லாத் தேவர்க்குந் தேவ னென்னா.

(இ - ள்.) இறைவன் வேறு வேறு கீர்த்தி - இறைவனது வேறு வேறாகவுள்ள புகழ்களை, வினா உரையாகப் பாடி - வினா மொழியாகப் பாடி. ஈறு இலான் அன்பர் கேட்ப - முடிவில்லாத அப்பெருமானுக்கு

அன்பராகிய வாதவூரடிகள் கேட்க, வளவன் கன்னி மடவரல் - சோழன் புதல்வியாகிய அங்நங்கை, இறைமொழி கொடுத்து மூங்கை மாறினள் - அவற்றுக்கு மறுமொழி கொடுத்து மூங்கைத் தன்மை நீங்கினள், வளவன் கண்டு - சோழன் அதனைப் பார்த்து, சிவனே எல்லாத் தேவர்க்கும் தேவன் என்னுத் தேறினன் - சிவபெருமானே எல்லாத் தேவர்களுக்கும் தேவனுவா னென்று தெளிந்தான்.

ஈறிலான் - சுட்டு. இறை - விடை. வாதவூரடிகள் தாம் வினவிய வற்றையும் அங் நங்கையின் விடைகளையும் 'திருச்சாழல்' என்னும் பதிகமாகப் பாடியருளினர் என்க.

> "பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
> பேசுவதுந் திருவாயான் மறைபோலுங் காணேடீ
> பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
> ஈசனவ னெவ்வுயிர்க்கு மியல்பானுன் சாழலோ"

என்னும் பாட்டில் முன்னிரண்டடியும் வினவாகவும் பின்னிரண் டடியும் விடையாகவும் கொள்க. (கக௨)

> பின்பர வாரம் பூண்ட பிரானருள் விளையப் பாடும்
> அன்பரை முனிவர் மூவா யிரவரை யடியிற் றாழ்ந்து
> முன்பவர் சொன்ன வாறே மூர்க்கரைத் தடிந்து மன்றுள்
> இன்பரை நடங்கண் டேத்தி யிறைமகன் சைவ னுனன்.

(இ - ள்.) பின்பு - பின், அரவு ஆரம் பூண்டபிரான் அருள் விளையப் பாடும் அன்பரை - பாம்பை ஆரமாக அணிந்த ஆண்டவனது திருவருள் விளையுமாறு பாடும் அன்பராகிய மாணிக்கவாசகரையும், முனிவர் மூவாயிரவரை - அந்தணர் மூவாயிரவரையும், அடியில் தாழ்ந்து - அடிகளில் வீழ்ந்து வணங்கி, மூர்க்கரை அவர் முன்பு சொன்னவாறே தடிந்து - மூர்க்கர்களாகிய புத்தர்களை அவர் முன் சொல்லியபடியே ஒறுத்து, மன்றுள் இன்பரை - பொதுவிலாடும் இன்ப வடிவினரை, நடம் கண்டு ஏத்தி-அவர் திருக்கூத்தினைக் கண்டு வழுத்தி, இறைமகன் சைவன் ஆனுன் - சோழமன்னன் சைவனுயினன்.

அடியிற்றுழ்ந்து என்பது ஒரு சொல்லாய் அன்பரை மூவாயிர வரை என்பவற்றுக்குத் தனித்தனி முடிபாயிற்று. அவர் சொன்ன வாறே - அப்புத்தர்கள் தாமே சொன்னவாறு. கொண்டதுவிடார் என்பார் 'மூர்க்கரை'. என்ருர். சைவனுகி அடியிற்றுழ்ந்து ஏத்தினன் என்று கருத்துக்கொள்க. மாணிக்கவாசகர் பணியால் நாமகள் புத்தர் களின் நாவை விட்டகல அவர்கள் மூகையானமை அறிந்த ஈழத்தரசன் தனது ஊமைப் பெண்ணை அழைத்து அவளது ஊமைத் தன்மையைத் தீர்க்குமாறு வேண்ட அவர் அங்ஙனமே புத்தர் கூறிய தருக்கத்திற் கெல்லாம் அப்பெண் மாறு கூறுமாறு செய்து ஊமை தீர்த்தனர் என்றும், அதனை அறிந்து ஈழமன்னன் சைவனுயினுன் என்றும், புத்தர்

களின் ஊமைத் தன்மையையும் இங்ஙனமே தீர்த்தருளுமாறு ஈழத்தரசனும், சோழ மன்னனும் முதலாயினார் வேண்டிக்கொள்ள அடிகள் அவர்களது மூகையையும் போக்கினர் என்றும், பின் புத்தரெல்லாரும் சிவவேடம் பூண்டு சைவராயினர் என்றும் திருவாதவூரடிகள் புராணம் கூறும். (௧௧௩)

மாசறு மணிபோற் பன்னாள் வாசக மாலை சாத்திப்
பூசனை செய்து பன்னாட் புண்ணிய மன்று ளாடும்
ஈசன தடிக்கீ ழெய்தி யீறிலா வறிவா னந்தத்
தேசோடு கலந்து நின்றார் சிவனருள் விளக்க வந்தார்.

(இ - ள்.) சிவன் அருள் விளக்க வந்தார் - சிவபெருமான் திருவருளை விளக்கிக்காட்ட வந்த வாதவூரடிகள், பலநாள் மாசு அறுமணி போல் வாசகமாலை சாத்தி - பலநாள்வரை குற்றமற்ற 'மாணிக்க மாலை போலும் திருவாசக மாலையைச் சாத்தி, பல்நாள் பூசனைசெய்து - பன்னாட்கள்வரை வழிபாடு செய்து, புண்ணியமன்றுள் ஆடும் ஈசனது அடிக்கீழ் எய்தி - அறவடிவாகிய அம்பலத்தி லாடியருளும் திருக்கூத்தனது திருவடி நிழலை அடைந்து, ஈறு இலா அறிவு ஆனந்தத் தேசொடுகலந்து நின்றார் - அழிவில்லாத சிவானந்த ஒளியுடன் கலந்து நின்றருளினார்.

மணிபோலும் வாசகங்களாகிய மாலை என விரித்தலுமாம். மாணிக்கவாசகர் தில்லைப்பதியிலே மற்றும் பற்பல திருப்பதிகங்கள் பாடியருளிப் பன்னசாலையில் எழுந்தருளி யிருக்கும்போது, இறைவர் ஒரு மறையோர் கோலந்தாங்கி வந்து, "யாமிருப்பது பாண்டிநாடு; மாலும் அயனும் காணவரிய இறைவரைப் பரிமீதேறிவரச் செய்தநும் பெருமையாலே பாண்டி நாடு பெருவாழ்வுற்றது: நீர் திருப் பெருந்துறையில் ஐயன் திருவடியைச் சேவித்துத் திருக்கழுக்குன்றம் சென்று தில்லை மன்றடைந்து புத்தரை வாதில் வென்றீர் என்பது கேட்டு யாவரும் மகிழ்ச்சி யடைந்தனர்; நீர் அன்பினாலே இறைவனைப் பாடிய பாடல்களை ஓதவெண்ணி இங்கு வந்தனம்; அவற்றை விளங்கச் சொல்லியருளும்" என வேண்ட, அவரும் உவந்து தாம் பாடிய திருவாசகம் முழுதும் சொல்ல ஐயர் அவற்றை யெல்லாம் ஏட்டி லெழுதிக் கொண்டு, பின்னும் அவரை நோக்கி, "நீர் திருச்சிற்றம்பலமுடைய பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு ஓர் அகப்பொருட் கோவை பாட வேண்டும்" என்று கூறி, அங்ஙனமே அவர் பாடிய கோவையையும் எழுதிக் கொண்டு மறைந்தனர்; மாணிக்கவாசகர் வந்தவர் இறைவரென்றறிந்து அன்பினால் அகங்குழைந்தழுது ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினார்; மறைந்தருளிய இறைவர் தாம் எழுதிய திருவாசக திருக்கோவைத் திருமுறை முடிவில் 'மாணிக்கவாசகர் கூற எழுதிய இத்திருமுறை அழகிய திருச்சிற்றம்பல முடையார் எழுத்து' என்று கைச்சாத்திட்டு மைக்காப்புச் சேர்த்துத் திருவம்பலத்தின் வாயிற்படியில் வைத்தருளினார்: திருவாயிற்படியில் வைத்த திருமுறையைக் கண்ணுற்ற தில்லை மூவாயிரவரும் வியப்புடன் அதனை யெடுத்துப் படித்து, முடிவில் திருச்சிற்றம்பல முடையார் கைச்சாத்திட்டிருந்ததனையும் கண்டு அளவிலா

ஆனந்தங்கொண்டு, அத்திருமுறையின் பொருளையறிய விரும்பி வாத வூரடிகளை அடைந்து, அங்கு நிகழ்ந்தவற்றைக் கேள்வியுற்று மனங்களி கூர்ந்து 'நீர் பெருமான்மீது பாடிய இத் தமிழ் மாலைக்குப் பொருள் தெரித்தருள்வீராக' என வேண்ட, மாணிக்கவாசகப் பிரானும் அவர்கள் உடன்வரச் சென்று பொன்னம்பலத்தை அடைந்து 'இத் தமிழ் மாலைப் பொருளாவார் இவரே' என அங்குத் திருநிருத்தம் புரியும் இறைவரைக் காட்டி, யாவருங் காணத் திருவடி நீழலிற் கலந் தருளினர்; என்று திருவாதவூரடிகள் புராணம் கூறுவது அறியற் பாலது. (௧௧௪)

ஆகச் செய்யுள் - ௩,௧0௫.

அறுபத்திரண்டாவது

பாண்டியன் சுரந்தீர்த்த படலம்

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

வான லமுத மதிமுடிமேன் மதுரைப் பெருமான் மண்சுமந்து
தேன லமுத வாசகரைக் கதியில் விடுத்த திறனிதுமேற்
பானன் மணிவாய்க் கவுணியனை விடுத்துச் சமணர் படிற்றேழுகுங்
கூனல் வழுதி சுரந்தணித்தாட் கோண்ட கோள்கை கூறுவாம்.

(இ - ள்.) மதுரைப் பெருமான் - திருவாலவாயில் எழுந்தருளிய சோம சுந்தரக் கடவுள், வான் நல் அமுத மதி முடிமேல் - வானின் கண் உலவும் குளிர்ந்த அமிழ்தினையுடைய சந்திரனைத் தரித்த முடியின் மேல், மண் சுமந்து - மண்ணைச் சுமந்து, தேன் நல் அமுத வாசகரை- தேனும் அமிழ்தமும் போலும் இனிய திருவாசக முடைய மணிவாசகனாரை, கதியில் விடுத்த திறன் இது - வீட்டுலகிற் செலுத்திய திருவிளையாடல் இது; மேல் - இனி, பால் நல்மணிவாய்க் கவுணியனை விடுத்து - பால் மண மருத நல்ல அழகிய திருவாயினை யுடைய ஆளுடைய பிள்ளையாரை விடுத்து, சமணர் படிற்று ஒழுகும் கூனல் வழுதி சுரம் தணித்து - சமணர்களின் பொய் நெறியில் ஒழுகும் கூன் பாண்டியனுடைய வெப்பு நோயைத் தணித்து, ஆட் கொண்ட கொள்கை கூறுவாம் - அடிமை கொண்டருளிய திருவிளையாடலைக் கூறுவோம்.

வான் அல் எனப் பிரித்து இரவில் இயங்கும் மதி என்பாருமுளர். சுவை மிகுதியால் தேனையும் உறுதி பயத்தலால் அமிழ்தையும் போலும் வாசகம் என்க.

''பானல் வாயொரு பாலனீங்கிவ னென்றுநீ பரிவெய்திடேல்''

என்று பிள்ளையார் மங்கையர்க்கரசியாரை நோக்கிக் கூறுதலானும் பால் மணம் நீங்காத வாய் என்பது கடைப்பிடிக்க. கவுணியன் என்றது கோத்திரத்தாற் பெற்ற பெயர். இது பிள்ளையார் புரிந்த செயலேனும் இறைவனருள் பெற்றுச் சென்று செய்தமையின் இறைவனது திருவிளையாடலாகக் கொண்டு 'கவுணியனை விடுத்து வழுதி சுரந்தணித்தாட் கொண்ட' என்று கூறினர். (க)

வாகு வலத்தான் சகநாத வழுதி வேந்தன் மகன்வீர
வாகு வவன்சேய் விக்கிரம வாகு வவன்சேய் பராக்கிரம
வாகு வனையான் மகன்சுரபி மாற*னனையான் றிருமைந்தன்
வாகு வலத்தான் மறங்கடிந்து மண்ணு ளுங்குங் குமத்தேன்னன்.

(பா - ம்.) *சுரதமாறன்.

(இ - ள்.) வாகுவலத்தான் சகநாத வழுதி வேந்தன் மகன் - தோள் வலியுடையானாகிய சகநாத பாண்டிய மன்னன் புதல்வன், வீரவாகு - வீரவாகு என்பான்; அவன் சேய் விக்கிரமவாகு - அவன் மகன் விக்கிரமவாகு என்பான்; அவன் சேய் பராக்கிரமவாகு - அவன் புதல்வன் பராக்கிரமவாகு என்பான்; அனையான் மகன் சுரபிமாறன் - அவன் சேய் சுரபிமாறனென்பான்; அனையான் திருமைந்தன் - அவனது அழகிய புதல்வன், வாகுவலத்தால் மறம் கடிந்து - தனது தோள் வலியினால் தீமையைப் போக்கி, மண் ஆளும் குங்குமத் தென்னன் - நிலவுலகை ஆளுங் குங்கும பாண்டியனென்பான்.

சகநாதவழுதி அரிமருத்தனன் மகனென்பது முற்படலத்தாற் பெறப்பட்டது. (௨)

அன்னான் குமரன் கருப்புரபாண் டியனா மவன்சேய் காருணிய
மன்னா மவன்றன் மகன்புருடோத் தமனா மவன்றன் மகனாகும்
மின்னார் மௌலிச்* சத்துருசா தனபாண் டியனாம் விறல்வேந்தன்
இன்னான் மகன்கூன் பாண்டியனா மிவன்றோள் வலியா லிசைமிக்கான்.

(இ - ள்.) அன்னான் குமரன் கருப்புர பாண்டியனாம் - அவன் மகன் கருப்பூர பாண்டியனாவான்; அவன் சேய் காருணிய மன்னாம் - அவன் புதல்வன் காருணிய பாண்டியனாவான்; அவன்தன் மகன் புருடோத்தமனாம் - அவன் மகன் புருடோத்தம பாண்டியனாகும்; அவன் தன் மகனாகும் - அவன் மகனாவான், மின் ஆர் மௌலிச் சத்துரு சாதன பாண்டியனாம் - ஒளி நிறைந்த முடியினையுடைய சத்துரு சாதன பாண்டியனாகிய, விறல் வேந்தன் - வெற்றியையுடைய மன்னன்; இன்னான் மகன் கூன் பாண்டியனாம் - இவன் புதல்வன் கூன்பாண்டியனென்பான்; இவன் தோள் வலியால் இசைமிக்கான் - இவன் தனது தோள் வலியினால் மிக்க புகழுடையனாயினான்.

தன் என்பன அசைகள். (௩)

திண்டோள் வலியாற் குடநாடார் செம்ம றனையு மாரலங்கல்
வண்டோ லிடுதா ரிரவிகுல மருமான்றனையு மலைந்துபுறங்
கண்டோர் குடைக்கீழ் நிலமூன்றுங் காவல் புரிந்து கோலோச்சிப்
புண்டோய் குருதி மறக்கன்னிப் புகழ்வேல் வழுதி நிகழ்நாளில்.

(இ - ள்.) திண் தோள் வலியால் குடநாடார் செம்மல் தனையும் - திண்ணிய தோளின் வலியால் மேற்புலத்தார் மன்னனாகிய சேரனையும், ஆர் அலங்கல் வண்டு ஒலிடுதார் இரவிகுல மருமான் தனையும் - ஆத்தி மாலையில் வண்டுகள் ஒலிக்கும் வரிசையை யுடைய சூரியகுலத் தோன்றலாகிய சோழனையும், மலைந்து புறம் கண்டு - போர் புரிந்து புறங்கண்டு, ஓர் குடைக்கீழ் நிலமூன்றும் காவல்புரிந்து - ஒரு குடை நீழலில் இம்மூன்று நிலங்களையும் காத்து, கோல் ஓச்சி - செங்கோல் நடாத்தி.

(பா - ம்) *மின்னார் மோலி.

புண்தோய் குருதி - பகைவருடலிற்பட்ட புண்ணின் குருதியிற் ரோய்ந்த, மறக்கன்னி - கொற்றவை வாழும், புகழ்வேல் - புகழ் பொருந்திய வேலையுடைய, வழுதி நிகழ் நாளில் - பாண்டியன் அரசு புரிந்து வரும் நாளில்.

குடநாடு - மலைநாடு. அலங்குதலையுடைய ஆர்த்தார் என்னலு மாம்; அலங்கல் - அசைதல். மருமான் - வழித்தோன்றல். குருதியை யுடைய வேல், மறக்கன்னி வாழும் வேல், புகழ்வேய் எனத் தனித்தனி இயைக்க. வேலில் கொற்றவை வாழும் என்பர். (ச)

விண்டு ழாவுங் கைம்மாவும் வெறுக்கைக் குவையு மணிக் [குவையும்
வண்டு வீழுந் தாரளக வல்லி யாய மோடுநல்கிக்
கண்டு கூடற் கோமகனைக் காலில் வீழ்ந்து தன்னுடு
பண்டு போலக் கைக்கொண்டு போனுன் றேனர் பனந்தாரான்.

(இ - ள்.) தேன் ஆர் பனந்தாரான் - தேன் நிறைந்த பனம்பூ மாலையை யணிந்த சேரன், கூடல் கோமகனைக் கண்டு - கூடற்றலைவ னுகிய கூன் பாண்டியனை நேரிற் கண்டு, காலில் வீழ்ந்து - அவன் காலில் வீழ்ந்து வணங்கி, விண் துழாவும் கைம்மாவும் - மேகத்தைத் துழாவும் துதிக்கையினையுடைய யானைகளையும், வெறுக்கைக் குவையும் - பொற் குவியல்களையும், மணிக்குவையும் - மணிக் குவியல் களையும், வண்டு வீழும் தார் அளகவல்லி ஆயமொடு நல்கி - வண்டுகள் மொய்க்கும் மாலையை யணிந்த கூந்தலையுடைய கொடிபோன்ற பெண்கள் கூட்டத்தையுங் கொடுத்து, தன் நாடு - தனது நாட்டினை, பண்டுபோலக் கைக்கொண்டு போனுன் - முன்போலப் பெற்றுக் கொண்டு சென்றனன்.

குவை - திரள். கைம்மா முதலியவற்றைத் திறையாக நல்கினன். வல்லி ஆயம் - பரிசன மகளிர். கோமகனைக் கண்டு நல்கி வீழ்ந்து கைக்கொண்டு போனுன் என்க. (ரு)

சென்னிக் கோனுந் தானீன்ற திலகப் பிடியை யுலகமெலாம்
மின்னிக் கோதில் புகழொளியால் விளக்குஞ் சைவ மணிவிளக்கைக்
கன்னிக் கோல மங்கையருக் கரசி தன்னைக் கௌரியற்கு
வன்னிக் கோமுன் மணம்புணர்த்தி வாங்கி னுன்றன் வளநாடு.

(இ - ள்.) சென்னிக்கோனும் - சோழ மன்னனும், தான் ஈன்ற திலகப் பிடியை - தான் பெற்ற திலதமணிந்த பெண்யானை போல் வாரும், கோது இல்புகழ் ஒளியால் - குற்றமற்ற புகழாகிய ஒளியினுல், உலகமெலாம் மின்னி விளக்கும் சைவமணி விளக்கை - உலகமனைத் தையும் ஒளி வீசி விளக்குகின்ற சைவ மாணிக்க விளக்குப் போல்வாரு மாகிய, கன்னிக்கோல மங்கையர்க்கரசி தன்னை - கன்னிப் பருவ முடைய அழகிய மங்கையர்க்கரசியாரை, கௌரியற்கு - அப்பாண்டி யனுக்கு, வன்னிக் கோ முன் மணம் புணர்த்தி - தீக்கடவுள் முன்னே மணஞ் செய்து கொடுத்து, தன் வளநாடு வாங்கினுன் - தனது வளப்ப மிக்க நாட்டினைப் பெற்றுக் கொண்டான்.

இதிற் கூறிய கௌரியனாகிய கூன் பாண்டியனுக்கு நெடுமாறன் என்பது பெயரென்பதும், இவன் நெல்வேலியில் நிகழ்ந்த போரிலே மாற்றாரை வென்றவன் என்பதும்

"நிறைக்கொண்ட சிந்தையா னெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்"

என்னும் திருத்தொண்டத் தொகையால் அறியப்படும். இவ்வரசன் சேர சோழர்களை வென்று அடிப்படுத்தவன் என்பது இறையனாரகப் பொருளுரை மேற்கோட் செய்யுள்கள் முதலியவற்றால் அறியப்படுகின்றன. இவ்வேந்தனுடன் நெல்வேலியில் எதிர்த்த பகைஞர் தமிழ் நாட்டின் வடக்கிலுள்ளவர் என்பது,

"ஆயவர சளிப்பார்பா லமர்வேண்டி வந்தேற்ற
சேயபுலத் தெவ்வரெதிர் நெல்வேலிச் செருக்களத்துப்
பாயபடைக் கடன்முடுகும் பரிமாவின் பெருவெள்ளம்
காயுமதக் களிற்றினிரை பரப்பியமர் கடக்கின்றார்"

"இணையகடுஞ் சமர்விளைய விகலுழந்த பறந்தலையிற்
பணைநெடுங்கை மதயானைப் பஞ்சவனார் படைக்குடைந்து
முனையழிந்த வடபுலத்து முதன்மன்னர் படைசரியப்
புனையுநறுந் தொடைவாகை பூழியர்வேம் புடன்புனைந்து"

என்னும் திருத்தொண்டர் புராணச் செய்யுட்களாலும், சாசனங்களாலும் அறியப்படுகின்றது. அரிகேசரி மாறவன்மன் என்று கூறப்படும் இந்நெடுமாறன் கி. பி, 667-க்கு முன் ஆட்சி புரிந்தோன் என்பது சாசனங்களால் அறியப்படுதலின் இவனுடன் நெல்வேலியில் எதிர்த்த வடபுல வேந்தன் சளுக்க மன்னனாகிய இரண்டாம் புலிகேசியோ, அன்றி அவன் மகனாகிய முதலாம் விக்கிரமாதித்தனோ ஆதல் வேண்டும் என்க.

மங்கையர்க்கரசியார் சோழன் மகளார் என்பதும் மானி என்னும் பெயருடையார் என்பதும்

"மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி"

என்னும் திருஞான சம்பந்தர் திருவாக்கானும், பெரிய புராணம் முதலியவற்றானும் பெறப்படும்.　(சு)

[வேறு]

வளவர்கோன் செழியன் கற்பின் மங்கையர்க் கரசி யாருக்
களவறு நிதியுஞ் செம்பொற் கலிங்கமு மணியும் போகம்
விளைநில மனைய வாய வெள்ளமும் பிறவுந் தென்னன்
உளமகிழ் சிறப்ப வேந்தர் வரிசையா லுதவிப் பின்னர்,

(இ - ள்.) வளவர் கோன் - சோழ மன்னன், செழியன் கற்பின் மங்கையர்க்கரசியாருக்கு - பாண்டியன் வாழ்க்கைத்துணையாகிய கற்பினையுடைய மங்கையர்க்கரசியாருக்கு, அளவு அறு நிதியும்-அளவற்ற திரவியமும், செம்பொற் கலிங்கமும் - சிவந்த பொன்னுடைகளும், அணியும்-அணிகலங்களும், போகம் விளை நிலம் அனைய ஆயவெள்ளமும் பிறவும் - இன்பம் விளையும் நிலத்தினை யொத்த சேடியர் கூட்டமும் ஏனையவும், தென்னன் உளம் மகிழ் சிறப்ப - பாண்டியன் உள்ளங் களிகூர, வேந்தர் வரிசையால் உதவி - மன்னர் முறைப்படி கொடுத்து, பின்னர் - பின்பு. (எ)

கோதறு குணத்தின் மிக்க குலச்சிறை யென்பா னங்கோர்
மேதகு கேள்வி யானை விடுத்தனன் மீண்டு தென்னன்
காதலி யோடு காவற் கடவுள்*சேம் பதுமக் கோயின்
மாதரை மணந்து செல்வான்போல்வந்து மதுரை சேர்ந்தான்.

(இ - ள்.) கோது அறு குணத்தின் மிக்க குலச்சிறை என்பான் - குற்றமற்ற குணத்தினால் மேம்பட்ட குலச்சிறை என்னப்படும், ஓர் மேதகுகேள்வியானை அங்கு விடுத்தனன்-சிறந்த நூல்வல்லானொருவனை அங்கு விடுத்தான்; தென்னன் - கூன்பாண்டியன், செம்பதுமக்கோயில் மாதரை மணந்து செல்வான்-சிவந்த தாமரைக் கோயிலில் வீற்றிருக்குந் திருமகளை மணந்து செல்லும், காவற் கடவுள்போல் - காத்தற் கடவுளாகிய திருமாலைப் போல, காதலியோடு மீண்டு மதுரை வந்து சேர்ந்தான் - மனைவியோடுந் திரும்பி மதுரை வந்து சேர்ந்தனன்.

குலச்சிறையார் பாண்டி நாட்டிலுள்ள மணமேற்குடி என்னும் பதியிற் றோன்றியவ ரென்று,

"பன்னு தொல்புகழ்ப் பாண்டிநன் னாட்டிடைச்
செந்நெ லார்வயற் றீங்கரும் பின்னயல்
துன்னு பூகப் புறம்பணை சூழ்ந்தது
மன்னு வண்மையி னார்மண மேற்குடி"

" அப்ப திக்கு முதல்வர்வன் றொண்டர்தாம்
ஒப்ப ரும்பெரு நம்பியென் றோதிய
செப்ப ருஞ்சீர்க் குலச்சிறை யார்திண்மை
வைப்பி னாற்றிருத் தொண்டின் வழாதவர்"

என்னும் பெரியபுராணச் செய்யுட்களாற் பெறப்படுகின்றது. மேதகு-மேன்மை பொருந்திய. கேள்வியானை அங்கு விடுத்தனன் என்க. (அ)

(பா - ம்.) *மாயக்கடவுள்.

மலர்மகள் மார்பன் பொன்னின் மன்னவன் பயந்த தெய்வக்
குலமக ளுடனே வந்த குலச்சிறை குணனுங் கேள்வித்
தலைமையு மதியின் மிக்க தன்மையுந் தூக்கி நோக்கி
நலமலி யமைச்ச னாக்கி நானிலம் புரக்கு நாளில்.

(இ - ள்.) மலர்மகள் மார்பன் - திருமகள் தங்கும் மார்பினை யுடைய பாண்டியன், பொன்னி மன்னவன் பயந்த - காவிரி நாடாளும் சோழமன்னன் பெற்றெடுத்த, தெய்வக்குலமகளுடனே வந்த-தெய்வத் தன்மை பொருந்திய மங்கையர்க்கரசியாருடனே வந்த, குலச்சிறை குணனும் கேள்வித் தலைமையும் - குலச்சிறையாரின் நற்குணங்களையும் நூற் கேள்வியின் சிறப்பினையும், மதியின் மிக்க தன்மையும்-இயற்கை யறிவின் மேம்பட்ட தன்மையினையும், தூக்கி நோக்கி - சீர் தூக்கிக் கண்டு, நலம்மலி அமைச்சனாக்கி - அவரைத் தனக்கு நன்மை நிறைதற் கேதுவாகிய முதன் மந்திரியாக்கி, நானிலம் புரக்கும் நாளில்-புவியினைப் பாதுகாத்து வரும் நாளில்.

நிலம் ஆளுந் திருவுடை வேந்தன் காவற் கடவுள் அமிசம் என்ப வாகலின் "மலர் மகள் மார்பன்" என்றார்.

"திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்" என்று பெரியார் கூறுதலுங் காண்க. அமைச்சராவார் இயற்கை மதி நுட்பமும் நூலறிவும் ஒருங்குடையராதல் வேண்டு மென்பது,

"மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை" (திருக்குறள் - கூ௬கூ)

என்னும் திருக்குறளால் பெறப்படுதல் காண்க. குறிஞ்சி முதலாக நான்கு பகுதிப் படுதலின் புவி நானிலம் எனப்படும். (௧)

வல்வினை வலியான் மெய்யில் வலியகூ னடைந்தான் போலக்
கொல்வினை யிலராய் வஞ்சங் கொண்டுழன் றுடுத்த பாசம்
வெல்வினை யறியா நக்க வேடர்சொல் வலையிற் பட்டு
நல்வினை யுதவாத் தென்ன னான்மறை யொழுக்க நீத்தான்.

(இ - ள்.) வல்வினை வலியால் - தீவினையின் வன்மையால், வலிய மெய்யில் கூன் அடைந்தான் போல - திண்ணிய உடலிற் கூனை அடைந்தான் போல, கொல்வினை இலராய் வஞ்சம் கொண்டு உழன்று - கொல்லுதற்றொழில் இல்லாதவராய் வஞ்சகங் கொண்டு சுழன்று, உடுத்த பாசம் வெல்வினை அறியா - சூழ்ந்துள்ள பாசக் கட்டினை அறுக்கும் நற்கரும மறியாத, நக்க வேடர் சொல்வலையில் பட்டு - வெற்றரையினையுடைய அருகர்களின் சொல்வலையிற்பட்டு, நல்வினை உதவாத் தென்னன் - முன்னை நல்வினை வந்து உதவப் பெறாத பாண்டியன், நால்மறை ஒழுக்கம் நீத்தான் - நான்மறை வழி ஒழுகுதலைத் துறந்தான்.

வலிய கூன் எனக்கொண்டு மருந்து முதலியவற்றால் தீராத வன்மையுடைய கூன் என்றுரைத்தலுமாம். அடைந்தான் என்பதனை முற்றாக்கி, அதுபோல எனச் சுட்டு வருவித்தலுமாம், அவர் கொல்லாமையை விரதமாகக் கொண்டதும் செம்மையாகாது கரவாம் என்பார் 'கொல்வினையிலராய் வஞ்சங் கொண்டு' என்றார். வெல்வு எனத் தொழிற் பெயராக்கி, வெல்லுதலை என்றுரைத்தலும் பொருந்தும். சிறிதும் இலரென்பார் 'அறியா' என்றார். நக்கர்—ஆடையுடாதவர். வேடர் என்றதற்கேற்பச் சொல்லை வலையாக்கி நயன்படக் கூறினார். சைவ நெறி நின்று சிவனது திருவருள் கூடும் நல்வினை முன்பு செய்துள்ளானாயினும் அஃது இப்பொழுது கூடிற்றில தென்பார் 'நல்வினை உதவா' என்றார். நான்மறை ஒழுக்கம் - வைதிக சைவவொழுக்கம். வல்வினை வலியால் வலையிற் பட்டு ஒழுக்கம் நீத்தான் என இயைக்க. (க0)

போதவிழ் தாரா னக்கர் புன்னெறி யொழுக்கம் பூண்டோ
னாதலிற் கன்னி நாடு மமணிருண் மூழ்கிப் பூதி
சாதன நெறியாஞ் சைவ சமயமு முத்திச் செல்வ
மாதவ நெறியுங் குன்ற மறைந்தது வேத நீதி.

(இ - ள்.) போது அவிழ் தாரான் - மலர் விரிந்த மாலையை யணிந்த பாண்டியன், நக்கர் புல் நெறி ஒழுக்கம் பூண்டோன் ஆதலின் - அருகரது புல்லிய மதத்தின் ஒழுக்கங்களை மேற்கொண்டானாதலினால், கன்னி நாடும் அமண் இருள் மூழ்கி - பாண்டி நாடும் சமண இருளில் அழுந்தப் பெற்று, பூதிசாதன நெறியாம் சைவசமயமும் - பூதிசாதன நெறியாகிய சைவ சமயமும், முத்திச் செல்வம் மாதவ நெறியும் குன்ற - வீடுபேறாகிய செல்வத்தை அடைவிக்கும் பெரிய தவவொழுக்கமும் குறைவுபட, வேத நீதி மறைந்தது - வேத நெறி மறைந்தது.

அரசன் வழிப்பட்டது உலக மாதலின் கன்னி நாடும் அமணிருள் மூழ்கிற்று என்க. பூதி சாதனம் - திருநீறாகிய சாதனம்; திருநீறும் உருத்திராக்கம் முதலிய சாதனமும் என்றுமாம். மாதவ நெறி - சரியை, கிரியை, யோகம், ஞானம் எனனும் நெறிகள். வேத நீதி - வேத சிவாகமங்களிற் கூறப்பட்ட விதி விலக்கு முறைமை. சிவாகமமும் வேத மெனப்படும் எனவுணர்க. (கக)

பறிபடு தலையும் பாயி னுடுக்கையும் பாசிப் பல்லும்
உறிபொதி கலனு மத்தி நாத்தியேன் றுரைக்கு நாவு
அறிவழி யுளம்போ ணுணற் றழிந்தவெற் றரையுங் கோண்டு
குறிகெடு மணங்கு சூழ்ந்தாங் கமணிறை கோண்ட தேங்கும்.

(இ - ள்.) பறிபடுதலையும் - மயிர் பறிக்கப்பட்ட தலையும், பாயின் உடுக்கையும் - பாயாகிய உடையும், பாசிப்பல்லும் - பசுமை படர்ந்த பல்லும், உறி பொதி கலனும் - உறியிற் பொதிந்த கமண்டலமும், அத்தி நாத்தி என்று உரைக்கும் நாவும் - உண்டாம் இல்லையாம் என்று

கூறும் நாவும், அறிவு அழி உளம் போல் - அறிவழிந்த உள்ளம் போல், நாண் அற்று அழிந்த வெற்று அரையும் கொண்டு - வெட்கம் சிறிதுமின்றி அழிந்த ஆடையில்லாத அரையும் உடையதாய், குறிகெடும் அணங்கு சூழ்ந்தாங்கு - பொலிவிழந்த தவ்வை சூழ்ந்து தங்கினாற் போல, அமண் எங்கும் இறை கொண்டது - சமண் எங்குஞ் சூழ்ந்து தங்கியது.

பாசிப்பல் - விளக்காமையால் அழுக்கேறிப் பசுமை படர்ந்த பல். அத்தி - உண்டு. நாத்தி - இல்லை. ஆருகதர் சீவன் முதலாகக் கூறும் பதார்த்தங்கள் உண்டோ இல்லையோ என வினவிய வழி, உண்டாம், இல்லையாம், உண்டும் இல்லையுமாம், சொல்லொணாததாம், உண்டுமாம் சொல்லொணாததுமாம், இல்லையுமாம் சொல்லொணாததுமாம், உண்டும் இல்லையுமாம் சொல்லொணாததுமாம் என எழு வகையான் இறுப்பர்; இவை எல்லாம் உண்டு, இல்லை என்னும் இருவாய்பாட்டுள் அடங்குதலின் 'அத்தி நாத்தி யென்றுரைக்கு நாவும்' என்றார். நாண் அற்று அழிந்த என்பதற்கு அரை ஞாணின்றிப் பீடழிந்த என்றும் உரைத்துக் கொள்க. குறிகெடும் அணங்கு - மூதேவி; பேயுமாம். அமண்: குழூஉப் பெயர், இறை கொள்ளல் - தங்கல். (கஉ)

அருந்தமிழ்ப் பாண்டி வேந்தற் குறுதியா யாக்கஞ் செய்யும்
மருந்தினிற் சிறந்த கற்பின் மங்கையர்க் கரசி யாரும்
பெருந்தகை யமைச்சு நீரிற் குழைத்தன்றிப் பிறங்கப் பேறு
தருந்திரு நீறிடாராய்ச் சிவனடிச் சார்பி னின்றார்.

(இ - ள்.) அருந்தமிழ்ப் பாண்டி வேந்தற்கு - அரிய தமிழையுடைய பாண்டி மன்னனுக்கு, உறுதியாய் ஆக்கம் செய்யும் மருந்தினில் சிறந்த - பற்றுக் கோடாக நின்று வீடுபேறாகிய செல்வத்தை அளிக்கும் அமிழ் தொன்று உளதேல், அதனினும் சிறந்த, கற்பின் மங்கையர்க் கரசியாரும் - கற்பின் மிக்க மங்கையர்க்கரசியாரும், பெருந்தகை அமைச்சும் - பெரிய தகுதியை யுடைய மந்திரியாராகிய குலச்சிறையாரும், பேறுதரும் திருநீறு - எல்லாப் பேற்றினையும் அளிக்குந் திருநீற்றினை, நீரில் குழைத்தன்றி - நீரிற் குழைத்து வெளியே தோன்றா வண்ணம் இடுதலேயன்றி, பிறங்க இடாராய் - வெளித் தோன்றுமாறு இடாதவராய், சிவன் அடிச் சார்பில் நின்றார் - சிவபெருமானது திருவடிச் சார்பில் நின்றனர்.

ஆக்கஞ் செய்யும் மங்கையர்க் கரசியார் எனவும், மருந்தினிற் சிறந்த கற்பு எனவும், கூட்டி யுரைத்தலுமாம். திரு நீறு பிறங்க இடாமை,

"ஓங்கிய சைவ வாய்மை யொழுக்கத்தி னின்ற தன்மை
பூங்கழற் செழியன் முன்பு புலப்படா வகைகொண் டுய்த்தார்"

எனத் திருத்தொண்டர் புராணங் கூறுதலானும் பெறப்படுதல் காண்க. அடிச் சார்பில் நின்றார் - திருவடியே பற்றுக் கோடாக நின்றார். (கந)

போய்யுரை பிதற்று மிந்தப் புன்சமண் களைகட் டீண்டு
மெய்யுரை வேத நீதி வியன்பயிர் தலைச்செய் தோங்கச்
செய்யுந ரெவரோ வென்று* சிந்தையிற் கவலை பூண்டு
நையுந ராகிக் கூட னாதனை வணங்கப் போனார்.

(இ - ள்.) ஈண்டு - இவ்விடத்தில், பொய் உரை பிதற்றும் இந்தப் புன் சமண் களை கட்டு - பொய் மொழியைப் பிதற்றுகின்ற இந்தப் புல்லிய சமணாகிய களையினைப் பிடுங்கி, மெய் உரை வேதநீதி வியன் பயிர் தலைச் செய்து ஓங்க - உண்மையை உரைக்கும் வேத நெறி என்னுஞ் சிறந்த பயிர் தலையெடுத்து ஓங்குமாறு, செய்யுநர் எவரோ என்று - செய்யவல்லுநர் எவரோ என்று கருதி, சிந்தையில் கவலை பூண்டு நையுநராகி - மனத்திற் கவலையை மேற்கொண்டு நைதலையுடையராய், கூடல் நாதனை வணங்கப் போனார் - கூடலிறைவனாகிய சோம சுந்தரக் கடவுளை வணங்குதற்குச் சென்றனர்.

பிதற்றல் - முன்னொடு பின் மலைவுபடக் கூறல். கட்டு - பிடுங்கி. (௧௪)

பேதுற்ற முனிவர்க் கன்று பெருமறை விளக்கஞ் செய்த
வேதத்தின் பொருளே யிந்த வெஞ்சமண் வலையிற் பட்டுப்
போதத்தை யிழந்த வேந்தன் புந்தியை மீட்டிப் போதுன்
பாதத்தி லடிமை கோள்வா யென்றடி பணியு மெல்லை.

(இ - ள்.) பேதுற்ற முனிவர்க்கு அன்று - பொருள் தெரியாமல் மயங்கிய முனிவர்களுக்கு அந்நாளில், பெருமறை விளக்கம் செய்த வேதத்தின் பொருளே - பெரிய வேதத்திற்குப் பொருள் விளக்கிய மறைப் பொருளே, இந்த வெம் சமண் வலையில் பட்டு - இந்தக் கொடிய சமணாகிய வலையிற் பட்டு, போதத்தை இழந்த வேந்தன் - அறிவினை இழந்த அரசனது, புந்தியை மீட்டு - புத்தியைத் திருப்பி, இப்போது உன் பாதத்தில் அடிமை கொள்வாய் என்று - இப்போது உனது திருவடிக்கு அடிமை யாக்கிக் கொள்வா யென்று குறையிரந்து, அடிபணியும் எல்லை - திருவடியை வணங்கும்போது.

பேதுறல் - மயங்கல். வேதப் பொருளறியாது மயங்கிய முனிவர்க்கு அதனைத் தெளிவித்த நீரே சமண் வலையிற் பட்டு மயங்கிய அரசனுக்கும் உண்மை விளக்கம் செய்யவல்லீர் என்பார் 'பெருமறை விளக்கஞ் செய்த வேதத்தின் பொருளே' என விளித்தா ராகலின் இது கருத்துடையடைகொளியணி. (௧௫)

வேதிய னொருவன் கண்டி வேடமும் பூண்டோன் மெய்யிற்
பூதியன் புண்டரீக புரத்தினும் போந்தோன் கூடல்
ஆதியைப் பணிவான் வந்தான் மங்கையர்க் கரசி யாரும்
நீதிய வமைச்ச ரேறு நேர்பட வவனை நோக்கா.

(பா - ம்.) *எவரே யென்று.

(இ - ள்.) புண்டரீக புரத்தினும் போந்தோன் - புலியூராகிய சிதம்பரத்தினின்றும் வந்தவனாகிய, வேதியன் ஒருவன் - மறையவனொருவன், கண்டி வேடமும் பூண்டோன் - உருத்திராக்கமணிந்த திருவேடமுமுடையவனாய், மெய்யில் பூதியன் - உடலில் திருநீறு தரித்தவனாய், கூடல் ஆதியைப் பணிவான் வந்தான் - கூடலிறைவனாகிய சோமசுந்தரக் கடவுளை வணங்கத் திருக்கோயிலுக்கு வந்தனன்; மங்கையர்க்கரசியாரும் நீதிய அமைச்சர் ஏறும் - மங்கையர்க்கரசியாரும் நீதியையுடைய அமைச்சருள் ஏறு போல்வாராகிய குலச்சிறையாரும், அவனை நேர்பட நோக்கா - அவனை நேரிற் கண்டு.

புரத்தினும் - புரத்தினின்றும்; வருஞ் செய்யுளில் நாட்டினும் என்பதும் இத்தகைத்து. பணிவான்: வினையெச்சம். (௧௬)

எங்கிருந் தந்த ணாளிர் வந்தனி ரென்றா ராய்ந்த
புங்கவன் சென்னி பொன்னி நாட்டினும் போந்தே னென்றான்
அங்கவ ரங்குண் டான புதுமையா தறைதி ரென்றார்
சங்கரற் கன்பு பூண்டோ னுண்டென்று சாற்று கின்றான்.

(இ - ள்.) அந்தணாளிர் எங்கு இருந்து வந்தனீர் என்றார் - அந்தணாளரே எங்கிருந்து வந்தீரென்று வினவினர்; ஆய்ந்த புங்கவன் - கலைகளை ஆராய்ந்த தூயவனாகிய அம்மறையவன், சென்னி பொன்னி நாட்டினும் போந்தேன் என்றான் - சோழனது காவிரி நாட்டிலிருந்து வந்தேனென்று கூறினன்; அவர் அங்கு உண்டான புதுமை யாது அறைதிர் என்றார் - அவர் அங்கு உண்டாகிய புதுமை யாது அதனைக் கூறுமென்று கேட்டனர்; சங்கரற்கு அன்பு பூண்டோன் உண்டு என்று சாற்றுகின்றான் - சங்கரனுக்கு அன்பு பூண்ட அவ்வந்தணன் புதுமை உண்டு என்று அதனைக் கூறத் தொடங்கினான்.

அன்பு பூண்டவனும் புங்கவனுமாகிய அவன் என்க. அங்கவர் என்புழி அங்கு அசைநிலை. அங்கு யாதேனும் புதுமையுளதாயின் அதனைக் கூறுதிரென்றார் என்பது கருத்தாகக் கொள்க. (௧௭)

ஏழிசை மறைவல் லாளர் சிவபாத விதய ரென்னக்
காழியி லொருவ ருள்ளார் காரமண் கங்குல் சீப்ப
ஆழியி லிரவி யென்ன வொருமக வளித்தி யென்னா
ஊழியி லொருவன் றாளை யுள்கிநோற் றேழுகி நின்றார்.

(இ - ள்.) காழியில் - சீகாழிப்பதியின்கண், ஏழ் இசை மறை வல்லாளர் ஒருவர் சிவபாத இதயர் என்ன உள்ளார் - ஏழு இசைகளையுடைய மறையில் வல்ல வேதியரொருவர் சிவபாத விருதயரென்னும் பெயருடையராய் இருக்கின்றார்; கார் அமண் கங்குல் சீப்ப - (அவர்) கரிய அமணாகிய இருளை ஓட்ட, ஆழியில் இரவி என்ன ஒரு மகவு அளித்தி என்னா - கடலிற் றோன்றிய இளஞ் சூரியனைப் போல ஒரு புதல்வனை அளிக்கக் கடவை என்று, ஊழியில் ஒருவன் தாளை உள்கி

நோற்று ஒழுகி நின்றார் - ஊழிக்காலத்தில் ஒருவனாயுள்ள இறைவன் திருவடியை நினைந்து தவஞ் செய்தனர்.

பேரூழிக் காலத்தில் உலகுயிரனைத்தையும் தம்முளொடுக்கிக் கொண்டு தாம் ஒருவராகவே யிருத்தலின் 'ஊழியிலொருவன்' என்றார். (கஅ)

ஆயமா தவர்பா லீச னருளினா லுலக முய்யச்
சேயிளங் கதிர்போல் வந்தான் செல்வனுக் கிரண்டாண் டெல்லை
போயபின் மூன்று மாண்டிற்* பொருகடன் மிதந்த தோணி
நாயகன் பிராட்டி யோடும் விடையின்மே னடந்து நங்கை.

(இ - ள்.) ஆயமாதவர்பால் - அந்தத் தவப் பெரியாரிடத்து, ஈசன் அருளினால் - இறைவன் திருவருளால், உலகம் உய்ய - உலகம் உய்தி பெறுதற் பொருட்டு, சேய் இளங் கதிர்போல் வந்தான் - ஒரு புதல்வன் இளஞ் சூரியனைப்போல அவதரித்தான்; செல்வனுக்கு இரண்டு ஆண்டு எல்லை போயபின் - அச் செல்வனுக்கு இரண்டு ஆண்டின் அளவு போனபின், மூன்றும் ஆண்டில் - மூன்றாவது ஆண்டின் கண், பொருகடல் மிதந்த தோணி நாயகன் - அலைகள் மோதும் கடலின் மேல் மிதந்த தோணிபுரத்து இறைவன், பிராட்டியோடும் விடையின் மேல் நடந்து - இறைவியுடன் ஆனேற்றி லேறி வந்து, நங்கை - அப்பிராட்டியினது.

பிரளய காலத்தில் நீரின்மீது தோணிபோல் மிதந்தமையால் தோணிபுரம் எனப் பெயர் பெற்ற பதி என்பார் 'பொருகடன் மிதந்த தோணி' என்றார். (கக)

திருமுலைப் பாலி னோடு ஞானமுந் திரட்டிச் செம்பொற்
குருமணி வள்ளத் தேந்திக் கொடுப்பவப் பாலன் வாங்கிப்
பருகியெண் ணிறந்த வேதா கமமிவை பற்றிச் சார்வாய்
விரிகலை பிறவு மோதா துணர்ந்தனன் விளைந்த ஞானம்.

(இ - ள்.) திருமுலைப்பாலினோடு ஞானமும் திரட்டி - திருமுலைப் பாலுடன் சிவஞானத்தையுங் குழைத்து, செம்பொன் குருமணி வள்ளத்து ஏந்திக் கொடுப்ப - சிவந்த பொன்னாலாகிய நிறம் பொருந்திய மணிகள் பதித்த கிண்ணத்திலேந்திக் கொடுத்தருள, அப் பாலன் வாங்கிப் பருகி - அப்பாலன் அதனை வாங்கி அருந்தி (அதனால்), எண் இறந்த வேத ஆகமம் - அளவிறந்த மறைகளையும் ஆகமங்களையும், இவை சார்வாய் பற்றி விரிகலை பிறவும் - இவற்றைப் பற்றிச் சார்பு நூல்களாக விரிந்த பிற கலைகளையும், ஓதாது உணர்ந்தனன் - ஓதுதலின்றியே உணர்ந்தனன்; ஞானம் விளைந்த - ஞானங்கள் விளைந்தன.

(பா - ம்.) *போயின மூன்றுமாண்டில்.

இறைவன் ஆணையால் இறைவி ஊட்டினளாகலின் அதனை இறைவன்மீது ஏற்றிக் கூறினர். பருகி, காரணப் பொருட்டாய வினை யெச்சம். சார்வாய் விரிகலை - வேதாங்கம், புராணம் முதலாயின. விரிகலையும் பிறவும் என்றுமாம்.

"சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்"

என்று திருத்தொண்டர் புராணங் கூறுமாறு அனைத்து ஞானமும் எய்தப் பெற்றாராகலின் 'விளைந்த ஞானம்' எனப் பன்மை கூறினர். பிள்ளையார் மூன்றும் ஆண்டில் ஞானம் பெற்ற வரலாற்றைப் பெரிய புராணத்தால் விளங்க வறிக. (உ0)

நம்பந்த மறுப்போன் ஞான நாயகன் ஞானத் தோடு
சம்பந்தஞ் செய்து ஞான சம்பந்த னாகி* நாவில்
வம்பந்த முலைமெய்ஞ் ஞான வாணியுங் காணி கோள்ள
அம்பந்த மறைக ளெல்லா மருந்தமி ழாகக் கூறும்.

(இ - ள்.) நம்பந்தம் அறுப்போன் ஞான நாயகன்-நமது கட்டினை அறுக்கும் ஞான நாயகனாகிய இறைவனது, ஞானத்தோடு சம்பந்தம் செய்து - சிவஞானத்துடன் சம்பந்தஞ் செய்தலால், ஞான சம்பந்தனாகி-ஞான சம்பந்தன் என்னும் பெயருடையராய், நாவில் - தமது நாவின் கண், வம்பு அந்தம் முலை மெய்ஞ்ஞான வாணியும் காணி கொள்ள - கச்சினை யணிந்த அழகிய கொங்கையையுடைய உண்மை வடிவாகிய ஞானவாணி உறைவிடமாகக் கொண்டு தங்க, அம்பந்தம் மறைகள் எல்லாம் - அழகிய பந்தம் அமைந்த மறைகளனைத்தையும், அரும் தமிழாகக் கூறும் - அரிய தமிழ்ப் பாடல்களாகக் கூறுவாராயினர்.

"யாவருக்குந் தந்தைதா யெனுமிவரிப் படியளித்தார்
ஆவதனு லாளுடைய பிள்ளையா ராயகில
தேவருக்கு முனிவருக்குந் தெரிவரிய பொருளாகுந்
தாவிறனிச் சிவஞான சம்பந்த ராயினர்"

என்னும் பெரிய புராணச் செய்யுளால் இவருக்கு ஆளுடைய பிள்ளையார், திருஞானசம்பந்தர் என்னும் பெயர்கள் உண்டாய காரணம் அறியப்படும். வம்பு அந்தம் - கச்சினைக் கிழிக்கும் என்றுமாம். காணி கொள்ள - காணியாகக் கொண்டு தங்க. பந்தம்-தளை. மறைகளெல்லாம் அருந்தமிழாகக் கூறும் என்ற கருத்து,

---

(பா - ம்.) *செய்யு ஞானசம்பந்தனுக.

"எல்லையிலா மறைமுதன்மெய் யுடனெடுத்த வெழுதுமறை
மல்லனெடுந் தமிழாலிம் மாநிலத்தோர்க் குரைசிறப்ப"

என்பது முதலாகத் திருத்தொண்டர்புராணத்துப் பயின்று வருதல் காண்க. (உக)

கரும்பினிற் கோது நீத்துச் சாறடு கட்டி யேபோல்
வரம்பிலா மறையின் மாண்ட பொருளெலா மாணத் தெள்ளிச்
சுரும்பிவர் கொன்றை வேணிப் பிரானிடந் தோறும் போகி
விரும்பிய தென்சொன் மாலை சிவமணம் விளையச் சாத்தி.

(இ - ள்.) கரும்பினில் கோது நீத்து - கரும்பினின்றுங் கோதினை ஒழித்து, சாறு அடு கட்டியே போல் - சாற்றினைக் காய்ச்சுதலா லுண்டாகும் சருக்கரைக் கட்டியை ஆக்குதல் போல, வரம்புஇலா மறையின் மாண்ட பொருள் எலாம் - அளவிறந்த மறைகளின் சிறந்த பொருள்களனைத்தையும், மாணத் தெள்ளி - மாட்சிமைப்படக் கொழித் தெடுத்து, சுரும்பு இவர் கொன்றை வேணிப் பிரான் இடந்தோறும் போகி - வண்டுகள் ஏறுங் கொன்றை மலராலாகிய மாலையை யணிந்த முடியினையுடைய சிவபெருமான் எழுந்தருளிய திருப்பதிகடோறுஞ் சென்று, விரும்பிய தென்சொல்மாலை - அவ் விறைவனுல் விரும்பப் பெற்ற தமிழ்மாலையாகச் செய்து, சிவமணம் விளையச் சாத்தி - சிவமணம் கமழ அவ்விறைவனுக்குச் சாத்தி.

தேவாரம் வேதத்தின் சாரமென்பார் 'கரும்பினிற் கோது நீத்துச் சாறடு கட்டியே போல்' என உவமை கூறினர்;

"வேதம் பசுவதன்பால் மெய்யா கமநால்வர்
ஓதுந் தமிழதனி னுள்ளுறு நெய்"

என்னும் ஆன்றோர் வாக்குங் காண்க. (உஉ)

பருமுத்த முலையாள் பங்க னருளினுற் பசும்போற் றாளந்
திருமுத்தின் சிவிகை காளந் தெண்முத்தின் பந்த ரின்ன
நிருமித்த வகைபோற் பெற்றுப் பாலையை நெய்த லாக்கிப்
பொருமுத்த நதிசூழ் வீழிப் போற்படிக் காசு பெற்று.

(இ - ள்.) பரு முத்தம் முலையாள் பங்கன் அருளினுல்-பரிய முத்து மாலையை யணிந்த கொங்கையையுடைய உமையம்மையை ஒரு பாதியிலுள்ள இறைவனருளினுல், பசும்பொன் தாளம் - பசிய பொற்றாளமும், திருமுத்தின் சிவிகை காளம் - அழகிய முத்துச்சிவிகையும் திருச்சின்னமும், தெள்முத்தின் பந்தர் இன்ன - தெள்ளிய முத்துப் பந்தரும் இவைபோல்வன பிறவும், நிருமித்தவகை போல் பெற்று -

புதிதாக ஆக்கிய தன்மை போலப் பெற்று, பாலையை நெய்தலாக்கி-பாலை நிலத்தை நெய்தனிலமாக்கி, பொரு முத்தம் நதி சூழ் வீழி-கரையை மோதும் அலைகளையுடைய முத்துக்களையுடைய காவிரிநதி சூழ்ந்த திருவீழிமிழலையில், படி பொற் காசு பெற்று - திருப்படியிற் பொற் காசு பெற்று.

திருக்கோலக்கா என்னும் பதியிற் பொற்றாளமும், திருவரத்துறைக்குச் செல்லுகையில் மாறன் பாடியில் முத்துச் சிவிகை முத்துக்குடை முத்துச் சின்னங்களும், திருச்சத்தி முற்றத்திலிருந்து திருப்பட்டீச்சுரத்துக்கு எழுந்தருளுகையில் முத்துப் பந்தரும், திருநாவுக்கரசருடன் திருவீழி மிழலையில் எழுந்தருளியிருக்கும் பொழுது பொற்காசும் இறைவர்பாற் பெற்றனர்; இவ்வரலாறுகளைத் திருத்தொண்டர் புராணத்தால் விளக்கமுற அறிக. அவை உடன் தோன்றியவாற்றை வியந்து 'நிருமித்த வகைபோல்' என்றார்; நிருமித்தல் - படைத்தல். பாலையை நெய்தலாக்கியது,

> "பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
> காலனையன் றேவிக் கராங்கொண்ட—பாலன்
> மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தம்
> கரணம்போ லல்லாமை காண்"

எனத் திருக்களிற்றுப்படியாரில் எடுத்துப் போற்றப் பெற்றுளது. பிள்ளையார் தமது திருத்தாயார் பிறந்த தலமாகிய திருநனிபள்ளியை முன்பு பாலையாக்கி, பின் அதனை நெய்தலாக்கினர் என்று,

> "கள்ளம் பொழில்நனி பள்ளி தடங்கட மாக்கியஃதே
> வெள்ளம் பணிநெய்த லாக்கிய வித்தகன் வெண்குருகுப்
> புள்ளொண் டவளப் புரிசங்கொ டாலக் கயலுகளத்
> தள்ளந் தடம்புனற் சண்பையர் காவலன் சம்பந்தனே"

என்னும் திருச்சண்பை விருத்தத்தால் அறியப்படுகின்றது. (௨௫.)

> அருமறை வணங்குங் கோயிற் கதவினை யடைக்கப் பாடிப்
> பரனுறை பதிக ளெங்குந் தொழுதனர் பாடிப் பாடி
> வருமவர் நுங்க ணாட்டு வணங்கவும் வருவ ரென்னத்
> தருமநூ லணிந்த தெய்வத் தாபதன் சாற்ற லோடும்.

(இ - ள்.) அருமறை வணங்கும் கோயில் கதவினை அடைக்கப் பாடி - அரிய வேதங்கள் வழிபடுந் திருக்கோயிற் கதவு அடைக்குமாறு பாடியருளி, பரன் உறை பதிகள் எங்கும் தொழுதனர் - இறைவன் எழுந்தருளிய திருப்பதிகளனைத்திலும் சென்று வணங்கி, பாடிப்பாடி வருமவர் - திரு நெறித் தமிழ்மறை பாடிப்பாடி வருகின்ற அவ்வாளுடைய பிள்ளையார், நுங்கள் நாட்டும் வணங்க வருவர் என்ன - நுமது நாட்டிற்கும் சோமசுந்தரக் கடவுளை வணங்க வருவர் என்று, தரும

நூல் அணிந்த தெய்வத்தாபதன் சாற்றலோடும் - அறநெறி வழாத முந்நூலணிந்த தெய்வத் தன்மை பொருந்திய அம்முனிவன் சொல்லிய வளவில்.

திருமறைக்காட்டிலே வேதங்களாற் பூசித்துத் திருக் காப்பிடப் பெற்ற திருக்கோயிற் கதவினைத் திருநாவுக்கரசர் திருப்பதிகம் பாடித் திறக்க, இருவரும் அவ்வாயிலால் உட்சென்று இறைவரைத் தரிசித்துப் புறம் போந்தபின் திருஞான சம்பந்தர் பதிகம்பாடி அதனைத் திருக்காப் பிட்டனர் என்னும் வரலாற்றைப் பெரியபுராணத்தா லறிக. தரும நூல் - அறவடிவாகிய நூல் என்றுமாம். (உச)

கற்பலர் கோடியன் னாருந் தென்னவன் கண்போல் வாரும்
அற்புரை யமண்பே யோட்டி யன்றுதங் கோமான் மெய்யிற்
பொற்புறு நீறு கண்டு பூதிசா தனத்தா லெய்துஞ்
சிற்பர வீடு கண்ட மகிழ்ச்சியுட் டிளைத்தோ ரானார்.

(இ - ள்.) கற்பு அலர் கொடி அன்னாரும் - கற்பாகிய மலர் மலர்ந்த கொடி போல்வாராகிய மங்கையர்க்கரசியாரும், தென்னவன் கண் போல்வாரும்-பாண்டியன் கண்போல்வாராகிய குலச்சிறையாரும், அன்று-அப்பொழுதே, அல் புரை அமண் பேய் ஓட்டி - இருளை யொத்த சமணப் பேயினைத் துரத்தி, தம் கோமான் மெய்யில் பொற்பு உறு நீறு கண்டு - தமது தலைவன் மேனியில் அழகு மிக்க திரு நீற்றினையுங் கண்டு, பூதி சாதனத்தால் எய்தும் - பூதி சாதனத்தாலடையும், சிற்பர வீடு கண்ட மகிழ்ச்சியுள் - ஞானமயமாகிய பரவீட்டினைக் காணுதலால் விளையுஞ் சிவானந்தத்தில், திளைத்தோர் ஆனார் - அழுந்தியவ ராயினர்.

மங்கையர்க்கரசியாரின் கற்பு மேம்பாட்டை வியந்துரைப்பார் 'கற்பு அலர் கொடியன்னார்' என்றார். இஃது இல்பொருளுவமை. அரசன் தீ நெறியிற் செல்லின் தடுத்து நனனெறிச் செலுத்தும் இயல் புடையாரென்பார் குலச்சிறையாரைத் 'தென்னவன் கண் போல்வார்' என்றார். அவ்வுரை கேட்டவளவில் அமணினை ஓட்டுதலும் அரசன் நீறு தரித்தலும் யாவரும் பரவிடெய்துதலும் உறுதி யெனத் தெளிந்தா ராகலின் அவை அப்பொழுதே எய்தினாற் போல மகிழ்ச்சியடைந்தனர் என்க. (உரு)

தங்கள்பேர் தீட்டி யோலை விண்ணப்பஞ் சண்பை நாடர்
புங்கவர்க் குணர்த்த வந்தப் பூசுரன் கையிற் போக்கி
மங்கையர்க் கரசி யாரு மரசற்கு மருந்தன் னாரும்
அங்கயற் கண்ணி கோனைப் பணிந்துதம் மகத்திற் புக்கார்.

(இ - ள்.) சண்பைநாடர் புங்கவர்க்கு உணர்த்த - காழி நாட்டினர் தலைவராகிய திருஞான சம்பந்தருக்குத் தெரிவிக்க, ஓலை விண்ணப்பம் தங்கள் பேர் தீட்டி - விண்ணப்ப ஓலை யொன்று தங்கள் பேராலெழுதி,

அந்தப் பூசுரன் கையில் போக்கி - அம்மறையவன் கையிற் கொடுத்து அவனை அனுப்பி, மங்கையர்க்கரசியாரும் அரசற்கு மருந்து அன்னானும் - மங்கையர்க்கரசியாரும் மன்னனுக்கு அமிழ்தினை யொத்த குலச் சிறையாரும், அங்கயற் கண்ணி கோனைப் பணிந்து தம் அகத்தில் புக்கார் - அங்கயற் கண்ணி தலைவனைப் பணிந்து தமது இல்லிற் சென்றனர்.

விண்ணப்ப ஓலை தங்கள் பேரால் தீட்டி என்க. பதியும் நாடு எனப்படுதல் வழக்கு. புங்கவர் - உயர்ந்தோர்; தலைவர். அரசன் உடற்பிணியும் உயிர்ப்பிணியும் நீங்கி உறுதி யெய்துதற்குக் காரணராகலின் 'அரசற்கு மருந்தன்னான்' என்றார். (உசு)

பண்படு வேதச் செல்வன் வல்லைபோய்ப் பழன வேலிச்
சண்பையர் பிரானைக் கண்டு பறியுண்டு தலைக ளெல்லாம்
புண்படத் திரியுங் கையர் போய்யிருள் கடந்தார் தந்த
எண்படு மோலை காட்டிப் பாசுர மெடுத்துச் சொன்னான்.

(இ - ள்.) பண்படு வேதச் செல்வன் - பண்ணமைந்த மறைச் செல்வனாகிய அவ்வந்தணன், வல்லைபோய் - விரைந்து சென்று, பழன வேலி சண்பையர் பிரானைக் கண்டு - கழனிகள் சூழ்ந்த காழியின் வேந்தராகிய திருஞானசம்பந்தரைத் திருமறைக்காட்டிற் கண்டு, தலைகள் எல்லாம் புண்படப் பறியுண்டு திரியும் கையர் - தலைகள் முழுதும் புண்படுமாறு மயிர்கள் பறிக்கப்பட்டுத் திரியும் கீழ் மக்களாகிய சமணர்களின், பொய் இருள் கடந்தார் தந்த - பொய் நெறியாகிய இருளினைக் கடந்த மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை யாருங் கொடுத்த, எண்படும் ஓலை காட்டி - மதிக்கத்தகும் ஓலையினைக் காட்டி, பாசுரம் எடுத்துச் சொன்னான் - அதிலுள்ள பாசுரத்தை எடுத்துக் கூறினான்.

திருஞான சம்பந்தர் திருமறைக்காட்டில் எழுந்தருளி யிருத்தலை அரசியாரும் அமைச்சரும் கேள்வியுற்றுப் பரிசனங்களை விடுக்க அவர்கள் சென்று அப்பதியிற் கண்டு வணங்கி அவர்கள் விண்ணப்பத்தைத் தெரிவித்தனரெனப் பெரிய புராணங் கூறும். பாசுரம் - திருமுகவாசகம். பிள்ளையார் கட்டளையால் எடுத்துச் சொன்னான் என்க. (உஎ)

[எழுசீரடி யாசிரிய விருத்தம்]

வெங்குரு வேந்த ரடிபணிந் தடியேன்
குலச்சிறை விளம்புவிண் ணப்பம்
இங்கெழுந் தருளிச் சமணிரு ளோதுக்கி
யெம்மிறை மகற்குநீ றளித்துப்

போங்கிரும் பணைசூழ் தென்றமிழ் நாட்டைப்
பூதிசா தனவழி நிறுத்தி
எங்களைக் காக்க வென்றபா சுரங்கேட்
டெழுந்தனர் கவுணியர்க் கிறைவர்.

(இ - ள்.) அடியேன் குலச்சிறை வெங்குருவேந்தர் அடிபணிந்து - அடியேன் குலச்சிறை காழிமன்னரின் திருவடியை வணங்கி, விளம்பு விண்ணப்பம் - கூறும் விண்ணப்பமாவது, இங்கு எழுந்தருளி - தேவரீர் இந்த நாட்டிற்கு எழுந்தருளி, சமண் இருள் ஓதுக்கி - சமணாகிய இருளை ஓட்டி, எம் இறைமகற்கு நீறு அளித்து - எமது அரசனுக்குத் திருநீறு கொடுத்து, பொங்கு இரும்பணை சூழ் - நிறைந்த பெரிய வயல் சூழ்ந்த, தென் தமிழ்நாட்டை - தமிழையுடைய இத் தென்னாட்டை, பூதிசாதன வழி நிறுத்தி - பூதிசாதன நெறியில் நிறுத்தி, எங்களைக் காக்க - அடியேங்களைக் காக்கக் கடவீர், என்ற பாசுரம் கேட்டு - என்னும் பொருளமைந்த பாசுரத்தைக் கேட்டு, கவுணியர்க்கு இறைவர் எழுந்தனர் - கவுணியர் தலைவராகிய ஆளுடைய பிள்ளையார் எழுந்தனர்.

வெங்குரு - சீகாழியின் பன்னிரு பெயர்களில் ஒன்று; அசுர குரு பூசித்தமையால் வந்த பெயர். பன்னிரு பெயர்களின் வரலாறும் மேல் அருச்சனைப் படலத்திற் கூறப்படும். பாண்டிநாடு முற்றும் பூதி சாதனங்கள் இழந்தன என்பார் 'தென்றமிழ் நாட்டைப் பூதி சாதன வழி நிறுத்தி' என்றார். கவுணியர் - கவுணிய கோத்திரத்தினர். (உஅ)

ஆதகா திதுவென் றோதுவார் நாவுக் கரையர்நீர் சிறியவ ரவரோ
பாதக மஞ்சார் தம்மோடும் பன்னாட் பழகிய வென்னையவர் செய்த
வேதனை யளந்து கூறுவ தென்னை விடுகதில் லம்மவோ வுமக்கிப்
போதுநாள் கோள்கள் வலியில வென்னப் புகலியர் வேந்தரும் புகல்வார்.

(இ - ள்.) நாவுக்கரையர் - அவருடனிருந்த திருநாவுக்கரசுகள், ஆதகாது இது என்று ஓதுவார் - ஆ இது தகாது என்று கூறுபவர், நீர் சிறியவர் - நீரோ பாலர்; அவரோ பாதகம் அஞ்சார் - அவரோ தீவினைக்கு அஞ்சாதவர்; தம்மொடும் பன்னாள் பழகிய என்னை - தம்மோடும் பலவாண்டுகள் பழகிய எனக்கு, அவர் செய்த வேதனை அளந்து கூறுவது என்னை - அவர்கள் செய்த துன்பத்தை வரையறுத்துக் கூறுதல் எங்ஙனம்; உமக்கு இப்போது நாள் கோள்கள் வலிஇல - உமக்கு இப்போது நாள்களும் கோள்களும் வலியுடையனவாகவும் இல்லை; விடுகதில் - (ஆதலின்) போதலைத் தவிர்க; என்ன - என்று கூற, புகலியர் வேந்தரும் புகல்வார் - காழிப்பதியார்க்குத் தலைவராகிய திருஞான சம்பந்தரும் கூறுவாராயினர்.

ஆ என்பதும், அம்மவோ என்பதும் இரக்கத்தில் வந்தன. அம்ம: கேட்பித்தற் பொருட்டுமாம். அவர் சமயத்திற் புகுந்து அவரோடிடைவிடாது பழகிய பயிற்சியையும் கருதாது இரக்கமின்றி நீற்றறையிலிடுதல் ஆதிய கொடுந் துன்பங்கள் செய்த பாதகர் என்பார் 'தம்

மொடும் பன்னாட் பழகிய வெண்ணயவர் செய்த வேதனை அளந்து கூறுவ தெவன்' என்றார். 'தில்' ஒழியிசை இடைச் சொல். நாள் - நக்கத் திரம். கோள் - நவக்கோள். வலியில - நலந்தரும் நிலையின வல்ல. (உ௧)

எந்தையெம் பெருமா னருளிலார் போல
வின்னண மிசைப்பதேன் னவர்செய்
வெந்த வேதனையி னுய்ந்தநீர் நாள்கோள்
விளங்குபுள் ளவுணர்பேய் பூதம்
அந்தமில் பலவு மம்மையோ டப்ப
ணாணையா னடப்பன வவர்நஞ்
சிந்தையே கோயில் கொண்டுவீற் றிருப்பத்
தீங்கிழை யாவென வெழுந்தார்.

(இ - ள்.) எந்தை அவர் செய் வெந்த வேதனையின் உய்ந்தநீர் - எம்மப்பரே,— அச்சமணர் செய்த கொடிய துன்பத்தினின்றும் இறைவனருளாற் றப்பிய நீவிர், எம்பெருமான் அருள் இலார் போல - எம் பெருமான் திருவருளைப் பெறாதார் கூறுவதுபோல, இன்னணம் இசைப்பது என் - இங்ஙனம் கூறுவது என்னோ, நாள் கோள் விலங்கு புள் - நாள்களுங் கோள்களும் விலங்குகளும் பறவைகளும், அவுணர் பேய் பூதம் அந்தம்இல் பலவும் - அவுணர்களும் பேய்களும் பூதங்களும் இவைபோன்ற அளவிறந்த பலவும், அம்மையோடு அப்பன் ஆணையால் நடப்பன - அம்மையோடு அப்பனாயுள்ள இறைவன் ஆணையினாலே நடப்பன; அவர் நம் சிந்தையே கோயில் கொண்டு வீற்றிருப்ப - அவ்விறைவர் நமது மனத்தையே கோயிலாகக் கொண்டு வீற்றிருத்தலால், தீங்கு இழையா என எழுந்தார் - அவை தீங்கு புரியாவெனப் பதிகங் கூறிப் புறப்பட்டனர்.

எந்தையாகிய எம்பெருமான் என்றுமாம். இறைவனருளுடையார்க்கு யாதொன்றானும் துன்பமுண்டாகா தென்பதற்குச் சமணர் புரிந்த கொடுந்துன்பங்களினின்றும் உய்ந்த நீரே சான்றாக இருப்பவும் இங்ஙனம் கூறுவதென்னென்பார் 'எம்பெருமானருளிலார் போல இன்னண மிசைப்பதென் அவர் செய் வெந்த வேதனையின் உய்ந்த நீர்' என்று பிள்ளையார் கூறினரென்க. நாள் கோள் முதலியன இறைவனடியார்க்கு இன்னல் விளையாது நல்லனவேயாம் என்று அப்பொழுது பிள்ளையார் பாடிய பதிகம் "வேயுறு தோளி பங்கன்" என்னும் கோளறு பதிகமாகும்;

"வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ னுளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள்செவ் வாய்புதன் வியாழம் வெள்ளி சனிபாம்
[பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல வடியா ரவர்க்கு மிகவே"

என்னும் முதற் பாட்டால் கோட்களும், ஏனைய பாட்டுக்களாற் பிறவும் நல்லன வாதல் கூறப்பட்டமை காண்க. ஒவ்வொரு பாட்டிலும் இறைவன் அம்மையோடு உளம்புகுந்திருத்தல் கூறப்படுதலின் ஈண்டும் 'அம்மையோடப்பன்' என இந்நூலாசிரியர் கூறினரென்க. (கூ0)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

மாமுர சொலிப்பச் சங்கங் காகளம் வாய்விட் டேங்கச்
சாமறை பனிப்ப முத்தின் பந்தரிற் றரளத் தெய்வக்
காமரு சிவிகை மேற்கோண்* டமணிருள் கழுவுஞ் சோதி
யாமேன நெறிக்கோண் டீச னிடந்தோறு மடைந்து பாடி.

(இ - ள்.) மாமுரசு ஒலிப்ப - பெரிய முரசங்கள் முழங்கவும், சங்கம் காகளம் வாய்விட்டு ஏங்க - சங்கங்களும் திருச்சின்னமும் வாய்விட்டு ஒலிக்கவும், சாமரைபனிப்ப - இருபுறங்களிலும் சாமரை அசையவும், முத்தின் பந்தரில் - முத்துப் பந்தரின் கீழ், தெய்வக் காமரு தரளச் சிவிகை மேற்கொண்டு - தெய்வத் தன்மை பொருந்திய அழகிய முத்துச் சிவிகையி லேறியருளி, அமண் இருள் கழுவும் சோதியாம் என - அமணாகிய இருளைப்போக்குஞ் சூரியனாகும் என்று கண்டோர் சொல்லுமாறு, நெறிக்கொண்டு ஈசன் இடந்தொறும் அடைந்து பாடி - வழிக்கொண்டு இறைவன் திருப்பதிகடோறுஞ் சென்று பாடியருளி.

காமரு, உ : சாரியை; காமம் மரு காமரு என்றாயதெனக் கொண்டு, விருப்பம் பொருந்திய என்றுரைத்தலுமாம். முத்துச் சிவிகை முதலியவற்றின் ஒளியும், திருநீற்றினொளியும் விரவி மிகுதலால் 'அமணிருள் கழுவுஞ்சோதியாமென' என்றார் என்னலுமாம்;

"துன்னுமுழு வுடற்றுகளாற் சூழுமுணர் வினிற்றுகளால்
அன்னெறியிற் சென்றடைந்த வமண்மாசு கழுவுதற்கு
மன்னியொளிர் வெண்மையினாற் றூய்மையினால் வழுதியர்தங்
கன்னிநாட் டிடைக்கங்கை யணைந்ததெனுங் கவின் காட்ட"

என்னும் திருத்தொண்டர் புராணச் செய்யுள் இங்கு நோக்கற்பாலது.

கழுவுதல் - போக்குதல். (ருக)

செம்பிய னாடு நீந்தித்† தென்னவ னாடு நண்ணி
வெம்பிய சுரமு முல்லைப் புறவமு மேக வில்லைத்
தும்பிகை நீட்டி வாங்கு மலைகளுந் துறந்து பாகத்
தம்பிகை யுடையான் கூட னகர்ப்புற னணுகச் செல்வார்.

(பா - ம்.) *மேல்கொண்டு. †செம்பியனாடு நீங்கி.

(இ - ள்.) செம்பியன் நாடு நீந்தி - சோழன் நாட்டினைக் கடந்து, தென்னவன் நாடு நண்ணி - பாண்டியன் நாட்டினை அடைந்து, வெம்பிய சுரமும் முல்லைப்புறவமும் - வெப்பமிக்க பாலை நிலத்தையும் முல்லை நிலத்தையும், மேகவில்லைத் தும்பி கைநீட்டி வாங்கும் மலைகளும் துறந்து-முகிலிலுள்ள இந்திர வில்லை யானை தனது துதிக்கையை நீட்டி வளைக்கும் மலைகளையும் கடந்து, பாகத்து அம்பிகை உடையான் - ஒரு பாதியில் உமையையுடைய இறைவனது, கூடல் நகர்ப்புறன் அணுகச் செல்வார் - கூடலம்பதியின் அண்மையிற் செல்வாராயினர்.

முல்லையாகிய புறவம் என்க. மலைகளின் உயர்ச்சி கூறுவார் 'மேகவில்லைத் தும்பிகை நீட்டி வாங்கு மலைகள்' என்றார். இது தொடர்புயர்வு நவிற்சி. (௩௨)

புண்ணிய நீற்றுத் தொண்டர் குழாத்தினுட் புகலி வேந்தர்
நண்ணிய சிவிகை மீது நகைவிடு தரளப் பந்தர்
கண்ணிய ரேற்றந்* தீம்பாற் கடல்வயிற் றுதித்துத் தீர்ந்து
விண்ணியன் முழுவெண் டிங்கள் விளக்கமே யொத்த தன்றே.

(இ - ள்.) புண்ணிய நீற்றுத் தொண்டர் குழாத்தினுள் - புண்ணியமாகிய திருநீற்றினை யணிந்த அடியார் கூட்டத்தினுள், புகலிவேந்தர் நண்ணிய சிவிகை மீது - காழிவேந்தர் ஏறியருளிய சிவிகையின்மேல், நகைவிடு தரளப் பந்தர் - ஒளிவிடும் முத்துப் பந்தரின், கண் இயல் தோற்றம் - பார்த்தற்கு அமைந்த காட்சி, தீம்பால் கடல் வயிறு உதிர்த்து - இனிய பாற் கடலின் நடுவிற்றோன்றி, தீர்ந்துவிண் இயல் முழுவெண் திங்கள் - மேற் போந்து வானிலுலாவும் வெள்ளிய முழு மதியினது, விளக்கமே ஒத்தது - காட்சியையே ஒத்தது.

புண்ணியமே வடிவாயது திருநீறு என்பது,

"புண்ணிய மாவது நீறு"

என்னும் திருநீற்றுப் பதிகத்தாலறிக. நீறு பூசிய தொண்டர் குழாம் பாற்கடல் போன்றும், முத்துப் பந்தர் அப் பாற்கடலிலுதித்து வானி லுயர்ந்த முழுமதிபோன்றும் விளங்கின என்க. பந்தர்: போலி. அன்று, ஏ: அசைகள். (௩௩)

தேம்படு குமுதச் செவ்வாய்ச் சிரபுரச் செல்வர் முன்னம்
போம்பரி சனத்தார் தம்மிற் பொன்னெடுஞ் சின்ன மார்ப்போர்
தாம்பர சமய சிங்கஞ் சமணிருள் கிழியப் பானு
வாம்படி வந்தா னென்றென் றூர்த்தெழு மோசை கேளா.

(இ - ள்.) தேம்படு குமுதச் செவ்வாய்ச் சிரபுரச் செல்வர் முன்னம் - தேன் பொருந்திய குமுத மலர்போன்ற சிவந்த வாயினை

(பா - ம்.) *கண்ணிய தோற்றம்.

யுடைய காழிச் செல்வருக்கு முன்னே ; போம் பரிசனத்தார் தம்மில் - போகும் பரிசனங்களுள், பொன் நெடுஞ் சின்னம் ஆர்ப்போர் - பொன்னாலாகிய நீண்ட திருச்சின்னம் ஊதுவோர், பரசமய சிங்கம் - எங்கள் பரசமய கோளரி, சமண் இருள் இரிய - சமணாகிய இருள் இரிந்தோட, பானுவாம்படி வந்தான் என்று என்று ஆர்த்து எழும் ஓசை கேளா - சூரியன் போன்று வந்தனன் என்று பல முறை கூறி ஆரவாரித்து எழும் ஒலியினைக் கேட்டு.

தாம் : அசை. பரசமய சிங்கம்-புறச் சமய வாதியராகிய வேழங் களை அடக்கும் சிங்கம் ;

"உரைசெய்திருப் பேர்பலவு மூதுமணிச் சின்னமெலாம்
பரசமய கோளரிவந் தானென்று பணிமாற"

என்றார் அருண்மொழித் தேவரும். ஒலிப்பிக்க எழும் ஓசை என்க. (௩.௪)

நின்றுண்டு திரியுங் கைய ரெதிர்வந்து நீவிர் நுங்கள்
கொன்றறஞ் சொன்ன தேவைக் கும்பிட வந்தா லிந்த
வென்றிகோள் சின்ன மேன்கோல் வீறென்கோல் யாரைவென்றீர்
என்றனர் தடுத்தா ரென்று மீறிலா னடியார் தம்மை.

(இ - ள்.) நின்று உண்டு திரியும் கையர் - நின்ற வண்ணமே உணவு அருந்தித் திரியுங் கீழ்மக்களாகிய சமணர்கள், எதிர் வந்து - நேரில் வந்து, கொன்று அறஞ் சொன்ன நுங்கள் தேவை - உயிர்களைக் கொன்று அறங் கூறிய உங்கள் தேவனை, நீவிர் கும்பிட வந்தால் - நீவிர் வணங்குதற்கு வந்தால், இந்த வென்றி கொள் சின்னம் என் கொல் - இந்த வெற்றி பொருந்திய சின்னம் எதற்கு, வீறு என் கொல் - இறு மாப்பு எதற்கு, யாரை வென்றீர் என்றனர் - யாவரை வென்றீரென்று கூறி, என்றும் ஈறு இலான் அடியார் தம்மைத் தடுத்தார் - எஞ் ஞான்றும் அழிவில்லாத இறைவனடியார்களைத் தடுத்தனர்.

கொன்று அறஞ் சொன்ன - தான் கொலை புரிந்து பிறர்க்குக் கொலை தீதென்று அறஞ் சொன்ன. கொல்லுந் தொழிலுடையான் ஓதிய அறமும் அறமாகாது, அவனும் தேவனாகான் என இழித்துக் கூறுவாராய் 'நுங்கள் கொன்றறஞ் சொன்ன தேவை' என்றார். ஈண்டுக் கொல்லுதலாவது சருவ சங்காரஞ் செய்தல்; யானை, பசு, நாகம், காமன், காலன் முதலியோரைக் கொன்றமையுமாம்; இவற்றுள் முன்னது உயிர்களை இளைப்பாற்றுதற்கும், பின்னது தம்மை யடைந் தார் வினை தீர்ப்பதற்கும் என்றுணர்க. என்றனர் : முற் றெச்சம். (௩.௫)

மாமத மொழுகச் செல்லுந் திண்டிறன் மத்த வேழந்
தாமரை நூலிற் கட்டத் தடைபட வற்றோ கோற்றக்
காமனை முனிந்தார் மைந்தர் கயவர்தந் தடையை நீத்துக்
கோவணி மாட மூதூ ரடைந்தரன் கோயில் புக்கார்.

(இ - ள்.) மாமதம் ஒழுகச் செல்லும் - கரிய மதநீர் ஒழுகச் செல்லா நிற்கும், திண்திறல் மத்த வேழம் - மிக்க வலியுடைய மதயானை யானது, தாமரை நூலில் கட்டத் தடைபட வற்றோ - தாமரை நூலினாற் கட்டுதலால் தடைபட்டுப் போக்கொழியும் வன்மைக் குறை வுடையதோ? (இல்லை); கொற்றக் காமனை முனிந்தார் மைந்தர் - வெற்றி பொருந்திய மதவேளை எரித்தவரின் திருமைந்தர், கயவர் தம் தடையை நீத்து - அக் கீழ்மக்களின தடையை நீக்கி, கோமணி மாடம் மூதூர் அடைந்து - தலைமை பெற்ற மணிகள் அழுத்திய மாடங் களையுடைய தொன்னகராகிய மதுரையை அடைந்து, அரன் கோயில் புக்கார் - சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலுட் புகுந்தார்.

மத்தம் - மதச்செருக்கு; மத்தகமும் ஆம். வற்றோ - வல்லதோ; வன்மைக் குறைவுடையதோ என்பது கருத்தாகக் கொள்க;

"வெந்தறுகண் வேழத்தை வேரிக் கமலத்தின்
தந்துவினாற் கட்டச் சமைவதொக்கும்"

எனப் பிறரும் உவமை கூறினமை காண்க. இறைவன் ஞானப் பாலூட்டுவித்தும், சிவிகை முதலியன தந்தும் பிள்ளைமை பாராட்டுத லானும், இவரும் சற்புத்திர நெறி நின்று அம்மையப்பரையே தமக்குத் தாய் தந்தையராகப் போற்றி யொழுகலானும் 'காமனை முனிந்தார் மைந்தர்' என்று கூறப்படுதற்குப் பிள்ளையார் உரிமையுடையராதல் பெற்றாம். (௩௬)

கைம்மலைச் சாபந் தீர்த்த கருணையங் கடலைத் தாழ்ந்து
மும்முறை வளைந்து ஞான முகிழ்முலைப் பாலி னோடு
செம்மணி வள்ளத் தீந்த திருவோடுந் தொழுதா னந்த
மெய்ம்மய வெள்ளத் தாழ்ந்து நின்றனர் வேதச் செல்வர்.

(இ - ள்.) வேதச் செல்வர் - மறையாகிய செல்வத்தையுடைய திருஞானசம்பந்தப் பெருமானார், ஞானம் - சிவஞானத்தை, முகிழ் முலைப் பாலினோடு - தாமரையரும்பினையொத்த திருமுலைப்பாலி னோடுங் குழைத்து, செம்மணி வள்ளத்து ஈந்த திருவொடும் - சிவந்த மணிகள் பதித்த பொற்கிண்ணத்தில் கொடுத்தருளிய அம்மையோடும், கைம்மலைச் சாபம் தீர்த்த கருணையங்கடலை - வெள்ளை யானையின் சாபத்தைப் போக்கியருளிய அருட்கடலாகிய அப்பனை, மும்முறை வளைந்து தாழ்ந்து தொழுது - மூன்று முறை வலம் வந்து வீழ்ந்து வணங்கி, மெய்ம்மய ஆனந்த வெள்ளத்து ஆழ்ந்து நின்றனர் - உண்மை மயமாகிய சிவானந்தப் பெருக்கிலழுந்தி நின்றனர்.

கடலைத் தாழ்ந்து வெள்ளத்து ஆழ்ந்து நின்றனர் என்பது சொன் னயம். (௩௭)

மறைவழி நின்று நின்னை வந்திசெய் துய்ய மாட்டா
நிறைவழி வஞ்ச நெஞ்சச் சமணரை நெறிக ளெல்லாஞ்
சிறைபட வாது செயத் திருவுள்ளஞ் செய்தி கூற்றைக்
குறைபட வுதைத்தோ யென்று குறித்துரை பதிகம் பாடி.

(இ - ள்.) கூற்றைக் குறைபட உதைத்தோய் - கூற்றுவனை அவனுயிர் சிதையுமாறு உதைத்தருளியவனே, மறைவழி நின்று நின்னை வந்தி செய்து உய்யமாட்டா - வேத நெறியினின்று உன்னை வணங்கிப் பிழைக்கமாட்டாத, நிறைவு அழிவஞ்ச நெஞ்சச் சமணரை - அறிவழிந்த வஞ்சம் நிரம்பிய உள்ளத்தையுடைய சமணரை, நெறிகள் எல்லாம் சிறைபட - அவர் வழிகளெல்லாம் சிறைபடுமாறு, வாது செய்யத் திருவுளம் செய்தி என்று - வாது செய்யத் திருவுள்ளஞ் செய்யக்கடவை என்று, குறித்து உரைபதிகம் பாடி - அதனைக் குறித்து உரைக்கும் திருப்பதிகம் பாடியருளி.

நெறிகள் எல்லாம் சிறைபட - அவர்கள் புன்னெறி யெல்லாம் மறைந்தொடுங்க. சமணரோடு வாது செய்யவும், அவர்களை வாதில் வென்றழிக்கவும் இறைவர் திருக்குறிப்பினை யுணர்தல் வேண்டிப் பிள்ளையார் பாடிய பதிகம் இரண்டு; அவை முறையே,

"காட்டு மாவ துரித்துரி போர்த்துடல்
நாட்ட மூன்றுடை யாயுடை செய்வனுன்
வேட்டு வேள்வி செயாவமண் கையரை
ஓட்டி வாது செயத்திரு வுள்ளமே"

"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி யமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
னால வாயி லுறையுமெம் மாதியே"

என்னும் பாடல்களை முதலாக வுடையன. இவற்றுட் பின்னது வரும் படலத்திற் கூறப்படுதலின் ஈண்டு முதற்பதிகத்தைக் கொள்க. அடியவர்க்காக இயமனை உதைத்தருளிய பேரருளுடையை ஆகலின் சமணரை வாதில் வெல்ல அருள் புரிவை என விசேடியம் கருத்துடன் கூடியிருத்தலின் இது கருத்துடை யடை கொளியணி;

"ஆலமே யமுத மாக வுண்டுவா னவர்க் களித்துக்
காலனை மார்க்கண் டற்காக் காய்ந்தனை யடியேற் கின்று
ஞாலநின் புகழே யாக வேண்டுநான் மறைக ளேத்துஞ்
சீலமே யால வாயிற் சிவபெரு மானே யென்றார்"

என்னும் பெரிய புராணச் செய்யுள் இங்கே சிந்திக்கற்பாலது. (௬௮)

வேண்டுகோண் டருளைப் பெற்று மீளுமப் போது கண்டு
மூண்டவைம் பொறியும் வென்ற வாகீச முனிக ளென்ன*
ஆண்டுளா ரொருவர் வேண்ட வவர்திரு மடத்தி லன்பு
பூண்டெழு காத லோடும் போயினார் புகலி வேந்தர்.

(பா - ம்.) * முனிவரென்ன.

(இ - ள்.) வேண்டு கொண்டு அருளைப்பெற்று மீளும் அப்போது - வேண்டிக்கொண்டு திருவருளைப் பெற்றுத் திரும்பும் அப்பொழுது, மூண்ட ஐம்பொறியும் வென்ற - மூளுகின்ற ஐம்பொறியும் வென்ற - வாகீச முனிகளென்ன ஆண்டு உளார் ஒருவர் கண்டு வேண்ட - வாகீச முனிகளென்று அங்குள்ள ஒருவர் கண்டு வேண்டி யழைக்க, அவர் திருமடத்தில் - அவர் திருமடத்திற்கு, அன்பு பூண்டு எழு காதலோடும் - அன்பு பூண்டு மேலெழும் விருப்பத்தோடும், புகலிவேந்தர் போயினார் - காழியரசர் சென்றருளினார்.

வேண்டுகொண்டு - வேண்டுதல் செய்து; வேண்டு: முதனிலைத் தொழிற் பெயர். மூண்ட - புலன்களிற் செல்ல மூளும். வாசீகமுனிகள் - பிள்ளையார் காலத்தில் மதுரையில் திருமட மமைத்து அதில் வசித்து அம்மையப்பரை வழிபாடு செய்து கொண்டிருந்த ஒரு சிவயோகியாராவர்; திருநாவுக்கரசுகளைப்போல அங்குள்ள ஒரு சிவயோகியார் வேண்ட என்றுரைப்பாருமுளர். (கூக)

அங்கெழுந் தருளி யெல்லி னமுதுசெய் திருப்ப வற்றைக்
கங்குல்வா யமணர் செய்யுங் கருதருஞ் செயலுந் தங்கள்
மங்கல மரபின் வந்தாள் வருத்தமுங் காண வஞ்சிச்
செங்கதி ரவன்போய் மேலைச் செழுங்கடல் வெள்ளத் தாழ்ந்தான்.

((இ - ள்.) அங்கு எழுந்தருளி எல்லின் அமுது செய்து இருப்ப - பிள்ளையார் அங்கு எழுந்தருளிப் பகற்பொழுதில் திருவமுது செய்து இருக்க, அற்றைக் கங்குல்வாய் - அன்று இரவின்கண், அமணர் செய்யும் கருதரும் செயலும் - சமணர்கள் செய்யும் நினைத்தற்கரிய செயலையும், தங்கள் மங்கலமரபின் வந்தாள் வருத்தமும் - தமது மங்கலமாகிய மரபிற்றோன்றிய மங்கையர்க்கரசியாரின் வருத்தத்தையும், காண அஞ்சி - பார்க்க அஞ்சி, செங்கதிரவன் போய் - சிவந்த கிரணங்களையுடைய சூரியன் சென்று, மேலைச் செழுங்கடல் வெள்ளத்து ஆழ்ந்தான் - மேற்குத் திசையிலுள்ள செழிய கடற் பெருக்கி லழுந்தினன்.

கருதருஞ் செயல் - மனத்தால் நினைத்தற்குமரிய கொடுஞ் செயல். சூரியனையும் அவன் மரபினர் பிறரையும் கருதித் 'தங்கள்' என்றார். ஆதித்தர் பன்னிருவரென்பது பற்றித் 'தங்கள்' என்றார் எனலுமாம். இயல்பிலே அத்தமித்த சூரியனை அமணர் செயலும் மரபின் வந்தாள் வருத்தமும் காண அஞ்சிக் கடல் வெள்ளத்தாழ்ந்தான் என்றமையால் இது தற்குறிப்பேற்ற அணி. (சO)

மாறுகோ ளமணர் செய்யும் வஞ்சனைக் கிடனு யோத்து
வேறற நட்புச் செய்வான் வந்தென விரிந்த கங்குல்
ஈறற முளைத்த வான்மீ னினமவர் பறித்த சென்னி
ஊறுபட் டெழுந்த மொக்கு ளொத்தவக் கங்கு லெல்லை.

(இ-ள்.) மாறுகொள் அமணர் செய்யும் வஞ்சனைக்கு இடனாய் - மாறுபாட்டினைக் கொண்ட சமணர்கள் புரியும் வஞ்சவினைக்கு இடமாகி, வேறு அற ஒத்துநட்புச் செய்வான் வந்தென - வேறுபாடு நீங்க ஒன்றுபட்டு நட்புச் செய்ய வந்தாற்போல, கங்குல் விரிந்தது - இருள் வந்து பரவியது; அக்கங்குல் எல்லை - அவ்விரவின்கண், ஈறு அற முளைத்த வான் மீன் இனம்-முடிவு இல்லையாக முளைத்த விண்மீன் கூட்டங்கள், அவர் பறித்த சென்னி - அவர்களுடைய மயிர் பறிக்கப்பட்ட தலைகளில், ஊறுபட்டு எழுந்த மொக்குள் ஒத்த - புண் பட்டு எழுந்த கொப்புளங்களை ஒத்தன.

செய்வான் : வினையெச்சம். வந்தென: விகாரம். விரிந்தது என்னும் வினைமுற்றின் இறுதி தொக்கது. ஈறு அற - அளவில்லையாக என்றபடி. (சக)

[கலிநிலைத்துறை.]

வைதி கத்தனி யிளஞ்சிறு மடங்கலே றடைந்த
செய்தி யைத்தெரிந் தயன்மலை யிடங்களிற் றிரண்ட
கைத வத்தவெண் ணாயிரங் கயவரு மொருங்கே
எய்தி முத்தமிழ் விரகர்மேற் பழித்தழ லிழைத்தார்.

(இ-ள்.) வைதிகம் தனி இளஞ் சிறு மடங்கலேறு - வேதநெறியிற் செல்லும் ஒப்பற்ற மிக்க இளமையையுடைய சிங்கவேறுபோல்வாராகிய திருஞானசம்பந்தர், அடைந்த செய்தியைத் தெரிந்து - அப்பதிக்கு வந்து சேர்ந்த செய்தியை அறிந்து, அயல் மலை இடங்களில் திரண்ட - பக்கங்களிலுள்ள மலையிடங்களிற் கூடியுள்ள, கைதவத்த எண்ணாயிரம் கயவரும் - வஞ்சக வொழுக்கத்தையுடைய எண்ணாயிரங் கயவர்களும், ஒருங்கே எய்தி - ஒருசேர மதுரைக்கு வந்து, முத்தமிழ் விரகர்மேல் பழித்தழல் இழைத்தார் - முத்தமிழ் வித்தகர்மேற் பழி வேள்வி செய்தனர்.

வைதிக மடங்கலேறு என்க. அயல்மலை இடங்கள் - ஆனைமலை முதலிய எண் குன்றங்கள்;

"ஆனை மாமலை யாதி யாய விடங்க ளிற்பல வல்லல்சேர்
ஈனர் கட்கெளி யேன லேன்றிரு வால வாயர னிற்கவே"

என்று பிள்ளையார் அருளிச்செய்தலுங் காண்க. பழித்தழல்-அபிசார வேள்வி. (சஉ)

மெய்யில் சிந்தையா ரத்தழற் கடவுளை விளித்தாங்
கெய்தி யெம்பகை யாயினோ ரிருக்கையை யமுது
செய்து வாவெனப் பணித்தனர்* சிறுவிதி மகத்துக்
கையி ழந்தவன் செல்லுமோ வஞ்சினான் கலங்கி.

(இ - ள்.) மெய்இல் சிந்தையார் - உண்மையில்லாத உள்ளத்தை யுடைய சமணர், அத்தழற் கடவுளை விளித்து - அத்தீக் கடவுளை அழைத்து, ஆங்கு எய்தி-அங்குச் சென்று, எம் பகையாயினோர் இருக்கையை அமுது செய்துவா எனப் பணித்தனர்-எமது பகைவரின் இருப்பிடத்தை உண்டு வருவாயாகவென்று கட்டளை யிட்டனர்; சிறுவிதி மகத்தில் கை இழந்தவன் - தக்கன் வேள்வியில் கை அறுபட்ட அவன், செல்லுமோ - செல்வானோ, கலங்கி அஞ்சினான் - மனங்கலங்கி அஞ்சினான்.

மெய்யில் சிந்தை - பொய் குடிகொண்ட சிந்தை. மந்திரத்தால் அத்தீக் கடவுளை அழைத்து என்க. சிவபிரானுக்கு மாறாகத் தக்கன் புரிந்த வேள்வியில் சென்று கை குறைபட்டவன் சிவகுமாரராகிய திருஞான சம்பந்தர்க்கு மாறாக அவர் இருக்கையிற் றுணிந்து செல்வனோ என அவன் செல்லாமைக்கு ஏதுக் காட்டினர்;

"தவமறைந் தல்ல செய்வார் தங்கண்மந் திரத்தாற் செந்தீ
சிவநெறி வளர்க்க வந்தார் திருமடஞ் சேரச் செய்தார்"

"ஆதி மந்திர மஞ்செழுத் தோதுவார் நோக்கு
மாதி ரத்தினு மற்றைமந் திரவிதி வருமே
பூதி சாதனர் மடத்திற்றும் புனைந்தசா தனைகள்
சாதி யாவகை கண்டமண் குண்டர்க டளர்ந்தார்"

என்னும் சேக்கிழார் திருவாக்குகளும் காண்க. (சங)

ஈனர் தாஞ்சடத் தீயினை யெடுத்தன ரேகி
ஞான போனகர் மடத்தினிற் செருகினார் நந்தா
தான தீப்புகை யெழுவதை யடியவர் கண்டு
வான நாயகன் மைந்தருக் குணர்த்தினார் வல்லை.

(இ - ள்.) ஈனர்தாம் சடத் தீயினை எடுத்தனர் ஏகி - கீழோராகிய அச்சமணர் தாமே சடமாகிய நெருப்பினை எடுத்துச் சென்று, ஞான போனகர் மடத்தினில் செருகினார் - சிவஞானத்தை அமுது செய்த பிள்ளையார் இருக்குந் திருமடத்திற் செருகினர்; ஆன தீப்புகை நந்தாது எழுவதை - அதனாலாகிய நெருப்பின் புகை குறைவு படாது மேலெழுவதை, அடியவர் கண்டு - அடியார்கள் பார்த்து, வான நாயகன் மைந்தருக்கு வல்லை உணர்த்தினார் - வீட்டுலகிற்குத் தலைவனாகிய இறைவனது திருப்புதல்வருக்கு விரைய அறிவித்தனர்.

சடத்தீ - பூதாக்கினி. ஞான போனகர் - சிவஞானமாகிய உணவினையுண்டவர். வானவர்க்கு நாயகன் என்றுமாம். (சச)

(பா- ம்.) * வாவென விடுத்தனர்.

சிட்டர் நோக்கியத் தீயினைத் தென்றமிழ்க் கூடல்
அட்ட மூர்த்தியை யங்கிருந் தருமறைப் பதிகந்
துட்டர் போய்யுரை மேற்கோண்டு தோன்முறை துறந்து
விட்ட வேந்தனைப் பற்றெனப் பாடினார் விடுத்தார்.

(இ - ள்.) சிட்டர் அத்தீயினை நோக்கி - மேலோராகிய பிள்ளையார் அந்நெருப்பினைப் பார்த்து, அங்கு இருந்து - அங்கு இருந்த வண்ணமே, துட்டர் பொய் உரைமேற் கொண்டு - தீச் செயலையுடையவர்களாகிய சமணர்களின் பொய்மொழியை மேற்கொண்டு, தொல்முறை துறந்து விட்ட வேந்தனைப் பற்று என - பழைய முறைகளைக் கைவிட்ட மன்னனைப் பையச் சென்று பற்றக் கடவை என, தென்தமிழ்க் கூடல் அட்ட மூர்த்தியை - தமிழையுடைய தெற்கின் கண்ணுள்ள கூடலில் எழுந்தருளிய அட்டமூர்த்தியாகிய சோமசுந்தரக் கடவுள்மேல், அருமறைப்பதிகம் பாடினார் விடுத்தார் - அரிய தமிழ்மறைப் பதிகம் பாடி விடுத்தனர்.

அட்ட மூர்த்தியைப் பாடி வேந்தனைப்பற்று என அத்தீயினை விடுத்தார் எனக் கூட்டுக. நிலம் முதலிய எட்டு மூர்த்தங்களினும் உள்ளிருந்து அவற்றின் செயல்களை நிகழ்விப்போன் இறைவனாகலின் அவனைப் பாடித் தீயினை விடுத்தார் என்க. அரசன் முறை வழுவிய காரணத்தால் இது நிகழ்ந்ததாகலின் பேரருளாளராகிய பிள்ளையார் சமணர்மீது தீயினை ஏவாது அரசன்மேல் ஏவினர். பிள்ளையார் அப்பொழுது பாடிய பதிகம்,

“செய்ய னேதிரு வாலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே”

என்னும் திருப்பாட்டை முதலாக வுடையது. ‘அமணர் கொளுவுஞ் சுடர் பையவே சென்று பாண்டியற்காக’ எனப் பிள்ளையார் பாடியதற் குரிய காரணங்களை,

“பாண்டிமா தேவியார் தமது பொற்பிற்
பயிலுநெடு மங்கலநாண் பாது காத்தும்
ஆண்டகையார் குலச்சிறையா ரன்பி னாலு
மரசன்பா லபராத முறுத லாலும்
மீண்டுசிவ நெறியடையும் விதியி னாலும்
வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடைய னாத லாலுந் தீப்பிணியைப்
பையவே செல்க வென்றார்”

என அருண்மொழித் தேவர் பாடிய அருமைச் செய்யுளாலறிக. (சடு)

அடுத்த தக்கணத் தரசனை வெப்புநோ யாகித்
தொடுத்த திட்டபல் கலன்களுந் துகளெழப் பனிநீர்
மடுத்த சாந்தமுங் கலவையு மாலையுங் கருகப்
படுத்த பாயலுஞ் சருகெழப் புரவலன் பதைத்தான்.

(இ - ள்.) அக்கணத்து அரசனை அடுத்தது - (அத்தியானது) அவ் விநாடியிலே கூன்பாண்டியனை அடைந்து, வெப்பு நோய் ஆகித் தொடுத்தது - சுரநோயாகிப் பற்றியது; (அதனால்), இட்ட பல்கலன் களும் துகள்எழ - அவன் அணிந்த பல அணிகளும் பொரிந்து தூளாக வும், பனிநீர் மடுத்த சாந்தமும் கலவையும் மாலையும் கருக - பனிநீர் விட்டு மட்டித்த சந்தனமும் கூட்டுவர்க்கமும் மாலையுங் கருகித் தீயவும், படுத்த பாயலும் சருகு எழ - படுத்திருக்கும் படுக்கை யும் வெந்து சருகாகவும், புரவலன் பதைத்தான் - அவ்வேந்தன் பதைத்தனன்.

அடுத்தது: முற்றெச்சம். துகளெழ முதலிய வினை யெச்சங்கள் நிகழ்காலத்தில் வந்தன. துகளெழ, கருக, சருகெழத் தொடுத்தது என முடித்தலுமாம். (௬௬)

வளவர் கோன்றிரு மடந்தையு மந்திர ரேறுந்
தளர்வ டைந்துநன் மருத்துநூல் விஞ்சையர் தமைக்கூஉய்ப்
பளகில் பன்மருந் தருத்தவும் பார்வையி னாலும்
விளைவதே யன்றி வெஞ்சுரந் தணிவது காணார்.

(இ - ள்.) வளவர் கோன் திரு மடந்தையும் - வளவர் கோன் பாவையாகிய மங்கையர்க்கரசியாரும், மந்திரர் ஏறும் - அமைச்சரேறாகிய குலச்சிறையாரும், தளர்வு அடைந்து - தளர்ச்சி யுற்று, நல் மருத்து நூல் விஞ்சையர் தமைக் கூய் - நல்ல மருத்துவ நூல் வல்லாரை அழைத்து, பளகுஇல் பல் மருந்து அருத்தவும்- குற்ற மில்லாத பல மருந்துகளை அருத்துவதனாலும், பார்வையினாலும் - மந்திரித்தலினாலும், விளைவதே அன்றி - மேலும் மேலும் மூதிர்வதே யல்லாமல், வெஞ்சுரம் தணிவது காணார் - கொடிய அவ்வெப்பு நோய் தணிவதைக் கண்டிலர்.

கூவி என்பது விகாரமாயிற்று. அருத்தவும் - ஊட்டுதலினாலும். பார்வை – மந்திரித்தல். விளைதல் - முதிர்தல். (௬௭)

சவலை நோன்புழந் திம்மையு மறுமையுஞ் சாரா
அவல மாசரை விடுத்தன ரனைவரும் பார்த்துத்
தவவ லத்தினு மருந்தினுந் தணிந்தில தாகக்
கவலை யெய்தின ரிருந்தனர் விடிந்தது கங்குல்.

(இ - ள்.) சவலை நோன்பு உழந்து - உடல் மெலிதற் கேதுவாகிய நோன்பினால் வருந்தி, இம்மையும் மறுமையும் சாரா - இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் அடையாத, அவலம் மாசரை விடுத்தனர் - தவவலியற்ற இருவகை அழுக்கினையுமுடைய சமணர்களை விடுத்தனர்; அனைவரும் - அவரனைவரும், தவவலியினும் மருந்தினும் பார்த்து தணிந்திலதாக - தமது தவவன்மையினாலும் மருந்தினாலும் பார்த்தும் அந்நோய் தணியாதாக, கவலை எய்தினர் இருந்தனர் - கவலை யுற்று இருந்தனர்; கங்குல் விடிந்தது - இரவு விடிந்தது.

கவலை நோன்பு - சுடுபாறையிற் கிடத்தல் முதலிய நோன்பு. அவலம் - துன்பம் என்றுமாம். மாசர் - அக வழுக்கும் புறவழுக்கு முடையவர். விடுத்தனர் என்பதற்குப் பரிசனங்கள் என எழுவாய் வருவித்துக் கொள்க. அவரனைவரும் எனச் சுட்டுப் பெயர் விரிக்க. தங்கள் மதத்திற்கு யாது தீங்கு நேருமோ எனக் கவலையெய்தின ரென்க. எய்தினர் : முற்றெச்சம். (சஅ)

வட்ட வாழியோன் றுடையதேர்ப் பரிதிதன் மருமான்
பெட்ட காதல்கூர் மருகனைப் பற்றிய பிணிகேட்
டிட்ட காரிரு ளேழினியை யெடுத்தெடுத் தங்கை
தொட்டு நோக்குவான் வந்தெனத் தொடுகடன் முளைத்தான்.

(இ - ள்.) வட்ட ஆழி ஒன்று உடைய தேர்ப்பரிதி - வட்டமாகிய உருள் ஒன்றையுடைய சூரியன், தன் மருமான் பெட்ட காதல் கூர் மருகனை - தனது வழித் தோன்றலாகிய சோழனால் விரும்பப் பட்ட அன்பு மிக்க மருமகனாகிய பாண்டியனை, பற்றிய பிணிகேட்டு - தொடுத்த நோயினைக் கேட்டு, இட்ட இருள் எழினியை - இடப்பட்ட கரிய இருளாகிய திரையினை, எடுத்து எடுத்து அகங்கை தொட்டு நோக்குவான் வந்தென - எடுத்துவிட்டு அகங்கையாற் றொட்டுப் பார்ப்பதற்கு வந்தாற்போல, தொடுகடல் முளைத்தான் - தோண்டப் பட்ட கீழைக்கடலின்கண் தோன்றினான்.

பெட்ட - விரும்பிய. இருள் சிறிது சிறிதாக நீங்குதலின் 'எடுத் தெடுத்து' என்றார். சகரர் தோண்டியது கீழ்கடலாதலின் 'தொடு கடல்' என்றார். (சகூ)

வாலி தாகிய சைவவான் பயிரினை வளர்ப்பான்
வேலி யாகியோ ரிருவரும் வேந்தனை நோக்கிக்
கால பாசமுஞ் சுடுமிந்நோ யருமறைக் காழிப்
பால ராலன்றித் தீர்த்திடப் படாதெனப் பகர்ந்தார்.

(இ - ள்.) வாலிதாகிய சைவவான் பயிரினை வளர்ப்பான் - தூய தாகிய சிறந்த சைவமாகிய பயிரினை வளர்த்தற்கு, வேலியாகியோர் இருவரும் - வேலியாயுள்ள மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும், வேந்தனை நோக்கி - அரசனைப் பார்த்து, காலபாசமும் சுடும் இந்நோய்-

கூற்றுவனது பாசத்தையும் வெதுப்பும் இப்பிணியானது, அருமறைக் காழிப் பாலரால் அன்றி - அரிய தமிழ்மறையையுடைய காழிப் பிள்ளை யாரால் தீர்க்கப்படுமல்லாமல் ஏனையோரால், தீர்த்திடப்படாதெனப் பகர்ந்தார் - நீக்கப்படாது என்று கூறினர்.

புறச்சமயிகளாகிய பட்டிகளால் அழியாது பாதுகாப்பவரென்பார் 'வேலி யாகியோர்' என்றார். காழியில் வந்த மறைப்பாலரால் என்க. மறைப்பாலர் - அந்தணச் சேயும் ஆம். (௯0)

பொய்யர் சார்பினை விடாதவ னீங்குநீர் புகன்ற
சைவர் நீறிட்டுப் பார்ப்பது தகுவதோ வென்ன
ஐய நீயெனைத் திறத்தினு லாயினு நோய்தீர்ந்
துய்ய வேண்டுமே யிதனில்யா துறுதியென் றுரைத்தார்.

பொய்யர் சார்பினை விடாதவன்-பொய்யர்களாகிய சமணர்களின் சார்பினைவிட்டு நீங்காத பாண்டியன், ஈங்கு நீர் புகன்ற சைவர் - இப்பொழுது நீர் கூறிய அச்சைவர், நீறுஇட்டுப் பார்ப்பது தகுவதோ என்ன - திருநீறிட்டு என்னைப் பார்ப்பது தகுவதொன்றோ என்று கூற, ஐய - ஐயனே, நீ எனைத் திறத்தினுல் ஆயினும் - நீ எந்த வகையினு லாவது, நோய் தீர்ந்து உய்யவேண்டுமே - நோய் நீங்கிப் பிழைக்க வேண்டுமல்லவா, இதனில் உறுதி யாது என்று உரைத்தார் - இதனி னும் நன்மை யாது உளதென்று உரைத்தனர்.

நீர் புகன்ற - நும்மாற் கூறப்பட்ட. நீறு இட்டுப் பார்ப்பது - திருநீறு போட்டு நோய் தீர்ப்பது; திருநீறு பூசி வந்து பார்ப்பது என்றுமாம். எனைத்து என்பது எனை எனநின்றது. சைவர் நீறிடுதலால் உய்வது உறுதியாமன்றி அது தகாதென மறுத்து உயிரிழப்பது உறுதி யாகா தென்பார், 'இதனில் யாது உறுதி' என்றார் என்க. (௯க)

அழைமி னீண்டென வரசனு மிசைந்தன னார்வந்
தழையு மந்திரத் தலைமகன் றனிநக ரெங்கும்
விழவு தூங்கநன் மங்கல வினைகளால் விளக்கி
மழலை யின்றமிழ் விரகர்தம் மடத்தில்வந் தெய்தா.

(இ - ள்.) ஈண்டு அழைமின் என அரசனும் இசைந்தனன்-இங்கு அழையுங்கள் என்று அரசனும் உடன்பட்டனன்; ஆர்வம் தழையும் மந்திரத் தலைமகன் - விருப்ப மிகும் அமைச்சர் தலைவனாகிய குலச்சிறை யார், தனிநகர் எங்கும் விழவு தூங்க - ஒப்பற்ற நகர் முழுவதும் திரு விழாப் பொலிவுற, நல்மங்கலவினைகளால் விளக்கி - நல்ல மங்கலச் செயல்களால் நகரை அலங்கரித்து, இன் மழலை தமிழ் விரகர் தம் மடத்தில் வந்து எய்தா - இனிய மழலை மொழியினையுடைய முத்தமிழ் விரகர் எழுந்தருளிய திருமடத்தில் வந்து சேர்ந்து.

அவர் உரைத்தமை கேட்டு அரசனும் இசைந்தனன் எனவும், அதனால் ஆர்வந்தழையும் மந்திரத் தலைமகன் எனவும் விரித்துரைக்க.

மங்கல வினைகள் - கொடியெடுத்தல், தோரணங் கட்டுதல், மாலை தூக்கல் முதலாயின. மழலை போலும் இனிய தமிழ் என்றுமாம். (௰௨)

அன்று கேள்வியா லருந்திய ஞானவா ரமுதை
இன்று கண்களா லுண்டுகண் பெற்றபே றெய்திச்
சென்றி றைஞ்சின னெழுந்திருந் தீயமண் சூழ்ச்சி
வென்ற சிந்தையீ ரென்றனர் பூந்தராய் வேந்தர்.

(இ - ள்.) அன்று கேள்வியால் அருந்திய ஞான ஆரமுதை - அந்தணனாற் கூறப்பட்ட அன்று செவியினாற் பருகிய நிறைந்த ஞான அமிழ்தினை, இன்று கண்களால் உண்டு - இப்பொழுது கண்களாற் பருகி, கண் பெற்ற பேறு எய்தி - கண் பெற்ற பயனை அடைந்து, சென்று இறைஞ்சினன் - நெருங்கிப்போய் வீழ்ந்து வணங்கினான்; பூந்தராய் வேந்தர் - காழிமன்னர், தீ அமண் சூழ்ச்சிவென்ற சிந்தையீர் - கொடிய அமணர்களின் சூழ்ச்சியை வென்ற சிந்தையையுடையீர், எழுந்திரும் என்றனர் - எழுந்திருப்பீராக என்று கூறியருளினர்.

ஞான அமுது - ஞானமே உருவமாகிய அமிழ்தம் போல்வார்;

"ஞானத்தின் றிருவுருவை நான்மறையின் றனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தி னெழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்"

என்னும் அருண்மொழித்தேவர் அமுதவாக்கு இங்கே நோக்கற்பாலது. பூந்தராய் - சீகாழியின் பன்னிரு பெயருள் ஒன்று. (௰௩)

நன்றி ருந்தனி ரேயென நகைமலர்த் தடந்தார்
வென்றி மீனவன் கற்பினா் தம்மையும் வினவ
என்று நம்மரு ளுடையவர்க் கேவன்குறை யென்னா
ஒன்று கேண்மைகூ ரன்பின ரிதனையு முரைப்பார்.

(இ - ள்.) நன்று இருந்தனிரே என - நலமுற இருக்கின்றீரோ என்று, நகைமலர்த் தடம்தார் - ஒளி பொருந்திய மலர்களாலாகிய பெரிய மாலையையணிந்த, வென்றி மீனவன் கற்பினார் தம்மையும் - வெற்றியையுடைய பாண்டியன் தேவியாகிய மங்கையர்க்கரசியாரைக் குறித்தும், வினவ - உசாவ, நம் அருள் உடையவர்க்கு என்றும் குறை எவன் என்னா - நுமது அருளையுடையவர்க்கு முக்காலத்தும் தீங்கு ஏது என்று கூறி, ஒன்று கேண்மை கூர் அன்பினர் - பொருந்திய நட்பு மிகுதற் கேதுவாகிய அன்பினையுடைய குலச்சிறையார், இதனையும் உரைப்பார் - இதனையுங் கூறுவாராயினர்.

மங்கையர்க்கரசியாரும் நீரும் நலமே என உடன் சேர்த்து வினவினரென்பார் 'நன்றிருந்தனிரே யென - மீனவன் கற்பினார் தம்மையும் வினவ என்றார்; இங்ஙனம்' பொருள் கூறுவதே இவ்வாசிரியர் கருத்துக்கு இயைந்ததாகும்; மங்கையர்க்கரசியாரை நோக்கி வினவினரெனவும், அவர் இதனையும் உரைப்பார் எனவும் பிறர் கூறும் பொருள் பொருந்தாதென்க.

"செம்பியர் பெருமான் குலமக ளார்க்குந் திருந்திய சிந்தையீ ருமக்கும்
நம்பெரு மான்றன் றிருவருள் பெருகு நன்மைதான் வாலிதே யென்ன
வம்பல ரலங்கன் மந்திரி யாரு மண்மிசைத் தாழ்ந்தடி வணங்கித்
தம்பெருந் தவத்தின் பயனனை யார்க்குத் தன்மையா நிலையுரைக்
[கின்றார்"

"சென்றகா லத்தின் பழுதிலாத் திறமு
மினியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனு
லெற்றைக்குந் திருவரு ளுடையோம்
நன்றியி னெறியி லழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனு முய்ந்து
வென்றிகொ டிருநீற் றொளியினில் விளங்கு
மேன்மையும் படைத்தன மென்பார்"

என்னும் திருத்தொண்டர் புராணச் செய்யுட்கள் ஈண்டுச் சிந்திக்கற்பாலன. (௩௬)

கையர் மாளவு நீற்றினாற் கவுரியன் றேயம்
உய்வ தாகவு மின்றுநம் மருளினா லொலிநீர்
வையை நாடன்மேல் வெப்புநோய் வந்ததா லதனை
ஐய தீர்த்திடல் வேண்டுமென் றடியில்வீழ்ந் திரந்தார்.

(இ - ள்.) ஐய - ஐயனே, இன்று நும் அருளினால் - இன்று நுமது திருவருளினால், கையர் மாளவும் - கீழ்மக்களாகிய சமணர்கள் அழியவும், கவுரியன் தேயம் நீற்றினால் உய்வது ஆகவும் - பாண்டியன் நாடானது திருநீற்றினால் உய்தி பெறுதலை அடையவும், ஒலிநீர்வையை நாடன்மேல் வெப்பு நோய் வந்தது - ஒலியினையுடைய நீர் நிறைந்த வையை நாடனாகிய பாண்டியன் உடலில் வெப்பு நோய் வந்தடைந்தது; அதனைத் தீர்த்திடல்வேண்டும் என்று - அப்பிணியை நீக்கியருள வேண்டுமென்று, அடியில் வீழ்ந்து இரந்தார் - திருவடியில் வீழ்ந்து குறையிரந்தனர்.

ஒலிநீர் வையைக்கு அடை. ஆல் : அசை. (௩௭)

இரந்த வன்பருக் கன்னதா கென்றருள் சுரந்து
பரந்த நித்தில யானமேற் பனிக்கதிர் மருமான்
சுரந்த ணிப்பலென் றேகுவா னொத்துமெய்ச் சுருதி
புரந்த ளிப்பவர் பாண்டியன் கோயிலிற் புகுவார்.

(இ - ள்.) மெய்ச்சுருதி புரந்து அளிப்பவர் - உண்மையாகிய மறைகளைப் பாதுகாத்தளிப்பவராகிய பிள்ளையார், இரந்த அன்பருக்கு அன்னது ஆக என்று அருள் சுரந்து - அங்ஙனங் குறையிரந்த அன்பருக்கு அங்ஙனமே ஆகுக என்று அருள் கூர்ந்து, பரந்த நித்தில யானமேல் - ஒளி பரந்த முத்துச்சிவிகையி லேறியருளி, பனிக்கதிர் - குளிர்ந்த ஒளியினையுடைய சந்திரன், மருமான் சுரம் தணிப்பல் என்று ஏகுவான் ஒத்து - தனது வழித்தோன்றலாகிய பாண்டியனது வெப்பு நோயைத் தணிப்பேனென்று கருதிப் போதல்போல, பாண்டியன் கோயிலில் புகுவார் - பாண்டியனது மாளிகையுட் போவாராயினர்.

ஆகென்று அகரம், தொக்கது. ஏகுவான் : தொழிற்பெயர். சுருதியைப் பாதுகாப்பவர் என்பதனை ''நான்மறையின் தனித் துணையை'' என்பதனாலுமறிக. (ருசு)

வாயி லெங்கணுந் தூபமு மங்கல விளக்குந்
தோய கும்பமுங் கொடிகளுஞ் சுண்ணமுந் துவன்றச்*
சேய காகள வொலிமன்னன் செவிப்புலன் சுவைப்பக்
கோயி லெய்தினா ரமணர்தங் கோளரி யனையார்.

(இ - ள்.) வாயில் எங்கணும் - வாயில்கள் எங்கும், தூபமும் மங்கல விளக்கும் - தூபங்களும் மங்கல விளக்குகளும், தோயகும்பமும் - நீர் நிறைந்த குடங்களும், கொடிகளும் சுண்ணமும் துவன்ற - கொடிகளும் சுண்ணப் பொடிகளும் நெருங்கவும், சேய காகள ஒலி - சேய்மையிலுள்ள திருச்சின்ன ஒலியாகிய அமுதினை, மன்னன் செவிப்புலன் சுவைப்ப - பாண்டியனது செவிப் புலனானது சுவையுடன் அருந்தவும், அமணர் தம் கோளரி அனையார் - சமணர்களாகிய யானைகட்குச் சிங்கம் போன்ற பிள்ளையார், கோயில் எய்தினர் - அரசனது மாளிகையை அடைந்தனர்.

தோயம் - நீர். சேயகாகளம் பொன்னாற் செய்தமையின் செம்மையுடைய காகளம் என்றுமாம். (ருஎ)

காவ லோன்மருங் கிட்டதோர் கதிர்மணித் தவிசின்
மேவி னாரவா நோக்கினன் மீனவன் றெளிந்து
வாவி தாழ்செழுந் தாமரை யேனமுக மலர்ந்து
பாவி யேன்பிணி தணித்தெனைப் பணிகொண்மி னென்றான்.

(பா - ம்.) *துவன்றி.

(இ - ள்.) காவலோன் மருங்கு இட்டது ஓர் கதிர்மணித் தவிசில் மேவினர் - அரசன் பக்கத்தில் இட்டதாகிய ஒளி பொருந்திய மணிகளழுத்திய ஒருதவிசின்கண் இருந்தனர்; அவர் நோக்கினல் மீனவன் தெளிந்து - அவரது பார்வையினுற் பாண்டியன் தேறி, வாவிதாழ் செழுந்தாமரை என - தடாகத்திற் றங்கிய செழுந்தாமரை மலரென, முகமலர்ந்து - முகமலர்ச்சியுடையவனுய், பாவியேன் பிணி தணித்து - பாவியாகிய எனது நோயைத் தணித்து, எனைப் பணிகொள்மின் என்ருன் - என்னை அடிமையாக்கிக் கொள்வீர் என்று குறையிரந்தனன்.

அவர் மேவினர் எனவும், மீனவன் நோக்கினுன் எனவும் கூட்டியுரைத்தலுமாம். பிள்ளையாரைத் தரிசித்தமையாலும் அவரது அருள் நோக்கத்தாலும் சிறிது பிணி தவிர்ந்து அறிவு தெளிந்தான் என்க. (ருஅ)

புலைத்தொ ழிற்குவித் தாயினோர் கேட்டுளம் புழுங்கிக்
கலைத்த டங்கட னீந்திய காவலோ யுன்றன்
வலப்பு றத்துநோ யிவரையு மற்றைநோ யெமையுந்
தொலைத்தி டப்பணி யென்றனர் கைதவன் சொல்வான்.

(இ - ள்.) புலைத்தொழிற்கு வித்தாயினோர் - கொல்லுதல் முதலிய இழிதொழிலுக்கு விதையாயுள்ள சமணர்கள், கேட்டு உளம் புழுங்கி - அதனைக் கேட்டு உள்ளம் வெந்து, கலைத்தடம் கடல் நீந்திய காவலோய் - நூல்களாகிய பெரிய கடலை நீந்திக் கரைகண்ட மன்னனே, உன்றன் வலப்புறத்து நோய் இவரையும் - உனது வலப் பக்கத்திலுள்ள நோயினை இவரையும், மற்றை நோய் எமையும் - இடப்புறத்து நோயினை எம்மையும், தொலைத்திடப் பணி என்றனர் - நீக்குதற்குக் கட்டளை யிடுவாயாக வென்றனர்; கைதவன் சொல்வான் - பாண்டியன் கூறுவானுயினன்.

ஆடவ ருடம்பின் வலப்புறத்து நோய் வலிதும் இடப்புறத்து நோய் எளிதுமாம் என்னும் மருத்துநூற் கொள்கையுணர்ந்து இங்ஙனம் கூறினர் போலும். வலப்புறத்து நோய் தொலைத்திட இவரையும் மற்றைநோய் தொலைத்திட எம்மையும் பணி யென்றனர் எனக் கூட்டியுரைக்க. (ருகூ)

அனைய செய்திரேன் றிசையுமுன் சமணரு* மசோகன்
றனைநி னைந்துகைப் பீலியாற் றடவியுங் கரத்துக்
கனைகோ ளாலிநீர் சிதறியு நெய்சொரி கனல்போற
சினவி மேலிடக் கண்டனர் தீர்ந்திடக் காணுர்.

(இ - ள்.) அனைய செய்திர் என்று இசையுமுன் - அங்ஙனமே செய்யுமென்று உடன்படுமுன்னே, சமணரும் அசோகன் தனை நினைந்து-

(பா - ம்.) * இசைத்தலுமமணரும்.

அமணர்களும் அருகனை நினைந்து, கைப்பீலியால் தடவியும்-கையிலுள்ள மயிற் பீலியினால் தடவியும், கரத்துக் கனைகொள் நீர் ஆலி சிதறியும் - கமண்டலத்திலுள்ள ஒலித்தலைக் கொண்ட நீர்த்துளியினைச் சிதறியும், நெய் சொரி கனல்போல் - (அவற்றால் அந் நோய்) நெய் சொரிந்த நெருப்புப்போல, சினவி மேலிடக் கண்டனர்-சினந்து மேலிடுதலைக் கண்டாரேயன்றி, தீர்ந்திடக் காணார்-நீங்கக் கண்டிலர்.

அசோகன் - அசோக மரத்தின் நிழலில் இருக்கும் அருக தேவன். கரகம் என்பது கரம் என விகாரமாயிற்று. ஆலி - நீர்த்துளி. (௬௦)

தீயர் மானமிக் குடையராய்ச் செருக்கழிந் திருப்பப்
பாய கேள்வியோர் புண்ணியப் பையுணீ றள்ளிக்
காயு நோயது தணித்திடக் கருதினா ரதனை
மாய நீறென விலக்கினார் மாயைசெய் தழிவார்.

(இ - ள்.) தீயர் - அக்கொடியவர், மானம் மிக்குடையராய் - மிகுதியும் மானமுடையவராய், செருக்கு அழிந்து இருப்ப-இறுமாப்பு அழிந்து வாளாவிருப்ப, பாயகேள்வியோர் - பரந்த நூற்புலமை யுடைய பிள்ளையார், புண்ணியப் பையுள் நீறு அள்ளி - அறவடிவின தாகிய பையுளுள்ள திருநீற்றினை அள்ளி, காயும் நோயது தணித்திடக் கருதினார் - வெதுப்புகின்ற நோயினை நீக்கக் கருதினார்; அதனை மாயநீறு என - அதனை மாயநீறு என்று கூறி, மாயை செய்து அழிவார் விலக்கினார் - வஞ்சகம் புரிந்து அழியும் அவ்வமணர் தடுத்தனர்.

புண்ணியப்பை - நீற்றுப்பை. நோயது, அது : பகுதிப்பொருள் விகுதி கருதினாராக அதனை என்க. மாயநீறு - பொய்யாகிய நீறு; நீறு அல்லது. (௬௧)

அண்ட நாயகன் றிருமடைப் பள்ளிநீ றள்ளிக்
கொண்டு வாருமென் றருமறைக் கவுணியர் கூறக்
கண்டு காவல ரேவலர் கைக்கொடு வந்தார்
வண்டு லாவுதார் வழுதிநோய் தணிப்பவர் வாங்கி.

(இ - ள்.) அண்டநாயகன் திருமடைப்பள்ளி நீறு - தேவநாயகனாகிய சோமசுந்தரக் கடவுளின் திருமடைப்பள்ளியிலுள்ள சாம்பலை, அள்ளிக்கொண்டு வாரும் என்று-அள்ளிக்கொண்டு வாருங்களென்று, அருமறைக் கவுணியர் கூற-அரிய தமிழ்மறை பாடும் பிள்ளையார் கூறியருள, காவலர் ஏவலர் கண்டு - மன்னன் ஏவலாளர் அதனைக் கேட்டு, கைக்கொடு வந்தார்-கையிலள்ளிக் கொண்டு வந்தனர்; வண்டு உலாவு தார் வழுதிநோய் தணிப்பவர் வாங்கி - வண்டுகள் உலாவும் மலர் மாலையை யணிந்த பாண்டியனது பிணியினை நீக்கும் பிள்ளையார் அதனை வாங்கி,

அண்டர் நாயகன் என்பது அண்ட நாயகன் என்ருயிற்று; அண்டங் கட்கு நாயகன் என்றுமாம். (சுஉ)

மருந்து மந்திரம் யாவையு மறையுரைப் பதுவும்
பொருந்து மின்பவீ டளிப்பதும் போகமும் பொருளுந்
திருந்து மாலவா யான்றிரு நீறெனச் சிறப்பித்
தருந்து மின்னமு தனையசொற் பதிகம தறைந்து.

(இ - ள்.) மருந்து மந்திரம் யாவையும்-மருந்தும் மந்திரமும் முதலிய அனைத்தும், மறை உரைப்பதும் - வேதத்தினுல் உரைக்கப்படுவதும், பொருந்தும் இன்ப வீடு அளிப்பதும் - பொருந்திய இன்பினையுடைய வீடுபேற்றினை அளிப்பதும், போகமும் பொருளும்-போகமாயுள்ளதும் பொருளாயுள்ளதும், திருந்தும் ஆலவாயான் திருநீறு என சிறப்பித்து- திருந்திய ஆலவாயான் திருநீறே என்று சிறப்பித்து, அருந்தும் இன் அமுது அனைய சொல்பதிகமது அறைந்து - உண்ணும் இனிய அமிழ்தினை யொத்த சொற்களை யுடைய திருப்பதிகம் பாடியருளி,

பதிகமது, அது : பகுதிப்பொருள் விகுதி. பதிகம்,

"மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் பெறுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் றிருநீறே"

என்னும் திருப்பாட்டை முதலாகவுடைய திருநீற்றுப்பதிகம், இப் பதிகத்துள், "ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந்தருவது நீறு" என்பதனுல் மருந்தும், "மந்திர மாவது நீறு" என்பதனுல் மந்திரமும், "வேதத்திலுள்ளது நீறு" என்பதனுல் மறையுரைப்பதும், "முத்தி தருவது நீறு" என்பதனுல் வீடளிப்பதும், "இருமைக்குமுள்ளது நீறு" என்பதனுல் போகமும், "அருத்தமதாவது நீறு" என்பதனுல் பொருளும் ஆமென்று அருளிச் செய்தமை காண்க. (சுங)

மெய்யி லிட்டனர் வருடலும் வெஞ்சுரந் துறந்த
மையில் சிந்தையோர் வெகுளியிற் றணிந்தது வாசஞ்
செய்த தண்பனி நீர்விரைச் சந்தனந் திமிர்ந்தால்
எய்து தண்மைய தாயின திறைவலப் பாகம்.

(இ - ள்.) மெய்யில் இட்டனர் வருடலும் - பாண்டியனது உடம்பில் இட்டுத் தடவியவளவில், வெஞ்சுரம் - அக் கொடிய வெப்பு நோய், துறந்த மை இல் சிந்தையோர் வெகுளியில் தணிந்தது-முற்றத் துறந்த குற்றமில்லாத சிந்தையினை யுடையோர் சினம்போல விரையத் தணிந்தது; இறை வலப்பாகம் - (ஆதலால்) அரசனது வலப்பாகம்,

வாசம் செய்த தண் பனிநீர் விரையச் சந்தனம் திமிர்ந்தால் - மணம் வீசிய குளிர்ந்த பனிநீரிற் குழைத்த மணமுடைய சந்தனத்தைப் பூசினால். எய்து தண்மையது ஆயினது - உண்டாகும் குளிர்ச்சியை உடையதாயிற்று.

இட்டனர் முற்றெச்சம். வஞ்சம் தணிந்தது எனக் கூட்டுக. நற்குணங்களின் முடிவில் நின்ற துறந்தோரிடத்து ஒரோ வழி வெகுளி யுண்டாயின் அது மெய்யுணர்வால் அப்பொழுதே அழியுமாதலின் 'துறந்த மையில் சிந்தையோர் வெகுளியில் தணிந்தது' என்றார்;

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது"

என்னுங் குறளும், அதற்குப் பரிமேலழகர் வரைந்த உரையுங் காண்க. (கூச)

பொழிந்த தண்மதுத் தார்புனை பூழியர் கோனுக்
கிழிந்த செய்கையர் கைதோட வெரியிடு சுரத்தாற்
கழிந்த துன்பமுங் கவுணியர் கைதோடச் சுரந்தீர்ந்
தொழிந்த வின்பமு மிருவினை யொத்தபோ லொத்த.

(இ - ள்.) தண் மதுப்பொழிந்த தார்புனை பூழியர்கோனுக்கு - தண்ணிய தேனைப் பொழியும் மாலை யணிந்த பாண்டியர் மன்னனுக்கு, இழிந்த செய்கையர் தொட - இழிந்த தொழிலை யுடைய சமணர்கள் கைதொட, எரிஇடு சுரத்தால் கழிந்த துன்பமும் - அனல் போலக் காந்தும் வெப்பு நோயால் மிகுந்த துன்பமும், கவுணியர் கைதொட - பிள்ளையார் திருக்கரந்தொடுதலால், சுரம் தீர்ந்து ஒழிந்த இன்பமும் - வெப்ப நோய் நீங்கி ஒழிதலாகிய இன்பமும், இருவினை ஒத்தபோல் ஒத்த - இரண்டு வினைகளுந் தம்முளொத்தனபோல ஒத்தன.

தொட-தொடுதலால். கழிந்த-மிக்க; கழி என்னும் உரியடியாக வந்த பெயரெச்ச வினை. ஒழிந்த: பெயரெச்சம் காரணப் பொருட்டு. ஒத்த, அன்பெறாத பலவறி சொல். துன்பமும் இன்பமும் ஒத்த என்றது அமணர் தொட்ட பாகத்து எத்துணைத்துன்ப மிகுந்ததோ அத் துணை இன்பம் பிள்ளையார் தொட்ட பாகத்து மிகுந்தது என இரண்டும் அளவால் ஒத்தமை கூறியவாறும். இருவினையொப்பு என்பதற்கு நல் வினையும் தீவினையும் ஓரளவினவாதல் என ஒரு சாரார் பொருள் கூறுவ ராகலின் அம்முறைபற்றி 'இருவினை யொத்தபோல்' என்றார்.

"மன்னவன் மொழிவா னென்னே மதித்தவிக் கால மொன்றில்
வெந்நர கொருபா லாகும் வீட்டின்ப மொருபா லாகும்
துன்னுநஞ் சொருபா லாகுஞ் சுவையமு தொருபா லாகும்
என்வடி வொன்றி லுற்றே னிருதிறத் தியல்பு மென்பான்"

என்னும் பெரிய புராணச் செய்யுளும் நோக்குக. (கூரு)

ஐய விச்சுர மாற்றரி தாற்றரி தென்னு
வையை நாடவன் வல்லமண் மாசுதீர்ந் தடியேன்
உய்ய வேண்டுமே லதனையு மடிகளே யொழித்தல்
செய்ய வேண்டுமென் றிரந்தனன் சிரபுரக் கோனை.

(இ - ள்.) வையை நாடவன் - வையை நாட்டினையுடைய பாண்டியன், ஐய - ஐயனே, இச்சுரம் ஆற்றரிது ஆற்றரிது என்னு - இவ் வெப்பு நோய் பொறுத்தற் கரியது பொறுத்தற்கரியது என்று கூறி, வல் அமண் மாசு தீர்ந்து அடியேன் உய்ய வேண்டுமேல் - வலிய அமணர்களின் சார்பாயுள்ள குற்றத்தினின்றும் நீங்கி அடியேன் பிழைக்க வேண்டுமானல், அதனையும் அடிகளே ஒழித்தல் செய்ய வேண்டும் என்று-அவ்விடப் புறத்து வெம்மையையும் அடிகளே நீக்கி யருள வேண்டுமென்று, சிரபுரக்கோனை இரந்தனன்-காழி வேந்தனைக் குறையிரந்து வேண்டினன்.

அடுக்கு அச்சப் பொருட்டு. ஒழித்தல் செய்ய - ஒழிக்க. (சுசு)

பிள்ளை யாரிடப் பாகமும் பண்டுபோற் பெருமான்
வெள்ளை நீறுதோட் டங்கையா னீவுமுன் மேனாள்
உள்ள கூனொடு வெப்புநோ யொழிந்துமீ னுயர்த்த
வள்ளன் மாசறக் கடைந்தவிண் மணியெனப் பொலிந்தான்.

(இ - ள்.) பிள்ளையார் - ஆளுடைய பிள்ளையார், இடப்பாகமும் பண்டு போல் பெருமான் வெள்ளை நீறு தொட்டு - இடப்புறத்தையும் முன்போலவே இறைவன் வெண்ணீற்றினைத் தொட்டு, அங்கையால் நீவுமுன் - அகங்கையாற் றடவிய வளவில், மேல்நாள் உள்ள கூனொடு வெப்பு நோய் ஒழிந்து - முன்னரே இருந்த உடற் கூனுடன் வெப்பு நோயும் நீங்கி, மீன் உயர்த்த வள்ளல் - மீனக்கொடி யுயர்த்திய வள்ளலாகிய பாண்டியன், மாசுஅறக் கடைந்த விண்மணி எனப் பொலிந்தான் - குற்றம் நீங்கக் கடையப்பட்ட சூரியனைப்போல விளங்கினன்.

பண்டு - காலத்தின் சேய்மையைக் குறியாது சிறிது முன் என்னும் பொருளில் வந்தது. விண்மணி - ஆதித்தன்; ஆதித்தனிலும் சிறந்து விளங்கினன் என்பார் 'மாசறக் கடைந்த விண்மணி' என்றார். (சுஎ)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

அன்னதொரு காரணத்தாற் சவுந்தரிய
பாண்டியனென் றாகி யன்ன
தென்னவர்கோன் கவுணியர்கோன் றிருநோக்காற்
பரிசத்தாற் றெருட்டும் வாக்காற்
பொன்னடிதாழ்ந் தைந்தெழுத்து முபதேசப்
பேறடைந்த பொலிவால், வஞ்சந்
துன்னமணர் நெறியிகழ்ந்து தொல்வேத
நெறியடைந்த தூய ஞானன்.

(இ - ள்.) அன்னதென்னவர் கோன் - அந்தப் பாண்டியர் பெருமான், அன்னது ஒருகாரணத்தால் - அந்தக் கூன் நீங்கிய ஒரு காரணத்தினால், சவுந்தரிய பாண்டியன் என்று ஆகி - சவுந்தரிய வழுதி என்னும் பெயருடையனாய், கவுணியர் கோன் திருநோக்கால் பரிசத்தால் - கவுணியர் பெருமானது திருப் பார்வையினாலும் தொடுதலினாலும், தெருட்டும் வாக்கால் - மெய்ப்பொருளைத் தெளிவிக்குந் திருவார்த்தையினாலும், பொன் அடி தாழ்ந்து - அவர் பொன்போலுந் திருவடியில் வீழ்ந்து வணங்கி, ஐந்தெழுத்தும் உபதேசப் பேறு அடைந்த பொலிவால் - திருவைந்தெழுத்தையும் உபதேசிக்கப் பெறுதலை யடைந்த விளக்கத்தாலும், வஞ்சம் துன் அமணர் நெறி இகழ்ந்து - வஞ்சஞ் செறிந்த சமணர்கள் பொய் நெறியை இகழ்ந்து, தொல் வேதநெறி அடைந்து தூயன் ஆனான் - பழைய வேதநெறியினை அடைந்து புனிதனானான்.

திருஞானசம்பந்தப் பெருமானின் திரு நோக்கம் முதலாயின வெல்லாம் பாண்டி வேந்தன் பாசத்தைப் போக்கும் தீக்கைகளாயின என்பார் 'கவுணியர் கோன் திருநோக்கால் பரிசத்தால் தெருட்டும் வாக்கால்' என்றார்.

"பலவிதமா சான்பாச மோசனந்தான் பண்ணும்
படிநயனத் தருள்பரிசம் வாசகமா னதமும்
அலகில்சாத் திரம்யோக மவுத்தி ராதி
அநேகமுள"

என்னும் சிவஞான சித்தியால் நயனதிக்கை, பரிச தீக்கை, வாசக திக்கை என்பவற்றின் உண்மை காண்க. பொன்னடி தாழ்ந்து வாக்கினாலே உபதேசப் பேறடைந்த பொலிவால் என்று இயைத் துரைத்தலுமாம். 'தொல்' என்பது வேதத்திற்கும் வேத நெறியாகிய சைவத்திற்கும் அடையாதலே யன்றி, அவனும் அவன் குலத்தினரும் தொன்று தொட்டுக் கைக்கொண்டு ஒழுகிய வேதநெறி என்னும் பொருட்டுமாம். (கூஅ)

ஆகச் செய்யுள் ௩௧௯௩.

அறுபத்துமூன்றாவது

சமணரைக் கழுவேற்றிய படலம்

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

பஞ்சவ னடைந்த நோயைப் பாலறு வாயர் தீர்த்து
நஞ்சணி கண்ட னீறு நல்கிய வண்ணஞ் சொன்னேம்
அஞ்சல ராகிப் பின்னும் வாதுசெய் தடங்கத் தோற்ற
வஞ்சரைக் கழுவே றிட்ட வண்ணமுஞ் சிறிது சொல்வாம்.

(இ - ள்.) பால் அறுவாயர் - பால்மணம் நீங்காத திருவாயினை யுடைய ஆளுடைய பிள்ளையார், பஞ்சவன் அடைந்த நோயைத் தீர்த்து- பாண்டியன் அடைந்த வெப்பு நோயை நீக்கி, நஞ்சு அணிகண்டன் நீறு நல்கியவண்ணம் சொன்னேம் - நஞ்சினையணிந்த திருமிடற்றினை யுடைய இறைவனது திருநீற்றினை (அவனுக்கு) அளித்தருளிய திருவிளையாடலைக் கூறினேம்; பின்னும் அஞ்சலராகி - மீண்டும் அஞ்சாதவராய், வாது செய்து அடங்கத் தோற்ற வஞ்சரை - வாது புரிந்து ஒருசேரத் தோல்வியுற்ற வஞ்சகராகிய சமணரை, கழு ஏறிட்ட வண்ணமும் - கழுவில் ஏற்றிய திருவிளையாடலையும், சிறிது சொல்வாம்- சிறிது கூறுவாம்.

தாம் ஏவிய மந்திரத் தீயானது பிள்ளையார் திருமடத்திற் செல்லாமையும், தாம் திருமடத்தில் இட்ட சடத்தீயால் பாண்டிய னுக்கு வெப்பு நோய் உண்டானமையும், தம்மால் தீர்க்கலாகாத அந்நோயைப் பிள்ளையார் தீர்த்தமையும் கண்டு வைத்தும் அஞ்சிற்றிலராய் வாதிட்டனர் என அவரது தறுகண்மை மிகுதி கூறுவார் 'அஞ்சலராகி' என்றார். ஏறிட்ட - ஏற்றிய. (க)

தென்னவன் றேவி யாரு மமைச்சருட் சிறந்த சிங்கம்
அன்னவன் றானுங் காழி யந்தண ரடியில் வீழ்ந்தெம்
மன்னவன் வெப்புங் கூனும் பாசமு மாற்றி னீரே
இன்னமு மடியேம் வேண்டுங் குறைசெயத் தக்க தென்றார்.

(இ - ள்.) தென்னவன் தேவியாரும் - பாண்டியன் தேவியாராகிய மங்கையர்க் கரசியாரும், அமைச்சருள் சிறந்த சிங்கம் அன்னவன் தானும்-மந்திரிகளுள் மேம்பட்ட சிங்கத்தினை ஒத்த குலச்சிறையாரும், காழி அந்தணர் அடியில் வீழ்ந்து - சீகாழிப் பதியில் திருவவதாரஞ் செய்தருளிய அந்தணராகிய ஆளுடைய பிள்ளையார் திருவடியில் விழுந்து வணங்கி, எம்மன்னவன் வெப்பும் கூனும் பாசமும் மாற்றி னீர் - எம் அரசனுடைய வெப்பு நோயையும் உடல் வளைவையும் பாசத்தினையும் போக்கியருளினீர்; இன்னமும் அடியேம் வேண்டும் குறை செயத்தக்கது என்றார் - இன்னும் அடியேங்கள் விரும்பும் குறையினை முடிக்கக் கடவீராக என்று இரந்து வேண்டினர்.

இனி என்னும் இடைச் சொல் அம் பெற்று இன்னம் என்றுயது. குறை - முடிக்கப்படும் பொருள் ;

"பயக்குறை யில்லைத்தாம் வாழுநாளே"

என்னும் புறப்பாட்டடியில் இஃது இப் பொருட்டாதல் காண்க. செயத்தக்கது - முடிப்பது ; "மறப்பதறிவிலென் கூற்றுக்களே" என்புழிப் போல் துவ்விகுதி வியங்கோளில் வந்தது. (உ)

கன்னிநா டெங்கு மிந்தக் காரமண் காடு மூடித்
துன்னின திதனை யின்னே துணித்திடல் வேண்டு மென்றார்
அன்னவ ரால வாயார் திருவுள்ள மறிவே னென்னு
உன்னிய மனத்த ராகி யோய்யெனக் கோயில் புக்கார்.

(இ - ள்.) கன்னி நாடு எங்கும் இந்தக் கார் அமண் காடுமூடித் துன்னினது - இக் கன்னி நாடு முற்றும் இந்தக் கரிய சமண் காடு மூடிச் செறிந்தது ; இதனை இன்னே துணித்திடல் வேண்டும் என்றார் - இக் காட்டினை இப்பொழுதே வெட்டியழிக்க வேண்டு மென்று கூறினர் ; அன்னவர் - அவ்வாளுடைய பிள்ளையார், ஆலவாயார் திருவுள்ளம் அறிவேன் என்னு - திருவாலவாயுடையார் திருவுள்ளக்கிடையை அறிவேனென்று, உன்னிய மனத்தராகி - கருதிய உள்ளத்தை யுடைய வராய், ஒய்யெனக் கோயில் புக்கார் - விரைந்து திருக் கோயிலுட் புகுந்தனர்.

காடு என்றதற் கேற்பத் 'துணித்திடல் வேண்டும்' என்றார். ஒய்யென: விரைவுக் குறிப்பு. (ங)

அவ்விரு வோருங்* கூட வடைந்துபோற் கமலம் பூத்த
திவ்விய தீர்த்தந் தோய்ந்து சேனெடுங் கண்ணி பாக
நவ்வியங் கமலச் செங்கை நாதனைத் தாழ்ந்து வேந்தன்
வெவ்விய வெப்பு நீத்தார் தொழுதிது வினவு கின்றார்

(இ - ள்.) அவ்விருவோரும் கூட அடைந்து - அவ்விருவரும் உடன் வரச்சென்றருளி, பொன் கமலம் பூத்த - பொற்றாமரை மலர்ந்த, திவ்விய தீர்த்தம் தோய்ந்து - திப்பிய தடாகத்தில் நீராடி, சேல் நெடுங் கண்ணி பாகம் - மீன்போன்ற நீண்ட கண்களையுடைய உமையினை ஒரு கூற்றிலுடைய, நவ்வி அம் கமலச் செங்கை நாதனை - மானை அழகிய தாமரை போன்ற சிவந்த திருக்கரத்திலேந்திய இறைவனை, தாழ்ந்து - பணிந்து, வேந்தன் வெவ்விய வெப்பு நீத்தார் - மன்னனது கொடிய வெப்பு நோயை நீக்கியருளிய பிள்ளையார், தொழுது இது வினவு கின்றார் - வணங்கி இதனை வினவுகின்றார்.

கூட - உடன் வர. திவ்வியம் - தெய்வத்தன்மை. நீத்தார். வினைப்பெயர். (ச)

(பா - ம்.) * அவ்விரு பேரும்.

காயமே யோறுத்து நாளுங் கைதவம் பெருக நோற்கும்
பேயரை யிம்மை யோடு மறுமையும் பேறற் றாரை
நீயுரை செய்த வேத வேள்வியை நிந்தை செய்யுந்
தீயரை யோறுத்தல் செய்யத் திருவுளஞ் செய்தி யென்றார்.

(இ - ள்.) காயமே ஒறுத்து நாளும் கைதவம் பெருக நோற்கும் பேயரை - உடலை வருத்தி எஞ்ஞான்றும் வஞ்சகமே வளர நோற்கும் பேய்போல்வாரும், இம்மையோடு மறுமையும் பேறு அற்றாரை - இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் இழந்தவரும், நீ உரை செய்த - நீ திருவாய் மலர்ந்தருளிய, வேத வேள்வியை நிந்தை செய்யும் தீயரை - மறையையும் (அதன்கட் கூறப்படும்) வேள்வி யையும் நிந்தனை புரியும் தீயவருமாகிய சமணர்களை, ஒறுத்தல் செய்யத் திருவுளம் செய்தி என்றார் - ஒறுப்பதற்குத் திருவுளம் புரிய வேண்டுமென்று இரந்தனர்.

உடம்பினை ஒறுத்து வஞ்சம் பெருக அவர்கள் புரியும் தவத்தின் பயன் உடலை யொறுத்தலால் இம்மைப் பயனையும் வஞ்சம் பெருகலால் மறுமைப் பயனையும் இழத்தலன்றிப் பிறிதில்லை என்றார். வேத வேள்வியை நிந்தை செய்யுந் தீயர் என்ற கருத்தினை,

"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி யமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந் தென்
ஆல வாயி லுறையு மெம் மாதியே"

எனப் பிள்ளையார் பாடியருளிய திருப்பதிகத்திற் காண்க. பதிகத்தில் தேரரையும் குறித்திருப்பது சிந்தித்தற் குரியது. (௫)

வெம்மத வேழங் காய்ந்த விடையவர் விசும்பிற் சொல்வார்
எம்மனோ ராவீர் நுங்கட் கிசைந்ததே யெமக்கும் வேண்டுஞ்
சம்மத மதனால் வெல்லத் தக்கவ ராக நீரே
அம்மத முடையார் தோற்கத் தக்கவ ராக வென்றே.

(இ - ள்.) வெம்மத வேழம் காய்ந்த விடையவர் - கொடிய மத மயக்கமுடைய யானையைக் கொன்ற இடபவூர்தியினையுடைய இறைவர், விசும்பில் சொல்வார் - வானின்கண் அசரீரியாகக் கூறுவார், எம்மனோராவீர் - எமது அடியார்களே, நுங்கட்கு இசைந்ததே - நுங்கள் கருத்துக்குப் பொருந்திய தொன்றே, எமக்கும் வேண்டும் சம்மதம் - எமக்கும் வேண்டிய உடன் பாடு; அதனால் நீரே வெல்லத் தக்கவராக - அதனால் நீங்களே வெல்லத் தக்கவராக, அம்மத முடையார் - அந்தச் சமண் மதமுடையார், தோற்கத் தக்கவராக என்று - தோல்வி பெறத் தக்கவராக என்று கூறியருளி.

எம்மனோர் - எமர்; எம் அடியார். அம்மத முடையார் - அந்தத் தருக்கினையுடையார் என்றுமாம். (௬)

எம்மொழி தேறி னீர்போ யிறைமக னவையத் தெய்திச்*
செம்மையி லாரை வாது செய்திர்நீ ரனையார் தோற்று
வெம்முனைக் கழுவி லேறி விளிகுவ ரென்னக் கேட்டு
மைம்மலி களத்தான் மைந்தர் தொழுதுதம் மடத்திற் போந்தார்.

(இ - ள்.) எம்மொழி தேறினீர் - எமது மொழியாகிய வேதாகமங்களைத் தெளிந்தவர்களே, நீர் போய் - நீவிர் சென்று, இறைமகன் அவையத்து எய்தி-பாண்டி மன்னன் அவையினை அடைந்து, செம்மையி லாரை வாது செய்திர் - ஒழுக்கமில்லாத அச்சமணருடன் வாதம் புரிமின்; அனையார் தோற்று - அவர் தோல்வியுற்று, வெம்முனைக் கழுவில் ஏறி விளிகுவர் - கூரிய முனையையுடைய கழுவில் ஏறி இறந்து படுவர்; என்ன - என்று கூறியருள, கேட்டு - அதனைக் கேட்டு, மைம்மலி களத்தான் மைந்தர்-கருமை நிறைந்த திருமிடற்றினையுடைய இறைவனது புதல்வராகிய ஆளுடைய பிள்ளையார், தொழுது-வணங்கி, தம்மடத்தில் புக்கார் - தமது மடத்திற் புகுந்தருளினர்.

விசும்பிற் சொல்வார் விளிகுவர் என்று சொல்ல என இயைக்க. (எ)

இருவரு மீண்டு தத்த மிருக்கையிற் போகி யற்றைப்
பருவமங் ககலப் பின்னாட் பாண்டிமா தேவி யாரும்
பெருமதி யமைச்ச ரேறும் பிள்ளையார் மடத்திற் போகி
அருகரை வெல்லுஞ் சூழ்ச்சி யாதென வளந்து தேர்வார்.

(இ - ள்.) இருவரும் மீண்டும் தத்தம் இருக்கையில் போகி - மற்றை இருவரும் திரும்பித் தங்கள் தங்கள் இருப்பிடஞ் சென்று, அற்றைப் பருவம் அங்கு அகல - அற்றைப் பொழுது அங்கு நீங்க, பின்னாள் - மறுநாள், பாண்டி மாதேவியாரும் - மங்கையர்க்கரசியாரும், பெருமதி அமைச்சர் ஏறும் - கூர்த்த மதியினையுடைய அமைச்சருள் ஏறுபோல்வாராகிய குலச்சிறையாரும், பிள்ளையார் மடத்தில் போகி - ஆளுடைய பிள்ளையார் திருமடத்திற்குப் போய், அருகரை வெல்லும் சூழ்ச்சி யாது என - சமணரை வெல்லுதற்குரிய வழி யாது என்று, அளந்து தேர்வார் - ஆராய்ந்து தெளிவாராயினர்.

தேவியாரும் அமைச்சரேறும் ஆகிய இருவரும் எனக் கூட்டி, இருவரும் இருக்கையிற் போகிப் பின்னாள் மடத்திற் போகி அளந்து தேர்வார் என முடிக்க. (அ)

பேரரு ணிறைந்த காழிப் பெருந்தகை யுடன்போய்த் தங்கோன்
சீரவை குறுகி யீது செப்புவார் செய்ய கோலாய்
காரமண் காடே யெங்குங் கழியவு மிடைந்த வின்ன†
வேரொடுங் களைந்தாற் சைவ விளைபயி ரோங்கு மென்றார்.

(பா - ம்.) *அவையத் தேறி. †மிடைந்ததின்ன.

(இ - ள்.) பேர் அருள் நிறைந்த காழிப்பெருந்தகையுடன் போய்- பெரிய அருள் நிறைந்த சிகாழிப் பெருந்தகையாராகிய பிள்ளையாரு டன் சென்று, தம்கோன் சீர் அவை குறுகி - தம் அரசனது சிறந்த அவையினை அடைந்து, ஈது செப்புவார் - இதனைக் கூறுவார்; செய்ய கோலாய் - செங்கோலை யுடையாய், கார் அமண்காடே எங்கும் கழிய வும் மிடைந்த - கரிய அமண்காடுகளே எங்கும் மிகவும் செறிந்தன; இன்ன வேரொடும் களைந்தால் - இவற்றை வேரோடும் அகழ்ந்தெறிந் தால், சைவ விளைபயிர் ஓங்கும் என்றார் - சைவமாகிய விளையும் பயி ரானது ஓங்கி வளருமென்று கூறினர்.

சமண் காட்டைக் களைந்தால் சைவப்பயிர் ஓங்கு மென்றமையால் இஃது இயைபுருவகவணி. (கூ)

அவ்வண்ணஞ் செய்வ தேயென் றரசனு மனுச்சை செய்யச்
சேவ்வண்ண வெண்ணீற் றண்ண லனுச்சையுந் தேரிந்து தேயம்
உய்வண்ண மிதுவேன் றங்க னுண்மகிழ்ந் திருந்தார் நீண்ட
பைவண்ண வாரம் பூண்டார் புகழெங்கும் பரப்ப வல்லார்.

(இ - ள்.) அவ்வண்ணம் செய்வது என்று அரசனும் அனுச்சை செய்ய - அங்ஙனமே செய்கவென்று வேந்தனும் அனுமதிக்க, செவ் வண்ணம் வெண்ணீற்று அண்ணல் அனுச்சையும் தெரிந்து - செம் மேனியில் வெண்ணீ றணிந்த இறைவனது உடன்பாட்டையும் உணர்ந்து, தேயம் உய்வண்ணம் இது என்று உள் மகிழ்ந்து - நாடு உய்தி பெறுதற்குரிய காலம் இதுவே யென்று மனமகிழ்ந்து, நீண்ட பைவண்ண ஆரம்பூண்டார் - நீண்ட படத்தையுடைய அழகிய பாம் பார மணிந்த இறைவரது, புகழ் எங்கும் பரப்ப வல்லார் அங்ஙன் இருந்தார்-புகழினை யாண்டும் பரவச் செய்ய வல்லுநராகிய பிள்ளையார் அங்கு இருந்தருளினார்.

அனுச்சை - அனுமதி. அங்ஙன் - அவ்விடம் என்னும் பொருட்டு. (க0)

[கலி விருத்தம்]

அந்த வேலை யருகந்தக் கையரைக்
குந்த வேற்கட் குலமட மாதரும்
மைந்த ராகிய மக்களுங் கண்ணழல்
சிந்த நோக்கி யிகழ்ந்திவை சேப்புவார்.

(இ - ள்.) அந்த வேலை - அப்பொழுது, அருகந்தக் கையரை - அருகராகிய கீழ்மக்களை, குந்தவேல் கண் குல மடமாதரும் - கூரிய வேற்படை போன்ற கண்களையுடைய அவர் மனைவியரும், மைந்த ராகிய மக்களும் - புதல்வராகிய மக்களும், கண் அழல் சிந்த நோக்கி - கண்களில் நெருப்புப் பொறி சிதற நோக்கி, இகழ்ந்து இவை செப்பு வார் - நிந்தித்து இவற்றைக் கூறுவாராயினர்.

அருகந்தர்-அருகர். திண்மையுடையராகிய புதல்வர்களும் என்று மாம். (கக)

செழியர் கோமகன் மூழ்கிய தீப்பிணி
கழிய மாற்றும் வலியின்றிக் கற்றிலா
மழலை வாயொரு மைந்தற்குத் தோற்றுவெம்
பழிவி ளைத்தீர் பகவன் றமர்க்கெலாம்.

(இ - ள்.) செழியர் கோமகன் மூழ்கிய தீப்பிணி - பாண்டியர் மன்னன் மூழ்கிய வெப்பு நோயினின்றும், கழிய மாற்றும் வலி இன்றி- நீங்குமாறு அதனைப் போக்கும் வலியிலீராய், கற்றிலா மழலைவாய் ஒரு மைந்தற்குத் தோற்று - கல்லாத மழலைச் சொல்லையுடைய வாயினையுடைய ஒரு பிள்ளைக்குத் தோற்று, பகவன் தமர்க்கெலாம் வெம்பழி விளைத்திர் - அருகக் கடவுளின் அடியார்கட்கெல்லாம் கொடிய பழியை விளைத்திர்.

கற்றிலா - ஆசிரியனிடத்து ஓதாத, கல்வி பயிலாத கற்றிலா. மைந்தன் எனவும் மழலைவாய் மைந்தன் எனவும் கூட்டுக. பகவன் - ஈண்டு அருகதேவன். தமர் - அடியார். (கஉ)

சாம்ப ராடுஞ் சமயம் புகுந்துவெம்
பாம்ப ணிந்தவ னேபக வானென
வேம்ப னுங்கள் விரத நெறியெலாஞ்
சோம்ப லெய்தத் துறந்தா னிகழ்ந்தரோ.

(இ - ள்.) வேம்பன் -வேப்பமலர் மாலையையுடைய பாண்டியன், சாம்பர் ஆடும் சமயம் புகுந்து - சாம்பலைப் பூசுஞ் சமயத்திற் புகுந்து, வெம்பாம்பு அணிந்தவனேபகவான் என -கொடிய பாம்பினை யணிந்த சிவனே இறைவனென்று கொண்டு, உங்கள் விரத நெறிஎலாம் சோம்பல் எய்த - உங்கள் விரதநெறி முற்றும் சோர்வடைய, இகழ்ந்து துறந்தான் - இகழ்ந்து கைவிட்டான்.

திருநீற்றினை இகழ்ந்துரைக்குங் கருத்தால் 'சாம்பர்' என்றார். சாம்பர் : ஈற்றுப் போலி. பகவான் - ஆறு குணங்களையுடையவன். பகம் - ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் அறுகுணங்கள். சோம்பல் - வாடுதல், சமண் சமயத்தைத் துறந்தான் என்க. அரோ :அசை (கங)

ஏது மக்கு நிலையினி* யென்றவப்
போது மற்றவர் தம்மைப் புறகிட
வாது செய்தற் கெழுந்தனர் வஞ்சகர்
போது மென்னத் தடுத்தனர் பூவைமார்.

(இ - ள்.) இனி உமக்கு நிலை ஏது என்ற அப்போது - இனி உமக்குப் பற்றுக்கோடு ஏது என்று கூறிய அப்பொழுது, அவர் தம்மைப் புறகிட வாது செய்தற்கு - ஆளுடைய பிள்ளையாரை அவர் புறகிடுமாறு வாது செய்தற்கு, வஞ்சகர் எழுந்தனர் - அவ்

(பா - ம்.) *நினைவினி.

வஞ்சகர்கள் எழுந்தார்கள்; பூவைமார் போதும் என்னத் தடுத்தனர் - அவர் மனைவியர் (நீவிர் பெற்ற வெற்றி) போதுமென்று தடைப் படுத்தினர். (௧௪)

சேல்லன் மின்க ணுமக்கிது சேவ்வியன்
றல்லல் கூர வருந்துன்பத் தாழநாம்
எல்லி கண்ட கனவுண் டிதனையாஞ்
சோல்லு கேமின்று கேண்மேனச் சோல்லுவார்.

(இ - ள்.) செல்லன்மின்கள் - போதலொழியுங்கள்; நுமக்கு இது செவ்வி அன்று - நுமக்கு இது வெற்றி தருங் காலமன்று; நாம் அல்லல் கூர அருந் துன்பத்து ஆழ - நாங்கள் கவலைமிகக் கடத்தற்கரிய துன்பக்கடலுள் அழுந்த, எல்லி கண்ட கனவு உண்டு - இரவிற் கண்ட கனு உண்டு; யாம் இதனை இன்று சொல்லுகேம் - யாம் இக்கனவினை இப்பொழுது சொல்லுவேம்; கேண்ம் எனச் சொல்லுவார் - கேளுங்களென்று கூறுவாராயினர்.

செல்லன்மின்கள்: விகுதிமேல் விகுதி வந்தது. செவ்வி-தருணம். கேண்ம், கேளும் என்னும் வினைமுற்றின் ஈற்றயலுகரம் கெட்டது. (௧௫)

[கலி நிலைத்துறை]

இடைய ருதுநம் பாழியும் பள்ளியு மேங்குஞ்
சடையர் முஞ்சியர் சாம்பலர் தாங்கிய சூலப்
படையர் தீவிழிப் புலவுவாய்ப் பாய்பேரும் புலித்தோல்
உடைய ராய்ச்சிலர் வந்துவந் துலாவுதல் கண்டேம்.

(இ - ள்.) இடையறுது - இடைவிடாது, நம் பாழியும் பள்ளியும் எங்கும் - நமது தவச்சாலையும் கோயிலுமாகிய எங்கும், சடையர் முஞ்சியர் சாம்பலர் - சடையினையுடையராயும் முஞ்சிப் புல்லையுடையராயும் சாம்பற் பூச்சினையுடையராயும், தாங்கிய சூலப்படையர் - சூலப் படையினைத் தாங்கியவராயும், தீவிழி புலவுவாய் பாய் பெரும் புலித்தோல் உடையராய் - நெருப்புப் போலும் விழிகளையும் புலால் நாறும் வாயினையுமுடைய பாய்கின்ற பெரிய புலியின் தோலை ஆடையாக வுடையவருமாகி, சிலர் வந்து வந்து உலாவுதல் கண்டேம் - சிலர் வந்து வந்து உலாவுதலைப் பார்த்தேம்.

பள்ளி - அருகன் கோயில், பாழி - சமண் முனிவர் இருப்பிடம். தவச்சாலை பள்ளியெனப் படுதலுமுண்டு. முஞ்சி - ஒருவகைப் புல்; அதனால் அரைஞாண் தரித்துக் கொள்வர். தோளிலே சூலப்படையின் குறியினையுடையரும் என்றுமாம். சடை முதலிய வெல்லாம் சைவ தாபதக் கோலமாதல் காண்க. (௧௬)

கன்னி யிற்றுற வன்னங்கள் கணவனிற் றுறவின்
மன்னு மாரியாங் கனைகணால் வாங்குமக் குசைகள்
என்ன மூவகைப் பேண்டவப் பள்ளிக ளேல்லாஞ்
சின்ன வேண்பிறைக் கோட்டுமா சிதைக்கவுங் கண்டேம்.

(இ - ள்.) கன்னியில் துறவு அன்னங்கள் - மணமில்லாத கன்னிப் பருவத்திலே துறவுபூண்ட அம்சங்களும், கணவனில் துறவின் மன்னும் ஆரியாங்கனைகள் - நாயகனோடு கூடியிருக்கும் பொழுதே துறவில் நிலை பெற்ற ஆரியாங்கனைகளும், நூல்வாங்கும் அக்குசைகள் என்ன - மங்கல நாண் இழந்து துறவுபூண்ட அக்குசைகளும் என்று சொல்லப் பட்ட, மூன்று வகைப் பெண் தவப் பள்ளிகளெல்லாம் - மூன்று வகைப் பெண்களின் தவஞ் செய்யு மிடங்களனைத்தையும், சின்னவெண்பிறைக் கோட்டுமா சிதைக்கவும் கண்டேம் - சிறிய வெள்ளிய பிறைபோன்ற கொம்பினையுடைய யானை ஒன்று அழிக்கவும் கண்டேம்.

கன்னிப்பருவத்தில் ஆசிரியனிடத்து உபதேசம் பெற்றுத் துறந்து தவம் பூணும் பெண்கள் அம்சங்கள் எனவும், கணவனுடன் கூடி இல்லறத்திருக்குங்காலத்து உபதேசம் பெற்றுத் தவம்பூணும் பெண் கள் ஆரியாங்கனைகள் எனவும், மங்கலநாண் இழந்தபின் உபதேசம் பெற்றுத் துறந்து தவம்பூணும் பெண்கள் அக்குசைகள் எனவும் வழங்கப்படுவர் என்ப. சின்ன வெண்பிறைக் கோட்டுமா என்பது பிள்ளையாரைக் குறிப்பினுணர்த்தல் காண்க. (கஎ)

முண்டி தஞ்செய்த தலையராய் முறுக்குறி தூங்கு
குண்டி கைத்தடங் கையராய்க் கோவணம் பிணித்த
தண்டு தாங்கிய சுவலராய்ச் சடையன்பேர் நாவிற்
கொண்ட சைத்தன ராயெங்குங் குலாவுதல் கண்டேம்.

(இ - ள்.) முண்டிதம் செய்த தலையராய் - முண்டிதஞ் செய்த தலையினையுடையராய், முறுக்கு உறிதூங்கு குண்டிகைத்தடம் கையராய் - முறுக்கிய உறியிற்றூங்குங் கமண்டலத்தை யுடைய பெரிய கையினை யுடையராய், கோவணம் பிணித்த தண்டு தாங்கிய சுவலராய் - கோவணங் கட்டிய கோலினைத் தாங்கிய பிடரினை யுடையராய், சடையன்பேர் நாவில்கொண்டு அசைத்தனராய் - சிவன் பெயரை நாவிற்கொண்டு கூறுபவராய்ப் பலர், எங்கும் குலாவுதல் கண்டேம் - எங்கும் உலாவுதலைப் பார்த்தேம்.

உறியிற் றூங்கும் கமண்டலம் சைவத் துறவிகட்கும் உண்டென உணர்க;

"உறித் தாழ்ந்த கரகமும்"

என்பது கலித்தொகை. சடையன் - சிவன்; புறச் சமயத்தார் சிவபிரானை இங்ஙனங் கூறுதல் பெரு வழக்கு. (கஅ)

காந்து வெங்கத முடையதோர் கயந்தலை வந்து
சூழ்ந்து கொண்டுநம் மடிகண்மார் கணமெலாந் துரத்தி
ஏந்து பூஞ்சினை யலைந்திட* விரங்கிவண் டிரியப்
பாய்ந்து பிண்டியை வேரோடும் பறிக்கவுங் கண்டேம்.

(பா - ம்.) *சினையலறிட.

(இ - ள்.) காந்து வெங்கதம் உடைய தோர் கயந்தலை வந்து - சுடுகின்ற கொடுஞ் சினமுடைய ஒரு யானைக் கன்று வந்து, சூழ்ந்து கொண்டு நம் அடிகண்மார் கணமெலாம் துரத்தி - வளைத்துக் கொண்டு நமது அடிகள்மார் கூட்டங்களை யெல்லாம் துரத்தி, ஏந்து பூஞ்சினை அலைந்திட - ஏந்திய பூங்கொத்துக்களலையவும், இரங்கிவண்டு இரிய-வண்டுகள் ஒலித்து நீங்கவும், பாய்ந்து பிண்டியை வேரொடும் பறிக்கவும் கண்டேம் - பாய்ந்து அசோக மரத்தினை வேரொடும் பறித்தலையும் பார்த்தேம்.

கயந்தலை - யானைக்கன்று; இது பிள்ளையாரைக் குறிப்பின் உணர்த்துதல் காண்க. பிண்டி அருகன் உறையுந் தருவாகலின் அதனை வேரொடும் பறித்தல் என்பது பிள்ளையார் சமண் மதத்தை அடியுடன் அழிப்பதைக் குறிக்கின்றது. சினை அலைதற்கும் வண்டு இரிதற்கும் பறித்தல் காரணம்.

"மழவிடை யிளங்கன் றென்று வந்துநங் கழகந் தன்னை
உழறிடச் சிதறி யோடி யொருவருந் தடுக்க வஞ்சி
விழவொரு புகலு மின்றி மேதினி தன்னை விட்டு
நிழலிலா மரங்க ளேறி நின்றிடக் கண்டோ மென்பார்"

என்னும் பெரியபுராணச் செய்யுள் காணற்பாலது. (௧௯)

அந்த மூவிலை வேலினு மயின்முனைக் கழுவின்
பந்தி மீதுநீ ரேறவுங் கண்டுளம் பனிப்பச்
சந்த மார்பகஞ் சேப்பவந் தளிர்க்கரம் புடைத்துக்
கந்த வார்குழல் சோரவுங் கலுழவுங் கண்டேம்.

(இ - ள்.) அந்தம் மூவிலை வேலினும்-இறுதியைத் தரும் மூவிலைச் சூலங்களிலும், அயில் முனைக் கழுவின் பந்தி மீதும் - கூரிய முனைகளையுடைய கழுமர வரிசைகளின் மேலும், நீர் ஏறவும் - நீவிர் ஏறவும், கண்டு உளம் பனிப்ப - அதனைக் கண்டு எங்கள் உள்ளம் நடுங்க, சந்த மார்பகம் சேப்ப - சாந்தணிந்த மார்பினிடம் சிவக்குமாறு, அம் தளிர்க்கரம் புடைத்து - அழகிய தளிர் போன்ற கையினால் அடித்துக் கொண்டு, கந்தவார் குழல் சோரவும் கலுழவும் கண்டேம் - மணம் பொருந்திய நீண்ட கூந்தல் சரியவும் அழுது புலம்பவுங் கண்டேம்.

சேப்ப - சிவப்ப. எங்கள் குழல் சோரவும் நாங்கள் மார்பகம் புடைத்துக் கலுழவும் என்க. (௨௦)

தள்ள ருந்திற லிந்திர சாலமோ காதி
உள்ள விஞ்சையிவ் வெல்லைவந் துதவில வொன்றுங்
கள்ள ராற்பறி பட்டவோ கனலில்வெந் தனவோ
வெள்ளங் கொண்டவோ சேமத்திற் கிடப்பவோ விளம்பீர்.

(இ - ள்.) தள் அரும் திறல் இந்திர சாலம் மோக ஆதி உள்ள விஞ்சை - பிறரால் நீக்குதற் கரிய வலியினையுடைய இந்திரசாலமும்

மோகன முதலாகவுள்ள வித்தைகளும், இவ்வெல்லாம் வந்து ஒன்றும் உதவில - இது போது வந்து சிறிதும் உதவில; கள்ளரால் பறி பட்டவோ - அவை திருடராற் பறிக்கப்பட்டனவோ, கனலில் வெந்தனவோ - நெருப்பில் வெந்துபட்டனவோ, வெள்ளம் கொண்டவோ - வெள்ளத்தாற் கொள்ளப்பட்டனவோ, சேமத்தில் கிடப்பவோ விளம்பீர் - காவலில் வைக்கப்பட்டுக் கிடக்கின்றனவோ கூறுமின்.

மோகாதி விஞ்சை - மோகனம், ஆகருடணம், வசியம், அதிரிச்சியம், அஞ்சனம், தம்பனம், வாதம் என்பன. உதவில என்றதும் கனவு நிலையாகக் கொள்க. (உக)

தாவு தீவளர்த் தெழுகரி தன்னையா டரவை
ஆவை யேவிமுன் னம்மனோர் பட்டது மறந்தீர்
காவ லன்பிணி தணித்தலீ ரினிச்செயுங் கருமம்
யாவ தாகுமோ வதனையு மெண்ணுமி னென்றார்.

(இ - ள்.) தாவு தீ வளர்த்து - தாவுகின்ற நெருப்பினை வளர்த்து, எழுகரி தன்னை ஆடு அரவை - அதில் எழுந்த யானையையும் கொல்லுந் தொழிலையுடைய அரவினையும், ஆவை - பசுவையும், முன் நம்மனோர் ஏவி பட்டதும் அறிந்திர் - முன்னொரு காலத்தில் விடுத்து நம்மவர் பட்டதையும் அறிந்திர்; காவலன் பிணி தணித்திலீர் - பாண்டியன் வெப்பு நோயையுந் தணித்திலீர்; இனிச் செயுங் கருமம் யாவது ஆகுமோ - இனிச் செய்யப் போகும் வினை யாதாய் முடியுமோ, அதனையும் எண்ணுமின் என்றார் - அதனையுஞ் சிறிது எண்ணிப் பாருங்கள் என்றனர்.

அடு என்னும் முதனிலை நீண்டு ஆடு என்றாயது. கரி, அரவு, ஆ இவற்றை ஏவினமையை இப்புராணத்து யானை யெய்த படலம், நாகமெய்த படலம், மாயப் பசுவை வதைத்த படலம் என்பவற்றில் முறையே காண்க. பட்டது - எய்தியது; அழிந்தது என்றுமாம். முற்காலத்தில் நம்மடிகண்மார் பல மாயங்கள் செய்து தோல்வியுற்றமையும் அறிவீர், நீவிரும் இப்பொழுது காவலன் பிணி தணித்திலீர். இனி நீங்கள் செய்யுங் காரியம் உங்கட்கு வெற்றி தருவது எங்ஙனம்? இதனைச் சிந்தித்துப் பாருங்கள் என்றார். (உஉ)

இற்றை வைகலுக் கேகன்மி னென்றன ரறத்தைச்
செற்ற வஞ்சகர் செல்லுவார் திரும்பவுங் கையைப்
பற்றி யீர்த்தனர் பெண்டிர்சோற் கேட்பது பழுதென்
றற்ற தீவினை வழிச்செல்வா ரொளித்தனர் செல்வார்.

(இ - ள்.) இற்றை வைகலுக்கு ஏகல்மின் - இந்த நாளில் செல்லன்மின், என்றனர் - என்று கூறினர்; அறத்தைச் செற்ற வஞ்சகர் - அறத்தைக் கொன்ற வஞ்சகராகிய அச்சமணர், திரும்பவும் செல்லு

வார்-மீளவுஞ் செல்லுவாராயினர், கையைப்பற்றி ஈர்த்தனர் - அவர் கையைப் பிடித்து அம்மகளிர் இழுக்கவும், பெண்டிர் சொல் கேட்பது பழுதென்று - மகளிர் சொல்லைக் கேட்பது பழுதாகுமென்று கருதி, உற்ற தீவினை வழிச் செல்வார் - வந்தடைந்த தீவினையின் வழியே செல்லுமவர், ஒளித்தனர் செல்வார் - மறைந்து செல்வாராயினர்.

வைகலுக்கு: வேற்றுமை மயக்கம். ஒரு காரியத்தின் பொருட்டுச் செல்வாரைச் செல்லன்மின் என்று கூறுதலும் கையைப்பற்றி ஈர்த்தலும் தீ நிமித்தமாதலுங் காண்க. ஈர்த்தனர் என்பதை ஈர்க்கவும் என எச்சப்படுத்துக. ஒளித்தனர்: முற்றெச்சம். (உ௩)

கோங்க லர்க்குழல் சரிந்திடக் குரத்தியர் பின்னும்
எங்கள் சொற்கொளா தேகுவீர் பரிபவ மெய்தி
உங்க ளுக்கிடை யூறுவந் துறுகெனச் சபித்தார்
அங்க தற்குமஞ் சார்செல்வா ரழியுநா ளடுத்தார்.

(இ - ள்.) குரத்தியர் கொங்கு அலர்க்குழல் சரிந்திடப் பின்னும் - மனைவிமார் மணம் பொருந்திய மலரையணிந்த கூந்தல் சரிய மீண்டும், எங்கள் சொல் கொளாது ஏகுவீர் - எங்கள் சொல்லை ஏற்றுக்கொள்ளாது செல்கின்றீர்; பரிபவம் எய்தி உங்களுக்கு இடையூறு வந்து உறுக எனச் சபித்தார் - பரிபவம் உண்டாக உங்களுக்குத் துன்பம் வந்துறக் கடவதென்று சபித்தனர்; அழியும் நாள் அடுத்தார் - அழியுங் காலம் வந்து பொருந்தப்பெற்ற அச்சமணர்கள், அங்கு அதற்கும் அஞ்சார் - அங்கு அதற்கும் பயப்படாமல், செல்வார்-போவாராயினர்.

குரத்தியர் - குரவன்மார் மனைவியர். குரத்தியர் குரவன்மாரைச் சபித்தனரென்க, பின்னும் என்றது முன்பு ஏகன்மின் என்று கூறிக் கையைப்பற்றி ஈர்த்தமையைத் தழுவி நின்றது. பரிபவம் - இழிவு, துன்பம். உறுகென: அகரந்தொகுத்தல், அழியுநா ளடுத்தாராகலின் செல்வார் என்க. (உ௪)

புட்க ளும்பல விரிச்சியும் போகலென் றெதிரே
தட்க வுங்கடந் தேகுவார் தடங்கய லுகைப்பக்
கட்க விழ்ந்தலர் கிடங்கர்சூழ் கடிநகர்ப் புறம்போய்
உட்கு நெஞ்சரா யாவரு மோரிடத் தீண்டி.

(இ - ள்.) புட்களும் பல விரிச்சியும் போகல் என்று எதிரே தட்கவும் - பறவைகளும் பல தீச்சகுனங்களும் போகன்மின் என்று தடுக்கவும், கடந்து ஏகுவார் - கடந்து செல்லுகின்றவர், தடம் கயல் உகைப்ப கள் கவிழ்ந்து அலர் கிடங்கர் சூழ் - பெரிய கயல் மீன்கள் எழுந்து பாய்தலால் தேனைச் சிந்தித் தாமரைகள் மலரும் அகழி சூழ்ந்த, கடிநகர்ப்புறம்போய் - காவலையுடைய நகரின் புறத்தே போய், உட்கும் நெஞ்சராய் - அஞ்சிய நெஞ்சினை யுடையராய், யாவரும் ஓரிடத்து ஈண்டி - அவரனைவரும் ஓரிடத்திற் கூடி,

புட்களும் மற்றும் பலவும் விரிச்சியும் என்றுரைத்தலுமாம். செம் போத்து, காகம் முதலிய பறவைகளும், பூனை, பாம்பு முதலியனவும் இடமாதல், வலமாதல், குறுக்கிடுதல் முதலியன பின் வரும் நன்மை தீமைகளை அறிவிக்கும் நிமித்தங்களாகும். விரிச்சி - வாய்ப்புள் என்றுங் கொள்க; அஃது இயல்பாகப் பிறர் வாயிற் பிறக்குஞ் சொல் தமது காரியத்தின் நன்மையையோ தீமையையோ அறிவிப்ப தாதல். தட்க என்றமையால் ஈண்டு இவையெல்லாம் தீயனவாதல் கொள்க. போகன்மின் என்பது விகுதி கெட்டு வந்தது. கிடங்கு கிடங்கர் என்றாயது போலி. (உகு)

யாது சூழ்ச்சியென் றெண்ணுவா ரிறைவனைக் கண்டீ
தோதி நாமவ னனுமதி யுறுதிகோண் டனைய
ஏதி லாளனை வாதினால் வேறுமென் றிசைந்து
போது வார்நகர் புகுந்துவேத் தவைக்களம் புகுவார்.

(இ - ள்.) சூழ்ச்சி யாது என்று எண்ணுவார் - வெல்லுஞ் சூழ்ச்சி யாது என்று எண்ணுவாராகி, நாம் இறைவனைக் கண்டு ஈது ஓதி - நாம் அரசனைக் கண்டு அவனுக்கு இதனைச் சொல்லி, அவன் அனுமதி உறுதி கொண்டு - அவனது உடம்பாட்டின் உறுதியைப் பெற்று, அனைய ஏதிலாளனை வாதினால் வேறும் என்று - அந்த அய லானை வாதத்தினால் வெல்லுவோமென்று, இசைந்து போதுவார் - தம்முளொருப்பட்டுப் போகும் அச்சமணர், நகர் புகுந்து வேத்து அவைக்களம் புகுவார் - நகரிற் புகுந்து மன்னன் அவைக்களஞ் செல்வார்.

வேறும் - வெல்வோம். வேத்து: வலிக்கும்வழி வலித்தல். (உசு)

ஆய போதிளங் காலையிற் கவுணிய ரால
வாயர் சேவடி பணிந்துதம் மடத்தினிற் செல்லக்
காயு மாதவச் செல்வனைக் கங்குல்சூழ்ந் தாங்கு
மாய வஞ்சகர் வந்திடை வழித்தலை மறித்தார்.

(இ - ள்.) ஆயபோது - அப்பொழுது, இளங்காலையில் - மிக்க காலைப் பொழுதில், கவுணியர் ஆலவாயர் சேவடி பணிந்து தம் மடத் தினில் செல்ல - ஆளுடைய பிள்ளையார் திருவாலவாயுடையவரின் சிவந்த திருவடியினைப் பணிந்து தமது மடத்திற்குச் செல்லா நிற்க, காயும் ஆதவச் செல்வனை - சுடுகின்ற சூரிய தேவனை, கங்குல் சூழ்ந் தாங்கு - இருள் சூழ்ந்தாற்போல, மாயவஞ்சகர் வந்து இடை வழித் தலை மறித்தார் - மாய வஞ்சகராகிய அச்சமணர் வந்து வழி நடுவின் மறித்தனர்.

சூழ்ந்தாங்கு: விகாரம். மாய வஞ்சகம் - மிக்க வஞ்சகம் : ஒரு பொருளிரு சொல். வழித்தலை, தலை: ஏழனுருபு. ஆதவச் செல்வனைக் கங்குல் சூழ்ந்தாங்கு என்றது இல்பொருளுவமை. (உஎ)

மறித்த கையர்பின் செல்லமுன் மன்னவை குறுகிக்
குறித்த வாளரித் தவிசின்மேற் கோச்சையர் பெருமான்
எறித்த சேயிளம் பரிதியி னேறிவீற் றிருந்தார்
பறித்த சீத்தலைப் புலையர்கள் பொருதிவை பகர்வார்.

(இ - ள்.) மறித்த கையர் பின் செல்ல-அங்ஙனம்வழிமறித்த அக் கீழ் மக்கள் பின்னே செல்ல, கோச்சையர் பெருமான் - காழியர் பெருமானாகிய பிள்ளையார், முன் மன் அவை குறுகி - முன்னே மன்னன் அவையினை அடைந்து, குறித்த ஆளரித் தவிசின்மேல் - அவனாற் காட்டப்பட்ட சிங்காதனத்தின்மேல், எறித்த சேய் இளம்பரிதியின் ஏறி வீற்றிருந்தார் - ஒளி வீசும் சிவந்த இளஞ் சூரியனைப்போல ஏறி வீற்றிருந்தருளினார்; பறித்த சீத்தலைப் புலையர்கள்-பிடுங்குதலாற் சீப்பட்ட தலையினையுடைய புலையர்கள், பொருது இவை பகர்வார் - பொறுக்காமல் இவற்றைக் கூறுவாராயினர்.

கொச்சை - சீகாழியின் பன்னிரு பெயர்களில் ஒன்று. சீழ்த்தலை எனற்பாலது சீத்தலை என்றாயது. புலையர் - புன்மையுடையோர்.

(உஅ)

மழலை யின்னமுந் தெளிகிலா மைந்த*கண் மணியோன்
றுழல்க ருங்கோடி யிருந்திடக் கனியுதிர்ந் தாங்குன்
சுழல்கோள் விஞ்சையி னன்மையான் மன்னனைத் தொடுத்த
தழல வித்தன மென்றுநீ தருக்குறத் தகுமோ.

(இ - ள்.) மழலை இன்னமும் தெளிகிலா மைந்த - இன்னும் மழலை தேறாத சிறுவனே, கண்மணி ஒன்று உழல் கருங்கோடி இருந்திட - இரண்டு கண்களுக்கு ஒரு மணி இருந்து சுழலும் கரிய காக்கை ஏறியிருக்க, கனி உதிர்ந்தாங்கு - பனம்பழம் விழுந்தாற்போல, உன் சுழல்கொள் விஞ்சையின் நன்மையால் - உனது நிலையில்லாத வித்தையின் நன்மையினால், மன்னனைத் தொடுத்த தழல் அவித்தனம் என்று - அரசனைத் தொடுத்த வெப்பு நோயை நீக்கினேம் என்று கருதி, நீ தருக் குறத்தகுமோ - நீ தருக்கினையடையத் தகுமோ?

கல்வியில்லாத சிறுவன் என இழித்துரைக்குங் கருத்தால் 'மழலை யின்னமுந் தெளிகிலா மைந்த' என்றனர். மணி - கருவிழி. கொடி - காக்கை. கருமை என்னும் அடை தன்னோ டியைபின்மை மாத்திரை நீக்கியது. காகத்தின் இரண்டு கண்ணிற்கும் கருவிழி ஒன்றென்பது,

''காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர்
ஆகத்து ளோருயிர் கண்டம்''

எனத் திருச்சிற்றம்பலக் கோவையாரிலும் கூறப்பட்டுள்ளது. உழல் என்னுஞ் சினை வினை முதல்மேல் நின்றது. தானே உதிருஞ் செவ்வியி

(பா - ம்.) *தேர்கிலா மைந்த,

விருந்த பனம் பழம் காக்கை யேறிய பொழுது இயல்பாக உதிர்ந்த தேனும் 'காக்கை யேறப் பனம் பழம் உதிர்ந்தது' என்று கூறுவர்; இது வடமொழியில் காகதாலிய நியாயம் எனப்படும். காக்கையேறக் கனியுதிர்ந்தாற்போல நீ தீர்க்கத் தொடங்கிய பொழுது இயல்பாக நீங்கிய அரசனது வெப்பு நோயை நின் விஞ்சை வலியால் நீக்கியதாகக் கருதித் தருக்குதல் தகுமோ என்றாரென்க. சுழல் கொள்விஞ்சை - மயக்க வித்தையுமாம். (உகூ)

நந்து நாகுநீர் வண்டுசேன் னடைவழி யெழுத்தாய்
வந்து வீழினும் வீழுமவ் வழக்கினின் கையிற்
சிந்து சாம்பருஞ் சிறுசோலு மருந்துமந் திரம்போற்
சந்து சூழ்மலை யான்சுரந் தணித்தன கண்டாய்.

(இ - ள்.) நந்துநாகு நீர்வண்டு செல் நடைவழி - சங்கும் நத்தையும் நீர் வண்டும் செல்லும் வழி, எழுத்தாய் வந்து வீழினும் வீழும் - எழுத்தாக வந்து வீழினும் வீழும்; அவ்வழக்கின்-அவ்வழக்கைப்போல, நின்கையில் சிந்து சாம்பரும் சிறு சொலும் - நினது கையிலிருந்து சிந்திய சாம்பலும் பொருளில்லாத சிறு சொல்லும், மருந்து மந்திரம் போல் - முறையே மருந்தையும் மந்திரத்தையும் போல, சந்து சூழ் மலையான் சுரம் தணித்தன கண்டாய் - சந்தன மரங்கள் நெருங்கிய பொதியின் மலையினையுடைய பாண்டியன் வெப்பு நோயைப் போக்கின.

நந்து நாகு நீர் வண்டு, மருந்து மந்திரம் என்பவற்றில் செவ்வெண்கள் தொகை பெறுவாயின. செல் நடை, ஒரு பொருட் பன்மொழி. வீழ்தல் - தற் செயலாய்ப் பொருந்துதல். இழித்துரைக்குங் கருத்தால் 'சிந்து சாம்பலும் சிறு சொலும்' என்றார். கண்டாய், முன்னிலையசை. நந்து முதலியவை கடற்கரை மணல் முதலியவற்றில் ஊர்ந்து செல்லுங்கால் உண்டாகும் கீற்றுக்கள் எழுத்தாய் அமையினும் அமையும், அங்ஙனம் அமையினும் அதனை அவை அறிந்து எழுதின வெனல் சாலாது என்க; இது குணாக்கர நியாயம் எனப்படும். மேல், இயல்பாக நீங்கிய சுரத்தை நீர் தீர்த்ததாகக் கருதல் தகாது என்று கூறியவர், நீ சிந்திய சாம்பலும் சொல்லிய சொல்லும் மருந்தும் மந்திரமும் போலாகி அரசன் வெப்பினைப் போக்கி யிருப்பினும் நீ மருந்து எனவும் மந்திரம் எனவும் அவற்றை அறிந்து வழங்கினாயல்லை என இப்பொழுது கூறினார் என்க. (ந௦)

உங்கண் மந்திர மேடோன்றிற் றீட்டுக வோரேட்*
டெங்கண் மந்திரந் தன்னையுந் தீட்டுக விரண்டும்
அங்கி வாயிடின் வேந்தது தோற்றதவ் வங்கி
நுங்கி டாதது வென்றதேன் றேட்டியே நுவலா.†

(பா - ம்.) *உங்கள் மந்திர மோரேட்டிற் றீட்டுகவோ ரேட்டில், † நுவல்வார்.

(இ - ள்.) உங்கள் மந்திரம் ஏடு ஒன்றில் திட்டுக - நுங்கள் மந்திரத்தை ஒரு பனையேட்டில் திட்டக் கடவீர்; எங்கள் மந்திரம் தன்னையும் ஓர் ஏட்டு திட்டுக - எங்கள் மந்திரத்தையும் ஓர் ஏட்டில் வரையக் கடவேம்; இரண்டும் அங்கிவாய் இடின் - இவ்விரண்டேட்டினையும் நெருப்பின்கண் இட்டால், வெந்தது தோற்றது - வெந்த ஏடு தோல்வியடைந்தது; அவ்வங்கி நுங்கிடாதது வென்றது என்று - அத்தியினால் உண்ணப்படாத ஏடு வெற்றி பெற்றது என்று, ஒட்டியே நுவலா - வஞ்சினங் கூறி.

சைவ சமயிகள் பிறரையும் உளப்படுத்தி 'உங்கள் மந்திரம்' என்றனர். திட்டுக என்னும் வியங்கோள் முற்றுக்கள் முறையே முன்னிலையிலும் தன்மையிலும் வந்தன. அங்கிவாய், வாய்: ஏழனுருபு. வெந்த ஏட்டில் வரையப்பெற்ற மந்திரத்தையுடைய சமயம் தோற்றது எனவும், அதற்கு எதிரானது வென்றது எனவும் கருத்துக் கொள்க. ஒட்டல் - பணயம் (பந்தயம்) விதித்தல். (௩௧)

சேக்க ரஞ்சடை யானுறை பதிகளிற் செய்யத்
தத்த தன்றவ னடுநிலை பிழைத்துநுஞ் சார்வாய்
விக்க மெம்மனோர்க் கியற்றுவான் வேறொரு தலத்திற்
புக்க மர்ந்து வாதஞ்செயப் போதுக மென்னா.

(இ - ள்.) செக்கர் சடையான் உறைபதிகளில் - சிவந்த சடையையுடைய சிவன் உறையும் பதிகளில், செய்யத்தக்கது அன்று - (இவ்வாதம்) செய்யத்தக்கது அன்று; அவன் நடுநிலை பிழைத்து - அச்சிவன் நடுவு நிலைமை தவறி, நும் சார்வாய் எம்மனோர்க்கு விக்கம் இயற்றுவான் - நுமது சார்பில் நின்று எம்மவர்க்குக் கெடுதி செய்வான் (ஆகலின்), வேறு ஒரு தலத்தில் புக்கு அமர்ந்து வாதம் செய - மற்றொரு தலத்திற் போயிருந்து வாது புரிதற்கு, போதுகம் என்னா - போகக் கடவோம் என்று கூறி.

விக்கினம் எனற்பாலது விக்கம் எனத் திரிந்தது. (௩௨)

வென்றி மாமுர சுறங்கிடா வியனகர்ப் புறம்போய்
மன்றல் வேம்பன்முன் கதழெரி மடுத்திடிற் பிழைப்ப
தோன்று வேவதோன் றீதுகொண் டுமர்களு மெமரும்
இன்று வெல்வதுந் தோற்பதுங் காண்டுமென் றெழுந்தார்.

(இ - ள்.) வென்றிமாமுரசு உறங்கிடா வியன் நகர்ப்புறம் போய் - பெரிய வெற்றிமுரசு இடையறாது ஒலிக்கும் இடமகன்ற இந்நகரின் வெளியே சென்று, மன்றல் வேம்பன் முன் கதழ் எரி மடுத்திடில் - மணம் பொருந்திய வேப்ப மலர் மாலையை யணிந்த பாண்டியன் முன் மிக்கெரியும் தீயின்கண் நம்மேடுகளையிட்டால், பிழைப்பது ஒன்று வேவது ஒன்று ஈது கொண்டு - வேவாதது ஒன்று வேவது ஒன்றாகிய இவ்வேதுவினாலேயே, உமர்களும் எமரும் இன்று வெல்வதும் தோற்பதும் காண்டும் என்று எழுந்தார் - உம்மவரும் எம்மவரும்

இன்று வெற்றி பெறுவதும் தோல்வியுறுவதும் பார்ப்போமென்று எழுந்தனர்.

உறங்கிடாமை - எப்பொழுதும் ஒலித்தல். கதழ்எரி - வேக முடைய நெருப்பு. (௩௩)

[ஒரு பேரு சொச்சகம்]

ஈட்டுவஞ்ச நெஞ்சரே யெழீஇநகர்ப் புறம்புபோய்க்
கீட்டிசைக்க ணோரழற் கிடங்குதோட் டெழுந்துவான்
நீட்டுகோ டரங்குறைத்து நிறையவிட்டு நெட்டெரி
மூட்டினார்த மாதரார் வயிற்றுமிட்டு மூட்டினார்.

(இ - ள்.) வஞ்சம் ஈட்டு நெஞ்சரே எழீஇ - வஞ்சகத்தையே தேடித் தொகுக்கும் உள்ளத்தையுடைய அச்சமணர்களே முன்னர் எழுந்து, நகர்ப்புறம்பு போய் - நகருக்கு வெளியே சென்று, கீழ் திசைக் கண் ஓர் அழல் கிடங்கு தொட்டு - கீழைத் திசையின்கண் ஒரு தீக்குழி தோண்டி, எழுந்து வான் நீட்டு கோடரம் குறைத்து - மேலெழுந்து வானை அளாவிய மரக்கிளைகளை வெட்டி, நிறைய இட்டு நெட்டெரி மூட்டினார்-அக்குழி நிறையப் போட்டுப் பெரிய நெருப்பை மூட்டினார்; தம் மாதரார் வயிற்றும் இட்டு மூட்டினார் - அவ்வனலைத் தம் மனைவியர் வயிற்றிலும் இட்டு மூட்டினார்.

கீட்டிசை, கீழ்த்திசை என்பதன் மரூஉ. கோடரம் - கிளை. இவர்கள் மூட்டும் இத்தீயானது இவர் தம் மனைவியர் வயிற்றில் சோகத்தீ மூளுவதற்குக் காரணமாயிற்று என்பார் 'தம் மாதரார் வயிற்றுமிட்டு மூட்டினார்' என்றார். (௩௪)

ஞானமுண்ட முனிவர்தம்மை யெள்ளியெள்ளி நாயினும்
ஈனரங்கி யைத்தடுத் திருப்பவெண் ணிராயிரர்
ஆனதொண்ட ருடனெழுந்து சண்பைவேந்து மரசனும்
மானனாரு மந்திரக் கிழானும்வந்து வைகினார்.

(இ - ள்.) ஞானம் உண்ட முனிவர் தம்மை எள்ளி எள்ளி - சிவஞானம் பருகிய முனிவராகிய ஆளுடைய பிள்ளையாரை இகழ்ந் திகழ்ந்து, நாயினும் ஈனர் - நாயினும் கடையராகிய அச்சமணர், அங்கியைத் தடுத்து இருப்ப - அவ்வனலைத் தமது மந்திரத்தாற் கட்டிக் கொண்டிருக்க, எண்ணிராயிரர் ஆன தொண்டருடன் எழுந்து - பதினாறாயிரமாகிய தொண்டருடன் எழுந்து, சண்பை வேந்தும் அரச னும் மான் அனாரும் - காழி வேந்தரும் பாண்டியனும் மான் போன்ற மங்கையர்க்கரசியாரும், மந்திரக் கிழானும் வந்து வைகினார் - குலச் சிறையாரும் வந்து தங்கினார்.

அடுக்கு பன்மை குறித்தது. தடுத்தல் - மந்திரத்தால் தம்பனஞ் செய்தல். (௩௫)

உள்ளவிழ்ந்த முலேசுரந் தொழுக்குபா லருந்தியே
துள்ளியோடு கன்றுபின் றொடர்ந்துசெல்லு மானென
வெள்ளியம்ப லத்துளாடும் வேதகீதர் காதல்கூர்*
பிள்ளேபோன வாறுதம் பிராட்டியோடு மெய்திஞர்.

(இ - ள்.) உள் அவிழ்ந்த முலே சுரந்து ஒழுக்குபால் அருந்தி- உள்ளம் நெகிழ்தலால் முலே சுரந்து சொரியும் பாலேப்பருகி, துள்ளியோடு கன்று பின்தொடர்ந்து செல்லும் ஆன் என - துள்ளியோடுகின்ற கன்றின்பின்னே தொடர்ந்து போகும் பசுவைப் போல, வெள்ளி யம்பலத்துள் ஆடும் வேத கீதர் - வெள்ளி மன்றுள் ஆடியருளும் சாம வேத விருப்பினராகிய இறைவர், தம் பிராட்டியோடும் - தமது இறைவியாரோடும், காதல் கூர் பிள்ளே போன்வாறு எய்திஞர் - அன்பு மிக்க பிள்ளேயார் சென்ற வழியிற் சென்றடைந்தனர்.

அவிழ்ந்த என்னும் பெயரெச்சம் காரணப் பொருட்டு. பிள்ளேயார் உமையின் பாலருந்தித் துள்ளியோடு கன்ருதல் உணர்க. ஆன் தொடர்ந்து செல்லுதல் போல எய்திஞர் என்றமையின் இது தொழிலுவமை. (கூசு)

ஆறிஞே டிரண்டடுத்த வாயிரஞ் சமணரும்
வேறுவேறு தாமுயன்ற மந்திரங்கள் வேறுவே
றூறுநீர் சுரந்தவோலே யிற்பொறித் தொருங்குபோய்ச்
சீறிவா னிமிர்ந்தெழுந்த தீயின்வாய் நிரப்பிஞர்.

(இ - ள்.) ஆறிஞேடு இரண்டு அடுத்த ஆயிரம் சமணரும் - ஆறு என்னும் எண்ணுடன் இரண்டு சேர்ந்த ஆயிரம் (எண்ணுயிரம்) சமணரும், வேறு வேறு தாம் முயன்ற மந்திரங்கள் - தாம் முயன்று கற்ற வேறு வேறு மந்திரங்களே, ஊறு நீர் சுரந்த வேறுவேறு ஓலேயில் பொறித்து - ஊறுகின்ற நீர் சுரந்த வெவ்வேருகிய ஓலேயில் எழுதி, ஒருங்கு போய் - ஒரு சேரச் சென்று, சீறிவான் நிமிர்ந்து எழுந்த தீயின் வாய் நிரப்பிஞர் - சினந்து வானின் கண் ஓங்கி யெழுந்த அனலின்கண் நிரப்பிஞர்கள்.

முயன்ற - முயன்று பயின்ற. நீர் சுரந்த வோலே - சிறிதும் நீர் வற்ருத பச்சோலே. வேறு வேறு ஓலேயில் என்க. எண்ணிறந்த மந்திரங்களே எண்ணிறந்த ஓலேயிற் பொறித்து எண்ணிறந்தோர் ஒருங்கு சென்று தீயிற் போகட்டனர் என்ருர். (கூஎ)

அக்கிவாய் மடுத்தவே டனேத்துமக் கணத்தினே
இக்குவா யுலர்ந்ததோ டேனக்கரிந்து சாம்பராய்
உக்கவாறு கண்டுநீச ருட்கிடந்து பொங்கவே
திக்குளார்கள் கண்டபேர் சிரித்துளார்க ளாயிஞர்.

(பா - ம்.) *வாய்மை கூர்.

(இ - ள்.) அக்கிவாய் மடுத்த ஏடு அனைத்தும் - அவ்வனல் வாய் மடுத்த ஏடு முற்றும், அக்கணத்தினே - அந்தக் கணப்பொழுதிலேயே, இக்குவாய் உலர்ந்த தோடெனக் கரிந்து சாம்பராய் - கரும்பிலுள்ள காய்ந்த தோட்டைப்போலக் கரிந்து சாம்பராகி, உக்கவாறு கண்டு - அழிந்த தன்மையைக் கண்டு, நீசர் உள்கிடந்து பொங்க - புலையர்களாகிய அச்சமணரது உள்ளம் புழுங்கிப் பொங்க, திக்குளார்கள் கண்டபேர் - அதனைக் கண்டவர்களாகிய அத்திசையிலுள்ளாரனைவரும், சிரித்துளார்கள் ஆயினர் - சிரிப்பார்களாயினர்.

அங்கி எனற்பாலது அக்கி என வலித்தது; அக்கினி என்பதன் கடைக்குறையுமாம். கரும்பின் உலர்ந்த தோடு நெருப்பிலிட்டாற் கரிதல் போன்று என்க, கண்டபேர் - கண்டவர்; வழக்குப் பற்றி வந்தது; சிரித்துளார்கள் - சிரித்தவர்கள், சிரிப்பவர்கள். (ருஅ)

விரிந்தவேத நாவர்தாம் விரித்தவேத மெய்ப்பொருள்
வரைந்தபுத்த கத்தைவண் கயிற்றினுல் வகிர்ந்துதாம்
அருந்தஞான வமுதளித்த வம்மைபே ரகப்படத்
தெரிந்தவே டெடுத்தடுத்த தீயின்வாயி லிட்டனர்

(இ - ள்.) வேதம் விரிந்த நாவர் - மறைகள் விரிந்த நாவினையுடைய பிள்ளையார், தாம் விரித்த வேதம் மெய்ப்பொருள் வரைந்த புத்தகத்தை — தாம் விரித்துக் கூறிய மறையின் உண்மைப் பொருள் எழுதிய திருமுறையை, வண்கயிற்றினுல் வகிர்ந்து - வளவிய கயிற்றினுல் வகிர்ந்து, தாம் அருந்த ஞான அமுது அளித்த அம்மை பேர் அகப்படத் தெரிந்த ஏடு - தாம் அருந்துதற்கு ஞானப்பால் கொடுத்த அம்மையாரின் திருப்பெயர் கிடைக்க விளங்கிய ஏட்டினை, எடுத்து அடுத்த தீயின் வாயில் இட்டனர் - எடுத்து அடுத்துள்ள அனல் வாயில் இட்டனர்.

பரந்துள்ள வேதம் பயின்ற நாவர் என்றுமாம். வேத மெய்ப் பொருள் - வேதத்தின் சாரமாகிய தமிழ் மறை; மெய்ப்பொருள் வேதம் என மாறி உண்மைப் பொருளையுடைய தமிழ்மறை என்றுரைத்தலுமாம். கயிற்றினுல் வகிர்தல் - கயிறு சாத்தி எடுத்தல். அம்மை பேர் முற்படப் பொருந்திய ஏடு அகப்பட அதனை எடுத்து என்க. அம்மை பேர் அமைந்த ஏடாவது "போகமார்த்த பூண்முலையாள்" என்னும் திருநள்ளாற்றுப் பதிகம் வரைந்த ஏடு:

"போகமார்த்த பூண்முலையா டன்னேடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள்ளேற் றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண வாடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே"

என்பது அப்பதிகத்தின் முதற் பாட்டு. அவ்வேட்டினைத் தீயின்கண் இடும்பொழுது பிள்ளையார் பாடிய நள்ளாற்றுப் பதிகமொன்றுமுளது; அது,

"தளிரிள வளரொளி தனதெழி றருதிகழ் மலைமகள்
குளிரிள வளரொளி வனமுலை யிணையவை குலவலின்
நளிரிள வளரொளி மருவுநள் ளாறர்தந் நாமமே
மிளிரிள வளரொளி யிடிலவை பழுதிலை மெய்ம்மையே"

என்னும் திருப்பாட்டை முதலாக வுடையது. (௩௯)

மறைபுலப் படுத்தநூல் வரைந்தவே டனந்தநாள்
அறைபுனற் கிடந்ததா மெனப்பசந்த தரசனும்
நிறையமைச்சு மரசியாரு நின்றபேரு மந்தணர்க்
கிறைவரைப் புகழ்ந்தளப்பி லின்பவெள்ள மூழ்கினர்.

(இ - ள்.) மறை புலப்படுத்த நூல் வரைந்த ஏடு - வேதத்தின் மெய்ப்பொருளை வெளிப்படுத்திய திருமுறையினின்றுங் கைக்கொண்ட அவ்வேடு, அனந்தநாள் அறை புனல் கிடந்ததாம் எனப் பசந்தது - மிகப் பலநாள் ஒலிக்கின்ற நீரின்கண் கிடந்ததுபோலப் பசந்தது; அரசனும் நிறை அமைச்சும் அரசியாரும் நின்ற பேரும் - பாண்டியனும் அமைச்சிலக்கணம் நிறைந்த குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் அங்கு நின்ற மற்றவரும், அந்தணர்க்கு இறைவரைப் புகழ்ந்து - மறையவர்க்கு மன்னராகிய பிள்ளையாரைப் புகழ்ந்து, அளப்பில் இன்ப வெள்ளம் மூழ்கினர் - அளவில்லாத இன்பப் பெருக்கில் மூழ்கினர்.

நூல் வரைந்த - திருமுறையினின்றும் கொண்ட; பதிகம் எழுதிய என்றுமாம். (௪0)

வெந்த்சிந்தை யமணர்வாது வெல்வதற்கு வேறிடம்
புந்திசெய்து வந்தவப் போதுத்தலம் பொதுக்கடிந்
தந்தணாளர் வாதுவென்ற வன்றுதொட்டு ஞானசம்
பந்தனென்ற நாமமே படைத்துயர்ந்த தின்றுமே.

(இ - ள்.) வெந்த சிந்தை அமணர் வாது வெல்வதற்கு - புழுங்கிய உள்ளத்தை யுடைய சமணர் வாதில் வெல்வதற்கு, வேறு இடம் புந்தி செய்து வந்த அப்பொதுத்தலம் - வேறு இடம் வேண்டுமெனக் கருதி வரப் பெற்ற அப்போது விடமானது, அந்தணாளர் வாது வென்ற அன்று தொட்டு - ஆளுடைய பிள்ளையார் வாதில் வென்ற அன்று முதல், இன்றும் - இற்றைக்கும், பொதுக்கடிந்து - பொதுமை நீங்கி, ஞான சம்பந்தன் என்ற நாமமே படைத்து உயர்ந்தது - ஞான சம்பந்தன் என்ற பெயரையே படைத்துச் சிறந்தது.

கடிந்து - நீக்கி; நீங்கி என்னும் பொருட்டாயது. ஞானசம்பந்தர் வென்றதற்கு அடையாளமாக அவர் திருப் பெயரிட்டு அவ்விடத்தை வழங்கலாயின ரென்க. அது 'சம்பந்த நத்தம்' என வழங்கி இக் காலத்தில் 'சாம்ப நத்தம்' என வழங்குகின்றது. (௪௧)

அன்னவேடு முறையினோ டிறுக்கியந்த ணாளர்கோன்
மன்னைநோக்க வினையினோடு பாயுடுத்த மாசர்தாஞ்
சொன்னசூள் புலப்படத் துணிந்தும்வாய்மை நாணோரீஇக்
கன்னிநாட னவைசிரிக்க வாற்றலாது கத்துவார்.*

(இ - ள்.) அன்ன ஏடு முறையினோடு இறுக்கி - அந்த ஏட்டினைத் திரு முறையுடன் சேர்த்து இறுக்கிக் கட்டி, அந்தணாளர்கோன் மன்னை நோக்க - மறையவர் பெருமானாகிய பிள்ளையார் மன்னனைப் பார்க்க, வினையினோடு பாய் உடுத்த மாசர் - தீவினையுடன் பாயையும் உடுத்த அழுக்கினையுடைய அச்சமணர், தாம் சொன்ன சூள் புலப்படத் துணிந்தும் - தாங்கள் கூறிய வஞ்சினத்தை விளங்க அறிந்து வைத்தும், வாய்மை நாண் ஓரீஇ - வாய்மையையும் வெட்கத்தையும் விட்டு நீங்கி, கன்னி நாடன் அவை சிரிக்க - பாண்டி மன்னன் அவையிலுள்ளார் சிரிக்க, ஆற்றலாது கத்துவார் - பொறுக்கலாற்றாது கத்துவார்.

பாய் உடையாகச் சூழ்ந்தாற்போல வினையாலும் சூழப் பெற்றவர் என்பார் 'வினையினோடு பாயுடுத்த' என்றார். வெந்த ஏட்டில் வரைந்த மந்திரத்தையுடைய சமயம் தோற்றது எனவும், அங்ஙனமல்லாதது வென்றது எனவும் தாமே கூறிய வஞ்சினம் தமக்கு நன்கு தெரிந்திருந்தும், தமது ஏடு வெந்தவுடன் தோல்வியை ஏற்றுக் கொள்ளாமல் மீட்டும் வாதிற்கு எழுதலின் வாய்மையும் நாணும் இல்லார் என்பார் 'தாம் சொன்னசூள் புலப்படத் துணிந்தும் வாய்மை நாணோரீஇ' என்றார். (௬௨)

ஏடநாங்க ளேழுதியிட்ட பச்சையேடே ணாயிரம்
வீடவந்த நீவரைந்து விட்டவோலை யோன்றுமேன்
வாடலின்றி நீரிலிட்ட வண்ணமான தாலிதுன்
பாடவஞ்செய் விஞ்சைகோண்டு பாவகற் பிணித்ததே.

(இ - ள்.) ஏட - ஏடா, நாங்கள் எழுதி இட்ட எணாயிரம் பச்சை ஏடு வீட-நாங்கள் எழுதியிட்ட எண்ணாயிரம் பச்சை யேடுகளும் வெந்து சாம்பராக, நீ வரைந்து விட்ட அந்த ஓலை ஒன்றும் - நீ எழுதிப் போட்ட அந்த ஓரோலை மட்டும், வாடல் இன்றி - சிறிது வாடுதலும் இல்லாமல், நீரில் இட்ட வண்ணமானது என் - நீரிலிட்டது போன்ற நிறத்தை யடைந்தது என்ன காரணம், இது உன் பாடவம் செய் விஞ்சை கொண்டு - இது உன்னுடைய (பிறருக்கு) மகிழ்ச்சியை விளைக்கும் வித்தையைக் கொண்டு, பாவகன் பிணித்ததே - அனலைக் கட்டியதேயாகும்.

அந்த ஓலை எனவும், வண்ணமானது என் எனவும் கூட்டுக. ஆல்: அசை. விஞ்சை - அக்கினித் தம்பன வித்தை. (௬௩)

(பா - ம்.) * கதறுவார்.

உங்களேடு மெங்களேடு மும்பர்வா னளாய்விரைஇப்
பொங்கியோடும் வையைநீரி லிடுகவிட்ட போதுதான்
அங்குநீ ரெதிர்க்குமோலை வெல்லுமோலை யன்றியே
துங்கவேலை செல்லுமோலை தோற்குமோலை யாவதே.

(இ - ள்.) உங்கள் ஏடும் எங்கள் ஏடும் - நுமது ஏட்டினையும் எமது ஏட்டினையும், உம்பர்வான் அளாய் விரைஇப் பொங்கி ஓடும் - வானின்மேல் அளாவி விரைந்து கரைவழிந்து ஓடா நின்ற, வையை நீரில் இடுக - வையையாற்றின் நீரினில் இடுவேமாக; இட்டபோது - அங்ஙனம் இட்டபொழுது, அங்கு நீர் எதிர்க்கும் ஓலை வெல்லும் ஓலை - அவண் நீரில் எதிர்த்துச் செல்லும் ஓலையே வென்ற ஓலை; அன்றி - அங்ஙனமின்றி, துங்க வேலை செல்லும் ஓலை - பெரிய கடலிற் செல்லும் ஓலை, தோற்கும் ஓலை ஆவது - தோல்வியுறும் ஓலையாகும்.

உம்பர் வான்: ஒருபொருட் பன்மொழி; வானினது உச்சி என்றுரைத்தலுமாம். விரைஇ-விரைந்து: சொல்லிசை யளபெடை. தான்: அசை. சமயத்தின் வென்றி தோல்வியை ஓலையின்மேல் ஏற்றி 'வெல்லுமோலை' 'தோற்குமோலை' என்றார். (௪௪)

வென்றுவீ றடைந்தவர்க்கு வீறழிந்து தோற்றபேர்
என்றுமேவ லடிமையாவ தேன்றிசைந்து கைதவக்
குன்றுபோலு நின்றகுண்டர் கூறலோடு மீறிலா
மன்றுளாடு மடிகண்மைந்தர் வாய்மலர்ந்து பேசுவார்.

(இ - ள்.) வென்று வீறு அடைந்தவருக்கு - வெற்றி பெற்றுப் பெருமை அடைந்தவருக்கு, வீறு அழிந்து தோற்றபேர் - தோல்வி யுற்றுப் பெருமையிழந்தவர்கள், என்றும் ஏவல் அடிமையாவது என்று இசைந்து - எப்பொழுதும் ஏவல் புரியும் அடிமையாவதென்று உடன் பட்டு, கைதவக் குன்றுபோலும் நின்ற குண்டர் கூறலோடும் - வஞ்ச மலை போலும் நின்ற கீழ்மக்களாகிய அச்சமணர் கூறியவளவில், ஈறு இலா மன்றுள் ஆடும் அடிகள் மைந்தர் - முடிவில்லாத பொதுவில் ஆடியருளும் இறைவன் புதல்வராகிய பிள்ளையார், வாய் மலர்ந்து பேசுவார் - திருவாய் மலர்ந்து கூறுவாராயினர்.

தோற்று வீறழிந்தபேர் என மாற்றுக. பேர் என்பது வழக்கு. ஈறிலா அடிகள் எனக் கூட்டுக. (௪௫)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

அடியார் பதினா றுயிரவ ருள்ளார் சிவனை யவமதித்த
கொடியார் நீவி ருமக்கேற்ற தண்ட மிதுவோ கொன்றைமதி
முடியா ரருளா லுங்களைநாம் வென்றே மாயின் மூவிலைவேல்
வடிவா னிரைத்த* கழுமுனையி லிடுவே மதுவே வழக்கென்றார்.

(பா - ம்.) *வடிவாணிரைத்த.

(இ - ள்.) அடியார் பதினாறுயிரவர் உள்ளார் - நமக்கு ஏவல் புரியும் அடியார்கள் பதினாறுயிரவர் உள்ளார்கள் (அவரேயமையும்;) நீவிர் சிவனை அவமதித்த கொடியார் - நீங்கள் சிவபெருமானை இகழ்ந்த கொடியவர்கள்; உமக்கு ஏற்ற தண்டம் இதுவோ - (ஆகலின்) உமக்கியைந்த தண்டம் இதுவன்று; கொன்றை மதி முடியார் அருளால் - கொன்றை மாலையையும் பிறைமதியையும் அணிந்த முடியினையுடைய இறைவரது திருவருளால், நாம் உங்களை வென்றேமாயின் - யாம் உங்களை வென்றோமானால், மூவிலை வேல் வடிவால் நிரைத்த கழுமுனையில் - மூன்றுதகட்டு வடிவமைந்த சூலப் படையின் உருவத்தோடு வரிசைப் படுத்தி நட்ட கழுமுனையில், இடுவேம் - இடா நிற்பேம்; அதுவே வழக்கு என்றார் - அதுவே தக்க முறையாகும் என்றனர்.

தோற்றவர் வென்றவர்க்கு அடிமையாவதென்று சமணர் கூறினமையின் இங்கே அடியார் பதினாறுயிரவர் உள்ளாராகலின் நுங்கள் அடிமை வேண்டற் பாலதன்று, நுமக்கேற்ற தண்டமும் இதுவன்று எனப் பிள்ளையார் கூறினரென்க. இவ்வாதிலே தோற்றவர் செய்வது இன்னதென்பதனை ஒட்டி வாது செய்யவேண்டு மெனக் குலச்சிறையார் கூற, அமணர்கள் தாமே 'வாதிலழிந்தோ மாகில் இவ்வரசன் கழுவேற்றுவானாக' என்றனர் எனப் பெரிய புராணம் கூறுகின்றது;

"என்றமண் கையர் கூற வேறுசிர்ப் புகலி வேந்தர்
நன்றது செய்வோ மென்றங் கருள்செய நணுக வந்து
வென்றிவே லமைச்ச னார்தாம் வேறினிச் செய்யு மிவ்வா
தொன்றினுந் தோற்றார் செய்வ தொட்டியே செய்வ தென்றார்'

"அங்கது கேட்டு நின்ற வமணரு மவர்மேற் சென்ற
பொங்கிய வெகுளி கூரப் பொருமைகா ரணமே யாகத்
தங்கள் வாய் சோர்ந்து தாமே தனிவாதி லழிந்தோ மாகில்
வெங்கழு வேற்று வானிவ் வேந்தனே யென்று சொன்னார்"

என்பன காண்க. (சசு)

ஊழின் வலியா லமணரதற் குடன்பட் டார்க ளஃதறிந்து
சூழி யானைக் குலச்சிறையுந் தச்சர் பலரைத் தொகுவித்துக்
காழி னெடிய பழுமரத்திற் சூல வடிவாய்க் கழுநிறுவிப்
பாழி நெடிய தோள்வேந்தன் முன்னே கொடுபோய்ப் பரப்பினார்.

(இ - ள்.) ஊழின் வலியால் அமணர் அதற்கு உடன் பட்டார்கள் - தீவினையின் வலியினால் சமணர் அதற்கு இசைந்தார்கள்; சூழியானைக் குலச்சிறையும் - முக படாத்தையுடைய யானையையுடைய குலச்சிறையாரும், அஃது அறிந்து தச்சர் பலரைத் தொகுவித்து - அதனை யறிந்து பல தச்சர்களைக் கூட்டி, காழின் நெடிய பழுமரத்தில் -

வயிரமுடைய நீண்ட முதிர்ந்த மரங்களில், சூல வடிவாய்க் கழு நிறுவி - சூலவடிவாகக் கழுக்களை நிறுத்தி, பாழி நெடிய தோள் வேந்தன் முன்னே கொடுபோய்ப் பரப்பினர் - வலிய நீண்ட தோளையுடைய பாண்டி மன்னன் முன்னே அவற்றைக் கொண்டு போய்ப் பரப்பினர். (௭௭)

தேற லாதார் தமைக்காழிச் செம்ம னோக்கி யினிவம்மின்
நீறு பூசிக் கண்டிகையும் பூண்டு நிருத்த ரெழுத்தைந்தும்
ஊற வோதிப் பாசமொழித் துய்மி னென்னு வறநோக்கிக்
கூறி னார்மற் றதுகேட்டுக் குண்ட ரெரியிற் கொதித்துரைப்பார்.

(இ - ள்.) தேறலாதார்தமை - மெய்ப்பொருளை யறியாத அச் சமணர்களை, காழிச் செம்மல் நோக்கி - சீகாழித் தோன்றலாகிய பிள்ளையார் பார்த்து, இனி வம்மின் - இனியேனும் இங்கு வருவீராக; நீறு பூசிக் கண்டிகையும் பூண்டு - திருநீறு தரித்து உருத்திராக்க மாலையையும் அணிந்து, நிருத்தர் எழுத்து ஐந்தும் ஊற ஓதி - திருக் கூத்தருடைய திருவைந்தெழுத்தையும் நாவிற் சுவையூற ஓதி, பாசம் ஒழித்து உய்மின் என்னு - பாசபந்தத்தை ஒழித்துப் பிழையுங்கள் என்று, அறம் நோக்கிக் கூறினர் - அற நெறியை நோக்கிக் கூறியருளினர்; அது கேட்டு குண்டர் எரியில் கொதித்து உரைப்பார் - அதனைக் கேட்டு அக் கீழ்மக்கள் நெருப்பைப்போலச் சினந்துரைப்பாராயினர்.

தேறலாதார் - தெளிவில்லாதவர்; பகைமையுடையார் என்றலுமாம். ஊற ஓதி - பயில ஓதி என்றுமாம். (௭௮)

முன்பு தீயில் வென்றனமே நீரில் யாதாய் முடியுமென
அன்பு பேசி யெமையிணக்கி யகல நினைத்தா யல்லதைநீ
பின்பு வாது செயத்துணியும் பெற்றி யுரைத்தா யல்லைபுலால்
என்பு பூணி யடியடைந்த வேழாய் போதி யெனமறுத்தார்.

(இ - ள்.) முன்பு தீயில் வென்றனம் - முன்பு அனல் வழக்கில் வென்றுவிட்டோம், நீரில் யாதாய் முடியும் என - இனி நீர் வழக்கில் யாதாக முடியுமோவெனக் கருதி, அன்பு பேசி எமை இணக்கி அகல நினைத்தாய் அல்லது - இன்மொழி கூறி எங்களை உடன்படுத்தி ஓடிப் போக நினைத்தாயே யல்லாமல், நீ பின்பு வாது செயத் துணியும் பெற்றி உரைத்தாய் அல்லை - நீ பின்பு வாது புரிதற்கு மனந்துணியுந் தன்மையைக் கூறினையல்லை; புலால் என்பு பூணி அடி அடைந்த ஏழாய் - புலாலையுடைய எலும்பினை யணிந்த சிவனடியினை யடைந்த அறிவில்லாதவனே, போதி என மறுத்தார் - (வாதஞ் செய்ய) வரக் கடவா யென்று மறுத்துக் கூறினர்.

அல்லதை, திரிசொல். பூணி - பூண்டவன்; இ: வினை முதற் பொருள் விகுதி. பிள்ளையாரையும் அவரது கடவுளையும் இழித்

துரைக்குங் கருத்தால் 'புலால் என்பு பூணி யடியடைந்த வேழாய்' என்றார். போதி - போவாய் என்றுமாம். (சக)

ஊகந் தவழும் பழுமரத்தை யுதைத்துக் கரைமா றிடவோதுக்கிப்
பூகந் தடவி வேர்கீண்டு பொருப்பைப் பறித்துப் புடைபரப்பி
மாகந் துழாவிக் கடுகிவரும் வையைப் புனலை மந்திரத்தால்
வேகந் தணிவித் தேடெழுதி விடுத்தார் முன்போல் வெள்காதார்.

(இ - ள்.) ஊகம் தவழும் பழுமரத்தை உதைத்து - கருங்குரங்கு தாவுகின்ற ஆலமரங்களைக் கல்லி, கரைமாறிட ஓதுக்கி - கரைகள் உடைபட அங் கொதுக்கி, பூகம் தடவி வேர் கீண்டு - பாக்கு மரங்களின் முடியை யளாவி அவற்றின் வேர்களைக் கல்லி, பொருப்பைப் பறித்துப் புடைபரப்பி - மலைகளை அகழ்ந்து பக்கங்களிற் பரப்பி, மாகம் துழாவிக் கடுகிவரும் வையைப் புனலை - வானைத் தடவிக் கொண்டு விரைந்து வரும் வைகை நீரினை, வேகம் மந்திரத்தால் தணிவித்து - வேகத்தை மந்திரவலியினால் தணித்து, முன்போல் ஏடு எழுதி வெள்காதார் விடுத்தார் - முன்போலவே ஏடுகள் எழுதி வெட்கமில்லாதவராய் விட்டனர்.

வேகம் - கடுகிய செலவு. (கூ0)

சிறையேய் புனல்சூழ் வேணுபுரச்
செல்வர் யாருந் தெளிவெய்த
மறையே வாய்மை யுரையாகின்
மறைகண் முழுதுந் துணிபொருடான்
பிறையேய் வேணிப் பிரானாகிற்
பெருநீ ரெதிரே செல்கவென
முறையே பதிக மெடுத்தெழுதி
விட்டார் முழங்கி வருபுனலில்.

(இ - ள்.) சிறை ஏய் புனல் சூழ் வேணுபுரச் செல்வர் - கரை பொருந்திய நீர் சூழ்ந்த காழிச் செல்வர், யாரும் தெளிவு எய்த - அனைவரும் தெளிவடைய, மறையே வாய்மை உரையாகில் - வேதமே உண்மையுரையானால், மறைகள் முழுதும் துணி பொருள் - அம் மறைகள் அனைத்தும் துணிந்து கூறும் மெய்ப்பொருள், பிறை ஏய் வேணிப் பிரான் ஆகில் - பிறைமதியை யணிந்த சடையையுடைய சிவபிரானேயானால், பெருநீர் எதிரே செல்க என - இந்த வெள்ள நீரின் எதிரேறிச் செல்லக் கடவது என்று, முறையே பதிகம் எடுத்து எழுதி - முறையாகப் பதிகம் எடுத்து எழுதி, முழங்கிவரு புனலில் விட்டார் - ஆரவாரித்து வரும் நீரில் விட்டனர்.

யாரும் தெளிவெய்தப் பதிகம் எடுத்தெழுதி விட்டார் என இயைக்க. எழுதிவிட்ட பதிகமாவது,

"வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே"

என்னும் பாசுரத்தை முதலாகவுடையது. (நுக)

தேசம் பரவுங் கவுணியர்கோன் விடுத்த வேடு செழுமதுரை
ஈச னருளாங் கயிறுபிணித் தீர்ப்ப நதியி லெதிரேற
நாசஞ் செய்யும் பொறிவழியே நடக்கு* முள்ள மெனச்சென்று
நீச ரேடெண் ணாயிரமு நீத்த வழியே யொழுகியவால்.

(இ - ள்.) தேசம் பரவும் கவுணியர் கோன் விடுத்த ஏடு - உலகத்தார் துதிக்கும் ஆளுடைய பிள்ளையார் விடுத்த ஏடானது, செழுமதுரை ஈசன் அருளாம் - செழிய மதுரைப் பிரானாகிய சோம சுந்தரக் கடவுளின் திருவருளாகிய, கயிறு பிணித்து ஈர்ப்ப - கயிறானது கட்டியிழுத்தலால், நதியில் எதிரேற - நதியில் எதிரேறிச் செல்லா நிற்க, நீசர் ஏடு எண்ணாயிரமும் - புல்லராகிய சமணர்களின் எண்ணாயிர ஏடுகளும், நாசம் செய்யும் பொறிவழியே நடக்கும் உள்ள மென - அழிவைத் தரும் ஐம்புலன்களின் வழியே நடக்கும் உள்ளம் போல, நீத்த வழியே சென்று ஒழுகிய - வெள்ளஞ் செல்லும் வழியே சென்று நடந்தன.

பொறியானது உள்ளத்தை ஈர்த்துச் செல்லுதலின் நீத்தத்திற்குப் பொறியையும், அதன் வழிச் சென்ற சமணர் ஏட்டிற்கு உள்ளத்தையும் உவமை கூறினர். தீயோராகிய சமணரது ஏட்டிற்குப் பொறி வழிச் செல்லும் உள்ளத்தை உவமை கூறியது பெரிதும் பொருத்த முடைத்தாதல் காண்க. (நுஉ)

சிங்க மனையா ரேழுதுமுறை
　　யெதிராற் றேறத் தேரிந்தமரர்
அங்க ணறும்பூ மழைபொழிந்தா
　　ரறவோர் துகில்விண் ணேறிந் தார்த்தார்
கங்கை யணிந்தார் திருத்தொண்டர்
　　கண்ணீர்க் கடலி லமிழ்ந்தினர்
வெங்க ணமணர் நடுங்கியுடல்
　　வேயர்வைக் கடலி லமிழ்ந்தினர்.

(இ - ள்.) சிங்கம் அனையார் எழுதும் முறை ஆற்று எதிர் ஏற - பரசமயங்களாகிய யானைகட்குக் கோளரி போல்வாராகிய பிள்ளையார்

(பா - ம்.) *பொறிவழி போய்,

எழுதி விட்ட திருமுறை ஆற்றின்கண் எதிரேறிச் செல்லாநிற்க, அமரர் தெரிந்து அங்கண் நறும்பூ மழை பொழிந்தார் - தேவர்கள் அதனை யுணர்ந்து அவ்விடத்தில் நறிய மலர்மழை பொழிந்தனர்; அறவோர் துகில்விண் எறிந்து ஆர்த்தார் - முனிவர்கள் ஆடையை வானில் வீசி ஆரவாரித்தனர்; கங்கை அணிந்தார் திருத்தொண்டர் கண்ணீர்க் கடலில் அமிழ்ந்தினர் - கங்கையை யணிந்த சிவபிரானது அடியார்கள் கண்களிலிருந்து வரும் இன்ப நீர்க்கடலில் அழுந்தினர்கள்; வெம்கண் அமணர் உடல் நடுங்கி வெயர்வைக்கடலில் அமிழ்ந்தினர் - வன்கண் மையுடைய அமணர்கள் உடல் நடுங்கி வெயர்வைக்கடலுள் அழுந்தினர்கள்.

கள் நறும்பூ எனப் பிரித்து மதுவையுடைய நறிய பூ என்றுரைத்தலுமாம். திருத்தொண்டர்க்கு ஆனந்தத்தால் கண்ணீரும், அமணர்க்கு அச்சத்தால் வெயர் நீரும் பெருகின என்க. (௩௫)

வேமே யென்ப தறியாதே வெல்வே மேன்றே சூளோட்டி
நாமே யிட்ட வேடெரியில் வேவக் கண்டு நதிக்கெதிரே
போமே யின்னம் வெல்வேமேன் றிட்ட வேடும் புணரிபுகத்
தாமே தம்மைச் சுடநாணி நின்று ரமணர் தலைதூக்கி.

(இ - ள்.) வேம் என்பது அறியாது வெல்வே மென்று சூள் ஒட்டி - வெந்து போகும் என்பதனை அறியாமல் வெல்லுவோம் என்று வஞ்சினங் கூறி, நாமே இட்ட ஏடு எரியில் வேவக்கண்டும் - நாமே கொண்டுபோய்ப் போட்ட ஏடுகள் அனலில் வேதலைப் பார்த்து வைத்தும், நதிக்கு எதிரே போம் இன்னம் வெல்வேமென்று - நதியினெதிரே நம்மேடு போகும் (அதனால்) இன்னமும் வெல்லுவோமென்று, இட்ட ஏடும் புணரிபுக - இட்ட ஏடும் கடலில் சென்று புக்கனவே என, தாமே தம்மைச் சுட - தம் உள்ளமே தம்மைச் சுட்டு வருத்துவதால், அமணர் தலை தூக்கி நாணி நின்றூர் - அமணர்கள் தலையிறக்கி வெட்கி நின்றனர்.

வேகு மென்பது அறியாமல் ஏட்டினைத் தீயிலிட்ட அறியாமை மேலும், அதனைக் கண்ட பின்னரும் நம் ஏடு ஆற்றெதிரே செல்லு மெனக் கருதி யிட்ட அறியாமையும் உடையமாயினேம் எனக் கருதுதலால் அவர்கள் உள்ளமே அவர்களைச் சுடலாயின வென்க. புக என்பதற்குப் புக்கெனவேயென என்று விரித்துரைக்க.

தூக்குதல் - தொங்கவிடுதல்; கவிழ்த்தல். (௩௬)

போருப்பே சிலையாய்ப் புரங்கடந்த
புனித னேயேத் தேவர்க்கும்
விருப்பேய் போகம் வீடுதரு
மேலாங் கடவு ளேனநான்கு

மருப்பேய் களிற்ருன் முடிதகர்த்தான்
மருமா னறியக் குருமொழிபோல்
நெருப்பே யன்றி வேகவதி
நீரும் பின்னர்த் தேற்றியதால்.

(இ - ள்.) பொருப்பே சிலையாய்ப் புரம் கடந்த புனிதனே - மேரு மலையையே வில்லாகக் கொண்டு திரிபுரமெரித்த தூயோனாகிய சிவ பெருமானே, எத்தேவர்க்கும் - எல்லாத் தேவர்களுக்கும், விருப்பு ஏய் போகம் வீடுதரும் மேலாம் கடவுள் என - விருப்பம் பொருந்திய இன்பத்தையும் வீடுபேற்றையும் அளித்தருளும் முதற் கடவுளென்று, நான்கு மருப்பு ஏய் களிற்ருன் முடிதகர்த்தான் மருமான் அறிய - நான்கு கொம்புகளையுடைய வெள்ளையானையையுடைய இந்திரன் முடியினைத் தகர்த்தெறிந்த உக்கிரப் பெருவழுதியின் வழித்தோன்றலாகிய சவுந்தரிய பாண்டியன் அறியுமாறு, குருமொழிபோல்-குருவின் உபதேசமொழிபோல, நெருப்பே அன்றி - முன்னர் அனல் தெளிவித்ததே யல்லாமல், பின்னர் வேகவதி நீரும் தேற்றியது - பின்னர் வையையின் புனலுந் தெளிவித்தது.

போகம் - இம்மை, மறுமை யின்பங்கள். எத்தேவர்க்கும் மேலாங் கடவுள் என இயைத்தலுமாம். உறுதி பெறத் தெளிவித்த தென்பார் 'குருமொழிபோல்' என்ருர். (ருரு)

போய்யின் மறையின் புறத்தமணர் புத்தர்க் கன்றி வாய்மையுரை
செய்யு மறைநூல் பலதெரிந்தும் சிவனே பரமேன் றறியாதே
கையில் விளக்கி னெடுங்கிடங்கில் வீழ்வார் போலக் கலங்கிமனம்
ஐய மடைந்த பேதையர்க்கு மறிவித் தனவே யவையன்றே.*

(இ - ள்.) பொய் இல் மறையின் புறத்து அமணர் புத்தர்க்கு அன்றி - பொய்யில்லாத மறைக்குப் புறம்பினராகிய சமணர் புத்தர் களுக்கே யல்லாமல், வாய்மை உரை செய்யும் மறை நூல் பல தெரிந்தும் - வாய்மையை யுரைக்கும் பல மறை நூல்களை ஓதியும், சிவனே பரம் என்று அறியாது - சிவபெருமானே முழுமுதற் கடவுளென் றுணராமல், கையில் விளக்கிஞெடும் கிடங்கில் வீழ்வார் போல் - கையிலுள்ள விளக்கோடும் குழியில் வீழ்பவரைப் போல, மனம் கலங்கி ஐயம் அடைந்த பேதையர்க்கும் - அறிவு கலங்கி ஐயுற வுற்ற மூடர்களுக்கும், அவை அறிவித்தன அன்ருே - அவை தெரிவித்தன அல்லவா?

மறையின் புறத்தமணர் புத்தர் - வேதபாகியராகிய சமணர் புத்தர்கள் ஐயமடைந்த பேதையர் என்றது வைதிகருள்ளே சைவரல் லாத ஏனையரை வேதத்தைப் பயின்று வைத்தும் சிவனே பரமெனத் தெளியாமையால் 'கையில் விளக்கிஞெடும்' என்ருர். கிடங்கு - கிணறும் ஆம். (ருசு)

(பா - ம்.) *மனத்தைய மடைந்த அறிவித்தஃதேயது வன்ருே.

கண்டு கூடற் கோமகனுங்* கற்பு நிறைந்த பொற்புடைய
வண்டு கூடுந் தாரளக வளவன் மகளு மந்திரியுந்
தொண்டு கூடு மடியாருங் காழிக் கரசைத் தொழுதுதுதி†
விண்டு கூடற் கரிய‡மகிழ் வெள்ளத் தழுந்தி வியந்தனரால்.

(இ - ள்.) கூடல் கோமகனும் - கூடல் மன்னனாகிய பாண்டியனும், கற்பு நிறைந்த பொற்பு உடைய - கற்புநிறைந்த அழகினையுடைய, வண்டுகூடும் தார் அளகவளவன் மகளும் - வண்டுகள் கூடும் மாலையை யணிந்த கூந்தலையுடைய வளவர்கோன் பாவையாகிய மங்கையர்க்கரசியாரும், மந்திரியும் தொண்டு கூடும் அடியாரும் கண்டு-குலச்சிறையாரும் தொண்டுபூண்ட அடியார்களும் இந்நிகழ்ச்சியைக் கண்டு, காழிக்கு அரசைத் தொழுது துதிவிண்டு - காழி மன்னராகிய பிள்ளையாரை வணங்கித் துதிமொழி கூறி, கூடற்கு அரிய மகிழ்ச்சி வெள்ளத்துள் அழுந்தி வியந்தனர் - பிறரடைதற்கு அரிய மகிழ்ச்சி வெள்ளத்துள் அழுந்தி வியப்புற்றனர்.

அளகத்தையுடைய மகள் என்க. விண்டு - விளம்பி. (நள)

நன்றி தேறார் பின்புள்ள மான மிழந்து நாணழிந்து
குன்று போலுந் தோணிபுரக் கோமா னெதிரே யாங்களுமக்
கின்று தோற்றே மேமையீண்டு நீரே வென்றீ ரெனநேர்ந்து
நின்று கூறக் கவுணியர்கோ னனையா ருய்யு நெறிநோக்கா.

(இ - ள்.) நன்றி தேறார் பின்பு உள்ள மானம் இழந்து நாண் அழிந்து - செய்ந் நன்றி தேறாத அச்சமணர் பின் எஞ்சியுள்ள மானத்தை இழந்து நாணமும் அழிந்து, குன்று போலும் தோணிபுரக் கோமான் எதிரே - மலைபோலும் தோணிபுரத்தோன்றலாகிய பிள்ளையார் திருமுன் வந்து, இன்று யாங்கள் உமக்குத் தோற்றேம் - இன்று யாம் உமக்குத் தோற்றேம்; ஈண்டு எமை நீரே வென்றீர் என - இவ்விடத்தில் எம்மை நீரே வென்றீரென்று, நேர்ந்து நின்று கூற - உடன்பட்டுச் சொல்ல, கவுணியர்கோன்-கவுணியர் தலைவராகிய பிள்ளையார், அனையார் உய்யும் நெறிநோக்கா-அச் சமணர் உய்தி பெறும் வழியைக் கருதி.

திருமடத்திலே தீயிட்ட தீச்செயலுக்கு ஒறுக்காது விடுத்த நன்றியை அவர்கள் அறியாமையால் 'நன்றிதேறார்' என்றார்; உறுதி இன்னதென் றறியாதவர் என்றுமாம். உள்ள மானம் - மனமானம் எனலும் பொருந்தும். குன்றுபோலும் கோமான் எனக் கூட்டுக. சலியாமையும் பெருமையும் யாவராலும் அறியப்படுதலும் முதலியவற்றால் பிள்ளையார்க்கு மலை உவமமாயிற்று. நேர்ந்து நின்று: ஒரு சொல். (நஅ)

(பா - ம்.) *கோமானும். †காழிக்கரசைத் துதித்திறைஞ்சி. ‡விண்டுகூறற்கரிய.

இன்ன மறத்தா றிசைக்கின்றே நீரேன் வாளா விறக்கின்றீர்
அன்னை யனையா னெம்மிறைவ னவனுக் காளா யுய்மின்கள்
என்ன வேட சிறியாய்நீ யெவ்வா றெங்கட் கடாதமொழி
சொன்ன தென்று மானமுளார் கழுவி லேறத் தொடங்கினர்.

(இ - ள்.) இன்னம் அறத்தாறு இசைக்கின்றேம் - இன்னமும் அறநெறி கூறுகின்றேம்; நீர் ஏன் வாளா இறக்கின்றீர் - நீவிர் ஏன் வீணாக இறந்துபடுகின்றீர், எம் இறைவன் அன்னை அனையான் - எம் இறைவன் எல்லா வுயிர்கட்குந் தாய் போல்பவன், அவனுக்கு ஆளாய் உய்மின்கள் என்ன - அவனுக்கு ஆட்பட்டுப் பிழையுங்களென்று கூறியருள, ஏட - ஏடா, சிறியாய் நீ - சிறியவனாகிய நீ, எங்கட்கு அடாத மொழி சொன்னது எவ்வாறு என்று - எங்களுக்குப் பொருந்தாத மொழியைச் சொன்னது எங்ஙனமென்று, மானம் உளார் கழுவில் ஏறத் தொடங்கினர்கள் - மானம் மிக்காராகிய அச்சமணர்கள் தாமே கழுவில் ஏறத் தொடங்கினர்கள்.

அறநெறி நோக்கிக் கூறுகின்றேம் என்றுமாம். மானமுளார் - கொண்டது தவறாயினும் அதனை விடுதற் கொல்லாத தீமானமுடையவர்; ஈண்டுச் சைவமே மெய்ச் சமயமென அறிந்து வைத்தும் தமது சமயத்தை விடமாட்டாராய் உயிர் துறக்கவுந் துணிந்தாராகலின் 'மானமுளார் கழுவிலேறத் தொடங்கினர்கள்' என்றார். (௬௯)

மதத்தினின் மான மிக்கார் தாங்களே வலிய வேறிப்
பதைத்திட விருந்தா ரேனைப் பறிதலை யவரைச் சைவ
விதத்தினி லொழுக்கம் பூண்ட வேடத்தார் பற்றிப் பற்றிச்
சிதைத்திடர் செய்தேற் றிட்டார் திரிதலைக் கழுக்கோ றன்னில்

(இ - ள்.) மதத்தினில் மானம் மிக்கார் தாங்களே வலிய ஏறி - தங்கள் சமயத்தில் பற்று மிக்க சமணர் சிலர் தாங்களாகவே கழுவில் வலிய ஏறி, பதைத்திட இருந்தார் - உயிர் பதைக்க இருந்தனர்; பறி தலை ஏனையவரை - அங்ஙனம் ஏறாத பறிக்குந் தலையினையுடைய ஏனைச் சமணரை, சைவவிதத்தினில் ஒழுக்கம்பூண்ட வேடத்தார் - சைவப் பாகுபாட்டுள் ஒழுக்கமேற்கொண்ட திருவேடமுடையார், பற்றிப் பற்றி - பிடித்துப் பிடித்து, சிதைத்து - இடர் செய்து, அலைத்து - துன்புறுத்தி, திரிதலைக் கழுக்கோல் தன்னில் ஏறிட்டார் - மூன்று தலையையுடைய கழுமரத்தில் ஏற்றினார்கள். (௭0)

வழிவழி வருமா ணுக்கர் சாதற்கு வருந்தி நெஞ்சம்
அழிபவர் திருநீ றிட்டா ரதுகிட்டா தயர்வா ராவின்
இழிவில்கோ மயத்தை யள்ளிப் பூசினா ரிதுவுங் கிட்டா
தொழிபவ ராவின் கன்றைத் தோளிலிட் டுயிரைப் பெற்றார்.

(இ - ள்.) வழிவழி வரு மாணுக்கர் - வழி வழியாக வந்த மாணுக்கர்களுள், சாதற்கு வருந்தி நெஞ்சம் அழிபவர் - சாதலுக்கு வருந்தி உள்ளம் நைபவர், திருநீறு இட்டார் - திரு நீற்றினைத் தரித்தனர்; அது கிட்டாது அயர்வார் - அவர்களுள் அந்நீறு கிடைக்காது வீருந்துபவர், ஆவின் இழிவு இல் கோமயத்தை அள்ளிப் பூசினர் - பசுவினது குற்றமில்லாத கோமயத்தை வாரிப் பூசினர்; இதுவும் கிட்டாது ஒழிபவர் - இதுவுங் கிடைக்காம லொழிபவர், ஆவின் கன்றைத் தோளில் இட்டு உயிரைப் பெற்றுர் - பசுவின் கன்றினைத் தோளிற் ருங்கி உயிரைப் பெற்றனர். (சுக)

கூறிட்ட மூன்றுங் கிட்டா தயர்பவர் குற்றந் தீர
நீறிட்டார் நெற்றி யோடு நிருமல கோம யத்தின்
சேறிட்டார் நெற்றி யோடு நெற்றியைச் செறியத் தாக்கி
மாறிட்ட பாசந் தன்னை மறித்திட்டுப் பிறப்பை வெல்வார்.

(இ - ள்.) கூறிட்ட மூன்றும் கிட்டாது அயர்பவர் - இங்குக் கூறிய மூன்றுங் கிடைக்காமல் வருந்துபவர், குற்றம்தீர நீறு இட்டார் நெற்றியோடும் - குற்றம் நீங்கத் திருநீறிட்டவரின் நெற்றியோடும், நிருமல கோமயத்தின் சேறு இட்டார் நெற்றியோடும் - தூய கோமயக் குழம்பினை யிட்டவரின் நெற்றியோடும், நெற்றியைச் செறியத் தாக்கி - தமது நெற்றியைப் பொருந்தத் தாக்கி, மாறு இட்ட பாசம் தன்னை மறித்திட்டு - தம்மோடு மாறுதலைக் கொண்ட பாசத்தனையைப் போக்கி, பிறப்பை வெல்வார் - பிறப்பினை யொழிப்பார்கள்.

கூறிட்ட - கூறிய, மாறிட்ட - மாறுகொண்ட, மறித்திட்டு - மடங்கச்செய்து, வலியை அழித்து என்றபடி - திருநீற்றுச் சார்புற்றமையால் பாசத்தை நீக்கிப் பிறப்பை யொழிப்பாராயினர் என்க. (சுஉ)

மற்றிவர் தம்மை யூற்றஞ் செய்திலர் மடிந்தோர் யாருஞ்
சுற்றிய சேனங் காக நரிகணுய் தொடர்ந்து கேள்விப்
பற்றிநின் றீர்த்துத் தின்னக் கிடந்தனர் பரும யானை
வெற்றிகோள் வேந்தன் காழி வேந்தரைத் தொழுது நோக்கா.

(இ - ள்.) இவர் தம்மை ஊற்றம் செய்திலர் - இன்னேரைச் சிவவேடத்தினர் ஊறு செய்யாது விட்டனர்; மடிந்தோர் யாரும் - இறந்தவரனைவரும், சுற்றிய சேனம் காகம் நரிகள் நாய் தொடர்ந்து - சூழ்ந்த பருந்தும் காக்கையும் நரிகளும் நாய்களுந் தொடர்ந்து, கௌவிப்பற்றி நின்று ஈர்த்துத் தின்னக் கிடந்தனர் - வாயாற் கௌவிப் பிடித்து நின்று இழுத்துத் தின்னக் கிடந்தனர்; பருமம் யானை வெற்றிகொள் வேந்தன் - கவச மணிந்த யானையை யுடைய வெற்றி பொருந்திய பாண்டிய மன்னன், காழி வேந்தரைத் தொழுது நோக்கா - காழி மன்னராகிய பிள்ளையாரை வணங்கி நோக்கி,

மற்று: அசை. ஊற்றம் - ஊறு. (சுஙு)

இன்றுநீ ரிட்ட வேடிங் கியாவருங் காண நேரே
சென்றதே யெங்கே யென்ரு னதனையாஞ் செம்பொற் கூடன்
மன்றவ ரருளா லின்னே வருவிப்ப மென்று வாது
வென்றவர் நதியின் மாடே மேற்றிசை நோக்கிச் செல்வார்.

(இ - ள்.) இன்று நீர் இட்ட ஏடு - இப்பொழுது நீர் போட்ட ஏடானது, யாவரும் காண நேரே சென்றதே எங்கே என்ருன் - அனைவரு மறிய நேரே போயிற்றே அஃது எங்கே என்று வினவினன்; வாது வென்றவர் - வழக்கில் வெற்றிபெற்ற பிள்ளையார், செம்பொன் கூடல் மன்றவர் அருளால் - சிவந்த பொன்மயமாகிய கூடலில் வீற் றிருக்கும் வெள்ளியம்பலவர் திருவருளால், யாம் அதனை இன்னே வருவிப்பமென்று - யாம் அவ்வேட்டினை இப்பொழுதே வருவிப்போ மென்று கூறியருளி, நதியின் மாடே மேற்றிசை நோக்கிச் செல்வார் - ஆற்றின் கரையிலேயே மேற்றிசையை நோக்கிச் செல்வாராயினர்.

நேரே சென்றது - எதிர்த்துச் சென்றது.　(௬௪)

செல்லுநர் காண வோலை காவதஞ் செல்வ தப்பால்
ஒல்லையங் கொளித்த லோடும் வியந்தவ ஞெருங்கு கூடிக்
கோல்லையான் மேய்த்து நின்ருர் சிலர்தமைக் குறித்து நீரிவ்
வெல்லையுள் விசேட முண்டோ விவண்கண்ட திசைமி னென்ருர்.

(இ - ள்.) செல்லுநர் காண - அங்ஙனம் போகின்றவர் காணு மாறு, காவதம் செல்வது ஓலை - ஒரு காவததூரஞ் சென்றதாகிய அவ்வேடு, அப்பால் அங்கு ஒல்லை ஒளித்தலோடும்-பின் அவ்விடத்தில் விரைந்து மறைந்த வளவில், வியந்து - வியப்புற்று, அவண் ஒருங்கு கூடி - அங்கு ஒருசேரத் திரண்டு, கொல்லை ஆன் மேய்த்து நின்ருர் சிலர்தமைக் குறித்து - முல்லைநிலப் பசுக்களை மேய்த்து நிற்குஞ் சிலரை நோக்கி, இவ்வெல்லையுள் விசேடம் உண்டோ - இந்த எல்லைக்குள் வியக்கத்தகும் நிகழ்ச்சி ஏதேனும் உண்டோ, இவண் கண்டது நீர் இசைமின் என்ருர் - இங்குக் கண்டதை நீவிர் கூறுமின் என்று வினவினர்.

கூடி மேய்த்து நின்ருர் எனவும், நீர் இவண் கண்டது இசைமின் எனவும் இயைக்க. விசேடம் - புதுமை.　(௬௫)

அவவிடைச் சிருர்கள் யாங்க ளொன்றையு மறியே மென்ன
இவ்விடை விசேடங் காணல் வேண்டுமேத் திறத்து மென்னுத்
தேவ்விடை வாது செய்யத் திருவுளக் கருணை செய்த
வெவ்விடைக் கோடியி ஞரைப் பாடிஞர் வேத நாவார்.

(இ - ள்.) அவ்விடைச்சிருர்கள் - அந்த இடைச் சிறுவர்கள், யாங்கள் ஒன்றையும் அறியேம் என்ன - யாங்கள் ஒரு நிகழ்ச்சியையும்

அறியேம் என்று கூற, இவ்விடை எத்திறத்தும் விசேடம் காணல் வேண்டும் என்னு - இவ்விடத்தில் எவ்வகையாலேனும் ஒரு விசேடங் காண வேண்டுமென்று, தெவ் இடை வாது செய்ய - பகைவராகிய சமணரிடத்து வழக்குப் புரிதற்கு, திருவுளக் கருணை செய்த - திருவுளம்பற்றி அருள்செய்த, வெவ்விடைக் கொடியினரை - விரைந்த செலவினையுடைய இடபக்கொடியை யுயர்த்திய சிவ பெருமானை, வேதநாவர் பாடினர் - தமிழ் வேதம் பாடும் நாவினை யுடைய பிள்ளையார் திருப்பதிகம் பாடினர்.

காணல் வேண்டும் என்னுப் பாடினர் என இயைக்க. பாடிய பதிகம்,

"வன்னியு மத்தமு மதிபொதி சடையினன்
பொன்னிய றிருவடி புதுமல ரவைகொடு
மன்னிய மறையவர் வழிபட வடியவர்
இன்னிசை பாடல ரேடகத் தொருவனே" (க)

"கோடுசந் தனமகில் கொண்டிழி வையைநீர்
ஏடுசென் றணைதரு மேடகத் தொருவனை
நாடுதென் புகலியுண் ஞானசம் பந்தன
பாடல்பத் திவைவல்லார்க் கில்லையாம் பாவமே" (கக)

என்பது. (சசு)

பாட்டின்மேற் கருணை வைத்தார் சயம்புவாய்ப் பராரை வில்லக்
காட்டினு ளிருப்ப நேரே கண்டுதாழ்ந் தெழுந்து சண்பை
நாட்டினர் வலங்கொண் டேத்தி யெதிர்நின்றார் நகைத்தார் நிம்பத்
தோட்டின னதுகேட் டங்கே தோன்றினன் றானை யோடும்.

(இ - ள்.) பாட்டின்மேல் கருணை வைத்தார் - திருப்பதிகத்தின் மேல் அருள் வைத்த இறைவர், சயம்புவாய் பராரை வில்லக் காட்டினுள் இருப்ப - சுயம்புமூர்த்தியாய்ப் பருத்த அரையையுடைய வில்வக்காட்டினுள்ளே இருக்க, நேரே கண்டு தாழ்ந்து எழுந்து - நேரிற் கண்டு விழ்ந்து வணங்கி எழுந்து, சண்பை நாட்டினர் வலம் கொண்டு ஏத்தி எதிர்நின்றார் - காழிநாட்டினையுடைய பிள்ளையார் வலம் வந்து துதித்துத் திருமுன் நின்றனர்; நகைத்தார் நிம்பத் தோட்டினன் - விளங்கும் இதழையுடைய வேப்ப மலர்மாலையை யணிந்த பாண்டியன், அது கேட்டு தானையோடும் அங்கே தோன்றினன் - அதனைக் கேட்டுத் தன் சேனையுடன் அங்கு வந்தனன்.

பரு அரை - பராரை என்றாயது மரூஉ முடிபு. நகைத்தோட்டு நிம்பத்தாரினன் என மாறுக. (சுஎ)

அந்தமா விலிங்கத் தீச னுயிர மதியங் கண்ட
முந்தைவே தியராய்த் தோன்றி முத்தமிழ்க் கரசை நீயென்
மைந்தனு மிளையோ னொப்பாய் வருகென நீறு சாத்திச்
சிந்தைநீ ளார்வங் கூரத் திருவருள் சுரந்து நின்றார்.

(இ-ள்.) அந்தமா இலிங்கத்து - அந்தச் சிறந்த இலிங்கத்தினின்றும், ஈசன் - இறைவன், ஆயிரம் மதியம் கண்ட முந்தை வேதியராய்த் தோன்றி - ஆயிரம் பிறைகளைக் கண்ட முதிய மறையவனாகத் தோன்றி, முத்தமிழ்க்கு அரசை - மூன்று தமிழுக்கும் அரசராகிய பிள்ளையாரை, நீ என் மைந்தனும் இளையோன் ஒப்பாய் - நீ என் புதல்வனாகிய இளையவனைப் போல்வாய்; வருக என நீறு சாத்தி - வரக்கடவாயென்று திருநீறு சாத்தி, சிந்தைநீள் ஆர்வம் கூர - உள்ளத்தின்கண் பேரன்பு மிக, திருவருள் சுரந்து நின்றார் - திருவருள் பாலித்து நின்றருளினர்.

வருகென அருகணைத்து நீறுசாத்தி என்க. (௬௮)

நின்றவந் தணரை யன்று நிருமல ஞான மீந்தார்
என்றுகண் டிறைஞ்சி யைய நீரில்யா னிட்ட வேடு
சென்றதிங் கெடுத்தீர் நீரே யஃதுநுஞ் செல்வர்க் கேற்ற
தன்றதைத் தருதி ரென்றா ரறுமுகச் செம்ம லன்னார்.

(இ-ள்.) அறுமுகச் செம்மல் அன்னார் - ஆறுமுகங்களையுடைய முருகக்கடவுளைப் போல்வாராகிய பிள்ளையார், நின்ற அந்தணரை - தமக்கு எதிரே தோன்றி நின்ற அந்தணரை, அன்று நிருமல ஞானம் ஈந்தார் என்று கண்டு - முன் தூய சிவஞானத்தினைத் தமக்கு அளித்தருளியவரென்று உணர்ந்து, இறைஞ்சி - வணங்கி, ஐய - ஐயனே, நீரில் யான் இட்ட ஏடு இங்கு சென்றது - நீரிலே யான் விட்ட ஏடு இங்கு வந்தது, எடுத்தீர் நீரே - அதனை யெடுத்தவர் நீரே யாவீர்; அஃது நும் செல்வர்க்கு ஏற்றது அன்று - அது நும் புதல்வர் விளையாடுதற்கேற்ற தன்று; 'அதைத் தருதிர்' என்றார் - (ஆகலின்) அதனைத் தந்தருள்வீராக என்று கேட்டனர்.

'நீ என் மைந்தனும் இளையோ னொப்பாய்' என முன்பு வேதியர் கூறினாராகலின் அம்மைந்தன் பொருட்டு அதனை நீர் வைத்திருத்தல் வேண்டா என்பார் 'அஃது நும் செல்வர்க் கேற்ற தன்று' எனப் பிள்ளையார் கூறினரென்க. (௬௯)

இன்னமும் பன்னா ளெம்மை யிடந்தோறும் பாடி யெஞ்சும்
புன்னெறி யோழுகு வாரை வென்றுநம் புனித வீடு
பின்னர்நீ பெறுதி யென்னா வேடுதந் தாசி பேசி
மின்னென மறைந்து நின்றார் வேதிய ராய வேடர்.

(இ - ள்.) வேதியர் ஆய வேடர் - மறையவராகிய திருவேடமுடையார், இன்னமும் பன்னாள் எம்மை இடந்தொறும் பாடி - இன்னமும் பலநாள்வரை எம்மைத் திருப்பதிகடோறுஞ் சென்று பாடி, எஞ்சும் புல் நெறி ஒழுகுவாரை வென்று - எஞ்சியுள்ள புல்லிய நெறியில் ஒழுகுவாரையும் வென்று, பின்னர் நம் புனித வீடு பெறுதி என்னு - பின் நமது தூய வீட்டுலகினையடைவா யென்று, ஏடு தந்து ஆசி பேசி மின் என மறைந்து நின்றார் - ஏட்டினைக் கொடுத்து ஆக்க மொழி கூறி மின்போல மறைந்து நின்றனர்.

ஏடு தந்து என்னு ஆசி பேசி மறைந்து நின்றார் என்க. வேதியராய ஏடர் எனப் பிரித்து ஏடகர் என்பது ஏடர் என்றாயிற்று எனலும் பொருந்தும். (௭௦)

தாதையார் கவர்ந்து மீளத் தந்தவே டதனை வாங்கிப்
போதையார் ஞான முண்டார் புரிசடைப் பிரானார் வெளவி
ஈதையா மிரந்த வேண்டத் தந்தன ரேன்று கூறிக்
கோதையார் வேலி னாற்குக் காட்டவக் கொற்கை வேந்தன்.

(இ - ள்.) தாதையார் கவர்ந்து மீளத் தந்த ஏடு அதனை - தந்தையார் கைப்பற்றித் திரும்பக் கொடுத்த அவ்வேட்டினை, போதையார் ஞானம் உண்டார் வாங்கி - ஞானவடிவினராகிய அம்பிகை அளித்த ஞானவமுதினையுண்ட பிள்ளையார் வாங்கி, ஈதை - இவ் வேட்டினை, புரிசடைப் பிரானார் வெளவி - முறுக்கிய சடையினையுடைய இறைவர் கவர்ந்து, யாம் இரந்து வேண்டத் தந்தனர் என்று கூறி - (பின்) யாம் குறையிரந்து வேண்டக் கொடுத்தருளினாரென்று கூறி, கோதை ஆர் வேலினாற்குக் காட்ட - மாலையையணிந்த வேற்படையுடைய பாண்டியனுக்குக் காண்பிக்க, அக் கொற்கை வேந்தன் - அந்தக் கொற்கை மன்னனாகிய பாண்டியன்.

சிவபெருமான் பிள்ளையார்க்குத் தந்தை முறையால் அருள் செய்தலின் 'தாதையார்' என்றார். போதையார் - போதவுருவினராகிய உமாதேவியார்;

"போதையார்பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்"

எனப் பிள்ளையார் அருளிச்செய்த தேவாரமும் காண்க. கொற்கை, பாண்டியர் தலைநகரங்களுள் ஒன்றாகலின் 'கொற்கை வேந்தன்' என்றார். (௭௧)

கச்சான வரவ மார்த்த கருணையங் கடலிற் றோன்றும்
விச்சான ஞான முண்டீ ராற்றலின் விளைவு தேறா
தச்சான வலியா னும்மை யளந்தன னடியே னிந்தத்
துச்சான பிழைதீர்த் தாள்கென் றிறைஞ்சினான் றுணர்த்தார் வேம்பன்.

(இ - ள்.) கச்சான அரவம் ஆர்த்த கருணை அம்கடலில் தோன்றும் - கச்சாகிய பாம்பினைக் கட்டிய அருட்கடலிற் றோன்றிய, விச்சு ஆன ஞானம் உண்டீர் - வீட்டிற்குக் காரணமான ஞானவாரமுதினை உண்டீரே, ஆற்றலின் விளைவு தேருது - நுமது ஆற்றலின் பெருமையை அறியாது, அச்சு ஆன வலியால் நும்மை அடியேன் அளந்தனன் - தற்போத வலியினுல் நும்மை அடியேன் அளந்தேன்; இந்தத் துச்சான பிழை தீர்த்து ஆள்க என்று - இந்த இழிவாகிய குற்றத்தை நீக்கி ஆளக் கடவீரென்று, துணர்த்தார் வேம்பன் இறைஞ்சினுன் - கொத்துக்களாகிய வேப்பமாலையை யணிந்த பாண்டியன் வணங்கினுன்.

விச்சு - வித்து; போலி. விஞ்ஞானம், அஞ்ஞானம் என்பன முறையே விச்சானம், அச்சானம் எனத் திரிந்தன என்னலுமாம். துச்சம் என்பதன் ஈறு கெட்டது. ஆள்கென்று: அகரம் தொகுத்தல். (எஉ)

அங்நெடு மேரு வாகு மாடகச் சிலையி னூர்க்குப்
பொன்னெடுஞ் சிகரக் கோயின் மண்டபம் புயலைக் கீண்டு
மின்னெடு மதியஞ் சூடுங் கோபுர மேகந் தாவுங்
கன்னெடும் புரிசை வீதி யாவையுங் களிப்பக் கண்டான்.

(இ - ள்.) அங்நெடு மேருவாகும் ஆடகச் சிலையினூர்க்கு - நீண்ட மேருவாகிய பொன் மலையை வில்லாகக் கொண்ட அக்கடவுளுக்கு, பொன் நெடுஞ் சிகரக் கோயில் - பொன்னுலாகிய நீண்ட முடியினை யுடைய திருக்கோயிலும், மண்டபம் - திருமண்டபங்களும், புயலைக் கீண்டு மின் நெடும் மதியம் சூடும் கோபுரம் - முகில் மண்டிலத்தைக் கிழித்து ஒளிபொருந்திய பெரிய சந்திரனைத் தரிக்குங் கோபுரங்களும், மேகம் தாவும் கல் நெடும்புரிசை வீதி யாவையும் - முகில் தவழும் கல்லாலாகிய நீண்ட திருமதில்களும் வீதியு முதலிய அனைத்தையும், களிப்பக் கண்டான் - கண்டோர் கண்களிப்ப ஆக்கினுன்.

சிலையையுடைய அவர்க்கு என்க. கீண்டு - கீழ்ந்து; மரூஉ. கண்டான் - இயற்றினுன். (எகூ)

அற்றைநா ளாதி யாக வேடக மென்னு நாமம்
பெற்றதா லேட கத்தின் மேவிய பிரானைப் பாண்டிக்
கோற்றவன் சமண ரோடுங் கூடிய பாவ மெல்லாம்
பற்றறப் பூசை செய்து பாசமுங் கழியப் பெற்றுன்.*

(இ - ள்.) அற்றை நாள் ஆதியாக - அந்நாள் முதலாக, ஏடகம் என்னும் நாமம் பெற்றது - (அப்பதி) திருவேடகம் என்னுந் திருப்பெயரைப் பெற்றது; ஏடகத்தில் மேவிய பிரானை - அத்திருவேடகத்தில் எழுந்தருளிய இறைவனை, பாண்டிக்கொற்றவன் - பாண்டி மன்னன்,

(பா - ம்.)*கழியப்பட்டான்.

சமணரோடும் கூடிய பாவம் எல்லாம் பற்று அற - சமணரோடும் சேர்ந்ததனு லாகிய பாவங்களனைத்தும் பசையற (சிறிது மில்லையாக,) பூசை செய்து - பூசித்து, பாசமும் கழியப் பெற்ருன் - மும்மலமாகிய பாசமும் நீங்கப் பெற்ருன்.

அன்று என்பது ஐ பெற்று அற்றை என்ருயது. பாசமும் என்பதிலுள்ள உம்மை எச்சப் பொருளோடு சிறப்புப் பொருளும் குறித்தது. ஆளுடைய பிள்ளையார் திருப்பாசுர மெழுதி இட்ட ஏடு ஆற்று நீரிலே எதிர்ந்து செல்லும் பொழுது அதனைத் தொடர்ந்து எடுக்கவேண்டிக் குலச்சிறையார் பரிமீதேறிச் சென்ருர் என்றும், பிள்ளையார் ஏடு தங்குதற் பொருட்டு ''வன்னியு மத்தமும்'' என்னும் பதிகம் பாடாநின்றமையின் காடிடமாக ஆடும் கண்ணுதல் கோயிலின் பக்கத்தே நீரிலே சென்றுநின்ற ஏட்டினைக் குலச்சிறையார் சேர்ந்து எடுத்துத் தலைமிசை வைத்துக் கொண்டு வந்து பிள்ளையாரை வணங்கி ஏட்டினை அனைவருக்கும் காட்டினர் என்றும் திருத்தொண்டர்புராணம் கூறுகிற்கும். (எசு)

நறைகெழு துழாயி ஞனுங் கலுழனு நாகர் வேந்தும்
முறையினு லுகங்கண் மூன்றும் பூசித்து முடியா வின்ப
நிறையருள் பெற்ரு ரன்ன நிராமய விலிங்கந் தன்னை
இறுதியா முகத்திற் பாண்டி யிறைமகன் பூசை செய்தான்.

(இ - ள்.) நறைகெழு துழாயினுனும் கலுழனும் நாகர் வேந்தும்- மணம் பொருந்திய துழாய் மாலையையணிந்த திருமாலும் கருடனும் பாம்புகளுக்கு வேந்தனுகிய அனந்தனும், முறையினுல் உகங்கள் மூன்றும் பூசித்து - முறையே உகங்கள் மூன்றிலும் வழிபாடு செய்து, முடியா இன்பநிறை அருள்பெற்ருர் - அழியாத இன்பநிறைந்த திருவருளைப் பெற்றனர்; அன்ன நிராமய இலிங்கம் தன்னை - அந்த நோயற்ற இலிங்க மூர்த்தியை, இறுதியாம் உகத்தில் - இறுதியாகிய இக்கலியுகத்தில், பாண்டி இறைமகன் பூசை செய்தான் - பாண்டி மன்னன் வழிபாடாற்றினுன்.

உகம் - யுகம். (எரு)

அங்கண்மா நகர்கண் டாங்கோ ராண்டிறை கொண்டு காழிப்
புங்கவ ரோடும் பின்னுட் பூழியர் பெருமான் மீண்டு
மங்கல மதுரை சேர்ந்து வைகுநா ணீற்றுச் செல்வம்
எங்கணும் விளங்கச் சின்னு ளிருந்துபின் ஞானச் செல்வர்.

(இ - ள்.) அங்கண் மாநகர் கண்டு - அழகிய இடமகன்ற ஒரு நகரமமைத்து, ஆங்கு காழிப் புங்கவரோடும் ஓராண்டு இறைகொண்டு- அவ்விடத்தே சீகாழித் தோன்றலாருடன் ஓர் ஆண்டளவு தங்கி, பூழியர் பெருமான்-சௌந்தரிய பாண்டியன், பின் நாள் மீண்டு மங்கல மதுரை சேர்ந்து வைகுநாள் - பின்னர் மீள மங்கலம் நிறைந்த

மதுரைப் பதியை யடைந்து தங்கும் நாள், ஞானச் செல்வர்-சிவஞானச் செல்வராகிய பிள்ளையார், நீற்றுச் செல்வம் எங்கணும் விளங்கச் சின்னாள் இருந்து - திருநீற்றுச் செல்வம் எங்கும் விளங்கச் சிலநாளங் கிருந்து, பின் - பின்பு.

இறைகொண்டு - தங்கி. எங்கணும் - பாண்டிநாடு முழுதும். (௭௬)

வடபுலத் துள்ள வீசன் பதிகளும் வணங்கிப் பாடக்
கடவமேன் றெழுந்து கூடற் கண்ணுதற் பெருமான் றன்னை
இடனுறை கயற்க ணுளை யிறைஞ்சிப்பல் வரனும் பெற்று
விடைகோடு தமிழ்நா டெங்கும் பணிந்தனர் மீண்டு போவார்.

(இ - ள்.) வடபுலத்து உள்ள ஈசன் பதிகளும் வணங்கிப் பாடக் கடவம் என்று எழுந்து - வடநாட்டிலுள்ள இறைவன் திருப்பதி களையும் வணங்கிப் பாடக் கடவேமென்று கருதி எழுந்து, கூடல் கண் நுதல் பெருமான் தன்னை - கூடலில் எழுந்தருளிய நெற்றிக் கண்ணை யுடைய பெருமானையும், இடன் உறை கயற்கணாளை இறைஞ்சி - அவனிடப்பாகத்தி லுறையும் அங்கயற்கண்ணம்மையையும் வணங்கி, பல் வரனும் பெற்று - பல வரங்களையும் பெற்று, விடைகொடு - விடைபெற்று, தமிழ் நாடு எங்கும் பணிந்தனர் மீண்டு போவார் - தமிழ் நாட்டிலுள்ள பதிகளனைத்தையும் பணிந்து மீண்டு செல்வா ராயினர்.

பெருமான் றன்னையும் கயற்கணாளையும் என எண்ணும்மை விரிக்க. பணிந்தனர்: முற்றெச்சம். (௭௭)

தன்பெருங் கற்பி னாளு மமைச்சனுந் தமிழ்நர் கோனும்
பின்புமு னந்தண் காழிப் பிரானடி பிரிவாற் றாராய்
அன்புதந் தவர்பா னட்ட வன்றுதோட் டானாக் கேண்மை
இன்பமுந் துன்ப மாகி விளைந்துமுன் னீர்ப்பப் போனார்.

(இ - ள்.) தமிழ்நர்கோனும் தன்பெருங் கற்பினாளும் அமைச் சனும் - பாண்டியனும் அவனது பெருங் கற்பினராகிய மங்கையர்க் கரசியாரும் குலச்சிறையாரும், முன் அந்தண் காழிப் பிரான் பின்பு அடி பிரிவு ஆற்றாராய் - முன்னே செல்லும் அழகிய குளிர்ந்த சீகாழித் தலைவராகிய பிள்ளையார் பின்னே அவர் திருவடியின் பிரிவினைப் பொறாதவராகி, அவர்பால் அன்பு தந்து நட்ட அன்று தொட்டு - அவரிடத்தி லன்பு செய்து நட்ட அன்று முதல், ஆனாக் கேண்மை இன்பமும் - நீங்காத கேண்மையாலாகிய இன்பமும், துன்பமாகி விளைந்து முன் ஈர்ப்பப் போனார் - துன்பமாக விளைந்து முன்னின் றிழுக்கச் சென்றனர்.

தமிழ்நர்கோன் - தமிழ் நாட்டினர்க்குத் தலைவன். ஈர்ப்பப் பின்பு போனார் என்றியையும். பெரியார் கேண்மை பிரிவின்கட் பீழை தருவதாகலின் 'துன்பமாகி விளைந்து' என்றார். (எஅ)

சண்பையர் றலைவர் தாமு மனையராய்த் தம்பின் செல்லும்
நண்புடை யவரை நோக்கி நம்மிடத் தன்பு நீங்காப்
பண்பின ராகி நீறு பாதுகாத் தீசன் கீர்த்தி
மண்பட வாழ்மி னீது மறுக்கன்மி னின்மி னென்றார்.

(இ - ள்.) சண்பையர் தலைவர் தாமும் அனையராய் - காழியர் பெருமான் தாமும் அத்தன்மை யுடையோராய், தம்பின் செல்லும் நண்புடை யவரை நோக்கி - தமது பின்னே வரும் கேண்மையுடைய அவர்களைப் பார்த்து, நம்மிடத்து அன்பு நீங்காப் பண்பினராகி - நம் மிடத்தில் அன்பு நீங்காத குணமுடையவராய், நீறு பாதுகாத்து - திருநீற்றினைப் பாதுகாத்து, ஈசன் கீர்த்தி மண்பட வாழ்மின் - இறைவன் புகழ் நிலவுலகமுற்றும் வளர்ந்து பரவுமாறு வாழுங்கள், ஈது மறுக்கன்மின் நின்மின் என்றார் - இதனை மறுக்காமல் நில்லுங்கள் என்று கூறியருளினர்.

அனையராய் - அவர்போல் வருந்தினவராய்; அனையராய்த் தம்பின் செல்லும் நண்புடையவரை என்றியைத்துரைத்தலுமாம். பட - உண்டாக; பரக்க. (எகூ)

ஆளுடைப் புகலி வேந்த ரருண்மொழி மறுக்க வஞ்சித்
தாளுடைப் பதுமச் சேந்தா டலையுறப் பணிந்து மீண்டு
வாளுடைத் தானைத் தென்னன் மதுரையில் வந்தான் கஞ்சத்
தோளுடைச் சிங்க மன்னர் சோழர்கோ னாடு புக்கார்.

(இ - ள்.) ஆளுடைப் புகலி வேந்தர் - தம்மை ஆளாகவுடைய காழி வேந்தரின், அருள் மொழி மறுக்க அஞ்சி - அருள் நிரம்பிய மொழியினை மறுப்பதற்கு அஞ்சி, தாள் உடைப் பதுமச் செந்தாள் தலையுறப் பணிந்து - தண்டையுடைய தாமரை மலர்போன்ற சிவந்த திருவடிகள் தலையிற் பொருந்துமாறு வணங்கி, வாள் உடைத் தானைத் தென்னன் மீண்டு மதுரையில் வந்தான் - வாட்படை ஏந்திய தானையை யுடைய பாண்டியன் திரும்பி மதுரைப் பதியை யடைந்தான்; கஞ்சத் தோள் உடைச் சிங்கம் அன்னார் - தாமரை மாலையை யணிந்த தோளை யுடைய சிங்கம் போல்வாராகிய பிள்ளையார், சோழர்கோன் நாடு புக்கார் - சோழர் மன்னனது நாட்டினுட் புகுந்தனர்.

ஆளுடைப் புகலிவேந்தர் - ஆளுடைய பிள்ளையார் என்றுரைத்தலுமாம். அருள் மொழி - ஆணை: தோளையுடையதொரு சிங்கம் போல்வார் எனக்கொண்டு இல்பொருளுவமை யாக்கலுமாம். (அ௦)

ஞானமா மதநீர் சோர ஞானசம் பந்த ரென்னும்
மானமா யானை வந்து கடம்பமா வனத்திற் றுன்னும்
ஊனமாஞ் சமண ரென்னுந் தருக்களை யோடித்து வெண்ணீ
றூனமாப் பூழி யள்ளித் தூற்றிய தவனி யெங்கும்.

(இ - ள்.) ஞானமாம் மதநீர் சோர - ஞானமாகிய மதநீர் ஒழுக, ஞானசம்பந்தர் என்னும் மானம் மா யானை வந்து-ஞானசம்பந்தராகிய சிறந்த பெரிய யானை வந்து, கடம்பமா வனத்தில் துன்னும் - பெரிய கடம்ப வனத்திற் செறிந்த, ஊனமாம் சமணர் என்னும் தருக்களை ஒடித்து - குற்றமுடைய சமணராகிய மரங்களை ஒடித்து, வெண்ணீறு ஆன மாப் பூழி அள்ளி - திருநீறாகிய சிறந்த பூழியை வாரி, அவனி யெங்கும் தூற்றியது - உலகமுற்றும் தூற்றியது.

புவி முழுதும் திருநீறு விளங்கச் செய்தன ரென்பார் 'வெண்ணீறான பூழியள்ளித் தூற்றிய தவனி யெங்கும்' என்றார். இது மிகை குறையின்றி வந்த ஒற்றுமை யுருவகவணி. (அக)

[கலிநிலைத்துறை]

ஆதி யாலயத் தடலைகொண் டாழிசூழ் காழிச்
சோதி வேதியர் பாண்டியன் சுரந்தணித் துடலிற்
பேதி யாதகூ னிமிர்த்தலாற் பிறங்குகற் பாதிப்
பூதி யாவினுஞ் சிறந்ததவ் வட்டில்வாய்ப் பூதி.

(இ - ள்.) ஆதி ஆலயத்து அடலை கொண்டு - முதற்கடவுளாகிய சோமசுந்தரப் பெருமான் திருக்கோயிற் சாம்பலினால், ஆழிசூழ் காழிச்சோதி வேதியர் - கடல் சூழ்ந்த காழியில் அவதரித்த புகழொளியினையுடைய மறையவராகிய பிள்ளையார், பாண்டியன் சுரந்தணித்து - பாண்டியன் வெப்பு நோயை நீக்கி, உடலில் பேதியாத கூன் நிமிர்த்தலால் - உடலில் மாறுபடாத கூனை நிமிர்த்தியதால், பிறங்கு கற்ப ஆதி பூதி யாவினும் - விளங்காநின்ற கற்பமுதலிய திருநீறு அனைத்தினும், அவ்வட்டில் வாய்ப்பூதி சிறந்தது - அம்மடைப் பள்ளிப் பூதியே மேலானது.

கற்பம் ஆதி கற்பாதி என்றாயிற்று. திருநீறு கற்பம், அநுகற்பம், உபகற்பம், அகற்பம் என நால்வகைப்படும் ஆகலின், 'கற்பாதிப் பூதி யாவினும்' என்றார். கற்பம் முதலியவற்றின் இயல்பைச் சைவ சமய நெறி முதலிய நூல்களானறிக. (அஉ)

ஆகச் செய்யுள்—ங,உ௫௫.

அறுபத்து நான்காவது

வன்னியுங் கிணறும் இலிங்கமு மழைத்த படலம்

[எழுசீரடி யாசிரிய விருத்தம்]

சென்னிவெண் டிங்கண் மிலைச்சிய மதுரைச்
சிவனரு ளடைந்தசம் பந்தர்
துன்னிருஞ் சமணைக் கழுமுனை யேற்றித்
துணித்தவா றிசைத்தனம் வணிகக்
கன்னிதன் மன்றற் கரியினை மாற்றாள்
காணவக் கண்ணுத லருளால்
வன்னியுங் கிணறு மிலிங்கமு மாங்கு
வந்தவா றெடுத்தினி யுரைப்பாம்.*

(இ - ள்.) சென்னி வெண் திங்கள் மிலைச்சிய - முடியின்கண் வெள்ளிய பிறையை யணிந்த, மதுரைச் சிவன் அருள் அடைந்த சம்பந்தர் - மதுரைப் பதியில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளின் திருவருளைப் பெற்ற திருஞானசம்பந்தர், துன் இரும் சமணை - செறிந்த கூட்டமாகிய சமணர்களை, கழுமுனை ஏற்றி - கழுநுனியில் ஏற்றி, துணித்தவாறு இசைத்தனம் - துண்டித்த திருவிளையாடலைக் கூறினேம்; வணிகக்கன்னி தன் மன்றல் கரியினை - ஒரு வணிகமகளின் மணச் சான்றினை, மாற்றாள் காண - அவள் மாற்றாள் காணுமாறு, அக்கண்ணுதல் அருளால் - அவ்விறைவன் திருவருளால், வன்னியும் கிணறும் இலிங்கமும் - வன்னிமரமும் கேணியும் சிவலிங்கமும், ஆங்கு வந்தவாறு - அங்கு வந்த திருவிளையாடலை, இனி எடுத்து உரைப்பாம்- இனி எடுத்துக் கூறுவாம்.

சமண் : குழூஉப் பெயர். வென்றவர் சம்பந்தராகலின் 'சம்பந்தர் ...கழுமுனையேற்றித் துணித்தவாறு' என உபசரித்துக் கூறினர். (க)

பொன்மலர்க் கைதை வேலிசூழ் வேலைப்
புறத்தொரு பட்டினத் துள்ளான்
மின்மணிக் கொடும்பூ ணொருகுல வணிகன்
வேறுவே றும்பல செல்வத்

(பா - ம்.) *எடுத்தினி துரைப்பாம்.

தன்மையிற் சிறந்தோன் மகவில ளுகித்
தன்மனக் கினியதோர் காட்சி
நன்மனைக் கோடியோ டறம்பல புரிந்தோர்
நகைமதிக் கொம்பையீன் றெடுத்தான்.

(இ - ள்.) பொன்மலர்க் கைதை வேலிசூழ் - பொன்போலு மலரையுடைய தாழையாகிய வேலிசூழ்ந்த, வேலைப் புறத்து ஒரு பட்டினத்து உள்ளான் - கடற்கரையிலுள்ள ஒரு பட்டினத்திலுள்ளவ னுகிய, மின்மணிக் கொடும்பூண் ஒரு குலவணிகன் - ஒளிபொருந்திய மணிகளழுத்திய வளைந்த அணிகளை யணிந்த சிறப்புடைய வணிக னொருவன், வேறு வேறு ஆம் பல செல்வத் தன்மையில் சிறந்தோன் - வெவ்வேறு வகையாகிய பல செல்வங்களின் மிக்கோனு யிருந்தான்; மகவு இலனுகி - அவன் மகப்பேறில்லாதவனுய், தன் மனக்கு இனிய தோர் காட்சி - தன் மனத்துக்கு இனியதொரு தோற்றத்தையுடைய, நல்மனைக் கொடியோடு - நல்ல மனைக் கிழத்தியுடனே, பல அறம் புரிந்து - பலவகை அறங்களைப் புரிந்து, ஓர் நகை மதிக் கொம்பை ஈன்று எடுத்தான் - ஒளிபொருந்திய மதியை ஏந்திய பூங்கொம்புபோன்ற ஒரு புதல்வியைப் பெற்றெடுத்தான்.

பொன்மலர் என்றமையின் கைதை செந்தாழையாகும். பொன் - அழகுமாம். கொடுமை - வளைவு. மனக்கு: அத்துச்சாரியை தொக்கது. நகைமதிக் கொம்பு: இல்பொருளுவமை. (உ)

அத்தன வணிகற் குரியநன் மருக
னவன்முதற் கடிமண முடித்தோன்
முத்தமிழ் மதுரைப் பதியுளா னவற்கே
முறையினு னேற்றுநான் பயந்த
வித்தக மயிலைக் கொடுப்பலென் றனைய
வியற்குல வணிகர்கோன் றன்னே
டொத்தபல் கிளைஞர் யாவரு மறிய
வுணர்த்தினுன் சிலபகல் கழிய.

(இ - ள்.) அத்தனவணிகற்கு உரிய நல் மருகன் - அந்தத் தனவணிகனுக்கு உரிமையுடைய நல்ல மருகனொருவன், முத்தமிழ் மதுரைப்பதி உளான் - மூன்று தமிழையுமுடைய மதுரை நகரி லிருந்தனன்; அவன் முதல் கடிமணம் முடித்தோன் - அவன் முன்பே மணம்புரிந்து கொண்டவன் (ஆயினும்), அவற்கே - அவனுக்கே, நான் நோற்று பயந்த - நான் தவங்கிடந்து பெற்றெடுத்த, வித்தக மயிலை முறையினுல் கொடுப்பல் என்று - சதுரப்பாடுடைய மயில்போன்ற புதல்வியை முறைப்படி மணஞ்செய்து கொடுப்பேனென்று, அனைய வியன்குல வணிகர்கோன் - அந்தச் சிறந்த குலவணிகர் தலைவன், தன்னேடு ஒத்த பல் கிளைஞர் யாவரும் அறிய உணர்த்தினுன் - தன்னுடன்

ஒத்த பல கிளைஞ ரனைவரும் அறியத் தெரிவித்தான். சில பகல் கழிய-சின்னாட்கள் நீங்க.

மருகன் - தங்கை மகன். வியன் குலம் என்பது வலித்தலாயிற்று. கிளைஞர் - ஞாதியரும் சுற்றத்தாரும். (௩)

ஊழ்வினை வலியா லாருயி ரிழந்தா
னுயிர்க்குடம் பனையதன் கற்பின்
சூழ்கதிர் மணிப்பூண் மனைவியு மிறப்பத்
துணிந்தன ளவரிரு வோர்க்கும்
ஆழ்கடற் கிளைஞர் செயத்தகு கடன்க
ளாற்றியச் செய்தியை மதுரை
வாழ்தரு மருகற் குணர்த்துவா னோலை
விடுத்தனர் மருமகன் வாங்கா.

(இ - ள்.) ஊழ்வினை வலியால் ஆருயிர் இழந்தான் - பழவினையின் வலியினாலே தனது அரிய உயிரைத் துறந்தனன்; உயிர்க்கு உடம்பு அனைய - உயிருக்கு உடல்போன்ற, தன் கற்பின் சூழ்கதிர் மணிப்பூண் மனைவியும் - அவனது கற்பினையுடைய ஒளிமிக்க மணிகளழுத்திய அணிகலனையணிந்த மனைவியும், இறப்பத் துணிந்தனள் - இறக்கத் துணிந்து விட்டனள்; அவர் இருவோர்க்கும் - அவரிருவருக்கும், ஆழ் கடல் கிளைஞர் செயத்தகு கடன்கள் ஆற்றி - ஆழ்ந்த கடல்போன்ற சுற்றத்தார் செய்யத்தகுந்த கடன்களைச் செய்து முடித்து, அச் செய்தியை மதுரைவாழ்தரு மருகற்கு உணர்த்துவான் - அந்தச் செய்தியை மதுரையில் வாழும் அவன் மருகனுக்கு அறிவிக்கும் பொருட்டு, ஓலை விடுத்தனர் - ஓலை எழுதிப் போக்கினர்; மருமகன் வாங்கா - மருமகன் அந்த ஓலையை வாங்கி.

தன் கருத்து முற்றுப் பெறுமுன் உயிர்துறந்தா னாகலின் 'ஊழ்வினை வலியால்' என்றார். அனைய மனைவியும் கற்பின் மனைவியும் எனக் கூட்டுக. துணிந்து இறந்தனள் என்க. கடன்கள் - அபரக் கிரியைகள். உணர்த்துவான்: வினையெச்சம். (௪)

தன்னருண் மாமன் றுஞ்சினன் கூடத்
தாரமுந் துஞ்சிய திப்பால்
அன்னவற் களவின் றாகிய தனமுண்
டவனனி நாண்மக வின்றிப்
பின்னொரு பெண்ணைப் பெற்றன னவளைத்
தனக்கெனப் பேசின னனைய
கன்னியை மணந்து செல்கென முடங்கற்
கழறிய பாசுரந் தெரியா.

(இ - ள்.) தன் அருள் மாமன் துஞ்சினன் - நினது கருணையை யுடைய மாமன் இறந்தனன்; கூடத் தாரமும் துஞ்சியது - அவனுடன் அவன் மனைவியும் இறந்தனள்; இப்பால்-பின், அன்னவற்கு, அளவு இன்றாகிய தனம் உண்டு - அவனுக்கு அளவில்லாத நிதியம் உண்டு; அவன் நனிநாள் மகவு இன்றி - அவன் நெடுநாள் காறும் மகப் பேறில்லாதவனாய், பின் ஒரு பெண்ணைப் பெற்றனன் - பின் ஒரு பெண் மகவினைப் பெற்றெடுத்தான்; அவளைத் தனக்கெனப் பேசினன்- அவளை உனக்கு மணஞ் செய்து கொடுப்பதாகச் சொன்னான் (ஆதலின்), அனைய கன்னியை மணந்து செல்க என - அந்தப் பெண்ணை மணஞ் செய்து கொண்டு செல்லக்கடவா யென்று, முடங்கல் கழறிய பாசுரம் தெரியா - ஓலையிற் கூறியுள்ள வாசகத்தைத் தெரிந்து.

தன், தனக்கு என்பன முன்னிலையில் வந்தமையால் இடவழு வமைதி. தாரம் என்பது சொல்லால் அஃறிணையெனக் கொண்டு 'துஞ்சியது' என அஃறிணைவினை கொடுத்தார். இப்பால் - இனிக் கூறத்தகுவன என்றபடி. பேசினன் - கிளைஞர் பலரோடும் சொல்லினன். செல்கென: அகரம் தொக்கது. முடங்கல் கழறிய என்று பாடமிருப்பின் ஓலை கூறிய என்றுரைக்க. பாசுரம் - ஈண்டு வாசகம். (௫)

வீழ்ந்தனன் றரைமேற புரண்டன னுயிர்ப்பு
வீங்கினன் விழிப்புனல் வெள்ளத்
தாழ்ந்தனன் விம்முற் றம்மவோ வென்றேன்
றரற்றினன் கிளைஞர்நட் படைந்து
வாழ்ந்தவர் தழுவத் தழீஇத்தழீஇக் கரைந்தான்
மற்றவர் தேற்றிடத் தேளிந்து
சூழ்ந்தவெந் துயர்நீத் தொருதலை மாமன்
றொன்னகர்க் கேகுவான் றுணிந்தான்.

(இ - ள்.) தரைமேல் வீழ்ந்தனன் புரண்டனன் - தரையில் வீழ்ந்து புரண்டு, உயிர்ப்பு வீங்கினன் - பெருமூச்செறிந்து, விழிப் புனல் வெள்ளத்து ஆழ்ந்தனன் - கண்களிலிருந்து வரும் நீர்ப்பெருக்கி லழுந்தி, விம்முற்று அம்மவோ என்று அரற்றினன் - விம்மி அம்மவோ வென்று புலம்பினன்; கிளைஞர் நட்பு அடைந்து வாழ்ந்தவர் - சுற்றத் தாரும் நட்பினைப் பெற்று வாழ்கின்றவரும் வந்து, தழுவத் தழீஇத் தழீஇக் கரைந்தனன் - தழுவ எதிராகத் தானும் தழுவித்தழுவி அழுது மற்றவர் தேற்றிடத் தெளிந்து - அவர்கள் தேற்றத் தெளிந்து சூழ்ந்த வெந்துயர் நீத்து - சூழ்ந்த கொடிய துயரினைத் துறந்து, மாமன் தொல்நகர்க்கு ஏகுவான் ஒருதலை துணிந்தான் - மாமனுடைய பழம்பதிக்குச் செல்ல ஒருதலையாகத் துணிந்தனன்.

வீழ்ந்தனன் முதலிய வினைமுற்று நான்கனையும் எச்சமாக்குக. அம்ம, ஓ என்பன புலம்பலில் வந்த இடைச்சொற்கள். (௬)

அங்குள கிளைஞர் சிலரோடுங் கூடி
யருங்கடி மதுரைநீத் தேகிப்
பொங்கிருங் கழிசூழ் பட்டினங் குறுகிப்
புகுதுவான் வரவறிந் தங்குத்
தங்குதங் கிளைஞர் வினவநேர் வாரைத்
தழீஇத் தழீஇச் செலவிடுத் தேகிக்
கொங்கிவர் தளவத் தாரினன் மாமன்
கோயில்புக் கிருந்தன னாக.

(இ-ள்.) *அங்கு உள கிளைஞர் சிலரொடும் கூடி* - அங்குள்ள சில சுற்றத்தாருடன் சேர்ந்து, *அருங்கடி மதுரை நீத்து* - அரிய காவலையுடைய மதுரையை விட்டு, *ஏகி* - சென்று, *பொங்கு இருங்கழி சூழ் பட்டினம் குறுகி* - பொங்குகின்ற பெரிய உப்பங்கழி சூழ்ந்த பட்டினத்தை நெருங்கி, *புகுதுவான் வரவு அறிந்து* - அதில் புகுகின்றவனது வரவினை யறிந்து, *அங்குத் தங்கு தம்கிளைஞர் வினவ நேர் வாரை* - அங்கு வசிக்கும் சுற்றத்தவராய் அச்செய்தியைக் கேட்க வருகின்றவரை, *கொங்கு இவர் தளவத் தாரினன்* - மகரந்தம் பரந்த முல்லை மாலையை யணிந்த அவ்வணிகன், *தழீஇத் தழீஇச் செலவிடுத்து ஏகி* - தழுவித்தழுவிச் செல்ல விடுத்துச் சென்று, *மாமன் கோயில்புக்கு இருந்தனனாக* - மாமன் மாளிகையிற் புகுந்து இருந்தானாக.

புகுவானாயினன் அங்ஙனம் புகுகின்றவனது வரவினையறிந்து வினவ நேரும் கிளைஞரை என உரைக்க. துயரம் வினவுவாரும் வினவப் படுவாரும் தழுவிக்கொள்ளுதல் ஒருசாராரிடைக் காணப் படும் வழக்கம். (எ)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

நாள்சில கழிந்த பின்னர் நாய்கரே றனையா னன்ன
வாள்புரை கண்ணி னாளை மதுரையிற் கொடுபோ யங்கென்
கேளிர்முன் வேட்ப லென்று கிளந்துதன் மாம னீட்டு
நீள்பெரும் பொருள்கண் மற்றுங் கைக்கொண்டு நெறியிற் செல்வான்.

(இ-ள்.) *சிலநாள் கழிந்த பின்னர்* - சிலநாட்கள் சென்றபின், *நாய்கர் ஏறு அனையான்* - வணிகருள் ஏறுபோல்வானாகிய அவன், *அன்ன வாள்புரை கண்ணினாளை* - அந்த வாள்போலுங் கண்களை யுடைய மங்கையை, *மதுரையில் கொடுபோய்* - மதுரைக்கு அழைத்துக் கொண்டு போய், *அங்கு என் கேளிர் முன் வேட்பல் என்று கிளந்து* - அங்கு எனது கிளைஞர் முன்னிலையில் மணஞ் செய்வேனென்று கூறி, *தன் மாமன் ஈட்டும் நீள் பெரும் பொருள்கள் மற்றும்* - தன் மாமன் தேடிய மிகப் பெரிய பொருள்களையும் பிற வற்றையும், *கைக்கொண்டு நெறியில் செல்வான்* - கைப்பற்றிக் கொண்டு வழியிற் செல்வானாயினன்.

முன் மணமுடித்தோனாகலின் மதுரையிலுள்ள கிளைஞர் ஐயுரு வண்ணம் அவர் முன் இவளை வேட்டல் கருதினான். மற்றும் என்றது ஆடை அணி முதலியவற்றை. (௮)

வழிவிட வருவார் தம்மை நிறுத்திப்பின் மதுரை மூதூர்க்
கெழுதரு சுற்றத் தாரை முன்சேன்மி னென்று போக்கித்
தொழுபரி சனமுந் தானுந் தோகையும் வைக லொன்றிற்
கழிவழி யரைமேற் பெய்த காவத மாகப் போவான்.

(இ - ள்.) வழிவிட வருவார் தம்மை நிறுத்தி - வழிவிட வருகின்றவரை நிற்கச் செய்து, பின் மதுரை மூதூர்க்கு எழுதரு சுற்றத்தாரை - பின் பழைய மதுரைப் பதிக்குப் புறப்படும் கிளைஞர்களை, முன்சென்மின் என்று போக்கி - முன்னே செல்லுங்க ளென்று அனுப்பி, தொழு பரிசனமும் தானும் தோகையும் - தன்னை வணங்கும் ஏவலாளரும் தானும் மங்கையுமாக, வைகல் ஒன்றில் கழிவழி - நாள் ஒன்றில் நீங்கும் வழி, அரைமேல் பெய்த காவதமாகப் போவான் - ஒன்றரைக் காவதமாகப் போவானாயினன்.

பரிசனமும் தானும் தோகையும் போவான் என்றது பால்விரவிச் சிறப்பால் ஆண்பால் முடிபு பெற்றமையின் வழுவமைதி;

"தானும் தன்றையலுந் தாழ்சடையோ னுண்டிலனேல்" என்புழிப்போல. கழிவழி - கடந்து செல்லும் தூரம். (௯)

வெங்கதிர் வேலை செல்லும் வேலைவந் தணையு முன்னம்
இங்கிருந் தொழிக மென்னுப் புறம்பய மூதூ ரெய்தி
அங்கிறை கோயின் முன்னிக் கூவனீ ராடி யங்குத்
தங்கிய வன்னி மாடே போனகஞ் சமைத்துண் டெல்வாய்.

(இ - ள்.) வெங்கதிர் வேலை செல்லும் வேலைவந்து அணையு முன்னம் - சூரியன் மேலைக் கடலிற் செல்லும் காலம் வந்து பொருந்து முன்னரே, இங்கு இருந்து ஒழிகம் என்னு - இங்கே தங்கிச் செல்வே மென்று கருதி, புறம்பய மூதூர் எய்தி - திருப்புறம்பயமென்னும் பழம்பதியினை யடைந்து, அங்கு இறை கோயில் முன்னி - அங்குள்ள இறைவன் திருக்கோயிலை அடைந்து, கூவல் நீராடி - கிணற்றில் நீராடி, அங்குத் தங்கிய வன்னிமாடே - அங்குள்ள வன்னிமரத் தடியில், போனகம் சமைத்து உண்டு - உணவு சமைத்து உண்டு, எல்வாய் - அவ்விரவின்கண்,

வேலை - கடல், பொழுது. புறம்பயம் - சோழநாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற திருப்பதிகளிலொன்று. (௧௦)

மலைவைத்த சிலையான் கோயின் மருங்கொரு படியி னும்பர்த்
தலைவைத்துத் துயிலு மெல்லை விதிவழிச் சார வந்தோர்
கொலைவைத்த விடவாய் நாகங் கடித்தது கோதித்து நீண்ட
விலைவைத்த கொடும்பூ ணுய்கன் விடந்தலைக் கொண்டு மாய்ந்தான்.

(இ - ள்.) மலைவைத்த சிலையான் கோயில் மருங்கு - மலையை வில்லாக வைத்த சிவபெருமான் திருக்கோயிலின் அருகே, ஒரு படியின் உம்பர் - ஒருபடியின்மேல், தலைவைத்துத் துயிலும் எல்லை - தலை வைத்துத் தூங்கும்போது, விதிவழி - ஊழின் வழியே, சாரவந்து - பொருந்த வந்து, ஓர் கொலை வைத்த விடவாய் நாகம் கொத்திக் கடித்தது - கொல்லுதற்கு வைத்த நஞ்சினையுடைய வாயையுடைய ஒரு பாம்பானது சினந்து கடித்தது; நீண்ட விலைவைத்த கொடும் பூண் நாய்கன் - பெரிய விலைமதிப்புள்ள வளைந்த அணியினை யணிந்த அவ்வணிகன், விடம் தலைக்கொண்டு மாயந்தான்-அந்நஞ்சு தலைக்கேறி இறந்தான்.

நாகம் வந்து கொதித்துக் கடித்தது என்க. (கக)

அங்குள பரிச னங்க ளாவலித் திரங்கிச் சூழக்
கொங்கைகள் புடைத்துச் சேடிக் குற்றிடை மகளி ரேங்கச்
சிங்கவே றனையா னாகந் தீண்டிடா தொதுங்கிப் போந்த
பகய மலர்க்கொம் பன்னாள் பாவைபோற் புறம்பு நின்றாள்.

(இ - ள்.) அங்குள பரிசனங்கள் ஆவலித்து இரங்கிச் சூழ - அங்கே யுள்ள ஏவலாளர் அவலமுற்று அழுது சூழாநிற்க, சேடிக் குற்றிடை மகளிர் - தோழிகளாகிய சிறிய இடையினையுடைய பெண்கள், கொங்கைகள் புடைத்து ஏங்க - தங்கள் கொங்கைகளில் அடித்துக் கொண்டு அழாநிற்க, போந்த பங்கய மலர்க் கொம்பு அன்னாள் - உடன் வந்த தாமரைமலரையுடைய கொம்புபோல்வாள், சிங்க ஏறு அனையான் ஆகம் திண்டிடாது - ஆண் சிங்கம்போல் வானாகிய அவ்வணிகன் உடலைத் தீண்டாது, புறம்பு ஒதுங்கிப் பாவை போல் நின்றாள் - ஒருபுறமாக ஒதுங்கிப் பாவைபோல் நின்றனள்.

பங்கய மலர்க் கொம்பன்னாள், இல்பொருளுவமை. செயலற்று அசையாது நின்றாள் என்பார் 'பாவைபோற் புறம்பு நின்றாள்' என்றார். (கஉ)

[கலிநிலைத்துறை]

ஆளியே றன்னவ னரவின்வாய்ப் பட்டது மவிந்ததும்
மீளிவே லுண்கணார் கைகுலைத் தழுவதும் விழுவதுங்
கேளிர்சூழ்ந் தயர்வது மழுவதுங் கண்டிளங் கிளியனாள்
வாளியே றுண்டதோர் மயிலின்வீழ்ந் துயங்கினாண் மயங்கினாள்.

(இ - ள்.) ஆளி ஏறு அன்னவன் - ஆளியேற்றினை யொத்த வணிகன், அரவின் வாய்ப் பட்டதும் அவிந்ததும் - பாம்பின் வாய்ப் பட்டதையும் இறந்ததையும், மீளிவேல் உண்கணார் - பெருமை பொருந்திய வேல்போன்ற மையுண்ட கண்களையுடைய மகளிர், கை குலைத்து அழுவதும் விழுவதும் - கைநெரித்து அழுவதையும் விழு வதையும், கேளிர் சூழ்ந்து அயர்வதும் சோர்வதும் - சுற்றத்தார் சூழ்ந்து அயர்வதையும் சோர்வதையும், இளம்கிளி அனாள் கண்டு - இளம்கிளிபோன்ற அவ்வணிக மகள் பார்த்து, வாளி ஏறுண்டது ஓர் மயிலின் வீழ்ந்து உயங்கினாள் மயங்கினாள் - அம்புபாயப்பெற்றதாகிய ஒரு மயிலைப்போல வீழ்ந்து சோர்ந்து மயங்கினாள்.

அரவின் வாய்ப்பட்டது - பாம்பாற் கடிக்கப்பட்டது. உண்கணார் - சேடியர். (கந)

வடிக்கணுட் செருகின வருகின வுயிர்ப்பழல் வாய்ப்படுந்
தொடுத்தபூங் கோதைபோற் சோர்ந்ததா கங்கரஞ் சோர்ந்தன
அடித்தளிர் சோர்ந்தன கன்னியன் னப்பெடை யன்னவள்
இடிக்கெதிர்ப் பட்டுவீழ்ந் தாளெனக் கிடந்தன ளென்செய்வாள்.

(இ - ள்.) வடிக்கண் உள் செருகின - மாவடுப்போன்ற கண்கள் உள்ளே செருகின; உயிர்ப்பு அருகின - மூச்சுகள் குறைந்தன; அழல் வாய்ப்படும் தொடுத்த பூங்கோதைபோல் - நெருப்பின்வாய்ப்பட்ட கட்டிய பூமாலைபோல, ஆகம் சோர்ந்தது - உடல் வாடியது, கரம் சோர்ந்தன - கைகள் சோர்ந்தன. அடித்தளிர் சோர்ந்தன - அடியாகிய தளிர்கள் வாடின; கன்னி அன்னப்பெடை அன்னவள் - இளமை பொருந்திய அன்னப்பேட்டினை யொத்த அவ்வணிகமாது. இடிக்கு எதிர்ப்பட்டு வீழ்ந்தாள் எனக் கிடந்தனள் - இடிக்கு எதிர்ப்பட்டு வீழ்ந்தவளைப்போல வீழ்ந்து கிடந்தனள்; என் செய்வாள் - வேறு என் செய்வாள்.

அன்னப்பெடை யன்னவளாகிய கன்னி என்றுமாம் (கச)

சாயும்பூங் கொம்பரிற் சூழ்ந்திறந் தான்புறஞ் சார்ந்தழூஉம்
ஆயமென் மகளிர்மீண் டன்பனோ டெங்கைதன் னாவியும்
போயதே கொல்லென மடியுறக் கொடுங்கையாற் புறந்தழீ இத்
தூயதா செறிந்தினைப் பாற்றினார் சிறிதுயிர் தோற்றவே.

(இ - ள்.) சாயும்பூங் கொம்பரில் - வளைகின்ற பூங்கொம்புகளைப் போல, இறந்தான் புறம் சார்ந்து சூழ்ந்து அழூஉம் - இறந்தவனருகிற் சார்ந்து சுற்றி நின்று அழுகின்ற, ஆயமென் மகளிர் - மெல்லிய தோழிப் பெண்கள், மீண்டு - திரும்பிப் பார்த்து, அன்பனோடு எங்கை தன் ஆவியும் போயதே கொல் என - அன்பனோடு எம் தங்கையின்

(பா - ம்.) அருகிய துயிர்ப்பு.

உயிரும் போயிற்றேவென்று கருதி, கொடுங்கையால் மடிஉறப் புறம் தழீஇ-வளைந்த கையால் மடியிற் பொருந்த அவளுடம்பைத் தழுவி, தூய தூசு எறிந்து இளைப்பு ஆற்றினர்-தூய்மையான ஆடையால் வீசி இளைப்பினைப் போக்கினர்; சிறிது உயிர் தோற்ற - அதனால் சிறிது உயிர்ப்பு வெளிப்பட.

உயிர்தோற்ற இளைப்பாற்றினர் என்றுமாம். (கரு)

மெய்கழிந் தின்னுயிர் மீண்டுதன் யாக்கையின் மேல்லவே
கைகலந் தாங்கிரு காலியங்குற்றன கண்களும்
பொய்கைநீ லஞ்சிறி தவிழ்ந்தேன வலர்ந்தன பூவையை
மைகழி நாண்முத னன்குநால் வேலியாய் வளர்ந்தவே.

(இ - ள்.) மெய்கழிந்த இன் உயிர் - உடலினின்றும் நீங்கிய இனிய உயிரானது, மீண்டு தன் யாக்கையில் மெல்ல கைகலந்தாங்கு - திரும்பவும் தனது உடலின் கண் மெல்ல வந்து கலந்தாற்போல, இருகால் இயங்குற்றன - இரண்டு கால்களும் அசைந்தன; பொய்கை நீலம் சிறிது அவிழ்ந்தென - பொய்கையின்கண் நீல மலர் சிறிது மலர்ந் தாற்போல, கண்களும் அலர்ந்தன - கண்களும் சிறிது திறந்தன; பூவையை-அம்மாதினை, மைகழி நாண்முதல் நான்கும் - குற்றம் நீங்கிய நாணம் முதலிய நான்கும், நால் வேலியாய் வளர்ந்த - நான்கு வேலி களாக வளர்ந்தன.

கழிந்த என்னும் பெயரெச்சத் தகரம் தொக்கது. கைகலத்தல், ஒருசொல். நான்கு - நாண், மடம், அச்சம், பயிர்ப்பு. நாண் முதலிய நான்கும் கற்பு வழுவுறாமற் காப்பனவாகலின் "நால் வேலியாய் வளர்ந்த" என்றார். வளர்ந்த: அன்பெறாத பலவின்பால் முற்று. (கசு)

கையெறி யுங்குழற் கற்றைசோ ருந்திரி காறுளி
நெய்யெனக் கண்புனல் கொங்கைமுற் றத்துக நெஞ்சுகும்
பையவாய் விடும்புறம் பார்க்குநா ணெடுந்தளைப் படுஞ்சிறு
தெய்வந்தோட் டாளெனத் தேம்பிவிம் மாந்தொளி தேயுமால்.

(இ - ள்.) கை எறியும் - நிலத்திற் கையினை மோதுவாள்; குழல் கற்றை சோரும் - திரண்ட கூந்தல் சோருவாள்; திரிகால் நெய்துளி என - திரி சிந்தும் நெய்த்துளியைப் போல, கண்புனல் கொங்கை முற்றத்து உக நெஞ்சு உகும் - கண்ணீர் கொங்கையின் முன்றிலிற் சிந்த மனமுடைவாள்; பைய வாய் விடும் - மெல்ல வாய் திறந்து புலம்பக் கருதுவாள்; புறம் பார்க்கும் - புறத்திற் பார்ப்பாள்; நாண் நெடுந்தளைப் படும் - நாணுகிய நீண்ட விலங்கிற் படுவாள்; சிறு தெய்வம் தொட்டாள் என - சிறிய தெய்வத்தாற் பற்றப் பட்டவளைப் போல, தேம்பி விம்மாந்து ஒளி தேயும் - தேம்பி விம்மி ஒளி குறைவாள்.

கட்புனல் வெப்பமுற் றுதிர்தலின் விளக்கின் திரிசிந்தும் நெய்யை உவமை கூறினர். கன்னியாகிய தான் புலம்பின் பிறர் அலர் தூற்றுவரோ என்னும் நாணத்தால் வாய்விட்டுப் புலம்பா தொழிவாள் என்பார் 'நாணெடுந் தளைப்படும்' என்றார். தொட்டாள்-தீண்டப்பட்டாள். சோரும், உகும், தேயும் என்னும் சினைவினைகள் முதன்மேல் நின்றன. (களஎ)

வணங்கில்செல் வந்தழீஇப் பிறந்தநா டொட்டொரு வைகலும்
அணங்கெனக் கனவிலுங் கண்டிலா ளன்பன்மே லன்பென
இணங்குதன் னுருவமாய் நிறைவரம் பிற்றென விருந்தோர்பெண்
அணங்குவாய் விட்டழு தாலெனப் புலம்பலுற் றாளரோ.

(இ - ள்.) வணங்கு இல் செல்வம் தழீஇ - குறைதலில்லாத, செல்வத்தைப் பொருந்தி, பிறந்தநாள் தொட்டுப்-பிறந்தநாள் முதலாக ஒருவைகலும்-ஒருநாளேனும், அணங்கு எனக் கனவிலுங் கண்டிலாள்- துன்பமென்று கனவிலுங் கண்டறியாத அம் மாது, அன்பன் மேல் இணங்கு அன்பு - அன்பன் மேற் பொருந்திய அன்பானது, தன் உருவமாய் நிறைவரம்பிற்று என - தன் வடிவமாய் நிறைந்த அளவினையுடையதாயிற்று என்று கண்டோர் கூற, ஓர் பெண்அணங்கு இருந்து வாய்விட்டு அழுதால் என - ஒரு பெண் தெய்வம் இருந்து வாய்விட்டு அழுதாற் போல, புலம்பல் உற்றாள் - புலம்பத் தொடங்கினாள்.

வணங்கு: முதனிலைத் தொழிற் பெயர்; வணங்கல் குறைதல். அன்பென என்பதிலுள்ள என: அசை. ஓர்: விகாரம். அரோ: அசை. (கஅ)

[அறுசீரடி யாசிரிய விருத்தம்]

என்னா யகனேயோ வென்னிருகண் மணியேயோ வென்னை யீன்றான்
தன்னாவி யன்னதனி மருகாவோ முருகாவோ தாரார் முல்லை
மன்னாவோ வணிகர்குல மணியேயோ விடவரவின் வாய்ப்பட்டாயோ
உன்னாக நிழலான வென்னைவிடுத் தெவ்வண்ண மொளிப்ப
தேயோ.

(இ - ள்.) என் நாயகனேயோ - என் நாயகனே, என் இருகண் மணியேயோ - என் இரண்டு கண்களின் மணியே, என்னை ஈன்றான் தன் ஆவி அன்னதனி மருகாவோ - என்னைப் பெற்ற தந்தையினது உயிர்போன்ற ஒப்பற்ற மருகனே, முருகாவோ - இளமைப் பருவமுடையவனே, முல்லைத்தார் ஆர் மன்னாவோ - முல்லை மாலையையணிந்த மன்னனே. வணிகர்குல மணியேயோ-வணிகர் மரபிற்கு ஒரு மணி போல்வானே, விட அரவின் வாய்ப்பட்டாயோ - நீ நஞ்சினையுடைய பாம்பின்வாய்ப் பட்டனையோ, உன் ஆக நிழலான என்னை விடுத்து - உனது உடலின் நிழலாகிய என்னைவிட்டு, ஒளிப்பது எவ்வண்ணம் - நீ மறைவது எங்ஙனம்?

தன் தந்தையால் கணவனாக நிச்சயிக்கப்பட்டவன் ஆதலால் 'என்னாயகனே' என்றான். நிழல்போன்ற என்னை விடுத்து ஒளிப்பது பெரியதொரு வியப்பு என்பாள் 'உன்னாக நிழலான என்னைவிடுத் தெவ்வண்ண மொளிப்பது' என்றாள். ஓகாரங்கள் புலம்பலில் வந்தன. (கக)

பொன்னாட்டின் மடவாரைப் புணர்வதற்கோ
நம்மளகா புரத்து வேந்தன்
நன்னாட்டின் மடவாரை மணப்பதற்கோ
வுனைக்கடித்த நாகர் வேந்தன்
தன்னாட்டின் மடவாரைத் தழுவுதற்கோ
வென்னாவித் தலைவா வென்னை
இந்நாட்டி லிருத்தியெனை வஞ்சித்துப்
போயினவா றென்னே யென்னே.

(இ - ள்.) பொன்னாட்டின் மடவாரைப் புணர்வதற்கோ - பொன்னாட்டிலுள்ள மகளிரைக் கூடுவதற்கோ (அன்றி), நம் அளகாபுரத்துவேந்தன் - நமது அளகாபுரத்து அரசனாகிய குபேரனது, நல் நாட்டின் மடவாரை மணப்பதற்கோ - நல்ல நாட்டிலுள்ள பெண்களை மணம்புரிவதற்கோ (அன்றி), உனைக் கடித்த நாகர் வேந்தன் தன் நாட்டின் - உன்னைக்கடித்த பாம்புகளின் வேந்தனாகிய அனந்தனது நாட்டிலுள்ள, மடவாரைத் தழுவுதற்கோ - மாதர்களைக் கூடுவதற்கோ, என் ஆவித்தலைவா - எனது உயிர்த்தலைவனே, என்னை இந்நாட்டில் இருத்தி எனை வஞ்சித்துப் போயினவாறு என்னே என்னே - என்னை இந்த நாட்டிலேயே இருத்தி என்னை வஞ்சித்துப் போன காரணம் என்னே என்னே!

பொன்னாட்டு அரமகளிர் இன்பமும், அளகைவாழும் இயக்க மகளிர் இன்பமும், நாக நாட்டு நாக மகளிர் இன்பமும் புவிமகளிர் இன்பத்தினும் சிறந்ததென்னுங் கருத்தால் ஏகினையோ என்பாள் இங்ஙனம் கூறினாள். தனவணிகர் நிதிக்கிழவன் வழியினர் என்னுங் கருத்தால் 'நம்மளகாபுரத்து வேந்தன்' என்றாள் என்க. (உO)

தென்னுலகிற் புகுந்தனையோ பணிந்தனையோ
மாதுலனைத் தேவி யோடும்
தன்னிருதோ ளுறவாரத் தழுவினனோ
நானுமுடன் சார்ந்தே னாகில்
என்னுரிய குரவரையுங் கண்ணாரக்
காணேனோ வேனை*யீங் கிட்டாய்
பின்னுரிய பரிசனமுங் †கைவிட்டாய்
‡தனிப்போயேன் பெற்றா யையா.

(பா - ம்.) *ஈங்கிட்டு. †கைவிட்டு. ‡தனிபோய்.

(இ - ள்.) தென்னுலகில் புகுந்தனையோ - பிதிரருலகத்துப் புகுந்தனையோ, மாதுலனைத் தேவியோடும் பணிந்தனையோ - உன மாமனையும் மாமியையும் வணங்கினையோ, தன் இருதோள் உற ஆரத் தழுவினனோ - அவன் தன் இரண்டு தோள்களும் பொருந்த நின்னை நன்கு தழுவினனோ, நானும் உடன் சார்ந்தேனுகில் - யானும் உடன் வந்திருப்பேனுயின், என் உரிய குரவரையும் கண்ணுரக் காணேனே - எனது உரிய குரவ ரிருவரையும் கண்களிக்கக் காணேனே, எனை ஈங்கு இட்டாய் - என்னை இங்கு விட்டனை, பின் உரிய பரிசனமும் கை விட்டாய் - பின் நினக்குரிய ஏவலாளரையுங் கைவிட்டனை, தனிப் போய் என் பெற்றுய் ஐயா - தனியே சென்று என்ன பயனைப் பெற்றுய் ஐயனே?

குரவர் - தந்தை தாயர். (உக)

வரிசைமரு மகனரவால் விளிந்ததுநா
  னறைபோய மனத்தோ டிங்குப்
பரிவுறலு மேனைப்பயந்தார் நோற்றதவ
  நன்ருகப் பலித்த தேயோ
பேரிதவரிக் *கட்கலக்கங் காணுமு
  னிறந்தன்ரே பிழைத்தா ரந்தோ
அரியதிலு மரியபய னிதுவன்ரே
  வேவர்பெற்ரு ரவர்போ லம்மா.

(இ - ள்.) வரிசை மருமகன் அரவால் விளிந்ததும் - சிறந்த மருமகன் பாம்பினுல் இறந்து பட்டதையும், நான் அறைபோய மனத்தோடு இங்குப் பரிவுறலும் - நான் உள்ளீடற்ற உள்ளத்துடன் இங்கிருந்து துன்புறுவதையும் (நோக்கின்), எனைப் பயந்தார் நோற்ற பயன் நன்ருகப் பலித்தது - என்னைப் பெற்றவர் தவஞ்செய்த பயன் நன்ருகப் பலித்தது; அவர் - அத்தாய் தந்தையர், பெரிது இக் கண் கலக்கம் காணுமுன் இறந்து அன்ரே பிழைத்தார் - பெரிதாகிய இந்தக் கண் கலக்கத்தைக் காணுதற்கு முன்னரேயே இறந்தன்ரே தப்பினர்; அந்தோ - ஐயோ, இது அன்ரே அரியதிலும் அரிய பயன் - இது வல்லவா அரிதினும் அரிதான பயன்; அவர் போல் எவர் பெற்ருர் - அவர் பெற்றது போல வேறு யார் பெற்றனர்?

வரிசை மருமகன் - பாராட்டிற்குரிய மருமகன். அறைபோய மனம் - அறிவின்றிப் புரைபட்ட மனம்; தானும் உயிர் துறவாது இருத்தற்கு நொந்து 'நான் அறை போய மனத்தோடிங்குப் பரிவுறலும்' என்ருள். நோக்கின் என ஒரு சொல் விரித்துரைக்க. பிழைத்தார் - துன்பத்தினின்றும் தப்பினுர். 'நோற்ற பயன் நன்ருகப் பலித்தது' என்பதும், 'அரியதிலு மரிய பயன் இது' என்பதும், 'எவர் பெற்ருர் அவர்போல்' என்பதும் குறிப்பினுல் எதிர்மறைப்பொருள் பயப்பன. அந்தோ, அம்மா என்பன இரக்கப் பொருளில் வந்த இடைச் சொற்கள். (உஉ)

*கண்கலக்கம்.

உன்காதன் மாமனெனைப் பயந்தவன்றே
யுறவறிய வுனக்கே பேசிப்
பின்காதன் மனைவியொடு முயிரிழந்தான்
யானுமந்தப் பேற்றி யாலே
என்காத லுயிர்போக வெற்றுடம்போ
விருக்குமுட னிறப்பே னென்னாத்
தன்காதற் றுணையிழந்த வன்லெறின
விருந்தழுதா டமிய ளானாள்.

(இ - ள்.) உன் காதல் மாமன் எனைப் பயந்த அன்றே - உனது அன்புள்ள மாமன் என்னைப் பெற்ற காலத்திலேயே, உறவு அறிய உனக்கே பேசி - சுற்றத்தாரறிய உனக்கே மணஞ் செய்து கொடுப்பதாகப் பேசி, பின் காதல் மனைவியொடும் உயிர் இழந்தான் - பின்பு தன் அன்புள்ள மனைவியொடும் உயிர் நீத்தனன்; யானும் அந்தப் பெற்றியாலே - யானும் அந்தத் தன்மையினாலே, உடன் இறப்பேன் - நின்னுடன் இறப்பேனாவேன்; என் காதல் உயிர்போக - என் காதலுள்ள உயிராகிய நீ சென்று விட, வெறு உடம்போ இருக்கும் என்னா - உயிரற்ற உடம்பாகிய யானோ இங்கிருப்பேன் என்று கூறி, தமியள் ஆனாள் - துணையற்றவளாகிய அவ்வணிக மங்கை, தன் காதல் துணை இழந்த அன்றில் என இருந்து அழுதாள் - தனது காதலுள்ள ஆணன்றிலை இழந்த அன்றிற்பேடுபோல இருந்து அழுதனள்.

உறவு - உறவினர்க்காயிற்று. (உரு)

[வேறு]

நன்னக ருறக்க நீங்கி நடுக்கமுற் றழுங்கக் காழித்
தென்னகர் ஞானச் செல்வர் சிவனகர் தோறும்போய்ப் பாடி
அந்நக ரடைந்தா ரங்கோ ரணிமடத் திருந்தார் கேட்டீ
தென்னென வாள்விட் டாய்ந்து கோயிலி னிடைவந் தெய்தி.

(இ - ள்.) நல் நகர் உறக்கம் நீங்கி நடுக்கமுற்று அழுங்க - அந்த நல்ல நகரிலுள்ளவர்கள் துயில் நீங்கி நடுங்கி வருந்தா நிற்க, காழித் தென் நகர்ஞானச் செல்வர் - சீகாழியாகிய அழகிய நகரின்கண் அவதரித்த சிவஞானச்செல்வராகிய ஆளுடைய பிள்ளையார், சிவன் நகர் தொறும் போய்ப் பாடி - சிவபிரான் எழுந்தருளிய திருப்பதிக டோறுஞ் சென்று பதிகம் பாடி, அந்நகர் அடைந்தார் - அத்திருப் பதியை யடைந்து, அங்கு ஓர் அணிமடத்து இருந்தார் - அங்கு ஓர் அழகிய மடத்தின்கண் இருந்தவர், கேட்டு - இவ்வழுகை யொலியைக் கேட்டு, ஈது என்னென ஆள்விட்டு ஆய்ந்து - இஃது என்னவென்று ஆள்விட்டு ஆராய்ந்து தெரிந்து கொண்டு, கோயிலினிடை வந்தெய்தி - கோயிலின் பக்கல் வந்து சேர்ந்து.

வணிகன் உயிர்நீத்ததும் வணிகக்கன்னி அழுது வருந்துவதும் அறிந்து நகரிலுள்ளாரும் துயிலுதலின்றி வருந்தின ரென்க. பிறர் துயரையும் தம் துயர்போற் கருதினாராகலின் 'நன்னகர்' என்றார். நகர் என்றது நகரிலுள்ளாரைக் குறித்தது. அடைந்தார், முற்றெச்சம். இருந்தார்: வினைப்பெயர். ஆள் - ஏவலாள். (௨௪)

கன்னிநீ யாரை யுற்ற தென்னெனக் கன்னி தாழ்ந்து
தன்னரு மரபு மீன்றார் தம்மையு மருகற் கென்றே
உன்னினர் மன்றல் பேசி யிறந்தது முயிரன் னானோ
டிந்நெறி யடைந்தீங் குற்ற நிகழ்ச்சியு மெடுத்துச் சொன்னாள்

(இ - ள்.) கன்னி நீ யார் என் உற்றது என - கன்னியே, நீ யார் உனக்கு என்ன நேர்ந்தது என்று வினவ, கன்னி தாழ்ந்து - அம்மாது வணங்கி, தன் அரு மரபும் ஈன்றார் தம்மையும்-தனது அரிய மரபினையும் தன்னைப் பெற்றோர்களையும், மருகற்கு என்றே உன்னினர் மன்றல் பேசி இறந்ததும் - இந்த மருமகனுக்கே தன்னைக் கொடுப்ப தென்று கருதி மணம்பேசி இறந்தொழிந்ததனையும், உயிர் அன்னானோடு இந்நெறி அடைந்து - உயிர்போல்வானுடன் இவ்வழியினை அடைய, ஈங்கு உற்ற நிகழ்ச்சியும் எடுத்துச் சொன்னாள் - இங்கு நேர்ந்த நிகழ்ச்சியினையும் எடுத்துக் கூறினாள்.

யாரை, ஐகாரம் முன்னிலைக்கண் வந்தது. அக்கன்னி தாழ்ந்து எனச் சுட்டு வருவிக்க. மரபு முதலியவற்றிலும் இரண்டனுருபு விரிக்க. (௨௫)

தந்தையுந் தாயு மன்னார் தமியளா யிரங்கும் பேதைப்
பைந்தொடி யாவி காப்பான் பாம்புகோட் பட்டான் மாடே
வந்தவ னாக மெல்லா மருந்துரு வாகும் வண்ணஞ்
சிந்தைசெய் தருட்கண் வைத்தார் குதித்தது தீவாய் நஞ்சம்.

(இ - ள்.) தந்தையும் தாயும் அன்னார் - உயிர்களுக்கு அப்பனும் அம்மையும் போல்வாராகிய ஆளுடைய பிள்ளையார், தமியளாய் இரங்கும் பேதைப் பைந்தொடி - தனியாய் வருந்தும் பேதையாகிய பசிய வளையலை யணிந்த அவ்வணிகமாதின், ஆவி காப்பான் - உயிரைக் காக்கும்பொருட்டு, பாம்பு கோட்பட்டான் மாடே வந்து - பாம்பினாற் கொள்ளப்பட்டவன் அருகே வந்து, அவன் ஆகம் எல்லாம் மருந்து உருவாகும் வண்ணம் சிந்தை செய்து - அவன் உடல் முற்றும் அமிர்த மயமாகுமாறு திருவுள்ளங்கொண்டு, அருள் கண் வைத்தார் - அருட் பார்வையை வைத்தருளினார்; தீவாய் நஞ்சம் குதித்தது - நெருப்பின் றன்மை வாய்த்த நஞ்சு தான் ஏறிய விடத்தினின்றுங் குதித்தோடியது.

தந்தையும் தாயும் அற்ற வணிக மாதுக்கு உதவிபுரிய வந்த பேரருளாளர் ஆகலின் 'தந்தையும் தாயு மன்னார்' என்றார். காப்பான்: வினை யெச்சம். பாம்புகோட்பட்டான், தம்மினாகிய தொழிற் சொல்

முன்வர வலி இயல்பாயிற்று. விரைந்து இறங்கிற்று என்பார் 'குதித்தது' என்றார். (௨௬)

எழுந்தன னுறங்கி னான்போ லிறந்தவன் யாருங் கண்டு
தொழுந்தகை ஞான வேந்தைத் தொழுதனர் துதிசெய் தார்வத்
தழுந்தினர் கன்னி யன்ன மனையவ ளின்பத் தீந்தேன்
பொழிந்தொரு புறத்தே கஞ்சம் பூத்ததோர் கொம்பி னின்றாள்

(இ - ள்.) இறந்தவன் உறங்கினான்போல் எழுந்தனன் - இறந்த அவ் வணிகன் உறங்கியவன் எழுந்தாற்போல எழுந்தான்; யாரும் கண்டு - அதனை அனைவரும் பார்த்து, தொழும் தகை ஞானவேந்தைத் தொழுதனர் - அனைவரும் வணங்குந் தகுதியை யுடைய ஞான வேந்தரை வணங்கி, துதி செய்து ஆர்வத்து அழுந்தினர் - துதி மொழி கூறி மகிழ்ச்சிக் கடலுள் மூழ்கினர்; கன்னி அன்னம் அனையவள் - கன்னி யன்னப் பேட்டினை ஒத்த அம்மாது, இன்பத் தீந்தேன் பொழிந்து கஞ்சம் பூத்தது ஓர் கொம்பின் - இன்பமாகிய இனிய தேனைப் பொழிந்து தாமரை மலரப் பெற்றதாகிய ஒரு கொம்புபோல, ஒருபுறத்தே நின்றாள் - ஒருபுறமாக ஒதுங்கி நின்றனள்.

தொழுதனர்: முற்றெச்சம். கஞ்சம் பூத்ததோர் கொம்பின் என்றது இல்பொருளுவமை. (௨௭)

தலைவனை யிறந்த போதுந் தனியுயிர் பெற்ற போதுஞ்
சிலைநுதல் காதன் மாமன் செல்வியா யிருந்துந் தீண்டா
நிலைமையு மன்புங் கற்பி னீர்மையும் வியந்து நோக்கி
மலைமகண் ஞான முண்டார் வணிகனை நோக்கிச் சொல்வார்.

(இ - ள்.) சிலை நுதல் - விற்போலும் நெற்றியையுடைய அவ் வணிக மாது, காதல் மாமன் செல்வியாய் இருந்தும் - காதல்மிக்க மாமன் மகளா யிருந்தும், இறந்தபோதும் தனி உயிர் பெற்றபோதும் - தன் தலைவன் இறந்த காலத்திலும் அவன் தனித்த உயிரினைப் பெற்ற காலத்திலும், தலைவனைத் தீண்டா நிலைமையும் - அவனைத் தொடாதிருந்த தன்மையையும், அன்பும் - அவளது அன்பினையும், கற்பின் நீர்மையும் - கற்பின் தன்மையையும், மலைமகள் ஞானம் உண்டார் நோக்கி வியந்து - உமையம்மையின் ஞானப்பாலைப் பருகிய ருளிய பிள்ளையார் கண்டுவியந்து, வணிகனை நோக்கிச் சொல்வார் - அவ்வணிகனைப் பார்த்துக் கூறுவாராயினர்.

சிலை நுதல்: அன்மொழித் தொகை. தீண்டுதற்குரிய முறைமையும் தீண்டத்தகும் தருணமும் உடையளாயிருந்தும், தன் காதற் கிழமையுடையானது துஞ்சிய உடலைத் துயரத்தாற் றொடுதலும், அவன் உயிர்த்தெழுந்தகால உவகையாற் றொடுதலும் எவ்வாற்றானும் பழியன்றாகவும் தீண்டா திருந்தமையின் அவளது தற்காக்கும் பண்பினையும், அங்ஙனம் அவனுடலைப் பரிசியாது நிற்பினும் அவன்

மாட்டுக் குன்றுதலின்றி வளரும் அன்புடையளா யிருக்குந் தன்மையையும், அவ்வாற்றால் அவளது கற்பின் பெற்றியையும் பிள்ளையார் நோக்கி வியந்தனர் என்க. (உஅ)

வருதிநின் மரபுக் கெல்லா மணியனு யுன்றன் மாமன்
தருதிரு வனையா ளின்பஞ் சாருநா ளுன்பம் வந்து
பெருகுநா ளன்றி யென்றுன் மெய்தோடப் பெறுவ ளீண்டே
திருமண முடித்துக் கொண்டு போகெனச் செப்ப லோடும்.

(இ - ள்.) நின் மரபுக்கு எல்லாம் மணி அனுய் வருதி - நினது மரபு முழுதுக்கும் மணிபோல்வாய் வருக; உன்றன் மாமன் தரு திரு அனையாள் - உன் மாமன் பெற்ற திருமகள்போன்ற இம்மாது, இன்பம் சாரும் நாள் - நினக்கு இன்பம் வந்து பொருந்தும் நாளிலும், துன்பம் வந்து பெருகு நாள் அன்றி - துன்பம் வந்து மிகு நாளிலு மல்லாமல், என்று - வேறெந்நாளில், உன் மெய் தொடப் பெறுவள் - உனது உடலினைத் தீண்டப் பெறுவாள்; ஈண்டே - (ஆதலால்) இவ்விடத்திலேயே, திருமணம் முடித்துக் கொண்டு போக எனச் செப்பலோடும் - திருமணத்தை முடித்துக் கொண்டு போவாயாக வென்று சொல்லியவளவில்.

அவன் அரவுகடித் திறத்தலாகிய துன்பமும், உயிர்த்தெழுதலாகிய இன்பமும் எய்திய பொழுதுகளில் அவனைத் தீண்டாது நின்றாளாகலின் 'இன்பஞ் சாரு நாள் துன்பம் வந்து பெருகு நாள் அன்றி என்று உன் மெய்தொடப் பெறுவள்' என்றும், அவள் கன்னியா யிருப்பதே நின்னைத் தொடுதற்குத் தடையா யிருத்தலின் அத்தடை நீங்க ஈண்டே திருமணம் முடித்துக்கொண்டு போக என்றும் பிள்ளையார் அருளினார் என்றார். போகென என்பதில் அகரம் தொக்கது. (உகூ)

சேங்கணே றனையா னையன் றிருமொழி தலைமேற் கொண்டு
பங்கயன் படைத்த சாதி நான்கையும் பாது காப்பீர்
எங்குல வணிக ரின்றிக் கரிகளு மின்றி யீங்கே
மங்கல முடிக்கும் வண்ணம் யாதென வணங்கிச் சொன்னான்.

(இ - ள்.) செங்கண் ஏறு அனையான் - சிவந்த கண்களையுடைய ஏறு போல்வானாகிய அவ்வணிகன், ஐயன் திருமொழி தலைமேல் கொண்டு - பிள்ளையாரின் திருமொழியினை முடிமேற்கொண்டு, பங்கயன் படைத்த சாதி நான்கையும் பாதுகாப்பீர் - பிரமன் படைத்த நான்கு வருணத்தையும் பாதுகாப்பவரே, ஈங்கே - இங்கு, எம் குலவணிகர் இன்றி - எமது குல வணிக ரில்லாமல், கரிகளும் இன்றி - பிற சான்று களுமில்லாமல், மங்கலம் முடிக்கும் வண்ணம் யாது என - மண முடிக்கும் வண்ணம் எங்ஙன மென்று, வணங்கிச் சொன்னான் - வணங்கிக் கூறினான்.

நாற்பாற் குலத்தினரும் ஒழுக்கத்தின் வழுவாமற் காக்கும் இயல் புடையீர் என்பான் 'சாதி நான்கையும் பாதுகாப்பீர்' என்றும், அப்

பெற்றியராய தேவரீரே யாங்கள் முறைமை வழுவாமல் மணமுடித்துக் கொள்ளும் உபாயமும் உரைத்தருள வேண்டுமென்பான் 'மங்கல முடிக்கும் வண்ணம் யாது' என்றும் அவ் வணிகன் கூறினான் என்றார். (கூ0)

கன்னியை யீன்ற ஞான்றே யுனக்கென்றுன் காதன் மாமன்
உன்னிய துறவி னுள்ளா ரறிவரே யுனக்கீ தன்றி
வன்னியுங் கிணறு மிந்த விலிங்கமுங் கரிகண் மைந்தா
இங்கிலே வதுவை செய்தி யெம்முரை கடவா தென்றார்.

(இ-ள்.) உன் காதல் மாமன் - உன் அன்புள்ள மாமன், கன்னியை ஈன்ற ஞான்றே - இக் கன்னியைப் பெற்றபொழுதே, உனக்கு என்று உன்னியது உறவின் உள்ளார் அறிவரே - உனக்கே யென்று கருதிப் பேசியதை உறவினர் பலர் அறிவாரே, உனக்கு ஈது அன்றி - உனக்கு இதுவே யல்லாமல், இந்த வன்னியும் கிணறும் இலிங்கமும் கரிகள் - இந்த வன்னி மரமுங் கிணறும் இலிங்கமும் சான்றுகளாகும்; மைந்தா - புதல்வனே, எம் உரை கடவாது இங்கிலே வதுவை செய்தி என்றார் - எமது சொல்லைக் கடவாமல் இவ்விடத்திலேயே மணமுடிப்பாயாக என்றருளினர்.

எங்குல வணிகரின்றி என அவன் கூறியதற்கு மாற்றமாக 'கன்னியை ஈன்ற ஞான்றே யுனக்கென்றுன் காதன் மாமன் உன்னிய துறவினுள்ளா ரறிவரே' என்றும், கரிகளுமின்றி என்றதற்கு மாற்றமாக 'வன்னியும் கிணறும் இந்த விலிங்கமும் கரிகள்' என்றும் அருளிச் செய்தா ரென்க. இங்கிலே என்பதற்கு இரட்டுற மொழிதலால் இப்பொழுதே என்றும் பொருள் கொள்க. (கூக)

மாசறு மனத்தான் காழி வள்ளலைப் பணிந்து நீரே
தேசிகர் குரவர் நட்டோர் தெய்வமுங் கிளையு மென்னுப்
பேசிய வாறே வேள்வி பெற்றியா னிறீஇத்தான் வேட்ட
பாசிழை யோடு தாழ்ந்து விடைகோடு பரவிப் போனான்.

(இ-ள்.) மாசு அறு மனத்தான் - குற்றமற்ற மனத்தினையுடைய அவ்வணிகன், காழி வள்ளலைப் பணிந்து - சீகாழி வள்ளலாகிய பிள்ளையாரை வணங்கி, நீரே தேசிகர் குரவர் நட்டோர் தெய்வமும் கிளையும் என்னுப் பேசி-நீரே எமக்கு ஆசிரியருங் குரவரும் நட்பினரும் கடவுளும் சுற்றத்தாருமாவி ரென்று கூறி, அவாறே வேள்வி பெற்றியால் நிறீஇ - அங்ஙனமே திருமணத்தை முறைப்படி முடித்து, தான் வேட்ட பாசிழையோடு தாழ்ந்து - தான் மணந்த பசிய அணிகளை யணிந்த அம்மாதுடன் அவரை வணங்கி, விடைகொடு பரவிப் போனான் - விடைபெற்றுக்கொண்டு துதித்துச் சென்றான்.

குரவர் - ஐங்குரவர். தேசிகர், குரவர் என்பவற்றுக்கு ஞானசிரியரும், வித்தையாசிரியரும் என்றுரைத்தலுமாம். என்னு-என்று கூறி,

பேசியவாறே-அவர் உரைத்தவாறே, எனப் பிரித்துப் பொருளுரைத்த லுமாம். வேட்ட - வேட்கப்பட்ட. பாசிழை : அன்மொழித்தொகை.

வைப்பூரின்கண் ஏழு புதல்விகளையுடைய தாமன் என்னும் வணிகன் தன் மருகனுக்கு மூத்த புதல்வியை மணஞ் செய்விப்ப தாகக் கூறிப் பின்பு பிறனொருவனுக்குப் பொருளாசையால் அளித்து, இங்ஙனமே மருகனை வஞ்சித்துப் பின் ஐந்து பெண்களையும் பிறர்க்கு அளித்துவிட, அஃதுணர்ந்த அவனுடைய ஏழாவது புதல்வி மனம் வருந்திப் பெற்றோரறியாமல் அவனுடன் புறப்பட்டு வழிச்செல்லுங்கால் ஓரிரவில் திருமருகல் என்னும் திருப்பதியில், திருக்கோயிலின் பக்கத்துள்ளதொரு மடத்தின்கண் துயிலும்பொழுது, அவ்வணிகன் அரவு தீண்டி யிறக்க, அதுகண்ட அக்கன்னி நெஞ்சம் பதைபதைத்து வருந்தி ஆற்றாது மருகற்பெருமானை விளித்துப் புலம்பாநிற்க, அப்பொழுது இறைவனை வழிபடுதற்கு அவண் எழுந்தருளிய திருஞான சம்பந்தப் பிள்ளையார் அருகு வந்து, நிகழ்ந்ததை அவள் சொல்ல அறிந்து, அவளது துயரினை யொழிக்கக் கருதித் திருமருகலில் வீற்றிருக்கும் இறைவன்மீது "சடையா யெனுமால்" என்னும் திருப்பதிகம் பாடி அவ்வணிகனை உயிர்ப்பித்து அவர்களை ஆண்டே மணம் பொருந்தச் செய்து விடுத்தருளினர் என்று திருத்தொண்டர் புராணம் கூறாநிற்கும்.

பெரும்பற்றப் புலியூர் நம்பியானவர் தாமியற்றிய திருவிளையாடற் புராணத்தில்,

"மருத்தயில் பாப்புக் காப்பு வள்ளலை மனத்து வைத்துத்
தருக்கமார் காழி வேந்தர் சடையெனும் யாப் பெடுத்து
விரைத்திரு மருக றன்னில் வெவ்விடந் தீர்த்த தன்றித்
திருப்புறம் பயத்த லத்திற் றீர்த்தனர் திருக்கண் சாத்தி"

என்னுஞ் செய்யுளால் திருமருகலில் நிகழ்ந்த வரலாற்றையும் உடன்பட்டு, திருஞானசம்பந்தப் பெருமான் திருப்புறம்பயத்தில் விடந்தீர்த்து வணிகனை உயிர்ப்பித்தது அதனின் வேறாய வரலாறு என்று குறிப்பிடுவாராயினர்.

ஆளுடையபிள்ளையார்க்குச் சில நூற்றாண்டுகளின் முன்னும் இத்தகையதொரு சரிதம் நிகழ்ந்துள தென்பது கடைச்சங்க காலத்த தாகிய சிலப்பதிகாரத்து வஞ்சினமாலையில், காவிரிப்பூம்பட்டினத்தி லிருந்த கற்புடை மகளிரைக் கண்ணகி யெடுத்துரைக்குமிடத்து.

"வன்னி மரமு மடைப்பளியுஞ் சான்றாக
முன்னிறுத்திக் காட்டிய மொய்குழலாள்"

என்று கூறியிருத்தலால் அறியப்படும். சிலப்பதிகாரம் கூறும் நிகழ்ச்சியும் திருவிளையாடற்புராணங் கூறும் நிகழ்ச்சியும், சிறிது வேறுபாட்டுடன் காணப்படினும் வன்னி மரம் முதலியவற்றைச் சான்றாகக் காட்டினள் என்பதனை உன்னின் இரண்டும் ஒன்றே போலுமெனக் கருதுதல் இழுக்காகாது. ஆனால், இரு திருவிளையாடற்

புராண ஆசிரியரும் இதற்கு மாறுபட்ட கருத்தினர் என்பதில் ஐயமில்லை. அவர்கள் கருதுமாறு திருப்புறம்பயத்தில் விடந்தீர்த்தது ஆளுடைய பிள்ளையாரேயாயின் சிலப்பதிகாரம் குறிப்பிடும் வரலாறு அதனின் வேறாய தொன்றாகும். (௩உ)

ஏவல்சே யாயத் தாரு மடியரு மீண்ட வீண்டிக்
காவல்செய் மதுரை மூதூர் குறுகித்தன் காதன் மாமன்
பூவையை மணந்த வண்ணங் கேட்டங்குப் புடைசூழ் சுற்றம்
யாவரும் முவப்ப வின்புற் றிருந்தன னிளங்கோ மன்னன்.

(இ - ள்.) இளங்கோ மன்னன் - வணிகர் தலைவன், ஏவல் செய் ஆயத்தாரும் அடியரும் - பணிபுரியும் மகளிர் கூட்டமும் ஏவலாளரும் நெருங்கிவர, ஈண்டிக் காவல் செய் மதுரைமூதூர் குறுகி - (காவலாளர்) நெருங்கிக் காவல்புரியும் மதுரையாகிய பழம்பதியினை யடைந்து, தன் காதல் மாமன் பூவையை மணந்த வண்ணம் கேட்டு - தனது அன்புள்ள மாமன் புதல்வியை மணந்த தன்மையைக் கேட்டு, அங்குப் புடைசூழ் சுற்றம் யாவரும் உவப்ப - அங்கு வந்து அருகிற் சூழ்ந்த சுற்றத்தாரனைவரும் மகிழ, இன்புற்று இருந்தனன் - இன்பமெய்தி இருந்தனன்.

மன்னர் பின்னோராகிய வணிகர் இளங்கோக்கள் எனப்படுதற்குரியராகலின் 'இளங்கோ மன்னன்' என்றார். (௩௩)

தன்பெருந் தனமு மாம னீட்டிய தனமு மீட்டி
மன்பெரு நிதிக்கோ னென்ன வாணிகம் பெருக்கி நாய்கன்
இன்புறு காத லார்க ளிருவரு மீன்ற காதல்
நன்பொருண் மகிழ்ச்சி செய்ய நலம்பெற வாழு நாளில்.

(இ - ள்.) தன்பெருந் தனமும் மாமன் ஈட்டிய தனமும் ஈட்டி - தனது பெரும் பொருளையும் மாமன் தேடிவைத்த பொருளையும் ஓரிடத்திற் றொகுத்து, மன்பெரு நிதிக்கோன் என்ன - நிலைபெற்ற பெரிய குபேரனைப்போல, வாணிகம் பெருக்கி - வாணிகத்தாற் பொருள் பெருக்கி, நாய்கன் - அவ்வணிகன், இன்புறு காதலார்கள் இருவரும் ஈன்ற - இன்ப மிக்க காதலையுடைய இரண்டு மனைவியரும் பெற்ற, காதல் நன்பொருள் மகிழ்ச்சி செய்ய - அன்புள்ள மக்கள் மகிழ்ச்சியை விளைக்க, நலம் பெற வாழும் நாளில் - நலமாக வாழுங்காலத்தில்.

நிதிக்கோனென்ன ஈட்டி என்றியைத்தலுமாம். பொருள் - பிள்ளை.

"தம்பொரு ளென்ப தம்மக்கள்"

என்னும் குறளும்,

"ஒப்புடைய மாதரு மொண் பொருளு நீ"

என்னும் தேவாரமும் காண்க. மகிழ்ச்சி செய்தலை,

"மக்கண் மெய்தீண்ட லுடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு"

என்பது முதலியவற்றா லறிக. (கூச)

மூத்தவள் சிறுவர் சால மூர்க்கரா யுள்ளா ரேனை
மாத்தளி ரியலி னாட்கோர் மைந்தனுண் டிவனு மன்ன
தீத்தொழி னாக மன்ன சிறார்களு மல்லற் செல்வம்
பூத்தநீ ணியமத் தூடு போய்விளை யாடல் செய்வார்.

(இ - ள்.) மூத்தவள் சிறுவர் சால மூர்க்கராய் உள்ளார் - மூத்தாள் புதல்வர் மிகவுங் கொடியராயுள்ளவர், ஏனை மாத்தளிர் இயலினாட்கு ஓர் மைந்தன் உண்டு - மாந்தளிர் போன்ற மென்மையுடைய இளையாளுக்கு ஒரு புதல்வன் உளன்; இவனும் - இம்மைந்தனும், அன்ன தீத்தொழில் நாகம் அன்ன சிறார்களும் - அந்தக் கொடுந் தொழிலையுடைய பாம்புபோன்ற சிறுவர்களும், மல்லல் செல்வம் பூத்த நீள் நியமத்தூடு போய் - பெருஞ் செல்வம் நிறைந்த நீண்ட கடைவீதி யூடு சென்று, விளையாடல் செய்வார் - விளையாடுவாராயினர்.

எதுகை நோக்கி மாத்தளிர் என வலித்தது. நியமம் - கடைத்தெரு. (கூரு)

முந்திய மனைாட்டி மைந்தர் முகிழ்முலை யிளைய பாவை
மைந்தனை யொருநாட் சீறி யடித்தனர் வருந்தி யீன்ற
சந்தணி முலையாண் மாற்றா டனையரை வைதா ளீன்ற
பைந்தொடி தானுஞ் சீறி யிளையளைப் பழித்து வைவாள்.

(இ - ள்.) முந்திய மனைாட்டி மைந்தர் - முந்திய மனைவியின் புதல்வர்கள், முகிழ்முலை இளையபாவை மைந்தனை - தாமரை மொட்டினை யொத்த கொங்கைகளையுடைய இளைய மனைவியின் புதல்வனை, ஒருநாள் சீறி அடித்தனர் - ஒருநாள் சினந்து அடித்தனர்; வருந்தி ஈன்ற சந்து அணி முலையாள் மாற்றாள் தனையரை வைதாள் - அவனை வருந்திப்பெற்ற சாந்து அணிந்த கொங்கையையுடைய அவ்விளையாள் மூத்தாள் புதல்வர்களை வைதனள்; ஈன்ற பைந்தொடி - அப்பிள்ளைகளைப் பெற்ற பசிய வளையலை யணிந்த மூத்தாள், தானும் சீறி இளையளைப் பழித்து வைவாள் - தானுஞ் சினந்து இளையவளை இகழ்ந்து நிந்திப்பாளாயினள்.

மணவாட்டி எனற்பாலது மனைாட்டி என்றாயது. அவனை வருந்தி யீன்ற என்றும், அவர்களை யீன்ற என்றும் விரித்துரைக்க. மாற்றாள் - சக்களத்தி. (கூசு)

எந்தவூ ரெந்தச் சாதி யார்மகள் யாவர் காணச்
செந்தழல் சான்று வெங்கோன் கடிமணஞ் செய்து வந்த
கொந்தவிழ் கோதை நீயென் கொழுநனுக் காசைப் பட்டு
வந்தவ ளான காமக் கிழத்திக்கேன் வாயும் வீறும்.

(இ - ள்.) நீ எந்த ஊர் எந்தச் சாதி - நீ எந்த வூரினள், என்ன மரபினள், யார் மகள் - யாவர் புதல்வி, யாவர்காணச் செந்தழல் சான்று - யாவர் முன்னிலையில் சிவந்த அனல் சான்றாக, எம்கோன் கடிமணம் செய்து வந்த கொந்து அவிழ் கோதை - எம் நாயகன் திருமணஞ் செய்துவந்த பூங்கொத்துக்கள் மலர்ந்த மாலையையணிந்த பெண்ணாவாய், என் கொழுநனுக்கு ஆசைப்பட்டு வந்தவளான காமக் கிழத்திக்கு - என் கொழுநனை விரும்பி வந்தடைந்த காமக் கிழத்தியாகிய உனக்கு, வாயும் வீறும் ஏன் - பேச்சும் இறுமாப்பும் எதற்கு?

ஊர், சாதி என்பன ஊரினள், சாதியினள் என்னும் பொருளில் வந்தன. ஊர், குலம், பெற்றோர் அறியப் பெறாதவளும், உறவினர் முதலானோர் காண அங்கி சான்றாக என் கணவனால் மணக்கப்படாதவளும், என் கணவனின்பத்தை விரும்பி வலிதிலடைந்த காமக்கிழத்தியுமான நினக்கு இவ்வளவு வாயும் பெருமிதமும் ஏன் என நிந்தித்தனள் என்க. வாய் பேச்சுக்காயிற்று. (௩எ)

உரியவன் நீமுன் னாக வுன்னைவேட் டதற்கு வேறு
கரியுள தாகிற் கூறிக் காட்டெனக் கழற லோடும்
எரிசுட வாடிச் சாய்ந்த விணர்மலர்க் கொம்பிற் சாம்பித்
தெரியிழை நாணஞ் சாய்ப்ப நின்றிது செப்பு கின்றாள்.

(இ - ள்.) உரியவன் - எனக்கு உரிய நாயகன், தீ முன்னாக உன்னை வேட்டதற்கு வேறு கரி உளதாகில் - அனல் முன்னாக நின்னை மணந்ததற்கு வேறு சான்று உளதேல், கூறிக் காட்டு எனக் கழறலோடும் - அதனைக் கூறிக் காட்டுவாயெனச் சொல்லிய வளவில், எரி சுட - நெருப்புச் சுடுதலால், வாடிச் சாய்ந்த இணர் மலர்க்கொம்பின் - வாடிச் சாய்ந்த கொத்துக்களையுடைய பூங்கொம்பு போல, சாம்பி - வாடி, தெரி இழை நாணம் சாய்ப்ப நின்று - ஆராய்ந்த அணிகளையுடைய அம்மாது நாணம் தன்னைச் சாய்க்க நின்று, இது செப்புகின்றாள் - இதனைக் கூறுகின்றாள்.

காட்டுதல்-மெய்ப்பித்தல். தெரியிழை : அன்மொழித் தொகை, (௩அ)

அரவின்வாய்ப் பட்ட வைக லாருயி ரளித்த ஞானப்
புரவல ரருளா லெங்கோன் புறம்பய நாதன் வன்னித்
தருவோடு கிணறுகாணச் செய்தனன் சாறம் மூன்று
கரிகளு முள்ள வென்றாள் கற்பினு லொப்பி லாதாள்.

(இ - ள்.) அரவின் வாய்ப்பட்ட வைகல் - (என் கொழுநன்) பாம்பின் வாய்ப்பட்ட போது, ஆருயிர் அளித்த ஞானப் புரவலர் அருளால் - அரிய உயிரினைக் கொடுத்தருளிய ஞானவேந்தராகிய ஆளுடைய பிள்ளையாரின் ஆணையால், எம்-கோன் - எம் தலைவன், புறம்பய நாதன் வன்னித் தருவொடு கிணறு காண - திருப்புறம் பயத்திலுள்ள சிவலிங்கப் பெருமானும், வன்னி மரமுங் கிணறுங் காண, சாறு செய்தனன் - மணம் புரிந்தான்; அம்மூன்று கரிகளும் உள்ள என்றாள் - அந்த மூன்று சான்றுகளும் உள்ளன வென்று கூறினள், கற்பினால் ஒப்பிலாதாள் - கற்பினால் ஒப்பற்றவள்.

சாறு - விழா, மன்றல். ஒப்பிலாதாள் உள்ள வென்றாள் என முடிக்க. (௨௯)

மாற்றவ ணகைத்து நன்று நன்றுநின் மன்றல் வேள்விக்
கேற்றன கரியே சொன்னா யிங்குமக் கரிகள் மூன்றுந்
தோற்றுமே லதுவு மெய்யே யென்றன டோகை யோடும்
வேற்றுமை யிலாத சாய லிளையவள் விழுமங் கூரா.

(இ - ள்.) மாற்றவள் நகைத்து - அதனைக் கேட்டு மாற்றாள் சிரித்து, நன்று நன்று நின் மன்றல் வேள்விக்கு ஏற்றன கரியே சொன்னாய் - நன்று நன்று, நினது மண வேள்விக்கு ஏற்றனவாய சான்றுகளையே கூறினை; அக் கரிகள் மூன்றும் இங்கும் தோற்றுமேல் - அச் சான்று மூன்றும் இங்கும் தோற்றுமாயின், அதுவும் மெய்யே என்றனள் - அந்த மணமும் உண்மையே யாகும் என்று கூறினள்; தோகையோடும் வேற்றுமை இலாத சாயல் இளையவள் - மயிலுடன் வேற்றுமை யில்லாத சாயலையுடைய இளையாள், விழுமம் கூரா - துன்ப மிகுந்து.

நன்று நன்று : இகழ்ச்சி குறித்தது. நினது மன்றல் பொய்ம்மை யாதல்போல் கரியும் பொய்யென்பாள் 'நின் மன்றல் வேள்விக் கேற்றன கரியே சொன்னாய்' என்றாள். தோற்றா வென்னுங் கருத்தால் 'தோற்றுமேல்' என்றாளென்க. (௩௦)

வெவ்வுயிர்ப் பெறிய வில்போய் மெல்விர னெரிக்குங் கையால்
அவ்வயி றதுக்கும் வீழுங் கண்புனல் வெள்ளத் தாழுங்
கோவ்வைவாய் துடிக்கு நாணந் தலைக்கொளுங் கூசு மன்றே
தெய்வமே யாவா வென்னு மென்செய்கேன் சிறியே னெனும்.

(இ - ள்.) வெவ்வுயிர்ப்பு எறிய - வெம்மையாகிய பெருமூச் செறிய, இல்போய் - வீட்டினுட் சென்று, மெல் விரல் நெரிக்கும் - மெல்லிய விரல்களை நெரிப்பாள்; கையால் அவ்வயிறு அதுக்கும் - கையினால் அம் மெல்லிய வயிற்றைப் பிசைவாள்; வீழும் - கீழே விழுவாள்; கண் புனல் வெள்ளத்து ஆழும் - கண்ணீர்ப் பெருக்கில்

அழுந்துவாள்; கொவ்வை வாய் துடிக்கும் - கொவ்வைக் கனி போன்ற உதடு துடிப்பாள்; நாணம் தலைக்கொளும் கூசும் - வெட்கந் தலைக் கொள்ளுவாள், கூசுவாள்; ஆ ஆ தெய்வமே என்னும் - ஐயோ தெய்வமே என்பாள்; என் செய்கேன் சிறியேன் என்னும் - என்ன செய்வேன் சிறியேனென்பாள்.

அவ் வயிறு - அழகிய வயிறு. வாய் துடிக்கும், சினை வினை முதன்மேல் நின்றது. அன்னே, ஆ ஆ என்பன இரக்கப் பொருளில் வந்த இடைச்சொற்கள். (௬௧)

தாதைதா யிறந்த வன்றே தமியளா யிங்குப் போந்த
பேதையேற் காருண் டைய பேதுறும் வணிகற் கன்று
மாதுல னாகி ஞாதி வழக்கறுத் துரிமை யீந்த
நாதனே யேதி லாள்வாய் நகையினிற் காத்தி யென்னா.

(இ - ள்.) தாதை தாய் இறந்த அன்றே - அப்பனும் அம்மையும் இறந்த பொழுதே, தமியளாய் இங்குப் போந்த பேதையேற்கு - தனியளாகி இங்கு வந்த அறிவில்லாத எனக்கு, ஐய - ஐயனே, யார் உண்டு - (நின்னை யன்றி வேறு துணை) யார் உளர்; பேதுறும் வணிகற்கு - மனமயங்கி வருந்திய வணிகனுக்கு, அன்று - முன்னொரு காலத்தில், மாதுலனாகி - மாமனாக வந்து, ஞாதி வழக்கு அறுத்து - பங்காளிகளின் வழக்கினை ஒழித்து, உரிமை ஈந்த நாதனே - அவன் உரிமையைக் கொடுத்தருளிய இறைவனே, ஏதிலாள் வாய் நகையினில் காத்தி என்னா - மாற்றாள் வாயிலிருந்து வரும் இகழ்ச்சி மொழியினின்றும் என்னை நீக்கிக் காத்தருள்வாயாக வென்று குறையிரந்து வேண்டி.

அன்று ஞாதியரால் வருந்துதலுற்ற வணிகனொருவனுக்கு மாதுலனாகி வந்து வழக்கறுத்து உரிமை யீந்தீர் ஆகலின், இன்று மாற்றவளால் வருந்தலுறும் வணிகமாதாகிய எனக்கும் எளிவந்து உரிமை யீவீர் என்றாள் என்க. வணிகற்கு மாதுலனாகி ஞாதி வழக்கறுத் துரிமை யீந்த வரலாற்றை இப் புராணத்து, மாமனாக வந்து வழக்குரைத்த படலத்திற் காண்க. (௬௨)

அன்றிர வுண்டி யின்றித் துயிலின்றி யழுங்கிப் பின்னாட்
பொன்றிணி கமல வாவிப் புண்ணியப் புனறோய்ந் தண்ட
நின்றிழி விமானக் கோயி னிரம்பிய வழகர் முன்னாச்
சென்றிரு தாளில் வீழ்ந்து தன்குறை செப்பி வேண்டும்.

(இ - ள்.) அன்று இரவு உண்டியின்றித் துயில் இன்றி அழுங்கி - அன்று இரவு உணவுமின்றி உறக்கமுமின்றி வருந்தி, பின்னாள் - மறு நாள், பொன்திணி கமலவாவி - செறிந்த பொற்றாமரைகளையுடைய வாவியில், புண்ணியப் புனல் தோய்ந்து - அறவடிவாகிய நீரில் முழுகி, அண்டம் நின்று இழி விமானக் கோயில் - வானினின்றும் இறங்கிய

விமானமாகிய திருக்கோயிலில் எழுந்தருளிய, நிரம்பிய அழகர் முன்னுச்சென்று - பேரழகராகிய சோமசுந்தரக் கடவுளின் திருமுன் சென்று, இருதாளில் வீழ்ந்து - அவருடைய இரண்டு திருவடிகளிலும் வீழ்ந்து வணங்கி, தன் குறை செப்பி வேண்டும் - தனது குறையைக் கூறி இதனை வேண்டுவாள்.

கோயிலில் எழுந்தருளிய என விரித் துரைக்க. (சங)

அன்றெனைக் கணவன் வேட்ட விடத்தினி லதற்குச் சான்றாய்
நின்றபைந் தருவு நீயுங் கிணறுமந் நிலையே யிங்கும்
இன்றுவந் தேதி லாள்வாய் நகைதுடைத் தெனைக்கா வாயேற்
பொன்றுவ லென்றாள் கற்பின் புகழினை நிறுத்த வந்தாள்.

(இ - ள்.) அன்று எனைக் கணவன் வேட்ட இடத்தினில் - அன்று என்னை நாயகன் மணம்புரிந்த இடத்தில், அதற்குச் சான்றாய் நின்ற பைந்தருவும் நீயும் கிணறும் - அதற்குச் சான்றாகி நின்ற பசிய வன்னி மரமும் சிவலிங்கமாகிய நீயும் கிணறும், அந்நிலையே இன்று இங்கும் வந்து - அங்ஙனமே இன்று இங்கும் வந்து, ஏதிலாள் வாய்நகை துடைத்து எனைக் காவாயேல் - மாற்றாளின் இகழ்மொழியை விரையப் போக்கி அடியேனைக் காத்தருளாவிடின், பொன்றுவல் என்றாள் - இறந்துபடுவே னென்று கூறினாள், கற்பின் புகழினை நிறுத்த வந்தாள் - கற்பினது புகழை உலகில் நிலைநிறுத்த வந்த அவ்வணிக மாது.

தருவும் கிணறும் என்னும் அஃறிணைப் படர்க்கை யொருமைப் பெயர்களும், நீயும் என்னும் முன்னிலை யொருமைப் பெயரும் விரவி வந்து காவாயேல் என்னும் முன்னிலை யொருமைவினை கொண்டது இடவழுவமைதியும் பால் வழுவமைதியும் ஆகும்.

கற்பின் புகழ் - கற்பா லுளதாகும் புகழ். (சச)

அல்லலுற் றழுங்கி நின்றாள் பரிவுகண் டந்தண் கூடல்
எல்லையில் கருணை மூர்த்தி யருளினா லெவருங் காணத்
தொல்லையின் படியே யன்னாள் சொல்லிய கரிகண் மூன்றும்
ஒல்லைவந் திறுத்த கோயி லுத்தர குணபா லெல்லை.

(இ - ள்.) அல்லல் உற்று அழுங்கி நின்றாள் பரிவுகண்டு - துன்ப முற்று வாடி நிற்கும் அவ்வணிகமாதின் வருத்தத்தை நோக்கி, அம் தண் கூடல் எல்லை இல் கருணை மூர்த்தி அருளினால் - அழகிய குளிர்ந்த கூடற்பதியில் எழுந்தருளிய அளவிறந்த கருணை வடிவினனாகிய இறைவன் அருளினால், எவரும் காண - அனைவருங் காணுமாறு, தொல்லையின் படியே - முன்பிருந்தவாறே, அன்னாள் சொல்லிய கரிகள் மூன்றும் - அம்மாது சொன்ன சான்றுகள் மூன்றும், கோயில் உத்தர குணபால் எல்லை ஒல்லை வந்து இறுத்த - திருக்கோயிலின் வட கீழ்த் திசையில் விரைய வந்து தங்கின.

கண்டு என்னும் வினையெச்சம் வந்திருத்த என்னும் வினை கொண்டது; கண்ட என்னும் பெயரெச்சத்து அகரம் தொக்கது என்றுமாம். தொல்லையின் படியே - முன்பு திருப்புறம்பயத்தில் இருந்தவாறே. அன்னாள் சொல்லிய - அவள் மாற்றாளுக்குக் கூறிய. இறுத்த: அன் பெறாத பலவின்பால் முற்று. (௪௫)

அன்னபோ திளையாள் மூத்தாட் கொண்டுபோ யால வாயெம்
முன்னவன் றிருமுன் றாழ்ந்து காட்டுவாண் முகிறோய் சென்னி
வன்னியீ திலிங்க மீது கிணறிதென் மன்றற் சான்றாய்த்
துன்னிய வென்றாள் கண்டாண் முடித்தலை தூக்கி நின்றாள்.

(இ - ள்.) அன்னபோது - அப்போது, இளையாள் மூத்தாள் கொண்டுபோய் - இளையவள் மூத்தவளை அழைத்துக்கொண்டு போய், ஆலவாய் எம் முன்னவன் திருமுன் தாழ்ந்து - ஆலவாயி லெழுந்தருளிய எம் முன்னவனாகிய சோமசுந்தரக் கடவுளின் திருமுன் வீழ்ந்து வணங்கி, காட்டுவாள் - காட்டுவாளாய், என் மன்றல் சான்றாய்த் துன்னிய முகில் தோய் சென்னி வன்னி ஈது - எனது மணத்திற்குச் சான்றாகிப் பொருந்திய முகிலை யளாவிய முடியினையுடைய வன்னி மரம் இது; இலிங்கம் ஈது - இலிங்கம் இது; கிணறு இது என்றாள் - கிணறு இதுவாகுமென்று சுட்டிக் காட்டிக் கூறினள்; கண்டாள் முடித்தலை தூக்கி நின்றாள் - பார்த்த மூத்தாள் தனது தலையைக் கீழே யிறக்கி நின்றனள்.

நான் கூறிய வன்னி இது, இலிங்கம் இது, கிணறு இது, இவை என் மன்றற் சான்றாய்த் துன்னியன; என்றுரைத்தலுமாம். தூக்கி- கீழிறக்கிட்டு. (௪௬)

அவ்விடைத் தருவு நீரு மன்றுபோ லின்றுஞ் சான்றாய்
இவ்விடைப் பட்ட வென்ன வதிசய மேவர்க்குந் தேறாத்
தெய்வமு மெளிவங் தங்கைக் கனியினித் திருவி னன்னாள்
கைவசப் பட்ட தென்றாற் கற்பினுக் கரிதே தம்மா.

(இ - ள்.) அவ்விடை - அவ்விடத்திலுள்ள, தருவும் நீரும்- வன்னி மரமுங் கிணறும், அன்றுபோல் இன்றும் சான்றாய் - அக் காலத்தைப் போல இக்காலத்திலும் சான்றாகி, இவ்விடைப் பட்ட - இவ்விடத்து வந்திருந்தன; என்ன அதிசயம் - இஃதென்ன வியப்பு; எவர்க்கும் தேறாத் தெய்வமும் - எவராலும் அறியமுடியாத இறைவனும், எளிவந்து அங்கைக் கனியின் - எளிதாக வந்து உள்ளங்கை நெல்லிக் கனிபோல, இத்திருவின் அன்னாள் கைவசப் பட்டது என்றால் - இத் திருமகள் போன்றாளின் கையி லகப்பட்ட தென்றால், கற்பினுக்கு அரிது ஏது - கற்பினுக்கு அரிய பொருள் ஏது? (ஒன்றுமில்லை).

நீர் என்னும் தானியின் பெயர் கிணற்றுக்கு ஆயிற்று. ஒரு காலத்து ஓரிடத்திருந்த நிலையியற் பொருள்களாகிய வன்னி மரமும் கிணறும் பிறிதொரு காலத்துப் பிறிதோரிடத்தில் அவ்வாறே வந்து தோன்றுதல் பெரியதொரு புதுமையாகலின் 'என்ன வதிசயம்' என வியந்தார். சான்று மூன்றனுள் சிறப்பு நோக்கித் தெய்வத்தை வேறு பிரித் தோதினர்.

''காண்டகைய தங்கணவ ரைக்கடவு ளார்போல்
வேண்டலுறு கற்பினர்த மெய்யுரையி னிற்கும்
ஈண்டையுள தெய்வதமு மாமுகிலு மென்றால்
ஆண்டகையி னோர்களு மவர்க்குநிக ரன்றே''

என்னும் கந்தபுராணச் செய்யுள் இங்கு நோக்கற் பாலது. அம்ம, வியப்பிடைச் சொல். இது கவிக் கூற்று. (சஎ)

மங்கைதன் கற்பு மீச னிடத்தவள் வைத்த வன்பும்
அங்கண னவட்குச் செய்த வருளையும் வியந்து நோக்கி
மங்கல நகரா ரெல்லா மகிழ்ச்சியு ளாழ்ந்தார் முல்லைத்
தொங்கலான் முதுமணாட்டி யொருத்தியுந் துன்பத் தாழ்ந்தாள்.

(இ-ள்.) மங்கல நகரார் எல்லாம் - மங்கலம் நிறைந்த மதுரை நகரிலுள்ளாரனைவரும், மங்கை தன் கற்பும் - அவ் வணிக மாதின் கற்பினையும், ஈசன் இடத்து அவள் வைத்த அன்பும் - இறைவன் மாட்டு அவள் வைத்துள்ள அன்பினையும், அங்கணன் அவட்குச் செய்த அருளையும் - அவ்விறைவன் அவளுக்குச் செய்த அருளையும், நோக்கி வியந்து மகிழ்ச்சியுள் ஆழ்ந்தார் - கண்டு வியந்து மகிழ்ச்சிக் கடலுள் அழுந்தினர்; முல்லைத் தொங்கலான் முதுமணாட்டி ஒருத்தியும் முல்லை மாலையை யணிந்த வணிகன் மூத்த மனைவி யொருத்தியும், துன்பத்து ஆழ்ந்தாள் - துன்பக் கடலுள் அழுந்தினள்.

கற்பும், அன்பும் என்புழியும் இரண்டனுருபு விரிக்க. மங்கல நகர் - சிவநகர் என்றுமாம்; மதுரைக்குச் சிவநகரம் என்னும் பெயருண்மை தலவிசேடப் படலத்திற் காண்க. (சஅ)

மேதகு வணிகர் மூத்த வினைக்கோடி யாளைப் பொல்லாப்
பாதகி யிவளா மென்று பழித்தனர் படிறு பேசிக்
கோதறு குணத்தி னாளைக் குடிப்பழி துரைத்தாய் நீயென்
காதலி யாகா யென்று கணவனுந் தள்ளி விட்டான்.

(இ-ள்.) மேதகு வணிகர் - அங்குள்ள சிறந்த வணிகர்கள், மூத்த வினைக் கொடியாளை - மூத்தாளாகிய தீவினையையுடைய கொடியவளை, இவள் பொல்லாப் பாதகியாம் என்று - இவள்

பொல்லாத பாவியாவாள் என்று, பழித்தனர் - இகழ்ந்தார்கள்; கோது அறு குணத்தினளை - குற்றமற்ற குணத்தினையுடைய இளையாளை, படிறு பேசிக் குடிப்பழுது உரைத்தாய் - பொய் பேசிக் குடிக்குற்றங் கூறினை; நீ என் காதலியாகாய் என்று - (ஆகையால்) நீ என் மனைவியாகமாட்டா யென்று, கணவனும் தள்ளிவிட்டான்- நாயகனும் அவளைத் தள்ளிவிட்டனன்.

கொடிய மூத்தாளை என விகுதி பிரித்துக் கூட்டுக. ஏனை வணிகர் பழித்ததன்றி என்னும் பொருள் தருதலின் கணவனும் என்பதிலுள்ள உம்மை எச்சவும்மை. (௬௬)

அங்கிலை யிளையாள் கேள்வ னடியில்வீழ்ந் திரப்பா ளைய
என்னது கற்பை யின்று நிறுத்தின ளிவண்மாற் றளன்
றன்னையி லாதேற் கன்னை யாயின ளிவளும் யானும்
இன்னுயி ருடல்போல் வாழ்வோ மெனத்தழீஇத் தம்மி னட்டார்.

(இ - ள்.) அங்கிலை - அப்பொழுது, இளையாள் கேள்வன் அடியில் வீழ்ந்து இரப்பாள் - இளையவள் நாயகன் திருவடியில் வீழ்ந்து இரந்து வேண்டுவாள்; ஐய - ஐயனே, இவள் என்னது கற்பை இன்று நிறுத்தினள் - இவள் என்னுடைய கற்பை இன்று நிலைநிறுத்தினள்; மாற்றாள் அன்று - (ஆகையால் இவள் எனக்கு) மாற்றா ளல்லள்; அன்னை இலாதேற்கு அன்னை ஆயினள் - அன்னை இல்லாத எனக்கு அன்னையாயினள்; இவளும் யானும் இன் உயிர் உடல்போல் வாழ்வோம் என - இனி இவளும் யானும் இனிய உயிரும் உடலும் போலப் பிரிவின்றி வாழ்வோமென்று கூறி, தம்மில் தழீஇ, நட்டார்- தங்களுள் ஒருவரை யொருவர் தழுவி நட்புப் பூண்டனர்.

நிறுத்தின ளாகலின் மாற்றாளல்லள் அன்னையாயினள் என்க. என்னது : னகரம் விரித்தல். (௬௭)

உடம்பின லிரண்டே யன்றி யுயிர்ப்பொரு ளிரண்டற் றுள்ளம்
மடம்படு மழுக்கா றற்று மைந்தரு மனைய ராக
விடம்படு மைவாய் நாகம் விழுங்கிரை யொத்துத் தம்மில்
இடம்படு மன்புற் றின்புற் றிருவரு மிருந்தார் மன்னே.

(இ - ள்.) இருவரும் - அவ்விருவரும், உடம்பினால் இரண்டே அன்றி - உடலினா லிரண்டே யல்லாமல், உயிர்ப் பொருள் இரண்டு அற்று - உயிர்ப் பொருளால் இரண்டாகாமல், உள்ளம் மடம்படும் அழுக்காறு அற்று - உள்ளத்தின்கண் அறியாமையால் உண்டாகும் பொறாமை யின்றி, மைந்தரும் அனையராக - புதல்வர்களும் அத் தன்மையரேயாக, விடம்படும் ஐவாய் நாகம் விழுங்கு இரை ஒத்து, நஞ்சினையுடைய ஐந்தலைப் பாம்பு விழுங்கும் இரையைப்போன்று- தம்மில் இடம்படும் அன்புற்று இன்புற்று இருந்தார் - தங்களுள் மிகுந்த அன்பினைப் பொருந்தி இன்பமெய்தி இருந்தனர்.

உயிர்ப்பொருள் - உயிராகிய பொருள். ஐவாய் நாகம் ஐந்து வாயாலும் இரை விழுங்கினும் அஃது ஐ வேறு பாம்பாகாமை போல இவர்களும் இருவேறு உடலினராயினும் அன்பால் இருவராகா திருந்தனர் என்றார். இடம்படும் - அகன்ற. மன், ஓ அசைகள். (௩க)

அருந்ததி யனையாள் கேள்வற் காயுளு மானுச் செல்வப்
பெருந்தன நிறைவுஞ் சீரு மொழுக்கமும் பீடும் பேறு
தருந்தவ நெறியுங் குன்றுத் தருமமும் புகழும் பல்க
இருந்தனள் கமலச் செல்வி யென்னவீற் றிருந்து மன்னோ.

(இ - ள்.) அருந்ததி அனையாள் - அருந்ததி போன்றாளாகிய அவ் விளைய நங்கை, கேள்வற்கு ஆயுளும் ஆனுச் செல்வப் பெருந்தன நிறைவும் - தன் நாயகனுக்கு வாணாளும் நீங்காத பொருட் செல்வ நிறைவும், சீரும் ஒழுக்கமும் பீடும் - சிறப்பும் ஒழுக்கமும் பெருமையும், பேறு தரும் தவநெறியும் - பயன் தரும் தவ வொழுக்க மும், குன்றுத் தருமமும் புகழும் பல்க - குன்றாத அறமும் புகழும் மேலோங்க, கமலச்செல்வி வீற்றிருந்தென்ன இருந்தனள் - பூமகள் வீற்றிருந்தாற் போல வாழ்ந் திருந்தனள்.

வீற்றிருந்தென்ன என மாறுக. திருமகள் உறையுங்கால் இவை யெல்லாம் பல்குமாதலின் 'கமலச் செல்வி வீற்றிருந்தென்ன இருந்தனள்' என்றார். (௩உ)

பொன்னவிர் கமலம் பூத்த பொய்கைசூ ழால வாயெம்
முன்னவன் விளையாட் டெல்லை கண்டியார் மொழிய வல்லார்
இன்னமு மளவின் றென்ப வெங்குரு நாத சாமி
சொன்னவா றுங்கட் கெண்ணெண் காதையுஞ் சொன்னே னம்ம.

(இ - ள்.) பொன் அவிர் கமலம் பூத்த பொய்கைசூழ் ஆலவாய் - பொன்போல விளங்குந் தாமரைகள் மலர்ந்த பொய்கைகள் சூழ்ந்த திருவாலவாயில் எழுந்தருளியுள்ள எம் முன்னவன் விளையாட்டு எல்லை கண்டு மொழியவல்லார் யார் - எம் முதல்வனது திருவிளையாட்டின் முடிவைக் கண்டு மொழிய வல்லவர் யாவருளர்; இன்னமும் அளவு இன்று என்ப - இன்னும் அளவில்லை என்று கூறுவர்; எம் குருநாதசாமி சொன்னவாறு - எம் குருநாதனாகிய முருகப் பெருமான் கூறியருளிய வாறே, எண்ணெண்காதையும் உங்கட்குச் சொன்னேன் - அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் உங்களுக்குச் சொன்னேன்.

பொற்றாமரைப் பொய்கை பொருந்திய என்றுமாம். கண்டியார் : இகரம் குறுகாது நின்றது. குருநாதனாகிய சாமி என்க. அம்ம : வியப்பின்கண் வந்தது: மேல் புராண வரலாற்றில்,

"அத்தலத் தனைய மூவகைச் சிறப்பு
மளவிலா வுயிர்க்கெலாங் கருணை
வைத்தவன் செய்த திருவிளை யாட்டும்
வரையுரங் கிழியவே லெடுத்த

வித்தக னெனக்கு விளம்பிய வாறே
விளம்புவ னுமக்கென வந்த
உத்தம முனிவர் யாவருங் கேட்க
வுணர்த்துவான் கடலெலா முண்டான்"

என்று கூறியிருத்தலுங் காண்க. (௩௩)

[எழுசீரடி யாசிரிய விருத்தம்]

என்றுதென் மலைமே லிருந்தமா தவத்தோ
னின்னருட் குருபரன் றனையும்
அன்றவன் றிருவாய் மலர்ந்தவா சகமு
மருள்கனிந் தொழுகவுள் ளடக்கித்
தென்றமி ழால வாய்த்தனிப் பதியைச்
சென்னிமேற் பன்னிரண் டும்பர்
ஒன்றவைத் திமையா வங்கயற் கண்ணி
யுடனுறை யொருவனை நினைந்தான்.

(இ - ள்.) என்று - என்று கூறி, தென் மலைமேல் இருந்த மாதவத்தோன் - பொதியின் மலைமேல் இருந்த பெருந் தவத்தினனாகிய குறுமுனிவன், இன் அருள் குருபரன்தனையும் - இனிய அருளையுடைய குருநாதனையும், அன்று அவன் திருவாய் மலர்ந்த வாசகமும் - அன்று அக்குருநாதன் திருவாய்மலர்ந்தருளிய உபதேச மொழியையும், அருள் கனிந்து ஒழுக உள் அடக்கி - அருள் பழுத்து ஒழுகுமாறு உள்ளத்தின் கண் அடக்கி, தென் தமிழ் ஆலவாய்த் தனிப்பதியை - அழகிய தமிழையுடைய திருவாலவாயில் எழுந்தருளிய ஒப்பற்ற இறைவனும், இமையா அங்கயல் கண்ணியுடன் உறை ஒருவனை - இமையாத அங்கயற்கண்ணியுடன் உறைகின்ற ஒருவனுமாகிய சோமசுந்தரக் கடவுளை, சென்னிமேல் பன்னிரண்டு உம்பர் ஒன்ற வைத்து - முடியின் மீது பன்னிரண்டு அங்குலத்திற்கு அப்பால் பொருந்த வைத்து, நினைந்தான் - தியானித்தான்.

அருள்கனிந் தொழுகத் திருவாய்மலர்ந்த வாசகமும் என்று மாறுதலுமாம். சென்னி - பிரமரந்திரம். பன்னிரண்டு உம்பர் - துவாதசாந்தம், இறைவனும் இறைவியும் துவாதசாந்தத்தில் இருத்தலை,

"உயிர்த் துணையாந் தோன்றாத் துணைக்கோர் துணையாகித்
துவாதசாந்தப் பெருவெளியிற் றுரியங்கடந்த பரநாத
மூலத்தலத்து முளைத்த முழுமுதலே"

எனக் குமரகுருபர வடிகள் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் அருளிச் செய்தலானு மறிக. ஆலவாயாகிய திருப்பதி எனக் கொண்டு, அஃது

அண்டத்தில் துவாதசாந்தத்தலம் எனப்படுமாகலின் அதனைப் பிண்டத்தினுள்ளே துவாதசாந்தத்துடன் ஒன்றவைத்து ஆண்டு அங்கயற்கண்ணியுடன் உறை ஒருவனை நினைந்தான் என்றுரைத் தலுமாம். (௩௪)

பரவச மடைந்து வழிகவர்ந் துண்ணும்
பழிப்புல வேடர்போ யொளிப்ப
இருள்வெளி கடந்து திருவருள் வழிச்சென்
றெண்ணிலாச் சராசர மனைத்தும்
புரையற நிறைந்து காட்சிகண் காண்பான்
புதைபடத் தனித்தபூ ரணமாய்
உரையுணர் விறந்த வுண்மையா னந்த
வுணர்வினை யுணர்வற நினைந்தான்.

(இ - ள்.) பரவசம் அடைந்து - சிவகரணம்பெற்று, வழிகவர்ந்து உண்ணும் பழிப்புல வேடர்போய் ஒளிப்ப - ஆறலைத் துண்ணுகின்ற பழிமிக்க ஐம்புல வேடர்கள் போய் மறைய, இருள் வெளிகடந்து - கேவல சகல அவத்தைகளைக் கடந்து, திருவருள் வழிச்சென்று - திரு வருளின் வழியே சென்று, எண் இலாச் சர அசரம் அனைத்தும் நிறைந்து - அளவிறந்த இயங்கியற் பொருளும் நிலையியற் பொருளு மாகிய அனைத்திலுங் குற்றமற நிறைந்து, காண்பான் காட்சி கண்புதை பட - காண்பானுங் காட்சியும் காட்சிப் பொருளு மறைய, தனித்த பூரணமாய் - ஒப்பற்ற பூரணவடிவாய், உரை உணர்வு இறந்த உண்மை ஆனந்த உணர்வினை - மாற்றமு மனமுங் கழிய நின்ற சச்சிதானந்த வடிவினை, உணர்வு அற நினைந்தான் - இடையறாது தியானித்தான்.

புலம் - பொறி. வழிகவர்ந்துண்ணும் வேடர் போலும் ஐயம்பொறிகள் என்க;

"ஐம்புல வேடரி னயர்ந்தனை"

எனச் சிவஞான போதம் கூறுவதுங் காண்க. ஆன்மா இச்சை ஞானக்கிரியைகளின் நிகழ்ச்சி சிறிதுமின்றி ஆணவ மலத்தால் மறைப்புண்டு நிற்பது கேவலம் ஆகலின் அதனை 'இருள்' என்றும், மாயேயமாகிய தநுகரண புவன போகங்களைப் பொருந்தி இச்சை ஞானக் கிரியைகள் சிறிது விளங்கப்பெற்று நரகொடு சுவர்க்கம் நானிலங்களிற் போக்குவரவு புரிவது சகலம் ஆகலின் அதனை 'வெளி' என்றும் கூறினர்: எனவே நின்மலாவத்தையை யெய்தி என்றவாறு. அவனருளே கண்ணாகக் காண்பார்க்கன்றி இறைவன் அறியவாரா னாகலின் 'திருவருள் வழிச்சென்று' என்றார். சென்று உணர்ந்தான் புதைபட உணர்ந்தான் என இயையும். புரையற என்பதற்கு வெற்றிடம் சிறிது மில்லையாக என்றலுமாம். காட்சி - காணப்படு பொருள். கண் - காணுங்கருவி காண்பான் முதலியவற்றை அறிபவன், அறிவு, அறியப்படுபொருள் என்று கொள்க; இவை ஞாதிரு,

ஞானம், ஞேயம் என்று கூறப்படும். புதைபட - ஞாதிரு என்றும் ஞானம் என்றும் ஞேயம் என்றும் அறியும் சங்கற்ப ஞானம் மறைய. இவை மூன்றும் நழுவாமல் நழுவி நிற்க வேண்டுமென்பர் பெரியோர். உரை உணர்வு இறந்த என்பதற்கு வேதாகமங்களாகிய பாசஞானத்தையும், சுட்டறிவாகிய பசுஞானத்தையும் கடந்த என்றும், உணர்வு அற என்பதற்குத் தற்போதமற என்றும் உரைத்தலுமாம். காண்பான் கண்காட்சி எனவும், உண்மை உணர்வு ஆனந்தம் எனவும் நிற்கற்பாலன செய்யுளாதலின் மாறி நின்றன வென்க. (௩௫)

ஆகச் செய்யுள் - ௩,௩௪0

அறுபத்தைந்தாவது

அருச்சனைப் படலம்.

[எழுசீரடி யாசிரிய விருத்தம்]

கன்னிதன் வதுவைக் கரிகளா யிலிங்கக்
கடவுளுங் கவைக்கருங் கோட்டு
வன்னியும் படுநீர்க் கூவலும் வந்த
வழியிது மதுரைநா யகனைச்
சென்னியில் வைத்த முனிவனைப் பூசை
செய்துமா தவரோருங் கெய்திப்
பன்னிற மலர்தூ டாலவா யானைப்*
பரவிய பரிசது பகர்வாம்.

(இ - ள்.) கன்னிதன் வதுவைக் கரிகளாய் - வணிக மங்கையின் மணச்சான்றுகளாய், இலிங்கக் கடவுளும் - சிவலிங்க மூர்த்தியும், கருங்கவைக் கோட்டு வன்னியும் - கரிய பிளவு பட்ட கிளைகளையுடைய வன்னிமரமும், நீர்படு கூவலும் வந்தவழி இது - நீர் ஊறுங் கிணறு மாகிய இவை வந்த திருவிளையாடல் இது; மதுரை நாயகனைச் சென்னியில் வைத்த முனிவனை - (இனி) சோமசுந்தரக் கடவுளை முடிக்குப் பன்னிரண்டு அங்குலத்திற்கு மேல் வைத்துத் தியானித்த அக் குறுமுனிவனை, பூசைசெய்து - பூசித்து, மாதவர் ஒருங்கு எய்தி- அம்மாதவர்கள் ஒருசேரச் சென்று, ஆலவாயானை - திருவாலவா யுடைய இறைவனை, பல் நிற மலர் தூய்ப் பரவிய பரிசது பகர்வாம்- பல நிறங்களையுடைய மலர்களைத் தூவி வழிபட்ட தன்மையைக் கூறுவாம்.

படுநீர் - ஆழமாகிய நீர் என்றுமாம். மேலைப் படலத்துக் கூறியதனை அநுவதித்து 'மதுரை நாயகனைச் சென்னியில் வைத்த முனிவனை' என்றார். பரிசது, அது : பகுதிப் பொருள் விகுதி. (க)

போதவா னந்தத் தனிக்கடல் பருகும்
புயல்புரை முனிவனை வசிட்ட
மாதவ னாதி முனிவரு முலோபா
முத்திரை தன்னோடும் வரித்துப்
போதோடு சாந்த மான்மதந் தீபம்
புகைமுதற் கருவிகைக் கொண்டு
மேதகு சிறப்பா லருச்சனை செய்து
பின்னுமோர் விணவுரை செய்வார்.

(பா - ம்.) *ஆலவாயானை.

(இ - ள்.) போத ஆனந்தத் தனிக்கடல் பருகும் புயல்புரை முனிவனை - ஞானானந்தமாகிய ஒப்பற்ற கடலைக் குடிக்கும் முகில் போன்ற அகத்திய முனிவனை, உலோபா முத்திரை தன்னொடும் வரித்து- உலோபாமுத்திரையுடன் இருத்தி, வசிட்டன் ஆதி முனிவரும்- வசிட்டன் முதலிய முனிவ ரனைவரும், போதொடு சாந்தம் மான் மதம் தீபம் புகைமுதல் கருவி கைக்கொண்டு - மலர் சந்தனம் மான் மதம் தீபம் தூபம் முதலிய உபகரணங்களைக் கையிற் கொண்டு, மேதகு சிறப்பால் அருச்சனை புரிந்து - மேம்பட்ட சிறப்பினால் அருச்சித்து, பின்னும் ஓர் வினவுரைசெய்வார் - மீண்டும் ஒரு வினா வினை நிகழ்த்துவார்.

அகத்தியர் கடலுண்டவராகலின், அஃதேயன்றி இக்கடலும் பருகினாரென ஒரு நயந்தோன்றக் கூறினார். உலோபாமுத்திரை- அகத்தியனாரின் மனைவியார்: மனைவியாரையும் கூறினமையின் 'வரித்து' என்றார்; வரித்தல் - அழைத்தல்; ஈண்டு அழைத்து ஆதனத் திருத்தி என்க. (௨)

[கொச்சகக் கலிப்பா]

கோட்டஞ் சிலைவளைத்த கூடற் பிரானாடல்
கேட்டஞ் செவிபடைத்த பேறடைந்தேங் கேட்டபடி
நாட்டங் களிப்ப நறுமலர்தூய்க் கண்டிறைஞ்ச
வேட்டங்கள் யாங்களென வோதினார் மெய்த்தவரே.

(இ - ள்.) கோடு அம் சிலை வளைத்த கூடல்பிரான் ஆடல் - மேரு மலையை அழகிய வில்லாக வளைத்த நான்மாடக் கூடலின் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல்களை, கேட்டு அம்செவி படைத்த பேறு அடைந்தேம் - கேட்டதனால் அழகிய செவிகளைப் படைத்த பயனைப் பெற்றோம்; கேட்டபடி - கேட்டவண்ணமே, நாட்டம் களிப்பக் கண்டு - கண்கள் களிப்பக் கண்டு, நறுமலர் தூய் இறைஞ்ச - நறிய மலர்களை யிட்டு வணங்குதற்கு, யாங்கள் வேட்டங்கள் என-யாங்கள் விரும்பினோமென்று, மெய்த்தவர் ஓதினார்-அவ் வுண்மைத் தவமுடைய முனிவர்கள் கூறினார்கள்.

கோடு - சிமயம்; மலைக்கு ஆகுபெயர். கோட்டஞ்சிலை என்புழி டகரம் விரித்தல்; மலையாகிய சிலையை என்றுமாம். அஞ்செவி - அகஞ் செவி என்றுமாம். வேட்டங்கள், யாங்கள் என்பவற்றில் கள் : அசை. (௩)

என்ற வறவோ ரெதிரே முகமலர்ந்து
குன்ற மடக்குங் குறுமுனிவன் கூறுவான்
நன்றுமுனி காளிதனை நானுள்ளத் தெண்ணியாங்
கொன்றமொழிந் தீரென்றான் பின்னும்வியந் தோதுவான்.

(இ - ள்.) என்ற அறவோர் எதிரே - என்று கூறிய முனிவர்கள் முன்னே, குன்றம் அடக்கும் குறுமுனிவன் முகமலர்ந்து கூறுவான் - விந்தமலையை அடக்கிய அகத்திய முனிவன் முகமலர்ந்து கூறுவானுயினன்; நன்று முனிகாள் - முனிவர்களே நன்று, நான் உள்ளத்து எண்ணியாங்கு - யான் எனது மனத்தில் நினைத்தவண்ணமே, இதனை ஒன்ற மொழிந்தீர் என்முன்-இதனைப் பொருந்த வுரைத்தீரென்று கூறி, பின்னும் வியந்து ஓதுவான் - பின்னும் வியந்து கூறுவானுயினன்.

அகத்தியர் விந்தமலையை அடக்கிய வரலாற்றைக் கந்தபுராணத்து விந்தம் பிலம் புகு படலத்திற் காண்க. என்முன்: முற்றெச்சம். வியக்க என்பது வியந்து எனத் திரிந்தது எனலுமாம். (ச)

பண்ணுன் மறைமுடியுந் தேருப் பரசிவனை
எண்ணு லளவிறந்த வெக்கலையாற் கண்டுமுளக்
கண்ணு லறியாதார் வீட்டின்பங் காண்பரோ
மண்ணுதி யாறுறு நீத்ததனி மாதவரே.

(இ - ள்.) மண் ஆதி ஆறுறும் நீத்ததனி மாதவரே - மண்முதலிய முப்பத்தாறு தத்துவங்களையும் களைந்த பெருந்தவத்தினையுடைய முனிவர்களே, பண் நால் மறைமுடியும் தேருப் பரசிவனை - இசையமைந்த நான்கு மறைகளின் அந்தமுங் கண்டறியாத பரசிவத்தை, எண்ணுல் அளவு இறந்த எக்கலையால் கண்டும்-எண்ணினுல் அளவில்லாத எந்தக் கலைகளின் உணர்வினுற்கண்டு வைத்தும், உளக்கண்ணுல் அறியாதார் - உள்ளக் கண்ணினுல் அறியாதவர், வீட்டு இன்பம் காண்பரோ - முத்தியின்பத்தைக் காண்பார்களோ (காணுர்) என்றபடி.

எண்ணுல் என்பதற்குத் தருக்கத்தால் என்றும், கருதலளவையால் என்றும் உரைத்தலும் பொருந்தும். உளக்கண் என்றது பரஞானத்தை. இறைவனை அபரஞானத்தால் அறிந்து வைத்தும் பரஞானத்தாற் காணுதவர் வீட்டின்பம் காணுர் என்றுர். ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும், வித்தியாதத்துவம் ஏழும், சுத்த தத்துவம் ஐந்தும் என்பார் 'ஆறுறும்' என்றுர், எல்லாத் தத்துவங்கட்கும் கீழாகவுள்ளது மண் ஆகவின் 'மண்ணுதி' என்றுர், நீத்தலாவது தத்துவங்களை ஒரோவொன்ருகக் கண்டு அவற்றினியல்பை யறிந்து களைந்து அவற்றின் வேருக ஆன்மாவாகிய தன்னை அறிதல். மாதவரே என்பதில் ஏகாரம் விளி. (ரு)

அஞ்செவியி லூறுபடக் கேட்டபடி யாலவாய்ப்
பஞ்சமுகச் சோதிப் பரனைப்போ யர்ச்சித்து
நெஞ்சநெகக் கண்டு நினையா வழிநினைந்து
வஞ்சவினை வேர்களைவான் வம்மின்க ளென்ருனே.

(இ - ள்.) அஞ்செவியில் ஊறுபடக்கேட்டபடி - அகஞ் செவியில் அழுந்தக் கேட்ட வண்ணமே, ஆலவாய்ப் பஞ்சமுகச் சோதிப் பரனை-

திருவாலவாயி லெழுந்தருளிய ஐந்து திருமுகங்களையுடைய ஒளி வடிவினனாகிய சோமசுந்தரக் கடவுளை, போய் அர்ச்சித்து - அங்குச் சென்று அருச்சித்து, நெஞ்சம் நெகக் கண்டு - நெஞ்சு நெக்குவிட் டுருகத் தரிசித்து, நினையா வழி நினைந்து - (முன்னொரு காலத்தும்) நினையாத திருவருள் வழியே நினைந்து, வஞ்சவினை வேர் களைவான் வம்மின்கள் என்றான் - வஞ்சித்துப் பிறவியிற் செலுத்தும் வினைகளுக்கு மூலமாகிய ஆணவத்தைப் போக்குதற்கு வருவீராக வென்று கூறினான்.

ஊறுபட - நன்கு பொருந்த. ஊறு: முதனிலை திரிந்த தொழிற் பெயர். பஞ்ச முகம்-ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்பன. வினையை வேரொடுங் களைய என்றுமாம். களைவான்: வினையெச்சம். வம்மின்கள், கள்: அசை. (௬)

மங்கல வோரை வருதினத்தில் வானிழிந்த
கங்கை படிந்துலக நாயகனைக் கைதொழுது
புங்கவர்முன் சங்கற்பஞ் செய்தனுச்சை பூண்டொழுகி
அங்கவர்வா யாசி மொழிகேட் டகமகிழ்ந்தே.

(இ - ள்.) புங்கவர்-வசிட்டர் முதலிய முனிவர்கள், அங்கு அவர் முன் சங்கற்பம் செய்து - அவ்விடத்தில் அவ்வகத்திய முனிவர்முன் சங்கற்பஞ் செய்துகொண்டு, வாய் ஆசி மொழி கேட்டு - அவர் வாயி லிருந்து வரும் வாழ்த்துரையைக் கேட்டு, அகமகிழ்ந்து அனுச்சை பூண்டு ஒழுகி - மன மகிழ்ந்து விடை பெற்றுச் சென்று, மங்கல ஓரை வருதினத்தில் - மங்கலமான நல்லோரை வரும் நாளில், வான் இழிந்த கங்கை படிந்து - வானி னின்றும் இழிந்த கங்கையில் நீராடி, உலக நாயகனைக் கைதொழுது - விசுவநாதனைக் கையாற் றொழுது.

ஓரை - முழுத்தம். உலக நாயகன் - விச்சுவநாதன்; வாரணாசியில் எழுந்தருளி யிருக்கும் பெருமான். புங்கவர் அங்கு அவர் முன் என மாறுக. சங்கற்பம் நீராடற் பொருட்டும் தலயாத்திரையின் பொருட்டும் செய்தா ரென்க. அனுச்சை - உடன்பாடு; அநுக்ஞை என்பதன் சிதைவு. (௭)

ஐம்புலனுங் கூடற் பெருமா னடியோதுக்கி
நம்பனுரு வெழுத்தைந்து நாவாடக் கைகூப்பித்
தம்புனித சைவத் தவத்தெய்வத் தேர்மேற்கொண்
டும்பர் வழிநடக்க லுற்றார்க ணற்றவரே.

(இ - ள்.) நல் தவர் - நல்ல தவத்தினையுடைய அம்முனிவர்கள், ஐம்புலனும் கூடல் பெருமான் அடி ஒதுக்கி - ஐந்து பொறிகளையும் கூடல் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவடியிற் பதியுமாறு ஒதுக்கி, நம்பன் உரு எழுத்து ஐந்தும் நா ஆட - அவ் விறைவன் திருவுருவமாகிய திருவைந் தெழுத்தையும் நா உருவேற்ற, கைகூப்பி - கைகளை முடியிற் கூப்பி, தம்புனித சைவ தவத் தெய்வத் தேர் மேற் கொண்டு - தமது தூய சைவ நெறியிற் றப்பாத தவமாகிய தெய்வத்

தன்மை பொருந்திய தேரில் ஏறி, உம்பர் வழி நடக்க லுற்றூர்கள்-வான் வழியாக நடக்கத் தொடங்கினர்.

நா ஆட - நா உச்சரிக்க. தவ வலியால் விசும்பு நெறிச் செல்லுதலை 'தவத் தெய்வத் தேர் மேற்கொண்டு உம்பர் வழி நடக்கலுற்றூர்' என்ரூர்; மேல் கிரனுக்கிலக்கண முபதேசித்த படலத்தில்,

"உடைய நாயகன் றிருவுள முணர்ந்தனன் முடிமேல்
அடைய வஞ்சலி முகிழ்த்தன னருந்தவ விமானத்
திடைபு குந்தனன் பன்னியோ டெழுந்தன னகல்வான்
நடைய ளுகிவந் தடைந்தன னற்றமிழ் முனிவன்"

எனவும்,

"இயங்கு மாதவத் தேரினும் பன்னியோ டிழிந்து"

எனவும் கூறியிருத்தல் காண்க. மேல் 'வம்மின்க ளென்ரூனே' என்றமையின் அகத்தியனும் ஒருங்கு சென்றமை பெறப்படும். (அ)

செய்ய சடையர் திருநீறு சண்ணித்த
மெய்யர்தவ நோற்றிளைத்த மேனியின ருட்புறம்புந்
துய்யரணி கண்டிகையர் தோலு மருங்குடையர்
ஐயர் தவத்துக் கணிகலம்போற் போதுவார்.

(இ - ள்.) தவத்துக்கு அணிகலம்போல் ஐயர் - தவத்திற்கு அணிகலம் போலும் முனிவர்கள், செய்ய சடையர் - சிவந்த சடையினை யுடையராய், திருநீறு சண்ணித்த மெய்யர் - திருநீறு தரித்த உடலினை யுடையராய், தவம் நோற்று இளைத்த மேனியினர் - தவம் புரிதலால் இளைத்த உருவினை யுடையராய், உள் புறம்பும் துய்யர் - அகமும் புறமும் தூய்மை யுடையராய், அணி கண்டிகையர் - அணிந்த உருத்திராக்க மாலையை யுடையராய், தோலும் மருங்கு உடையர் போதுவார் - தோலையும் இடையில் உடையராய்ப் போவாராயினர்.

தவ எனப் பிரித்து உரிச்சொல்லாக்கி மிக நோற்று என்றுரைப் பாரும், ஐய தவத்துக்கு எனப் பாடங்கொண்டு அழகிய தவத்துக்கு என்றுரைப்பாரும் உளர். தோலும் என்பதன் உம்மை எச்சப் பொருட்டு. தவமும் இவராற் சிறப்படைந்த தென்பார் 'தவத்துக் கணிகலம்போல்' என்ரூர். ஐயர் அணிகலம்போற் போதுவார் எனக் கிடந்தாங்கு உரைத்தலுமாம்.

"மானின், உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பெழுந் தியங்கும் யாக்கையர்"

என்று திருமுருகாற்றுப்படையும்,

"மாசிலாத மணிதிகழ் மேனிமேற்
பூசு நீறுபோ லுள்ளும் புனிதர்கள்"

என்று பெரியபுராணமும் கூறுவன இங்கு நோக்கற் பாலன. (௯)

[அறுசீரடியாசிரிய விருத்தம்]

புண்ணியந் தழைக்குந் தெய்வத் தலங்களும் புலன்கள் வென்றோர்
நண்ணிய வனமுந் தீர்த்த நதிகளுந் தவத்தோர் நோற்கும்
வண்ணமு நோக்கி நோக்கி மலயமா முனிவன் காட்டக்
கண்ணிணை களிப்ப நோக்கிக் கைதொழு திறைஞ்சிச் செல்வார்.

(இ - ள்.) புண்ணியம் தழைக்கும் தெய்வத் தலங்களும் - அறத்தைப் பெருக்குந் தெய்வத் திருப்பதிகளையும், புலன்கள் வென்றோர் நண்ணிய வனமும் - ஐம்புலன்களையும் வென்றடக்கிய முனிவர்கள் வசிக்கும் காடுகளையும், தீர்த்த நதிகளும் - தூயநதிகளையும், தவத்தோர் நோற்கும் வண்ணமும் நோக்கி நோக்கி - முனிவர்கள் தவம் புரியுந் தன்மையையும் ஆராய்ந்து கண்டு, மலயமா முனிவன் காட்ட - பொதியின் மலையை யுடைய குறுமுனிவன் காட்ட, கண் இணை களிப்ப நோக்கி - கண்களிரண்டும் களிப்பக் கண்டு, கைதொழுது இறைஞ்சிச் செல்வார் - கைகூப்பி வணங்கிச் செல்வாராயினர்.

அங்கே புரியும் புண்ணியம் ஒன்று பலவாகப் பல்கும் என்பார் 'புண்ணியந் தழைக்குந் தெய்வத் தலங்கள்' என்றார். தீர்த்தங்களும் நதிகளும் என்றுமாம். (௧௦)

சீறுகோ ளிலங்கை வேந்தைச் செகுத்திட விராமன் பூசித்
தாறணி விரூபக் கண்ண னருள்பெறு தலமீ தும்பர்
ஏறிவீழ்ந் திறந்தோர் முன்ன மெண்ணிய வெண்ணி யாங்கே
மாறிய பிறப்பி னல்கு மலையிது காண்மின் காண்மின்.

(இ - ள்.) சீறுகோள் இலங்கை வேந்தைச் செகுத்திட - சினத்தலைக்கொண்ட இலங்கை மன்னனாகிய இராவணனைக் கொல்லுதற்கு, இராமன் பூசித்து - இராமன் வழிபட்டு, ஆறு அணி விரூபக்கண்ணன் அருள்பெறு தலம் ஈது - கங்கையை யணிந்த விருபாக்கனாகிய சிவபெருமானது திருவருளைப் பெற்ற ஏமகூடம் இத் திருப்பதியாம்; உம்பர் ஏறி வீழ்ந்து இறந்தோர் - உச்சியில் ஏறிக் கீழே வீழ்ந்து இறந்தவர்கள், முன்னம் எண்ணிய எண்ணியாங்கு - முன் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைய, மாறிய பிறப்பில் நல்கும் மலை இது - மறுபிறவியில் அவர்கட்கு அளிக்குந் திருப்பருப்பதம் இது; காண்மின் காண்மின் - இவற்றைப் பாருங்கள் பாருங்கள்.

சீறு: முதனிலைத் தொழிற் பெயர் - விரூபக் கண்ணன் - விருபாக்கன்; ஏனைக் கண்களின் வேறுபட மேனோக்கிய அனற் கண்ணனாகலின்

இறைவன் விருபாக்கன் எனப் பெறுவன். இப்பதி விருபாக்கம் எனவும் ஏமகூடம் எனவும் வழங்கப்பெறும்; இதனை,

"கொங்கொளி மணியுந் தபனியத் திரளுங்
கோழரைச் சந்தனக் குறடும்
கந்தமிக் குயிர்க்குங் காழகிற் றுணியுங்
கையரிக் கொண்டுவீ ழருவி
மைந்துடைத் திசையெண் கரிகளு நடுக்கு
மண்டுபே ரோதையி னெழுகும்
அந்தர நிவந்த வேமகூ டத்தி
னமர்விரு பாக்கனே யெனவும்"

என்னும் காஞ்சிப் புராணச் செய்யுளா னறிக. எண்ணி யாங்கே அடைய என ஒரு சொல் விரித் துரைக்க. மலை - ஸ்ரீசைலம்; திருப்பருப்பதம். இது மல்லிகார்ச்சுனம் என்னும் பெயரு முடைத்து. இது மூவர் தேவாரமும் பெற்ற வடநாட்டுத் திருப்பதி. அடுக்கு உவகை பற்றியது விரைவு பற்றியதுமாம். (கக)

சுரபிநீள் செவியி லிங்கச் சுடருரு வாயி னொன்றன்
இரவினிற் றிருத்தேர் மன்றல் நடக்குமூ ரிவ்வூர் மேலை
உரவுநீர்க் கரைத்தேண் மாதத் துயர்ந்தகார்த் திகையிற் றேரூர்ந்
தரவுநீர்ச் சடையான் வேள்வி நடக்குமூ ரவ்வூர் காண்மின்.

(இ - ள்.) சுரபி நீள் செவி சுடர் இலிங்க உருவாயினொன்றன் இரவினில்-பசுவினது நீண்ட காதைப்போல ஒளியினையுடைய இலிங்க வடிவாகிய இறைவனது சிவநிசியில், திருத்தேர் மன்றல் நடக்கும் ஊர் இவ்வூர் - திருத்தேர் விழா நடக்கும் திருக்கோகரணம் இத் திருப்பதியாம்; மேலை உரவு நீர்க்கரை - மேலைக் கடற்கரையில், தேள் மாதத்து உயர்ந்த கார்த்திகையில் - கார்த்திகைத் திங்களில் சிறந்த கார்த்திகை நாளில், அரவுநீர்ச் சடையான் தேர் ஊர்ந்து - பாம்பையுங் கங்கையையு மணிந்த சிவபெருமான் தேரில் ஏறியருள, வேள்வி நடக்கும் ஊர் அவ்வூர் - திருவிழா நடக்கும் திருவஞ்சைக்களம் அத் திருப்பதியாம்; காண்மின் - பாருங்கள்.

சுரபி நீள் செவி - ஆனின் நெடிய காது; கோகர்ணம். இராவணன் இலங்கையில் நிறுவுமாறு சிவபிரான்பாற் பெற்றுக் கொணர்ந்த சிவலிங்கத்தை வானோர் வேண்டுகோளின்படி விநாயகர் வாங்கிக் கீழ்வைத்துப் பிரதிட்டை செய்துவிடலும், இராவணன் அதனைப் பெயர்த் தெடுக்கத் தன் ஆற்றல்கொண்டு இழுத்தகாலை அவ்விலிங்கம் பசுவின் காதுபோற் குழைந்தமையின் 'கோகர்ணம்' எனப் பெறுவதா யிற்று. சுடருருவாயினொன்றன் இரவு - மகா சிவராத்திரி. தேர் மன்றல்- இரதோற்சவம். இது திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய இருவர் பாடல்பெற்ற துளுவ நாட்டுத் திருப்பதி. உரவு நீர் - வலிய

நீர் .. கடல். தேள் மாதம் - விருச்சிக ராசியில் ஆதித்தன் இருக்கும் கார்த்திகைத் திங்கள். உயர்ந்த கார்த்திகை - கார்த்திகைத் திங்களில் வரும் திருக்கார்த்திகை. ஊர்ந்து என்பதை ஊர எனத் திரிக்க. அஞ்சைக்களம் என்பது சுந்தரர் பாடல் பெற்ற மலைநாட்டுத் திருப்பதி. வேள்வி நடக்கும் ஊர் சோமநாதம் என்பாருமுளர். (௧௨)

விற்பயி றடக்கை வேடன் மென்றவூன் பாகம் பார்த்தோன்
பொற்புறு கிரியீ தண்டம் புழைபட விடத்தா ணீட்டி
அற்புதன் காளி தோற்க வாடிய திதுமா நீழற்
கற்புடை யொருத்தி நோற்கும் பிலமிது காண்மின் காண்மின்.

(இ - ள்.) வில்பயில் தடக்கைவேடன் மென்ற ஊன் - வில்லை யேந்திய பெரிய கையையுடைய வேடர் குலத்தினராகிய கண்ணப்பர் மென்ற ஊனினை, பாகம் பார்த்தோன் பொற்பு உறு கிரி ஈது - சுவை பார்த்த இறைவன் எழுந்தருளிய அழகிய திருக்காளத்திமலை இது; புழைபட அண்டம் இடத்தாள் நீட்டி - அண்டந் தொளைபடு மாறு இடக்காலை நீட்டி, அற்புதன்-ஞானவடிவினனும் இறைவன், காளி தோற்க ஆடியது இது - காளி தோல்வியடைய ஆடியருளிய திருவாலங்காடு இது; மாநீழல் - மாமரத்தின் நிழலில், கற்புடை ஒருத்தி நோற்கும் பிலம் இது காண்மின் காண்மின் - கற்புடைய காமாட்சியம்மை தவஞ் செய்யும் பிலத்துவாரமாகிய காஞ்சிபுரம் இது பாரும் பாரும்.

பாகம் பார்த்தல் - சுவை பார்த்தல்; ஈண்டுத் திருவமுது செய்தல் என்னும் பொருட்டு. கண்ணப்பர் ஊனினை மென்று அளித்தமையை,

"வெய்யகனற் பதங்கொள்ள வெந்துளதோ வெனுமன்பால்
நையுமனத் தினிமையினி னையமிக மென்றிடலாற்
செய்யுமறை வேள்வியோர் முன்புதருந் திருந்தவியில்
எய்யும்வரிச் சிலையவன்றா னிட்டவூ னெனக்கினிய"

என்னும் பெரியபுராணச் செய்யுளா னறிக. இத்தலம் பாம்பும் யானையும் வழிபட்டமையால் காளத்தி யென்னும் பெயர் பெற்றது; விராட் புருடனுக்கு விசுத்தித்தானமாகவும், ஐம்பூதத் தலங்களுள் வாயுத்தலமாகவும், தென் கயிலாயம் என்று சிறப்பிக்கப் பெறுவ தாகவும் உள்ளது; அன்பு பிழம்பாகிய கண்ணப்பர் ஆறுநாளிலே முத்தி பெற்று இறைவற்கு வலப்பக்கத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமையுடையது; மூவர் தேவாரமும் பெற்ற தொண்டைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. அற்புதன் காளி தோற்க ஆடியது - சிவ பெருமான் தம்மோடு வாதுசெய்த காளியை ஊர்த்துவ தாண்டவம் புரிந்து தோல்வியுறுவித்த தலம்; திருவாலங்காடு; ஐந்து மன்றங்க ளுள் வடக்கிலுள்ளதாகிய இரத்தின மன்றம்; காரைக்காலம்மையார் தலையாலே நடந்துவந்து இறைவனுடைய திருவடிக்கீழ் என்று மிருக்கும் பெருமை சான்றது; மூவர் தேவாரங்களுடன் அம்மையார் பாடிய பதிகங்களும் பெற்றுள்ள தொண்டை நாட்டுத் திருப்பதி;

இஃது அடுத்துள்ள பழையனூருடன் சேர்த்துப்பழையனூ ராலங்காடு என்று பதிகங்களிற் கூறப்பெற்றுள்ளது. காரைக்காலம்மையார் தலையால் நடந்து வந்து பதிகங்கள் பாடித் திருவடிக்கீழ் இருத்தலை,

"அப்பரி சருளப் பெற்ற வம்மையுஞ் செம்மை வேத
மெய்ப்பொரு ளானார் தம்மை விடைகொண்டுவணங்கிப் போந்து
செப்பரும் பெருமை யன்பாற் றிகழ்திரு வாலங் காடாம்
நற்பதி தலையி னாலே நடந்துபுக் கடைந்தா ரன்றே"

"ஆலங்கா டதனி லண்ட முறநிமிர்ந் தாடு கின்ற
கோலங்காண் பொழுது கொங்கை திரங்கியென் றெடுத்துத் தங்கு
மூலங்கா ணுதார் தம்மை மூத்தநற் பதிகம் பாடி
ஞாலங்கா தலித்துப் போற்று நடம்போற்றி நண்ணு நாளில்"

"மட்டவிழ்கொன் றையினார் தந் திருக்கூத்து முன்வணங்கும்
இட்டமிகு பெருங்காத லெழுந்தோங்க வியப்பெய்தி
எட்டியில வம்மீகை யெனவெடுத்துத் திருப்பதிகம்
கொட்டமுழ வங்குழக னுடுமெனப் பாடினார்"

"மடுத்தபுனல் வேணியினா ரம்மையென மதுரமொழி
கொடுத்தருளப் பெற்றாரைக் குலவியதாண் டவத்திலவர்
எடுத்தருளுஞ் சேவடிக்கீ ழென்றுமிருக் கின்றாரை
அடுத்தபெருஞ் சீர்பரவ லாரளவா யினதம்மா"

என்னும் திருத்தொண்டர் புராணச் செய்யுட்களானறிக. கற்புடையொருத்தி நோற்கும் பிலம் - உமாதேவியார் திருக்கைலையினின்றும் எழுந்தருளி வந்து இறைவனைப் பூசித்து எண்ணான்கு அறங்களும் செய்து கொண்டு தவம்புரியும் பிலம்; காஞ்சிபுரம். இது சத்தபுரிகளுள் ஒன்று; கச்சியேகம்பம், கச்சிமேற்றளி, கச்சியனேகதங்காவதம், கச்சிமயானம், ஓணகாந்தன்றளி, கச்சிநெறிக் காரைக்காடு என்னும் திருப்பதிகளைத் தன்னகத்துடையது. மூவர் தேவாரமும் பெற்ற தொண்டை நாட்டுப் பெரும்பதி. இதன் பெருமைகள் அளவிறந்தன. அவற்றைக் காஞ்சிப் புராணம் முதலியவற்றானறிக. பிலம் : ஆகுபெயர்; (௧௩)

திருமறு மார்பன் காவற் செயல்பெற வரனைப் பூசித்
திருகர முகிழ்த்து நேர்நின் றேத்திட மிதுவா மோத்தின்
உரைவரம் பகன்ற முக்க ணுத்தமன் சந்தை கூட்டி
அருமறை யறவோர்க் கோது வித்திட மதனைக் காண்மின்.

(இ - ள்.) திருமறு மார்பன் - திருமகளையும் மறுவினையுமுடைய மார்பினையுடைய திருமால், காவல் செயல்பெற - காவற்றொழிலைப்

பெறுவதற்கு, அரனைப் பூசித்து - சிவபெருமானை வழிபட்டு, இருகரம் முகிழ்த்து நேர்நின்று ஏத்து இடம் இது - இரண்டு கைகளையுங் கூப்பி எதிர்நின்று துதித்த திருமாற் பேறென்னும் பதியிது; ஓத்தின் உரைவரம்பு அகன்ற முக்கண் உத்தமன் - மறையின் பொருளெல்லை யைக் கடந்த முக்கண்ணிறைவன், அறவோர்க்கு சந்தை கூட்டி அருமறை ஓதுவித்த இடம் அதனைக் காண்மின் - முனிவருக்குச் சந்தை கூட்டி அரிய மறையினை ஓதுவித்த இடமாகிய அத்திருவோத்தூரைக் காணுங்கள்.

மறு - ஸ்ரீவத்ஸம். திருவாகிய மறு என்றுமாம். ஏத்திடம் - திருமாற்பேறு; திருமால் கண்ணினை இடந்து பூசித்து இறைவன்பாற் சக்கரம் பெற்றது; இது திருஞான சம்பந்தர், திருநாவுக்கரையர் என்னும் இருவர் தேவாரம் பெற்ற தொண்டை நாட்டுத் திருப்பதி. சந்தை அநுட்டுப் முதலிய சந்தசுகள்; சந்தை கூட்டி என்பதற்கு வேதவாக்கியங்களை ஒருசேரச் சொல்வித்து என்றுரைப்பாருமுளர். ஓதுவித்த என்பதன் அகரம் விகாரத்தால் தொக்கது. ஓதுவித்த இடம் - சிவபெருமான் தேவர்கட்கும் முனிவர்கட்கும் வேதத்தை ஓதுவித்த தலம்; திருவோத்தூர்; இது திருஞான சம்பந்தப் பெருமான் பதிகம்பாடி ஆண்பனையைப் பெண்பனையாக்கிய அற்புதம் நிக ழப்பெற்றது: திருஞானசம்பந்தர் தேவாரம் பெற்ற தொண்டை நாட்டுத் திருப்பதி.

"குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும்பு கலியுண் ஞானசம் பந்தன்சொல்ல
விரும்பு வார்வினை வீடே"

என்னும் சம்பந்தர் திருக்கடைக் காப்பு நோக்கற்பாலது. (கச)

அடிமுடி விலங்கும் புள்ளு மளந்திடா தண்டங் கீண்டு
நெடுகிய நெருப்பு நின்ற நிலையிது முள்வாய்க் கங்க
வடிவெடுத் திருவர் நோற்கு மலையிது பல்வே றூழி
இடையுற முன்னும் பின்னு மிருக்குமக் குன்றைக் காண்மின்.

(இ - ள்.) அடிமுடி விலங்கும் புள்ளும் அளந்திடாது - அடியையும் முடியையும் பன்றியாகிய திருமாலும் அன்னமாகிய பிரமனும் அளந்து காணாமல், அண்டம் கீண்டு நெடுகிய நெருப்புநின்ற நிலை இது - அண்டத்தைக் கிழித்து நீண்ட அனல் வடிவாய் நிலைபெற்ற அண்ணாமலை இது; இருவர் முள்வாய்க் கங்கவடிவு எடுத்து நோற்கும் மலை இது - இருவர் முள்போலும் வாயினையுடைய கழுகுவடிவ மெடுத்துத் தவம்புரியும் திருக்கழுக்குன்றம் இது; பல்வேறு ஊழி இடை உற - பலவேறாகிய ஊழிகள் இடையில் வர, முன்னும் பின்னும் இருக்கும் அக்குன்றைக் காண்மின் - அவற்றுக்கு முன்னும் பின்னும் இருக்கும் அப்பழ மலையைப் பாருங்கள்.

நெடுகிய நெருப்பு நின்ற நிலை - தாம் தாமே பரமெனத் தருக்குற்ற திருமாலும் பிரமனும் முறையே பன்றியுருவும் அன்னவுருவுங் கொண்டு தேடி அடியும் முடியுங் காணாது அயர்க்குமாறு நீண்ட அக்கினியுருவாகிய சிவபெருமான் நின்ற இடம்; திருவண்ணாமலை; இது தேயுவிலிங்கத்தலம்; திருஞான சம்பந்தர், திருநாவுக்கரையர் என்னும் இருவர் தேவாரம்பெற்ற நடுநாட்டுத் திருப்பதி. கங்கம் - கழுகு. கங்கவடிவெடுத்து இருவர் நோற்கும் மலை - நான்கு யுகங்களிலும் முறையே சண்டன் பிரசண்டன், சம்பாதி சடாயு, சம்புகுத்தன் மாகுத்தன், பூடா விருத்தா என்னும் இவ்விருவர் கழுகுருக் கொண்டு சிவபெருமானைப் பூசிக்கப்பெற்ற மலை; திருக்கழுக்குன்றம்; இற்றைக்கும் இரு கழுகுகள் பூசித்தலைப் பல்லோ ரறிவர். இது மூவர் தேவாரம் பெற்ற தொண்டை நாட்டுத் திருப்பதி. பல்வேறூழி இடையுற முன்னும் பின்னும் இருக்கும் குன்று - எண்ணிறந்த பிரளயங்கள் இடையே வந்து கழிய அவற்றின் முன்னும் பின்னும் அழிவின்றி நிலை பெற்றிருக்கும் பழமையுடைய மலை; திருமுது குன்றம், விருத்தாசலம். இப்பகுதியில் நம்பியாரூரர். இறைவனைப் பாடிப் பொன்பெற்று மணிமுத்தாநதியி விட்டுத் திருவாரூர்க் கமலாலயத்தில் எடுத்த அற்புதச் செய்தி பெரிய புராணத்தால் அறியப்படும். இது மூவர் தேவாரமும் பெற்ற நடுநாட்டுத் திருப்பதி. (கரு)

அவுணரிற் கள்வ னான வந்தகற் காய்ந்து மூன்று
புவனமுங் கவலை தீர்த்த புண்ணியன் புரமீ தாகும்
தவலரும் புரங்கண் மூன்றுந் தழனுதற் றிருக்கண் சாத்திப்
பவமறு மூவ ரன்பிற் பட்டவன் பதியைக் காண்மின்.

(இ - ள்.) அவுணரில் கள்வனான அந்தகன் காய்ந்து - அவுணருள் வஞ்சமிக்குடையவனாகிய அந்தகாசுரனைக் கொன்று, மூன்று புவனமும் கவலைதீர்த்த புண்ணியன் புரம் ஈது ஆகும் - மூன்று உலகங்களிலுள்ளவர்களின் துன்பத்தையும் நீக்கிய அறவடிவினனாகிய சிவபெருமானது திருக்கோவலூர் வீரட்டானம் இஃதாகும்; தவல் அரும் புரங்கள் மூன்றும்-அழிதலில்லாத மூன்று புரங்களிலும், நுதல் திரு தழல் கண்சாத்தி - நெற்றியிலுள்ள அழகிய நெருப்பு விழியைச் சாத்தி (அவற்றை அழித்து, ஆங்குள்ள), பவம் அறு மூவர் அன்பில் பட்டவன் பதியைக் காண்மின்-பிறப்பற்ற மூவர்களின் அன்புவலையில் அகப்பட்ட அவ்விறைவன் பதியாகிய திருவதிகை வீரட்டானத்தைப் பாருங்கள்.

அந்தகற் காய்ந்த வரலாறுவது, இரணியாக்கன் புதல்வனாகிய அந்தகாசுரன் என்பான் பிரமனை நோக்கித் தவம்புரிந்து வரம்பெற்று இந்திரன் முதலிய இமையவர்களை வருத்தும் பொழுது அவர்கள் சிவபெருமானைச் சரண்புக இறைவன் போரிலெதிர்த்த அவுணர்களையெல்லாங்கொன்று அவ்வந்தகனைச் சூலத்தாற் குத்தியேந்தி அமரரைக் காத்தனர் என்பது. சத்தியும் சிவமுமாயிருந்து உயிர்கட்குப் போக முத்திகளை நல்குதலின் 'புண்ணியன்'என்றார். பிற சமயத்தாசிரியரும்,

"போக மீன்ற புண்ணியன்"

எனச் சிவபிரானைக் கூறுதல் காண்க.

புண்ணியன் புரம் - திருக்கோவலூர் வீரட்டம்; இஃது அட்ட வீரட்டத்து ளொன்று; திருஞானசம்பந்தர், திருநாவுக்கரையர் என்னும் இருவர் பாடல்பெற்ற நடுநாட்டுத் திருப்பதி. மூவர் - சுதன்மன், சுசீலன், சுபுத்தி என்பார். இறைவன் முப்புரம் எரித்த ஞான்று மூவர்க்கு அருள் செய்தமையை,

"பூவார் மலர்கொண் டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்க ளெரித்த வன்று மூவர்க் கருள் செய்தார்
தூமா மழைநின் றதிர வெருவித் தொறுவின் னிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையுஞ் சார லண்ணா மலையாரே"

என்னும் ஆளுடைய பிள்ளையார் திருவாக்கா லறிக.

மூவரன்பிற் பட்டவன் பதி - திருவதிகை வீரட்டம்; அட்ட வீரட்டத்து ளொன்று; மருணீக்கியார் தமக்கையாராகிய திலகவதி யம்மையாரைப் பணிந்து திருநீறு பெற்றுக் 'கூற்றாயினவாறு' என்னும் பதிகம்பாடிச் சூலைநோய் நீங்கி, இறைவனளித்த திருநாவுக்கரசர் என்னும் பெயரினை யெய்திப் பாடற்றொண்டுடன் உழவாரத் தொண்டு புரிந்த பதி. மூவர் தேவாரமும் பெற்ற நடுநாட்டுத் திருப்பதி. (௧௬)

சத்திய ஞான னந்த தத்துவ மசைவற் றாடும்
நித்திய பரமா னந்த நிறையருண் மன்ற மீது
முத்தியங் குதித்தோ ரெய்தும் பதியது முதனூ னான்கும்
பத்தியிற் பூசித் தேத்தும் பதியிது வாகும் பார்மின்.

(இ - ள்.) சத்திய ஞான ஆனந்த தத்துவம்-சச்சிதானந்த மெய்ப் பொருளாகிய திருக்கூத்தப்பெருமான், அசைவு அற்று ஆடும் - அசை வின்றி ஆடியருளப்பெற்ற, பரம ஆனந்த நிறை நித்திய அருள்மன்றம் ஈது - சிவானந்தம் நிறைந்த அழியாத அருண்மன்றமாகிய சிதம்பரம் இது; அங்கு உதித்தோர் முத்தி எய்தும் பதி அது-தன்கட் பிறந்தவர் வீடுபேற்றினை அடையப்பெறும் திருப்பதியாகிய திருவாரூர் அது; முதல் நூல் நான்கும் - முதல் நூலாகிய மறைகள் நான்கும், பத்தியில் பூசித்து ஏத்தும் - அன்போடு வழிபட்டுத் துதிக்கும், பதி இது ஆகும் - திருமறைக்காடு இதுவாகும்; பார்மின் - பாருங்கள்.

சத்தியம் ஞானம் ஆனந்தம் - சச்சிதானந்தம். தத்துவம் - மெய்ப் பொருள். தாம் அசைதலின்றியே எவ்வுயிரையும் அசைவிப்பாராகலின் 'அசைவற்றாடும்' என்றார்; வியாபகப் பொருட்கு அசைவு கூடாமை அறிக.

மன்றம் - பொற்சபை; திருச்சிற்றம்பலம்; அதனையுடைய தில்லைப்பதி. இஃது ஆகாய விலிங்கத்தலம்; விராட் புருடனுக்கு அநாகதமாகிய இதய கமலமாகவுள்ளது. சகல வேதாகமாதி மெய்ந் நூல்களாற் போற்றப்படும் இதன் பெருமை அளவிட முடியாதது. இது மூவர் தேவாரமும் பெற்ற சோணாட்டு முதற்றிருப்பதி.

முத்தி அங்கு உதித்தோர் எய்தும் பதி - திருவாரூர் ; இது பிறக்க முத்திதரும் தலமென்பது மெய்ந்நூற் கொள்கை. இப்பதி விராட் புருடனுக்கு மூலாதாரத் தானமாகவும். பிருதிவிலிங்கத் தலமாகவும் உள்ளது; இலக்குமி பூசித்தமையாற் கமலையென்னும் பெயரு முடையது; மனுநீதிச் சோழர் உயிர் துறந்த ஆன்கன்றின் பொருட்டுத் தன் மகனைத் தேர்க்காலி லூர்ந்து முறைசெய்து திருவருள் பெற்றது; முசுகுந்தச் சக்கரவர்த்தி திருமால் முதலானோரால் பூசிக்கப்பெற்ற ஆன்மார்த்த மூர்த்தியாகிய தியாகேசரை இந்திரன்பாற் பெற்றுக் கொணர்ந்து பிரதிட்டிப்பித்தது; நம்பியாரூரர் சிவபெருமானால் அழைக்கப்பெற்றுச் சென்று பரவையாரை மணந்து தம்பிரான்றோழர் என்னும் பெயரும் பெற்று இன்புற்றிருந்தது; அவரால் திருத் தொண்டர்கள் வரலாற்றுக் கெல்லாம் மூலமாகிய திருத்தொண்டத் தொகை அருளப் பெற்றது; மற்றும் எண்ணிறந்த சிறப்புக் களுடையது. இது மூவர் தேவாரமும் பெற்ற சோணாட்டுத் திருப்பதி.

முதல் நூல் நான்கும் - நான்கு வேதங்களும், ஏத்தும் பதி - திரு மறைக்காடு; வேதாரணியம். இது வேதங்கள் பூசித்துத் திருக் காப்பிட்ட திருக்கதவினைத் திருநாவுக்கரசர் பதிகம் பாடித் திறந்தும், திருஞான சம்பந்தர் பதிகம் பாடி அடைத்தும் தமிழ் வேதமெய்ம்மை தெரித்தருளப் பெற்றது; மூவர் தேவாரமும் பெற்ற சோணாட்டுத் திருப்பதி. (௧௭)

பிரமன்மான் முதலாந் தேவர் பிரளயத் திறவா வண்ணம்
பரமனார் தோணி யேற்றும் பன்னிரு நாமம் பெற்ற
புரமிது சடாயு சம்பா திகள்பெரும் பூசை செய்ய
வரமளித் திருணோய் தீர்க்கு மருந்துறை பதியீ தாகும்.

(இ - ள்.) பிரமன் மால் முதலாம் தேவர் - பிரமனுந் திருமாலு முதலிய தேவர்கள், பிரளயத்து இறவாவண்ணம் பரமனார் தோணி ஏற்றும் - பிரளய காலத்தில் இறந்துபோகாவாறு இறைவனார் தோணியின்கண் ஏற்றப்பெறும், பன்னிருநாமம் பெற்ற புரம் இது - பன்னிரண்டு திருப்பெயர்களைப் பெற்ற நகரமாகிய சீகாழிப்பதி இது; சடாயு சம்பாதிகள் பெரும்பூசை செய்ய சடாயுவும் சம்பாதியும் பெரிய வழிபாடியற்ற, வரம் அளித்து இருள் நோய் தீர்க்கும் மருந்து உறை பதி ஈது ஆகும்-அவர்கட்கு வேண்டிய வரங்கொடுத்து ஆணவ இருளோடு கூடிய பிறவிநோயைத் தீர்க்கும் மருந்து உறையும் புள்ளிருக்கு வேளூராகிய பதி இதுவேயாகும்.

தோணி யேற்றும் புரம், பன்னிரு நாமம் பெற்ற புரம் எனத் தனித்தனி கூட்டுக. பன்னிரு நாமம் இவை யென்பதனை,

"பிரமபுரம் வேணுபுரம் பெரும்புகலி வெங்குருநீர்ப்
பொருவிறிருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்."

என்னும் பெரியபுராணச் செய்யுளா லறிக. இப் பன்னிரு பெயரினையும் திருஞானசம்பந்தப் பெருமான் பல பதிகத்தும் பாராட்டுதலுங் காண்க; பிரமன் பூசித்தமையாற் பிரமபுரம்; சூரபன்மன் போருக் குடைந்த இந்திரன் பூசித்த காலை இறைவன் வேணுவாய் முளைத்து அருள் செய்தமையின் வேணுபுரம்; சூரபன்மனால் துன்புற்ற வானோர் கள் பிரமேசரைப் புகலடைந்து வழிபட்டமையாற் புகலி; அசுர குருவாகிய சுக்கிரன் பூசித்தமையால் வெங்குரு; கற்பாந்தத்தில் அழியாது தோணியாக மிதந்தமையின் தோணிபுரம்; வெள்ளைப் பன்றி யுருக்கொண்டு இரணியாக்கனைக் கொன்று, பூமியைக் கொம்பிலேற்று நிறுவிய திருமால் பூசித்தமையின் பூந்தராய்; வெட்டுண்ட தலைக் கூறாகிய இராகு பூசித்தமையின் சிரபுரம்; சிபியின்பாற் புறாவுருக் கொண்டுவந்து சோதித்த அக்கினி பூசித்தமையிற் புறவம்; சண்பைப் புல்லை ஆயுதமாகக் கொண்டு பொருது மடிந்த யாதவர் கொலைப்பழி தன்னை அணுகா வண்ணம் கண்ணன் பூசித்தமையிற் சண்பை; காளி பூசித்தமையாற் காழி; பராசரர் மச்சகந்தியைச் சேர்ந்து பெற்ற மூடை நாற்றமும் பழியும் போகப் பூசித்தமையின் கொச்சைவயம்; உரோமச முனிவர் ஞானோபதேசம் பெற்று மலங்கழுவப் பெற்றமையின் கழுமலம் எனப் பெயர்க் காரணங் காண்க; இன்னும் வெவ்வேறு காரணங் கூறப்படுவனவும் உள. இப்பதி சைவசமய முதற்குரவராகிய திருஞானசம்பந்தர் திருவவதாரஞ் செய்து மூன்றாம் ஆண்டிலே சிவபெருமான் உமாதேவியாருடன் எழுந்தருளிச் சிவஞானம் கலந்த திருமுலைப்பால் ஊட்டியருளப் பெற்றுத் 'தோடுடைய செவியன் என்னும் பதிகம் பாடி இறைவனைச் சுட்டிக் காட்டிய பெருமை வாய்ந்தது; மூவர் தேவாரமும் பெற்ற சோணாட்டுத் திருப்பதி.

இருள் நோய் தீர்க்கும் - உயிர்ப் பிணியாகிய ஆணவ இருளையும் உடற் பிணியையும் தீர்க்கும் என்றுமாம். மருந்து என்றது வைத்திய நாதனாகிய இறைவனை. மருந்துறைபதி - திருப்புள்ளிருக்கு வேளூர்; வைத்தீசுவரன் கோயில்; திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் என்னும் இருவர் பாடல் பெற்ற சோணாட்டுத் திருப்பதி. நோய் தீர்க்கும் மருந்து என்ற கருத்தினை,

"பேராயி ரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா வடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமுந் தந்திரமு மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் றன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்தின் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளு ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே"

என்னும் திருத்தாண்டகத்திற் காண்க. (௧௮)

மதிநுத லிமயச் செல்வி மஞ்ஞையாய் வழிபட் டேத்தும்
இதுதுலாப் பொன்னித் தான மெம்மனோர் மூன்று கோடி
மதிபெறு முனிவர் வந்து வழிபடு மூதூ ரீதிப்
பதியறக் கடவுள் பூசை பண்ணிய தானங் காண்மின்.

(இ - ள்.) மதி நுதல் இமயச் செல்வி - பிறைச் சந்திரனை யொத்த நெற்றியை யுடைய பனிமலையின் புதல்வியாகிய உமையம்மையார், மஞ்ஞையாய் வழிபட்டு ஏத்தும் இது - மயிலுருக் கொண்டு வழிபட்டுப் பரவும் இப்பதி, துலாப் பொன்னித்தானம் - ஐப்பசித் திங்களில் தன்னில் மூழ்குவோருக்கு வீடுபேற்றினை யருளுங் காவிரியை யுடைய மாயூர மென்பதாகும்; எம்மனோர் மூன்றுகோடி மதிபெறும் முனிவர் வந்துவணங்கும் மூதூர் இது - எம்மைப்போன்றாராகிய மூன்றுகோடி அறிவுள்ள முனிவர்கள் வந்து வணங்குகின்ற பழம்பதியாகிய திருக்கோடிகா இதுவாகும்; இப்பதி அறக் கடவுள் பூசைபண்ணிய தானம் - இப்பதி அறக்கடவுளாகிய கூற்றுவன் வழிபட்ட தருமபுர மாகும்; காண்மின் - பாருங்கள்,

உமாதேவியார் மயிலுருக் கொண்டு பூசித்தமையால் மயிலாடு துறை என்றும் மாயூரம் என்றும் பெயர் பெற்ற இப்பதி என்க. துலா-துலா விராசியில் ஆதித்தன் இருக்கும் ஐப்பசித் திங்கள். பொன்னித்தானம் - காவிரியில் யாவரும் நீராடும் தீர்த்த விசேடத்தை யுடைய இடம். ஐப்பசி அமாவாசையில் எல்லாத் தீர்த்தங்களும் இதன்கண் வந்து நீராடும் என இதன் சிறப்புக் கூறப்பெற்றுளது. மயிலாடுதுறை திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் என்னும் இருவர் தேவாரம் பெற்ற சோணாட்டுத் திருப்பதி.

மூன்று கோடி முனிவர் வழிபடும் மூதூர் - திருக்கோடிகா; இதுவும் அவ்விருவர் தேவாரம் பெற்ற சோணாட்டுத் திருப்பதி. அறக்கடவுள் - இயமதருமன். தருமன் பூசித்தமையால் தருமபுரம் எனப்பட்டது. இது திருஞானசம்பந்தர்(யாழ்முரி) பதிகம் பெற்ற சோணாட்டுத் திருப்பதி. (௧௧)

கோடுநான் குடைய வேழந் தானவன் குறைத்த கோட்டைப்
பாடற நோற்றுப் பெற்ற பதியிது மாலை சாத்துந்
தாடகை மானங் காப்பான் றாழ்ந்துபூங் கச்சிட் டீர்க்கும்
பீடுறு கலய னன்பி னிமிர்ந்தவெம் பிரானூ ரீதால்.

(இ - ள்.) கோடு நான்கு உடைய வேழம் - நான்கு கொம்பினை யுடைய ஐராவத மென்னும் யானை, தானவன் குறைத்த கோட்டை - அவுணனாகிய பானுகோபன் வெட்டிய தன் கொம்புகளை, பாடு அற நோற்றுப் பெற்ற பதி இது - துன்பம் நீங்கத் தவஞ் செய்து பெற்ற திருவெண்காடு இது; மாலை சாத்தும் தாடகை மானம் காப்பான் - மாலை சூட்டும் தாடகை என்னும் மாதின் மானத்தைக் காக்கும் பொருட்டு, தாழ்ந்து - வளைந்து, பூங்கச்சு இட்டு ஈர்க்கும் - அழகிய

பா - ம். தாபதன்

கச்சினைப் பூட்டி இழுத்த, பீடு உறு கலயன் அன்பின் நிமிர்ந்த - பெருமை பொருந்திய குங்கிலியக்கலய நாயனார் அன்பினால் நிமிர்ந்த, எம்பிரான் ஊர் ஈது - எம் பிரான் ஊராகிய திருப்பனந்தாள் இது வாகும்.

வெள்ளை யானை பூசித்தமையால் வெண்காடு எனப்பெற்றது, யானை வழிபட்டதனை,

"சக்கரமாற் கீந்தானுஞ் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமே லசைத்தானு மடைந்தயிரா வதம்பணிய
மிக்கதனுக் கருள்சுரக்கும் வெண்காடு வினைதுரக்கும்
முக்குளநன் குடையானு முக்கணுடை யிறையவனே"

என்னும் சம்பந்தர் திருவாக்கா னறிக. திருவெண்காடு மூவர் தேவாரமும் பெற்ற சோணாட்டுத் திருப்பதி. தாழ்ந்து பின் நிமிர்ந்த என்க. தாடகை மானங் காப்பான் தாழ்ந்த வரலாறுவது அன்பிற் சிறந்த தாடகை யென்னும் மாதராள் இறைவனை வழிபட்டு வருங்காலை ஒருநாள் திருப்பள்ளித்தாமத்தைக் கையிற் கொண்டு சாத்த லுற்ற பொழுது உடுத்திருந்த உடை நெகிழலுற்றமையின் அதனை இரு முழங்கையாலும் இடுக்கிக் கொண்டு மாலையைச் சாத்தலாற்றாது வருந்தி நிற்க, இறைவன் அம் மாதின் அன்புக் கிரங்கித் திருமுடி சாய்த்து மாலையை ஏற்றருளினர் என்பது. தாடகை பூசித்தமையால் அது தாடகையீச்சரம் எனப்பெற்றது. கலயன் - மெய்யடியார் அறுபத்து மூவருள் ஒருவராகிய குங்கிலியக்கலயனார். தாடகை பொருட்டுச் சாய்ந்து நின்ற சிவலிங்கப் பெருமானைச் செவ்வே நிறுத்தி வழிபட விரும்பிய அரசன் தன்சேனை யெல்லாம் பூட்டி இழுப்பிக்கவும் நிமிராத திருவுருவம் கலயனார் கழுத்திற் கயிறு பூண்டு இழுக்க நிமிர்ந்த வரலாற்றைப் பெரிய புராணத்திற் காண்க. திருப்பனந்தாள் திருஞான சம்பந்தர் பதிகம் பெற்ற சோணாட்டுத் திருப்பதி. காப்பான்: வினையெச்சம். தாபதன் என்று பாட மோதுவாரு முளர். இய பாடத்திற்குத் துருவாச முனிவன் குறைத்த இரு கொம்புகளையும் நோற்றுப் பெற்ற என்க. அம் முனிவன் சாபத்தால் இரு கொம்புடைப் காட்டானையான வரலாற்றை வெள்ளை யானைச் சாபந் தீர்த்த படலத்தாலறிக. சிவப்பிரியன் என்னும் முனிவன் என்றுமாம். (௨௦)

கரிமுகத் தவுணற் காய்ந்து கரிமுகத் தண்ணல் பூசை
புரிசிவ நகர மீது தாரகற் பொருது செவ்வேள்
அரனையர்ச் சித்த தார்க்கீழ் மணற்குறி யான்பா லாட்டிப்
பரன்முடி மாலை சூடுஞ் சேய்வளம் பதியீ தாகும்.

(இ - ள்.) கரிமுகத்து அண்ணல் - யானை முகத்தையுடைய மூத்த பிள்ளையார், கரிமுகத்து அவுணன் காய்ந்து - கயமுகாசுரனைக் கொன்று, பூசைபுரி சிவநகரம் ஈது - வழிபாடாற்றிய திருச்செங்காட்டங்குடி இது; செவ்வேள் தாரகன் பொருது - முருகக்கடவுள் தாரகனைக் கொன்று, அரனை அர்ச்சித்தது - சிவபெருமானை வழிபட்டதும், ஆர்க்

கீழ் மணல் குறி ஆன்பால் ஆட்டி - ஆத்தி மரத்தி னடியி லமைத்த மணலாலாகிய சிவலிங்கத்திற்குப் பசுவின் பாலா லாட்டி, பரன் முடிமாலை சூடும் சேய்வளம் பதி ஈது ஆகும் - அவ்விறைவன் திரு முடியிலுள்ள மாலையை அணியும் சண்டேசர் திருவவதாரஞ் செய்ததுமாகிய திருச்சேய்ஞலூர் இதுவாகும்.

கரிமுகத் தவுணனது குருதி பரந்தமையால் அப்பதி செங்காடு எனவும், கணபதி தாபித்துப் பூசித்தமையால் அங்குள்ள திருக்கோயில் கணபதீச்சரம் எனவும் பெயர் பெற்றன. சிவநகரம் - திருச்செங்காட்டங்குடி; சிறுத்தொண்டர் தம் புதல்வராகிய சீராளதேவரைக் கறிசெய் தூட்டிப் பேறு பெற்ற தலம்; திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் என்னும் இருவர் பாடல் பெற்ற சோணாட்டுத் திருப்பதி.

சேய்வளம் பதி - சேய்நல் ஊர்; திருச்சேய்ஞலூர்: இது முருகக் கடவுள் பூசித்தமையால் போந்த பெயர். இது திருஞானசம்பந்தர் தேவாரம் பெற்ற சோணாட்டுத் திருப்பதி. ஆர் - ஆத்தி. கணபதி யானைமுகத் தசுரனைக் கொன்று சிவபெருமானைப் பூசித்த வரலாற்றையும், முருகவேள் தாரகனைக் கொன்று இறைவனைப் பூசித்த வரலாற்றையும் கந்தபுராணத்திலும், சண்டேசர் அரனை வழிபட்டு மாலை சூடுந் தலைமைபெற்ற வரலாற்றைப் பெரிய புராணத்திலும் காண்க. (உக)

கறுவிவீழ் காலன் மார்பிற் சேவடிக் கமலஞ் சாத்திச்
சிறுவனுக் காயு ளீந்த சேவகப் பெருமான் மேய
அறைபுனற் பழன மூதூ ரதுவிது வானை தந்த
குறையுடற் போர்வை போர்த்த கொற்றவன் கோயில் காண்மின்.

(இ - ள்.) கறுவி வீழ் காலன் மார்பில் - சினந்து மார்க்கண்டன் மேல் வீழ்ந்த காலனுடைய மார்பில், சேவடிக் கமலம் சாத்தி - சிவந்த திருவடித் தாமரையைச் சாத்தி, சிறுவனுக்கு ஆயுள் ஈந்த - அம் மாணிக்கு வாணாளைக் கொடுத்தருளிய, சேவகப் பெருமான் மேய - வீரனாகிய சிவபெருமான் எழுந்தருளிய, அறை புனல் பழனம் மூதூர் அது - ஒலிக்கும் நீரினையுடைய வயல்கள் சூழ்ந்த பழம் பதியாகிய திருக்கடவூர் அது; இது - இப்பதி, ஆனை தந்த குறை உடல் போர்வை போர்த்த கொற்றவன் கோயில் காண்மின்-யானை கொடுத்த அதனுடலி னின்றும் நீங்கிய தோலாகிய போர்வையைப் போர்த்தருளிய வீரன் திருக்கோயிலையுடைய வழுவூ ரென்பது பாருங்கள்,

மூதூர் - கடவூர்; திருமால் முதலிய தேவர்கள் கொணர்ந்து வைத்த அமுதகடம் இலிங்கமானமையின் இப் பெயர் பெற்றது. இத்தலத்திலே மார்க்கண்டன் பொருட்டுச் சிவபிரான் இயமனை உதைத் தருளினர் என்பதனை,

"சேலினே ரனைய கண்ணார் திறம்விட்டுச் சிவனுக் கன்பாய்ப்
பாலுநற் றயிர்நெய் யோடு பலபல வாட்டி யென்றும்
மாலினைத் தவிர நின்ற மார்க்கண்டற் காக வன்று
காலனை யுதைப்பர் போலுங் கடவூர்வீ ரட்ட னூரே"

என்னும் திருநாவுக்கரசர் தேவாரம் முதலியவற்று லறிக. இஃது அட்ட வீரட்டத்து ளொன்று. மூவர் தேவாரமும் பெற்ற சோணாட்டுத் திருப்பதி. கொற்றவன் கோயில் - திருவழுவூர்; தாருக வனத்து முனிவர்கள் பழிவேள்வியி னின்றும் தோற்றுவித்து விடுத்த யானையைச் சிவபெருமான் கொன்று அதன் தோலைப் போர்த்தருளிய தலம்; அட்ட வீரட்டத்து ளொன்று. கோயிலையுடைய பதியைக் கோயில் என்றார். ௨௨)

பங்கயக் கடவு ளீந்த பரிகலம் வாங்கிக் கொண்ட
அங்கண னிடமீ தாட லனங்கனை யமுது செய்த
செங்கண னிருக்கை யீது மேழகச் சென்னி தன்னை
மங்கல மாமற் கீந்த மருகன ரிருக்கை காண்மின். ○

(இ - ள்.) பங்கயக் கடவுள் ஈந்த பரிகலம் வாங்கிக் கொண்ட - தாமரை மலரிலிருக்கும் பிரமன் கொடுத்த பலிக்கலனை வாங்கித் திருக் கரத்தில் வைத்துக்கொண்ட, அங்கணன் இடம் ஈது-இறைவனிடமாகிய திருக்கண்டியூர் இது; ஆடல் அனங்கனை அமுது செய்த செங்கணன் இருக்கை ஈது - வெற்றி பொருந்திய மன்மதனை நீறுக்கிய தழற் கண்ணையுடைய சிவபெருமான் இருப்பிடமாகிய திருக்குறுக்கை இது; மேழகச் சென்னி தன்னை - ஆட்டுத் தலையை, மங்கல மாமற்கு ஈந்த மருகனர் இருக்கை - மங்கலமுள்ள மாமனாகிய தக்கனுக்குக் கொடுத்த மருகனராகிய சிவபெருமான் இருக்கும் திருப்பறியலூர் (இது) காண்மின் - பாருங்கள்.

பரிகலம் - பிரமன் தலையாகிய பலிக்கலம். கொய்து கொண்டதனை 'ஈந்த பரிகலம் வாங்கிக்கொண்ட' என்றது உபசாரம். அந்தணன் இடம் - திருக்கண்டியூர்; அட்டவீரட்டத்து ளொன்று; திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் என்னும் இருவர் பாடல் பெற்ற சோணாட்டுத் திருப்பதி. அமுது செய்த செங்கண் என்க. செங்கணன் இருக்கை - திருக்குறுக்கை; அட்டவீரட்டத்து ளொன்று; திருநாவுக் கரசர் பாடல் பெற்ற சோணாட்டுத் திருப்பதி. மங்கலம் என்றது குறிப்பு. மருகனர் இருக்கை - திருப்பறியலூர்; அட்டவீரட்டத்து ளொன்று; திருஞானசம்பந்தர் பதிகம் பெற்ற சோணாட்டுத் திருப்பதி; இருக்கை இது எனச் சுட்டு வருவித்துரைக்க, (௨௩)

திண்டிற லவுணன் றன்னைப் பெருவிரற் றீட்டு நேமி
உண்டிட விருந்தாக் கோண்டோ னுறையதா மொருத்தி மன்றல்
கண்டிடு கரியாய்க் கூவல் கண்ணுத லிலிங்கம் வன்னி
எண்டிசை யறியக் காட்ட நின்றிட மிதனைக் காண்மின்.

(இ - ள்.) திண் திறல் அவுணன் தன்னை - மிக்க வலியினையுடைய சலந்தராசுரனை, பெருவிரல் தீட்டு நேமி விருந்தா உண்டிட - கால் பெருவிரலால் வரைந்த திகிரிப் படை விருந்தாக உண்ண- கோண்டோன் - அதனைக் கொண்ட சிவபெருமான், உறை அது ஆம்,

இருப்பிடமாகிய திருவிற்குடி அதுவாகும்; ஒருத்தி மன்றல் கண்டிடு கரியாய் - ஒரு வணிக மகள் தன் மணத்தைக் கண்ட சான்றுகளாய்; கூவல் கண்ணுதல் இலிங்கம் வன்னி - கிணறும் சிவலிங்கமும் வன்னியு மாகிய மூன்றையும், எண்திசை அறியக் காட்ட - எட்டுத் திக்கி லுள்ளவரும் அறியுமாறு காண்பிக்க, நின்ற இடம் இதனைக் காண்மின் - அவை நின்ற இடமாகிய திருப்புறம்பயமாகு மிதனைப் பாருங்கள்.

சிவபிரான் காற் பெருவிரலால் வரைந்த புவியின் பகுதியைப் பெயர்த்தெடுக்க அது திகிரியாய்ச் சலந்தரனைத் தடிந்த தென்பதும், அதனையே திருமால் சிவபிரான்பாற் பெற்றன ரென்பதும் வரலாறு. உறை, ஆகுபெயர். விருந்தாகக் கொண்டோன் உறை - திருவிற்குடி; அட்டவீரட்டத்து ளொன்று; திருஞானசம்பந்தர் பதிகம் பெற்ற சோணாட்டுத் திருப்பதி. கண்ணுத லிலிங்கம் - சிவலிங்கம். ஒருத்தி காட்ட என இயைக்க. வணிகமாது வன்னி, கிணறு, இலிங்கம் என்னும் மூன்றையும் கரியாய்க் காட்டினமையை மேலைப் படலத்தா லறிக. நின்றிடம் - திருப்புறம்பயம்; மூவர் தேவாரமும் பெற்ற சோணாட்டுத் திருப்பதி. நின்ற இடம் என்பது நின்றிடம் என விகாரமாயிற்று. (உ௪)

சாமகண் டத்தன் றன்னைத் தானருச் சித்த தென்னர்
கோமகன் பிரம சாயை குறைத்ததிப் பதியாங் கங்கை
மாமகந் தோறும் வந்து வந்துதற் படிந்தோர் விட்டுப்
போமகம் போக மூழ்கும் புனிதநீர்ப் பதியைக் காண்மின்.

(இ - ள்.) சாமகண்டத்தன் தன்னைத் தான் அருச்சித்த - சாமவேத முழங்கும் திருமிடற்றினையுடைய இறைவன் தன்னைத் தானே அருச்சித்ததும், தென்னர் கோமகன் பிரமசாயை குறைத்தது - பாண்டியர் மன்னனாகிய வரகுண பாண்டியனது பிரமக் கொலைப் பாவத்தைப் போக்கியதுமாகிய திருவிடைமருதூர், இப் பதியாம் - இந்தப் பதியாகும்; கங்கைதன் படிந்தோர் விட்டுப் போம் அகம் போக - கங்கையானது தன்னிடம் வந்து நீராடியவர் விட்டுப்போன பாவங்கள் போமாறு, மாமகம் தோறும் வந்து வந்து மூழ்கும் புனித நீர்ப் பதியைக் காண்மின் - மாமகந்தோறும் வந்து வந்து நீராடும் தூய தடாகத்தையுடைய திருக்குடந்தையைப் பாருங்கள்.

இடை மருதில் இறைவன் தன்னைத் தான் அருச்சித்ததனை,

"எமையா மருச்சித் திருக்குந்தலத் தெய்து வாயால்"

என வரகுணபாண்டியற்குச் சிவபிரான் அருளிச் செய்ததாக இப் புராணத்து வந்திருத்தலா னறிக. தான் என்பதனை அசையாக்கி, இறைவனை அருச்சித்த தென்னர் கோமகன் என்றுரைத்தலுமாம். வரகுணனது பிரமசாயை நீங்கிய வரலாற்றை வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய படலத்தா னறிக. இப்பதி தமிழில் திருவிடை மருதூர் எனவும், வடமொழியில் மத்தியார்ச்சுனம் எனவும் கூறப்படும். வடக்கே மல்லிகார்ச்சுனமும் தெற்கே புடார்ச்சுனமும் இருக்க இஃது

இடையே அமைந்தமையின் இப்பெயரினதாயிற்று என்ப; தைப்பூசத் தீர்த்த விசேட முடையது; இது,

"பாச மொன்றில ராய்ப்பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈச னெம்பெரு மானிடை மருதினில்
பூச நாம்புகு தும்புன லாடவே"

எனத் தேவாரத்திலும் குறிக்கப்பெற்றுளது. இது மூவர் தேவாரமும் பெற்ற சோணாட்டுத் திருப்பதி. மாமகம் - பன்னிரண்டாண்டிற் கொருமுறை வியாழன் சிங்கவிராசியில் இருக்குங் காலத்து வரும் மாசி மகம். அகம் - பாவம். யாவர் பாவத்தையும் போக்கும் கங்கை தன்னை யடைந்த பாவத்தைப் போக்குதற்கு வந்து முழுகும் மாமக தீர்த்தத்தையுடைய பதி யெனத் தீர்த்தவிசேடம் கூறியவாறாயிற்று. உபலக்கணத்தால் ஏனைய புண்ணிய நதிகளும் கொள்க;

"கங்கை யானவள் கன்னி யெனப்படும்
கொங்கை யாளுறை யுங்குட மூக்கிலே"

என்றும்,

"கோதா விரியுறை யுங்குட மூக்கிலே"

என்றும் திருக்குறுந்தொகையுள் வருதல் காண்க.

புனிதநீர்ப் பதி - திருக்குடமூக்கு; இது கும்பகோணம் எனவும், திருக்குடந்தை எனவும் கூறப்படும்; ஒரு பிரளய வெள்ளத்தில் எல்லா வுயிர்களையும் சேமித்து இட்ட குடத்தின் மூக்கு இருந்த இடமாதலின் இப்பெய 'ரெய்திற்று என்ப; இது திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் என்னும் இருவர் பாடல் பெற்ற சோணாட்டுத் திருப்பதி. (உ௫)

குருமொழி தந்தைக் கீந்தெங் குருவுறை மலையீ தெங்கோன்
கருமுகில் வண்ணத் தண்ணல் கண்ணிடந் தடியிற் சாத்தப்
பொருவிற லாழி யீந்த புரமிது நந்தி யெந்தை
திருவுரு வடைய நோற்ற தலமிது தெரிந்து காண்மின்.

(இ - ள்.) குருமொழி தந்தைக்கு ஈந்து எம்குரு உறைமலை ஈது - உபதேசமொழியினைத் தன் தந்தையாருக்கு அருளி எம் குருவாகிய சாமிநாதன் உறையும் சுவாமிமலை இதுவாகும்; கருமுகில் வண்ணத்து அண்ணல் - கரிய முகில் போன்ற நிறத்தினையுடைய திருமால், கண் இடந்து அடியில் சாத்த - கண்ணைத் தோண்டித் திருவடியிற் சாத்த,

பொருவிறல் ஆழி ஈந்த எங்கோன் புரம் இது - பொருதற் குரிய வலியினையுடைய திகிரிப் படையை அளித்தருளிய எம் சிவ பெருமான் எழுந்தருளிய திருவீழிமிழலை இதுவாகும்; நந்தி - திருநந்தி தேவர், எந்தை திருஉரு அடைய நோற்ற தலம் இது தெரிந்து காண்மின் - எம் தந்தையாகிய சிவபெருமான் திருவுருவத்தைப் பெறுதற்குத் தவம்புரிந்த திருவையாறென்னும் இப்பதியினை ஆராய்ந்து காணுங்கள்.

அகத்தியனார் தமக்குத் தமிழறிவுறுத்த செந்தமிழ்ப் பரமாசாரிய ராகலின் முருகப் பெருமானை 'எங்குரு' என்றார். குருவுறை மலை - சுவாமிமலை; திருவேரகம். ஆழியீந்த புரம் - திருவீழிமிழலை; திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் இறைவன்பாற் படிக்காசுபெற்று அடியார்கட்கு அமுதூட்டிய தலம்; மூவர் தேவாரமும் பெற்ற சோணாட்டுத்திருப்பதி. நந்தி நோற்ற தலம் - திருவையாறு; திரு நாவுக்கரசர் திருக்கைலாய தரிசனம் பெற்ற தலம்; மூவர் தேவாரமும் பெற்றி சோணாட்டுத் திருப்பதி. (உசு)

முடங்குகாற் சிலந்தி யானை மலைமகண் முளரி நாட்டத்"
தடங்கடல் வண்ண னோற்ற தவநக ரிதுமுச் சென்னி
மடங்கலே றனையா னம வரையிது குடைந்தோர் பாவம்
அடங்கலும் பருகும் பொன்னி யாறிது காண்மின் காண்மின்.

(இ - ள்.) முடங்குகால் சிலந்தி யானை மலைமகள் - வளைந்த காலையுடைய சிலந்தியும் யானையும் உமையம்மையும், முளரிநாட்டம் தடம் கடல் வண்ணன் - தாமரைமலர் போன்ற கண்களையும் பெரிய கடல்போலுங் கரிய நிறத்தினையு முடைய திருமாலும், தவம் நோற்ற நகர் இது - தவஞ்செய்த திருவானைக்கா என்னும் பதி இதுவாகும்; முச்சென்னி மடங்கல் ஏறு அனையான் நாம வரை இது - மூன்று தலைகளையுடைய சிங்கவேறு போல்வானாகிய திரிசிரன் பெயரைப் பெற்ற திரிசிராமலை இதுவாகும்; குடைந்தோர் பாவம் அடங்கலும் பருகும் பொன்னியாறு இது - மூழ்கியோரின் பாவமனைத்தையும் உண்ணுங் காவிரியாறு இதுவாகும். காண்மின் காண்மின் - இவற்றைப் பாருங்கள் பாருங்கள்.

நோற்றல் - தவஞ்செய்தல்; இறைவனை வழிபடுதல். தவ நகர் - ஞான நகர் என்றுமாம். சிலந்தியும் யானையும் பூசித்த வரலாற்றைப் பெரிய புராணத்துக் கோச்செங்கட் சோழர் வரலாற்று னறிக. கடல் வண்ணன் நோற்றமை,

"ஆழி யாற்கரு ளானைக் காவுடை யாதி"

எனச் சுந்தரர் தேவாரத்தும் குறிக்கப்பெற்றுளது.

இஃது ஆனை பூசித்தமையால் திருவானைக்கா எனப்பெற்றது நாவல் தலவிருக்கமாகலின் சம்புகேசுவரம் எனவும் வழங்கப் பெறுவது; ஐம்பூதங்களில் அப்புலிங்கத்தலமாக வுள்ளது. மூவர்தேவாரமும்

பெற்ற சோணாட்டுத் திருப்பதி. முச்சென்னியான் - திரிசிரன்; அவன் பூசித்தமையின் இது திரிசிராமலை எனவும் திருச்சிராப்பள்ளி எனவும் பெயரெய்திற்று. இது திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் என்னும் இருவர் பதிகம்பெற்றசோணாட்டுத் திருப்பதி. (உஎ)

இந்நதி வெண்முத் தார மெனக்கிடந் திலங்குஞ் சென்னி
மன்னவ னாடீ தென்ப தமிழறி வையைப் பேர்யா
றந்நதி துறக்க மண்மேல் வழுக்கிவீழ்ந் தாங்குத் தோற்றித
தென்னவ னாடு சேய்த்தாத் தெரிவதே காண்மி னென்றான்.

(இ - ள்.) இந்நதி வெண்முத்து ஆரம் எனக்கிடந்து இலங்கும் - இந்நதியானது வெள்ளிய முத்துமாலையைப் போலக் கிடந்து விளங்கும், சென்னி மன்னவன் நாடு ஈது என்ப - சோழ மன்னன் நாடு இது என்று சொல்லுவர்; அந்நதி - அந்த நதியானது, தமிழ் அறி வையைப் பேர்யாறு - தமிழ் மறையின் சுவையினை அறிந்த வையை யென்னும் பெயரினையுடைய நதி; துறக்கம் மண்மேல் வழுக்கி வீழ்ந்தாங்கு தோற்றி - பொன்னுலகமானது இம்மண்ணின் மேல் வழுக்கி வீழ்ந்ததுபோல விளங்கி, சேய்த்தாத் தெரிவதே தென்னவன் நாடு - தூரத்தே காணப்படுவதே பாண்டியன் நாடு; காண்மின் என்றான் - அதனைப் பாருங்களென்று கூறினான்.

இந்நதி-பொன்னிநதி. அந்நதி, அகரம் சேய்மைச்சுட்டு. தோற்றி-தோன்றி; தன்வினை. (உஅ)

போங்கர்மென் புதல்க ளென்னப் பொருநதி சிறுகா லென்னக்
கோங்கலர் தடஞ்சிற் றூறற் குழியெனப் பழனஞ் சில்லி
தங்குமென் பாத்தி யென்னத் தாழைதாழ் சிறுபுல் லென்னப்
பைங்குலைக் கதலி மஞ்சட் பாத்திபோற் றோற்றக் கண்டார்.

(இ - ள்.) பொங்கர் மென் புதல்கள் என்ன - மரச்செறிவுகள் மெல்லிய சிறு செடிகளைப்போலவும், பொருநதி சிறு கால் என்ன - கரையோடு மோதும் அலைகளையுடைய நதி சிறிய கால்வாயைப் போலவும், கொங்கு அலர் தடம் - மணம் பரந்த தடாகங்கள், சிறு ஊறல் குழி என - சிறிய ஊற்றுக் குழிகளைப்போலவும், பழனம் - வயல்கள், மென்சில்லி தங்கும் பாத்தி என்ன - மெல்லிய சிறு கீரைகள் தங்கும் பாத்திகளைப் போலவும், தாழை தாழ் சிறுபுல் என்ன - தென்னைகள் தாழ்ந்த சிறிய புற்களைப் போலவும், பைங்குலைக் கதலி மஞ்சள் பாத்திபோல் - பசிய குலையையுடைய வாழைகள் மஞ்சட் பாத்திகளைப் போலவும், தோற்றக் கண்டார் - (தங்கள் கண்களுக்குப்) புலப்படக் கண்டார்கள்,

பாத்தி - வரம்பு கோலிப் பகுக்கப்பட்டது என்னும் பொருட்டு. தாழை-தென்னை. கதலி-வாழைத் தோட்டம் என்க. சேய்மையினின்று பார்க்கப்படும் பொருள்கள் சிற்றுருவுடன் தோற்றுமாகலின் இங்ஙனம் தோற்றக் கண்டாரென்க. (உக)

பன்னிற மாட மாலை யுபரிகைப் பந்தி செய்குன்
றன்னம்வெண் குருகு செம்போத் தழகுபைங் கிள்ளை மஞ்ஞை
இன்னபுள் வேறு வேறு யொழுங்குபட் டிருப்ப தொப்ப
மின்னுபூங் கோடியப் புட்கள் சிறகென விதிர்ப்பக் கண்டார்.

(இ - ள்.) பல்நிற மாடமாலை - பலநிறங்களையுடைய மாட வரிசைகளும், உப்பரிகைப்பந்தி - உப்பரிகைகளும், செய்குன்று-கட்டு மலைகளும், அன்னம் வெண்குருகு செம்போத்து அழகு பைங்கிள்ளை மஞ்ஞை - அன்னங்களும் வெள்ளிய நாரைகளும் செம்போத்துகளும் அழகிய பசிய கிளிகளும் மயில்களும், இன்ன புள்-இவை போன்றபிற புட்களும், வேறுவேறாய் ஒழுங்குபட் டிருப்பது ஒப்ப - வேறுவேறாக வரிசைப்பட்டிருப்பதை ஒக்க, மின்னுபூங் கொடி - அம்மாளிகைகளிற் கட்டிய விளக்கமாகிய அழகிய கொடிகள், அப்புட்கள் சிறகென விதிர்ப்பக் கண்டார் - அப்பறவைகளின் சிறகு அசைதலைப்போல அசையக் கண்டனர்.

மாலை - வரிசை. உபரிகை - மேன்மாடம். மாடமாலை முதலியன அன்னம் முதலியவற்றின் வரிசைகளைப் போலாகிற்க, அவற்றிற் கட்டப்பெற்ற கொடிகள் அப்புட்களின் சிறகுகளைப்போல் அசையக் கண்டனர். சேய்மையவாதலின் இவையும் இங்ஙனம் தோன்றின வென்க. (௩௦)

கண்டு நாட்டு நகர்வளங்க ணடந்து நடந்து கண்கள்விருந்
துண்டு மீள வகல்விசும்பா றேழுகி வலமா வருமுனிவர்
விண்டு ழாவுங் கொடுங்குன்றுந் தளிப்புத் தூரும் விரிபொழில்வாய்
வண்டு பாட மயிலாடல் பயிலா டானை வளநகரும்.

(இ - ள்.) நாடு நகர் வளங்கள் - நாட்டு வளம் நகர வளங்களை, கண்கள் நடந்து நடந்து கண்டு விருந்து உண்டு மீள - கண்கள் சென்று சென்று கண்டு விருந்தருந்தி மீளா நிற்க, அகல்விசும்பு ஆறு ஒழுகி வலமாவரு முனிவர் - அகன்ற வானின் வழியாகச் சென்று வலமாக வரும் முனிவர்கள், விண்துழாவும் கொடுங்குன்றும் - வானையளாவிய திருக்கொடுங்குன்றமும், தளிப்புத்தூரும் - திருத் தளிப்புத்தூரும், விரிபொழில் வாய் வண்டு பாட - விரிந்த சோலையின் கண் வண்டுகள் பாடாநிற்க, மயில் ஆடல் பயில் ஆடானை வளநகரும்- மயில்கள் ஆடலைச் செய்யும் திருவாடானை யென்னும் வளமிக்கபதியும்.

கொடுங்குன்று - திருக்கொடுங்குன்றம்; பிரான்மலை; திருஞான சம்பந்தர் பதிகம்பெற்ற பாண்டிநாட்டுத் திருப்பதி. தளி - கோயில்; திருப்புத்தூரிலுள்ள கோயில் திருத்தளி என்றே வழங்கப் பெறுதலை.

"திருப்புத்தூரிற் றிருத்தளியான் காணவனென் சிந்தையானே"

என்னும் அப்பர் தேவாரத்தா லறிக. இது திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் என்னும் இருவர் தேவாரம்பெற்ற பாண்டி நாட்டுத் திருப்பதி. ஆடானை - திருவாடானை; பிருகு முனிவர் துருவாசர் சாபத்தால் ஆட்டுத் தலையும் யானை யுடலும் பெற்றுப் பூசித்துச்

சாபம் நீங்கினமையால் இப்பெய ரெய்திற் றென்ப. இது திரு ஞானசம்பந்தர் பதிகம்பெற்ற பாண்டி நாட்டுத் திருப்பதி (௯௧)

சரத வேதம் பரவுபுன வாயி னகருந் தவசித்தர்
இரத வாதஞ் செய்துசிவ னுருவங் கண்ட வெழினகரும்
வரத னாகி யரனுறையுங் கானப் பேரு மலைமகளை
விரத யோக நெறிநின்று மணந்தார் சுழியல் வியனகரும்.

(இ - ள்.) சரத வேதம் பரவுபுனவாயில் நகரும் - உண்மையாகிய மறை துதிக்கும் திருப்புனவாயி லென்னுந் திருப்பதியும், தவ சித்தர் - தவ வடிவுடைய சித்த மூர்த்திகள், இரத வாதம் செய்து - பொன்னனையாள் பொருட்டு இரசவாதஞ் செய்து, சிவன் உருவம் கண்ட எழில் நகரும் - சிவபிரான் திருவுருவங் கண்ட அழகிய திருப்பூவணமும், அரன் வரதனாகி உறையும் கானப்பேரும் - இறைவன் அருட்கொடை யுடையனாய் எழுந்தருளிய திருக்கானப்பேரும், மலை மகளை விரத யோக நெறி நின்று மணந்தார் - பார்வதி தேவியாரை விரதத்தையுடைய யோகநெறியில் நின்று மணஞ் செய்தருளிய சிவ பெருமானது, சுழியல் வியன் நகரும் - திருச்சுழிய லென்னும் சிறந்த பதியும்.

புனவாயில் - திருப்புனவாயில்: திருஞானசம்பந்தர், நம்பியாரூரர் என்னும் இருவர் தேவாரம்பெற்ற பாண்டி நாட்டுத் திருப்பதி. சிவனுருவங் கண்ட எழினகர் - திருப்பூவணம். தவ சித்தர் இரசவாதஞ் செய்த வரலாற்றை இப் புராணத்து இரசவாதஞ் செய்த படலத்தா லறிக. தமிழ் நாட்டு மூவேந்தரும் இறைவனை வழிபட்டன ரென,

"முறையார் முடிசேர் தென்னர் சேரர் சோழர்க டாம்வணங்கும்
திறையா ரொளிசேர் செம்மை யோங்குந் தென்திருப் பூவணமே"

என்னும் ஆளுடைய பிள்ளையார் திருவாக்கா லறியலாகும்; சுந்தர மூர்த்திகள் இத்தலத்தை மூவேந்தரோடும் தரிசித்தனரெனத் திருத்தொண்டர் புராணம் கூறும்; இது மூவர் தேவாரமும் பெற்ற பாண்டி நாட்டுத் திருப்பதி. கானப்பேர் - திருக்கானப்பேர். நம்பியாரூரர் சேரமான் பெருமாளுடன் திருச்சுழியலில் இறைவனைத் தரிசித்துக் கொண்டு எழுந்தருளியிருக்கும் பொழுது கானப்பேருடையார் காளை வடிவங்கொண்டு கையிற் பொற்செண்டும் முடியிற் சுழியமும் உடையராய் ஆரூரர் கனவிற்றோன்றி 'நாம் இருப்பது கானப்பேர்' என்று அருளிச் செய்ய, அவர் "தொண்டரடித் தொழலும்" என்று பதிகந் தொடங்கி, "கண்டு தொழப் பெறுவ தென்றுகொலோ வடியேன் கார்வயல்சூழ் கானப்பேருறை காளையையே" என்று பாடிக் கொண்டு வந்து தரிசித்தமையின் இது காளையார்கோயில் என வழங்கும். இத்தலம் திருஞானசம்பந்தர், நம்பியாரூரர் என்னும் இருவர் பாடல் பெற்ற பாண்டி நாட்டுத் திருப்பதி. சுழியல் - திருச்சுழியல்; நம்பியாரூரர் பதிகம் பெற்ற பாண்டி நாட்டுத் திருப்பதி.

(௯௨)

மறவா ளிலங்கை யிறைமகனை வதைத்த பழியான் மருண்டரியன்
றறவா ணேமி யளித்தவனை யர்ச்சித் தகன்ற வணிநகரும்
நிறவாண் முத்தும் வயிடூய நிரையும் பொன்னும் விளைபொருநைத்
துறைவாய் பிறவாக் கடவுள்வேய் வயிற்றிற் பிறந்த தொன்னகரும்.

(இ - ள்.) மறவாள் இலங்கை இறைமகனை - கொலைத் தொழிலை யுடைய வாட்படையுடைய வேந்தனாகிய இராவணனை, வதைத்த பழியால் - கொன்ற பாவத்தினால், அரி மருண்டு - திருமால் மன மயங்கி, அன்று அறவாள் நேமி அளித்தவனை - முன்னொரு காலத்து அறம் பொருந்திய ஒளியினையுடைய திகிரிப்படையினைக் கொடுத் தருளிய இறைவனை, அர்ச்சித்து அகன்ற அணி நகரும் - வழிபட்டு அப்பழியின் நீங்கிய அழகிய திருவிராமேச்சுரமும், நிறம் வாள் முத்தும் வயிடூய நிரையும் - மிக்க ஒளியினையுடைய முத்துக்களும் வயிடூரிய வரிசைகளும், பொன்னும் விளை பொருநைத் துறைவாய் - பொன்னும் விளைகின்ற பொருநைத்துறையின்கண், வேய் வயிற்றில் - மூங்கிலின் வயிற்றில், பிறவாக் கடவுள் பிறந்த தொல் நகரும் - யாண்டும் பிறவாத இறைவன் வந்து பிறக்கப் பெற்ற பழமையை யுடைய திருநெல்வேலியும்.

அரி - திருமாலின் அவதாரமாகிய இராமன். சிவபக்தியுடைய இராவணனைக் கொன்ற பழி திருமாறு இராமன் சிவலிங்கம் தாபித்துப் பூசித்தமையால் இஃது இராமேச்சுரம் எனப் பெற்றது; இவ் வரலாற்றைச் சேதுபுராண முதலியவற்றா லறிக;

"மானன நோக்கியை தேவிதன் னையொரு மாயையால்
கானதில் வவ்விய காரரக் கன்னுயிர் செற்றவன்
ஈனமி லாப்புக ழண்ணல் செய்தவிரா மேச்சுரம்
ஞானமு நன்பொரு ளாகிநின்ற தொரு நன்மையே"

என ஆளுடைய பிள்ளையாரும்,

"பாசமுங் கழிக்க கில்லா வரக்கரைப் படுத்துத் தக்க
வாசமிக் கலர்கள் கொண்டு மதியினான் மால்செய் கோயில்
நேசமிக் கன்பி னாலே நினைமினீர் நின்று நாளும்
தேசமிக் கானி ருந்த திருவிரா மேச்சுரமே"

என அப்பரும் அருளிச் செய்தலுங் காண்க. இத்தலம் பரதகண்டத்தா ரனைவரும் அறிந்து போற்றும் பெருமை யுடையது; திருஞானசம்பந், திருநாவுக்கரசர் என்னும் இருவர் தேவாரம் பெற்ற பாண்டி நாட்டுத் திருப்பதி. வைடூரியம் எனற்பாலது வயிடூயம் என்றாயிற்று. பொருநை-தாம்பிரபன்னி.

"பிறவா யாக்கைப் பெரியோன்"

எனப் பிற சான்றோரும் சிவபிரானைக் கூறுதல் காண்க. துறைவாய் வேய் வயிற்றிற்பிறந்த என இயையும். என்றும் பிறவாத கடவுளும் பிறந்த நகர் என அத்தலத்தின் சிறப்புக் கூறியவாறு. பிறந்த தொன்னகர் - திருநெல்வேலி; வேதசன்மர் என்னும் அன்பர் தமது நிவேதனத்திற்கு வைத்திருந்த நெல்லை வெள்ளங் கவராதவாறு சிவ பெருமான் காத்தமையின் இப்பெய ரெய்திற் றென்ப. இறைவன் மூங்கிலடியில் முளைத்தமையின் இது வேணுவனம் எனவும் கூறப் படும் இஃது, ஐந்து மன்றங்களில் தாமிரமன்றம், உள்ளது; திருஞான சம்பந்தர் பதிகம் பெற்ற பாண்டி நாட்டுத் திருப்பதி. (௩௩)

துளபக் குன்றைக் கொன்றைமுடிக்
குன்ற மாக்குந் தொன்னகரும்
அளகைப் பொறித்த கொடியிளையோன்
மானேர் நோக்கி ஞானைமகள்
புளகக் குன்றை மணந்துமுத
லிருந்த பொருப்பும் போர்விசயன்
வளைவிற் றுக்க வடுக்கிடந்த
முடியோன் மேய வளநகரும்.

(இ - ள்.) துளபக் குன்றைக் கொன்றை முடிக் குன்றம் ஆக்கும் தொல் நகரும் - துளப மாலையை யணிந்த நீலமலை போலுந் திருமாலைக் கொன்றை மாலையணிந்த முடியினையுடைய மாணிக்க மலைபோலுஞ் சிவபிரான் ஆக்கிய பழைய திருக்குற்றாலமும், அளகைப் பொறித்த கொடி இளையோன் - கோழியை எழுதிய கொடியினை யுயர்த்திய முருகக் கடவுள், மான் நேர் நோக்கின் ஆனைமகள் புளகக் குன்றை மணந்து - மான் போன்ற பார்வையினை யுடைய தெய்வயானையாரின் புளகரும்பிய கொங்கையாகிய மலையை அணைந்து, முதல் இருந்த பொருப்பும் - முதலில் வீற்றிருந்தருளிய திருப்பரங்குன்றமும், போர் விசயன் வளைவில் தாக்க - போர் வெற்றியையுடைய அருச்சுனன் வளைந்த வில்லா லடித்ததா லாகிய, வடுக் கிடந்த முடியோன் - தழும்பு கிடந்த முடியினையுடைய இறைவன், மேய வளநகரும் - வீற்றிருக்கும் வளம் பொருந்திய திருவேடகமும்.

குன்று என்பன குறிப்புமொழிகள். அளகு என்பது ஈண்டு கோழியின் சேவலையுணர்த்திற்று. தென்றிசைக்கட் போந்த அகத்தியர் திருக்குற்றாலம் என்னும் பதியை அடைந்த காலையில் அங்குள்ள வைணவர்கள் அவரது சிவவேடப் பொலிவை நோக்கி இகழாநின்றமை யின் அவர் வைணவ ருருக்கொண்டு திருமால் கோயிலையடைந்து திருமா லுருவின் திருமுடியிற் கைவைத்துக் குழைத்துச் சிவவுரு வாக்கினர் என்பது கந்தபுராண முதலியவற்றால் அறியப்படுவது;

"அறுகுமதி நதிபுனையுஞ் செஞ்சடையெம்
பெருமானை யகத்துட் கொண்டு
சிறுகுமுரு வுடையமுனி நாரணனார்
திருமுடிமேற் செங்கை யோச்சிக்

குறுகுகுறு கெனவிருத்தி யொள்ளரக்கிற்
புனைபாவைக் கோல மீது
மறுகுதழ லுற்றென்னக் குழைவித்தோர்
சிவலிங்க வடிவஞ் செய்தான்"

என்னும் கந்தபுராணச்செய்யுள் காண்க. தல விருக்கம் குறும்பலா ஆதலின் இப்பதி திருக்குறும்பலா எனவும் படும். இஃது ஐந்து மன்றங்களுள் சித்திரமன்றம் உள்ளது; திருஞானசம்பந்தர் பதிகம் பெற்ற பாண்டி நாட்டுத் திருப்பதி. முதல் இருந்த பொருப்பு - திருப்பரங்குன்றம்; முருகக்கடவுள் மகேந்திரபுரியிலிருந்து மீண்டபொழுது முதலில் வீற்றிருந்து தெய்வயானையை மணந்த இடமாகலின், இங்ஙனம் கூறினர். முருகவேள் பரனை (சிவனை) அருச்சித்த இடமாகலின் பரங்குன்று எனப்பட்டது; முருகக்கடவுளின் படைவீடாகிய தலங்களுள் முதன்மையானது. இப்பதியில் சுந்தரமூர்த்தி நாயனர் தமிழ் மூவேந்தருடன் சென்று தரிசித்துப் பதிகம் பாடினரென்பது, அவர் பதிகத்துத் திருக்கடைக்காப்பின்கண் "முடியா லுலகாண்ட மூவேந்தர் முன்னே மொழிந்தாறு மோர்நான்கு மோரொன்றினையும், படியா விவைகற்று வல்லார்" என அருளிச் செய்தலா னறியலாகும். இது திருஞானசம்பந்தர், நம்பியாரூரர் என்னும் இருவர் தேவாரம் பெற்ற பாண்டி நாட்டுத் திருப்பதி. வடுக்கிடந்த முடியோன் மேய வளநகர் - திருவேடகம் என்ப; இது திருஞானசம்பந்தர், புனல் வாதத்தில் பாசுரம் எழுதியிட்ட திருவேடு வையையில் எதிர்த்துச் சென்று தங்கிய இடமாதலைச் சமணரைக் கழுவேற்றிய படலத்தா லறிக. இது திருஞானசம்பந்தர் பதிகம் பெற்ற பாண்டி நாட்டுத் திருப்பதி. (ருசு)

கோண்டல் படியுந் திருவாப்ப னூருந் தொழுது குளிர்திரைக்கை
வண்டு படியுங் கமலமுக வையைப் பிராட்டி யெதிர்வணங்கிக்
கண்டு பணிந்து திசை யெட்டும் விழுங்கி யண்டங் கடந்துலகம்
உண்ட நெடியோ னெனவுயர்கோ புரமுன் னிறைஞ்சி யுள்புகுதா.*

(இ - ள்.) கொண்டல் படியும் திருவாப்பனூரும் தொழுது - முகில்கள் படியுஞ் (சோலைசூழ்ந்த) திருவாப்பனூருமாகிய இப்பதிகளை வணங்கி, குளிர் திரைக் கை வண்டுபடியும் கமலமுக வையைப் பிராட்டி - குளிர்ந்த அலைகளாகிய கையையும் வண்டுகள் படியுந் தாமரையாகிய முகத்தையுங் கொண்ட வையையாகிய பெருமாட்டியை, எதிர்கண்டு பணிந்து வணங்கி - எதிரிற் கண்டு வீழ்ந்து வணங்கி, திசை எட்டும் விழுங்கி - எட்டுத் திசைகளையும் விழுங்கி, அண்டம் கடந்து - அண்டத்தைக் கடந்து, உலகம் உண்ட நெடியோன் என - உலகத்தை உண்ட திருமாலைப்போல, உயர்கோபுரம் முன் இறைஞ்சி - உயர்ந்த கோபுரத்தை முன் வணங்கி, உள் புகுதா - உள்ளேசென்று.

கொண்டல் படியும் சோலை சூழ்ந்த என விரித்துரைக்க; கொண்டல் படியும் கோயில் என்றுமாம். ஒரு பாண்டி வேந்தன்

(பா - ம்) * உள்புகுந்தார்.

பொருட்டு இறைவன் ஆப்பினிடத்திற்றோன்றி யருளினமையால் இது திருவாப்பனூர் எனப்பட்டது. கொடுங்குன்று முதலாக எண்ணி வந்தவற்றை இரண்டனுருபு விரித்துத் தொழுது என்பது கொண்டு முடிக்க. திருவாலவாய்க் கோபுரத்தை இறைஞ்சி மதுரைத் திருப்பதியின் உள்புகுந்து என்க. இப்பதியிலே சோமசுந்தரக் கடவுள் புரிந்த அற்புதத் திருவிளையாடல்களை உணர்த்த வெழுந்தது இப்புராணமாகலின் இதன் சிறப்பை இப்புராணத்து ஆண்டாண்டுக் காண்க. இது விராட் புருடனுக்குத் துவாதசாந்தத் தலமாக வுள்ளது; ஐந்து மன்றங்களில் வெள்ளிமன்றம் உடையது; திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் என்னும் இருவர் தேவாரம் பெற்ற பாண்டிநாட்டுத் திருப்பதி. (௩௫)

மறுகு தோறும் பணிந்தெழுந்து வளைந்து வளைந்து பொற்கோயில்
குறுகி விதியாற் பொற்கமலங் குடைந்து செய்யுங் குறைநிறுவி
ஊறுதி பெறவைந் தெழுத்தெண்ணி யூற்று மதத்து நாற்றடந்தோட்
சிறுகு கண்ண வைங்கரத்துச் சித்தி யானை யடிவணங்கா.

(இ - ள்.) மறுகுதோறும் பணிந்து எழுந்து வளைந்து வளைந்து, வீதிகடோறும் விழுந்து வணங்கி எழுந்து பலமுறை வலம் வந்து-பொன் கோயில் குறுகி - பொன்மயமாகிய திருக்கோயிலை அடைந்து, பொற்கமலம் விதியால் குடைந்து-பொற்றாமரையில் விதிப்படி நீராடி, செய்யும் குறை நிறுவி - செய்ய வேண்டிய இன்றியமையா வினைகளைச் செய்து, உறுதிபெற ஐந்தெழுத்து எண்ணி - உறுதிப் பயனை யடையத் திருவைந் தெழுத்தைச் செபித்து, ஊற்று மதத்து நால்தடந்தோள் - கொட்டும் மதநீரையும் பெரிய நான்கு திருத்தோள்களையும், சிறுகு கண்ண ஐங்கரத்துச் சித்தியானை அடி வணங்கா - சிறிய கண்களையும் ஐந்து திருக்கரங்களையு முடைய சித்திவிநாயகரின் திருவடிகளை வணங்கி.

குறை - இன்றியமையாக் கடன். உறுதிபெற எண்ணி என்பதற்கு "ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர் ஞான விளக்கினை யேற்றி நன்புலத் தேனை வழி திறந்து" திட்பமுடன் எண்ணி என்றுரைத் தலுமாம். கண்ண என்பது குறிப்புப் பெயரெச்சம்; அதனை ஐங்கரத்தையு முடைய என இறுதிக்கண் மாறியுரைக்க. (௩௬)

மும்மை யுலகு நான்மறையு முறையா லீன்ற வங்கயற்கண்
அம்மை யடிகண் முடியுறத்தாழ்ந் தன்பு கொடுத்தின் னருள்வாங்கி
வெம்மை யொளிகான் மணிக்கனக விமானத் தமர்ந்த தனிச்சுடரின்
செம்மை யடித்தா மரைவேணிச் சிரமேன் மலரப் பணிந்தேத்தா.

(இ - ள்.) மும்மை உலகும் நான்மறையும் முறையால் ஈன்ற - மூன்று உலகங்களையும் நான்கு மறைகளையும் முறையாற் பெற்ற-அங்கயற்கண் அம்மை அடிகள் முடிஉறத் தாழ்ந்து - அங்கயற்கண்

ணம்மையாரின் திருவடிகள் முடியிற் பொருந்த வீழ்ந்து வணங்கி, அன்பு கொடுத்து இன் அருள் வாங்கி - அன்பினைக் கொடுத்து இனிய அருளைப்பெற்று, வெம்மை ஒளிகால் மணிக்கனக விமானத்து அமர்ந்த- விரும்பத்தக்க ஒளியினை வீசும் மணிகள் அழுத்திய பொன்னாலாகிய விமானத்தின்கண் எழுந்தருளிய, தனிச்சுடரின் செம்மை அடித்தாமரை- ஒப்பற்ற ஒளிவடிவினனாகிய சோமசுந்தரக் கடவுளின் சிவந்த திருவடித் தாமரைகள், வேணிச்சிரமேல் மலரப் பணிந்து ஏத்தா - சடையினை யுடைய முடியின் மேல் மலராநிற்க வணங்கித் துதித்து.

அம்மையடிகள் முடியில் உற அவற்றைத் தாழ்ந்து என்றும், அடித் தாமரை சிரமேல் மலர அவற்றைப் பணிந்து என்றும் விரித்துரைக்க. நிறை அன்புடன் வணங்கி அருள்பெற்று என்பார் 'அன்பு கொடுத்து இன்னருள் வாங்கி' என்றார். அம்மையினருள் பெற்று அப்பனை வணங் கச் சென்றார் என்க. அன்பு கொடுத்து அருள்பெற்று என்றது பரி வருத்தனையணி. (௩எ)

டி வேறு

அன்றிரு போது முண்டி துறந்திரா வறுக்குந் தீவாள்
என்றெழு முன்னீ ராடி நியதிக ளியற்றி யைந்தும்
வென்றுளத் தன்பு பாய விளைமுழு முதலைப் பார்மேல்
மின்றிரண் டென்ன நின்ற விமானமீ திருப்பக் கண்டார்.

(இ - ள்.) அன்று இருபோதும் உண்டி துறந்து-அன்று இரண்டு வேளையும் உணவை நீத்து, இரா அறுக்கும் தீவாள் என்று - இரவைப் போழும் வெவ்விய வாளையுடைய சூரியன், எழுமுன் நீராடி - எழுவ தற்கு முன்னே நீராடி, நியதிகள் இயற்றி - நாள் வினைகளை முடித்து, ஐந்தும் வென்ற உளத்து - ஐம்புலன்களையும் வென்ற உள்ளமாகிய வயலில், அன்புபாய - அன்பாகிய நீர் பாய்தலால், விளை முழுமுதலை - இன்னருள் விளையாநின்ற முழுமுதலை, பார்மேல் மின் திரண்டென்ன நின்ற-நிலவுலகின் மேல் மின் திரண்டு நின்றாற்போல நின்ற, விமான மீது இருப்பக் கண்டார்-விமானத்தின் மேல் இருக்கப் பார்த்தனர்.

அறுக்கும் என்பதற்கேற்ப 'வாள்' என்றார். வாள் - வாட்படை, கிரணம். என்று - சூரியன். வென்ற என்பதன் அகரம் தொக்கது. ஐந்தும்வென்ற என்பதற்கு ஐம்புலவாசைகளாகிய களைகளைக் களைந்து என விரித்துரைத்தலுமாம். முதல் - பயிர், முதற்கடவுள்;

"அன்புறு பத்தி வித்தி யார்வநீர் பாய்ச்சுந் தொண்டர்க்
கின்புரு வான வீச னின்னருள் விளையு மாபோல்"

என இவ்வாசிரியர் நாட்டுப்படலத்தில் உரைத்தமையுங் காண்க.

உள்ளத்தே விளையும் சிவபோகமானது புறத்தே விமானத்தி லிருக்கத் தரிசித்தன ரென்க. (௩அ)

வாசமஞ் சனந்தேன் கன்னல் பைங்கனி மறுவி லானைந்
தாசறு மமுத மைந்து தென்மலை யாரம் வாசம்
வீசுதண்* பனிநீர் வெள்ள மான்மதம் விரைமென் போது
தூசணி மணிப்பூ ணல்ல சுவையமு தின்ன தாங்கா.

(இ - ள்.) வாச மஞ்சனம் தேன் கன்னல் - மணம் ஊட்டிய திருமஞ்சனமும் தேனும் கருப்பஞ்சாறும், பைங்கனி மறு இல் ஆன் ஐந்து - பசிய பழங்களின் சாறும் குற்றமற்ற பஞ்ச கவ்வியமும், ஆசு அறும் அமுதம் ஐந்து - குற்றமற்ற பஞ்சாமிர்தமும், தென்மலை ஆரம்-பொதியின் மலைச்சாந்தும், வாசம் வீசு தண்பனிநீர் வெள்ளம் - மணம் வீசுங் குளிர்ந்த பனிநீர்ப் பெருக்கும், மான்மதம் விரைமென்போது - கத்தூரியும் நறிய மெல்லிய மலர்களும், தூசு அணிமணிப்பூண் - ஆடையும் அழகிய மணிப்பூண்களும், நல்ல சுவை அமுது - நல்ல சுவையினையுடைய அமுதும், இன்ன தாங்கா - இவற்றைக் கையிலேந்தி.

மஞ்சனம் - திருமுழுக்கு; அதன் நீருக்காயிற்று. அமுதம் ஐந்து - பால், தயிர், நெய், தேன், சருக்கரை என்பன. சுவை அமுது - இனிய நைவேத்தியங்கள்; சருக்கரைப் பொங்கல் முதலிய அன்ன வகையும், பிட்டுமுதலிய பலகார வகையும் பால் முதலியனவுமாம். (௩௯)

சதவுருத் திரத்தா லாட்டி மட்டித்துச் சாத்திப் பூட்டிப்
பதமுற மனுவா லட்ட பாலமு தருத்திப் பஞ்ச
விதமுறு வாசம் பாகு வெள்ளிலை யளித்துப் போகம்
உதவுறு தூப தீபா திகள்பல வுவப்ப நல்கா.

(இ - ள்.) சத உருத்திரத்தால் ஆட்டி - சதருத்திர மனுவினால் அபிடேகஞ் செய்து, மட்டித்து - மான்மதத்தைப் பூசி, சாத்தி - மலர் ஆடைகளைச் சாத்தி, பூட்டி - அணிகளைப் பூட்டி, பதம் உற மனுவால் அட்ட பால் அமுதுஅருத்தி - பதமமைய மனுவினால் சமைத்த பாலுணவினை ஊட்டி, பஞ்சவிதமுறு வாசம் பாகு வெள்ளிலை அளித்து-ஐவகையான மணப்பொருள்களையும் பாக்கையும் வெற்றிலையையுங் கொடுத்து, போகம் உதவுறு தூப தீப ஆதிகள்பல - விரும்பிய போகங்களை அளிக்கும் தூபமுந் தீபமு முதலிய பலவற்றை, உவப்ப நல்கா - மகிழ்கூரத் தந்து.

சதவுருத்திரம் - எசுர்வேதத்துட் கூறப்பட்ட மந்திர விசேடம். மேலைச் செய்யுளிற் கூறியவற்றுள் மஞ்சனம் முதல் பனிநீர்காறு முள்ளவற்றால் ஆட்டி, மான்மதம் மட்டித்து, போதும் தூசும் சாத்தி, மணிப்பூண் பூட்டி, சுவையமுது அருத்தி என முறையே கொள்க. பதமுற அட்ட என்றும், மனுவால் அருத்தி என்றும் கூட்டலுமாம். பால் அமுது - பகுதிப்பட்ட அமுது; பாலுடன் கூடிய அமுது என்றும், அட்ட அன்னவகையும் பாலுமாகிய அமுது என்றும் கொள்ளலுமாம்.

(பா - ம்.) *வீசு தெண்.

பஞ்ச விதமுறு வாசம் - ஏலம், இலவங்கம், பச்சைக் கருப்பூரம், சாதிக்காய், தக்கோலம் என்பன. போகம் - இம்மை மறுமை வீட்டின்பங்கள் ;

" விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞான மாகும் "

என்பது முதலிய அருண்மொழிகளா னுணர்க. தீபாதி: தீர்க்கசந்தி.
(௪0)

ஐம்முகச் சைவச் செந்தீ யகத்தினுந் துடுவை யார
நெய்ம்முகந் தருத்திப் பூசை நிரப்பிநால் வேதஞ் சொன்ன
மெய்ம்மனு நூற்றுப் பத்தான் மூவிலை வில்ல நீலங்
கைம்மல ரேந்திச் சாத்திக் கடவுளை யுவப்பச் செய்து.

(இ - ள்.) ஐம்முகச் சைவச் செந்தீ அகத்தினும் - ஐந்து முகங்களை யுடைய சிவபெருமான் திருவுருவமாகிய சிவந்த வேள்வித் தீயின் கண்ணும், துடுவை ஆர நெல் முகந்து அருத்தி - துடுப்பு நிறைய நெய்யை முகந்து வார்த்து ஆகுதி செய்து, பூசை நிரப்பி - சிவபூசையை முடித்து, நால் வேதம் சொன்ன - நான்கு மறைகளுங் கூறிய, மெய்ம் மனு நூற்றுப்பத்தால் - சிவபெருமானது ஆயிரந் திருப்பெயரினால், மூவிலை வில்லம் நீலம் கைம்மலர் ஏந்தி - மூன்று இலைகளையுடைய வில்வத்தையும் நீலோற்பல மலரையும் கையாகிய மலரில் ஏந்தி, சாத்தி - அருச்சித்து, கடவுளை உவப்பச் செய்து - இறைவனை மகிழச் செய்து.

ஐம்முகம் சிவத்திற்கு அடை. சைவச் செந்தீ - சிவாக்கினி. ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் பஞ்சமந்திரங்களால் அருத்தி என்றுமாம். மனு நூற்றுப் பத்தால் - சகத்திரநாம மந்திரத்தால். அகத்தினும் என்னும் உம்மை எச்சப் பொருட்டு. (௪௧)

வாசமஞ் சனநீ ரோடு மந்திர மலர்கைக் கொண்டு
பூசையின் பயனை முக்கட் புண்ணியன் கையி னல்கி
நேசநெஞ் சூறக் கண்க ணிறையநீ ரூறிச் சோர
ஈசனை யிறைஞ்சி யாரு மஞ்சலித் தேத்தல் செய்வார்.

(இ - ள்.) வாச மஞ்சன நீரோடு மலர்கைக் கொண்டு - மணம் ஊட்டிய திரு மஞ்சன நீருடன்மலரையுங் கைக்கொண்டு, மந்திரம் - அவற்றுடன் சிவமூல மந்திரத்தால், பூசையின் பயனை - வழிபாட்டின் பயனை, முக்கண் புண்ணியன் கையில் - மூன்று கண்களையுடைய அறவடிவினனாகிய இறைவன் திருக்கரத்தில், நல்கி-கொடுத்து, நெஞ்சு நேசம் ஊற - உள்ளத்தின்கண் அன்பு சுரக்க, கண்கள் நிறைய நீர் ஊறிச் சோர - கண்கள் நிறைய நீர் சுரந்து ஒழுக, யாரும் -

யாவரும், ஈசனை இறைஞ்சி - சோமசுந்தரக் கடவுளை வணங்கி, அஞ்சலித்து ஏத்தல் செய்வார் - கைகூப்பித் துதிப்பாராயினர்.

நல்குதல் - அர்ப்பணஞ் செய்தல். (சஉ)

[எண்சீரடி யாசிரிய விருத்தம்]

பழியோடு பாச மாறு கெடவாச வன்செய்
பணிகொண்ட வண்ட சரணம்
வழிபடு தொண்டர் கொண்ட நிலைகண்ட வெள்ளி
மணிமன்று ளாடி சரணம்
செழியன்வி ளிந்தி டாத படிமாறி யாட
றெளிவித்த சோதி சரணம்
எழுகடல் கூவி மாமி யுடன்மாம ஞட
விசைவித்த வாதி சரணம்.

(இ-ள்.) பழியொடு பாசம் மாறு கெட - பழியும் பாசமுமாகிய பகை கெட, வாசவன் செய் பணி கொண்ட அண்ட சரணம்-இந்திரன் செய்த பணியினை ஏற்றுக் கொண்டருளிய தேவனே அடைக்கலம்; வழிபடு தொண்டர் கொண்ட நிலை கண்டு - வழிபடும் அடியாராகிய புலிக்கான் முனியும் பதஞ்சலியும் உள்ளத்திற் கொண்ட உறுதியைக் கண்டருளி, மணிவெள்ளி மன்றுள் ஆடி சரணம் - அழகிய வெள்ளியம் பலத்தின்கண் திருக்கூத்தாடி யருளியவனே அடைக்கலம்; செழியன் விளிந்திடாதபடி மாறி யாடல் தெளிவித்த - இராசசேகர பாண்டியன் இறவாவாறு கான்மாறி யாடிக் காட்டியருளிய, சோதி சரணம் - ஒளி வடிவினனே அடைக்கலம்; எழு கடல் கூவி - ஏழு கடல்களையும் அழைத்து, மாமியுடன் மாமன் ஆட இசைவித்த ஆதி சரணம் - மாமி யாகிய காஞ்சனமாலையுடன் மாமனாகிய மலயத்துவசனும் ஆடுதற்கு அவனை அழைத்தருளிய கடவுளே அடைக்கலம்.

இந்திரன் உற்ற பழியையே யன்றி அவனது அனாதி பாசத்தையும் போக்கினரென்பார் 'பழியொடு பாச-மாறு கெட' என்றார். மன்றுள் ஆடி: பெயர். இச்செய்யுளிலும், வருஞ் செய்யுள்களிலும் கூறப்படுகின்ற வரலாறுகளை இப்புராணத்து ஆண்டாண்டுக் காண்க. (சங)

வெங்கரி யாவி சோர நரசிங்க வாளி
விடுவேட ரேறு சரணம்
புங்கவர் தேற வாதி மறையுட் கிடந்த
பொருளோது போத சரணம்
வங்கம தேறி வேலை மகரம்பிடித்த
வலையாண் மணாள சரணம்
கங்கண நாகம் வீசி நகரெல்லை கண்ட
கறைகொண்ட கண்ட சரணம்.

(இ - ள்.) வெம் கரி ஆவி சோர - (சமணரேவிய) கொடிய யானையின் உயிர் நீங்க, நரசிங்கவாளி விடு வேடர் ஏறு சரணம் - நரசிங்க பாணத்தை விட்ட வேடரேறு போலுந் திருக்கோல முடையவனே அடைக்கலம்; புங்கவர் தேற - கண்ணுவர் முதலிய முனிவர்கள் தெளிய, ஆதி மறையுள் கிடந்த பொருள் ஓது போத சரணம் - முதனூலாகிய வேதத்தினுள் மறைந்து கிடந்த பொருளை அருளிச் செய்த ஞான வடிவினனே அடைக்கலம்; வங்கமது ஏறி - தோணியில் ஏறி, வேலை மகரம் பிடித்த - கடலிலுள்ள சுறுமீனைப் பிடித்த, வலையாள் மணாள சரணம் - நெய்த னிலத்தலைவன் புதல்வி யாகிய இறைவியை மணந்த மணவாளனே அடைக்கலம்; கங்கண நாகம் வீசி நகர் எல்லை கண்ட - கையிற் கங்கணமாகிய பாம்பை விடுத்து நகரின் எல்லையைக் காட்டி யருளிய, கறை கொண்ட கண்ட சரணம் - நஞ்சக் கறையினைக் கொண்டருளிய திருமிடற்றினை யுடையவனே அடைக்கலம்.

வங்கமது, அது: பகுதிப்பொருள் விகுதி. மகரம் பிடித்த வலையாள் மணாள - மகரத்தைப் பிடித்து அதனால் வலையாளை மணந்த மணாள என்க. (சச)

மைந்தனி லாழி மேரு மகவா னகந்தை
　　மடிவித்த நித்த சரணம்
சுந்தர நாம வாளி பணிகொண்டு கிள்ளி
　　தோகைவென்ற வீர சரணம்
வெந்திறன் மாறன் முன்க லுருவானை கன்னன்
　　மிசைவித்த சித்த சரணம்
முந்திய கல்லின் மாதர் பெறவட்ட சித்தி
　　முயல்வித்த யோகி சரணம்.

(இ - ள்.) மைந்தனில் - புதல்வனாகிய உக்கிரகுமார வழுதியினால், ஆழிமேரு மகவான் அகந்தை மடிவித்த நித்த சரணம் - கடலின் செருக்கையும் மேரு மலையின் செருக்கையும் இந்திரன் செருக்கையும் அழித்தருளிய அழிவில்லாதவனே அடைக்கலம்; சுந்தர நாமவாளி பணிகொண்டு - சுந்தரப் பேரம்பினை ஏவல் கொண்டு, கிள்ளி தொகை வென்ற வீர சரணம் - விக்கிரம சோழனுடைய படைத் தொகுதியை வென்றருளிய வீரனே அடைக்கலம்; வெந்திறல் மாறன் முன் - மிக்க வலியினையுடைய அபிடேக பாண்டியன் முன்னர், கல் உரு ஆனை கன்னல் மிசைவித்த சித்த சரணம் - கல்லானைக்குக் கரும்பினை அருத்திய சித்தனே அடைக்கலம்; முந்திய கல்லின் மாதர் அட்டசித்தி பெற - முற்பட்ட கல் வடிவாகக் கிடந்த இயக்கிய ரறுவரும் அட்டமாசித்தி களையும் அடைய, முயல்வித்த யோகி சரணம் - செய்வித்த யோகியே அடைக்கலம். (சரு)

திருமணி மைந்தன் மைந்தன் முடிசூட விற்ற
　　திருமல்கு செல்வ சரணம்
மருமக னென்று மாம னுருவாய் வழக்கு
　　வலிபேசு மைந்த சரணம்

குருமொழி தந்து நாரை குருவிக்கு வீடு
குடிதந்த வெந்தை சரணம்
வருபழி யஞ்சி வேட மகனுக் கிரங்கு
மதுரா புரேச சரணம்.

(இ - ள்.) மைந்தன் மைந்தன் முடிசூட - வீரபாண்டியன் புதல்வனாகிய அபிடேக பாண்டியன் முடி சூடும் பெருட்டு, திருமணி விற்ற திருமல்கு செல்வ சரணம் - சிறந்த மாணிக்கங்களை விற்ற சிறப்பு மல்கிய செல்வனே அடைக்கலம்; மருமகன் என்று மாமன் உருவாய் - மாமன் வடிவெடுத்து வந்து (ஒரு வணிகச் சிறுவனை) மருமகனென்று கூறி, வழக்கு வலி பேசும் மைந்த சரணம் - வன்மையாக வழக்குப் பேசிய வீரனே அடைக்கலம்; குருமொழி தந்து - உபதேச மொழியை அருளி, நாரைக் குருவிக்கு - நாரைக்குங் கரிக்குருவிக்கும், வீடு குடி தந்த எந்தை சரணம் - வீட்டுலகினைக் காணியாகக் கொடுத்தருளிய எம் தந்தையே அடைக்கலம்; வருபழி அஞ்சி - தென்னனுக்கு வரும் பழியினை அஞ்சி, வேட மகனுக்கு இரங்கும் மதுராபுர ஈச சரணம் - வேட மகனுக்கு இரங்கியருளிய மதுரைப் பதியின் தலைவனே அடைக்கலம்.

முன்னுள்ள மைந்தன் என்பதற்கு வீரன் என்று பொருள் கொள்க; மேலைச் செய்யுளிற் கூறிய மைந்தனுக்கு மைந்தன் மைந்தனாகியவன் என்றுரைத்தலுமாம் புரேச: குணசந்தி. (௪௬)

விருத்தகு மார பால வருண்மேனி கொண்டு
விளையாடு மண்ணல் சரணம்
குரத்தியை நச்சு பாவி யுயிருண்டு சோரி
குடைவாகை வேல சரணம்
கருத்திசை பாண னாளி னிசைபாடி மாறு
களைவேத கீத சரணம்
நரித்திரண் மாவை மீள நகரங்கலங்க
நரிசெய்த நம்ப சரணம்.

(இ - ள்.) விருத்த குமார பால அருள் மேனி கொண்டு விளையாடும் அண்ணல் சரணம்-விருத்தகுமார பாலராகிய அருட் டிருமேனி கொண்டு திருவிளையாட்டுப் புரியும் அண்ணலே அடைக்கலம்; குரத்தியை நச்சு பாவி உயிர் உண்டு - ஆசிரியன் மனைவியாகிய மாணிக்கமாலையை விரும்பிய பாவியாகிய சித்தன் உயிரை உண்டு, சோரி குடைவாகை வேல சரணம் - அவன் குருதியில் மூழ்கிய வெற்றி மாலையை யணிந்த வேற்படையோனே அடைக்கலம்; கருத்து இசை பாணன் ஆளின் - நின் திருவடியில் கருத்தை இசைத்த பாணபத்திரன் அடிமைபோலச் சென்று, இசை பாடி மாறு களை வேதகீத சரணம் - இசை பாடி அவன் பகைவனாகிய ஏமநாதனை ஓட்டிய வேதகீதனே அடைக்கலம்; நரித் திரள் மாவை-நரிக் கூட்டங்களாகிய குதிரைகளை,

நகரம் கலங்க மீள நரி செய்த நம்ப சரணம் - நகரிலுள்ளவர்கள் கலங்குமாறு மீளவும் நரிகளாக்கிய நம்பனே அடைக்கலம்.

நரித் திரளைக் குதிரைகளாக்கி அவற்றை மீள நரிகளாக்கிய என்க. (கூஎ)

முறபக லாறி ரண்டு சிறுபன்றி யுண்ண
முலைதந்த வன்னை சரணம்
பொற்புறு மாய வாவை யடலேறு கொண்டு
பொருதட்ட சிட்ட சரணம்
பற்பல ஞால மெங்கு மடையப் பிரம்பு
படுமட்ட மூர்த்தி சரணம்
கற்பினொ ருத்தி மன்ற லறிவிக்க மூன்று
கரிதந்த வள்ளல் சரணம்.

(இ - ள்.) முற்பகல்-முன்னொரு காலத்தில், ஆறிரண்டு சிறுபன்றி உண்ண முலை தந்த அன்னை சரணம் - பன்னிரண்டு பன்றிக் குட்டிகள் பால் பருகுமாறு முலை கொடுத்தருளிய தாயே அடைக்கலம்; பொற்பு உறு மாய ஆவை - அழகுமிக்க மாயப்பசுவினை, அடல் ஏறு கொண்டு - வலிய திருநந்தி தேவராகிய ஆனேற்றினால், பொருது அட்ட சிட்ட சரணம்-போர்புரிந்து கொன்ற மேலானவனே அடைக்கலம்; பற்பல ஞாலம் எங்கும் அடைய-பலப்பல ஞாலங்களனைத்தும் வடுவினைப்பெற, பிரம்புபடும் அட்ட மூர்த்தி சரணம்-பிரம்படிபட்ட அட்ட மூர்த்தியே அடைக்கலம்; கற்பின் ஒருத்தி மன்றல் அறிவிக்க - கற்பினையுடைய ஒரு வணிகமாதின் மணத்தை அவள் மாற்றாளுக்கு அறிவிக்க, மூன்று கரி தந்த வள்ளல் சரணம் - மூன்று சான்றுகள் கொடுத்தருளிய வள்ளலே அடைக்கலம்.

ஞாலமெங்கும் வடுப்படுதற்குக் காரணங் கூறுவாராய் 'அட்ட மூர்த்தி' என்றார். (சுஅ)

அளவைக ளாலும் வேத முதனூல் களாலு
மயன்மாய னாலு* மளவாக்
களவையு னக்கு நாம குணசின்ன சாதி
கதிசெய்தி யில்லை யவையும்
உளவென யாம றிந்து துதிசெய்ய வேகோ
வுலகஞ்செ யன்பி னெளிதாய்
விளையருண் மேனி கொண்டிவ் வறுபத்து நாலு
விளையாடல் செய்த படியே.

(இ - ள்.) அளவைகளாலும் வேத முதல் நூல்களாலும் - காட்சி முதலிய அளவைகளாலும் வேதங்களாகிய முதனூல்களாலும்,

(பா - ம்.) *அறியாக்களவை.

அயன்மாயனாலும் அளவாக் களவை - அயனாலுந் திருமாலாலும் அளந்து காணமுடியாத மறைவையுடையை; உனக்கு நாமம் குணம் சின்னம் சாதி கதி செய்தி இல்லை - உனக்குப் பெயரும் குணமும் குறியும் சாதியும் பிறப்பும் தொழிலும் இல்லையே; யாம் அறிந்து துதி செய்யவே கொல் - யாம் அறிந்து துதிப்பதற்குப் போலும், உலகம் செய் அன்பின் எளிதாய் - உயர்ந்தோர் செய்யும் அன்பிற்கு எளிதாக, அவையும் உள என - அவையும் நினக்கு உள்ளன வென்று கூறுமாறு, விளை அருள்மேனி கொண்டு - விளையும் அருட்டிருமேனி கொண்டு, இவ்வறுபத்து நாலு விளையாடல் செய்தபடி - இந்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களுஞ் செய்தருளிய தன்மை.

வேதத்தை வேறு பிரித்தமையின் அளவைகள் என்றது காட்சி அநுமானங்களை. வேதம் முதலாகிய நூல்களாலும் என்றுமாம்.

"மறையினா லயனால் மாலால் மனத்தினால் வாக்கால் மற்றும்
குறைவிலா வளவி னாலும் கூறொணா தாகி நின்ற
இறைவர்"

என்று சிவஞான சித்தியார் கூறுவதுங் காண்க. களவை-களவினையுடையை; ஐ: முன்னிலை விகுதி. "ஒளிக்குஞ் சோரனை" என மாணிக்க வாசகரும், "வேதங் கிடந்து தடுமாறும் வஞ்சவெளி" என இந் நூலாசிரியரும் கூறுதல் காண்க. நீ பற்பல நாம குண சின்ன சாதி கதி செய்தி உடையையாய் விளையாடல் செய்தபடி என விரிக்க. (௪௬)

அறுசீரடி யாசிரிய விருத்தம்

எனத்துதித்த வசிட்டாதி யிருடிகளைக்
குறுமுனியை யெறிதே னீப
வனத்துறையுஞ் சிவபெருமா னிலிங்கத்தின்
மூர்த்தியாய் வந்து நோக்கிச்
சினத்தினைவென் றகந்தெளிந்தீர் நீர்செய்த
பூசைதுதி தெய்வத் தானம்
அனைத்தினுக்கு மெனைத்துயிர்க்கு நிறைந்துநமக்
கானந்த மாயிற் றென்னா.

(இ - ள்.) எனத் துதித்த வசிட்ட ஆதி இருடிகளை - என்று துதித்த வசிட்டர் முதலிய முனிவர்களையும், குறுமுனியை - அகத்திய முனிவனையும், எறிதேன் நீபவனத்து உறையும் சிவபெருமான் - தேன் பொழியுங் கடம்பவனத்தின்கண் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள், இலிங்கத்தில் மூர்த்தியாய் வந்து நோக்கி - சிவலிங்கத்தினின்றும் உருவத் திருமேனியுடன் வெளிவந்து பார்த்து, சினத்தினை வென்று அகம் தெளிந்தீர் - சினத்தை வென்று உள்ளந் தெளிந்தவர்களே, நீர் செய்த பூசை துதி - நீவிர் செய்த வழிபாடும் துதிமொழியும், தெய்வத்தானம் அனைத்தினுக்கும் எனைத்து உயிர்க்கும் நிறைந்து - தெய்வம் இருக்கும் திருப்பதிகள் அனைத்திற்கும் உயிர்கள் அனைத்திற்கும் நிறைந்து, நமக்கு ஆனந்தம் ஆயிற்று என்னா - நமக்கு இன்பத்தைத் தந்தன என்று.

வசிட்டாதி : தீர்க்க சந்தி. மூர்த்தியாய்-சகளமூர்த்தியாய். சினம் என்றது காமம் முதலியவற்றுக்கும் உபலக்கணம். பூசையும் துதியும் என எண்ணும்மை விரிக்க. தெய்வத்தானம் அனைத்தினும் நிறையுங் காரணத்தை மூர்த்தி விசேடத்திற் காண்க. எல்லாவுயிருள்ளும் விரவியுடனிற்றலால் அனைத்துயிர்க்கும் நிறைந்த தென்க. ஆயிற்று - ஆயின. (௫௦)

சிறந்தவருள் சுரந்துகுரு முனியைவரு
கென்றுகரஞ் சிரமேல் வைத்துப்
புறந்தடவி யெமையொப்பாய் நீயேநின்
கற்புடைய பொலங்கோம் பன்னாள்
அறந்தழையு முமையொப்பா ளாதலினா
லுமையொப்பா ரகிலத் தியாரே
நிறைந்ததவம் புரிந்தோனுந் தவத்துறுதி
பெற்றோனு நீயே யன்றோ.

(இ - ள்.) சிறந்த அருள் சுரந்து - மேம்பட்ட திருவருள் சுரந்து, குறுமுனியை வருக என்று கரம் சிரமேல் வைத்து-அகத்திய முனிவனை வரக்கடவாயென்று(அருகில்அழைத்து)திருக்கரத்தை அவன் முடியின் மேல் வைத்து, புரம் தடவி - முதுகினைத் தடவி, நீயே எமை ஒப்பாய்- நீயே எம்மை ஒப்பாய்: நின் கற்புடைய பொலம் கொம்பு அன்னாள்- நினது கற்புடைய பொற்கொம்பு போன்ற உலோபாமுத்திரையே, அறம் தழையும் உமை ஒப்பாள் - முப்பத்திரண்டு அறங்களையும் வளர்க்கும் உமையைப் போல்வாள்; ஆதலினால் உமை ஒப்பார் அகிலத்து யார்-ஆகையால் உம்மை ஒப்பவர் உலகத்தின்கண் வேறு யாவர் (ஒருவருமில்லை); நிறைந்த தவம் புரிந்தோனும் - நிறைந்த தவஞ் செய்தவனும், தவத்து உறுதி பெற்றோனும் நீயே அன்றோ-அத்தவத்தினாற்பயனடைந்தோனும் நீயே யல்லவா?

வருகென்று : அகரந் தொக்கது. அகத்தியன் இறைவனையொப்பானென்றும், உலோபாமுத்திரை உமையொப்பாளென்றும் மேல் கீரனுக்கிலக்கண முபதேசித்த படலத்திலும் கூறியிருத்தல் காண்க. (௫க)

உனக்கரிய வரமினியாந் தருவதேவ
னுனக்கரிதா வொன்றுங் காணேம்
எனக்கருணை செய்திலிங்கத் திடையிச்சை
வடிவாய்ச்சேன் றிருந்தா னாகத்
தனக்கரிய வரநல்குஞ் சிவலிங்கந்
தன்பெயராற் றாபித் தான்றன்
இனக்கருணை வசிட்டாதி முனிவர்களுந்
தம்பெயரா லிலிங்கங் கண்டார்.

(இ-ள்.) உனக்கு அரிதா ஒன்றும் காணேம் - உனக்கு அரிதாக ஒன்றையுங் கண்டிலேம் ஆகலின், உனக்கு அரிய வரம் இனி யாம் தருவது எவன்-உனக்கு அரிய வரத்தினை இனி யாம் தருவது எங்ஙனம், எனக் கருணை செய்து - என்று அருள்புரிந்து, இச்சை வடிவாய் இலிங்கத்திடை சென்றிருந்தானாக - இச்சை வடிவாய்ச் சிவலிங்கத்தினுள் சென்றிருந்தனனாக; தனக்கு அரிய வரம் நல்கும் சிவலிங்கம் - (அக்குறுமுனிவன்)தனக்கு அரிய வரத்தினை நல்கியருளுஞ் சிவலிங்க மொன்றினை, தன்பெயரால் தாபித்தான்-தனது பெயரினால் நிறுவினான்; தன் இனக் கருணை வசிட்டாதி முனிவர்களும் - அவன் இனமாகிய அருளையுடைய வசிட்டன் முதலிய முனிவர்களும், தம் பெயரால் இலிங்கம் கண்டார் - தந்தம் பெயரினால் ஒவ்வோ ரிலிங்கத்தினை நிறுவினார்கள்.

இச்சைவடிவு - சுதந்திர வடிவு. (௯௨)

ஏத்தியருச் சனைசெய்து நினைவிலரி
  தாயன்பி லெளிய வட்ட
மூர்த்தியையங் கயற்கண்ணி யன்பனைமுப்
  போதும்போய் முடிதாழ்ந் தின்பம்
பூத்தமனத் தினராகிக் கருவித்தேன்
  பொதிந்தசிறு புட்போ லந்த
மாத்தலனில் வசிட்டாதி முனிவர்தபோ
  வனஞ்செய்து வதிந்தார் மன்னோ.

(இ-ள்.) ஏத்தி அருச்சனை செய்து - (தாம் நிறுவிய சிவலிங்கங் களைத்) துதித்து அருச்சித்து, நினைவில் அரிதாய் அன்பில் எளிய அட்ட மூர்த்தியை - நினைத்தற்கு அரிதாகி அன்பிற்கு எளிய அட்ட மூர்த்தியும், அங்கயற்கண்ணி அன்பனை - அங்கயற்கண்ணம்மையின் தலைவருமாகிய சோமசுந்தரக் கடவுளை, முப்போதும் போய் முடி தாழ்ந்து - மூன்று காலங்களிலுஞ் சென்று தலை வணங்கி, இன்பம் பூத்த மனத்தினராகி - இன்பம் நிறைந்த மனத்தினை யுடையராய், கருவித் தேன் பொதிந்த சிறு புள்போல்-மிக்க தேனடையில் மொய்த்த வண்டுகள் போல, அந்த மாத் தலனில் - அந்தச் சிறந்த பதியின்கண், வசிட்ட ஆதி முனிவர் - வசிட்டர் முதலிய முனிவர்கள், தபோவனம் செய்து வதிந்தார் - தவவனமொன்றாக்கி அதிற் றங்கி யிருந்தனர்.

கருவி - தொகுதி. சிறுபுள் - ஈ, வண்டு. தேனிலே மொய்த்த வண்டு அதனை நுகர்ந்து சலனமற்றிருந்தாற் போன்று சிவானந்தம் நுகர்ந்து சலிப்பற் றிருந்தனர் என்க. (௯௩)

திருவாலவாய்க் காண்டம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் ௩௩௬௩.

திருவிளையாடற் புராணம் முற்றுப்பெற்றது.

பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்திற்கு நடுக்காவேரி மு. வேங்கடசாமி நாட்டார் எழுதிய உரை முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

[எண் : பக்க எண்]

அகலிய நுதலின ௨௮௮
அகலிலான் பரவி ௧௯௨
அக்கர நாற்பத் ௩௯
அக்கிவாய் மடுத்தவே ௪௫௭
அக்கீர வேலை ௧௦௮
அக்குறிகளின் மேம்பட்ட ௧௫௭
அக்கொடுந் தொழிலு ௨௫௧
அங்கண ருரக ௧௪
அங்கண்மா நகர்கண் ௪௭௬
அங்கியை மதிமர ௭
அங்கிருந் தநாதி ௧௯௩
அங்குள கிளைஞர் ௪௮௪
அங்குள பரிச ௪௮௬
அங்கெழுந் தருளி ௪௨௫
அச்சமுற் றுவகை ௩௭[illegible]
அஞ்செவியி ௫௧[illegible]
அடிபணிந் தேத்தி ௧௫௯
அடிமுடி விலங்கும் ௫௨௦
அடியார் பதிஞ ௪௬௧
அடுத்த தக்கணத் ௪௨௯
அடுத்தாயிரங் குண்டோ ௩௩௮
அடுத்திட் வடுத்திட ௨௧௧
அடுத்திடுவர் கண்ணி ௨௭௧
அடுத்துநர் மிருக்குஞ் ௧௬௯
அடைந்து பணிந்தரு ௧௭
அடையாளம் படவொருவ ௩௭௮
அட்ட மூர்த்திதன் ௧௩௪
அட்டில் புக்கன ௩௧௮
அணிகிளர் கழுத்தில் ௨௯௭
அண்ட கோடிக ௨௬௩
அண்ட நாயகன் ௪௩௬
அண்டமெலா மாதார ௨௮௧
அண்ட ருக்கரி ௩௨௨
அண்டவான் றருமேற் ௫௬
அண்ணலரி மருத்த ௧௯௯
அண்ணல் வேதிய ௨௨௦
அத்த கற்ற ௧௦௭
அத்தகு வருண ௩௮
அத்தகைய பாண்டியருட் ௧௪௫
அத்தருவே யாலநெடுங் ௩௫௩
அத்தவோ கல்லாக் ௯௩௧
அத்தன வணிகற் ௪௮௧
அந்தணர் பெருமான் ௩௯௮
அந்தமா விலிங்கத் ௪௭௩
அந்தமி லழகன்கூட ௧௬௫
அந்தமி லழகன்றன்னை ௨௫௩
அந்தமில் கேள்வி ௧௩௬
அந்த மூவிலை ௪௪௯
அந்த வேலை ௪௪௫
அந்த வேலையிலாதி ௯௨
அந்த வேலையின் ௨௪
அந்த வோலைப் ௨௩௭
அந்நிலை யிளையாள் ௫௦௬
அந்நிலை வதுவைக் ௧௯௧
அந்நெடு மேரு ௪௭௫
அப்பெருஞ் சலதி ௫
அப்பெ ரும்புனற் ௮௦
அப்பொழு தரசன் ௨௮௬
அமுத முண்டவ ௩௨௪
அம்மகனை முடிசூட்டி ௩௮௫
அம்முனை வாளி ௨௪
அரசனிடைப் புகுந்துள்ள ௧௫௦
அரச னியம்பல ௧௮
அரணமுந் துருக்கமு ௨௯௦
அரவி னன்னில ௨௦
அரவின்வாய்ப் பட்ட ௫௦௦
அராமுக மனைய ௧௬௬
அரிகணை தொடுத்து ௨௪௭
அருகிருக்குந் தொல்ல ௩௨௪
அருந்ததி யனை ௫௦௭
அருந்தமிழ்ப் பாண்டி ௪௦௯
அருமறை வணங்குங் ௪௧௫
அருளினு லுலக ௩௫௮
அரைசிய லமைச்சு ௨௪௨
அலர்ந்த வெண்டிரை ௧௭௩
அல்லது வான்மீ ௧௮௭
அல்லதையென்றமராலென் ௧௫௩
அல்லலுற் றழுங் ௫௦௩
அவுணரிற் கள்வ ௫௨௧
அவ்வண்ணஞ் செய்வ ௪௪௫
அவ்விடைச் சிறார்கள் ௪௭௧
அவ்விடைத் தரு ௫௦௪
அவ்விடை வருகின் ௪௧
அவ்விரு வோருங் ௪௪௨
அவ்வுரைதன் செவிநுழைந் ௧௫௨
அவ்வேலை மனக்கினிய ௩௨௬

அவ்வேலை யன்புடையா	௧௯௩	ஆரவை குறுகி	௧௦௦
அழுக்கடைந்த பழந்துணி	௩௪௮	ஆரிய மிந்தப்	௨௯௪
அழைமி னீண்டென	௪௩௧	ஆலய மருங்குவல	௨௧௩
அளக்கில் கேள்வியா	௯௫	ஆல வாயுடை	௧௭௮
அளந்து சூழ்திரு	௧௯	ஆலுமறைச் சிரமுடியா	௩௪௮
அளவைக ளாலும்	௫௪௫	ஆவலந்தனே னடிய	௧௧௬
அறந்தரு கோலான்	௩௦௬	ஆவிமுன் னேகத்	௨௮
அறனிலா னிழைத்த	௧௧௧	ஆழ மவ்விடைச்	௮௧
அறிவுடைக் காட	௧௬௧	ஆளியே றன்னவ	௪௮௬
அற்றைநா ளாதி	௪௭௫	ஆளுடைப் புகலி	௪௭௮
அனற்கணு னேக்கி	௧௦௮	ஆறினே டிரண்டடுத்த	௪௫௭
அனைய செய்திரென்	௪௩௫	ஆற்றன்மிகு பிரதாப	௧௪௪
அனைய நீண்மதி	௧௨	ஆன மந்திரக்	௨௬௩
அனையனை மறுக்கஞ்	௩௭௦	இங்கிவர் தோற்ற	௩௯௭
அன்றிர வுண்டி	௫௦௨	இசைத்தவைங் கதியுஞ்	௨௮௨
அன்றிரு போது	௫௩௯	இச்சுழி யுடைய	௨௯௯
அன்றுகுருந் தடியிலடி	௩௮௭	இச்சை யாலவ	௧௭௫
அன்று கேள்வியா	௪௩௨	இச்சை யால்வடி	௨௭௩
அன்றுசிறுத் தொண்டரிடும்	௩௮௧	இடும்பைநோய் வெள்ள	௩௫௫
அன்று துயிலும்	௨௩௭	இடைய ருதுநம்	௪௪௭
அன்றெனைக் கணை	௫௦௩	இத்த கைப்பல	௨௧௮
அன்னகூர் வாளி	௨௫	இத்தகையோர் நிகழ்	௧௯௮
அன்னது தெரிந்து	௧௬௮	இத்தனை மாக்களு	௯
அன்ன மன்னவ	௭௪	இத்தனை யெல்லாஞ்	௩௭௧
அன்னதொரு காரண	௪௩௯	இத்தன்மைய ளுகிக்கலை	௧௪௦
அன்னதொர் நாமம்	௫௪	இந்திய னுதலினு	௨௯௩
அன்னவி யன்பொழின்	௫௪	இந்திரன்றன் பழி	௧௪௩
அன்னவேடு முறையினே	௪௬௦	இந்நதி வெண்முத்	௫௩௨
அன்னுன் குமரன்	௪௦௩	இந்நிலை யலமரு	௨௯௨
அன்னைமூலைத் திம்பாலி	௩௫௧	இந்நிலை யூரி	௩௪௩
அன்னையெனத் தன்பாலின்	௩௫௦	இப்பெரும் தடமே	௧௨௨
ஆங்கவ ளப்போ	௩௫௫	இம்பருல குள்ளவல	௨௬௯
ஆசை வெம்பவ	௨௨௪	இம்பர்வீடளிக்குந்	௬௭
ஆடுவார் சாமமெனத்	௩௫௪	இம்மா நகருள்ளாரொரு	௩௮
ஆண்டகை யவர்போ	௨௮௩	இம்மாயஞ் செய்தானை	௩௨௫
ஆண்டகை வனப்பை	௩௬௨	இயங்கு மாதவத்	௧௨௮
ஆதகா திதுவென்	௪௧௮	இயம்பருந் திறலி	௪
ஆதி சைவனு	௨௦௯	இயம்பரும் பதிகடம்	௧௫௭
ஆதி யாலயத்	௪௭௯	இரக்கமி லிழிந்த	௧௯௧
ஆத்தராய் மருங்குறை	௨௯௧	இரந்த வன்பருக்	௪௩௪
ஆயமா தவர்பா	௪௧௨	இருங்கலை வல்லோ	௪௭
ஆய பட்டினத்	௧௭௩	இருணி றைந்த	௧௦௭
ஆய போதிளங்	௪௫௨	இருந்த மாதவச்	௧௨௯
ஆயமா தவர்பா	௪௧௨	இருமைக்குந் துணையாய்	௩௦௭
ஆயவளம் பதியதனி	௧௯௬	இருவகைச் சாரியு	௨௯௨
ஆய வாறென்	௪௮	இருவகைப் புறவுரை	௧௨௯
ஆயி ரம்பொரி	௩௧௯	இருவருந் துருவ	௧௩௭
ஆயிரம் வாளி	௨௭	இருவரு மீணடு	௪௪௪

இலக்கண மிவனுக்	௧௨௩	ஊகங் தவழும்	௪௬௪
இவனெடுத் தமற்	௧௩௨	ஊடினர் போல	௫௭
இவ்வண்ண மிருக்கு	௩௯௭	ஊரா ருனைச்சிரிப்ப	௨௫௮
இவ்வண்ண மிவரொருகா	௩௫௩	ஊரெலா மட்ட	௨௪௫
இவ்விள வேனிற்	௮௯	ஊழின் வரியா	௪௬௨
இளம்புளிங் தயிர்வி	௮௮	ஊழ்வினை வலியா	௪௮௨
இறக்கினு மின்றே	௨௪௫	ஊளை யோசைகேட்	௩௧௫
இற்றை வைகலுக்	௪௫௦	ஊனிட ரகன்றே	௩௭
இனையதுன் றிருவுள்	௧௨௭	ஏங்கிருந் தந்த	௪௧௧
இனையதூ சிவன்பா	௩௦௫	எடுத்தசொன் மாறி	௧௧௦
இனையர்போல் வந்து	௪௪	எடுத்ததிண் கரைக	௩௬௩
இன்றிவீர்க் கனுமா	௩௯௪	எடுத்த பொற்சுமை	௨௦௭
இன்றுநீ ரிட்ட	௪௭௧	எடுத்தமண் கூடை	௩௫௬
இன்ன செய்கையி	௨௦௬	எண்ணி லாரிடத்	௨௦௪
இன்ன மிறத்தா	௪௬௯	எந்தலூ ரெந்தச்	௫௦௦
இன்னமு மாலவாயெம்	௧௬௨	எந்தா யனைத்துலகு	௨௫௫
இன்னமும் பன்னு	௪௭௩	எந்தையிவ் விகழ்ச்சி	௯௮
இன்னவாம் பரிக	௨௮௫	எந்தையெம் பெருமா	௪௧௯
இன்னிய மதிர்ந்தன	௨௦௯	எம்மொழி தேறி	௪௪௪
ஈச னுடல்வெம்	௩௧௧	எய்த வாளி	௨௨
ஈட்டுவஞ்ச நெஞ்சரே	௪௫௬	எய்தி வெள்ளி	௧௦௫
ஈறி லாச்சிவ	௩௨௧	எரி மருத்தவனி	௧௬௩
ஈனர் தாஞ்சடத்	௪௨௭	எல்லை கூறிய	௨௩௪
உங்கண் மந்திர	௪௫௪	எவ்வண்ண வேதமிகு	௨௯௯
உங்களேடு மெங்களேடு	௪௬௧	எழில்புனை யதுல	௫
உடம்பினு லிரண்டே	௫௦௬	எழுந்தன னுறங்கி	௪௯௪
உடுத்த சுற்றமுங்	௩௦௯	எழுந்தா ருடைய	௨௩௮
உடைய நாயகன்	௧௨௭	எறிவ லைப்படு	௧௮௨
உடையுங் கோவண	௨௧௭	எற்றி தாலெனத்	௧௮௧
உணர்ந்த கேள்வியா	௯௬	எனத்துதித்த வசிட்டாதி	௫௪௬
உண்டவ ளொருத்தி	௮௫	என்ற வறவோ	௫௧௨
உத்தர திசைப்புரவி	௨௬௯	என்ற வாதரங்	௩௧௦
உம்மைநா னடுத்த	௩௭௪	என்றவ் வாதவூர்	௨௦௪
உயர்ந்த சாதியுங்	௧௮௪	என்றி ரங்குவோ	௨௫௯
உரகத வாரங்	௨௮௬	என்றிரங் திரங்கு	௨௭௯
உரியவன் நீமுன்	௫௦௦	என்றுபல முறையாலே	௩௮௩
உலகினுட் பெருகி	௧௪௨	என்று வாய்திறங்	௨௩௧
உலத்தை வென்றதோ	௮௨	என்றேறிய புகழ்	௩௩௨
உலர்ந்த நெஞ்சு	௯௭	என்னவதிசய மோ	௧௪௯
உவகிடக் கலணை	௩௦௪	என்னு யகனே	௨௩௬
உள்ளத்தா சங்கை	௩௬௯	என்னு யகனேயோ	௪௮௯
உள்ள மாரநாங்	௩௧௩	என்னு விறைஞ்சி	௨௩௬
உள்ளம் வேறுபட்	௨௦௭	என்னிவன் பரிமா	௨௪௯
உள்ளவிழ்ந்த முலைசுரங்	௪௫௭	என்னையிகழ்ந் தனனே	௧௪௮
உறக்கமொழிந் தறவோர்	௩௯௨	என்னை யினிச்செயு	௧௭
உனக்கரிய வரமினியா	௫௪௭	ஏக நாயக	௨௬௦
உன்காதன் மாமனெனைப்	௪௯௨	ஏகநா யகனெவ்	௩௬௭
உன்னத நீளமுண்	௨௮௯	ஏடநாங்க ளெழுதியிட்ட	௪௬௦

ஏது மக்கு	சசகூ	கரந்தை சூடிய	ஙOகூ
ஏத்தியருச் சனைசெய்து	ருசஅ	கரவி லாதபே	உOங
ஏந்தரி யணைநீங்கி	உஎகூ	கரவி லுள்ளமாம்	உககூ
ஏந்தன்முடி மாலை	உஎஉ	கரிமுகத் தவுணற்	ருஉகூ
ஏமா சலமென்	கூஎ	கரியி ைனேசையும்	ஙகஎ
ஏவ லாளரோ	கஅங	கருகிருண் முகந்தா	கஅச
ஏவல்செ யாயத்	சகூஅ	கருங்கட லேழுங்	ரு
ஏழிசை மறைவல்	சகக	கருங்க டற்றிரை	ஙசO
ஏனமங் திரருந்	ஙOஎ	கருணை நாயகி	உOஅ
ஏன்ற வேந்த	கOச	கருத்துக் கண்ணழி	கஙக
ஐம்புலனுங் கூடற்	ருகச	கருத்து ருதவிச்	ஙஉச
ஐம்முகச் சைவ	ருசக	கரும்பனும் விரும்ப	ஙகூO
ஐய சொற்பொரு	கOரு	கரும்பினிற் கோது	சகச
ஐய யாவையு	கூச	கரும்பு போன்மொழி	எஅ
ஐய விச்சுர	சஙக	கலையினு னிறைந்த	கூக
ஐயவோ வென்னுடைய	ஙஙO	கலைவீசு மதிச்சடையோன்	ககரு
ஐயுறு கருத்தை	கூக	கல்லென்றதிர் சும்மைப்	ஙஙரு
ஒப்பவர் மிக்கோர்	ஙஎகூ	கல்வி யாளர்தங்	கூரு
ஒருத்திகள் ளுண்கின்	அஎ	கவன வெம்பரி	ஙஉஉ
ஒருவழிப் பட்டு	உகூ	கழித்தலைக் கண்டற்	கஅகூ
ஒருவ னுன்முகத்	கூஉ	கழிந்த பெருங்கேள்வி	கசரு
ஒல்லையி லதுமன்னற்	உஎரு	கழுமணி வயிரம்	சO
ஒழித்த நோன்பின	உககூ	களநடு விரட்டைச்	உகூஅ
ஒன்று வேண்டுமிப்	உOஅ	களித்த காதலன்	எகூ
ஓங்குதன் பணைசூழ்	கருஅ	களித்தவ ளொருத்தி	அஅ
ஓயாவிறன் மதனுக்கிணை	கஙஅ	கள்ளக் காதல	உOரு
ஓலவாய் மறைக	ங	கள்ளேறு கடுக்கை	கருச
கங்குலெல்லைகா	ஙஉக	கள்ளொ முக்குதார்	ஙகஉ
கங்குல்வங் திருத்த	உருஉ	கறுவிவீழ் காலன்	ருஉஎ
கங்கைப்புனல் வடி	ஙஙஉ	கறையணி கண்டனை	அ
கங்கை யைச்சடை	உகூரு	கற்பலர் கொடியன்	சககூ
கச்சான வரவ	சஎச	கற்ற ரேனுங்கலை	கககூ
கடம்பமா வனத்தி	கஉகூ	கற்ற ரேனும்பின்	கஙங
கடிமனை யடைந்த	உசக	கற்றவர் புகழ்சவ்	உகூச
கடியேறு மலர்மகன்	ஙஎக	கற்றிணி தோளான்	உருO
கட்டவிழ் கடுக்கை	கஉஉ	கற்றைவார் சடையா	கOஉ
கட்டு வார்கரை	ஙசங	கனவில்வருங் காட்சி	உஉகூ
கண்டவர் கடிதோடிக்	உஎச	கனவி னிடத்துங்	உஙஅ
கண்டனன் கனன்று	ஙகூச	கனவினு நீறு	ஙகூங
கண்டிகை மதாணி	கூக	கன்னிநா டெங்கு	சசஉ
கண்டு கூடற்	சகூஅ	கன்னிநீ யாரை	சகூங
கண்டு நாட்டு	ருஙங	கன்னி யிற்றுற	சசஎ
கண் ணுத னந்தி	ஙகூஅ	கன்னியை யீன்ற	சகூகூ
கண் ணுமிடு கவசமும்	ஙஉஎ	காண்ட லுஞ்சில	ஙகரு
கதிர்நோக்கிக் கனன்	ஙஉகூ	காந்து வெங்கத	சசஅ
கத்திகின் ஜெருபா	ஙO	காமனிவ னேகொலறு	உஎக
கயபதி காய்சின	கரு	காமனைப் பொடியாக்	கஙகூ
கயனெடுங் கண்ணி	உருச	காயமே யொறுத்து	சசங

காயிலை யடைந்தகழு உகங
காயும்வேன் மன்ன உஅசூ
கார்கொ ணீர்த்திரு கஎசூ
கால முங்கனு உகக
காவலன் கருமஞ் உசஅ
காவ லோன்மரு சஙச
காவி நேருங் உஎஅ
காவியுங் கமல அங
காற்றி னுங்கடுங் ஙஉங
கான கந்தனி ஙகங
கிட்டி யோடினர் ஙகசூ
கிட்டுந் தோணியை கஎக
கிட்டு வார்பரி ஙசஉ
கிளையுநங் கோனும் ககூ0
கீட்டி சைத்தலை கக
குங்குமங் கருப்புரங் உஅக
குடைக்காடன் பசிக்கண் கசங
குரவ வோதியர் எரு
குருமொழி தந்தை ருங0
குலமகள்போற் கவிழ்முக ங0உ
குறட்குநீ ரருத்தி ஙசஎ
குறிகுணங்கள் கடந்ததனி ஙஅஅ
குற்றமின் மேல ஙஎ
குற்ற மிக்கவிக் கூசூ
குற்றமே தப்புரவிக் ஙஉஎ
குன்றவில் வேடன் உச
குன்றெறிந்தவேற் கஎக
கூந்தற் பிடியும் சூச
கூலியாள் வருவ ஙசஎ
கூலியுங் கொண்டான் ஙசூக
கூழை பாசியின் எசூ
கூறிட்ட மூன்றுங் சஎ0
கூற்றம் போன்றகண் கஎங
கைக்குமருந் தின்சுவை ஙஎக
கைதந்து கரையே கக0
கைதைசூழ் துறைவ ககூ0
கைம்மலைச் சாபங் சஉங
கையர் மாளவு சஙங
கையெறி யுங்குழற் சஅஅ
கொங்க லர்க்குழல் சருக
கொடிக ணீன்மதின் கஉ
கொட்டிணைக் கழலப் ஙருஎ
கொட்டுமண் சுமந்து ஙருசூ
கொண்டல் படியுங் ருஙஎ
கொத்தவிழ்தார் நறுஞ்சா ங0ங
கொய்யு நீலமுங் எக
கொய்யு ளைப்பரி உசூஎ
கொலையினையோ ரவுண கருக
கொற்றவெள் விடைமேற் ககக
கொன்று மீன்பகர் கஎஉ
கொன்றையந் தெரியல் கஉக
கோடுநான் குடைய ருஉரு
கோடும் பிறைவா சூச
கோட்டஞ் சிலைவளை ருகஉ
கோதறு குணத்தின் ச0சூ
சங்க லம்புதண் கஅங
சங்கவான் றமிழ் கசக
சங்கி னேசையும் ஙகஉ
சச்சிதா னந்த ஙஎரு
சண்பக மாறன் ரு
சண்பையர் தலைவர் சஎஅ
சதவுருத் திரத்தா ருச0
சதுரமா யளவி சசூ
சத்திய ஞான ருஉஉ
சந்தநாண் மறைக கஅஎ
சந்தமறை தீண்டரிய உக0
சந்நிதியில் வீழ்ந் கசஎ
சம்பகமாற னென்னுங் ககக
சரத வேதம் ருஙச
சரியை வல்லமெய்த் உகரு
சலந்தர னுடலங் ககஉ
சவலை நோன்புழந் சஉக
சாடியு ணறவ அஎ
சாமகண் டத்தன் ருஉக
சாம்ப ராடுஞ் சசசூ
சாயும் பூங் கொம்பரிற் சஅஎ
சாய்ந்த கொண்டையுங் உசூச
சாலநா ளிழைத்த ககரு
சிங்க மனையா சசூரு
சிங்கமான் சுமந்த கசூக
சிங்கவே றனையான் கஅஅ
சிட்டர் நோக்கியத் சஉஅ
சித்தமா சகல கஉசூ
சித்தர் தஞ்சின கக
சித்திர மேரு ங
சிந்துர நுதன்மால் உசஅ
சிந்தை களித்திரு கஅ
சிந்தை யாகிய உஙரு
சிலர்மைந்தரை யெடு ஙஙசூ
சிலர்வந்து மன்னுவோ கருஉ
சிலைத்தெழு செம்பியன் கசூ
சிலையது பொறைதோற் உருக
சிலைவிற்சே வகஞ்செய்து ஙச
சிறந்த பூசைக்கு உஙங
சிறந்தவருள் சுரந்து ருசஎ
சிறையேய் புனல்சூழ் சசூச

சுட்டுதற் கரிய	௨௮௩
சுந்தர விடங்க	௨௫௨
சுரபிநீள் செவியி	௫௧௭
சுருதி கூறிய	௨௧௪
சுருப்புக் கமழ்தேங்	௬௩
சுழிபடு பிறவி	௨௫௨
சுற்றமாம் பாச	௨௪௭
சுற்றமுந் தொடர்பு	௨௪௩
சூக்க மாகுமை	௨௨௧
சூழும் வார்திரை	௧௭௦
சேக்க ரஞ்சடை	௪௫௫
செக்குர விடையிட்	௩௯௬
செங்கணே றணையா	௪௯௫
செங்கதிர் மேனி	௫௬
செடிய காருடற்	௧௭௪
செம்ப டாஞ்செய்த	௨௬௧
செம்பிய னுடு	௪௨௦
செய்யகோன் மனுவழி	௮
செய்யுள் கொண்டு	௯௭
செருக்கிய வண்டு	௫௪
செருத்துணை யாகி	௨௫
செல்லலை வருதி	௨௬
செல்லன் மின்க	௪௪௭
செல்லுநர் காண	௪௭௧
செவியுண வான	௩௪௪
செவ்விதி னேக்கி	௧௮௯
செழியர் கோமகன்	௪௪௬
செறுத்துநா னும்மை	௩௭௩
செற்றமிகுங் கருவி	௧௯௮
சென்னிக் கோனுங்	௪௦௫
சென்னிவெண் டிங்கண்	௪௮௦
சேட்டிகைத் தென்கா	௫௬
சேய தாரகை	௩௧௧
சையமொத் தெழு	௧௯
சொல்வரம் பிகந்த	௧௦௦
சொற்குவை தேரும்	௫௨
சொற்குற்ற மின்று	௧௦௧
ஞான நாயக	௩௦௮
ஞானமா மதநீர்	௪௭௯
ஞானமுண்ட முனிவர்	௪௫௬
நக்க மேருமா	௧௭௫
தங்கள்பேர் திட்டி	௪௧௬
தடிந்தன தோளுந்	௨௮
தணியலுண் டுள்ளஞ்	௮௪
தண்டலா ளர்களி	௩௨௮
தத்துநீர்க் கலத்திற்	௩௯௩
தந்திரங்களாற்	௨௧௨
தந்திவாய் மருப்பிடறி	௩௫௨
தந்தை தாயிலேன்	௯௩
தந்தைதாய் குரவ	௨௪௪
தந்தைதாய் பிறரின்றி	௩௪௯
தந்தையுந் தாயு	௪௯௩
தந்தையொடு தாயின்றி	௩௫௧
தரங்கமெறி முத்திவை	௨௬௮
தரங்க வாரிநீர்	௧௮௦
தருக்கு மின்பமுங்	௬௩௧
தரும மாதிநாற்	௨௬௨
தருமேவு மலைமகளுஞ்	௩௫௩
தரைகிழித் தெழுநீர்	௫௭
தலைமகன் றிருமுன்	௩௬௧
தலைவனை யிறந்த	௪௯௪
தழுவிய கிளைஞர்	௨௪௩
தளர்ந்த பைங்கொடி	௧௭௮
தள்ள ருந்திற	௪௪௯
தள்ளு நீர்த்திரை	௧௮௦
தறைவிழத் தனது	௨௮
தனிவரு புலவர்	௪௨
தன்பெருங் கணத்து	௧௮௫
தன்பெருங் கற்பி	௪௭௭
தன்பெருந் தனமு	௪௯௮
தன்றொடக் கறுத்த	௩௭௭
தன்னருண் மாமன்	௪௮௨
தன்னரு ளான	௩௭௭
தன்னை யித்தலும்	௧௩௨
தாதையார் கவர்ந்து	௪௭௪
தாமரை களாஞ்சி	௬௧
தாமொரு புலவ	௩௯
தாவு கந்துக	௨௭௩
தாவு தீவளர்த்	௪௫௦
தாழ்ந்தது வடகீ	௧௨௪
தாழ்ந்த வேணிய	௧௦௪
தாளணி கழலினுன்	௭
தானெனன மகிழ்ச்சி	௨௮௧
திங்களங் கண்ணி	௪௪
திடங்காதல் கொண்ட	௩௪௮
திணிதரு கழுத்தினிற்	௨௮௯
திண்டிற லவுணன்	௫௨௮
திண்டோள் வலியாற்	௪௦௩
தித்திக்கு மணிவார்	௨௨௫
திரிபுர மெரிய	௧௧௨
திருத்தனே சரணஞ்	௧௦௬
திருமணி மைந்தன்	௫௪௩
திருமறு மார்பன்	௫௧௯
திருமுலைப் பாலி	௪௧௨
திரும்பித்தன் றேவி	௯௦
தீயர் மானமிக்	௪௩௬

துங்க வாரியிற்	உஙஉ
துடித்த வாளர	உக
துடுவைவான் முறங்கா	ஙO
துணிவுடைய குலத்து	கசச
துணையின்றி மக்க	ஙசரு
துண்ணென மாயோன்	ஙசுசு
துதித்த கிரனுக்	கககூ
தும்பைச்சடை முடியா	ஙஙஉ
துளபக் குன்றை	ருஙசு
துள்ளு மாவொலி	உக
துறந்தவர் போக	ஙஎஅ
துன்னு மின்னிய	உஎச
தூக்கி யார்த்த	உசுO
தூய சொல்லும்	ருO
தூய நீர்குடை	எசு
தெரிதர வகுத்த	உகூஎ
தெள்ளியடு சிற்றுண்டி	ஙருO
தென்றுசைப் பரங்	கஉ
தென்னவ னின்ன	கருசு
தென்னவன் குல	கூச
தென்னவன் றேவி	சசக
தென்னுலகிற் புகுந்த	சகூO
தேசம் பரவுங்	சசுரு
தேம்படு குமுதச்	சஉக
தேய்ந்த நாண்மதிக்	கOங
தேவ தேவனை	கககூ
தேவரு மனிதருங்	உகூங
தேவர்க்கு மரிய	ஙசசு
தேற லரிதார்	சசுங
தேற்றமில் லாத	ஙகூசு
தேனிமி குதலை	சு
தேனும் பாலுங்	உஉஉ
தையலார் சிலர்	அஉ
தையலா ளொருத்தி	சுஅ
தொடுத்தவறு மையும்	ககூரு
தொண்டுறை மனத்து	கஅஅ
தொண்டை வாய்வலை	கஎஅ
தொல்லைநீ ருலக	ஙஎங
தொழுத கையினர்	உஉங
தோழுதன ரடிகள்	கஙஎ
நகைத் தடவந்த	ககங
நங்கோமகன் செங்கோல்	ஙஙஎ
நதியணிந்தவர்	ருக
நந்தி நாதனு	கஅங
நந்தி யாதியாம்	உருகூ
நந்து நாகுநீர்	சருச
நம்பந்த மறுப்போன்	சகங
நரியாவும் பரியாக்கி	ஙஅஉ
நல்ல வாம்பரி	ஙகூO
நறை கெழு துழாயி	சஎசு
நற்புறம்வான் முக	ஙOக
நன்றி தேருர்	சசுஅ
நன்றி ருந்தனி	சஙஉ
நன்னக ருறக்க	சகூஉ
நாடிக் காவலன்	ஙகச
நாதவோ நாத	ஙஉகூ
நாதனின் னருளாற்	கசுகூ
நாமகளுரு வாய்	சசு
நாமகள் வரவு	ஙசு
நாயக னேவ	கஎO
நாலுகால் களுங்கடை	உகூO
நாளையுந்திரு	ஙகO
நாள்சில கழிந்த	சஅச
நாறிய தண்ணங்	சுO
நாறு சுண்ணமென்	எகூ
நாறுபூந் தாம	சஎ
நானவார் குழலி	ஙசு
நிரப்பிய வழிநா	ஙசு
நிலந்தரு திருவி	சுஉ
நிறைந்த தெண்கட	கஎஉ
நிறையுடை யிவனை	ஙஎஉ
நிற்கின்றுன் முகத்தை	உஅச
நின்ற நீணிலைப்	ஙகரு
நின்றவந் தணரை	சஎங
நின்றுண்டு திரியுங்	சஉஉ
நின்னையுணர்ந் தவர்வேத	ஙஅக
நீடுந் தரங்க	சுரு
நீலப்பிடி மேற்	சுங
நுண்ணிய பொருளினு	கூ
நுழைந்தான் பொரு	கசக
நூறம்பு தொடுத்து	உஎ
நூறுவிர வித்தமவாம்	ஙOங
நெஞ்சே யுரையே	உஎஅ
நெடிய வேதநா	கூங
நெட்டலை யொதுங்கி	ஙருஅ
நெய்த்திடு மாந்தளிர்	உஅஎ
நெருங்கு தூரிய	ஙOஅ
நெருப்பிலிடு வெண்ணெ	உகஉ
நேற்றும்பரி நரியாயின	ஙஙஎ
பகைத்திற முருக்கு	உகூO
பங்கயக் கடவு	ருஉஅ
பங்கயச் செங்கை	கஉங
பங்கய முகமென்	கOங
பஞ்சவ னடைந்த	சசக
படர்ந்து பணிந்தன்	கருங
படவு டைப்பவோர்	கஅக

பட்டும் பன்னிறக்	௮௨
பண்சு மந்தழைறை	௩௪௦
பண்டொரு வைகல்	௧௨௪
பண்ணெனுஞ்சொலார்	௭௫
பண்படு வேத	௪௧௭
பத்தம்பு தொடுத்து	௨௬
பத்திக்குளிர் கமுகின்	௩௩௨
பத்தி செய்தர	௨௦௧
பந்தி யாளர்கள்	௩௨௩
பரவிநீ வழிபட்	௧௦௨
பரனருள் விளையாடல்	௨௭௬
பரிசிலைப் புலவ	௧௬௩
பரிதியு மதியும்	௩௬௫
பரிவாயின் மொழிதொடுத்து	௧௪௭
பருங்கைமால் யானை	௧௧௪
பருமுத்த முலையாள்	௪௧௪
பலருஞ் செய்த	௪௮
பல்கா சொடு	௧௪௧
பல்குறு மானிட	௮
பல்லாயிரஞ் செந்தாமரை	௩௩௩
பல்வ கைப்பெருங்	௧௩
பழியொடு பாச	௫௪௨
பழுதி லாதசொன்	௨௨௩
பள்ள மாக்குவ	௨௬௭
பறிபடு தலையும்	௪௦௮
பறிப்ப வேரொடு	௩௧௯
பற்பல கலைமாண்	௪௧
பன்றி வாய்விடு	௩௨௦
பன்னிற மாட	௫௩௩
பன்னிற முடையவாம்	௨௯௨
பாசிழை யொருத்தி	௭௦
பாடல்விஞ் சையனே	௩௬௦
பாடிய பாணற்	௪௫
பாடுவா யளிதே	௩௩
பாட்டிற் கின்புறு	௨௨௪
பாட்டின் மேற் கருணை	௪௭௨
பாண்டியன் முதுகிற்	௩௬௪
பாத மலரிணை போற்றி	௧௫௫
பாதியுமை யுருவான	௩௮௦
பாம்பி னூற்கடி	௯
பாயிருட் படலங்	௨௮௦
பாயுடையார் விடுத்த	௧
பாயு மால்விடை	௧௦௬
பாய்திரை புரளு	௩௭௪
பார்த்த பார்வையா	௨௨௧
பிச்ச வொண்குடை	௨௬௧
பிடிக ளென்ன	௬௫
பிட்டிடுவே னுனக்கென்று	௩௫௦
பிட்டுவாய் மிதப்ப	௩௫௬
பிட்டுவிற் றுண்டு	௩௪௫
பிணத்தினைக் கோலிப்	௩௧
பிணியவிழ் கோதை	௭௧
பித்தனே யென்று	௩௫௯
பித்திது வெனப்பிறர்	௨௧௧
பிரமன் மான் முதலாங்	௫௨௩
பிரிவுற வுரத்தி	௨௯௮
பிழையில் கற்புடை	௧௭௭
பிள்ளை யாரிட	௪௩௯
பிள்ளை யின்மை யேற்	௧௭௬
பிறக்கு மாசையோர்	௨௬௪
பிறவியந் தகர்க்கு	௩௯௫
பிறவி யந்தகன்	௧௭௬
பின்பர வாரம்	௩௯௯
பின்பாவல ரெல்லாம்	௧௩௯
பின்றொ டர்ந்துநாய்	௩௨௦
பின்னவ னணை	௨௮௪
பின்னி டாதிரு	௨௩
பின்னுமவர் கனவின்கண்	௩௯௨
புட்களும் பல	௪௫௧
புண்ணிய நீற்றுத்	௪௨௧
புண்ணியப் புலவீர்	௧௬௨
புத்த ராதியோர்	௨௦௦
புத்தர் சில ரிலங்கையினும்	௩௯௦
புரசை மாவய	௨௩௨
புரத்தினு ளுயர்ந்த	௩௧
புலந்தொறும் போகிப்	௪௦
புலவு மீனுணக்	௧௭௧
புலவு மீன்விலை	௧௭௭
புலைத்தொ ழிற்குவித்	௪௩௫
புல்லாதார் முரண	௧௯௯
புல்லி மைந்தர்	௭௩
புறவு பூவைபைங்	௩௧௯
பூட்டியருட் பாசமிரு	௨௫௮
பூவார் முளரி	௨௭௭
பெண்ணிணைப் பாகங்	௧௫௯
பெண்ணிணை வதுவை	௧௯௨
பெய்வளை விந்தை	௪
பெருகு மன்புளங்	௧௨௮
பெருந்தகை யமுதன்	௧௮௬
பெரும விங்நக	௧௦
பேதுற்ற முனிவர்	௪௧௦
பேரரு ணிறைந்த	௪௪௪
பேர்வாத வூரரென	௧௯௭
பைத்தலை புரட்டு	௧௨௫
பொக்கமுடை யார்செய்	௧௫௬

பொங்கரி னுழைந்து	௬0	மந்திரக் கிழமை	௨௪௨
பொங்கர்மென் புதல்க	௫௩௨	மயிலிளம் பெடையன்	௭0
பொங்குஞ் சினமடங்கல்	௨௫௭	மருத்தென வருகின்ற	௨௭௫
பொட்டமுகன் மார்பிலிடு	௨௭௨	மருந்து மந்திரம்	௪௩௭
பொய்த்திடு நுண்ணிடை	௫௩	மருளு மாறு	௪௯
பொய்யர் சார்பினை	௪௩௧	மலர் தொறுஞ் சிறிதே	௮௫
பொய்யின் மறையின்	௪௬௭	மலர்ந்தசெவ் வந்தி	௫௯
பொய்யுரை பிதற்று	௪௧0	மலர்மகள் மார்பன்	௪0௭
பொருங்கட லனிக	௨௧௧	மலைவைத்த சிலையான்	௪௮௬
பொருப்பகழ்ந் தெடு	௧௧௩	மல்லார்தடம் புயவாணிக	௧௩௯
பொருப்பே சிலையாய்	௪௬௬	மழலை யின்னமுந்	௪௫௩
பொருவில்சி ரிலக்கண	௨௮௭	மறத்தாறு சூந்த	௩௭0
பொழிந்த தண்மது	௪௩௮	மறந்த வாதவேல்	௨0௬
பொற்றனிச்சடை	௯௫	மறமலி நேமி	௪௩
பொன்மலர்க் கைதை	௪௮0	மறம்பு லனந்தவேன்	௩௧௭
பொன்றுதன் முத்தி	௩௯௫	மறவா ளிலங்கை	௫௩௫
பொன்னங் கமலத்	௨௪0	மறித்த கையர்பின்	௪௫௩
பொன்னவிர்	௫0௭	மறுகு தோறும்	௫௩௮
பொன்ன னுளொடு	௧௩௨	மறுகும்பல பொருளா	௩௩௫
பொன்னட்டின் மடவாரை	௪௯0	மறைபுலப் படுத்தநூல்	௪௫௯
பொன்னினும் வெள்ளி	௮௩	மறைமரபு சால	௨௭0
பொன்னின் பீடிகை	௫0	மறையி னந்தமு	௧௩௩
பொன்னு மளவோ	௨௩௯	மறையினு ளெழுகும்	௪௨
பொன்னுள்ளன பணி	௩௩௬	மறைவழி நின்று	௪௨௩
பொன்னெடுஞ் சயிலங்	௨௫0	மற்றிவர் தம்மை	௪௭0
போதவா னந்தச்	௨௫௪	மற்றிவர் வழிப்படுமுன்	௨௧0
போதவானந்தத்	௫௧௧	மனிதர் வெங்கோடை	௫௫
போதவிழ் தாரா	௪0௮	மன்றல் வேம்பனும்	௨0௭
போதையனா ருலக	௧0௯	மன்றுஞ் சித்திர	௩௧௭
போனவிடைக் காடனுக்கு	௧௪௮	மன்றுடை யானோர்	௩௬௯
மகவளிக்கும் பிடர்வெ	௩00	மன்று ளாடிய	௨௧௮
மகவி லாமையா	௧௭௪	மன்னர் பெருமா	௨௩௯
மகவை யீன்றதாய்	௧௩௪	மன்னவர் மன்னன்	௫௨
மகிழ்ந்தான் சிலர்	௧௪0	மன்னவ னிணைவாற்றுன்	௨௭௭
மங்கலவோரை	௫௧௪	மன்னவ னெறிகோடா	௨௭௪
மங்கை தன் கற்பு	௫௧௫	மன்ன வன்றிரு	௨௩௪
மங்கை நல்லவ	௭௭	மன்னே யென்னை	௨௪0
மங்கையா ளொருத்தி	௮௬	மாகவா றியங்கு	௨௯
மட்பு லந்திசை	௨௬௮	மாசறு காட்சி	௩௨
மணிகெழு தேல	௪	மாசறு கேளி	௧௮௯
மணிமாலையு மலர்மாலையுஞ்	௩௩௪	மாசறு மணிபோற்	௪00
மண்டொ டுங்கருவி	௩௪௧	மாசறு மனத்தான்	௪௯௬
மண்ணுதி யாருறு	௨௨௯	மாசாய் மறைக்குமல	௨௩௧
மண்ணுய்ப் புனலாய்	௨௫௬	மாசி னனமுஞ்	௮௧
மதத்தினின் மான	௪௬௯	மாண்டதாரக	௨௬௩
மதிநுத லிமய	௫௨௫	மாதவன் றனக்	௧௩௫
மதுகைவா ளொருவ	௭௨	மாதவி பாதிரி	௫௩
மந்தரங் கயிலை	௩௭௬	மாத்தாண் மதமா	௬௨

மார்தளிரடியார்	௭௩
மாந்தளி ரீன்று	௮௯
மாமத மொழுக	௪௨௨
மாமுர சொலிப்பச்	௪௨0
மாயா விருத்தியினன்	௩௮0
மாரனைப் பொடி	௧0௪
மாற னறிந்தினி	௧௬
மாறுகொ ளமணர்	௪௨௫
மாற்றவ ணைகை	௫0௧
மானிரையுங் குயவரியும்	௩௮௯
மீடைந்தவர் தண்டெஞ்	௨௫௩
மிடைந்த மாயவாம்	௨௬௬
மின்மதிச் சடை	௧௬0
மின்றிரித் தன்ன	௧௬௫
மின்ன லங்கிலே	௨௩
முகிழ்தரு முலேயின்	௩௮
முடங்கு காலுடைச்	௩௧௬
முடங்குகாற் சிலந்தி	௫௩௧
முடங்கு முள்ளிலே	௧௭0
முடங்கு வெஞ்சிலே	௨0
முட்டிய சமரிடை	௨௮௮
முண்டக மென்கடி	௫௩
முண்டி தஞ்செய்த	௪௪௮
முத்தேர் நகையார்	௬௬
முந்திய மணுட்டி	௪௯௯
முந்துநான் மொழிந்தார்	௪௫
முந்தையொரு மந்திரி	௨௭0
மும்மை யுலகு	௫௩௮
முழுதல கீன்ற	௧௮௫
முறையி னேதிய	௨௬௬
முற்பக லாறி	௫௪௫
முன்ப ணிந்தன	௨௧௯
முன்பு தியில்	௪௬௩
முன்பு நான் மாட	௧௨௧
முன்பு பெருந்துறை	௩௮௪
முன்னர் விசினற்	௧௮௨
முன்னு முதுபொருட்கு	௨௫௬
மூத்தவள் சிறுவர்	௪௯௯
மூவா முதலாய்	௨௫௫
மெய்கழிந் தின்னுயிர்	௪௮௮
மெய்ம்மை யாம்பொருள்	௨00
மெய்யன் புடையா	௨௪௧
மெய்யி லிட்டனர்	௪௩௭
மெய்யில் சிந்தையா	௪௨௬
மேதகு சான்ருேர்	௪௭
மேதகு வாணிகர்	௫0௫
மைக்கணு ளொருத்தி	௬௮
மைக்குழ லொருத்தி	௬௯
மைந்தனி லாழி	௫௪௩
மையறு மனத்தான்	௧௨௩
மையுன் கண்ணியர்	௭௪
மைவார் தடங்க	௯௬
யாது சூழ்ச்சியென்	௪௫௨
யாவ ராலு	௧0௬
யரவ ரும்புன	௨௫௯
யாவரே யாக	௩௬௭
வங்கத்தார் பொருள்	௯௧
வங்கிய சேகரன்போல்	௩௫
வங்கிய சேகரன்வங்	௫௧
வஞ்சவினைக் கொள்கலனு	௨௨௭
வடபுலத் துள்ள	௪௭௭
வடிக்கணுட் செருகின	௭௮௪
வடுத்தவா மரும	௨௬
வட்டத் தோல்வரி	௨௬௧
வட்ட வாழியொன்	௪௩0
வணங்கில்செல் வந்தழீஇப்	௪௮௯
வண்டமிழ் நாவி	௪௪
வண்டுபோற் புண்டரிக	௩௮௭
வண்டுமு தாரி	௨௮0
வந்த நாவலர்	௪௯
வந்த யோகர்மா	௧0
வந்தவரைச் சிவந்த	௩௨௬
வந்தவிப் பத்தி	௩௭௫
வந்தனவா லிவ்விரண்டு	௨0௧
வந்திக்குக் கூலி	௩௫௯
வரிசைமரு மகனரவால்	௪௯௧
வருதிறின் மரபுக்	௪௯௫
வருபுனல் பெருகப்	௩௭௧
வரைபக வெறிந்த	௧௬௮
வரையறை செய்த	௨௪௯
வரையுந்திய மதுமுல்லே	௩௩௪
வல்வினை வலியான்	௪0௭
வழிவழி வருமா	௪௬௯
வழிவிட வருவார்	௪௮௫
வழுக்காத சொற் சுவை	௧௪௬
வழுதிதன் றமர்விட்	௩௩௮
வழுதியரி யணையிலிருந்	௧௫0
வழுதியால் விடுக்கப்	௩௮௫
வழுதியு மறிந்து	௨௮0
வளங்கொள் காம்போச	௨௯௩
வளவர்கோன் செழியன்	௪0௫
வளவர் கோன்றிரு	௪௨௯
வளைந்தமெய் யுடைய	௩௪௫
வள்ளத்து வாள்போல்	௮௪
வள்ளல் வாதவூர்	௨௩௩

வள்ளறன் கோப	௩௬௩	விற்பயி றடக்கை	௫௧௮
வறியவனு மொருபிறவி	௨௨௮	வீங்குநீர்ச் சடையா	௧௬௭
வறுமைநோய் பிணிப்ப	௯௭	வீதிதொறும் வீழ்ந்து	௩௮௬
வனைந்த பைங்கழ	௭௭	வீழ்ந்த காதலன்	௭௮
வன்புதாழ் மனத்தோர்	௩௬௭	வீழ்ந்தனன் றரைமேற	௪௮௩
வன்ருன் மழவிடை	௧௩௯	வெங்கதிர் வேலை	௪௮௫
வாகு வலத்தான்	௪௦௨	வெங்கய நீள்கொடி	௧௪
வாங்கு சங்க	௫௦	வெங்கரி யாவி	௫௪௨
வாசமஞ் சனநீ	௫௪௧	வெங்குரு வேந்த	௪௧௭
வாசமஞ் சனந்தேன்	௫௪௦	வெஞ்சின மறக்கோ	௩௨
வாச மென்பனி	௮௦	வெட்டுவார் மண்ணைமுடி	௩௫௨
வாசிவா ணிகர்க்கு	௩௦௫	வெண்ணிறஞ் சிவப்புப்	௨௯௪
வாட்டு நுண்ணிடை	௧௭௧	வெந்தசிந்தை யமணர்	௪௫௯
வாதவூ ரனைவிடுத்து	௩௯௧	வெம்பணிக ளைப்பொர	௨௬௯
வாம்ப ரித்திர	௩௧௩	வெம்மத வேழங்	௪௪௩
வாம்பரி மறைக்கெலாம்	௨௯௧	வெருவரு செலவின்	௧௬௯
வாயி லெங்கனுங்	௪௩௪	வெவ்விய நறவ	௮௬
வாய்ந்த நாண்மலர்	௭௧	வெவ்விய வேலான்	௯௦
வாலி தாகிய	௪௩௦	வெவ்வயிர்ப் பெரிய	௫௦௧
வாவி நாறிய	௨௬௫	வெள்ளநீர் வறப்ப	௯
வானத்தின் மண்ணிற்	௩௫௭	வெள்ளமாச் சோரி	௩௦
வான லமுத	௪௦௨	வெள்ளிவித்	௨௯௬
வானவர் தமக்கே	௨௮௫	வெள்ளை மாமதி	௧௨௯
வானவர் மனிதர்	௩௬௬	வெறித்த டக்கைமத	௩௪௧
வானுதி யைந்துமுதல்	௨௩௦	வெறுத்த காணமுங்	௩௧௪
வானுறிழி நதியாயிர	௩௩௮	வென்றி மாமுர	௪௫௫
விடைகொடு போவ	௧௨௫	வென்றுவீ றடைந்த	௪௯௧
விடைத்தனி யேறன்	௭௨	வேடுரு வாகி	௩௫
விண்சுமக்கும் புள்ளாய்	௩௮௩	வேண்டுகொண் டருளை	௪௨௪
விண்டு மூவுங்	௪௦	வேத நூலொரு	௨௧௪
விதிமுறை கதலி	௧௬௦	வேத வாகம	௨௦௨
விம்மித மடைந்து	௪௩	வேதனெடு மாலாதி	௨
விரதமு மறனு	௧௬௭	வேதிய னொருவன்	௪௧௦
விரிகதிர்ப் படாதிற்	௯௯	வேந்த னேவலால்	௯௬
விரிந்தவேத நாவர்தாம்	௪௫௮	வேமே யென்ப	௪௬௬
விரிபொழிற் சாலி	௨௯௫	வேலையினு லறவருந்தி	௩௫௪
விருத்தகு மார	௫௪௪	வேழ மறப் படை	௧௫
வில்லொடு மேக	௩௩	வேளையும் வனப்பி	௩௪௨
விழவரு நகரெங்கும்	௧௯௬	வேறு பாடறி	௪௯
விழித்த ஞாளிகள்	௩௧௮	வேறுரை யாது	௩௫௯
விழைதரு காத	௫௮	வேறிவே றிறைவன்	௩௯௮
விளம்பு கின்றவ	௨௬௭	வைகலு மவித்த	௩௪௪
		வைதி கத்தனி	௪௨௬